ஸ்ரீ
கம்பராமாயணம்

நான்காவது

கிட்கிந்தாகாண்டம்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர்
இயற்றிய உரையுடன்

குவை பப்ளிகேஷன்ஸ்
51, பெல்சு சாலை, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005
தொலைபேசி : 843933 & 845264

ஆறும் பதிப்பு : 1976

விலை ரூ. 25-00

வைரம் அச்சகம், சென்னை - 600 005

இப்புத்தகத்திலடங்கியவை:—

நூன்முகம்

ஆலினிலைப் பாலகனா யன்றுலக முண்டவனே!
வாலியைக்கொன் றரசிளைய வானரத்துக் களித்தவனே!
காலின்மணி கரையலைக்குங் கணபுரத்தென் கருமணியே!
ஆலிநகர்க் கதிபதியே! அயோத்திமனே! தாலேலோ.

தனமருவு வைதேவி பிரியலுற்றுத் தளர்வெய்திச் சடாயுவை வைகுந்தத் தேற்றி, வனமருவு கவியரசன் காதல்கொண்டு வாலியைக் கொன்றிலங்கைநக ரரக்கர்கோமான், சினமடங்க மாருதியால் சுடுவித்தானைத் தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள், இனிதமர்ந்த வம்மானை யிராமன்றன்னை யேத்துவா ரிணையடியே யேத்தினேனே.

அருந்தமிழன்பீர்! "அரிதரிது மானிடராதலரிது" என்றபடி கிடைத்தற்கு அரியமானிடப் பிறவியைப் பெற்றோம்: ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர்வரையிலுமுள்ள உயிர்வர்க்கங்களுள் ஆறறிவையும் பெற்றுள்ளோம். உண்ணுதல் உறங்குதல் முதலியன பற்றிய அறிவோ, விலங்குக்கும் மானிடராகிய நமக்கும் ஒத்ததாகவுள்ளது: ஆயினும், 'இன்னது நல்லது, இன்னது, தீயது' என்று பகுத்தறியக் கூடிய வல்லமையைக் கடவுள் நமக்குத் தந்துள்ளார்: அதற்கு ஏற்ப, நூல்களும் ஏற்பட்டுள்ளன.

பகுத்தறிவுள்ள நாம் அவ்வாறான நூல்களைக் கற்று மெய்ப் பொருளைக் காணவேணும்: அவ்வாறு மெய்ப்பொருளைக்காண்பது, மீளாவுலகைப் பெறுதற்கு வழி; "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டுவாராநெறி" என்று நாயனாரும் கூறிப் போந்தார். மற்றும், கற்றதற்குப்பயன், இறைவனடியைப் பற்றுதலே: இறைவனடியைப் பற்றினரே, பிறவிப் பெருங்கடலைக் கடப்பர்.

அங்ஙனம் நூலறிவைப்பெற்று நன்ஞானத்தையடைந்து நல்லொழுக்கத்தை மேற்கொண்டு அவ்வழியாற்சித்திபெறுவது, மிகவும் அருமையானது. ஆகவே, சேதனரின் இழவைப் பொறுக்கமாட்டாமல் சரணாகதியென்கிறவோர் சிறுபேருபாயத்தை ராமக்ருஷ்ணாதியவதாரங்களில் எம்பெருமான் அருளிப்போந்தான்: இவ்வுபாயம், வேதபுருஷனாலும் ஆதரிக்கப்பெற்றது. வேதத்தின்பொருளை விளக்கும் உபப்பிரமணமென்னப்படும் இதிகாசசிரேட்டமான ஸ்ரீராமாயணம் சரணாகதிவேதமெனப்படுமென்பது, யுத்தகாண்டத்து முகவுரையில் விளக்கப்பட்டுள்ளது.

கரும்பைச் சுவைக்கச்சுவைக்கக் கணுத்தோறும் இன்சாறு சுரப்பதுபோல இந்த இதிகாச சிரேட்டமான இராமாயணமும் எம்மொழியிலிருப்பதாயினும் கற்கக்கற்கக் காண்டந்தோறும் இன்சுவை தருவதாகும்: இந்தச்சுவை அறிஞர் மனத்துணர்வால் துய்ப்பதன்றி வாயினாற் சொல்லிக்காட்ட இயலாது: இத்திறத்தைத் தொல்காப்பியனாரும் "ஒப்புமுருவும் வெறுப்புமென்றா, கற்புமேருமெழிலு

மென்று...,ஆவயின் வரூஉங் கிளவி யெல்லாம், நாட்டிய மரபினெஞ்சு கொளினல்லது, காட்டலாகாப்பொருள வென்ப" என்ற சூத்திரத்தினால் குறிப்பித்துப் போந்தார். ஆகவே, "தொட்டனைத் தூறுமணற் கேணி மாந்தர்க்குக், கற்றனைத் தூறு மறிவு" என்ற முறைமைப்படி மாந்தர்க்குக் கற்கக்கற்கக் கற்கும் நூலிலுள்ள ஆழ்பொருளும் இன் சுவையும் அறிந்து திளைத்தலாகும்.

அங்ஙன் திளைத்தற்குஉரிய தாகமிளிர்வது, நந்தமிழ்மொழியில் தமிழுக்குக் கதியென்று சொல்லத்தக்க கம்பர்கவியன்றி வேறு உண்டோ? இதுபற்றியன்றே "செம்பொன்மேரு வனையபுயத் திறல்சேரிராமன் திருக்கதையில், கம்பநாடன்கவிதையிற்போற்கற் றோர்க்கிதயங் களியாதே" என்று முன்னோரொருவர்கூறியதும். வெண்பாவாலும் அகவற்பாவாலும் விருத்தப்பாவாலும் யாக்கப்பட்டு இராமசரித்திரம்கூறுவனவாய்க் கம்பர்காலத்துக்குமுன்னரே பல நூல்கள் இருந்தன என்பது, தொல்காப்பியவுரையினாலும் யாப்பருங் கலவுரையினாலும் அறியப்படுவதன்றிச் சிலதொகைநூற்செய்யுட் களில்காட்டப்பெறும்பாடல்களாலும் அறியப்படும்.கம்பர் தாம் பாடிய காவியத்துக்கு வான்மீகத்தைச் சிறப்புற முதனூலாகக் கொண்டா ரெனினும், தம்காலத்துக்கு முந்தியிருந்த அவ்வகையான தமிழ்நூல் களையும் மேற்கோளாகக்கொண்டாராகல்வேண்டும். "அருந்தவமுனி வன்,வேள்விபோற்றிய இராமனவனொடு,மிதிலைமூதூரெய்தியஞான்றே, மதியுடம்பட்ட மாக்கட் சீதை,கடுவிசை வின்னாணிடியொலி கேளாக், கெட்டபாம்பின் வாட்டமெய்தித், துயிலெழுந்து மயங்கினள்" என்று தொல்காப்பியத்து அகத்திணையியலில் உதாரணமாகக் காட்டப்பட்ட செய்யுளைப்போன்ற ஒன்றையே கம்பர் மேற்கோளாகக் கொண்டு மிதிலைக்காட்சியில் அகத்திணைப்பொருளை நயம்பெற நாட்டினரென்று கொள்வதற்கு ஏதேனும் தடையுண்டோ? இங்ஙனே சில காணலாம்.

இராமசரித்திரம்கூறும் பண்டைய தமிழ் நூல்கள் யாவும் கம்ப ராமாயணமாகிய கதிரவன் பொலிவுறத் தோன்றியபின் பொலி விழந்து வழக்காறொழிந்தன எனின் மிகையாகாது: ஆகவே, இந்தக் கம்பராமாயணமே, சரணாகதியென்ற அரும்பெருபாயத்தை முக்கிய பொருளாகக்கொண்டதாகிய இராமசரிதத்தைக் கூறும் தமிழ் நூல்களுள் ஒப்புயர்வின்றித் துலங்குவதாகும்.

கம்பரது கவியி லீடுபட்ட பேரறிஞர் இந்தக்காவியத்தைச் சுவைத்து இன்புறுவது நிற்க: மற்றையோர்க்கும், செய்யுளும் பதப் பொருளுமே கேட்க கேட்க இன்பும் மகிழ்வும் விளைக்கும். மற்றும் பலபடக்கேட்குமிடத்து அறிவிற் பலவகைப்பட்ட தருமங்களும் படிந்திடும்: காண்மின்! கவிஞரின் காப்பியங்கள் காந்தாசம்மிதை யென்னப்பட்டு எத்திறத்தார்க்கும் பலவகைநற்போதனைகளை யுண்டு பண்ணுமென்பது, பாலகாண்டத்தின் முகவுரையில்தானே காட்டப் பட்டுளளது.

எம்பெருமானது அவதாரம், நல்லோரைக் காத்து அல் லோரை நலிதற்காகவே யென்பது பிரசித்தம். அதற்கு ஏற்ப இராம

பிரான் வனவாசமென்பதை ஓர் வியாஜமாகக் கொண்டு தண்டகாரணிய வாசிகளாய்ச் சரணம்புகுந்த முனிவர் பெருமக்களுக்கு அபயமளித்து, விராதன் கராதிகள் அயோமுகி கபந்தன் என்ற இவ்வாறான அரக்கர்களை வதைசெய்து சாதுசனங்களைப் பாதுகாத்தமை ஆரணியகாண்டத்துக் கூறப்பட்டது: இந்தக் கிட்கிந்தாகாண்டத்தில் நண்பனைக் கொள்ளப்பட்டவனைப் பாதுகாத்தமை கூறப்படுகிறது. முற்காண்டத்தில் ஜடாயுவுக்கு மோக்ஷங்கொடுத்தலாகிய பரத்துவ சின்னம் காட்டப்பட்டது. இதில், தாரையின்பேச்சு வாலியின் பேச்சு முதலியவற்றால் எம்பெருமானது பலவகை மங்கலப் பண்புகள் காட்டப்படுகின்றன.

மற்றும், மாயமானான மாரீசனைக்கண்டு அந்த மான் மேல் சீதாபிராட்டி விருப்பங்கொண்டாள். அதனையே வியாஜமாகவைத்து இராவணன் அந்தச் சீதாபிராட்டியைக் கவர்ந்துசென்றான். இடையில் சடாயு மீட்கப்பார்க்கவும் முடியாமற்போயிற்று. பின்னர் இராவணன் சீதையைச் சிறைப்படுத்தினனாக, அன்னவள் அரக்கியரால் அலைப்புண்டு கிடந்தாளென்பது கீழ்க்காண்டத்தில் கூறப்பட்டது. இந்நிலையில், இராமபிரான் சுக்கிரீவனோடு நட்புக்கொண்டு பிராட்டியைத் தேடிக் காணப்பிரதானமாக அங்குளீயகத்தைக்கொடுத்து அனுமானை யனுப்பினான்: அவன்மூலமாகச் சீதையுள்ள விடத்தையறிந்து மீட்டானென்பது, கிட்கிந்தாகாண்டம் முதல் வரும் சரித்திரமாகும்: இந்தக் கதாசந்தர்ப்பத்திற்கு உள்ளுறைபொருள் கூறப்படுவது வருமாறு:—மாரீசனிடத்துச் சீதைவிருப்புக் கொள்ளுதலென்பது - எம்பெருமானையே இடையறாது நுகர்தற்கு உரிய ஆன்மா (தனக்கு உரியவல்லாத) ஐம்புலன்களில் விருப்புக்கொள்ளுதலையும்; அப்போது இராவணன் பற்றிக்கொண்டது - உயிர் ஐம்புலனில் விருப்புக் கொள்கையில் அதனை மோஹம் பற்றுதலையும்; ஜடாயுவினால் மீட்கப்பட முயன்றும் முடிபவில்லை யென்பது - கேவலகருமத்தினால் மோகத்தினின்று உயிர் விடுபடுதல் முடியாதென்பதையும்; இலங்கையிற் சிறைப்படுவது - ஸாம்ஸாரிகமான உடம்பிற் சேதநன் புகுதலையும், இலங்கையில் அரக்கியரின் மருட்டலுக்கு அச்சீதையுட்படுதல் - ஆன்மா ஆத்தியாத்துமிகம் முதலிய தாபத்திரயத்திற்கு உட்படுதலையும், அனுமானைக் கொண்டு சீதாபிராட்டியைத் தேடியது - சிறைப்பட்ட சேதநனை எம்பெருமான் தனது பெருங்கருணையினால் பெறமுயல்வதையும், பிராட்டியை மீட்டுக்கொண்டமை - சேதநனையங்கீகரித்தலையும் காட்டு மென்பர். இந்த ராமாயணத்தில் உள்ளுறையாகப் பல இரத்தினங்கள் கிடைப்பதுபோலவே, செம்பொருளாகவும் பல வகையறங்களும் அரும்பொருளும் கிடைக்கின்றன.

இந்தக் கிட்கிந்தாகாண்டத்தைக் குரக்குச்சரிதையெனக் கருதலாம்: இதிலுள்ள அரும்பொருள்களோ மற்றைக்காண்டங்களிற் காணவரியன. இத்திறம் இதனையூன்றிப்பார்க்கப் பார்க்கவே விளக்கமுறும். தூதலக்ஷணம், அரசர் நடந்துகொள்ளவேண்டிய முறை, எம்பிரான் திருவவதாரஞ் செய்தற்குக் காரணம், இராமநாம மகிமை, சரணமாகவடைந்தவனைக் காப்பாற்றாவிடின் வருங்கேடு, மதுபானத்தின் தீமை, கார்காலகூதிர்கால வருணனைகள், பர்தாதிதேசாந்த

வருணனை முதலியன இதில் விளக்கமாகவுள்ளன. இந்த இராம சரித்திரத்தால் ஏற்படும்பொருளாக ஒருமகாகவி கூறியிருப்பது - ''யாந்தி ந்யாய ப்ரவ்ருத்தஸ்ய-திர்யஞ்சோபிஸஹாயதாம் | அபந்தாநந்துகச்சந்தம் - ஸோதரோபி விமுஞ்சதி'' [இதன் பொருள்—நியாய வழியில் நடப்பவனுக்கு விலங்குகளும் துணைபுரிகின்றன; நெறியல்லா நெறியிற் செல்வோனைத் துணைவனும் கைவிடுவான்] என்பது. மற்றும் அநுமானுடைய திறமை, ஸ்ரீராமபிரானாலும் ஜாம்பவானாலும் இந்தக் கிட்கிந்தா காண்டத்தில் நன்கு வெளிப்படுகின்றது.

அடியேனது ஆசிரியரும் பிற்காலத்து உரையெழுதுவோர்க்கெல்லாம் ஒரு வழிகாட்டியுமாகி எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உ. வே. வை. மு. சடகோபராமாநுஜாசாரியர்ஸ்வாமி இந்தக் கிட்கிந்தாகாண்டத்தில் பம்பைப்படலம் முதல் கிட்கிந்தைப்படலம் வரையுமுள்ள படலங்கட்கெல்லாம் கல்லூரி மாணவர்க்காக நெடுங்காலத்துக்கு முந்தி உரையெழுதினர்; அப்போது அன்னார்க்கு உசாத் துணையாக இருந்து உதவியவர் ஸ்ரீமாந். சே. கிருஷ்ணமாசார்யஸ்வாமிகள். அந்த சடகோபராமாநுஜாசார்யர் ஸ்வாமி பரமபதித்த பிறகு, ஸ்ரீமாந். சே. கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமி மற்றைப் பகுதிகட்கும் உரையெழுதி, கிட்கிந்தாகாண்டத்தை வெளியிட விரும்பினர்: அப்போது அடியேன் உடனிருந்து அக்காலத்துக்கிடைத்த பிரதிகளையொப்பிட்டுப் பாடபேதங்களும் குறித்துக் காண்டம் முற்றிலும் உரையுடன் அச்சிட்டேன். பின்னர் மற்றைக் காண்டங்களைப் பதிப்பித்ததுபோலவே இக்காண்டத்தையும் பதிப்பிக்க நெடுநாட்கு முன்னரே கருதினேன். ஆயினும், இதற்கு முன் பதிப்புக்களில் அத்திறம் நிறைவேறவில்லை. இப்போதைய பதிப்பில் மற்றைக் காண்டங்களைப் போலவே பாடபேதங்களைக்குறித்தல் அகராதியமைத்தல் முதலியன செய்துள்ளேன். இடம்பொருள் ஏவல்களின் சௌகரியக்குறைவால் இந்தப்பதிப்பு மெதுவாக நடக்கலாயிற்று. இதற்குப் பழையவுரையே வெளியிட்டேனாயினும், புத்துரை என்று சொல்லுமாறு இவ்வுரையமைந்துளது.

இந்தக் கிட்கிந்தா காண்டத்தில் படலப்பிரிவு பலவகையாகக் காணப்படினும், எந்தப்படலப்பிரிவை மேற்கொள்வது நலம் என்று ஆராய்ந்து, அடியேன் மனத்திருத்தியை ஒட்டியே படலப்பிரிவை இப்பதிப்பில் மேற்கொண்டேன். படலம் முடிவு முதலியன மாறுபட்டிருத்தலையும், படலப்பெயர்கள் மாறுபட்டிருத்தலையும் ஆங்காங்குக் காட்டியுள்ளேன்.

பல பாடங்களுள்ள இடத்துப் பொருட்பொலிவு சொற்செறிவு ஓசைநயம் பொருள்கூற அரியதாகை முதலிய காரணங்களைமுன்னிட்டு இந்தப்பதிப்பில் ஒருபாடத்தை முக்கியமாகக்கொண்டும், சிற்சில இடத்துவேறுபாடங்கட்கும் பொருள்கூறும்முறைதெரியுமாறு உரைவகுத்தும் உள்ளேன். பிரதிபேதத்திற்காட்டியனசில பிரதானமாகக்கொள்ளத்தக்கன எனச் சிலர்க்குத்தோன்றலாம்: எல்லாவிடத்தும் யாவரும் இதுவே தக்கதென்று ஒருமனமாக எங்கும்

ஒப்புமாறு பிரதானபாடத்தை யமைப்பது, இயலாதசெயலாகும். கிடைத்த மற்றைப்பாடங்களை யெல்லாமும் காட்டவேணு மென்ற கருத்துடனே பிரதிபேதங்கள் காட்டியுள்ளேன்; சோர்வினால் சில இடத்துத் தவறுதல்நேர்தலும் இயல்பே.

இந்தப்பதிப்பிற்கு உரைவகுக்கும்போது ராவ்ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்களின் கம்பராமாயணசாரமும் உதவிற்று. இந்தப்பதிப்பு ஏற்கவே குறிக்கப்பெற்ற பாடபேதங்களைக் கொண்டதோடு, இன்னும் சில பாடபேதங்களைக் கொண்டுள்ளது. அவற்றுக்குத் திருவாளர் ராவ்ஸாஹிப் S. வையாபுரி பிள்ளையவர்கள் (திருவாங்கூர்ப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பீடாதிபதியாயமைந்துள்ளவர்) தந்த பிரதியும், ஸ்ரீராங்-மன்னார்கோவில் க்ருஷ்ணமாசார்யர் பதிப்பித்ததுஎன்று சொல்லப்படுகின்ற அச்சுப்பிரதியும், ஏற்கவே அச்சாகியுள்ள பழம்பிரதிகளும், ஒரு ஓலைச்சுவடியும் உதவியாயின. இன்னும், பல பிரதிகளைத் தேடிப்பெற்று ஒப்பிட்டுப்பார்த்தாலும் ஆங்காங்குச் சிறந்த பாடபேதங்கள் கிடைக்குமென்பது திண்ணம். ஏற்கவே பதிப்பித்த பிரதிகளில் இல்லாதபாடல்கள் பல கிடைத்தவை, இதிற் காட்டப்பட்டுள்ளன. அங்ஙனம் காட்டுமிடத்து மூன்று பாடல்கள் சோர்வினால் விடுபட்டனவாகத்தோன்றுகின்றன: அவை வருமாறு:—

நட்புக்கோட்படலம்–74ஆம் பாடலுக்குப்பின்

(1) நீலகண்டனு நேமியுங் குலிசனு மலரின்
மேலுளானும்வந் தவனுயிர்க் குதவினும் வீட்டி
ஆலுமுன்னர் சுரிமையோ டளிக்குவ னலோன்
சாலுமின்றென துரைக்கருஞ் சான்றெனச் சமைந்தான்

என்பதும், ஷை படலத்தில் 83-ஆம் பாடலுக்குபின்

(2) மண்ணுளோரரா முதுகிடை முளைத்தமா மரங்கள்
எண்ணிலேழுள வவற்றிலொன் றுருவவெய் திடுவோன்
விண்ணுள்வாலித னுருயிர் விடுக்குமென் றுலகின்
கண்ணுளோர்கடாங் கழறிடுங் கட்டுரை யுளதால்

என்பதும், கிட்கிந்தைப்படலத்தில் "நீரெலாம்" (43) என்ற செய்யுள் முன்னும் "அணையனுள்ளமும்"(42) என்ற செய்யுள் பின்னுமாகவுள்ள பிரதிகளில் அந்தச் செய்யுளுக்குப்பின்

(3) அன்னை போனபி னங்கதக் காளையைத்
தன்னை நேரிலச் சமீரணன் காதலன்
இன்ன நீசென் றிருந்துயி னீக்கென
மன்னன் வைகிடத் தேகினன் மாசிலான்

என்பதுமாம்.

பயிலவழங்காமல் முன்னரே காட்டப்பட்ட செய்யுட்களுக்குப் போலவே, இப்பதிப்பில் புதியனவாகச்சேர்த்தவைகட்கும் உரையெழுதப்படவில்லை: இப்பாடல்களெல்லாம் வெள்ளிப்பாட்டிற் சேர்ந்தனவோ? பின்னிட்டு வேறுகவிஞராற் சேர்க்கப்பட்டனவோ?

இந்தக்காண்டத்திலும் மற்றைக்காண்டங்களிற்போலவே, சீர் பிரித்த செய்யுளும், பதவுரையும் என்பவற்றோடு பாடலிற்கூறியுள்ள விடயம்விளங்குமாறு எல்லாச்செய்யுட்கும் தலைப்பும், கருத்து பதசாரம் அணிகள் தொனிப்பொருள், முதனூலுக்கும் இதற்கு முள்ளவேறுபாடுகள், ஒத்தபகுதிமேற்கோள்கள் புராணகதைகள் இலக்கணக்குறிப்புக்கள் மற்றும்கூறற்குஉரிய உரைநுணுக்கங்கள் முதலியனவும் காட்டப்பட்டுள்ளன. மற்றும் செய்யுள்முதற்குறிப் பகராதி அரும்பதவகராதி முதலியனவும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தக் கிஷ்கிந்தாகாண்டத்தைப் படிக்கும் அறிஞர் பலர்க்குக் கம்பநாடர் வானரர்கட்குச் சுக்கிரீவன் கூறியன ஆகவும், பின்னர் அவ் வானரர்கள் தேடியனவாகவும் குறிக்கப்பட்ட இடங்களைப் பற்றி யறிய வேணு மென்று ஓராவல் நிகழலாம்; அன்னவர்களின் ஆராய்ச்சிக்கு உதவுமாறு யாம் அறிந்தவற்றைக் கூறுவாம்:—

தேடுமாறு குறித்துள்ளவை:—(1) விந்தமலைப்பிரதேசம், (2) நருமதைப்பிரதேசம், (3) ஏமகூடமலைப்பிரதேசம், (இதன் பிறகு பாலைவனமும் பிலமும் துமிரனது பொய்கைத்தலமும் அலைந்து வருந்தியவை), (4) சரியபெண்ணை, (5) தசநவநாடு, (6) விதர்ப்ப மண்டலம், (7) தண்டகம், (8) முண்டகத்துறை, (9) பாண்டுமலை, (10) கோதாவரி, (11) சுவணநதிப்பிரதேசம், (பலநாடு கடந்தபிறகு) (12) குலிந்தம், (13) கொங்கணம், (14) அருந்ததிமலை, (15) மரகத கிரி, (16) வேங்கடமலைப்பிரதேசம், (அப்பால்) (17) தொண்டைநாடு (18) பொன்னிநாடு, (19) மலைமண்டலம், (20) தென்றமிழ்நாடு முத லியன; (பின்னர், பொதியமலை யிறைஞ்சியேகிக் காண்டற்குரியன மஹேந்திரமலையும் கடலும்) என்பன. ஈண்டு ஒரு விடயம் உன்னிப் பாகக் கவனித்தற்குரியது. சுக்கிரீவன் "சுவணத்தைக் கடந்தப் பால்.........உவணபதிக்கொளித்துறையும் கொங்கணமும் குலிந்த மும் சென்றுறுதிர்" என்று கொங்கணத்தை முன்னும் குலிந்தத் தைப் பின்னும் [நாடவிட்டபடலம்—23இல்] சொல்லியிருந்தாலும், மேல் ஆறுசெல்படலத்தில், வாநரவீரர் சுவணகத்துறையிற்புக்க வர், குலிந்தமும் புறத்துக்கொண்டு பின்னரே "கொங்கணம் ஏழும் நீங்கிக் குடகடல்............தவிரவேகி அருந்ததிக்கருகரானார்" என வருதலின், அங்ஙனே சென்ற நெறி கூறுதலே தகுதியாகும். நாட விட்டபடலத்து மாறிக்கூறியது, செய்யுளாதலினென்க.

இனி, யாம் ஏற்புடைத்தாகக் கண்ட சில அபிப்பிராயங்களைக் கூறுவோம்: அவை, கம்பர், தாம் கூறிய தென்திசை நெறியைத் தம் காலத்துத் தக்ஷிண இந்திய பூகோளரீதிக்கேற்ப மாறுபடாத படி அமைத்துள்ளார் என்பதைப் பெறவைப்பதற்காகவுமாகும்.

(i) "இஷ்கிந்தை என்பது - துங்கபத்திராநதிக்குச் சமீபமானதும் பம்பாசரஸ் இருந்த இடமுமாகிய ஹம்பிக்கரையடுத்து, மதங்கா சிரமத்தைப் பெற்றிருந்த ரிசியமூக பர்வதத்தின் தெனபாலும், நீல கிரி குடகுமலைத் தொடர்களுக்கு வடபாலுமாக மைசூர்மலைப்பிர தேசங்களையுள்ளடக்கிய மேற்குத்தொடர்ச்சிமலையாம்" என்று

குறிப்பெழுதியுள்ளனர், மு. ராகவய்யங்கார் ஸ்வாமிகள். சரித்திர அறிஞராகிய B. சூரியநாராயணராவ் என்போரும் விசயநகரராஜ்யத்தைப்பற்றித் தாம் எழுதியுள்ள நூலில் 'பண்டு வாலியாண்ட கிஷ்கிந்தைதான் பாழ்பட்ட ஆனகுந்தி, ஹம்பி இவையமைந்த இடம்' என்று கூறியுள்ளார். எனவே, கிஷ்கிந்தையைப்பற்றி ஒருவாறு இடம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தக் கிஷ்கிந்தையிலிருந்து தென்றிசையிற் செல்லவேண்டிய வாநரரை விந்தியமலைக்கு முதலிற் செல்லுமாறு சுக்கிரீவன் கட்டளையிட்டது எங்ஙனம் பொருந்துமென்னில்,—பூமிக்குமத்தி விந்தியம் என்று பேசுதலால், அதற்குத் தென்திசையெனக் கொண்டால் பொருந்துவதாம். மற்றும், தென்றிசை முற்றும் தேடவேண்டியவர் விந்தியமலையினின்று தேடத் தொடங்குதலும் (starting-place) பொருத்தமேயாகும்.

இனி, சென்ற நெறியில் இரண்டுநிலைகள் காணப்படுகின்றன.

(1) முதல்நிலை:—விந்தியமலை முதல் ஏமகூடபர்வதம் வரை:—இதில், வாநரவீரர்களும் இருவெள்ளம் சேனையோடு கலந்து தேடினர்.

(2) இரண்டாவது நிலை:—ஏமகூடம் முதல் மகேந்திரகிரி வரை:—இதில், வாநரவீரர்கள் மட்டும் தேடிவந்தனர். (கவனிப்பு—ஏமகூடத்தில் இருவெள்ளம் சேனையும் பிரிந்தது: ஏமகூடத்துப் பிரிந்தவானரசேனைவெள்ளமிரண்டும் தெள்ளுநீருலகெலாம் திரிந்து தேடிப் பின்னர் மயேந்திரமலையில் தமது வானரவீரர்களோடு ஒன்று கூடுகின்றது என்பது உணர்க.)

(ii) 'தசார்ண நாடு' என்பது மகாபாரதகாலத்தில் விந்தியமலைக்குச் சிறிது வடக்காக F. E. பார்ஜிடர் போன்ற அறிஞரால் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால், கம்பராமாயணத்தில் தசார்ணம் கரியபெண்ணைக்குத் தெற்கிலிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. 'கரியபெண்ணை' என்பது 'வேன்கங்கா' (Wainganga) நதியாகத்தானிருத்தல்வேண்டுமென்பது அந்நதிக்குத்தெற்கேவிதர்ப்பம் [பீரார்] இருப்பதாகக் கூறியிருத்தலாலே வலியுறுகின்றது. எனவே, மகாபாரதகாலத்தில் விந்தியத்துக்குஒட்டி வடக்குப்பிரதேசத் தசார்ணமென்னும்பேருள்ளநாடுபோலவே, ஒருகால் கம்பர்காலத்தில் விந்தியத்துக்குச் சற்றுத்தெற்குப்புறமாகவும் தசார்ணமென்னும்பேருடன் ஓர்நாடு நர்மதை வேன்கங்கா நதிகள் பாயும் பிரதேசங்களைத் தழுவியதாகக்கிடந்ததோ என ஐயுறவேண்டியிருக்கின்றது; இஃது பொருந்துமாறும் ஆகும். எங்ஙனமயினும், தசார்ணநாட்டை 'சந்திரகிரியின் கிழக்கு' எனச் சில ஆய்வாளர் கொள்வது ஏற்புடையதாகத் தோன்றவில்லை. அஃது 'கரியபெண்ணை' என்பதை வட பெண்ணையெனக் கொண்டதால் நேர்பட்ட மாறுபாடாகும்.

(iii) இனி, 'கரியபெண்ணை' நதியானது 'வேன்கங்கா' வாகும் என்று நிர்ணயித்தபின் அந்நதிக்கும் நர்மதைக்கும் இடையே ஏமகூடம் பேசப்பட்டிருத்தலால், இந்த ஏமகூடம்என்பது வேன்கங்காவுக்குச் சற்றுவடமேற்காகக்காணப்படும் 'மகாதேவ்' மலைத்தொடர்களின் மேல்பாலுள்ளபகுதிஎனக் கொள்ளலேஏற்புடைத்து.

(iv) இனி, சுவணநதியைப்பற்றி ஒருகுறிப்பு மகாபாரதம் வன பர்வத்துக்காணப்படுகின்றது. அதனைப்பற்றி, பார்ஜிடர் என்பார் ஆங்கிலத்தி லெழுதியுள்ள மார்க்கண்டேய புராணத்துக் [பக்கம் 300, கீழ்க்குறிப்பு] கூறுவதாவது—இந்தச்சுவேண (Su-vena) நதி இப்பெயரை 'க்ருஷ்ணவேணு' என்ற நதியினின்று வேற்றுமை தெரிதற்காரணமாகவே பெற்றுள்ளதென்பது.

(v) இனி, சூரியகாந்த சந்திரகாந்தமலைகள், அருந்ததிமலை, மரகதமலை இவைகளைப்பற்றி ஆய்ந்து ஒருவேளை இவைகளாயிருக்கலாமோவென ஒருவகையிலும் தெற்றெனத் தெளிதற்குக் கூடவில்லை. வானரர்களின் சென்றவழியைப்பற்றி எமது கருத்து இவ்வளவே.

இந்த இரண்டாம் பதிப்புத்தொடங்கியதுமுதல் முற்றும்வரையும் தமக்கு என்னவேலையிருப்பினும் ஒருமுறையாவது பார்த்துத் தரும் பணியைத்தாமே மகிழ்வுடன்மேற்கொண்டு, தமக்குத்தோன்றிய அரியவிஷயங்களையும் ஆராய்ந்து சேர்த்து அவ்வாறே முற்றிலும் பார்த்து உதவியவர் சென்னை விவேகாநந்தர் கல்லூரியில் தலைமைத் தமிழ்விரிவுரையாளரான வித்துவான் C. ஜகந்நாதாசாரியர், எம். ஏ. எல், டி. Dipl. Geog. என்பவர்; அன்னார்க்கு ஸ்ரீராமபிரானருளால் பல்வகைநலனும் உண்டாவதாக. திருவல்லிக்கேணி நேஷனல் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக இருக்கும் வித்துவான் வைத்யநாத ஐயரவர்கள் அகராதியில் சிலபகுதியே அமைத்தார்: அவர் மனப்பான்மையைப் பாராட்டுகின்றேன்.

இந்தப்பதிப்பில் அச்சுச்சாலையாரின் அஜாக்கிரத்தையாலும் என்னுடைய சோர்வாலும் பிழைகள் நேர்ந்திட்டன; அவற்றுள்முக்கியமான பலவற்றிற்குத் திருத்தங்காட்டியுள்ளேன். கற்றோரும் கற்போரும் பொறைமேற்கொண்டு திருத்திப்படித்துக்கொள்வாராக.

"குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

வை மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர்.

ஐந்தாம் பதிப்பு:—இந்தப்பதிப்பு நான்காம்பதிப்பையொட்டியே அமைந்துள்ளது. இந்தப்பதிப்பு அச்சாகுங்கால் அச்சுத்தாளைத் திருத்தல் முதலியவகையால் பெரிதும் உதவியவர்—தமிழ்ப்பேராசிரியர் வித்வான் C. ஜெகந்நாதாசாரியர், எம். ஏ. எல். டி. ஆவர். இவர் திறத்து நன்றியறிதலுடையேன்.

பிலவங்க, ஆனி மீ
1967

வை. மு. நரசிம்மன்.

கம்ப ராமாயணம்

நான்காவது

கிட்கிந்தா காண்டம்

இட்கிந்தாகாண்டமென்ற வடமொழித் தொடர்மொழி, ஆரும் வேற்றுமைத்தொகை; கிட்கிந்தையின் சம்பந்தமான காண்டம் என விரியும்; இட்கிந்தையைப்பற்றிய காண்ட மென விரித்து, இரண்டனுருபும் பொருளுந் தொக்கதொகை யெனினுமாம். இட்கிந்தம் என்பது, ஒருமலை; அம்மலையைச்சார்ந்த நாடு கிட்கிந்தா எனப்பெயர் பெற்றது: அதன் பிரதான பட்டணத்துக்கும் கிட்கிந்தா என்று பெயர். இது, வாநரராசர்களான வாலிசுக்கிரீவர்கட்கு இராசதானி: குகைபோல மலையிடையேயுள்ளது. காண்டம்-கூட்டம்; இப்பொதுப் பெயர் - இங்கு, சரித்திரத்தின் ஒருபாகத்தை யுணர்த்துஞ் செய்யுள் களின் கூட்டமென்று சிறப்பாகக் கொள்ளப்பட்டு, ஒருபெரும் பிரிவுக்குப் பெயராக வழங்கியது. ஆகவே, கிட்கிந்தையில் நடந்த வரலாற்றைக் கூறும் பாக மென்றதாயிற்று. கிட்கிந்தா = கிஷ்கிந்தா: இது, கிட்கிந்தை எனவும் கிஷ்கிந்தை எனவும் வழங்கும்.

இக்காண்டம் - பம்பைப்படலம் முதல் மகேந்திரப்படலம்ஈறாக 14 - படலங்கள் அடங்கிய 1050 - செய்யுளுள்ளது.

கம்பர் தனியன்.

தரலாற்றுங் கவிச்சக்ர வர்த்திசெய்யுள் தானுழ முடைமை நோக்கி
வரலாற்று முறைமும்மைத் தமிழுணர்த்த முதியோரு மற்று ளோரும்
முரலாற்றுங் கடற்பாரிற் கம்பசூத் திரமுதுசொன் மொழிப வன்னேற்கு
எரலாற்று மால்சங்க மொக்கு மெனின் யாம்வேறெப் பியம்ப லாமால்.

கடவுள் வணக்கம்: சீராம துதி.

மூன்றுரு வெனக்குண மும்மை யாமுதல்
தோன்றுரு வெவையு[1]மம் முதலைச் சொல்லுதற்கு
[2]ஏன்றுரு வமைந்தவு [3]மிடையி னின்றவும்
[4]சான்றுரு வுணர்வினுக் [5]குவந்த தாயினன்.

இது, காப்புச்செய்யுள். இதனால், கவி தாம் பாடத்தொடங்கிய காண்டம் இடையூறில்லாமல் இனிது முடிதற்பொருட்டு, உயர்ந்தோர் வழக்கத்தின்படியே செய்யப்படுங் கடவுள்வணக்கத்தை, மாநசமாக வன்றி வாசிகமாகவுங் கூறுகின்றார். நான்முகத்திற் கடவுள்வணக்கங்கூறியது அமையாதோ? காண்டந்தோறும் கூறவேண்டுமோ? எனின்,—ஆசிரியர் பதஞ்சலியார் 'மங்களத்தை முதலிலும் இடை

யிலும் கடையிலு முடைய நூல்கள் மிகச்சிறப்புடன் தோன்றும் என மாபாடியத்திற் கூறினராதலின், இடையிலும் மங்களமாகக் கடவுள்வாழ்த்துக் கூறுதல் நலமாதலாலும், கல்விக்குப்பயன் கடவுளை வணங்குதலே யாதலாலும், நூல் ஒன்றேயாயினும், காண்டங்கள் பொருளால் வேறுபடுதலாலும் இவ்வாறு கூறினரென்க.

அலைகடனடுவணே சனந்தன்மீமிசை மலையென விழிதுயில் வளருமாமுகிலாய்ப் பரமபுருடனாகிய மன்றலர்துளவினனே கசரத துரகமாக்கடல்கொள் காவலன் தசரதனுக்குமதலையாய், இம்மாண் கதைக்கோரிறையாய் ஸ்ரீராமனாகித்திருவவதரித்ததனனே, கவிச்சக்கரவர்த்தியான கம்பர், ஈடுமெடுப்புமில்லாத இவ்வுத்தம நாயகன் விஷயமாகச் செய்யப்புக்க இப்பெருங்காப்பியத்திற்கு அவரையே வாழ்த்தல் வேண்டுதலின், காண்டந்தோறும் அவர் விஷயமாகவே கடவுள்வாழ்த்துக் கூறத் துணிந்து, பாலகாண்டத்தில் ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களைச் சொல்லுகிற முறையாலே மூன்றுகவிகளாற் கூறி, அயோத்தியாகாண்டத்தில் இக்காப்பியத் தலைவராகிய ஸ்ரீராமபிரான் சருவேசுவரனென்று கூறி, ஆரணியகாண்டத்தில் அப்பெருமான் வேதம்முதலிய நூல்களாலும் பிரமன் முதலிய பெரியோர்களாலும் உணர்தற்கரிய பரவஸ்து என்று கூறி, இக்காண்டத்தில் இக்கவியால், அப்பெருமான் சகல பிரபஞ்சத்தையும் தனக்குச் சரீரமாகக்கொண்டவனென்று அவன் தன்மையைப் பேசுகிறார்.

(இதன்பொருள்.) உணர்வினுக்கு - (காண்பவர் கேட்பவர்களின்) நல்லறிவுக்கு, உவந்தது ஆயினான் - உவப்பைத்தரும் பொருளாயிருக்கின்ற ஸ்ரீராமபிரானுக்கு,—மூன்று உரு என - மூன்றுநிறங்களென்று சொல்லும்படி, குணம்மும்மை ஆம்-மூன்று குணங்களையுமுடைய, முதல் - மூலப்பிரகிருதியும், தோன்று உரு எவைஉம் - (அந்தமூலப்பிரகிருதியினின்று) உண்டாகிய எல்லாத் தத்துவங்களும், அ முதலை சொல்லுதற்கு ஏன்று உரு அமைந்த உம் - அந்த மூலப்பிரகிருதியை (நிரூபிக்குமாறு பெயரும் உருவமும் கொடுத்து)ச் சொல்லும்படி பொருந்தி வடிவமைந்த பிரபஞ்சங்களும், இடையில் நின்றஉம் - அப்பிரபஞ்சத்தினிடையே புகுந்து நின்ற ஜீவன்களும், சான்ற உரு - (தனக்குச்) சிறந்த சரீரமாம்; (என்றவாறு.)

மூலப்பிரகிருதியும், சேதநாசேதநங்களின் வடிவமானஎல்லாப் பிரபஞ்சமும் பரமான்மாவுக்குத் திருமேனி யென்னுமிடத்தை, ஸ்ரீ விஷ்ணுபுராணம் ஸ்ரீபாகவதம் முதலியவற்றிலே மிகத்தெளிவாய்ப் பரக்கக் காண்க. 'ராமன்' என்னுஞ்சொல்லுக்கு 'தன்பக்கல் யாவரும் மனங்களிக்கப்பெற்றவன்' என்பது பொருளாதலால், அக்கருத்துப்பற்றி, இங்கு 'உணர்வினுக்கு உவந்ததாயினன்' என்றார். ஆகவே, இது ஸ்ரீராமபிரானைப் பற்றியதாயிற்று. 'மூன்றுரு' என்னுமிடத்தில், 'உரு - நிறம்; இரண்டாம் அடியிலுள்ள 'உரு' என்பது - வடிவுள்ள தத்துவங்களையும், மூன்றும் அடியிலுள்ள 'உரு' என்பது-பிரபஞ்சத்தையும், நான்காம் அடியிலுள்ள 'உரு' என்பது - சரீரத்தையும் காட்டும்.

நிறம் மூன்றுவன - வெண்மை, செம்மை, கருமை என்பன. குணம் மூன்றுவன - ஸத்வம், ரஜஸ், தமஸ் என்பன. மூலப்பிரகிருதிக்கு இந்தமூன்று நிறங்களும் முக்குணங்களும் சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. [3] இடையினின்றவன். [5] உணர்வதாயினன் என்ற பாடத்துக்கு—முதல்தோன்று உரு எவையும், அம்முதலைச் சொல்லுதற்கு ஏன்று உரு அமைந்தவையும், இடையில் - தன்னிடத்திலே, நின்றவன் - நிற்கப்பெற்றவன்: (பிராணிகள் புரியும் கருமங்களெல்லாவற்றுக்கும்), சான்றுஉரு - சாட்சியான வடிவுள்ளவன்: உணர்வினுக்கு - அறிவு என்னத்தக்க ஆன்மாவுக்கும், உணர்வுஅது ஆயினன் - உயிராக அமைந்தவன் என்றுபொருள்.

மும்மை என்பது மூன்றென்ற பொருளையே குறித்ததனால் இதில் 'மை'-பகுதிப்பொருள்விகுதி யென்க. 'முதல்' என்னும் பண்புப் பெயர் - ஆகுபெயராய், முதன்மையான மூலப்பிரகிருதியை யுணர்த்திற்று. 'முதல்' என்பதன ஈற்றில் எண்ணும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது. மூலப்பிரகிருதியினின்று உண்டாகிய தத்துவங்கள்;—மாந் 1, அகங்காரம் 1, மனம் 1, ஞானேந்திரியம் 5, தந்மாத்திரை 5, பூதம் 5 என இவை. சான்ற என்ற பெயரெச்சத்தின் இறுதி, தொகுத்தல். அமைந்த, நின்ற-பெயர்.

துறை - கடவுள் வாழ்த்து; தொல்காப்பியத்தில் "வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே" என்றதன்கண், 'வகை' என்றதனாற் கொண்ட அறுமுறைவாழ்த்தன்றித் தனக்கும் பிறர்க்கும் பயன்படும்படி "யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது" என்றதனால், முன்னிலையன்றியுங் கடவுளை வாழ்த்துதலின், இக்கவி கடவுள் வாழ்த்தெனப் பெயர்பெற்றது. [அறுமுறை வாழ்த்தினுள் வாழ்த்தப்படும் பொருள்களாவன:—முனிவரும், பசுவும், பார்ப்பாரும், அரசரும், மழையும், நாடுமாம்.]

பி - ம்:—[1] இம்முதல். [3] ஏன்றுருவமைந்தவா. [3] இடையினின்றவர். [4] சான்றவருணர்வினுக்கு, ஊன்றுருவுணர்வினுக்கு, சான்றுருவுலகினுக்கு. [5] உலகந்தாயினன், உணர்வதாயினர். (1)

முதலாவது

பம்பைப்படலம்

பம்பை என்பது - ஒரு பெரிய பொய்கை; பொய்கை - மானிடராக்காத நீர்நிலை. அது, கிஷ்கிந்தாநகரத்துக்கு அருகிலுள்ளது. படலம் என்னும் வடசொல்லுக்குக் கூட்டமென்று பொருள்: ஆகவே, ஸ்ரீராமலக்ஷ்மணர் பம்பைப்பொய்கையைக் கண்டது, இராமபிரான் பிராட்டியைப் பிரிந்த பிரிவால் அப்பொய்கையிலுள்ள சக்கரவாகம் முதலிய பறவைகளையும் தாமரை முதலிய கொடிகளையுங் கண்டு இரங்கியது, அதில் நீராடிச்சந்தியாவந்தனம் செய்தது முதலிய செய்தியைச் சொல்லுஞ் சிறுபிரிவு என்றதாயிற்று. இப்

படலத்துக்குப் பெயர் - பம்பா நதிப்படலம் என்றும், பம்பைவாவிப் படலம் என்றும் ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகிறது.

1.—இதுமுதல் இருபத்தாறுகவிகள்-பம்பைப்பொய்கையின் வருணனை.

தேன்படி மலரது செங்கண் [1]வெங்கைம்மா
தான்படி கின்றது தெளிவு சான்றது
மீன்படி மேகமும் படிந்து [2]வீங்குநீர்
வான்படிந் துலகிடைக் கிடந்த மாண்பது.

(இ - ள்.) (அப்பொய்கை),—தேன் படி மலரது-மதுப்பொருந்திய (தாமரை முதலிய நீர்ப்) பூக்களையுடையது: செம் கண் வெம் கை மா - சிவந்த கண்களையும் வெப்பம் பொருந்திய துதிக்கையையுமுடைய மதயானைகள், படிகின்றது - (தன்னிடம் வந்து) குளிக்கப் பெற்றது: தெளிவுசான்றது - தெளிவு மிக்குள்ளது; (ஆதலால்)—வீங்கு நீர் - மிக்க நீரையுடைய கடலானது, மீன் படி மேகம்உம் படிந்து - மின்னல் பொருந்திய மேகங்களும் (தன்னிடத்து வந்து) படியப்பெற்று, வான் படிந்து - ஆகாயம் படியப்பெற்று, உலகு இடை - நிலவுலகத்தின் நடுவிலே, கிடந்த - பொருந்தியிருந்த, மாண்பது - தன்மையை யுடையது; (எ - று.)—தான் - அசை.

கீழ் ஆரணியகாண்டத்தின் ஈற்றுக் கவியில் "பம்பையாம் பொய்கை புக்கார்" என்று கூறியுள்ளதனால், இதுமுதற் பதினைந்து கவிகளுக்கு 'அப்பொய்கை' எனத் தோன்றா எழுவாய் வருவித்து முடிக்க.

மலர்கள் நிறைந்து யானைகள் வந்து படியப்பெற்றுத் தெளிவு பொருந்திய அப்பம்பைப்பொய்கையானது, மின்னல்கள் நிறைந்து மேகங்கள் தவழ்கின்ற ஆகாயம் தங்கப்பெற்றதொரு கடலையொத் திருந்தது என்பதாம்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி.

மின்னல்கள் - மலர்களுக்கும், மேகங்கள் - யானைகளுக்கும், ஆகாயம்படிதல் - தெளிவுமிக்கிருத்தற்கும், கடல் - பொய்கைக்கும் ஒப்பு எனக் காண்க. யானைகள் கூட்டங்கூட்டமாகவந்து முழுகிக் கலக்கும்போது அவற்றின் இடையிடையே தோன்றி மறைகின்ற மலர்களை, மேகத்தினிடையே தோன்றி மறைகின்ற மின்னல்களாகக் குறித்தார். கருநிறத்திற்கும், மதமழை பொழிதற்கும் யானைக்கு மேகம் ஒப்பாம். ஆகாயம் சுத்தமாய் நிர்மலமான நிலைமையையுடைய தாதலால், தெளிவுக்கு உவமை கூறப்படும். தாமரை முதலிய நீர்ப் பூக்களின் மலர்ச்சி கூறப்பட்டதனால் ராமலக்ஷ்மணர் பம்பாபுஷ் கரிணியை யடைந்த காலம் வசந்தகாலமென்று முதனூலிற் கூறியதைக் குறிப்பித்தவாறாயிற்று.

யானை மதம்பிடித்திருக்கும்போது அதன்கண்கள் சிவந்தும், துதிக்கை வெப்பமாயும் இருக்குமாதலால், 'செங்கண் வெங் கைம்மா' என்றார். கைம்மா - துதிக்கையையுடைய விலங்கு: எனவே, யானையாயிற்று. கைம்மா - சாதியொருமையாதலால்,

'தான்படிகின்றது' எனப்பட்டது. குறிஞ்சிநிலக் கருப்பொருளாதல் பற்றி, கைம்மாவைக் கூறினர். 'யானைகள் படிந்து கலக்கினலும் தெளிவுசான்றது' என்றதனல், நீரின்மிகுதி கூறியவாறு.

[1]வேங்கைமா என்ற பாடங்கொண்டு, புலியாகியவிலங்கெனப் பொருள்கூறி, 'மீன்படி' என்பதை, மேகம் வீங்குநீர் வான் என்ற மூன்றனேடும் இயைத்து, அப்பொய்கை மின்னல்பொருந்திய மேகங்கள் பூமியிற் படிந்துகிடந்த மாண்பது, மீன்கள்பொருந்திய கடல் (இவ்விடத்திற்) கிடந்த மாண்பது, நக்ஷத்திரங்கள் பொருந்தியவானம் உலகிடைப்படிந்து கிடந்த மாண்பது என்று தனித்தனி முடிபுகொண்டு, அப்பொய்கைக்கே மேகம் கடல் வானம் என்ற மூன்றையும் உவமைகூறியதாக உரைக்கினுமாம்.

மீன் - மின் என்பதன் நீட்டல் விகாரம்: அன்றி, மின்னுவது - மீன் எனக் காரணப்பெயராகவும் வரும். மேகமும், உம் - எதிரது தழுவிய எச்சம். இனி, படி என்பதை 'படிந்து' என்பது விகுதி முதலியன தொக்கதாகக் கொண்டு, நக்ஷத்திரம் படிந்து என்றுமாம். வீங்குநீர் - கடலுக்கு வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. பி - ம்:—[2]வேலை நீர். (2)

2. ஈர்ந்தநுண் பளிங்கெனத் தெளிந்த வீர்ம்புனல்
பேர்ந்தொளிர் நவமணி படர்ந்த பித்திகை
சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலால்
ஓர்ந்துணர் வில்லவ ருள்ள மொப்பது.

(இ - ள்.) ஈர்ந்த நுண் பளிங்கு என - அறுத்து வேலைசெய்யப்பட்ட நேர்மையான [மிகமெல்லிய] ஸ்படிகக்கல்போல, தெளிந்த - மிகத் தெளிவாகவுள்ள, ஈர் புனல் - (அப்பொய்கையின்) குளிர்ந்த நீரானது,—பேர்ந்து ஒளிர் நவமணி படர்ந்த பித்திகை - இடையிட்டு விளங்குகின்ற ஒன்பதுவகை யிரத்தினங்களும் நிரம்பப் பதிந்துள்ள படித்துறைச்சுவர்களில், சேர்ந்துழி சேர்ந்துழி - அலைமோதி யடையும்பொழுதெல்லாம், நிறத்தை - (அந்தந்த இரத்நங்களின்) வருணத்தை, சேர்தலால் - அடைதலாலே,—(அப்பொய்கை), ஓர்ந்து - (பல நூல்களை) ஆராய்ந்தும், உணர்வு இல்லவர் - (அவற்றின் மெய்ப்பொருளை) அறிதலில்லாதவரது, உள்ளம் - மனத்தை, ஒப்பது - ஒத்திருப்பது; (எ - று.)

தெளிந்த புனல் பித்திகையின் நிறத்தைப் பெறுவதாகக் கூறியது - பிறிதின்குணம்பெறலணி. மெய்யறிவில்லார் மனம் தன்னில் ஒரு தேர்ச்சியின்றி ஆங்காங்குக்காணும் பொருள்களையெல்லாம் மெய்ப்பொருளென்று பற்றுவதுபோல, பொய்கையின் நீர் தனக்கென ஒருநிறமு மில்லாமல் பித்திகையின் ஒவ்வொருவகை யிரத்தினங்களையும் சாரும்போது அவற்றின் நிறத்தைக் கொண்டு தோன்றுவதுஎன்பது தொழில்பற்றிவந்த உவமையணி. அப்பொய்கையின்நீர் மிகத்தெளிவுள்ளதெனபதனை விளக்குதற்கு, ஈர்ந்த நுண்பளிங்கை உவமை கூறினர்; தெளிவுமிகுதியால் தன்னை

யடுத்த பொருளின் உருவத்தைத் தான் கொண்டு காட்டுதலில், ஈர்ந்தநுண்பளிங்கும் புனலும் ஒக்கும்; "அடுத்தது காட்டும் பளிங்கு" என்றார், திருவள்ளுவரும்.

நவமணிகளாவன - கோமேதகம், நீலம், பவளம், புஷ்யராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன. உணர்வு இன்னதென்பதனை "எப்பொருளெத்தன்மைத்தாயினு மப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னுந் திருக்குறளாலும் அறிக. ஈர்ம்புனல் - பண்புத்தொகை. 'பித்திகா' என்னும் வடமொழி, ஆவீறு ஐயாயிற்று. சேர்ந்துழி - தொகுத்தல்; அடுக்கு - தொறுப் பொருளது. 'பல நூல்களை' என்பது, இசையெச்சம். 'ஓர்ந்தும்' என்னும் உயர்வு சிறப்பும்மை, விகாரத்தால் தொக்கது. (3)

3. குவான்[1] மணித் தடந்தொறும் பவளக் [2]கோலிவர்
கவானரச‌ சன்னமும் பெடையுங் காண்டலின்
தவாநெடு [3]வானகந் தயங்கு மீனொடும்
உவாமதி யுலப்பில வுதித்த தொப்பது.

(இ - ள்.) குவால் மணி - கூட்டமாகிய முத்துக்களையுடைய, தடம் தொறும் - அப்பொய்கையினிடமெல்லாம், பவளம் கோல் இவர் கவான் - பவழத்தாலான கோலைப்போன்ற [சிவந்துநீண்ட] கால்களையுடைய, அரசு அன்னம்உம் - ராஜஹம்ஸம் பலவும், பெடை உம் - (அவற்றின்) பெடைகள் பலவும், காண்டலின் - (சேர்ந்து) காணப்படுதலால்,—(அப்பொய்கை),—உலப்பு இல் - அளவில்லாத [மிகப்பல], உவா மதி-பௌர்ணமியில் தோன்றுகின்ற பூர்ணசந்திரர்கள், தயங்கும் மீனொடுஉம் - விளங்குகின்ற (தம்மனைவியர்களாகிய) நக்ஷத்திரங்களுடனே, உதித்தது- (தன்னிடத்தே ஒருசேர) விளங்கப் பெற்றதாகிய, தவா நெடு வான் அகம் -அழியாத பெரிய ஆகாயத்தினிடத்தை, ஒப்பது - ஒத்திருப்பது; (எ - று.)

முத்துக்கள் நிறைந்த பொய்கையினிடங்களில் அங்கங்கே பெடைகளாற் சூழப்பட்டுத் தோன்றும் அரசவன்னம், பலதாரகைகள் நிறைந்துள்ள ஆகாயத்தினிடங்களில் அங்கங்கே மனைவியரான அசுவினி முதலிய நக்ஷத்திரங்களாற் சூழப்பட்டுத் தோன்றும் பூரண சந்திரரை யொக்கும் என்றவாறு; தற்குறிப்பேற்றவணி. அன்னத்துக்கு - வெண்மதியும், அதன் பெடைகளுக்கு - அசுவினி முதலிய நட்சத்திரங்களும், முத்துக்களுக்கு - மற்றைத்தாரகைகளும், பொய்கைக்கு - வானமும் உவமை. இனி, முத்துக்களினிடையே அன்னம் தோன்றுவது, நட்சத்திரங்களினிடையே சந்திரன் விளங்குவது போலும் என உரைப்பினும் அமையும்.

இச்செய்யுளில் மருதநிலத்திற்குப் பயின்ற அன்னத்தைக் குறிஞ்சிநிலத்தில் மயங்கக் கூறியது, "எந்நில மருங்கிற் பூவும் புள்ளும், அந்நிலம் பொழுதொடு வாராவாயினும், வந்த நிலத்தின்

பயத்தவாகும்" என்பதனால் அமைந்தது; மேல் - புள்ளும் பூவும் முதலியன மயங்கக்கூறுவனவற்றிற்கும் இஃது ஒக்கும்.

அரசன்னம் - அன்னப்பறவைகளிற் சிறந்தது: உடம்பு முழுவதும் வெளுத்து மூக்குடன் கால்சிவந்து நீண்டிருப்பது அதனிலக்கணமாதலின், 'பவளக்கோலிவர்கவானரசன்னம்' என்றார். காற்று, நெருப்பு, நீர், நிலம் என்னும் மற்றை நான்கு பூதங்களுக்கும் காரணமாகி முன்னே தோன்றி அவையெல்லாம் அழியுமளவும் தான் அழியாதிருத்தலால், 'தவா' என்னும் அடைமொழி, வானுக்குக் கொடுக்கப்பட்டது. அசுவினி முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்களும் சந்திரனுக்கு மனைவியரென்பது நூற்கொள்கை.

கவான் - தொடை யென்னும் பொருளையுடைய இச்சொல், இலக்கணையாற் காலையுணர்த்திற்று. அன்னம் - ஹம்ஸமென்னும் வடமொழியின் சிதைவு. தொல்காப்பியத்து மரபியலில் "புள்ளு மூரிய அப்பெயர்க் கென்ப" என்றதன்பின், "பேடையும் பெடையும் நாடி னொன்றும்" என்றதனால், பெடை யெனப்பட்டது. தவா - எதிர்மறைப்பெயரெச்சம்: இதில் தபு என்பதன் திரிபாகிய தவு-முதனிலை. பி - ம்:—[1]மணல். [2]கொம்பிவர். [3]கானகம். [2]காலிவர் என்னும் பாடம், மோனைத் தொடைக்குச் சிறவாது. இது, இப்படலத்து 5 - ஆம் பாடலாகச் சில பிரதியில் உள்ளது. (4)

4. ஓதநீ ருலகமு முயிர்க ளியாவையும்
வேதபா ரகரையும் விதிப்ப வேட்டநாள்
சீதம்வீங் குவரியைச் செருக்கு மாறொரு
காதிகா தலன்தரு கடலி னன்னது.

(இ - ள்.) (அப்பொய்கை),— ஒரு - ஒப்பில்லாத, காதி காதலன் - காதி யென்னும் ராஜரிஷியினது குமாரராகிய விசுவாமித்திரர், ஓதம் நீர் உலகம்உம் - குளிர்ந்தகடல்நீரால் சூழப்பட்ட உலகத்தையும், உயிர்கள் யாவைஉம் - (அவ்வுலகத்திலடங்குகின்ற) உயிர்களெல்லாவற்றையும், வேதபாரகரைஉம் - வேதங்களாகிய கடலின் கரையைக் கண்ட பிராமணர்களையும், விதிப்ப - (வேறே) படைத்தற்பொருட்டு, வேட்ட - விரும்பிய, நாள் - காலத்தில்,—சீதம் வீங்கு உவரியை - குளிர்ச்சிமிக்க உப்புக்கடலை, செருக்கும் ஆறு - மாறுகொள்ளும்படி, தரு - படைத்த, கடலின் - நல்லநீர்க்கடலை, அன்னது - ஒத்திருப்பது; (எ - று.) "காசடை" (8) என்பது 4 - ஆம் பாடலாகச் சில பிரதியில்.

இப்பொய்கை, இனிய நீருடையதாதலால், பூமியைச் சூழ்ந்த லவண சமுத்திரத்துக்கு மாறாகப் பூமியினிடையே படைத்ததொரு நன்னீர்க்கடலைப் போன்ற தென்றார்: (இவ்வருணனை, வடமொழியுள்ளுங் காதம்பரியில் அச்சோதமென்ற சரசின் வருணனையிற் கூறப்பட்டிருக்கிறது:) தற்குறிப்பேற்றவணி.

வேதபாரகர் - வேதத்தைக் கரைகண்டவர்: வேதம்முழுவதையும் தாம் ஐயந்திரிபற உணர்ந்து பிறர்க்கு ஓதுவிக்கவும் வல்லவர் என்ற

படி. வேதம் - நன்மை தீமைகளை அறிவிப்பது எனக் காரணக்குறி. பாரகர்-கரையை அடைந்தவர்; பாரம்-அக்கரை. அடைதல் - அறிதல். இனி, பாரம்-முடிவு எனக்கொண்டு,வேதத்தின் முடிவாகிய வேதாந்த சாஸ்திரத்தை யறிந்தவரென்றுமாம். சிறப்புப்பற்றி, அந்தணரைத் தனியே எடுத்தோதினர். பிரம சிருஷ்டிக்குமாறாக எல்லாவுலகங்களையும் இந்திராதிதேவர்களையும் மற்றுமுள்ள பொருள்களையும் படைக்கத்தொடங்கிய சிறப்புப்பற்றி 'ஒரு காதிகாதலன்' என்றார். இனி, ஒரு கடல் என்றுங் கூட்டலாம். காதி - விசுவாமித்திர முனிவனது தந்தை: பிரமனது புதல்வனான குசனென்னும் அரசனது புத்திரர் நால்வருள் குசநாபனது மகன். காதலன் - அன்புக்கு விஷயமானவன்.

விசுவாமித்திரர் பிரதிசிருஷ்டி செய்யத்தொடங்கியது, அயோத்தியரசனாகிய திரிசங்குமகாராசனுக்கு மனிதசரீரத்துடனே சுவர்க்கங் கொடுக்க முயன்றபொழுதில்: அவ்வரலாறு வருமாறு: சூரியகுலத்துத் தோன்றிய (அரிச்சந்திரனது தந்தையாகிய) திரிசங்கு மகாராசன் தனது குலகுருவாகிய வசிட்டரை நோக்கி 'இவ்வுடம்புடனே யான் சுவர்க்கலோகமடையும்படி அருள்செய்ய வேண்டும்' என்று வேண்டியதற்கு, 'அவர் அது இயலாது: இறந்த பின்னர் அடையலாம்' என்று சொல்லி மறுக்கவே, அரசன் 'ஆனால், வேறு குருவை நாடியடைகின்றேன்' என்ன, முனிவர் 'குருத்துரோகியாகிய நீ சண்டாளனாவாய்' என்று சபிக்க, உடனே அவன் சண்டாளனாகி நகர்நீங்கி வெளியில் அலைகையில், தென்திசையில் தவஞ்செய்து கொண்டிருந்த விசுவாமித்திரரை யடைந்து நிகழ்ந்ததைச் சொல்ல, முன்னமே வசிஷ்டரிடத்துப் பகைமை கொண்டவராகிய அவர் அவனுக்கு அவ்வரமளிக்க உடன்பட்டு வேள்வியொன்று செய்து அதற்குவாராததுபற்றித் தேவர்மீது கோபங்கொண்டு திரிசங்குவைத் தமது தவவலிமையால் ஒருவிமானத்திலேற்றி மேலுலகத்திற்குச் செலுத்த, அங்கே தேவர்கள் புலையன்வரலாகாதென்று தள்ளிவிட, கூக்குரலிட்டுக்கொண்டு தலைகீழாக விழுகின்ற அத் திரிசங்குவை விசுவாமித்திரர் தமது தவவலிமையால் அங்ஙனமே ஆகாயத்தில் நிலைநிறுத்தி, தேவர்கள்மீது சினந்து பிரதியுலகம் படைக்கத் தொடங்கிச் சிலவற்றைச் சிருஷ்டித்து, பின்பு தேவர் வேண்டுகோளினால் அச்செயலொழிந்தன ரென்பது. (5)

6. [1]எற்பொரு நாகர்த மிருக்கை யீதெனக்
கிற்பதோர் காட்சிய தெனினுங் கீழுறக்
கற்பக மணியவக் கவிஞர் [2]நாட்டிய
சொற்பொரு ளாமெனத் [3]தோன்றல் சான்றது.

(இ - ள்.) (அப்பொய்கை),—'எல் பொரு நாகர் தம் இருக்கை - (தம்மிடத்திலுள்ள மாணிக்கங்களின் ஒளியாற்) சூரியனோடு மாறுபடுகின்ற நாகர்கள் வசிக்கின்ற பாதாளலோகம், ஈது - இதுதான்,' என இற்பது - என்று அண்மையாகச் சுட்டிக்காட்டிச்

சொல்லத்தக்கதாகிய, ஓர் காட்சியது எனின்உம்-ஒரு தோற்றத்தை யுடையதா யிருந்தாலும் [பாதாளம் வரையிலும் ஆழ்ந்துள்ளதாயி னும்],—கற்பகம் அனைய-கல்பகவிருட்சம்போன்ற, அ கவிஞர்-அந்த [சிறந்த] மகாகவிகள், காட்டிய - (தாம்செய்து உலகத்தில்) நிலை நிறுத்திய, சொல் பொருள் ஆம் என - சொற்களின் பொருள்போல, கீழ் உற - கீழுலகம் வரையிலும், தோன்றல் சான்றது - விளங்குத லமைந்தது: [மிகவுந் தெளிவுடைய தென்றபடி]; (எ - று.) இது 3 - ஆம் பாடலாகச் சில பிரதியில் உள்ளது.

நல்ல கவிகள் செய்தநூல் ஆராய்ந்துபார்க்கப்பார்க்க ஆழ்ந்த கருத்தையுடையதா யிருந்தாலும் பொருளை ஐயத்துக்கிடமாகாது விளங்கவைத்தல் போல, இப்பொய்கை ஆழ்ந்து தெளிந்துமுள்ள தென்றவாறு; உவமையணி. கீழ் "சான்றோர்கவியெனக் கிடந்த கோதாவரி" என்று நதிக்குச் சான்றோர்கவியை உவமை கூறியிருத் தல் காண்க.

கற்பகமனைய கவிஞ ரென்றது - நினைத்தவற்றை யெல்லாம் அறிந்து கவிபாடிக் கொடுக்கவல்லவ ரென்றபடி: அகரச்சுட்டு, பிரசித்தியைக் காட்டுகின்றது. நாகராவார் - படமும் வாலு முடையராய் மநுஷ்யரூபமுந் தெய்வப்பிறப்புமானதொரு சர்ப்ப ஜாதியார். கற்பகம் - தேவதரு; வடசொற்றிரிபு : வேண்டுவன வற்றை வேண்டியவாறே பெறும்படி கல்பிப்பது [உண்டாக்குவது] என்று பொருள். ஆம் - அசை. பி - ம்:—[1] எற்படர். [2] காட்டிய. [3] தோன்றுகின்றது. (6)

6. களனவி லன்னமே முதல கண்ணகல்
தளமலர்ப் [1] புள்ளொலி தழங்க வின்னதோர்
கிளவியென் றறிவருங் கிளர்ச்சித் தாதலின்
வள்நகர்க் கூலமே போலு மாண்பது.

(இ - ள்.) கண் அகல் - இடமகன்ற, தளம் மலர் - இதழ்களை யுடைய (தாமரை) மலர்களி லிருக்கின்ற, களன் நவில் - எழுத்து இன்னதென்று உணரமுடியாமல் இனிமையாகக் கூவுகின்ற, அன் னம் முதல-அன்னங்கள் முதலிய, புள்-பறவைகளின், ஒலி - சத்தம், தழங்க - மிகுதியாக ஒலிப்பதனால்,—இன்னது ஓர் கிளவி என்று - இத்தன்மையதான ஒருவகைத்தொனி யென்று, அறிவு அரு - அறிதல்கூடாத, கிளர்ச்சித்து - எழுச்சியை யுடையது: ஆதலின் - ஆதலால்,—(அப்பொய்கை),—வளம் நகர் கூலம் போலும் - பல வளப்பங்களும் நிறைந்த பெருநகரத்தினது கடைவீதியை யொக் கின்ற, மாண்பது-மாட்சிமையுடையது; (எ - று.)

பெரிய நகரத்துக் கடைத்தெருக்களிற் பலதேசத்து மனி தரும் கூடிப் பலவகைப் பாஷைகளைப் பேசும்போது உண்டாகின்ற பேரொலியானது இன்னதென்று அறியமுடியாதவாறு இருத்தல் போல, அப்பொய்கையிற் பலவகைப் பறவைகளும் சேர்ந்து கூவு

கின்ற ஒலியும் ஓசையென்று அறிவதன்றி இன்னவோசையென உணரமுடியாதபடியிருந்ததென்பதாம்; உவமையணி.

களனவிலன்னம் - கலஹம்ஸம்; காரன்னம். இதுவும், கீழ்க் கூறிய அரசவன்னமும் அன்னத்தின் ஜாதிபேதங்கள். ஏகாரம் இரண்டும் - இசைநிறை. மலரென்பது - இங்குச் சிறப்பாய்த் தாமரையைக் குறித்தது. பி - ம்:—[1] புள்ளொடு தயங்க. (7)

7. அரிமலர்ப் பங்கயத் தன்ன மெங்கணும்
புரிகுழல் புக்கிடம் [1] புகல்கி லாதயாம்
திருமுக [2] நோக்கல மிறந்து தீர்துமென்று
[3] எரிபுகு வனவெனத் தோன்று மீட்டது.

(இ - ள்.) எங்கண் உம் - எல்லாவிடத்திலும், அரி மலர் பங்கயத்து - செந்தாமரை மலர்களிலுள்ள, அன்னம் - அன்னப் பறவைகள், 'புரி குழல் புக்க இடம்-அழகாகக்கட்டிமுடித்த கூந்தலை யுடைய சீதாபிராட்டியார்சென்ற இடத்தை, புகல்இலாத - தெரிந்து சொல்லமாட்டாத, யாம்—, திருமுகம்நோக்கலம்-(ஸ்ரீராமபிரானது) அழகிய முகத்தைப் பாராமல், இறந்து தீர்தும் - இறந்து ஒழிவோம்,' என்று - என்று எண்ணி, எரி புகுவன என - நெருப்பிற் குதிப்பனபோல, தோன்றும் - காண்பதற்கு இடனான, ஈட்டது - தன்மையை யுடையது, (அப்பொய்கை); (எ - று.)

அப்பொய்கையிற் செந்தாமரைமலர்மேலுள்ள அன்னங்கள், இலக்குமியாகிய சீதாபிராட்டிக்கும் அன்னங்களாகிய தமக்கும் உறைவிடம் தாமரையென்ற ஒன்றாகவேயிருந்தும், அவள் செய்தியை அறிந்து உரையாமையாகிய குற்றம் தம்மீது இருப்பதுபற்றி இப்போது ஸ்ரீராமபிரானது திருமுகத்தைப் பாராமல் இறந்துவிடுவோமென்று நினைத்து நெருப்பிற் குதிப்பன போலக்காணப்பட்டன வென்பதாம்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. நெருப்பை உவமை கூறியதனால், அரிமலரெனப்பட்டது; அரி-செம்மை. தாமரைக்கு நெருப்பு உவமை கூறப்படுவதை, "புண்டரிகம் தீயெரிவதுபோல் விரிய" என்னும் நளவெண்பாவிலும் காண்க. இனி, அரிமலரென்பதற்கு-வண்டுகள் மொய்த்தலையுடையமலரெனப் பொருள்கொண்டால், மலரில்மொய்க்கின்ற வண்டுகள் நெருப்பினின்று எழுகின்ற புகைக்கு உபமேயமாம்.

பங்கயத்துமலரென மாறுக. பங்கயம் - பங்கஜம்; சேற்றில் முளைப்பது. புரிகுழல் - அன்மொழித்தொகை. புக்கிடம் - பெயரெச்சவீறு தொகுத்தல். பி - ம்:—[1] புகல்கிலாமையால், புகற்கிலாமையாம். [2] நோக்கிலம். [3] எரியினிற் புகுவபோற் புகுவதொப்பது. (8)

8. காசடை [1] விளக்கிய காட்சித் தாயினும்
மாசடை பேதைமை யிடைமயக்கலால்
ஆசடை நல்லுணர் வணைய தாமெனப்
பாசடை வயின்தொறும் பரந்த பண்பது.

(இ - ள்.) (அப்பொய்கை),—மாசு அடை பேதைமை - குற்றம் பொருந்திய அவிச்சையானது, இடை - நடுவில்நின்று, மயக்கலால்-மயங்கச்செய்தாலே, ஆசு அடை - அற்பத்தன்மையை (இடையிலேயே) அடைந்த, நல் உணர்வு - நல்ல மெய்யறிவை, அனையது ஆம் என - போன்றது என்னும்படி,—காசு அடை - முத்துக்கள் (தன்னுள்) பொருந்தியிருத்தலே, விளக்கிய - (வெளியே நின்று காண்போர்க்கு) விளங்கச்செய்த, காட்சித்து ஆயின்உம் - (மிகத்தெளிந்த) தோற்றத்தையுடையதா யிருந்தாலும், பசு அடை - பசிய இலைகள், வயின் தொறும் - இடையிடங்கள் தோறும், பரந்த - பரவப்பெற்ற, பண்பது - தன்மையையுடையது; (எ - று.)

நல்லறிவு தான் மாசற்றதாயிருந்தாலும் ராஜஸ தாமஸ குணங்கள் இடையிடையே தோன்றி மயக்குதலால் மாசடைந்து தன் நிலைமை தோன்றாதிருப்பதுபோல, பொய்கை கீழுள்ள பொருள்களை யெல்லாம் நன்குவிளங்கச் செய்கின்ற மிகத்தெளிந்த நீருடையதாயினும் தாமரை முதலிய நீர்க்கொடியின் பச்சிலைகள் இடையிடையே பரவி மறைத்தலால் தன் நிலைமை தோன்றாதிருக்குமென்பதாம்; உவமையணி. "வையகத் துருவினர் மலராவறிவினைப், புலநிறை மறைத்த புணர்ப்பது போலக், குளிர்கொண்டுறையுங் மெளிநீர் வாவியை, வள்ளை செங்கமலங் கள்ளவிழாம்பற், பாசடைமறைக்கும்" என்றார் பிறரும்.

மெய்யறிவாவது-பிறப்புவீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களாலன்றி உண்மையால் அறிதல்; இதனை வடநூலார் தத்வஜ்ஞாந மென்பர். அவிச்சையாவது - மறுபிறப்பும் இருவினைப் பயனும் கடவுளும் இல்லையெனவும், மற்றும் இத்தன்மையனவுஞ் சொல்லும் மயக்கநூல்வழக்குகளை மெய்ந்நூல் வழக்கெனத் துணிதல்; குற்றியை மகனென்றும், இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றினைப் பிறிதொன்றாகத் துணிதலும் அது. ஆசடைதல் - துலக்கப்பட்ட புலன்களின் மேலே பழையபயிற்சிவயத்தால் ஒரோவழி நினைவு சென்று கெடுதல். காசு - நவமணிகளுக்குப் பொதுப்பெயர்; இங்குச் சிறப்பாய், முத்தை யுணர்த்திற்று. இனி, காசடை - முத்துச்சிப்பிக ளென்றும், பாசடை - பாசிக்கொத்துக்களென்றும் ஏதுப்பெயராகப் பொருள்கொள்ளலுமாம். பாசடை - பண்புத்தொகை; பசுமையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதி நீண்டது. முதலடியில், அடை-முதனிலைத் தொழிற்பெயர். பி - ம்:—[1]விளங்கிய. (9)

9. களிப்படா மனத்தவன் காணிற் கற்பெனும்
கிளிப்படா மொழியவள் விழியின் கேளெனத்
துளிப்படா நயனங்கள் துளிப்பச் சோருமென்று
[1]ஒளிப்படா தாயிடை யொளிக்கு மீனது.

(இ - ள்.) (அப்பொய்கை),—'களி படா மனத்தவன் - (சீதாபிராட்டியைப்பிரிந்ததனாற்) களிப்பில்லாத மனத்தையுடையவனான

ஸ்ரீராமன், காணின் - (நம்மைக்) கண்டால், கற்பு எனும்-கற்பு நிலைமையே இவ்வாறு ஓருருக்கொண்டுவந்ததெனத்தக்க, கிளி படா மொழியவள் - கிளியினிடத்தும் உண்டாகாத (மிக இனிய) சொற்களையுடையவளான பிராட்டியினது, விழியின் - கண்களுக்கு, கேள் - உறவானவை [இணையானவை]; என - என்று எண்ணி, துளி படா நயனங்கள் - (முன் ஒருகாலத்தும்) நீர்த்துளி உண்டாகப்பெறாத (தனது) திருக்கண்கள், துளிப்ப - நீர்த்துளி சிந்தும்படி, சோரும் - வாடுவான்,' என்று - என்று எண்ணி, ஒளிப்படாது - விளங்காமல் [வெளிப்படாமல்], அ இடை - அவ்விடத்தில், ஒளிக்கும் - மறைந்து ஓடுகின்ற, மீனது - மீன்களையுடையது; (எ - று.)

இயல்பாக நீரினுள்ளே மீன்கள் மறைதற்கு, 'நம்மைக் கண்டமாத்திரத்திலே சீதாபிராட்டியாரான தன்காதலியினது திருக்கண்களினழகு நினைவுக்குவர இராமபிரான் வருந்துவா னாதலால் அதற்கு நாம் காரணமாதல் தக்கதன்று' என்று எண்ணி அம்மீன்கள் மறைந்ததாகக் காரணத்தைக் கற்பித்தலால், இஃது ஏதுத்தற்குறிப்பேற்றவணியாம். கற்பெனும் கிளிப்படாமொழியவள் - "விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீரிலங்கை வெற்பில், நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன், இற்பிறப் பென்பதொன்றும் இரும் பொறையென்ப தொன்றும், கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக்கண்டேன்" என்பது, சுந்தரகாண்டத்துத் திருவடியின் வாசகம். களிப்பு அடா எனப்பிரிப்பினுமாம். காணின் சோரும் என இயையும்.

கற்பு - பதிவிரதாதருமம்; மூன்றாமடியிலும், நான்காமடியிலும் தொடைமுரண் காண்க. சோரும்-செய்யுமென்முற்று, ஆண்பாலிற் சென்றது. ஆயிடை-சுட்டு நீண்ட விடத்து யகரந் தோன்றிற்று. பி - ம்:—[1] ஒளிப்படாவானமேயொதுங்கும். (10)

10. கழைபடு முத்தமுங் கலுழிக் கார்மதம்
மழைபடு தரளமு மணியும் வாரிநேர்
இழைபடர்ந் தணையநீ ரருவி யெய்தலால்
குழைபடு முகத்தியர் கோல [1] மொப்பது.

(இ - ள்.) கழை படு முத்தம்உம் - மூங்கிலிலிருந்து உண்டாகின்ற முத்துக்களையும், கலுழி மதம் மழை கார் படு தரளம்உம் - கலங்கலாகிய மதநீர்ப்பெருக்கைச் சொரிகின்ற மேகம்போன்ற யானைகளி(ன் தந்தத்தி)லிருந்து உண்டாகின்ற முத்துக்களையும், மணிஉம்-(மற்றைய) இரத்தினங்களையும், வாரி-வாரிக்கொண்டு,— நேர் இழை படர்ந்து அணைய - தக்க ஆபரணங்கள் மேலே பரவினாற் போன்ற, நீர் அருவி - மலையருவிநீரானது, எய்தலால் - (தன்னிடம் வந்து) சேரப்பெறுதலாலே,—(அப்பொய்கை),— குழை படு முகத்தியர் கோலம்-காதணிகள் பொருந்திய முகத்தையுடைய பெண்களின் அலங்காரத்தை, ஒப்பது - ஒத்திருப்பது;

மூங்கில், தந்தம் இவற்றினின்று தோன்றும் முத்துக்களையும் மற்றும் பலவகையிரத்தினங்களையும் வாரிக்கொண்டு பெருகிவந்த அருவிநீர் தன்னிடத்துச் சேர்வதனால், அப்பொய்கையானது மகளிர் பற்பல இரத்தினாபரணங்களையணிந்திருந்த தன்மையைப் போன்ற தென்பதாம்: தற்குறிப்பேற்றவணி. வாரி அனைய என இயையும். இழை-ஆபரணம்: நூலிழையென்றலும் ஒன்று. நிலம் குறிஞ்சியாத லால், அந்நிலக்கருப்பொருளாற் பிறக்கும் முத்து முதலியன கூறி னார். மூங்கில் முதலியவற்றில் முத்துப்பிறக்கு மென்பதை, "தந்தி வராகமருப் பிப்பி பூகந் தழை கதலி, நந்து சலஞ்சல மீன்றலை கொக்கு நளின மின்னார், கந்தரஞ் சாலிகழை கன்ன லாவின்பல் கட்செவி கா, ரிந்து வுடும்பு கரா முத்தமீனு மிருபதுமே" என்பதனா லறிக.

'கார்' என்பது - கருநிறமுள்ள மேகம்போன்ற யானைக்கு இருமடி யாகுபெயர்: 'கலுழி மதமழைபடு' என்ற அடைமொழி, இதன் பொருளை விளக்கிற்று. பி - ம்:—[1]போல்வது. (11)

11. பொங்குவெங் கடகரி [1]பொதுவி னாடலின்
கங்குலி னெதிர்பொரு கலவிப் பூசலின்
அங்கநொந் தலசிய விலையி னாய்வளை
மங்கையர் வடிவென வருந்து மெய்யது.

(இ - ள்.) (அப்பொய்கை),—பொங்கு - மிகுதியான, வெம்-வெப்ப முள்ள, கடம் - மதத்தையுடைய, கரி - யானைகள், பொதுவின் - பொதுவாக, ஆடலின் - (நீரில்) இறங்கிக் கலக்குதலாலே,—கங்கு லின் - இராத்திரிகாலத்தில், எதிர் பொரு - (ஆடவர்கள்) சந்தித்துச் செய்கின்ற, கலவி பூசலின் - புணர்ச்சிப் போரினால், அங்கம் நொந்து- உடம்பு வருந்தி, அலசிய - சோர்ந்த, ஆய் வளை விலையின் மங்கையர்- ஆராய்ந்தெடுத்தணிந்த வளையல்களையுடைய விலை மாதர்களது, வடிவு என - உருவம்போல, வருந்தும் - கலங்கிக் காணப்படுகின்ற, மெய்யது - உருவத்தையுடையது; (எ - று.)

மதயானைகள் அநேகம் தனித்தனியே வந்து விழுந்து துளைந்து ஆடுவதனாற் கலங்கிய அப்பொய்கை, பல விடபுருஷர்களும் வந்து கூடிக்கலந்து பலவகைச் சிருங்காரசேஷ்டைகளைச் செய்யப்பெற்ற வேசையரது சோர்ந்து மெலிந்த வடிவம்போன்று காணப்பட்ட தென்பதாம்: தற்குறிப்பேற்றவுவமையணி.

பொருள் கொடுப்பவர்க்கெல்லாம் பொதுவாகிய விலைமகளிரை உவமை கூறுதற்கு ஏற்ப, 'பொதுவினாடலின்' எனப்பட்டது. விலை யின் மங்கையர் - தமது இன்பத்தை விலைகொடுப்பவர்க்கெல்லாம் விற்கின்ற மகளிர். எதிர்ந்து என்னும் வினையெச்சம், பகுதிமாத்திர மாய் நின்றது. பி - ம்:—[1]பொதுளி யாடலின். (12)

12. [1]விண்டொடர் நெடுவரைத் தேனும் வேழத்தின்
வண்டுளர் நறுமத மழையு மண்டலால்

உண்டவர் பெருங்களி [2]யுறலி னோதியர்
தொண்டையங் கனியிதழ்த் [3]தோன்றல் சான்றது.

(இ - ள்.) விண்தொடர் நெடு வரை தேன் உம் - ஆகாயத்தை யளாவிய (மிகவுயர்ந்த) பெரிய மலைகளினின்று பெருகுகின்ற தேனொழுக்கும், வேழத்தின் வண்டு உளர் நறு மதம் மழைஉம் - யானைகளினது வண்டுகள் கிண்டப்பெற்ற வாசனைவீசுகின்ற மதநீர்ப்பெருக்கும், மண்டலால் - (மிக்குவந்து) நிறைந்திருத்தலாலே, உண்டவர் - (அந்நீரைக்) குடித்தவர்கள், பெருங் களி உறலின் - மிக்க களிப்பை யடைவதனால்,—(அப்பொய்கை),—ஓதியர்-கூந்தலழகுள்ள மகளிரது, தொண்டை அம் கனி இதழ் - அழகிய கொவ்வைப்பழம்போன்ற (சிவந்த) அதரம் போல, தோன்றல் சான்றது - தோன்றுதலமைந்தது; (எ - று.)

மங்கையரது அதரம் பானஞ்செய்தவர்க்குக் களிப்பைத் தருவது போல, இப்பொய்கையின் நீரும் களிப்பைக் கொடுப்பதென்பதாம்; உவமையணி. வானத்துக்கும் மலைக்குஞ் சம்பந்தமில்லாமலிருக்கச் சம்பந்தத்தைக் கற்பித்ததனால், 'விண்டொடர் நெடுவரை' என்ற தொடர் - தொடர்புயர்வுநவிற்சியணி. தேனொழுக்கு - மூங்கில்முதலியவற்றிற் கட்டப்பட்ட கூடுகளினின்று பெருகுவது.

வரை - இருமடியாகுபெயர். உண்டலென்பது-உண்பன தின்பன பருகுவன நக்குவன எனப்பிரித்துக் கூறுமிடத்துச் சிறப்புவினையும், வாயினால் நுகரப்படும் பொருளெல்லாம் உணவெனப் படுமாதலின் பொதுவினையுமாதலால், உண்டவரெனப்பட்டது. 'தொண்டையங் கனியிதழ்த் தோன்றல்சான்றது' என்றது. "அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே" என்னுஞ் சூத்திரத்திற் கூறி விலக்கிய அடுத்து வரலுவமை யன்று; முன்னது உருவுவமையும், பின்னது - பயனுவமையுமா யிருத்தலானென்க. பி - ர்:—[1] விண்டொடு. [2] உறுவது. [3] துப்பிற். (13)

13. ஆரியம் முதலிய பதினெண் [1]பாடையில்
பூரிய ரொருவழி [2]புகுந்த தாமென
[3]ஓர்வில கிளவிக ளொன்றொ டொப்பில
சோர்வில விளம்புபுள் துவன்று கின்றது.

(இ - ள்.) ஆரியம் முதலிய - ஸம்ஸ்கிருதம் முதலாகிய, பதினெண் பாடையில் - பதினெட்டுப் பாஷைகளில், பூரியர் - (இலக்கண இலக்கியத் தேர்ச்சியின்றி) அற்பஞானமுடையவர்கள், ஒருவழி - ஓரிடத்தில், புகுந்தது ஆம் என - கூடி ஆரவாரிப்பது போல, ஓர்வு இல - (இன்ன இன்ன பறவையின் தொனி இது இது என்று தனித்தனி) ஆராய்ந்து அறியப்படமாட்டாதவைகளும், ஒன்றொடு ஒப்பு இல - ஒன்றோடொன்று ஒத்திராதவைகளுமாயுள்ள, கிளவிகள் - ஒலிகளை, சோர்வுஇல - ஓய்தலில்லாத

வைகளாய், விளம்பு - ஒலிக்கின்ற, புள் - (பலவகைப்) பறவைகள், துவன்றுகின்றது - நெருங்கியிருக்கப்பெற்றது, (அப்பொய்கை);

இச்செய்யுளைக் கீழ் 6-ஆஞ் செய்யுளோடு ஒப்புநோக்கி, அதற்கும் இதற்குமுள்ள வேற்றுமைகள் ஊன்றி யுணரத் தக்கன. 'ஆரியம் முதலிய பதினெட்டுப் பாஷை' என்றது - ஆரியத்தையும், தமிழொழிந்த தேசபாஷைகள் பதினேழையும். தமிழ்நிலமொழிந்த பதினேழு நிலத்தையும் "சிங்களஞ் சோனகம் சாவகஞ் சீனந் துளுக் குடகங், கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம் வங்கம், கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங் குசலம், தங்கும் புகழ்த்தமிழ்சூழ் பதினேழ்புவிதா மிவையே" என் பதனால் அறிக; எனவே, பாஷைகள் பத்தொன்பதாமென்ப. தமிழ்ப்பாஷையினது ஒப்புயர்வற்ற சிறப்பைக்கருதி, அதனை இங் குக் கூறுராயினர்; இது, கவியினது பாஷாபிமானத்தைக் காட் டும்: அது பிறவற்றோடு கலவாத தனிப்பாஷை யென்பது, கவி ஹ்ருதயம்போலும்; இனி, ஆரியம் முதலிய பதினெண்பாடை என் பதற்கு-வடமொழியை(த் தமக்கு) முதலாகவுடைய பதினெட்டுத் தேசபாஷைகளென்று பொருள்கொண்டால், ஸம்ஸ்கிருதம் ஸகல பாஷைகளுக்குந் தாய்ப்பாஷை யென்பது போதரும். பாடை - பாஷா என்னும் வடசொல்லின் திரிபு. பி - ம்:—[1] ஆயசொல். [2] புகுந்து போற்றல் போல், புகுந்த போன்றன. [3] ஓர்கில. (14)

14. தானுயி ருறத் [1] தனி தழுவும் பேடையை
ஊனுயிர் பிரிந்தெனப் பிரிந்த வோதிமம்
[2] வானர மகளிர்தம் வயங்கு நூபுரத்
தேனுகு மழலையைச் செவியி [3] னேற்பது.

(இ - ள்.) தான் உயிர் உற - தன்னைப் பிராணனுக்கு ஒப்பாக (எண்ணி), தனி - வேறு உவமை பெறுமல், தழுவும் - ஆலிங்கனஞ் செய்கின்ற, பேடையை - பெண்ணன்னத்தை, ஊன் உயிர் பிரிந்து என - உடம்பு உயிர் நீங்கப் பெற்றாற்போல, பிரிந்த - விட்டு நீங் கின, ஓதிமம் - ஆணன்னமானது,—வான் அரமகளிர் தம் - தேவ லோகத்தினின்று நீராடவருகின்ற தெய்வப் பெண்களின், வயங்கு நூபுரம் - விளங்குகின்ற காற்சிலம்பணிகளின், தேன் உகு மழலையை - தேன்போன்ற (இனிய) மெல்லோசையை, (தன் பேடை யின் குரலென்று எண்ணி), செவியின் ஏற்பது - காதுகொடுத்துக் கேட்பதற்கு இடமானது, (அப்பொய்கை); (எ - று.)

தமது உயிரோடொத்த பெண்ணன்னத்தைப் பிரிந்த ஆணன்னங்கள், அப்பொய்கையில் நீராடவருந் தேவமாதரது காற்சிலம்பினொலியைத் தமது பேடையின் குரலென மயங்கிக்கேட்கு மென்க; மயக்கவணி. இங்ஙனம்கூறியது—இராமபிரான் தனது பிராணநாயகியாகிய சீதாபிராட்டியாரைப் பிரிந்து அவளது குரல் முதலியவற்றிற்கு உவமையாகிற போலிப்பொருள்களைக் கண்டு மயங்குகின்றமையைத் தொனிப்பிக்கும். 'தான் உயிருற' 'ஊன் உயிர்பிரிந்தென' என ஒன்றுக்கொன்று உயிர்போல்வன

வான அவற்றின் அன்பையும், 'தணி தழுவும்' என அவற்றின் இன்ப நலத்தையும் கூறினர். அன்னப்பறவை அன்பிற்சிறந்ததாதலை, "ஆதரம் பெருகுகின்ற அன்பினலன்னமொத்தும்" என்றதனுலும் அறிக. தணி பிரிந்தவென்று கூட்டியும் உரைக்கலாம். அன்னத்தி னெலிக்கு மகளிர்சிலம்பொலியை உவமை கூறுதலை, 'அரங்கி னுடு வார் சிலம்பி னன்ன நின், றிரங்கு வார்புனற் சரயு" "மின்னுர் சிலம் பிற்சிலம்புங்குரலன்னம்" என்பனவற்றிலுங் காண்க.

ஊன் என்னும் தசையின் பெயர் - உடம்புக்கு ஆகுபெயர். அரமகளிர் - அமரமகளிர்: அன்றி, அரம்பைமகளிர் என்பதன். விகாரம். உற, உகு என்ற இரண்டும் - இங்கே உவமவுருபாய் நின்றன. பி - ம்:—[1] துணை. [2] வானவமகளிர். [3] ஓர்ப்பது, நோற்பது. (15)

15. [1] ஈறிட லரியமால் வரைநின் றீர்த்திழி
ஆறிடு விரையகி லார மாதியா
[2] ஊறிட வொண்ணக ருரைத்த வொண்டளச்
[3] சேறிடு பரணியிற் றிகழு [4] நேரது.

(இ - ள்.) (அப்பொய்கை),—ஈறு இடல் அரிய - முடிவிடுதற்கு அரியதான, மால் வரை நின்று - பெரிய மலையிலிருந்து, ஈர்த்து - இழுத்துக்கொண்டு, இழி - பெருகிவருகின்ற, ஆறு - அருவி களாலே, இடு - கொணர்ந்துதள்ளப்பட்ட, விரை - வாசனையை யுடைய, அகில் - அகிற்கட்டையும், ஆரம் - சந்தனக் கட்டையும், ஆதி ஆ - முதலினவாக, (வாசனைமரங்கள்), ஊறிட - (தன்னிடத்து நீரில்) ஊறித்தேய்ந்து வருவதனுல்,—ஒள் நகர் - ஒளிபொருந்திய [செல்வம் மிக்க] பட்டணங்களி லுள்ளவர்கள், உரைத்த - தேய்த்து அரைத்த, ஒள் தளம் சேறு - ஒள்ளிய [வாசனை மிக்க] மிகுதியான சந்தனக் குழம்பை, இடு - நிறைத்து வைக்கப்பெற்ற, பரணியின் - பாத்திரம் போல, திகழும் - விளங்குகின்ற, நேரது - தன்மையை யுடையது; (எ - று.)

அகிற்கட்டை முதலியவற்றை மலைகளிலிருந்து இழுத்துக் கொண்டு வரும்போது அவைகள் தேய்ந்து குழம்பிய மலைநீரருவிகள் தன்னில் விழப்பெற்ற அப்பம்பைப் பொய்கை - கலவைச் சந்தனம் வைத்ததொரு பெரும் பரணியை யொத்திருந்ததென்பதாம்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பொய்கைக்குப் பரணியும், அதிலுள்ள அகில் முதலியவற்றின் தேய்வையாற் குழம்பிய நீர்க்குக் கலவைச் சந்தனக் குழம்பும் ஒப்புளனக் காண்க. நாகரிகத்துக்கு உரிய சிறந்த சந்தன மென்றற்கு, 'ஒண்ணகருரைத்த' என்ற அடைமொழி கொடுக் கப்பட்டது. பரணி - பாத்திரம்.

[3] 'சேறிடு பாணியின்' எனப் பாடங்கொண்டால், கலவைச் சந்தனத்தைக் கரைத்த நீர்போல என்று பொருள். அகிலும் சந்தனமும் குறிஞ்சிநிலக்கருப்பொருளாதலாற் கூறினர். ஆ - ஆக வென்பதன் விகாரம். நகர் - அங்குள்ளார்க்கு இடவாகு

பெயர். மூன்றாமடி - முற்றுமோனை. பி - ம்:—[1] ஏறிட. [2] ஊறவொண்ணுதலியருரைத்த சந்தனம். [4] தேசது. (16)

வேறு.

16. நவ்வி நோக்கிய ரிதழ்நிகர் குமுதத்தி னறுந்தேன்
[1] வவ்வி மாந்தரிற் களிமயக் குறுவன மகரம்
எவ்வ [2] மோங்கிய [3] விறப்பொடு பிறப்பிவை யென்னக்
[4] கவ்வு மீனொடு [5] முழுகுவ வெழுவன கரண்டம்.

(இ - ள்.) (அப்பொய்கையில்),—மகரம் - முதலைகள்,—நவ்வி நோக்கியர் இதழ் நிகர் குமுதத்தின் - மானின் பார்வைபோன்ற பார்வையையுடைய மகளிரது அதரத்துக்கு ஒப்பான செவ்வாம்பல் மலர்களிலுள்ள, நறுந்தேன் - மணமுள்ள மதுவை, வவ்வி-குடித்து,—மாந்தரின் - (ஆம்பல் மலர்போன்ற மகளிரது அதரத்தின் அமுதத்தைப் பானஞ்செய்கின்ற) ஆடவர்போல, களி மயக்கு உறுவன - களிப்பினால் மயக்கம் மிகுவன; கரண்டம் - நீர்க்காக்கைகள்,—'எவ்வம் ஓங்கிய - துன்பம் நிரம்பிய, இறப்பொடு-மரணத்தோடு, பிறப்பு - பிறவியும், இவை - இத்தன்மையன [மாறிமாறி வருகின்றன],' என்ன - என்று காட்ட,—கவ்வு மீனொடு - (வாயிற்) கௌவிய மீன்களுடனே, முழுகுவ எழுவன - (அடிக்கடி) முழுகி எழுவனவாயின;

அப்பொய்கையில் முதலைகள் ஆம்பல்மலர்களின் தேனைக் குடித்து மயங்கியும், நீர்க்காக்கைகள் மீன்களைக் கவ்வியபடி முழுகியும் எழுந்தும் இடப்பனவென்பதாம். முன்னிரண்டடிகள் - உவமையணி. இதழ் நிகர் குமுதம் - உலகத்துப் பெண்பாலர் வாயின் நறு நாற்றத்திற்கு உபமானமாகச் சிறப்பித்துக் கூறப்படுகின்ற ஆம்பலை உபமேயமாக்கி வாயை உபமானமாகக் கூறியதனால், எதிர்நிலையணி. நீர்க்காகங்கள் தம்செய்கையினாற் பிறப்பு இறப்பின் நிலைமையாகிய தத்துவப்பொருளைத் தெரிவித்ததாகக் கூறியது, (நற்பொருட்)காட்சியணி: இதனை, வடநூலார் நிதர்சநாலங்கார மென்பர். மருதத்துக்குப் பயின்ற ஆம்பலும், கரண்டமும், நெய்தற்குப்பயின்ற மகரமும், குறிஞ்சிநிலத்து மயங்கக் கூறியது - பொருளிலக்கணத்தில் திணை மயக்கம்.

மாந்தர் - பன்மைக்கே வரும்பெயர்; இதனை நித்யபகுவசநமென்பர் வடநூலார்: மக்கள், மாக்கள் என்பனவும் இவ்வாறே. மகரம், கரண்டம் என்பன - பால்பகா அஃறிணைப் பெயராதலால், இங்குப் பன்மைவினை கொண்டன. இறப்பொடு, ஒடு - எண்ணுப்பொருளது. கரண்டம்=காரண்டவம்: வடமொழி. பி - ம்:—[1] வவ்வும். [2] நீங்கிய. [3] பிறப்பினோடிறப்பிவை. [4] கவ்வி. [5] முழுகியே. (17)

17. கவள யானைய ஞற்கந்தக் கடிநறுங் கமலத்
தவளை [1] யீகல மாவது செய்துமென் றருளித்

திவள வன்னங்கள் திருநடை காட்டுவ [2]தேஞர்
குவளை காட்டுவ [3]விழியிதழ் காட்டுவ குமுதம்.

(இ - ள்.) (அப்பொய்கையில்),—'கவளம் யானை அனற்கு-(தான் விரும்பிய) கவளம் பெற்று வளர்ந்த யானைபோன்ற ஸ்ரீராமபிரானுக்கு, அந்த கடி நறுங் கமலத்தவளை ஈகலம் - வாசனை வீசுகின்ற நல்ல செந்தாமரைமலரிலுள்ள அந்த இலக்குமியை [சீதாபிராட்டியாரை]க் கொண்டுவந்து கொடுக்கும் திறமை யில்லோம்; (ஆயினும்), ஆவது - (நம்மால்) இயன்ற உதவியை, செய்தும் - செய்வோம்,' என்று—, அருளி - மனமிரங்கி,—அன்னங்கள் - அன்னப்பறவைகள், திவள - துவளும்படியாக, திரு நடை காட்டுவ - (அச்சானகியின்) சிறந்த நடையின் அழகைக் காட்டுவன; தேன் ஆர் குவளை - தேன் நிரம்பிய நீலோற்பல மலர்கள், விழி காட்டுவ - கண்களின் அழகைக் காட்டுவன; குமுதம் - செவ்வாம்பல் மலர்கள், இதழ் காட்டுவ - அதரத்தின் அழகைக் காட்டுவன; (எ - று.)

ஸ்ரீராமனுக்கு அந்தச் சீதையைக் கொணர்ந்து கொடுத்தற்குத் தான் நம்மால் முடியாதாயினும் ஆனதைச்செய்வோமென்று, அன்னம் முதலியவை சீதாபிராட்டியின் நடையழகு முதலியவற்றைக் காட்டின வென்பதாம்; ஏதுத்தற்குறிப்பேற்றவணி. நடைகாட்டுவ முதலியன, நடைபோன்ற நடையைக் காட்டுவன என்பது முதலியவாகப் பொருள்பட்டு உபமானஉபமேயங்களுக்கு ஐக்கியத்தைச் சொல்லிய தாகுவது, காட்சியணியாம். கவளயானை யென்பதற்கு இவ்வாறு பொருளுரைத்தல், "கவளக்களிறு" என்னுமிடத்தில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்த உரையால் அறிக. கவளம் - வாயளவுகொண்ட உணவுத்திரளை; இது, கபளமென்னும் வடமொழியின் திரிபு. பெருமாள் ஸ்ரீராமனாகத் திருவவதாரஞ் செய்தபோது பிராட்டி சீதையாகத் திருவவதரித்ததனால், 'கமலத்தவள்' எனப்பட்டனள். மருதத்துக்குப் பயின்ற குவளையும் குமுதமும், குறிஞ்சியில் மயங்கக் கூறப்பட்டன. யானையுவமை - கம்பீரமான தோற்றத்துக்கும், நடைக்கும், வலிமைக்கும், மறைத்தற்குரிய காலத்தே மறைத்து வெளிப்படுத்தற்குரியகாலத்தே வெளிப்படுத்துஞ் சிறத்திற்கும். 'திவள' என்ற செயவெனெச்சம், நடைஎன்னுந் தொழிற்பெயரின் 'நட' என்ற முதனிலையைக் கொள்ளும். பி-ம்:—[1] ஈகிலம். [2]செங்கண். [3] துவரிதழ். (18)

18. பெய்கலன்களி னிலங்கொளி மருங்கொடு பிறழ
வைகலும்புனல் குடைபவர் வானர மகளிர்
செய்கை யன்னங்க ளேந்திய சேடிய ரென்னப்
பொய்கை யன்னங்க ளேந்திய பூங்[1]கொம்பர் பொலிவ.

(இ - ள்.) பெய் கலன்களின் - (தாம்) அணிந்துள்ள ஆபரணங்களினது, இலங்கு ஒளி - விளங்கின்ற காந்தியானது, மருங்கொடு பிறழ - எல்லாப்பக்கத்தும் ஒளிசெய்யாநிற்க,—வைகலும் - நாள்தோறும், புனல் குடைபவர் - (அப்பொய்கையின்) நீரில்

இறங்கித் துளேந்து விளையாடுபவர்களாகிய, வான் அரமகளிர் - சுவர்க்கலோகத்து தெய்வப்பெண்களினது, செய்கை அன்னங்கள் - (விளையாடுதற்காகச்) செய்யப்பட்ட அன்னப்பறவைகளை [அன்னப்பதுமைகளை], ஏந்திய - (கைகளில்) [1]ஏந்திக் கரையில் நிற்கின்ற, சேடியர் என்ன - (அம்மகளிரது) தோழிமார்போல,— பொய்கை அன்னங்கள் - அப்பொய்கையில் வாழ்கின்ற அன்னப் பறவைகளை, ஏந்திய - தம்மேற்கொண்ட, பூ கொம்பர் - (கரையிலுள்ள) மலர்க்கொம்புகள், பொலிவ-விளங்குவன; (எ - று.)

தெய்வப்பெண்கள் நீரிலிழிந்து குடையும்போது அதினின்று அஞ்சியெழுந்து அருகிலுள்ள பூங்கொம்புகளிற் போயிருக்கும் அன்னங்கள், அவர்கள் தோழியர் கையில்வைத்துள்ள அன்னப் பதுமைகளை யொத்திருந்தன வென்பதாம்; தன்மைத்தற்குறிப்பேற்ற வணி: பொய்கையன்னத்துக்கு - செய்கையன்னமும், கரையிலுள்ள பூங்கொம்புக்கு - கரையிலுள்ள சேடியரும் ஒப்பு.

பொய்கை - மானிடராக்காத நீர்நிலை. மருங்கொடு, ஒடுவுருபு உடனிகழ்ச்சிப்பொருளாகாது இடப்பொருளாய் நிற்றலால், உருபு மயக்கம்: இனி, இடையுடனே மின்ன என்று பொருள்கொள்ளலுமாம். சேடி என்ற வடசொல் திரிந்து 'அர்' என்னும் பலர்பால் விகுதிபெற்று, 'சேடியர்'என வந்தது. கொம்பர்-குற்றியலுகரம், 'அர்' பெற்றது. பி - ம்:—[1]கொம்பு. *(19)*

19. ஏலும் [1]நீர்நிழ லிடையிடை யெறித்தலிற் படிகம்
போலும் வார்புனல் புகுந்துள வாமெனப் பொங்கி
ஆலு மீன்கண [2]மஞ்சின வலம்வர வஞ்சிக்
கூல மாமரத் திருஞ்சிறை புலர்த்துவ குரண்டம்.

(இ-ள்.) ஏலும் நீர் - (அப்பொய்கையிற்) பொருந்திய நீரில், நிழல் - (மரங்களிலுள்ள கொக்குகளின்) சாயைகள் [பிரதிபிம்பங்கள்], இடை இடை - நடுநடுவே, எறித்தலின் - விளங்குதலாலே, படிகம் போலும் வார் புனல் புகுந்து உள ஆம் என - பளிங்கு போல மிகத் தெளிந்த மிக்க அந்நீரினுள் (அக்கொக்குகள் தம்மைத் தின்னுதற் பொருட்டுப்) புகுந்துள்ளன என்று எண்ணி,— பொங்கி ஆலும் மீன் கணம் - (இயல்பாக) மகிழ்ந்து துள்ளிவிளையாடுகின்ற மீன்கூட்டங்கள், அஞ்சின - பயந்தன: அஞ்சி அலம்வர - (அங்ஙனம்) பயந்து சுழன்று பதுங்கும்படி, குரண்டம் - கொக்குகள், கூலம் மா மரத்து - கரையிலுள்ள பெரியமரங்களில், இருஞ் சிறை புலர்த்துவ - (தமது) பெரிய சிறகுகளை உலர்த்திக்கொண்டிருப்பன; (எ - று.)

கொக்குகள் அப்பொய்கையின் கரைமீதுள்ள மரங்களிலிருந்து தமது சிறகை யுலர்த்துகையில் அவற்றின் நிழல் மிகத்தெளிந்த நீரிலே கண்ணாடியில் தோன்றுவதுபோலத் தோன்ற, அந்நிழலைக் கண்டு மீன்கள் தம்மைத் தின்னுதற்பொருட்டு அக்கொக்குகள் நீரிற்புகுந்துள்ளனஎன மயங்கின வென்பதாம்; மயக்கவணி. வஞ்சி

கூலம் எனப் பிரித்து, கொடிகள் படர்ந்த கரை யென்று பொருள் கொள்வாருமுளர். பி - ம்:—[1]நீணிழல். [2]அஞ்சினவலமர. (20)

20. அங்கொர் பாகத்தி னஞ்சன மணிநிழ லடையப்
பங்கு பெற்றொளிர் பதுமரா கத்தொளி [1]பாயக்
கங்கு லும்[2]பக லும்மெனப் பொலிவெய்து கரைய
[3]மங்கை மார்தட முலையெனப் பொலிவன வாளம்.

(இ - ள்.) அங்கு - அப்பொய்கைக் கரையில், ஒர் பாகத்தின் - ஒருபக்கத்திலே (பதிக்கப்பட்டுள்ள), அஞ்சனம் மணி நிழல் - மை போன்ற நீல ரத்தினங்களின் ஒளி, அடைய - அடங்கும்படி [தோன் ருது மறையும்படி], பங்கு பெற்று - வேருெரு பக்கத்திற்பொருந்தி, ஒளிர் - விளங்குகின்ற, பதுமராகத்து - பதுமராகக் கற்களின், ஒளி - காந்தி, பாய - (சென்று) பரவுதலால், கங்குல்உம் - இராத் திரிகாலத்தும், பகல் என - பகலென்று சொல்லும்படி, பொலிவு எய்து - விளக்கமடைகின்ற, கரைய - கரைகளிலேயுள்ளன ஆகிய, வாளம் - (ஆணும்பெண்ணுமான) சக்கரவாகங்கள்,—(எப்பொழுதும் பகலாகநினைத்துப் பிரியாதிருப்பதனால்), மங்கைமார் தட முலை என - மங்கைப்பருவமுள்ள மகளிரது பருத்த தனங்கள்போல, பொலிவன - விளங்குவன; (எ - று.)

அந்தப் பொய்கையினொருபக்கத்தில் நீலமணிகளினொளியும் அடங்கும்படி பதுமராகக்கற்கள் செந்நிறவொளியைமிகுதியாகவீசி இரவையும் தெரியவொட்டாமற் செய்வதனால், அங்குள்ள சக்கர வாகப்பறவைகள் இரவிலுமுட்படத் தம்பேடையைப்பிரியாது கூடி மகிழ்வனவாயின வென்பதாம். சக்கரவாகங்கள் இரவிற்பிரிந்து பகலிற் கூடுமியல்பின வாதலால், இவ்வாறு கூறப்பட்டது. ஆணும் பெண்ணு மாகிச் சேர்ந்துள்ள சக்கரவாகங்கள் மகளிரது இரட்டையாகிய தனங்களுக்கு உவமையா மென்க; இது, எதிர்நிலையணி. பதுமரா கத்தின் ஒளியால் சக்கரவாகப்பறவைகள் இரவைப் பகலென்று எண்ணியதாகக்கூறிய மயக்கவணி, எதிர்நிலையணிக்கு அங்கமாகத் தொனிக்கும். பங்குபெறுதல் - பக்கத்தைத் தமக்கு இடமாகப் பெறுதல். பதுமராகம் - செந்தாமரைமலர் போலச் சிவந்துள்ள இரத்தினம்.

கரைய வாளம் எனஇயையும். கங்குலும், உம்மை - சிறப்பு: பகலும், உம்மை - இசைநிறை: இனி, முறையே இழிவுசிறப்பு உயர்வுசிறப்புகளாகவுமாம். பகலும்மென, மகரம் - விரித்தல். கரைய- குறிப்புப்பெயரெச்சம். வாளம் - சக்ரவாளம் என்ற வடசொல்லின் முதற்குறை; ஒரு பெயரின் ஒருபகுட்பைக்கொண்டு அப்பெயரைக் குறிப்பது: நாமைகதேசநாமக்ரஹணம். பி - ம்:—[1]பரப்ப, பரம்ப. [2]பகலேயென. [3]மங்கைமார்துணைமுலையென என்று பாடங்கொள் ளல், நேர். (21)

21. [1]வலிந டத்திய வாளென [2]வாளைகள் பாய
[3]ஒலிந டத்திய திரைதொறு [4]முகள்வன நீர்நாய்

[5]கலிந டைக்கழைக் கண்ணுள ரென நடங் கவினப்
பொலிவு டைத்தெனத் தேரைகள் புகழ்வன போலும்.

(இ - ள்.) (அப்பொய்கையில்),— வாளைகள் - வாளைமீன்கள், வலி நடத்திய வாள் என - வலிமையோடு வீசிய வாளாயுதங்கள் போல, பாய - பாய்ந்துசெல்லாநிற்க,—ஒலி நடத்திய திரை தொறும் - ஒலியுள்ள (மேன்மேலுஞ்) செல்வனவாகிய அலைகளி லெல்லாம், உகள்வன - உருண்டுசெல்வனவாகிய, நீர்நாய்—,—கலி நடை கழை கண்ணுளர் என நடம் கவின - (காலிற்கட்டிய சதங் கைகளின்) ஒலியையுடைய நடையோடுகூடிய கழைக்கூத்தாடிகள் போல (அவ்வாளைமீன்களின்மேல்) நடனத்தை அழகியதாகச் செய்யாநிற்க, தேரைகள் - தவளைகள், (அதனைக் கண்டு), பொலிவு உடைத்து என புகழ்வன - '(இந்நடனம்) நன்றாயிருக்கின்றது' என்று புகழ்ந்து கூறுவனவற்றை, போலும் - ஒத்துக் கத்து கின்றன; (எ - று.)

வாளைமீன்கள் வாள்போற் பாயும்போது அவற்றின்மேல் திரையு களும் நீர்நாய்கள் உருள்வன - மூங்கில் நாட்டி அதன்மேலேறி ஆடு கின்ற கூத்தர்கள் கத்தியைக் குறுக்கே பிடிக்க அதன்மேற் கரணம் போடுகின்றது போலவும், அயலில் தவளைகள் இரைவது - அக்கூத்து அழகியதென்று புகழ்வன போலவும் இருந்தன வென் பது கருத்து; தன்மைத்தற்குறிப்பேற்றவணி. "வாளென வாளைபாய" எனபது, சிந்தாமணி. "நீர் நாய் கௌவிய நெடும்புறவாளை, மலங்கு மிளிர் செறுவின் விலங்கப்பாயின்" என்பது, சிலப்பதிகாரம். கழை - மூங்கில். கண்ணுள் - கூத்து. [5]கலி நடம் - பாடமாயின், மிடுக்கையுடைய நடனம் என்க. பி - ம்:—[1]பலி. [2]வாளைவாய். [3]நிலை. [4]உறுவன. (22)

22.—இராமபிரான் அப்பொய்கையிலுள்ள அன்னம் முதலியவற்றைக் கண்டு புலம்பத் தொடங்குதல்.

அன்ன தாகிய வகன்புனற் பொய்கையை யணுகிக்
கன்னி யன்னமுங் கமலமு [1]முதலிய கண்டான்
தன்னி னீங்கிய [2]தளிரியற் குருகினன் தளர்வான்
உன்னு நல்லுணர் [3]வொடுங்கிடப் புலம்பிட லுற்றான்.

(இ - ள்.) (ஸ்ரீராமபிரான்),—அன்னது ஆகிய - அப்படிப்பட்ட தான், அகல் புனல் பொய்கையை - பரந்த நீரையுடைய தடாகத்தை, அணுகி-சேர்ந்து,—(அதிலுள்ள), கன்னி அன்னம்உம்-இளமையான அன்னப்பறவைகளும், கமலம்உம் - தாமரை மலர்களும், முதலிய - முதலியனவற்றை, கண்டான் - பார்த்து,— தன்னின் நீங்கிய - தன்னிடத்தினின்று பிரிந்துபோன, தளிர் இயற்கு - இளந்துளிர் போன்ற மென்மைத்தன்மையையுடைய சீதையின் பொருட்டு, உருகினன் - நெஞ்சுருகி, தளர்வான் - வருந்துபவனும்,—உன்னும் நல் உணர்வு ஒடுங்கிட - ஆராய்ந்தறிதற்கு உரிய நல்ல அறிவு

அடங்காநிற்க, புலம்பிடல் உற்றான் - புலம்பத்தொடங்கினன்; (எ - று.)—அதனை, மேல் ஒன்பதுகவிகளாற் கூறுகின்றார்.

அன்னமும் தாமரைமலரும் முதலியவை - சீதாபிராட்டியாரின் நடை முகம் முதலியவற்றைப்போன்று தோன்றி வருத்தத்தை விளைத்தலால், இராமபிரான் அவற்றைக்கண்டு இரங்கிப் பிரிவாற்றாமையால் வாய்விட்டு அரற்றத் தொடங்கினனென்பதாம். இராமபிரான் தான் திருமாலின் திருவவதாரமாயிருந்தும் இவ்வாறு புலம்புவது, தான்கொண்ட மானுடவேடத்திற்குஏற்ப நடிக்குந் தன்மையினா லென்க. தளிரியல் - உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. முதலிய-பலவின்பாற் பெயர். பி-ம்:—[1]உறைவன. [2]தையலுக்கு. [3]ஒழிந்திட. (23)

வேறு.

23.—இதுமுதல் ஒன்பது கவிகள்—இராமபிரான் புலம்பல்.

வரியார் மணிக்கால் [1]வாளமே மடவன் னங்கா [2]ளெனைநீங்கத்
தரியாள் நடந்தா ளில்லளேற் றளர்ந்த போதுந் [3]தகைவேயோ
எரியா நின்ற [4]வாருயிருக் கிரங்கி னாலீ திசையன்றோ
[5]பிரியா திருந்தேற் கொருமாற்றம் பேசிற் பூசல் பெரிதாமோ.

(இ - ள்.) வரி ஆர் - இரேகைகள் பொருந்திய, மணி கால் - அழகிய கால்களையுடைய, வாளமே - சக்கரவாகங்களே! மடம் அன்னங்காள் - இளமையான அன்னங்களே!—எனை நீங்க தரியாள் - என்னைவிட்டுப்பிரியப் பொறுதவளாகிய சீதை, நடந்தாள் - பிரிந்து போனாள்; இல்லள் - (அவள் என்னிடத்து) இல்லாதவளாயினாள்: ஏல் - என்றால், தளர்ந்த போதுஉம் - (அதனால் நான்) வாடிநின்ற இச்சமயத்திலும், தகைவுஏஓ - (நீங்கள் முன்னே வருதற்குத்) தடை உண்டோ? எரியாநின்ற அரு உயிருக்கு - (பிரிவாற்றாமையால் வருந்தித்) தவிக்கின்ற (எனது) அரிய உயிருக்கு, இரங்கினால் - (நீங்கள்) இரக்கஞ் செய்தால், ஈது - இது, இசை அன்றோ - (உங்களுக்குக்) கீர்த்திக்குக் காரணமன்றோ? பிரியாது இருந்தேற்கு - (இதுவரையில் ஒருபொழுதுஞ் சீதையைப்) பிரியாதிருந்த எனக்கு, (ஆறுதல் உண்டாம்படி), ஒருமாற்றம் பேசின் - ஒருவார்த்தை சொன்னால், பூசல் பெரிது ஆம்ஓ - (அதனால் உங்களுக்குப்) பெரிய பொல்லாங்கு உண்டாகுமோ? (எ - று.)

சீதை போயிருக்கின்ற இடத்தைச்சொல்லி உதவிசெய்யுங்கள் என்பது கருத்து. 'இல்லளேல் தளர்ந்தபோதுந் தகைவேயோ' என்றது - அவள் உளளாயின் நீங்கள் அவளது தனத்துக்கும் நடைக்குந் தோற்று முன்நிற்க மாட்டீர்; அவளில்லாது யான் வருந்துகின்ற இப்போது வருதற்குத் தடையென்ன? என்றபடி. "நாளங்கொள் நளினப்பள்ளி நயனங்களனையநேமி, வாளங்களுறைவ கண்டு மங்கைதன் கொங்கைநோக்கும்" என்றும், "ஓதிமமொதுங்கக்கண்ட வுத்தம னுழையளாகுஞ், சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்" என்றும் கீழ்ச் சூர்ப்பணகைப் படலத்துச் சக்கரவாகமும் அன்னப்பறவையும் முறையே

சீதையின் தனத்துக்கும் நடைக்கும் தோற்றுஒளித்து ஓடுவதை இராமபிரான் குறிப்பித்ததாக வந்துள்ளமை காண்க.

இனி, இல்லள் - இல்வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவி [சீதை] எனக்கொள்ளலுமாம். [3]தகவேயோ என்ற பாடத்துக்கு - நான் இவ்வாறு வருந்தவும் நீங்கள் இங்ஙனம் இரங்காமலிருப்பது தகுதிதானா? எனப் பொருள் கொள்க. நெய்தலுக்கு உரிப்பொருளாகிய இரங்கல் குறிஞ்சியில்வருதல் "திணைமயக் குறுதலுங் கடிநிலையிலவே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால் அமையும்.

எனை - தொகுத்தல். தரியாள் - பெயர். உம்மை - இழிவுசிறப்பு. இசைக்குக் காரணமானதை இசையென்றது, உபசாரவழக்கு. அன்று, ஓ - தேற்றப்பொருளன. ஈற்றேகாரம் - எதிர்மறையோடு கூடிய வினாப்பொருளது. பி - ம்:—[1]வராலினமே. [2]என்னீங்கள். [4]உயிராருக்கிரங்கிலஃது. [5]பிரியாதிருந்தீர்க்கு. 'தரியாநடையாளில ளாலெற்றந்த தேதுந்தகவேயாய்' என்று சில பிரதிகளில் இரண்டாமடி. (24)

24\. வண்ண நறுந்தா மரைமலரும் வாசக் குவளை நாண்மலரும் [காய்
புண்ணி னெரியு மொருநெஞ்சம் பொதியு மருந்திற் றரும்பொய்
கண்ணு முகமுங் காட்டுவாய் வடிவு மொருகாற் காட்டாயோ
[1]ஒண்ணு [2]மென்னி னஃதுதவா துலோவி னாரு [3]முயர்ந்தாரோ.

(இ - ள்.) வண்ணம் நறும் தாமரை மலர்உம் - அழகிய தாமரை மலர்களையும், வாசம் நாள் குவளை மலர்உம் - வாசனையுள்ள அன்று மலர்ந்த நீலோற்பல மலர்களையும், புண்ணின் எரியும் ஒரு நெஞ்சம் பொதியும் மருந்தின் - (சீதையைப்பிரிந்ததனால்) புண்போல எரிகின்ற தனிமையான [வேறு துணையுங்கதியுமில்லாத] (எனது) மனத்திற்கு மேலே தடவுகின்ற மருந்துபோல, தரும் - காட்டுகின்ற, பொய்காய் - தடாகமே!—கண்உம் முகம்உம் காட்டுவாய் - (சீதையின்) கண்களையும் முகத்தையும் (பலதரம்) காட்டுகின்ற நீ, வடிவுஉம் - அவளுருவம் முழுவதையும், ஒரு கால் காட்டாய்ஓ - (எனக்கு) ஒருதரமாயினுங் காட்டமாட்டாயோ? ஒண்ணும் என்னின் - (தம்மால்) கூடுமானால், அஃது உதவாது - அப்பொருளை உதவிசெய்யாமல், உலோவினார்உம் - உலோபஞ்செய்தவர்களும், உயர்ந்தார்ஓ - (உலகத்தில்) மேலானவராவார்களோ? [ஆகாரன்றோ? என்றபடி]; (எ - று)

பொய்கையில் மலர்ந்துதோன்றுகின்ற தாமரைமலரும் குவளைமலரும் பிராட்டியினது முகமும் கண்களும் போன்று இருத்தலால், சீதையைப் பிரிந்து வருந்துகின்ற தனது மனம் அவை கண்டு சிறிது வருத்தமாறுதல்பற்றி, இவ்வாறு கூறினன். கண்ணும் முகமும் காட்டுகின்ற உனக்கு அப்பிராட்டியினுடைய வடிவம் காட்டக் கூடியதாயிருக்க அங்ஙன் காட்டாது உலோவுவதால், நீ உயர்ந்தோயாகாய் என்ற பொருளைப் பிறிதுமொழிதல் வகையால் தெரிவிக்கும். இனி,

[1]'உண்ணும்' எனப்பாடங்கொண்டு, ஒருவன் உண்பானானால் அவனுக்குச் சிறிது கொடுத்து ஆசை காட்டி முற்றக்கொடாமல் லோபஞ்செய்தவர்கள் என்று உரைப்பினும் அமையும். முன்னே உபமானமாகிய தாமரையும் குவளையும் கூறியதற்கு ஏற்ப, பின்னே உபமேயமாகிய முகத்தையுங் கண்களையும் முறையே கூறாமையின், எதிர்நிரனிறைப் பொருள்கோள்.

உலோவினர் - லோபமென்னும் வடமொழியின் திரிபாகிய உலோவம் என்னும் பெயரினடியாய்ப்பிறந்த இறந்தகால வினையாலணையும்பெயர்; உம்மை - இழிவுசிறப்பு. ஓ - எதிர்மறை. பி - ம்:— [2]ஒருகால். [3]உலந்தாரோ. (25)

25. விரிந்த குவளை சேதாம்பல் விரைமென் கமலங் கொடிவள்ளை
தரங்கங் கெண்டை வராலாமை யென்றித் தகைய தமைநோக்கி
மருந்தி னனையா ளவயவங்க ளவைநிற் கண்டேன் வல்லரக்கன்
அருந்தி யகல்வான் சிந்தினவோ வாவி யுரைத்தி யாமன்றே.

(இ - ள்.) விரிந்த குவளை - மலர்ந்த கருங்குவளை மலர்களும், செம்மை ஆம்பல் - செவ்வாம்பல்மலர்களும், விரை மெல் கமலம் - வாசனையுடைய மெல்லிய தாமரைமலர்களும், கொடி வள்ளை - வள்ளைக்கொடியின் இலைகளும், தரங்கம் - அலைகளும், கெண்டை - கெண்டைமீன்களும், வரால் - வரால்மீன்களும், ஆமை - ஆமைகளும், என்று இ தகைய தமை - என்று இத்தன்மையனவாகிய பொருள்களை, நோக்கி - (ஸ்ரீராமன்) பார்த்து,—(அப்பொய்கையை நோக்கி),—'வாவி - பொய்கையே! மருந்தின் அனையாள் அவயவங்கள் - தேவாமிருதம போன்ற சீதையினது (கண் வாய் முகம் கை கால் வயிற்றுமடிப்பு கணைக்கால் புறங்கால் முதலிய) உறுப்புக்களை, நின் கண்டேன் - உன்னிடத்துப் பார்த்தேன்; அவை - அவ்வுறுப்புக்கள்,—வல் அரக்கன் - வலிய இராக்கதன் [இராவணன்], அகல் வான் - பரந்த ஆகாயத்தில், அருந்தி - தின்னும்போது, சிந்தின ஓ - (கீழே) சிந்தினவைகளோ? உரைத்தி - (நீ) சொல்வாயாக, (என்று கூறிப்புலம்பினான்;) (எ - று.)—ஆம், அன்று, ஏ - அசைகள்.

குவளை மலரும் கெண்டையும் பிராட்டியின் கண்களையும், ஆம்பல் மலர் - வாயையும், தாமரைமலர்-முகம் கை கால்களையும், தாமரையரும்பு - தனங்களையும், வள்ளையிலை - காதுகளையும், அலை - வயிற்று மடிப்பையும், வரால் - கணைக்கால்களையும், ஆமை - புறங்கால்களையும் போலுதலால் இது கூறினான். குவளை முதலியவற்றைச் சீதையின் அவயவங்களாக இராமபிரான் கருதினனென்ன வந்தது, மயக்கவணி. குவளை முதலியவற்றை, அரக்கன் தின்னும் போது சிந்திய சீதையின் அவயவங்களாகக் கருதினனாகக் கூறியது அம்மயக்கவணி மூலமாக வந்த தற்குறிப்பேற்றவணி. கொடி, வள்ளை எனத் தனியே பிரித்து, கொடி - இடைக்கு உவமையாகவும் கொள்ளலாம். கிடைத்தற்கு அரியளாய்க் கண்ணுக்கு இனியளாய்த் தன்னை நுகர்ந்தார் பிறிது நுகராமல் தடுக்குந் தன்மை

பற்றி, 'மருந்தினனையாள்' என்றான். அரக்கனுக்கு வன்மை, புஜபல வரபலங்களும் கல்நெஞ்சுடைமையும்.

செம்மை + ஆம்பல் = சேதாம்பல்: பண்புத்தொகை: செம்மையின் ஈறுபோய் ஆதிநீண்டு முன்நின்ற மெய் திரிந்தது: இதனைப் போன்ற பண்புத்திரிபுகளை 'பண்புமாத்திரையாய்க் குறைந்த சொல்லாதலின், மரூஉவின் பாத்தியதாய் நின்றது' என்பர், நச்சினார்க்கினியர். அருந்தி யகல்வான் - தின்றுகொண்டு போகும்போது என்றும் உரைக்கலாம்; அவ்வுரையில், அகல்வான் என்பதை அகல வென்னும் எச்சத்தின் திரிபாகக் கொள்க. ஆவி-வாபீ: வடமொழியின் சிதைவு. வாவியெனப் பிரித்தல் மோனைத்தொடைக்குச் சிறவாது. 'நோக்கி' என்ற வினையெச்சத்துக்கு ஏற்ற முடிக்குஞ்சொல் வருவித்து உரைக் கப்பட்டது. (26)

26. ஓடா நின்ற களிமயிலே சாயற் கொதுங்கி யுள்ளழிந்து, கூடா தாரிற் றிரிகின்ற நீயு மாகங் குளிர்ந்தாயோ, தேடா நின்ற வென் னுயிரைத் தெரியக் கண்டாய் சிந்தையுவந்து, ஆடா நின்று யாயிரங்க [1]ணுடையாய்க் கொளிக்கு மாறுண்டோ.

(இ - ள்.) ஓடாநின்ற - (இப்போது எனது எதிரிலே) ஓடிவிளை யாடுகின்ற, களி மயிலே - மகிழ்ச்சியுடைய மயிலே! சாயற்கு ஒதுங்கி உள் அழிந்து கூடாதாரின் திரிகின்ற நீஉம் - (சீதையின்) சாயலுக் குத் தோற்று மறைந்து மனமழிந்து (அச்சீதைக்குப்) பகைவர்போலச் சஞ்சரித்துவந்த நீயும், ஆகம் குளிர்ந்தாய் ஓ - (இப்பொழுது சீதை யில்லாமை பற்றிச் சந்தோஷத்தால்) மனங் குளிர்ந்தனையோ? தேடா நின்ற என் உயிரை - (அவளைத்) தேடுகின்ற எனது உயிரினது (யாவருமிரங்கத்தக்க) நிலைமையை, தெரிய கண்டாய் - பிரதியட்சமா கப்பார்த்தாய்; (பார்த்தும் சிறிதுமிரங்காமல்), சிந்தை உவந்து ஆடா நின்றாய் - மனமகிழ்ந்து நடனஞ்செய்கின்றாய்; (சீதை போனவிடத் தைச் சொல்லலாகாதோ)? (நான் பார்த்தேனில்லை யென்று சொல் வையாயின்),—ஆயிரம் கண்உடையாய்க்கு-ஆயிரம் கண்களையுடைய உனக்கு, ஒளிக்கும் ஆறு - (தெரியாதபடி அவள்) மறைந்து செல் லும் வழி, உண்டு ஓ - உளதோ? [இல்லையே]; (எ - று.)

சாயலால் உன்னை அவமதித்துவென்ற சீதை என்னைவிட்டுப் பிரிந்துபோய்விட்டதனால் நீ அகமகிழ்ந்து, அவளுள்ள விடத்தை அறிந்திருந்தும் எனக்கு உரையாது களிநடம்புரிகின்றாயென, இராம பிரான் மயிலை வெறுத்துக் கூறினனென்க. இயற்கையில் மயில் அகமகிழ்ந்து களிநடம்புரிதற்கு, சீதை பிரிந்துபோனதைக் கண்டு இவ்வாறு புரிகின்றதெனக் கூறியது, ஏதுத்தற்குறிப்பேற்றவணி. ஒளிக்குமாறு உண்டாகாது என்பதை, 'ஆயிரங்கண் உடையாய்' என்ற அடைகொளி சாதித்து நிற்பது, கருத்துடையடைகொளியணி யாம். அடர்த்தியால் கார்காலம்போலிருண்ட சோலைகள் தேனை மிகுதியாப்பொழிய அதுகண்டு மழையென மருண்டு மயில்கள் இள

வேனிற்காலத்திலும் களிநடம்புரிந்தன வெனக. 'தேடாநின்ற என்னுயிரைத் தெரியக்கண்டாய்' என்பதற்கு - என்னால் தேடப்படுகின்ற என்உயிருக்கு ஒப்பான சீதையை அவள் பேசும்போது நன்றாகப் பார்த்திருப்பாயென்றும் பொருள் கொள்ளலாம். 'ஆயிரங் கண்' என்றது, பீலிக்கண்களை. இங்கே 'ஆயிரம்' என்றது - பலவென்னும் பொருள்பட நின்றது. இவ்விடத்தில், "நாணினதொகுபீலி கோலின நடமாடல், பூணியநினசாயல் பொலிவது பலகண்ணிற், காணிய வெனலாகுங் களிமயில் பலகாணும்" என்றதன் பொருளை நோக்குக. "மையில் வாணெடுங்கண்வளராதன, மெய்யெலாமுடையாய் மெய்ம்மை காண்டி நீ, ஐயன்சென்றுழிக் கூறுகென்று ஆய்மயில், கையினால் தொழுதாள் கயற் கண்ணினாள்" என்ற சிந்தாமணிச் செய்யுள், இங்கு நினைவிற்கு வருகின்றது.

களி மயில் - களிக்கின்ற மயில் எனினுமாம். கூடார் - பகைவர். ஆகம் என்னும் உடம்பின் பெயர் - மனத்திற்கு ஆகுபெயர்; இனி, அகம் என்பதன் நீட்டல் விகாரமாகவுங்கொள்ளலாம். என் உயிர்-ஒற்றுமைக் கிழமையில் வந்த ஆறும்வேற்றுமைத்தொகை. உயிர் என்பது - முன்னைய பொருளிற் பொருளாகுபெயரும், பின்னையபொருளில் உவமையாகுபெயருமாம். பி - ம்:—[1]உடையார்க்கு. (27)

27. அடையீ ரெனினு மொருமாற்ற மறிந்த துரையீ ரன்னத்தின்
பெடையீ ரொன்றும் பேசீரோ பிழையா தாற்குப் பிழைத்தீரோ
நடைநீ ரழியச் செய்தாரே நடுவி லாதார் நனியவரோடு
உடையீர் பகைதா னுமைநோக்கி யுவக்கின் றேனை முனிவீரோ.

(இ - ள்.) அன்னத்தின் பெடையீர் - அன்னப்பேடைகளே!— அடையீர் எனின்உம் - (நீங்கள் என்னிடத்து) வரமாட்டீர்களானாலும், அறிந்தது ஒரு மாற்றம் உரையீர் - (சீதையைப்பற்றி நீங்கள்) அறிந்ததொரு வார்த்தையையாயினுஞ் சொல்லுங்கள்; ஒன்றும் பேசீர்ஓ - (என்னோடு) ஒருவார்த்தையும் பேசமாட்டீர்களோ? பிழையாதாற்கு - (உங்கள் விஷயத்தில்) தவறு ஒன்றுஞ் செய்யாதவனுக்கு (எனக்கு), பிழைத்தீர்ஓ - தவறுசெய்வீர்களோ? நடு இலாதார்ஏ-இடையில்லாத சீதாபிராட்டியாரே, நீர் நடை அழிய செய்தார் -நீங்கள் நடையழகில் (தமக்குத்) தோற்றுப்போம்படி செய்தார்; அவரோடு தான் நனி பகை உடையீர் - அச்சீதையாரோடுதான் மிக்க பகைமையை யுடையராயிருக்கின்றீர்; (அங்ஙனமன்றி), உமை நோக்கி உவக்கின்றேனை - உங்களைப்பார்த்து (உங்கள் நடை அவள்நடையை ஒக்கும் என்று எண்ணி) மகிழ்கின்ற என்னையும், முனிவீர்ஓ-வெறுப்பீர்களோ? (எ - று.)

உங்கள்நடையை யழியச்செய்து வெற்றிகொண்ட சீதையினிடத்துப் பகைமைகொள்வது முறையே; உங்களுக்கு ஒரு பிழையுஞ் செய்யாமல் உங்கள்நடையை நோக்கி மகிழ்கின்ற என்னிடத்தும் பகைமைகொண்டு அருகில் வாராதும் இவ்வாறு ஒன்றும் பேசாதும் போவது தகுதியோ? என்பதாம்; இனி,

இக்கவியில், உரையீர் என்பதற்கு - சொல்லுகின்றீரில்லையென்றும், பிழையாதாற்கு - (சீதையைப் பிரிந்து) உயிர்வாழமாட்டாதவனுக்கு என்றும் பொருள்கொள்ளலாம். நடுவிலாதார் நடை நீரழியச் செய்தார் என்ற தொடர் - நடுவுநிலையற்றவர் உம்மிடத்து நன்னடக்கை யழியச்செய்தாரென்ற பொருளும் தோன்றநின்றது.

பெடையார்-இங்கு, ஆர் என்னும் பலர்பால் விகுதி, உயர்வுப் பொருளது; இது-உயர்வினால் அஃறிணை உயர்திணையாகச் சொல்லப் பட்ட திணைவழுவமைதி. பிழையாதாற்கு - தன்மையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி. ஓகாரங்கள் - இரக்கப்பொருளன. (28)

28. பொன்பால் பொருவும் விரையல்லி புல்லிப் பொலிந்த பொலந் தாது, தன்பாற் றழுவுங் குழல்வண்டு தமிழ்ப்பாட் டிசைக்குந் தாம ரையே, என்பா லில்லை யப்பாலோ விருப்பா ரல்லர் விருப்புடைய, உன்பா லில்லை யென்றக்கா லொளிப்பா ரோடு முறவுண்டோ.

(இ - ள்.) பொன் பால் பொருவும் - பொன்னின் இயல்பை யொத்திருக்கின்ற, விரை - வாசனையையுடைய, அல்லி புல்லி - அக விதழ்களைச் சார்ந்து, பொலிந்த - (அவற்றினகத்தேபொருந்தி) விளங்குகின்ற, பொலம் தாதுதன்பால் - பொன்னிறமான மகரந்தப் பொடியினிடத்தே, தழுவும் - (ஆணும் பெண்ணுமாகத்) தழுவிநிற் கின்ற, குழல் வண்டு - இசைபாடுகின்ற வண்டுகள், தமிழ் பாட்டு இசைக்கும் - (கேட்டற்கு) இனிமையான இசைப்பாட்டுக்களைப் பாடப் பெற்ற, தாமரையே - தாமரைமலரே!—(சீதையார்), என்பால் இல்லை- (கணவனாகிய) என்னிடத்தில் இல்லை; அப்பால்ஓ இருப்பார் அல்லர்- வேறிடத்திலோ இருக்கத்தக்கவரல்லர்; விருப்பு உடைய உன்பால் இல்லை என்றக்கால் - விருப்பத்தையுடைய (பிறந்த இடமாகிய) உன் னிடத்திலும் இல்லை யென்று நீயுஞ்சொன்னால்,—ஒளிப்பாரோடுஉம்- (வைத்துக் கொண்டு இல்லை யென்று) மறைத்துப் பேசுபவர்களோ டும், உறவு - சிநேகங்கொள்ளுதல், உண்டுஓ - தகுதியுள்ளதாமோ? [ஆகாதே]; (எ - று.)

இலக்குமியினமிசமான சீதாபிராட்டியார் என்னிடத்தில் இல்லை யென்பது பிரதியட்சமாகத்தெரிந்தவிஷயம்; வேறிடத்தில் இருக்க மாட்டாரென்பதும் பிரசித்தமானதே; ஆகையால், உன்னிடத்தே இருத்தல்வேண்டும். ஆகவே, நீ உன்னிடத்திற் காட்டாது ஒளிக் கின்றாயெனத் தாமரையை இராமபிரான் வெறுத்து உரைத்தன னென்க.

அல்லி-அகவிதழ்; (புல்லி - புறவிதழ் என்றபொருளிலும்வரும்.) அல்லி புல்லித்தாதுதழுவுந் தாமரையென்று கூட்டியும் உரைக்க லாம். குழல் - இசைப்பாட்டு: இனி, குழல்வண்டு - ஊதுகுழல்போலப் பாடுகின்ற வண்டு என்றும், கூந்தல்போற் கருநிறம் பொருந்திய வண்டு என்றுமாம், 'தமிழ்' என்ற சொல்-இனிமையென்ற பொருள தாதலை "தமிழ்தழீஇய சாயலவர்" என்னுமிடத்துங் காண்க.

பொன் + தாது = பொலந்தாது; இப்புணர்ச்சி. "பொன்னென் கிளவி" என்னுந் தொல்காப்பியத்துப் புள்ளிமயங்கியற் சூத்திரவிதி பற்றி அமைந்தது: இனி, பிற்காலத்தார் 'பொலம்' என்று தனியே ஒருசொற்கொள்வர். புல்லி - இறந்தகாலவினையெச்சம். கேளாத தாமரையைக் கேட்பதுபோலக்கூறியது, மரபுவழுவமைதி; "சொல்லா மரபி னவற்றோடு கெழீஇச், செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்" என்றார், ஆசிரியர் தொல்காப்பியனார்; இவ்விலக்கணம், ஏனையிடங் கட்கும் ஒக்கும். (29)

29. ஒருவா சகத்தை [1]வாய்திறந்திட் டுதவாய் பொய்கை யுள் ளொடுங்குந், திருவா யனைய சேதாம்பற் கயலே கிடந்த செங்கிடை யே, வெருவா வெதிர்நின் றமுதுயிர்க்கும் வீழிச் செல்விக் கொழுங் கனிவாய், தருவா யங்[2]வா யின்னமிழ்துந் தண்ணென் மொழியுந் தாராயோ.

(இ - ள்.) ஒரு வாசகத்தை வாய் திறந்திட்டு உதவா - ஒரு வார்த்தையையும் வாயைத்திறந்து சொல்லாமல், பொய்கையுள் ஒடுங்கும் - தடாகத்திலே குவிந்திருக்கின்ற, திரு வாய் அனைய சேதாம்பற்கு - சீதையினது வாயைப் போன்ற சிவந்த ஆம்பல் மலர்க்கு, அயலே - அருகிலே, கிடந்த - பொருந்தியுள்ள, செம் இடையே - சிவந்த சடையே!—(நீ),—வெருவா - அஞ்சாமல், எதிர் நின்று - (என்) முன்னே பொருந்தி,—அமுது உயிர்க்கும் - அமிருதத்தை வாய்விடுகின்ற [அமிழ்தம்போ லினிய பேச்சுக்களைப்பேசுகின்ற], செவ்வி கொழு வீழி கனி வாய் - அழகையுடைய செழுமையான வீழிப்பழம் போன்ற சீதையின் வாயை, தருவாய் - காட்டுவாய்; (அத்தகைய நீ), அ வாய் இன் அமிழ்துஉம் - அந்த வாயிலுள்ள இனிய அமிருதம்போன்ற இரசத்தையும், தண்ணென்மொழிஉம் - குளிர்ந்த பேச்சுக்களையும், தாராய்ஓ - காட்டமாட்டாயோ? (எ - று.)

'நீ ஆம்பலைப்போலன்றி சீதையின் வாயைப்போன்று வெளி வந்து காட்டுகின்றனையே; அதிலுள்ள இனிய சுவையையும், இனிய பேச்சையுந் தரலாகாதோ?' என, இராமபிரான் செங்கிடையை நோக்கி இரங்கின னென்க. இங்குச் செஞ்கிடை வாயை வடிவத்தால் ஒத்துநின்று இனிய ரசத்தையும் மதுரமான பேச்சையும் பெறாது நிற்பதாகிய குறைவைக் கொண்டுள்ளதாகக் கூறியதில் வேற்றுமையணி தொனிக்கும்.

இப்பொழுது என்னிடத்துச் சீதையுமில்லாமையால் நீ அவளது வாயழகுக்குத் தோற்று அஞ்சி ஓடாது எதிர்நிற்கின்றாய் போலு மென்பான், 'வெருவா எதிர்நின்று தருவாய்' என்றான். பகற்பொழுதாதலால், ஒடுங்குமாம்பலெனப்பட்டதுமாம். வீழி - ஓர் செடி. ஒரு வாசகத்தை என்னுமிடத்து, இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. பி-ம்:—[1]வாய்திறந்திங்குதவாய், வாய்திறந்திட்டுதவாய். [2]வாய் முகிழ்நகையும். (30)

30. அலக்க ணுற்றேற் [1]குற்றுதவற் [2]கடைவொன் றுண்டே கொடிவள்ளாய், மலர்க்கொம் பனைய மடச்சீதை காதே மற்றென் றல்லையால், பொலக்குண் டலமுங் [3]கொடுங் குழையும் புனை [4]தாழ் முத்தின் பொற்றோடும், விலக்கி வந்தாய் [5]விளம்பாதே [6]யின்னும் பூசல் விரும்புதியோ.

(இ - ள்.) கொடி வள்ளாய் - வள்ளைக்கொடியின் இலையே!—(நீ),—மலர் கொம்பு அனைய - பூங்கொம்பைப்போன்ற, மடம் சீதை - மடமைக்குணமுள்ள சீதையினது, காதே - காதுதானே யல்லாமல், மற்று ஒன்று அல்லை - வேறொன்றுமல்லாய்; ஆல் - ஆதலால், அலக்கண் உற்றேற்கு - துன்பமடைந்த எனக்கு, உற்று உதவற்கு - மனமிசைந்து உதவி செய்தற்கு, அடைவு ஒன்று உண்டுஎ - ஒரு முறையும் உள்ளதே: (இங்ஙன மிருக்கவும்), பொலம் குண்டலம்உம் - பொன்னாற்செய்த குண்டலத்தையும், கொடுங் குழைஉம் - வளைந்த குழையையும், புனை தாழ் முத்தின் பொன்தோடுஉம் - அணிதற்குரிய தொங்குகின்ற முத்தினாற் செய்த அழகிய தோட்டினையும், விலக்கி வந்தாய் - (அணியாமல்) நீக்கி வந்த நீ, விளம்பாதே- (அவள் சென்ற இடத்தைச்) சொல்லாமலே, இன்னும் - இன்னமும், பூசல் - பகைமையையே, விரும்புதிஒ - விரும்புகின்றாயோ?(எ - று.)

நீ வடிவத்தாற் சீதையின் காதை யொத்திருப்பதனால் குண்டலம் முதலியவற்றையும் அணிந்துவந்து எல்லாப்படியாலும் அவளது காதுபோன்றுதோன்றினையானால், நான், உன்னைக்கண்டு ஆறியிருப்பேன்: நீ அவ்வாறு செய்கின்றிலையே யென வள்ளைக் கொடியை நோக்கி இராமபிரான் இரங்கியவாறு. 'வள்ளாய்காதே' என்றது - உருவகவணி: நீ சீதையின்காதே யென்ற வர்க்கியம், 'உற்று உதவற்கு அடைவொன்றுண்டே' என்பதைச் சமர்த்தித்து நிற்பதனால், தொடர்நிலைச்செய்யுட்குறியணியாம்; வள்ளை பூசலைவிரும்பியதனால் பொலக்குண்டலம் முதலியவற்றை விலக்கி வந்ததாக ஒரு காரணம் கற்பித்துக்கூறியது, ஏதுத்தற்குறிப்பேற்ற வணி: இந்தப் பின்னிரண்டடிகளில், வேற்றுமையணியும் தொனிக்கும்.

அலங்குகண் என்பது, அலக்கண் என மருவிற்று; 'அலக்கண்' என்பது - மலர்ந்த நோக்கமின்றி மையல்நோக்கப்படவரும் இரக்கம்: இடுக்கண் என்பதும் அது.' அலம் கண் என்று பிரித்து - சஞ்சலமான கண்களெனக் கொண்டு, துன்பத்துக்குக் காரணக்குறி யென்றலும் அமையும். கொம்பு - மேனிக்கும், மலர் - அதிலுள்ள கண் கை கால் முகம் முதலிய அவயவங்களுக்கும் உவமை. மடமாவது-எல்லாம் அறிந்தும் ஒன்றும் அறியாது போலிருக்குந் தன்மை; இது-நாணம், அச்சம், பயிர்ப்பு முதலிய பெண்குணங்கள் பிறவற்றிற்கும் உபலக்ஷணம். குண்டலம், குழை, தோடு இவை - காதணிகளின் பேதங்கள். ஜநகமகாராஜன் ஒருகால் யாகஞ் செய்யச் சாலையமைப்பதற்காகப் பூமியை உழுதபொழுது பூமியினின்று கலப்பையுழுபடைச்சாலில் அகப்பட்டதனால், சீதையெனப் பெயர்: சீதை - உழுபடைச்சால்; இதனால், அயோநிஜத்வம் கூறப்படுகின்றது. பி - ம்:—[1]ஆற்றுவ

தற்கு. [2]அடைவுண்டொன்றே, அடைவுண்டென்ற. [3]நெடுங். [4]தோள். [5]காட்டாயோ. [6]இன்னம். இது "பஞ்சு பூத்த" என்பதற்குப்பின் சிலபிரதியில். (31)

31. பஞ்சு பூத்த விரற்பதுமம் பவளம் பூத்த [1]வடியாளென்
நெஞ்சு பூத்த தாமரையி னிலயம் [2]பூத்தாள் நிறம்பூத்த
மஞ்சு பூத்த[3]மலர்பூத்த குழலாள் கண்போன் மணிக்குவளாய்
[4]நஞ்சு பூத்த தாலென்ன நகுவா யென்னை நலிவாயோ.

(இ - ள்.) பஞ்சு பூத்த விரல் - செம்பஞ்சுக்குழம்பு ஊட்டிய விரல்களினால், பதுமம் பவளம் பூத்த - செந்தாமரைமலரிற்பவழம் பொருந்தின் தொத்த, அடியாள் - பாதங்களையுடையவளும், என் நெஞ்சு பூத்த தாமரையின் நிலயம் பூத்தாள்-எனது மனமென்னும் மலர்ந்த தாமரைமலராகிய வீட்டில் (எப்பொழுதும்) வசிப்பவளும், நிறம் பூத்த மஞ்சு பூத்த மலர் பூத்த குழலாள்-கருநிறமுள்ள மேகத்தைப்போன்றதும் மலர்களைச் சூடியதுமான கூந்தலையுடையவளுமாகிய சீதையினது, கண்-கண்களை, போல் - ஒத்திருக்கின்ற, மணி குவளாய் - அழகிய நீலோத்பலமே!—(நீ),—நஞ்சு பூத்தது என்ன - விஷம் படர்ந்ததுபோல, நகுவாய் - நகைத்து [மலர்ந்து], என்னை—, நலிவாய்ஓ - வருத்துவையோ? (எ - று.)—ஆல் - அசை.

தான் எப்பொழுதும் ஜானகியை நினைத்திருப்பதனாலும், இலக்குமிக்கு இருப்பிடம் தாமரை யாதலாலும், 'என்னெஞ்சு பூத்த தாமரையின் நிலயம் பூத்தாள்' என்றார். இப்போது எனது மனத்திலேயே தங்கியிருக்கிற சீதையின் கண்ணை யொத்திருக்கின்ற நீ, அவள் என்னிடத்து இருப்பதுபோலவே அன்போடு இருக்கவேண்டியிருக்க, அவ்வாறிருத்தலைவிட்டு நகைத்து நலிதல் தக்கதன்று என்பதாம். நகுதல் என்பது - இங்கு, (பரிகாசமாகச்) சிரித்தல், மலர்தல் என்ற இருபொருளையும் தந்தது: வடமொழியிலும் 'ஹாஸ:'என்பது-இவ்விருபொருளையுமுடையதாதல்,காண்க. ஆகவே,'நகுவாய் என்னை நலிவாயோ'என்பது-சிலேடை மூலமாக வந்த ஒற்றுமையுயர்வுநவிற்சியணி. 'பூத்த' என்ற ஒரு சொல் வெவ்வேறு பொருளில் பலமுறை வந்தது—சொற்பின்வருநிலையணி. நஞ்சபூத்த விரல், பதுமம் பவளம் பூத்த வடியாள் முதலிய இடங்களில்— தன்மைத்தற்குறிப்பேற்றவணியும், கண்போன்ற குவளை என்ற இடத்து—எதிர்நிலையணியும் உள்ளன; இவ்வாறு பல அணிகள் இச்செய்யுளிற்சேர்ந்து வந்துள்ளன. பாதங்கள் செந்தாமரைமலரையும், அப்பாதங்களிலுள்ள விரல்கள் திரண்டபவழத்துண்டையும் போலுமென்க. "பஞ்சியூட்டிய பாட்டிசைக்கிண்கிணிப்பதுமஞ், செஞ்செவிச் செழும்பவழத்தின் கொழுஞ்சுடர் சிதறி" என்றது, இங்கு நோக்கத்தக்கது. நெஞ்சுபூத்த தாமரை-ஹ்ருதய கமலம். மணிக் குவளை - நீலமணிபோன்ற குவளை யென்றுமாம். நஞ்சு - வருத்துதலாலும், கருநிறத்தாலும் குவளைக்கு உவமை.

'வினைப்பகுதிகள் வேண்டிய பொருளை விளக்கும்' என்னும் வடமொழி நியாயத்தால், இக்கவியில் 'பூத்த' என்னுஞ் சொல்லுக்கு - சந்தர்ப்பத்திற்கு ஏற்பப் பொருளுரைக்கப்பட்டன. பி - ம்:—[1] துவர் வாயாள். [2] உவந்தாள். [3] மழையனைய. [4] நஞ்சுபூத்ததாமன்னநகையா லென்னை நலிவரோ. (32)

வேறு.

32.—மீண்டும் இராமன் அப்பொய்கையைநோக்கியிரங்குதல்.

என்ற யாவுயிர்க் கின்றவ னேடவிழ்
கொன்றை [1]யாவிப் புறத்திவை கூறியான்
பொன்ற யாதும் [2]புகல்கிலை [3]போலுமால்
வன்ற யாவிலி யென்ன வருந்தினன்.

(இ - ள்.) அயா - (மனைவியைப் பிரிந்ததனு லுண்டான) மன வருத்தத்தால், உயிர்க்கின்றவன் - பெருமூச்சுவிடுகின்றவனாகிய ஸ்ரீராமபிரான்,—ஏடு அவிழ் கொன்றை - பூவிதழ்கள் விரிகின்ற கொன்றை மரங்களையுடைய, ஆவி புறத்து - அப்பொய்கையின் கரையிலே (இருந்து), என்று இவை கூறி - என்று இத்தன்மையன வாகிய வார்த்தைகளைச் சொல்லி,—(பின்னும் பொய்கையை நோக்கி), 'வல்-வன்மைக்குணமுடைய, தயா இலி-இரக்கமில்லாத பொய்கையே! யான் - நான், பொன்ற - (இவ்வாறு) அழியவும், யாதும் புகல்கிலை போலும் - யாதொரு வார்த்தையையும் பேசாமலிருப்பாய் போலும்,' என்ன - என்று சொல்லி, வருந்தினன் - வருத்தமடைந்தான்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

பொய்கைக்கரையிலும் பொய்கையிலு முள்ள பொருள்களை நோக்கிப் புலம்பிய இராமபிரான் இங்குப் பொய்கையைநோக்கிப் புலம்பின னென்க. முல்லைநிலக் கருப்பொருளாகிய கொன்றையைக் குறிஞ்சியிற் கூறியது - திணைமயக்கம். போலும் - ஒப்பில்போலி: உவமைப் பொருள்தாராத போலென்னுஞ் சொல். தயா என்னும் வடமொழி - ஆவீறுஐயீறாகத் திரியாதுநின்றது. 'தயாவிலி' - அண்மைவிளி. பி - ம்:—[1]வாவிப்புறத்திலும். [2]புரிகிலை. [3]போதுமால். (33)

33.—பிடிக்குக் களிறு நீரூட்டுவதைக்கண்டு இராமபிரான் வருந்துதல்.

[1]வார ளித்தழை மாப்பிடி வாயிடைக்
கார ளிக்கலு ழிக்கருங் கைம்மலை
நீர ளிப்பது நோக்கின னின்றனன்
பேர ளிக்குப் [2]பிறந்தவில் லாயினன்.

(இ - ள்.) பேர் அளிக்கு - மிக்க கருணைக்கு, பிறந்த இல் ஆயினன் - பிறப்பிடமாகவுள்ள ஸ்ரீராமன்,—(அங்கே), கார் அளி-கறுத்த வண்டுகள் மொய்க்கப்பெற்ற, கலுழி - மதநீர்ப்பெருக்கை யுடைய, கருங் கைம்மலை - கரிய ஆண்யானைகள், வார் அளி தழை மா பிடி வாயிடை நீர் அளிப்பது - நீண்ட இனிப்பான தழைகளைத் தின்கின்ற பெரிய பெண்யானைகளின்வாயில் தண்ணீரைத் தமது துதிக்கை

யால்) மொண்டு கொடுத்து ஊட்டுதலை, நோக்கினன் - பார்த்து, நின்றனன் - (தனக்கு இவ்வாறு விளையாடுதற்கு இல்லையே! என்கிற எண்ணத்தால் திகைத்து) நின்றான்; (எ - று.)

"சென்றுங்கோ ரலவன்றன் சீர்ப்பெடையின், வாய்வண்டனைய தோர் நாவற்கனி நனிநல்கக் கண்டு, பேய்கண் டனையதொன்றுகி நின்று னப்பெருந்தகையே" என்றார் திருக்கோவையாரிலும். முதலடியில், இலக்கணையால், அளி - இனிப்பைக் காட்டிற்று. அளிதல் - இனிப்புண்டாகக்கனிதல். பிடி - பெண்யானை: துதிக்கையையுடைய மலையெனவே, யானையாயிற்று. பிடியென வந்ததனால், கைம்மலை-களிறாயிற்று. இரண்டாவது அடிக்கு - காளமேகம்போல மதமழையைப் பெருக்குகின்ற யானை யென்றும் பொருள் கொள்ளலாம். அளியாவது - அன்புகாரணத்தால் தோன்றும் அருள். பி - ம்:—[1]வாரளித்திள. [2]பிறந்தகம். (34)

34.—இலக்குமணன் இராமபிரானை மாலைக்கடன் செய்யத் தூண்டுதல்.

[1]ஆண்டவ் வள்ளலை யன்பெனு[2]மாரணி
பூண்ட தம்பி பொழுது கழிந்ததால்
ஈண்டி ரும்புனல் [3]தோய்ந்துன் னிசையென
[4]நீண்ட வன்கழல் தாழ்நெடி யோயென்ருன்.

(இ - ள்.) ஆண்டு - அப்பொழுது,—அன்பு எனும் அரு அணி பூண்ட - அன்பென்கின்ற பெறுதற்கரிய ஆபரணத்தை அணிந்த, தம்பி - இளையபெருமாள்,—அ வள்ளலை - அந்த ஸ்ரீராமனை நோக்கி, 'பொழுது கழிந்தது - பொழுது போய்விட்டது [சூரியாஸ்தமனகாலமாயிற்று]; ஆல் - ஆகையால், நெடியோய் - (திருக்கலியாண குணங்களாற்) பெரியவனே! (நீ), ஈண்டு இரும்புனல் தோய்ந்து - இப்பொய்கையின் பெருமை பொருந்திய தீர்த்தத்திலே நீராடி,—உன் இசை என நீண்டவன் - உன்னுடைய கீர்த்தி (எல்லா வுலகத்தும் ஓங்கி வளர்வது) போல வளர்ந்தருளின திரிவிக்கிரமனாகிய ஸ்ரீமந்நாராயணனது, கழல் - திருவடிகளை, தாழ்-வணங்குவாயாக,' என்றான்-என்று விண்ணப்பஞ் செய்தான்; (எ - று.)

பொழுதுகழிந்ததுமுட்படத் தெரியாதபடி இராமபிரான் விரக வேதனையுற்றிருத்தல் பற்றி, இளையபெருமாள் இங்ஙனம் விண்ணப்பஞ் செய்தனர்; அன்றியும், பிரபுக்களுக்குத் தெரிந்த விஷயங்களையும் ஞாபித்தல், அடியவர்கடமை. [1]ஆண்டவள்ளலை என்ற பாடமும் அமையும்: 'ஆண்டவன்' என்பது அனைத்துயிரையும் ஆட்கொண்டவனான எம்பெருமானை யுணர்த்தும். வள்ளல் - வரையாது கொடுக்குந் தன்மையையுடையவன். அன்பு - ஸ்ரீராமபக்தி. அன்பென்னும் ஆர் அணி யென்ற விதப்பு - உலகத்து ஆபரணங்களெல்லாம் அலங்கரிப்பது உடம்பு மாத்திரத்தையே; இவ்வணியோ உயிரை அலங்கரிப்பது என்னும் வேற்றுமை தோன்ற நின்றது. 'நீண்டவன் கழல்தாழ்' என்றது - சூரியமண்டலத்தின் நடுவிலே எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீமந் நாராயணனைக் குறித்துச்

சாயஞ்சந்தியாவந்தனம் செய்வாயாக வென்றபடி. தலைமயனே யென்றற்கு 'நெடியோய்' என்றுருமாம்.

அணியென்பது - அணியப்படுதலாகிய காரணம் பற்றி வழங்கும் பெயராய், இடுவன தொடுவன கட்டுவன கவிப்பனவாகிய ஆபரணங்கள் பலவற்றிற்கும் பொதுவாய் நிற்கையால், காரணப் பொதுப்பெயர். பி - ம்:—[1] ஆண்ட. [2] பேரணி. [3] தோய்ந்துழியேகி நீ, தோய்ந்துழிசெய்கென, தோய்ந்துழிச் செய்யென. [4] நீண்டவன் கழலாய். (35)

35.—இராமபிரான் நீராடுதல்.

அரசு மவ்வழி நின்[1]றரி தெய்தியத்
திரைசெய் [2] தீர்த்தமுன் செய்தவ முண்மையால்
வரைசெய் மாமத வாரண நாணுற
விரைசெய் பூம்புன லாடலை மேயினன்.

(இ - ள்.) அரசுஉம் - ஸ்ரீராமனும்,—அ வழி நின்று அரிது எய்தி - அவ்விடத்திலிருந்து அருமையாக [வருத்தத்தோடு] சென்று,—அ திரை செய் தீர்த்தம் முன் செய் தவம் உண்மையால் - அலைகளை வீசுகின்ற அந்தத்தீர்த்தம் முன்னே செய்துள்ள தவப்பயன் இருத்தலினாலே [தவஞ்செய்திருந்தபடியால்],—வரை செய் மா மதம் வாரணம் நாண்உற - மலைபோன்ற பெரிய மதம்பிடித்த யானையும் வெள்கும்படி, விரை செய் பூ புனல் - வாசனை வீசுகின்ற அழகிய தீர்த்தத்தில், ஆடலை மேயினன் - நீராடலைப் பொருந்தினன் [மூழ்கினன்]; (எ - று.)

திருமாலினது திருவடியினின்று தோன்றிய கங்காநதியானது அந்தத் திருவடியின் சம்பந்த மொன்றினாலேயே எல்லாவுலகத்தாரும் கைகூப்பி வணங்கும்படியான மேன்மையை யடைந்திருத்தலால், அப்பெருமானது திருமேனி முழுவதும் படியப்பெற்ற இப்பொய்கையின் சிறப்பு மிகப்பெரிதென்பார், 'அத்திரைசெய் தீர்த்தம் முன் செய்தவ முண்மையால் ஆடலைமேயினன்' என்று பாராட்டிக் கூறினர்.

அரசு - பண்பாகுபெயர். வரை செய், செய் - உவமவுருபு; "வேல் நிரைசெய் கண்ணியொடு மெல்லென விருந்தான்" என்னுஞ் சிந்தாமணியிற்போல. பி - ம்:—[1] அரிதேகி. [2] தீர்த்தம். (36)

36.—இராமபிரான் நீராடியதனால் அப்பொய்கை வெதும்புதல்.

நீத்த நீரி னெடியவன் மூழ்கலும்
தீத்த [1] காமத் தெறுகதிர்த் தீயினால்
[2] காய்த்தி ரும்பைக் கருமகக் கம்மியன்
[3] தோய்த்த தண்புன [4] லொத்ததத் தோயமே.

(இ - ள்.) நெடியவன் - ஸ்ரீராமபிரான், நீத்தம் நீரில் - வெள்ளத்தையுடைய அத்தீர்த்தத்தில், மூழ்கலும் - ஸ்நானஞ் செய்தவளவில்

—தீத்த - (அவனது திருமேனியை) வெதும்பச்செய்த, காமம் - காமமாகிய, தெறு - அழிக்கின்ற, கதிர் தீயினால்- சுவாலையையுடைய அக்கினியினால், அ தோயம் - அப்பொய்கையின் தீர்த்தமானது,—கருமகன் கம்மியன் - இரும்புவேலை செய்பவனாகிய கருமான், காய்த்த இரும்பை - (நன்றாகக்) காய்ச்சின இரும்பை, தோய்த்த - நனைத்த, தண் புனல் - குளிர்ந்த நீரை, ஒத்தது—;(எ - று.)

விரகவேதனையால் தபிக்கின்ற ஸ்ரீராமன் நீராடின மாத்திரத்தில் அவனது திருமேனியின் வெப்பத்தால் அத்தண்ணீர் கொல்லனுலையிற் காய்ச்சின இரும்பைத்தோய்த்த நீர்போலக் கொதித்ததென்பதாம்; உவமையணி. காமமும் நெருப்பும் தாம் சேர்ந்தவிடத்தைச் சுட்டெரிக்குந் தொழிலுடையனவாதலால், 'தீத்தகாமத்தெறு கதிர்த்தீ' என்றார்; உருவகவணி. உலகத்து நெருப்பை அவிக்குந் தன்மையுடைய நீரினால் அவியாமல் இக்காமத்தீ அந்நீரையும் வெதுப்பிற்றெனக் காமத்தின் கொடுமையை வேற்றுமையணி தோன்ற விளக்கியபடி.

நீத்தம் - நீந்தப்படுவதென வெள்ளத்துக்குக் காரணப்பெயர். காய்த்திரும்பு - விகாரம். இரும்பைக்காய்த்து என மாற்றி யுரைப்பினுமாம். கருமகக் கம்மியன் - கருமகனாகிய கம்மியன்; இருபெயரொட்டு; கருமானாகிய கம்மாளனென்று பொருள்; உயர்திணையிடத்து விகாரமாயிற்று. இவை - முறையே கர்மகன், கர்மீ என்னும் வடசொற்களின் விகாரம். பி-ம்:—[1] காமத்தெறுங்கதிர், காமந்தெறு திறல். [2] காய்த்திமற்றக் கரும்பொனைக்கம்மியன், காய்த்த... காய்த்திமற்றக் கருமகன் கம்பியை, காய்த்தமைந்த... [3] தோய்த்தவப்புனல். [4] ஒத்ததுதோயமே. (37)

வேறு.

37.—இராமபிரான் அங்கு ஒரு சோலையில் தங்கச் சூரியன் அஸ்தமித்தல்.

ஆடினா னன்னமா யருமறைகள் பாடினான்
நீடுநீர் முன்னைநூ னெறிமுறையி னேமிதாள்
சூடினான் [1] முனிவர்தந் [2] தொகுதிசேர் சோலைவாய்
மாடுதான் வைகினா [3] னெரிகதிரும் வைகினான்.

(இ - ள்.) அரு மறைகள் - அறிவதற்கருமையான வேதங்களை, அன்னம்ஆய் - அன்னப்பறவைவடிவு கொண்டு, பாடினான் - (பிரமனுக்கு) உபதேசித்தருளிய திருமாலின் திருவவதாரமாகிய ஸ்ரீராமன், ஆடினான் - (அப்பொய்கையில்) நீராடி, முன்னை நூல் நெறி முறையின் - அநாதியான வேதங்களிற் கூறிய விதியின் கிரமப்படி, நீடு நீர் - சிறந்த அர்க்கிய தீர்த்தத்தை, நேமி தாள் - சக்கராயுதத்தையுடைய திருமாலினது திருவடிகளில், சூடினான் - சமர்ப்பித்து [சந்தியாவந்தனஞ் செய்து],—முனிவர் தம் தொகுதி சேர் சோலைவாய் - முனிவர்களின் கூட்டம் பொருந்தியதொரு

சோலையில், மாடு - ஒருபக்கத்தில், வைகினன் - தங்கியிருந்தான்; எரி கதிர்உம் - சுடுகின்ற கிரணங்களையுடையனான சூரியனும், வைகினன்-அஸ்தமித்தான்; (எ - று.)

'அன்னமாய் அருமறைகள் பாடினன் நேமிதாள் சூடினன்' என்ற இதில், திருமால் தன் திருவடிகளைத் தானே சூடினனென்று மேல்நோக்கில் முரணும், ஆழ்ந்துநோக்குமிடத்துத் திருமால் தான் கொண்ட மானுடவேடத்திற்குத் தக்கபடி இவ்வாறு செய்தானென்று பரிகாரமும் தோன்றுதலால், இது முரண்விளைந்தழிவணியாம்; இது, வடமொழியில் விரோதாபாஸாலங்கார மெனப்படும்; "தன் திருநாமத்தைத் தானுஞ் சாத்தியே" என்றது, இங்குக் காணத்தக்கது. 'அருமறைகள் பாடினன் சோலைவாய் மாடு தான் வைகினன் எரிகதிரும் வைகினன்' என்ற சொற்போக்கில், சூரியன் அத்தகிரியில் தங்கியதும் இராமபிரான் சோலையில் தங்கியதும் தம்மிலொக்குமென உவமையணி தொனித்தல் காண்க. இப்பூமியிலுதித்து ஜனங்களுக்கு நேரும் மனவிருளை யகற்றுவதனால், இராமபிரான் சூரியனையொப்பனென்க; 'ராமதிவாகரன்' என்ப. நீடு நீர் - பொய்கை என்று கொண்டு, நீடுநீர் ஆடினன் எனினுமாம். இனி, நீடு நீர் என்பதை நூலுக்கு விசேஷணமாக்கி, மிக்க நீர்மை (நன்மை) யமைந்த வேதவிதிப்படி திருமாலைத் திருவடி தொழுது என்றும் பொருள் கொள்ளலாம். இராமபிரான் பொய்கையில் அர்க்கியம் முதலியவற்றை முடித்ததை 'நேமிதாள் சூடினன்' என்றது, அர்க்கியம்விடும் மந்திரமாகிய காயத்திரி சூரியமண்டலத்தினிடையிலிருக்கும் திருமாலைப்பற்றியது என்ற கருத்தினாலாம். அருகிலுள்ள சோலைவாய் வைகினது - காயத்ரீ ஜபஞ் செய்வதற்காக என்னலாம்.

முன்னொருகாலத்திற் பிரமதேவனிடத்தினின்று வேதங்களைப் பறித்துக்கொண்டு கடலில் மூழ்கி மறைந்துபோன மதுகைடபர்களைத் திருமால் கடலினுட்புக்குத் தேடிக் கண்டுபிடித்துக் கொன்று வேதங்களைக் கொணர்ந்து ஹம்ஸரூபியாய்ப் பிரமனுக்கு உபதேசித்தருளின வரலாற்றை உட்கொண்டு, 'அன்னமா யருமறைகள் பாடினன்' என்றார்.

மறையென்பது - சிலசாதியார்க்கும் பெண்பாலார்க்கும் ஓதவும் ஓதுவிக்கவுமாகாதென்று மறுக்கப்படுவதாலும், அறிதற்கரிய மறைபொருளுடைமையாலும், வேதத்துக்குக் காரணக்குறி. நேமி-சக்கரம்: இவ்வடசொல், இலக்கணையாய் அதனையுடையவனை யுணர்த்திற்று. முனிவர் - கடவுளைமனனஞ் செய்பவர்; எல்லாப்பற்றுக்களையும் முனிந்தவர் (விட்டவர்)எனத் தமிழ்வழியாற் காரணங் கூறலாகாது, வடசொல் திரிபாதலின். 'சூடினன்' என்ற சொல்லாற்றலால், தாளை மலராக்கொள்க. சோலைவாய்—வாய் - ஏழனுருபு. எரிகதிர் - வினைத்தொகையன்மொழி. 'முனிவரைத் தொழுது பூஞ்சோலைவாய்' என்று சில பிரதிகளிற் பாடங் காணப்படுகின்றது. பி - ம்:— [1]முனிவரைத். [2]தொழுது சேர், தொகுதிதண். [3]கதிரவனும் வைகினன். (38)

38.—சந்திர னுதித்தல்.

[1] அந்தியாள் வந்துதா [2] னணுகவங் கணுகுருச்
[3] சந்தவார் கொங்கையாள் [4] தனிமைதனி நாயகன்
சிந்தியா நொந்துதேய் பொழுதுதெறு சீதநீர்
இந்துவா னுந்துவா [5] னெரிகதிரி ஞனென.

(இ - ள்.) அந்தியாள் வந்து அணுக - மாலைப்பொழுது வந்து பொருந்தவும், அங்கு அணுகுரு-அவ்விடத்தில் வந்துசேராத, சந்தம் வார் கொங்கையாள் - அழகிய கச்சணிந்த தனங்களையுடைய சீதா பிராட்டியினது, தனிமை - பிரிந்து தனியேயிருக்குந் தன்மையை [விரகத்தை], தனி நாயகன் - ஒப்பற்ற தலைவனாகிய ஸ்ரீராமபிரான், சிந்தியா - நினைத்து, நொந்து - மனம்வருந்தி, தேய் பொழுது-வாடும் போது,—தெறு சீதம் நீர் - (அலை) மோதுகிற குளிர்ந்த நீரையுடைய கடலினின்று, இந்து - சந்திரன், எரி கதிரிஞன் என - சுடுகின்ற கிரணங்களையுடைய சூரியன் போல, வான் - ஆகாயத்தில், உந்துவான் - உதித்து உயர்ந்து விளங்குபவனானான்; (எ - று.)—தான் - அசை.

இதில், மாலையாகிய பெண் வரவும் சீதையாகிய பெண் வந்தாளில்லளென்பது தோன்றுதல் காண்க. விரகவேதனை யுற்றார்க்குச் சந்திரகிரணம் முதலிய குளிர்ந்த பொருள்களும் அக்கினிச்சுவாலை போல வெப்பந்தருவனவாமாதலால், சீதகிரணனாகிய சந்திரனும் உஷ்ணகிரணனாகிய சூரியன்போல வெப்பமுண்டாகத் தோன்றினா னென்றார். "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்" என்றபடியே மாலைக்காலத்தில் ஆசை நோய் மிகுதல்பற்றி, இவ்வாறு கூறினர். அந்தி - ஸந்த்யா என்னும் வடமொழியின் சிதைவு. அது, வடமொழியில் ஸ்த்ரீலிங்கம் (பெண்பால்) ஆதலால், 'அந்தியாள்' எனப் பெண்பாலாகக் கூறப்பட்டது. [3] சந்தமார் என்னும் பாடத்துக்கு - சந்தனமணிந்த கொங்கையென்க. தெறுசீதநீர் என்பதற்கு - பிரிந்தாரைக் காமோத்தீபகப் பொருளாக நின்று வருத்துதற்கு உரிய கடலென்றும், (பிரளயகாலத்திற் பொங்கி உலகத்தை) அழிக்குங் கடலென்றும் பொருள் கூறலாம். அந்தியாள் வந்து, சிந்தியாநொந்து, இந்துவானுந்துவான்; பிராஸம். அணுகவங் கணுகுரு - தொடைமுரண். பி-ம்:—[1] அந்திதான். [2] அணுகாரகவன், அணுகவணுகவன், அணுக வவ்வயின். [3] சந்தமா. [4] தனிமைதாநாயகன். [5] எரிகதிரினேறிஞன், எறிசுடருமேகிஞன், எரிகதிருமாயிஞன். (39)

வேறு.

39.—இதுவும், அடுத்த கவியும்–இராப்பொழுதின் வருணனை.

பூவொடுங் கினவிரவு புள்ளொடுங் கின [1] பொழில்கண்
மாவொடுங் கினமரனு மிலையொடுங் கின [2] கிளிகள்
நாவொடுங் கின [3] மயில்கள் நடமொடுங் கினகுயில்கள்
கூவொடுங் கினபிளிறு குரலொடுங் கினகளிறு.

(இ - ள்.) (அப்பொழுது), விரவு-கலந்த [பலவேறுவகைப்பட்ட], பூ - (பகலிற் பூத்திருக்குந் தாமரை முதலிய) மலர்கள், ஒடுங்கின - குவிந்தன; புள் - பறவைகள், பொழில்கண் - சோலைகளில், ஒடுங்கின- (தம்தமது கூடுகளில்) அடங்கின; மா - மிருகங்கள், ஒடுங்கின - (தம்தஞ்செய்கை) ஒழிந்தன; மரன்உம் - மரங்களும், இலை ஒடுங்கின- இலைகள் குவியப்பெற்றன; கிளிகள்—, நா ஒடுங்கின - பேசுதல் அடங்கின; மயில்கள்—, நடம் ஒடுங்கின - ஆட்டம் ஒழிந்தன; குயில்கள்—, கூ ஒடுங்கின - கூவுதல் அடங்கின; களிறு - யானைகள், பிளிறு குரல் ஒடுங்கின - பேரொலி செய்கின்ற குரல் அடங்கின; (எ - று.)

'ஒடுங்கின' என்ற சொல் ஒரேபொருளிற் பன்முறைவந்தது, சொற்பொருட்பின்வருநிலையணி. ஒடுங்குதல்-உறக்கங்கொண்டு ஒடுங்குதல். 'விரவு' என்னுங் காலங்கரந்த பெயரெச்சத்தைப் பிறபெயர்களோடுங் கூட்டுக. இனி, இரவு எனப்பிரித்து - அவ்விராத்திரியில் இவை இவை ஒடுங்கின என்றும் உரைக்கலாம். பொழில்கள் என்பதைப் புள் என்பதனோடு சேர்க்காமல், புள் ஒடுங்கின - (தடாகத்திலும் சோலையிலு முள்ள) பறவைகள் ஒடுங்கின என்றலும் ஒன்று. 'பொழிற்கண்' எனத் திரியாதது, சந்தவின்பம் நோக்கி; இனி பொழில்கள் எனப்பிரித்து, சோலைகள், பறவைகள் அடங்கப்பெற்றன வென்றும், பொழில்கள் மா ஒடுங்கின - பகலெல்லாம் அலைந்த விலங்குகள் ஓரிடத்து ஒடுங்கித்தங்குதற்கு இடமாயின என்றும் உரைக்கலாம். மரனும் இலையொடுங்கின - பறவைகள் மிருகங்கள் போல ஒடுங்குந் தன்மையில்லாத மரங்களும் தாம் ஒடுங்கவில்லையாயினும், தம் இலைகள் சுருங்கி உறங்குவனபோல ஒடுங்கின என்பர் ஒரு சாரார். கிளி மயில் குயில் என்பன பறவையிலும் களிறு என்பது விலங்கிலும் சேர்ந்தன ஆயினும், சிறப்புடையனவாதலால் தனியே எடுத்துக்கூறப்பட்டன. முறையே பேசுதல் ஆடுதல் பாடுதல் பெருங்காத்திரமுடைமை அவைகட்குச் சிறப்பாம், 'மரனும்' என்ற இழிவு சிறப்பும்மை, அதனுடைய ஓரறிவுடைமையைக் கருதிற்று. 'மரனும் இலையொடுங்கின' 'குயில்கள் கூவொடுங்கின' என்பவை முதலியவாக்கியங்களில், அஃறிணையெழுவாயைத் தொடர்ந்த அஃறிணைச்சினைப்பெயரும் தொழிற்பெயரும் அவ்வெழுவாயின் முடிபினையேகொண்டன. கூ - முதனிலைத் தொழிற்பெயர். பிளிறு குரல் - வினைத்தொகை. களிறு - இங்கு யானைப் பொது. பி - ம்:— [1]பொருவில் மாவுறங்கின. [2]கிளியும். [3]மயிலும். (40)

40. மண்[1]டுயின் றனநிலைய மலைதுயின் றனமறுவில்
பண்[1]டுயின் றனவிரவு பணிதுயின் றனபகரும்
விண்டுயின் றனகழுதும் விழிதுயின் றனபழுதில்
கண்டுயின் றிலநெடிய கடல்துயின் றனகளிறு.

(இ - ள்.) மண் - பூமியிலுள்ள பிராணிகளெல்லாம். துயின்றன - தூங்கின; நிலைய மலை - (சலியாமல்) நிலைபெறுதலையுடைய மலைகளி

லுள்ள பிராணிகளெல்லாம், துயின்றன—; மறுஇல் - மாசில்லாத [தெளிந்த], பண் - நீர்நிலைகள், துயின்றன—; விரவு பணி - (நாக லோகத்திற்) பொருந்திய பாம்புகள், துயின்றன—; பகரும் விண் - சொல்லப்படுகின்ற ஆகாயத்திற் சஞ்சரிக்கும் பிராணிகளெல்லாம், துயின்றன—; கழுதுஉம் - பேய்களும், விழி துயின்றன-கண்ணுறங்கின; (இப்படி எல்லாம் உறங்கின காலத்திலும்), நெடிய கடல் துயின்றன களிறு - பெரிய திருப்பாற்கடலிற் பள்ளிகொள்வனவாகிய ஆண் யானைகள், பழுது இல் கண் துயின்றில - குற்றமற்ற திருக்கண்கள் உறங்கவில்லை [ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் மாத்திரம் நித்திரை கொண்டாரில்லை;] (எ - று.)

ஸ்ரீராமபிரான் பிராட்டியைப் பிரிந்த வருத்தத்தாலும், இளைய பெருமாள் தமையனுர்க்குச் சகலவிதகைங்கரியமுஞ்செய்யும் ஊற்ற மிகுதியாலும், திருக்கண் வளர்ந்தில ரென்க. இருவரும் ஸ்ரீமகா விஷ்ணுவினது அமிசமேயாதலால், 'நெடியகடல் துயின்றன களிறு' என்றார். திருமாலினது ஐவகை நிலையுள், பாற்கடலிற்பள்ளி கொள்வது, வியூஹநிலையெனப்படும். களிறு துயின்றன - யானைகளும் தூங்கின; கடல்மாத்திரம் கண்டுயின்றில [ஓசையடங்காது நின்று இராமபிரானுக்கு வருத்தத்தை விளைத்தது] என்று கூறுவதில், சிறப்பின்மை யுணர்க. சொற்பொருட்பின்வருநிலையணி. 'நடுராத்திரியில் ஒரு முகூர்த்த காலம் நீர் தூங்கும்' என்பவாதலால், 'மறுவில் பண் துயின்ற' என்றார். பண் - பண்ணை யென்பதன் விகாரம். பண் - இலக்கணையால், அதிலுள்ள பிராணிகளையும் உணர்த்தும். பண் - இராகமுமாம்; பண் துயிலுதலாவது - பண் அடங்கி நிற்றல். நள்ளிரவில் முகூர்த்தகாலம் பேய்களுந் தூங்கு மென்பது வழக்கு. "பேயுந்துயின்றதாற் பேர்யாமம்" "தோன்றுங்கழுதுந் துயின்றதே" என்றார் புகழேந்தியாரும். கழுதும் என்ற உம்மை, அதனது இராத்திரியிலேயே சஞ்சரிக்குந் தன்மையைக் குறித்தது. பணி - படத்தை யுடையது; வடசொல். பணம் - படம். களிறு - யானையின் ஆண்மைப்பெயர்; "வேழக்குரித்தே விதந்து களிறென்றல்" என்பது, தொல்காப்பியம்; இச்சொல் - பால்பகாவஃறிணைப் பெயராதலால், உவமையாகுபெயராய், இராமலக்ஷ்மணரிருவரையு முணர்த்திற்று. ஈற்றடியில் தொடைமுரண் காண்க. மண், மலை, விண் - இடவாகு பெயர்கள். பி - ம்:—[1] துயின்றது. (41)

41.—பிறகு இரவுநீங்குமாறு சூரியனுதிக்கத் தாமரை மலர்தல்.

பொங்கிமுற் றியவுணர்வு புணர்தலும் புகையினெடு
பங்கமுற் றணையவினை பரிவுறும் படிமுடிவில்
கங்குலிற் றதுகமல முக[1]மெடுத் தனகடலில்
வெங்கதிர்க் கடவுளெழ விமலன்வெந் துயரினெழ.

(இ - ள்.) விமலன் - குற்றமற்றவனுகிய ஸ்ரீராமன், வெம் துயரின் - கொடிய துன்பத்தினின்றும், எழ - நீங்கும்படி, வெம் கதிர் கடவுள் - உஷ்ணகிரணங்களுடைய சூரியன், கடலில்—, எழ -

உதித்தமாத்திரத்தில்,—பொங்கி முற்றிய உணர்வு - விளங்கி நிறைந்த மெய்யறிவு [தத்துவஞானம்], புணர்தலும் - (ஒருவனைச்) சேர்ந்த மாத்திரத்தில், புகையினொடு பங்கம் உற்று அனைய வினை - புகையுஞ் சேறுஞ் சேர்ந்தாற்போன்ற தீவினைகள், பரிவு உறும்படி - நீங்குந்தன்மை போல, முடிவு இல் கங்குல் - முடிவில்லாத இராத்திரி, இற்றது - கழிந்தது; கமலம் - தாமரைமலர்கள், முகம் எடுத்தன - முகம்விளங்கி மலர்ந்தன; (எ - று.)

நல்லுணர்வு தோன்றியவுடனே வினைகள் கழிதல்போல, சூரியன் தோன்றியவுடனே இருள் கழிந்த தென்பதாம்; உவமையணி. இராக்காலத்தில் மிக்கிருந்த விரகவேதனை பகற்காலத்திற் குறைவுபடுதலால், 'விமலன் வெந்துயரினெழ' எனப்பட்டது. இனி, சீதை இருக்குமிடத்தைத் தேடிக் கண்டு சென்று இராவணனைச் சங்கரித்துப் பிராட்டியைச் சேர்தற்குக் காரணமாக, அநுமான் சுக்கிரீவன் இவர்களது சிநேகம் அன்றையதினத்தில் நேரிடப்போவதுபற்றி,ஸ்ரீராமன் கொடிய துன்பக்கடலினின்று கரையேறும்படி சூரியன் தான் கடலினின்று உதிக்க என்றுருமாம். பாவத்தைக் கருநிறமுடையதாக வருணிப்பது கவிகளது மரபாதலால், புகையுஞ்சேறுங்கலந்தாற் போன்ற வினையென்றார். விரகமுள்ளவர்க்குக் கங்குல் ஆயிரமூழிகளாய் நீட்டித்துத் தோன்றுமாதலால், 'முடிவில்கங்குல்' எனப்பட்டது. பி - ம்:—[1]எடுத்தது. சில பிரதிகளில் இரண்டாமடி - பங்கமுற் றளவில்வினை பரிவுறும் படிமுடியின் என்று காண்கிறது. (42)

42.—இராமலக்குமணர் சீதையைத் தேடிக்கொண்டு அப்பாற் செல்லுதல்.

[1]காலையே கடிதுவர வேகினர் கடல்கவினு
[2]சோலையேய் மலைதழுவு கானநீ ணெறிதொலைய
ஆலையேய் துழனியக ஞடரார் கலியமிழ்து
போலவே யுரைசெய்புன மானைநா டுதல்புரிஞர்.

(இ - ள்.) ஆலை ஏய் துழனி அகல் நாடர் - கரும்புயந்திரங்களிற் பொருந்திய ஒலிமையுடைய பரந்த கோசலநாட்டையுடையவர்களான இராமலக்ஷ்மணர்கள்,—ஆர்கலி அமிழ்து போல ஏ உரைசெய் - மிக்க ஓசைமையுடைய திருப்பாற்கடலில் தோன்றிய தேவாமிருதம்போல (மிகவும் இனிமையாகப்) பேசுகின்றவளான, புனம் மானை - கொல்லைகளில் வாழும் மான்பேடைபோன்ற பார்வையுடைய ஜாநகிப்பிராட்டியை, நாடுதல் புரிஞர் - தேடுதல் செய்பவர்களாய்,—காலை ஏ வர - உதயகாலம் வர,—(அப்பொழுதே), கடல் கவினு சோலை ஏய் - சமுத்திரம்போன்ற அழகிய சோலைகள் சூழ்ந்த, மலை - மலைகளும், தழுவு கானம் - அம்மலைகளைச்சேர்ந்த காடுகளும் ஆகிய இவற்றின், நீள் நெறி - பெரிய வழி, தொலைய - கழியும்படி, கடிது ஏகினர் - விரைவாகச் சென்றார்கள்; (எ - று.)

கரும்பாலைகளின் ஒலிமிகுதி கூறியவற்றால், நாட்டின் நீர்நிலவளங்களை வெளியிட்டபடி. 'ஆலையேய்துழனியகனாடர்' என்ற தொட

ரில், ஆலையிலிட்ட கரும்புபோல இவர்கள் இராவணனால் இப்போது மிக்க துன்பத்தை யனுபவித்தாலும், அக்கரும்பு சர்க்கரையாகி உண்பதற்கு இதமாவதுபோல இவர்கள் தாமும் பிராட்டியைப் பெற்றுத் துஷ்டர்களை யழித்தலாற் பெரியோர் பலர்க்கும் மகிழ்ச்சி விளைப்ப ரென்னும் உள்ளுறையுவமம் தோன்றுமெனக் கூறுவர். அமிழ்து - சீதைக்கே உவமையாகவுமாம். சோலைக்குக் கடல்-குளிர்ச்சி இருட்சி அகற்சிகளால் உவமை. கவினு, உ - சாரியை. கவின் - உவமவுருபாகவுமாம். கானம் - கானநம் என்னும் வடமொழியின் சிதைவு. ஆர்கலி - வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. பி - ம்:—[1] காலையே கடிதுநெடிதேகினர். [2] சோலையே.

'ச்ரிய: பதியான ஸர்வேச்வரன், நித்தியஸூரிகளைப்போலவே நித்தியகைங்கர்ய நிரதராய் வாழ்கைக்குப் பிராப்தியுண்டாயிருக்கச் செய்தேயும் லீலாவிபூதியிலுள்ள ஜீவவர்க்கம் அதனை யிழந்து வருந்துகின்றதே!' என்று திருவுள்ளம் நொந்து வருந்துகிறனென, இப்படலத்துக்கு உள்ளுறைபொருள் கூறுவர்.

முதனூலாகிய வான்மீகத்திலே கிஷ்கிந்தாகாண்டத்தின் ப்ரதமஸர்க்கத்திலும் இப்படலத்திற்கூறிய விஷயமே கூறியுள்ளது. (43)

பம்பைப்படலம் முற்றிற்று.

இரண்டாவது

அனுமப்படலம்

அனுமப்படலம் என்பது - அநுமானது படலம் என ஆறும் வேற்றுமைத்தொகையாம். அனுமான் ஸ்ரீராமலக்ஷ்மணர்களைக் கண்டு பேசிய கதையைச் சொல்லும் படலமென்பது, திரண்ட பொருள். இராமன் அனுமானைச் சந்தித்துப் பேசியதைக் கூறும் படலம் எனினுமாம். அனுமான் - (குழந்தைப்பருவத்தில் இளஞ் சூரியனைக் கனிந்த பழமென்று பிடிக்கப் பாய்ந்தபொழுது அதனை அறிந்து சினந்த இந்திரனது வச்சிராயுதத்தினால் அடிக்கப்பட்டுச் சிதைந்த) கன்னமுடையவன்; அனு - ஹநு: கவுள், கன்னம்: மாந்- வடமொழிப்பெயர்விகுதி.

அச்சிட்ட பிரதிகளில் "எய்தினர்" என்று தொடங்குகிற இச் செய்யுள் முதல் "தென்புலக்கிழவனூர்" என்று தொடங்கும் செய்யுள் முடிவுவரையில் 145 - செய்யுள்கள் மராமரப்படலம் என்று காண்கிறது.

1.—இதுவும், அடுத்தகவியும் - இராமலட்சுமணர் வருவதைக்கண்டு சுக்கிரீவன் அஞ்சிக் குகைக்குள் ஓடியதைக் கூறும்.

எய்தினர் சவரிநெடி தேயமால் வரையெளிதின்
நொய்தினே றினரதனி னோன்மை[1]சால் கவியரசு
[2]செய்வதோர் கில[3]னிவர்கள் தெவ்வரா மெனவெருவி
உய்துநா மென[4]விரைவி[5]னோடினான் மலைமுழையின்.

(இ - ள்.) எய்தினர்- (அவ்வாறு) சென்ற ராமலக்ஷ்மணர்கள்,—சவரி நெடிது ஏய - சபரியானவள் பலகாலம் வாசஞ்செய்திருந்த, மால் வரை - பெரிய ருசியமூகபர்வதத்தின் மேல், எளிதின் - சுலபமாகவும், நொய்தின் - விரைவாகவும், ஏறினர் - ஏறிச்சென்றார்கள்; (அப்பொழுது), அதனில் - அம்மலையிலிருந்த, நோன்மை சால் கவி அரசு - பெருந்தன்மை மிக்க குரங்குகட்கு அரசனாகிய சுக்கிரீவமகாராஜன்,—இவர்கள் தெவ்வர் ஆம் என - 'இவ்விருவரும் (எனக்குப்) பகைவர்கள்' என்று எண்ணி, வெருவி - அஞ்சி, செய்வது ஓர்கிலன்- செய்யவேண்டுவது இன்னதென்று அறியாதவனாய், நாம் உய்தும் என - 'நாம் (இப்பொழுது) தப்பிப்பிழைப்போம்' என்று கருதி,—மலை முழையின் - அம்மலையின் குகையொன்றினுள், விரைவின் ஓடினான் - வேகமாய் ஓடினான்; (எ - று.)

இராமலட்சுமணர்கள் ருசியமூகபர்வதத்தின்மேல் விரைந்தேறி வருவதனைக் கண்ட சுக்கிரீவமகாராஜன், வீரத்தன்மை தோன்றுகின்றஇவரது தோற்றத்தைக் கண்டு, தனக்குப் பகைவனாகிய வாலியின்பட்சத்தைச் சேர்ந்தவர்கள் இவர்களென நினைத்து அஞ்சியோடி அம்மலைமுழையொன்றிற் புக்கொளித்தனனென்பதாம்.

இங்குக்குறித்த சபரி யென்பவள், மதங்கமுனிவரது ஆச்சிரமத்தி லிருந்துகொண்டு மதங்கமுனிவரது சீடர்களை உபசரித்து வந்த துறவறம் பூண்ட ஒரு தவப்பெண்: இவள், இராமபிரான் வரப்போவதைத் தனது ஞானக்கண்ணா லுணர்ந்து அப்பிரானுக்கு நிவேதிப்பதற்காக அவ்வாச்சிரமத்திலிருந்த பழங்களைச் சுவைத்தறிந்து தனது தவவலிமையாற் கெடாதபடி சேர்த்து வைத்து இராமலக்ஷ்மணர் எழுந்தருளியவுடன் அவர்கட்கு நிவேதித்து இராமபிரானருளால் தனது பிறப்பை யொழித்து முத்தியடைந்தவள். சவரி - சபரீ; சபரமென்னும் வேடர்சாதியிற் பிறந்தவள்; சபரரென்பார் க்ஷத்திரியசாதிஸ்திரீயினிடம் வைசியனுக்குப் பிறந்த பிரதிலோமசாதியர்: தேன்விற்றல் முதலியன இவரது தொழில். சவரி நெடிது ஏய என்பதற்கு - சபரியினால் விவரமாக வழிகளையெல்லாம் எடுத்துச்சொல்லி ஏவப்பட்ட என்றுமாம்: "துணைபரித்தேரோன் மைந்தன் இருந்தவத் துளக்கில்குன்றம், நினைவரிதாயற்கொத்த நெறியெலாம் நினைந்து சொன்னாள்" என்றார், ஆரணிய காண்டத்தில்.

வசித்திருந்த என்ற முந்தினபொருளில், ஏயஎன்பதில் 'ஏய்' - பகுதி, அ - விகுதி, ய் - இறந்தகால இடைநிலை: தனிக்குறிலைச் சாராத பகுதியீற்று யகரம் யகரம்வரக் கெட்டது சந்தி. பிந்தின பொருளில், 'ஏய'—ஏவிய என்பதன் மரூஉ. கவி - கபி என்னும் வட மொழியின் திரிபு. எய்தினர் - பெயர். ஆம் - அசை. அரசு என்னும் பண்புப்பெயர் - ஆகுபெயராய்ப் பொருளால் உயர்திணையாதலால், 'ஓடினன்' என்னும் உயர்திணை வினைகொண்டு முடிந்தது. பி - ம்:— [1]கூர், சேர். [2]செய்தல், செய்தி. [3]இனையர், அனையர். [4]மறுகி. [5]ஓடினர். (44)

2. காலின்மா மதலையிவர் காண்மி[1]னோ கறுவுடைய
வாலியே வலின்வரவி னர்கள்தாம் வரிசிலையர்
நீலமால் வரையனையர் [2]நீதியா நினைமினென
[3]மூலமோர் கிலன்மறுகி யோடினன் [4]முழையதனின்.

(இ - ள்.) 'காலின் மா மதலை - வாயுவினது பெருமைபொருந்திய குமாரனே! [அநுமானே!] வரி சிலையர் - கட்டமைந்த வில்லையுடைய வரும், நீலம் மால் வரை அனையர் - நீலநிறமமைந்த பெரிய மலையைப் போன்றவருமாகிய, இவர் - இவ்விருவரும், கறு உடைய வாலி ஏவலின் - (நம்மிடத்து) வைரமுள்ள வாலியினது கட்டளையினால், வரவினர்கள் தாம் - (நம்மை வருத்துதற்கு) வருகின்றவர்களேயா வர்; காண்மின்ஓ - பார்ப்பீராக; நீதி ஆ நினைமின் - முறைமையாக ஆலோசிப்பீராக,' என-என்று சொல்லிக்கொண்டு, மூலம் ஓர்கிலன்- (இவர்கள் வருகின்ற) காரணத்தை அறியாதவனாய், மறுகி - மனங் கலங்கி, முழையதனின் - குகையினுள்ளே, ஓடினன் - ஓடியொளித் தான், (சுக்கிரீவன்) (எ - று.)

இச்செய்யுள் - 'ஓடினன் மலைமுழையின்' என்று கீழ்ப்பொது வாகக் கூறியதை அவன் ஓடும்பொழுது இன்னவாறு உரைத்துக் கொண்டு ஓடினன் என உணர்த்துவதற்காக வந்த அநுவாதம். 'இவரைக் காணும்போது வாலியின் ஏவலினால் நம்மைவருத்துதற்கு வருபவராக எனக்குத் தோன்றுகின்றது; ஆதலால், இவர் யான நினைத்தபடி வாலியின் பக்கத்தைச் சேர்ந்தவரா? எனபதையும், இவர் அவ்வாறு வாலியைச் சேர்ந்தவராயின் இப்போது நாம் யாது செய்யத்தக்கது? என்பதையும்பற்றி 'நீவிர் ஆராய்ந்து சொல்வீராக' என்று தன் மந்திரியரிற் பிரதானனான அநுமானை விளித்துக் கூறிக் கொண்டே சுக்கிரீவன் சென்றனனென்பதாம்.

அநுமான் கேஸரியென்னும் வாநரராஜனது மனைவியான அஞ்சனாதேவியினிடத்தில் வாயுவினநுக்கிரகத்தால் தோன்றிய வனாதலின், 'காலின்மாமதலை' எனப்பட்டான். வாலீ என்பதற்கு - வாலில்வலியுள்ளவனென்றும், வாலினின்று பிறந்தவனென்றும் பொருள். 'இங்கு வருபவர் யாவரும் பெண்வடிவமடைக' என்று சொல்லப்பட்டிருந்த தலத்திற் சென்றதனாற் பெண்வடிவமடைந்த ருக்ஷரஜஸ் என்னும் வாநரராஜனது வாலினழகைக் கண்டு காமுற்ற இந்திரனது அநுக்கிரகத்தால் தோன்றியவன் வாலி

யென்றும், கழுத்தினழகைக் கண்டு காதல்கொண்ட சூரியனது அனுக்கிரத்தினால் தோன்றியவன் சுக்கிரீவனென்றும் அறிக.

இலக்குமணன் பொன்னிறத்தவனாக இருக்கவும் இராமலட்சுமணரிருவரையுஞ்சேர்த்து 'நீலமால்வரை யனையர்' என்றது - ஸ்ரீராமனது தலைமையை நோக்கி; அன்றி, பெருமாளது திருமேனியின் நீலவொளி இளையபெருமாள்மீது பட்டுவருதலால் அவரது திருமேனியும் பொன்னொளியடங்கி நீலவொளியுடையதாகக் காணப்பட்டதனால் இவ்வாறு கூறினானென்றலும் ஒன்று.

மதலை காண்மின் - பிரதானனாதலின் அநுமனை விளித்து, ஏற்ற துணைவரையும் தழுவி 'காண்மினோ! நினைமின்' என்று பன்மை கூறினான்: இனி, ஒருமையிற் பன்மை மயங்கி வந்த வழுவமைதி எனினுமாம். ஓ - அச்சப்பொருள் குறித்தது. தாம் - தேற்றப்பொருள்பட நின்றது. கீழ்க்கவியிலுள்ள 'கவியரசு' என்பதே இக்கவியில் 'ஓடினான்' என்னும்வினைக்கும் எழுவாயென அறிக்க. பி - ம்:—[1]ஓர்கறுவுடையர், ஓகறுவுடையர். [2]நீதிமா முதல்வர்வரு, நீதியாய் நினைதியென. [3]மூலமோர்கிலர் மறுகியோடினர். [4]மலை முழையில், முழையுழையின். இச்செய்யுள், சிலபிரதிகளில் அடுத்த பாடலின் பின்னிருக்க, "அவ்விடத்தவர்" (5) என்பது நான்காவது பாடலாக உள்ளது. (45)

3.—இராமலட்சுமணர்களும் அங்குச் செல்லுமாறு கருதுதல்.

[1]தாரனீ லனைமருவு தாமமா ருதியைமுதல்
வீரரோ டிரவிசுதன் மேருமால் வரையைநிகர்
பாரமா மலையினொரு பாகமோ டுதல்புரிய
ஆரமார் பருமதனி னாகுமா றுறல்கருதி.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்: குளகமாவது - பலபாடல் ஒருவினைகொண்டு முடிவது.

(இ - ள்.) தாரன் - தாரனையும், நீலனை-நீலனையும், மருவு தாமம் மாருதியை - பொருந்திய ஒளியையுடைய அனுமானையும், முதல் - முதலாகவுள்ள, வீரரோடு - வானரவீரர்களுடனே, (இருந்த), இரவி சுதன் - சூரியனது புத்திரனாகிய சுக்கிரீவன், மேரு மால் வரையை நிகர் பாரம் மா மலையின் ஒருபாகம் ஓடுதல் புரிய - மகாமேருபருவதத்தை யொத்த மிகவும் பெரிய அம்மலையினது ஒரு பக்கத்தில் ஓடிப்போய் ஒளிக்க,—ஆரம் மார்பர்உம் - இரத்தினமாலை யணிந்த மார்பையுடையவர்களாகிய இராமலட்சுமணர்களும், அதனின் - அம்மலையில், ஆகும் ஆறு உறல் - (சீதையைத்தேடிக் கண்டுபிடிப்பதற்கு) ஏற்றநல்ல உபாயம் நேருந்தன்மையை, கருதி - எண்ணி,—(எ - று.)—'கருதி' என்பது, அடுத்த கவியில் 'புரிஞர்' என்பதனோடு முடியும்.

சுக்கிரீவன் இராமலட்சுமணர்களை வாலியைச் சேர்ந்தவரென மயங்கி மலையின் ஒரு பக்கத்திற் பதுங்கியிருக்க, அச்சுக்கிரீவனைக்

காணவேணுமென்றே வருபவரான இராமலக்ஷ்மணர்கள் அங்குச் சென்றன ரென்க.

தாமம் - ஞானவொளி. இனி, இந்திரன் வச்சிராயுதத்தினுல் அனுமானை யடித்தபொழுது சினங்கொண்ட வாயுவை உவப்பிக்குமாறு பல தேவர்களும் பல வரங்களைக் கொடுத்த சமயத்தில் இந்திரன் பொற்றாமரை மலர்மாலையை இவனுக்கு அளித்தனனாதலின், பொற்றாமரை மலர்மாலையை யணிந்த என்றுமாம். மாருதி என்பதற்கு வாயுவின்குமாரனென்று பொருள்; மாருதன் - வாயு: தத்திதாந்தநாமம். அநுமான் வாயுபுத்திர னென்பதையும், சுக்கிரீவன் சூரியபுத்திரனென்பதையும் அறிக. ஆரமார்பர் - சந்தனமணிந்த மார்பரென்றுமாம், 'ஆரமார்பர்' என்றது, முன்னைய நிலையைக் கருதி. கீழ்க் கபந்தன் இராமபிரானாற் கொல்லப்பட்டுக் கந்தர்வரூபமடைந்துசெல்லும்பொழுது "தாயினுமுயிர்க்கு நல்குஞ் சவரியைத் தலைப்பட்டன்னு, ளேயதோர் நெறியினெய்தி யிரலையின்குன்றமேறி" "கதிரவன் சிறுவனய கனகவாணிறத்தினனை, யெதிரெதிர் தழுவி நட்பி னினிதமர்ந்தவனினீண்ட, வெதிர்பொருந் தோளினனை நாடுதல் விழுமிது" என்று சொன்னதனுல், 'அதனினுகுமாறுறல் கருதி' என்றார்; இனி, அம்மலையிலுள்ள வழியிலே செல்வதைக் கருதி என்றுமாம். பி - ம்:—[1] தாரனேர்தகைய னளனீலன் மாருதி முதல, தாரனீனளன் மருவுதாம மாருதிமுதல, தாரனீலன் மருவுதாம மாருதியை முதல். இச்செய்யுள் சில பிரதிகளிலில்லை. (46)

4.—இராமலட்சுமணர் வாலியைச் சேர்ந்தவரல்லரென்று அறிந்து அனுமான் தன்னுடனிருந்த வானரரோடு சென்று சுக்கிரீவனுக்குத் தேறுதல் கூறினமை.

மானைநா டுதல் புரிஞர் வாலியே வலின்வருதல்
[1] ஆனவா றலர்மறுகி யாவிசோர் [2] நிலையரென
ஏனைவா னரர்சிலரு மேகிமா முழையின்முழு
ஞானநா தரையறிவி னடிமா ருதிமொழியும்.

(இ - ள்.) மானை நாடுதல் புரிஞர் - பிராட்டியைத்தேடுதலை விரும்பி அங்குச்செல்பவர்களாக,— மாருதி - அனுமான், '(இவர்கள்), வாலி ஏவலின் - வாலியின் கட்டளையால், வருதல் ஆன ஆறு அலர் - வருதல் பொருந்தியவர்களல்லர்; மறுகி - மனங்கலங்கி, ஆவி சோர் - உயிர் தளர்கின்ற, நிலையர் - நிலைமையை யுடையவர்,' என - என்று, முழு ஞானம் நாதரை - நிறைந்த தத்துவ ஞானத்துக்குத் தலைவர்களாகிய இராமலட்சுமணர்களை, அறிவின் நாடி - (தனது) ஞானத்தால் ஆலோசித்து அறிந்து, (துணிவுகொண்டு வெளியிருந்த), ஏனை வானரர் சிலர் உம் - மற்றைச் சில வானரர்களும், (தானுமாக), (அப்போது), மா முழையில் - பெரிய அக்குகையினுள்ளே, ஏகி - சென்று,—(சுக்கிரீவன் முதலானுர்க்கு), மொழியும் - (தேறுதல்) சொல்வானுனன், (எ - று.)

இராமலக்ஷ்மணர் சீதையைத் தேடிக்கொண்டே அங்குவருவதைக் கண்ட சுக்கிரீவனாதியோர் கலங்குகின்ற சமயத்தில், அநுமான் தனது அறிவினால் நாடியறிந்து சுக்கிரீவன் முதலானாரைத் தேற்றலானா னென்க; இப்பொருள் முதனூலுக்கும் ஒக்கும். இனி, சில வாநரவீரர்கள் அவரது வடிவுசெயல்களைக் கண்டு வாலியைச் சேர்ந்தவரல்லரென ஊகித்துத் தெரிவிக்க, அநுமான் முறையின் ஏகிக் கூறுவானாயினன் என்று உரைப்பாருமுளர்: அது பொருந்துவதாகத்தோன்றவில்லை. அன்றி, ஏனைவானரர் சிலரும் ஏகி - சுக்கிரீவனோடு ஓடினவரொழிய எஞ்சித்துணிவுகொண்டுநின்ற மற்றை வானரரும் இராமலக்ஷ்மணர் மானை நாடுதல் புரிஞராய்ப் பின்னும் நணுகுவது கண்டு அஞ்சியேக என்று, ஏகி, என்பதை எச்சத்திரிபாக் கொண்டு உரைப்பாருமுளர். முழுஞானநாதர் - தத்துவஞானத்தால் அறியப்படுபவர் என்று கருத்து. முழுஞானம் - பூர்ணஞானம்.

மான் - மான்பேடைபோன்ற பார்வையையுடைய சீதைக்கு உவமவாகுபெயர். வாநர ரென்ற வடசொல் - ஏறக்குறைய மனிதர் போன்றவரெனக் காரணப்பொருள்படும். புரிஞர் - பலர்பாற்குறிப்பு முற்றெச்சம். பி - ம்:—[1] ஆனவாறென. [2] நிலையர்தொடர். இச் செய்யுள் தென்னாட்டுப்பிரதிகள் பலவற்றி லில்லை. (47)

5.—அநுமான், அஞ்சிய வாநரர்களைத் தேற்றியவகை.

அவ்விடத் தவர்மறுகி யஞ்சி [1]நெஞ் சழியமைதி
வெவ்[2]விடத் தினைமறுகு தேவர்தானவர் [3]வெருவல்
[4]தவ்விடத் தனியருளு தாழ்சடைக் கடவுளென
[5]இவ்விடத் தினிதிருமி னஞ்சலென் றிடையுதவி.

(இ - ள்.) அ இடத்து - அம்மலையில், அவர் - அவ்வாநரர்கள், மறுகி - (மனந்தெளியாமற்) கலங்கி, அஞ்சி - பயந்து, நெஞ்சு அழி அமைதி - மனவுறுதி [தைரியம்] கெட்டு நின்ற சமயத்தில்,—(அநுமான்), வெம் விடத்தினை - (திருப்பாற்கடல் கடைந்தகாலத்து அதனினின்று எழுந்த) கொடிய ஹாலாஹலவிஷத்தைப் பார்த்து, மறுகு - மனந்திகைத்த, தேவர் - தேவர்களும், தானவர் - அசுரர்களும், வெருவல் - அஞ்சுதல், தவ்விட - நீங்கும்படி, தனி அருளு - (தான்) தனியே (அவ்விஷத்தை உண்டு) கிருபை செய்த, தாழ் சடை கடவுள் என - தாழ்ந்து தொங்குகின்ற சடையையுடைய உருத்திரமூர்த்திபோல,—(வாநரர்களைநோக்கி), 'இ இடத்து இனிது இருமின் - இவ்விடத்திலே நீங்கள் சுகமாயிருங்கள்: அஞ்சல் - பயப்படவேண்டா,' என்று - என்று சொல்லி, இடை உதவி - நடுவே தேறுதல் கூறி, (எ - று.)—'குறுகி' என்று அடுத்த கவியோடு தொடரும்.

சுக்கிரீவன் முதலியோர் தேவாமிசமாதலாலும், அநுமான் உருத்திராமிசமாதலாலும், சுக்கிரீவன் முதலியோரை அநுமான் தேற்றியதற்கு - தேவர்களைப் பரமசிவன் தேற்றியதை உவமை கூறி

ணர். அநுமான் உருத்திராமிசமென்பதை, பாலகாண்டத்தில் "புராரி மற்றியானே வாத, சேயெனப் புகன்றான்" என்றதனாலறிக. "தான வர்தவ்விட' என்றது, உவமையை நிறைத்தற்காக வன்று: அக்கதை யின் இயற்கை பற்றியாம். கடலிற்புக்கொளித்த தேவர்களின் செல் வத்தை மீளவும் பெறுதற்பொருட்டுத் திருப்பாற்கடலைத் தேவாசுரர் கள் கடைந்த சமயத்தில் அதனினின்று யாவரும் அஞ்சி நடுங்கி இரியும்படி எழுந்ததொரு ஆலகால மென்ற கொடுவிஷத்தைப் பரமசிவன் உட்கொண்டு கண்டத்தி லடக்கிக் காத்தனனென அறிக.

முதலடி - முற்றுமோனை. தேவர் - எப்போதும் மகிழ்ந்து நிற்பவ ரெனப்பொருள்படுங் காரணக்குறி. தானவர் - (காசியபமுனிவரது மனைவியருள்) தநுவென்பவளது சந்ததியாரெனப்பொருள்படும் வட மொழித்தத்திதாந்தநாமம். "அச்சக்கிளவிக் கைந்து மிரண்டும், எச்சமிலவே பொருள்வயினான" என்பவாதலால், 'விடத்தினை மறுகு' என்றார்; 'பழியை யஞ்சி' என்றாற்போல. பி - ம்—[1]நெஞ்சழியமதி. [2]'விடத்தினின்.' [3]மருவு, வெருவு. [4]தவ்விடத்தளியருளா, தவ்விடத் தினிதருளா. [5]இவ்விடத்திடை. இச்செய்யுள் "செவ்விடத்தவன் மறுகி யஞ்சு சிந்தையின்மதியின், வெவ்விடத்தினை மறுகு தேவர் தானவர் மறுகும், அவ்விடத்தளி யருளுமணிசடைக் கடவுளென, இவ்விடத்தினி திருமினஞ்சலென் றிடையுதவி" என்று சில பிரதி யிலும், இவ்வாறே முதல் மூன்றடிகளிருக்க நான்காம் பாதம் "இவ் விடத்தினிதமைதி யஞ்ச லென்றிடையுதவி" என்று சில பிரதியி லும் காண்கிறது. (48)

6.—அநுமான் மாணவவடிவத்தோடு இராமலட்சுமணரை யணுகி அவரைப் பற்றி ஆலோசிக்கத் தொடங்குதல்.

அஞ்சனைக் கொருசிறுவ னஞ்சனக் கிரியனைய
மஞ்சனைக் [1]குறுகியொரு [2]மாணவப் படிவமொடு
[3]வெஞ்சினத் தொழிலர்தவ மெய்யர்கைச் சிலையரென
நெஞ்சயிர்த் தயன்மறைய நின்று[4]கற் பனைநினையும்.

(இ - ள்.) அஞ்சனைக்கு ஒரு சிறுவன் - அஞ்சநாதேவிக்கு ஒப் பற்ற குமாரனாகிய அநுமான்,—ஒரு மாணவன் படிவமொடு - ஒரு பிரமசாரி ரூபத்தோடு, அஞ்சனம் கிரி அனைய மஞ்சனை குறுகி - நீல மலைபோன்ற (சக்கரவர்த்தித்) திருமகனைச் சமீபித்து, அயல் மறைய நின்று - அருகில் மறைவாக இருந்து,—(அவர்களைக் குறித்து), 'வெம் சினம் தொழிலர் - (இவர்கள்) கொடிய கோபத்தோடு கூடிய தொழிலையுடையவர்களும், தவம் மெய்யர் - தவத்துக்கு உரிய வேடம் பூண்டவர்களும், கை சிலையர் - கையில் வில்லேந்தியவர்களுமா யிருக் கின்றார்கள்,' என - என்று, நெஞ்சு அயிர்த்து - மனத்திற் சந்தே கித்து, கற்பனை - (தனது) மனோபாவத்தினால், நினையும் - (அவர் களைப்பற்றிப்பின்னும்) ஆலோசிப்பானாயினான்; (எ - று.)—அதனை, மேல் நான்கு கவிகளாற் கூறுகின்றார்.

அநுமான் சுக்கிரீவனுக்கு ஒற்றனுய்த் தனது இயற்கை வடிவத்தையொழித்து மாணவக்கோலத்துடன்நின்று அவ்விராம லட்சுமணரது தன்மையை ஆராய்வானுயின னென்பதாம். பிக்ஷு வடிவத்துடன் சென்றதாக முதனூலிற் கூறியுள்ளது. ஒற்றனுய்ப் போகின்றன னுதலின், வேற்றுவடிவத்துடன் சென்றனனென்க. முகக்குறிப்பினுல், சினத்தொழிலரென்று கருதினுன். சடைமுடியும் மரவுரியுமாகிய தவவேஷமும், வில்லும் அம்பும் முதலிய ஆயுதங்களைத் தரித்தலாகிய ராஜவேஷமும் ஒன்றுக் கொன்று ஒவ்வாததனுல், நெஞ்சு அயிர்த்தா னென்க. கற்பனை - இராமலட்சுமணரின் மனோபாவத்தைப்பற்றி எனினுமாம்.

'அஞ்சனக்கிரியனைய மஞ்சனைக்குறுகி' என்றது, லக்ஷ்மணனைக் குறுகியதற்கும் உபலக்ஷணம். மஞ்சன் - மைந்தன் என்பதன்போலி. மாணவன் - மாணவகனென்னும் வடசொல்லின் விகாரம். [1]கற்பினின் என்ற பாடத்துக்கு-தன் கல்வியறிவா லென்க. கற்பு-தொழிற்பெயர்; பு - விகுதி. பி - ம்:—[1]குறுகவொரு. [2]மாணிநற்படிவமொரு. [3]வெஞ்சமத். [4]கற்பவன். (49)

7.—இதுமுதல் நான்கு கவிகள் - அநுமானது ஆலோசனை.

தேவருக் கொருதலைவ [1]ராமுதற் றேவரெனின்
மூவர்மற் றிவரிருவர் மூரிவிற் கரரிவரை
யாவரொப் பவருலகின் யாதிவர்க் கரியபொருள்
கேவலத் திவர்[2] நிலைமை தேர்வதெக் கிழமைகொடு.

இதுமுதல் ஐந்து கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) '(இவர்கள்),—தேவருக்கு - எல்லாத்தேவர்கட்கும், ஒரு தலைவர் ஆம் - ஒப்பற்ற தலைவர்களாகிய, முதல் - முதன்மையான, தேவர் - பிரம விஷ்ணு ருத்திரமூர்த்திகள்,' எனின் - என்று ஆலோசித்தால், மூவர் - (அம்மூர்த்திகள்) மூன்றுபேராவர்; இவர் இருவர் - இவர்களோவென்றுல் இரண்டுபேராயிருக்கின்றுர்கள்; (அன்றியும்), மூரி வில் கரர் - வலிமைபொருந்திய வில்லைத்தாங்கிய கையையுடையவராயிருக்கின்றுர்கள்; இவரை - இவர்களை, ஒப்பவர் - ஒக்குந்தன்மை யுள்ளவர்கள், உலகின் - எவ்வுலகத்தில்தான், யாவர்- யார் இருக்கின்றனர்? இவர்க்கு அரிய பொருள் - இவர்கட்குச் செய்வதற்கு அருமையான காரியந்தான், யாது - யாது உளது? இவர் நிலைமை - இவர்களின் தன்மையை, கேவலத்து - எளிதாக, தேர்வது - ஆராயத்தொடங்குவது, எ கிழமைகொடு - எந்த விதத்தால்? (எ - று.)

இவரை ஒப்பார் எவரு மில்லை; இவருக்கரியது ஒன்றுமில்லை என்றபடி. இச்செய்யுளில் முதல்மூர்த்திகட்கும் இராமலட்சுமணர்கட்கும் வேற்றுமை கூறியது, வேற்றுமையணி. இவர் மூரிவிற்கர ரென்றது அந்தத் திரிமூர்த்திகள் பினாகசூலங்களையும், ஐம்படைகளையும், சொல்லையுந் தாங்கியவ ராதலால்; "சூலமுந் திகிரியுஞ் சொல்லுங்

தாங்கிய" என்றது காண்க. யாவர், யாது என்பவற்றில், யாவினு இன்மை குறித்தது. மற்று - வினைமாற்று. பி - ம்:—[1] ஆழுதற்றெறி வரிய, ஆழுதற்றேறினவர், ஆழுதற்றெரியினவர், ஆழுதற்றேவர யர். [2] நிலையை. சில பிரதிகளில் முதலடி, தேவரொப்பிருதலைவரா முதற் றெரிவரியா என்று உள்ளது. (50)

8. சிந்தையிற் சிறிதுதுயர் [1] சேர்வுறத் தெருமரலின்
நொந்[2] தயர்த் தவரணையர் நோவுறச் சிறியரலர்
[3] அந்தரத் தமரரலர் மானிடப் படிவர்மயர்
[4] சிந்தனைக் குரியபொருள் தேடுதற் [5] குறுநிலையர்.

(இ - ள்.) (இவர்கள்), சிந்தையில் - மனத்தில், சிறிது துயர் சேர்வுற - சிறிதுதுன்பம் வந்தடைய, தெருமரலின் - அத்துன்பத் தினால், நொந்து - மனம் வருந்தி, அயர்த்தவர் - சோர்ந்தவர்களை, அனையர் - ஒத்திருக்கின்றார்கள்; நோவு உற - (அவ்வாறு) எளிதில் வருத்த மடைவதற்கு, சிறியர் அலர் - எளியவர்களல்லர்; அந்தரத்து அமரர் அலர் - மேலுலகத்திலுள்ள தேவர்களோவென்றால் அல்லர்; மானிடர் படிவர் - மனிதர்களின் உருவமுள்ளார்; மயர்சிந்தனைக்கு உரிய பொருள் - மயங்கத்தக்க மனத்துக்கு இசைந்த தொருவஸ் துவை, தேடுதற்குஉறு - தேடுதற்குப்பொருந்திய, நிலையர் - நிலைமை யினை யுடையர்; (எ - று.)

அமரரலர் மானிடப்படிவ ரென்று அறிந்தது-கண்ணிமைத்தல், கால் நிலந்தோய்தல், வியர்நீரரும்புதல் முதலிய குறிகளால். தெரு மரல், தெருமா - பகுதி. மயர்சிந்தனை - வினைத்தொகை. அமரர் என்பதற்கு - மரணமில்லாதவரென்றும், மாநுஷர் என்பதற்கு-(காசி யபமுனிவரது மனைவியரில்) மனுவின் வழித்தோன்றிய மக்க ளென் றும் பொருள். மாணிடர் = மாநுஷர்: வடசொற்சிதைவு. முதலடி - முற்றுமோனை. பி - ம்:—[1] சேர்வர, தேர்வுற. [2] அயர்த்தனரெனினும். [3] அந்தரத்தவர் சிறுவர் மானுடத்துருவொடயர், அந்தரத்தமரரலர் மானிடப் படிவமலர், அந்தரத்......மானிடப்படிவர்மயல். [4] நிந்தனைக் கரியபொருணேடுதற்கு. [5] ஒருநிலையர். (51)

9. [1] தருமமுந் தகவுமிவர் தனமெனுந் தகையரிவர்
கருமமும் பிறிதொர்பொருள் கருதியன் [2] றதுகருதின்
அருமருந் தனையதிடை யழிவுவந் துளததனை
இருமருங் கினுநெடிது துருவுகின் றனரிவர்கள்.

(இ - ள்.) இவர் - இவர்கள்,—தருமம்உம் தகவுஉம் - தருமத் தையும் மற்றை நல்லொழுக்கத்தையுமே, தனம் எனும் தகையர் - (தமக்குச்) செல்வமென்று எண்ணுகின்ற தன்மையுடையவர்கள்; இவர் கருமம்உம் - இவர்கள் இங்குவந்த காரியமும், பிறிது ஒர் பொருள் கருதி அன்று - வேறொரு காரியத்தைப்பற்றி யன்று;

அது கருதின் - அக்காரியம் என்னவென்று ஆலோசித்துப் பார்க்குமிடத்து,—இவர்கள்—, அரு மருந்து அனையது - கிடைத்தற்கரிய தேவாமிருதத்துக்கு ஒப்பானதும், இடை அழிவு வந்து உளது அதனை - நடுவில் நீங்கிப்போய்விட்டதுமாகிய தொருபொருளை, இரு மருங்கின்உம் - இரண்டு பக்கங்களிலும், நெடிது - மிகுதியாக, துருவுகின்றனர் - தேடுகின்றார்கள்; (எ - று.)

அனுமான் சூரியனிடத்துச் சகல சாஸ்திரங்களையும் ஓதியுணர்ந்து நவவியாகரணபண்டிதனும் அறிவினால் மிகச்சிறந்தவனுமிருத்தலின், அவ்விராமலக்ஷ்மணரின் முகக்குறிகளைக் கண்டே அவர்கள் தன்மையனைத்தினையும் உள்ளபடி ஊகித்தறிந்தனனென்க.

'இவர் தனம்' என்பதை ஆறும்வேற்றுமைத்தொகையாகக் கொண்டு, தங்களுக்குரிய பொருளாகத் தருமத்தையும் நல்லொழுக்கத்தையுங் கொண்டவரெனக் கூறுவாருமுளர். நரை திரை மூப்புச் சாக்காடு என்னும் இவற்றை நீக்குவதற்கு அமிருதம் மருந்துபோலிருத்தலின், அது 'மருந்து' எனப்படும். முதலடி - முற்றுமோனை. இரு மருங்கு - வலமும், இடமும்; அன்றி முன்னும் பின்னும். பி - ம்:—[1] தருமமுந்தகவுமிவை,...தகவுமவை,...தகையர்வரு. [2] இது கருதில். (52)

10. கதமெனும் [1] பொருண்மையிலர் கருணையின் கடலனையர்
இதமெனும் பொருளலதொ ரியல்புணர்ந் திலரிவர்கள்
சதமனஞ் சுறுநிலையர் [2] தருமனஞ் சுறுசரிதர்
மதனனஞ் சுறுவடிவர் மறலியஞ் சுறு [3] விறலர்.

(இ - ள்.) இவர்கள்—, கதம் எனும் பொருண்மை இலர் - கோபமென்னும் பொருளின் தன்மையு மில்லாதவர்கள்; கருணையின் கடல் அனையர் - அருளுக்குக் கடலை யொத்தவர்கள்; இதம் எனும் பொருள் அலது - நன்மையென்னும் பொருளை யல்லாமல், ஓர் இயல்பு - வேறொருபொருளை [தீமையை], உணர்ந்திலர் - (பேரும்) அறியாதவர்கள்; சதமன் - இந்திரனும், அஞ்சுறு - அஞ்சத்தக்க, நிலையர் - கம்பீரமான தோற்றமுள்ளவர்கள்: தருமன் - தருமதேவனும், அஞ்சுறு - அஞ்சத்தக்க, சரிதர் - நல்லொழுக்கமுள்ளவர்கள்; மதனன் - மன்மதனும், அஞ்சுறு - அஞ்சத்தக்க, வடிவர் - திருமேனியழகுள்ளவர்கள், மறலி - யமனும், அஞ்சுறு - அஞ்சத்தக்க, விறலர் - வல்லமை யுள்ளவர்கள்; (எ - று.)

காம்பீரியத்தில் இந்திரனிலும், நல்லொழுக்கத்தில் தருமனிலும், வடிவழகில் மன்மதனிலும், வல்லமையில் யமனிலும் இவ்விருவரும் மேம்பட்டவரென்றபடி. ("தருமன் தண்ணளியால் தனதீகையால், வருணன்கூற்று உயிர் மாற்றலின் வாமனே, அருமையாலழகிற் கணையைந்துடைத், திருமகன் திருமாநிலமன்னனே" எனச்

சிந்தாமணியார் கூறியது, இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.) 'கருணையின் கடலனையர்' என்றது - நீர்க்கெல்லாஞ்சேர்விடமாகுங் கடல் போலக் கருணைக்கெல்லாம் இருப்பிடமானவ ரென்றபடி.

வைசேடிகர், பொருள் பண்பு தொழில் சாதி விசேடம் இயைபு என்பவற்றை அறுவகைப்பொரு ளென்றாற்போல, இங்குக் குணம் பொருளெனப் பட்டது: "சினத்தைப் பொருளென்று கொண்டவன்" என்றார் திருவள்ளுவனாரும். பொருண்மை, மை - தன்மைப்பொருள் விகுதி. [1]பொதுமை என்னும் பாடத்துக்கு - யாவரிடத்தும் பெரும் பான்மையாக வுள்ள குண மென்க. இதம் - ஹிதம். சதமன் - ஶதமகனென்னும் வடமொழியின் விகாரம்; நூறு (அசுவமேத) யாகங்கள் செய்தவ னென்று பொருள். தர்மன் - அறக்கடவுள். மதநன் - களிப்பை யுண்டாக்குபவ னென்று பொருள். மறல் - கொடுமை: அதனை யுடையவன், மறலி. பி - ம்:—[2]தருமம். [3]மறவர். (53)

வேறு.

11.—அநுமான் இராமலக்குமணரைக் கண்டு அன்பு கொண்டு நிற்றல்.

என்பன பலவு[1]மெண்ணி யிருவரை யெய்த நோக்கி
[2]அன்பின னுருகு கின்ற வுள்ளத்த னார்வத் தோரை
முன்பிருந் தனையர் தம்மை [3]முன்னினா னென்ன நின்றான்
தன்பெருங் குணத்தால் [4]தன்னைத் தானல தொப்பிலாதான்.

(இ - ள்.) தன் பெருங் குணத்தால் - தனது சிறந்த குணங்களால், தன்னை தான் அலது - தனக்குத் தானே ஒப்பாவதல்லாமல், ஒப்பு இலாதான் - (வேறு) உவமையில்லாதவனான அநுமான்,— என்பன பலஉம் எண்ணி - என்று இவ்வாறு பலவிஷயங்களையும் நினைத்துக் கொண்டு, இருவரை எய்த நோக்கி - அவ்விருவீரரையும் நன்றாகப் பார்த்து,—(அந்த அன்புமிகுதியால்) கரைகின்ற மன முள்ளவனுமாகி,— ஆர்வத்தோரை - அன்பர்களை, முன் பிரிந்து - முன் ஒரு காலத்தில் விட்டு நீங்கி, அனையர் தம்மை - அவர்களை, முன்னினான் என்ன - திரும்பவும் எதிர்ப்பட்டுக் கண்டவன்போல, நின்றான் - (பேரன்புகொண்டு) நின்றான்; (எ - று.)

எய்த நோக்கி - அவர்களுருவம் தன் மனத்திற்பதியும்படி பார்த்து என்றவாறு; எம்பெருமானைத் தரிசித்தமாத்திரத்தில் எல்லா நன்மைகளும் உண்டாகுமாதல்பற்றி 'எய்த நோக்கி' என்றாருமாம். அடிமைத் தொழில் செய்ய வேண்டிய திருமாலைக் காணும்போது காரணமின்றி அன்புமிகுமென வாயுதேவன் அநுக்கிரகித்துள்ளபடியே இப்போது இவ்வநுமானுக்குப் பக்தி மேலிட்டதனால், இவனை 'அன்பினன்' என்றார். மிக அழகிய பொருள்களை முதலிற் காணும் போது, முனனமேகண்டு பரி சயஞ் செய்யப்பட்டது போலத் தோன்றுதல் இயற்கையாத

லால், 'ஆர்வத்தோரை முன்பிரிந்தனையர் தம்மை முன்னினுனென்ன நின்றுன்' என்றுரென்னலாம்; 'பண்டிவரைக்கண்டறிவது எவ்வூரில் யாமென்றே பயில்கின்றுளால்'' என்ற பெரியார்பாசுரத்தையும், அதன் வியாக்கியானத்தையுங் காண்க. "தானே தனக்குவமன்," "தனக்குவமையில்லாதான்" என்றாற்போல, 'தன்பெருங் குணத்தால் தன்னைத் தானலதொப்பிலாதான்' என்றுர்.பி-ம்:— [1]பன்னி. [2]அன்பினெடுருகுகின்ற. [3]முன்னினரென்ன. [4]தன்னிற்று னலதொப்பிலாதான். (54)

12.—இதுமுதல் நான்கு கவிகள்–அநுமான் பின்னும் பலவாறு எண்ணுதல்.

தன்கன்று கண்ட வன்ன தன்மைய தறுகட் பேழ்வாய்
மின்கன்று மெயிற்றுக் கோண்மா வேங்கையென் [1]றினைய வேயும்
பின்சென்று காதல் கூரப் [2]பேய்கணித் திரங்கு கின்ற
[3]என்கன்று கின்ற தெண்ணிற் [4]பற்பல விவரை யம்மா.

(இ - ள்.) தறுகண் பேழ் வாய் - அஞ்சாமையையும் பெரிய வாயையுமுடைய காட்டு யானைகள், தன் கன்று கண்ட அன்ன தன்மைய - (இவர்கள்பக்கல் தம்தமது) கன்றுகளைக் கண்டாற்போன்ற அன்பினையுடையனவாயிருக்கின்றன; மின் கன்றும் எயிறு - மின்னலும் மெலிதற்குக் காரணமான பற்களையுடைய, கோள் மா - (யானை முதலிய பெருவிலங்குகளி னுயிரையுங்) கொள்ளுந்தன்மையுடைய சிங்கங்களும், வேங்கை - புலிகளும், என்ற இனைய ஏ உம் - என்ற இவை போன்ற துஷ்டமிருகங்களும், (தங்கள் கொடுமை குன்றிச் சாந்தமாய்), பின் சென்று - (இவர்கள்) பின்னே தொடர்ந்து சென்று, காதல் கூர - ஆசைமிகாநிற்க,—பேய் -பேய்களும், கணித்து - (இவர்களை) நன்குமதித்து, இரங்குகின்ற- (மனம்) இளகுகின்றன; இவரை- இவர்களைக்குறித்து, பற்பல - பலபலவகையான கொடிய ஜந்துக்களில், எண்ணின்-ஆலோசிக்குமிடத்து, என் கன்றுகின்றது - எந்தப் பிராணிதான் சினங்கொள்ளுகின்றது? [எதுவும் இல்லை என்றபடி]; (எ - று.)

இயற்கையில் மிகக்கொடிய மிருகங்களும் பேய்களும் கண்டமாத்திரத்தில் தமது கொடுமை நீங்கி இரங்குந்தன்மையையுடைய இந்த இளங்குமாரர்களைக் கண்டு, பகைவர்களாகவும் பகைவனது படையாட்களாகவும் நினைத்து அஞ்சுவதற்குக் காரணமில்லையே என்பதாம்.

இக்கவிமுதல் மூன்றுகவிகள் விலங்குகளும் நிலைத்திணைப் பொருள்களும் அவர்கள் விஷயத்தில் நடந்துகொண்டமையைக் குறித்து அநுமான் தனக்குள்ளே நினைத்துச் சொன்னமை கூறுகின்றன. இவ்வாறு அவையெல்லாம் இரங்கித் தம் தமக்குஇயன்ற பணிவிடைகளைச் செய்வதற்குக் காரணம், உணர்வினுக்குணர்வாகும் முதற்பெருந்தேவனான ஸ்ரீராமபிரான்பக்கல் இயல்பாயெழுந்த பேரன்பாம்.

'மின்கன்றும் எயிறு' என்றது - மின்னலின் ஒளியினும் எயிற்றினொளி மிக்கு விளங்குதலால்; கன்றுதல் - உவமவுருபாகவு மாம். கோண்மா - ஹரி என்னும் வடசொல்லின் பொருள் கொண்டது. எண்ணில் என்கன்றுகின்றது - மனத்தில் என்ன நினைத்து வருந்துவது எனக் கூறுவாருமுளர்.

தன்கன்று கண்டவன்ன தன்மைய—ஒருமைப்பன்மை மயக்கம். 'கன்று' என்பதற்கும், மேல்வருகின்ற 'கோண்மா' 'வேங்கை' என்பவற்றிற்கும் ஏற்ப, 'பேழ்வாய்' என்றதற்கு - காட்டுயானை யெனப் பொருள் கொள்ளப்பட்டது. பேழ்வாய் - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இனையவேயும், ஏகாரமும் உம்மையும்- இழிவுசிறப்பு; அவ்விலங்குகளின் கொடுமையைக் கருதிற்று. தன்மைய, இரங்குகின்ற - முற்று. அம்மா-ஈற்றசை; வியப்புமாம். பி-ம்:—[1] இனையவேனும். [2]பேழ்கணித்திரங்குகின்ற, பேர்கலாதிரங்குகின்ற, பேய்க்கணீர்த்திரங்குகின்ற, பேய்தணித்திரங்குகின்ற, பேகணித்திரங்குகின்ற. [3]என் கன்றுகின்ற தெண்ணி, என்கன்றுகின்ற வெண்ணில். [4]பற்பல விசையவம்மா. (55)

13. மயின்முதற் பறவை யெல்லா மணிநிறத் [1]திவர்கள் மேனி
வெயிலுறற் கிரங்கி [2]மீதா [3]விருஞ்சிறைப் பந்தர் [4]வீசி
[5]எயில்வகுத் தெய்து கின்ற விண்முகிற் கணங்க ளெங்கும்
பயில்வுறத் திவலை சிந்திப் பயப்பயத் [6]தழுவும் பாங்கர்.

(இ - ள்.) மயில் முதல் பறவை எல்லாம் - மயில் முதலான பறவைகளெல்லாம், மணி நிறத்து இவர்கள் மேனி - அழகிய திருநிறத்தையுடைய இவர்களது திருமேனியில், வெயில் உறற்கு இரங்கி - வெயில் படுவதற்காக மனமிரங்கி, மீது ஆ இருஞ் சிறை பந்தர் வீசி - (இவர்கட்கு) மேலாகப் பெரிய சிறகுகளாகிய பந்தலைப் பரப்பி, எயில் வகுத்து-மதில்போலச் சுற்றிலும் வளைத்துக்கொண்டு, எய்துகின்ற-கூடவருகின்றன; விண்முகில் கணங்கள்-ஆகாயத்திலுள்ள மேகங்களின்கூட்டங்கள், எங்கும்உம் - எல்லாவிடத்தும், பயில்வு உற-நெருக்கமாக, திவலை சிந்தி-நீர்த்துளிகளைச் சிந்திக்கொண்டு, பாங்கர் - (இவர்கள்) பக்கத்தில், பயப் பய-மெல்ல மெல்ல, தழுவும் - தொடர்ந்து வருகின்றன: (எ - று.)

வழிநடத்தலால் இவர்கட்கு வெம்மை முதலியவற்றாலான வருத்தந் தோன்றாதிருக்குமாறு ஒவ்வொரு பிராணியும் தம்மாலியன்றவற்றைச் செய்தன வென்பதாம். முதல் வாக்கியம் - "மேலாப் பரந்த வெயில் காப்பான் வினதை சிறுவன் சிறகென்னும், மேலாப் பின்கீழ் வருவான்" என்ற ஆண்டாள் பாசுரத்தை அடியொற்றிய தென்க; ஆரணியகாண்டத்துச் சடாயுகாண்படலத்தில் "அவர் திண்சிறை, விரியுநீழலிற்செல்ல விண்சென்றனன்" என்றது, இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. பெரியோர்கள் செல்லுமிடங்களில் மழைபெய்தலியல்பாதல் குறித்துப் பிந்தின வாக்கியங் கூறின ரென்னலாம்.

பந்தர், பாங்கர் - பந்தல், பாங்கு: ஈற்றுப்போலிகள். பயப்பய. பையப்பைய என்னுங் குறிப்புவினையெச்ச அடுக்கின்முதற்போலி. பி - ம்:—[1] இவர்தம்மேனி. [2] மேலாய். [3] விரிசிறை. [4] நீங்கா. [5] இயல்வகுத் திரங்குகின்ற வினமுகிற்கணங்களெங்கும். [6] தாழும்.

14. காயெரி கனலுங் கற்கள் கள்ளுடை [1] மலர்க ளேபோல்
தூயசெங் கமல பாதந் தோய்தொறுங் குழைந்து தோன்றும்
போயின திசைகள் தோறு [2] மரனொடு புல்லு மெல்லாம்
சாய்வுறுந் [3] தாழ்வ போலிங் கிவர்களோ தரும மாவார்.

(இ - ள்.) காய் எரி கனலும் கற்கள் - வெயிலிற்காய்கிற நெருப்புப்போலச் சுடுகின்ற பருக்கைக்கற்கள், தூய செம்கமலம் பாதம் தோய் தொறும் - பரிசுத்தமான செந்தாமரை மலர்போன்ற (இவர்களது) திருவடிகள் படும்பொழுதெல்லாம், கள் உடை மலர்களே போல் - தேனையுடைய மலர்கள் போலவே, குழைந்து தோன்றும் - நெகிழ்ந்து (மென்மையாகத்) தோன்றுகின்றன; போயின திசைகள் தோறும் - (இவர்கள்) சென்ற இடங்களிலெல்லாம், மரனொடு புல் உம் எல்லாம் - மரங்களும் புற்களுமாகிய இவையெல்லாம், தாழ்வ போல் - (இவர்களை) வணங்குவனபோல, சாய்வுறும் - சாய்ந்து நிற்கின்றன; இங்கு - இக்காரணங்களால், தருமம் ஆவார் - தரும தேவதைகளாவார், இவர்களோ - இவர்கள் தாமோ? (எ - று.)

இவரது திருவடிகள் பட்டமாத்திரத்திற் சுடுகிற கற்களும் மலர் போலக் குளிர்ந்து மென்மையாகின்றன; இவர் திருமேனிகளைக் கண்டபோதே மரம் முதலிய ஓரறிவுடைய அஃறிணைப் பொருள்களும் வணங்குகின்றன என்று இவரது கடவுட்டன்மையைக் குறித்து அநுமான் வியந்தனனென்க. காய் கற்களென இயையும். 'கள்ளுடை மலர்கள்' என்றது. அன்று மலர்ந்த புதிய மலர்களென்பது தோன்ற நின்றது; மிகவும் மெல்லியன அவையே யாதலால். மரமும் புல்லும் சாய்வதைத் தாழ்வதாகக்கூறியது தற்குறிப்பேற்றவணி யென்க. 'இவர்களோ தருமமாவார்' என்ற தொடரை முன்வாக்கியங்கள் சமர்த்தித்து நின்றன: தொடர்நிலைச்செய்யுட்குறியணி.

மலர்களே, ஏகாரம் - உயர்வுசிறப்போடு தேற்றப் பொருள்பட நின்றது. கமலபாதம் - உவமத்தொகை. வடநூன்முடிபு. இவர்களோ, ஓகாரம் ஐயப்பொருள் குறித்தது: வியப்புப் பொருள் படுத்தியும் உரைக்கலாம். பி - ம்:—[1] மலரேபோல. [2] புல்லொடு மரனுமெல்லாம். [3] தொழுவபோன்று, தொழுவபோன்ற. (57)

15. துன்பினைத் [1] துடைத்து மாயத் தொல்வினை [2] தன்னை [3] நீக்கித்
தென்புலத் [4] தன்றி மீளா நெறியுய்க்குந் தேவ ரோதாம்
[5] என்பெனக் குருகு கின்ற திவர்கின்ற தளவில் காதல்
அன்பினுக்கவதி யில்லையடைவென்கொ [6] லறிதல் தேற்றேன்.

(இ - ள்.) துன்பினை துடைத்து - (பிறவித்) துன்பங்களைப் போக்கி, மாயம் தொல்வினை தன்னை நீக்கி - (அத்துன்பங்கட்குக் காரணமான) அவிச்சையினா லுண்டாகின்ற அநாதியான கருமத்தை ஒழித்து, தென் புலத்து அன்றி மீளா நெறி உய்க்கும் - தெற்குத்திக் கிலுள்ள யமலோகத்திலே யல்லாமல் (சென்றவர்கள்) மீண்டு வருத லில்லாத மோக்ஷலோக மார்க்கத்திலே (தம்மை யடைந்தவர்களைச்) செலுத்துகின்ற, தேவர் ஓ தாம்-தேவாதி தேவரான ஸ்ரீ மகாவிஷ்ணு தாமோ (இவர்கள்)? எனக்கு—, என்பு உருகுகின்றது - (இவர்கள் திறத்தில்) எலும்பும் கரைகின்றது; அளவு இல் காதல் இவர் கின்றது- அளவில்லாத பக்தி மேன்மேல் மிகுகின்றது: அன்பினுக்கு- (இவர்கள் திறத்தி லுண்டாகின்ற) அன்புக்கு, அவதி இல்லை - எல்லை யில்லை; அடைவு என் கொல் - (இப்படி ஆவதற்குக்) காரணம் யாதோ? அறிதல் தேற்றேன் - அறியமாட்டாதவனா யிருக்கின்றேன், (யான்); (எ - று.)

முன்பு வாயுபகவான் அநுமனை நோக்கி 'நீ திருமாலுக்கு அடிமை செய்' என்றான்; அப்பொழுது அம்மாருதி 'யான் திருமாலை எங்ஙனம் அறிவது?' என வினவ, வாயுதேவன் 'எவரைக் கண்டமாத் தில் காரணமில்லாமல் உனக்கு அளவில்லாத பேரன்பு உண்டா கின்றதோ, அவரையே திருமாலென்று அறி' என்று சொல்லியிருந் ததனால் இவ்வாறு கூறினான்: அதனை நட்புக்கோட்படலத்தில் "துன்பு தோன்றிய","பிறிது மன்னவன்"என்னும் செய்யுள்களாலும் அறிக. 'அடைவென்கொல்' என்பதற்கு - அவர்கட்கும் எனக்கும் உள்ள சம்பந்தம் யாதோ? என்றும், அவர்கள் இவ்விடத்து வந் தடைதற்குக் காரணம் என்னவோ! என்றும் பொருள் கூறலாம். கொல் - ஐயம்.

தன்னைப் பற்றி வருந் தலைநோய் முதலியனவாகிய ஆத்யாத் மிகமும், புலி முதலிய பிறவுயிர்களால் நிகழும் ஆதிபௌதிகமும், தெய்வத்தால் நேரும் இடிமுதலியனவாகிய ஆதிதைவிகமும் என்ற மூன்றும் 'துன்பு' என்றதில் அடங்கும். சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்னும் மூவகைக் கருமங்களையும் குறித்தலால், வினை - சாதியொருமை. சஞ்சிதமாவது - ஆன்மாவினால் சம்பாதிக் கப்பட்டுக் குவிந்து கிடக்கின்ற வினை: பிராரப்தமாவது - ஈட்டப் பட்டவற்றில் இப்போது அனுபவிக்குமாறு உடன்பட்ட வினை. ஆகாமியமாவது - அவ்வாறு அனுபவிக்கு மிடத்துப் புதிதாக ஈட்டப்படும் வினை. அவித்யை - அறியாமை. பி-ம்:—[1]தொடக்கு மாயத், தொடக்குமாயைத். [2]துடைத்து. [3]நீங்காத். [4]உருமல். [5]என்புநெக்குருகுகின்றது. [6]அறிதற்கென்றான். (58)

16.—அநுமான் இராமலக்ஷ்மணரைச் சந்திக்க, இராமன் அவனை விசாரித்தல்.

[1]இவ்வழி யெண்ணி யாண்டவ் விருவரு மெய்த லோடும்
செவ்வழி யுள்ளத் தானுந் தெரிவுற வெதிர்சென் றெய்திக்
கவ்வையின் றாக [2]நுங்கள் வரவெனக் கருணை யோனும்
[3]எவ்வழி நீங்கி யோய்நீ யாரென [4]வியம்ப லுற்றான்.

(இ - ள்.) இ வழி எண்ணி - இவ்விதமாக ஆலோசித்து, செம் வழி உள்ளத்தான் உம் - நல்வழியிற் செல்லுகின்ற மனத்தையுடைய வனான அநுமானும்,—ஆண்டு அ இருவர் உம் எய்தலோடும் - அவ் விடத்தில் அவ்விரண்டு பேரும் வந்தவளவிலே,—தெரிவுற - (அவர் கள் தன்னைக்) காணும்படி, எதிர் சென்று எய்தி - (அவர்கட்கு) எதிரிற் போய்ச் சேர்ந்து, 'நுங்கள் வரவு - உங்கள் வருகை, கவ்வை இன்று ஆக - துன்பமில்லாத [நல்ல] வரவாகக்கடவது', என - என்று க்ஷேமம் விசாரிக்க,—கருணையோன் உம் - கிருபாமூர்த்தி யாகிய ஸ்ரீராமனும், 'நீ—, எ வழி நீங்கியோய் - எவ்விடத்தி லிருந்து வந்தவன்? யார் - யாவன்?' என - என்று கேட்க, இயம்பல் உற்றான் - (அநுமான்) சொல்லத் தொடங்கினான்; (எ - று.)—அதனை, மேல் இரண்டுகவிகளாற் கூறுகின்றார்.

அநுமான் தான் இருக்குமிடத்து இராமலக்குமணர் வரும் போது அவர்களெதிரிற் சென்று அவர்களைச் சேமம் வினவ ஸ்ரீராமன் அநுமானை வினவின னென்றவாறு. வந்தவர்களைத் தமக்கு உதவும்படி திருமால் தானே வந்ததாகக் கருதின னாதலின், இதுவரையும் மறைந்து நின்ற அநுமான் இப்பொழுது அவர்க ளெதிரில் வெளிப்படையாக வந்தனனென்க. 'ஆண்டு' என்றது, அநுமான் நின்ற விடத்தை. 'கவ்வையின்றாக நுங்கள் வரவு' என் றது - 'ஸ்வாகதம்' என்னும் வடமொழியின் பொருளை உட்கொண் டது; வந்தவர்களை இவ்வாறு உசாவுதல், மரபு. பி - ம்:—[1] இவ்வகை. [2] உங்கள். [3] எவ்வகை, வெவ்வழி. [4] விளம்பலுற்றான். (59)

17.—இரண்டு கவிகள் - அநுமான் கூறிய விடையைத் தெரிவிக்கும்.

மஞ்செனத்[1] திரண்ட கோல [2] மேனிய மகளிர்க் கெல்லாம்
நஞ்செனத் தகைய வாகி [3] நளிரிரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சமொத் தலர்ந்த செய்ய [4] கண்ணயான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றின் வந்தே னாமமு [5] மனும னென்றான்.

(இ - ள்.) 'மஞ்சு என திரண்ட - நீர்கொண்ட காளமேகம்போல அமைந்த, கோலம் மேனிய - அழகிய திருமேனி நிறத்தை யுடைய வனே!—மகளிர்க்கு எல்லாம் - (காண்கின்ற) பெண்கள் யாவர்க்கும், நஞ்சு என தகைய ஆகி - விஷமென்று சொல்லுதற்கேற்ற தன்மையை யுடையனவாய், நளிர் இரு பனிக்கு தேம்பா கஞ்சம் ஒத்து - குளிர்ச்சி மிகுந்த பனிக்கு வாடாத செந்தாமரை மலரைப் போன்று, அலர்ந்த - மலர்ந்து விளங்குகின்ற, செய்ய கண்ண - சிவந்த திருக்கண்களை யுடையவனே! யான் - அடியேன், காற்றின் வேந்தற்கு - வாயுபகவா னுக்கு, அஞ்சனை வயிற்றின் - அஞ்சனாதேவியின உதரத்திலே, வந் தேன் - பிறந்தவன்; நாமம் உம் - (எனது) பெயரும், அனுமன் - அநு மான் (என்பர்),' என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

'நான் வாயுதேவனுக்கு அஞ்சனாதேவி வயிற்றிற் பிறந்தவன்: என் பெயர் அனுமான் என்பது' என 'நீ யார்?' என்று ஸ்ரீராமன் வினவுதலுக்கு இதனால் விடையிறுத்தனனென்க. நீலமேகம் - பெருமாளினது திருமேனிக்கு நிறத்தினாலும், குளிர்ச்சியினாலும், கண்டவர் கண்களைக் கவரும் கட்டழகினாலும், உவமை. திருக்கண்கள் தம்மைக் காமுற்றுக் காண்கின்ற மங்கையர்க்கெல்லாம் தாமும் எதிர்நோக்கி இன்பமளியாமல் ஆசைநோயைஉண்டாக்கிச் சாவை விளைக்கும் வருத்தத்தையும் மூட்டுதலால், 'மகளிர்க்கெல்லாம் நஞ்செனத் தகையவாகி' என்றார்; "ஏழைய ராவியுண்ணும் இணைக் கூற்றங்கொலோ அறியேன்" என்றார்பெரியாரும். எக்காலத்தும் எப்பொழுதுங் குவியாத தாமரை மலர்களிருந்தால் அவையே ஒருபடியாக இக்கண்களுக்கு உவமையாகக் கூடுமேயன்றி, பகலிலே மலர்ந்து இரவிலே குவிந்து வெயிற்காலத்துமாத்திரமே செவ்விபெற்று மற்றைப் பனி மழைக் காலங்களில் வாடிப்போகு மியல்புள்ள சாதாரணமான தாமரை மலர்கள் இவற்றிற்கு உவமையாகச் சொல்லுதற்கு ஏற்றவையல்ல வென்பது தோன்ற, 'நளிரிரும் பனிக்குத் தேம்பாக் கஞ்சமொத் தலர்ந்த' எனப்பட்டது; இல்பொருளுவமை; இதனை வேற்றுமையணி யென்று கூறுவதும் உண்டு. கஞ்ஜம் - நீரிற்பிறப்பது; கம் - நீர். பி - ம்:—[1] கரிய, இருண்ட. [2] மேனியீர். [3] நள்ளிரும். [4] கண்ணினீர். [5] அனுமனென்பேன். (60)

18. இம்மலை யிருந்து வாழு மெரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக் கேவல் செய்வேன் தேவநும் வரவு நோக்கி
விம்மலுற் றனைய னேவ வினவிய வந்தே னென்றான்
எம்மலைக் குலமுந் தாழ விசைசுமந் தெழுந்த தோளான்.

(இ - ள்.) 'இ மலை - இந்த ருசியமூக பருவதத்தில், இருந்து வாழும் - வாழ்ந்துகொண்டிருக்கின்ற, எரி கதிர் செல்வன் பரிதி செம்மலுக்கு - விளங்குகின்ற ஆயிரங் கிரணங்களை(த் தனக்கு)ச் செல்வமாக வுடையவனான சூரியபகவானது குமாரனாகிய சுக்கிரீவனுக்கு, ஏவல் செய்வேன் - தொண்டு பூண்டொழுகுபவனாகிய யான், தேவ - சுவாமி! அனையன் - அந்தச் சுக்கிரீவன், நும்வரவு நோக்கி - உங்கள் வருகையைப் பார்த்து, விம்மல் உற்று - கலக்க மடைந்து, ஏவ - (விசாரித்துவரும்படி) ஏவியதனால், வினவிய வந்தேன் - விசாரித்தற் பொருட்டு (இங்கு) வந்தேன்,' என்றான்—; (யாவனெனில்), எ மலை குலம்உம் - எல்லாக் குலபருவதங்களும், தாழ - தாழ்ச்சி அடையும்படி, இசை சுமந்து - கீர்த்தியைத்தாங்கி, எழுந்த - வளர்ந்திருக்கின்ற, தோளான் - தோள்களையுடையவனான அநுமான்;(எ-று.)

இதனால் 'எவ்வழி நீங்கியோய்' என்ற வினாவிற்கு அனுமான் விடையிறுக்கின்றான்; நான் சுக்கிரீவனிடம் ஏவல் செய்வேன்; உமது வரவு நோக்கி 'வாலியினாலேவப்பட்டு வருகின்றவரோ? என்று உம்மைக் கண்டு கலங்கி விசாரித்துவருமாறு என்னையேவ

அங்கிருந்து வந்தேனென்றனன் அனுமானென்றவாறு. மலைக்குலம் - மலைகளின் கூட்டமென்றுமாம். 'அவை தாழ' என்றது-தோள்கள் அவற்றினும் உயர்ந்தும் வலியனவாயுமிருத்தலால். மலைக்குலத்தினும் தோளுக்குப் பின்னும் உயர்ச்சி கூறுவார் 'இசை சுமந்தெழுந்த' என்று அடைமொழி கொடுத்தார். மகிழ்ச்சியடைந்து என்னும் பொருளும் தோன்ற, 'விம்மலுற்று' என்றார். சூரியபகவானென்று வழங்குதற்கு ஏற்ப 'பரிதிச் செல்வன்' என்றாருமாம்.

இலக்குமணனையுங்கூட்டி 'நும்' எனப் பன்மையாகக் கூறினர்; தேவநும்-ஒருமைப்பன்மைமயக்கமென்னலாம். செம்மல் - ஆண்பாற் சிறப்புப் பெயர். வினவிய - செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம். (61)

19.—இராமபிரான் அநுமானை நற்குணமுடையவனென்று தெளிந்து இலக்குமணனிடத்துக் கூறத்தொடங்குதல்.

மாற்றமஃ துரைத்த லோடும் வரிசிலைக் குரிசின் மைந்தன்
தேற்றமுற் றிவனி [1] னூங்குச் [2] செவ்வியோ ரின்மை தேறி
ஆற்றலு [3] நிறைவுங் கல்வி யமைதியு மறிவு [4] மென்னும்
வேற்றுமை யிவனோ டில்லை யாமென விளம்ப லுற்றான்.

(இ - ள்.) மாற்றம் அஃது - அந்த வார்த்தையை, உரைத்தலோடும்-(அனுமான்) சொன்னவளவில்,—வரி சிலை குரிசில் மைந்தன் - கட்டமைந்த கோதண்டத்தையுடைய தசரதசக்கரவர்த்தியின் திருமகன்,—தேற்றம் உற்று - சற்றே ஆராய்ச்சிசெய்யத் தொடங்கி,—இவனின் ஊங்கு செவ்வியோர் - (இங்குவந்துள்ள) இவனைக்காட்டிலும் மேலாக நற்குணமுள்ளவர்கள், இன்மை-(எவ்வுலகத்திலும் வேறெவரும்) இல்லாமையை, தேறி - தெளிந்து, 'ஆற்றல் உம் - பராக்கிரமமும், நிறைவு உம் - (சற்குண) பூர்த்தியும், கல்வி அமைதி உம் - சாஸ்திரங்களின் பொருத்தமும், அறிவு உம்-ஞானமும், என்னும் - என்கிற, வேற்றுமை - வேறுபாடு, இவனோடு - இவனுடனே, இல்லை ஆம் - இல்லையாகும்,' என - என்று எண்ணி,—விளம்பல் உற்றான்-(தம்பியோடு) சொல்லத்தொடங்கினன்; (எ - று.) —அதனை, மேல் மூன்று கவிகளாற் கூறுகின்றார்.

இவனினும் நற்குணமுடையார் இல்லையென்றும், பராக்கிரமம் முதலிய மேன்மைகளெல்லாம் இவனிடத்தே ஒற்றுமைப்பட்டு நிரம்பிக்கிடக்கின்றனவே யன்றி இவனையல்லாமல் இவ்வுலகத்திற் பராக்கிரமம் முதலியன வேறு இடத்து இல்லையென்றும் இராமபிரான் குறிப்பால் நிச்சயித்தனனென்க; ஆற்றல்முதலிய நிரம்பியவனென்றற்காக, 'ஆற்றலும்...அறிவும் என்னும் வேற்றுமை இவனோடில்லை' என்று, ஆற்றல் முதலியவற்றின் சொரூபமே இவனெனகிறான். "கலையின தகலமுங் காட்சிக் கினபமுஞ், சிலையின தகலமும் வீணைச் செல்வமு, மலையினி னகலியமார்ப னல்லதிவ், வுலகினி லிலையென

வொருவனுயினுன்" என்ற சிந்தாமணிச்செய்யுள் நோக்கத்தக்கது. பி - ம்:—[1]ஊங்கும். [2]செவ்வியோருண்மைதேரில். [3]நிறையும், இசையும். [4]என்ப. (62)

20.—இதுமுதல் மூன்று கவிகள் – இராமபிரான் அநுமானைக் குறித்து இலக்குமணனிடத்துக் கூறுவன.

இல்லாத வுலகத் தெங்கு [1]மீங்கிவ னிசைகள் [2]கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே யென்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற்றன்றே[3]யார்கொலிச்சொல்லின் செல்வன்
வில்லார்தோ ளிளைய [4]வீர விரிஞ்சனே விடைவல் லானே.

இதுமுதல் நான்குகவிகள்-ஒருதொடர்.

(இ - ள்.) வில் ஆர் தோள் - விற் பொருந்திய தோளையுடைய, இளைய - இளமையுடையவனே [தம்பீ]! வீர-வீரனே!—ஈங்கு இவன் - இவ்விடத்தில் [இப்பொழுது] வந்திருக்கின்ற இவன், இசைகள் கூர - கீர்த்தி மிகும்படி, கல்லாத - படியாத, கலைஉம் - சாஸ்திரங்களும், வேதம் கடல்உம் - வேதங்களாகிய சமுத்திரமும், உலகத்து எங்குஉம் - எல்லா வுலகங்களிலும், இல்லாத ஏ-இல்லாதனவேயாம், என்னும் - என்று சொல்லுதற்கேற்ற, காட்சி - அறிவு, (இவனுக்கு இருத்தல்), சொல்லால் ஏ - (இவன் பேசும்) வார்த்தையினாலே, தோன்றிற்று அன்றே - வெளிப்பட்டதன்றோ? இ இன்சொல் செல்வன - இனிய சொற்களையே செல்வமாக வுடையவனான இவன், விரிஞ்சன்ஓ - பிரமதேவனோ? (அன்றி), விடை வல்லான் ஓ - விருஷபத்தை வாகனமாகக்கொண்டு ஏறி நடத்தவல்ல உருத்திரமூர்த்தியோ? யார்கொல் - யாரோ?; (எ - று.)

இவன் கல்லாத கலையும் வேதமும் உலகத்து இல்லாதவே என்றதனால், சகலவேதாகமங்களையுங் கரைகண்டவன் இவன் என்றபடி. இனி, முதலிரண்டடிகளுக்கு - தான் இல்லாத உலகத்திலும் எவ்விடத்தும் இவ்வாறே புகழ்மிகும்படி (பிறரால்) கற்கமுடியாத நூல்களும் வேதசாகரமுமாகிய இவற்றினுருவமே யாவன் இவன் என்று சொல்லத்தக்க தோற்றம் எனப் பொருள் கொள்ளுதலு மொன்று. இவன் சகல சாஸ்திரங்களையும், அநந்தமான வேதங்களையுங் கற்றுத் தேர்ந்து புகழ்பெற்ற மகாஞானியென்னுந் தன்மை வார்த்தையால் வெளிப்பட்டதென்றார், கற்றவர்க்குங் கல்லாதவர்க்கு முள்ள வேறுபாடு யாக்கைநயத்தாலன்றி வாக்குநயத்தாலேயே விளங்கு மாதலால். வேதத்தைக்கடலென்றது - அளவுபடாமையும், பல்வகைப்பொருளையு முடைமையும் முதலிய காரணங்களினுல். அன்றே - தேற்றம். ஞானத்தாற் பிரமனேவென்றும், பராக்கிரமத்தால் உருத்திரனேவென்றுஞ் சங்கித்தான். இனி, உருத்திராமிசமாகப் பிறந்தவனாதலாலும் அடுத்த பிறவியிற் பிரமபட்டத்தைப் பெறப்போகின்றவனாதலாலும் அவ்விருகூறும் அவனிடத்துத் தோன்றுவதால் இவ்வாறு கூறியதுமாம். இனி, திரிமூர்த்திகளுள் இராமபிரான் தான்

ஸ்ரீமகாவிஷ்ணுவினது திருவவதாரமாதலின் தானன்று என்று விளங்கியதனால், மற்ற இருமூர்த்திகளுள் யாரோவென்று ஐயமுற்றனனென்பாருமுளர். இவ்வாறாக இராமபிரான் இலக்குமணனிடத்து அநுமானைப் புகழ்ந்து கூறுவது, இவனை அவமதியாது இவனிடத்து மிக்க கௌரவத்தோடும் கருத்தோடும் எப்போதும் பேசவேண்டுமென்று குறிப்பித்தற்குப்போலும். 'கடலுமே' என்ற ஏகாரம், பிரித்தெடுத்து, 'இல்லாத' என்பதனோடு கூட்டப்பட்டது. சொல்லின் செல்வன், இன் - சாரியையுமாம். இளையஎன்பதைப் பெயரெச்சமாகக் கொண்டு, இளைய வீர - இளைய வீரனே! என்று இத்தொடரே விளியாக உரைக்கலாம். பி - ம்:—[1] இயங்குவானியல்பு, இங்கிவனினிமை, இங்கிவனியல்வு. [2] கூற. [3] யாரேயிச் சொல்லின் செல்வன். [4] மைந்த. (63)

21\. மாணியாம் [1] படிவ மன்று மற்றிவன் வடிவ மைந்த
ஆணியிவ் வுலகுக் கெல்லா மென்னலா மாற்றற் கேற்ற
சேணுயர் [2] பெருமை தன்னைச் [3] சிக்கறத்தெளிந்தேன் [4] பின்னர்க்
காணுதி மெய்ம்மை யென்று தம்பிக்குக் கழறிக் கண்ணன்.

(இ - ள்.) மைந்த - இளையவனே!—இவன் வடிவம் - இவனது சொரூபம், மாணி ஆம் படிவம் அன்று-சாதாரணமான பிரமசாரிரூபமன்று; மற்று - பின்னை, இ உலகுக்கு எல்லாம் - இந்தலோகங்களுக்கெல்லாம், ஆணி - (ஓர்) அச்சாணி, என்னல்ஆம் - என்று சொல்லக் கூடிய, ஆற்றற்கு - பராக்கிரமத்திற்கு, ஏற்ற - தக்க, சேண் உயர் பெருமைதன்னை - மிகவும் அதிகமானமகிமையை, (இவனிடத்து உள்ளதாக), சிக்கு அற - சந்தேகமில்லாமல், தெளிந்தேன் - நிச்சயித்தேன்; மெய்ம்மை - அதன் உண்மையை, பின்னர்-பின்பு, காணுதி - (நீயும்) காண்பாய், என்று,—கண்ணன் - ஸ்ரீராமபிரான், தம்பிக்கு-லக்ஷ்மணனுக்கு, கழறி - சொல்லி,—(எ - று.)—'கழறி' என்பது மேல் 'என்றான்' (23) என்பதனோடு முடியும்.

பெரியதேர்க்குச் சக்கரங்கோத்தமரத்தில் அச் சக்கரங் கழலாமற் கடையிற் செருகுகின்ற ஆணி வடிவாற் சிறியதாயிருந்தே பெரிய பாரங்களையெல்லாங் கொண்டு செலுத்துகின்ற வலிமையுடையதாயிருத்தல்போல, இவனுருவம் வடிவாற் சிறியதாயிருந்தே பெரிய காரியங்களை யெல்லாஞ் செய்துமுடிக்கும் வலிமையுடையது; ஆதலால் இவனுருவத்தின் சிறுமையை நோக்கி இகழ்ச்சி செய்யலாகாது; இத்தன்மைத்தான மகிமை, காலம் வரும்போது வெளிப்படும்; அப்பொழுது காணலாம் என்றான். "உருவுகண்டெள்ளாமை வேண்டு முருள் பெருந்தேர்க், கச்சாணியன்னாருடைத்து" என்றார், திருக்குறளிலும். ஆகவே, நீ இவனது உருவத்தைக் கண்டு அவமதிக்கலாகா தென்றதாயிற்று. இவன்வடிவு அமைந்த ஆணி என்று பிரித்தும் உரைக்கலாம்.

சேண் உயர் - ஒருபொருட்பன்மொழி. க்ருஷ்ணனென்னும் வடமொழி, பிராகிருதமாய்க் கண்ணனெனச் சிதைந்துவந்தது. இது, விஷ்ணுவின் திருநாமங்களுள் ஒன்று; இது, இங்கே அவ

தாரப்பெயரன்றி வந்த காரணப்பெயர். அன்றி, கவி கிருஷ்ணவ தாரத்திற்குப் பிந்தியவ ராதலால், 'இருவரும் ஒருவரே' என்ற கொள்கையால் இராமனையே கண்ணனெனக் கூறினரென்றலு மொன்று. இனித் தமிழ்மொழியேயாய், கண்ணன் - கண்ணழகுடை யவன்எனினுமாம். பி - ம்:—[1]வேடம், வடிவம், வடிவும். [2]பெருமைத் தன்மை. [3]சிக்கெனத்தெரிந்தேன், சிக்கறத்தெளிந்தே. [4]பின்னும்.

22. மற்றுமிவ் வுலகத் துள்ள முனிவர்வா னவர்க [1]ளாரிச்
சொற்றிற[2]முடையார் [3]மற்றுச் சுருதியின் தொகுதி யாவும்
முற்றறி தருமிம் மாணி மொழிக்கெதிர் முதல்வ ராய
பெற்றியர் மூவர்க் கேயும் [4]பேராற்ற [5]லரிது மன்னே.

(இ - ள்.) மற்றும் - பின்னும், இ உலகத்து உள்ள - இந்தப் பூலோகத்திலுள்ள, முனிவர் - இருடிகளுள்ளும், வானவர்கள் - (மேலுலகத்திலுள்ள) தேவர்களுள்ளும், இ சொல் திறம் உடையார் - இத்தன்மைத்தான சொல்லின் திறமையுடையவர், ஆர் - யார் இருக்கின்றனர்? [எவருமில்லையென்றே?] மற்று - மேலும், சுருதியின் தொகுதி யாஉம் - வேதங்களின் கூட்டமெல்லாவற்றை யும், முற்று அறிதரும் - முழுவதும் [ஐயந்திரிபற] அறிந்த, இ மாணி - இந்தப் பிரமசாரியினது, மொழிக்கு எதிர் - சொல்லுக்கு எதிரில், முதல்வர் ஆய பெற்றியர்-(யாவர்க்கும்) முதல்வரான தன்மை யுடையவர்களாகிய, மூவர்க்கேஉம் - திரிமூர்த்திகட்கேயாயினும், பேர் ஆற்றல் - மிக்க வல்லமை, அரிது - அருமையுடையதாகும்; (எ - று.)—மன், ஓ - ஈற்றசைகள்.

இவனது சொல்திறமைக்கு முன்னே மும்மூர்த்திகளின் சொல் திறமையும் இல்லாததாக எண்ணப்படுமென்று இலக்குமண னிடம் அநுமனது சொல் திறமையைப் பாராட்டிக் கூறுகிறான் சீராமனென்க. சுருதி என்பதற்கு - எழுதாக்கிளவியாய் ஆசார்ய சிஷ்ய பரம்பரைக் கிரமப்படி உபதேசமூலமாகக்கேட்கப்பட்டு வருவ தென்று அவயவப்பொருள். மூவர் - தொகைக்குறிப்பு. ஏயும், உம் மும்-உயர்வுசிறப்பு. பி-ம்:—[1]ஞானச். [2]வல்லார். [3]மற்றெச், மற்றைச். [4]பேசுதல். [5]அரிதென்றுன்ன. இச்செய்யுள், சில ஏட்டுப் பிரதிகளில் இல்லை. (65)

23.—சுக்கிரீவனைக் காட்டவேண்டுமென்று இராமபிரான் அநுமானை நோக்கிக் கூறுதல்.

எவ்வழி யிருந்தான் சொன்ன கவிக்குலத் [1]திறைவன் யாங்கள்
அவ்வழி யவனைக் காணு [2]மருத்தியா லணுக வந்தேம்
இவ்வழி நின்னை யுற்ற வெமக்கு [3]நீ யின்று சொன்ன
செவ்வழி யுள்ளத் தானைக் காட்டுதி தெரிய வென்றான்.

(இ - ள்.) (என்றுந் தம்பிக்குச் சொல்லிப் பின்பு ஸ்ரீராமன் அநுமானை நோக்கி), 'சொன்ன - (உன்னால்) சொல்லப்பட்ட, கவி

குலத்து இறைவன் - குரங்குகளின் கூட்டத்துக்குத் தலைவனாகிய சுக்கிரீவன், எ வழி இருந்தான் - எவ்விடத்தில் இருக்கின்றானோ, அ வழி - அவ்விடத்தில் (சென்று), அவனை காணும் - அவனைப் பார்க்கவேண்டுமென்கிற, அருத்தியால் - விருப்பத்தால், யாங்கள் - நாங்கள், அணுக வந்தேம் - சமீபமாக வந்தோம்; இ வழி - இவ்விடத்தில், நின்னை உற்ற - உன்னை எதிர்ப்பட்ட, எமக்கு - எங்களுக்கு, நீ இன்று சொன்ன - நீ இப்போது கூறிய, செம் வழி உள்ளத்தானை - சன்மார்க்கத்திற் செல்கின்ற நன்மனத்தையுடைய அவனை, தெரிய காட்டுதி - தெரியுமாறு காண்பிப்பாயாக,' என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

சுக்கிரீவனைக் காணவேணுமென்றே யாம் வந்துள்ளோமாதலால், அவனைக் காட்டவேண்டுமென்று அனுமானை இராமபிரான் வேண்டினனென்க. [3]'நின் இன்சொலன்ன செவ்வழியுள்ளத்தான்' என்ற பாடத்துக்கு - மனமும் சொல்லும் ஒத்த தூயவனென்க.
பி - ம்:—[1] அரசன். [2] அருத்தியின். [3] நீயென்கொலென்ன. (66)

24.—இதுவும் அடுத்த கவியும்-அநுமான் கூறிய முகமன்.

மாதிரப் பொருப்பொ டோங்கி வரம்பிலா வுலகின் [1]மற்றுப்
பூதரப் புயத்து வீரர் நும்மொக்கும் புனிதர் யாரே
ஆதரித் தவனைக் காண்டற் கணுகினி ரென்னி னன்னான்
தீதவித் [2]தமையச் செய்த செய்தவச் [3]செல்வ நன்றே.

இது முதல் ஐந்து கவிகள் - ஒரு தொடர்: நான்கரை கவிகள் அநுமான் வார்த்தை.

(இ - ள்.) பூதரம் புயத்து வீரர் - பூமியைத் தாங்குகின்ற மலை போன்ற [உலகத்தைத்தாங்குகின்ற] தோள்களையுடைய வீரர்களே!—மாதிரம் பொருப்பொடு ஓங்கி - எட்டுத்திக்கிலும் சுற்றிலுமிருக்கின்ற சக்கரவாளபருவதத்தோடு உயர்ந்து,வரம்பு இலா-எல்லையில்லாமறபரந்துகிடக்கின்ற, உலகில் - இந்தப் பூலோகத்திலே, நும் ஒக்கும் - உங்களைபோன்ற, புனிதர் - பரிசுத்தகுணமுடையவர், மற்று யார்ஏ - வேறு யாவர் உளர் (இப்படிஒப்பவரில்லாத நீங்கள்), அவனை ஆதரித்து காண்டற்கு அணுகினிர் என்னின் - அச்சுக்கிரீவனிடத்து அன்புபாராட்டி அவனைப பார்ப்பதற்கென்று சமீபித்து வந்தீர்களென்றால்,—அன்னான் - அவன், தீது அவித்து - கொடிய ஐம்பொறியை அடக்கி, அமைய - பொருத்தமாக, செய்த—, செய் தவம் செல்வம் - செவ்விய [நல்ல] தவமாகிய செல்வம், நன்றே - மிகுதியும் நன்மையுடையதே; (எ - று.)

என்றது, முற்பிறப்புக்களில் மிக்க தவஞ் செய்திருந்தாலன்றி இப்படிப்பட்ட மகான்களது சேர்க்கை நேராதென்றவாறு. 'மாதிரப் பொருப்பு' என்றது, பூமியைச் சூழ்ந்துள்ள கடலுக்கு அப்பால் மதில் போலச் சூழ்ந்திருக்கின்ற சக்கரவாளகிரியை. மலை தோள்களுக்கு,

வலிமையினாலும் உயர்ச்சியினாலும் மாத்திரமேயன்றி, நிலவுலகத்தை நிலைபெறச் செய்தலினாலும் உவமையாகு மென்பது தோன்ற, 'பூதரம்' என்னும் பெயராற் கூறினர். வீரர் - அண்மை விளி. தீது - சாதியொருமை; தீது அவித்து - பாவத்தை யொழித்து என்றுமாம். செய் தவம் என்பதில், செய் - செம்மையென்னும் பண்புப்பெயரின் விகாரம்; செய்தற்குரிய தவமென வினைத்தொகையுமாம். ஈற்றேகாரம் - தேற்றம். பி - ம்:—[1]மற்றிப். [2]அரிதிற் செய்க, அரிதிற் செய்த. [3]செல்வனன்றே. (67)

இங்கே ஒருபாடல் சீகாழிப் பிரதியிற் கண்டதாகக் கொடுக்கப்பட்டுள்ளது வருமாறு:—"இருக்கன் மாமைந்தரான வாலியுமிளவருனும், செருக்கினோடிருக்குங் காலைச் செறுநரிற் சீறிவாலி, நெருக்குற வெருவியிந்த நெடுங்குவட்டிறுத்தான்றன்பால், மருக்குலாந்தாரீர்! வந்ததவன்செய்மாதவத்தினன்றோ."

25. இரவிதன் [1]புதல்வன் தன்னை யிந்திரன் [2]புதல்வ னென்னும்
பரிவிலன் சீறப் போந்து பருவரற் கொருவ னாகி
அருவியங் குன்றி[3]னெம்மோ டிருந்தன னவன்பாற் செல்வம்
வருவதோ[4]ரமைவின்வந்தீர் வரையினும் வளர்ந்த தோளீர்.

(இ - ள்.) வரையின்உம் வளர்ந்த தோளீர் - மலைகளினும் மிகுதியாகப்பருத்து வளர்ந்திருக்கின்ற தோள்களை யுடையவர்களே!— இரவிதன் புதல்வன் - சூரியகுமாரனான சுக்கிரீவன், தன்னை—, இந்திரன் புதல்வன் என்னும் பரிவு இலன் சீற - இந்திரனது குமாரனாகிய வாலியென்ற சிறிதும் இரக்கமில்லாத தமையன் கோபித்துத் துரத்திவிட்டதனால், பருவரற்கு ஒருவன் ஆகி - துன்பத்தை யனுபவித்தற்கு (த் தான்) ஒருவனேயாய், அருவி அம் குன்றின் போந்து - நீரருவிகளையுடைய அழகிய இம்மலையிற்புகுந்து, எம்மோடு இருந்தனன் - என்னுடனே ஒளித்திருக்கின்றான்; அவன்பால் - அவனிடத்தில், செல்வம் - பாக்கியம், வருவது ஓர் அமைவின் - வந்து நேர்வதொரு தன்மையினால், வந்தீர் - (நீங்கள் இங்கு) வந்தீர்கள்; (எ - று.)

நீங்கள் இப்போது வந்ததனால், இனிச் சுக்கிரீவன் இழந்த செல்வத்தைப் பெறுவ னென்பதாம். அவனிடத்துப் பாக்கியம் வந்து சேர்வதொரு தன்மை போல நீவிர் வந்தீரென்றுமாம். இங்கு வாலியைத் தமையனென்னாது 'இந்திரன் புதல்வன்' என அன்னியன் போலக் கூறியது, சகோதரர்களாகிய வாலி சுக்கிரீவரிருவரும் மனம் வேறுபட்டதனாலாகும். 'பரிவிலன்' என்பதற்கு - துன்பமில்லாதவனெனப் பொருள்கூறி, சுக்கிரீவன் துன்பத்திற்கே இலக்காயிருத்தல் போல வாலி இன்பத்திற்கே இலக்காயிருக்கின்றா னென நயந்தோன்றக் கருத்துக் கூறுவர் ஒருசாரார். ஊரிலு மிருக்க வொட்டாமற்செய்தனனென்பார் 'போந்து' என்றார்.

'பருவரற்கு ஒருவனாகி' என்றதற்கு - துன்பம் முழுவதையும் தான் ஒருவனே அனுபவிக்கின்றானென்றும், அத்துன்பத்தைப்

போக்குதற்கு வேறே யாரும் துணையில்லையென்றும் கருத்து. 'ஒருவனாகி' என்றது, அவன் மனைவியையும் வாலி அபகரித்துக் கொண்டமை தோன்ற நின்றது. அருவியங்குன்றின் - அருவியை யுடைய மலைபோல என உரைத்து, கண்ணீர் பெருக்குகின்ற சுக்கிரீவனுக்கு உவமையாக்குவாருமுளர். சுக்கிரீவன் பக்கத்தைச் சார்ந்தவராய் மற்றும் நான்கு வானரரிருந்தன ரென்று குறிப்பிக்க 'எம்மோடு' என்றான். பி - ம்:—[1] சிறுவன். [2] சிறுவன், தனயன், மைந்தன். [3] என்னோடிருந்தனன். [4] அமைதின். (68)

26.—அநுமான் சரணமடைந்தவரைக்காத்தல் எல்லாத் தருமங்களிலுஞ் சிறந்த தென்றல்.

ஒடுங்கலி லுலகம் யாவு [1] முவந்தன வுதவி வேள்வி
[2] தொடங்கின மற்று [3] முற்றத் தொல்லறந் [4] துணிவ ரன்றே
கொடுங்குலப் [5] பகைஞ ளுகிக் கொல்லிய வந்த கூற்றை
[6] நடுங்கினர்க் கபய நல்கு மதனினு நல்ல துண்டோ.

(இ - ள்.) ஒடுங்கல் இல் - சுருங்குதலில்லாத [மிகப்பரந்த] உலகம் யாஉம் - உலகத்திலுள்ள உயிர்களெல்லாம், உவந்தன - விரும்பியவற்றை, உதவி - தானஞ்செய்து,—தொடங்கின-தொடங்கியவைகளாகிய, வேள்வி - யாகங்களையும், மற்றுஉம் - தவம் முதலியவற்றையும், முற்ற - நிறைவேற்றும்படி, தொல் அறம் - பழமையான தருமங்களை, துணிவர் அன்றே - (பெரியோர்) நிச்சயிப்பார்களன்றோ? (அத்தருமங்களுள்), கொடுங் குலம் பகைஞன் ஆகி - குலத்துக்குக் கொடிய பகைவனாய், கொல்லிய வந்த - கொல்லுதற்கு வந்த, கூற்றை - யமன் போன்ற பகைவனைக்குறித்து, நடுங்கினர்க்கு-அஞ்சி(த் தம்மை)ச் சரணமடைந்தவர்களுக்கு, அபயம் நல்கும் அதனின் உம் - 'பயப்படாதே' என்று அருள் செய்வதைப் பார்க்கிலும், நல்லது - மேம்பட்டதொரு தருமம், உண்டுஒ - உளதோ? (எ - று.)—ஓ· எதிர்மறை.

பலவகைப்பட்ட தானங்கள், யாகங்கள், தவங்கள் முதலிய எல்லா அறங்களினும் புகலடைந்தோர்க்கு அஞ்சலென்று அபயப் பிரதானஞ் செய்தலே பேரறமென்பதாம்; ஆகவே, நாங்கள் நும்மைச் சரணமடைந்துள்ளோமாதலால், எம்மைக் காக்க வேண்டுவது நுமது கடனென்பது குறிப்பெச்சம். 'ஒடுங்கல் இல் உலகம் யாவும் உவந்தன உதவி' என்பதற்கு - விரும்பிக் கேட்கப்படுகின்றனவாகிய சுருங்குதலில்லாத பூமி முதலியவற்றைக் கொடுத்து என்றுமாம்.

அறம் - (இன்னது செய்யத்தக்கது என நூல்களால்) வரையறுக்கப்பட்டது எனக் காரணக் குறி; இதன் எதிர்மொழி - மறம்: (செய்யத்தகாததென்று சாஸ்திரங்களில்) மறுக்கப்பட்டது. வேள்வி- தொழிற்பெயர்; ஓமஞ் செய்தல். கொல்லிய - வினையெச்சம். கூற்று - உவமையாகுபெயர் "அச்சக் கிளவிக்கு ஐந்து மிரண்டும்" என்றதனால், 'கூற்றை நடுங்கினர்க்கு' என்றார். பி - ம்:—[1] உவந்தவர்க்கு,

உயர்ந்தவர்க்கு, உவந்தனர். [2] தொடங்கினர். [3] முற்றி. [4] துணிவரன் றேல், துறந்த சான்றோர், துணிந்தசான்றோர். [5] பகைஞராகி. [6] நடுங்குநர்க்கு. சில பிரதிகளில் முன்னிரண்டடிகள் - உவந்தனனுதவி வேள்வி, தொடங்கினன் மற்றுமுற்றத் தொல்லறந் துணிந்த ஞான்றால் என்றுள்ளன. (69)

27.—அநுமான் உம்மைச் சரணமடைவதே எமக்கு எல்லா நன்மைகளையும் உண்டாக்குமென்றல்.

எம்மையே [1] காத்தி ரென்ற [2] லெளிதரோ விமைப்பி லாதோர்
தம்மையே முதலிட் டான்ற சராசரஞ் [3] சமைந்த வாற்றல்
மும்மையே ழுலகுங் காக்கு முதல்வர்நீர் [4] முருகற் செவ்வி
உம்மையே புகல்புக் கேழுக் கிதின்வரு முறுதி யுண்டோ.

(இ - ள்.) 'எம்மை ஏ - (எளிய) எங்களை மாத்திரமே, காத்திர் - (நீங்கள்) காப்பீர்கள்', என்றல் - என்பது, எளிது அரோ - எளிமையானதன்றோ? (ஏனென்றால்),—நீர் - நீங்கள்,—இமைப்பு இலாதோர் தம்மை ஏ முதல் இட்டு - கண்கள் இமைத்தலில்லாத தேவர்களையே முதற்கொண்டு, ஆன்ற - மிகுதியான, சர அசரம் - அசையும் பொருள்களும் அசையாப்பொருள்களும், சமைந்த-நிரம்பிய, ஆற்றல்-வலிமையையுடைய, மும்மை ஏழ் உலகுஉம் - மூன்று வகைப்பட்ட ஏழுலகங்களையும், காக்கும் - காக்கவல்ல, முதல்வர்-தலைவர்; முருகன் செவ்வி - முருகக் கடவுளைப் போன்ற அழகையும் பராக்கிரமத்தையுமுடைய, உம்மை ஏ - உங்களையே, புகல் புக்கேமுக்கு - சரணமாக அடைந்த எங்களுக்கு, இதின் - இதைப் பார்க்கிலும், வரும்-(மேலாக) வருகின்ற, உறுதி - நன்மையைத் தருவது, உண்டு ஓ - வேறு உளதோ? [இல்லை]; (எ - று.)

அநுமான், தனது பேரறிவினால் இராமலட்சுமணரது சொரூபத்தையறிந்து 'நீர் எல்லாவுலகங்களையுங் காக்கும் முழுமுதற் கடவுளினமிச மாதலின், நீரே எமக்குப் புகல்; உம்மைச் சரணமடைவதே எமக்கு எல்லா நன்மைகளையும் விளைவிக்கும்; ஆகவே யாம் நும்மைச் சரணமடைவோம்' என்று கூறினனென்க.

ஏழுலகு - மேலேழுலகும்கீழேழுலகும் என இருவகைப்பட்டவை. உலகம் பதினான்காயிருக்க 'மும்மையேழுலகு' என்றது, மேல் கீழ் நடு என்கிற நோக்கத்தால்; அன்றி, கிருதகம் அகிருதகம் கிருதகாகிருதகம் என்று மூன்று வகைப்பட்ட உலகமுமாம்: கிருதகம் - (பிரமனது தினப்பிரளயத்தில் அழிவதனால் மீண்டும் புதிதாகச்) செய்யப்பட்டது; பூமி, பாதாளம் முதலியன. அகிருதகம் - (அவ்வாறு அழியாமலிருத்தலால் மீண்டும்) செய்யப்படாதது; தபோலோக சத்தியலோகங்கள். கிருதகாகிருதகம் - (பாதியழிந்தும் பாதியழியாமலுமிருத்தலால்) செய்யப்பட்டதும் செய்யப்படாததுமாயிருப்பது; சுவர்க்கம் முதலியன. முருகன் - முருகையுடையவன்; முருகு - இளமை, தெய்வத்தன்மை, அழகு. எம்மையே - ஏகாரம் இழிவுசிறப்போடு பிரிநிலை. தம்மையே - உயர்வுசிறப்பு.

உம்மையே - உயர்வுசிறப்போடு, பிரிநிலை, அரோ - இங்குத் தேற்றம். சராசரம் = சர + அசரம்: இயங்குதிணைப்பொருளும், நிலைத்திணைப் பொருளும்: ஜங்கம ஸ்தாவரங்கள். புகல் - புகுதல்; சரணமாக அடைதல். பி - ம்:—[1]காத்தி ரென்றற்கு. [2]அரிதரோ. [3]சமைத்த, சார்பின். [4]முருகச்செவ்வி. (70)

28.—அநுமான் 'நும்மை யாரெனத் தெரிவிப்பது?' என வினவ, இலக்குமணன் கூறத்தொடங்குதல்.

யாரென [1]விளம்பு கேனெ [2]னெங்குலத் தலைவற் கும்மை
வீரநீர் பணித்தி ரென்றான் மெய்ம்மையின் வேலி போல்வான்
வார்கழ லிளைய [3]மைந்தன் மரபுளி வாய்மை யாதும்
[4]சோர்வில னிலைமை யெல்லாந் [5]தெரிவுறச் சொல்ல லுற்றான்.

(இ - ள்.) 'வீர - வீரனே!—எம் குலம் தலைவற்கு - எங்கள் கூட்டத்துக்குத் தலைவனாகிய சுக்கிரீவனுக்கு, நான்—, உம்மை—யார் என விளம்புகேன் - யாவரென்று சொல்லுவேன்? நீர் பணித்திர் - நீங்கள் சொல்லுங்கள்,' என்றான் - என்றுகேட்டான், மெய்ம்மையின் வேலி போல்வான் - சத்தியமாகிய பயிர் அழியாமைக்குப் போகட்ட வேலி போல்பவனான அநுமான்; (உடனே), வார் கழல் இளைய மைந்தன் - நீண்ட கழலையுடைய லக்ஷ்மணன்,—மரபு உளி - (சொல்லவேண்டிய) முறைமையை ஆலோசித்து, வாய்மை யாதுஉம் சோர்விலன் - மெய்ம்மையினின்றும் சிறிதும் தளராதவனாகி, நிலைமை எல்லாம் - (தங்கள்) நிலைமைகளையெல்லாம், தெளிவுற - நன்றாய் விளங்க, சொல்லல் உற்றான் - சொல்லத்தொடங்கினான்; (எ - று.)—அதனை, மேல் நான்குகவிகளாற் கூறுகின்றார்.

'நீங்கள் யார்?' என்னாமல் அனுமான் வினவிய வகை மிகநாகரிகமாகவுள்ளமை காண்க. மெய்ம்மையின் வேலிபோல்வான் - மெய்ம்மை தன்னைவிட்டுக் கடவாதிருக்கப்பெற்றவன்; எப்போதும் உண்மையையே பேசுபவனென்றபடி. கழல் - வீரர்கள் தமது வீரத்தன்மைக்கு அறிகுறியாகக் காலிலணிந்துகொள்ளும் ஒருவகை ஆபரணம். விளம்புகேன், ககரவொற்றிடைநிலை - எதிர்காலங் காட்டிற்று. வீர நீர் பணித்திர் - ஒருமைப்பன்மைமயக்கம்; வீரத்தன்மையையுடைய நீரென்றுமாம். 'வீரர்' என்று பாடங் கொள்ளுதல் நேர். உளி - உள்ளி என்பதன் தொகுத்தல்: இறந்தகாலவினையெச்சம்: இனி, மரபுளி - முறையினால் என்றுங் கொள்ளலாம்: முறைப்படி யென்றவாறு. 'உளி' என்பது - மூன்றாம்வேற்றுமைப் பொருள்படுவதோர் இடைச்சொல்; ஏழனுருபுமூன்றனுருபின் பொருளில்வந்த தெனினுமாம். பி - ம்:—[1]இயம்புகேனென். [2]என்குலத்திறைவற்கும்மை. [3]வீரன் மரபுளிவாய்மையாதும், மைந்த மற்றநம்மரபியாவுஞ். [4]சோர்விலாதுரையென்றையன், சோர்விலா நிலைமையெல்லாம். [5]தெளிவுற, சொல்லலுஞ். (71)

29.—இதுமுதல் மூன்று கவிகள் - இலக்குமணன் கூறிய விடை.

சூரியன் மரபிற் [1]றேன்றிச் [2]சுடர்நெடு நேமி யாண்ட
ஆரிய[3]னமரர்க் காக வசுரரை யாவி யுண்ட
வீரியன் வேள்வி [4]முற்றி விண்ணுல கோடு மாண்ட
[5]காரியன் கருணை [6]யன்ன [7]கண்ணனக் கவிகை மன்னன்.

நான்கு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) அ கவிகை மன்னன் - அவ்வெண்கொற்றக்குடையை யுடைய அரசன், சூரியன் மரபில் தோன்றி-சூரியவமிசத்திற் பிறந்து, சுடர் நெடு நேமி ஆண்ட - விளங்குகின்ற பெரிய ஆஜ்ஞாசக்கரத்தை (உலக முழுவதுஞ்செலுத்தி) அரசாட்சிசெய்த, ஆரியன் - மேம்பட்டவன்; அமரர்க்கு ஆக - தேவர்களின் பொருட்டு, அசுரரை - (சம்பரன் முதலிய) அசுரர்களை, ஆவி உண்ட - உயிர் குடித்த [கொன்ற], வீரியன் - பராக்கிரமமுடையவன்; வேள்வி முற்றி - யாகங்களைச் செய்து முடித்து, விண் உலகோடும் ஆண்ட-தேவலோகத்தையும் அரசாண்ட, காரியன் - செயலுடையவன்; கருணை அன்ன - அருளே வடிவமெடுத்தாற்போன்ற, கண்ணன் - கண்ணோட்ட முடையவன்; (எ-று.)

தம்மைத் தசரதபுத்திரரென்று சொல்லவேண்டி, முதலிரண்டு பாடல்களால் தசரதசக்கரவர்த்தியைச் சிறப்பாகக்கூறுகிறான். விண்ணுலகோடும் ஆண்ட காரிய னென்றது - இந்திரன் முதலிய தேவர்கட்குப் பகைவர்களாகிய சம்பரன் முதலிய அசுரர்களைத் தேவர்களுடைய வேண்டுகோளினாற் போர்செய்து நாசப்படுத்தி அவராற் கைக்கொள்ளப்பட்ட தேவலோக சாமிராச்சியத்தை இந்திரனுக்குக் கொடுத்து அருள்செய்ததனால்; இதனை "இன்றளிர்க்கற்பகநறுந்தேனிடை துளிக்கு நிழலிருக்கை யிழந்து போந்து, நின்றளிக்கும் தனிக்குடைக்கீழதினொதுங்கிக்குறையிரந்து நிற்பநோக்கிக், குன்றளிக்கும் குலமணித்தோட்சம்பரனைக் குலத்தோடுந் தொலைத்து நீகொண்டு, அன்றளித்த வரசன்றோ புரந்தரனின்றுள்கின்ற தரசு" என விசுவாமித்திரர் கூறியவாற்றாலும் அறிக: அன்றியும், தசரதசக்கரவர்த்தி இந்திரனோடொப்ப அவனது அர்த்தாசனத்தில் வீற்றிருந்தனரெனப் பிறவிடத்துக் கூறியவாற்றாலுமாம். செய்யுளாதலின், முதலில் 'அக்கவிகை மன்னன்' எனச் சுட்டினார். ஆஜ்ஞையைச் சக்கரமென்றும் குடை யென்றுஞ் சொல்வது வழக்கம். ஆரியன் என்பதற்கு - பூஜிக்கத்தக்கவனென்றும், அஸுரர் என்பதற்கு - பகைவருயிரைக்கவர்பவரென்றும், தேவர்க்கு மாறானவரென்றும்பொருள். கவிகை - கவிந்திருப்பது; காரணப்பெயர். பி - ம்:—[1]தோன்றல், தோன்றும். [2]தொல்லுலகாண்டமேலோன். [3]அமரர்க்காகி. [4]செய்து, வென்று. [5]காரியல். [6]போல்வான். [7]கண்ணகன்கவிகை. சில பிரதிகளில் 'வீரியன் வேள்வியென்னும் வேலையின் வேலைகண்ட' என்று இரண்டாமடியும், 'காரியன் மதியோன்றுற்ற தண்ணெனும் கவிகை மன்னன்' என்று நான்காமடியும் காணப்படுகின்றன. (72)

30. புயல்தரு மதத்திண் கோட்டுப் புகர்மலைக் கிறையை யூர்ந்து
மயல்தரு மவுணர் [1]யாரு [2]மடிதர வடிவிற் கொண்ட
இயல்தரும் புலமைச் செங்கோன் மனுமுத லெவரு மொவ்வாத்
தயரதன் [3]கனக மாடத் தடமதி லயோத்தி வேந்தன்.

ப்

(இ - ள்.) (அவன்), - புயல் தரும் மதம்-மேகம்போன்ற மதநீர் பெருக்கையும், திண்கோடு - வலிய தந்தங்களையும், புகர் - (முகத்திற்) செம்புள்ளிகளையுமுடைய, மலைக்கு - மலைகள்போன்ற யானைகளுக்கு, இறையை - தலைவனாகிய பட்டத்து அரசயானையை, ஊர்ந்து - ஏறிநடத்தி, மயல் தரும் அவுணர்யாரும் மடிதர வரிவில் கொண்ட - மதிமயக்கங் கொண்ட அசுரர்களெல்லாம் அழிந்து போம்படி கட்டமைந்த வில்லையேந்திப் போர்செய்த, இயல் தரும் புலமை செங்கோல் - இயல்பாகப் பொருந்திய நல்லறிவையும் நீதி தவறாத அரசாட்சியையுமுடைய, மனு முதல் - வைவசுவதமனு முதலான, எவரும் - எந்த அரசர்களும், ஒவ்வா - ஒப்பாகமாட்டாத, தயரதன் - தசரதனென்னும் பேருள்ளவன்; கனகம் மாடம் - பொன்மயமான மாளிகைகளையும், தட மதில் - பெரிய மதிலையுமுடைய, அயோத்தி - அயோத்தியாநகரத்துக்கு, வேந்தன் - அரசன்; (எ - று.)

முதலென்றதனாற் குறிக்கப்பட்டவர் மாந்தாதா, ககுத்ஸ்தன், சகரன், பகீரதன் முதலியவர். தயரதன் - தசரதன்; இது தச ரத எனப் பிரிந்து, பத்துத்திக்குக்களிலுஞ் செல்லவல்ல தேருடையவனென்று பொருள்படும்; எங்குந் தடையின்றிச் செல்ல வல்லவனென்றதாயிற்று. இது இந்திரனைச் சிறையிட்ட சம்பராசுரனை வதைத்தற்பொருட்டு அவன் சென்ற இடமெல்லாஞ் சென்றமையால் விளங்கியது. 'புயல்தரு' என்பதை மலையோடு இயைத்து, மேகவுவமையைக் கருமை நிறத்துக்காகவுங் கொள்ளலாம். புயல்தரு, தரு - உவமவுருபு. 'புகர்மலை' எனவே, யானையென விளங்கிற்று; புகர்மலைக்கிறை - தேவேந்திரனது ஐராவதமாகவுமாம். அயோத்தி - அயோத்யா என்னும் வடசொல்லின் விகாரம்: சண்டையிடுதற்குக் கூடாததென்பது பொருள்; அகழி மதில் ஆயுதம் சேனை முதலியவற்றால் மிக்க காவலுடையதென்பது கருத்து: இதனால், அந்நகரத்தை ஆண்ட சக்கரவர்த்திகளின் ஒப்புயர்வில்லாத வீரத்தன்மை தொனிக்கும். பி - ம்— [1]எவரும். [2]மடியக்கை. [3]சந்தமாடத். (73

31. அன்னவன் [1]சிறுவ னாமிவ் வாண்டகை [2]யன்னை யேவத்
தன்னுடை யுரிமைச் செல்வந் தம்பிக்குத் தகவி னல்கி
நன்னெடுங் கானஞ்சேர்ந்தா னுமமு மிராம னென்பான்
[3]இந்நெடுஞ் சிலைவ லானுக் கேவல்செய் யடியன் யானே.

(இ-ள்.) அன்னவன் சிறுவன் ஆம்-அச்சக்கரவர்த்திக்குத் திருமகனாகிய, இ ஆண்தகை - ஆண்மைக்குணமுள்ள இவன், அன்னை

ஏவ - (தனது சிறிய) தாயாகிய கைகேயி கட்டளையிட்டதனால், தன்னுடை உரிமை செல்வம் - (மூத்தகுமாரனாதலால்) தனக்கே யுரியதாகிய அரசாட்சிச் செல்வத்தை, தம்பிக்கு - (தனது) தம்பி (யும் அவள்பிள்ளையும்) ஆகிய பரதனுக்கு, தகவின் நல்கி - தக்க அன்போடு கொடுத்து, நல் நெடுங் கானம் சேர்ந்தான் - நல்ல பெரிய வனத்தை அடைந்தான்: நாமமும் இராமன் என்பான் - திருநாமமும் இராமனென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன்; இ நெடுஞ் சிலை வலானுக்கு - நீண்ட வில்லில் வல்ல இம் மகாவீரனுக்கு, ஏவல் செய் - குற்றேவல்தொழில் செய்கின்ற, அடியன் - தொண்டனாவேன், யான்—;(எ - று.)

இம்மூன்று பாடல்களாலும் - மகாபல பராக்கிரமசாலியான தசரதசக்கரவர்த்தியினது மூத்தகுமாரனாய்த் திருவவதரித்து இராமனெனப் பெயர்பூண்ட இவன் தாய்சொல்லைத் தட்டாது தனது இராச்சியத்தைத் தம்பிக்குக் கொடுத்துவிட்டு இங்கு வந்துள்ளான் எனத் தமையனையும், அவனது அடியவன் யானெனத் தன்னையும் இளையபெருமாள் உணர்த்தினனாயிற்று. புருஷோத்தமனென்பான், 'ஆண்டகை' என்றான். சீதாகல்யாணத்தின் பிறகு தசரதசக்கரவர்த்தி இராமபிரானுக்குப் பட்டாபிஷேகஞ் செய்ய யத்தனிக்கையில், மந்தரைசூழ்ச்சியால் மனங்கலக்கப்பட்ட கைகேயி, தன்கொழுநரான தசரதரை நோக்கி, முன்பு அவர் தனக்குக் கொடுத்திருந்த இரண்டு வரங்களுக்கும் பயனாகத் தன் மகனான பரதனுக்குப் பட்டங்கட்டவும் கௌசல்யைமகனான இராமனைப் பதினான்கு வருடம் வனஞ் செலுத்தவும் வேண்டுமென்று சொல்லி வற்புறுத்த, அதுகேட்டு வருந்தின தசரதர் சத்தியவாதியாதலால் முன்பு அவட்கு வரங்கொடுத்திருந்த சொல்லைத் தவறமாட்டாமலும், இராமன்பக்கல் தமக்கு உள்ள மிக்க அன்பினால் அவ்வரத்தை நிறைவேற்றுமாறு அவனை வனத்துக்குச் செல்லச் சொல்லவும் மாட்டாமலும் கலங்கி வாய்திறவாதிருக்கிற சமயத்தில், கைகேயி இராமனை வரவழைத்து 'பிள்ளாய்! உங்கள் தந்தை பரதனுக்கு நாடு கொடுத்துப் பதினான்கு வருடம் உன்னைக் காடேறப்போகச்சொல்லுகின்றார்' என்று சொல்ல, அச்சொல்லைத் தலைமேற்கொண்டு, அந்தமாற்றாந்தாயின் வார்த்தையையும் அவட்குத் தனது தந்தைகொடுத்திருந்தவரங்களையும் தவறாது நிறைவேற்றி மாத்ருபித்ருவாக்கிய பரிபாலனஞ் செய்தலினிமித்தம் இராமபிரான் வனஞ் சென்றனனாதலால், 'அன்னையேவ' எனப்பட்டது, "பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ" என்று சொல்லிச் சிறிதும் வெறுப்பில்லாமற் களிப்போடு கொடுத்தமை தோன்ற 'தகவினல்கி' என்றும், பெருமாள் எழுந்தருளிய இடமே எல்லா நாடுகளினும் மேம்பட்டதென்று தான் நினைத்தமை தோன்றக் கானகத்துக்கு 'நல்நெடு' என்ற அடைமொழிகொடுத்துங் கூறினான். இனி, கானகத்துக்குநன்மை - அருந்தவம் செய்த பெருமுனிவர்களிருத்த லாகவுமாம். 'சிலை வலானுக்குத் தம்பி' என்னாமல் 'அடியன்' என்றது, "பின்னும் பகர்வாள் மகனே இவன்பின் செல்தம்பி, என்னும்படியன் றடியா

ரினிலேவல்செய்தி" என்று தனது தாய் கட்டளையிட்டபடியே தமையனருக்குப் பலவகைப் பணிவிடைகளையுஞ் செய்தலையே தனக்குப் பெரும்பேறாகக்கொண்டவனாதலாலென்க. ஆண்டகை - ஆண்மையாகிய தகுதியையுடையவனெனப் பண்புத்தொகையன்மொழி: ஆண்களிலே தகுதியுடையவனெனவுமாம். பி - ம்:—[1]சிறுவனால். [2]அனையன். [3]இந்நெடுஞ் சிலையனானுக்கு, 'தன்னொடும்பிறந்திங்கே வல்தலைக்கொளுமடியன்யானும்' என்றும், 'தன்னொடும் பிறந்திங்கே வல் செய்திடும் அடியன் யானும்' என்றும் நான்காம் அடி சிற்சில பிரதிகளில். (74)

32.—இலக்குமணன் வார்த்தையைக்கேட்ட அநுமான் இராமபிரானை வணங்குதல்.

என்றவன் தோற்ற மாதி யிராவண னிழைத்த மாயப்
புன்தொழி லிறுதி யாகப் புகுந்துள பொருள்க ளெல்லாம்
ஒன்றுமாண் டொழிவு றாம[1]லுணர்த்தின னுணர்த்தக் கேட்டு
நின்றவக் காலின் மைந்த[2]னெடிதுவந் தடியிற் றாழ்ந்தான்.

(இ - ள்.) என்று - இவ்வாறாக, அவன் தோற்றம் ஆதி - இராமபிரானது திருவவதாரம் முதல், இராவணன் இழைத்த மாயம் புல் தொழில் இறுதி ஆக - இராவணன் செய்த வஞ்சனையாகிய அற்பச் செய்கை [சீதையை அபகரித்துக் கொண்டு போனது] வரையிலும், புகுந்துஉள பொருள்கள் எல்லாம் - நடந்துள்ள செய்திகளையெல்லாம், ஒன்றுஉம் ஒழிவு உறாமல் ஆண்டு உணர்த்தினன் - சிறிதுந் தவறாமல் அப்பொழுது (இளையபெருமாள் அநுமானுக்குச்) சொன்னான்; உணர்த்த - (அவ்வாறு) சொல்ல, கேட்டு—, நின்ற - எதிரில் நின்ற, அ காலின் மைந்தன் - அந்தவாயுகுமாரன், நெடிது உவந்து - மிகவும் மகிழ்ச்சியடைந்து, அடியில் - (இராமபிரான்) திருவடிகளில், தாழ்ந்தான் - (ஸாஷ்டாங்கமாக) விழுந்து தண்டனிட்டான்; (எ - று.)

இலக்குமணன் கூறியதைக் கேட்கவே, இராமபிரானது சிறந்த குணம் விளங்கியதனால், அப்பிரானை மஹானென்று கொண்டு அநுமான் அவனது திருவடியில் வணங்கினனென்க. அடியில் - ராமலக்ஷ்மணரது திருவடிகளிலென்றுமாம்; இராமலக்ஷ்மணர்களைச் சார்ந்ததும், பிக்ஷுவடிவங் கொண்டு நின்ற அநுமான் வணங்கினனென முதனூலிற் கூறியுள்ளது. இராவணன - ராவணன்: (பிறரை வருத்துதலாலே உலகமுழுவதையுங்) கூச்சலிடும்படி செய்பவன்; அன்றி, (தான் கைலாசாதிகளை எடுத்து நெருக்குண்டு) கூப்பிடுபவன்; இதனால் தனக்கும் பிறர்க்கும் நன்மையறியாத கொடுந்தன்மையுடையவனென்றபடி: இனி, இச்சொல்லுக்கு - விச்சிரவமுனிவரது குமாரனெனப் பொருள் கூறுதலு முண்டு. பி - ம்:—[1]உணர்த்தினது. [2]நெடியவனடியில்வீழ்ந்தான். (75)

33.—இராமனுக்கும் அநுமானுக்கும் சம்பாஷணை.

தாழ்தலுந் தகாத செய்த தென்னை நீ தரும மன்றால்
[1]கேள்விநூன் மறைவல் லாளா [2]வென்றன னென்னக் கேட்ட
பாழியந் தடந்தோள் [3]வென்றி மாருதி பதுமச் செங்கண்
ஆழியா [4]யடியேன் றானு மரிக்குலத் தொருவ னென்றான்.

(இ - ள்.) தாழ்தலும் - (அநுமான்) வணங்கினவளவில்,—(இராமன் அவனை நோக்கி),—'கேள்வி நூல் மறை வல்லாளா - நூற்கேள்விகளையுடைய வேதங்களில் வல்ல பிராமணப் பிரமசாரியே! நீ—, தகாத செய்தது - தகுதியல்லாதகாரியத்தைச்செய்தது [என்னைவணங்கினது], என்னை - என்ன காரணத்தால்? தருமம் அன்று ஆல் - (பிராமணன் க்ஷத்திரியனை நமஸ்கரிப்பது) தருமமல்லவே,' என்றனன் - என்று அருளிச்செய்தான்; என்ன - என்று அருளிச்செய்ய, கேட்ட - (அதனைச்) செவியுற்ற, பாழி அம் தட தோள் வென்றி மாருதி - வலிமையுள்ள அழகிய பெரியதோள் வெற்றியையுடைய அநுமான், 'பதுமம் செம் கண் ஆழியாய் - செந்தாமரை மலர்போலுந் திருக்கண்களையும் ஆஜ்ஞாசக்கரத்தையுமுடையவனே! அடியேன் தான் உம் - அடியேனும், அரிகுலத்து ஒருவன் - குரங்குச்சாதியில் தோன்றிய ஒருத்தன்,' என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

'பிராமண பிரமசாரியாகிய நீ க்ஷத்திரியனாகிய என்னைவணங்குதல் தகாதே' என்று இராமபிரான் சொல்ல, அநுமான் அஃறிணைப்பொருளிற் சேர்ந்த யான் உயர்திணையாகிய நும்மை வணங்குதல் குற்றமன்றாமென மறுமொழி கூறினனென்பதாம்.

கேள்வியாவது - கேட்டற்குரிய நூற்பொருளைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல்: கற்றவிடத்தே அதனாலாகிய அறிவைத் திடப்படுத்துதலாலும், கல்லாதவிடத்தும் அவ்வறிவை யுண்டாக்குதலாலும்' 'கேள்வி நூன்மறை வல்லாளா' என்க் கேள்வியை முற்கூறினான். "கற்றிலனாயினுங்கேட்க" என்றார், திருக்குறளிலும். மறை - சிலர்க்கு மறைக்கப்படுவது; அன்றி, மறைந்தபொருளுடையது. மறைவல்லாளனென்றது - பிராமணனையே குறிக்கும்; வேதங்களை ஓதுதல் ஓதுவித்தல் என்னும் இருதொழிற்கும் உரியவர் அவரேயாதலால். ஆழியாய் என்பதற்கு - சுதரிசனமென்னுஞ்சக்கரத்தையுடையவனே யென்றும்,பாற்கடலுட் பள்ளிகொள்பவனேயென்றும், பிரளயகாலத்திற் பெருங்கடலில் ஆலிலையிற் பள்ளிகொள்பவனே யென்றும் பொருளுரைத்து, அநுமான் மெய்ஞ்ஞானமுள்ளவனாதலால் இராமபிரானை விஷ்ணுவின அவதாரமென்று அறிந்தனனென்னலுமொன்று. கேள்வி - இன வெதுகை. பி - ம்:—[1]வாழிய மறைவலாளர், கேள்வி நூல்மறைவலாள. [2]என்றனர். [3]வீரம். [4]அடியனேனும். (76)

34.—அநுமான் பெரிய வாநரவுருக் கொள்ளுதல்.

மின்னுருக் கொண்ட வில்லோர் வியப்புற வேத நன்னூல்
பின்னுருக் கொண்டதென்னும் பெருமையாம் பொருளுந் தாழப்
பொன்னுருக் கொண்ட மேரு புயத்திற்கு முவமை போதாத்
தன்னுருக் கொண்டு நின்ருன் தருமத்தின் தனிமை தீர்ப்பான்.

(இ - ள்.) பின் - உடனே,—தருமத்தின் தனிமை தீர்ப்பான் - தருமத்தினது (கதியில்லாமல்) தனித்திருக்குந் தன்மையைப் போக்குபவனுகிய அவ்வநுமான்,—மின் உரு கொண்ட வில்லோர் வியப்பு உற - மின்னல்போன்ற விளக்கத்தைக்கொண்ட விற்களை யுடையவர்களான ராமலக்ஷ்மணர்கள் அதிசயமடையும்படியாகவும், வேதம் நல் நூல் பெருமை ஆம் உரு கொண்டது என்னும் பொருள்உம் தாழ - வேதங்களாலும் நல்ல சாஸ்திரங்களாலும் பெரிய ரூபத்தைக் கொண்டதென்று சொல்லப்படுகிற பெரும் பொருள்களும் (தனது உருவத்துக்கு முன்னே) சிறுமையுற்றுத் தோன்றும்படியாகவும்,—பொன் உரு கொண்ட மேரு - பொன் மயமானவடிவத்தைக்கொண்ட மகாமேரு பருவதம், புயத்திற்கும் (தனது) தோள்களுக்கும், உவமை போதா - ஒப்பாகமாட்டாதபடி, தன்உரு - தன்னுடைய (பெரிய நிஜ) ரூபத்தை, கொண்டு நின்ருன் - எடுத்துக்கொண்டு நின்ருன்; (எ - று.)

அப்போது தான் முற்கூறியபடி வானர வடிவத்தைக் கொண்டவனே யென்பதைக் காட்டுமாறும், தன்னிடத்தில் அவர்கட்கு மதிப்பு உண்டாகுமாறும், அநுமான் பெரியவானரவுருக்கொண்டு நின்றனனென்பதாம். எல்லாப் பொருள்களினும் பெரிய ரூபத்தைக் கொண்டா னென்பது, 'வேதநன்னூல் உருக்கொண்ட தென்னும் பெருமையாம் பொருளுந் தாழ' என்பதன் கருத்து. இராவணன முதலிய ராக்ஷசர்களால் நாசஞ்செய்யப்பட்டு அழிந்துபோம் நிலையிலிருந்ததான தருமத்தை அநுமான் இராமனுக்குத் துணையாக இருந்து அவர்களைச் சங்காரஞ்செய்து நிலைநிறுத்துவதனுல், 'தருமத்தின் தனிமை தீர்ப்பான்' என்ருர்; இனி, தருமத்தினது ஒப்பில்லாத தன்மையைத் தான்போக்குபவன்; அதாவது - வேறு உவமை பெருத தருமத்துக்குத் தான் உவமையாகச் சொல்லப்படுஞ் சிறப்புடையவ னென்றுமாம். (77)

35.—அநுமான் கொண்ட உருவத்தின் சிறப்பு.

கண்டில னுலக மூன்றுங் காலினுற் கடந்து கொண்ட
புண்டரி கக்க ணுழிப் புரவலன் [1]பொலங்கொள் [2]சோதிக்
குண்டல வதன மென்ருற் கூறலாந் தகைமைத் [3]தொன்ரு
பண்டைநூல் கதிரோன் சொல்லப் படித்தனன் படிவ[4]மம்மா.

(இ - ள்.) 'உலகம் மூன்றுஉம் - (சுவர்க்கம் மத்திமம் பாதாளம் என்னும்) மூன்று லோகங்களையும், காலினுல் - (தனது) திருவடிகளால், கடந்துகொண்ட - (திரிவிக்கிரமாவதாரத்தில்) அளந்து தன

தாக்கிக்கொண்ட, புண்டரிகம் கண் ஆழி புரவலன் - செந்தாமரை மலர் போலுங் கண்களையும் சக்கராயுதத்தையுமுடைய காத்தல் தொழிலில் வல்லவனாகிய (விஷ்ணுவினது அம்சமான)ஸ்ரீராமபிரான், பொலம் கொள் சோதி குண்டலம் வதனம் - பொன்னினாலாகிய பிரகாசத்தையுடைய குண்டலங்களை யணிந்த (அநுமானுடைய) முகத்தை, கண்டிலன் - காணமாட்டாமற் போயினன்,' என்றால்—, பண்டை நூல் கதிரோன் சொல்ல படித்தனன் - பழமையான சாஸ்திரங்களை [வியாகரணம் முதலியவற்றை]ச் சூரிய பகவான் கற்பிக்க (அவன்பக்கற்) படித்தவனான அநுமானது, படிவம் - பேருருவம், கூறல் ஆம் தகைமைத்து ஒன்றோ - (நம்மால்) எடுத்துச் சொல்லக் கூடியதொரு தன்மை யுடையதோ? [அன்று என்றபடி]; (எ - று.) —அம்மா - வியப்பிடைச்சொல்.

முன்பு திரிவிக்கிரமாவதாரஞ்செய்த திருமாலான இராமனே பேருருவெடுத்த அனுமானுடைய திருமுகத்தைக் காண்கிற்கிலனென்றால், அவனது அவ்வுருவத்தின் மகிமையை நாம் எவ்வாறு எடுத்துச்சொல்வது? எனக் கவிக்கூற்று; காலினாற் கடந்துகொண்ட கடவுளும் என்ற கருத்தைத் தருதலால், கருத்துடையடைமொழியணி. திரிவிக்கிரமன் ஸ்ரீராமன் என்ற இருவரும் திருமாலின் திருவவதாரமே யாதலால், இராமபிரானை, 'காலினாற் கடந்து கொண்ட புண்டரிகக்கண் ஆழிப் புரவலன்' என்றார். புரவலன் - காத்தல் தொழிலில் வல்லவன்: காக்குங்கடவுள்.

காலினாற்கடந்துகொண்ட கதை:—மகாபலிசக்கரவர்த்தி தன் வலிமையாற் சுவர்க்கமுட்பட மூவுலகங்களையும் தன்னுடையனவாக்கி ஆட்சிபுரிய, அரசிழந்த தேவர்களின் வேண்டுகோளினால் திருமால் காசியபமுனிவர்க்கு அதிதியினிடத்தில் வாமனனாகிய புதல்வனாய்த் தோன்றி, மாவலி யாகஞ்செய்கையில் அவன் பக்கல் சென்று 'மூவடி மண் தா' என்று வேண்டி, சுக்கிராசாரியன் தடுக்கவும் கேளாமல் அங்ஙனமே அவன் தரப் பெற்று, திரிவிக்கிரமனாய் வளர்ந்து, ஓரடியால் மண்ணையும் மற்றோரடியால் விண்ணையும் அளந்து, மூன்றாமடியை அவன் தலைமேல் வைத்து அவனைப் பாதலத்திலழுத்தினனென்பதாம். பி - ம்:—[1]புலன்கொள், பொலன்கொள். [2]சோதிகுண்டலவதனம். [3]அன்றால். [4]மன்னோ. (78)

36.—இராமன் அநுமானைக்குறித்து இலக்குமணனிடத்து வியந்து கூறுதல்.

தாட்படாக் கமல மன்ன தடங்கணான் தம்பிக் கம்மா
கீட்படா நின்ற [1]நீங்கிக் கிளர்படா தாகி யென்றும்
நாட்படா மறைக ளாலு நவைபடா ஞானத் தாலும்
கோட்படாப் பதமே யைய குரக்குருக் கொண்ட தென்றான்.

(இ - ள்.) தாள் படா கமலம் அன்ன தட கணான் - நாளத்தைவிட்டு நீங்காத செந்தாமரைமலர்போன்ற பெரியகண்களையுடையவனான இராமன், தம்பிக்கு - லக்ஷமணனுக்கு, 'ஐய -

தம்பி! அம்மா - ஆச்சரியம்! கீழ்படாநின்ற நீங்கி - கீழ்மைப்பட்டு நின்ற (ராஜச தாமச) குணங்கள் போகப்பெற்று [சுத்தசாத்துவிக குணமயமானதாய்], கிளர் படாது ஆகி - ஒளி அழியாததாய்,—என்றும் - எப்பொழுதும், நாள் படா மறைகளால்உம் நவை படா ஞானத்தால்உம் - நாட்செல்லாத வேதங்களாலும் குற்றம் [ஐயந்திரிபுகள்] இல்லாத தத்துவஞானத்தாலும், கோள்படா - அறியப்படாத, பதமே - மோட்சலோகமே, குரங்கு உரு கொண்டது - வாநரவடிவத்தை எடுத்து வந்ததாம்,' என்றான்-எனறு (அநுமான் கொண்ட வடிவத்தைப்பற்றி வியந்து) சொன்னான்; (எ - று.)

ஒளிமிகுதியாலும், பெருந்தோற்றத்தாலும், சத்துவகுணமே தலையெடுத்திருத்தலாலும், பரமபதமே குரங்கு வடிவங்கொண்டதாமென்று உத்ப்ரேக்ஷித்தார்; தன்மைத்தற்குறிப்பேற்றவணி; 'சிறுகாலையிலா நிலையோதிரியா, குறுகா நெடுகா குணம்வேறுபடா, உறுகால்கிளர்பூதமெலாமுகினும், மறுகாநெறி'' என்று கீழ் ஆரணிய காண்டத்தில் மோட்சலோகத்தின் தன்மையைக்கூறியது, இங்குக் கருதத்தக்கது. 'நாளத்தைவிட்டு நீங்காத கமலம்' என்றது - வாடாமைக்கும், மிக்கமென்மைக்கும், கண்ணுக்கினிய தோற்றத்துக்கும்; இனி, நாளத்தினின்று தோன்றாத கமலமென்று உரைத்து, இல்பொருளுவமையாகவுமாம். 'கீழ்படாநின்றநீக்கி' என்ற பாடத்திற்கு - தான் எல்லாவுலகங்களிலும், மேற்பட்டதாயென்றும் கருத்துக் கொள்ளலாம். 'என்றும் நாட்படா மறைகள்' என்றதற்கு - தோற்ற வழிவுக ளில்லாமல் அநாதியாய் நித்தியமான வேதங்களென்று கருத்த'. அந்தமிலின்பத்தழிவில் வீடு சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்தாதலால், 'மறைகளாலும் ஞானத்தாலுங கோட்படாப் பதம்' எனப்பட்டது. இனி, பதம் - பொருள் எனக் கொண்டு, கீழ்படா நின்ற நீக்கி - கீழ்மைப்பட்டுள்ளனவான குணங்களையொழித்து, கிளர் படாது ஆகி - விளங்கித் தோன்றுகின்ற நற்குணங்களை நீங்காததாகி, மறைகளாலும் ஞானத்தாலும் கொள்ள முடியாத பரம்பொருளே குரக்குருக்கொண்டுவந்துள்ளது என்றுமாம்: பரம்பொருளுக்கு ஆக்கல் அளித்தல் அழித்தல் என முத்தொழில்கள் என்று மூன்று வேதத்திற்கூறப்பட்டிருத்தலாலும், இந்தக்குரங்குக்கு அளித்தலொன்றே இருத்தலாலும், 'கீட்படா நின்ற நீக்கிக்கிளர்படாதாகிக் கோட்படாப்பதமே குரக்குரு' என்றாரென்ப. நின்ற - பெயர்.

அம்மா - வியப்பிடைச்சொல். கீழ் என்பதன் ஈற்று ழகரம், வருமொழி முதலில் வல்லினம்வந்து புணர்ந்தபோது டகரமாத் திரிந்தது: ''ஐம்மூன்றதாமுடல் வன்மை பின் வந்திடி லாறுடைந் தாம்'' என்னும் வீரசோழியவிதியைக் காண்க. இனி, ஈற்று ழகரத்துக்கு எதுகைநோக்கி ளகரம் போலியாய், அது டகரமாத் திரிந்ததெனினும் அமையும். இராமபிரான் தம்பியை 'ஐய' என்றது - அன்புபற்றிய மரபுவழுவமைதி. ஐய - அழகிய என்றுமாம். தம்பிக்கு என்றான் என இயையும். குரங்கு+உரு=குரக்குரு: வேற்றுமையில் மென்றொடர் வன்றொடராயிற்று. பி - ம்:—[1]நீக்கிக் கிளர்படாதாகி. நீக்கிக் கீழ்ப்படாதாகி, கீட்படா நின்ற நீத்தங் கிளர்படாதாகி

யென்றும், "...நீக்கிக்கீழ்ப்படாதாகியென்றும்,"... "நீத்தங்கிளப்படாதாகியென்றும்" என இங்ஙன்சிற்சில பிரதிகளில் இரண்டாமடி. (79)

37.—இராமன் அநுமானைப்பெற்றமைக்கு உவந்து சுக்கிரீவனைப் புனைந்துரைத்தல்.

[1] நல்லன நிமித்தம் பெற்றேம் நம்பியைப் பெற்றேம் நம்பால்
இல்லையே துன்ப மான [2] தின்பமு [3] மெய்திற் றின்னும்
வில்லினு [4] யிவனைப் போலாங் [5] கவிக்குலக் குரிசில் வீரன்
சொல்லினு லேவல் செய்வா னவனிலை சொல்லற் பாற்றோ.

இரண்டு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (பின்னும் இராமபிரான் சொல்வானாயினான்:—) நல்லன நிமித்தம் - (நாம் புறப்படும்போது மிகவும்) நல்லனவாகிய சகுனத்தை, பெற்றேம் - அடைந்தோம்; (அதனால்), நம்பியை பெற்றேம் - இம்மேம்பட்டவனை [அனுமானை]க் கிடைக்கப்பெற்றோம்; (இனி), நம்பால் - நம்மிடத்து, துன்பமானது - துன்பமென்பது, இல்லை ஏ - இல்லாததேயாம்; இன்பம்உம் - சுகமும், எய்திற்று - வந்ததேயாம்; இன்னும் - மேலும்,—வில்லினும்-வில்லையுடையவனே! இவனை போல் ஆம் வீரன் - இவனைப்போன்ற மகாவீரன், கவி குலம் குரிசில் சொல்லினால் - குரங்குக்கூட்டத்துக்குத் தலைவனாகிய சுக்கிரீவனது கட்டளையால், ஏவல் செய்வான் - குற்றேவல் தொழிலைச் செய்வான்; (என்றால்), அவன் நிலை - அச்சுக்கிரீவனது நிலைமை, சொல்லல் பாற்று ஓ - சொல்லத்தக்க தன்மையையுடையதோ? [அன்றென்றபடி]; (எ - று.)

கீழ் அநுமானைப் பரமபதத்துக்கு ஒப்பானவனெனக் கூறினதால், அதற்கு ஏற்ப, துன்பம் கலப்பில்லாத இன்பமே நமக்கு எய்திற்று என முன்னிரண்டடிகளிற் கூறுகின்றான். பின்னிரண்டடிகளால், காணப்பட்ட அநுமானைக்கொண்டு, காணப்படாத மகாராசரது திறமையை அநுமானபிரமாணத்தால் ஊகிக்கின்றனன் இராமபிரான். முன்னிரண்டடிகள் பின்னிரண்டடிகளைச்சமர்த்திப்பது - தொடர்நிலைச்செய்யுட்குறியணி. 'நல்லனநிமித்தம்பெற்றேம் நம்பியைப் பெற்றேம்' முதலியனவாகப் பன்மையாற் கூறியது - இலக்குமணனையும் உளப்படுத்தியதனாலென்க. இல்லையே, ஏகாரம் - தேற்றம். 'எய்திற்று' என இறந்தகாலமாகக் கூறியதும், அத்தேற்றம்பற்றியே. போல் - ஒப்பில்போலி. பி - ம்:—[1] நல்லவாம். [2] இன்பமே. [3] எய்திற்றேனும், எய்திற்றன்றே, எய்திற்றென்றான். [4] நின்னைப்போல, நின்னைப் போலாம், இவனைப்போல. [5] கவிகுலக்குரிசில். சில பிரதிகளில் முதலடி 'நல்லவா நிமித்தம்பெற்றேன் நம்பியைப்பெற்றேன் நம்பர்' என்று காண்கின்றது. (80)

38.—அநுமான் சுக்கிரீவனை யழைத்துவருமாறு இராமனிடத்து விடைபெற்றுச் செல்லுதல்.

என்றக [1] முவந்து கோல முகமலர்ந் [2] தினிதி னின்ற
[3] குன்றுறழ் தோளி னுரை [4] நோக்கியக் குரக்குச் சீயம்
சென்றவன் றன்னை யின்னே கொணர்கின்றேன் [5] சிறிதுபோழ்து
வென்றியி ரிருத்தி [6] ரென்று விடைபெற்று விரைவிற்போனான்.

(இ - ள்.) என்று - என்று சொல்லி, அகம் உவந்து - மனம் மகிழ்ந்து, (அதற்கு ஏற்ப), கோலம் முகம் மலர்ந்து - அழகிய முக மலர்ச்சி பெற்று, இனிதின் நின்ற - இனிதாக இருந்த, குன்று உறழ் தோளினரை நோக்கி - மலைகள் போன்ற திருத்தோள்களை யுடையவரான ராமலக்ஷ்மணர்களைப்பார்த்து,—அ குரங்கு சீயம் - வானரச் சிரேஷ்டனான அவ்வநுமான்,—'(யான்), சென்று - போய், அவன் தன்னை - அச்சுக்கிரீவனை, இன்னே - இப்பொழுதே, கொணர் கின்றேன் - அழைத்துக்கொண்டு வருகிறேன்; சிறிது போழ்து - சற்றுப் பொழுது, வென்றியீர் - வெற்றியையுடையீர்காள்! இருத்திர் - (இங்கே) இருங்கள்' என்று - என்று சொல்லி, விடை பெற்று - (அவர்களது) அநுமதியைப் பெற்றுக்கொண்டு, விரைவின் போனான் - சீக்கிரமாகச் சென்றான்; (எ - று.)

இராமலக்குமணரைச் சுக்கிரீவனுள்ளவிடத்துக்குத் தோள் களில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்றனன் அநுமானென முதனூலிற் கூறியுள்ளது. குரக்குச்சீயம் - வாநரஸிம்ஹம்: இங்கே 'சீயம்' என்றது - சிறப்புப்பொருள் குறித்துநின்றது. சீயம் - வட சொற்றிரிபு. வென்றியீர் - வென்றியரென்பதன் ஈற்றயல்திரிந்தவிளி. பி - ம்:—[1]மலர்ந்து. [2]இரங்கிநின்ற, இனிதுநின்ற, இளையநின்ற, இமையாநின்ற. [3]குன்றியல். [4]நோக்கியகுரக்குச்சீயம். [5]சிறிதுபோழ் தில். [6]என்னா. (81)

கடவுளினிடத்துத் தான் எப்போதும் அநுகூலனாயிருக்கவேண் டிய சேதனன் அவ்வாறு நில்லாமற் பராமுகனாயிருக்க, ஆசாரியன் அச்சேதனனைக் கடவுளினிடத்துச் சேர்க்குமாறு உபாயஞ்செய் வதை, இப்பகுதிக்கு உள்ளுறைபொருளாகக் கூறுவர்.

அனுமப்படலம் முற்றிற்று.

மூன்றாவது

நட்புக்கோட்படலம்

ஸ்ரீராமபிரானும் சுக்கிரீவனும் நட்புக்கொண்டதைக் கூறும் படலம் என்பது இத்தொடர்க்குப் பொருள். இப்படலத்துக்குப் பெயர் - நட்புப்படலம் என்றும், சுக்கிரீவன் நட்புப்படலம் என்றும் சிற்சில பிரதிகளிற் காணப்படுகின்றது.

1.—அநுமான் சுக்கிரீவனைச் சேர்தல்.

போனமந் தரமணிப் புயநெடும் புகழினான்
ஆனதன் [1]பொருசினத் தரசன்மா டணுகினான்
யானு[2]மென் குலமுமிவ் வுலகுமுய்ந் தனமெனா
மானவன் குணமெலா நினையு[3]மா மதியினான்.

(இ - ள்.) போன - (அவ்வாறு) சென்ற, மந்தரம் மணி புயம் நெடும் புகழினன் - மந்தரமலை போன்ற அழகிய தோள்களையும் மிக்க கீர்த்தியையுமுடையவனான அநுமான்,—மானவன் குணம் எலாம் நினையும் - மநுசக்கரவர்த்தியின் வமிசத்தில் திருவவதரித்தவனான ஸ்ரீராமனது திருக்கலியாணகுணங்களனைத்தையுமேநினைத்து நினைத்துப் பார்க்கின்ற, மா மதியினன் - பேரறிவையுடையவனாய்,— யானும்—, என்குலம்உம் - எனது இனமும் [குரங்குக்கூட்டமும்], இஉலகுஉம் - இந்த லோகமும், உய்ந்தனம் - பிழைத்தோம், என - என்று சொல்லிக்கொண்டே,—தன் ஆன - தனக்கு (எசமானனாக)ப் பொருந்திய, பொரு சினத்து அரசன்மாடு - போர்செய்தற்குஉரிய சீற்றத்தையுடைய சுக்கிரீவமகாராசனிடத்து, அணுகினான் - சமீபித்தான்; (எ - று.)

அநுமான் தான் சென்ற காரியஞ் செவ்வனே முற்றியதெனக் குறிப்பிக்குமாறு 'யானும் என் குலமும் இவ்வுலகும் உய்ந்தனம்' எனக் கூறிக்கொண்டே சுக்கிரீவனைக் குறுகினனென்க. மந்தரம் பாற்கடலைக் கலக்கியவாறுபோலத் தோள்கள் சேனைக்கடலைக் கலக்குமென்பார், மந்தரத்தை உவமை கூறினார். 'பொருசினத்தரசன்' என்றது - ராமலக்ஷ்மணர்களிடத்தே பகைவர்களென்று சங்கை கொண்டிருந்ததைக் குறிப்பதற்கு: அரசர்க்குச் சினம் இலக்கணமாகலின் இவ்வாறு கூறினானென்றலு மொன்று; "நச்சுநாகத்தினாழற் சீற்றத்தான்" எனச் சிந்தாமணியிற் கூறியது காண்க.

தான் முதலிற்சென்று அவர்களைச் சேர்ந்த பேற்றினால். 'யானும்' எனத் தன்னைத் தனியே முதலிற் கூறினான். மேல் வாலியைச் சங்காரஞ்செய்து சுக்கிரீவனுக்கு அரசளிக்குந்தன்மையைக் கருதியும், இவ்வாறே துஷ்டநிக்கிரகஞ்செய்து சிஷ்டபரிபாலனஞ் செய்கின்ற இயற்கையைக் கருதியும், 'என்குலமு மிவ்வுலகு முய்ந்தனம்' என்கிறான். 'என்குலம்' என்பதற்கு - யானொருவன் இவர்களையடைந்து வணங்கினமாத்திரத்தால், எனது தாதை மூதாதை முதலிய பரம்பரையாரெல்லாம் நற்கதிபெற்றனரெனப் பொருள் கொள்ளலுமாம். அறிவுபடைத்ததன் பயன் கடவுளின் குணங்களைச் சிந்தித்திருத்தலேயாதலாலும், அதற்கேற்ப வேதங்களாலும் முற்றும் அறியமுடியாத எம்பெருமானது குணங்களைச் சிந்தித்திருத்தல்பற்றியும் அநுமானுடைய அறிவை 'மாமதி' என்றார்.

அரசன் மாடு, மாடு - ஏழனுருபு. உய்ந்தனம் - முன்னிலை படர்க்கைகளை உளப்படுத்திய தன்மைப்பன்மைமுற்று; இறந்தகாலம், தெளிவுபற்றியது. என - செய்யாவென்னும் வாய்பாட்டு உடன்பாட்டு இறந்தகால வினையெச்சம். மானவன் - தத்திதாந்தநாமம்: மநு - சூரியனது புதல்வன்; அதனால், வைவசுவதமநுவென்றும் சொல்லப்படுவன். பி-ம்:—[1] அரிகுலத்தரசன். [2] உன், எம். [3] மாமகிழ்வினன்.

இதுமுதற் பதினாறுகவிகள் பெரும்பாலும் எல்லாச்சீர்களும் விளச்சீர்களாகிய அளவடிநான்கு கொண்ட கலிவிருத்தங்கள். (82)

2.—இராமபிரான் வந்துள்ளதை அநுமான் சுக்கிரீவனுக்குத் தெரிவித்தல்.

மேலவன் திருமகற் குரைசெய்தான் விரைசெய்தார்
வாலியென் றளவிலா வலியினு னுயிர்தெறக்
காலன்வந் தனனிடர்க் கடல்கடந் தனமெனு
ஆலமுண் டவனினின் றருநடம் புரிகுவான்.

(இ - ள்.) 'விரை செய் தார் - வாசனை வீசுகின்ற மலர்மாலையை யுடைய, வாலி என்ற - வாலி யென்று சிறப்பித்துப் பெயர் சொல்லப்படுகின்ற, அளவு இலா வலியினன் - அளவில்லாத பலத்தை யுடைய வாநரவீரனது, உயிர் - பிராணனை, தெற - அழித்தற்கு [உடம்பினின்று போக்கிக்கொல்லுதற்கு], காலன் - யமன், வந்தனன் - வந்தான்; (இனி நாம்), இடர் கடல் - துக்கசாகரத்தை, கடந்தனம் - தாண்டிக் கரையேறினோம்,' என - என்று, மேலவன் திரு மகற்கு - ஆகாயத்திற் செல்லுகின்றவனான சூரியனது சிறந்த குமாரனாகிய சுக்கிரீவனுக்கு, உரைசெய்தான் - சொல்லினவனாய்,— (அநுமான்),—ஆலம் உண்டவனின் - ஹாலாஹல விஷத்தை யுண்டவனான உருத்திரமூர்த்திபோல, நின்று அரு நடம் புரிகுவான் - அரிய நடனத்தைச்செய்து நிற்பானாயினான் [ஆனந்தக்கூத்தாடினான்]; (எ - று.)

அநுமான் 'நீ முன் ஐயுற்றவாறு வாலியைச்சேர்ந்த நமது பகைஞனல்லன்: அவ்வாலியையே வெல்லுமாறு மிக்கபலம் பெற்ற மகாவீரனாவன் இவன்' எனக் கூறி அவனது மனக்கவலையைமாற்றி மகிழச்செய்து, தானும் ஆனந்தக் கூத்தாடினனென்பதாம். அடிக்கடி சுக்கிரீவன் முதலானாரோடு போர்செய்தற்குத் தும்பைப்பூமாலை சூடி வருதலால் அவனை 'விரைசெய்தார்வாலி' என்றும், தன்னோடு எதிர்த்தார்வலியிலே பாதி தன் வலியோடு கூடுமாறு அவன் வரம் பெற்றிருப்பதனால், 'அளவிலாவலியினன்' என்றுங் கூறினான். வாலி பிறந்தபொழுது அவனுக்கு இந்திரன் தன் கழுத்திலிருந்த பொன் மாலையைக் கொடுத்து 'எந்தவீரன் உன்னை எதிர்த்தாலும் எதிர்த்தவனுடைய பலத்திற் பாதி உனக்கு வரும்; அதனால் நீ எவர்க்கும் வெல்லக்கூடாதவனாய் விளங்கக்கடவாய்' என்று வரமளித்துச் சென்றனனென்று அறிக. "வாலியென்றுளான் வரம்பிலாற்றலான்" என மேல் வருவதுங் காண்க. உரைசெய்தான் விரைசெய்தார் - பிராசம். 'என்றளவிலா' என்றவிடத்துப் பெயரெச்சவீற்று அகரம், தொகுத்தல். (83)

3.—இதுமுதல் மூன்றுகவிகளால், அநுமான் இராமலட்சுமணரது தன்மையை எடுத்துக் கூறுகின்றான்.

மண்ணுளார் விண்ணுளார் மாறுளார் வேறுளார்
எண்ணுளா [1]ரியலுளா [2]ரிசையுளார் திசையுளார்
கண்ணுளா ராயினர் பகையுளார் கழிநெடும்
[3]புண்ணுளா ராருயிர்க் கமிழ்தமே போலுளார்.

இதுமுதல் பதின்மூன்றுகவிகள் - ஒருதொடர்: அநுமான் கூறுவன:—

(இ - ள்.) (அவ்வீரர்கள்),—மண் உளார் - இந்நிலவுலகத்திலுள்ளவர்களும், விண் உளார் - சுவர்க்கலோகத்திலுள்ளவர்களும், மாறு உளார் - (இவற்றிற்கு) மாறுகிய பாதாளலோகத்திலுள்ளவர்களும், வேறு உளார் - மற்றை லோகங்களிலுள்ளவர்களும், திசை உளார் - எட்டுத்திக்கிலு முள்ளவர்களும் ஆகிய இவர்களுடைய, எண் உளார் - மனத்திலேயுள்ளவர்களும், இயல் உளார் - செயலிலே உள்ளவர்களும், இசை உளார் - சொல்லிலேயுள்ளவர்களும், கண் உளார் - கண்ணாக வுள்ளவர்களும், ஆயினர் - ஆனவர்கள்; பகை உளார் - பகைவர்களை யுடையவர்களும், கழி நெடும் புண் உளார் - (அப்பகைவர்களாற் செய்யப்பட்ட) மிகவும் அதிகமான விரணங்களை யுடையவர்களுமாய்(த் தம்மை யடைந்தவர்களது), அரு உயிர்க்கு - அருமையான பிராணனுக்கு, அமிழ்தமே போல் உளார் - (பகைவரை யழித்து மரணத்தைப்போக்கி இன்பத்தைத் தருதலால்) தேவாமிருதத்தையே ஒத்திருப்பவர்கள்; (எ - று.)

எம்பெருமான் அந்தர்யாமியாய் எங்குமுள னாதலால், அக்கடவுளினவதாரமான இவர்களை, 'மண்ணுளார் விண்ணுளார் மாறுளார் வேறுளார் திசையுளாரது எண்ணுளாரியலுளா ரிசையுளாராயினர்' என்றான். மண்ணுளார் முதலோரது கண்ணுளார் - "கண்ணவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு" என்றார் ஆழ்வாரும். பகையைப் போக்கி இனிமையைத்தரும் இவர்கட்கு, மரணத்தைப்போக்கி உடலுக்கு வலிமையைத் தரும் அமிழ்தை உவமை கூறினர். "அச்சமுற்றடைந்தார்க் கமிர் தன்னவன்" என்றார், சிந்தாமணியாரும். முதலடியில் பிராஸமும், தொடைமுரணுங் காண்க. கழி - மிகுதிப்பொருள் குறிப்பதோர் உரிச்சொல். 'அவ்வீரர்கள்' எனத் தோன்றாவெழுவாய் வருவிக்கப்பட்டது; மேலிரண்டு செய்யுட்கும் இங்ஙனமே காண்க. பி - ம்:—[1] ஆரவர்க்கு, எவரவர்க்கு, திசையுளார், உளரவர்க்கு. [2] இயலுநல்லிசை யுளார், இயலுளாரிசையுளார், இயலுநல்விசையுளார், இயைபுளாரிசையுளார். [3] புண்ணுளாராயினர், புண்ணுளாராயினர்க்கு. (84)

4. [1] சூழிமால் யானையார் [2] தொழுகழற் றயரதன்
[3] பாழியா லுலகெலா மொருவழிப் படர [4] வாழ்
ஆழியான் மைந்தர்பே [5] ரறிவின ரழகினர்
[6] ஊழியா லெளிதினிற் கரசுதந் [7] துதவுவார்.

(இ - ள்.) உலகு எலாம் - எல்லாவுலகங்களும், பாழியால் ஒரு வழி படர - (தனது) வலிமையால் ஒருகுடைக்கீழ் அமைந்து வாழும்படி, வாழ் - (சிறப்புப்பெற்று) வாழ்கின்ற, ஆழியான் - ஆஜ்ஞாசக்கரமுடையவனும், சூழி மால் யானையார் தொழு கழல் - முகபடாத்தையணிந்த மதயானைச்சேனையையுடையவர்களான அரசர்களெல்லாரும் வணங்குகின்ற பாதங்களையுடையவனுமாகிய, தயரதன் - தசரதசக்கரவர்த்தியினது, மைந்தர் - திருக்

குமாரர்கள்; பேர் அறிவினர் - மகாபுத்திமான்கள்; அழகினர் - கட்டழகுடையவர்கள்; நிற்கு - உனக்கு, ஊழியால் - முறைமையாக, எளிதில் - சுலபத்தில், அரசு - அரசாட்சியை, தந்து உதவுவார் - அளித்து உதவிசெய்வார்கள்; (எ - று.)

யானை - மற்றைத் தேர் குதிரை காலாட்சேனைகளுக்கும் உபலட்சணம். யானையை எடுத்துக்கூறியது, அது சதுரங்கசேனை யுள்ளும் சிறந்த தாதலால்; அதனை, "படைதனக்கியானை வனப்பாகும்", "யானையுடையபடை காண்டல் மிகவினிதே" என்னுஞ் சங்கச்செய்யுள்களாலும் உணர்க. இனி, யானைபோன்றவரென்றுமாம். தோள் வலிமையாற் சம்பராசுரன முதலியோரை வென்று தேவலோகத்தையும் உட்பட அரசாண்டதனால், 'உலகெலாமொருவழிப்பட' என்றான்; இத்தொடர்க்கு - உலகத்தவரெல்லாரும் ஒற்றுமைகொண்டு வாழ என உரைப்பாருமுளர். ஊழ் - ஊழியென ஈறுதிரிந்தது; "அரசனோடுடன் மாய்ந்த நல்லூழிச்செல்வம் போல்" என்ற நெய்தற்கலியிற்போல. 'ஊழியால்' என்றது, தமது நண்பனுக்கு நேர்ந்த துன்பத்தைத் தமக்குநேர்ந்ததாகக் கொள்ளும் உத்தமகுணமுடையவரென்பது தோன்றுதற்கு. [6]ஊழியார் என்ற பாடத்துக்கு - நற்குணமுடையவரென்று பொருள். மூவுலகங்களையுங் காக்கவல்ல மகாவீரரான அவர்க்கு வாலியைக் கொன்று உனக்கு அரசளிப்பது அரிய பெரிய காரியமன்று. நினைத்தமாத்திரத்தில் நிறைவேற்றக்கூடியதென்பது தோன்ற 'எளிதில் நிற்கு அரசுதந்துதவுவார்' என்றான்.

பி - ம்:—[1]சூழிமால் யானையான். [2]தொடு. [3]பாழியார். [4]ஆள். [5]அழகினரறிவினர். [6]ஊழியாயினிதுனக்கு, ஊழியாமாலுனக்கு, ஊழியாரினிதுநிற்கு, ஊழிவாழினியுனக்கு. [7]உதவினர். (85)

5. நீதியார் கருணையின் [1]னெறியினர் நெறிவயின்
பேதியா நிலைமையா ரெவரினும் பெருமையார்
போதியா தளவிலா வுணர்வினர் புகழினர்
காதிசேய் [2]தருகடற் [3]கடவுள்வெம் படையினர்.

(இ - ள்.) நீதியார் - மனுநீதியுடையவர்கள்; இன் கருணை நெறியினர் - இனியகிருபையின் தன்மையையுடையவர்கள்; நெறி வயின் - சன்மார்க்கத்தினின்று, பேதியா - மாறுபடாத, நிலைமையார் - உறுதிநிலைமையையுடையவர்; எவரின்உம் பெருமையார் - எல்லாரைக்காட்டிலும் அதிக மகிமையையுடையவர்கள்; போதியாது - (எவராலும்) கற்பிக்கப்படாமல் [இயல்பாகவே] யமைந்த, அளவு இலா உணர்வினர் - வரையறைப்படாத அறிவையுடையவர்கள்; புகழினர் - கீர்த்தியையுடையவர்கள்; காதி சேய் தரு - காதியென்னும் முனிவனது குமாரராகிய விசுவாமித்திர மகா முனிவரால் அநுக்கிரகிக்கப்பெற்ற, கடல் - கடல்போலப் பரந்த, கடவுள் வெம் படையினர்-தெய்வத்தன்மையையுடைய கொடிய அஸ்திர சஸ்திரங்களை யுடையவர்கள்; (எ - று.)

முன்னிரண்டடிகள் - 'நம்மிடத்திற்பழகியும் ஒருகால் வாலி வலியனென்று மாறுவரோ?' என்னும் ஐயத்தை யொழிக்க வந்தன. பின்னிரண்டடிகள் - சுக்கிரீவனுக்குப்பகைமாகியவாலியைச் சங்கரிக்கும்வல்லமையினர் அவர்களென்பதைக் காட்டும். இயற் கைப்பேரறிவுடைமை இறைவனது எண்குணங்களுளொன்றாத லால், இவரைக் கடவுளரென்று தெரிவிக்குமாறு, 'போதியா தளவிலாவுணர்வினர்' என்றான். "மறையினை டொழிவறுகலையும், தவண்மதிபுனை யரணிகர் முனி தரவே" என்றபடி வசிட்டமுனிவரிடத்து ஓதியிருக்கவும் இவர்களை இவ்வாறு கூறியது, (கிருஷ்ணன் ஸாந்தீபினியினிடத்திற் பயின்றதுபோல) அது ஒருவியாஜமே யாதலா லென்க.

ஈற்றடியிற்குறித்த வரலாறு;—ராமலக்ஷ்மணர்கள் இளமைப் பருவமுடையராயிருக்கும்பொழுது விசுவாமித்திரர் தாம்செய்யப் போகின்ற யாகத்தைக் கெடுக்கின்ற தாடகை சுபாகு முதலிய அரக்கர்களை யழித்து வேள்வியைக்காத்தற்பொருட்டுத் தசரத சக்கரவர்த்தியின் அநுமதிபெற்று, இவர்களை அழைத்துக் கொண்டுபோய்த் தாடகையைச் சங்காரஞ்செய்வித்தபொழுது, பற்பல அஸ்திரசஸ்திரங்களை அம்முனிவர் இவர்கட்குக்கொடுத் தருளினரென அறிக.

கருணையின்னெறியினர், னகரமெய் - விரித்தல். செம்மை யென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டு முன்நின்ற மகர மெய் யகர மாகத்திரிந்து 'சேய்' என நின்றது; இப்பண்புப்பெயர் ஆகுபெயராய், செம்மை நிறத்தினையுடைய முருகக்கடவுளை முதலில் உணர்த்தி, பின்பு குமாரனென்னும் வடமொழிபோல உவமவாகுபெயராய்ப் பலபராக்கிரமங்களில் அக்கடவுளைப் போன்ற மைந்தனை உணர்த்திற்று. நெறிவயின், வயின் - ஏழனுருபு; ஐந்தனுருபின் நீக்கப்பொருளில் வந்தது. பி - ம்:—[1] நிலைமையார். [2] தருநகக், தருதடக், தருநெடுங், தருங்கடல், தருதடம். [3] கடவுடம். சிலபிரதிகளில் 'காதியார்சேய்தருங் கடவுள்வெம்படையினர்' என்று, ஈற்றடி. சிலபிரதிகளில் இந்தச்செய்யுளையடுத்து "கரன்முதல்" (10), "உளைவயப்" (8), "நல்லுறுப்பமைய" (7) "வேலிகற் சினவு" (6) "தெவ்விராவணை" (9) என்ற முறையிற் செய்யுள்க ளுள்ளன. (86)

6.—இதுமுதல் ஏழுகவிகளால் இராமபிரானது சிறப்பை அநுமான் எடுத்து விவரிக்கின்றான்.

[1] வேலிகற் சினவுதா டகைவிளிந் துருளவிற்
[2] கோலியக் கொடுமையாள் [3] புதல்வனைக் கொன்றுதன்
காலியற் பொடியினெ னெடியகற் படிவமாம
ஆலிகைக் [4] கரியபே ருருவளித் தருளினான்.

(இ - ள்.) (அவர்களுள் மூத்தவன்),—வேல் - சூலாயுதத்தை(க் கையில்) ஏந்திய, இகல் - மாறுபாட்டையுடைய, சினவு - கோபித்து

வருகின்ற, தாடகை - தாடகையானவள், விளிந்து உருள - இறந்து விழும்படி, வில் கோலி - வில்லை வளைத்து, அ கொடுமையாள் புதல்வனை கொன்று - கொடுந்தன்மையுடையவளான அவளது புத்திரனாகிய சுபாகுவைக்கொன்று, தன் கால்இயல் பொடியினால் - தனது திருவடிகளிற் பொருந்திய தூளியினால், நெடிய கல் படிவம் ஆம் ஆலிகைக்கு - பெரிய கல்லின்வடிவமாய்க்கிடந்த அகலிகைக்கு, அரிய பேர் உரு-பெறுதற்கரிய சிறந்த நிஜரூபத்தை, அளித்து அருளினன்-கொடுத்து அருள்செய்தான்; (எ - று.)

"கல்லுறுப்பமையு நம்பியரின் முன்பவன்" என மேற்கவியில் வருவதையே இக்கவிக்கும் எழுவா யென்னலாம். முன்னிரண்டடிகளால் - இராமபிரானது மிக்க வலிமையும், பின்னிரண்டடிகளால் - அவனது கடவுள் தன்மையும் விளங்கும்.

தாடகை - மலைகளிற் சஞ்சரிப்பவள்; இவள் - சுகேதுவென்னும் யக்ஷனது மகள், சுந்த னென்பவனது மனைவி: ஆயிரம் யானைவலிமை கொண்டவள்: கணவன் அகஸ்தியரது கோபத்தீக்கு இலக்காய்ச் சாம்பரானதையறிந்த இவள் தன்புத்திரராகிய சுபாகுமாரீசர்களுடனே இம்முனிவரை எதிர்த்துச் சென்றபொழுது, அவரிட்ட சாபத்தால் மூவரும் அரக்கராயினர். இராமன் தாடகையைக் கொன்றது - விசுவாமித்திரருடனே அவராச்சிரமத்துக்குச் செல்லும் வழியிடையில்: சுபாகுவைக்கொன்றது, அம்முனிவரது யாகத்தைக் காக்குந் தருணத்தில்.

ஆலிகை - அஹல்யா என்னும் வடசொல்லின்விகாரம்; அச்சொல்லுக்கு - அழகில்லாமை யில்லாதவள் என்றுபொருள்; [ஹல்யம் - அழகின்மை:] மிக்க அழகுடையவ ளென்றுகருத்து, இவள் கௌதமமுனிவரது மனைவி: சதாநந்தமுனிவரது தாய்: கற்படிவமாம் அகலிகைக்கு அரியபேருருவளித்தவரலாறு:—கௌதமமுனிவரது பத்தினியாகிய அகலிகையின்மீது பலநாளாய்க் காதல் கொண்டிருந்த தேவேந்திரன் ஒருநாள் நள்ளிரவிலே பொழுது புலருங் காலத்துக் கோழிகூவுவதுபோலக் கௌதமராச்சிரமத்துக்கு அருகேவந்து கூவ, அதுகேட்ட முனிவர், 'சந்தியாகாலஞ் சமீபித்தது' எனக் கருதிக் காலைக்கடன் கழித்தற்பொருட்டு, நீர்நிலைநோக்கிச் செல்ல, அப்பொழுது இந்திரன் அம்முனிவருருக்கொண்டு அவளோடு கலக்க, பின்பு அதனை ஞானதிருஷ்டியினாலுணர்ந்த அம்முனிவர் இவளைக் கருங்கல்வடிவமாம்படி சபித்து உடனே அஞ்சி நடுங்கிப் பலவாறுவேண்டிக்கொண்டதற்கு இரங்கி 'இராமபிரானது திருவடிப்பொடிபடுங்காலத்து இக்கல்வடிவம் நீங்கிச் சுயவுருவம் அடைவாய்' என்று அனுக்கிரகிக்க, அவ்வாறே கல்லுருவாய்க்கிடந்த இவள் இராமபிரான் விசுவாமித்திரனோடு மிதிலைக்குச்செல்லும்போது அவனுடைய திருவடித்துகள் பட்டமாத்திரத்திற் சாபம் நீங்கி இயற்கையுருவமடைந்தன ளென்பதாம். பி - ம்:—[1]மேலிகற். [2]கோலியப்பெருமையாள், கோலியப்பேருளாள். [3]புதல்வரை. [4]அனைய. (87)

7. நல்லுறுப் பமையுநம் பியரின்முன் பவ[1]னயந்து
[2]எல்லுறுப் பரிய[3]பே ரெழுசுடர்க் கடவுள்தன்
பல்லிறுத் தவன்வலிக் கமை[4]தியம் பகமெனும்
வில்லிறுத் தருளினன் மிதிலைபுக்[5]கனையநாள்.

(இ - ள்.) நல் உறுப்பு அமையும் நம்பியரில் முன்பவன் - நல்ல அவயவ இலக்கணங்களெல்லாம் அமைந்த இவ்வாண்மக்களுள் முன்பிறந்தவனான இராமன்,—மிதிலை புக்க - மிதிலாபுரியையடைந்த, அனைய நாள் - அந்தக்காலத்தில் [சீதையைத் திருக்கலியாணஞ் செய்துகொள்ளுமுன்],—எல் உறுப்பு அரிய - இருளின் அடையாளமும் இல்லையாதற்குக்காரணமான, பேர் எழுசுடர் - மிக்குவிளங்குகின்ற கிரணங்களையுடைய, கடவுள்தன் - சூரியபகவானது, பல் - பற்களை, இறுத்தவன் - உதிர்த்தவனாகிய பரமசிவனது, வலிக்கு - வலிமைக்கு, அமை - ஏற்ற, தியம்பகம் எனும் வில் - திரியம்பகமென்னும் வில்லை, நயந்து - விரும்பி, இறுத்தருளினன் - ஒடித்தருளினன்; (எ-று.)

இச்செய்யுளால் - முதலாவ்வார் மூவரினும் மிக்கவன் இராமபிரானென்று குறிப்பித்தவாறாயிற்று. நல்லுறுப்பு - சாமுத்திரிக சாஸ்திரத்திற் சொல்லப்படுகின்ற சக்கரவர்த்தி குமாரர்களுக்கு ஏற்ற உத்தமலக்ஷணங்கள். 'சுடர்க்கடவுள்தன் பல்லிறுத்தவன்' என்றது - தன்னையவமதித்த தக்ஷமுனிவரது யாகத்தில் வீரபத்திரரூபியாய்ச்சென்று பூஷாவென்னுஞ் சூரியனது பற்களையுதிர்த்த பரமசிவனை. தியம்பகம் = திரியம்பகம்: த்ரைய்யம்பகம் என்பதன் சிதைவு; திரியம்பகன் என்பதற்கு - மூன்றுகண்களையுடையவனென்று பொருளாதலால், திரியம்பகமென்பது சிவசம்பந்தமானதென்று பொருள்படும். இச்சிவதனுசு, பரமசிவனால் ஜநகமகாராஜாவுக்குக் கொடுக்கப்பட்டு, அவனால் 'இவ்வில்லை யெடுத்து வளைத்தவர்க்குச் சீதாபிராட்டியைக் கலியாணஞ் செய்து கொடுப்பேன்' என்று கந்யாசுல்கமாக வைக்கப்பட்டது. விசுவாமித்திரன் தனது வேள்வி தடையின்றி முற்றுமாறு தசரத சக்கரவர்த்தியினிடத்திலிருந்து வேண்டிப் பெற்ற இராமபிரானைக்கொண்டு தான்தொடங்கிய வேள்வியை முடித்தபின்பு அவனை மிதிலாபுரிக்கு அழைத்துச்சென்று சிவதநுசை வளைக்குமாறுசொல்ல, அவ்வாறே இராமபிரான்செய்து சீதையை மணந்துகொண்டனனென்க. மிதிலை யென்பதற்கு - மிதியென்பவனால் ஏற்படுத்தப்பட்ட நகரமென்பது பொருள்; மிதி என்பது, ஜநககுலத்தவனான ஓரரசனுக்குப் பெயர்: கடைந்ததனாலுண்டானமை பற்றியது. நம்பி - நமக்கு இன்னானென்னும் பொருள்பட வருவதோர் உயர்ச்சிச் சொல்: ஆடவரிற் சிறந்தவன். பி - ம்:—[1]எழில், முனம். [2]எல்லிறுப்பரிய. [3]தேரெழு. [4]திரியம்பகம். [5]இனையநாள், இளையநாள். 'நல்லுறுப்பமையுநங்கையரின்மேலவள்பொருட்டெல்லுறுப்புடைய பேரெழு பரிக்கடவுடன்' என்று சிலபிரதிகளில் முன்னிரண்டடிகள். (88)

8\. உளைவயப் புரவியா னுதவ[1]வுற் றொருசொலால்
அளவில்கற் புடையசிற் றவைபணித் தருளலால்
வளையுடைப் புணரிசூழ் மகிதலத் திருவெலாம்
[2] இளையவற் குதவியித் தலையெழுந் தருளினன்.

(இ - ள்.) உளை வயம் புரவியான் - பிடரிமயிர்களைக்கொண்ட வெற்றியையுடைய குதிரைகளையுடையவனான தசரதன், உதவ - கொடுக்க, உற்ற - கிடைத்த, ஒரு சொலால்-ஒரு வார்த்தையை[வரத்தை]க் கொண்டு, அளவு இல் கற்பு உடைய சிறு அவை பணித்தருளலால் - அளவில்லாத கற்பையுடைய சிறியதாயான கைகேயி கட்டளையிட்டருளியதனால், வளை உடை புணரி சூழ் மகி தலம் திரு எலாம் இளையவற்கு உதவி - சங்குகளைக்கொண்ட கடலாற் சூழப்பட்ட பூமியையாளுகின்ற அரசர்செல்வம் முழுவதையும் தம்பியாகிய பரதாழ்வானுக்குக் கொடுத்து, இ தலை எழுந்தருளினன் - இந்தஇடத்துக்கு (வனவாசமாய்) வந்தருளினன்; (எ - று.)

ஆசையின்மையும், மாத்ருபித்ருவாக்யபரிபாலநமாகிய நல்லொழுக்கமு முடையவன் அவனெனக் கூறியவாறுயிற்று. உதவ என்றது - தசரதர் சம்பரனோடு போர் செய்யும் பொழுது கைகேயி சாரத்தியஞ்செய்து உதவிபுரிய, அதற்குக் கைம்மாறாக இரண்டு வரங்களைக் கொடுக்க என்றபடி. 'ஒருசொலாற் பணித்தருளலால்' என்றது-அவ்விருவரங்களுள் ஒருவரத்தால் இராமனுக்குக் காடளிக்கவும் மற்றொரு வரத்தாற் பரதனுக்கு நாடளிக்கவும் கேட்டுக்கொண்டனளாதலால். "நாயகனுரையான் வாயால் நானிது பகர்வன்" எனக் கூறிக்கொண்டு வந்தன ளாதலால் 'சிற்றவை பணித்தருளலால்' என்றார். "சிற்றவை பணியால் முடிதுறந்தானை" என்றார், பெரியாரும்.

சிற்றவை - சிற்றவ்வை: அவ்வை - ஔவையென்பதன் போலி. வளை - வலம்புரி இடம்புரியாக வளைந்திருப்பது. புணரி - நதிகளாகிய மனைவிகள் வந்துசேரப்பெறுவது எனக் கடற்குக் காரணக்குறி. உற்றொரு - தொகுத்தல். இனி, உளைவயப்புரவியான் உதவ - தசரதர் (முதலில் இராச்சியத்தைக்) கொடுக்க, உற்று - (அதனை) அங்கீகரித்து, (உடனே), சிற்றவை ஒருசொலாற் பணித்தருளலால் இளையவற்கு உதவி எழுந்தருளினன் என்று பொருளுரைக்கவும் அமையும். ஒருசொலால் இத்தலையெழுந்தருளின னென்க.

இக்கவிக்கும் - 'நம்பியரின் முன்பவன்' என்பதே எழுவாய்; ஆகவே, 6 - ஆங் கவிமுதல் மூன்றுகவிகள் ஒருதொடராமெனக் காண்க. பி - ம்:—[1] மற்று. [2] இளவலுக்கு. (89)

9\. தெவ்விரா வகைநெடுஞ் [1]சிகைவிரா [2]மழுவினன்
அவ்விரா மனையுமா வலிதொலைத் தருளினன்
இவ்விரா கவன்வெகுண் டெழு[3]மிரா வணையனும்
[4]வெவ்விரா தனை[5]யிரா வகைதுடைத் தருளினன்.

(இ - ள்.) இ இராகவன் - இந்த ஸ்ரீராமன், தெவ் இரா வகை - (உலகத்திற்) பகைவர்கள் இராமற்போம்படி, நெடுஞ் சிகை விரா(வு) மழுவினன் - மிக்க சுவாலை பொருந்திய மழுவாயுதத்தையுடைய வனாகிய, அ இராமனைஉம் - அந்தப் பரசுராமனையும், மா வலி தொலைத்து - மிக்க வலிமையைப் போக்கி, அருளினன் - அருள் செய்தான்; (அன்றியும்), வெகுண்டு எழும் - கோபித்து எதிர்த்து வந்த, இரா அனையன் ஆம் - இருளைப் போன்றவனாகிய, வெம் விராதனை - கொடிய விராதனென்னும் அரக்கனை, இரா வகை - (இவ்வுலகத்தில்) வாழ்ந்திராதபடி, துடைத்தருளினன் - அழித்தருளினன்; (எ - று.)

தன் தந்தையாகிய ஜமதக்னிமுனிவரது ஓமதேனுவைக் கவர்ந்த கார்த்தவீரியார்ச்சுனனைப் பரசுராமன் கொல்லவே, அக்கார்த்தவீரியார்ச்சுனனது மைந்தர் சமதக்னி முனிவரைப் பழிக்குப்பழிவாங்கினராக, பரசுராமன் அக்கார்த்தவீரியன்மக்களைக் கொன்று அது முதல் க்ஷத்திரியர்கள்மீது கறுக்கொண்டு இருபத்தொருமுறை பூலோகத்தைப்பிரதக்ஷிணஞ்செய்துவந்து ஆங்காங்குள்ள சகல க்ஷத்திரியர்களையும் சங்காரஞ்செய்ததனால் 'தெவ்விராவகை' என்றும், மழுப்படையையே தனக்கு நிரூபகமாகக் கொண்டு பரசுராமனெனப் பெயர் பெற்றதனால் 'மழுவின னவ்விராமனை' என்றும், சீதா கலியாணம் முடிந்தபின்பு தசரதசக்கரவர்த்தி மக்களோடும் மருமகளோடும் அயோத்திக்குமீண்டுசெல்லுகையில் அப்பரசுராமன் எதிரில் வந்து 'முன் ஹரிஹரயுத்தத்திலே இற்றுப்போனவில்லை முடித்த திறமை அறிந்தேன்; இந்த மகாவிஷ்ணுவினது வில்லை வளை, பார்ப்போம்' என்று ஒருதனுசை இராமபிரானது கையிற்கொடுக்க, ஸ்ரீராமன் உடனே அதனை வளைத்துக் கணை தொடுத்து 'இந்த அம்புக்கு இலக்கு என்?' என்றுகேட்க, அதற்கு இலக்காகத் தன் தபோபலம் முழுவதையுங் கொடுத்துப் பார்க்கவராமன் மீண்டுசென்றதனால் 'இராமனையும் மாவலிதொலைத்து' என்றும், பரசுராமன் க்ஷத்திரிய வமிசத்தைக் கருவறுத்தவனாயிருந்தாலும் வேதவித்தும் தவவிரதம் பூண்டவனுமாதல்பற்றி ஸ்ரீராமன் அவனுயிரைக் கொல்லாமல் தவத்தைக் கவர்ந்த மாத்திரத்தோடு விடுத்ததனால் 'அருளினன்' என்றுங் கூறினன். க்ஷத்திரியர்கள் செருக்குக்கொண்டு பூமிக்குப் பாரமாயிருந்ததனால் அப்பொறையை யொழித்தற்காகத் திருமாலின் ஆறுமவதார மெனக் கூறப்படுகின்ற பரசுராமனிடத்து ஆவேசித்திருந்த திருமாலினது சக்தியைத் தொழில்முற்றியதனால் திருமாலின் ஏழாவதான அமிசாவதாரமாகிய தசரதராமன் தன்னிடத்துக் கவர்ந்து கொண்டன னென்று அறிக.

தெவ் இராவகை என்பது, மழுவினன் என்பதில் தொக்குநின்ற உடையவனென்னுங் குறிப்புவினையோடு முடியும். விரா மழு என்பதை வினைத்தொகையாகவாயினும் விராம் மழு எனப்பிரித்து ஈற்றுயிர்மெய் சென்றுநின்ற செய்யுமென்வாய்பாட்டுத்தெரிநிலைப் பெயரெச்சத்தொடராகவாயினுங் கொள்க. இராமனையும், உம்மை - உயர்வுசிறப்பு. தேகபலம் முதலியவற்றைக் குறியாமல் தபோபலத்தையே குறித்தற்கு, 'மாவலி' எனப்பட்டது. ராகவன் என்

பதற்கு ரகுமகாராஜனது வமிசத்தில் அவதரித்தவ னென்று பொருள். அவ்வரசன், தசரதனுக்கு மூதாதை; எல்லாத்தேசத்தையும் வென்று 'விஸ்வஜித்' என்னும் வேள்வியைச் செய்து சகல சம்பத்தையுந் தானஞ்செய்துவிட்டு வறுங்கையினனாயிருக்கையில், கௌத்ஸன் என்னும் பிராமணன் தனது ஆசாரியராகிய வரதந்து மகாமுனிவர்க்குக் குருதக்ஷிணை கொடுப்பதற்காக வந்து யாசிக்க, குபேரனிடத்திலிருந்து வேண்டும் பொருளை அழைப்பித்து அந்தக் கௌத்ஸனுக்குக் கொடுத்தான்: இந்த ரகுமகாராஜன் இவ்வாறு மிக்க வீரமுங் கொடையு முள்ளவனாதலால், இராமபிரானை அவன்வமிசத்துப் பெயராற் குறித்தார்; இது - தத்திதாந்த நாமம்.

விராதனென்னும் வடசொல்லுக்கு - மிகுதியாய் அபராதஞ் செய்பவனென்றுபொருள்; இவன் முன்னே தும்புருவென்னும் பெயருள்ள கந்தருவனாயிருந்து பின்புகுபேரனதுசாபத்தால் ராக்ஷஸனாகி வனத்தில் திரிந்துவந்தவன். இவனைக் கீழ் ஆரணியகாண்டத்தில் "தங்கு திண் கரிய காளிமை தழைந்து தவழ," "கங்குபூசிவருகின்ற கலிகாலமெனவே" வந்தான் என்றதற்கு ஏற்ப, இங்கு "இராவணையனும் வெவ்விராதன்" என்றார். ராமலக்ஷ்மணர் சீதையுடனே தண்டகாரணியத்திற் செல்லுகையில் இவ்வரக்கன் வந்து ஜாநகியைத் தூக்கிக்கொண்டுசெல்லக் கண்டு ராமலக்ஷ்மணர்கள் எதிர்க்க, அவன் அவளைவிட்டு இவர்களிருவரைத் தூக்கிக்கொண்டு செல்ல ராகவவீரர்கள் அவனைத் தோள்களை வெட்டிக் கொன்றுவிட்டு, அவன் தனது பிறப்பையுணர்த்தி வேண்டிக்கொண்டபடி அவனைப் பள்ளம் வெட்டிப் புதைத்துச் சென்றதனால் 'இராவகைதுடைத்து' என்றும், அவன் இவர்களைத் தோள்களில் எழுந்தருளப்பண்ணிக் கொண்டு போனபொழுதும் ஸ்ரீராமன் காலால் உதைத்துப் பள்ளத்திலே தள்ளியபொழுதும் இவர்கள் திருவடிகள் பட்ட பாக்கியத்தால் அவன் தீவினையெல்லாந் தீர்ந்து பூர்வஜந்மத்து நிஜரூபத்தைப் பெற்றுத் தன் உலகஞ்சென்று இன்பமடைந்ததனால், 'துடைத்தருளினான்' என்றுங் கூறினார். இரா - ராத்திரி: இருளுக்கு ஆகுபெயர். 'இராவணையனும்விராதனை யிராவகை துடைத்தருளினான்' என்பதனை, "இராவண னிராவண மறுத்தோர்" என்னும் அழகர்கலம்பகத்தோடு ஒப்பிடுக.

இனி, இக்கவிமுதல் இராமபிரானது துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்யுங் குணத்தைக் கூறும்முகத்தால் அநுமான், நமது பகைவனாகிய வாலியையொழித்து நமதுகருத்தை முற்றுவிப்பான் இவன் என்பதைத் தெரிவிக்கின்றான். பி - ம்:—[1] சிலை. [2] மழுவினால். [3] அரா. [4] அவ்விராதனை. [5] வினை. (90)

10. கரன்முதற் கருணையற் றவர்கடற் படையொடும்
[1] சிரமுகச் [2] சிலைகுனித் [3] துதவுவான் [4] திசையுளார்
பரமுகப் பகைதுமித் தருளுவான் பரமராம்
[5] அரன்முதற் றலைவருக் கதிசயத் திறலினான்.

(இ - ள்.) (இன்னும் இந்த இராமன்),—கரன் முதல் கருணை அற்றவர் - கரன் முதலாகிய தயையில்லாத ராக்ஷஸர்களுடைய, கடல் படையொடுஉம் - சமுத்திரம்போன்ற சேனைகளும், சிரம் - (அரக்கன் முதலியோரது) தலைகளும், உக - துணிபட்டு விழும்படி, சிலை குனித்து - வில்லை வளைத்து(ப் போர்செய்து), உதவுவான் - (தேவர்கட்கு) உதவிசெய்தவன்; (அன்றியும்), திசை உளார் - எல்லாத்திக்குகளிலும் உள்ளவர்களுடைய, பரமுகம் பகை - அலட்சியஞ் செய்கின்ற பகைவர்களை, துமித்து அருளுவான் - அழித்தருளுபவன்: பரமர் ஆம் அரன் முதல் தலைவருக்கு - (மற்றை யாவரினும்) மேம்பட்டவர்களாகிய உருத்திரன் முதலிய தலைவர்களான தேவர்களுக்கும், அதிசயம் - மேம்பட்டிருக்கின்ற, திறலினன் - வல்லமையுடையவன்; (எ - று.)—இச்செய்யுளுக்கும் அடுத்த செய்யுளுக்கும் கீழ்க்கவியிலுள்ள 'இவ்விராகவன்' என்பதே எழுவாய்.

கரன் என்பதற்கு - கடுமையுள்ளவனென்று பொருள். இவன், பூர்வீக ராட்சஸசிரேஷ்டனான சுமாலியின் மகளும், இராவணன் தாயான கேகசியின் தங்கையும், ராவணனது தந்தையான விசிரவ முனிவரையே கொழுநனாக அடைந்தவளுமான கும்பீநசியின் குமாரன்; இராவணனுக்குத் தம்பிமுறையில் நிற்பவன்; தண்டகாரணியத்திலே ஜநஸ்தானத்தில் தன் தங்கையாகிய சூர்ப்பணகைக்குப் பாதுகாவலாக இராவணனாலேற்படுத்தப்பட்ட பதினாலாயிரம் ராக்ஷஸசேனைகளுக்குத் தலைவர் மூவரிற் பிரதானமானவன். 'கரன் முதற் கருணையற்றவர்' என்றது - தூஷணன், திரிசிரசு என்ற இருவரையுங்கூடக் குறிக்கும். சேனைக்குப் பரப்பினாலும், ஆரவாரத்தினாலும், அணியணியாக வருதலாலும், கடல் உவமை. திசையுளார் - திக்பாலக ரென்றுமாம். பரமுகம் - பராங்முக மென்னும் வடமொழியின் விகாரம்: அசட்டை. அரன் - ஹரன்; சங்காரக்கடவுள். தலைவருக்கு - நான்கனுருபு எல்லைப்பொருளில் வந்தது. இரண்டாமடியில் 'சிரமுகச் சிலைகுனித் துடையன்மற்றமரர்தம்' என்று பாடமோதுவாருமுளர். பி - ம்:—[1]சிரமற. [2]சிலைவளைத்து. [3]உதவுவார். [4]புவியுளார், தீயுளார், செகமுளார். [5]அரவணைத் தலைவருக் கதிசயித்தறிவினார். சில பிரதிகளில் "கரன் (10) உளைவய்" (8) நல்லுறுப்பு (7) வேலிகல் (6) தெவ்விரா (9) என்ற முறையிற் பாடல்களுள்ளன. இச்செய்யுளுக்குப்பின் சிலபிரதிகளில் காணப்படும் பாடல் வருமாறு:—

"பிரிவில்கா னதுதனிற் பெரியசூர்ப் பணகைதன்
கரியமா நகிலொடும் காதொடும் நாசியை
அரியினா ரவர்சொலத் திரிசிரா வவனொடும்
கரனொடும் மவுண்ருங் காலன்வா யாயினர்."

கரன்முதற் கருணையற்றவர் கடற்படையும் சிரமும் உகுவித்த கதை:—இராமலக்ஷ்மணர்களின் அழகைக் கண்டு வியந்து காதல் கொண்டு மிக அழகிய மங்கைப்பருவம் பூண்டுவந்து தன்னை மணந்து கொள்ளும்படி வற்புறுத்திய இராவணன் தங்கையாகிய

சூர்ப்பணகையின் மூக்கையும் காதையும் இளையபெருமாள் அறுத்து விட்டதைக் கேட்டுப் பெருங்கோபங்கொண்டு, கரன் தூஷணன் திரிசிரசு என்னும் இராக்கதத்தலைவர்களும் பதினாலாயிரம் இரதாதிபதிகளும் சேனைகளோடு வந்து எதிர்க்க, ஸ்ரீராமபிரான் இளைய பெருமாளைப் பிராட்டிக்குக் காவலாக வைத்துவிட்டுத் தனியாய் நின்று வில்லைவளைத்துப் பலகணைகள் தொடுத்து அளவிடற்கரிய அரக்கர்சேனைகளையும் சேனாதிபதிகளையும் தலைவர்கள் மூவரையுங் கொன்றுவிட்டனனென்பதாம். (*91*)

11. [1]ஆயமா னாகர் [2]தா ழாழியா [3]னேயலால்
காயமா னாயினான் [4]யாவனே [5]காவலா
நீயமா [6]னேர்தியா [7]னிருதமா ரீசனார்
[8]மாயமா னாயினான் மாயமா னாயினான்.

(இ - ள்.) காவலா - மகாராசனே!—(இந்த ஸ்ரீராமன்), காயமான் ஆயினான் - (மநுஷ்ய) சரீரமுடையவனாய் வந்த, ஆயம் மால் நாகர் தாழ் ஆழியான் ஏ அலால் - கூட்டமாகிய பெருமை பொருந்திய தேவர்களெல்லாரும் வணங்கப்பெற்ற திருப்பாற்கடலில் திருக்கண்வளர்ந்தருளுகின்ற ஸ்ரீமகாவிஷ்ணுவே யல்லாமல், யாவன்ஏ - வேறு யாராவன்! நீ—, அ மான் - அப்பெரியவனை, நேர்தி - வந்து சினேகிப்பாயாக; (அவன்), ஆர் மாயம் மான் ஆயினான் - நிறைந்த வஞ்சனையையுடைய மானினது வடிவம்பூண்டு வந்தவனான, நிருதன் மாரீசன் - மாரீசனென்னும் ராக்ஷஸனுக்கு, மா - பெரிய, யமான் ஆயினான் - யமனானவன்; (எ - று.)—ஆல் - ஆசை.

ஆய எனப் பிரித்து, பொருந்திய வென்றுமாம். ஆயமான் எனக் கொண்டு - அந்த ஸ்ரீராமனென்றும் பொருள் கொள்ளலாம்: இப்பொருளில், ஆ அமான எனப் பிரிக்க: ஆ - அகரச்சுட்டு நீண்டது; நீண்டவிடத்து யகரந் தோன்றியது: அமான் - அம்மான் என்பதன் தொகுத்தல். [4]ஆவனே என்கிற பாடத்துக்கு - ஆ அமான் ஆழியானே - ஸ்ரீராமபிரான் ஸ்ரீமகாவிஷ்ணுஸ்வரூபியே; அல்லாவிட்டால், காயம்மான் ஆயினான் ஆவன்ஏ - தனது வடிவத்தில் பார்வதிதேவியைப் பொருந்தப்பெற்ற பரமசிவனே யாவன் என்று பொருள்; மான் - மான்பார்வையையுடைய உமாதேவிக்கு உவமவாகுபெயர். இனி, மான்என்பதை மாநுஷனென்னும் வடமொழியின் திரிபாகக்கொண்டு, சாதாரணமான மநுஷ்ய சரீரம் உடையவனாவனோ? ஆகான் என்றுங் கொள்ளலாம். [6]ஓர்தி என்னும் பாடத்துக்கு - காவலாஎன்பதனை, காவல் ஆ(க)எனக் கொண்டு, நீ அவனை உனக்குக்காக்குந்துணையாக அறிவாயென்று உரைக்க. [6]ஓர்தியால் [7]நேரில், என்னும் பாடத்துக்கு - அவனைச் சென்று சேர்ந்தால் யான்சொல்லுங் குணங்களையெல்லாம் நீயே தெரிந்துகொள்வா யென்க. அப்பாடத்திற்கே - நேர் இல் எனப் பிரித்து, ஒப்பில்லாத மாரீசனென்றுமாம். [7]'நேரும்' என்னும் பாடத்துக்கு - எதிர்ப்பட்ட மாரீசனென்க. ஈற்றிலுள்ள 'மாயமானாயினன்'என்பதை - மாயம் மான் ஆயினான் எனப்பிரித்து, அவ்வடிக்கு,

'மாயமானனவன், மாய-அழியும்படி (அவனைக்கொன்று), மான் (இராவணனால் கவரப்பட்ட) மான்போன்ற சீதையை, ஆயினன் - தேடுவானானன் என்றும் உரை கூறலாம்; அவ்வுரைக்கு, ஆயினன் என்பதை - ஆய் என்னும் பகுதியடியாப்பிறந்த இறந்தகால வினைமுற்றாகக் கொள்க; காசிக்கலம்பகத்தில் "மகரமாயினன்" என்பதற்கு - மகரத்தை [மீனை] மாய்த்தவனெனப் பொருள்கொண்டு, மாயினன் என்பதை மாய் என்பதன் இறந்தகால முற்றாகக் கொள்வதுபோல. ஈற்றடி - யமகம்.

ஆயம் - மகளிர்கூட்டம்; இங்குக் கூட்டமென்னும் மாத்திரமாய் நின்றது. மால் - பெருமையுணர்த்தும் உரிச்சொல். நாகர் என்னும் வடசொல்லுக்கு - துக்கமில்லாதவரென்று பொருள்; ந+அகம்: ந - எதிர்மறைப்பொருளுணர்த்துவது, கம் - சுகம்; அஃது அல்லாதது, அகம்: துக்கம். ஆழி - ஆழ்ந்திருப்பது; இ - வினைமுதற்பொருள்விகுதி. (பிரளயகாலத்தில்) உலகங்களை அழிப்பதென்றும், வட்டவடிவமானதென்றும் பொருள்கொள்ளலாம். ஆழியான் - சக்கரதரனுமாம். ஏ - தேற்றம். காயமான், மான் - வடமொழியில் உடைமைப்பொருளுணர்த்தும் பெயர்விகுதி; வடமொழியிற் சில சொற்களுக்கு 'மாந்' என்பதும், சில சொற்களுக்கு 'வாந்' என்பதும் பெயர்விகுதியாக வரும்: அகரவீற்றுச் சொல்லுக்குப் பலவாந் குணவாந் என்பவற்றிற்போல 'காயவான்' என வாந் என்பதே வரற்பாலதாயினும், அது எதுகையின்பம் நோக்கி இங்கே மாந் என்றே நின்றதெனக்கொள்க. யாவன் - எவனுமாகானென எதிர்மறை குறித்தது. ஏ - அசை. காவலன் - கா வலன்: காத்தலில் வல்லவன்: அன்றி, காவல் அன் - காத்தல் தொழிலுடையவன். அமான் - அம்மான் என்பதன் தொகுத்தல்; மான்-மஹாந் என்னும் வடமொழியின் விகாரம். மான் நேர் தி - ஐயுருபு உயர்திணையிடத்துத் தொக்கது. நிருதன்-நைருதன் என்பதன் விகாரம்: நிருருதி என்னுந் திக்பாலகியின் வமிசத்தில் தோன்றியவனென்று பொருள். நிருதமாரீசன் - உயர்திணைப்பெயர் ஈறு கெட்டது. யமான் - யமனென்பதன் நீட்டல்.

ஈற்றடியிற் குறித்த வரலாறு:—தாடகையின் குமாரனமாரீசன் முன்னமே விசுவாமித்திரமுனிவரது வேள்வியை யழிக்குமாறு சென்று இராமபிரானால் வாயவ்யாஸ்திரஞ் செலுத்திக் கடலில் வீழ்த்தப்பட்டதனால் அப்பிரானது வலிமையை யறிந்திருந்தான். சூர்ப்பணகை வார்த்தையாற் சீதைமேற் காதல் கொண்ட இராவணன் துணையாக வேண்டவே, அவன பொன்மயமான மான்வேடம் பூண்டு ஸ்ரீராமலக்ஷ்மணர் ஜாநகியுடனே வசித்திருக்கும் ஆசிரமத்துச்சென்று விளையாட, அதனைச் சீதை கண்டு, பிடித்துத்தரவேண்டுமென்று இராமனைப் பிரார்த்திக்க, அவ்விராமபிரானும் பின்தொடர்ந்து வெகுதூரஞ் சென்றும் அகப்படாமையால் இது மாயைவடிவுஎன்று அறிந்து ஓரம்பெய்து வதைத்தனனென்பதாம். பி - ம்:—[1] ஆயமாநாகர். [2] வாழ். [3] ஆமலால். [5] காவலாய். [7] நிகரின்மாரீசனர், நிருதமாரீசனும். [8] மாயமானுயினர். (92)

12. [1]உக்கவந் தமு[2]முடற் பொறைதுறந் துயர்பதம்
புக்கவந் தமுநமக் குரைசெயும் [3]புரையவோ
[4]திக்கவந் தரநெடுந் [5]திரள்கரஞ் [6]சினவுதோள்
அக்கவந் தனுநினைந் [7]தமரர்தாழ் சவரிபோல்.

(இ - ள்.) திக்கு - எல்லாத் திக்குக்களிலுமுள்ள உயிர்களெல்லாம், அவம் தர - அழிவடையும்படி, நெடு - நீண்ட, திரள் - திரண்ட, கரம் - கைகளையும், சினவு தோள் - கோபித்துப் பாய்கின்ற தோள்களையுமுடைய, அ கவந்தன் உம் - அந்தக் கபந்தனென்னும் இராக்ஷசனும், உக்க - (இவர்கள் கையால்) இறந்து போன, அந்தம்உம் - முடிவும்,—(மேலும் அவன்), உடல் பொறை துறந்து - (பூமிக்குப்) பாரமான (தன்) சரீரத்தை விட்டு, சவரி போல் - சபரியென்பவளைப் போல, அமரர் நினைந்து தாழ் - தேவர்களெல்லாம் மதித்து வணங்குகின்ற, உயர் பதம் - சிறந்த [பரம] பதவியை, புக்க - அடைந்த, அந்தம்உம் - அழகும்,—நமக்கு - எம்போல்வார்க்கு, உரைசெயும் புரையஓ - சொல்லத்தக்க தன்மையையுடையனவோ? (எ - று.)

தன்னிடத்துப் பக்திகொண்ட சவரியோடு தன்னை விழுங்க வேணுமென்று முயன்ற கபந்தனோடு வாசியற இருவர்க்கும் உயர்பதமளித்த மகான் இவனென, இராமபிரானது தன்மையைக் கூறியவாறு.

இச்செய்யுளிற் குறித்த வரலாறுகள்:—தநுவென்னும் யக்ஷனது மகன், ஸ்தூலசிரஸ் என்னும் முனிவனது சாபத்தால் அரக்கனாய், பிரமனருளால்தீர்க்காயுசுபெற்று, தேவேந்திரனோடு எதிர்த்து அவனது வச்சிராயுதத்தாற் புடைபட்டு, தனது தலை வயிற்றில் அழுந்தியதனால் கபந்தனென்று பெயர்பெற்றான். கபந்தமென்பதற்கு - தலையில்லாத உடம்பென்று பொருள். இவன் தண்டகாரணியத்தில் ஓர் பக்கத்திலிருந்து தனது நீண்ட கைகள் இரண்டையும் எட்டியமட்டிற் பரப்பித் துழாவி அகப்பட்ட ஜீவராசிகளையெல்லாம் வாரி வாய்ப்பெய்து விழுங்கிக் கொண்டிருக்க, அங்குச் சென்று அவன் தோள்களினிடையே அகப்பட்டுக்கொண்ட இராமலக்ஷ்மணர்கள் அவன் தோள்களை வாள்களால் வெட்டிவிட, அவர்களுடைய திருக்கைகள் தீண்டினமாத்திரத்தில் அவன் முன்னையசாபமும் முற்பிறப்பின் தீவினையும் தீர்ந்து ராக்ஷஸ சரீரத்தைவிட்டுத் தேவ சரீரம்பெற்றுப் பெருமாளைப் பலவாறு பிரார்த்தித்து நற்கதிபெற்றானென்பதும், ஞானமுந் தவமு மிக்கவளாகிய சபரியென்பவள் இராமனுக்காக இனியபழங்களைச்சுவை பார்த்துப்பார்த்து வைத்திருந்து சமர்ப்பிக்க, இராமபிரானும் அவற்றை அமுதினுமினிதாகக் கொண்டு அமுதுசெய்து பின்பு அவளுக்கு மோக்ஷங்கொடுத்தருளினனென்பதும் ஆம்.

"நேமிசேர் தடங்கையினானை நினைப்பிலாவலி நெஞ்சுடைப், பூமி பாரங்கள்" என்றபடி பகவந்நாம ஸ்மரணமில்லாதவரது சரீரம்

விசுவம்பரையான பூமிக்குப் பொறுக்கவொண்ணுத பாரமாகுதலால், 'உடற்பொறை' எனப்பட்டது; இதனை "ஈட்டமிவறி யிசைவேண்டா வாடவர், தோற்றம் நிலக்குப் பொறை," "கண்ணோட்டத்துள்ள துலகிய லஃதிலா, ருண்மை நிலக்குப் பொறை" என்றாற்போலக் கொள்க; அன்றியும் "பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்புமிகை" என்றபடி முத்திபெறுபவர்க்கு அதற்குக் கருவியாயிருந்த உடம்பும் அநாவசியமாகத் தோன்றுமாதலாலும், 'உடற்பொறை' என்றல் தகும். அந்தம் என்பது முடிவை யுணர்த்தும்போது, வடமொழி; அழகைக் குறிக்கும்போது, தென்மொழி. பி-ம்:—[1]உக்கவந்தவ், உக்கவந்துவ். [2]உடற்பகை. [3]புரையதோ. [4]திக்குமந்தரம். [5]திசைகரம், திரளறம். [6]செலவு. [7]அமரவாழ். (93)

13.—அநுமான் இராமலட்சுமணரது மகிமையைக் கொண்டாடுதல்.

[1]முனைவரும் பிறருமேன் [2]முடிவரும் பகலெலாம்
[3]இனையர்வந் துறுவரென் றியல்தவம் [4]புரிகுவார்
வினையெனுஞ் சிறைதுறந் துயர்பதம் [5]விரவினார்
எனையரென் றுரைசெய்கே னிரவிதன் [6]சிறுவனே.

(இ-ள்.) இரவிதன் சிறுவனே - சூரியனது குமாரனே!—முனைவர்உம்-முனிவர்களும், பிறர்உம் - மற்றையவர்களும், மேல் முடிவு அரும் பகல் எலாம்-முதற்காலந்தொடங்கி எல்லையில்லாத பலநாளாக, இனையர் வந்து உறுவர் என்று - இவ்விராமலட்சுமணர்கள் (தம்பக்கல்) வந்து சேரவேண்டுமென்று, இயல் தவம் புரிகுவார்- (தம்தமது) சக்திக்குத் தகுதியான தவத்தைச் செய்து, (பின்பு இவர்களது தரிசனத்தைப் பெற்று), வினை எனும் சிறை துறந்து - ஊழ்வினையாகிய கட்டினின்றும் நீங்கி, உயர் பதம் - சிறந்த மோட்சபதவியை, விரவினார் - சேர்ந்தார்கள்; (அப்படிப்பட்ட ஸ்ரீராமலட்சுமணர்களை), எனையர் என்று - எப்படிப்பட்டவரென்று, உரைசெய்கேன் - சொல்லி முடிப்பேன்? (எ-று.)—இப்படிப்பட்டவரென்று உரைக்க என்னால் இயலாதென்றபடி.

இருடியர் முதலியோர் இவரது வருகையைக்குறித்துத் தவஞ்செய்தின்றதனால் இவர் தீயோரையழித்து நல்லோரைக் காக்கத் திருவவதரித்த முதற்கடவுளே போலுமென்று கூறினனென்க. மோக்ஷத்தையடைவதற்கு நல்வினை தீவினையென்ற இரண்டும் தடையாய் நிற்றலால், 'வினையெனுஞ் சிறை' எனப் பொதுப்படக் கூறினார்; "இருள்சேரிரு வினையுஞ் சேரா" என்றார், திருவள்ளுவனாரும்.

முனைவர் - முனிவர் என்பதன் திரிபு: அவர் - சரபங்கர் முதலியோர். பிறர் - சபரி முதலியோர். இயல் தவம்-இலக்கணம் அமைந்த தவமுமாம். எனையரென்று உரைசெய்கேன் - (அவர்களால் நற்கதியடைந்த முனிவர்களை) எத்தனைபேரென்றுசொல்வே னென்றுமாம். பி-ம்:—[1]முனிவரும். [2]முடிவறும். [3]இனையன். [4]முயல்குவார். [5]துருவினார், விழைகுவார். [6]புதல்வனே. (94)

14.—அநுமான் இராமலட்சுமணர் உன்னோடு நேசிக்க விரும்புகின்றனரெனல்.

[1]மாயையான் [2]மதியிலா நிருதர்கோன் மனைவியைத்
[3]தீயகா னெறியி[4]னுய்த் தனனவட் [5]டேடுவார்
நீயையா [6]தவமிழைத் துடைமையா னெடுமனம்
[7]தூயையா வுடைமையா [8]லுறவினைத் [9]துணிகுவார்.

(இ - ள்.) ஐயா - தலைவனே! மதி இலா நிருதர் கோன் - புத்தியில்லாத ராக்ஷஸவரசனாகிய இராவணன், மனைவியை-(இந்த ஸ்ரீராமனது) தருமபத்தினியாகிய சீதையை, மாயையால் - வஞ்சனையினாலே, தீய கான் நெறியின் உய்த்தனன் - கொடிய காட்டுவழியிலே எடுத்துக்கொண்டுபோனான்; அவள் தேடுவார்-அவளைத் தேடுபவர்களாய் வந்த ராமலட்சுமணர்கள், நீ—, தவம் இழைத்து உடைமையால்-நல்வினை செய்திருத்தலாலும், நெடு மனம் தூயை ஆ உடைமையால் - பெரிய [சிறந்த] மனத்திற் பரிசுத்தி யுடையவனாயிருத்தலாலும், உறவினை - (உன்னோடு) சினேகித்தலை, துணிகுவார் - நிச்சயிப்பவரானார்கள்; (எ - று.)

இதனால், இராமலட்சுமணர்கள் அங்குவருவதற்கு அநுமான் காரணங்கூறினனென்க. நல்வினையும் மனத்தூய்மையும் உடையவரிடத்தன்றி இப்படிப்பட்ட மகான்கள் சென்று சேர்ந்து நட்புக்கொள்ளாவினையா ராதலால், இங்ஙனங் கூறியது. இராமனது வலிமையை யோராமையாலும், பிறன்மனைவியைக் கள்ளத்தாற் கவர்ந்து சென்றதனாலும், இராவணனை 'மதியிலாநிருதர்கோன்' என்றார். கானுக்குத் தீமையாவது - கொடியராக்ஷஸர் முதலியோர் முனிவராதியோரை வருத்துதற்கு இடமாயிருத்தல். தீயகான் - நெருப்பையுடைய காடு என்றுமாம். [3]தீயதாநெறியினுய்த்தனன் என்று பாடமோதி, களவினாற் கொண்டுபோனானென்று உரைப்பாருமுளர்.

அவள் + தேடுவார் = அவட்டேடுவார்: உயர்திணையிரண்டாம் வேற்றுமைத்தொகையாதலின், இயல்பாக வேண்டியவிடத்து விகாரப்பட்டது. பி - ர்:—[1]மாய்கையால். [2]மதியிலான். [3]தீயதன்னகரின், தீயவா நகரின். [4]வைத்தனன். [5]தேடுவான். [6]தவம்விளைத்துடைமையால், தவமிழைத் திடுதலால். [7]தூய்மையா, தூயையாம். [8]உறவுனை. [9]தொடருவார். (95)

15.—இராமலட்சுமணரோடு சினேகஞ்செய்யவரும்படி அநுமான் சுக்கிரீவனை யழைத்தல்.

தந்திருந் தனரருட் [1]டகைநெடும் பகைஞனும்
இந்திரன் சிறுவனுக் கிறுதியின் றிசைதரும்
புந்தியின் பெருமையாய் [2]போதரென் றுரைசெய்தான்
மந்திரங் [3]கெழுமுநூன் மரபுணர்ந் துதவுவான்.

(இ - ள்.) புந்தியின் பெருமையாய் - புத்தியினால் மகிமையை யுடையவனே!—(அவர்கள்), அருள் - கருணையை, தந்திருந்தனர் - (நம்மிடத்தில்) வைத்திருக்கிறார்கள்; (ஆதலால்), தகை நெடும் பகைஞன் ஆம் இந்திரன் சிறுவனுக்கு - வலிமைமிக்க பகைவனாகிய இந்திரகுமாரனை வாலிக்கு, இறுதி - மரணம், இன்று - இப்பொழுதே, இசைதரும் - நேரிடும்; (ஆகையால்), போதர் - (அவர்களோடு நட்புக்கொள்ளுதற்குப்) புறப்பட்டு வருவாயாக, என்று—, கெழுமு நூல் மரபு உணர்ந்து - விளங்குகின்ற (அரசர்க்குரிய) நீதி சாஸ்திரம் முதலியவற்றினது முறைமையை அறிந்து, மந்திரம் உதவுவான் - (சுக்கிரீவனுக்குக் காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ற) ஆலோசனை சொல்பவனாகிய அனுமான், உரைசெய்தான் - சொன்னான்; (எ - று.)

புந்தி - புத்தி யென்பதன் மெலித்தல். போதர் என்பது வா என்னும் பொருள தாதலை "போதர்கண்டா யிங்கேபோதர்கண்டாய்," "போதரே யென்று சொல்லி" என்ற பெரியார் பாசுரங்களிலும் காண்க: போதரு என்று பிரிப்பாருமுளர். மந்திரம் = மந்த்ரம்: வடசொல். பி - ம்:—[1] தனிமையைப், தலைமையைப், தனிநெடும், தனிமையின், தனிமைநின். [2] போதுகென்று, போதியென்று. [3] கெழுவு. (96)

16.—சுக்கிரீவன் இராமபிரானை யணுகுதல்.

அன்னவா முரையெலா மறிவினா லுணர்குவான்
உன்னையே யுடையவெற் கரியதெப் பொருளரோ
பொன்னையே பொருவுவாய் [1] போதெனப் போதுவான்
[2] தன்னையே யனையவன் சரணம்வந் [3] தணுகினான்.

(இ - ள்.) அன்ன ஆம் உரை எலாம் - அத்தன்மையனவாகிய (அநுமான் சொன்ன) வார்த்தைகளையெல்லாம், அறிவினால்-(தனது) நுண்ணறிவால், உணர்குவான் - அறிபவனாகிய (சுக்கிரீவன் அநுமானைநோக்கி), 'பொன்னையே பொருவுவாய் - பொன்போன்றவனே! உன்னையே உடைய - (மகாபுத்திமானான) உன்னையே துணையாகவுடைய, எற்கு - எனக்கு, எப்பொருள் - எந்தக்காரியம், அரியது - அருமையானது? [எல்லாம் எளியதே]; போது - வருவாயாக,'—என- என்றுசொல்லி, போதுவான் - புறப்பட்டவனாய்,—தன்னையே அனையவன் - (தனக்கு வேறு எவரும் ஒப்பில்லாமையால்) தானே ஒப்பவனாகிய ஸ்ரீராமனது, சரணம் - திருவடிகளை, வந்து அணுகினான் - வந்து சேர்ந்தான்; (எ - று.)

அநுமான் கூறியதற்கு இசைந்து அவனையும் உடனழைத்துக்கொண்டு இராமபிரானுள்ள இடத்தைச் சுக்கிரீவ னணுகினனென்பதாம். பெரியோரை யடைந்தா னென்னும் பொருளில் அவர் திருவடியையணுகினா னென்றல், மரபு. அன்றியும், எம்பெருமானுடைய திருவடிகளே சேதநனுக்குப் புகலா மென்பதையும் உணர்க. பொன் - அநுமானுடைய தேக காந்திக்கும்,

யாவரும் மதிக்குஞ் சிறப்புக்கும், கிடைத்தற்கு அருமைக்கும் உவமை. இனி, 'பொன்னையே பொருவுவாய்' என்பதற்கு - (தேவேந்திரனுக்குக் குருவும்மந்திரியுமாகிய) பிருகஸ்பதிபகவானையே யொத்திருப்பவனே எனப் பொருள் கொள்ளுதலும் தகும். தன்னையே அனையவன் என ஒப்பில்லாமை கூறியதில், உயர்வில்லாமை அருத்தாபத்தியாற் பெறப்படும். சரணம் - எழுந்தருளியிருக்கின்ற இடமாகவுமாம். எற்கு - எனக்கு. அரோ - ஈற்றசை. மூன்றுமடி - முற்று யோனை. பி - ம்:—[1]போதுவாயென்றனன், போதெனப்போதுவார். [2]அன்னமே. [3]அணுகுவான், அணுகுவார். (97)

வேறு.

17.—சுக்கிரீவன் இராமபிரானைக் காணுதல்.

கண்டன னென்ப மன்னோ கதிரவன் சிறுவன் [1]காமர்க்
குண்டலந் துறந்தகோல வதனமும் [2]குளிர்க்குங் கண்ணும்
புண்டரி கங்கள் பூத்துப் புயல்தழீஇப் பொலிந்த திங்கள்
மண்டல முதயஞ் செய்த மரகதக் கிரி [3]யன் னானை.

(இ - ள்.) கதிரவன் சிறுவன் - சூரியகுமாரனான சுக்கிரீவன்,— புண்டரிகங்கள் பூத்து - தாமரைமலர்கள் மலரப்பெற்று, புயல் தழீஇ - காளமேகந் தழுவப்பெற்று, பொலிந்த - விளங்குகின்ற, திங்கள் மண்டலம் - சந்திரமண்டலம், உதயம் செய்த - உதிக்கப் பெற்ற, மரகதம் கிரி - மரகதமலையை, அன்னானை - போன்றவனான ஸ்ரீராமபிரானது, காமர் குண்டலம் துறந்த கோலம் வதனம்உம்- அழகிய குண்டலங்களை யிழந்த காணுதற்கு இனிய திருமுகத்தை யும், குளிர்க்கும் கண்உம் - குளிர்ச்சியான திருக்கண்களையும், கண்ட னன் - பார்த்தான்; (எ - று.)-என்ப, மன்ஓ - அசைகள்.

கதிரவன் - ஆயிரங்கிரணங்களையுடையவன். புண்டரிகங்கள் - கைகால் முதலிய அவயவங்களுக்கும், புயல் - கரிய திருக்குழலுக்கும் திங்கள்மண்டலம் - திருமுகமண்டலத்துக்கும், மரகதக்கிரி - நீல மேனிக்கும் உவமை. பின்னிரண்டடி— இல்பொருளுவமை. குண்டலந் துறந்தவதன மென்றது, பித்ருவாக்கிய பரிபாலனஞ்செய்தற் பொருட்டு வனவாசம் புறப்பட்டபொழுது சகலசம்பத்துகளோடு அரசர் கோலத்துக்கு உரிய திருவாபரணம் முதலியவற்றையுந் துறந்து மரவுரியுடுத்துத் தவவேடம் பூண்டதனால் என்க. கிரியனானை வதனமும் கண்ணும் கண்டனன - இரண்டு செயப் படுபொருள் வந்த வினை; இது வடமொழியில் த்விகர்மகர்த்தரி ப்ரயோக மெனப்படும்; முதலை - ஆறும்வேற்றுமையாகத் திரித்தல், தமிழ்மரபு. இனி, இச்செய்யுளுக்கு - கண்ணையும் வதனத்தையும் தன்னிடத்திலுடைமையாற் புண்டரிகங்கள் பூத்துப் பொலிந்த திங்கள்மண்டலம் உதயஞ்செய்த மரகதக் கிரியனானைக் கதிரவன் சிறுவன் கண்டனனெனக் கூட்டியுரைப்பினுமாம். குண்டலம், வதனம், புண்டரீகம், மண்டலம், உதயம், மரகதம், கிரி - வடசொற்கள். குளிர்க்கும் - கு - சாரியை; குளிர்க்கும் என்பதைப்

பிறவினைப்பெயரெச்ச மென்றலுமாம். பி - ம்:—[1]காமர். [2]குளிர்ந்த. [3]அருனே.

இது முதற் பதினைந்துகவிகள் - அனுமப்படலத்தின் பதினேராங்கவி போன்று முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும், மற்றவை மாச்சீர்களுமாகிவந்த அறுசீராசிரிய விருத்தங்கள். (98)

18.—சுக்கிரீவன் இராமலட்சுமணரைச் சிறப்பாகக் கருதுதல்.

நோக்கினு னெடிது நின்ரு னொடிவருங் கமலத் தண்ணல்
ஆக்கிய வுலக [1]மெல்லா மன்றுதொட் டின்று காறும்
பாக்கியம் [2]புரிந்த வெல்லாங் குவிந்திரு படிவ மாகி
மேக்குயர் தடந்தோள் [3]பெற்று வீரராய் [4]விளைந்த வென்பான்.

(இ - ள்.) நோக்கினன் - (அவ்வாறு சுக்கிரீவன் இராமலட்சுமணர்களைப்) பார்த்துக்கொண்டு (அவர்கள் அழகில் ஈடுபட்டு), நெடிது நின்ருன் - வெகுநேரம் (அதிசயித்து) நின்றவனாய், 'நொடிவு அருங் கமலத்து அண்ணல் - சொல்லுதற்கரிய (சிறப்பையுடைய) தாமரை மலரில் தோன்றிய பிரமதேவன், ஆக்கிய - படைத்த, உலகம் எல்லாம் - உலகத்திலுள்ள எல்லாவுயிர் வர்க்கங்களும், அன்று தொட்டு - அந்தப் படைப்புக்காலந் தொடங்கி, இன்று காறும் - இன்றைவரையிலும், புரிந்த - செய்தவையான, பாக்கியம் எல்லாம் - நல்வினைகளெல்லாம், குவிந்து - திரண்டு, இருபடிவம் ஆகி - இரண்டு திருவுருவமாய், மேக்கு உயர் தட தோள் பெற்று - மேலாக உயர்ந்த பெரிய தோள்களையுடையவையாய், வீரர் ஆய் விளைந்த - இவ்வீரர்களாய்த் தோன்றின' என்பான்-என்று எண்ணுபவனுனன்; (எ - று.)

இவ்விருவரும் இங்கே திருவவதரித்தது இவ்வுலகத்துப்பிறந்துள்ள ஜீவராசிகளின் புண்ணியப்பயனே யென்றவாறு. "உலகமென்பது உயர்ந்தோர்மாட்டே" என்ப வாதலால், இங்கு 'உலகம்' என்பது - உயர்ந்தோரை யுணர்த்துமென்னலாம். 'உலகமெல்லாம் புரிந்த பாக்கியம் இருபடிவமாகி வீரராய்விளைந்த' என்பதற்கு - உலகத்தோரின் புண்ணியங்கள் யாவும் திரண்டு இருவீரராக உருவாயினரென்னுமல், அப்புண்ணியங்களனைத்தும் விதைகளாக அவ்விதைகளின் திரண்ட பயனுக இவ்விருவீரர் விளைந்தனரென்றும் கொள்ளலாம். சாதுசனங்களை நலியுங் கொடியோர்களை யெல்லாம் நிரஸித்தலால், இவர்கள் அச்சாதுசனங்களின் புண்ணியப்பயனுவ ரென்க. சுக்கிரீவன் வேண்டுவது வாலியைத் தொலைக்கும் வீரத்தையே யாதலால், அழகு அறிவு முதலியவற்றைப்பற்றிக் கூருது 'வீரராய் விளைந்த' என்ருன்.

நொடிவு - தொழிற்பெயர். நொடிவு அரு - அழிவில்லாத என்றுமாம். கமலம், பாக்யம் - வடசொற்கள். மேக்கு - மேலென்னும் பொருளதாதலே, "வெங்கடுங்கால்பொர மேக்குநோக்கிய" எனப் பாலகாண்டத்திலுங் காண்க. புரிந்த - பலவின்பாற்பெயர். விளைந்த - முற்று. பி - ம்:—[1]தன்னுள். [2]புரிந்தவெல்லாம், [3]பெற்ற. [4]விளைந்ததென்பான். (99)

19.—திருமாலே இவ்வாறு அவதரித்துள்ளானெனச் சுக்கிரீவன் நிச்சயித்தல்.

தேறின னமரர்க் கெல்லாந் [1]தேவராந் தேவ [2]ரன்றே
[3]மாறியிப் பிறப்பில் [4]வந்தார் [5]மானுட ராகி மன்னோ
[6]ஆறுகொள் சடிலத் தானு மயனு[7]மென் றிவர்க ளாதி
வேறுள குழுவை யெல்லாம் மானுடம் வென்ற [8]தென்றே.

(இ - ள்.) 'அமரர்க்கு எல்லாம் - எல்லாத் தேவர்கட்கும், தேவர் ஆம் - கடவுளாகிய, தேவர் அன்றே-முதற்கடவுளே [ஸ்ரீமகாவிஷ்ணு தாமே], மாறி - (தமது சொரூபம்) மாறி, மானுடர் ஆகி - மனித சரீரமுடையவராய், இ பிறப்பில் - இந்தப்பிறவியைக் கொண்டு, வந்தார்-திருவவதரித்தார்; (ஆதலால்), ஆறுகொள் சடிலத்தான்உம்- கங்காநதியைக்கொண்ட சடையையுடையவனான உருத்திரனும், அயன்உம் - பிரமனும், என்ற இவர்கள் ஆதி - என்ற இவர்கள் முதலிய, வேறு உள குழுவை எல்லாம்-வெவ்வேறாகவுள்ள தெய்வ கணங்களை யெல்லாம், மானுடம் - இம்மனிதவர்க்கம், வென்றது - ஜயித்து மேற்பட்டது,' என்றே தேறினன் - என்றே நிச்சயித்தான், (சுக்கிரீவன்); (எ - று.)

இராமலக்ஷ்மணர் நல்லிலக்கணங்களுள் ஒன்றுனுங் குறைவின்றி யிருந்தமையால், சுக்கிரீவன், இவர்களைப் புருஷோத்தமனது அவதாரமென்றே கருதினன். 'தேவர்கட்குள் முதல்வனான திருமாலே மானிடனாகத் திருவவதரித்துவிட்டதனால், இம்மானிட வர்க்கம் தெய்வப் பிறப்பினுஞ் சிறப்புப் பெற்றிட்டதெனக் கூறினா னென்பதாம். பின்னிரண்டடிகளை முன்னிரண்டடிகள் சமர்த்தித்து நிற்பது-தொடர்நிலைச்செய்யுட்குறியணி; 'அமரர்க்கெல்லாந் தேவராந் தேவர்'—"முதலாவார் மூவரே யம்மூவருள்ளும்,முதலாவான் மூரிநீர் வண்ணன்" என்றார் பெரியாரும். முன்பு மீனம், கூர்மம், வராகம், நாரசிங்கம் முதலிய திருவவதாரங்கள் செய்திருத்தலால், 'இப்பிறப் பில் மானுடராகி வந்தார்' என்றானெனினுமாம். இனி, அமரர்க் கெல்லாந் தேவராந்தேவர் அன்றே - திரிமூர்த்திகளே, மானிட ராகி - (இரண்டு) மனிதராகி, வந்தார் எனினுமாம்: "தேவருக் கொருதலைவராமெனத் தெரியினவர், மூவர் மற்றிவரிருவர்" என அனுமப்படலத்துக் கூறியிருத்தலுங் காண்க. முதற் பொருளில், தேவர் வந்தார் - உயர்வுப் பன்மை; வடநூலார் 'பூஜாயாம் பஹுவசநம்' என்பர். மன்னோ - ஈற்றசை. என்றிவர்- தொகுத்தல்.

கபிலமுனிவரது கோபத்தீக்கு இலக்காகிச் சாம்பராய் நற்கதி யிழந்த தன்மூதாதையரான சகரபுத்திரர்களை உய்விக்கவேண்டித் தவஞ்செய்த பகீரத சக்கரவர்த்தியின் வேண்டுகோளினாற் கங்கா நதியைச் சடைமுடியி லேற்றமையால், சிவபிரான், 'ஆறுகொள்சடி லத்தான்' எனப்பட்டான். பி - ம்:—[1]தேவர்தந்தேவர்க்கு. [2]என்றே. [3]மாறியல், மாறிய. [4]வந்த. [5]மானுயர்யாக்கை. [6]ஆறுள, ஆறுயர். [7]என்றவர்கள். [8]அன்றே. ஆறுயர் சடிலத்தானே யென்றவராதி யாக—என்று சில பிரதிகளில் மூன்றாமடி. (100)

20.—சுக்கிரீவன் ஸ்ரீராமனை யணுக, அப்பிரான் இவனை உபசரித்தல்.

எனநினைந் [1]தினைய வெண்ணி யிவர்கின்ற காத [2]லோதக்
கனைகடற் [3]கரைநின் றேருக் கண்ணிணை களிப்ப நோக்கி
அனகனைக் குறுகி னானவ் வண்ணலு மருத்தி கூரப்
புனைமலர்த் தடக்கை நீட்டிப் போந்தினி திருத்தி யென்றான்.

(இ - ள்.) (சுக்கிரீவன்).—என நினைந்து - என்று நினைத்து, இனைய எண்ணி - இத்தன்மையவற்றை ஆலோசித்து,—இவர்கின்ற - மேன்மேற் பெருகுகின்ற, காதல் - அன்பாகிய, ஓதம் கனை கடல்நின்று - வெள்ளத்தையுடைய ஒலிக்கின்ற கடலினின்றும், கரைஏரு - கரையேருமல் [அன்புக்கு எல்லையில்லாதவனாய்], கண் இணை களிப்ப நோக்கி - (தனது) இரண்டு கண்களும் பெரு மகிழ்ச்சியடையும்படி தரிசித்து,—அனகனை - குற்றமற்றவனான ஸ்ரீராமனை, குறுகினான் - வந்து சமீபித்தான்; அ அண்ணல்உம் - அப்பெரியோனும்,—(அவனை நோக்கி), அருத்தி கூர - அன்பு மிக, புனை மலர் தட கை நீட்டி - அழகிய செந்தாமரைமலர்போன்ற பெரிய (தனது) திருக்கையைநீட்டி, 'போந்து - இங்குவந்து, இனிது - இனிமையாக, இருத்தி - இருப்பாய்,' என்றான் - என்று உபசரித்தான்; (எ - று.)

மிக்க அன்போடு சுக்கிரீவன் இராமபிரானையணுக, இராமபிரான் தானும் மிக்க கருணையுடன் அவனை வரவேற்று உபசரித்தனனென்பதாம். இங்கு இரு என்று காட்டக் கைநீட்டினான்; இது உபசாரக்குறிப்பு. இனி, "தந்மமைவைஷஸத்கார:—லாபஶ்சைவோத்தம: ப்ரபோ, யத்த்வமிச்சஸி ஸௌஹார்தம் - வாநரேண மயாஸஹ, ரோசதே யதிவாஸக்யம் - பாஹுரேஷப்ராஸாரித:, க்ருஹ்யதாம் பாணிநா பாணி: மர்யாதா பத்யதாம் த்ருவா...ஸ ப்ரஹ்ருஷ்டமநா ஹஸ்தம் - பீடயாமாஸபாணிநா" என்று ஸ்ரீவான்மீகர் கூறுவதை நோக்குமிடத்து, கையைப் பிடித்துக்கொண்டு குலுக்குதல் நட்பைக் காட்டும் மரியாதை யெனத் தெரிதலால், நண்பனான சுக்கிரீவனுடைய கையைப் பிடித்துக் குலுக்குமாறு ஸ்ரீராமன் கைநீட்டினனெனக் கொள்ளலுமாம். ந+அகன் = அநகன்; குற்றமில்லாதவன்; வடசொல். பி - ம்:—[1]இரங்கி. [2]ஓதைக். [3]கரைநின்றேற, கரைநின்றேறி, கரையுளாழ்ந்து, தலைநின்றேறி, துறைநின்றேறி. (101)

21.—இரண்டுகவிகள் - இராமசுக்கிரீவருக்குண்டான நட்பின்வருணனை.

தவாவலி யரக்க ரென்னுந் [1]தவாவிருட் பகையைத் தள்ளிக்
குவாலற நிறுத்தற் கேற்ற காலத்தின் கூட்ட மொத்தார்
அவாமுத லறுத்த சிந்தை யனகனு மரியின் வேந்தும்
உவாவுற வந்து கூடு முடுபதி யிரவி யொத்தார்.

(இ - ள்.) அவா முதல் அறுத்த சிந்தை அனகன்உம் ஆசையை (இயற்கையாகவே) வேரோடுபோக்கியமனத்தையுடைய

குற்றமற்றவனான ஸ்ரீராமனும், அரியின் வேந்துஉம் - வாநரராசனான சுக்கிரீவனும்,—(ஒருவரோடொருவர் கூடியவர்களாய்), தவா வலி அரக்கர் என்னும் - அழியாத பலத்தையுடைய ராக்ஷசரென்கிற, தவர் இருள் பகையை - எளிதில் அழியாத பகைவர்களாகிய இருட்டை, தள்ளி - ஒழித்து, குவால் அறம் நிறுத்தற்கு - கூட்டமாகத்திரண்ட தருமவொளியை நிலைநிறுத்துதற்கு, ஏற்ற - தக்கதாய்வந்த, காலத்தின் - காலத்தினது, கூட்டம் - சேர்க்கையை, ஒத்தார் - ஒத்திருந்தார்கள்: (இன்னும் அவர்கள்), உவா உற - அமாவாசியை வர, வந்து கூடும் - (ஒன்றாக) வந்து சேர்கின்ற, உடுபதி இரவி - சந்திர சூரியர்களையும், ஒத்தார்—; (எ - று.)

இராமசுக்கிரீவர்களது சிநேகம் - இராவணாதி ராக்ஷச சங்காரத்துக்கு மூலகாரணமாய் முடிதலால், 'தவாவலி......காலத்தின் கூட்டமொத்தார்' என்றும், இச்சிநேகம் இராமசந்திரனுக்கும் சூரியபுத்திரனுக்கும் உண்டானதாதலால், 'உவாவுற வந்து கூடு முடுபதி யிரவியொத்தார்' என்றும் கூறினர்; உவமையணி. ஆகவே, இங்குக் காலத்தின் கூட்டமென்றது - இரவுடன் பகல் கூடும் காலச்சந்தியைக் காட்டும். முதலடியில் அரக்கரை இருளாக உருவகஞ்செய்ததற்குஏற்ப, அறத்தைப்பகல்வெளிச்சமென உருவகஞ் செய்யப்பெறுத ஏகதேசவுருவகவணி, உவமையணிக்கு அங்கமாய் நின்றது. அறங்கள் மிகப்பலவகைப்படுதலால், 'குவாலறம்' என்றார். "மெய்த்திருப் பதம் மேவென்றபோதினும், இத்திருத்துறந்தேகென்ற போதினும், சித்திரத்தினலர்ந்த செந்தாமரை, யொத்திருக்கு முகத்தன்" என்றபடி ஒழித்தற்கரிய மண்ணாசை பொன்னாசைகளை வெறுத்ததனால், இராமபிரானை 'அவாமுத லறுத்த சிந்தை யனகன்' என்றார். அவா முதல் அறுத்த - காமம் முதலிய குற்றங்களைப் போக்கின என்றுமாம்.

சூரியகிரணங்களின் சம்பந்தத்தால் நிறைவுற்று அமிருதமயமாயிருக்கின்ற சந்திரனைக் கிருஷ்ணபக்ஷத்திலே அக்நிமுதலான தேவர்கள் தினம் ஒவ்வொரு கலையாகப் பானஞ் செய்கின்றார்கள்; இப்படி சதுர்த்தசிவரையில் தேவர்கள் பானஞ் செய்ததுபோக மிச்சப்பட்ட இரண்டுகலைகளுள் ஒன்றை அமாவாசையில் பிதிருக்கள் பானஞ்செய்கின்றார்கள்; இங்ஙனம் ஒருகலை மாத்திரமாய் மிச்சப்பட்ட சந்திரனைச் சூரியன் மீண்டும் பதினைந்து திதிகளில்தினம் ஒருகலையாகத் தன் கிரணத்தால் வளர்த்து நிறைக்கின்றான். தேவர்களாற் பானஞ் செய்யப்பெற்று இரண்டு கலைகள் மிச்சப்பட்டு நின்றவனான சந்திரன் சூரியகிரணங்களில் மறைந்து வசிக்கின்ற நாளே, அமாவாசை. உடுபதி - நக்ஷத்திரங்களுக்குத்தலைவன். பி - ம்:—[1] தகை, தகா, தா. (102)

22. கூட்ட [1]மொத் திருந்த வீரர் குறித்ததோர் பொருட்கு [2]முன்னாள்
ஈட்டிய தவமும் [3]பின்னர் முயற்சியு[4]மியைந்த தொத்தார்
[5]மீட்டும்வா ளரக்க ரென்னுந் தீவினை வேரின் வாங்கக்
கேட்டுணர் கல்வி யோடு ஞானமுங் கிடைத்த தொத்தார்.

(இ - ள்.) கூட்டம் ஒத்து இருந்த - நட்பாய்க் கூடியிருந்த, வீரர் - வீரர்கள் [ராமசுக்கிரீவர்கள்],—குறித்தது ஓர் பொருட்கு - நினைத்ததொரு காரியம் நிறைவேறுதற்கு, முன் நாள் ஈட்டிய தவம் உம் - முற்பிறப்பிற்செய்த நல்வினையும், பின்னர் - பின்பு [இப்பிறப்பிற்] (செய்கின்ற), முயற்சி உம் - பிரயத்தனமும், இயைந்தது - (ஒன்றோடொன்று) சேர்ந்து அமைந்ததை, ஒத்தார்—; மீட்டும் - மேலும்,—வாள் அரக்கர் என்னும் தீவினை - வாள்போலக் கொடிய ராட்சசர்களாகிய பாவத்தை, வேரின் வாங்க - வேரோடு அழிக்க, கேட்டு உணர் - (நல்லாசிரியர்பக்கல்) உபதேசம்பெற்று அறிந்த, கல்வியோடு - கல்வியறிவும், ஞானம் உம் - தத்துவஞானப் பயனான நல்லொழுக்கமும், கிடைத்தது - கூடியதையும், ஒத்தார்—; (எ-று.)

கல்வியும் ஞானமும் கூடிய வழியே தீவினையொழிதல் போலவும், ஊழ்வினையும் முயற்சியுங்கூடியவழியே ஒரு காரியம் முற்றுதல்போலவும், இவ்விருவரும் நண்பினராய்க் கூடியதனாலேயே ராட்சச சங்காரம், நிறைவேறுமென்பதாம்; உவமையணி. கல்வி யென்பது - கல்வியறிவையும், ஞானமென்பது - அக்கல்வியறிவாற் பெற்ற அறிவின் பயனான ஒழுக்கத்தையும் இலக்கணையாற் காட்டின. "எண்ணிய பொருளெலா மினிது முற்றுக" என்ற இடத்துப்போல, இங்கே, பொருள் - காரியம் என்ற அருத்தத்தில் வந்தது. பி - ம்:—[1]உற்று. [2]முன்னர். [3]அன்ன, பின்னாள். [4]இசைந்தது. [5]வீட்டும். 'கேட்டுணர் மனமுந் தீராக் கல்வியுங் கிடைத்த தொத்தார்' என்று சில பிரதிகளில் நான்காவதடி. (103)

23.—சுக்கிரீவன் ஸ்ரீராமனை நோக்கிக் கூறிய முகமன்.

ஆயதோ[1]ரமைதி யின்க ணருக்கன்சே யரசை நோக்கித்
[2]தீவினை தீய நோற்று[3]ரென்னின்யார் செல்வ நின்னை
[4]நாயக முலகுக் கெல்லா மென்னலா நலமிக் கோயை
[5]மேயினன் விதியே நல்கின் மேவலா காதென் னென்றான்.

(இ - ள்.) ஆயது ஓர் அமைதியின்கண் - (இவ்வாறு) கூடியிருந்த அச்சமயத்தில்,—அருக்கன் சேய் - சூரியகுமாரன் [சுக்கிரீவன்],—அரசை நோக்கி - ஸ்ரீராமனைப் பார்த்து, 'செல்வ - எல்லாச் செல்வமுமுடையவனே! உலகுக்கு எல்லாம் நாயகம் என்னல் ஆம் - சகலலோகங்களுக்குந் தலைமையான பொருளென்று சொல்லுதற்கு ஏற்ற, நலம் மிக்கோயை - நல்ல திருக்கலியாண குணங்கள்மிக்குள்ள வனாகிய, நின்னை - உன்னை, மேயினன் - (யான்வந்து) சேரப்பெற்றேன்; (ஆதலால்), என்னின் - என்னைக்காட்டிலும், தீவினை தீய நோற்றார் - கொடிய கருமம் ஒழியும்படி தவஞ்செய்தவர், யார் - யாவருளர்? விதியே நல்கின் - ஊழ்வினையேகொண்டுவந்து கூட்டி முடித்தால், மேவல் ஆகாது என் - சித்தியாதது யாது?' என்றான்—;

இப்பிறப்பில் நல்வினை செய்யாதிருந்தாலும் ஊழ்வினை யிருந்தால் எதுதான் சித்தியா தென்றபடி. இடையிரண்டடிகளிற் கூறிய சிறப்புப்பொருளை, 'விதியேநல்கின் மேவலாகாதென்' என்ற

பொதுப்பொருள் சமர்த்தித்துநிற்பது - வேற்றுப்பொருள் வைப்பணி; இதனை வடமொழியில் அர்த்தாந்தரந்யாஸாலங்கார மென்பர். ஆயது - பொருந்தியது. மிக்கோய் - வினையாலணையும்பெயரிடத்து யகரவீற்றயல் ஆ ஓ வாயிற்று. மேயினன் - அன்விகுதி, தன்மைக்கு வந்தது; புதியன புகுதல். அர்க்கன், விதி - வடசொற்கள். பி - ம்:— [1] அவதி. [2] தீயனதீய. [3] என்னுநன்னலத்தான்றன்னை, எண்ணு நன்னலத்தாயுன்னை, என்னுநன்னலத்தினையை, என்னுநன்னலத் தினை...நலத்தினேனை. [4] நாயகன். [5] மேவிய. சில பிரதிகளில் 'மேவினன் விதியே நல்க மேவலர்க்கரசே யென்றான்' என்று நான் காமடி. (104)

24.—இராமன் தாங்கள் அங்குவந்த வரலாற்றைக் கூறுதல்.

மையறு [1] தவத்தின் வந்த [2] சவரியிம் மலையில் நீவந்து
எய்தினை யிருந்த தன்மை யியம்பினள் யாங்க ளுற்ற
கையறு துயர நின்னாற் கடப்பது கருதி வந்தேம்
ஐயநிற் றீரு [3] மென்ன வரிக்குலத் தரசன் சொல்வான்.

(இ - ள்.) (அது கேட்டு ஸ்ரீராமன் சுக்கிரீவனை நோக்கி),—'ஐய- சிறந்தவனே!—மை அறு தவத்தின் வந்த சவரி - குற்றமில்லாத தவமுடையவளாய்வந்த சபரியானவள், இ மலையில் - இந்த ருசியமூக பருவதத்தில், நீ வந்து எய்தினை இருந்த தன்மை-நீ வந்து பொருந்தி யிருந்த வரலாற்றை, இயம்பினள் - சொன்னாள்; யாங்கள் உற்ற கை அறு துயரம் - நாங்கள் அடைந்த சிறுமையில்லாத [மிகப்பெரிய] துன்பம், நின்னால் கடப்பது - உன்னால் நீங்குவதை, கருதி - எண்ணி, வந்தேம் - (இங்கு) வந்தோம்; நின் தீரும் - (அத்துன்பம்) உன்னால் தீரக்கடவதாம்,' என்ன - என்றுசொல்ல,—அரி குலத்து அரசன் - குரங்குக் கூட்டத்துக்குத் தலைவனாகிய சுக்கிரீவன், சொல்வான் - சொல்பவனானான்; (எ - று.)

கவந்தன்சொற்படி நின்னைச் சினேகிக்குமாறு யான் நாடிவரும் போது சபரியானவள் நீ உள்ள இடத்தைத் தெரிவிக்க எனது துய ரத்தைப் போக்கிக்கொள்ளுமாறு இப்போது உன்னிடத்து வந்தே னென்று இராமபிரான் கூறினனென்பதாம். தவத்திற்குக் குற்றம் - காமம் வெகுளி மயக்கம் இடையேநிகழ்வது. கையறுதல் - துணை யில்லாமை: செயலில்லாமையாகவுமாம். வந்தேம் - படர்க்கையை உளப்படுத்திய தன்மைப்பன்மை, இலட்சுமணனை உட்படுத்திற்று. துயரம் - சீதையைப் பிரிந்தது. பி-ம்:—[1] தவத்தினான், எங்களாலும். [3] சபரி. [3] இந்த வவலமென்றரியுஞ் சொன்னான். (105)

25.—சுக்கிரீவன் இராமபிரானைச் சரணம் புகுதல்.

[1] முரணுடைத் தடக்கை யோச்சி முன்னவன் பின்வந் தேனை
[2] இருணிலைப் புறத்தின் காறு முலகெங்குந் [3] தொடர விக்குன்று
[4] அரணுடைத் தாகி யுய்ந்தே னுருயிர் [5] துறக்க லாற்றேன்
சரணுனைப் புகுந்தே னென்னைத் தாங்குதல் தரும மென்றான்.

(இ - ள்.) 'முன்னவன் - (எனக்கு) முன்பிறந்தவன் [தமையன்] ஆகிய வாலி, பின் வந்தேனை - பின்பிறந்தவனான என்னை, முரண் உடை தட கை ஓச்சி - வலிமையையுடைய பெரிய (தனது) கையை (அடித்தற்காக) உயரத்தூக்கிக் கொண்டே, இருள் நிலை புறத்தின் காறும் - இருட்டுக்கு இருப்பிடமாகிய இவ்வுலகத்துக்கு அப்புறம் வரையிலும், உலகு எங்கும் - சகலலோகங்களிலும், தொடர - பின் தொடர்ந்து துரத்த, இ குன்று உடைத்து அரண் ஆகி உய்ந்தேன் - இம்மலையையே உரிய பாதுகாவலாகக்கொண்டு பிழைத்தவனும், ஆர் உயிர் துறக்கல் ஆற்றேன் - அரிய பிராணனை விடமாட்டாமல் வைத்துக்கொண்டிருப்பவனுமாகிய நான், உனை சரண் புகுந்தேன் - (இப்பொழுது) உன்னையே அடைக்கலமாக அடைந்தேன்; என்னை தாங்குதல் - என்னைக் காப்பாற்றுதல், தருமம் - தருமமாகும்.' என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

மதங்கமுனிவர்சாபத்தால் ருசியமூகபருவதத்தில் வாலி வந்தால் தலைவெடித்து இறப்பானாதலால், 'இக்குன்று அரணுடைத்தாகி யுய்ந்தேன்' என்கிறான்; அது, மேல் விவரமாகக் கூறப்படும். சரண் - சரணம். 'இருணிலைப்புறம்' என்றது, சக்கரவாள பருவதத்துக்கு அப்பால் அந்தகாரமொன்றுசூழ்ந்திருப்பதனால். [1]முரண்வலி என்ற பாடத்துக்கு - ஒருபொருட்பன்மொழியாம். அரண் உடைத்து ஆகி - உடைத்து அரண் ஆகி என மாறுக: உடைத்து - உரியது என்றவாறு. இங்ஙனங்கொள்ளாது, 'அரணுடைத்தாகி யுய்ந்தேன்' என்பதற்கு - அரணுடையதாகி யுய்ந்தேனென்று உரைக்குமிடத்துத் திணைவழுவாத லுணர்க: இனி, ஆகி - ஆக என் எச்சத்திரிபாக்கியும் உரைக்கலாம். [4]அரணுடைத்தாக்கி வந்தேன் என்ற பாடமும் உண்டு. பி-ம்:—[2]இருணிலப்புறத்தின், உருணிலைபுறத்தின். [3]தொடரக் குன்றின்று, தொடரக் குன்றம். [5]துறக்கலஞ்சி, துறக்கலாதேன். (106)

26.—இராமபிரான் சுக்கிரீவனுக்கு அபயமளித்தல்.

என்றவக் [1]குரக்கு வேந்தை யிராமனு மிரங்கி நோக்கி
[2]உன்றனக் குரிய [3]வின்ப துன்பங்க [4]ளுள்ள முன்னாள்
சென்றன [5]போக மேல்வந் துறுவன [6]தீர்ப்ப லன்ன
நின்றன வெனக்கு நிற்கு நேரென மொழியு நேரா.

இதுவும், மேற்கவியும் - ஒரு தொடர்.

(இ - ள்.) என்ற - என்று சொன்ன, அ குரங்கு வேந்தை - குரங்குகளுக்கு அரசனாகிய அச்சுக்கிரீவனை, இராமனும்—, இரங்கி நோக்கி - மனமிரங்கிக் கடாட்சித்து, 'உன்தனக்கு உரிய - உனக்கு உரிமையான, இன்ப துன்பங்கள் உள்ள - சுக துக்கங்களுள்ளவற்றுள், முன்நாள் சென்றன போக - இதற்குமுற்போதில் (அனுபவித்துக்) கழிந்தன தவிர, மேல் வந்து உறுவன - இனி வந்து நேருந்துன்பங்களை யெல்லாம், தீர்ப்பல் - நீக்குவேன்; அன்ன நின்றன - இனிவருவனவாகிய அச்சுகதுக்கங்கள், எனக்குஉம்நிற்குஉம்

நேர் - எனக்கும் உனக்கும் சமானமாகும்', என - என்று, மொழியும் நேரா - வாக்குத்தத்தமுஞ் செய்து,—(எ - று.)—இச்செய்யுளில் 'நேரா' என்னும் வினையெச்சம், மேற்கவியில் 'என்றான்' என்பதனோடு முடியும்.

உனக்கு வரும் இன்பத்தையும் துன்பத்தையும் எனக்கு வந்ததாகவே பாவித்துத் துன்பம் வராமற் காப்பே னென்று அபய மளித்தன னென்க. [6] தீர்த்தலின்றி என்னும் பாடத்துக்கு, மேல் வந்து உறுவன - மேல்வருவனவும், தீர்த்தல் இன்றி நின்றன - தீரா மல் நின்றவையுமாகிய இன்பதுன்பங்க ளென்க. குரங்குவேந்து - வேற்றுமையில் மென்றொடர்மொழி தன் இன வன்றொடராயிற்று. நேர்வன என்பது - விகுதி முதலியவைகெட்டு, நேர்என நின்றது; "கொள்வாருங் கள்வரு நேர்" என்னுமிடத்துப்போல. மொழியும் நேரா, உம்மை - மேல்வருங் கவியை நோக்குதலால், எதிரது தழுவிய எச்சம்: நேர்தல்-ஈதல். பி - ம்:—[1] குரங்கு. [2] உன்றனக்குள்ள, இன்று னக்குரிய. [3] இன்பத்துன்பங்கள். [4] எவையும். [5] போக்கி. [6] தீர்த்தலன்றி, தீர்தலன்றி, தீர்ப்பனன்ன. (107)

27.—இராமபிரான் சுக்கிரீவனை உயிர்த்துணைவனாகக் கொள்ளுதல்.

மற்றினி யுரைப்ப [1] தென்னே வானிடை மண்ணில் [2] நின்னைச்
செற்றவ [3] ரென்னைச் செற்றார் தீயரே யெனினு முன்னோடு
உற்றவ [4] ரெனக்கு முற்றா ருன்கிளை யென [5] தென் காதல்
சுற்றமுன் சுற்ற [6] நீயென் னின்னுயிர்த் துணைவ னென்றான்.

(இ - ள்.) 'இனி உரைப்பது மற்று என்னே - இனிமேல் (யான் பலவாகச்) சொல்லவேண்டுவது வேறு யாது உளது? வானிடை - சுவர்க்கலோகத்திலும், மண்ணில் - இப்பூலோகத்திலும், நின்னை செற்றவர் - உன்னை வருத்தியவர், என்னை செற்றார் - என்னை வருத்தியவராவர்; தீயரே எனினும் - துஷ்டர்களேயானாலும், உன்னோடு உற்றவர்-உன்னுடன் சேர்ந்தவர்கள், எனக்குஉம் உற்றார் - எனக்கும் நண்பராவர்; உன் கிளை - உனது பந்துஜனமெல்லாம், எனது - எனது பந்துஜனமாம்; என் காதல் சுற்றம் - எனது அன்புள்ள பந்து வர்க்கமெல்லாம், உன் சுற்றம்- உனது பந்துவர்க்கமாம்: நீ—, என் இன் உயிர் துணைவன்- எனது இனிய பிராணசிநேகிதனாவாய்', என்றான்—; (எ - று.)

சுக்கிரீவனோடு கொண்ட நட்பின் உறைப்பை விளக்க ஸ்ரீராமன், அந்தச் சுக்கிரீவனோடு பகைத்தவர் நட்பாயுற்றவர் கிளைஞர் என்ற மூவர் திறத்தும் அந்தச்சுக்கிரீவன்போலவே நான்நடந்து கொள்வே னென்கின்றான். 'தீயரேயெனினு முன்னோடுஉற்றவர் எனக்கும் உற்றார்,' என்பது பொருந்துமோ என்று ஒருகடா: அதற்கு விடை - சுக்கிரீவன் நட்புக்கொள்ளும்போது ஆராய்ந்தே நட்புக் கொண்டிருப் பானாதலாலும், அங்ஙன் நட்கப்பட்டவன் பின்னர் எக்காரணத்தினா லேனும் குணம் மாறினானாயினும் "நட்டபின் வீடில்லை நட்பாள்

பவர்க்கு" என்ற நியாயத்தால் சுக்கிரீவனுக்கு அவன் நட்பை விட்டிடுதல்கூடாது ஆதலாலும், அவனைப்போலவே, அவன் நண்பர் முதலியோரைப் பாவிக்கும் ஸ்ரீராமனுக்கும் அத்தீயரின் உறவு விடலாகாது என்று நட்பினுறைப்பைத்தெரிவித்தவாறு என்க. காரியத்தின்பொருட்டுச் சுக்கிரீவனோடு நட்புக்கொண்ட ஸ்ரீராமன் இராசதந்திரமுறையால் இவ்வாறுகூறுகின்றானென்றலும் ஒன்று. காரியார்த்தமாக நட்புக்கொண்ட ஸ்ரீராமன் அந்தச் சுக்கிரீவனுடைய நண்பருள் சிலரைக் கொண்டு சிலரைத் தள்ளுதல் தகுதியன்று என்று இங்ஙன் கூறுகின்றானுமாம். துணைவன் - சகோதரனுவா யென்றுமாம்.

கிளை - மரத்தைக் கிளைபோலத் தழுவிநிற்கும் உறவினத்திற்கு உவமவாகுபெயர். எனது-அகரச்சாரியையும் துவ்விகுதியும் பெற்று வந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று. சுற்றம் - சுற்றிநிற்பது; அம்-வினைமுதற்பொருள் விகுதி. கிளை, சுற்றம் என்பன - சாதியொருமை. உயிர்த் துணைவன் - உவமத் தொகை. தீயரே, ஏ - தேற்றம். எனினும், உம் - இழிவுசிறப்பு. பி - ம்—[1] என்னை. [2] உன்னை. [3] எம்மை. [4] எமக்கும். [5] எம். [6] நீயேயென், நீயேயெம். (108)

28.—அதுகேட்டு வானரரும் வானவரும் மகிழ்தல்.

ஆர்த்தது குரக்குச் சேனை யஞ்சனை சிறுவன் மேனி
போர்த்தன பொடித்த [1]ரோமப் புளகங்கள் பூவின் மாரி
தூர்த்தனர் விண்ணோர் [2]மேகஞ் சொரிந்தன வனகன் சொன்ன
[3]வார்த்தை யெக்குலத்து ளோர்க்கு [4]மறையினு மெய்யென் றுன்னா.

(இ - ள்.) 'அனகன் - நிர்மலனாகிய ஸ்ரீராமபிரான், சொன்ன - அருளிச்செய்த, வார்த்தை-திருவாக்கானது, எ குலத்துஉளோர்க்கு உம் - எந்த [எல்லாக்] குலத்தில் தோன்றியவர்களுக்கும், மறையின் உம் - வேதவாக்கைக்காட்டிலும், மெய் - உண்மையானதாம்.' என்று உன்னா - என்று எண்ணி,—குரங்கு சேனை - வானரக்கூட்டம், ஆர்த்தது - ஆரவாரித்தது; அஞ்சனை சிறுவன் - அஞ்சனாதேவி குமாரனான அநுமானது,மேனி - சரீரத்தை, பொடித்த ரோமம் புளகங்கள்-அரும்பிய மயிர்ச்சிலிர்ப்புக்கள், போர்த்தன - மறைத்தன; விண்ணோர் - தேவர்கள், பூவின் மாரி தூர்த்தனர் - மலர் மழையால் (பூமியை) நிறைத்தார்கள்; மேகம் - மேகங்கள், சொரிந்தன - (நீர்த்துளி) பொழிந்தன; (எ - று.)

'வேதவாக்கைப் பார்க்கிலும் சிறப்புற்ற ஸ்ரீராமனது மெய்யுரை பிறந்தபடியால், இனி நமக்கு என்னகுறை? வாலிவதம் தவறாமல் இராவணாதி அரக்கரின்சங்காரத்துக்கு மூலமாம்' என்று எண்ணி, வானவரும் வானரருடன் ஒருசேரக் களிப்படைந்தனர். தான் இராமபிரானிடத்துத் தூதுபோய் வந்தது பயன்பெற்றதனால், அநுமான் மேனிபொடித்தனனென்க. நற்காலத்துக்கு அடையாளமாக மேகம் மழைபொழிந்தன. [2]மேகஞ்சொரிந்தன கனகமண்ணல் என்ற பாடத்துக்கு, அண்ணல் - (ஸ்ரீராமனது) வார்த்தை

யை மெய்யென்று எண்ணி, மேகங்கள் பொன்மழை பொழிந்தன வென்க. பி - ம்—[1]ரோமபுளகங்கள். [3]வார்த்தையே. [4]மறை யெனும். (*109*)

29.—சுக்கிரீவனது இருப்பிடத்துக்கு எழுந்தருளவேண்டு மென்று அநுமான் விண்ணப்பிக்க இராமபிரான் உடன்படுதல்.

ஆண்டெழுந் தடியிற் [1]றாழ்ந்த அஞ்சனை [2]சிங்கம் வாழி
தூண்[3]திரள் தடந்தோண் மைந்த தோழனு நீயும் வாழி
ஈண்டு[4]நுங் கோயி லெய்தி [5]யினிதினி னிருக்கை [6]காண
வேண்டுது மருளு கென்றான் வீரனும் விழுமி தென்றான்.

(இ - ள்.) ஆண்டு - அப்பொழுது, எழுந்து - எழுந்திருந்து, அடியில் - (ஸ்ரீராமனது) திருவடிகளில், தாழ்ந்த - விழுந்து வணங்கிய, அஞ்சனை சிங்கம் - அஞ்சனாதேவியினது வயிற்றில் தோன்றிய சிங்கம்போன்ற மகாவீரனாகிய அநுமான்,—'தூண் திரள் - தூண் போலத் திரண்டிருக்கின்ற, தடதோள் - பெரிய தோள்களையுடைய, மைந்த - சக்கரவர்த்தித் திருமகனே! தோழன்உம் நீஉம் - உனது தோழனாகிய சுக்கிரீவனும் நீயும், வாழி வாழி - பலகாலம் வாழ வீர்களாக; ஈண்டு - இப்பொழுது, (நீங்கள்), நும் கோயில் எய்தி - உமது மாளிகையை அடைந்து, இனிதினின் - சுகமாக, இருக்கை - எழுந்தருளியிருத்தலை, காண—, வேண்டுதும் - விரும்புகிறோம்; அருளுக - கருணைபுரிக, என்றான் - என்றுகேட்டுக்கொண்டான்; வீரன்உம் - ஸ்ரீராமனும், 'விழுமிது - (அது) மேன்மையானது', என்றான் - என்று சொல்லி உடன்பட்டான்; (எ - று.)

அநுமான் இராமசுக்கிரீவர் நட்புக்கொண்டமைக்கு உவந்து வாழ்த்துக்கூறி, அச்சுக்கிரீவனது இருப்பிடத்துக்கு எழுந்தருள வேண்டுமென விண்ணப்பிக்க, இராமபிரானும் உடன்பட்டன னென்பதாம். விழுமிது - உடன்பாட்டுக்குறிப்புச்சொல். 'தோழனும் நீயும் வாழி' என்றது - உம்மிருவர்க்கும் இப்போது நேர்ந்த நட்பு நித்தியமாய்ச் செல்லவேணுமென்ற குறிப்பு. மேலோரிடங் கீழோர் ஒன்று சொல்லும்போது 'ஜய,' 'விஜயீபவ' என்றாற்போல முதலில் வாழ்த்துக்கூறிப் பின்பு செய்தி சொல்லுதல், இயல்பு. சுக்கிரீவன் மாளிகையை 'நுங்கோயில்' என உளப்படுத்தியது - உரிமைபற்றி. கோயில் - கோ இல்: அரசனது இருப்பிடம்; சிறந்த இடமெனினுமாம்.

சிங்கம்போன்றவனை 'சிங்கம்' என்றது - உபசார வழக்கு. வாழிய என்னும் வியங்கோள்முற்றின் ஈற்றுஉயிர்மெய்கெட்டது. முதலிலுள்ள 'வாழி' என்பதை, முன்னிலை யசைச்சொலெனலு மாம். அருளுகென்றான், அகரம் - தொகுத்தல். பி - ம்:—[1]தாழ்ந்தவ், தாழ்ந்து. [2]சிறுவன். [3]திகழ், தரும், திரட். [4]நங். [5]இனிதினி யிருக்கை, இனிதினிலிருத்தல், இனிதினும் மிருக்கை, இனிது

நீயிருக்கை, இனிதினீ யிருக்கை. [6]காணவேண்டுநுமருளென்னென்றான். (110)

இங்கே யொருபாடல் சிலபிரதியிற் காண்பது வருமாறு:—"கடுத்தெழு மதத்தைச் சீறும் கதிர்ச்சுடர்க் கடவுளாய்ந்து, வடித்தநூன் முழுதுந் தானோர் வைகலின் வரம்புதோன்றப், படித்தவன் வணங்கி வாழ்த்திப் பருமணிக்கனகத்தேர்ண்மேல் எடுத்தன னிரண்டு பாலு மிருவரை யேக லுற்றான்".

30.—யாவரும் பூஞ்சோலையை அடைதல்.

[1]ஏகின ரிரவி சேயு மிருவரு [2]மரிக ளேறும்
ஊகவெஞ் சேனை [3]சூழ வறந்தொடர்ந் துவந்து வாழ்த்த
நாகமு [4]நரந்தக் காவு நளினவா விகளு [5]நண்ணிப்
போக[6]பூ மியையு [7]மேசும் புதுமலர்ச் சோலை புக்கார்.

(இ - ள்.) இரவி சேய்உம் - சூரிய குமாரனான சுக்கிரீவனும், இருவர்உம் - இராமலட்சுமணர்களும்,—அரிகள் ஏறுஉம் - குரங்குகளுக்குச் சிங்கம்போன்றவனான அநுமானும், வெம் ஊகம் சேனை - கொடிய வானரசேனை, சூழ - சூழ்ந்துவரவும்,—அறம் - தருமதேவதை, தொடர்ந்து - பின்தொடர்ந்து வந்து, உவந்து - மகிழ்ந்து, வாழ்த்த - வாழ்த்தாநிற்கவும், ஏகினர் - புறப்பட்டவராய்,—நாகம்உம் - புன்னை மரச்சோலைகளும், நரந்தம்காஉம் - நரந்தமென்னும் மரங்களின்சோலையும், நளினம் வாவிகள்உம் - தாமரைத் தடாகங்களும், நண்ணி - பொருந்தி, போக பூமியைஉம் ஏசும் - நல்வினைப்பயன்களை யனுபவிக்குமிடமாகிய சுவர்க்கம் முதலிய லோகங்களையும் இகழும்படியான, புது மலர் சோலை - புதிய [அன்றுமலர்ந்த] மலர்களையுடைய பூஞ்சோலையை, புக்கார் - அடைந்தார்கள்; (எ - று.)

அழிந்துபோவதாயிருந்த தன்னைக் கைகொடுத்துக் காப்பாற்றுவதனால், தருமதேவதை வாழ்த்துவதாயிற்று. ஊகம் - குரங்கின் சாதிபேதங்களுள் ஒன்று என்பதை "குரங்குமுசுவுமூகமுமூன்றும், நிரம்ப நாடி னப்பெயர்க்குரிய" என்னுந் தொல்காப்பியச் சூத்திரங் கொண்டு உணர்க. நரந்தம் - ஓர் மரவிசேடம்: நாரத்தை மரமென்பர். போகபூமியையும் ஏசுதல் - அளவிறந்த இன்பத்தைத் தரும் இடமாயிருத்தல். 'போக பூமியையும்' என்ற உம்மை - உயர்வு சிறப்பு. பி - ம்:—[1]ஏகினார், ஏகினன். [2]அரிகளென்னும். [3]சூழ்வந்தடி, சூழவந்தடி. [4]நரந்தை. [5]நல்கி, மல்கி. [6]பூமியையே. [7]ஏயும். (111)

31.—அச்சோலையின் சிறப்பு.

ஆரமு மகிலுந் [1]துன்றி யவிர் [2]பளிக் கறைய ளாவி
நாரநின் றனம்பாற் [3]றேன்றி நவமலர்த் தடங்க [4]ளுடும்
பாரமு [5]மருங்குந் தெய்வத் தருவுநீர்ப் பண்ணை யாடுஞ்
சூரர மகளி ருசல் துவன்றிய சும்மைத் தன்றே.

(இ - ள்.) (அச்சோலை),—ஆரம்உம் அகில்உம் துன்றி - சந்தன மரங்களும் அகில்மரங்களும் நெருங்கப்பெற்று, அவிர் பளிங்கு அறை அளாவி - விளங்குகின்ற படிகப்பாறைகள் பொருந்தப்பெற்று, நாரம் நின்றன போல் தோன்றி - (அப்பளிக்கறைகள் விளக்கத்தால் தெளிவான) நீர் (எழுந்து) நின்றனபோலக் காணப்பெற்று,—நவம் மலர் தடங்கள் நாடும் பாரம்உம் - புதுமையான [அப்பொழுதுமலர்ந்த] மலர்களுடைய தடாகங்களின் (கண்டோர்) விரும்பும்படியான (இரண்டு) கரைகளிலும், மருங்குஉம் - பக்கங்களிலுமுள்ள, தெய்வம் தருவு - தெய்வத்தன்மையையுடைய மரங்களில், நீர் பண்ணை ஆடும் சூர் அரமகளிர் - நீர்விளையாடுகின்ற தெய்வத்தன்மையையுடைய தேவமாதர்களின், ஊசல் - ஊஞ்சல், துவன்றிய - தொங்கியசையப் பெற்ற, சும்மைத்து - ஆரவாரத்தையுடையது; (எ - று.)

சந்தனம் முதலிய சிறந்த மரங்களும் பளிக்கறைகளும் பொருந்தி, தெய்வப்பெண்கள் தம் உலகத்தைவிட்டு இங்கு வந்து தாமரைத் தடாகங்களில் ஜலக்கிரீடை செய்து அருகிலுள்ள மரங்களில் ஊஞ்சல் விளையாடப் பெற்ற சிறப்பையுடையது அச்சோலை என்றபடி. பளிக்கறை - பளிங்கினாலியன்ற சிறிய வீடுகள் எனலுமாம். தரு - தருவு என உகரச்சாரியை பெற்று வந்தது. பண்ணை - மகளிர்விளையாட்டு. சும்மைத்து - ஒன்றன்பாற்குறிப்பு முற்று. அன்று; ஏ - ஈற்றசை. பி - ம்:—[1] துன்னி. [2] பளிக்கறைகளூர, பளிக்கறைகளாவி. [3] தோன்ற நவமணித். [4] நீடும். [5] அருகும். (112)

வேறு.

32.—அங்கு உள்ள இரத்தினங்களின் சிறப்பு.

அயர்வில் கேள்விசா லறிஞர் வேலைமுன்
பயில்வில் கல்வியார் பொலிவில் பான்மைபோல்
குயிலு மாமணிக் [1] குழுவு சோதியால்
வெயிலும் [2] வெள்ளிவெண் மதியு மேம்படா.

(இ - ள்.) அயர்வு இல் கேள்வி சால் அறிஞர் வேலைமுன் - தளர்ச்சியில்லாத நூற்கேள்விகள் அமையப்பெற்ற புத்திமான்களுடைய கூட்டத்துக்கு எதிரில், பயில்வு இல் கல்வியார் பொலிவு இல் பான்மை போல் - கல்விப்பயிற்சியில்லாதவர்கள் மேன்மையடையாத தன்மைபோல,—குயிலும் மா மணி குழுவு சோதியால் - (அச்சோலையிற்) பதிக்கப்பட்டுள்ள சிறந்த [பெரிய] இரத்தினங்களினது கூட்டமாகத்திரண்ட ஒளியினால், வெயில்உம் - சூரியகாந்தியும், வெள்ளி வெள் மதிஉம் - வெள்ளிபோன்ற வெண்மையான சந்திரனது காந்தியும், மேம்படா - (அங்கு) மேன்மைப்பட்டு விளங்கா; (எ - று.)

மாமணிச்சோதியால் வெயிலும் மதியும் மேம்படா என, ஒன்றினில் மற்றொன்று மறைந்ததாகக் கூறியது - மறைவணி. அங்குள்ள இரத்தினங்களின் ஒளி சூரியசந்திரர்களின் ஒளியினும் மிக்கு விளங்குவதென்றபடி. இனி, ஆங்கு உள்ள மணியின் சோதியால் வெயிலும், வெள்ளியின் சோதியால் மதியும் மேம்படா என்று உரைப்பினுமாம். "எழுத்தறியார் கல்விப்பெருக்கமனைத்தும், எழுத்தறிவார்க்காணின் இலையாம்—எழுத்தறிவா, ராயுங் கடவுளவிர்சடைமுன் கண்டளவில், வீயுஞ் சுரநீர்மிகை" எனப் பிற்காலத்தார் கூறியிருப்பதுங் காண்க.

அயர்வு - ஐயந்திரிபு. கேள்வியானது கல்வி யறிவைப்பெருக்குதலால் 'கேள்விசாலறிஞர்' என்றார். வேலையென்னுங் கடலின் பெயர் - இலக்கணையால், அதுபோலப் பரந்த கூட்டத்தை யுணர்த்திற்று; உவமையாகுபெயர். பயில்வில் கல்வியார் - கல்வி பயில்வில்லார் என விகுதி பிரித்துக் கூட்டுக. வெள்ளி - வெண்மையுடைமையினாற் காரணப்பெயர். பி - ம்:—[1]குழுமு. [2]வெள்ளி வெண்ணிலவு மேம்படா.

இதுமுதல் நாற்பதுகவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் மூன்றுஞ்சீரும் மாச்சீர்களும், மற்றை இரண்டும் கூவிளச்சீர்களுமாகிய கலிவிருத்தங்கள். (113)

33.—இராமசுக்கிரீவர் மலர்ப்பாயலி லிருந்து அன்போடு அளவளாவுதல்.

[1]ஏய வன்னதா மினிய சோலைவாய்
[2]மேய மைந்தனுங் கவியின் வேந்தனும்
தூய [3]பூவணை பொலிந்து தோன்றினர்
ஆய [4]வன்பினோ டளவ ளாவுவார்.

(இ - ள்.) ஏய - தகுதியாக, அன்னது ஆம் இனிய சோலை வாய் மேய - அப்படிப்பட்டதாகிய அழகிய சோலையிற் சேர்ந்த, மைந்தன் உம் - இராமபிரானும், கவியின்வேந்தன் உம் - வாநரவரசனும் [சுக்கிரீவனும்], தூய பூ அணை பொலிந்து தோன்றினர் - பரிசுத்தமான மலராசனத்தில் வீற்றிருந்து விளங்கினவர்களாய், ஆய அன்பினோடு அளவளாவுவார் - பொருந்திய அன்புடனே மனங்கலந்து உசாவுவாராயினர்; (எ - று.)

அளவளாவுதல் - தன்னளவையும் பிறனளவையும் ஒருவரையொருவர் விசாரித்தல். ஏய - ஏய் என்பதன் அடியாப் பிறந்த செயவெனெச்சம். சோலைவாய், வாய் - ஏழனுருபு. மேய - மேவிய. கவி = கபி - குரங்கு: வடசொல். பி - ம்:—[1]ஏயினர்கடாம். [2]மேய மைந்தரும். [3]பூவணைப். [4]அன்பினல். (114)

34—இராமபிரான் நீராடி விருந்துண்ணல்.

கனியுங் [1]கந்தமுங் காயுந் [2]தூயன
இனிய யாவையுங் கொணர யாரினும்
புனிதன் மஞ்சனத் தொழில்[3] புரிந்துபின்
இனி[4]தி ருந்துநல் விருந்து மாயினான்.

(இ - ள்.) கனிஉம் - பழங்களையும், கந்தம்உம் - கிழங்குகளையும், காய்உம் - காய்களையும், தூயன இனிய யாவைஉம் - பரிசுத்தமாயும் இனிமையாயுமுள்ள மற்றைச் சாகம் [இலை] மூலம் [வேர்] முதலிய வற்றையும், கொணர - (அநுமான் முதலிய வாநரர்கள்) கொண்டு வந்து அமைக்க,—யாரின்உம் புனிதன் - யாவரினும் பரிசுத்தனாகிய ஸ்ரீராமன், மஞ்சனம் தொழில் புரிந்து - நீராட்டஞ்செய்துகொண்டு, பின் - பின்பு, இனிது இருந்து - இனிமையாக இருந்து, நல் விருந்து உம் ஆயினான் - நல்ல விருந்தாளியும் ஆனான் [அவற்றை யுண்டருளினனென்றபடி]; (எ - று.)

சுக்கிரீவன் தன் பரிவாரங்களைக் கொண்டு விருந்து அமைக்க, இராமபிரான் நீராடி இருந்து விருந்துண்டானென்பதாம். விருந்தினனுக்கு நன்மை - பெறுதற்கு அரியவனாய் ஞான ஒழுக்கங்களால் உயர்ந்து நிற்றல். கந்தம் - வடசொல். மஞ்சனம்-மஜ்ஜநம்: வடமொழி. விருந்து - புதுமை; இங்கு ஆகுபெயராய், புதியனாய் வந்தவன்மேல் நின்றது. விருந்தும், உம்மை - இறந்தது தழுவியது. பி - ம்:—[1]மூலமும். [2]தூயநன்கு. [3]புரிந்த. [4]அருந்தும். (*115*)

35.—இராமன் சுக்கிரீவனை அன்பினால் ஒன்று வினாவுதல்.

விருந்து மாகியம் மெய்ம்மை யன்பினோடு
இருந்து [1]நோக்கிநின் றிறைவன் சிந்தியாப்
பொருந்து [2]நன்மனைக் குரிய பூவையைப்
பிரிந்து ளாய்[3]கொலோ நீயும் பின்[4]னென்றான்.

(இ - ள்.) அ மெய்ம்மை அன்பினோடு இருந்து - அப்படிப்பட்ட உண்மையான அன்புடனேயிருந்து, இறைவன் - ஸ்ரீராமன்,—விருந்துஉம் ஆகி - (இவ்வாறு) விருந்தினனும் ஆகி [உண்டு], நோக்கி நின்று - (தனக்கு விருந்து நிகழ்த்தியபோது நடந்ததைப்) பார்த்திட்டு, சிந்தியா - ஆலோசித்து,—பின் - பின்பு, (சுக்கிரீவனைநோக்கி), 'பொருந்தும் நல் மனைக்கு - பொருந்திய நல்ல இல்லற வாழ்க்கைக்கு, உரிய - இன்றியமையாத, பூவையை - மனைவியை, நீயும்—, பிரிந்து உளாய்கொலோ - (என்னைப்போலவே) பிரிந்துள்ளாயோ?' என்றான் - என்று வினாவினான்; (எ - று.)

அதிதியாகிய தம்மைச் சுக்கிரீவன் மனைவியில்லாமல் உபசரிப்பதைக் கண்டு இவ்வாறு இராமபிரான் வினாவினனென்க. மனை - வீடு; பூவை - கிளி: இவை - முறையே மனைவாழ்க்கைக்கும், பூவை போன்றவளுக்கும் இடவாகுபெயரும், உவமவாகுபெயருமாம்.

கொல் - ஐயம். ஓ - வினா. நீயும், உம் - இறந்தது தழுவிய எச்சம். பி - ம்:—[1] நீடுநோக்கு, நோக்கிநொந்து. [2] நின். [3] கொலாம். [4] எனா. (116)

36.—அதற்கு அநுமான் விடைகூறத் தொடங்குதல்.

என்ற வேலையி னெழுந்து மாருதி
குன்று போலநின் றிருகை கூப்பினான்
நின்ற [1] நீதியாய் நெடிது கேட்டியால்
[2] ஒன்றி யானுனக் குரைப்ப துண்டெனா.

இதுமுதல் முப்பது கவிகள் - ஒரு தொடர்.

(இ - ள்.) என்ற வேலையின்-என்று (ஸ்ரீராமன்) வினாவியபொழுதில்,—மாருதி - அநுமான்,—எழுந்து - எழுந்திருந்து, குன்றுபோல நின்று - மலைபோல (அருகில் வந்து) நின்று, இரு கை கூப்பினான் - இரண்டுகைகளையும் கூப்பித்தொழுதவனாய்,—(ஸ்ரீராமனை நோக்கி), 'நின்ற நீதியாய் - நிலையாய்நின்ற நீதியையுடையவனே! யான் - அடியேன், உனக்கு—, உரைப்பது - (வினாவிய கேள்விக்கு விடையாகச்) சொல்ல வேண்டுவது, ஒன்று - ஒருவரலாறு, உண்டு-இருக்கின்றது; (அதனை), நெடிது கேட்டி - செவ்வையாகக் கேட்டருள்வாயாக,' எனா - என்று சொல்லி, (எ - று.)—'எனா' என்னும் வினையெச்சம், மேல் 66-ஆங் கவியில் 'இயம்ப' என்னும் வினையோடு முடியும். ஆல் - ஈற்றசை.

சுக்கிரீவன் தாரமிழந்த வரலாற்றை அவனே கூறுவது தகுதியன்று என்று கருதி, அநுமான், அவ்வரலாற்றைக் கூறலாயினனென்க. விருந்தினனை மனைவியுடனிருந்தே உபசரித்தல் இல்வாழ்வானுக்கு முறையென்பதை யுட்கொண்டு வினாவினதென்று குறிப்பிக்க, 'நின்ற நீதியாய்' என விளித்தான். கேட்டுக்கொண்டிருக்கின்றவனை 'கேட்டி' என்றது, அதற்குப்பரிகாரஞ் செய்தருளவேண்டுமெனக் குறிப்பித்தற்குப் போலும். பி-ம்:—[1] கீர்த்தியாய், சீர்த்தியாய். [2] ஒன்றுநான். (117)

37.—இதுமுதல் இருபத்தொன்பது கவிகள் - அநுமான் கூறிய விடை.

நாலு வேதமா [1] நவையில் சாலியின்
[2] வேலி யன்னவன் [3] மலையின் மேலுளான்
[4] சூலி யின்னருள் [5] துறையின் முற்றினான்
வாலி யென்றுளான் வரம்பி லாற்றலான்.

(இ - ள்.) நாலு வேதம் ஆம் நவை இல் சாலியின் - நான்கு வேதங்களாகிய குற்றமில்லாத நெற்பயிருக்கு, வேலி அன்னவன் - வேலியைப்போலப் பாதுகாவலா யுள்ளவனும், மலையின் மேலுளான் - கைலாச பருவதத்தில் வீற்றிருப்பவனுமாகிய, சூலியின் - சூலாயுதத்தையுடையவனான உருத்திர மூர்த்தியினது, அருள்

துறையின் - கருணையின் வழியே, முற்றினன்-முதிர்ந்தவனாகி, வாலி என்று - வாலியென்று பெயர் சொல்லப்பட்டுப் பிரசித்திபெற்று, வரம்பு இல் ஆற்றலான் - எல்லையில்லாத வலிமையுடையானொரு வானரவீரன், உளான் - இருக்கிறான்; (எ - று.)

சுக்கிரீவன் மனைவியை யிழந்த வரலாற்றை விவரமாகக் கூறத் தொடங்கிய அநுமான் இச்செய்யுளால், வரபலம் மிக்கவனாய் வாலியென்று ஒருவனிருத்தலைத் தெரிவித்தான். "சங்கராத்ஜ்ஞாந மந்விச்சேத்', என்றபடி சிவபிரான் ஞானங்கட்கு இருப்பிடமாயிருத்தலால், அப்பெருமானைப் பரந்த நான்குவேதங்கட்கும் வேலி யன்னவன் என்றார். சூலியின் அருள் துறையின் முற்றினன் என்பதற்கு - பரமசிவனது திருவருளைப் பரிபூர்ணமாகப் பெற்றவ னென்பதுகருத்து. உலகோர் நல்லொழுக்கத்தோடு சீவித்திருக்கக் கருவி யாதலால், வேதங்களைச் சாலியாக உருவகஞ்செய்தது. சூலி என்ற வடமொழிப்பெயர், சூலாயுதத்தையுடையவனென்று பொருள்படும். பி - ம்:—[1]நவையிலார்கலி. [2]வேலி யன்னதோர், வேலையன்னவன், வேலியன்னதொல், வேலியன்னவோர். [3]வெள்ளி வெண்கிரிச், விமலன் வேறுளான், அமலன்மேலுளான். [4]சூலிதன். [5]துறையு முற்றினன். (*118*)

38. [1]கழறு தேவரோ டவுணர் [2]கண்ணினின்று
உழலு மந்தரத் துருவு [3]தேயமுன்
அழலுங் கோளரா வகடு [4]தேய்விடச்
சுழலும் வேலையைக் [5]கடையுந் தோளினான்.

(இ - ள்.) (அவன்),—கழறு - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, தேவரோடு - தேவர்களும், அவுணர் - அசுரர்களுமாகிய அவர்களது, கண்ணின் - எதிரில், நின்று—, உழலும் - (மத்தாகிச்) சுழல்கின்ற, மந்தரத்து - மந்தரமலையினது, உருவு - வடிவம், தேய - தேயும்படியாகவும்,—அழலும் - சீறும் இயல்பமைந்த, கோள் அரா - வலிமையுடைய (கடைகயிறாகிய வாசுகியென்னும்) பாம்பினது, அகடு - நடுவுடம்பு, தேய்விட - தேய்ந்துபோம்படியாகவும்,—சுழலும் - அலைகின்ற, வேலையை - திருப்பாற்கடலை, முன் - முற்காலத்தில், கடையும் - கடைந்த, தோளினான் - புஜபலமுடையவன்;(எ-று.) —இதுவும், அடுத்த கவியும் - வாலியினது வலிமையை யுணர்த்தும்.

வாலிகடலைக்கடைந்தவரலாறு:-தேவர்களும் அசுரர்களும்ஒருங்கு கூடிச் சாவாமருந்தாகிய அமிருதத்தைப் பெறுமாறு மந்தரமலையை மத்தாக நாட்டி வாசுகிநாகத்தைக் கடைகயிறாகப்பூட்டிச் சந்திரனை அடைதாணாக நிறுத்திப் பாற்கடலைக் கடைய முயலுகையில், இருதிறத்தாரும் அதனைக்கடையும் வலிமையிலராய் என்செய்வ தென்று கலங்கி நிற்குமளவிலே, வானர ராசனும் தேவேந்திரனது குமாரனுமாகிய வாலி, தான் நாள்தோறும் பல கடல்களிலுஞ் சென்று வைதிகநித்தியகருமங்களை முடித்துவரும் வழக்கப்படி

பாற்கடல்சென்றுசேர, தேவர்கள் அவனை வேண்டிக்கொண்டதனால் அவன் சுராசுரர்களை விலக்கிவிட்டுத் தானொருவனாகவே இரு கைகளாலும் வாசுகியின் தலையையும் வாலையும் பிடித்து வலமும் இடமுமாக வலிய இழுத்துக் கடைந்தனன் என்பதாம். இவ்வரலாறு வால்மீகத்தில் இல்லையாயினும், நல்லிசைப் புலவராகிய கம்பர் கூறியிருத்தலால், புராணாந்தரங்களிலேயாதல் கல்பாந்தரத்திலேயாதல் உண்டென்று கொள்ளவேண்டும்; "மற்றவன் முன்னோனங்கா ளிராவணன் வலிதன் வாலி, னிற்றுகக் கட்டி யெட்டுத் திசையினு மெழுந்து பாய்ந்த, வெற்றியன் தேவர்வேண்ட வேலையை விலங்கன் மத்திற், சுற்றிய நாகந் தேய வழுதெழக் கடைந்த தோளான்" என்று சுந்தரகாண்டத்திலும், "கடலைச் சுராசுரர்க் கமிழ்தெழக் கடைந்த, வீரியன்" என்று உத்தர காண்டத்திலும் கூறுவன காண்க. (இச்சரித்திரத்தைக் காஞ்சிப் புராணத்து மணிகண்டேசுரப்படலத்திற் பரக்கக்காணலாம்.) முன் கடையுந் தோளினன் - இயல்பினால்வந்த காலவழுவமைதி. தேய்வு இடுதல் - தேய்வுகொள்ளுதல். பி - ம்:—[1]கழறும். [2]கண்ணிகின்று, கன்றநின்று. [3]தேய்வுறும், தேயநின்று, தேயநின். [4]தீவிடச். [5]கடைசெய். (119)

39. நிலனு [1]நீருமாய் நெருப்புங் காற்றுமென்று
[2]உலைவில் [3]பூதநான் குடைய வாற்றலான்
[4]அலையின் வேலைசூழ் கிடந்த வாழிமா
மலையி னின்றுமிம் மலையின் வாவுவான்.

(இ-ள்.) நிலன்உம் - பூமியும், நீர்உம் - ஜலமும், நெருப்புஉம் - அக்கினியும், காற்றுஉம் - வாயுவும், என்று ஆய் - என்றுபொருந்தி, உலைவு இல்-அழிவில்லாத, பூதம் நான்கு-நான்குபூதங்களும், உடைய- (தாம்தாம் தனித்தனி) உடைத்தான, ஆற்றலான் - வல்லமை முழுவதையும் தான் ஒருசேர உடையவன்; அலையின் வேலை-அலைகளையுடைய ஏழுசமுத்திரங்களுக்கும் அப்பால், சூழ் கிடந்த - சுற்றிலும் பொருந்திய, ஆழி மா மலையினின்றும்-பெரிய சக்கரவாளபருவதத்தினின்றும், இ மலையின்-இங்குள்ள பருவதத்தில், வாவுவான் - தாவுந் தன்மையுடையவன், (எ - று.)

நிலம் முதலிய நான்கு பூதங்களின் ஆற்றலோடு, சக்கரவாள மலையினின்று இங்குள்ள மலையில்தாவும் வல்லமையுமுடையவன் அந்த வாலி யென்றவாறு. இவ்வுலகைச் சூழ்ந்துள்ள எல்லாக்கடல்கட்கும் அப்பால் வட்டவடிவான மலையொன்று சூழ்ந்துள்ள தென்றும் அது சக்கரவாளமலையென்று பெயர்பெறுமென்றும் நூல்கள் கூறும். நிலத்துக்கு நீரும், நீர்க்கு நெருப்பும், நெருப்புக்குக் காற்றும் காரணமாதலால், அம்முறைப்படி வைத்தார். பஞ்சபூதங்களுள் ஆகாயத்தை ஒழித்தது, அதற்கு மற்றவை போன்ற ஆற்றலும் உருவமும் இல்லாமையால். 'சூழ்' என்ற முதனிலை, இங்கு வினையெச்சப்பொருள் தந்தது: "வரிப்புனை பந்து" என்னுமிடத்திற்போல. பி - ம்:—[1]நீருமாநெருப்பும். [2]உலவில். [3]பூதமைந்து. [4]அலையும்வேலை. 'நிலனுநீரொடு நெருப்புங்கால்வெளி, உலைவில்

பூதமைந்துடைய வாற்றலான்' என்று முதலிரண்டடிகளும், 'நிலனும் நீரும்வான் நெருப்புங்காற்றும்' என்று முதலடியும், சிற்சில பிரதிகளில். (120)

40. [1]கிட்டு வார்பொரக் கிடைக்கி னன்னவர்
பட்ட [2]நல்வலம் பாக மெய்துவான்
எட்டு மாதிரத் திறுதி நாளுமுற்று
அட்ட மூர்த்திதாள் பணியு [3]மன்பினன்.

(இ - ள்.) கிட்டுவார் பொர கிடைக்கின் - நெருங்குபவர்களாய்ப் போர் செய்தற்கு (யாவராயினும் எதிரில்) வந்தால், அன்னவர் பட்ட நல் வலம் - அவர்கள் (முன்பு) அடைந்துள்ள நல்ல (உடல்) வலிமையில், பாகம் - (பாதி) பாகத்தை, எய்துவான் - அடைபவன்; நாளும் - நாள்தோறும், எட்டு மாதிரத்து இறுதி-எட்டுத்திக்குக்களி னெல்லையிலும், உற்று - போய், அட்டமூர்த்தி தாள் - அஷ்டமூர்த்தி யெனப்படுகிற சிவபெருமானது திருவடிகளை, பணியும் - வணங்குகின்ற, அன்பினன் - அன்பையுடையவன்; (எ - று.)

இச்செய்யுள் - வாலிக்குஉள்ள தைவிகவரத்தையும் தெய்வ பக்தியையும் தெரிவிக்கும். [2]நல்வரமென்ற பாடத்துக்கு - வரபலத்தை என்க; இது, உடல்வலிமைக்கும் உபலக்ஷணமாம். சிவபிரானன் அஷ்ட மூர்த்திகள் - பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன், யஜமானது என்பன; இவ்வெட்டையுந் திருமேனியாக வுடைமையால், சிவபிரான், அஷ்டமூர்த்தி யெனப்படுவான். அட்டமூர்த்தி தாள் பணிவதற்காக எட்டுத்திக்கிற் சென்றன னென நயங் காண்க. உம்மை - தொறுப் பொருளது. அஷ்டமூர்த்தி - வடமொழித்தொடர்; பண்புத்தொகை யன்மொழி. பாகம் - வடசொல். பி - ம்:—[1]இட்டினர். [2]மேல்வலம், மாபெலம். [3]ஆற்றலான், ஆணையான். (121)

41. கால்செ லாதவன் முன்னர்க் கந்தவேள்
வேல்செ லாதவன் [1]மார்பின் வென்றியான்
வால்செ லாதவா யலதி ராவணன்
கோல்[2]செ லாதவன் குடைசெ லாதரோ.

(இ - ள்.) அவன் முன்னர் - அவ்வாலியினது வேகத்திற்கு முந்தி, கால் செலாது - வாயுவும் போகமாட்டாது; அவன் மார்பின் - அவ்வாலியினது மார்பிலே, கந்தவேள் வேல் - சுப்பிரமணியக்கடவுளது வேலும், செலாது - நுழையாது; வென்றியான் வால்செலாத வாய் அலது - வெற்றியையுடையவனான அவ்வாலியினது வால் செல்லாத இடத்திலே அல்லாமல் [வால் சென்ற இடத்தில்],இராவணன் - இராவணனது, கோல் - அதிகாரம், செலாது - செல்லாது; அவன் குடை - அவ்விராவணனது வெற்றியும், செலாது - செல்லாது; (எ - று.)—அரோ - ஈற்றசை; தேற்றமுமாம்.

முதலில் அந்த வாலியின் விரைந்த செலவையும் பின்பு அவனுடைய வன்மை வென்றிகளையும் இச்செய்யுள் கூறும். இந்திரன் முதலிய எல்லாத்தேவர்களையும் வென்ற இராவணனது கோலும் குடையும் வாலியின் வால் சென்றவிடத்துஞ் செல்லாதென, வாலியின் வீரமிகுதி கூறியபடி. வால்சென்றவிடத்தே செல்லாதெனவே, அவனுள்ளவிடத்துச் செல்லாமை தானே பெறப்படும். இவ்வாறு கூறியது, முன்னொருகாலத்தில் தன்னைப் பற்றுதற்குப் பின்புறத்தே வந்த இராவணனை, வாலி தன் வாலினாற் கட்டி, வலியடக்கிக் கர்வ பங்கஞ்செய்தமைபற்றியென்க. இனி, பின்னிரண்டடிக்கு - வாலியினது வாலின்வலிமை அழிந்தாலன்றி இராவணனது கோலுங் குடையும் அழியா வென்றுமாம், வாலியும் இராவணனும் பின்னர் நட்புக் கொண்டனராதலால்: இப்பொருளில், இராவணனைக் கொல்லுதற்கு வாலியைக் கொல்வது இன்றியமையாதென்பது கருத்து.

கந்தன் - ஸ்கந்தனென்ற வடசொல்லின் விகாரம். வேள் என்பதற்கு - விரும்பப்படுகின்றவனென்பது பொருள்; அழகியவனென்பது கருத்து; இச்சொல் மந்மதனுக்கும் பெயராதலால், அவனை விலக்குதற்கு, 'கந்தவேள்' என்றார். செலாதவாய் அலது - இரண்டு எதிர்மறை உடன்பாட்டை வற்புறுத்திற்று. கோல் - அரசாட்சிக்கும், குடை - வெற்றிக்கும் இலக்கணை. பி - ம்:—[1]மார்பம். [2]செலாதுவெண். (122)

42. மேரு வேமுதற் கிரிகள் வேரொடும்
பேரு மேயவன் [1]பேரு மேல்நெடுங்
காரும் வானமுங் கதிரு [2]நாகமும்
தூரு மே[3]யவன் பெரிய தோள்களால்.

(இ - ள்.) அவன் - அவ்வாலி, பேரும் ஏல் - (தன் இடம்விட்டு) எழுவானானால், (அவ்வதிர்ச்சியினால்), மேருஏ முதல் கிரிகள் - மகாமேரு முதலிய பெரிய மலைகளெல்லாம், வேரொடும் பேரும்ஏ - வேரோடும் இடம்விட்டுப் பெயர்ந்துபோமே; அவன்பெரிய தோள்களால் - அவனுடைய பெரிய தோள்களால், நெடுங்கார்உம் - பெரிய மேகமும், வானம்உம் - ஆகாயமும், கதிர்உம் - சூரிய சந்திரர்களும், நாகம்உம் - பர்வதங்களும், தூரும்ஏ - மறைந்துபோய்விடுமே; (எ - று.)

அவன் இயல்பாக அடிவைத்துச் செல்லும்போதே அவ்வதிர்ச்சியைத் தாங்கமுடியாமல், இவ்வுலகத்தைத் தாங்கவல்ல பெருமலைகளும் நிலைகுலைந்துவிடும்; அன்றியும், உத்தம விலக்கணத்திற்கு ஏற்ப அவனது தோள்கள் மிகவுயர்ந்து நிற்றலால், மேகம் முதலியவைகளெல்லாம் அவற்றால் தூர்ந்துவிடு மென்பதாம்; தொடர்புயர்வு நவிற்சியணி. இதனால், வாலியினது உடல்வலிமையும் உயர்ந்த தோற்றமும் விளங்கும். நாகம் - சலியாதது என மலைக்குக் காரணக் குறி: நாகம் - வானுலகு எனினுமாம். பேரும் - பெயருமென்பதன் மரூஉ. மேருவே, ஏ - உயர்வுசிறப்பு. பி - ம்:—[1]பெயருமே னெடுங், பெயருமே யெனிற். [2]நாகரும். [3]கடல். (123)

43. [1]பாரி டந்தவெம் பன்றி பண்டைநாள்
[2]நீர்கி டந்தபே ராமை [3]நேருளான்
[4]மார்பி டந்தமா லெனினு மற்றவன்
தார்கி டந்ததோள் [5]தகைய வல்லதோ.

(இ - ள்.) பண்டை நாள் - முற்காலத்தில், பார் இடந்த-பூமியைக் (கோட்டாற்) குத்தியெடுத்த, வெம் பன்றி - கொடிய மகாவராகத்தை யும்,—நீர் கிடந்த பேர் ஆமை - பாற்கடலிலே (மந்தரமலையைத் தன் முதுகின்மீது தாங்கிக்கொண்டு) கிடந்த மகா கூர்மத்தையும்,—நேர் உளான்-(தனக்கு) ஒப்பாகக்கொண்டுள்ளவனாகிய, அவன்-அவ்வாலி யினது, தார்கிடந்ததோள் - வெற்றி மாலை பொருந்திய புயங்களை, மார்பு இடந்த மால் எனின் உம் - (இரணியனது) மார்பைக் கீண்ட திருமாலாகிய (நர) சிங்கமேயானாலும்,— தகைய வல்லது ஓ-எதிர்க்க வல்லதோ? [அல்ல என்றபடி]; (எ - று.)

இச்செய்யுளும், வாலியினது வீரத்தை விளக்கும். திருமாலினது அமிசாவதாரமாகிய ஸ்ரீராமனும் வாலிக்கு எதிர்நின்று போர் புரி யாது மறைந்துநின்றே அம்பெய்து அவ்வாலியைக் கொல்லப்போவத னால் இவ்வாறு கூறினரென்னலாம்.

'பாரிடந்தபன்றி' என்றது-பூமியைப் பாயாகச்சுருட்டி யெடுத்துக் கடலில் மூழ்கிப்போன இரணியாக்கனைத் திருமால் தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளின்படி வராகரூபமாகத் திருவவதரித் துக் கொன்று பூமியைக் கோட்டாற் குத்தியெடுத்துக் கொண்டு வந்து விரித்தருளின வரலாற்றை உட்கொண்டு. தேவர்களும் அசுரர் களும் மந்தரபருவதத்தை மத்தாகவும் வாசுகியைக் கடைகயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தபொழுது சுழலாநின்ற மந்தரபரு வதத்திற்குக் கீழ்ப்புறத்தில் ஸ்ரீமந்நாராயணன் மகாகூர்மரூபத்தைத் தரித்து அம்மலை கடலில் அழுந்திவிடாதபடி ஆதாரமாக இருந்த தனால், 'நீர் கிடந்த பேராமை' என்றார். நீர் - கடலுக்கு ஆகுபெயர்; இங்குச் சந்தருப்பம் நோக்கிப் பாற்கடலெனப் பொருள் கொள்ளப் பட்டது.

[4]மார்பிடந்த மா என்ற பாடத்திற்கு-'மா' என்ற விலங்கின் பொதுப்பெயர், இங்குச் சிறப்பாய்ச் சிங்கத்தையுணர்த்தும் என்க: எல்லா அவயவங்களினுஞ் சிறந்த அங்கமாகிய தலை சிங்கமா யிருந் தது பற்றி, 'மா' எனப்பட்டது. [3]நேரிலான் என்ற பாடம் - பகைவ னென்று பொருள்படும்: நேருளான் என்பதற்கே - பகைவன் என் னலாம். மார்பிடந்த மா என்ற பாடத்தையே கொண்டு, பன்றி ஆமை மா என்ற இவையே யானாலும் என்று பொருள் கூறுதலே சிறக்கும். மற்று - அசை. தார்கிடந்த தோட்டகைய வல்லதோ என்று சில பிரதிகளில் நான்காமடி.

பி - ம்:—[1]பார்கிடந்த. [2]நீர்கடைந்த. [5]தகையவல்லரோ, தகைய வல்லவோ. (124)

44. படர்ந்த நீள்நெடுந் தலைப ரப்பிமீது
[1]அடர்ந்து பாரம்வந் துறவ நந்தனும்
கிடந்து தாங்குமிக் கிரியை மேயினான்
நடந்து தாங்குமிப் புவன நாளெலாம்.

(இ - ள்.) தாங்கும்-(பூமியைத்) தாங்குகின்ற, இ கிரியை-இந்தக் கிட்கிந்த மலையை, மேயினான் - பொருந்தியவனான வாலி,—(நடக்கும் பூமியிடத்தின்), மீது - மேலே, பாரம் அடர்ந்து வந்து உற - பாரம் மிகுதியாக வருதல்பற்றி, படர்ந்த நீள் நெடுந் தலை - (ஆயிரமென்னுங் கணக்காக) மிக்குள்ள மிகவும் நீண்ட (தன்) பணா முடிகளை, பரப்பி-பரப்பிக்கொண்டு, அநந்தன் உம்-ஆதிசேஷனும், கிடந்து-கீழிருந்தபடியே, நடந்து - (அவன் நடக்குமிடத்தே உடன்) நடந்து, நாள் எலாம் - நாள்தோறும், இபுவனம் - இப்பூமியை, தாங்கும் - (எப்பொழுதும்) பரிப்பான்; (எ-று.)

தான் ஓரிடத்திலேயே யிருந்துகொண்டு பூமியைத் தாங்கு மியல்பினனான ஆதிசேஷனும் வாலி நடக்கையில் அவனது உடற்பொறையைச் சுமக்க முடியாமல் பூமி குழிந்து அழுந்த, பூமி பிளந்திடுமோ என்று அஞ்சித் தானும் இடம்பெயர்ந்து அவனுடனே சென்றுகொண்டே தாங்கிவருவ னென்பதாம்; இதனால், வாலியினது பெருவலிமையுடன் பாரமுடைமை கூறப்பட்டதாம். மலைகள் தாம் வெளியில் எவ்வளவு உயர்ந்திருக்கின்றனவோ, அவ்வளவு உள்ளேயும்புக்குநின்று பூமியைச் சலிக்க வொட்டாது தாங்குகின்றன என்றகொள்கைபற்றி 'தாங்கு மிக்கிரி' என்றார். அநந்தனென்பதற்கு - அழிவில்லாதவ னென்று பொருள்: (ந + அந்தம்.) அந்தம் - முடிவு. உம்மை - உயர்வுசிறப்பு.

இனி இச்செய்யுளுக்கு வேறுவகையாக உரைகூறுதலுண்டு; அது வருமாறு:—அநந்தன் உம் - ஆதிசேஷனும்,—படர்ந்த நீள் நெடுந் தலை - (ஆயிரமென்னுங்கணக்காக) மிகுந்த மிகவும் நீண்ட (தன்) பணாமுடிகளை, பரப்பி—,—மீது - மேலே, பாரம் - பாரமானது, அடர்ந்து வந்து உற - மிகுதியாகப் பொருந்தியிருக்க, கிடந்து - கீழிருந்து, இ புவனம் - இப்பூலோகத்தை, நாள் எலாம் - எந்நாளும், தாங்கும் - பரிப்பான்; இ கிரியை மேயினான்-இம்மலையைப் பொருந்தி வாழ்கின்றவனான வாலியானவனோ, நடந்து - (தான்மேலே) நடந்துகொண்டு, தாங்கும் - பூமியைத்தாங்குவான் என்பது. இதனால், வாலியினது உலகங்காக்குந் திறம் கூறப்பட்டது. ஆதிசேஷன், இப்பூமியின் பொறையைத் தாங்கமுடியாமல் வருந்தித்தாங்குகின்றான்; வாலியோ அங்ஙனமன்றிச் சிறிதும்வருத்தமில்லாமல் உல்லாஸமாக நடந்துகொண்டு தாங்குகின்றன னென்பதாம். இவ்வாறு உபமானமாகிய ஆதிசேஷனினும் உபமேயமாகிய வாலிக்கு ஏற்றங் கூறியது - வேற்றுமையணி. கிடந்து தாங்குதல் - சுமத்தல்; நடந்து தாங்குதல் - காத்தல்.

பி - ம்:—[1] அடைந்த. 'அடர்ந்த பாரிடந்தனை யனந்தனுங், கிடந்துதாங்கு மிக்கிரியின் மேவினான்' என்று சில பிரதிகளில் இரண்டு மூன்றுமடிகள். (125)

45. [1]கடலு ளைப்பதுங் கால்[2] ச ரிப்பதும்
மிடல ருக்கர்தேர் மீது செல்வதும்
[3]தொடர மற்றவன் [4]சுளியு மென்றலால்
அடலின் வெற்றியா [5]யயலி னாவவோ.

(இ - ள்.) அடலின் வெற்றியாய் - வலிமையையும் சயத்தையும் உடையவனே!—தொடர - இடைவிடாமல், கடல் உளைப்பதுஉம் - சமுத்திரம் ஒலிப்பதும், கால் சரிப்பதுஉம் - காற்றுச் சஞ்சரிப்பதும், மிடல் அருக்கர் தேர்மீது செல்வதுஉம் - வலிமையையுடைய சூரியர்கள் [துவாதசாதித்தியர்கள்] தேரின்மேற் சஞ்சரிப்பதும்,—அவன் - அவ்வாலி, சுளியும் என்று அலால் - சினந்திடுவனே என்ற அச்சத்தினாலல்லாமல், அயலின் - வேறொருவகையால், ஆவ ஓ - ஆவனவோ? [ஆகா என்றபடி]; (எ - று.)

இது, வாலியினது மிக்ககோபத்தை வருணித்தது. கடல் முதலியன எல்லாம் அவனது கோபத்துக்கு அஞ்சியே நடக்கின்றனவென்பதாம். உளைப்பது - மேன்மேற் பொங்கியெழாமல் ஒருநிலையில் அடங்கிநிற்பதும், சரிப்பது - எல்லாவுயிரும் பொறுக்கும்படி அடங்கி நடப்பது மாகவுமாம். இயல்பிற் கடல் உளைப்பது முதலியவற்றிற்கு, வாலியின் கோபத்தினால் நிகழ்வனவாகக் காரணங்கற்பித்துக்கூறியது - ஏதுத்தற்குறிப்பேற்றவணி. பரம்பொருளுக்கு அஞ்சிக் கடல் முதலியன நடக்கின்றன என்று நூல்கள் கூறுவது தவறென்று சாதிப்போர்போன்று, 'அயலினாவவோ' என்றார்; ஆகவே, இங்கு அபநுத்தியணி தொனிக்குமென்க. இதனால் காற்று முதலியன தனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நிற்கும்படி செய்யும் பரம்பொருள் போன்ற வரம்பிலாற்றலுடையன் வாலி யென்பதும் தோன்றும். மாதந்தோறும் வெவ்வேறாகச் சூரியர் பன்னிருவராதலால், 'அருக்கர்' எனப் பன்மையாற் கூறினர். தேர்மீதுசெல்லுதல் - உதித்தும் அத்தமித்தும் அந்தந்தக்காலத்திற்குத் தக்கபடி நடத்தல். பி - ம்:— [1]கடலுலைப்பதும், கடலொலிப்பதும். [2]சலிப்பதும். [3]தொடரின். [4]சுளியினேற்றலால், சுழியினெற்றலால், சுழியினேறலால். [5]அயலினாவதோ. (126)

46. வெள்ள மேழு[1]பத் துள்ள மேருவைத்
தள்ள லானதோ [2]ளரிகள் தானையான்
உள்ள [3]மின்றியவ் வுயிரை யஞ்சலால்
வள்ள லேயவன் வாழ வாழுமால்.

(இ - ள்.) வள்ளலே - வரையாமல் அருளுந் தன்மையை யுடையவனே!—அவன் வாழ-அவ்வாலி வாழாநிற்க, தானையான் உள்ளம் இன்றி - (வாநர) சேனைக்கெல்லாந்தலைவனாகிய அவ்வாலியின் கருத்து [அநுமதி] இல்லாமல், அ உயிரை அஞ்சலால் - அக்குரங்குகளின் உயிரைக் கொண்டுபோவதற்கு (யமனும்) அஞ்சுதலால்,—வெள்ளம் ஏழு பத்து உள்ள - எழுபதுவெள்ள மென்னுந் தொகையுடையனவாகிய, மேருவை தள்ளல் ஆன தோள் அரிகள் - மகாமேருவையும் புரட்டிவிடவல்ல தோள்வலிமையையுடைய வாநர

சேனைகள், வாழும் - (அழிவில்லாமல்) வாழாநிற்கும்; (எ - று.)—அரிகள் வாழு மென்க.

வாலியினிடத்து அச்சங்கொண்டு யமனும் பின்வாங்குதலினால், அவனது குரங்குச்சேனைகள் 'தம்முயிர்க்குத் தீங்கு நேருமோ?' என்ற அச்சமின்றி இனிது உயிர்வாழ்கின்றன வென்பதாம்: இதனால், கடவுளரும் அஞ்சுந்தன்மை கூறப்பட்டது. இனி, வாலி வாழும் போது அவனது குரங்குச்சேனைகளை உயிர் கொண்டுபோவதற்கு யமனும் அஞ்சிப் பின்வாங்குதல்பற்றி அக்குரங்குச்சேனைகளில் இறப்பனவின்றிப் பின்னும் பிறக்கும் வானரங்களெல்லாம் சேர்ந்துகொண்டு வருதலினாலே அவ்வாலிக்கு எழுபதுவெள்ளம் வானரசேனை யுளதாயிற்றென்று கருத்துக்கூறலுமாம். (வெள்ளம் - ஒரு பெருந்தொகை: மிகப்பல அக்ஷௌஹிணி கொண்டது; யானையொன்றும், தேரொன்றும், குதிரை மூன்றும், காலாள்ஐந்துங் கொண்டது - பத்தி யெனப்படும்; அப்பத்தி மூன்றுபங்குகொண்டது - சேனாமுகம்; சேனாமுகம்மூன்று - குல்மம்; குல்மம் மூன்று - கணம்; கணம் மூன்று - வாகினி; வாகினி மூன்று - பிரதனை; பிரதனை மூன்று - சமூ; சமூ மூன்று - அநீகினி; அநீகினி பத்து - அக்ஷௌகிணி; அக்ஷௌகிணி எட்டுப்பங்கு கொண்டது - ஏகம்; ஏகம் எட்டு-கோடி; கோடிஎட்டு - சங்கம்; சங்கம் எட்டு - விந்தம்; விந்தம் எட்டு-குமுதம்; குமுதம்எட்டு - பதுமம்; பதுமம் எட்டு - நாடு; நாடு எட்டு - சமுத்திரம்; அந்தச்சமுத்திரம் எட்டுப்பங்கு கொண்டது - வெள்ளம் எனக் காண்க.) மேருவைத் தள்ளலானதோள் - மகாமேருவையுந் தனக்கு ஒப்பன்றென்று விலக்கும்படியான தோளென்றுமாம். ஆல் - ஈற்றசை.

பி - ம்:—[1] பத்துளது. [2] அரியின். [3] இன்றிவ்வுயிருமெஞ்சலால், அஞ்சியெவ்வுயிருமெஞ்சுமால். பின்னிரண்டடிகள் "உள்ளொந்து மெவ்வுயிருமெஞ்சுமால், வள்ளலேயவன் வலியின் வண்மையால்," எனவும், "உள்ளமொன்றியெவ்வுயிருமன்பினால், வள்ளலேயவன் வாழ வாழுமால்" எனவும், "உள்ளமொன்றியெவ்வுயிரும் வாழுமால், வள்ளலேயவன் வலியின் வண்மையால்" எனவும் காணப்படுகின்றன. (127)

47. மழையி டிப்புரு [1] வயவெஞ் சீயமா
முழையி டிப்புரு [2] முரண்வெங் காலுமெல்
[3] தழை[4]து டிப்புறச் சார்வு ருதவன்
விழைவி டத்தின்மேல் விளிவை [5] யஞ்சலால்.

(இ - ள்.) விளிவை அஞ்சலால் - (வாலி சினத்தால் தம் தமக்கு) அழிவு நேரிடுமே! என்று பயப்படுதலால்,—அவன் - அவ்வாலி, விழைவு இடத்தின்மேல் - விரும்பி வாசஞ்செய்கின்ற இடத்திற்கு நேராக,—மழை - மேகங்கள், இடிப்புஉரு - இடிக்கமாட்டாவாம்; வயம் - வெற்றியையுடைய, வெம் - கொடிய, சீயம் மா - சிங்கமாகிய விலங்குகள், முழை - குகையில், இடிப்புஉரு - கர்ச்சிக்கமாட்டாவாம்; முரண் - வலிமையையுடைய, வெம் - கொடிய, கால்உம் - காற்றும், மெல் தழை துடிப்பு உற சார்வு உருது - (அங்குள்ள) மெல்லிய இலைகள் உதிரும்படியாகவும் சேராது; (எ - று.)

அவ்வாலியிருக்குமிடத்தில் தமது வல்லமையைக் காட்டினால் தமக்கு அபாயம் நேரிடுமென்று அவன் வலிமையைநோக்கி அஞ்சி மேகமும் சிங்கமும் காற்றும் அடங்கி நடக்கு மென்றபடி. இது வாலிக்குக் கடவுளரும் அஞ்சுந் தன்மையோடு விலங்கும் அஞ்சுந் தன்மையுங் கூறியது. சீயம் - ஸிம்ஹமென்ற வடசொல்லின் சிதைவு. சீயம் மா - சீயமாகிய மா என இருபெயரொட்டுப்பண்புத்தொகை. பி - ம்:—[1]வயவு. [2]முதிரும் வெவ்வரா, முரணுகாலினால், முரணு கானமென். [3]உழை, வளை. [4]துடிப்புருதவனூரற்றுமா, துடிப்புருச் சார்விலாதவன். [5]அஞ்சுமால். திருக்குற்றாலப் பிரதியொன்றில் இச் செய்யுள் "மழை யிடிப்புரு வலியசீயமா, முழையிடிப்புரு முடியவவ் விடத், தழறுடிப்புரு சாலும் வல்லரா, அழறுடிப்புருமீளியஞ்சலால்" என்று காணப்படுகிறதென்ப. (128)

48. [1]மெய்க்கொள் வாலினான் மிடலி ராவணன்
தொக்க [2]தோளுறத் தொடர்ப டுத்தநாள்
[3]புக்கி லாதவும் [4]பொழிய ரத்தநீர்
[5]உக்கி லாதவும் [6]உலகம் யாவதோ.

(இ - ள்.) மெய் கொள் வாலினால் - (பேருக்கு ஏற்றபடி) மெய்ம்மையாகக்கொண்ட வாலினால், மிடல் இராவணன் தொக்க தோள் - வலிமையையுடைய இராவணனது (இருபதாகத்) திரண்ட தோள்களை, உற - ஒருசேர அழுந்தும்படி, தொடர் படுத்த - கட்டி எடுத்துச்சென்ற, நாள் - அந்நாளில், புக்கிலாதஉம் - (வாலி) செல்லாததும், பொழி - (அவ்விராவணனது உடம்பினின்று) சொரிந்த, அரத்தம் நீர் - ரத்த வெள்ளம், உக்கிலாதஉம் - சிந்தாததுமாகிய, உலகம் - (வேறு) லோகம், யாவதுஓ - யாதுஉள்ளதோ? (எ - று.)

வாலி இராவணனை வாலினாற்கட்டி அலட்சியமாகத் தூக்கிக் கொண்டு எல்லாவுலகங்களிலுந் தாவித்தாவிச் சென்றபோது, அவன்சென்ற இடங்களிலெல்லாம் இராவணனது இரத்த நீர்ப் பெருக்குச் சொரிந்துகொண்டேயிருந்த தென்பதாம். வாலினால் தொடர்படுத்த என இயையும். வாலினான் என்று எடுத்து - வாலி யென்றுமாம். அரத்தம் - ரக்தம். உக்கிலாத, புக்கிலாத=உக்கிலா தது, புக்கிலாதது. யாவது=யாது. பி - ம்:—[1]மிக்க. [2]தோளிற. [3]புக்கிலாதவெம். [4]பொழிலியாதுவேறு. [5]உக்கிலாதவெம், உக்கி லாதவேறு, உக்கிலாதவெவ். [6]உலகியாவையோ. "புக்குலாவுவெம் பொழியரத்த நீ, ருக்கிலாதவெவ் வுலகமூழியாய்" என்று சில பிரதி களில் பின்னிரண்டடிகள். (129)

49. இந்தி ரன்தனிப் புதல்வ னின் [1]னளிச்
சந்தி ரன்தழைத் தனைய தன்மையான்
அந்த கன்தனக் [2]கரிய வானையான்
முந்தி வந்தன னிவனின் [3]மொய்ம்பினோய்.

(இ - ள்.) மொய்ம்பினோய் - வலிமையுடையவனே! இந்திரன் - தேவேந்திரனது, தனி - ஒப்பில்லாத, புதல்வன் - புத்திரனாகிய

அவன்,—இன் அளி சந்திரன் தழைத்து அனைய - இனிமையான குளிர்ச்சியையுடைய பூரண சந்திரன் விளங்கினாற்போன்ற, தன்மையான் - தன்மையை [வெண்ணிறத்தை] யுடையவன்; அந்தகன் தனக்கு - யமனுக்கும், அரிய - (கடப்பதற்கு) அருமையான, ஆணையான் - ஆஜ்ஞையுடையவன்; இவனின் - இச்சுக்கிரீவனைக் காட்டிலும், முந்தி - முன்னே [தமையனாக], வந்தனன் - (ஒரே தாய் வயிற்றில்) பிறந்தவன்; (எ - று.)

இதனால், வாலியின் மேனிநிறத்தையும், எல்லோரையுங் கீழ்ப்படிந்து நடக்கச்செய்யுந்தன்மையையும் கூறினார். அந்தகன் - (பிராணிகளுக்கு) அழிவைச்செய்பவன். அந்தகன் தனக்கும் என்றீ உயர்வு சிறப்பும்மை, விகாரத்தால் தொக்கது. தழைத்தனைய என்பதை - தழைத்தாலனைய என எச்சத்திரிபாகவாவது, தழைத்ததனைய என்பதன் விகாரமாகவாவது கொள்க. பி-ம்:—[1] இசை, நளிர். [2] உரிய தன்மையான். [3] முன்பினோய், முன்பினான். (130)

50. அன்ன வன்னெமக் [1] கரச னாகவேன்று
இன்ன வன்னிளம் பதமி யற்றுநாள்
முன்ன வன்குலப் பகைஞன் முட்டினான்
மின்னெ யிற்றுவா ளவுணன் [2] மேன்மையான்.

(இ - ள்.) அன்னவன் - அவ்வாலி, எமக்கு அரசன் ஆக - எங்களுக்கு [வானரங்கட்கெல்லாம்] ராஜாவாக இருக்க, இன்னவன் - இச்சுக்கிரீவன், இளம் பதம் - இளவரசாட்சியை, ஏன்று - ஏற்றுக்கொண்டு, இயற்றும் - நடத்திவருகின்ற, நாள் - காலத்தில், மேன்மையான் - பெருமையையுடையவனாகிய, மின் எயிறு - மின்னல்போல வெளிப்பட்டுவிளங்குகின்ற கோரப்பற்களையுடைய, வாள் - வாள்போற் கொடிய, அவுணன் - ஓர் அசுரன் [மாயாவியென்பவன்], குலம் பகைஞன் - (எங்கள்) கூட்டத்துக்குச் சத்துருவாய், அவன்முன் - அவ்வாலியெதிரே வந்து, முட்டினான் - எதிர்த்துப் போர்செய்தான்;

சுக்கிரீவன் வாலி இவ்விருதிறத்தாரிற் சேர்ந்த வானரர்கட்கெல்லாம் தம்மிற் பகையுண்டானதற்கு மாயாவியென்னும் இவ்வசுரன் வாலியினுடன் போர்செய்யவந்ததே முதன்முதற்காரணமாய் நின்றது பற்றி, அவனை 'குலப் பகைஞன்' எனக் கூறினனென்க. இனி, குலப் பகைஞன்-சிறந்த பகைவனென்றவாறுமாம்; 'குலகிரி' என்றாற் போல. அன்னவன்னெமக்கு' 'இன்னவன்னிளம் - விரித்தல், இளம் பதம் - யுவராஜபட்டம். வாள் - மற்றை ஆயுதங்கட்கும் உபலக்ஷணமாய், படைகளையுடைய பகைவனென்றுமாம். இனி, வாளெயிறு என இயைத்து - வாள்போன்ற தந்தமென்றலுமாம். பி - ம்:— [1] அரசனாக வென்று என்றும் படிக்கலாம். அரசனாகவே, அரசனாகவும். [2] வெம்மையான். (131)

51. முட்டி நின்றவன் முர[1]ணு ரத்தினேர்
ஒட்ட [2] வஞ்சிநெஞ் சுலைய வோடினான்
வட்ட மண்டலத் தரிது வாழ்வெனா
எட்ட ரும்[3] பெரும் பிலனு ளெய்தினான்.

(இ - ள்.) (அவ்வசுரன்),—முட்டி நின்று - (அவ்வாறு) எதிர்த்துப் போர் செய்துநின்று, (வாலியின் வலிமை தன் வலிமையினும் மிக்கிருத்தலை நோக்கி), அவன் மூராண் உரத்தின் நேர் - அவ்வாலியினது வலியபலத்துக்கு எதிரில், ஒட்ட - பொருந்துதற்கு, அஞ்சி - பயந்து—'வட்டம் மண்டலத்து - வட்ட வடிவாகிய இப்பூமண்டலத்துள், (இருந்தால்),—வாழ்வு - (உயிரோடு) வாழ்ந்திருப்பது, அரிது - (எனக்கு) அருமையானதாம்,' என - என்று எண்ணி,—நெஞ்சு உலைய ஓடினன் - மனம் வருந்த ஓடிப்போய், எட்டு அரும் - பாய்ந்து செல்லுதற்கு அருமையான, பெரும் பிலனுள் - (பூமியின் கீழேயுள்ள) பெரிய துவாரத்தினுள்ளே, எய்தினன்-சென்றான்;

அவ்வாலியோடு போர்செய்ய முடியாமற் பின்வாங்கிய மாயாவி 'இவ்வுலகத்தில் இருந்தால் வாலி தவறாமற் கொல்வான்' என்று கருதிப் பாதாளலோகத்தில் ஒளிப்பதற்குப் பிலத்துவாரத்திற் புகுந்தனனென்பதாம். முட்டி நின்றவன் என்று எடுத்து - மாயாவி யெனக் கொண்டால், 'முரணுரத்தின்' என்பதற்கு முன் 'வாலியினது' என வருவிக்க. ஓடினன் - முற்றெச்சம். பிலன் - பிலமென்பதன் ஈற்றுப் போலி. பி - ம்:—[1]உரத்தினல். [2]நஞ்சின். [3]பிலமதனில். (132)

52. எய்து [1]காலையப் பிலனு ளெய்தியான்
நொய்தி [2]னங்கவற் கொணர்வெ [3]னோன்மையாய்
செய்தி காவல்நீ சிறிது [4]போழ்தென
வெய்தி னெய்தினன் வெகுளி [5]மேயினன்.

(இ-ள்.) எய்து காலை - (இவ்வாறு மாயாவி) புகுந்த பொழுதில்,—வெகுளி மேயினன் - சினம் பொருந்தியவனான வாலியானவன், (சுக்கிரீவனை நோக்கி), 'நோன்மையாய் - வலிமையையுடையவனே! யான்—, அ பிலனுள் எய்தி - அந்தப் பிலத்துவாரத்துட் புகுந்து, அங்கு - அங்கே (புகுந்துள்ள), அவன் - அவ்வசுரனை, நொய்தின் - விரைவிலே, கொணர்வென் - பிடித்துக் கொண்டுவருவேன்; சிறிது போழ்து - (அங்ஙனங் கொண்டு வருகின்ற) சிறிது நேரமட்டில், நீ—, காவல் செய்தி - (வேறொருவகையால் அவன் வெளிப்பட்டுப் போய்விடாதபடி இப்பிலத்துவாரத்தின் வாசலிலேயே) காவல் காத்துக்கொண்டிரு,' என - என்று சொல்லிவிட்டு, வெய்தின் - விரைவாக, எய்தினன் - (பிலத்தினுட்) போனான்; (எ - று.)

மாயாவி பிலத்தினுட்புக்கதைக் கண்டு வாலியானவன் மிக்க சினங்கொண்டு தன் தம்பியாகிய சுக்கிரீவனை அப்பிலவாயிலிற் காவல் வைத்து விரைந்து மாயாவியைத் தொடர்ந்து சென்றனனென்பதாம். நோன்மையாய் - திருவடி பெருமானை முன்னிலைப் படுத்திய விளியுமாம். ஈற்றடியிற் பிராசமும், முன் செய்யுளோடு இச்செய்யுள் அந்தாதித்தொடையாகத் தொடர்ந்ததும் கருதத் தக்கன. அவற்கொணர்வென் - இரண்டாம் வேற்றுமைத்தொகை

யாதலால். "இயல்பின் விகாரம்." நொய்தின் - எளிதில் என்றுமாம்.
பி - ம்:—[1]காலேயிற். [2]இங்கிவன். [3]நோன்மையால். [4]போதெனு. [5]மேவினுன். (133)

53. ஏகி வாலியும் மிருது வேழொடேழ்
வேக வெம்பிலந் தடவி [1]வெம்மையான்
[2]மோக வென்றிமேன் [3]முயல்வின் வைகிடச்
சோக [4]மெய்தினன் துணை துளங்கினுன்.

(இ - ள்.) வாலியும்—, ஏகி - சென்று, இருது ஏழொடு ஏழ் - பதினுன்கு ருது [இருபத்தெட்டு மாச] காலம் வரையிலும், வெம் பிலம் - கொடிய அப்பிலத்தினுள்ளே, வேகம் - வேகத்தோடு, தடவி - தேடிப்பார்த்து, (அவனைக் கண்டு), வெம்மையான வென்றி மோகம் மேல் - கொடுந்தன்மையையுடைய அவ்வசுரனை வெல்லுதலாகிய விருப்பந்தரும் பொருளின்மேல், முயல்வின் - முயற்சியிலே, வைகிட - பொருந்தியிருக்க,—துணை - தம்பியான சுக்கிரீவன், சோகம் எய்தினன் - துன்பமடைந்தவனுய், துளங்கினுன் - கலங்கினுன்; (எ - று.)

பிலத்துட்சென்ற வாலியானவன் அசுரனைத் தேடுதலும், தேடிக் கண்டுபிடித்தலும், பிடித்துப் போர்செய்தலுமாகிய தொழில்களிற் பொருந்தி இருபத்தெட்டு மாசம் வரையிலும் வெளிவராததனுல், 'வாலிக்கு என்ன அபாயம் நேர்ந்ததோ?' என்று காவல் காத்துநின்ற சுக்கிரீவன் கலங்கினனென்பதாம். இருது - இரண்டு மாச காலங் கொண்டது. இருது, பருவம் என்பன - ஒருபொருட்சொற்கள். சித்திரையும் வைகாசியும் - வசந்தருது [இளவேனிற் பருவம்] என்றும், ஆனியும் ஆடியும் - க்ரீஷ்மருது [முதுவேனிற் பருவம்] என்றும், ஆவணியும் புரட்டாசியும் - வர்ஷருது [கார்ப்பருவம்] என்றும், ஐப்பசியும் கார்த்திகையும் - சரத்ருது [கூதிர்ப்பருவம்] என்றும், மார்கழியும் தையும் - ஹேமந்தருது [முன்பனிப்பருவம்] என்றும், மாசியும் பங்குனியும் - சிசிருது [பின்பனிப் பருவம்] என்றும் கூறப்படும். இருபத்தெட்டு மாதங் கழியவும் காலக்கழிவைக் குறித்துச் சிறிதும் ஆலோசனையின்றி அவ்வசுரனை வெல்வதிலேயே கருத்தாயிருந்ததனுல், வென்றியை 'மோகம்' என்ருர். வென்றியாகிய மோகம்மேல் என மாறுக. வெம்மையான் - வாலியாகவுமாம். வென்றிமோகமேல் வெம்மையான் எனக் கூட்டி, வெற்றியாகிய மோகத்தில் விருப்புடையவனுன வாலியென்றும் உரைக்கலாம். ஏழொடேழ் - ஏழொடு கூடிய ஏழ். ஏழ் - ழகரமெய்யீற்றுப்பெயரென்பது, தொல்காப்பியனுர்கொள்கை; நன்னூலார் முதலாயினுர், ஏழு என்னும் முற்றியலுகரவீற்றுப்பெயர் விகாரப்பட்டு அவ்வாறு நிற்குமென்பர்.

வாலியும் மிருது—விரித்தல். பி - ம்:—[1]வெம்மைசால். [2]மோகமோடமர். [3]முயல்பின் வைகிட. [4]எய்திகின்று, எய்தியென், எய்தியுன். (134)

54. அழுத ழுங்குறு மிவனை யன்பினில்
தொழுதி ரந்துநின் றொழிலி தாதலால்
எழுது [1]வென்றியா [2]யரசு கொள்கெனப்
பழுதி தென்றனன் பரியு நெஞ்சினன்.

(இ - ள்.) அழுது-புலம்பி, அழுங்குறும்-வருந்துகின்ற, இவனை - இச் சுக்கிரீவனை, (நாங்களெல்லாம்), அன்பினில் - அன்போடு, தொழுது - வணங்கி, இரந்து - பிரார்த்தித்து, 'எழுது வென்றியாய்-(நூல்களிற் சிறப்பித்து) எழுதத்தக்க வெற்றியையுடையவனே! நின் தொழில் இது ஆதலால் - உனது செய்கை இது [அரசாட்சி] ஆகையால், அரசு கொள்க - அரசாட்சியையேற்றுக் கொள்வாயாக,' என - என்று சொல்ல,—பரியும் நெஞ்சினன் - துயர்கின்ற மனமுடையனான அச்சுக்கிரீவன், இது பழுது என்றனன் - இது குற்றமாமென்று சொன்னான்; (எ - று.)

நெடுநாள் கழிந்தும் வாலி மீண்டுவராததனால் 'அவ்வாலிக்கு ஏதேனும் தீங்குநேரிட்டதோ?' என்று கருதுதலால் இச்சுக்கிரீவன் மனம் கலங்கிநிற்க, நாங்கள் இவனைத் தேற்றி 'இளவரசு ஆகிய நீயே வாலிக்குப்பிறகு அரசு புரியவேண்டும்' என்று வற்புறுத்திக்கூறவும் இச்சுக்கிரீவன் அதனைத் தடுத்துக் கூறலாயினனென்பதாம். இங்கே, இரத்தல் - வேண்டுதல். 'நின் தொழில் இதாதலால்' என்றது - அரசனாகிய வாலிக்குப் பின்பு அரசாள வேண்டுவது இளவரசனாகிய உனது கடமை யாகையால் என்றபடி. எழுதுதல் - ஆங்காங்குத் தனது வென்றியைக் கற்களில் எழுதி நாட்டிவைத்தலுமாம். அழுங்குறும்மிவனை - விரித்தல். பி - ம்:—[1]சீர்த்தியாய். [2]அரசு செய்கென. (135)

55. [1]என்று தானுமவ் வழியி ரும்பிலஞ்
[2]சென்று முன்னவன் [3]தேடு வேனவற்
[4]கொன்று ளான்தனைக் [5]கொல்வ னன்றெனில்
பொன்று வே[6]னெனப் [7]புகுதன் மேயினான்.

(இ - ள்.) என்று - என்றுசொல்லி,—தான்உம் - சுக்கிரீவனும், 'இரும் பிலம் சென்று - பெரிய பிலத்தினுட்புகுந்து, அ வழி - அவ் விடத்தில், முன்னவன் - தமையனை, தேடுவேன் - தேடிப்பார்ப்பேன்; (அவன் இறந்துபோயிருந்தால்), அவன் கொன்று உளான் தனை - அவனைக் கொன்றுள்ள பகைவனை, கொல்வன் - (போர் செய்து) கொல்லுவேன்; அன்று எனின் - கொல்ல முடியாதாயின், பொன்றுவேன் - (போரில்) இறப்பேன்,' என - என்றுசொல்லி, புகுதல் மேயினான் - (அப்பிலத்தில்) நுழையப் போயினான்; (எ - று.)

'வாலி சென்ற பிலத்தினுட் புக்குப் பார்த்து அவ்வாலியை அசுரன் கொன்றிருப்பின் அவனைக்கொல்வேன்; அதுமுடியா விடின், யான் இறப்பேன்' என்று சுக்கிரீவன் தன் துணிவை

யெடுத்துக் கூறினனென்பதாம். பி - ம்:—[1] அன்று...அரும். [2] சென்றென். [3] தேடினன் வரிற், தேடிநானவற். [4] கொன்றுளார்தமை. [5] கொலவொணுதெனில். [6] எனுப். [7] போதல். (136)

56. [1] தடுத்து வல்லவர் தணிவு செய்துநோய்
[2] கெடுத்து மேலையோர் [3] கிளத்து நீதியால்
அடுத்த காவலும் [4] மரிகளாணையால்
கொடுத்த துண்டிவன் [5] கொண்ட னன்கொலாம்.

(இ - ள்.) வல்லவர் - சொல்வன்மையையுடைய மந்திரிமார்,— அரிகள் ஆணையால் - (மற்றை) வானரர்களின் ஏவலினால், தடுத்து - (இவன் செல்வதைத்) தடைசெய்து, மேலையோர் கிளத்தும் நீதியால் - முன்னையோர் கூறியுள்ள நீதிமுறையைக் கொண்டு, தணிவு செய்து - சமாதான வார்த்தைகள் சொல்லி, நோய் கெடுத்து - (இவனுடைய) துயரத்தைப் போக்கி [தேற்றி], அடுத்த காவல்உம் - பொருந்திய அரசாட்சியையும், கொடுத்தது உண்டு - (இவனுக்குக்) கொடுத்தது உண்டு; (அவ்வரசாட்சியை), இவன் - இச்சுக்கிரீவன், கொண்டனன் கொல் - (தானாகவே) கைக்கொண்டானோ? [இல்லை]; (எ - று.)—ஆம் - அசை.

நாங்கள் வற்புறுத்திக் கூறவும் கேளாது இவன் செல்வதைக் கண்ட மந்திரிமார் இவனைத் தடுத்துப் பலவாறு சமாதானங்கூறி இராச்சியத்தை யாளுமாறு பட்டங் கட்டித் தரவே, இச்சுக்கிரீவன் அம்மந்திரிமாரது கட்டளையைக் கடக்கமாட்டாமல் அரசாளுதலை உடன்பட்டானேயன்றித் தானே கைப்பற்றவேணுமென்று அரசை ஏற்றுக்கொள்ளவில்லை யென்பதாம். இதனால், சுக்கிரீவன்மீது சிறிதுங் குற்றமில்லை யென்பதைத் தெளிவாகக் கூறியவாறும். [5] கொண்டிலன்கொலாம் என்ற பாடத்திற்கு, கொல் ஆம்-அசைகள். காவலும் மரிகள், மகரவொற்று - விரித்தல்.

பி - ம்:—[1] தடுக்க. [2] எடுத்தவேலையோர், எடுத்திவன்றனக்கு. [3] இறைமையோடியைந்து, இயைவினலியைந்து, இயைவினலியைத்து, இசைவினலிசைந்து, கேள்வியாலியைந்து. [4] அரசும். (137)

57. அன்ன நாளின்மா யாவி யப்பிலத்து
இன்ன வாயினூ [1] டேறு மென்னயாம்
பொன்னின் மால்வரைப் பொருப்பொ ழித்துவேறு
உன்னு குன்றெலா முடன [2] டுக்கினேம்.

(இ - ள்.) அன்ன நாளில் - அந்தக்காலத்தில்,—'மாயாவி - (வாலியைக் கொன்றிருப்பின்) மாயாவியானவன், அ பிலத்து - அப்பிலத்திலிருந்து, இன்னவாயினூடு - இந்தவழியால், ஏறும் - (பிலத்திலிருந்து) மேலேறி வருவான்,' என்ன - என்று எண்ணி,— யாம் - நாங்களெல்லாம், பொன்னின் மால் வரை பொருப்பு ஒழித்து - பொன்மயமான மகாமேருகிரியாகிய ஒரு மலை ஒழிய விட்டு, வேறு உன்னு குன்று எலாம் - (மனத்தால்) நினைக்கப்

படும் மற்றைமலைகளையெல்லாம், உடன் - ஒருசேர, அடுக்கினேம் - (கொண்டுவந்து ஒன்றின்மே லொன்றாக) அடுக்கி வைத்து(ப்பிலத் துவாரத்தை) அடைத்துவிட்டோம்; (எ - று.)

வெகுநாள் கழிந்துவிடவே, அம்மாயாவி பிலத்தினுள் வாலியைக் கொன்றுவிட்டானென்று மாறாகக் கருதிய வானரர்கள் அதனால், சுக்கிரீவனாதியோரையுங் கொல்லுதற்கு அம்மாயாவி மீண்டு வருதல்கூடு மென்றெண்ணி அங்ஙனம் வரவொட்டாமல் பில வழியை யடைத்தனரென்க. பின்னிரண்டடி - உயர்வுநவிற்சியணி. மாயாவி - மாயையுடையவன்; இவனும், துந்துபியும் - இராவணன் மனைவியான மந்தோதரியின் உடன்பிறந்தவர்: இவர்கள் தந்தை - அசுர சிற்பியான மயன்; தாய் - ஹேமா என்ற அப்ஸரஸ்ஸ்த்ரீ. பி - ம்:—[1]எய்தும். [2]அடுக்கினேம். (138)

58. சேம மவ்வழிச் செய்து செங்கதிர்க்
[1]கோம கன்தனைக் [2]கொண்டு வந்தியாம்
மேவு குன்றின்மேல் வைகும் வேலைவாய்
ஆவி யுண்டன னவனை யன்னவன்.

(இ - ள்.) யாம் - நாங்கள், அ வழி - அந்த வழியை, சேமம் செய்து - (அங்ஙன் அடைத்தலாகிய) காவலைச்செய்து, செம்கதிர் கோமகன் தனை கொண்டு வந்து - சிவந்த கிரணங்களையுடைய சூரிய பகவானது குமாரனாகிய சுக்கிரீவனை அழைத்துக்கொண்டுவந்து,— மேவு குன்றின்மேல் வைகும் - (இருப்பிடமாகப்) பொருந்திய இவ் இந்தை மலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற, வேலைவாய் - காலத்தில்,—(அங்கே), அன்னவன் - அவ்வாலி, அவனை - அந்தமாயாவியை, ஆவி உண்டனன் - உயிர் குடித்தான் [கொன்றானென்றபடி], (எ - று.)

வழி யடைத்தபின்பு நாங்கள் சுக்கிரீவனை அழைத்துக் கொண்டு வந்து இம்மலையில் வாழ்ந்துகொண்டிருக்கையில், வாலி மாயாவியைக் கொன்றிட்டனனென்பதாம். சேமம் - க்ஷேமம். வந்தியாம் - குற்றியலிகரம். பி - ம்:—[1]கோவின்மைந்தனை. [2]கொண்டுவந்துயர். (139)

59. ஒளித்த வன்[1]னுயிர்க் கள்ளை யுண்டுளம்
களித்த வாலியுங் கடிதி னெய்தினன்
விளித்து நின்றுவே றுரை[2]பெ றானிருந்து
அளித்த வாறுநன் றிளவ லாரென.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) ஒளித்தவன் - (பிலத்தில்) மறைந்தவனான மாயாவியினது, உயிர் - பிராணனாகிய, கள்ளை - மதுவை, உண்டு - குடித்து [மாயாவியைக் கொன்று], உளம் களித்த - மனம் மதிக்க [செருக்கடைய]ப் பெற்ற, வாலியும்—, கடிதின் - விரைவாக, எய்தினன் -

(பிலத்தின் வாயிலில்) வந்து, (வழி அடைபட்டிருப்பதைப் பார்த்து), விளித்து நின்று - (தம்பியைக்) கூப்பிட்டுநின்று, வேறு உரை பெறான் - மறுமொழியைப் பெறாதவனாய், 'இளவலார் - (நமது) தம்பியார், இருந்து - (வாயிலில்) இருந்து, அளித்த ஆறு - காவல்செய்த விதம், நன்று - நன்றாயிருந்தது!' என - என்று எண்ணி,—(எ - று.)—'என' என்பது, வருங் கவியில் 'எற்றலும்' என்பதனோடு முடியும்.

சிறிதும் ஆராய்ச்சியின்றி உடனேவெகுண்டதனால், 'களித்த' என்றும், 'கள்ளை யுண்டு' என்றுங் கூறினர். பகைவனைக் கொன்றதனாலுண்டான வெற்றிச் செருக்கை, உயிர்க்கள்ளுண்டு உளங்களித்ததாக்குறித்தார்; தற்குறிப்பேற்றவணி; இவ்வணிக்கு 'உயிர்க்கள்ளையுண்டு' என்ற உருவகவணி அங்கமாய்நின்றது. வேறுரை - எதிர்மொழி. 'அளித்தவாறு நன்று' - பிறகுறிப்பு. இளவல் - பண்படியாப்பிறந்தபெயர்; அல் - பெயர்விகுதி. 'இளவலார்' எனப் பலர்பாற்குஉரிய 'ஆர்' விகுதி கொடுத்துக் கூறியது - இகழ்ச்சிபற்றி; செறலின்கண் வந்தது என்னவுமாம். பலர்பாலாற் கூறுதல் உயர்த்தற்கண்ணதன்றோ வெனின்?—"தாம்வந்தார் தொண்டனார்" என்றாற்போல உயர்சொல்தானே குறிப்புநிலையால் இழிபுவிளக்கிற்றென்க. பி - ம்:—[1]உயிர்தன்னை. [2]பெறான்விரைந்து.

60. வால்வி சைத்துவான் [1]வளிநி மிர்ந்தெனக்
கால்[2]வி சைத்தவன் [3]கடிதி னெற்றலும்
நீல்[4]நி றத்து[5]விண் ணெடுமு கட்டவும்
வேலை புக்கவும் பெரிய வெற்பெலாம்.

(இ - ள்.) அவன் - அவ்வாலி, வால் விசைத்து - வாலைவலிமையோடு தூக்கி, கால் விசைத்து - காலைப் பலமாக எடுத்து, வான் வளி நிமிர்ந்து என - பெருங்காற்று எழுந்தாற்போல, கடிதின் - வேகமாக, எற்றலும் - உதைத்துத் தள்ளினமாத்திரத்தில்,—பெரிய வெற்பு எலாம் - (நாங்கள் அடைத்துவைத்த) பெருமலைகளெல்லாம், நீல் நிறத்து விண் நெடு முகட்டஉம் - நீலநிறத்தையுடைய ஆகாயத்தினது உயர்ந்த உச்சியையடைந்தனவும், வேலை புக்கஉம் - கடலில் விழுந்தனவும் (ஆயின); (எ - று.)—'ஆயின' என வினை வருவிக்க.

அவ்வாறு சுக்கிரீவன்மீது மிக்க சினங்கொண்ட வாலி தனது காலினால் ஒருதை யுதைத்தலும், பிலத்தை மூடியிருந்த மலைகளெல்லாம் வானிலும் கடலிலுமாகச் சென்று சேர்ந்திட்டன வென்பதாம். நீலமென்பது, கடைக்குறையாக 'நீல்' என நின்றது. முகட்ட - பலவின்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர். மூன்றாமடியில் 'நீல்நிறம்' என்ற இடத்து இடைநிலைமெய்ம்மயக்கம் இலதாகவுஞ் சந்திபெறாதது, எதுகைத் தொடையின் பொருட்டென்க. பி - ம்:—[1]வழி. [2]பெயர்த்தவன். [3]கடிதினெய்தினான், கடிதுதைத்தலும். [4]நிறத்த. [5]வான். 'வால் விசைத்து மாவழிதிறந்திட' என்று சிலபிரதியில் முதலடி. (141)

61. ஏறி னானவன் [1]னெவரு மஞ்சுறச்
சீறி னானெடுஞ் சிகர மெய்தினான்
[2]வேறி லாதவன் [3]புதல்வன் [4]மெய்ம்மையாம்
ஆறி னானும்வந் தடி [5]வ ணங்கினான்.

(இ - ள்.) அவன் - வாலி, ஏறினான் - (பிலத்தினின்று) ஏறியவனாய், எவர்உம் அஞ்சுற-யாவரும் பயப்படும்படி,சீறினான்-கோபித்து (இரைந்துகொண்டு), நெடுஞ் சிகரம் - பெரிய இம்மலையுச்சியை, எய்தினான் - அடைந்தான்; மெய்ம்மை ஆம் ஆறினான் - சத்தியமான வழியிற் செல்பவனாகிய, வேறு இல் - (மனத்தில்)வேறுபாடில்லாத, ஆதவன் புதல்வன்உம் - சூரியபுத்திரனான சுக்கிரீவனும், வந்து—, அடி வணங்கினான் - (தமையனது) பாதத்தில் விழுந்து வணங்கினான்; (எ - று.)

வாலியானவன் விசையோடு அம்மலைகளைத் தள்ளிப் பின்பு மிக்கசீற்றத்துடன் இம்மலையை யடைய,சுக்கிரீவன் மனத்திற் களங்கமில்லாதவனாதலால் அவ்வாலியின் பாதங்களை வணங்கின னென்பதாம். மனத்திற் களங்கமின்றிப் பெரியவானரர்களின் கட்டளைப்படியே நடந்தவனாதலால், 'வேறு இல்' என்றும், 'மெய்ம்மையாம் ஆறினான்' என்றுங் கூறினார்; அதுபற்றியே, அவன் அஞ்சியொடுங்கி யொளியாமல் எதிர்வந்து வணங்கியது மென்க. ஆதவன்-ஆதபன்: நன்றாகத் தபிப்பவன்; தபித்தல் - வெயில்காய்தல். அவன்னெவரும், னகரமெய் - விரித்தல்விகாரம். [2]வேறிலாதவன் புகவும் என்ற பாடத்திற்கு, வேறு இலாதவன் - சீற்றம் தவிர வேறொன்றான சாந்த குணத்தைக் கொண்டிராதவனென்க: இனி, வேறு - வெற்றியைத் தவிர வேறொன்றை [தோல்வியை] என்பாருமுளர்.

பி - ம்:—[1]எங்கும். [3]புகவும், புதல்வ. [4]மெய்ம்மையால், மெய்ம்மலை, வெம்மையால். [5]இறைஞ்சினான். (142)

62. வணங்கி [1]யண்ணநின் வர[2]வி லாமையால்
உணங்கி [3]யுன்வழிப் படர வுன் னுவேற்கு
இணங்க [4]ரின்மையா லிறைவ [5]நும் முடைக்
கணங்கள் காவலுன் [6]கடன்மை யென்றனர்.

(இ - ள்.) வணங்கி - (சுக்கிரீவன்) தண்டனிட்டு, (வாலியை நோக்கி), 'அண்ண - மூத்தவனே! இறைவ - தலைவனே! நின் வரவு இலாமையால் - (வெகுநாள் வரையில்) உன் வருகை இல்லாமையால், உணங்கி - ('உனக்கு என்ன நேர்ந்ததோ?' என்று) வருந்தி, உன் வழி படர - உன்னிடம் வந்து சேரும்படி, உன்னுவேற்கு - எண்ணிப் புறப்பட்ட எனக்கு,—நும் உடை கணங்கள் - உம்முடைய கூட்டத்தார் [மந்திரிகள் முதலிய வானரர்கள்), இணங்கர் இன்மையால் - சம்மதமில்லாமையோடு, காவல் - (எங்களைக்) காத்தல் [அரசாளுதல்], உன் கடன்மை - உனது கடமையாம்,' என்றனர் - என்றார்கள். (எ - று.)

இச்செய்யுளில் 'அண்ண' என்றது முதல் அடுத்த செய்யுளில் 'பொருய்' என்னுமளவும், முன்னே வாலியிடத்துச் சுக்கிரீவன் கூறியதை அநுமான் அநுவதிக்கின்ருன். சுக்கிரீவன் நேர்மையான வழியில் நடப்பவனுதலால், வாலிகேட்பதற்கு முன்னமே தன்மீது சிறிதுங் குற்றமில்லையெனத் தெளிவிக்குமாறு நிகழ்ந்த செய்தியை உள்ளபடி வாலியினிடத்துக் கூறலாயின னென்க. உன்னுவேற்கு - நான்கனுருபு, கொள்ளுதற் பொருளது. 'இணங்கு' என்னும் முதனிலைத் தொழிற்பெயராகிய மென்ருெடர்க்குற்றியலுகரத்துக்கு, 'இணங்கர்' என அர் போலியாய்வந்தது; 'இணங்கல்' எனப்பாடங் கொள்ளுதல், நேர். இறைவநும்முடை - ஒருமைப்பன்மைமயக்கம்; மரியாதைபற்றி வந்ததனுல், வழுவமைதி. இறைவ - சுக்கிரீவனைக் குறித்த வாநரர்களின்விளியுமாம். [1]அண்ணனின் என்ற பாடத்துக்கு, அண்ணன் என்று பிரிந்து அண்மைவிளியாம்; அண்ணல் என்று பிரித்தலுமொன்று. பி - ம்:—[2] இலாமையான். [3]யான். [4]இல்லையால். [5]உன்னுடை. [6]கடனிது, கடமை. (*143*)

63. ஆணை யஞ்சியிவ் வரசை யெய்திவாழ்
நாணி லாதவென் நவையை[1] நல்குவாய்
பூணு லாவு[2]தோ ளிணைபொ ருயெனக்
[3]கோணி னுனெடுங் கொடுமை [4]கூறினுன்.

(இ - ள்.) (என்று நிகழ்ந்தவரலாற்றைக்கூறிப் பின்னும் சுக்கிரீவன் வாலியைநோக்கி), 'பூண் உலாவு தோள் இணை - ஆபரணங்கள் அசைந்து விளங்கப் பெற்ற இரண்டு தோள்களையுடையவனே!—ஆணை அஞ்சி - (அவ்வாநரர்களின்) கட்டளையை (மறுப்பதற்கு)ப் பயந்து, இ அரசை எய்தி - இந்த அரசாட்சியையடைந்து, வாழ் - (உன்னிடம் வராமல் இங்கேயே) வாழ்ந்துகொண்டிருந்த,நாண் இலாத -வெட்கமில்லாத, என் - எனது, நவையை - குற்றத்தை, பொருய் நல்குவாய் - பொறுத்தருள்வாயாக', என - என்று வேண்டவும்,—(வாலி), கோணினுன் - மனம் மாறுபட்டவனுய், நெடுங் கொடுமை கூறினுன் - பெரிய கொடிய வார்த்தைகளைச் சொன்னுன்; (எ-று.)

தனக்கு விருப்பமில்லாமலிருக்கவும், வாநரர்களின் வேண்டுகோளினுல் தான் செய்த காரியம் அரசாட்சியில் விருப்பத்தாற் செய்ததென வாலி எண்ணுதற்கு இடமாய் நிற்றலால், 'நாணிலாத என் நவையை' என்று, தன்னையும் அறியாது நேர்ந்த தன் குற்றத்தை வெளிப்படையாகக் கூறி, 'பொருய்' என்று புகலடைந்தன னென்க. சுக்கிரீவன் இவ்வாறு சரணுகதனுகவும் வாலீ பொறுத்திடாமற் போனதனுலேயே, அறத்தை நிலைநாட்டப் பிறந்த ஸ்ரீராமன் அடைக்கலம்புகுந்தோரை யளித்தலாகிய அறத்துக்குப்பகைஞனை வாலியைவீழ்த்தினனென அறிக. கோணுதல் - சுக்கிரீவன் தன்கட்டளையைத்தவறி அரசச்செல்வத்திலுண்டான ஆசையால் இப்படிச் செய்தானென்றேஎண்ணியதனுல். நல்குவாய் - அரசனுவாய் என்றுமாம். கொடுமை கூறுதல் - நிஷ்டூரவார்த்

தைகள் சொல்லுதல். பூணுலாவுதோளிணை - அன்மொழித்தொகை; அண்மைவிளி. பூணுலாவு தோளிணை பொறுய் - அரசச்சுமையை யேற்ற என் தோளிணைகளைப் பொறுப்பாய் என்பர் ஒரு சாரார். பி - ம்:—[1] நல்கிணுய். [2] தோளினே, தோளிறை. [3] கோணிலாதவெங். [4] கூடினுன். சில பிரதிகளில் "ஆணை யஞ்சியிவ் வரசை யெய்திணுய், நாணி லாதநீ நவையுள் வைகிணுய், ஏணு லாவுதோ ளிளவலே யெனக், கோணி ஞனெடுங் கொடுமை கூறினன்" என இச்செய்யுள் வாலி கூற்றெனக் கொள்ளுமாறு காணப்படுகின்றது. (144)

64. அடல்க டந்ததோ ளவனை யஞ்சிவெங்
குடல்க லங்கியெங் குலமொ டுங்கமுன்
கடல்க டைந்த [1]வக் கரத லங்களால்
உடல்க டைந்தன னிவனு லைந்தனன்.

(இ - ள்.) (கொடிய சொற்களைக் கூறியபின்னும் வாலியானவன்), —அடல் கடந்த - வலிமைமிக்க, தோள் - புயங்களையுடைய, அவனை - அவ்வாலியை, அஞ்சி - பயந்து, வெம் குடல் கலங்கி - கொடிய குடலும் கலங்கிப்போய், எம் குலம் ஒடுங்க - எங்கள் [சுக்கிரீவனைச் சார்ந்த வானரர்களின்] கூட்டமெல்லாம் பதுங்கியொளியும்படி,— முன் கடல் கடைந்த - முற்காலத்தில் திருப்பாற்கடலைக் கடைந்திட்ட, அ கரதலங்களால் - அந்தத்(தனது) கைகளால், உடல் - (சுக்கிரீவனது) உடலை, கடைந்தனன் - குத்திக் குமைத்துக் கலக்கினுன்; (அதனுல்), இவன் - சுக்கிரீவன், உலைந்தனன் - மிக வருந்திணுன்; (எ - று.)

கொடியசொற்களைக்கூறியதோடு நில்லாமல் வாலி நாங்கள் பலரும் அஞ்சிக் கலங்கும்படி எம் முன்னிலையிலேயே சுக்கிரீவனைக் குத்திக்குமைத்தன னென்பதாம். இனி, அடல் கடந்த தோள் - (பகைவர்களின்) வலிமையை அடக்கி வெற்றிகொண்ட தோளென்றுமாம். ஒடுங்கக் கடைந்தனன் என இயையும். "அச்சக்கிளவிக்கு ஐந்து மிரண்டும்" என்ற தொல்காப்பியத்தால், 'அவனையஞ்சி' என்ருர். பி - ம்:—[1] வெங். (145)

65. இவனு லைந் [1]துலைந் தெழுக டற்புறத்து
அவனி யுங்கடந் [2]தய[3]ல டைந்தனன்
கவன மொன்றிலான் கால்க டாயென
அவனி வேலையே ழரியின் வாவிணுன்.

(இ - ள்.) இவன் - சுக்கிரீவன், உலைந்து உலைந்து - மிகவருந்தி, எழு கடல் புறத்து அவனிஉம் - ஏழு சமுத்திரங்களுக்கும் அப்புறத்திலுள்ள பூமியையும், கடந்து - தாண்டி, அயல் - (அப்பாலுள்ள) இடத்தை, அடைந்தனன் - சேர்ந்தான்; கவனம் ஒன்று இலான் - கவலைசிறிதுமில்லாதவனுன வாலியும், கால் கடாய் என - காற்றுச் சென்ருற்போல [வாயுவேகமாய்], அவனி வேலை ஏழ் -

பூமியைச்சூழ்ந்த ஏழு சமுத்திரங்களையும், அரியின் - சிங்கத்தைப் போல, வாலினன்-(அலக்ஷியமாகத்) தாண்டிப் பாய்ந்தான்; (எ-று.)

வாலியினிடத்தினின்று தப்பி யோடிவிடவேண்டு மென்னுங் கருத்தினாற் சுக்கிரீவன் ஏழு கடல்களைக்கடந்து அண்டபித்திகையை யடைய, வாலியும் பின்தொடர்ந்தே சிங்கம் மலைப்பிரதேசங்களைத் தாண்டுவதுபோல ஏழு கடல்களையும் மிக எளிதிற் கடந்து சென்றன னென்பதாம். இனி, அரியின் என்பதற்கு விஷ்ணுவைப்போல வென்றும், சூரியன்போல வென்றும், குதிரைபோல வென்றும் பலவகையாகப் பொருள் கொள்ளுதலும் ஒன்று. கவனம் ஒன்று இலான் - (இவனைத் தொடர்ந்து பற்றுதலன்றி) வேறு கருத்தில்லாதவ னென்றுமாம். நான்காமடியின் முதலில், அவன் இவேலேயேழ் என்று பிரித்தும் உரைக்கலாம்; அவ்வுரைக்கு, 'அவனிவ்வேலேயேழ்' என்றதன் வகரமெய் தொக்கதெனக. உலைந்து உலைந்து - அடுக்கு, மிகுதிபற்றியது. கடாய் - கடாவினால் என்னும் எச்சத்தின் திரிபு. அவநி என்ற வடசொல் - (அரசராற்) காக்கப்படுவது என்று காரணப்பொருள்படும். பி - ம்:—[1] அலைந்து. [2] எயில். [3] கடந்தனன். இது முதல் நான்குகவிகள் சில ஏட்டுப்பிரதிகளி லில்லையென்ப. மேலிரண்டு கவிகள் - சில அச்சுப்பிரதிகளிற் காணப்படுகின்றன வாயினும், பயில வழங்கா; அவற்றை 'வெள்ளிப்பாட்டு' என்பர்: வெள்ளியம்பல வாணத்தம்பிரா னென்பவர் பாடிச் செருகியவை. (*146*)

66.—அநுமான் கூறிவருகின்ற வரலாற்றைக் கேட்டு ஸ்ரீராமன் வியத்தல்.

என்று கான்மக னியம்ப வீசனுந்
நன்று நன்றென நனிதொ டர்ந்துபின்
சென்ற வாலிமுன் சென்ற செம்மல்தான்
அன்று வாவுதற் கறிந்த னன்கொலாம்.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) என்று—, கால்மகன் - வாயுபுத்திரனை அநுமான், இயம்ப - சொல்ல,—ஈசன்உம் - தலைவனாகிய ஸ்ரீராமனும், 'நன்று நன்று - நன்றாயிருந்தது நன்றாயிருந்தது! நனி - மிகுதியாய் [வேகமாய்], பின் தொடர்ந்துசென்ற - பின்னே விடாமல் தொடர்ந்து போன, வாலி - வாலியால்,—முன் சென்ற செம்மல் - முன்னேபோன சுக்கிரீவன், அன்று - அந்நாளில், வாவுதற்கு - தாவிச்செல்ல, அறிந்தனன்கொல்ஆம் - அறிந்தான்போலும்,' என - என்று, (எ - று.)—'என' என்பது, மேற்கவியில் 'வியந்து' என்பதனோடு முடியும்.

வாலி பின்னே தொடரத்தொடர முன்னே செல்லுகின்ற சுக்கிரீவன் பின்னும் விரைந்து செல்வதனால், 'பின்சென்றவாலியினால் முன்சென்ற செம்மல் வாவுதற்கு அறிந்தனன்கொல்' என்றான். இனி, பின்தொடர்ந்துசென்ற வாலி முன்சென்ற சுக்கிரீவ

னால் வாவுதற்கிறந்தனன்கொ லென்பாருமுளர்; அது சிறவாது. நன்று நன்று - அடுக்கு, வியப்புப்பற்றியது. செம்மல் - பெருமையிற் சிறந்தவன்; ஆண்பாற் சிறப்புப்பெயர். தான் - அசை. ஈசனுந் நன்று—நகரவொற்று - விரித்தல். (147)

67.—ஸ்ரீராமன் பின்னுங் கூறுமாறு வினவுதல்.

இனைய வாவியந் திளவல் தன்னொடும்
வனையும் வார்கழற் கருணை வள்ளல்பின்பு
இனைய வீரர்செய் தமையி யம்பெனப்
புனையும் வாகையான் புகறன் மேயினான்.

(இ - ள்.) வனையும் வார் கழல் - அணிந்த பெரிய வீரக்கழலை யுடைய, கருணை வள்ளல் - கிருபாமூர்த்தியான ஸ்ரீராமபிரான், இள வல்தன்னொடும் - இளையபெருமாளுடனே, இனைய ஆ வியந்து - இவ்வாறு அதிசயித்து, (அநுமானை நோக்கி), 'இனைய வீரர் - வீரர் களாகிய இந்த வாலி சுக்கிரீவர்கள், பின்பு—, செய்தமை - செய்த வரலாற்றை, இயம்பு - சொல்வாய்,' என - என்று வினவ,—புனையும் வாகையான் - பொருந்திய வெற்றியையுடையவனான சிறிய திருவடி, புகறல் மேயினான் - சொல்லத்தொடங்கினான்; (எ - று.)—அதனை, அடுத்த நான்கு கவிகளிற் காண்க.

வாகையென்ற ஒருவகை மரத்தின் பெயர் - அதன்மலர்க்கு முதலாகுபெயர்; போரில்வென்றவர் இதனைச்சூடுதல், மரபு: ஆகவே, புனையும் வாகையான்-போர்செய்து வெற்றிகொள்ளுதலையே தனக்கு அலங்காரமாகக் கொண்டவன் என்றபடி. ஆ=ஆறு: விகாரம். புகறல் - தொழிற்பெயர். (148)

68.—இதுமுதல் நான்கு கவிகள்-அநுமான் தான் சொல்லிவந்த வரலாற்றைக் கூறிமுடித்தலைத் தெரிவிக்கும்.

நக்க ரக்கடற் புறத்து நண்ணுநாள்
செக்கர் மெய்த்தனிச் சோதி [1] சேர்கலாச்
சக்க ரப்பொருப் பிற்ற லைக்குமப்
பக்க முற்றவன் கடிது பற்றினான்.

(இ - ள்.) நக்கரம் - முதலைகளையுடைய, கடல் - ஏழுகடல்களுக் கும், புறத்து - அப்பாலில், நண்ணும் நாள் - (சுக்கிரீவன்) இருந்த பொழுதில்,—செக்கர் - சிவந்த, மெய் - நிறத்தையுடைய, தனி - ஒப்பில்லாத, சோதி - ஒளிவடிவமான சூரியனது பிரகாசமும், சேர்கலா - சேராத, சக்கரம் பொருப்பின் தலைக்கும் - சக்கரவாள பருவதத்தினிடத்துக்கும், அப் பக்கம் - அப்பாலில், அவன் - அவ் வாலி, உற்று - சேர்ந்து, கடிது - விரைவிலே, பற்றினான் - (அங்கு ஓடிப்போயிருந்த சுக்கிரீவனைப்) பிடித்துக்கொண்டான்; (எ-று.)

கீழ்க்கூறியவாறு சக்கரவாளகிரிக்கும் அப்பால் அண்டபித் திகையை யடைந்த சுக்கிரீவன் அதற்குமேற்போக இடமில்லை

யாதலால் திகைத்துநிற்கையில், அவனைத் தொடர்ந்துசென்ற வாலியும் அவனை விரைந்து பிடித்துக்கொண்டன னென்பதாம். பூமியைச் சுற்றிலுமுள்ள ஏழுகடலுக்கும் அப்பால் கோட்டைமதில் போலச் சுற்றிலுமிருக்கின்ற சக்கரவாளபருவதத்துக்கு உட்பக்கம் மாத்திரம் சூரியகிரணங்களாற் பிரகாசிக்க வெளிப்பக்கம் அவற்றால் விளங்கா தாதலால், 'செக்கர்மெய்த் தனிச்சோதி சேர்கலாச் சக்கரப்பொருப்பிற் றலைக்கு மப்பக்கம்' என்றார்; இதனை, அம்மலையினது 'லோகாலோகம்' என்னும் வடமொழிப்பெயராலும் உணர்க. நக்கரம்=நக்ரம். சக்கரம்=சக்ரம். நக்கரத்தைக் கூறியது - இங்கு மற்றை நீர்வாழுயிர்கட்கும் உபலக்ஷணம். சக்ராகாரமாய் [வட்டவடிவமாய்] உலகத்தை வளைந்திருத்தல்பற்றி, 'சக்கரப்பொருப்பு' எனப்பட்டது: இங்கு 'சக்ரம்' என்பதை 'சக்ரவாளம்' என்றதன் நாமைகதேசே நாமக்ரஹண மென்னலாம். பி - ம்:—[1]சேர்தலால். (149)

69. பற்றி யஞ்சலன் [1]பழியின் வெஞ்சினம்
முற்றி [2]நின்றதன் முரண்வ லிக்கையால்
எற்று வானெடுத் [3]தெழுத லும்பிழைத்து
அற்ற மொன்றுபெற் றிவன கன்றனன்.

(இ - ள்.) (வாலியானவன்),—பற்றி - (சுக்கிரீவனைப்) பிடித்துக்கொண்டு, பழியின் அஞ்சலன் - (தம்பியை வருத்துகின்றானென்று வரும்) பழிக்குப் பயப்படாதவனும்,—வெம் சினம் முற்றி நின்ற - கொடிய கோபம் மிக்குநின்ற, தன் - தனது, முரண் வலி கையால் - மிக்க வலிமையையுடைய கையினால், எற்றுவான் - மோதுதற்கு, எடுத்து எழுதலும் - உயர எடுத்து எழும்பின வளவில்,—இவன் - சுக்கிரீவன், அற்றம் ஒன்று பெற்று - அவன் சோர்ந்திருக்கின்றதொரு சமயம் பார்த்து, பிழைத்து அகன்றனன் - தப்பி உய்ந்து ஓடிவிட்டான்; (எ - று.)

வாலியானவன் தன்னைப் பிறர் பழிப்பரேயென்ற எண்ணஞ் சிறிதுமில்லாமல் அந்தச் சுக்கிரீவனைத் தரையில் மோதுமாறு உயர எடுத்தவளவில், சுக்கிரீவன் அவ்வாலி சிறிது ஏமாந்த சமயம் பார்த்துத் தப்பியோடிவந்துவிட்டனனென்பதாம். பழியின் - வேற்றுமைமயக்கம். பழியினின்று அஞ்சானாகி என்று ஐந்தனுருபாகவே கொள்ளுதலுமாம்; வடமொழிநடை. பி - ம்:—[1]பழியை. [2]நின்றுதன். [3]எறிதலும். (150)

70. எந்தை மற்றவன் னெயிற துக்குமேல்
அந்த கற்கு[1]மோ [2]ரரண மில்லையால்
இந்த வெற்பின்வந் திவனி ருந்தனன்
[3]முந்தை யுற்றதோர் [4]சாப முண்மையால்.

(இ - ள்.) எந்தை - எமது சுவாமியே! அவன் - அவ்வாலி, எயிறு அதுக்கும் ஏல் - பல்லைக்கடித்துக் கோபிப்பானானால், அந்தகற்கும் - யமனுக்கும், ஓர் அரணம் - (சார்ந்து பிழைக்கலாம்படி

யான) ஒரு பாதுகாவலிடம், இல்லை—; (ஆனாலும்), முந்தை-முன்னே, உற்றது - (வாலி) அடைந்ததாகிய, ஓர் சாபம் - ஒருசாபமானது, உண்மையால் - உள்ளதனால், இவன் - சுக்கிரீவன், இந்த வெற்பின் - இந்தமலையிலே, வந்து இருந்தனன் - வந்து சேர்ந்து (இதுவரையிற்) பிழைத்திருந்தான்; (எ - று.)—மற்று - அசை.

வாலியின் கோபத்துக்கு இலக்கானவர் யாவரேயாயினும் தப்பி யுய்தற்கு உரிய இடமில்லைதான்; ஆனாலும், 'இம்மலையில் வந்தால் இறப்பான்' என்று மதங்கமுனிவர் சாபமிட்டுள்ளார்; அதனால், சுக்கிரீவன் இம்மலையைத் தனக்குஉரிய அரணாகக்கொண்டு இங்கே பதுங்கி உயிர் வாழ்ந்திருக்கின்றனனென்பதாம். சாபம் - சபிப்பு; வெகுண்டு கூறும் மொழி. எயிறதுக்குதல் - காரியம் காரணத்தின் மேல் நின்றது; உபசாரவழக்கு. அரண் - சரணம். 'மற்றவன்னெயிறு' —னகரவொற்று - விரித்தல். பி - ம்:—[1]மேல். [3]அரணும். [3]முந்த வுற்றதோர், முந்தையுற்றவெம். [4]சாபவுண்மை. சில பிரதிகளில் மூன்று நான்காமடிகள் மாறியுள்ளன என்ப. (151)

71. [1]உருமை யென்றிவற் குரிய தாரமாம்
அருமருந்தையும் மவன்வி ரும்பினான்
இருமை யுந்துறந் திவனி ருந்தனன்
கரும [2]மிங்கிதெங் கடவு ளென்றனன்.

(இ - ள்.) எம்கடவுள் - எம்சுவாமியே! இவற்கு - இச்சுக்கிரீவனுக்கு, உருமை என்ற உரிய - ருமையென்று பேர்கொண்ட (இல்லற வாழ்க்கைக்கு) உரியவளான, தாரம் ஆம் - மனைவியாகிய, அருமருந்தைஉம் - கிடைத்தற்கரிய தேவாமிருதத்தையும், அவன் - வாலி, விரும்பினான் - விரும்பிக் கவர்ந்துகொண்டான்; இவன் - சுக்கிரீவன், இருமைஉம் துறந்து - இரண்டையும் [செல்வத்தையும் மனைவியையும்] ஒருசேர இழந்து, இருந்தனன் - இருந்தான்; இங்கு இது கருமம் - இங்குச் சொல்லப்பட்ட இது நடந்த செய்தி, என்றனன் - என்று சொல்லி (அநுமான் தான் கூறிவந்த வரலாற்றை) முடித்தனன்; (எ - று.)

இராச்சியம் முதலிய செல்வத்தையெல்லாம் முன்னமே கவர்ந்துகொண்டமைபற்றி, 'உருமையென் றிவற்குரியதாரமாம் அருமருந்தையும் மவன் விரும்பினான்' என்றார்; அன்றியும், மற்றைச் செல்வமெல்லாம் மூத்தவனாகிய வாலிக்கே உரியனவாதலால் கொண்டதனோடு இவனுக்கே யுரிய தாரத்தையும் கவர்ந்தன னென்றுமாம்.

மருந்தையும், உம்மை - உயர்வுசிறப்போடு இறந்ததுதழுவிய எச்சப்பொருளது. விரும்பினான் - காரியம், காரணமாக உபசரிக்கப் பட்டது. இருமையும், உம்மை - முற்றும்மை. "இருமைவகை தெரிந்து" என்னுமிடத்துப்போல, இருமையென்றது - இங்கு எண்ணின்மேல் நின்றது: இதில், மைவிகுதி - தன்மையுணர்த்தாமல், தன்மையுடைய பொருளையே உணர்த்துதலால், பகுதிப் பொருள் விகுதியாம். மருந்தையும்மவன், மகரவொற்று - விரித்தல். பி - ம்:— [1]உரிமை. [2]இங்கிதே, இங்கிதென். (152)

வேறு.

72.—அவ்வரலாறுகேட்ட ஸ்ரீராமன் வாலியின்மீது சினங்கொள்ளுதல்.

பொய்யி லாதவன் வரன்முறை [1]யம்மொழி புகல
ஐய னாயிரம் [2]பெயருடை [3]யமலர்க்கு மமரன்
வைய நுங்கிய வாயிதழ் துடித்தது மலர்க்கண்
செய்ய தாமரை யாம்பலம் போதென[4]த் திகழ்ந்த.

(இ - ள்.) பொய் இலாதவன் - அசத்தியமென்பது சிறிதுமில்லாதவனான அநுமான், வரல் முறை - (சுக்கிரீவன் தன்மனைவியைப் பிரியநேர்ந்த) வரலாறாகிய, அ மொழி - அவ்வார்த்தையை, புகல - சொல்ல,—ஆயிரம் பெயர் உடை - ஆயிரந் திருநாமங்களையுடைய, அமலர்க்கும் அமரன் - குற்றமில்லாதவரான தேவர்க்கெல்லாம் மேம்பட்ட தேவனாகிய, ஐயன் - தலைவனான ஸ்ரீராமனது, வையம் நுங்கிய வாய் இதழ் - உலகங்களை (முன்பு பிரளயகாலத்தில்) விழுங்கிய வாயினது அதரம் [உதடு], துடித்தது - (கோபத்தால்) துடிதுடித்தது; கண் - திருக்கண்களாகிய, செய்ய தாமரை மலர் - செந்தாமரை மலர்கள், ஆம்பல் அம் போது என - செவ்வாம்பல் மலர் போல, திகழ்ந்த - விளங்கின; (எ - று.)

சுக்கிரீவன் தன்மனைவியான ருமையைப் பிரியுமாறு முன்நிகழ்ந்த வரலாற்றை அநுமான் சொல்லக்கேட்ட ஸ்ரீராமன் புகலடைந்தாரைக் காத்தலாகிற அறத்திற்கு மாறாக நடந்த வாலியின்மீது அக்கணமே சினங்கொண்டன னென்பதாம். இயல்பாகக் கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியனவாகிய கண்கள், வாலியினது கொடுமையைக்கேட்டு எழுந்த கோபத்தால் முற்றிலுஞ் சிவந்தனவென்பார் 'மலர்க்கண் செய்ய தாமரை ஆம்பலம்போதெனத் திகழ்ந்த' என்றார்.

ஆயிரம் பெயர் - ஸஹஸ்ரநாமம். உடை அமரன் என இயையும். வையம் நுங்கியது, மகாப் பிரளயகாலத்தில் சகல லோகங்களையும் சிறிதுமழிவில்லாதபடி தன் திருவயிற்றில் வைத்துக் காத்தது. ஆம்பலம்போது—அம் - சாரியை. அம் - அழகிய எனினுமாம். இனி, முதலடிக்கு - பொய்ம்மையில்லாதவனான சுக்கிரீவனது வரலாற்று முறைமையை (அநுமான்) சொல்ல என்றுமாம். பி-ம்:—[1] இம்மொழி. [2] பெரும்பெயர். [3] அமரற்குமான, அமலர்க்கு மமலன், அமரர்க்குமமரன். [4] சிவந்த. (153)

73.—இதுவும், அடுத்த செய்யுளும் - கவிக்கூற்று: இராமபிரான் சினங்கொண்டதற்குக் காரணங் காட்டுதல்.

திறத்து மாமறை யயனொ டைம்முகன் பிறர்தேடிப்
புறத்த கத்துண ரரியதன் பொலனடிக் கமலம்
உறச்சி வப்பவித் தரைமிசை யுறலற மாக்கல்
மறத்தை வீட்டுத லன்றியே பிறிதுமற் றுண்டோ.

(இ - ள்.) திறத்து - (இருக்குமுதலிய) கூறுபாடுகளையுடைய, மா மறை - சிறந்த வேதங்களை யோதுகின்ற, அயனொடு - பிரமதேவனும், ஐம்முகன் - ஐந்து முகங்களையுடையவனான ருத்திரமூர்த்தியும், பிறர் - மற்ற இந்திரன் முதலியோரும், புறத்து - வெளிக்கரணங்களாகிய மொழிமெய்களாலும், அகத்து - அகக்கரண [அந்தக்கரண] மாகிய மனத்தினாலும், தேடி - தேடியும், உணர் அரிய - அறிதற்கு அருமையான, தன் - தனது, பொலன் அடி கமலம் - அழகிய திருவடித்தாமரைகள், உற சிவப்ப - (தரையில் நடப்பதனால்) மிகவுஞ் சிவக்கும்படி, இ தரைமிசை - இப்பூமியில், உறல் - (திருமால்) திருவவதரித்தற்குக் காரணம்,—அறம் ஆக்கல் - தருமத்தைக் காத்து வளர்த்தலும், மறத்தை வீட்டுதல் - அதருமத்தை அழித்தலும், அன்றி ஏ - அல்லாமலே, பிறிது உண்டுஓ - வேறொன்று உளதோ? (எ - று.)—மற்று - அசை.

"அஜாயமானோ பஹுதா விஜாயதே", "பிறப்பிலி பலபடியாப் பிறக்கிறான்" என்றபடி இயற்கையிற் கருமத்தாற் பிறத்தலில்லாத திருமால் தீயவரையழித்துப் பாவத்தைப் போக்குதற்கும், நல்லவரை யருளித் தருமத்தை ஆக்குதற்குமே திருவவதரிப்பவனாதலால், வாலியின் கொடுந்தொழிலைக் கேட்டமாத்திரத்தில் இவ்வாறு கோபித்தனனென்பதாம். இக்கவி - கீழ்க்கவியோடு ஒரு தொடராய்நின்று, கீழ்க்கவியிற்கூறிய 'இராமபிரான் கோபித்தான்' என்பதைச் சமர்த்திக்கும்: ஆகவே, இவ்விரண்டு கவியுஞ் சேர்ந்து தொடர்நிலைச்செய்யுட்குறியணியின்பாற் படுமென்க.

"பத்துடையடியவர்க்கெளியவன் பிறர்களுக்கரிய வித்தகன்" என்றபடி எம்பெருமான் தன்பக்கல் அன்புநிலையிற் குறைப்பட்டார்க்கு அகப்படாததன்மையனாதலால் 'அயனொடைம்முகன் பிறர் தேடிப்புறத்தகத் துணரரிய தன் பொலனடி' எனப்பட்டது; "பூதேவருங் கனகப்பூங்காநிழல்வைகு, மாதேவருந்தேடிக் காணாமலரடியோன்" என்றார் வில்லிபுத்தூராரும். ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என வேதம் நான்குவகையாதலால், 'திறத்து மாமறை' என்றார். அயன் = அஜன்: திருமாலினிடத்தினின்று தோன்றியவனென்று பொருள்பெறும். ஸதாசிவமூர்த்தி ஸத்யோஜாதம், அகோரம், வாமதேவம், தத்புருஷம், ஈசானம் என்ற ஐந்து முகங்களையுடைமையால், 'ஐம்முகன்' என்றார். 'திறம்' என்ற சொல்லுக்கு - தகுதி, தத்துவம், திறமை, மேன்மை என்ற பொருள்களும் உண்டு. இச்செய்யுள் யாம் கண்ட ஏட்டுப் பிரதி யெதிலும் காணப்படவில்லை. (154)

74. ஈர நீங்கிய சிற்றவை சொற்றன ளென்ன
[1]ஆரம் வீங்குதோள் [2]தம்பிக்குத் தன்னர சுரிமைப்
பார மீந்தவன் [3]பரிவினன் [4]ஒருவன்மு னிளையோன்
தாரம் வவ்வின னென்றசொல் [5]தரிக்குமா றுளதோ.

(இ - ள்.) ஈரம் நீங்கிய - அன்பில்லாத, சிற்றவை - சிறியதாய் [கைகேயி], சொற்றனள் - சொன்னாள், என்ன - என்று, ஆரம் வீங்கு

தோள் தம்பிக்கு - இரத்தின மாலைகளையணிந்த பருத்த தோள்களை யுடைய (தன்) தம்பிக்கு [பரதாழ்வானுக்கு], தன் அரசு உரிமை பாரம்-(மூத்தகுமாரனாகிய) தனக்கே உரியதான இராச்சியபாரத்தை, பரிவின் - அன்போடு, ஈந்தவன்-கொடுத்தவனான ஸ்ரீராமன், அன்று - அக்காலத்து, 'ஒருவன்முன் - ஒருத்தனுடைய அண்ணன், இளையோன் தாரம் - (தனது) தம்பியின்மனைவியை, வவ்வினன் - அபகரித்துக்கொண்டான்,' என்ற—, சொல்-வார்த்தையை, (கேட்டு), தரிக்கும்ஆறு - பொறுத்துச் சும்மா இருத்தல், உளதுஓ - உண்டாகுமோ? (எ - று.)

ஸ்ரீராமன் தனக்கு உரிய அரசாட்சியைத் தம்பிக்குக்கொடுத்த தயாமூர்த்தியாதலால், வாலி தன் தம்பிக்குஉரிய மனைவியைக் கவர்ந்துகொண்ட வரலாற்றைச் செவியுற்றமாத்திரத்திலே கடுஞ் சினங் கொண்டானென்றபடி. அரசுரிமைப் பாரமீந்தவன் தரிக்குமா றுளதோ - கருத்துடையடைகொளியணி. தயரதன் 'உனது மகன் நாட்டையாளுக; இராமன் காட்டிற்குச் செல்லவேண்டா' என்று இவகுவாக வேண்டவும், சிறிதும் இரக்கமின்றிப் பதினான்குவருடங் காட்டிற்குச்செல்லவேண்டுமென்று வற்புறுத்திக் கூறிய கன்னெஞ் சின ளாதலால், கைகேயியை, 'ஈரநீங்கிய சிற்றவை' என்றார். சிற்றவை - சிறு அவ்வை; சிறியதாய். ஆரம் - முக்தாஹாரம்: சந்தனக்குழம் புமாம். வவ்வினன் = வௌவினன்: போலி. பி - ம்:—[1] ஆரநீங்கிலா, ஆரநீங்குதோள், வாரநீங்கு தோள். [2] இளவற்குமன். [3] பரிவிலன். [4] ஒருவன்முன்றமியோன். [5] பரிக்குமாறு. (155)

75.—இராமபிரான் 'வாலியைக் கொல்வேன்' எனல்.

உலக மேழினோ டேழும்வந் தவனுயிர்க் [1] குதவி
விலகு மென்னினும் [2] வில்லிடை வாளியின் வீட்டித்
தலைமை யோடுநின் தாரமு முனக்கின்று [3] தருவேன்
புலமை யோயவ னுறைவிடங் [4] காட்டென்று புகன்றான்.

(இ - ள்.) 'உலகம் ஏழினோடு ஏழ்உம் - பதினான்கு லோகங் களிலுமுள்ள எல்லாப் பிராணிகளும், அவன் உயிர்க்கு - அவ்வாலி யின் பிராணனைக் காப்பதற்கு, உதவி - சகாயமாக, வந்து—, விலகும் என்னின்உம் - தடுக்குமாயினும், (யான்), வில்லிடைவாளியின்-வில்லி னின்றும் விடப்படுகின்ற அம்பினால், வீட்டி - (அவையும் உள்பட அவனை) அழித்து, தலைமையோடு - அரசாட்சியுடனே, நின் தாரம் உம் - உனது மனைவியையும், உனக்கு—, இன்று - இப்பொழுதே, தருவேன் - கொடுப்பேன்; புலமையோய் - அறிவுடையவனே! அவன் உறைவு இடம் - அவன் வசிக்கின்ற இடத்தை, காட்டு - காண்பிப் பாயாக', என்று—, புகன்றான் - (ஸ்ரீராமன் சுக்கிரீவனை நோக்கிக்) கூறியருளினான்; (எ - று.)

அவ்வாறு சினங்கொண்ட ஸ்ரீராமன் 'அவ்வாலியுள்ள இடத்தை இப்பொழுதே காட்டுவாயாக: யார்வந்து தடுப்பினும் சிறிதும் பின்வாங்காது இப்பொழுதே அவ்வாலியைச் சங்கரிப்

பேன்' என்று கூறின னென்பதாம். அரசநீதிக்கு ஏற்பத் துணையையும் காலத்தையும் நோக்கி இத்தனைகாலம் ஒடுங்கியிருந்தமை பற்றி, சுக்கிரீவனை இராமபிரான் 'புலமையோய்' என விளித்தான். விலக்கும் என்பது, எதுகைநோக்கி 'விலகும்' என விகாரப்பட்டு நின்றது. பி - ம்:—[1] உதவ. [2] வில்லுடை. [3] தருவன். [4] காட்டெனப்.

76.—அதுகேட்டுச் சுக்கிரீவன் மிகமகிழ்ந்து 'நாங்கள் சிறிது ஆலோசிக்க வேண்டும்' எனல்.

எழுந்து [1] பேருவ கைக்கடற் பெருந்திரை [2] யிரைப்ப
[3] அழுந்து [4] துன்பத்துக் கக்கரை [5] கண்டன னனையான்
விழுந்த தேயினி வாலிதன் வலியென விரும்பா
மொழிந்த வீரற்கி யாமெண்ணுவ துண்டென மொழிந்தான்.

(இ - ள்.) (இவ்வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில்), அனையான் - அந்தச் சுக்கிரீவன், பேர் உவகை கடல் - பெரிய மகிழ்ச்சியாகிய சமுத்திரம், பெருந் திரை - பெரிய அலைகளோடு, எழுந்து இரைப்ப - பொங்கியெழ [அளவில்லாத மகிழ்ச்சியைப் பெற்று]— அழுந்து துன்பத்துக்கு - (தான்) அழுந்திக்கிடந்த துயரமாகிய கடலுக்கு, அ கரை - முடிவெல்லையை, கண்டனன் - அடைந்தான் போன்றான்: 'இனி—, வாலி தன் வலி - வாலியின் வலிமை, விழுந்ததே - அழிந்ததேயாம்,' என - என்று எண்ணி, விரும்பா - விரும்பி, மொழிந்த வீரற்கு - (இவ்வாறு) வாக்குதத்தஞ் செய்த மகாவீரனை ஸ்ரீராமனுக்கு, 'யாம் எண்ணுவதுஉண்டு - நாங்கள் ஆலோசிக்க வேண்டுவது ஒன்றுஉளது', என - என்று, மொழிந்தான் - சொன்னான்; (எ - று.)

இராமபிரான் சினந்து "உன்தாரத்தை வவ்வியவனைக் காட்டு பதினான்கு லோகமும் பக்கபலமாக நின்றாலும், உனது எதிரிமையொழித்து உன் தலைமை, தாரம் என்பவற்றைத் தருவேன்" என்றவுடனே, சுக்கிரீவன் உவமைமிக வாலியை யொழிந்தவனாகவே கருதினான்: பிறகு சற்று ஆலோசிக்கவேண்டுமென்று தோன்றியதை, இராமபிரானிடம் விண்ணப்பித்தானென்பதாம். "எண்ணித் துணிக கருமம்" என்ப ஆதலால் தன் காரியத்தை இராமனிடம் ஒப்படைக்கு முன் எண்ணலானானென்க.

உவகைக்கடல் - உருவகம். 'அக்கரை 'என்பதற்கு ஏற்ப, துன்பத்தைக் கடலாக் கொள்க. 'விழுந்தது' என்றது, தெளிவுபற்றி: ஏ - தேற்றம். பி - ம்:—[1] பேருவகைப் பெருந்திரைக் கடல். [2] அலைப்ப, எடுப்ப. [3] அழிந்த. [4] துன்பினுக்கு. [5] கண்டவன். கழிந்த துன்பத்துக் கக்கரைகண்டவனனையான் எனவும், அழிந்து துன்பத்திற் கரைகண்ட கடாக்களிறனையான் எனவும் சிற்சில பிரதியில் இரண்டாமடி. (157)

77.—அநுமான் முதலியவரோடு சுக்கிரீவன் தனியேயிருக்க, அநுமான் கூறத்தொடங்குதல்.

அனைய வாண்டுரைத் [1]தனுமனே முதலிய வமைச்சர்
நினைவுங் கல்வியு நீதியுஞ் சூழ்ச்சியு நிறைந்தார்
[2]எனைய ரன்னவ ரோடும்[3]வே றிருந்தன னிரவி
[4]தனய னவ்வழிச் சமீரணன் மகனுரை தருவான்.

(இ - ள்.) இரவி தனயன் - சூரியபுத்திரனான சுக்கிரீவன்,—ஆண்டு - அப்பொழுது, அனைய உரைத்து - அவ்வாறு சொல்லிவிட்டு,—நினைவுஉம் - எண்ணமும், கல்விஉம் - வித்தையும், நீதிஉம் - நியாயமும், சூழ்ச்சிஉம் - ஆலோசனையும், நிறைந்தார் - நிரம்பியவர்களாகிய, அனுமனே முதலிய - அநுமான் முதலான, அமைச்சர் - மந்திரிகள், எனையர் அன்னவரோடுஉம்-எத்தனைபேர் உண்டோ அத்தனைபேருடனும், வேறு இருந்தனன் - (ராம லக்ஷுமணர்களை விட்டுத்) தனியே (ஆலோசனை செய்தற்கு) இருந்தான்; அவழி - அப்பொழுது [அவ்விடத்தில்], சமீரணன் மகன் - வாயுகுமாரனான அநுமான், உரை தருவான் - சொல்வானாயினான்; (எ-று.)—அதனை, அடுத்த ஆறுகவிகளிற் காண்க.

'வாலியைக்கொல்லும் ஆற்றல் இராமபிரானுக்கு உண்டோ? இல்லையோ?' என்று சுக்கிரீவன ஐயுற்று அதனைப்பற்றி ஆலோசிக்குமாறு அநுமான் முதலியோரைத் தனியே அழைத்துக்கொண்டு தக்க இடத்துத்தங்கியிருக்க, அப்போது அநுமான் கூறத்தொடங்கின னென்பதாம். அமைச்சர் - அமாத்யர்: சமீபத்திலிருப்பவ ரென்பது, அவயவப்பொருள். நினைவு - ஞாபக சக்தி. ஸமீரணன் என்ற வடசொல், நன்றாகச் சஞ்சரிக்குந் தன்மையையுடையவனென்று காரணக்குறி. பி-ம்:—[1]அனையவனெழுதலின். [2]எனையவானரரோடும், எனைவரன்னவரோடும். [3]வேறெண்ணினன், வீற்றிருந்தனன். [4]தனையன் என்று போலியான பாடமே பெரும்பான்மை காணப்படுகிறது. (158)

78.—இதுமுதல் ஆறுகவிகள் – 'இராமபிரான் வாலியைக் கொல்லவல்லனென்பதில் ஐயுறவேண்டா' என்று சுக்கிரீவனை அநுமான் தேற்றுதல்.

உன்னி னேன்[1]னுன்ற னுள்ளத்தி [2]னுள்ளத்தை யுரவோய்
அன்ன வாலியைக் காலனுக் களிப்பதோ ராற்றல்
இன்ன வீரர்பா லில்லையென் றயிர்த்தனை யினியான்
சொன்ன கேட்டவை கடைப்பிடிப் பாயெனச் [3]சொன்னான்.

(இ - ள்.) 'உரவோய் - வலிமையையுடையவனே! உன்தன் உள்ளத்தின் - உன் மனத்தின், உள்ளத்தை - எண்ணத்தை, உன்னினேன் - (நான்) ஆலோசித்தறிந்தேன்; (அது என்னவென்றால்),—அன்ன வாலியை - அப்படிப்பட்ட (மகா பலசாலியான) வாலியை, காலனுக்கு அளிப்பது - யமனுக்குக் கொடுக்கும்படி

யான [கொல்லத்தக்க], ஓர் ஆற்றல் - ஒப்பற்ற வலிமை, இன்ன வீரர்பால் - இந்த வீரர்களிடத்தில், இல்லைஎன்று—, அயிர்த்தனை - சந்தேகித்தாய்; இனி—, யான் சொன்ன கேட்டு - நான் சொல்லும் வார்த்தைகளைச் செவியுற்று, அவை கடைப்பிடிப்பாய் - அவற்றை உறுதியாகக் கொள்வாய்,' என - என்றுசொல்லி, சொன்னனை - (பின்னும்) சொல்வானாயினன், (அநுமான்); (எ - று.)—அதனை, அடுத்த ஐந்துகவிகளிற் காண்க.

'உள்ளம்' என்னுஞ் சொல் இரண்டனுள், முன்னது காரணப் பெயர்: நினைத்தற்குக் கருவியான தென்று பொருள்; உள் - பகுதி: அம் - கருவிப்பொருள்விகுதி; அகத்துறுப்பு என்றுமாம்; பின்னது-தொழிற்பெயர்: அம் - தொழிற்பெயர்விகுதி. இனி உள்ளத்தின் உள்ளத்தை - மனத்தில் இருப்பதை எனவுமாம். பி - ம்—[1]நினைது, நினது. [2]உள்ளவை, உள்ளதை. [3]சொல்லும். (159)

79\. சங்கு சக்கரக் குறியுள தடக்கையிற் றளில்
எங்கு [1]மித்தனை யிலக்கணம் யாவர்க்கு மில்லை
செங்கண் விற்கரத் திராமனத் திருநெடு மாலே
இங்கு [2]தித்தன னீண்டற நிறுத்துதற் கின்னும்.

இதுமுதல் ஐந்து கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (இராமனுக்கு), தட கையில் - பெரிய திருக்கைகளிலும், தாளில் - திருவடிகளிலும், சங்கு சக்கரம் குறி உள - சங்க சக்கரங்களின் ரேகைகள் இருக்கின்றன; இத்தனை இலக்கணம் - இவ்வளவு (உத்தம புருஷ) லக்ஷணங்கள், எங்குஉம் - எவ்வுலகத்திலும், யாவர்க்கும் - எவர்க்கும், இல்லை - இருந்ததில்லையாம்; (ஆகையால்),—செம் கண் - சிவந்த திருக்கண்களையும், வில் கரத்து - கோதண்டமேந்திய திருக்கையையுமுடைய, இராமன் - ஸ்ரீராமன், —ஈண்டு - இப்பொழுது, அறம் நிறுத்துதற்கு - தருமத்தை நிலைபெறச்செய்தற் பொருட்டு, இங்கு - இவ்வுலகத்தில், உதித்தனன் - திருவவதரித்தவனாகிய, அ திரு நெடு மாலே - திருமகள் கணவனான சிறந்த அந்த ஸ்ரீமகாவிஷ்ணுவேயாவன்; இன்னும் - மேலும்,—(எ - று.)

'புருஷோத்தமன்' என்று ஒரு பெயர் பெறுமாறு ஸாமுத்ரிக நூல்முறைப்படி எல்லா இலக்கணங்களும் நிறைந்திருக்கப்பெற்றவன் திருமாலேயா தலாலும், இராமனிடத்தும் எல்லா நல்லிலக்கணமும் நிரம்பியிருத்தலாலும் அத்திருமாலே அறத்தை நிலைநாட்டும் பொருட்டு இங்குத் திருவவதரித்தனனென்று ஊகித்துணரலாமெனக் கூறினனென்க. இது காரணங்கொண்டு ஊகித்துணர்தலால் அநுமாநாலங்கார மெனப்படும். "சங்கரேகையுஞ் சக்கரரேகையும், அங்கையுள்ளன ஐயனுக்காதலாற், சங்கபாணியின் சக்கராயுதம், அங்கையேந்துமெனறறையல் வேண்டுமோ" என்ற சூளாமணிச் செய்யுள் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. பி - ம்:—[1]இத்துணை. [2]நின்றனன். (160)

80. செறுக்கும் வன்றிறற் றிரிபுரந் தீயெழச் சினவிக்
கறுக்கும் வெஞ்சினக் காலன்தன் காலமுங் காலால்
அறுக்கும் புங்கவ ஞண்ட[1]பே ராடகத் தனிவில்
[2]இறுக்குந் தன்மையம் மாயவற் கன்றியு மெளிதோ.

(இ - ள்.) செறுக்கும் - (யாவரையும்) வருத்துகின்ற, வல் திறல்- மிக்க வலிமையையுடைய, திரி புரம் - மூன்று பட்டணங்களும், தீ எழ - நெருப்புப் பற்றி யெரியும்படி, சினவி - கோபித்து, கறுக்கும் வெம் சினம் காலன் தன் - கோபிக்கின்ற கொடிய கோபத்தையுடைய யமனது, காலன் உம் - ஆயுட்காலத்தையும், காலால் அறுக்கும் - காலினல் உதைத்து அழித்துவிட்ட, புங்கவன் - புருஷர்களுட் சிறந்த பரமசிவன், ஆண்ட - (கையிற்கொண்டு போர் செய்து) ஆண்டுவந்த, பேர் - பெரிய, ஆடகம் - பொன்மயமான, தனி - ஒப்பற்ற, வில் - தனுசை, இறுக்கும் - முறிக்கின்ற, தன்மை - செயல், அ மாயவற்கு அன்றி உம் - அற்புதசக்தியை யுடையவனுன அத்திருமாலுக்கே யல்லாமலும், எளிதுஓ - (மற்றையோர்க்கு) எளியது ஆகுமோ? (எ - று.)

ஸ்ரீராமபிரான் ஸ்ரீமந்நாராயணனே யென்பதைச் சீதாகலியாண காலத்திற் சிவதனுசை முறித்ததனுலும் அறியலாமே யென்று அனுமான் மற்றுமோர் அனுமானங் கூறினனென்க. சிவபெருமானைப்பற்றி இங்கு இவ்வாறு சிறப்பித்துக் கூறியது - பிறரது வலிமையைப் பாராட்டி அவரை வென்றதாகக் கூறுவதும் கதாநாயகனுக்கு மிக்க மேன்மையை விளக்கு மென்ற அலங்கார நூலார் கொள்கை பற்றி யென்க. புங்கவன் - எருதை வாகனமாக வுடையவனெனினுமாம். "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள" என்றதனுல், 'கறுக்கும்' என்பதற்கு - கோபிக்கின்ற எனப்பட்டது; கருநிறமுடைய என்று உரைத்து, காலனேடு கூட்டலுமாம். காலம் - காலபாசமாகவுமாம். ஆடகம் - ஹாடகம்.

ஸ்ரீராமபிரான் பரதத்வமென்பது, இங்கு வெளியிடப்பட்டது. பாலகாண்டத்துப் பரசுராமப்படலத்தில் "நீதியாய் முனிந்திடேல் நீயிங்கியாவர்க்கும், ஆதியானநிந்தனெனலங்கல் நேமியாய், வேதியா விறுவதேயன்றி வெண்மதிப், பாதியான்பிடித்தவில் பற்றப்போதுமோ" "பொன்னுடைவனேகழற் பொலங்கொள் தாளினுய், மின்னுடை நேமியானுதல் மெய்ம்மையால்" என்றதும், திருவரங்கத்து மாலையில் "மாதண்டமேவுங் சரத்தாரரங்கர் வடமிதிலைக், கோதண்ட வேகம் பிறப்பித்தபோது குவட்டுவெள்ளி, வேதண்டமேவு மழுவாளி நாணினன் வென்றிகண்டு" என்றதும் உணர்க.

"காலன்தன் காலமுங் காலால்" என்றவிடத்து மடக்கு என்னுஞ் சொல்லணி காண்க. திரிபுரம் - த்ரிபுரம்: மூன்ருகிய நகரமெனப் பண்புத்தொகை. வானத்திற் பறந்து திரிகின்ற நகரமெனக் கொண்டால், திரிபுரம்' என்ற தொடர் - வினைத்தொகையும், திரி - தமிழ்ச்சொல்லுமாம். 'காலால் அறுக்கும்' என்றது, மிகவும் அலக்ஷ்யமாக எளிதிற் செய்தமையைக் காட்டிற்று. பி - ம்:— [1]போராடகத், போராகரத். [2]இறுக்குந்தன்மையும் வல்லமா மாயவற்கரிதோ.

திரிபுரம் தீயெழச் சினவியகதை:—தாரகாசுரனது புத்திரர்களாகிய வித்யுந்மாலி தாரகாக்ஷன் கமலாக்ஷன் என்னும் மூவரும் மிக்க தவஞ்செய்து பிரமனிடம் பெருவரம்பெற்று மயனென்பவனால் சுவர்க்கம் பூமி பாதாளம் என்னும் மூன்று இடங்களிலும் முறையே பொன் வெள்ளி இரும்பினால் அரண்வகுத்து இயற்றப்பட்டு ஆகாய மார்க்கத்திற் சஞ்சரிக்குந் தன்மையையுடைய மூன்று பட்டணங்களைப்பெற்று அவற்றில் வசித்துச் சிவபூசைசெய்து கொண்டு அச் சிவபக்திமகிமையால் எவர்க்கும் அழிக்கவொண்ணாதவராய் அத் தகைய மற்றும் பல அசுரர்களோடு அந்நகரங்களுடனே தாம் நினைத்த இடங்களிற் பறந்துசென்று பல இடங்களின் மேலும் இருந்து அவ்வவ்விடங்களைப் பாழாக்கிவருகையில், அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் திருமால் மாயையினால் ஜீநாவதாரமும் புத்தாவதாரமுஞ் செய்து பற்பலதீயவழிகளைக் கற்பித்து உபதேசித்து மயக்கி அவ் வசுரர்களைச் சிவத்துவேஷிகளாகச்செய்து விட்டதன்பின்பு, தேவர்கள் பிரார்த்தனைப்படி சிவபெருமான் பூமியைத் தேராகவும், சந்திர சூரியரைத் தேர்ச்சக்கரங்களாகவும், நான்கு வேதங்களையும் நான்கு குதிரைகளாகவும், பிரமனைச்சாரதியாகவும், மகாமேருவை வில்லாகவும், விஷ்ணுவை வாயுவாகிய சிறகு அமைந்து அக்கினியை முனையாகவுடைய அம்பாகவும், மற்றைத் தேவர்களைப் பிறபோர்க் கருவிகளாகவும் அமைத்துக்கொண்டு யுத்தசன்னத்தனாய்ச் சென்று போர்செய்ய யத்தனித்துப்புன்சிரிப்புச் செய்து அவ் வசுரர்கள் பலரையும் பட்டணங்களோடு எரித்தருளினன் என்பதாம்.

காலன்தன் காலத்தைக் காலாலறுத்த கதை:—மிருகண்டு முனிவன் மருத்துவதி யென்பாளை மணந்துகொண்டு சிலகாலங் கழித்த பின்பு பிள்ளையில்லாத குறையாற் காசியையடைந்து சிவபிரானைக் குறித்துத் தவஞ்செய்ய, அம்முனிவனுக்குப் பரமசிவன் பிரதியட்சமாகி வடிவினாலும் குணங்களினாலுஞ் சிறந்தவனாய்ப்பதினாறு பிராயமேயுடைய ஒரு புதல்வனை அநுக்கிரகிக்க, அங்ஙனமேபிறந்த குமாரன் பிரமதேவனால் மார்க்கண்டேயனென நாமகரணம் செய்விக்கப்பெற்றுச் சகல சாஸ்திரங்களையும் இளமையிலேயே உணர்ந்து, பின்பு தனது அற்பாயுளைக்குறித்து வருந்துகின்ற தாய்தந்தையரது துயரத்தைப் போக்குமாறு மணிகர்ணிகா கட்டத்திற் சிவபிரானை நோக்கி அரும்பெருந்தவம்புரிந்து அப்பரமசிவனால் அபயமளித்துத் தனது முடியிலே திருவடிகள் வைக்கப்பெற்று இனிதுவாழ்ந்திருக்கையில், பதினாறுபிராயம் கழிந்து அந்திமகாலம் வரவே, யமன் சமீபித்துக் காலபாசத்தால் மார்க்கண்டேயனைக் கட்டி யிழுக்குமளவில், சிவபிரான் வெளிப்பட்டு அவ்யமன் உயிர்நீங்குமாறு அவனைக் காலாலுதைத்துத்தள்ளி, தான் அபயப்பிரதானஞ் செய்திருந்த ருஷிகுமாரனுக்கு என்றும் பதினாறாக நீடூழிவாழுமாறு அருள்புரிந்தனனென்பதாம். இவ்வரலாற்றினால், மிக்கமுயற்சிகொண்டு ஊழ்வினையையும் வெல்லலா மென்பது போதரும். (161)

81. என்னை யீன்றவ [1]னிவ்வுல கியாவையு மீன்றான்
தன்னை யீன்றவற் கடிமைசெய் [2]தவமஃ தையா
[3]உன்னை யீன்றவெற் குறுபத முளதென வுரைத்தான்
இன்ன தோன்றலே [4]யவனிதற் கேதுவுண் டிறையோய்.

(இ - ள்.) இறையோய் - தலைவனே! என்னை ஈன்றவன் - என்னைப்பெற்றவனான வாயுபகவான், (முன்பு என்னைநோக்கி, 'நீ,) இ உலகு யாவைஉம் ஈன்றான் தன்னை - இந்த லோகங்களையெல்லாம் படைத்தவனான பிரமதேவனை, ஈன்றவற்கு - (தனது நாபிகமலத்தினின்று) தோற்றுவித்தவனான ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு, அடிமை செய்- அடிமைத்தொழில் செய்வாய்: அஃது - அக்கைங்கரியமே, தவம் - சிறந்த தவமாகும்; ஐயா - குழந்தாய்! (நீ அவ்வாறு செய்தால்), உன்னை ஈன்ற எற்கு - (உனக்குமாத்திரமேயல்லாமல்) உன்னைப் பெற்ற எனக்கும், உறு பதம் - சிறந்த பதவி, உளது - கிடைப்பதாம்,' என - என்று, உரைத்தான் - சொல்லியிருந்தான்; இன்ன தோன்றலே-இந்த ஸ்ரீராமனே, அவன் - (அதற்கு ஏற்ப வந்த) அம் மகாவிஷ்ணுவாவன்; இதற்கு—, ஏது உண்டு - வேறொரு காரணமும் உளது; (எ - று.)—அவ்வேதுவை, மேற்கவியிற் காண்க.

எனது தந்தையாகிய வாயுபகவான் முன்பு என்னைநோக்கி 'உனக்கும் எனக்கும் நல்லபதவி கிடைக்குமாறு திருமாலுக்கு அடிமைசெய்' எனக் கூறியிருக்கின்றனன்; அத்திருமாலே யான் செய்யும் அடிமைத்தொழிலை ஏற்றுக்கொள்ளுமாறு இப்போது பிரதியட்சமாக இங்கு வந்துள்ளான்; இதற்கு, யான் கீழ்க்கூறிய காரணமன்றி வேறோர்காரணமுமுள்ளது: அதனைக்கூறுவேன்: கேட்பாயாக என அநுமான் மீண்டுங் கூறலாயினனென்பதாம். தந்தை மைந்தனை 'ஐயா' என்றது, அன்புபற்றிவந்த மரபுவழுவமைதி. தோன்றல் - விளங்குபவன்; அல் - கருத்தாப்பொருள் விகுதி. ஹேது - வடசொல். முதலடி - முற்றுமோனை. பி - ம்:—[1]உலகங்களியாவையு மீன்றான், எவ்வுலகியாவையு மீன்றான், இவ்வுலகியாரையு மீன்றான். [2]தவமுனக்கஃதே, தலைமையுமஃதே, தலைமையுமையா. [3]உன்னையீன்றவற்கு. [4]அவனதற்கு, இவனதற்கு. (162)

82. துன்பு தோன்றிய[1] பொழுதுடன் தோன்றுவ னெவர்க்கும்
முன்பு தோன்றலை [2]யறிதற்கு முடிவென்னென் றியம்ப
அன்பு சான்றென வுரைத்தன னைய[3]வென் யாக்கை
என்பு [4]தோன்றல வுருகின [5]தெனிற்பிறி தெவனோ.

(இ - ள்.) 'முன்பு - முன்னே [அக்காலத்தில்], தோன்றலை அறிதற்கு - (நீ சொன்ன) அப்புருஷோத்தமனை அறிவதற்கு, முடிவு என் - நிச்சயமான உபாயம் என்ன?' என்று இயம்ப - என்று (யான் தந்தையைக்) கேட்க,—(அவ்வாயுபகவான்)—'(அம்மகா புருஷன்), எவர்க்குஉம் - யாவர்க்கும், துன்பு தோன்றியபொழுது - துன்பமுண்டான காலத்தில்,உடன் தோன்றுவன் - உடனே (அத்துன்பத்தைத் தீர்ப்பதற்கு எதிரில்வந்து) தோன்றுவன்; (மேலும்),அன்பு சான்று-

(அப்பகவானைக் கண்டமாத்திரத்தில் உனக்கு) உள்ளன்பு உண்டா வதே ஸாக்ஷியாகும்', என - என்று, உரைத்தனன் - சொன்னான்; (அதற்கு ஏற்ப இப்பெருமானைக் கண்டமாத்திரத்திலே), ஐய - தலை வனே! என் யாக்கை - எனது உடம்பு, என்பு தோன்றல உருகின து- எலும்பும் உருக்காணப் படாதனவாக உருகிவிட்டது: எனின் - என்றால், பிறிது எவன்ஓ - வேறுவகையாகச் சங்கிப்பது எவ் வாறோ? (எ - று.)

'நீ திருமாலுக்கு அடிமைசெய்' என்று எனக்கு வாயுபகவான் கூறியபோது, யான் 'இவன்தான் திருமாலென்று கண்டறிவது எப்படி?' என்று வினவ, அதற்கு அவ்வாயுதேவன், 'ஆபத்தை யடைந்தவர்களுக்கெல்லா முன்வந்து நின்று உதவுபவனாகிய அத் திருமால் உன்னெதிரில் வந்தானானால் உனக்கு அவனிடத்தில் யாதொரு காரணமுமின்றிப் பேரன்பு உண்டாகும்; இதுவே நீ அப் பெருமானைக் கண்டறிவதற்கு உரிய நெறியாம்' என அடையாளங் கூறினான்; அஃது இப்போது ஒத்திருப்பதனாலும் இவன் அத்திரு மாலே யெனத் துணியலாமென்று வேறோரநுமானமும் அநுமான் காட்டினனென்பதாம். முடிவு - தொழிலாகுபெயரால், முடிவான உபா யத்தைக் காட்டிற்று. உடன் தோன்றுவன் - உடன் தோன்றுபவ னாகிய, எவர்க்குஉம் முன்பு தோன்றலை - யாவரினும் முன்னே தோன்றிய [அநாதியான] அக்கடவுளை என்றும் உரைக்கலாம். 'துன்பு தோன்றியவுடலிடைத் தோன்றினேனறித, லின்புதோன்று மக்கடவுளை யெவ்வகை யெனயான்' என்று பாடமோதுவாருமுளர். பி - ம்:—[1]போதுடன்றோன்றுவோன். [2]அறிஞர்க்குமுருவன். [3]என் னுக்கை. [4]தோன்றிய. [5]இனிப். (163)

83. பிறிது மன்னவன் பெருவலி யாற்றலைப் பெரியோய்
அறிதி யென்னினுண் டுபாயமு மஃதரு மரங்கள்
நெறியி னின்றன வேழினொன் றுருவவிந் நெடியோன்
பொறிகொள் வெஞ்சரம் போவது காணெனப் புகன்றான்.

(இ - ள்.) பெரியோய் - சிறந்தவனே! பிறிதுஉம் - மற்றும், அன்னவன் - அந்த ஸ்ரீராமனது, பெரு வலி ஆற்றலை - மிக்க பலத் தின் தன்மையை, அறிதி என்னின் - அறிய விரும்புவாயானாலும், உபாயம்உம் உண்டு - (அவ்வாறு அறிதற்கு) ஒருபாயமும் உளது; அஃது-அவ்வுபாயம் (எதுவென்றால்).—நெறியில் நின்றன-(போகும்) வழியிலிருப்பவையாகிய, அரு மரங்கள் ஏழின் - (எய்வதற்கு) அருமை யான மராமரங்கள் ஏழிலும், ஒன்று உருவ - ஒன்றைத் துளைக்கும் படி, இ நெடியோன் - பெரியவனான இந்த ஸ்ரீராமனது, பொறி கொள் வெம் சரம் - அனற்பொறியைக்கொண்ட கொடிய அம்பொன்று, போவது காண் - செல்வதேயாகும், என - என்று, புகன்றான்-சொல் லினான், (அநுமான்); (எ - று.)

இங்கிருந்து நமது இருப்பிடத்திற்குச் செல்லும் வழியிலுள்ள ஸாலவிருட்சங்களேழில் ஒன்றை ஓரம்புகொண்டு துளைக்கச் சொல்லி அந்த அம்பு ஊடுருவிச் செல்வதைப் பார்த்தால், வாலி யைக் கொல்வதற்கு ஏற்ற வலிமை இவனுக்கு உளதென்று நீயே

தெளியலாம் என்று, சுக்கிரீவன் தெளியுமாறு சிறந்த உபாயத்தைக் கூறிமுடித்தனன் அனுமனென்பதாம். (164)

84.—அநுமான் கூறியதற்கு இணங்கிச் சுக்கிரீவன் இராமபிரானிடஞ் சென்று ஒன்றுகூறத் தொடங்குதல்.

நன்று [1] நன்றெனு தன்னெடுங் குன்றமு [2] நாணும்
தன்று ணைத்தனி மாருதி [3] தோளிணை தழுவிச்
சென்று செம்மலைக் குறுகியான் செப்புவ துளதால்
[4] ஒன்று னக்கென விராமனு [5] முரைத்தியஃ தென்றான்.

(இ - ள்.) (அதுகேட்ட சுக்கிரீவன்),—நன்று நன்று என 'நல்லது நல்லது' என்று மகிழ்ந்து,—தன் துணை - தனக்கு உதவியான, தனி - ஒப்பற்ற, மாருதி - அனுமானுடைய, நல் நெடுங்குன்றம் உம் நாணும் - நல்ல பெரிய மலைகளும் வெள்கும்படியான [மிகவும் பெரிய வலிய], தோள் இணை - இரண்டு தோள்களையும், தழுவி - அணைத்துக்கொண்டு, சென்று - போய், செம்மலை குறுகி - ஸ்ரீராமனைச் சேர்ந்து,—'உனக்கு—, செப்புவது - சொல்வது, ஒன்று - ஒரு காரியம், உளது - உண்டு', என - என்று சொல்ல,—இராமனும்—, அஃது உரைத்தி என்றான் - 'அதனைச்சொல்' என்றான்; (எ - று.)

இராமனது வல்லமையைத் தெளிவதற்குஉரிய உபாயமாக முடிவில் அநுமான் கூறியது தன்மனத்திற்குச் சம்மதமாயிருந்ததனால், சுக்கிரீவன் அநுமானைத் தழுவிக் கொண்டாடி, பின்பு இராமபிரானிருந்த இடத்தைக் குறுகி 'ஒன்று சொல்லவேண்டியிருக்கின்றது' என்ன, அவ்விராமனும் 'கூறுவாய்' என்றன னென்பதாம். நன்று நன்று, அடுக்கு - உவகைப்பற்றியது; இது, அவ்வநுமன் கூறியதற்குத் தான் இணங்கியமையைத் தெரிவிக்கும். பி - ம்:—[1] நன்றென. [2] நாண. [3] தோளினைத். [4] ஒன்றுகேளென. [5] உரைத்தியது. சில பிரதிகளில் இங்கு நட்புக்கோட்படலம் முற்றுப்பெற, அடுத்தபாடல் முதல் மராமரப்படலம் தொடங்குகின்றது. (165)

85.—சுக்கிரீவன் ஸ்ரீராமனையழைத்துச்சென்று மராமரங்களேழனுள் ஒன்றை எய்யச்சொல்லுதல்.

ஏக வேண்டுமிந் நெறியென வினிதுகொண் டேகி
மாக நீண்டன குறுகிட நிமிர்ந்தன மரங்கள்
ஆக [1] வைந்திஞே டிரண்டினுள் [2] றுருவநின் னம்பு
போகவே [3] யென்றன் [4] மனத்திடர் போமெனப் புகன்றான்.

(இ - ள்.) (சுக்கிரீவன்),—'இ நெறி - இவ்வழியாக, ஏக வேண்டும் - போகவேண்டும்,' என - என்று சொல்லி, இனிது - இனிமையாக, கொண்டு ஏகி - (ராமலக்ஷ்மணர்களை) அழைத்துக் கொண்டு போய்,—'நீண்டன மாகம் - நீண்டனவான ஆகாயமும், குறுகிட நிமிர்ந்தன - குறுகிய தென்னும்படி ஓங்கிவளர்ந்தவையாகிய, மரங்கள் - மராமரங்கள், ஆக ஐந்தினோடு இரண்டின் - மொத்தமாக இருக்கிற ஏழினுள், ஒன்று - ஒன்றை, உருவ - துளைக்கும்படி,

நின் அம்பு போகஏ-உனது அம்பொன்று சென்றமாத்திரத்திலேயே, என்தன் மனத்து இடர் போம் - எனது மனத்திலுள்ள துன்பம் நீங்கும்,' என - என்று, புகன்றான் - சொன்னான்; (எ-று.)

இம்மராமரங்களேழனுள் ஒன்றை ஓர் அம்பையெய்து துளைத்தால், அப்போது வாலியை நீ கொல்வாயென்று உறுதியாக நம்புவேனாதலால், வாலியைப்பற்றியுள்ள எனது மனத்துன்பம் போம்; ஆகவே, எனக்கு உன்துவலிமை தெளிவாக விளங்குமாறு இதனை ஓர் அம்பெய்து துளைக்கவேண்டுமெனக் கூறினன் சுக்கிரீவனென்பதாம். நீண்டன மாகம் - நீண்டுள்ள பத்துத் திக்குக்களும் [மேல் கீழ் பக்கம்என்ற எல்லாவிடமும்], குறுகிட-குறுகியன எனத் தோன்றுமாறு, நிமிர்ந்தன - பரவியுள்ளனவான, மரங்கள் என்றுருமுளர். நீண்டன, நிமிர்ந்தன - பெயர். ஆக - எல்லாஞ்சேர்ந்து என்றபடி. மாகம் - மஹாகம்; வடசொல் பி - ம்:—[1] அஞ்சினோடு. [2] உருவிடவம்பு. [3] மன்ற. [4] மனத்துயர். (166)

86.—அங்ஙனமே தான் செய்வதாக ஸ்ரீராமன் செல்லுதல்.

[1] மறுவி லானது கூறலும் வானவர்க் கிறைவன்
முறுவல் செய்தவன் முன்னிய முயற்சியை [2] முன்னி
எறுழ்வ லித்தடந் [3] தோள்களாற் சிலையைநா ணேற்றி
அறிவி னாலளப் பரியவற் றருகுசென் றணைந்தான்.

(இ-ள்.) மறு இலான் - (மனத்திற்) களங்கமில்லாதவனான சுக்கிரீவன், அது கூறலும் - அவ்வார்த்தையைச் சொன்னவளவில், —வானவர்க்கு இறைவன் - தேவர்க்கெல்லாந்தலைவனான ஸ்ரீராமன், அவன் முன்னிய முயற்சியை முன்னி - சுக்கிரீவன் எண்ணிய காரியத்தை அறிந்துகொண்டு, முறுவல் செய்து - புன்சிரிப்புச்செய்து, எறுழ் வலி தட தோள்களால் - மிக்க வலிமையையுடைய பெரியகைகளால், சிலையை நாண் ஏற்றி - வில்லை யெடுத்து நாணேறிட்டு,— அறிவினால் அளப்பு அரியவற்று-அறிவினால் அளவிட்டு அறிவதற்கு அருமையான அம்மரங்களின், அருகு - சமீபத்தில், சென்று அணைந்தான் - போய்ச்சேர்ந்தான்; (எ - று.)

சுக்கிரீவன் வார்த்தையைக் கேட்டவுடனே, ஸ்ரீராமன், அவன் மனத்திற் சிறிதுங் குற்றமற்றவனாயிருத்தலைக்கண்ட மகிழ்ச்சியினாலும்,சுக்கிரீவன் கூறியது தனது பெருவலிமைக்கு முன் மிகவுஞ் சிறு தொழிலாக இருத்தலாலும் புன்சிரிப்புக்கொண்டு, அவ்வாறே செய்வதற்காக வில்லை நாணேறிட்டு அம்மரங்களுள்ள இடத்தைக் கிட்டினனென்பதாம். தனது உட்கருத்தை ஒளியாமல் வெளியிட்டமைபற்றி, 'மறுவிலான்' என்றார். எறுழ்-உரிச்சொல். "எறுழ்வலியாகும்" என்பது, தொல்காப்பியம். எறுழ்வலி - ஒருபொருட்பன்மொழி. அரியவற்று, அற்று - சாரியை. பி-ம்:—[1] மறுவிலாதவன். [2] உன்னி. [3] தோளினிற் சிலையை நாணேற்றி, தோள்களால் நெடுஞ்சிலையேற்றி. (167)

நட்புக்கோட்படலம் முற்றிற்று.

நான்காவது

மராமரப்படலம்

வாலியைக் கொல்லும் வல்லமை தனக்கு உள்ள தென்று தெரிவித்துச் சுக்கிரீவனது ஐயத்தைத் தீர்த்தற்பொருட்டு அவன் விருப்பத்தின்படி இராமபிரான் ஏழு மராமரங்களை ஓர் அம்பு எய்து துளைத்த செய்தியைச் சொல்லும் பாகம். (மராமரம்-ஸால விருட்சம்: ஒருவகை யாச்சாமரம்.)

87.—இதுமுதல் ஒன்பதுகவிகள்-மராமரங்களின் வருணனை.

ஊழி பேரினும் [1] பேர்வில வுலகங்க [2] ளுலைந்து
தாழுங் காலத்துந் தாழ்வில தயங்குபே [3] ரிருள்சூழ்
ஆழி மாநிலந் தாங்கிய வரும் [4] பெருங் கிரிகள்
ஏழு மாண்டுச் [5] சென் றொருவழி நின்றென வியைந்த.

இதுவும் அடுத்த கவியும்-ஒருதொடர்.

(இ - ள்.) (அம்மராமரங்கள் ஏழும்),—ஊழி பேரின்உம் - யுகங்கள்மாறினாலும், பேர்வு இல - நிலைமாறுதலில்லாதவை: உலகங்கள்-எல்லாவுலகங்களும், உலைந்து தாழும் காலத்துஉம் - அழிந்துபோகுங் காலத்திலும், தாழ்வு இல - விழுதலில்லாதவை; தயங்கு பேர் இருள் சூழ் - திகைத்தற்குக் காரணமான மிக்க இருளினாற் சூழப்பட்ட, ஆழி மா நிலம் - கடல் சூழ்ந்த பெரிய பூமியை, தாங்கிய - (நிலைபெயராமல்) தாங்குகின்ற, அரும் பெருங்கிரிகள் ஏழ்உம் - அரிய பெரிய ஏழு குலபருவதங்களும், ஆண்டு சென்று - அவ்விடத்தில் வந்து, ஒருவழி நின்று என - ஒருசேர நின்றாற்போல, இயைந்த - பொருந்தியவை; (எ - று.)

முன்னிரண்டடிகள் - அம்மரங்கள் அழியாது நிலைத்துநிற்றலை விளக்கவந்த உயர்வுநவிற்சியணியும், பின்னிரண்டடிகள் - அம்மரங்களின் பெருந்தோற்றத்தையும் வன்மையையும் எண்ணிக்கையையும் பற்றிவந்த தற்குறிப்பேற்றவணியுமாம். கவி மராமரத்துக்கு ஒப்புத் தேடி ஒப்புப்பொருள் மலையேயென்றும் அவற்றிலும் ஏழு என்னுந் தொகையன சத்தகுலாசலமேயாதலால் அவற்றைக்கூறலாமென்றும் கருதி, வெவ்வேறு இடங்களிலிருக்கும் அவை ஒப்பாகாவாதலால் ஒப்பு அமையவேண்டி அவற்றை ஒருங்கே இயைந்து நின்றனபோலு மெனக் குறித்தார். இதனை இல்பொருளுவமை யென்றலும் உண்டு. (கடல் நீர்ப்பெருக்கத்தால்), உலகங்கள்,—உலைந்து - நிலைகுலைந்து, தாழும் காலத்துஉம் - கடல் நீருள்மூழ்கித்தாழ்ந்துபோகுங்கற்பாந்தகாலத்தும், தாழ்வுஇல - அந்நீர்க்குள் தாழ்ந்திடாமல் மேலோங்கிநிற்பன என உரைத்தலும் ஒன்று. அடுத்த செய்யுளிலுள்ள 'ஏழும்' என்பதையே இச்செய்யுளிலுங் கூட்டி, இச்செய்யுளிலுள்ள பயனிலைகட்கும் எழுவாயாக்குக. பேரிருள் என்றது - சக்ரவாளபர்வதத்துக்கு அப்பாலுள்ள காடாந்தகாரத்தை. கிரிகள் ஏழு - கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், கந்தமாதநம் என்பன. மலைகள் பூமிக்கு

மேலுங் கீழும் பொருந்தி அதனைத் தரித்தலால், 'மாநிலந்தாங் இருகிரி' எனப்பட்டது; அதனை 'பூதரம்' என்னும் வடமொழிப் பெயராலும் உணர்க. இருள் சூழ் ஆழி - பிரளயத்தால் இருள் சூழப்பட்ட கடல் எனினுமாம். நீலகிரியையும் சேர்த்து, அஷ்ட குலாசலம் [எட்டுக்குலமலை] என வழங்குதலும் உண்டு. ஊழி - பிரமனது ஆயுள்; கல்பமெனப்படும். பேரினும், காலத்தும், உம்மை - உயர்வுசிறப்பு. ஏழும், உம்மை - முற்று. ஆழி - சக்கர வாளகிரியுமாம். பி - ம்:—[1]பெயர்வில். [2]உலந்து. [3]பேர்மொய்ம்பால், பேரருளால். [4]குலக். [5]கின்று. ஆண்டுசென்று என இயல்பாக ஓதுவர் ஒருசாரார். (168)

2. கலை [1]கொண் டோங்கிய மதியமுங் கதிரவன் தானும்
தலை[2]கண் டோடுதற் கருந்தவந் தொடங்குறுஞ் [3]சாரல்
மலைகண் டோமென்ப தல்லது [4]மலர்மிசை யயற்கும்
இலை[5]கண் டோமெனத் தெரிப்பருந் தரத்தன வேழும்.

(இ - ள்.) ஏழ்உம் - (அம்மராமரங்கள்) ஏழும்,—'கலை கொண்டு ஓங்கிய மதியம்உம் - பதினறுகலைகளையுங் கொண்டு வளர்ந்த சந்திரனும், கதிரவன் தான்உம் - (ஆயிரங்) கிரணங்களையுடையவனான சூரியனும், தலைகண்டு ஓடுதற்கு - (தனது) உச்சியைக் கண்டு தாண்டிச்செல்லுதற்கு, அருந்தவம் தொடங்குறும் - செய்தற்கரிய தவத்தைத் தொடங்கிச் செய்தற்கு ஈடான [மிகஉயர்ந்த], மலை சாரல் - மலைச்சாரலை, கண்டோம் - பார்த்தோம்,' என்பது அல்லது - என்று சொல்வதேயல்லாமல், மலர்மிசை அயற்குஉம் - தாமரை மலரில் தோன்றிய பிரமனுக்கும், இலை கண்டோம் என - (அதன் நுனியிலுள்ள) இலையைப் பார்த்தோமென்று, தெரிப்பு அரு - சொல்லுதற்கு அருமையான, தரத்தன - உயர்வை யுடையன; (எ - று.)

மேலுலகங்க ளெல்லாவற்றுள்ளும் உயர்ந்த சத்தியலோகத்தில் வாழ்கின்ற அப்பிரமனும் 'இனி இவற்றின் உச்சியைக் கண்டு பிடித்துக் கடந்துசெல்லவேண்டும் என்று கருதி நாடோறும் வானத்துச் செல்லும் சந்திரசூரியர் பெருந்தவஞ் செய்வதற்கு ஏற்ற ஓர்மலைச்சாரலைக் கண்டோம்' என்று அந்தச் சாலமரத்தின் அடிப் பகுதியைப்பற்றிச் சொல்லுவதன்றி வேறு சொல்ல முடியாதபடி, நுனி, காணப்படாமல் ஓங்கி உயர்ந்தவை அம்மராமரங்கள் என்பதாம். சத்திய லோகத்தையும் ஊடுருவி அந்த ஆச்சாமரங்கள் அப்பாற் செல்வதால், அந்தப்பிரமனும், சூரிய சந்திரர் தம்முடைய கதி தடைப்பட்டுத் தங்குகின்ற அம்மரங்களின் அடிப்பகுதியைக் கண்டு 'மரத்துச்சியைக் கண்டு அப்பாற்செல்லுமாறு சந்திர சூரியர் தவம்புரியத் தங்கும் மலைச்சாரலாகும் இவ்விடம்' என்று கருதுவானாயினன் என்பது, முதல் மூன்றடிகளிற் கூறிய விஷயம். மரங்கட்குப் பெருங்கிரிகளேழையும் உவமையாகக் கூறிய கவிஞர், மரங்களின்வலிய அடிப்பகுதி பாறைகளடர்ந்த மலையடிப்பகுதி போன்றும், பசிய இலைகள் செறிந்த அம்மரங்களினுச்சாணிக்கிளைகள் மரத்தொகுதியடர்ந்து பச்சைசப்பசேரென்று தோன்றும் மலையுச்சி

போன்றும் மனக் கண்ணுக்குப் புலப்பட, அவற்றை இங்ஙன் வருணிக்கலாயின ரென்க. இனி, இலே - இல்லே யென்பதன் விகாரமாய், பிரமனுக்கும் அம்மரம் முழுவதையுங் கண்டோமில்லே யென்று சொல்லலாம்படி யாவர்க்குந் தெரிவதற்கு அரிய தன்மையனவென்றுமாம். இச்செய்யுள் - அம் மலேயின் உயர்ச்சியை விளக்கவந்த உயர்வுநவிற்சியணி. கலே - சந்திரனது பங்கு. சாரல் - மலேப்பக்கம். 'கலேகொண்டோங்கிய' என்பதைக் கதிரவனுக்கும் அடைமொழியாக்கலாம். பி - ம்:—[1]கண்டு. [2]கொண்டு. [3]சாயல், சாலம். [4]மலர் மிசையவற்கும். [5]கண்டல்லது. (169)

3. ஒக்க நாளெலா முழல்வன [1]வுலேவில வாக
மிக்க தோர்பொரு ளுளதென [2]வேறுகண் டிலமால்
திக்கும் வானமுஞ் செறிந் தவத் [3]தருநிழற் சீதம்
புக்கு நீங்கலிற் றளர்வில விரவிதேர்ப் புரவி.

(இ - ள்.) இரவி தேர் புரவி - சூரியனது தேரிற் பூட்டப்பட்ட ஏழுகுதிரைகள், நாள் எலாம் - தினந்தோறும் [நாள் முழுவதும்], ஒக்க - ஒரேவிதமாக, உழல்வன-(ஓயாமல்) ஓடிச்செல்வன; (ஆயினும் அவை), உலேவு இல ஆக - சிறிதும் வருத்தமில்லாதவையா யிருப்பதற்கு, மிக்கது ஓர்பொருள் உளதுஎன - மேம்பட்டதொரு காரணம் உண்டென்று, வேறு கண்டிலம் - வேறே கண்டோமில்லே; திக்கு உம் வானம்உம் செறிந்த - எல்லாத் திக்குக்களிலும் ஆகாயத்திலும் நெருங்கிப் பரந்த, அ தரு - அம்மரங்களின், சீதம் நிழல் - குளிர்ந்த நிழலே, புக்கு - அடைந்து, நீங்கலின் - செல்வதனுல், தளர்வு இல - (அக்குதிரைகள்) தளர்ச்சியில்லாதனவாம்; (எ-று.)—ஆல்-ஈற்றசை; தேற்றமுமாம்.

சூரியனது தேர்க்குதிரைகள் ஓயாமல் ஒவ்வொருநாளும் ஓடுவனவாயிருந்தும் இளேப்படையாமைக்குக் காரணம், ஒவ்வொரு நாளும் அவ்வங்ஙாளின் இளேப்பு நீங்கும்படி அம்மரத்தின் கீழ் நிழலின்வழிச் செல்வதேயெனக் குறித்தது, ஏதுத்தற்குறிப்பேற்றவணி. இதனுல், அம்மரங்களின் இலேயடர்ந்த உச்சிக்கிளேகள் சூரியமண்டலத்தினும் உயர்ந்தன என்பதும், மிகவும் பரந்துள்ளன என்பதும் தொனிக்கும். 'இலேகண்டோமெனத் தெரிப்பருந்தரத்தன' எனக் கீழ்வந்தமையால், இலேசெறிந்த உச்சாணிக் கிளேகளே இங்குக் கூறினர். சூரியனது தேர்க்குக் குதிரைகள் ஏழாதலால், 'தளர்வில' எனப் பன்மையாற் கூறினர். புரவி - பால்பகாவஃறிணேப்பெயர். பி - ம்:—[1]உலேவிலேவான, உலேவிலாவான. [2]ஒன்று. [3]திரு. (170)

4. நீடு நாள்களுங் கோள்களு மென்னமேல் [1]நிமிர்ந்து
மாடு தோற்றுவ மலரெனப் பொலிகின்ற [2]வளத்த
ஓடு மாச்சுடர் வெண்மதிக் குட்கறுப் புயர்ந்த
கோடு தேய்த்தலிற் களங்க[3]முற் ருமெனுங் குறிய.

(இ - ள்.) (அவ்வேழுமரங்களும்),—நீடு - நெடுங்காலமுள்ள, நாள்கள்உம் - நக்ஷத்திரங்களும், கோள்கள்உம் - நவக்கிரகங்களும், என்ன - என்று, மேல் நிமிர்ந்து-ஆகாயத்திற் பொருந்தி, மாடு தோற்றுவ - பக்கங்களில் விளங்குகின்ற இவை, மலர் என - (இம்மரங்களின்) புஷ்பங்களென்னும்படி, பொலிகின்ற - விளங்குகின்ற, வளத்த - வளர்ச்சியையுடையவை; ஓடும் - (ஆகாயத்திற்) செல்லுகின்ற, மா சுடர் - சிறந்த ஒளியையுடைய, வெள் மதிக்கு-வெண்மையான சந்திரனுக்கு, உள் கறுப்பு - நடுவிலுள்ள மறு, உயர்ந்த கோடு தேய்த்தலின் - (இம்மரத்தின்) உயர்ந்த கிளைகள் பட்டு (அவனுடம்பைத்) தேய்த்தலால், களங்கம் உற்று ஆம் - களங்கமென்று பொருந்தியதனாலாம், எனும் குறிய - என்று குறிக்கத்தக்கவை; (எ - று.)

இம்மரங்களின் கிளைகளைச் சார்ந்து விளங்குகின்ற கிரகங்களும் நக்ஷத்திரங்களும் எல்லாம் இம்மரங்களின் மலர்கள்போல இருக்கின்றன என்பது, முன்னிரண்டடியிற் கூறிய பொருள்; இம்மரங்களின் கிளைகள் அடிக்கடி சந்திரன்மீது படுவதனால் அவனிடத்து உண்டான தழும்புகளே களங்கமென்று சொல்லப்படுகின்றன என்பது, பின்னிரண்டடியிற் கூறிய பொருள்; இரண்டும் தற்குறிப்பேற்றவணி.

எழுவாய் வருவிக்க. கோள் - க்ரஹமென்ற வடசொல்லின் பொருள்கொண்டது; அவை-சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், பிருகஸ்பதி, சுக்ரன், சனி, ராகு, கேது என ஒன்பதாம். மாடு-ஏழாம் வேற்றுமை யிடப்பொருளுணர நின்ற இடைச்சொல். தோற்றுவ - பெயர். பொலிகின்ற - பெயரெச்சம். வளத்த, குறிய - முற்று. 'உற்று' என்ற செய்தெனெச்சம் - காரணப்பொருளது. பி - ம்:— [1]நிவந்த, நிவந்து. [2]வனப்ப. [3]உற்றுலெனும், உற்றுமென், உற்றுலென, உற்றுமன்ன. (171)

5. [1]தீத றும்பெருஞ் சாகைகள் [2]தழைக்கின்ற செயலால்
வேத மென்னவுந் தகுவன விசும்பினு முயர்ந்த
ஆதி யண்டமுன் பளித்தவ னுலகினங் கவனூர்
ஓதி மந் [3]தனிப் பெடையொடும் புடையிருந் துறைவ.

(இ - ள்.) (பின்னும் அம்மரங்கள்),—தீது அறும் - அழிவில்லாத, பெரு - பெரிய, சாகைகள் - கிளைகள் [பிரிவுகள்], தழைக்கின்ற - செழித்திருக்கின்ற, செயலால் - தன்மையினால், வேதம் என்னஉம் தகுவன - வேதங்களென்றுஞ் சொல்லத்தக்கவை: விசும்பின்உம் உயர்ந்த - தேவலோகத்தினும் உயர்ந்தவை; ஆதி அண்டம் முன்பு அளித்தவன் - பழமையான அண்டகோளங்களை முன்னே படைத்தவனான பிரமனது, உலகின் - லோகத்தின், அவன் ஊர் - அப்பிரமன் (வாகனமாக) ஏறி நடத்தும்படியான, ஓதிமம் - அன்னப்

பறவை, தனி பெடையொடுஉம் - ஒப்பற்ற பேடையுடனே, புடை இருந்து - (தமது) சார்பிலிருந்து, உறைவ - வாசஞ்செய்யப் பெற்றவை; (எ - று.)—'அங்கு' - அசை.

இச்செய்யுட்கும் எழுவாய் வருவிக்கவேண்டியதே. சாகா என்னும் வடசொல்லுக்கு - மரக்கிளையென்றும், வேதத்தின் பிரிவென்றும் பொருள்கள் உள்ளன வாதலால், 'சாகைகள் தழைக்கின்ற செயலால் வேதமென்னத் தகுவன' எனச் செம்மொழிச் சிலேடையுவமையணியாற் கூறினர். சிலேடை - ஒருசொல்லைப் பல பொருள் படச்சொல்வது; செம்மொழிச்சிலேடையென்றும், பிரிமொழிச்சிலேடையென்றும் சிலேடை இருவகைப்படும். செம்மொழிச்சிலேடையாவது - சொல்வெவ்வேறு வகையாகப் பிரியாது பல பொருள் தருவது; பிரிமொழிச்சிலேடையாவது - "கண்ணுஞ் சொல்லும் கரும்பிணை" என்றவிடத்து, கண், கரு பிணை - கரியமான்போன்றது: சொல், கரும்பு இணை - கரும்பை யொத்தது என்றாற்போலச்சொல் வெவ்வேறு வகையாகப் பிரிந்து வெவ்வேறு பொருளைத்தருவது. பி - ம்:—[1] தீ தரும். [2] தழைத்ததோர். [3] துணைப். (172)

6. நாற்ற [1] மல்கு [2] போ தடைகனி [3] காய்முதல் நாநா
[4] வீற்று மண்டலத் தியாவையும் வீழ்கில யாண்டும்
காற்ற லம்பினுங் [5] கலிநெடு [6] வானிடைக் கலந்த
ஆற்றின் வீழ்ந்துபோ [7] யலைகடற் பாய்தரு மியல்ப.

(இ - ள்.) காற்று அலம்பின்உம் - காற்று அசைத்தாலும், நாற்றம் மல்கு போது - நறுமணம் மிக்க மலர்களும், அடை - இலைகளும், கனி - பழங்களும், காய் - காய்களும், முதல் - முதலிய, நாநா வீற்று யாவைஉம் - பலவகைப்பட்ட அனைத்தும், மண்தலத்து - பூலோகத்தில், யாண்டும் - எவ்விடத்திலும், வீழ்கில - விழாதனவாய்,—கலி - ஆரவாரத்தையுடைய, நெடு வானிடைகலந்த - பெரிய தேவலோகத்திற் பொருந்திய, ஆற்றின் - ஆகாசகங்காநதியில், வீழ்ந்து - விழுந்து, போய் - (அதன்வழியாகச்) சென்று, அலை கடல் பாய்தரும் - அலைகின்ற கடலில் சேர்கின்ற, இயல்ப - தன்மையையுடையவை; (எ - று.)

இதனால், அவை ஆகாசகங்கைக்கும் மேலாக உயர்ந்துள்ளனவென்றபடி; தொடர்புயர்வுநவிற்சியணி. யாவையும் காற்று அலம்பினும் வீழ்கில வீழ்ந்துபோய்ப் பாய்தரும் இயல்ப என இயையும். இனி, முன்னிரண்டடிக்கு - எந்நாளும் இலை முதலிய உதிராதவை யென்றும், பின்னிரண்டடிக்கு - காற்றடித்தால் ஆகாசகங்கையிலும் கடலிலும் படும்படி அசைபவை யென்றும் பொருள் கொள்ளலாம். நாற்றம் தொழிற்பெயர்; இச்சொல் - இங்குத் தீநாற்றத்தைக் காட்டாது நறுமணமென்ற பொருளைத் தந்தது. தலம், நாநா - வடசொற்கள். பாய்தரும், தா - துணைவினை. பி - ம்:—[1] நல்கு. [2] பூ. [3] நனைமுதல் யாவும், காம்முதல்யாவும், காயொடு நானா. [4] வீற்றின், வீற்ற, வேற்று. [5] கவினெடும். [6] கானிடை. [7] பாயமீன். (173)

7. [1]அடியி ஞலுல களந்தவ னண்டத்துக் கப்பால்
முடியின் மேற்சென்ற [2]முடியன வாதலின் முடியா
நெடிய [3]மாலன்ன [4]நிலையன நீரிடைக் கிடந்த
படியின் மேல்நின்ற மேருமால் வரையினும் பரிய.

(இ - ள்.) (பின்னும் அம்மரங்கள்),—அடியினுல் - (தன்) அடி வைப்புக்களால், உலகு - உலகங்களை, அளந்தவன் - அளந்தவனை திருமாலின், அண்டத்துக்கு - உலகங்கட்கு, அப்பால் முடியின்மேல்- மேல் முகட்டின்மேலும், சென்ற - போயுள்ள, முடியன - நுனியை யுடையன; ஆதலின் - ஆகையினுல், முடியா - அளவிடப்படாத, நெடிய - நீண்ட, மால் அன்ன - திருமாலை யொத்த, நிலையன-நிலைமை யுடையவை; நீரிடை கிடந்த - ஜலத்தின்மேற் பொருந்திய, படியின் மேல் - பூமியில், நின்ற - நிலைபெற்ற, மால் மேரு வரையின்உம் - மகா மேரு பருவதத்தினும், பரிய - பருத்தவை; (எ - று.)

மராமரங்களேழும், பிரமாண்டத்தையுங்கடந்து நிற்றலால் திரி விக்கிரம மூர்த்தியை யொத்தும், மேருமலையினும் மிகப்பருத்தும் நிற் கின்றன என்பதாம். நெடியமால் அண்டத்துக்கப்பால் முடியின்மேற் சென்ற முடியனுதலை "படிவட்டத்தாமரை பண்டுலக நீரேற்று, அடி வட்டத்தாலளப்ப நீண்ட - முடிவட்டம், ஆகாயமூடறுத் தண்டம் போய் நீண்டதே, மாகாயமாய் நின்ற மாற்கு" என்ற பெரியார் பாசு ரத்தாலும் உணர்க. முடியா-அழிவில்லாத எனினுமாம். நெடியமால்- மகாவிஷ்ணு. [1]அடிய நான்மறையந்தண னண்டத்துக்கு என்ற பாடத்துக்கு, அநாதியான நான்குவேதங்களையுடைய பிரமதேவ னுடைய அண்டமென்க; சத்தியலோக மென்றுமாம். ஆதியிற் கடவுள் நீரைப்படைத்து அதன்மேல் பூமியைத் தோற்றுவித்தன ராதலால், 'நீரிடைக் கிடந்த படி' எனப்பட்டது. பூமிக்கு மத்தியிற் பொன்மயமா யோங்கிநின்ற மேருமலை தன்னிடத்துச் சூரியன் மறை வதனுல் அஸ்தமனமும், வெளித்தோன்றுவதனுல் உதயமும் நவ கண்டங்கட்கும் உண்டாகுமாறு செய்கின்றதென்று புராணம் கூறும். எழுவாய் வருவிக்க. அடுத்த இரண்டு செய்யுள்களிலும் இவ்வாறே. பி - ம்:—[2]முடியின. [3]மாலெனும். [4]நிலையின. *(174)*

8. வள்ள லிந்திரன் மைந்தற்குந் தம்பிக்கும் [1]வயிர்த்த
உள்ள மேயென வொன்றினென் [2]றுள்வயிர்ப் புடைய
தெள்ளு நீரிடைக் [3]கிடந்தபார் [4]சுமக்கின்ற சேடன்
வெள்ளி வெண்படங் குடைந்துகீழ்ப் போகிய [5]வேர.

(இ - ள்.) வள்ளல் - வரையாமற்கொடுப்பவனுகிய, இந்திரன் - தேவேந்திரனது, மைந்தற்குஉம் - குமாரனை வாலிக்கும், தம்பிக்கு உம் - (அவனது) தம்பியான சுக்கிரீவனுக்கும், வயிர்த்த - (ஒருவர் மேலொருவர்) பகைமை கொண்ட, உள்ளமே என - மனம்போல [வயிரங்கொண்ட தன்மையில் ஒன்றுக்கொன்று தாழாமைபோல], ஒன்றின் ஒன்று - ஒன்றைக் காட்டிலும் ஒன்று (குறைந்திடாத),

உள் வயிர்ப்பு உடைய - உள்ளே வயிரத்தன்மையையுடையவை; தெள்ளும் நீரிடை கிடந்த - தெளிவான கடலினிடையே பொருந்திய, பார் - பூமியை, சுமக்கின்ற - தாங்குகின்ற, சேடன் - ஆதிசேஷனது, வெள்ளி வெள் படம் - வெள்ளிபோல வெண்மையான படத்தை, குடைந்து - கிழித்துக்கொண்டு, கீழ் போகிய - கீழே ஊன்றிச்சென்ற, வேர - வேரினையுடையவை; (எ - று.)

வாலிசுக்கிரீவர்கள் உள்ளே வயிரம் வளரப்பெற்றமைபோல, அம்மரங்கள் உள்வயிரம்வளரப்பெற்றன வென்றபடி: செம்மொழிச் சிலேடைபற்றி வந்த உவமையணி; வாலி சுக்கிரீவர்கட்கு வயிர்ப்பு - நெஞ்சிற்கொண்டுள்ள பகைமை: மரத்திற்கு வயிர்ப்பு - உறுதிப்பாட்டினால் மரத்தினுட்புறத்தில் தோன்றும் நிறவேறுபாடு: இவ்விரண்டும் வேருயிருக்கவும் உவமைவருவதற்காக ஒன்ருக்கொண்டது, வேற்றுமையுயர்வுநவிற்சி யெனப்படும். அம்மரத்தின்வேர்கள் நாகலோகத்திற்குக் கீழுஞ் சென்றுள்ளன வென்பது, பின்னிரண்டடிகளின் கருத்து. சேஷன் - (பிரளயகாலத்திலும் அழியாது) எஞ்சிநிற்பவனெனக் காரணப்பெயர். பி - ம்:—[1]வலித்த, வலிந்த, வயிரத்து. [2]உள்வயிரத்த. [3]இடந்து. [4]சுமந்தவச். [5]வேர்கள். (175)

9. சென்று திக்கினை யளந்தன [1]பணைகளிற் றேவர்
என்று நிற்குமென்[2]றிசைப்பன விருசுடர் திரியும்
குன்றி னுக்குயர்ந் தகன்றன [3]வொன்றினுங் [4]குறுகா
[5]ஒன்றி னுக்கொன்றி [6]னிடைநெடி தியோசனை யுடைய.

(இ - ள்.) (அம்மரங்கள்),—'சென்று - போய், திக்கினை-எல்லாத் திசைகளையும், அளந்தன - அளவிட்டவையாகிய, பணைகளின் - (இம்மரங்களின்) கிளைகளால், (தடைபட்டு), என்று - சூரியன், நிற்கும்- (இனிக் கதியொழிந்து) நின்றுவிடுவான்', என்று—, தேவர் - தேவர்களால், இசைப்பன - சொல்லத்தக்கவை; இரு சுடர் திரியும் குன்றினுக்கு - சூரிய சந்திரர்கள் சஞ்சரிக்கின்ற உதயகிரி அஸ்தகிரிகளைக்காட்டிலும், உயர்ந்து அகன்றன - ஓங்கிப் பரந்திருப்பவை; ஒன்றின் உம் குறுகா - ஒருவகையிலும் குறைவில்லாதவை; ஒன்றினுக்கு ஒன்றின் இடை - ஒன்றுக்கொன்று இடையிலே, நெடிது யோசனை உடைய - பலயோசனைதூரம் இடைவெளியுள்ளவை; (எ - று.)

இங்கு வேறுவகையால் அம்மரங்களின் ஓங்கிய தன்மையையும் பரப்பையும் விளக்கி, அவ்வேழுமரங்களும் ஒன்றற்கு ஒன்று ஒருயோஜனை தூரம் இடம் விட்டுள்ளன என்று, அம்மரங்கள் நெருக்கமாகவன்றி விசாலமாக முளைத்திருப்பதைத் தெரிவிக்கின்ருர். கீழ் 'மேருமால்வரையினும் பரிய' என வந்ததனுல், 'இருசுடர்திரியுங்குன்று' என்பதற்கு - மேருவென்று பொருள்கொள்ளப்படவில்லை. ஒன்றினுங் குறுகா - ஒன்றில் ஒன்று சேராதபடியென்றுமாம். யோசனை - யோஜநா: வடசொல்: ஓரெல்லையளவு. என்று-சூரியன்: ஒளியையுடையதெனப் பொருள்படுங்காரணக்குறி;

எல்-ஒளி: பகுதி; று - பெயர்விகுதி. நெடிதியோசனை-குற்றியலிகரம். பி - ம்:—[1] எண்களில். [2] இசைத்தன. [3] என்னினும். [4] குறுகாது. [5] ஒன்றினுக்கொன்றுதான், ஒன்றினுக் கிடையொன்றுதான். [6] இடைநெறி. (176)

10.—இராமபிரான் அம்மரங்களைக் கண்டவுடனே அம்பு எய்யுமாறு நாணொலி யெழுப்புதல்.

ஆய மாமர மனைத்தையு நோக்கிநின் றமலன்
தூய வார்கணை துரப்பதோ [1] ராதரந் தோன்றச்
சேய வானமுந் திசைகளுஞ் செவிடுறத் தேவர்க்கு
[2] ஏய்வி லாததோர் [3] பயம்வரச் சிலையினா ணெறிந்தான்.

(இ-ள்.) அமலன் - ஸ்ரீராமன்,—ஆய மாமரம் அனைத்தைஉம் - அத்தன்மையனவான பெரிய மராமரங்கள் ஏழையும், நோக்கிநின்று-பார்த்து நின்று,—தூய வார்கணை-பரிசுத்தமான நீண்ட அம்பை, துரப்பது-பிரயோகிப்பதற்கேற்ற, ஓர் ஆதரம்-ஒருவிருப்பம், தோன்ற-உண்டாக,—(உடனே), சேய வானம்உம் - தூரத்திலுள்ள தேவலோகத்தி லிருக்கின்ற பிராணிகளும், திசைகள்உம் - எல்லாத்திக்கிலுமுள்ள பிராணிகளும், செவிடு உற - செவிடுபடவும்,—தேவர்க்கு - தேவர்களுக்கு, ஏய்வு இலாதது - (இதுவரையிலும் எந்நாளும்) உண்டாகாததான, ஓர் பயம் வர - ஒரு பயம் உண்டாகவும், சிலையின் நாண் எறிந்தான் - வில்லிலேற்றிய நாணியை(க் கைவிரலால்) எறிந்து (டங்காரத்தொனி) செய்தான்; (எ - று.)

சுக்கிரீவனுக்கு நம்புதலுண்டாக்குதற்பொருட்டு ஏழுமரங்களையும் ஒருசேர எய்யுமாறு விரும்பி, வானமும் திசைகளும் செவிடுபடவும், தேவர்களும் நடுநடுங்கவும், இராமபிரான் நாணொலியெழுப்பின னென்பதாம். செவிடுபடுதல்- அளவிறந்த ஒலியைக்கேட்டலால். பயம் வருதல் - என்ன அபாயம் வருமோ வென்று. கணைக்குத் தூய்மை - துஷ்டர்களை அழித்தலும், குறித்த இலக்குத் தப்பாமையும். தூய, சேய - குறிப்புப் பெயரெச்சம். வானம், திசை என்பன - அங்குள்ளார்க்கு இடவாகுபெயர். பி - ம்:—[1] நெடுந்தொழில். [2] ஏயிலாதது. [3] பயமுற. (177)

11.—நாணொலியின் வருணனை.

[1] ஒக்க நின்றதெவ் வுலகமு மங்கங்கே யோசை
பக்க நின்றவர்க் குற்றது பகர்வதெப் படியோ
திக்க யங்களு மயங்கின திசைகளுந் திகைத்த
புக்க யன்பதி சலிப்புற வொலித்ததப் [2] போர்வில்.

(இ - ள்.) ஓசை - அவ்வொலி,—எ உலகம்உம் - எல்லாலோகங்களிலும், ஒக்க - ஒருசமமாக, அங்கு அங்கே நின்றது - அவ்வவ்விடங்களிற் (போய்ப்) பரவிநின்றது; (என்றால்),—பக்கம் நின்றவர்க்கு - அருகில் இருந்தவர்களுக்கு, உற்றது - நேர்ந்ததை, பகர்

வது - சொல்வது, எப்படிஓ - எவ்வாறோ? (அந்நாவொலியினால்), திக் கயங்கள் உம் - (எட்டுத்) திக்குயானைகளும்,மயங்கின - மயக்க மடைந்தன; திசைகள்உம் - எல்லாத்திக்குகளும், திகைத்த - கலக்க மடைந்தன; அ போர் வில் - போர்க்கு ஏற்ற அந்த வில், அயன் பதி சலிப்பு உற - பிரமலோகமும் அதிர்ச்சியடையும்படி, புக்கு ஒலித்தது-போய்ச் சப்தித்தது; (எ - று.)

வெவ்வேறு உலகங்களிற் சென்ற இராமபிரானது வில்லின் நாவொலி அவ்வவ்விடத்தில் தான்தோன்றினதுபோலப் பேரோசை பெற்றிருந்ததென்றால், உண்மையில் அதனருகேயிருந்தவர்க்கு இவ்வாறு இருந்ததென்பதுகூறாமலே விளங்கும்; அவ்வாறுதோன்றிய பேரொலியினால் திக்கஜங்கள் திகைப்படையத் திக்கிலுள்ளவர்கள் மயங்கப் பிரமலோகமும் சலித்ததென்பதாம். இச்செய்யுள்-நாவொலியின் மிகுதியைத் தெரிவிக்கவந்த தொடர்புயர்வுநவிற்சியணி.இதற்கு -இரண்டாமடியிற்கூறிய விஷயத்தைக் கைமுதிகநியாயத்தாற் சாதிக்கின்ற முதலடியிலுள்ள தொடர்நிலைசெய்யுட்பொருட்பேறணி அங்கமாய் வந்தது. திக்கஜங்கள்-ஐராவதம்,புண்டரீகம், வாமநம், குமுதம், அஞ்சநம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீகம் என்பன. கயம் - கஜம். உலகமும், உம்மை - முற்று. ஓ - எதிர்மறை. கயங்களும், உம்- எண்ணுப்பொருளோடு உயர்வுசிறப்புப்பொருளது. திசைகளும், உம்மை - எண். பி - ம்:—[1] ஒக்க வெவ்வுலகத்துக்கும், ஒக்க நின்ற வெவ்வுலகிற்கும். [2] பொருவில். (*178*)

12.—இதுவும் அது.

அரிந்த மன்சிலை [1] நாணெடி தார்த்தலு மமரர்
இரிந்து நீங்கினர் கற்பத்தி னிறுதியென் றயிர்த்தார்
பரிந்த தம்பியே பாங்குநின் றான்மற்றைப் பல்லோர்
புரிந்த தன்மையை யுரைசெயிற் [2] பழியவர்ப் புணரும்.

(இ - ள்.) அரிந்தமன் - பகைவர்களை அடக்குபவனான ஸ்ரீராமனது, சிலை நாண் - கோதண்டத்தினது நாணி, நெடிது ஆர்த்தலும்- மிகுதியாய் ஆரவாரித்தமாத்திரத்தில்,—அமரர் - தேவர்களெல்லோரும், இரிந்து நீங்கினர் - அஞ்சி ஓடினவர்களாய், கற்பத்தின் இறுதி என்று - கல்பகாலத்தின்முடிவு [பிரளயகாலம்] (இப்போது) என்று, அயிர்த்தார் - சந்தேகித்தார்கள்; பரிந்த தம்பிஏ - (தமையனார்பக்கல்) அன்புபூண்ட இளையபெருமாள் ஒருவன் மாத்திரமே, பாங்கு நின்றான் - அருகில் இருந்தான்: மற்றை பல்லோர் புரிந்த தன்மையை - மற்றை (சுக்கிரீவன் அநுமான் முதலிய) பலரும் அடைந்த விதத்தை, உரைசெயின்-சொல்லத்தொடங்கினால், அவர் - அப்பலரையும், பழி - பழிப்பு, புணரும் - வந்துசேரும்; (எ - று.)

இராமபிரானது செயலை இடைவிடாது வானத்தினின்று கவனித்துவந்த தேவர்கள் சுக்கிரீவனுக்கு நம்பிக்கையுண்டாவதற்காக ஸ்ரீராமன் மராமரத்தை யெய்யப்போவதைக் காண

விருப்போடு வந்துநின்றா ராயினும், அபூர்வமான இந்த வில்நாணொலி அவர்களையும் திடுக்கிடுமாறு செய்ததனால் அவர்களும் கற்பாந்தகாலம் வந்துவிட்டதென்று அயிர்த்து, அஞ்சியோடினர்: சுக்கிரீவன் முதலியோர் தம் விருப்பின்படியே ஸ்ரீராமன் மராமரத்தை யெய்யத் தனுசின் நாணொலியை யெழுப்பவும், அதன் பேரொலி செவிப்பட்டமாத்திரத்தில் தம் நிலை குலைந்து இன்னபடி யஞ்சினார்களென்று சொல்லுதற்கும் முடியாதபடி அவ்வளவு மிகுதியாக அச்சத்தை யடைந்தனர். இராமபிரான் தநுஷ்டங்காரஞ் செய்கையில், இலக்குமண னொருவனே அஞ்சாது அருகிலிருந்தன னென்பதாம்.

அங்ஙன் அவர்கள் அஞ்சியது அவர்களின் பெருவீரத்துக்கு இழுக்கு ஆதலால், அவர்களைப் பழி புணர்வதாகு மென்க.

அரிந்தமன் - வடசொல்: பகைவரையடக்குபவன் என்று பொருள்: பாவத்தைப் போக்குபவனென்று பொருள் கொண்டு, இயற்கையாகப் பாவமில்லாமையோடு தனக்குச் சரீரமாகவுள்ள சராசரங்களின் பாவமும் தட்டாதவனென்றும், தன்னையடைந்தவர்களது பாவத்தைப் போக்குபவனென்றும், மற்றும் பலவாறாகவும் கருத்துக் கூறப்படும். நெடிது நாண் என்று எடுத்து - நீண்ட நாண் என்றுமாம். கற்பம் - கல்பம்; லகரம் றகரமாகத் திரிந்தது. ஏ - பிரிநிலை. அவர்ப்புணரும்—"இயல்பின் விகாரம்." பி-ம்:—[1]நாணெறிந்து. [2]பழியவாய். (179)

13.—இராமபிரான் அம்பை யெய்தல்.

எய்தல் காண்டுங்கொ லின்னமென் றரிதின்வந் தெய்திப்
பொய்யின் மாருதி [1]முதலினோர் [2]புகழ்வுறும் பொழுதின்
மொய்கொள் வார்சிலை நாணினை [3]முறையுற வாங்கி
வெய்ய வாளியை யாளுடை வில்லியும் விட்டான்.

(இ - ள்.) பொய் இல் மாருதி முதலினோர் - பொய்ம்மையில்லாத அநுமான் முதலானவர்கள், 'இன்னம் - இன்னமும், எய்தல் - அம்பெய்தலை, காண்டும் கொல் - பார்க்கவேணுமோ?' என்று - என்று சொல்லிக்கொண்டு, அரிதின் - அருமையாக, வந்து எய்தி - வந்து சேர்ந்து, புகழ்வுறும் பொழுதில்-புகழ்ந்து கொண்டிருக்கின்ற சமயத்தில்,—ஆள் உடைவில்லிஉம் - (எல்லாவுயிர்களையும்) அடிமையாகவுடைய வில்லில் வல்லவனான ஸ்ரீராமனும்,—மொய்கொள் - வலிமையைக் கொண்ட, வார் - நீண்ட, சிலை - வில்லிற் பூட்டிய, நாணினை - நாணியை, முறை - முறைப்படியே, உற - நன்றாக, வாங்கி - இழுத்து, வெய்ய வாளியை - கொடிய அம்பை, விட்டான் - தொடுத்தான்; (எ - று.)

இராமபிரான் செய்த நாணொலியைக் கேட்டு அஞ்சியோடியவர்களில் மாருதி முதலிய தைரியசாலிகளில் சிலர் அரிதில் தேறி 'இவன் ஏழு மராமரங்களை யெய்வது திண்ணம்: இனி அதனைக்

காணவேணுமோ?' என்று இராமபிரானை யணுகி அப்பிரானது வலிமையைக் குறித்துக் கொண்டாடிக் கூறிக்கொண்டிருக்கையில், இராமபிரான் நாணை யிழுத்து அம்பு தொடுத்தனனென்பதாம். கீழ் அஞ்சியோடியமைபற்றி, 'அரிதின் வந்தெய்தி' எனப்பட்டது. இராமன் வாலியைக் கொல்லவல்லவனென்று துணிந்த அநுமானது அநுமானம் இப்பொழுது மெய்யாவதனால், இங்கு 'பொய்யில் மாருதி' என்றார். 'காண்டும்' என்பதில், 'டும்' விகுதி எதிர்காலங் காட்டிற்று. பி - ம்:—[1] முதலினர். [2] புகலுறும், புகல்வுறும். [3] முறைமையின், முன்கையின். (180)

14.—இராமபிரான் பிரயோகித்த அம்பு மராமரங்களோடு கீழேழுலகங்களையுந் தொளைத்துச் செல்லுதல்.

ஏழு மாமர முருவிக்கீ ழுலகமென் றிசைக்கும்
ஏழு மூடுபுக் குருவிப்பின் னுட[1]னடுத் தியன்ற
[2]ஏழி லாமையான் மீண்டதவ் விராகவன் பகழி
ஏழு கண்டபி னுருவுமா லொழிவதன் றின்னும்.

(இ - ள்.) அ இராகவன் பகழி - (அங்ஙன் விடுக்கப்பட்ட) அந்த ராமபாணம்,—(தனக்கு இலக்காகக் குறித்த), ஏழு மா மரம் - பெரிய அவ்வேழு மரங்களையும், உருவி - துளைத்துச் சென்று,—(அது சென்ற கீழ்ப்பக்கத்தில் அடுத்து நின்ற), கீழ் உலகம் என்று இசைக்கும் ஏழ்உம் - கீழுலகமென்று சொல்லப்படுகின்ற ஏழையும், ஊடு புக்கு உருவி - நடுவே துளைத்துச் சென்று,—பின் - பின்பு,—உடன் அடுத்து இயன்ற - அப்பாற் பொருந்தியிருக்கின்ற, ஏழ் - ஏழென்னுந்தொகையுடைய பொருள், இலாமையால் - வேறு இல்லாமையால், மீண்டது - திரும்பி வந்துவிட்டது; (அந்த அம்பு), இன்னும் - இன்னமும், ஏழு கண்டபின் - ஏழென்னுந்தொகையையுடைய பொருளைக் காணுமாயின், ஒழிவது அன்று - (துளையாமல்) விடுவதன்று; உருவும் - துளைத்தேவிடும்; (எ - று.)

இராமபிரான் பிரயோகித்த அம்புகள் ஏழு மராமரங்களையுந் துளைத்து ஏழுலகங்களையும் ஊடுருவிச் சென்றதனால், அவ்வம்புகள் ஏழென்னும் எண்ணமைந்துள்ள பொருள்களை யெல்லாந் துளைத்துச் செல்லுமென்பது, தெற்றென விளங்குகின்றது; அவ்வாறு மிக்க வலிமை பெற்றிருந்தும் அவ்வம்புகள் மராமரம் கீழுலகம் என்ற இரண்டைத்தவிர மற்றொன்றையுந் துளையாதிருந்தது, ஏழென்ற எண்ணமைந்தபொருள் கீழுலகங்கட்கப்பால் வேறொன்றுங் கிடைத்திடாமையாற்போலு மென்பதாம். இராமபிரான் தொடுத்துவிட்ட அம்பு மராமரத்தையும் கீழுலகமேழினையுந் துளைத்ததோடு மீண்டு நிற்றதற்கு 'பின்னுடனடுத்தியன்ற ஏழிலாமையால்' எனக்காரணங் கற்பித்துக்கூறியது, ஏதுத்தற்குறிப்பேற்றவணி. கீழுலக மேழ் - அதலம், விதலம், சுதலம், தராதலம், ரஸாதலம், மகாதலம், பாதாளம் என்பன. மூன்றாமடியிலும், நான்காமடியிலும், ஏழு - ஆகுபெயர். கண்டபின் - பின்னீற்று எதிர்கால வினையெச்சம். ஆல் - அசை. பி - ம்:—[1] அடுக்கியன்ற. [2] ஏழிலாமையினொழிந்தது, ஏழிலாமையாலொழிவதின்று. (181)

15.—இராமபிரான் அம்புஎய்ததைக்கண்டுபலபொருள்களும் அஞ்சுதல்.

ஏழு வேலையு முலகமே லுயர்ந்தன வேழும்
ஏழு குன்றமு மிருடிக ளெழுவரும் புரவி
ஏழு மங்கைய ரெழுவரு [1] நடுங்கின வென்ப
[2] ஏழு பெற்றதோ விக்கணைக் கிலக்கமென் றெண்ணி.

(இ - ள்.) ஏழு வேலைஉம் - ஸப்தஸமுத்திரங்களும், உயர்ந்தன மேல் ஏழ்உலகம்உம் - உயர்ந்துள்ள மேலேழுலகங்களும், ஏழு குன்றம்உம் - ஸப்தகுல பருவதங்களும், இருடிகள் எழுவர் உம் - ஸப்த ருஷிகளும், புரவி ஏழ்உம் - (சூரியன்தேர்க்) குதிரைகள் ஏழும், மங்கையர் எழுவர்உம் - ஸப்தமாதர்களும், 'இ கணைக்கு - இந்த அம்புக்கு, ஏழு - ஏழென்னும் தொகையுடையதெல்லாம், இலக்கம் பெற்றதுஓ - குறியாகப்பெற்றதோ?' என்று எண்ணி—, நடுங்கின - (அச்சத்தால்) நடுக்கமடைந்தன; (எ - று.)

வேலை முதலியவைகள் நடுங்கின என, அப்பிரகிருதங்கள் நடுங்குதலென்ற ஒரே தொழிற் பண்பையடைந்தனவாக் கூறியது - ஒப்புமைக்கூட்டவணி; இது, வடமொழியில் துல்யயோகிதாலங்காரமெனப்படும். (அப்பிரகிருதமாவது - கதைப்போக்குக்குச் சம்பந்தப்படாத பொருள்.) 'ஏழு' என்ற ஒரேபொருளையுடையசொல் மீண்டு வந்தது - சொற்பொருட்பின்வருநிலையணி. ஏழென்னும் எண்ணினையுடைய பலபொருள்களை ஒருங்கே யமைத்தது, கவிசமத்காரம்.

ஏழு வேலை - உவர்நீர், கருப்பஞ்சாறு, மது, நெய், தயிர், பால், நன்னீர் இவற்றின்மயமானவை. மேலேழுலகம் - பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், ஜநலோகம், மஹர்லோகம், தபோலோகம், சத்தியலோகம் என இவை. ஏழு குன்றம் - கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பன; இவை, சப்த குலாசலமெனப்படும். இருடிகள் எழுவர் - அத்திரி, பிருகு, குத்ஸர்,வசிஷ்டர், கௌதமர், காசியபர், ஆங்கீரஸர்; இவர்க்குப் பிறவாறு முரைப்பர். காயத்ரீ, உஷ்ணிக், அநுஷ்டுப், ப்ருஹதீ, பங்க்தி, த்ரிஷ்டுப், ஜகதீ என்ற ஏழுசந்தசுகளும் சூரியனது தேரின்குதிரைகளென நூல்கள் கூறும். மங்கையர் எழுவர் - பிராஹ்மீ, மஹேச்வரீ, கௌமாரீ, நாராயணீ, வாராகி, இந்திராணீ, சாமுண்டீ என்ற இவர்.

ஏழு என்பது பன்மையாயினும், ஏழு சேர்ந்த ஓரினம் என்ற பொருளை இங்குத் தருவதனால், இலக்கம் பெற்றது என்ற ஒருமை முற்றைப்பெற்றது. வேலையும், உலகமும், குன்றமும், இருடிகளும், புரவியும், மங்கையரும் என அஃறிணையும் உயர்திணையுங்கலந்து எண்ணி, மிகுதியினால் 'நடுங்கின' என்னும் அஃறிணைமுடிபைப் பெற்றன; உயர்திணைப்பொருள் இரண்டாக, அஃறிணைப்பொருள் நான்காதல் - இங்கே, மிகுதி. நடுங்கினரென்னே, என்ற பாடத்துக்கு, சிறப்பினால்உயர்திணைமுடிபு வந்தது; என்னே; - அதிசய விரக்கக் குறிப்புச்சொல் என்க. என்ப - அசை; இது-புறனடையாற் கொள்க.

இலக்கம் - லக்ஷ்யம். பி - ம்:—[1] நடுங்கினரென்ப, நடுங்கினவென்னே. [2] ஏழின்மேலதோ, ஏழுபெற்றபேர். (*182*)

16.—சுக்கிரீவன் ஒன்று கூறத் தொடங்குதல்.

அன்ன தாயினு [1] மறத்தினுக் காருயிர்த் துணைவன்
என்னுந் தன்மையை [2] நோக்கின ரியாவரு மெவையும்
பொன்னின் வார்கழற் புது [3] நறுந் தாமரை பூண்டு
சென்னி மேற் [4] கொளூஉ வருக்கன்சே யிவையிவை செப்பும்.

(இ-ள்.) அன்னது ஆயினும் - அவ்வாறு அச்சமுண்டானாலும், யாவரும் - எல்லாரும், 'அறத்தினுக்கு - தருமத்துக்கு, அரு உயிர் - அரிய உயிரைக் காக்கும்படியான, துணைவன் - துணையா யிருப்பவன் (ஸ்ரீராமன்),' என்னும் தன்மையை - என்கிற இயல்பை, நோக்கினர் - நோக்கி அச்சமொழிந்தனர்; எவைஉம் - எல்லாஉயிர்களும், (நோக்கின) - அவ்வாறே அறத்துக்குத் துணைவனுந்தன்மையைநோக்கி அச்சமொழிந்தன; அருக்கன் சேய் - சூரியன்மகன் [சுக்கிரீவன்], பொன்னின் வார் கழல் - பொன்னினாலாகிய நீண்ட வீரக் கழலை யுடைய, புது - புதிய [அன்று மலர்ந்த], நறு - நன்மணமுள்ள, தாமரை - தாமரைமலர்போன்ற (ஸ்ரீராமனது) திருவடிகளை, பூண்டு - பொருந்தி, சென்னிமேல் கொளூஉ - தலைமேற்கொண்டு [ஸாஷ்டாங்கமாக விழுந்து தண்டனிட்டு], இவை இவை செப்பும் - இந்த இந்த வார்த்தைகளைச் சொல்பவனானான்; (எ - று.)—அவை, மேல் இரண்டு கவிகளாற் கூறப்படும்.

இராமபிரானது நாணொலியையும் வில்லின் வேகத்தையும் பார்த்து உயர்திணைப்பொருள்களோடு அஃறிணைப் பொருள்களும் அஞ்சினவாயினும் இராமபிரான் தருமத்தை நாட்டுதற்கே திருவவதரித்திருப்பதை யறிந்தனவாதலால் அச்சம் நீங்கியனவாக, அப்போது சுக்கிரீவன் ஸ்ரீராமனை வணங்கி ஒன்று கூறலாயினனென்பதாம். அன்பு மிகுதியாற் பற்பல வகையாகக் கூறியது தோன்ற, 'இவையிவைசெப்பும்' என்றார். கொளூஉ - செய்யூ என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். 'எவையும்' என்பதற்குப் பயனிலை வருவிக்கப்பட்டது; இனி, யாவரும் எவையும் நோக்கினர் என இயைத்து, உயர்திணையும் அஃறிணையும் சேர்ந்து, சிறப்பினால் உயர்திணை முடிபைப் பெற்றுவந்த திணைவழுவமைதியெனக் கொள்ளுதலுமாம். தாமரை - உவமவாகுபெயர்; 'கழல்' என்ற அடைமொழி, இதன் பொருளைவிளக்கிற்று. பி - ம்:—[1] அனைத்திற்கும். [2] நினைந்தனரியாவருமெவரும், நோக்கினர் யாவருமெவரும். [3] நிறந். [4] கொளும், கொண்ட. (*183*)

வேறு.

17.—சுக்கிரீவன் ஸ்ரீராமனைத் துதித்தல்.

வையநீ வானுநீ [1] மற்றுநீ மலரின்மேல்
ஐயனீ யாழிநீ [2] யாழிவா ழமலனீ
[3] செய்ய [4] தீ வினைதெறுந் தேவுநீ நாயினேன்
உய்யவந் துதவினை [5] யுலகமுந் துதவினாய்.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) வையம் - பூமியும், நீ-நீயே; வானும் - ஆகாயமும், நீ—; மற்றும் - மற்றை (அப்பு தேயு வாயு என்னும்) பூதங்களும், நீ—; மலரின் மேல் - தாமரைமலரில் தோன்றிய, ஐயன் - பிரமதேவனும், நீ—; ஆழி - கடலும், நீ—; ஆழி வாழ் அமலன் - திருப்பாற்கடலில் வாழ்கின்ற ஸ்ரீமந் நாராயணனும், நீ—; தீவினை தெறும் - பாவங்களை நாசஞ்செய்கின்ற, செய்ய - நன்மைக்குணத்தையுடைய, தேவும் - தருமதேவதையும், நீ—; முந்து - முற்காலத்தில், உலகம் - லோகங்களையெல்லாம், உதவினாய் - உண்டாக்கின நீ, (இப்பொழுது), நாயினேன் உய்ய - நாய்போலக் கடைப்பட்ட அடியேன் பிழைக்கும்படி, வந்து - எழுந்தருளி, உதவினாய் - அருள் செய்தாய்; (எ - று.)

இராமபிரான் மரா்மரத்தை அம்பெய்து துளைக்கையில், நெஞ்சினாலும் நினைத்தற்கு அரிய அப்பிரானது மகா பராக்கிரமத்தைக் கண்கூடாகக்கண்டதனால், 'இவன் அநுமான் கூறியபடி முழுமுதற் கடவுளாகிய திருமாலின் திருவவதாரமே' என்று தெளிந்து, சுக்கிரீவன் இங்ஙனங்கூறலாயினனென்க. பஞ்சபூதங்களுள் முதலதையும் ஈற்றதையுங் கூறி மற்றவற்றை 'மற்றும்' என்பதனாற் பெறவைத்தான். இரண்டாம் அடியில் 'ஆழிவாழாழியா மாலுநீ' என்ற பாடத்துக்கு - கடலிற் கண்வளர்ந்தருளுகிற சக்கரதரனான மகாவிஷ்ணுவும் நீயே என்று பொருள். செய்ய தேவு என இயையும். பி - ம்:—[1] சுருதிநீ. [2] ஆழிவாழ்மாலுநீ, ஆழிவாழமலனே, ஆழிமாமாலுநீ, ஆழிமேன்மாலுநீ, ஆழிமேலாழிவாழ். [3] கையனீ. [4] தீயனையவத், தீவினைகளைத். [5] உலகமுண்டுதவினாய். (184)

18.—சுக்கிரீவனது முகமன்.

என்னெனக் [1] கரியதெப் பொருளு [2] மெற் [3] கெளிதலால்
உன்னையித் தலைவிடுத் துதவினர் [4] விதியினர்
அன்னையொப் புடையவுன் னடியருக் கடியன்யான்
மன்னவர்க் கரசவென் றுரைசெய்தான் வசையிலான்.

(இ - ள்.) மன்னவர்க்கு அரச - அரசர்களுக்கரசனே! விதியினர் - முற்பிறப்பிற் செய்த (எனது) நல்வினையார், உன்னை—, இத்தலை - இவ்விடத்தில், விடுத்து உதவினர் - (தாமே) கொண்டு வந்துவிட்டருளினார்; யான்—, அன்னை ஒப்பு உடைய - தாய்க்குச் சமானமான, உன் - உனது, அடியருக்கு அடியன் - அடியார்களுக்கு அடியவனானேன்; (இனி), எற்கு - எனக்கு, எ பொருளும் - எந்தக் காரியமும், எளிது அலால் - (செய்துமுடித்தற்கு) எளியதாகுமேயல்லாமல், எனக்கு—, அரியது - (செய்வதற்கு) அரியது, என் - யாது உளது? என்று—, வசை இலான் - குற்றமற்றவனான சுக்கிரீவன், உரைசெய்தான் - சொல்லித் துதித்தான்; (எ - று.)

என்து ஊழ்வினை, பெறுதற்கு அரிய பரம்பொருளாகிய உன்னையே என்னிடத்திற் சேர்த்துவிட்டதனால், இனி எனக்குப் பெறு

தற்கு அரியது யாது உளது? இனி யான் உனது மகிமையை உணர்ந்ததனால் உனது அடியார்க்கு அடிமையாய் நடந்துகொள்வேனென்று சுக்கிரீவன் கூறினனென்க. "பாக்கியத்தாற், செங்கட்கரியானைச் சேர்ந்தோம்யாம் தீதிலமே, எங்கட்கரியதொன்றில்" என்றாற்போல 'என்னெனக்கரியது எப்பொருளு மெற்கெளிதலால்' என்றான். ஊழ்வினையால் தனக்கு நேர்ந்த நன்மையைக்கருதி, உவப்பினால் 'விதியினார்' என்று உயர்வுபற்றிய பலர்பால் விகுதிகொடுத்துக் கூறினன்; திணைவழுவமைதி. அடியருக்கடியன் - தாஸாநுதாஸன். வசை - இங்குக் கபடம். பி - ம்:—[1] அரிய. [2] மற்று. [3] எளிதலாது. [4] யாவரே. (185)

19.—மற்றை வானரவீரர்களின் மகிழ்ச்சி.

ஆடினார் பாடினா ரங்குமிங் கும்[1] களித்து
ஓடினா [2] ருவகையின் னறவையுண் டுணர்கிலார்
நேடினும் வாலிகா லனையெனா நெடிதுநாள்
வாடினார் தோளெலாம் வளரமற் றவரெலாம்.

(இ - ள்.) நெடிது நாள் வாடினார்-(வாலியின் உபத்திரவத்தால்) பலநாளாக வாடிக்கிடந்த, மற்றவர் எலாம் - மற்றை வாநரர்களெல்லாரும், 'வாலிகாலனை - வாலிக்கு யமனை, நேடினும் - (இன்றைக்குத்) தேடியடையப்பெற்றோம்', எனா-என்று எண்ணி,உவகையின் நறவை-களிப்பாகிய மதுவை, உண்டு-பானஞ் செய்து, உணர்கிலார்-அறியாதவர்களாய் [தம்மையும்மறந்து],—தோள் எலாம் வளர - (வாடியிருந்த) தோள்கள் முழுதும் வளரும்படி [ஆனந்தத்தால் உடம்பு பூரித்து], ஆடினார் - நர்த்தனஞ்செய்தார்கள்; பாடினார் - கீதம் பாடினார்கள்; அங்கும் இங்கும் களித்து ஓடினார்-கண்ட இடமெல்லாம் பெருமகிழ்ச்சி கொண்டு ஓடினர்; (எ - று.)

வாலியின் உபத்திரவத்தினால் மெலிந்துகிடந்த சுக்கிரீவனைச் சேர்ந்த மற்றை வாநரவீரர்கள் இராமபிரான் வல்லமையைக் கண்கூடாகக் கண்டதனால் 'இவன் வாலிவையழிக்கும் ஆற்றலமைந்தவனே' என்று நிச்சயித்து மிக்க மகிழ்ச்சிகொண்டு தோள்கள்பூரிக்க மெய்ம்மறந்து ஆடுதலும் பாடுதலும் ஓடுதலும் செய்யலானார்களென்பதாம். ஆடுதல் முதலியன - உவகையின் மெய்ப்பாடுகள். ("ஓடுவார் விழுவா ருகந்தாலிப்பார், நாடுவார் நம்பிரானெங் குற்றானென்பார், பாடுவார்களும் பல்பறைகொட்ட நின், றாடுவார்களுமா யிற்றாய்ப்பாடியே" என்றது, இங்கு ஒருசார் ஒப்புநோக்கத்தக்கது.) மகிழ்ச்சியின் மிகுதியை விளக்குமாறு ஆடுதல் முதலிய பலதொழில்களை வானரவீரர் ஒருங்கேசெய்வதாகக் கூறியது - கூட்டவணி; இது - வடமொழியில் ஸமுச்சயாலங்கார மெனப்படும்.

உவகையை நறவாகக்கூறியது, மெய்ம்மறக்கும்படி செய்தலால். உவகையின்னறவு - உருவகவணி; னகரமெய் - விரித்தல். நறவு - 'நறா' என்ற குறியதன்கீழ் ஆகாரம் குறுகி உகரமேற்றது.

வாலிகாலன் - வடமொழித்தொடர். பி - ம்:—[1]கலந்து, திரிந்து. [2]உவகையாம், உவகையார், உவகைமா. (186)

20.—இராமபிரான் துந்துபியென்பவனது உடற்குவையைக் காணுதல்.

அண்டமும் மகிலமும் [1]மடையவன் றனலிடைப்
பண்டு[2]வெந் தனநெடும் பசைவறந் திடினும்வான்
மண்டலந் [3]தொடுவதம் மலையின்மேன் மலையெனக்
கண்டனன் துந்துபிக் கடலனு னுடலரோ.

(இ - ள்.) நெடும் பசை வறந்திடின்உம்-மிக்க ரத்தப்பசைவற்றிப் போயிருந்தாலும்,—அண்டம்உம் - அண்டகோளங்களும், அகிலம் உம் - (அதனிடத்துள்ள) சகல லோகங்களும், அடைய - ஒருசேர, அன்று - அந்நாளில் [பிரளயகாலத்தில்], பண்டு - முன்னே, அனலிடை - காலாக்கினியிற் பட்டு, வெந்து அன - வெந்தாற்போன றதும், வான் மண்டலம் தொடுவது - ஆகாயமண்டலத்தை அளாவுவதும் (ஆகிய), கடல் அனான் துந்துபி உடல் - சமுத்திரம் போன்றவனான துந்துபியென்னும் அசுரனது உடம்பெலும்புக் குவையை, அ மலையின்மேல் - ருசியமூககிரியின்மேலே, மலை என - வேறொரு கிரியைப்போல, கண்டனன் - பார்த்தான், (ஸ்ரீராமபிரான்); (எ - று.)

'அண்டமும்...வெந்தன' 'அம்மலையின்மேல்மலையென' என்பவை - தன்மைத்தற்குறிப்பேற்றவணிகள். துந்துபியின் உலர்ந்த உடம்பெலும்புக்குவை, அண்டகோளங்களும் உலகங்கள்யாவும் பிரளயகாலத்தில் வெந்ததையொத்தும், மலையின்மேல் மலையிருப்பதைப்போன்றும் அந்த ருசியமூகமலையின்மேல் விளங்குவதை, இராமபிரான் கண்டனனென்பதாம். உலர்ந்தபோதே இவ்வாறு தோன்றுவது பச்சையாயிருக்கும்போது எவ்வாறு தோன்றுமோ வென்பார், 'பசைவறந்திடினும்' என்றார். இச்சொல் மத்திமதீபமாய் முன்னும் பின்னும் இயையும். பசை - ஒட்டும்படியான ஈரம். துந்துபி இன்னானென்பது, மேல்விளங்கும். துந்துபிக்குக் கடலுவமை - ஆரவாரத்துக்கும், பெருமைக்கும், கருமைக்கும். அன - தொகுத்தல். அரோ - ஈற்றசை. 'அண்டமும் மகிலமும்மடைய'—மகரவொற்றுக்கள் விரித்தல். பி - ம்:—[1]உடையவன், உண்டவன். [2]வெந்தது நெடும், வெந்தனனெடும், வெந்ததுவென, வந்தது நெடும். [3]தொடர்வதம், தொடுவதோர். (187)

21.—இராமபிரான் 'இது என்ன?' என வினவுதல்.

தென்புலக் கிழவனூர் [1]மயிடமோ திசையின்வாழ்
வன்புலக் கரிமடிந் ததுகொலோ [2]மகரமீன்
என்[3]புலப் புறவுலர்ந் ததுகொலோ விதுவெனு
[4]அன்புலப் பரியநீ [5]யுரைசெயா யெனவவன்.

இதுமுதற் பதினன்கு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (ஸ்ரீராமன் அதனைக்கண்டு), 'இது—, தென் புலம் கிழவன் - தெற்குத்திக்குத் தலைவ [பாலக]னை யமன், ஊர் - வாகனமாக ஏறி நடத்துகின்ற, மயிடமோ - எருமைக்கடாவோ? திசையின் வாழ் - திக்குக்கள் தோறும் வாழ்கின்ற, வன்பு உலம் கரி - வலிமையையுடைய கற்றிரள் போன்ற யானை, மடிந்தது கொலோ - இறந்துகிடந்ததுதானோ? மகரம் மீன் - மகரமென்னும் பெரிய மீன், என்பு உலப்பு உற - எலும்பு (தனியே) ஒழியும்படி, உலர்ந்ததுகொலோ - உலர்ந்துகிடந்ததுவோ? எனு - என்று சங் கித்து, (சுக்கிரீவனைநோக்கி) 'அன்பு உலப்பு அரிய நீ - அன்புக்கு அளவிடுதலில்லாத நீ, உரைசெயாய் - சொல்வாய்,' என் - என்று சொல்ல,—அவன் - சுக்கிரீவன்,—(எ - று.)

இக்கவியில், துந்துபியின் உலர்ந்த எலும்புக்குவையின் பருமையை நோக்கிப் பலவகையாக விகற்பித்துக் கூறியதனால் ஐயவணி. மயிடம் - மஹிஷம் என்னும் வடமொழியின் திரிபு. திசை யின் வாழ் கரி - திக்கஜம். மகரம் - சுறுமீன்; இது, கடலில் வாழ் வது: யானையை விழுங்கவல்லது: மரக்கலத்தைக் கவிழ்க்கவல்லது. 'அவன்' என்னுஞ் சுட்டுப்பெயர், மேற்படலத்திற் பதின்மூன்றாங் கவியில் 'உரைசெய்தான்' என்பதனோடு முடியும். அன்புஉலப்பரியநீ- அளவற்ற அன்பையுடைய நீயென்றபடி. பி - ம்:—[1]மகிடமோ. [2]மகரநீர். [3]உலப்பில. [4]அன்புலப்பரிய, உன்புலக்குரிய. [5]உரை செய்வாய். (188)

மராமரப்படலம் முற்றிற்று.

ஐந்தாவது

துந்துபிப்படலம்

வாலியினாற் கொல்லப்பட்டவனும், எருமைக்கடாவின் உருவம் பூண்டவனும், மாயாவியினது உடன்பிறந்தவனும், மயன் என்னும் அசுர ராசனது மகனுமாகிய துந்துபியென்பவனது உலர்ந்த எலும் புத் திரளைச் சுக்கிரீவனது விருப்பத்தின்படியே ஸ்ரீராமனது கட்டளை யால் லக்ஷ்மணன் தன்கால்விரலால் தூக்கியெறிந்து பலயோசனை தூரங்களுக்கு அப்பாற் போய்விழச்செய்த கதையைக் கூறும் படலம். இவ்வசுரனது முழக்கம் துந்துபி யென்னும் வாத்தியத்தி னது பேரொலியை ஒத்தலால், இவனுக்கு இப்பெயர். துந்துபி - பேரிகை.

1.—இதுமுதற்பதின்மூன்றுகவிகளால், சுக்கிரீவன் அத்துந்துபியெலும்பின் வரலாற்றை இராமபிரானிடம் கூறுகின்றான்.

துந்துபிப் பெயருடைச் சுடுசினத் தவுணன்மீது
இந்துவைத் தொடநிமிர்ந் தெழுமருப் பிணையினன்
மந்தரக் கிரியெனப் பெரியவன் மகரநீர்
சிந்திடக் கருநிறத் தரியினைத் தேடுவான்.

(இ - ள்.) துந்துபி பெயர் உடை - துந்துபியென்கிற பெயரையுடைய, சுடு சினத்து-(பகைவர்களை) அழிக்கின்ற கோபத்தையுடைய, அவுணன் - அசுரன்,—மீது இந்துவை - ஆகாயத்தில் விளங்குகின்ற சந்திரனை, தொட - அளாவும்படி, நிமிர்ந்து எழும் - ஓங்கி வளர்ந்திருக்கின்ற, மருப்பு இணையினன் - இரண்டு கொம்புகளையுடைய வனும்,—மந்தரம்கிரிஎன - மந்தரமலைபோல(ச்சென்று), பெரிய வல் மகரம் நீர் சிந்திட - பெரிய வலிய மீன்களையுடைய திருப்பாற்கடலின் நீர் சிந்தும்படி, கரு நிறத்து அரியினை - கருமைநிறத்தையுடைய ஸ்ரீமகாவிஷ்ணுவை, தேடுவான்-தேடுபவனானான்; (எ - று.)

எருமைக்கடாவின் வடிவத்தைக் கொண்ட துந்துபியென்னும் அசுரன் இயற்கை வலிமையினாலும் வரபலத்தாலும் மிக்க செருக்குக் கொண்டு திருமாலோடு போர்புரியக்கருதி மந்தரமலை போல (அத்திருமால் பள்ளிகொண்டுள்ள) பாற்கடலைக் கலக்கிய வண்ணம் சென்றனனென்பதாம். 'சந்திர மண்டலத்தை யளாவிய இணைமருப்புடையனாகி' என்றதனால், எருமைக்கடாவின் வடிவ மெடுத்துச் சென்றானென்பது குறிப்பிக்கப்பட்டது. மந்தரக்கிரி - பாற்கடலிடையே விழுந்து கலக்குதற்கு உவமை; இனி. மந்தரமலை போல உருவத்தாற் பெரியவனென்றுமாம். பி - ம்:—[1] கிரியென்னும். [2] சிந்தியக். (189)

2. அங்குவந் தரியெதிர்ந் [1] தமைதியென் னென்றலும்
பொங்குவெஞ் செருவினிற் பொருதியென் றுரைசெயக்
[2] கங்கையின் கணவனக் கறைமிடற் [3] றிறைவனே
[4] உங்கள்வெங் கதவலிக் கொருவனென் றுரைசெய்தான்.

(இ - ள்.) அங்கு - அப்பொழுது, அரி - மகாவிஷ்ணு, வந்து எதிர்ந்து - எதிரில் வந்து, அமைதி என் - ('நீ இங்குவரக்) காரணம் என்ன?' என்றலும் - என்று வினவியவளவில்,—(துந்துபி), 'பொங்கு வெம் செருவினில் - சீற்றங் கொண்டு செய்கிற கொடிய போரில், பொருதி - (என்னுடன்) போர்செய்ய வருவாயாக,' என்று—, உரை செய - சொல்ல,— (அப்பொழுது திருமால்), கங்கையின் கணவன் - கங்காநதிக்குத் தலைவனும், அ கறை மிடறு இறைவனே-(நஞ்சுண்டதனால்) கறுத்த கண்டத்தை யுடையவனுமான அப்பரமசிவனே, உங்கள் வெம் கதம் வலிக்கு-உன்போன்றவர்களது கொடிய உக்கிரமான பலத்துக்கு, ஒருவன் - (ஏற்றபடி போர் செய்யத்தக்க) ஒருவனாவான்,' என்று—, உரைசெய்தான் - சொன்னான்; (எ-று.)

திருமால் போர்செய்து கொல்லாமல் இவ்வாறு கூறியது, இவனுக்கு வாலியினால் வதை நேரவேண்டிய ஊழ்வினை உள்ளதனாலென்க. உருத்திர மூர்த்தியை எடுத்துக் கூறியது, சங்காரக் கடவுளாதலால். பெண்பாலாகிய கங்கை சிவபிரானை நீங்காது சேர்ந்திருக்குந் தன்மையும், சிவபிரான் குமாரனையுண்டாக்குதற்கு வெளிப்படுத்

திய அனற்பொறிகளைக் கங்காநதி ஏற்றுக்கொண்டிருந்தமையும், பெண்பாலாகிய கங்கையைச் சிவபிரான் அன்போடு முடிமேல் வைத்துக்கொண்டிருத்தலும் பற்றி, அப்பிரான் 'கங்கையின் கணவன்' எனப்பட்டான். ஏகாரம் - பிரிநிலை. இனி, இவ்விரண்டு கவிகளுக்கும்- அப்பெரியவன் மகரமீன்களையுடைய நீர் சிந்தும்படி கருநிறத்தையுடைய ஸமுத்திரராஜனைத்தேடுவானானானென்றும், கங்கைக்குக் கணவனான அச்சமுத்திர புருஷன் எதிர்ப்பட்டு உரைசெய்தான் என்றும் பொருள் கொள்ளுதலும் தகும். இவ்வுரையில்,'அரி' என்று கடலுக்குப் பெயர் உண்மையும், 'கங்கையின் கணவன்' என்கிற பெயர் நதிபதியாகிய கடலிறைவனுக்கு நன்கு பொருந்துதலும் உணர்க. பி - ம்:—[1] அமைதியென்றலுமவன். [2] கங்கைதங்கணிசடை. [3] அமலனே. [4] உங்கதப்பெரு. (190)

3. கடிதுசென் றவனுமக் கடவுள்தன் கயிலையைக்
கொடியகொம் பினின்[1] மடுத் தெழுதலுங் [2] குறுகிமுன்
நொடிதிநின் [3] குறையெனென் றலுநுவன் றனனரோ
முடிவில்வெஞ் செருவெனக்[4] கருள்செய்வான் முயல்கெனா.

(இ - ள்.) அவன்உம் - அவ்வசுரனும், கடிது சென்று - விரைவாகப் போய், அ கடவுள் தன் - அந்த உருத்திர பகவானது, கயிலையை - கைலாசகிரியை, கொடிய கொம்பினில் - கொடுந்தன்மையையுடைய (தன்) கொம்புகளால், மடுத்து - முட்டிக்கொண்டு, எழுதலும் - பாய்ந்தவளவில், முன் குறுகி - (அச்சிவபெருமான்) எதிரில் வந்து, 'நின் குறை என் - உனக்குவேண்டுவதென்ன? நொடிதி - சொல்,' என்றலும் - என்றுவினவியவுடன், (துந்துபி,) எனக்கு—, முடிவு இல் வெம் செரு - முடிவில்லாத கொடியபோரினை, அருள் செய்வான் - கொடுக்கும் பொருட்டு, முயல்க-பிரயத்தனப்படுவாயாக, எனா - என்று, நுவன்றனன் - சொன்னான்; (எ - று.)— அரோ - ஈற்றசை.

'என்னோடு இடைவிடாது போர் புரிய வரவேண்டும்; நான் வேண்டுவது அதுவே' என்று, துந்துபி தான் வந்த காரணத்தைத் தெரிவித்தனனென்பதாம். கயிலை - கைலாஸமென்ற வடசொல்லின் சிதைவு. முயல்கெனா - வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். பி - ம்:—[1] எடுத்திடுதலும், எடுத்தெழுதலும். [2] குறுகிநேர். [3] குறையெனச் சடையினானுவலலும். [4] உதவுவான். (191)

4. மூலமே [1] வீரமே [2] மூடினா யோடுபோர்
ஏலுமே [3] தேவர்பா லேகெனா [4] வேவினான்
சாலநாள் போர்[5] செய்வா [6] யாதியேற் சாரல்போர்
வாலிபா [7] லேகெனா வானுளோர் வானுளான்.

(இ- ள்.) (அப்பொழுது பரமசிவன்), 'மூலமே வீரமே மூடினாயோடு - தலைமையும் வலிமையும் மிகுந்துள்ள உன்னுடனே, போர் ஏலுமே - (எனக்குப்) பொருவது இயலுமோ? [இயலாது]: தேவர்பால் ஏகு - (நீ) தேவர்களிடம் போ,' எனா - என்று, ஏவினான் - சொல்லியனுப்பினான்; (அவன் அங்ஙனமேசென்று

தேவர்களைப்போர்க்கு அழைக்க), வான்உளோர் வான் உளான் - அந்தச் சுவர்க்கலோகத்திலுள்ள தேவர்களுக்குத் தேவனான இந்திரன், (அவ்வசுரனை நோக்கி), 'சால நாள் போர் செய்வாய் ஆதி எல் - வெகு காலம் போர்செய்ய விரும்புவாயானால், சால் - (இங்குச்) சோராதே: போர் வாலிபால் - போர்க்குஉரிய வாலியினிடம், ஏகு - போவாய்,' என - என்று, (ஏவினான்)-சொல்லியனுப்பினான்; (எ-று.) —நான்காமடியில் 'என' என்ற வினையெச்சத்தை. இரண்டாமடியிலுள்ள 'ஏவினான்' என்பதைத் தருவித்துக் கூட்டுக: இனி, அடுத்த செய்யுளிலுள்ள 'விட' என்பதனோடு இயைத்தலும் ஒன்று.

துந்துபியென்ற அசுரன் கைலாசத்தைத் தன் கொம்பினால் முட்டிப்பாய்ந்தபொழுது அங்கு வெளிப்பட்ட சிவபிரான் அவ்வசுரனை நோக்கி 'என்னொருவனால் மிக்க வலிமைபொருந்திய நின்னோடு செருச் செய்ய இயலாது. ஆதலால், நீ தேவலோகத்துச் சென்றால் அங்கு மிகப்பல தேவர்களுள்ளாராதலால், உனதுஎண்ணம் ஈடேறும்' என்று போக்குக் காட்ட, அங்கு அவன் செல்லவே, தேவேந்திரன், 'அவன்போர்புரியுமாறு வந்ததைக்கண்டு 'நின்னோடு போர்புரிய எமக்கு இயலாது; வாலியென்று பேர்படைத்த எனது மகனொருவன் எம்மினும் மிக்க வலிமைபெற்றவனாயுள்ளான்; அவனிடத்துப் போ' என்று விடையளித்தனனென்பதாம். 'வான் உளான்' என்னுமிடத்திலுள்ள 'வான்' என்ற சொல் - "வான்தோய் குடிப்பிறந்தார்" என்னுமிடத்திற் போல உயர்ச்சிப் பொருளதாம்: வானுளோர் வானுளான் - தேவலோகத்திலுள்ள தேவர்களுள் உயர்ந்துள்ளவனான இந்திரனென்ற பொருள் தந்தது, 'சால்போய்' என்ற பாடத்துக்கு - வாலி வாழும் மலைப்பக்கத்திற் சென்றென்க. மூலமே வீரமே, ஏகாரங்கள் - எண்ணுப்பொருளன. இரண்டாமடியில், ஏ-எதிர்மறை. பி - ம்:—[1]வீரமோ, வீரமா. [2]மூடினூடு, மூடினரோடு. [3]என்றெனவே கென, தேவராலேயென. [4]ஏயினான். [5]செய்வான். [6]ஆதியோசாதியோ, ஆகியேசாரல்போய், ஆதியேசாலபோர், ஆதியேற்சாருபோர். [7]ஏயினான், ஏயென. (192)

5. அன்னவன் விடவுவந் [1]தவனும்வந் தரிகள்தம்
மன்னவன் வருகபோர் [2]செய்கென மலையினைச்
சின்னபின் னம்[3]படுத் தெய்தலுஞ் [4]சினவியென்
முன்னவன் [5]முன்னர்வந் [6]தனையவன் [7]முனைதலும்.

(இ - ள்.) அன்னவன் - அத்தேவேந்திரன், விட - அனுப்ப,—அவனும் - துந்துபியும், உவந்து வந்து - மகிழ்ந்து (ருசியமூகத்துக்கு) வந்து, 'அரிகள் தம் மன்னவன் - குரங்குகளுக்கு அரசனே [வாலியே]! வருக போர் செய்க - வந்து யுத்தஞ்செய்வாயாக,' என - என்று சொல்லிக்கொண்டு, மலையினை சின்னபின்னம் படுத்து எய்தலும் - அம்மலையைப் பலவாறு நாசப்படுத்திச் சேர்ந்தவளவில்,—என் முன்னவன் - எனது தமையன் [வாலி], சினவி - கோபித்து, முன்னர்

வந்து - எதிரில் வந்து, அனையவன் - அவ்வசுரனோடு, முனைதலும் - போர்செய்தவளவில்,—(எ - று.)—'திரிவுறும்பொழுதின் உணர்ந்திலர்கள்' என அடுத்த கவியோடு தொடர்ந்து முடியும்.

தேவேந்திரன் சொற்படியே வாலியினிடத்துச் சென்று துந்துபி போர்க்கு அழைக்க, அவனும் போர்க்கு வர, இருவரும் பொருதன ரென்பதாம். அன்னவன் விட - அத்துந்துபியை அனுப்ப என்றல் நேர். சிங்கபிங்கம் - வடசொல். செய்கென - தொகுத்தல். பி - ம்:—[1] அவனுவந்து, ஆதரித்து, அங்கும்வந்து. [2] செயவென. [3] படுத்திடுதலும். [4] சினவுமென். [5] முன்னில். [6] அன்னவன். [7] முனிதலும். (193)

6. இருவருந் திரிவுறும் பொழுதினின் னவர்களென்று
ஒருவருஞ் சிறிதுணர்ந் திலர்களெவ் வுலகினும்
வெருவருந் [1] தகைவிலார் விழுவர்நின் றெழுவரால்
[2] மருவருந் தகையர்தா னவர்கள்வா னவர்கள்தாம்.

(இ - ள்.) இருவரும் - இரண்டுபேரும் [வாலியும் துந்துபியும்], திரிவுறும் பொழுதின் - (இடசாரி வலசாரியர்கச்) சுழலும்போதில், (அவ்வேகத்தால்), இன்னவர்கள் என்று - இவர்கள் இன்னாரென்று, ஒருவரும் - எவரும், சிறிது உணர்ந்திலர்கள் - சற்றும் அறிந்தாரில்லை; எ உலகினும் - எந்த லோகத்திற் சென்றாலும், வெருவரும் தகைவு இலார் - அஞ்சுந் தன்மையில்லாத இவர்கள், விழுவர் - (கீழே) விழுவார்கள்; நின்று எழுவர் - (மீண்டும்) எழுந்து நிற்பர்கள்; (இவர்களை நோக்கி), தானவர்கள் - அசுரர்களும், வானவர்கள் - தேவர்களும், தாம்—, மருவு அருந் தகையர் - கிட்ட வருவதற்கும் அரிய தன்மையையுடையவரானார்கள் [அஞ்சி யோடினார்களென்றபடி]; (எ - று.)

இதுமுதல் மூன்று கவிகள், வாலி துந்துபியர் செய்த போரின் தன்மையைக் கூறும். 'இவன் தான் வாலி, இவன் தான் துந்துபி' என்று ஒருவருங் காணமுடியாதவாறு மிக்கவிரைவாகச் சாரிசுழல்வதும் விழுவதும் எழுவதுமாய் இவ்விருவரும் போர் செய்கையில், அவ் வுக்கிரத்தைக் கண்டு தேவாசுரர்களும் அஞ்சியோடினார்களென்பதாம். ஆல்-ஈற்றசை. பி - ம்:—[1] தகையராய், தகையினர். [2] மருவருந் தகைய, மருள்வருந்தகையர். (194)

7. தீயெழுந் தது விசும் புறநெடுந் [1] திசையெலாம்
போயெழுந் தது முழக் குட [2] னெழுந் தது புகை
[3] தோயநன் புணரியுஞ் [4] சுடர்தடங் கிரிகளும்
சாயழிந் தனவடித் தலமெடுத் திடுதலால்.

(இ - ள்.) (இவர்கள்), அடி தலம் எடுத்திடுதலால் - கால்களைத் தூக்கிவைத்தலால், தீ - நெருப்பு, விசும்புஉற - ஆகாய

த்தை அளாவ, எழுந்தது - கிளம்பிற்று; முழக்கு - அவ்வாரவாரம், நெடுந் திசை எலாம் - பெரிய திக்குக்களெல்லாவற்றிலும், போய் எழுந்தது - சென்று பரவிற்று; புகை- (அந்நெருப்பின்) புகை, உடன் எழுந்தது - உடனே பரவிற்று; தோயம் நல் புணரியும் - நீர்மயமான நல்ல கடலும், சுடர் தட கிரிகளும் - விளங்குகின்ற பெரிய மலைகளும், சாய் - [தம் தமது] நிலைமை, அழிந்தன - கெட்டன; (எ-று.)

தீ-அடிகள் படுகிற அதிர்ச்சியால் நிலத்தினின்று உண்டானது. கடலும் கொதித்தது, மலைகளும் அசைந்தன என்றபடி. [2]எழுந்தது புயல் என்ற பாடத்துக்கு - பெருங்காற்று உண்டாயிற்று என்க. 'எழுந்தது' என்ற சொல் ஒரு பொருளிற் பலமுறை வந்தது - சொற் பொருட்பின்வருநிலையணி. பி - ம்:—[1]திசைமிசை. [3]தோயமும், தேயமும். [4]தொடர்நெடுங், திசைநெடுங். (195)

8. புயலும்வா னகமுமப் புணரியும் புணரிசூழ்
அயலும்வீழ் தூளியா லறிவருந் [1]தகையவா
மயனின்மா மகனும்வா லியுமறத் துடலினர்
இயலுமா [2]மதியமீ ராறும்வந் தெய்தவே.

(இ - ள்.) புயலும் - மேகங்களும், வானகமும் - ஆகாயமும், அ புணரியும் - பெருங்கடலும், புணரி சூழ் அயலும் - அக்கடல் சூழ்ந் துள்ள மற்றைய இடங்களும், வீழ் தூளியால் - பரவி விழுகின்ற துகளினால், அறிவு அருந்தகைய ஆ (க) - அறிவதற்கு அருமையான தன்மையை யுடையவாம்படி,—மயனின் மா மகனும் - மயனென்னும் அசுரத்தச்சனது சிறந்த மகனாகிய துந்துபியும், வாலியும்—, இயலும் மா மதியம் ஈர் ஆறும் வந்து எய்த - செல்லுகிற பெரிய மாதங்கள் பன்னிரண்டும் வந்து சேர [ஒரு வருடகாலம்], மறத்து-வலிமையோடு, உடலினர் - போர் செய்தார்; (எ - று.)

வாலியும் துந்துபியும் எங்குந் தூளிபரவ அதியுக்கிரமாகப் பொருகையில் ஒருவருடகாலங் கழிந்ததென்பதாம். அமாவாசைக்கு அமாவாசை ஒருமாதமென்று சந்திர சம்பந்தத்தாற்கொள்ளுஞ் சாந்திரமான பக்ஷம்பற்றி, 'மதி' என்று மாதத்துக்குப்பெயர். பி-ம்:— [1]தகையவாம். [2]மதிகள். இச்செய்யுள் சில பிரதிகளிலில்லையென்ப.

9. அற்றதா கியசெருப் [1]புரிவுறும் மளவினில்
கொற்றவா லியு[2]மவன் குவவுத்தோள் வலியொடும்
பற்றி[3]யா னையினெடும் [4]பணைமருப் பிணைபறித்து
எற்றினா னவனும்வா னிடியினின் றுரறினான்.

(இ - ள்.) அற்றது ஆகிய - அப்படிப்பட்டதான, செரு-யுத் தத்தை, புரிவுறும் அளவினில் - செய்கின்றபொழுதில்,—கொற்றம் வாலியும்-வெற்றியையுடைய வாலியும், குவவு தோள் வலியொடும் -திரண்ட (தனது) தோள்களின் வலிமையுடனே, அவன் - அவ்

வசுரனது, ஆசையின் நெடும் பணை மருப்பு இணை - திக்குக்களை அளாவி நீண்ட பருத்த இரண்டு கொம்புகளையும், பற்றி - பிடித்து, பறித்து - பிடுங்கி, எற்றினன் - (அவற்றைக்கொண்டே அவனை) அடித்தான்; அவனும் - அவ்வசுரனும், வான் இடியின் - மேகத்தி லெழுகின்ற இடிபோல், நின்று உரறினன் - கர்ச்சித்துநின்றான்; (எ - று.) இரண்டாமடியில் 'குவவுதோள்' என இயல்பாகப் படிப்பர்.

இருவரும் வெற்றிதோல்வியின்றி ஒரு வருடகாலம் பொருத பின்பு வாலி வலிமைமேம்பட்டவனாகி அவ்வசுரனது கொம்பைப் பிடுங்கி, அவற்றைக்கொண்டே அவனையடிக்க, அவன் பொறுக்க முடியாமற் கதறின னென்பதாம். கொம்பை வேரோடு பறித்த நோவோடு அடித்ததுஞ் சேரவே, அசுரன் கதறலாயினனென்க. புரிவுறும்மளவினில் - விரித்தல். ஆசா - வடசொல். பி - ம்:—[1]பயில் வுறும். [2]வயக்குவவுதோள்வலியினால். [3]ஆசையினவன். [4]படர் நெடும்பணைபறித்து, படர்நெடும்பணைமருப்பு. (197)

10. தலையின்மே லடிபடக் கடிதுசாய் [1]நெடியதாள்
உலையவாய் முழைதிறத் துதிரவா [2]றொழுகமா
மலையின்மே லுருமிடித் தென்னவான் மண்ணொடும்
குலையமா திசைகளுஞ் செவிடுறக் குத்தினான்.

(இ - ள்.) தலையின்மேல் அடிபட - தலைமேலே அடிபடும்படியும், கடிது சாய் நெடிய தாள் உலைய - விரைவில் விழுந்து நீண்ட கால்கள் ஒடியவும், வாய் முழை திறந்து உதிரம் ஆறு ஒழுக - மலைக்குகை போன்ற வாய் திறந்து இரத்தநதி பெருகவும், வான்மண்ணொடுஉம் குலைய - மேலுலகமும் பூமியும்நடுங்கவும், மா திசைகள்உம் செவிடு உற - பெரிய திக்குக்களெல்லாம் செவிடு படவும், மாமலையின்மேல் - பெரிய மலைமேல், உரும் இடித்து என்ன - இடியிடித்தாற்போல, குத்தினான் - (வாலி அசுரனைக்) குத்தினான்; (எ - று.)

அப்போது உண்டான அதிர்ச்சியினால் வானும் மண்ணும் குலைந்து திசைகளெல்லாம் செவிடாகுமாறு வாலியானவன் அவ் வசுரன் காலொடிந்து சாயவும், வாயைத் திறந்துகொண்டு இரத்தத் தைக் கக்கவும், மலையினுச்சியி லிடிவீழ்ந்தாற்போல அவ்வசுரனது தலைமேல் வலியக் குத்தின னென்பதாம். சாய் - சாய்ந்து என்னும் வினையெச்சத்தின் விகாரம். பி - ம்:—[1]நெடிது. [2]ஒழுகும். (198)

11. கவரி [1]யிங் கிதுவெனக் கரதலங் கொடுதிரித்து
இவர்தலுங் குருதிபட் [2]டிசைதொறுந் திசைதொறும்
துவரணிந் தனவெனப் [3]பொசிதுதைந் தனதுணைப்
பவர்நெடும் பணை [4]மதப் பகையின்வன் கரிகளே.

(இ - ள்.) இது கவரி என - '(இவ்வாலி கையிற்கொண்டிருக் கின்ற) இது சாமரமாம்' என்று (கண்டோர்) சொல்லும்படி, கர தலம்கொடு - கையினால், (வாலி துந்துபியை எடுத்து), திரித்து

இவர்தலும் - சுழற்றிக்கொண்டு (தான்) சுழன்றவளவில்,—குருதி - (அத்துந்துபியின்) இரத்தம், பட்டு இசைதொறும் - (சுழற்றுகிற வேகத்தால்) துளித்துப் படும்போதெல்லாம்,—திசைதொறும் - எல்லாத் திக்குகளிலும் உள்ளனவாகிய, துணை பவர் நெடும் பணை மதம் பகையின் - ஒன்றோடு ஒன்று ஒத்த நெருங்கிய நீண்ட தந்தங்களையும் மதத்தையும் பகைத்தன்மையையுமுடைய, வல் - வலிய, கரிகள் - (திக்கு) யானைகளெல்லாம், துவர் அணிந்தன என - சிவப்பு நிறப் பொருளைக்கொண்டு அணிந்தனபோல, பொசி துதைந்தன - அவ்விரத்தநீர் பொருந்தப்பெற்றன; (எ - று.)

கீழ்க்கூறியவாறு வாலி அத்துந்துபியின் தலைமேற் குத்திய பின்பு அவனைத் தன்கையாலெடுத்துக்கொண்டு சுழலவே, அவ்வேகத்தால் அவ்வசுரனது வாயினின்று பெருகுகின்ற இரத்தநீர் தெறித்துத் திக்கசங்களின் மீது சிந்த, அவைகள் செந்நிறப் பொருள் கொண்டு பூசி அணியப்பட்டவைபோல விளங்கின வென்பதாம்: தன்மைத்தற்குறிப்பேற்றவணி. இனி, 'கவரி இங்கு இது என' என்பதற்கு - இது ஒரு வலிய எருமையென் றெண்ணி யெனப் பொருள் கொள்ளுதலு மொன்று. கவரி - சாமரமும், எருமையும்: இங்கு எருமைக்கடாவென்க. சொற்சமத்காரமமைய இங்கே 'கவரி' என்ற சொல்லைப் பிரயோகித்தார். எருமைக்கடா சாமரம்போலத் திரிக்கப்பட்டமை பற்றிக் கவரி கவரியாகு மென்க. 'இங்கு' - அசை. பி - ம்:—[1] அங்கிரியினை, அங்கிரியென. [2] இசைநெடுந். [3] பொறி துதைந்தது. [4] மதம் பகையில் வன்கிரிகளே, மதம்பயிலும்வன் கரிகளே. (199)

12\. [1] புயல்கடந் திரவிதன் புகல்கடந் தயலுளோர்
[2] இயலுமண் டிலமிகந் தெனையவுந் தவிரமேல்
வயிரவன் கரதலத் தவன்வலித் தெறியவன்று
[3] உயிரும்விண் படரவிவ் வுடலுமிம் பரினரோ.

(இ - ள்.) (பின்பு), அவன் - அவ்வாலி,—புயல் கடந்து - மேக மண்டலத்தைத் தாண்டி, இரவிதன் புகல் கடந்து - சூரியனிருக்குமிடத்தையுந் தாண்டி, அயல் உளோர் இயலும்மண்டிலம் இகந்து - மற்றுமுள்ள தேவர்கள் பொருந்திவாழ்கின்ற மண்டலங்களையெல்லாம் கடந்து, எனையவும் தவிர - மற்றையெல்லா மேலிடங்களையும் கடக்கும்படி, வயிரம் வல் கரதலத்து மேல் வலித்து எறிய - உறுதியான வலிய கையினால் (அவ்வெருமைக் கடாவை எடுத்து) மேலே வலிமையோடுவீச,—அன்று - அப்பொழுது,—உயிரும் விண் படர - (அதன்) உயிர் மேலுலகத்துக்குச் செல்ல,—இ உடலும் - இந்த உடம்பும், இம்பரின் - கீழே (விழுந்திட்டது); (எ - று.)

கீழ்க்கூறியவாறு வாலி தான் துந்துபியினது உடலை மிக்க உயரத்தில் எறிய, அதனால் அவ்வசுரன் உயிரொழிந்தனன்: அவனது உடம்பும் இவ்வாறு இங்கே விழுந்திட்டது என்பதாம். பயனிலைவருவிக்கப்பட்டது. மண்டிலம் - வடசொற்றிரிபு. அரோ -

ஈற்றசை. சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் புதன் சுக்கிரன் அங்காரகன் பிருகஸ்பதி சனி ஸப்தரிஷிகள் துருவன் என இவர்களின் மண்டலங்கள் வானத்தில் முறையே ஒன்றன்மேலொன்ருக அமைந்துள்ளன வென்ப. பி - ம்:—[1]புவி. [2]இயலுமண்டல மிகந்தனைய மீனும்பரமேல். [3]உயரமென்பது தெறத்தொலையு மிவ்வுலகமே, உயிரும் ......இப்பரிசரோ. (200)

13. முட்டிவான் முகடுசென் [1]றளவியிம் முடையுடல்
[2]கட்டிமால் வரையைவந் [3]துறுதலுங் கருணையான்
இட்டசா பமுமெனக் [4]குதவுமிவ் வியல்பினிற்
பட்டவா முழுவதும் பரிவினு லுரைசெய்தான்.

(இ - ள்.) இ முடை உடல் கட்டி - முடைநாற்றமுடைய இவ்வுடற் பிண்டம், வான் முகடு - ஆகாயமுகட்டை, முட்டி - தாக்கி, சென்று அளவி - போய் அளாவி, மால் வரையை-பெரிய இவ்விருசிய மூகமலையை, வந்து உறுதலும் - வந்துசேர்ந்தவளவில் [இம்மலையில் வந்து விழுந்தவளவில்],—'கருணையான் - கருணை யுடையவரான மதங்கமுனிவர், இட்ட - (அதற்காகக்) கொடுத்த, சாபம்உம் - சபிப்பும், எனக்கு—, உதவும் - (இப்பொழுது) உதவியாயிருக்கின்றது,' (என்று), இ இயல்பினின் - இவ்விதமாக, பட்ட ஆமுழுவதும் - உண்டான வரலாறுமுழுவதையும், பரிவினுல் உரை செய்தான் - அன்போடு சொன்னன், (சுக்கிரீவன்); (எ - று.)

வாலி வீசியெறிந்த துந்துபியினது உயிர்நீங்கிய உடல் ருசியமூகமலையில் மதங்கமுனிவர் இருந்து தவஞ்செய்கின்ற ஆச்சிரமத்தில் வந்து விழுந்து அதனை அசுத்தப்படுத்தியதனுல், அம்முனிவர் கடுங்கோபங்கொண்டு ஞானக்கண்ணுல் வாலி யெறிந்ததென்று அறிந்து 'அவன் இங்கு வருவானுயின் தலைவெடித்து இறக்கக்கடவன்' என்றும், 'அவனைச்சேர்ந்த மித்திரர்கள் இங்கே வந்தால் கல்வடிவமாகக்கடவர்' என்றுஞ் சபித்தார்; அச்சாபவுதவியால் நான் இங்கே வாலிக்கு அஞ்சி ஓடிவந்து மறைந்திருந்தேன் என்று சுக்கிரீவன் அவ்வெலும்பின் வரலாற்றைக்கூறி, தான் அங்குவாழுங் காரணத்தையும் தெரிவித்தன னென்பதாம். 'உறுதலும்' என்பது வரையிலும், கீழ்ச்செய்யுளின் அநுவாதம். முடை - ஒருவகைத் துர்க்கந்தம். பி - ம்:—[1]அணவி, அணுகி, அளவியம். [2]கட்டமால். [3]உறுதலின். [4]உதவுமுன், உதவவும், உதவுமென்று. (201)

வேறு.

14.—இராமன் 'இத்துந்துபியினுடலை எடுத்தெறி' என்று இலக்குமணனுக்குக் கட்டளையிட, அவனும் அவ்வாறு செய்தல்.

கேட்டன னமலனுங் கிளந்த வாறெலாம்
வாட்டொழி லிளவலை யிதனை மைந்தநீ
ஓட்டென வவன்கழல் விரலி னுந்தினன்
[1]மீட்டது விரிஞ்சனு டுற்று மீண்டதே.

(இ - ள்.) அமலன்உம் - ஸ்ரீராமனும், இளந்த ஆறு எலாம் - (சுக்கிரீவன்) சொன்ன வரலாறு முழுவதையும், கேட்டனன் - கேட்டு, —வாள் தொழில் இளவலை - வாளெடுத்துப் போர்செய்யுந்தொழிலை யுடைய தம்பியை [இலக்குமணனை] நோக்கி, 'மைந்த-வீரனே! இதனை- இந்தத் துந்துபியின் உடற்கூட்டை, நீ—, ஒட்டு - அப்பால் தள்ளு', என - என்று கட்டளையிட,—அவன் - இலக்குமணன், கழல் விரலின் - (தன்) கால்விரலினால், உந்தினன் - தள்ளி யெறிந்தான்; அது - அவ்வெலும்புக் குவியல், மீட்டு - மறுமடியும், விரிஞ்சன் நாடு உற்று - பிரமலோகத்தையடைந்து, மீண்டது - திரும்பி வந்து விழுந்தது; (எ - று.)

இராமபிரான் மராமரத்தையெய்து தன்னுடைய வல்லமையை விளக்கியதனால், தம்பியினுடைய வல்லமையைச் சுக்கிரீவன் முதலானோர்க்கு விளக்கக் கருதி, துந்துபியினுடம்பெலும்பை யெடுத்தெறியுமாறு இலக்குமணனுக்குக் கட்டளையிட்டன னென்பதாம். முன்பு வாலி தூக்கியெறிந்தபொழுது ஒருமுறைபிரமலோகம்வரையிற் சென்றுவந்ததனால், இங்கு 'மீட்டு' என்றார். வாலி தன்னுடைய பலம் விளங்குமாறு முன்பு துந்துபியினுடலைத் தூக்கிஉயரவெறிந்தானாதலால்,'இலக்குமணன் வாலிபோன்ற பலமுடையவனே' என்று வானரர்க்கு விளங்குமாறு அதனையேசெய்யும்படி இலக்குமணனுக்குக் கட்டளையிட்டன னென்க.

இச்செய்யுளிருக்குமிடத்துச் சிறிதுமாறி, "கேட்டனனமலனும் இளந்தவாறெலாம், வாட்டொழிலிளவறன்வதன நோக்கியான், ஒட்டு தல்காணென விரலினுந்தினன், மீட்டதுவிரிஞ்சனடுற்று மீண்டதே" என்றுகாணப்படுகின்றது. இந்தப்பாடம் வான்மீகத்துக்கு ஒத்ததாகத்தோன்றினும், அங்குள்ளமுறைக்கும் இங்குள்ளமுறைக்கும் வேறுபாடு உள்ளது. பி - ம்:—[1] மீண்டுமவ். (202)

15.—அதுகண்டு வானரர்மகிழ, சுக்கிரீவன் ஒன்றுகூறத் தொடங்குதல்.

ஆயிடை யரிக்குல மசனி [1] யஞ்சிட
வாய்திறந் தார்த்தது வள்ள லோங்கிய
[2] தூயநற் சோலையி லிருந்த சூழல்வாய்
நாயக வுணர்த்துவ துண்டு நானென.

இது முதல் நான்கு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) ஆயிடை - அப்பொழுது, அரி குலம் - குரங்குக் கூட்டமெல்லாம், அசனி அஞ்சிட - இடியும் அச்சமடையும்படி, வாய் திறந்து ஆர்த்தது - வாய்விட்டு ஆரவாரித்தது; வள்ளல் - ஸ்ரீராமபிரான், ஓங்கிய-உயர்ந்த, தூய - பரிசுத்தமான, நல்- அழகிய, சோலையில்-பூஞ்சோலையிலே, இருந்த - வந்து தங்கியிருந்த, சூழல் வாய் - சமயத்தில்,

(சுக்கிரீவன் ஸ்ரீராமனைநோக்கி), 'நாயக - தலைவனே! நான் உணர்த்துவது-யான் சொல்லவேண்டுவது, உண்டு - (ஒன்று) உளது', எனு - என்று, - (எ - று.)—'எனு' என்னும்வினையெச்சம், மேற் கலன் காண்படலத்தின் மூன்றாங்கவியில் 'எனு' எனவரும் வினையெச்சத்தோடு முடிய, அது-அக்கவியில் 'காட்டினன்' என்னும் வினைமுற்றைக் கொண்டுமுடியும்.

இலக்குவனது திறமையையும் இப்பொழுது கண்டதனால், வாநர சைனியம் மிகக்களித்தது. இவ்வாறு வாநரர்களெல்லாம் தமது பலபராக்கிரமத்தைக் கண்டுகளிக்குமாறு இராமபிரான் தான் மராமரத்தையெய்தலும் தனது தம்பியைக்கொண்டு துந்துபியினுடலை உயரவெடுத்து வீசுதலுஞ் செய்தபின்பு, தாம் முன்னிருந்த இடத்தே எல்லாரும் வந்துசேர, அப்போது சுக்கிரீவன் ஒன்று கூறத் தொடங்கினனென்பதாம். அதன் விவரத்தை, அடுத்தபடலத்திற் காண்க. முதலடி - முற்றுமோனை. பி - ம்:—[1] அஞ்சுற. [2] தூயவச், தூயதண். (203)

இவ்வரலாறுகள் முதனூலிற் கூறியுள்ள விவரம்:—இராமலட்சுமணர்க்கும் சுக்கிரீவனுக்கும் அனுமான் மூலமாக நட்பு உண்டாயிற்று. பின்பு சுக்கிரீவன் தன் வருத்தத்திற்குக் காரணங்களைக் கூறக் கேட்ட இராமபிரான், பிறகு 'நான் உனது பகைவனை எனது அம்புகளால் அழித்துவிடுகிறேன்; அஞ்சாதே' என்று அபயப்பிரதானஞ்செய்யவும், சுக்கிரீவன் மனந்தெளியாமல் வாலியினது பேராற்றலைப்பற்றிப் பலபடியாகச்சொல்லினன். முடிவில் வாலி மராமரங்களில் ஒன்றைத் துளைத்ததையும் துந்துபியின் உடலெலும்பை ஒரு யோசனைதூரம் தூக்கி யெறிந்ததையுங் குறித்துப் பாராட்டிக் கூறி, 'இவ்வாறு பேராற்ற லமைந்தவனை வெல்வது எப்படிமுடியுமோ?' என்றான்; கேட்ட இலட்சுமணன் 'உனக்கு நம்புதலில்லையாயின் இப்போது என்ன செய்யவேண்டுவது?' என்ன, சுக்கிரீவன் 'இராமபிரான் நீறுபூத்த நெருப்புப்போலத் தோன்றினும், வாலியின் வல்லமையை நினைக்கும்போது சங்கையுண்டாகின்றது; ஏழு மராமரத்தையும் துளைத்து இந்தத்துந்துபியின் எலும்பையும் இருநூறு விற்கிடைதூரம் தூக்கியெறிந்தால் எனக்கு நம்புதலுண்டாகும்' என்று சொல்லினன். சுக்கிரீவனுக்கு நம்புதலுண்டாக்குமாறு அவனது வார்த்தைக்கு இயைந்து இராமபிரான் துந்துபியினுடம்பெலும்பைத் தனதுகாற்கட்டைவிரலினால் இலேசுஆகத் தூக்கிப் பத்துயோசனைத்தூரத்திற்கு அப்பால் எறிந்தான். அதனைக் கண்டசுக்கிரீவன் 'முன்பு உலராதிருக்கையில் வாலி இதனைத் தூக்கியெறிந்தான். இப்போது உலர்ந்துபோய்விட்ட இதனைத் தூக்கியெறிதல் ஒரு சிறப்பன்று' என்றான். பின்பு இராமபிரான் ஒருபாணத்தை ஏழுமராமரங்களின்மேலேவ, அது அம்மரங்களைத் துளைத்தோடு ஏழுலகங்களையுந் துளைத்துச்சென்று மீண்டு தூணீரத்தையடைந்தது. அடையவே, அதனைக்கண்ட சுக்

இரீவன் இராமபிரானது திருவடிகளை வணங்கி அப்பிரானை வியந்து புகழ்ந்து முகமன் கூறினனென்பதாம்.

துந்துபிப்படலம் முற்றிற்று.

ஆறுவது

கலன்காண்படலம்

சீதாபிராட்டியின் திருவாபரணங்களைச் சுக்கிரீவன் கொண்டு வந்துகாட்ட அவற்றை இராமபிரான் பார்த்தருளிய செய்தியைக் கூறும் பாகம். கலன் -அணிகலம்; மகரனகரம் மாறிவருஞ்சொல்.

1.—இதுமுதல் மூன்றுகவிகள் ஒருதொடர்: சுக்கிரீவன் சிலகூறி, சீதையின் அணிகலமுடிப்பைக் காட்டுதல்.

இவ்வழி யாமியைந் திருந்த தோரிடை
வெவ்வழி யிராவணன் [1]கொணர மேலைநாள்
செவ்வழி [2]நோக்கிநின் தேவி யேகொலாம்
கவ்வையி னரற்றினள் கழிந்த [3]சேணுளாள்.

(இ - ள்.) மேலை நாள் - முன்னொருநாளில், இ வழி - இந்த இடத்தில், யாம் - நாங்கள், இயைந்து இருந்தது ஓர் இடை - கூடியிருந்த சமயத்தில்,—வெவ் வழி இராவணன் - கொடியவழியிலொழுகுகின்றவனான இராவணன், கொணர - எடுத்துக்கொண்டு வரும்போது, (அவன்கையிலகப்பட்டுச் செல்கின்ற), நின் தேவியே கொல் ஆம் - உனது மனைவியான ஜாநகிப்பிராட்டியே தானோ? கழிந்த சேண் உளாள் - நெடுந்தூரத்திலுள்ளாளொருத்தி, செவ்வழி நோக்கி - (இக்காடுமலைகளிலுள்ள) நேரானவழியைப் பார்த்து, கவ்வையின் அரற்றினள் - துன்பத்தோடு கதறினாள்; (எ - று.)

கழிந்தசேண்-மிக்கதூரம். இனி, கழிந்த சேண் உளாள்-வானத்தில் நெடுந்தூரத்தி லிருந்தா ளென்றுங் கொள்ளலாம், மிக நெடுந்தூரத்திலுள்ளாளாகவே, அவளது திருமேனியடையாளங் கண்டு கூற இயலவில்லை யென்றபடி. 'நின்தேவியேகொலாம்' என்றது அந்தப்பெண் சீதாதேவியாய் இருக்கலாமென்று இப்பொழுது ஊகிக்கிறே னென்றபடி. வெவ்வழி - தீயொழுக்கவழி, துன்மார்க்கம். செவ்வழி [2]நோக்கினம் என்ற பாடத்துக்கு - செவ்வையாய்ப் பார்த்தோமென்று பொருள். கவ்வை - கௌவை; துன்பம், பேரொலியுமாம். அரற்றுதல் - அழுதல், ஒலித்தல். பி - ம்:—[1]கொணர்ந்த.

[2]நோக்கினேன், நோக்கினின்வள்ளல். [3]விண்ணுளாள். 'கவ்வையின் கத்தினள் கழிந்து சேணுளாள்' என்று ஒரு பிரதியில் நான்காமடி. (204)

2. [1]உழையரி னுணர்த்துவ [2]துளதென் [3]றுன்னியோ
குழைபொரு [4]கண்ணினாள் குறித்த [5]தோர்ந்திலம்
மழைபொரு கண்ணிணை வாரி யோடுதன்
இழைபொதிந் திட்டனள் [6]யாங்க ளேற்றனம்.

(இ - ள்.) உழையரின் - தூதர்கள்போல, உணர்த்துவது-(தான் சென்ற திசையை இந்த ஆபரணங்கள் தனது கணவனுக்குத்) தெரிவிக்கக்கூடியது, உளது என்று உன்னிஓ - உண்டென்று எண்ணியோதானோ, குழை பொரு கண்ணினாள் - குழையென்னுங் காதணியை மோதுகின்ற [காதளவும்நீண்ட] கண்களையுடையளான அவள், குறித்தது - கருதியதை, ஓர்ந்திலம் - அறிகின்றோமில்லை: தன் இழை பொதிந்து - தனது ஆபரணங்களை(க்கழற்றி) ஆடையில் முடிந்து, மழை பொரு கண் இணை வாரியோடு - மழையையொத்த (தனது) கண்களிரண்டினின்றும் பெருகுகின்ற நீருடன், இட்டனள் - கீழே போகட்டாள்; யாங்கள் ஏற்றனம் - (அக்கிழிமுடிப்பைத் தரையில் விழாதமுன்னமே) நாங்கள் கைகளில் ஏந்திக்கொண்டோம்; (எ - று.)

வனவாசம் புறப்படுகின்றபோது இராமபிரான் சொன்னபடி தனது ஆபரணங்களிற் பெரும்பாலனவற்றை அந்தணர்க்குத் தானஞ் செய்துவிட்டு வந்த சீதாதேவி, பிறகு வனத்தில் அத்திரி முனிவரது ஆச்சிரமத்தில் அவர்பத்தினியான அநசூயையால் அளிக்கப்பட்ட ஆபரணங்களை அதுமுதல் அணிந்துகொண்டிருந்தனளென்பது, இங்கு அறியத்தக்கது.

கழிந்த சேணுளாள் கண்ணீர்சொரிந்துகொண்டே இழைமுடிப்பை இட, நாங்கள் ஏற்றனமென்பது, கருத்து. வாரியும் இழையுமாகிய இரண்டுபொருளுக்கு இட்டனளென்ற வினையொன்றே பொருந்தச்சொன்னது, புணர்நிலையணி; மேகம்போலக் குளிர்ச்சியாய்க் காண்பவர்க்கு மகிழ்ச்சி விளைக்குங் கண்களென்ற பொருளோடு மேகம்போல மிக்கநீரைச்சொரியுங்கண்களென்ற பொருளும் அமைய, 'மழைபொருகண்ணிணை' எனப்பட்டது; "தழைத்த பொன்முலைத் தடங்கடந் தருவிபோய்த் தாழப், புழைத்தபோல நீர் நிரந்தரம் பொழிகின்ற பொலிவால், இழைக்கு நுண்ணிய மருங்குலாள் இணைநெடுங்கண்கள், மழைக்கணென்பது காரணக்குறியென வகுத்தாள்" என்ற சுந்தரகாண்டச் செய்யுள் இங்கு நோக்கத்தக்கது. இனி முதலடிக்கு - இந்த வானரங்கள் நமது செய்தியை நமது கணவனுக்குத் தூதர்போலத் தெரிவிக்கக்கூடியது உண்டென்று எண்ணியோ எனினு

மாம். உழையர் - அருகிலுள்ளார், ஏவல்செய்வோர்; இங்குத் தூதர் மேலது. இன் - ஒப்பு. இழை பொதிந்து - இழையை இழையிற் பொதிந்து என ஒருசொல்லையே மறுமுறை வருவித்துக்கொள்க; முதல் 'இழை' - ஆபரணம்; இரத்தினங்களிழைத்துச்செய்தது; இரண்டாவது 'இழை' - நூலின்பெயர் ஆடைக்குக் கருவியாகுபெயரென்க. பி - ம்:—[1]உழைவரின். [2]என்பது. [3]எண்ணியோ. [4]தோளிளுள். [5]ஓர்இலம். [6]யானதேற்றனன். (205)

3. [1]வைத்தன மிவ்வழி வள்ளல் நின்வயின்
[2]உய்த்தனன் தந்தபோ [3]துணர்தி யாலெனுக்
கைத்தலத் தன்னவை கொணர்ந்து காட்டினன்
நெய்த்தலைப் பால்[4]கலந் தனைய நேயத்தான்.

(இ - ள்) வள்ளல் - வரையாதருளுமியல்புடையவனே!—வைத்தனம் - (அங்ஙனம் ஏந்திய அணிகலமுடிப்பை அப்படியே பத்திரமாக) வைத்திருக்கிறோம்; இ வழி- இப்பொழுது [அல்லது இவ்விடத்தில்], நின்வயின் - உன்பக்கல் [உனது முன்னிலையில்], (அந்த ஆபரணங்களை), உய்த்தனன் தந்தபோது - கொணர்ந்துகாட்டும்போது, உணர்தி - (நீ அவற்றைச் சீதையினுடையனவா? அல்லனவா? என்று) அறிவாய், எனு - என்றுசொல்லி,—நெய்த்தலை பால் கலந்து அனைய நேயத்தான் - நெய்யோடு பால் சேர்ந்தாற்போன்ற [மிக இனிய] நட்புநிலையையுடையவனான சுக்கிரீவன், கைத்தலத்து- கையில், அன்னவை - அந்த ஆபரணங்களை, கொணர்ந்துகாட்டினன்- எடுத்துக்கொண்டுவந்து (இராமபிரானுக்குக்)காட்டினான்; (எ - று.) ஆல் - அசை.

நெய்த்தலை - நெய்யினிடத்து; தலை - ஏழனுருபு. பி - ம்:—[1]வைத்தனன். [2]உய்த்தன. [3]உணர்தியாம். [4]கலந்தன்ன. (206)

4.—அந்த ஆபரணங்களைநோக்கி இராமபிரான் அடைந்த நிலைமைகளை இதுமுதல் ஐந்துகவிகளிற் கூறுகின்றார்.

தெரிவுற நோக்கினன் [1]தெரிவை மெய்யணி
எரிகன [2]லெய்திய [3]மெழுகின் யாக்கைபோய்
[4]உருகின னென்கில [5]முயிருக் கூற்றமாய்ப்
[6]பருகின னென்கிலம் பகர்வ [7]தென்கொலாம்.

(இ - ள்.) (சுக்கிரீவனாற் காட்டப்பட்ட), தெரிவை மெய் அணி - சீதாதேவியின் திருமேனியாபரணங்கள், தெரிவு உற நோக்கினன் - (இராமபிரான்) நன்றாகப்பார்த்தருளினான்; (அங்ஙனம் பார்த்தவளவில்), எரி கனல் எய்திய மெழுகின - எரிகின்ற நெருப்பிற் சேர்ந்த மெழுகுபோல, யாக்கை - உடம்பு, போய் உருகினன் என்கிலம் - நெகிழ்ந்து உருகினானென்று சொல்ல வல்லோமல்லேம்; (அந்த

அணிகலங்களாகிய அமிருதத்தை), உயிருக்கு ஊற்றம் ஆய்-(தனது) உயிருக்கு வலிமையாக, பருகினன் என்கிலம் - குடித்தானென்று சொல்ல வல்லோமுமல்லேம்; பகர்வது என்கொல் ஆம்-(அப்பொழுது இராமனடைந்த நிலையைப்பற்றி மற்று யாம்) சொல்லக் கூடியது யாதுஉளது; (எ - று.)

இராமபிரான் அந்த அணிகலங்களை நன்றுகப் பார்த்தமாத்திரத்தில் தனது தேவியாருடைய திருவாபரணங்களென்று தெரிந்துகொண்டதனால் தீயிலிட்ட மெழுகுபோல உடல்கரைந்து உருகியதுமன்றி, அவற்றைத் தனது உயிர்க்கு ஆதாரமாகவுங் கொண்டனனென்பதாம். இருவகையினுள் ஒன்றைத்துணிந்து கூறமாட்டாமை தோன்ற, இரண்டிடத்தும் 'என்கிலம்' என்றார். இங்கு, எதிர்மறை விகற்பம் பற்றியது. அவற்றை நோக்கியது தனது உயிரின் தளர்ச்சியொழியுமாறு. அமிருதத்தைப் பருகினாற்போன்றதென்றது, 'உயிருக்கு ஊற்றமாய்ப் பருகினன்' என்றதனால் விளங்கியது. ஊற்றம் - வலிமை, பற்றுக்கோடு, ஊன்றுகோல், அசைவின்றி நிற்றற்கு உரிய ஆதாரம். உருகியது - பிரிவாற்றாமையாலும், பருகியது - அணிந்தவளிடத்துள்ள பெருங்காதலாலுமாம்.

[3]மெழுகின்யாக்கைபோல் என்ற பாடத்துக்கு - மெழுகினாற் செய்யப்பட்டதொரு வடிவம் (பாவை) போல என்று பொருளாம். ஆய் - ஆக: எச்சத்திரிபு. போய்-உறுதிகெட்டு; எனவே, நெகிழ்ந்து என்க. போய் உருகினன் - உருகிப்போயினன் என விகுதி பிரித்துக் கூட்டலுமாம். பி - ம்:—[1]தேவி. [2]ஏந்திய. [4]உருகிலன். [5]உயிரும், உயிரில். [6]பருகிலன். [7]என்கொல்யாம்.

தெரிவை - தெரிவைப்பருவமுடைய பெண். இருபத்தாருவது வயது முதல் முப்பத்தோராவது வயதுவரையிலும் மகளிர்க்குத் தெரிவைப்பருவமாம். இராவணன் சீதையை யெடுத்துக்கொண்டு செல்கின்றபோது அப்பிராட்டிக்கு முப்பத்தொருபிராயம் நிரம்பி முப்பத்திரண்டாவது பிராயம் தொடங்கியதென்பது, இங்கு உணரத்தக்கது. (207)

5\. நல்குவ தென்னினி நங்கை கொங்கையைப்
[1]புல்கிய பூணுமக் கொங்கை போன்றன
அல்குலி லணிகளு மல்கு லாயின
பல்கலன் பிறவுமப் [2]படிவ மானவே.

(இ - ள்.) நங்கை - அப்பிராட்டியினது, கொங்கையை புல்கிய - தனங்களின்மீது அணியப்பட்டு அவற்றைச்சார்ந்திருந்த, பூண்உம் - ஆபரணங்களும், (இராமபிரானுக்கு) அ கொங்கை போன்ற - அவ்வணிகலங்களை யணிந்திருந்த தனங்களாகவே தோன்றின; அல்குலின் அணிகளும் அல்குல் ஆயின—; பல்கலன் பிறஉம் - மற்றையவயவங்களில் அணியப்பட்ட பல ஆபரணங்களும், அ படிவம்

ஆன - அந்தந்த அவயவங்களாகவே தோன்றின; இனிநல்குவது என் - மற்றும் (அந்த ஆபரணங்கள் அப்பெருமானுக்குச்) செய்யக் கூடியது யாது? (எ - று.)

ஆரம் மேகலை முதலிய ஆபரணங்களைப் பார்த்தபோது அவற்றையணிந்த ஜாநகிப்பிராட்டியின் திருமேனி அவயவங்களை நேரிற் கண்டாற்போல இராமபிரான் பெரிதும் ஆறுதலடைந்தன னென்பது கருத்து. நல்குதல் - உதவுதல். நங்கை - மகளிரிற்சிறந்தவள் ("நாரீணாம் உத்தமா"): பெண்பாற் சிறப்புப்பெயர். முதலிரண்டு வாக்கியங்களில் உம்மைகள் - ஒன்றை ஒன்று நோக்கி முறையே எதிரதும் இறந்ததும் தழுவிய எச்சமாம்; மூன்றும் வாக்கியத்தில், உம்மை-இறந்தது தழுவிய எச்சத்தோடு முற்றுப் பொருளுமுடையது. படிவம் - இங்கு உடலுறுப்பு. அல்குல் - இடை. பி - ம்:—[1]புல்லிய. [2]படிகளாயின, படிகளாயவே. (208)

6. [1]விட்டபே ருணர்வினை [2]விளித்த வென்கெனோ
அட்டன வுயிரையவ் வணிக ளென்கெனோ
[3]கொட்டின சாந்தெனக் [4]குளிர்ந்த வென்கெனோ
சுட்டன வென்கெனோ யாது சொல்லுகேன்.

(இ-ள்.) அ அணிகள் - அந்த ஆபரணங்கள், விட்ட பேர் உணர்வினை-நீங்கிப் போயிருந்த (இராமபிரானது) சிறந்தஅறிவை, விளித்த என்கென்ஓ - அழைத்தன என்று சொல்வேனோ? உயிரை அட்டன என்கென்ஓ - (அவனது) உயிரைக் கொன்றன என்று சொல்வேனோ? கொட்டின சாந்துஎன குளிர்ந்த என்கென்ஓ-மேலே நிரம்பச் சொரிந்த சந்தனம்போல (அப்பெருமானுக்குக்) குளிர்ச்சிசெய்தன என்று சொல்வேனோ? சுட்டன என்கென்ஓ - (அப்பிரானுக்குத்) தாபமளித்தன என்று சொல்வேனோ? யாது சொல்லுகேன் - என்னவென்று சொல்லுவேன்! (எ - று.)

இராமபிரானுக்கு இயல்பாகவுள்ள பேரறிவு பிராட்டியைப்பிரிந்ததனாலாகிய வருத்தத்தால் நீங்கியிருந்தது அவளது அணிகலங்களைக் கண்டதனால் மீண்டு வரலாயிற்றென்பது - முதல் வாக்கியத்தின் கருத்தும், அவ்வணிகலங்கள் அவளது மிக அழகிய அவயவங்களை நினைப்பூட்டிப் பிரிவுத்துயரை மிகுவித்து அப்பெருமானுக்கு மரண வேதனையைச் செய்வனவு மாயின வென்பது-இரண்டாம் வாக்கியத்தின் கருத்தும், அவை அவனது பிரிவுத்துயரை ஒருபால் தணிவித்தனவென்பது - மூன்றும்வாக்கியத்தின் கருத்தும், அத்துயரத்தை மிகுவிப்பனவு மாயினவென்பது-நான்காம் வாக்கியத்தின் கருத்துமாம். இன்னபடியென்று ஒன்றைத்துணிந்துகூறமாட்டாமையின், இங்ஙனம் விகற்பித்து, 'யாது சொல்லுகேன்' எனலாயிற்று. இனி, பிரிந்திருக்கின்ற சமயத்தில் அப்பிரிந்த பொருளை நினைப்பூட்டுகின்ற பொருள்கள்யாவும் ஒருபால் மகிழ்ச்சி

யையும் ஒருபால் மிக்க வருத்தத்தையும் விளைத்தல் இயல்பாதலால், இங்ஙனம் மாறிமாறிக்கூறினருமாம். அடுதல் - இங்கு, மிகவும் வருத்துதல்: சுடுதல் - வெதுப்புதல். விளித்த, அட்டன, குளிர்ந்த, சுட்டன - பலவின்பால் முற்றுக்கள். இச்செய்யுளிலுள்ள தன்மையொருமை முற்று ஐந்திலும், ககரவொற்று - எதிர்கால விடைநிலை. ஓகாரங்கள் - விகற்பப்பொருளன. பி - ம்:—[1]விட்டன, விட்டனன். [2]விளிந்த, விளைத்த. [3]கொட்டிய. [4]குளிர்ந்தது, குளிர்த்த. (209)

7. மோந்திட நறுமல ரான [1]மொய்ம்பினில்
ஏந்திட [2]வுத்தரி யத்தை யேய்ந்தன
[3]சாந்தமு மாயொளி தழுவப் போர்த்தலால்
[4]பூந்துகி லாயவப் பூவை பூண்களே.

(இ - ள்.) அ பூவை பூண்கள் - (கொஞ்சி இன்சொற்கள் பேசுதலில்) நாகணவாய்ப்பறவைபோன்றவளான அப்பிராட்டியினது ஆபரணங்கள்,—மோந்திட நறுமலர் ஆன - (இராமபிரான்) மோந்து பார்த்தற்கு நறுமணம் வீசும் மலர்கள்போன்றன: மொய்ம்பினில் ஏந்திட உத்தரியத்தை ஏய்ந்தன - (அப்பெருமான்) தோளில் தரிக்க உத்தரீயம்போலாயின; ஒளி தழுவ சாந்தம்உம் ஆய் - (அப்பெருமான்மீது) ஒளிபரவுதலால் (அவனுக்குப்பூசுஞ்) சந்தனமும் போன்று, (ஒளி) போர்த்தலால் பூ துகில் ஆய - (அவ்வொளியினால் அவனுடம்பை) மூடுதலால் (அவனுக்கு) அழகிய மேற்போர்வையும் போன்றன; (எ - று.)

இலக்குமியின் அவதாரமாகி உத்தமசாதி மகளாகிய சீதாதேவியினது இயற்கை நறுமணமுடைய திருமேனியிற் படுதலால் பெருமணம் பெற்ற அந்த அணிகலங்கள் இராமபிரான் பெருவிருப்போடு அடிக்கடி மோந்துபார்க்குந்தோறும் மலர்கள்போல நறுமணம்வீசி இனிமைசெய்தனவென்பார் 'மோந்திட நறுமலரான' என்றும், மற்றும் அவற்றை இராமபிரான் பெருவிருப்பத்தால் மேலாடைபோலத்தோளில்வைத்துக்கொண்டு கொண்டாடினனென்பார் 'ஏந்திட வுத்தரியத்தை யேய்ந்தன' என்றும், அவன் அவற்றைக் கைகளிற்கொண்டு மோந்து பாராட்டுமிடத்து அவற்றின் ஒளி அவனது மார்பிலும் தோள்களிலும் பரவுதலாற் சந்தனம்பூசினாற் போலிருந்த தென்பார் 'ஒளிதழுவச் சாந்தமுமாய்' என்றும், அவற்றை அவன் தோள்களில் வைத்துக்கொண்டபோது அவற்றின் ஒளி அவனுடம்பு முழுவதும் பரவுதலால் ஒரு போர்வை போர்த்தாற் போலாயிற்றென்பார், '(ஒளி) போர்த்தலாற் பூந்துகிலாய' என்றுங் கூறினார். 'ஒளி' என்றதை, 'தழுவ' 'போர்த்தலால்' என்ற இரண்டனோடுங் தனித்தனி கூட்டுக. பூந்துகில் - மலர்போல மெல்லிய துகி லென்றும், மலர்போலச்சித்திரவேலை செய்யப்பட்ட துகிலென்றுங் கொள்ளலாம். துகில் - ஆடை; இங்கே, மேற்

போர்வை. பூவை-உவமையாகுபெயர். சில பிரதிகளில் இதுவும் அடுத்த செய்யுளும் மாறியுள்ளன. பி - ம்:—[1]மொய்ம்பினன், மொய்ம்பினி. [2]உத்தரீயத்தை. [3]சாந்தமுமாயின. [4]பூந்துகிலான.

8. [1]ஈர்த்தன செங்கணீர் வெள்ளம் யாவையும்
போர்த்தன மயிர்ப்[2]புறம் புளகம் பொங்குதோள்
[3]வேர்த்தன வென்கெனோ வெதும்பி னனென்கோ
தீர்த்தனை யவ்வழி யாது செப்புகேன்.

(இ - ள்) (இராமபிரானது), செம் கண் நீர் வெள்ளம் - சிவந்த இரண்டு கண்களினின்றும் (அப்பொழுது பெருகிய) நீர்வெள்ளங்கள், யாவைஉம் ஈர்த்தன - (அங்குள்ள) எல்லாப்பொருள்களையும் இழுத்துக்கொண்டு சென்றன; மயிர் புளகம் - மயிர்ச்சிலிர்ப்புக்கள், புறம் போர்த்தன - (அப்பெருமானது) திருமேனி முழுவதையும் மூடின; பொங்கு தோள் - பூரிக்கின்ற (அவனது) திருத்தோள்கள், வேர்த்தன என்கென்ஓ-வேர்வை யடைந்தனவென்று சொல்வேனோ? வெதும்பினன் என்கோ - (வேர்த்தல்கொள்ளாது) தாபமடைந்தானென்று சொல்வேனோ? அவ்வழி - அப்பொழுது, தீர்த்தனை - பரிசுத்தமூர்த்தியான இராமபிரான அடைந்த நிலைமையைக் குறித்து, யாதுசெப்புகேன் - என்ன சொல்வேன்! (எ - று.)

மயிர்ப்புளகம் புறம்போர்த்தலும் தோள் பொங்குதலும் மகிழ்ச்சியினாலும், வேர்த்தலும் வெதும்புதலும் சோகத்தாலும், கண்ணீர் வெள்ளம் பெருகுதல் இரண்டினாலும் உண்டாகக்கூடிய மெய்ப்பாடுகளாதலால், அவை யனைத்தையும் அப்பொழுது ஒருங்கு பெற்ற இராமபிரானது நிலைமை மகிழ்ச்சி அல்லது சோகம் என இரண்டிலொன்று துணிந்து சொல்லக்கூடாதபடி யிருந்ததென்பதாம். அது பற்றியே 'யாது செப்புகேன்' என்றார். இனி, கண்ணீர் வெள்ளம் பெருக்குதல் மயிர்ப்புளகம் போர்த்தல் தோள் பொங்குதல் தோள் வேர்த்தல் என்னும் இவற்றை யடைந்தவன் பின்பு வெப்பமே தலையெடுத்துநின்றானென்றற்கு, இங்ஙனம் விகற்பித்துக் கூறினரென்றல் நேர். இவ்வுரை, அடுத்த கவியில் 'வெம்மை மீக்கொள' என்பதற்கு ஏற்றலுங் காண்க. முதலடி-உயர்வுநவிற்சியணி.

வேர்த்தல் - தாபத்தின் முதிர்ந்த நிலை. வெதும்புதல் - அதன் முதிராதநிலை எனக்கொண்டு வேறுபடுத்தி, தோள் வேர்த்தன வென்கெனோ வெதும்பினனென்கோ என்று விகற்பித்துக் கூறலாயிற்றென்க. 'தீர்த்தன்' என்றது, இலக்கணையால் அவன் அடைந்த நிலையின்மேல் நின்றது. செங்கண் - உத்தமவிலக்கணமாகிய செவ்வரி பரந்து செந்தாமரை மலர்போன்ற கண்; சோகத்தாற் கலங்கியும் கண்சிவந்தன. [3]'வேர்த்தனனென்கெனோ' என்ற பாடத்திற்கு, தோள்வேர்த்தனன் என்பது - சினையின் வினையை முதலின்மேலேற்றிக் கூறிய முடிபாம். பி-ம்—[1]ஈர்த்தது. [2]பெரும். (211)

9.—பெருமாள் மூர்ச்சித்துச் சாய அருகிலிருந்த சுக்கிரீவன் தாங்கிக்கொள்ளுதல்.

விடம்[1]பரந் தணையதோர் வெம்மை மீக்கொள
நெடும்பொழு துணர்விேனா டுயிர்ப்பு நீங்கிய
தடம்பெருங் கண்ணனைத் தாங்கி னுன்தனது
உடம்பினிற் செறிமயிர்[2]சுறுக்கென் றேறவே.

(இ - ள்.) விடம் பரந்து அணையது ஓர் வெம்மை மீக்கொள - (உடம்பில்) விஷம் பரவினாற்போன்றதொரு தாபம் அதிகப்பட, நெடும் பொழுது உணர்விேனாடு உயிர்ப்பு நீங்கிய - வெகுநேரம் அறிவும் சுவாசமும் நீங்கிக் கீழேவிழுபவனான, தட பெருங் கண்ணனை - மிகப் பெரிய கண்களையுடையவனான இராமபிரானை, (சுக்கிரீவன்), தனது உடம்பினில் செறி மயிர் சுறுக்கென்றுஏற தாங்கினான் - தன்னுடைய உடம்பிற் பொருந்திய மயிர்கள் சுறுக்கென்று (அவனது மெல்லிய திருமேனியிற்) படுமாறு (கீழே விழாதபடி) தாங்கிக் கொண்டான்; (எ - று.)

வானரவீரனான சுக்கிரீவனது உடம்பிலுள்ள மயிர்களின் வன்மையும் இராமபிரானது மலர்போல் மெதுவான திருமேனியின் மென்மையும் பற்றி, 'தனதுஉடம்பினிற் செறிமயிர் சுறுக்கென்றேற' என்றார். முதலடியில் தற்குறிப்பேற்றமும், மற்றையடிகளில் தன்மை நவிற்சியுங் காண்க. இவையிரண்டுஞ் சேர்தலால், சேர்வையணி. "கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்துசெவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய கண்கள்" ஆதலால், 'தடம்பெருங்கண்' எனப்பட்டன.
பி - ம்:—[1]கரந்தணைய. [2]சுறுக்கொண்டேற. (212)

10.—சுக்கிரீவனது அநுதாபவார்த்தை.

தாங்கின னிருத்தியத் துயரந் தாங்கலாது
ஏங்கிய நெஞ்சின [1]னிரங்கி விம்முவான்
வீங்கிய தோளினல் வினையி னேனுயிர்
வாங்கினெ னிவ்வணி வருவித் தே[2]னென.

(இ - ள்.) தாங்கினன் இருத்தி-(அவ்வாறு சுக்கிரீவன் இராமபிரானைத் தனது மார்பில்) தாங்கிக்கொண்டு உட்காரவைத்து, அ துயரம்தாங்கலாது ஏங்கிய நெஞ்சினன்-(அப்பெருமானுக்குநேர்ந்த) அத்துன்பத்தைக்கண்டு தான் பொறுத்திருக்கமாட்டாமல் மெலிந்த மனத்தையுடையவனாய், இரங்கி விம்முவான்-அநுதாபங்கொண்டு சோகிப்பவனாகி, (அப்பெருமானைநோக்கி), 'வீங்கிய தோளினாய்-பருத்த தோள்களையுடையவனே! வினையினேன் - தீவினையுடையேனான யான், இ அணி வருவித்தேன் உயிர் வாங்கினென்-இந்த ஆப

ரணங்களைக் கொண்டுவந்து உனது உயிரை ஒழியச் செய்தேன்,' எனு- என்று சொல்லிப் புலம்பி,—(எ - று.)—(17) 'என்ருன்' என முடி யும். இதுமுதல் எட்டுச் செய்யுள்கள் குளகமென்க. அன்றி, எனு விம்முவான் என இச்செய்யுளிலேயே முடித்து, என்று சொல்லிப் புலம்புபவனுனு னென்றலுமாம்.

தான் பிராட்டியினணிகலங்களைக் கொணர்ந்து காட்டியமை இராமபிரானுக்கு இவ்வளவு வேதனையை யுண்டாக்கியதென்பதை உட்கொண்டு, அதற்குக் காரணமான தன்னைத் தீவினையுடையே னென்று கழிவிரக்கத்தோடு வெறுப்பவனுனன் சுக்கிரீவனென்க. வினையினேன்-பாவியேன். பி - ம்:—[1] இருந்து. [2] என்ருன். (213)

11.—இதுமுதல் ஏழுகவிகள்–ஒருதொடர்: சுக்கிரீவன் இராமபிரானைத் தேற்றுமாறு கூறிய வார்த்தைகள்.

அயனுடை [1]யண்டத்தி னப்பு றத்தையும்
மயர்வற நாடியென் வலியுங் காட்டியுன்
உடர்புகழ்த் தேவியை யுதவற் பாலனல்
துய[2]ருழந் தயர்தியோ சுருதி நூல்வலாய்.

(இ - ள்.) சுருதி நூல் வலாய் - வேதசாஸ்திரங்களில் வல்ல வனே!—அயனுடை அண்டத்தின்-இந்தப்பிரமாண்டத்திற்கு, அப் புறத்தைஉம் - அப்பாலுள்ள இடத்தையும், மயர்வு அற நாடி-அறிவு மாருட்டமில்லாதபடி தேடிப்பார்த்து, என் வலிஉம் காட்டி - எனது வலிமையையும் (இராவணன் முதலியோரனைவர்க்கும்) தெரியச் செய்து, உன் உயர் புகழ் தேவியை-உனது சிறந்த கீர்த்தியையுடைய மனைவியை, உதவற்பாலன் - (உனக்குக்) கொணர்ந்து கொடுக்கக் கட வேன்; (ஆகவே), துயர்உழந்து அயர்திஒ-(நீ) துன்ப மனுபவித்து மூர்ச்சிக்கக் கடவையோ? (எ - று.)—ஆல் - அசை.

இராவணன் சானகியை இந்த அண்டத்திற்கு அப்பாலொளி த்து வைத்திருந்தாலும் அங்குஞ் சென்று நன்ருகத் தேடி அப் பிராட்டி யிருக்குமிடத்தைக் கண்டறிந்து எனது ஆற்றலைக் காட்டிப் பொருது இராவணனைத் தொலைத்து அத்தேவியை மீட்டுக் கொண்டு வந்து நின்னிடம் சமர்ப்பிக்கத்தக்கவனுய் யான் இருக்க,நீ இவ்வாறு துயருறுவானேனென்று சுக்கிரீவன் இராமபிரானை நோக்கிக் கூறின னென்பதாம். அண்டத்திற்கு அப்புறத்தைக் கூறவே, அதற்கு உட் பட்ட உலகங்களிற் சென்று தேடிக் கண்டுபிடித்தல் கூறவேண்டா தாயிற்று.

அயனுடை அண்டம்-பிரமனைத் தனது அகத்திலுடையதாய் அவனது ஆட்சிக்கு உட்பட்ட அண்டம். மயர்வு - மயக்கம்; இனி மயர்வு அற-(யான்) சோர்வடையாமல் எனினுமாம். உயர்புகழ்த் தேவி—திருக்குறளில் வாழ்க்கைத்துணைநலத்தில் "தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' என்றதையும், அங்குப் பரிமேலழகர் 'தன்மாட்டுப் புகழாவது - வாழும்ஊர் கற்பால் தன்னைப் புகழ்வது' என்றதையுங் காண்க. சுருதி நூல் - உம்மைத்தொகை: சுருதியாகிய நூல்எனப் பண்புத்தொகையுமாம். பி-ம்:—[1] அகண்டத்தின். [2] உழன்று. (214)

12. திருமக [1]ளணையவத் தெய்வக் கற்பினள்
வெருவரச் செய்துள வெய்ய வன்புயம்
இருபது மீரைந்து தலையும் [2] நிற்கவுன்
ஒருகணைக் காற்றுமோ வுலக [3]மேழுமே.

(இ - ள்.) திருமகள் அணைய - இலக்குமியைப்போன்ற, அ தெய்வம் கற்பினள்-தெய்வத்தன்மையுள்ள பதிவிரதா தருமத்தையுடையவளான அந்தச் சானகிப்பிராட்டி, வெருவர - அஞ்சும்படி, செய்து உள - (அவள்பக்கல் தீங்கு) செய்துள்ள, வெய்யவன்-கொடியவனான இராவணனுடைய, புயம் இருபதுஉம் - இருபது தோள்களும், ஈர் ஐந்து தலைஉம் - பத்துத் தலைகளும்,—நிற்க - கிடக்கட்டும்; (அம்பு செலுத்து மிடத்து), உலகம் ஏழும்ஏ-ஏழுலகங்களும் தாம், உன் ஒரு கணைக்கு ஆற்றும்ஓ - உனது ஓர் அம்புக்குத்தான் இலக்குப்போதுமோ? [ஆற்ரு என்றபடி]; (எ - று.)

தன்து ஆற்றலைக் கீழ்க்கூறிய சுக்கிரீவன், இவ்வாறு பெருமாளுடைய ஆற்றலை எடுத்துக் கூறுகின்றான். சீதாபிராட்டியை வெருவுறச்செய்த வெய்யோனின் இருபது புயங்களும் ஒருபது தலைகளும் உமது ஒரு கணைக்கு இரையாகவும் போதா என்றவாறு. அழகும் உத்தமவிலக்கண நிறைவும் பெருமாளுக்கு வாழ்க்கைப்படுதலும் பற்றி, 'திருமகளணைய' என்றான். கற்பிற்குத் தெய்வத்தன்மை-''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை'', ''கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி... பெய்யெனப் பெய்யு மழை'' எனக் காண்க. இனி தெய்வக்கற்பினள் என்பதற்கு - தெய்வவடிவமாய் [நக்ஷத்திரரூபமாய்] நிற்கும் அருந்ததி போலுங் கற்பினையுடையா ளென்று உரைத்தலுமொன்று. பி - ம்:—[1] அருந்ததி. [2] ஓர்விலுன், ஏவினுன், ஏவின. [3] போதுமோ. (215)

13. ஈண்டுநீ யிருந்தரு ளேழொ [1]டேழெனப்
பூண்டபே ருலகங்கள் வலியிற் புக்கிடைத்
[2] தேண்டியவ் வரக்கனைத் [3] திருகித் தேவியைக்
[4] காண்டியா னிவ்வழிக் [5] கொணருங் கைப்பணி.

(இ - ள்.) ஈண்டு நீ இருந்தருள் - இங்கேயே நீ இருந்தருள்வாய்; யான்—, ஏழொடு ஏழ் என பூண்ட பேர் உலகங்கள் - பதி

ஞன்கென்று தொகைகொண்ட பெரிய உலகங்களிலெல்லாம், வலியின்புக்கு-வலிமையோடு சென்று, இடை தேண்டி - அவ்விடங்களில் (பிராட்டியைத்) தேடி, அ அரக்கனை திருகி - (அவளையெடுத்துச் சென்ற) அந்த ராக்ஷசனைத் தலையறுத்து, தேவியை இ வழி கொணரும் - உன் மனைவியான ஜாநகியை இவ்விடத்துக்கொண்டு வந்து சேர்க்கும், கை பணி - சிறிய ஏவல்தொழிலை, காண்டி - பார்ப்பாயாக; (எ - று.)

கீழ்க்கூறியவாறு பெருவலிபடைத்த பெருவீரனான நீ அந்த அற்பனான இராவணனைக் கொன்று சீதையை மீட்டற்கு எழுந்தருள வேண்டா: இங்கேயேஇருப்பாய். அந்த இராவணன் இந்தப் பதினன்குலோகங்களில் எங்கேபுகுந்திருந்தாலும், அவனைத் தேடிக் கண்டுபிடித்து வென்று அந்தச்சீதாபிராட்டியைமீட்டுக் கொணர்வேன்: பார், என்றுகூறுகின்றனன் சுக்கிரீவனென்க. இவ்வளவு பெரியகாரியம் தனது ஆற்றலுக்கு மிகவும் எளிதாதல்தோன்ற, 'கைப்பணி' எனப்பட்டது கைப்பணி - கைத்தொண்டு, குற்றேவல், கைங்கர்யம்; கை-சிறுமை மேலது. ஏழொடேழ் - மேலேழோடு கீழேழும். தேண்டி-விரித்தல். காண்டி - ஏவலொருமை. பி - ம்:—[1] ஏழெனெப். [2] தீண்டிய. [3] செயித்து. [4] காண்டிகான். [5] கொணர்வல் காவலோய். (216)

14. ஏவல்செய் [1] துணைவரேம் யாங்க ளீங்கிவன்
தாவரும் பெருவலித் தம்பி நம்பிநின்
சேவக மிதுவெனிற் [2] சிறுக நோக்கலென்
மூவகை யுலகுநின் மொழியின் முந்துமோ.

(இ - ள்.) யாங்கள் - நாங்கள், ஏவல் செய் துணைவரேம் - (நீ) ஏவியகாரியங்களைச் செய்கின்ற தோழராக இருக்கிறோம்; ஈங்கு இவன் - இங்கேயுள்ள இவ்விலக்குமணனே, தா அரும் பெரு வலி தம்பி - அழிவற்ற மிக்க வலிமையையுடைய (நின்) தம்பியாவன்; நம்பி - ஆடவரிற் சிறந்தவனே! நின் சேவகம் இது - உனது வீரமோ இத்தன்மையது; எனில் - என்றால், மூவகைஉலகுஉம் நின்மொழியின் முந்தும்ஓ - மூன்றுவகை யுலகங்களும் உனது கட்டளையைக் கடக்குமோ? [கடக்கமாட்டா வென்றபடி]; (இங்ஙனமிருக்க), சிறுக நோக்கல் என் - (உன்னை நீ) குறையுடையனாகப்பார்க்கவேண்டியது என்ன? (எ - று.)

நீ இட்ட கட்டளையை இயற்றுநரோ, அனுமராதியரான நாங்கள்: புருடோத்தமா! நின் தம்பியோ அழியாபபெருவலிபடைத்தவன்: நீயோ அசகாயசூரன்; இவ்வாறிருக்க, உன்னைக் குறைவுற நினைக்கின்றாயே! இம்மூவுலகும் உன்பேச்சைமீறிநடக்கவல்லதோ? என்றவாறு. 'நின்சேவகம் இது' என்று சுட்டியது, 12-ஆங் கவியிற் குறித்ததை. துணைவர் - உதவி செய்பவராயிருப்பவர்: இது, தன்மைப்பன்மை

விருதி பெற்றுவந்தது. பெருவலி - மகாபலம். நம்பி - புருஷோத்தமன். சிறுக நோக்கல் - எளியவனாகப் பாவித்தல். 'மூவகையுலகு' என்றது, மேல் கீழ் நடு என்ற நோக்கத்தால். இங்கு 'உலகு'என்றது, அவ்விடத்து உயிர்கள்மேல் நின்றது. பி - ம்:—[1] துணைவரோ, துணைவரோம். [2] சிறிது நோக்கியென், சிறுகநோக்கியென், சிறுக நோக்கிலம். (217)

15. [1] பெருமையோ ராயினும் பெருமை [2] பேசலார்
[3] கருமமே யல்லது பிறிதென் கண்டது
தருமநீ யல்லது தனித்து வேறுண்டோ
அருமையே [4] துனக்குநின் றவலங் கூர்தியோ.

(இ - ள்.) பெருமையோர் ஆயின்உம் - (உத்தமர்கள் தாம்) பெருமையுடையவர்களாயிருந்தாலும், பெருமை பேசலார் - (தங்கள்) பெருமையை(த்தாங்களே) சொல்லமாட்டார்கள்; (ஆகவே), கருமம் ஏ அல்லது பிறிது கண்டது என் - அவர்கள்செய்த செயல்களை (உலகம்) கண்டதல்லாமல் வேறுகண்டதுயாது? தருமம்நீ அல்லது தனித்து வேறு உண்டுஓ - தருமம் நீயே யல்லாமல் தனியே (உன்னைக்காட்டிலும்) வேறொன்று உள்ளதோ? உனக்கு அருமைஏது - (இங்ஙனமான) உனக்கு அசாத்தியமான செயல் எது? [எதுவுமில்லையென்றபடி]; (இவ்வாறிருக்கவும்), நின்று அவலம் கூர்திஓ - (நீ ஒன்றுஞ் செய்யமாட்டாதவன்போலத் திகைத்து) நின்று துயர் கொள்ளக்கடவையோ? (எ - று.)

பெரியோர் தம்திறமையைச் செயலாற் காட்டுவதல்லது வாயினாற் பேசார்: ஆகவே, பெரியோனாகிய நீ உன்செயலாற் பெருமையைக்காட்டவேண்டியிருக்க, அவலங்கூர்தல் தக்கதோ? அன்று என்றவாறு. பெருமை - அறிவு, ஆற்றல், செயற்கரியனசெய்தல் முதலிய சிறப்புக்கள். "பெருமை பெருமிதமின்மை" என்றபடி செருக்கின்றியிருத்தல் பெரியோர்கட்குஇயல்பு ஆதலால் தமது பெருமையைத் தாமே எடுத்துச்சொல்லாரென்க. அப்படிச்சொல்லிக்கொள்ளுதல் சிறியோரியல்பா மென்பதை 'சிறுமையணியுமாந் தன்னை வியந்து" என்றதனா லுணர்க. அவர்கள் தமது பெருமையைத் தாம் கூறாமல் அரியசெயல்களைச் செய்தல் மாத்திரமுடையராகவே, உலகம் அவர்களது செயலைக் காண்பது உண்டேயன்றி வேறொன்றைக் காணவல்லதன்று என்பது, இரண்டாமடியின் கருத்து. இனி, இதற்கு - பெரியோர் தாம் செய்யக் கடவனவான காரியங்களையே நோக்குவார்களல்லது அவர்கள் நோக்குவதுவேறு யாது? என்றலுமாம்: "கருமமே கண்ணாயினர்" என்றபடி. தருமமூர்த்தியாவாய் நீ யென்பது, மூன்றாமடியின்பொருள். நின்று - எளியவர் போல நின்று. பி - ம்:—[1] பெருமையோராயினர். [2] பேசினர், பேசுவார், போரெனக். [3] பெருமையே. [4] உனக்குநீ. "பெருமை

யோராயினும் பெருமைபேசுவார்க்கு, அருமையேயல்லது" என்று முன்னிரண்டடிகட்குச் சில பிரதிகளிற் பாடம். (218)

16. முளரிமேல் வைகுவான் முருகற் றந்தவத்
தளிரியல் பாகத்தான் தடக்கை யாழியான்
அளவியொன்[1] ருவரே யன்றி யையமில்
[2] கிளவியாய் தனித்தனிக் [3] கிடைப்ப ரோதுணே.

(இ - ள்.) ஐயம் இல் இளவியாய் - சந்தேகமில்லாத பேச்சுக்களை யுடையவனே!—முளரிமேல் வைகுவான் - (திருமாலின் நாபித்) தாமரைமலரில் தோன்றிவாழ்பவனுன பிரமனும், முருகன் தந்த அ தளிர் இயல் பாகத்தான் - முருகக் கடவுளைப் பெற்ற தந்தையும் தளிர்போல்மெல்லிய இயல்பையுடையளான அம்பிகையை வாம பாகத்திற் கொண்டவனுமான அந்தச் சிவபிரானும், தட கை ஆழி யான் - பெரிய திருக்கையில் சக்கராயுதத்தை யுடையவனுன திருமாலும், ஒன்று அளவி (துணை) ஆவரே அன்றி - ஒன்று சேர்ந்து (உனக்கு) ஒப்பாக மாட்டுவரே யல்லாமல், தனித்தனி துணை கிடைப்பர் ஓ - (அவர்கள்) தனித்தனியே (உனக்கு) ஒப்பாகப்பொருந்துவரோ? (எ - று.)

திரிமூர்த்திகளும் கூடினுல் உனக்கு ஒப்பாகக்கூடுமேயன்றி அவர்களில் எவரும் தனியே உனக்கு ஒப்பாகமாட்டார் என்று ஸ்ரீராமபிரானது மகிமையைச் சுக்கிரீவன் கொண்டாடியவாறும். 'துணை' என்பது, 'ஆவரே' என்றதனேடுங் கூட்டப்பட்டது. 'ஐயம்' என்றது, திரிபுக்கும் உபலக்ஷணம்; இரண்டும் மெய்ம்மைக்கு மாறும். பொருள்களை ஐயந்திரிபற விளக்கமாக எடுத்துக்கூறுந் தெளிவான பேச்சுக்களை யுடையவனே யென்பது, 'ஐயமில் இளவியாய்' என்றதன் கருத்து. 'முருகற்றந்த' என்றது, தளிரியல் பாகத்தானுக்கு அடைமொழி. பி-ம்:—[1] ஆவதே. [2] இளவியர், இளவியால். [3] கிடைப்பரோ துணே, கிடைப்பரோ நுணே. (219)

17. என்னுடைச் [1] சிறுகுறை முடித்த லீண்டொரீஇப்
பின்னுடைத் தாயினு மாக பேதுறும்
மின்னிடைச் சனகியை [2] மீட்டு மீடுமால்
பொன்னுடைச் சிலையினுய் விரைந்து [3] போபென்ருன்.

(இ - ள்.) பொன் உடை சிலையினுய் - பொலிவையுடைய வில்லை யுடையவனே!—என்னுடை சிறு குறை முடித்தல் - என்னுடைய சிறிய குறையை நிறைவேற்றுதலென்பதை, ஈண்டு ஒரீஇ - இப்பொழுதுஒழிந்து, பின் உடைத்து ஆயினும் ஆக - பின்னே (அச்செயல்) நிகழ்வதானுலும் ஆகட்டும்; விரைந்துபோய் - விரைவிற் சென்று, பேது உறும் - (இராவணன்கையிலகப்பட்டு) கலக்கமடைந்திருப்பவளான, மின் இடை சனகியை - மின்னல் போலும் இடையை

யுடைய சீதையை, மீட்டு - (அவனிடத்தினின்று) மீட்டுக்கொண்டு, மீடும் - திரும்பிவருவோம், என்றான் - என்று (ஸ்ரீராமனை நோக்கிக்) கூறினான், (சுக்கிரீவன்); (எ - று.)—விரைந்துபோய் மீட்டு மீடும், என்றான் என்க.

'என்னுடைச் சிறுகுறைமுடித்தல்' என்றது-வாலிவதஞ்செய்து தன் மனைவியான ருமையைமீட்டுக்கொடுத்தலை. இராவணனைவென்றவனான வாலியை வதைத்தலென்பது மிகவும் அரியபெரிய செயலேயாயினும் அதனைச்செய்து முடித்தற்கு ஏற்ற இராமலட்சுமணர்களது போராற்றலை மராமரமெய்ததனாலும், துந்துபியுடலையெறிந்ததனாலும் கண்கூடாகக் கண்டுள்ளானாதலால், அத்திறத்தை நோக்கி 'சிறுகுறை' என்றான். குறை - காரியம்; செய்து முடிக்க வேண்டியதாய் மிச்சமாயிருப்பது. பேது உறுதல் - பேதமுறுதல், கலங்குதல். இடைக்கு மின்னல் உவமை - மெல்லியவடிவிலும் ஒளியிலுமாம். மீடும் - மீள் + தும். பொன்னுடைச் சிலையினாய் - பொன்னால் அலங்கரிக்கப்பட்ட வில்லையுடையவனே யெனினுமாம்; ('காஞ்சந பூஷித சாபம்' என்றும், 'காஞ்சநசித்ர கார்முகம்' என்றும் வால்மீகி ராமாயணத்திற் காணப்படுகின்றது.) பி - ம்:—[1]சிறுமையை. [3]மீட்டுமீள்வமால். [3]போதுமால். (220)

18.—அவ்வளவில் இராமபிரான்ஒருவாறு மூர்ச்சைதெளிந்து சுக்கிரீவனை நோக்கிப் பேசத்தொடங்குதல்.

எரிகதிர்க் காதல னினைய கூறலும்
அருவியங் கண்திறந் தன்பி னோக்கினான்
[1]திருவுறை மார்பனுந் தெளிவு தோன்றிட
ஒருவகை யுணர்வுவந் துரைப்ப தாயினான்.

(இ - ள்.) எரி கதிர் காதலன் - சுடுகின்ற கிரணங்களையுடைய சூரியனது குமாரனான சுக்கிரீவன், இனைய கூறலும் - இவ்வாறான வார்த்தைகளைச் சொன்னவளவில்,—திரு உறை மார்பன் உம் - இலக்குமி வீற்றிருக்கின்ற மார்பையுடையவனான திருமாலின் அவதாரமாகிய ஸ்ரீராமபிரானும், தெளிவு தோன்றிட-மூர்ச்சைதெளிதலுண்டாக, ஒருவகை உணர்வு வந்து - ஒருவாறு பிரஜ்ஞைவரப் பெற்றவனாய், அருவி அம் கண் திறந்து - நீர்ப்பெருக்கையுடைய அழகிய (தன்) கண்களைத் திறந்து, அன்பின் நோக்கினான் - அன்போடு (சுக்கிரீவனைப்) பார்த்து, உரைப்பது ஆயினான் - (சிலவார்த்தைகள்) சொல்லுதலுடையவனானான்; (எ - று.)—அவற்றை, அடுத்த ஆறு செய்யுள்களிற் காண்க.

'என்குறை முடிப்பதைப் பின்னர்ப்பார்த்துக் கொள்ளலாம்; நீ இங்கேயேயிரு: உன்னேவலாளரான நாங்கள் இராவணனைத் தேடிக் கொன்று சீதையைமீட்டு வருகின்றோம்: விடைகொடுப்பாய்' என்று

இவ்வாறுசுக்கிரீவன்கூறியதுகேட்டு, அதுவரையிற் கண்ணைமூடிய படியே கேட்டிருந்த இராமன் தெளிவுதோன்றக் கண்களைத்திறந்து அன்புடன் பார்த்து, ஒருணர்ச்சி தோன்றக் கூறலாயினனென்ப தாம். எரிகதிர் - வினைத்தொகையன்மொழி. அருவியங்கண் - மலை யருவிபோல நீரைச்சொரியுங் கண். பி - ம்:—[1] திருவுடைமார்பன்.(221)

19.—இதுமுதல் ஆறுகவிகள் - இராமபிரான்வார்த்தை.

விலங்கெழிற் றோளிஞய் வினையி னேனுமிவ்
விலங்குவிற் [1] கரத்தின னிருக்க வேயவள்
[2] கலங்கழித் தனளிது [3] கற்பு மேவிய
[4] பொலங்குழைத் தெரிவையர் புரிந்து ளோர்கள்யார்.

(இ - ள்.) விலங்கு எழில் தோளிஞய் - மலைகள்போன்ற அழகிய தோள்களையுடையவனே!—வினையினேனும் - தீவினையுடையேனை யான், இ இலங்கு வில் கரத்தினன் - விளங்குகின்ற இந்தவில்லை யேந்திய கையையுடையவனுய், இருக்கவே - உயிர்வாழ்ந்திருக்கும் பொழுதே, அவள் - அந்த ஜாநகி, கலம் கழித்தனள் - (தனது) ஆபரணங்களைக் கழற்றியெறிந்து விட்டாள்; கற்பு மேவிய-பதிவிரதா தருமம் பொருந்திய, பொலன் குழை தெரிவையர் - பொன்னலாகிய குழையென்னுங் காதணியையுடைய மகளிரில், இது புரிந்துளோர்கள் யார் - இங்ஙனஞ் செய்தவர்கள் யாவரேனும்உண்டோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

'கணவன் இறக்கப்பெற்ற கற்புடைமகளிர் கலன்கழித்தல் இயல்பே; கணவன் உயிர்வாழ்ந்திருக்கையில் அவன்பிரிவைப் பொறுக்கமாட்டாத துயரத்தாலும் வேறேயொருநற்பயனைக் கரு தியும் இப்படித் தன்னுடைய அணிகலங்களைக்கழற்றியெறியுங் கற புடைமகளிர் சானகியைத் தவிர வேறு எவரேனும்உண்டோ?' என்று பிராட்டியின் சிறப்புற்ற பெரும்பண்பைப் பாராட்டிக்கூறிய வாரும். கணவன் வாழ்ந்திருக்கையிலேயே அவள் கலன் கழித்த மையைப் பற்றிய இரக்கமும் இதில் தோன்றும். மனைவி இங்ஙனம் பரிதாபமான நிலைமையை யடைதற்கேற்ற தீவினையுடையேன் யான் என்று தம்மைத் தாமே வெறுத்துக்கொண்டனர், மானுட பாவனையினல் பெருமாள். பகை வெல்லுதற்கேற்ற கருவி கையி லிருந்தும் பயனில்லாமை தோன்ற, 'இலங்குவிற்கரத்தினனிருக் கவே' என்றார். காதோலை மங்கலவாழ்க்கைக்கு இன்றியமையாததாத லால், சுமங்கலிஸ்திரீகளென்ற பொருளில் 'பொலங்குழைத்தெரி வையர்' எனப்பட்டது. விலங்கு - விலங்கல்: ஊர்க்கு ஒருபுறமாக விலகிநிற்பதுபற்றிய பெயர். பி - ம்:—[1] கரத்தினில், கரத்தினும். [2] கலன். [3] கறபின். [4] பொலன். இரண்டாம்அடி - இலங்குவில் கரத்தி னிலியைந்திருக்கவே, இலங்குநற் புவியினிலிருக்கவேயவள், பெலங் கெழு பூமியிலிருக்கப் பெய்வளை என வெவ்வேறுவகையாகக் காண்கிறது. (222)

20. வாணெடுங் கண்ணியென் வரவு நோக்கயான்
தாணெடுங் கிரியொடுந் [1]தடங்கள் தம்மொடும்
பூணொடும் [2]புலம்பியிப் பொழுது [3]போக்கினேன்
நாணெடுஞ் சிலைசுமந் [4]துழல [5]நாணலேன்.

(இ - ள்.) வாள் நெடுங் கண்ணி-வாள்போற் கூரிய நீண்ட கண்களையுடையவளான ஜாநகி, என் வரவு நோக்க - என்னுடைய வரவை எதிர்பார்த்து வருந்திக்கொண்டிருக்கவும், யான்—, (அவளது துன்பத்தைப் போக்க வழிதேடாமல்), தாள் நெடுங் கிரியொடும் - தாழ்வரைகளையுடைய பெரிய மலைகளுடனும், தடங்கள் தம்மொடும் - நீர்நிலைகளுடனும், பூணொடும்-ஆபரணங்களுடனும், புலம்பி-அழுது, இ பொழுது போக்கினேன் - இவ்வாறு காலத்தை வீணாய்க் கழித்துக் கொண்டிருக்கிறேன்: (மற்றும் யான்), நாண் நெடுஞ் சிலை சுமந்து உழல நாணலேன் - நாணியையுடைய நீண்ட வில்லைச் சுமந்துதிரிதற்கு வெட்கமுறாதிருக்கின்றேன்; (எ - று.)

'நான் வருவேன், சிறைமீட்பேன்' என்று என் மனைவி நினைத்திருக்க,மலையைப்பார்த்தும்,தடங்களைப்பார்த்தும் அப்பிராட்டியணிந்த அணிகலங்களைப்பார்த்தும்புலம்பி அழுதவண்ணம் நாளைப் போக்கிக் கொண்டிருக்கிறேன்: அவளைக் காத்தற்கு உதவாமற் போனதன்றி மீட்டற்கும் உதவாதிருக்கிற வில்லை நாணமின்றிச் சுமந்துகொண்டிருக்கிறேனே என்றனன் ஸ்ரீராமனென்க. 'சுமந்து' என்ற வினையின் ஆற்றலால், பகைவனை வென்று அவன் கவர்ந்த தமது பொருளை மீட்காதவர்களேந்தும் படைகள் அவர்கட்குச் சுமையாவதன்றிப் பெருமை பெறாவென்பது தோன்றும். 'உழல' என்றது எங்கேனும் ஒளித்திராமல் வெளிப்படையாய் எங்குந்திரியஎன்றபடி. மலையின் அடியைப் பாதமென்னும் மரபுபற்றி, 'தாள்' என்றார். 'நாண்' என்ற ஒரு சொல்லை வேறொருபொருளில் மீளவும் ஓதியது, சொற்பின்வருநிலையணி. பி-ம்:—[1]தருக்கடம்மொடும், தடக்கைதம்மொடும். [2]புலம்பினன், புலம்பிய, புலம்பினேன், புலம்பியே. [3]போக்கியிங். [4]உழல்வன். [5]நாணிலேன், நாணினேன். (223)

21. ஆறுடன் செல்பவ [1]ரஞ்சொன் மாதரை
வேறுளார் [2]துயர்செயின் விலக்கி வெஞ்சமத்து
ஊறுறத் தம்முயி ருகுப்பர் [3]யானெனைத்
தேறினள் தன்துயர் தீர்க்க கிற்றிலேன்.

(இ - ள்.) (தமக்கு யாதொரு தொடர்புமில்லாதவரும்), ஆறுடன் செல்பவர் - வழியிலே போகின்றவர்களான, அம் சொல் - அழகிய சொற்களையுடைய, மாதரை - மகளிரை, வேறு உளார் - வேறு எவரேனும், துயர் செயின்-துன்பப்படுத்தினால், விலக்கி - (அவர்களை (அது செய்ய வொட்டாதபடி) தடுத்து, வெம் சமத்து ஊறு உற-

(அவர்களைத் தாம் எதிர்த்துச் செய்யும்) கொடிய போரில் (அவர்களால் தமக்கு) ஊறுபாடு உண்டாக, தம் உயிர் உகுப்பர் - தமது உயிரையொழித்தலுஞ் செய்வர்; யான் - நானோ, எனை தேறினள்தன் - என்னையே நம்பியவளான ஜானகியின், துயர் - துன்பத்தை, தீர்க்ககிற்றிலேன் - நீக்கமாட்டாதவனாயிருக்கிறேன்; (எ - று.)

நல்லோர் தம்மோடு யாதோருறவுமில்லாமல் தற்செயலாய்த் தாம் செல்லும்வழியிற் செல்லும் மாதாரை ஆரேனும்துன்புறுத்தினால் அவரோடு அமர்புரிந்து அம்மாதரை மீட்கத் தம்முயிரையும் கொடுப்பார்; யானோ என்னையே நம்பியவளின் துன்பத்தையும் போக்காதிருக்கின்றேனே என்று வருந்துகின்றனன் இராமபிரானென்க.

[2]வலிசெயில் என்ற பாடத்துக்கு - வலியக்கவர்ந்து சென்றாலென்று பொருள். ஊறு - தழும்பு, தீமை, கொலை. 'உகுப்பரென்பதுந் தேறினன் றுயரநான் றீர்க்ககிற்றிலேன்' என்று பாடமானபோது, வழியே செல்பவர் மாதரைப் பிறர் வருத்துதலை விலக்கிப் போர் செய்யத்தொடங்கி அதில் ஊறுபாடுண்டாகத் தமது உயிரை நீப்பரென்பதையும் (சடாயு உயிர்நீத்ததனால்) நன்றாக அறிந்த யான் என் மனைவியின் துன்பத்தை ஒழிக்காமலிருக்கின்றேனேயென்று பொருள் காண்க. பி - ம்:—[1] அரிவைமார் தமை. [3] என்னையேதேறினாள்புன்கணோய். (224)

22. கருங்கடல் தொட்டனர் கங்கை தந்தனர்
பொரும்புலி மானொடு புனலு மூட்டினர்
பெருந்தகை [1]யென்குலத் தரசர் பின்னொரு
திருந்திழை துயரநான் [2]தீர்க்க நோற்றிலேன்.

(இ - ள்.) பெருந் தகை - பெருமைக் குணத்தையுடைய, என் குலத்து - எனது குலத்தில் (முன்பு தோன்றிய), அரசர்—, கருங்கடல் தொட்டனர் - கருநிறமான கடலைத் தோண்டினர்; கங்கை தந்தனர் - கங்கையை (மேலுலகத்திலிருந்து இவ்வுலகத்துக்குக்) கொணர்ந்தனர்; பொரும் புலி மானொடு புனல்உம் ஊட்டினர் - போர் செய்யுமியல்புள்ள புலியையும் மானையும் (ஒருதுறையில்) நீருண்ணவுஞ் செய்தனர்; பின் - அவர்கட்குப்பின் (பிறந்தவனான), நான் - நானோ, ஒரு திருந்து இழை துயரம் - திருத்தமான ஆபரணங்களையுடையவளாகிய என்மனைவி யொருத்தியின் துன்பத்தை, தீர்க்க - நீக்குதற்கு, நோற்றிலேன் - தவஞ்செய்யாதவனாக இருக்கின்றேன்! (எ - று.)

எனது குலத்துமுன்னோர்கள் கடலைத்தோண்டுதலும் கங்கையைக் கொணர்தலும், புலியும்மானும் ஒருதுறையில் நீருண்ணும்

படி செய்தலுமாகிய அரியபெரிய செயல்களைச் செய்து பெரும் புகழ் படைத்தற்கு வேண்டிய பேற்றை யுடையவராயிருந்தார்கள். அப்படிப் பட்ட பெரியோர்களுடைய மரபிற் பிறந்தவனான யானே, எனது மனைவியொருத்தியின் துன்பத்தை நீக்குதற்கு வேண்டிய பேறும் இல்லாதவனா யிருக்கின்றேனே? என்று இரங்கிக் கூறினனென்பதாம்.

சூரியகுலத்துச் சகரமகாராஜன் அசுவமேதயாகஞ் செய்தபொழுது பூமியை வலம்வருவதற்காகச் செலுத்தின குதிரையை, பொறாமைகொண்டதேவேந்திரன் மாயையால் ஒளித்துக்கொண்டு சென்று, பாதலத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த கபிலமுனிவர் பின்னே கட்டிவைக்க, அவ்வேள்விக்குதிரையை நாடிச் சென்று, சகரபுத்திரர் அறுபதினாயிரம்பேர் பூமிமுழுவதும் தேடிக் காணாது பாதாளத்திற்குப் போதற்பொருட்டுப் பெருவழியாகப் பரதகண்டத்தில் வடகிழக்குப் பக்கத்தில் தோண்டிச் செல்ல, அப்பெரும்பள்ளமே பின்பு கங்கை முதலியவற்றின் நீரினால் நிறைந்து சாகரமென்னும் பெயர் பெற்றுக் கடலோடு கூடித் தானும் கடலின்பாற்பட்டதென்பது கடல் தொட்ட கதை.

சூரியகுலத்துப் பகீரத சக்கரவர்த்தி, கபிலமுனிவரது கண்ணின் கோபத்தீக்கு இலக்காகி உடலெரிந்து சாம்பராய் நற்கதியிழந்த தனது மூதாதையரான சகரன்மக்கள் அறுபதினாயிரவரையும் நற்கதி பெறுவித்தற்பொருட்டு நெடுங்காலந் தவஞ்செய்து கங்காநதியை மேலுலகத்திலிருந்து கீழுலகத்திற்குக் கொணர்ந்தனனென்பது, கங்கை தந்த வரலாறு.

இரண்டாமடியாற் கூறியது - வலியவை எளியவற்றை வருத்தாதபடி அரசாட்சிசெய்தனனென்பது; இங்ஙனம் ஆண்டவன், சூரியகுலத்து மாந்தாதா என்னும் அரசன். இவனது அரசாட்சியில் எங்குஞ் சத்துவகுண காரியமாகிய சாந்தியே தலையெடுத்து நின்றதனால், பகுத்தறிவில்லாத விலங்குகளுக்கும் ஒன்றன்மேல் ஒன்றற்கு அன்பும் அருளும் உண்டாயினவேயன்றி இரசோகுண தமோகுண காரியங்களாகிய கொலை பகை அச்சம் முதலிய கொடுமைக் குணங்கள் உண்டாகவில்லை யென்க. அரசனது கட்டளையில் தமக்கு உள்ள நம்புதலால் எவையும் தம்மால் வருத்தத்தக்கவற்றையும் வருத்தவில்லையென்று அரசாட்சிநீதிமுறைமை விளங்கும்.

பெருந்தகை - குலத்திற்கு அடைமொழி; 'என்' என்பதற்கு அடைமொழியாக்கினால், தற்புகழ்ச்சியின்பாற்படும். திருந்திழை - வினைத்தொகையன்மொழி. நோற்றிலேன் - நல்வினையுடையனாகாமற்போனேன் என்றபடி. பி - ம்:—[1]பெருங்குலத்தரசரிற் பிறந்து. [2]தீர்க்ககிற்றிலேன். இச்செய்யுள் சில பிரதியில் அடுத்த செய்யுளுக்குப் பின் உள்ளது. (225)

23. இந்திரற் [1]குரியதோ ரிடுக்கண் தீர்த்திகல்
[2]அந்தகற் கரியபோ ரவுணற் றேய்த்தனன்
எந்தைமற் றவனின்வந் [3]துதித்த யானுளேன்
வெந்துயர்க் கொடும்பழி [4]வில்லிற் ருங்கினேன்.

(இ - ள்.) எந்தை - எனது தந்தை [தசரத சக்கரவர்த்தி], இந்திரற்கு உரியது ஓர் இடுக்கண் தீர்த்து - தேவேந்திரனுக்கு நேர்ந்ததொரு பெருந்துன்பத்தை நீக்கி, அந்தகற்கு இகல் அரிய - (பிராணிகளுக்கெல்லாம்) அழிவைச் செய்பவனான யமனுக்கும் எதிர்த்தற்கு அருமையான, போர் அவுணன் - போர்வலிமையுடைய சம்பராசுரனை, தேய்த்தனன் - அழித்திட்டான்; அவனின் வந்து உதித்த யான் - அவனிடத்தினின்று வந்து பிறந்தநானோ, வெம் துயர் கொடும் பழி - வெவ்விய துனபத்தைத் தருகின்ற கொடிய பழியை, வில்லின் - வில்லுடனே, தாங்கினேன் உளேன் - சுமந்தவனா யிருக்கின்றேன்; (எ - று.)

வெந்துயர்க்கொடும்பழி - மனைவியைக் கவர்ந்தவனை நாடிக் கொன்று மீட்காமையால் வந்தது. அது செய்யாத எனக்கு வில் ஒரு பாரமே யென்பதும் ஈற்றடியில் விளங்கும்; "சிலைசுமந்து (20)" என்றாற்போல. 'கொடும்பழி வில்லின் தாங்கினேன்' என்றது - புணர்நிலையணி. இடுக்கண் தீர்த்து அவுணற்றேய்த்தனன் - அவுணற்றேய்த்து இடுக்கண் தீர்த்தனன் என விகுதிபிரித்துக் கூட்டுதல் இலக்கணத்திற்கு ஏற்கும். மற்று - வினைமாற்று.

தண்டகாரணியத்தில் வைசயந்தமென்ற நகரத்திலே யிருந்து அரசாண்டு வந்தவனும் திமித்துவசனென்னும் மறுபெயருள்ளவனும், பற்பல மாயைகளில் தேர்ந்தவனுமான சம்பரனென்ற அசுரன் பல அசுரர்களையும் அரக்கர்களையும் உடன்கொண்டு சென்று தேவர்களுடன் பெரும்போர் செய்து அவர்களைப் பலவாறு வருத்தித் தேவராசனான இந்திரனையுமுட்பட வென்று அவனது பொன்னுலகத்தைக் கவர்ந்துகொண்டு துரத்திவிட, அங்ஙனம் அரசிழந்த தேவேந்திரன் தசரதசக்கரவர்த்தியை அடுத்துச் சரணமடைந்து தன்குறையைக் கூறித் தனக்கு உதவிசெய்யுமாறு வேண்ட, அவனது அந்நிலையை நோக்கி இரக்கங்கொண்ட தசரதர் அவ் வேண்டுகோட்கு இணங்கிக் கைகேயியையும் உடனழைத்துக் கொண்டு இந்திரனுக்கு உதவியாகத் தேவாசுரப்போரில் தலையிட்டுச் சம்பரனுடன் எதிர்த்துக் கடும்போர் புரிய, அந்த வெம்போரை ஆற்றமாட்டாமல் அசுரன் மாயையால் மறைந்து ஓட்டங் காட்டவே, அவன் சென்ற சென்ற திசைகளிலெல்லாம் தசரதர் விடாது தொடர்ந்துசென்று பொருது அவனைச் சுற்றத்துடன் கொன்று, முன்பு அவனாற் கவரப்பட்ட இந்திரனது அரசாட்சி தமக்கு உரியதாகப் பெற்றவராய் மீண்டு உடனே அவ்வரசாட்சியை இந்திரனுக்குக் கொடுத்தருளின ரென்பது, இங்கு அறிய வேண்டிய கதை.

பி - ம்:—[1] உற்றதோர், அரியதோர். [2] அந்தரத்து. [3] உதித்துளே னெழு, உதித்தயானெனில். [4] வேலிற், பெறவில். (226)

24. விரும்பெழி லெந்தையார் மெய்ம்மை வீயுமேல்
வரும்பழி [1] யென்றியான் மகுடஞ் சூடலேன்
கரும்பழி சொல்லியைப் [2] பகைஞன் கைக்கொளப்
பெரும்பழி சூடினேன் பிழைத்த தென்னரோ.

(இ - ள்.) விரும்பு - (யாவரும்) விரும்பத்தக்க, எழில் - அழகை யுடைய, எந்தையார் - எனது தந்தையாரது, மெய்ம்மை - சத்தியம், வீயுமேல் - தவறுமானால், பழி வரும் - (அதனால் எனக்குப்) பழியுண் டாகும், என்று—, யான்—, மகுடம் சூடலேன் - முடிசூட்டிக் கொள் ளாமல் வனவாசம் போந்தேன்; கரும்பு அழி சொல்லியை - கருப்பஞ் சாற்றை (இனிமை மிகுதியால்) வெல்கின்ற சொற்களை யுடையவ ளான தன்மனைவியை, பகைஞன் கைக்கொள - பகைவனான இரா வணன் வஞ்சித்துக்கவர்ந்துகொள்ள, (அதனால்), பெரும் பழி சூடி னேன் - மிக்கபழியை மேற்கொண்டேன்: பிழைத்தது என் - (யான் பழியினின்று) நீங்கியது எங்ஙனம்? (எ - று.)

தந்தையாரின் வாய்மையை நிலைநிற்கச் செய்யாவிட்டால் அத னால் பழிப்பு வருமே என்று அஞ்சி இராச்சியபட்டாபிஷேகஞ் செய்து கொள்ளுதலைவிட்டுத் தம்பிக்கு அரசுகொடுத்து வனவாசம் போந் தேன்: அங்ஙனம் வந்த இடத்தில் மனைவியைப் பகைவன் கவர்ந்து கொள்ளும்படியானதனாற் பெரும் பழிப்பை யடைந்தேன்; இப்படி யான் பழியினின்று தப்பும்வகையில்லாதவனானேனே! என்று இரங் கிக்கூறியவாறும்; பழிநீக்கிக் கொள்ளவந்தவனுக்குப் பெரும்பழிநேர்ந்த தென்ற இது - தகுதியின்மையணியாம். எந்தையார் மெய்ம்மை - தசரதர் கைகேயிக்குக் கொடுத்திருந்த இரண்டு வரங்கள். அவை தவறாமல் தசரதர் சத்தியவாதியாதற்பொருட்டே இராமன் வன வாசம் போந்தமை வெளிப்படை.

கரும்பு - அதன்சாற்றுக்கு முதலாகுபெயர். சொல் கருப்பஞ் சாற்றை அழித்தல் தனது இனிமைமிகுதிக்கு ஒப்பாகாமையால். அரோ - ஈற்றசை. பி - ம்:—[1] என்றலால், என்றிலன். [2] பகைஞர். (227)

25.—மீளவும் இராமன் மூர்ச்சிக்க, சுக்கிரீவன் தெளிவித்தல்.

[1] என்னநொந் தின்னன பன்னி [2] யேங்கியே
[3] துன்னருந் துயரத்துச் சோர்கின் றான்றனைப்
பன்னருங் கதிரவன் புதல்வன் பையுள்பார்த்து
அன்னவெந் துயரெனு மளக்கர் [4] நீக்கினான்.

(இ - ள்.) என்ன - என்று, இன்னன - இத்தன்மையவான வார்த்தைகளை, நொந்து பன்னி - வருந்திக்கொண்டே சொல்லி,

ஏங்கி - ஏக்கமடைந்து, துன்ன அருந் துயரத்து - சேரத்தகாத துக்கத்தினால், சோர்கின்றான்தனை - தளர்கின்றவனான ஸ்ரீராமனை,— பன்ன அருங் கதிரவன் புதல்வன் - வருணித்துச்சொல்லுதற்கு அருமையான கிரணங்களையுடையவனாகிய சூரியனது புத்திரனான சுக்கிரீவன்,—பையுள் பார்த்து - (அவனடைந்த) துன்பத்தைப் பார்த்து, அன்ன வெம் துயர் எனும் அளக்கர் நீக்கினான் - அந்தக் கொடிய துன்பமென்கிற கடலினின்று நீங்கிக் கரையேறச் செய்தான்; (எ - று.)

அன்ன வெந்துயர் - மூர்ச்சை; அதனினின்று நீக்குதல் - தெளிவித்தல். [2]ஈடழிந்து என்ற பாடத்துக்கு - மனோபலமும் தேக பலமும் ஒழிந்து என்க: அஞ்ஞான்று உன்னருளன இரண்டாமடி பிரிக்க. பன்னரு-நெருங்குதற் கருமையான எனினுமாம். அளக்கர் - அளக்க அரியது. ஈற்றடி - உருவகவணி. பி - ம்:—[1] இன்னனபல நினைந்தெண்ணி, இன்னனபல நினைந்தேங்கி, இன்னனபன்னிநொந்தெண்ணி, இன்ன நொந்தெண்ணிலபன்னி. [3]உன்னருந்துயருழந்துலைகின்றான்றனை, துன்னருந்துயரத்துளைகின்றான்றனை. [4]நீங்கினான். (228)

26.—எட்டுக்கவிகள்-குளகம்: இக்கவி, இராமபிரான் வார்த்தை.

ஐயநீ யாற்றலி [1]னாற்றி னேனலது
[2]உய்வனே யெனக்கிதி [3]னுறுதி வேறுண்டோ
வையகத் திப்பழி தீர மாய்வது
[4]செய்வனின் குறைமுடித் தன்றிச் செய்கலேன்.

(இ - ள்.) ஐய-அன்பனே! நீ ஆற்றலின்-நீ (என்னைத்) தேற்றியதனால், ஆற்றினேன் அலது-(எனது துன்பத்தை ஒருவாறு) தணித்துக் கொண்டேனேயல்லாமல், உய்வனே - (யான்) பிழைக்கக்கடவேனோ? எனக்கு இதின் உறுதி வேறு உண்டோ எனக்கு மானத்தைக் காட்டிலும் நல்லது வேறு உண்டோ? [இல்லையென்றபடி]; வையகத்து இபழி தீர மாய்வது செய்வன்-இவ்வுலகத்துப்பரவுகின்ற இப்பழிப்பு ஒழியும்படி இறத்தலைச் செய்வேன்; (ஆனால்) நின் குறை முடித்துஅன்றி செய்கலேன் - உனது குறையை நிறைவேற்றியல்லாமல் அது செய்யமாட்டேன்; ([5]எ - று.)

யான் மரணமடைவது என்னளவில் இனியதேயானாலும் உயிர் நண்பனான உனக்கு வாக்குதத்தம் செய்தபடி உன் மனைவியைக் கவர்ந்தவனைக் கொன்று அன்னவளை மீட்டு உனக்குக் கொடுத்தல்லாமல் மரணமடையற்பாலனல்லே னென்கின்றனன். வேறுண்டோ என்பதற்கு - எனக்கு நீ செய்த உதவியைக் காட்டிலுஞ் சிறந்தது வேறொன்று உண்டோ என்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1] ஆறினேனது. [2]உய்வனீ. [3]துறவு, உதவி, உய்தல். [4]செய்யநின். சில பிரதிகளில், எய்தியபழியினியின்னவாயபின், எய்திய பழியினியியல் பிணவது என்று மூன்றாமடி. (229)

27.—அச்சமயத்தில் அநுமான் சொன்ன வார்த்தைகளை இதுமுதல் ஏழுகவிகளிற் கூறுகின்றார்.

என்றன னிராகவ [1]னிளைய காலையில்
வன்றிறன் மாருதி [2]வணங்கி னநெடுங்
[3]குன்றிவர் தோளினாய் [4]கூற வேண்டுவது
ஒன்றுள ததனைநீ [5]யுணர்ந்து கேளெனா.

(இ - ள்.) என்றனன் இராகவன் - என்று கூறினன் இராமபிரான்; இளைய காலையில் - இந்தச் சமயத்தில்,—வல்திறல் மாருதி - மிக்க வலிமையையுடைய வாயுகுமாரனான அநுமான், வணங்கினன் - (இராமபிரானைத்) தொழுது,—'நெடுங் குன்று இவர் தோளினாய் - பெரியமலையையொத்த தோள்களையுடையவனே! கூறவேண்டுவது ஒன்று உளது - (நான்) சொல்லவேண்டுவது ஒன்றுஉண்டு: அதனை நீ உணர்ந்து கேள் - அதனை நீ திருவுளம்வைத்துக் கேட்பாயாக,' எனா - என்று சொல்லி,—(எ - று.)—'என நிகழ்த்தினன்' என மேல் 33 - ஆஞ் செய்யுளோடு தொடர்ந்துமுடியும்.

ராகவன் - வடசொல்: ரகுவென்னும் அரசனது குலத்தில் அவதரித்தவன். வல்திறல் - (பகைவர்க்குக்) கொடிய வலிமை யெனினுமாம். இவர்தல் - விரும்புதல், பொருந்துதல்; இங்கு, இது உவம வாசகமாய் நின்றது. உணர்ந்து கேள் - கேட்டுஉணர் என விகுதி பிரித்துக்கூட்டுதல் நலம். பி - ம்:—[1]என்ற. [2]வணங்கி நோக்கினன். [3]குன்றுயர். [4]கூறல். [5]உவந்து. (230)

28. கொடுந் [1]திறல் வாலியைக் கொன்று கோமகன்
கடுங்கதி ரோன்மக னாக்கிக் கைவளர்
நெடும்படை [2]கூட்டினா லன்றி நேடரிது
[3]அடும்படை யரக்கன திருக்கை [4]யாணையாய்.

(இ - ள்.) ஆணையாய் - ஆஜ்ஞை எங்குஞ்செல்லத்தக்கவனே! —கொடுந் திறல் வாலியை கொன்று - கொடியவலிமையுடைய வாலியை (முதலில்) வதைத்து, கடும் கதிரோன் மகன் கோமகன் ஆக்கி - வெப்பமான கிரணங்களை யுடையவனாகிய சூரியனது குமாரனை சுக்கிரீவனை (வாநரங்களுக்கு) அரசனாகச் செய்து, கை வளர் நெடும் படைகூட்டினால் அன்றி - செழித்து வளர்ந்துள்ள பெரிய (வாநர) சேனையைச் சேர்த்தாலல்லாமல், அடும்படை அரக்கனது இருக்கை நேடுஅரிது - கொல்லும்ஆயுதங்களையுடைய இராக்கதனாகிய இராவணனது இருப்பிடம் தேடியுணர்தற்கு அரியது;(எ-று.)

பிராட்டியைத் தேடி அவளுள்ள இடத்தைக் கண்டுபிடித்தற்குப் பலர் பல இடத்து ஏககாலத்துச் செல்லவேண்டுமாதலால், அதற்கு ஏற்ப வாலியைக்கொன்று சுக்கிரீவனை அரசனாக்கினால்தான் பெரும் படை திரட்டமுடியும்; அங்ஙன் தேடித் திரட்டினாலே அரக்கனிருக்

கையைக் காணமுடியுமென்பதாம். கைவளர் - எல்லாப் பக்கங்களிலும் மிகுதியாய்ப் பொருந்திய என்றும், கைபோல உரிய சமயங்களில் உதவுந்தன்மைமிக்க வென்றுங் கொள்ளலாம். கடுங் கட்டளையை யுடையவனேயென்பார், 'ஆணையாய்' என்றார். எங்கட்கெல்லாம் கட்டளை கூறத்தக்க தலைவனே! என்றவாறுமாம். மூன்றாமடியில், படை - சேனை; நான்காமடியில் படை - ஆயுதம். பி - ம்:—[1] தொழில். [2] கூடினால். [3] அடும்படை யரக்கர் தம், அடுந்திறலரக்கரது. [4] ஆணையால், ஆழியாய். (231)

29. வானதோ மண்ணதோ [1]மற்று வெற்பதோ
ஏனைமா நாகர்த மிருக்கைப் பாலதோ
[2]தேனுலாந் தெரியலாய் [3]தெளிவ தன்றுநாம்
[4]ஊனுடை மானிட மான துண்மையால்.

(இ - ள்.) தேன் உலாம் தெரியலாய் - வண்டுகள் வந்து மொய்க்கும் மலர்மாலையையணிதற்கு உரியவனே!—(இராவணன் இருப்பிடம்), மண்ணதுஓ-தரையிலுள்ளதோ? மற்று—, வெற்பதுஓ-மலைகளின் மேலுள்ளதோ? வானதுஓ - (அன்றி) வானத்திலுள்ளதோ? ஏனை - இவற்றினும் வேறான, மா நாகர்தம் இருக்கை பாலதுஓ - பெரிய நாகலோகத்திலுள்ளதோ? நாம்—, ஊன் உடை மானிடம் ஆனது உண்மையால் - குறைபாடுடைய மனிதப்பிறப்பின்பாற் பட்டிருத்தலால், தெளிவது அன்று - (இன்னவிடத்ததென்று) எளிதில் அறியக்கூடியதன்று; (எ - று.)

மானுடசாதிக்குக் குறைபாடு, தேவர்கள்போல இருந்தவிடத்திலிருந்தபடியே அறிவின்வன்மையால் எல்லா வுலகங்களின் செய்தியையும் அறியமாட்டாமை; பொதுநெறிபற்றி, இந்த அடைமொழி மனிதசாதிக்குக் கொடுக்கப்பட்டது. இனி, ஊனம் - ஆகாசகமனத்தால் எங்குஞ் செல்லமாட்டாமையுமாம். அநுமான் முதலியோர் முகத்திலும் வாலிலும் வானரம்போலினும் மற்றைப்படி மனிதர் போன்ற வடிவமுடையராதலால், 'நாம் மானிடமான துண்மையால்' என்று அநுமான் கூறினன். நாகர்தமிருக்கை-சர்ப்பசாதியார் வசிக்குமிடம்; கீழுலகம். தேன்உலாம் - (மலர்களில்) தேன்ததும்பப் பெற்ற எனினுமாம். ஊன், மானிடம் - ஊநம், மாநுஷம் என்ற வடசொற்களின் விகாரம். பி - ம்:—[1] மாறு, மற்றும். [2] தேனுள, தேனுளர், தேனமர். [3] தெரிவதன்றவர், தெளிவதன்றுதாம். [4] ஊர்நமக்குற்றுழியுதவல், ஊர்நமக்குற்றுழியுறுதல். (232)

30. [1]எவ்வுல கங்களு மிமைப்பி னெய்துவர்
வவ்வுவ ரவ்வழி மகிழ்ந்த யாவையும்
வெவ்விணை வந்தென வருவர் மீள்வரால்
அவ்வவ [2]ருறைவிட [3]மறியற் பாலதோ.

(இ - ள்.) (அந்த ராக்ஷஸர்களோ), இமைப்பின் எ உலகங்கள்உம் எய்துவர் - ஒருமாத்திரைப்பொழுதிலே எல்லாவுலகங்களிலும் போய்ச்சேருவார்கள்; அவழி மகிழ்ந்த யாவைஉம் வவ்வுவர் - (தாம் சென்ற) அந்த இடங்களில் தாம் விரும்பிய பொருள்களெல்லாவற்றையும் கவர்ந்துகொள்வார்கள்; (இங்ஙனம் எல்லாவிடத்தும்), வெவ்வினை வந்து என வருவர் - (அவ்வவ்வுயிர்கள் செய்த) கொடிய கருமம் (தடுக்கமுடியாமலும் எதிர்பாராமலும் திடீரென்று பயனூட்ட) வந்தாற்போல வருவார்கள்; மீள்வர் - (அவ்வினை பயனூட்டியவுடன் தொலைவதுபோல அங்கங்கு விரும்பிய பொருள்களைக் கவர்ந்துகொண்டவுடன்) திரும்பிச் செல்வார்கள்; ஆல் - ஆதலால், அ அவர் உறைவு இடம் அறியல் பாலதுஒ - அத்தன்மையையுடைய அவ்வரக்கர்கள் வசிக்குமிடம் எளிதில் அறியத்தக்கதாமோ? [ஆகாதென்றபடி]; (எ - று.)

ஒருபடிப்பட ஓரிடத்து நிலைத்துநில்லாமல் தாம் விரும்பியபடியே விரும்பிய இடத்துத் திடீரெனச்சென்று வேண்டியன வவ்வி விரைந்துமீள்வராதலால், அவரிருக்குமிடத்தைக் கண்டுபிடித்தலெளிதன்றென்பதாம். இமைப்பு - இயல்பாகக் கண்ணிமைக்கும் பொழுது. ஆல் - ஆதலால் என்பதன் விகாரம். பி - ம்:—[1]எவ்வுலகத்தினும். [2]உறையிடம். [3]அளவின்பாலதோ, அறிதற்பாலதோ. (233)

31\. ஒருமுறை யே[1]பரந் துலகம் யாவையும்
[2]திருமக ளுறைவிடந் [3]தேர வேண்டுமால்
[4]வரன்முறை நாடிட வரம்பின் ருலுலகு
அருமையுண் [5]டளப்பரு [6]மாண்டும் வேண்டுமால்.

(இ - ள்.) ஒரு முறையே - ஒரே சமயத்திலே, உலகம்யாவையும் பரந்து-உலகங்களெல்லாவற்றிலுஞ் சென்றுபரவி, திருமகள் உறைவு இடம் தேரவேண்டும் - சீதாபிராட்டியிருக்கின்ற இடத்தைத் தேடியறியவேண்டும்; (அங்ஙனமின்றி), வரல்முறை நாடிட-வரிசைக்கிரமமாய் [ஓரிடத்தின்பின் மற்றோரிடமாக]த் தேடுதலில், உலகு வரம்பு இன்று ஆல் அருமை உண்டு-உலகம் வரையறையில்லாதபடி பரந்திடத்தலால் சிரமமுண்டு; (அன்றியும் அவ்வாறு தேடுதற்கு), அளப்பு அரும் ஆண்டுஉம்வேண்டும்-அளவிடுதற் கருமையான [மிகப்பலவான] வருடங்களும் செல்லும்; (எ-று.)

அரக்கர்கள் கணப்பொழுதில் எவ்வுலகத்திலுஞ் சென்று விரும்பிய பொருளைக் கவர்ந்து மீளத்தக்கவ ராதலால், ஏககாலத்திலே வாநரர்களெல்லாரும் வெவ்வேறாக உலகமுழுவதும் பரந்துசென்று பிராட்டியிருக்குமிடத்தைத் தேடியறிய வேண்டும்; அங்ஙனமின்றி, இரண்டொருவர் புறப்பட்டு ஓரிடத்தின்பின் மற்றோரிடமாக முறையே தேடுவதென்றால் உலகம் பெரும்பரப்பினதாதலால்

அருமையாகும்; மேலும் அதற்கு மிகப்பலயாண்டுகளும் சென்றிடும் என்பதாம். 'உலகு வரம்பின்றால் அருமையுண்டு' என்றது - நாம் ஓரிடத்தில் தேடுகையில் அவர் மற்றோரிடத்திலிருக்கவும், பின்னர் அந்த இடத்திற்போய்த் தேடுகையில் முன்பு தேடியான இடத்தில் அவர் வந்து சேர்ந்திருக்கவும் கூடுமாதலால் காரியம் சித்திபெறு தென்ற கருத்தைக் கொண்டது. 'ஆல்' மூன்றனுள் - முன்னதும், பின்னதும் அசை; மற்றையது - ஆதலால் என்பதன் விகாரம். பி-ம்:—[1] பெயர்ந்து. [2] திருவுறைவேறிடம். [3] தேட. [4] வருமுறை. [5] அள வில. [6] ஆண்டு. (234)

32. [1] ஏழுபத் தாகிய வெள்ளத் [2] தெம்படை
[3] ஊழியிற் கடலென வுலகம் [4] போர்க்குமால்
ஆழியைக் குடிப்பினு மயன்செ யண்டத்தைக்
கீழ்மடுத் தெடுப்பினுங் [5] கிடைத்த செய்யுமால்.

(இ - ள்.) ஏழுபத்து ஆகிய வெள்ளத்து எம் படை - எழுபது வெள்ள மென்னுந் தொகையையுடைய எமது [வானர] சேனை, ஊழியில் கடல் என உலகம் போர்க்கும் - கற்பாந்த காலத்துப் பொங்குங் கடல்போல உலகமுழுவதும் பரந்து மூடவல்லது; (மற்றும் அது), ஆழியை குடிப்பின் உம் - கடலைக் குடிக்க வேண்டுமென்றாலும், அயன் செய் அண்டத்தை கீழ் மடுத்து எடுப்பின் உம் - பிரமாண்டத்தைக் கீழேபிடித்து எடுக்கவேண்டுமென்றாலும், கிடைத்த செய்யும் - (அங்ஙனம் தமக்கு) நேர்ந்த கட்டளையைத் தவறாது செய்யமாட்டும்; (எ - று.)—'ஆல்' இரண்டும் - அசை.

மேலே 'கிடைத்த' என வருதலால், குடிப்பினும் எடுப்பினும் என்பவற்றிற்கு - குடியென்றாலுங், கீழ்மடுத்து எடு என்றாலும் என்க. இந்த எழுபது வெள்ளம் வானரசேனையும் நமது கட்டளைக்கு உள்ளாகி ஏககாலத்தில் உலகமுழுவதுஞ்சென்று பிராட்டியைத் தேடும்படி செய்தல் வேண்டுமென்றற்கு 'ஆழியைக் குடிப்பினும் அயன் செயண்டத்தைக் கீழ்மடுத்தெடுப்பினும் கிடைத்த செய்யும்' என்று இது கூறப்பட்டது. எம்படை - எம்மவர்கூட்டம். அயன் செய் அண்டம் - பிரமன் பிராணிகளைப் படைத்தற்கு இடமான அண்டம். கிடைத்த - பெயர். மடுத்தல் - கொள்ளல். பி - ம்:—[1] எழுபத் தெனவுள. [2] எண். [3] பூழியில். [4] பேர்க்குமால். [5] கிடைத்தல், கிளத் தல். (235)

33.—அநுமான் சொன்னதை இராமன் அங்கீகரிக்க, அனைவரும் வாலியிருக்குமிடத்தை நோக்கிப் புறப்படுதல்.

ஆதலா லன்னதே யமைவ தாமென
நீதியாய் நினைந்தனெ னெனநி கழ்த்தினன்
சாதுவா மென்றவத் [1] தனுவின் செல்வனும்
போதுநாம் வாலிபா லென்னப் [2] போயினர்.

(இ - ள்.) ஆதலால்—, நீதியாய் - நீதிநெறியையுடையவனே! அன்னது ஏ அமைவது ஆம் என நினைந்தனென் - முன்பு வாலியைக் கொன்று பிராட்டியைத் தேடுவதே தக்கதாமென்று எண்ணுகின்றேன், என நிகழ்த்தினன் - என்று (அநுமான்) கூறினன்; சாது ஆம் என்ற - (நீ சொன்னது) தக்கதே என்று கூறிய, அ தனுவின் செல்வன் - அந்த வில்வீரனாகிய ஸ்ரீராமனும், நாம் வாலி பால் போதும் என்ன - '(ஆனால்) நாம் (இப்பொழுது) வாலியினிடத்திற்குச் செல்வோம்' என்று சொல்ல, போயினர் - (சுக்கிரீவனும் அவன் மந்திரிகளாகிய நால்வரும் இராமலக்குமணரும் புறப்பட்டு அவ்விடத்தைக் குறித்துச்) செல்லலானார்கள்; (எ-று.)—சுக்கிரீவன் மந்திரிகள் நால்வர் - அநுமான், தாரன், நளன், நீலன் என்பர்.

வாலியைக் கொன்று படைதிரட்டிச் சீதையிருக்குமிடத்தைத் தேடுவதே தக்கதென நினைந்தேனென்று அநுமன்கூற, இராமனும் உடன்பட யாவரும் வாலியிருக்கை நோக்கிச் செல்லலாயினரென்பதாம். கீழ் 28-ஆங் கவியிற் கூறியது, இக்கவியில் 'அன்னது' எனச் சுட்டப்பட்டது. சாதுஆம்என்ற - (அநுமான் வார்த்தையை) நல்லதென்று உடன்பட்ட என்றுமாம்: சாது - அங்கீகாரத்தை யுணர்த்தும் வடசொல். சாது ஆம் என்ற - சற்குணமுடையோன் என்னப்படுகிற என்பாரும் உளர். தனுவின் செல்வன் - வில்லினால் வரும் மேன்மையை யுடையவன். முதலடி - முற்றுமோனை. பி - ம்:—[1] தனுவினுதனும். [2] போயினன். (236)

வேறு.

34.—அவர்கள் மலைச்சாரல்வழியே செல்லுதல்.

[1] வெங்க ணாளி யேறு மீளி மாவும் வேக நாகமும்
சிங்க வேறி ரண்டொ டுந்தி ரண்ட வன்ன செய்கையார்
தங்கு சால மூல மார்[2] த மால மேலம் வாழைமாப்
பொங்கு நாக முந்[3] து வன்று சார லூடு போயினர்.

(இ - ள்.) வெம் கண் ஆளி ஏறு உம் - அச்சந்தருகின்ற கண்களையுடைய ஆண்யாளி யொன்றும், மீளி மா (இரண்டு) உம் - பராக்கிரமத்தையுடைய புலிகளிரண்டும், வேகம் நாகம் (இரண்டு) உம் - நடைவிரைவையுடைய யானைகளிரண்டும், சிங்கம் ஏறு இரண்டொடும் திரண்ட அன்ன - இரண்டு ஆண்சிங்கங்களுடனேகூடிச் சென்றனபோன்ற, செய்கையார் - தன்மையை யுடையவர்களாய், (சுக்கிரீவனும் அவன்மந்திரிகள் நால்வரும் இராமலட்சுமணர்களும்), —தங்கு சாலம் - நிலைபெற்ற ஆச்சாமரங்களும், மூலம் ஆர் தமாலம்- வேரூன்றிய பச்சிலைமரங்களும், ஏலம் - ஏலமரக்கொடிகளும், வாழை- வாழைமரங்களும், மா - மாமரங்களும், பொங்கு நாகம்உம்-செழித்து

வளர்கின்ற சுரபுன்னைமரங்களும், துவன்று - நெருங்கிய, சாரலூடு - மலைச்சாரல்களின் வழியாக, போயினர் - செல்லலானார்கள்; (எ - று.)

'சிங்கவேறு' என்பதை அடுத்துள்ள 'இரண்டு' என்ற சொல், 'மா' என்றதனோடும், 'நாகம்' என்றதனோடும் கூட்டப்பட்டது, தகுதி பற்றி. ஆளியேறு - சுக்கிரீவனுக்கும், புலியிரண்டு-அவன் மந்திரிகள் நால்வருள் நளன் நீலன் என்பவர்க்கும், யானையிரண்டு - அநுமான் தாரன் என்பவர்க்கும், சிங்கவேறிரண்டு - இராமலக்ஷ்மணர்க்கும் உவமையெனக் காண்க. பல பராக்கிரமங்களின் மிகுதிபற்றி, யாளி முதலியன ஒப்பாம். மிருகராஜனாகிய சிங்கம் உவமை, சக்கரவர்த்தி திருக்குமாரர்களுக்கு ஏற்றது; பிறவும் இங்ஙனங் காண்க. அரிய பெரிய மலைகளிலே சிரமமின்றி அலக்ஷியமாக ஏறியும் இறங்கியும் கம்பீரமாகச் செல்லுதற்கும் இவ்விலங்குகள் ஒப்பாகத்தக்கன. நாகமும் என்ற உம்மை - செவ்வெண்ணின் ஈற்றதாகிய எச்சவும்மை. மூலம் ஆர்-அடி பருத்த என்றும், தலைமைபெற்ற என்றும் உரைக்கலாம். சார்ந்துள்ளது சாரலென, மலைப்பக்கத்துக்குக் காரணக்குறி. பி - ம்:—[1]வெங்கணகம். [2]தமால மேலமாலைபோற், தமால மேகமாலைபோற், தமால மேல மாலுடன், தமால மேகவாழைமா. [3]துவன்ற. சிலபிரதியில் வெங்கண்யானையோடு பாயும் வேங்கை தானும் வேகமாம் என்று முதலடி.

இக்கவிமுதலாகவே வாலிவதைப்படலம் என்று சிலபிரதிகளிற் காணப்படுகின்றது.

இதுமுதற் பன்னிரண்டு கவிகள் - எழுசீராசிரியவிருத்தங்கள்; இவை சந்தக்குழிப்புக்கு ஒத்துவாராமையால், சந்தவிருத்தங்களாகா; இனி, இவற்றை முதலாறு சீர்களையும் மூன்று பெருஞ்சீர்களாகப் பிரித்துக் கலிவிருத்தமென்றல் ஒருசாரார் கொள்கை. (237)

35.—இதுமுதல் ஏழுகவிகள்—அம்மலைவழியிற் காணலாகும் காட்சி வருணனை.

உழையு லாநெ டுங்கண் மாத ரூச [1]லூச லல்லவே
[2]தழையு லாவு [3]சந்த லர்ந்த சாரல் [4]சார லல்லவே
மழையு லாவு முன்றி லல்ல மன்றல் நாறு சண்பகக்
குழையு லாவு சோலை [5]சோலை யல்ல பொன்செய் குன்றமே.

(இ - ள்.) (அந்தவழி யெல்லாம்),—உழை உலாம் நெடுங்கண் மாதர் ஊசல் - மான்பார்வைபோன்ற (நோக்கமுள்ள) நீண்ட கண்களையுடைய வாநரமகளிர் ஆடும் ஊஞ்சல்களும்,—ஊசல் அல்லவே - அந்த ஊஞ்சல்களல்லாத இடங்களிலே, தழை உலாவு சந்து அலர்ந்த சாரல் - தழைகள் காற்றிலசைந்தாடப்பெற்ற சந்தனமரங்கள் மலர்ந்த மலைச்சாரல்களும்,—சாரல் அல்லவே - அச்சாரல்களல்லாத இடங்களிலே, மழை உலாவு முன்றில் - மேகங்கள் சஞ்சரிக்கப்

பெற்ற (மலைகளின்) முன்னிடங்களும்,—அல்ல - அவையல்லாத இடங்களில், மன்றல் நாறு குழை உலாவு சண்பகம் சோலை - வாசனை வீசுவனவும் தளிர்விளங்குவனவுமான சண்பக மரங்களினாலாகிய சோலைகளும்,—சோலை அல்ல - அச்சோலைகளல்லாத இடங்களில், பொன் செய் குன்றமே - பொன்னை உண்டாக்குகின்ற சிறுமலைகளு மேயா யிருந்தன; (எ - று.)

அவர்கள் செல்லுமிடங்களில் ஊஞ்சல் முதலியன இருந்தன என்பதாம். ஊசல், ஊசலல்ல சாரல், சாரலல்ல முன்றில், அவையல்ல சோலை, சோலையல்ல குன்றம் எனத் தொடர்ச்சிபடுத்திச் சொன்னது, ஒற்றைமணிமாலையணி; இதனை வடநூலார் ஏகாவளியலங்கார மென்பர். பின் பின்னாக வருவனவற்றிற்கு முன்முன்னாக வந்தவற்றை விசேஷியங்களாகவேனும் விசேடணங்களாகவேனுஞ் சொல்லுதல், இதன் இலக்கணம். இங்குவிசேடணமாகக் கூறியது. "நென்மலை யல்லன நிறைவருதாளம், சொன்மலையல்லன தொடுகடலமிர்தம், நன்மலை யல்லன நதிதரு நிதியம், பொன்மலையல்லன மணிபடு புளினம்" என்ற பாலகாண்டச் செய்யுளும் இவ்வாம்பாடமைந்ததாதல் காண்க.

உலாம் - உவம வாசகம். உழை - மான்; ஆகுபெயராய் அதன் நோக்கினை யுணர்த்திற்று. இனி, உழை உலாம் - நோக்கத்தாற் பக்கங்களில் உலாவுகின்ற என்றலுமாம். பொன் செய்குன்றம் - பொன்உண்டாகப்பெற்ற குன்றுகள்; பொன்மயமான குன்றுகளென்றும், விளையாட்டின்பொருட்டுப் பொன்னாலியற்றப்பட்டசெய்குன்றுகள் [செயற்கைமலைகள்] என்றும், அழகுசெய்கின்ற குன்றுகளென்றும் உரைப்பினும் அமையும். பி - ம்:—[1] அல்லவல்லவேல். [2] தழையுலாவ. [3] சந்துலாவு. [4] அல்லவல்லவேல். [5] அல்லவல்ல. (238)

36. அறங்கள் நாறு மேனி யார ரிக்க ணங்க ளோடுமங்கு
இறங்கு போது மேறு போது மீறி லாத[1] வோதையால்
கறங்கு வார்க ழற்க லன்க லிப்ப முந்து கண்முகிழ்த்து
உறங்கு [2]மேக நன்கு ணர்ந்து மாக மீது லாவுமே.

(இ - ள்.) அறங்கள் நாறும் மேனியார் - தருமங்கள் விளங்குந் திருமேனியையுடையவர்களான இராமலட்சுமணர்கள், அரிகணங்களோடும் - வானரவீரர்களுடைய கூட்டங்களுடனே, அங்கு - அம்மலைச்சாரல்வழியில், இறங்குபோதும் ஏறுபோதும் - இறங்குகின்ற பொழுதும் ஏறுகின்றபொழுதும், கறங்கு வார் கழல் கலன் - (அவர்கள் காலிலணிந்துள்ள) ஒலிக்குமியல்பையுடைய நீண்ட வீரக்கழலாகிய ஆபரணம், ஈறு இலாத ஓதையால் கலிப்ப - எல்லையில்லாத ஓசையுடனே ஒலித்தலால், முந்து கண்முகிழ்த்து உறங்கும் மேகம் - முன்பு (அம்மலைகளிற்) கண்மூடியுறங்கிக் கொண்டிருந்த மேகங்கள், நன்கு உணர்ந்து - நன்றாகத் தூக்கந்

தெளிந்து, மாகம்மீது உலாவும் - பெரிய வானத்திற் சஞ்சரிக்கும்; (எ - று.)

இவர்கள் இறங்கியும் ஏறியும் காலணிகள் ஒலித்து ஆரவாரிக்க விசைபட நடந்துவருதலால் மலைச்சாரல்களிற் படிந்து கிடக்கின்ற மேகங்கள் அங்குச் சிதறுவனவாயின என்பதாம்: இங்கு மேகத்தினிடத்து விலங்கின் தன்மையை யேற்றி இவ்வாறு குறித்தார்; தற்குறிப்பேற்றவணி. இராமலக்ஷ்மணர்களுடைய தோற்றத்தைக் காணும் பொழுதே அவர்கள் தருமகுணமுள்ளவர்களென்பது நன்கு விளங்கும்படியிருத்தலால், "அறங்கள் நாறுமேனியார்" என்றார். 'அரிக்கணங்கள்' என்பது, கீழ்க்கூறிய ஐந்து வாநரர்களை. பி - ம்:—[1]ஓதையாய், ஓசையால். [2]மேகமும் முணர்ந்துணர்ந்து, மேகமும் முணர்ந்துயர்ந்து. (239)

37. நீடு [1]நாக மூடு மேக [2]மோட நீரு [3]மோடநேர்
ஆடு நாக மோட மான [4]யானை யோட வாளிபோம்
மாடு நாக [5]நீடு சாரல் வாளை யோடும் [6]வாவியூடு
ஓடு நாக மோட [7]வேங்கை யோடும் யூக மோடுமே.

(இ - ள்.) (இவர்கள் விசைபட வரும்போது), மேகம் நீடு நாகமூடு ஓட - (கீழ்க்கூறியபடி) மேகங்கள் (சிதறியெழுந்து) உயர்ந்த வானத்திலே ஓடாநிற்க, நீரும் ஓட - (அங்ஙனஞ் சிதறும் மேகங்களினின்று) நீரும் வழிந்தோட,—மாடு நாகம் நீடு சாரல் - பக்கங்களிற் சுரபுன்னைமரங்கள் செழித்து வளரப்பெற்ற அம்மலைச் சாரல்களில் (இவர்கள் வரும் விசையால் அஞ்சி), நேர் ஆடு நாகம் ஓட - எழுந்து படமெடுத்தாடு மியல்புள்ள பாம்புகள் ஓடிப்போக, மானம் யானை ஓட - தணியாக்கோபமுடைய யானைகள் ஓட, ஆளி போம் - சிங்கங்களும் (அவற்றினுடனே) செல்லும்; வாவியூடு வாளை யோடும் ஓடு நாகம் ஓட - சுனைகளிலே வாளைமீன்களுடனே ஓடு மியல்புள்ள நீர்ப்பாம்புகளும் அஞ்சிவிலக, வேங்கையோடும் யூகம் ஓடும் - புலிகளுடனே கருங்குரங்குகளும் (அச்சத்தால்) ஓடுவனவாயின; (எ - று.)

அச்சத்தால் தடுமாறி யோடுமிடத்து, தம்மிற்பகையுடையனவும் ஒருங்குசேர்ந்து கொண்டு ஓடுதல், இயல்பு. மேகங்கள் நீர்சொரிந்து ஓடுதலையும் அச்சத்தாலானதாகக் குறித்தார். 'நாகம்' என்பது - ஆகாயம், பாம்பு, சுரபுன்னைமரம் முதலிய பல பொருள் குறிக்கும் ஒரு பெயர்த்திரிசொல். முதலடியில் 'நீடுநாகம்' என்றதனால் வானமென்பதும், இரண்டாமடியில் 'ஆடுநாகம்' என்றதனால் பாம்பென்பதும், மூன்றாமடியில் 'நாகநீடு' என்றதனால் மரமென்பதும், நான்காமடியில், 'வாவியூடோடுநாகம்' என்றதனால் நீர்ப்பாம்பென்பதும் விளங்கின. இவற்றிற்கு வேறுகூறின் பொருந்துமாயிற்கொள்க. பி - ம்:—[1]நாகமோடு. [2]ஓடும். [3]ஓடவே. [4]யானையோடுமாளிபோல். [5]மூடுசாரல்.

[6]வாவியாய், வர்வியோடு. [7]வேகமாடுமூக மோடவே, வேங்கையோடும் யூகமோடவே, வேங்கையூகம் வேகமோடவே. (240)

38. மருண்ட மாம லைத்த டங்கள் செல்ல [1]லாவ வல்லமால்
[2]தெருண்டி லாத மத்த யானை [3]சீறி நின்று [4]சிந்தலால்
இருண்ட [5]காழ கிற்றடத்[6]தொடிற்று வீழ்ந்த சந்துவந்து
உருண்டபோ[7]த ழிந்த தேனொ ழுக்கு பே[8]ரி ழுக்கினே.

(இ - ள்.) தடத்து - மலைப்பக்கங்களிலே, மால் தெருண்டிலாத - மயக்கந்தெளிந்திலாத, மத்த யானை - மதத்தையுடைய யானைகள், சீறி நின்று - கோபங்கொண்டுநின்று, சிந்தலால் - தாக்குதலினால், இற்று வீழ்ந்த - முறிந்து விழுந்த, இருண்ட காழ் அகில் ஒடு - கருநிறங்கொண்ட வயிரம்பற்றிய அகில்மரங்களுடனே, சந்து - சந்தன மரங்களும், வந்து உருண்டபோது - உருண்டுவந்தபோது, அழிந்த - (அவைபடுதலாற்) சிதைந்த, தேன் (தேன் கூடுகளிலுள்ள) தேன், ஒழுக்கு - ஒழுகுதலினாலாகிய, பேர் இழுக்கின் - மிக்க வழுக்கலினால், —மருண்ட மாமலை தடங்கள்-(அனைவரும்) மருளும்படியான பெரிய அம்மலைகளின் வழிகள், செல்லல் ஆவ அல்ல-எளிதில்நடந்து செல்லத்தக்கன வல்லவாயிருந்தன; (எ - று.)

மயக்கந்தெளியாத மதயானைகள் சீற்றங்கொண்டு மோதும் போது அகில்மரங்களும் சந்தனமரங்களும் முறிந்து விழுகின்றன: அங்ஙன் முறிந்து விழுந்த அம்மரங்கள் உருளும்போது படுதலால் அம்மலைகளிற்கட்டியுள்ள தேனிறால்கள் சிதைகின்றன: சிதைந்த அவற்றினின்று வழிகின்ற தேன்பெருக்கினால் அம்மலைகளின் வழிகள் வழுக்கலுடையனவாகிச் செல்வார்க்குக் கால்சறுக்குதலால் எளிதிற் செல்லவொண்ணாதபடி யிருந்தன என்பதாம்.

"குறவரும்மருளுங்குன்றம்" என்றபடி பலர்க்கும் அச்சம் விளைத்தலால், 'மருண்டமாமலை' எனப்பட்டது. மருண்ட - மருளுதற்குக் காரணமான என்க. 'தடத்தொடு' என்பதிலுள்ள 'ஒடு' உருபு பிரித்து, 'அகில்' என்பதனோடு கூட்டப்பட்டது. 'ஒழுக்கு பேரிழுக்கு' என இயல்பானது, செய்யுளோசை நயம்பற்றி. பி - ம்:—[1]ஆவதல்ல. [2]தெருண்டிலாமதத்த, தெருண்டிலாமதக்கை. [3]சிந்து நின்று. [4]இடித்தலால். [5]காரகில். [6]ஒடிந்துலர்ந்து, ஒடித்துலர்ந்த, இடிந்துலர்ந்த, ஒடிந்துவந்த. [7]அழிந்துதேன். [8]இழுக்கவே, இழுக்கரோ. (241)

39. மினன்ம ணிக்கு லந்து வன்றி[1]வில்ல லர்ந்து [2]விண்குலாய்
அனல்[3]ப ரப்ப வொப்பமீ[4]தி மைப்ப வந்[5]த விப்பபோல்
[6]புனல்ப ரப்ப வொப்பி ருந்த பொன்ப ரப்பு மென்பவால்
இணைய விற்ற டக்கை வீர[7]ரேகு கின்ற குன்றமே.

(இ - ள்.) மினல் மணி குலம் - மின்னுதலையுடைய (பதுமராக) இரத்தினங்களின் கூட்டம், துவன்றி - நிறைந்து, வில் அலர்ந்து - ஒளியினாற் பரவி, விண் குலாய் - ஆகாயமளவும் விளங்கி, அனல் பரப்ப ஒப்ப மீது இமைப்ப - நெருப்புப் பரவுவனபோல அம்மலைகளின் மேல் பிரகாசஞ் செய்ய,—வில் தட கை இனைய வீரர் - வில்லையேந்திய பெரிய கையையுடைய இந்த வீரர் [இராமலக்ஷ்மணர்], ஏகுகின்ற - செல்லுகின்ற, குன்றம் - அம்மலைகள், வந்து அவிப்ப போல் - விரைந்துவந்து (அந்நெருப்பை) அவிப்பனபோல, புனல் பரப்ப ஒப்பு இருந்த பொன் பரப்பும் - நீர் பரவுவனபோலிருந்த பொன்னொளியைப் பரவச்செய்யும், என்ப - என்று (தெரிந்த கவிகள்) வருணிப்பார்கள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை. 'என்ப' என்பதையும் அசை என்னலாம்.

அம்மலைகளிற் பதுமராக ரத்தினங்கள் நெருப்புப்போல ஒளிவீச அந்நெருப்பையவிக்கும் நீர்ப்பெருக்குப்போலப் பொன்னொளிவீசு மென்பது கருத்து.

மினல் - மின்னல்; தொகுத்தல். மணி - இங்கே - செம்மணி. பதுமராகம், மாணிக்கம். பி - ம்:—[1]விண்கலந்து. [2]கண்குலாம், கண் குலாய், மண்குலாய், கங்குலா, கங்குல்வாய், கங்குலாம், விண் குலாம். [3]பரப்பதொப்ப, பரப்பியொப்ப. [4]அலைப்ப, அமைப்ப. [5]இமைப்ப. [6]புனல்பரப்பு மாரிசிந்து, புனல்பரப்பதொப்பிருந்த. [7]ஏறுகின்ற. (242)

40. மருவி யாடும் வாவிதோறும் வான யாறு[1]பாயும்வந்து
இருவி [2]யார்த டங்கள் தோறு மேறு பாயு மாறுபோல்
அருவி பாயு முன்றி லொன்றி யானை பாயு மேனலில்
குருவி பாயு மோடி மந்தி [3]கோடு பாயு மாடெலாம்.

(இ - ள்.) மாடு எலாம் - அம்மலையிடங்களி லெல்லாம்,— மருவி ஆடும் வாவிதோறும் - விரும்பி நீராடத்தக்க எல்லாச் சுனைகளிலும், வான யாறு வந்து பாயும் - ஆகாசகங்காநதி வந்துபாயும்; இருவி ஆர் தடங்கள் தோறும் - அரிந்த தினைத்தாள் முதலியன பொருந்திய (புனங்களின்) இடங்கள் தோறும், ஏறு பாயும் ஆறுபோல் - இடபம் பாயும் விதம்போல, அருவிபாயும் - நீரருவிகள் பாய்ந்து பெருகும்; முன்றில் - (அத்தடங்களின்) முன்னிடத்து, ஆனை ஒன்றி பாயும் - யானைகள் பொருந்திப்பாயும்; குருவி ஏனலில் பாயும் - குருவிகள் தினைக்கதிர்களிற் பாயும்; மந்தி ஓடி கோடு பாயும் - பெண்குரங்குகள் விரைந்து மரக்கிளைகளின்மேற் பாயும்; (எ- று.)

மிகவோங்கி யிருத்தலால், அம்மலைவாவிகளில் வானயாறு படியும்: மற்றும், இருவியார்ந்தமலைத்தடங்கடோறும்ஏறுபாய்வது போல், அருவிபாயும்: அம்மலைத்தடத்து முன்றிலிலொன்றி யானை பாயும்: ஆங்குள்ள ஏனலிற் குருவிபாய, மந்தியோடிக்கோடுபாயும்;

இவ்வாறுள்ளன அம்மலைப்பக்கங்களென்பதாம். இப்பாடலுக்கு— 'மருவி...........வந்து, இருவியார் தடங்கண் மீனினேறுபாயுமாறு போல், அருவி பாயு மொன்றினொன்றி ஞனைபாயுமேனலிற்........... மாடெலாம்' என்று பாடபேதங்கொள்வார் உரைக்குமாறு:—ஆர் தடங்களில் மீனின்ஏறு, இருவியில் [தினைத்தாள்களில்] பாயும்; அருவி, யாறுபோல்பாயும்; யானைகள்ஒன்றன்மேல் ஒன்றுபாயும் என்பது.

அம்மலைகளின் பலவகைத் தன்மைகளை இதனாற் கூறுகின்றார். அம்மலைகளிலுள்ள விரும்பி நீராடத்தக்க நீர்நிலைகளில் ஆகாச கங்கா நதி வந்து பாயுமென்றதனால், அம்மலைகளினது வானத்தை யளாவிய மிக்கவுயர்ச்சிதோன்றும்; இது,தொடர்புயர்வுநவிற்சியணி. அம்மலைச் சுனைகளிலுள்ள ஆண்மீன்கள் அருகிற் புனங்களிலே இருக்கின்ற தினைத்தாள்களின்மேற் பாயுமென்றதில், மீன்களின் கொழுமை கூறுமுகத்தால், அம்மலைகளின் நீர்வளத்தை விளக்கியவாறும். அருவி - மலைநீர்ப்பெருக்கு. தனித்தனிச் சிறியதெனத்தக்க அம்மலை யருவி ஒவ்வொன்றுமே நதிபோலப் பாயுமென்றதனால், அந்நீர்ப் பெருக்கின்மிகுதி உணர்த்தப்பட்டது. அம்மலைகளிலுள்ள யானைகள் கொழுத்துமதமேறி ஒன்றோடொன்று மோதிப் பொருமென்க. தினை வளத்தாலும், கடிந்துகாப்பவரெவருமில்லாமையாலும், குருவிகள் தாம்விரும்பியபடி தினைக்கதிர்களிற்பாய்ந்து இரைகொள்ளும். ஆண் பாலிலும் வலிமை குறைந்ததெனத்தக்க பெண்பாலாகிய மந்தியும் ஒடி மரக்கிளைகளின் மேல் தாவுமென்றது, அம்மலைக்குரங்குகளின் கொழுமை கூறியபடி. மந்தி - குரங்கின் பெண்மைப்பெயர். கோடு-மலை யுச்சியென்றலும் அமையும். இருவி - அறுப்பறுக்கப்பட்ட தினைத் தாள். பி -ம்:—[1]பாய. [2]பாய். [3]கொம்பு. இச்செய்யுள் சிலபிரதிகளில் "தேனிழுக்கு" என்பதன் பின் உள்ளது. (243)

41. தேனி ழுக்கு சாரல் வாரி [1]செல்ல மீது [2]செல்லு [3]நாள்
மீனி ழுக்கு [4]மன்றி வான [5]வில்லி ழுக்கும் வெண்மதிக்
கூனி ழுக்கு [6]மற்று லாவு கோளி ழுக்கு [7]மென்பவால்
வானி ழுக்கு [8]மேல வாச மன்றல் நாறு குன்றமே.

(இ - ள்.) வான் இழுக்கும் - வானத்திலுள்ளாரையும் (தன்னிடத்து விரும்பி வருமாறு) இழுக்கின்ற, ஏலம் வாசம் மன்றல் நாறு குன்றம் - ஏலக்காய்களின் நறுமணம் வீசப்பெற்ற மலைகள்,—தேன் இழுக்கு சாரல் - தேன் பெருகுதலாலே வழுக்குகின்ற சாரல்களில், வாரி செல்ல - நீர் வெள்ளம் பெருகுதலால்,— மீது செல்லும்நாள் மீன்-வானத்திற்செல்லுகின்ற நக்ஷத்திரங்களை, இழுக்கும்—; அன்றி- அல்லாமலும், வான வில் - ஆகாயத்திற் காணப்படுகின்ற இந்திர தனுசை, இழுக்கும்—; வெண் மதி கூன் - வெண்மையான இளம் பிறைச் சந்திரனை, இழுக்கும்—; மற்று உலாவு கோள் - மற்றும் வானத்திற் சஞ்சரிக்கின்ற கிரகங்களை, இழுக்கும்—; என்ப-என்று (கவிகள்) வருணிப்பர்; (எ - று.)

அம்மலைகளின் உயர்வையும் அவற்றிற்பெருகுகின்ற நீர்ப்பெருக்கின் மிகுதியையும் நன்குவிளக்கும் தொடர்புயர்வுநவிற்சியணி. நாள் மீன் - தினத்தைக் குறிக்கின்ற அசுவினி முதலியன. மற்று உலாவு கோள் - நவக்கிரகங்களுள் சந்திரன் நீங்கலாகச் சூரியன் அங்காரகன் முதலிய எட்டு. வான் - வானவர்க்கு இடவாகுபெயர். வாச மன்றல் - ஒருபொருட்பன்மொழி. வானிழுக்கும் என்பதை ஏலவாச மன்றலுக்கு அடைமொழியாக்குதலும் ஒன்று. [8]மேலவாய மன்றனூறு என்ற பாடத்திற்கு - மேல ஆய என்றுபிரித்து மேன்மையுடையனவான, (பலவகை) வாசனைகள் வீசுகின்ற என்று பொருள் காணலாம். பி - ம்:—[1]சொல்லின். [2]செல்ல. [3]கான். [4]இன்றி. [5]மின். [6]மாறு, முற்று. [7]என்பரால். [8]மேலவாவு தென்றல்வாசம். (244)

42.—இராமன்முதலியோர் கிட்கிந்தமலையைச் சார்ந்து ஆலோசித்தல்.

அன்ன தாய குன்றி னூறு சென்ற வீர ரைந்தொடைந்து
[1]என்ன லாய யோச னைக்கு மும்ப ரேறி யிம்பரில்
பொன்னி ழ[2]டி ழிந்த தன்ன வாலி வாழ்பொ ருப்பிடம்
துன்னி னார்கள் செய்வ தென்னை யென்று நின்று [3]சொல்லுவார்.

(இ-ள்.) அன்னது ஆய - அத்தன்மையதான, குன்றின் ஆறு - மலைவழியிலே, சென்ற - போன, வீரர் - (இராமபிரான் முதலிய) வீரர்கள்,—ஐந்தொடுஐந்து என்னல் ஆய யோசனைக்கும் உம்பர் ஏறி - ஐந்தோடுகூடிய ஐந்து [பத்து] என்று எண்ணத்தக்க யோசனை தூரங்கட்கும் மேற்கடந்து, பொன்னின் நாடு இம்பரில் இழிந்தது அன்ன வாலி வாழ் பொருப்பு இடம் துன்னினார்கள் - பொன்மயமான தெய்வலோகம் இங்கு இறங்கிவந்தாற்போன்றதான வாலி வாழும் (கிஷ்கிந்த) மலையினிடத்தையடைந்து, நின்று - அங்குநின்று, செய்வது என்னை என்று சொல்லுவார் - இனிச் செய்யவேண்டுவதென்ன என்பதைக் குறித்து (த் தமக்குட்) பேசிக்கொள்ளலானார்கள்; (எ - று.)

அன்னதாய ஆறென்க. இரண்டாமடியில், 'உம்பரேறியிம்பரில்' என்றது-தொடைமுரணின்பாற்படும். பி-ம்:—[1]உன்னலாய. [2]இழிந்ததென்ன, இழிந்தவன்ன. [3]சொல்லுவான். (245)

கலன்காண்படலம் முற்றிற்று.

ஏழாவது

வாலிவதைப்படலம்

வாலியினது வதையைப் பற்றிக் கூறும் பாகம். இராமன் வாலியைக் கொன்ற செய்தியை உணர்த்துதலால், வாலிவதை என்ற இதில் ஆறனுருபு - செயப்படுபொருளது.

1.—அச்சமயத்தில் இராமபிரான் தன் கருத்தை வெளியிடுதல்.

அவ்வி டத்தி ராமனீ[1]ய ழைத்து [2]வாலி யானதோர்
[3]வெவ்வி டத்தின் வந்துபோர் விளைக்கு [4]மேல்வை வேறுநின்று
எவ்வி டத்து ணிந்த மைந்த தென்க ருத்தி தென்றனன்
[5]தெவ்வ டக்கும் வென்றி யானு நன்றி தென்று சிந்தியா.

(இ-ள்.) அ இடத்து - அச்சமயத்தில், தெவ் அடக்கும் வென்றியான் - பகைவர்களையழித்து அடையும் வெற்றியையுடையவனான, இராமன் - ஸ்ரீராமபிரான், சிந்தியா - ஆலோசித்து, இது நன்று - இதுதான் நல்லதென்று ஒன்றைத்துணிந்து, (அதனைச் சுக்கிரீவனை நோக்கிச் சொல்பவனும்),—'நீ—, வந்து - சென்று, அழைத்து - (வலியப்போர்க்கு) அழைத்து, வாலியானது - வாலியாகிய, ஓர் வெவ் விடத்தின் - ஒப்பற்ற கொடிய விஷத்துடனே, போர் விளைக்கும் ஏல்வை - எதிர்த்து யுத்தஞ் செய்யும் பொழுது, வேறு நின்று எவ்விட - வேறாக (ஓரிடத்தில் யான் மறைந்து) நின்று அம்பு செலுத்துவதாக, துணிந்து அமைந்தது - நிச்சயித்துப் பொருந்தியதாகிய, இது—, என் கருத்து - எனது கருத்து,' என்றனன-என்று சொல்லியருளினான்; (எ - று.)

கிஷ்கிந்தமலையையடைந்து இனிச் செய்வ தென்னவென்பதைக் குறித்து அனைவரும் பேசி யாலோசிக்கின்ற சமயத்தில், இராமபிரான் சிறிது சிந்தனை செய்து ஒன்றை நிச்சயித்துச் சுக்கிரீவனை நோக்கி, 'நீ சென்றுவாலியை வலியப் போர்க்கு அழைத்து அவனும் நீயும் போர்செய்கையில் நான் தனியேநின்று அவன்மேல் அம்புதொடுத்தெய்து அவனைக் கொல்லக் கருதினேன்' என்று கூறினனென்பதாம்.

சொற்களைப் பலவிடத்துந் துணித்து எடுத்துக் கூட்டி இங்ஙனம் பொருள்கொண்டது, கொண்டுகூட்டுப்பொருள்கோள். மிக்க கொடுமையுடைமைபற்றி, 'வாலியானதோர் வெவ்விடம்' என்றார். ஏவிட என்பது எதுகைநோக்கி எவ்விட என விகாரங்களையடைந்தது; "எவ்வரிவெஞ்சிலைத் தடக்கையிராமன்தன்னை" என்ற பெரியாரருளிச்செயலிலும் இது காண்க. நல்லோர்க்கு நலிவு செய்யுந் தீயோரை எவ்வகை உபாயத்தாலாவது அடக்க வேண்டுமென்னுஞ் சங்கற்பமுடையவ னென்பதும், எவ்வாற்றாலும் வெற்றியையே பெறுபவ னென்பதும், நல்லோர்க்கு நலிவு செய்பவரையே தனக்குப் பகையாகக்கொள்பவ னென்பதும் விளங்க, 'தெவ்வடக்கும் வென்றியான்' என்றார். வென்றியானும், உம்மை - இசைநிறை; இனி, தெவ்வையடக்கி வெற்றிபெறக் கருதும் வானியங்குதேரினன் மகனும் [சுக்கிரீவனும்] இவ்யோசனை நல்லது என்று சிந்தித்து என்று மேலிற் செய்யுளோடு குளகமாக் கூறலும் ஒன்று. பி - ம்:— [1] அழைத்த. [2] வாலியானபேர், வாலியான்போர். [3] வெவ்விடத்தை. [4] வேலை. [5] தெவ்வடர்க்கும். (246)

2.—அதுகேட்டவுடன் சுக்கிரீவன் ஆரவாரித்தல்.

வார்த்தை யன்ன தாக வானி யங்கு தேரி னுன்மகன்
நீர்த்தரங்க வேலை யஞ்ச நீல மேக [1]நாணவே
வேர்த்து மண்ணு ளோரி ரிந்து விண்ணு ளோர்கள் [2]விம்மமேல்
ஆர்த்த வோசை [3]யீச னுண்ட வண்ட முற்று முண்டதே.

(இ - ள்.) வார்த்தை அன்னது ஆக - (இராமபிரான் அருளிச் செய்த) வார்த்தை அத்தன்மையதாகவே [இராமன் அவ்வாறு சொல்லவே என்றபடி], (அதுகேட்டமாத்திரத்தில்), வான் இயங்கு தேரினன் மகன் - ஆகாயத்தில் இடைவிடாது செல்கின்ற தேரை யுடையவனாகிய சூரியனது குமாரனான சுக்கிரீவன், நீர் தரங்கம்வேலை அஞ்ச - நீர்மயமானதும் அலைகளை வீசுவதுமான கடல் அஞ்சும்படி யாகவும், நீல மேகம் நாண - நீலநிறமுள்ள மேகங்கள் வெட்கமடையும் படியாகவும், மண் உளோர் வேர்த்து இரிந்து - நிலவுலகத்திலுள்ளார் (அஞ்சி) உடல்வியர்த்து ஓடும்படியாகவும், விண் உளோர்கள் விம்ம - மேலுலகத்திலுள்ளவர்களும் அஞ்சிக் கலங்கும்படியாகவும், மேல் ஆர்த்த - (இராமன் வார்த்தைக்கு இணங்கி மகிழ்ந்து) மிகுதியாக ஆரவாரஞ்செய்த, ஓசை - ஓசையானது, ஈசன் உண்ட அண்டம் முற்றும் உண்டது - ஸர்வேசுவரனான எம்பெருமானால் (கல்பாந்த காலத்தில்) உட்கொள்ளப்படுகின்ற அண்டகோளம் முழுவதையும் உட்கொண்டது; (எ - று.)

அச்சுக்கிரீவனது ஆரவாரம் அண்டகோளம் முழுவதும் கேட்கும்படியாயிருந்த தென்பதாம். அவ்வாரவாரத்தின் மிகுதியை விளக்கும் உயர்வுநவிற்சி இது. இப்பேரொலி கடல்முழக்கத் தினும் இடி முழக்கத்தினும் மிக்கிருந்த தென்பது, இரண்டா மடியால் விளங்கும். இரிந்து = இரிய; எச்சத்திரிபு. வேர்த்தல் - அஞ்சுதலாலும், ஓடுதலாலும் ஆவது. ஓசை அண்ட முற்றும் உண்டது - உண்ணுததை உண்பதுபோலச் சொன்ன மரபுவழு வமைதி.

இனி, முந்தின செய்யுளோடு இச்செய்யுளைக் குளகமாக்கி, (1) அப்பொழுது இராமன் (சுக்கிரீவனை நோக்கி) 'நீ அழைத்து வந்து வாலியானதோர் வெவ்விடத்தின் போர்விளைக்கும் எல்லை (நான்) வேறு நின்று எவ்விடத்துணிந்து அமைந்தது இது என் கருத்து' என்றனன்; (2) வார்த்தை அன்னதாக (1) எவ்வாற்றாலேனும் பகைவனை யடக்கி வெற்றிகொள்ளவேண்டு மென்றிருக்கின்றவனான (2) வான் இயங்கு தேரினன்மக (1) னும் நன்று இதுவென்று சிந்தியா [நல்லது இதுவென்று எண்ணி அச்சொல்லுக்கு இணங்கி] (2) நீர்த்தரங்கவேலை யஞ்ச *** ஆர்த்த ஓசை அண்ட முற்றும் உண்டது என்று கூட்டிப் பொருள்கொள்ளலுமாம். பி - ம்:— [1]நாண நேர். [2]விம்மிநேர், விம்மநேர். [3]ஈசனென்ன. (247)

3.—சுக்கிரீவன் வலியப்போர்க்கு அழைத்துத் தோள்தட்டிக் கர்ச்சிக்கின்றமுழக்கம், தூங்குகின்ற வாலியின் செவிகளில் நுழைதல்.

இடித்து ரப்பி [1]வந்து போரெ திர்த்தி யேல டர்ப்பனென்று
அடித்த லங்கள் கொட்டி வாய்ம டித்[2]த டுத்த லங்குதோள்
புடைத்து நின்[3]று ளைத்த பூசல் புக்க தென்ப மிக்கிடந்
துடிப்ப வங்கு றங்கு வாலி [4]திண்செ வித்தொ ளைக்கணே.

(இ - ள்.) (உடனே சுக்கிரீவன்), அடுத்து - (கிட்கிந்தாபுரியைச்) சமீபித்து, வாய் மடித்து - உதடுகளை மடித்துக்கொண்டு, வந்து போர் எதிர்த்தி ஏல் அடர்ப்பன் என்று - வந்து எதிர்த்து (என்னுடன்) போர்செய்வையானால் (உன்னைக்) கொல்வேன் (யான்) என்று, இடித்து உரப்பி - இடியிடித்தாற்போல அதட்டி, அடி தலங்கள் கொட்டி - கால் கொட்டிக்கொண்டு, அலங்குதோள் புடைத்து - விளங்குகின்ற தோள்களைத் தட்டி, நின்று - நிலைநின்று, உளைத்த - வலியப் போர்க்கு அழைத்த, பூசல் - ஆரவாரமானது, அங்கு உறங்கு வாலி திண் செவி தொளைக்கண் - அக்கிட்கிந்தாபுரியினுள் தூங்கிக் கொண்டிருக்கின்ற வாலியினுடைய வலியகாதுகளின் துளையிலே, மிக்கு இடம் துடிப்ப புக்கது - (அவனுக்கு) இடப்பக்கம் மிகுதியாய்த் துடிக்கும்படி நுழைந்தது; (எ - று.)

இங்ஙனம் சுக்கிரீவன் அறைகூவிக் கொக்கரிக்கின்ற முழக்கம் செவிப்படுகின்ற சமயத்தில் வாலிக்கு உடனே நேரும் பெருந்தீங்கிற்கு அறிகுறியாக இடக்கண்ணும் இடத்தோளும் துடித்த செய்தியையும் இதிற் கூறினர். ஆடவருக்கு இடந்துடித்தல், தீநிமித்தம். 'அடித்தலங்கள் கொட்டி' என்பதற்கு - தொடைதட்டியென்றுஉரைப்பாருமுளர். வாய்மடித்தல், கோபக்குறி. உளைத்தல் - அழைத்தல்; ஒலித்தலுமாம். பூசல் - பேரொலி. என்ப - அசை.
பி - ம்:—[1]வந்தபோரெதிர்ந்த வேடவேட. [2]அடுத்தலங்கரேள், அடித்தலங்குதோள், அலங்கறங்குதோள். [3]அழைத்த, இணைத்த. [4]தன், வன். (248)

வேறு.

4.—அப்பேரொலியை வாலி கேட்டமை.

[1]மாற்பெருங் கடகரி முழக்கம் வாளரி
[2]ஏற்பது செவித்தலத் தென்ன வோங்கிய
ஆர்ப்பொலி கேட்டன னமளி மேலொரு
பாற்கடல் கிடந்ததே யணைய [3]பான்மையான்.

(இ - ள்.) அமளிமேல் - படுக்கையின்மேல், ஒரு பால் கடல் கிடந்ததுஏ அனைய - ஒருபாற்கடல் படுத்திருந்தது போன்ற, பான்மையான் - தன்மையையுடையவனாகிய வாலி,—மால் பெருங் கட கரி முழக்கம் வாள் அரி செவி தலத்து ஏற்பது என்ன - மயக்கங் கொண்ட பெரிய மதயானையின் முழக்கத்தைக் கொடிய சிங்கம் காதுகளில் ஏற்றுக்கொண்டாற்போல, ஓங்கிய ஆர்ப்பு ஒலி கேட்டனன் - மிகுதியான அந்த (ச்சுக்கிரீவனது) கர்ச்சனை முழக்கத்தைச் செவியுற்றான்; (எ - று.)

ஒருமலைக்குகையினுள்ளேபடுத்து உறங்கிக்கொண்டிருக்கின்ற சிங்கம் மதமயக்கங்கொண்ட யானையின் பிளிறலைக் கேட்டுத் துயிலுணர்ந்தாற்போல, குகைபோல மலையிடையேயிருக்கின்ற கிட்கிந்தாபுரியினுள்ளபடுக்கையிற் படுத்து உறங்குகின்றவாலி, சுக்கிரீவன் செருக்கி அறைகூவுகின்ற முழக்கத்தைக் கேட்டுத் துயிலுணர்ந்தனனென்பதாம்; உவமையணி. வாலியினது மகாபலமும், சுக்கிரீவனது வலிமைக்குறைவும், அவனால் இவன் எளிதில் அழிக்கத்தக்கவனாயிருத்தலும், இம்முழக்கங்கேட்டமாத்திரத்தில் வாலி மகிழ்ச்சியுற்றனனேயன்றிக் கலக்கமுற்றில னென்பதும் தோன்ற இவ்வொப்புமை கூறினார். அமளி-மெத்தை. வெண்ணிறமும் கம்பீரமான தோற்றமும் பற்றி, 'பாற்கடல் கிடந்ததேயனைய பான்மையான்' என்றார். ஆர்ப்பு ஒலி - ஒருபொருட்பன்மொழி.

ரகரவொற்றோடு கூடியவல்லொற்றும், றகரவொற்றும் ஓசையொப்புமைபற்றி, விரவி எதுகை யமைக்கப்பட்டன. பி - ம்:—[1]மாப்பெருங். [2]ஓர்ப்பது. [3]பண்பினான். (249)

5.—வாலி சிரித்தல்.

உருத்தனன் பொரவெதிர்ந் திளவ [1]லுற்றமை
வரைத்தடந் தோளினன் மனத்தி னெண்ணினன்
சிரித்தன னவ்வொலி திசையி [2]னப்புறத்து
இரித்த[3]தவ் வுலகமொ ரேழொ [4]டேழையே.

(இ - ள்.) வரை தட தோளினன் - மலைகள்போன்ற பெரிய தோள்களையுடையவனான வாலி,—இளவல் உருத்தனன் பொர எதிர்ந்து உற்றமை - தனது தம்பியான சுக்கிரீவன் கோபித்துப் போர்செய்தற்கு எதிர்த்து வந்தமையை, மனத்தின் எண்ணினன் - மனத்தில் ஆலோசித்து, சிரித்தனன் - சிரித்தான்; அ ஒலி-அந்தச் சிரிப்பினோசையானது, அ உலகம் ஓர் ஏழொடு ஏழை - அந்த உலகங்கள் பதினான்கையும், திசையின் அப்புறத்து இரித்தது - திக்குகளின் எல்லைக்கு அப்பால் அஞ்சியோடும்படி செய்தது; (எ - று.)

முன்பு போரிற் பலமுறை பலபடி தோற்றோடி அஞ்சியொளித்தவன் மீண்டுவந்து வலியப்போர்க்கு அழைத்தல்பற்றிய இகழ்ச்சியினாலும், கோபத்தாலும், வாலி வீராட்டகாசஞ்செய்தனன். வாலியின் அச்சிரிப்பொலி எல்லாவுலகத்து உயிர்களையும் அஞ்சி நிலைகுலைந்து நெடுந்தூரம் ஓடும்படிசெய்த தென்பதாம். உயர்வுநவிற்சி, அவ்வொலியின் மிகுதியை விளக்கும். 'உருத்தனன்' என்பதை 'சிரித்தனன்' என்பதனோடுகூட்டி யுரைப்பினுமாம். பி - ம்:—[1]உற்றதை. [2]அப்புறந் - திரித்தது. [3]இவ்வுலகம். [4]ஏழையும். (250)

6.—வாலி எழுதலும், தோள்களை உதறுதலும்.

எழுந்தனன் வல்விரைந் திறுதி யூழியிற்
கொழுந்[1]திரைக் கடல்கிளர்ந் தனைய கொள்கையான்

அழுந்திய தக்கிரி யருகின் மால்வரை
விழுந்தன தோள்புடை [2]விசித்த காற்றினே.

(இ - ள்.) ஊழி இறுதியில் - கற்பாந்தகாலத்தில், கொழுந்திரை கடல் இளர்ந்து அனைய - செழுமையான அலைகளையுடைய கடல் (உலகங்களழியுமாறு) பொங்கியெழுந்தாற் போன்ற, கொள்கையான் - தன்மையையுடையவனும், வல் விரைந்து எழுந்தனன் - (சுக்கிரீவனை யழித்தற்பொருட்டு வாலி உடல் பூரிப்புடனே) மிக விரைவாய் எழுந்தான்; (அங்ஙனம் அவன் கோபாவேசத்தோடு எழுந்ததனு லாகிய விசையால்), அ கிரி அழுந்தியது - அந்தக்கிட்கிந்தமலை கீழே சென்றுவிட்டது; தோள் புடை விசித்த காற்றின் - (மற்றும் அவன் தோள்களையுதறியபோது அவனுடைய) தோள்கள் பக்கங்களில் எழுப்பிய காற்றினுல், அருகில் மால் வரை விழுந்தன - (அந்தமலையின்) அருகிலுள்ள பெரியமலைகள் (நிலைபெயர்ந்து) விழுந்திட்டன; (எ - று.)

வல்-விரைவு குறிக்கும் இடைச்சொல்; இது, சாரியைகளையேற்று வல்லையெனவும்,வல்லேயெனவும் நிற்கும். வல் விரைந்து-ஒருபொருட் பன்மொழி. திரைக்குக் கொழுமை-மிகுதியும், வளர்ச்சியும். அழுந்துதல் - பூமியினுள்ளாதல். தோள்புடைவிசித்தகாற்று - தோள்கள் வீசுதலினுலாகிய காற்று. பி - ம்:—[1] திசைக்கடல் பெயர்ந்ததே, திரைக்கடல்பெயர்ந்த. [2]விசைத்த, விசயக். (251)

7.—அவனது கோபாக்கினி.

[1]போய்பொடித் தனமயிர்ப் [2]புறத்த வெம்பொறி
[3]காய்ப்பொடுற் றெழுவட கனலுங் கண்கெடத்
தீப்பொடித் தனவிழி தேவர் [4]நாட்டினும்
மீப்[5]பொடித் தனபுகை யுயிர்ப்பு வீங்கவே.

(இ - ள்.) வெம் பொறி - வெவ்விய அனற்பொறிகள், போய் பொடித்தன மயிர் புறத்த - (கோபாவேசத்தால் அவனுடம்பிற்) சிலிர்த்தனவான மயிர்களினிடத்தவாய் எழுந்தன; காய்ப்பொடு உற்று எழு வட கனல்உம் கண் கெட - (ஊழிக்காலத்திலே உலகங்களையழித்தற்கு) உக்கிரத்தைக் கொண்டு பொருந்தி உலகிலெழுகின்ற வடவைக்கனலும் அவ்வுக்கிரத்தைதக்காணமாட்டாமற் கண் பார்வைகெடும்படி, விழி - (வாலியின்) கண்கள், தீ பொடித்தன - கோபாக்கினியைப்பொறிப்பொறியாய்ச் சிந்தின; உயிர்ப்பு வீங்க - (அவனுடைய) மூச்சுக்காற்று (க்கோபாவேசத்தாற்) பெரிதாயெழ, புகை - (அதிலிருந்து எழுந்த) புகைகள், தேவர் நாட்டின்உம் மீ பொடித்தன - தேவலோகத்திற்குமேலுஞ் சென்றன; (எ - று.)

போய்ப் புறத்த - புறத்துப்போயின வென விகுதிபிரித்துக் கூட்டுக. காய்ப்பு - கொதிப்பும், கோபமுமாம். உம்மைகள் - உயர்வு சிறப்பு. கண்கெட - ஒளிகெட என்றும், பெருமைகெட என்றும்

கொள்ளலாம். [1]போங்ப் பொடித் தனமயிர் புறத்தவெம்பொறி என்ற பாடத்திற்கு - இரண்டுவாக்கியமாக்கியுரைக்கலாம். பி - ம்:— [2]புறத்து. [3]காய்ப்பொடுற்றெழுவடவனலும், காய்ப்பொறித்து..., காய்ப்பொடுற்றன..., காய்ப்பொடித்து... [4]நாட்டிடம். [5]பொடித்தது. (252)

8.—வாலி தன் கையைத்தட்டுதல்.

[1]கைக்கொடு கைத்தலம் புடைப்பக் காவலின்
திக்கயங் களுமதச் [2]செருக்குச் சிந்தின
உக்கன வுருமின முலைந்த வும்பரும்
[3]நெக்கன நெரிந்தன [4]நின்ற குன்றமே.

(இ - ள்.) கைகொடு கைத்தலம் புடைப்ப - (வாலி கோபாவேசத்தோடு) ஒருகையினால் மற்றொருகையைத் தட்ட, (அதனாலாகிய பேரொலியால் அஞ்சி), காவலின் திக்கயங்களும் மதம் செருக்கு சிந்தின - (உலகத்தைத்) தாங்குதலுடைய திக்கஜங்களும் மதத்தினாலாகிய களிப்பையொழிந்தன; உரும் இனம் உக்கன - இடிக்கூட்டங்கள் வலியழிந்தன; உம்பரும் உலைந்த - (அவ்வொலிமிகுதியாலாகிய அதிர்ச்சியால்) மேலுலகங்களும் நடுங்கின; நின்ற குன்றம் நெக்கன நெரிந்தன - (நிலவுலகத்திற் புடைபெயராது) நிலைபெற்ற மலைகளும் நெகிழ்ந்து நொருங்கின; (எ - று.)

கையொடுகை புடைத்ததனாலாகிய ஆரவாரம் எவ்வுலகத்திலுஞ் சென்று நடுக்கத்தை யுண்டாக்கிற்றென்க. உலைதல்-கம்பமடைதல். 'நின்ற குன்றம்' என்றதற்கு - (நிலவுலகத்தைச்சூழ்ந்து) நின்ற சக்கரவாளபர்வதத்தொடு ரென்று உரைப்பாருமுளர். உரும் இனம் உக்கன - (அவ்வதிர்ச்சியால்) இடிக்கூட்டங்கள் கீழே சிந்தின என்றலுமாம். நின்ற குன்றம் - அசலமாகியமலைகள். பி - ம்:— [1]புக்கிருகைத்தலம், கைத்தலங்கையொடு. [2]செருக்குஞ். [3]நெக்கது நெரிந்தது. [4]நேமிக். (253)

9.—'வந்தேன், வந்தேன்' என்று சொல்லிக்கொண்டு வாலி எழுதல்.

வந்தனென் வந்தனெ னென்ற வாசகம்
[1]இந்திரி முதற்றிசை யெட்டுங் கேட்டன
சந்திரன் முதலிய தார கைக்குழாம்
சிந்தின மணிமுடிச் சிகரந் தீண்டவே.

(இ - ள்.) வந்தனென் வந்தனென் என்ற வாசகம் - '(இதோ) வந்துவிட்டேன் வந்துவிட்டேன்' என்று (அப்பொழுது வாலி வீரவாதமாகக்) கூறிய சொற்கள், இந்திரி முதல் திசை எட்டும் கேட்டன - கிழக்கு முதலிய எட்டுத்திக்குக்களிலும் (எல்லாப் பிராணிகளுக்கும்) கேட்டன; மணி முடி சிகரம் தீண்ட-(அவன் உடல் பூரித்து எழுந்தபோது அவனது) இரத்தின கிரீடமணிந்த (சிரசாகிய) மலைச்சிகரம் பட்டதனால், சந்திரன் முதலிய தாரகை குழாம் - சந்திரனைத்

தலைவனாகக்கொண்ட நட்சத்திரங்களின் கூட்டங்கள், சிந்தின - கீழே யுதிர்ந்தன; (எ - று.)

முதலிரண்டடி - அவனது உரத்தகுரலையும், மற்றையிரண்டடி - அவன்ஓங்கியெழுந்தஉயர்ச்சியையும்வருணித்தன: உயர்வுநவிற்சி யணி. உயர்வும் பருமையும் வலிமையும்பற்றி, 'முடிச்சிகரம்' எனப்பட்டது. இதனால், வாலி பர்வதாகாரமான தேகமுடையவ னென்பது போதரும். இந்திரி = ஐந்த்ரீ: இந்திரனது சம்பந்தமானதிக்கு: இந்திரனைத் தலைவனாகக் கொண்டதாகிய கிழக்கு; கிழக்குத் திக்குப்பாலகன், இந்திரன். சந்திரனுக்கு நக்ஷத்திரங்கள் மனைவிய ரென்னும்படி சந்திரன் தாரகாதிபதி யாதலால், சந்திரனை முதல்வனாக [தலைவனாக] க்கொண்ட தாரகைகளின் குழாமென்றார். இனி, 'முதலிய' என்பதற்கு - முதலான என்று உரைத்தல் ஏலாது; சந்திரன் தாரகைகளிலொன்றல்ல னாதலால். இங்கு 'முதல்' என்றது-"அகரமுதல வெழுத்தெல்லாம்" என்புழிப்போலாது "ஆதிபகவன் முதற்றே யுலகு" என்புழிப்போலும். கேட்டன - செவிப் புலனாயின. பி - ம்:—[1] இந்திரன் முதற்றிசை, இந்திரன் திசைமுதல். (254)

10.-வாலி எழுந்துவரும் விசையால் வீசிய காற்றும், அவனது மயிர்த்துளைகளினின்று எழுந்த அனற்பொறிகளும்.

வீசின காற்றின்வேர் [1]பறிந்த வெற்பினம்
[2]ஆசையை யுற்றன வண்டப் பித்திகை
பூசின[3] வெண்[4]மயிர் பொடித்த வெம்பொறி
கூசின னந்தகன் குலைந்த தும்பரே.

(இ - ள்.) வீசின காற்றின் - (அவன் விசைபட வரும்போது) வேகமா யெழுந்த காற்றினால், வெற்பு இனம் - மலைகளின் கூட்டங்கள், வேர் பறிந்த - நிலைபெயர்ந்தவைவனாய், ஆசையை உற்றன - திக்குக்களின் கடையெல்லையிற் போய்விழுந்தன; வெள் மயிர் பொடித்த வெம்பொறி - (அவனது உடம்பின்) வெண்ணிறமான மயிர்களினின்று வெளிச்சிதறிய வெவ்விய கோபாக்கினியின் பொறிகள், அண்டம் பித்திகை பூசின - அண்டகோளத்தின் சுற்றுச் சுவரை மறைத்தன; (அத்தீப்பொறிகளைக்கண்டு), அந்தகன் கூசினன் - யமனும் கண்கூசினான்; உம்பர் குலைந்தது - (இமையாக்கண்ணராகிய) மற்றைத் தேவர்களும் நிலைகுலைந்தார்கள்; (எ - று.)

இச்செய்யுள் - வாலியினது விசையையும் வெகுளித் தீயையும் விளக்கும். உம்பர்என்பது - ஆகுபெயராய், மேலுலகத்தவரைக் குறிக்கும்; ஆகவே, 'குலைந்தது உம்பர்' என்றது-சொல்நிலைநோக்கிய முடிபு. மயிர்பொடித்தவெம்பொறி - உரோமத்துவாரங்களிலிருந்து எழுந்த தீப்பொறிகள். பி-ம்:—[1]பறிந்து. [2]ஆசையின். [3]மெய்ம். [4]மயிர்ப்புறத்து வெம்பொறி, மதிபொடிந்துபோயது, மதிபொடித்துப் போயின, ... பொடித்தபோயின. (255)

11.—வாலி கோபத்தாற் பற்களைக் கடித்தலும், தோள்களைத் தட்டுதலும்.

கடித்த[1]வா யெயிறுகு [2]கனல்கள் கார்விசும்பு
[3]இடித்தவா [4]யுருமுரு மினத்திற் சிந்தின
தடித்துவீழ் வனவெனத் தகர்ந்து சிந்தின
[5]வடித்ததோள் வலயத்தின் வயங்கு காசரோ.

(இ - ள்.) கடித்த வாய் எயிறு உகு கனல்கள் - (வாலி கோபத்தாற்) கடித்த பொழுது (அவன்) பற்களினின்று வெளிப்பட்ட கோபாக்கினிகள், கார் - கார்காலத்து, விசும்பு இடித்தவாய்-மேகங்கள் இடித்தபொழுது, உகும் - விழும், உரும் இனத்தின் - இடிகளின் கூட்டம் போல, சிந்தின - (கடுமையாய் எங்கும்) சிதறின; (அவன் தோள் தட்டியபொழுது), வடித்த தோள் வலயத்தின் வயங்கு காசு - சிறந்த (அவனது) தோள்வளைகளில் விளங்குகின்ற இரத்தினங்கள், தடித்து வீழ்வன என - மின்னல்கள் கீழ் விழுந்தாற் போல, தகர்ந்து சிந்தின - நொருங்கிச்சிதறின; (எ - று.)—அரோ - ஈற்றசை.

வாலீயின் வெகுளிமிகுதியை உயர்வுநவிற்சியாற் கூறியது, இச்செய்யுளும். வாய் எயிறு - வாயிலுள்ள பற்கள் என்றும், இடித்த வாய் - இடித்த இடங்களில் என்றும் உரைத்தலுமாம். கார் - கருநிறமுடைய மேகங்கள் மழைபொழியும் பருவத்திற்கு இருமடியாகுபெயர். வடித்தல் - தேர்ந்தெடுத்தல். பி - ம்:—[1]வாளெயிற்றுகும், வாயெயிறுகு, வாளெயிறுகள். [2]கனலில். [3]இடித்தலால், இடித்தவால். [4]உருமுகும். [5]இடித்த தோள்வலயத்தினிலங்கு, அடித்ததோள் வலயத்தினலங்கு. (256)

12.—வாலியின் கொடுமை.

ஞாலமு நாற்றிசைப் புனலு நாகரும்
மூலமு முற்றிட முடிவிற் [1]றீக்குமக்
காலமு மொத்தனன் கடலிற் றன்கடை
ஆலமு மொத்தன னெவரு மஞ்சவே.

(இ - ள்.) (அப்பொழுது வாலி),—எவரும் அஞ்ச - (காண்பவர்) யாவரும் அஞ்சும்படி,—ஞாலம்உம் - பூலோகமும், நால்திசை புனல் உம் - நான்குதிக்குகளிலுமுள்ள கடல்களும், நாகர்உம்-தேவர்களும் [அல்லது பாதாளலோகவாசிகளும்], மூலம்உம்-(இவற்றிற்கெல்லாம்) ஆதிகாரணமான மகத்தத்வம்முதலிய தத்துவங்களும், முற்றிட - அழியும்படி, முடிவில் - உலகம் அழியும்காலத்தில், தீக்கும்-(அனைத்தையும்) எரிக்கின்ற, அ காலம்உம் - அந்தக் காலாக்கினியையும், ஒத்தனன் - போன்றான்: தான் கடை கடலில் - (முன்பு) தன்னாற் கடையப்பட்ட பாற்கடலினின்று தோன்றிய, ஆலம்உம் - விஷத்தையும், ஒத்தனன் - போன்றான்; (எ - று.)

சர்வசங்காரகாலத்தில் அனைத்தையும் எரிக்கின்ற ஊழித்தீப் போலவும், முன்பு தான் கடைந்தபோது பாற்கடலினின்று எழுந்த

ஹாலாஹல விஷம்போலவும் வாலி மிகக்கொடுந்தோற்றத்துடன் வெகுளிவெறியுடனே கொதிப்புடன் போர்க்கு வரலாயின னென்பதாம். காலம் - காலாக்கினிக்கு ஆகுபெயர்; அகரச்சுட்டு, பிரசித்தி பற்றியது. ஆலம் - ஹாலம். எவரும் - முற்று. மற்றையும்மைகள் - எண். பி - ம்:—[1] தீர்க்குமக், திக்குறும். (257)

13.—அப்பொழுது அவன் மனைவியான தாரை விலக்குதல்.

ஆயிடைத் தாரை[1]யென் றமிழ்திற் றோன்றிய
[2]வேயிடைத் தோளினு[3]ளிடைவி லக்கினாள்
வாயிடைப் [4]புகைவர வாலி கண்வருந்
தீயிடைத் தன்னெடுங் கூந்தல் [5]தீகின்றாள்.

(இ - ள்.) ஆயிடை - அப்பொழுது,—தாரை என்று - தாரையென்று பெயர் கூறப்பட்டு, அமிழ்தின் தோன்றிய - தேவாமிருதம் போலக் காணப்படுகின்ற, வேய் இடை தோளினுள் - மூங்கிலின் தன்மையைத் தன்னிடத்தே கொண்ட தோள்களையுடையவள்,—வாயிடை புகை வர - (வாலியின்) வாயினின்று புகைகிளம்ப, வாலி கண் வரும்- அவனது கண்களிலிருந்து வெளியெழுகின்ற, தீயிடை - நெருப்பில், தன் நெடுங் கூந்தல் தீகின்றாள் - தனது நீண்ட கூந்தல் எரிகின்றவளாய், இடை விலக்கினாள் - (போர்க்குப்புறப்பட்டுச்செல்லும் அவ்வாலியை) இடையில் விலக்கினாள்; (எ - று.)

ஐம்பொறிகட்கும் இனியளாதல் பற்றி, அமிருதம் போலத் தோன்றியவளென்றார். திரண்டு உருண்டு நீண்டு வளைந்து எழும் இளமூங்கில் - மகளிர்தோளுக்கு உவமையாம். பின்வரும் அமங்கலத்தை முன்னரே சூசிப்பித்தார் ஈற்றடியாலென்னலாம். பி - ம்:—[1] அன்றமுதில். [2]வேயுடை. [3]எதிர்விலக்கினாள், விரைவிற் பற்றினாள். [4]புகையுடை. [5]தீயவே, தீர்கின்றாள். (258)

14.—வாலி அத்தடையை மீறுதல்.

விலக்கலை விடுவிடு விளித்து ளானுரங்
கலக்கியக் கடல்கடைந் [1]தமுது கண்டென
[2]உலக்கவின் னுயிர்குடித் தொல்லை [3]மீள்குவன்
மலைக்குல மயிலென மடந்தை கூறுவாள்.

(இ - ள்.) 'மலை குலம் மயில் - மலையில் விளையாடுகின்ற சிறந்த மயில் போன்றவளே! விலக்கலை விடுவிடு - (என்னைத்) தடுத்தலை விட்டுவிடு: அ கடல் கடைந்து அமுது கண்டு என - அந்தப் பாற்கடலைக் கடைந்து அமிருதம் உண்டாகப்பெற்றாற் போல, விளித்துளான் உரம் கலக்கி - (என்னைவலியப் போர்க்கு) அழைத்துள்ளவனை சுக்கிரீவனது வலிமையைச்சிதையச்செய்து, உலக்க இன் உயிர் குடித்து - (அவன்) இறக்க (அவனது) இனிமையான உயிரைக் குடித்து, ஒல்லை மீள்குவன் - விரைவில் திரும்பிவருவேன்,' என - என்று (வாலி) சொல்ல,—மடந்தை கூறுவாள் -(அவன்) மனைவியான தாரை (மீண்டுஞ்) சொல்வாள்; (எ - று.)—அதனை அடுத்த கவியிற் காண்க.

"அன்னை தயையு மடியாள் பணியு மலர்ப், பொன்னினழகும் புவிப்பொறையும்—வன்னமுள, வேசிதுயிலும் வீரன் மந்திரி மதியும், பேசிலிவையுடையாள் பெண்" என்றபடி உத்தம மனைவியாகும் மாதுக்கு இருக்கவேண்டிய குணங்கள் யாவுங் குறைவின்றி நிறைந்த பெண்ணிவ ளென்பது தோன்ற, 'மடந்தை' என்றார். மந்திரிபோலச் சமயோசித மறிந்து நல்லஆலோசனைசொல்லுந் திறம், இங்குக்கரு தத்தக்கது. மகளிர்க்கு மயில் - சாயலில் உவமம். மயில் குறிஞ்சிநிலத் துப்பறவை யாதலால், மலை மயிலுக்கு அடைமொழியாக்கப்பட்டது. மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தில் விளையாடுதல் வாநரவரசியாகிய தாரைக்கும் ஏற்கும். மயில் - இங்கு, அண்மை விளி. மருளுதல் தோன்ற 'மலைக்குலமயில்' என விளித்தானுமாம். 'விலக்கலை' என்பதை எதிர்மறையொருமையேவலாகக் கொண்டு, விலக்காதே யென்றுமாம். அப்போது விடுவிடு என்பதற்கு 'என்னை' எனச் செயப்படுபொருள் வருவிக்க. விடுவிடு - அடுக்கு, மீறும் குறிப்பினது. உயிர் குடித்து - உண்ணப் படாதது உண் ணப்படுவதுபோலச் சொல்லப்பட மரபுவழுவமைதி. பி - ம்:—[1] அமுதுகொண்டென. [2] உலக்குவித்து, உலக்கவுற்று. [3] மீள் கின்றேன். (259)

15.—சுக்கிரீவன் வலியவந்து போர்க்கு அழைப்பதன் காரணத்தைத் தாரை சொல்லுதல்.

கொற்றவ நின்பெருங் குவவுத் தோள்வலிக்கு
[1] இற்றைய னல்லனு லீடுண் [2] டேகுவான்
பெற்றிலன் [3] பிறந்திலன் பெயர்த்தும் போர்செயற்கு
உற்றது [4] நெடுந்துணை யுடைமை யாலென்றாள்.

(இ - ள்.) 'கொற்றவ - வெற்றியையுடைய தலைவனே!—இற்றை யன் அல்லன் - (சுக்கிரீவன்) இத்தனைநாள் இருந்தவன் போன்றவ னல்லன்; நின் பெருங் குவவு தோள் வலிக்கு - உனது பெரிய திரண்ட தோள்களின் வலிமைக்கு, ஈடுஉண்டு ஏகுவான் - (இத்தனை நாளாய்க்) குழைவுகொண்டு செல்பவனான அவன், பெற்றிலன் - (இன்றைக்குப் புதிதாக ஓர் உடல்வலிமையைப்) பெற்றானில்லை; பிறந் திலன் - (அப்பிறப்பொழிந்து) வேறொருபிறப்பெடுத்துத் தோன்றி னானுமில்லை: பெயர்த்தும் போர் செயற்கு உற்றது - (அங்ஙனமிருக்க வும் அவன்) மீளவும் (உன்னுடன்) போர்செய்தற்கு வந்தது, நெடுந் துணை உடைமையால் - பெரிய ஒரு துணைவனைப் பெற்றதனா லாகும்' என்றாள் - என்று (தாரை வாலியை நோக்கிக்) கூறினாள்; (எ - று.) —ஆல் - ஆசை.

இற்றையன் - இன்றைத்தினத்தில் வந்துள்ளவனான அவன், இத்தனைநாள்போல நின்பெருங்குவவுத்தோள்வலிக்கு ஈடுண்டு ஏகுவா னல்லன் என்று உரைப்பினுமாம். பி - ம்:—[1] இற்றனன் முனைநாள், இற்றையதல்லநாள். [2] ஏகினான். [3] பெருந்திறல். [4] பெருந் துணை. (260)

16.—ஐந்துகவிகள் - ஒருதொடர்: தாரைக்கு வாலி தன்வலிமை மிகுதி கூறல்.

மூன்றென முற்றிய முடிவில் பேருலகு
ஏன்றுட [1]னுற்றன வெனக்கு நேரெனத்
[2]தோன்றினுந் தோற்றவை தொலையு [3]மென்றலின்
[4]சான்றுள [5]வன்னவை தையல் கேட்டியால்.

(இ - ள்.) மூன்று என - (மேல் கீழ் நடு என) மூன்றாக (வகுக்கப்பட்டு), முற்றிய - நிறைந்துள்ள, முடிவு இல் பேர் உலகு - அழிவில்லாத பெரிய உலகங்களெல்லாவற்றிலுமுள்ள பிராணிகள் யாவும், ஏன்று உடன் உற்றன - கருத்து இணங்கி ஒருங்குசேர்ந்தவைகளாய், எனக்கு நேர் என தோன்றின் உம் - எனக்குப்பகையாக வந்துஎதிர்த்தாலும், அவை தோற்று தொலையும் - அவையெல்லாம் தோல்வியடைந்து அழியும், என்றலின் - என்கிற பொருளைச் சாதித்தற்கு, சான்று உள - (அநேக) சாக்ஷிகள் உள்ளன; (அவற்றை நீ அறியாய்): (ஆதலால்), அன்னவை - அவற்றை, தையல் - பெண்ணே! கேட்டி - (யான் சொல்லக்) கேட்பாய்; (எ - று.)

தையல் - அழகுடையவள். அன்னவை கேட்டி ஆல் - அவற்றை (முன்பு யான்சொல்லக்) கேட்டுள்ளாயன்றோ என்னவுமாம். முந்திய பொருளில், கேட்டி - ஏவலொருமைமுற்று; இப்பொருளில், கேட்டி - முன்னிலை யொருமையிறந்தகாலமுற்று; ட் - இறந்தகாலவிடைநிலை. பி - ம்:—[1]உற்றனன். [2]தோன்றலும், தோன்றின. [3]என்பது, ஆமெனில். [4]சான்றுளது. [5]அன்னது. (261)

17. மந்தர நெடுவரை மத்து வாசுகி
அந்தமில் கடைகயி றடைக லாழியான்
சந்திரன் தூணெதிர் தருக்கின் வாங்குநர்
இந்திரன் முதலிய வமர ரேனையோர்.

18. பெயர்வுற வலிக்கவு மிடுக்கில் பெற்றியார்
[1]அயர்வுற லுற்றதை நோக்கி யானது
தயிரெனக் கடைந்தவர்க் [2]கமுதந் தந்தது
மயிலியற் குயின்மொழி [3]மறக்க லாவதோ.

இவையிரண்டுகவிகளும், பாற்கடல் கடைந்த வரலாற்றைக் கூறுவதால், ஒருங்கு உரைக்கப்படுகின்றன.

(இ - ள்.) (17) மந்தரம் நெடு வரை - பெரிய மந்தரமலை, மத்து - மத்தாகவும், வாசுகி - வாசுகியென்னும் மகாநாகம், அந்தம் இல் கடை கயிறு - எல்லையில்லாத [மிகநீண்ட] கடையுங் கயிறாகவும், ஆழியான் - சக்கராயுதத்தையுடையவனான திருமால், அடைகல் - (அம்மந்தரகிரி) கடலில் அழுந்திவிடாதபடி ஆமைவடிவமாய்க் கீழே

நின்று தாங்கும் பீடமாகவும், சந்திரன்—, தூண் - அடைதூணாக வும், எதிர் தருக்கின் வாங்குநர் - (ஒருவர்க்கொருவர்) எதிராகநின்று களிப்புடன் கடைகயிற்றையிழுப்பவர், இந்திரன் முதலிய அமரர் ஏனையோர் - இந்திரன் முதலான தேவர்களும் அவர்கட்கு மாறான அசுரர்களுமாக அமைந்து,—(18) பெயர்வு உற வலிக்கஉம் மிடுக்கு இல் பெற்றியார் - (மத்தாகிய அந்த மந்தரகிரி) நிலைபெயருமாறு இழுத்தற்கும் வலிமையில்லாத தன்மையை யுடையவர்களாய், அயர் வுறல் உற்றதை - (அத்தேவாசுரர்கள்) தளர்ச்சிமிக்கதை, யான் - நான், நோக்கி - பார்த்து, அது-அப்பாற்கடலை, தயிர் என கடைந்து- தயிர்கடைவதுபோலக்கடைந்து, அவர்க்கு அமுதம் தந்ததுஉம் - அவர்கட்கு அமிருதத்தை உண்டாக்கிக் கொடுத்த திறமும், மயில் இயல் குயில் மொழி - மயில்போன்ற சாயலையும் குயில்கூவுவது போன்ற இன்சொற்களையும் உடையவளே! மறக்கல் ஆவதுஒ - மறக்கக் கூடியதோ? (எ - று.)

தேவர்கள் அசுரர்களைத் துணைக்கொண்டு பாற்கடல் கடையத் தொடங்கியபொழுது மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்தி விட, தேவர்கள் வேண்டுகோளினால் திருமால் பெரியதோர் ஆமை வடிவமெடுத்து அம்மலையின்கீழேசென்று அதனைத் தனது முதுகின்மீது கொண்டு தாங்கி அம்மலை கடலில் அழுந்திவிடாமற் கடைதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்தன னென்பது, பிரசித்தம். அடைகல் - கம்மப்பட்டடை; அதாவது கம்மாளர்கள் பொன்முதலியவற்றை வைத்து வெட்டுதற்கு ஆதாரமாகக் கொள்ளுங் கருவி; இங்கு, அது, ஆதாரமான பீடமென்றமாத்திரமாய் நின்றது. வாசுகி - அஷ்டமகாநாகங்களி லொன்று. அந்தம் இல் - அழிவில்லாத வெனினுமாம். ஏனையோர் - மற்றொரு வகுப்பினர்; இங்கு, அசுரராயிற்று.

மயிலியற் குயின்மொழி - உவமைத்தொகை உம்மைத்தொகைகளின் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை: மறுக்கலாவதோ என்ற பாடத்திற்கு - யான் கடைந்து அமுதந்தந்த பெருமையும் (யாராலேனும்) மறுக்கத்தக்கதாமோ? என்று பொருள். பி - ம்:— [1] அயர்வுற வுற்றநாளதனை நோக்கியான், அயர்வுறஉற்றன ரதனை..., [2] அமுதுதந்தமை, அமுதுதந்ததும். [3] மறக்கற்பாலதோ. இந்தப் பாடல் "பேர்வுறவலிக்கவுமிடுக்கில் பெற்றியார், நோவுற வுலந்தனரதனைநோக்கியான், ஆர்கலிதனைக் கடைந்தமுதுகொண்டனன், போர்வலியழிந்து போய்ப்புறந்தந்தோடலேன்" என்று சில பிரதியில். (262, 263)

19. [1] ஆற்றினெ னமரரு மவுணர் யாவரும்
தோற்றன [2] ரெனையவர் [3] சொல்லற் பாலதோ
கூற்றுமென் பெயர்சொலக் [4] குலையு மாலினி
[5] மாற்றவற் காகிவந் தெதிரு மாண்பினேர்.

20. பேதைய [6]ரெதிர்குவ ரெனினும் பெற்றுடை
[7]ஊதிய வரங்களு [8]முரமு முள்ளதிற்
பாதியு [9]மென்னதாற் பகைப்ப தெங்ஙனம்
நீதுய ரொழிகென நின்று கூறினான்.

இவையிரண்டுகவிகள் - வாலி தன்திறத்தைக்கூறி, சுக்கிரீவனுக்குப் பெருந்துணையாக ஒன்று நேர்படாதென்று தாரையைத் தேற்றுதலைக் கூறுதலால், ஒருங்கு உரைக்கப்படுகின்றன.

(இ - ள்.) (19) ஆற்றினென் - வலிமையோடு போர் செய்தவனான எனது முன்னிலையில், அமரர்உம் அவுணர் யாவர்உம் - தேவர்களிலும் அசுரர்களனைவரிலும், எனையவர் தோற்றனர்-எத்தனையோ பேர் தோல்வியடைந்தார்கள்; சொல்லற்பாலதுஓ - (அங்ஙனம் தோற்றவர்களது தொகை) சொல்லத்தக்கதோ? [அன்றென்றபடி]; கூற்றுஉம் - (பிராணிகளை உடல்வேறும் உயிர் வேறுமாகக்) கூறுபடுத்துபவனான யமனும், என் பெயர் சொல குலையும் - என்பெயரை (எவரேனும்) சொன்னவளவிலே நடுங்குவான்; இனி - இவ்வாறான பின்பு, மாற்றவற்கு ஆகி வந்து - (எனது) பகைவனான சுக்கிரீவனுக்குத் துணையாகி வந்து, எதிரும்-(வன்மையினோடு) மாறுபடுகின்ற, மாண்பினோர் - தன்மையுடையோர், (20) பேதையர் - அறிவில்லாதவரேயாவர்; எதிர்குவர் எனின்உம் - (அங்ஙனம் அவர்கள் என்னை) எதிர்ப்பரேயானாலும், பெற்றுஉடை - (அவர்கள்) பெற்றுள்ள, ஊதியம் வரங்கள்உம் - இலாபகரமான [சிறந்த] வரங்களிலும், உரம் உம் - பலத்திலும், உள்ளதில் பாதிஉம் என்னது - அவர்களிடமுள்ளதிற் பாதியோ (அவர்களை விட்டு நீங்கி) என்னுடையதாய் விடும்; ஆல் - ஆதலால், பகைப்பது எங்ஙனம் - (அவர்கள் என்னைப்) பகைத்துப் பயன்பெறுவது எப்படி? (ஆகவே), நீ துயர் ஒழிக - (யான் போர்க்குச்செல்வதைப்பற்றி) நீ துன்பமடையா திருப்பாயாக, எனநின்று கூறினான் - என்று (வாலி) சிறிதுபொறுத்து (த் தாரைக்கு)ச் சமாதானஞ் சொன்னான்; (எ - று.)

என்னுடைய தேகபல வரபலங்களோடு அவர்களுடைய தேகபல வரபலங்களிற் பாதியும் என்னிடம் வந்துசேரும்: எவராலும் என்னை வெல்லமுடியாதென்பதாம். இனி, முதலடிக்கு - (இவ்வாறு) தேவர்களனைவரையும் அசுரர்களனைவரையும் துயர்தீர்த்தே னென்று உரைப்பினுமாம்: [4]குலையுமாரினிஎன்று பாடமாம்போது, மாற்றவற்காகி வந்தெதிரு மாண்பினோர் இனி ஆர் என்று முடித்து, சுக்கிரீவனுக்குத் துணையாய்வந்து என்னோடு எதிருந் திறமுடையோர் வேறு யார்? என்றும் பொருள் கொள்ளலாம். சொல்லற்பாலதோ என்பதற்கு - (மற்றையோரைப் பற்றிச்) சொல்லவேண்டியது முண்டோ? என்றலுமொன்று. 'ஏனையர்சொல்லற்பாலரோ' என்றும் பாட மேர்துவர். பி-ம்:—[1] ஆற்றலில், ஆற்றலின், ஆற்றல் செய், ஆற்றலென்று. [2] அனையது, ஏனையர். [3] சொல்லற்பாலரோ, சொல்லலாவதோ. [5] மாற்றவர்க்கு. [6] எதிர்க்குவர். [7] ஓதிய. [8] உணர்

வும். [9] எனிற்றது. 20-இல் பேதைய ரெதிரினும் பெயர்ந்து பெற்றிடை என்று சிலபிரதியில் முதலடி. (264, 265)

21.—சுக்கிரீவனுக்கு இராமன் துணையாய்வந்ததைத் தாரை வாலிக்குக் கூறல்.

[1] அன்னது கேட்டவ ளரச வாயவற்கு
இன்னுயிர் நட்பமைந் திராம னென்பவன்
உன்னுயிர் கோடலுக் குடன்வந் தானெனத்
துன்னிய [2] வன்பினர் சொல்லி னரென்றாள்.

(இ - ள்.) அன்னது கேட்டு - அவ்வாறு (வாலி) சொன்னதைக் கேட்டு, அவள் - அந்தத் தாரையானவள், (வாலியை நோக்கி), 'அரச - தலைவனே! இராமன் என்பவன்—, ஆயவற்கு இன் உயிர் நட்பு அமைந்து - அந்தச் சுக்கிரீவனுக்கு இனிய உயிர் நண்பனைப் பொருந்தி, உன் உயிர் கோடலுக்கு - உனது உயிரைக் கவர்தற்காக, உடன்வந்தான் - அவனுடன் வந்திருக்கிறான், என - என்று, துன்னிய அன்பினர் - (நம்மிடத்துப்) பொருந்திய அன்பையுடையவர்கள், சொல்லினர் - சொன்னார்கள்,' என்றாள் - என்று சொன்னாள்; (எ - று.)

துன்னிய அன்பினர் சொல்லினர் - நமக்கு அநுகூலரான சிலர் வந்து சொல்லக் கேள்வியுற்றேன் என்றபடி: என்றதனால், அதனைச் செவ்வையாக விசாரித்துப் பார்த்துக்கொண்டுதான் போகவேண்டுமென்றாளாம். கேட்டவள்என ஒருசொல்லாகவும் எடுக்கலாம். ஆயவன் - ஆகிய அவன். பி - ம்:—[1] அன்னவன் கூறலினரசுகேளவற்கு, அன்னவன்கூறலும்... [2] நண்பினர். (266)

22.—இது முதல் ஆறு கவிகள்—வாலி அதற்கு மாறுகூறல்.

[1] உழைத்தவல் லிருவினைக் கூறு [2] காண்கலாது
அழைத்தய ருலகினுக் கறத்தி னாறெலாம்
[3] இழைத்தவற் கியல்பல வியம்பி யென்செய்தாய்
பிழைத்தனை பாவியுன் பெண்மை யா [4] லென்றான்.

(இ - ள்.) 'பாவி-தீவினையுடையவளே!—உழைத்த-(தாம்)செய்து சேர்த்த, வல் இரு வினைக்கு - கொடிய இருவகையான கருமங்களுக்கு, ஊறு காண்கலாது - அழிவு காணாமல், அழைத்து - (வருத்தமிகுதியால்) கூவிக்கொண்டு, அயர் - வருந்துகின்ற, உலகினுக்கு-உலகத்திலுள்ள உயிர்களுக்கு, அறத்தின் ஆறு எலாம் - தருமமார்க்கங்களையெல்லாம், இழைத்தவற்கு - செய்துகாட்டுபவனான அந்தப்பெருமானுக்கு, இயல்பு அல - தகுதியல்லாத வார்த்தைகளை, இயம்பி - சொல்லி, என்செய்தாய் - என்ன அபசாரப்பட்டாய்! உன் பெண்மையால் பிழைத்தனை - உனது பெண்தன்மைக்குஏற்ற பேதைமையால் (இங்ஙனம்) தவறுசெய்து விட்டாய்,' என்றான் - என்று (தாரையை நோக்கி வாலி) கூறினான்; (எ - று.)

அவ்வாறு தாரை சொல்லக் கேட்டவுடன், வாலி, 'பிறப்பு அநாதியாய் வருதலாற் பலபிறப்புகளில் தாம் செய்து சேர்த்த கொடிய கருமங்களை யொழிக்கும் உபாயத்தைக் காணாமல் வருந்திக் கதறுகின்ற உலகத்தவர்கள் உய்யுமாறு அவதரித்துத் தரும மார்க்கங்களை யெல்லாம் தான் காட்டும் ஆண்டகையான அந்த இராமபிரான் திறத்தில், 'அவன் சுக்கிரீவனுக்குத் துணையாய் இடையே புகுந்து உன்னைக்கொல்ல வந்திருக்கின்றான்' என்று சிறிதுந் தகுதியில்லாத வார்த்தையைச் சொல்லிப் பெருங்குற்றம் புரிந்தாய்; பாவி! "நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே" என்றபடி பெண்மைக்கு இயல்பான பேதைமையால் நீ இது செய்தனை போலும்' என்றுவெறுத்து உரைத்தனனென்க. உழைத்த-பெயரெச்சம், காரணப்பொருளது: வருந்துவதற்குக் காரணமாக வெனினுமாம். அழைத்தல் - தமது வினைகள் தீருமுபாயங் கூறுபவனை நாடியழைத்தலுமாம். பி - ம்:—[1]உழைத்தவல்லிரு வினையூறு, குழைத்தவல்லிருவினைக்கூறு. [2]காண்கிலாது. [3]இழைத்தியல்பலதை நீ, இழைத்தவற்கியல்பலது [4]என்னே. (267)

23\. இருமையு நோக்குறு மியல்பி னூற்கிது
[1]பெருமையோ விங்கிதிற் பெறுவ தென்கொலோ
அருமையி னின்[2]றுயி ரளிக்கு மாறுடைத்
தருமமே [3]தவிர்க்குமோ தன்னை[4]த் தானரோ.

இதுமுதல் ஐந்து கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்) இருமைஉம் நோக்குறும் இயல்பினாற்கு - (இம்மை மறுமை யென்னும்) இரண்டின் பயன்களையுங் கருதுகின்ற இயல்பையுடையவனான அந்தப்பெருமானுக்கு, இது பெருமைஓ - நீ சொன்னபடி செய்வது பெருமையாகுமோ? இங்கு இதின் பெறுவது என்கொலோ - இவ்வாறு செய்வதனால் (அவன்) அடையும்பயன் யாதோ? அருமையின் நின்று - அருமையான பொருளாய் நின்று, உயிர் அளிக்கும் - எல்லாவுயிர்களையும் பாதுகாக்கின்ற, ஆறு உடை -தன்மையை யுடைய, தருமம்ஏ - தருமந்தானே, தன்னைத் தான் தவிர்க்கும்ஓ - தன்னைத் தான் ஒழிக்குமோ? (எ - று.)—அரோ - ஈற்றசை.

ஒருவரோடொருவர் பொருகையில் அவர்களி லொருவனுக்கு உதவியாய் இடையேபுகுந்து மற்றொருவனைக் கொல்லுதலாகிய அதருமத்தைச் செய்து பழிபாவங்களைப் பெரு னவ னென்றவாறு. இருமையும் நோக்குறும் இயல்பினான் - இம்மைப்பயனாகியபுகழும் மறுமைப்பயனாகிய புண்ணியமும் அறத்தினாற் கைகூடுதலைக்கருதி அவ்வறத்தைப் பரிபாலனஞ்செய்யு மியல்புடையவன்: "மண்ணிடை யாவ ரிராகவனன்றி மாதவ மறத்தொடும் வளர்த்தார்" என்றார், பாலகாண்டத்தில். தருமமூர்த்தியான அவன் தரும

விரோதமான காரியத்தைச் செய்யமாட்டானென்பான், 'தருமமே தவிர்க்குமோ தன்னைத் தான்' என்றான். தர்மம் - வடசொல். பி-ம்—[1]பெருமையன் நிங்கிதில், பெருமையிங் கிதனினி. [2]உலகு. [3]தப்புமோ. [4]தானென்றான், தானென. (268)

24. ஏற்றபே ருலகெலா மெய்தி [1]யீன்றவள்
மாற்றவ ளேவமற் றவள்தன் மைந்தனுக்கு
ஆற்றரு [2]முவகையா லளித்த வையனைப்
போற்றலை யின்னன [3]புகறற் பாலையோ.

(இ-ள்.) ஏற்ற பேர் உலகு எலாம் - (தன் தந்தை) மேற்கொண்டு அரசாட்சிசெய்த பெரிய உலகமுழுவதையும், எய்தி - (தனக்கு) உரிமையாகப்பெற்று, (உடனே), ஈன்றவள் மாற்றவள் ஏவ - (தன்னைப்)பெற்ற தாயினது சக்களத்தியான கைகேயி சொன்னதனால், அவள் தன் மைந்தனுக்கு - அவளுடைய மகனான பரதனுக்கு, ஆற்று அரும் உவகையால் அளித்த - கொள்ளுதற்கு அரிய மகிழ்ச்சியுடனே கொடுத்தருளிய, ஐயனை - சிறந்தவனான இராமபிரானை, போற்றலை - துதியாமல், (அவன் திறத்து), இன்னன புகறற்பாலை - இத்தன்மையவான பழிமொழிகளைக் கூறத்தகுவையோ? (எ - று.)

தனக்கு உரியதான நிலவுலகத்தரசாட்சி முழுவதையும் மாற்றாந்தாய் சொல்ல அவள் பிள்ளைக்கு மிக்கமகிழ்ச்சியுடன் கொடுத்து வந்த பெரும்பண்பாளனான இராமபிரானைத் துதிப்பதை விட்டு அந்தப் பெருமான்மேல் இப்படிப் பழிமொழி சொல்லலாமோ என்றான். முதலிற் பட்டாபிஷேகத்திற் கென்று குறிப்பிட்டநாளிற்கு முந்தின நாளில் தசரதசக்கரவர்த்தி மந்திரிகளோடு ஆலோசித்து ஸ்ரீராமனை வரவழைத்து 'இராச்சிய பாரத்தை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்றுசொல்லித் தனது ஆளுகைக்கு உட்பட்ட உலக முழுவதையும் வாய்க்கொடையாகக் கொடுக்க, இராமன் அதனை ஏற்றுக்கொள்ளுதற்கு உடன்பட்டமை 'ஏற்றபேருலகெலாமெய்தி' எனப்பட்டது. ஈன்றவள் - கௌஸல்யை. ஈன்றவள் மாற்றவள் - மாற்றாந்தாய். மற்று - வினைமாற்று; அசையுமாம். ஆற்றரும் உவகை - அளவற்ற மகிழ்ச்சி; அதனை, அயோத்தியா காண்டத்தில் "இப்பொழுதெம்மனோரா லியம்புதற்கெளிதே யாருஞ், செப்பருங் குணத்திராமன் றிருமுகச்செவ்விநோக்கில், ஒப்பதே முன்புபின் பவ்வாசகமுரைக்கக்கேட்ட, அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா," "தெருளுடை மனத்து மன்னனேவலிற் றிறம்பவஞ்சி, இருளுடையுலகந் தாங்குமின்னலுக் கியைந்து நின்றான், உருளுடைச்சகடம் பூண்ட வுடையவ னுய்த்த காரேறு, அருளுடை யொருவனீக்க வப்பிணியவிழ்ந்த தொத்தான்" எனக் கூறினர். அளித்தல் - பரதன் பெற்றுக்கொண்டு ஆளுமாறு அரசாட்சியைத் தான் கைவிட்டு வனவாசஞ் சென்றமை. பி - ம்:—[1]ஈன்றவம். [2]உவகையோடு. [3]புகலலாகுமோ, புகலற் பாலையோ. (269)

25. நின்றபே ருலகெலா [1]நெருக்கி நேரினும்
வென்றிவெஞ் சிலையலாற் பிறிது வேண்டுமோ
தன்றுணை [2]யொருவரும் தன்னில் வேறிலான்
புன்றொழிற் குரங்கொடு புணரு [3]நட்பனோ.

(இ-ள்.) நின்ற பேர் உலகு எலாம் - நிலைபெற்ற பெரிய உலகங்களெல்லாம், நெருக்கி நேரின்உம் - ஒன்றுசேர்ந்து எதிர்த்தாலும் (அந்த இராமபிரானுக்கு), வென்றி - வெற்றிதருவதற்கு, வெம் சிலை அலால் - (அவனது) வெவ்விய கோதண்டமே யல்லாமல், பிறிது வேண்டும்ஓ - வேறொருதவி வேண்டுவதுண்டோ? [வேண்டா என்றபடி]; தன் துணை தன்னில் வேறு ஒருவரும் இலான் - தனக்குச் சமானம் தன்னைக்காட்டிலும் வேறொருவரு மில்லையாகப் பெற்றவனை அப்பெருமான், புல் தொழில் குரங்கொடு - அற்பமான செய்கையையுடைய ஒரு குரங்காகிய சுக்கிரீவனோடு, புணரும் நட்பன்ஓ - சிநேகஞ் செய்வனோ? (எ - று.)

நெருக்கி - ஒன்றையொன்று நெருக்கி; தம்மில் ஒன்றுசேர்ந்து என்றபடி. தன்துணை ஒருவரும் தன்னில் வேறிலான் - "தானே யுவமை தனக்கு" என்னும்படி தனக்குத் தானே நிகரென்னலாமேயன்றி வேறு உவமை கூறப்பெறாதவன்: "தனக்குவமையில்லாதான்" என்றார் திருவள்ளுவர்; "தன்னொப்பாரில்லப்பன்" என்றார் ஆழ்வார். பிறிது வேண்டுமோ - வேறு துணையை (அவன்) வேண்டுவனோ? என்றும் பதப்பொருள் கூறலாம். புணரும் நட்பனோ - நட்புப் புணர்வனோ, பொருந்தும் நட்பினை யுடையவனோ? பி-ம்:—[1]நெருங்கி. [2]ஒருத்தனும். [3]நட்பெனோ. (270)

26. தம்பிய ரல்லது தனக்கு வேறுயிர்
இம்பரி [1]னிலதென [2]வெண்ணி யேய்ந்தவன்
எம்பியும் யானு[3]முற் றெதிர்ந்த [4]போரிடை
அம்பிடை தொடுக்குமோ வருளி னாழியான்.

(இ - ள்.) தம்பியர் அல்லது தனக்கு வேறு உயிர் இலது என எண்ணி - தன் தம்பிமார்களே யல்லாமல் தனக்கு வேறொருயிர் இல்லையென்று எண்ணி, இம்பரின் ஏய்ந்தவன் - இவ்வுலகத்தில் (அவர்களோடு) இணங்கி நடப்பவனும், அருளின் ஆழியான்-அருள் நிறைந்தவொரு கடல்போன்றவனுமான அவ்விராமபிரான், எம்பிஉம் யான்உம் உற்று எதிர்ந்த போரிடை - என் தம்பியான சுக்கிரீவனும் யானும் எதிர்த்துநின்று செய்யும் போரில், இடை அம்பு தொடுக்கும்ஓ-நடுவில் (தான் என்மேல்) அம்புதொடுப்பனோ? [அப்படி அவன் தொடுக்கமாட்டானென்றபடி]; (எ - று.)

கீழ் 22 - ஆஞ் செய்யுளிற் சுருங்கச் சொன்னதை அடுத்த நான்கு செய்யுள்களும் விவரித்தன வாதலால், அது தொகுத்துச் சுட்டலும், இவை - வகுத்துக் காட்டலுமாம். அருளினாழியான் -

கருத்துடையடைகொளி. இம்பரின் இலது என்று நேரே உரைப்பாருமுளர். உற்று எதிர்தல் - த்வந்த்வயுத்தஞ் செய்ய உடன்பட்டு எதிர்த்தல். இரண்டாமடி - முற்றுமோனை. பி - ம்:—[1] இல்லெனை. [2] எண்ண நீர்ந்தவன். [3] வந்து. [4] போரினில். (271)

27.—வாலி மறுத்துச்சொல்லத் தாரை தடுக்க அஞ்சுதல்.

இருத்திநீ யிறையிவ ணிமைப்பில் காலையில்
[1] உருத்தவ னுயிர்குடித் துடன்வந் தாரையும்
கருத்தழித் [2] தெய்துவென் [3] கலங்க லென்றனன்
விரைக்குழல் பின்னுரை விளம்ப வஞ்சினாள்.

(இ - ள்.) நீ இறை இவண் இருத்தி - நீ சிறிதுபொழுது இங்கே இருப்பாய்: இமைப்பு இல் காலையில் - கண்ணிமைப்பொழுதுமில்லாத காலத்தில் [ஒருமாத்திரைப் பொழுதிற் குள்ளாகவே] உருத்தவன் உயிர் குடித்து - கோபித்துவந்தவனான சுக்கிரீவனது உயிரைப் பருகி, உடன் வந்தாரைஉம் கருத்து அழித்து - அவனுடன் வந்தவர்களையும் மனமழியச்செய்து, எய்துவென் - மீண்டுவருவேன்; கலங்கல் - (நீ) மனக்கலக்கமுறாதே, என்றனன் - என்று (தாரையை நோக்கி வாலி) கூறினன்; பின் - அதன் பின்பு, விரைகுழல்-நறுமணமுள்ள கூந்தலை யுடையவளான தாரை,உரை விளம்ப- (அக்கணவன் கருத்திற்கு மாறான) வார்த்தை சொல்லுதற்கு, அஞ்சினாள் - அஞ்சிநின்றுவிட்டாள்; (எ - று.)

இறை - காலநுட்பம். உருத்து அவனுயிர் குடித்து என்று பிரித்தும் உரைக்கலாம். 'உடன்வந்தாரை' என்றது, அவனது துணைவரான அநுமான்முதலியோரை. விரைக்குழல் - அன்மொழித்தொகை. பின் உரை என்று எடுத்து - மாறானசொல்லெனவுந்தகும். பி - ம்:—[1] உருத்துயிர் குடித்தவன். [2] எய்துவன், ஏகுவன். [3] கலங்கலின்றெனை. (272)

வேறு.

28.—வாலி அம்மலையின் ஒருபுறத்தில் வருதல்.

ஒல்லைச் செருவேட் டுயர்[1] வல்புய வோங்க லும்பர்
எல்லைக்கு மப்பா லிவர்கின்ற விரண்டி னோடும்
மல்லற் கிரியின் தலைவந்தனன் வாலி கீழ்பால்
தொல்லைக் கிரியின் றலைதோற்றிய ஞாயி [2] றென்ன.

(இ - ள்.) வாலி - (இவ்வாறுகூறித் தாரையை நிறுத்திய) வாலியானவன்,—ஒல்லை - விரைவில், செரு வேட்டு - போரை விரும்பி, உயர் - (அப்போர் விருப்பத்தாற் பூரித்து) உயர்ந்து, உம்பர் எல்லைக்குஉம் அப்பால் - தேவலோகத்தின் எல்லைக்கு அப்பாலும், இவர்கின்ற - மேலெழுகின்ற, வல் புயம் - வலிய தோள்களாகிய, ஓங்கல் இரண்டினோடுஉம் - இரண்டு மலைகளுடனே,—மல்லல் கிரியின் தலை - வளங்களையுடைய அம்மலையினிடத்து,—கீழ்பால் - கிழக்குத்திக்கி

லுள்ள, தொல்லை இரியின் தலை - பழமையரான உதயகிரியின் சிகரத்தில், தோற்றிய - உதித்துவிளங்கிய, ஞாயிறு என்ன - சூரியன் போல, வந்தனன் - வந்தான்; (எ - று.)

இயல்பாகவே மலைகள்போலுள்ள தோள்கள் பொருவதிலுள்ள பெருமகிழ்ச்சியால் மிகவும்பூரிக்க வந்தானென்பார், நயந்தோன்ற 'தோள்களாகிய இரண்டுமலைகளுடனே ஒருமலையின் தலையில் வந்தான்' என்றார். போர்நேர்வதென்ற மகிழ்ச்சியால் தோள்கள் பூரித்தல், சிறந்தவீரரியல்பு; "செருவென்ற மாற்றங் கேட்டுச் சிந்தையினுவகைபொங்க, மருவொன்று மலங்கன்மார்பும் வாகுபூதரமும் பூரித்து" எனக் காண்க. பொருவதிலுற்சாகத்தினால் விளக்கமுற மலைமீதுதோன்றிய வாலிக்கு, உதயகிரியில் விளங்கும் ஞாயிறு உவமை. பி - ம்:—[1]மல், வேல், வான். [2]ஒத்தான், ஒப்பான். (273)

29.—இதுவும் அது.

நின்று [1]னெதிர்யாவரு நெஞ்சு நடுங்கி யஞ்சத்
தன்றோள் வலியாற் [2]றகைமால் [3]வரை [4]சாலும் வாலி
குன்றூடு வந்துற் றனன் கோ [5]ளவுணன் குறித்த
வன்றூ ணிடைத்[6]தோன்றிய மாநர [7]சிங்க மென்ன.

(இ - ள்.) தன் தோள் வலியால் - தனது தோள்களின் வலிமையால், தகை மால் வரை சாலும் - அழகிய பெரிய மலையை யொத்த, வாலி - வாலியானவன்,—கோள் அவுணன் குறித்த வல் தூணிடை தோன்றிய மா நரசிங்கம் என்ன - கொடுமையையுடைய இரணியாசுரன் குறிப்பிட்ட வலிய தூணினிடத்து வெளிப்பட்ட பெரிய நரசிங்கமூர்த்தி போல,—எதிர் யாவரும் நெஞ்சு நடுங்கி அஞ்ச - (தன்னைக்) காண்கின்ற எல்லாரும் அஞ்சி மனநடுங்கும்படி, குன்று ஊடு வந்து உற்றனன் நின்றான் - அம்மலையின் ஒருபுறத்தில் வந்துசேர்ந்து நின்றான்; (எ - று.)

யாவரும் அஞ்சிநடுங்கத் தோன்றியதில் வாலிக்கு நரசிங்கம் உவமை. எதிர் நின்றான் என்றெடுத்து, சுக்கிரீவனெதிரில்நின்றானெனினுமாம். நடுங்கி அஞ்ச = அஞ்சி நடுங்க. 'சாலும்' - உவமவாசகமாய்நின்றது. வரை சாலும் - மலையின்தன்மையமைந்த வென்னலுமாம். கோள் - வலிமையுமாம். நரசிங்கம் - மனிதவடிவங் கலந்த சிங்கவடிவம். பி-ம்:—[1]இறை. [2]தடமா, தனிமா, தடமால். [3]மலை. [4]சாரும். [5]அவுணற்குறித்து. [6]தோற்றிய. [7]சீயம். (274)

30.—வாலி ஆரவாரஞ்செய்ய அப்பேரொலி எல்லாவுலகங்களிலும் பரவுதல்.

ஆர்க்கின்ற [1]பின்னோன்றனை நோக்கினன் தானு மார்த்தான்
வேர்க்கின்ற வானத் துருமேறு வெறித்து [2]வீழப்
போர்க்கின்ற தெல்லா வுலகும் [3]பொதிர்வுற்ற பூசல்
கார்க்குன்ற மன்று னிலந்தாவிய [4]காலி னென்ன.

(இ - ள்.) ஆர்க்கின்ற பின்னோன் தனை நோக்கினன் - கர்ச்சிக்கின்ற தன் தம்பியான சுக்கிரீவனைப்பார்த்து, தான்உம் ஆர்த்தான்- (வாலி) தானும் கர்ச்சித்தான்; (அதனால்), வேர்க்கின்ற வானத்து உரும் ஏறு வெறித்து வீழ - (அஞ்சி) வியர்க்கின்ற மேகங்களினின்று பேரிடிகள் உக்கிரமாய்விழுந்திடும்படி, பொதிர்வு உற்ற - மிகுதிகொண்ட, பூசல் - பேரொலியானது,—கார் குன்றம் அன்னான் நிலம் தாவிய காலின் என்ன - கருநிறமுடையதொரு மலையைப் போன்றவனான திருமால் உலகங்களைத் தாவியளந்த திருவடிகள் போல, எல்லாம் உலகுஉம் போர்க்கின்றது - எல்லா வுலகங்களிலுஞ் சென்று பரவுவதாயிற்று; (எ - று.)

'வேர்க்கின்ற வானம்' என்றது. மழை துளித்தல்பற்றி. கீழிரண்டு செய்யுள்களும் இவ்வாறே. உருமேறுவிழுதல், ஒலி மிகுதியாலான அதிர்ச்சியால். [4]காலிதென்ன என்றபாடம், எளிதிற் பொருள்படும். உவமையணி. பி - ம்:—[1] தன் தம்பியை. [2] வீழ்ந்த. [3] பொதிவுற்ற. [4] காலினன்ன. (275)

31.—இராமன் வாலியை நோக்கி அதிசயித்தல்.

அவ்வேலை யிராமனு [1] மன்புடைத் தம்பிக் [2] கைய
செவ்வே [3] செலநோக்குதி தானவர் தேவர் நிற்க
எவ்வேலை [4] யெம்மேக மெக்காலொ டெக்கால வெந்தீ
வெவ்வே றுலகத் [5] திவன்மேனியை மானு மென்றான்.

(இ - ள்.) அ வேலை-அப்பொழுது,—இராமன்உம் - ஸ்ரீராமபிரானும்,—அன்பு உடை தம்பிக்கு - (தன்பக்கல்) அன்பையுடைய தம்பியான இலக்குமணனைநோக்கி, 'ஐய - அப்பா! செவ்வே செல நோக்குதி - நன்றாக (க் கண்பார்வை) செல்லுமாறு காண்பாயாக; தானவர் தேவர் நிற்க - அசுரர்களும் தேவர்களும் இருக்கட்டும்; உலகத்து வெவ்வேறு - உலகத்தில் தனித்தனியேயுள்ள, எ வேலை - எந்தக் கடல்தான், எ மேகம் - எந்த மேகம்தான், எ காலொடு - எந்தக் காற்றுத்தான், எ காலம் வெம் தீ - வெவ்விய எந்தக்காலாக்கினிதான், இவன் மேனியை-இந்த வாலியின் உடம்பை, மானும் ஒக்கும்?' என்றான் - என்று வியந்து கூறினான்; (எ - று.)

கடல்முதலியவற்றில் எதுவும் இவனுடம்பை யொவ்வாதென்றபடி. தானவர்களும் தேவர்களும் இவனுக்கு ஒப்பாகமாட்டாரென்பான், 'தானவர் தேவர் நிற்க' என்று பராமுகமாகக் கூறினான். தானவர் - தநுவின்மக்கள். தம்பிக்கு என்றான் என இயையும். தமையனார் தம்பியை 'ஐய' என்றது, மரபுவழுவமைதி. பி-ம்:—[1] அன்பமர். [2] அம்ம. [3] சில. [4] எம்மேரு. [5] இவர். (276)

32.—அதற்கு இலக்குமணன் 'சுக்கிரீவன் செய்தியாலாகிய கலக்கத்தால் ஒன்றையும் உணர்ந்திலேன்' எனல்.

வள்ளற் கிளையான் பகர்வா னிவன் [1] தம்முன் வாளுள்
கொள்ளக் கொடுங்கூற் றுவனைக் கொணர்ந்தான் [2] குரங்கின்

எள்ளற் [3]கரும்போரது செய்கல னென்னு மின்னல்
[4]உள்ளத்தி னூன்ற [5]வுணர்வுற்றில னென்று மென்ருன்.

(இ - ள்.) வள்ளற்கு - வரையாதருளுமியல்பினனான இராமபிரானை நோக்கி, இளையான் - இளையபெருமாள் [இலக்குமணன்], பகர்வான் - விடைகூறுபவனும், 'இவன் - இச்சுக்கிரீவன், தம்முன் வாழ்நாள் கொள்ள - (தனது) தமையனது ஆயுளை யொழித்தற்கு, கொடுங் கூற்றுவனை கொணர்ந்தான் - கொடிய யமனை அழைத்துக் கொண்டு வந்தான்; குரங்கின் எள்ளற்கு அரும் போர் அதுசெய்கலன் - (சாதாரணமாய்க்) குரங்குகள் செய்தற்குரிய இகழ்ச்சிக்கு இடமில்லாத போரைச் செய்வானல்லன், என்னும் - என்பதனாலாகிய, இன்னல் - துன்பம், உள்ளத்தின் ஊன்ற - மனத்திற் பதிதலால், ஒன்றும் உணர்வுற்றிலன் - ஒன்றையும் அறிந்தேனில்லை,' என்ருன் - என்று சொன்னன்; (எ - று.)

சுக்கிரீவன் செய்கின்ற முயற்சி தருமயுத்தமுறைமைக்கு மாறென்பதை உள்ளத்திற்கொண்டு மனங்கலங்கியது பற்றி, இலக்குமணன் இவ்வாறு கூறினன். 'கூற்றுவன்' என்றது, இராமபிரானை; "வாலிகாலன்" என்ருர் பிறரும். உலகத்து உயிர்களைச் சங்கரிக்கின்ற யமன் இவ்வாலியைச் சங்கரிக்கத் திறமில்லாதவனென்பது தோன்ற, 'கொடுங் கூற்றுவன்' என்னலாயிற்று. தம்முன் - தமது முன்பிறந்தவனெனத் தமையனுக்குக் காரணக்குறி. 'குரங்கென் றெள்ளற்குறும்போர்செய வெண்ணினன்' என்ற பாடத்திற்கு - குரங்கின்தொழிலென்று இகழ்தற்கு ஏற்ற போரைச் செய்ய எண்ணினனென்றும், 'குரங்கினெள்ளற்கரும்போர் செய வெண்ணினன்' என்ற பாடத்திற்கு - உள்ளே தமையனைக் கொல்வதற்குக் கூற்றுவனை உடனழைத்து வைத்துக்கொண்டு வெளியே குரங்குகள் ஸாமாந்யமாகச் செய்யும் இகழ்ச்சிக்கிடமில்லாத போரைச் செய்யக் கருதினனேயென்றும், தமதினத்தவரோடு பெரும்போர் செய்யக்கருதினனே யென்றும் பொருளாம். பி - ம்:—[1]தன்முன். [2]குரங்கென்று. [3]அரும்போர் செயவெண்ணினன், அரும்போரது செய்தனன், உறுபோர்செய வெண்ணினன். [4]உள்ளத்திடையூன்ற. [5]உணர்ந்தேனிலை, உணர்கிற்றிலன், உணர்ந்தேனிலன். (277)

33.—மற்றும் இலக்குமணன் சுக்கிரீவனது அக்கிரமத்தை எடுத்துக் கூறல்.

ஆற்ருது பின்னும் பகர்வா னறத்தா றழுங்கத்
தேற்ருது செய்வார்களைத் தேறுதல் [1]செவ்வி தன்ருல்
மாற்ரு னெனத்தம் முனைக்கொல்லிய வந்து நின்ருன்
[2]வேற்ருர்கள் திறத்திவன் தஞ்சமென் [3]வீர வென்ருன்.

(இ - ள்.) ஆற்ருது பின்னும் பகர்வான் - மனம்பொருமல் (இலக்குமணன்) மீளவும் (தமையனைநோக்கிக்) கூறுபவனும், 'வீரமகாவீரனே! அறத்து ஆறு அழுங்க - தருமமார்க்கம் கெட,

தேற்றாது செய்வார்களை - நம்பத்தகாத காரியத்தைச் செய்பவர்களை, தேறுதல் - நம்புதல், செவ்விது அன்று - நன்மையையுடையதன்று; மாற்றான் என - பகைவன்போல, தம்முனை கொல்லிய வந்து நின்றான் - தனது தமையனைக் கொல்லவந்து நின்றவனாகிய, இவன் - இச்சுக்கிரீவன், வேற்றார்கள் திறத்து தஞ்சம் என் - அயலார் விஷயத்தில் துணையாவது எப்படி?' என்றான் - என்று வினவினான்; (எ - று.)

நம்பிக்கைக்கு மாறான காரியத்தைப் பிறர்பக்கல் செய்பவன் நம் திறத்திலும் அங்ஙனஞ் செய்யக்கூடுமாதலாலும், சிறந்த உறவினனான தமையனையே கொல்லத் துணிந்தவன் யாதொரு தொடர்புமில்லாத பிறர்க்குத் துணையாவனென்பது துணியப்படாமையாலும், இச்சுக்கிரீவனை நாம் நம்பலாகாதென்பது, இலக்குமணன் கூறியதன் கருத்து. தம்முனை மாற்றான் என என்று மொழிமாற்றி, தமையனைப்பகைவனென்றெண்ணியென்றலுமாம். தேற்றாது - ஆலோசியாமல் எனினுமாம். ஆல் - அசை. பி - ம்:—
[1]செவ்விதாமோ. [2]வேற்றோர்கள். [3]வீரம், வீவ. (278)

34.—இதுவும், அடுத்தகவியும் - ஒருதொடர்: அதற்கு இராமபிரான் கூறுஞ் சமாதானம்.

அத்தா விதுகேளென வாரியன் கூறு வானிப்
பித்தாய [1]விலங்கி[2]னொழுக்கினைப் பேச லாமோ
எத்தாயர் [3]வயிற்றினும் பின்[4]பிறந் தோர்க ளெல்லாம்
ஒத்தாற் பரதன் பெரிதுத்தம [5]னாத லுண்டோ.

(இ - ள்.) 'அத்தா - அப்பா! இது கேள் - (யான்சொல்லும்) இதனைக்கேட்பாய்,' என - என்று, ஆரியன் கூறுவான் - சிறந்த தலைவனான இராமபிரான் (பின்வருமாறு) சொல்வான்;—(மனிதரின் ஒழுக்கத்தினைக் குறித்து 'இது நியாயமானது, இது அநியாயமானது' என்று பேசுவதுபோல), இ பித்து ஆய விலங்கின் ஒழுக்கினை - பைத்தியங்கொண்டதுபோன்ற [விவேகமில்லாத] இவ்வகை மிருகங்களின் ஒழுக்கத்தைக் குறித்து, பேசல் ஆம்ஓ - (இங்ஙனம் ஆராய்ச்சி செய்து) பேசுதல் கூடுமோ? (விலங்கினத்தைச் சார்ந்த உடன்பிறந்தோருள் அண்ணனைப் பகைத்த சுக்கிரீவன் கிடக்க: மனிதரான உடன்பிறந்தாருள்), எ தாயர் வயிற்றின் உம் - எந்தத் தாய்மார் வயிற்றிலும், பின்பிறந்தோர்கள் எல்லாம் - பின்னே பிறந்தவர்களெல்லோரும், ஒத்தால் - (தம்தம் தமையனோடு) இணங்கியே நடந்தால், பரதன் பெரிது உத்தமன் ஆதல் உண்டுஓ - (நமது) பரதன் மிகவுஞ் சிறந்தவனாவது உண்டோ? (எ - று.)

பகுத்தறிவற்ற விலங்கினங்களின் ஒழுக்கமுறைமை இப்படி ஆராய்ந்து பேசத்தக்கதன்று என்றும், விவேகசூனியமான விலங்கினத்திலே யன்றிப் பகுத்துணர்வுடையரான மனிதரிலும் எல்லாரும் பரதன்போலத் தமையனருக்குக்கீழ்ப்படிந்து நடப்பதுண்டோ என்றும், விலங்கின் இயற்கைப் பேதைமையையும், முன்பிறந்தோ

னுக்கு அடங்கிநடத்தலின் அருமையையும் சுக்கிரீவனது செய்கைக்குச் சமாதானமாகப் பெருமாள் இளையபெருமாளுக்கு எடுத்துக்காட்டினர். பெருமாள் தமது அன்பர்கள் பக்கல் வரம்புகடந்த திருவருள் பாலித்துத் தழுவுபவராதலால், காலத்திற்கு ஏற்ப இவ்வாறு சுக்கிரீவனைத் தழுவிப்பேசலாயினர். தனக்கென்று தன்தாய் வாங்கிக் கொடுத்த இராச்சியத்தைக் கைக்கொள்ளாது விட்டுச் சென்று அதனைத் தமையனுர்க்கு வலிய நிர்ப்பந்தித்துக்கொடுக்கும் உத்தம குணம் பரதாழ்வானொருவற்கேயன்றிப் பிறரெவர்க்கும் வாய்க்காதென்பது, பின்னிரண்டடியால் விளங்கிற்று; "தாயுரைகொண்டு தாதையுதவிய் தரணிதன்னைத், தீவினை யென்னநீத்துச் சிந்தனை முகத்திற்றேக்கிப், போயினை யென்றபோழ்து புகழினேய் தன்மை கண்டால், ஆயிரமிராமர் நின்கேழாவரோ தெரியினம்மா" என்று அதனைக் குகப்பெருமாள் பாராட்டிக் கூறியதும் காண்க. பரதனிடத்து அன்பினலன்றி அன்னன் நடந்துகொண்ட நீதிபற்றி இங்ஙன் அப்பரதனைப் பாராட்டிக் கூறியதனல் பரதனது மேன்மை பெறப்படுமேயன்றி, இலக்குமணன் முதலியோரைப் பழித்துக் கூறியதாகாதென்பதை யுணர்க. பரதன் இலக்குமணன் என்ற இருவரன்பும் ஒரு தன்மையனவே யென்றபொருளை "காடுறைந் துளைந்த மெய்யோ கையறு கவலைகூர, நாடுறைந்துளைந்த மெய்யோ நைந்ததென்றுலகம் நைவ" என்ற இடத்தும், இராமன் யாவரிடத்திலுமில்லாத பேரன்பை இலட்சுமணனிடத்துக்கொண்டுள்ளா னென்பதை "பிரிபவர் பிரிகபேரிடர், வருவனயாவையும் வருக வார்கழல், பெருவிரல்வீர நிற் பிரியினல்லது, பருவரலென் வயிற் பயிறற் பாலதோ" என்ற இராமபிரான் வாக்கிலும் கண்டு தெளிக.

இங்கு 'அத்தா' என்றதற்கு, 31-ஆஞ் செய்யுளில் 'ஐய' என்றதற்கு உரைத்தது உரைக்க. ஆர்யனென்ற வடசொல் - அடையத்தக்கவனென்றும், (தீவினைகளினின்று) சேய்மையாய் விலகிச் செல்பவனென்றும் காரணப்பொருள் பெறும். பரதன் - எல்லாப் பாரங்களையும் நிர்வகிக்கவல்லவ னென்று பொருள்படும். இராமபிரான் வனவாசஞ்செல்லவும் தசரதசக்ரவர்த்தி மேலுலகஞ்செல்லவும் காவலனில்லாததாகின்ற இராச்சியச்சுமையைத் தாங்குந் தன்மைபற்றிப் பரதனென்று திரிகாலஞானியான வசிட்டமாமுனிவர் முன்னமே இவனுக்குப் பெயரிட்டனர். பி - ம்:—[1]குரங்கின். [2]ஒழுங்கினை. [3]வயிற்றினில். [4]பிறந்தார்கள். [5]ஆவதுண்டோ, ஆகையுண்டோ. (279)

35. விற்றங்கு வெற்பன்ன விலங்கெழிற் [1]றோள மெய்ம்மை
உற்றார்சில ரல்லவ ரேபல ரென்ப துண்மை
பெற்றா ருழைப்பெற்ற பயன்பெறும் பெற்றி யல்லால்
அற்றார் நவையென்றலுக் [2]காகுந [3]ரார்கொ லென்றான்.

(இ - ள்.) வில் தாங்கு - ஒளியைக்கொண்ட, வெற்பு அன்ன - மலைபோன்ற, இலங்கு எழில் - விளங்குகின்ற அழகையுடைய,

தோள - தோள்களையுடையவனே! (உலகத்தில்), மெய்ம்மை உற்றார் சிலர்ஏ - (வேதசாஸ்திரங்களிற் கூறியபடி) தவறாத நல்லொழுக்கம் பொருந்தியவர் சிலரே: அல்லவர்ஏ பலர் - அந்நல்லொழுக்கமுடையவரல்லாதவரே பலர், என்பது—, உண்மை - உண்மையாகும்; (ஆதலால்), பெற்றாருழை - நண்பராகப்பெற்றவரிடத்தில், பெற்ற பயன் பெறும் பெற்றி அல்லால் - நேர்ந்த நற்பயனைப் பெற்றுக் கொள்ளுந் தன்மையல்லாமல், நவை அற்றார் என்றலுக்கு ஆகுநர் ஆர் கொல் - குற்றமற்றவரென்று சொல்லுதற்கு உரியவர் யாவருளர்? என்றான் - என்று (இராமன் இலக்குமணனை நோக்கிக்) கூறினான்; (எ - று.)

'உடன்பிறந்தவர் ஒற்றுமையின்றிப்பகைப்பது தகுதியோ?' என்ற வினாவிற்கு விடையிறுத்த ஸ்ரீராமன், 'உடன்பிறப்போடு பகைத்ததன்றி, அப்பகைவனுக்குக் கூற்றுவனாக ஒருதுணையைப் பெற்றுவந்து சூழ்ச்சியானபோர் செய்வதும் தக்கதோ? அவ்வாறானவனை நாம் துணையாகக் கொள்ளலாமோ?' என்ற வினாவிற்கு இதனால் விடையிறுக்கின்றானென்க. வேதசாஸ்திரங்களிற் கூறியவிதிமுறைப்படி தவறாத நல்லொழுக்கமுடையவர் சிலரும் அவ்வகையொழுக்கமில்லாதவர் பலருமாயிருப்பதுதான், உலகத்து இயல்பு; "நெல்லுக்குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு, புல்லிதழ் பூவிற்கு முண்டு" என்றபடி குற்றமில்லாதவர் உலகத்தில் அரியராதலால், அவரவரிடமுள்ள குற்றங்களைக் கவனியாமல் நாம் நற்பயனைக் கொள்ளவேண்டுமென்று பெருமாள் இளையபெருமாளுக்குச் சமாதானங் கூறியருளினாரென்பதாம். இங்குப் பொதுவாகக் கூறிய பொருள், சுக்கிரீவன் மெய்ம்மையொழுக்கத்தைக்கொள்ளாத குற்றமுள்ளவனே யாயினும் அதனைக் கருதாது அவனிடமுள்ள நற்குணத்தை மாத்திரம் பார்த்துத் துணைவனான அவனால் ஆகவேண்டிய உதவியைப் பெறுவதே நாம் செய்யவேண்டிய முறைமையென்ற சிறப்புப்பொருளைத் தெரிவித்தது; இங்ஙன் வருவதும் பிறிதுமொழிதலணியின் வகையாகும்.

வில் தாங்கு - வில்லைத் தரித்த என்றும், எழில் - எழுச்சியென்றும் உரைக்கலாம். மெய்ம்மை - ஆகுபெயரால், நல்லொழுக்கத்தைக் காட்டிற்று. பயன் என்பது - இரட்டுறமொழிதலால், அவர்களிடமுள்ள நற்குணமென்றும், நமக்கு ஆகவேண்டிய காரியமென்றும் இருபொருளது. பி - ம்:—[1]தோளின்மேன்மை, தோளமேன்மை, தோளின்மென்மை. [2]ஆக்குநர். [3]யாவர். (280)

36.—அப்பொழுது வாலிசுக்கிரீவர் போர்க்கு நெருங்குதல்.

வீரத் திறலோ [1]ரிவை[2]யின்ன விளம்பும் வேலை
தேரிற் றிரிவான் மகனிந்திரன் செம்ம லென்றிப்
பாரிற் றிரியும் பனிமால்வரை யன்ன பண்பார்
மூரித்[3] திசையானை யிரண்டென [4]முட்டி னாரே.

(இ - ள்.) வீரம் திறலோர் - வீரத்தையும் பலத்தையு முடையவர்களான இராமலக்குமணர்கள், இன்ன இவை விளம்பும் வேலை - இத்தன்மையனவான இவ்வார்த்தைகளை (த் தம்மிற்) பேசிக்கொண்டிருக்குஞ் சமயத்தில்,—தேரில் திரிவான் மகன் - தேரிலேறி (உலகமெங்குஞ்) சுற்றிவருபவனான சூரியனது குமாரனாகிய சுக்கிரீவனும், இந்திரன் செம்மல் - இந்திரனது புதல்வனான் வாலியும், என்று - என்றுசொல்லப்பெற்று, இ பாரில் திரியும் பனி மால்வரை அன்ன - இந்த உலகத்திற் சஞ்சரிக்கும் குளிர்ச்சியுள்ள பெரிய மலைகள் போன்ற, பண்பார் - தன்மையுடையவர்கள், மூரி திசை யானை இரண்டு என முட்டினார் - வலிமையையுடைய இரண்டு திக்கஜங்கள் (ஒன்றோடொன்று போர் செய்தற்கு நெருங்கினாற்) போல (ப் போர்க்குத் தம்மில்) நெருங்கினார்கள்; (எ - று.)

மலைபோற்பெருந்தோற்றமுடைய வாலிசுக்கிரீவர், திக்கஜங்கள் முட்டிக்கொள்வதுபோற் பொரலானார்களென்பதாம்: வலிய பெரிய வடிவிற்கும், வெகுளிவெறிக்கும் உவமை. மூன்றாமடி - இல்பொருளுவமை: அசலமாய் நிலையாயிருக்கும் மலைகளல்லாமற் புடைபெயர்ந்து நிலவுலகமெங்குந் திரியும் மலைகள் உளவானால் அவை போன்றவர்களென்க. பண்பு ஆர் என்று பிரித்து, திரியும் மலைகள் போன்ற தன்மைபொருந்திய, திக்கஜங்களென்று உரைப்பர் ஒரு சாரார். என்று அன்ன என இயையும். பி - ம்:—[1] இவண், இவர், அவன், அவை. [2] அன்ன். [3] திறல். [4] முட்டினார்கள். (281)

37.—அவ்விருவரும் சாரி திரிதல்.

குன்றோடு [1] குன்றுற்றன கோளரிக் கொற்ற வல்லேறு
ஒன்றோடு சென்றொன் றெதிருற்றன வேயு மொத்தார்
[2] நின்றார் திரிந்தார் நெடுஞ்சாரி நிலந் [3] திரிந்த
[4] வன்றோட் குயவன் [5] திணிமட்கலத் தாழி [6] யென்ன.

(இ - ள்.) குன்றோடு குன்று உற்றன - மலையோடு மலை நெருங்கிப் பொருவனவற்றையும், கோள் கொற்றம் வல் அரி ஏறு ஒன்றோடு ஒன்று எதிர்சென்று உற்றனஉம் - கொல்லும் இயல்பையும் வெற்றியையும் வலிமையையுமுடைய ஆண்சிங்கங்கள் ஒன்றோடொன்று எதிர்த்துச் சென்று நெருங்கியவற்றையும், ஒத்தார் - போன்றவர்களாய், நின்றார் - (தம்மில்) நெருங்கிநின்றவர்களான அந்தவாலி சுக்கிரீவர்கள், நெடுஞ் சாரி திரிந்தார் - தொடர்ச்சியாகப் பலமுறை வலசாரி இடசாரியாகத் திரிந்தார்கள்; (அங்ஙனம் அவர்கள் திரிகின்ற கடுவிசையால்), நிலம் - நிலவுலகம், வல் தோள் குயவன் திணி மண் கலத்து ஆழி என்ன - வலிய கைகளையுடைய குயவன் வனைகின்ற மண்பாத்திரங்கட்குத் துணைக்கருவியான சக்கரம் போல, திரிந்த - சுழலலாயிற்று! (எ - று.)

எதிர்ந்துநின்ற நிலையில் குன்றோடு குன்று நின்றதுபோன்ற தோற்றமுள்ள வாலிசுக்கிரீவர், இருசிங்கங்கள் எதிர்ப்பனபோல

எதிர்த்தார்; சாரிதிரிந்தார்: திரிந்தவிசையால் நிலம் குயவன்திகிரி போற் சுழலலாயிற்றென்பதாம்; உவமையணி. நின்றூர் [நின்று] குயவன் திரித்த மட்கலத்தாழியென்ன நெடுஞ்சாரி திரிந்தார் என்று கூட்டி யுரைப்பாருமுளர். ஸிம்ஹமென்ற பெயரின் காரணப் பொருள் தோன்ற, 'கோள்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது: கோள் - மிடுக்குமாம். சிங்கம் உவமை - பலபராக்கிரமங்களுக்கும், உக்கிரத்தன்மைக்கும். திரிந்த = திரிந்தது: விகாரம். நன்றாகத் தொழில்செய்தற்கு ஏற்ற கைவலிமையையுடையவனென்பார், 'வன் றேட் குயவன்' என்றூர். பி - ம்:—[1] நிலம் குன்றெத்தனர். [2] நின்றோர் திரிந்தார், நின்றுரெதிர்ந்தார். [3] திரிந்தார். [4] மனறேய். [5] திரி, தனி. [6] மான. (282)

38.—அவர்கள் உராய்தலால் தீ எழுதல்.

தோளோடு தோள்தேய்த்தலிற் றென்னிலந் [1] தாங்க லாற்றுத்
தாளோடு தாள்தேய்த்தலிற் றந்த தழற்[2]பி றங்கல்
வாளோடு மின்னேடுவ போனெடு [3]வானி னேடும்
கோளோடு கோ[4]ளுற் றெனவேற் [5]றடர்த்தார் கொதித்தார்.

(இ - ள்.) கோளோடு கோள் உற்று என ஏற்று அடர்த்தார் - (இரண்டு) கிரகங்கள் (தம்மில்) நெருங்கியனபோன்று எதிர்த்து ஒருவரை யொருவர் நெருக்குகின்ற, கொதித்தார் - கோபாவேசங் கொண்டவர்களான அவ்வாலி சுக்கிரீவர்கள்,—தோளோடு தோள் தேய்த்தலின் - (ஒருவர்) தோளோடு மற்றொருவரின் தோளை உராய் தலினாலும், தொல் நிலம் தாங்கல் ஆற்று தாளோடு தாள் தேய்த் தலின் - பழமையான நிலவுலகந் தாங்கமாட்டாதபடி [மிக்கவலிமை யாக] ஒருவர்காலோடு மற்றொருவர்காலைத் தேய்த்தலினாலும், தந்த- உண்டான, தழல் பிறங்கல் - தீப்பிழம்புகள், வாளோடு மின் ஓடுவ போல் - ஒளியோடு மின்னல்கள் ஓடுவனபோல, நெடுவானின் ஓடும் - பரந்த வானத்தில் விரைந்து செல்லும்; (எ - று.)

பெரியதாய்விளங்கும் வடிவத்துடன் நெருங்குதல் பற்றி 'கோளோடு கோளுற்றென' என உவமை கூறினான். அடர்ந்து பொருகின்ற வாலி சுக்கிரீவர்கள் தோளோடுதோளையும் தாளோடு தாளையும் தேய்த்தாராகையால் தோன்றிய தழற்பிறங்கல் மின்போல் வானிலோடுவதாயிற்றென்று, தாக்கிய விசையை உயர்வுநவிற்சியணி வகையாற் கூறினார். தோளோடு தோள் தேய்த்தல் - ஒருவர் தோளினால் மற்றொருவர் தோளை எற்றுதல்; தாளோடு தாள் தேய்த்தல் - ஒருவர்காலால் மற்றொருவர்காலை எற்றுதல். கோளோடு கோள் - சூரியசந்திர ரென்னலாம். பி - ம்:—[1] தாங்கல் தேற்று. [2] பிறங்கும், பிழம்பு. [3] வானினேட. [4] உற்றன வொத்து. [5] அடர்ந் தார். (283)

39.—அவர்கள் சுந்தோபசுந்தர் போலுதல்.

தந்தோள் வலி[1] மிக்கவர் [2] தாமொரு தய்வ யிற்றின்
வந்தோர் மடமங்கை பொருட்டு [3]மலைக்க லுற்றூர்

சிந்தோ டரி[4]யொண்கட் டிலோத்தமை காதல் செற்ற
சுந்தோப சுந்தப்பெயர்த் தொல்லையி னேரு மொத்தார்.

(இ - ள்.) தம் தோள் வலி மிக்கவர் - தமது தோள்வலியால் மிக்கவர்களும், ஒரு தாய் வயிற்றின் வந்தோர் - ஒரு தாயின்வயிற்றிலிருந்து பிறந்தவர்களும், மட மங்கை பொருட்டு மலைக்கல் உற்றார் - மடமைக்குணமுள்ள ஒருபெண்ணின் நிமித்தமாய் (த் தம்மிற்) போர் செய்யத் தொடங்கியவர்களுமான அவ்வாலி சுக்கிரீவர்,—சிந்து ஓடு - சிதறிப் பரந்த, அரி - (உத்தமவிலக்கணமாகிய) சிவந்த இரேகைகளையுடைய, ஒள் கண் - ஒளியுள்ள கண்களையுடைய, திலோத்தமை - திலோத்தமை யென்பவளிடத்துக் கொண்ட, காதல் - ஆசையினால், செற்ற - பகைத்து (ஒருவரோடொருவர்) போர்செய்த, சுந்த உபசுந்தர் பெயர் தொல்லையினோர் உம் - சுந்தன் உபசுந்தன் என்னும் பெயரையுடைய பழமையான அசுரர்களையும், ஒத்தார் - போன்றார்கள்; (எ - று.)

சுந்தோபசுந்தர் வரலாறு:—திருமாலால் நரசிங்காவதாரத்திற் கொல்லப்பட்டவனான இரணியகசிபுவென்னும் அசுரராசனது குலத்தில் நிகும்பனென்பவனது புத்திரர்களாய்த் தோன்றிய சுந்தன் உபசுந்தன் என்ற இருவரும், தம்மில் மிக்கமனவொற்றுமையுடையராய், நடத்தல் இருத்தல் படுத்தல் உண்ணல் உறங்கல் முதலிய எல்லாச் செயல்களிலும் எப்பொழுதும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாராய்த் தமது இன்ப துன்பங்களைச் சமமாகப் பாவித்து வந்தனர். அவர்கள் இளமையில் மூவுலகத்தையும் வெல்லக்கருதி விந்திய கிரியை யடைந்து மிக்க விரதானுட்டானத்துடனே திரிமூர்த்திகளைக் குறித்து நெடுங்காலம் அரிய பெரிய தவத்தைச் செய்கையில் அத்தவத்தின் கடுமையைக்கண்டு அஞ்சிய தேவர்கள் மாயையாற் பல மகளிரையேவி அவர்களுடைய தவத்திற்குப் பலவாறு இடையூறு செய்ய முயன்றும் முடியவில்லை. பின்னர்ப் பிரதியட்சமான திரிமூர்த்திகள் அச்சுந்தோபசுந்தர் வேண்டியபடியெல்லாம் அவர்கட்கு வரங்களைக் கொடுத்துவருகையில், அவ்வசுரர்கள் 'நாங்கள் எவராலுங் கொல்லப்படாதவ ராகவேண்டும்' என்று வரம் வேண்டினர். அதற்கு ஆதிதேவர்கள் 'உங்களிருவர்க்கும் பிறவுயிர்களெவற்றாலும் மரணமில்லை' என்று வரமளித்தார்கள். பின்பு அவ்விருவரும் மிகச் செருக்கி மூவுலகையும் வெல்லத் தொடங்கி இந்திராதிதேவர்கட்கும் பற்பல முனிவர்கட்கும் மனிதர்கட்கும் மற்றும் பலர்க்கும் மிக்க துன்பத்தை விளைத்துப் பல பிராணிகளை அழித்து வந்தனர். பிறகு தேவர்களும் முனிவர்களும் பிரமனைச் சரணமடைந்து செய்திகூற, அக்கடவுள் விசுவகர்மாவைக் கொண்டு மூவுலகத்துமுள்ள அழகிய பிராணிகளினுடைய உடம்பிற் சிறந்த அழகில் எள்ளளவு எள்ளளவாக எடுத்துச் சேர்த்து அதுகொண்டு எவ்வுலகத்தும் ஒப்புயர்வில்லாத கட்டழகுடைய ஒரு பெண்ணையுண்டாக்கி அக்காரணத்தால் அவளுக்குத் திலோத்தமையென்று பெயரிட்டு அவளைச் சுந்தோபசுந்தரிருக்கின்ற இடத்திற்கு அனுப்பினான். விந்தியமலையின் தாழ்

வரையில் அவ்விருவரும் உல்லாசமாக வீற்றிருக்கையில் அங்குமலர் கொய்துவந்த அம்மங்கையைக் கண்டு அவளழகை வியந்து ஒருங்கு காமுற்று அருகிற்சென்று அவளுடைய வலக்கையைச் சுந்தனும், இடக்கையை உபசுந்தனுமாகப் பிடித்துக்கொண்டார்கள். இயல்பில் மிக்க கொழுப்பையுடைய அவ்விருவரும் பின்பு வரத்தினாலும் செல்வத்தினாலுமாகிய களிப்போடு அப்பொழுது மதுபானஞ் செய்ததனாலான மதமுங் கொண்டவராய்க் காமக்களிப்புற்றுத் தம்மில் மாறுபட்டுத் தம்பியை நோக்கி அண்ணன் 'தமையனாகிய என்னாற் காதலிக்கப்பட்ட இவள் உனக்குத் தாய்முறையன்றோ? இவளை நீ விரும்புதல் ஏற்குமோ?' என்றும், அதற்கு ஈடாகத் தமையனை நோக்கித் தம்பி 'தம்பியாகிய என்னாற் காதலிக்கப்பட்ட இவள் உனக்கு மருமகள் முறையன்றோ? இவளை நீ விரும்பலாமோ?' என்றும் கூறிச் சினங்கொண்டு தம் கையிலுள்ள கதாயுதத்தால் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு போர்செய்து இருவரும் ஒருங்கே ஒருவரால் ஒருவர் அழிந்தனர் என்பதாம்.

ஒருதாய்வயிற்றின் வந்தோர் - சகோதரர். 'மடமங்கை' என்றது, சுக்கிரீவன் மனைவியும் இப்பொழுது வாலிவசத்திலிருப்பவளுமான ருமையை. முதலிரண்டடிகளிற்கூறிய மூன்று அடைமொழிகளும் - சுந்தோபசுந்தர்க்கும் ஏற்கும். உவமை, பின்னிடாமற் போர் செயதற்கும் அமையும். திலோத்தமா, திலம் - எள், உத்தமா - மேலானவள், ஸுந்த + உபஸுந்த = ஸுந்தோபஸுந்த: வடமொழிப்புணர்ச்சி, குணசந்தி: சுந்தோபசுந்தர் - உயர்திணையும்மைத்தொகை, பன்மை விகுதிபெற்றது. பி - ம்:—[1]மிக்குநர், மிக்கனர். [2]தம்மொடு. [3]மலையல், மலைதல். [4]உண், தண். மூன்றாமடியில் அரிக்கட்டிலோத்தமை என்றும் பாடமுண்டு. (284)

40.—மற்றும் அவர்கட்குச் சில ஒப்புமைவகுத்தல்.

கடலொன்றினொ டொன்று மலைக்கவுங் காவன் மேருத்
திடலொன்றினொ டொன்றமர் செய்யவுஞ் சீற்ற மென்பது
உடல்கொண் டிரண்டாகி யுடற்றவும் [1]கண்டி லாதேம்
மிடலிங்[2]கிவர் வெந்தொழிற் [3]கொப்புரை வேறு காணேம்.

(இ - ள்.) கடல் ஒன்றினொடு ஒன்று மலைக்கஉம் - கடல்கள் ஒன்றோடொன்று போர்செய்யவும், காவல் மேரு திடல் ஒன்றினொடு ஒன்று அமர் செய்யஉம் - (நிலவுலகத்தைப்) பாதுகாப்பதான மேருமலை (இரண்டு) ஒன்றோடொன்று போர்செய்யவும், சீற்றம் என்பது இரண்டு ஆகி உடல் கொண்டு உடற்றஉம - சினமென்கிற குணந்தானே இரண்டு புருஷவடிவங்கொண்டதாகி (ஒன்றோடொன்று) போர்செய்யவும், கண்டிலாதேம் - பார்க்காதயாம், இங்கு மிடல் இவர் வெம் தொழிற்கு வேறு ஒப்பு உரை காணேம் - இவ்வுலகத்தில் வலிமையையுடைய இவ்வாலி சுக்கிரீவர் செய்யுங் கொடியபோர்த்தொழிற்கு வேறு உபமானங் கூற அறியேம்; (எ - று.)

கடல் ஒன்றினோடு ஒன்று மலைதலும், மேருத்திடல் ஒன்றினோடு ஒன்று அமர் செய்தலும், சீற்றமென்பது உடல்கொண்டு இரண்டாகியுடற்றலும் உளவாயின் வாலிசுக்கிரீவர் இங்ஙனங் கடும்போர் செய்தற்கு ஒப்புமையாகு மென்பது கருத்து; இல்பொருளுவமையணி. பூமிக்கு மேலும் கீழும் நின்று அதனை நிலை நிறுத்துதலாலும், நதிகளின் உற்பத்திக்கு இடமாகி நின்று அதுகொண்டு நிலவுலகத்து உயிர்களைப் பாதுகாத்தலாலும், மலைகள் 'பூதரம், கோத்ரம்' என்றும் பெயர் பெறும்; அவ்வியல்புகள் பெரிய மலையாகிய மேருவுக்கு ஏற்குமாதலால் 'காவல்மேரு' எனப்பட்டது. 'தெரித்தீண்டுரைத்த தீவெவைக்கு நடுவாஞ் சம்பூத்தீவதனைத், தரித்து நடுவண் மேருவெனுஞ் சயில மதனிற் றனிதுலங்கும்'' என்ற கூர்மபுராணமுங் காண்க; 'மேரு, பூமிக்கு நாராசம் போலத் தென்துருவம்முதல் வடதுருவம் வரையும் உள்ளே வளர்ந்து வடதுருவத்தில் மேலோங்கியிருக்கும் பொன்மயமாகிய மலை' என்ற நூற்கொள்கையும் நோக்கத்தக்கது. திடல் - மேடு; இங்கே உயர்ந்தமலை. பி - ம்:—[1] காண்இலாதேம், கண்டிலேம்நேர். [2] அவர். [3] ஒப்புமை, ஒப்பவை, ஒப்பிவை, ஒப்பன. (285)

41.—அவர்கள் கண்களினின்று வெளிப்படுந் தீ.

ஊகங்களி னுயகர் வெங்க ணுமிழ்ந்த தீயான்
மேகங்கள் [1] கரிந்தன வெற்பு மெரிந்த திக்கின்
நாகங்கள் நடுங்கின நானில முங்[2] கு லைந்த
[3] மாகங்களை நண்ணிய விண்ணவர் போய்ம றைந்தார்.

(இ - ள்.) ஊகங்களின் நாயகர் - வானரத்தலைவர்களான அந்த வாலி சுக்கிரீவர்களுடைய, வெம் கண் - வெவ்விய கண்கள், உமிழ்ந்த- சொரிந்த, தீயால் - நெருப்பினால், மேகங்கள் கரிந்தன—: வெற்புஉம் எரிந்த - மலைகளும் எரிந்தன; திக்கின் நாகங்கள் நடுங்கின - திக்கஜங்கள் அஞ்சிநடுங்கின; நால் நிலம்உம் குலைந்த - நால்வகைப்பட்ட நிலங்களும் நிலையழிந்தன; மாகங்களை நண்ணிய விண்ணவர் போய் மறைந்தார் - (போர்காணும் பொருட்டு) வானிடங்களைச் சார்ந்து நின்ற தேவர்களும் (அஞ்சி அவற்றைவிட்டு நெடுந்தூரம் அப்பால்) ஓடி ஒளித்தார்கள்; (எ - று.)

வாலிசுக்கிரீவர் நெருங்கிப்பொருகையில் அவர் கண்களினின்று வெளித்தோன்றிய வெகுளித்தீப் பொறிகளால் மேகங்களும் கரிய, மலைகளும் எரிந்தன. நிலவுலகத்தில் நிகழும் போரைக் கண்டு வியத்தற்பொருட்டு வரும் வழக்கப்படி பெரிய வானத்தினிடங்களை யடைந்த தேவர்களும் அஞ்சி மறைந்துபோய்விட்டார்களென்பதாம். உமிழ்தல் - வெளிப்படுத்தல். திக்கின் நாகங்கள் - கீழே எட்டுத் திசைகளிலும் இருந்து உலகத்தைத் தாங்குகின்ற வாசுகி முதலிய அஷ்டமகாசர்ப்பங்களுமாம். நால் நிலம் - முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல். உயர்வுநவிற்சியணி. பி-ம்:—[1] எரிந்தன. [2] குலைந்து. [3] மாகங்களின். (286)

42.—அவர்கள் பலவிடங்களிலும் ஓடியோடிப் பொருதல்.

விண்மே லினரோ நெடுவெற்பின் முகட்டி னாரோ
மண்மே லினரோ புறமாதிர வீதி யாரோ
[1] கண்மே லினரோ வெனயாவருங் காண நின்றார்
புண்மே லிரத்தம் பொடிப்பக் கடிப்பார் புடைப்பார்.

(இ - ள்.) விண் மேலினர்ஓ - வானத்தின்மேலுள்ளாரோ? நெடு வெற்பின் முகட்டினாரோ - பெரியமலைகளின் சிகரங்களிலுள்ளாரோ? மண்மேலினர்ஓ - நிலவுலகத்தி லுள்ளாரோ? புறம் மாதிரம் வீதி யார்ஓ - (அவ்வுலகத்தின்) சுற்றிலுள்ள திசைகளின் கடையெல்லை யொழுங்கி லுள்ளாரோ? (அன்றி), கண்மேலினர்ஓ - (நமது) கண்களி லுள்ளாரோ? என - என்று, யாவர் உம் காண - எல்லாரும் (விகற் பித்து) நோக்கும்படி, நின்றார் - (எங்கும் ஓடித்திரிந்து சென்று) நின்றவர்களாய், (அவ்விருவரும்), புண்மேல் இரத்தம் பொடிப்ப கடிப்பார் புடைப்பார் - புண்களுண்டாகி அவற்றினின்று இரத்தம் சிந்தும்படி (ஒருவரையொருவர்) கடிப்பவர்களும் குத்துபவர்களு மானார்கள்; (எ - று.)

இவ்வாறு போர் செய்யும் வாலி சுக்கிரீவர்கள், திடீரென்று ஆகாயத்திலெழுவார்கள்: மலைச்சிகரத்திற் குதிப்பார்கள்: தரையில் வருவார்கள்: திக்குகளிலோடித்திரிவார்கள்: எல்லாவுயிர்களின் கண் களிலும் இருக்கின்றவர்கள் போல அங்கங்கே நிற்பார்கள்: இரத்தங் கொப்பளிக்கும்படி ஒருவரையொருவர் கடிப்பார்கள்: குத்துவார்கள் என்பதாம். வெகு விசையோடு சென்று பலவிடங்களில் நின்று போர்செய்தார்க ளென்பது, முதல்மூன்றடிகளால் விளங்கிற்று. அவர்கள் அப்படி மிகுவிரைவாகச் சுழன்று திரியும்போது எங்குங் காணலாம்படி யிருத்தலால், 'கண்மேலினரோ' என்றார். புடைப் பார் - அடிப்பாருமாம். பி - ம்:—[1] எண். (287)

43.—அவர்கள் கர்ச்சனையும், குத்துதலாலாகும் ஓசையும்.

ஏழொத் [1]துடனாந் திசையெட்டொ டிரண்டு [2]முட்டும்
ஆழிக் கிளரார்கலிக் கைம்மடங் கார்ப்பி [3]னோதை
பாழித் தடந்தோளினு மார்பினுங் கைகள் பாய
வூழிக் கிளர்கா[4]ரிடி யொத்தது [5]குத்து மோதை.

(இ - ள்.) ஆர்ப்பின் ஓதை - (அவ்விருவரும்) கர்ச்சித்து ஆர வாரிக்கின்ற ஓசையானது,—ஏழ் ஒத்து உடன் ஆம் - (தம்மிலுள்ள) ஏழுவகைகளும் தம்முள் ஒத்து ஒருங்குசேர்ந்தனவும், திசை எட் டொடு இரண்டும் முட்டும் - பத்துத் திக்குகளிலும் பரவி நிறை வனவுமான, ஆழி - கடல்களில், கிளர் - உண்டாகின்ற, ஆர் கலிக்கு - நிறைந்த ஓசையினும், ஐம் மடங்கு - ஐந்து மடங்கு அதிகப்பட்டதாம்; பாழி தட தோளின் உம் - வலிமையுள்ள பெரிய தோள்களிலும், மார்பின் உம் - மார்பிலும், கைகள் பாய - கைகள் விரைந்து சென்று சேரும்படி, குத்தும் - மொத்துதலினாலாகிய,

ஓதை - ஓசையானது,—ஊழி கிளர் கார் இடி ஒத்தது - கற்பாந்த காலத்தில் (பெருமழை பொழிந்து உலகங்களை யழித்தற்கு) எழுகின்ற மேகங்கள் இடித்துக்கொள்வதனாலான முழக்கத்தைப் போன்றது; (எ - று.)

வீரர் ஒருவர்மீது மற்றொருவர் போர்க்குச் செல்லும்போது ஆரவாரித்தலும் தம்கைகளால் மார்பு தோள் ஆகிய இடங்களில் பேரொலியுண்டாகத் தட்டுதலும் இயல்பு. ஏழுகடல்களும் பொங்கித் தம்மில் ஒருங்குசேர்ந்து பத்துத்திசைகளிலும் பரவும்போது ஆங்கு உண்டாகின்ற ஓசையினும் பலமடங்கு மிகுதியாயிருந்தது அவர்கள் கர்ச்சனைமுழக்க மென்பது, முன்னிரண்டடிகளின் பொருள். குத்தும் ஓதை என்பதற்கு - ஒருவரை யொருவர் கைகளாற் குத்திக்கொள்கிற ஓசை எனினுமாம். இரண்டு - மேல், கீழ். ஆர்ப்பினோதை, ஏழொத்துடனும் ஆழியின் ஆர்கலிக்கு ஐம்மடங்காகி, திசைஎட்டினோடிரண்டு முட்டும் என் முதல் சொற்றொடரை இயைத்து உரைப்பினுமாம். கலிக்கு - நான்கனுருபு எல்லைப்பொருளில் வந்தது. இடி - முதனிலைத்தொழிற்பெயர். பி - ம்:—[1]உடனைத், உலகம். [2]முட்டி, முட்ட. [3]ஓசை, ஓசைப். [4]இடிப்பு, உருமு. [5]குத்தின். (288)

44.—அவர்கள் கடித்தலாற் பொடிக்கும் இரத்தம்.

வெவ்வா யெயிற்றுன் மிடல்வீரர் கடிப்ப மீச்சென்று
அவ்வா [1]யெழுசோரிய தாசைகள் தோறும் வீச
எவ்வாயு மெழுந்த கொழுஞ்சுடர் மீன்க [2]ளெல்லாம்
செவ்வாயை நிகர்த்தன செக்கரை யொத்த மேகம்.

(இ - ள்.) மிடல் வீரர் - வலிமையையுடைய அவ்வீரரிருவரும், மீச்சென்று - ஒருவர்மேலொருவர் பாய்ந்து, வெவ் வாய் எயிற்றால் கடிப்ப - கொடுமைவாய்ந்த பற்களாற் கடித்தலினால், அவ் வாய் எழு - அந்தக் கடித்தவாயிலிருந்து வெளிப்படுகின்ற, சோரி அது - இரத்தமானது, ஆசைகள் தோறும் வீச - எல்லாத்திக்குகளிலும் தெறிக்க, (அவ்விரத்தம் பட்டதனால்), எவ்வாய்உம் எழுந்த கொழுஞ் சுடர்மீன்கள் எல்லாம்- (வானத்தில்) எவ்விடத்திலும் விளங்குகின்ற மிக்க ஒளியையுடைய நட்சத்திரங்களெல்லாம், செவ்வாயை நிகர்த்தன - அங்காரகனைப் போன்றன; மேகம் - மேகங்கள், செக்கரை ஒத்த-செவ்வானத்தைப் போன்றன; (எ - று.)

அவர்கள் ஒருவரையொருவர் கடித்த வாயிலிருந்து தெறித்த இரத்தம் பட்டதனால் நட்சத்திரங்கள் யாவும் செந்நிறமாயின வென்க. செவ்வாய் - நவக்கிரகங்களிலொன்று; அவனது நிறம், செம்மை. சொரிவது சோரி. சோரியது, அது - முதல்வேற்றுமைச் சொல்லுருபு. பி - ம்:—[1]தொறுஞ்சோரிகள், எழுசோரிகள், தொறுந் தாரைகள். [2]யாவும். (289)

45.—வாலியின் தோள்களும், சுக்கிரீவனது மார்பும் தகர்தல்,

வெந்த வல்லிரும் பிடைநெடுங் கூடங்கள் [1]வீழ்ப்பச்
சிந்தி யெங்கணுஞ் சிதறுவ [2]போற்பொறி தெறிப்ப
இந்தி ரன்மகன் [3]புயங்களு மிரவிசே யுரனும்
[4]சந்த [5]வன்னெடுந் தடக்கைகள் தாக்கலிற் றகர்வ.

(இ - ள்.) வெந்த வல் இரும்பிடை - (உலைக்களத்திற்) பழுக்கக் காய்ந்த வலிய இரும்பின்மேல், நெடுங் கூடங்கள் வீழ்ப்ப - (கருமான்) பெரிய சம்மட்டிகளை யிட்டு அடிக்க, (அதனால் அவ்விரும்பு), பொறி - அனற்பொறிகளை, தெறிப்ப - தெறிக்கும்படி, எங்கண் உம் சிந்தி சிதறுவ போல் - எல்லாப்பக்கங்களிலும் சிந்திச் சிதறுவது போல- இந்திரன் மகன் புயங்கள் உம் - இந்திரகுமாரனான வாலியின் தோள்களும், இரவி சேய் உரன் உம் - சூரியகுமாரனான சுக்கிரீவனது மார்பும், சந்தம் வல் நெடுந் தட கைகள் தாக்கலின் - அழகிய வலிய நீண்ட பெரிய கைகள் அறைவதனால், தகர்வ - உடைந்துபோவன வாயின; (எ - று.)

வாலியின்தோள்களுக்கும் சுக்கிரீவனது மார்புக்கும் இரும்பும், சுக்கிரீவன் வாலி என்னும் இவ்விருவரது கைகளுக்கு இரும்பை யடிக்குஞ் சம்மட்டியென்னுங் கொல்லன்கருவியும் உவமை. 'பொறிதெறிப்ப' என்றதை, உபமேயத்திற்குங் கொள்ளலாம். பி - ம்:—[1]வீழப். [2]பொறிதெறித்தென்ன. [3]உரங்களும். [4]தந்தம். [5]மென்னெடும். (290)

46.—நான்குகவிகள்–இருவரும் பொரும் வகைகள் கூறுவன.

உரத்தி னன் [1]மடுத் துந்துவர் பாதமிட் [2]டுதைப்பர்
கரத்தி னல்[3]விசைத் தெற்றுவர் கடிப்பர்நின் றிடிப்பர்
மரத்தி ன[4]லடித் துரப்புவர் [5]பொருப்பினம் வாங்கிச்
சிரத்தின் மேலெறிந் துறுக்குவர் [6]தெழிப்பர்தீ விழிப்பர்.

(இ - ள்.) (இருவரும் ஒருவரையொருவர்), உரத்தினல் மடுத்து உந்துவர் - மார்பினல் நெட்டித்தள்ளுவார்கள்; பாதம் இட்டு உதைப்பர் - கால்களை நீட்டி உதைப்பார்கள்; கரத்தினல் விசைத்து எற்றுவர் - கைகளால் வேகங்கொண்டு தாக்குவார்கள் ; கடிப்பர் - கடிப்பார்கள்; நின்று இடிப்பர் - நேர்நின்று மோதுவார்கள்; மரத்தினல் அடித்து உரப்புவர் - மரங்களைக்கொண்டு அடித்து அதட்டுவார்கள்; பொருப்பு இனம் வாங்கி - மலைவர்க்கங்களைப் பெயர்த்தெடுத்து, சிரத்தின்மேல் எறிந்து - தலைமேல் வீசி, உறுக்குவர் - அச்சமுறுத்துவார்கள்; தெழிப்பர் - ஆரவாரிப்பார்கள்; தீ விழிப்பர் - நெருப்புப் புறப்பட(க் கோபத்தால்) விழித்துப் பார்ப்பார்கள்; (எ - று.) பி - ம்:—[1]எடுத்து. [2]எறிவர். [3]பிசைந்து, விசைந்து. [4]அடர்த்து, இடித்து. [5]பொருப்பெலாம். [6]தெறிப்பத். (291)

47. எடுப்பர் பற்றி[1]யுற் றொருவரை யொருவர்விட் டெறிவர்
கொடுப்பர் வந்துரங் குத்துவர் [2]கைத்தலங் [3]குளிப்பக்
கடுப்பி னிற்பெருங் [4]கறங்கெனச் சாரிகை பிறங்கத்
தடுப்பர் பின்றுவ ரொன்றுவர் தழுவுவர் விழுவர்.

(இ - ள்.) ஒருவரை ஒருவர் - ஒருவரை மற்றொருவர், பற்றி எடுப்பர் - பிடித்துத் தூக்குவர்; உற்று விட்டு எறிவர் - நெடுந்தூரம் வீசியெறிவர்; வந்து உரம் கொடுப்பர் - (அங்ஙனம் எறியப்பட்டு விழுந்தவர் உடனே ஓடி) வந்து (எதிரிக்குத்) தம் மார்பை (அவன் தாக்குமாறு) காட்டுவர்; கைத்தலம் குளிப்ப குத்துவர் - (அவ்வாறு காட்டிய மார்பில் தமது) கைப்பிடி புதையும்படி குத்துவார்கள்; கடுப்பினில் - வேகத்தோடு, பெருங் கறங்கு என - பெரிய காற்றாடியைப்போல, சாரிகை பிறங்க - வலசாரி இடசாரி முறைகள் விளங்க, (நடந்து), தடுப்பர் - (ஒருவரை யொருவர்) தடுப்பார்கள்; பின்றுவர் - (விசையோடு வலியத் தாக்குதற்பொருட்டுச் சிறிது) பின்வாங்குவார்கள்: ஒன்றுவர் தழுவுவர் விழுவர் - பொருந்தி (ஒருவரை யொருவர்) தழுவிக்கொண்டு கீழ் விழுவார்கள்; (எ - று.)

உற்றுப் பற்றி - நெருக்கிப் பிடித்து எனினுமாம். "ஊக்கமுடையா னொடுக்கம் பொருதகர், தாக்கற்குப் பேருந்தகைத்து" என்றபடி, பொருகையில் தன்பகைகெடப் பாய்தற்பொருட்டுப் பின்னே கால்வாங்குதல் விலங்குகட்கு இயல்பாம்: இனி, பின்றுவர்-கால்களோடு கால்களைப் பின்னுவரெனினுமாம். பி - ம்:— [1]மற்று. [2]கரதலம், கைத்துணை. [3]குழிப்பக். [4]சாரிகை கறங்கெனப். (292)

48. வாலி னாலுரம் [1]வரிந்தனர் நெரிந்துக வலிப்பர்
காலி னானெடுங் கால்[2]பிணித் துடற்றுவர் கழல்வர்
வேலி னா[3]லற [4]வெறிந்தன [5]விறல்வலி யுகிரால்
[6]தோலி னாலுடல் நெடுவரை முழையெனத் தொளைப்பர்.

(இ - ள்.) உரம் வாலினால் வரிந்தனர் - (ஒருவர்) மார்பை (மற்றொருவர் தமது) வாலினாற் கட்டி, நெரிந்து உக வலிப்பர்-(எலும்புகள்) நொருங்கிப் பொடியாம்படி இழுப்பர்; காலினால் நெடுங் கால் பிணித்து உடற்றுவர் - (தமது) காலால் (மற்றொருவரது) நீண்ட காலை மாட்டியிழுத்து வருத்துவர்; கழல்வர் - (பின்பு) சிறிது நெகிழ்வர்; வேலினால் அற எறிந்து அன - வேலாயுதத்தைக் கொண்டு நன்றாக எறிந்தாற்போன்ற [மிகக்கூரிய], விறல் வலி உகிரால் - மிக்க வலிமையையுடைய நகங்களினால், தோலினால் உடல் நெடு வரை முழை என - தோலுடன் உடம்பு பெரிய மலையின் குகைபோலாகும்படி [பிளவு கொடுக்கும்படி], தொளைப்பர் - துளைப்பார்கள்; (எ - று.)

விறல் வலி - வெற்றியைத் தரும் வலிமையெனினுமாம். பி-ம்:— [1]வலிகுவர், வரிகுவர், வலிந்தனர். [2]பிடித்து. [3]உற, இற. [4]எறிந்தென. [5]விரல். [6]தோலினோடு. (293)

49. மண்ண கத்தன [1]மலைகளு மரங்களு மற்றும்
கண்ண கத்தினிற் றோன்றிய யாவையுங் கையால்
எண்[2]ண கப்பறித் தெறிதலி [3]னெற்றலி னிற்ற
[4]விண்ண கத்தினை மறைத்தன மறிகடல் [5]வீழ்ந்த.

(இ - ள்.) மண் அகத்தன மலைகள்உம்-நிலத்தினுள்ளே ஊன்றியிருப்பனவான மலைகளையும், மரங்கள்உம் - மரங்களையும், மற்றுஉம் கண் அகத்தினில் தோன்றிய யாவைஉம் - மற்றும் கண்ணெதிரிற் காணப்பட்ட எல்லாப் பொருள்களையும், (அவர்கள்), எண் நக கையால் பறித்து - வலிமைவிளங்கக் கைகளாற் பெயர்த்தெடுத்து, எறிதலின் - (அவற்றை யொருவர்மீது ஒருவர்) வீசியெறிந்ததனாலும், எற்றலின் - (கைகளிற்கொண்டு அவற்றால்) அடித்ததனாலும், இற்ற - (அம்மலைமுதலியன) முறிந்தவையாய், விண் அகத்தினை மறைத்தன - ஆகாயத்தினிடத்தை மறைத்தனவும், மறி கடல் வீழ்ந்த - (அலைகள்) மடங்கப்பெற்ற கடலில் (போய்) விழுந்தனவுமாயின; (எ - று.)

வானமெங்கும் பரவி நிறைதலால், 'விண்ணகத்தினை மறைத்தன' என்றார். 'மண்ணகத்தன' என்பதை மரங்களுக்கும் இயைக்கலாம். கண் அகத்தினில் - கண்பார்வையிடத்தில்; கண்முன்னிலையில் என்றபடி. பி - ம்:—[1]மரங்களுமலைகளும். [2]உக, அற, இற. [3]இற்றனயாவும், எற்றலினேற்ற, எற்றலினீற்று. [4]விண்ணகத்தையும். [5]வீழ்வ, வீழ்ந்து. (294)

50.—ஒருவர்க்கு ஒருவர் தோற்காமற் சமமாகப் பொருதல்.

வெருவிச் சாய்ந்தனர் விண்ணவர் வேறென்னை [1]விளம்பல்
ஒருவர்க் [2]காண்டம ரொருவருந் தோற்றில [3]ருடன்று
செருவிற் [4]றுய்த்தலிற் செங்கனல் [5]வெண்மயிர் செல்ல
முரிபுற் [6]கானிடை யெரிபரந் தனவென [7]முனைவார்.

(இ - ள்.) ஆண்டு அமர் - அப்பொழுது (நிகழ்ந்த) போரில், ஒருவர்க்கு ஒருவர்உம் தோற்றிலர் - ஒருவர்க்கு ஒருவர் தோற்காதவராய், உடன்று செருவில் துய்த்தலின் - உக்கிரமாய்ப் போர்செய்தலில் வீராவேசம் கொள்வதனால், முரி புல் கானிடை எரி பரந்தன என - உலர்ந்த புற்கள் நிறைந்த காட்டில் நெருப்புக்கள் பரவியன போல, வெள் மயிர் செம் கனல் செல்ல - வெண்ணிறமான (தங்கள் உடம்பு) மயிர்களிலிருந்து சிவந்த நெருப்பு எழ, முனைவார் - (அவ்விருவரும்) போர்செய்பவரானார்கள்; (அப்போரின் கடுமையைக் கண்டு), விண்ணவர் வெருவி சாய்ந்தனர் - தேவர்கள் அஞ்சிநிலை குலைபவரானார்கள்; (என்றால்), வேறு விளம்பல் என்னை - (அப்

போரின் கடுமையைக் குறித்து) மற்றும் சொல்லலாவது என்ன இருக்கின்றது? (எ - று.)

'செங்கனல் வெண்மயிர் செல்ல' - தொடைமுரண். பி - ம்:— [1]விளம்பின். [2]ஆரமர். [3]உடலம். [4]தேய்த்தலின். [5]மென்மயிர், வெண்மயிர்ச். [6]கான்வரை, காய்வரை. [7]முளைப்பார், முனைப்பர். (295)

51.—பிறகு வாலி, சுக்கிரீவனைக் குத்திக் குமைத்து நிலைகுலைத்தல்.

அன்ன [1]தன்மைய ராற்றலி [2]னமர்புரி பொழுதின்
[3]வன்னெ டுந்[4]தடந் திரள்[5]புயத் தடுதிறல் வாலி
சொன்ன தம்பியைத் தும்பியை யரிதொலைத் தென்னக்
கொன்ன கங்களிற் கரங்களிற் குலைந்துக மலைந்தான்.

(இ - ள்.) அன்ன தன்மையர் - அப்படிப்பட்ட தன்மையை யுடையவர்களாய், ஆற்றலின் அமர் புரி பொழுதின் - மிக்க பலபராக்கிரமங்களுடன் போர் செய்கின்றபொழுது,—வல் நெடுந் தட திரள் புயத்து அடு திறல் வாலி - வலிய நீண்ட பெரியதிரண்ட தோள்களையும் பகை யழிக்கும் வலிமையையுமுடைய வாலியானவன்,—சொன்ன தம்பியை -மேற்கூறப்பட்ட தம்பியான சுக்கிரீவனை, தும்பியை அரி தொலைத்து என்ன - யானையைச் சிங்கம் அழிக்குமாறுபோல, கொல் நகங்களின் - கொலைசெய்யவல்ல நகங்களாலும், கரங்களின் - கைகளாலும், குலைந்து உக - உறுதிநிலை குலைந்து விடும்படி, மலைந்தான் - போர் செய்தான்; (எ - று.)—பி - ம்:—[1]தன்மையின். [2]அமர் பொரு பொழுதின், ஏற்றத்தனை. [3]கன்னெடுந். [4]தடத்திரள். [5]புயக் கடுந். (296)

52.—சுக்கிரீவன் இராமபிரானை யடைய அப்பெருமான் அவனுக்கு அடையாளமாலை சூட்டுதல்.

மலைந்த [1]போதினைந் திரவிசே யையன்[2]மாட் டணுகி
உலைந்த [3]சிந்தையோ டுணங்கினன் வணங்கிட வுள்ளம்
குலைந்தி டேலுமை [4]வேற்றுமை தெரிந்திலங் கொடிப்பூ
மிலைந்து செல்கென [5]விடுத்தன னெதிர்த்தனன் [6]மீட்டும்.

(இ - ள்.) மலைந்த போது - (இவ்வாறு வாலி) கடும்போர் செய்த பொழுது, இரவி சேய் - சூரியகுமாரன் [சுக்கிரீவன்], இனைந்து - மிகவருந்தி, ஐயன்மாட்டு அணுகி-ஸ்ரீராமபிரானிடம் வந்து சேர்ந்து, உலைந்த சிந்தையோடு - வருந்திய மனத்துடனே, உணங்கினன் - வாட்டமுற்றவனாய், வணங்கிட - நமஸ்கரிக்க,—(அப்பெருமான் அவனை நோக்கி), 'உள்ளம் குலைந்திடேல் - மனம் வருந்தாதே; உமை வேற்றுமை தெரிந்திலம் - உங்களை (இன்னான் வாலி இன்னான் சுக்கிரீவன் என்று) வேறுபாடறியாமற் போனோம்; (இனி வேறுபாடறியுமாறு), கொடி பூ மிலைந்து செல்க - காட்டுக் கொடியின் மலரைச் சூடிச்செல்வாயாக,' என - என்று சொல்லி, விடுத்தனன் - (அவனை) அனுப்பினான்; மீட்டும் எதிர்த்தனன் -

(அவ்வாறே காட்டுமலர்ப்பூவைச் சூடிச் சுக்கிரீவன்) மீளவும் (வாலியை) எதிர்க்கலானான்; (எ - று.)

வாலிசுக்கிரீவரிருவரும் போர் செய்கின்றபொழுது அவர்களில் இன்னாரின்னாரென்று வேறுபாடு தெரியாததால் ஒருகால் தவறிச் சுக்கிரீவன்மேல் அம்புஎய்ததாய்விடுமோ என்ற சங்கைபற்றியே பெருமான் வாளாவிருந்தருளின னென்பது விளங்கிற்று. 'இனி அடையாளம் தெரியும்படி இப்பொழுது இதனை நீ தரித்துக் கொண்டு போய்ப் போர்செய்தால், இடையே வாலிமேல் அம்பு தொடுக்கின்றேன்' என்று சொல்லி, அவனுக்குக் காட்டுக் கொடிப் பூமாலையைச் சூட்டி யனுப்ப, சுக்கிரீவன் வாலியை யெதிர்க்கலானா னென்க. செல்கென-விகாரம். 'கொடிப்பூ' என்பதைப் பூங்கொடி யென மொழிமாற்றி, பூங்கொடியை அடையாளமாகத் தரித்துச்செல் வாயாக என்றதாகவும் உரைக்கலாம். கஜபுஷ்பி யென்றபூங்கொடி அடையாளமாகக் கழுத்திற் கட்டப்பட்டதெனமுதனூல் கூறும். போதில் கைந்து என்றும் பிரிக்கலாம். பி-ம்:—[1]போதிலைத்து. [2]மாடனுகி. [3]சிந்தையை யுரைத்தனன். [4]தெரிந்திலம் வேற்றுமை. [5]மிலைச்சியே விடுத்தனன், மிலைச்சினன் விடுத்தனன, மிலைச்சியே யெதிர்த் தனன். [6]மீண்டான். (297)

53.—சுக்கிரீவன் வாலியைத் தாக்குதல்.

தயங்கு [1]தாரகை நிரைதொடுத் [2]தணிந்தன போல
வயங்கு சென்னியன் வயப்புலி வானவல் லேற்ருேடு
உயங்கு மார்ப்பின [3]ெனல்லைவந் தடுதிறல் வாலி
பயங்கொ ளப்புடைத் தெற்றினன் குத்தினன் பலகால்.

(இ - ள்.) தயங்கு தாரகை நிரை தொடுத்து அணிந்தன போல - விளங்குகின்ற நட்சத்திரங்கள் வரிசையாக (மாலையாய்)த் தொடுத்து அணியப்பட்டனபோல, வயங்கு - (மலர்மாலை) விளங்குகின்ற, சென்னியன் - முடியையுடையவனான சுக்கிரீவன்,—வய புலி - வலிய புலியும், வானம் வல் ஏற்ருேடு - மேகத்தில் தோன்று கின்ற வலிய இடியேறும், உயங்கும் - (கேட்டு) வருந்தும்படியான, ஆர்ப்பினன் - ஆரவாரத்தைச் செய்துகொண்டு, ஒல்லை வந்து - விரைவாய் வந்து, அடு திறல் வாலி பயம் கொள - பகையழிக்கும் வலிமையையுடைய வாலியும் அச்சங்கொள்ளும்படி, புடைத்து - (அவனை) அடித்து, எற்றினன் - மோதி, பல கால் குத்தினன் - பல முறை குத்தினன்; (எ - று.)—இதுவும் அடுத்த செய்யுளும் சில பிரதிகளிலில்லை.

கொடிப்பூ மிலைந்து விடுக்கப்பட்ட சுக்கிரீவன், அக்கொடிப்பூ வான்மீன்போல் தோன்ருகிற்க, புலிபோலவும் பேரிடிபோலவும் பேராரவாரஞ்செய்த வண்ணம் வாலியும் அஞ்சிட மோதிக்குத்தினு னென்பதாம். 'வானம் வல் ஏற்ருேடு' என்பதற்கு - வானத்தையளாவி வளர்ந்த [மிகப்பெரிய] வலிய ஆண்சிங்கமும் என்றும் உரைக்கலாம். பி-ம்:—[1]தாரகைக்குழுவினை. [2]அணிந்த சந்திரன்போல், அணிந்தெதன வெண்பூ. [3]எல்லைவந்துறு. ''உயங்கு மாலையன்மற்றது வன்புலி

யுகிர்போ, லுயங்குமார் பின்னெல்லை வந்துற்றனன்வாலி" என்று சில பிரதிகளில் இடையிரண்டடிகள்.

இச்செய்யுளின்பின் ஒருபிரதியில் பின்வரும் செய்யுள் காணப்படுகின்றதென்ப:—"சிவந்த கண்ணுடை வாலியும் செங்கதிர்ச் சேயும், வெவந்தபோதவரிருவரும் நோக்கின்ற வேலைக், கவந்த தம்பியைக்கையினு லெடுத்தவனுயிரை, அவந்தமற்றவனுருயிரந்தகற்களிப் போன்." (298)

54.—சுக்கிரீவனை வாலி உயிர்நிலைகளில் தாக்குதல்.

[1] அயிர்த்த சிந்தைய னந்தகன் குலைகுலைந் தஞ்சச்
செயிர்த்து நோக்கினன் சினத்தொடு சிறுநகை செய்யா
வயிர்த்த கையினுங் காலினுங் கதிர்மகன் மயங்க
உயிர்த்த லந்தொறும் புடைத்தன [2]னடித்தன னுதைத்தான்.

(இ - ள்.) (அப்பொழுது வாலி), அயிர்த்த சிந்தையன் - (தோற்றோடியவன் மீளவும்வந்தது என்னையோ! என்று)சங்கித்த மனத்தையுடையவனாய், அந்தகன் குலைகுலைந்து அஞ்ச - யமனும் அஞ்சி நடுங்கும்படி, செயிர்த்து நோக்கினன்-கோபித்து உறுக்கிப் பார்த்து, சினத்தொடு சிறு நகை செய்யா - அக்கோபத்தாற் சிறு சிரிப்புச் சிரித்து, வயிர்த்த கையின்உம் காலின்உம் - உறுதிகொண்ட (தன்) கைகளாலும் கால்களாலும், கதிர் மகன் மயங்க - அச்சுக்கிரீவன் மயக்கமடையும்படி, உயிர்த்தலம்தொறும் - (அவனது) உயிர்நிலைகளிலெல்லாம், புடைத்தனன் அடித்தனன் - குத்திஅடித்து, உதைத்தான்—; (எ - று.)

கையின்புடைத்தனன் அடித்தனன், காலின் உதைத்தான் என முறைநிரனிறைப்பொருள்கோள். வயிர்த்தல் - வைரங்கொள்ளுதல். கதிர் மகன் - சூரிய புத்திரன்; கதிர் - ஒளி; ஒளியையுடையவனுக்குப் பண்பாகுபெயர். குலைகுலைந்து அஞ்ச - அஞ்சிக் குலைகுலைய; விகுதிபிரித்துக்கூட்டல். இனி, குலை குலைந்து - ஈரல் நிலைகுலைந்து என்றலுமாம். 'சினத்தொடு' என்றதில், 'ஒடு' உருபு-ஆலுருபின் பொருளில் வந்தது. உயிர்த்தலம் - உடம்பில் மர்மஸ்தானங்கள். இங்குக்கூறிய சிரிப்பு, வீரத்துஎழுந்த வெகுளிநகை; இகழ்ச்சி பற்றியதுமாம். மயங்குதல் - அறிவு கலங்குதல். அயிர்த்த சிந்தையன்-சிந்தை அயிர்த்தவன். பி - ம்:—[1] செயிர்த்த. [2] இடித்தனன். ()

55.—சுக்கிரீவன் சிதைந்து, இராமபிரானிருக்கின்ற திசையை நோக்குதல்.

கக்கி னா[1]னுயி ருயிர்ப்பொடுஞ் செவிகளிற் கண்ணின்
உக்க தாங்கெரிப் படலையோ டுதிரத்தி [2]னோதம்
திக்கு நோக்கினன் செங்கதி ரோன்மகன் செருக்கிப்
புக்கு மீக்கொடு நெருக்கின னிந்திரன் புதல்வன்.

(இ - ள்.) ஆங்கு - அப்பொழுது, (சுக்கிரீவன்), உயிர்ப்பொடும் உயிர் கக்கினன் - பெருமூச்சுடனே உயிரைக் கக்கலானான்; செவிகளின் - (அவனுடைய) காதுகளிலிருந்து, கண்ணின் - கண்களிலிருந்து, எரி படலையோடு - நெருப்பின் தொகுதியோடு, உதிரத்தின் ஓதம் - இரத்தப்பெருக்கு, உக்கது - வெளிப்பட்டது; (இவ்வாறு சிதைவுற்ற), செம் கதிரோன் மகன் - அந்தச் சூரிய குமாரன் [சுக்கிரீவன்], திக்கு நோக்கினன் - (வேறுகதியில்லாமையால் இராமபிரான் எழுந்தருளியிருக்கின்ற) திசையை (எளிமையோடு) நோக்கினன்; இந்திரன் புதல்வன் - இந்திரகுமாரனான வாலியோ, செருக்கி - கர்வங்கொண்டு, புக்கு மீ கொடு நெருக்கினன் - மேல்மேல் தாக்கி வருத்திக்கொண்டிருந்தான்; (எ - று.)

சுக்கிரீவன் மிகவும் மோதப்பட்டதனால் இராமனுள்ள இடத்தை நோக்காநிற்க, வாலி செருக்கி மேன்மேலும் நெருக்கலானானென்பதாம். உயிர்ப்பொடும் உயிர் கக்கினன் - பிராணன் போய்விடுமென்னும்படி பெருமூச்சுவிடலானான் என்க. பி - ம்:—[1] தனது. [2] ஒழுக்கம். (300)

56.—வாலி சுக்கிரீவனைத் தரையில்மோதுதற்கு எடுக்குஞ் சமயத்தில் இராமபிரான் வாலியின்மேல் அம்புதொடுத்தல்.

எடுத்துப் பாரிடை [1]யெற்றுவன் பற்றியென் றிளவல்
[2]கடித்த டத்தினுங் கழுத்தினுந் தன்னிரு கரங்கள்
மடுத்து மீக்கொண்ட வாலிமேல் கோலொன்று வாங்கித்
தொடுத்து நாணொடு [3]தோளுறுத் திராகவன் துரந்தான்.

(இ - ள்.) 'பற்றி எடுத்து பாரிடை எற்றுவன் - (இவனைப்) பிடித்தெடுத்துத் தரையில் மோதுவேன்', என்று - என்று எண்ணி, இளவல் - தம்பியான அச்சுக்கிரீவனது, கடி தடத்தின் உம் - இடையிலும், கழுத்தின் உம் - கழுத்திலும், தன் இரு கரங்கள் மடுத்து - தனது கைகளிரண்டையுஞ் செலுத்தி, மீ கொண்ட - (அவனை) மேலேயெடுத்த, வாலிமேல் - வாலியின்மீது,— இராகவன் - இராமபிரான், கோல் ஒன்று வாங்கி - ஓர் அம்பையெடுத்து, தொடுத்து - (தனது வில்லில்) வைத்து, நாணொடு தோள் உறுத்து - அவ்வில்நாணியுடனே (தனது) தோளைப் பொருந்துமாறுசெய்து, துரந்தான் - செலுத்தினன்; (எ - று.)

இடையில் ஒரு கையையும் கழுத்தில் ஒருகையையுங் கொடுத்துச் சுக்கிரீவனை வாலி தூக்கி மேலேயெடுத்துப் பூமியிலேமோதிக் கொல்ல முயல்கையில், கண்ட இராமபிரான் 'இனி நாம் வெறுமனேயிருக்கலாகாது' என்று நினைத்து ஒருபாணத்தையெடுத்துக் கோதண்டத்திற்பூட்டி நாணியைத் தோளளவும் இழுத்து வாலியின்மார்பை இலக்குவைத்து அந்த அம்பைத் தொடுத்தனனென்க. ராகவன் - ரகுகுலத்தில் அவதரித்தவன்; தன்னையடுத்துக் குறைவேண்டின ஓர் அந்தணனது குறையைத் தீர்த்தற்பொருட்டுக்

குபேரன்மேற் போர்தொடங்கிய ரகுவினது குலத்தில் அவதரித்த பெருமான் தன்னையடுத்தவனான சுக்கிரீவனது குறையை நீக்கும் பொருட்டு வாலிமேல் அம்புதொடுத்தல் இயல்பே என்பது தோன்ற, இங்கு அப்பெருமானை 'இராகவன்' என்ற திருநாமத்தாற் குறித்தன ரென்னலாம். பி - ம்:—[1]எற்றுவம். [2]கடித்தலத்தினும். [3]தோளிறுத்து. (301)

57.—இராமபாணம் வாலியின் மார்பை எளிதில் துளைத்தல்.

[1]காரும் வார்[2]சுவைக் கதலியின் கனியினைக் கழியச்
சேருஞ் [3]சூசியிற் சென்றது [4]நின்றதென் செப்ப
நீரு நீர்தரு நெருப்பும்[5]வன் காற்றுங் [6]கீழ் நிமிர்ந்த
பாருஞ் சார்வலி படைத்தவ [7]னுரத்தையப் பகழி.

(இ - ள்.) அ பகழி - அந்த (இராம) பாணமானது,—நீரும்—, நீர் தரு நெருப்புஉம் - நீரையுண்டாக்கிய தியும், வல் காற்றுஉம் - (அந்நெருப்பையுண்டாக்கிய) வலிய காற்றும், கீழ் நிமிர்ந்த பார்உம் - (இவற்றிற்கு ஆதாரமாய்க்) கீழேவிளங்குகின்ற பூமியும், (ஆகிய பூதங்கள் நான்கும்), சார் - கொண்ட, வலி - வலிமையை, படைத்தவன் - பெற்றவனான வாலியினது, உரத்தை - மார்பை,—காரும் வார் சுவை - முதிர்ந்தமிக்க உருசியையுடைய, கதலியின் கனியினை - வாழைப் பழத்தை, கழிய சேரும் - தைத்துச் செல்லுகின்ற, சூசியின் - ஊசி போல, சென்றது - (எளிதில் துளைத்துக்கொண்டு) சென்றது, (என்றால்), செப்ப நின்றது என் - (அந்த ராமபாணத்தின் ஆற்றலைக் குறித்து மற்றும்)கூறவேண்டியதாய் நின்றது யாது உளது?[ஒன்றுமில்லை யென்றபடி]; (எ - று.)

அந்த இராமபாணமானது, நான்குபெரும்பூதங்களின் வலிமை முழுவதும் நிறைந்த திடகாத்திரமுடைய வாலியின் மார்பிலே,கனிந்த வாழைப்பழத்தில் ஊசி இறங்குவதுபோலச் சிறிதுந்தடைப்படாமல் நுழைந்ததென்பதாம். ஐம்பெரும்பூதங்களுள் முதலதான வானத்திற்கு வடிவமில்லாமை பற்றி, அதனை இங்குக் கூறுராயினர். "அக்நேராப: [அங்கியிலிருந்து நீர் தோன்றிற்று]" என்பது வேதநூல். பி-ம்:—[1]காருண்வார். [2]சிலை. [3]ஊசியின், முள்ளென. [4]நின்றதென் செப்பின், நின்றனசெறித்து, நின்றதன்செவ்வி. [5]வெங். [6]மேனிவந்த, கீழ்நிவர்ந்த. [7]உரத்தில். (302)

58.—வாலி விழுதல்.

அலங்கு தோள்வலி [1]யழிந்தனன் தம்பியை [2]யருளான்
வலங்[3]கொள் பாரிடை யெற்றுவா னுற்றபோர் வாலி
[4]கலங்கி [5]வல்விசைக் கால்கிளர்ந் [6]தெறிவுறக் [7]கடைக்கால்
விலங்கன் மேருவும் வேர்[8]பறிந் தாலென வீழ்ந்தான்.

(இ - ள்.) அலங்கு தோள் வலி அழிந்தனன் - விளங்குகின்ற தோள்களின் வலிமையழிந்தவனும், தம்பியை - (தனது) தம்பியு

மான சுக்கிரீவனை, அருளான் - (அவன்பக்கல் சிறிதும்) கருணை கொள்ளாதவனும், வலம்கொள் பாரிடை எற்றுவான் உற்ற - வலிமை கொண்ட தரையில் மோதிக் கொல்லுதற்குத் தொடங்கிய, போர் வாலி - போரில்வல்ல வாலியானவன்,—கலங்கி - (அந்த ராமபாணம் பட்டவுடனே) நிலைகலங்க,—கடைக்கால் - கற்பாந்தகாலத்தில், வல் விசை கால் இளர்ந்து எறிவுற - வலிய வேகத்தையுடைய காற்று எழுந்து வீசுதலால், மேரு விலங்கல்உம் வேர் பறிந்தால் என - மேரு கிரி நிலைபெயர்ந்து விழுந்தாற்போல, வீழ்ந்தான் - விழுந்திட் டான்; (எ - று.)

"போராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா, லூராண்மை மற்றத னெஃகு" என்றபடி கண்ணோட்டமின்றிப் பகைவரை யழித்தல் தகுதியாயினும், அப்பகைவர்க்குப் போரில் துன்பம் நேர்ந்த இடத்து அவரை அழித்திடாமல் அன்போடுவிடுதல் பெருவீரரின் போரறமும், தன் தம்பியினிடத்தே மைந்தனிடத்திற்போல அன்பு செலுத்து தல்.தந்தை யொப்பவனான தமையனது கடமையுமாயிருக்க, அந்த நீதிநூற்கொள்கைக்கும் அறநூற்கொள்கைக்கும் மாறாக வாலி தன் தம்பியான சுக்கிரீவனை வலியழிந்த நிலையிற் சிறிதும் இரக்கமின்றிக் கொல்லத்துணிந்தானன்றோ! ஆதலால், "மணிமிக்க நல்வினை தீவினை கட்கு இம்மையிலேயே பயன் நுகரலாகும்" என்றபடி அத்தீவினை மிகுதியால் உடனே அழியலாயின னென்பது தோன்றக் கூறினர். இப்படிப்பட்டவனை, "இன்று போய் போர்க்கு நாளைவா" என்று கொடும் பகைஞனை இராவணனையு முட்பட முதல் நாட்போரில் அருள் செய்து விடுக்கும் இயல்புடையவனும் தம்பியர்பக்கல் வரம் பில்லாத அன்புடையவனுமாகிய இராமபிரான் கொல்லுதல் தகு தியே யென்பதும் இதில் விளங்குதல் காண்க. இவ்வகைப் பெருங் குற்றத்தைத் தன் கண்ணாற் காணுமளவும் பெருமான் அம்புசெலுத் தாமற் பொறுத்திருந்து அதுகண்டபின்னரே அம்புதொடுத்தன னென்பதும் கருதத்தக்கது. மேருவும், உம் - உயர்வுசிறப்பு. வல் விசைக் கால் - சண்டமாருதம். பி - ம்:—[1] அழிந்ததன், அழிந்தவத். [2] அடர்ந்து. [3] கொளப்புவி. [4] கலங்க, கலங்கு. [5] நன்னெடுங். [6] எறிவு றுங். [7] கடைநாள். [8] பறிந்தாமென. (303)

59.—சுக்கிரீவனை வாலி யெடுத்த பிடி நெகிழ்தல்.

சையம் வேரொடு முருமுறச் சாய்ந்தெனச் [1] சாய்ந்து
வைய [2] மீதிடைக் கிடந்தபோ ரடுதிறல் வாலி
வெய்ய வன்தரு மதலையை மிடல்கொடு கவரும்
கய் [3] நெகிழ்ந்தன னெகிழ்ந்திலன் கடுங்கணை [4] கவர்தல்.

(இ - ள்.) உரும் உற - இடி விழுதலால், சையம் - மலை, வேரொடும் சாய்ந்து என - அடியோடு நிலைபெயர்ந்து விழுந்தாற் போல, வையம்மீது இடை - பூமியிலே, சாய்ந்து கிடந்த - (நிலை குலைந்து) விழுந்துகிடந்த, போர் அடு திறல் வாலி - போரிற்பகை யழிக்கும் வலிமையையுடைய வாலியானவன்,—வெய்யவன் தரு

மதலேயை - சூரியன்பெற்ற குமாரனான சுக்கிரீவனை, மிடல் கொடு கவரும் - வலிமைகொண்டு தூக்கியெடுத்த, கய் - கைகளின் பிடி, நெகிழ்ந்தனன் - நெகிழ்ந்து விட்டான்: (ஆனால்), கடுங் கணை கவர் தல் நெகிழ்ந்திலன் - உக்கிரமான (இராம) பாணத்தைப் பற்றுவதை நெகிழவிட்டானில்லை; (எ - று.)

வாலியைக் கொல்லுமாறு இராமன் அம்பு தொடுக்கவே, சுக்கிரீவனைப் பிடித்த வாலியின் கைப்பிடி நெகிழ்வதாயிற்று; அந்நிலையிலும் சோர்வின்றி வாலி இராமபாணத்தைப் பிடித்த பிடி நெகிழ விட்டா னில்லை யெனத் திறந்தோன்றக் கூறினர். கை நெகிழ்ந்திலன் கவர்பவனானனென்க. இனி, இங்கு, "மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின், அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு" என்ற குறளையும், அத்திருக்குறளி னுரையிற் பரிமேலழகர் 'சூழ்கின்ற பொழுதே தானும் உடன் சூழ்தலின்' என்றதையுங் காண்க. சுக்கிரீவனை வலியிழந்த நிலையில் வாலி வலியஎடுத்துத் தரையில் மோதிக் கொல்ல முயன்றமை, அவ் வாலியைக் கொல்லுமாறு உடனே இராமபிரான் அவன்மேல் அம்பு தொடுத்ததற்குக் காரணமென்பது கீழே விளங்கிற்று: அங்ஙனம் காரணமாகிய வாலியின் கைப்பிடி தளர்ந்தாலும், அதன் காரியமாகிய இராமனம்பின்பிடி தளர்ந்திலதெனச் சமத்காரந்தோன்றக் கூறினரெனினுமாம். ஈற்றடி - தொடைமுரண். கய்=கை: போலி. பி - ம்:—[1]சாய்ந்தான். [2]மீதினில். [3]நெகிழ்த்தனன். [4]பற்ற. (304)

60.—வாலி தன்னுயிரைக் கவரும்படையைத் தன்னுடலினின்று அப்பாற்போகவொட்டாது அகப்படுத்தியமை.

வெற்றி வீரன தடுகணை யவன்மிட லுரத்தூடு
உற்ற [1]தப்புறத் துருதமு னுறுவலிக் கரத்தால்
பற்றி வாலினுங் காலினும் பிணித்தகப் படுத்தான்
கொற்ற வெங்கொடு மறலியுஞ் சிரதலங் குலேந்தான்.

(இ - ள்.) வெற்றி வீரனது - வெற்றியையுடைய மகாவீரனான இராமபிரானது, அடு கணை - தவறாமல் அழிக்கவல்ல அம்பானது, அவன் மிடல் உரத்து ஊடு உற்றது - அந்தவாலியினது வலிமையையுடைய மார்பிற் சேர்ந்தது; அப்புறத்து உருதமுன் - (அதனை முழுவதுந் துளைத்துக்கொண்டு) அப்பாற் சென்று விடாததன் முன்னே, (அதனை அவ்வாலி), உறு வலி கரத்தால் - மிக்க வலிமையுடைய (தன்) கைகளால், பற்றி - பிடித்து, வாலின் உம் காலின் உம் பிணித்து - (தனது) வாலினாற்கட்டியும் கால்களால் தடுத்தும், அகப்படுத்தான் - அப்பாற் போகவொட்டாமற் செய்தான்; (அப்பேராற்றலைக்கண்டு), கொற்றம் வெம் கொடு மறலி உம் - (எங்கும்) வெற்றியையுடைய மிகக் கொடிய யமனும், சிர தலம் குலேந்தான் - (அத்திறத்தைக் கொண்டாடித்) தலையசைத்தான் [சிரக்கம்பஞ் செய்தானென்றபடி]; (எ - று.)

உயிர்போகுந் தறுவாயிலும் வாலி மனவுரங்கொண்டு தன்னுயிரை வாங்கும் இராமபிரானது கணையை ஊடுருவிக்கொண்டு அப்பாற்போகாதபடி அகப்படுத்தியமையைக் கண்டு காலக்கடவுளும் அவன்திறலைக் கொண்டாடினனென்பதாம். மறலி சிரதலங்குலைந்தான் - அஃறிணையாகிய சினை தான் தொடர்ந்த உயர்திணையாகிய முதலின் முடிபைக் கொண்டது. பி - ம்:—[1]அப்புறம். இச்செய்யுள் பல பிரதிகளிலில்லை. (305)

61.—வாலியின் கோபாவேசம்.

எழுந்து [1]வான்முக டிடித்[2]தகப் படுப்பனென் றிவரும்
உழுந்து [3]பேர்வுழித் திசை[4]திரித் தொறுப்பலென் [5]றுதைக்கும்
[6]விழுந்து பாரினை வேரொடும் [7]பறிப்பலென் [8]றுருக்கும்
அழுந்து மிச்சர மெய்தவ ளுர்கொலென் [9]றயிர்க்கும்.

(இ - ள்.) (அப்பொழுது வாலி),—எழுந்து - மேற்கிளம்பி, 'வான் முகடு இடித்து - வானத்தின் முகட்டை யிடித்து, அகப்படுப்பன் - இந்தப் பூமியினிடத்துச் சிந்தச் செய்துவிடுவேன்,' என்று - என்றெண்ணி, இவரும் - மேலெழுவான்; 'உழுந்து பேர்வுழி - (ஓர்) உளுந்து நிலைபெயர்ந்து (ஒரு முறை) உருளுமளவிலே [மிகுவிரைவில் என்றபடி], திசை திரித்து - எல்லாத்திக்குக்களையுஞ் சுழலுமாறுசெய்து, ஒறுப்பல் - (அத்திக்குக்களையெல்லாம்) அழித்துவிடுவேன்,' என்று - என்றுசொல்லி, உதைக்கும் - உதைப்பான்: 'விழுந்து - கீழ்விழுந்து, பாரினை - பூமியை, வேரொடும் பறிப்பல் - அடியோடு பெயர்த்தெடுப்பேன்,' என்று—, உருக்கும் - பெருஞ்சினங்கொள்வான்; 'அழுந்தும் இ சரம் - (மிகவலிய என்மார்பிற்) பாய்ந்து செல்லுகின்ற இந்தப்படைக்கலத்தை, எய்தவன் - தொடுத்தவன், ஆர்கொல் - யாரோ?' என்று அயிர்க்கும் - என்று சந்தேகிப்பான்; (எ - று.)

இராமபாணம் பட்டதனால் வாலி துள்ளித் துடிக்கும்போது "எண்பது கோடி நினைந்தெண்ணுவன" என்றபடி அவன்கொண்ட பல எண்ணங்களை இங்ஙனம் எடுத்துக் கூறினர். தன்னுயிர் வாங்கிய படையைக் குறித்துப் பலபடியாக ஐயுற்று, 'சரமெனும்படி தெரிந்தது பலபடச் சலித்தென்' என்று வாலி சரமெனத் தெளிந்தானென்று மேல் வருவதனால், இச்செய்யுளில் சரமென்பது - உயிரை வாங்கலுறும் படை என்ற உறுப்புப்பொருளைக் கொண்டதென்பதே சாலும். வான் முகடு - அண்டகோளத்தின் மேலிடம். உழுந்து பேர்வுழி - உழுந்து உருளுங்கால வெல்லை. பி - ம்:—[1]வானகமுகடு. [2]உக. [3]பேர்வுழி, பேருமுன். [4]திரிந்தொறுப்பல், திரிந்திறுப்பல், திறந்தொறுப்பல். [5]ஒறுக்கும், உகைக்கும், உரைக்கும். [6]ஒழிந்து. [7]பறிக்கென. [8]வெகுளும். [9]ஓரும், உன்னும். (306)

62.—வாலி தன்னுயிர் வாங்கிய படையைப் பற்றியவண்ணம் கால்வால்களினால் வலியுறப் பறிக்கப் பார்த்தல்.

எற்றுங் [1]கையிணை நிலத்தொடு மெரிப்பொறி [2]பறப்பச்
சுற்று நோக்குறுஞ் சுடு[3]சரத் தைத்துணைக் கரத்தால்
பற்றி வாலினுங் [4]காலினும் வலியுறப் பறிப்பான்
[5]உற்று ருமையி னுலைவுறு மலையென வுருளும்.

(இ - ள்.) (மற்றும் வாலி),—கையிணை நிலத்தொடுஉம் எற்றும்- (தன்) கைகளைத் தரையோடு மோதுவான்; எரி பொறி பறப்ப - (தன் கண்களிலிருந்து) நெருப்புப்பொறிகள் பறக்கும்படி, சுற்றுஉம் நோக்குறும் - எல்லாப் பக்கங்களிலும் விழித்துப்பார்ப்பான்; சுடு சரத்தை - வெவ்விய அந்த அம்பை, துணை கரத்தால் பற்றி - (தனது) இரண்டு கைகளாலும் பிடித்து, வாலின்உம் காலின்உம் - (தனது) வாலின் உதவியையும் கால்களின் உதவியையுங் கொண்டு, வலிஉற பறிப்பான் - வலியப் பெயர்த்தெடுத்தற்கு, உற்று - தொடங்கி, உருமையின் - (அம்முயற்சி) நிறைவேறாததால், உலைவு உறும் - வருத்தமடைவான்; மலை என உருளும் - மலை (புரண்டாற்) போல (நோவு பொறாமல் நிலத்திற்) புரள்வான்; (எ - று.)

கையிணை நிலத்தொடும் எற்றும் - கைகளைத் தரையில் அறைவான்; கைகளால் தரையை மோதுவான். பறப்ப - மேலெழ. பி - ம்:— [1]கைகளை. [2]பறக்க, பிறக்க, பிறங்க. [3]சரத்தினை. [4]பல்லினும் காலினும். [5]உற்றெருணமையின். (307)

63.—படையெறிந்தோரைப் பற்றிய வாலியின் சங்கை.

தேவ ரோவென வயிர்க்குமத் தேவரிச் செயலுக்கு
ஆவ ரோவவர்க் காற்றலுண் டோவெனு மயலோர்
[1]ஏவ ரோவென நகைசெயு மொருவனே யிறைவர்
மூவ ரோடுமொப் பான்செய லாமென [2]மொழியும்.

(இ - ள்.) 'தேவர் ஓஎன - (இந்த அம்பை என்மேல் எய்தவர்) தேவர்களோ?' என்று, அயிர்க்கும் - சந்தேகிப்பான்; (மற்றும்), 'அ தேவர் - அந்தத் தேவர்கள், இ செயலுக்கு ஆவர்ஓ - இவ்வகையான செயல் செய்வார்களோ? (அன்றியும்), அவர்க்கு ஆற்றல் உண்டுஓ - அவர்கட்கு (என்னுடலைத் துளைக்கவல்ல அம்பைச் செலுத்தும்) திறமையுண்டோ?' எனும் - என்றும் எண்ணுவான்; 'அயலோர் ஏவர்ஓ - (இது செய்தவர்) வேறு யாரோ?' என - என்றும் எண்ணி, நகைசெயும் - சிரிப்பான்; 'ஒருவனே இறைவர் மூவரோடுஉம் ஒப்பான் செயல் ஆம் - தானொருவனே திரிமூர்த்திகளுக்கும் ஒப்பாகின்றவனது செய்கையாகும் (இது),' என மொழியும் - என்றும் தனக்குட் சொல்லிக்கொள்வான்; (எ - று.)

'தன்மீது அம்பு எய்தவர் தேவரோ?' என அயிர்த்த வாலி, தொந்தயுத்தமாக இருவர் போர்செய்கையில் இடையே ஒருவர்

மேல் தாம் அம்புசெலுத்துதலாகிய இத்தகுதியில் செயலைப் புண்ணியப் பயனை நுகர்பவரும் சிறப்பப்பேரறிவுடையவர்களுமான தேவர்கள் உடன்பட்டுச் செய்திடா ரென்பான், 'அத்தேவர் இச்செயலுக்கு ஆவரோ'? என்றான்; தேவராசகுமாரனை என் திறத்தில் தேவர்கள் இப்படிச் செய்யக் கடவரல்ல ரென்ற கருத்தை யுங்கொண்டதுமாம். நகைசெய்தது, அத்தொழிலைக் குறித்த இகழ்ச்சிபற்றி. திரிமூர்த்திகளி லொருவர்க்குத் தனியே இவ்வகைத்திறம் இல்லை யென்பது பற்றி, 'ஒருவனே இறைவர் மூவரோடு மொப்பான் செயலாம்' என்றான். திரிமூர்த்திகட்கும் ஒப்பான ஒருவனே இது செய்யவல்லவ னென்க. திரிமூர்த்திகளின் ஆற்றலையுமுடையவன் இராமபிரானென்பதை இந்நூலில் மற்றும் பல இடங்களிலுங் காணலாம். மூவர் - பிரம விஷ்ணு ருத்திரர். பி - ம்:—[1]யாவரோ. [2]முனியும். (308)

64.—தன்னுயிரை வாங்கிய படையைப்பற்றிய வாலியின் சங்கை.

நேமி தான்கொலோ நீலகண் டன்னெடுஞ் சூலம்
ஆமி தாங்கொலோ [1]வன்றெனிற் குன்றுரு வயிலும்
நாம விந்திரன் வச்சிரப் படையுமென் னடுவண்
போமெ னுந்துணை போதுமோ [2]யாதெனப் புழுங்கும்.

(இ - ள்.) ஆம் இது - (என்மார்பிற்பட்ட) இப்படைக்கலம், நேமி தான் கொல்ஓ - (ஸ்ரீமகாவிஷ்ணுவினது) சக்கராயுதமேயாகுமோ? நீலகண்டன் நெடுஞ் சூலம் ஆம் கொலோ - (நஞ்சையுண்டதனாற்) கறுத்த கழுத்தை யுடையவனான சிவபிரானது நீண்ட சூலாயுதமாகுமோ? அன்று எனில் - அவையல்லவென்றால், குன்று உரு அயிலும் - மலையினுருவத்தைச்சிதைத்த, நாமம் இந்திரன் வச்சிரம் படை உம்-பிரசித்திபெற்ற இந்திரனது வச்சிராயுதமும்,என் நடுவண் போம் எனும் துணை போதும்ஓ - எனது மார்பில் நுழைந்துசெல்லும் என்னத்தக்க வலிமை யமைந்ததோ? யாது - (மற்றும் இது) எதுவோ?, என - என்று சங்கித்து, புழுங்கும் - தவிப்பான்; (எ-று.)

'அழுந்தும் இச்சரம் (61)' என்ற இடத்து - மார்பிலழுந்தி உயிர் வாங்கும் இப்படை எனக் கூறியதாக் கொண்டு, அப்படையைக் குறித்து 'நேமிதான்கொலோ' முதலியனவாக ஐயுற்றான் வாலி யென்க. முன்னாளில் மலைகள் சிறகுடையனவாயிருந்து பறந்து மக்களின்மேல் விழுந்து அழித்துக்கொண்டிருந்ததனால் இந்திரன் அவற்றின் சிறகைத் தனதுவச்சிரப்படையால் அரிந்தன னென்ற வரலாறுபற்றி, 'குன்றுருவயிலும் இந்திரன் வச்சிரப்படை' எனப்பட்டது. அயிலுதல் - உண்ணுதல்; இங்கே, அழித்தலுக்கு இலக்கணை. புழுங்குதல் - கோபதாபங் கொண்டு கொதித்தலுமாம். நடுவண் - நடுவிடம். இனி ஒரு சாரார் 'நேமிதான் கொலோ : சூலமாங்கொலோ' என்றவற்றிற்கு - அவற்றின்

அமிசமோ என்பது கருத்தாக்கொண்டு, இங்ஙனங்கொள்ளாவிட்டால், கீழ் (61) "அழுந்துமிச்சர மெய்தவன்" என்றதனேடுமாறுபடும் என்ப.

இனி, 'குன்று உருவு அயிலும்' என்பதற்கு - (கிரௌஞ்சமென்னும்) மலையைத் துளைத்த (முருகக்கடவுளின்) வேலாயுதமும் என்றும் உரைக்கலாம். உருவுதல் - ஊடுருவுதல். இங்கு அறியவேண்டிய கதை—முருகக்கடவுள் அசுரர்களை யழித்தற்பொருட்டுப் படையெடுத்துத் தேவர்களுடனே சூரபதுமனது மகேந்திரநகரத்தை நோக்கிச் செல்லும் வழியிடையே வானுற ஓங்கிய கிரௌஞ்சகிரியைக்கண்டு தேவர்கள் திகைத்திடுதலும், நாரதமுனிவர் கூறியதனுல், அம்மலையில் ஒருசார் மாயமாபுரியிலே சூரபதுமனது தம்பியான தாரகன் பல அசுரசேனையுடனேயிருத்தலையறிந்து, முருகக்கடவுள் தனக்குத் தம்பிமுறையாகின்ற வீரவாகுவைச் சேனையோடு போர்க்கு அனுப்ப, தாரகாசுரன் சேனையுடன் வந்து போர்செய்கையில், அசுரர்கள் அழிந்திட, யானை முகமுள்ள அத்தாரகாசுரன் கடும்போர்புரிந்து முருகக்கடவுளின் பரிவாரமான பூதகணங்களை யழித்து முடிவில் முன்நிற்கமாட்டாமல் அம்மலையின் ஒருகுகையிலே ஒளித்தனுக, தொடர்ந்துசென்ற வீரவாகு முதலியோர் பலர் அக்குகையினுள்ளே அம்மலையின் மாயையால் மயங்கிக்கிடக்க, தாரகன் போர்க்களம் புகுந்து பூதகணங்களை வருத்தித்துரத்த, இச்செய்திகளை நாரதமுனிவர் சொல்லக் கேட்டு முருகக்கடவுள் சேனையுடன் சென்று போர்செய்து அவ்வசுரனது துதிக்கையையும் தந்தங்களையும் துணித்து அவனது சேனைகளை அழிக்கையில், அவன் அக்கிரௌஞ்சமலையுடன் கூடிப் பலமாயைகள் புரிய, ஆறுமுகமூர்த்தி வேலாயுதத்தை யெறிந்து அம்மலையையும் அவ்வசுரனையும் அழித்திட்டன னென்பதாம். அன்றியும், சிவபிரான் பரசுராமனுக்கும் சுப்பிரமணியனுக்கும் ஒருங்கு படைக்கலவித்தை பயிற்றுவித்தபின்பு அவர்கள் திறத்தைப்பரீக்ஷிக்கையில் பரசுராமன் அம்பெய்து கிரௌஞ்சகிரியைத் துளைக்க, குமாரமூர்த்தி தனது வேற்படையை அக்கிரியின்மீது எறிந்து அதனைப் பிளந்து தனது வேலின் திறத்தைக் காட்டினனென்ற வரலாறு உண்டு. பி - ம்:—[1] அன்றெனிற் குன்றுருவியவேல், அன்றெனிற் குன்றினையரியும். அறுமுகனயில்கொலோவன்றேல், அன்றியும் குன்றுருவயிலோ. [2] யாதெனப்புகலும், வாமெனப்புகலும். (309)

65.—வாலி தன்னுயிரை வாங்கும் படையைக் கொண்டாடித் தன்மார்பைக் கல்லி இராமபாணத்தைக் காணுதல்.

வில்லி னுற்றுரப் [1]பரி திவ்வெஞ் சரமென வியக்கும்
சொல்லி னுனெடு [2]முனிவரோ [3]தூண்டினு ரென்னும்
பல்லி னுற்[4]கடிப் புறும்பல காலுந்தன் னுரத்தைக்
[5]கல்லி யார்ப்பொடும் [6]பறிக்குமப் [7]பகழியைக் கண்டான்.

(இ - ள்.) (வாலி),—'இ வெம் சரம் - இந்தக் கொடிய அம்பு, வில்லினல் துரப்பு அரிது - வில்லினல் எய்துசெலுத்துதற்கு அருமையானது,' என - என்று, வியக்கும் - ஆச்சரியப்படுவான்; 'நெடு முனிவர் - மகாவிருடியர், சொல்லினல் தூண்டினர்ஓ - (தங்கள்) சொற்களின் வலிமையைக்கொண்டு (இதனை) ஏவினர்களோ?' என்னும் - என்று எண்ணுவான்; பல்லினல் கடிப்புறும் - (பொத்திய படையை வெளிக்கொணரத் தன்) பற்களாற் கடித்திழுப்பான்: பலகால்உம் - பலமுறையும், ஆர்ப்பொடுஉம் - ஆரவாரத்துடனே, தன் உரத்தை கல்லி பறிக்கும் - தனது மார்பைத் தோண்டிப் பறிப்பவனானன்; (அங்ஙன்செய்யும்போது), அ பகழியை - அந்த அம்பை, கண்டான் - பார்த்தான்; (எ - று.)

'ஒருகால் தன்னுயிர் வாங்குவது அம்பு ஆகவும் இருக்கலாமோ!' என்று ஓரெண்ணமும் வாலிக்கு இருத்தலால், 'வில்லினற்றுரப்பரிதிவ் வெஞ்சரம்' என்கிருன்: வாலி தன்னுயிரை வாங்குவது சரந்தானென்று தெளிந்தமையை 'சரமெனும்படி தெரிந்தது பலபடச் சலித்தென்' என்று மேற்செய்யுளில் கூறுவது காண்க. சொல்-அருள்கொண்டு கூறினலும் வெகுண்டுகூறினலும் அந்தந்தப் பயன்களைத் தவருமல் விளைத்திடுகின்ற நிறைமொழிகள். இனி, சொல்லினல்-மந்திரபலத்தால் என்றுமாம். விற்சரத்தினும் முனிவர் சொற்சரம் கொடுமை வாய்ந்த தென்பதை இச்செய்யுளின் முன்னிரண்டடிகளில் விளக்குகிருர். பறிக்கும் அப்பகழி - பறிக்கப்படுகிற அப்பகழியை யெனினுமாம். பி - ம்:—[1] இவெஞ்சரம். [2] முனிவரே. [3] தூண்டினர். [4] பறிபபுறும். [5] கல்லினற் பின்னும். [6] பறிப்பரும். [7] வாளியை. (310)

66.—வாலி அந்த அம்பைத் தன்மார்பினின்று பிடுங்கக் கருதுதல்.

சரமெ னும்படி தெரிந்தது பலபடச் [1] சலித்தென்
உரமெ னும்[2]பத முயிரொடு முருவிய வொன்றைக்
கரமி ரண்டினும் [3]வாலினுங் காலினுங் கழற்றிப்
[4]பரம னின்னவன் பெய[5]ரறி குவனெனப் பறிப்பான்.

(இ - ள்.) 'சரம் எனும் படி தெரிந்தது - (இஃது ஓர்) அம்பு என்கிற நிலைமை தெரிந்ததே; பல பட சலித்து என் - பலவாருகச் சங்கித்து என்ன பயன்? உரம் எனும் பதம்-மார்பென்கிற இடத்தை, உயிரொடும் - (எனது) உயிருடனே, உருவிய - துளைத்துக்கொண்டு சென்ற, ஒன்றை - ஒப்பற்றதான அந்த அம்பை, கரம் இரண்டின்உம் - (எனது) இரண்டு கைகளாலும், வாலின்உம் காலின்உம் - வாலின் உதவியைக்கொண்டும் கால்களின் உதவியைக்கொண்டும், கழற்றி - (எனது உடம்பைவிட்டுக்) கழலப் பண்ணி, இன்னவன் பரமன் பெயர் அறிகுவன் - இதனைத் தொடுத்தவனை பெரியோனது பெயரைத் தெரிந்துகொள்வேன்,' என - என்று எண்ணி, பறிப்பான் - (அந்த அம்பை வாலி தன்மார்பினின்று) பிடுங்குபவனானன்; (எ - று.)

இமிசிப்ப தென்பது 'சரம்' என்ற வடமொழிப்பெயரின் காரணப் பொருளாதலால் 'சரம் எனும்படி தெரிந்தது' என்பதற்கு - (இந்த ஆயுதம்) சரமெனப்படுந் தன்மை (மிகவருத்துகின்ற விதத்தால் எனக்கு அனுபவத்தில்) தெரிந்தது என்பர், ஒருசாரார். சலித்தல் - எண்ணம்மாறுதல்; இனி, தன் மார்பைத் துளைக்கும்படி அம்பு செலுத்தியவன் அனைவரினுஞ் சிறந்தவனாதல் வேண்டு மென்பது பற்றி, 'பரமன்' என்றான்; அன்றி, இத்தகுதியில் செயலைச் செய்தவனென்று இகழ்ச்சிக்குறிப்பால் 'பரமன்' என்றானென்பாருமுளர். [4]பரமனன்னவன் என்ற பாடத்திற்கு - கடவுள் போன்றவனென்க. அம்புகளில் உடையவன்பெயரைச் செதுக்கிவைத்திருத்தலால், அது கொண்டு இதனை எய்தவ னின்னானென்று அறிவேனென்றானென்க. பி - ம்:—[1]சலித்தான். [2]அகம், தலம். [3]காலினும்வாலினும். [5]அறிவேன். (311)

67.—வாலி அந்த அம்பைப் பறித்தல்.

ஓங்க ரும்பெருந் [1]திறலுடை மனத்தனுள் ளத்தன்
வாங்கி னான் [2]மற்றவ் வாளியை யாளிபோல் வாலி
ஆங்கு [3]நோக்கின ரமரரு மவுணரும் [4]பிறரும்
வீங்கி னார்கள்தோள் [5]வீரரை யார் [6]விய வாதார்.

(இ - ள்.) ஓங்கு - உயர்ந்த, அரு - (பிறர்பக்கல்) அருமையான, பெருந்திறல் - மிக்கவலிமையை, உடை - உடைய, மனத்தன் - மனத்தையுடையவனும், உள்ளத்தன் - (அந்த வலிமைக்கு ஏற்ற) மனக்கிளர்ச்சியையுடையவனுமான, யாளி போல் வாலி - சிங்கம்போன்ற வாலியானவன், அவ் வாளியை வாங்கினான் - அந்த அம்பை(த் தன் மார்பினின்று) பறித்தெடுத்துவிட்டான்; ஆங்கு நோக்கினர் - அப்பொழுது அதனைப் பார்த்தவர்களான, அமரர்உம் - தேவர்களும், அவுணர்உம் - அசுரர்களும், பிறர்உம் - மற்றையோரும், தோள் வீங்கினார்கள் - (அந்த அற்புதத்தைக் கண்டதனாலாகிய மகிழ்ச்சியால்) தோள்கள் பூரித்தார்கள்; வீரரை வியவாதார் யார் - (உலகத்தில்) வீரரைக் கொண்டாடாதவர் எவர்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)—மற்று - அசை; பின்பு எனினுமாம்.

உள்ளமென்பது ஊக்கமென்னும் பொருளதாதலை, "உள்ளமுடைமை யுடைமை," "உள்ளத்தனைய துயர்வு," "உள்ளமிலாதவரெய்தார்" எனத் திருக்குறளிலும், "உள்ளமில்லவர் புளினுருள் சுருங்கி" எனச் சிந்தாமணியிலும் காண்க. ஊக்கமாவது - மனம் மெலிதலின்றித் தொழில்செய்தலிற் கிளர்தல். மனவுறுதி குன்றாது தன்னுடலிற் பொத்திய வாளியைப் பேர்த்தெடுத்தது கண்டு தேவர்கள் அசுரர்கள் முதலானவர்கள் வாலியைக் கொண்டாடி மகிழ்ந்தார்களென்ற சிறப்புப்பொருளை, உலகத்திலே சுத்தவீரர்களைக் குறித்து யார்தான் அதிசயிக்கமாட்டாரென்றபொதுப் பொருள்கொண்டு விளக்கினர்; வேற்றுப்பொருள்வைப்பணி.

பி-ம்:—[1] திறலினுமனத்தினுங்கரத்தால், திறலினுங்காலினு முரத்தும், திறலுடைமனத்தினுள்ளூரத்தின், திறலுடைமனத்தினனுரவோன், திறலினன்வாலினுங் கரத்தும். [2]மற்றை. [3]நோக்கிய. [4]முததோர். [5]வீரனை. [6]விரும்பாதார். (312)

68 —வாலியின் மார்பினின்று பெருகிய இரத்த வெள்ளம்.

[1]மோடு தெண்டிரை [2]முரிதரு [3]கடலென முழங்கி
ஈடு பேருல [4]கிறந்துள தா[5]மெனற் கெளிதோ
காடு [6]மாநெடு [7]விலங்கல்கள் [8]கடந்ததக் கடலின்
ஊடு [9]போதலுற் றதனை [10]யொத் துயர்ந்துள துதிரம்.

(இ - ள்.) காடு - காடுகளையும், மா நெடு விலங்கல்கள் - மிகப்பெரிய மலைகளையும், கடந்தது - தாண்டியதாய், அ கடலின் ஊடு போதல் உற்றதனை ஒத்து - அந்தக்கடலிற் சென்றுசேரத் தொடங்கியதைப் போன்று, உயர்ந்து உளது - உயர்ந்துள்ளதாகிய, உதிரம்- இரத்தவெள்ளமானது,—'மோடு தெள் திரை முரிதரு கடல் என - உயர்ச்சியான தெளிந்த அலைகள் மடங்கப்பெற்ற கடல்போல, முழங்கி -ஆரவாரஞ் செய்துகொண்டு, ஈடு பேர் உலகு இறந்துளது ஆம் - வலிய பெரிய (பல) உலகங்களைக் கடந்ததாம்', எனற்கு - என்று வருணித்துச் சொல்லுமாறு, எளிதோ - எளியதாமோ? [ஆகாதென்றபடி]; (எ - று.)

அம்பைப் பறித்தவுடனே வாலியின் மார்பினின்று பெருகியெழுந்து காடுமலைகளைக் கடந்துசெல்கின்ற இரத்தவெள்ளமானது கற்பாந்தகாலத்தில் உலகங்களில் பரவி அவற்றையழிக்கும் பிரளயக் கடலினும் மிக்கதா மென்பது, இதன் கருத்து: அந்தப் பிரளயக் கடலைத் தனக்குஉவமை கூறும்படி எளியதன்றென்க; தொடர்புயர்வு நவிற்சியணி. மோடு - உயர்ச்சி. ஈடு - பெருமை. 'அக்கடல்' என்ற இடத்தில், சுட்டு - பிரசித்திபற்றியது; சேய்மை பற்றியதுமாம். உயர்ந்துளது - ஓங்கிப்பெருகியது. பி - ம்:—[1]மூடு. [2]முரிதரக். [3]கடன்மிக. [4]இழிந்துளது, ஈர்த்துளது. [5]என்றல். [6]மாணெடு. [7]விலங்கலும். [8]கடந்தவக், கடந்தது, கடந்தன. [9]பேர்தலுற்றதனை என்றும் படிக்கலாம். [10]உயர்ந்தனவொத்து. (313)

69.—அதுகண்டு சுக்கிரீவனும் வருந்துதல்.

வாசத் [1]தாரவன் மார்பெனு மலைவழங் கருவி
ஓசைச் சோரியை நோக்கின னுடன்பிறப் பென்னும்
பாசத் தாற் பிணிப் புண்டவத் [2]தம்பியும் [3]பசுங்கண்
நேசத் தாரைகள் [4]சொரிதர நெடுநிலஞ் சேர்ந்தான்.

(இ - ள்.) வாசம் தாரவன் - வாசனையையுடைய மலர்மாலையைத் தரிப்பவனான அந்தவாலியினது, மார்பு எனும் - மார்பாகிய, மலை - மலையினின்று, வழங்கு - பெருகிய, சோரிஓசை அருவியை -

இரத்தவெள்ளமாகிய ஆரவாரத்தையுடைய அருவிப்பெருக்கை, நோக்கினன் - பார்த்து, உடன்பிறப்பு என்னும் பாசத்தால் - உடன் பிறந்தவனென்பதுபற்றி யுண்டான அன்பாகிய கயிற்றினால், பிணிப்புண்ட - கட்டுப்பட்ட, அ தம்பிஉம் - தம்பியான அச்சுக்கிரீவனும், பசுங்கண் - பசுமையான (தன்) கண்களினின்று, நேசம் தாரைகள் - அன்பிற்கு அறிகுறியான நீர்த்தாரைகள், சொரிதர - பெருக, நெடுநிலம் சேர்ந்தான் - பெரிய தரையில்விழுந்தான்; (எ - று.)

எவ்வளவு பகைமை யிருந்தபோதிலும் "மரணாந்தாநி வைராணி" என்றபடி எதிரியிறந்தவளவிற் பகைமை நீங்குதலால், அன்புடைத் தம்பியான் சுக்கிரீவன் தன் தமையனது மரணத்தைக் குறித்து வருந்தின னென்க; இங்ஙனமே இராவண னிறந்தபின்னர், விபீடணன் வருந்துவதுங் காண்க. வாலிக்குச் சுக்கிரீவன்பக்க லுண்டானாற்போலப் பெரும்பகைமை சுக்கிரீவனுக்கு வாலியினிடம் ஆதியில் உண்டானதில்லை யென்பதும் உணரத்தக்கது. மார்பெனும் மலைவழங்கு அருவி ஓசைச்சோரி - உருவகம். பாசத்தால் - பாச மாகிய பாசத்தால் எனச் சிலேடையுருவகம். பாசம் - அன்பும், கயிறும். அன்புடையார்க்குப் பிறரிடத்துத்துன்பங் கண்டவழிக் கண்ணீர் விழு மாதலால், அச்சோகக்கண்ணீர் 'நேசத்தாரை' [1]எனப்பட்டது. 'வாசத்தார்' என்றது - போர்க்கு அறிகுறியான தும்பைப் பூமாலையை; அலங்காரத்திற்கு அணியும் நறுமலர்மாலையையுமாம். பி - ம்:—[1] தார்புனை. [2] தம்பியை. [3]பசும்புண். [4] இழிதர, சொரிந்திட. (314)

70.—வாலி அந்த அம்பிற் பொறிக்கப்பட்டுள்ள பெயரைப் பார்க்கத் தொடங்குதல்.

பறித்த வாளியைப் [1]பருவலித் [2]தடக்கையாற் பற்றி
இறுப்பெ னென்றுகொண் [3]டெழுந்தனன் மேருவை[4]யிறுப்போன்
முறிப்பெ னென்னினு முறிவதன் றுமென மொழியாப்
பொறித்த நாமத்தை [5]யறிகுவா னோக்கினன் [6]புகழோன்.

(இ - ள்.) மேருவை இறுப்போன் - மகாமேருகிரியையும் முறிக்க வல்லவனும், புகழோன் - கீர்த்திபெற்றவனுமான வாலி—பறித்த வாளியை - (தனது உடம்பினின்று) பிடுங்கிய அம்பை, பரு வலி தடக்கையால் பற்றி - பருத்த வலிமையுள்ள பெரிய (தன்) கைகளாற் பிடித்து, இறுப்பென் என்று கொண்டு - ஒடிப்பேனென்று கருதி, எழுந்தனன் - எழுந்து, 'முறிப்பென் என்னின்உம் - (யான்) முறிக்க முயன்றேனானாலும், (இது), முறிவது அன்று - முறியமாட்டாது,' என மொழியா - என்று (தனக்குட்) சொல்லிவிட்டு, பொறித்த நாமத்தை - (அதிற்) செதுக்கப்பட்டுள்ளபெயரை, அறிகுவான் - (இன்னதென்று) அறியும்பொருட்டு, நோக்கினன் - பார்க்கலானான்; (எ - று.)—ஆல் - அசை.

'எழுந்தனன்' என்பதற்கு - முறிக்கத் தொடங்கி யென்றும் பொருள் கொள்ளலாம். பி - ம்:—[1]பரூஉவலி. [2]தடக்கையிற். [3]எழுந்தவன். [4]இரண்டாய், இறுப்பேன். [5]அறிகலன். [6]புகழ்வான். (315)

71.—வாலி அந்த அம்பில் இராமநாமம் பொறிகப்பட்டிருப்பதைப் பார்த்தல்.

மும்மைசா லுலகுக் கெல்லா மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே [1]தமர்க்கு நல்குந் தனிப்பெரும் [2]பதத்தைத் [3]தானே
இம்மையே [4]யெழுமை நோய்க்கு மருந்தினை [5]யிராம வென்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக் [6]கண்களிற் றெரியக் கண்டான்.

(இ - ள்.) மும்மை சால்-மூன்றென்னுந் தொகையமைந்த, உலகுக்கு எல்லாம் - உலகங்க ளெல்லாவற்றிற்கும், மூலம் மந்திரத்தை - முக்கிய மந்திரமாக வுள்ளதும்,—தமர்க்கு - தன்னை ஜபிக்கின்றவர்களான அடியார்கட்கு, தம்மைஏ முற்றுஉம் நல்கும் - தம்மையே முழுவதும் கொடுக்கின்ற, தனி பெரும் பதத்தை - ஒப்பற்ற சிறந்த சொல்லாக வுள்ளதும்,—தானே - தான் தனியாகவே, இம்மைஏ - இப்பிறப்பிலேயே, எழுமை நோய்க்குஉம் மருந்தினை - எழுவகைப்பட்ட பிறப்புக்களாகிய நோய்களையெல்லாம் ஒழிப்பதற்கு மருந்தாக வுள்ளதுமான,—இராம என்னும் செம்மை சேர் நாமந்தன்னை - 'ராம' என்கிற சிறப்புப்பொருந்திய திருநாமத்தை,—கண்களின் தெரிய கண்டான் - தனது கண்களினால் (அந்த அம்பிலே) விளங்கப் பார்த்தான், (வாலி); (எ - று.)

தாரகமந்திரமென்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற சிறந்த மகாமந்திரமான ராமநாமத்தின் மகிமை, இங்கு உணர்த்தப்பட்டது; "நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே, தின்மையும் பாவமும் சிதைந்துதேயுமே, சென்மமும் மரணமு மின்றித் தீருமே, இம்மையே ராமவென்றிரண்டெழுத்தினால்" என்று இந்நூல் தொடக்கத்திற் கூறியதுங் காண்க; மேல் 123 - ஆஞ் செய்யுளும் நோக்கத்தக்கது. மூல மந்திரம் - தலைமையான மந்திரம்; ஸஹஸ்ரநாமஸ்தோத்திரத்தினிறுதியில், "ஸஹஸ்ரநாமதஸ்துல்யம் - ராம நாம வராநநே [அழகிய முகத்தையுடைய பார்வதியே! ராம என்கிற நாமமானது (அப்பிரானது) ஆயிரநாமத்தோடு ஒத்தது]" என்று சிவபிரானுரைத்ததாக இருப்பதையுங் காண்க. எல்லா வுலகத்தவராலும் அறிந்து செபிக்கப்படுவதென்பார், 'உலகுக்கெல்லாம் மூலமந்திரம்' என்றார். உலகம் பதினான்காயிருக்க 'மும்மைசால்உலகு' என்றது, மேல் கீழ் நடு என்ற நோக்கத்தால்; அவை ஸ்வர்க்கம் பூமி பாதாளமெனத் தொகுத்துரைக்கப்படும். மும்மை - மூன்றாயிருக்கும் தன்மை. ராமநாமத்தை ஜபித்தவர் அப்பெருமானாக அவரித்த ஸ்ரீமந்நாராயணனது பரமபதத்தை யடைந்து அந்த எம்பெருமானுடைய சுவரூபம் முழுவதையும் திரிகரணங்களாலும் அநுபவித்துப் பெரு மகிழ்வு

அடைதல்பற்றி, 'முற்றும் தம்மையே தமர்க்குநல்கும் தனிப்பெரும் பதம்' எனப்பட்டது. 'தம்மை' என்றது அந்த நாமத்தின் பொருளான எம்பெருமானைக் குறித்தது; பன்மை, உயர்வு பற்றியது. இரண்டாமடியில், தமர்க்கு - (பெரும்பதமாகிய [பரமபதமாகிய]) தன்னையே செபிப்பவர்க்கு, தம்மையே [பரமபதத்தையே], நல்கும் - கொடுக்கின்ற, தனி பெரும்பதத்தை - ஒப்பற்ற பெருமையுள்ள சொல்லாயிருப்பதும் என்று உரைப்பாருமுளர். இப்பொருளில், தம்மை என்பது - பெரும்பதம் என்பதைக் குறிக்கும். பெரும்பதம் என்பது - சிலேடையால், பரமபதம் என்ற ஸ்தாநத்தையும், சிறந்த சொல் என்பதையும் காட்டும்; எதுகை நோக்கிவந்ததுமாம். 'தானே' என்ற ஏகாரம் - பிரிநிலை; வேறொருவன் உதவியை வேண்டாமலென்றபடி. 'இம்மையே' என்ற ஏகாரம் - தேற்றம்; "சரீராவஸாநத்திலே மோக்ஷம்" என்று பேரருளாளப்பெருமாள் தாமே திருவாய்மலர்ந்தருளியபடியும், "சரணமாகுந் தனதாளடைந்தார்க்கெல்லாம், மரணமானால் வைகுந்தங்கொடுக்கும் பிரான்" என்று நம்மாழவார் அருளிச்செய்தபடியும், எம்பெருமானது அடியார்கட்கு இப்பிறப்பின் முடிவிலேயே முத்திகிடைத்தலால், 'இம்மையே எழுமை நோய்க்கும் மருந்து' எனப்பட்டது. எழுமை - தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் ஏழுவகைப் பிறப்புகள். முத்திபெற்றவர்க்கு மீண்டும் கருமவசமான பிறப்பு இல்லையென்பது உணர்க. செம்மை - செவ்வி. இராமநாமமென்ற ஒரு பொருளினிடத்து மூன்று தன்மைகளைக் கூறியது, பலபடப் புனைவணி. 'கண்டான்' என்றவிடத்து. 'கண்களின்' என வேண்டாது கூறியது, கண்கள் படைத்தபயனாகக் கண்டானென ஒருசிறப்புப்பொருள் தோன்ற. தெரியக் கண்டான் - நன்றாகப் பார்த்தானென்க. பி - ம்:—[1] அவர்க்கு, தனக்கு, எவர்க்கும். [2] தவத்தை. [3] தாழாது. [4] மறுமை. [5] இராமன். [6] நோக்கினன், கண்களால். (316)

72.—தன்மேல் அம்பெய்தவன் இராமனென்று உணர்ந்து வாலி இகழ்தல்.

இல்லறந் துறந்த நம்பி [1]யெம்மனோர்க் காகத் தங்கள்
வில்லறந் துறந்த வீரன் தோன்றலால் [2]வேதநூலில்
[3]சொல்லறந் [4]துறந்தி லாத சூரியன் [5]மரபுந் தொல்லை
நல்லறந் துறந்த தென்று நகைவர [6]நாணுட் கொண்டான்.

(இ - ள்.) 'இல் அறம் துறந்த நம்பி - (தனது) கிருகத்திலிருந்து தருமஞ்செய்தலைவிட்டு வனவாசம் புக்க சிறந்த ஆணமகனும், எம் அனோர்க்கு ஆக - எம்மைப்போன்றவர்களுக்காக, தங்கள் வில் அறம் துறந்த - தங்கட்குப் பரம்பரையாக உரிய விற்போர் முறைமையை விட்டிட்ட, வீரன் - வீரனுமான இராமன், தோன்றலால் - பிறந்ததனால்,—வேதம் நூலில் - வேதசாஸ்திரங்களில், சொல் -

சொல்லப்பட்ட, அறம் - தருமங்களை, துறந்திலாத - கைவிடாமல் அனுஷ்டித்துவந்த, சூரியன் மரபும் - சூரியகுலமும், தொல்லை நல் அறம் துறந்தது - தொன்றுதொட்டு வருகின்ற நல்ல தருமத்தை விட்டதாயிற்று,' என்ஞ - என்று எண்ணி, நகை வர - சிரிப்பு உண்டாக, நாண் - நாணத்தை, உள் கொண்டான் - மனத்திற் கொண்டான்; (எ - று.)

இல்லறம் துறந்த நம்பி - மனையாள் முதலானாரோடு கிருகத்தில் வாழ்ந்து செய்யுங் கிருகஸ்தாச்சிரம தருமத்தைவிட்டு வாநப்பிரஸ் தாச்சிரமதருமத்தை மேற்கொண்டு மனையாளோடு தவவேடம் பூண்டு வனத்திற் சென்றவ னென்றபடி. இனி, இல்வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியை (இராவணன் கவர) இழந்துவிட்டு அதற்கு எதிரொன்றுஞ் செய்யாதவ னென்ற பொருளில் 'இல்லறந்துறந்த நம்பி' என்றதுமாம்; இல்லத்தைவிட்ட நம்பி என்றலுமுண்டு. எம் அனோர்- எம்மோடொத்தவர்; இங்கு 'எம்மனோர்க்காக' என்றது, எமக்காக என்றபடி; ஒப்பில்போலியும், தன்மைப்படர்க்கையுமாம்: பன்மை - உளப்பாட்டுத் தன்மைப்பன்மை. எனக்குப் பிரதிகூலமாகவும், என் தம்பிக்கு அநுகூலமாகவு மென்க: என்னைத் தொலைக்கவும், சுக்கிரீவனுக்கு உதவவும் என்றவாறு. வில்லறம்துறத்தல் - இருவர் பொருகையில் விற்போர்முறைமைக்குமாறாக இடையேதான் புகுந்து மறைந்துநின்று அவர்களிலொருவர்மேல் அம்பெய்தல்; ("இருவருமுணைந்த போரி லிளைத்தவற்குதவியாகப், பொருவது கடனன்று" என்றது, மகாபாரதம்.) நம்பி - ஆடவரிற்சிறந்தவன், புருஷோத்தமன். இங்கு 'நம்பி,' 'வீரன்' என்றவை - இகழ்ச்சிக் குறிப்பாய் எளிமைகுறிக்கும். மனைவியைப் பிரிந்த விசனத்தால் அறிவு கலங்கியமைபற்றி உனது குலத்தார்க்குச் சொந்தமான இராசதருமத்திற்கு மாறாக இப்படிச் செய்தனைபோலுமென்கிறான். இப்படி என்பக்கல் இராமனொருவன் அநீதிசெய்ததனால் அவன் பிறந்த சூரியகுலம் முழுவதுக்குமே சிறப்பழிந்த தென்றானென்க. நகைப்புவந்தது, இகழ்ச்சிபற்றி. "பிறர்பழியுந் தம்பழியும் நாணுவார் நாணுக்கு, உறைபதி யென்னு முலகு" என்றபடி பிறர்க்கு வரும் பழியையும் தமக்குவந்ததாகவே கருதி நாணுதல் உயர்ந்தோரியல்பு ஆதலால், இராமனது பழிக்கத்தக்க செயலைக் குறித்து வாலி நாணங்கொண்டான். அன்றி, 'நாண் உட்கொண்டது - இங்ஙனஞ்செய்த போலி வீரனது அம்புபட்டதனால் தான் உயிரிழக்க நேர்தல்கருதி' என்றலும், 'இவன் ஒருகாலும் தருமநெறிதவறா னென்ற முழுநம்பிக்கையுடன் "தருமமே தவிர்க்குமோ தன்னைத் தானரோ" என்று இவனைக் குறித்து என்மனைவியுடன் சொன்னேனே! என் மதியீனம் இருந்தவகை என்னே! என்று தன் மனத்துள் வெட்கமுற்றான்' என்றலுமாம். இங்கு இராமனது செயலாலான எளனம் பற்றிய நகை வெளிப்பட்டுத்தோன்றி, அதன் விளைவான நாணத்தை வெளிக்காட்டாதடக்கினனென்ற கருத்துத் தோன்ற 'நகைவர நாணுட்கொண்டான்' என்றார். பி - ம்:—[1]எங்களுக்காக. [2]வேத நன்னூல். [3]தொல்லறந். [4]துறக்கிலாத. [5]மரபிற்றெல்லோர். [6]நாணுக்.

(317)

73.—இதுவும் அது.

[1]வெள்கிட மகுடஞ் சாய்க்கும் [2]வெடிபடச் சிரிக்கு [3]மீட்டும்
உள்கிடு மிதுவுந் [4]தானே ரோங்கற மோவென் றுன்னும்
முள்கிடுங் [5]குழியிற் புக்க மூரிவெங் களிநல் யானை
[6]தொள்கொடுங் கிடந்த தென்னத்[7] துயருழந் தழிந்து சோர்வான்.

(இ - ள்.) முள்கிடும் குழியில் - முழுகி அழுந்தத்தக்க பெருங் குழியிலே (விழுந்து), புக்க - அகப்பட்டுக்கொண்ட, மூரி வெம் களி நல் யானை - வலிமையையுடைய வெவ்விய மதங்கொண்ட சிறந்த ஓர் ஆண்யானையானது, தொள்கொடும் கிடந்தது என்ன - விலங்குடனே (அங்குக்) கிடந்தது போல, துயர் உழந்து அழிந்து சோர்வான் - துன்பமனுபவித்துக்கொண்டு நிலையழிந்து தளர்பவனான வாலி,—வெள்கிட (மனத்தில்) நாணமுற்றதனால், மகுடம் சாய்க்கும் - கிரீடமணிந்த தலையைச் சாய்ப்பான்; மீட்டும் உள்கிடும் - (நடந்த செய்தியைக் குறித்து) மீளவும் ஆலோசிப்பான்; இதுஉம் தான் ஓர் ஓங்கு அறம்ஓ என்று உன்னும் - இப்படி அம்பெய்ததுதானும் ஒரு சிறந்த தருமமாகுமோ என்று எண்ணுவான்; (எ-று.)

இங்கு 'வெடிபடச்சிரிக்கும்' என்பதனால், கீழ்ச்செய்யுளில் 'நகை வர' என்றது - புன்சிரிப்பு உண்டாக என்றவாறும். இனி, மீட்டும் வெடிபடச் சிரிக்கும் என்று இயைத்தால், கீழ்ச்செய்யுளில் 'நகை வர' என்றதும் வெடிச்சிரிப்பாகலாம். உள்ளுதல் - வருத்தத்தோடு சிந்தித்தல். முள்கிடுங்குழி - பெரும்பள்ளம், படுகுழி: யானை பிடிப்பவர் யானைக்காட்டில் ஒரு பெரும்பள்ளத்தைப் பறித்து அதன் இப்புறத்திலே தாம் பழக்கிவைத்துக் கொணர்ந்த பெண்யானையை நிறுத்த, அப்புறத்திலுள்ள ஆண்யானை அதனோடு சேரும் விருப்பத்தால் ஓடி வருகையில் அப்படுகுழியில் வீழ்ந்து மேலேறமாட்டாமல் அகப்பட்டுக்கொள்ள, அதனை அவர்கள் பின்பு தந்திரமாக விலங்கிட்டு மேலேற்றித் தம்வசப்படுத்திக் கொள்ளுதல், இயல்பு; அவ்வாறு இராமன் செய்த தந்திரத்தால் வாலி அகப்பட்டு வருந்தலாயினனென்பது, பின்னிரண்டடியிற் கூறிய உவமையால் விளங்கும். நல் யானை - உத்தமவிலக்கண மமைந்த கஜம். தொள்கு - வலை: இங்கே, இலக்கணையாய்க் கால் விலங்கென்னலாம்; சேறு என்பாருமுளர். சாய்க்கும் - அசைக்கு மெனினுமாம். மகுடம் - அணியும் முடிக்குத் தானியாகுபெயர். பி - ம்:—[1]வெள்கிடும். [2]வெடுவெடு. [3]மடிக்கும், பின்னை. [4]தானெவ். [5]உயிர்ப்புவீங்கும், குழியிற்புக்கு. [6]தொள்கொடு நின்றதென்ன. [7]தொழிலிழந்து. (318)

74.—இராமபிரான் வாலியின் எதிரில் வருதல்.

இறைதிறம் பினனு [1]லென்னே [2]யிழிந்துளோ ரியற்கை [3]யென்னின்
முறை [4]திறம் பினனு லென்று [5]மொழிகின்ற முகத்தான் முன்னர்
மறை [6]திறம் பாத வாய்மை மன்னர்க்கு [7]மனுவிற் [8]சொல்லுந்
துறைதிறம் பாமற் காக்கத் [9]தோன்றினன் வந்து [10]தோன்ற.

(இ - ள்.) 'இறை - தலைமையுள்ளவன், திறம்பினன் - நீதி தவறினான்; (என்றால்), இழிந்துளோர் இயற்கை - தாழ்ந்தவர்களது இயல்பு, என்னே - என்னாகும்! (அந்த இறையும்), என்னில் - என் திறத்தில் தான், முறை திறம்பினன் ஆல் - நீதிதவறினானே! ஈது என்ன!! என்று—,' மொழிகின்ற - சொல்கின்ற, முகத்தான் - வாயையுடையவனான அந்த வாலியினது, முன்னர் - எதிரில்,—மறை திறம்பாத - வேதத்தின் கருத்தோடு மாறுபடாத, வாய்மை - உண்மைப் பொருளான, மனுவில் - மனுதருமசாஸ்திரத்தில், மன்னர்க்கு - அரசர்கட்கென்று, சொல்லும் - சொல்லுகின்ற, துறை - நல்லலொழுக்கத்தினின்று, திறம்பாமல் - தவறாதபடி, காக்க - பாதுகாத்தற்கு, தோன்றினான் - அவதரித்தவனான இராமபிரான், வந்து தோன்ற—,—(எ - று.)—"கண்ணுற்றான் வாலி நோக்கி ஏசுவான் இயம்பலுற்றான்" என, அடுத்த கவியோடு தொடர்ந்து முடியும். 'ஆல்' இரண்டனுள், முன்னது - வியப்புப்பொருளது; பின்னது - தேற்றம்.

அரசநீதிமுறைமையைத் தவறாமற் பாதுகாத்தற்பொருட்டுத் திருவவதாரஞ்செய்த பெருமான் வாலிமுன் வந்து தோன்றினனென்பதாம். தருமசாஸ்திரம் வேதத்தின்பொருளை நினைத்துச் செய்யப்பட்டு அதனால் ஸ்மிருதியென்று பெயர் பெறுதலால், 'மறைதிறம்பாத வாய்மை மனு' எனப்பட்டது. பி - ம்:—[1] அஃதே. [2] இழிந்துளோர்க்கு, இழிந்துளது. [3] என்று, எண்ணின். [4] திறம்பியது. [5] நோகின்ற, நோக்கின்ற. [6] திறம்பாமற்காக்கும். [7] முன்னம். [8] சொன்ன. [9] தோன்றினன். [10] தோன்றி, தோன்றல். (319)

75.—வாலி இராமனை நோக்கி இகழ்ச்சியாகப் பேசத் தொடங்குதல்.

கண்ணுற்றான் வாலி நீலக் [1] கார்முகில் கமலம் பூத்து
மண்ணுற்று வரிவி லேந்தி [2] வருவதே போலு மாலைப்
[3] புண்ணுற்ற தனைய சோரிப் பொறியொடும் பொடிப்ப நோக்கி
[4] எண்ணுற்றா யென்செய் தாயென் றேசுவா [5] னியம்ப லுற்றான்.

(இ - ள்.) நீலம் - நீலநிறமுள்ள, கார் முகில் - கார்காலத்து மேகமொன்று, கமலம் பூத்து - (தன்பக்கல்) தாமரை மலர்கள் மலரப்பெற்று, வரிவில் ஏந்தி - கட்டமைந்த வில்லொன்றை யேந்திக்கொண்டு, மண் உற்று வருவது ஏ போலும் - நிலவுலகத்தைச் சார்ந்து வருவது போலுள்ள, மாலை - திருமாலின் திருவவதாரமூர்த்தியான ஸ்ரீராமபிரானை, கண்ணுற்றான் - கண்ணெதிரிற் கண்டவனான, வாலி - வாலியானவன்,—புண் உற்றது அனைய சோரி - புண்ணிலிருந்து வெளிப்படுவது போன்ற இரத்தம், பொறியொடும் பொடிப்ப - நெருப்புப்பொறிகளுடனே (தன்கண்களினின்று) வெளிப்படும்படி,

நோக்கி - (கோபத்தோடு அப்பெருமானை) நோக்கி, '(என்) எண்ணுற்றாய் - என்ன நினைத்தாய்? என்செய்தாய் - யாது செய்தாய்!' என்று - என்று சொல்லி, ஏசுவான்-(பின்னும்) பழிப்பவனாய், இயம்பல் உற்றான்-சொல்லத்தொடங்கினான்;(எ-று.)—அவற்றை, அடுத்த பதினைந்து கவிகளிற் காண்க.

நீலமுகில் - காளமேகம். அது - இராமபிரானது திருமேனிக்கு நிறத்திலும், கண்டவர் கண்குளிரச் செய்யுந் தன்மையிலும் உவமம். அப்பெருமானது கண் கை வாய் உந்தி பாதம் முகம் என்னும் அவயவங்கள் செந்தாமரைமலர்போலுதலாலும், அவ்விறைவன் கோதண்டத்தைக் கையிற்கொண்டு தரையில் நடந்து வருதலாலும், "நீலக்கார்முகில் கமலம்பூத்து வரிவிலேந்தி மண்ணுற்று வருவதே போலும் மாலை" என்றார்; தற்குறிப்பேற்றவணி. இராமபிரான் தன்னெதிரில் நிற்கவும், வாலி தன் கண்களிலிருந்து இரத்தம் தெறிக்கவும் தீப்பொறிச் சிந்தவும் கடுமையாக நோக்கி அப்பெருமானை 'என் கருதி என் செய்தாய்? என்று கூறி, பிறகு ஏசுமாறு கூறலுற்றான். கண்ணுற்றான்நோக்கி யென்று இயைத்து, கண்களை யூன்றவைத்து உறுக்கிப்பார்த்து என்றலுமாம். 'என்' என்பதை மத்திமதீபமாக, 'எண்ணுற்றாய்' 'செய்தாய்' என்ற இரண்டனோடுங் கூட்டுக: 'என்நினைந்து என்செய்தாய்' என்றல் வழக்கு. பி - ம்:—[1]கரு. [2]வருவது. [3]புண்ணுற்றநயனச், புண்ணுற்றுணைந்து, புண்ணுற்றுணயச். [4]எண்ணுற்றான். [5]எடுத்துக்கொண்டான். (320)

76.—இதுமுதற் பதினைந்து கவிகள் - வாலி இராமனை ஏசியன.

வாய்மையு [1]மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
[2]தூயவன் மைந்த னேநீ பரதன்முன் [3]தோன்றி னாயே
தீமைதான் பிறரைக் காத்துத் தான்செய்தாற் [4]றீங்கன் றாமோ
தாய்மையு [5]மன்றி[6]நட்புந்[7]தருமமுந் தழுவி நின்றாய்.

பதினாறு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) வாய்மைஉம்-சத்தியத்தையும், மரபுஉம்-(தான்பிறந்த) குலத்தின் பெருமையையும், காத்து-பாதுகாத்து, (அதன்பொருட்டு), மன் உயிர் துறந்த - சிறந்த (தனது) உயிரைவிட்ட, வள்ளல் - வரையாதருளுமியல்பினனும், தூயவன் - பரிசுத்தியுடையவனுமான தசரதசக்கரவர்த்தியினது, மைந்தனே-புத்திரனே! நீ—, பரதன் முன் தோன்றினாய்ஏ - பரதனுக்குத் தமையனாகப் பிறந்தாயே! பிறரை தீமை காத்து - பிறரைத் தீயசெயல் செய்யாதபடி விலக்கி, தான் (தீமை) செய்தால் - தான் தீயசெயல் செய்தால், தீங்கு அன்று ஆம்ஓ - (அது) குற்றமல்லாததாகுமோ? தாய்மைஉம் அன்றி-(உலகத்திற்குத்) தாயாயிருக்குந் தன்மையை மாத்திர மல்லாமல், நட்புஉம் - சிநேககுணத்தையும், தருமம்உம் - தருமத்தையும், தழுவி நின்றாய் - தழுவி நின்றவனே! (சொல்); (எ - று.)

முன்பு கைகேயிக்கு இரண்டு வரமளித்ததனால் சத்தியம் பிறழ லாகாதென்பதற்காகத் தனது அருமையான மூத்த குமாரன் வனவா சம்போகும்படி நேர்ந்து, 'தன்மகனைக் காட்டுக்குத் துரத்திவிட்டுத் தான் உயிர்வாழ்ந்தான் இக்குலத்தில் ஒருவன்' என்ற பழிப்புத் தான் பிறந்த மநுகுலத்திற்கு வராதபடி புத்திரசோகத்தால் உயிர் நீத்த மகாநுபாவன் தசரதசக்கரவர்த்தியென்றற்கு, 'வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல் தூயவன்' என்றான். மன் உயிர் - நிலைபெறுன உயிர். எனினுமாம். வள்ளல் - பிறர்க்காகத் தனது உயிரையுந் துறப்பவன். தூயவன் - தூய்மை யுடையவன், பழிக்கு அஞ்சி நடந்தவன்; திரிகரணசுத்தியுடையவன். அப்படிப் பட்டவனது மகனாகப் பிறந்த நீ அப்பெருமைக் கெல்லாம் மாறாக இவ்வாறு தீச்செயல் செய்யக் கடவையோ என்றானும். பரதனது குணாதிசயங்கள், முன்பு கூறப்பட்டன; அவனது தமையனாகப் பிறத் தற்குத் தக்கவனல்லன் நீ யென்றவாறு. தீமைகாத்து என்ற இடத்து, காத்தல் - விலக்கல். பிறர்தீமை செய்யாதபடி காப்பவன் தான் தீமைசெய்யாமலிருந்தாலன்றோ தகுதியா மென்பான், 'தீமை தான் பிறரைக்காத்துத் தான் செய்தால் தீங்கன்றாமோ' என்றான். 'தீங்கன்றாமோ' - தீங்கல்லாததாகப் பாராட்டப்படும்போலும் என்று கூறுதலுமொன்று. உலகத்து உயிர்கட்கெல்லாம் தாய்போல ஒரு நிகராக அன்புடையனா யிருக்கத்தக்க நீ ஒருவனிடத்துச் சிநேகத் தாற் பட்சபாதமாகத் தருமமார்க்கந்தவறி மற்றொருவனுக்கு இப் படிப் பெருந்தீங்கு புரியலாமோ வென்பது, ஈற்றடியாற் போதரும். தோன்றினாயே, ஏ - இகழ்ச்சி. தீமைதான், தான் - அசை. பி - ம்:—
[1]வழக்கும். [2]தூய்மையன். [3]தோன்றலாமே. [4]தீதன்றாமோ. [5]மறை யுந். [6]மற்றைத். [7]தருமத்தைத். (321)

77. குலமிது கல்வி யீது கொற்றமீ துற்று நின்ற
நலமிது [1]புவன மூன்று [2]நாயக முன்ன தன்றோ
[3]வலமிதிவ் வுலகந் தாங்கும் வண்மையீ [4]தென்றாற் றிண்மை
[5]அலமரச் செய்யலாமோ வறிந்திருந் [6]தயர்ந்து ளார்போல்.

(இ - ள்.) குலம் இது - சிறந்தகுலம் உன்னுடையது; கல்வி ஈது - சிறந்தகல்வி உன்னுடையது; கொற்றம் ஈது - வெற்றி உன் னுடையது; உற்று நின்ற நலம் இது - பொருந்திநின்ற நற்குணநற் செயல்கள் உன்னுடையன; புவனம் மூன்றும் நாயகம் - மூன்று உலகங்கட்குந் தலைமை, உன்னது அன்றோ - உன்னுடையதன்றோ? வலம் இது - சிறந்தபலம் உன்னுடையது; இ உலகம் தாங்கும் வண்மை ஈது - இந்த உலகத்தைப் பாதுகாக்கின்ற மேம்பாடு உன் னுடையது; என்றால்—, அறிந்து இருந்து - (எல்லாம்) அறிந்திருந் தும், அயர்ந்துளார்போல் - (அனைத்தையும்) மறந்தவர்போல, திண்மை அலமர - அவ்வுறுதிகளெல்லாம் நிலைகலங்கும்படி, செய்யல் ஆம்ஓ - (நீ இப்படிச்) செய்தல் தக்கதோ? (எ - று.)

உனதுகுலமோ, கடல்தோண்டினோர் கங்கைதேர்ந்தோர் முதலிய பெருஞ்சிறப்புற்றபெரியோர் தோன்றியது; உனது வீரமோ பதினாலாயிரக்கணக்கான கரதூடணுதியரைத் தனித்து வென்ற சிறப்புக் கொண்டது: உனது கல்வியும்நலனும், சொல்லுந்தரத்தனவல்ல: மூவுலகுக்கும் தலைமை நினக்கே: உன்வலிமை உலகமெல்லாம் தாங்க வல்லது: நீ வள்ளலென்னுமாறு வேண்டுவோர்க்கு வேண்டுவன கொடுக்கவல்லாய்: உன்பெருமை இப்படியெல்லாமிருக்க, நீ எல்லாமறிந்திருந்தும், ஒன்றும் அறியாதவன்போலத் தருமம் தடுமாற இந்த அக்கிரமச் செயலைச் செய்யலாமோ? என்றனனென்பதாம். சாதி யொருமையாக, 'நலமிது' எனப்பட்டது. பி - ம்:—[1] உலகமூன்றின். [2] நாயகமுன்னதுன்றேள், நாயகமீது நின்றேள், நாயகமீது நல்லோர், நாயகவிது நின்றேளின், நாயகமிதுநின்றேளின். [3] வலிமிக. [4] என்னே. [5] அலமரல், அலம்வரச். [6] அமர்த்துளார்போல். (322)

78\. கோவியற் றரும முங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்
[1] ஓவியத் தெழுத வொண்ணு [2] வுருவத்தா யுடைமை [3] யன்றே
ஆவியைச் சனகன் பெற்ற வன்னத்தை யமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலுஞ் [4] செய்கை.

(இ - ள்.) ஓவியத்து எழுத ஒண்ணு உருவத்தாய் - சித்திரத்திலெழுத முடியாத வடிவழகையுடையவனே!—கோ இயல் தருமம் - அரசநீதியானது, உங்கள் குலத்து உதித்தோர்கட்கு எல்லாம் - உங்கள்குலத்திற் பிறந்தவர்களெல்லார்க்கும், உடைமை அன்றே - உரியபொருளன்றே; (அங்ஙனமிருக்க நீ இப்படிச் செய்தாயாதலால்),—ஆவியை - உயிர்போன்றவளும், சனகன் பெற்ற அன்னத்தை - சனகமகாராசனுக்கு (யாகபூமியினின்று) கிடைக்கப்பெற்று வளர்த்த அன்னப் பறவை போன்றவளும், அமிழ்தின் வந்த - அமிருதம்போல அருமையாகக் கிடைத்தவளுமான, தேவியை - மனைவியை, பிரிந்த பின்னை - பிரிந்தபின்பு, செய்கை திகைத்தனைபோலும் - செய்யுஞ் செயலில் தடுமாற்றமுற்றாய் போலும்; (எ - று.)

வாலி, தன்னை மறைந்துஎய்து உயிர்போகும் நிலையையடைவித்த இராமபிரானை யேசுகின்றபோதும், அப்பிரான்திறத்து ஒருபால் மதிப்பும் அன்பும் கொண்டுள்ளானுதலால், அப்பிரானது செய்கைக்கு ஒருநியாயம்காட்டுபவன்போல 'மனைவியைப் பிரிந்த வருத்தத்தால் அறிவுகலங்கியமைபற்றி, உனது குலத்தார்க்குச் சொந்தமான இராசதருமத்திற்கு மாறுக இப்படிச் செய்தனை போலும்' என்கிறான். கோ இயல் தருமம் - அரசர்கட்கு இயல்பாகப் பொருந்திய தருமம்: கோ வியல் தருமம் என்று பிரித்து - பெரிய இராசதரும மென்னலுமாம். உங்கள் என்பது, இலக்குமணனையும் உளப்படுத்தியது. தக்கபடி அமையாத இடத்துக் கலைத்துக் கலைத்துச் சீர்திருத்தி எழுதக்கூடிய சித்திரத்திலும் இராமனது திருமேனியழகை உள்ளபடி எழுதவியலாதென, அதன்சிறப்பு

உணர்த்தப்பட்டது; "எழுதவரியபெருமான்" என்பர், பிறரும். பெற்ற - பெருப்பேருகப் பெற்ற. ஆவி, அன்னம் - உவமையாகு பெயர்கள். இன்றியமையாமையிலும் மிக்க அன்பிற்கு இடமாகு தலிலும் ஆவியும், நடையழகில் அன்னமும், சீதைக்கு உவமை. அமிழ்து - இனிமைக்கேயன்றிக் கிடைத்தற்கு அருமைக்கும் உவமையாயிற்று. பி-ம்:—[1] ஒவியர்க்கு. [2] உருவத்தோய். [3] அன்றே. [4] செய்யோய், சித்தம், சிந்தை, செல்வ. (323)

79. [1]அரக்கரோ ரழிவு செய்து கழிவரே [2]லதற்கு வேறோர்
[3]குரக்கினத் தரசைக் [4]கொல்ல [5]மனுநெறி கூறிற் றுண்டோ
இரக்க மெங் குகுத்தா யென்பா [6]லெப்பிழை கண்டா யப்பா
[7]பரக்கழி யிதுநீ பூண்டாற் புகழையார் பரிக்கற் பாலார்.

(இ - ள்.) அரக்கர் ஓர் இழிவு செய்து கழிவர் ஏல் - இராக்கதர், (உனக்கு) ஒரு தீங்கைச் செய்து சென்றால், அதற்கு - அதற்காக வேறு ஓர் குரங்கு இனத்து அரசை - (அவ்வினத்தினும்) வேறாகிய குரங்குகளின் கூட்டத்திற்கு அரசனான ஒருவனை, கொல்ல-கொல்லுமாறு, மனு நெறி கூறிற்று உண்டோ - மனுவினால் செய்யப்பட்ட தருமசாஸ்திரம் சொன்னதுண்டோ? இரக்கம் எங்கு உகுத்தாய் - (உனக்குஉரிய) கருணையென்கிறகுணத்தை எங்கே சிந்தியொழித்து விட்டாய்? என்பால் எ பிழைகண்டாய் - என்னிடத்தில் என்ன குற்றத்தைப் பார்த்தாய்? அப்பா—! நீ—, பரக்கழி இது பூண்டால் - இந்தப்பெரும்பழிப்பை யேற்றுக்கொண்டால், புகழை பரிக்கற்பாலார் யார் - கீர்த்தியைத்தரிக்கத்தக்கவர் வேறுயாவருளர்? [எவருமில்லை யென்றபடி]. (எ - று.)

அழிவு-அழிப்பு. அரக்கர் தீம்புசெய்ய அதற்காகக் குரக்கரசனைக் கொல்லுமாறு நீ படித்த மநுதருமசாஸ்திரத்திற் கூறியுள்ளதோ? ஒருத்தரைக் கொல்லுவதென்பது தயையற்றவர் செய்யுந் தொழிலாதலால் என்னைக் கொல்லுந் திறத்தில் இரக்கமென்பதை எங்கே ஒழித்திட்டாய்? 'பிழைசெய்தவர் திறத்தில் இரக்கங்காட்டலாகாது' என்பாயேல், என்னிடத்து எந்தப் பிழையைக் கண்டாய்? நீயே பெருநிந்தைதபயக்குஞ் செயலைச் செய்தால் உலகத்திற் புகழைப் பெறுபவர் யாவர் தாம்? என்று ஒருபால் மதிப்பும் அன்புந் தோன்ற வாலி ஏசினனென்க. திகைத்தனைபோலும் செய்கை என்று கீழ்க்கவியிற் கூறியதை, திகைத்துச் செய்தசெயல் இன்னதென்று முன்னிரண்டடிகள் காட்டும். கேடு - செய்யத்தகாத செயல்: அரக்கர் செய்த அழிவு என்பது இராவணன் சீதையைக்கவர்ந்த செயலைக் குறிக்கும். இரக்கம் சிறிதும் இலையாயினையே யென்பான், 'இரக்கம் எங்கு உகுத்தாய்' என்கிறான். உகுத்தல் - சொரிதல்; மநு - ஓர் அரசன். நெறி - நல்லொழுக்க வழி; அதனைக் கூறும் நூலுக்கு ஆகுபெயர். பரக்கழி - பெருநிந்தை; பெருந்தீங்குமாம். தம் பழி தமக்குத்தெரியாததாகிய உலகவியல்பையே கொண்டு, வாலி 'என்பா லெப்பிழைகண்டாய்' என்கிறான். பி - ம்:—[1] அரக்கரே.

[2]அதற்குமாறேர், அவர்க்குமற்றேர். [3]குரக்கரசதனை. [4]கொல்லென்று. [5]மனுவினிற். [6]எப்பழி. [7]புரக்கழி என்ற பாடத்திற்கு-காத்தலையழித்தலான செயலை யென்க. (324)

80. ஒலிகட லுலகந் தன்னி[1] லூர்தரு குரங்கின் [2]மாடே
கலியது காலம் வந்து [3]பரந்ததோ கருணை வள்ளால்
மெலியவர் பால தேயோ[4]வொழுக்கமும் விழுப்பந் தானும்
வலியவர் [5]மெலிவு செய்தாற் புகழன்றி [6]வசையு முண்டோ.

(இ - ள்.) கருணை - அருளையுடைய, வள்ளால் - வரையாதருளுமியல்பினனே!—ஒலி கடல் உலகந்தன்னில் - ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்திலே, ஊர்தரு குரங்கின் மாடுஏ - ஓடித்திரிகின்ற குரங்குகளினிடத்தில் மாத்திரம், (பெரும்பாலும் அறமே நிகழவேண்டிய திரேதாயுகத்தில் தானே), கலியது காலம் வந்து பரந்ததுஓ - கலிகாலம் வந்து பரவிற்றே? ஒழுக்கம்உம் - நல்லொழுக்கமும், விழுப்பம்தான்உம் - (அதனாலான) சிறப்பும், மெலியவர் பாலதுஏஓ - வலிமை முதலியவற்றிற் குறைந்தவரிடத்தில் மாத்திரம் இருக்கவேண்டியனவோ? வலியவர் மெலிவு செய்தால் - வல்லமையுடையோர் மெலியவரான (பிறர்) நலிவுறுந் தொழிலைச் செய்தால், புகழ் அன்றி வசைஉம் உண்டுஓ - (அதனால் அவர்கட்குக்) கீர்த்தியுண்டாவதன்றிப் பழிப்பும் உண்டாகக்கடவதோ! (எ - று.)

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்ற யுகம் நான்கனுள், கலியுகம் வேதசாத்திரங்கட்கு விலக்கான தீயசெயல்கள் நிகழ இடனாவதென்பது, வெளிப்படை. மற்றை எவ்வகையினத்திலும் நேராமல், குரங்கினமான தன்திறத்தில் மாத்திரம் கருணைவள்ளலான இராமபிரானால் இவ்வகையான அநீதி நேர்ந்தமைபற்றி, 'குரங்கின்மாடே கலியதுகாலம்வந்து பரந்ததோ!' என்கிறான். இந்த மிகக்கொடிய செயல் கலியின்தொடக்கத்திலன்றி அதன் முதிர்ச்சியில்தான் நேர்தற்கு ஏற்ற தென்பது தோன்ற, 'கலிகாலம் பரந்ததோ' எனலாயிற்று. இராமசரித்திரம் நிகழ்ந்தது திரேதாயுகத்தினிடையே யென்பது, இங்குக் கருதத்தக்கது. தருமம் கிருதயுகத்தில் நான்கு பாதமும், திரேதாயுகத்தில் மூன்று பாதமும், துவாபரயுகத்தில் இரண்டு பாதமும், கலியுகத்தில் ஒருபாதமுமாக நிகழ்ந்து அதன் முதிர்வில் வரவரக் குன்றிடு மென்ப. நினது கருணையும் வண்மையும் இவ்வாறே முடிந்தன என்று ஏசுவான் 'கருணைவள்ளால்' என்று விளித்தான். ஒழுக்கமும் விழுப்பமும் வேண்டியது எளியவர்க்கு மாத்திரமோ? வலியவர்க்கு வேண்டியதில்லையோ என்பது - மூன்றாமடியின் பொருள். மெலியவர் - அறிவு ஆண்மை ஆற்றல் என்றவற்றிற் குறைபாடுடையவர். அவற்றில் மிக்கவர், வலியவர். நான்காமடியின் பொருள் - வலியவர் தீமைசெய்தாலும் அவர்க்குப் பழி வராது புகழே வருகின்றதே! இதென்ன அநியாயம் என்றபடி; இங்ஙன் வாலி கூறியது - தன்னை

நேர்மையின்றிக் கொன்ற ஸ்ரீராமனது செயலை "மகாபலசாலியாகிய வாலியை இராமன் கொன்றான்" என்று உலகம் பாராட்டுமேயென்பதை மனத்தில் சிந்தித்ததனால் தோன்றிய எரிச்சலினாலாகும்: "அறைகழலலங்கல் வீரராயவர்புரிவதாண்மைத், துறையெனலாயிற்று" என்று கூறுவதுங் காண்க. இனி, புகழே வருமோ, பழி வருமோ? என்று கருத்துக் காண்பாருமுளர்: 'வசையன்றிப் புகழுமுண்டோ' என்ற பாடமுங் காணப்படுகின்றது. "ஒழுக்கம் விழுப்பந் தரலானொழுக்கம், உயிரினு மோம்பப்படும்" என்ற திருக்குறள் இங்குக் காணத்தக்கது: கலியது - கலி புருஷனது; 'அது' ஆறனுருபு. குரங்கின்மாடு, மாடு - ஏழனுருபு; ஏ - பிரிநிலை. ஊர்தரு, தா - துணைவினை, ஊர்தல் - செல்லுதல். வள்ளல் என்றதன் ஈற்றயல் திரிந்த விளி. ஒழுக்கமும் விழுப்பந்தானும் மெலியவர்பாலதேயோ - பன்மை யொருமை மயக்கம்; (தனித்தனி) பாலதோவென்க. ஏ - பிரிநிலை; ஓ - வினா. விழுப்பம் - உரிச்சொல்; நற்குணமுமாம். பி - ம்:—[1]உறைதரு. [2]மாட்டே. [3]கலந்ததோ, பிறந்ததோ, கழிந்ததோ. [4]விழுப்பமுமொழுக்கந்தானும். [5]பிழையே, பிழையைச், அழிவு, மெலிமை, முறைமை. [6]வசையுண்டாமோ, வசையின்றாமோ. (325)

81. கூட்டொரு வரையும் வேண்டாக் கொற்றவ பெற்ற தாதை
பூட்டிய செல்வ [1]மாங்கோர் தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு [2]கருமஞ் செய்தா [3]யெம்பிக்கிவ் வரசை நல்கிக்
காட்டொரு கருமஞ் செய்தாய் கருமந்தா னிதன்மே லுண்டோ.

(இ - ள்.) கூட்டு ஒருவரைஉம் வேண்டா - (போரில்வெல்லத்) துணையாக ஒருவரையும் வேண்டாத, கொற்றவ - வெற்றியையுடையவனே! பெற்ற தாதை - பெற்றதந்தை [தசரதசக்கரவர்த்தி], பூட்டிய- (மூத்தமகனான உனக்கு) உரியதாகக் கொடுத்த, செல்வம்-அரசாட்சிச் செல்வத்தை, ஆங்கு - அப்பொழுது [அல்லது அவ்விடத்து], ஓர் தம்பிக்கு கொடுத்து - (உனது) ஒருதம்பிக்கு [பரதனுக்கு] உரியதாகும்படி கொடுத்துவிட்டு, போந்து - (காட்டிற்கு) வந்து, எம்பிக்கு- என் தம்பிக்கு [சுக்கிரீவனுக்கு], இ அரசை நல்கி - இந்த எனது அரசாட்சியைக் கொடுத்து, நாடு ஒரு கருமம் செய்தாய் - (இவ்வாறு) நாட்டிலே ஒருவகைப் புதுமையான காரியத்தைச் செய்தாய்: காடு ஒரு கருமம் செய்தாய் - காட்டில் (அதற்குமாறாக) ஒருவகைப் புதிய செயலைச் செய்தாய்; இதன்மேல் கருமம்உண்டுஓ - இதனினும் மேலான செயல் வேறு உண்டோ? [இல்லைபோலும் என்றபடி]; (எ - று.)

அண்ணனுக்கு உரிய இராச்சியத்தைத் தம்பிக்குக் கொடுத்தலாகிய புதுமையான செயலை நாட்டிலேயன்றிக் காட்டிலுஞ் செய்தாய்: உன்னைப்பார்க்கிலும் மேலான புதுமைச் செயலைச் செய்தவர் வேறுளரோ? அசகாய சூரனான உனக்கே இவ்வாறான புதுமைச்

செயல் தருமென்றவாறு. இனி, கூட்டு - துணை. கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவ - அசகாய சூர! என்பதன் மொழிபெயர்ப்பு: "துணைவேண்டாச் செருவென்றி" என்ற புறநானூறு, இங்கு நோக்கத்தக்கது. பூட்டிய - வலியக்கொடுத்த என்றபடி. தம்பிக்கு அரசைக் கொடுத்து நாட்டிலே ஒரு அரசத் தந்தையைத் தற்செயலாய் உயிர் நீங்கச்செய்தாய்: காட்டிலே தம்பிக்கு அரசைக் கொடுத்து மறைந்து நின்றுஎய்து வேண்டுமென்றே அரசனுன என்னைக் கொன்றாய்; இவ்வாறான இவற்றிற்குமேலும் அநியாயமும் புதுமையுமான செயலுண்டோ? என்று வாலி ஏசுதலோடு மனப் பரிவுந் தோன்றக் கூறினனென்றுமாம். 'நாட்டிலே தன்னலங்கருதாது தியாகமூர்த்தியாய் எல்லாச் செல்வங்களையும் தன்னுட்கொண்ட அரசப்பெருஞ்செல்வமணைத்தையும் தம்பிக்குக்கொடுத்துப் பரமத்தியாகபரனென்று பார்முழுதும் பரவிய மிகவுயர்ந்த புகழ்பெற்ற நீயே, காட்டிலே இராவணனை வெல்லச் சுக்கிரீவன் துணையை வேண்டிச் சுயகாரிய துரந்தரனாய் உன்னை யெதிர்க்காத நிரபராதியான என்னை மறைந்து நின்று கொல்லும் மாபாதகத்தைச் செய்து மிகஇழிந்த வெம்பழியுற்றாய்: அச்செயலினுஞ் சிறந்ததும் இல்லை: இச்செயலினும் இழிந்ததும் இல்லை; இப்படி ஒன்றற்குஒன்று எதிரிடையான செயல்கள் செய்தலில் உனக்கு மேற்பட்டவர் யார் இருக்கின்றனர்?' என்று இக்கவிக்கு விரித்துப் பொருள்கூறுவர் இராமாயணசாரமுடையார். பி - ம்:—[1] ஆங்கே. [2] தருமஞ். [3] எம்பிக்கும். (326)

82. அறைகழ லலங்கல் [1] வீர ராயவர் [2] புரிவ தாண்மைத்
துறையென லாயிற் றன்றே [3] தொன்மையி னன்னூற் கெல்லாம்
[4] இறைவனீ யென்னைச் செய்த தீதெனி லிலங்கை [5] வேந்தன்
முறையல செய்தா னென்று முனிதியோ முனிவி லாதாய்.

(இ - ள்.) அறை கழல் - ஒலிக்கின்ற வீரக்கழலையும், அலங்கல் - வெற்றி மாலையையுந் தரித்த, வீரர் ஆயவர் - வீரராயுள்ளவர், புரிவது-எத்தொழிலைச் செய்கின்றார்களோ அத்தொழில், ஆண்மை துறை எனல் ஆயிற்று அன்றே - ஆண்மைக்குஉரிய செயலாய் விட்டதன்றோ! தொன்மையின் நல் நூற்கு எல்லாம் இறைவன் நீ - பழமையான் சிறந்த சாத்திரங்களுக்கெல்லாம் தலைவனான நீ, என்னை செய்தது - என்பக்கல் செய்தது, ஈது - இத்தன்மையான செயல், எனில் - என்றால்,—இலங்கை வேந்தன் முறை அல செய்தான் என்று முனிதியோ - இலங்காநகரத்தரசனான இராவணன் நீதியல்லாத காரியங்களைச் செய்தானென்று (அவன்மேற்) கோபிக்கக் கடவையோ? முனிவு இலாதாய் - (இயல்பிற்) கோபமில்லாதவனே! (எ - று.)

'வல்லான் ஆடியதே ஆட்டம்,' 'கெருடிபழகுகிறவன் இடறி விழுந்தால் அதுவும் ஒருவித்தை' என்றாற்போல வலிமையையுடைய வீரர் பேடிச்செயலைச் செய்தாலும், அவர் செய்வன இன்னவையென்று பாராது அவையெல்லாம் பராக்கிரமச்செயலென்று,

பகுத்தறிவு இல்லாத உலகத்தாரால் கொண்டாடப்பெறுமென்பது, முதல்வாக்கியத்தின் பொருள். ஆகுமன்றேஎன வரற்பாலது, தேற்றத்தினால், 'ஆயிற்றன்றே' என இறந்தகாலத்தாற் கூறப்பட்டது. 'வேதசாஸ்திரங்களிற்கூறிய அனுஷ்டானங்களை நடப்பித்து அவற்றிற்கெல்லாந் தலைவனாகின்ற நீ என் திறத்தில் இப்படிச் செய்துவிட்டு, ராக்ஷஸராசனான இராவணன் உன்திறத்தில் அக்கிரமச் செயல்களைச் செய்தானென்று சினக்க இடமுண்டோ?' என்பது இரண்டாம் வாக்கியத்திற் கூறியபொருள். முனிவிலாதாய் - இயல்பிற் சாந்தகுணமுடையவனே! என்றபடி; கோபித்தற்கு உரிமையற்றவனே! என்றுமாம். 'முனிவிலாதாய்' என்றது - 'நீ, கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் பஞ்சமாபாதகங்களுள் முதலாவதான கொலைப்பாவஞ் செய்தவனாதலால் நான்காவதான காமசம்பந்தமான பாவஞ் செய்த இராவணனைக் கோபிக்கத் தகுதியில்லாதாய்!' என்ற பொருளைக் குறித்துநின்றது' என்பது, இராமாயணசாரம். கவர்தற்காகச் சந்நியாசிவேஷம் பூண்டது, மாய மானைக்கொண்டு மூவரையும் பிரித்தது, தனிப்பட்ட சீதையைக் கவர்ந்தது என்ற இவை யாவும் 'முறையல' எனப்பட்டன; முறையலது என்பது விகாரப்பட்டதென் பாருமுளர். நன்னூற்கெல்லாம் இறைவன் - வேதசாஸ்திரங்களையெல்லாம் உலகத்தார்க்குக் கொடுத்தவன் என்றபடி: "மாநம்ப்ரதீபமிவ காருணி கோ ததாதி [கருணாமூர்த்தி, பிரமாணமான வேதம் முதலிய நூல்களைத் தீபம்போல் தருகிறான்]" என்பது, முன்னோர் வாக்கு. பி - ம்:—[1]வீரத்தடுத்திவர், வீரர்க்கடுத்ததே. [2]செய்வது. [3]தொன்மை நான்மறைகட்கெல்லாம், தொல்லை நான்மறைகட்கெல்லாம், தொன்மையே யிணைந்த நூலான், தொன்மையினன்னூலானே. [4]இறைவநீ. [5]வேந்தை. (327)

83. இருவர்போ ரெதிருங் காலை யிருவரு நல்[1] லுற் றாரே [நின்று
ஒருவர்மேற் கருணை [2]தூண்டி யொருவர் [3]மேலொளித்து
வரிசிலை குழைய வாங்கி [4]வாயம்பு மருமத் [5]தெய்தல்
தருமமோ பிறிதொன் றாமோ [6]தகுகில தென்னும் பக்கம்.

(இ - ள்.) இருவர் போர் எதிரும் காலை - இரண்டுபேர் (தம்மில்) எதிர்த்துப் போர் செய்துகொண்டிருக்கும்பொழுது, இருவர்உம் நல் உற்றார் - அவ்விரண்டுபேரும் (ஒருசமமாக) நல்ல உறவினரேயாவர்: (அங்ஙன் கொள்ளுவது உனக்குத் தகுதியாயிருக்கவும் அவ்வாறு பாவிப்பதை விட்டு), ஒருவர்மேல் கருணை தூண்டி - (அவ்விருவருள்) ஒருவர்மேல் அருளைச்செலுத்தி, ஒருவர்மேல் - மற்றொருவர்மேல், ஒளித்து நின்று - மறைந்துநின்று, வரிசிலை குழைய வாங்கி - கட்டமைந்த வில்லைக் குழையும்படி வளைத்து, வாய் அம்பு மருமத்து எய்தல்-கூர்நுனியையுடைய அம்பை மார்பிற் செலுத்துதல், தருமம் ஓ - தருமமாகுமோ, (அல்லது), பிறிது ஒன்று ஆம்ஓ - அதருமமாகுமோ? (இது), தகுகிலது என்னும் பக்கம் - தகாதகெதனப்படுகிற பக்ஷபாதமே; (எ - று.)

உற்றாரிருவர் எதிர்ந்துபொருகையில் ஒருவர்மேற் கருணை கொண்டு மற்றொருவரை ஒளிந்துநின்று அம்பையெய்து கொல்வது தருமமோ, அதருமமோ? எப்படியானாலும், தகாததெனப்படுகின்ற பக்ஷபாத மென்று சொல்லத் தடையில்லை யென்பதாம். தருமமோ பிறிதொன்றாமோ என்றதில் ஐயமுண்டானாலும், தகுதிலதென்னும் பக்கமென்றற்கு ஐயமில்லை யென்க: இது - வெளிப்படை யென்ற வாறு. திருக்குறளில் நடுவுநிலைமையென்ற அதிகாரத்தில் 'நடுவு நிலைமை - தகுதி' என்றும், அதனையுடையார் 'தக்கார்' என்றும், அஃதில்லாதவர் 'தகவிலர்' என்றுங் கூறப்பட்டதனால், அதற்கு மாறான பக்ஷபாதத்திற்கு 'தகுதிலதென்னும்' என்ற அடைமொழி ஏற்கும்; பக்கம் - இலக்கணையாய், ஒருபுறஞ்சார்தலைக் குறித்தது. பி - ம்:—[1] உற்றாரேல். [2] தூண்ட. [3] வேறு. [4] வாய்ப்புறமருமத்து. [5] எய்தால். [6] தக்கிலதென்னும், தராதலத்தெண்ணும். 'தருமமோ வுலகந் தன்னில் தராதிபர்க் கென்னுந்தன்மை' என்று சிலபிரதி களில் ஈற்றடி. (328)

இங்கே சில பிரதிகளில் மாத்திரம் காணப்படும் பாடல் வருமாறு:—"ஒன்றாக நின்னோ டுறுஞ்செற்ற மில்லை யுலகுக்கு நான் செய்த தோர்குற்றமில்லை, வென்றாள்வதே யென்னில் வேறொன்று மில்லை வீணேபிடித்தென்றன்மேலம்புவிட்டாய், தன்றாதை மாதா வுடன் கூடி யுண்ணத் தண்ணீர் சுமக்குந் தவத்தோனை யெய்தான், நின்றாதையன்றேயும் நீயும் பிடித்தாய் நெறிப்பட்டவாறின்று நேர் பட்டதாமே": இது கம்பர்வாக்கல்ல என்பது படிக்கும்போதே தோன்றுகின்றது.

வேறு.

84. வீர மன்று [1] விதியன்று [2] மெய்ம்மையின்
வார மன்று [3] நின் மண்ணினுக் கென்னுடல்
பார மன்று பகையன்று [4] பண்பழிந்து
[5] ஈர மன்றி யிதென்செய்த [6] வாறரோ.

(இ - ள்.) (நீ செய்த இச்செயல்), வீரம் அன்று - பராக்கிரம காரியமன்று; விதி அன்று - (வேதசாஸ்திரங்களில்) விதித்த செயலன்று; மெய்ம்மையின் வாரம் அன்று - உண்மையின்பாற் சேர்வதும் அன்று; நின் மண்ணினுக்கு என் உடல் பாரம் அன்று - உனக்குஉரியதாகின்ற இந்தப்பூலோகத்திற்கு என்னொருத்தனுடைய உடம்பு பொறுக்கவொண்ணாத பாரமுமாகாது; பகை அன்று - (உனக்குநான்) பகையுமன்று; (இங்ஙனமெல்லாமிருக்கவும்), நீ—, பண்பு அழிந்து - பெருமைக்குணம்நீங்கி, ஈரம் அன்றி - அன்புக்கு உரியதல்லாமல், இது செய்த - இச்செயலைச் செய்த, ஆறு - விதம், என் - யாது காரணம் பற்றி? (எ - று.)—அரோ - ஈற்றசை.

பூமிபாரம் நீங்குதற் பொருட்டுக் கொடியவரைக்கொல்லுதல் ஆன்றோர்செயலாம்; ஆனால், யான் கொடியவனல்ல னாதலின் என்னை நீ கொன்றது அந்தநற்செயலின்பாற் படாதென்பான், 'நின்மண்ணினுக்கு என்னுடல் பாரமன்று' என்கிறான். 'நின் மண்' என்றது, சக்கரவர்த்தியின் மூத்தகுமாரனாதலால்: இனி, 'இக்ஷ்வாகூணும்இயம்பூமி: ['இந்தப்பூமி இக்ஷுவாகு குலமன்னர்க்கு உரியது'] என்ப ஆதலால், இங்ஙன் கூறியதுமாம். வாரம் - பக்கம், பங்கு, வகுப்பு. திருக்குறளில் 'பண்புடைமை' என்ற விடத்து 'பண்பாவது - பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாதே நின்றே எல்லாரியல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்; "பண் பெனப்படுவது பாடறிந்தொழுகல்" என்றார் பிறரும்" எனப் பரிமேலழகருரைத்தது, இங்குக் கொள்ளத்தக்கது. பி - ம்:—[1]வினையன்று. [2]வெம்மைமேல், மெய்ம்மையால், மெய்ம்மைசால். [3]நும். [4]பண்பழித்து, பண்பொழிந்து. [5]தீரமன்றிது, தீரமன்றிஃது. [6]ஆறுநீ. (329)

85. இருமை [1]நோக்கிநின் றியாவர்க்கு மொக்கின்ற
அருமை யாற்றலன் றோவறங் [2]காக்கின்ற
பெருமை [3]யென்ப திதென்பிழை [4]பேணல்விட்டு
ஒருமை [5]நோக்கி யொருவற் [6]குதவலோ.

(இ - ள்.) இருமை நோக்கி நின்று - இம்மைமறுமைப்பயன்களை (ப் பெற)க் கருதிநின்று, யாவர்க்கும் ஒக்கின்ற - (ஒருவர்பக்கல் பக்ஷபாதமுடையராகாது) எல்லார்க்குஞ் சமமாகின்ற, அருமை ஆற்றல் அன்றோ - அருமையான செயலைச் செய்தலன்றோ, அறம் காக்கின்ற பெருமை என்பது - தருமத்தைப் பாதுகாக்கின்ற பெருந் தன்மையென்று சொல்லப்படுவது? பிழை பேணல்விட்டு - (பழிபாவங்களாகிய) குற்றங்களை (த் தன்பக்கல்வராதபடி) குறிக்கொண்டு காத்தலை விட்டு, ஒருமை நோக்கி - ஒருபுறத்திற் சார்ந்து [பக்ஷபாதங்கொண்டு], ஒருவற்கு உதவல் - ஒருவனுக்கு உதவி செய்தலாகிய, இதுஓ - இச்செயலோ, என் - என்னாகும்? [இது அறங்காக்கின்ற பெருமை யாகாதென்றபடி]; (எ - று.)

இம்மைமறுமைப்பயன்களைக் கருதியவண்ணம் எல்லாரிடத்தும் ஒருநிகராக நடந்துகொண்டு அதற்காக அறச்செயலைச் செய்வதே, அறத்தைக் காக்கின்ற பெருமையைத் தரும்: பக்ஷபாதமாக ஒருவற்கு உதவுவதோ அவ்வாறானபெருமையைத் தராதென்பதாம். இருமை - இம்மை, மறுமை யென்னும் இரண்டு; இங்கு, ஆகு பெயராய், இம்மைப்பயனாகிய புகழையும் மறுமைப் பயனாகிய புண்ணியத்தையுங் குறிக்கும். இனி, இருமை நோக்கி - இம்மை மறுமைகளில்வரும் நன்மைதீமைகளைப்பற்றி ஆலோசித்து நின்று என்னவுமாம். அருமை என்பதும் - ஆகுபெயரே: யாவர்க்கும் ஒக்கின்ற அருமை - பகை நொதுமல் நண்பு என்னும் மூன்று பகுதியார்க்

கும் ஒப்பாகச்செய்யும் அரியசெயல் என்க. அவ்வகை நடுவு நிலைமையின் சிறப்பை, "தகுதியெனவொன்றும் நன்றே பகுதியாற், பாற்பட் டொழுகப் பெறின்" எனக் காண்க: ஒ - தெரிநிலை. பி-ம்:—[1]நோக்கினை, நோக்கிநீ. [2]காப்பது. [3]என்பது பின், என்பதுவன். [4]நோக்கல். [5]நீக்கி. [6]உதவலே. (330)

86. செயலைச் [1]செற்ற பகை [2]தெறு வான்தெரிந்து
அயலைப் பற்றித் துணை [3]யமைந் தாயெனின்
புயலைப் [4]பற்றுமப் பொங்கரி போக்கியோர்
முயலைப் [5]பற்றுவ தென்ன முயற்சியோ.

(இ - ள்.) செயலை - (உங்கள்) பாதுகாவலை, செற்ற - அழித்த [உங்களை மாயமானைக்கொண்டு பிரியச்செய்து சீதையைக் கவர்ந்து சென்ற], பகை - பகைவனை இராவணனை, தெறுவான் - அழித்தற் பொருட்டு, தெரிந்து - ஆலோசித்து, அயலை - வேறொருவனை [சுக்கிரீவனை], துணை பற்றி அமைந்தாய் - துணைவனாகக் கொண்டு பொருந்தினாய், எனின் - என்றால்,—(அது), புயலை பற்றும் - காளமேகம் போன்றதான யானையைப் பிடித்து உயிர்கவர வல்லதும், பொங்கு - கோபித்து எழுமியல்பினதுமான, அ அரி - அப்படிப்பட்ட சிங்கத்தை, போக்கி - துணையாகக்கொள்வதை விட்டு, ஓர் முயலை பற்றுவது - ஒருமுயலைத் துணையாகக்கொள்வதாம்: (அங்ஙன் செய்வது), என்ன முயற்சியோ—? (எ - று.)

உனது பாதுகாவலைப் போக்கி உன் மனைவியைக்கவர்ந்து உன்னை மானபங்கப்படுத்திய பகைவனை இராவணனைக் கொல்லுதற் பொருட்டு ஆலோசித்துச் சுக்கிரீவனைத் தேர்ந்தெடுத்துத் துணைவனாகக்கொண்டு அவனோடு கூடினை: இதைக் கருதுவோமானால், அந்த இராவணனை மிகஎளிதில் வெல்லவல்ல ஆற்றலையுடைய என்னைத் துணைக்கொள்வதைவிட்டுப் பலபராக்கிரமங்களிற் குறைபாடுடைய சுக்கிரீவனைத் துணைக்கொண்ட இது, யானையையழித்தற் பொருட்டு அதனை எளிதிலழிக்கவல்ல சிங்கத்தைத் துணைக்கொள்வதைவிட்டு அதன் காலினால் நசுங்கிப் போகத்தக்க எளியபிராணியான முயலைத் துணைக்கொள்வது போல் நல்லறிவின்றிச் செய்யும் முயற்சியாம்: அறிவுடைமுயற்சியாகா தென்கிறான். லலிதாலங்காரம். செயல் - காவல் என்பது, பிங்கலந்தை: இனி, ஒழுக்க மெனப்பொருள் கொண்டு, செயலைச் செற்ற - நல்லொழுக்கத்தைக் கைவிட்ட என்றலும் ஒன்று. புயல் - உவமையாகுபெயர். புயல் என்பதற்கு இலக்கணைப் பொருளைக் கொள்ளாது செம்பொருளையே கொண்டு, புயலைப்பற்றும் அப்பொங்கரி - (விசை கொண்டு எழுந்து ஆகாயத்தையளாவப் பாய்ந்து) மேகத்தைப் பிடிக்கின்ற கோபத்தோடு கூடிய அப்படிப்பட்ட சிங்கம் என்று உரைத்தலும் ஒன்று. பி - ம்:—[1]செற்றுப். [2]அடுவான். [3]அமைந்தாய்மழைப், மறந்தாயெனின், அமர்ந்தாயெனின். [4]பற்றுறும். [5]பற்றினை. (331)

87. காரி யன்ற [1]நிறத்த களங்க மொன்று
[2]ஊரி யன்ற மதிக்குள தா[3]மெனச்
சூரி யன்[4]மர புக்குமோர் தொன்மறு
ஆரி யன்பிறந் தாக்கினை யாமரோ.

(இ - ள்.) ஊர் இயன்ற மதிக்கு - ஊர்கோள்பொருந்திய சந்திரனுக்கு, கார் இயன்ற நிறத்த களங்கம் ஒன்று - கருநிறம்பொருந்திய ஒரு களங்கம், உளது ஆம் - உள்ளது, என - என்று எண்ணி, சூரியன் மரபுக்குஉம் - சூரிய வமிச முழுவதுக்கும், ஓர் தொல் மறு - ஒரு நிலையான களங்கத்தை, ஆரியன் பிறந்து ஆக்கினை ஆம் - தலைவனான நீ பிறந்து உண்டாக்கினைபோலும்; (எ - று.)—அரோ - ஈற்றசை. 'உளதாம்' என்றதில், ஆம் - அசை.

சூரியவமிசம் சந்திரவமிசம் என்று உலகத்திற் பிரசித்தமான அரசகுலங்களிரண்டினுள், ஒன்றன் குலமுதல்வனான சந்திரனுக்குத் தொன்றுதொட்டு மறு இருப்பதைக் கருதி மற்றொருசுடரான சூரியனது குலத்திற் பிறந்தவனாகிய நீ அக்குலமுழுவதுக்குமே நிலையான மறுவை உண்டாக்கினைபோலுமென்கிறான்; தற்குறிப்பேற்ற வகையால் இழித்துரைத்தபடி. சந்திரனுக்கு இயல்பிற் களங்கமிருப்பது போல, களங்கமில்லாதிருந்த சூரியகுலத்திற்கும் நீ பிறந்து நிலையான களங்க முண்டாகும்படி செய்தா யென்க. 'ஊர் இயன்ற மதி' என்பதற்கு - ஊர்தல் [சஞ்சரித்தல்] பொருந்திய மதி யென்றலுமாம்; "வானூர் மதியம்" என்ப; இப்பொருளில், ஊர் - முதனிலைத் தொழிற்பெயர். தொல் மறு - முன்னோரை வரையுந் தொடரும் மறு: இனி, என்றும் நிலைத்துத் தொன்மையாகும் மறு; மறு - இங்கே, பழிப்பு. இங்ஙன் மறு என்பதை இருபொருளமைய நயம்படவுரைத்தார். சொல்மறு என்பது தொல்மறு என மாற்றி யெழுதப்பட்டதுபோலும் என்றனர், இராமாயணசாரமெழுதினோர். பழியைக் கரியதென்றல், கவிசமயம். ஆரியன் - முன்னிலைப்படர்க்கை; அண்மைவிளியுமாம். இங்கு 'ஆரியன்' என்றது, இகழ்ச்சிக்குறிப்பு. பி - ம்:—[1]களங்கநிறத் தொன்மை, நிறத்த களங்கநல். [2]வாரியன்ற. [3]என்ப. [4]மரபுக்கொரு. (332)

88. மற்றொ ருத்தன் வலிந்தறை [1]கூவவந்து
உற்ற [2]வென்னை யொளித்துயி [3]ருண்டநீ
[4]இற்றை யிற்பிறர்க் கும்மிக லேறென
நிற்றி போலுங் கிடந்த நிலத்தரோ.

(இ - ள்.) மற்று ஒருத்தன்-வேறொருவன்[சுக்கிரீவன்],(என்னை), வலிந்து அறை கூவ - வலியப் போர்க்கு அழைத்ததனால், வந்து உற்ற - (இங்கு அவனுடன் பொருதற்கு) வந்து சேர்ந்த, என்னை—, ஒளித்து - மறைந்து நின்று, உயிர் உண்ட - (அம்பெய்து) உயிரைக் கவர்ந்த, நீ—, (நாணமின்றி), இற்றையின் - இப்பொழுது, கிடந்த நிலத்து - (யான் உன் அநியாயச்செயலால்) விழுந்துகிடக்கின்ற

இவ்விடத்தில் தானே, பிறர்க்குஉம் - மற்றையோர்க்கெல்லாம், இகல் ஏறு என - வலிய ஆண்சிங்கம் போல, (பெருமிதந் தோன்ற), நிற்றிபோலும் - நிற்கின்றாய் போலும்! (எ - று.)— அரோ - ஈற்றசை. போலும் - ஒப்பில்போலி. பி-ம்:—[1] கூற. [2] போரில். [3] உண்டனே. [4] இற்ற தற்பினிகலரி. மூன்றாமடி சில பிரதிகளில் எற்றையும் படியாயிகலே றெனு' என்று காண்கிறது. (333)

89\. நூலி யற்கையு நுங்குலத் [1]துந்தையர்
போர்[2]லி யற்கையுஞ் சீலமும் போற்றலை
வாலி யைப்படுத் தாயலை [3]மன்னற
வேலி யைப்[4]படு த்தாய்விறல் வீரனே.

(இ - ள்.) விறல் வீரனே - வலிமையையுடைய வீரனே! நூல் இயற்கைஉம் - சாஸ்திரங்களின் முறைமையையும், நும் குலத்து உந்தையர்போல் இயற்கைஉம் - உங்கள் குலத்தில் உனது தாதை மூதாதை போன்றவர்களது இயல்பையும், சீலம்உம் - நல்லொழுக் கத்தையும், போற்றலை - (நீ) பாதுகாக்கின்றிலை: (ஆதலால்), வாலியை படுத்தாய் அலை - வாலியை யழித்தாயல்லை: மன் அறம் வேலியை படுத்தாய் - அரசதருமத்தின் வேலியையே யழித்திட்டாய்;

வேலியே பயிரை மேய்வதுபோலத் தருமவேலியையிட்டுக் குடிகளைப் பாதுகாக்கின்ற அரசனே தருமத்தையழித்திட்டால், குடிகளிடத்து அதருமம் புகுந்து அக்குடிகளை யழித்து விடுமே: இதுபோன்ற அநீதச்செயல் யாதுஉளது என்று ஈற்றடியின் கருத்தை விரித்துரைக்க. அக்கிரமமாக என்னைக் கொன்றதனால் ராஜதருமத்தின் பாதுகாவலை யழித்திட்டாயென்க. வேலி - காவல். மன் அறம் - நிலைபெற்ற தருமமெனினுமாம். 'மன்னற வேலியைப் படுத்தாய்' என ஒரு தருமத்தை ஆரோபித்தற் பொருட்டு, 'வாலியைப்படுத்தாயலை' என உண்மையை யொழித் தது, ஒழிப்பணி யெனப்படும். இங்கு 'விறல் வீரனே' என்றது, இகழ்ச்சிக் குறிப்பு. 'நும்' என்ற பன்மை - இலக்குமணனை உளப் படுத்தியது. போற்றலை - முன்னிலை யொருமை யெதிர்மறை முற்று. 'வாலியை' என்றது தன்மைப்படர்க்கை; என்னை யென்றபடி. பி - ம்:—[1] உந்தையோர். [2] இயற்கையிற். [3] மன்னர்தம், மன்னறன். [4] பிரித்தாய். (334)

90\. [1]தார மற்[2]றெரு வன்கொளத் தன்கையில்
பார வெஞ்சிலை [3]வீரம் பழிப்பதே
[4]நேரு மன்று மறைந்து நிராயுதன்
மார்பி னெய்யவோ [5]வில்லிகல் வல்லதே.

(இ - ள்.) தாரம் - (நீ கொண்ட) மனைவியை, மற்று ஒருவன் கொள - வேறொருவன் கவர்ந்து கொள்ள, (அவனுக்கு எதிர் செய் யாததோடு இப்படி வேறொருவனை அம்பெய்து கொல்லுத லால்), தன்கையில் பாரம்வெம் சிலை - உன்கையிலேந்திய பெரிய

கொடிய வில், வீரம் பழிப்பதுவே - வீரச்செயலிற்பழிப்படைவது தகுதியோ? வில் இகல் வல்லது - (நீ) வில்லைக்கொண்டு போர்செய்தலில் வல்லவனனது, நிராயுதன் மார்பின் - கையில் ஆயுதமில்லாதவனது மார்பிலே, நேரும் அன்று மறைந்து எய்யஓ - வெளிப்படையாக எதிரில் வந்துமல்லாமல் ஒளித்து நின்று அம்பெய்தற்குத் தானே! (எ - று.)

தான் செய்யவேண்டியது - கொண்டமனைவியைக் கவர்ந்தவனைக் கண்டுபிடித்து உயிரைக் கவர்வதென்பது: செய்யத்தகாதது - நிராயுதன் மார்பில் எய்வதென்பது: கொல்லவேண்டியவனைக் கொல்லாமல் கொல்லத்தகாதவனைக் கொன்றதனால், வில் வீரம் பழிப்பதாயிற்று: இங்ஙன் தகுதியில் செயலைச் செய்யலாமோ? என்றவாறு. உனது வில் கைக்குப் பாரமாகவே யமைந்த தென்ற இழிப்புத் தோன்ற, 'பார வெஞ்சிலை' என்றுனுமாம். பழிப்பதே, ஏ - வினு; தகுதியின்மைப்பொருளைக் காட்டும். 'சிலைவீரம்' என்பதை 'பழிப்பதே' என்பதற்கு எழுவாயாக்கியுரைப்பினுமாம். இராமன் மனத்தில் துன்புறுத்தி அப்பிரானுக்கு ரோஷத்தை யெழுப்புமாறு ஏளனஞ்செய்திருத்தல் கவனித்து இன்புறுதற்கு உரியது. [3]வீரம்பரிப்பதென் என்ற பாடத்தில், மனைவியையும் பாதுகாக்கத் திறனற்று வீரத்தோற்றத்தோடு வில்லைத் தாங்கியிருப்பது எதற்காகவோ? கையில் வீரவில்லை வெறுமனே வைத்துக்கொள்ளப் படாதென்று நிராயுதன் மார்பில் மறைந்து எய்தலாகிய அநீதச் செய்கையைச் செய்தற்கோ? இவ்வாறுன செயலில்தான் உனக்கு வல்லமையோ என்று கருத்துரைக்க. பி - ம்:—[1]வாரமுற்று. [2]ஒருவற்கயவன்கையில். [3]வல்லோய் பழியன்றே, தானும் பழுதுற, தானும் பழியுற. [4]நேருமென்று, நேருமன்றி. [5]வில்லிகள் வல்லரே. (335)

91.—வாலியின் வார்த்தைகளுக்கு இராமன் பதில் சொல்லத் தொடங்குதல்.

என்று [1]தானு மெயிறு [2]பொடிபடத்
தின்று [3]கான்று விழிவழித் தீயுக
அன்ற வாலி யனையன [4]கூறினன்
நின்ற வீர [5]னிணைய [6]நிகழ்த்தினன்.

(இ - ள்.) என்று —, எயிறு பொடிபட தின்று - பற்கள் பொடியாம்படி (நெறுநெறுவென்று) கடித்துக்கொண்டும், விழி வழி தீ உக கான்று - கண்களின் வழியாய்ப் பொறிகள் சிந்தும்படி (கோபாக்கினியை) உமிழ்ந்துகொண்டும், அன்று அ வாலி அனையன கூறினன் - அப்பொழுது அந்தவாலி அத்தன்மையனவான வார்த்தைகளைச் சொன்னன்; நின்ற வீரன் தானும் - எதிரில் நின்ற மகாவீரனன இராமனும், இனைய நிகழ்த்தினன் - இத்தன்மையனவான வார்த்தைகளைச் சொல்லலானன்; (எ - று.)— அவற்றை, அடுத்த பதினெரு கவிகளிற் காண்க.

வாலி தானும் என்று கூட்டி, இராமன் விழிவழித் தீயுக அம்பு சொரிந்ததுபோல, வாலி சொற்களைப் பொழிந்தான் எனினுமாம். 'அன்றவ்வாலி' என்பது தொக்கது. 'அன்று' என்பதை வினைத்தொகையாகக் கொண்டு, கோபித்த என்றலுமாம்; அன்றுதல் - சீறுதல். பி - ம்:—[1]நாணும். [2]பொறியெழ. [3]கானம். [4]சொல்லினன். [5]இதனை. [6]நிகழ்த்துவான. வென்றவாலியினைய விளம்பினன் என்று மூன்றுமடியிற் சிலபிரதி. (336)

92.—இதுமுதல் பதினொருகவிகள் - இராமபிரான் தான் வாலியைக் கொன்றதற்கு நியாயங்கூறுதல்.

பிலம்புக் காய்[1] நெடு நாள்பெய ரா[2] யெனப்
புலம்புற் [3]றுன் வழிப் [4]போதலுற் றுன் தனைக்
குலம்புக் கான்ற முதியர் குறிக்கொள் நீ
அலம்பொற் றுரவ னேயர சென்றலும்.

இது முதல் மூன்று கவிகள் - குளகம்.

(இ - ள்.) பிலம் புக்காய் - (முன்னாளில் மாயாவியைத் தொடர்ந்து) பாதாளவழியினுள்ளே சென்றவனை நீ, நெடு நாள் பெயராய் - வெகுகாலமளவும் மீண்டுவாராமலே யிருந்துவிட்டாய், என - என்றகாரணத்தால், புலம்பு உற்று - சோகமடைந்து, உன் வழி போதல் உற்றுன் தனை - நீ சென்ற அப்பிலத்துவாரவழியிலே செல்லத்தொடங்கியவனை சுக்கிரீவனை (நோக்கி), - குலம்புக்கு ஆன்ற முதியர் - (உங்கள்) குலத்தில் தோன்றி அறிவினால் அமைந்த பெரியோர், 'குறிக்கொள் - (நாங்கள் சொல்வதை) ஊன்றிக்கேட்பாய்: நீ அரசு அலம் - நீ (எங்கட்கு) அரசனாதல் அமையும்,' என்றலும் - என்றுசொன்னவளவில்,—(எ - று.) — (சுக்கிரீவன் அதற்கு இணங்காமல்) 'என' என்று அடுத்த கவியோடு தொடரும்.

சுக்கிரீவனிடத்துக் குற்றமில்லாமையையும், வாலியிடத்துக் குற்றமிருத்தலையும் காட்டுதற்கு, இராமபிரான் முன்னை நிகழ்ச்சிச் செய்தியை எடுத்துக்கூறுகின்றான். பூர்வத்தில் நீ மாயாவியைத் துரத்திக்கொண்டு, பாதாளலோக வழியாகிய பெரியபிலத்தினுள்ளே சென்று வெகுநாளளவும் வராம லிருந்துவிட்டாய்; உன்னால் அந்தப் பிலத்துவாரத்தின் வாயிலிற் காவலாக நிறுத்தப் பட்ட உன் தம்பியான சுக்கிரீவன் பின்பு மிகவுந் துன்பமடைந்து அப்பிலத்தினுள்ளே தானும் செல்லுதற்குப் புறப்பட்டான்; அவனை உங்கள் குலத்திலுள்ள பெரியவர்கள் மறித்து, 'நீயும் போய்விட்டால் எங்கட்குக் கதி யார்? இனி நீயாவது இருந்து அரசாட்சிசெய்' என்று வெகுவாய்ச் சொல்லி நிறுத்தினர்களென்றன னென்க. நெடுநாள் - இருபத்தெட்டுமாசம். அலம் - சஞ்சலம் என்று கொண்டு, அலம் பொன்தாரவனே - அசைகின்ற பொன்னாரத்தை யுடையவனே! நீ—, அரசுகுறிக்கொள் - இராச்சியத்தை ஆளக்கருது

வாய் என்று பதவுரை கூறவுந் தகும். 'முதியர்' என்றதும், மந்திரிகளை. பி - ம்:—[1]பெரு. [2]எனப். [3]உம்பியும். [4]பேர்தல் எனவும் படிக்கலாம். (337)

93. வான மாளவென் தம்முனை வைத்தவன்
தானு மாளக் [1]கிளையி னிறத் தடிந்து
யானு [2]மாள்வெ னிருந்தர சாள்கிலேன்
ஊனமான வுரை [3]பகர்ந் தீரென.

(இ - ள்.) (அதனை மறுத்துச் சுக்கிரீவன்),—'என் தம்முனை - எனது தமையனை வாலியை, வானம் ஆள வைத்தவன் - வீர சுவர்க்கமடையுமாறு கொன்றிட்டவனை மாயாவி, தான்உம் மாள - தானும் இறக்கும்படியாகவும், கிளையின் இற - (அவன்) சுற்றத்தவர் களும் அழியும்படியாகவும், தடிந்து - கொன்று, யான்உம் மாள் வென் - நானும் இறப்பேன்: இருந்து அரசு ஆள்கிலேன் - (என் தமையன் இறந்தபின்பு நான்மாத்திரம்) பிழைத்திருந்து அரசாட்சி செய்யமாட்டேன்; ஊனம் ஆன உரை பகர்ந்தீர் - (எனக்குத்) தகாததான வார்த்தையை நீங்கள் சொன்னீர்கள்,' என - என்று (அந்தப் பெரியோர்களை நோக்கிச்) சொல்ல, (எ - று.)—"வீரரும் முதியரும் முன்பரும் பற்றி...என" என்று அடுத்த கவியோடு தொடரும்.

அப்பிலத்தினுள்ளே மாயாவி வாலியைக் கொன்றுவிட்டா னென்று மாறுகக்கருதியதனால், 'என் தம்முனை வானமாள வைத் தவன்' என்றான், சுக்கிரீவன். போரிற் புறங்கொடாது இறந்தவர் வீரசுவர்க்கமடைவரென்னும் நூல்துணிபுபற்றி, 'வானம் ஆள' எனப்பட்டது. பி-ம்:—[1]களையின்றகை தடிந்து, களையின்களை கடிந்து. [2]ஆள்வன். [3]புரிந்தீர், உரைத்தீர். (338)

94. பற்றி [1]யான்ற படைத்தலை வீரரும்
முற்று ணர்ந்த முதியரு [2]முன்பரும்
[3]எற்று நும்மர செய்துவை யாமெனக்
கொற்ற நன்முடி [4]கொண்டதக் கோதிலான்.

(இ - ள்.) (மீளவும்), ஆன்ற படைத் தலை வீரர்உம் - சிறந்த சேனாதிபதிகளும், முற்று உணர்ந்த முதியர்உம் - (அறிய வேண்டு வன) யாவும் அறிந்த மந்திரிகளும், முன்பர்உம் - (மற்றுமுள்ள) பெரியோர்களும், பற்றி - (சுக்கிரீவனை அப்பிலத்தினுட் செல்ல விடாது) பிடித்துக்கொண்டு, 'எற்றுஉம் - (நிகழ்ந்த செயல்) எத்தன் மையதா யிருப்பினும், நும் அரசு எய்துவை - உங்கட்கு உரிய அரசாட்சியை நீ அடையக்கடவாய்,' என - என்றுசொல்லி நிர்ப் பந்திக்க,—(அதனால்தான்), அ கோது இலான் - குற்றமற்றவனான அச்சுக்கிரீவன், கொற்றம் நல் முடி கொண்டது - வெற்றிக்கு அறி குறியான கிரீடத்தைச் சூட்டிக்கொண்டது (நிகழ்ந்தது); (எ - று.)— ஆம் - அசை.

நிகழ்ந்த செயல் எவ்வாறு இருப்பினும் 'நும்மரசை நீயேபெறுக' என்று படைத்தலைவர் முதலியோர் வற்புறுத்தவே, சுக்கிரீவன் வானரராசனுதலை ஒப்புக்கொண்டான்; அவன்மீது எள்ளளவுங் குற்றமில்லை யென்றனன், இராமனென்க. எற்றும் - வாலிமாயாவிகளின் செய்தி எவ்வாருயினும் என்றபடி. முடி கொண்டது-அரசாட்சியை ஏற்றுக்கொண்டது. கொண்டது - தொழிற்பெயர், வினைமுற்றின் தன்மையடைந்தது. பி - ம்:—[1] அந்தப், உற்று. [2] அன்பரும். [3] இற்றதும்மரசெய்தலையேலென, எற்றுநும்மரசெய்தலையென்னவும். [4] கொண்டதிக். (339)

95. வந்த [1] நின்னை வணங்கி [2] மகிழ்ந்தனன்
எந்தை [3] யென்க ணினத்தவ ராற்றலின்
தந்த வுன்னர சென்று [4] தருக்கிலான்
முந்தை யுற்றது [5] சொற்ற முனிந்துநீ.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) வந்த நின்னை - (மாயாவியைக்கொன்றுபிறகு) மீண்டு வந்த உன்னைப் பார்த்து, மகிழ்ந்தனன்-மகிழ்ச்சியடைந்து, வணங்கி - (உன்னை) நமஸ்கரித்து, 'எந்தை - எமது தலைவனே; இனத்தவர் - (நமது) இனத்தாரான வானரர்கள், என்கண் - என்னிடத்தில், ஆற்றலின் தந்த - வலியக்கொடுத்த, உன் அரசு - உனது அரசாட்சி (இது),' என்று - என்றுதொடங்கி, தருக்கு இலான் - அகங்காரமில்லாதவனுன சுக்கிரீவன், முந்தை உற்றது - முன்பு நிகழ்ந்த செய்தியை, சொற்ற - சொன்ன வார்த்தைகளை, நீ முனிந்து - நீ வெறுத்து,—(எ - று.)—' இரங்கலை' என அடுத்த கவியோடு தொடரும்.

தமையனைத் தந்தையைப்போலப் பாவிக்க வேண்டுதலால், 'எந்தை' என விளித்தான். ஆற்றலின் தந்த - முயற்சியாற்கொடுத்த என்றும், ஏற்றுக்கொள்ளுமாறுகொடுத்த என்றுங்கொள்ளலாம். தருக்கு - யானென்னுஞ்செருக்கு. மாயாவியைக்கொன்று நீ மீண்டு வந்ததைக் கண்டவுடனே 'இனத்தவர் வலியத்தந்த அரசு இது: உன்னரசு ஆன இதை நீ பெறுக' என்று சுக்கிரீவன் அகங்காரமில்லாது நிகழ்ந்தது சொல்லவும் நீ அவன்பேச்சை ஏற்றுக்கொள்ளாது வெறுத்தாயென்பதாம். பி - ம்:—[1] உன்னை. [2] மகிழ்வொடு. [3] நின்கண். [4] தரித்திலான், தரிக்கிலான். [5] சொல்ல. (340)

96. கொல்ல லுற்றனை யும்பியைக் கோதவற்கு
இல்லை யென்ப [1] துணர்ந்து [2] மிரங்கலை
அல்லல் செய்யே லுனக்கப யம்[3] பிழை
புல்ல லென்னவும் புல்லலை பொங்கினுய்.

(இ - ள்.) அவற்கு - அச்சுக்கிரீவனிடத்தில், கோது இல்லை என்பது - குற்றமில்லை யென்பதை, உணர்ந்தும் - (அவன் சொற்களினால்) அறிந்தவனாயிருந்தும், இரங்கலை - (அவனிடத்து நீ)

இரக்கங்கொள்ளாதவனும்,—'அல்லல் செய்யேல் - (என்னை நீ) துன்பப்படுத்தாதே; உனக்கு அபயம் - உனக்கு அடைக்கலப்பொருள் (யான்); பிழை புல்லல் - (எனது) குற்றத்தைக்கொள்ளாதே [பொறுத்தருள்வாய்],' என்னஉம் - என்று (அச் சுக்கிரீவன்) சொல்லவும், புல்லலை - (அவனைச்) சேர்ந்திடாதவனாய், பொங்கினாய் - சீறி, உம்பியை கொல்லல் உற்றனை - உன் தம்பியான சுக்கிரீவனைக் கொல்லத் தொடங்கினாய்; (எ - று.)

உன் தம்பியிடம் குற்றமில்லையென்பதை யுணர்ந்தும் நீயே இரக்கங்கொள்ளவேண்டிய அவனிடத்து இரக்கங் கொண்டிலை: மற்றும் உன் தாளில் வீழ்ந்து, என்பிழைபொறுப்பாயென்னவேண்டியும் அவனைப் பகைவன்போல நினைத்துச் சீறினாய் என்று, வாலியினிடத்து, இரக்கமின்மை அபயம்வேண்டியவனைப் பொறுத்திடாமை என்ற குற்றங்களைக் காட்டினன் இராமபிரானென்க. அவற்கு - உருபு மயக்கம். அபயம் - அஞ்சாதேயென்று அருளிக் காக்கத்தக்க பொருளாகின்றேன் யான் என்றபடி. புல்லுதல் - அமைதலுமாம். பி - ம்:— [1]கண்டு. [2]பிழைப்பில்லை. [3]பிழைபுல்லிது. (341)

97. [1]ஊற்ற முற்று[2]டை யானுனக் [3]காரமர்
[4]தோற்று மென்று [5]தொழுத கையானை நீ
கூற்ற முண்ணக் கொடுப்பனென் [6]றெண்ணினாய்
நாற்றி சைக்கும் புறத்தையு நண்ணினான்.

(இ - ள்.) ஊற்றம் உற்று உடையான் - பக்கவலிமையை மிகுதியாக உடையவனாயிருந்தும், ஆர் அமர் உனக்கு தோற்றும் என்று - பெரும்போரில் உனக்குத் தோறறோம் (யாம்) என்று சொல்லி, தொழுதகையானை - அஞ்சலிசெய்யுந்தன்மையையுடையனான அச்சுக்கிரீவனை, நீ—, (ஆதரியாமல்), கூற்றம் உண்ண கொடுப்பன் என்று எண்ணினாய் - (இவனுயிரை) யமன் உண்ணும்படி கொடுப்பேன் [இவனைக் கொன்றுவிடுவேன்] என்று நினைத்தாய்; (பின்னர் அவன் அஞ்சி), நால் திசைக்குஉம் புறத்தைஉம் நண்ணினான் - நான்கு திக்குக்களின் கடையெல்லையையும் ஓடிச் சேர்பவனான்; (எ - று.)

பக்கபலமிருந்தும் பெரும்போரில் வெல்ல முயற்சிகொள்ளாமல் "நான் உனக்குத் தோற்றேன்: என்னைக்காக்க" என்று அஞ்சலி செய்தும், நீ அச்சுக்கிரீவனைக் கொல்லப்பார்க்கவே அவன் நாற்றிசைக் கடை யெல்லைவரையும் ஓடிப்பார்த்தானென்பதாம். தோற்றும் - றும் விகுதி, இறந்தகாலங் காட்டிற்று; தனித்தன்மைப் பன்மை. தோற்றும் என்று - தோற்போமென்று எண்ணி யென்றலுமாம். தொழுத கையானை என்றும் பிரித்து உரைக்கலாம். பி - ம்:— [1]ஊற்றமும். [2]உடையாய். [3]ஓரமர். [4]தோற்றேன். [5]தொழுதுயர்கையனீ, தொழுதுயர்கையனை, தொழுதுயர்கையை நீ. [6]உன்னினாய், உன்னவும். (342)

98. அன்ன தன்மை யறிந்து மருளலை
[1]பின்ன வன்னிவ னென்பதும் பேணலை
[2]வன்னி[3] தானிடு சாப வரம்புடைப்
[4]பொன்ம லைக்கவ[5]னண்ணலிற் [6]போகலை.

(இ - ள்.) அன்ன தன்மை அறிந்துஉம் - அப்படி அவன் வலி யிழந்து ஓடிப்போகின்ற தன்மையை யறிந்தும், அருளலை - (அவன் பக்கல்) நீ அருள்செய்யாதவனாய், இவன் பின்னவன் என்பதுஉம் பேணலை - இவன் (நமது) தம்பியென்பதையும் கருதாமல் (அவனைத் துரத்தித்துரத்திவருத்தினாய்;) (பின்பு), அவன் - அச்சுக்கிரீவன், வன்னி தான் இடு சாபம் வரம்பு உடை - (மதங்க) முனிவரா லிடப் பட்ட சாபமாகிய தடையெல்லையையுடைய, பொன் மலைக்கு நண்ண லின் - அழகிய ரிசியமூககிரிக்குப் போய்ச் சேர்ந்ததனால், போகலை - (அங்கு நீ) செல்லாதுவிட்டாய்; (எ - று.)—அதனால் அவன் உயிர் தப்பிப் பிழைத்தா னென்க.

உனக்கு அழிவைச் செய்வதான சாபத்திற்கு அஞ்சிச் சுக்கிரீவ னுள்ள இடத்துக்கு நீ செல்லாதுவிட்டனையேயன்றி, சரணமடைந்த வனைப் பாதுகாத்தல்வேண்டு மென்ற விசேடதருமத்தையாவது, வலியிழந்துபுறங்கொடுத்து ஓடுகின்றவனைத் துரத்திக் கொல்லலாகா தென்ற அரசதருமத்தையாவது, தம்பிபக்கல் அன்புவைத்தல் வேண்டு மென்னும் உறவுரிமையையாவது சிறிதேனுங் கருதி அவனை விட்டிலை யென்பதாம். தம்மையைத் தன்னுயிர்போலப் பாவிப் பவனும், வலியிழந்த பகைவனை 'இன்றுபோய் நாளைவா' என்று அன்போடு சொல்லி விடுத்தருள்பவனும், சரணாகதரக்ஷணத்தைப் பரமதருமமாகக் கொண்டுள்ளவனுமான இராமபிரான், மேற்கூறிய பெரியகுற்றங்களைப் பார்த்துப் பொறானென்பது, வெளிப்படை. வன்னி - வர்ணீ என்ற வடசொல்லின் விகாரம்: பிரமசாரியின் பெயர்; அச்சொல் இங்கு, நித்தியபிரமசாரியான மதங்கமுனிவனைக் குறித்தது. வன்னிசாபம் - 'இங்கு வாலிவந்தால் தலைவெடித்து இறப்பானாக' என்பது. பி - ம்:—[1]பின்னவன்னெனப் பேர்ந்தொன்று நோக்கலை. [2]மன்ன, வன்ன, தன்ன. [3]மாமுனி. [4]பொன்னின்மால் வரை, பொன்னின்மலைக்கிவன். [5]ஏறலிற். [6]பொன்றலன், பொன் றிலன். (343)

99. ஈர மாவது மிற்பிறப் பாவதும்
வீர மாவதுங் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவது மற்றொரு வன்புணர்
தார மாவது தாங்குந் [1]தருக்கரோ.

(இ - ள்.) ஈரம் ஆவதுஉம் - அன்பின் செயலாவதும், இல் பிறப்பு ஆவதுஉம் - உயர்குலத்திற் பிறந்ததன் பயனாவதும், வீரம் ஆவதுஉம் - வீரத்தின்பயனாவதும், கல்வியின் மெய் நெறி வாரம் ஆவதுஉம் - கல்விகற்று உணர்ந்தஉண்மையான நீதிமார்க்கத்திற்கு

உரிய செயலாவதும், மற்று ஒருவன் புணர் தாரம் ஆவது தாங்கும் தருக்கு அரோ - மற்றொருவன் சேர்ந்த மனைவியை(க் கற்பு நிலைமை தவறுதபடி) பாதுகாக்கும் பெருமையே யன்றோ; (எ - று.)—அரோ - தேற்றம்; இடைச்சொற்களுக்கு இடத்திற்கு ஏற்பப் பொருள் கொள்ளலாம்; இவ்விலக்கணம் வடநூலார்க்கும் ஒக்கும்.

பிறன்மனைவியைக் கற்புநிலை கெடாது தாங்குதலே, அன்பு முதலிய குணங்கட்கு ஏற்ற செயலா மென்றவாறு. இனி 'தருக்கரோ' என்ற இடத்து 'அர்' என்பதைச் சாரியையாகத் தள்ளி, ஓகாரத்தை வினவாகக்கொண்டு, ஈரம் முதலியன ஆவது மற்றொருவன் புணர் தாரமாவதைத் தனதாகக்கொண்டு பாதுகாக்கின்ற செருக்குச் செயலாமோ? என்று உரைப்பினுமாம். 'தருக்கதோ' எனத் திருத்திப் படிப்பாருமுளர். ஈரம், இற்பிறப்பு, வீரம் என்பன - அவற்றின் காரிய மென்ற பொருளில் நின்றன; உபசாரவழக்கு. வாரம் - உரிமை. தார மென்பது உயர்திணைப்பொருளுணர்த்தும் அஃறிணைச் சொல்லாதலால், 'தாரம் ஆவது' எனப்பட்டது; 'ஆவது' என்பது பகுதிப் பொருள் விகுதி. பி - ம்:—[1]கருத்தரோ. (344)

100. மறந்தி றம்பல் வலிய மெனுமனம்
புறந்தி றம்ப லெளியவர்ப் பொங்குதல்
அறந்தி றம்ப லருங்[1]கடி மங்கையர்
திறந்தி றம்பல் தெளிவுடை யோர்க்கெலாம்.

(இ - ள்.) தெளிவு உடையோர்க்கு எலாம் - தெளிந்த அறிவையுடையவர்கட்கெல்லாம்,—வலியம் என - 'வலியுடையோம் யாம்' என்று கருதி, மனம் புறம் திறம்பல் - மனம் வீரத்தில் தவறாகச் செல்வதாய், எளியவர் பொங்குதல் - எளியார் மீது கோபித்தல், மறம் திறம்பல் - பராக்கிரமச் செயலினின்று தவறுவதாம்; அருங் கடி மங்கையர் திறம் திறம்பல் - (பிறர் புகுதற்கு) அரிய பாதுகாவலையுடைய மாதர்களது கற்பின் வலிமையை யழித்தல், அறம் திறம்பல்- தருமத்தினின்று தவறுதலாம்; (எ - று.)

தெளிவுடையோர்க்கெலாம் எளியவர்ப் பொங்குதல் மறந் திறம்பலும், மங்கையர் திறந்திறம்பல் அறந்திறம்பலுமா மென்க. வலியிழந்து ஓடிய சுக்கிரீவனை விடாது துரத்தித்துரத்தி யடித்துக்கொல்ல முயன்றதனாலும், அவன் மனைவியான ருமையைக்கவர்ந்து கொண்டதனாலும், தெளிவுடையோரனைவரும் வெறுக்கத்தக்க மறந்திறம்பலும் அறந்திறம்பலு மாகிய பெருங் குற்றங்கள் உன்னிடம் நிகழ்ந்தன என்று அவ்வாலியினது குற்றத்தை ஸ்ரீராமன் காட்டினனென்க. புறம் - வீரம்; அக்கிரமவழி யென்றுங் கொள்ளலாம். திறம் திறம்பல் - கற்புநிலைக்குமாறாக ஒழுகுதல். பி - ம்:—[1]குடி. (345)

101. தருமமின்ன தெனுந்தகைத் தன்மையும்
இருமை யுந்தெரிந் தெண்ணலை [1]யெண்ணினல்

அருமை யும்பித ஞருயிர்த் தேவியைப்
பெருமை [2]நீங்கினை யெய்தப் பெறுதியோ.

(இ - ள்.) தருமம் இன்னது எனும் - அறம் இத்தன்மைய தென்கிற, தகைதன்மைஉம் - தகுதியையும், இருமைஉம் - இம்மை மறுமைப்பயன்களையும், தெரிந்து எண்ணலை - ஆராய்ந்து கருதாமற் போனாய்; எண்ணினுல் - (அவற்றை) ஆலோசித்து அறிந்தால், அருமை உம்பி தன் ஆர்உயிர் தேவியை - அருமையான உன் தம்பியினது அரிய உயிர் போன்ற மனைவியை, பெருமை நீங்கினை எய்த பெறுதிஓ - பெருந்தன்மையொழிந்து சேரக்கடவையோ; (எ - று.)

தருமத்தின் சொரூபத்தையும், தருமவழியிற் செல்லாமையால் இம்மைமறுமைகளில் விளையக்கூடியபயனையும் ஆராயாமல் அருமைத் தம்பியின் மனைவியைக் கவர்ந்து பெருமை நீங்கினையே யென்றவாறு. இம்மைப்பயன் - புகழ், மறுமைப்பயன் - புண்ணியம். உயிர்த்தேவி - உயிரோடொத்த மனைவி; பிராணநாயகி. "அறம்புகழ் கேண்மை பெருமையிந்நான்கும், பிறன்தாரம் நச்சுவார்ச்சேரா" என்பது, காணத்தக்கது. பி - ம்:—[1]எண்ணிலா. [2]நீங்கிட. (346)

102. ஆத லானு மவனெனக் காருயிர்க்
[1]காத லானென லானு [2]நிற் கட்டனென்
[3]ஏதி லாரு [4]மெளியரென் ருரையும்
தீது தீர்ப்பதென் [5]சிந்தைக் கருத்தரோ.

(இ - ள்.) ஆதலான்உம் - (நீ இப்படியெல்லாஞ் செய்தாய்) ஆதலாலும், அவன் எனக்கு ஆர் உயிர்காதலான் எனலான்உம் - அச்சுக்கிரீவன் எனக்கு அருமையான உயிர்போன்ற நண்பனுனதனுலும், நின் கட்டனென் - உன்னை உயிர்பறித்தேன்; (அன்றியும்), ஏதிலார் உம் - யாதொருசம்பந்தமுமில்லாத அயலாரையும், எளியர் என்ருரை உம் - எளியவர்களையும், தீது தீர்ப்பது - துன்பமொழிப்பது, என் சிந்தை கருத்து - எனது மனக்கருத்தாம்; (எ - று.)—அரோ - ஈற்றசை.

ஏதிலாரும் எளியரும் என்ருரை எனக்கூட்டியுரைப்பினுமாம். தான் மனமாரச்செய்த தவறிலனென்பதை விளக்கித் தன் பிழையைப் பொறுக்குமாறு வணங்கியும் அபயம் வேண்டியும் தோற்றேனென்றுசொல்லியும் சரணமாக அடைந்தவனைத் துரத்தித் துரத்தியடித்ததோடு இம்மை மறுமைப்பயனை யெண்ணுது அவன் மனைவியையும் கவர்ந்தாய்: இவ்வாறு பெரும்பிழை செய்தா யாதலாலும், சுக்கிரீவன் எனக்கு உயிர் நண்பனுனதனுலும், வேருெரு பற்றுக்கோடு இல்லாமலும் நான்எளியனென றுசொல்லியும் என்னை யடைந்தோரின் தீமையைத் தீர்ப்பது என் கடமையாகக் கொண்டுள்ளேனுதலாலும் அச்சுக்கிரீவனைக் காப்பது என்கடமையாயிற் றென்று ஸ்ரீராமபிரான் கூறினுன், உயிர்க்காதலான் - பிராண

ஒரேஇதன். கிற் கட்டனென் - இரண்டாம் வேற்றுமைத்தொகை. பி - ம்:—[1] காதலானதனாலும், காதலாதலினாலும். [2] இதென்கடன், என்கைக்கடன். [3] ஏதிலாரையும். [4] இற்பிழைத்தாரையும், எளியரென்றுலவர். [5] சிந்தைகடுத்தரோ. (347)

103.—இவ்வாறு இராமபிரான் சொல்ல, அவற்றிற்கு வாலி எதிர்கூறத் தொடங்குதல்.

பிழைத்த தன்மை [1] யிதுவெனப் பேரெழில்
தழைத்த வீர னுரைசெயத் தக்கிலாது
இழைத்த வாலி [2] யியல்பல வித்துணை
[3] விழைத்தி றத்தொழி லென்ன [4] விளம்புவான்.

(இ - ள்.) பிழைத்த தன்மை இது - (நீ) தவறுசெய்த விதம் இது, என - என்று, பேர் எழில் தழைத்த வீரன் - மிக்க அழகு நிரம்பிய மகாவீரனான இராமபிரான், உரைசெய - சொல்ல, தக்கிலாது இழைத்த - தகாத செயலைச் செய்த, வாலி - வாலியானவன், 'இத்துணை - (தகாதனவென்று நீ சொன்ன) இவ்வளவும், இயல்பு அல - (வானரமான எங்கள் பிறப்புக்கு) உரியனவல்ல; விழைதிறம் தொழில் - விரும்பியபடி தொழில்செய்தலே (எங்கள் பிறப்புக்கு உரியது),' என்ன - என்றுகூறி, விளம்புவான் - பின்னும் சொல்பவனானான்; (எ - று.)—இது, தொகுத்துச் சுட்டல்; இதன் விவரணத்தை, அடுத்த மூன்று கவிகளிற் காண்க.

'இயல்பல இத்துணை விழைத்திறத்தொழில்' என்பதற்கு-தகுதியல்லாதனவாக நீ கருதிக் கூறிய இவ்வளவும் (எங்களுக்கு) விரும்பிச் செய்யத்தக்க தொழில்களேயாம் என்றும் பதவுரை கொள்ளலாம். பேரெழில் தழைத்தல் - பேரழகு நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக மேன்மேல் வளரப்பெறுதல். [2] இயல்பெனக்கித்துணை விழைத்திறத்தகொல் என்றபாடத்துக்கு விரும்பியபடி செய்வன எமக்கு இயல்பு: (அதுகுறித்து) இவ்வளவு கூறவேண்டுமோ என்க. 'தன்மையிது,' 'தக்கிலாது' என்பன - தொகுதி யொருமைகள்; தக்கிலாது - எதிர்மறை யிறந்தகால வினையாலணையும் பெயர். பி - ம்:—[1] இயல்பெனக்கு, இதுவெமக்கு. [3] விழைத்திறந். [4] விளம்பினான். (348)

104.—இதுமுதல் மூன்று கவிகள்—வாலி கூறும் சமாதானம்.

ஐய நுங்க ளருங்குலக் கற்பினப்
பொய்யின் மங்கையர்க் கேய்ந்த புணர்ச்சிபோல்
[1] செய்தி லன்னெமைத் தேமலர் [2] மேலவன்
எய்தி [3] னெய்திய தாக வியற்றினான்.

(இ - ள்.) ஐய - தலைவனே! நுங்கள் - உங்களுடைய, அருங்குலம் - அருமையான குலத்தில் தோன்றிய, கற்பின் - பதிவிரதா

தருமத்தை முக்கியமாகக்கொண்ட, அ - அப்படிப்பட்ட, பொய் இல் மங்கையர்க்கு - பொய்மையில்லாத மாதர்கட்கு, ஏய்ந்த - பொருந்திய, புணர்ச்சிபோல் - (விவாகம் செய்துகொண்டு அவரையே) கலத்தல் போல, எமை - எங்களுக்கு; தேன் மலர் மேலவன் - தேனையுடைய (திருமாலின் திருநாபித்) தாமரை மலரின்மேல் தோன்றியவனான பிரமன், செய்திலன் - நியமஞ்செய்தானில்லை; எய்தின் எய்தியது ஆக இயற்றினன் - நேர்ந்தால் நேர்ந்தபடியாகுமாறு நியமஞ்செய்தான்; (எ - று.)

ஒருவனை மணந்து கொண்டு அவனையே புணர்வதென்ற முறைமையில்லாமல், நேர்ந்தபடி புணருமாறு எங்கட்குப் பிரமதேவன் நியமனஞ்செய்தன னென்றவாறு. 'நுங்கள் குலம்' என்றது, மனிதப்பிறப்பை. கற்பு இனம் என்று பிரித்து உரைப்பாருமுளர். பொய்யின்மை - மனம்வேறு சொல்வேறு தொழில்வேறு ஆகாமை, திரிகரணசுத்தி. தே மலர் - தெய்வத்தன்மையையுடைய மல ரெனினுமாம். செய்திலன்னெமை - விரித்தல். எமை - உருபு மயக்கம். பி-ம்:—[1]செய்இலன். [2]மன்னவன். [3]எய்தினது. (349)

105. மணமு மில்லை மறைநெறி வந்தன
குணமு மில்லைக் குலமுதற் கொத்தன
உணர்வு சென்றுழிச் செல்லு மொழுக்கலால்
திணமு நெய்யு மிணங்கிய நேமியாய்.

(இ - ள்.) திணம்உம்-பகைவருடற்கொழுப்பும், நெய்உம் -(பூசிய) நெய்யும், இணங்கிய - பொருந்திய, நேமியாய் - சக்கராயுதத்தையுடையவனே! உணர்வு சென்ற உழி செல்லும் ஒழுக்கு அலால் - மனம்போன வழியே நடக்கும் நடக்கைகள் (எங்களுக்கு) உள்ளனவேயல்லால், மறை நெறி வந்தன மணம்உம் இல்லை -வேதமார்க்கப்படி வந்தவையான விவாகக்கிரமங்களும் இல்லை; குலம் முதற்கு ஒத்தன குணம்உம் - வமிசபரம்பரைக்கு ஒத்தனவான நற்பண்பும், இல்லை—;

'குலமுதற்கொத்தன உணர்வுசென்றுழிச்செல்லும் ஒழுக்கு'- (எங்கள்) மிருகசாதிக்குத் தக்கனவாக மனம்போனபடியொழுகும் ஒழுக்கமெனினுமாம். மறைநெறி வந்தன - வேதங்களிற்கூறிய முறைமையால் வந்தவை. ஒழுக்கு - ஒழுக்கம். திணம் - பகைவருடலிற்பாயும் போது அங்கிருந்து ஒட்டிக்கொண்டது. ''திருவுடைமன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனேயென்னும்'' என்றபடி அரசன் விஷ்ணுவினமிசமென்பதுபற்றி, 'நேமியாய்' என்று இராமனை விளித்தான்; இடையிடையே தத்துவவுணர்வும் இராமபிரானிடத்து மதிப்பும் தோன்றுவதால், இங்ஙன் விளித்தானுமாம். (350)

106.—வாலிக்கு இராமன் மீண்டும் எதிர்சொல்லத் தொடங்குதல்.

பெற்றி மற்றிது [1]பெற்றதோர் [2]பெற்றியின்
குற்ற முற்றில [3]னீயது கோடியால்

வெற்றி யுற்றதோர் வெற்றியி னுயெனுச்
சொற்ற [4]சொற்றகைக் குற்றது சொல்லுவான்.

(இ - ள்.) வெற்றி உற்றது ஓர் வெற்றியினுய் - (என்னை)ஜயித்த தன்மையையுடையவனும் (இயல்பில்) வெற்றிபெறுவோனுமான வனே! பெற்றி இது-(எங்கள் பிறப்புக்குஉரிய) தன்மை இது: (ஆதலால்), பெற்றது ஓர் பெற்றியின் - (நான்) அடைந்துள்ள ஜாதித் தன்மைப்படி, குற்றம் உற்றிலென் - (யாதொரு) குற்றத்தையுஞ்செய் திலேன்: அது நீ கோடி - அதனை நீ (மனத்திற்) கொள்வாய், எனு - என்று, சொற்ற - சொன்ன, சொல் தகைக்கு-சொற்களின் பெருமை யையுடையவனுன வாலிக்கு, உற்றது சொல்லுவான் - தக்க சமாதானஞ் சொல்பவனுயினன், (இராமபிரான்); (எ-று.)—அதனை, அடுத்த ஒன்பதுகவிகளிற் காண்க. மற்று, ஆல் - அசைகள்.

'வெற்றியுற்றதோர் வெற்றியினுய்' என்பதற்கு - ஜயம் தான் அடைந்ததொரு ஜயத்தையுடையவனே! என்று பொருள் கொண்டு, வெற்றிகளுள்ளும் மேம்பட்ட வெற்றியையுடையவனே! என்று கருத்துரைத்தலும் அமையும்; எவராலும் வெல்லுதற்கு அரிய தன்னைக் கொன்றிட்டதையே சிறந்தவெற்றியாகக் குறித்தான். பி-ம்:—[1]பெற்றியோர். [3]பெற்றியால். [3]இற்றிது, நிற்கிது. [4]சொற்று றைக்கு. (351)

107.—இதுமுதல் ஒன்பதுகவிகள் - இராமபிரான் வாலியின் வார்த்தையை மறுத்துப் பேசுதலைத் தெரிவிக்கும்.

நலங்கொள் தேவரிற் றேன்றி [1]நவையறக்
[2]கலங்க லாதற நன்னெறி காண்டலின்
விலங்க லாமை விளங்கிய [3]தாதலால்
[4]அலங்க லார்க்கி தடுப்பதன் றுமரோ.

(இ - ள்.) (நீங்கள்), நலம் கொள் தேவரின் தோன்றி - சிறப்புக் கொண்ட தேவர்களின் புதல்வராய்ப் பிறந்து, நவை அற - (ஐயந்திரிபுகளாகிய) குற்றங்களில்லாதபடி, நல் அறம் நெறி - (என்றும் ஒருபடியாகவுள்ள) சிறந்த தருமமார்க்கத்தை, கலங்கலாது காண்டலின் - நிலைகலங்காமல் அறிந்திருத்தலால், விலங்கு அலாமை விளங்கியது - (நீங்கள் சாமாணியமான) மிருகசாதி யல்லீ ரென்பது விளங்கிற்று; ஆதலால் - ஆகவே, அலங்கலார்க்கு-(போர் வெற்றிகட்குரிய) மாலைகளைத் தரிப்பவர்களான வீரர்கட்கு, இது அடுப்பது அன்று ஆம் - இது தகுவதன்றும்; (எ - று.)—அரோ - தேற்றம்.

உன் தம்பி நீ அனுமான் முதலியோர் வடிவத்தால் வானரராயினும், தேவர்கட்குப் புதல்வராய்ப் பிறந்து அறநெறியைத் தெளிவுறத்தெரிந்திருத்தலால், நும்போலியர் விலங்குஎன்று முறைகேடான செயலைச்செய்தல் அடாது என்கின்றுன், இராமபிரான். முன்பு கூறியவற்றையெல்லாம் தொகுத்து, தொகுதியொருமையாக 'இது' எனப்பட்டது. விளங்கியது-நன்றுகத் தெரிகின்ற தென்றபடி.

'அலங்கலார்க்கு' என்றது - முன்னிலைப்படர்க்கையாக, போர்வீரர்களான உங்கட்கு என்றவாறுமாம்: அஃறிணையினின்று பிரித்ததனால் உயர்திணையாக் கூறினர். பி-ம்:—[1] நவையுறக். [2] கலங்கலா. [3] ஓர்புகல். [4] அலங்கலாய்க்கு, அலங்கலாய். (352)

108. [1] பொறியின் யாக்கைய தோபுல[2] னோக்கிய
அறிவின் மேலதன் றோவறத் தாறுதான்
[3] நெறியி [4] னோன்மையை [5] நேரி துணர்ந்தநீ
பெறுதி யோபிழை [6] யுற்றுறு [7] பெற்றிதான்.

(இ - ள்.) அறத்து ஆறு தான்-தருமமார்க்கந்தான், பொறியின் யாக்கையது ஓ - ஐம்பொறிகட்கு இடமான உடம்பைப் பற்றியதோ? புலன் நோக்கிய அறிவின் மேலது அன்றோ - விஷயங்களை ஆராய்ந்தறிகின்ற அறிவைப்பற்றிய தன்றோ! நெறியின் நோன்மையை - (அந்தத்) தருமமார்க்கத்தின் பெருமையை, நேரிது உணர்ந்த-நேர்மையாக அறிந்துகின்ற, நீ—, பிழை உற்று - தவறுகளைச் செய்திட்டு, உறு பெற்றி தான் பெறுதி ஓ-(பிழையன்று, என்செயல் சரியானதே என்று) சாதிக்கின்ற தன்மையைப் பெறக்கடவையோ? (எ - று.)

நீ, வடிவினால் விலங்காகிய வாநரம்போலிருப்பினும், பகுத்தறிவுடைமையால் மனிதர் போலுதலால், தருமமார்க்கத்தை யறிந்திருந்தே தவறுகள் செய்தது தகாது என்பதாம். பிழை உற்றுறு பெற்றிதான் பெறுதிஓ - தவறுகளை மிகுதியாகச் செய்கின்ற தன்மையைப் பெறக்கடவையோ? எனினுமாம். அடைக்கலம் புகுந்தவனை வெருட்டியடித்தல் அவன்மனைவியையுமுள்படக்கவர்தல் முதலியன செய்தமையால், இவ்வாறு கூறியது. தொல்காப்பியத்து மரபியலில் "மக்கள் தாமே ஆறறிவுயிரே, பிறவுமுளவேயக்கிளைப் பிறப்பே" என்ற சூத்திரத்தின் உரையில், 'பிறப்பென்றதனால், குரங்குமுதலாகிய விலங்கினுள் அறிவுடையன எனப்படும் மனவுணர்வுடையன உளவாயின், அவையும் ஈண்டு ஆறறிவுயிராயடங்கு மென்பது' என்றது, இங்குக் காணத்தக்கது. பொறி - இந்திரியம்: புலன் - விஷயம்: சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன. புலனோக்கிய அறிவு - பகுத்தறிவு: விவேகம். பி - ம்:—[1] பொறியில். [2] ஆகிய, ஆக்கிய. [3] நெறியும். [4] நீர்மையும், நோன்மையும். [5] நேர்கின்று. [6] ஆற்றுறு, உற்றது. [7] பெற்றியாய். (353)

109. மாடு பற்றி யிடங்கர் வலித்திடக்
கோடு பற்றிய கொற்றவற் கூயதோர்
பாடு பெற்ற வுணர்வின் பயத்தினால்
வீடு பெற்ற விலங்கும் [1] விலங்கதோ.

(இ - ள்.) இடங்கர் - முதலை, (தன்னை), மாடு பற்றி வலித்திட - ஒருபக்கத்திற் பிடித்துக்கொண்டு வலிய இழுத்ததனால், கோடு பற்றிய கொற்றவன் கூயது - சங்கத்தை ஒருகையிலேந்தியுள்ள வெற்றியையுடையவனை திருமாலை ஓலமிட்டழைத்ததாகி, (அதன் பயனாக), ஓர் பாடு பெற்ற உணர்வின் பயத்தினால் - ஒப்பற்ற

பெருமைபெற்ற அறிவின் பயனால், வீடு பெற்ற - (அத்துன்பத்தினின்று) விடுதலையடைந்து (பிறகு) முத்தியையும் அடைந்த, விலங்கு உம் - யானையும் [கஜேந்திராழ்வானும்], விலங்கு அதுஓ - மிருகஜாதியாகுமோ? (எ - று.)

மிக்கவிஷ்ணுபக்தியுடையனான இந்திரத்யும்நனென்னும் அரசன் வழக்கப்படி விஷ்ணுபூஜை செய்துகொண்டிருந்தபோது ஒருநாள் அகத்தியமகாமுனிவன் அவனிடம் எழுந்தருள, அப்பொழுது அவன் தன்கருத்து முழுவதையும் திருமாலைப்பூசிப்பதிற் செலுத்தியிருந்ததனால் அவ்விருடியின் வருகையை அறிந்திடானும் அவனுக்கு உபசாரமொன்றுஞ் செய்யாதிருக்க, அம்முனிவன், தன்னை அரசன் அலக்ஷியஞ்செய்தானென்று மாறுகக்கருதிக் கோபித்து, 'நீ, யானைபோலச் செருக்குற்றிருந்ததனால், யானையாகக் கடவை', என்று சபிக்க, அங்ஙனமே அவன் ஒரு காட்டில் யானையாகத் தோன்றினனாயினும், முன்செய்த விஷ்ணுபத்தியின் மகிமையால் அப்பொழுதும் விடாமல் நாள்தோறும் ஆயிரந் தாமரைமலர்களைக்கொண்டு திருமாலை அருச்சித்துப் பூசித்து வருகையில், ஒரு நாள் பெரியதொரு தாமரைத் தடாகத்தில் அர்ச்சனைக்காகப் பூப்பறித்தற்குப்போய் இறங்கியபொழுது, அங்கே முன்பு நீர்நிலையில் நின்று தவஞ்செய்துகொண்டிருந்த தேவலனென்னும் முனிவனது காலைப் பற்றியிழுத்து அதனாற் கோபங்கொண்ட அவனது சாபத்தாற் பெரியமுதலையாய்க் கிடந்த ஹூஹூவென்னுங் கந்தருவன் அவ்யானையின் காலைக் கௌவிக்கொள்ள, அதனை விடுவித்துக் கொள்ள முடியாமற் கஜேந்திரன் 'ஆதிமூலமே!' என்று கூவி யழைக்க, உடனே திருமால் கருடாரூடனாய் அங்கு எழுந்தருளி, தனதுசக்கராயுதத்தைச் செலுத்தி முதலையைத் துணித்து யானையை அதன் வாயினின்று விடுவித்து, இறுதியில் அதற்கு முத்தியை யருளினன் என்ற வரலாறு, இங்குக் குறித்தது.

அந்தக் கஜேந்திரன்போலவே நீயும் சாமானியமான விலங்கென்று கொள்ளத்தக்கவனல்லை: ஆதலால், விலங்குச் செயலாகத் தம்பிமனைவியைப் புணர்ந்தது பெருந்தவறே யென்பதாம்.

மாடு - பக்கம். வெற்றிக்கு அறிகுறியாகச் சங்கத்தை வாயில் வைத்து ஊதுதலும், சங்கத்தின் நாதத்தினாற் பகைவரை அச்சமுறுத்திவெல்லுதலுந் தோன்ற, 'கோடுபற்றிய கொற்றவன்' என்றார். பயத்தினால் - பயனால்: பயம் - பயன். 'வீடுபெற்ற' என்றது, இரட்டுறமொழிதல். வீடு - விடுபடுதல் என்றபொருளில், விடு என்ற முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; பற்றுக்களைவிட்டு அடையுமிடம் என்ற பொருளில், 'விடு' என்ற பகுதியினடியாப்பிறந்த இடப்பெயர். விலங்கது, அது - பகுதிப்பொருள் விகுதி. பி - ம்:—[1] விலங்கரோ. (354)

110. சிந்தை நல்லறத் தின் [1]வழிச் [2]சேறலால்
பைந்தொ டித்திரு வின்பரி வாற்றுவான்

வெந்[3]தொ ழிற்றுறை வீடுபெற் றெய்திய
எந்தை யும்மெரு வைக்கர [4]சல்லனே.

(இ - ள்.) நல் அறத்தின் வழி - நல்ல தருமமார்க்கத்தில், சிந்தை சேறலால் - மனம் சென்றதனால், பைந் தொடி திருவின் பரிவு ஆற்றுவான் - பசுமையான [பசும்பொன்னாலாகிய] தொடியென்னுங்கைவளையை யணிந்த திருமகள்போன்ற சீதையினது துன்பத்தைத் தீர்த்தற்பொருட்டு, வெம் தொழில் துறை - கொடிய போர்த்துறையில், (தன் திறமையைக்காட்டி), வீடு பெற்று எய்திய - பரமபதஞ் சேர்ந்து (இவ்வுலகத் தொடர்பினின்று) விடுதலை யடைந்த, எந்தை உம் - எமது (பெரிய) தந்தையான ஜடாயுவும், எருவைக்கு அரசு அல்லனோ - கழுகுகளுக்கு அரசனன்றோ! (எ - று.)

சூரியசாரதியான அருணனது புத்திரனும் சம்பாதியின் தம்பியுமாகிய ஜடாயு, நெடுநாளாய்த்தசரதசக்கரவர்த்திக்கு உயிர்த்தோழனாயிருந்தனன். இவன் பின்பு தசரதகுமாரர்களான இராமலட்சுமணர்களைத் தண்டகாரணியத்திற் கண்டு அவர்களைத் தனது புத்திரர் போலவே பாவித்து அன்புபாராட்டி அவர்கட்குப் பாதுகாவலாய் நிற்க, அவர்களும் தசரதனினும் பிராயம்முதிர்ந்தவனான இவனைத் தமது பெரியதந்தையாகப் பாவித்து வந்தனர். இங்ஙன மிருக்கையில், இராவணன் மாயமான் வடிவுபூண்ட மாரீசனது சூழ்ச்சியால் இராமலக்குமணரை அப்புறப்படுத்தி, தனித்து நின்ற சீதையை வலியஎடுத்துத் தேரின்மேல் வைத்துக்கொண்டு ஆகாய மார்க்கமாய்ச் செல்லுகையில், அவள் கூக்குரலிட்டதைக் கேட்டுக் கழுகரசான் ஜடாயு ஓடிவந்து எதிர்த்துப் பெரும்போர்செய்து அவனது கொடி முதலியவற்றைச் சிதைத்து, முடிவில் அவனெறிந்த தெய்வவாளினாற் சிறகுஅறுபட்டு விழ, அரக்கன் சீதையைக் கொண்டு போய் இலங்கையில் அசோகவனத்திற் சிறை வைத்திட்டான். பின்பு வந்த இராமலக்ஷ்மணர் பர்ணசாலையிற் சீதையைக்காணாமற் கலங்கி அவளைத் தேடிச்செல்லும் வழியில் ஜடாயு வீழ்ந்து கிடக்கக்கண்டு துயர்கையில், குற்றுயிருடன் விழுந்து கிடந்த அந்தக் கழுகரசன் நடந்த செய்தியைச் சிறிதுகூறி உயிர் நீப்ப, இராமபிரான் அவனுக்குப் பரமபதமளித்துச் சரம கைங்கரியஞ் செய்து முடித்தனன் என்ற வரலாறு ஆரணியகாண்டத்திற் கூறப்பட்டது.

ஜடாயுபோலவே நீயும் சாமானியமான விலங்கென்று கொள்ளத்தக்கவனல்லை யென்பதாம். எழுவகைப் பிறப்பினுள் விலங்கும் பறவையும் வேறு வேறாகக் கூறப்படினும், இவ்விரண்டும் நால்வகைக் கதிகளுள் விலங்குக்கதியில் அடங்குதலால், இங்குக் கழுகரசு வானரத்தோடொப்ப எடுக்கப்பட்டது. 'வீடு' என்பதைத் திரும்பவும் எடுத்து, வீடு பெற்று - உயிர்நீங்குதலை யடைந்து, வீடு எய்திய - பரமபதமடைந்த என்று பதவுரை கூறப்பட்டது. ஆற்றுவான் - எச்சம்; வினையாலணையும்பெயரெனின், ஆற்றுபவனாய்

என்க. எந்தையும்மெருவை, விரித்தல். பி - ம்:—[1]நெறி. [2]சேர்தலால் சேரலால், சேர்த்தலால். [3]திறல். [4]என்பரால். (355)

111. நன்று தீதென் [1]றியல்தெரி நல்லறிவு
இன்றி [2]வாழ்வ தன்றோ [3]விலங்கின்னியல்
[4]நின்ற சின்னெறி [5]நீயறி யாநெறி
ஒன்று மின்மை[6]யுன் வாய்மை யுணர்த்துமால்.

(இ-ள்.) விலங்கின் இயல்-மிருகங்களின் சுபாவம்,—நன்று தீது என்று - (இன்னது) நல்லதென்றும் (இன்னது) கெட்டதென்றும், இயல் தெரி - (அதனதன்) இயல்பை (உள்ளபடி) உணர்கின்ற, நல் அறிவு - நல்ல பகுத்தறிவு, இன்றி - இல்லாமல், வாழ்வது அன்றோ - உயிர்வாழ்ந்திருப்பதன்றோ? நின்ற நல் நெறி - நிலைபெற்ற சன்மார்க்கங்களுள்,நீ அறியா நெறி-நீ அறியாத வழி, ஒன்றும் இன்மை-ஒன்றுமில்லையென்பதை, உன் வாய்மை - உன் வாயினின்று (இப்பொழுது) வந்த சொற்களே, உணர்த்தும் - தெரிவிக்கும்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

எல்லா நன்னெறிகளையும் அறிந்தும் அந்நன்னெறிக்குமாறாக நீ நடந்தது தவறேயென்றவாறு. [3]விலங்கின்னிடை என்ற பாடத்துக்கு - (மனிதர்க்கு) மிருகங்களோடுள்ள வேறுபாடு என்க. இடை - அந்தரம்: தாரதமியம். வாய்மை என்றது— "வாய்மையும் மரபும்" (76) என்று தொடங்கி, "தாரமற்றொருவன் கொள...வில்லிகல் வல்லதே" (90) என்று இராமபிரானையேசிய பேச்சுக்களைக் காட்டுவதன்றி, பேச்சினால் மானிடரினும் மிகப் பேசிவிட்டுப் புகல்புக்க தம்பியைக் கொல்ல மிக முயன்றதற்குச் சமாதானம் நேரிதாகச் சொல்லாமல், தம்பியின் மனைவியைப் புணர "இத்தனை விழைத் திறத்தொழில்," (103) "மணமுமில்லை மறைநெறிவந்தன" (105) என்று இவை முதலாகத் தன்னைக் குற்றமற்றவன்போல மழுப்பிச் சொல்லியமையையும் காட்டும். நன்றுதீதென்று இயல் தெரி நல்லறிவு - விவேகம். பி - ம்:—[1] அறிதரு, இயலறி. [2]வீழ்வது. [4]நின்றுநன், நின்றனன். [5]நீயறியும், நீயறிபுன். [6]நின். (356)

112. தக்க வின்ன தகாதன [1]வின்னவென்று
ஒக்க வுன்னல [2]ராயி [3]னுயர்ந்துள
மக்க ளும்விலங் கே[4]மனு வின்னெறி
புக்க வேலவ் விலங்கும் புத்தேளிரே.

(இ - ள்.) உயர்ந்துஉள மக்கள்உம் - (எல்லாப் பிராணிகளினுஞ்) சிறந்துள்ள மனிதர்களாயினும், தக்க இன்ன - தகுதியானவை இவை, தகாதன இன்ன - தகுதியல்லாதவை இவை, என்று—, ஒக்க - (நீதிநூல் முறைமைக்குப்) பொருந்த, உன்னலர் ஆயின்-எண்ணாதவர்களானால், விலங்கே-மிருகத்துக்கு ஒப்பானவர்களே; அ விலங்குஉம்-அந்த மிருகங்களேயாயினும், மனுவின் நெறி புக்க ஏல் - மநுதருமசாத்திரத்திற் கூறப்பட்டுள்ள முறைமை

களிற் பொருந்தி நடந்தனவாயின், புத்தேளிர்ஏ - தேவர்கட்கு ஒப்பானவையே; (எ - று.)

உணவு உறக்கம் அச்சம் முதலிய பலதொழில்களும் ஐம்பொறியுணர்வும் மனிதர்க்கும் மிருகங்களுக்கும் சமமே: ஆயினும், மிருகங்களினும் மனிதர் சிறப்புடையராக மதிக்கப்படுதற்குக் காரணம், நல்லவை தீயவைகளைப் பகுத்தறியும் அறிவுமிகுதி மிருகங்களுக்கு இல்லையாக மனிதர்க்கு அந்தப்பகுத்தறிவு இருத்தலேயாம்; ஆதலின், உயர்ந்த பிறப்பிற் பிறந்திருந்தும் அதற்கு ஏற்ற விவேகத்தை யுடையராகாத மனிதர் மிருகங்களோடு ஒப்பர்: இழிந்த பிறப்பிற் பிறந்துள்ள அந்த மிருகங்கள் தாம் தமது பிறப்பிற்குஉரிய அறிவினும் மேம்பட்ட அவ்வுணர்வுமிகுதியோடு கூடி நீதிநெறியே ஒழுகுமாயின் சிறப்புணர்வுடைய தேவர்கட்குச் சமமாகு மென்பதாம். விலங்கும் மக்களே என்னவேண்டிய இடத்து, விலங்குக்கு உள்ள ஏற்றம் விளங்க, 'விலங்கும் புத்தேளிரே' என்றார்: "விலங்கொடு மக்களனைய ரிலங்குநூல், கற்றாரோ டேனையவர்" என்ற திருக்குறள் இங்கு நோக்கத்தக்கது.

உம்மை யிரண்டும்-முறையே உயர்வுசிறப்பும். இழிவுசிறப்புமாம். ஏகாரங்கள் - தேற்றம். 'மக்கள்' என்ற பெயர், "மக்கள் தாமே ஆறறிவுயிரே" என்ற தொல்காப்பியத்தின்படி ஐம்பொறியுணர்வோடு மனவறிவையும் உடைமையாகிய அவர்களது விசேடத்தை விளக்கும். 'உயர்ந்துள' என்ற அடைமொழி, "அரிதரிது மானிடராதலரிது" என்றவாறு எல்லாப் பிறப்பினும் மனிசப்பிறவிக்கு உரிய ஏற்றத்தை எடுத்துக்காட்டியபடி. புத்தேளிர், இர் - பலர்பால்விகுதி: கேளிர், மகளிர் என்ற இடத்துப்போல. பி - ம்:—[1] இன்னது. [2] ஆகி. [3] உலந்துள. [4] மனுநூனெறி. சிலபிரதிகளில் 'ஒக்கவுன்னியுடனபுரவார்களேல்' என்று இரண்டாமடி. (357)

113. கால னாற்றல் [1]கடிந்த கணிச்சியான்
பாலி னாற்றிய பத்தி பயத்தலான்
மாலி [2]னாற்றரு வன்பெரும் பூதங்கள்
நாலி னாற்றலு [3]மாற்றுழி நண்ணினாய்.

(இ - ள்.) காலன் ஆற்றல் கடிந்த - யமனுடைய வல்லமையையழித்து (அவனை) வென்ற, கணிச்சியான் பாலின் - மழுவென்னும் ஆயுதத்தை யுடையவனான சிவபிரான்பக்கல், ஆற்றிய - (நீ) செய்த, பத்தி - பக்தி, பயத்தலான் - பயன் தந்ததனால்,—மாலினால் தரு வல் பெரும் பூதங்கள் நாலின் ஆற்றல்உம் - திருமாலாற் படைக்கப்பட்ட வலிய பெரிய பூதங்கள் நான்கிற்கும் உள்ள வலிமைகளையெல்லாம், ஆற்றுஉழி நண்ணினாய் - (உனது) வலிமையிற் பெற்றாய்; (எ - று.)

நல்வினைசெய்தால் நற்பயன் விளையுமென்பதற்கு இது கூறப்பட்டது. காலனாற்றல் கடிந்த கணிச்சியான் - முன் "காலன்றன்

காலமுங் காலா, லறுக்கும் புங்கவன்'' என்றது காண்க. கணிச்சி - சூலமுமாம். 'அண்டத்தையும், அண்டகாரணங்களையும் தானே உண்டாக்கும்' என்றபடி அண்டத்தின்காரணமான பஞ்சமகாபூதங்களைப் பிரமனைக்கொண்டன்றி எம்பெருமான் தானே படைத்தருளுதலால், 'மாலினல்தரு வன்பெரும் பூதங்கள்' எனப்பட்டன; இது, ஸமஷ்டி ஸ்ருஷ்டியின்பாற் படும். ஆற்று உழி - ஆற்றலில்; ஆற்று-ஆற்றல்: வல்லமைபெறல்: உழி - ஏழனுருபு. மாற்று உழி என்று பிரித்து, பூதங்கள் நான்கின் வலிமையையும் போக்கும்படியான திறத்தைப் பெற்றுவென்று உரைத்தலும் ஒன்று. பி - ம்:—[1]கடந்த. [2]ஆற்றல் வரும். [3]மாற்றலும், நண்ணுழி, அற்றுழி. (358)

114. மேவ ருந்தரு மத்துறை மேவினர்
ஏவ ரும்[1]பவத் தாலிழிந் தோர்களும்
தாவ ருந்தவ ரும்[2]பல தன்மைசால்
தேவ ரும்முளர் [3]தீமை திருத்தினர்.

(இ - ள்.) (இந்தப்பிரபஞ்சத்தில்), ஏவர்உம் - குற்றமுடையராயிருந்தவர்களிலும், பவத்தால் இழிந்தோர்கள்உம் - பிறப்பினால் தாழ்ந்தவர்களிலும்,—மேவு அருந் தருமம் துறை மேவினர் (உளர்) - சேர்தற்கு அரிய [மிகச்சிறந்த] தருமமார்க்கத்திற் சேர்ந்து நடந்தவருளர்: (அவ்வாறே), தா அருந் தவர்உம் - குற்றமில்லாத தவத்தைச் செய்தவர்களான முனிவர்களிலும், பல தன்மை சால் தேவர்உம்-பல வகைப்பட்ட குணங்கள் சிறந்த தேவர்களிலும், தீமை திருத்தினர் - தீயசெயல் செய்தவர்கள், உளர் - உள்ளனர்; (எ - று.)

இன்னார் நல்லனவே செய்வர், இன்னார் தீயனவே செய்வர் என்னும் நியதி யில்லையென்க. ஏவம் - குற்றம்; அதனையுடையவர், ஏவர்: ஏவஞ்செய்தவ ரென்க; 'தவர்' என்றாற்போல. பவத்தால் இழிந்தோர்கள் - இழிபிறப்பினர். தா - உரிச்சொல்; அழிவுமாம். தேவரும்முளர், மகரமெய் - விரித்தல். பின்வரும் 'தவர்' என்பதற்கு எதிராக 'ஏவர்' என்றும், 'தேவர்' என்பதற்கு எதிராக 'பவத்தாலிழிந்தோர்கள்' என்றுங் கூறினர். [3]'தீமை திருந்தினர்' என்ற பாடத்திற்கு - தீமைசெய்து பின்பு சீர்திருந்தப் பெற்றவரென்று உரைப்பர். பி - ம்:—[1]பலத்தால், பழியால். [2]தமதன்மை, அதன் தன்மை, மனத்தன்மை. 'தாவரும்பலநன்மையரீறுசால்' என்று சில பிரதிகளில் மூன்றாமடி. (359)

115. இனைய [1]தாதலி னெக்குலத் தியாவர்க்கும்
வினையி னால்வரு மேன்மையுங் கீழ்மையும்
அனைய தன்மை யறிந்து மழித்தனை
மனையின் [2]மாட்சியென் றான்மனு நீதியான்.

(இ - ள்.) இனையது ஆதலின் - (உண்மை) இத்தன்மையதாயிருத்தலால், எ குலத்து யாவர்க்குஉம் - எந்தக்குலத்திற் பிறந்த எவர்க்கும், மேன்மைஉம் கீழ்மைஉம் - உயர்வும் இழிவும், வினையினால் வரும் - (அவரவர்செய்யுஞ்) செயல்களாலேயே வரும்; அனைய

தன்மை அறிந்துஉம் - அத்தன்மையை (நீ) உணர்ந்திருந்தும், மனையின் மாட்சி அழித்தனை - (அயலான்) மனைவியின் கற்பையழித்தாய், என்றான் - என்றுசொன்னான்; (யாவனெனின்), மனுநீதியான் - மநு தருமசாஸ்திரத்திற் சொல்லப்பட்ட நீதிநெறிதவறாது நடப்பவனான ஸ்ரீராமபிரான்; (எ - று.)

வினை - கர்மம். நல்வினையால் மேன்மையும், தீவினையாற் கீழ்மையும் வருமென்க. மாட்சி - பெருமை; இங்கே, சிறப்பினால், கற்பையுணர்த்திற்று. பி - ம்:—[1] ஆகலின். [2] நீதி. (360)

வேறு.

116.—பிறகு வாலி வேறென்று வினவ, அதற்கு இலக்குமணன் விடைகூறத் தொடங்குதல்.

அவ்வுரை யமையக் கேட்ட வரிகுலத் தரசு [1] மாண்ட
செவ்வியோ யனைய தாக செருக்களத் [2] துருத்தெய் யாதே
வெவ்விய [3] புளிஞ ரென்ன [4] விலங்கியே மறைந்து வில்லால்
எவ்விய [5] தென்னை யென்று னிலக்குவ [6] னியம்ப லுற்றான்.

(இ - ள்.) அ உரை அமைய கேட்டு - அந்த (இராமபிரான்) வார்த்தை மனத்திற்பதியுமாறு கேட்ட, அரி குலத்து அரசுஉம் - குரங்குகளின் கூட்டத்திற்கு அரசனான வாலியும், (அவ்விராமனை நோக்கி,) 'ஆண்ட செவ்வியோய் - (எல்லாவுயிர்களையும்) ஆளுகின்ற நற்குணத்தை யுடையவனே! அனையது ஆக - அப்படியானால் ஆகட்டும்: [நீ கூறியபடி நான் தவறு செய்தவனென்பதை யொப்புக்கொள்கின்றேன் என்றபடி]: செருக்களத்து உருத்து எய்யாது - போர்க்களத்தில் முன் நின்று (என்மேல்) அம்பு தொடுக்காமல், வெவ்விய புளிஞர் என்ன - கொடிய வேடர்கள் (மறைந்து நின்று விலங்குகளின் மேல் அம்புதொடுத்தல்) போல, விலங்கி மறைந்துஏ - (எதிர்ப்படாமல்) விலகி மறைந்துநின்றே, வில்லால் எவ்வியது - வில்லைக்கொண்டு (என்மேல் அம்பு) செலுத்தியது, என்னை - என்ன காரணத்தால்?' என்றான் - என்றுவினவினான்; இலக்குவன் இயம்பல் உற்றான் - (அதற்கு) லக்ஷ்மணன் விடைகூறத் தொடங்கினான்; (எ - று.)— அதனை, மேலே காண்க.

'தன்னை வதைத்தது முறையே' என்று மனமொப்பிய வாலி 'மறைந்து எய்வானேன்? என்று வினவியதற்கு ஒரு போலிச்சமாதானத்தை இலட்சுமணன் கூறலானான்: இது பற்றியே இலட்சுமணன் பேச்சாகக் கவி வைத்தனர் போலும். இனி, அறிவிற் சிறந்த ஆதிசேடனின் அமிசமாதலின் அவனை விடையிறுக்க வைத்தார் எனலுமாம். அரசு மாண்ட என்று பிரித்தால், 'மாண்ட' என்பதற்கு - மாட்சிமைப்பட்ட என்று பொருளாம்: 'ஆக' என்பது - வியங்கோள் முற்று; 'அனையதாகச் செருக்களத்து' என்று வலிமிக்க பாடத்திற்கு, ஆக - செயவெனெச்சம்; அவ்வாறாயின் என்று பொருள். உருத்தல் - உருவங்காட்டுதல்.

எவ்வியது - (அம்பை) ஏவியது. இலக்குவன்=லக்ஷ்மண னென்ற சொல் - சகலலக்ஷணங்களும் பொருந்தியவனென்றும், லக்ஷ்மியோடு [இராமனுக்கு அடிமைசெய்தலாகிய செல்வத்தோடு] கூடியவனென்றும் காரணப்பொருள்பெறும். பி - ம்:—[1] ஆன்ற. [2] உருச்செயாதே, எதிர்த்தெய்யாதே, எதிர்செய்யாதே. [3] புளிகன். [4] விலங்கினே. [5] என்கொலென்றான். [6] விளம்பலுற்றான். (361)

117.—இலக்குமணன் கூறிய விடை.

முன்புநின் தம்பி வந்து சரண்புக முறையி லோயைத்
தென்புலத் [1] துய்ப்பெ னென்று செப்பினன் செருவில் நீயும்
அன்பிணே யுயிருக் [2] காகி யடைக்கல [3] மியானு மென்றி
என்பது கருதி யண்ணன் மறைந்துநின் றெய்த தென்றான்.

(இ - ள்.) நின் தம்பி முன்பு வந்து சரண் புக-உன் தம்பியான சுக்கிரீவன் முதலில் வந்து சரணமடைய, (அப்பொழுது ஸ்ரீராமன்), முறைஇலோயை-நீதிநெறியில்லாதவனான உன்னே, தென்புலத்து உய்ப்பென் என்று செப்பினன் - கொல்லுவதாக (அவனுக்கு) வாக்குதத்தஞ் செய்தருளினன்; (பிறகு), 'நீயும்—, செருவில் - போரில், உயிருக்கு அன்பிணே ஆகி - (உனது) உயிரினிடத்து அன்புடையையாய், யானும் அடைக்கலம் என்றி - நானும் (உனக்கு) அடைக்கலம்' என்று சொல்லுவாய், என்பதுகருதி - என்பதை எண்ணியே, அண்ணல் - இந்த ஸ்ரீராமன், மறைந்து நின்று எய்தது - (உனது எதிரில் நில்லாமல்) மறைந்துநின்று அம்பெய்தது, என்றான்-என்று (இலக்குமணன் வாலிக்கு) விடை கூறினான்; (எ - று.)

பெருமாள் வாலியை எதிரில்வந்து வதை செய்யாதது ஏனெனின்,—அவர் முதலில் தம்மைச்சரணமடைந்த சுக்கிரீவனுக்கு அப்பொழுது அபயமளித்து வாலியைக்கொன்று உதவுவதாகப் பிரதிஜ்ஞைசெய்தனர்; பிறகு வாலியினெதிரில்வந்து போர்செய்தால் வாலியும் போரில் தமது திறத்தைக்கண்டு அஞ்சித் தன்னுயிர் பாதுகாத்துக்கொள்ளுங் கருத்தினால் சரணமடைந்திடுவனாயின், பின்பு, தஞ்சமடைந்தவர்களைக் கொலைசெய்யக் கூடாமையால் முன்செய்த பிரதிஜ்ஞை தவறிப்போய்விடும் என்ற கருத்துக் கொண்டே பேராற்றலை யுடையரான பெருமாள் வாலியின்கண்ணெதிரில் தோன்றிப் பொராமல் மறைந்துநின்று அம்பெய்தனரென்க. இராமபிரான் வாலியுடன் பொரவில்லையென்றும், அவன் செய்த தீச்செயலுக்குத் தண்டனையே புரிந்தாரென்றும், தண்டனையை எவ்வாறும் செய்யலாமென்றும் தெரிவித்தவாறு.

தென்புலத்து உய்த்தல் - (உயிரை உடம்பினின்று ஒழித்துத்) தென்திசையிலுள்ளவனான யமனிடத்துச் செலுத்துதல். 'என்றி' என்ற முன்னிலையொருமைமுற்றில், இகரவிகுதி - எதிர்காலங்காட்டிற்று; ற் - எழுத்துப்பேறு. அண்ணல்-தலைவனென்றும், பெருமை

யிற் சிறந்தவனென்றும், தலைவனென்றும் பொருள்படும். அண்ணன் என்று எடுத்தும் உரைக்கலாம். எய்தது - தொழிற்பெயர், வினைமுற்றின் தன்மை யடைந்தது. இனி, எய்தது கருதி (ஆம்) என்று இயைத்துப் பொருள்கொள்ளவுமாம். பி - ம்:—[1] உய்ப்பன். [2] ஆக. [3] என்று கூறும், யானுமென்பாய். (362)

118.—வாலி சமாதானமடைந்து ஸ்ரீராமனை வணங்குதல்.

[1] கவிகுலத் தரசு மன்ன கட்டுரை [2] கருத்திற் கொண்டான்
அவியுறு மனத்த னாகி [3] யறத்திற னழியச் செய்யான்
[4] புவியுடை யண்ண [5] லென்ப [6] தெண்ணினன் பொருந்தி முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் [7] சென்னியி னிறைஞ்சிச் சொன்னான்.

(இ - ள்.) முன்னே செவியுறு கேள்வி செல்வன் - முன்னமே [இளமையிலேயே] (பலபெரியோர்கள் பக்கல்) கேட்டுஉட்கொண்ட நூற்கேள்விகளாகிய செல்வத்தை யுடையவனான, கவி குலத்து அரசு உம்-குரங்குகளின் கூட்டத்திற்கு அரசனான வாலியும், அன்ன கட்டுஉரை - (இளையபெருமாள் சொன்ன) அந்தத் தகுதியான வார்த்தையை, கருத்தில் கொண்டான் - மனத்திற் கொண்டவனாய், 'புவியுடை - உலகத்திற்கு உரிய, அண்ணல் - பெருமையிற் சிறந்தவனான இராமன், அவியுறு மனத்தன் ஆகி - (துயரத்தினால்) முறிந்த மனத்தை யுடையவனாய், அறம் திறன அழிய - தருமமார்க்கம் அழியும்படி, செய்யான் - தொழில்செய்யமாட்டான், என்பது எண்ணினன் - என்பதைக் கருதியவனாகி,—பொருந்தி - அடங்கி, சென்னியின் இறைஞ்சி - (இராமபிரானைக்குறித்துத்) தலைவணங்கி, (நமஸ்கரித்து), சொன்னான் - சொல்பவனானான்; (எ-று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

அறிவை யுண்டாக்கி வளர்ப்பனவான நூற்கேள்விகளை முன்னமேயுடையவனாதலால், இராமலக்ஷ்மணர் சொன்ன சமாதானங்களை உளங்கொண்டு, தான் குற்றஞ்செய்தவனாதலால் தன்னியல்பாக அறக்கடவுள் தன்னைத்தண்டித்தது என்று தனது சிற்றமொழிந்து, இராமபிரானடியில் தனது முடிபடும்படிவிழுந்து ஸாஷ்டாங்கநமஸ்காரஞ் செய்யமாட்டாமையால், தனதுதலைவணக்க மாத்திரத்தில் அவ்வந்தனக் குறிப்பைத் தெரிவித்தனன் வாலியென்க. 'முன்னேசெவியுறு கேள்விச் செல்வன்' என்ற அடைமொழி - இங்ஙனம் ஒருகருத்தையுட்கொண்டதனால், கருத்துடையடைமொழியணி. "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம், செல்வத்துளெல்லாந் தலை" என்ற திருக்குறளும், அதனுரையிற் பரிமேலழகர் 'செவியான்வருஞ் செல்வம் - கேள்வியான் எல்லாப்பொருளையும் அறிதல்' என்றதும் இங்கு நோக்கத்தக்கன. முன்னே செவியுறு கேள்விச் செல்வன் என்பதற்கு - முன்னமே பகவான் இராமனாகத் திருவவதரித்திருக்கின்றானென்று செவியுற்ற கேள்விச் செல்வத்தையுடையவனான வாலி என்றுஉரைப்பாருமுளர். [1] கவிகுலத்தரசு மன்னன் கட்டுரை என்ற

பாடத்திற்கு, மன்னன் - க்ஷத்திரியகுலத்தில் அவதரித்தவன் என்றேனும், அன்னன் என்று பிரித்து, அவனென்றேனும் பொருள் கொள்க. கட்டுரை - ஏற்றசொல். 'அவியுறு மனத்தனுகி' என்பதற்கு-தாபங்கொண்ட மனத்தவனு யென்றும், சமாதானங் கொண்ட மனத்தையுடையவனு யென்றும், 'பொருந்தி' என்பதற்கு-(அந்தச் சமாதானவார்த்தைகள் தகுதியாமென்று)சம்மதித்து என்றும் பொருள் கொள்வாருமுளர். அவிதல்-முறிதல், தபித்தல், அமைதல், தணிதல். உறு - துணைவினை. பி - ம்:—[2] மனத்திற். [3] அறத்திினின்று. [4] புவியிடை. [5] என்ன. [6] எண்ணிினிற்பொருந்த..., எண்ணினன்பொருமி விம்மி. [7] சென்னியை. (363)

119.—தனது குற்றங்களைப் பொறுத்தருளுமாறு வாலி இராமனை வேண்டுதல்.

தாயென வுயிர்க்கு நல்கித் தருமமுந் தகவுஞ் சால்பும்
நீயென நின்ற[1] நம்பி [2]நெறியினி னேக்கு நேர்மை
நாயென நின்ற [3]வெம்மால் நவையற [4]வுணர லாமே
தீயன பொறுத்தி யென்ருன் சிறியன சிந்தி யாதான்.

(இ - ள்.) 'தாய் என உயிர்க்கு நல்கி - தாய்போல உயிர்கள் பக்கல் அன்பு செய்து, தருமம்உம் தகவுஉம் சால்புஉம் நீ என நின்ற- தருமமும் நடுவுநிலைமையும் நற்குணநிறைவும் நீயேயென்று சொல்லும்படி நின்ற, நம்பி - புருஷோத்தமனே! நெறியினின் நோக்கும் நேர்மை - (வேதசாஸ்திரங்களிற் கூறிய) சன்மார்க்கப்படி (நீ) பார்க்கும் நேர்வழியை, நாய் என நின்ற எம்மால் - நாய்போல எளியராய் நின்ற எங்களால், நவை அற உணரல் ஆமே - குற்றங்களில்லாமலறிதல் முடியுமோ? தீயன பொறுத்தி - (என்னுடைய) தீயசெயல்களைப் பொறுத்தருள்வாய்,' என்ருன் - என்று (இராமபிரானை நோக்கிச்) சொன்னான்; (யாவனெனில்),—சிறியன சிந்தியாதான் - சிறிய எண்ணங்களைக் கொள்ளாதவனான் வாலி; (எ - று.)

தருமாதிசொரூபியான புருடோத்தமனே! கடையோமான எங்களுக்கு வேதநுண்பொருளை உணர்கை இயலாதாதலால், தாய்போல் இன்னருள் சுரக்கும் நீ என் குற்றத்தைப்பொறுக்க வேணுமென்று வாலி வேண்டுகின்றனனென்பதாம். தாயென வுயிர்க்குநல்கி— "தாயொக்குமன்பின்" என்றது காண்க. தருமமும் தகவும் சால்பும் நீயென நின்ற - இவனல்லாது இவ்வுலகில் தருமம் முதலியன வேறு இல்லையென்னும்படி அவற்றின் சொரூபமாய் நின்ற என்றபடி; தருமம்முதலியன சிறிதுந்தவருமல் அவற்றை முழுவதும் நடப்பிப்பவனென்ற கருத்தினல், இங்ஙனம் ஒற்றுமைநயம்படக் கூறியது. தகவு - தகுதி; இது நடுவுநிலைமை யாதலை, "தக்கார் தகவிலர்" என்ற திருக்குறளிலுங் காண்க. சால்பு - பல நற்குணங்களால் நிறைதல், குணபூர்த்தி. நம்பி - ஆண்மைவிளி. மூன்ருமடியி னீற்றில், ஏ -

வினை. பிறர்குணங்களைக் குற்றமாகக் கொள்ளுதல், தாம்பிடித்ததே சாதிப்போமென்னும் தருக்கு, மனம்வேறு சொல்வேறு தொழில் வேறுதல் முதலிய கீழ்மக்கட் டன்மை யில்லாதவ னென்பது, 'சிறியனசிந்தியாதான்' என்றன் பொருள்; ஆனதுபற்றியே, அபராத க்ஷாமணம் வேண்டுகின்றன னென்க. சிறியனசிந்தியாதான் என்ப தற்கு - அற்பசாரங்களான இவ்வுலக வின்பங்களைச் சிந்தித்தலை யொழிந்தவனென்னலுமாம். நெறியினில் உணரலாமே - நெறியினின் நோக்கும் நேர்வழியை எளியேமான எங்களால் தவறுமறப்பார்க்கமுடி யுமோ எனினும் அமையும். இனி இராமாயணசாரம் தொகுத்தவர் [2]'நெடிது நீ நோக்கு நோன்மை' எனப் பாடங்கொண்டு உரைத்த பொருளும், கருத்தும் வருமாறு:—சிறியன சிந்தியாதான் - (இராம னருளால் மெய்யுணர்வு பெற்றதனாற் பரலோக சம்பந்தமான மகத் தான எண்ணமுடையவனாய் இகலோகசம்பந்தமான) அற்பவிஷயங் களைப் பொருளாகக் கருதாதவனான வாலி,—'தாய் குழந்தைக்கு அன்பு செய்தல்போல உயிர்கட்கு அன்பு செய்து, நீதியும் (அதற்கு இன்றியமையாத) நடுவுநிலைமையும், (எங்கு நிகழ்வதையும் அறிதற்கு ஏற்பச்) சருவ வியாபகத்துவமும் நீயேயென்னுமாறு சருவ சாட்சி யாய் நின்ற புருஷோத்தமனே! முன்வினை நெடுங்காலத்துக்குப்பின் பயன் விளைத்தலை நெடுங்காலமும் நோக்கி அறிந்து நீதி செலுத்தும் பேரறிவுடைய உனது வல்லமை எம்மால் ஐயந்திரிபு அற அறிய லாகாது. அதனை நீ அளித்த தத்துவஞானத்தால் தெரிந்துகொண் டேன். இதற்குமுன் அறியாமையால் யான் செய்த குற்றங்களைப் பகுத்தறிவில்லாத குரங்குசெய்தன எனக் கருதிப் பொறுத்தருள் வாயாக' என்று கூறினான். சருவலோக நியாயாதிபதியான இறை வன் [கடவுள்] எவ்வுலகிற் பிறந்தாரும் வாக்குக்காயங்களாற் செய்யும் நன்மை தீமைகளுக்கேயன்றி, மனத்தாற் செய்யும் நன்மை தீமை கட்கும் முறையே நற்பயன் தீப்பயன்களை யருள்பவனென்பது போதர, 'தருமம் (நீதி)...நீ என நின்ற நம்பி என்றானென்க' என்பது. பி - ம்:—[1]நம்ப. [3]எம்மால். [4]உணரலாமோ, உணரற்பாற்றோ. (364)

120.—வாலி மற்றும் பிரார்த்தித்து வேறு சில கூறத் தொடங்குதல்.

இரந்தனன் பின்னு [1]மெந்தை யாவது மெண்ணல் தேற்றுக்
குரங்கெனக் கருதி நாயேன் கூறிய [2]மனத்துக் கொள்ளேல்
அரந்தைவெம் [3]பிறவி யென்னோய்க் கருமருந் தனைய வையா
வரந்தரு வள்ளா லொன்று கேளென [4]மறித்துஞ் சொல்வான்.

(இ - ள்.) (வாலி), பின்உம் இரந்தனன் - மற்றும் (இராம பிரானைப்) பிரார்த்திப்பவனாய்,—'எந்தை - எமது தலைவனே! யாவது உம் எண்ணல் தேற்றா குரங்கு என கருதி - எதையும் ஆராய்ந் தறியமாட்டாத குரங்கென்று (என்னைத்) திருவுள்ளம்பற்றி, நாயேன் கூறிய - நாய்போற் கடைப்பட்டவனான எளியேன் (உன்னைக் குறித்து நிந்தனையாகச்) சொன்ன சொற்களை, மனத்து கொள்

ளேல் - மனத்திற்கொள்ளாதே: அரந்தை - வருத்தத்தைச் செய்கின்ற, என் பிறவி - எனது பிறப்பாகிய, வெம் நோய்க்கு - கொடிய வியாதிக்கு, அரு மருந்து அனைய - அருமையான ஒளடதம் போன்ற, ஐயா - சுவாமி! வரம் தரு - (வேண்டியவர்க்கு வேண்டிய) வரங்களை (எல்லாம்) கொடுத்தருள்கின்ற, வள்ளால் - வரையாதருளுமியல்பினனே! ஒன்று கேள் - நான் செய்வதொரு விண்ணப்பத்தைக் கேட்டருள்வாய்,' என - என்றுசொல்லி, மறித்துஉம் சொல்வான் - மீளவும் கூறுபவனானான்; (எ - று.)—அவற்றை, அடுத்த கவி முதல் ஏழுகவிகளிற் காண்க.

சுக்கிரீவன் விஷயமாகத் தான் செய்த குற்றங்களுக்காகக் கீழ்க்கவியிலும், இராமபிரானைத் தான் பழித்தவற்றிற்காக இக்கவியிலும் பொறைவேண்டினனென வேறுபாடுஉணர்க. குரங்கு ஒரு நிலை கொள்ளாத சபலசித்தத்தை யுடைமையால், அதற்கு 'யாவதுமெண்ணல்தேற்று' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. பிறப்பையொழித்து எனக்கு முத்தியைத் தந்தருள்பவனே யென்பது, மூன்றுமடியின் பொருள். அரு மருந்து - கிடைத்தற் கரிய மருந்து. எளிதிற் பெறவொண்ணுதமருந்து, பெரும்பேருகக் கிடைத்த மருந்து. எந்தை - அண்மைவிளி. நாயேன் கூறிய மனத்துக்கொள்ளேல் - எளியேன் சொன்ன பழிமொழிகளைக் குறித்து உன் திருவுள்ளத்திற் சீற்றங் கொள்ளாதே யென்றவாறு. பி - ம்:—[1]எந்தாய். [2]மனத்தும், மனத்தில். [3]பிறவிநோய்க்கும், பிறவிவெந்நோய்க்கு. [4]மறுத்தும், மற்றும். (365)

வேறு.

121.—வாலி இராமபிரானைத்துதித்து ஒருவரம் வேண்டுதலை இதுமுதல் ஏழுகவிகள் கூறும்.

ஏவுகூர் வாளியா [1]லெய்துநா யடியனேன்
ஆவிபோம் வேலைவா யறிவுதந் [2]தருளினாய்
மூவர்நீ [3]முதல்வனீ முற்றுநீ மற்றுநீ
பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ.

(இ - ள்.) ஏவு கூர் வாளியால் - தொடுத்துச்செலுத்திய கூரிய அம்பினால், எய்து - (என்னை) அடித்து, நாய் அடியனேன் ஆவி போம் வேலைவாய் - நாய்போற் கடைப்பட்டவனான அடியேன் உயிர் நீங்குஞ் சமயத்தில், அறிவு தந்தருளினாய் - தத்துவஞானத்தை (எனக்குக்) கொடுத்தருளினாய்; மூவர் நீ - (பிரமவிஷ்ணுருத்திரரென்னும்) திரிமூர்த்திகளும் நீயே, முதல்வன் நீ - அவர்கட்கெல்லாம் ஆதிகாரணனான ஸ்ரீமந்நாராயணனும் நீயே: பாவம் நீ தருமம் நீ - பாவமும் நீயே தருமமும் நீயே; பகைஉம் நீ உறவுஉம் நீ - பகையானவனும் நீயே உறவுமுறையுடையானும் நீயே: மற்றுஉம் நீ - மற்றும் உள்ளன நீயே: முற்றும்உம் நீ - யாவும் நீயே; (எ - று.)

எய்தல் - நால்வகை யூறுபாட்டி லொன்று; அவை - எறிதல் குத்தல், வெட்டல், எய்தல் என்பன. 'நாயடியனேன் - நாய்போற் கடைப்பட்ட அடியேன்: தன்னையுடையான் "எறிந்தவேல் மெய்ய தாக வால்குழைக்கும் நாய்" போல நீ எறிந்தவாளி மெய்யதாக அகங் குழையும் அடியேன்'. இங்கு நாய்—தாழ்மை நன்றியறிவுடைமை இரண்டையும் குறிப்பதுமாம். இராமபாணம்பட்டதனால் உயிர்நீங்குஞ் சமயத்தில் தத்துவஞானமடைந்து, அதனால் அப்பெருமான் ஜகத் காரணனும் ஸர்வவியாபியும் எல்லாப்பொருட்கும் நிர்வாஹகனுமான ஸ்ரீமந்நாராயணனென்பதை யுணர்ந்து துதிக்கிறான். 'மூவர்' என்றது - படைத்தல்தொழில் செய்யும் பிரமதேவன், காத்தல்தொழில் செய்யும் மகாவிஷ்ணுவாகிய உபேந்திரமூர்த்தி, அழித்தல்தொழில் செய்யும் உருத்திரமூர்த்தி என்பவர்களை. இவர்கள் ஸ்ரீமந்நாராயண னது சொரூபமென்பதை "இருகூலமும் பொருமாநீ ரரங்கத்தி லெந்தை யந்தண், முருகூர் கமலமுனியாய்வகுக்கு முறைமையினாற், புருகூதனுக்குத் திருத்தம்பியாகிப் புரக்கு முமை, யொருகூறு கொண்டவனாயழிக்கு முகாந்தத்திலே" என்பதனாலும் அறிக. 'முதல் வன்' என்றது, எல்லாவுருவங்கட்கும் மூலமாய்ப் பரமபதத்திலெழுந் தருளியிருக்கின்ற ஆதிமூர்த்தியை. இனி, திருப்பாற்கடலி லெழுந் தருளியிருக்கின்ற திருமாலின் வியூகமூர்த்திகளாகிய வாசுதேவன் சங்கர்ஷணன் பிரத்யும்நன் அநிருத்தன் என்ற நால்வருட் பிரதான மூர்த்தியான வாசுதேவன் பிரம விஷ்ணு ருத்ரரூபிகளாய்ப் படைத் தல் காத்தல் அழித்தல் தொழில்களைச் செய்யும் மற்றைமூவர்க்குங் காரணனாதலால் அவ்வாசுதேவனை 'முதல்வன்' என்றும், மற்றை யோரை 'மூவர்' என்றும் கூறியதாகவும் கொள்ளலாம். ஒன்றற்கு ஒன்று மாறான புண்ணியபாவங்கள் பகையுறவுகள் இவைகட்கெல் லாம் தலைவனாகி நடத்துபவனென்பது 'பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ' என்றது: "புண்ணியம் பாவம் புணர்ச்சிபிரிவென்றிவை யாய்," "நல்குரவுஞ் செல்வும்நரகுஞ்சுவர்க்கமுமாய், வெல்பகையு நட்பு விடமும் அமுதமுமாய்ப், பல்வகையும் பரந்த பெருமா னென்னையாள் வான்," என்று நம்மாழ்வாரருளிச் செய்திருத்தலுங் காண்க. 'நஞ்ச மும் அமுதமும் தோன்றுதற்கு இடமாகவுள்ளவன் இறைவன். முறை தவறி முயன்றபோது விடத்தையும், முறையாகமுயன்றபோது அமிழ் தத்தையும் தேவர்கட்குத் திருப்பாற்கடல் கொடுத்தாற்போல, சீவர் கட்கு இறைவன் அவர்கள் பாவஞ் செய்தபோது பாவபலனையும் புண்ணியஞ்செய்தபோது புண்ணிய பலனையும் தருவானென்ப. இறைவனமிசங்களாய்ப் பாவபுண்ணியங்களும், பகைநட்புக்களும் உள்ளன' என்று கூறினருமுளர். "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்றபடி ஸகலசேதநா சேதநங்களின் உள்ளும் புறம்பும் எம்பெரு மான் வாசியறக் கலந்து நிற்றலால், 'மற்றுநீமுற்றும்நீ' என்றான்: இத்தொடர்க்கு - அறியப்பட்ட பொருள்களனைத்தும்நீயே, அறியப் படாத மற்றைப் பொருள்களும் நீயே என்று உரைப்பாருமுளர்.

பி - ம்:—[1]வந்து. [2]அருளினை, உதவினாய். [3]மற்றுநீ முற்றுநீ முதல்வனீ. (366)

122. புரமெலா மெரிசெய்தோன் முதலினோர் பொருவிலா
வரமெலா முருவியென் [1]வசையிலா வலிமைசால்
உரமெலா [2]முருவியென் [3]னுயிரெலா நுகருநின்
சர[4]மலாற் பிறிதுவே றுளதரோ தருமமே.

(இ - ள்.) புரம் எலாம் எரிசெய்தோன் முதலினோர் - திரிபுரங்களையும் எரித்திட்டவனான சிவபிரான் முதலிய தேவர்கள்,(எனக்குத் தந்தருளிய), பொருவு இலா வரம் எலாம் - ஒப்பில்லாத வரங்களெல்லாவற்றையும், உருவி - இடையேபுகுந்து பழுதுபடச் செய்தும், என் - எனது, வசை இலா வலிமை சால் - குற்றமில்லாத வலிமை மிக்க, உரம் எலாம் - மார்பு முழுவதையும், உருவி-நுழைந்து துளைத்தும், என் உயிர் எலாம் நுகரும் - எனது உயிர் முழுவதையும் உட்கொண்ட, நின் சரம் அலால் - உனது அம்பேயல்லாமல், பிறிது வேறு தருமம் - தனியே வேறுயுள்ள தருமமென்பது, உளது ஏ - இருக்கின்றதோ? [இல்லை யென்றபடி];(எ-று.)—ஈற்றேகாரம் - வினா. அரோ - அசை.

தருமந்தவறியவர்களைத் தவறுது தண்டித்துத் தருமத்தைப் பரிபாலிப்பதனால், உனது அம்பு தருமவடிவமேயாவ தென்பதாம். நான் செய்த பிழைகட்கு உன்சரத்தால் எனக்குத் தண்டனை கிடைத்தது; என்னை நீ அம்பு எய்ததில் யாதொரு தவறுமில்லை யென்று இசைந்தானும். முதலினோர் வரம் எனறும், என் உரம் என்றும் இயையும். உருவுதல் - தைத்து முழுவதுந் துளைத்துக் கொண்டு செல்லுதல், புதைந்தோடல். வரங்களை ஒருவாறு ஒதுக்கிவிட்டதே, இங்கே 'வரமெலாம் உருவி' எனப்பட்டது. வலிமைக்கு வசை - போரில் தோற்றல், 'எலாம்' என்றது - முதலிரண்டடிகளில் பொருளின் பன்மை குறித்தும், மூன்றுமடியில் ஒருபொருளின் பலவிடங்குறித்தும் நின்றது. 'உயிர் நுகரும்' என்றது - உயிரைக் கவர்ந்துகொண்ட அதாவது உயிரை உடம்பினின்று ஒழித்த என்றபடி; உண்ணுதது உண்பதுபோலவும், உண்ணப்படாதது உண்ணப்படுவது போலவுஞ் சொல்லப்பட்ட மரபுவழுவமைதி. பி - ம்:—[1]வகையிலா, வலியிலா, வகையினர். [2]உருவிவந்து. [3]உயிரினூண். [4]அலாதுலகில். சில பிரதியில் இச்செய்யுள். "ஏவுகூர்" என்பதற்கு முன். (367)

123. மாவலச் சூலியார் வாழ்த்துநர்க் குயர்வரம்
ஓவலற் றுதவனின் ஞெருதனிப் பெயரியம்பு
ஆவலிப் புடைமையா லாகுமப் பொருளையாம்
தேவநிற் கண்டவெற் கரிதெஞே தேரினே.

(இ - ள்.) தேவ - சுவாமி!—தேரின் - ஆலோசிக்குமிடத்து,—மா வலம் சூலியார் - மிக்க வலிமையையுடைய சூலாயுதத்தையுடையவரான சிவபிரான், வாழ்த்துநர்க்கு - (தன்னைத்) துதித்தவர்கட்கு,

உயர் வரம் - சிறந்த வரங்களை, ஓவல் அற்று உதவல் - ஒழிவில்லாமற் கொடுத்தல், நின் ஒரு தனி பெயர் இயம்பு ஆவலிப்பு உடைமையால் ஆகும் - உனது ஒப்பற்ற திருநாமமொன்றைக் கூறும் பேரன்பையுடைமையினாலாகும்: (என்றால்), அ பொருள் நின்னை - அந்தப் பெயர்க்குரிய பொருளாகிய உன்னை, கண்ட - பிரதியக்ஷமாகத் தரிசித்த, எற்கு - எனக்கு, அரிது - பெறுதற்கு அரிய பொருள், என் ஆம்ஓ - யாதாகுமோ? [யாதுமில்லை யென்றபடி];)எ - று.)

நினது திருநாமத்தை உச்சாரணம் செய்து வருகின்றதன் பலத்தாற் சிவபிரான் தன்னைத் துதித்தவர்கட்கெல்லாம் வேண்டிய வரங்களைத் தவறுமற் கொடுத்து வருகின்றனனென்றால், அப்படிப்பட்ட திருநாமமகிமையையுடைய உன்னையே நேரில் தரிசித்தவனான எனக்குப் பெறுதற்கு அரிய பேறு உண்டோ? என்பதாம். இங்ஙனம் ஒருபொருளைச் சொல்லி அதுகொண்டு கைமுதிக நியாயத்தால் மற்றொருபொருளைச் சாதித்தல் - தொடர் நிலைச் செய்யுட்பொருட்பேறணி; (கைமுதிகநியாயமாவது - "மங்கை முகம் திங்களையே வாட்டிற்று அறைகுவதென், பங்கயமென் போது படும் பாடு" என்றாற்போல, 'சொல்ல வேண்டுவதென்ன?' என்னும் வாய்பாடு அமையக் கூறுதல்.) "ராம என்ற திருநாமம், திருமாலின் ஸஹஸ்ரநாமங்களுக்கும் ஸமமானது" என்று சிவபிரான் உமாதேவிக்கு உபதேசித்தருளியதும், காசியில் இறக்கும் பிராணிகட்கு உயிர்நீங்குஞ்சமயத்திற் சிவபிரான் தாரக மந்திரமான ராமநாமத்தை வலச்செவியில் ஓதுதலால் அவ்வுயிர்கள் யாவும் முத்தி பெறுகின்றன என்பதும் முதலியன உணரத்தக்கன. இக்கம்பராமாயணத்தின் முதலிற் காணப்படுகின்ற தனியன்களுள் ஒன்றில் "சம்பநாடன்னுமைசெவிசாற்று பூங், கொம்பனுடன் கொழுந னிராமப்பேர்" என்றதும், "சீராமவென்றொரு காலுரைத்தா லுன்தன் திருநாமமாயிரத்துக் கிணையா மென்றே, நீராருஞ் சடையான் பாகத்துமைக்கு நிகழ்த்திடி லம்மந்திரத்துக் கிணையொன்றுண்டோ, பாராருமதுதனையுச்சரித் தீடேற" எனப் பின்னோர்கூறியதுங் காண்க.

ஆவலிப்பு-செருக்கு எனினுமாம்; "மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ நின்நாமங்கற்ற, ஆவலிப்புடைமைகண்டாய் அரங்கமாநகருளானே" என்றவிடத்துப்போல. 'அப்பொருளை நின்' என்றது அப்பொருள் நின்னை யென்று உருபு பிரித்துக்கூட்டப்பட்டது. இனி, 'அப்பொருளை' என்பதற்கு - அப்பொருளாகின்றாய் நீ யென்று உரைத்தலுமாம்; அவ்வுரைக்கு 'பொருளை' என்றதில், ஐகாரம் - முன்னிலை விளக்கிநின்றதெனக. ஓவல் - ஒருவல் என்பதன் மரூஉ. இனி, பொருள் என்பதில் ஐகாரத்தை அசையாகக்கொண்டு, அப்பொருள் ஆம் தேவ - அப்பொருளே யாகின்ற தேவனே! என்று உரைப்பினுமாம். இச்செய்யுள் பல ஏட்டுப்பிரதிகளில் இல்லை. (368)

124. [1]யாவரும் மெவையுமா யிருதுவும் பயனு[2]மாய்ப்
பூவுநல் வெறியுமொத் [3]தொருவரும் பொதுமையாய்
[4]யாவனீ யாவதென் றறிவினு ரருளினர்
தாவரும் பதமெனக் கருமையோ தனிமையோய்.

(இ - ள்.) யாவர்உம் - எல்லா வுயர்திணைப்பொருள்களும், எவைஉம் - எல்லா அஃறிணைப்பொருள்களும், ஆய் - ஆகியும், இருதுஉம் - (வசந்தருது முதலிய அறுவகை) ருதுக்களும், பயன் உம் - (அந்த ருதுக்களிலுண்டாகின்ற) பலன்களும், ஆய் - ஆகியும், பூஉம் நல்வெறிஉம் ஒத்து - பூவையும் அதனிடத்தேயுள்ள நல்ல மணத்தையும் போல, ஒருவுஅரும் பொதுமையாய் - (எல்லாப்பொருளிலும்) விட்டு நீங்காமற் கலந்து (அனைத்திற்கும்) பொதுவாயுள்ளவனே! தனிமையோய் - ஒப்பற்றவனே! நீ யாவன் யாவது என்று-நீ யாரென்றும் (உனது தன்மை) ஈதென்றும், அறிவினர் அருளினர்- (எனக்கு) அறிவு (உண்டாகித்) தெரிவித்தது: (ஆதலால்), தா அரும் பதம் எனக்கு அருமைஓ - அழிவில்லாத பரமபதம் [முத்தி] எனக்குக் கிடைப்பது அருமையாமோ? [ஆகாதென்றபடி]; (எ - று.)

எல்லாச் சேதநாசேதநங்களின் உள்ளும் புறம்பும் எம்பெருமான் வாசியறக்கலந்து நிற்றலால், "யாவரும் எவையுமாய்" எனப்பட்டது; "யாவையும் யவருந் தானுய்" என்றார் நம்மாழ்வாரும். 'இருதுவும் பயனுமாய்' என்றது, காரணங்களும் காரியங்களும் அவனே யென்றதை விளக்கும். 'பூவும் நல்வெறியுமொத்து ஒருவுஅரு' என்பதற்கு- மலரில் மணம்போல விடாமல் எல்லாப்பொருளிலும் எங்கும் வியாபித்திருப்பவனென்று கருத்து. சிறந்த பொருளோடு இழிந்த பொருளோடு வாசியற எங்கும் ஒருதன்மையாயிருத்தல் பற்றி, 'பொதுமையாய்' என்றனன். நீ இன்னுனென்றும் உனது தன்மை இது வென்றும் அறியும்படி உன் திருவருணோக்கத்தினல் எனக்குத் திவ்விய ஞானம் தோன்றியதனுல், இனிப்பரமபதங்கிடைப்பது எளிதென்பதாம்; "கற்றீண்டுமெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டு வாரா நெறி" என்பது காண்க.

'யாவர்' என்றது - மக்கள் தேவர் நரகரையும், 'எவை' என்றது -மற்றை உயிருள்ளவற்றையும் உயிரில்லாதவற்றையும் குறிக்கும். சிறப்புத் தோன்ற, உயர்திணையாக்கி 'அறிவினர் அருளினர்' என்றான்: உயர்த்திச் சொல்லுதல்பற்றிவந்த திணைவழுவமைதி. பி-ம்:— [1]யாவையும். [2]மென். [3]அறிவரும் பொதுமையால். [4]ஆவனென்றறியவென். (369)

125. உண்டெனுந் தருமமே யுருவமா [1]யுடையநிற்
[2]கண்டுகொண் டேனினிக் காணவென் கடவதே
பண்டொடின் [3]றளவுமே யென்பெரும் [4]பழவினை
தண்டமே யடியனேற் [5]குறுபதந் [6]தருவதே.

(இ - ள்.) உண்டு எனும் - அழிவற்றதென்று (நூல்களிற்) கூறப்படுகின்ற, தருமமே - தருமத்தையே, உருவம் ஆய் உடைய - வடிவமாகக்கொண்டுள்ள, நின் - உன்னை, கண்டுகொண்டேன் - தரிசிக்கப்பெற்றேன்; இனி என் காண கடவென்கொ - இனி எந்தப் பொருளைக் காணவேண்டியவனா யிருக்கின்றேன்! [ஒன்றையுங் காணக்கடவேனல்லே னென்றபடி]; என் பெரும்பழவினை - எனது பெரியதும் தொன்றுதொட்டுவருவதுமான கருமம், பண்டொடு இன்று அளவு உமே - முன்னேதொடங்கி இன்றைவரையிலுமே (உள்ளது) [இனி இல்லை]; (ஏனென்றால்), தண்டமே - (எனது தீவினைகட்கு நீ செய்தருளிய) இத்தண்டனை தானே, அடியனேற்கு - அடியேனுக்கு, உறு பதம் தருவதுவே - நல்ல பதவியை [பரமபதத்தை]த் தருவதாகுமே! (எ - று.)

இராமபிரான் தருமஸ்வரூபி யென்பது, முதலடியில் விளங்கிற்று. முதல் வாக்கியம் - கண்படைத்த பயனாகக் காணவேண்டிய பரம்பொருளாகிய உன்னைக் காணப்பெற்றே னாதலால், இனி யான் காணவேண்டியதாக வேறொரு பொருளுமில்லை யென்றவாறும். பிறப்பு அநாதியாய் வருதலாற் பலபிறப்புகளிற் காரண காரியத் தொடர்ச்சியாய்ச் செய்து சேர்க்கப்பட்ட பலகருமங்கள், 'பெரும் பழவினை' எனப்பட்டன. அங்ஙன் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளால் அனுபவிக்கப்பட்டனவும் [ஸஞ்சிதமும்] பிறந்த இவ்வுடம்பால் முகந்துநின்றனவும் [பிராரப்தமும்] ஒழிய, பின்னும் அநுபவிக்கக்கடவனவாய்க் கிடந்தன [ஆகாமியம்] விளக்கின்முன் இருள்போல எம்பிரானருளாற் கெடுதலால் 'பண்டொடின்றளவுமே என்பெரும் பழவினை' என்றான். எம்பெருமானாற் கொல்லப்பட்டவர் வீடுபெறுவ ரென்னுந் துணிவு பற்றி. 'தண்டமே அடியனேற்கு உறுபதந்தருவதே' எனப்பட்டது: மேல் 134 - ஆங் கவியையுங் காண்க. இனி, 'பழவினைத் தண்டமே என்ற பாடத்திற்கு, பின்னிரண்டடிகட்கு - தொன்றுதொட்டு இன்றைவரையிலும் யான் செய்து போந்த பழைய பெரிய கருமங்கட்குப் பிராயச்சித்தம் அடியேனுக்கு நீ முத்தி தந்தருள்வதே யென்று வேண்டியதாக உரைப்பர். 'தண்டமே' என்ற ஏகாரம் - பிரிநிலை. 'தருவதே' என்ற ஏகாரம் - தேற்றம். பழவினைக்குத் தண்டனை யுறுபதந்தருவதாவதே! என்று ஏகாரம் வியப்புமாம். பி - ம்:—[1] கின்ற. [2] கண்டனன்மற்று. [3] என்னெனக் கருமை யென்பழமையோய். [5] உயர். [6] தருமதே. (370)

வேறு.

126. மற்றினி [1] யுதவி யுண்டோ வானினு முயர்ந்த [2] மானக்
கொற்றவ [3] நின்னை யென்னைக் கொல்லிய கொணர்ந்து தொல்லைச்
சிற்றினக் குரக்கி னோடுந் [4] தெரிவுறச் செய்த செய்கை
வெற்றர செய்தி யெம்பி வீட்டர செனக்கு [5] விட்டான்.

(இ - ள்.) வானின்உம் உயர்ந்த மானம் - வானத்தைக் காட்டிலும் உயர்ந்த பெருமையையுடைய, கொற்றவ - வெற்றியுள்ள அரசனே!—எம்பி - என் தம்பி [சுக்கிரீவன்], என்னை—, கொல்லிய - கொல்லுதற்பொருட்டு, நின்னை கொணர்ந்து - உன்னை அழைத்துக் கொண்டுவந்து,—தொல்லை - பழமையாக [நெடுநாளாக], சிறு இனம் குரக்கினோடுஉம் - சிறிய இனமாகிய குரங்குகளுடனே, தெரிவு உற செய்த - ஆலோசனையமையச் செய்த, செய்கை - செயலால், வெறு அரசு - சிறந்த பயனில்லாததான (எனது) அரசாட்சியை, எய்தி - (தான்) அடைந்து, வீடு அரசு - முத்தியுலகத்திற் சிறக்க வீற்றிருக்குந் தன்மையை, எனக்கு விட்டான் - எனக்குக் கொடுத்தான்; (ஆதலால்), இனி மற்று உதவி உண்டுஓ - இதனைக் காட்டிலும் மேலாக (எனக்கு அவன் செய்யக்கூடிய) வேறு உபகாரம் உண்டோ? (எ - று.)

என் தம்பி என்னைக் கொல்லுதற்காக உன்னை அழைத்து வந்து சேர்த்து, என்னைக்கொன்று, எனது இந்த எளிய அரசச் சுமையைத் தான் அடைந்து மிகச்சிறந்த மோட்சசாமிராச்சியத்தை எனக்குக் கிடைக்கச் செய்தன னாதலால், அவன் எனக்குச் செய்தது பேருதவியேயாயிற் றென்றான். இங்ஙனங் கூறியதனால், வாலிக்குச் சுக்கிரீவனிடமிருந்த பகைமை மாறியமை பெறப்பட்டது. குற்றத்தைக் குணமாகக் கூறிய இலேசவணியும், இழிந்தபொருளைப் பெற்றுக்கொண்டு உயர்ந்தபொருளைத் தருதலாகிய மாற்றுநிலையணியும் இதில் அமைந்திருத்தல் காண்க. குரங்குகட்கு இயல்பாகிய விவேகக்குறையும், சபலசித்தமும், திரிபுணர்ச்சியும் முதலிய இழிவுகள் பற்றி, 'சிற்றினக்குரங்கு' எனப்பட்டது. வானினும் உயர்ந்த - மிகவுயர்ந்த என்றபடி; இது, "வானுயர் தோற்றம்" என்றாற்போன்ற இலக்கணவழக்கு. பி - ம்:—[1]உறுதி. [2]வானக். [3]உன்னைக்கண்டு. [4]திரிவுறச் செய்த, செய்வன தெளிவில். [5]தந்தான். (371)

127 —வாலி இராமனை ஒருவரம் வேண்டுதல்.

ஓவிய [1]வுருவ நாயே னுளதொன்று பெறுவ [2]துன்பால்
பூவியல் நறவ மாந்திப் புந்திவே றுற்ற [3]போது
தீவினை யியற்று மேனு [4]மெம்பிமேற் சீறி யென்மேல்
ஏவிய பகழி யென்னுங் [5]கூற்றினை யேவ லென்றான்.

(இ - ள்.) ஓவியம் உருவ - சித்திரத்திலெழுதிய வடிவம்போலழகிய வடிவத்தையுடையவனே! நாயேன் - எளியேன், உன்பால் - உன்பக்கல், பெறுவது ஒன்று - வேண்டிப்பெறுவதொரு வரம், உளது - இருக்கின்றது: (அது எதுவென்றால்,—என் தம்பியான சுக்கிரீவன்), பூ இயல் நறவம் மாந்தி - மலர்களிலுண்டான மதுவைக் குடித்து, புந்தி வேறு உற்றபோது - அறிவு மாறுபட்டபொழுது, தீ வினை இயற்றும் ஏன்உம்-கெட்டகாரியஞ் செய்வானாயி

னும், எம்பிமேல் - அவன்மேல், சீறி - கோபங்கொண்டு, என்மேல் ஏவிய பகழி என்னும் கூற்றினை - என்மேல் (இப்பொழுது நீ) சினந்து செலுத்திய அம்பாகிய யமனை, ஏவல் - செலுத்தாதிருப் பாயாக,' என்றான் - என்று (வாலி இராமபிரானை) வரம்வேண் டினான்; (எ - று.)

இதனால், வாலிக்குத் தம்பியினிடமுள்ள அன்பு விளங்கும். வாலி தன்னைக் கொல்வித்த தம்பியைத் தனக்கு வீட்டரசு விட்ட தாகப் பாராட்டுகின்றானாதலால், பெரு ஞானம் பெற்ற இந்நிலையில் நான் புத்திமாறுபட்டதினால் தீவினை புரிந்ததுபோல என்தம்பி தீ வினை புரிந்தாலும், தீவினைக்குத் தண்டனையாகச் சீறிக் கணையெனும் கூற்றை என்மேல் விடுத்ததுபோல் விடாமல் நன்மதியுண்டாகுமாறு செய்வாயென்று வேண்டுகின்றான்; மரண காலத்தில் இங்ஙனம் வேண்டுவது கல்நெஞ்சையும் கரைவிக்கும்; வாலியின்பேரன்பும் பெருந்தன்மையும் பாராட்டற்குரியன. இங்கு இராமபிரான் செய்கை அறமுள்ளதே என வாலி தெரிந்தமை நன்கு பெறப்படும். மனத்திற்குத் திருப்தியுண்டாகு மளவுங் கலைத்துக் கலைத்துச் சீர்திருத்தி மிகவும் அழகியதாக எழுதக்கூடிய தாதலால், சித்திரவடிவம், இராமபிரானது அதிசௌந்தரியமுள்ள வடிவத் திற்கு ஒப்புமையாகக் குறிக்கப்பட்டது. இயற்கையுருவத் திற்குச் செயற்கையுருவத்தையும் செயற்கை யுருவத்திற்கு இயற்கையுருவத்தையும் ஒப்புமை குறித்தல் கம்பரியல்பாதலை இந்நூலில் பிறவிடங்களிலும் காணலாம். சுக்கிரீவன் இயல் பினால் எப்பொழுதும் அறிவுநிலை கலங்கித் தீவினையியற்றுபவ னல்லனென்பது, இரண்டாமடியால் விளங்கும். இலக்காகக் குறிப் பிட்ட பிராணியைக் கொல்லுதலில் தவறாமை பற்றி, 'பகழியென் னுங் கூற்று' எனப்பட்டது; உருவகம். இது பகழியென்று கூறப் படுவதேயன்றி இதன் தன்மையைக் கூர்ந்து நோக்கினால் இது பகழி அன்று: கூற்றே என இத்தொடர்க்குக் கருத்துக் கொண்டால், இத்தொடர் - அபநுதியணியாம். உளதொன்று பெறுவதுன்பால் என்பது, உன்பால் பெறுவது ஒன்று உளதுஎன முற்றிலும் மாறி இயையுமாறு அமைந்த நயம் பாராட்டற்பாலது. 'சீறி,' என்பது மத்திமதீபமாகி, 'என்மேற்சீறி, எம்பிமேற் சீறி' என ஈரிடத் தும் இயைதற்கு உரியது. பி - ம்:—[1]உருவத்தாயான், உருவனே யான், உருவினாயான். [2]உண்டால். [3]போதில். [4]எம்பியை. [5]யாவர்க் குங்கூற்றையேவல். (372)

128.—வாலி இராமனை மற்றுமொருவரம் வேண்டுதல்.

[1]இன்னுமொன் [2]றிரப்ப துண்டா லெம்பியை யும்பி மார்கள்
தன்முனைக் கொல்வித் தானென் [3]றிகழ்வரேற் [4]றடுத்தி தக்கோய்
[5]முன்முனே மொழிந்தா யன்றே யிவன்[6]குறை [7]முடிப்ப தையா
[8]பின்னிதென் [9]வினையின் செய்கை[10]யதனையும் பிழைக்க லாமோ.

(இ - ள்.) இன்னும் இரப்பது ஒன்று உண்டு - இன்னமும் (யான் உன்னிடம்) வேண்டுவதொரு வரமிருக்கின்றது; (அது என்ன வென்றால்),—எம்பியை - என் தம்பியை [சுக்கிரீவனை], உம்பிமார்கள் - உன் தம்பியர், தன் முனை கொல்வித்தான் என்று இகழ்வரேல் - தனது தமையனைக் கொல்வித்தவனிவனென்று பழிப்பாரானால், (அப்பொழுது அவர்களை), தக்கோய் - தகுதியான சிறந்த குணங்களை யுடையவனே! தடுத்தி - (நீ) தடுத்தருள்வாய்; ஐய - சுவாமி! இவன் குறை முன் முடிப்பது முனே மொழிந்தாய் அன்றே - இவனுக்கு ஆக வேண்டிய காரியத்தை முதலிற் பூர்த்தி செய்து கொடுப்பதாக முன்னமே (நீ உடன்பட்டு) அருளிச்செய்தாயன்றோ; பின் - ஆனபின்பு, இது - சரத்தாலடியுண்டு உயிரிழந்த இது, என் வினையின் செய்கை - என் தீவினையின் விளைவாம்; அதனைஉம் பிழைக்கல் ஆம்ஓ - அவ்வூழ்வினைப்பயனையும் தப்பமுடியுமோ? [முடியாதன்றோ என்றபடி;] (எ - று.)

என் தீவினையின் பயன் எனக்கு இவ்வாறு நேர்ந்ததென்பது, ஈற்றடியின் கருத்து. 'மற்றும், வினைப்பயன் யார்க்கும் விலக்க வொண்ணாதாதலால் இங்ஙனம் நேர்ந்து விட்டது' என்பது, ஈற்றடியின் கருத்துமாம். வினையின் செய்கையதனைப் பிழைத்தல் - முற்பிறப்பிற் செய்த கருமங்காரணமாக நேருங் காரியத்திற்கு உள்ளாகாது விலகுதல். இனி, [8]பின்னிவன் வினையின் செய்கை என்ற பாடத்தில், முதலில் உடன்பட்ட பின்பு இவனது காரியத்தின் நிலைமையைப் பிழையாகக் கொள்ளுதல் தகுதியாகா தென்று உரைப்பாருமுளர். தக்கோய் - நடுவுநிலைமை முதலிய சற்குணங்களையுடைய உத்தமனே! என்றபடி. பி-ம்:—[1]இன்னம். [2]உரைப்பது, இசைப்பது. [3]இகழ்தலை. [4]தவிர்த்தி. [5]முன்னமே. [6]குற்றம். [7]முடிவிலாமை, முடிக்கிலாமை. [8]பின்னவன், பின்னதன், பின்னதென். [9]குறையின். [10]யான் செயல்பிழைக்கலாமோ, முடிக்குவன் பெரும வென்றான். (373)

129.—வாலி இராமனுக்கு அநுமானைப் பற்றித் தகவுரை கூறல்.

[1]மற்றிலெ னெனினு மாய வரக்கனை வாலிற் பற்றிக்
[2]கொற்றவ நின்கட் டந்து குரக்கியல் தொழிலுங் காட்டப்
[3]பெற்றிலென் [4]கடந்த சொல்லிற் பயனிலைப் [5]பிறிதொன் றே
உற்றது செய்கென் றுலு [6]முரியனிவ் வனுமனென்றான். [னும்

(இ - ள்.) கொற்றவ - வெற்றியையுடையவனே! மற்று இலென் எனின்உம் - (உனக்கு) வேறொரு பேருதவி யெதனையுஞ் செய்ய வல்லனல்லேனாயினும்,—மாயம் அரக்கனை - வஞ்சனையையுடைய அரக்கனான இராவணனை, வாலின் பற்றி - வாலினாற் சுற்றியெடுத்து, நின்கண் தந்து - உன்னிடத்திற் கொணர்ந்து ஒப்பித்து, குரங்கு இயல் தொழில்உம் காட்ட - ஒரு குரங்காகிய எனக்கு இயன்ற

தொழிலையாயினும் செய்து காட்ட, பெற்றிலென் - பாக்கியம் பெறாதவனாயினேன்; கடந்த சொல்லின் பயன் இலை - நடந்துபோன செய்திகளைச் சொல்லுதலாற் பயனில்லை; உற்றது செய்க என்றால் உம் - ஆகவேண்டியதான இச்செயலைச் செய்வாயாக என்று சொன்னாலும், பிறிது ஒன்று எனும் - வேறொருசெயலைச் செய்க என்றாலும், (அதனைச் செய்து முடித்தற்கு), இ அனுமன் உரியன் - இந்த ஹநுமான் உரியவன், என்றான் - என்று (வாலி இராமனை நோக்கிக்) கூறினான்; (எ - று.)

"கற்றார்முற் றோன்றா கழிவிரக்கம்" ஆதலாலும், அதுகழிந்த நீர்க்கு அணைகோலுதல்போல வீணாதலாலும், 'கடந்தசொல்லிற் பயனிலை' என்றான். குரக்கியல்தொழில் - விரைந்து தாவிச்சென்று பற்றி விடாப்பிடியாகக் கொணர்தல். பி - ம்:—[1]மற்றில. [2]கொற்றமும். [3]பெற்றிலன். [4]கிடக்கசொல்லிப். [5]பிழைப்பதின்றும், பிழைப்பதென்னும், பிழைப்பதின்னும். [6]உரியவன். (374)

130.—வாலி இராமனை நோக்கி மற்றுஞ்சிலகூறுதல்.

அனுமனென் பவனை [1]யாழி யையநின் செய்ய செங்கைத்
தனுவென நினைதி மற்றென் [2]தம்பிநின் தம்பி யாக
[3]நினைதியோர் துணைவ [4]ரின்னோ ரனையவ ரிலைநீ யீண்டவ்
வனிதையை நாடிக் கோடி வானினு முயர்ந்த [5]தோளாய்.

(இ - ள்.) ஆழி ஐய - சக்கராயுதத்தையுடைய தலைவனே! அனுமன் என்பவனை - அனுமானை, நின் - உனது, செய்ய - அழகிய, செம் கை - சிவந்த கையிலேந்திய, தனு என - வில்லைப்போல, நினைதி - (தவறாமல் விரைந்து பகையழித்து உதவுபவனாக) நினைப்பாய்; மற்று - மற்றும், என் தம்பி - எனது தம்பியான சுக்கிரீவனை, நின் தம்பி ஆக நினைதி - உன் தம்பியான இலக்குமணனைப் போலவே (மிக்க அன்புடன் நினக்குக் குற்றேவல்கள் செய்பவனாக) நினைப்பாய்; இன்னோர் அனையவர் ஓர் துணைவர் இலை - இவர்கள் போன்றவர்களான துணையாயுதவுபவர் வேறில்லை; வானின் உம் உயர்ந்த தோளாய் - வானத்தைக் காட்டிலும் உயர்ந்த [மிகவுயர்ந்த] தோள்களையுடையவனே! நீ—, ஈண்டு - இப்பொழுது, அ வனிதையை - அந்தச் சீதாபிராட்டியை, நாடி - (இவர்களைக்கொண்டு) தேடி, கோடி - பெறுவாய்; (எ - று.)

வனிதா என்ற வடசொல்லுக்கு - கணவனை யடைபவளென்பது பொருள். இராமபிரான் திருமாலின் அவதாரமென்பதை யுணர்ந்தனனாதலால், 'ஆழியைய' என்று விளித்தான்; இனி, ஆழி - ஆஜ்ஞாசக்கரமுமாம். துணைவர் - உதவி செய்பவர். பி - ம்:—[1]ஆயின், வாழி. [2]தம்பியையும்பியாக, தம்பியுன்றம்பியாக. [3]நினையொரு, நினைத்தொரு. [4]அன்னார் நினையவரில்லை, இன்னோரல்லவரில்லை, இன்னோர்க்கு நினையவதில்லை. [5]வார்த்தை. (375)

131.—பிறகு வாலி சுக்கிரீவனை யணைத்துச் சிலகூறத் தொடங்குதல்.

என்றவற் கியம்பிப் பின்ன ரிருந்தன னிளவல் தன்னை
வன்றுணைத் தடக்கை நீட்டி வாங்கினன் தழுவி மைந்த
ஒன்றுனக் குரைப்ப துண்டா [1]லுறுதியஃது ணர்ந்து கோடி
குன்றினு முயர்ந்த தோளாய் வருந்தலை யென்று கூறும்.

(இ - ள்.) (வாலி), என்று அவற்கு இயம்பி - என்று அந்த இராமபிரானை நோக்கிச் சொல்லி,—பின்னர் - பின்பு, இருந்தனன் - அருகிலிருந்தவனாகிய, இளவல் தன்னை - (தனது) தம்பியான சுக்கிரீவனை, வல் தட துணை கை நீட்டி வாங்கினன் தழுவி - வலிய பெரிய (தனது) இரண்டு கைகளையும் நீட்டிச் சேர்த்து அணைத்துக் கொண்டு,—'மைந்த - பிள்ளாய்! உனக்கு உரைப்பது உறுதி ஒன்று உண்டு-உனக்கு (நான் இப்பொழுது) சொல்வதான நன்மையொன்று இருக்கின்றது; அஃது உணர்ந்து கோடி - அதனைக் கேட்டறிந்து மனத்திற்கொண்டு நடப்பாய்; குன்றின் உம் உயர்ந்த தோளாய் - மலைகளைக் காட்டிலும் உயர்ந்துள்ள தோள்களையுடையவனே! வருந்தலை - (என் மரணத்திற்காக) நீ வருந்தாதே,' என்று - என்று சொல்லி, கூறும் - (மற்றுஞ்) சொல்வான்; (எ - று.)—அதனை, அடுத்த ஆறுகவிகளிற் காண்க. ஆல் - அசை.

இருத்தல் - ஏங்கித்திகைத்திருத்தல். தமையன் தந்தையோ டொப்பவனாதலால், மகனோடொப்பவனான தம்பியை 'மைந்த' என்று விளித்தான். உறுதி - இதமொழி. பி - ம்:—[1]உறுதியது. (376)

132.—இதுமுதல் ஆறுகவிகள் - சுக்கிரீவனுக்கு வாலி உறுதி கூறல்.

மறைகளு முனிவர் [1]யாரு மலர்[2]மிசை யயனு மற்றைத்
துறைகளின் முடிவுஞ் சொல்லுந் துணிபொருள் [3]துணிவிற்றூக்கி
அறைகழ லிராம [4]னாகி யறநெறி நிறுத்த வந்தது
இறையொரு சங்கை யின்றி யெண்ணுதி யெண்ண மிக்கோய்.

ஏழுகவிகள் - ஒரு தொடர்.

(இ - ள்.) எண்ணம் மிக்கோய் - ஆலோசனை மிக்கவனே! மறைகள் உம் - வேதங்களும், மற்றை துறைகளின் முடிவு உம் - மற்றைச் சாஸ்திரங்களின் சித்தாந்தமும், முனிவர் யார் உம் - எல்லாவிருடிகளும், மலர்மிசை அயன் உம் - தாமரை மலரின்மீது வாழ்கின்ற பிரமனும், சொல்லும் - சொல்லுகின்ற, துணிபொருள் - தேர்ந்தபொருளாகிய பரப்பிரம்மந்தானே, அறம் நெறி நிறுத்த - தருமமார்க்கத்தை நிலைநிற்கச் செய்யும்பொருட்டு, அறை கழல் இராமன் ஆகி - ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய இராமனாக அவ தரித்து, துணி வில் தூக்கி - (அம்பெய்து பகைவரைத்) துண்டிக் கும் வில்லை யேந்திக்கொண்டு, வந்தது—; (இத்தன்மையை), இறை ஒரு சங்கை இன்றி - சிறிதும் சந்தேகமில்லாமல், எண்ணுதி - மனத்திற்கொள்வாய்; (எ - று.)

பரம்பொருளே இராமனாகவந்துள்ள தென்று வாலி உபதேசித்தான். தன்னால் அழித்தற்கு அரிய பெரிய பகைவனைத் தவறாது அழிக்கவல்ல நல்துணைவனை நாடியடைந்த அருமையைப் பாராட்டி 'எண்ணம் மிக்கோய்' என்று விளித்தான். பி-ம்:—[1] தாமும். [2] மிசையவனும். [3] தனிவிற்றாக்கி, குனிவிற்றூங்கி. [4] ஆயிவ்வறநெறி நிறுத்த வந்தான், ஆகி...வந்த. (377)

133. நிற்கின்ற[1] செல்வம் வேண்டி நெறிநின்ற பொருள்க
ளெல்லாங், கற்கின்ற விவன்ற னாமங்[2] கருதுவ விவனைக் கண்டாய்,
பொற்குன்ற மனைய தோளாய் பொதுநின்ற [3] தலைமை நோக்கின்,
எற்கொன்ற வலியே சாலு மிதற்கொன்று மேது வேண்டா.

(இ - ள்,) பொன் குன்றம் அனைய தோளாய் - பொன்மயமான மலையை [மேருகிரியை]ப் போல மிகவுயர்ந்து விளங்குகின்ற தோள்களையுடையவனே! நிற்கின்ற செல்வம் வேண்டி - (அழியாமல் எந்நாளும்) நிலைநிற்கின்ற முத்திச்செல்வத்தை யடைய விரும்பி, நெறிநின்ற - அதற்குரிய [யோகமார்க்கம் முதலிய] வழிகளில் நின்ற, பொருள்கள் எல்லாம் - (சிறப்புடைப்) பொருள்களாகிய உயிர்கள்யாவும், இவன் தன் நாமம் கற்கின்ற - இவ்விராமபிரானுடைய திருநாமத்தை ஜபிக்கின்றன; இவனை கருதுவ - இவனைத் தியானிக்கின்றன; கண்டாய் - (இதனை) உணர்வாய்: பொதுநின்ற தலைமை நோக்கின் - (இங்ஙனம் விசேடமாகவன்றிச்) சாமானியமாக இவனிடத்துள்ள சிறப்பைப் பார்த்தாலும், (அதற்கு), என் கொன்ற வலிஏ - என்னைக் கொன்றிட்ட இந்த வலிமையே, சாலும் - சாட்சி போதும்; இதற்கு ஏது ஒன்றுஉம் - இதனைக் காட்டிலும் மேலான காரணமொன்றும், (அதனைச் சாதித்தற்கு) வேண்டா - வேண்டுவதில்லை; (எ - று.)

பரம்பொருளான இறைவன் சரமன்றி, வேறு என்மார்பைத் தொளைக்கமாட்டா என்கிறான். முத்தி நித்தியமான ஐசுவரியமாதலால்,'நிற்கின்ற செல்வம்' எனப்பட்டது. அதனை வேண்டுகின்ற பொருள்கள்-முமுக்ஷுக்களான ஆத்மாக்கள். உடம்பையும்உயிரையும் வேறுபிரித்துக் கூறுமிடத்து அஃறிணையாகக் கூறுதல் இலக்கணமாதலால், "பொருள்களெல்லாம் கற்கின்ற கருதுவ" எனப்பட்டன. நெறி - ஞானம், யோகம், பக்தி, பிரபத்தி என்ற உபாயங்கள்.. கண்டாய் - தேற்றம். நிற்கின்ற செல்வம் வேண்டி நெறிநின்ற பொருள்களெல்லாம் கற்கின்ற இவன்தன் நாமம் - "கற்பா ரிராம பிரானை யல்லால் மற்றுங்கற்பரோ" என்றார், நம்மாழ்வாரும். பி-ம்:—[1] செல்வவேறு, செல்வம்வேறு, செல்வம் வேறின், செல்வம்வென்றி. [2] கருதுப. [3] நிலைமை. (378)

134. கைதவ மியற்றி யாண்டுங் [1] கழிப்பருங் கணக்கில் தீமை
வைகலும் புரிந்து ளாரும் வானுயர் [2] நிலையை வள்ளல்

[3]எய்தவர் பெறுவ ரென்று லிணையடி [4]யிறைஞ்சி யேவல்
செய்தவர் பெறுவ தையா செப்பலாந் [5]தன்மைத் தாமோ.

(இ - ள்.) ஐயா—! கைதவம் இயற்றி - வஞ்சனையைச் செய்து, யாண்டுஉம் கழிப்பு அரு - எவ்விடத்துந் தீர்த்துக்கொள்ளுதற்கு அருமையான, கணக்கு இல் தீமை - எண்ணிறந்த பாவச்செயல்களை, வைகல்உம் புரிந்து உளார்உம் - நாள்தோறும் செய்துள்ளவர்களாயிருந்தாலும், வள்ளல் எய்தவர் - வரையாதருளுமியல்பினனான இராமபிரானால் அம்பெய்து கொல்லப்பட்டவர், வான் உயர் நிலையை பெறுவர் - மிகவுயர்ந்த தானத்தை [பரமபதத்தை] ச் சேர்வர், என்றால்—, இணை அடி இறைஞ்சி ஏவல் செய்தவர் பெறுவது - (அவனது) உபயபாதங்களை வணங்கி (அவனுக்கு)க் குற்றேவல் செய்தவர் முத்திபெறுவது, செப்பல் ஆம் தன்மைத்து ஆம்ஓ - சொல்லவேண்டிய தன்மையையுடையதாகுமோ? [அன்றென்றபடி]; (எ - று.)

எம்பெருமானுக்கும் பிறர்க்கும் துரோகஞ்செய்து எண்ணில்லாத தீவினைகளையியற்றியவர்களும் அப்பெருமானாற் கொல்லப்படுவராயின், அவர் அத்தண்டனையினால் தமது தீவினைகளெல்லாந் தீர்ந்து முத்திபெறுவ ரென்றால், அவனது இரண்டுதிருவடிகளையும் வணங்கிப் பயபக்தி விசுவாசங்களுடன் அவனுக்குக் குற்றேவல் செய்தொழுகியவர் முத்திபெறுவ ரென்பது சொல்லவேண்டியது முண்டோ? என்பதாம்; தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி. "பொருளொன் றுரைக்கத் தண்டாபூபிகை, வழக்கால் மற்றொரு வண்பொருள் தோன்றல், தொடர்நிலைச் செய்யுட்பொருட்பேறணியே" என அதனிலக்கணங் காண்க. நல்லோர்க்கே யன்றித் தீயோர்க்கும் வினையனைத்தையுந் தீர்த்து வீடுதந்தருளும் பரமோதார னாதலால், 'வள்ளல்' என்றார். யாண்டும் கழிப்பு அருமை - புண்ணியதீர்த்த ஸ்நானம், ஸ்தலயாத்திரை முதலியவற்றாலும் தீர்க்கவொண்ணாதனவாதல். யாண்டும் - எப்பொழுதும் எனினுமாம். பி - ம்:—[1]கணிப்பருங்குணங்கள். [2]வீடு, நிலையின். [3]எய்து வான் நினைவில். [4]எய்தி, ஏத்தி, தழுவி. [5]சீர்மைத்தாமோ, சிறுமைத் தாமோ. (379)

35. [1]அருமையென் விதியி னாரே யுதவுவா [2]னமைந்த காலை
இருமையு [3]மெய்தி னாய்மற் றினிச்செயற் பால [4]தெண்ணின்
திருமறு மார்ப னேவல் சென்னியிற் சேர்த்திச் சிந்தை
ஒருமையி னிறுவி மும்மை யுலகினு முயர்தி யன்றே.

(இ - ள்.) விதியினாரே - ஊழ்வினைதானே, உதவுவான் அமைந்த காலை - துணைசெய்தற்குப் பொருந்திய பொழுது, அருமை என் - அடைதற்கு அருமையானது யாதுஉளது? [எதுவுமில்லை யென்றபடி]; (ஆகவே), இருமைஉம் எய்தினாய் - இம்மை மறுமையின்பங்களை யெல்லாம் (நீ) அடைந்தாய்: இனி செயல்

பாலது எண்ணின் - இனிமேல் நீ செய்யவேண்டியது யாதென்று ஆலோசிக்குமிடத்து, திரு மறு மார்பன் ஏவல் சென்னியின் சேர்த்தி - இலக்குமியையும் ஸ்ரீவத்ஸமென்னும் மறுவையும் திருமார்பில் உடையவனான திருமாலாகிய இவ்விராமனது கட்டளையைத் தலைமேற்கொண்டு, சிந்தை ஒருமையில் நிறுவி - மனத்தை (சஞ்சலப்படாதபடி அக்குற்றேவல் செய்தலாகிய) ஒருதன்மையிலே நிற்கச் செய்து, மும்மை உலகின்உம் உயர்தி - மூன்று உலகங்களினும் மேம்படுவாய்; (எ - று.)—அன்றே - ஈற்றசை. மற்று - வினைமாற்று.

உனக்கு ஆகூழ்வந்து வாய்த்த தாதலாற் பெறுதற்கரியதெதுவுமில்லையென்பது, முதலடியின் பொருள்: அது எவராலுந் தடுத்தற்கரிய பெருவலியினதென்பது, வெளிப்படை. உயர்த்திக் கொண்டாடுவான், 'விதியினர்' என்று உயர்திணைப்பலர்பாலாற் கூறினன்; திணைவழுவமைதி. இனி, விதியினர் - தெய்வம் என இராமபிரானைக் குறித்ததுமாம். சென்னியிற் சேர்த்துதல் - சிரசினால் தாங்குதல். ஒருமையின் நிறுவி - இறையுணர்வில் நிறுத்தி யெனினுமாம். மும்மையுலகினும் உயர்தி - மூன்று உலகங்களிலுமுள்ள உயிர்களெல்லாவற்றினும் மேன்மையடையக் கடவாய். பி - ம்:—[1]அருமையின். [2]அமைந்தாரையா, அமைந்தாலையா, அமைத்தாலையா. [3]எய்தினுமற்று. [4]எண்ணி. (380)

136. [1]மதவியல் குரக்குச் செய்கை [2]மயர்வொடு மாற்றி வள்ளல்
உதவியை யுன்னி யாவி [3]யுற்றிடத் துதவு கிற்றி
பதவியை யெவர்க்கு நல்கும் பண்ணவன் பணித்த யாவும்
சிதைவில செய்து நொய்திற் [4]றீர்வரும் பிறவி தீர்தி.

(இ - ள்.) மத இயல் - மடமை மிக்க, குரங்கு செய்கை - வானர இயற்கையையும், மயர்வொடு - மயக்கத்தையும், மாற்றி - ஒழித்து, வள்ளல்உதவியை உன்னி - வரையாதருளுமியல்பினனான இராமபிரான் (உனக்குச்) செய்த உதவியை (மறவாமல்) உள்ளத்திற் கொண்டு, உற்ற இடத்து ஆவி உதவுகிற்றி - (அவனுக்காக) வேண்டியசமயத்தில் (உனது) உயிரையும் கொடுக்கக்கடவாய்; (மற்றும்), எவர்க்குஉம் பதவியை நல்கும் பண்ணவன் - (எல்லார்க்கும்) உயர் கதியை அளித்தருளுகின்ற முதற்கடவுளான அவ்விராமபிரான், பணித்த யாஉம் - கட்டளையிட்ட செயல்களை யெல்லாம், சிதைவு இல செய்து - கெடாதனவாகச் செய்து, தீர் அரும் பிறவி - எளிதில் நீங்குதற்கு அரிய பிறப்புக்களை, நொய்தின் தீர்தி - எளிதில் நீங்கப் பெறுவாய்; (எ - று.)

'மத' என்பது மடமையுணர்த்துவதோர் உரிச்சொல்லாதலை, "மதவேமடனும் வலியு மாகும்" என்ற தொல்காப்பியத்தாலுணர்க: இது உகரச்சாரியைபெற்று 'மதவு' எனவும் நிற்கும்; "பதவு மேய்ந்த மதவுநடை நல்லான்" எனக் காண்க. குரக்குச்

செய்கை - திரிகரணங்கள் வரம்புகடந்த விரைவையும் சஞ்சலத்தையும் அடைதல். மயர்வு - இயற்கைப்பேதைமையாலும் மதுபானத்தாலும் மனம் மயங்குதல்; ஒன்றைப் பிறிதொன்றாகத் துணிதல்; ஒடு-எண்ணொடு. உன்னி - கருதி. உற்ற இடத்து-ஆபத்து நேர்ந்த போது, இடையூறு உற்றவிடத்து. உற்றிடம்-தொகுத்தல். உதவு இற்றி என்ற ஏவலொருமைமுற்றில், இல் - ஆற்றலுணர்த்தும் இடைநிலை. 'நொய்தின்' என்றது, 'தீர்வரும்,' 'தீர்தி' என்னும் இரண்டனோடும் இயையும். சிதைவில-முற்றெச்சம். பதவி-இங்கே, பரமபதம். பிறவிதீர்தல் - முத்திபெறுதல். பி - ம்:—[1]மதவிய, மதவியற். [2]உயிரொடு, மயர்வற. [3]உற்றுழி. [4]தீர்வரும்பிறவி நோய்தீர், தீர்தரும்பிறவிதானே. (381)

137. அரசியற் பாரம் பூரித் [1]தயர்ந்தனை [2]யிகழா தையன்
மரைமலர்ப் பாத [3]நீங்கா வாழுதி மன்ன ரென்பார்
[4]எரியெனற் குரியா ரென்றே யெண்ணுதி யெண்ணம் யாவும்
புரிதிசிற் றடிமை குற்றம் பொறுப்பரென் றெண்ண வேண்டா.

(இ - ள்.) அரசு இயல் பாரம் - இராச்சியபாரத்தைப் பெற்ற மகிழ்ச்சியால், பூரித்து - மனம்மிகக்களித்து, அயர்ந்தனை இகழாது- அறிவுகெட்டு (இராமபிரானை) இகழ்ச்சி செய்யாமல், ஐயன் மரை மலர் பாதம் நீங்கா வாழுதி - அப்பெருமானுடைய தாமரைமலர் போன்ற திருவடிகளை விட்டுநீங்காமல் வாழக்கடவாய்; மன்னர் என்பார் - அரசர்கள், எரி எனற்கு - பற்றியெரிகின்ற நெருப்பு என்று உவமை கூறுதற்கு, உரியார் என்றே எண்ணுதி-உரியவர்களென்றே நினைப்பாய்; எண்ணம் யாஉம் புரிதி - (அங்ஙனம் நினைத்து அஞ்சியொழுகிச் சக்கரவர்த்தித்திருமகனாகிய அப்பெருமான்) நினைத்த காரியங்களையெல்லாம் (குறிப்பறிந்து) செய்யக்கடவாய்; சிறு அடிமை குற்றம் பொறுப்பர் என்று எண்ணவேண்டா-(அரசர்கள்) சிறிய அடிமைகளின் பிழைகளைப் பொறுப்பரென்று நினைக்கலாகாது; (எ - று.)

“அளையுறைபாம்பு மரசும் நெருப்பும், முழையுறைசீயமு மென்றிவை நான்கும், இளைய எளிய பயின்றன வென்றெண்ணி, இகழி னிழுக்கந் தரும்” என்ற ஆசாரக்கோவையும்; “அகலா தணுகாது தீக்காய்வார்போல்க, இகல் வேந்தர்ச்சேர்ந்தொழுகுவார்”, “இளையரினமுறைய ரென்றிகழார் நின்ற, ஒளியோ டொழுகப் படும்,” “பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங், கெழுதகைமை கேடுதரும்” என்ற திருக்குறட்பாக்களும், 'அவன்பொருதுசெறும் பொழுதின் அப்பழமைநோக்கிக் கண்ணோடாது உயிரை வௌவுதலான், அவன் வேண்டாதன செய்தற்கு ஏதுவாய கெழுதகைமை கேடுதரு மென்றார். இவை மூன்றுபாட்டானும், பொறுப்பரென்று அரசர்வெறுப்பன செய்யற்க என்பது கூறப்பட்டது' என்ற பரிமேலழகருரை வாக்கியங்களும்; 'கைவரும்வேந்தன்நமக்கென்றுகாத

லித்த, செவ்விதெரியா துரையற்க - ஒவ்வொருகால், எண்மைய னேனுமரியன் பெரிதம்மா, கண்ணிலனுள்வெயர்ப்பினன்'' என்ற நீதிநெறிவிளக்கமும்; 'அரசரும் நெருப்பும் பாம்பும் சரி' என்ற பஞ்சதந்திரமுங் காண்க. மரை - முதற்குறைவிகாரம். அடிமை - அடிமையானவர். வேண்டா-வேண்டும் என்ற வியங்கோள்முற்றின் எதிர்மறை. பி - ம்:—[1] அயர்த்தனே. [2] இகலாது. [3] நீங்காய். [4] எரியனற்கு. (382)

138.—சுக்கிரீவனை வாலி இராமன்கையில் ஒப்படைத்தல்.

என்னவித் தகைய வாய [1]வுறுதிகள் [2]யாவு மேங்கும்
பின்னவற் [3]கியம்பி நின்ற பேரெழி லானை நோக்கி
மன்னவர்க் கரசன் மைந்த மற்றிவன் சுற்றத் தோடும்
உன்னடைக் கல[4]மென் [5]றுய்த்த [6]யுயர்கர முச்சி வைத்தான்.

(இ - ள்.) என்ன - என்று, இ தகைய ஆய - இத்தன்மையன வான, உறுதிகள் யாஉம் - இதங்களை எல்லாம், ஏங்கும் பின்னவற்கு இயம்பி - (தன்மரணத்திற்காக) ஏக்கமடைகின்ற தன்தம்பியான சுக்கிரீவனைநோக்கிக் கூறி,—(பிறகு வாலி), - நின்ற பேர் எழிலானை நோக்கி - எதிரில்நின்ற மிக்க அழகை யுடையவனான ஸ்ரீராமபிரானைப் பார்த்து, 'மன்னவர்க்கு அரசன் மைந்த - (தசரத) சக்கரவர்த்தியின் திருக்குமாரனே! இவன் - இந்தச்சுக்கிரீவன், சுற்றத்தோடுஉம் - (தனது) உறவினத்துடனே, உன் அடைக்கலம்- உனது அடைக்கலப்பொருளாவன்', என்று - என்றுசொல்லி, உய்த்து - (அச்சுக்கிரீவனை இராமபிரான்பக்கல்) செலுத்தி, உயர் கரம் உச்சி வைத்தான் - உயரவெடுத்த, (தன்) கைகளை (த் தனது) சிரமேற்கொண்டு நமஸ்காரஞ்செய்தான்; (எ - று.) - மற்று - அசை.

அடைக்கலம் - பாதுகாக்கத்தக்க பொருள். [5]உந்தி என்ற பாடத்திற்கு - தன்னால் தழுவப்பட்டிருந்த சுக்கிரீவனை இராமன் முன்னிலையிற் சேர்த்து என்க. 'உயர் கரம் உச்சிவைத்தான்' என்பதற்கு - (அவ்விராமபிரான் இச்சுக்கிரீவனைத் தான் பாதுகாப்பதாக உடன்பட்டு அடைக்கலமாக ஏற்றுக்கொண்டருளின னென்பதற்கு அடையாள மாகுமாறு) அப்பெருமானது சிறந்த வலக்கையைப் பிடித்து (இச்சுக்கிரீவனது) தலையின்மேல் வைத்தனனென்று உரைப்பாரு முளர். பின்னவன் - பின்பிறந்தவன். பி - ம்:— [1]வாய்மைகள். [2]இரங்கி. [3]உரைத்து. [4]இன்று. [5]என்ன. [6]உயர்கரமதனை. (383)

139.—பிறகு வாலி சுக்கிரீவனைக்கொண்டு அங்கதனை வருவித்தல்.

வைத்தபி [1]னுரிமைத் தம்பி மாமுக நோக்கி [2]வல்லே
[3]உய்த்தனை கொணர்தி யுன்ற னேங்கரு மகனை யென்ன
அத்தலை [4]யவனை [5]யேவி யழைத்தலி னணைந்தா [6]னென்ப
கைத்தலத் துவரி நீரைக் கலக்கினுன் பயந்த காளை.

(இ - ள்.) வைத்த பின் - (இவ்வாறு உபகாரத்தை உச்சி) வைத்தபின்பு, உரிமை தம்பி மா முகம் நோக்கி - உரிய அன்பிற்கு இடமான தன் தம்பியாகிய சுக்கிரீவனது அழகிய முகத்தைப் பார்த்து, 'உன் தன் ஓங்கு அரு மகனை - உன்னுடைய சிறந்த அருமையான புதல்வனை [அங்கதனை], வல்லே உய்த்தனை கொணர்தி - விரைவில் இங்கு அழைத்துக்கொண்டுவருவாய்,' என்ன - என்று சொல்லி, அதலை அவனை ஏவி - அவ்வங்கதனிருந்த இடத்திற்கு அச்சுக்கிரீவனை அனுப்பி, அழைத்தலின் - (அவனைக்கொண்டு அங்கதனை) அழைத்ததனால், கைத்தலத்து உவரிநீரை கலக்கினன் பயந்த காளை அணைந்தான் - (தன்) கைகளாற் கடலைக் கடைந்தவனான வாலி பெற்ற குமாரனாகிய அவ்வங்கதன் அங்கு வந்து சேர்ந்தான்; (எ - று.)

அங்கதன்-வாலிக்குத் தாரையினிடம் பிறந்த புதல்வன். தம்பியினிடம் தான் கொண்ட அன்புரிமையால் ஒற்றுமை நயப்படுத்தி, 'உன் தன் மகனை' என்றான்; இதுவரையில் யான் பாதுகாத்தது போலவே இனி நீ அவனைக் காக்க வேண்டுமென்று குறிப்பித்தற்கு இவ்வாறு கூறினனுமாம். அத்தலை - அவ்விடம்; அப்பொழுது எனினுமாம். இலக்கணையாய் 'உவரி' என்பது பாற்கடலையும், 'நீர்' என்பது - பாலையுங் குறித்தன. காளை - உவமையாகுபெயர்; நடை வலிமை காம்பீரியங்களால் உவமை. மா முகம் - கம்பீரமான முகம்; பொலிவுபெறும் முகம். என்ப - அசை. பி - ம்:—[1] அருக்கன்மைந்தன். [2] வல்லை. [3] உய்த்தபின். [4] அனையன். [5] நேயோர். [6] அன்பால். (384)

140.—வந்த அங்கதன் வாலியைக் காணுதல்.

சுடருடை மதிய மென்னத் தோன்றினன் [1] தோன்றி யாண்டும்
இடருடை [2] யுள்ளத் தோரை [3] யெண்ணினு [4] முணர்ந்தி லாதான்
[5] மடருடை நறுமென் சேக்கை [6] மலையன்றி யுதிர வாரிக்
[7] கடரிடைக் கிடந்த காதற் றாதையைக் கண்ணிற் கண்டான்.

(இ - ள்.) யாண்டுஉம் - (இதுவரை) எந்தக்காலத்திலும், இடர் உடை உள்ளத்தோரை - துன்பமுள்ள மனத்தையுடையவரை, (கண்டறியாமையேயன்றி), எண்ணின்உம் உணர்ந்திலாதான் - (துன்பமுடையார் இன்னபடியிருப்பரென்று) மனத்தினால் பாவனை செய்தும் இல்லாதவனான அங்கதன், சுடர் உடை மதியம் என்ன தோன்றினன் - ஒளியையுடைய பூர்ணசந்திரன் (உதித்தாற்) போல அங்கு வந்து சேர்ந்தான்; தோன்றி - (அங்ஙனம்) வந்து,—மடர் உடை நறு மெல் சேக்கை மலை அன்றி - பூவிதழ்களினாலாகிய வாசனை வீசுகின்ற மென்மையான படுக்கையாகிய மலையின்மீ தன்றி, உதிரம் வாரி கடர் இடை - இரத்தப்பெருக்காகிய கடலினிடையே, கிடந்த - படுத்துக்கொண்டிருக்கின்ற, காதல் தாதையை - அன்புக்கு உரிய (தன்) தந்தையான வாலியை, கண்ணின் கண்டான் - கண்களாற் பார்த்தான்; (எ - று.)

பாலப் பருவமுதல் துன்பங்கொண்ட மனமுடைய ர்வரையும் எங்கும் எப்பொழுதும் மனத்தினலும் அறியாதவனுன அங்கத குமாரன், இயல்பாக மிகவுயர்ந்த மலர்ப்பள்ளியின்மீது பள்ளிகொண் டிருத்தலைவிட்டுப் புதுமையாக இரத்தக்கடலிற் கிடந்து மரண வேதனையோடு மிகத்துன்புறுகின்ற உள்ளத்தையும் உடலையு முடைய தன் உயிர்நிலையான தந்தையைத் தன்கட்புலனுகக் கண்டு திகைப்புற்றனென இரக்கந்தோன்றக் கூறினர். இங்கு மலைமீது படுப்பதைவிட்டுக் கடலிடையேகிடந்தா னென்று கூறிய நயம் காண்க. வாலியின் அரசாட்சியின்கீழிருந்த கிஷ்கிந்தாபுரி முழுவதி லும் எப்பொழுதும் எவரும் எக்காரணத்தாலேனும் வருத்தமுற்ற தில்லையாகவே, அங்கதன் தான் பிறந்தநாள்முதல் துன்பமுற்ற மனத்தவரைக் கண்களாற் பார்த்திலனுதலால், இடருடையுள்ளத் தோர் இன்னவாறிருப்பரென்று மனத்தினலுணர்ந்தானுமில்லை யென்க; இடயுடையுள்ளத்தோரை யெண்ணினு முணர்ந்திலாதான் என்பதற்கு-தன்னேடு தொடர்பில்லாத பிறர் துன்பத்தை எண்ணிப் பார்க்க முயன்றுலும் அறியாத பாலப்பருவமகலாத பச்சைப்பிள்ளை என்று உரைத்து, இதனைத் தன்மைநவிற்சி என்றும் கூறினர், இராமாயணசாரம் இயற்றியவர்: மேல் நிகழும் கதைநிகழ்ச்சியைக் கருதுமிடத்து இவனைப் பச்சைப் பாலகனென்னலாமா என்பதும், இத்தொடர் உயர்வுநவிற்சியணி யாவதன்றித் தன்மைநவிற்சி யாகுமா என்பதும் ஆராய்தற்கு உரியன. சுடருடைமதி - கலைகள் நிறைந்த சந்திரன். மடருடை நறுமென் சேக்கை - புஷ்பசயநம், மலர்ப்பள்ளி. இனி, மடர் உடை - பூவிதழ்களையுடைய [அதாவது - காம்பரிந்தமலர்களை மேலே பரப்பிவைக்கப்பெற்ற] என்றும் பதப் பொருள் கூறலாம். அப்படுக்கையின் ஓங்கிய தன்மைபற்றி 'மலை' என்றுர். உதிரவாரி - செந்நீர். மனத்தினற் காணுதலும் உளதாத லின், அதனினின்று பிரித்தற்கு 'கண்ணிற்கண்டான்' என்றுர். மடல் கடல் என்பன - எதுகை நோக்கி, மடர் கடர் எனவந்தன; [5]மடல் [7]கடல் எனப்போலியில்லாதபாடமு முண்டு. பி - ம்:—[1]தோன் றல். [2]முகத்தினேரை. [3]எண்ணத்தும். [4]உணர்கலாதான். [6]மல ரன்றி. (385)

141.—கண்ட அங்கதன் வாலியின்மேல் விழுதல்.

கண்டனன் [1]கலுழி நீருங் குருதியுங் [2]காலை மாலைக்
குண்டல [3]மலம்பு கின்ற குவவுத்தோட் குரிசில் திங்கள்
மண்டல முலகில் [4]வந்து கிடந்ததம் மதியின் மீதா
[5]விண்டலந் தன்னி னின்றேர் மீன்விழுந் தென்ன வீழ்ந்தான்.

(இ - ள்.) காலை மாலை - சூரிய சந்திரர்போல, குண்டலம் அலம்பு இன்ற - குண்டலமென்னும் காதணி அசைந்து விளங்கப்பெற்ற, குவவு தோள் - திரண்ட தோள்களையுடைய, குரிசில் - அங்கத குமாரன்,—கண்டனன் - (அங்ஙனம் தந்தையைப்) பார்த்து,—கலுழி

நீர்உம் குருதிஉம் - (தன்கண்களினின்று பெருகுகின்ற) கலக்கமுள்ள கண்ணீரும் இரத்தமுமாய், - திங்கள் மண்டலம் (விண்தலந்தன்னி னின்று) உலகில் வந்து கிடந்தது-சந்திரமண்டலம் வானத்திலிருந்து நிலவுலகத்தில் வந்துவிழுந்து கிடந்ததாக, அமதியின் மீது ஆ - அந்தப்பூர்ணசந்திரன்மேலே, விண்தலந்தன்னினின்று ஓர் மீன் விழுந்து என்ன-வானத்திலிருந்து ஒருநக்ஷத்திரம் விழுந்தாற்போல, வீழ்ந்தான் - (தரையில் விழுந்து கிடக்கின்ற அந்த வாலியின்மேல் தான் சோகத்தால்) விழுந்திட்டான்; (எ - று.)

சந்திர மண்டலம் மண்தலத்துக் கிடந்தாற்போற் கீழ்வீழ்ந்து கிடக்கின்ற வாலியைக்கண்டு அங்கதகுமரன் குருதியோடு தன்கண் ணநீரும் வடியப்பெற்று விண்தலத்துநின்று விண்மீன் விழுந்தாற் போலவீழ்ந்தனனென்க. முன்னிரண்டடிகளில் உவமையணியும், பின்னிரண்டடிகளில் தற்குறிப்பேற்றவணியும் சேர்ந்ததனால், சேர்வை யணி. கலுழிநீர் - கலங்கல்நீர்; சோகமிகுதியாற் கண்ணீரோடு குரு தியும் கண்களினின்று வெளிப்பட்டது. இலக்கணையால், 'காலை' என்பது - காலையில் உதித்துவிளங்கும் சூரியனையும், 'மாலை' என் பது - மாலைப்பொழுதில் உதித்துவிளங்கும் பூர்ணசந்திரனையுங் குறித்தன. ஒளிமிகுதியும் வட்டவடிவும்பற்றி, சூரியசந்திர மண்ட லங்கள் - குண்டலங்கட்கு உவமை. இனி, காலை மாலை - உதயபர்வ தம் அஸ்தமநபர்வதம் என்றுகொண்டு, அவற்றைத் தோள்கட்கு உவமையாக்கியுரைத்தலுமாம். ஆ-ஆக என்பதன் விகாரம்; இதனை இங்கு அசையென்னலாம். மீன் - விண்மீன். [2]கால என்ற பாடத் துக்கு - கான்யாறுபோல நீர்ப்பெருக்கையும் இரத்தத்தையும் (கண் கள்) தொடர்ச்சியாய்ச் சொரியவென்க; அப்போது, மாலை - இடை யறுத தொடர்ச்சிக்கு இலக்கணை. காதிலணிந்த குண்டலங்கள் தோளளவுந் தொங்குதலால், 'குண்டலமலம்புகின்ற குவவுத்தோள்' என்றார். பி-ம்:—[1]கண்ணினீரும், கலுழிநீரின். [3]இலங்குகின்ற. [4]வந்தவதனத்தான்றதை தன்பால், வந்துவதிந்தென மீதுமாக. [5]விண்டலமதனில் நின்றோர்மீன். (386)

142.—நான்குகவிகள் - வாலியைக்குறித்து அங்கதன் புலம்பல்.

எந்தையே யெந்தை யேயிவ் வெழுதிரை [1]வளாகத் தியார்க்கும்
சிந்தையாற் செய்கை யாலோர் தீவினை செய்தி லாதாய்
[2]நொந்தனை யதுதா னிற்க நின்முக நோக்கிக் கூற்றம்
வந்ததே யன்றோ வஞ்சா தா[3]ரதன் [4]வலிமை தீர்ப்பார்.

(இ - ள்.) எந்தையே எந்தையே - என்தந்தையே! என்தந் தையே!! இ எழு திரை வளாகத்து - மேலெழுகின்ற அலைகளையுடைய கடல் சூழ்ந்த இந்நிலவுலகத்தில், யார்க்கும் - எவர்க்கும், சிந்தையால் செய்கையால் ஓர் தீவினை செய்திலாதாய் - மனத்தினாலும் செய்கையி னாலும் ஒருதீங்கையுஞ் செய்யாதவனே! நொந்தனை - (அங்ஙனமிருந் தும் நீ இவ்வாறு) துன்பமடைந்தாய்!! அது தான் நிற்க - அது

அப்படியிருக்கட்டும்: நின் முகம் நோக்கி கூற்றம் வந்ததுவ அன்றோ- உனதுமுகத்தைப் பார்த்தும் (அஞ்சாமல்) யமன் (உன்னிடத்திலும்) வந்து விட்டதேயன்றோ; (இனி), அஞ்சாது அதன் வலியை தீர்ப்பார் ஆர்-அச்சங்கொள்ளாமல் அதன்வலிமையை யொழிக்கவல்லவர் வேறுயாவருளர்? (எ - று.)

திரிகரணங்களுள் ஆதிகாரணமான மனத்தையும், பிற்பட்ட காரியமான செய்கையையுங் கூறவே, இடைப்பட்டதான சொல்லினு லும் எவர்க்குந்தீமை செய்யாதவனென்பது போதரும்; சிந்தையால் தீ வினை செய்தல் - பிறர்க்குத் தீங்குசெய்யுமாறு மனத்தினால் நினைத் தல். 'எந்தையே எந்தையே' என்ற விளியடுக்கு, புலம்பல் பற்றி வந் தது. எழுதிரை - வினைத்தொகையன்மொழியாய், கடலைக்குறித்தது: இனி, 'எழுதிரை' என்பதைப் பண்புத்தொகையாக, எழு கடல்கள் சூழ்ந்த நிலவுலக மென்றலுமாம்; இப்பொருளில், திரை - கடலுக்குச் சினையாகுபெயர். வளாகம் - சூழப்பட்ட இடம். அங்க தன் வாலியைச் சேர்ந்தவரோடு வாழ்பவனாதலால் சுக்கிரீவன் வாலியால் துரத்தப்பட்டு அவன் மனைவியைக் கவர்ந்ததை அவர்கள் கூறுமிடத்து, பகைவருடைய சொத்துக்களையும் அவர் மனைவியையும் பறித்துக்கொள்ளல் நியாயமானவையே என்னக் கேட்டிருத்தலால், சுக்கிரீவனுக்கு வாலி தீமை செய்திருக்கவும், 'யார்க் குஞ் சிந்தையாற் செய்கையாலோர் தீவினை செய்திலாதாய்' என் றான். பி - ம்:—[1] உலகத்து. [2] நொந்தநெஞ்சு. [3] அவன். [4] வலியைத் தீர்ப்பார். (387)

143. [1] தறையடித் ததுபோற் நீராத் தகையவித் திசைகள் தாங்கும்
கறையடிக் [2] கழிவு செய்த கண்டக னெஞ்ச [3] முன்றன்
நிறையடிக் கோல வாலி னிலைமையை [4] நினையுந் தோறும்
பறையடிக் கின்ற தந்தப் பயமறப் [5] பறந்த தன்றே.

(இ - ள்.) தறை அடித்ததுபோல் - (அவ்வவை) இருக்கும் இடத்தில் தானே ஆணியடித்தாற்போல, நீரா தகைய - இடம் விட்டுப் பெயராத தன்மையை யுடையனவாய், இ திசைகள் தாங்கும் - இந்த எட்டுத் திக்குக்களையும் (கீழிருந்து) தாங்குகின்ற, கறையடிக்கு - (எட்டுத் திக்) கயங்களுக்கும், அழிவுசெய்த-தோல்வியை விளைத்த, கண்டகன் - கொடியவனான இராவணனது, நெஞ்சம் - மனம்,—உன் தன் - உனது, நிறை அடி - பருத்த அடியையுடைய, கோலம் வாலின் - அழகிய வாலின், நிலைமையை - தன்மையை, நினையுந் தோறும் - நினைக்கும்பொழுதெல்லாம், பறை அடிக்கின்றது - பறையடிக்கின்றதுபோலப் படபடவென்று துடிதுடிக்கின்றது; அந்த பயம் - அந்த அச்சம், அற பறந்தது அன்றே - (இப் பொழுது நீ இறத்தலால் இனி) முழுவதும் போய்விட்ட தன்றோ! (எ - று.)

இராவணனை வாலி வாலினாற் கட்டி வலியடக்கிக் கருவபங் கஞ் செய்தது, கீழ்க் கூறப்பட்டது; மேல் உத்தரகாண்டத்து

வாலிவாலாற்கட்டுண்ட படலத்திற் பரக்கக்காணலலம். ஆகவே, அவ்வாலியினது வாலின்வலிமைநிலையை நினைக்குந்தோறும் அச்சத்தால் இராவணன்மனம் மிகத் துடிக்கின்றதென்க.'வாலியின்பின் புறத்து உறுப்பான வாலுக்கே இராவணன்மனம்பதைப்பானுனல், முன்புறத்து உறுப்புகளாகிய கைகால்களைப்பற்றி அவ்விராவணன் என்படான்?' என்ற குறிப்புப் பொருளை இங்குக் காணலாம். கைலாயபதியின் காலாலடர்ப்புண்டானை வாலி தன் வாலாலடக்கினனென்றார். திசைகள் தாங்கும் கறையடி - எட்டுத் திசைகளிலும் இழிருந்து நிலவுலகத்தைத் தாங்கும் யானைகள். 'தறையடித்தது போல் தீராத்தகைய' என்றது - அவ்யானைகள் இடம் விட்டுப் பெயராமல் ஒருநிலையில் நிற்றற்கு உவமை. நிலவுலகம் எட்டுத் திசையிலும் நிலைபெயராமைக்கு உவமையா மென்பாருமுளர். கறையடி - உரல்போன்ற கால்களை யுடையது என உவமைத்தொகை யன்மொழியாய் யானையைக் குறிக்கும். அழிவு செய்தல் - தன்னைத்தாக்கிய அவற்றின் கொம்புகளால் பங்கப்படாது அவற்றை முறியச்செய்தமை. திக்கஜங்களை இராவணன் வென்றது திக்கு விசயகாலத்தி லென்க. கண்டகம் - வடசொல்; முள்: அதுபோலப் பிறர்க்கு உபத்திரவஞ் செய்பவன், கண்டகன். பறையடித்தல் - மிகத்துடித்தலென்ற இப்பொருளதாதலை "பந்தடிக்குந்தொறும் நெஞ்சம் பறையடிக்கின்றது" எனச் சடகோபரந்தாதியிலும், "இருவர்மாமனமும் பறையறைந் தயர்வுடனடுங்க" என வில்லிபுத்தூரார்பாரதத்திலுங் காண்க. பி-ம்:—[1]தறையடித்தகைசொற்றீரா, தறையடித்தகைபோல், தறையடித்தகைபோர், தகைவிதியது போல். [2]இழிவுகண்ட. [3]உற்ற, ஊன்ற, முற்ற. [4]உன்னுந்தோறும். [5]பறிந்ததன்றே. (388)

144. குலவரை நேமிக் குன்ற [1]மென்றுவா னுயர்ந்த கோட்டின்
தலைகளு நின்பொற் ருளிற் [2]றழும்பினித் தவிர்ந்த வன்றே
[3]மலையுட னரவு [4]மற்று மதியமும் பலவுந் தாங்கி
அலைகடல் கடைய வேண்டி ஞரினிக் கடைவ ரையா.

(இ - ள்.) ஐயா - அப்பா!—குலம் வரை - (அஷ்ட) குலபருவதங்கள், நேமிக் குன்றம் - சக்கரவாளகிரி, என்று - என்று பெயர் சொல்லப்பட்டு, வான் உயர்ந்த - ஆகாயத்தையளாவி யுயர்ந்துள்ள, கோட்டின் - மலைகளின், தலைகளும் - சிகரங்களும், இனி - இனிமேல், நின் பொன் தாளின் தழும்பு-உனது அழகிய பாதங்களை வைத்தலாலாகுஞ் சுவட்டை, தவிர்ந்த அன்றே - நீங்கினவன்றோ! மலையுடன் - (மத்தான மந்தர) கிரியையும், அரவு உம் - (கடைகயிருன வாசுகியென்னும்) பாம்பையும், மற்றும்—, மதியம் உம் - (அடைதூணுகக் கொண்ட) சந்திரனையும், பல உம் - (ஸ்ரீகூர்மமாகிய அடைகல் ஓஷதிகள் முதலிய) பல உபகரணங்களையும், தாங்கி - கொண்டு, அலைகடல் கடைய வேண்டின் - அலையெறிகின்ற பாற்கடலைக் கடைந்து தருமாறு (தேவர்கள்) வேண்டினுல், இனி ஆர் கடைவர் - (நீ இறந்

தொழிதலால்) இனிமேல் வேறு யார் கடைந்து உதவமாட்டுவர்! [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

கீழ்க்கவியில் வாலியினுடைய வால்வலிமையைத் தெரிவித்தவர், இங்கு முன்னிரண்டடிகளினால் அவ்வாலியின் கால்வலிமையையும் பின்னிரண்டடிகளினால் கைவலிமையையும் பேசுவர். சிவ பூசைசெய்வோர் பூசைசெய்யக் குறித்த இடத்தினுள்ளேதானே சிவனைத் திசைமுடிவுகளில் வீற்றிருப்பதாகப் பாவனையால் தாபனஞ் செய்து பூசைபுரிவர்; வாலியோ அப்படியன்றித் தனது சிவபூசை முடித்தற்குத் தின்தோறும் திசைமுடிவுகட்கே சென்று திரும்புவன்; மகா பலசாலியான வாலி அங்ஙன் திரும்புகையில் ஒன்றினின்று ஒன்றுகப் பலமலைகளில் தாவிக் குதிக்கும்போது அவன் கால்கள் அழுந்துதலால் அம்மலைச்சிகரங்கள் தழும்படைந்திருந்தன என்று முன்னிரண்டடிகளில் கால்வல்லமையைக் கூறியதைக் காண்க. மற்றும் பலவும் என்றது - கூர்மமாகிய அடைகல் ஒஷதிகள் முதலியவற்றை. தலைகளும், உம் - உயர்வுசிறப்பு. பாற்கடல் மந்தரம் வாசுகி முதலிய யாவும் இருந்தும் நீயொருவன் இல்லாக்குறையால் பாற்கடல் கடைகையாகிய தொழில் நிகழாது என்றது இன்மை நவிற்சியணி. பின்னிரண்டடிகளில் தேவர்சுரர்முதலிய எவராலும் கடைந்தெடுக்க முடியாத அமுதத்தைக் கடைந்து கொடுத்த கைவல்லமை கூறப்பட்டது. பி - ம்:—[1] இன்றிவான், என்றிவற்று. [2] தழும்பினில். [3] மலைகொளும். [4] பலவுளமத்துந்தாம்பும், மற்றுளபிறவுந் தாங்கி. சிலபிரதிகளில் இது "பஞ்சின்மெல்லடியாள்" என்றதன் பின். (389)

145. பஞ்சின்மெல் லடியாள் [1]பங்கன் [2]பாதுக மல்ல [3]யாவும்

அஞ்சலித் தறியாச் [4]செங்கை [5]யாணையா யமரர் யாரு‍ம்

[6]எஞ்சல ரிருந்தா ருன்னு [7]லின்னமு தீந்த நீயோ

துஞ்சினை வள்ளி யோர்கள் [8]நின்னின்யார் சொல்லற் பாலார்.

(இ-ள்.) பஞ்சின் மெல் அடியாள் பங்கன் பாதுகம் அல்ல யாவும் அஞ்சலித்து அறியா-பஞ்சுபோல் மென்மையுள்ள பாதங்களையுடையவளான அம்பிகையைத் (தனது) திருமேனியின் இடப்பக்கத்திற் கொண்டவனாகிய சிவபிரானது திருவடிநிலைகளை (த் தொழுவதேயன்றி அச்சிவபாதுகை யல்லாதமற்றவை) எவற்றையுங் கும்பிட்டறியாத, செம் கை - சிவந்த கைகளையுடைய, ஆணையாய் - ஆஜ்ஞாசக்கர முடையவனே! உன்னால் - நீ கடல்கடைந்து அமிருதங் கொடுக்கப் பெற்றதனால், அமரர் யாரும் எஞ்சலர் இருந்தார்-தேவர்களெல்லாரும் இறந்து குறையாதவர்களாய் நின்றார்கள்; (அங்ஙனமிருக்க), இன் அமுது ஈந்த நீ துஞ்சினை- இனிமையான அமிருதத்தை (அவர்கட்கு)க் கொடுத்த நீ இறக்கின்றாய்: (ஆகவே), நின்னின் வள்ளியோர்கள் சொல்லல் பாலார் யார்-உன்னைப்போல வண்மையையுடையவராகச் சொல்லத்தக்கவர் யாருளர்? (எ - று.)

தனக்குக்கிடைத்த அமிருதத்தைத் தான் உண்டு அதனால் அழிவின்றி உயிர்வாழாது அதனைத் தேவர்கட்குக் கொடுத்து

அவர்களை அமரராக்கிய வண்மை மிகவும் அரியசெயலாதலால், அதனைப் பாராட்டிப் புலம்பினன். (பிற்காலத்தில் அதிகமானென்னும் வள்ளல் தனக்கு அருமையாகக் கிடைத்ததும் உண்டால் உண்ட அவரை மாத்திரமே நீடூழிகாலம் உயிர்வாழச் செய்வதுமான அமிருதத்தன்மை அமைந்ததொரு மிக இனிய கருநெல்லிப் பழத்தைத் தான் உண்ணாது அதனை ஔவையார்க்குக் கொடுத்து அவளை நெடுங்காலம் உயிர்வாழ்ந்திருக்கச் செய்தமையினும்; தன்னுடைக் கை வல்லமையாற் பெற்றதும், உண்ட தேவரையெல்லாம் மரணத்தினின்று தவிர்த்ததும், தான் உண்டால் தேவர்களுண்ணுதற்குப் போதாதே என்று குறைகூற முடியாதபடி பின்னும் எஞ்சியிற்பது மான அமிருதத்தைத் தான் உண்ணாது தேவர்கட்கே கொடுத்த வள்ளன்மை இங்குப் பாராட்டத்தக்கது.)

பஞ்சின் மெல் அடி - செம்பஞ்சுக்குழம்பூட்டிய மென்மையான பாதமெனினுமாம். பாதுகம் - மிதியடி. ஆணையாய் - எங்குந்தவறுத கட்டளையை யுடையவனே யென்றபடி. நீயோ; ஓ - தெரிநிலை. பி - ம்:—[1]பாகன். [2]பதயுகமலது, பதமலரலது. [3]யாரும். [4]செய்கை. [6]ஆணையால்..., ஆர்கலிகடைந்துமுன்னம், ஆணையாலமரர் யாண்டும். [5]எஞ்சலிலமரருண்ண. [7]இன்னமிது. [8]செய்கையார் சொல்லற் பாலார். (390)

146.—வாலி அங்கதனைத் தழுவித் தேறுதல் கூறுதல்.

[1]ஆயன [2]பலவும் பன்னி யழுங்கினன் [3]புழுங்கி [4]நோக்கித்
தீயுறு மெழுகிற் சிந்தை [5]யலம்வருஞ் செங்கண் வாலி
நீயினி யயர்வா யல்லை யென்றுதன் னெஞ்சிற் புல்லி
நாயக னிராமன் செய்த நல்வினைப் [6]பயனி தென்றான்.

(இ - ள்.) ஆயன பலஉம் - இவ்வாறாகிய பலவார்த்தைகளையும், பன்னி - அடுத்தடுத்துச் சொல்லி, அழுங்கினன் - (அங்கதன்) அழுதான்; நோக்கி - (அதனைப்) பார்த்து, புழுங்கி - மனந்தவித்து, தீ உறு மெழுகின் - நெருப்பி லிட்டமெழுகு போல, சிந்தை அலம் வரும்- மனம் நெகிழ்ந்து உருகுகின்ற, செம் கண் வாலி - (கலக்கத்தாற்) சிவந்த கண்களையுடைய வாலியானவன், (அந்த அங்கதனை நோக்கி), இனி நீ அயர்வாய் அல்லை என்று - 'இனி நீ வருந்தக் கடவாயல்லை' என்று சொல்லி, தன் நெஞ்சின் புல்லி - தனது மனப்பூர்வமாக [உண்மையான அன்புடனே] (அவனை) அணைத்துக்கொண்டு, நாயகன் இராமன் செய்த நல்வினை பயன் இது என்றான் - '(எல்லாப் பொருள்கட்குந்) தலைவனான இராமபிரான் செய்த புண்ணியத்தின் பயன் இது' என்று கூறினான்; (எ - று.)

மூவுலகங்களையும் வென்றிட்ட இராவணனை வென்றவனான தன்னை வெல்லுதல் மிக்க புண்ணியத்தின் பயனாலன்றிக் கூடாதென்னுங் கருத்தால், 'இராமன்செய்த நல்வினைப்பயன் இது' என்

ருன்; 'இது' என்றது, தன்னைக் கொல்லுதலை. இனி, இராமன் செய்த நல்ல காரியத்தின் பயன் இதுவென்று உரைத்தலுமாம்: இவ்வுரைக்கு, 'நல்வினை' என்றது, தன்மேல் அம்பெய்ததை; தான் முத்திபெறுதற்குக் காரணமாதல்பற்றி, அதனை 'நல்வினை' எனக் கொண்டாடுகின்றனனென்க: நல்வினைப்பயனிது என்றது - இராம பிரான் வாலியைக் கொன்றான் என்று மாறுபடக் கருதாதே என்ற குறிப்பினது. இதன் திறம், அடுத்தகவியில் விளங்கும். தன் நெஞ்சின் - மார்போடு எனினுமாம்; (நெஞ்சு - தானியாகுபெயர்.) அலம்வருதல் - கலக்கமடைதல்; அலம் - சஞ்சலம். பி - ம்:—[1] ஆயவன். [2] பிறவும். [3] அழுங்கி. [4] நோக்க. [5] உருகுவான், உருகினன். [6] பயனீது. (391)

147.—இது முதல் மூன்று கவிகள்-அங்கதனுக்கு வாலி அறிவு கூறியன.

தோன்றலு மிறத்தல் தானுந் துகளறத் துணிந்து நோக்கின்
[1] மூன்றுல கத்தி னோர்க்கு மூலத்தே [2] முடிந்த வன்றே
யான்றவ முடைமை யாலிவ் விறுதிவந் [3] திசைந்த தியார்க்கும்
சான்றென நின்ற [4] வீரன் தான்வந்து வீடு தந்தான்.

(இ - ள்.) துகள் அற - (ஐயந்திரிபுகளாகிய) குற்றங்களில்லாமல், துணிந்து நோக்கின் - நிச்சயித்துப் பார்க்குமிடத்து,—தோன்றல்உம் இறத்தல் தான்உம் - பிறத்தலும் இறத்தலும், மூன்றுஉலகத்தினோர்க்குஉம் - மூன்று வகைப்பட்ட உலகங்களி லுள்ளவரெல்லார்க்கும், மூலத்துஏ முடிந்த அன்றே - தொன்றுதொட்டே யமைந்துள்ளனவன்றோ? யான் தவம் உடைமையால் - நான் முன்புசெய்த தவத்தை யுடைமையால், இ இறுதி வந்து இசைந்தது - இத்தன்மையான நன்மரணம் (எனக்கு) வந்து வாய்த்தது: யார்க்குஉம் சான்று எனநின்ற வீரன் - எல்லார்க்கும் சாட்சியாய் நிற்கின்ற மகாவீரனான இராமபிரான், தான் வந்து வீடு தந்தான் - தானே (என்பக்கல்) எழுந்தருளி (எனக்கு) முத்தி தந்தருளினான்; (எ - று.)

முதலிரண்டடி - மூவுலகங்களிலு முள்ளாரனைவர்க்கும் பிறவியும் இறப்பும் தொன்றுதொட்டு இயல்பாக இருத்தலால் என் மரணத்தைக் குறித்து நீ வருந்தவேண்டாவென்று யாக்கை நிலையாமையையும் உலகியலையுங் கூறி மகனைத் தேற்றுகின்றவாறாம். இனி, பிறத்தலும் இறத்தலும் அவரவர்க்கு ஆதிகாலத்திலேயே [கருவாய்ப் பதிகின்றபொழுதே] அவரவரது முற்பிறவியின் வினைக்கு ஏற்றபடி அமைந்திட்டனவன்றோவென்று பொருள் கொள்ளலுமாம்: "அளந்தன போகமெல்லாமவரவர்க்கு அற்றை நாளே, அளந்தனவாழுநாளும்," "சாதலும் பிறத்தல்தானும் தம்வினைப் பயத்தினாகும், ஆதலுமழிவுமெல்லாம் அவை பொருட் இயல்புகண்டாய், நோதலும் பரிவுமெல்லாம் நுண்ணுணர் வின்மையன்றே"

என்ற சிந்தாமணி, இங்கு ஒப்பு நோக்கத்தகும். சிறப்புப்பற்றி 'உலகத்தினோர்' என உயர்திணைமேல் வைத்துக் கூறினாராயினும், உபலக்ஷணத்தால், அஃறிணை யுயிர்களையுங் கொள்க. பிறந்த உயிர் என்றைக்கேனும் எவ்வாற்றாலேனும் இறக்கவேண்டியதாயினும், எனக்கு இப்பொழுது இராமன்கையால் மரணம் நேர்கின்றது, யான் செய்த மாதவத்தின் பயனே: இதனால், உடனே வீடுபேறு வாய்க்கு மன்றோ என்பது, பின்னிரண்டடியின் பொருள். உலகத்து உயிர்கள் யாவுஞ் செய்யும் கருமங்களையெல்லாம் எப்பொருளினுள்ளும் உறைபவனான எம்பெருமான் தவறாது உணர்தலால், 'யார்க்கும் சான்றென நின்ற வீரன்' என்றான்: திருமாலின் ஸஹஸ்ரநாமங்களுள் 'ஸாக்ஷீ' என்பது ஒரு திருநாமமாதலுணர்க. 'துணிந்து நோக்கின்' என்றதை 'நோக்கித் துணியின்' என விகுதி பிரித்துக் கூட்டலாம். பி-ம்:—[1]மூவுலகத்துளோர்க்கும். [2]முடிந்தது. [3]அடைந்தது. [4]நம்பன். (392)

148. [1]பாலமை [2]தவிர்நீ யென்சொற் பற்றுதி [3]யாயிற் றன்னின்
மேலொரு பொருளு மில்லா மெய்ப்பொருள் வில்லுந் தாங்கிக்
கால்தரை தோய நின்று [4]கட்புலக் குற்ற தம்மா
மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தென வணங்கு மைந்த.

(இ - ள்.) ஐய - அப்பா! மைந்த - பிள்ளாய்! பாலமை தவிர் நீ - மிக்க இளமைப்பருவத்தின் தன்மையைக் கடந்த நீ, என் சொல் பற்றுதி ஆயின் - (தந்தையான) எனது வார்த்தையை விடாமற் கொள்வாயானால், தன்னின்மேல் ஒரு பொருள்உம் இல்லா மெய்ப்பொருள் - தன்னினும் மேன்மையாக ஒருபொருளும் இருக்கப்பெறாத தத்துவப் பொருளாகிய பரப்பிரமந்தானே, கால் - (தன்) கால்கள், தரை தோய நின்று - நிலத்திற்படும்படி (மனிதவடிவங்கொண்டு) நின்று, வில்உம் தாங்கி - ஒருவில்லையுங் கையில் ஏந்திக்கொண்டு, கண் புலக்கு உற்றது - (நமது) கண்ணின் புலனுக்கு [காட்சிக்கு] விஷயமாயிற்று; அம்மா - ஆச்சரியம்! (அது), மால்தரும் பிறவி நோய்க்கு - மயக்கத்தைச்செய்கின்ற பிறப்புக்களாகிய வியாதிகளைப் பற்றற வொழித்தற்கு, மருந்து - தக்கஔஷதமாகும், என-என்று எண்ணி, வணங்கு- (அவ்விராமமூர்த்தியை) நமஸ்கரிப்பாய்; (எ - று.)

மெய்ப்பொருள் - உண்மைப்பொருள், பரம்பொருள், பரதத்வம். கால்கள் நிலத்தில்தோயாமை தேவர்கட்கு இயல்பு ஆதலை, "கால் நிலந் தோயாக் கடவுள்" என்றதனாலும் உணர்க. "அடிகள் காசினியில் தோய்தலால்," "இருநிலஞ் சேவடியுந் தோயும்" எனப் பிறரும் கால்நிலந்தோய்தலால் தெய்வமன்மையை யுணர்ந்து மனிதரென்று துணிந்தமை காண்க. 'மேலொரு பொருளுமில்லா மெய்ப்பொருள் கால் தரைதோயநின்று' என்றது, பரத்வத்தை இருந்தது தெரியாதபடி விட்டுச் சௌலப்யத்தை மேற்கொண்டு என்றவாறும். 'வில்லுந்தாங்கி' என்றது - நல்லோரைக் காத்து அல்லோரைக் கடிந்து தருமத்தைப் பாதுகாத்தற்குச் சித்தனாய்

நிற்றலைக் காட்டும். கட்புலக்கு உற்றது - நமது கண்ணுக்கு இலக்காயிற்று; நம்மாற் காணப்படுவதாயிற்று என்றபடி. அமரர்க்குங் காணுதற்கரிய பரம்பொருள் எளியேமான நமக்குக் கட்புலனாவதே! என்று அதிசயித்தவாறும். பாலமை - பாலர் தன்மை; பாலர் - மிக இளையோர்; ஏழுபிராயத்திற்கு உட்பட்ட பருவத்தினர். 'பாலமைதவிர்' எனத் தனியே எடுத்து - 'பால்ய குணத்தை நீ விட்டிடு' என்று உரைப்பாருமுளர். பற்றுதியாயின் என வணங்கு என்று இயையும். அம்மா - வியப்பிடைச்சொல். புலக்கு - புலத்துக்கு: அத்துச்சாரியை தொக்கது. மால் - அவா. மால்தரும் பிறவி - அவாவினாலுண்டாகும் பிறப்புக்களெனினுமாம். 'கால்தரை' 'மால்தரும்' என்ற இடங்களில் இடைநிலைமெய்ம்மயக்கம் இலதாகவும் சந்திபெறுது இயல்பாய் நின்றது, எதுகைத்தொடையின பொருட்டென்க. பி - ம்:—[1] பாலனை. [2] தவிர்தி. [3] பார்க்கின்றெனில், பார்க்கிற்றன்னில். [4] கண்ணுக்கு மெளியனானன். (393)

149. என்னுயிர்க் கிறுதி செய்தா னென்பதை யிறையு மெண்ணாது
உன்னுயிர்க் குறுதி செய்தி யிவற்கமர் உற்ற துண்டேல்
[1] பொன்னுயிர்த் தொளிரும் பூணாய் [2] போதுதி நிலைமை நோக்கி
மன்னுயிர்க் குறுதி செய்வான் மலரடி சுமந்து வாழ்தி.

(இ - ள்.) பொன் உயிர்த்து ஒளிரும் பூணாய் - பொன்னாற் செய்யப்பட்டு விளங்குகின்ற ஆபரணங்களையுடையவனே! என் உயிர்க்கு இறுதிசெய்தான் என்பதை - எனது உயிர்க்கு அபாயத்தைச்செய்தான் (இவ்விராமன்) என்பதை, இறைஉம் எண்ணாது - சிறிதும்மனத்திற்கொள்ளாமல், உன் உயிர்க்கு - உனது உயிர்க்கு, உறுதி செய்தி - நிலையான நன்மையைச் செய்துகொள்ளக்கடவாய்: (அதாவது), - இவற்கு அமர் உற்றது உண்டுஏல் - இவனுக்குப் (பகைவரோடு) போர் நேர்ந்ததானால், போதுதி - (நீயும்) துணை செல்வாய்: மன் உயிர்க்கு நிலைமை நோக்கி உறுதிசெய்வான் - நிலைபெற்ற உயிர்கட்கு (அவ்வவற்றின்) பக்குவத்தைப் பார்த்து (அதற்கு ஏற்ப) நன்மைசெய்தருள்பவனான இப்பெருமானுடைய, மலர் அடி - செந்தாமரை மலர்போன்ற திருவடிகளை, சுமந்து - தலைமேற்கொண்டு, வாழ்தி - வாழ்வாய்: (எ - று.)

உயிர்த்தல் - உண்டாக்கப்படுதல். பி - ம்:—[1] பொன்னுருத்து. [2] பொன்றுதிதருமம்போற்றி. இந்தச்செய்யுள் சிலபிரதிகளில் மாறி வழங்குவது வருமாறு:—"என்னிதினுறுதியப்பாலுண்டென விறையுங்கொள்ளேல், உன்னுயிர்க்குறுதிசெய்தியுரைத்தன வுவந்து நோக்கிப்...பொதுகின்று தருமம்போற்று, மன்னுயிர்க்குறுதி செய்வான் மலரடிதொழுதுவாழ்தி," (394)

150.—இதுவும் அடுத்தகவியும் – வாலி அங்கதனை இராமபிரான்வசத்தில் ஒப்பித்தல்.

என்றன [1]னினைய வாய வுறுதிகள் யாவுஞ் சொல்லித்
தன்றுணைத் தடக்கை யாரத் தனயனைத் தழுவிச் சாலக்
குன்றினு முயர்ந்த திண்டோள் குரக்கினத் தரசன் கொற்றப்
பொன்றிணி வயிரப் பைம்பூட் புரவலன் றன்னை நோக்கி.

இதுமுதல் மூன்று கவிகள் - குளகம்.

(இ - ள்.) என்றனன் - என்று, இனைய ஆய - இத்தன்மையனவான, உறுதிகள் யாஉம் - இதமொழிகளை யெல்லாம், சொல்லி - (அங்கதனுக்குச்) சொல்லி, குன்றின்உம் சால உயர்ந்த திண் தோள் குரங்கு இனத்து அரசன் - மலையைக்காட்டிலும் மிகவுயர்ந்த வலிய தோள்களையுடைய வானரக்கூட்டத்திற்கு அரசனான வாலி, தனயனை - தன்மகனான அங்கதனை, தன் தட துணை கை - தனது பெரியகைக ளிரண்டினாலும், ஆர தழுவி - (மீண்டும்) இறுக அணைத்துக் கொண்டு,—கொற்றம் - வெற்றியையுடைய, பைம் பொன் திணி வயிரம் பூண் புரவலன் தன்னை நோக்கி - பசும்பொன்னாற் செய்யப் பட்டு வச்சிரரத்தினங்கள் பதித்த ஆபரணங்களை யணிதற்குரியவனும் காத்தற்றொழிலில்வல்லவனுமான இராமபிரானை நோக்கி,— (எ - று.)—'புனித!...என்று' என அடுத்தகவியோடு தொடரும்.

தனயனைத்தழுவி, புரவலன் தன்னைநோக்கி, குரக்கினத்தரசன், புனித! என்று காட்டுங்காலை என இயைக்க. பி - ம்:—[1] இனையயாவு முறுதிகள் பலவும். இச்செய்யுள் சில பிரதிகளிற் காணப்படுதலில்லை யென்ப. (395)

151. நெய்[1]யடை நெடுவேற் றானை நீனிற நிருதரென்னும்
துய்[2]யடைக் கனலி யன்ன[3]தோளினன் தொழிலுந் தூயன்
பொய்யடை யுள்ளத் தார்க்குப் புலப்படாப் [4]புனித மற்றுன்
கையடை யாகு மென்றவ் விராமற்குக் [5]காட்டுங் காலை.

(இ - ள்.) 'பொய் அடை உள்ளத்தார்க்கு - பொய்ம்மை பொருந்திய மனத்தையுடையவர்கட்கு, புலப்படா - புலனாகாத [அறியப் படாத], புனித - பரிசுத்தமூர்த்தியே! (இந்தஎன்மகன்),—நெய் அடை - நெய் பூசிய, நெடு வேல் - நீண்ட வேலாயுதத்தை யேந்திய, தானை - சேனைகளையுடைய, நீல் நிறம் நிருதர் என்னும் - கருநிறமுள்ள அரக்கர்களாகிய, துய் அடைக்கு - பஞ்சின் மூட்டைக்கு, அனலி அன்ன - நெருப்புப் போன்ற, தோளினன் - தோள்களையுடையவன்: தொழில்உம் தூயன் - குற்றமற்றசெயல்களையுமுடையவன்; (இங்ஙனமாகிய இவனும்), உன் கையடை ஆகும் - உனக்கு அடைக்கலமாவன்,' என்று - என்று சொல்லி, அ இராமற்கு காட்டும் காலை - அந்த இராமபிரானுக்கு (அங்கதனை)க் காண்பிக்கும்பொழுது,—(எ - று.)—

'தன்னடிதாழ்தலோடும்' என அடுத்த கவியோடு தொடரும். மற்று-அசை; வினைமாற்றுமாம்.

அங்கதன் தன்மையைக் கூறி, வாலி இராமபிரானிடம் அவனை அடைக்கலம் தந்தனனென்க. அரக்கர்களை மிக எளிதில் அழிக்கத் தக்க தோள்வலிமையையுடையவ னென்பது, 'இருத ரென்னுந் துய்ய டைக்கு அனலியன்ன தோளினன்' என்றதன் கருத்து. 'கனலி' என்று எடுத்தால், 'அடை' என்றதை நான்காம் வேற்றுமைத் தொகையென வேண்டும். துய்யடை - பஞ்சுப்பொதி. பொய்ம்மை யுடையார்க்குத் தானும் பொய்யனுவன் எம்பெருமா னென்க; "மெய் யனுகும் விரும்பித்தொழுவார்க்கெல்லாம், பொய்யனுகும் புறமே தொழுவார்க்கெல்லாம்," "மெய்யர்க்கே மெய்யனுகும் விதியிலா வென்னைப்போலப், பொய்யர்க்கே பொய்யனுகும் புட்கொடியுடைய கோமான்" என்றார் ஆழ்வார்களும். கையடை - அடைக்கலம்; கை அடை என்றுபிரிந்து - ஒருவரது கையை [சுவாதீநத்தை] யடைவது என்றாவது, ஒருவரது கையில் [வசத்தில்] சேர்வது என்றாவது பொருள்பட்டுக் காரணக்குறியாகத்தக்கது; நெய் அடை - (பகைவரது) நிணந் தோய்ந்த வெனினுமாம். தொழிலும் தூயன் - மன மொழிகளில் மாத்திரமே யன்றிச் செயலிலும் தூய்மையுடையவ னெனினுமாம். காட்டுதல் - காட்டிக்கொடுத்தல், ஒப்பித்தல். பி - ம்:—[1]உடை, இடை. [2]இடை. [3]தோளிணைத்தொழிலுந்தூயன், தோளிணைத் தொழிலுந்தூய, தோளினை தொழிலுந்தூயை. [4]புலவவுன்றன், புயல்வண்ணவுன், புலவமற்றுன். [5]காட்டிப் பின்னை. (396)

152.—அங்கதனை இராமன் அங்கீகரித்தலும், வாலி பரமபதமடைதலும்.

தன்னடி [1]தாழ்த லோடுந் தாமரைத் [2]தடங்க ணனும்
பொன்னுடை வாளை நீட்டி நீயிது பொறுத்தி யென்றான்
என்னலு முலக மேழு மேத்தின [3]விறந்து வாலி
அந்நிலை [4]துறந்து [5]வானுக் கப்புறத் துலக [6]ணனன்.

(இ - ள்.) தன் அடி தாழ்தலோடும் - (அங்கதகுமாரன்) இராமபிரானது திருவடிகளில் விழுந்து வணங்கியவளவில்,— தாமரை தட கணன்உன் - செந்தாமரைமலர்போன்ற பெரிய திருக்கண்களையுடையவனான இராமபிரானும், (அங்கதனைத்தான் அடைக்கலமாக ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக), பொன் உடை வாளை நீட்டி - அழகிய (தனது) உடைவாளைத் தன் கையி லெடுத்து நீட்டி, 'நீ இதுபொறுத்தி - நீ இதனை ஏற்றுக்கொள் வாய்,' என்றான்-என்று கட்டளையிட்டருளினான்; என்னலும்-என்று சொன்னவளவில், உலகம் ஏழ்உம் ஏத்தினன் - ஏழுவகைப்பட்ட உல கங்களிலுள்ள உயிர்களெல்லாம் (இராமபிரானைத்) துதித்தன; (பின்பு), வாலி—, இறந்து--, அ நிலை துறந்து-அந்த உடம்பைவிட்டு,

வர்னுக்கு அப்புறத்து உலகன் ஆனுன் - மேலுலகங்கட் கெல்லாம் அப்பாலுள்ள தான முத்தியுலகத்தை யடைந்தவனுனன்; (எ-று.)

தனது உயிர் நண்பனுன சுக்கிரீவன் விரும்பியபடி அவனுக்குப் பழம் பகைவனாகிய வாலிக்குப் பரமபதமளித்து அவன் மகனுன அங்கதனை வாலியின் விருப்பத்தின்படி தனக்குத் துணைவனுக ஏற்றுக்கொள்ளுகையிற் பெருமான் திருவுள்ளமுவந்து கண்மலர்ந் திருந்தமை தோன்ற, 'தாமரைத் தடங்கணுன்' என்றுர். வாலியின் வேண்டுகோட்கு இணங்கி அங்கதனிடத்து அன்புவைத்தருளிய அருமைக் குணத்தைக் கொண்டாடி, எல்லாவுலகங்களுந் துதித்தன வென்க; தந்தைபோலன்றி மைந்தன் எம்பெருமானுடைய கருணைக்கு முதலிலேயே இலக்காயினமை குறித்து அதிசயித்து அவ்வங்கதனைப் புகழ்ந்தன வென்றலுமாம். தாமரைக்கண்ணுன் - புண்டரீகாக்ஷன். உடைவாள் - உடலிற் செருகி வைக்கும் வாள்; உடையின்மீது கட்டும் வாள். உடை - அரையிலுடுக்கும் ஆடை. பொறுத்தல் - கையிலேந்துதல். அந்நிலை - உயிர்நிலை: திருக்குறளில் "கள்வார்க்குத் தள்ளுமுயிர்நிலை" என்றவிடத்தில் 'உயிர்நிலை' என்றது உடம்பாதல் காண்க; 'உயிர்நிற்றற்கு இடனுகலின், உயிர்நிலை எனப்பட்டது' என்று அங்கு உரைத்தனர், பரிமேலழகர். 'இறந்து அந்நிலைதுறந்து' என்றது, ஒருபொருட் பன்மொழி. இனி, 'அந்நிலைதுறந்து என்பதற்கு - அந்த உலக சம்பந்தத்தைப் பற்றறவிட்டு என்றும், வழியிலுள்ள இடங்களை யெல்லாம் கடந்து என்றும் பொருள் கொள்ளலாம். பி - ம்:— [1] தழுவலோடும், தாழுங்காலை. [2] செங். [3] கிடந்த, இறந்த. [4] தீர்ந்து. [5] வானினப். [6] ஆவான். (397)

153.—இராமபாணம் இராமனிடம் மீளுதல்.

[1] கையவ [2] ணெகிழ்த லோடுங் [3] கடுங்கணை காலன் வாலி
வெய்யமார் பகத்துள் தங்கா [4] துருவிமேக் குயர மீப்போய்த்
துய்யநீர்க் கடலுள் தோய்ந்து தூய்மல [5] ரமரர் தூவ
[6] ஐயன்வெந் விடாத கொற்றத் தாவம்வந் தடைந்த தன்றே.

(இ - ள்.) அவண் - அப்பொழுது, கை நெகிழ்தலோடும் - (வாலி தன்மார்பினூடுருவிய இராமபாணத்தை இழுத்துப்பிடித்திருந்த) கைப்பிடிதளர்ந்த வளவில், கடுங் கணை - விரைவையுடைய அந்த அம்பானது, காலன் வாலி வெய்ய மார்பு அகத்துள் தங்காது - யமன்போலக் கொடியவனுன வாலியினது கொடிய மார்பினுள்ளே தங்காமல், உருவி - (அந்தமார்பைத்) துளைத்துக் கொண்டு அப்புறங் கழன்று, மேக்கு உயர மீ போய் - மேலே உயர எழுந்துசென்று, துய்ய நீர் கடலுள் தோய்ந்து - பரிசுத்தமான கடலின் நீரில் நீராடி, அமரர் தூய் மலர் தூவ - தேவர்கள் பரிசுத்தமான (கற்பகதருக்களின்) மலர்மாலைகளைத் தூவாநிற்க, ஐயன் வெந் விடாத கொற்றத்து - ஸ்ரீராமபிரா

னுடைய முதுகைவிட்டு நீங்காத [அவனது தோளின் புறத்தில் கட்டப்பட்டுள்ள] வெற்றியையுடைய, ஆவம் - அம்பறுத்தூணி யில், வந்து அடைந்தது - வந்து சேர்ந்தது; (எ - று.)—அன்றே - ஈற்றசை; அப்பொழுதே யெனினுமாம்.

பரிசுத்தமான இராமபாணம் தன்செயலைச் செய்தபின் தன்னுறைவிடத்துச் சேருமியல்பினது. துய்யநீர் - தன்னில் நீராடியவர்க்குத் தீவினை தீர்த்துத் தூய்மையை யளிக்கும் புண்ணிய தீர்த்தம். வெற்றிபெறுந்தன்மையவான அம்புகள் தங்கும் புட்டிலாதலால், 'கொற்றத்து ஆவம்' எனப்பட்டது. பி-ம்:—[1]—கையவன். [2]நெகிழ்த்தலோடும். [3]கடுங்கணைகால, கணையெனுங்காலன். [4]அகன்று. [5]அமரர் சூட்ட, மாரிதூவ. [6]ஐயன் பின் தூங்கும், ஐயனை விடாது. இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லையென்ப: சிலபிரதிகளில், அடுத்துள்ள தாரைபுலம்புறு படலத்தின் 21-ஆம் பாடலாகிய "புதல்வன் பொன் மகுடம்" என்ற பாடலுக்குப்பின், வாலிவதைப்படலம் முற்றிற்று என்பது காணப்படுகின்றது. (398)

வாலிவதத்தைப்பற்றிக் கம்பரும் வான்மீகியும் கூறியிருப்பவற்றின் சாரமும் ஆராய்ச்சியும்: வாலி மாயாவியை வென்று மீண்டு வந்ததும் மந்திரிமார் முதலியோர் கட்டாயப்படுத்தியதனால் தான் அரசையேற்றதன்றி ஆசையினால் அரசைக் கொள்ளவில்லையென்பதைச் சுக்கிரீவன் வற்புறுத்திக்கூறித் தன்பிழையைப் பொறுக்குமாறு புகல்புகுந்தான். தன்தம்பிமீது குற்றமில்லாமையை யுணர்ந்தும், அவன் தன்னைச் சரணமடைந்தவனாக இருந்தும், அவன்பிழையைப்பொறுக்கவேண்டுவதே அந்த வாலிக்குக் கடமையாயிருக்க, அவன்மீது பெருஞ்சீற்றங் கொண்டு அச்சுக்கிரீவனை யொழிப்பேனென்று அவனைக் கொல்லப் பார்த்தான். அதனால், வாலி வரக்கூடாதென்று சாபவரம்புடைய மதங்காச்சிரமமுள்ள ரிசியமூகபருவதத்தில் சுக்கிரீவன் அனுமான் முதலியோருடன் வாழ்ந்து வரலானான்; அங்கிலையில் சுக்கிரீவன் மனைவி ருமையையும் வாலி பெண்டாகக்கொண்டான். இராமலட்சுமணர் சீதையை நாடுங் கருத்தோடு அங்கு வருகையில், அன்னாரோடு அநுமான் மூலமாக நட்புக்கொண்டு தன் சரிதையைச் சுக்கிரீவன் விளங்கக் கூறினான்.

பிழையற்றவனாய்ப் புகல்புகுந்தோனைக் காவாமை, தம்பியின் மனைவியைப் புணர்தல் என இரண்டு பெருங்குற்றங்கள் வாலியினிடம் இருத்தலைத் தெளிந்து, இராமபிரான் 'என்சரம் அந்த வாலியைத் தொலைத்துவிடும்; அஞ்சாதே' என்று அபயம் ஈந்தான்: அபயம்பெற்ற சுக்கிரீவன் சரணாகத வத்சலனான இராமபிரானது மொழிப்படியே அறைகூவி வாலியோடு பொருகையில், போரில் இளைத்த சமயத்தில் அந்தச் சுக்கிரீவனை வாலி கொல்லப்பார்த்தான். அப்போது இராமபிரான் கணையெறிய, அது வாலியின் மார்பை யூடுருவிற்று. வாலி வலியொடுங்கி விழுந்திட்டான்.

விழுந்த வாலி தன்னைக்கொன்ற காரணத்தை வினவ, இராமபிரான் வாலியின்மீது உள்ள இரண்டுபெரும்பிழைகளை விளக்கவுரைத்து இக்குற்றத்திற்குத் தண்டனையாகவே உன்னைக்கொன்றதென்று கூறினான். வாலிக்கு இராமபிரான் பதில் கூறுமிடத்து வான்மீகத்தில் பலபடி பேசிவருகையில், தண்டனையாகக் கொல்லுமிடத்து எவ்வகையாலும் கொல்லலாமென்று கூறியதோடு, நீ விலங்காகையால் மன்னவர்கள் விலங்கை வேட்டையாடுவது இயல்பேயென்றுங் கூறியுள்ளார்: விலங்கென்று வாலியைப்பேசுவது வேண்டுவதன்று என்றுகருதிய கம்பநாடர், வாலி தான் விலங்கு என்று கூறிய பேச்சுக்கு மறுதலையாக "நலங்கொடேவரில் தோன்றி நவையறக், கலங்கலாவறநன்னெறி காண்டலின், விலங்கலாமை விளங்கியது" என்பதுமுதலியவாகக் கூறியுள்ளார். அதற்கு இசைந்து, வாலி, 'வெவ்விய புளிஞரென்ன விலங்கியே மறைந்துவில்லால், எவ்வியதென்னை?' என்றான். இக்கேள்விக்கு விடையாக இலக்குமணன் கூறியதாக "முன்பு நின்தம்பிவந்து சரண்புக முறையிலோயைத், தென்புலத்துய்ப்பெனென்று செப்பினன் செருவில்நீயும், அன்பினையுயிருக்காகி அடைக்கலம் யானுமென்றி, யென்பது கருதி அண்ணல் மறைந்துநின்றெய்தது" என்றான். புகலடைந்தோரைப் பாதுகாப்பவன் இராமபிரான் என்பதை வற்புறுத்தும் பொருட்டே இவ்வாறு கம்பர் கூறியது: உண்மையை யாராய்வோமானல், விசுவாமித்திரர் சிவபிரானிடத்திருந்துமே பலப்பல அஸ்திரங்களை யெல்லாம்பெற்று வசிட்டமுனிவனை யெதிர்த்தபோது அம்முனிவன் தனதுபிரமதண்டத்தை முன்வைக்க, அது அம்மன்னவன் எறிந்தபடைகளை யெல்லாம் விழுங்கிற்று என்றால், சருவ சக்தனை எம்பெருமானுக்குமுன் மற்றைத்தேவர்களீந்த வரம் என் செய்யும்? மற்றும் எதிர்நின்று பொருதால் வாலிக்கு எதிர்நிற்பவரின் வலிமையிற் பாதிவந்துவிடுமென்பது கருதி மறைந்தெய்தது என்பது சில இடத்துவருகின்றது: எதிர்நிற்பவன் வலிமையிற்பாதி வருவதாகவே கொள்வோம்: வாலியின் மார்பை ஊடுருவிச்செல்லும்வன்மை இராமசரத்துக்குப் போய்விடுமோ? அறத்தை நிலைநாட்டவேயன்றோ அது அப்பிரானோடு உள்ளது? ஆயினும், தான் மானுடபாவனை கொண்டிருத்தலாலும் பிறதேவரின் வரத்துக்கு மதிப்புக்கொடுக்க வேணுமென்ற கருத்தினாலும், தான் ஏற்றுக்கொண்டுள்ள அவதாரத்தில் எவ்வகையாலாயினும் புகலடைந்தோரைக்காத்தலே கடமையென்பதை வெளிப்படையாகக் காட்டவேணுமென்ற கருத்தினாலுமே இங்ஙன் நேராக வந்து எய்யாததென்பது தெற்றென விளங்கும்.

வருணனை வழிவேண்டு படலத்தில் வருணன் காட்சிகொடாமல் தாழ்க்கையில் அவன்மீது இராமபிரான் கணையெய்ய முயல, அவ்வருணன் எதிர்வந்து அபயம் வேண்டினான்: அபயமளித்த இராமபிரான் 'இக்கணைக்கு இலக்கு யாது?' என்றான்: வருணன் 'மன்னவ மருகாந்தாரமென்பதோர் தீவின்வாழ்வார், அன்னவர் சதகோடிக்கும் மேலுளர் அவுணராயோர், தின்னவே யுலகமெல்லாந் தீர்ந்தன எனக்குந்தீயோர், மின்னுமிழ் கணையை வெய்யோர் மேற்செல விடுதி' என்றான்: 'நெடிநூல் தெரிந்துளோர்க்கும் உணர்விற்கும் நிமிரநின்

றுன், 'கோடிநூறாய தீயஅவுணரைக் குலங்களோடும், ஓடிநூறு' என்று விட்டான்: ஓரிமையொடுங்கா முன்னம், பாடிநூறுகநூறிமீண்டதப் பகழித்தெய்வம்:' இராமபிரான் இங்ஙன் மருகாந்தாரத்து அவுணர்மாய வெய்யகணை செய்மையிலிருந்து விடுத்துத் தீயோரை மாய்த்தது பழிக்கத்தக்கதென்று கூறுபவருண்டோ? அம்முறையே இந்த வாலிவதத்துக்கும் ஏற்றதாமென்க.

வாலிவதைப்படலம் முற்றிற்று.

எட்டாவது

தாரை புலம்புறுபடலம்.

வாலி இறந்ததை யறிந்துவந்து அவன்மனைவியான தாரை அவ்வாலியினுடம்பின்மேல் விழுந்து புலம்புவதைத் தெரிவிக்கும் படலம் என்பது பொருள். தாரை புலம்பற்படலம் என்றும் இப்படலப்பெயருக்குப் பாடபேதம் காண்கின்றது. சில பிரதிகளில் இங்குத்தானே அரசியற்படலம் தொடங்குகின்றது.

1.—வாலி பரலோகமடைந்த பின்னர் அவன் மனைவியான தாரை வந்து அவனுடம்பின்மேல் விழுதல்.

வாலியு [1]மேகி ஞன்விண் [2]வரம்பிலா [3]வாற்ற லோடும்
[4]பாலியா முன்னர் நின்ற பரிதிசேய் [5]செங்கை பற்றி
ஆலிலைப் பள்ளி யானு மங்கத னோடும் [6]போனன்
வேல்விழித் தாரை [7]கேட்டு வந்தவன் [8]மெய்யில் வீழ்ந்தாள்.

(இ - ள்.) வாலிஉம் விண் ஏகினன் - வாலியும் பரமபத மடைந்தான்; ஆல் இலை பள்ளியான்உம் - (பிரளயகாலத்தில் ஆதிசேஷனது அமிசமான) ஓர் ஆலிலையைப் படுக்குமிடமாகக் கொண்டருள்பவனான திருமாலின் அவதாரமாகிய ஸ்ரீராமபிரானும், வரம்பு இலா ஆற்றலோடும் பாலியா - வரையறையில்லாத திறத்துடனே (அவனுக்கு அவ்வாறு பரமபதத்தை) அளித்து, முன்னர் நின்ற பரிதி சேய் செம் கை பற்றி - எதிரில் நின்ற சூரியகுமாரனான சுக்கிரீவனது சிவந்த கையைப் பிடித்துக்கொண்டு, அங்கதனோடும் போனன் - அங்கதனையும் அழைத்துக்கொண்டு (வாலிஇறந்த அந்த இடத்தினின்று சிறிது) விலகிச் சென்றான்; (அச்சமயத்தில்),—கேட்டு (தன் கணவனான வாலி இறந்த செய்தியைக்) கேள்வியுற்று, வேல் விழி தாரை-வேலாயுதம் போன்ற கண்களையுடைய தாரையானவள், வந்து-(கிஷ்கிந்தாநகரத்து அந்தப்புரத்திலிருந்து போர்க்களத்திற்கு) வந்து, அவன் மெய்யில் வீழ்ந்தாள் - அவ்வாலியினுடம்பின்மேல் விழுந்தாள்; (எ - று.)

இராமபிரான் சுக்கிரீவன் கையைப்பற்றிய வண்ணம் அங்கத னோடும் அவ்விடத்தினின்று விலகினனாக, வாலி இறந்தது கேட்டு அன்னணிறந்துள்ள அந்த இடத்துக்குத் தாரைவந்து அந்த வாலி யின் மேனிமீது வீழ்ந்தாளென்க.

'ஆலிலைப்பள்ளியான்' என்றது, எம்பெருமானது பரத்வத்தை விளக்கும்; யாவும் அழியுங் கற்பாந்தகாலத்திலும் தான் அழிவின்றி உலகங்களைத் தனது திருவயிற்றினுட்கொண்டு பாதுகாத்தருளும் முழுமுதற்கடவுளென்க. இது, எம்பெருமானது செயற்கரியன செய்யும் விசித்திரசக்தியையும், பேரருளுடைமையையுங் காட்டும். பாலியாமுன்னர் நின்ற ஆலிலைப்பள்ளியான் என்று அந்வயித்து உரைத்தலுமாம். 'விண்' என்றதை மத்திமதீபமாகக் கொண்டு, 'பாலியா' என்றதனோடுங் கூட்டுக. விண் - இங்கே, பரமாகாசம். வரம் பிலாவாற்றல் - அநந்த வீரியம்; இது, மற்றைக் கடவுட்குணங்கட்கும் உபலக்ஷணம். 'வரம்பிலா வாற்றலோடும்' என்றதனால், மகா பல சாலியான வாலியை எளிதிற்கொன்ற இராமபிரானது திறத்தையும், தன்னாற் கொல்லப்பட்டவர்க்கு முத்தியளிக்கும் ஈச்சுரகுணத்தையும் பாராட்டியவாறும்.

அங்கதன் - வாலியின் மகன். விழிக்கு வேல் - கூர்மைக்கும், ஆடவர் நெஞ்சுறுதியை யழித்து அவர்க்கு வருத்தத்தை விளைக்குந் திறத்திற்கும் உவமை. பி - ம்:—[1]ஏகயார்க்கும். [2]வரைவிலா. [3]உலகி லின்பம், வரம்பிலின்பம். [4]பாலனஞ் செய்யாநின்ற. [5]அங்கை. [6]நிற்ப. [7]கேட்டாள். [8]மேனி, மேலே, அடியில். சில பிரதிகளில் 'வாலியேகிய பினண்ட வரம்பிலாவுலகிலின்பம், பாலியாமுன்னிநின்ற' என்று முதலிரண்டடிகளிற் பாடம். (399)

2.—தாரை வாலியின்மார்பிற் புரளுதல்.

குங்குமங் [1]கொட்டி யன்ன குவிமுலைக் குவட்டிற் [2]கொத்த
பொங்குவெங் குருதி [3]போர்ப்பப் புரிகுழல் சிவப்பப் [4]பொற்றோள்
அங்கவ னலங்கன் மார்பிற் புரண்டன ளகன்ற [5]செக்கர்
வெங்கதிர் விசும்பிற் றோன்று மின்னெனத் [6]திகழு மெய்யாள்.

(இ - ள்.) குவி முலை குவட்டிற்கு ஒத்த - நுனிகுவிந்த மலைச் சிகரம்போன்ற (தனது) தனங்களின் பொலிவுக்கு ஏற்றுள்ள, குங் குமம் - குங்குமப்பூவின் குழம்பை, கொட்டி அன்ன - சொரிந்தாற் போன்றனவாய், பொங்கு வெம் குருதி போர்ப்ப - (வாலியின் மார்பிலிருந்து) கிளர்ந்துவருகிற வெப்பமுள்ள இரத்தப்பெருக்குக் கள் (அம்முலைக்குவடுகளில்) முழுவதும் பரவும்படியாகவும், புரி குழல் சிவப்ப - நுனிசுருண்ட (தனது) கூந்தல் (இரத்தம்படித லாற்) சிவக்கும்படியாகவும், பொன் தோள் அங்கு அவன் - அழ கிய தோள்களையுடைய அவ்விடத்தே கிடக்கின்ற அவ்வாலியி னது, அலங்கல் மார்பில் - மாலையணிந்தமார்பிலே, (தாரையான

வள்), அகன்ற செக்கர் வெம் கதிர் - பரந்த செவ்வானமாகிய வெவ்விய சூரியகிரணம் பரந்த, விசும்பில் - வானத்திலே, தோன்றும் - காணப்படும், மின் என திகழும் மெய்யாள் - மின்னற்கொடிபோல விளங்கும் வடிவத்தையுடையவளாய், புரண்டனள் - புரண்டாள்; (எ - று.)

தலைவிரிகோலமாய்த் தாரை விழுந்து புரளும்போது அவளது கடைகுழன்றகருங்குழல் இரத்தம் படிதலாற் சிவந்ததை 'புரிகுழல் சிவப்ப' என்றார். வாலி முதலிய வானரர்கள் முகத்திலும் வாலிலும் குரங்குவடிவமும் மற்றை யுறுப்புக்களிற் பெரும்பாலும் மனிதர் போன்றவடிவமு முடையவரென்பது உணரத்தக்கது. வாலியின் மார்பில் தாரைவிழுந்து புரளும்போது, அம்மார்பில் இராமபாணம் தைத்த வாயினின்று பொங்கிவழிகின்ற இரத்தம் தாரையின் தனபாரம் முழுவதிலும் படிந்தது, இயற்கையழகு நிறைந்த அம்முலைக் குவடுகளுக்கு ஏற்ற செயற்கையழகாகக் குங்குமப்பூவின் குழம்பை முழுவதும் நிரம்பப்பூசு மியல்பு போன்ற தென்க. வாலியினது அகன்ற மார்பு இரத்தப்பெருக்கினால் அந்திப்பொழுதிற் சூரியகிரணம் படிதலாற் சிவந்த மேகங்கள் பரவிய வானம்போன்றிருப்ப, அம்மார்பில் விழுந்து புரளுகின்ற மெல்லிதாய் விளங்கும் வடிவமுடைய தாரை அச்செவ்வானத்தில் துவண்டு விளங்கும் மின்னற் கொடி போன்றனள் : இவை - தற்குறிப்பேற்றவணி.

அலங்கல் - அலங்காரத்திற்காகத் தரித்த மாலைகளும். போர்ப்பூ மாலையும். பி-ம்:—[1]கொட்டியென்ன, கோட்டியென்ன, [2]ஒக்க. [3]ஆர்ப்ப. [4]பொற்றார். [5]செக்கர்ச்-செங். [6]துவளும். (400)

3.—தாரை புலம்பத் தொடங்குதல்.

வேய்ங்குழல் [1]விளிகொள் நல்யாழ் வீணையென் [2]றினைய நாண
ஏங்கின ளிரங்கி விம்மி [3]யுருகின ளிருகை கூப்பித்
[4]தாங்கினள் தலையிற் [5]சோர்ந்து சரிந்துதாழ் குழல்கள் தள்ளி
[6]ஓங்கிய குரலாற் பன்னி [7]யினையன வுரைக்க லுற்றாள்.

(இ - ள்,) வேய் குழல் - புல்லாங்குழலின்ஒலியும், விளி கொள் நல் யாழ் - இசையமைதியைக் கொண்ட சிறந்தயாழென்னும் இசைக்கருவியின் நாதமும், வீணை - வீணையின்ஒலியும், என்று இனைய - என்று இத்தன்மையனவான இன்னிசைகளெல்லாம், நாண - (தன் குரலினிமைக்கு ஒப்பாகாமல்) வெள்கும்படி,—(தாரையானவள்), ஏங்கினள் - ஏக்கங்கொண்டு, இரங்கி - பரிதபித்து, விம்மி - பெருமூச்செறிந்து, உருகினள் - (உள்ளமும் உடலும்) கரைந்து, இருகைகூப்பி தலையில் தாங்கினள் - (தனது) இரண்டு கைகளையுங் குவித்துத் (தன்) தலையின்மேல் வைத்துக்கொண்டவளாய், சோர்ந்து - (தேகபலமும் மனோபலமும்) தளர்ந்து, சரிந்து தாழ் குழல்கள் தள்ளி - (பாரத்தால்) சாய்ந்து தாழ்கின்ற தலைமயிர்கள் அவிழ்ந்துவிழுந்து புரளப் பெற்றவளாய், ஓங்கிய குரலால் - உரத்தகுரலினால், இனையன - இத்தன்மையனவான வார்த்

தைகளை, பன்னி உரைக்கல் உற்றாள் - அடுத்தடுத்துச் சொல்லத் தொடங்கினாள்; (எ - று.)—அவ்வார்த்தைகளை, அடுத்த பதின்மூன்று கவிகளிற் காண்க.

இனைய நாண உரைக்கலுற்றாளென இயையும்; அவளது குரலின் இயல்பான இனிமைமிகுதியை எடுத்துக்காட்டியவாறும். வேய்ங்குழல் - மூங்கிலினாலாகிய இசைஊதுகுழல். யாழ் - வீணையின் சாதிபேதம். பி - ம்:—[1]விளரி. [2]இவைகள், இவையும், எவையும். [3]இருகையால் மடிமேல்வைத்து. [4]தாங்கியதலையள். [5]சேர்த்தி. [6]ஓங்கிய துயரால். [7]இன்னன. (401)

வேறு.

4.—இதுமுதற் பதின்மூன்றுகவிகள் – தாரை புலம்பல்.

வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன்
கரைசே ராவிடர் [1]வேலை [2]காண்கலேன்
உரைசே ராருயி ரேயெ னுள்ளமே
அரைசே யானிது காண வஞ்சினேன்.

பதினாறு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) உரை சேர் - மேன்மை பெற்ற, (என்) ஆர் உயிரே - எனது அருமையான உயிர்போன்றவனே! என்உள்ளமே - எனது மனம்போன்றவனே! (என்) அரைசே - எனது தலைவனே!—வரை சேர் தோளிடை நாளும் வைகுவேன் - மலைகள்போன்ற (உனது) தோள்களினிடையே நாள்தோறும் தங்குபவளாய், (அதனால்) கரை சேரா இடர்வேலை காண்கலேன் - கரையில்லாத துன்பக்கடலை (இது வரையில் ஒருநாளும்) காணாதிருந்தவளான, யான் - நான், இதுகாண அஞ்சினேன் - (உனது) இவ்வாறான நிலைமையைப்பார்க்கப் பயப்படுகின்றேன்; (எ - று.)

வாலி தோளாகிய இன்பமலைமீது மகிழ்ந்துவாழ்ந்த தாரையாகிய மயிலுக்கு அவனது சவக்கோலத்தைக் காண்டலாகிய துன்பக்கடலுள் வீழ்ச்சி மிகவும் பரிதாபத்திற்கிடனாகுமென்க. துன்பத்தின் கடுமையை விளக்க, 'கரைசேராவிடர்வேலை' என்றது. வாலியின் மலைத்தோளில் வாழ்ந்தேனென்றதனால், அவ்வாலிதாரையை மலையில்வாழும் மயில்போலிருக்கப் பாராட்டி வந்தமைபெறப்படும். இரண்டாமடியால் இதுவரையிற் சிறிதுந் துன்பமனுபவியா திருந்தவளென்றபடி. உரை - உயர்ச்சி; இனி, உரைசேர் - புகழ் பெற்ற எனினுமாம். இன்றியமையாமையும் ஒற்றுமையும் பற்றி, 'உயிரே, உள்ளமே' என விளித்தாள். 'இது' - தன்கணவனுக்கு நேர்ந்த நிலையின் காட்சி, சவக்கோலக்காட்சி; அதனை வாயாற் சொல்லவும் கூசி, 'இது' என்று சுட்டினாள்; "மற்றையதொன்றும் மற" என்று தயரதன் கூறினாற்போல்: "பேதை பாலகனதாகும்" என்று தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்ததும் காண்க. காண - காணுதற்கு: கண்டதனால் எனினுமாம். பி - ம்:—[1]வல்லை. [2]கண்டிலேன. (402)

5. துயரா லேதொலை யாத [1]வென்னையும்
[2]பயிரா யோபகை யாத பண்பினோய்
[3]செயிர்தீ ராவிதி யான தெய்வமே
உயிர்போ னலுட [4]லாரு முய்வரோ.

(இ - ள்.) பகையாத பண்பினோய் - (இதுவரையில் எப்பொழுதும் என்னோடு) மாறுபடாத குணத்தையுடையவனே! துயராலே தொலையாத என்னைஉம் - (உனக்குநேர்ந்த) துன்பத்தைக் கண்டதனாலே உயிர்நீங்காமலிருக்கின்ற என்னையும், பயிராயோ - (இனி நீ) அருவருக்கமாட்டாயோ? செயிர் தீரா - (என்னிடத்திற்) கோபம் நீங்காத, விதி ஆன தெய்வமே - (எனது) விதியின்வடிவமான கடவுளே! உயிர் போனால் உடலாரும் உய்வரோ - உயிர்நீங்கிவிட்டால் அதன் பின்பு உடம்புமாத்திரம் பிழைத்திருக்குமோ? (எ - று.)

இதுவரையில் யான் குற்றஞ்செய்யினும் அதனைப் பொறுத்து என்னோடு நீ மாறுபடாத தன்மையையுடையாயினும், நீ இறந்ததைக்கண்டும் உயிர்மாயாத என்னை இனி அருவருப்பாய் போலும் என்பது, முதல்வாக்கியத்தின் கருத்து: வாலி வாய்திறந்து ஒன்றும் பேசாதிருந்தமைபற்றிக் கூறியது இது என்னலாம். 'என்னையும்' என்ற உயர்வுசிறப்பும்மை, முன்பு தான் அவனுடைய உழுவலன்புக்கு முழுவதும் இடமாயிருந்தமைபற்றியது. இனி, முதலிரண்டடிக்கு - முன்பு நீ என்னோடு இயல்பில் மாறுபடாத தன்மையுடையையாயினும் உனக்கு நேர்ந்த துன்பங் காரணமாக யான் உயிர்நீங்காதிருத்தல்பற்றி என்னை நீ இனி அன்புகொண்டு அழைப்பாயல்லைபோலும் என்றும் உரைக்கலாம். பயிராயோ என்பது, என்னை எப்போதும்போல் அழைக்கவேணுமென்னுங் கருத்துப்பற்றியது; நீ சென்ற இடத்துக்கு என்னையழையாயோ என்றுமாம். பயிர்தல் - அழைத்தலாதலை, "பயிரும் பைங்கிளி" எனச் சிந்தாமணியிலும் காண்க. விதி - இருவினைப்பயன் செய்த உயிரையே சென்றடைதற்கு ஏதுவாகிய நியதி. "குலமகட்குத் தெய்வம் கொழுநனே" ஆதலால், 'விதியான தெய்வமே' என்று தன் கணவனையே விளித்தாளெனக் கொள்ளலுமாம். தனக்குப் பெருந்துன்பம் தந்தமைபற்றி, 'செயிர்தீரா' என்றாள். [3]செயிர் தீராய் என்ற பாடத்திற்கு - இந்த நல்லோனை அகாலமரணமுறச் செய்த நீ குற்றம் நீங்காய் என்க: இனி, 'செயிர்தீராய்' என்பதற்கு - கோபம் நீங்குவாய் என்று வாலியை வேண்டியதாக உரைத்தலும் ஒன்று; அன்றி, (என்னையுங்கொன்று எனது இக்) குற்றத்தைத் தீர்ப்பாயாகவென்று உரைப்பாருமுளர். செயிர் - துன்பமுமாம். உயிர்நீங்கினால் உடல் தனித்துப் பிழைக்குமோ? என்றது, தனக்குஉயிரானவாலி இறந்தபின்பும் தான் பிழைத்திருப்பதுபற்றி அதிசயித்து வினவியவாறும். சீவித்திருத்தலும் இறமையும் விதியின்காரியமாதலால், இங்ஙனம் விதியைநோக்கி வினவலாயிற்று. 'உடலாருமுய்வரோ' என்றவிடத்துப் பலர்பால்விகுதி

இழிப்புப்பற்றி வந்தது; திணைவழுவமைதி. பி - ம்:—[1] என்னைய. [2] அயராயோபகையோடு மன்பினேய், அயராயோபகையாடும்.... [4] மாரும். (403)

6. [1] நறிதா நல்லமிழ் [2] துண்ண நல்கலின்
பிரியா வின்னுயிர் பெற்ற [3] பெற்றிதாம்
அறியா ரோநம ஞர தன்றெனின்
சிறியா ரோ[4] வுப காரஞ் சிந்தியார்.

(இ - ள்.) (எனது கொழுநனே!)—(உன்து உயிரை வாங்கிய) யமனர், நறிது ஆம் நல் அமிழ்து - நறுமணமுள்ளதான சிறந்த அமிருதத்தை, உண்ண - (தாம்) உண்ணுமாறு, நல்கலின் - (தமக்கு நீ) கொடுத்ததனல், இன் உயிர் பிரியா பெற்ற - இனிமையான (தமது) உயிர் (தமது உடம்பைவிட்டு) நீங்காதிருக்கப்பெற்ற, பெற்றி - தன்மையை, தாம் அறியார்ஓ - தாம் அறிந்திலரோ? அது அன்று எனின் - அங்ஙனமன்றுனல், (அந்த யமனர்), உபகாரம் சிந்தியார் - (தமக்குப் பிறர்செய்த) உதவியை ஞாபகத்திற்கொள்ளுதலில்லாத, சிறியார்ஓ - அற்பகுணமுடையவர்தாமோ? (எ - று.)

தேவர்களும் அசுரர்களும் ஒருங்குகூடிச் சாவாமருந்தாகிய அமிருதத்தைப் பெறுமாறு மந்தரமலையை மத்தாகநாட்டி வாசுகி நாகத்தைக் கடைகயிறுகப்பூட்டிச் சந்திரனை அடைதூணக நிறுத்திப் பாற்கடலைக் கடையமுயல்கையில், இருதிறத்தாரும் அதனைக் கடையும் வலிமையிலராய் என்செய்வதென்று கலங்கிநிற்குமளவிலே, வானரராஜனும் தேவேந்திரனது குமாரனுமாகிய வாலி தான் நாள்தோறும் பலகடல்களிலுஞ்சென்று வைதிகநித்திய கருமங்களை முடித்துவரும் வழக்கப்படி பாற்கடல் சென்றுசேர, தேவர்கள் அவனை வேண்டியதனல், அவன் சுராசுரர்களை விலக்கிவிட்டுத் தானொருவனகவே இரண்டுகைகளாலும் வாசுகியின் தலையையும் வாலையும் பிடித்து வலமும்இடமுமாக வலிய இழுத்துக்கடைய, அக்கடலினின்று அமிருதமுண்டாக, அதனைத் தேவர்கள் பெற்று உண்டு மரணந்தவிர்ந்து அமரராயினரென்ற வரலாறு இங்குஉணரத்தக்கது. அத்தேவர்களில் யமனும் ஒருவனென்பது வெளிப்படை. இவ்வாறு தனக்கு என்றென்றைக்கும் உயிர்நீங்காதிருக்கும்படி அருள்செய்தவன் நீ என்பதை யமன் அறிந்திருந்தால், இப்பொழுது உனது உயிரைக் கவரக்கடவனே? அல்லன். ஆதலால், அவன் அவ்வியல்பை அறிந்திலன்போலுமென்பது, முந்திய வாக்கியத்தின் தாற்பரியம். அன்றி, அதனை அவன் அறிந்திருந்தும், இங்ஙனஞ்செய்யாதிருந்தானுயின் செய்ந்நன்றி மறந்த அற்பனுதல் வேண்டுமென்பது, பிந்திய வாக்கியத்தின் கருத்து. நமனர் என்றவிடத்துப் பலர்பால் செறல் [கோபம்] பற்றி வந்தது. உபகாரஞ்சிந்தியார் - நன்றிகெட்டவர். பி - ம்:—[1] நறிதாய். [2] உண்கை. [3] பெற்றிதான். [4] உபகாரசிந்தையால். (404)

7. [1]அணங்கார் பாகனை யாசை தோறுமுற்று
உணங்கா [2]வொண்மலர் கொண்டு ளன்பொடும்
[3]இணங்காக் கால மிரண்டொ டொன்றினும்
வணங்கா தித்துணை வைக வல்லையோ.

(இ - ள்.) ஆசைதோறுஉம் உற்று - திக்குக்கள்தோறுஞ் சென்று, உள் அன்பொடுஉம் இணங்கா - மனப்பூர்வமான பக்தியுடன் கூடி, உணங்கா ஒள் மலர் கொண்டு - வாடாமல்விளங்குகின்ற மலர்களைக் கொண்டு, அணங்கு ஆர் பாகனை - சிறந்த தெய்வமகளாகிய அம்பிகை பொருந்திய இடப்பக்கத்தை யுடையவனான சிவபெருமானை, காலம் இரண்டொடு ஒன்றின்உம் வணங்காது - முக்காலத்திலும் வந்தித்து வழிபடாமல், இ துணை வைக - இவ்வளவு நேரம் ஓரிடத்தில் வெறுமனே தங்கியிருக்க, வல்லையோ—? (நீ); (எ - று.)

வாலி மகாசிவபக்த னாதலாலும், நாள்தோறும் பல திசைகளிலுஞ் சென்று தான்செல்லுமிடங்களில் ஆங்காங்குச் சிவபூசை செய்து மீள்வனென்க; "எட்டுமாதிரத் திறுதிநாளுமுற், றட்ட மூர்த்தி தாள் பணியுமாற்றலான்" என்றார், முன்னும். இரண்டொடு ஒன்று - காலை, நண்பகல், மாலை என்பன. பி - ம்:—[1]அணங்கோர் பாகனை. [2]நாண்மலர் தூயுளன்பினால், ஒண்மலர் தூவுமன்புளோய். [3]இணங்கார் காலம். (405)

8. [1]அரைசே பூவணை யாடை வைகுவாய்
தரைமே லாயுறு தன்மை [2]யீதெனக்
[3]கரைவே னின்றிடு பூசல் கண்டுமொன்று
[4]உரையா யென்வயி னூனம் [5]யாவதோ.

(இ - ள்.) அரைசே - தலைவனே! பூ அணை - மலர்களாகிய படுக்கையில், ஆடை - மெல்லிய மேல்விரியாடையின்மீது, வைகுவாய் - படுப்பவனான நீ, தரைமேல் ஆய் உறு தன்மை - (அதற்கு மாறாக) வெறுந்தரையிற் பொருந்தியிருக்கின்ற தன்மை, ஈது - இதுவாம், என - என்றகாரணத்தால், கரைவேன் நின்று இடு - (யான்) மனங் கரைபவளாய் (உனது) எதிரில்நின்று செய்கின்ற, பூசல்-அழுகையை, கண்டுஉம் - பார்த்தும், ஒன்று உரையாய் - ஒன்றும் பேசாமலிருக்கின்றாய்; (அங்ஙனம் நீ உபேட்சைசெய்யுமாறு), என் வயின் ஊனம் யாவதோ - என்னிடத்தில் நேர்ந்த குற்றம் யாதோ? (எ - று.)

பூவணை யாடையில் வைகுவானுக்கு வெறுந்தரைமேலாயுறு தன்மை நேர்ந்தமை கூறியது - முறையிற்படர்ச்சியணியின்பாற்படும். 'கரைதல் அன்பின்செயலே யாதலால், அன்புடைய நீ மாறுகூறாதபடி என்மீது என்னகுற்றம்?' என்று வினவுகின்றாள்: நீ மாறுகூறாதது உன்மீது குற்றமாமென்று கருதுக் கொள்ளவும் இடமுண்டு. பூவணை - மலர்ப்பள்ளி, புஷ்பசயநம். 'கேட்டு' என்றபொருளில் 'கண்டு' என்றதாகக் கொண்டால், பூசல் - பேரொலி யென்னலாம். பி - ம்:—[1]வரையார்தோள்பொரடியாடவைகுவாய். [2]ஈதென்கொல்,

யாதெனுக். [3]கரையாதேனிடுபூசல். [4]உரையாயோருரை, உரையாயோ வைய. [5]என்னதே. (406)

9. நையா நின்றன ஞனிருந் [1]திங்கன்
[2]மெய்வா ஞேர் திருநாடு மேவிஞய்
ஐயா நீயென தாவி [3]யென்றதும்
பொய்யோ பொய்யுரை யாத புண்ணியா.

(இ - ள்.) பொய் உரையாத புண்ணியா - பொய்பேசாத நல்வினையுடையவனே! நான் இருந்து இங்கன் நையா நின்றனன் - நான் இங்கேயிருந்து இவ்வாறு வருந்துகின்றேன்; (அங்ஙனம் வருந்தவும் நீ), மெய் வாஞேர் திருநாடு மேவிஞய் - வாய்மைதவருத தேவர்கள் வசிக்கும் மேன்மையான நாட்டை யடைந்து இன்புறுகின்ருய்; ஐயா - தலைவனே! நீ எனது ஆவி என்றதுஉம் பொய்ஒ - 'நீ என்னுடைய உயிர்' என்று (என்னை நோக்கி நீ வாழ்நாளில் மிக்க அன்புடன்) சொல்லி வந்ததும் பொய்தானே?—(எ - று.)—பொய்யாகாவிடின், உன்னுயிரான நான் துன்புற, நீ இன்புறக்கடவாயோ? என்பது குறிப்பு.

உயிர் துடிக்கையில் உடல் இன்பமடைவதென்பது உலகத்திலில்லை யாதலால், 'நீயெனதாவியென்றதும் பொய்யோ' என்ருள். 'என்றதும்' என்ற இடத்துள்ள உம்மை - உயர்வுசிறப்பு: 'நீ எனது ஆவி' என்று என்னை நோக்கி நீ சொல்லிக் கொண்டிருந்த வார்த்தை பொய்யாகாமலிருத்தற் பொருட்டாவது சத்தியவாதியான நீ என்னை விட்டு நீங்காதிருக்கக் கடவாயன்றே? என்றவாரும். உன்வார்த்தை பொய்யாய் விட்டால் அதுபற்றி அங்கே சத்தியவாதிகளான தேவர்கள் உன்னை எவ்வாறு மதிப்பரென்றற்கு, 'மெய் வாஞேர்' என்ருள். இங்கன் - இந்தப்பூமியிலேயென்றுமாம். பி - ம்:—[1]இவண், நின், நீ. [2]மையார் கண்ணியர் வானமேறிஞய். [3]என்பதும். 'நையா நின்றனெஞனிருந்து நீ, மெய்வான் மங்கையர் கொங்கை மேவிஞய்' என்று முதலிரண்டடிகள் சில பிரதிகளிற் காணப் படுகின்றன. (407)

10. செருவார் தோளநின் [1]சிந்தை யுளெனெனின்
மருவார் வெஞ்சர [2]மெணையும் வவ்வுமால்
ஒருவே [3]னுள்ளுளை யாகி லுய்தியால்
[4]இருவே முள்ளிரு வே[5]மி ருந்திலேம்.

(இ - ள்.) செரு ஆர் தோள - போர்த்தொழிலை நிரம்பப்பயின்ற தோள்களை யுடையவனே! நின் சிந்தை உளென் எனின் - உனது நெஞ்சில் நான் இருந்தே னென்பது மெய்யாஞல், மருவார் வெம் சரம் எனைஉம் வவ்வும் ஆல் - பகைவரது [இராமனுடைய] கொடிய அம்பு (உன்னைப்போலவே) என்னையும் நிச்சயமாக உயிர் வாங்கியிருக்கும்; ஒருவேன் உள் உளை ஆகில் - தனிப்பட்டவளான எனது நெஞ்சில் நீ இருந்தா யென்பது மெய்யாஞல், உய்தி ஆல் - (என்னைப் போலவே) நீயும் நிச்சயமாகப் பிழைத்திருப்பாய்; (இப்படி யில்லாமை

யால்), இருவேம் இருவேம் உள் இருந்திலேம் - நாம் இருவரும் ஒருவருள்ளத்தில் ஒருவர் இருந்தோமில்லை; (எ - று.)

'நீ என்னிதயத்துள்ளாய்' என்று நானும் நீயும் அடிக்கடி நினைப்பதுஉண்டு: இங்ஙன் காதலன் காதலி என்ற இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தியரா நினைக்கும் இந்நினைவு, காதல்பற்றியதேயன்றி உண்மையன்று. உண்மையாக, நான் உன்னிதயத்துள்ளேயிருப்பின், உன்னுயிரைக் கவர்ந்த பகைவன்சரம் என்னுயிரையும் உண்டிருக்கும்: அங்கனே, நீ என்னிதயத்துள்ளிருப்பின், பகைவன் வெஞ்சரம் என்னிதயத்தை வௌவாமையால் நீ பிழைத்திருப்பாய்: யானும் பகைவன் சரத்தால் வௌவப்படுதல், நீ வெஞ்சரத்தால் வௌவப்படாது உயிர்த்திருத்தல் என்ற இவை நிகழாமையால், இருவேமுள்ளும் இருவேமுமிருந்திலே மென்பது, அனுமானப்பிரமாணத்தாற பெறப்படுமென்பதாம்: இது அனுமானாலங்காரம். வவ்வும் = வௌவும்: போலி. 'மருவார்' என்ற பன்மை, செறல் பற்றியது. பி - ம்:—[1] சிந்தையேன், சிந்தையாள், சிந்தையுளான். [2] என்னை. [3] உள்ளுளையுள்ளிருந்தாயெனின், உள்ளிருந்தாலுமுய்தியே. [4] இருவேமுமிருவேமுள், ஒருவோமும்மிருவேமுள். [5] இருந்துளோம். (408)

11. எந்தாய் நீயமிழ் தீய யாமெலாம்
உய்ந்தா மென் [1]றுப கார முன்னுவார்
நந்தா நாண்மலர் [2]சிந்தி நண்பொடும்
வந்தா ரோ[3]வெதிர் வானு ளோரெலாம்.

(இ - ள்.) 'எந்தாய் - எமது தலைவனே! நீ அமிழ்து ஈய - நீ அமிருதத்தை (ப் பாற்கடலினின்று உண்டாக்கி)க் கொடுத்ததனால், யாம் எலாம் உய்ந்தாம் - நாங்களனைவரும் (அதனையுண்டு) என்றும் அழிவின்றி உயிர் வாழப்பெற்றோம்,' என்று - என்று சொல்லிக்கொண்டு, உபகாரம் உன்னுவார் - (முன்பு நீ தமக்குச் செய்த) உதவியை (மறவாமல்) மனத்திற் கொள்பவராய், வான் உளோர் எலாம் - மேலுலகத்திலுள்ளவர்களான தேவர்கள் யாவரும், நந்தா நாள் மலர் சிந்தி - வாடாத அன்று மலர்ந்த [புதிய] (கற்பகதருக்களின்) மலர்களை (உன்மேற்) சொரிந்துகொண்டு, நண்பொடும் எதிர்வந்தார்ஓ - அன்புபாராட்டி (உனது) எதிரில் வந்து (உன்னை எதிர்கொண்டு) உபசரித்தார்களோ? (எ - று.)

உன்னுதல் - நினைத்தல். 'நந்தா மலர்' எனவே, தேவதருக்களின் மலரென்றதாயிற்று. பி - ம்:—[1] உபசாரம். [2] தூவி, ஏந்தி. [3] எதிரேய வானுளோர். (409)

12. ஓயா வாளி யொளித்து நின்றெய்வான்
[1]ஏயா வந்த விராம னென்றுளான்
வாயா [2]லேயின னென்னின் வாழ்வெலாம்
[3]ஈயா யோவமிழ் தேயு [4]மீகுவாய்.

(இ - ள்.) அமிழ்துஎஉம் ஈகுவாய் - சாவாமருந்தாகிய அமிருதமேவேண்டுமென்றாலும் அதனையும் கொடுப்பவனே! (நீ),—ஓயா வாளி - (தனக்கு இலக்கானவரது உயிரைக்கவர்ந்தன்றி) ஒழியாத அம்பை, ஒளித்து நின்று எய்வான் - மறைந்து நின்று (உன்மேல்) எய்தற்கு, ஏயா - உடன்பட்டு, வந்த—, இராமன் என்று உளான் - இராமனானவன், வாயால் ஏயினன் என்னின் - தன் வாய்மொழியால் (இன்னது தருகவென்று உன்னை) ஏவினனாயின், வாழ்வு எலாம் ஈயாய்ஓ - (உன்) செல்வவாழ்க்கைகளை யெல்லாம் (உன்தம்பியான சுக்கிரீவனுக்கு) நீ கொடுக்கமாட்டாயோ? (எ - று.)

நினது பெருவண்மையை உணராமல் நின்னை இராமன் மறைந்து நின்று அம்பெய்துகொன்றது வீணென்பதாம். உன்னுயிரைக் கொடு என்றாலும் நீ கொடுக்கவல்லாய் என்பது இதன் கருத்து. 'என்றுளான்' என்பது, 'என்றவன்' என்றதுபோல முதல் வேற்றுமைச் சொல்லுருபின் தன்மையதாய் நின்றது; இனி,'இராமனென்றுளான்' என்றது, பராமுகந்தோன்ற நின்றதென்னலாம். 'ஓயா வாளியொளித்து நின்றெய்வான் ஏயாவந்த' என்றது, அவனது அடாத செய்கையைக் காட்டியவாறும், 'ஓயாவாளி' என்பதற்கு - விசையையுடைய அம்பென்று கருத்துமாம். வாயாலேவுதல் - வாய்திறந்து கூறுதல். இராமபிரான் தனக்கெனவேண்டும் வாழ்க்கையை யெல்லாம் நீ தருவாய் என்று இச்செய்யுட்குக் கருத்துக் காண்பாருமுளர். பி - ம்:—[1]ஏயாமேய, ஏயினன்வந்த. [2]ஏயினனென்னின் மன்னர்சீர், ஏவினனன்றி வாளியால். [3]வீயாயேயமுதீயும். [4]மீளியாய், மேனியாய், மெய்யினாய், (410)

13. சொற்றேன் முந்துற வன்ன சொற்கொளாய்
[1]அற்றா னன்னது செய்க லா[2]னென
உற்றா யும்பியை யூழி காணுநீ
[3]இற்றாய் [4]நானுனை யென்று [5]காண்கெனோ.

(இ - ள்.) முந்துற - முன்னமே [சுக்கிரீவனுடன் போர்செய்தற்கு நீ புறப்படும்பொழுதே], சொற்றேன் - (இராமனென்பவன் சுக்கிரீவனுக்குப் பிராணசிநேகிதனாயமைந்து உன்னுயிர்கொள்ளுதற்கு உடன்வந்துள்ளானென்று) சொன்னேன்: அன்ன சொல் கொளாய்- அந்த வார்த்தையை ஏற்றுக்கொள்ளாமல், 'அற்றான் - (விருப்பு வெறுப்பு) இல்லாதவனான அவ்விராமபிரான், அன்னது செய்கலான் - அவ்வாறான தகுதியில்செயலைச்செய்யமாட்டான்', என - என்று சொல்லி, உம்பியை உற்றாய் - உன் தம்பியை [சுக்கிரீவனை] (ப்போரின் பொருட்டு)ச் சேர்ந்து, ஊழி காணும் நீ - (நெடுங்காலம் இறவாதிருந்து) கற்பாந்தகாலத்தைக் காணவல்ல நீ, இற்றாய் - இறந்துவிட்டாய்; நான் உனை என்று காண்கென்ஓ - நான் உன்னை இனி எப்பொழுது காண்பேனோ! (எ - று.)

அற்றான் - ஒப்பற்றானெனினுமாம்; இனி, 'அற்றான்' என்பதை அகரச்சுட்டடியாப் பிறந்த பெயரென்னவுமாம். பி - ம்:—

[1]கற்ருன். [2]என. [3]கற்ரும். [4]யானுனே. [5]காண்பெனே, காண்பனுன். (411)

14. நீரு மேருவு நீ[1]நெ ருக்கினுல்
மாருேர் [2]வாளியுன் [3]மார்பை யீர்வதோ
தேறேன் யானிது தேவர் [4]மாயமோ
வேருேர் வாலிகொ லாம்[5]வி ளிந்துளான்.

(இ - ள்.) நீ நெருக்கினுல்-நீ (சென்றுஉன்மார்பால்) தாக்கினுல், மேருஉம் நீறு ஆம் - மகாமேருகிரியும் பொடியாய் விடுமே: (அங்ஙன மிருக்க), ஓர் வாளி - ஓர் அம்பு, மாறு - (அதற்கு) எதிராய், உன் மார்பை - (அப்படிப்பட்ட வன்மையையுடைய) உனது மார்பை, ஈர்வதுஓ - பிளக்கமாட்டுமோ? இது தேவர் மாயம்ஓ - இது தேவர்கள் செய்த மாயைதானே? யான் தேறேன் - யான் தெளிகின்றேனில்லை; (அன்றி), விளிந்துளான் - (இங்கே)இறந்துள்ளவன், வேறு ஓர் வாலி கொல் ஆம் - (நீ யன்றி) வேறே ஒருவாலிதானே? (எ-று.)

வாலியின் மார்பினுரத்தில் பெருநம்பிக்கையுள்ள தாரை 'உன் மார்பை மாருக ஓர் வாளியீராதே; வாளி ஈர்ந்ததாகக் கண்கூடாகத் தெரிகின்ற இது, மாயத்தோற்றமோ? அன்றி, வாலிபோற் காணப் படுந்தோற்றமுடைய ஒருவன் தான் இறந்துளானே?' என ஐயத்தற் குறிப்பேற்றம் தோன்றக்கூறுகின்ருளென்க. தேறேன்-நம்பமாட்டே னென்பாருமுளர். இது - உன்மார்பைப் பிளப்புண்ணச் செய்த செயல். பி-ம்:—[1]நெருங்கினுல். [2]வாளியின். [3]மார்பிறந்ததே. [4]மாயையோ. [5]விளிந்தநீ. (412)

15. தகைநேர் வண் [1]புகழ் நின்று தம்பியார்
பகைநேர் வாருள ரான பண்பினுல்
உகநேர் [2]சிந்தி யுலந்த ழிந்தவால்
மகனே [3]கண்டிலை யோநம் [4]வாழ்வெலாம்.

(இ - ள்.) மகனே - பிள்ளாய்! [அங்கதனே!] தம்பியார் - (உன் தந்தைக்குத்) தம்பியரான சுக்கிரீவர், தகை நேர் - பெருமை பொருந் திய, வள் - சிறந்த, புகழ் - (வாலிக்குத் தம்பியாயிருத்தலாகிய) புக ழிலே, நின்று - (முதலில்) நிலைத்திருந்து, (பின்பு), பகை நேர்வார் உளர் ஆன பண்பினுல் - (அவரோடு) பகைமை கொள்பவரான தன் மையினுல், உக - (உன் தந்தையார்) இறக்க, நம் வாழ்வு எலாம் - நமது செல்வவாழ்க்கைகளெல்லாம், நேர் சிந்தி உலந்து அழிந்த - தகுதிகெட்டு அழிந்துபோயின; கண்டிலை ஓ - (இதனை நீ) பார்த்தா யில்லையோ? (எ - று.)

இது, அங்கதகுமாரனை முன்னிலையாக்கிப் புலம்பியது: இனி, சிலப்பதிகாரத்தில் "நோதகவுண்டோ நும்மகனுர்க்கினி" என்ற விடத்திலும், மணிமேகலையில் "நினக்கிவன் மகனுய்த்தோன்றிய தூஉம்" என்றவிடத்திலும், 'மகன்' என்பது புருஷனென்றமாத்திர மாய்க் கணவனென்ற பொருளில்வந்திருத்தலால், இங்கும் 'மகனே' என்பதற்கு - (என்) கணவனே! என்றுபொருள்கொண்டு, அதற்கு

ஏற்ப இச்செய்யுளுக்கு உரைகூறலுமாம். புகழ்நின்று என்பதற்கு - புகழினின்றும் (நீங்கி) என்றும், பகைநேர்வார் என்பதற்கு - பகையாய் எதிர்ப்பவரென்றும் உரைத்தலுமாம். "இகலின் மிகலினிதென்பவன் வாழ்க்கை, தவலும் கெடலும் நணித்து" என்ற குறள், இங்குக்காணத்தக்கது. பி - ம்:—[1] புகழ்தின்று. [2] சிந்தையுலந்தழிந்தனன். [3] கண்டனையோ. [4] வாழ்வெனு. (413)

16. [1] அருமந் தற்ற மகற்றும் வில்லியார்
ஒருமைந் தற்கு மடாத துன்னினார்
தருமம் பற்றிய [2] தக்க வர்க்கெலாம்
கருமங் கட்டளை [3] யென்றல் கட்டதோ.

(இ - ள்.) அருமந்து - (கிடைத்தற்கு) அரிய மருந்துபோன்று, அற்றம் அகற்றும் - (பிறரது) ஆபத்தை நீக்குகின்ற, வில்லியார் - வில்லில்வல்லவரான இராமபிரான், ஒரு மைந்தற்கு உம் அடாதது உன்னினார் - ஒருவீரனுக்கும் தகாதசெயலைச்செய்ய நினைத்துச் செய்துவிட்டார்; தருமம் பற்றிய தக்கவர்க்கு எலாம் - தரும மார்க்கம் பொருந்திய பெரியோர்களுக்கெல்லாம், கருமம் கட்டளை என்றல் - (அவரவர்செய்யுஞ்) செயலே (அவரவரது பெருமையாகிய பொன்னின்மாற்றை யறிவதற்கு ஏற்ற) உரைகல்லாகு மென்பது, கட்டு அதோ - (நடத்தையில் வாராத வெறுங்) கட்டுப்பாடு வார்த்தை தானோ? (எ - று.)

"பெருமைக்கு மேனைச்சிறுமைக்குந் தத்தங், கருமமே கட்டளைக் கல்" என்ற நீதி உண்மையாகுமானால், பெரியோர்களெல்லாரும் நல்ல தொழில்களையே செய்யவேண்டுமே; அங்ஙனம் இராமபிரான் செய்யாமையால், அந்நீதி வெறுங்கட்டுப்பாடான வார்த்தையோ? என்கிறாள். 'ஒருமைந்தற்குமடாதது' என்றது, இருவர் தம்மிற் பொருகையில் அவர்களுள் ஒருவர்மீது மூன்றுமவரொருவர் மறைந்து நின்று அம்பெய்தலை. இனி, இரண்டாமடிக்கு - எனது ஒருமைந்தனுக்கு மாத்திரம் தகாதவினையைவினைத்தார் என்று உரைப்பர் ஒருசாரார்; அப்பனைக்கொன்று சிற்றப்பனுக்கு அரசளித்துவிட்டார் என்பது, அதன்கருத்து. அருமந்து - அருமருந்து என்றதன் மரூஉ. 'அருமைமந்தற்றமகற்றும்' என்ற பாடத்திற்கு - அருமையான பலத்தினால் (பிறரது) துன்பத்தைப்போக்குகின்ற என்று பொருள். கட்டதோ என்றதில் 'அது' - பகுதிப்பொருள்விகுதி. 'கட்டதோ' என்பதற்கு - உண்மையாகுமோ? என்றும், நீங்கிவிட்டதோ? என்றும் உரைக்கலாம். பி - ம்:—[1] அருள்வந்து, அரிமைந்து. [2] தக்கவவர்க்கெலாம். [3] என்கைவிட்டதோ, என்றல்கைவிட்டதோ, என்றுகைவிட்டதோ. (414)

17.—இதுவும், அடுத்தகவியும்—அநுமான் தாரையை அந்தப்புரத்திற்கு அனுப்பிவிட்டு வாலிக்கு அந்திமக்கிரியை செய்வித்தமை கூறும்.

என்று ளின்னன பன்னி யின்னலோடு
[1] ஒன்று வுள்ளுணர் வேது முற்றிலாள்

[2]நின்ரு ளந்நிலை நோக்கி நீதிசால்
வன்ருள் மால்வரை யன்ன மாருதி.

(இ - ள்.) என்ருள் இன்னன பன்னி - என்று இத்தன்மையான வார்த்தைகளை மேன்மேற்சொல்லி, இன்னலோடு ஒன்ரு-துன்பத்தோடு கூடி, உள் உணர்வு ஏதுஉம் உற்றிலாள் - அகத்திலெழும் அறிவு சிறிதும் பொருந்ாதவளான [மூர்ச்சித்த] அந்தத் தாரை, நின்ருள் - செயலொழிந்தாள்: அ நிலை நோக்கி - அந்த நிலைமையைப் பார்த்து, நீதி சால் வல் தாள் மால் வரை அன்ன மாருதி - நீதிநிரம்பியவனும் வலிய தாழ்வரைகளையுடைய பெரியமலை போன்றவனுமான அநுமான்,—(எ - று.)—'ஏவி' என அடுத்த கவியோடு தொடரும்.

இனி, வல் தாள் - வலிய முயற்சியையுடைய என்று உரைத்து அநுமானுக்கு அடைமொழியாக்குதலுமாம்; சுக்கிரீவனுக்கும் இராமனுக்கும் சிநேகஞ் செய்வித்தது முதலாக அநுமானது முயற்சி வலிமைத்திறம் பிரசித்தம். வல்தாள் - வலிய கால்களையுடைய அநுமானென்றலு மொன்று. வரை - இங்கே, மேருமலையென்னலாம்: அநுமானைப் பற்றிக்கூறுமிடத்து "காஞ்சநாத்ரி கமநீய விக்ரஹம் [மேருமலைபோன்ற பொன்மேனியுள்ளவன்]" என வந்திருத்தல் காண்க. அநுமானுக்கு மலை - அழித்தற்கு அருமை, அளக்கலாகா அளவு, துளக்கலாகாநிலை, கம்பீரமான தோற்றம், பெருமை முதலியவற்றில் உவமம். மலையின் அடிப்பக்கத்தை 'பாதசைலம்' என்னும் மரபு பற்றி. அது இங்கே 'தாள்' எனப்பட்டது. பி - ம்:—[1]ஒன்ருனள். [2]நின்ருளைத்தனிநெடிது தேற்றியே, நின்ருளைத்தனிநெடிது நோக்கியே. நீதிசால் என்ற இடத்து நீதியான் என்றும் பாடம். (415)

18. [1]மடவா ராலம டந்தை முன்னர்வாழ்
இடமே வும்படி யேவி வாலிபால்
கடன்யா வுங்கடை கண்டு கண்ணனேடு
[2]உடனு வுற்ற வெலா[3]மு ணர்த்தலும்.

(இ - ள்.) மடவாரால் - (தாரையுடன்வந்துநின்ற அவள் தோழியர்களான) வாநரமகளிரைக்கொண்டு, அ மடந்தை - அந்தத் தாரையை, முன்னர்வாழ் இடம் மேவும்படி ஏவி - முன்பு (அவள்) வசித்திருந்த இடத்தில் [கிஷ்கிந்தாநகரத்து அரண்மனை யந்தப்புரத்தில்] போய்ச்சேரும்படி அனுப்பிவிட்டு, வாலிபால் கடன் யாஉம் கடைகண்டு - வாலிவிஷயமாகச் செய்யவேண்டிய கடமைகளை [அந்திமக்கிரியைகளை] யெல்லாம் (அங்கதனைக் கொண்டு) முழுவதும் செய்வித்து, உடன் ஆ - (க) - உடனே, கண்ணனேடு - ஸ்ரீராமபிரானுடன், உற்ற எலாம் உணர்த்தலும் - நடந்தசெய்திகளை யெல்லாஞ் சொன்னவளவில்,—(எ - று.)—'அருக்கனுர்மேலைக்கிரிபுக்க போழ்தினில்' என அடுத்த கவியோடு தொடரும்.

புலம்புகின்ற தாரையை அவள்தோழிமார்மூலமாக அப்பாற் படுத்தி, அங்கதனைக்கொண்டு ஈமக்கடனை நிறைவேற்றியபின், சுக்கிரீவன் இராமபிரானிடம் நிகழ்ந்த செய்திகளை யுணர்த்தின னென்ப தாம். கடைகண்டு - நிறைவேற்றி. கண்ணன் - கரியோ னென்னும் பொருளதாகிய க்ருஷ்ணனென்னும் வடமொழியின் சிதைவு; இது, இங்கே அவதாரப்பெயரன்றி வந்தகாரணப்பெயர்; "சுவணவண்ண னெடுகண்ணனுறை தோளன்" என்றார், ஆரணிய காண்டத்திலும். உணர்த்தல் - தெரிவித்தல். பி - ம்:—[1]...சூழ...தன்னைவாழ், மடவா ராய...முன்னரீள், மடமாதினளைமடந்தைமாரொடும். [2]கடனுயுள்ளது கண்டு. [3]உடனுயிற்ற, உடனுயற்ற. [4]உரைத்தலும். (416)

19.—சூரியாத்தமன சமயமாதல்.

[1] அகம்வே ரற்றுக [2]வீச ருக்கனர்
[3] புகுமே லைக்கிரி புக்க [4]போழ்தினின்
[5] நகமே யொத்த குரக்கு நாயகன்
முகமே யொத்தது மூரி மண்டிலம்.

(இ - ள்.) அகம் - இருள், வேர் அற்று உக - வேரோடு அழிந்து போம்படி, வீசு - ஒளி வீசுகின்ற, அருக்கனர் - சூரியபகவான், புகும் - (நாள்தோறுந்தான்) செல்லுமிடமான, மேலைக்கிரி - மேற்குத்திசையிலுள்ள அஸ்தமனகிரியை, புக்க போழ்தினின் - அடைந்தபொழுதில், —மூரி மண்டிலம் - பெரிய அச்சூரியமண்டலமானது,—நகம்ஏ ஒத்த குரங்கு நாயகன் - மலைபோன்ற வானரராஜனான வாலியின், முகமே - முகத்தையே, ஒத்தது - போன்றது; [இறந்தான் தெறித்ததனைச் சிவந்த அவன் முகம்போல அந்திப்பொழுதிற்சூரிய செந்நிற மிகுதியை யடைந்தது]; (எ - று.)

உவமையணி. இவ்வுவமை, ஒளிமழுங்கியதற்கும் ஏற்கும்: இனி, வாலியின் முகம் இயல்பிற் செந்நிறமுடையதாதலாற் சாய்ங்காலத் துச் சூரியனுக்கு உவமை கூறப்பட்டதென்று கொள்ளுதலும் அமையும். இவ்வருணனை, வால்மீகிராமாயணத்தில் தாரைபுலம்பலில் "நீ உயிரொழிந்திருக்கையிலும் உன்முகம் மகிழ்ச்சிபெற்றதுபோல அத்த கிரியையடைந்த சூரியன்போன்ற நிறமுடையதாய்ப் பிழைத்திருக்கும் போது இருந்ததுபோலவே காணப்படுகின்றது" என்று வந்துள்ளது; இவ்வாறே ஊன்றிநோக்குமிடத்து, கம்பராமாயணத்திற் கூறியபொருள்கள் பலவற்றை, வால்மீகி ராமாயணத்தில் ஆங்காங்கு வெளிப்படையாகவும் மறைபொருளாகவும் காணலாம்; ஆனதுபற்றியே, சுலோகம் சுலோகமாக ஒழுங்காய் மொழிபெயர்க்கப் படாததாக வும் பல இடங்களில் மாறுபாடுடையதாகவும் இருக்கையிலும், கம்ப ராமாயணத்தை வால்மீகி ராமாயணத்தின் வழிநூலென்பர் உணர்ந் தோர்.

அகம் - பாவம்; வடசொல்: அது, இலக்கணையாய், கருநிற மான இருளை யுணர்த்திற்று. அகம்என்ற சொல்லுக்கு மரமென்றும் ஒருபொருளுள்ளதனல், முதலடிக்கு - இருளாகிய மரம் வேரோடு

அற்றுவிழும்படி அதனைவீசியெறிகிற சூரியனெனக் கொள்ளலாம்: இனி, பாவமாகிய மரம் வேரோடு அற்றுவிழும்படி அதனை வீசி யெறிகின்ற சூரியனென்றலும் அமையும். சிலேடையுடன்கூடிய உருவகம். சூரியனை வந்தனைவழிபாடுகள் செய்வார்க்குத் தீவினைகள்யாவும் தொலையுமென்ற கொள்கை யுண்டு. பி - ம்:—[1] அகமேருக்கிரி, அகமேயக்கிரி. [2] மீது. [3] புக. [4] போதினின். [5] நகமேயுற்ற. (417)

20.—சூரியன் அத்தமித்தலும் இராமன் இராப்பொழுதைக் கழித்தலும்.

மறைந்தான் [1] மாலை யருக்கன் வள்ளியோன்
உறைந்தான் மங்கை திறத்தை யுன்னுவான்
குறைந்தா னெஞ்சு [2] குழைந்த ழுங்குவான்
நிறைந்தார் கங்குலின் வேலை [3] நீந்தினன்.

(இ - ள்.) மாலை - மாலைப்பொழுதில், அருக்கன் - சூரியன், மறைந்தான்—; வள்ளியோன்-வண்மைக் குணமுடையவனான இராமபிரான், மங்கை திறத்தை உன்னுவான் - சீதையின் நிலைமையைக் கருதுபவனாய், உறைந்தான் - (அங்கு ஓரிடத்தில்) தங்கி, குறைந்தான் - மெலிந்தவனும், நெஞ்சுகுழைந்து அழுங்குவான் - மனம் நெகிழ்ந்து வருந்துபவனுமாகி,—நிறைந்து ஆர் கங்குலின் வேலை - நிறைந்துபொருந்திய இராப்பொழுதாகிய கடலை, நீந்தினன்-அரிதிற் கடந்தான்; (எ - று.)

மனைவியைப் பிரிந்து வருந்துபவர்க்கு இராப்பொழுது நீண்டதாகத் தோன்றுமாதலாலும், அதனைக் கழித்தல் அரிதாதலாலும், 'நிறைந்தார்கங்குலின் வேலை நீந்தினன்' என்றார். பி - ம்:—[1] வானின். [2] குறைந்து. [3] நீங்கினன். (418)

21.—சூரியோதய வருணனை.

புதல்வன் [1] பொன்மகு டம் [2] பொ றுத்தலான்
முதல்வன் பேருவ கைக்கு முந்துவான்
உதவும் பூமகள் [3] சேர வொண்மலர்க்
கதவஞ் [4] செய்ய கரத்தி னீக்கினன்.

(இ - ள்.) புதல்வன் - (தன்) மகனான சுக்கிரீவன், பொன் மகுடம் பொறுத்தலால் - பொன்மயமான கிரீடத்தை (அன்றைத் தினத்தில்) தரிக்கப்போவதுபற்றி, முதல்வன் - (அவனது) தந்தையான சூரியன், பேர் உவகைக்கு முந்துவான் - (அதனைக்கண்டு) மிக்க மகிழ்ச்சியை யடைதற்கு முற்பட்டவனாய்,—உதவும் பூமகள் சேர - (அந்தமகுடாபிடேகத்திற்கு) உதவியாகின்ற திருமகள் வந்து (அவனைச்) சேரும்படி, ஒள் மலர் கதவம் - (அவளிருக்குமிடமான) சிறந்த தாமரை மலர்களின் இதழ்களாகிய கதவுகளை, செய்ய கரத்தின் - (தனது) சிவந்த கிரணங்களாகிய கைகளினால், நீக்கினன் - திறந்துவிட்டான்; (எ - று.)

இராப்பொழுது கழியுமளவில் இயல்பாகச் சூரியனுதித்தலை - அற்றை நாள் தன்மகனாகிய சுக்கிரீவன் முடிசூடும் நாளாதலால் அப் பெருவிழாவைக்கண்டு மிகவும்மகிழ்தற்பொருட்டுச் சூரியன் எதிரில் வந்ததாகவும், சூரியனுதித்தவளவில் தாமரையிதழ் விரிந்துமலர் தலை - திருமகள் அவனைச்சேரும்படி அவளிருக்குமிடமான தாமரையென்னும் வீடுகளின் இதழ்க்கதவுகளைத் தன் சிவந்த கிரணங்களாகிய கைகளை நீட்டித் திறந்துவிட்டதாகவும் குறித்தார்; உருவகத்தை யங்கமாகப் பெற்றுவந்த தற்குறிப்பேற்றவணி. பூமகள்சேர - இரவில் தாமரை இதழ் குவிந்திருக்கும் போது அதனுள்ளே யுறைகின்ற திருமகள் அதிலிருந்து வெளிப்பட்டுத் தன்மகனைச் சேருமாறு என்க. இனி, செல்வமளிப்பவளான திருமகள் அவ்விடத்து மலருந் தாமரைகளில் வந்துவீற்றிருக்கும்படி யெனக்கொண்டு அதற்கேற்ப உரைத்தலுமாம். கரமென்பது கிரணமென்றும் கையென்றும் பொருள்படுதலை ''கரமென்ப கிரணஞ் செங்கை'' என்ற நிகண்டினாலும் அறிக. 'கரத்தின்' என்ற ஒரு சொல்லுக்கே கரமாகியகரத்தால் [கிரணமாகிய கையினால்] என்று இருபொருள் கொண்டு உரைத்தது - சிலேடையுருவகம். பூ மகள் - சிறந்த மலராகிய செந்தாமரையில் வாழும் பெண். முதல்வன் - அதிதிதேவியின் புதல்வரான தேவர்களுள் முந்தியவனாய் ஆதித்தியனென்று பேர்பெற்றவனென்றுமாம். பி - ம்:—[1] பொன்னெடுமோலி. [2] பொறுக்கலால். [3] மன்னும். [4] வெய்ய.

இதுவரையில் வாலிவதைப்படல மென்று சிலபிரதிகளிற் காணப்படுகின்றது. (419)

தாரை புலம்புறுபடலம் முற்றிற்று.

ஒன்பதாவது

அரசியற்படலம்

சுக்கிரீவனது அரசாட்சியின் இயல்பைக் கூறும் பாகம். இராமபிரான் வாலியை வதைத்த பின்னர் அவனது அரசாட்சியை அவன் தம்பியான சுக்கிரீவனுக்கு அளிக்க, அவன் அதனைப் பெற்று வானர வரசனாய்க் கிட்கிந்தாநகரத்தில் அரசாட்சிபுரிந்த செய்தியைக் கூறுவது, இப்படலம். இராமபிரானது திருத்தந்தையாரான தசரத சக்கரவர்த்தியினது அரசாட்சி முறைமையைக் கூறும் பாகத்திற்கு 'அரசியற் படலம்' என்று பாலகாண்டத்திற் பெயர்கூறிப்போந்த கம்பநாடர், எல்லாவுலகங்கட்கும் அரசனான அவ்விராமபிரானுக்குப் படைத்துணைமைசெய்து 'மகாராசர்' என்று பேர்பெறுஞ் சுக்கிரீவனது சிறப்புத்தோன்ற இங்கும் அத்தொடராற் படலப்பெயரமைத்தன ரென்னலாம்.

1.—சுக்கிரீவனுக்கு முடிசூட்டும்படி இராமன் இலக்குமணனுக்குக் கட்டளையிடுதல்.

[1]அதுகா லத்தி லருட்கு நாயகன்
மதிசால் தம்பியை வல்லை யேவினன்
கதிரோன் மைந்தனை [2]யைய கைகளால்
[3]விதியான் மௌலி [4]மிலைச்சு வாயென.

நான்கு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) அதுகாலத்தில் - அப்பொழுது,—அருட்கு நாயகன் - கருணைக்குத்தலைவனான இராமபிரான்,—மதி சால் தம்பியை - அறிவு மிக்க தன் தம்பியான இலக்குமணனை நோக்கி,—'ஐய - அப்பா! கதிரோன் மைந்தனை - சூரியன் மகனான சுக்கிரீவனை, கைகளால் - (உன்) கைகளால், விதியால் மௌலி மிலைச்சுவாய் - நூல்முறைப்படி முடி சூட்டுவாய்,' என - என்று, வல்லை ஏவினன் - விரைவாகக் கட்டளையிட்டான்; (எ - று.)

கைகேயி பெற்ற வரத்தின்படி தசரதன்பேச்சைக் காக்கும் பொருட்டுப் பதினான்குவருடம் வநவாசஞ்செய்வதாக உடன்பட்டு வந்த இராமபிரான் அந்தக்காடுறைகாலத்தில் தான் நகரத்தினுட் சேர்தலாகாதென்றுகொண்டு தானே இலக்குமணனை நோக்கி 'நீ கிட்கிந்தாபுரியுட்சென்று சுக்கிரீவனுக்கு முடிசூட்டி வா' என்று கட்டளையிட்டருளினனென்க. பட்டாபிஷேகம் நகரத்திலேயே நடத்த வேண்டிய சடங்கென்பது வெளிப்படை.

வல்லை மிலைச்சுவாய் என இயைத்தலுமாம். ஐய - வழுவமைதி. ஐயகைகளால் என்று எடுத்து, அழகிய கைகளால் என்றுமாம். மௌலி - சிரசு; இடவாகுபெயரால், கிரீடத்தைக்குறித்தது. பி-ம்:— [1]அதிகாலத்தில், அதுகாலத்து. [2]உன்றன். [3]விதிசால். [4]மிலைச்சி வாவென. (420)

2.—சுக்கிரீவனது முடிசூட்டிற்கு வேண்டுவனகொணரும்படி இலக்குமணன் அனுமானுக்குக் கூறுதல்.

[1]அப்போ தேயருள் [2]நின்ற வண்ணலும்
[3]மெய்ப்போர் மாருதி தன்னை [4]வீரநீ
இப்போ தேகொண [5]ரின்ன செய்வினைக்கு
ஒப்பாம் யாவையு மென்[6]று ணர்த்தலும்.

(இ - ள்.) அருள்நின்ற அண்ணல்உம் - (இராமபிரானது) கட்டளையில் நிற்கின்ற பெருமையிற்சிறந்தவனான இலக்குமணனும்,— அப்போதே - அப்பொழுதே, மெய் போர் மாருதி தன்னை - நீதிதவறாத போரைச்செய்தலில் வல்ல அநுமானைநோக்கி, 'வீர - வீரனே! நீ—, இன்ன செய்வினைக்கு ஒப்பு ஆம் யாவைஉம் - இந்த(ப்பட்டாபிடேக)ச் செயலுக்கு வேண்டுவனவான எல்லாப்பொருள்களையும், இப்போதே கொணர் - இப்பொழுதே கொண்டுவந்து சேர்ப்பாய்,'

என்று உணர்த்தலும் - என்று கூறியவுடனே,—(எ-று.)—'யாவையும் நண்ணும் வேலையில்' என அடுத்த கவியோடு தொடரும்.

அருள் - அருள்மொழி; இலக்கணை. அருள்கின்ற - தமையனாது கட்டளையைக் கடவாதஎன்க; இனி, (இராமனது) அருளுக்கு இலக்காய்கின்ற என்றலும், சிவகாருணியம்பொருந்திய என்றலும் ஆம். மெய் போர் மாருதி - உடல்வலிமைகொண்டு செய்யும் போரில் வல்ல மாருதி யென்றலும், சத்தியத்திலும் போரிலும் வல்ல மாருதி யென்றலுமாம். [3]மெய்ப் பேர் மாருதி என்ற பாடத்திற்கு - உண்மையான புகழையுடைய மாருதி யென்க. பி - ம்:—[1]அப்போதங்கு. [2]அண்ணல்பின்னரும், நின்றவள்ளலும். [4]வீரன். [5]இனிய. [6]உரைத்தலும். (421)

3.—அங்ஙனமே அநுமான் கொணர்தல்.

மண்ணுந் நீர்முதன் மங்க லங்களும்
எண்ணும் பொன் [1]முடி யாதி யாவையும்
நண்ணும் வேலையி னம்பி தம்பியும்
திண்ணஞ் [2]செய்வன செய்து செம்மலே.

(இ - ள்.) மண்ணும் நீர் முதல் மங்கலங்கள்உம் - (சுக்கிரீவனை) நீராட்டுதற்குஉரிய புண்ணியதீர்த்தம் முதலிய மங்கலகரமான பொருள்களும், எண்ணும் பொன்முடி ஆதி யாவைஉம்-(யாவராலும்) நன்குமதிக்கப்படுகின்ற பொன்மயமான கிரீடம் முதலிய மற்றும் எல்லா உபகரணங்களும், நண்ணும் வேலையில்-(அநுமானாற்கொணரப் பட்டு) வந்து சேர்ந்தவளவில்,—நம்பி தம்பிஉம் - புருஷோத்தமனை இராமபிரானது திருத்தம்பியாகிய இலக்குமணனும், செம்மலே - பெருமையிற் சிறந்தவனான சுக்கிரீவனுக்கு, திண்ணம் செய்வன செய்து - (முடிசூட்டுதற்குமுன்பு) தவறுமற் செய்யவேண்டிய செயல்களைச்செய்து,—(எ - று.)—'மௌலிசூட்டினான்' என அடுத்த கவியோடு தொடர்ந்து முடியும்.

மண்ணும் நீர்முதல் மங்கலங்கள்-மங்கலஸ்நானஞ் செய்வித்தற்கு வேண்டும் நீர் முதலியன. மண்ணும்நீர் - அபிஷேகதீர்த்தம்: கங்கை முதலிய புண்ணியநதிகளின் தீர்த்தமும், சமுத்திர ஜலமும். செம்மல்- செவ்வையுடையோன்; செம்மலே - உருபுமயக்கம். ஈற்றடி - முற்றுமோனை. பி - ம்:—[1]முடியோடு, முடியாதும். [2]செய்வினை. (422)

4.—சுக்கிரீவனது முடிசூட்டு.

மறையோ ராசி வழங்க வானுளோர்
நறைதோய் நாண்மலர் தூவ [1]நன்னெறிக்கு
இறையோர் முன்வினை செய்ய வேந்தலைத்
துறையோர் [2]நூன்முறை மௌலி சூட்டினான்.

(இ - ள்.) மறையோர் ஆசி வழங்க - பிராமணர்கள் வாழ்த்து மொழிகூறவும்,—வான்உளோர் நறை தோய் நாண் மலர் தூவ - தேவர்கள் தேன்நிரம்பிய அன்றுமலர்ந்த [புதிய] (கற்பகத் தருக்களின்) மலர்களைச் சொரியவும்,—நல்நெறிக்கு இறையோர் முன் வினை செய்ய - சன்மார்க்கத்திற்குத் தலைவரான முனிவர்கள் புரோகிதத் தொழில்செய்யவும்,—ஏந்தலை-பெருமையிற் சிறந்தவனான அச்சுக்கிரீவனை, துறையோர் நூல் முறை - நல்லொழுக்க வழியில் நடப்பவரான பெரியோர்கள் கூறிய நூல்களில் விதித்த முறைமைப்படி, மௌலி சூட்டினான் - முடிதரிப்பித்தான்; (எ - று.)

மறையோர் - வேதம்வல்லவர்; வேதங்களை ஓதுதலோடு ஓதுவித்தற்கும் உரியவர். இச்சடங்கிற்கென்று பிராமணர்கள் வரவழைக்கப்பட்டன ரென்பர் ஒருசாரார்; மற்றொருசாரார், வாநரர்களிலும் பிராமணர்முதலியசாதிக ளுண்டென்பர். நறை தோய் - நறுமணம் நிரம்பிய எனினுமாம். முன்வினைசெய்தல் - முன்னேயிருந்து செய்ய வேண்டும் தொழிலைச் செய்தல். 'நன்னெறிக்கிறையோன் றன்னிளையோனவ்வேந்தலை' என்ற பாடம் சிறவாது; குளகச் செய்யுள்களுட் கீழ்ச்செய்யுளில் 'நம்பி தம்பி' என எழுவாய் வந்த பின்னர் இச்செய்யுளில் 'நன்னெறிக்கிறையோன் றன்னிளையோன்' என அப்பொருளையே யுணர்த்தும் எழுவாய் வந்து கூறியது கூற லாகுதலால். ஏந்தல் - உயர்ந்தவன் எனக் காரணப் பொருள்படும்.

வாலியின் சவச்சடங்கு முடிந்தபின், வானரர் சூழச் சுக்கிரீவன் இராமபிரானிடத்தைச் சார்ந்தனன்; அநுமான் இராமபிரானை நோக்கிக் கைகுவித்தவண்ணம் 'இனிக் கிட்கிந்தை நகரினுள் வந்து சுக்கிரீவ பட்டாபிஷேகத்தை நடத்துக' என்றான்; இராமபிரான் '14 யாண்டுகள் வனவாசஞ்செய்யவேண்டியவன் நகரத்தினுட்புகலாகாது; நான் இலட்சுமணனுடன் இங்குத்தானே தங்குகிறேன்; நீவிர் வானரராச்சியத்தில் சுக்கிரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்வீராக' எனச்சொல்லி, சுக்கிரீவனைப் பார்த்து 'இந்த அங்கதனுக்கும் இளவரசுபட்டஞ் சூட்டுக; இப்போது கார்காலமாகையால், கார்த்திகையில் மீண்டு வருக; இப்போதுமுடிசூடிநகரினுள் இனிதிருக்க' என்று அனுப்பி விட்டனன் என முதனூலிலுள்ளது. பி - ம்:—[1] அந்நெறிக்கு. [2] நன் முடிமௌலி. (423)

5.—பின்பு சுக்கிரீவன் வந்து இராமனை வணங்க, அப்பெருமான் அவனுக்குச் சில உறுதிமொழிகூறத் தொடங்குதல்.

பொன்மா மௌலி புனைந்து பொய்யிலான்
தன்மா னக்கழல் தாழும் வேலையில்
நன்மார் பிற்[1] றழு வுற்று நாயகன்
சொன்னான் முற்றிய சொல்லி[2] னெல்லையான்.

(இ - ள்.) (சுக்கிரீவன்), பொன் மா மௌலி புனைந்து - பொன் மயமான சிறந்தகிரீடத்தைத் தரித்து, பொய் இலான் தன்-பொய்ம்மை மொழியில்லாதவனான இராமபிரானது, மானம் கழல் - பெருமையை யுடைய திருவடிகளில், தாழும் வேலையில் - வணங்குமளவில்,—நாயகன் - (எல்லாப்பொருள்கட்கும்) தலைவனும், முற்றிய சொல்லின் எல்லையான்-நிரம்பிய பாஷையின் கடையெல்லை எவ்வளவு உண்டோ அவ்வளவையும் அறிந்தவனுமான அவ்விராமபிரான், நல் மார்பில் தழுவுற்று - அழகிய (தனது) மார்பில் (அந்தச் சுக்கிரீவனை) அணைத்துக்கொண்டு, சொன்னான் - (சில உறுதிமொழிகளைக்) கூறலானான்; (எ - று.)—அதனை, அடுத்த பதினொருகவிகளிற் காண்க.

'வாலியைக்கொன்று அவனது அரசாட்சியையும் உனதுமனைவியையும் உனக்குக்கொடுப்பேன்' என்று முன்பு சுக்கிரீவனுக்கு வாக்குதத்தஞ்செய்தபடி இராமபிரான்நிறைவேற்றிவிட்டமைபற்றி, அப்பெருமானை இங்கே 'பொய்யிலான்' என்றார். இனி, பொய்யிலான் - சுக்கிரீவன், பொன் மா மௌலிபுனைந்து, தன் - தனது [இராமனது], மானக்கழல் தாழும்வேலையில் என்று பதவுரைகூறலுமாம்; இவ்வுரைக்கு, தனது காரியத்தை இராமபிரான் முடித்தவுடன் தான் அவனதுகாரியத்தை முடிப்பதென்ற கோட்பாட்டிற்கு இணங்கிய சுக்கிரீவன் அங்ஙனமே தான் முடிதரித்துக்கொண்டவுடன் இராம காரியஞ் செய்தற்பொருட்டு இராமனிடம் வந்தமைபற்றி அவனை 'பொய்யிலான்' என்றதாகக் கொள்க. [1]தழுவுற்றநாயகன் என்ற பாடத்திற்கு - 'அந்நாயகன்' என்றது அநாயகனெனத் தொகுத்தல் பெற்றதென்க. 'முற்றிய சொல்லினெல்லையான்'—"தென்சொற் கடந்தான் வடசொற்கலைக் கெல்லைதேர்ந்தான்" என்றார், அயோத்தியாகாண்டத்திலும். இனி, முற்றியசொல் - பழமையான வேதம்: அதன் எல்லை-வேதாந்தம்: அதற்கு விடயமானவன் என்று உரைத்தலுமாம். பி - ம்:—[2]எல்லையோன். (424)

வேறு.

6.—இனி, பதினொருகவிகள்-ஒருதொடர்: சுக்கிரீவனுக்கு இராமபிரான் உறுதி கூறல்.

ஈண்டுநின் றேகி நீநின் [1]னின்னிய லிருக்கை யெய்தி
வேண்டுவ மரபி னெண்ணி விதிமுறை யியற்றி வீர
பூண்டபே ரரசுக் கேற்ற யாவையும் புரிந்து போரின்
மாண்டவன் மைந்த னோடும் [2]வாழ்திநற் றிருவின் வைகி.

(இ - ள்.) வீர - வீரனே! நீ—, ஈண்டுநின்று ஏகி - இவ்விடத்திலிருந்து போய், நின் இன் இயல் இருக்கை எய்தி - உனக்கு இனிய இயல்பாக [உரியதாக]ப் பொருந்திய இருப்பிடத்தை [கிட்கிந்தா பட்டணத்தை] யடைந்து, வேண்டுவ - (நீ) செய்யவேண்டுவனவான காரியங்களை, மரபின் எண்ணி - முறைப்படி ஆராய்ந்து, (அச்செயல்களை), விதிமுறை இயற்றி - (நூல்களில்) விதித்துள்ள முறைப்படி

செய்து, பூண்ட பேர் அரசுக்கு ஏற்ற - (நீ) ஏற்றுக்கொண்ட பெரிய அரசாட்சிக்குத் தக்க, யாவையும் - செயல்களெல்லாவற்றை யும், புரிந்து - செய்து, போரில் மாண்டவன் மைந்தனோடுஉம் - போரிலிறந்தவனான வாலியினது மகனாகிய அங்கதனுடனே, நல் திருவின் வைகி வாழ்தி - சிறந்தசெல்வவாழ்க்கையில் நிலைபெற்று வாழ்வாயாக! (எ - று.)

'போரின் மாண்டவன்மைந்தனோடும் நல்திருவின்வைகிவாழ்தி' என்றதனால், இளவரசனாகிய அங்கதன் யாதோர் குறைவின்றியிருக் கக்கொண்டு வாழ்வாயாக என்று சுக்கிரீவனை உணர்த்தியவாறும்.
பி - ம்:—[1] இயல்பமை. [2] வாழி. (425)

7. வாய்மைசா லறிவின் [1]வாய்த்த [2]மந்திர மாந்த ரோடும்
தீமைதீ ரொழுக்கின் வந்த [3]திறத்தொழின் மறவரோடும்
தூய்மைசால் புணர்ச்சி [4]பேணித் துகளறு தொழிலை யாகிச்
சேய்மையோ டணிமை யின்றித் தேவரிற் றெரிய நிற்றி.

(இ - ள்.) வாய்மை சால் - சத்தியத்தோடு கூடிய, அறிவின் - அறிவினால், வாய்த்த - சிறப்பமைந்த, மந்திர மாந்தரோடுஉம் - மந் திரிகளுடன், தீமை தீர் ஒழுக்கின் வந்த - குற்றமற்ற நல்லொழுக் கத்தோடு கூடியொழுகிய, திறம் தொழில் மறவரோடு உம்-வலிமைக் கேற்ற தொழில்களையுடைய வீரர்களான சேனைத்தலைவர்களுடனும், தூய்மை சால்புணர்ச்சி பேணி - குற்றமற்றதாக அமைந்தசேர்க் கையை விரும்பிச்செய்து, துகள் அறு தொழிலை ஆகி - பிழையற்ற செயல்களைச் செய்பவனாய், சேய்மையோடு அணிமை இன்றி - (அந்த மந்திரிகள் சேனாதிபதிகள் முதலியோர் உன்னுடன் பழகுமிடத்து உன்னைவிட்டுவிலகி) நெடுந்தூரத்தில் நிற்றலும் மிக நெருங்குதலு மில்லாமல், தேவரின் தெரிய நிற்றி - (உன்னைத்) தேவர்களைப்போலக் கருதும்படி நிற்பாயாக; (எ - று.)

பட்டாபிடேக காலத்தில் அரசர்கட்கு அறிவுடையோர் நீதி போதித்தல் முறைமை: அதன்படி, முற்றுணர்வினனான இராம பிரான் மகாராசர்க்கு இங்ஙனம்நீதிபோதனஞ் செய்கின்றனன் என்க. இராமனுக்கு நாளைக்கு முடிசூட்டுவதென்று நிச்சயித்தபோது தசரத சக்கரவர்த்திசொன்னபடி வசிட்டமுனிவர் இராமபிரானுக்கு நீதி யுணர்த்தியதை அயோத்தியா காண்டத்திலும், ஸௌராஷ்டிர தேச த்துத் தேவநகரத்தில் அரசாண்ட சோமகாந்தராஜன் தன் மகனை ஏமகண்டனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்ய நிச்சயித்தபோது அவ னுக்குத் தருமோபதேசஞ் செய்ததை விநாயகபுராணத்து உபாசனா காண்டத்து அரசியற்படலத்திலும் காண்க.

இங்கு 'சேய்மையோ டணிமை யின்றி' என்ற விஷயம், ஸ்ரீ வான்மீகிராமாயணத்தில் வாலி அங்கதனுக்கு அறிவு கூறு மிடத்து "யாருடனும் அதிக சிநேகம் செய்யத்தக்கதன்று, சிநேக மில்லாமையும் செய்யத்தக்கதன்று: இரண்டும் பெரியகுற்றமாம்;

ஆகையால், இடைநிகராய் ஒழுகவேண்டும்'' என்று கூறப்பட்டிருக்கின்றது. சேய்மையோடு அணிமை இன்றி—''அகலா தணுகாது தீக்காய்வார்போல்க, இகல் வேந்தர்ச் சேர்ந்தொழுகுவார்'' என்றது காண்க. மிக விலகினாற் பயன்கொடாமல் மிகநெருங்கினால் தம்மை அவர் அவமதித்ததாக நினைத்துக் கோபித்தல், வேந்தரியல்பு. தேவரின் தெரிய நிற்றி—''இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற, வொளியோடொழுகப்படும்'' என்றதையும், 'ஒளி - உறங்காநிற்கவும் தாம் உலகங்காக்கின்ற அவர் கடவுள் தன்மை; அதனோடு பொருந்த ஒழுகுதலாவது - அவர் கடவுளரும் தாம் மக்களுமாய் ஒழுகுதல்' என்றதும் காண்க. ''திலகநீண்முடித் தேவரும் வேந்தரும், உலக மாந்தர்க ளொப்பவென்றோதுப'' என்றது, பொதுநெறி. தகுதியல்லாத வழியால் நட்புப்பாராட்டுதலை யொழித்தற்கு, 'தூய்மை சால் புணர்ச்சி பேணி' என்றார். தொழிலை - முன்னிலைக் குறிப்பு வினையாலணையும் பெயர். பி - ம்:—[1]வந்த, வாய்ந்த. [2]மந்திரிமார்களோடும். [3]தெறுதொழில் மறவரோடும், திறந்தொழிலறவரோடும். [4]எண்ணி. (426)

8. புகையுடைத் தென்னி [1]னுண்டு [2]பொங்கன லங்கென் றுன்னும்
மிகையுடைத் துலக நூலோர் வினையமும் வேண்டற் பாற்றே
பகையுடைச் சிந்தை யார்க்கும் பயனுறு பண்பிற்றீரா
நகையுடை முகத்தை யாகி யின்னுரை [3]நல்கு நாவால்.

(இ - ள்.) உலகம் - உலகத்தில் வாழ்கின்ற சனத்தொகுதி,—புகை உடைத்து என்னின்-(ஓர் இடம் மேலே காணப்படும்) புகையையுடையதாயிருந்தால், (அதுகொண்டு), அங்கு பொங்கு அனல் உண்டு என்று உன்னும் - அவ்விடத்திலே எழுந்தெரியு மியல்புடைய நெருப்பு உள்ளது என்று ஊகித்து உணர்கின்ற, மிகை உடைத்து - மிகுதியான அறிவை யுடையது; (ஆதலால், அந்த அநுமானப்பிரமாணம் வேண்டுவதாதலோடு), நூலோர் வினையமும் - நீதிநூல் வல்லவராற் கூறப்படுகின்ற வஞ்சனையும், வேண்டல் பாற்றுஏ - (அரசர்க்கு) விரும்பத்தக்கதேயாம்;பகை உடை சிந்தையார்க்கும் - (உன்பக்கல்) பகைமையுள்ள மனத்தையுடையவர்களுக்கும்,பயன்உறு பண்பின் தீரா - (அவரவர் தகுதிக்கேற்ற) பயனுண்டாம்படி எல்லா ரியல்புகளும் அறிந்து நடத்தலினின்று நீங்காம லிருந்துகொண்டே, நகை உடை முகத்தை ஆகி - மலர்ச்சியையுடைய முகத்தையுடையையாய், நாவால் இன் உரை நல்கு - நாவினால் இனிமையான சொற்களைச் சொல்வாயாக; (எ - று.)

உலகத்தவர் காட்சியளவையன்றி அநுமானத்தையும் மேற்கொள்வதாலும், பகைவரிடத்தும் வெளிக்கு நட்புக்கொண்டு வஞ்சனையாகவொழுகல் வேண்டுமென்று நீதிநூல்களில் கூறுதலாலும், உன் பகைவரிடத்து வெளிப்படையாக நகைப்பைக்கொண்டு உன்னை நட்புடையவனென்று கருதும்படி நீ நடந்த வண்ணமே பகைவரின் மேன்மைகளை யறிந்துகொண்டே அவரவர் தகுதிக்கு

ஏற்ப இன்னுரையையும் வழங்குவாயென்றவாறு. 'புகையுடைத் தென்னினுண்டு பொங்கன லங்கென்றுன்னும் மிகையுடைத்துலகம்' என்றதனால், காணப்படும் பொருளைக்கொண்டு காணப்படாத பொருளின் நிலையையும் நிச்சயித்தறிதல் வேண்டுமென்க. மிகை - மிக்கது; கண்ணுற் கண்டதற்குமேலும் ஒன்றைக்கொள்ளுதலால், 'மிகை' எனப்பட்டது. "எல்லாஞ் சலவருட்சாலச்சலமே நலவருள், நன்மை வரம்பாய்விடல்" என்றபடி யோக்கியரிடத்துத் தாமும் யோக்கியமாய் ஒழுதலும் அயோக்கியரிடத்துத் தாமும் அயோக்கியமாய் ஒழுகுதலும் அரசர்க்கு உரியன வாதலால். 'நூலோர் வினையமும் வேண்டற் பாற்றே' என்று பொதுப்படக் கூறியவர், அதற்கு உதாரணமாகச் சிறப்பாய் ஒன்றையெடுத்துக் காட்டுகின்றார், பின்னிரண்டடிகளில். அகத்திற் பகைமை யுடையராய்ப் புறத்திற் கூடியொழுகுவார்பக்கல் நீயும் அவர்போலவே நின்று புறத்தில் முகமலர்ச்சிகாட்டி இன்சொற்பேசி அகத்தால் நட்காமல் அந்த அகப்பகைவரை அழித்தற்கு வேண்டிய ஜாக்கிரதையிலேயே யிருத்தல் வேண்டுமென்க. திருக்குறளிற் கூடா நட்பு என்னும் அதிகாரத்தில் "மிகச்செய்து தம்மெள்ளுவாரை நகச்செய்து, நட்பினுட் சாப்புல்லற் பாற்று," "பகை நட்பாங் காலம் வருங்கால் முகநட்டு, அகநட்பொரீஇவிடல்" என்றவை இங்கு நோக்கத்தக்கன. பண்பு - எல்லாரியல்புகளும் அறிந்து நடத்தல்; "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்" என்ற கலித்தொகையைக் காண்க. மனப்பூர்வமாக அன்றி யென்பது தோன்ற, 'நாவால் இன்னுரை நல்கு' என்றார். 'பகை நண்பு நொதுமல் என்னும் வேறுபாடின்றி யாவரிடத்தும் ஒரு நிகராக இன்சொற்பேசுதலை நாவினியல்பாகக் கொள்ளவேண்டும்' என்பது தோன்ற, இது கூறினருமாம். புகையுடைத்தென்னின்...... நூலோர்வினையமும் வேண்டற்பாற்று என்பதற்கு—உலகவியல்பு இத்தன்மைய தாதலால், அநுமானப்பிரமாணத்தால் ஆராயுமிடத்தும் குற்றங்கட்கு இடமில்லாமற் குணம்நிரம்பியவனு யொழுகல் வேண்டுமென்று கருத்துக்கொள்ளுதலுமாம். 'பகையுடைச் சிந்தையார்க்கும்' என்ற உம்மையால், மற்றையோரிடத்துமலர்ந்த முகத்தையும் இனிய சொல்லையுமுடையனுதல் வேண்டுமென்பது பெறப்பட்டது.

வினையம் = வினயம்; பணிவென்று பொருள் கூறவுந்தகும். இனி, நாலுணர்ந்தோராற் கூறப்படுகின்ற பிரித்தல் பொருத்தல் பொருதல் முதலிய செயல்வகைகளை 'வினையம்' என்று சாதியொருமையாற் குறித்ததாகக் கொண்டும் உரைக்கலாம். பி - ம்:— [1]உண்டாம். [2]பொங்கழல். [3]நவிற்றிநாவில், நல்குநாவில், நல்குவாயால். (427)

9. [1]தேவரு மருடற் கொத்த [2]செயிரறு செல்வ [3]மஃதுன்
[4]காவலுக் குரியதென்று லன்னது [5]கருதிக் [6]காண்டி

ஏவரு மினிய நண்ப [7]ரயலவர் [8]விரவா ரென்று
மூவகை [9]யியலோ ராவர் முனிவர்க்கு [10]முலக மூன்றின்.

(இ - ள்.) தேவரும் மருளற்கு ஒத்த - (பெருஞ்செல்வத்திலிருப்பவர்களான) தேவர்களும் அதிசயித்து மயங்கத்தக்க, செயிர் அறு செல்வம் அஃது - குற்றமற்ற மிக்கபெருஞ்செல்வமானது, உன் காவலுக்கு உரியது - உனது பாதுகாப்பிற்கு உரிய பொருளாயிற்று, என்றால்—, அன்னது கருதி - அச்செல்வத்தின் சிறப்பை மனத்திற்கொண்டு, காண்டி - (அதனைப் பாதுகாத்தலில்) விழிப்புடனிருப்பாய்; உலகம் மூன்றின் - மூன்று உலகங்களிலுமுள்ள, ஏவரும் - எல்லாரும், முனிவர்க்குஉம் - முனிவர்களிடத்தும், இனிய நண்பர் விரவார் அயலவர் என்று மூவகை இயலோர் ஆவர் - இனிமையான சிநேகிதரும் பகைவரும் (இவ்விருதிறத்தினருமல்லாமல்) நொதுமலா யுள்ளவருமென்று மூன்றுவகைப்பட்ட தன்மையுடையோராவர்; (எ - று.)

இம்மூவுலகோர் பொருள்களினிடத்து விருப்புவெறுப்புக்களையொழித்தவர்களான இருடியர்திறத்தும் மூவகையியலோராவரெனவே, உன்திறத்து அங்ஙனமாவரென்பது கூறவேண்டா: ஆகவே, தேவரும் மருளும் செல்வம்பெற்ற நீ உலகோரின் தன்மையை விழிப்புடனறிந்துகொண்டு நடப்பாயென்றவாறு. பி - ம்:— [1]தேவரும்வியத்தற்கொத்த என்ற பாடத்திற்கு - தேவர்களும் பெருவியப்புக்கொண்டுமருளற்குஏற்ற என்று பொருள். அயலவர் = நொதுமலர்: உதாசீநரெனப்படுவர். விரவார் - சேராதவர். முனிவர் - முன்னையவர்; பெரியோர். பி - ம்:—[2]செயலது. [3]அஃதும். [4]காவலதருமைத்து, காவலர்க்குரியது. [5]காத்துக். [6]கேட்டி, கோடி. [7]இரவலர், விரவலர். [8]உரவோரென்னும். [9]இயல்பிற்றுரும். [10]முயல்கமுன்னே, உலகமுன்னே, உலகின்முன்னே. (428)

10\. செய்வன செய்தல் யாண்டுந் தீயன [1]சிந்தி யாமல்
வைவன வந்த போதும் வசையில வினிய கூறல்
[2]மெய்சொலல் வழங்கல் [3]யாவு மேவின வெஃக லின்மை
[4]உய்வன வாக்கித் தம்மோ டுயர்வன [5]வுவந்து செய்வாய்.

(இ - ள்.) யாண்டுஉம் - (பகைவர் நொதுமலர் நண்பர் என்ற மூவகையோருள்) எவர்திறத்திலும், தீயன சிந்தியாமல் - தீமையான காரியங்களைக் கருதாமல், செய்வன செய்தல் - செய்யத்தக்கமுறையான காரியங்களைச் செய்தலும், வைவன வந்தபோதுஉம் - (பிறர்) வைத வசைச்சொற்கள் (தமது கேள்விக்கு) வந்தபோதிலும், வசை இல இனிய கூறல் - (அவர்திறத்துத் தாம் சொல்லுஞ் சொற்களை) வசைச்சொற்களில்லாமல் இனியனவாகச் சொல்லுதலும், மெய் சொலல் - மெய் பேசுதலும், யாஉம் வழங்கல் - (தாம் கொடுத்தற்கு இயைவனவான) பொருள்களை யெல்லாம் (இரப்பவர்க்குக்) கொடுத்தலும், மேவின வெஃகல் இன்மை - (பிறரிடத்திற்) பொருந்திய

பொருள்களை(த் தாம்) கவர்தற்கு விரும்பாமையும், (ஆகிய இச்செயல்கள்),—உய்வன ஆக்கி தம்மோடு உயர்வன - (தம்மையுடைய உயிர்களை) நற்கதிபெறுவனவாகச்செய்து அவ்வுயிர்களோடு தாமும் மேம்படுவனவாம்; (ஆகவே), உவந்து செய்வாய் - (இவற்றை நீ) விரும்பிச் செய்வாய்; (எ - று.)

உய்வனவாக்கித் தம்மோடு உயர்வனவாதலால், செய்வன செய்கை முதல் வெஃகலின்மை ஈறாகிய செய்கையை உவந்து மேற்கொள்க என்று உபதேசித்தவாறு. செய்வன செய்தல் - "செயற்பால செய்யாதிவறியான் செல்வம், உயற்பாலதின்றிக்கெடும்" என்பது தமிழ்மறை. யாண்டும் - எவ்விடத்தும். வைவனவந்தபோதும் என்பதற்கு - தாம் வசைமொழி கூறத்தக்க காலம் நேர்ந்தபோதும் என்று உரைத்தலுமொன்று. வசை - திட்டு. திருக்குறளில் 'வெஃகாமை' என்பதற்குப் பரிமேலழகர் 'பிறர்க்குரியபொருளை வெளவக்கருதாமை' என்று பொருளுரைத்தது இங்கு உணரத்தக்கது. இனி, "முன்னிய, பல்பொருள் வெஃகுஞ் சிறுமை......செல்வமுடைக்கும் படை" என்றபடி 'மேவின வெஃகலின்மை' என்பதற்கு - பொருந்திய பலபொருள்களையும் விரும்புதலில்லாமை யென்று உரைத்தலுமாம். [2]மெய்யன வழங்கல் என்ற பாடத்திற்கு - மெய்ம்மையை யுடைய சொற்களைச் சொல்லுதலும், மேவினயாவும் வெஃகலின்மையும் என இரண்டாக்குக. பி - ம்:—[1]சிந்தியாமை. [3]யாவுமேகென வேவலின்மை, யாவும்...வெகுடலின்மை. [4]உய்வனவாகி. [6]உயர்ந்த தோளாய். (429)

11. சிறியரென் றிகழ்ந்து [1]நோவு செய்வன செய்யன் மற்றிந்
நெறி [2]யிகந் தியானோர் தீமை யிழைத்தலா லுணர்ச்சி நீண்டு
குறியதா மேனி [3]யாய கூனியாற் குலவுத் தோளாய்
வெறியன வெய்தி நொய்தின் வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன்.

(இ - ள்.) குலவு தோளாய் - திரட்சியையுடைய தோள்களையுடையவனே!—சிறியர் என்று இகழ்ந்து - (வலிமைநிலைமைகளில்) எளியவரென்பதுபற்றி அவமதித்து, நோவு செய்வன செய்யல்-(எவர்திறத்திலும்) வருத்தந்தருஞ்செயல்களைச் செய்யாதே; யான்-நான், இ நெறி இகந்து - இந்தவழியைக் கடந்து, ஓர் தீமை இழைத்தலால் - ஒரு தீங்கு செய்ததனாலே, உணர்ச்சி நீண்டு - அறிவுநீண்டு, குறியது ஆம் மேனி ஆயகூனியால் - குறுகிய வடிவமுடையவளான கூனியினால், நொய்தின - எளிதில், வெறியன எய்தி - இல்லாமைகளை யடைந்து, வெம் துயர் கடலின் வீழ்ந்தேன் - கொடிய துன்பமாகிய கடலில் விழுந்தேன்; (எ - று.)—மற்று - வினைமாற்று.

சிறியரென்று ஒருவரையிகழ்ந்து தீய செய்தலால் தீமைவிளையும் என்பதற்குத் தன்னொழுக்கத்தையே எடுத்துக்காட்டாக் காட்டுகின்றான் இராமனென்க. இராமன் சிறுவனாயிருந்த காலத்தில்

கையிற் சிறுவில்லும் மண்ணுண்டையுங்கொண்டு விளையாடி வருகையில், ஒருகால் விற்கொண்டு எய்த உண்டை கைகேயியின்வேலைக்காரியானமந்தரையென்னும் கூனியின் முதுகின்புறத்தே தெறித்தது. அவள், தனது கூனுடைமையை இராமன் இங்ஙனம் இகழ்ந்தனனென்று தவறாகக்கருதி, மனம்வருந்தி, அவன்மேற் சினங்கொண்டாள். அரசன்மைந்தனாதலின் அப்பொழுது ஒன்றுஞ் செய்யமாட்டாமற் சென்று, தனக்குவாய்க்குந் தருணம் நோக்கிக் கறுக்கொண்டிருந்தாள். பின்பு தசரதன் இராமனுக்குமுடிசூட்டத் தீர்மானித்ததை யுணர்ந்தவளவிற் கோபதாபம்மிக்கவளாகி, அதற்கு எப்படியாவது தான் தடைசெய்ய வேண்டுமென்று உறுதி கொண்டு, கைகேயிக்குக் கலகஞ்செய்து அவள்மனத்தை மாற்றி அவளைக் கொண்டு இராம பட்டாபிடேகத்தைத் தவிர்த்து அப்பெருமானை வனம்புகுவித்தனளென வரலாறு அறிக.

உணர்ச்சிநீண்டு - மிகஆராய்ந்து என்றபடி. 'உணர்ச்சிநீண்டு குறியதர்மேனியாய்' என்ற அடைமொழி கொடுத்ததனால், உடலின் சிறுமைபற்றி இகழலாகாதென்பது தோன்றும். "உருவுகண்டெள்ளாமைவேண்டும்" என்பது, தமிழ்மறை. இராசாங்கம் சுற்றம் பொன் மணி நெல் வாகனம் அடிமை முதலாக ஐசுவரியங்கள்பலவாதல்பற்றி அவற்றின் இன்மைகளும் பலவாதலால், 'வெறியன' எனப் பன்மையாற் கூறினர். 'வெந்துயர்க்கடல்'என்றது, சீதையைப்பிரிந்ததனாலாகிய துயரத்தை. கூனி - கூனுடையவள். பி - ம்:—[1] சிந்தை நோவன செய்கலர்நீ, நோக்கிச் செய்வன, நொய்வுசெய்வன செய்யன் முற்றும்...செய்யன்மற்றிங். [2] இகழ்ந்து. [3] மானக். (430)

12. மங்கையர் பொருட்டா [1]லெய்து மாந்தர்க்கு மரண மென்றல்
சங்கையின் றுணர்தி வாலி [2]செய்கையாற் சாலு மின்னும்
அங்கவர் திறத்தி னானே யல்லலும் [3]பழியு மாதல்
[4]எங்களிற் காண்டி யன்றே [5]யிதனின்வே றுறுதி யுண்டோ.

(இ - ள்.) 'மங்கையர் பொருட்டால் - மகளிர்நிமித்தமாக, மாந்தர்க்கு மரணம் எய்தும் - ஆடவர்க்கு மரணம்நேரிடும்', என்றல் - என்கிறபொருளை, சங்கை இன்று உணர்தி - சந்தேகமில்லாமல் அறிந்துகொள்வாயாக: (இவ்விஷயம்), வாலி செய்கையால் சாலும் - வாலியின் செயலால் உறுதிப்படும்; இன்னும் - மற்றும், அவர் திறத்தினானே - அந்தமகளிர் காரணமாகவே, அல்லல்உம் பழிஉம் ஆதல் - துன்பமும் பழிப்பும் நேர்தலை, எங்களில் காண்டி அன்றே - எங்கள்பக்கல் கண்டாயன்றோ? இதனின்வேறு உறுதி உண்டோ - இந்நீதியை யறிதலைக்காட்டிலும் நன்மைதருவது வேறு உண்டோ? [இல்லையென்றபடி]; (எ - று.)—அங்கு - அசை.

சிறந்த உறுதிப்பொருளாகும் இது என்று வற்புறுத்தியவாறும். பிறன் மனைவியை விரும்புதல் பெருங்கேடு விளைத்தலால் அது

கூடாதென்றும், அவ்வாறே தன்மனைவியின் சொற்கேட்டலும் பெருந்தீங்கு பயத்தலால்அதுவும் ஆகாதென்றும், மகளிர்பிறர்மேற் பழிகூற அஞ்சாராதலால் அவரிடத்து அதிஜாக்கிரதையாகப் பழக வேண்டுமென்றும் உறுதி கூறியவாறும். "தூமகேது புவிக்கெனத் தோன்றிய, வாமமேகலை மங்கையரால் வருங், காமமில்லை யெனிற் கடுங்கேடெனும், நாமமில்லை நரகமுமில்லையே" என்றது அயோத்தியா காண்டத்தில் வசிட்டர் இராமனுக்குக்கூறிய நீதி.

சீதை வனவாசம் புக்கவிடத்தும் மாயமானைக்கண்டு பொன்மானென்று விருப்பங்கொண்டு அதனைப் பிடித்துத் தரும்படி இராமபிரானை வற்புறுத்தித் தூண்டியனுப்பினாள்; உடனே இராவணன் வந்து சீதையைக் கவர்ந்து செல்ல இராமபிரான் சோகக்கடலில் வீழ்ந்தமையும்; மாயமானாக வந்த மாரீசன் இராமபிரானெய்த அம்புபட்டு விழுகையில் தன்மெய்வடிவங்கொண்டு 'ஹா ஸீதே! லக்ஷ்மணா!' என்று இராமன்குரலாற் சத்தமிட்டு விழுந்து இறக்க, அக்குரல்கேட்டவளவில் இலக்குமணன் அரக்கன் வஞ்சனையிது என்றுஉணர்ந்து வாளாவிருந்தானாக அவ்வுண்மையை யுணராமற் சீதை இராமனுக்கு அபாயம் நேர்ந்ததென்றேகருதிப் புரண்டழுது அதுதீர்த்தற்பொருட்டுத் தன்னைவிட்டுச்செல்லாத இலக்குமணன் மேற் குறைகூறினாளாக. இலக்குமணன் உண்மையுணர்த்தவும் கேளாமல் அச்சீதை இலக்குமணனைப்பலவாறு பழித்து நெருப்பில் விழத்தொடங்க, அப்பழிக்கு அஞ்சி இளையபெருமாள் அவளைத் தனியேவிட்டு இராமனிடம் சென்றமையும்பின்னிரண்டடியில் அறிய வேண்டியபொருள்கள். எங்களில் - என்னிடத்தும், என் தம்பியான இலக்குமணனிடத்தும்; என்னிடத்து அல்லலும், இலக்குமணனிடத்துப் பழியும் சீதைகாரணமாக நேர்ந்தமை காண்டியென முறையே கொள்க.

ஆடவர்க்கும் மகளிர்க்கும் பொதுவான மாந்தர் - என்பது இங்கே ஒன்றொழிபொதுச்சொல்: 'மங்கையர்பொருட்டால்' என்ற தன் குறிப்பினால், பெண்பாலையொழித்து ஆண்பாலைக் காட்டிற்று. இன்று = இன்றி. பி - ம்:—[1] என்றும். [2] செய்கையேசாலும், செய்கையிற்காண்டி. [3] அழிவுமாதல். [4] எங்கள்பால். [5] இதற்குவேறேதியாதோ, இதற்கு வேறுவமையாதோ, இதற்குவேறுரைப்பதுண்டோ, இதற்கு வேறுவமையுண்டோ. (431)

13. நாயக [1]னல்ல னம்மை நனிபயந் தெடுத்து நல்கும்
தாயென [2]வினிது பேணத் தாங்குதி [3]தாங்கு வாரை
ஆயது தன்மை [4]யேனு [5]மறவரம் [6]பிகவா வண்ணந்
[7]தீயன வந்த போது சுடுதியாற் றீமை யோரை.

(இ - ள்.) 'நாயகன் அல்லன் - (இவன் நமக்கு) அரசனல்லன்; நம்மை பயந்து எடுத்து நனி நல்கும் தாய் - நம்மைப் பெற்று எடுத்துவளர்த்து நன்றாகப்பாதுகாக்குந் தாயாவன்,' என - என்று

எண்ணியும் சொல்லியும், இனிது பேண - இனிமையாய் (உன்னைச் சனங்கள்) விரும்பும்படி, தாங்குவாரை தாங்குதி - பாதுகாத்தற்குரிய குடிமக்களைப் பாதுகாப்பாயாக; ஆயது தன்மை எனும் - அங்ஙனம் (எல்லாக்குடிகளிடத்தும்) கண்ணோட்டஞ்செய்வதை (நினது) இயல்பாகக் கொண்டாலும், தீயன வந்த போது - (அவர்களில் எவராலேனும் நாட்டில்) தீங்குகள் நேர்ந்தபோது, தீமையோரை - அக்கொடியவரை, அறம் வரம்பு இகவாவண்ணம் - தருமத்தி னெல்லையைக் கடவாதபடி, சுடுதி - தண்டிப்பாயாக; (எ - று.)—ஆல் - அசை.

தமது அரசாட்சியின்கீழ் வாழுங் குடிகளிடத்து மிக்க அன்புடையராய் ஒழுகுதலும், அங்ஙனம் ஒழுகுமிடத்தும் அவர்களில் யாரேனுங் குற்றஞ்செய்தால் அவர்களைக் கண்ணோட்டமின்றிக் குற்றத்திற்கு ஏற்றபடி தண்டித்தலும் அரசர்க்கு முறைமையாமென்க. "குடிபுறங்காத் தோம்பிக் குற்றங்கடிதல், வடுவன்று வேந்தன் றொழில்," "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ், களைகட் டதனோடு நேர்" என்ற திருக்குறள்களும், அவற்றின் உரையிற் பரிமேலழகர், 'துன்பஞ்செய்தல், பொருள்கோடல், கோறல் என ஒறுப்பு மூன்று; "தன்கீழ்வாழ்வாரை யொறுத்தல் அறனன்மையின் வடுவா மென்பதனை ஆசங்கித்து, அஃதாகாது; அரசனுக்கு அவரை அக்குற்றத்தின் நீக்கித் தூயராக்குதலும் சாதிதரும மென்றார்'; 'கொடியவர் என்றது-தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார், பிறனில் விழைவார் என்றிவர் முதலாயினாரை: இவரை வடநூலார் ஆததாயிக ளென்ப. இப்பெற்றியாரைக் கண்ணோடிக் கொல்லாவழி, புற்களைக்கு அஞ்சாநின்ற பைங்கூழ் போன்று நலிவுபல எய்தி உலகு இடர்ப்படுதலின், கோறலும் அரசற்குச் சாதி தரும மென்பதாயிற்று' என்றனவையும், இங்கு நோக்கத் தக்கன.

'நாயகன் அல்லன்' என உண்மைத்தன்மையை மறுத்து 'தாய்' என மற்றொரு தன்மையை ஏற்றியது, ஒழிப்பணியெனப்படும் அவநுதி: "சிறப்பினும் பொருளினுங் குணத்தினு முண்மை, மறுத்துப் பிறிதுரைப்ப தவநுதி யர்கும்" என அதன் இலக்கணங் காண்க. "மிகுதலும் குறைதலும் தாழ்தலும் உயர்தலும், பால் மாறுபடுதலும் பாகுபாடுடைய" என்றாராதலால், ஆண்பாற்குப் பெண்பால் உவமையாயிற்று. இனி, நாயகன் நல்லன் என்று எடுத்து, நமது அரசன் நல்லவன் என்று உரைப்பாருமுளர். [2]'இனிது பேணித் தாங்குதி' என்ற பாடத்திற்கு - தாயென்று குடிகள் நினைக்கும்படி அவர்களை இனிமையாக விரும்பிப்பாதுகாப்பாயென்க. பி-ம்:—[1]நல்லநம்மை. [3]தரணியோரை. [4]என்னும். [5]அறத்திறம். [6]அகலாவண்ணம், இகழாவ்ண்ணம். [7]தீயபேர்கண்டபோது,...வந்தபோதே. (432)

14. இறத்தலும் பிறத்தல் தானு மென்பன விரண்டுா் யாண்டும்
[1]திறத்துளி [2]நோக்கிற் செய்த [3]வினைதரத் [4]தெரிந்த வன்றே

புறத்தினி யுரைப்ப தென்னே [5]பூவின்மேற் புனிதற் கேனும்
அறத்தின திறுதி வாழ்நாட் கிறுதியஃ [6]துறுதி யென்ப.

(இ - ள்.) திறத்துஉளி நோக்கின் - உண்மையானவழியாற் பார்க்குமிடத்து,—இறத்தலும் பிறத்தல்தானும் என்பன இரண்டு உம் - (உலகத்துப்பிராணிகள்) சாதலும்பிறத்தலும் என்று சொல்லப்படுவனவான இரண்டு தன்மைகளும், யாண்டும் - எப்பொழுதும், செய்த வினை தர தெரிந்த அன்றே - (அந்தப் பிராணிகள்) செய்த கருமங்கள் தம்பயனைய் உண்டாக்க உண்டாவனவன்றோ? பூவின் மேல் புனிதற்கு ஏனும் - (திருமாலின் நாபித்) தாமரை மலரில் தோன்றிய பரிசுத்த குணமுடையவனான (படைத்தற் கடவுளாகிய) பிரமதேவனுக்கே யானாலும், அறத்தினது இறுதி - தருமத்தை விட்டுத் தவறுதல், (வாழ்நாட்கு) இறுதி - ஆயுளின் அழிவுக்குக் காரணமாம்; அஃது - தருமத்தை விட்டுத்தவறாமை, வாழ்நாட்கு உறுதி - ஆயுளுக்கு உறுதியைச் செய்வதாம், என்ப - என்று (பெரியோர்) கூறுவர்; (என்றால்), இனி—, புறத்து உரைப்பது என்னே - வேறாகவுள்ளவர்களைப் பற்றிக் கூறவேண்டுவது யாது? [யாதுமில்லை யென்றபடி]; (எ - று.)

தருமத்தின் வரம்பைக் கடந்து நடத்தல் ஆயுளின் அழிவுக்கும், அவ்வரம்பு கடவாமல் அதனில் நிற்றல் ஆயுளின்வளர்ச்சிக்குங் காரணமாமென்க. இனி, 'அஃது உறுதி' என்பதற்கு - அறத்தினது இறுதிவாழ்நாட்கு இறுதிஎன்னும் அது நிச்சயமென்று உரைப்பினுமாம். 'புறத்தினியுரைப்பதென்னே' என்று தண்டாபூபிகா நியாயமெனப்படுங் கைமுதிகநியாயத்தைக் கொண்டுசாதித்தது, தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி யென்னுங் காவ்யார்த்தாபத்தியலங்காரம். திறம் - தத்துவம். 'உளி' என்றது, மூன்றாம் வேற்றுமையின் பொருள்படுவதோ ரிடைச்சொல். பி - ம்:—[1]திறத்துழி. [2]நோக்கிச். [3]வினையத்தில். [4]தெளிந்தவன்றே, உரைப்பதென்னே. [5]பூமிசைப்புனிதன். [6]அறுதியன்றே, அறுதியன்ப, உறுதியம்மா. (433)

15. ஆக்கமுங் கேடுந் தாஞ்செ யறத்தொடு பாவ மாய
[1]போக்கிவே றுண்மை [2]தேரார் [3]பொருவரும் புலமை [4]நூலோர்
தாக்கின [5]வொன்றோ டொன்று [6]தருக்குறுஞ் செருவிற்[7]றக்கோய்
பாக்கிய [8]மன்றி யொன்றும் பாவத்தைப் பற்ற லாமோ.

(இ - ள்.) ஒன்றோடு ஒன்று தாக்கின தருக்கு உறும் - (பிராணிகள்) ஒன்றோடொன்று தாக்கியனவாய்க் களிப்படைதற்கிடமான, செருவில் - போரில், தக்கோய் - சிறந்தவனே!—ஆக்கமும் கேடும் - செல்வமடைதற்குக் காரணமும் வறுமையடைதற்குக்காரணமும், தாம்செய் அறத்தொடுபாவம் ஆயபோக்கி-அவ்வவ்வுயிர்கள் செய்த புண்ணியமும் பாவமும் ஆகியவற்றைத் தவிர்த்து, வேறுஉண்மை - வேறு இருத்தலை, பொருவு அரும்புலமை நூலோர்-ஒப்பற்ற தேர்ந்த

அறிவைத்தரும் நூல்களில் வல்லவர்கள், தேறார் - அறியார்; (ஆகவே), பாக்கியம் அன்றி பாவத்தை ஒன்றும் பற்றல் ஆமோ - செல்வத்திற்குக் காரணமான நல்வினையைச் செய்வதல்லாமல் அதற்கு மாறாக வறுமைக்குக்காரணமான தீவினையைச் சிறிதேனும் கைக்கொள்ளலாமோ? [கொள்ளலாகாது]; (எ - று.)

முதலடியில் ஆக்கத்திற்குக் காரணம் அறமும், கேட்டிற்குக் காரணம் பாவமுமாம் என முறைநிரனிறைப் பொருள்கோள் காண்க. காரணங்கள் காரியங்களாக உபசரிக்கப்பட்டன. "தாக்கின ஒன்றோடு ஒன்று தருக்கு உறும்" என்றதைத் தனிவாக்கியமாக்கி, (அறமும் பாவமும்) ஒன்றோடொன்று பகைமைகொண்டு மாறுபடும் என்றலும் அமையும்; அன்றி, தக்கோய்! (அறமும் பாவமும்) ஒன்றோடு ஒன்று தாக்கித் தருக்குற்றுச் செருச்செய்கையில் (அறிவுடையோர்) பாக்கியத்தைப்பற்றுவதல்லாமற் பாவத்தைச்சிறிதேனும் பற்றலாமோ என்று உரைத்தலுந் தகும்: இதனை வாலி - சுக்கிரீவ யுத்தத்திற் பெருமாள் கொடியவனான வாலியை ஆதரியாமல் நல்லவனான சுக்கிரீவனை ஆதரித்ததுபோலக் கொள்க. பி - ம்:— [1]நோக்கி. [2]தேரார். [3]நுணிவரும். [4]மேலோர். [5]அன்றி. [6]தருக்குவ செருவில். [7]தக்கோய். [8]அன்றியென்றும், அன்றி மற்றும், கடுத்துச்சூடு. (434)

16. [1]இன்னது [2]தகைமை யென்ப வியல்புளி மரபி னெண்ணி
மன்னர சியற்றி யென்கண் [3]வருவழி மாரிக் காலம்
[4]பின்னுற முறையி [5]னுன்றன் பெருங்கடற் சேனை யோடும்
துன்னுதி போதி யென்றான் சுந்தர னவனுஞ் சொல்வான்.

(இ - ள்.) இன்னது தகைமை என்ப - கீழ்க்கூறிய இது (அரசர்க்குத்) தக்க முறைமையா மென்று (அறிந்தோர்) கூறுவர்; (ஆதலால்), இயல்பு உளி - (நூல்களிற் கூறிய) இயல்பினால், மரபின் எண்ணி - முறைப்படி ஆலோசித்து, மன் அரசு இயற்றி - சிறப்பாக அரசாட்சியைச் செய்து, வருவழி மாரி காலம் பின் உற - இனி வரும் முறைமையிலுள்ளதான மழைக்காலம் கழிந்த பின்பு, முறையின் உன்தன் பெருங்கடல் சேனையோடுஉம் - ஒழுங்காகவுள்ள உனது பெரிய கடல்போற் பரந்த சேனையுடனே, என்கண் துன்னுதி - என்னிடம் வரக்கடவாய்; போதி - (இப்பொழுது) செல்வாயாக, என்றான் - என்று (சுக்கிரீவனை நோக்கிக்) கூறினான், சுந்தரன் - அழகியவனான இராமபிரான்; (அதுகேட்டு), அவன்உம் சொல்வான் - அச்சுக்கிரீவனும் கூறுவான்; (எ - று.)— அதனை, அடுத்த இரண்டு கவிகளிற் காண்க.

இராசநீதிகளை யறிவுறுத்தியபின் இராமபிரான் மாரிக்காலம் வருவதால் அது கழிந்தபின் சேனையோடு என்செயலைச்செய்யவருவாயாகஎன்று விடைகொடுத்தனுப்பினானென்க. பல இடங்களிலும் அலைந்து திரிந்து பிராட்டியைத் தேடுதற்கு மழைக்காலம் இனிய

தன்றுதலால், அதுகழிந்தபின்பு சேனையுடன் வருகவென்றான். இங்கு "மாரிக்காலம்" என்றது, ஆடி முதலிய நான்குமாதங்களென முதனூலுரைகளால் விளங்கும். ஆவணி புரட்டாசி மாதங்களே கார்காலமெனப்படுமாயினும், ஆவணிக்குமுன் மாதமாகிய ஆடி மாதத்திலும், புரட்டாசிக்குப் பின்மாதமாகிய ஐப்பசியிலும் கார்காலத்துத் தொடர்பு இருத்தல்பற்றி, இந்நான்கு மாதங்களும் மாரிக்காலமெனப்படுவது உண்டு. சுந்தரனென்றதை இராமன் என்பதன் பரியாயநாமமென்னலாம். 'என் கண்வருவழி மாரிக்காலம் பின்னுற' என்பதற்கு - என்னிடத்தில் நீ வரும்பொழுது மழைக்காலம்கழிந்திடுக: முறையின் - அதன் பின்பு என்று உரைத்தலுமாம். அன்றி, 'மாரிக்காலம் பின் உற என்கண் வருவழி உன்தன் முறையின் பெருங்கடற்சேனையோடும் துன்னுதி' என்று மொழிமாற்றி, மழைக்காலங் கழிந்த பின்பு நீ என்னிடம் வரும்போது உனது ஆளுகையின் கீழ்ப்பட்ட பெரிய கடல்போன்ற சேனையுடன் வருவாயாகவென்று உரைத்தலும் தகும். முறையின் துன்னுதி - (நீ எனக்கு உதவி செய்யவேண்டிய) முறைமையின்படி வருவாய் என்றலுமாம். [4]பின்னுவ என்ற பாடத்திற்கு - மழை நாட்கள் கழிவனவாதல் வேண்டுமென்க. பி - ம்:—[1] இன்னவை. [2] தன்மை. [3] மருவுழி. [4] பின்னுறு. [5] சின்றன். (435)

17.—இரண்டுகவிகள் - ஒருதொடர்: கிஷ்கிந்தா நகரத்தினுள் வந்துவசிக்கும்படி இராமனைச் சுக்கிரீவன் வேண்டுதலைத் தெரிவிக்கும்.

குரங்குறை யிருக்கை யென்னுங் குற்றமே குற்ற மல்லால்
[1] அரங்குறு துறக்க நாட்டுக் [2] கரசென [3] லாகு மன்றே
மரங்கிள ரருவிக் [4] குன்றம் வள்ளனீ மனத்தி னெம்மை
இரங்கிய [5] பணியாஞ் செய்ய விருத்தியாற் [6] சின்னா ளெம்பால்.

(இ - ள்.) 'வள்ளல் - வண்மைக் குணமுடையவனே!—மரம்கிளர் அருவி குன்றம் - மரங்கள் செழித்து வளரப்பெற்றதும் நீரருவிகளையுடையதுமான (நாங்கள் வசிக்கின்ற) கிஷ்கிந்தகிரி, குரங்கு உறை இருக்கை - குரங்குகள் வசிக்கின்ற இடமாகும், என்னும் - என்கிற, குற்றமே குற்றம் அல்லால் - ஒரு குற்றத்தை யுடையதேயல்லாமல், (மற்றைப்படி செல்வ இன்பங்களால்), அரங்கு உறு துறக்கம் நாட்டுக்கு அரசு எனல் ஆகும் அன்றே - சபை பொருந்திய சுவர்க்கலோகத்தினும் மேம்பட்டதென்று சொல்லத்தக்கதாகுமன்றோ? (ஆதலால்), நீ—, மனத்தின் எம்மை இரங்கிய பணி - உன் திருவுள்ளத்தில் எங்கள் பக்கல் இரக்கங் கொண்டு கட்டளையிடுங் காரியங்களை, யாம் செய்ய - யாம் செய்யுமாறு, சில் நாள் எம்பால் இருத்தி - சில தினங்கள் (அந்த) எமது இடத்தில் வந்து வசிப்பாயாக; (எ - று.)

எம்முடைய கிட்கிந்தையைக் குறித்துக் குரங்குகள் வாழிடமென்று ஒருகுறை கூறலாமேயன்றி, மற்றைப்படி சுவர்க்கத்தினும் மிக்கதாகையால், உன் கட்டளையை யாம் செய்ய எமது நகரி லினிதிருப்பாயாக எனச் சுக்கிரீவன் இராமபிரானை வேண்டுகின்று

னென்பதாம். "ஸுதர்மா தேவஸபா" என்று பாராட்டப்படுதலால், 'அரங்குறு துறக்கம்' என்றது. அரங்கு - நர்த்தகர் செய்யுமிட மென்றல் உண்டு. நிலவள நீர்வளச் செழுமைகொண்டு வாசத்திற்குச் சிறந்த இடமாமென்றற்கு, 'மரங்கிளரருவிக்குன்றம்' என்றான். அன்றே - தேற்றம். பி-ம்:—[1] அரங்கெழில், அரங்கெழு, அரண்கெழு. [2] அருகெனல், அரசெனல். [3] ஆயது. [4] குன்றில். [5] பணியாமெய்த, பயன்யாமெய்த. [6] சில நாளெய்தி. (436)

18. அரிந்தம நின்னை யண்மி [1]யருளுக்கு முரியே மாகிப்
பிரிந்துவே றெய்துஞ் செல்வம் [2]வெறுமையிற் பிறிதொன் றாமோ
கருந்தடங் கண்ணி னாளை நாடலாங் காலங் காறும்
இருந்தருள் தருதி யெம்மோ டென்றடி யிணையின் வீழ்ந்தான்.

(இ - ள்.) அரிந்தம-பகைவர்களை யழிப்பவனே! நின்னை அண்மி - (நாங்கள்) உன்னைச்சரணமடைந்து, அருளுக்கும் உரியேம் ஆகி - (உனது) கருணைக்கும் உரியவர்களாயிருந்து, பிரிந்து - (உன்னை) விட்டுப்பிரிந்து, வேறு எய்தும் - தனியே அனுபவிக்கின்ற, செல்வம் - செல்வமானது, வெறுமையின் பிறிதுஒன்று ஆம்ஓ - ஏழைமையினும் வேறானதொன்றாகுமோ? [ஆகாது]; (ஆகவே), கருந் தடங் கண்ணினாளை நாடல் ஆம் காலம் காறும் - கரிய பெரிய கண்களையுடையவளான பிராட்டியைத் தேடுதற்கு ஏற்றகாலம் வருமளவும், எம்மோடு இருந்து அருள் தருதி - (நீ கிஷ்கிந்தா நகரத்தில்) எங்களுடன் வசித்தருள்வாய், என்று - என்று சொல்லி, அடி இணையின் வீழ்ந்தான் - (இராமபிரானது) உபய பாதங்களில் விழுந்து வணங்கினான், (சுக்கிரீவன்); (எ - று.)

நாங்கள் உன்னையடைந்து உனது கருணைக்கும் இலக்காகி நண்பான பின்பு, உன்னைவிட்டுப்பிரிந்து தனியேயனுபவிக்குஞ் செல்வம் வறுமையின்பாற் படுமேயன்றி இன்பந்தராதாதலால் மழைக்காலங்கழியுமளவும் நீயும் எங்களுடன் கிஷ்கிந்தா நகரத்தினுள் வந்து வசிப்பாயாக என்றுவேண்டி இராமனது திருவடிகளில் விழுந்து வணங்கினான் சுக்கிரீவன் என்பதாம். "விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா, மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று" என்ற குறள் நினைவிற்கு வருகின்றது. இங்கு - அரிந்தம என்று விளித்தது, வாலியைக்கொன்ற திறத்தில் ஈடுபட்டதனால். வெறுமையிற் பிறிதொன்றாமோ - பெற்றும் பெறாததே போலாம் என்றபடி. பி - ம்:—[1] அருளுறுமுரியராகி, அருளினுக்குரியராகி, அருளுக்குமுரியராகி, பணிசெயுமடிமையின்றி. [2] வெறுமையிற்பிறிதொன்றாமால், வெறுமையிற் பிறிதொன்றாமே, வறுமையிற் பிறிதன்றாமால். (437)

19.—ஐந்து கவிகள் – ஒரு தொடர்: இராமபிரான் தான் நகரில்வசிக்கக் கூடாது என்ற அதனைக் காரணத்துடன் கூறல்.

ஏந்தலு [1]மிதனைக் கேளா [2]வின்னிள முறுவல் [3]நாற
[4]வேந்தரி லிருக்கை யெம்போல் விரதியர் விழைதற் கொவ்வா

[5]போந்தவ ணிருப்பி னெம்மைப் போற்றவே [6]பொழுது போமால்
[7]தேர்ந்தினி தியற்று முன்ற னரசியற் றருமந் தீர்தி.

(இ - ள்.) ஏந்தல்உம் - பெருமையிற் சிறந்தவனான இராமபிரானும்,—இதனை கேளா - இந்தவார்த்தையைக் கேட்டு,—இன் இள முறுவல் நாற - இனிமையான புன்சிரிப்பு உண்டாக,—(சுக்கிரீவனை நோக்கி),—வேந்தர் இல் இருக்கை - அரசர்மனையில் வசிப்பதற்கு, எம்போல் விரதியர் விழைதற்கு - எம்மைப்போன்ற விரதானுட்டானமுடையோர் விரும்புவதற்கு, ஒவ்வா(து) - தகாததாம்; (அன்றியும்), அவண் போந்து இருப்பின் - அவ்விடத்தில் [கிஷ்கிந்தாநகரத்தினுள்] (யாம்) வந்து வசித்தால், எம்மை போற்றஏ பொழுது போம் - (எம்மை) உபசரித்தலிலேயே (உனக்குப்) பொழுது கழிந்திடும்; ஆல் - ஆதலால், தேர்ந்து இனிது இயற்றும் உன்தன் அரசு இயல் - (நீ) ஆராய்ந்து இனிமையாகச் செய்யவேண்டிய அரசாட்சியில், தருமம் தீர்தி - முறைமை தவறியவனாவாய்; (எ - று.)— இச்செய்யுளிலுள்ள 'ஏந்தலும்,' 'இதனைக்கேளா', 'இன்னிளமுறுவல் நாற' என்ற மூன்றும், மேல் 23 - ஆங் கவியில் வருகின்ற 'என்றான்' என்னும் முற்றைக் கொள்ளும்.

''விரதியர்'' என்றது,வானப்பிரஸ்தாச்சிரமத்திற்கு உரிய விரதங்களையனுட்டிப்பவரை. வானப்பிரஸ்தாச்சிரமமாவது-இல்லந் துறந்து மனைவியோடாயினும் தனித்தாயினும் வனத்தில் வாழும் நிலையாம். எம்மைப் போற்றவே பொழுதுபோம் - எம்மை உபசரிப்பதற்கே பொழுது சரியாய்ப்போம்; இராசாங்ககாரியம் பார்ப்பதற்குப் பொழுதில்லையா மென்க. முறுவலுறியது - அவர்களின் அன்பைக் கண்டதனால். பி - ம்:—[1] அதனை. [2] இளநிலர். [3] தோன்ற. [4] வேந்தமை, வேந்தர்கள். [5] போந்தினிது. [6] பொழுதும், போது, காலம். [7] சேர்ந்தனை நினைக்கு நின்தன்..., சேர்ந்துடனிருக்கின் நின்தன்..., சேர்ந்தனை நிற்கமுன்பவ்... (438)

20. ஏழிரண் டாண்டு [1]யான்போந் தெரிவனத் திருக்க [2]வேன்றேன்
வாழியா [3]யரசர் வைகும் [4]வளநகர் வைக [5]லொல்லேன்
பாழியந் [6]தடந்தோள் வீர [7]பார்த்தில போலு மன்றே
யாழிசை மொழியோ டன்றி [8]யானுறு மின்பு மென்னே.

(இ - ள்.) வாழியாய் - வாழ்வையுடையவனே!—ஏழ் இரண்டு ஆண்டு-பதினான்குவருஷகாலம், யான்போந்து எரிவனத்துஇருக்க - நான்சென்று வெவ்வியகாட்டில் வசிப்பதாக, ஏன்றேன் - (கைகேயியின் முன்னிலையில்) உடன்பட்டுக் கூறிவந்தேன்: (ஆதலால், அப்பதினான்கு வருஷத்திற்குள்), அரசர் வைகும் வளம் நகர் வைகல் - அரசர்கள் வசிப்பதற்குஉரிய செல்வவளமுள்ள நகரத்தினுள்வசித்தற்கு, ஒல்லேன் - உடன்படேன்; (மற்றும்), பாழி அம் தட தோள்

வீர - வலிமையையுடைய அழகிய பெரிய தோள்களையுடைய வீரனே! யாழ் இசை மொழியோடு அன்றி - வீணாகானம்போலினிய சொற்களையுடையளான சீதையோடுகூடி யல்லாமல், யான் உறும் இன்பம்- நான் அடையும் இன்பம், என்னே - யாதோ? பார்த்திலைபோலும் - (இதனை நீ) ஆராய்ந்து (பார்த்தாயில்லை)போலும்; (எ - று.)— அன்றே - ஈற்றசை.

பதினான்குயாண்டு வனத்திலுறைந்துவருவதாக வாக்களித்து வந்திருத்தலால் நான் நகரில் வாழலாகாது: நான் இனிது வாழ வேணுமென்றல்லவா நாட்டில் வந்துறையுமாறு வேண்டுகின்றாய். சீதையைப் பிரிந்துள்ள எனக்கு இனிய வாழ்க்கையுளதாகாதென்பதை நீ ஆராய்ந்து பார்த்திலைபோலுமென்பதாம். இங்குக்குறித்த விஷயம், வாலியை ஸம்ஹரித்தானபின்பு, கிஷ்கிந்தாபுரியினுள்ளே எழுந்தருளிச் சுக்கிரீவனுக்கு முடிசூட்டி எல்லாரையும் மகிழ்விக்க வேண்டுமென்று வேண்டிய அநுமானுக்கு, ஸ்ரீராமன் "பதினான்கு வருஷங்கள் கழியுமளவும் யான் நகரினுள்ளாவது ஊரினுள்ளாவது புகேன்: இவ்வாறு என் தந்தையின் கட்டளை யாதலால், அதனை ஒருகாலும் தவறேன். ஆதலால், நீங்களெல்லாருஞ் சேர்ந்து சுக்கிரீவ பட்டாபிஷேகத்தைக் கிஷ்கிந்தையில் நடத்தக் கடவீர்" என்று அருளிச்செய்ததாக ஸ்ரீவால்மீகி ராமாயணத்தில் வந்துள்ளது.

எரி வனம் - வெயிலின் கடுமையால் தீப்போற் சுடுகின்ற வனம்: தீப்பற்றி யெரியும் வனம். யாழிசைமொழி - உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. பி - ம்:—[1]நான். [2]சென்றேன், என்றேன். [3]அரசன், அரசின். [4]மாநகர். [5]மாட்டேன். [6]புயத்து. [7]பார்க்கலை. [8]யானுறை, யான்றுய்க்கும். (439)

21. தேவிவே றரக்கன் வைத்த [1]சேமத்து [2]ளிருப்பத் தான்தன்
[3]ஆவிபோற் [4]றுணைவ ரோடு மளவிடற் கரிய வின்பம்
மேவினா னிராம னென்ற லையவிவ் வெய்ய மாற்றம்
மூவகை யுலக முற்றுங் காலத்து முற்ற வற்றோ.

(இ - ள்.) 'தேவி - தன் மனைவியான சீதை, வேறு - தனியாய், அரக்கன் வைத்த சேமத்துள் இருப்ப - இராவணன் கொண்டுபோய் வைத்த காவலுள்ள விடத்திலே யிருக்க, இராமன்—, தான்—, தன் ஆவிபோல் துணைவரோடும் - தனது உயிர்போன்ற நண்பர்களுடனே, அளவு இடற்கு அரிய இன்பம் - அளவிடக்கூடாத [மிகவும் அதிகமான] இன்பத்தை, மேவினான் - அடைந்தான்,' என்றால் - என்று (ஜனங்கள்) சொல்லும்படியானால், ஐய - அப்பா! இ வெய்ய மாற்றம் - இந்தக் கொடிய சொல், மூவகை உலகம் முற்றும்காலத்தும் - (மேல் கீழ் நடு என) மூன்று வகைப்பட்ட உலகங்களும் அழியுங்காலத்தில்தானும், முற்றவற்றோ - அழியவல்லதோ? [அந்தப் பெரும்பழி என்றென்றைக்கும் நீங்காதென்றபடி]; (எ - று.)

மூவகையுலகமுற்றுங்காலத்தும் - கல்பாந்த காலத்திலும். பி - ம்:—[1] சிறையிடை, சிறையினுள். [2] இருக்க. [3] ஆவியாக். [4] துணைவனோடும். (440)

22\. இல்லறந் [1] துறந்தி லாதோ ரியற்கையை [2] யெதிர்ந்து போரின்
வில்லறந் [3] துறந்து [4] வாழ்வேற் கின்னன [5] மேன்மை யில்லாச்
சில்லறம் புரிந்து நின்ற தீமைகள் தீரு மாறு
[6] நல்லறந் துறந்த நோன்பி னவையற [7] நோற்ப [8] லென்றான்.

(இ - ள்.) இல் அறம் துறந்திலாதோர் இயற்கையை எதிர்ந்து - கிருகஸ்தாச்சிரம தர்மத்தைக் கைவிடாதவர்களுடைய இயல்புக்கு மாறுபட்டு, போரின் வில் அறம் துறந்து - யுத்தத்தில் வில்லைக் கொண்டு செய்யும் தருமத்தைச் செய்யாது விட்டு, வாழ்வேற்கு-வாழ்பவனாகிய எனக்கு, இன்னன - இவை போன்றவை [நகரத்தினுள் வந்து உறைந்து நண்பர்களோடு இனிது வாழ்தல் முதலியன], மேன்மை இல்லா சில் அறம் - சிறப்பில்லாத அற்ப வொழுக்கங்களாம்; புரிந்து நின்ற தீமைகள் தீரும் ஆறு-(மனைவியைப் பிரிதற்குக் காரணமாக யான்) செய்துள்ள தீவினைகள் நீங்கும்படி, நல் அறம் துறந்த நோன்பின் - நல்ல தருமமாகிய இல்லறத்தைத் துறந்து அனுஷ்டிக்கும் வானப்பிரஸ்தாச்சிரம தருமங்களால், நவை அற நோற்பல் - குற்றமில்லாமல் தவஞ்செய்வேன், என்றான் - என்று கூறினான்; (இராமன்); (எ - று.)

எவ்வகைத் தீக்கருமஞ்செய்தாயினும் தனது தருமபத்தினியைக் காத்தல் வேண்டுமென்பது, இல்லற நிலையின் தருமம்; தான் மனைவியைப் பாதுகாவாது விட்டமை பற்றி 'இல்லறந் துறந்திலாதோ ரியற்கையை யெதிர்ந்து' என்றான். 'போரின் வில்லறந் துறந்து வாழ்வேற்கு' என்றது, தன் மனையாளைக் கவர்ந்த மாற்றானைப் பொருது தொலைக்காமல் தான் உயிர்வாழ்தல் பற்றி. தான் பூண்ட மானுட வேடத்திற்கு ஏற்றபடி ஒழுகுபவனாதலால், தனது நிஜரூபமான தெய்வத்தன்மையைப் பாராட்டாமல் 'புரிந்து நின்ற தீமைகள் தீரு மாறு நோற்பல்' என்கின்றான். இனி, புரிந்து நின்ற தீமைகள் தீரு மாறு - (இராவணன்) செய்த தீங்குகள் ஒழியும்படி யென்றலுமாம். "அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை" என்றபடி இல்லறம் சிறத்தலால், அது 'நல்லறம்' எனப்பட்டது. இங்கு - 'நல்லறந் துறந்த நோன்பு' என்றான், வானப்பிரஸ்தாச்சிரமத்தை; திருக்குறளில் "அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றில்" என்றவிடத்தில், இல்லைவிட்டு வனத்துச் செல்லும் நிலையை இல்லறத்திற்குப் புறமாகிய நெறி யென்றமை காண்க. அந்நிலையின் வகை பலவற்றுள் இல்லறந்துறந்து வனத்துச் சென்று மனைவியோடன்றித் தனித்துச் செய்யும் தவம், இங்கு நோன்பு எனக் குறிக்கப்பட்டது. பி - ம்:—[1] துறந்திலாதோம். [2] இழந்து போரின், எதிர்ந்த போதின், எதிர்ந்த போரின். [3] துறந்தும். [4] வாழ்வேனென்இன்ற, வாழவெள்இன்ற. [5] மெய்ம்மையில்லாச், மெய்ம்மையல்லால். [6] நல்லறந் தொடர்ந்த நோன்பின்,

நல்லறந்துறந்தநோன்மை. [7]நோற்பன். [8]நாளும். வில்லறந்துறந்து வாழ வெள்கினென் விளிவில் வீர என்று இரண்டாமடியிற் பாடம் உண்டு. (441)

23. அரசியற் குரிய யாவு மாற்றுழி யாற்றி யான்ற
[1]திரைசெயற் குரிய சேனைக் கடலொடுந் திங்கள் நான்கின்
[2]விரசுக வென்பால் நின்னை வேண்டினென் வீர வென்றான்
உரைசெயற் கெளிது மாகி யரிதுமா மொழுக்கி னின்றான்.

(இ - ள்.) வீர - வீரனே! அரசு இயற்கு உரிய யாவும் - அரசாட்சிக்கு உரிய செயல்களை யெல்லாம், ஆற்று உழி ஆற்றி - செய்ய வேண்டிய முறைப்படி செய்து, ஆன்ற திரை செயற்கு உரிய சேனை கடலொடும் - பெரிய அலைகள் வீசுதற்கிடமான கடல்போன்ற சேனையுடனே, திங்கள் நான்கின் என்பால் விரசுக - நான்குமாதங் கழிந்தவளவில் என்பக்கல் வந்து சேர்வாயாக; நின்னைவேண்டினென் - உன்னை (இங்ஙனம்) வேண்டுகின்றேன், என்றான்-என்றும் கூறினன்: (யாவனெனில்),—உரைசெயற்கு எளிதும் ஆகி - சொல்லுதற் கெளியதுமாய், அரிதும் ஆம் - (அனுஷ்டித்தற்கு) அரியது மான, ஒழுக்கில் - நல்லொழுக்கத்தில், நின்றான் - சலியாது நிலைநிற்பவனான இராமபிரான்; (எ - று.)

நான்குமாதம் ஊரில் தங்கியிருந்து அரசியலுக்கு வேண்டுவன செய்திட்டுப் பின் மீண்டுவருக என்றான் ஸ்ரீராமபிரானென்க. நல்லொழுக்கம் சொல்லுதற்கு எளிதாயினும் அனுஷ்டித்தற்கு அரியதாதலால், 'உரைசெயற்கெளிதுமாகி யரிதுமாமொழுக்கு' எனப்பட்டது. "சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ், சொல்லியவண்ணஞ் செயல்" என்றபடி வனவாசஞ் செய்வேனென்பது முதலிய விரதங்களைப்பற்றிய நியமவார்த்தைகளைச் சொல்லுதல் எவர்க்கும் எளியதாயினும் அந்நியமப்படி தவறாது நடத்தல் எவர்க்கும் அரிதாதலும் உணர்க. சேனையிலுள்ளாரது வரிசையொழுங்குகளைச் சேனையாகிய கடலுக்கு அலையாகக் கருதுக. பி - ம்:—[1]கரைசெயற்கரிய. [2]விரசுவது. (442)

24.—சுக்கிரீவன் உடன்பட்டுச் செல்லுதல்.

மறித்தொரு மாற்றங் கூறான் [1]வானுயர் தோற்றத் தன்னான்
குறிப்பறிந் தொழுகன் மாதோ கோதில ராத[2]லென்னா
[3]நெறிப்படர் கண்கள் பொங்கி நீர்வர நெடிது தாழ்ந்து
[4]பொறிப்பருந் துன்ப முன்னாக் கவிக்குலத் தரசன் போனான்.

(இ - ள்.) (அவ்வார்த்தைகளைக்கேட்டு), கவி குலத்து அரசன் - குரங்குகளின் கூட்டத்திற்குத் தலைவனான சுக்கிரீவன்,—மறித்து ஒரு மாற்றம் கூறான் - (அதனைத்) தடுத்து ஒருவார்த்தையும் சொல்ல மாட்டாதவனாய், வான் உயர் தோற்றத்து அன்னான்

குறிப்பு அறிந்து ஒழுகல் - வான்போலுயர்ந்த தவவேடத்தையுடைய அவ்விராமபிரானது குறிப்பை யுணர்ந்து அதன்படி நடத்தலே, கோது இலர் ஆதல் என்னு - குற்றமில்லாதவராகுதலாம் என்று எண்ணி, படர் கண்கள் நீர் பொங்கி நெறி வர - பரந்த (தன்) கண்களினின்று நீர்பொங்கித் தொடர்ச்சியாய் ஒழுக, நெடிது தாழ்ந்து - நீளமாக [எட்டுறுப்பும் நிலத்துத்தோய விழுந்து] வணங்கி, பொறிப்பு அருந் துன்பம் உன்னு - எழுதமுடியாத [மிகவும் அதிகமான] துன்பத்தை மனத்திற்கொண்டு, போனன்-(கிஷ்கிந்தாநகரத்தை நோக்கிச்) சென்றான்; (எ - று.) மாதோ - அசை.

இராமபிரான் பேசியதைக் கேட்டதும் வேறொன்றும் பேசாது இப்பிரானது குறிப்பறிந்தொழுகுதலே குற்றமற நடத்தற்குஉற்ற நெறி என்று கருதி, கண்களில் நீர்வாரக் கீழ்விழுந்து வணங்கிப் பெருந்துன்புடனே சுக்கிரீவன் கிட்கிந்தைக்குச் சென்றானென்பதாம். திருக்குறளில் "வானுயர்தோற்றம்" என்றதற்குப் பரிமேலழகர் கூறியது இங்குக் காண்க. [1]வானுயர் கொற்றத்தன்னன் என்ற பாடத்திற்கு - வானத்தை யளாவி யுயர்ந்த வெற்றியையுடைய அவனென்னலாம்; கொற்றம், வாலிவதத்தாலாகியது. பொறிப்பருந் துன்பம் - இராமபிரானைப் பிரிவதனுலாகிய சோகம்; இதுவே, கண்ணீர் பொங்கி வருதற்குக் காரணம். இராமபிரானது சீதாவிரக சோகத்தைக் கருதியதனுலாகிய சோகம் என்பாருமுளர். பி - ம்:— [2]முன்னு. [3]நெறிப்பட. [4]பொறுப்பருந் துன்பம். (443)

25.—இராமன் அங்கதனுக்கு அறிவுகூறல்.

வாலிகா தலனு மாண்டு மலரடி வணங்கி னானை
நீலமா மேக மன்ன நெடியவ [1]னருளி னோக்கிச்
சீலநீ [2]யுடையை [3]யாத லிவன்சிறு தாதை [4]யென்னு
[5]மூலமே தந்த நுந்தை யாமென முறையி னிற்றி.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) மலர் அடி வணங்கினன் - அப்பொழுது தனது தாமரை மலர்போன்ற திருவடிகளை நமஸ்கரித்தவனை, வாலி காதலனை உம் - வாலியின் மகனை அங்கதனையும், ஆண்டு-அப்பொழுது, நீலம் மா மேகம் அன்ன நெடியவன் - நீலநிறமுடைய சிறந்த மேகத்தைப்போன்ற பெரியவனை இராமபிரான், அருளின் நோக்கி - கருணையோடு பார்த்து, நீ சீலம் உடையை ஆதல் - நீ நல்லொழுக்க முடையனுவது (எங்ஙனமெனின்), இவன் சிறுதாதை என்னு - இச்சுக்கிரீவனை (உனக்குச்) சிறிய தந்தையென்று கருதாமல், மூலமே தந்த நுந்தை ஆம் என - உன்பிறப்பிற்குக் காரணமான உன்னைப் பெற்ற தந்தையாகவே கொண்டு, முறையில் நிற்றி - அவன்கட்டளையில் நிற்பாயாக; (எ - று.)—'நோக்கி' என்றது, அடுத்த செய்யுளில் 'கூறி***என்றான்' என இயையும்.

வணங்கினன் வாலி காதலனையும் என உருபு பிரித்துக் கூட்டுக. ஆதல்-வியங்கோள் முற்றுமாம். இனி, பின்னிரண்டடிக்கு-நீ

நல்லியல்பையுடையாய்; ஆதல் - ஆதலால், இவன் சிறு தாதை என்னுமல், மூலமே தந்த நுந்தை ஆம் எனக்கொண்டு, முறையில் நிற்றி [முறைப்படி அவனுக்கு அடங்கி நிற்கக்கடவாய்] என்று உரை கூறலுமாம். மூலமேதந்த நுந்தை - சாக்ஷாத் பிதா. நெடியவன் - பெருமைக் குணமுடையான். பி-ம்:—[1] அருளி [2] உடைமை. [3] அன்றே. [4] என்னுய். [5] மூலமேதானத்நுந்தை. (444)

26.—இராமன் அங்கதனுக்கும் அனுமானுக்கும் விடையளித்தல்.

என்னமற் றிணைய கூறி யேகவற் [1] றெடர வென்ருன்
பொன்னடி வணங்கி [2] மற்றப் புகழுடைக் குரிசில் போனன்
பின்னர்மா ருதியை நோக்கிப் பேரெழில் வீர நீயும்
அன்னவ னரசுக் கேற்ற தாற்றுதி யறிவி னென்ருன்.

(இ - ள்.) என்ன மற்று இணைய கூறி - என்றும் மற்றும் இத் தன்மையனவான வார்த்தைகளையுஞ் சொல்லி, அவன் தொடர ஏகு என்ருன் - அச்சுக்கிரீவனேடுகூடச் செல்வாயாகவென்று கூறியருளினன்: மற்று - உடனே, அ புகல் உடை குரிசில் - கீர்த்தியையுடைய பெருமையிற் சிறந்தவனை அவ்வங்கதன்,—பொன் அடி வணங்கி - (இராமபிரானது), பொன்போலச் சிறந்த திருவடிகளை நமஸ்கரித்து, போனன் - (கிஷ்கிந்தா நகரத்துக்குச்) சென்ருன்; (இராமபிரான்), பின்னர்—, மாருதியை நோக்கி - அனுமனைப் பார்த்து, 'பேர் எழில் வீர - மிக்க அழகையுடைய வீரனே! நீயும்—, (சென்று), அன்னவன் அரசுக்கு ஏற்றது - அச்சுக்கிரீவனது அரசாட்சிக்கு வேண்டிய காரியத்தை, அறிவின் ஆற்றுதி - (உனது) அறிவினுற் செய்வாயாக', என்ருன் - என்று அருளிச்செய்தான்; (எ - று.)

அங்கதனுக்கும் விடைகொடுத்தனுப்பி, இராமபிரான், அனுமனைப்பார்த்து 'சுக்கிரீவனுட்சிக்கு ஏற்றதைப்புரிக' என்ன, அன்னவன் பதில்கூறலானனென்பதாம். சுந்தரனென்று ஒருபெயரிருத்தலால், அனுமானை, 'பேரெழில்வீர' என விளித்தல் தகும். இனி, பேர் எழில் வீர - மிக்க எழுச்சியையுடைய வீரனே! என்றுங்கொள்ளலாம்: எழுச்சி - உயர்ச்சி, பெருவடிவங்கொள்ளுதல்; அநுமான் பெருவடிவங்கொண்டு காட்டியமை, கீழ்ச் சிற்சில இடத்து வருவது காண்க. பி - ம்:—[1] தொடர்க. [2] மற்றைப். (445)

27.—அனுமான் 'இங்கிருந்து பணிசெய்வேன்' எனல்.

பொய்த்தலி லுள்ளத் தன்பு பொழிகின்ற புணர்ச்சி யானும்
இத்தலை யிருந்து நாயே னேயின வெனக்குத் தக்க
கைத்தொழில் செய்வே னென்று [1] கழலிணை வணங்குங் காலை
மெய்த்தலை நின்றவீர னிவ்வுரை [2] விளம்பி விட்டான்.

(இ - ள்.) அன்பு பொழிகின்ற - அன்பை மிகுதியாக விளக்கின்ற, பொய்த்தல் இல் உள்ளத்து புணர்ச்சியானும் - பொய்படுதலில்லாத மனக்கலப்பை யுடையவனை அநுமானும்,—(இராம

பிரானை நோக்கி), 'நாயேன் - அடியேன், இ தலை இருந்து - இவ்விடத்தில்தானே இருந்து, ஏயின - (உன்னால்) கட்டளையிடப்பட்டனவும், எனக்கு தக்க - எனது நிலைமைக்கு ஏற்றனவுமான, கைத் தொழில் - அடிமைத் தொழில்களை, செய்வேன்—,' என்று - என்று சொல்லி, கழல் இணை வணங்கும் காலை - (அப்பெருமானது) உபய பாதங்களில் விழுந்து நமஸ்கரிக்கும்பொழுது, - மெய்த்தலை நின்ற வீரன் - சத்தியத்தில் நிலைபெற்ற வீரனை இராமபிரான், இ உரை விளம்பிவிட்டான் - இந்த வார்த்தைகளைக் கூறலானான்; (எ - று.)— அவற்றை அடுத்த இரண்டு கவிகளிற் காண்க.

அநுமான் இவ்வாறு கூறுதற்குக் காரணம் அவன் இராமபிரான்பக்கல் கொண்ட பக்திப்பெருங்காத லென்பது தோன்ற 'பொய்த்தலிலுள்ளத் தன்புபொழிகின்ற புணர்ச்சியான்' என்றும், இராமபிரான் அதனை மறுத்துரைத்தற்குக் காரணம் அப்பெருமானது நேர்மை என்பது தோன்ற 'மெய்த்தலை நின்ற வீரன்' என்றுங் கூறினர். 'எனக்குத் தக்க' என்றது - இரட்டுறமொழிதலால், எனது அடிமைத்திறத்திற்கு ஏற்ற என்ற பொருளோடு, யான் செய்தற்கு இயன்ற என்ற பொருளையுங் காட்டும். கைத்தொழில் -சிறுதொழில். பொய்த்தலில் உள்ளத்துப் புணர்ச்சி - அகம் வேறு புறம் வேறு ஆகாமல் மனப்பூர்வமான நண்பு. இனி, முதலடிக்கு - பொய்த்தல் இல் உள்ளத்து அன்பு - பொய்படாததும் மனப்பூர்வமானதுமான அன்பை, பொழிகின்ற - மிகுதியாக விளைக்கின்ற, புணர்ச்சியானும் - நண்பையுடையவனை அநுமானும் என்று பதவுரைகூறலுமாம். இனி 'அன்பு பொழிகின்ற' என்பதற்கு - அன்பினைக்கண்ணீராய் வெளிப்படுத்துகின்ற என்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1]கழலடி. [2]விளம்புகின்றான், விளம்பியிட்டான், விளம்பலுற்றான். (446)

28, 29.—இவ்விரண்டு கவிகள் - ஒருதொடர்: இராமபிரான் அதனை மறுத்துக் கூறல்.

நிரம்பினா னொருவன் காத்த நிறையரசு [1]இறுதி நின்ற
வரம்பிலா ததனை மற்றோர் தலைமகன் [2]வலிதிற் கொண்டால்
[3]அரும்புவ நலனுந் தீங்கு மாகவி னைய நின்போல்
பெரும்பொறை யறிவி [4]னோரா னிலையினைப் பெறுவ தம்மா.

ஆன்றவற் [5]குரிய வாய வரசினை நிறுவி யப்பால்
ஏன்றெனக் [5]குரிய தாய கருமமு மியற்றற் கொத்த
சான்றவர் நின்னி னில்லை யாகலாற் றருமந் தானே
போன்றநீ யானே வேண்ட வத்தலை போதி யென்றான்.

(இ - ள்.) (28) நிரம்பினன் ஒருவன் - (அறிவுஆண்மைபெருமையென்னும் மூவகையாற்றலும்) நிறைந்தவனான ஓரரசன், காத்த-பாதுகாத்துநின்ற, இறுதிநின்ற வரம்புஇலாது நிறைஅரசுஅதனை-கடையெல்லை யில்லாததும் (செல்வவளங்கள்) நிறைந்ததுமான அரசாட்சியை, மற்று ஓர் தலைமகன் - வேறோரரசன், வலிதின் கொண்

டால் - வலியக் கைப்பற்றிக் கொண்டால், (அவ்வரசாட்சியில்), நலன் உம்தீங்குஉம் அரும்புவ - நன்மைகளேயன்றித் தீமைகளும்விளைவன வாம்; ஆகலின் - ஆதலால், (அவ்வாறான சுக்கிரீவனது அரசாட்சி), ஐய - அப்பா! நின் போல் பெரும் பொறை அறிவினோரால் - பெரிய பாரத்தைத் தாங்கவல்ல அறிவையுடைய உன்னைப் போன்றவர்களா லேயே, நிலையினை பெறுவது - நிலைபெறக் கடவதாகும்; (அதனால், முதலில்), (29) ஆன்றவற்கு உரிய ஆய அரசினை - (பல குணங்களா லும்) நிறைந்தவனான சுக்கிரீவனுக்கு உரியதாகிய அரசாட்சியை, நிறுவி - (அவன்பக்கல்) நிலைநிற்கும்படிசெய்து, அப்பால் - பின்பு, எனக்கு உரியது ஆய கருமம்உம் - எனக்கு ஆகவேண்டியதான காரி யத்தையும், ஏன்று - ஏற்றுக்கொண்டு, இயற்றற்கு ஒத்த - செய்யத் தக்க, சான்றவர் - பெரியோர், நின்னின் இல்லை-உன்போல் (எவரும்) இல்லை; ஆகலால் - ஆதலால், தருமம் தானே போன்ற நீ - தருமமே வடிவெடுத்தாற் போன்றவனான நீ, யான்ஏ வேண்ட - நான் வேண்டு கின்றபடியே, அதலை போதி - அவ்விடத்திற்கு [சுக்கிரீவனிடத் திற்கு]ச் செல்லக்கடவாய், என்றான் - என்று (அநுமானைநோக்கி இராமன்) கூறினான்; (எ - று.)

மூவகைத்திறனும் நிரம்பிய ஒருவனது அரசை மற்றொருவன் வலிதிற்கொண்டால் அப்போது அங்கு நன்மையேயன்றித் தீமை களும் விளைவனவாம்: அவ்வரசு உன்னைப்போன்ற அறிஞர் தாங்கவே நிற்கும்: ஆகவே, நீ சென்று சுக்கிரீவனாட்சியை நிலைபெறுத்திப் பின்னர் என்காரியத்தைச் செய்வாய்: உன்னைப்போன்றவர் எவரு மில்லையன்றோ! என்றுகூறி, சுக்கிரீவனாட்சியை நிலைநிறுத்தச் செல் லுமாறு அநுமானை இராமபிரானேவினனென்க. 'நிரம்பினனொரு வன்' என்றது, இங்கு வாலியாம். 'மற்றோர் தலைமகன்' என்றது, இங்குச் சுக்கிரீவனும். இறுதிஇன்றவரம்பு - அழிவு; அஃதில்லாத தென்க. பொறை - பொறுக்கப்படுவது; பொறுத்தல் - சுமத்தல். 'பெரும்பொறை யறிவினோரால்' என்பதற்கு - மிக்க பொறுமைக் குணத்தையும் அறிவையு முடையவர்களாலென்று பொருள் கூறலு மாம். ஆன்றவன் என்பதில், சால் - பகுதி; சால் என்பது ஆல் என நின்றது. பி - ம்:—[1]உறுதிஇன்ற. [2]வலியிற். [3]அரும்புலனவனும் நீங்கும், அரும்புவ நலனுந் தீங்காம், அரும்புதலவனு நீங்கும், அரும் புதல்வனும் போய் நீங்கும், அரும்புதலன்புநீங்கும். [4]ஆராரிறையி னிப், ஓரானிறையினைப், ஓரானிலையினைப், ஓரார்நிலையினில். [5]அரிய வான. (447, 448)

30.—அநுமான் கிட்கிந்தைக்குச் செல்ல, இராமலக்ஷ்மணர் வேறொரு மலைக்குச் செல்லுதல்.

ஆழியா னணைய கூற வாணையி [1]தாகி னஃதே
[2]வாழியான் [3]புரிவேனென்று வணங்கிமா ருதியும் போனான்
சூழிமால் யானை யன்ன [4]தம்பியுந் தானுந் தொல்லை
ஊழிநா யகனும் வேறோ ருயர் தடங் குன்ற முற்றான்.

(இ - ள்.) ஆழியான் - சக்கராயுதத்தை யுடையவனான திரு மாலின் அவதாரமாகியஸ்ரீராமபிரான், அனையகூற - அவ்வார்த்தை

களைச் சொல்ல,—(அதுகேட்டு), மாருதிஉம் - அநுமானும்,—(அவ் விராமபிரானை நோக்கி), 'வாழி - வாழ்வாயாக: ஆணை ஈது ஆகின் - (உன்) கட்டளை இதுவானால், யான் அஃதுஏ புரிவேன் - அடியேன் அவ்வாறே செய்வேன்,' என்று - என்று சொல்லி, (இராமபிரானை), வணங்கி—, போனான் - (கிட்கிந்தா நகரத்தைநோக்கிச்) சென்றான்; தொல்லை ஊழி நாயகன்உம் - பழமையான உலகத்திற்குத் தலைவனாகிய ஸ்ரீராமனும், சூழி மால் யானை அன்ன தம்பிஉம் - முகபடாத்தையுடைய பெரிய யானையைப்போன்ற தன் தம்பியான இலக்குமணனும், தானும் - தானுமாக, வேறு ஓர் உயர் தட குன்றம் - உயர்ந்த பெரிய வேறொருமலையை, உற்றான் - சேர்ந்தான்; (எ - று.)

அநுமான் இராமபிரானாணைக்கு இசைந்துசென்றாக, இராமபிரானும் தம்பி உடன்வர வேறோர்மலையையுற்றானென்பதாம். "அபிஷிக்தேது ஸுக்ரீவே - ப்ரவிஷ்டே வாநரேகுஹாம், ஆஜகாமஸஹ ப்ராத்ரா - ராம: ப்ரஸ்ரவணம்கிரிம்' என வான்மீகி கூறுவதால், இராமபிரான் வசிக்குமாறு உற்றமலை ப்ரஸ்ரவணம் எனப்படும்; இதுக்கு மால்யவான் என்றும் ஒரு பெயருண்டு. "தனுவின்செல்வனும் போதும்நாம்வாலிபால்" என்று சொல்லி வாலியுள்ளகிரிக்குச்சென்றதனால், வேறோருயர் தடங்குன்றம் என்றது ரிசியமூகத்தை யென்ப: "மதங்கன திருக்கையானகுன்றத்து ஒருசிறை" என்றதனால் ரிசியமூகத்தைச் சார்ந்த வேறோர் மலையென்றலே சாலும். உத்தம குணத்தால் உனக்கு ஒரு திருஷ்டிதோஷ முண்டாகாமல் நீ நீடுழி வாழ்வாயாக வென்பான், இங்கு 'வாழி' என்றான். கீழோர் மேலோரை வாழ்த்துவது தகுதியோ வெனின்,— வரம்புகடந்த பொங்கும் பரிவையுடைய பக்தர்கள் அவ்வாறான அன்பின் மிகுதியால் தமது நிலையையும் எதிர்த்தலையின் நிலையையும் மறந்து இங்ஙனம் வாழ்த்துதல் மரபாமென்க. [2]வாழியாய் என்ற பாடத்திற்கு - என்றென்றைக்கும் அழியாத வாழ்வையுடையவனே! என்று பொருள். 'சூழியானை' எனவே, நாட்டுயானை யென்றதாம். மனம்போனபடி காட்டில் இரியும் யானைபோலன்றி ஒரு பாகனுக்கு அடங்கி நடக்கும் யானைபோலத் தமையனாரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் தம்பியான இலக்குமணனென்க. ஊழிநாயகன் தம்பியும் தானும் உற்றான் - தலைமை பற்றி வந்த திணைவழுவமைதி. பி - ம்:—[1] ஆயின். [3]பிறிவன், பிரிவன், புரிவன. [4]தம்பியுந் துணையாந், தம்பியோடெழுந்து துணையாய்த்... தானாந், ...தானுந். (449)

31.—இதுவும் அடுத்த கவியும் – சுக்கிரீவன் அரசாளுதலைக் கூறும்.

ஆரிய [1]னருளிற் போயவ் வகன்மலை யகத்த னாய
சூரியன் மகனு மானத் துணைவருங் கிளையுஞ் சுற்றத்
தாரையை வணங்கி யன்னாள் தாயெனத் [2]தந்தை [3]முந்தைச்
[4]சீரியன் சொல்லே [5]யென்னச் [6]செவ்விதி னரசு செய்தான்.

(இ - ள்.) ஆரியன் அருளின் போய் - சிறந்தவனான இராமபிரானது கட்டளையினாற் சென்று, அ அகல் மலை அகத்தன் ஆய -

விசாலமான அந்தக் கிஷ்கிந்தமலையி னுள்ளிடத்தைச் சேர்ந்தவனை, சூரியன் மகன்உம் - சூரியபுத்திரனை சுக்கிரீவனும் —மானத் துணைவர்உம் கிளைஉம் சுற்ற - பெருமையையுடைய (அரசாட்சிக்குத்) துணையாயுள்ள மந்திரிகள் முதலியோரும் உறவினரும் (தன்னைச்) சூழ்ந்து நிற்க,—தாரையை வணங்கி - (வாலியின் மனைவியான) தாரையை நமஸ்கரித்து, அன்னாள் தாய் என - (தமையன் மனைவியான) அவள் (தனக்குத்) தாயென்று சொல்லும்படியாகவும், முந்தை சீரியன் சொல்லே தந்தை என்ன - தனக்கு முன்பிறந்தவனும் [தமையனும்] சிறப்புள்ளவனுமான வாலி சொன்ன வார்த்தையே தனக்குத் தந்தை கூறும் சொல்லென்று சொல்லும்படியாகவும், செவ்விதின் அரசு செய்தான் - சிறப்பாய் அரசாட்சியைச் செய்தான்; (எ - று.)

"ஜ்யேஷ்டப்ராதா பித்ருஸம: = தமையன் தந்தையோடொப்பான்" என்றபடி தமையனைத் தந்தையைப்போலக் கொண்டு நன்கு மதித்தலும், அவர் மனைவியைத் தாயைப்போலக் கொண்டு நன்கு மதித்தலும் வேண்டுமன்றோ? அவ்வாறே சுக்கிரீவன், தன் தமையன் மனைவியான தாரையைத் தாயைப்போலக் கொண்டு அவள் சொற்கேட்டு நடப்பவனாயின னென்பதும், தன் தமையனை வாலி இறந்துவிட்டதனால் அவன் சொல்லைச் செய்தலையே பிதிருவாக்கிய பரிபாலனஞ் செய்தலாக் கொண்டன னென்பதும், பின்னிரண்டடியில் விளங்கும். வாலி இறக்கும்போது சுக்கிரீவனை அருகிலழைத்து அவனுக்குச் சில நல்லறிவுகளைக் கூறினனென்பது, கீழ் வாலிவதைப் படலத்திற் சொல்லப்பட்டது. அவ்வுறுதிமொழிகளைச் சுக்கிரீவன் தலைமேற்கொண்டு அவற்றின்படி நடந்தனனென்பது, இங்குக்கூறியவாறும். முந்தை - முந்து தோன்றியவன். இனி, 'முந்தைச் சீரியன் சொல்' என்பதற்கு - பழமையானவனும் சிறப்புள்ளவனுமான இராமபிரான் கூறிய உறுதிமொழிகளென்று உரைத்தலுமாம். மந்திரியர் முதலியோர் அரசர்க்கு உறுதிச்சுற்றமெனப்படுவராதலால், அவர்கள் உரிய சமயங்களில் வந்து சூழ்ந்து உதவுதலை 'மானத் துணைவர் சுற்ற' எனக் கூறினர்; "சூழ்வார் கண்ணாக வொழுகலான் மன்னவன், சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்" என்ற திருக்குறளைக் காண்க. சுற்றத்தாரைத் தழுவுதல் செல்வம்படைத்ததன் பயனும் செல்வத்தைப் பாதுகாத்தற்கும் வளர்த்தற்கும் காரணமு மாதலால் அவர்களைத் தழுவுதல் 'கிளைசுற்ற' என்றதனாற் கூறப்பட்டது. "கொடுத்தலு மின்சொலு மாற்றின் அடுக்கிய, சுற்றத்தாற் சுற்றப்படும்" என்றபடி, இன்சொற்சொல்லுதல் வேண்டுவனகொடுத்தல் முதலியவற்றை இவன் உடையனாகுதலால், இவனைச் சுற்றத்தார் நீங்காது தழுவுவ ரெங்க. [3]'முந்தைச் சீரியர்சொல்' என்ற பாடத்திற்கு - பழைய பெரியோர் (நூல்களிற் கூறியுள்ள) சொற்களென்று பொருளாம். பி - ம்:—[1]அருளிற்போய்த்தன், அருளினற்போய், அருளாற்போயவ். [3]தந்தசொற்கள். [4]சீரியர், சீரியோன். [5]ஆக. [6]செய்தவன், செய்வதனறு, செவ்விதன்று, செவ்விதின், (450)

32. வளவர செய்தி மற்றை வானர வீரர் யாரும்
கிளைஞரி னுதவ வாணை கிளர்திசை யளப்பக் கேளோடு
[1] அளவிலா வாற்ற லாண்மை யங்கதன் [2] தங்கள் செல்வத்து
இளவர சியற்ற வேவி [3] யினிதினி னிருந்தா னிப்பால்.

மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) வளம் அரசு எய்தி - செல்வமிகுதியை யுடைய அரசாட்சியை அடைந்து,—மற்றை வானர வீரர் யார்உம் கிளைஞரின் உதவ - மற்றை வானரவீரர்கள்யாவரும் சுற்றத்தார் போல வேண்டுவன செய்யவும், ஆணை கிளர் திசை அளப்ப - (தனது) ஆஜ்ஞை யானது நீண்ட திக்குக்களின் எல்லையை அளாவவும்,—அளவு இலா ஆற்றல் ஆண்மை அங்கதன் - அளவில்லாத பலத்தையும் பராக்கிரமத்தையுமுடைய அங்கதன், கேளோடு - அன்புடன், தங்கள் செல்வத்து இளவரசு இயற்ற - தங்கள் அரசாட்சிச்செல்வத்திற்கெல்லாம் இளவரசனாய் ஆட்சி செய்யுமாறு, ஏவி - கட்டளையிட்டு, இனிதினின் இருந்தான் - (அக்கிஷ்கிந்தாநகரத்திற் சுக்கிரீவன்) இனிமையாய் வீற்றிருந்தான்; இப்பால் - இப்புறம், (எ - று.)—'வள்ளலும் அவண் நின்று ஏகி' என அடுத்தகவியோடு தொடரும்.

சுக்கிரீவன் இராமன் என்னும் இருவருள் சுக்கிரீவன் செய்தியை இவ்வாறு கூறி, மேல் இராமன் செய்தியைக் கூறுகின்றாராதலின், வேறுபாடுதோன்ற, 'இப்பால்' என்றார்; அங்குச் சுக்கிரீவன் செய்தி அதுவாக இங்கு இராமன் செய்தி இது வென்க. ஆணை கிளர் திசை அளப்ப - (தனது) கட்டளை எங்குந் தடையின்றிச் செல்ல வென்க; 'சுக்கிரீவாஜ்ஞை' என்று சிறப்பித்துக் கூறல் வழக்கு. அங்கதனைத் தங்கள் செல்வத்துக்கு இளவரசு இயற்ற ஏவி இனிதினின் இருந்தான் - அங்கதன் இளவரசனாயிருந்து இராசாங்க காரியமெல்லாம் பார்த்துவரச் சுக்கிரீவன் இன்பமனுபவித்துக் கொண்டிருந்தனனென்க. பி - ம்:—[1] அளவில. [2] அறங்கொள் செல்வத்து, அறங்கள் செல்வத்து. [3] இரவிசேய். (*451*)

33.—இராமன் மாலியவானில் வசித்தல்.

வள்ளலு மவணின் றேகி மதங்கன திருக்கை யாய
வெள்ளவான் குடுமிக் குன்றத் தொருசிறை மேவி மெய்ம்மை
[1] உள்ளுறு காதற் றம்பி யுவகையா லமைக்கப் பட்ட
எள்ளலில் சாலை யெய்தி [2] யினிதினி னிருந்த காலை.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) வள்ளல்உம் - வரையாதருளு மியல்பினனான ஸ்ரீராமனும், அவண் நின்று ஏகி - அவ்விடத்திலிருந்துசென்று, மதங்கனது இருக்கைஆய வெள்ளம் வான் குடுமி குன்றத்து - மதங்க முனிவனது இருப்பிடமாயுள்ளதும் நீர்ப்பெருக்குக்களையும் ஆகாயத்தை யளாவிய சிகரத்தையு முடையதுமான ரிசியமூககிரியின், ஒருசிறை

மேவி - ஒருபக்கத்தை [மாலியவானை] அடைந்து, (அவ்விடத்தில்), உள்ளுறுமெய்ம்மை காதல் தம்பி - மனப்பூர்வமாகவுள்ள உண்மையான பக்தியையுடைய தன் தம்பியான இலக்குமணனால், உவகையால் அமைக்கப்பட்ட - மகிழ்வோடு செய்யப்பட்ட, எள்ளல் இல் சாலை - குற்றமில்லாத பர்ணசாலையை, எய்தி - அடைந்து, இனிதினின் இருந்த காலை - (அங்கு) இனிமையாய் வசித்திருந்தபொழுது, —(எ - று.)—'இரவி ஏகினன்' என அடுத்த கவியோடுதொடர்ந்து முடியும்.

மதங்கன் து இருக்கையாய குன்றம் - மதங்க முனிவன் வசிக்குமிடத்தைக்கொண்ட மலை: இந்த ரிசியமூககிரியே வாலிக்கு அஞ்சிய சுக்கிரீவன் தங்கியிருந்த இடம். அதன்ஒருசிறை - மாலியவான் என்னலாமென்று தோன்றுகிறது: 'வேறோருயர் நடங்குன்ற முற்றான்' என்று 30-ஆஞ் செய்யுளிற்கூறி, இங்கு மதங்கனதிருக்கையாய...குன்றத்தொருசிறைமேவி என்றதனால், இது ரிசியமூகமன்று என்றும், அதைச்சார்ந்துள்ள ஒருபகுதியாய வேறோர்மலை யென்றும் பெறப்படுதல் காண்க. எள்ளல் இல் - பழித்தற்கிடமில்லாத என்க. மெய்ம்மைக்காதல் - நிஜபக்தி, காதல், இங்கே ராமபக்தி. பி - ம்:—[1] அள்ளுறு...அன்பினால். [2] இருந்தனனிதினிப்பால், இருந்தனனிமையோரேத்த.

இச்செய்யுள் சிலபிரதிகளிற் காணப்படவில்லை. சிலபிரதிகளில் கார்காலப்படலத்தின் முதற்செய்யுளாக வுள்ளது. (452)

அரசியற்படலம் முற்றிற்று.

பத்தாவது

கார்காலப்படலம்.

மழைக்காலத்தைப் பற்றிக் கூறும் பாகம் என்பது, இத்தொடர்க்குப்பொருள். மழைக்கால வருணனையும், சுக்கிரீவனுக்குத்தவணைகுறித்த நான்குமாதகாலத்தை இராமபிரான் கழித்த செய்தியையும் இதிற்கூறுகின்றார். அக்காலத்திற் சீதையின் பிரிவைக்குறித்து இராமபிரான் இரங்குதலும், இலக்குமணன், தேற்றுதலும், அக்கார்காலம் கழிதலும், இப்படலத்திற் கூறப்படுகின்றன.

கார்காலம் - மேகங்களையுடைய காலம், மேகங்களுக்கு உரிய காலம்; மேகங்கள் மழைபெய்யுங் காலமென்க. கார்க்கால மெனவலி மிகாது இயல்பானதற்குக் காரணம், வருமொழி வடமொழியாயிருத்தலே யாதல்வேண்டும். மாதம் பன்னிரண்டனுட் சித்திரை முதலாக இரண்டிரண்டு மாதங்கள் - முறையே இளவேனிற்பருவம், முதுவேனிற் பருவம், கார்ப்பருவம், கூதிர்ப்பருவம், முன்பனிப் பருவம், பின்பனிப்பருவம் எனப்படும்; பருவம், ருது, பெரும்பொழுது என்பவை - ஒருபொருட்சொற்கள். இம்முறைப்படி, ஆவணி

புரட்டாசி மாதங்கள் கார்காலமாம். உய்த்துநோக்குமிடத்து இரண்டிரண்டு மாதங்களாகக் குறிக்கப்பட்ட ஆறுபருவங்களும், வெயிற்காலம் மழைக்காலம் பனிக்காலம் என்று மூன்றாய்ப்பகுக்கும்போது நான்கு மாதமே மழைக்காலம் என்றற்கு ஏற்கும்: அதுபற்றியே, நான்கு மாதங்கள் இங்குக் கார்காலம் எனப்பட்டது. வான்மீகி முனிவரும் இவ்வாறே கொண்டுள்ளார். * "மழைக்காலத்திற்கு வேண்டுபவற்றிற்காக மற்றையெட்டு மாதங்களில் முயலவேண்டும்" என்று பொருளுள்ள வடமொழிமேற்கோளும் இங்குக் கருதத்தக்கது. முதுவேனிற்பருவத்தின் பிற்பாதியாகிய ஆடிமாதத்திலேயே மழை தொடங்கிக் கூதிர்ப்பருவத்தின் முற்பாதியாகிய ஐப்பசி மாதம் வரையில் மழைபெய்த லியல்பாதலால், மழைக்காலமாகிய அந்த நான்கு மாதங்களும், ஆங்காங்குச் சென்று சீதையைத் தேடுவித்தல் முதலாக மேற்செய்யவேண்டும் காரியமுயற்சிக்கு ஏற்றகாலமல்லவென்று இராமபிரானாற் கொள்ளப்பட்டன என்பதும் உணர்க. இனி, இப்படலத்திற்கு 'சரற்காலப்படலம்' என்று பெயர் கூறுவாருமுளர்; அது, இப்படலத்தின் இறுதியிற் சரத்காலத்தின் வரவும் அக்காலவருணனையும் கூறுதல்பற்றியெனக் கொள்ளவேண்டும். வான்மீகத்திலும் சரற்கால வருணனை இங்கு வருகின்றது.

வேறு.

1.—தட்சிணாயனம்: சூரியன் தெற்கே ஒதுங்குதல்.

மாவியல் வடதிசை நின்று [1]வானவன்
[2]ஓவிய மேயென வொளிக்க வின்குலாந்
தேவியை [3]நாடிய [4]முந்தித் [5]தென்திசைக்
கேவிய தூதென விரவி [6]யேகினான்.

(இ - ள்.) ஓவியமே என - சித்திரத்தி லெழுதிய பிரதிமையே போல, ஒளி கவின் குலா(வு)ம் - ஒளியோடு கூடிய அழகுவிளங்கப் பெற்ற, தேவியை - (தன்) மனைவியான சீதையை, நாடிய - தேடும் பொருட்டு, முந்தி - (அநுமான் முதலிய வானரர்களை அனுப்புதற்கு) முன்னமே, வானவன் - தேவாதி தேவனான ஸ்ரீராமபிரான், தென் திசைக்கு ஏவிய - தெற்குத்திக்கிற்கு அனுப்பிய, தூது என - தூதன் போல, இரவி - சூரியன், மா இயல் வடதிசை நின்று - பெருமை பொருந்திய வடக்குத்திக்கினின்று, ஏகினான் - (தெற்குத்திக்குக்குச்) செல்லலானான்; (எ - று.)

தைமாசம்முதல் ஆனிமாசம் வரையில் ஆறுமாசம் உத்தராயணமும், ஆடிமாசம்முதல் மார்கழிமாசம் வரையில் ஆறுமாசம் தக்ஷிணாயனமுமாம். சூரியன் வடபுறமாக ஒதுங்கிச் சஞ்சரிக்குங் காலம் - உத்தராயணம்; [உத்தரம்-வடக்கு: அயனம் - செல்லும் வழி.] அவன் தென்புறமாக ஒதுங்கிச் சஞ்சரிக்குங் காலம் - தட்சிணாயனம். [தட்சிணம் - தெற்கு] தட்சிணாயனத் தொடக்கமாகிய ஆடிமாசம்

* "வர்ஷார்த்த மஷ்டௌ ப்ரயதேத மாஸாந்"

முதலாகச்சூரியன் வடக்கினின்று தென்புறமாக ஒதுங்குகின்றனன். அங்ஙனம் அவன் இயல்பால் வடக்கிலிருந்து தெற்கே செல்லுதற்கு, இராவண னெடுத்துச்சென்ற சீதையைத் தேடுதற்குத் தென் திசையில் இராமனால் அநுமனுதியரை அனுப்புவதற்கு முந்தித் தூதனுப் பப்பட்டு அத்திசை நோக்கிச் சென்றாற்போல இரவி ஏகினனென்று கவி கற்பித்துக்கூறியது தற்குறிப்பேற்றவணி. இது சமயத்திற் கேற்பக் கூறியதாம். சூரியன், விளக்கத்தைச் செய்பவனாதலால் காணமற்போன பொருளைத் தேடிக் கண்டுபிடிக்க ஏற்றவனாவன்: மற்றும் சூரியனது சஞ்சாரம் எம்பெருமான் கட்டளைப்படியே நடப்ப தாதலால், அவனை அப்பெருமானால் ஏவியனுப்பப்பட்ட தூதனென் றல் ஏற்கும்.

வானவன் - தேவன்; இப்பொதுப்பெயர், சிறப்பாய்த் திருமா லின் அவதாரமான இராமபிரானை யுணர்த்திற்று. இனி, 'வானவ னேவிய தூதெென' என்பதற்கு-இந்திரனேவிய தூதன்போல என்று உரைப்பினும் அமையும். சூரியபுத்திரனும் வாநரராஜனுமான சுக்கிரீ வன் தென்திசைக்கு இனி அனுப்புந் தூதன் வாயுபுத்திரனும் வாநர னும் வேகத்திலும் சோர்வின்மையிலும் கல்வியிலும் சிறந்தவனு மான அநுமான்; ஸாக்ஷாத் தேவராஜனான இந்திரன் அத்திசைக்கு முந்தியனுப்பிய தூதன், தேவர்களில் முதல்வனும் வேகமாகச் செல் லுதலிலும் சோர்வின்மையிலும் பேர்பெற்றவனும் அநுமானுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியனுமான சூரியன் என்க. தேவர்கள் தாமான நிலையில் நின்றாவது வாநரம் முதலிய பிறப்புக்களில் தோன்றியாவது சீதையைத்தேடுதல் முதலிய இராமகாரியத்திற்குத் துணை செய்யக் கடமைப்பட்டவரென்பது, கருதத்தக்கது. இனி, [1]மானவன் என்ற பாடம் - மனிதரிற் சிறந்தவனென்றும், மநுகுலத்திலவதரித் தவனென்றும் பொருள்பட்டு இராமனைக் குறிக்கும். மனத்திற்குத் திருப்தியுண்டாகுமளவும் கலைத்துக் கலைத்து எழுதிச் சீர்திருத் தியமைக்கக்கூடு மாதலால், சித்திரப்பாவை மிக அழகியதாம்; அவ்வடிவம் இயற்கையழகுமிக்க பிராட்டிக்கு உவமையாகக் கொள்ளப் பட்டது.

வடதிசை - பெருந்திசையும் மங்களத்திசையும் புண்ணியத் திசையு மாதலால், அதற்கு 'மா இயல்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. மா வியல் என்று எடுத்தால், மிகப்பெரியஎன்று பொருள்படும்; ஒருபொருட்பன்மொழி: வியல் - அகல முணர்த்தும் உரிச்சொல். ஏ - பிரிநிலையோடு, உயர்வுசிறப்பு. குலாம்=குலாவும். நாடிய - செய்யியவென்னும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம். நாடிய ஏவிய என இயையும். பி - ம்:—[2]ஒவியமிதுவென வுரைக்க வொண்ணிலாத். [3]நாடியே, நாடிட. [4]இந்த. [5]தென்றிசை. [6]எய்தி னன். (453)

2.—காளமேக வருணனை.

[1]பையணைப் [2]பஃறலைப் பாந்த [3]ளேந்திய

மொய்ந்[4]நிலத் தகளியின் முழங்கு நீர்நெயின்

வெய்யவன் [5]விளக்கமா மேருப் [6]பொற்றிரி
[7]மையெடுத் தொத்தது மழைத்த வானமே.

(இ - ள்.) மழைத்த வானம் - மழையையுட்கொண்ட ஆகாய மானது,—பை அணை - படம்பொருந்துதலான், பல் தலை - பல தலை களையுடைய, பாந்தள் - சர்ப்பராசனான ஆதிசேடனால், ஏந்திய - சுமக் கப்படுகின்ற, மொய் நிலம் - (அணுக்கள்) செறிந்த பூமியாகிய, தகளி யில் - அகலில், முழங்கு நீர் நெயின் - ஆரவாரிக்கின்ற கடலாகிய நெய்யிலே, மேரு பொன் திரி - மேருமலையாகிய அழகிய திரியில், வெய்யவன் விளக்கம் ஆ - சூரியனை விளக்காகக்கொண்டு, மை எடுத்(த)துஒத்தது - மையையெடுத்தற்கு ஆதாரமான கலசத்தூரைப் போன்றது; (எ - று.)

பூமியாகிய தகழியிலே கடல்நீராகிய நெய்யினிடையே மேரு மலையாகிய திரியிற் சூரியனாகிய சுடர்ப்பிழம்பில் வானமாகிய கறுத்த மண்கலசத்தூரில் மை பரவினாற்போன்றது, நீர்கொண்ட கரிய மேகம் வானத்திற் பரவிய தோற்றமென்க. இவ்வருணனை நிறமும் செறிவும் பற்றியது. பலபொருள்களைத் தம்முள் இயை புடையனவாகவைத்து ஒப்புமைகுறித்ததனால், தற்குறிப்பேற்ற வியைபுவமையணி. "வையந் தகளியா வார்கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காக" என்ற பொய்கையாழ்வா ரருளிச்செயலை அடி யொற்றியது, இவ்வருணனை. சூரியனதுகிரணமாகிய வெயிலினாற் கடல்நீர் சுவறி ஆவியாகஎழுவதே மேகத்திற்குக் காரணமென்ற நூற் கொள்கை இவ்வருணனைக்கு மூலமென்பதை நுட்பமாய் நோக்குக. சூரியன் பூமியின்நடுவிலுள்ள மேருமலைக்கு மேலாக வானத்தில் அம் மலையை வலம்வருகின்றன னென்ற புராணக்கொள்கைபற்றி மேரு வைத் திரியென்றும், அம்மேருவை வலஞ் சுழல்கின்ற சூரியனை அத்திரியில் மங்கலகரமாக வலஞ் சுழல்கின்ற விளக்கு எனவும் கொண்டார். 'பாந்தளேந்திய' என்று நிலத்திற்கு அடைமொழி கொடுத்ததனால், பூமியின்கீழிருந்து அதனைத்தாங்கும் ஆதிசேடனை விளக்குத்தண்டாகக் கொள்க. மை - கண்கட்கு இடும் அஞ்சனம். மாதரார் கண்ணுக்குஇடும் மையைக் கூட்டும்போது அகலில்நெய் வார்த்துத் திரியிட்டு விளக்கெரியவைத்து அதனால்தோன்றும் கரித்திரளைக் கலசத்தினடிப்பகுதியில் ஏறுறச்செய்து திரட்டும் இயல்பு கருதத்தக்கது.

அணை - முதனிலைத்தொழிற்பெயர். அணைத்தலை - இரண் டாம்வேற்றுமையுருபும் பயனும்தொக்கதொகை. இனி, அணை யென்பதைப் பாந்தளுக்கு அடைமொழியாக்கி, (திருமாலுக்குத்) திருப்பள்ளிமெத்தையாகவிருக்கும் ஆதிசேஷ னென்றலுமாம். அணை - படுக்கை. மொய் - பெருமையையுடைய வெனினுமாம். தகளி = அகல்: தகழி எனவும் வழங்கும். நெயின் - தொகுத்தல். இன்-ஏழனுருபு; ஐந்தனுருபாக்கி, நெய்யைக்கொண்டு என்றலுமாம்: ஏதுப்பொருள். விளக்கம் - விளக்கு. இனி, பொன் - பொன்மய

மான, மா மேரு - மகாமேருகிரி, திரி என்று பதவுரை கூறுதலு மொன்று. மழைத்த - வினைச்சொல் தன்மைப்பட்ட 'மழை' என்ற பகுதியின்மேற் பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம். எடுத்து - எடுத்தது: வினையாலணையும் பெயரின் விகாரம்; வானம் ஒத்தது என்று இயையுமிடத்து, எதை என்ற வினாவிற்கு ஏற்பப் பெயர்ப்பொருளையே செயப்படுபொருளாகக் கொள்ளவேண்டுமாதலால், எடுத்(த)து என்பதற்கு - மையெடுத்தற்கு இடனாகும் கலசத்தாரை [கலசத்தினடிப்பகுதியை] எனப் பொருள்கூறலாயிற்று. 'எடுத்து' என்பதற்கு - எடுத்தால் எனப் பொருள்கூறின், இயையாதென்பதைக் கூர்ந்து நோக்குக. பல்+தலை=பஃறலை. பி - ம்:—[1]பையனற், பையினப், பையாநற், பையுடை, பைமிறப், பையினிற். [2]பலதலை. [3]ஏந்துபார். [4]நிறத். [5]விளக்கமாம். [6]பொன்றிரி. [7]மைபடுத்தடுதாத்தது, மையகலொத்தது, மையகலாதது. இச்செய்யுள், சில பிரதிகளில் "நாட்களின் (5)" என்ற பாடலுக்குப் பின் உள்ளது. (454)

3.—மேகங்களால் வானம் இருளுதலும், வெயில்தணிதலும்.

[1]நண்ணுதல ருங்கடல் நஞ்ச நுங்கிய
கண்ணுதல் கண்டத்தின் [2]காட்சி காணலாய்
விண்ணக மிருண்டது வெயிலின் [3]வெங்கதிர்
[4]தண்ணிய மெலிந்தன தழைத்த மேகமே.

(இ - ள்.) தழைத்த மேகம் - செழித்துப் பரவித் தாழ்ந்த மேகங்களினால்,—விண் அகம் - ஆகாயத்தின் இடமானது, நண்ணுதல் அரு - (பிறர்) சமீபித்தற்கும் அரியதான, கடல் நஞ்சம் - (பாற்) கடலினின்று தோன்றிய விடத்தை, நுங்கிய - விழுங்கிய, கண் நுதல் கண்டத்தின் - (நெருப்புக்) கண்ணை நெற்றியிலுடையவனான சிவபிரானுடைய கழுத்தினது, காட்சி - தோற்றத்தை, காணல் ஆய் - (தன்னிடத்திற்) பார்க்கலாகும்படி, இருண்டது - கறுத்தது; வெயிலின் வெம் கதிர் - சூரியனுடைய உஷ்ணமான கிரணங்கள், தண்ணிய - குளிர்ச்சியுடையனவாய், மெலிந்தன - உக்கிரந் தணிந்தன; (எ - று.)

சிவபிரானது நஞ்சுண்டு கறுத்த கண்டம்போல் வானம் இருளடையும்படியாகவும், வெவ்விய சூரியகிரணங்கள் வெப்பந் தணியும்படியாகவும், நீர்கொண்ட காளமேகங்கள் வானத்திற்பரவித் தழைத்தனவென்பதாம். முதல்வாக்கியம் - காட்சியணி. இரண்டாவது - தன்மைநவிற்சி. 'தழைத்தமேகம்' என்பதைத் தனிவாக்கியமாகக் கொண்டு, (இவ்வாறு ஆகும்படி) மேகங்கள் தழைத்தன வென்றலுமாம்; இவ்வுரையில், தழைத்த - முற்று. முந்தின உரையில், தழைத்த - பெயரெச்சம். கண் நுதல் - அன்மொழித்தொகை. வெயில் - சூரியனுக்கு, இலக்கணை. இரண்டாமடி, முற்றுமோனை. மெலிந்தன தழைத்த - முரண்தொடை. பி - ம்:—[1]நண்ணருங்கரு. [2]காட்சிகாண்

வர, காட்சிகார்வர, காளமாமென. [3]செங். [4]தண்ணளி மலிந்தன தளிர்த்த. (455)

4.—வானம் இருண்டமை.

நஞ்சினி னளிர்நெடுங் கடலி [1]னங்கையர்
அஞ்சன [2]நயனத்தி னவிழ்ந்த கூந்தலின்
வஞ்சனை யரக்கர்தம் வடிவிற் செய்கையின்
நெஞ்சினி னிருண்டது நீல வானமே.

(இ - ள்.) நீலம் வானம் - நீலநிறமுள்ள ஆகாயமானது,—நஞ்சினின் - விஷம்போலவும், நளிர் நெடுங் கடலின் - குளிர்ந்த பெரிய கடல்போலவும், நங்கையர் அஞ்சனம் நயனத்தின் - மகளிரது மையிட்ட கண்கள் போலவும், அவிழ்ந்த கூந்தலின் - (அம்மகளிரின்) அவிழ்ந்த தலைமயிர் போலவும், வஞ்சனை அரக்கர்தம் வடிவின் - வஞ்சனைக்குணமுள்ள இராக்கதர்களுடைய உடம்பு போலவும், செய்கையின் - (அவர்களுடைய) தீச்செயல்போலவும், நெஞ்சினின் - (அவர்களுடைய) மனம் போலவும், இருண்டது - (காளமேகங்கள் பரவியதனால்) கறுத்துத் தோன்றியது; (எ - று.)

பின்னிரண்டடி - சந்தர்ப்பத்திற்கு ஏற்ற உவமையாம். இயல்பாக நீலநிறமுள்ள வானம் கார்மேகம்பரவியதனால் கரியநிறமானதென்பார் 'நீலவானம் இருண்டது' என்றார். கருமைமிகுதியைத் தெரிவிக்க 'அஞ்சன நயனம்' என்றும், மேகத்தின்பரந்துள்ள தன்மையை விளக்க 'அவிழ்ந்தகூந்தல்' என்றும்கூறினர். காளமேகங்களடர்ந்த வானம் சீதையைப் பிரிந்த இராமபிரானுக்கு மிக்க வருத்தத்தை விளைத்தல்பற்றி அதற்கு விஷத்தை முதலுவமையாக எடுத்துக் கூறுதல் ஏற்கும். அவ்வாறு பிரிவுற்றார்க்குக் காதல் நோயை மிகுவித்து வேதனை தருதலில், நளிர்நெடுங்கடலும் இருண்ட வானமும் ஒப்பாம். பிராட்டியாரின் கண்ணழகும், அவிழ்ந்த கூந்தலும், அரக்கர்தம் வடிவு செய்கை நெஞ்சுகளும் இராமனுக்கு வருத்தத்தை விளைவித்தல், வெளிப்படை. 'விண்ணகமிருண்டது' என்று கூறி யிருப்ப, மிகஇனிமையுற வருணித்தற்காக வானமிருண்டதை ஈங்குமீண்டும் எடுத்துக்கொண்டதனாற் கூறியதுகூறலாகாது.

ஒரு பொருளுக்குப் பல உபமானங்கள் காட்டியதனால், பலபொருளுவமையணி. 'நங்கையர்' என்றதை 'கூந்தலின்' என்பதனோடும், 'அரக்கர்தம்' என்றதை 'செய்கையின்', 'நெஞ்சினின்' என்பவற்றோடுங் கூட்டுக. [1]நங்கையார் என்ற பாடத்திற்கு - சீதாபிராட்டியாருடைய என்றுபொருளாம். அரூபமாகிய தீவினையைக் கருநிறமுடைய தென்றல் கவிமரபு; ஆதலால், அரக்கர்தஞ் செய்கை இருட்சிக்கு உவமையாயிற்று. அவர்களுடைய மனம் அஜ்ஞானமாகிய இருளினாலும் தீயசிந்தனைகளாலும் கறுத்திருத்தலால்

அதனையும் உபமான மாக்கினர்; "அகங் குன்றி மூக்கிற் கரியார்" என்றதிருக்குறளும், "மங்கை பங்கன்சிற்றம்பலம் ஆதரியாக்,கூழின் மலிமனம்போன் றிருளாநின்ற கோகிலம்" என்ற திருக்கோவையாரும் நோக்கத்தக்கன. 'நீலம்' என்ற அடைமொழி, இயற்கைத் தோற்றம்பற்றியது. "பஞ்சின் மெல்லடிப்பாவையருள்ளமும், வஞ்ச மாக்கள் தம் வல்வினையும்...,......உணராவறிவிலோர்,நெஞ்சு மென்ன விருண்டது நீண்டவான்" என்ற பகுதியை, இங்கு ஒப்பு நோக்குக. 'நஞ்சினின்' முதலியவற்றில், இன் - ஐந்தனுருபு, ஒப்புப்பொருள். 'நஞ்சினின்' 'நெஞ்சினின்' என்றவற்றில், முதலாவது இன்-சாரியை. பி - ம்:—[2]நீலத்தின். (456)

5.—மேகங்கள் மின்னுதல்.

நாட்களி னளிர்கடல் நார நாவுற
வேட்கையிற் பருகிய மேக மின்னுவ
[1]வாட்கைகள் [2]மயங்கிய செருவின் வார்மதப்
பூட்கைகள் [3]நிறைந்தபுண் திறப்ப போன்றவே.

(இ - ள்.) நாட்களில் - உரிய நாள்களிலே [அல்லது பலநாள் களாக] நளிர் கடல் நாரம் - குளிர்ந்த கடலின் நீரை, நா - நாவினால், உற - மிகுதியாக, வேட்கையின் பருகிய - விருப்பத்தோடு குடித்த, மேகம் - மேகங்கள், மின்னுவ - மின்னுகின்றவை,—வாள் கைகள் மயங்கிய செருவின் - (வீரர்களின்) வாட்படைகளை யேந்திய கைகள் ஒன்றோடொன்றுமயங்கிச் செய்யும் போரில், வார் மதம் பூட்கைகள் - மிகுதியான மதத்தைக் கொண்ட யானைகள், நிறைந்த புண் திறப்ப - (அவ்வாட்படைகளால் வெட்டப்பட்டு) மிக்க விரணத்தை உடம்பு திறந்து வெளிக்காட்டுவனவற்றை, போன்ற - போன்றன; (எ - று.)

நிரம்ப நீர்கொண்ட கரியமேகங்களின் இடையிடையே காணப் படுகின்ற மின்னல்கள், போரில் வாள்கொண்டு துணிக்கப்பட்ட மத யானைகளின் உடம்பிற் பலவிடங்களிலும் தோல் கிழியக் காணப் படும் சிவந்த புண்கள் போன்றன வென்பதாம்; உவமையணி. மேகம் மின்னுவ - மின்னுவனவாகிய மேகங்கள்: பூட்கைகள் திறப்ப - திறப் பனவாகிய பூட்கைகளை என்க.

'நாவுற', 'வேட்கையின்' என்றவை - கற்பனையால் வந்தன. இங் ஙனங் கூறுதல், சமாதி யென்னுங் குணவலங்காரத்தின் பாற்படும்; அதன் இலக்கணத்தை "உரிய பொருளன்றி யொப்புடைப் பொருண்மேல், தருவினை புணர்ப்பது சமாதியாகும்" என்க் காண்க. வேட்கை-நீர்வேட்கையாகிய தாகத்தா லென்னலாம். துவாரமுள்ள துதிக்கையை யுடைமையால், யானையை 'புழைக்கை' எனலாம். அது, 'பூழைக்கை' என முதல் நீளும்: அது, பூட்கை யென மருவிய தென்க. நிறைந்த - (இரத்தம்) நிரம்பிய வெனினுமாம். பி - ம்:— [1]வாட்கணம், வாட்கையர், வாட்கையின். [2]மள்ளர்கள். [3]நிறத்த, இறந்த. (457)

6.—இடிமுழக்கம்.

நீல்நிறப் [1]பெருங்கரி நிரைத்த [2]நீர்த்தெனச்
சூல்நிற முகிற்குலந் துவன்றிச் [3]சூழ்திரை
[4]மால்நிற நெடுங்கடல் வாரி மூரிவான்
மேல் [5]நிரைத் துளதென முழக்க மிக்கதே.

(இ - ள்.) சூல் - கருக்கொண்ட [நீரை யுட்கொண்ட], நிறம் - (கரு) நிறம்மிக்க, முகில் - மேகங்களின், குலம் - கூட்டமானது,—நீல் நிறம் பெருங் கரி நிரைத்த நீர்த்து என - நீலநிறத்தையுடைய பெரிய யானைகள் வரிசைப்பட்டுநின்ற தன்மைபோல, துவன்றி - நிரைந்து நெருங்கி,—சூழ் திரை - சுழல்கின்ற அலைகளையுடைய, மால் நிறம் - கருநிறமுள்ள, நெடுங் கடல் - பெரிய கடலின், வாரி - நீர், மூரி வான் மேல் நிரைத்துளது என - (எழுந்து) பெரிய வானத்திற் பரவினாற் போல, முழக்கம் மிக்கது - ஆரவாரம் மிகுந்தது [மிக்க முழக்கத்தைச் செய்தது]; (எ - று.)

கரிய பெரிய யானைகள் தொகுதிப்பட்டு நின்றாற்போல நீர் கொண்ட காளமேகங்கள் நெருங்கிக் குமுறுவது, கரிய பெரிய கடல் வானத்திலேறி ஆரவாரித்தாற்போ லிருந்த தென்பதாம்: தற்குறிப் பேற்றவணி. இனி, கரிநிரைத்த நீர்த்தெனவும் கடல்வாரி வான்மேல் நிரைத்துளதெனவும், முகிற்குலம் துவன்றி முழக்கம் மிக்கது என்று அந்வயித்துப் பொருளுரைத்தால், யானை கடல் என்னுமிரண்டும் - மேகத்திற்குக் கரிய பெரிய வடிவம் முழக்கம் என்னுமிரண்டிலும் ஒப் பாகும்.

நீல் = நீலம். நீர்த்து - நீர்மை யென்ற பண்புப்பெயர் ஈறுபோயி ற்று: து - பகுதிப்பொருள்விகுதி. [2]நீர்த்தன என்ற பாடத்திற்கு - தன்மையையுடையனவாய் என்று பொருள். பி - ம்:—[1]பெருங்கிரி. [2]நீத்தம்போல். [3]சூழ்ந்தன. [4]வானிரை. [5]நிறைந்துளதென, நிரைந் துளதென. (458)

7.—இதுமுதல் நான்கு கவிகள்—மின்னல்களின் வருணனை.

அரிப்பெரும் பெயரவன் முதலி னோரணி
விரிப்பவு மொத்தன [1]வெற்பு மீதுதீ
எரிப்பவு மொத்தன வேசி லாசைகள்
சிரிப்பவு மொத்தன தெரிந்த மின்னெலாம்.

(இ - ள்.) தெரிந்த மின் எலாம் - (வானத்திலே மேகங்களிற்) காணப்படுகின்ற மின்னல்க ளெல்லாம்,—அரி பெரும் பெயரவன் முதலினோர் - வானத்திலுள்ள ஹரியென்னும் பெரும்பெயரை யுடையவனான இந்திரன் முதலிய தேவர்களுடைய, அணி - ஆபர ணங்கள், விரிப்பஉம் - ஒளிவீசுவனவற்றையும், ஒத்தன - போன் றன; வெற்புமீது தீ எரிப்பஉம் ஒத்தன - மலைகளின்மேல் நெருப்புப்

பற்றிப் பொருள்களை யெரிப்பவற்றையும் போன்றன; ஏசு இல் ஆசைகள் சிரிப்பஉம் ஒத்தன - பழித்தலில்லாத திக்குக்கள்சிரிப்பவற்றையும் போன்றன; (எ - று.)

வானத்திலுள்ள இந்திரன் முதலிய தேவர்களுடைய ஆபரணங்கள் இடையிட்டு வீசும் ஒளி போலவும், மலைகளின்மேல் இயல்பாகப் பற்றியெரிகிற நெருப்புக்களின் சுவாலைகள் போலவும், ஒன்றையொன்று இகழ்தலில்லாத திக்குக்கள் ஒன்றை நோக்கி ஒன்று நண்பினாற் சிரிக்கும் சிரிப்பொளி போலவும், வானத்திற் பரவித்தழைத்த மேகங்களில் மின்னல்கள் விளங்கின வென்பதாம்; தற்குறிப்பேற்றவணி. சிரிக்கும்போது பற்களினொளி வெளியே தோன்றுதல், இயல்பு. 'அரிப்பெரும் பெயரவன் முதலினோர்' என்றது, அஷ்டதிக்பாலகர்களை யென்பர் ஒருசாரார். பெரும்பெயர் - பிரசித்திபெற்ற பெயர். அரி = ஹரி, 'அரிப்பெரும் பெயரவன்' - ஹரியென்னும் பிரசித்தமான பெயரை யுடையவனாகிய திருமாலென்பாருமுளர். ஏசு - முதனிலைத் தொழிற்பெயர். மின்னுவது மின் எனக்காரணக்குறி. பி - ம்:—[1]வெற்பின். (459)

8. மாதிரக் கருமகன் மாரிக்[1] கார்மழை
யாதினு [2]மிருண்டவிண் ணிருந்தைக் குப்பையில்
கூதிர்வெங் கால்நெடுந் [3]துருத்திக் கோளமைத்து
ஊதுவெங் கனலுமி ழுலையு மொத்ததே.

(இ - ள்.) யாதின்உம் இருண்டவிண் - எல்லாப் பொருள்களைக்காட்டிலுங் கறுத்த ஆகாயமானது,—மாதிரம் கருமகன் - திக்குக்களாகிய கருமான், மாரி கார் மழை - மழைக்காலத்துக் காளமேகமாகிய, இருந்தை குப்பையில் - கரிக்குவியலில், வெங்கூதிர் கால் நெடுந் துருத்தி கோள் அமைத்து - வேகமுள்ள வாடைக்காற்றாகிய பெரிய ஊதுதுருத்தியின் வலிமையைக்கொண்டு, ஊது - ஊதிவளர்த்த, வெம் கனல் - வெவ்விய அக்கினியின் சுவாலைகளை, உமிழ் - வெளிப்படுத்துவதான, உலைஉம் - உலைக் களத்தையும், ஒத்தது - போன்றது; (எ - று.)—அங்ஙனம் உமிழும் அக்கினிச்சுவாலைகளே மின்னல்களென்க.

கார்காலமாகிய கருமான் காளமேகமாகிய கரியைப்பெய்து கூதிர் வாடையாகிய துருத்திக்காற்றைக் கொண்டு மின்னலாகிய அக்கினிச் சுவாலையை வெளிப்படுத்தும் உலைக்களத்தைப் போன்றது விண் என்க; விண்ணை வருணித்தாற்போலத் தோன்றினும் முன்பின்னுள்ள பாடல்களை நோக்கி, வானத்துத் தோன்றும் மின்னலை வருணித்ததாகக் கருத்துக் காண்க. பல பொருள்களைத் தம்முள் இயைபுடையனவாக வைத்து உருவகஞ்செய்தது, இயைபுருவகவணியின் பாற்படும். 'யாதினுமிருண்டவிண் வெங்கனலுமிழுலையையொத்தது' என்றது - இவ்வுருவகத்தை அங்கமாகக் கொண்ட தற்குறிப்பேற்றம். கருமகன் - இரும்புவேலை செய்பவன். தொகுதியொருமையாக 'யாதினும்' என்றார்; கருநிறமுடைய பொருளனைத்

இனுமென்க. கூதிர்க்கால் - வாடைக்காற்று. துருத்திக்கோள் அமைத்து என்பதற்கு - துருத்திக்கருவியை யமைத்து என்பாருமுளர். பி - ம் :— [1] மின்னுகார். [2] இருண்டன. [3] துருத்தி கோள். (460)

9. பிரிந்துறை மகளிரும் பிலத்த பாந்தளும்
எரிந்துயிர் நடுங்கிட விரவி யின்கதிர்
அரிந்தன வாமென வசனி[1] நாவென
விரிந்தன திசைதொறு [2]மிசையின் [3]மின்னெலாம்.

(இ - ள்.) மிசையின் - மேலே [வானத்திலே], திசைதொறும் - திக்குக்கள் தோறும் [எல்லாத்திக்குக்களிலும்], மின் எலாம் - மின்னல்களெல்லாம்,—பிரிந்து உறை மகளிர்உம் - (கணவரைப்) பிரிந்து வசிக்கின்ற மாதர்களும், பிலத்த பாந்தள்உம் - பூமியின் கீழிடத்திலுள்ள பாம்புகளும், எரிந்து உயிர்நடுங்கிட - தவித்து உயிர் துடிக்கும்படியாக,—இரவியின் கதிர் அரிந்தன ஆம் என - சூரியகிரணங்களை அறுத்துவைத்தன போலவும், அசனி நா என - இடிகளின் நாக்குக்கள் போலவும், விரிந்தன - விளங்கின; (எ - று.)

பொருளீட்டுதற்பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்லுந் தலைவன் அங்ஙனம் தான் பிரிந்து செல்லும்போது கார்காலத்தில் மீண்டு வருவதாகக் காலங்குறித்துச் சொல்லிப்போதல் இயல்பு ஆதலின், அக்காலம் வருமளவும் ஒருவாறு பிரிவுத்துயரைப் பொறுத்துக்கொண்டு ஆறியிருந்த தலைவி அக்காலம் வரக்கண்டவளவிலும் அவன் வரவு காணாளாயின் பிரிவாற்றாது மிக வருந்துவளாதலால், 'பிரிந்து உறைமகளிர் எரிந்து உயிர்நடுங்கிட மிசையின் மின்னெலாம் திசைதொறும் விரிந்தன' என்றார். வேந்தற்குற்றுழிப் பிரிவிலும் தலைவன் தான் கார்காலத்தில் மீண்டு வந்து சேர்வதாகத் தலைவிக்குக் காலங் குறித்துச் செல்லுத லுண்டு. அக்காலத்தின் வருகையை மேகத்தில் விளங்கும் மின்னல்கள் முந்தித் தெரிவித்து அம்மகளிரை மிகவருந்தச் செய்யுமென்க. அக்காலங் குறியாது சென்ற பிரிவுகளிலும், வெப்பமும் தட்பமும் மிகாது இடைநிகரதாய் நீரும் நிழலும் பெற்றுக் களிசிறந்து மிருகங்களும் பறவைகளும் தம்தம் துணையோடு இன்புற்று விளையாடுங் காலமாதலால் வருத்தத்தை மிகுவிக்குமென்பார், பொதுப்பட 'பிரிந்து உறை மகளிர்' என்றனரென்க. இவ்வகை வருத்தம் பிரிந்த ஆடவர்க்கும் உளதாகவும் மகளிரை எடுத்துக்கூறியது, வருத்தம் பொறுக்கமாட்டாத அபலைகளெனப்படும் அவர்களது மெல்லியல்பைப் பாராட்டி யென்க. இடியோசையைக் கேட்டவளவிலே நாகங்கள் அஞ்சித்துடித்தல் இயல்பாதலை "விரிகிற நாகம் விடருளதேனும் உருமின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கும்" என்றநாலடியாரினாலும் அறிக. கட்புலனாலும் செவிப்புலனாலும் உணரப்படுவனவாய் வேறுபட்டிட்டாலும் மின்னலும் இடியும் ஒன்றேயாகின்ற உண்மைநிலையைக் கருதி ஒற்றுமைநயத்

தால் இடிமுழக்கத்தின் தன்மையை மின்னலொளியின் மேலேற்றி 'பிலத்தபாந்தள் எரிந்து உயிர்நடுங்கிட மின்னெலாம் விரிந்தன'' என்றார்; ''எப்பொரு ளெத்தன்மைத்தாயினும் அப்பொருள், மெய்ப் பொருள் காண்பதறிவு'' ஆதலின் மின்னல் பாய்தலினலாகும் ஓசையே இடியென்க. இங்ஙனமிருக்க, மின்னலை 'அசனி நாவென' என்றது, தற்குறிப்பேற்றத்தாற் கூறியதாம். பிலத்தினுள்ளேயிருக் கின்ற பாம்புகள் அங்கிருந்து மின்னலைக் கண்டாலும் நடுங்கும்; 'பார்க்கடல் பருகி மேகம் பாம்பினம் பதைப்பமின்னி'' என்பது, சிந்தாமணி. 'பிரிந்துறைமகளிரும் பிலத்தபாந்தளும், எரிந்துயிர் நடுங்கிட' என்றவிடத்து ஒப்புமைக்கூட்டவணியும், மற்றைப் பகுதியில் தற்குறிப்பேற்றவணியும் சேர்ந்திருத்தலால், சேர்வை யணி. சூரியகிரணம் - செந்நிறமும் ஒளியும் பற்றியும், நா - செந்நிறம் பற்றியும் மின்னலுக்கு ஒப்பாம். பி - ம்:—[1]ஒடுற. [2]இசையின். [3]மின் னெற. இச்செய்யுள் சிலபிரதிகளில் ''சூடின'' என்ற பாடலுக்குப் பின் உள்ளது. (461)

10\. சூடின மணிமுடித் [1]துகளின் விஞ்சையர்
[2]கூடுறை நீக்கிய குருதி வாட்களும்
[3]ஆடவர் பெயர்தொறு[4]மாசை யானையின்
ஓடைக [5]ளொளிபிறழ் வனவு [6]மொத்ததே.

(இ - ள்.) சூடின மணிமுடி - தரித்த இரத்தின கிரீடத்தை யுடைய, துகளின் - மாயையுள்ள, விஞ்சையர் - வித்தியாதரர்கள், கூடு உறை நீக்கிய - (போர்செய்தற்பொருட்டு) உறையினுள்ளேயிருத் தலைநீக்கி யெடுத்து உருவிக்கழற்றிய, குருதி வாட்கள் உம் - (பகை வரது) இரத்தந்தோய்ந்த வாளாயுதங்களையும்,—ஆடவர் பெயர் தொறுஉம் - (திக்குக்களுக்கு உரிய) புருஷர்களான திக்பாலகர்கள் இடம்விட்டுச் செல்லுந்தோறும், ஆசை யானையின் ஓடைகள் ஒளி பிறழ்வனஉம் - அத்திக்குக்களாகிய யானைகளின் நெற்றிப்பட்டங்கள் அசைந்து இடையிட்டு ஒளிவிளங்குவனவற்றையும், ஒத்தது - போன் றது, (அம்மின்னல்களின் தோற்றம்); (எ - று.)

வித்தியாதரர் - பதினெட்டுத்தேவகணங்களுள் ஒருவகையார்; மாலிகாஞ்சனம் முதலிய மாயைவித்தைகளில் தேர்ந்தவர்; அது பற்றியே, அவர்கட்கு இப்பெயர். விஞ்சை - வித்தை. வித்தியாதரர் களின் மாயைத் தேர்ச்சி விளங்க, அவர்கட்கு 'துகளின்' என்ற அடை மொழி கொடுக்கப்பட்டது. துகள் - குற்றம்: குற்றத்திற்கு இடனை மாயைக்கு இலக்கணை. துகளில் என்ற பாடத்திற்கு - (போரிற் பின்னிடுவதாகிய) குற்றமில்லாத என்று பொருள். வித்யாதரர்கள் தாமிருக்குமிடம் பிறர்க்குத்தெரியாதபடி வானத்திலும் மேகங்களி லும் மாயையால் மறைந்துநின்று போர்செய்தற் பொருட்டு உறை களிலிருந்து வாளாயுதங்களை உருவியெடுத்துச் சுழற்றுமிடத்து அவ்வாள்களின்ஒளி விளங்கினாற்போன்றது மின்னல்களின் தோற்ற மென்க.

ஆடவர் - இங்கே இந்திரன், அக்கினி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் அஷ்டதிக்பாலகர்கள்; கிழக்கு, தென்கிழக்குமுதலாக முறையே எட்டுத்திக்குகளிலும் இவர்கள் நின்று அவற்றைப் பாதுகாப்பர். திக்குகளைப்பாதுகாக்கின்ற இந்திரன் முதலிய எண்மரையும், அத்திக்குகளாகிய யானைகளை வாகனமாகக்கொண்டு ஏறிநடத்தும் யானைவீரர்களாகக் கற்பித்தார். அவர்கள் அங்ஙனம் ஏறிச்செல்லும்போது புடைபெயர்கின்ற அத்திசைகளாகிய யானைகளின் நெற்றியிலுள்ள பொற்பட்டங்கள் அசைந்து பளபளவென்று ஒளிவீசுவன மின்னலுக்கு உவமையாம்; தற்குறிப்பேற்றவணி. 'ஆசையானையின்' என்பதற்கு - ஐராவதம் முதலிய அஷ்ட திக்கஜங்களினுடைய என்று உரைப்பாருமுளர்; அவை பூமியின் கீழேயிருந்து நிலத்தைத் தாங்குவன. ஆசை-திக்கு. மணிமுடி - இரத்தின கிரீடம். கூடு - இங்கே, படைக்கூடு. உறை - உறைதல்: முதனிலைத் தொழிற்பெயர். இனி, கூடு உறை - உறைக்கூடு என ஒருபொருட்பன்மொழியாக்குதலுமொன்று. [2]கூடுற நீக்கிய என்ற பாடத்திற்கு, கூடு உற நீக்கிய - கூடுகளினின்று மிகுதியாக உருவியெடுத்த என்றும், [3]ஆடுவ பெயர்தோறும் என்ற பாடத்திற்கு - நடனஞ்செய்து கொண்டு புடைபெயருந்தோறும் என்றும் பொருளாம். [6]ஒத்தவே என்ற பாடத்திற்கு-(மின்னல்கள்) ஒத்தனவென்க. பி-ம்:—[3]ஆடுவதொறும் பெரிது. [4]ஆனையாசையின். [5]பெறப்பிறழ்வது. (462)

11.—மின்னல்களும் மழைக்காற்றும்.

எண்வகை நாகங்கள் திசைக ளெட்டையும்
நண்ணின நாவளைத் தனைய [1]மின்னகக்
[2]கண்ணன்மெய் வடிவெனக் கருகிக் கார்விசும்பு
உண்ணிறை யுயிர்ப்பென [3]வூதை யாட்டின.

(இ - ள்.) எண்வகை நாகங்கள் - (கீழேயிருந்து பூமியைத்தாங்குகின்ற) அஷ்டமகாநாகங்கள், (அங்கிருந்து மேலெழுந்து), திசைகள் எட்டைஉம் - எட்டுத் திக்குகளையும், நண்ணின - கிட்டினவாய், நாவளைத்து அனைய - (தம்தம்) நாவை (அடிக்கடி) வெளியே நீட்டி அவற்றால் அத்திக்குகளை வளைத்தாற்போன்றனவாக, மின் நக - மின்னல்கள் (எல்லாத்திக்குகளிலும்) ஒளிவீசா நிற்கையில்,—கார் விசும்பு - காளமேகங்கள், கண்ணன் மெய் வடிவு என கருகி - திருமாலினது திருமேனியின் நிறம்போலக் கறுத்து, உள் நிறை உயிர்ப்பு என - தமக்குள்ளே நிறைந்த சுவாசத்தை (வெளியிட்டாற்) போல, ஊதை ஆட்டின - குளிர்ந்த காற்றைச் சஞ்சரிக்கச் செய்தன; (எ - று.)

கருக்கொண்டு கறுத்த மேகங்கள் அக்கருப்பத்தின் முதிர்ச்சியாற் பெருமூச்சுவிட்டாற்போலக் குளிர்காற்றுவீசின என்றவாறு. இனி, காளமேகங்கள் இராமபிரானது திருமேனிநிறம் போலக்

கறுத்து (அப்பெருமான் சீதாபிராட்டியாரை நினைத்துநினைத்துத் துயரினால்) பெருமூச்சுவிடுமாறுபோலக் காற்றுவீசின என்று உரைத்தலும் அமையும்; தற்குறிப்பேற்றவணி. மழைபெய்தற்குக் காரணம் குளிர்காற்று என்கிற நுண்ணிய நூற்பொருளைக் கருதி, அவ்வகைக் காற்றின் அமைதியைக் கூறலாயினர். எண்வகை நாகங்கள் - வாசுகி, அநந்தன், தக்ஷகன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன் என்பன: இவை - பூமியின்கீழ் நடுவிலிருந்து பூமியைத்தாங்குகின்ற ஆதிசேடனுக்கு உதவியாய்ச் சுற்றிலும் கிழக்குமுதலிய எட்டுத்திக்கிலும் முறையே கீழ்நின்று பூமியைத் தாங்குவன; காசியப மகாமுனிவரது மனைவியருள் கத்துருவென்பவளிடந் தோன்றிய தெய்வத்தன்மையுள்ள சர்ப்பங்கள்: இவற்றைக் கடவுட்பாம்பென்ப. 'நண்ணின' என்பதற்கு - (தீண்ட) விரும்பினவையாய் என்று உரைத்தலுமொன்று. கண்ணன் மெய் வடிவெனக் கருகிக் கார்விசும்பு - "ஊழிமுதல்வ னுருவம்போல் மெய் கறுத்து" என்பது, ஆண்டாள் பாசுரம்: "வான், ஆறணிந்து சென்றார்கலி மேய்ந்தகிற், சேறணிந்த மூலத் திருமங்கைதன், வீறணிந்த வன் மேனியின் மீண்டவே" என்றார், பாலகாண்டத்து ஆற்றுப்படலத்திலும். இனி, [2]கண்ணுதன்மிடறெனக்கருகி என்று பாடமோதுவாருமுளர்; அது, கீழ்ப்போந்த மூன்றுஞ் செய்யுளோடு கூறியதுகூறலாமாதலாற் சிறவாது. [3]ஊதையாடின அல்லது ஓடின என்ற பாடத்திற்கு, 'கருகி' என்பதைக் கருக எனத் திரித்துப் பொருளுரைக்க.

'வானம்' என்றதுபோல, 'விசும்பு' என்பது - ஆகாயத்தின் பெயர். இடவாகுபெயராய் மேகத்தைக் குறித்தது; திருக்குறளில் வான்சிறப்பென்னும் அதிகாரத்தில் "விசும்பிற் றுளி வீழின்" என்ற இடத்திற் போல. பி - ம்:—[1]மின்னின், மின்னகல், மின்னுவ. [3]ஊதைபொங்கவே, உலாயதூதையே. இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லை யென்ப. (463)

12 —எங்கும் காற்று வீசுதல்.

தலைமையுங் கீழ்மையுந் தவிர்த லின்றியே
மலையினு மரத்தினு [1]மற்று முற்றினும்
விலை[2]நினைந் துளவழி விலங்கும் [3]வேசையர்
உலைவுறு மனமென [4]வுலாய தூதையே.

(இ - ள்.) ஊதை - அந்த மழைக்காற்றானது,—தலைமைஉம் கீழ்மைஉம் தவிர்தல் இன்றிஏ - மேலான இடத்திலும் கீழான இடத்திலும் நீங்குதலில்லாமலே, மலையின்உம் மரத்தின்உம் மற்றுஉம் முற்றின்உம் - மலைகளிலும் மரங்களிலும் மற்று எல்லாப்பொருள்களி

லும்,—விலை நினைந்து - (பொருள் கொடுப்பவரது உருவம் குணம் முதலியவற்றைக் கருதாமல் தமது இன்பத்திற்கு) விலையாகக் கொடுக்கவேண்டிய பொருளையே கருதி, உள வழி விலங்கும் - அப் பொருட்கொடை யுள்ளவரிடத்தே பாய்ந்துசெல்லுகின்ற, வேசையர்-விலைமகளிரது, உலைவுஉறு மனம்என - சுழற்சி பொருந்திய மனம் போல, உலாவுது - சென்றுவீசியது; (எ - று.)

குலம் வடிவம் குணம் செயல்முதலியவற்றுள் மேலோர் கீழோர் என்னும் வேறுபாடு கருதாது, விலைகொடுப்பவர் எவரிடத்தும் செல்லுதல், விலைமாதரது மனத்தின் இயல்பு. இங்ஙனம் தமது இன்பத்தை விலைகொடுப்பவர் யாவர்க்கும் கொடுப்பதால் அவர் விலைமகளிரென்றும் விலைமாதரென்றும் பொருட்பெண்டிரென்றும் கூறப் படுவர்: அவர் தம் இன்பத்தைக் கொள்ளற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரையறைகொள்ளாமை பற்றி, வரைவின் மகளிரென்றும் பெயர்பெறுவர்; மற்றும் 'கணிகா' என்ற வடமொழிப்பெயரும், பொருளையும் பொருளுடையாரையுமே கருதுதல் பற்றியதே. இவ்வாறுன வேசையரது மனம், மேல் கீழ்என்ற வேறுபாடு கருதாமலும் ஓரிடத்திலேனும் நிலைத்திராமலும் விலைப்பொருளுள்ளவரிடத்தி லெல்லாம் செல்லுதல் போல, காற்றும் மேல் கீழ் என்ற வேறுபா டின்றி நேர்ந்த இடத்திலெங்குஞ்சென்று வீசிற்றென்பதாம். விலங்கு தல் - விலகிச்செல்லுதல். தமது நலத்திற்கு ஏற்ற ஒருவரிடத்தே செல்லுதலாகிய நேர்வழியைவிட்டுப் பொருளையே பிரதானமாகக் கொண்டு விலை கொடுப்பவரிடத்தெல்லாம் செல்லுதலின் தகுதி யின்மை தோன்ற, 'விலங்கும்' எனப்பட்டது. 'தலையுங்கீழ்மையுந் தவிர்தலின்றியே' என்றதனால், ஆகாயம் முதலாகப் பூமிமுழுவதி லும் வீசிற்றென்க. முதலடி, எங்கும் விலக்கில்லையென்பதைக் காட்டிற்று.

வேசை = வேஶ்யா: வடசொல். உலைவு - நிலையின்மை; ஓரிடத்தி லேனும் நிலைத்திராமை. இத்தன்மை, உபமேயமான காற்றிற்கும் ஏற்றது. 'உலைவுறுமுளமென வுலாயதூதையே' என்ற பாடம், முற்றுமோனை கொண்டதாம். பி - ம்:—[1]மாறு. [2]சிறந்துள. [3]வேசியர். [4]உலாய. (464)

13.—வாடைக்காற்றின் மிகுதி.

அழுங்குறு மகளிர்த [1]மன்பர்த் தீர்ந்தவர்
புழுங்குறு புணர்முலை கொதிப்பப் புக்குலாய்
கொழுங்குறைத் [2]தசையென வீர்ந்து கொண்டது
விழுங்குறு [3]பேயென வாடை [4]வீங்கிற்றே.

(இ - ள்.) வாடை - வாடைக் காற்றானது,—தம் அன்பர் தீர்ந் தவர் - தமது கணவரைப் பிரிந்தவர்களாய், அழுங்குறு - வருந்து

இன்ற, மகளிர் - மாதர்களுடைய, புழுங்குறு புணர் முலை - தாபங் கொண்ட (ஒன்றோடொன்று) நெருங்கிய தனங்கள், கொதிப்ப-மிகவும் வெப்பமடையும்படி, புக்கு உலாய்-(அவற்றின்மேற்) சென்று வீசி,—(அக்கொங்கைகளை), கொழு(மை) தசை குறை என - கொழுமையுள்ள மாமிசத்துண்டமென்றுகருதி, ஈர்ந்து கொண்டு - அரிந்தெடுத்துக் கொண்டு, அதுவிழுங்குறு - அத்தசையை விழுங்க வந்த, பேய் என-பேய் போல, வீங்கிற்று - வளர்ச்சி பெற்றது; (எ - று.)

வாடைக்காற்று, தலைவரைப் பிரிந்த தலைவியரது கொங்கைகள் மிகத்தவிக்குமாறு வீசிக்கொண்டு, அக்கொங்கைகளாகிய ஊனைத் தின்று ஊனைப்பெருக்க வந்த பேய்போல மிகவும் அச்சுறுத்தி மிகவும் வளர்ச்சிபெற்றுநின்றதென்பதாம்; தன்மைத்தற்குறிப்பேற்ற வணி. இனி, மூன்றும் அடிக்கு - கொழுமையான உடற்றுறையி னின்று தசையை(க் கீண்டெடுத்துக்கொள்ளுமாறு) போல அக் கொங்கையை அரிந்துகொண்டு என்று பதவுரை கூறவுமாம்; தலை வரைப்பிரிந்த தலைவியரது தனங்களுக்கு வாடைக்காற்று மிக்க தாபத்தைவிளைத்தல், தலையற்ற உடம்பினின்று பேய் தசையை ஈர்ந்து விழுங்குவதுபோலுமென ஒருநயந் தோன்றும். தலைவரைப் பிரிந்த மகளிர் வாடையால் தவித்தலை "பணிப்பியல்வாக வுடைய தண் வாடை யிக்கால மிவ்வூர்ப், பணிப்பியல் வெல்லாந் தவிர்ந் தெரி வீசும்" என்ற திருவிருத்தத்தாலும் உணர்க. தம் அன்பர் - தமது அன்புக்கு இடமானவர்: தம்மிடத்து அன்பு கொண்டவர். அன்பர்த் தீர்ந்தவர் - இரண்டாம் வேற்றுமைத் தொகை. தசை - சதை; எழுத்துநிலைமாறுதல், இலக்கணப்போலி. வாடை - வடக்கி லிருந்து தெற்குநோக்கி வீசுவது. பி - ம்:—[1] அன்பில். [2] தசையினை யரிந்துகொண்டது, தசையிலென்பீர்ந்து கொண்டது. [3] தீயென. [4] வீசிற்றே. (465)

14.—அப்பொழுதைய வானத்தின் காட்சி.

ஆர்த்தெழு துகள்விசும் படைத்த லானுமின்
கூர்த்தெழு வாளெனப் பிறழுங் [1]கொட்பினும்
தார்ப்பெரும் பணையின்விண் [2]தழங்கு தாவினும்
போர்ப்பெருங் களமெனப் பொலிந்த தும்பரே.

(இ-ள்.) ஆர்த்து - ஆரவாரஞ் செய்துகொண்டு, எழு - மேலெழு கின்ற, துகள் - புழுதி, விசும்பு அடைத்தலான்உம் - ஆகாயத்தை மறைத்தலினாலும்,—மின் - மின்னல்கள், கூர்த்து எழு வாள் என - கூர்மைகொண்டு விளங்குகின்ற வாளாயுதங்கள்போல, பிறழும் - அசைந்துஒளிவீசுகின்ற, கொட்பின்உம் - சுழற்சியினாலும்,—விண் - மேகங்கள், தார் பெரும் பணையின் - மலர்மாலையை யணிந்த பெரிய முரசவாத்தியங்கள்போல, தழங்கு - ஒலிக்கின்ற ஒலி, தாவின்உம் - (எங்கும்) பரவுதலாலும்,—உம்பர் - ஆகாயமானது, பெரும் போர்

களம் என பொலிந்தது - பெரிய போர்க்களம்போல விளங் கிற்று; (எ - று.)

காரணங்காட்டி உவமித்ததனால், ஏதுவுவமையணி. போர்க் களத்திற் சேனைகள் செல்லும்பொழுது அவற்றின்கால்கள்படுதலால் தூளிகள் மேலெழுந்து பரவி வானத்தைமறைக்கும்; இங்குக் காற் றடித்தலால் ஆரவாரித்துக்கொண்டு துகள் மேலெழுந்து வான த்தை மறைக்கின்றன. வானத்தில் மின்னல்கள் அசைந்து விளங்கிச் செல்லுதல், போர்க்களத்தில் வீரர்கள் உறைகழித்து உருவியெடுத் துச் சுழற்றும் வாளாயுதங்கள் அசைந்து பளபள வென்று ஒளிர் தல் போலும். இடிமுழக்கம் வாச்சியவொலி போலும். போர்க்கு அறிகுறியாகவும், போரில் வீரர்களுக்கு உற்சாகத்தை வளர்த்தற் பொருட்டும், வாச்சியங்களை முழக்குதல், இயல்பு. துகள் - தூளீ என்ற வடசொல்லின் விகாரம். கொட்பு - சுழற்சி; இயல்பென்றுங் கொள்ளலாம். அலங்காரமாகவும் போர்க்கு அறிகுறியாகவும் வாச்சியங்களிற் பூமாலை கட்டுதல் இயல்பு ஆதலால், 'தார்ப்பணை' எனப்பட்டது. 'வான்', 'விசும்பு' எனறவை போல, 'விண்' என்ற ஆகாயத்தின் பெயரும் - இடவாகுபெயராய், மேகத்தைக் குறித்தது; "விண்ணின்று பொய்ப்பின்" எனத் திருக்குறளிலுங் காண்க. தழங்கு - வினையடியாப்பிறந்த பெயர். தாவு - தாவுதல்; முதனிலைத்தொழிற்பெயர். இனி, மூன்றும் அடிக்கு, தார் - சேனையில் அடிக்கப்படுகின்ற, பெரும் பணையின் - பெரியபறைகள் போல, விண் தழங்கு - மேகங்கள் ஒலிக்கின்ற, தாவினும் - வலிமை யினாலும் [மேகங்கள் வலிமையாக முழங்குதலாலும்] என்று உரைக் கவும் படும். பி - ம்:—[1]கோட்பினும் என்றும் படிக்கலாம். [2]தழங்குகாரினும், தழங்குகற்பினும், தழங்குகாரினும், தழங்கலானு மோர். (466)

15.—மேகங்கள் மலைமேல் மழை பெய்தல்.

இன்னகைச் சனகியைப்[1]பிரிந்த வேந்தன்மேல்
மன்மதன் மலர்க்கணை வழங்கி னானெனப்
பொன்னெடுங் குன்றின்மேற் பொழிந்த தாரைகள்
மின்னொடுந் துவன்றின மேக ராசியே.

(இ - ள்.) இன் நகை சனகியை பிரிந்த ஏந்தல் மேல் - இனிமை யான புன்சிரிப்பையுடைய சீதையைப் பிரிந்த இராமபிரான் மேல், மன்மதன் மலர் கணை வழங்கினான் என - மன்மதன் (தனது) புஷ்ப பாணங்களை மேன்மேல் எய்தான் போல,—மின்னொடும் துவன் றின - மின்னல்களுடனே நெருங்கிநிறைந்த, மேக ராசி - மேகங்களின் கூட்டங்கள், பொன் நெடும் குன்றின்மேல் - பொன்னை யுடைய பெரிய மலையின்மேல், தாரைகள் பொழிந்த - மழைத்தாரைகளைச் சொரிந்தன; (எ - று.)

இராமபிரான்மீது மலர்க்கணை வழங்குதற்போல மேகராசி தாரைகளைக்குன்றின்மேல் வழங்கின என்பதாம். உவமையணி. கார் காலம் காமோத்தீபகமாய்ச் சீதையைப்பிரிந்த இராமனை வருத்துதல் தோன்றக் காலத்திற்கேற்க உவமையாக இவ்வருணனை கூறினா ரென்க. மேகத்திற்கு மின்னல்கள் கூறியதற்கு ஏற்ப, மன்மதனுக்கு அங்கத்துடனிருக்கும்போது அணியும் அணிகலங்களின் ஒளியைக் கொள்க. அனைத்தையும் பொறுத்தலும் எதற்குஞ் சலியாமையும் பெருமையும் வண்மையும் அளக்கலாகா அளவும் முதலிய குணங் களையுடைய இராமபிரான், அக்குணங்களையுடைய மலைக்கு உவமை யாகத்தக்கவன். மேல்மேல் அம்புதொடுத்தலை 'பாணவர்ஷம்' என் றல் மரபு. இங்கே 'பொன்னெடுங்குன்று' என்றது அப்பொழுது இராமபிரான் எழுந்தருளியிருக்கின்ற இடமான ப்ரஸ்ரவண கிரியை: பொன்விளையுஞ்சுரங்கங்களையுடைய பெரியமலையென்க. பொதுப்பட மலைகளின்மே லென்பாருமுளர்.

பிராட்டியின் புன்சிரிப்பிற் பெருமானுக்கு உள்ள ஈடுபாடு தோன்ற, 'இன்னகைச் சனகி' என்றார். மந்மத னென்ற வடமொழிப் பெயர்-(பிராணிகளுடைய) மதியை [அறிவை]க் கலக்குபவ னென்று பொருள்படும். தாமரைமலர், மாமலர், அசோகமலர், முல்லைமலர், நீலோற்பலமலர்- என்னும் ஐந்தும் மனமதனுக்கு அம்புகளாம். பொழிந்த - முற்று. மேகராசி என்பதில், ராசியென்ற சொல்லை ராஶி யெனக் கொண்டால், கூட்டம்; ராஜியெனக் கொண்டால், வரிசை. பி - ம்:—[1] பிரிந்தராமன் மேல். (467)

16.—மழைத்தாரைகளும் இடிகளும்.

கல்லிடைப் [1]படுந்துளித் [2]திவலை காரிடு
[3]வில்லிடைச் சரமென விசையின் [4]வீழ்ந்தன
செல்லிடைப் பிறந்த[5]செங் கனல்கள் சிந்தின
அல்லிடை மணிசிறந் தழ[6]லி யற்றல்போல்.

(இ - ள்.) கல்லிடை - (அந்தமலையிலுள்ள) கற்களின் இடையே, படும் - (மேகங்கள்) சொரிகின்ற, துளி திவலை - மழை நீர்த் துளிகள்,— கார் இடு வில்லிடை சரம் என-மேகங்களில் தோன்றிய இந்திர வில்லி லிருந்துபாய்கின்ற அம்புகள் போல, விசையின் வீழ்ந்தன - வேகத் தோடு விழுந்திட்டன; செல்லிடை பிறந்த செம் கனல்கள் - (அம்) மேகங்களிலிருந்து தோன்றிய செந்நிறமான இடியாகிய நெருப்புகள், —மணி அல்லிடை சிறந்து அழல் இயற்றல்போல்-(அம்மலையிலுள்ள) இரத்தினங்கள் இராத்திரி காலத்திலே மிகுதியாக ஒளிவீசி அக்கி னிச்சுவாலைபோன்ற ஒளியை வீசுதல்போல, சிந்தின—; (எ - று.)

மேகங்களின் வில்லிலிருந்து சரம் பாய்வதுபோலக் கற்களி டையே மழைநீர்த்துளிகள் வீச, அம்மேகங்களிலிருந்து தோன்றிய

இடி நெருப்புக்கள் இராக்காலத்து இரத்தினங்கள் ஒளிவீசுதல் போலச் சுவாலைகளை வீசின என்பதாம். முதல்வாக்கியம் - தற்குறிப்பேற்றவணியும், இரண்டாவதுவாக்கியம் - உவமையணியுமாம். பின்னிரண்டடிகளில் 'செல்லிடைப்பிறந்த செங்கனலிற்சிந்தின, எல்லிடைமணி சிதர்ந்தழலியற்றல்போல்' என்ற பாடத்திற்கு—மணிசிதர்ந்து (மழைத்துளிகள் விசையோடு விழுதலால் அம்மலையிலுள்ள) இரத்தினங்கள் சிதறி, செல்லிடை பிறந்த செம்கனலின் - மேகங்களினின்று விழுகின்ற சிவந்த இடிவடிவான நெருப்புக்கள் போலவும், எல்லிடை மணி அழல் இயற்றல் போல் - பகலில் (சூரியகாந்த) ரத்தினங்கள் அக்கினிச்சுவாலையை வீசுதல்போலவும், எல் இடை சிந்தின - ஒளியை இடந்தோறும் வீசின என்று பொருள்கொள்ளலாம்; இவ்வுரைக்கு - சிலசொற்களை மீளவும் திரும்பச் சொல்லிக்கொள்ள வேண்டும். [6]இயற்றல்போன்ம் என்ற பாடத்திற்கு - மேகங்கள் மழைபொழியும்போது இரத்தினங்களையுஞ் சிந்தினவாகக்கொண்டு, செல்லிடை பிறந்த - மேகங்களினின்று தோன்றியனவையும், செம் கனலின் சிந்தின - சிவந்த நெருப்புகள்போலக் கீழேசிந்தியனவையுமான, எல் இடைமணி, அழல் இயற்றல் போன்ம்என்க. போன்ம் = போலும். எல் இடைமணி - ஒளியைத் தன்னிடத்தேகொண்ட மணியென்க. எல்லிடை - இரவில் என்றுமாம். செல்வது செல் என மேகத்திற்குக் காரணக்குறி. பி - ம்:—[1]படு. [2]துவலை, கவலைக், கவலை, கலவக். [3]வில்லிடுவிடுகணை, வில்லிடை விடுகணை. [4]மேவின. [5]வெங்கனலின். (468)

17.—மழைபெய்கையிற் பெருங்கற்கள் புரளுதல்.

மள்ளர்கள் மறுபடை மான யானைமேல்
வெள்ளிவே லெறிவன போன்ற மேகங்கள்
[1]தள்ளரு மிடிபடத் [2]தகர்ந்து சாய்கிரி
புள்ளிவெங் கடகரி புரள்வ போன்றவே.

(இ - ள்.) (மலையிலுள்ள கரியபெரிய கற்களின்மேல் மழைத்தாரைகளைச் சொரிகின்ற), மேகங்கள்—, மள்ளர்கள் மறுபடை - வீரர்களுடைய (பகைவர்களை) எதிர்த்துப் போர்செய்யவல்ல சேனைகள், மானம் யானைமேல் - பெரிய யானைகளின்மேல், வெள்ளி வேல் எறிவன போன்ற - வெண்ணிறமான வேலாயுதங்களை யெறிவன போன்றன; தள் அரு இடி பட - (அம்மேகங்களினுடைய) விலக்கவொண்ணாத இடிகள் (விசையோடு) விழுதலினால், தகர்ந்து சாய் - பிளந்து விழுகின்ற, கிரி - அப்பெருங்கற்கள், புள்ளி வெம் கட கரி புரள்வ போன்ற - உத்தம விலக்கணமாகிய செம்புள்ளிகளையும் வெவ்விய மதத்தையுமுடைய யானைகள் (அவ்வேல்கள் படுதலால்) புரண்டு விழுவன போன்றன; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி: மறுபடை - மாறுபாடுகொண்ட சேனையெனினுமாம். வெள்ளி வேல் - வெள்ளியாலாகிய வேலெனினுமாம்.

யானையை யெதிர்த்துப் போர்செய்வார் பெரும்பாலும் வேலினாற் பொரும் இயல்பிற்கு ஏற்ப, 'மள்ளர்கள் மறுபடை மான யானை மேல், வெள்ளிவேலெறிவன' எனப்பட்டது; அதனை, திருக்குறளில் "யானை பிழைத்தவேல்," "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்" என்றும், சீவகசிந்தாமணியில் "விழித்து மேற்சென்ற வேழம் வேலினால் விலக்கி நிற்பார்," "விரும்புவார் வேழவேற்போர்" "சென்றுணிகல் களிறுயிரமிரியச் சினவேலோன்" என்றும் வருவன கொண்டு உணர்க.

இனி, மள்ளர்கள் - போர்வீரர்கள், மறு படை மானம் யானை மேல் - எதிர்ச்சேனைகளிலுள்ள பெரிய யானைகளின்மேல், எறிவன - எறிவனவாகிய, வெள்ளிவேல் - வெண்ணிறமான வேலாயுதங்களை, போன்ற - ஒத்த, மேகங்கள் தள் அருந் துளி - மேகங்களினுடைய விலக்கவொண்ணாத மழைத்தாரைகள், பட - விழுதலினால் என்று பதவுரை கூறுவாருமுளர். எறிவன, புரள்வ - பெயர். போன்ற - முற்று. கிரி - பெருங்கல்லுக்கு இலக்கணை; மலையென்றே கொண்டும் அமைக்கலாம். புள்ளி - பெருமையுமாம். கடம்-கன்னம்; அதிலிருந்து பெருகும் மதஜலத்திற்கு இடவாகுபெயர். பி - ம்:—[1] தள்ளருந்துளி, தள்ளிருந்துளி. [2] தாழ்ந்து. (469)

18.—இதுமுதல் ஏழுகவிகள் - மழைவருணனை.

வானிடு [1] தனுநெடுங் [2] கருப்பு வின்மழை
[3] மீனெடுங் கொடியவன் பகழி [4] வீழ்துளி
[5] தானெடுஞ் சார்துணை பிரிந்த தன்மையர்
ஊனுடை யுடம்பெலா [6] மூழ்க லொத்தவே.

(இ - ள்.) மழை - மேகம், மீன் நெடுங் கொடியவன் - மீனின் வடிவத்தை யெழுதிய உயர்ந்த துவசத்தையுடைய மன்மதனைக,—வான் இடு தனு - அம்மேகத்தில் தோன்றிய இந்திரதனுசு, நெடுங் கரும்பு வில் - (அம்மன்மதன் கையிற்கொண்டு வளைக்கும்)நீண்ட கரும்பாகிய வில்லாக,—வீழ் துளி - (மேகத்தினின்று) விழுகின்ற மழைத்தாரைகள், பகழி - (மன்மதன் எய்யும்) அம்புகளாக,—நெடுஞ் சார் - நீண்ட மலைச்சாரல்கள், துணை பிரிந்த தன்மையர் - துணைவரைப் பிரிந்தவர்களாக, - ஊன் உடை உடம்பு எலாம் மூழ்கல்ஒத்த - (மழைத்தாரைகள் மலைச்சாரல்களைத் துளைத்தல்கள் அப்பிரிந்தாருடைய) தசையையுடைய உடம்புகளிலெல்லாம் (மன்மத பாணங்கள்) தைத்தலைப் போன்றன; (எ - று.)—தான் - அசை.

மழையை மன்மதனைகவும், வானிடுதனுவைக் கருப்பு வில்லாகவும், வீழ்துளியைப் பகழியாகவும், நெடுஞ்சாரலைத் துணைபிரிந்தவராகவும் இங்ஙன் பலபொருள்களைத் தம்முள் இயைபுடையனவாக வைத்து உருவகஞ்செய்தது - இயைபுருவகவணி. வானவில்லைக்

கொண்ட மழை, வில்லினின்று பகழிவெளிப்படுவதுபோல் தன்னி லிருந்து தாரைகள் வெளிப்பட்டுச் சாரலில் அழுந்துவது, துணைப் பிரிந்தாருடலில் கரும்புவிற்சரம் அழுந்துவதுபோலுமென்பதாம். இவ்வுருவகத்தை அங்கமாகக் கொண்டுவந்த தற்குறிப்பேற்றவணியா கும் இச்செய்யுள். துணைபிரிந்த தன்மையர் - மகளிரைப்பிரிந்த ஆட வரும், ஆடவரைப்பிரிந்த மகளிரும்: இருவரும் ஒருவர்க்கொருவர் இல்வாழ்க்கைக்குத் துணையாவர். பிராணநாயகனை அல்லது பிராண நாயகியைப் பிரிந்ததனால் உயிர்போய் ஊன்மாத்திரமேயாயுள்ள உடம்பென்ற பொருள்தோன்ற, 'ஊனுடையுடம்பு' என்றார். ஊனுடை யுடம்பு - உயிரையுடைய உடம்பன் றென்றபடி; மேல் 22-ஆஞ் செய்யுளின் முதலிரண்டடிகளைக்காண்க. உடம்பு எலாம்-உடம்பு முழுவதிலு மென்றலுமாம். [6]உருக்கலொத்தவே என்று காண்கின்ற பாடத்திற்கு-மழைத்தாரைகள் மலைச்சாரல்களைக் கரைத்துக்கொண்டு பெருகுதல், மன்மதபாணங்கள் பிரிந்தாருடைய உடலையுருக்கினாற் போலுமென்று பொருள் காண்க. சார் - சாரல்: விகாரம். 'சார்' என் பதையே மலையைச்சார்ந்துள்ளதான பக்கத்திற்குக் காரணப்பெய ரென்று கொள்ளலுமாம்.

இனி, [5]தாநெடுஞ்சார்துணை என்ற பாடத்தைக் கொண்டு, இச்செய்யுளுக்கு — இந்திரவில்லாகிய நீண்ட கரும்பு வில்லையுடைய மேகமாகிய மன்மதன் எய்யும் அம்புகள்போல விழுகின்ற மழைத் துளிகள், தாம் நெடுஞ் சார் துணை பிரிந்த தன்மையர் - தாம் தாம் நெடுநாளாகச் சார்ந்துள்ள [அல்லது தம்தமக்குப் பெருஞ்சார் பாகவுள்ள] துணைவரைப் பிரிந்தவர்களுடைய, ஊனுடைய உடம்பு களிலெல்லாம் நன்றாகத் தைத்து உருவுவனபோலிருந்தன [அதா வது காமோத்தீபகமாய் அவர்களுடைய பிரிவுத்துயரை மிகுவித் தன] என்று உரைப்பாரு முளர். பி - ம்:—[1]தனுவொடும். [2]தழைத் தவான். [3]மீனெடுங்கொடியன்வன். [4]வீழ்ந்துழி. [6]உக்கதொத் தவே. (470)

19. தீர்த்தனுங் கவிகளுஞ் [1]செறிந்து [2]நம்பகை
[3]பேர்த்தன ரினியெனப் பேசி வானவர்
ஆர்த்தென வார்த்தன மேக மாய்மலர்
[4]தூர்த்தன வொத்தன [5]துள்ளி வெள்ளமே.

(இ - ள்.) 'தீர்த்தன் உம் - பரிசுத்தமூர்த்தியான இராமபிரா னும், கவிகள் உம் - குரங்குகளும், செறிந்து - சேர்ந்திட்டதனால், இனி - இனிவிரைவில், நம் பகை பேர்த்தனர் - நமக்குப்பகைவரா யுள்ள இராவணன்முதலிய இராக்கதர்களை அழித்தவராவர்,' என பேசி - என்று (தங்களுக்குட்) சொல்லிக்கொண்டு, வானவர் - தேவர் கள், ஆர்த்து என - (மகிழ்ச்சியால்) ஆரவாரித்தாற்போல, மேகம் - மேகங்கள், ஆர்த்தன - ஆரவாரித்தன; துள்ளி வெள்ளம் - (அம் மேகங்கள் சொரிகின்ற மழைத்துளிகளின்) தொகுதிகள், ஆய்

மலர் தூர்த்தன ஒத்தன் - (அங்ஙனம் மகிழ்ச்சிகொண்ட தேவர்கள்) தேர்ந்தெடுத்த [சிறந்த] (கற்பகதருக்களின்) மலர்களை (அவ்விராம பிரான்மேலும் குரங்குகளின்மேலும்) மிகுதியாகச் சொரிந்து நிரப்பிய வற்றைப் போன்றன; (எ - று.)

மேகத்தின் இடி—'இராமபிரானும் கவிகளும் சேர்ந்திட்டதனால் இனிவிரைவில் நம்பகைஒழியும்' என்று தேவர்களின் மகிழ்ச்சியாற் செய்த ஆரவாரத்தையும், அம்மேகங்களின் நீர்த்துளிப் பொழிவு மலர்ப்பொழிவையும் ஒத்தனஎன்க: தற்குறிப்பேற்றவணி. நீருக்கு 'மேகபுஷ்பம்' என்று வடமொழியிற் பெயர்வழங்குதலும், மலர் களைச் சொரிதலைப் புஷ்பவர்ஷமென்னும் வழக்கும், இங்கு உணரத் தக்கன.

தீர்த்தனும் கவிகளும் பேர்த்தனர் - உயர்திணையும் அஃறிணை யும் விரவிச் சிறப்பினால் உயர்திணைமுடிபையேகொண்ட திணைவழு வமைதி. இனி 'கவிகள்' என்பதைப் பொருளினால் உயர்திணை யென்றே கொண்டால், இம்முடிபு வழாநிலையேயாம். பேர்த்தனர் - தெளிவும் விரைவும்பற்றிய காலவழுவமைதி; துள்ளி - துளி யென் பதன் விரித்தல். பி - ம்:—[1] செறிந்த. [2] நம்வினை, தம்பகை. [3] பேர்த் தனரினிதென. [4] தூர்த்தெனத்தூர்த்து. [5] துளியின். (471)

20. வண்ணவிற் கரதலத் தரக்கன் [1] வாளினன்
[2] விண்ணிடைக் கடிதுகொண் டேகும் வேலையில்
பெண்ணினுக் கருங்கல [3] மணைய பெய்வளை
கண்ணெனப் [4] பொழிந்தது கால மாரியே.

(இ - ள்.) வண்ணம் வில் கரதலத்து அரக்கன் - அழகிய வில்லை யேந்திய கையையுடைய இராவணன், வாளினன் - வாளாயுதத்தைக் கொண்டவனாய், கொண்டு - (சீதையை) எடுத்துக்கொண்டு, விண் ணிடை - ஆகாயத்திலே, கடிது ஏகும் வேலையில் - விரைவாகச் செல்லுகின்ற சமயத்தில், பெண்ணினுக்கு அருங்கலம் அனைய பெய் வளை கண் என - மகளிர்க்கு அருமையான ஆபரணம்போன்றவளும் அணிந்த வளையல்களையுடையவளுமான சீதாபிராட்டியின் கண்கள் மிகுதியாக நீர்சொரிந்தாற் போல, காலம் மாரி பொழிந்தது - (மேகம்) கார்காலத்துமழையை மிகுதியாகச் சொரிந்தது; (எ - று.)

இராவணன் வஞ்சனையாகச் சீதையைத் தரையொடு பெயர்த் தெடுத்துத் தனது தேரில் வைத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் செல்லும்போது, கழுகரசனும் தசரதனுக்கு நண்பனும் அதனால் இராமபிரானுக்குப் பெரியப்பன் முறையாகின்றவனுமான ஜடாயு வந்து எதிர்த்துப் பெரும்போர்செய்து இராவணனுடைய துவசம் குண்டலம் கிரீடம் கவசம் முதலியவற்றைப் பறித்துச் சிதைக்க,

இராவணன் தன்கையிலுள்ள வில்லை வளைத்து மிகப் பல அம்புகளை அச்சடாயுவின்மீது மேன்மேல் தொடுக்கவும், அவன் அந்த அம்புகளைத் தனது சிறகுகளினாலும் கால்நகங்களாலும் மூக்கினாலும் சின்னபின்னப்படுத்தியதுமன்றி, இராவணனது வில்லைப் பற்களாற் பறித்துக் கால்களால் ஒடித்துவிட்டு, மற்றும் அவனது சாரதி தேர்க் குதிரைகள் தேர் அம்பறுத்தூணி முதலியவற்றை அழிக்கவே, இராவணன் தனதுசூலம் தண்டம் முதலிய ஆயுதங்களைப் பிரயோகித்து அவை பயனிலவானபின்னர் வேறொரு படைக்கலமுமின்றி, முன்பு தான் கைலாசகிரியைப் பெயர்த்தெடுத்த காலத்திற் சிவபிரான் தனக்கு வரமாகக்கொடுத்த சந்திரஹாஸ மென்னும் மிகச்சிறந்த வாளாயுதத்தை யெடுத்து அதுகொண்டு சடாயுவைச் சிறகறுத்து விழுத்திவிட்டு அப்பாற்சென்றனனென்ற கதைக் குறிப்புத்தோன்ற, 'வண்ணவிற்கரதலத்தரக்கன் வாளினன், விண்ணிடைக்கடிது கொண்டேகும் வேலையில்' என்றார். மற்றும், இவ்வாறு சடாயுவைச் சிறகறுத்துத் தள்ளியபின்பு இராவணன் ராமலக்ஷ்மணர்களாவது இவனைப்போன்ற வேறுயாராவது வந்திடுவாரோ என்ற அச்சத்தில் அதிவேகமாகச் சென்றனனென்பதும், தன்னை இராவணனெடுத்த மாத்திரத்திலே அலறிக்கதறிப் புலம்பத் தொடங்கிய சீதை சடாயுவைக் கண்டவளவிற் சிறிது ஆறியிருந்தவள் சடாயு சிறகற்றுவிழ இராவணன் விரைந்தோடும்போது மிகக்கலங்கிப் புலம்பிக் கண்ணீர் சொரியலாயின ளென்பதும், இங்கே கருதத்தக்கன. வஞ்சனையாற் சீதையையெடுத்துச் செல்லும் அரக்கனது கையில் வில் அலங்காரத் திற்காக அமைந்ததேயன்றிப் போர்வெற்றிக்காக அமைந்திலதென்பது, 'வண்ணவிற் கரதலத் தரக்கன்' என்றதனாற் பெறப்படும்.

சிறந்த பெண்ணை 'ஸ்த்ரீரத்நம்,' 'பெண்மணி' என்றல் போல 'பெண்ணருங்கலம்' என்றலும் மரபு; "பெண்ணருங்கலத்தொடு பிணைந்த பேரருள்" என்ற சிந்தாமணியையும், "பெண்ணருங்கலமிது பெறுவல்" என்ற சூளாமணியையுங்காண்க. பெண்களுக்குச் சிறந்த ஆபரணம்போல அழகு செய்பவளென்க; இவளொருத்தியினது நற்குணநற்செயல்களினால் மகளிர்சாதி முழுவதுக்குமே ஒருசிறப்பு உண்டாகின்ற தென்பது, தேர்ந்த கருத்து. இங்கே 'பெண்' என்றது, சாதியைக் குறித்தது. பெய்வளை - வினைத்தொகையன்மொழி. பெய்வளை கண்ணெனப்பொழிந்தது - "மழை பொருகண்ணிணை வாரியோடு தன், இழைபொதிந்திட்டனள்" என்றது கலன் காண்படலம்.

'பெண்ணினுக்கருங்கலமனைய பெய்வளை' என்ற சொற்போக்கில் மகளிர்க்கெல்லாம் ஓர் அணிகலமாயிருப்பவளும் இயற்கை யழகுமிக்கவளுமான இவள் அணிகலமணிதல் அழகினுக்கு அழகு செய்தவாறேயாகு மென்பது தோன்றும். பி - ம்:—[1] மண்ணொடும், வானினில். [2] எண்ணிடைக்கடிது...எல்வையில். [3] என்னும். [4] பொழிந்தன, பொலிந்தது. (472)

21. [1]சிரஞ்சுடர் மதிபுனை தேவன் விண்டொடர்
புரஞ்சுட விடுசரம் புரையு [2]மின்னினம்
[3]அரஞ்சுடப் பொறி[4]நிமி ரயிலி னாடவர்
உரஞ்சுட [5]வுளைந்தனர் [6]பிரிந்து ளோரெலாம்.

(இ - ள்.) சிரம் - (தனது) முடியில், சுடர் மதி புனை - ஒளியை யுடைய சந்திரனைத் தரித்த, தேவன் - கடவுளாகிய சிவபிரான், விண் தொடர் புரம் சுட - ஆகாயமார்க்கத்திற் பறந்துசெல்லுகின்ற திரி புரங்களை எரித்தற்பொருட்டு, விடு - எய்த, சரம் - அக்கினியை முனையாகவுடையதான அம்பை, புரையும் - ஒத்துவிளங்குகின்ற, மின் இனம் - மின்னல்கள்,—அரம் சுட பொறி நிமிர் அயிலின் - அரத்தினால் அராவப்பட்டு ஒளிவீசுகின்ற வேலாயுதங்கள் போல, ஆடவர் உரம் சுட - (கார்காலத்திற்குத் தாம் அறிகுறியாகித் தலைவி யரைப்பிரிந்த) தலைவர்களுடைய நெஞ்சை எரிக்க, பிரிந்து உளோர் எலாம் - அந்த ஆடவர்களெல்லாம், உளைந்தனர்-வருந்தினர்;(எ-று.)

மேகங்கள் மழை பெய்யும்போது இடையிடையே தோன்றும் மின்னல்களை வருணித்ததாதலால், இச்செய்யுள் இங்குநின்றது. மின்னல்கள் தாம் பாயும்போது எதிர்ப்பட்ட பொருள்களைத்தவறும லழிக்கவல்லனவாகின்ற இயல்பை முதலிரண்டடிகளில் உவமை கொண்டு விளக்கினார்; (மின்னல்பாய்தலே இடிவிழுதலாம்.) சுடர் மதி - ஒன்று அல்லது இரண்டு கலைகள் மாத்திரத்தால் மிச்சப்பட்ட பிறைச்சந்திரன். பிறையாயிருப்பவன் சுடர்பெற்று மதியாகுமாறு அவனைத்தன்சிரத்திற்கு ஓர் அணியாகக்கொண்டருளியகடவுளென் பது, 'சிரஞ் சுடர் மதி புனை தேவன்' என்றதில் தோன்றும். சரண மடைந்தவனைத் தலைமேற்கொண்டு குறை தீர்த்து வளரச் செய்து பாதுகாக்கு மியல்புடைய கடவுளே பகைத்த அசுரர்களைப் பட்டணங் களோடு எரிப்பவனாயினனென்பது விளங்க, 'சிரஞ்சுடர் மதி புனை தேவன் விண்டொடர் புரஞ்சுட விடுசரம்' என்றார். சந்திரன், உலகத்திற்கு ஒளியைக்கொடுக்கும் லோகோபகாரி யாதலால், கடவுளாற் காக்கப்பட்டான்; விண்டொடர்புரங்கள், பறந்து சென்று பல இடங்களின்மேலும் இருந்து அந்தந்த இடங்களைப் பாழாக்கி உயிர்களையழிக்கத் தலைப்பட்டதனால் அத்தேவனால் எரிக் கப்பட்டன வென்க. [2]மின்னின என்ற பாடத்திற்கு - மின்னல் களையுடைய மேகங்க ளென்க. சிவபிரான் திரிபுர மெரிக்கத் தொடுத்த அம்பாகிய திருமாலைப்போல விளங்குகின்ற மின்னலோடு கூடிய மேகங்க ளென்னலாம்.

அரஞ்சுடப்பொறி நிமிர் அயில் - அரத்தினால் அராவப்படும் போது நெருப்புப்பொறிகளை வெளிப்படுத்தும் வேலென்றுமாம். நான்காமடியில், [5]உளைந்தன [6]பிரிந்துளோர்க்கெலாம் என்ற பாடத் திற்கு, பிரிந்துளோர்க்கு—, எலாம் - அகத்துறுப்பாகிய உள்ளமும்

புறத்துறுப்பாகிய உடலும் ஆகிய அனைத்தும், உளர்ந்தன - தவித்தன என்க. பிரிந்துளோருரஞ்சுட (அந்த) ஆடவர்க்கு எலாம் உளர்ந்தன என மொழிமாறுதல் தகுதி. ஆடவர் - ஆண்மக்கள்; அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி யென்னும் ஆடூஉக் குணங்களையுடையார். உரம் - மார்பு; மனத்திற்கு இடவாகுபெயர். இனி, உரம் சுட - நெஞ்சின் உறுதியைப்போக்க வெனினுமாம். பி-ம்:—[1]பரஞ்சுடர்ப்பண்ணவன் பண்டு. [3]அருஞ்சுடர். [4]நிமிர்ந்தன. (473)

22. பொருடரப் [1]போயினர்ப் பிரிந்த பொய்யுடற்கு
உருடரு [2]தேர்மிசை யுயிர்கொண் டுய்த்தலால்
மருடரு [3]பிரிவினோய் மாசு ணங்கெடக்
கருடனைப் பொருவின [4]கால மாரியே.

(இ - ள்.) பொருள் தர போயினர் பிரிந்த - செல்வம் தேடுதற்பொருட்டு வேற்றுநாடு சென்ற தலைவரைப்பிரிந்த, பொய் உடற்கு - (பிராண நாயகரைப் பிரிந்ததனால்) உயிர் நீங்கிய உடம்புமாத்திரமாயுள்ள தலைவியர்க்கு, உருள் தரு தேர்மிசை - (விரைந்து செல்ல வல்ல) சக்கரங்களமைந்த தேர்களின் மேல், உயிர் கொண்டு - (அப்பிரிந்த தலைவர்களாகிய) உயிர்களை மீட்டுக் கொண்டு, உய்த்தலால் - வந்து சேர்த்தலால்,—காலம் மாரி - கார்காலத்து மழைகள்,— மருள் தரு பிரிவின் நோய் மாசுணம் கெட-மயக்கத்தைச் செய்கின்ற (அத்தலைவியரது) பிரிவுத்துன்பங்களாகிய பெரும் பாம்புகள் அழியும்படி (வந்த), கருடனை—, பொருவின - ஒத்தன; (எ - று.)

ஏதுவுவமையணி. தலைவன் தலைவியை மணஞ்செய்து கொண்டதன்பின்பு பிரியும் பிரிவு ஆறுவகைப்படும். ஓதற்பிரிவு, காவற்பிரிவு, பகைதணிவினைப்பிரிவு, வேந்தற்குற்றுழிபிரிவு, பொருள்வயிற்பிரிவு, பரத்தையிற் பிரிவுஎன: அவற்றில், பொருள்வயிற்பிரிவாவது - செல்வத்தை ஈட்டுதற் காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரிந்து வேற்று நாட்டிற்குச் செல்லுதல்: தாதை மூதாதை முதலிய தன் முன்னோரால் ஈட்டப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ் செய்தால், அதனால்வரும்பயன் அவர்க்கு ஆவதல்லது தனக்கு ஆகாமையால் தனது பொருள்கொண்டு இல்லறஞ் செய்தற்காகத் தான் பொருளீட்டுதற்பொருட்டுச் செல்வம் நிறைந்தவனான தலைவனும் செல்வனென்ப. அவ்வாறு தலைவியைப் பிரிந்து செல்லும்போது தலைவன், தான் கார்காலத்தே மீண்டு வருவதாகக் காலங்குறித்துச் செல்வன். கற்பொடு பொருந்திக் கணவன்சொல் தவறாத தலைவி அவ்வார்த்தையை நம்பி அக்காலவரவை எதிர்நோக்கிக் கொண்டு அதுவரை பிரிவுத்துயரை ஒருவாறு பொறுத்துக்கொண்டு இல்லத்துஇருப்பள். இங்ஙனமிருக்கையில் முன்பெயல்மாரி தொடங்கியதாக, அதுகண்டு அவள், கார்காலம் வந்தவளவிலும் தலைவன் வரவில்லையேயென்று வருந்தத்தொடங்குவள். இவள் செய்தி இங்ஙன

மாக, பிரிந்து சென்ற தலைவன், பொருளீட்டிக் கொண்டு வரவிருக்கு மளவிலே, முன்பெயல் மாரியைக் கண்டு, குறித்தகாலம் வந்து விட்டதென்றுகருதி, தலைவினிலை யாதர்குமோ என்று கருதிப் பாகனை விரைந்து தேர் செலுத்தச் சொல்லி, (பரதாழ்வானுக்குக் கூறிய பதினான்கு வருடத் தவணை கடவாதபடி புஷ்பகமேறி அதிவிரைவாக மீண்டு வரும் இராமபிரான் போல) வெகு விரைவாக மீண்டு வந்து தலைவியைச் சேர்ந்து மகிழ்விப்பன். இப்படி, உயிர்நீங்கிய உடம்பில் உயிரைக் கொண்டு சேர்த்தாற் போலத் தலைவியின் இன்னுயிர்க் கணவனை விரைவில் தேர்மீது கொண்டு சேர்ப்பது, காலமாரி யென்க. மழை அக்காலத்திற்கு ஞாபகமாகி பிராணநாயகனை விரைவு படுத்தலால், தலைவியின் பிரிவு நோயாகிய மகாநாகத்தைத் தான் சேய்மையில் நின்றபடியே அறத்தொலைக்குங் கருடன் போன்றது காலமாரி யென்றார். மரணத்தை விளைக்குந் துன்பத்தைத் தருதலால் 'பிரிவினோய் மாசுணம்' எனப்பட்டது.

போயினர்ப் பிரிந்த - இரண்டாம் வேற்றுமைத்தொகை. பிரிவின் நோய் - பிரிவினாலாகிய நோய், விரகவேதனை. மாரி - பல்பகா அஃறிணைப் பெயராதலால், 'பொருவின' என்னும் பன்மை முற்றைக் கொண்டது. பி - ம்:—[1]போயினர்பிரிந்த. [2]தேர்மேல். [3]பிரிவெனுமாசுணம், பிரிவுநோய்மாசுணம், பிரிவினோர்மாசுணம். [4]காரின் மாரியே. (474)

23. முழங்கின முறைமுறை மூரி மேகநீர்
வழங்கின மிடைவன மான யானைகள்
தழங்கின பொழிமதத் திவலை தாழ்தரப்
புழுங்கின வெதிரெதிர் பொருவ போன்றவே.

(இ - ள்.) மூரி மேகம் - பெரிய மேகங்கள்,—முறை முறை முழங்கின - மாறிமாறி இடிமுழக்கஞ் செய்தனவாய், நீர் வழங்கின - மழையைப் பெய்துகொண்டு, மிடைவன - (ஒன்றோடொன்று) நெருங்குபவை,—மானம் யானைகள் - பெரிய யானைகள், தழங்கின - பிளிறிக்கொண்டு, பொழி மதம் திவலை தாழ்தர - (தமது உறுப்புக்களினின்று) சொரிகின்ற மதநீர்த்தாரைகள் பெருக, புழுங்கின எதிர் எதிர் பொருவ - சினங்கொண்டு ஒன்றோடொன்று எதிர்த்துப் போர் செய்வனவற்றை, போன்ற - ஒத்தன; (எ - று.)

முழங்கி வழங்கி மிடைவனவான மேகங்கள், தழங்கித்தாழ்தரப் பொருவனவான யானைகளைப் போன்றன வென்க. கரிய பெரிய மேகங்கள் அவ்வகைவடிவினால் யானைகள் போலும். மேகங்கள் குமுறுதல் - யானைகள் பிளிறுதலையும், இவை மழை பொழிதல் - அவை மதநீர் சொரிதலையும், இவை ஒன்றோடொன்று நெருங்குதல் - அவை ஒன்றையொன்று எதிர்த்து நெருங்கிப் போர் செய்தலையும் ஒக்கும்: உவமையணி. 'புழுங்கின' என்பதற்கு - (கோபதாபத்தால்) உடல் வியர்த்தனவாய் என்றும் உரைக்கலாம். முழங்கின, வழங்கின,

தழங்கின, புழுங்கின - முற்றெச்சம். மிடைவன, பொருவ - பெயர். போன்ற - முற்று. (475)

24\. [1]விசைகொடு மாருத [2]மறித்து வீசலால்
அசைவுறு [3]சிறுதுளி யப்பு மாரியின்
[4]இசைவுற வெய்வன [5]வியைவ வாயிரும்
திசையொடு திசைசெருச் [6]செய்த லொத்தவே.

(இ - ள்.) மாருதம் - காற்று, விசை கொடு - வேகங் கொண்டு மறித்து வீசலால் - மாறி மாறி [வாடையும் தென்றலும் மேல் காற்றும் கீழ்காற்றுமாக மடங்கி] வீசுதலால், அசைவு உறு சிறு துளி - (தம்மிடத்தினின்று) அசைதல் பொருந்திய சிறிய மழை நீர்த்துளி களை, அம்பு மாரியின் - அம்புகளினாலாகிய மழையைப் போல, இசை வுற எய்வன - (எதிர்ப்பக்கத்தில் நெடுந்தூரமளவுஞ்) சென்றுசேரும் படி செலுத்துவனவான மேகங்கள்,—இருந் திசையொடு திசை - பெரிய திக்குகளோடு திக்குகள், இயைவ ஆய் - (போர்செய்ய) இணங்கினவையாய், செரு செய்தல் - போர் செய்தலை, ஒத்த - போன்றன; (எ - று.)

பலபடியாக அடிக்குங் காற்றின் விசையால் மழைத்தாரைகளை மேகங்கள் எதிரெதிரே செலுத்துதலைப் பார்க்குமிடத்து, திசைக ளோடு திசைகள் அம்பு தொடுத்துப் போர்செய்கின்றவாறுபோ லிருந்த தென்பதாம்; தற்குறிப்பேற்றவணி. அசைவு உறு - தம்மை விட்டுப் புடைபெயர்தல் பொருந்தியவென்க. மேகரூபமாகக் காணப் படுகின்ற நீராவித்திரட்சி காற்றுப்பட்டதனால் நீராகமாறி மழை யாகப் பொழிகின்றதென்க. இனி அசைவு உறு - ஓசைமிக்க என்ற லுமாம். இயைதல் - சம்மதித்தல். கீழ், ஏழாஞ்செய்யுளில் "ஏசி லாசைகள் சிரிப்ப" என்றதனோடு மாறுகொளக் கூறலாகாமைப் பொருட்டு, திசைகள் தம்மிற்போர்செய்ய இசைந்து விளையாட்டாகப் போர்செய்வன என்றாரென்க. இனி, 'இயைவவாய்' என்பதற்கு - நெருங்குவனவாய் என்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1]விசை யொடு, விசைகெடு. [2]வெறித்து; அடுத்து, எடுத்து. [3]துளிவிழ. [4]இசையுறழ்ந்து. [5]இயைவவாய்ப்பொருந், இசையவாயிருந். [6]செய்கை செய்தவே, செய்த செய்கையே, செய்த வொத்தவே, செய்வ போன்றவே. (476)

25.—அக்கார்காலத்தில் உலகத்துப்பொருள்களின் நிகழ்ச்சியை இதுமுதல் இருபத்து நான்குகவிகளில் வருணிக்கின்றார்.

உலர்ந்த மரங்கள் தளிர்த்தல்.

[1]விழையுறு பொருள்தரப் பிரிந்த வேந்தர்வந்து
உழையுற வுயிருற வுயிர்க்கு [2]மாதரின்
மழையுற [3]மாமுக மலர்ந்து தோன்றின
குழையுறப் [4]பொலிந்தன வுலவைக் கொம்பெலாம்.

(இ - ள்.) விழையுறு - (யாவராலும்) விரும்பப்படுவதான, பொருள்-செல்வத்தை, தர-சம்பாதித்துக்கொண்டு வரும் பொருட்டு, பிரிந்த - (தம்மைவிட்டுப்) பிரிந்து (அயல்நாட்டுக்குச்) சென்ற, வேந்தர் - (தமது) தலைவர் [கணவர்], வந்து உழை உற - (கார்காலம் வந்தவளவிலே) மீண்டுவந்து தம்மிடம்சேர, (அதனால்), உயிர் உற - (முன்புபிரிந்த நிலையில் உயிர்நீங்கியது போலிருந்த தமது உடம்பில்) உயிர்பொருந்த, உயிர்க்கும் - மூச்சுவிடுகின்ற, மாதரின் - மகளிர் போல்,—உலவை கொம்பு எலாம்-(மழை யில்லாமலிருந்த காலத்தில்) உலர்ந்துகிடந்த மரங்களின் கிளைகளெல்லாம், மழை உற - மழைவந்த வளவிலே, குழை உற பொலிந்தன-தளிர்கள்பொருந்த விளங்கியவை யாய், மா முகம் மலர்ந்து தோன்றின-அழகிய முகம் மலர்ந்து காணப் பட்டன; (எ - று.)

பிரிந்த நிலையில் வாடிய மகளிர் கூடிய நிலையில் முகமலர்ந்து தோன்றுதல்போல, மழையின்றி யுலர்ந்த மரங்கள் மாரி பெய்த வளவில் குழையுற முகம்மலர்ந்து தோன்றின என்றார்: உவமையணி. காலத்திற்கு ஏற்ற வருணனையாக, அக்காலநிகழ்ச்சிகளையே ஒன்றற்கு ஒன்று உவமையாக அமைத்தார். கொம்புகளுக்கு முகம் - முன்னே காணப்படும் இடம். மலர்ச்சி - செழித்தல், அழகியதாகக் காணப்படு தல். பொலிதல் - இளர்தல். [2]மாந்தரின என்ற பாடத்திற்கு - மனி தர்கள்போல என்று பொருள்கொண்டு, 'வேந்தர்' என்றதற்கு அரச ரென்று உரைக்க. உலவை - உலர்ந்தலையுடையது; உலத்தலெனி னும், உலர்தலெனினும் ஒக்கும். பி - ம்:—[1]விழையுற. [3]மணமுற, வனமுற. [4]பொலிவுறும். (477)

வேறு.

26.—பாதிரி பூவாமையும், வெண்காந்தள் பூத்தலும் முதலியன.

பாடலம் வறுமை கூரப் பகலவன் [1]பசுமை கூரக்
கோடல்கள் பெருமை கூரக் குவலயஞ் சிறுமை கூர
ஆடின மயில்கள் பேசா தடங்கின குயில்க [2]ளன்பர்த் [றும்.
[3]தேடுவார் [4]தளர்ந்தார் போன்றுந் [5]திருவுறக் கிளர்ந்தார் போன்

(இ - ள்.) (அக்கார்காலத்திலே),—பாடலம் - பாதிரிமரங்கள், வறுமை கூர-(மலர்களில்லாமையால்) வெறுமையாயிருக்குந் தன்மை மிக,—பகலவன் - சூரியன், பசுமை கூர - குளிர்ந்திருக்குந் தன்மை மிக,—கோடல்கள் - வெண்காந்தட்செடிகள், பெருமை கூர - (மலர் களைப்பெறுதலால்) பெருமை மிக,—குவலயம் - குவளைமலர்கள், சிறுமை கூர - வாட்டம் மிக,—மயில்கள்—, திரு உற கிளர்ந்தார் போன்று - செல்வம் வாய்த்ததனால் மகிழ்ச்சி பெற்றவர் போல, ஆடின-களித்துக் கூத்தாடின;குயில்கள்—,அன்பர் தேடுவார் தளர்ந் தார் போன்று - (தம்மை விட்டுப்பிரிந்த) அன்புள்ள உறவினரைத்

தேடவேண்டியவராய்த் தளர்ச்சியடைந்தவர்போல, பேசாது அடங்கின - பேசாமல் அடங்கின; (எ - று.)

உவமையணியை அங்கமாகக் கொண்டுவந்த தன்மைநவிற்சியணி. 'சித்திரையிற் பாதிரி பூத்தது' என்றபடி பாதிரிமரம் இளவேனிற்பருவத்தே பூப்ப தாதலால், கார்காலத்தில் மலரின்றிப் பாழடையும். அப்பருவத்தில், மேகசஞ்சாரத்தாலும், மழையினாலாகிய குளிர்ச்சியினாலும், சூரியனுடைய வெப்பம் பூமியில் தோன்றாது. கார்த்திகைக்கொடியென்றும், கார்த்திகைப்பூவென்றும் வழங்கும்படி வெண்காந்தள் மழைக்காலத்திற் பூத்தல், இயல்பு. அக்காலத்திற் குவளைமலர்கள் குவிந்திடும். 'மயிலாடக் குயில்வாட மாமுகிலெழுந்தது', "மாவிற் குயிலு மயிலு மொளிசெய்ய, மேவிப் புயல்தவழும்" என்றபடி, மழைக்காலத்தில் மயிலுக்குக் கொண்டாட்டமும், குயிலுக்குத் திண்டாட்டமுமாதலால், மயில் ஆடக் குயில் கூவாது ஒடுங்கும். அப்பொழுது அரசாட்சிச்செல்வம் பெற்று மகிழ்ந்த சுக்கிரீவனைக் களித்தாடுகின்ற மயிலுக்கும், பிராட்டியைத் தேடுங் கவலையாற் சோர்ந்திருக்கின்ற இராமபிரானைக் கூவாது ஒடுங்குகின்ற குயிலுக்கும் காலத்திற்கேற்ற உவமையாகக் கொண்டு, 'திருவுறக்கிளர்ந்தார் போன்றும், அன்பர்த் தேடுவார் தளர்ந்தார் போன்றும்' என்றார். உபமான உபமேயங்கள் முறை மாறியிருத்தல், எதிர்நிரல்நிறைப்பொருள்கோள். இராமபிரானுடன் இருந்து அவனோடொப்ப இன்ப துன்பங்களை அனுபவிக்கின்ற இலக்குமணனையும், சுக்கிரீவனுடனிருந்து அவனோடொப்ப இன்ப துன்பங்களை அனுபவிக்கின்ற தாரன், நீலன், நளன், அநுமான் முதலிய வாநரர்களையும் உளப்படுத்தி, 'தளர்ந்தார்', 'கிளர்ந்தார்' என்று பன்மையாற்கூறினர். தளர்ந்தாரைப் பாடலம் குவலயம் என்பவற்றிற்கும், கிளர்ந்தாரைப் பகலவன் கோடல்கள் என்பவற்றிற்குமுட்பட உவமையாக்குதலு மொன்று: அப்பொழுது தாபமின்றித் தண்ணென்றிருத்தலைச் சூரியனுக்கு ஆக்கமாகக் கற்பித்தவாறும். இச்செய்யுளில் - வறுமை பசுமை, பெருமை சிறுமை, ஆடின அடங்கின, தளர்ந்தார், கிளர்ந்தார் என்று அடிதோறும் மாறுபட்ட சொற்கள் வந்தது, முரண்தொடை. பகலவன் - (தனது சேர்க்கையாற்) பகற்பொழுதைச் செய்பவன். பசுமை-இங்கே குளிர்ச்சியின்மேலது; குளிர்ந்த நீரை 'பச்சை ஜலம்' என்னும் வழக்கையுங் காண்க. இனி, பகலவன் பசுமை கூர - சூரியன் மிகவும் ஒளிமழுங்க என்றலுமாம். கோடல், கொடியாகவும் உண்டு. உம்மைகள் - இறந்ததும் எதிரதுந் தழுவியன. பி - ம்:—[1] பசுமை கூர்ந்த, பசலைகூர. [2] அன்பாற் கேடுற, அன்பர் கேடுற, ஆக்கந்தேடு. [3] தேடுறத், [4] தளர்ந்தார்போலும், பொலிந்தார்போலும், பிரிந்தார்போன்றும், திகைஞர்போன்றும். [5] திருவுறத் திளைஞர்போலும், தீயதற்கிளைஞர் போன்றும். (478)

27.—செங்காந்தட்பூ.

நானிறச் [1] சுரும்பும் வண்டு [2] நவமணி யணியிற் [3] சாரத்
[4] தேனுக [5] மலர்ந்து சாய்ந்த சேயிதழ்க் காந்தட் செம்பூ

வேனிலை வென்ற தம்மா காரென வியந்து நோக்கி
[6]மா நிலக் கிழத்தி கைகள் மறித்தன [7]போன்ற மன்னோ.

(இ - ள்.) நால் நிறம் சுரும்புஉம் - பலநிறங்களையுடைய (வண்டின் சாதிபேதமாகிய) சுரும்புகளும், வண்டுஉம் - கருவண்டுகளும், நவ மணி அணியின் சார - நவரத்தினங்களிழைக்கப் பெற்று(க்கைகளில்) அணியும் (வளைமோதிரம்முதலிய) ஆபரணங்கள்போல(க் காந்தள் மலரிற்) சூழ்ந்துமொய்க்க,—தேன் உக மலர்ந்து சாய்ந்த - தேன் வழிய மலர்ந்து சாய்ந்துள்ள, சேய் இதழ் காந்தள் செம் பூ - சிவந்த இதழ்களையுடைய செங்காந்தள் மலர்கள்,—மா நிலம் கிழத்தி - பெரிய பூமிதேவி, நோக்கி - (கார்காலத்தின் அழகைப்) பார்த்து, வேனிலை வென்றது கார் அம்மா என வியந்து - 'வசந்தகாலத்தை வென்றுவிட்டது கார்காலம்' என்று அதிசயித்து, மறித்தன - (தான் அதிசயிப்பதைக் காட்டுமாறு) மடக்கிவைத்தனவான, கைகள் - கைகளை, போன்ற - ஒத்தன; (எ - று.)—மன்; ஓ - ஈற்றசை. அம்மா - அதிசயத்தைக்காட்டும் இடைச்சொல்.

தற்குறிப்பேற்றவணி. அக்கார்காலத்திற் செங்காந்தள் மலர்கள் மலர்ந்து சாய்ந்துள்ளன, பூமிதேவி கார்காலத்தைப் பார்த்து இது வசந்தகாலத்தினுஞ் சிறந்ததாயிருக்கின்ற தென்று கொண்டாடி அந்தக் கொண்டாட்டத்தைக் குறிப்பிக்கக் கைம்மறித்து வைத்திருத்தல்போலு மென்றார். கையைமறித்துவைத்தல், வியப்பினைக் குறிப்பிக்கும். இனி, மறித்தல் - தடுத்தல் எனக்கொண்டு, அவ்வசந்த காலத்தை 'இனி நீ வேண்டா' என்று கைகளாற் சைகை காட்டித் தடுக்கின்றவாறுபோலிருந்தது என்று கருத்துக் கொள்ளலுமொன்று. இதழ்விரிந்த செங்காந்தள் மலர், அகங்கை விரித்தாற் போலிருக்கும்; "காந்தளஞ்செங்கை" என்றார், பிறரும். வேனில் - இங்கே, இளவேனில். அது பருவங்களுட்சிறந்ததென்று தலைமை பெற்றதாதலால் அதனைவென்றமை 'அம்மா' என்று வியக்கும்படியாயிற்று. இனி, வேனில் - முதுவேனிலும் உட்படப் பொதுப்பட வெயிற்காலமாகிய நான்குமாதங்க ளென்று கொள்ளுதலும் ஒன்று; வெயிற்காலத்திலுண்டான வெப்பம் வேர்வை முதலிய குற்றங்களையொழித்ததனால், வேனிலைக் கார் வென்றது. 'வேனிலை வென்றது' என்றதற்கு - (நம்மை வற்றச்செய்யும்) வெயிற்காலத்தை யொழித்தது என்றும், 'நிலக்கிழத்தி கைகள் மறித்தன போன்ற' என்றதற்கு - பூமியாகிய பெண் கைகளை விரித்துக் கொண்டு ஆட அக்கைகள் போன்றன என்றும் உரைப்பாருமுளர். சுரும்பு - பொறிவண்டு, பலவகையான நிறம் என்ற பொருளில், 'நால் நிறம்' என்றார். [3]சாரற்... காந்தள் என்றபாடத்தில், காந்தள் குறிஞ்சிநிலத்ததென விளங்கிற்று: (மலையும், மலைசார்ந்த இடமும் - குறிஞ்சி.) பி - ம்:—[1]சுரும்பிண்ட. [2]நவமணியணியுஞ். [4]தேனுண. [5]மலர்ந்தசந்தச், மலர்ந்தசைந்த. [6]மானிலக். [7]போன்றவன்றே. சில பிரதிகளில் இச்செய்யுள், "வாளெயிற்றரவம்" என்ற செய்யுளுக்குப்பின் உள்ளது. (479)

28.—வெண்காந்தள்.

வாளெயிற் றரவம் போல வன்தலை கான்ற மானத்
தாளுடைக் கோடல் தம்மைத் தழீஇயன காதல் தங்க
[1]மீளல வவையு மன்ன விழைவன வுணர்வு வீந்த
கோளர வென்னப் பின்னி யவற்றெடுங் குழைந்து சாய்ந்த.

(இ - ள்.) வாள் எயிறு அரவம் - வாளாயுதம்போன்ற [கூரிய] பற்களையுடைய நாகங்கள்,—வல் தலை போல - (தங்கள்) வலிய தலையை வெளிக்காட்டினாற்போல, கான்ற - (மலர்களைமேற்புறத்தில்) வெளிப்படுத்திய, மானம் தாள் உடை கோடல் தம்மை - பெரிய நாளத்தையுடைய வெண்காந்தட்செடிகளை, [நாகங்களென்றே எண்ணி), காதல் தங்க தழீஇயன - ஆசைபொருந்தத் தழுவிக் கொண்டனவாய், மீளல - விட்டுநீங்காமலிருந்தன; அவைஉம் - அவ் வெண்காந்தட் செடிகளும்,—அன்ன விழைவன உணர்வு வீந்த கோள் அரவு என்ன - அத்தன்மையனவாகவே விரும்புவனவாய் (அக்காதல்மிகுதியால்) உணர்ச்சிநீங்கிய கொலைசெய்யு மியல்புள்ள நாகங்கள்போல, அவற்றெடுஉம் பின்னி குழைந்து சாய்ந்த - அந்த நாகங்களுடனே பின்னிக்கொண்டு ஒற்றுமைப்பட்டுச் சாய்ந்து கிடந்தன; (எ - று.)

ஆணும் பெண்ணும் ஈருடம்பு ஒருடம்பாகுமாறு தம்மிற் பின்னிக்கொண்டு இழைந்து போகம்நுகர்தல், நாகங்களின் இயல்பு. நீண்டு வளர்ந்த வெண்காந்தட்செடிகள் பாம்பின்படம் போன்ற மலர்களை யுடையனவாம்போது, பாம்புகள்போலும்; இதுபற்றியே, "காந்தளும் பாந்தளைப் பாரித்தலர்ந்தனவே" "வெய்யவாளரவு பைத் தாவித்தன்னவங்காந்தளவிழ்ந்தலர்ந்தன," "பைந்நாகப் பள்ளி மணி வண்ணனிற் பாயல் கொண்டு, கைந்நாகந்துஞ்சுங் கமழ்காந்தளஞ் சாரல்" என்றுர் பிறரும். முதல்வாக்கியம் - அம்மலையிலுள்ள நாகங்கள், நீண்ட தாளின்மீது விரிந்தமலரைக்கொண்ட வெண்காந்தட் செடிகளைப் பார்த்துத் தமக்குத்துணையாதற்கேற்ற வேற்றுப் பாலாகிய நாகங்களென்றுமயங்கி ஆசையோடு அவற்றை இறுகத் தழுவிக்கொண்டு விடாதிருந்தன என்ற பொருளது: மயக்கவணி. இரண்டாம் வாக்கியத்திலே, அசேதநமாகிய அச்செடிகள் - அத் தழுவுதலுக்கு உட்பட்டு அவற்றேடு பின்னிக்கொண்டு சாய்ந்து கிடந்ததை, இந்நாகங்களும் அவ்வாறே காமவசப்பட்டு மோகாதிசயத்தால் உணர்ச்சிநீங்க அவசமாய் அவற்றேடு பின்னி ஒற்றுமைப்பட்டுச் சாய்ந்துகிடந்தாற்போலு மென்று வருணித்தார்; தற்குறிப்பேற்றம். (அசேதநப்பொருளான செடிக்குச் சேதனமுள்ளது போலக் கற்பித்த கவிநயம் பாராட்டற்பாலது.) இவ்வாறு இரண்டு அணிகள் தம்மில் வேறுபாடுதோன்றச் சோந்து வந்ததனல் சேர்வை

யணி. நாகங்கள் காந்தட்செடிகளைத் தழுவிய பின்பும் நாகமல்ல என்று உணர்ந்து விடாமலிருந்ததற்குக் காரணத்தைவிளக்கியது, இரண்டாம் வாக்கியம்.

தலை காலுதல் - படமெடுத்தாற்போலப் பூப்பூத்தல். தழீஇயன — தழுவியன: கோள் - உயிரைக் கொள்ளுதல். பி - ம்:—[1] மீளலவாகி. இச்செய்யுள் "வாளெயிற்றரவம்போன்ற வான்றலைதோன்ற வார்ந்த, தாளுடைக் கோடறம்மிற் றழுவின காதறங்க, மீள மெல்லணையின் மன்னன் விழைவினுளுணர்வு வீந்த, தோளெனப் பின்னியாங்கே யவற்றொடுந் துலங்கிச் சாய்ந்த" என்றும், "வாளெயிற்றரவம்போல வான்றலை தோன்றமானத், தாளுடைக்கோடறம்மிற்றழுவின காத றங்க, மீளுநாளணையின் மன்னன் விழைவினுளணிகளேந்தும், தோளெனவொன்றிப்பற்றி யவற்றொடுந்துலங்கிச்சாய்ந்த" என்றும், "வாளெயிற்றரவம்போன்ற வான்றலை தோன்றவார்ந்த, தாளுடைக் கோடறம்மைத் தழுவினகாதறங்க, மீளலவணையின்மன்னன் விழைவினுளுணர்வுவீய்ந்த, தோளெனமின்னியாங்கேயவற்றொடுங் குழைந்துசாய்ந்த" என்றும், "வாளெயிற்றரவம்போன்ற வான்றலை கான்றமானத், தாளுடைக்கோடறம்மிற்றழுவின காதறங்கும், மீளியானையின் மின்னன்ஞர்விழவினுளணிகள் வேய்ந்த, தோளென மின்னியாங்கேயவற்றொடுந் துலங்கிச்சாய்ந்த" என்றும் பிரதிகளிற் காணப்படுகின்றது. (480)

29.—தம்பலப் பூச்சி.

எள்ளிட [1]விடனு மின்றி யெழுந்தன விலங்கு கோபம்
தள்ளுறத் தலைவர் தம்மைப் [2]பிரிந்தவர் [3]தழீஇய [4]தூமக்
கள்ளுடை யோதி யார்தங் கலவியிற் பலகாற் கான்ற
வெள்ளடைத் தம்பற் குப்பை சிதர்ந்தென [5]விரிந்த மாதோ.

(இ - ள்.) எள் இட உம் இடன் இன்றி-ஓர் எள்ளைப் போகடுதற் கேனும் வெற்றிடமில்லாதபடி, எழுந்தன இலங்கு - (தரைமேற்) பொருந்தியனவாய் விளங்குகின்ற, கோபம் - இந்திரகோபமென்னும் பட்டுப் பூச்சிகள்,— தள்ளுற - (சிலகாலங்) கழிய, தம்மை பிரிந்தவர் - தம்மைவிட்டு நீங்கி அயல்நாட்டுக்குச் சென்றிருந்தவர்களான, தலைவர் - (தமது) கணவர், தழீஇய-(கார்காலத்தில்) மீண்டுவந்து சேரப் பெற்ற, தூமம் கள் உடை ஓதியார் - (அகிற்புகை முதலிய வாசனைப்) புகை யூட்டப் பெற்றதும் (சூடிய மலர்களின்) தேனையுடையதுமான கூந்தலை யுடையவர்களாகிய மகளிர், தம் கலவியில் - தாம் (அக்கண வரோடு) அடுத்தடுத்துச் செய்யும் புணர்ச்சியில், பல கால் கான்ற - பலமுறை உமிழ்ந்த, வெள் அடை தம்பல் குப்பை - வெற்றிலைத் தம் பலங்களின் தொகுதிகள், சிதர்ந்து என - சிந்திக்கிடந்தாற்போல, விரிந்த - மிகுதியாயிருந்தன; (எ - று.)

தம்பலம்-வெற்றிலைபாக்கு சுண்ணம்புகள் சேர்ந்த சேர்க்கையின் சாரம்; தாம்பூலந் தரிக்கும்போது அதனினின்று வாயில்ஊறுவது, இதுபோன்ற நிறமுடையதா யிருத்தல் பற்றி, மழைக்காலத்திலே தரைமீது நிறைந்து காணப்படும் இந்திரகோபமென்னும் பட்டுப்பூச்சிகளுக்குத் தம்பலப்பூச்சியென்று பெயராம். பல நாள் தலைவியரைப் பிரிந்து சென்றிந்த தலைவர் கார்காலம் வந்தவளவிலே மீண்டு வந்து சேர்ந்தனராக, "பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ" என்றபடி அத்தலைவியர் காதல் கைவிஞ்சி அவரோடு அடுத்தடுத்துச் சேரும்போது அடிக்கடி தாம்பூலம் உபயோகித்துக்கொண்டு தம்பலம் உமிழ, அத்தம்பலங்கள் எங்குங் கிடந்தாற்போன்றன, அம்மழைக்காலத்திலே தரையில் அடர்த்தியாக நிரம்பிக் காணப்படுகின்ற இந்திரகோபங்களென்று வருணித்தார்: தற்குறிப்பேற்றவணி. தாம்பூலம் உபயோகிக்கும்போது முதலில் ஊறுகின்ற ரசத்தை உமிழ்ந்துவிட்டுப் பின்பு ஊறும் ரசத்தைஉட்கொள்ள வேண்டுமென்னும் தேகாரோக்கிய முறைபற்றித் தம்பலம் உமிழ்தல் இயல்பு.

இந்திரகோபம்என்ற சொல்லை முதற்குறையாக 'கோபம்' என்றார். 'தள்ளுற' என்பதற்கு - (பிரிவுத்துயரால் தமக்குத்) தளர்ச்சியுண்டாக வென்றும் உரைக்கலாம். தழீஇய - தழுவிய. அடை-இலை, தம்பல் - கடைக்குறை விகாரம். இயற்கை நலத்தால் மாத்திரமன்றிச் செயற்கைநலத்தாலும் கணவரை மேன்மேல் மகிழ்விக்கின்றன ரென்பார், 'தூமக் கள்ளுடையோதியார்' என்றார். [4]தாமக்கள்ளுடையோதியார் என்ற பாடத்திற்கு - (சூடிய) மலர் மாலைகளின் தேனையுடைய கூந்தலையுடையவர்களான மகளி ரென்று பொருள்; தாமம் - மாலை, 'எள்ளிட விடனுமின்றி' என்ற விடத்து இழிவு சிறப்பும்மை பிரித்துக் கூட்டப்பட்டது. மாது, ஓ-ஈற்றசை. பி - ம்:— [1]இடமும், இடமொன்று. [2]பிரிந்தனர். [3]தழுவத்தூய, தழுவத்தூமக். [5]சிதர்ந்தன. (481)

30.—வேங்கை கொன்றைமலர்களை அடித்துக்கொண்டு செல்லும் மலையருவி வருணனை.

தீங்கனி நாவ லோங்குஞ் சேணுயர் குன்றிற் செம்பொன்
வாங்கின கொண்டு பாரின் மண்டுமால் [1]யாறு மான
[2]வேங்கையின் மலருங் கொன்றை [3]விரிந்தன [4]வீயு மீர்த்துத்
தாங்கின [5]கலுழி சென்று தலை[6]மயக் குறுவ தம்மில்.

(இ - ள்.) தீம் - இனிமையான, கனி - பழத்தையுடைய, நாவல் - நாவல் மரம், ஓங்கும் - உயர்ந்திருக்கப்பெற்ற, சேண் உயர் குன்றின் - ஆகாயத்தையளாவி உயர்ந்திருக்கின்ற மகாமேருமலையினின்று, வாங்கின செம் பொன் கொண்டு - மிகுதியான சிவந்த பொன்னை அடித்துக்கொண்டு, பாரில் மண்டு - பூமியில் மிக்குப் பெருகுகின்ற, மால் யாறு - பெரிய (ஜம்பூஎன்னும்) நதியை, மான -

ஒப்ப,—(அந்த மலையிலிருந்து), வேங்கையின் மலர்உம் - வேங்கை மரத்தின் மலர்களையும், கொன்றை விரிந்தன வீஉம் - கொன்றை மரத்தில் மலர்ந்தனவான மலர்களையும், ஈர்த்து தாங்கின - இழுத்துத் தம்மீது கொண்டுவருவனவான, கலுழி - நீர்ப்பெருக்குக்கள், சென்று - பெருகி, தம்மில் தலைமயக்கு உறுவ - தமக்குள் [ஒன்றோடொன்று] கலப்பனவாயின; (எ - று.)

'இந்த நாவலந்தீவின் நடுவிலுள்ள மேருவென்னும் பொன்மலையைச் சார்ந்து தெற்கிலிருக்கின்ற கந்தமாதனமென்னும் உப பருவதத்திலுள்ள மிகப்பெரிய நாவல்மரத்தின் பழங்கள் பெரிய யானையினளவினவாய் அம்மலையின் மேல்விழுந்து சிதைய, அவற்றின் சாற்றினால் ஜம்பூநதி யென்று ஓர் ஆறு பெருகுகின்றது. அவ்வாற்றங் கரையின் மண்ணானது அந்தச்சாற்றில் நனைந்து காற்றினால் உலர, ஜாம்பூநதமென்று பெயர் கொண்டு, சித்தர்கள் அணிதற்கு உரிய செம்பொனாகின்றது. அந்த நாவல்மரத்தைப்பற்றித் தான், இந்தத் தீவுக்கு ஜம்பூத்வீபம் [நாவலந்தீவு] என்கின்ற பெயர் உண்டாயிற்று' என்று புராணம் கூறும். ("பட்டமார்தரு மாகரியளவெனப் பருத்துக், கொட்டை நுண்ணிய நாவலின் கொழுங்கனிச் சாறு, பெட்ட சம்புமாநதியென வலங்கொடு பெருகி, உட்டெளிந்து பொன்மேருவைச்சுலா யினிதோடும்," "அதிருமப்புன லருந்தின ராருங்கரையசும்பு, ததையும் வெங்கதிர் காற்றுறவுலர்ந்து நற்சாம்பு, நதமெனும்பொனா மாங்கதினணி புனைநலத்தோர், இதமில் வெம்பிணி நரைதிரையற்றினிதிருப்பார்" என்ற பாகவதமும், காணத்தக்கது.

அந்த நாவற்பழச்சாற்றின் சம்பந்தத்தாலும் பொன்மயமான மேருமலையினின்று பெருகுதலாலும் பொன்னைக் கொழித்துக் கொண்டு வருகின்ற ஜம்பூநதியை, இந்த இராமபிரான் வசிக்கும் கிரியில் மழைபெய்தலாற் கார்காலத்தேமலர்ந்த பொன்னிறம் மிக்க வேங்கைமலர்களையும் கொன்றைமலர்களையும் அடித்துக் கொண்டு வருகின்ற ஆற்றுப்பெருக்கிற்கு உவமை கூறினார்; உவமையணி. செம் பொன் - மாற்றுயர்ந்த பொன். கலுழி - காட்டாறு: கலுழ்தலையுடைய தெனக் காரணப்பெய ரென்னலாம்; கலுழ்தல் - கலங்குதல். தலைமயங்குதல் - கலத்தல்; இது இப்பொருளதாதலை "சாறும் வேள்வியும் தலைமயங்குமே" எனப் பாலகாண்டத்திலுங் காண்க. இதில், 'தலை' என்பது - தமிழுபசருக்கம். பி - ம்:—[1] மகளிர்மான. [2] வேங்கை நாண்மலரும். [3] வீந்தன, விரிந்தநாள், ஈந்தன, விரிந்ததண். [4] வீயு மீதாய், வீயுமீய, வீயும்வீயா, வீயுமெய்தாய். [5] நதிகள். [6] மயக்குறுவ தம்மா. (482)

31.—செங்காந்தள்மலரில் கொன்றைமலரும் இந்திரகோபமும் தோன்றும் காட்சி.

நன்னெடுங் காந்தட் போதி [1]னறைவிரி கடுக்கை [2]மென்பூத்
துன்னிய கோபத் தோடுந் தோன்றிய தோற்றந் தும்பி

இன்னிசை [3]முரல்வ நோக்கி யிருநில [4]மகள்கை யேந்திப்
பொன்னொடுங் காசை [5]யீட்டிக் [6]கொடுப்பதே போன்ற தன்றே.

(இ - ள்.) நல் - அழகிய, நெடு - நாளம்உயர்ந்த, காந்தள் போதில் - செங்காந்தள்மலரில், நறை விரி கடுக்கை மெல் பூ - வாசனை வீசுகின்ற மென்மையான கொன்றைமலர்கள், துன்னிய கோபத் தோடும் - பொருந்திய தம்பலப் பூச்சிகளுடன், தோன்றிய-விளங்கு கின்ற, தோற்றம் - காட்சியானது,—இன் இசை முரல்வ - இனிமை யான இசையைப் பாடுவனவான, தும்பி நோக்கி - வண்டுகளைக் குறித்து, இரு நிலம் மகள் - பெரிய பூமிதேவி, கை ஏந்தி - (தன்) கைகளை உயர எடுத்து, பொன்னொடும் காசை ஈட்டி - பொன்னோடு இரத்தினங்களையும் சேர்த்து, கொடுப்பதுஏ - கொடுப்பதையே, போன்றது-ஒத்தது; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

தரையில் உயர்ந்தெழுந்த காந்தட்செடிகளின் சிவந்தமலர்களிற் கொன்றைமரத்தினின்று விழுந்தபொன்னிறமான மலர்கள் தங்க, அவற்றுடன் தம்பலப்பூச்சிகளும் எழுந்து அந்தச் செங்காந்தள் மலர் களிற் சேர்ந்த தோற்றமானது, வண்டுகள் இனிமையாக இசைபாடு வதைக் கேட்டு மகிழ்ந்து பூமிதேவி தன்கைகளை உயர எடுத்து அவற்றிற் பொன்னையும் மாணிக்கத்தையும் வைத்துக் கொண்டு அவ் வண்டுகளுக்குப் பரிசு கொடுக்கின்றவாறு போலிருந்த தென்பதாம்; தற்குறிப்பேற்றவணி. காந்தட்குக் கையும், கொன்றை மலர்க்குப் பொன்னும், இந்திரகோபத்திற்கு மாணிக்கமும் நிறத்தால் உவமம். காந்தட்குக் கை வடிவிலும் ஒப்பாம். தேவதையாதலால், பூமிதேவி, அரூபியாயிருந்து கொடுக்கின்றாளென்க. 'கொடுப்பதே' என்ற தேற்றேகாரம், தற்குறிப்பேற்றத்திற்கு அங்கமாம்.

நறைவிரி - தேன்மிக்க எனினுமாம், இந்திரகோபத்திற்கு எழுத லும் இயல்பாதலை "சிந்துரச்செம்பொடிப்போல் திருமாலிருஞ்சோலை யெங்கும், இந்திரகோபங்களேயெழுந்தும் பரந்திட்டனவால்" என்ற ஆண்டாளருளிச்செயலினாலும் அறிக. தும்பி - வண்டின் சாதி பேதம். தும்பி இசை முரலுதல் - ரீங்காரஞ் செய்தல். காசு - நவரத்தி னங்களுக்குப் பொதுவான பெயர்; இங்கே சிறப்பாய், செந்நிறமுடைய பதுமராகமென்னும் மாணிக்கத்தைக் குறித்தது. பி - ம்:—[1]நறவிரி. [2]நன்பூத், தன்பூத். [3]முரல. [4]உவகையெய்தி, மலர்க்கையேந்தி, பெண்கையேந்தி, உவகையேற, உவகையேற்ப. [5]ஈட்டி. [6]கொடுப்பவே போன்றவன்றே. (483)

32.—ஒலிக்கும் வண்டு, இடிக்கும் வானம், மயில், தோன்றிப்பூ, கருவிளமலர் இவற்றின் காட்சி.

கிளைத்துணை மழலை வண்டு கின்னர நிகர்த்த [1]மின்னும்
துளிக்குரன் மேகம் [2]வள்வார்த் தூரியந் துவைப்ப போன்ற

வளைக்கையர் போன்ற மஞ்ஞை [3]தோன்றிக ளரங்கின் மாடே
[4]விளக்கின [5]மொத்தகாண்போர் [6]விழியொத்த விளையின்மென்பூ.

(இ - ள்.) இளை - கைக்கிளை யென்னும் இசைக்கு, துணை - சம மான, மழலை - இனிய ரீங்காரத்தையுடைய, வண்டு - வண்டுகள், கின்னரம் கிகர்த்த-யாழைப்போன்றன; மின்னும் துளி குரல் மேகம் - மின்னுவனவும் மழைபெய்தலையும் இடிமுழக்கத்தையு முடையனவு மான மேகங்கள், வள் வார் தூரியம் துவைப்ப போன்ற - செறிந்த தோற்கயிற்றாற் கட்டப்பட்ட மத்தளங்கள் ஒலிப்பன போன்றன; மஞ்ஞை - மயில்கள், வளை கையர் போன்ற - வளையல்களையணிந்த கைகளை யுடையவர்களான மகளிரைப் போன்றன; தோன்றிகள் - செங்காந்தள்மலர்கள், அரங்கின் மாடே - நாட்டியமாடுமிடத்திலே, (ஏற்றிவைக்கப்பட்ட), விளக்கு இனம் - விளக்குக்களின் கூட்டத்தை, ஒத்த - போன்றன: மெல் விளையின் பூ - மென்மையான கருவிள மலர்கள், காண்போர் விழி ஒத்த - பார்ப்பவர்களுடைய கண்களைப் போன்றன; (எ - று.)

வண்டுகள் இனிமையாக ரீங்காரஞ்செய்தல் யாழிசைத்தல் போலிருக்க, மேகங்கள் இடியினாலும் மழைத்தாரைகளாலும் முழங்கு தல் மத்தளந்தட்டுவதுபோலிருக்க, செங்காந்தள் மலர்கள் நாட்டிய சாலையில் விளக்குக்க ளேற்றிவைத்தாற்போலிருக்க, மயில்கள் ஆடு தல் மகளிர் நாட்டியமாடுதல்போ லிருந்தது; கருவிள மலர்கள் அந்த நாட்டியத்தை இமைமூடாமல் நன்றாகப் பார்ப்பவர்களுடைய கண் கள்போ லிருந்தன என்பதாம். இயைபுவமையணி. இச்செய்யுளில் வாக்கியந்தோறும் ஒவ்வோர் உவமைச் சொல்லை அமைத்தது, பல வயிற்போலியுவமையாம்.

இளை - ஏழிசைகளில் ஒன்று; (மற்றவை - குரல், துத்தம், உழை. இளி, விளரி, தாரம் என்பன.) கின்னரம் - வீணை. வள் - நெருக்கமும், வலியும், வளமுமாம். நாட்டியமாடும் மகளிர் தம்மை அலங்கரித்துக் கொண்டுவரும் இயல்பு தோன்ற 'வளைக்கையர்' என்றார். பி - ம்:— [1]மாலைத், பின்னும், விண்மீத். [2]வள்வாய்த்தூரியம், வள்வார்த் தூம் பினம்,...தூம்பியம். [3]தோன்றிதானரங்கின்மாடே. [4]விளக்கினமாக, [5]கிகர்த்த. [6]விழி கருவிளையின்மென்பூ, விழியொத்த வீயும் வேய்ந்த. 'துளிக்குரன்மேகமாயோன்றுயில்வன போன்று தோன்ற' என 2 - ஆவது அடியும், 'விளக்கினமாகக் காண்போர் விழி கருவிளையின் மென்பூ' என 4-ஆவது அடியும் இரண்டு மூன்றுபிரதிகளில் வேறு படக்காண்கின்றன என்ப. (484)

33.—வண்டுகளின் ஒலியும், கூதாளச்செடிகள் மலர்தலும்.

பேடையு ஞிமிறும் பாடப் [1]பெயர்வுழிப் பிறக்கு மோசை
[2]ஊடுறத் தாக்குந் தோறு மொல்லொலி பிறப்ப நல்லார்
[3]ஆடியற் [4]பாணிக் கொக்கு [5]மரியவவ் வமிழ்தப் பாடல்
[6]கோடிய தாளங் கொட்டன் மலர்ந்த[7]கூ தாள மொக்க.

(இ - ள்.) ஞிமிறும் - ஆண்வண்டுகளும், பேடையும் - பெண் வண்டுகளும், பாய - (ஒன்றன்மேலொன்று) மோதுமாறு, பெயர்வு உழி - வேகத்தோடுவரும்பொழுது, பிறக்கும் - (அவ்வருகையினால்) உண்டாகின்ற, ஓசை - ஓசையும்,—ஊடு உற தாக்கும் தோறும் - (அவ்வண்டுகள்) இடையேபொருந்த (ஒன்றை ஒன்று) மோதும் பொழுதெல்லாம், பிறப்ப - உண்டாவனவாகிய, ஒல் ஒலி - ஒல்லென் னும் ஓசை உண்டாவனவும்,—நல்லார் ஆடு இயல் பாணிக்கு ஒக்கும்- (அம்மலையில்) தேவமாதர்கள் (வந்து களித்து) ஆடுகின்ற முறை தவறாத கூத்திற்குஒத்திருக்கும் [அந்நாட்டியத்திற்கு ஏற்பச் சில வகை வாத்தியங்கள் முழங்கினாற்போலு மென்றபடி]: அரிய அ அமிழ் தம் பாடல்-(அரிய அவர்கள்பாடுகின்ற) அந்த அமிருதம் போலினிய பாட்டுக்களுக்கு ஏற்ப, கோடிய தாளம் கொட்டல்ஒக்க - புதுமையான தாளங்களை முழங்கத்தொடங்கினாற்போல, கூதாளம் மலர்ந்த- கூதாளஞ்செடிகள் மலர்ந்தன; (எ - று.)

வண்டுகள் ஆணும்பெண்ணும் ஒன்றன்மேலொன்று மோதும் பொருட்டு விசைபடவரும்பொழுது அவ் வருகையாலுண்டாகும் ஒலியும், அவை தம்மில் மோதும்போது உண்டாகும் ஒலியும், அம் மலையில் தேவமாதர்கள் வந்து ஆடும் நாட்டியத்திற்கு ஏற்பச்சில வகைவாத்தியங்கள் முழங்கினாற்போலும்; கூதாளச்செடிகள் மலர்ந் தது, அப்பொழுது அம்மாதர்கள்பாடும் இனியபாட்டுக்களுக்கு ஏற் பத் தாளங்கொட்டத் தொடங்கினாற் போலும் என்பதாம்: தற்குறிப் பேற்றவணி. கூதாளச்செடிகளின் மலர், வடிவில் தாளம்போலிருக்கு மென்க. கூதாளம் - ஓர்செடி; கூதாளி - கூதளம். தாளி, நறுந்தாளி எனவும்படும்; கார்காலத்து மலர்வது.

பேடை - பறவைகளின் பெண்மைப்பெயர். 'மிஞிறு' என்பது, எழுத்து நிலைமாறி 'ஞிமிறு' என நிற்கும்; இலக்கணப்போலி. முன்னே 'பேடை' என்றதனால், ஞிமிறு-ஆண்வண்டைக் குறித்தது. நல்லார் - இங்கே, தேவமாதர். பாணி - இங்கே, கூத்து. கோடி - புதுமை; அதனடியாப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம், 'கோடிய' என்பது. இனி, 'கோடிய' என்பதை 'கோடு' என்னும் வினைப்பகுதி யின்மேற் பிறந்த இறந்தகாலப் பெயரெச்ச மெனக்கொண்டு, வளை வுள்ளஎன்று பொருள்கூறலுமாம். பாடற்கு ஓடியஎன்று பிரித்தல், மோனைத்தொடைக்குச் சிறவாதாம். "கோடியர் தாளங்கொட்டல்" என்ற பாடம் - நட்டுவர் தாளங்கொட்டுத லென்று பொருள்படும். பி - ம்:—[1]பெயர்வுற, பேர்வுற. [2]ஊடலில். [3]ஆடலின், ஆடிய. [4]பாணிக்கேற்ப. [5]ஆரியவமுதப். [6]கோடுயர்கரங்கள், கோடல்கள் கரங்கள். [7]கூதாளமொப்ப, கூதாளமொத்த, கூதாளமன்னே, கூதாளமாதோ. (485)

34.—காட்டாறுகள் கொன்றைமரங்கள் இவற்றின் வருணனை.

வழைதுறு கான யாறு மாநிலக் கிழித்தி [1]மக்கட்கு
உழைதுறு மலைமாக்கொங்கை [2]சுரந்த பாலொழுக்கை யொத்த

விழைவுறு [3]வேட்கை நாளும் வேண்டினர்க் குதவ வேண்டிக்
குழைதொறுங் கனகந் [4]தூங்குங் கற்பக நிகர்த்த கொன்றை.

(இ-ள்.) வழை துறு கானம் யாறு - சுரபுன்னைமரங்கள் நிறைந்த காடுகளில் (மலைகளினின்று) பெருகியநதிகள்,—மாநிலம் கிழத்தி - பெரிய பூமிதேவியாகிய தாய், மக்கட்கு - (தன்) புதல்வர்களாகிய மக்கள் ஜீவிப்பதற்காக, உழை துறு மலை மா கொங்கை சுரந்த - புடைபருத்துநெருங்கிய மலைகளாகிய (தனது) பெரியதனங்களினின்று (அன்பினால்) சுரந்து பெருகவிட்ட, பால் ஒழுக்கை - பாலின் தாரைகளை, ஒத்த - போன்றன; கொன்றை - (பொன்னிறமான மலர்களை நிரம்பப்பூத்த) கொன்றைமரங்கள்,—விழைவு உறு வேட்கை - (பொருள்களை மேன்மேல்) விரும்புதல் பொருந்திய ஆசையினால், நாளும் வேண்டினர்க்கு - எந்நாளிலும் வேண்டுபவர்கட்கு, உதவ வேண்டி - கொடுப்பதை விரும்பி, குழைதொறுஉம் கனகம் தூங்கும் - தளிர்கள் தோறும் பொன்னைத் தொங்கவிட்டுக் கொண்ட, கற்பகம் - கல்பக தருவை, நிகர்த்த - ஒத்தன; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. "மண்மாதர் விண்வா, யழைத்துப் புலம்பி முலைமலைமேனின்று மாறுகளாய்," "காரார் வரைக்கொங்கை," "சோலைமலையோ டிரண்டாய், மேதினியாள் கொங்கை நிகர் வேங்கடம்," "பொதியமுமிமயமும் புணர்முலையாக," "அலைநீராடை மலைமுலை யாக," "கொங்கையே பரங்குன்றமுங் கொடுங்குன்றும்" எனப் பலரும் மலைகளைப் பூமிதேவியின் கொங்கைகளென்றல் காண்க. யாறு, நிலக்கிழத்தி மக்கட்குக் கொங்கை சுரந்த பாலொழுக்கை யொத்த— "சரயுவென்பது தாய்முலையன்னதிவ், வுரவுநீர்நிலத்தோங்கு முயிர்க்கெலாம்" என்றார், பாலகாண்டத்து ஆற்றுப்படலத்திலும். யாற்றுப்பெருக்குப் பிரஜைகள்பிழைப்புக்கு இன்றியமையாததாகுதலும், அந்நீரின் இனிமையும், இங்கு விளங்கும். எனக்கு இப்பொருள் வேண்டுமென்னும் பொருள்களின்மேல் தோன்றும் பற்றுள்ளமான அவாவும், அவாவினால் அப்பொருள்களைப் பெறவேண்டுமென்று மேன்மேல் நிகழும் ஆசையுமென வேறுபாடு தோன்ற 'விழைவுறு வேட்கை' எனப்பட்டது.

தூங்குதல் - தொங்குதலாதலை, "கொழுங்கனி கோட்டிடைத் தூங்குவ" எனச் சிந்தாமணியிலும் காண்க. விழைவுறு வேட்கையை வேண்டினர்க்குச் சேர்க்காமல், கற்பகத்திற்கு உரியதாக்கி, (வேண்டுபவர்களிடத்துத் தான்கொண்ட) மிக்க விருப்பத்தால் அவர்கட்குக் காலதாமத மில்லாமற் கொடுத்தற்பொருட்டு முன்னமேசித்தமாய்ப் பொன்களைத்தன்வடிவில் இடந்தோறுங்காய்த்து நிரம்ப மிகுதியாகக் கொண்ட கற்பக மெனலுமாம். பி - ம்:—[1]மக்கட்குழைவுறு, மக்கட்குழைவுற, மக்கட் குழைவர, மாக்கட்குழைவர. [2]சொரிந்த, கூர்ந்த. [3]வேட்கையோடும், வேட்கையின்றி. [4]தூக்கும், தூர்க்கும். (486)

35.—காடுகள் செழித்தலும், மான்கள் களித்தலும்.

[1]பூவியல் [2]புறவ மெங்கும் பொறிவரி வண்டு [3]போர்ப்பத்
[4]தீவிய[5]களிய வாகிச் செருக்கின [6]காமச் செவ்வி
ஓவிய[7]மரன்கள் தோறு [8]முரைத்தற வுரிஞ்சி [9]யொண்கேழ்
[10]நாவிய செவ்வி நாறக் கலையொடும் [11]புலந்த நவ்வி.

(இ - ள்.) பூ இயல் புறவம் - மலர்கள் பொருந்திய காடுகள், —எங்கும் - எவ்விடத்திலும், பொறி வரி வண்டு போர்ப்ப - உடற் புள்ளிகளையும் இசைப்பாட்டுக்களையுமுடைய வண்டுகள்மொய்த்து நிறைய, தீவிய களிய ஆகி - (காண்பவர்க்கு) இனிமையான களிப்பைத் தருவனவாய், செருக்கின - செழித்தன; (அவ்விடத்தில் ஆண்மான்கள்), காமம்செவ்வி - (தாம்கொண்ட) காமத்தின் முதிர்ச்சியால், ஓவிய மரன்கள்தோறும் உரைத்து அற உரிஞ்சி - நேர்பட்ட மரங்களிலெல்லாம் உராய்ந்து நன்றாக உடல் தேய்ந்துவந்து, ஒள் கேழ் நாவிய செவ்வி நாற-(அம்மரங்களுட் சந்தனம் அகில் தேவதாரு முதலிய வாசனைமரங்களின் சம்பந்தத்தால்) ஒள்ளிய நிறமுள்ள கஸ்தூரிக்கு உரிய நல்ல வாசனையை (உடம்பில்) மிகுதியாக வீச, - கலையொடும்-(அந்த) ஆண்மான்களோடு, நவ்வி - பெண்மான்கள், புலந்த - (அவற்றை வேற்றினமாகிய கஸ்தூரி மானோடு சேர்ந்து வந்தனவாகக் கொண்டு) பிணங்கின; (எ - று.)

புலத்தலாவது - ஆணும் பெண்ணும் இன்பநிலையில் ஒன்றற்கொன்று சிறுமனஸ்தாபங் கொள்ளுதல்; பிரணயகலகம், ஊடலெனவும்படும். கொழுப்பினால் மரங்களில் உராய்ந்து அவற்றின் மணத்தைப் பெற்று வந்த ஆண்மான்களைக் கஸ்தூரிமான்களோடு கூடி அவற்றின் மணம் பெற்று வந்தனவாக மாறுபடக்கருதிப் பெண்மான்கள் மனத்தாபப்பட்டன என்ற இதில் மயக்கவணி, காண்க; காதல் மிகுதியாற் பெண்மான்களைக் குறித்து ஓடிவரும் போது வழியில் நேர்பட்ட மரங்களில் உராய்ந்து உடல் தேய்ந்து அம் மரங்களின் நறுமணத்தைப் பெற்று வந்தனவாகவுங் கொள்ளலாம். முதல் வாக்கியம், தன்மைநவிற்சியணி. வண்டு போர்த்தல்-மணத்தையும் மதுவையும் நாடி வண்டுகள் சூழ்தல்.

புறவம் - முல்லை நிலம். 'போர்ப்ப', என்றதனால், வனத்தை மறைக்குமாறுமிகுதியாக அடர்ந்து மொய்க்கின்றனவென்றதாம். ஓவிய - நேர்பட்ட: ஓவுதல் - ஒவ்வுதல்: இசைதல். இனி, ஓவியம் என்று எடுத்து, சித்திரத்தி லெழுதினாற்போன்ற [மிக அழகு பெற்ற] மரங்களி லென்றலுமாம்: கஸ்தூரிமானென்னும் ஒரு வகைமானினது நாபியிலுள்ள கொழுப்பு ஆதலால், கஸ்தூரிக்கு 'மிருகநாபி' என்று பெயர்; அது நாபி யென்றும் வழங்கும். அச்சொல், நாவியெனத் தமிழில் விகாரப்பட்டது. நாவிய - நாவியென்பதன்மேற் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். கலை - மானின்

ஆண்மைப்பெயர்; "இரலையுங் கலையும் புல்வாய்க் குரிய" என்றார் தொல்காப்பியனார். கலைமான் என ஒரு சாதிமானுமாம். 'கலை' என வந்ததனால், நவ்வி - பெண்மையை யுணர்த்திற்று. "'காமச் செவ்வி, யோவலின் மரங்கடோறு முரைத்தவாறுரிஞ்சி...நாவிய செவ்விநாற' என்று பாடமோதி, எல்லாரும் விரும்பும் அழகு நீங்காத மரங்கள் தோறும் (கஸ்தூரி மான்கள்) உராய்ந்த இடத்திலே (கலைமான்கள்) உராய்ந்து கஸ்தூரிமான்களின் மணம் வீச என்று உரைப்பாரு முளர். பி - ம்:—[1]பூவியற். [2]புறவமோங்கும். [3]போன்ற, பேர, போர்ப்ப. [4]தேவிய, தேவியல். [5]களிப்ப...செருக்கிய. [7]மான்கடோறும். [8]உரைத்தவற்றுரிஞ்சி. [9]போன. [10]நாவியின்மணங்கமற. [1]புணர்ந்த. (487)

வேறு.

36.—குவளை குவிதலும், முல்லை அரும்புதலும்.

[1]தேரி னன்னெடுந் திசைசெலச் செருக்கழிந் தொடுங்கும்
கூ[2]ர யிற்றருங் கண்ணெனக் குவிந்தன குவளை
மார னன்னவர் வரவுகண் [3]டுவக்கின்ற மகளிர்
மூரன் மென்குறு முறுவலொத் தரும்பின முல்லை.

(இ - ள்.) (தம்மைப்பிரிந்து தமது தலைவன்), தேரினன் - தேரிலேறியவனும், (பொருளீட்டுதல் முதலிய காரிய நிமித்தமாய்), நெடுந் திசை செல - நெடுந்தூரஞ் செல்ல, செருக்கு அழிந்து ஒடுங்கும் - (அப்பிரிவுத்துன்பத்தாற்) களிப்பொழிந்து ஒடுங்கிய, கூர் அயில் தரும் கண் என - கூரிய வேலாயுதத்தைப் போன்ற (மகளிர்) கண்கள் போல, குவளை குவிந்தன - கருங்குவளைமலர்கள் இதழ் குவிந்தன; மாரன் அன்னவர் வரவு கண்டு - மன்மதனைப் போன்ற [மிக அழகிய] தமது தலைவர் (அங்ஙனம் பிரிந்து சென்றிருந்து குறித்த காலந் தவறாமல்) மீண்டு வருதலைப்பார்த்து, உவக்கின்ற-மகிழ்கின்ற, மகளிர் - மாதரது, மூரல் மெல் குறு முறுவல் - பற்கள் சிறிது வெளித்தோன்றும்படி உண்டாகின்றபுன்சிரிப்பை, ஒத்து-போன்று, முல்லை அரும்பின - முல்லைக்கொடிகள் [அல்லது முல்லைச் செடிகள்] அரும்பெடுத்தன; (எ - று.)

உவமையணி. கருநிறமும் மென்மையும் வடிவும் பற்றி மகளிர் கண்ணுக்குக் கருங்குவளை மலரும், வெண்ணிறமும் வடிவும்பற்றிப் பல்லுக்கு முல்லையரும்பும் உவமையாம். 'மூரல் மென்குறுமுறுவலொத்து' என்றாரேனும், புன்சிரிப்புக் கொள்ளுங்காலத்துச்சிறிது வெளியே தோன்றும்பற்களைப் போன்று என்பது கருத்தாம். துன்பத்தாற் கண்மலர்ச்சியின்றி இடுங்குதல் இயல்பு; (அதுபற்றித் துன்பம் 'இடுக்கண்' எனப் பெயர்பெறுதலுங்காண்க.) நெடுந்திசை செல-வேற்றுத்திசையில் நெடுந்தூரத்திலுள்ள தேசாந்தரத்திற்குப் போக. இனி, 'தேரினன் நெடுந்திசை செல' என்பதற்கு - ஒற்றைத் தனியாழித்தேரவனான சூரியன்வேறொருபெருந்திசையாகிய மேற்கே

சென்றுவிட [அதாவது நன்றாய் அஸ்தமித்து விட] என்று உரைத்தலும் ஒன்று; பிரிந்த மகளிர் பிரிவாற்றாமைத் துயரால் பகலினும் இரவில் மிகுதியாக வருந்துதல் இயல்பு. 'செருக்கழிந் தொடுங்குங் கூரயிற்றருங்கண்' எனவே, பிரிந்த மகளிர்கண் என்பது போதரும். தேரினன் - சிறந்த தேரையுடையோன்; எனவே, சூரியனும். பிரிந்த தலைவியர் சூரியாத்தமனத்தைக் குறித்து மிக வருந்துதலை "ஒளியவன் விசும்பியங்குந், தேரும் பேர்யிற்றுத் திசைகளும் மறைந்தன செய்வதொன் றறியேனே" என்ற பெரியதிருமொழியினாலும் உணர்க. 'தேரின் மன்னெடுந் திசை செல' என்ற பாடத்திற்கு, மன் - தலைவன், தேரிற் செல என்றே பொருளாம்.

தேரில் நல்நெடுந் திசை செல என்று எடுத்து, பின்வாக்கியத்தில் வருகின்ற 'மாரனன்னவர்' என்பதையே, 'செல' என்றதற்கும் வினைமுதலாக்கியுரைத்தலும் அமையும். மற்றும்தேரினன் [தன்னைத் தேரின் மேல் தூக்கிவைத்துக் கொண்டவனான இராவணன்] நெடுந் தூரஞ் சென்றனனாகத் துணிவொழிந்து ஒடுங்கிய (பிராட்டியினது) கூரிய வேலையொக்குங்கண்கள் போலவென்றலும் ஏற்கும். 'கூரயிற் றருங் கண்ணெனக் குவிந்தனகுவளை' என்றது. "அடுக்கியதோற்றம் விடுத்தல்பண்பே" என்று தொல்காப்பியத்து உவமவியலில் விலக்கப்பட்ட அடுத்துவரலுவமை யாகாது; பொதுத்தன்மை வேறுபடுதலால். கூர்மையும், ஆடவர்நெஞ்சுறுதியைப் போக்குதலும் பற்றி, மகளிர் கண்ணுக்கு வேல்உவமை கூறப்படும்.

தரும் - உவமவுருபு. [2]'அயிற் கருங்கண்' என்று பாடமோதுவாருமுளர். மாரன் - வடசொல்; (பிராணிகளை ஆசைநோயால்) மரணவேதனைப்படுத்துபவன். 'குவளைமலர்போலும் கண்' என்றும் 'முல்லையரும்புபோலும் பல்' என்றும் தொன்றுதொட்டு உலகத்திற் பிரசித்தமாக வழங்குகின்ற உபமான உபமேயங்களை மாற்றி, 'கண்கள் போன்றன குவளைகள்' என்றும், "பற்கள் போன்றன முல்லையரும்புகள்" என்றும் சொல்லியது - எதிர்நிலையணி யெனப்படும். "உயர்ந்த தன்மேற்றே யுள்ளுங்காலை" என்றபடி உபமேயத்தினும் உபமானம் சிறந்திருத்தல்வேண்டுமென்பது அலங்கார நூலார் துணிபு ஆதலால், அதன்படி, உபமேயத்தை உபமானமாகக்கூறுதல் உபமேயத்தைச் சிறப்பிக்குமென உணர்க. பி - ம்:—[1]தேரும், ஒரும். [2]அயில் நெடுங். [3]உவப்புறு. (488)

37.—அருவிகள் பொன்னைக் கொழித்தலும், தாமரைக்கொடிகளின் எழுச்சியும்.

களிக்கு மஞ்ஞையைக் கண்ணுள ரினமெனக் கண்ணுற்று
அளிக்கு மன்னரிற் [1]பொன் வழங் கினமலை யருவி
[2]வெளிக்கண் வந்தகார் [3]விருந்தென [4]விருந்துகண் டுள்ளங்
[5]களிக்கு மங்கையர் முகமெனப் [6]பொலிந்தன கமலம்.

(இ - ள்.) களிக்கும் மஞ்ஞையை - (கார்காலத்திற்) களித்துக் கூத்தாடுகின்ற மயில்களை, கண்ணுளர் இனம்என - கூத்தாடிகளின் வர்க்கமென்று கருதி, கண்ணுற்று - (அவை ஆடுங் கூத்தைப்) பார்த்து, அளிக்கும் - அன்போடு (அவற்றிற்குப்பொன்னை) நிரம்பப் பரிசு கொடுத்தருள்கின்ற, மன்னரின் - அரசர்கள்போல, மலை அருவி - மலையினின்றுபெருகுகின்ற நீர்ப்பெருக்குக்கள், பொன் வழங்கின - (மலைச்சுரங்கங்களினின்று அடித்துக்கொண்டுவந்த) பொன்னை மிகுதியாகச் சொரிந்தன, வெளிக்கண் வந்த கார் - ஆகாயவெளியிலே வந்த மேகங்களை, விருந்து என - விருந்தாளிகளென்று கருதி, இருந்து கண்டு - (தாம் வீட்டினுள்) இருந்தபடியே (அவரது வருகையை) நோக்கி, உள்ளம் களிக்கும் - மனம் மகிழ்கின்ற, மங்கையர் - மாதர்கள், முகம் என - முகம் (மலர்தல்) போல, கமலம் - தாமரைக்கொடிகள், பொலிந்தன - (நீரினுள்ளே) எழுச்சி பெற்றன; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. கண்ணுள் - கூத்து; அதனை யாடுபவர், கண்ணுளர். இனி, கண்ணுளர் - மூங்கிலின்மேல் ஏறியாடுங் கழைக்கூத்தாடிகளுமாம்; கண் - கணு: மூங்கிலுக்குச் சினையாகுபெயர்; 'வரை' என்பதுபோல; அதில் ஏறுபவர், கண்ணுளர் என்க. நீர்நிலைகள் கோடைகாலத்தில் வற்றியபோது, "அக்குளத்திற், கொட்டியுமாம்பலும் நெய்தலும் போலவே, ஒட்டி யுலர்வார்" என்றபடி. அவற்றிலிருந்த தாமரைக்கொடிகளும் வாடி உலர்ந்து கிடக்கும்; பின்புகார்காலத்தில் நீர்நிலைகள் நிரம்புமளவில், "நீரளவேயாகுமாம் நீராம்பல்" என்றபடி அக்கொடிகள் தளிர்த்து எழுந்து செழிப்பனவாம். வானத்தில் மழை வந்தவளவிலே நீர்நிலைகளின் அகத்தே தாமரைக்கொடிகள் எழுச்சிபெறுதற்கு, விருந்தினர்வாயிலில்வந்தவளவில் அவர்வருகையை மாதர்கள் வீட்டின் அகத்திலிருந்தபடியே நோக்கி மனமகிழ்ந்து அம்மகிழ்ச்சியால் முகமலர்தலை உவமைகூறினர்; இவ்வாறன்றி, 'மங்கையர் முகமெனப்பொலிந்தன கமலம்' என்பதற்கு - மகளிர்முகம்போலத் தாமரைமலர்கள் மலர்ந்தன என்று பொருள்கொள்ளுதல், கார்காலத்தின் இயல்பிற்குச் சிறவாது: இத்தன்மையை நோக்கி 'உள்ளங்குளிர்க்கு மங்கையர் முகமெனத் தளிர்த்தன கோடு' என்று பாடங்கொண்டாருமுளர். இனி, மழைபெய்தவளவிலே தாமரைக்கொடிகள் செழிப்பதுமாத்திரத்தைக்கொண்டு, தாமரைமலர்ந்தனவென்னுமளவாக வருணித்தலும் ஒருசார் கவிமரபாம்; மேல் 45 - ஆஞ் செய்யுளின் மூன்றாமடி பார்க்க. படிதாண்டாப் பத்தினிகளாதலால் இருகத்தின் அகத்திலிருந்தபடியே கண்டனர். "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங், கடுத்தது காட்டும் முகம்" என்றபடி, உள்ளங்களித்ததுபற்றி முகம் மலர்ந்ததாம். "மோப்பக்குழையு மனிச்சம் முகந்திரிந்து, நோக்கக்குழையும் விருந்து" ஆதலால், விருந்தினர் வருந்தாதபடி அவரைக்கண்டவளவில் இன்முகங் கொள்ளுதல் விருந்தினரையுபசரிப்பவர்க்கு இன்றியமையாமையுணர்க. கணவன்கருத்திற்கு ஏற்ப விருந்தினரையுபசரித்தல், இல்

வாழ்க்கைத்துணைவியராகும் மணைவியரியல்பு; "பெருந்தடங்கட்பிறை நுதலார்க்கெலாம், பொருந்துசெல்வமுங்கல்வியும் பூத்தலால், வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும், விருந்துமன்றி விளைவனயாவையே" என்றார், பாலகாண்டத்து நாட்டுப்படலத்திலும்: சிலப்பதிகாரத்திற் கண்ணகி "தொல்லோர்சிறப்பின், விருந்தெதிர்கோடலுமிழந்த வென்னை" என்று கழிவிரக்கத்தோடுகூறியதும் இதுபற்றியே; திருக்குறளில் வாழ்க்கைத்துணைநலத்தில் மனைத்தக்கமாண்புகளில் விருந்தயர்தலை அடக்கினர் பரிமேலழகரும். '[2]வெளிக்கண் வந்தனர் விருந்தென' என்றபாடம் வாயிலில் வந்துள்ளார் விருந்தாளிகளென்று அறிந்து என்று பொருள்படும். பி-ம்:--[1]பொன்மழை வழங்கின. [2]விளிக்க வந்தகார், வெளிக்கண்வந்ததார், வெளிக்கண்வந்தனர். [3]அகன்றது. [4]வியந்து. [5]தளிர்க்கும். [6]தழைத்தன, களித்தன. (489)

38.—தேனீ.

[1]சரத நாண்மல ரியாவையுங் குடைந்தன [2]தடவிச்
சுரத[3]நூல்தெரி விடரெனத் தேன்கொண்டு தொகுப்ப
பரத நூன்முறை நாடகம் பயனுறப் பகுப்பான்
இரத மீட்டுறுங் கவிஞரைப் பொருவின தேனீ.

(இ-ள்.) சுரதம் நூல் - சிற்றின்பவிளையாட்டு நூல்களை, தெரி- ஆராய்ந்து அறிந்த, விடர் என - காமுகர்கள் (பலமகளிரிடத்துஞ் சென்று சேர்ந்து இன்பங்கொள்ளுமாறு)போல, சரதம் நாள்மலர் யாவைஉம் குடைந்தன தடவி - ரஸத்தோடு [தேனோடு] கூடினவான அன்றுமலர்ந்த மலர்களையெல்லாம் துளைத்து முழுவதும் பரிசித்து, தேன் கொண்டு - (அவற்றினின்று) தேனைக்கொண்டு, தொகுப்ப - சேர்ப்பனவாகிய, தேன் ஈ - தேனீக்கள், பரதநூல் முறை - பரதசாஸ்திரத்திற்கூறிய முறைமைப்படி, நாடகம் - நாடகத்தை, பயன் உற பகுப்பான் - (காண்பவர்க்கு இனிமையாகிய) பயன் மிகுமாறு பாகுபாடுகளமையச் செய்தற்பொருட்டு, இரதம் ஈட்டுறும் - ரஸங்களைச் சேர்க்கின்ற, கவிஞரை - கவிகளை, பொருவின- ஒத்தன;(எ - று.)

உவமையணி. விடர் - தீயொழுக்கமுடைய காமுகர். பருவமடைந்த பல மாதரிடஞ் சென்று கூடிக்கூலரவித் தழுவி இன்பங்கொள்ளுதல், அவரியல்பு. தேனோடுகூடி மலர்ந்த புதுமலர்களிலெல்லாங் குடைந்து தடவித் தேன்கொள்ளுந் தேனீக்கு அவர் உவமையாயினர். ("மாதவியீன்ற மணிமேகலைவல்லி, போதவிழ் செவ்வி பொருந்துதல் விரும்பிய, உதயகுமரனு முலகாள்வண்டின், சினைதயாவுள்ளஞ்செவ்வி தினருந்த", 'ஒருதனியோங்கிய திருமணிக் காஞ்சி......காமர்செவ்விக் கடிமலரவிழ்ந்த, துதயகுமரனெனு

மொருவண் டுணீஇய, விரைவொடுவந்தேன்" என்ற மணிமேகலை யும், "பெண்டிர்நலம் வௌவித்தண்சாரற்ருதுண்ணும்வண்டினர்" என்ற கலித்தொகையும் இங்குக் காணத்தக்கன.) சுரதநூல் - காம சாஸ்திரம். பாவம் ரஸம் தாளம் என்னும் மூன்றின் அமைதி யையு முடைமையால், நாட்டியசாஸ்திரத்திற்குப் பரதசாஸ்திர மென்று பெயராம்; பரதாசாரியரென்பவரால் போற்றப்பட்ட தென்பதுபற்றி அங்ஙனம் பெயர் வந்த தென்றலும் உண்டு. 'நாடகம் - கதைதழுவிவருங் கூத்து' என்றனர், அடியார்க்குநல் லார். காவியவகைபலவற்றுள், சிராவியபிரபந்தங்களாகிய [கேட் பதற்குரிய நூல்களாகிய] மற்றையவற்றினும் திருசியபிரபந்த மாகிய [காட்சி நூலாகிய] நாடகம் சிறந்ததாம். அந்த நாடகம், வடமொழியிற் பத்துவகையாகப்பகுக்கப்படும். அவற்றின் இலக் கணங்களும், அவற்றிற்குரிய சந்திகளும், அவற்றின் பகுப்புக் களும், அவற்றின் இயல்புகளும் அளவிறந்தன: அவையெல்லாம் இங்கு விரிப்பிற் பெருகும். நாடகம், ஐந்து அல்லது ஏழு அங்கங் களை யுடையதாய் வரும். ரஸ மெனினும், சுவையெனினும் ஒக்கும். உவகை, பெருமிதம், அழுகை, வியப்பு, நகை, அச்சம், இளிவரல், வெகுளி, நடுநிலை என்னும் ஒன்பதும் நாடக ரசமாம்; இவை - முறையே வடமொழியில் சிருங்காரம், வீரம், கருணை, அத்புதம், ஹாஸ்யம், பயாநகம், பீபத்ஸம், ரௌத்ரம், சாந்தி எனப்படும். இந்த நவரஸங்களும் அமைய இயற்றப்படும், நாடகம் உத்தம சாதியாம்; இரண்டொரு சுவைகள் குறையக் கூறலும் உண்டு. காண்பவர்க்கு இடந்தோறும் சுவை மிகவும்தோன்றுமாறு ரஸங் களைச் சிறப்புற அமைத்தாலன்றி நாடகம் சிறவா தாதலால், அவற்றை நாடித் தொகுத்தல், நாடகமியற்றுங் கவிகட்கு இன்றி யமையாக்குணமாம். பலவகைரசங்களைநாடிக்கொணர்ந்து ஒருங்கு தொகுக்கும் நாடகப் புலவர் போல, புஷ்பரசமாகிய தேனைப் பல மலர்களினின்றுங் கொணர்ந்து கூட்டில்தொகுத்தன தேனீக்க ளென்பதாம்; (ரஸம்; சுவையும், ஸாரமும்.) பி - ம்:—[1] கருதி. [2] கல்வி. [3] நூனெறி. சில பிரதிகளில் இச்செய்யுள் "களிக்குமஞ்ஞை" என்ற செய்யுட்கு முன் உள்ளது. (490)

39.—மான்கள் களித்தல்.

நோக்கி னனமை [1] நோக்கழி [2] கண்டநுண் மருங்குல்
தாக்க [3] ணங்கருஞ் சீதைக்குத் [4] தாக்கருந் துன்பம்
[5] ஆக்கி னனம துருவினென் றரும்பெற லுவகை
[6] வாக்கி னுரை யாமெனக் களித்தன மான்கள்.

(இ - ள்.) 'நோக்கினல் - (தனது) பார்வையழகினால், நமை - நம்மை, நோக்கு அழி கண்ட - பார்வையழகு கெடுமாறு செய்த [வெற்றிகொண்ட], நுண் மருங்குல் - நுண்ணிய இடையையுடைய, தாக்கு அணங்கு - மோகினி போன்ற, அருஞ் சீதைக்கு - அருமை யான சீதைக்கு, தாக்கு அருந் துன்பம் - தாக்கும்படியான (பொறுத்

தற்கு) அரிய துன்பத்தை, நமது உருவின் ஆக்கினன் -(மாரீசனென்னும் ராக்ஷஸன்) நம்முடைய [மான்] வடிவத்தைக் கொண்டுசெய்தான், என்று - என்பதனால் (நமக்கு உண்டாகின்ற), அரும் பெறல் உவகை - பெறுதற்கு அரிய மகிழ்ச்சியை, வாக்கினன் உரையாம் - வாயாற் சொல்லக்கடவோமல்லோம்,' என - என்று (இராமனிடத்து அச்சத்தாற் பேசாமற் களித்தாற் போல), மான்கள் களித்தன - (அந்தரிசியமூககிரியில்) மான்கள் குரல்காட்டாமற் களிப்புற்றன; (எ - று.)

இராவணன் சூர்ப்பணகைவார்த்தையினாற் சீதையினிடங் காதல்கொண்டு அப்பெண்ணரசியைக்கவர்ந்து வரக்கருதி அதற்கு மாரீசனைத் துணையாக வேண்ட, அவன் மாயையாற் பொன்மானுருவங்கொண்டு ஜாநகியுடன் ஸ்ரீராமலக்ஷ்மணர் உறைகின்ற ஆச்சிரமத்தின் அருகிற்சென்று விளையாட, அப்பொன்மானைப் பார்த்துச் சீதை அதனிடம் ஆசைகொண்டு அதனைப் பிடித்துத் தருமாறு பலமுறை வேண்ட, இராமன் அதனைத்தொடர்ந்து சென்றபோது, அது கையிலகப்படாமல் ஓட்டங்காட்டி நெடுந்தூரம் இழுக்கடிக்கவே, அதுகண்டு இராமன்மாயமானென்று துணிந்து அதன்மேல் அம்புதொடுக்க, மாரீசன் இராமபாணம்பட்டு விழுந்து இறக்கும்போது தனதுகுரலை விட்டு இராமன் குரலைக் கொண்டு, அவன் தனக்கு அபாயம் நேர்ந்தவிடத்துமனைவியையும் தம்பியையும் கூப்பிடுமாறுபோல, 'ஹா ஸீதே! ஹா லக்ஷ்மணா!!' என்று அரற்றி இறக்க, அக்கூக்குரல் கேட்டவுடனே, சீதை, இராமனுக்கு அபாயம் நேர்ந்ததென்றே கருதி வருந்தி இலக்குமணனை இராமனிடத்திற்கு வற்புறுத்தியனுப்ப, இவ்வாறு ஒருவருமின்றிச்சீதை தனித்துநின்ற சமயம் பார்த்து இராவணன் அவளை எடுத்துச் சென்று இலங்கையிற் சிறைவைத்தனனென்ற செய்தி, ஆரணிய காண்டத்தில் விரித்து உரைக்கப்பட்டது.

கண்ணழகிற் சீதைக்கு ஒப்பாகாமல் தோற்றுப்போய்த் தங்களை அவள் வென்றதற்காக அவளிடங்கறுக்கொண்டு எதிரொன்றுஞ் செய்ய வல்லமையில்லாதிருந்த மான்கள், மாரீசன் தங்கள் வடிவத்தைக் கொண்டு, அவட்குப் பெருந்தீங்கு செய்ததுபற்றி மகிழ்ச்சிகொண்டு, அம்மகிழ்ச்சியை வாய்விட்டுக்கூறினால் இராமன் அந்த மாயமானைப்போலவே தங்களையும் அம்பெய்து கொன்றுவிடுவானென்று அஞ்சிப் பேசாமற் களித்துநின்றாற்போன்றது என்று, அக்காரகலத்தில் அம்மலையிலே மான்கள் களிப்படைந்தும் ஆரவாரஞ்செய்யாமல் நின்றமையை வருணித்தார்: தற்குறிப்பேற்றவணி. மதங்கர்முதலிய முனிவர்களுடைய தவத்திற்கு இடையூறுகுமோ என்றெண்ணி மான்கள் ஆரவாரஞ்செய்யாமல் ஊமைகள்போல் மௌனமாக இருத்தல்பற்றி அம்மலைத்தொடர்க்கு 'ருசியமூகம்' என்று பெயராயிற்றென்பது, இங்கே கருதத்தக்கது. ருச்யம் - மான், மூகம் - ஊமை. விசுவாமித்திரமுனிவனது யாகத்தில்

இராமபிரானுக்குத் தோற்ற மாரீசன் சுயரூபத்தோடு ஒன்றும் எதிர் செய்யமாட்டாமல் மான்வடிவங்கொண்டு பழிதீர்த்துக்கொண்டது போல, சீதையின் கண்ணழகுக்குத் தோற்ற மான்கள் தாம் எதிரொன்றுஞ் செய்யமாட்டாது மாரீசனது மான்வடிவத்தாற்பழி தீர்த்துக்கொண்டவன்வாகக் கருதிக் களித்தன வென்க. 'வாக்கினுனுரையாமென' என்றதில், (அம்மகிழ்ச்சி சொல்லுக்கு அடங்குவதன்றுதலால்) அதனைச் சொல்லவல்லோமல்லோமென்று என்ற பொருளும் தோன்றும்; வரம்புகடந்த மகிழ்ச்சி யுண்டானபொழுது ஒன்றுஞ் சொல்லமாட்டாமற் சும்மா இருத்தல், இயல்பு: (இராவணனை இராமன் கொன்றிட்டசெய்தியை அநுமான்வந்து சொன்னவளவிற் சீதை, இனைய தின்ன இயம்புவதென்பதோர்நினைவிலாது நெடிதிருந்தா ளென்ப; யுத்தகாண்டத்து மீட்சிப்படலத்தில் "மேக்கு நீங்கிய வெள்ள வுவகையா, லேக்கழற் றுன்றியம்புவதியாதென, நோக்கிநோக்கி யரிதென நொந்துளேன், பாக்கியம் பெரும்பித்தும் பயக்குமோ" என்பதுங் காண்க. மான்கள் கார்காலத்தியல்பாற் களித்தும் அவ்விடத்தினியல்பாற் குரல் காட்டாமலும் இருந்ததற்கு, இவ்வகையான ஒருகாரணத்தைக் கவி தாமாகக் கற்பித்து உரைத்தார்; " இயல்பின்விளை திற னன்றியயலொன்று, தான் குறித்தேற்றுதல் தற்குறிப்பேற்றம் " ஆதலால், இவ்வருணனை தற்குறிப்பேற்றமாம். மாயையால் எந்த வடிவம் வேண்டுமானாலும் கொள்ளவல்லவனான மாரீசன் வேறு எவ்வடிவமுங் கொள்ளாமல் மான்வடிவுகொண்டது. இவ்வருணனைக்கு மூலம்.

'கண்ட' என்பது, செய்தவென்னும் பொருளதாய் நின்றது; 'திருநகரங்கண்ட படலம்', 'மநுநீதிகண்ட புராணம்' என்ற இடங்களிற் போல. 'நமைநோக்கழிகண்ட' என்றது, நம்மைக் கண்ணைக் கெடுத்த என்றாற்போல நின்றது. 'நுண்மருங்குல்' என்றது, அவளது மெல்லியல்போடு, துன்பம் பொறுக்கும் ஆற்றலின்மையையுங் காட்டும். தாக்கருந்துன்பம் - இராமவிரகம். தாக்கு அணங்கு-ஆடவரைத் தாக்கி வருத்தும் மோகினியென்னும் பெண்தெய்வம்; இது - மிக்க அழகிற் சீதைக்கு உவமம். பிறரைத்தாக்கும் பெண்ணான அரிய சீதைக்குத் தான் தாக்கும் அரியதுன்பத்தைச் செய்தானென ஒரு சமத்காரந்தோன்ற நின்றது, இரண்டாமடியின் சொற்போக்கு. தாக்கணங்கு அரு என்ற இரண்டும் சீதைக்கும், தாக்கு அருஎன்ற இரண்டும் துன்பத்திற்கும் அடைமொழி. இனி, தாக்கு அணங்கு - எல்லாரிடத்திலுஞ்சென்று சேருந் திருமகளாகிய என்பாரும், கொல்லியம்பாவை போன்றவளான என்பாரும், 'தாங்கரு' என்பது 'தாக்கரு' என விகாரப்பட்டதென்று கொண்டு பொறுத்தற்கரிய என்று உரைப்பாரும், [4]தாங்கரு என்று பாடமோதுவாருமுளர். பி - ம்:—[1]நோக்கழிசெய்த, நோக்கழிசெய்திடும். [2]நுடங்கு நுண்மருங்குல். [3]அணங்கெனும். [5]ஆக்கினுழுருவாலெனும், ஆக்கினேனுருவாலெனும். [6]வாக்கினுலுரையாவென. (491)

40.—அன்னப்பறவைகள் நதிகளிற் குடைந்து விளையாடுதல்.

நீடு நெஞ்சுறு [1]நேயத்தா னெடிதுறப் பிரிந்து
[2]வாடு கின்றன [3]மருளுறு காதலின் [4]மயங்கிக்
[5]கூடு நன்னதித் [6]தடந்தொறுங் குடைந்தன படிவுற்று
ஆடு கின்றன கொழுநரைப் பொருவின வன்னம்.

(இ - ள்.) நெடிது உற பிரிந்து - நெடுநாளாக விட்டுப்பிரிந்து, நெஞ்சு உறு நீடு நேயத்தால் - மனத்திற் பொருந்திய மிக்க அன்பினால், வாடுகின்றன - வாட்டமடைந்தனவாயிருந்து, மருள் உறு காதலின் மயங்கி - மோகத்தைச் செய்யும்படியான மிக்க ஆசையுடன் வந்து சேர்ந்து, கூடு நல் நதி தடம் தொறுஉம் குடைந்தன படிவு உற்று ஆடுகின்றன - (தாம்) வந்துசேரப்பெற்ற சிறந்த நதிகளின் இடந்தோறும் துளைந்து நீராடி விளையாடுகின்றனவான, அன்னம் - அன்னப்பறவைகள்,—கொழுநரை பொருவின - கணவரைப் போன்றன; (எ - று.)

நதிகளில் நீர்வற்றியகாலத்தில் அவற்றைவிட்டுப்பிரிந்து போய் நெடுநாளாய் அந்நதிகளினிடங்களைப்பற்றிய ஞாபகத்துடன் வாடியிருந்த அன்னப்பறவைகள் கார்காலம் வந்தவளவிலே மிக்க ஆசையுடன்மீண்டுவந்து 'காய்ந்த மாடு கம்பங்கொல்லையில்விழுந்தது' என்றாற்போல அந்நதிகளிற்பலபடி துளைந்துபலமுறை நீராடி விளையாடுகின்றன; அவற்றிற்கு, தலைவியரை நெடுநாள் பிரிந்து அன்பினால் வருந்தியிருந்த தலைவர் கார்காலம் வந்தவளவிலே மிக்க காதலுடன் மீண்டுவந்து அவர்களிடம் கூடிக்குலாவிக்களித்தலை உவமை கூறினார்: உவமையணி. அன்னத்திற்குக் கூறிய அடைமொழிகளின் விஷயம், கொழுநர்க்கும் ஏற்றது. 'கூடும் நல் நதித் தடம் தொறும்' என்பதற்கு - சிறந்த நதியின்பெருக்கு வந்து சேரப் பெற்ற தடாகங்களி லெல்லாம் என்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1]நேயத்தாற்பிரிந்துழிநினைந்து, நேயத்தபிரிந்துழிநினைந்த, நேயத்தர் பிரிந்துழிநினைந்து. [2]ஓடுகின்றன. [3]மகளிர்தங், மாதரிற்கோகிலம். [4]உயங்கி, மயக்க. [5]கூடுகின்றனநதித்தடம். [6]பிரிந்தது தடந்தொறுங் குடைவுற்று,...படிந்தனகுடைவுற்று, தடந்தொறும்படிந்தன குழைவுற்று, ...குடைவுற்று. (492)

41.—கொக்குகள் வரிசை வரிசையாய் வானத்திற் பறத்தல்.

காரெ னும் [1]பெயர்க் கரியவன் மார்பினிற் [2]கதிர்முத்து
ஆர மென்னவும் பொலிந்தன [3]வளக்கரு மளக்கர்
[4]நீர்மு கந்தமா மேகத்தி [5]னருகுற நிரைத்துக்
[6]கூரும் வெண்ணிறத் திறத்தன பறப்பன குரண்டம்.

(இ - ள்.) அளக்க அரும் - அளவிடுதற்கு அருமையான, அளக்கர் - கடலினின்று, நீர் முகந்த - நீரைக் கவர்ந்துசெல்கின்ற, மா மேகத்தின் - கரிய மேகத்தின், அருகு உற - சமீபத்திலே

பொருந்த, நிரைத்து - வரிசைப்பட்டு, கூரும் வெள்நிறம் திறத்தன பறப்பன - மிகுதியான வெண்மைநிறத்தின் மேன்மையையுடைய வையாய்ப் பறக்கின்றவையான, குரண்டம் - கொக்குகள்,—கார் எனும் பெயர் கரியவன் மார்பினில் - கிருஷ்ணனென்று (நிறத்தி னுற்) பெயர்பெற்ற கருநிறமுடையவனுன திருமாலின் மார்பில் அணிந்த, கதிர் முத்து ஆரம்என்னஉம் - ஒளியுள்ள முக்தாஹாரம் போலவும், பொலிந்தன - விளங்கின; (எ - று.)—உம்மை - அடுத்த செய்யுளில் வரும் வருணனையை நோக்கி எதிரது தழுவிய எச்சமாய் நின்றது.

நிறமும் தோற்றமும் பற்றி வந்த உவமையணி. கார் - கருமை யென்னும் பண்புப்பெயரின் விகாரம்; கருநிறமுடையவனைக்குறிக் கும்போது, பண்பாகுபெயர். இனி, கார்எனும் பெயர் கரியவன் - காளமேகமென்னும் பெயரையுடைய திருமால் என்றுங் கொள்ள லாம்; (பாண்டிய நாட்டிலுள்ள திருமோகூரென்னுந் திருப்பதியி லெழுந்தருளியிருக்கும் எம்பெருமானது திருநாமம் - காளமேகப் பெருமாள் என்பது.) அளக்க அரும் என்பது, அளக்கரும் எனத் தொகுத்தல் விகாரமடைந்தது; அருமை யென்ற பண்புப்பெயர், ஈற்றுஐகாரம்மாத்திரம்கெட்டது. 'அளக்கர்' என்ற பெயர் - அளக்க அரு என்பதன் விகாரமாய், அளத்தற்கு அரியது என்று காரணப்பொருள்படும்; அந்த உறுப்புப்பொருள் தோன்ற 'அளக்கரும் அளக்கர்' என விசேடித்துக்கூறினர். கடலினின்று எழுந்து திரண்டு தொகும் நீராவிகளைக் கடலினின்று நீரை மொண்டு சென்ற மேக மென்றல், மரபு. முகத்தல் - மொள்ளுதல். குரண்டம் - வடசொல். [6]'கூரும் வெண்ணிறத்திரையெனப் பறப் பன' என்ற பாடம், 'ஆரமென்னவும் பொலிந்தன' என்ற இடத்து உம்மையை இறந்ததுதழுவிய எச்சமாகக்கொள்ளுதற்கு ஏற்கும். திரை என - அலைகள் போல வென்க. பி - ம்:—[1]பெயர்ப்பெரியவன், பெயற்கரியவன், நிறக்கரியவன். [2]கவின்முத்து, திகழ்முத்து, கான்முத்து. [3]அளப்பரும். [4]நீர்நுகர்ந்தமாமேகத்தின். [5]அருகுற நிறைத்து, மருங்குறநிரைத்த or நிரைத்து. [6]கூரும்வெண்ணிறத் திரையென,.... வெண்டிரைநிகர்த்தன,.... எண்ணிருந்திறத்தன. கூருமெண்ணில் வெண்ணிறத்தன பற்பல குரண்டம் என்றும் நான்காமடியிற் பாடமுண்டு. (493)

42.—நாரைகள் வரிசை வரிசையாய் வானத்திற் பறத்தல்.

[1]மருவி நீங்கல்செல் லாநெடு [2]மாலைய வானில்
பருவ மேகத்தி னருகுறக் குருகினம் பறப்ப
திருவி னுயக னிவனெனத் தேமறை தெரிக்கும்
ஒருவன் [3]மார்பினி [4]னுத்தரி யத்தையு மொத்த.

(இ - ள்.) மருவி - (பல) ஒன்றுசேர்ந்து, நீங்கல் செல்லா - (நடுவில்) நீங்கிப்போகாமல் - நெடு மாலைய-நீண்ட வரிசைப் பட்டன

வாய், வானில் - ஆகாயத்தில், பருவம் மேகத்தின் அருகு உற - கார் காலத்துக் காளமேகத்தின் சமீபத்திலே பொருந்த, பறப்ப-பறக்கின்றவையான, குருகு இனம் - நாரைகளின் கூட்டங்கள்,—திருவின் நாயகன் இவன் என - "இலக்குமியின் கணவன் இவன்" என்று, தேமறை தெரிக்கும் - தெய்வத்தன்மையுள்ள வேதங்கள் சிறப்பாகத் தெரிவிக்கப்பெற்ற, ஒருவன்-ஒப்பற்ற [ஏகமூர்த்தியான] திருமாலின், மார்பினின்-திருமார்பிற் சாத்திய, உத்தரியத்தையும்-மேலாடையையும், ஒத்த - போன்றன; (எ - று.)

மின்னலோடுகூடிய காளமேகத்தின் அருகில் வரிசையாக நெருங்கிப் பறக்கும் வெண்குருகுகள், திருமகளைத் திருமார்பிற் கொண்டவனை திருமாலின்மார்பிற்சாத்திய வெண்பட்டு உத்தரீயம் போன்றனவென்க. இதுவும், நிறமும் தோற்றமும் பற்றி வந்த உவமையணி. நாரை வெண்ணிறமுடையது. அதன்காலின்செந்நிறம், உத்தரீயத்தின் கரைபோலுமென்க. கிருகஸ்தாச்சிரமத்தவர் மார்பில்உத்தரீயந்தரித்தல், மரபு. திருமால் தோளில்உத்தரீயம் சாத்தியுள்ளதை "மீயோங்கு செம்பொன் முடியாயிர மின்னிமைப்ப, ஓயா வருவித்திர ளுத்தரியத்தையொப்பத், தீயோருளராகிய தாலவர்தீமைதீர்ப்பான், மாயோன் மகரக்கடனின்றெழு மாண்பதாகி" என்று சுந்தர காண்டத்திலுங் கூறுவர். திருவின்நாயகன் இவன் - எல்லா ஐசுவரியங்களுக்குந் தலைவனிவனேயென்றவாறும். வேதத்திற்குத் தெய்வத்தன்மை - என்றும் ஒருபடிப்பட நித்தியமாயிருத்தலும், எம்பெருமானால் வெளியிடப்படுதலும், பொருள்களின் இயல்பை உள்ளபடி கூறுதலும், அனைவராலும் சிறந்தபிரமாணமாக அங்கீகரிக்கப்படுதலும் முதலியன. ஒருவன் - அத்விதீயன். பி - ம்:—[1]மருவல். [2]மாலையவானி, மாலியவானில். [3]மார்பினில். [4]உத்தரியத்தினையொத்த. (494)

43.—பசும் புல்.

உறவெ துப்புறுங் கொடுந்தொழில் வேனிலா னொழியத்
[1]திறநி னைப்பருங் காரெனுஞ் செவ்வியோன் சேர
[2]நிறம னத்துறு [3]குளிர்ப்பினி னெடுநில மடந்தை
புற[4]ம யிர்த்தலம் பொடித்தன போன்றன [5]பசும்புல்.

(இ - ள்.) பசும் புல் - (தரையில் எங்கும் முளைத்துச் செழிக்கின்ற) பசு நிறமான புற்கள்,—உற வெதுப்பு உறும் கொடுந்தொழில்-மிகவும் தாபத்தைச்செய்கின்ற கொடுந்தொழிலையுடைய, வேனிலான் - வெயிற்காலமாகிய அரசன், ஒழிய - நீங்க, திறம் நினைப்பு அரு - மேன்மையை நினைத்தற்கும் அரியதாகப்பெற்ற [மிக மேன்மையுள்ள], கார் எனும் - கார்காலமாகிய, செவ்வியோன் - நற்குண நற்செயல்களை யுடையவன், சேர - (அரசனாய்) வந்துசேர, (அதுபற்றி), நெடு நிலம் மடந்தை - பெரிய பூமிதேவி, நிறம் மனத்து உறு - மாட்சி பெற்ற (தன்) மனத்திற் கொண்ட,

குளிர்ப்பினின் - குளிர்ச்சியால் [மகிழ்ச்சியால்], புறம் பொடித்தன - உடம்பு முழுவதுஞ் சிலிர்த்தனவான, மயிர்த்தலம் - மயிர்களை, போன்றன - ஒத்தன; (எ - று.)

தனக்கும் தன்குடிமக்கட்கும் மிக்கதாபத்தைச்செய்து கொடியவனாயிருந்த வெயிற்காலமாகிய அரசன் நீங்க, அதற்கு மாறாகத் தனக்கும் தன் பிரஜைகளுக்குங் குளிர்ச்சியைச் செய்பவனும் மனத்திற்கும் எட்டாத அளவு மேன்மையை யுடையவனுமான கார்காலமென்கிற உத்தமபுருஷன் அரசனாய் வந்து சேரப்பெற்றதை பற்றி, பூமிதேவி அகங்குளிர்ந்து உடம்பு முழுவதும் மயிர்சிலிர்த்தாற் போன்றன, அக்கார்காலத்திலே தரையிலெங்கும்முளைத்துச்செழிக்கின்ற பசும்புற்கள் என்பதாம்: தற்குறிப்பேற்றவணி. மயிர்சிலிர்த்தல், மகிழ்ச்சியாலும் குளிர்ச்சியாலும் ஆவது. காலம், ருது என்பன வடமொழியில் ஆண்பாற்சொற்களாதலால், அவற்றை ஆண்மகனைக் குறித்தார்: காலம் உலகத்தையும் உயிர்களையும் தனவசப்படுத்தி நடத்தலால், அதனை அரசனாகக்கூறுதல் தகும்; சிலப்பதிகாரத்தில் "காரரசாளன்," "பனியரசியாண்டுளன்", "இன்னிளவேனில் யாண்டுளன்" என்றவை காண்க. செவ்வியோன் - நல்லோன்.

வெதுப்பு - வெதுப்புதல், வெதும்பச்செய்தல்: பிறவினை முதனிலைத்தொழிற்பெயர். திறம் - உலகமும் அதற்கு உறுதியாகிய அறம் பொருளின்பங்களும் நடத்தற்கு ஏதுவாதல்; திருக்குறளில் 'வான்சிறப்பு' என்னும் அதிகாரத்திற் பாக்கக் காண்க. பி - ம்:—[1] திறவினைப்புறும், தெறவினைப்பருக், தெறவினைப்புறுங். [2] வினைமனத்துறு, விறமனைத்துறு. [3] களிப்பினில். [4] மயிர்க்குலம். [5] புட்கள். (495)

44.— மயில்கள் தோகைவிரித்து ஆடுதலும், கூவுதலும்.

[1] தேன வாமலர்த் திசைமுகன் முதலினர் தெளிந்தோர்
ஞான நாயக[2]னவையுற [3]நோக்கினர் நல்கக்
[4] கானம் யாவையும் பரப்பிய [5]கண்ணெனச் சனகன்
மானை நாடிநின் றழைப்பன போன்றன மஞ்ஞை.

(இ - ள்.) தேன் அவாம் மலர் திசைமுகன் முதலினர் தெளிந்தோர் - தேன் சொரிகின்ற (திருமாலின் நாபித்) தாமரைமலரில் தோன்றிய நான்கு முகமுடையவனான பிரமன் முதலிய தெளிந்த அறிவுடையவர்கள், ஞானம் நாயகன் அவை உற நோக்கினர்-தத்துவ ஞானத்திற்குத் தலைவனான இராமபிரானது (சீதையைப் பிரிந்ததனாலாகிய) துன்பத்தை நன்றாகப் பார்த்தவர்களாய், நல்க - (சீதையை நாடி) உதவும் பொருட்டு, கானம் யாவையும் பரப்பிய - காடுகளிலெல்லாம் பரப்பிய, கண் என - கண்கள் போலத்தோன்றாநிற்க,— மஞ்ஞை - மயில்கள்,—(தோகைக் கண்களைப் பரப்பி), சனகன் மானை

நாடி நின்று - ஜாநகிப்பிராட்டியைத் தேடிநின்று, அழைப்பன போன்றன - அழைப்பவற்றை யொத்தன; (எ - று.)

கார்காலத்தில் மயில்கள் களித்துத் தமது தோகைக்கண்களைப் பரப்பிக்கொண்டு கூத்தாடுதலும், கூவுதலும் இயல்பு. அப்படி அக்காடுகளெங்குங்காணப்படுகின்ற மயிற்றோகைக் கண்களை, எண்கண்ணனான பிரமன் முதலிய தலைமைத்தேவர்கள், இராமபிரான் சீதையைப் பிரிந்துவருந்துதலைப்பார்த்துத் தாம் சீதையை நாடிக் கண்டு உதவக் கருதிக் காடுகளிலெங்கும் கண்களைப்பரப்பினாற் போலுமென்றும்; அம்மயில்கள் தோகைக்கண்களைப் பரப்பிக்கொண்டு கூத்தாடிக் கூவுதலை, அவை தமது மிகப்பலகண்களைப் பரப்பிக்கொண்டு எழும்பி எழும்பிச் சீதை சென்ற இடத்தை நாடுவனவும் அவளை உரத்த குரல்கொண்டு அழைப்பனவும் போன்றன வென்றும் உத்ப்ரேட்சித்தார்; தற்குறிப்பேற்றவணி. இயல்பிலேயே எட்டுக்கண்களையுடைய னென்று காட்டுதற்கு, 'திசை முகன்' என்றார். ஆயிரங் கண்ணனான திருமாலாகிய இராமபிரான் தேடிக்காண மாட்டாத சீதையைத் தான் தேடிக் காணுதற்குத் தனது எட்டுக் கண்கள் போதா என்று படைத்தற்கடவுளான பிரமன் தனது திவ்ய சக்தியால் மிகப்பல கண்களைக் கொண்டு அவற்றைக் காடுகளெங்கும் பரப்பி விழித்து நோக்கலாயின னென்க; மற்றைத் தெளிந்தோர்க்கும் இவ்வாறே கொள்க. பிரமன் முதலிய தேவர்கள் மற்றையோரினுஞ் சிறந்த அறிவையுடையரா யிருப்பதனோடு, எம்பெருமானுக்கு உதவி செய்யும் நாட்டமுடையரானமை பற்றி, 'தெளிந்தோர்' எனப்பட்டனர்; அன்றியும், தேயமிடையிட்டவற்றையும் காலமிடையிட்டவற்றையும் தமது ஞானக்கண் கொண்டு காண வல்லவ ரென்பது தோன்ற இவ்வாறு கூறினருமாம். ஞான நாயகன் - தத்துவ ஞானத்தை அடியார்கட்கு அளிப்பவன்: தத்துவ ஞானத்திற்குப் புலனாகின்றவன். இனி, தத்துவஞானத்தையுடைய (தங்கள்) தலைவ னென்றும் கொள்ளலாம். 'திசை முகன் முதலினர் தெளிந்தோர் ஞானநாயகன் நவை உற நோக்கினர் நல்க' என்பதற்கு - பிரமன் முதலிய தேர்ந்த அறிவுடையோர் இராமபிரான் துன்பமடைய (அதனை)ப் பார்த்தவர்களாய் (அவனுக்கு) உதவி செய்தற்காக என்றும், பிரமன் முதலியோர் ஞான நாயகனுடைய துன்பத்தைத்தெளிந்தவர்களாய் [நன்றாக அறிந்தவர்களாய்] (சீதை யிருக்கின்ற இடத்தை நன்றாகப் பார்த்து இராமபிரானுக்கு) உதவி செய்ய என்றும் பதவுரை கூறலாம். தெளிந்தோர் ஞானநாயகன் - தெளிந்தோரது ஞானத்திற்கு நாயகனெனலுமாம்.

இனி, [3]நோக்கினநல்க என்ற பாடத்திற்கு, பிரமன் முதலிய தெளிந்தோர்க்கும் தத்துவஞானத்திற்கும் தலைவனான இராமபிரானுடைய துன்பத்தை (மயில்கள் தாம்) பார்த்தவையாய் (அவனுக்குச் சீதையை நாடிக்கொடுத்)து) உதவுமாறு என்று பொருள் கொண்டு அதற்கேற்பக் கருத்து அமைக்கவேண்டும். "தேடாநின்ற வென்னுயிரைத் தெரியக்கண்டாய் சிந்தையுவந், தாடாநின்றாயா யிரங்கணுடையாய்க் கொளிக்குமாறுண்டோ" என்று (பம்பைப்

படலத்தில்) இராமபிரான் மயில்களை நோக்கி இரங்கியுள்ளானாதலால், அவை இங்ஙனம் பிராட்டியை நாடிக்கண்டு உதவுமாறு முயலத்தகும். இனி, நோக்கினவாய் நல்கும் பொருட்டுக் காடுகளெல்லாம் தம் தம் கண்களைப் பரப்பின போல என்று கற்பனை யமைத்ததலும் ஒன்று.

அவாவுதல் - விரும்பிவெளிப்படுத்தல். அவாம் - அவர்வும். இனி, தேன் அவாம் - வண்டுகள் விரும்பத்தக்க எனினுமாம். சனகன் மான் - ஜநகமகாராஜன் வளர்த்த பெண். மான் - உவமையாகுபெயர். பி - ம்:—[1]தேனின்மாமலர். [2]நவையற. [3]நோக்கென நல்க, நோக்கெலாநல்க, நல்கின நோக்கி. [4]தானம்யாவையும். [5]கண்ணனசனகன். (496)

45.—செந்தாமரைமலர்களும் கொடிகளும்.

[1]செஞ்செ வேலவர் செறி[2]சிலைக் குரிசில ரிருண்ட
குஞ்சி சேயொளி கதுவுறப் புதுநிறங் கொடுக்கும்
பஞ்சி [3]போர்த்தமெல் லடியெனப் பொலிந்தன பதுமம்
வஞ்சி போலியர் [4]மருங்கென நுடங்கின வல்லி.

(இ - ள்.) செம் செவ் வேலவர் - (பகைவரிரத்தந்தோய்தலால்) மிகவுஞ் செந்நிறமான வேலாயுதத்தை யுடையவர்களும், செறி சிலை குரிசிலர் - கட்டமைந்த வில்லை யேந்திய வீரர்களுமான தலைவர்களுடைய, இருண்ட குஞ்சி - கருநிறமான தலைமயிர்முடி, சேய் ஒளி கதுவுற - சிவந்த ஒளியைக் கொள்ளுமாறு, புது நிறம் கொடுக்கும் - (அதற்குப்) புதிய நிறத்தைக் கொடுக்கின்ற, பஞ்சி போர்த்த மெல் அடி என - செம்பஞ்சுக்குழம்பு மிகுதியாக ஊட்டப்பெற்ற மென்மையான (மாதர்களுடைய) பாதங்கள்போல, பதுமம் பொலிந்தன - செந்தாமரைமலர்கள் விளங்கின; வஞ்சி போலியர் மருங்கு என - நீர்வஞ்சிக்கொடிபோல மெல்லிய வடிவுடையரான மாதரது நுண்ணிய இடைபோல, வல்லி நுடங்கின-பூங்கொடிகள் மெல்லியனவாய் அசைந்தன; (எ - று.)

தலைவனும் தலைவியும் கூடிக்குலாவும் இன்பநிலையில் அவ்வின்பத்தைமிகுவிக்குமாறு தலைவி தலைவன்மேல் ஏதேனுமொருகாரணத்தைக் கற்பித்துக்கொண்டு கோபங்காட்டி அவ்வூடலை முதிரவிட்டனளாக, இன்சொல்முதலிய வேறுஉபாயங்களினால் தணிக்கக்கூடிய நிலையைக் கடந்து காலில்விழுதலாகிய ஒருபாயத்தினாலன்றித் தணிக்கக்கூடாத நிலைமை யடைந்த அப்பெரும்புலவிக்காலத்தில், அத்தலைவியினூடலைத் தணித்தற்பொருட்டு, யாவரையும் வசப்படுத்தும் இயல்பினதானவணக்கத்தைத் தலைவன் மேற்கொண்டு ("சில்லரிக்கிண்கிணிமென் தெய்வமலர்ச்சீறடிமைத், தொல்லைமணிமுடிமேற் சூட்டினன்" என்றபடி) அவள் பாதங்களில் தனது முடிபடுமாறு வீழ்ந்து வணங்க, அவள் அதற்கும் இணங்காது,

("புலந்தவள் கொடியெனநடுங்கிப்பொன்னரிச், சிலம்பொடு மேகலை மிழற்றச் சென்னிமே, லலங்கல்வா யடிமலரணிந்து" என்றபடி) கோபந்தீர அவனைக் காலால் முடிமேல்உதைக்கும்போது, அப்பாதத்தில் மிகுதியாக ஊட்டப்பட்டிருந்த செம்பஞ்சுக்குழம்பு பட்ட இடத்திலெல்லாம் தலைவனது தலைமயிர்முடி இயற்கைக் கருநிறம் நீங்கிச் செயற்கைச் செந்நிறங்கொண்டு விளங்குமென்பது, முதல் மூன்றடிகளில் உணரத்தக்கது; "ஊடலிற் கனன்று, மறித்து நோக்கியர் மலரடி மஞ்சுளப்பஞ்சி, குறித்தகோலங்கள் பொலிந்தன வரக்கர்தங் குஞ்சி" என மேற் சுந்தரகாண்டத்தில் வருவதுங் காண்க. உபமான உபமேயங்களைமாற்றிக் கூறியதனால், எதிர்நிலையுவமையணி. செந்தாமரைமலர்கட்குச் செம்பஞ்சுக்குழம்பை மிகுதியாக ஊட்டிய மகளிரடிகள் நிறத்திலும் மென்மையிலும் அழகிலும், கொடிகட்கு அவரதுஇடை மெல்லிதாய் நுடங்கும் வடிவிலும் உவமம். 'வஞ்சி போலியர்' என்பதை 'அடி' என்றதனோடுங் கூட்டுக. கார்காலத்தில் தாமரைமலர்வர்ணனை வருதற்குக் காரணம், 37 - ஆஞ் செய்யுளின் உரையிற் காட்டப்பட்டது.

'செஞ்செவ்வேலவர்' என்பது, ஓசையின்பம் நோக்கித் தொகுத்தல் விகாரப்பட்டது. செறி சிலை - வலிமைமிக்க வில் எனினுமாம். குரிசில் என்ற ஆண்பாற் சிறப்புப்பெயரின்மேல், அர் - பலர்பால் விகுதி. குஞ்சி - ஆடவர் தலைமயிர். பி - ம்:—[1] செஞ்செய். [2] நிலை. [3] ஆர்ந்த. [4] மருங்குல்போல். (497)

46.—குயில்கள் குரலடங்குதல்.

நீயி [1]ரன்னவர் குதலைய [2]ராதலி னேடிப்
[3]போய தையலைத் தருதிரென் றிராகவன் [4]புகலத்
தேய மெங்கணுந் திரிந்தன [5]போந்திடைத் [6]தேடிக்
கூய வாய்க்குரல் [7]குறைந்தபோற் [8]குறைந்தன குயில்கள்.

(இ - ள்.) 'நீயிர் - நீங்கள், அன்னவர் குதலையர் ஆதலின் - அந்த ஜாநகியாருடைய மழலைச்சொற்போன்ற இனிமையான குரலையுடையவர்களாதலால், போய தையலை நேடி தருதிர் - (என்னை விட்டுப்) பிரிந்துபோன அந்த அழகிற் சிறந்தவளைத்தேடி (எனக்கு)க் கொணர்ந்து கொடுக்கக்கடவீர்கள்,' என்று -, இராகவன் புகல - இராமபிரான் (குயில்களைநோக்கிக்) கூற,—குயில்கள்—,—(அதற்கு இணங்கி), தேயம் எங்கண்உம் திரிந்தன போந்து - எல்லாவிடங்களிலுஞ்சென்று திரிந்துவந்து, இடை தேடி - அந்த அந்த இடங்களில் (பிராட்டியாரைத்) தேடி, கூய ஆய் - உரக்கக்கூவிக் கூவி அழைத்தனவாய், குரல் குறைந்தபோல் - குரலொடுங்கின போல, குறைந்தன - (கார்காலத்திற்) குரலொடுங்கின [கூவாமலிருந்தன]; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. நீங்கள் குரல்காட்டியழைத்தால் அவள் தன் இனமென்று கருதி உங்களிடம் வந்து சேர்வளென்றவாறும்;

குயில்மொழியாளான சீதையை வருவித்தற்குக் குயிலைத் தூதாகப் பற வையாகக் கொண்டனரென்க. நீயிர் அன்னவர் குதலையராதலின் - நீங்கள் குரலினினிமையால் அந்த ஜாநகியாரோடு ஒத்த நண்ப ராதலாலென்றபடி; இனி, நீங்கள் மாதர்குதலைபோன்ற குதலையை யுடையீராதலால், பிரிந்துசென்ற (சீதையாகிய) மாதைத் தேடித்தர வல்லீரென்றலுமாம். முந்தின உரையில், அன்னவர் - உயர்வுப் பன்மை; இவ்வுரையில், பொருட்பன்மை. 'நீயிர் அன்னவர் குதலையர்' என்ற வாக்கியத்தில், முன்னிலையிற்படர்க்கைவந்த இடவழுவமைதி காண்க: 'குதலையிர்' என்பது - வழாநிலை. செய்யுளாதலின் 'அன்ன வர்' எனச் சுட்டுப்பெயர் முதலில் வந்தது; "செய்யுட்கு ஏற்புழி" என்றார், நன்னூலாரும்; [நன். பொது. 43.] பிறரிடம் சொல்லும் போது அவர்க்கு நன்குமதிப்பு நிகழுமாறு தன் மனைவியைப் பன்மை யாக்குறிக்கும் இயல்புபற்றி, 'அன்னவர்' என்றான்: [1]அன்னவள் என்றும்பாடமுண்டு. மகளிர்க்குக் குதலை எப்பருவத்திலுங் கூறப் படும். ராகவன் என்ற திருநாமத்திற்கு-ரகுமகாராசனது வமிசத்தில் அவதரித்தவனென்று பொருள். பி - ம்:—[2]ஆகலின், ஆநெறி. [3]போயத்தையலை. [4]புலம்ப. [5]பேர்ந்தன, போந்திடை, பறந்திடை. [6]காணுக். [7]குழைந்தபோல், மெலிந்தபோல். [8]குழைந்தன, ஒடுங்கின, மெலிந்தன. (498)

47 —பசுக்கள் புல்மேய்தலும், காளானும் பிடவமலருந் தோன்றுதலும்.

[1]பொழிந்த மாநிலம் [2]புற்றரக் குமட்டிய [3]புனிற்ரு
எழுந்த வாம்பிக ளிடறின செறிதயி ரேய்த்த
மொழிந்த தேனுடை முகிழ்முலை யாய்ச்சியர் [4]முழவில்
பிழிந்த பால்வழி [5]நுரையினைப் பொருவுவ பிடவம்.

(இ - ள்.) பொழிந்த - மழைபெய்யப்பெற்ற, மா நிலம் - சிறந்த பூமி, புல் தர - பசும்புற்களையுண்டாக்கிக்கொடுக்க, குமட்டிய - (அவ ற்றை) நிரம்பமேய்ந்துதெவிட்டிய, புனிறு ஆ - கன்றையீன்றுநெடு நாளாகாத பசுக்கள்,—எழுந்த ஆம்பிகள் - ஆங்காங்குப் பூத்து எழுந்த காளான்களை, இடறின - (கால்களால்) இடறித்தள்ளின; (அவ்வாறு இடறிய காளான்கள்), செறி தயிர் ஏய்த்த - இடறிச் சிதறப்பட்ட கட்டித்தயிரை யொத்தன; பிடவம் - பிடவமென்னுஞ் செடியின்மலர்கள்,—மொழிந்த தேன் உடை - பேசுகின்ற தேன் போலினிய சொற்களையுடைய, முகிழ் முலை ஆய்ச்சியர் - (கோங் கின்) அரும்புபோன்ற தனங்களையுடைய இடைசாதிப்பெண்கள், முழ வில் பிழிந்த - குடங்களிற் கறந்த, பால் - பாலினின்று, வழி - மேலே வழிகின்ற, நுரையினை - நுரையை, பொருவுவ - ஒப்பன; (எ - று.)

நிறமும் வடிவும் பற்றிய உவமையணி. முல்லைநிலத்துப் பொருள் கட்கு அந்நிலத்துப்பொருள்களே உவமைகூறப்பட்டன; இடத்திற்கு ஏற்ற உவமை. குமட்டுதல் - தேக்கெறியுமாறு வயிறு நிறையத்

தின்னுதல். புனிறு - ஈன்றணிமை: சிலநாளைக்கு முன்பு ஈன்ற நிலை; பெரும்பாலும் கார்காலத்து ஆக்கள் கன்றீனுதலால், 'புனிற்று' என்றது. தேன் - உவமையாகுபெயர்; நாவிற்கு இனிய சொற்களென்க. 'மொழிந்த' என்ற அடைமொழி, 'தேன்' என்பதன் ஆகுபெயர்ப்பொருளைவிளக்கிற்று; 'மொழிந்த தேன்' எனவே, சொல்லென்றதாயிற்று. முகிழ் - தாமரையரும்புமாம். அடிக்கப்படும் வாத்தியங்களின் பொதுப்பெயராகிய முழவு என்றஇது, சிறப்பாய்க் கடவாத்திய மெனப்படுங் குடமுழாவையுணர்த்த, இங்கு - குடமென்ற மாத்திரமாய் நின்றது. மடிநிறையப்பால்கொண்டு சுரக்கும் பசுக்களைக் கறத்தலாவது முலையைப்பிழிதலேயாதலால், 'பிழிந்த' என்றார். பிடவம் - ஓர்செடி; கார்காலத்தே பூப்பது; குட்டிப்பிடவ மென்னுங் கொடியென்றலு முண்டு. 'பிடா' என்பது 'பிடவம்' எனநின்றதென்க. [1]'பொழிந்தவா னிலம்புற்றர' என்ற பாடத்திற்கு-பொழிந்த மழையால் நிலத்திற் புல்லுண்டாக என்று பொருள். பி - ம்:— [1]பொழிந்தபானிலம். [2]புனரற. [3]குன்றில். [4]முடிவில், முழாவில். [5]பொருவின நுரைமென. (499)

48.—வேங்கை, புன்னை, முல்லை, செங்கழுநீர் இவை மலர்தல்

வேங்கை நாறின கொடிச்சியர் [1]வடிக்குழல் [2]விரைவண்டு
[3]ஏங்க [4]நாகமு நாறின [5]நுளைச்சிய ரைம்பால்
[6]ஆங்கு நாண்முல்லை நாறின வாய்ச்சிய ரோதி
[7]ஞாங்க ருற்பல முழத்தியர் [8]பித்திகை நாற.

(இ - ள்.) வேங்கை - (குறிஞ்சிநிலத்துக் கருப்பொருளாகிய) வேங்கை மரங்கள், (மலர்ந்து), கொடிச்சியர் வடி குழல் நாறின - (அந்நிலத்து மகளிராகிய) குறத்தியருடைய சிறந்த கூந்தல்போல நறுமணம் வீசின; நாகம்உம் - (நெய்தல்நிலத்துக் கருப்பொருளாகிய) புன்னைமரங்களும், (மலர்ந்து), விரை வண்டு ஏங்க - விரைந்து செல்லுமியல்பினவானவண்டுகள் (மொய்த்து) ஆரவாரிக்கும்படி, நுளைச்சியர் ஐம்பால் நாறின - (அந்நிலத்துமகளிராகிய) செம்படவச்சிகளுடைய கூந்தல் போல நறுமணம் வீசின; ஞாங்கர் உற்பலம் - பக்கத்திலுள்ள (மருதநிலத்துக் கருப்பொருளாகிய) செங்கழுநீர்க் கொடிகள், (மலர்ந்து), உழத்தியர் பித்திகை நாற - (அந்நிலத்து மகளிராகிய) கடைசியருடைய கூந்தல்போல நறுமணம்வீச,—ஆங்கு நாள் முல்லை - அவற்றினருகிலேயுள்ள அன்றுமலர்ந்த (முல்லை நிலத்துக் கருப்பொருளாகிய) முல்லைக்கொடிகள், ஆய்ச்சியர் ஓதி நாறின - (அந்நிலத்துமகளிராகிய) இடைச்சியருடைய கூந்தல்போல நறுமணம் வீசின; (எ - று.)

எதிர்நிலையுவமையணி. அந்தந்த நிலத்துமாதரது கூந்தலின் இயற்கை நறுமணச்சிறப்பை விளக்கும்முகத்தால் அக்கால மலர்களை வருணித்தார். உத்தமசாதிமகளிரின் கூந்தல் இயற்கை நறுமணம் வீசு மென்பது, நூற்கொள்கை. வேங்கைமுதலியவற்றை அவற்றின் மலர்களாகவே கொள்ளலுமாம். இனி, கொடிச்

சியர் வடிக்குழல் வேங்கைநாறின என்று மாற்றி, குறிஞ்சிநிலத்து மகளிரது சிறந்த கூந்தல்கள் (அக்காலத்தில் மலர்ந்த) வேங்கை மலர்களைச்சூடி அவற்றின் மணம்வீசின என்று பொருள் கொள்ளுதலுமாம்; வேங்கை மலர்கள் கொடிச்சியர்வடிக்குழலில் (சூட்டப்பட்டு) மணம்வீசின வென்பாரும், நாறின - தோன்றின என்பாருமுளர்: இவ்வனுவரைப்பது மற்றைறவாக்கியங்களுக்கும் ஒக்கும். வடித்தல் - தேர்ந்தெடுத்தல்; வடிக்குழல் - சிறந்ததென்று தேர்ந்தெடுத்தற்குத்தக்க கூந்தல்: வடி - முதனிலைத்தொழிற்பெயர். இனி, வடிக் குழல் - (சூடியமலர்களின்தேன்) பெருகுதலையுடைய கூந்தலெனினுமாம்; இப்பொருளில், வடிதல் - பெருகுதல்; வடி - முதனிலைத்தொழிற்பெயரே; வடி - தேனுமாம். விரைவண்டு - நறுமணத்தை நாடுகிற வண்டு என்றும், தேனைவிரும்புகிற வண்டுஎன்றும் கொள்ளலாம்; விரை - வாசனை, தேன். வேங்கை வண்டுறைமலர்மரமாதலால், 'விரை வண்டு ஏங்க' என்றதை அதற்குச்சேரவொட்டாதபடி பின்னே வைத்தார்; அதனை, முல்லை உற்பலங்களுக்குங் கூட்டுக. இனி அதனை முதல்வாக்கியத்தோடுங் கூட்டி, அங்கு, விரை வண்டு ஏங்க - விரைந்து செல்லுமியல்பினவான வண்டுகள் (வேங்கை மலர்களினருகில் வந்துமொய்த்து நறுமணத்தையும் தேனையும் கொள்ளமாட்டாமல் சேய்மையில் நின்றபடியே) ஏக்கமடைய என்று பொருள்கொள்ளுதலுமாம். முன்பு, ஏங்குதல் - ஒலித்தல்; இப்பொழுது இரங்குதல். நுளைச்சியர் - நுளையர் என்பதன் பெண்பால். ஐம்பால் - ஐந்து பகுப்பையுடையது: இனி ஐந்து தன்மையையுடையதென்றலுமாம்: ஐந்து பகுப்பாவன - மயிரை உச்சியில் முடித்தலாகிய முடியும், பக்கத்தில் முடித்தலாகிய கொண்டையும், பின்னே செருகுதலாகிய சுருளும், சுருட்டிமுடித்தலாகிய குழலும், பின்னிவிடுதலாகிய பனிச்சையுமாம். ஐந்து தன்மையாவன-மணம், மது, மென்மை, நெய்ப்பு, கருமைஎன்பன. உற்பலம் - இங்கு செங்குவளை. பித்திகையெனினும், பித்தையெனினும் ஒக்கும். [8]'பித்தையினுற' என்றும் பாடமுண்டு. [8]'பின்னகநாற' என்ற பாடத்திற்கு' பின்னகம் - பின்னியமயிர்முடி. பாலைக்குத் தனியே நிலமில்லையாதலாலும், அதன் சிறப்பின்மை பற்றியும், அதனை இங்குக் கூறுராயினர். [5]'எயிற்றியரைம்பால்' என்ற பாடத்திற்கு - பாலைநிலத்துமகளிரது கூந்தலென்று பொருள்; அப்பொழுது, நாகம் - சுரபுன்னைமரம் என்று கொண்டு, அவ்விடத்திற்குச் செம்மையதாதலால் நெய்தல்நிலம் இங்குக் கூறப்பட்டிலதென்க: அப்பாடம், மோனைத்தொடைக்கு ஏற்கும். பி - ம்:—[1]வெடிக்குழல். [2]விழை வண்டு, விளிவண்டு, விழாவண்டு, விளர்வண்டு. [3]ஏங்கு. [4]நாறின வெயினர் நுண்ணிடைச்சியர், நாறினநரந்தமவ்வெயிற்றியர். [6]ஓங்கு நாண்முல்லை. [7]ஞாங்கருற்பலம் பரத்தியர் பித்திகை நாற. (500)

49.— இராமபிரான் கார்காலத்தைக் கண்டு மிகவும் வருந்துதல்.

தேரைக் [1]கொண்டபே [2]ரல்குலாள் திருமுகங் காணான்
ஆரைக் கண்டுயி ரார்றுவா னல்லுணர் வழிந்தான்

மாரற் கெண்ணில்பல் லாயிர மலர்க்கணை வகுத்த
காரைக் கண்டனன் வெந்துயர்க் கொருகரை காணான்.

(இ-ள்.) தேனை கொண்ட பேர் அல்குலாள் திரு முகம் காணான் - சீதாபிராட்டியினுடைய அழகிய முகத்தைக் காணாதவனான இராமபிரான்,—மாரற்கு - மரணாந்தமான வருத்தத்தைச் செய்பவனான மன்மதனுக்கு, எண் இல் பல் ஆயிரம் மலர் கணை வகுத்த - கணக்கில்லாத பல ஆயிரக்கணக்கான புஷ்பபாணங்களைச் செய்துகொடுத்த, காரை - அந்தக்கார்காலத்தை, கண்டனன்-பார்த்து, வெம் துயர்க்கு-கொடிய (தனது) துன்பமாகியகடலுக்கு, ஒருகரை - ஒருமுடிவெல்லையை, காணான் - காணாதவனாய், நல் உணர்வு அழிந்தான் - நல்ல அறிவு அழிந்தவனானான் [பிரஜ்ஞை தப்பினான் என்றபடி]; ஆரை கண்டு உயிர் ஆற்றுவான் - (தன் மனைவியைக்காணாத அவன்) வேறு யாரைக் கண்டுதான் துயர் தணிந்து உயிர் வைத்துக்கொண்டிருக்கமாட்டுவன்? (எ - று.)

வானம் மழைபெய்து செடி கொடி மரங்களில் நிரம்பமலர்களை யுண்டாக்கி மிகவும் காமோத்திபகமாய்க் காதலை மேன்மேல் வளர்த்தலாலும், மன்மதனுக்கு மலர்களே அம்பு என்பவாதலாலும், கார் எண்ணில் பல்லாயிரம் மலர்க்கணைவகுத்து உதவி செய்ததாகக் கூறினார். நான்காமடியில், 'காரைக் கண்டனன்...கரை காணான்' என்றவிடத்து ஒருவகைச் சொற்சமத்காரங் காண்க; தொடைமுரண். நீர்நிலைகட்குச் சாதாரணமாக, நான்குகரைகள் அமைந்திருக்குமாதலால், அந்நான்கினுள் ஒன்றையுங் கண்டானில்லை யென்பார், ஓர்கரை காணான் என்றது. 'துயர்க்கு ஓர்கரை காணான்' என்றது, உருவக விசேடம். இராமன் உணர்வு அழிந்தான் - தினைவழுவமைதி.
பி - ம்:—[1] கண்ட. [2] அல்குறன். (501)

50.—இராமபிரான் காரைக்கண்டு வருந்துதலைப்பற்றிய கவிக்கூற்று.

அளவில் காரெனு மப்பெரும் பருவம்வந் [1] தணைந்தால்
[2] தளர்வ ரென்பது தவம் [3] புரி வோருக்குந் தகுமால்
கிளவி தேனினு மமிழ்தினுங் [4] கிளைத்தவெள் வளைதோள்
[5] வளவி யுண்டவன் வருந்துமென் றுலது வருத்தோ.

(இ - ள்.) அளவு இல் - (சிறப்பிற்கு) ஓர் எல்லையில்லாததான [அளவிறந்த சிறப்பையுடைய], கார் எனும் அ பெரும் பருவம் - கார்காலமென்கிற அந்தச் சிறந்த காலம், வந்து அணைந்தால் - வந்து சேர்ந்தால், தளர்வர் - நெஞ்சுறுதியழிவார்கள், என்பது - என்கிற விஷயம், தவம் புரிவோருக்குஉம் தகும் - (முற்றத்துறந்து) தவஞ்செய்பவர்களான முனிவர்கட்கும் பொருந்தும்; ஆல் - ஆதலால்,—கிளவி - (தனது) சொற்கள், தேனின்உம் அமிழ்தின்உம் இளைத்த - தேனைக்காட்டிலும் அமிருதத்தைக்காட்டிலும் செழித்த [இனிமைமிகப்பெற்ற], வெள் வளை - வெண்ணிற

மான வளையல்களையணிந்தவளாகிய சீதையினது, தோள் - தோள்களை, வளவி - தழுவி, உண்டவன் - இன்பமனுபவித்துக்கொண்டிருந்தவனான ஸ்ரீராமன், வருந்தும் - (கார்காலம் வந்தபொழுது) வருந்துகின்றான், என்றால்—, அதுவருத்துஓ - அது ஒருவருத்தமென்று விசேடமாகக் கொள்ளத்தக்கதோ? (அன்று என்றபடி].

அது இயல்பே என்றதாம். 'மனையாளோடு கூடிவாழும் வாழ்க்கையைப் பற்றறவிட்டுச் சென்று தவஞ் செய்கின்றவர்களான துறவிகளுக்கும் கார்காலம் மனவுறுதியைப் போக்கவல்லது' என்ற ஒரு தன்மையைக்கொண்டு, 'இயற்கையழகிலும் செயற்கையழகிலும் மிக்கவளான சீதையோடு கூடிக்குலாவிப் போகந்நுகர்ந்துகொண்டிருந்தவன் அவளைப் பிரிந்த நிலையிற் கார்காலத்தைக்கண்டு தளர்ந்து மிகவருந்துதல் இயல்பே' என்ற பொருளை எளிதிற் சாதித்தது, தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணியின் பாற்படும்.

பெரும்பருவம் - பெரும்பொழுது என்றவாறுமாம்; பெரும்பொழுது - ருது: (மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு என்பன - சிறுபொழுதெனப்படும்.) 'பெரும்பருவம்' என்றது - (பிரிந்தார்க்குக்) கழித்தற்கு அரியது என்ற பொருளும் தோன்ற நின்றது. உம் - உயர்வுசிறப்பு. ஆல் - ஆதலால் என்பதன் விகாரம்: அசையாகவும், தேற்றப்பொருளதாகவுங் கொள்ளத்தகும். இளவி - பேச்சு. வெள்வளை - சங்கினாலாகிய வளை; அதனையணிந்தவளைக் குறித்தலால், பண்புத்தொகையன்மொழி. [4]'இளைத்தவள் வளைத்தோள்' என்ற பாடத்திற்கு - செழித்தவளான பிராட்டியினது வளையல்களையணிந்ததோள்களென்று பொருள். [4]'கிளைத்தவள் கிளைத்தோள்' என்றபாடத்தில், கிளைத்தோள் - மூங்கில்போன்ற தோள். வளவுதல் எனினும், வளாவுதல் எனினும் ஒக்கும். வருத்து - வருத்தம், வருந்துதல்: ஓ - எதிர்மறை. [5]'அளவியுண்டவன் வருந்து மென்றா லது வருந்தோ' என்று பாடமோதி, 'அளவி - அளாவி,......அருந்தோ - அருமையோ' என்று உரைப்பாரு முளர். பி - ம்:—[1] அடைந்தால். [2] தளர்வது. [3] புரிவோர்கட்கும். [4] கிடைத்தவள், படைத்தவள், கிளைத்தோள். (502)

51.—இராமபிரான் இரங்கத்தொடங்கினனென்றல்.

காவி யுங்கருங் குவளையு நெய்தலுங் [1]காயாம்
[2]பூவை யும்பொரு வானவன் புலம்பினன் தளர்வான்
ஆவி யுஞ்சிறி துண்டுகொ லாமென [3]வயிர்த்தான்
தூவி யன்னமன் னுள்திறத் திவையிவை [4]சொல்லும்.

(இ - ள்.) காவிஉம் - காவிமலரையும், கருங் குவளைஉம் - கருங்குவளை மலரையும், நெய்தல்உம் - கருநெய்தல்மலரையும், காயாம்பூவைஉம் - காயாமலரையும், பொருவான - (தனது திருமேனி நிறத்

தால்) ஒப்பவனுன, அவன் - அந்த இராமபிரான், புலம்பினன் தளர்வான் - புலம்பித் தளர்ச்சியடைபவனுய், ஆவியும் சிறிது உண்டு கொல் ஆம் என அயிர்த்தான் - (இவனுடம்பிற்) சிறிது உயிரும் உளதோ என்று சங்கிக்கத்தக்கவனுகி, தாவி அன்னம் அன்னுள் இறத்து - மென்மையான இறகின் அழகையுடைய அன்னப்பறவையைப் போன்றவளான பிராட்டியின் விஷயமாய்(த் தான் கொண்ட காதல் மிகுதியால்), இவை இவை சொல்லும்-இந்த இந்த வார்த்தைகளைச் சொல்பவனுனுன்; (எ - று.)—அவற்றை, அடுத்தபன்னிரண்டு கவிகளிற் காண்க.

காவி, கருங்குவளை, நெய்தல் என்ற மூன்றும் - நீலோற்பலத்தின் சாதிபேதம். காயா - ஓர்செடி. பொரு வானவன் - ஒத்த தேவாதிதேவனுன ஸ்ரீராமன் என்றும், பொரு ஆனவன் அல்லது பொருவு ஆனவன் - காவி முதலியவற்றை (த் தனக்கு) உவமையாகப்பெற்றவன் என்றும் பதவுரைகொள்ளலாம். மன்மதாவத்தைகளுள், அழுங்கலும் மொழிபலபிதற்றலுமாகிய மோகமும், அயர்ப்பும் மயக்கமுமாகிய மரணமும் இங்கே கூறப்பட்டன; அயிர்த்தான் - அயிர்க்கப்பட்டான் எனச் செய்வினை செயப்பாட்டு வினைப்பொருளது. அன்னம், நடையழகில் உவமம். இவையிவை —பின்வருபவை. பி - ம்:—[1]காரும். [2]பூவையுஞ் செறிமேகமும் பரவையும் போல்வான், பூவையுஞ் செழும்பரவையும் பொருவுவான் புலம்பி. [3]அமர்வான், அயிர்ப்பான், அமர்த்தான். [4]சொல்வான். (503)

வேறு.

53.—இதுமுதற் பன்னிரண்டு கவிகள் - காளமேகம் முதலியவற்றைநோக்கி இராமபிரான் இரங்கிக் கூறுதல்.

இதுவும், அடுத்த கவியும் - காளமேகத்தைநோக்கி இரங்கல்.

[1]வாரேர் முலையாளை [2]மறைக்குநர்வாழ்
[3]ஊரே யறியே னுயிரோ டுழல்வேன்
நீரே யுடையா [4]யருள்நின் னிலையோ
காரே யெனதா விகலக் குதியோ.

(இ - ள்.) காரே - காளமேகமே!—வார் ஏர் முலையாளை மறைக்குநர் வாழ் ஊரே அறியேன் - கச்சணிந்த அழகிய தனங்களையுடையவளான சீதையை எடுத்துக்கொண்டுபோய் ஒளித்து வைத்திருப்பவராகிய இராக்கதர் வாழ்கின்ற ஊரையேனும் இன்னதென்று அறியமாட்டாமல், உயிரோடு உழல்வேன்-உயிரைவைத்துக் கொண்டு திரிந்துகொண்டிருக்கின்றேன்; நீரே உடையாய் - (நீ) நீரையேயுடையவனு யிருக்கின்றனையே [நீர்மையையேயுடையவனுகின்றனையே]; அருள் நின் இலையோ - அருள் உன்னிடத்தில் இல்லையோ? எனது ஆவி கலக்குதியோ - என்னுடைய உயிரை (இச்சமயத்தில் இவ்வாறு) கலங்கச்செய்வையோ? (எ - று.)

இராவணனையே இகழ்ச்சிப்பன்மையாக 'மறைக்குநர்' என்றதாகவுங் கொள்ளலாம். அவருடைய உருவம் வலிமை சேனை முதலியவற்றை அறியாமையேயன்றி அவரிருக்கின்ற ஊரையும் அறியேன் எனப் பொருள்படுதலால், ஏ - இழிவுசிறப்பு. தனக்குப் பெருந்தீங்கு செய்த அவர்க்குத் தன்னால் யாதொருதீங்குஞ்செய்ய மாட்டாமையைப் புலப்படுத்துவான், 'வாரேர்முலையாளைமறைக்குநர் வாழ்' என்றான்; வாழ்தல் - எவ்வகையாலுங் குறைவின்றி வசித்தல், உழலுதல் - வருந்தித் திரிதல். எனக்குப்பெருங்கேடுசெய்தவர் திறத்தில் இவ்வளவு அறியாமையோடுகூடிய யான் உயிரையிழந்தாலுங் குற்றமில்லை; அதுசெய்யாமல் உயிருடனிருக்கின்றேன் என்ற கழிவிரக்கந்தோன்ற, 'உயிரோடுழல்வேன்' என்றான்; உயிர்நீங்காதிருத்தலால் வருந்துகின்றேனென்றானுமாம். "உண்ணிலாவிய துயரம்பிடித்துந்த வாருயிர் நின்றூசலாட" என்றபடி உயிர் நிற்கவும்மாட்டாமல் நீங்கவும் மாட்டாமல் அலையப்பெறுகின்றேனென்ற பொருளில் 'உயிரோடுழல்வேன்' என்றதாகவுங் கொள்ளலாம். இரட்டுறமொழிதலென்னும் உத்தியால், 'நீரே யுடையாய்' என்பதற்கு - இருபொருள் ஒருங்குகொள்ளப்பட்டது; சிலேடையணியென்னலாம். நீரேயுடையாய் - நீர்மயமாகவிருக்கின்றாய்; ஏ - பிரிநிலை. நீர்மையென்றபண்புப்பெயர், ஈறுபோய் 'நீர்' என நிற்கும். நீர்மை - இங்கு, உலகத்துஉயிர்களை யெல்லாம் பாதுகாத்தல். நீரின் தன்மை - தண்மை; அருளென்பதும் தண்மையே. நீர்மை - இனியதன்மை. நீரையும் நீர்மையையு முடையவனை நீ தண்ணளியில்லாமலிருக்கற்பாலையோ என்றான். நின் அருள் இலையோ - நினது அருள் (என்பக்கல்) இல்லையோ என்றலு மொன்று. அருள் நின் நிலையோ என்று பிரித்து, அருளையுடைய நினது நிலைமை இதுதானோ என்றும், நினது இந்நிலைமை அருளாமோ என்றும் உரைத்தலுமாம். கிணற்றில் தவறி விழுந்தவர்மேற் கல்லையெடுத்துப் போகட்டாற்போல, பிராணநாயகியைப் பிரிந்து நான் அவளிருக்குமிடமுந் தெரியாமையால் அரையுயிரா யிருப்பதை நீயும் காதலைவளர்த்து நிலைகலக்குவது தகாதென்பது, தேர்ந்த கருத்து.

[3] ஊரே யுணரேன் என்ற பாடத்திற்கு, இரண்டாமடி - முற்றுமோனை கொண்டதாம். பி - ம்:—[1] வாரேய். [2] மறைக்குநன். [3] ஊரேதறியேன். [4] அருணின்றிலையோ, அருளின்னிலையோ.

இதுமுதல் ஏழுகவிகள் கலிவிருத்தங்களன்றி, 'வாரேர்முலையாளைமறைக் குநர்வாழ்' என இவ்வாறு பிரித்து, வஞ்சிவிருத்தமாகக் கொள்ளினும் இழுக்காது. தலைவன தலைவியர் காதலாலிரங்குதலைக் கூறுமிடத்துப் பெரும்பாலும் இவ்வகை விருத்தம் உபயோகிக்கப்படுகின்றது; பாலகாண்டத்துக் கடிமணப் படலத்திற் சீதை இராமன் என்னும் இருவரிரங்கற்கும் இவ்விருத்தமே உபயோகித்தனர்: சுந்தரகாண்டத்து உருக்காட்டுபடலத்திற் சீதை இரங்குதற்கும் இதுவே விருத்தம். அதிவீரராமபாண்டியரும் நைடதத்துச்

சுயம்வரப்படலத்தில் நளன் தமயந்தி என்னுமிருவரிரங்கலையும் இவ் விருத்தத்திலேயே கூறுதல் காண்க. (504)

53. [1]வெப்பார் நெடுமின் னி[2]னெயிற் றைவெகுண்டு
எப்பா லும்விசும் பினிருண் டெழுவாய்
அப்பா தகவஞ் ச[3]வரக் கரையே
ஒப்பா யுயிர்கொண் டல[4]தோ வலையோ.

(இ - ள்.) வெப்பு ஆர் - (காண்பவர்க்கு) அச்சந்தருந்தன்மை மிக்க, நெடு மின்னின் - நீண்ட மின்னல்களாகிய, எயிற்றை - கோர தந்தங்களை யுடையாய்; இருண்டு - கருநிறங்கொண்டு, வெகுண்டு - கர்ச்சித்து, விசும்பின் - ஆகாயத்திலே, எ பால்உம் - எந்தப்பக்கத் திலும், எழுவாய்-தோன்றுகின்றாய்: (ஆதலால்), அ பாதகம் வஞ்சம் அரக்கரை ஏ ஒப்பாய் - கொடுந்தொழிலையும் வஞ்சனையையுமுடைய அந்த இராக்கதரையே போல்பவனான நீ, உயிர் கொண்டு அலது ஓவலைஓ - (எனது) உயிரைக் கவர்ந்தல்லாமல் அப்பாற்போகமாட் டாயோ? (எ - று.)

உவமையணி. உபமானமாகிய அரக்கர்க்கு இயையும்போது, 'மின்னின் எயிற்றை' என்பதற்கு - மின்னல்கள்போன்ற கோரதந் தங்களையுடையாயென்றும் பொருள் கொள்ளலாம். இருண்டு வெகுண்டு விசும்பின் எப்பாலும் எழுதல், காளமேகத்திற்கும் அரக் கர்க்கும் ஒக்கும். அரக்கர், எனது உயிர்நிலையாகிய [பிராணநாயகி யான] சீதையைக் கவர்ந்துகொண்டு அப்பாற்சென்றனர்: நீ எனது உயிரைக் கவர்ந்துகொண்டுதான் செல்வையோ என்றானாம். வெகுண்டு - கோபித்து: இக்காரணச்சொல் காரியப்பொருளின் மேல் நின்று, கர்ச்சித்து என்றதாயிற்று. மேகம் கர்ச்சித்தல் - இடிமுழங்குதல்: தன்னை வருத்துதல்பற்றி, கோபங்கொண்டு என் றானுமாம்.

[3] 'எயிற்றின்' என்ற பாடத்திற்கு - பற்களுடனே யென்று பொருள். 'எப்பாலும்' என்றதை 'ஒப்பாய்' என்பதனோடு இயைத்து, எல்லாவகையாலும் ஒத்திருப்பாய் என்றலும் ஒன்று. ஒப்பாய் - ஒப் பவனனமேகமே! என விளியுமாகலாம்.

இங்கு, மேகம் முதலிய அஃறிணைப்பொருள்களைக் கேட்டல் முதலிய செயல்கட்குஉரியனவாக் கூறுதல், வழுவமைதியின்பாற் படும்; தொல்காப்பியத்துப் பொருளியலில் "சொல்லாமரபி னவற் றொடு கெழீஇச், செய்யாமரபிற் றொழிற்படுத்தடக்கியும்" என்றதும், செய்யுளியலில் "ஞாயிறு திங்க ளறிவே நாணே, கடலே கானல் விலங்கே மரனே, புலம்புறுபொழுதே புள்ளே நெஞ்சே, அவையல பிறவும் நுவலிய நெறியாற், சொல்லுநபோலவும் கேட்குந போலவும், சொல்லியாங் கமையு மென்மனார் புலவர்" என்றதுங்காண்க: விரகவேதனையில் அறிவுதிரிந்த நிலையில் தலைவன் தலைவியர் இவ்வாறெல்லாம் பேசுதல் ஏற்கு மென்பது கருத்து. பி - ம்:— [1]வெப்பா. [3]அரக்கனையே. [4]ஓய்விலையோ, ஓய்குதியோ, ஒக்கு தியோ. (505)

54.—மயிலை நோக்கி இரங்கல்.

[1]அயிலே [2]விழியார் [3]விளையா ரமிழ்தின்
[4]குயிலே [5]மொழியார்க் கொணராய் கொடியாய்
துயிலே னொருவே [6]னுயிர் [7]சோர் வுணர்வாய்
மயிலே யெனைநீ வலியா டுதியோ.

(இ - ள்.) மயிலே—!—அயில் ஏ விழியார் - வேலாயுதமும் அம்பும் போலக் கூரிய கண்களையுடையவரும், விளை ஆர் அமிழ்தின் - (பாற்கடலில்) தோன்றிய அருமையான தேவாமிருதத்தையும், குயில்ஏ - குயில்கூவுதலையுமே போன்ற [மிக இனிய], மொழியார் - சொற்களையுடையவருமான ஜாநகியாரை, கொணராய் - தேடிக் கொண்டுவந்து (எனக்குக்) கொடுத்து உதவமாட்டாய்; கொடியாய் நீ - கொடுந்தன்மையுடையையான நீ, துயிலேன் ஒருவேன் உயிர் சோர்வு உணர்வாய் - தூக்கங்கொள்ளாதவனும் (மனைவியைப் பிரிந்து) தனித்திருப்பவனுமான எனது உயிர் தளர்ச்சியடைதலையறிவாய்; (அறிந்திருந்தும்), எனை வலி ஆடுதிஓ - என்னை (இச்சமயத்தில்) உன்வலிமைகாட்டி நலியற்பாலையோ? .(எ - று.)

மயில் தனதுதோகையினாற் சீதையின் கூந்தலையும், தனது சாயலினாற் சீதையையும்போ லிருத்தலால், அப்பொருள்களை நினைப்பூட்டி நலிவுசெய்யு மென உணர்க. சோர்ந்திருக்கின்ற சமயத்தில் உதவிசெய்வதைவிட்டு மேன்மேல்வருத்தியழிக்கத் தொடங்குதல் பகைவர்க்கும் வீரச்செயலாகா தென்பான், 'உயிர் சோர்வுணர்வாய் வலியாடுதியோ' என்றான்; இராவணனையும், போரில் 'இன்றுபோய் போர்க்கு நாளைவா' என்று அருள்செய்யும் இயல்பினனாதலாலும் தன்னைபோலவே பிறரையும் நினைத்தல் பெரியோரியல்பாதலாலும் என்க. 'கொடியாய்' என விளித்தலும் இதுபற்றியே. அம்ருதம் - தன்னை நுகர்ந்தவர் பிறிதுநுகராமல் தடுக்கும் இனிமையில் உவமம். அமிழ்தின் - அமிருதத்தோடு என்க. முதலடியில், ஏ - அம்பு: ஓரெழுத்தொருமொழியாகிய பெயர்ச்சொல். மன்மதாவத்தைகளுள் துயிலாமையும் ஒன்று; பிரிவாற்றாமைக்கு உரிய குறிகளுள் "வாராவுறக்கமும்" என்றதுங்காண்க. எனை - என்னை; தொகுத்தல். பி - ம்:—[1]அயிலேர், அயிலேய், அயிலோ. [2]விழையார். [3]விளைவார், சுவையார், அலையார். [4]குயிலேய், குயிலோ. [5]மொழியார், மொழியாய். [6]உரை. [7]சோர்வுணராய். (506)

55.—பூங்கொடியைநோக்கி இரங்கல்.

மழைவா டையொடா டிவலிந் துயிர்மேல்
[1]நுழைவாய் மலர்வாய் நொடியாய் கொடியே
இழைவா [2]ணுதலா ளிடைபோ லிடையே
குழைவா யெனதா வி[3]குழைக் குதியோ.

(இ - ள்.) கொடியே—!—மழை வாடையொடு ஆடி - மழைக் காலத்தில் வீசுகின்ற வாடைக்காற்றிற்கு ஏற்ப அசைந்து

[வாடைக்காற்றோடு பழகி], வலிந்து உயிர்மேல் நுழைவாய் - வன்மை கொண்டு (எனது) உயிரில் நுழைகின்றாய்; மலர்வாய் - மலர் பெற்றிருப்பாய் [மலர்ச்சி கொண்டிருப்பாய்]; இழை - (என்னோடு) கூடியிருந்த, வாள் நுதலாள் - ஒளியுள்ள நெற்றியையுடையளான சீதையின், இடை போல்—, இடையே குழைவாய் - இடையிடையே துவண்டுகாட்டி, எனது ஆவி குழைக்குதியோ - என்னுடைய உயிரை இளகச்செய்யத்தகுவையோ? நொடியாய் - சொல்வாய்; (எ - று.)

இராமபிரான் கொடியைநோக்கி, மழைக்காலத்து வாடைக்காற்றோடு பழகியதனால் அதன்குணத்தை நீயும் உடையாய்: அது வன்மைகொண்டு எனது உயிரின்மேல் வீசி வருத்துதல் போல நீயும் எனது எதிரில் உனது மெல்லியதாய்த்துவளும் வடிவைக் காட்டி அசைந்துகொண்டு சீதையின் இடையை நினைப்பூட்டி என்னுயிரை வலியத்தாக்கி வருத்துகின்றாயென்றான். 'மலர்வாய்' என்றதனால் என்வருத்தத்தைக்கண்டு சிறிதேனும் இரங்காமல் என் முன்னிலையில் மலர்ந்திருக்கின்றனையே யென்றானும்; வருத்தமுற்றவர்க்கு, பிறர் மலர்ச்சியைக் காணுமிடத்து வருத்தம்மிகுதல் இயல்பு. நொடியாய் - (என்க்குச் சமாதானமாக யாதொன்றும்) பேசாதிருக்கின்றாய் என்றும் பொருள்படும்: 'செய்யாய்' என்னும் வாய்பாட்டுச்சொல் உடன்பாடு எதிர்மறை என்ற இரண்டிலும் வரும். 'மலர்வாய் நொடியாய்' என்பதற்கு - மலராகிய வாயினாற் பேசாய் என்று உரைப்பாருமுளர். 'கொடியே' என்ற விளி, கொடுமையையுடையாய் என்ற பொருளும் தோன்ற நின்றது; (சுந்தரகாண்டத்து உருக்காட்டுபடலத்தில் "தழல்வீசவுலாய்வரு வாடை தழீஇ, அழல்வீ ரெனதாவி யறிந்திலிரோ, நிழல்வீரையனோருடனீர் நெடுநா, ளுழல்வீர் கொடியீ ருரையாடலிரோ" என வரும் பிராட்டியிரங்கல், இங்கு நோக்கத்தக்கது.) இழை - (உலகத்திற்கு) அணிபோன்ற என்றும் உரைக்கலாம்: நுதலுக்கு அடைமொழியாக்கி, ஆபரணங்களுக்கு ஒளியைத்தரும் நெற்றியை யுடையாளென்றலுமாம். இடையே குழைவாய் - இடந்தோறும் [கண்ட இடமெங்கும்] குழைந்துகாட்டுவா யெனினுமாம். 'இடைபோலிடையே குழைவாய் குழைக்குதியோ' என்றதில், ஒரு வகைச் சொற்சமத்காரம் தோன்றும். நினைப்பூட்டுவனவான பொருள்களனைத்தும் பிரிந்தார்க்கு நலிவுசெய்யுமாதலால், 'நுதலாளிடைபோலிடையே குழைவாய் எனது ஆவி குழைக்குதியோ' எனப்பட்டது. பி - ம்:—[1] நுழைவாய்மலர்வாய் மலரார் கொடியாய், உழைவாய் மலரா லொடியாய் கொடியே. [2] நுதலாரிடை. [3] குழைக்குவையோ. (507)

56.—மானை நோக்கி இரங்கல்.

[1] விழையேன் [2] விழைவா [3] னவைமேன் மையினின்று
[4] இழையே னுணர்வே னவையின் மையினால்
பிழையே னுயிரோ டுபிரிந் தனரால்
உழையே யவரெவ் வுழையா ருரையாய்.

(இ - ள்.) உழையே - மானே!—நவை - குற்றத்திற்கு இடமான பொருளை, விழைவால் விழையேன் - ஆசையால் விரும்பக் கடவே னல்லேன்: மேன்மையினின்று இழையேன் - பெருமைக் குணத்தி னின்று நெகிழக்கடவேனல்லேன்: உணர்வேன் - (பொருள்களை நல் லது தீயது என்று உள்ளபடி) அறியக்கடவேன்: அவை இன்மையி னால் - மேற்கூறிய அத்தன்மைகள் (என்னிடத்தில்) இல்லாமற் போய்விட்டதனால், பிழையேன் - பிழைபாடுடையவனாயினேன்; (ஆத லால்), உயிரோடு பிரிந்தனர் - (என்னுடைய) உயிரோடு (ஜாநகியார் என்னைவிட்டுப்) பிரிந்துபோயினர்; அவர் எ உழையார் உரையாய் - அவர் (இப்பொழுது) எவ்விடத்தி லிருக்கின்றார்? சொல்வாய்;எ-று.) —ஆல் - அசை.

பொன்மானாகிய இது மெய்வடிவமாயிருக்குமா, அல்லது மாயை யுருவமாகுமா என்று ஆய்ந்து அதன் இயல்பை உள்ளபடி உணரா மல், அன்புள்ள தம்பி 'மாயை இது' என்று கூறவுங் கேளாமல், பெண்சொல்லைக்கேட்டு, அந்தமானைப் பிடிக்கவிரும்பி அதனைத்தான் தொடர்ந்துசென்றமையே, சீதையை இராவணன் கவர்தற்கு இட மாயிற்று என்று நடந்தசெய்தியைப்பற்றிக் கழிவிரக்கத்தோடு கூறியவார்த்தையாகும், முதல் மூன்று அடிகள். 'அவை' என்றது - விழையாமை, மேன்மையினின்று நெகிழாமை, உணர்வு என்றவற் றைச் சுட்டும். பிராணநாயகியாரான அவர் என்னைவிட்டுப் பிரிந்தது, எனது உயிர் உடம்பைவிட்டுப் பிரிந்ததுபோலு மென்பான், 'உயி ரோடுபிரிந்தனர்' என்றான்; இதனால் சீதையின் இன்றியமையாமை யைப் புலப்படுத்தினன். ஈற்றடியில் 'உழை' என்ற சொல்லை இரு பொருளில் அமைத்தது, சொற்சமத்காரமாம்: உழை - மானும், இடமும். மான் வடிவங் கொண்டவனால் அவர் பிரிந்தனராதலால் அவரிருக்கின்ற இடத்தை மானே! நீ சொல்லக் கடவாய் என வேண்டினனென்க. நவை - குற்றம்; ஆகுபெயராய், அதற்கு இடமான பொருளை யுணர்த்திற்று. இழைதல் - நெகிழ் தல்.

இனி, இச்செய்யுளுக்கு வேறு வகையாகவும் உரைகொள்ளலாம்; அது வருமாறு:—விழைவு ஆனவை விழையேன் - விரும்பத்தக்க பொருள்களெவற்றையும் விரும்புகின்றேனில்லை; மேன்மையில் நின்று இழையேன் - (அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி, என ஆடவர்க்குரிய) மேன்மைக்குணங்களில் நிலைத்துத் தொழில்செய்ய ஆற்றலிலேன்; உணர்வு ஏனவை இன்மையினால் - புத்தியும் மற்றை அந்தக்கரணங் களாகிய மனம் சித்தம் அகங்காரம் என்பனவும் ஒழிதலால், பிழையேன் - இனி உயிர்வாழமாட்டேன்; உயிரோடு பிரிந் தனர் - என் உயிரோடு (அந்த ஜாநகியார் என்னை விட்டுப்) பிரிந்து சென்றார் எனக்காண்க. விழைவானவை - உணவு, படுக்கை, மலர் முதலியன. இழைத்தல் - செய்தல். ஏனவை - ஏனை யவை.

இனி, [1]'விழையேன் விளைவா லருண் மெய்ம்மையினின்று' என்ற பாடத்திற்கு - அடியில் வருமாறு பொருளுரைக்கலாம்;—

உழையே - மானே! விழையேன் - (மாரீசனாகிய மாயமானைப்போல உன்னைப்பிடிக்க) விரும்பேன்; விளைவால் - காரியத்தால், அருள் மெய்ம்மையினின்று இழையேன் - கருணையினின்றும் சத்தியத்தினின்றும் நெகிழமாட்டேன்; உணர்வேன் - (உனது இயல்பை) அறிவேன்; நவை இன்மையினால் - (உன்னிடத்தில் யாதொரு) குற்றமும் இல்லாததனால், பிழையேன் - (தொடர்தல் துரத்துதல் அம்பெய்தல் கொல்லுதல் என்றாற்போல) யாதொருதவறும் (உனக்குச்) செய்யமாட்டேன் என்க.

'விழையேன்...மெய்ம்மையினின்று, இழையேனுணர் வென்வயினின்மையினால், அல்லது இழைவேனுறைவேன் வயினின்மையினால், பிழையே னுயிர்கொண்டு பிரிந்தனரால்' என்றும், 'இழைதோய் முலையாள் விளைவெண்ணுகினும், உழைதானுணர்வேனுயிரின்மையினால்' என்றும் பாடமுண்டு. பி - ம்:—[1]விழைவேன். [2]விழவால். [3]அருண்மென்மையினின்று, அவண்மெய்ம்மையினின்று, அவைமெய்ம்மையினின்று. [4]அழையேன், இழைவேன், இழவேன். (508)

57.—இராமபிரான் தன்னுயிரை நோக்கி இரங்கல்.

பயில்பா டகமெல் லடி[1]பஞ் சணையார்
செயிரே துமிலா ரொடுதீ ருதியோ
அயிரா துடனே [2]யகல்வா யலையோ
உயிரே [3]கெடுவா யுறவோர் கிலையோ.

(இ - ள்.) உயிரே - (எனது) உயிரே!—பயில் - அணிந்த, பாடகம் - பாடக மென்னும் ஆபரணத்தை யுடைய, மெல் அடி - மென்மையான பாதங்கள், பஞ்சு அணையார் - பஞ்சுபோல மென்மையா யிருக்கப் பெற்றவரும், செயிர் ஏதுஉம் இலாரொடு - யாதொரு குற்றமு மில்லாதவருமான ஜாநகியாரோடு, தீருதிஓ - (நீ) என்னை விட்டு நீங்கிப் போகக் கடவையோ? (அப்படிப்போவதானால்), அயிராது உடனே அகல்வாய் அலைஓ - சங்கைகொள்ளாமல் அவர் பிரிந்த அப்பொழுதே அவருடன்சென்றிருக்கக் கடவாயன்றோ! கெடுவாய்—! உறவு ஓர்கிலைஓ - (பிராணனாகிய உனக்கும் பிராணநாயகியாராகிய அவர்க்குமுள்ள) உறவுரிமையை (அப்பொழுது) அறிந்தாயில்லையோ? (எ - று.)

உயிரே! நீ அப்பொழுதே என்னுடம்பைவிட்டு நீங்கியிருந்தால் வருத்தமில்லாதிருக்குமேயென்றவாறும். அன்றியும், எனது உயிராகிய நீ அவரைவிடாமல்தொடர்ந்துசென்று அவருடனிருந்தால் வருத்தமென்பதுஏது? என்றவாறுமாம். மூன்றாமடிக்கு - (நீ போவதானால்), "உண்ணிலாவிய துயரம்பிடித்துந்த வாருயிர்நின்றூசலாட" என்றபடி உடம்பை விட்டுப்போவதா? போகாமலிருப்பதா? என்று சங்கைகொண்டாய்போலப் போவதும் வருவதுமாயிருந்து வருத்தாமல், உடனே [விரைவிற்] சென்றுவிடக் கடவா

யன்றோ என்று கருத்து. 'உறவோர்கிலேயோ' என்பதற்கு - (எனக்கும் அவர்க்குமுள்ள) உறவுரிமையை அறிகின்றாயில்லையோ என்றலுமாம். இனி ஒரு குற்றமுமில்லாத அவரோடு இப்போதாக (நீ உறவு) ஒழிகின்றாயோ? அல்லாக்கால் அவர் போனவுடனே நீயும் சங்கையின்றிப் போகக்கடவாயன்றோ? என்றும், உயிரே! கெடுவாய்! நெடுநாள் பழகிய உறவையாவது நினையாயோ? என்றும் உரைக்கலாம். 'கெடுவாய்' என்றது, இரக்கத்தால் நிட்டூரந்தோன்ற விளிப்பது. பி - ம்:—[1]பஞ்சணையார். [2]மகிழ்வாயலேயோ. [3]கொடியாய், கொடுவாய். (509)

58.—கொன்றையை நோக்கி இரங்கல்.

ஒன்றைப் பகராய் குழலுக் [1]குடையாய்
வன்றைப் புறுநீள் [2]வயிரத் தினையோ
கொன்றைக் கொடியாய் [3]கொணர்கிற் றிலையோ
என்றைக் குறவாக [4]விருந் தனையோ.

(இ - ள்.) கொன்றை கொடியாய் - கொன்றைமரமாகிய கொடியவனே!—குழலுக்கு உடையாய் - (ஜானகியாருடைய) கூந்தலோடு நீ (பகைமை) உடையையாய், (அதனால் அவரிடத்தும் என்னிடத்தும்), வல் தைப்புஉறு நீள் வயிரத்தினை ஓ - வலிய ஊன்றிய நீண்ட கறுவுடையாயோ? (அதனாலேதான்), ஒன்றை பகராய் - யாதொரு விடையுங் கூறாமல், கொணர்கிற்றிலை ஓ - (அவரை என்னிடம்) கொண்டுவந்து கொடாமலிருக்கின்றாயோ? என்றைக்கு உறவு ஆக இருந்தனை - (நீ) என்றைக்குத்தான் உறவாக இருந்தாய்? (எ - று.)—ஓ - இரக்கம்.

கொன்றைமரம் கார்காலத்தில் மலர்ந்துவிளங்கிக் காமோத்தீபகமாய் வருத்துதலால், அதனை 'கொடியாய்' என்று விளித்து இரங்குபவனானான். கொன்றைக்காயை மகளிர்கூந்தலுக்கு வடிவில் உவமையாகக்கூறும் மரபுபற்றி, 'குழலுக்கு உடையாய்' என்றான். 'கொன்றை' என்ற சொல் கொன்று என்று ஒருபொருள் படுதலாலும், அன்பு நண்பு அருள் இன்றிக் கொல்லுமியல்புடையாய் நீ யென்பான், 'என்றைக்கு உறவாகவிருந்தனையோ' என்றான்; நீ என்றென்றைக்கும் கொன்றையென்று பெயர் பெற்றிருக்கின்றனையேயன்றி, ஒருநாளேனும் உறவுஎன்று பெயர் பெற்றிலை யென்றானும்: 'ஆரக் வதம்' என்ற இதன் வடமொழிப்பெயரையுங் காண்க. கொன்றை மனிதர் சூட்டிக்கொள்ளும் மலரன்றாதல்பற்றி, நீ என்றைக்கு அவர் கூந்தலோடு சம்பந்தமுடையையாயிருந்தாயென்ற பொருளில் 'என்றைக்குறவாகவிருந்தனையோ' என்றதுமாம்; அவர் கூந்தலோடு உனக்கு என்றைக்கும் நண்பு இருந்ததில்லை யென்க. என்னைவிட்டுப் பிரிந்தநிலையிலும் பிரியாதநிலையிலும் எந்நாளிலும் நீ அவர்கூந்தலுக்கு ஒப்பாகத் தகுதியுடையையல்லையென்ற பொருளுங்

தோன்றும்; இவ்வளவுதகுதியற்ற உனக்குப் பகைமையும் கறுவும் ஏன்? என்றபடி. திருமாலுக்கும் அப்பெருமானது திருவவதார மூர்த்திகளுக்கும் கொன்றைமலர் உரியதன்றென்னும் உண்மை இங்குப் புலனாகுமென்பர் ஒருசாரார். ஒன்றைப் பகராய் - (இப்படி வருந்துகின்ற எனக்குச் சமாதானமாக) ஒருவார்த்தையையுஞ் சொல் லாய் என்றவாறுமாம்: ஒருவார்த்தையையேனும் சொல்வாய் எனி னுமாம். அசேதநமாகிய மரம் ஒன்றையுஞ்சொல்லாமலும் பிரிந்த வரைக் கொணரமாட்டாமலும் நின்றமைக்குப் பகைமையும் வயிரமுங் காரணமாகக் குறிக்கப்பட்டன.

தைப்பு உறு - தைத்தல்பொருந்திய; (எளிதில் தீராதபடி) நன்றாக அழுந்திய என்க. நீள் வயிரம் - நெடுங்காலமாகவுள்ளவைரம். 'குழலுக்கு உடையாய்' என்றது - (காயினுற்) கூந்தலுக்கு (ஒப்புமை) உடையாய் என்ற பொருளும், கூந்தலுக்கு (ஒத்த காய்களை) உடை யாய் என்றபொருளும், 'வல்தைப்புறு நீள்வயிரத்தினை' என்றது - வலிய உள்ளே ஆழ்ந்த நீண்ட வைரத்தையுடையாய் (வயிரம் - மர வைரம்) என்ற பொருளும், 'கொடியாய்' என்றது - கொடிகளையுடை யாய் என்ற பொருளும் (மரத்தைச்சார்ந்து கொடிகள்படர்ந்திருத்தல் இயல்பு) தோன்றநின்றன. கொணர்கிற்றிலையோ - (அவரைக்) கொண்டுவரமாட்டாயோ என்றுமாம். பி - ம்:—[1] உடைவாய், இடை வாய், உரியாய். [2] வயிரத்தினையே. [3] கொணர்கிற்றிலையே, கொணர் கின்றிலையே. [4] இருந்தனையே. (510)

வேறு.

59.—முல்லைமலரையும், இந்திரகோபத்தையுங்குறித்து இரங்கல்.

குராவரும் பணைய [1] கூர்வா ளெயிற்று [2] வெங் குருளை நாகம்
விராவுவெங் கடுவிற் கொல்லு மெல்லிணர் முல்லை [3] வெய்தின்
[4] உராவருந் துயர மூட்டி [5] யோய்வற [6] மலைவ [7] தொன்றோ
இராவண கோப [8] நிற்க [9] விந்திர கோப மென்னோ.

(இ-ள்.) குரா அரும்பு அணைய - குராமரத்தின் அரும்பையொத்த, கூர்வாள் எயிறு - கூரிய ஒளியுள்ள பற்களையுடைய, வெம் குருளை நாகம் - கொடிய இளமையான பாம்பினிடத்து, விராவு - பொருந்திய, வெம் கடுவின் - வெவ்விய விஷம் போல, மெல் இணர் முல்லை-மென் மையான மலர்களையுடைய முல்லைக்கொடி, வெய்தின் - கொடிதாய், கொல்லும் - (என்னை) மரணவேதனைப்படுத்தும்; உராவு அருந் துயரம் மூட்டி - பொறுத்தற்கு அரிய துன்பத்தை யுண்டாக்கி வளர்த்து, ஓய்வு அற மலைவது-ஒழிவில்லாமல் (என்னை எதிர்த்துப்) போர்செய்வது, ஒன்றுஓ - இதுஒன்றுமாத்திரமோ? இராவண கோபம் நிற்க - இராவண கோபமொன்று இருக்கையில், இந்திர கோபம் என்னோ - இந்திரகோபமொன்று (என்னைவருத்தத் தலைப் பட்டது) என்னோ? (எ - று.)

கார்காலத்துக் காணப்படும்பொருள்களெல்லாம் காமோத்தீபக மாய்விரகிகளை வருத்தும்; அவற்றில், முல்லைமலரும் தம்பலப்பூச்சி

யும் இங்குக் குறிக்கப்பட்டன. பிரிந்தாரது பற்களை முல்லையரும்பும், உதட்டைக் கோபமும் ஞாபகப்படுத்துதலாலும் வருத்துவனவாம். முல்லைமலர் மன்மதனது பஞ்சபாணங்களுள் நான்காவதாய் 'சந்தாபம்' எனப் பெயர்பெற்று, "வனத்திலுறு முல்லை கிடைகாட்டும்" என்றபடி அழுங்கலும் மொழிபலபிதற்றலுமாகிய மோகாவத்தைதயை விளைத்து மிகவருத்துதலும் உணரத்தக்கது. முதல் மூன்றடிகட்கு - நாகம், (கரிய) கொடியநஞ்சினைற் (பிராணிகளைக்) கொல்லும்; முல்லை, மெல்லிய (வெண்ணிறமான) மலரினுல் துய்யமூட்டி ஒப்பற (என்னோடு) மலைவது; இவைமாத்திரமோ என்றும் பதவுரை கொள்ளலாம்.

ஈற்றடியால், தன்மகனைக்கொண்டு இந்திரனைவென்று சிறைவைத்தவனான இராவணனது கோபம் நிற்கையில், அவனால் அடக்கப்பட்டவனும் அவனுக்கு அஞ்சியொளிப்பவனுமான இந்திரனது கோபம் தலைப்பட்டது எங்ஙனமோ! என்று வியந்தவாறும், அரக்கர் தலைவனான இராவணனது கோபம் என்னை வருத்தலாம்; தேவராஜனான இந்திரனது கோபம் என்னை வருத்தக்கடவதோ! என்னும் பொருளும் தோன்றும். 'இராவணகோபம்' என்பது - இராவணனுடைய மறைப்புஎன்று பொருள்பட்டு, இராவணன் சீதையை எடுத்துச்சென்று ஒளித்ததையும் உணர்த்தும்; கோபம் - சினம், மறைப்பு என்ற இருபொருளைக் காட்டவல்லது. கோபத்தைச் செந்நிறமுடையதாக வருணித்தல், கவிமரபு. தம்பலப்பூச்சிக்குப் பெயராம்போது, இந்திரகோபம் - இந்திரனால் காக்கப்படுவதென்று காரணப்பொருள்படும்; மழையினுல் அது தோன்றிப் பரவுதலாலும், இந்திரன் மேகவாகனனாய் மழைக்குத் தலைமைபூணுதலாலும், அங்ஙனம் அதற்குப் பெயராயிற்றென்ப. இவ்வாறு இந்திரனது சம்பந்தமுடையதாய்ச் செந்நிறத்தோடு தன்னை வருத்துவதாகிய அதனை இராமபிரான் இந்திரனது கோபமெனக் கற்பித்தலும் ஏற்றதாம்.

குரவமரத்தின் அரும்பு - பாம்பின்பல்லுக்குக்கூரிய வடிவிலும் நிறத்திலும் ஒப்பாம். குரா-மருதோன்றி அல்லது வாடாக்குறிஞ்சி. குருளை - இளமைப்பெயர்: தொல்காப்பியத்து மரபியலில் "நாயே பன்றி புலி முயல் நான்கும், ஆயுங்காலைக் குருளை யென்ப" என்ற சூத்திரத்தின உரையில் "ஆயுங்காலை" என்றதனால், "சிறுவெள்ளரவி னவ்வரிக் குருளை" என்பதுங் கொள்க என்று அமைக்கப்பட்டமை காண்க. முதிர்ந்துவலிதளர்ந்ததல்லாமல் இளம்பருவத்து வலிமையோடுள்ள நாக மென்றற்கு, 'குருளை நாகம்' எனப்பட்டது; இளமைமாருது புதிதாக மலரும் முல்லைக்கு உவமையாதல்வேண்டி 'குருளைநாகம்' என்ருருமாம். நாகம் - இளையதாயினும் விடத்தின் கடுமைக்குக் குறைவில்லையே; அவ்வாறே, முல்லை இளையதாயினும் வருத்துதலிற் குறைவில்லை யென்றதுமாம். உராவுதல் - பரிசித்தல், தாங்குதல்: இனி, 'உராவுவரும்' என்பது 'உராவரும்' எனத்

தொக்கு ஒருசொல் தன்மைப்பட்டதெனக் கொண்டு, வளர்ந்து வருகின்றனனலுமாம். 'மூட்டி' என்ற வினைக்கு ஏற்ப, துன்பமாகிய நெருப்பையென்னலாம். 'கொல்லும்' என்பதைப் பெயரெச்சமாகக் கொண்டு, கொல்வதான முல்லை வெய்தாய்த் துயரமூட்டி மலைவது மாத்திரமோ என ஒரு வாக்கியமாக்கவும் இடமுண்டு: துயரம் ஊட்டி என்று பிரித்தாலும் பொருள்படும். மெல்முல்லை இணர் என மொழி மாற்றி, மென்மையான முல்லைப்பூ என்றலும் அமையும். மென்மையானதன்மையையுடைய இதற்கு இவ்வாறு வருத்தும் வன்மை எங்ஙனமமைந்ததோ என்று அதிசயித்தல்தோன்ற, 'மெல்லிணர் முல்லை, குருளை நாகம் விராவு வெங்கடுவின் வெய்திற் கொல்லும்' எனப்பட்டது. அது இங்ஙனம் விபரீதநிலை யடைந்ததற்குக் காரணம் இராவணகோபமேயென்பது தோன்ற; அதனையடுத்து இராவணகோபத்தை நிறுத்தினன்.

ராவண னென்ற வடசொல்-கூவினவ னென்று பொருள்படும். கைலாசகிரியின்கீழ்க் கைமகப்பட்டுக் கொண்ட பொழுது பேராரவாரமிட்டமை பற்றி, இவனுக்கு இப்பெயர் சிவபிரானால் அளிக்கப்பட்டது; இனி, ராவணன் - கூச்சலிடச் செய்தவன் என்றுங் கொள்ளலாம். தான் செய்யும் பல துன்பங்களால் உலகத்தாரை அலறிக்கதறிக் கூவச்செய்தான் இவன். இனி, விச்சிரவன் மகனென்னும் பொருளில் (வடநூல் விதிப்படி) ஆதேசம் வந்து ராவணனென்றாயிற்றென்றும் கூறுவர்.

[5] 'ஒய்வுற' என்ற பாடத்திற்கு - (யான்) ஒய்வடையுமாறு [வலிமைதளர்ந்தொழியும்படி] என்று பொருளாம். பி - ம்:—[1] கூர்வாய், கூர்வால். [2] வன்குருளை. [3] என்றும். [4] உராவுவெங். [6] உலைப்பது, உழல்வது. [7] ஒன்றால். [8] தீர்க்க. [9] இந்திரகோபமன்னோ, இந்திரகோபமன்றோ. (511)

60.—வாடைக்கு இரங்கல்.

ஓடைவா ணுதலி ளுைளை யொளிக்கலா முபாய [1]முன்னி
நாடிமா ரீச ளுரோ [2]ராடக நவ்வி யாளுர்
வாடையாய்க் கூற்றி ளுரு முருவினை மாற்றி வந்தார்
கேடுசூழ் வார்க்கு வேண்டு முருக்கொளக்[3]கிடைத்த வன்றே.

(இ - ள்.) (முன்பு), மாரீசனுர்—, (என்னைத்துன்புறுத்த), ஓடைவாள் நுதலினளை ஒளிக்கல் ஆம் உபாயம் உன்னி நாடி - பொற்பட்டத்தை யணிதற்குரிய ஒளியுள்ள நெற்றியை யுடையவளான சீதையை வஞ்சனையாற் கவர்தற்கு ஏற்ற உபாயத்தை ஆலோசித்து அறிந்து, ஓர் ஆடகம் நவ்வி ஆனுர் - பொன்மயமானதொரு மான்வடிவமாயினர்; (இப்பொழுது), கூற்றினுர்உம் - யமனும், (என்னை வருத்துதற்கு), வாடை ஆய் உருவினை மாற்றி

வந்தார் - வாடைக்காற்றாக (த் தனது) உருவத்தை மாற்றிக் கொண்டுவந்தார்; கேடு சூழ்வார்க்கு - (எனக்குத்) தீங்குசெய்ய வருபவர்க்கு, வேண்டும் உரு கொள இடைத்த அன்றே-(அதற்கு) வேண்டியவாறெல்லாம் வடிவங்கள் கொள்ளும்படி கிடைத்தன வன்றோ? (இந்தக் கொடுமையை என்னென்பேன்!!) (எ - று.)

தலைவியைப் பிரிந்த தன்னைக் கார்காலத்து வாடைக்காற்று மரணவேதனைப்படுத்துவதுபற்றி, அதனை யமனென்றே குறித்தனன், 'ஓடைவாள் நுதலினாள்' என்றது, நெற்றியழகில் ஈடுபாட்டினால். ஓடைவாள் நுதலினாள் - பட்டமகிஷியாதற்குரியவள். ஓடை - நுதலாளுக்கு அடைமொழி; நுதலுக்கு அடைமொழியாக்கி. நீரோடைபோல எனது தாபத்தைத் தணிக்கின்ற நெற்றியழகுடையாளென்றலுமாம். 'மாரீசனார்', 'கூற்றினார்' என்ற பன்மைகள், சினம் பற்றியன; இகழ்ச்சிக் குறிப்புமாம். 'கூற்றுவது - வாழ்நாள் இடையறுது செல்லுங் காலத்தினைப் பொருள் வகையாற் கூறுபடுத்துங் கடவுள்' என்பது, தொல்காப்பியவுரை. உன்னி நாடி - ஊகித்து உணர்ந்து. நாடிடு - விரும்பி யெனினுமாம். ஈற்றடி-காமரூபிகளாய் வரபலத்தால் வேண்டும் வடிவங்கொள்ளும் ஆற்றல்படைத்தவர்கட்கு இவ்வாறுநலிதற்குக்காலத்திற்கு ஏற்ப வடிவங்கள் அமைந்த திறத்தைக் குறித்து வியந்தவாறும். அன்றே - தேற்றம். சூழ்தல் - ஆலோசித்தல். பி - ம்:—[1] எண்ணி. [2] நாடகநவ்வி. [3] கிடந்த, இடைத்தது. (512)

61.—மின்னுகின்ற மேகத்தை நோக்கி இரங்கல்.

அருவினை [1]யரக்க ரென்ன [2]வந்தர மதனில் [3]யாரும்
வெருவர முழங்கு கின்ற மேகமே மின்னு கின்றாய்
[4]தருவலென் [5]றிரங்கி னாயோ தாமரை [6]மறந்த தையல் [யால்.
உருவினைக் காட்டிக் காட்டி [7]யொளிக்கின்றா யொளிக்கின்றா

(இ - ள்.) அரு வினை அரக்கர் என்ன - (பொறுத்தற்கு) அரிய தீய செயலையுடைய இராக்கதர் போல (கரிய பெரிய வடிவ முடையையாய்), அந்தரம் அதனில் - வானத்திலே, யார் உம் வெருவர முழங்குகின்ற - யாவரும் அஞ்சும்படி பேரொலி செய்கின்ற, மேகமே—! மின்னுகின்றாய் - மின்னுகின்ற நீ, தருவல் என்று இரங்கினாய்ஓ - (அரக்கர்போலன்றி) 'இராமனுக்குச் சீதையைக் கொடுப்பேன் யான்)' என்று (என் பக்கல் சிறிது) இரக்கங்கொண்டாயோ? தாமரை மறந்த தையல் - செந்தாமரைமலரில் வசித்தலை விட்டு (விதேக நாட்டில்) தோன்றிய [இலக்குமியாகிய] அழகிற் சிறந்தவளான சீதையின், உருவினை - வடிவத்தை, காட்டி காட்டி ஒளிக்கின்றாய் ஒளிக்கின்றாய் - (நீ) காண்பித்துக் காண்பித்து மறைக்கின்றாய் மறைக்கின்றாய்; (எ - று.)

ஆல் - ஈற்றசை; இரக்கக் குறிப்புமாம்: ஆதலால் என்பதன் விகார மெனக் கொண்டு, காட்டிக்காட்டி ஒளிக்கின்றாயாதலால் தருவ

லென்று (சிறிது) இரங்கினாயோ என்று இயைத்தலுமாம். மின்னலே சீதையின் வடிவமாகக்குறிக்கப்பட்டது. காட்டிக் காட்டி ஒளிக்கின்றாய் ஒளிக்கின்றாய் - அடுக்குக்கள், இரக்கத்தோடு பலமுறைப் பொருளன. தாமரைமறந்த தையல்—"மையறுமலரினீங்கி யான்செய் மாதவத்தின்வந்து, செய்யவ ளிருந்தாளென்று.........அந்தக்கடிநகர் ....அழைப்பது போன்றதம்மா" என்றார், பாலகாண்டத்து மிதிலைக்காட்சிப்படலத்திலும். திருமகளின் அவதாரமானவ ளென்பது, இதன் கருத்து. "திருமால் இராமனானபோது திருமகள் சீதையாகத் தோன்றினள்" என்பது, புராணம். உவமையணியும் தற்குறிப்பேற்றவணியும் சேர்ந்து வந்த சேர்வையணி. [5]'இரங்கிலாயோ' என்ற பாடமும் ஏற்கும்; காட்டியதனோடு நில்லாமல் மீண்டும் ஒளித்துவிடுகின்றதனால் தருவலென்று இரங்குகின்றா யில்லையோ என்று கூறியதாம். 'அந்தரமதனில்' என்றதில், 'அது' - பகுதிப்பொருள்விகுதி. பி - ம்:—[1] அரக்கனென்ன. [2] அந்தரமதனின். [3] யாவும்வெருவர. [4] தருவனென்று. [6] இருந்த, துறந்த. [7] ஒளிக்கின்றாயொக்கின்றாயால், ஒழிக்கின்றாயொளிக்கின்றாயால், ஒளிக்கின்றாரொக்கின்றாயால். (513)

62.—இதுவும், அடுத்த கவியும்-மன்மதனைப் பழிப்பன.

உண்ணிறைந் துயிர்க்கும் வெம்மை யுயிர்சுட [1]வுடலை யுள்ளம்
[2]புண்ணுற வாளி [3]தூர்த்தல் பழுதினிப் [4]போதி மாரா
எண்ணுறு கல்வி யுள்ளத் [5]திளையவ னின்னே யுன்னைக்
கண்ணுறு மாயிற் [6]பின்னை யாரவன் சீற்றங் [7]காப்பார்.

(இ - ள்.) மாரா - (பிராணிகளை ஆசைநோயால்) மரணவேதனைப் படுத்துபவனான மன்மதனே!—உள் நிறைந்து - உள்ளிடம் முழுவதிலும் நிரம்பி, உயிர்க்கும் - (அங்கு இடங்கொள்ளாமையாற்) பீறிக்கொண்டு வெளிப்படுவதான, வெம்மை - (பிரிவுத்துயரினாலான) வெப்பமானது, உயிர் சுட - (எனது) உயிரை யெரித்துவிட, இனி - பின்பு, உடலை - (உயிரற்றதான எனது) வெற்றுடம்பை, உள்ளம்புண் உற வாளி தூர்த்தல் - உள்ளிடம்புண்கொள்ளுமாறு (நீ) மேன்மேல் அம்பெய்து அழித்தல், பழுது - பயனற்ற காரியமாம்; (ஆதலால்), போதி - அப்பாற்செல்வாய்; (மற்றும்),—எண் உறு கல்வி உள்ளத்து இளையவன் - (யாவராலும்) நன்குமதிக்கப்பெற்ற கல்வியில் தேர்ந்த மனத்தையுடைய (என்) தம்பியான இலக்குமணன், இன்னே - இப்பொழுது, உன்னை கண்ணுறும் ஆயின் - உன்னைப் பார்ப்பனானால், பின்னை - பின்பு, அவன சீற்றம் காப்பார் யார் - அவன் (உன்மேற்கொள்ளும்) கோபத்தைச் சாந்தப்படுத்தி (அதனால்வருந் தீங்கினின்று உன்னைப்) பாதுகாக்கவல்லவர் யாவருளர்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

'இன்னுயிர்க்கணவனான யான்பிரிந்திருந்த சமயம் பார்த்துச் சீதையைக் கவரத்தொடங்கிய சூர்ப்பணகை இலக்குமணனால்

உடலுறுப்புச் சிதைக்கப்பெற்றுப் பட்ட பாட்டை அறியாயோ? மன்மதா! என்னுயிர்த்தலைவி பிரிந்திருக்கின்ற சமயம்பார்த்து என்னை மிகவும் வருத்தத் தலைப்பட்டனையே! உன்னை இலக்குமணன் பார்த்தால் உன்கதி என்னாகும்?' என்றவாறும். தனது மெல்லிய மலரம்புகளை யெய்து பிரமன்முதல் எறும்பீறாக அனைத்து உயிரையும் தன்வயப்படுத்திவருகின்ற வில்வீரனான மன்மதனையும் அழிக்க வல்ல வில்வன்மையை யுடையவன் இலக்குமணனென்பது இங்கு விளங்கிற்று. மற்றும், மாரனை வெல்லும் வீரன் என்றதால், இலக்குமணன் இந்திரியங்களுக்கு வசப்பட்டவனல்லன் என்ற அரும்பெருங் கருத்தும் தொனித்தல் காண்க. இராமபிரான் சாட்சாத் பகவானது அமிசமே யாதலால் பொறுமையை மேற்கொண்டிருந்தருள்வன்: இலக்குமணனோ, பகவானது அமிசத்தோடு ஆதிசேடனது அமிசமும் கலந்தவனாதலால், சிற்சில சமயங்களிற் சினத்தை மேற்கொண்டிருந்தருள்வன்; கீழ்த் தசரதனும் கைகேயியுமாக இராமபிரானை வனவாசத்திற்கு அனுப்பியபோது பெருமான் இணங்கி உடனே புறப்பட்டுவிட்டனனாக, இளையபெருமாள் அது கேட்டவுடன் பெருஞ் சீற்றங்கொண்டு ஆயுதபாணியாய்ப் போர்க்குச் சன்னத்தனாகித் தந்தை தாயரைப் பழித்து வீரவாதங்கள் கூறிக்கொண்டு 'இராமனுக்குப் பட்டாபிடேகஞ் செய்துவைத்து மறுவேலை பார்ப்பேன்' என்று தொடங்கியபோது இராமன் அவனுக்குத் தணிவுரை பல கூறி அரிதில் அவனைச் சாந்தப்படுத்தும்படியாயிற்று என்ற விவரம், அயோத்தியாகாண்டத்து நகர்நீங்குபடலத்திற் பரக்கக் கூறப்பட்டது. இலக்குவனது சீற்றத்தை "யாவராலும், மூட்டாத காலக்கடைத்தீயென மூண்டெழுந்தான்", "கண்ணிற் கடைத் தீயுக நெற்றியிற் கற்றைநாற, விண்ணிற்சுடருஞ் சுடர் தோன்ற மெய்ந்நீர்விரிப்ப, உண்ணிற்கு முயிர்ப்பெனு மூதைபிறக்க நின்ற, அண்ணற் பெரியோன் தனதாதியின் மூர்த்தியொத்தான்" எனக் காண்க. இலக்குமணன் இத்தகைய வலிமையுஞ் சீற்றமு முடையனாதல்பற்றி, அவன்பெயரைச் சொல்லி மன்மதனை வெருட்டுவானாயினன் இராமபிரான். அப்பொழுதைய சினம் தாய்தந்தையர் மேல் தகாதவழியிற்கொண்டதாதலால், பலபடிசொல்லித் தான் தணிக்கலாயிற்று; மன்மதன்மேற் கொள்ளுஞ் சினமோ அத்தன்மையதன்றாதலால் தன்னாலுந் தணிக்கக்கூடியதன்று என்பது தோன்ற 'யாரவன் சீற்றங்காப்பார்?' என்றனன்.

வருத்தத்தால் வெப்பமுறப் பெருமூச்சுவிடுதல், உள்நிறைந்த தாபம் அங்குஅடங்காமல் ஒருபுறத்தால் வெளிப்படுவதாகக் கற்பிக்கப்பட்டதுபோலும். 'வாளிதூர்த்தல்' என்பது—நிரம்ப எய்தலென ஒருசொல் தன்மைப்பட்டு, 'உடலை' என்ற செயப்படு பொருளுக்கு முடிக்குஞ்சொல்லாயிற்று. தூர்த்தல் - நிறைத்தல். 'உள்ளம் புண்ணுற' என்பதை 'உயிர்சுட' என்றதனோடு இயைத்தலுமாம். பழுது என்பது பயனின்மை குறிப்பதோர் உரிச்சொல்லாதலை "பழுது பயமின்றே" என்னுந் தொல்காப்பியத்து உரிச்சொல்லியற் சூத்திரத்தா லுணர்க. இச்சொல்லுக்கு - குற்றமென்ற பொரு

னும் உண்டு; ஆகவே, நீ இனி வாளிதூர்த்தல் செத்த பாம்பை யடிப்பதுபோலப் பெருமைக்குக்காரணமாகாது என்று உரைத்தலுமாம். இனி உள்நிறைந்து உயிர்க்கும் வெம்மையை யுடைய உயிர் எரியும்படியாகவும் மனம் புண்ணுறும்படியாகவும் (என்) உடலை வாளிதூர்த்தல், (உனக்கு) அபாயத்திற்கு இடமாகும். ஆதலால், இப்பொழுதே விலகிச்செல் என்று உரைப்பாரு முளர்.

'இனி' என்பது - எதிர்காலங்குறிப்பதோர் இடைச்சொல். எண்ணுறுகல்வியுள்ளத்திளையவன் - எல்லாக்கலைகளிலும் தேர்ந்தவன். எண் உறுகல்வி - பதினென்கென்றும் அறுபத்துநான்கென்றும் எண்ணப்படுகின்ற கலைகளென்றலுமாம். இங்கு 'எண்ணுறு கல்வி யுள்ளத்து' என்ற விசேடணத்தை இளையவனுக்குக்கொடுத்தது, அநங்கனாய்த்திரிகின்ற உன்னை அவன் காணவும் வல்லனென்றற்கு. 'இன்னே' என்பது, நிகழ்காலங்குறிப்பதோ ரிடைச்சொல்லாம். கண் உறுதல் - கண்பொருந்துதல்: ஒருசொல் தன்மைப்பட்டு, பார்த்த லென்னும் பொருளதாய், 'உன்னை' என்ற செயப்படுபொருளுக்கு முடிக்குஞ்சொல்லாம். காத்தல் - தடுத்தலாதலை "செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்" எனத்திருக்குறளிலுங் காணலாம். பி-ம்:— [1]உலையும், உலைவேன். [2]புண்ணுறு. [3]தூர்த்தால். [4]போதிமார,போகுமாவி. [5]இமையவனின்னும். [6]பின்னர். [7]காண்பார். (514)

63. வில்லும் வெங்கணையும் வீரா வெஞ்சமத் தஞ்சி னார்மேல்
[2]புல்லுந வல்ல [3]வாற்றல் போற்றலர்க் குறித்துப் [4]போலாம்
அல்லுநன் பகலு [5]நீங்கா யனங்கநீ யருளிற் றீர்ந்தாய் [தாமோ.
செல்லுமென் [6]றெளிவந் தோர்மேற் செலுத்தலுஞ் சீர்மைத்

(இ - ள்.) வீரா - வீரனே! வில்உம் வெம்கணைஉம் - வில்லும் கொடிய அம்பும், வெம் சமத்து - கொடியபோரில், அஞ்சினார்மேல் - அஞ்சினவர்களின் மேல், புல்லுந அல்ல - சாரக்கடவனவல்ல: (மற்று), ஆற்றல் போற்றலர் குறித்து போல் ஆம் - (தமது) வலிமையை நன்குமதியாதவர்களையே கருதிக் குறியாகக்கொண்டு எய்தற்கு உரியனவாம்போலும்; (இங்ஙனமிருக்க), அனங்க - மன்மதனே! நீ—, அருளின் தீர்ந்தாய் - கருணையினின்று நீங்கியவனாய், அல்உம் நல் பகல்உம் நீங்காய் - இரவும் பகலும் (எம்மைவிட்டு) நீங்காதவனாகி, செல்லும்என்று எளிவந்தோர்மேல்செலுத்தல்உம் - (நமதுவலிமை இங்குப்) பலிக்கும் என்றுகருதி எளியவர்மீது செலுத்தி வருத்தலும், சீர்மைத்து ஆம்ஓ - புகழ்க்குஉரியதாகுமோ? [ஆகாதென்றபடி]; (எ - று.)

சோர்வடைந்தவர், அச்சமுற்றவர், படையிழந்தவர், ஒத்த படை யெடாதவர், போரிற் பின்வாங்கியவர் என்னும் இவர்களமேலும், மற்றும் இப்படிப்பட்டதன்மையுடையவர் மேலும்

படையைச் செலுத்தலாகாது என்பது போர்க்குஉரியவிதி. எவரேனொருவர் வீரத்தைமதியாது அவமதிக்கின்றாரோ, அவர்மீதே படைக்கலஞ்செலுத்தல்முறை: அவ்வாறிருக்க, எளியஎன்மீது உன்வீரத்தைக்காட்டுதல் தகுதியோ? என்று மன்மதனைப் பழிக்கின்றான், இராமபிரான். ஆற்றல் - திறமை; பலபராக்கிரமங்கள். போற்றலர் - அலட்சியஞ்செய்பவர். 'மங்கல மென்பதோரூருண்டு போலும்', "நெருப்பழற் சேர்ந்தக்கால் நெய்போல்வதூஉம், எரிப்பச்சுட்டெவ்வநோயாக்கும்" என்ற இடங்களிற் போல 'போல்' என்றது - ஒப்பில்போலியாய் நின்றது; அதாவது, உவமைப்பொருளுணர்த்தாத போலென்னுஞ்சொல்: இது உரையசையாகுமென உணர்க; இதனை வாக்யாலங்காரமென்பர், வடநூலார். [1]வீரர்என்ற பாடத்திற்கு, வெஞ்சமத்தஞ்சினாரை 'வீரர்' என்றது, இகழ்ச்சிக் குறிப்பு என்க. வீரர்வெஞ்சமத்து என்றுஎடுத்து, வீரர்கள்செய்யுங் கொடியபோரில் என்றலுமாம். வீரர் வில்லும் வெங்கணையும் என்று இயைத்து, வீரரது வில்லும் அம்பும் என்பாருமுளர். [3]ஆற்றல் போற்றலர் குறித்தல் போலாம் என்ற பாடத்தைக்கொண்டு - (அஞ்சினார்மேற் படைக்கலஞ்செலுத்துதல்) வீரம் வேண்டாதாரது கருத்தேயாமென்று உரைப்பாருமுளர்.

[6]'எளிவந்தேமை' என்றபாடத்திற்கு - எளிய எம்மை, நமது வலிமை இவரிடத்துச் செல்லுபடியாமென்று, செயல் - (அம்பைச் செலுத்தி வருத்துஞ்) செய்கை, உறும் - மிக்க, சீர்மைத்தாமோ என்க. இனி, செல்லும் என்று எளிவந்தேமை - 'நீர் (என்னைவிட்டுப்) போம்' என்று வேண்டி எளிமைகாட்டுகிற எம்மையென்று உரைப்பர், ஒருசாரார். அருளின் தீர்ந்தாய் - அருள்சிறிதுமில்லாதிருக்கின்றாய் என்றபடி. பிரிந்தார்க்கு இரவவ்வளவு கொடியதன்றாதலால், பகலுக்கு 'நல்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது: பலபொருள்களைப் பார்த்துப்பொழுது போக்குதற்கும், வேறுவேறு செயல்களில் மனம் செல்லுதற்கும் உரியதாதலால் பகலில் ஒருவாறு ஆறியிருத்தல்கூடும். அல்லும் பகலும் என்றதனால் அப்பகலிலுமுட்பட ஆறவொண்ணாதபடி நீ அருளின்றி எம்மை வருத்துகின்றாயென்றவாறும். அநங்கன் - வடசொல்: அங்கமில்லாதவன் (ந + அங்க = அநங்க:) சிவபிரானது நெற்றிக்கண்ணின் நெருப்புக்கு இரையாய் உடம்பு எரிந்து ஒழிந்தமைபற்றி, இவனுக்கு இப்பெயர். செல்லுதல் - பலித்தல். பி - ம்:—[1]வீரவாளும். [2]புல்லுவ. [3]போற்றலர்க்குரித்துப் போலாம், போற்றுதல் குறித்த போலாம், போற்றலர்க்குறித்த போலாம், போற்றலர்க்குரிய போலாம். [4]போர்வேட்டு. [5]நீங்கா. [6]எளிவந்தோரை, அளி வந்தார் மேல். (515)

64.—இராமனுக்கு இலக்குமணன் தேறுதல்கூறத் தொடங்குதல்.

என்னவித் தகைய பன்னி [1]யீடழிந் திரங்கு கின்ற
தன்னையொப் பானை நோக்கித் தகையழிந் [2]தயர்ந்த தம்பி

நின்னையெத் [3]தகையை யாக நினைந்தனை நெடியோ [4]யென்னச்
[5]சென்னியிற் சுமந்த கையன் தேற்றுவான் செப்ப லுற்றான்.

(இ - ள்.) என்ன இ தகைய பன்னி - என்று இத்தன்மையன வான வார்த்தைகளை மேன்மேற்சொல்லி, ஈடு அழிந்து இரங்குகின்ற - வலிமை யழிந்து விசனப்படுகின்ற, தன்னை ஒப்பானை - (தனக்குச் சமானமானவரெவரு மில்லாமையால்) தன்னைத் தானே ஒப்பவனான இராமபிரானை, நோக்கி - பார்த்து, தகை அழிந்து அயர்ந்த - துணி வொழிந்து தளர்ச்சியடைந்த, தம்பி - தம்பியான இலக்குமணன்,— சென்னியில் சுமந்த கையன் - (தன்) தலைமேல் (கூப்பி) வைத்துக் கொண்ட கைகளையுடையவனாய், தேற்றுவான் -(அத்தமையனாரைத்) தேற்றும்பொருட்டு, (அப்பெருமானை நோக்கி), 'நெடியோய் - பெரியவனே! நின்னை எ தகையை ஆக நினைந்தனை - உன்னை என்ன தன்மையையுடையவனாக நினைத்து விட்டாய்?' என்னா - என்று சொல்லி, செப்பல் உற்றான் - (மற்றும் சிலவார்த்தைகள்) சொல்லத் தொடங்கினான்; (எ - று.) அவற்றை, அடுத்த ஐந்து கவிகளிற் காண்க.

ஈடு அழிதல் - தேகபலமும் மநோபலமும் தளர்தல். இரங்குதல் - புலம்புதல், பரிதபித்தல். தன்னை ஒப்பான்—உபமேயத்தையே உபமானமாகவுஞ்சொன்னது, இயைபின்மையணி; வடநூலார் அநந்வயாலங்காரமென்பர். இப்பொருளுக்கு ஒப்பு வேறொன்றுமில்லையென்பது இதன் கருத்து; "தன்னொப்பாரில்லப்பன்", "தனக்குவமையில்லாதான்" என்றார், முன்னோரும். 'தன்னையொப்பானைநோக்கி' என்றது -'தகையழிந்தயர்ந்த,' 'என்னா', 'செப்பலுற்றான்' என்பவற்றோடு சேரும். 'நெடியோய்' என்றது - பெருமைக் குணமுடையவனேயென்ற பொருளோடு 'அண்ணா!' என விளித்தவாறுமாம். நின்னை எத்தகையையாக நினைந்தனை - உனது ஆற்றல் முதலியவற்றைநோக்கி நீ இவ்வாறு இரங்கற்பாலையல்லை யென்றபடி. என்னா - உடன்பாட்டிறந்தகால வினையெச்சம். சென்னியிற் சுமந்த கையன் - கைகளிரண்டையுங் கூப்பித் தலையின்மேல் வைத்துக்கொண்டு திரியங்கநமஸ்காரஞ் செய்தவனாய். தேற்றுவான் - தேற்றுதற்கு: எதிர்காலவினையெச்சம்; தேற்றுபவனாய் என முற்றெச்சமாகவுங் கொள்ளலாம். பி - ம்:—[1]இடருழந்து, இடரழிந்து. [2]அயருந், இரங்கித். [3]தகையனாக. [4]என்ன. [5]சென்னிமேற். (516)

வேறு.

65.—இதுமுதல் ஐந்துகவிகள் - இலக்குமணன் கூறுந் தேறுதல் வார்த்தை.

கால நீளிது காரு மாரியும் வந்த தென்றக வற்சியோ
நீலமேனிய ரக்கர் [1]வீரநி னைந்த ழுங்கிய [2]நீர்மையோ
வாலிசேனைம டந்தை [3]வைகிட நாட [4]வாரலி லாமையோ
சாலு [5]நூலுணர் கேள்வி வீர!த ளர்ந்த தென்னை [6]த வத்தினோய்.

(இ - ள்.) சாலும் - மிகுதியான [அல்லது சிறப்புமிக்க], நூல் உணர் - நூலறிவையும், கேள்வி - நூற்கேள்விகளையுமுடைய, வீர - வீரனே! தவத்திேனாய் - தவவொழுக்கத்தை யுடையவனே!—கார் காலம்உம்நீளிது - மழைக்காலமும் நீட்சியுடையது: மாரிஉம்வந்தது - மழையும்வந்துவிட்டது, என்ற - என்றதனாலாகிய, கவற்சிஓ - கவலை தானோ? நீலம் மேனி அரக்கர் வீரம் நினைந்து அழுங்கிய நீர்மைஓ - கறுத்தஉடம்பையுடைய இராக்கதரது பராக்கிரமத்தை நினைத்து மனமொடுங்குகின்ற தன்மையோ? மடந்தை வைகு இடம் நாட - பிராட்டியிருக்கின்ற இடத்தைத் தேடியுணர்தற்கு, வாலி சேனை வாரல் இலாமைஓ - வாலியினால் தொகுத்துவைக்கப்பட்ட வானர சேனை வாராமைதானோ! தளர்ந்ததுஎன்னை - (நீ) தளர்ச்சியடைந்த தற்குக் காரணம் (இவற்றில்) யாது? (எ - று.)

சீதையினிடத்துக் காதலிலேயே ஊன்றியிருக்கின்ற இராம பிரானது மனத்தை மாற்றும்பொருட்டு இவ்வாறு விகற்பித்து வினவலானான். இவற்றில் எது உண்மையான காரணமென்பதை ஆராய்தலிற் கருத்துச்செல்லவே துயரம் சிறிதுதணியுமென்பது, இலக்குமணன் கருத்து. அவலச்சுவையைப் பெருமிதத்தில் [வீர ரஸத்தில்] மாற்றவேண்டுமென்னுங்கருத்தினால், 'வீர' என விளித்த னன். இரண்டாமடியில் அரக்கரதுவீரத்தையெடுத்துக்கூறியதும் இது பற்றியே. எல்லாம் அறிந்தவனும் பெருவீரனும் ஐம்பொறி யடக்கும் ஆற்றலுடையவனுமான நீ இவ்வாறு தளர்ச்சியடையக் காரணமில்லை யென்பான், 'சாலுநாலுணர் கேள்வி வீர தளர்ந்த தென்னை தவத்தினோய்' என்றான்.

காலதாமதமாகும்படி இடையே மாரிக்காலம் வந்துவிட்டதே; மேற்செய்யவேண்டும் முயற்சிக்கு மழை தடையாகின்றதே யென் பதுபற்றிய கவலையோ என்பது, முதலடியின் பொருள். காரும் காலம் நீளிது - கார்ப்பருவமும் நீண்டகால முடையது என்னும் பதப் பொருளாகலாம். காலம் நீளிது - (சீதையைப்பிரிந்து) நெடுங்காலமா யிற்று: (அதனோடு) காரும் மாரியும் வந்தது - மேகமும் மழையும் (இடையீடாய்)வந்து சேர்ந்தன என்றலுமொன்று. வாரல் இலாமை - வருதலில்லாமை. மரவுரியுடுத்தலும் சடைமுடிதரித்தலுமாகிய தவ வேடத்தைப் பூண்டு வானப்பிரத்தாச்சிரமதருமம் போன்ற ஒழுக் கத்தையுடையனாதல் பற்றி 'தவத்தினோய்' என விளிக்கப்பட்டனன். 'வாலிசேனை' என்றது, அதன்சிறப்பைக்காட்டும். காரும் மாரியும் வந்தது - பன்மையொருமை மயக்கம். பி - ம்:—[1] வெம்மை. [2] நேர்மை யோ. [3] புக்கிடம். [4] வாலிதலாமையோ, வாரலதாகவோ, வாரலதாமை யோ. [5] நல்லுணர், நல்லுரை. [6] தவற்றினால். (517)

66. மறைதுளங்கினு மதிதுளங்கினும வானு மாழ்கடல் வைய மும், நிறைதுளங்கினு நிலைதுளங்குறு [1] நிலைமை நின்வயி னிற்குமோ,

பிறை[2] துளங்குவ வனைய பேரெயி றுடைய பேதையர் பெருமைநின்,
இறைதுளங்குறு[3] புருவ மென்சிலை[4] யிடைதுளங்குற[5] விசையுமோ.

(இ - ள்.) மறை துளங்கின்உம்-வேதங்கள் பிறழ்வனவானாலும், மதி துளங்கின்உம் - சந்திரன் நிலைதவறுவதானாலும், வான்உம் ஆழ் கடல் வையம்உம் நிறை துளங்கின்உம் - ஆகாயமும் ஆழ்ந்த கடல் சூழ்ந்த பூமியும் (தம்தம்நிலைமையில்) நிற்குந்தன்மை தவறுவன வானாலும், நிலை துளங்குறு நிலைமை-இயற்கைநிலை கலங்குந்தன்மை, நின்வயின் நிற்கும்ஓ - உன்னிடத்தில் உண்டாகக்கடவதோ? [அன்று என்றபடி]; பிறை துளங்குவ அனைய-பிறைகள் பல விளங்குவன போன்ற, பேர் எயிறு உடை - பெரிய பற்களையுடைய, பேதையர் - நல்ல அறிவில்லாதவர்களான இராக்கதர்களுடைய, பெருமை - பெருமையானது,—நின் - உன்னுடைய, இறை துளங்குறு புருவம் என் - மேன்மைவிளங்கும் புருவங்களென்கிற, சிலை - விற்கள், இடை துளங்குற - நடுவிடம் அசைந்த மாத்திரத்தில், இசையும்ஓ - பொருந்தி நிற்குமோ? [நிற்கமாட்டாது என்றபடி]; (எ - று.)

மறைதுளங்குதல் முதலியனவான நேரத்தகாத செயல்களெல்லாம் நேர்ந்தாலும் உனது உறுதிநிலை மாறக்கடவதன்றே யென்பது, முதலிரண்டடியின் பொருள். இதனை, "வேலை கரையிழந்தால் வேத நெறி பிறழ்ந்தால், ஞான முழுது நடுவிழந்தால் - சீலம், ஒழிவரோ செம்மை யுரைதிறம்பாச் செய்கை, யழிவரோ செங்கோலவர்" என்றாற் போலக் கொள்க. விற்போல வளைந்துள்ள நின்புருவங்களை நீ கொள்ளுங் கோபத்தாற் சிறிது நெறித்தமாத்திரத்திலே, அரக்கர்கட்குப் பலம், பராக்கிரமம், ஆயுதம், சேனை, செல்வம், வரம் முதலியவற்றுலாகிய பெருமைகளெல்லாம் ஒழியத் தாமும் அழிந்திடுவரென்பது பின்னிரண்டடியின் பொருள்.

துளங்குதல் - நிலைகலங்குதல், ஒளிசெய்தல், அசைதல். வேதங்கள் பிறழ்தலாவது - உயர்கதி பெறுதற்குஉரிய மனிதர்க்கு வேண்டும்உறுதிப்பொருள்களை யுணர்த்துதற்கென்றே அமைந்தவையும் எம்பெருமானது கட்டளைரூபமுமான வேதங்கள் அங்ஙனம் நல்வழி தீவழிதெரிவிப்பதில் நிலைதடுமாறுதல்; அதாவது - செய்யவேண்டுவனவற்றை விலக்குதலும், தவிர வேண்டுவனவற்றை விதித்தலும். சந்திரன்நிலைதவறுவதாவது - எம்பெருமானது சங்கற்பத்தின்படி நாள்தோறும் உரியகாலத்தில் உதித்து அஸ்தமிக்கும் முறைமை பூண்ட சந்திரன் அம்முறைமை தவறுதல். சந்திரனைக்கூறியது, மற்றைக் கிரக நட்சத்திரங்களுக்கும் உபலக்ஷணம். உதயாத்தமன காலங்கள் நாள்தோறும் மிகவும் வேறுபடுவனவாக விளங்கியும் நியமந்தவறாதிருத்தலாகிய விசேடம்பற்றி, சந்திரனை எடுத்துக்கூறினார். நிறை - நிலை, உறுதிப்பாடு. வான் நிறை துளங்குதல்-ஆகாயம் எல்லாப் பொருள்கட்கும் இடங்கொடுத்தலும், ஒலியைத் தன்குண

மாகவுடைமையும், வடிவமில்லாமையும் முதலிய இயல்புகள்மாறுதல். வையம்நிறைதுளங்குதல் - பூமி வன்மையும், பொருள்கட்கு இடமாதலும், மணத்தைக் குணமாகவுடைமையும் முதலிய இயல்புகள் மாறுதல். பஞ்சபூதங்களுட் காரணமாய் முதலதாகிய வானத்தையும் காரியமாய் ஈற்றதாகிய வையத்தையுங்கூறவே, இடைப்பட்டனவான காற்று தீ நீர் என்னும் மற்றைமூன்று பூதங்களையுங் குறித்தவாறும். புருவமென்சிலை என்றவிடத்து, 'என்' என்றது - உருவகவுருபு, இனி, புருவம் மெல் சிலை என்று எடுத்து புருவங்களாகிய மெல்லிய விற்க ளென்று பொருள் கொள்ளுதலுமாம்; அரக்கரின் பெருமையழிதற்கு நினது கோதண்டமாகிய வலிய வில் வளைந்து அசையவேண்டு மென்பதில்லை; நினது புருவங்களாகிய மெல்லிய விற்கள் நெறிந்து அசையுமளவே போதுமென்றதாம். பேதையர் - அறிவிலார்: இராமபிரானது வல்லமை தமது வலிமைகளினும் மிகவும் மேலானதென்று உணராமல், அப்பெருமானுக்குத் தீங்குசெய்யத் தொடங்கியதனால், அரக்கர் 'பேதையர்' எனப்பட்டனர். பிறை - கலை குறைந்த சந்திரன். அரக்கரது கோரதந்தத்திற்குப் பிறைச்சந்திரன் - வளைந்தவடிவிலும், வெண்ணிறத்திலும் உவமம். அக்கோரப்பற்கள் பலவாதலால், அவற்றிற்கு ஒப்பாதற்பொருட்டு இல்பொருளுவமையாகப்பல சந்திரப்பிறைகள்கொண்டு, 'பிறைதுளங்குவவனைய பேரெயிறு' என்றார்.

மறை - (எளிதில் உணரலாகாதபடி ஆழ்ந்த) மறைபொருளையுடையதென்று காரணப்பொருள் கொள்ளலாம். 'துளங்கினும்' என்றவற்றிலுள்ள உம்மைகள் - எண்ணுப்பொருளோடு, அவை துளங்காவென எதிர்மறைப்பொருளையுங் காட்டும். மதி - நன்கு மதிக்கப்படுவது; அன்றி, மது - தேன்: அதாவது - அமிருதகிரணம்; அதனை யுடையது என ஏதுப்பொருள் கூறுதலுமாம், 'இறை' என்பதை இயல்பாகிய அண்மைவிளியாகக்கொண்டு, தலைவனே! என்று உரைத்தலுமொன்று. 'இடை துளங்குற' என்பதற்கு - முன்னும் பின்னுமில்லாமல் நடுவிற் சிறிதுபொழுது அசைந்தாலென்று உரைத்தலுமாம். [4]'இறை துளங்குற' என்ற பாடத்திற்கு, சிலை - வில், இறை துளங்குற- சிறிதுபொழுது அசைய என்று பொருளாம்.
பி-ம்:—[1]நீர்மை. [2]துளங்குறுமனைய. [3]புருவவெஞ்சிலை. [5]இயலுமோ.

67. அனுமனென்பவ[1]னள[2]வறிந்தன [3]மறிஞ [4]வங்கதனாதியோர், [5]எனைய ரென்பதோ ரிறுதி கண்டில [6]மெழுபதென்றெனுமியல்பினர், வினையின் வெந்துயர் விரவு திங்களும் விரைவு சென்றன [7]வெளிதினின், தனுவெ னுந்திரு நுதலி வந்தனள் சரதம் வன்றுயர் தவிர்தியே.

(இ - ள்.) அறிஞ - அறிவுடையவனே!—அனுமன் என்பவன் அளவு அறிந்தனம் - அனுமான் என்பவ னொருவனுடைய (அறிவு பெருவடிவுகொள்ளுந்திறம் வலிமை முதலியவற்றின்) அளவை

அறிந்தோம்: அங்கதன் ஆதியோர் - அங்கதன் முதலானவர்களாகிய, எழுபது என்று எணும் இயல்பினர் - எழுபதுவெள்ளமென்று எண்ணிச்சொல்லப்படுந் தகுதியுடையவர்கள், எனையர் - (அறிவு பெருவடிவுகொள்ளுதல் வலிமை முதலியவற்றில்) எத்தன்மை யுடையோர், என்பது ஓர் இறுதி - என்கிற ஒரு வரையறையை, கண்டிலம் - அறிந்தோமில்லை; வினையின் - தீவினைபோல, வெம்துயர் விரவு - கொடிய துன்பந்தருந்தன்மை பொருந்திய, திங்கள்உம் - (மழைக்கால) மாதங்களும், விரைவு சென்றன - விரைவிற் கழிந்துபோகலாயின: (இனி),—நின் - உன்னுடைய, தனு என்னும் திரு நுதலி - (ஒப்புமையால்) வில்லென்று சொல்லத்தக்க அழகிய புருவங்களையுடைய மனைவியான சானகிப் பிராட்டி, எளிதில் வந்தனள் - சுலபத்தில் வந்து சேர்ந்தவளாவள்; சரதம் - (இது) நிச்சயம்; (ஆதலால்), வல் துயர் தவிர்தி - கொடிய துன்பம் நீங்குவாயாக; (எ - று.)

அனுமானோடு சம்பாஷித்ததனாலும் அப்பொழுது அவன் பெருவடிவங்கொண்டு காட்டக் கண்டதனாலும் அவனுடைய அறிவு பெருவடிவுகொள்ளுந்திறம் வலிமை முதலியவற்றை நேராக உணர்ந்தமைபற்றி, 'அனுமனென்பவனளவறிந்தனம்' என்றும், மற்றை அங்கதன் முதலிய வாநரவீரர்கள் எழுபது வெள்ளமெனுந் தொகையுடைய ரென்பதை அனுமான் வார்த்தையாலும் சுக்கிரீவன் சொல்லாலும் அறிந்ததேயன்றி அவர்களுடைய அறிவு திறம் வலிமை முதலியவற்றை நேராகக் கண்டுணரக் காலம் வாய்க்காமைபற்றி 'அங்கதனாதியோர் எழுபதென்றெணு மியல்பினர் எனைய ரென்பதோரிறுதி கண்டிலம்' என்றும் கூறினன். இதனால், காண நேருமிடத்து அவர்களுடைய அறிவு முதலியனவும் அனுமானுடையனபோலவே யிருத்தல்கூடு மென்பதை யுணர்த்தி தேறுதல் கூறினன். சென்றன, வந்தனள் என்றவை - விரைவும் நிச்சயமும் பற்றி எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதிகள்.

அனுமனென்பவன் என்பதில் என்பவன் என்றது, பகுதிப்பொருள் விகுதியாய் நின்றது; செயப்பாட்டுவினைப்பொருளில் வந்த செய்வினை யெனக் கொண்டு, 'ஊரெனப்படுவது உறையூர்' என்றாற்போல 'என்று சிறப்பித்துக் கூறப்படுபவனது' எனப் பொருள்கொள்ளலுமாம். இறுதி - எல்லை. 'எழுபது' என்றது - இலக்கணையாய், எழுபதுவெள்ளத்தைக் குறித்தது. வெள்ளத்திற்கு ஒருவராக எழுபதுவெள்ளத்திற்குந் தலைமைபூண்ட எழுபது படைத்தலைவர்களை மாத்திரமே 'எழுபதென்றெணுமியல்பினர்' என்று குறித்ததாகவுங் கொள்ளலாம். திருநுதலி - அழகிய நெற்றியை யுடையவளென்றுமாம்; அதற்கும் வளைந்த வடிவில் வில் உவமை கூறப்படும். தனு - தநுஸ்: இனி, தனு - தநு என்னும் வடசொல்லின் திரிபெனக்கொண்டு, (உனது) வடிவத்தில் ஒருகூறென்று சொல்லத்தக்க பிராட்டியென்றலு மொன்று;

இப்பொருளில், 'தனுவெனும்' என்றது - நுதலிக்கு அடைமொழி. பி - ம்:—[1] அறிவு. [2] அறிந்தனை. [3] அறிதி, அறிஞன். [4] அங்கதனமைதியோர், அங்ஙனமைதியோர். [5] எனைவர் அல்லது எனையர் எங்கொரிறுதிகண்டு மேல். [6] எழுபதென்பதோர் பரவையோர், எழுபதென்றெனுழுவகையோய், எழுபதென்றெழு பரவையோர். [7] எளிதினில். சில பிரதிகளில் மூன்றாமடி 'அணிகவெம்படை விரவுதிங்களுமவதி சென்றனவெளிதினின்' என்றும், 'வினையின் வெங்கதிர் விரவுதிங்களும் விரைவுசென்றன வென்றிநின்' என்றும் காணப்படுகின்றது. (519)

68. மறைய றிந்தவர் வரவு கண்டுமை வலியும் வஞ்சகர் வழியொடும், குறைய வென்றிடர் களைவெ [1]னென்றனை குறை முடிந்தது விதியினால், இறைவ [2]வுங்கவ ரிறுதி கண்டினி [3]திசைபு னைந்திமையவர்கள்தாம், உறையு மும்பரு [4]முதவி நின்றரு ளுணர்வ ழிந்திடலுறுதியோ.

(இ - ள்.) இறைவ - தலைவனே!—(முன்பு), மறை அறிந்தவர் வரவு கண்டு - வேதங்களை யுணர்ந்தவர்களாகிய (தண்டகாரணிய வாசிகளான) முனிவர்கள் (உன்னிடம்) வந்து சரணமடைந்ததை (நீ) பார்த்து, (அவர்கட்கு), உமை வலியும் வஞ்சகர் வழியொடும் குறைய வென்று இடர் களைவென் என்றனை - 'உங்களை வலிய் வருத்துகின்ற வஞ்சனையுடையவர்களான அரக்கர்கள் சந்ததியோடும் அழியும்படி அவர்களை வென்று (உங்கள்) துன்பங்களை நீக்குவேன்' என்று வாக்குதத்தஞ் செய்தருளினாய்; (அதற்கு ஏற்ப), விதியினால் குறை முடிந்தது - விதிவசமாக (அவ்வரக்கர்களால் உனக்கே) குற்றஞ்செய்யப்பட்டது; (ஆதலால், இனி), அங்கு அவர் இறுதி கண்டு - அத்தன்மையரான அவ்வரக்கர்களுடைய அழிவைச் செய்து, இனிது இசை புனைந்து - இனிமையாகக் கீர்த்தியைப் பெற்று, இமையவர்கள்உம் தாம் உறையும் உம்பர் உதவி நின்றருள் - தேவர்கட்கும் அவர்கள் வசிக்குமிடமான தேவலோகத்தை (உரியதாக)க் கொடுத்தருளிநிற்பாய்; (அதனை விட்டு), உணர்வு அழிந்திடல் உறுதிஓ - அறிவழிந்து திகைப்பது தகுதியோ? [அன்று என்றபடி]; (எ - று.)

இராமபிரான் மனைவியோடும் தம்பியுடனும் காட்டிலுறையுமாறு புறப்பட்டுத் தண்டகாரணியத்திற்கு எழுந்தருளி விராதனை வதைத்துச் சரபங்கமுனிவர்க்குப் பரமபதமளித்து அப்பாற் செல்லும்போது, அவ்வனத்தில் வாழ்பவர்களான வாலகில்லியர் முதலிய முனிவர்கள் எதிர்கொண்டுவந்து உபசரித்து, அரக்கர்களால் தங்கட்கு உண்டான துன்பங்களைத் தெரிவித்து இராமபிரானைச் சரணமடைய, அப்பெருமான் தான் அரக்கர்களை விரைவில் வேரறுத்துவிடுவதாக உறுதிமொழிகூறி அம்முனிவர்கட்கு அபயமளித்தனனென்பது ஆரணியகாண்டத்திற் கூறப்பட்டது. 'நமக்கு நேரே

துன்பம் செய்யாதவர்களை நாம் அழிக்கவேண்டுமே: இதற்கு ஒரு காரணம் கற்பிக்கவேண்டுமே!' என்று சிறிதும் ஆலோசிக்க வேண்டாதபடி அவ்வரக்கரால் உனக்கும் தீங்கு நேர்ந்த தென்பதை 'குறை முடிந்தது விதியினால்' என்றதனால் உணர்த்தினான். குறை - இங்கே, சீதையைக்கவர்ந்தமை. லோககண்டகரான அவ்வரக்கரை அழிப்பதற்கு ஒருவியாஜமாக இச்சீதாபகரணம் நேர்ந்ததை நல்லதாகக் கொள்ளவேண்டு மென்பது, 'குறைமுடிந்தது விதியினால்' என்றதனாற் போதரும். இராவணன் இந்திராதிதேவர்களை வென்று அவர்களுடைய ஸ்தானங்களைக் கவர்ந்துள்ளானதலால், 'இமையவர்கள் தாம் உறையுமும்பருமுதவி' எனலாயிற்று. பி - ம்:—[1]என்றவர், என்றவக். [2]வந்திவர். [3]இசைபுனைந்தனையவர்களால். [4]வெளியினின்றனருணர்வழிந்திடலொழிதியால், ... உணர்வொழிந்திடல்... (520)

6௨. காது கொற்ற [1]நினக்க லாது [2]பிறர்க்கெவ் வாறு கலக்குமோ
வேத னைக்கிட மாதல் வீரதை யன்று பேதைமை யாமரோ[யேல்
போது பிற்பட லுண்டி தோர் [3]பொரு ளன்றி யின்றி புணர்த்தி
யாது னக்கிய லாத தெந்தை வருந்த லென்ன வியம்பினான்.

(இ - ள்.) எந்தை - எமது ஐயனே! காது கொற்றம் - (பகைவரை) அழித்தலாலாகும் வெற்றி, நினக்கு அலாது - உனக்கே உண்டாகு மல்லாமல், பிறர்க்கு எ ஆறு கலக்கும்ஓ - அயலார்க்கு [அந்த அரக்கர்கட்கு] எப்படி உண்டாகுமோ [உண்டாகா தென்றபடி]; வேதனைக்கு இடம் ஆதல் - வருந்துதற்கு இடமாக இருப்பது, வீரதை அன்று - வீரத்தன்மையாகாது: பேதைமை ஆம் அரோ - (அது) எளிமையின்பாற் படுமன்றோ? போது பின்படல் இது ஓர் பொருள் உண்டு - காலத்தை அநுசரித்தலாகிய இச்செய்கை யொன்று (வழக்கத்தில்) இருக்கின்றது; அன்றி - அதனைப் பாராட்டாமல், இன்று புணர்த்திஏல் - இப்பொழுதே முயற்சிசெய்வையானாலும், உனக்கு இயலாதது யாது - உனக்குச் சாத்தியமாகாதது யாது உளது? [எதுவுமில்லை யென்றபடி]; (ஆகவே), வருந்தல்-வருந்தாதே, என்ன இயம்பினான் - என்று (இராமபிரானை நோக்கி இலக்குமணன்) கூறினான்; (எ - று.)

காது கொற்றம் - காதுதலாற்பெறுங் கொற்றம்; காதுதல் - அழித்தல். வீரதை=வீரதா: ஆவீறு ஐயாயிற்று. பகைவரை வெல்லக்கருதும் அரசர் அதற்கு ஏற்ற காலத்தை இன்றியமையாததாகக் கொள்ளும் வழக்கப்படி இம்மழைக்காலங் கழிவதை எதிர்பார்க்கலாயிற்றே யன்றி, உனது பெருந்திறத்திற்கு எப்பொழுதும் வெற்றிவாய்ப்பதில் ஐயமில்லை யென்று சொல்லித் தேற்றுவான், 'போதுபிற்பட லுண்டிதோர்பொரு ளன்றி யின்று புணர்த்தியேல்யாதுனக்கியலாதது' என்றான். திருக்குறளில் "இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது" என்றவிடத்திற் பரிமேலழகர் 'காலமாவது - வெம்மையும் குளிர்ச்சியும் தம்முள்ஒத்து

நோய்செய்யாது தண்ணீரும் உணவும் முதலிய உடைத்தாய்த் தானேவருந்தாதுசெல்லு மியல்பினதாம்' என்றது காணத்தக்கது. பிற்படல் - பின்போதல். புணர்த்தல் - உபாயஞ்செய்தல். தமையன் தந்தைக்குச் சமானனாதலால், அவனை 'எந்தை' என விளித்தல் தகும். பி - ம்:—[1] உனக்கலாது, நினைக்கலாமை. [2] பிறர்க்கிவ்வாறு, பிறர்க்குவந்து. [3] பொருளன்றுநின்றுபுணர்த்தியேல், பொருளன்றி யின்று துணிந்திடில். 'வேதனைக்கிடமான வீரமதன்று தீர்வது நன்றரோ' என்று சில பிரதியில் இரண்டாமடி. (521)

70.—இராமன் சிறிது ஆறுதலும், பிற்பெயல்மாரி தொடங்குதலும்.

சொற்ற தம்பி யுரைக்கு ணர்ந் [1] துயிர் சோர்வொ டுங்கிய தொல் லையோன், [2] இற்ற வின்ன லியக்க [3] மெய்திட [4] வைகல் பற்பல வேக மேல்,உற்று நின்ற வினைக் [5] கொ டும்பிணி யொன்றின் [6] மேலுட னென் றுராய், மற்றும் வெம்பிணி பற்றினு லென [7] வந்தெ ழுந்தது மாரியே.

(இ - ள்.) உயிர்சோர்வுஒடுங்கியதொல்லையோன் - (சீதையைப் பிரிந்த சமயத்திற் கார்காலவரவினால்) உயிர் தளர்ச்சியடைந்தமை பற்றி ஒடுங்கிநின்ற அநாதியான ஸ்ரீமந்நாராயணனது திருவவதார மூர்த்தியாகிய இராமபிரான், சொற்ற தம்பி உரைக்கு உணர்ந்து - (இவ்வாறு தேறுதல்) கூறிய தம்பியான இலக்குமணனது வார்த்தைகளினால் உணர்ச்சிபெற்று, இற்ற இன்னல் - நீங்கிய துன்பத்தோடு [துன்பம் நீங்கியவனாய்], இயக்கம் எய்திட - புடைபெயர்ச்சியடைய,—வைகல் பல் பல ஏக - (அவ்வாறே) பல பல நாள்கள் கழிய,—மேல் - பின்பு, உற்று நின்ற வினை கொடும் பிணி ஒன்றின் மேல் மற்றுஉம் வெம்பிணி ஒன்று உடன் உராய் பற்றினால் என - உண்டாகிநின்ற தீவினைபோலக் கொடியதான ஒருநோயின் மேல் மற்றும் ஒரு கொடியநோய் உடன்சேர்ந்துவந்து தொடர்ந்தாற் போல, மாரி வந்து எழுந்தது - பிற்பெயல்மாரி வந்து தொடங்கியது; (எ - று.)

முதலிற்பெய்த மழை இராமபிரானுக்கு மிக்கவருத்தத்தை விளைத்து நிற்க, அதன்மேல் அவ்வாறே வருத்தம் விளைப்பதாகப் பின்மழை தொடங்கியது, ஒருநோயின்மேல் தொடர்ச்சியாக மற்றும்ஒருநோய் நேர்ந்தாற்போலுமென்க: உவமையணி. உயிர் சோர்வு ஒடுங்கிய தொல்லையோன் சொற்ற தம்பி உரைக்கு உணர்ந்து இற்ற இன்னல் இயக்கம் எய்திட - மூர்ச்சையடைந்த ஸ்ரீராகவன் இலக்குமணனது வார்த்தைகளாற் சிறிது தெளிந்து ஒருவாறு துன்பந்தணிந்து சஞ்சரிக்கும்படியாக வென்க. இனி, 'இற்ற இன்னல் இயக்கம் எய்திட' என்பதற்கு - இன்னல்கள் இற்றனவானதால் (இராமன்) சஞ்சரிக்குந் தன்மையையடைய என்று உரைத்தலுமாம்; இவ்வுரைக்கு, இற்ற - இறந்தகாலப்

பலவின்பால்முற்று; முந்திய உரைக்கு, இற்ற-இறந்தகாலப் பெயரெச்சம். உரைக்கு உணர்ந்து-உரையினால் உணர்ந்து; உருபுமயக்கம். உற்றுநின்ற வினை - பயனளிக்க வந்துநின்ற கருமமென்க. உராய் - உராய்ந்து: விகுதிமுதலியன புணர்ந்துகெடப் பகுதியே வினையெச்சப் பொருளில்வந்தது; உராவுஎன்னும்பகுதிஈறுதொக்கு 'ய்' என்னும் விகுதிபெற்ற இறந்தகால வினையெச்சமென்றலுமாம். பி-ம்:—[1]உயிர் சோர்ந்தொடுங்கிய. [2]மற்றவின்னல். [3]மீதிட. [4]வைகலிற்றனவைக, வைகல்சிற்சிலவேக. [5]கடும்பிணி. [6]மேலடலுற்றுராய், மேலிடநின்றுராய். [7]வந்தெதிர்ந்தது. (522)

வேறு.

71.—அந்தப் பின்மாரிக்காலத்து நிகழ்ச்சிகளை இதுமுதற் பதின்மூன்று கவிகளிற் கூறுகின்றார்.

நிறைந்தன [1]நெடுங்குள னெருங்கின தரங்கம்
குறைந்தன கருங்குயில் குளிர்ந்தவுயர் குன்றம்
[2]மறைந்தன தடந்திசை வருந்தினர் பிரிந்தார்
உறைந்தன [3]மகன்றிலுட னன்றிலுயி [4]ரொன்றி.

(இ - ள்.) நெடுங் குளன் - பெரியகுளங்கள், நிறைந்தன - நீர்நிரம்பின; (அக்குளங்கள் முதலிய நீர்நிலைகளில்), தரங்கம் - அலைகள், நெருங்கின - நெருக்கமாய் [ஒன்றன்மே லொன்று தொடர்ச்சியாக] எழுந்தன; கருங்குயில் - கருநிறமான குயில்கள், குறைந்தன - மெலிந்தன; உயர் குன்றம் - உயர்ந்த மலைகள், குளிர்ந்த - குளிர்ச்சியடைந்தன; தட திசை - விசாலமான திக்குக்கள், மறைந்தன - (காலமேகங்கள் சூழ்ந்து கவிதலால்) தெரியாவாயின; பிரிந்தார் - துணைவரைப் பிரிந்தவர்கள் [தலைவரைப் பிரிந்த தலைவியரும் தலைவியரைப்பிரிந்த தலைவரும்], வருந்தினர் - (பிரிவினாலாகிய துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல்) வருந்தினார்கள்; மகன்றில் - மகன்றிற்பறவைகள், அன்றிலுடன் - அன்றில்களுடனே, உயிர் ஒன்றி உறைந்தன - (ஆண் பெண் இரண்டும் உடற்கு) உயிரொன்றே யென்னுமாறு இறுகத் தழுவிக்கொண்டிருந்தன; (எ - று.)

பெருமழைக்காலத்தின் இயல்பைக்கூறியதனால், தன்மை நவிற்சியணி. மகன்றில்-அன்றிலின் ஒரு சாதி: ஆணன்றில் என்பர் ஒருசாரார்: வேறொரு சாதிப்பறவை யென்பர் வேறொருசாரார். அன்றில் என்ற பறவை, எப்பொழுதும் ஆணும் பெண்ணுமாகிய இரட்டையாயே நிற்கும்; கணப்பொழுது ஒன்றை ஒன்று விட்டுப் பிரிந்தாலும் அத்துயரத்தைப்பொறாமல் ஒன்றையொன்று இரண்டு மூன்றுதரம் கத்திக் கூவி, அதன்பின்பும் தன் துணையைக் கூடாவிடின் உடனே இறந்துபடுமென்பர். பெருமழைக்காலத்தில் மேகங்களின் அடர்த்தியால் திசைதெரியாமல் இருளடையும்போது பிரிவுக்கு அஞ்சிப் பெண்ணன்றில்களை ஆணன்றில்கள் நன்றாகத்

தழுவிக்கொள்ளு மென்க. [3] அகன்றில் என்ற பாடத்திற்கு-ஆணன்றில் என்பர். பி - ம்:—[1] நெடுந்திசை, நெடுங்குளம். [2] உறைந்தனர் தமன்பருடன். [4] பொன்றி. (523)

72. பாசிழை [1] யரம்பையர் பழிப்பிலக லல்குல்
தூசுதொட [2] ரூசல்தனி வெம்மைதொடர் வுற்றே
வீசியது வாடையெரி வெந்தவிரி [3] புண்வீழ்
ஆசிலயில் வாளியென வாசைபுரி வார்மேல்.

(இ - ள்.) வாடை - வாடைக்காற்றானது,—பாசு இழை அரம்பையர் - பசுமையான [பசும்பொன்னாலாகிய] ஆபரணங்களை யுடைய மாதர்களுடைய, பழிப்பு இல் அகல் அல்குல் - பழித்தற்கு இடமில்லாத அகன்றஇடையைச்சாரஉடுத்த, தூசு - சேலையையும், தொடர் ஊசல் - (அவர்கள்) இருந்து ஆடுகின்ற ஊஞ்சலையும், தொடர்வு உற்று - சார்ந்து,—ஆசை புரிவார்மேல் - (அவர்கள் பக்கல்) காதல் கொண்டவர்களான ஆடவர்களின்மேல்,—எரி வெந்த விரி புண் - நெருப்புப்பட்டு வெந்ததனாலாகிய பரந்த புண்ணில், வீழ் - விழுந்து தைக்கின்ற, ஆசு இல் அயில் வாளி என - குற்றமற்ற கூர்மையை யுடைய அம்புபோல,—தனி வெம்மை வீசியது - மிக்க வெப்பமுண்டாம்படி வீசிற்று; (எ - று.)

அம்மலையின் சிறப்பினால், தேவமாதர்கள் அங்குவந்து அதிலுள்ள மரங்களிற் கட்டிய ஊசல்களில் வீற்றிருந்து ஆடுகின்றன ரென்க. அரம்பையர் - வனதேவதையரான மடந்தையருமாம். அம்மகளிரழகைக்கண்டு அவர்களிடங் காதல்கொண்டு அக்காமதாபத்தால் தவிக்கின்ற ஆடவர்களின்மேல், அம்மாதர்கள் உடம்பைச் சூழ உடுத்த ஆடையின் மேலும் அவர்களிருந்து ஆடும்ஊசலின் மேலும் பட்டுவருகின்ற வாடைக்காற்று வீசி அவர்கட்கு மிக்க வெப்பத்தைத் தருதற்கு, தீப்பட்டு வெந்ததனாலாகிய புண்ணிலே கூரிய அம்பு வீழ்ந்து வருத்தத்தை மிகுவித்தலை உவமைகூறினர். உவமையணி. பி - ம்:—[1] மடந்தையர். [2] ஊசலினின். [3] புண்கீழ். (524)

73. வேலைநிறை வுற்றன வெயிற்கதிர் [1] வெதுப்பும்
சீல [2] மழி வுற்ற [3] புன லுற்றுருவு செப்பின்
[4] காலமறி வுற்றுணர்தல் கன்னலள வல்லால்
மாலைபக லுற்றதென வோர்வரிது மாதோ.

(இ - ள்.) வேலை நிறைவுஉற்றன - கடல்கள்நிரம்பின; வெயில் கதிர் - சூரியனுடைய கிரணங்கள், வெதுப்பும் சீலம் அழிவுற்ற - எரிக்கின்ற தன்மை யழிந்தன; புனல் உற்று உருவு செப்பின் - (அடியிலுள்ள சிறுதுவாரவழியாக) நீர்வந்து சேரப்பெறும் நாழிகை வட்டிலைக்கொண்டு, கன்னல் அளவு - நாழிகைக்கணக்காக, காலம் அறிவுற்றுஉணர்தல் அல்லால் - காலத்தை அறியமுயன்று அறி

வதேயல்லாமல், மாலை பகல் உற்றது என ஓர்வு - இராத்திரி வந்தது பகல் வந்தது என்று அறிதல், அரிது - அரிதாயிற்று; (எ - று.)— மாது, ஓ - ஈற்றசைகள்.

"நெடுங்கடலுந் தன்னீர்மைகுன்றுந் தடிந்தெழிலி, தான்நல் காதாகிவிடின்" என்பவாதலால், 'மழையினால் வேலை நிறைவுற்றன' என்றார். இத்திருக்குறளினுரையிற் பரிமேலழகர் தன் இயல்பு குறைதலாவது - நீர்வாழுயிர்கள் பிறவாமையும், மணிமுதலாயின படாமையுமாம் என்றாராதலின், அவ்வகைக்குறைகள் இலவானதை 'வேலை நிறைவுற்றன' என்று ரென்னலாம். மழைக்கு முதலான கடற்கும் மழைவேண்டுமென்பதாயிற்று; இனி, கடல்கள்நீர்நிறையப்பெற்றன எனினும் இழுக்காது; சிலப்பதிகாரவுரையில், அடியார்க்குநல்லார் 'மூந்நீர் - கடல்: ஆகுபெயர். ஆற்றுநீர் ஊற்றுநீர் மேனீர் என இவை யென்பார்க்கு, அற்றன்று; ஆற்றுநீர் மேனீராகலானும், இவ்விரண்டும் இல்வழி ஊற்றுநீரும் இன்றுமாகலானும், இவற்றை முந்நீரென்றல் பொருந்துவதன்று.முதியநீரெனின், "நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்" என்பதனால் அதுவும் மேனீரின்றி அமையாமையின், ஆகாது' என்றது காண்க.

அப்பெருமழைக்காலத்திற் சூரியகிரணங்களாற் சிறிதும் வெப்பம் உண்டாகவில்லை யென்றது, இரண்டாம் வாக்கியம்.

நாழிகை வட்டிலாவது - ஆழமுள்ள ஒருபாத்திரத்திலே நீரை நிறைத்து அதிலே அளவுக்குஏற்ப அடியில் சிறுதுளையிட்டிருக்கும் தாமிரவட்டிலை விடுக்கில் அத்துளைவழியே நீர்ஏறிஉள்ளே நிரம்ப அவ்வட்டில் அமிழ்வது ஒருநாழிகைஎனக்கொண்டு காலத்தை அளவிடுதற்குரியகருவி. 'பன்னிரண்டரைப்பலம் எடையுள்ள தாமிரத்தைக்கொண்டு மகததேசத்தின் ஒருபடியளவாகச்செய்யப்பட்டதும், இருபது குன்றிமணியெடையுள்ள பொன்னினால் நாலங்குலவளவாகச் செய்த சலாகை கொள்ளுமளவாக அடியில் துளையிடப்பட்டதுமான ஒருபாத்திரத்தைத் தண்ணீரில்இட அப்பாத்திரம் எவ்வளவு காலத்தில் தண்ணீரால் நிறையுமோ, அவ்வளவு காலம் ஒரு நாழிகை யென்று அறியப்படும்' என்ற ஸ்ரீ விஷ்ணுபுராணம் இங்கு நோக்கத்தக்கது. அப்பெருமழைக்காலத்திற் காளமேகங்கள் வானமுழுவதும் படர்ந்து கவிந்துகொண்டதனால் எங்கும் இருண்டமை பற்றிச் சூரியனது உதயாத்தமனங்கள் தெரியாமற் போகவே, அடியிலே சிறுதுவாரமுடையதும் நீரிற்பெய்யப்பட்டு நாழிகையின் வரையறையைத் தெரிவிப்பதுமான ஒருவகைக் கிண்ணத்தைக் கொண்டு ஒவ்வொரு நாழிகையாகக் கணக்கிட்டுக் காலத்தை முயன்று உணர்ந்தாலன்றி இரவு வந்ததென்றும் பகல் வந்ததென்றும் எளிதில் அனைவரும் உணர்தல் இயலாதாயிற்று என்பது மூன்றாம் வாக்கியத்தின் கருத்து. "குறுநீர்க்கன்னலெண்ணுநரல்லது, கதிர்மருங்கறியா தஞ்சுவரப் பாஅய்" என்பது அகநானூறு. புனல் உற்று உருவுதல் - சிறுதுவாரத்தின் வழியாக நீர்

நுழைந்துசெல்லுதல். இனி, 'புனல் உற்று உருவு செப்பு' என்பதற்கு - நீர்நிறைந்து அழுந்துகின்ற இண்ணமென்று உரைப்பாருமுளர். 'அரிது' என்ற முற்றிற்கு 'ஓர்வு' என்றதொழிற்பெயர் - எழுவாய். இனி, ஓர்வு அரிது - ஓர்தற்கு அரியதுஎனக் கொண்டால், காலமென்பது எழுவாயாம். உருவு செப்பு - வினைத்தொகை. செப்பின் - இன் - ஐந்தனுருபு, ஏது.

இனி [3]'புனலுற்றுருகுசெப்பின்' என்றும் பாடம் காணப்படுகின்றது; அதற்கு, புனல் உற்ற உருகு செப்பின் என்று எடுத்து, நீர்பட்ட உருகிய தாமிரம்போல என்றுபொருள்கொண்டு, அதனை 'வெயிற்கதிர் வெதுப்புஞ் சீலமழிவுற்ற' என்றதனோடு கூட்டி, அனல்பட்டு உருகித் தாபங்கொண்ட செம்பு நீர்பட்டதனால் வெப்பம் மாறித் தட்பமடைந்தாற்போலச் சூரியனது உஷ்ணகிரணங்கள் பெருமழையினால் வெப்பம்மாறித் தட்பமடைந்தன என்று கருத்து உரைக்க வேண்டும்; அங்ஙனம் உரைக்குமிடத்து, 'கன்னலளவு அல்லால்' என்பதற்கு-நாழிகைவட்டிலைக்கொண்டே யல்லாமல் என்று பொருள் காண்க. இவ்வுரையில், கன்னல் - நாழிகைவட்டில்; முந்தினஉரையில், கன்னல் - நாழிகை. பி - ம்:—[1]வெதும்பும். [2]அறிவற்ற, மறவுற்ற. [3]புரையுற்றுருவு. [4]காலமிற. (525)

74. நெற்கிழிய [1]நெற்பொதி நிரம்பின நிரம்பாச்
சொற்கிழிய [2]நற்கிளிகள் [3]தோகையவர் [4]தூய்மென்
பற்கிழி மணிப்படர் திரைப்[5]பரதர் முன்றில்
பொற்கிழி விரித்தன சினைப்[6]பொதுளு புன்னை.

(இ - ள்.) தோகையவர் - மயில்போன்றவர்களான மகளிருடைய, நிரம்பா சொற்கு - நிரம்பாமென்சொற்களாகிய மழலைச்சொற்களுக்கு, இழிய - தோற்றலையுடைய, நல் கிளிகள் - அழகிய கிளிகள், நெல் இழிய நெல் பொதி நிரம்பின - நெற்கள் இழியுமாறு நெற்போர்களிற் பதுங்கி நிறைந்தன; தூய் மெல் பற்கு இழி - (மகளிரின்) சுத்தமான மெல்லிய பற்களுக்குத் தோற்ற, மணி - முத்துக்கள், படர் திரை - பரவுகின்ற (கடலின்) அலைகளில், (நிரம்பின) - மறைந்து நிறைந்தன; பரதர் முன்றில் - நெய்தல்நிலத்து மனிதர்களுடைய வீட்டு வாயில்களில், சினைபொதுளுபுன்னை - அரும்புகள் நிறைந்த புன்னைமரங்கள், பொன்கிழி விரித்து அன-பொன்முடிந்த சீலைமுடிப்பை யவிழ்த்தாற் போன்றன; (எ - று.)

பெருமழையைப் பொறுக்கமாட்டாமல் கிளிகள் ஓடி நெற்போர்களிற் பதுங்குதலை, அந்நிலத்து மகளிரது மழலைச்சொற்களுக்கு அவை தோல்வி யடைந்ததனால் முன்நிற்றற்கு வெள்கி மறைந்தனவாக வர்ணித்தது, முதல் வாக்கியம். இரண்டாம்வாக்கியத்தில், கடற்கரையில் அலைகளால் ஒதுக்கப்பட்டனவும் சிப்பி முதலியவற்றினின்று தோன்றியனவுமானமுத்துக்கள் பெருமழையால்தள்ளப்

பட்டு அக்கடலின் அலைகளில் மறைதலை, அந்நிலத்துமகளிரின் பற்களுக்குத் தாம் தோற்றதனால் அம்முத்துக்கள் முன்னிற்கவெள்கிக் கடலில் மறைந்தன என வருணித்தார். நெய்தல்நிலத்திற் புன்னை மரங்கள் நிறைய அரும்பெடுத்திருந்தவை அக்காலத்தில் மலர்தல், பொன்முடிந்திருந்த சிலைமுடிப்பை யவிழ்த்தாற் போலுமென்பது, மூன்றும் வாக்கியத்தின் கருத்து; இவ்வுவமை, நிறம் பற்றியது. முதலிரண்டு வாக்கியங்களில் தற்குறிப்பேற்றவணியும், மூன்றும் வாக்கியத்தில் உவமையணியுமாகச் சேர்ந்து வந்ததனால், சேர்வையணி. முதலடியில் 'நிரம்பின நிரம்பா' என்ற விடத்துத் தொடை முரண் காண்க.

இழிய - இழிதலை [தோற்றலை] யுடைய: 'இழி' என்னும் முதனிலைத் தொழிற்பெயரின்மேல் வந்த குறிப்புப் பெயரெச்சம். இழிதலால் [தோற்றலால்] எனப் பொருள்கொண்டால், தெரிநிலைச் செயவெனெச்சமாம். இனி, மகளிரது மழலைச்சொற்களைத் தாம் கற்றுக்கொள்ளுதற்காக (அந்நிலத்தில்) இறங்குதலையுடைய நல்ல கிளிகளென்று உரைத்தலும் அமையும். மகளிர்சாயலுக்குமயிலும், அவர்கள்கூந்தலுக்கு மயிலின் தோகையும் உவமை கூறப்படும். முதல் வாக்கியத்திலுள்ள 'நிரம்பின' என்ற வினைமுற்றையே இரண்டாம் வாக்கியத்திற்கும் எடுத்துச் சேர்த்துக்கொள்ளவேண்டும். 'தோகையவர்' என்றது மத்திமதீபமாக, இரண்டு வாக்கியத்திலுஞ் சேர்த்து உரைக்கப்பட்டது.

பரதர் - நெய்தல்நிலமாக்கள்: இதன் பெண்பால் - பரத்திமர். கடலும் கடல் சார்ந்த இடமும், நெய்தனிலம். முன்றில் - இல்முன் என்பது முன்பின்னாகச் சொல்நிலை மாறி விகாரப்பட்டது: இலக்கணப்போலி; இல் - வீட்டினது, முன் - முன்னிடம் என்க. சினை - அரும்பு: கிளையுமாம். பொதுளுதல்-நெருங்குதல்,செழித்தல். புன்னை- நெய்தனிலத்து மரம். 'தூமென்' என்ற பாடத்திற்கு தூய்மை யென்னும் பண்புப்பெயர் ஈறுபோதலோடு இடை யகரமுங் கெட்டதென்க.

இனி, இச்செய்யுளுக்கு வேறொருவகையாகவும் பொருள்உரைக்கலாம்: அதுவருமாறு:—நல் கிளிகள், நிரம்பாச் சொல் இழிய - மழலைச்சொற்கள் சிறிதுவெளிப்பட [வாய்திறந்து மழலைச்சொற்களைச் சிறிது பேசிக்கொண்டு], நெல் கிழிய நெல் பொதி நிரம்பின - நெற்கள் கிழியுமாறு நெற்கதிர்த்தொகுதிகளிற் சென்று நிரம்பின; தோகையவர் தூய் மெல் பல் கிழி மணி - மகளிரது வெண்ணிறமான அழகிய பற்கள்போல ஒளிவிட்டுவிளங்குகின்ற முத்துக்களைக் கொழிக்கின்ற, படர் திரை - பரவுமியல்புள்ள (கடலின்) அலைகள் வந்து உலாவப்பெற்ற, பரதர் முன்றில் - நெய்தனிலமாக்களின் வீட்டுவாயிலில், சினைப்பொதுளுபுன்னை, (மலர்ந்து) பொற்கிழி விரித்தன எனக் காண்க. பழைக்காலதிற் கிளிகள் வேறுஇரை

தேட மாட்டாமல் வயல்களிலுள்ள நெற்கதிர்களி லிருக்கின்ற நெற்களைக் கொறித்து அவற்றினுள்ளீட்டை யுட்கொள்ளுமாறு விளைச்சல்களிற் சென்று சேர்ந்து நிறைந்தன வென்க. பி - ம்:—[1]நற்பொதி. [2]நற்கிளிய. [3]தோகையினர். [4]தூமின். [5]பரவர், பரவை, படரும். [6]பொருவில். (526)

75. நிறங்கருகு கங்குல்பகல் [1]நின்றநிலை நீவா
அறங்[2]கருது சிந்தைமுனி யந்தணரி [3]னலிப்—
[4]பிறங்கரு நெடுந்துளி படப்[5]பெயர்வில் குன்றின்
[6]உறங்கலில் [7]விலங்கலில நின்றவுயர் வேழம்.

(இ-ள்.) நிறம் கருகு கங்குல் - (இருளினால்) கறுத்துத் தோன்றுகின்ற இராத்திரிகாலத்திலும், பகல் - பகற்பொழுதிலும், நின்ற நிலை நீவா - (தாம்) நின்ற (தவ)நிலை நீங்காத, அறம் கருது சிந்தை முனி அந்தணரின் - தருமமார்க்கத்தையே எண்ணுகின்ற மனத்தில் (எல்லாப்பற்றுக்களையுந்) துறந்த முனிவர்கள்போலவும்,—பிறங்கு அரு நெடு ஆலி துளி பட - விளங்குகின்ற அருமையான பெரிய மழைநீர்த்துளிகள் (தம்மேல்) விழுதலால், பெயர்வு இல் - சலித்தலில்லாத, குன்றின் - மலைகள்போலவும்,—உயர் வேழம் - உயர்ந்த யானைகள், உறங்கல் இல் - (அப்பெரு மழைக்காலத்தில்) தூங்குதலில்லாமல், விலங்கல் இல நின்ற - இடம்விட்டுப் பெயர்தலில்லாதனவாக நின்றன; (எ - று.)

அப்பெருமழையிலே யானைகள் இரவிலுழப்பட உறங்குதலில வாய் நின்றதற்கு - அல்லும்பகலும் அநவரதமும் துயிலின்றி ஒரு படிப்படத் தவநிலையில் நிற்கும் முற்றத்துறந்த முனிவர்களும், யானைகள் பெருமழைத்துளிபடுதலால் இடம்விட்டுப் பெயராது நின்றதற்கு - பெருமழைக்குச் சலியாது நிற்கும் மலைகளும் உவமையாம்; உவமையணி: அந்தணரின்உறங்கலில், குன்றின விலங்கலில் என முறையே இயைந்து பொருள்படுதல், முறைநிரனிறைப் பொருள்கோள். பெயர்வில் குன்று—'அசலம்' என மலைக்கு ஒரு பெயராதலுணர்க. இனி இரவுபகல் என்ற வேறுபாடின்றி எப்பொழுதும் ஒருநிலையாகத் தவநிலையில் நிற்கும் முனிவர்கள் பெரு மழையிலும் அந்நிலை பெயராது நிற்பராதலால், அவர்கள் விலங்கலின்மைக்கும் உவமையாகலாம்.

நீவா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; அந்தணர்க்கு அடைமொழி; இனி நீவா - நீங்காமல் என ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமாகக் கொண்டு 'அறம் கருது' என்பதனோடு இயைத்து அறச்சொரூபியான கடவுளைக் கருதுகின்ற என்றலு மொன்று; அறங்கருது சிந்தையையுடையவர்களும் (பற்றுக்களை) முனிபவர்களுமான அந்தணர்கள்போல என்றும் பதவுரை கூறலாம். பிறங்குதல் - மிகுதலுமாம். 'உயர்வேழம்' என்றதில், உயர்வு - தேகபல மநோ

பலங்களின் மிகுதியுமாம். பி - ம்:—[1]...நீங்கா, நின்றதென நீங்காது,...நோாது,...நீர்வாய். [2]குறுகு. [3]வைக. [4]பிறங்கலின். [5]...குன்றத்து, பெறுவமுன்றில். [6]உறங்கலில. [7]விலங்கலயம், பிறங்கலயல். (527)

76\. [1]சந்தினடை யிற்படலை வேதிகை [2]தடந்தோறு
[3]அந்தியி டகிற்புகை [4]நுழைந்தகுளி ரன்னம்
மந்தி[5]துயில் வுற்ற[6]முழை வன்கடுவ னங்கத்து
இந்திய மவித்ததனி[7]யோகியி னிருந்த.

(இ - ள்.) குளிர் அன்னம் - (அப்பெருமழையினுற்) குளிர்கொண்ட அன்னப்பறவைகள்,—சந்தின் அடையின் படலை - சந்தன மரத்தின் இலைகளால் மேலேவேயப்பட்ட சாலைகளில், வேதிகை - மேடைகளில், தடம் தோறு - ஓமகுண்டந்தோறும், அந்தி இடு-காலை மாலைகளில் (முனிவர்கள் ஓமம்வளர்த்தற்பொருட்டு) இட்டு எரிக்கின்ற, அகில் - அகிற்கட்டைகளின், புகை - புகையில், நுழைந்த - (தாம்) நுழைந்து குளிர்காய்ந்தன; மந்தி - பெண்குரங்குகள், மழை - மலைக்குகைகளில், துயில்வுற்ற - (போய்ப்பதுங்கித்) தூங்கின; வல் கடுவன் - வலிய ஆண்குரங்குகள், அங்கத்து - (யோகத்தின் அஷ்டாங்கங்களுள் ஒன்றான பிரத்தியாகார மென்னும்) அங்கத்தினுல், இந்தியம் அவித்த - பஞ்சேந்திரியங்களை யடக்கிய, தனி யோகியின் - ஒப்பற்ற யோகிபோல, இருந்த - (குளிரினுல்) ஒடுங்கியிருந்தன; (எ - று.)

முன்னிரண்டடிகட்கு, தடம் தோறு - அம்மலைப்பக்கங்களிலெல்லாம், வேதிகை - மேடைகளில், சந்தின் அடையின் படலை - சந்தன மரத்தின் இலைகளாற்செய்த படல்களின்கீழ், அந்தி இடு - (குளிர் காய்வதற்காகவும் வெளிச்சத்திற்காகவும் புலிமுதலியன அஞ்சி அருகில் வராதிருத்தற்காகவும் வேடர்கள்) இரவில் இட்டு எரிக்கின்ற, அகில் - அகிற்கட்டைகளின், புகை - புகையில், குளிர் கொண்ட அன்னங்கள் நுழைந்தன என்று உரைப்பாரு முளர். அந்தி யென்பது - இரவுடன் பகல்கூடுங் காலமாகிய காலைச்சந்திக்கும், பகலுடன் இரவுகூடுங் காலமாகிய மாலைச்சந்திக்கும் பொதுவாம். நறுமணமுள்ள மரங்களான சந்தனமும் அகிலும் மலையில் மிக்குள்ளன என்னும் மலைவளம் இச்செய்யுளிற் போதரும். யோகி - இயமம் நியமம் ஆசநம் பிராணுயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்னும் எட்டு அங்கங்களுடன்யோகஞ் செய்பவன். ஐம்பொறிகளையடக்கி மனத்தை ஒருவழி நிறுத்தி யோகஞ்செய்யும் அவன் அசைவின்றி நிற்றல், இங்கே பெருமழையிற் குளிர்மிகுதியால் ஆண்குரங்குகள்விறைத்து நிற்றற்குஉவமை. "பொறியுணர்வெல்லாம் புலத்தின் வழாமை, ஒருவகைப்படுப்பது தொகைநிலை யாமே" என்பது, பிரத்தியாகாரத்தின் இலக்கணம். ஐம்புலன்களிற் பற்றிநிற்கின்ற ஐம்பொறிகளைத் தடுத்துச்

சித்தத்திற்கு இசையச்செய்வது பிரத்தியாகாரமாமென்க: இதனால், மிகவுஞ்சஞ்சலமான இந்திரியங்கள் நன்றாய்வசப்படுகின்றன; அவை வசப்படாதபோது, யோகியானவன் யோகத்தைச்சாதிக்க மாட்டான்' என்று புராணம் கூறுதலால், 'அங்கத்து இந்திய மவித்ததனி யோகி' என்றார். கடுவன்மந்தியைப்பிரிந்து தனித்துநிற்றலும் கருதத்தக்கது. வல்கடுவனாதலால், மந்திபோல முழையிற் புகுந்து துயிலுறாமல் மழையிலேயே நின்றனவென்க; இதனால், இராவணாதி ராட்சசவதத்திற்கு ஏற்றசேனையாகுங் குரங்குகளின் ஊறஞ்சாமை யென்னும் உயர்குணம் உணரலாகும்.

இனி, பின்னிரண்டடிகட்கு, மந்தி - பெண்குரங்குகள், முழை - மலைக்குகைகளில், வல் கடுவன் அங்கத்து - வலிய ஆண்குரங்குகளின் மடியில், துயில்வுற்ற - படுத்துத் தூங்கின; (அவை துயில் கெடா திருக்குமாறு அவ்வாண்குரங்குகள்), இந்தியமவித்த தனியோகி போல அசையாதிருந்தன என்று பொருள் கூறலுமாம். மந்தி முழை துயில்வுற்ற-பெண்குரங்குகள் மலைக்குகைகளில் தங்கின என்றலுமாம்; மேல் 80-ஆஞ் செய்யுளில் 'துயிலுவந்து என்பது காண்க. பி - ம்:— [1]சந்தநடையிற், சந்தினிடையாற், சந்தினிலையிற். [2]இடந்தோறு, தடத்திற். [3]குந்தியிடகிற்புகை, உந்தியிடனற்புகை. [4]நுழைந்து. [5]துயிலுற்ற. [6]புழையிற், முழையிற், முறைவன். [7]யோகரின். "சந்தி னிடையிற்படலை வேய்ந்திசை தடந்தோ, றுந்தியிடகிற் புகை நுழைந்த குளிருள்ள, மந்திதுயிலுற்ற முழை வன்கடுவனங்கத், திந்தியமவித்த தனியோகரினிருந்த" என்றும் இப்பாடல் காணப் படுகின்றது. (528)

77. ஆசில்சுனை வாலருவி யாயிழைய ரைம்பால்
வாசமண நாறலில வானமணி [1]வன்கால்
ஊசல்வறி தான[2]வித ணொண்மணிகள் விண்மேல்
வீசலில [3]வானினெடு மாரிதுளி வீச.

(இ - ள்.) வானின் - மேகங்களினின்று, நெடு துளி மாரி வீச - பெருந்துளிகளையுடைய மழை மிகுதியாகப்பெய்தலால்,—ஆசு இல் சுனை - குற்றமில்லாத மலைநீரூற்றுக் குளங்களும், வால் அருவி-சுத்த மான மலையருவிகளும், ஆய் இழையர் ஐம்பால் வாசம்மணம் நாறல் இல ஆன - மகளிரது கூந்தலின் நறுமணங்கள் (தம்மிடம்) வீசுத லில்லாதனவாயின; மணி வல் கால் ஊசல் - இரத்தினமயமான வலியகால்கள் நாட்டி அவற்றில் அமைக்கப்பட்ட ஊஞ்சல்கள், வறிது ஆன - இருந்து ஆடுபவரில்லாதன வாயின; இதண் - பரண் கள், ஒள் மணிகள் விண்மேல் வீசல் இல - ஒளியுள்ள இரத்தினங் களை வானத்தில் எறிதலில்லாதனவாயின; (எ - று.)

பெருமழை பெய்தல்பற்றிக் குளிர்மிகுதலால் மலைச்சுனைகளி லும் மலையருவிகளும் மகளிரெவரும் துளைந்து நீராடாமையால், அச்சுனைகளும் அருவிகளும் அம்மாதரது கூந்தலின் நறுமணம்

வீசுதலில்லாதன வாயின வென்க. உத்தமசாதிமகளிரின் கூந்தலுக்கு இயற்கை நறுமணமும், வாசநெய்பூசுதல்நறும்புகையூட்டல் மலர்சூடுதல் என்னும் அவற்றாலாகிய செயற்கைநறுமணமும் ஆக இருவகைமணங்க ளிருத்தலால், அவற்றை 'வாசம்' 'மணம்' என இரண்டு சொற்களாற் குறித்தார்; இனி இவற்றை ஒருபொருட் பன்மொழி யென்றலு மொன்று. அம்மழைக்குளிரில் எவரும் ஊஞ்சலிலிருந்து ஆடிக் குளிர்ந்தகாற்றைப் பெற விரும்பாததனால், அங்கு அமைக்கப்பட்டுள்ள ஊஞ்சல்கள் ஆளின்றி வெறுமையாய் விட்டன. தினை முதலியவற்றின் கதிர்களைக் கிளி முதலிய பறவைகள் உண்டிடாமைப்பொருட்டு வேட்டுவமாதர்கள் அருகிலமைக்கப்பட்ட பரண்களிற் காவலாக இருந்து அங்குள்ள இரத்தினக் கற்களையெடுத்து வானத்தில் வீசிப் பறவைகளை யோட்டுதல் இயல்பு; பெருமழைபெய்தல்பற்றிப் பறவைகள் வெளிப்படாமல் ஒடுங்கி விட்டதனால், அங்ஙனம் ஓட்டுதல் வேண்டாதாயிற்றென்க. பரணிலுள்ளார் மணிகள் வீசுதலிலரானதைப் பரணின்மேல்வைத்துக் கூறினர்; உபசாரவழக்கு. இனி இதண் - பரண்களிலிருந்து, ஒண்மணிகள் விண்மேல் வீசுதலில்லையாயின என்று பொருள் கொள்ளலுமாம். 'இதண்' என்றவிடத்து, [2]'கவண்' என்று பாடமோதி, கல்லெறிகயிறுகள் மணிகள் வீசுதலிலவாயின என்றலும் ஏற்கும். இனி, மணிகள் பரணினின்று அல்லது (கவணினின்று) விண்மேல் வீசுதலிலவாயின என்றலு மொன்று: இதண்- பரண்கள், ஊசல் வறிது ஆன - ஊஞ்சல்கள் வறுமையாகப்பெற்றன என்று உரைத்து, பரணிலுள்ள ஊஞ்சல்களிற் பாதுகாவலின் பொருட்டு எவரும் இராததனால் அவைவறிதாயின வென்க. 'வானினெடுமாரி துளிவீச - ஒண்மணிகள் விண்மேல் வீசலில்' என்றதனால், மேகங்களினின்று பெய்யும் பெருமழை தானே பெருந்துளிகளை வீசிக் கற்களை வீசினாற்போலப் பறவைகளை வராதிருக்கச் செய்ததனால் அதற்காகக் கற்கள் வீசுதலில்லையாயிற் றென்ற கருத்தும் விளங்கும்.

சுனைக்குக் குற்றமின்மை - தன்னில் நீராடுவார்க்கு நோய் தராமை: பாவந்தீர்க்கும்புண்ணியதீர்த்தமாதலுமாம். அருவிக்குத் தூய்மையும் இவ்வாறே. 'வறியனவான' என்றது 'வறிதான' என்றது, பன்மையொருமைமயக்கம். இரண்டாமடியில், மணி-உறுதியுமாம். பி - ம்:—[1]வண்கால். [2]விதகோன்மணிகள். [3]வானநெடு. (529)

78. கருந்தகைய[1] தண்சினைய கைதைமடல் [2]காதல்
தருந்தகைய[3] போதுகிளை யிற்புடை தயங்கப்
[4]பெருந்தகைய பொற்[5]சிறை யொடுக்கி [6]யுடல் பேராது
இருந்தகுரு [7]கின்படை பிரிந்தவர்க ளென்ன.

(இ - ள்.) கருந் தகைய - கருநிறமுள்ள, தண் சினைய - குளிர்ச்சியான [காணுதற்கு இனிய] கிளைகளையுடைய, கைதை - தாழை மரங்களின், மடல் - மடல்களிலே, காதல் தரும் தகைய

போது - (காண்பவர்க்கு) ஆசையை மூட்டுந் தன்மையனவான மலர்கள், இளையின் - சுற்றமாகிய நாரைகள்போல, புடை தயங்க - பக்கங்களிற் சூழ்ந்துவிளங்க,—குருகின் பேடை - (அங்கு) நாரைகளின் பேடைகள் [பெண்நாரைகள்], பெருந் தகைய பொன் சிறை ஒடுக்கி - பெருமைக்குணமுள்ள அழகிய (தங்கள்) சிறகுகளை ஒடுக்கிக்கொண்டு, உடல் பேராது - உடம்பு இடம்விட்டுப்பெயரப் பெறாமல், பிரிந்தவர்கள் என்ன இருந்த - (தலைவரைப்) பிரிந்த தலைவியர்போல இருந்தன; (எ - று.)

மழைக்காலத்தில் தாழை மிகுதியாகப்பூத்தல், இயல்பு. தாழைமலர் காமோத்தீபகப்பொருள்களி லொன்றாதலால், 'காதல்தருந்தகையபோது' எனப்பட்டது; அது, மன்மதனுக்கு வாளாயுதமெனப்படும். தலைவரைப்பிரிந்த மகளிர் கார்காலத்திலே பிரிவுத் துயரின் மிகுதியால் இடம்விட்டுப்பெயரமாட்டாமல் ஒருபுறத்து ஒடுங்கிக் கிடக்குமாறுபோலப் பெண்குருகுகள் பெருமழையால் தமது பெரிய சிறகுகளை யொடுக்கிக்கொண்டு இடம்விட்டுப்பெயராமல் ஒருபுறத்திலிருந்தன வென்க. அப்பேடைக்குருகுகளினருகே சுற்றிலும் பூத்துநின்ற தாழைமலர்கள், அப்பேடைகளைச் சூழ்ந்து நிற்கும் அவற்றின் சுற்றமாகிய குருகுகள்போலும் என வருணித்தார். தாழைமலர்கள் வடிவிற் குருகுபோலுதலை, "அருகு கைதைமலரக் கெண்டை, குருகென்றஞ்சும்" என்ற பெரிய திருமொழியாலும் உணர்க. புடை தயங்க - பக்கங்களில் திகைத்துநிற்க எனினுமாம்; தாழைமலர்கள் அசைவறநிற்றல், குருகினங்கள் திகைத்து நிற்பதாகக் கற்பிக்கப்பட்டது. பி - ம்:—[1]கருந்தகை யகனசினைய, கருந்தகைய தன்தகைய. [2]கால. [3]போதுசினை. [4]பெருந்தனிய, பொருந்தகைய. [5]சிறையொடுங்கி. [6]இடைபேரா, உடல்பேரா. [7]இன்றுணை, இன்பெடை, இற்பெடை. சில பிரதியில் 'கருந்தகைய தனதகையகைதை மடல்கால' என்று முதலடி. (530)

79. [1]பதங்கமுழ வொத்த[2]விசை பன்ஞிமிறு பன்ன
விதங்களி[3]னடித்திடு[4]விகற்பவழி மேவும்
மதங்கியரை யொத்தமயில்[5]வைகுமர மூலத்து
ஒதுங்கின வுழைக்குல மழைக்குல[6]முழக்க.

(இ - ள்.) பதங்கம் - (பலவகைநீர்ப்) பறவைகள், முழவு ஒத்த - (தமது ஒலியினால்) மத்தளந் தட்டினாற் போன்றனவாக,—பல் ஞிமிறு - பலவகையான வண்டுகள், இசை பன்ன - (தமது ஒலியினால்) இசைப்பாட்டுப்பாட,—மயில் - மயில்கள், விதங்களின் நடித்திடு - பலவகைத் தாளவமைப்புக்களுடன் நர்த்தனஞ்செய்கின்ற, விகற்பம் வழி - பலவேறு வகைப்பட்ட (நாட்டிய) மார்க்கங்களில், மேவும் - பொருந்திய [பயின்று தேர்ந்த], மதங்கியரை - கூத்தாடும் மகளிரை, ஒத்த - போன்றன [அம்மழைக்காலத்திற் களித்துப் பலவாறு கூத்தாடின என்றபடி]: மழைகுலம் உழக்க - மேகங்களின்

கூட்டங்கள் (இடிமுழக்கத்தால் அச்சத்தை விளைத்துக்) கலங்கச் செய்ய, உழை குலம் - மான் கூட்டங்கள், வைகும் மரம் மூலத்து - (அவ்வாறுள்ள மயில்கள்) தங்கப்பெற்ற மரங்களின் அடியிலே, ஒதுங்கின - (விழித்த கண் வாங்காமல் அந்த நாட்டியத்தைக் காணச் செல்பவர்போல மருண்ட நோக்குடன்) போய்ச்சேர்ந்தன; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. பதங்கம் - பறவைப்பொதுப்பெயர்; இவ் வடசொல், எழும்பிச்செல்வதென்று பொருள்படும். மதங்கியர் - இளமைப் பருவமுடைய நாட்டியப்பெண்கள். விதங்களினடித்திடு விகற்ப வழிமேவும் மதங்கியர்—"விதங்களின் விதிமுறை சதிமிதிப்பவர், மதங்கியர்" என்றார், நகரப்படலத்திலும், 'முழக்க' என்று எடுத்து, முழங்கவென்று உரைத்தலு மொன்று; தன்வினைப் பொருளில் வந்த பிறவினை. [1]பதங்கொண்முழவொத்தமுகில்பண் ஞிமிறு பன்ன என்ற பாடம், கீழ்ப்போந்த 32 - ஆஞ்செய்யுளோடு கூறியதுகூறலா மாதலாற் சிறவாது. பி - ம்:—[1]பதங்கமுழவொக்க, பதங்கண்முகிலொத்த, பதங்கொண்முகிலொத்த. [2]இசையைஞ். [3]நடந்திடு. [4]விகற்பநனி. [5]வாசமலர். [6]உலைக்க. (531)

80. விளக்கொளி யகிற்புகை [1]விழுங்கமளி மென்கொம்பு
இளைக்குமிடை மங்கையரு மைந்தர்களு [2]மேவத்
[3]தளத்தகு மலர்த்தவி [4]சிகந்து[5]நகு சந்தின்
[6]தொளைத்துயி லுவந்துதுயில் வுற்றகுளிர் தும்பி.

(இ - ள்.) மெல் கொம்பு - மெல்லியபூங்கொம்பும், இளைக்கும் - (மெல்லிதாயிருக்குந்தன்மையில் ஒப்பாகாமல்) தோற்கும், இடை - இடையையுடைய, மங்கையர்உம் - இளமைப்பருவமுள்ள மகளிரும், மைந்தர்கள்உம் - இளமைப்பருவமுள்ள ஆடவரும், அகில் புகை விளக்கு ஒளி விழுங்கு அமளி மேவ - (கீழே) அகிற்கட்டைகளை யெரித்து ஊட்டும்புகை விளக்குகளின்ஒளியைத் தெரியாதபடி கவிந்துகொள்ளப்பெற்ற கட்டிலில் விரும்பிச்சேர,—குளிர் தும்பி - குளிர்கொண்ட வண்டுகள், தள தகு மலர் தவிசு இகந்து - விட்டிடத் தக்க தாமரைமலராகிய படுக்கையை விட்டு, நகு சந்தின் தொளை துயில் உவந்து - மலர்ந்துவிளங்குகின்ற சந்தனமரத்தின் துளையில் [பொந்தில்] தங்குதலை விரும்பி, துயில்வுஉற்ற - (அங்குச் சேர்ந்து) தூங்கின; (எ - று.)

பெருமழைக்காலத்திற் குளிர்தீருமாறு மங்கையரும் மைந்தரும் விளக்கினொளி தெரியாதபடி மிகுதியாக அகிற்புகையூட்டப் பெற்ற படுக்கையில் ஏறி ஒருவரையொருவர் தழுவிச் சயனிப்பா ராயினரென்றது, முன்னிரண்டடி. அப்பெருமழையில் தாமரை மலர்கள் இதழ்குவிந்தும் நீரில்ஆழ்ந்தும் அழிந்தும் விலக்கத் தக்கனவானதனால், வண்டுகள் அத்தாமரைமலராகிய தங்கு மிடத்தை விட்டுக் கரையிலுள்ள மலர்ந்த சந்தனமரங்களின்

பொந்துகளில் விருப்பத்தோடு சென்றுசேர்ந்து இனிது உறங்கலாயினவென்பது, பின்னிரண்டடியின் கருத்து. ''புதிய மழைத் தாரைகளால் அழிக்கப்பட்ட தாதுகளையுடைய தாமரைமலர்களை விரைவாகப்பற்றவிட்டு, வண்டுகள், தாதுகளோடுகூடிய புதிய கடம்ப மலர்களை மகிழ்ச்சியோடு சேர்கின்றன'' என்று ஸ்ரீவால்மீகிராமாயணத்திற் கூறியது நோக்கத்தக்கது. அடுத்த செய்யுளும் இவ்வாறான கருத்துடையதே.

மென்கொம்பு இளைக்கும் இடை - மெல்லிதான மரக்கொம்பினும் நுண்ணிதான இடை. தளத்தகு - தள்ளத்தகு; தொகுத்தல். துயில் - தங்குதல். துயில்என்பது தூங்குதலென்னும்பொருளோடு தங்குதலென்னும் பொருளையுமுடையது; சீவகசிந்தாமணியில் ''திருத்துயில்பெற்ற மார்பன்'' என்ற இடத்தில் 'துயிறல் - தங்குதல்' என்றார், நச்சினார்க்கினியரும். துயில்வுறுதல் - தூக்கத்தையடைதல்.

இனி, தளம் தகு மலர் என்று பிரித்து - இதழ்கள் நிறைந்த அழகிய தாமரைமலரென்று உரைத்தலும், 'தளக் கவின்மலர்' என்று பாடமோதுதலும் சிறவா. பி - ம்:—[1] விளங்கமளி. [2] ஏற. [3] தளைத்த கைமலர்த்தவிசு. [4] உவந்து. [5] தருசந்தின், தளிர்சந்தின், சுகிர்சந்தின், சுரிசந்தின். [6] துளைத்திடரறத்துயில்வதிந்த, துளைத்தருவின் வந்துதுயில், துளைத்தகுயில்வந்துதுயில். 'தளைத் தகைமலர்த்தவி சுவந்துதருசந்தின்' என்றும், 'தளைத்தவின் மணித்தவிசுவந்து சுகிர்சந்தின்' என்றும் சிலபிரதிகளில் மூன்றுமடி. (532)

81. தாமரை மலர்த்தவி [1]சிகந்துதகை யன்னம்
[2]மாமர னிரைத்தொகு பொதும்பருழை வைகத்
தேமர னடுக்கித ணிடைச்செறி குரம்பைத்
தூமரு வெயிற்றியரொ டன்பர்துயில் வுற்றார்.

(இ - ள்.) தகை அன்னம் - அழகிய அன்னப்பறவைகள், தாமரை மலர் தவிசு இகந்து-தாமரைமலராகிய தங்களிருப்பிடத்தை விட்டுநீங்கி, மா மரன் நிரைதொகு பொதும்பர் உழைவைக - பெரிய மரங்களின் வரிசையடர்ந்த சோலையிற் சேர்ந்து வசிக்க,—தேம் மரன் அடுக்கு இதண் இடை செறி குரம்பை - நறுமணமுள்ள மரக்கட்டைகளை அடுக்கியமைத்த பரணிற் பொருந்திய குடிசையில், தூ மருவு எயிற்றியரொடு - வெண்ணிறம் பொருந்திய பற்களையுடையவர்களான வேட்டுவப் பெண்களுடனே, அன்பர் - (அவர்களது) அன்புள்ள கணவரான வேடர்கள், துயில்வுற்றார் - தங்கித்தூங்கலானார்கள்; (எ - று.)

தாமரைமலரைவிரும்பித் தங்குமிடமாகக்கொண்டு அதனிடத்தில் வசிக்கும் அன்னப்பறவைகள் அப்பெருமழைக்காலத்தில் அம்மலர்கள் அழிந்து பொலிவிழந்ததனால் அவற்றைவிட்டு மரங்களடர்ந்தசோலைகளிற்சேர்ந்து வசிக்கலாயின; இனை முதலியவற்றிற்குக்

காவல்செய்யுங் கவலையின்மையால் வேட்டுவமகளிரும் வேடர்களும் அப்பெருமழையிற் குளிர்மிகுதியால் தங்கள்குடிசைகளுட்சென்று சேர்ந்து இனிதுதுயில்பவராயின ரென்பதாம். தவிசு - ஆசனம். பொதும்பர் - மரச்செறிவு. தேமரன் - சந்தனம் முதலியன. 'எயிற்றியர்' என்ற சொல் - 'எயிறு' என்ற பகுதியின் மேற் பிறந்த பெண் பன்மைப்பெயராய்ப் பற்களையுடையவரென்னும் பொருளையும், 'எயினர்' என்பதன் பெண்பாற்பன்மையாய் வேட்டுவமாதரென னும் பொருளையும் உணர்த்தும். இங்கு இரட்டுறமொழிதலாக, எயிற்றியராகிய எயிற்றிய ரென்று மீண்டும் கூறிக்கொண்டு, பற்களையுடையவர்களான வேட்டுவப்பெண்க ளென்று பொருள் கொள்ளப்பட்டது. பிந்தினபொருளில் 'எயின்' என்ற சாதிப்பெயர்-பகுதி.

மரன் நிரை தொகு பொதும்பர்உழை வைக-மரங்களின் கூட்டத் திற் பொருந்திய பொந்துகளிற்போய்ப் பதுங்கியிருக்க என்பாருமுளர். தூமருவு எயிற்றியர் என்பதற்கு - தசை பொருந்திய பற்களையுடைய வரென்பர் ஒருசாரார். [2]மாமரநிரைத் தொகுபொதும்பினுழை என்ற பாடத்திற்கு-பெரியமரங்களின்வரிசையையுடையதான ஒரு சோலையி னுள்ளே யென்க. பி - ம்:—[1] இகழ்ந்து, உவந்த. [2]மா...பொதும் பின்முழை. (533)

82. வள்ளிபுடை [1]சுற்றியுயர் சிற்றிலை [2]மரந்தோறு
எள்ளரு [3]மறிக்குருளொ டண்டர்க [4]ளிருந்தார்
கள்ளரி [5]ஞெளித்துழ னெடுங்கழு தொடுங்கி
[6]முள்ளெயிறு தின்றுபசி [7]மூழ்கிட விருந்த.

(இ - ள்.) வள்ளி புடை சுற்றி - கொடிகள் பக்கங்களிற் சூழ்ந்து கொள்ளப்பெற்று, உயர் - ஓங்கிவளர்ந்த, சிறு இலை மரம் தோறு - சிறிய இலைகளையுடைய மரங்கள்தோறும், (அவற்றின்கீழ்), எள்ள அரு மறி குருளொடு - இகழாமற் பாதுகாக்கத்தக்க ஆட்டுக் குட்டி களுடனே, அண்டர்கள் - இடையர்கள், இருந்தார் - தங்கினர்கள்; கள்ளரின் ஒளித்து உழல்-திருடர்கள்போல மறைந்து திரிவனவான, நெடுங் கழுது - பெரிய பேய்களும், ஒடுங்கி—, முள் எயிறு தின்று - முட்கள் போலக் கூறிய (தங்கள்) பற்களை மென்று தின்றுகொண்டு, பசி மூழ்கிட இருந்த - மிக்கபசியுடனே யிருந்தன; (எ - று.)

பெருமழை தம்மேற்பெய்தற்கு அஞ்சிஒதுங்குவார்க்கு, பெரிய இலைகளையுடைய ஆலமரம் முதலியவற்றினும் சிறிய இலைகளை யுடைய புளியமரம் முதலியன இனியனவாதலால், அப்பெருமழை யில் இடையர்கள் தாம் தவறாது பாதுகாத்தற்குரிய ஆட்டுக் குட்டிகளுடனே சிற்றிலை மரங்களினடியில் ஒதுங்கினர்க ளென்க. திருவள்ளுவர் திருக்குறளென்னும் நூலையியற்றிக்கொண்டு மயிலையினின்று மதுரையைநோக்கிச் செல்லும் வழியிலே ஒரு பெருங் காட்டில் மழைக்கு அஞ்சி ஆலமரத்தினடியிற் போய்

நிற்க, அங்குத் தாம் மேய்க்கும் ஆட்டுமந்தையுடன் புளியமரத்தின் கீழ் நின்ற இடைக்காடர் திருவள்ளுவரைப் புளியமரத்தின்கீழ் வரும்படி அழைக்க, அதன் நுட்பத்தை யுணர்ந்து வள்ளுவர் அங்குப் போய்ச்சேர்ந்தனரென்னும் வரலாறு இங்குக் கருதத் தக்கது. *இடையரின் பிழைப்புக்குக் காரணமான ஆடுகளுள்ளும் குட்டிகள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளக்கூடாத பருவத்தன ஆதலால் அவற்றை இடையர்கள் உடன் கொண்டு சென்றன ரென்பது விளங்க, மறிக்குருளுக்கு 'எள்ளரு' என்ற அடைமொழி கொடுக்கப் பட்டது. பேய்களும் வெளிக் கிளம்பமாட்டாமல் ஒருபுறத்தே ஒடுங்கிப் பசியில் மூழ்கிப் பற்களைமென்று கொண்டு வாடியிருந்தன என மழையின் மிகுதியை யுணர்த்தியவாரும். பசி மூழ்கிட - பசித்தீயில் தாம் மூழ்க என்க.

வள்ளி - வல்லீ. இனி, வள்ளி - வள்ளியென்னும் ஒருவகைக் கொடியென்றும், சிற்றிலைமரம் - சிற்றிலைமரமென்னும் ஒருவகை மரமென்றுங் கொள்வர் ஒருசாரார். குருள் - குருளை யென்ற இளமைப் பெயரின் விகாரம். உழல் நெடுங்கழுது கள்ளரின் ஒளித்து என்றுமாற்றி, எங்குந்திரியுமியல்பினவான பெரும் பேய்கள் (வெளிப்புறப்படமாட்டாமல்) திருடர்போல ஓரிடத்தில் ஒளித்துக்கொண்டு என்றலுமாம். பி - ம்:—[1]செற்றி. [2]மரத்தோர். [3]மறிக்குறிகொள். [4]அண்டரும். [5]ஒளித்துறை. [6]முள்ளெயிறிலிற்றுக, முள்ளெயிறுதின்றுக. [7]முகந்தவிருளெங்கும்,மூழ்கியவிருந்த, முகந்த விருண் முற்றும். (534)

83\. சரம்பயி னெடுந்துளி [1]நிமிர்ந்தபுயல் சார
[2]உரம்பெயர்வில் வன்[3]கரி கரந்துற வொடுங்கா
வரம்பக [3]னெடும்பிரசம் வைகல்பல வைகும்
முரம்பினி னிரம்பல முழைஞ்சிடை நுழைந்த.

(இ - ள்.) நிமிர்ந்த புயல் - (வானத்தில்) நெருங்கிய மேகங்களினின்று, சரம் பயில் நெடுந் துளி - அம்புகளையொத்த பெரிய மழைத்தாரைகள், சார - (தம்மேல்) விழுதலால்,—உரம் பெயர்வு இல் வல் கரி - (இயல்பில்) மனத்துணிவு குலைதலில்லாத வலிய யானைகள்,—ஒடுங்கா - ஒடுங்கி,—வரம்பு அகல் நெடும் பிரசம் பல வைகல் வைகும் - அளவற்ற பெரிய தேன்கூடுகள் பலநாளாய்த் தங்கப்பெற்ற, முரம்பினில் - மலையின்மேட்டுவெளிகளில், நிரம்பல - (தாம்) கூட்டமாக நிறைந்து வசிக்கமாட்டாதனவாய்,—கரந்து உற - (மழை தம்மேற்படாதபடி) ஒளித்துவசிக்க(க் கருதி),—முழைஞ்சு இடை நுழைந்த - மலைக்குகைகளில் (ஒவ்வொன்றாக) நுழைந்திட்டன; (எ - று.)

---

*"ஆங்குறும்மழைகண்டஞ்சியாலடிதனிற்போய்நின்றான்
பாங்குறுபுளிக்கீழ்நின்றுபரிந்திடைக்காடனன்னோற்
றூங்குபுத்தகத்துப்பேயாதயங்குசிற்றிலைக்கீழ்வாவென்
றோங்குபேரொலியாற்கூவவுடனவனுற்றானேர்ந்தே."

—புலவர்புராணம்.

வானத்தில் நெருங்கி நிறைந்த மேகங்களினின்று பெரிய மழைத் தாரைகள் அம்புகள்போலத் தம்மேல்விழவே, அவற்றைப் பொறுக்க மாட்டாமல், உடல்வலிமையும் மனத்திண்மையும் இயல்பில் மிக்கன வான யானைகளும் ஒடுங்கித் தம்மேல் அம்புமழைபடாதபடி ஒதுங்கி யுறையக் கருதி, தாங்கள் கூட்டங்கூட்டமாகவாழ்ந்து கொண்டிருந்த பரந்த மலையின்மேட்டுவெளியிடங்களை விட்டு மலைக்குகைகளினுள்ளே ஒவ்வொன்றாக அரிதில்நுழைந்துசெல்லலாயின என்பதாம். மூன்றும் அடி - முரம்புக்கு அடைமொழி. அங்கு வந்து அவ்வளவு உயரத்தி லேறியெடுப்பவரெவருமின்மையால் தேன்கூடுகள் பலநாளாக அம் மலையின் கற்பாறை மேட்டு வெளிகளில் அழிவின்றிக் கட்டியபடியே யிருக்கின்றன வென்க. இயல்பிலே மிக்க துணிவையும் வலிமையையு முடையனவான யானைகளும் அம்மழையின் மிகுதியால் இவ்வாறு ஒடுங்கி ஒளிக்கத் தலைப்பட்டன வென்பது விளங்க, 'உரம்பெயர்வில் வன்கரி' என்றார்.

இனி, இச்செய்யுளுக்கு - மேகங்களினின்று அம்புபோன்ற நெடுந்துளிதம்மேற்சார்ந்ததனால் வலியயானைகள் ஒடுங்கிஒளிக்கத் தேன்கூடுகள் (அம்மழைத்தாரைகள் விழுந்ததனால் உடைந்து) அவற்றினின்று பெருகிய தேன்கள் பலநாளாய்த் தாமிருந்த கற் பாறை மேட்டில் இடம்பற்றாமையால் மலைக்குகைகளினுள்ளும் போய்ச் சேர்ந்தன என்று உரைத்தலும் ஒன்று. பி - ம்:—[1]படுந் தொறுதகர்ந்த, நிரந்தபுயல்சார, நிரந்துபயில்சாரல், நிரந்துபுனல் சார, நிமிர்ந்தபுயல்சாரல். [2]உரம்பயிலும், குரம்பையினில். [3]கரி குலைந்துறவொடுங்கா, கரியுலைந்துறவொடுங்க, கரிகணைந்துற வொடுங்கா, இரியுலைந்திடவொடுங்கா, கரியுலைந்திறையொடுங்க. [4]நறும் பிரசம். (535)

84.—அந்தப் பின்மாரிக்காலத்தில் இராமபிரான் சீதாவிர கத்தால்மிக வருந்தி இலக்குமணனைநோக்கிச் சிலசொல்லத் தொடங்குதல்.

இத்தகைய மாரி [1]யிடை துன்னியிரு ளெய்த
[2]மைத்தகு மணிக்குறு நகைச் [3]சனகன் மான்மேல்
உய்த்த [4]வுணர் வத்தின [5]னெருப்பிடை யுயிர்ப்பான்
[6]வித்தக னிலக்குவனை முன்னினன் விளம்பும்.

(இ - ள்.) இ தகைய மாரியிடை - இத்தன்மையதான பெரு மழைக் காலத்திலே, இருள் துன்னி எய்த - இருட்டும் அடர்ந்து வந்துசேர [இருண்ட இராத்திரியி லென்றபடி],—வித்தகன் - அறி வுடையவனான இராமபிரான்,—மை தகு மணி - மையென்றுசொல் லத்தக்க [மிகக்கறுத்த] கண்ணின்கருமணியையும், குறு நகை - புன்

சிரிப்பையுமுடைய, சனகன் மான்மேல் - (பார்வை யழகினால் மான் போன்றவளான சனகமகாராசனதுமகளாகிய சீதையினிடத்தில், உய்த்த - செலுத்திய, உணர்வத்தினன் - அறிவையுடையவனும், (அதனால்), நெருப்பு இடை உயிர்ப்பான் - நெருப்புப்போல [உஷ்ணமாக] இடையிடையே பெருமூச்சுவிடுபவனுமாய், இலக்குவனை முன்னினன் விளம்பும் - இலக்குமணனை நோக்கிச் (சிலவார்த்தைகள்) சொல்லலானான்; (எ - று.)—அவற்றை, அடுத்த பதினொருகவிகளிற் காண்க.

மைத்தகு மணி-"உள் நஞ்சினிற் கருகி," கருமணியம்பாலகத்துப் பதித்தன்னபடியவாய்" என்றார் பிறரும். இனி, மணி - தானியாகு பெயராய், கருமணிகட்கு இடமான கண்க ளென்று கொண்டு, மைத்தகு மணி - மையிட்ட அழகிய விழிக ளென்றலுமாம். '[2]மைத்தகு விழி' என்றும் பாடமுண்டு. சானகியாது கரியகண்களின் பார்வையழகிலும் புன்சிரிப்பினழகிலும் இராமபிரானுக்கு உள்ள ஈடுபாடு விளங்க, 'மைத்தகுமணிக் குறுநகைச் சனகன் மான்மேல்' என்றார். '[2]மைத்தகுமணிக்குழல் மலர்ச்சனகன் மான்' என்ற பாடத்திற்கு - மைபோன்றதும் நீலமணியை யொத்ததுமானகரிய கூந்தலில்மலர்களைச் சூடியசானகியா ரென்றுபொருள். மன்மதாவத்தைகளுட் சுப்பிரயோக மெனப்படும் நினைப்பு 'சனகன்மான்மேல் உய்த்த உணர்வத்தினன்' என்றதனாலும், விப்பிரயோகமெனப்படும் வெய்துயிர்த்திரங்கல் 'நெருப்பிடை உயிர்ப்பான்' என்றதனாலும், மோகமெனப்படும் மொழிபலபிதற்றல் 'இலக்குவனை முன்னினன்விளம்பும்' என்றதனாலுங் கூறப்பட்டன. ஞானசொரூபியான இராமபிரான் தான் கொண்ட மானுடவடிவத்திற்கு ஏற்பக் காலத்தின்வசப்பட்டு அப்பொழுது பலவாறு இரங்கிக் கூறலாயின னென்பதும், துன்பத்தை ஆற்றுதற்குக் கருவியான அறிவே அதனை மிகுதியாகப்பாராட்டுதற்குக் காரணமாயிற்றென்பதுந்தோன்ற, 'வித்தகன்' என்றார். இலக்குவன் - லக்ஷ்மணன் என்ற வடமொழிப்பெயரின் விகாரம்; அத்திருநாமம் - லக்ஷ்மியோடு [இராமனுக்கு அடிமை செய்தலாகிய செல்வத்தோடு] கூடியவ னென்று பொருள்படும். உத்தமபுருடலட்சணங்கள் பொருந்தியவனென்று இதற்குப்பொருள் கூறுதலுமுண்டு. 'மாரியிடை துன்னியிருளெய்த' என்பதற்கு - மழையினால் இருளடையவென்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1]மிடைதுன்னி. [2]மத்தகமணிக்குறுநகை, மத்தகமணிக்குலவகைக், மைத்தகண்ணிக்குறுநகை. [3]சனகியாண்மேல். [4]உணர்விற்றினம், உணர்வைத்தின். [5]நெருப்பினிலுயிர்ப்பான். [6]வித்தகவிலக்குவன் முன்னினன் விளம்பும். (536)

வேறு.

85.—இதுமுதற் பதினொருகவிகள்-இராமபிரான் இரங்கல்.

மழைக்கரு மின்னெயிற் [1]றரக்கன் வஞ்சனை
இழைப்பருங் கொங்கையு [2]மெதிர்வுற் றின்னலின்

உழைத்தன ளுலைந்துயி [3]ருலக்கு மொன்றினும்
பிழைப்பரி தெனக்கு[4] மிதென்ன பெற்றியோ.

(இ - ள்.) இழை பருங் கொங்கைஉம் - ஆபரணங்களையணிந்த பருத்த தனங்களையுடையவளான சீதையும்,—மழைகருமின்எயிறு - மேகம்போலும் கருநிறத்தோடு மின்னல்போன்ற பற்களையுடையவனான, அரக்கன் - இராக்கதனாகிய இராவணனது, வஞ்சனை - வஞ்சனைக்கு, எதிர்வுஉற்று - இலக்காகி, இன்னலின்உழைத்தனள் - துன்பத்தால் வருந்தியவளாய், உலைந்து - வாடி, உயிர் உலக்கும் - உயிரழிவள்; எனக்கும்—, ஒன்றின்உம் பிழைப்பு அரிது - ஒருவகையாலும் பிழைத்தல் அரியதாயிருக்கின்றது; இது என்ன பெற்றிஓ - இது என்ன நிலைமையோ? (எ - று.)

மேகம்போலக்கருநிறமுடையவனும் மின்னல்போல விளங்கும் பற்களையுடையவனுமான இராவணனது வஞ்சனையி லகப்பட்டுச் சீதை துன்பத்தால் மிகவருந்திப் பிழைக்கும்வகையொன்றுமில்லாமல் உயிரழிய, யானும் அவ்வாறே கருநிறத்தையும் மின்னல்களையுமுடைய கார்மேகத்தின் கொடுமைக்கு இலக்காகி மிகவருந்திப் பிழைக்கவகையின்றி உயிரழிகின்றேன்: இது என்ன காலபலமோ! என்று இரங்கியவாறும். இராமபிரான் தனக்கும் சீதைக்கும் துயரம் நுகர்தலில் ஒப்புமைதோன்றுமாறு கூறிய நயம் பாராட்டத் தக்கது. மூன்றுமடி - முற்றுமோனை.

[4] "இதென்ன பெற்றியோய்" என்ற பாடத்திற்கு - பேரியல்பையுடையவனே! இது என்ன? என்று பொருளாகவேண்டும். 'அரக்கன் வஞ்சனை இழைப்பருங்கொங்கையும் எதிர்வுற்று' என்பதற்கு இராவணனது வஞ்சனையிலகப்பட்ட சீதையும் (இக்கார்காலத்திற்கு) இலக்காகி யென்று உரைப்பாருமுளர். இழைப்பு அரு என்று பிரித்து, (செயற்கையாகச்) செய்யவொண்ணாத என்று உரைப்பர் ஒருசாரார். பி - ம்:—[1] அரக்கர். [2] எதிரவுற்றிலள், எதிரவின்னலுள், எய்தியின்னலுள். [3] உலக்குமேலினி. (537)

86. தூநிறச் சுடு[1]சரந் தூணி தூங்கிட
வானுறப் பிறங்கிய வயிரத் தோளொடும்
யானுறக் கடவதே [2]யிதுவு மிந்நிலை
வேனிறத் [3]துற்றதொத் துழியும் வீகிலேன்.

(இ - ள்.) தூ நிறம் சுடு சரம் - மாமிசத்தின் நிறத்தைக் கொண்டனவும் [செந்நிறமானவையும்] (பகைவரை) எரிப்பனவுமான அம்புகள், தூணி தூங்கிட - (எனது) அம்பறுத்தூணியில் உறங்கிக்கிடக்க [தொழிலின்றி வாளாவிருக்க], வான்உறபிறங்கிய வயிரம் தோளொடுஉம் - ஆகாயத்தையளாவ [உயர்ந்து] விளங்கிய உறுதியுள்ள புயங்களுடனே, யான் இதுஉம் உறக்கடவதுஏ - யான் இவ்வாறான துன்பத்தையும் அனுபவிக்கக்கடவதோ! இநிலை -

(எனக்கு நேர்ந்துள்ள) இந்நிலைமை, வேல் நிறத்து உற்றது ஒத்த உழிஉம் - வேலாயுதம் நெஞ்சில் ஊன்றியதுபோன்றதாகவும், வீகிலேன் - இறவாமலிருக்கின்றேனே! (எ - று.)

பகையழித்தற்குவேண்டிய கருவிகளான இயற்கைவலிமையும் செயற்கைவலிமையும் என்னிடம் நிரம்ப இருந்தும், அவை எனக்குத் தீங்குசெய்தவனுக்கு எதிர்செய்யமாட்டாமல் வீணே கிடக்க, யான் இப்படித் துன்பத்தை நுகர்ந்துகொண்டு நாணமின்றிப் பிழைத்திருத்தல் தகுதியோ? இதனினும் யான் இறத்தலே மேலன்றோ! என்பதாம். இனி, தூ - தசைதோய்ந்த என்றும், இறகு கட்டிய என்றும் உரைக்கலாம்: அன்றி, தூ - சுத்தமான என்றுமாம். அம்புக்குத் தூய்மை - தகாதவரை இலக்காகக்கொள்ளாமையென்னலுமாம்; இலக்கானவரைத் தவறாமலழிப்பதும் அது. தூங்குதல் - சோம்பியிருத்தலும், தொங்கிக்கொண்டிருத்தலுமாம். ''சரத்தூணி தூங்குற' என்ற பாடத்திற்கு - அம்பறுத்தூணி (கட்டப்பட்டுத்) தொங்கிக்கொண்டிருக்க என்று பொருளாம். 'இந்நிலை வேல்நிறத்துற்றதொத்துழியும்' என்பதற்கு - இந்த மழைத் தாரைகள் வேல்கள் மார்பிற்பட்டனபோல வருத்தவும் என்பாருமுளர். ஒத்துழி - ஒத்தஉழி என்பதன் தொகுத்தல். முதலடி - முற்றுமோனை. பி - ம்:—[1] சுடுசரத்...தூங்குற,... தூக்கிட, சுடுகணை... [2] இறவுமின்னிலை, இதுவுமின்னிலை. [3] உற்ற தொத்துளவும் வீசுலேன், உற்றதொத்துயிரும் வீசுலேன். (538)

87. தெரிகணை [1]மலர்களாற் றிறந்த நெஞ்சொடும்
[2]அரியவன் றுயரொடும் யானும் வைகுவேன்
[3]எரியுமின் மினிமணி விளக்கி னின்துணைக்
[4]குரீஇயினம் பெடையொடுந் துயில்வ கூட்டினுள்.

(இ - ள்.) குரீஇ இனம் - ஆண்குருவிகளின் வருக்கங்கள்,—எரியும் - ஒளிர்கின்ற, மின்மினி - மின்மினிப்பூச்சியாகிய, மணி விளக்கின் - அழகிய விளக்கின் வெளிச்சத்திலே, இன் துணை பெடையொடுஉம் - இனிமையான (தமது) வாழ்க்கைக்குத் துணையாகிய பெண்குருவிகளுடன், கூட்டினுள் - (தங்கள்) கூடுகளினுள்ளே, துயில்வ - (சுகமாய்த்) தூங்குகின்றன; யான்உம் - நானோ, தெரிகணை மலர்களால் - (மன்மதனால்) தேர்ந்தெடுத்து எய்யப்பட்ட புஷ்பங்களாகிய பாணங்களால் [மலரம்புகள் தைத்துப் பாய்ததால் என்றபடி], திறந்த - பிளப்புண்ட, நெஞ்சொடுஉம் - நெஞ்சுடனும், அரிய வல் துயரொடுஉம் - பொறுத்தற்கு அரிய கொடிய துன்பத்துடனும், வைகுவேன் - (மனைவியைப் பிரிந்து வனத்தில்) வாழ்கின்றேன்! (எ - று.)

குருவிகளும், தங்கள் கூடுகளினுள்ளே இரவில் இடையிட்டு விளங்கும் மின்மினிப்பூச்சிகளை விளக்காகவைத்துக்கொண்டு தம்

தம்பேடையைப் பிரியாமல் அவற்றுடன்கூடி இனிமையாகப் படுத்துத்தூங்குகின்றன; அவ்வாறன்றி, நான் மனைவியைப் பிரிந்து ஐங்கணைவில்லியின் மலரம்புகளால் மனம்பிளப்புண்டு பொறுத்தற்கு அரியபெருந்துன்பத்துடன் படுக்கைகொள்ளாமல் இருளில் வனத்திலிருக்கின்றேனே! என்று இரங்கியவாறு. பிந்தினவாக்கியத்தில் 'கூட்டினுள்' என்பதற்கு ஏற்ப, முந்தின வாக்கியத்தில் 'வனத்தில்' என்பதும், 'மின்மினியாகிய விளக்கு விளங்க' என்பதற்கு ஏற்ப 'இருளிலே' என்பதும் கொள்ள வேண்டும். இழிந்தபிறப்பாகிய பறவையினத்திற்சேர்ந்த குருவிக்கு உள்ள அளவு நல்வினைப்பயனும் உயர்ந்த மானுடப்பிறவியில் தோன்றிய தனக்கு இல்லாமற்போனதைக்குறித்து வருந்திய வாறும். துணைவரைப்பிரிந்து வருந்துபவர் துணையோடும் கூடி வாழும் உயிர்களைக் காணுமிடத்து அவை காதல் நோயை மிகு விப்பதாகித் தமது பிரிவுத்துயரை வளர்த்தலால் தமது நிலை மையைக்குறித்து மிகவருந்தி அவ்வுயிர்களின்மேற் பொறாமை கொண்டவர்போன்று நிட்டூரமாகப் பேசும் உலகவியல்பு, இங்குக் கருதத்தக்கது.

'யானும்' என்ற உம்மை - உயர்வுசிறப்பு. எரிதல் - விளங்குதல். மின்மினி - இருளில் மின்னுவதொரு பறக்கும்புழு; மின் - மின்னல் போல, மினி - மின்னுவது எனக் காரணப்பொருள் காண்க; மின்னு தல் - இடையிட்டு விளங்குதல். மணி விளக்கு - இரத்தினமாகிய விளக்கு என்று கொள்ளலாம்: நந்தாவிளக்கு என்றுகருத்து. 'குருவி' என்ற சொல் 'குரீஇ' என்று விகாரப்பட்டு அள பெடுத்தது. பல பிரதிகளில் மின்மினியென்பது மிம்மினி என்று காணப்படுகிறது. பி - ம்:—[1] மலரொடும். [2] எரியவெந்துயரொடும், எரியவன்துயரொடும். [3] எரியுமிம்மின்மினி, இரியுமின்மினிமணி. [4] குரியினம். (539)

88. வானக மின்னினு மழை[1] முழக்கினும்
யானக [2] மெலிகுவே னெயிற்ற ராவெனக்
கானகம் [3] புகுந்தியான் முடித்த காரியம்
மேனகுங் [4] கீழ்நகு மினியென் [5] வேண்டுமால்.

(இ - ள்.) வான் அகம் மின்னின் உம் - மேகம்மின்னினால் அத னைக் கண்டும், மழை முழக்கின் உம் - மேகம் இடிமுழக்கஞ் செய் தால் அதனைக்கேட்டும், எயிறு அரா என - விடப்பற்களையுடைய நாகம் (அஞ்சி வருந்துவது) போல, யான் அகம் மெலிகுவேன் - நான் மனம்வருந்துபவனாவேன்; (ஆகவே),—யான் கான் அகம் புகுந்து முடித்த காரியம் - நான் வனவாசம்வந்து சாதித்த காரியத் தைக் குறித்து, மேல் நகும் கீழ் நகும் - மேலுலகத்தவர் சிரிப்பர் கீழுலகத்தவர் சிரிப்பர்: இனி என் வேண்டும் - இன்னும் (நான்) என்னசிறுமையையடையவேண்டும்? [ஒன்றுமில்லையென்றபடி;] (எ - று.)— ஆல் - ஈற்றசை.

தான் மணஞ்செய்துகொண்ட மனையாளை மாற்றான் கவர்ந்து கொள்ள இழந்து அதற்கு எதிரொன்றுஞ் செய்யமாட்டாது வருந்துதலாகிய இது, சிறுமையுட்சிறுமை யென்பதாம். தனது மனவலிமை சிறிதுமின்றி யொழிந்தமை, முன்னிரண்டடியிற் குறிக்கப்பட்டது. மின்னலுக்கும் இடிக்கும் அஞ்சிநடுங்குதல் பாம்பினியல்பாதல், முன்பு கூறப்பட்டது. விரகிகள் கார்காலத்து வருந்துதலும் அவ்வாறே. தன்னைத் தானே பழித்துக்கொள்ளுஞ் சமயமாதலால், தனக்கு நாகத்தை உவமைகூறிக்கொண்டான். 'மேல்', 'கீழ்' என்பன இடவாகுபெயர். 'மேல்' என்றது, தேவர்களை. 'கீழ்' என்றது நாகர்களை. மேலுலகத்தாரும் கீழுலகத்தாரும் நகுவ ரென்றதனால், இவ்வுலகத்தார்நகுவ ரென்பது கூறாமலே பெறப்பட்டது; அன்றி, 'கீழ்' என்றதில் நிலவுலகம் அடங்கு மென்றலுமாம். நகுதல் - இங்கே இகழ்ச்சிச் சிரிப்பு: பரிஹாஸம். இனி என் வேண்டும் - இதைக்காட்டிலும் எனக்கு வேறு அவமானம் வேண்டுமோ? என்றபடி: இனி, அவ்வாறான பின்பு (இவ்வுலகத்தில் எனக்கு) யாதுவேண்டுவது? [ஒன்றும் வேண்டுவதில்லை] என்றும் உரைக்கலாம்; இனி நான் பிழைத்திருந்து யாது செய்யவேண்டு மென்றதாம். '[2]மின்னுவன்' என்ற பாடத்திற்கு - நான் மனந்துடிப்பேன் என்று பொருள். பி - ம்:—[1]முழங்கினும், வழங்கினும். [2]விம்முவன், மெலிகுவன். [3]புகுந்துநான். [4]கிணகும். [5]வேண்டுமோ. (540)

89. மறந்திருந் [1]துய்கலேன் மாரி யீதெனின்
[2]இறந்துவிண் சேர்வது சரத மிப்பழி
பிறந்துபின் [3]தீர்வலோ பின்ன ரன்னது
துறந்துசென் [4]றுறுவலோ துயரின் வைகுவேன்.

(இ - ள்.) துயரின் வைகுவேன் - துன்பத்தில் தங்குபவனான நான்,—மறந்து இருந்து உய்கலேன் - (சீதையை) மறந்திருந்து பிழைக்கமாட்டுவேனல்லேன்; மாரி ஈது எனின் - மழை இத்தன்மையதானால், இறந்து விண் சேர்வது சரதம் - (நான்) மரணமடைந்து பரலோகத்தையடைவது நிச்சயம்: இ பழி - (சீதையை இராவணன் கவர்ந்து செல்ல இழந்ததாகிய) இந்தப்பழிப்பு, பிறந்து பின் தீர்வலோ - மற்றொரு பிறவியெடுத்து அப்பிறப்பில் (அவனுக்கு எதிர் செய்து) தீர்க்கடவேனோ? (அன்றி), பின்னர் - மற்றொரு பிறப்பில், சென்று துறந்து - (இல்லறத்தை) விட்டுத் துறவறத்தையடைந்து, அன்னது உறுவலோ - (இப்பழிதீரப் பெறுதலாகிய) அந்நிலைமையை யடைவேனோ? (எ - று.)

எப்படியும் இப்பிறப்பிலேயே இப்பழி தீரப்பெறுதல் எனக்கு இயலாதென்பதாம்; துறவறமடைந்தவர்க்கு முந்தின நிலையின் தொடர்புகளெல்லாம் நீங்குதலால் இப்பழியும் தீர்ந்திடு மென்று கொண்டு, 'துறந்துசென்று அன்னதுஉறுவலோ' எனப்பட்டது, இப்பிறப்பில் துறக்கமாட்டாமையை, மறந்திருந்து உய்கலேன் என்றதனால் உணர்த்தினன். ஓகாரங்கள் - ஐயவினா. 'மாரி ஈது

எனின்' என்றது - மழைக்காலம் இப்படி எனக்கு வருத்தஞ்செய்வதானல் என்றபடி; இப்படி விடாமல் மழைபெய்து கொண்டிருக்குமானல் என்றவாறுமாம். [2] 'இறந்துவிண் சேர்வது சாலும்' என்ற பாடத்திற்கு - (யான்) இறந்து மேலுலகமடைவதே தகுதியாமென்றுபொருள். பி - ம்:—[1] உய்கிலேன். [3] தீர்வனே. [4] உறுவனே, உய்வனே. (541)

90. ஈண்டுநின் றரக்கர்த மிருக்கை யாமினிக்
காண்டலிற் பற்பல காலங் [1] காண்டுமால்
வேண்டுவ தன் [2] றிது வீர நோய்தெற
[3] மாண்டனெ னென்றது [4] மாட்சிப் பாலதால்.

(இ - ள்.) வீர-வீரனே! யாம் - நாம், ஈண்டு நின்று - இவ்விடத்திலேயிருந்து, இனி - இனிமேல், அரக்கர் தம் இருக்கை காண்டலில் - (இராவணன் முதலிய) இராக்கதர்களின் இருப்பிடத்தைத்தேடிக் கண்டுபிடிப்பதில், பல்பல காலம் காண்டும் - மிகப்பலநாள்கள் கழியக் காண்போம்; ஆல்-ஆதலால், இது வேண்டுவது அன்று-(சீதையைத் தேடும்) இம் முயற்சிவேண்டா; நோய் தெற மாண்டனென் என்றது- (சீதையைப் பிரிந்ததனாலாகிய) ஆசை நோய் அழிக்க இறந்தேனென்பதே, மாட்சிப்பாலது - பெருமையிற் சேர்வதாம்; (எ - று.)— ஆல் - ஈற்றசை.

சீதையைக் கவர்ந்துசென்ற அந்த அரக்கரின் இருப்பிடத்தை நாம் இங்கேயிருந்து தேடியுணர்தற்கு இன்னும் எத்தனை காலஞ் செல்லுமோ? அத்தனைகாலம் சென்று சீதையுள்ள இடத்தை அறிந்தாலும், அவளைக் கவர்ந்துசென்ற பகைஞரைத் தொலைத்துப் பின் சீதையை மீட்கவேணும்: இம்முயற்சியில் பலகாலங் கழிதலைக் காட்டிலும் 'சீதையைப்பிரிந்ததனாலாகிய காதல் நோயினால் இராமன் இறந்தான்' என்று அனைவருஞ் சொல்லும்படி யான் இப்பொழுதே இறந்துவிடுவதே பெருமையைத் தருவதாகும் என்பதாம். துன்பம் நுகர்ந்துகொண்டு பல காலம் உயிர் வாழ்தலினும், துன்பந்தீர உயிரொழிதலேமேல் என்கிறான். 'காலம்' என்றது - வருடம் அல்லது யுகம் என்றவாறும்; காலத்தின் பெரும் பகுப்பைக் காட்டும். 'வீர' என்றது, இலக்குமணனை நோக்கிய அண்மைவிளி. மாட்சிப்பாலது - பெருமையின் பகுப்பிற் சேர்வது. பி - ம்:—[1] வேண்டுமால். [2] அது. [3] ...என்றலும், மாண்டனனென்பது. [4] மாட்சிப்பாலதாம். (542)

91. செப்புருக் கனையவிம் மாரிச் சீகரம்
[1] வெப்புறப் [2] புரஞ்சுட வெந்து [3] வீவதோ
அப்புருக் கொண்டவாள் [4] நெடுங்க ணுயிழை
[5] துப்புருக் குமுதவா [6] யமுதந் துய்த்தயான்.

(இ - ள்.) அம்பு உரு கொண்ட - அம்பின் வடிவத்தைக் கொண்ட [அம்புபோன்ற கூரியவடிவமுள்ள], வாள் நெடுங் கண் -

ஒளியுள்ள நீண்ட கண்களையுடைய, ஆய் இழை - தேர்ந்தெடுத்து அணிந்த ஆபரணங்களையுடையவளான சீதையினது, துப்பு உரு குமுதம் வாய் - பவழம்போன்ற நிறமுடையதும் செவ்வாம்பல் போன்றதுமான அதரத்தினது, அமுதம் - அமிருதம்போலினிமையான ரசத்தை, துய்த்த - பருகி இன்பமனுபவித்தவனான, யான் —,— இமாரி சீகரம் - இந்த மழைத்துளிகள், செம்பு உருக்கு அனைய - செம்பை (நெருப்பிலிட்டு) நீராக உருக்கி அதனைப்பெய்தாற் போன்றனவாய், வெப்பு உற - வெப்பம் மிகுமாறு, புரம் சுட - (என்) உடம்பை எரிக்க, வெந்துவீவதுஓ - தவித்து அழிவது தகுதியோ? (எ - று.)

சீதையுடன் கூடியிருந்த காலத்தில் அன்னவளின் இன்பத்தில் மூழ்கிப் பெருமகிழ்வுற்ற யான் இப்போது இம்மழைத்துளி அம்பு போல் உடலின்மேல் வீழ்ந்து எரிக்க எரிந்தழிந்து ஒழிய வேண்டுவதுதானோ என் நிலை! இதுதக்கதோ? என்றுமிகவும் வருந்திக் கூறினன் இராமபிரானென்பதாம். அமுதந் துய்த்த யான் வீவதோ என்றதனால், அமிருதமுண்டவன் அழிவது அடுக்குமோ? என்றானெனக. [2]'புறஞ்சுட' என்ற பாடத்திற்கும் பொருள் அதுவே. 'வீவதோ' என்றதில், தொழிற்பெயர் வினைமுற்றின் தன்மையையடைந்தது. பி - ம்:—[1]வெப்புறு, வெம்புறும். [3]வீவனோ, வீழ்வதே, வீவதோ, மீள்வதோ. [4]நெடுங்கணுப்வளை, ஒடுங்கவோவன்னுள். [5]துப்புருத்தமிர்தவாய், துப்புருத்தனையவாய், துப்புறுமமுதவாய். [6]நுகர்ந்துதுய்த்தயான். சிலபிரதிகளில் 'ஒப்புருக்கொண்டு மார்பொடுங்கவாய்வளை' என்று மூன்றுமடி. (543)

92. நெய்யடை தீயெதிர் நிறுவி [1]நிற்கிவள்
கையடை யென்றவச் சனகன் கட்டுரை
[2]பொய்யடை யாக்கிய பொறியி லேனொடு
மெய்யடை யாதினி விளிதல் நன்றரோ.

(இ - ள்.) நெய் அடை தீ எதிர் நிறுவி - (ஓமாகுதியாகிய) நெய் சேர்ந்து வளர்க்கப்பெற்ற அக்கினியின் முன்னிலையில் (சீதையைக் கொணர்ந்து) நிறுத்தி, நிற்கு இவள் கையடை என்ற - 'உனக்கு இவள் அடைக்கலப்பொருள்' என்று (என்னைநோக்கிச்) சொன்ன, அ சனகன் கட்டுஉரை - அந்தச்சனகமகாராசனது உறுதிச்சொல்லை, பொய் அடை ஆக்கிய - பொய் பொருந்தியதாகச் செய்துவிட்ட [பழுதுபடுத்திவிட்ட], பொறி இலேனொடு - நல்வினை யில்லாதவனான என்னிடத்தில், மெய் அடையாது - சத்திய மென்பது அமையாது; (ஆகவே யான்), இனி விளிதல் நன்று - இனி இறத்தலே நல்லது; (எ - று.)—அரோ - ஈற்றசை; தேற்றமுமாம்.

சனகமகாராசர் தாம் வளர்த்த பெண்ணான சீதையை அக்கினி சாட்சியாக எனக்குக் கன்னிகாதானஞ்செய்து கொடுத்தபோது விதி முறைப்படி ஓமத்தைவளர்த்து அக்கினிக்கு முன்பாக எனது எதிர் சீதையைக் கொண்டுவந்து நிற்கச்செய்து என்னைப்பார்த்து

'என் பெண்ணான இந்தச்சீதை இனி உனக்கு அடைக்கலமாவள்' என்று சொல்லி என்னிடத்தில் அவளை ஒப்பித்தனர்; அதற்கு இணங்கிச் சீதையைக் கைப்பற்றின யான், பின்பு அதன்படி அவளை விழிப்புக்கொண்டு பாதுகாவாமல் விட்டிட்டேனாதலால், அந்தச் சொல்லைப் பழுதுபடுத்தியவனானேன்; இப்படிச் சொல்தவறிய என்னிடம் இனி வாய்மைசேராது: ஆகவே, யான் இவ்வாறு பொய்யனாய் உயிர்வாழ்தலினும் இறத்தல் நன்று' எனப்பட்டது. கையடை - அடைக்கலம்; கை அடை என்றுபிரிந்து, ஒருவரது கையை [சுவாதீனத்தை] யடைவது என்றாவது ஒருவரது கையில் [வசத்தில்] சேர்வது என்றாவது பொருள்பட்டுக் காரணக்குறியாகத் தக்கது; தவறுமற் பாதுகாக்கத்தக்க பொருளென்பது கருத்து. தம்மிடம் பிறர் ஒப்பித்த அடைக்கலப் பொருளைப் பாதுகாவாது விடுதல் அதிபாதகமாதலால், 'பொறியிலேன்' என்கின்றான்: அங்ஙனம் அருமையான சானகியை இழவாது வைத்துக்கொண்டு வாழும் பேறுஅற்ற யான் என்று தன்னைவெறுத்துக்கொண்டவாறு. பொய் அடை - பொய் அடுத்தது. '[1] நிற்கவள்' என்றபாடம் சிறவாது. பி - ம்:— [1]பொய்யுரை. இச்செய்யுள் சிலபிரதியிலில்லை. (544)

93. தேற்றுவாய் நீயுளை யாகத் [1]தேறிநின்று
ஆற்றுவே னுளனாக வாய்வளை
தோற்றுவா ளல்லளித் துன்ப [2]மாரினி
மாற்றுவார் [3]துயர்க்கொரு வரம்புண் டாகுமோ.

(இ - ள்.) தேற்றுவாய் நீ உளை ஆக - (என்னைத்) தேற்றுபவனாய் நீ யிருக்க, தேறி நின்று ஆற்றுவேன் நான் உளன் ஆக - தேறுதலடைந்துநின்று (பிரிவுத் துன்பத்தைப்) பொறுத்துக்கொள்பவனாய் நான் இருக்க, (இவ்வளவினாலே), ஆய் வளை தோற்றுவாள் அல்லள் - ஆராய்ந்தெடுத்தணிந்த வளையல்களையுடையவளான சீதை இங்குவந்து தோற்றுபவளல்லள்; இ துன்பம் இனி ஆர் மாற்றுவார் - இத்துன்பத்தை வேறு யார் தீர்ப்பவர்? [எவருமில்லையென்றபடி]: (ஆகவே), துயர்க்கு ஒரு வரம்பு உண்டாகுமோ - இத்துன்பத்திற்கு ஒருமுடிவெல்லையும் உளதாமோ? (எ - று.)

நீ ஒருவன் என்பக்கத்தில்நின்று தேற்றிக்கொண்டிருக்க அந்த உன் வார்த்தையைக்கேட்டு நான் தேறி ஒருவாறு துயர் தணிவதனால்மாத்திரமே சீதை வந்து சேர்வளா? அவள்வராமற்போனால் இத்துன்பத்தை வேறெவரும் தீர்ப்பவரில்லையே! ஆகவே, இத்துன்பத்திற்கு ஒருமுடிவுண்டோ? என்பதாம். கலித்தொகையில் "உளனா வென்னுயிரை யுண்டு" என்றவிடத்திற்போல, 'உளன் என்றது - தன்மையொருமையாய் நின்றது. பி-ம்:—[1]தேற்றிநின்று. [2]மாரியை. [3]இதற்கொரு. (545)

94. விட்டபோர் [1]வாளிகள் [2]விரிஞ்சன் விண்ணையும்
சுட்டபோ திமையவர் முதல தொல்லையோர்

பட்டபோ [3]துலகமு முயிரும் பற்றறக்
கட்டபோ தல்லது மயிலைக் [4]காண்டுமோ.

(இ - ள்.) விட்ட - (யான் இனித்) தொடுக்கின்ற, போர் வாளி கள் - போர்க்குச் சிறந்த அம்புகள், விரிஞ்சன் விண்ணைஉம் சுட்ட போது - பிரமனது சத்தியலோகத்தையும் எரித்தபோதும், இமைய வர் முதல தொல்லையோர் பட்டபோது - தேவர்கள் முதலிய பழமை யானவர்கள் அழிந்தபோதும், உலகம்உம் உயிர்உம் பற்று அற கட்டபோது - உலகங்களையும் பிராணிகளையும் மிச்சமில்லாதபடி அழித்தபோதும், அல்லது - அல்லாமல், மயிலை காண்டும்ஓ - மயில்போன்ற சாயலை யுடையவளான சீதையைப் பார்ப் போமோ? (எ - று.)

சீதையைக் கவர்ந்துசென்ற இராவணன் முதலிய அரக்கர்க ளிருக்கின்ற இடமும் அவர்கள் சீதையை ஒளித்து வைத்திருக்கின்ற இடமும் நமக்குத் தெரியவில்லை யாகையாலும், அதனைப் பிரமனாவது மற்றைத் தேவகணங்களாவது வேறு பிராணிகளாவது தெரிவிக்கவு மில்லை யாகையாலும், இனி நான் அம்பு தொடுத்து எல்லாவுலகங் களையும் எல்லாப் பிராணிகளையும் அழித்தாலன்றிச் சீதையைக் காணமுடியாது என்பதாம். அவலச் சுவையினின்று இராமன் கருத்து, வீரச்சுவையிற் செல்லுகின்ற தென்ப தறிக. விண் - மேலுல கம்; இங்கே, மேலுலகங்க ளேழினுள்ளும் மேலதான சத்தியலோகத் தைக் குறித்தது. பி - ம்:—[1]வடிக்கணை. [2]விரிந்த. [3]உலகமும்யாரும். [4]காண்குமோ. 'விட்டதோர்வடிக்கணை விரிந்த விண்ணையும்' என்று முதலடி சிலபிரதியில். (546)

95. தருமமென் றொருபொருள் [1]தன்னை யஞ்சியான்
[2]தெருமரு கின்றது செறுநர் தேவரோடு
ஒருமையின் [3]வந்தன ரேனு முய்கலார்
உருமென வொலிபடு முரவிலோ யென்றான்.

(இ - ள்.) உரும் என - இடிமுழக்கம் போல, ஒலி படும் - (நாணின்) ஓசையுண்டாதற்கிடமான, உரம் விலோய் - வலிமையையுடைய வில்லை யுடையவனே!—யான் தெருமருகின்றது - 'யான் (உலகங் களையும் உயிர்களையும் அழிக்காமல்) இப்படி மனஞ்சுழன்று வருந்து கின்றது,—தருமம் என்ற பொருள் தன்னை அஞ்சி - தருமமென்கிற ஒரு சிறந்தபொருளைக் காவாமல் விடுவதற்கு அஞ்சியேயாம்; (அன்றி), செறுநர் - பகைவர்களான அரக்கர்கள், தேவரோடு - தேவர்களுடன், ஒருமையின் வந்தனர் ஏனும் - ஒருங்கு சேர்ந்து (எனக்கு எதிராக) வந்தாலும், உய்கலார் - (இறந்திடாமல்) தப்பிப் பிழைக்கமாட்டார் கள்: (இது திண்ணம்), என்றான் - என்று (இலக்குமணனை நோக்கிக்) கூறினன், (இராமபிரான்); (எ - று.)

மனம் வீரச்சுவையிற் சென்றும், இராமபிரான் கருணாமூர்த்தி யாதலால் அக்கருணைதோன்றக் கூறலுறுகின்றான். தருமமென்

கிற ஒருபொருளுக்கு அஞ்சியன்றோ, உலகங்களையும் உயிர்களையும் அழித்துச் சீதையைக் கண்டிடாமல் இன்னது செய்வதென்று தெரியாது மனத்தடுமாற்றமுற்று இப்படி வருந்துகின்றேன்; இல்லாவிட்டால், அரக்கர்களும் தேவர்களும் ஒன்றாகக்கூடி எதிர் நின்றாலும் என்முன் உயிர் தப்பி உய்ந்து போகமாட்டுவரோ? என்று இலக்குமணனை நோக்கி இராமன் கூறினானென்பதாம். என் மனைவியைக் கவர்ந்தவர் அரக்கரேயாயிருக்க அதன்பொருட்டுப் பிழைபுரியாத அனைத்துலகங்களையும் அனைத்துயிர்களையும் அழிப்பது அதருமமாகுமே யென்பதையாய்ந்தே யென்பது 'தருமமென் றொரு பொருள் தன்னை யஞ்சி' என்றதன் கருத்து. 3 - ஆம் அடியில் '[3] அருமையி னவிந்தனர் அல்லது வீந்தனர் என்னு மஃதலால்' என்ற பாடத்திற்கு - அரக்கர்கள் தேவர்களுடனே அருமையாக அழிந்தார்க ளென்று சொல்லும்படி செய்வதைவிட்டு, யான் தெருமருகின்றது இத்தருமத்தை யஞ்சியே யென ஒரே வாக்கியமாக உரைக்க; அருமையின் - பிறர்க்கு அரியவண்ணமாக வென்க. நான் சினந்தால் செறுநர் தேவரோடு அவிந்தனரென்னுமது அல்லாமற் பிறிதென்னும்? என்று இசையெச்சமாகச் சிலசொற்கள் வருவித்துத் தனி வாக்கியமாக முடிப்பாருமுளர். பி - ம்:—[1] தள்ளவஞ்சியான். [2] தெருமரல்கின்றது. [3] வாய்ந்தனர். (547)

96.—இனி ஏழுகவிகள்—இலக்குமணன் இராமனுக்குத் தேறுதல்கூறல்.

இளவலு முரைசெய்வா னெண்ணு [1] நாளினில்
உள [2] பகற் கூதிரு மிறுதி யுற்றதால்
[3] களவுசெய் தவனுறை காணுங் [4] காலம்வந்து
[5] அளவிய தயர்வதெ னாணை யாழியாய்.

(இ - ள்.) இளவல்உம் - (இவ்வாறு இராமபிரான் சொல்லக் கேட்ட) தம்பியான இலக்குமணனும், உரைசெய்வான் - (அப்பெருமானை நோக்கி அடியில் வருமாறு) கூறுவான்:—ஆணை ஆழியாய் - ஆஜ்ஞாசக்கரத்தையுடையவனே!—எண்ணும் நாளினில் உள - (முன்பு சுக்கிரீவனுக்குத் தவணையாகக்) குறிப்பிட்ட (நான்குமாத) காலத்தில் சேர்ந்த, கூதிர்உம் - சரத்காலமும், பகல் இறுதி உற்றது - பாதியளவு முடிவையடைந்தது; ஆல் - ஆதலால், களவு செய்தவன் உறை காணும் காலம் வந்து அளவியது - (ஜாநகிப்பிராட்டியாரை) வஞ்சனையாற் கவர்ந்துசென்றவனான இராவணனுடைய இருப்பிடத்தைத் தேடிக்காணுதற்கேற்ற காலம் வந்து சேர்வதாயிற்று; அயர்வது என் - (நீ) வருந்துவானேன்? (எ - று.)

எண்ணும் நாள் - சீதையைத்தேடும் முயற்சி செய்யத் தொடங்குதற்குத் தவணையாக முன்பு சுக்கிரீவனுக்குக்குறித்த நான்கு மாதங்கள்: இனி, (அரிதிற்கழிதல்பற்றி) ஒன்று இரண்டுஎன்று எண்ணிக் கணக்கிடப்படுகின்ற நாள்களென்றுங் கொள்ளலாம்: அன்றி, (நீ இவ்வாறு சீதாவிரகத்தாற்) சிந்தைப்படும் நாள்கள்

என்றலும்ஏற்கும். 'நாளினிலுள கூதிரும்பகல் இறுதியுற்றது' என்று மொழி மாறுக: பகல். பகுதி - பாதி [1]'நாளினும் அல்லது நாளினி உளவல கூதிருமிறுதியுற்றது' என்ற பாடம், சிறவாது: அரசியற் படலத்தில் ''மாரிக்காலம், பின்னுற முறையி னுன்றன் பெருங்கடற் சேனையோடும் துன்னுதி'' என்ற இடத்து, ஆடி முதல் நான்குமாதங்களைக் கழித்துக் கார்த்திகைமாதத்து என்னிடம் வருவது என்ற பொருளே முதனூலுக்கும் ஏற்குமென்று கூறப்பட்டிருப்பது காண்க.

களவுசெய்தவன் - திருடியவன், கவர்ந்தவன். உறை - வசிக்குமிடம். [4]'காலமீதளவியலாகியது' என்றபாடத்திற்கு, காலம் ஈது அளவு இயல் ஆகியது - காலமாகிய இது வந்துசேரும் தன்மையதாயிற்று என்றும், காலம் மீது என்று பிரிந்து, காலம் மேல் [இனிமேல்] வருவதாயிற்று என்றும்உரைக்கலாம். ''காலமீதள விறந்தயர்வதென்' என்று பாடமானபோது, காலம்ஈது என்பதைத் தனி வாக்கியமாக முடித்து, (நீ) அளவுகடந்து வருந்துவதென்னே? என்று பொருள்கொள்க. இனி, 'உறை' என்றசொல்லுக்கு-வாழ்நாளென்று ஒருபொருளிருத்தலால், சீதையைக்களவுசெய்த இராவணனுடைய வாழ்நாளை முடிவுகாணுங்காலம் [அவனையழிக்குங்காலம்] வந்து நெருங்கியது எனினும் அமையும். எங்கும் சுற்றிச் செல்வதாதல் பற்றி ஆஜ்ஞையைச் சக்கரமென்றல் மரபு. பி - ம்:—[2]பல. [3]களவு செய்தவனுழை, களவுசெய்தவருறை. [4]அளவியலாகியதாணை, அளவியதாவதெண். (548)

97. திரைசெயத் திண்கட லமிழ்தஞ் செங்கணுன்
உரைசெயத் [1]தரினுமத் தொழிலு வந்திலன்
வரைமுதற் கலப்பைகள் [2]மாடு [3]நாட்டித்தன்
[4]குரைமலர்த் தடக்[5]கையாற் [6]கடைந்து கொண்டனன்.

(இ - ள்.) திரை செய் அ திண் கடல்-அலைகள் வீசுகின்ற அந்த வலிய பாற்கடலானது, அமிழ்தம் - அமிருதத்தை, செம் கணன் - சிவந்த திருக்கண்களையுடையவனான திருமால், உரைசெய - ('கொடு' என்று) கட்டளையிட்ட மாத்திரத்திலே, தரின்உம்-கொடுக்கக்கடவதானாலும், அ தொழில் - அவ்வாறு தனது ஆஜ்ஞையின் வலிமையைக் காட்டிச் சடக்கெனப் பெறுவதை, உவந்திலன் - (அத் திருமால்) விரும்பாதவனாய்,—வரை முதல் கலப்பைகள் - (மந்தர) கிரி முதலிய கருவிகளை, மாடு - நாட்டி - அவ்விடத்திற்கொணர்ந்து தாபித்து, தன் குரை மலர் தட கையால் கடைந்து - தனது ஆபரணங்களொலிக்கப்பெற்ற செந்தாமரைமலர்போன்ற [மென்மையான] பெரிய கைகளால் (அக்கடலைக்) கடைந்தே, கொண்டனன் - (அதனினின்று அமிருதமுண்டாக அதனைப்)பெற்றுக்கொண்டான்; (எ - று.)

வரம்பிலாற்றலையுடைய திருமால் 'அமிருதம் முதலிய அரும் பொருள்களைக் கொடு' என்று பாற்கடலுக்கு ஒருகட்டளைகூறி அம்மாத்திரத்திலே அக்கடல் அஞ்சி அப்பொருள்களையெல்லாம்

கொணர்ந்து கொடுக்கப் பெற்றுக்கொள்ளவல்லவனே; ஆயினும் அவ்வாறு சடக்கெனச் செய்து காரியத்தைச் சாதித்துக்கொள்ளத் திருவுள்ளங்கொள்ளாமல் அதற்குவேண்டிய கருவிகளையெல்லாஞ் சேர்த்துக்கொண்டு தக்கவழியால் முயன்றே அமுதம் பெறலாகிய காரியத்தை முடித்தருளினன் என இதனை எடுத்துக் கூறியது,—வினைதுபழுதுபடாத அம்புகளினால் உலகமனைத்தையும் எல்லாப் பிராணிகளையும் அழித்துப் பிராட்டியைக் காணவல்ல பேராற்றலுடையை நீ: ஆயினும், அங்ஙனஞ் செய்யாது வாநரசேனைகள் முதலிய துணைகளைத் திரட்டித் தக்கவழியாற் சீதையைக்கண்டு பகைவென்று அத்தேவியைச் சேர்தலே தக்கதென்பதைக் குறிப்பித்தற்கு. அடுத்த இரண்டு செய்யுள்களும் இவ்வாறே: இங்ஙன்வருவது ஒத்தபொருளால் வேறொன்றைப் பெறவைக்கும் பிறிதுமொழிதலணியாம்.

செங்கணான் - உத்தம விலக்கணமாகிய சிவந்த ரேகைகள் படர்ந்த கண்களை யுடையான்: செந்தாமரைக் கண்ணன். இங்கே 'செங்கணான்' என்றது - திருமாலின் இயல்பிற்சிறந்த திருக்கண்களையே, தேவர்கள் செல்வங்களையெல்லாந் தான் ஒளித்துவைத்துக் கொண்டிருத்தற்காக அப்பெருமான் தேவர்கள்பக்கல் பரிவினால் தன் மீது சினந்து கண்சிவந்ததாகக் கருதிச் சமுத்திரராஜன் அஞ்சத்தக்கா னென்பதை யுணர்த்தும். இதனால், திருமாலின் திவ்வியசக்திக்குமுன், சமுத்திரராசன், வல்லமையற்றவனென்றவாறும். 'திரைசெய்' என்ற அடைமொழி - கடலின் இயற்கையாடம்பரத்தையும், 'திண்' என்றது - அதற்கு ஏற்ற இயற்கை வலிமையையுங் காட்டும். அகரச்சுட்டு - பிரசித்திபற்றியது. மாடு - இடம்: இங்கே கடைதற்கு ஏற்பத் திருப்பாற்கடலினிடத்தைக் காட்டிற்று. குரைத்தல் - ஒலித்தல். இங்கே கடையும்போது வளைமுதலிய ஆபரணங்களொலித்தல். மலர்க்கை - வருந்திக்கடைதற்குத்தகாத மென்மைத் தன்மையமைந்தகை. பி - ம்:—[1]தரினுமதொழியத்தக்கன, தரினுமெத்தொழிலுமுற்றபின். [2]மற்று. [3]நாட்டித்தான். [4]குரைகடல். [5]கையிற். [6]குடைந்து. (549)

98. [1]மனத்தினி னுலகெலாம் வகுத்து [2]வாய்ப்பெயும்
நினைப்பின னாயினு [3]நேமி யானெடும்
எனைப்[4]பல படைக்கல மேந்தி யாரையும்
வினைப்பெருஞ் [5]சூழ்ச்சியிற் பொருது வெல்லுமால்.

(இ - ள்.) (மற்றும்),—நேமியான் - சக்கராயுதத்தையுடையவனான அத்திருமால், மனத்தினின் - திருவுள்ளத்தில் நினைத்தமாத்திரத்தில், உலகுஎலாம் வகுத்து வாய் பெயும் - உலகங்களையெல்லாம் கூறுகூறாக்கி வாயிற் போகட்டுக்கொண்டு உண்டுவிடத்தக்க, நினைப்பினன் ஆயின்உம் - சங்கற்ப சக்தியை யுடையவனானாலும், (அவ்வாறு செய்யாமல்), எனை பல நெடும் படைக்கலம் ஏந்தி - மிகப்பல பெரிய ஆயுதங்களைக் கைகளிற் கொண்டு,

(அவற்றால்), யாரையும் - (அசுரர் அரக்கர் முதலிய கொடியவர்கள்) அனைவரையும், வினை பெரும் சூழ்ச்சியின் - போர்த்தொழிலுக்கு உரிய பெரிய தந்திரங்களுடன், பொருது - போர்செய்தே, வெல்லும் - ஜயிக்கின்றான்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

தான் பரமபதத்தில் அல்லது திருப்பாற்கடலில் இருந்தபடியே தனது சுதரிசனமென்னுஞ் சக்கராயுதத்தை யேவி அதுகொண்டு கொடியவர்களை யெல்லாம் அறத்தொலைக்கவல்ல ஆற்றலுடையனா யிருந்தும் அவ்வாறு செய்யாமல் அச்சக்கரம் முதலிய ஆயுதங்கள் பலவற்றை யேந்திக்கொண்டு அந்தந்தக் கொடியவர்களுள்ளவிடத்திற் சென்று காலத்திற்கு ஏற்பப் போர்செய்தே அவர்களை வெல்லுகின்றா னென்பது விளங்க, 'நேமியான் நெடும் எனைப்பல படைக்கல மேந்தி யாரையும் வினைப்பெருஞ் சூழ்ச்சியிற் பொருது வெல்லும்' என்றான். மகாமாயாவிகளான அக்கொடியவர்களுடைய பெரு மாயைகளுக்கு எதிர்செய்து வெல்லவல்ல மாயாசக்தியுடனே யென்பதும், 'வினைப்பெருஞ் சூழ்ச்சியின்' என்பதில் தோன்றும். இனி, வினைப்பெருஞ் சூழ்ச்சியின் - பகைவரிடத்துச் செய்யுந் தொழிலுக்குரிய பெரிய (சாம தாந பேத தண்டங்களாகிய) உபாயங்களுடனே யெனினும் அமையும். சூழ்ச்சி - ஆலோசனையுமாம்.

'உலகு' என்றது - இங்கு, இடத்தையும், இடத்து நிகழ்பொருளாகிய ஜீவராசிகளையும் உணர்த்திற்று. வகுத்தல் - வகைப்படுத்தல், பகுத்தல். வாய்ப் பெய்தல் - உட்கொள்ளுதல். இனி, உலகெலாம் வகுத்து வாய்ப்பெயும் மனத்தினின் நினைப்பினன் - உலகங்களை யெல்லாம் படைத்தலும் உண்ணுதலும் செய்யவல்ல மனத்தின் சங்கற்பத்தை யுடையா னென்று உரைத்தலு மொன்று; இவ்வுரையில், வகுத்தல் - உண்டாக்குதல். பெயும் = பெய்யும்; தொகுத்தல். நேமியான் - சக்ரபாணி. எனைப்பல - எத்தனையோபல. பி - ம்:— [1]மனத்தினில். [2]வாய்ப்புறும். [3]நேமிநேமியோடு, நேமியோனெடும். [4]பகல். [5]சூட்சியின். (550)

99. கண்ணுடை [1]நுதலினன் கணிச்சி வானவன்
[2]விண்ணிடைப் புரஞ்சுட வெகுண்ட மேலைநாள்
எண்ணிய சூழ்ச்சியு மீட்டிக் [3]கொண்டவும்
அண்ணலே யொருவரா [4]லறியற் பாலவோ.

(இ - ள்.) அண்ணலே - பெருமையிற் சிறந்தவனே!—கண் உடை நுதலினன் - (நெருப்புக்) கண்ணையுடைய நெற்றியை யுடையவனான, கணிச்சி வானவன் - மழுவையேந்திய மகாதேவனாகிய சிவபிரான், விண்ணிடை புரம் சுட - ஆகாயத்திலேசஞ்சரிக்கின்ற திரிபுரங்களை யெரித்தற்காக, வெகுண்ட - கோபங்கொண்ட, மேலை நாள் - முற்காலத்திலே, எண்ணிய சூழ்ச்சிஉம் - ஆலோசித்த ஆலோசனைகளும், ஈட்டிக்கொண்டஉம் - சேர்த்துக்கொண்ட உபகரணங்களும்,

ஒருவரால் அறியற்பாலஓ - ஒருத்தரால் அறியத்தக்கனவோ [ஒருவராலறியலாகாதவாறு மிகப்பல வென்றபடி.] (எ - று.)

ஒருவரால் அறியற் பாலவோ - ஒருவராலும் அறியற்பாலன வல்லவென்றுங் கொள்ளலாம்: ஒருவரால் அறியவேண்டியனவோ? உலகத்துப்பிரசித்தமானவையல்லவோ? என்று உரைப்பாருமுளர். உலகங்கட்கெல்லாம் பேரிடர்செய்த திரிபுரத்து அசுரர்களை அழித்திடுமாறு தேவர்கள் வேண்டியபொழுது, சிவபெருமான் தனது திருவடித்தொண்டர்களான அவ்வசுரர்களைத் தானே யழிப்பது எங்ஙனமென்று எண்ண, அக்குறிப்பிற்கு ஏற்பத் திருமால் உடனே மாயையினால் சினாவதாரமும் புத்தாவதாரமுஞ்செய்து விபரீதமான பற்பல வாதங்களைக்கற்பித்து அவ்வசுரர்கட்குப் போதித்து மயக்கி அவர்களையெல்லாம் சிவபெருமானிடத்துப் பகைமையுடையவராகச் செய்துவிட, அதன்பின்பு அப்பிரான் 'போர்க்குரிய சிறந்த கருவி களின்றிப் போர்செய்வது எவ்வாறு? அவை கூடினால், ஒருகணத்தில் அவ்வசுரர்களை யழித்திடலாம்' என்ன, அதன்படி தேவர்கள், தேர்குதிரை சாரதி வில் நாணி அம்பு முதலிய போர்க்கருவிகளை யெல்லாம் ஆயத்தஞ் செய்ய, பிறகு பரமசிவன் முப்பத்து முக்கோடி தேவகணங்களோடும் மிகப்பல வெள்ளக்கணக்கான பூதசேனை களோடும் புறப்பட்டுச் சென்று அத் திரிபுரமூன்றும் ஒருங்கு கூடிய சமயம்பார்த்து அம்புதொடுத்து அவ்வசுரர்களைப் பட்டணங்களோடு எரித்திட்டனனென்பது இங்குக் குறித்தது. "கருவி மூதெயில்காதுபோர்க், கருவியொன் றிலங் காண்வரக், கருவி கூடிற் கணத்தவர், கருவெலாமிறல் காண்டியால்," உருகெழு நிலமொரு வையமும், இருசுட ரிருபுடை யாழியும், சுருதிகள் துகளது வாசியும், மருமலரணையவன் வலவனும்," "தடநெடு வடவரை சாபமும், படவரவிறைபகர் நாரியும், மடல்விரி துளவினன் வாளியும், கடவுளர் பிறர்பிற கருவியும்" என்பன இங்கு அறியத்தக்கன.

இந்த உபகரணங்களில்லாமலே எளிதில் திரிபுரசங்காரஞ் செய்யத்தக்க நெற்றிக்கண்ணையும் அக்கினிசொரூபமான மழுவாயுதத்தையு முடையனுயிருந்தும் அவ்வாறு செய்திலனென்பது தோன்ற, 'கண்ணுடைநுதலினன் கணிச்சிவானவன்' என்றார். பகைமையைத் தவறுமலழித்தற்கு, தக்க ஆலோசனையும் தக்க கருவிகளும் இன்றியமையாதன என்பது, இங்கு விளக்கப்பட்டது. பி - ம்:—[1] நுதலவன், நுதனெடுங், நுதலெனும், அடைநெடுங். [2] விண்ணுடை. [3] கொண்டதும். [4] அறியற்பாலதோ. (551)

100. ஆகுநர் யாரையுந் துணைவ ராக்கிப்பின்
[1] ஏகுறு நாளிடை [2] யெய்தி யெண்ணுவ
[3] சேகுறப் பன்முறை [4] தெருட்டிச் செய்தபின்
வாகையென் றொருபொருள் வழுவற் பாலதோ.

(இ - ள்.) ஆகுநர் யாரையும் - (நமக்கு) அநுகூலரானவர்களெல்லாரையும், துணைவர் ஆக்கி - துணையாகவந்து உதவுபவர்களாகச்

சேர்த்துக்கொண்டு, எண்ணுவ - ஆலோசிக்கவேண்டியவிடயங்களை, சேகுஉற - உறுதியாக, பல்முறை தெருட்டி - பலமுறை ஆலோசித்துத் தெளிந்து, பின் - பின்பு, ஏகுறு நாளிடை -(காரியத்தின்பொருட்டுச்) செல்லுதற்குரிய நாளில், எய்தி - சென்று, செய்த பின் - (காரியத்தைச்) செய்தால், (அக்காரியத்தில்), வாகை என்ற ஒரு பொருள் - வெற்றியென்ற ஒருபொருள், வழுவல் பாலதுஓ - தவறக்கூடியதோ? [அன்று என்றபடி]; (எ - று.)

வெற்றிபெற்றவர் வாகைமரத்து மலர்களாலாகியமாலையைத் தரிக்கும் மரபு பற்றி, வெற்றிக்கு வாகையென்று பெயராயிற்று. வாகையென்றொரு பொருள் வழுவற்பாலதோ - தவறாமல் வெற்றி கிடைக்குமென்றபடி. ஆகுநர் யாரையும் - தக்கவர்களையெல்லாம் எனினுமாம். சேகு - மரவயிரம்; இங்கு, உறுதிக்கு இலக்கணை. சேகு உற - உறுதியமைய. [3]'சேகற' என்ற பாடத்திற்கு - இடையீடில்லாமல்என்றுபொருளாகவேண்டும்; குற்றமறஎன்பாருமுளர். பி - ம்:— [1]ஏகிய, ஏகின. [2]எண்ணியெய்துவ. [4]தெளிந்து, தெரிந்து. (552)

101. அறத்துறை திறம்பின ரரக்க [1]ராற்றலர்
மறத்துறை நமக்கென வலிக்கும் [2]வன்மையோர்
[3]திறத்துறை நன்னெறி திறம்ப லுண்டெனில்
[4]புறத்தினி யார்திறம் புகழும் [5]வாகையும்.

(இ - ள்.) ஆற்றலர் - வலிமையையுடையவர்களான, அரக்கர் - இராக்கதர்கள், அறம் துறை திறம்பினர் - தருமமார்க்கந் தவறியவர்களாய், மறம் துறை நமக்கு என வலிக்கும் வன்மையோர் - கொடியவழியே நமக்கு(ச் சிறந்தது) என்று நிச்சயித்து உறுதியையுடையவர்; (அவர்கள் அவ்வாறு), திறம் துறை நல் நெறி திறம்பல் உண்டுஎனில் - தகுதியுள்ள இடமாகிய சன்மார்க்கத்தை விட்டுத் தவறுத லுள்ள தென்றால், புறத்து இனி - அப்பால், புகழ்உம் வாகைஉம் - கீர்த்தியும் வெற்றியும், யார் திறம் - யாரிடத்தில் (சேரும்?) [அவர்களிடத்திற் சேரா: அவர்களை யழிக்கச்செய்பவனும் தருமமார்க்கந் தவறாதவனுமான உன்னிடத்திலேயே சேருமென்றபடி]; (எ - று.)

'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்பது உறுதியாதலால், தருமவழியிற் செல்லுதலைவிட்டுத் தீயவழியிலேயே செல்பவர்களான அரக்கர்கள் பழியையும் தோல்வியையும் அடைந்து அழிய, அறத்துறையில் நடக்கும் நீயே புகழையும் வெற்றியையும் அடைவாய் என்று தேற்றியவாறும். புறத்துஇனி - அப்புறம். இச்செய்யுளுக்கு - தருமமார்க்கந் தவறியவர்களான அரக்கர்கள் பலபராக்கிரமமுடையவர்க ளாதலால் '(எப்போதும்) போர்வெற்றி நமக்கே (யுளதாம்)' என்று நிச்சயிக்கும் உறுதியுடையோர்; (ஆனாலும்) மேன்மையிற்சேர்ந்ததான சன்மார்க்கத்தினின்று தவறுதல் (அவர்களிடத்தில்) உளதென்றால், (உன்னைவிட்டு) வேறுயாரிடத்திற் புகழும் வெற்றியும் கூடும்? என்றும் உரை கூறலுமாம்.

திறத்துறை - திறத்து உறை என்றும் பிரிக்கலாம். பி - ம்:—[1]ஆதலால், ஆற்றலால். [2]வண்ணையோர். [3]திறத்துறு, திறத்துயர், திறத்துரும்மனு. [4]புறத்தினில்யார்தரம். புறத்தினில்யாரதாம், [5]வாழ்க்கையும். (553)

102. பைந்தொடிக் கிடர்களை [1]பருவம் பையவே
[2]வந்தடுத் துளதினி வருத்த நீங்குவாய்
[3]அந்தணர்க் காகுநா மரக்கர்க் காகுமோ
[4]சுந்தரத் தனுவலாய் சொல்லு நீயென்றான்.

(இ - ள்.) பைந்தொடிக்கு இடர் களை பருவம் - பசுமையான [பசும் பொன்னாலாகிய] தொடியென்னும் வளையை யணிந்தவளான பிராட்டிக்கு (நேர்ந்த) துன்பத்தை நீக்குதற் கேற்றகாலம், பையவே வந்து அடுத்து உளது - மெல்ல வந்துசேர்ந்துவிட்டது; இனி வருத்தம் நீங்குவாய் - இனிமேல் துன்பத்தைத் தவிர்வாய்; அந்தணர்க்கு ஆகும் நாம் - முனிவர்கட்கு உதவியாகவேண்டிய நாம், அரக்கர்க்கு ஆகுமோ - இராக்கதர்க்கு இலக்காகக்கடவோமோ? சுந்தரம் தனு வலாய் - அழகிய வில்லில்வல்ல வீரனே! சொல்லு நீ - நீ சொல்லுவாய், என்றான் - என்று (இராமபிரானைநோக்கி இலக்குமணன்) கூறினான்; (எ - று.)

முனிவர்கட்குக் கொடுமைசெய்கின்ற அரக்கர்களைத் தொலைத்து அவ்விருடிகட்கு உதவியாக வேண்டிய நாம் அவ்வரக்கரியற்றிய இடையூற்றிற்கு உள்ளாகி அதனினின்றுமீளாமலே அழிந்து விடுவது தகுதியோ? சொல் என்று தேறுதல்கூறினன். 'ஆகும்' என்ற சொல் இரண்டனுள், முன்னது - பெயரெச்சம்; பின்னது - தன்மைப்பன்மை யெதிர்காலமுற்று. பி - ம்:—[1]பருவமாண்டுபோய். [2]வந்தெதிர்ந்து..., வந்தடுத்துளதறன்வழியினீங்குவாய், வந்தடுத்துளது...நீக்குவாய். [3]அந்தணர்க்காகுமோ, அந்தணர்க்காமறமரக்கர்க்காகுமோ. [4]சுந்தரச்சிலை. (554)

103.—மழைக்காலம் முடிவையடைதல்.

[1]உறுதியஃ தேயென வுணர்ந்த [2]வூழியான்
இறுதி[3]யுண் டேகொலிம் மாரிக் கென்பதோர்
தெறுதுய ருழந்தனன் தேயத் தேய்வுசென்று
அறுதியை யடைந்ததப் பருவ மாண்டுபோய்.

(இ - ள்.) (இவ்வாறு இலக்குமணன் சொன்னவார்த்தைகளைக் கேட்டு), அஃது உறுதி என உணர்ந்த - அவன்சொன்ன விஷயம் தக்கதே யென்று திருவுள்ளத்திற் கொண்ட, ஊழியான் - காலத்திற்குத்தலைவனான இராமபிரான், இ மாரிக்கு இறுதி உண்டுகொல் என்பது - இந்தமழைக்காலத்திற்கு ஒருமுடிவு உளதோ என்றுஎண்ணுதலாகிய, ஓர் தெறு துயர் - ஒப்பற்ற கொடிய துன்பத்தால், உழந்தனன் - வருந்தியவனாய், தேய - மெலி

வடையுமளவில்,—அ பருவம் - அந்தக்காலமானது, ஆண்டு போய் - (தனது) ஆணையைச் செலுத்திவிட்டுச் சென்று, (நாளடைவில்), தேய்வு சென்று அறுதியை அடைந்தது - மெலிவுற்று முடிவடைந்தது; (எ - று.)

காலத்திற்கு நியாமகனான இப்பெருமான் காலத்திற்குவசப்பட்டவன்போலக் கார்காலத்திற்குவருந்தியது, தான் கொண்ட மானுட அவதாரத்திற்கு ஏற்ற பாவனையே யென்பது விளங்க, இங்கு 'ஊழியான்' என்றார். இனி, ஊழியான் - காலச்சொரூபி எனினுமாம். தெறுதுயர் - மரணவேதனையைச் செய்யுந்துன்பம்: நிலைபெற்ற துன்பமென்றலுமாம்: தெறுதல் - அழித்தல், தங்குதல். கார்ப்பருவம் தேய்வு செல்லுதலாவது - நாளடைவில் வரவர மழை குறைதல்; அது அறுதியை யடைதலாவது - மழை இல்லையாதல். பருவம் மாண்டுபோய் என்று பிரிப்பாருமுளர். பி-ம்:—[1]உறுதியதே. [2]ஆழியான். [3]உண்டோ. (555)

104 —இப்படலம் முடியுமளவும் பதினெட்டுக்கவிகள் - அப்பொழுதை நிலைமைகளை வருணிப்பன:
சரற்காலவர்ணனை.

மேகங்கள் வெளுத்தல்.

[1]மள்கலில் பெருங்கொடை மருவி மண்ணுளோர்
உள்கிய பொருளெலா முதவி [2]யற்றபோது
எள்கலி லிரவலர்க் [3]கீவ தின்மையால்
வெள்கிய மாந்தரின் வெளுத்த மேகமே.

(இ - ள்.) மள்கல் இல் - பின்வாங்குதலில்லாத, பெருங் கொடை - பெரிய ஈகைத்தொழிலில், மருவி - பொருந்தி, மண் உளோர் உள்கிய பொருள் எலாம் உதவி - உலகத்திலுள்ளவர்கள் பெறநினைத்த பொருள்களையெல்லாம் (தம்மிடத்திலுள்ளவளவும் அவர்கட்குக்) கொடுத்து, அற்ற போது - (தம்மிடம்) பொருள் இல்லையானபோது, எள்கல் இல் இரவலர்க்கு - இகழப்படாத இரப்போர்க்கு, ஈவது இன்மையால் - (கொடுக்கவேண்டிய)பொருள் இல்லாததுபற்றிக் கொடுக்க மாட்டாமையால், வெள்கிய - நாணமடைந்த, மாந்தரின் - மனிதர்கள் (தமது இயற்கைநிறம்மாறுதல்) போல, மேகம் வெளுத்த - (தம்மிடமுள்ள நீர்முழுவதையும் பெய்துவிட்ட) காளமேகங்கள் வெண்ணிறமடைந்தன; (எ - று.)

உவமையணி. "இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும், வசையன்று வையத்தியற்கை" என்றாரேனும், "எல்லாமிரப்பார்க்கு ஒன்று ஈயாமை அச்சம்" என்பவாதலால், உயர்குடிப் பிறந்த உத்தமரான கொடைவள்ளல்கள் தம்மிடம் வந்த இரவலர்க்கு அவர்வேண்டும் பொருளைத் தாம் கொடுக்கக்கூடாமைபற்றி நாணமுற்று அதனால் முகத்துநிறம் மாறுபடுவரென்க- மள்கல் - மறுத்தல்; அழிதலுமாம். பெருங்கொடை - ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தல். மருவுதல் - இல்லையென்னாது கொடுக்கும் குணத்தில் நிலைபெறுதல். யாசகர்

நாணத்தைவிட்டு வாய்திறந்து 'எனக்கு இன்னது இல்லை: வேண்டும், தருக' என்று இளிவரவுபடச் சொல்லுதல் வேண்டாத படி அவர்கள் கருதியவளவிலே குறிப்பறிந்து கொடுத்து வந்த மகோதாரிகளென்பது விளங்க, 'மண்ணுளோருள்கிய பொருளெலா முதவி' என்றார். அற்றபோது - தாம் வறுமையடைந்தபோது. பி - ம்:—[1]வள்கல். [2]உற்றபோது - எள்கிய. [3]இசைவதின்மையால், இசைவதன்மையால். (556)

105.—காளமேகங்களின் அடர்த்தியாலாகியிருந்த இருள் ஒழிதல்.

தீவினை நல்வினை [1]யென்னத் தேற்றிய
[2]பேய்வினைப் பொருள்தனை யறிந்து பெற்றதோர்
ஆய்வினை மெய்யுணர் வணுக [3]வாசுறும்
மாயையின் மாய்ந்தது மாரிப் பேரிருள்.

(இ - ள்.) தீவினை - பாவச்செயலை, நல்வினை என்ன - புண்ணியம்என்று, தேற்றிய - எண்ணச்செய்யுந் தன்மையுள்ள, பேய் வினை - பேயின்செயல்களை யுண்டாக்குகின்ற, பொருள்தனை - செல்வத்தின் தன்மையை, அறிந்து - உணர்ந்து,—பெற்றது - அடைந்ததான, ஓர் - ஒப்பற்ற, ஆய்வினை மெய்உணர்வு - ஆராய்தல் தொழிலையுடையதான தத்துவஞானத்தால், (அப்பொருளிற் பற்றறவிட்டு), அணுக - (பரம்பொருளைச்)சார, (அவ்வளவிலே), ஆசுஉறும் - குற்றமுற்ற, மாயையின் - அவித்யை (ஒழிதல்) போல, (சரத்காலம் வந்தவளவிலே), மாரி பேர் இருள் - கார்காலத்துக் கருமேகங்களின் அடர்த்தியாலாகிய மிக்கஇருள், மாய்ந்தது - இருந்த இடம் தெரியாதபடி அழிந்தது; (எ - று.)

பொருளாசையானது தீவினையை நல்வினையென்னத்தேறச் செய்யும்: பிறரையடைந்து அவரிடத்திினின்று வெள்வச்செய்யும்: இத்தன்மையை மெய்யுணர்வால் அறிந்து பொருட்பற்றை அறவிட்டுப் பரம்பொருளையடைந்தாரிடத்தினின்று மாயை நீங்கும்: அதுபோல, கூதிர்காலம்வரவே வானத்திினின்று மாரிப்பேரிருள் மாய்ந்திட்டதென்பதாம். உவமையணி. மாயை, அவித்யை, விபரீத ஞானம், மயக்கம், மருள் என்பன - ஒருபொருட்சொற்கள். மெய்யுணர்வு - தத்துவஞானம்; அஃதாவது - இருவினைப் பயன்களையும் பிறப்பு வீடுகளையும் கடவுளின் சொரூபத்தையும் ஐயந்திரிபு அற உள்ளபடி உணர்தல். இம்மெய்யுணர்வு ஒருவர்க்குத்தோன்றிய மாத்திரத்தில் அவர்மனம் பற்றொழிந்து பரம்பொருளைச்சார, அவரிடம் முன்பு இருந்த அவித்யை தானேயொழியுமென்க. "இருணீங்கி யின்பம் பயக்கும் மருணீங்கி, மாசறு காட்சியவர்க்கு" என்ற திருக்குறள், இங்கு நோக்கத்தக்கது. பேயின்வினை - அறைந்து வெளவுஞ்செயல். பொருளுடையாரையறைந்து அவரிடத்துப் பொருளை வெளவத்தூண்டும். பொருட்பற்றுள்ளவர் பொருளி

ளிடத்துள்ள நசையினால் தாம் செய்வது தீவினையெனக் கருதாது நல்வினையைச் செய்வதிற்போல விருப்பங்கொண்டு புரிவராதலால், 'தீவினை நல்வினையெனத்தேற்றியபொருள்' என்றார். தத்துவஞானத்தின் வகையான கேள்வி விமரிசம் பாவனை என்ற மூன்றில், நல்லாசிரியரிடத்து உபதேசமாகக் கேட்ட பொருளைப் பிரமாணங்களைக் கொண்டும் யுக்தியைக்கொண்டும் தெளிய ஆராய்தலாகிய விமரிசத்தின் அமைதியை, 'ஆய்வினை' என்ற அடைமொழிகொண்டு விளக்கினர்.

இச்செய்யுளில் இடையிரண்டடிகளில் ஆசிடையிட்ட எதுகையும், ஈற்றடியில் இனவெதுகையோடு வருக்கவெதுகையும் வந்தன. ஆசிடையிட்ட எதுகையாவது - "ஆவேறு, பால்வேறு" (நாலடி) என்றாற்போல, எதுகைச் சொல்லின் முதலெழுத்திற்கும் இரண்டாமெழுத்திற்கும் இடையே யரலழ என்னும் மெய்யெழுத்துக்களுள் ஒன்றைப்பெற்று வருவது; இனவெதுகையாவது - வல்லினமும் மெல்லினமும் இடையினமுமாகிய மூவினங்களுள் ஓரினமெய்களில் ஒன்றற்கு ஒன்று எதுகையாய் வருவது; இங்கு,இடையின வெதுகை வகரத்திற்கு யகரம் வந்தது. வருக்கவெதுகையாவது-உயிரெழுத்துக்களுள் ஒன்றற்கு ஒன்று எதுகையாய் வருவது; இங்கு வகரத்தின் மேலுள்ள இகரத்திற்கு யகரத்தின்மேலுள்ள ஐகாரம் எதுகையாயிற்று. பி - ம்:—[1] எண்ணித்தேறிவெம், என்னத்தேறியப். [2] பேய்வினைப்பொருடனை யறிந்துபோர்ப்பதோர்; பேய்வினைப் பொருடனையறுத்துப் பெற்றதோர், பேர்வினை... [3] ஆசறும், வானவன், மாசுறும். (557)

106.—இடியும் மழையும் மின்னலும் இல்லையாதல்.

மூளமர் [1] முற்றுற முரச விந்தபோல்
[2] கோளமை கணமுகில் [3] குளிற லோவின
[4] நீளடு கணையெனத் துளியு நீங்கின
வாளுறை யுற்றென மறைந்த மின்னெலாம்.

(இ - ள்.) மூள் அமர் முற்று உற - (வீரர்களுள் ஒருவரோடொருவர்) மாறுபட்டுச்செய்த போர் முடிந்தவளவிலே, முரசு அவிந்தபோல்- போர்ப்பறைகள் (முழக்கப்படாது) ஒலிபடங்கினபோல, கோள் அமை- நீர்கொண்டிருக்குந்தன்மை யொழிந்த, கணம் முகில் - திரண்ட மேகங்கள், குளிறல் ஓவின - இடிமுழங்குதலொழிந்தன; நீள் அடு கணை என - நீண்ட கொலைசெய்யவல்ல அம்புகள் (போரொழிந்தவளவிலே எய்துசொரியப்படாதவாறு) போல, துளிஉம் நீங்கின- மழைத்துளிகளும் ஒழிந்தன: வாள் உறை உற்று என-(போரொழிந்தவளவிலே) வாளாயுதங்கள் உறையினுள்ளே (செருகப்பட்டு) மறைந்தாற்போல, மின் எலாம் மறைந்த - மின்னல்களெல்லாம் மறைந்தன; (எ - று.)

உவமையணி. 'மூளமர் முற்றுற' என்பதை மூன்றுவாக்கியங்களுக்குங் கூட்டுக: முதனிலைத்தீவகம். அமைதல் - அடங்குதல். பி - ம்:—[1]தொலைவுற, தொலையமா, முதலற. [2]கோளமர்கணமுகில், கோளமைகோண்முகில், கோளமைக்கொண்முகில். [3]குழறலோவின. [4]நீளிடு. (558)

107.—மலைநீர்ப் பெருக்குத் தணிதல்.

[1]தடுத்ததாள் நெடுந்[2]தடங் கிரிகள் [3]தம்மிடம்
அடுத்தநீ ரொழிந்தன வருவி [4]தூங்கின
எடுத்த[5]நூ லுத்தரி யத்தொ டெய்திநின்று
[6]உடுத்தவா னிறத்துகி லொழிந்த [7]போன்றவே.

(இ - ள்.) தடுத்த-குறுக்கிட்டு வழிமறிக்கின்றனபோன்ற, தாள்-அடிப்பக்கங்களையுடைய, நெடுந் தட கிரிகள் - உயர்ந்த பெரிய மலைகள்,—தம்மிடம் அடுத்த நீர் ஒழிந்தன - தம்மிடத்துச் சார்ந்த நீர் பொழியும் காளமேகங்க ளொழிந்தனவும், அருவி தூங்கின - அருவிகள் தணிந்து பெருகப்பெற்றனவுமாகி,—எடுத்த நூல் உத்தரியத்தொடு எய்தி நின்று - தரித்த பூணுலாகிய உத்தரீயத்துடன் பொருந்திநின்று, உடுத்த வான் நிறம் துகில் ஒழிந்த - (தம்மைச்) சூழ்ந்துநின்ற ஆகாயநிறமுள்ள துகில் [நீலத் துகில்] ஒழிந்தவற்றை, போன்ற - ஒத்தன; (எ - று.)

நீர் என்பது இலக்கணையால், நீர்கொண்ட மேகத்தைக் காட்டிற்று: கிரிகள் தம்மைக்கவிந்த காளமேகங்கள் நீங்க அருவிமாத்திரம் செல்லப் பெற்றவை - தம்மேனியைச் சூழ்ந்த நீலத்துகில் ஒழிந்திட வெண்ணிற வுத்தரீயமாத்திரத்தைத் தரித்திருந்தன போலுமென்றார்: தற்குறிப்பேற்றவணி. கிருகத்தாச்சிரமத்தவர் அரையிலுடுக்கும் ஆடையோடு தோளில் உத்தரீயத்தை உபவீதமாகத் தரிக்கவேண்டுமென்பது விதி. எப்பொழுதேனும் அந்த மேலாடை தரிக்கப்படாததனாலாகுங் குற்றம் இல்லையாகுமாறு அவர்கள் தாம் இயல்பாகத் தரிக்கும் இரண்டுபூணூல்களுடன் உத்தரீயத்தின் பொருட்டென்று ஒருபூணூலைச்சேர்த்துத்தரித்தலும் உண்டு. இனி, நீர் என்பதற்கு - நீர்முகில் லென்ற பொருளைக் கொள்ளாது நீர் வெள்ளமெனப் பொருள்கொண்டு, வால் நிறம் துகில் - வெண்ணிறமான ஆடையென்னலாம். மலைகள், சுற்றிலும் எங்கும் தாழ்வரைகளைச் சார்ந்து நீர்வெள்ளங்கள் தங்கப் பெற்றபோது அரையில் ஆடையுடுத்தனபோலவும், மேலே அருவிகள் நிறைந்து பெருகப்பெற்றபோது பூணூலுத்தரீயத்தையுந் தரித்தனபோலவு மிருந்தன; இப்பொழுது மழை நின்றுவிட்டதனால், அம்மலைகள் தாழ்வரையடுத்த நீரொழிந்து அருவிகள்மாத்திரமே தணிந்து பெருகப் பெற்றனவாய், அரையில் ஆடையுடுத்தலின்றிப் பூணூலுத்தரீயந்தரித்த மாத்திரத்தோடு நின்றாற்போலுமென வருணித்தாரென்ப; அடிமலையைப் பாதசைலமென்னும் வழக்குப்பற்றி, 'தாள்' என்றார்.

தாழ்வரை - மலையடிவாரம், மலையின் அடிப்பக்கம். உபமேயத்திற் கூறிய முறைக்குமாறாக உபமானத்திற்கூறிய முறை, எதிர்நிரனிறைப் பொருள்கோளின் பாற்படும். பி - ம்:—[1] தடித்ததாள். [2] தனிக்கிரிகள. [3] தாழ்வரை. [4] தூங்குவ. [5] மால். [6] உடுத்தலால். [7] போலுமே. (559)

108.—ஆறுகள் நீர் குறைதல்.

மேக[1] மா மலைகளின் புறத்து [2] வீதலான்
[3] மாகயா றியாவையும் வாரி யற்றன
ஆகையாற் றக[4] விழந் தழிவி னன்பொருள்
போக[5] வாறொழுகலான் செல்வம் போன்றவே.

(இ - ள்.) மாகம் யாறு யாவைஉம் - திக்குக்களையளாவிப்பெருகிய நதிகளெல்லாம்,—மேகம் மா மலைகளின் புறத்து வீதலால் - மேகங்கள் பெரிய மலைகளின் மேலிடத்தினின்று நீங்கிவிட்டதனால், வாரி அற்றன - நீர்வருவாயொழிந்தன; ஆகையால்—, தகவு இழந்து - பெருமையொழிந்து,—அழிவு இல் நல் பொருள் போக - (பயன் கொடுத்தன்றி) அழிதலில்லாத நல்ல புண்ணியம் கழிந்துவிட, ஆறு ஒழுகலான் - சன்மார்க்கத்திற் செல்லாதவனுடைய, செல்வம் - செல்வம் (குறைவடைதலை), போன்ற - ஒத்தன; (எ - று.)

"கூத்தாட்டவைக்குழாத்தற்றே பெருஞ்செல்வம், போக்குமதுவிளிந்தற்று" என்றபடி முற்பிறப்பில் ஒருவன் செய்த நல்வினை காரணமாக அவனிடத்துச் செல்வம் பலவகையால் தானே வந்து கூடி அந்நல்வினை நீங்கியபொழுது தானும் குறையலாகும்; இங்ஙனம் காரணமான நல்வினை நீங்கியபொழுது காரியமானசெல்வமும் குறைவடைதலை, காரணமான மேகங்கள் மலைப்பக்கங்களை விட்டு நீங்கியபொழுது காரியமான நதிகளும் நீர் குறைதற்கு உவமை கூறினர்; உவமையணி. ஒருவன் முற்பிறப்பின் நல்வினைப்பயனாற் செல்வமுடையனான பொழுது மற்றும் நல்வினைகளையே தொடர்ச்சியாகச் செய்துவரின் அச்செல்வம் இடையறாதுதொடர்தல் கூடும்; அங்ஙனஞ் செய்யாதவனது செல்வமென்பதுவிளங்க, 'ஆறொழுககலான் செல்வம்' என்றார். "வினைப்பகை வீயாது பின் சென்றடும்", "வீயா துடம்பொடு நின்ற வுயிரு மில்லை" என்ற இடங்களிலும், வீதல் - நீங்குதற் பொருளது. மாகம் - திக்கென்னும் பொருளதாதலை, "மாக நீள் விசும்படை" எனச் சீவகசிந்தாமணியிலுங் காண்க. தகவு - அழகுமாம்.

இச்செய்யுள் 'மேகமால் வரைகளைப் புறத்து மேவலான், மாகவாறெவைகளுக்வாரியற்றன, ஆகையாற்றகவிழந்தளவினன் பொருள், போகவீறொழிந்தவன் செல்வம் போன்றவே' என்றும், 'மேகமால்வரைகளப்புறத்து வீசலால், மாகவாறெவையுமால் வாரியற்றன, ஆகையாற்றகவொடுமழித்த நன்பொருள், போகவாறொழிந்தவன் பொலிவும் போன்றதே' என்றும், 'மேகமாமலைகளின் புறத்து மேவலால், மாகமாறி யாவையும் வாரி வார்ந்தன,

ஆகையாற்றகவு கந்தழிவினன் பொருள், போகவாறொழிந்தவன் செல்வம் போன்றதே' என்றும் காணப்படுகின்றதென்ப. பி - ம்:— [1]மால்வரைகளின். [2]மேவலால். [3]மாகவாறெலைவகளும். [4]உழந்து. [5]ஆறொழிந்தவர். (560)

109.—வானத்து மேகங்கள் நீங்கியவளவிற் சந்திரன் விளங்குதல்.

கடந்[1]திறந் தெழுகளி றணைய கார்முகில்
இடந்[1]திறந் [2]தேகலிற் பொலிந்த திந்துவும்
[3]நடந்திற னவில்வுறு நங்கை மார்முகம்
படந்[1]திறந் [4]துருவலிற் பொலியும் பான்மைபோல்.

(இ - ள்.) கடம் திறந்து எழு களிறு அணைய - கன்னங்கள் திறந்து (அவற்றின் வழியாக மதநீர்சொரிந்துகொண்டு) புறப்படுகின்ற ஆண்யானைகளைப் போன்றிருந்த, கார்முகில் - காளமேகங்கள், இடம் திறந்து ஏகலின் - (தாம் அடர்ந்து கவிந்துகொண்டிருந்த) வானத்தினிடத்தை (வெளியாம்படி) திறந்துவிட்டு விலங்கிச் சென்றதனால்,— இந்துஉம் - (அந்தக்கார்மேகத்தால் மறைக்கப்பட்டிருந்த) சந்திர மண்டலமும்,— படம் திறந்து உருவலின் - (மறைவாக விட்டிருந்த) திரைச்சீலையை உருவித்திறந்து விட்டதனால், திறன் நடம் நவில்வுறு நங்கைமார் முகம் பொலியும் பான்மை போல் - பல வகையான நாட்டியத்தை யாடுகின்ற மகளிரது முகம் விளங்கும் விதம்போல, பொலிந்தது - விளங்கிற்று; (எ - று.)

உருவுதிரையாக இட்டிருந்த சீலையைத் திறந்த வளவில் மறைவு நீங்கத் திரைக்குள்ளிருந்த நாட்டியமாடும் மாதரது முகமண்டலம் அரங்கில் விளங்கினாற்போல, கருநிறமாய்க் கவிந்துகொண்டிருந்த மேகங்கள் விலகியவளவில் மறைவு நீங்க வானத்துச் சந்திரமண்டலம் விளங்கிற்று என்பதாம்; உவமையணி. கரிய பெரிய வடிவமும் விரைந்த கதியும் முழக்கமும் மழைபொழிதலும் பற்றி, 'கடந்திறந்தெழுகளிறணைய கார்முகில்' என்றார். நடம் திறன் நவில்வுறு நங்கை - நடனத்தைச் சாமர்த்தியமாகச் செய்கின்ற பெண் எனினுமாம். திறந்துருவலின்—உருவித்திறத்தலின்: விகுதி பிரித்துக் கூட்டல். இனி திறந்து என்பதை எச்சத்திரிபு எனக்கொண்டு, திறந்து - திறக்க, உருவலின் என்றலும் ஒன்று. பி-ம்:—[1]துறந்து. [2]எழுதலின். [3]நடந்தினம், நடந்தனை. [4]ஒருவலின். (561)

110.—வாடைக்காற்று வீசுதல்.

பாசிழை மடந்தையர் பகட்டு வெம்முலை
[1]பூசிய சந்தனம் புழுகு குங்குமம்
[2]மூசின முயங்குசே றுலர மொண்டுற
[3]வீசிய நறும்பொடி [4]விண்டு வாடையே.

(இ - ள்.) பாசு இழை மடந்தையர் - பசுமையான [பசும் பொன்னாலாகிய] ஆபரணங்களை யணிந்த மகளிருடைய, பகடு

வெம் முலை - பெரியனவும் விருப்பந்தருவனவுமான தனங்களில், பூசிய—, சந்தனம் - சந்தனக்குழம்பும், புழுகு - கத்தூரிப்புழுகும், குங்குமம் - குங்குமப்பூவின் குழம்பும், மூசின - கலந்ததனாலாகிய, முயங்கு சேறு - குழைசேறு, உலர - உலரும்படி, வாடை - வாடைக் காற்றானது, நறும் பொடி - நறுமணமுள்ள (மலர்களின்) மகரந்தப் பொடிகளை, விண்டு (அம்மலர்களினின்று) வெளிப்படுத்தி, மொண்டு - கவர்ந்து, உற வீசிய(து) - மிகுதியாக வீசிற்று; (எ - று.)

மகளிர்மார்பிலுள்ள சந்தனக்கலவைச்சேறு உலரும்படி, வாடைக் காற்று, மலர்களின் மகரந்தப் பொடிகளை முகந்து வீசிற்று என்பதாம். இனி, பகட்டு வெம் முலை - (காண்பவர்க்கு) மினுக்கஞ் செய்வனவும் (காலவியல்பால்) வெப்பத்தையுடையனவுமான தனங்களெனினுமாம். முயங்குசேறு - (தன்னில் அகப்பட்டவரை எளிதில் மீளவொண்ணாதபடி) தழுவுஞ்சேறு எனக் குழைசேறும். வீசிய - வீசியது: இனி, மாறிமாறி வெவ்வேறாகவீசுதல் பற்றி வாடைகள் வீசின எனப் பன்மையாற்கூறினருமாம். விண்டு - (மலர்களைத்) திறந்து என்றும், வெளிப்பட்டு என்றும், வாடைவிண்டு எனமாறி - வாடைக்காற்று என்றும் [விண்டு - காற்று], விண்டுவாடை என மாறி - மலைக்காற்று என்றும் [விண்டு - மலை] பொருள் கொள்ளலாம். பி - ம்:—[1]பூசிய சாந்தினைப் புலர்த்து குங்குமம், பூசியமஞ்சளைப் ...பூசின சந்தனம் புலரக் குங்குமம். [2]மூசிய முழுகு சேறொழிய or உலர மொண்டற. [3]வீசின நறுமலர். [4]விண்ட. (562)

111.—அன்னப்பறவைகள் வானத்திலெங்கும் பறந்து செல்லுதல்.

மன்னவன் தலைமகன் வருத்த மாற்றுவான்
[1]அந்நெறிப் பருவம்வந் தணுகிற் றாதலால்
பொன்னினை [2]நாடிய [3]போது மென்ப போல்
அன்னமுந் திசைதிசை யகன்ற விண்ணின்வாய்.

(இ - ள்.) 'மன்னவன் தலைமகன் வருத்தம் மாற்றுவான் - தசரத சக்கரவர்த்தியினது மூத்தகுமாரனான இராமபிரானுடைய வருத்தத்தை யொழித்தற்கு, அ நெறி பருவம் வந்து அணுகிற்று ஆதலால் - அப்பெருமான் கூறிய முறைமையிலுள்ள காலம் வந்து சேர்ந்த தாதலால், பொன்னினை நாடிய போதும் - சீதாபிராட்டியைத் தேடும் பொருட்டுச் செல்வோம் (யாம்),' என்ப போல் - என்று புறப்பட்டன போல,—அன்னம்உம் - அன்னப்பறவைகளும், விண்ணின் வாய் - வானத்தில், திசைதிசை அகன்ற - திக்குக்கள்தோறும் (பறந்து) சென்றன; (எ - று.)

பெருமழைக்காலத்தில் ஒடுங்கிக்கிடந்த அன்னப்பறவைகள் அம் மழை நீங்கிய வளவிலே கிளர்ச்சிகொண்டு எழுந்து வான வழியாகப் பல இடங்களிலும் பறந்துசெல்லுதல் இயல்பு; அதனை 'மழைக்காலங்

கழிந்தவுடன் சீதையைத் தேடும் முயற்சி செய்யக் கடவீர்' என்று முன்பு இராமபிரான் வாநரர்க்கு இட்ட கட்டளையை ஒட்டி அன்னப் பறவைகளும் சீதையைத் தேடும் பொருட்டுத் திசைதோறும் சென் ருற்போலு மென வருணித்தார்: தற்குறிப்பேற்றவணி.

மன்னவன் தலைமகன் - சக்கரவர்த்தித் திருமகனுர். வருத்தம் - சீதையின்பிரிவினலாயது. 'அந்நெறிப்பருவம்' என்றது, சரத்காலத் தின் பிற்பகுதியை. பொன் - செல்வத்திற்கு உரிய தலைவியான இலக்குமியாரவதாரமான சீதை. திசைதிசை - அடுக்கு, தொறுப் பொருளது. பி-ம்:—[1]நன்னெறிப்பருவமு நணுகிற்ருகலால். [2]நாடியே. [3]போது மென்னப்போம். (563)

112.—நீர் தெளிதலும், மீன் பிறழ்தலும்.

[1]வஞ்சனைத் தீவினை மறந்த மாதவர்
நெஞ்செனத்[2]தெளிந்தன நீர நீர்தொறும்
பஞ்செனச் சிவக்குமென் பாதப் பேதையர்
அஞ்சனக் கண்ணெனப் [3]பிறழ்ந்த வாடன்மீன்.

(இ - ள்.) நீரம் - நீர்நிலைகளிலுள்ள நீர்கள், வஞ்சனை தீவினை மறந்த மா தவர் - வஞ்சனைக் கிடமான பாவச்செயல்களை யறியாத பெருந்தவமுடையரான முனிவர்களது, நெஞ்சு என - மனம்போல, தெளிந்தன - தெளிவடைந்தன; நீர் தொறுஉம் - அந்நீரிலெல்லாம், —ஆடல் மீன் - விளையாடு மியல்பையுடைய மீன்கள்,—பஞ்சு என சிவக்கும் மெல் பாதம் பேதையர் - பஞ்சின்மேல் நடக்கவேண்டு மென்று சொன்னவளவில்தானே கன்றிச்சிவக்கும் மென்மையான பாதங்களையுடைய மகளிரது, அஞ்சனம் கண் என பிறழ்ந்த - மை யிட்ட கண்கள்போலப் பிறழ்ந்தன; (எ - று.)

முதல் வாக்கியத்தில், வஞ்சனைக்கிடமான பாவச்செயல்களைக் கனவிலும் அறியாத பெருந்தவமுடையரான முனிவர்களின்மனம் ஐயந்திரிபுகளாலும் கவலைகளாலும் ஆகும்கலக்கங்களின்றித்தேர்ந்த ஞானத்தினலும் துணிவினலும்தெளிந்திருத்தலை, மழையொழிந்த பின்பு நீர்நிலைகளில் நீர்கலக்கமின்றித்தெளிவடைதற்கு உவமை கூறி ஞர். இரண்டாம் வாக்கியத்தில், அத்தெளிந்தநீரிற்கயல்மீன்கள் பிறழ்தலுக்கு, மகளிர்கண்கள் பிறழ்தல் உவமை கூறப்பட்டது: முன் னது - உவமையணி; பின்னது-எதிர்நிலை யுவமையணி. பஞ்சென்று சொன்ன மாத்திரத்திலே அதன்மேல் நடத்தற்குக் கூசிக்கன்றிச் சிவக்கும் பாதங்களெனக் கால்களின் மென்மைமிகுதியைக் குறித்த வாறும்; பஞ்சினும்மிகமென்மையான பாதமென்பது, தேர்ந்தகருத்து. நீர்க்குப் பன்மை கூறியது, நிலவேறுபாடுகளாலாகிய பாகுபாடுபற்றி யென்க. பி - ம்:—[1]வஞ்சனை தீவினை. [2]தெளிந்தநீர் or தோன்றுநீர் நிரந்துதோன்றுவ, தெளிந்தன நிறைந்து தோன்றுவ. [3]பிறழ்ந்த வானமீன். (564)

113.—தாமரைமலரும், செங்கிடையும்.

[1]ஊடிய மடந்தையர் வதன மொத்தன
[2]தாள்தொக மலர்ந்தன முதிர்ந்த தாமரை
கூடினர் துவரிதழ்க் கோலங் கொண்டன
[3]சேடுறு நறுமுகை விரிந்த செங்கிடை.

(இ - ள்.) தாள் தொக மலர்ந்தன-நாளத்திலே பொருந்த மலர்ந்தனவாய், முதிர்ந்த - (நாளடைவில்) முதிர்ச்சிபெற்ற, தாமரை - செந்தாமரைமலர்கள்,—ஊடிய மடந்தையர் வதனம் ஒத்தன - (தலைவரோடு) பிணங்கிய மகளிரது முகத்தைப் போன்றன [ஒருபுறமாகச் சாய்ந்தன என்றபடி]; சேடு உறு நறு முகைவிரிந்த-அழகுமிக்க நறுமணமுள்ள அரும்புகள் மலரப்பெற்ற, செங்கிடை - செங்கிடையென்னுஞ் செடிகள், கூடினர் துவர் இதழ் கோலம்கொண்டன - (தலைவரோடு) கலவி செய்த மகளிரது சிவந்த வாயிதழ்களின் தோற்றத்தைப் பெற்றன; (எ - று.)

தலைவர்மீது ஊடல்கொண்ட மகளிர் அவர்க்கு முகங்கொடாமல் சினக்குறியாக முகத்தைச் சாய்த்து வைத்துக்கொள்ளுதல் இயல்பு: அங்ஙனம் சிறிதுகோட்டிய மகளிர் முகங்களை, சிலநாள்களுக்குமுன்பு நாளத்திலே மலர்ந்து பின்பு முதிர்ந்து ஒருபுறத்தே சாய்கின்ற செந்தாமரைமலர்கட்கு உவமை கூறினர். கோலம் கொண்டன - கோலத்தை யொத்தனவென்றபடி. கோலம் - செயற்கையாகப்பூண்ட இனியதோற்றமுள்ளவேஷம். 'கொண்டன' என்பது - உவமவாசகம். செங்கிடை - நீரில் தோன்றும் சிவப்புநெட்டி: இயற்கைச் செந்நிறத்தோடு தாம்பூலந்தரித்ததனாலாகுஞ் செயற்கைச் செந்நிறமுஞ் சேர்தலாற் செந்நிறம் மிக்கிருக்கும் நிலையில் மகளிரது வாயிதழ்கட்குச் செங்கிடை ஒப்பாகாதென்னுங் கருத்தை யுட்கொண்டு, தலைவரோடு கூடியதனாற் செயற்கைச்செந்நிறம் நீங்கிய மகளிர்வாயிதழ்களைப்போன்றன செங்கிடை யென்றார். எடுத்துக்கொண்ட இரண்டு பொருள்களுள், ஒன்றற்கு ஊடியமகளிர்சம்பந்தமாகவும், மற்றொன்றற்குக் கூடிய மகளிர்சம்பந்தமாகவும் உவமை கூறிய நயம் இன்புறற்பாலது. பி - ம்:—[1]வாடியமடந்தையர். [2]தாடொறுமலர்ந்தன, தாடொறுமுதிர்ந்துகான், தாடொறுமலர்ந்துகான் or தான். [3]சேடுற நறுமுகை. (565)

114.—தவளைகள் குரலடங்குதல்.

கல்வியிற் றிகழ்[1] கணக் காயர் கம்பலைப்
பல்விதச் சிருரெனப் [2]பகர்வ பல்லரி
[3]செல்லிடத் தல்லதொன் றுரைத்தல் செய்கலா
[4]நல்லறி வாளரி [5]னவிந்த [6]நாவெலாம்.

(இ - ள்.) கல்வியின் திகழ் - கல்விகற்றதனால் விளக்கம்பெற்ற, ணக்காயர் - சிறுபள்ளிக்கூடத்து உபாத்தியாயரின்கீழ், கம்பலை -

ஆரவாரத்தோடு கல்விகற்கின்ற, பல் விதம் சிறுர் என - பலவகைப் பட்ட சிறுவர்கள்போல, பகர்வ - (மழைக்காலத்திற்)கத்திக் கொண்டிருந்தனவான, பல் அரி எலாம் - பலவகைப்பட்ட தவளைகள் யாவும்,—செல் இடத்து அல்லது ஒன்று உரைத்தல் செய்கலா நல் அறிவாளரின் - (தமது சொற்கள்) பலிக்குமிடத்தல்லது மற்றை யிடங்களில் ஒருசொல்லையுஞ் சொல்லுதல்செய்யாத நல்ல அறிவுடை யவர்கள்போல, நா அவிந்த - (அந்தச் சரற்காலத்திலே மிகுதியாகக் கத்தாமல்) வாயடங்கின; (எ - று.)

மழைக்காலத்தில் மிகுதியாகக்கத்துதலும், மழை பொழிந்து ஓய்ந்திட்டகாலத்தில் அங்ஙனங் கத்தாதிருத்தலும், தவளைக ளியல்பு. அவைமிகுதியாகக் கத்திக்கொண்டிருந்த நிலைக்கு - தெருப்பள்ளிக்கூடங்கள் போன்ற சிறு பள்ளிகளிற் பெரும்பா லும் மூலபாடங்களையே கற்பிக்கும் ஆசிரியன்கீழ்ப்படிந்து அவர் சொல்வனவற்றைத் தாம் அனைவரும் ஒருங்கே சொல்லிக் கல்வி பயிலுஞ் சிறுவரது பேரொலியையும், அத்தவளைகள் ஒவ்வொரு சமயத்தில் மாத்திரம் ஒலிசெய்து கொண்டு மற்றைச் சமயங்களி லெல்லாங் குரலடங்கியிருந்த நிலைக்கு - நல்லறிவுடையோர் தமது சொல் செல்லத்தக்க இடங்களில் மாத்திரமே சொற்களை உபயோ கித்து மற்றையிடங்களில் யாதொன்றுஞ் சொல்லாமல் மௌனமா யிருத்தலையும் உவமை கூறினர். பலபடி ஆரவாரித் தற்குக் கல்விபயிலுஞ்சிறுரையும், நாவடக்கத்துடனிருத்தற்குக் கல்விநிரம்பிய நல்லறிவாளரையும் ஒப்புமைகூறிய நயம் பாராட்டற் பாலது. கணக்கு ஆயர் - கணக்கை ஆய்தலுடையவரென்க: கணக்கு -எண்ணும், எழுத்தும். பல்விதச் சிறுர் - பிராயம் வடிவம் சாதி குலம் நாடு முதலியவற்றுற் பல்வேறுவகைப்பட்ட சிறுவர்; இங்குக் குறித் தது, பாலசிட்சையாகக் கல்விபயிலும் மாணுக்கர்களை. செல்லுதல் - கேட்டு நன்கு மதித்து அதன்படி நடக்கப் பெறுதல். பி-ம்:—[1] கரைத் தாய. [2] பகரும்வல்லரி. [3] செல்விடத்து, செல்விதத்து. [4] நல்லுணர் வாளரின். [5] விரிந்த. [6] நாகெலாம். (566)

115.—மயில்கள் ஒடுங்குதல்.

தஞ்சிறை [1] யொடுங்கின தழுவு [2] மின்னலின்
நெஞ்சுறு [3] மம்மரும் நினைப்பு [4] நீடின
மஞ்சுறு நெடுமழை [5] பிரித லான்மயில்
[6] எஞ்சின மிதிலைநாட் [7] டன்ன மென்னவே.

(இ - ள்) மயில் - மயிலென்னும் பறவைகள்,—மஞ்சு உறு நெடு மழை பிரிதலால் - மேகங்களினின்று பெய்த மிகுதியான மழை நீங் கப்பெற்றதனல்,—தம் சிறை ஒடுங்கின - தமது சிறகுகள் [தோகை கள்] ஒடுங்கப்பெற்றன: தழுவும் இன்னலின் - சேர்ந்த துன்பத்தை யுடைமையால், நெஞ்சு உறு மம்மர் உம் - மனத்திற்பொருந்திய மயக்கமும், நினைப்பு உம் - சிந்தனையும், நீடின - மிக்கன; (இங்ஙன்),

மிதிலை நாட்டு அன்னம் என்ன - மிதிலை நாட்டில் திருவவதரித்த ஜாநகிப் பிராட்டி போல, எஞ்சின - களிப்பற்றிருந்தன; (எ - று.)

கார்ப்பருவம்நீங்கிக் கூதிர்ப்பருவம்வரவே மகிழ்ச்சியொடுங்கிய மயிற்குச் சீதையை உவமை கூறினர். கதைப்பொருளை உவமை கூறுதலும் கவிசமயம். "மேகங்களினால் விடப்பட்ட ஆகாயத்தைப் பார்த்துக் காடுகளில் ஆண்மயில்கள் தோகையாகிய ஆபரணம் ஒழிந்தனவும், தம்பேடைகளிடம் விருப்பமற்றனவும், ஒளிகுறைந்தனவும், மகிழ்ச்சியற்றனவும், சிந்தை மிக்கனவுமாயின" என்றது, ஸ்ரீவால்மீகி ராமாயணம். அன்னம் - உவமவாகுபெயர். 'மஞ்சுறு நெடுமழை பிரிந்த மாமயில் எஞ்சின' என்ற பாடத்திற்கு - அழகு பொருந்திய பெரிய மேகங்கள் நீங்கிவிட்டனவாதலால் பெரிய மயில்கள் ஒடுங்கின என்று பதப்பொருள் கூறலாம். பி - ம்:—[1] ஒடுக்கின. [2] இனனல. [3] பயனில. [4] நீண்டன. [5] பிரிந்த மா மயில். [6] அஞ்சின. [7] அன்ன மன்னவாய். இச்செய்யுள் சில பிரதிகளில் "வஞ்சனை" என்ற பாடலுக்கு முன் உள்ளது. (567)

116.—கடலும் நதிகளும்.

[1] செறிபுனற் பூந்துகில் திரைக்கை யாற்றிரைத்து
[2] உறுதுணைக் கான்மடுத் [3] தொத்த வோதநீர்
எறுழ்வலிக் கணவனை யெய்தி யாறெலாம்
முறுவலிக் கின்றன போன்ற [4] முத்தெலாம்.

(இ - ள்.) ஓதம் நீர் - கடல்நீர், திரை கையால் - (தனது) அலைகளாகிய கைகளினால், செறி புனல் பூ துகில் - (நதிகளாகிய மாதரது) திரண்ட நீராகிய அழகிய ஆடையை, திரைத்து - மடக்கிப் பிடித்து, உறு துணை - (இல்வாழ்க்கைக்கு) உற்ற துணையாகிய [மனைவியராகிய] அந்நதிகளை, கால்மடுத்து ஒத்த - (சேர்தலின் பொருட்டு) வலிய இழுத்தாற் போன்றதாக,—யாறு எலாம் - அந்நதிகள் யாவும், எறுழ் வலி கணவனை எய்தி - மிக்க வலிமையை யுடைய அந்த(த் தமது) கணவனைத் தழுவி, முறுவலிக்கின்றன - புன்சிரிப்புச் செய்கின்றவற்றை, முத்து எலாம்—முத்துக்களெல்லாம், போன்ற - ஒத்தன; (எ - று.)

மழைக்காலத்தில் நதிகள் மிகுதியாகப்பெருகும் வெள்ளத்தால் தாமே கடலில் ஊடுருவிச்சென்று பாயும்: மழைதணிந்த காலத்திலோ வெள்ளங்குறைதலால் தாமே கடலிற் சென்றுசேர மாட்டாமற் கடலையடுத்து நிற்கும்: அக்காலத்திற் கடலினின்று எழுகின்ற அலைகள் அந்நதிகளின்வழியாக எதிரேறும் பொழுது நதிகட்குச் சமுத்திரத்தோடு சேர்க்கையுண்டாகும். கடலில்சங்கமத் துறைகளிற் சிப்பிகளினின்று முத்துக்களுண்டாதலும், அவை கூதிர்ப்பருவத்திற் கடலினலைகளாற்கொழிக்கப்பட்டுக் கடலோரத்தில் விளங்குதலும் இயல்பு. நதிகளாகிய மாதர்க்குக் கடலைக் கணவனென்றல்

மரபு; 'நதிபதி' என்ற கடலின் பெயர்வழக்கையும் காண்க. கணவனது காதற்குறிப்பைக் கண்ட விடத்து மாதர் சிரிப்பை அகத்தில் அடக்கமாட்டாமற் புன்சிரிப்புச் செய்வர். சிரிக்குங்காலத்துப் பற்கள் சிறிது வெளித்தோன்றும். பற்களுக்கு முத்து - வடிவிலும் வெண்ணிறத்திலும் ஒளியிலும் உவமையாம். இவ்வளவும், இவ் வருணனைக்கு மூலம். கடலாகிய கணவன் தனது அலைகளாகிய கைகளால் நதிகளாகிய தமது வாழ்க்கைத்துணைவியரின் நீராகிய ஆடையைப் பிடித்துக் கலவியின் பொருட்டு வலிய இழுத்தாற் போன்றதாக, அந்நதிகளாகிய பெண்கள் அக்குறிப்பின்படி அக்கடலாகிய கணவனைத் தழுவி அக்கணவன் செயலைக் குறித்துப் புன்சிரிப்புச் செய்ய, அப்பொழுது சிறிது வெளித்தோன்றிய அம்மாதரது பற்கள் விளங்கினாற்போல முத்துக்கள் விளங்கின எனக் கருத்து உணர்க. தற்குறிப்பேற்றவணி. ("மேகலை நெகிழ்த்தலோடும், நல்லெழில் கனிந்த கோதை நகையுளத் தடக்கலாற்ருள், முல்லைமென்முகையு நாண வரும்பிய முறுவல் பூத்தாள்" என்னும் நைடதம் முதலியன ஒருசார் ஒப்பு நோக்கத்தக்கன.) செறி புனல் - (நதிகளிடத்துப்) பொருந்திய நீர் என்றும், பூந்துகில் - பூப்போல் மெல்லிய ஆடை யென்றுங் கொள்ளலாம். உறுதுணை - ஏற்றதுணை. பி - ம்:—[1]செறிவுடைப். [2]உறுதுணைக், உறுத்தகக், உறுதனிக். [3]ஓடி. [4]முத்தினால். (568)

117.—பாக்குக்குலைகள் முதிர்ந்து பழுத்தல்.

[1]சொன்னிறை கேள்வியிற் றொடர்ந்த [2]மாந்தரின்
[3]இன்னிறப் பசலையுற் றிருந்த மாதரின்
[4]தன்னிறம் பயப்பய நீங்கித் [5]தள்ளரும்
பொன்னிறம் [6]பொருந்தின பூகத் தாறெலாம்.

(இ - ள்.) சொல் நிறை - புகழ்நிறைந்த, கேள்வியின் - நூற் கேள்வியின்பொருட்டு, தொடர்ந்த - (நல்லாசிரியரிருக்கின்ற இடத்தை நோக்கிவேற்றுநாட்டுக்குப்) பிரிந்துசென்ற, மாந்தரின் - தலைவரால், இன் நிறம் பசலைஉற்றிருந்த மாதரின் - இனிய பசலை நிறத்தை யடைந்த மாதர்போல,—பூகம் தாறு எலாம் - பாக்குமரத்தின் குலைக ளெல்லாம், தன் நிறம் பயப்பய நீங்கி - தமது நிறம் மெல்ல மெல்ல நீங்கப்பெற்று, தள்ள அரும் பொன் நிறம் பொருந்தின - இகழவொண்ணாத [விரும்பத்தக்கதும் கொண்டாடத்தக்கது மான] பொன்னிறத்தை யடைந்தன; (எ - று.)

பாக்குமரத்தின் குலைகள், இளமையா யிருக்கும்போது பசுநிறமா யிருந்தவை,முதிருந்தோறும் நாளடைவிற் பசுமைநிறம்மாறிப் பழுக்குமளவிற் பொன்னிறமடையும்: அதற்கு, கல்வியறிவுநிரம்பத் தமது கொழுநர் தம்மைப்பிரிந்துவேற்றிடஞ்செல்ல அப்பிரிவாற்ருமையாற்பசலைநிறமடைந்தமகளிரை உவமை கூறினர். அறுவகைப் பிரிவினுள் ஓதற்பிரிவாகிய இதுமுதலதாதலாலும் உயர்ந்தோர்க்கு

உரியதாதலாலும் எடுத்துக்கூறப்பட்டதென்க. பசலையாவது - தலைவரைக்கூடப்பெறாத நிலையிற் காதல்மிகுதியால் வருவதொரு நிறவேறுபாடு. அது பொன்னிறமுடைமையை, "பொன்தெளித் தெழுதியன்ன பூம்புறப் பசலைமூழ்கி" என்னுஞ் சிந்தாமணியாலும் உணர்க. [1]'சொன்னிறைகேள்வியிற் றுறந்த காந்தரால்' என்ற பாடத்திற்கு - நூற்கேள்வியால் இல்லறத்தைத் துறந்திட்ட (தமது) கணவரால் என்க.

இனி, முதலிரண்டடிகட்கு - சொல் நிறை கேள்வியின் தொடர்ந்த மாந்தரின் - சொற்கள் நிறைந்த நூற்கேள்விகளைக்கேட் டலில் இடைவிடாத மனிதர்கள் போலவும்,—இன் பசலை நிறம் உற்று இருந்த மாதரின் - இனிமையான பசலைநிறத்தை யடைந் திருந்த மகளிர் போலவும் என்று உரைப்பாருமுளர். ஞான அநுட் டானங்களையுடைய நல்லாசிரியர்பக்கல் நூற்பொருள்களை உபதேச முகத்தாற் பலகாலுங்கேட்டுப் பயின்றவர் நாளடைவில் அஜ்ஞான விருள்நீங்கி ஞானவொளி பெறுதலையும், ஆசைநோயுற்ற மகளிர் தமது இயற்கைநிறம் மாறிப் பொன்னிறமான பசலையயடைதலை யும் உவமையாக்கூறினரென்க. உவமையணி. 'தாமிறலாம்பொருந் தின' என்றதற்கு ஏற்ப 'தம் நிறம்' என்னாது, 'தன்நிறம்' என்றது - பன்மையொருமைமயக்கம்: [4]தந்நிறம் என்பதும் பாடம். பயப்பய =பையப்பைய: அடுக்கு, நாளடைவி லென்பதைக் காட்டும். தள்ள ரும் - நீக்கமுடியாத எனினுமாம். பூகம் - வடசொல். பி - ம்:— [2]மாந்தர்பால், மைந்தரால். [3]இன்னிறம். [5]தன்னரும். [6]பொலிந் தன. (569)

118.—முதலைகள் வெயிலில் உறங்குதல்.

பயின்றுடல் [1]குளிர்ப்பவும் பழன நீத்தவண்
[2]இயன்றில விளவெயி [3]லெழுது [4]மெய்யன
வயின்றொறும் வயின்றொறு மடித்த வாயன
துயின்றன விடங்கர்மாத் தடங்கள் தோறுமே.

(இ - ள்.) இடங்கர் மா-முதலைகளாகிய விலங்குகள்,—பயின்று- (தாம் நெடுநாளாக மிக்க நீரில்) வாழ்ந்தமைபற்றி, உடல் குளிர்ப்ப உம் - உடம்பு குளிரப்பெற்றதனாலே, அவண் இயன்றில - அவ்விடங் களில் [தமக்கு உரிய இடங்களில்] வசிக்காமல், பழனம் நீத்து - நீர் நிலைகளை விடுத்து, இள வெயில் எழுதும் மெய்யன - இளமையான சூரியகிரணம் (உடம்பின்மேல்) எழுதினாற்போலப் படியப்பெற்ற உடம்பையுடையனவாமாறு, தடங்கள் தோறும் - (நீர் நிலைகளின்) கரைகளிலெல்லாம், வயின் தொறும் வயின்தொறும் - பற்பல விடங்களில், மடித்த வாயன துயின்றன - வாயை மூடிக்கொண்டு (இனிமையாய்த்) தூங்கின; (எ - று.)

பெருமழைக் காலத்தில் நீரிலேயே மூழ்கிக்கிடந்தமையால் குளிர் மிக்கமைபற்றி இப்பொழுது முதலைகள் இளவெயில்காயக்

கரையிலே கிடக்கின்றனவென்க. பயின்று உடல்குளிர்ப்ப - மிகுதியாய் உடம்புகுளிர வெனினுமாம். குளிர்ப்பவும், உம்மை - அசைநிலை. [1]'குளிர்ப்பவண்பழனம்' என்ற பாடமும் ஏற்கும். பழனம் - பொய்கை: புறநானூற்றில் "பழனவாளை" (61) என்றவிடத்துப் பழனம் என்பதற்குப் பொய்கையென்று கூறியிருத்தல் காண்க. பழனநீத்தவண் என்ற தொடர்க்கு - பழனமும் நீத்துமாகிய அவ்விடங்களில் என்று உரைப்பாருமுளர்: இங்ஙன் பொருள் கூறுமிடத்து, பழனநீத்து - உம்மைத்தொகை. நீத்து - பெயர்; நீந்தப்படுவது என நீர்நிலைக்குக் காரணக்குறி. பழனம் - வயல். குளம் ஏரி மடு முதலிய நீர்நிலைகளிற்போலவே கழனிகளிலும் மழைவளத்தால் நீர் மிக்கிருந்தமை தோன்ற, நீர்நிலைகளோடு பழனத்தையுங் கூட்டினர். முதலை நீர்வாழுயிராதல்பற்றி, பழனத்தையும் நீத்தையும் 'அவண்' எனச் சுட்டினர்.

'நெய்தற்கு மா - சுறாவும், முதலையும் என்றார், இறையனாரகப் பொருளுரையில் நக்கீரர்; அதனை மறுத்து 'முதலையும் சுறாவும் மீனாதலின், மாவென்றல் மரபன்று' என்றனர் தொல்காப்பியப் பொருளதிகாரவுரையில் நச்சினார்க்கினியர். அங்ஙனமே 'இனி, முதலையும் சுறாவும் மா வென்பர்; "கெண்டையஞ்சினை மேய்ந்து கிளர்ந்து போய், முண்டகத்துறை சேர்ந்த முதலைமா, வண்டல் வார்கரை மாமகரக் குழாங், கண்டு நின்று கனலுங் கழியெலாம்" எனக்காட்டுவா ருளராயினும், அவை மீனெனப்படுவ வல்லது மா வெனப்படா' என்பர், சிலப்பதிகாரவுரையில் அடியார்க்குநல்லார். உய்த்து நோக்குடத்து, தேவர் மனிதர் விலங்கு புள் ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்னும் எழுபிறப்பினுள் புள் முதலியன தேவர் மக்கள் விலங்கு நரகர் என்னும் நால்வகைக்கதிகளுள் விலங்குகதியில் அடங்குதலால், 'அசுணமா' என்பதுபோல 'இடங்கர்மா' என்பதும் தகுமென்க. "போழ்ந்தமா கிடங்கிடைக் கிடந்து பொங்கிடங்கர்மா", "ஒன்றையொன்று முன்தொடர்ந்து சிறிடங்கர்மா" என்றார், பாலகாண்டத்திலும். இனி, மா-பெரிய என, தடத்திற்கு அடைமொழியாகவுமாம். மூன்றுமடி - முற்றுமோனை. பி - ம்:—[1]பாணிநீத்தவண். [2]இயன்றன. [3]ஏய்ந்த, எழுந்த, அழுந்து. [4]கூலமென், மெய்யின். [5]எய்தியே, துன்னியே, துன்னின. (570)

119.—வஞ்சிக்கொடிகள் செழித்துப்பொலிதல்.

கொஞ்சுறு கிளி [1]நெடுங் குதலை [2]கூடின
அஞ்சிறை [3]யறுபத வளக வோளிய
எஞ்சலில் [4]குழையன விடைநு டங்குவ
வஞ்சிகள் பொலிந்தன [5]மகளிர் மானவே.

(இ - ள்.) வஞ்சிகள் - வஞ்சிக்கொடிகள்,—கொஞ்சுறு கிளி நெடுங் குதலைக்கூடின - கொஞ்சிப்பேசுகின்ற கிளிகளின மிகுதியான

மழலைச்சொற்கள் (தம்மிடத்தே) பொருந்தப் பெற்றவையும் [கிளி கொஞ்சுவது போன்ற சிறந்தமழலைச்சொற்கள் பொருந்தியவையும்], அம் சிறை அறுபதம் அளகம் ஒளிய - (தம்மிடத்தே மொய்க்கின்ற) அழகிய இறகுகளையுடைய வண்டுகளாகிய அளகத்தின் ஒழுங்கையுடையவையும், எஞ்சல் இல் குழையன - குறைவில்லாத தளிர்களை யுடையவையும் [ஒளியிலும் விலையிலுங்குறைவில்லாத குழையென்னுங் காதணியை யுடையவையும்], இடை நுடங்குவ - இடைபோல ஒல்கி ஒசிவனவும் [இடை ஒல்கிஒசியப்பெற்றனவும்] ஆகி, மகளிர் மான - மாதர்கள்போல, பொலிந்தன - விளங்கின; (எ - று.)

இரண்டாமடியில் உருவகத்தையும், முதலடி மூன்றுமடிகளிற் செம்மொழிச் சிலேடையையும் அங்கமாகக்கொண்டுவந்த உவமையணி காண்க. வஞ்சிகட்குச் சேரும்போது, முதலடிக்கு - கிளிகள் கொஞ்சிப்பேசிக்கொண்டு தம்மைச் சார்ந்திருக்கப்பெற்றனவென்பது கருத்து. மகளிர்க்குக் குதலை எப்பருவத்திலுங் கூறப்படும். அறுபதம் - ஆறு கால்களை யுடையதெனப் பண்புத்தொகையன்மொழி. பி - ம்:—[1]நறுங். [2]கூட்டின. [3]அறுபதத்தளகவோதிய, அறுபதவளகவோதிய, அறுபதமளகமூசலின். [4]குழையின, குழையென. [5]மகளிர் மாலைபோல். இச்செய்யுள் சில பிரதிகளிலில்லை யென்ப. (571)

120.—நத்தைகள் சேற்றில் மறைதல்.

அளித்தன முத்தினந் [1]தோற்ப மானனார்
[2]வெளித்தெதிர் [3]விழிக்கவும் வெள்கி [4]மேன்மையால்
ஒளித்தன வாமென [5]வொடுங்கு கண்ணன
குளித்தன மண்ணிடைக் [6]கூனல் நந்தெலாம்.

(இ - ள்.) கூனல் நந்து எலாம் - முதுகுவளைவையுடைய நத்தைகளெல்லாம்,—அளித்தன முத்து இனம் தோற்ப - (தாம்) ஈன்றவையானமுத்துக்கள் (மகளிரின் பற்களுக்கு ஒப்பாகாமல்) தோல்வியடைந்துவிட்டதனால், மான் அனார் - (பார்வையழகில்) மான் போன்றவர்களான அம்மாதரது, எதிர் - எதிரில், வெளித்து - (தாம்) வெளிப்பட்டு, விழிக்கவும் வெள்கி - (அவர்களைப்) பார்ப்பதற்கும் நாணமுற்று, மேன்மையால் ஒளித்தன ஆம் என - (தமது) மேன்மையான இயல்பினால் ஒளித்துவிட்டன போல், ஒடுங்கு கண்ணன - ஒடுங்கிய கண்களையுடையவையாய், மண்ணிடை குளித்தன - சேற்றில் மூழ்கின; (எ - று.)

நத்தைகள் காலவியல்பினால் மண்ணில்மறைந்ததற்கு, தமது மகவாகிய முத்துக்கள் அங்குள்ள மாதரது பற்களுக்குத் தோற்றதனால் அம்மகளிரெதிரில் தாம் நின்று புலனாவதற்கு நாணியொளிப்பனபோல எனக் காரணங் கற்பித்துக் கூறியது, ஏதுத்தற்குறிப்பேற்றவணி. முத்துப்பிறக்குமிடங்களிருபதில் நத்தையும் ஒன்

ருதலே, "தந்திரவராகமருப்பிப்பி" என்ற தொடக்கத்துச் செய்யுளில் "நந்து சலஞ்சலம்' என்றதனு லுணர்க. இங்கு 'மேன்மை' என்றது, மானத்தில் நோக்கம்வைத்ததை. "'மென்மையால்' என்ற பாடத்திற்கு - மெல்ல என்க. இரண்டாமடி - முற்றுமோனை.

"அளித்தனமுத்தினந் தோற்றமானனுர், இளிக்கெதிர் விழிக்கலமென்று வெள்கியே, ஒளித்தனவாமென வோங்குநீரிடைக், குளித்தன வாணிறக் கூனநந்தெலாம்" என்றும் பாடமுண்டு; அதன் பொருள் வருமாறு:—வால் நிறம் - வெண்ணிறமுள்ள, கூன - வளைவையுடைய, நந்து எலாம் - சங்குகளெல்லாம், 'அளித்தன முத்து இனம் தோற்ற - (யாம் ஈன்றனவான முத்துக்கள் (மகளிர் பற்களுக்குத்) தோற்றுவிட்டனவாதலால், மான் அனுர் இளிக்கு எதிர் விழிக்கலம் - அம்மகளிரது அவமதிச்சிரிப்பிற்கு இலக்காக அவர்முன் நிற்கக்கடவோ மல்லோம்,' என்று - என்று எண்ணி, வெள்கி - வெட்கங்கொண்டு, ஒளித்தன ஆம் என - ஒளித்திட்டனபோல, ஓங்கு நீரிடை குளித்தன - உயர்ந்தெழுந்து அலை வீசுகின்ற நீரில் மூழ்கின எனக் காண்க. பி - ம்:—[1]தோற்கவானனம், தோற்றமானநாள், தோற்றமாகநாம், தோற்றமானநாம். [2]விழிக்கெதிர், வெளுத்தெதிர். [3]விழிக்கலம், விளக்கலம். [5]ஓங்கு நீரிடை, ஒழுங்கு கண்ணன. [6]கூனநந்தெலாம். 'வெளிக்கெதிர் விழிக்கலமென்று வெள்கியே' என்று சிலபிரதிகளில் இரண்டாமடியிற் பாடம் காண்கின்றதென்ப. (572)

121.—நண்டுகள் வளைகளிற் புகுதல்.

மழைபடப் [1]பொதுளிய மருதத் தாமரை
தழைபடப் பேரிலைப் [2]புரையிற் றங்குவ
[3]இழைபடு பெடையொடு [4]மெள்ளி லள்ளிகள்
[5]புழையடைத் [6]தொடுங்கின வச்சை மாக்கள்போல்.

(இ - ள்.) மழை பட பொதுளிய - மழைபெய்ததனுற் செழித்த, மருதம் தாமரை - மருதநிலத்திலுள்ள தாமரைக்கொடிகள், தழை பட - நன்கு வளர, பேர் இலை புரையில் தங்குவ - (அவற்றினது) பெரிய இலையின்கீழ்த் தங்குவனவான, எள் இல் நள்ளிகள் - பழிப்பிற்கு இடமில்லாத [குற்றமற்ற] (ஆண்) நண்டுகள்,— இழைபடு பெடையொடும் - (தம்மோடு) கூடிய பெண்நண்டுகளுடனே,— வச்சை மாக்கள் போல் - உலோபிகள் போல, புழை அடைத்து ஒடுங்கின - (தமது) வளையின்வாயிலை (ச் சேற்றுல்) அடைத்துக் கொண்டு அதனுள்ளே சேர்ந்தன; (எ - று.)

யாசகர் விருந்தினர் சுற்றத்தார் என்னும் இவரது வரவுக்கு அஞ்சி உலோபிகள் வீட்டுவாயிற் கதவை யடைத்து உள்ளே தாளிட்டுக் கொண்டு தாமும் தம்மனைவியருமாக அகத்தில் வாழ்வர்; அதுபோல ஆண்நண்டுகள் தமது பேடைகளுடனே தமது

வளையினுட் செல்லும்போது அதன் வாயைச்சேற்ற லடைத்துக் கொண்டு உள்ளே புக்கு உறையும்: அங்ஙன் உறையும் நண்டுகட்கு அவ்வுலோபிகளை உவமை கூறினர்; உவமையணி.

இனி, இச்செய்யுட்கு வேறும் ஒருரை வருமாறு:—எள் இல் நள்ளிகள் - இகழப்படாத ஆண் நண்டுகள், புழை அடைத்து ஒடுங்கின வச்சைமாக்கள் போல்-(தமது) வீட்டு வாயிற்கதவை யடைத்துக் கொண்டு உள்ளே பதுங்கி வசிக்கும் உலோபிகள் போல, மழைபட பொதுளிய - மழை பெய்தலால் ஒடுங்கிக் கிடந்த, மருதம் தாமரை - மருதநிலத்துத் தாமரைக் கொடிகள், (பின்பு) தழைபட - தழைக்க, பேர் இலை புரையில் - (அவற்றின்) பேரிலைச்சுருளினுள்ளே, இழைபடு பெடையொடும் - (தம்மைச்) சேர்ந்த பெடையுடன், தங்குவ - தங்குவனவாயின எனக் காண்க.

பெடை - பெண்மைப்பெயர்; இது, பறவைகட்கன்றிப் பிறவற்றிற்குச் சிறுபான்மைவரும். யாதொருதீங்குஞ்செய்யாததென்பார், 'எள்ளில்' என்ற அடைமொழி கொடுத்தார். முன்னர், 'பெடை' என வந்ததனால், 'நள்ளி' என்னும் நண்டின் பொதுப்பெயர் நண்டின் ஆணின்மேல் நின்றது. பகுத்தறிவில்லாத விலங்குபோன்ற மனிதரென்ற இழிவு விளங்க, 'வச்சைமாக்கள்' என்றார். பி - ம்:— [1]பொழிந்துழி. [2]புரையுட்டங்குவ. [3]விழைவுடைப்பெடையொடும் வெள்ள நள்ளிகள், இழைபடப்பெடையொடும், இழையுறுபெடையொடும், விழைபடப். [4]மெள்ள. [5]புழையிடத்து. [6]ஒதுங்கின. சில பிரதிகளில் இச்செய்யுள் முன்னும், 'அளித்தன' என்ற செய்யுள் பின்னுமாகக் காணப்படுகின்றன. 'மழைபடப்பொதுளியமலர்ந்த தாமரை, புழைப்படப்பேரிலைப் புரையிலன்னங்கள், விழைவுடைப் பெடையொடும் மேவநள்ளிகள், புழையிடத்தொடுங்கினபொச்சை மாக்கள்போல்' என்று சில பிரதிகளிற் பாடங் காண்கின்றதென் கின்றனர். (573)

கார்ப்பருவம். கூதிர்ப்பருவம் என்ற இருவகைப் பருவங்களின் வருணனை, இப்படலத்தில் விரித்துரைக்கப்பட்டது; பெருங்காப்பிய விலக்கணங்களுட் பருவவருணனை ஒன்றாத லுணர்க.

கார்காலப்படலம் முற்றிற்று.

11-ஆவது கிட்கிந்தைப் படலம்.

கிட்கிந்தாபட்டணத்தில் நடந்த செய்திகளைக் கூறும் பாகம். மழைக்காலங் கழிந்தவளவிலும், முன்பு சொன்னபடி சுக்கிரீவன் சேனைகளுடன் வந்திலனாக, இராமபிரான் கோபங்கொண்டு, கிட்கிந்தைக்குச் சென்று செய்தியறிந்து வரும்படி இலக்குமணனையனுப்பியதும், அவ்விளையபெருமாள் சென்றது முதலாகச் சுக்கிரீவன் இராமபிரானிடம் வந்து சமாதானங் கூறியது ஈறாக நிகழ்ந்தசெய்திகளும் இப்படலத்தில் விரித்து உரைக்கப்படுகின்றன.

1.—இனி எட்டுக் கவிகள் – சொன்னபடி சுக்கிரீவன் வந்திலனென்பதுபற்றி இராமபிரான் சினந்து இலக்குமணனைக் கிட்கிந்தைக்கு அனுப்புதலைக் கூறும்.

[1] அன்ன கால மகலு மளவினில்
[2] முன்னை வீர னிளவலை [3] மொய்ம்பினோய்
சொன்ன [4] வெல்லையி [5] னூங்கினுந் தூங்கினன்
மன்னன் வந்தில [6] னென்செய்த வாறரோ.

(இ - ள்.) அன்ன காலம்-அத்தன்மையதான கூதிர்காலத்தின் முற்பகுதி, அகலும் அளவினில் - அழியுமளவில்,—முன்னை வீரன் - மூத்தவனும் வீரனுமாகிய இராமபிரான்,—இளவலை - தம்பியான இலக்குமணனைநோக்கி,—மொய்ம்பினோய் - வலிமையை யுடையவனே! சொன்ன எல்லையின் ஊங்கின்உம் - (முன்பு நான்) சொன்ன நான்கு மாதத்தவணை கழிந்ததன்மேலும், மன்னன்-அச்சுக்கிரீவமகாராஜன், [ஜாக்கிரதையின்றியிருந்தவனாய்], தூங்கினன் - தூங்குதலைமேற் கொண்டவனாய், வந்திலன் - (இங்கு) வந்தானில்லை: செய்த ஆறு என் - (அவன்) செய்த விதம் யாதாயிருந்தது! (எ - று.)

இச்செய்யுளில் 'அகலுமளவினில்', 'முன்னை வீரன்', 'இளவலை' என்றவை மேல் எட்டாஞ் செய்யுளில் 'என்றான்' என்பதனோடு தொடர்ந்து முடியும்.

ஐப்பசித்திங்கள் போய்க் கார்த்திகைத்திங்கள் வரவும் சொல்லியபடி சுக்கிரீவன் வாராமையால், இராமபிரான் இலக்குமணனை நோக்கி, குறித்தகாலவெல்லைவந்தும் சுக்கிரீவன் வாராது தூங்குகின்றானே! என்றனனென்பதாம். தூங்குதல் - காரியத்திற் கருத்தின்றியிருத்தல். தனது சொல்லை அவன் உபேட்சித்ததும், அவன் தான் சொன்ன சொற்படி நடவாமற் பொய்த்ததும், செய்ந்நன்றி மறந்ததுமாகிய தகுதியில் செயல்களைப் பற்றிய வருத்தத்தால் 'என் செய்தவாறு' என்கிறான். அரசாட்சி பெற்றதனாலாகிய களிப்பினால் தன்னையும் தனக்கு உதவிசெய்தநம்மையும் மறந்து இங்ஙன மாயினானென்னுங்கருத்து அமைய, 'மன்னன்' என்றான்.

முன்னை - முன் பிறந்தவன்; ஐ - பெயர்விகுதி. இனி, முன்னை வீரன் - எல்லா வீரருள்ளும் முதன்மைபெற்ற வீரனெனினுமாம். மொய்ம்பினோய் - தோள்வலிமையுடையவனே என்று பொருள் கொள்ளலுமாம்; இவ்வுரையில், மொய்ம்பு என்பதற்கு - தோளென்றும் வலிமையென்றும் பொருளுண்டு. பி - ம்:—[1] அன்னகாலமகன்றனவன்புறும், இன்னகாலமகன்றனவின்புறும். [2] முன்னவீரன். [3] முன்பினோய். [4] வேலையின். [5] ஊங்குமற்றூங்கினன், ஊங்குறத்... ஊங்குமத்தூங்கிய [6] என்செய்யு மாறரோ. (574)

2. பெறல ருந்திருப் பெற்[1] றுத விப்பெருந்
திறனி னைந்திலன் சீர்மையிற் றீர்ந்தனன்

அறம றந்தன னன்பு கிடக்கநம்
மறன றிந்திலன் வாழ்வின் மயங்கினன்.

(இ - ள்.) (அச்சுக்கிரீவன்),—பெறல் அருந் திரு பெற்று - பெறுதற்கருமையான அரசாட்சிச் செல்வத்தை (நம்மாற்) பெற்று, உதவி பெருந் திறன் நினைந்திலன் - (தனக்கு நாம் செய்த) அவ்வுபகாரத்தின் பெருமைக் குணத்தைக் கருதினனில்லை; (ஆகவே), சீர்மையின் தீர்ந்தனன் - சிறந்த ஒழுக்கத்தினின்று நீங்கிவிட்டான்; அறம் மறந்தனன் - (தனக்கு உதவிசெய்தவர்க்கு எதிருதவி செய்வதாகிய) தருமத்தை மறந்துவிட்டவனான அவன், அன்பு கிடக்க நம் மறன் அறிந்திலன் - (நாம் அவன் பக்கல்செய்த) அன்பை மறந்தது இருக்கட்டும் நமது பல பராக்கிரமங்களையும் ஞாபகத்திற்கொண்டானில்லை; வாழ்வின் மயங்கினன் - (அரசாட்சி பெற்று இன்புற்று) வாழும் வாழ்க்கையில் அமிழ்ந்து கிடக்கின்றான்; (எ - று.)

'தூங்கிய மன்னன்' என்று கீழ்ச் செய்யுளிற் குறித்ததை இங்கு விவரிக்கின்றான். வாலியினிடத்தினின்று மீட்டுப் பெறுதற்கரிய ருமையென்னும் மனைவியைப் பெற்றமையும் 'பெறலருந்திருப்பெற்று' என்றதில் அடங்கும். உதவிப்பெருந்திறனை "செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும், வானகமுமாற்றலரிது" "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப்பெரிது" எனக் காண்க. [1]உதவப்பெறுந்திறம், என்று பாடமோதுவாருமுளர்; அதற்கு - (நாம்) உதவியதனால் (பெறுதற்கரியசெல்வத்தைப் பெற்றுப் பின்பு தான்) பெற்ற வழியை, நினைந்திலனென்பது பொருள். "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பவாதலால், 'சீர்மையிற்றீர்ந்தனன்' என்றான். அறம் - "நன்றி மறப்பது நன்றன்று" என்பது. மறன் - வல்லமை. வாழ்வின் மயங்கினன் - (தான் பெற்ற) வாழ்வினால் அறிவு கெட்டான் எனினுமாம். (575)

8. நன்றி கொன்றரு [1]நட்பினை நாரறுத்து
ஒன்று மெய்ம்மை சிதைத்துரை [2]பொய்த்துளாற்
கொன்று நீக்குதல் [3]குற்றத்தி னீங்குமால்
சென்று மற்றவன் சிந்தையைத் [4]தேர்குவாய்.

(இ - ள்.) (இவ்வாறு), நன்றி கொன்று - (தனக்கு ஒருவன் செய்த) நன்றியைச் சிதைத்து [தான் பெற்ற உதவிக்குக் கைம்மாறு செய்யாமல் அதனை மறந்துவிட்டு], அரு நட்பினை நார் அறுத்து - அருமையாகக்கொண்ட சிநேகத்தைக் கட்டற ஒழித்து, ஒன்றும் மெய்ம்மை சிதைத்து - (யாவர்க்கும்) ஏற்றதான சத்தியத்தை யழித்து, உரை பொய்த்துளான் - பேச்சுத்தவறியவனை, கொன்று நீக்குதல் - கொன்றொழித்தல், குற்றத்தின் நீங்கும் - பழிபாவங்களினின்று நீங்கிய செயலேயாம்; ஆல் - ஆதலால், சென்று அவன் சிந்தையை தேர்குவாய் - (அச்சுக்கிரீவன் தண்டித்தற்கு உரியன்

தானு? என்று நீ) போய் அவனது மனநிலையை அறிந்து வருவாய்; (எ - று.)—மற்று - வினைமாற்று; அசையுமாம்.

நார் - கயிறு; இங்கே, அன்பினாலாகும் பாசபந்தத்தை யுணர்த்திற்று. நட்பினை நாரறுத்து - நட்பைப்பற்றறவிட்டு; "நட்பு நாரற்றன" என்றார், நாலடியாரிலும். நீங்குதல் - இவ்வுலகத்தில் இல்லாதபடி செய்தல். பி - ம்:—[1]நட்பொடு, நட்பினின். [2]பொய்த் துளார்க்கொன்று. [3]குற்றத்து..., குற்றத்திற்றங்குமோ. [4]தேருவாய். (576)

4. வெம்பு கண்டகர் விண்புக வேரறுத்து
இம்பர் நல்லறஞ் செய்ய வெடுத்தவில்
கொம்பு முண்டருங் கூற்றமு முண்[1]டுங்கள்
அம்பு முண்டென்று சொல்லுநம் மாணையே.

(இ - ள்.) வெம்பு கண்டகர் விண் புக வேர் அறுத்து - உக்கிரங் கொண்ட கொடியவர்கள் (போரிலிறந்து) வீரசுவர்க்கமடையும்படி (அவர்களைப்) பற்றற அழித்து, இம்பர் நல் அறம் செய்ய - (இவ்வுலகத்தில்) நல்லதருமத்தை நிலைநிறுத்துதற்பொருட்டு, எடுத்த - (நாம்) ஏந்திய, வில் கொம்புஉம் - வில்லுத்தடியும், உண்டு - இருக்கின்றது; அருங்கூற்றம்உம் உண்டு - (எவராலுந்தடுத்தற்கு) அரிய யமனும் இருக்கின்றான்; உங்கள் அம்புஉம் உண்டு - (வானர வீரர்களாகிய) உங்களை யெல்லாங் கொல்லாமல் அம்பும் (நம்மிடம்) இருக்கின்றது, என்று—, நம் ஆணை சொல்லு - நமது கட்டளையாகச் (சுக்கிரீவனிடஞ்) சொல்வாய்; (எ - று.)

விராதன் முதலிய அரக்கர்களையும் வாலியையுங் கொன்ற வில் அம்புகளைக்கொண்டே உன்னையும் உன்னைச்சார்ந்தவர்களையும் யமனுக்கு இரையாக்குதல் கூடுமென்று நாம் சொன்னதாகச் சொல்லக்கடவாய் என்பதாம். நம் ஆணை சொல்லு - நமது கட்டளையைச் சொல்வாய். வெம்புகண்டகர் விண்புக வேரறுத்தல் - தீயோரை யொழித்தல். இம்பர் நல்லறஞ்செய்தல் - அறத்தை நிலைநாட்டுதல். வெம்பு கண்டகர் - (உலகம்) தவித்தற்குக்காரணமான கொடியவரெனினுமாம். எடுத்த - கையிற்கொண்ட, விற் கொம்பு - வில்லாகிய மூங்கில்; தநுர்த்தண்டம். உங்களம்பு - அரக்கரையேயன்றி வானரரையும் அழிக்கும் அம்பென்க. 'சிறுவ! பேராற்றலோனே! எனது சிற்றத்தின் வடிவைக் கூறுவாய்: எதனால் வாலி கொல்லப்பட்டுச் சென்றானோ, அதற்கு அந்தவழி சுருங்கவில்லை: முன்னர் ஒருகணையால் வாலியொருவனே கொல்லப்பட்டான்: உண்மை தவறிய உன்னைச் சுற்றத்தோடும் கொல்வேன் என்று எனது இந்தச் சொல்லையும் கூறுவாய்' என்று ஸ்ரீராமன் இலக்குமணனை நோக்கிக் கூறியதாக ஸ்ரீவான்மீகி பகவான் அருளியுள்ளார். பி-ம்:—[1]எங்களம்பு. (577)

5. [1]நஞ்ச மன்னவ ரைநலிந் தாலது
வஞ்ச [2]மன்று மனுவழக் காதலால்

[3] அஞ்சி லைம்பதி லொன்றறி யாதவன்
[4] நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாய்.

(இ - ள்.) நஞ்சம் அன்னவரை நலிந்தால் அது - விஷத்தைப் போலக் கொடியராயுள்ளாரைத் தண்டித்தால் அது, வஞ்சம் அன்று- கொடுமையாகாது; (ஏனெனில்),—மனு வழக்கு ஆதலால் - மநுதர்ம சாஸ்திரத்திற் கூறிய நீதியாதலால்; (இத்தன்மையை), அஞ்சில் ஐம்பதில் ஒன்று அறியாதவன் நெஞ்சில் நின்று நிலாவ - ஐந்துபிராயத்திலும் ஐம்பதுபிராயத்திலும் தக்கதொருசெயலை யறியாதவனை அச்சுக்கிரீவனது மனத்திற் பதிந்துவிளங்கும்படி, (நீ சொல்லி), நிறுத்துவாய் - நிறுபெறுத்துவாய்; (எ - று.)

"கொலையிற்கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ், களைகட்டதனோடு நேர்" என்றபடி கொடியவரைக்கொல்லாவிடின் உலகம் பலவாறு நலிவுபட்டு வருந்தும்: ஆதலால், பயிர்செழித்து வளருமாறு புற்களையைக் களைதல்போல நல்லோரைப் பாதுகாத்தற் பொருட்டுத் தீயோரைக் கொன்றொழித்தல் தருமச்செயலாம் எனச் சுக்கிரீவன் மனத்திற்பதியும்படி கூறுவாயென்றவாறு. நஞ்சமன்னவர்-தன்னையுண்டவரை வருத்திக்கொல்லும் விஷம்போலத் தன்னை நட்புக்கொண்டவர்க்குத் துரோகஞ்செய்பவர். மனு - இங்கே, ஸ்வாயம்புவமநு; அவரே அறநூலியற்றியவர். 'நஞ்சமன்னவரை நலிதல் வஞ்சமன்று' என்பதை, மநுதர்ம சாஸ்திரத்தில் இராசதருமங் கூறும் ஏழாவது அத்தியாயத்தில் தண்டப்பிரசம்ஸையிற் காணலாம். இனி, மனு வழக்கு - மனு வென்னும் முதலரசன்முதலாக வழங்கிவருஞ் செயலென்றலுமாம்.

அஞ்சி லைம்பதி லொன்றறியாதவன் - அஞ்சிலும் ஒன்று அறியாதவன் ஐம்பதிலும் ஒன்று அறியாதவனென்க; இளமையோடு முதுமையோடு வாசியற எப்பொழுதுமே செய்வது அறியாதவன் என்றபடி: இளமையில் ஆராய்ச்சியின்றித் தனது அண்ணனை வாலிபக்கல் தவறுதல் செய்தான், இப்பொழுது முதுமையில் எனக்குப் பிழைசெய்தான் என்றவாறும். "அஞ்சிலறியாதாரைம்பதிலுந் தாமறியா, ரென்சொலெனக்கோவெதிராசா - நெஞ்ச, முனதாளொழிந்தவற்றையே யுகக்க வின்றும், அனுதாபமற்றிருக்கையால்" என்றார், ஸ்ரீமணவாளமாமுனிகளும். இப்பழமொழி, 'ஆறிலறியார் நூறிலுமறியார்', 'தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டில்' என்பன போல்வது. உலகவழக்கச்சொல்லைத்தழுவிக்கொண்டு சொல்லியதால், இது - உலகவழக்குநவிற்சியணி: ஐந்து, ஐம்பது என்றன- இங்கு, இளமை முதுமைகட்கு இலக்கணை. அஞ்சு - போலி. இனி, மூன்றுமடிக்குப் பிறவாறுகூறும் பொருள், ஏற்குமேற்கொள்க. நெஞ்சில் நின்றுநிலாவ நிறுத்துதல் - தெளியச்சொல்லி வலிய உணர்த்துதல். பி - ம்:—[1] நஞ்சின். [2] அல்ல, என்னார். [3] அஞ்சியல்ல

தொன்றாரறிவாரவர், அஞ்சிலம்பதிலொன்றறியாதவன், அஞ்சில் ...அறியாதவர் அல்லது அறியாரவர். நெஞ்சினின்ற நினைவை or விலாபம். இச்செய்யுள் "ஊருமாளும்" என்பதற்குப் பின் சில பிரதிகளிலுள்ளது. (578)

6. ஊரு மாளு [1]மரசுநுஞ் சுற்றமும்
நீரு [2]மாளுதிரே யெனி [3]னேர்ந்தநாள்
வாரும் [4]வாரலி ராமெனின் வானரப்
பேரு மாளு மெனும் [5]பொருள் பேசுவாய்.

(இ - ள்.) ஊர்உம் - (உங்களுடைய) நகரத்தையும் [கிட்கிந்தாபுரியையும்], ஆள்உம் - அடிமைகளான குடிகளையும், அரசுஉம் - அரசாட்சியையும், நும் சுற்றம்உம் - உங்கள் உறவினத்தையும், நீர் உம் - நீங்களே, ஆளுதிர் ஏ எனின் - (இவ்வுலகத்தில்) ஆட்சிபுரிவீரானால் [ஆளவிரும்பினால் என்றபடி], நேர்ந்தநாள் - (சீதையைத் தேடஉதவுவதற்காக வருவதாக உடன்பட்ட இந்தக் கார்த்திகை மாதத்தில், வாரும் - (உடனே புறப்பட்டு நம்பக்கல்) வரக்கடவீர்கள்; வாரலிர் எனின் - (அங்ஙனம்) வாராமற் போவீரேயானால், வானரம் பேர்உம் மாளும் - வானரமென்கிற பெயரும் (உலகத்தில்) இல்லாதொழியும் [வானரமென்னும் பெயருமில்லாமற் போம்படி எல்லா வானரங்களையும் அழித்துவிடுவோம் யாம் என்றபடி]: எனும் - என்கிற, பொருள் - உண்மையை, பேசுவாய் - (சுக்கிரீவன் அங்கதன் முதலானவர்களிடம் நீ) சொல்வாய்; (எ - று.)—ஆம் - அசை.

'நும்' என்பதை, ஊர் ஆள் அரசு என்றவற்றோடும் கூட்டுக. நாடு நகரங்களுடனும் குடிகளுடனும் பந்துவர்க்கத்துடனும் அரசாட்சிபுரிய உங்களுக்கு விருப்பமானால் சீதையை நாட உதவுவதாகச் சொன்ன காலம் வந்திட்டபடியால் உடனே அச்செயலில்முயல்க: இல்லாவிடின், வானரமென்ற பேரும் ஒழிந்திடுமென்று சுக்கிரீவாதியரின் மனத்துப் படும்படி பேசுவாயென்றவாறு. நீரும் என்பதில் உம்மை - இசைநிறை: அசையுமாம். 'நேர்ந்தநாள் வாரும்' என்பதற்கு - (முன்பு சொன்னநாள்கள் கழிந்துபோய்விட்டன): நேர்பட்ட இன்றைக்காவது வாருங்கள் என்றுமாம். [1]அரசுமுஞ் சுற்றமும் என்றபாடம் மோனைத்தொடையுடையதாம். பி - ம்:—[2]ஆளுதிரென்பது, வாழுதிரென்பது. [3]நேர்ந்தநீர், நேர்திரேல். [4]வாரலிரேயெனின். [5]உரை. (579)

7. [1]இன்னு நாடுது [2]மிங்கிவர்க் கும்வலி
துன்னி னாரை யெனத்[3]துணிந் தாரெனின்
உன்னை வெல்ல வுலகொரு மூன்றினும்
நின்ன லாற்பிற [4]ரின்மை நிகழ்த்துவாய்.

(இ - ள்.) இன்னும் இங்கு இவர்க்குஉம் வலி துன்னினாரை நாடுதும் என துணிந்தார் எனின் - 'இனி வேறாக இவ்விராமலக்கு

மணரைக் காட்டிலும் வலிமைபொருந்தியவரைத் தேடித் துணையாக அடைவோம்' என்று (அச்சுக்கிரீவன் முதலியோர்) நிச்சயித்தார்களாயின், உன்னை வெல்ல உலகு ஒரு மூன்றின்உம் நின் அலால் பிறர் இன்மை நிகழ்த்துவாய் - உன்னை வெல்லுதற்கு மூன்று உலகங்களிலும் உன்னையல்லாமல் வேறு எவருமில்லாமையை (அவர்கட்குச்) சொல்வாய்; (எ - று.)

தற்புகழ்ச்சியாகாதிருக்குமாறு தன்னைச்சேர்த்துக்கொள்ளாமல் இலக்குமணனை மாத்திரமே குறித்தனன் இராமபிரான்; இது, அப்பெருமானது பெருந்தகைமையைக் காட்டும். தன்னையடக்க வேண்டுமாயின் தானே அடக்கிக்கொண்டாலல்லது பிறரெவராலும் அடக்கவொண்ணாத பேராற்றலையுடையவர் இளையபெருமானென்பது, இங்கு விளங்கிற்று. பிறரால் வெல்லவொண்ணாத பேராற்றலோடு வேண்டியபொழுது தன்னைத்தானே அடக்கிக் கொள்ளவல்ல பெருந்திறலையுடையவன் இலக்குமணனென்க. இங்கு இவர் - இவ்வாறு [வாலியைவதைத்துத் தனக்கு அரசளித்து] உதவிய இவர்களென்றபடி. பி - ம்:—[1] இன்னம். [2] ஈங்கு. [3] துணிந்தானெனில். [4] இல்லை. (580)

8\. [1] நீதி யாக நிகழ்த்தினை நின்றது
வேதி யாத பொழுது [2] வெகுண்டவன்
சாதி யாதவர் சொற்றரத் [3] தக்கனை
[4] போதி யாதியென் றான்புகழ்ப் பூணினன்.

(இ - ள்.) நின்று - (வெகுட்சிக்குறிப்பைக் காட்டாமல்) சாந்தமாக இருந்து, நீதி ஆக நிகழ்த்திணை - (சுக்கிரீவன் முதலியோர்க்கு) (நீ சொல்வது) நீதி என்பதுதோன்ற எடுத்துக்கூறி,—அது வேதியாத பொழுது - அந் நீதிச்சொல் (அவர்கள் மனத்திற்கொண்டமாறுபாட்டை) மாற்றாதபொழுது, (நீ) வெகுண்டு - கோபித்து, அவண் சாதியாது - அவ்விடத்தில் [அப்பொழுது] (அவர்களை) அழித்துவிடாமல், அவர் சொல் தர தக்கனை - அவர்கள் சொன்ன உத்தரங்களை (என்னிடங்) கொண்டுவந்து சொல்லக்கடவாய்: போதி ஆதி - செல்வாயாக, என்றான் - என்று சொல்லி விடை கொடுத்தான்: (யாவனெனின்),—புகழ் பூணினன் - புகழையே (தனக்கு) ஆபரணமாகக் கொள்பவனாகிய இராமபிரான்; (எ - று.)—இச்செய்யுளில் 'புகழ்ப்பூணினன்' என்றதை, இப்படலத்து முதற்செய்யுளில் 'மூன்னைவீரன்' என்றதற்கு விசேஷணமாகக் கொண்டு அதனோடு இயைத்து முடிபு அமைக்க.

இராமபிரான் முன்கோபங் கொண்டவனன்றிச் சாந்தகுணத்தை யுடையவனாதலாலும், இலக்குவன் சற்றுமுன்கோபமுள்ளவனாதலால் அன்னவன் சீற்றத்தால் மாறுபாடாகவிரைவுகொண்டு யாதும் செய்யாமலிருக்கவேணுமென்ற கருத்தினாலும் முடிவில்

இங்ஙனங் கட்டளை கூறியருளினன். புகழ் தன்னை அழகு படுத்துவதெனக் கருதி அதனை விருப்பத்தோடு மேற்கொள்பவனென்பதும், புகழினால் விளங்குபவனென்பதும், 'புகழ்ப்பூணினான்' என்றதன் கருத்து. விரைவை மேற்கொள்ளாது பொறுமையை மேற்கொண்டு இவ்வாறு கட்டளை கூறியது, புகழ்க்குக் காரணமென்பது விளங்க, இங்கு 'புகழ்ப்பூணினான்' என்றார். வேதித்தல் - பேதித்தல். [1]நீதியாதி நிகழ்த்தினை நின்றது வேதியாதபொழுது என்ற பாடத்தில் - நீதி முதலியவற்றைச் சொல்லி (அவற்றால்) அவர்களிருந்த நிலை மாறாதபொழுதென்க: இப்போது 'நின்றது' என்பது - ஒருசொல். ஆதி - முதலில் என்றுமாம். இனி, நீதி முதலியவற்றைச் சொல்லி, (அவர்கள்) நின்ற நிலைமை (நீதிக்கு) மாறாக இராதபோது, கோபங்கொண்டு அவர்கள் பக்கல் ஒன்றுஞ் செய்யாமல் அவர்கள் சொன்ன சொல்லை எனக்குத் தெரிவிக்கக்கடவையென்று கட்டளையிட்டருளினனென உரைத்தல் சிறவாமை யுணர்க.
பி - ம்:—[1]நீதியாக நிகழ்த்துதி,...நிகழ்த்திது. [2]வெகுண்டிடல், வெகுண்டிடேல், வெகுண்டனை. [3]தக்கன. [4]போதியாக வென்றான். (581)

9.—அக்கட்டளையை சிரமேற்கொண்டு இலக்குமணன் செல்லுதல்.

ஆணை சூடி யடிதொழு தாண்டிறை
[1]பாணி யாது படர்வெரின் பாழ்படாத்
தூணி [2]தூக்கித் [3]தொடுசிலை தொட்டருஞ்
சேணி னீங்கினன் [4]சிந்தையுள் நீங்கலான்.

(இ - ள்.) (இலக்குமணன்), ஆணை சூடி - (அந்தத் திருத்தமையனாது) கட்டளையைச் சிரமேற்கொண்டு,—அடிதொழுது - (அப்பெருமானது) திருவடிகளை வணங்கி, ஆண்டு இறை பாணியாது - அவ்விடத்திற் சிறிதுபொழுதும் தாமதித்து நிற்காமல்,—படர் வெரின் - பரந்த (தனது) முதுகில், பாழ்படா தூணி தூக்கி - (அம்புகள்) பற்றறுதலில்லாத அம்பறாத்தூணியை [அக்ஷயதூணீரத்தை]க் கட்டிக்கொண்டு, தொடு சிலை தொட்டு - அம்பு தொடுத்தலிற் சிறந்த வில்லைக் கையிற் பிடித்து, சிந்தையுள் நீங்கலான் - மனத்தில் (இராமபிரானை) விட்டுப் பிரியாதவனாய் [இராமபிரானைத் தியானித்துக்கொண்டே], அருஞ் சேணில் நீங்கினன் - செல்லுதற்கு அரிய நீண்ட வழியிற் செல்லலானான்; (எ - று.)

இறை - காலநுட்பம். பாணித்தல் - பொழுது நீட்டித்தல். முதுகு பரந்திருத்தல், உத்தமவிலக்கணம். வில்லையேந்தித் தூணியைப்பூட்டி யுத்த சந்நத்தன்போலச் சென்றது, அச்சமுறுத்திக் காரியத்தைச்சாதித்துக்கொள்ளுதற்கு என்னலாம்: இனி தற்காத்துக்கொள்ளுதற்காக முன்ஜாக்கிரதையாய்க் கொண்டது என்பாருமுளர். ஈற்றடியில் முரண்தொடை காண்க. பெருமாளிடம் இளைய பெருமாளுக்கு உள்ள பக்திவிசேஷம், இச்செய்யுளில் வெளியாம்.

உண்மையான பக்தியுடையார் இறைவனை எப்பொழுதும் தியானிக்கு மியல்புபற்றி, 'சிந்தையுள் நீங்கலான் சேணில் நீங்கினன்' என்றார். ஏதேனுமொருகாரியநிமித்தமாய்ச் செல்லும் பொழுது கடவுளின் தியானத்தோடு செல்லுதல் அடியா ரியல்பென்பதும், அவர்கட்கு அது காரியசித்திக்கு மூலமா மென்பதும் கருதத்தக்கன. வெரிந், வெரின் என இருவகையாகவும் எழுதுவர். இனி, 'சிந்தையுள் நீங்கலான்' என்பதற்கு-இராமபிரானது மனத்தினின்றுநீங்காத அன்புடைத்தம்பி என்று உரைப்பினும் இழுக்காது. சுக்கிரீவ மன்னன் தவணைக்காலம்வந்தும் வாராமையால், இராமபிரான், எளிமையுடனே 'அந்தச்சுக்கிரீவன் நாம் செய்த உதவியை யெண்ணவில்லை: நல்லொழுக்கத்தில் நிற்கின்றிலன்: இனி, வானரவரசச் செல்வத்தை நுகரான்' என்று இவ்வாறுகச்சொல்லினுகை, 'இலக்குமணன் 'உள்ளத்தைதக்கவர்ந்து எழும் சினத்தை அடக்கமாட்டுகின்றிலேன்; "நிஹந்மி ஸுக்ரீவம் அஸத்யம்அத்ய [மெய்ம்மையற்ற சுக்கிரீவனை இப்போதே கொன்றிடுகின்றேன்]; அங்கதனை அரசனுக்குகின்றேன்" என்று இங்ஙன் வெகுண்டுகிளர்ந்தெழுந்தானுகை, பலவீரஹந்தாவான இராமபிரான் நன்னராராய்ந்து 'இலக்குவனே! நல்லொழுக்கமுள்ள உன்னால் இந்தச்சீற்றம் கொள்ளத்தக்கதன்று: சினத்தையடக்கியாள்பவனே சிறந்த புருடன்: முன்புசெய்துள்ள நட்பைக் கைப்பற்றுக: தவணைக்காலங்கடந்திட்ட அந்தச் சுக்கிரீவனிடத்துக் கடுஞ்சொற்கூறாது இன்சொல்லே கூறுக' என்று மொழிந்தானுகை, இலக்குவன் இராமபிரானது மொழியை மனத்துக்கொண்டு சென்றான் என்றும்முதனூலிற் கூறியதற்கு ஏற்ப, 'சேணினீங்கினன் சிந்தையுணீக்கலான்' என்ற பாடத்தைக்கொண்டு உரைத்தல் சிறக்கும். பி - ம்:—[1]பாணியாதுபடர்வோன் பகைகெட or பழிபட. [2]பூட்டி. [3]கொடுஞ்சிலை. [4]சிந்தையினீங்கலான். (582)

10.—இலக்குமணன் வாநரங்கள் செல்லும்வழியாற் செல்லாது வேறுவழியாற் செல்லுதல்.

மாறு [1]நின்ற [2]மரனு மலைகளும்
நீறு சென்று [3]நெடுநெறி நீங்கிட
[4]வேறு சென்றனன் [5]மென்மைய னாயினும்
ஆறு [6]சென்றில னாணையி னேகுவான்.

(இ - ள்.) ஆணையின் ஏகுவான் - (ஸ்ரீராமனது) கட்டளைப்படி செல்பவனான அவ்விலக்குமணன்,—மென்மையன் ஆயின்உம் - மெல்லிய இயல்பையுடையவனாயினும், ஆறு சென்றிலன் - (சுக்கிரீவன் முதலியோர் முன்பு தங்களை ருசியமூககிரியினின்று கிட்கிந்தாபுரிக்கு அழைத்துக்கொண்டுபோன) வழியாற் செல்லாமல், மாறு நின்ற மரன்உம் மலைகள்உம் நீறு சென்று நெடுநெறிநீங்கிட வேறு சென்றனன் - குறுக்கேநின்ற மரங்களும் மலைகளும் (தான்செல்லும் விசையாற்) பொடியாகி நெடுந்தூரம் சென்றுவிடும்படி புதியதொரு வழியைக் கற்பித்துக்கொண்டு சென்றான்; (எ - று.)

இலக்குமணன் சுகுமாரமான சரீரமுடையவனாதலால் இது வரையிற் பலர் சென்று அடிப்பட்ட வழியால் எளிதில் இனிது செல்லத்தக்கவனாயினும், சுக்கிரீவன் முதலியோரைத் தம்பக்கல் மாறுபாடுகொண்டவராகக் கருதினனாதலால், அவர்கள் தமது ஊர்க்கு வழக்கமாக அமைத்துள்ள வழியில் ஏதேனும் வஞ்சனைத் தீங்கு புரிந்து வைத்திருப்பரோ என்னுஞ் சங்கை கொண்டவனாய் அவ்வழியாற் செல்லாது வேருகப் புதியதொருவழி கற்பித்துக் கொண்டு செல்லலாயினனென்னலாம். முதலிரண்டடியிற் குறித்தது, மகா பலசாலியான அவ்விளையபெருமாள் செல்லும் விசையினாலாகிய செயல். மாறுகின்ற - தனது செலவிற்குத் தடையாய் நின்ற என்றபடி. தனது தலைவனது கட்டளையை மேற்கொண்டு செல்பவனாதலால், அதற்கு ஏற்றபடி செல்லும்போது தனக்கு உண்டாகுஞ் சிரமத்தைச் சிறிதும் பார்த்திலனென்பது விளங்க, 'ஆணையினேகுவான்' என்றார்; மெய்வருத்தம்பாராது கருமமே கண்ணாகச் செல்லுதல், உத்தமதூதனிலக்கணம். 'ஆணையினேகுவான்' என்றது - இராமபிரானது கட்டளைதானே ஓர் ஆண் வடிவமெடுத்துச் சென்றாற்போல்பவனென்றவாறுமாம். [5]மெய்ம்மையினேங்கிடும், ஆறுசென்றவனாணையினேகுவான்' என்ற பாடத்திற்கு - சத்தியத்தாற் சிறந்த தருமமார்க்கத்திலே செல்பவனான இராமபிரானது கட்டளையின்படி செல்லும் இலக்குமணனென்று பொருளாம். பி - ம்:—[1]சென்ற. [2]மலைகளுமர்மரம். [3]நெடுநெறியோங்கிட. [4]வேறுசென்றனமெய்ம்மையினீங்கியே,......மேன்மையனாயினும். [6]சென்றவன். (583)

11.—இலக்குமணனது அடிவைப்புக்களால் மலைகள் அழுந்துதல்.

விண்ணுறத்தொடர் மேருவின் சீர்வரை
மண்ணுறப்புக் கழுந்தின மாதிரம்
கண்ணுறத் [1]தெரி வுற்றது கட்செவி
[2]ஒண்ணிறக்கழற் சேவடி யூன்றலால்.

(இ - ள்.) ஒள் நிறம் கழல் சே அடி ஊன்றலால் - ஒள்ளிய நிறமுள்ள வீரக்கழலையணிந்த சிவந்த (இலக்குமணனது) பாதங்கள் (அவன் செல்லும்போது) அழுந்துதலால்,—விண் உற தொடர் மேருவின் சீர் வரை - மேலுலகத்தையளாவவளர்ந்துள்ள மேருமலையினது (உயரத்தின்) எல்லையளவாக[மேருமலையின் உயரம் எவ்வளவோ அவ்வளவுதூரந் தாழ என்றபடி], மாதிரம் - மலைகள், மண் உற புக்கு அழுந்தின - தரையிலேபொருந்த உட்சென்று அழுந்தின; (அப்பொழுது), கட்செவி கண் உற தெரிவுற்றது - (பூமியின் கீழிருந்து அதனைத் தாங்குகின்ற) ஆதிசேஷன் கண்களுக்குப் புலனாயிற்று; (எ - று.)

உயர்வுநவிற்சியணி. 'மகாமேருகிரி எண்பத்திநாலாயிரம் யோஜனை யுயரமுள்ளது' என்று புராணம் கூறும். 'கட்செவி'

என்றது-இங்கே, சிறப்பினால் நாகராசனான ஆதிசேஷனைக்குறித்தது. பொதுப்பட நாகங்களை யுணர்த்தினதாகக்கொண்டு பூமியின் கீழுள்ள நாகங்கள் கட்புலனாயின என்றலுமாம். இப்பொருளில், 'தெரிவுற்றது கட்செவி' என்றது, சாதியொருமைபற்றி யென்க. [2]'உண்ணிறம்' என்ற பாடத்திற்கு - நிறம்உண் என மாறி, நிறங்கொண்ட என்று பொருளாம். பி - ம்:—[1] திரிவுற்றது. (584)

12.—இலக்குமணனது வேகம்.

வெம்பு கானிடைப் போகின்ற வேகத்தால்
[1]உம்பர் தோயு மராமரத் தூடுசெல்
[2] அம்பு போன்றன னன்றடல் வாலிதன்
தம்பி மேற்செலு [3]மானவன் தம்பியே.

(இ - ள்.) அன்று - அப்பொழுது, அடல் வாலிதன் தம்பிமேல் செலும் - வலிமையையுடைய வாலியின் தம்பியான சுக்கிரீவனை நோக்கிச் செல்லுகின்ற, மானவன் தம்பி - மநுகுலதிலகனான ஸ்ரீராமபிரானது திருத்தம்பியாகிய இலக்குமணன்,—வெம்பு கானிடை - வெப்பங்கொண்ட காட்டிலே, போகின்ற - செல்கின்ற, வேகத்தால் - விசையினால், உம்பர் தோயும் மராமரத்து ஊடுசெல் - மேலுலகத்தையளாவி வளர்ந்திருந்த (ஏழு) மராமரங்களினிடையே துளைத்துச்சென்ற, அம்பு - (இராம) பாணத்தை, போன்றனன் - போன்றான்; (எ - று.)

உவமையணி. இராமபாணம் மராமரங்களேழினையும் தான் செல்லும் விசையால் எளிதில் துளைத்து அப்பாற்சென்றதுபோல இலக்குமணன் தான் செல்லுங் காட்டுவழியிலுள்ள மரங்களையெல்லாம் செல்லும் விசையால் அழித்துத்தள்ளிக்கொண்டு செல்லுதல்பற்றி, உவமை கூறினர். 'உம்பர்தோயுமராமரம்' என்றது, உயர்வுநவிற்சி. பி - ம்:—[1] உம்பர்தோய. [2] அம்புபோன்றனனலடல், அம்பிற்சென்றனனன்று, அம்பிற்சென்றனனலடல். [3] மன்னவன். (585)

13.—இதுவும் அது.

மாடு வென்றியோர் மாதிர [1]யானையின்
[2]சேடு சென்று [3]கெடிலொரு திக்கின்மா
நாடு கின்றது நண்ணிய கால்பிடித்து
ஓடு கின்றது மொத்துள னாயினன்.

(இ - ள்.) மாடு - பக்கத்திலுள்ள, வென்றி - வெற்றியையுடைய, ஓர் மாதிரம் யானையின் - ஒரு திசையானையினது, சேடு-இளங்கன்று, சென்று - விலகிச்சென்று, கெடில் - (மீண்டுவருதலின்றிக்) காணமற் போய்விட்டால், நாடுகின்றது - (அதனைத்) தேடுவதாய், நண்ணிய கால் பிடித்து - (அந்த யானைக்குட்டியினது) பொருந்திய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, ஓடுகின்றது - (அது சென்றவிடத்தைக்

குறித்து) விரைந்துசெல்வதான, ஒரு திக்கின் மா உம் - வேறொரு திக்கஜத்தையும், ஒத்து உளன் ஆயினன் - போன்றவனானன், (அவ்விலக்குமணன்); (எ - று.)

பக்கத்தில் நின்ற ஒரு திக்கஜத்தின் குட்டியான யானைக்கன்று அதனை விட்டு விலகிச்சென்று மீண்டுவரவேண்டிய சமயத்தில் வராது காணாமற்போனவிடத்து அத்திக்கஜத்தோடு நட்புக் கொண்ட மற்றொரு திக்கஜம் அந்த யானைக்குட்டியைத்தேடுவதாய் அது கால்வைத்துச்சென்ற அடிச்சுவடுகளைப் பற்றி அது சென்ற விடத்தைக் குறித்து விரைந்துசென்றாற் போன்றனன் இலக்குமணன் என்பதாம்; உவமையணி. ஸ்ரீராமபிரானாற் புதல்வனைப் போல் அபிமானிக்கப்பெற்ற சுக்கிரீவன் அவ்வருமையை மனத்திற் கொள்ளாதவனாய்த் தான் சென்ற இடத்தினின்று வரவேண்டிய சமயத்தில் வந்திலனாக, இராமபிரானது கருத்திற்கு ஏற்ப இளைய பெருமாள் அச்சுக்கிரீவனைக் குறித்து அவனிருக்கின்ற இடத்தை நோக்கிக் கவனமாய் வழியுணர்ந்துசெல்லுதல் கருதத்தக்கது. சேடு - இளமை: இளங்கன்றிற்குப் பண்பாகுபெயர். கால் - காற்சுவட்டிற்கு இலக்கணை. பூமிபாரத்தைத் தாங்குதல்பற்றி, இராமலக்ஷ்மணர்க்குத் திக்கஜங்கள் ஒப்பாம். பி - ம்:—[1]யானைமுன். [2]சேடுதுன்று. [3]செடில், செலாது. (586)

14,—இலக்குமணன் தாம் வசித்திருந்த கிரியினின்று கிட்கிந்தைமலையை விரைவில் அடைதல்.

உருக்கொ ளொண்கிரி யொன்றினின் றொன்றினைப்
பொருக்க வெய்தினன் [1]பொன்னொளிர் மேனியான்
அருக்கன் மாவுத யத்தினின் றத்தமாம்
பருப்ப தத்தினை யெய்திய [2]பண்பினால்.

(இ - ள்.) அருக்கன் - சூரியன், மா உதயத்தினின்று - பெரிய உதயகிரியிலிருந்து, அத்தம் ஆம் பருப்பதத்தினை எய்திய பண்பினால் - அத்தமனகிரியை யடைந்தவிதமாக [அடைந்ததுபோல வென்றபடி],—பொன் ஒளிர் மேனியான் - பொன்னிறமாய் விளங்குகின்ற திருமேனியை யுடையவனான இலக்குமணன், உரு கொள் ஒள் கிரி ஒன்றினின்று - பெருவடிவுகொண்ட ஒள்ளிய ஒரு மலையினின்று [மாலியவானிலிருந்து], ஒன்றினை - மற்றொருமலையை [கிட்கிந்தமலையை]. பொருக்க எய்தினன் - விரைவிலடைந்தான்; (எ - று.)

உவமையணி. இடையே தங்குதலும் தட்டுத்தடங்கலும் இன்றி விரைந்து சென்று சேர்ந்தமை, இவ்வுவமையால் விளங்கும். இலக்குமணன் பொன்னிறமுடையனாதலை, ஆரணியகாண்டத்தில் "சுவண வண்ணன்" என்றதனாலும் உணர்க. சூரியனுவமை, நிறத்திற்கும், திருமேனி யொளிக்கும். உதயம் - சூரியன் முதலியகிரகங்கள் உதிக்குமிடமாய்க் கிழக்கிலுள்ளதொரு மலை: அவைகள் அஸ்தமிக்குமிடமாய் மேற்கிலுள்ள மலை, அத்தம். பி - ம்:—[1]பொன்னொளி. [2]பண்பினன், பண்புபோல். (587)

15.—இதுவும் அது.

தன்றுணைத் தமையன் தனி வாளியின்
சென்று சேணுயர் கிட்கிந்தை சேர்ந்தவன்
குன்றி [1]னின்றொரு குன்றினிற் குப்புறும்
பொன்று ளங்குளைச் சீயமும் [2]போன்றனன்.

(இ-ள்.) தன் துணை தமையன் தனி வாளியின் சென்று - தனக்கு உற்ற துணைவனும் தமையனுமான இராமபிரானது ஒப்பற்ற அம்புபோல(த் தடையின்றி விரைந்து) போய், சேண் உயர் கிட்கிந்தை சேர்ந்தவன் - மிகவுயர்ந்த கிட்கிந்த மலையை யடைந்தவனான அவ் விலக்குமணன்,—குன்றினின்று ஒரு குன்றினில் குப்புறும் - ஒரு மலையினின்று மற்றொரு மலையில் தாவிப்பாய்கின்ற, பொன் துளங்கு உளை சீயம்உம் - பொன்னிறமாய் விளங்கும் பிடரிமயிர்களையுடையதோர் ஆண்சிங்கத்தையும், போன்றனன் - போன்றான்; (எ - று.)

உவமையணி. பலபராக்கிரமங்களிலும் கம்பீரமானநடையிலும் தோற்றத்திலும் சிங்கம், இலக்குமணனுக்கு உவமையாகும். கீழ் 12-ஆஞ் செய்யுளில் பெருமரங்கள் பலவற்றை எளிதில் அழித்து அப்பாற்செல்லுதலில் இலக்குமணனுக்கு இராமபாணத்தை உவமை கூறியவர், இங்குத் தட்டுத்தடங்கலின்றிக் குறித்தவிடத்திற்கு விரைந்து சென்று சேர்தலில் இலக்குமணனுக்கு இராமபாணத்தை உவமை கூறினர். அசேதநமாகிய அம்புபோல இலக்குமணன் தன்னைச்செலுத்தின தலைவனுக்குப் பரதந்திரனாய் ஒழுகி அவன் செலுத்திய விடத்துச் செல்பவனென்பதும், இராமபாணம் போல இலக்கில் தவறாமல் எளிதிற்சென்று தடையின்றிக் காரியத்தைச் சாதித்து மீள்பவனென்பதும், இவ்வுவமை முகத்தால் தோன்றும்.

குப்புறுதல் - குதித்தல். சேண் உயர் - ஒருபொருட்பன்மொழி. இனி, சேண் உயர் - வானத்தையளாவியுயர்ந்த எனினுமாம். பி-ம்:— [1]ஒன்றினொன்றினை. [2]போன்றுளான். (588)

16.—இலக்குமணன் வந்ததைக்கண்டு வாநரங்கள் அஞ்சியோடி அங்கதனுக்குச் சொல்லுதல்.

கண்ட [1]வானரர் காலனைக் [2]கண்டபோல்
மண்டி [3]யோடினர் வாலி [4]மகற்கமர்
கொண்ட சீற்றத் [5]திளையோன் குறுகினன்
சண்ட [6]வேகத் தினனென்று சாற்றலும்.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ-ள்.) கண்ட - (இவ்வாறு கோபத்தோடு இலக்குமணன் வர அதனைப்) பார்த்த, வானரர்—, காலனை கண்டபோல் - யமனைக் கண்டதுபோல, (மிக்க அச்சங்கொண்டு), வாலிமகற்கு - வாலியின்

குமாரனை அங்கதனைநோக்கி, மண்டி ஓடினர் - மிகுதியாய் ஓடிய வராய், 'அமர் கொண்ட சீற்றத்து - சற்று அடங்கியும் கொண்டு முள்ள சீற்றத்துடனே, இளையோன் - இராமன் தம்பியான இலக்கு மணன், சண்ட வேகத்தினல் - உக்கிரமான வேகத்தோடு, குறுகி ஞன் - வந்துசேர்ந்துள்ளான்', என்று சாற்றலும்-என்று சொன்ன வளவில், (எ - று.)—'அன்னதோன்றலும் எய்தினன்' என அடுத்த கவியோடு தொடரும்.

இலக்குமணனைக் காணும்போதே பெருஞ்சீற்றத்தைக் கொண் டுள்ளானென்றும் ஆனல்அதனை அடக்கிக்கொண்டுள்ளானென் றும் புலனுதலால், வானரர், 'அமர்கொண்ட சீற்றத்திளையோன்' என்றனர். மண்டியோடுதல் - ஒன்றன்மேல் ஒன்ருக நெருக்கமுற்று ஓடுதலுமாம். பி - ம்:—[1]வானரம். [2]கண்டென, காண்டல்போல். [3]ஓடின. [4]மகற்கையா. [5]இளவல். [6]வேகத்தினன். (589)

17.—அங்கதன் வந்து இலக்குமணனது குறிப்பை யுணர்ந்து சுக்கிரீவனிடஞ் செல்லுதல்.

அன்ன தோன்றலு [1]மாண்டொழி லான்வரவு
இன்ன தென்றறி வான்[2]மருங் கெய்தினன்
மன்னன் மைந்தன் மனக்கருத் துட்கொளாப்
பொன்னின் வார்கழற் ருதையிற் போயினன்.

(இ - ள்.) ஆண் தொழிலான் - ஆண்மைக்குணத்திற்கு ஏற்ற செயலையுடையவனை இலக்குமணன், வரவு - வந்தநோக்கம், இன் னது என்று அறிவான் - இன்னதென்று அறிதற் பொருட்டு, அன்ன தோன்றல்உம் - அந்த அங்கதகுமாரனும், மருங்கு எய்தி ஞன் - இலக்குமணனருகில்வந்து, மன்னன் மைந்தன் மனம் கருத்து - தசரத சக்கரவர்த்தியின் குமாரனை அவ்விலக்குமணனு டைய மனத்தின் கருத்தை, உட்கொளா - (அவனது முகக்குறிப் பைக்கொண்டு) உணர்ந்து, பொன்னின் வார் கழல் தாதை - பொன்னினலாகிய நீண்ட வீரக்கழலையுடைய (தனது) சிறிய தந்தையான சுக்கிரீவனது, இல் - அரண்மனைக்கு, போயினன் - சென்ருன்; (எ - று.)

''அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம், கடுத்தது காட்டும் முகம்'' ஆதலால், இலக்குமணனது மனக்கருத்தை அவன் முகக்குறிப்பைக்கொண்டு அங்கதன் அறிந்து கொண் டனனென்க. மேல் 24 - ஆங் கவியில் ''சிந்தையுண் ணெடுஞ் சீற்றந் திருமுகந்தந்தளிப்ப'' என்பது காண்க. 'சிறுவ! பகை வரைப் பறந்தோடச் செய்யும் இராமன் தம்பி இலட்சுமணன் இதோ வாசலில் நின்றுகொண்டிருக்கிருன் என்று சொல்,' எனக்கூறியதாக வான்மீகத்தில் வந்துள்ளது. தாதையில் என்று ஒருசொல்லாக எடுத்து, சிறிய தந்தையினிடத்தில் என்ற லுமாம். அங்கதன் தனது சிறிய தந்தையைத் தந்தையாகவே பாவிப்பது தோன்ற, 'தாதை' என்றே கூறினர். பி - ம்:—[2]மருங்

கெய்திலான். [1] ஆண்டொழிலான் வரவின்னது என்பதை 'ஆண்டொழிலானவாவின்னது' என்று படிப்பர் ஒரு சாரார். (590)

18.—இதுமுதல் ஏழுகவிகள் - குளகம்: அப்பொழுது அங்குச் சுக்கிரீவனிருந்த நிலைமையைக் கூறுகிறார்.

நளனி யற்றிய நாயகக் கோயிலுள்
தள [1] மலர்த்தகைப் பள்ளியிற் [2] றாழ்குழல்
இள [3] முலைச்சிய ரேந்தடி தைவர
விளைது யிற்கு விருந்து விரும்புவான்.

(இ - ள்.) நளன் இயற்றிய நாயகம் கோயிலுள் - நளனென்னும் வாநரவீரனால் நிருமிக்கப்பட்ட சிறந்த அரண்மனையினுள்ளே,— தளம் மலர் தகை பள்ளியில் - இதழ்கள் நிறைந்த மலர்களைப் பரப்பியமைக்கப்பட்ட அழகிய படுக்கையிலே, தாழ் குழல் இள முலைச்சியர் - தொங்குகின்ற கூந்தலையும் இளமையான தனங்களையுமுடையவர்களாகிய மகளிர், ஏந்து அடி - சிறந்த (தனது) கால்களை, தைவர - தடவிப்பிடிக்க, விளை - உண்டாகின்ற, துயிற்கு - தூக்கத்திற்கு, விருந்து - (தான்) விருந்தினனாதலை, விரும்புவான் - விரும்புபவனும்,—(எ - று.)

புதிதாக அரசாட்சியைப்பெற்று அரண்மனையின் அந்தப்புரத்து உரிய மகளிர் பலர் தனது அடிகளைவருட இனிது துயிலுந் தூக்கத்தை விருப்பத்தோடு புதிதாகஉட்கொண்டு அனுபவிப்பவனென்று சுக்கிரீவனது தன்மையைக் கூறியவாறு. நளன் - தேவசிற்பியான விசுவகர்மாவின் குமாரனாய்ப் பிறந்த வாநரன். அவன் தனது தந்தையினமிசத்திற்கு ஏற்றபடி சிற்பசாத்திரத் தேர்ச்சியுடையவனாய் அரண்மனை நிருமித்தமை பற்றி, 'நளனியற்றிய நாயகக்கோயில்" என்றார். (பின்பு கடல்கடக்க அணைகட்டுபவனும் இவனே.) 'கோயிலுள்' என்றதனால், அரண்மனையினுள்ளே யிருக்கின்ற அந்தப்புரத்திலே யென்றதாம். கோயில்உள் தளம் என்று எடுத்து, அரண்மனையினகத்து உபரிகையிலே யென்று உரைத்தலுமொன்று. ஏந்து அடி - மடியில் வைத்துக்கொண்டுள்ள பாதங்கள் என்றுமாம். பி - ம்:—[1] மலர்த்தகப்பள்ளியில். [2] தார். [3] நகைச்சியர். (591)

19. [1] தெள்ளி யோருத வப்பெருஞ் செல்வமாம்
கள்ளி னாலதி கங்களித் தான்கதிர்ப்
புள்ளி [2] மாநெடும் பொன்வரை புக்கதோர்
வெள்ளி மால்வரை யென்ன விளங்குவான்.

(இ - ள்.) தெள்ளியோர் உதவு - தெளிந்த அறிவுடையவரான இராமலக்குமணரால் அளிக்கப்பட்ட, அ பெருஞ் செல்வம் ஆம் - அந்தப் பெரிய அரசாட்சிச்செல்வமாகிய, கள்ளினால் - கள்ளையுட்கொண்டதனால், அதிகம் களித்தான் - மிகுதியாகக்களித்தவனும்,—

கதிர் புள்ளி - ஒளிகளின் தொகுதியையுடைய, மா நெடு-மிகப்பெரிய, பொன் வரை - பொன்மயமான மலையில், புக்கது - புகுந்து தங்குவ தான, ஓர் வெள்ளி மால் வரை என்ன - பெரியதொரு வெள்ளி மலை போல, விளங்குவான் - விளங்குபவனும்,—(எ - று.)

களித்தல் - மதிமயங்குதல். களிப்பை விளைத்தல்பற்றி, பெருஞ் செல்வத்தை 'கள்' என்றார். இங்ஙனம் இச்சுக்கிரீவன் செய்வதறி யாது களித்தற்குக்காரணமான பெருஞ்செல்வந்தான் இவன் தானு கத் தனது ஆற்றலாற் பெற்றதன்றி, இராமலக்குமணர் அளித்த பிச்சையாகப் பெற்றதாமென்னும்உண்மையை, 'தெள்ளியோருதவு' என்றதனால் விளக்கினர். 'செல்வமாம்கள்' என்றது, செல்வத்தா லாகுஞ் செருக்கு என்றவாறும்; தமதமென்ப. வெண்ணிறமுள்ள கம்பீரமான வடிவத்தையுடைய சுக்கிரீவனுக்கு வெள்ளி மலையை யும், பொன்மயமான கட்டிலுக்கு அல்லது அரண்மனைக்குப் பொன் மலையையும் ஒப்பாகக்கொள்க. பெருஞ்செல்வமாங் கள்ளினால் அதி கங்களித்தான் - உருவகம். பொன்வரைபுக்கதோர் வெள்ளிமால்வரை யென்ன விளங்குவான் - இல்பொருளுவமை. புள்ளி - சிறப்புமாம். பி - ம்:—[1]தெள்ளியோரர்தவன், தெள்ளியோருகவா. [2]மானெடுங். இச்செய்யுள் சிலபிரதிகளிற் காணப்படவில்லை யென்ப. (592)

20\. [1]சிந்து வாரந் திருநறை [2]தேக்ககில்
[3]சந்த மாமயிற் சாயலர் தாழ்குழல்
கந்த மாமலர்க் [4]காடுக டாவிய
மந்த மாருதம் வந்துற வைகுவான்.

(இ - ள்.) சிந்துவாரம் - சிந்துவாரமரம், திருநறை - சுகந்தக் கொடி, தேக்கு - தேக்கமரம், அகில் - அகில்மரம், சந்தம் - சந்தன மரம், மா மயில் சாயலர் தாழ்குழல் - சிறந்த மயில்போலுஞ் சாயலை யுடையவரான மகளிரது தொங்குகின்ற கூந்தல், கந்தம் மா மலர் காடுகள்-(அக்கூந்தல்களிற்சூடிய) நறுமணமுள்ள சிறந்த மலர்களின் தொகுதி (என்னும் இவற்றில்), தாவிய - பரிசித்த, மந்த மாருதம் - இளங்காற்று, வந்து உற - வந்து (தன்மேல்) வீச, வைகுவான் - இனிது தங்குபவனும்,—(எ - று.)

சிந்துவாரம் முதலியவற்றிற் பரிசித்து வருதலால் நறுமணங் கொண்டதான இளங்காற்றுத் தன்மேல் வீச இனிதுதங்குபவ னென்க. ஸிந்துவாரம் - வடசொல்; வெண்ணொச்சியென்ப. திரு நறை - நல்லமணத்தையுடையதெனப்பொருள்பட்டுச் சுகந்த மென் னுங்கொடியை யுணர்த்திற்று; அன்மொழித்தொகை: முன்னும் பின்னும் சிந்துவாரம் தேக்கு என மரங்கள் கூறப்பட்டிருத்தலால் 'திருநறை' என்பதும் ஒருமரமாயிருக்கவேணுமென்பது, ஒருசாரார் கொள்கை. [1]சிந்துவாரத்தருநறை என்ற பாடத்திற்கு, சிந்துவாரத் தரு - சிந்துவாரமரமும், நறை - சுகந்தக்கொடியும் என்க. சீவகசிந் தாமணியில் "நறையுநானமுகாறுநறும்புகை" என்றவிடத்து

'நறை - நறைக்கொடி' என்றார், நச்சினார்க்கினியரும். உத்தமசாதி மகளிர் கூந்தல் இயற்கைநறுமணமுடையதாதல்பற்றி, அதனைத் தனியே கூறினர். மலர்க்காடு என்றதை 'தாமரைக்காடு' என்றாற் போலக்கொள்க. இனி சந்தம்மாமலர் - அழகிய நறுமணமுள்ள சிறந்தமலர்களைச்சூடிய, குழற்காடு - கூந்தற்கற்றை யென்றலுமொன்று. காடு கடாவிய என்றும் பிரிக்கலாம். சிந்துவாரமுதல் சந்தனமீருகவுள்ளவை - குறிஞ்சிநிலத்தன. ஈற்றடி - முற்றுமோனை. பி - ம்:—[2]தேக்கினன். [3]தந்தமாமயில். [4]காடுகடாவிடு. (593)

21. தித்தி யாநின்ற செங்கிடை வாய்ச்சியர்
[1]முத்த வாள்நகை முள்ளெயி றூறுதேன்
பித்து மாலும் [2]பிறவும் [3]பெருக்கலான்
மத்த வாரண மென்ன [4]மயங்கினன்.

(இ - ள்.) தித்தியாநின்ற - தித்திக்கின்ற, செம் கிடை வாய்ச்சியர் - செங்கிடைபோலச் சிவந்த அதரத்தையுடையவர்களான மகளிரின், முத்தம் வாள் நகை முள் எயிறு - முத்துப்போல வெண்ணிறமான ஒள்ளிய புன்சிரிப்பைச் செய்கின்ற கூரியபற்களினின்று, ஊறு - சுரக்கின்ற, தேன் - தேன் போலினிய இரசம், பித்துஉம் - பைத்தியத்தையும், மால்உம் - மயக்கத்தையும், பிறஉம் - மற்றும் காமம் மதம் மறதி சோர்வு துயில் முதலிய தமோகுணகாரியங்களையும், பெருக்கலான் - மிகுதிப்படுத்துதலால், மத்தவாரணம் என்ன - மதங்கொண்ட யானைபோல, மயங்கினன் - அறிவழிந்தவனும்,—

அதரபானத்தாலாகிய களிப்பிறலென்பது, முதல் மூன்றடிகளின் தேர்ந்தபொருள். வாய்ச்சியரெயிறூறுதேன் - அதராமிருதம். தித்தியாநின்ற தேன் என இயையும். மகளிரது அதராமிருதத்தை இவன் என்றென்றைக்கும் இனிமைதருவதெனக்கொண்டு மயங்கினமை தோன்ற, முக்காலத்தினுமொத்தியல்பொருளைச் செப்புதற்கு உரிய நிகழ்காலங் கொடுத்து, 'தித்தியாநின்ற தேன்' என்றார். இனி, 'தித்தியாநின்ற' என்றதை வாய்க்கு அடைமொழியாக்கினும் இழுக்காது. தித்தித்தல் - இனியதாதல். [1]முத்தவாண்முகைமுள்ளெயிறு என்ற பாடத்திற்கு-முத்தும், ஒளியுள்ள (முல்லை) அரும்பும் போன்றகூரிய பற்களென்க. தேன் - உவமையாகுபெயர்: பொருளின்பங்களுள் பொருளினாலாகியகளிப்பு இவனைத்தன்வயமிழக்கச் செய்ததைக் கீழ் 16 - ஆஞ் செய்யுளிற் கூறி, இன்பத்தாலாகிய களிப்பு அப்பரவசத் தன்மையை மிகைப்படுத்துதலை இங்குக் கூறுகின்றாராதலால், 'பெருக்கலான்' என்றார்; பெருஞ்செல்வமாங்கள்ளினால் மிகக்களித்ததனா லுண்டான பித்து முதலியவற்றை வாய்ச்சியரெயிறூறுதேன் பெருகச்செய்ததென்க. பிற என்றதில் போகமும் அடங்கும். மத்தவாரணம் - வடமொழித்தொடர். பி-ம்:—[2]மதமும். [3]பயக்கலான். [4]மயங்குவான். (594)

22. [1]மகுட குண்டல மே [2]முதன் மண்டனத்து
உகுநெ டுஞ்சுடர்க் கற்றை யுலாவலால்
பகல வன்சுடர் பாய்[3]பனி மால்வரை
[4]தக[5]ம லர்ந்து பொலிந்து [6]தயங்குவான்.

(இ - ள்.) மகுட குண்டலமே முதல் - மகுடமும் குண்டலங்களும் முதலிய, மண்டனத்து - அணிகலத்திநின்று, உகும் - வீசுகின்ற, நெடுஞ் சுடர் கற்றை - மிகுதியான ஒளிகளின் தொகுதி, உலாவலால்- (தனது வெண்ணிறமான உடம்பு முழுவதிலும்) பரவுதலால், பகலவன் சுடர் பாய் மால் பனி வரை தக - சூரியனது கிரணம் பரவப் பெற்ற பெரிய பனிமயமான இமயமலையை யொப்ப, மலர்ந்து பொலிந்து தயங்குவான் - மிகவும் அதிகமாக விளங்குபவனுமாய்.— (எ - று.)—'கிடந்தனன்' என அடுத்தகவியோடு முடியும்.

உவமையணி. மண்டனம் - அலங்காரம்: அணிகலனென்ற பொருளில் வந்தது. பனிவரை - ஹிமகிரி. தக - உவமவாசகம். மலர்ந்து பொலிந்து தயங்குவான் - ஒருபொருட்பன்மொழிகள். பி - ம்:—[1]மகுட or மகரகுண்டலமேய். [2]முகமண்டலத்து. [3]பணி. [4]தகை. [5]மலர்ந்ததுபோலத். [6]தயங்கவே. (595)

23.—அங்கதன் சுக்கிரீவனை நோக்கிச் சொல்லத் தொடங்குதல்.

கிடந்த னன்கிடந் தானைக் கிடைத்திரு
தடங்கை கூப்பினன் றாரை[1]மின் றாட்டந்த
மடங்கல் [2]வீர[3]னன் மாற்றம் விளம்புவான்
தொடங்கி னானவ னைத்துயி [4]னீக்குவான்.

(இ - ள்.) கிடந்தனன் - (சுக்கிரீவன்) படுத்திருந்தான்: கிடந்தானை - (அங்ஙனம்) படுத்திருந்தவனை அவனை, தாரை மின்னாள் தந்த மடங்கல் வீரன் - தாரையென்ற மின்னலைப்போன்ற பேரொளியுள்ளவள் பெற்ற ஆண்சிங்கம்போன்றவீரனான அங்கதன், கிடைத்து - சமீபித்து, இரு தட கை கூப்பினன் - (தனது) பெரிய கைகளிரண்டையுங் குவித்து அஞ்சலிசெய்தவண்ணமாய், அவனை துயில் நீக்குவான் - அச்சுக்கிரீவனைத் தூக்கத்திநின்று எழுப்புபவனாய், நல் மாற்றம் விளம்புவான் தொடங்கினான் - இதமான வார்த்தையைச் சொல்பவனானான்; (எ - று.)—அதனை, அடுத்த செய்யுளிற் காண்க.

'கிடந்தானை' என்றது, தொடர்ச்சிதோன்றக் கூறிய அநுவாதம். [3]'அம்மாற்றம்' என்ற பாடத்திற்கு - அந்தச்செய்தியை [இலக்குமணன் வந்த செய்தியை] யென்று பொருளாம்; அவனைத் துயில் நீக்குவான் - அவனைத் துயிலையொழிப்பான் என இரண்டு செயப்படுபொருள் வந்தவினை. பி - ம்:—[1]முன்னாள். [2]அன்னவன், அன்னதன். [4]நீக்கினான்.

(18) கோயிலுள், பள்ளியில், விரும்புவானும், (19) களித்தானும், விளங்குவானும், (20) வைகுவானும், (21) மயங்கினனும், (22) தயங்குவானுமாய் (23) (சுக்கிரீவன்) கிடந்தனன் என்று குளகச்செய்யுள்கட்கு முடிபு காண்க. இனி, (18) கோயிலுள், (19) கதிர்ப்புள்ளி...... விளங்குவானும், (22) தயங்குவானுமாகிய சுக்கிரீவன், (19) தெள்ளியோர்......களித்தானாகி, (18) தாழ்குழல்......விரும்புவானாய், தளமலர்த்தகைப்பள்ளியில், (20) வைகுவானாய், (21) மயங்கினன் [மயங்கி], (23) கிடந்தனன் என்று மாற்றி அந்வயித்துப்பொருளமைத்தலும் ஏற்கும். (596)

24.—அங்கதன் வார்த்தை.

எந்தை கேளவ் விராமற் கிளையவன்
[1]சிந்தை யுண்ணெடுஞ் சீற்றத் திருமுகம்
[2]தந்த ளிப்பத் தடுப்பரும் [3]வேகத்தான்
[4]வந்த னன்னுன் மனக்கருத்தி யாதென்றான்.

(இ - ள்.) 'எந்தை - எனது ஐயனே! கேள் - (யான்சொல்வதைக்) கேட்டருள்வாயாக: அ இராமற்கு இளையவன் - அந்த இராமபிரானுக்குத் தம்பியான இலக்குமணன், சிந்தையுள் நெடுஞ் சீற்றம் திருமுகம் தந்து அளிப்ப - மனத்தினுள்ளே நிகழ்ந்த பெருங்கோபத்தை(த் தனது) முகம் காட்டியருள, தடுப்பு அரும் வேகத்தான் வந்தனன் - (எவராலும்) தடுக்கவொண்ணாத வேகத்தையுடையவனாய் (இங்கு) வந்து சேர்ந்தான்; உன் மனம் கருத்து யாது - (இவ்விஷயத்தில்) உனது திருவுள்ளக்கருத்து யாது?, என்றான் - என்று (சுக்கிரீவனை நோக்கி அங்கதன்) கூறினான்; (எ - று.)

'இராமற்கிளையவன்' என்றது, இயல்பிற் சாந்தகுணமுடையவனென்றற்கு. மனத்தி லடங்கிய கோபத்தைப் பிறருணர்ந்து அபராதக்ஷாமணஞ் செய்து கொண்டு [மன்னிப்பு வேண்டி] உய்ந்திடுமாறு அச்சினத்தை முகம் முன்னின்று காட்டுதல் பேருபகாரமாமென்பது தோன்ற, 'சிந்தையுள் நெடுஞ்சீற்றம் திருமுகம் தந்தளிப்ப' எனலாயிற்று. வேகத்தான் - மூன்றனுருபேற்ற பெயருமாம். பி-ம்:— [1]சிந்தையின். [2]தந்தளிக்கத்தடுக்கரும். [3]வேகத்தின். [4]வந்தனன் மனக்கருத்து. (597)

25.—அச்சொல்லைச் சுக்கிரீவன் சிறிதும் உணராமை.

இனைய மாற்ற மிசைத்தன னென்பதோர்
[1]தினைவி லானெடுஞ் செல்வ [2]நெருக்கவும்
நனை ந றுந்துளி நஞ்சு [3]மயக்கவுந்
தனையு ணர்ந்திலன் மெல்லணை தங்கினான்.

(இ - ள்.) நெடுஞ் செல்வம் நெருக்கவும் - அரசாட்சிப் பெருஞ் செல்வம் வலியப் பரவசப்படுத்தியதனாலும், நறு நனை துளி நஞ்சு மயக்கவும் - மணமுள்ள கள்ளின் தாரையாகிய விடம் மயக்கம் தந்த

தனாலும், தனை உணர்ந்திலன் - தன்னையறியாதவனாய் [மெய்ம் மறந்தவனாய்], (அச்சுக்கிரீவன்), இனைய மாற்றம் இசைத்தனன் என்பது ஓர் நினைவு இலான் - இந்தவார்த்தையை (அங்கதன்) சொன்னானென்னும் ஒருணர்ச்சிதானும் இல்லாமலே, மெல் அணை தங்கினான் - மெத்தென்ற படுக்கையிலே கிடந்தான்; (எ - று.)

மூன்றுமடி - உருவகம். "ஸுநித்ராமதஸம்வீதோ - வாநரோ ந விபுத்தவாந் | பபூவ மதமத்தஸ்ச மதநேநசமோஹித: [அந்தச்சுக்கிரீவன், உறக்கத்தோடு களிப்பும் மிக்கதனாலும் தநமதத்தால் மதங் கொண்டதனாலும் மன்மதவிகாரத்தால் மதி தப்பியதனாலும் (அந்த அங்கதன் வார்த்தையை) உணர்ந்தானில்லை]" என்ற ஸ்ரீராமாயண சுலோகத்தின் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளது, இந்தச் செய்யுள். சுக்கிரீவன் என்ற எழுவாயை வருவிக்காமல், மெல்லணை தங்கினான்என்பதற்கு - சுக்கிரீவனென்று உரைத்து, தனையுணர்ந்திலன் எனப் பயனிலை கொள்ளலும் ஒன்று. தன்னையுண்டவரை அறிவிலராக்குதல்பற்றி, கள் 'நஞ்சு' எனப்பட்டது; "எஞ்ஞான்றும், நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்றார், திருவள்ளுவனாரும். தனை = தன்னை: தொகுத்தல். பி - ம்:—[1]நினைவிலன். [2]நெருக்கலான். [3]மயக்கலான். (598)

26.—பின்பு அங்கதன் அனுமானிடஞ் செல்லுதல்.

[1]ஆத லாலவ்வ ரசிளங் கோளரி
யாது [2]முன்னி யியற்றுவ தின்மையால்
கோதில் சிந்தை யனுமனைக் [3]கூவுவான்
[4]போதன் மேயினான் [5]போதக மேயனான்.

(இ - ள்.) ஆதலால் - புதுச்செல்வச் செருக்கினாலும் கள்ளின் மயக்கத்தாலும் மெய்ம்மறந்து தான் சொன்ன சொல்லையும் கேளாது மெல்லணையிலே சுக்கிரீவன் கிடந்திடவே, போதகம் ஏய் அனான் - யானைக்குட்டிபோன்றவனும், அரசு இளங் கோள் அரி - இளமையான வலிய ஆண்சிங்கம் போன்றவனுமான இளவரசனாகிய அவ்வங்கதன், முன்னி - (தானே) ஆலோசித்து, இயற்றுவது - செய்யத்தக்கது, யாதும் இன்மையால் - எதுவுமில்லாததனால், கோது இல் சிந்தை அனுமனை கூவுவான் போதல் மேயினான் - குற்றமில்லாத மனத்தையுடைய அனுமானை அழைத்தற்காக (அவனிடஞ்) செல்லலானான்; (எ - று.)

காலத்திற்கு ஏற்பச் செய்யவேண்டுவதை ஆராய்ந்து கூறுந் திறமுடையனாதலால், அநுமானிடம் செல்லலாயினனென்க. போதல்மேயினான் - சென்றானென்றபடி. பராக்கிரமம், துணிவு, முன்னும்பின்னும் நோக்குதல் என்னும் இவற்றாற் சிங்கமும், நடை வலிமை காம்பீரியங்களால் யானையும் அங்கதனுக்கு உவமையாம். மத்திமதீபமாக இளமையை 'அரசு' என்பதனோடுங் கூட்டுக.

பி-ம்:—[1] ஆதலோடும். [2] முன்னின்று..., ஆண்டொன்று..., ஒன்றும் முன்னன்றியற்றுவதின்றெனு. [3] கூவவே, கூடியே, கூடுவான். [4] போதமேயினன், போதகமேயினுன். (599)

இதன்பின்

சென்றுமாருதிதன்னிடஞ்சேர்ந்[1]தவண்
நின்றதன்மைகள்யாவுநிகழ்த்தலும்
வென்றிவீரன்வியப்பொடுமேல்வினை
ஒன்றுவானவன்[2] றன்னையுசாவினுன்.

என ஒரு செய்யுள் சில ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றது. பி-ம்:—[1] அவன். [2] தன்மை.

27.—அனுமனை அழைத்துக்கொண்டு அங்கதன் தாரையினிடஞ் செல்லுதல்.

மந்தி ரத்தனி மாருதி தன்னெடும்
வெந்தி றற்படை வீரர் [1]விராய்வர
அந்த ரத்தின்[2]வந் தன்னைதன் கோயிலை
இந்தி ரற்கு மகன்மக னெய்தினுன்.

(இ-ள்.) இந்திரற்கு மகன் மகன் - இந்திரனுடைய குமாரனை வாலியின் மகனாகிய அங்கதன்,—மந்திரம் தனி மாருதிதன்னெடும் - (தக்க) ஆலோசனையைக்கூறிய ஒப்பற்ற வாயுகுமாரனை அனுமானுடன், வெம் திறல் படை வீரர் விராய் வர - உக்கிரமான வலிமையுடைய சேனை வீரர்கள் திரண்டு (தன்னுடன்) வர, அந்தரத்தின் வந்து - (சுக்கிரீவனரண்மனையினின்று) வெளியே வந்து, அன்னைதன் கோயிலை எய்தினுன் - (தனது) தாயான தாரையின் சிறந்த மாளிகையை அடைந்தான்; (எ-று.)

'மந்திரத்தனிமாருதி தன்னெடும் அன்னைதன் கோயிலையெய்தினுன்' என்ற சொற்போக்கினுல், இப்பொழுது இளையபெருமாள் கொண்டுள்ள கோபத்தை ஆற்றத்தக்கவள் தாரையே யென்று அநுமன் ஆலோசனைகூறினனென அறியலாகும். வெந்திறற் படைவீரர் - அனுமான் படைத்தலைவரில் ஒருவனாதலால், அவனது ஆட்சியிலடங்கியவர் இவனுடன் வந்தவரெனக. இந்திரற்கு மகன் மகன் - இந்திரனது பௌத்திரனெனச் சிறப்பையுணர்த்தும். அந்தரத்தின் வந்து என்பதற்கு - துன்பத்தோடு வந்து என்றும், ஆகாயமார்க்கமாகத் தாவி வந்து என்றும், அம் தரத்தின் வந்து என்று பிரித்து-அழகிய தகுதியோடு வந்து என்றும் உரைப்பர். பி-ம்:—[1] விராயவன். [3] வந்தார் or வந்தான் அன்னை கோயிலை. (600)

28.—இப்பொழுது என்செய்யலாமென்று அங்கதன் முதலியோர் வினுவ, தாரை அவர்களைப் பழித்தல்.

எய்தி [1]யென்செயத் தக்கதிங் கென்றலும்
செய்திர் செய்தற் கருநெடுந் [2]தீயன

[3]நொய்தி லன்னவை நீக்கவு[4]நோக்குதிர்
உய்திர் போலு முதவிகொன் றீ[5]ரெனு.

இது முதல் ஆறுகவிகள் - குளகம்.

(இ - ள்.) எய்தி - (அநுமான் முதலானவர்களுடன் அங்கதன் தாரையை) அடைந்து, (நடந்த செயல்களைச் சொல்லி) 'இங்கு - இப்போது, செய தக்கது என் - (யாம்) செய்யத்தக்க செயல்யாது?' என்றலும் - என்று (அவளை) வினவியவளவில்,—(அவள் அவ் வாநரர்களை நோக்கி),—'செய்தற்கு அரு - செய்யத்தகாத, நெடுந் தீயன - பெரிய தீச்செயல்களை, நொய்தில் செய்திர் - எளிதிற் செய் வீர்கள்; அன்னவை - அச்செயல்களாலாகுங் கேடுகளை, (நொய் தில்) நீக்கவும் - எளிதில் நீக்கிக்கொள்ளவும், நோக்குதிர் - வழிபார்ப் பீர்கள்; உதவி கொன்றீர் - செய்ந்நன்றி மறந்தவர்களான நீங்கள், உய்திர்போலும் - தப்பிவாழ்வீர் போலும்!'' எனு - என்று சொல்லி, (எ - று.)—'மீட்டும் ஒன்று விளம்புகின்றாள்' என அடுத்த கவி யோடு தொடரும்.

நெடுந் தீயன - மிகக்கொடியவை. 'நொய்தில்' என்றது மத்திம தீபமாக முன்னும் பின்னும் கூட்டப்பட்டது. நோக்குதல் - உபாயந் தேடுதல், ஆலோசித்தல். "உய்வில்லை செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்பது நீதியாதலால், 'உய்திர்போலும்' என்றாள். 'உய்திர்போலும்' என்றது, உய்யமாட்டீரென்றவாறும். இம்மையில் ஒருகால் தப்பிப்பிழைத்தாலும் மறுமையில் இப்பாவத்தினின்று நீங்கும் வழி யில்லையே யென்பது போதரும். ஆதியிற் சுக்கிரீவன் ஆலோசனையின்றி வாலிபக்கல் எளிதில் தவறுசெய்து உடனே அக்குற்றத்தை நீக்கிக்கொள்ளமுயன்று அங்ஙனமாகாமற் பெருந் தீங்கிற்கு உள்ளாகிப் பிறகு நெடுநாளளவும் அத்தீங்கினின்று தப்ப வழிதேடி வந்ததையும், பிறகு வாலி தானுகவும் அறியாமற் சொல்லவுங் கேளாமற் சுக்கிரீவனோடு போர்க்கு எழுந்து தப்புமா றின்றி இராமபிரானால் மாண்டதையும் மனத்திற்கொண்டு தாரை 'உங்கட்கு இவை இயல்பாயின' என்று வெறுத்துஉரைப்பாள், இங்ஙனங் கூறினாள். இனி, செய்திர் என்பதற்கு - செய்துவிட்டீர் களென்றும், நோக்குதிர் என்பதற்கு வகைபார்க்கின்றீர்களென்றும் பொருள் கொள்ளலுமாம்; அப்பொழுது, செய்திர் என்றதில், 'த்' இறந்தகாலவிடைநிலை. பி - ம்:—[1]மேற்செயத்தக்கதென், என் செயத்தக்கது. [2]தீவினை. [3]நொய்தினன்னவை or நொய்தினங்கிலே. [4]நோக்கிலிர். [5]என்றாள். (601)

29.—இதுமுதல் நான்குகவிகள் – மற்றும் தாரை சொன்னவை.

மீட்டு மொன்று விளம்புகின் றாள்பலட
கூட்டு மென்றுமைக் கொற்றவன் கூறிய
நாட்டி றம்பினுந் நாட்டிறம் பும்மெனக்
கேட்டி லீ ரினிக் [1]காண்டிர் கிடைத்திரால்.

(இ - ள்.) மீட்டும் ஒன்று விளம்புகின்றாள் - மற்றும் ஒரு வார்த்தை சொல்லுகின்றாள்:—'படை கூட்டும் என்று உமை கொற்றவன் கூறிய நாள் திறம்பின்-சேனைகளைச் சேர்த்துக் கொண்டு வருவீர்களென்று உங்களை நோக்கி வெற்றியுள்ளவனான ஸ்ரீராமன் சொல்லிக்குறிப்பிட்ட தவணைநாள் தவறினால், உம் நாள் திறம்பும் - உங்கள் வாழ்நாள் தவறிவிடும்', என - என்று (அடிக்கடி நான்) சொல்லிவரவும், கேட்டிலீர் - (அதனை) ஏற்றுக்கொண்டு (அதற்குத் தக்கபடி) நடவாமற் போய்விட்டீர்கள்; இனிகாண்டிர் - இனி (அதன் பயனை அனுபவத்திற்) பார்ப்பீர்கள்: இடைத்திர் - (குற்றத்தில்) அகப்பட்டுக்கொண்டீர்கள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

கொற்றவன் - வெற்றியுடையவன். அனைவரையும் வென்ற வாலியையும் அழித்தமைபற்றி, தாரை ஸ்ரீராமனை இப்பெயராற் குறித்தாள். உம்நாள் திறம்பும் - நீங்கள் இராமனாற் கொல்லப்படு வீர்களென்றபடி; நும் என்றும் பிரிக்கலாம். இனி, படைகூட்டுங் களென்று உங்களைக் கொற்றவன் கூறியநாளில் (இத்தவணைநாள்) தவறினால் உங்கள் வாழ்நாள் தவறும் என்று அப்பெருமான் தானே சொல்லவும் அதன்படி நடவாது விட்டீர்களென்று உரைப் பாருமுளர்; அங்ஙன் கூறியதாக வந்துள்ளதா என்று கவனிக்க வேணும். பி - ம்:—[1]காண்டிர் இளத்திரால், காண்டல் இடைத் திரால். (602)

30. வாலி யாருயிர் காலனும் வாங்கவில்
கோலி வாலிய செல்வங் கொடுத்தவர்
[1]போலு மாலும் புறத்திருப் பாரிது
[2]சாலு மாலுங்கள் [3]தன்மையி னோர்க்கெலாம்.

(இ - ள்.) வாலி ஆர் உயிர்-வாலியினது அருமையான உயிரை, காலன்உம் வாங்க - யமனும் கவர்ந்திடும்படி, வில் கோலி - (தமது) வில்லைவளைத்து [அம்புதொடுத்து], வாலிய செல்வம் கொடுத்தவர் போலும் - ஒளியுள்ள அரசாட்சிச் செல்வத்தை (உங்கட்கு)க் கொடுத்தருளியவரான இராமபிரானு, உம் புறத்து இருப்பார் - உங்க ளால் உபேட்சிக்கப்படுபவர்? இது - (பேருதவி செய்த பெருமானை) இப்படி உபேட்சிப்பது, உங்கள் தன்மையினோர்க்கு எலாம் சாலும் - உங்கட்குத்தான் அடுக்கும்! (எ - று.)—'ஆல்' இரண்டும் - அசை; உரையசை யென்க.

பேருதவிசெய்தவரும் பேராற்றலுடையவருமானவரை எவ்வ ளவு மேலாகக்கொண்டு கௌரவிக்கவேண்டும்! அவரிடத்திலும் அபசாரப்படலாமோ? என்றாளாம். 'சாலும்' என்றது, எதிர்மறை யிலக்கணையால் சாலாதென்னும் பொருள் தந்தது. புறத்துஇருத் தல் - புறக்கணிக்கப் பட்டிருத்தல். காலனும்என்ற உம்மை - வாலி யால்எளிதில் வெல்லப்பட்டவனான இராவணனால் திக்குவிசயகாலத் தில்வென்று அடக்கப்பட்டவனான யமனும்என அவனது இழிவை

விளக்கும். வாலியசெல்வம் என்றது, வாலியினுடையதான செல்வமென்ற பொருளும் தோன்றநின்றது. உம்புறத்து இருப்பார்போலும் என்பதற்கு - உங்கள் சமயம்பார்த்து உங்கள் கடைவாயிலிற் காத்திருப்பார்போலு மென்று உரைத்தலுமாம். வாலியார்என்று உயர்வுபன்மையாகக் கூறினுளுமாம். பி-ம்:—[1]போலுமானும். [2]சாலுமானுங்கள். [3]தகைமையினோர்க்கெலாம். (603)

31. தேவி நீங்கவத் தேவரிற் [1]சீரியன்
ஆவி [2]நீங்கினன் போலயர் வானது
பாவி யாது பருகுதிர் [3]போலுநுங்
காவி நாண்மலர்க் கண்ணியர் காதனீர்.

(இ - ள்.) தேவி நீங்க - (தன்) மனைவியான சீதை பிரிந்திருக்க, (அத்துன்பத்தினால்), அ தேவரின் சீரியன் - தேவர்களைக் காட்டிலுஞ் சிறப்புடையனான அவ்விராமபிரான், ஆவி நீங்கினன் போல் அயர்வான் - உயிர் நீங்கியவன்போல் மூர்ச்சையடைவான்; அது பாவியாது - அதனை (நீங்கள்) மனத்துக் கொள்ளாமல், நும் நாள் காவி மலர் கண்ணியர் - உங்கட்குஉரிய(மனைவியரான) அன்றலர்ந்த கருங்குவளைமலர்போலுங் கண்களையுடையவராகிய மகளிரது, காதல் நீர் - சேர்க்கை யின்பமாகிய நீரை, பருகுதிர் போலும் - குடித்து மகிழ்கின்றீர்போலும்; (எ - று.)

இது சிறிதும்தகாதன்றே என்பதாம். காதல் நீர் - ஸம்போகரசம் என்பர். இதனைப் பருகுவதாகப் பொதுப்பட வானரர்களை நோக்கிக் கூறினளாயினும், நித்தியப்பிரமசாரியான அநுமான் மாத்திரம் இதற்கு விலக்கானவன். முக்கியமாகத் தலைவனான சுக்கிரீவன் செயலைமனத்துக்கொண்டுகூறினளாம். எவராலும் வெல்லவொண்ணாத வாலியைக் கொன்ற பேராற்றல் பற்றியும், உத்தம விலக்கணங்கள் நிரம்பியிருத்தல் பற்றியும், இராமபிரானை 'தேவரிற்சீரியன்' என்றாள். பருகுதிர் - அனுபவிக்கின்றீர் என்றபடி. பிராணபதமான பிராட்டி நீங்கவே ஆவிநீங்கினன்போல அயர்வானுயின னென்க. பி - ம்:—[1]சீரியோன். [2]நீத்தனன்போல். [3]போலுமால். (604)

32. [1]திறம்பி னீர்மெய் சிதைத்தீ ருதவியை
[2]நிறம்பொ லீ[3]ருங்கள் தீவினை நேர்ந்ததால்
மறஞ்செய் வானுறின் மாளுதிர் மற்றினிப்
புறஞ்செய் தாவதெ னென்கின்ற போதின்வாய்

(இ - ள்.) மெய் திறம்பினீர் - சத்தியந் தவறினீர்கள்; உதவியை சிதைத்தீர் - செய்த நன்றியை மறந்தீர்கள்; உங்கள் தீவினை நேர்ந்ததால் - நீங்கள் செய்துள்ள பாவம் பயனளிக்கவந்ததனால், நிறம் பொலீர் - (இப்படி) குணங்கெட்டவரானீர்கள்; மறம் செய்வான் உறின் மாளுதிர் - (அந்த மகாவீரரை எதிர்த்துப்) போர் செய்யத் தொடங்கினால் (அவரால்) இறப்பீர்கள்; இனி புறம்செய்து

ஆவது என் - இனிமேற் செய்யத்தக்கது யாதுளது? என்கின்ற போதின்வாய்-என்று(அங்கதன் முதலானவர்களை நோக்கித் தாரை) கண்டித்துப்பேசுகின்றசமயத்தில்—,(எ - று.)—'குரக்கினம்வாயிலைத் தாளுறுத்தித் தடவரைதந்து அடுக்கின' என அடுத்த கவியோடு தொடர்ந்து முடியும். மற்று - வினைமாற்று.

பொலீர் - பொல்லாதீர். 'ஆல்' என்பதை அசையாக்கி, நிறம் பொலீர், உங்கள் தீவினை நேர்ந்தது என்றவற்றைத் தனி வாக்கியங் களாக்குதலுமாம். 'மறம் செய்வான் உறின் மாளுதிர்' என்பதற்கு - அப்பெருமான் உங்களோடு போர்செய்யவந்தால் இறந்தொழிவீர்க ளென்றும், இனி புறம்செய்து ஆவதுஎன் - இவ்வாறானபோது (அப்பிரானைப்) புறக்கணித்துச் செய்யக்கூடியது என்? என்றும் பொருள்கொள்ளலாம். நிறம்பொலீர் - குணங்கெட்டவர்களே! என விளியுமாம். செய்தாவது = செய்வதாவது. பி - ம்:—[1] திறம்பி நீதி சிதைத்திருதவியை, திறம்பினீர்சிதைத்திருதவியை, திறம்பிநீர்மை. [2] நிறம்பொலீஇர். [3] நுங்கள். (605)

33.—அப்பொழுது பலகுரங்குகள் கிட்கிந்தாபுரியின் வாயிற் கதவைச்சாத்தி உள்ளே தாளிட்டுப் பெருங்கற்களையடுக்கி வைத்தல்.

கோளு றுத்தற் [1]கரிய குரங்கினம்
[2]நீளெ ழுத்தொட ருந்நெடு வாயிலைத்
தாளு றுத்தித் தடவரை தந்தன
மூளு றுத்தி [3]யடுக்கின மொய்ம்பினால்.

(இ - ள்.) கோள் உறுத்தற்கு அரிய குரங்கு இனம்-தடை செய் தற்கு அரிய [மிக்க வலிமையையுடைய] குரங்குகளின் கூட்டங்கள்,— நீள் எழு தொடரும் நெடு வாயிலை - நீண்ட உழலைமரம் போடுதற்கு உரிய பெரிய நகரத்து வாயிற்கதவை, தாள்உறுத்தி - (சாத்தி) உள்ளே தாளிட்டு, மொய்ம்பினால் - வலிமையினால், தடவரை தந்தன மூளுறுத்தி அடுக்கின - பெரியபாறைகளைக்கொணர்ந்து சேர்த்து (ஒன்றன்மேலொன்றாக அக்கதவைச் சார உள்ளே) அடுக்கி வைத் தன; (எ - று.)

கதவை எளிதில் திறக்கவொண்ணாதபடி தடவரைதந்துமூளு றுத்தி யடுக்கினவென்க. 'நீளெழுத்தொடரும்' என்ற அடைமொழி கொண்டு, பெரிய உழலைமரத்தைக் குறுக்கே செலுத்தின வென் பது கொள்ளலாம். ஆகவே, வாயிற்கதவைச்சாத்தி உள்ளே தாளிடுதல், உழலைபாய்ச்சுதல், பெரும்பாறைகளை அடுக்கிவைத் தல் என மூன்றுவகைப் பாதுகாப்புச்செய்துகொண்டனவாம். இங்ஙன் செய்தது, இலக்குமணனைக் கிட்கிந்தையினுட் புகவொட் டாதபடி செய்யும் நோக்கத்தாலாம். கோள் உறுத்தற்கு அரிய - இடையூறுசெய்வித்தற்கு அரிய; இனி, இதற்கு - பழிகூறுதற்கு அரியஎன்றும் உரைக்கலாம். கோள் - பழிமொழி, உறுத்தல் -

சேர்த்தல். தொடருந் தெடு - விரித்தல். வாயில் - கதவுக்கு, ஆகு பெயர். வரை - கல்லுக்கு, இலக்கணை. 'மூளுறுத்தி' என்பதில், உறு - துணைவினை. கோளுறுத்தற் [1]குரிய என்ற பாடத்திற்கு- (பிறர்க்கு) இடையூறு செய்வித்தற்கு உரிய என்று பொருளாம். பி - ம்:—[2]நீளுறத். [3]அடக்கினமுன்பினுல். (606)

34.—மற்றும் குரங்குகள் மரங்களையும் பாறைகளையும் எடுத்துக்கொண்டு போர்க்குச் சித்தமாதல்.

[1]சிக்கு றக்கடை சேமித்த செய்கைய
[2]தொக்கு றுத்த மரத்த துவன்றின
[3]புக்கு றுக்கிப் புடைத்து மெனப்புறம்
மிக்கி றுத்தன வெற்பு [4]மிறுத்தன.

(இ - ள்.) கடை சிக்குற சேமித்த செய்கைய - (இவ்வாறு) நகரவாயிலை உறுதியாகப் பத்திரப்படுத்திக்கொண்ட செய்கையையுடையனவான வானரங்கள்,—புக்கு உறுக்கி புடைத்தும் என - '(ஒருகால் இவ்வாயிற்கதவைக் கடந்து இலக்குமணன் உள்ளே வந்தால்) எதிரேசென்று (அவனை) அச்சுறுத்தி அடிப்போம்' என்று எண்ணி, தொக்குறுத்த மரத்த - முறித்துஎடுத்துக் கொண்ட மரங்களையுடையனவும், வெற்புஉம் இறுத்தன - பெருங் கற்களையும் பெயர்த்து எடுத்துக்கொண்டனவுமாய், துவன்றின - நெருங்கி [தம்மில் திரண்டு], புறம் மிக்கு இறுத்தன - மதிற்பக்கத்தில் மிகுதியாய்க் கூடிகின்றன; (எ - று.)

கடை - நகர்ப்புறவாயில். சேமித்தல் - காவல் செய்துவைத்தல். செய்கைய - பெயர்; எழுவாய். தொக்குறுத்தல் - தொகுத்தல், அளவுபடுத்தல்: ஈட்டுதல்; தொகு என்ற பகுதி 'உறு' என்ற துணைவினை பெற்று வந்தது. உறுக்கிப்புடைத்தல் - உக்கிரமாக அடித்தலுமாம். புறம் - மதிற்பக்கம். இறுத்தல் - சேர்தல், தங்குதல். வெற்பு - பெரும்பாறைக்கு, இலக்கணை. பி - ம்:—[1]திக்குற. [2]தொக்குறுத்ததுவன்றினவன்றியும். [3]புக்குறுத்து, புக்கிறுக்கில். [4]கிறுத்தன. (607)

35.—இலக்குமணன் சினந்து அக்கதவை உதைத்தல்.

காக்க வோகருத் தென்று கதத்தினுல்
[1]பூக்க மூரற் புரவலர் புங்கவன்
தாக்க ணங்குறை தாமரைத் தாளினுல்
நூக்கி னனக் கதவினை [2]நொய்தினின்,

(இ - ள்.) (வானரங்கள் நகரவாயிற் கதவையடைத்தமைகண்டு), புரவலர் புங்கவன்-அரசரிற் சிறந்தவனுன இலக்குமணன், காக்கஓ கருத்து என்று - '(நம்மிடத்திலிருந்து தங்களைப்) பாதுகாத்துக் கொள்ளவோ (இவர்கள்) கருதியது?' என்றுஎண்ணி, கதத்தினுல் மூரல் பூக்க - கோபத்தாற் புன்சிரிப்பு உண்டாக,—தாக்கணங்கு உறை தாமரை தாளினுல் - இலக்குமி வசிக்கின்ற செந்தாமரைமலர்

போன்ற (தனது) திருவடியினால், அ கதவினை நொய்தினின் நூக்கினான் - அவ்வாயிற்கதவை அலட்சியமாய்த் தள்ளினான்; (எ - று.)

காக்கவோ கருத்து - (உள்ளேவராதபடி நம்மைத்) தடுக்கவோ இவர்கள் இவ்வாறு ஆலோசித்தது என்றலுமாம். புரவலர்புங்கவன் - அரசர் தோன்றல். தன்னையடுத்தவரைக்காக்குந் தன்மையோடு தன்னோடு மாறுபடுபவர் தம்மைத் தாம் பாதுகாத்துக் கொள்ளமாட்டாதபடி செய்யும் வன்மையும் மிக்கவன் இலக்குமணனென்பது விளங்க, 'காக்கவோ கருத்தென்று புரவலர்புங்கவன் நொய்தினின் நூக்கினான்' என்றார். எல்லாராலும்விரும்பப்படுபவளான இலக்குமியும் தான் விரும்பி வசிக்குமிடமாமெனத் தாமரைமலரின் சிறப்பை யுணர்த்தியவாறும். இளையபெருமாளுடைய திருவடியின் அழகு முதலிய மேன்மைகட்குச் சாதாரணமான தாமரைமலர் ஒப்பாகமாட்டாமையால், திருமகளுறையுந்தெய்வத் தாமரைமலரையெடுத்து உவமைகூறினர். எம்பெருமானுக்கு எப்பொழுதும் பணிவிடை செய்தலாகிய கைங்கரியவிலக்குமியையுடையவரான இளையபெருமாளின் திருவடித்தாமரைகளை யடைந்தவர்கட்கு எல்லாச்செல்வங்களும் கைகூடுதல்பற்றி, 'தாக்கணங்குறை' என்றதைத் தாளுக்கும் அடைமொழியாக்கலாம். அணங்கு - மகளிரிற் சிறந்தவள்; பெண்தெய்வம். 'தாமரைத்தாளினால் கதவினை நொய்தினின் நூக்கினான்' என்றதில், தனது திருவடித் தாமரையினாற் கடுமையான தீவினையை எளிதில் ஒழித்தானென ஒருபொருள் தொனித்தல் கருதத்தக்கது; (கதம் - உக்கிரம், வினை - கருமம்:) அடுத்த செய்யுளில் வரும் உவமையை நோக்கி இத்தொனிப்பொருளின் பொருத்தமுணர்க. பி - ம்:—[1] பூக்கும். [2] நொய்தினில். (608)

36.—அத்திருவடி பட்டவளவில் அக்கதவு முதலியன அழிந்தொழிதல்.

காவன் மாமதி லுங்கத வுங்கடி
மேவும் வாயி லடுக்கிய வெற்பொடும்
தேவு சேவடி தீண்டலுந் [1] தீண்டரும்
பாவ மாமெனப் பற்றழிந் திற்றவால்.

(இ - ள்.) கதவுஉம் - அவ்வாயிற்கதவும், கடி மேவும் வாயில் அடுக்கிய வெற்பொடுஉம் - பாதுகாப்பமைந்த வாயில் (வாநரங்கள்) அடுக்கிவைத்திருந்த பெரும்பாறைகளும், காவல் மா மதில்உம்-(அவ்வாயிலைச்சார்ந்த) பாதுகாப்பாகவுள்ள பெரியமதிலும்,—தேவு சே அடி தீண்டலும் - தெய்வத்தன்மையுள்ள சிவந்த (இலக்குமணனுடைய) திருவடிபட்டமாத்திரத்தில், தீண்டு அரும் பாவம் ஆம் என - தொடவும் ஒண்ணாத [மிகக்கொடிய அல்லது மிகவும் இழிவான] தீவினைகள்போல, பற்றி அழிந்து இற்ற - தொடர்ச்சியின்றி முழுவதும் அழிந்தொழிந்தன; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

இளையபெருமானுடைய திருவடி பட்டமாத்திரத்தில் வாயிற் கதவு முதலிய பற்றறத்தொலைந்து போனதற்கு, அப்பெருமானுடைய திருவடியின் சம்பந்தத்தால் அடியார்க்குக்கொடியவினைக் கட்டுக்கள் யாவும் உடனே பற்றற ஒழிதலை உவமைகூறினர். உவமையணி. தேவு - இலக்குமணப்பெருமானுடைய, சேவடி என்றும் பொருள் கொள்ளலாம்: அத்திருவடிப் பரிசம் நேர்ந்தமாத்திரத்தில் விளக்கின்முன் இருள்போலவும், காட்டுத்தீ முனனர்ப்பஞ்சுத்துய் போலவும், கொடியகருமங்களின் தொகுதி முழுவதும் தொடர்பற ஒழிதல் விளங்க, 'தீண்டலும்' என்றார். தீண்டு அரும் பாவம் என்பதற்கு - உயிர்களைப்பற்றிநின்ற அழித்தற்கு அரிய பாவங்களெனவும் பதப்பொருளாகலாம். பரமான்மாவும் சீவான்மாவும் ஒற்றுமைப்படுதற்கு இடையீடாய்நிற்கும் மூவகைத்தீவினைகளை, இளையபெருமாளும் சுக்கிரீவனும் சந்தித்தற்குத்தடையாகின்ற கதவு முதலிய மூன்று பொருள்கட்கும் உவமைகூறிய நயமுணர்க. பாதம் சிவந்திருத்தல் - உத்தமவிலக்கணம். தீண்டலும் தீண்டரும் என்ற விடத்துத் தொடைமுரண் காண்க. மூன்றுமடி - முற்றுமோனை. பி - ம்:—[1] திண்டிறற்பாவம். (609)

37.—அக்கதவு முதலியன சிதறியமை கண்டு குரங்குகள் அஞ்சுதல்.

நொய்தி னேன்கத வும்[1] முது வாயிலும்
செய்த கன்மதி லுந் [2] திசை யோசனை
[3] ஐயி ரண்டி னளவடி யற்றுக
[4] வெய்தி னின்ற [5] குரக்கும் [6] வெருக்கொளா.

(இ - ள்.) நோன் கதவுஉம் - வலிய அந்தக்கதவும், முதுவாயில் உம் - பழமையான அந்நகரவாயிலும், கல் செய்த மதில்உம் - கற்களாலமைக்கப்பட்ட மதிலும், நொய்தில் - எளிதில், அடி அற்று - கட்டுக்குலைந்து, திசை - எல்லாத்திக்குகளிலும், ஐஇரண்டுயோசனையின் அளவு - பத்து யோஜனையளவு தூரம், உக - சிதறவே,—குரங்குஉம் - (யுத்தசந்நத்தமாய்நின்ற) வானரங்களும், வெருகொளா - அச்சங்கொண்டு, வெய்தின் நின்ற - தவித்தன; (எ - று.)

'செய்தகன்மதில்' என்றது - இரட்டுறமொழிதலால் முன்னமே அந்நகர்க்கு அரணாகக் கல்மயமாய் நிருமிக்கப்பட்டிருந்தமதிலையும், இப்பொழுது பாறைகள் அடுக்கியமைத்த பாதுகாப்பையுங்குறிக்கும்: ஆகவே, கீழ்ச்செய்யுளில் 'வாயிலடுக்கியவெற்பொடும்' என்றதற்கு - வாயிலோடும் 'வாயிலிலடுக்கிய கற்குவியலோடும் என்று பொருள் கொள்ளுதலும் அமையுமெனக்காண்க. அடியற்று - அடியோடு அற்று, முழுவதும் அழிந்து. வெய்தின்நிற்றல் - கொடிய துன்பமடைதல். குரக்கும்வெருக்கொளா—பிராசம்நோக்கி 'குரங்கு' என்றது, வலித்தது. [6] 'வெருக்கொள' என்ற பாடத்திற்கு - அச்சங்கொள்ளுதலாலென்று பொருள். பி - ம்:—[1] நொடிவாயிலும்,

நுழைவாயிலும். [2] தச. [3] ஐயிரண்டும். [4] வெய்துகின்ற. [5] குரங்கும், குரங்கு. (610)

38.—குரங்குகள் சிதறி யோடுதல்.

பரிய மாமதி லும்படர் வாயிலும்
சரிய வீழ்ந்த [1] தடித்தின் முடித்தலை
நெரிய நெஞ்சு பிளப்ப நெடுந்திசை
இரிய லுற்றன [2] விற்றில வின்னுயிர்.

(இ - ள்.) (இவ்வாறு), பரிய மா மதில்உம் - பருத்த உயர்ந்த அம்மதிலும், படர் வாயில்உம் - பரந்த அந்நகரவாயிலும், சரிய வீழ்ந்த - சாய்ந்திட விழுந்திட்டதாகிய, தடித்தின் - இடியினால், முடி தலை நெரிய - (தங்கள்) தலையிடம் நொருங்கவே, (அம்மதிலினகத்தே சாரநின்ற வானரங்கள்), நெஞ்சு பிளப்ப - மனம் பிளவுபட [நெஞ்சம் உறுதியழிந்து கலங்க], நெடுந்திசை இரியல் உற்றன - திசை தோறும் நெடுந்தூரம் ஓடிச்சென்றனவையாய், இன் உயிர் இற்றில - இனிமையான உயிர் அழியாதனவாயின [அரிதில் தப்பிப்பிழைத்தன வென்றபடி]; (எ - று.)

பரிய - பருமையையுடைய. "உயர் வகலந் திண்மை யருமை யிந்நான்கி, னமைவர ணென்றுரைக்கு நூல்" என்றபடி ஏணி கொண்டு ஏறவொண்ணாத உயர்வும் புறத்தோர்க்கு அகழலாகாத அடியகலத்தோடு அகத்தோர்க்கு நின்று தொழில்செய்யலாந் தலையகலமும் மிக்க மதிலென்பார், 'பரிய மா மதில்' என்றார். இம்மதிலின் திண்மையருமைகள், கீழ், 'செய்தகன்மதில்', 'காவன் மாதில்' என்றவற்றாற்பெறப்பட்டன. தடித் - வடசொல்; மின்னல்: இங்கு, இடிக்கு இலக்கணை. இடியென்றது - இலக்குமணன் தாளினால் நூக்கியதை யென்னலாம். உயிரழியாதவளவேயன்றி உடல் வலிமை மனத்திண்மை முழுவதும் அழியப்பெற்றனவென்பது தோன்ற, 'உயிரிற்றில' என்றார். '[1] தடித்திலிடித்தலை' என்ற பாடத்திற்கு - தடித்து இடித்தலை என்றுபிரித்து, மதிலும்வாயிலும் சரியவீழ்ந்தமையாகிய மின்னலில்லாத இடியினால் மனம் நன்கு பிளக்க என்று பொருள்கொள்க; இடி முழக்கம்செவிப்புலனாதற்கு முன்பு மின்னலின் தோற்றம் கட்புலனாதலால், இடியின் தோற்றத்தை முன்னருணர்தற்கு மின்னல் அறிகுறியாகின்றது: அங்ஙனம் முன்குறியாகும் மின்னல் நிகழாமலே ஓரிடியிடித்தாற்போன்றது, வானரங்கள் எதிர்பாராதிருக்கையில் திடீரென்று மதிலும் வாயிலும் சரிய வீழ இலக்குவன் தாளாலுதைத்தது என்க; இது, இல்பொருளுவமையாம். "மின்னுமலிடித்ததென" என்றார்பிறரும். பி - ம்:—[2] இற்றன. (611)

39.—அப்பொழுது அந்நகரத்திலுண்டான ஆரவாரம்.

பகர வேயு மரிது [1] பரித்தெழு
புகரில் வானர மஞ்சிய பூசலான்

சிகர மால்வரை சென்று திரிந்துழி
மகர வேலையை யொத்தது மாநகர்.

(இ - ள்.) பகரவும் அரிது - சொல்லுதற்கும் அரியதாக, பரித்து - கொடிய துன்பத்தை யடைந்து, எழு - இருப்பிடம்விட்டோடிய, புகர் இல் வானரம் - குற்றமற்ற அக்குரங்குகள், அஞ்சிய - அச்சமுற்றுச்செய்த, பூசலான் - பேரொலியினால், மா நகர் - சிறந்த அந்தக்கிட்கிந்தாபுரியானது, சிகரம் மால் வரை சென்று திரிந்த உழி மகரம் வேலையை ஒத்தது - சிகரங்களையுடைய பெரிய (மத்தாகிய) மந்தரமலைபுகுந்து சுழன்றபொழுது ஆரவாரித்த சுறுமீன்களையுடைய பாற்கடலைப் போன்றது; (எ - று.)

உவமையணி. துன்பத்தின்மிகுதி தோன்ற, 'பகரவேயுமரிது' என்றார். பகர்தற்கு அரிதாதல் பற்றியே, 'துயர்' என்ற பெயராற் குறியாது 'பகரவேயும் அரிது' என வேறொருவகையாற் குறிக்கப்பட்டதென்க. வாயாற் சொல்லவும் அரியதான துன்பத்தை மெய்யால் அனுபவிக்கின்ற இரங்கற்பாடு தோன்ற, 'பகரவேயுமரிது பரித்தெழு' எனப்பட்டது. 'புகரில்வானரம்' என்றதனால், முன் ஒரு காலத்திலும் இவ்வகையான துயரத்தை யடைந்திலவென்றதாம். இனி, புகர்இல் - ஒளியிழந்த வென்றுமாம். பூசல் - பெரிதொலித்தல், ஆரவாரம். [1]'பரிந்தெழும்' என்ற பாடத்திற்கு - சொல்லுதற்கும் அரியதாம்படி இரக்கங்கொண்டு சிதறுகின்ற என்று பொருளாம்; 'பகரவேயுமரிது' என்றதைப் பூசலுக்கு அடைமொழியாக்கியுரைத்தலுங் கூடும். (612)

40.—பல குரங்குகள் ஓடிப்போய்விட்டதனால் கிட்கிந்தாகிரி பொலிவிழத்தல்.

வான ரங்கள் வெருவி மலையொரீஇக்
[1]கானொ ருங்கு படரவக் கார்வரை
மீனெ ருங்கிய வானக மீனெலாம்
போன பின் [2]பொலி வற்றது போன்றதே.

(இ - ள்.) வானரங்கள் - பலகுரங்குகள், வெருவி - இவ்வாறு அஞ்சி, மலை ஒரீஇ - அக்கிட்கிந்தமலையை விட்டுநீங்கி, கான் ஒருங்கு படர - (அடுத்துள்ள) காடுகளில் ஒருசேரச்சென்று சேர்ந்துவிட்டதனால்,—அ கார் வரை - அந்தப் பெரிய மலையானது,—மீன் நெருங்கிய வானகம் - நக்ஷத்திரங்கள் அடரப்பெற்றிருந்த ஆகாயம், மீன் எலாம் போன பின் பொலிவு அற்றது - அந்நக்ஷத்திரங்களெல்லாம் நீங்கினபின்பு அழகிழந்த தன்மையை, போன்றது - ஒத்தது; (எ - று.)—கார்வரை - மேகங்கள் தவழப் பெற்ற மலையுமாம். வான் அகம் - வானகத்தின் இடம். பி - ம்:—[1]கானமெங்கும்படர. [2]பொலிவுற்றது. (613)

41.—பிறகு இலக்குமணன் அந்நகரினுட் பிரவேசிக்க, அங்கதன் முதலியோர் தாரையை நோக்கி 'என்செய்வது?' என்றல்.

அன்ன காலையி [1]னாண் டகை யாழியான்
[2]பொன்னி னன்னகர் வீதியிற் புக்கனன்
சொன்ன தாரையைச் சுற்றினர் நின்றவர்
என்ன செய்குவ தெய்தின னென்றனர்.

(இ - ள்.) அன்ன காலையின் - அப்பொழுது, ஆண் தகை ஆழியான் - ஆண்மைக்குணத்தையுடையவனான ஸ்ரீராமபிரானுடைய ஆஜ்ஞாசக்கரமே ஒருவடிவெடுத்தாற்போன்றவனாகிய இலக்குமணன், பொன்னின் நல் நகர் வீதியில் புக்கனன் - அழகியசிறந்த அந்நகரத்து வீதியிற் புகுந்து செல்லலானான்; (அதுகண்டு), சொன்ன தாரையை சுற்றினர் நின்றவர் - கண்டித்துப்பேசுகின்ற தாரையைச் சுற்றிலும் நின்றவர்களான அங்கதன் முதலியோர், (மிகவும் அஞ்சி அத்தாரையைநோக்கி), 'எய்தினன் - வந்துவிட்டானே! என்ன செய்குவது - (தாம்) செய்வது யாது?' என்றனர் - என்று சொன்னார்கள்; (எ - று.)

ஆண்டகை யாழியான்—"ஆணையினேகுவான்" (10) என்றதனோடு ஒப்பிடுக. எங்குஞ்சுற்றிச் செல்வதுபற்றி, ஆஜ்ஞையைச் சக்கரமென்றல் மரபு. தான் இருந்த விடத்திலேயிருந்து தன்நிலம் முழுவதும் தன்கட்டளையில் நடக்கச்செய்யும் பேராற்றலையுடைய அரசன் போல, எல்லாவல்லமையுமுள்ளவனான ஸ்ரீராமன். இலக்குமணன் மூலமாகத் தன்கட்டளையை நிறைவேற்றுகின்றனனாதலால், இராமபிரானை 'ஆண்டகை' என்றும், இலக்குமணனை 'அவனது ஆழியான்' எனறுங் கூறுதல் ஏற்கும். "கண்டுகாணுன்படைவலியீயும் அத், தண்டுகொண்டவன் சக்கரம் வந்ததே" என்றார்கலிங்கத்துப்பரணியிலும். பொன்னின் - பொன்மயமான எனினுமாம். [2]'பொன்னினந்நகர்' என்ற பாடத்திற்கு, அந்நகர் - அந்த நகரமென்க. பேர்சொல்லுதற்குங் கூசி இன்னானென எழுவாய் குறியாமல் 'எய்தினன்' என்றவளவே கூறினர். பி - ம்:—[1]ஆண்டகையாளியும். (614)

42.—அப்பொழுது அநுமான் ஓராலோசனை கூறுதல்.

[1]அனைய னுள்ளமு [2]மாய்வளை யாயலாம்
மனையின் வாயில் வழியினை மாற்றினால்
நினையும் வீரனந் நீள்நெறி நோக்கலன்
[3]வினைய மீதென் றனுமன் [4]விளம்பினான்.

(இ - ள்.) 'ஆய் வளை - ஆராய்ந்தெடுத்தணிந்த வளையல்களையுடையவளே! மனையின் வாயில் வழியினை மாற்றினால் - (பெண்பாலாகிய நீ சென்று சுக்கிரீவனது) அரண்மனையின்வாசல் வழியை (உட்புகவொட்டாது) தடுத்தால், அனையன் உள்ளமும் - அந்த

இலக்குமணப் பெருமானுடைய மனத்தையும், ஆயல் ஆம்-ஆராய்ந்து அறிதல் கூடும்: நினையும் வீரன் அநீள் நெறி நோக்கலன் - (தருமங்களைச்) சிந்திக்கு மியல்புடைய வீரனான அவ்விலக்குமணன் அந்த நீண்ட வழியைக் கண்ணெடுத்துப் பார்த்தலுஞ் செய்யான்; (தான் வந்தகாரியத்தை வாய்விட்டுச்சொல்வன்:) வினையும் ஈது - (செய்மைத் தக்க) தந்திரம் இது', என்று—, அனுமன் விளம்பினான் - அனுமான் (அப்பொழுது தாரையைநோக்கி) கூறினான்; (எ - று.)

[2] ஆய்வளையாயலர் என்றுபடிப்பின், ஆய்வளையாய்! அனையன் உள்ளம்உம் - அவ்விலக்குமணன்மனமோ, அலர் - மலர்போல் மெல்லியதென்க: இலக்குமணன் பலபராக்கிரமங்கள் மிக்கவனாயினும் அவன்மனம் மலர்போலமெல்லியது, வன்மையுடையதன்று; பெண்பாலாகிய நீ சென்று சுக்கிரீவனது அரண்மனையின் வாயில் வழியில் நின்றுவிட்டால், மகளிரை யெதிர்த்துப் பொருது கொல்லலாகாதென்னும் அறநூற்கொள்கையை யுணர்ந்த அவன் ஆவ்வழியைக் கண்ணெடுத்தும்பாராமல் விலகிச்சென்றிடுவன்: இது தக்கதோருபாயமா மென்று அநுமான் சமயோசிதமான ஆலோசனையொன்றைக் கூறினானென்பதாம். முதற்பொருளில் உள்ளமும் என்ற உம்மை - எச்சம்: பின்னைய பொருளில், தெரிநிலை. 'ஆய்வளையாய்' என்று விளித்தது, முன்னைய நிலைமைபற்றி; மேல் 52 - ஆஞ் செய்யுளைப் பார்க்க. வான்மீகத்தில் தாரையையும் பெண்டாகக் கொண்டு ரமித்தானென்றும், மங்கலமணிந்த மங்கைபோலவே யிருந்தனளென்றுமே கூறியுள்ளது. 'நினையும்' என்ற வினைக்கு ஏற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது.

சில ஏட்டுப்பிரதிகளில் இச்செய்யுள் "நீரெலாம்" என வரும் அடுத்த செய்யுளின்பின் காணப்படுகின்றது. பி - ம்:—[1] அனையெதிர்ந்திவளாய்வளையாரொடும். [3] விணையும். [4] விளம்புவான், விளங்பலால். (615)

43.— அவ்வாறே மகளிர் பலருடன் தாரை செல்லுதல்.

நீரெ லாமயல் நீங்குமி னேர்ந்தியான்
வீர னுள்ளம் [1] விளக்குவ லென்றலும்
பேர நின்றனர் யாவரும் பேர்கலாத்
தாரை சென்றனள் [2] தார்குழ லாரொடும்.

(இ - ள்.) (அங்கதன் முதலிய வானரர்களை நோக்கித் தாரை), 'நீர் எலாம் அயல் நீங்குமின் - நீங்களெல்லீரும் அப்பாற் செல்லுங்கள்: யான் நேர்ந்து - நான் (அவ்விலக்குமணனெதிரிற்) சென்று, வீரன் உள்ளம் விளக்குவல் - வீரனை அவனுடைய மனத்தை (கலக்கம்நீங்க)த் தெளியச்செய்வேன்', என்றலும் - என்றுசொன்னளவில், யாவர்உம் பேர நின்றனர் - அவ்வானர வீரரெல்லாரும் விலகிநின்றார்கள்; (உடனே), தாரை—, பேர்கலா - பின்வாங்காமல்,

தார் குழலாரொடுஉம் - மலர்சூடிய கூந்தலையுடையவர்களான (தோழியராகிய) மகளிர்பலருடன், சென்றனள் - புறப்பட்டுச் சென்றாள்; (எ - று.)

'வீரன்' என்றது, பெண்பெயர் கொண்டவரையும் எதிர்த்தல் செய்யாதவனென்றகுறிப்பு: அங்ஙனமாகவே, அவனது உள்ளத்தை யான் சென்று தெளிவித்தல் கூடுமென்பாள், 'நேர்ந்து யான் வீரனுள்ளம் விளக்குவல்' என்றாள். விளக்குதல் - தெளிவித்தல். 'உள்ளம் விளங்குவல்' என்ற பாடத்திற்கு - மனக்கருத்தை யுணர்வே னென்று பொருள் கொள்ளவேண்டும். மூன்றாம் அடியில், 'பேர', 'பேர்கலா' என மாறுபட்ட சொற்கள் வந்தது - தொடைமுரண். பி-ம்:—[1] வின்வுவல். [2] தாழ்குழலாரொடும். (616)

44.—இலக்குவன் சுக்கிரீவனது அரண்மனையைச் சாருமளவில் அவ்விலக்குமணனைத் தாரை மறித்தல்.

உரைசெய் வானர வீர ருவந்துறை
[1] அரசர் வீதி கடந்தகன் கோயிலைப்
புரசை யானை யனுன்புக லோடுமவ்
விரைசெய் வார்குழற் றாரை விலக்கினாள்.

(இ - ள்.) புரசை யானை அனான் - கழுத்தணிகயிற்றையுடைய யானையைப் போன்றவனான இலக்குமணன், உரை செய் வானரவீரர் உவந்து உறை அரசர் வீதி கடந்து - பிரசித்தமாகச் சொல்லப் படுகின்ற வானரவீரர்கள் மகிழ்ந்து வசிக்குமிடமான இராச வீதியை நடந்து கழித்து, அகல்கோயிலை புகலோடுஉம் - அகன்ற சுக்கிரீவ னரண்மனையினுட் புகுமளவில்,— அ விரை செய் வார் குழல் தாரை - இயற்கைநறுமணத்தைச் செய்கின்ற நீண்ட கூந்தலையுடைய அந்தத்தாரையானவள், விலக்கினாள் - (இலக்குமணனை) வழி மறித்தாள்; (எ - று.)

ஏறுபவர்க்குப் பற்றுக்கோடாயிருத்தற்பொருட்டு யானையின் கழுத்திற் கயிறுகட்டிவைத்தல் இயல்பு. யானை மதங்கொண்டு சீறினாலும், கழுத்தணிகயிற்றை யுடைமைபற்றி ஏறியவர்உயிருய்தல் கூடும்; அங்ஙனமே இலக்குமணன், சினந்துசீறினாலும், தருமத்திற்குக்கட்டுப்படும் இயல்புடையனாதல்பற்றி, இலக்கான வர் உயிருய்வர் என்னுங் கருத்துத் தோன்ற, 'புரசையானையனான்' என்றார். அரைசர் புரைசை என்ற போலியான பாடமுமுண்டு. உரைசெய் - மேற்சொல்லப்பட்ட எனினுமாம். பி - ம்:—[1] அரைச வீதி. (617)

45.—தாரை இலக்குமணனை வழிமறித்த வகை.

[1] விலங்கு மெல்லியல் வெண்ணகை [2] வெண்மதி
இலங்கு நுண்ணிடை [3] யேந்திள மென்முலைக்
குலங்கொள் தோகை மகளிர் [4] குழாத்தினால்
வலங்கொள் வீதி நெடுவழி மாற்றினாள்.

(இ - ள்.) விலங்கு மெல் இயல் - விலங்குபோன்ற [தன்னைக் கண்ணுறுவாரை அப்பாற்செல்லவொட்டாதபடி கட்டுப்படுத்துகின்ற] மென்மையான தன்மையையும், வெள் மதி வெள் நகை - வெண்மையான சந்திரன்போல வெண்ணிறமாய்விளங்கும் புன்சிரிப்பையும், இலங்கு நுண் இடை - விளங்குகின்ற நுண்ணிய இடையையும், ஏந்து இள மெல் முலை - உயர்ந்த இளமைமாறாத மென்மையான தனங்களையுமுடைய, குலம் கொள் தோகை மகளிர் - சிறந்த சாதிமயில்போலுஞ் சாயலுள்ள மாதரது, குழாத்தினல் - கூட்டத்தைக்கொண்டு, வலம் கொள் வீதி நெடு வழி மாற்றினள் - மேன்மைகொண்ட பெரிய அவ்வீதிவழியைத் தடுத்தனள், (தாரை); (எ - று.)

முதலடி - முற்றுமோனை. 'வெண்மதி' என்றது, வஞ்சகமில்லாத அறிவு என்றும் பொருள்படும். பி - ம்:—[1]விலங்க, விலங்கி. [2]வெள்வளை. [3]ஏந்துமிள, ஏந்திளம்பூண். [4]குழாத்தொடும். (618)

46 —தாரை மகளிரொடும் வழிமறித்ததைப்பற்றிய வருணனை.

வில்லும் வாளு [1]மணிதொறு மின்னிட
மெல்ல ரிக்[2]குரன் மேகலை [3]யார்த்தெழப்
பல்வ கைப்புரு வக்கொடி பம்பிட
வல்லி யாயம் [4]வலத்தினில் வந்ததே.

(இ - ள்.) அணிதொறும் - அணிந்துள்ள ஆபரணங்கள் தோறும், வில்லும் வாளும்—, மின்னிட - விளங்கவும்,—மெல் அரி குரல் - மெல்லிய [சிறிய] பருக்கைக்கற்களையுடையனவான காற்சிலம்புகளின் ஒலியும், மேகலை (குரல்) - மேகலையென்னும் இடையணியின் ஒலியும், ஆர்த்து எழ - (பறையொலியாக) ஆரவாரித்துத் தோன்றவும்,—பல் வகை புருவம் கொடி - பலவகைப்பட்ட புருவங்களாகிய கொடிகள், பம்பிட - நிறைந்திருக்கவும், வல்லி ஆயம் - மகளிர் கூட்டமாகிய சேனை, வலத்தினில் வந்தது - வலிமையோடு வந்து (இலக்குமணனை) வளைந்துகொண்டது; (எ - று.)

மகளிர்குழாம் வந்து இலக்குமணனைச் சூழ்ந்து வழிமறித்தலை, ஒரு சேனை வந்து சூழ்ந்ததாக வருணிக்கலானார். முதலடியில், வில் வாள் என்பன - ஒளிகள்; அவற்றைச் சொல்நிலையாற் படைக்கலங்களாகவுங்கொண்டு அமைத்தனர்; அன்றியும், ஆபரணங்கள் இடையிட்டுவிளங்குதல் வாள் பளபளத்தல்போலவும், அவ்வணிகலங்களினின்று எழுந்து வளைவாகவிளங்கும் ஒளி விற்போலவும் இருக்கும். அணிதொறும் என்றது - அணிவகுப்புத்தோறும் என்ற பொருளையும் தந்துநின்றது. இரண்டாமடியில், மகளிர் புடைபெயரும்போது அவரது சிலம்பும் மேகலையுமாகிய அணிகள் ஒலிப்பதை, சேனையில் நிகழும் பறைகளின் ஒலியாகக் குறித்தார்; "செருக்குரற்சிறுபறை சிலம்பு கிண்கிணி, யரிப்பறைமேகலையாகி

யார்த்தவே" என்ற சிந்தாமணி நோக்கத்தக்கது. நீண்டிருத்தல் பற்றி, புருவத்தைக் கொடி யென்றல் வழக்கு; புருவக்கொடி - கொடி போன்ற புருவம். 'பல்வகைப்புருவக்கொடிபம்பிட' என்றது, சேனைக்குஏற்பப் பலவகைக் கொடிகள்நெருங்க என்றதுமாயிற்று. கொடி - படர்கொடியும், துவசமும்; சிலேடையை அங்கமாகக் கொண்டுவந்த உருவகவணி.

'மெல்லரி' என்றது, பண்புத்தொகையன்மொழியாய்ச் சிலம்பைக் குறித்தது. "மெல்லரிக்குரல்" என்றதிலுள்ள 'குரல்' என்றதையே 'மேகலை' என்பதனோடுங் கூட்டுக. அரி - சிலம்பின் பருக்கைக்கல். இச்சொல்லுக்கு - சிலம்பு பறை யென்ற பொருள்களுமுண்டு. மேகலை - எட்டுக்கோவையுள்ளதான மாதரிடையணி. வல்லி- பூங்கொடி; உவமையாகுபெயராய்ப் பெண்ணை யுணர்த்தும்; இங்கு, சாதிப்பெயராய் நின்றது. ஆயம் - மகளிர்கூட்டம்; 'வல்லி' என வந்ததனால், கூட்டமென்ற மாத்திரமாய் நின்றது. இனி, வல்லி - தளை போலப் பந்தப்படுத்துவதான, ஆயம் - மகளிர் கூட்டம் என்று பொருள்கொள்ளுதலும் அமையும். வலத்தினில் வந்தது [வலம்வந்தது] - சூழ்ந்தது எனினுமாம். பி - ம்:—[1] அணியொடும். [2] குலமேகலை. [3] ஆர்த்திட. [4] வலத்தொடும், 'வல்லிபாய்வருதினிவந்தவே' எனச்சிலபிரதிகளில் நான்காம் அடி. (619)

வேறு.

47.—இலக்குமணன் கூச்சமடைதல்.

ஆர்க்கு[1] நூ புரம்பல் பேரி [2]யல்குலாந் தடந்தேர் சுற்ற
[3]வேற்கண்வெம் புருவம் போர்வின் மெல்லியர் வளைந்த போது
[4]பேர்க்கருஞ் சீற்றம் பேர [5]முகம்பெயர்ந் தொதுங்கிற் றல்லால்
பார்க்கவு மஞ்சி னனப்[6]பணையினு முயர்ந்த தோளான்.

(இ - ள்.) ஆர்க்கும் நூபுரம் - ஆரவாரிக்கின்ற காற்சிலம்புகள், பல் பேரி - (போர்க்குஉரிய) பலவகைப் பேரிகைவாத்தியங்களாக (ஒலிக்க), அல்குல் ஆம் தட தேர் - அல்குலாகிய (போர்க்கு) ஏற்ற பெரிய தேர், சுற்ற - கவிந்துகொள்ள,—கண் - கண்கள், வேல்-வேற்படைகளாகவும், வெம் புருவம் - (ஆடவர்க்கு ஆசை நோய் மூட்டுதலாற்) கொடியனவான புருவங்கள், போர் வில் - போர்செய்யும் விற்படைகளாகவும்,—(அமைய), மெல்லியர் வளைந்தபோது - மகளிராகிய சேனை சூழ்ந்தபொழுது,—அ பணையின்உம் உயர்ந்த தோளான் - பருமையைக்காட்டிலும் மேம்பட்ட தோள்களையுடையவனை [பெருவீரனை] அவ்விலக்குமணன், பேர்க்க அருஞ் சீற்றம் பேர - (எவராலும்) மாற்றவொண்ணாத (தன்கோபம்) மாற, முகம் பெயர்ந்து ஒதுங்கிற்று அல்லால் - (தன்) முகத்தை மாறவைத்துக்கொண்டு திரும்பியதல்லாமல், பார்க்கஉம் அஞ்சினன்-(அம்மகளிரைக்) கண்ணெடுத்துப்பார்த்தற்கும் அச்சமுற்றான்; (எ - று.)

இதனால், எதிலாரிற்கட் குருடாய் நிற்கும் இலக்குமணனது உத்தமகுணம்விளங்கும். வானரவரசன்பிராட்டியின் அணிகலனைக் காட்டியபோது, இலக்குமணன் 'யான் பிராட்டியாரின் தோள்வளை யைக் கண்டறியேன்: குண்டலங்களைக் கண்டறியேன்: நாடோறும் (பிராட்டியாரின்) திருவடிகளைப்பணிதலால் அவருடைய நூபுரங்களை யறிவேன்' என்ற வான்மீகம் இங்குக் கருதத்தக்கது. மகளிர் நேர் பட்டமாத்திரத்தில் முகம் இயல்பினல் திரும்பியமை தோன்ற 'முகம் பெயர்ந்து' எனத் தன்வினையாற் கூறினர். வெம்புருவம் - வெப்பத் தைச்செய்யும் புருவம்; விருப்பத்தை விளக்கும் புருவ மென்றுமாம். முதலிரண்டடி - உருவகம். "சில்லரிச்சிலம்பின்வள்வார்ச் சிறுபறை கறங்கச் செம்பொ, னல்குற்றேரணிந்த கொம்மை முலையெனும்புரவி பூட்டி, நல்லெழில் நெடுங்கணம்பாப் புருவவில் லுருவக் கோலிச், செல் வப்போர்க் காமன்சேனை செம்மன்மே லெழுந்ததன்றே" என்ற சிந்தா மணி நோக்கத்தக்கது. 'பணையினு முயர்ந்த தோளான் [பெருவீரன்] வில்வாள் வளைந்தபோது பார்க்கவும் அஞ்சினன் என்று அவ்விலக்கு வன்குணச்சிறப்புவிளங்கக் கூறியவகை, இன்புறற்பாலது. பருமை யென்றகுணத்தின் எல்லை எவ்வளவு உண்டோ அதினும் அதிக மாகப்பருத்துள்ள தோளென்பார், 'பணையினுமுயர்ந்த தோள்' என்றார்: வரம்புகடந்து பருத்ததோ ளென்னுங் கருத்தை இங்ஙனங் கூறினர்; பருமையைச் சிறுமையாக்குந் தோளென்க. பணை - மூங்கிலுமாம். பி - ம்:—[1] நூபுரமாம்பேரி. [2] அல்குலங் தடந்தேர் ஒத்த. [3] வேற்கண்விற்புருவம் போர்ப்ப மடந்தையர் or மெல்லியல் மிடைந்தபோது. [4] போர்க்கருஞ் அல்லது போக்கறுஞ் சீற்றம் போக்கி. [5] முகம்பெயர்த்து. [6] பணையினும் பெரிய, பனையினுமுயர்ந்த, பருவரையனைய. (620)

48.—அவ்வாருன இலக்குமணனை நோக்கித் தாரை பேசத் தொடங்குதல்.

தாமரை வதனஞ் சாய்த்துத் தனுநெடுந் தரையி னூன்றி
மாமியர் குழுவின் வந்தா ஞமென மைந்த னிற்பப்
பூமியி லணங்க ஞர்தம் [1] பொதுவிடைப் புகுந்து பொற்றேள்
[2] தூமன நெடுங்கண் தாரை [3] நடுங்குவா ளினைய [4] சொன்னுள்.

(இ - ள்.) மைந்தன் - இலக்சுமணகுமாரன், தாமரை வதனம் சாய்த்து - தாமரைமலர்போன்ற (தனது) முகத்தைச் சாயவைத்து [தலைகுனிந்து], தனு நெடுந் தரையின் ஊன்றி - (கையிற்பிடித்த) வில்லைப் பெரிய தரையிலே ஊன்றவைத்து, மாமியர் குழுவின் வந்தான் ஆம்என - மாமிமார் கூட்டத்தினிடையே வந்தவன்போல, நிற்ப - (கூச்சங்கொண்டு) நிற்க,—பொன் தோள் தூ மனம் நெடுங் கண் தாரை - அழகிய தோள்களையும் சுத்தமான மனத்தையும் நீண்டகண்களையு முடைய தாரையானவள், பூமியில் அணங்கு

அனார்தம் பொதுவிடை புகுந்து - நிலவுலகத்திலிறங்கிய தேவமாது போன்றவர்களான அவ்வானர மகளிரது கூட்டத்தினிடையே ஒதுங்கி, நடுங்குவாள் இனைய சொன்னாள் - (கூச்சத்தால்) நடுங்கு பவளாய் இவ்வார்த்தைகளைச் சொல்லலானாள்; (எ-று.)—அவற்றை, அடுத்த இரண்டுகவிகளிற் காண்க.

மாமியர்குழுவின் வந்தான்மைந்தன் என்றுஎடுத்து - மாமிமார் கூட்டத்தினிடையே வந்தவனை புதுமருமகன்போல என்றுபதப் பொருள் கூறலுமாம்.பரபுருஷனெதிரில் வந்து நிற்றற்குக் கூசி மாதர் கூட்டத்தினிடையே புகுபவளும், இலக்குவனை நோக்கிப் பேசுதற்குக் கூச்சப்பட்டு உள்ளமும் உடலும் நடுங்குபவளுமாயினள், கற்பு நலஞ்சிறந்த தாரை யென்க. முதலிரண்டடிகளில் இலக்குவனது நிலையைச் சித்திரித்துக் காட்டியுள்ளது பாராட்டற்குரியது. பி-ம்:— [1]பொலி விடைப்புகுந்த, பொலிவிடைப்புகுந்து. [2]தூய்மனம். [3]நடுங் கினள். [4]செல்வாள். (621)

49.—இலக்குமணனை நோக்கித் தாரை சொன்ன சொற்களை இதுமுதல் இரண்டுகவிகளிற் கூறுகின்றார்.

அந்தமில் கால நோற்ற வாற்றலுண் டாயி னன்றி
இந்திரன் [1]முதலி னோரா லெய்தலா மியல்பிற் [2]றன்றே
மைந்தநின் பாதங் கொண்டெம் மனைவரப் பெற்று வாழ்ந்தேம்
உய்ந்தனம் வினையுந் தீர்ந்தே முறுதி[3]வே றிதனி னுண்டோ.

(இ - ள்.) மைந்த-வீரனே! நீ (பாதந்தீண்டி வருவதென்பது),— அந்தம் இல் காலம் நோற்ற ஆற்றல்-அளவற்ற காலம் தவஞ்செய்த மகிமை, உண்டு ஆயின் அன்றி - உண்டானாலல்லாமல், இந்திரன் முதலினோரால் - இந்திரன் முதலானவர்களாலும், எய்தல் ஆம் இயல்பிற்று அன்றே - பெறத்தக்க தன்மையையுடையதன்றன்றோ? (அங்ஙனமாக), நின் பாதம் கொண்டு-உனது திருவடிகளைக்கொண்டு, எம் மனை வர பெற்று - (எங்கள்கிருகத்திற்கு நீ) எழுந்தருளப்பெற்ற தனால், வாழ்ந்தேம் - மேம்பட்டோம், (யாம்); (ஆகவே), வினைஉம் தீர்ந்தேம் உய்ந்தனம்-கருமங்களனைத்தும் ஒழிந்து உயர்கதியடையப் பெற்றோம்; இதனின் உறுதி - இதைக்காட்டிலும் (நாங்கள்) அடை யும் நற்பயன், வேறு உண்டோ - வேறு உளதோ? [இல்லையென்ற படி]; (எ - று.)

அளவற்றகாலம் தவஞ்செய்த மகிமையுண்டானாலன்றி உன் வரவு இந்திரன் முதலானவர்களாலும் அடையத்தக்கதன்மையை யுடையதன்றே: அத்தன்மையனான நீ எம்மனை வரப்பெற்ற இது, எல்லையில்காலம் நாங்கள் நோற்றிருந்த பெருநோன்பின் பயனே யாக வேண்டும்: இதனால், எம் வினை தீர்ந்து உய்ந்தேம்: இதனினும் மேம் பட்ட உறுதி எமக்கு இல்லையென்றவாறு. நின்பாதங் கொண்டு வர-

நடந்துவர; பரிசுத்திகரமான நினது திருவடிகளின் பரிசமாகிய மகிமை எங்கள் இல்லத்திற்கு நேரும்படி நீ எழுந்தருளிப் பொன்னடி சாத்தவென்க. எம்மனை வர - மிக இழிந்த வானர சாதிகளான எங்கள் மனைக்கு நீ வர என்க. இலக்குமணனது கடவுள் தன்மையோடுகூடிய அரசத்தன்மை அவன்வரவு இந்திரனுக்கும் பெறலரிதாதற்கு ஏதுவாம். உய்தல் - ஈடேறுதல். உறுதி - பேறு; புருஷார்த்தம். பரிசனமும் வாகனமுமின்றித் தன்னந் தனியனாய்க் கால்நோவ நடந்துவந்தாயே யென்பாள் 'மைந்த! நின்பாதங்கொண்டு எம்மனை வர' என்கின்றாள். 'மைந்த' என்றது, இளையபெருமாளே! என விளித்தவாறுமாம். பி - ம்:—[1]முதலினோர்க்கு. [2]ஒன்றோ, அன்றோ. [3]வேறிதினூங்குண்டோ. (622)

50. [1]வெய்தினீ வருதல் நோக்கி [2]வெருவுறுஞ் சேனைவீர
செய்திதா [3]னுணர்கிலாது திருவுளந் [4]தெரித்தி யென்றாள்
ஐயநீ யாழி வேந்த [5]னடியிணை பிரிக லாதாய்
எய்திய [6]தென்னை யென்றா ளிசையினு மினிய சொல்லாள்.

(இ - ள்.) வீர - வீரனே! நீ—, வெய்தின் வருதல் நோக்கி - உக்கிரமாக வருதலைப் பார்த்து, சேனை - வானரசேனை, செய்தி தான் உணர்கிலாது - (நீ) வருதலின் காரணத்தை (இன்னதென்று) அறியாமல், வெருவுறும் - அஞ்சும்: (அதன் அச்சந்தீர்ந்திடுமாறு), திருவுளம் தெரித்தி - (உனது) திருவுள்ளக் கருத்தைச் சொலவாய், என்றாள் - என்றுசொன்னாள்; (மற்றும்), ஐய - ஐயனே! ஆழி வேந்தன் அடிஇணை பிரிகலாதாய் நீ - ஆஜ்ஞாசக்கரத்தைச்செலுத்தும் அரசனான இராமபிரானது திருவடிகளை எந்நாளும் பிரியாது உடனுறைபவனான நீ, எய்தியது என்னை - (அப்பெருமானைவிட்டுப்பிரிந்து இங்குத் தனியே) வந்த காரியம் யாதோ? என்றாள் - என்றும் வினவினாள்: (யாவளெனின்,—) இசையின்உம் இனிய சொல்லாள் - சங்கீதத்தைக்காட்டிலும் இனிமையானசொற்களையுடையவளாகிய தாரை; (எ - று.)

நீ உக்கிரமும் விரைவுங்கொண்டு வருங் காரணம் அறியாது வானரசேனை அஞ்சிக்கலங்கியது; இராமபிரானைப் பிரியாதநீ இன்று பிரிந்துதனியாய்வந்த காரியம் என்னே! என்று தாரைவினவினள். மிகவும் இனிமையான தனது சொற்களால் இவ்வாறு சொல்லினளென்பார், 'என்றாளிசையினுமினிய சொல்லாள்' என்றார். வெய்தின் - விரைவாக எனினுமாம். '[2]வெருவுநுஞ் சேனை' என்ற பாடத்திற்கு, நும் சேனை வெருவும் - உங்கள் சேனை அஞ்சும் என்று பொருளாம்; சுக்கிரீவனுக்கு அதீனமான சைனியத்தை 'நும்சேனை' என்றது, இராமலக்ஷ்மணருளால் வாலியினிடமிருந்து சுக்கிரீவனுக்குக் கிடைத்தமைபற்றி உபசாரமாகக் கூறியதாம். அன்றி அதன்மேற் கோபமுண்டாகா திருக்குமாறு 'அது உங்களுடையதே' என்று உரிமைகாட்டினளுமாம். பி-ம்:—[1]வெய்தினின். [2]வெருவெருஞ்.

[3] உணர்விலாதுன். [4] தெரிதியென்றார், தெரிதி யென்ன. [5] அடியிணைப் பிரிவிலாதாய். [6] என்றோ. (623)

51.—இலக்குமணன் தாரையை நோக்குதலும், அவ்வளவில் அவனுக்குத் தாய்மாரைப்பற்றிய நினைவு வருதலும்.

ஆர்கொலோ வுரைசெய் தாரென் றருள்வரச் சீற்ற [1]மஃகாப்
பார்குலா முழுவெண் திங்கள் பகல்வந்த படிவம் [2]போலும்
ஏர்குலா முகத்தி னாளை யிறைமுக மெடுத்து நோக்கித்
[3]தார்குலா மலங்கன் மார்பன் தாயரை நினைந்து நைந்தான்.

(இ - ள்.) தார் குலாம் அலங்கல் மார்பன் - மலர்கள் விளங்கப் பெற்ற மாலையைத் தரிக்கும் மார்பையுடையவனான இலக்குமணன்,—(அவ்வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில்), அருள் வர - கருணையுண்டாக, சீற்றம் அஃகா - கோபங்குறைந்தவனாய், உரை செய்தார் ஆர் கொலோ என்று - (இத்தன்மையதான வார்த்தையை இங்குச்) சொன்னவர் யாரோவென்று அறியக் கருதியவனாய், குலாம் வெள் முழு திங்கள் பகல் பார் வந்த படிவம்போலும் - விளங்குகின்ற வெண்மையான பூர்ணசந்திரன் பகற்பொழுதிலே பூமியில் வந்த தோற்றம் போன்ற [ஒளிமழுங்கிய], ஏர் குலாம் முகத்தினாளை - அழகுவிளங்கின முகத்தையுடையவளான தாரையை, முகம் இறை எடுத்து நோக்கி - தன்முகத்தைச் சிறிது நிமிர்த்துப் பார்த்து, (அதனால்), தாயரை நினைந்து நைந்தான் - (தன்) தாய்மாரான சுமித்திரைமுதலியோரை ஞாபகத்திற்கொண்டு வருந்தினான்; (எ - று.)

பேரழகுடையவளாய் விளங்கிப் பேரரசனது உத்தமபத்தினியாய் நெடுங்காலங் வாழ்ந்து, பின்பு அக்கணவனை யிழந்து கைம்பெண்ணாகிக் கண்டவரிரங்கத்தக்க நிலைமையை யடைந்ததுபற்றி, தாரையைப் பார்த்தவுடன் தன் தாய்மார் நினைவிற்கு வரப்பெற்றவனாய் வருந்தலாயினன் இலக்குமணனென்க. தன்னைப்போலவே பிறரையுங் கருதுதல் அருளன்புகளையுடைய ஆன்றோரியல்பாதல் பற்றி, இலக்குமணன் பிறர்குடும்பத்தைப் பார்த்தவுடன் தன் குடும்பத்தின் ஞாபகங் கொள்ளலானான். இங்கு, 'தாயர்' என்றது - சுமித்திரை, கௌசல்யை என்னும் இருவரையே குறிப்பதெனக் கொள்ளலாம். மேல் 53-ஆஞ் செய்யுளின் முதலடியைக் காண்க. சந்திரமண்டலம் அந்தரத்தைவிட்டுத் தரையில்வந்த தோற்றமென்றது - இல்பொருளுவமையாம்; இனி, பார்குலாம் - உலகத்தில் விளங்குகின்ற என்றலு மொன்று. 'ஏர்குலாம்முகத்தினள்' என்றது, முன்பு இருந்த நிலைமையைப்பற்றி: அவ்வகைச் சிறப்பை இப்பொழுதும் குறிப்பா லுணரலாம்படியுள்ள முகமென்னலாம். 'தார்குலாமலங்கன்மார்பு' என்றது, இயற்கைபற்றிய அடைமொழியாம்; சுக்கிரீவன் முதலியோர்க்கு அச்சத்தையுண்டாக்கும் பொருட்டுப் போர்ச்செல

விற்கு அறிகுறியாகும் வஞ்சிப்பூமாலையை யணிந்துள்ளானென்றுங் கொள்ளலாம். தார் - மலர். இனி, 'தார்குலாம் அலங்கல் மார்பன்' என்றதற்கு, தன்னிடத்தே தரிக்கப்படும்மாலை விளங்குதற்குக்காரணமான ஒளிசெய்தலையுடைய மார்பையுடையனென்று உரைத்தலுங் கூடும். சிற்றமஃகா னைந்தான் - சினைவினை முதல் வினையைக் கொண்டமுடிபு. பி - ம்:—[1] அஃகா, அஃகி. [2]போன்றும். [3] தார்குலாவலங்கல். (624)

52.—இலக்குமணன் கண்ணீர் துளித்தல்.

[1]மங்கல வணியை நீக்கி மணியணி துறந்து வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக் குங்குமஞ் சாந்தங் கொட்டாப்
பொங்குவெம் முலைகள் பூகக் கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்கள் பனிப்ப [2]நைந்தான்.

(இ - ள்.) மங்கலம் அணியை நீக்கி - திருமங்கலியத்தையொழித்து, மணி அணி துறந்து - இரத்தினமயமான மற்றையாபரணங்களையும் அணியாதுவிட்டு, வாசம் கொங்கு அலர் கோதை மாற்றி - நறுமணமுள்ளதும் தேன்பெருகுவதுமானமலர்மாலையைச் சூடுதலை யொழித்து, குங்குமம் சாந்தம் கொட்டா பொங்கு வெம் முலைகள் பூகம் கழுத்தொடு மறைய - குங்குமப்பூவின் குழம்பையும் சந்தனக்குழம்பையும் பூசுதலில்லாதபருத்த வெய்யதனங்கள் பாக்குமரம்போன்றகழுத்துடன்மறையும்படி, போர்த்த - (மேலாடையால்) நன்றாகப்போர்த்துள்ள, நங்கையை - மகளிரிற்சிறந்தவளான அத்தாரையை, கண்ட - பார்த்த, வள்ளல்-வரையாதருளுமியல்பினனான இளையபெருமாள், நயனங்கள் பனிப்ப நைந்தான் - பரிதாபகரமான அத்தோற்றத்தைக்கண்டதனாலும் தன் தாயரை நினைந்ததனாலும் தன் கண்கள் நீர் துளிக்க வருந்தினான்; (எ - று.)

முன்னிரண்டடியிற் குறித்தவை, கைம்மைக்கோலம். இவ்வாறு கண்ணீர்மல்குதற்குக்காரணம் தன் குடும்பத்தைப்போலவே பிறர் குடும்பத்தையும் நினைக்கும் வள்ளன்மை யென்பது விளங்க, இங்கு 'வள்ளல்' என்றார். இளமையான பாக்குமரத்தின் கணுக்கள் கழுத்திற்கு வரையிலும், செய்ப்பிலும் உவமமாம். பி - ம்:—[1]மங்கலமரபு நீங்கி. [2]நின்றான். (625)

53.—இலக்குவன் தான் வந்த காரியத்தைச் சொல்லத்தொடங்குதல்.

இணையரா மென்னை யீன்ற விருவரு மென்ன [1]வந்த
நினைவினா [2]னயர்ப்புச் சென்ற நெஞ்சின னெடிது நின்றான்
வினவினாட் கெதிரோர் மாற்றம் [3]விளம்பவும் வேண்டு மென்றப்
[4]புனைகுழ லாட்கு வந்த காரியம் [5]புகல்வ தானான்.

(இ - ள்.) 'என்னை ஈன்ற இருவர்உம் - என்னைப்பெற்ற தாய்மாரிருவரும், இணையர் - இத்தன்மையராகவேயிருப்பர்', என்ன வந்த நினைவினான் - என்று (தன்) மனத்தில்தோன்றிய ஞாபகத்தி

ளுல், அயர்ப்பு சென்ற - தளர்ச்சிமிக்க, நெஞ்சினன் - மனத்தை யுடையவனாய், நெடிது நின்றான் - நெடும்பொழுதுஒன்றுந்தோன்றாது நின்றவனான அவ்விலக்குமணன், வினவினட்கு எதிர் ஓர் மாற்றம் விளம்பலும் வேண்டும் என்று - (தன்னை) வினவியவளுக்கு உத்தரமாக ஒருவார்த்தைசொல்லாதிருத்தலும் தகுதியன்று என்று எண்ணி, அ புனை குழலாட்கு - அழகியகூந்தலையுடையவளான அத்தாரையை நோக்கி, வந்த காரியம் புகல்வது ஆனான் - (தான்) வந்தகாரியம் இன்னதென்று சொல்லலானான்; (எ - று.)— அதனை, அடுத்த கவியிற் காண்க. ஆம் - அசை.

தாயரைப்பற்றியநினைவினால் சற்றுநேரம் ஒன்றுந்தோன்றாது நின்ற பிறகு வினவினட்கு விடையிறுக்காமலிருப்பது தகுதியன்றென்று தான் வந்த செயலை இலக்குவன் கூறலானானென்பதாம், இராமனைப் பெற்ற தாயான கௌசலையையும் தன்னைப்பெற்ற தாயான சுமித்திரையைப்போலவே பாவிப்பவனாதலால், 'என்னை யீன்றவிருவரும்' என்றான். பரதனுக்குத்தாயான கைகேயியை அங்ஙன்பாவியாது விடுத்தது, அவள் தனதுதிருத்தமையனாரை வலிய வனவாசம் புகுத்தினளென்பதுபற்றி அவள் விஷயமாகத் தன் மனத்திற்கொண்ட மாறுபாட்டின் தொடர்பினாலென்க. மாதரோடு பேசுதலில் இலக்குமணனுக்கு உள்ள மனக்கூச்சம், மூன்றாமடியால் விளங்கும். புனைகுழல்என்றது - பண்டைநிலைபற்றி. பி - ம்:— [1]வெந்த. [2]மரபு, அயர்வு. [3]விளம்பலும்வேண்டுமென்ன. [4]புனைகுழல் தனக்கு. [5]புகலலுற்றான். (626)

54.—இலக்குமணன் சொல்லுதல்.

சேனையும் யானுந் தேடித் தேவியைத் [1]தருவெ னென்று
மானவற் குரைத்த மாற்ற மறந்தன னருக்கன் மைந்தன்
ஆனவ னமைதி [2]வல்லை யறியென வருளின் வந்தேன்
மேனிலை யனையான் செய்கை [3]விளைந்தவா விளம்பு கென்றான்.

(இ - ள்.) அருக்கன் மைந்தன் - சூரியன்மகனான சுக்கிரீவன், சேனைஉம் யான்உம் தேவியை தேடி தருவென்என்று மானவற்கு உரைத்த மாற்றம் மறந்தனன் - 'எனதுசேனையும் யானுமாகச்சானகிப் பிராட்டியாரைத் தேடிக்கொணர்ந்து கொடுப்பேன்' என்றுமநுகுலத்தில் தோன்றியவனான ஸ்ரீராமபிரானுக்குச் சொன்ன வார்த்தையை மறந்துவிட்டான்; ஆனவன் அமைதி வல்லை அறி என - 'அங்ஙனமான அச்சுக்கிரீவனுடைய செய்தியைவிரைவிற் சென்று நீ அறிந்து வருவாயாக' என்று (அப்பெருமான் என்னை நோக்கிச்) சொல்ல, அருளின் - அக்கட்டளையினால், வந்தேன் - (இங்கு) வந்தேன், (யான்): மேல் நிலை அனையான் செய்கை விளைந்த ஆ விளம்புக - 'மேன்மையான அரசாட்சி நிலைமையைப் பெற்றுநின்ற அச்சுக்கிரீவனது செய்தி நிகழ்ந்தவிதத்தைச் சொல்வாயாக,' என்றான் - என்று (தாரையைநோக்கி இலக்குமணன்) கூறினான்; (எ - று.)

சொன்னபடி சுக்கிரீவன் வாராமையால் அவன் செய்தியுணர வந்தேன்: அவன் செய்கை யாது? என வினவினனென்பதாம். யானும் சேனையும் தேடித் தருவென் - சிறப்பினால் தன்மையொருமை வினையைப் பெற்றுவந்த வழுவமைதி. அமைதி - நிலைமை. மேல் நிலை - செல்வ அதிகாரங்கள்; மேல் - இனி, அனையான் செய்கை விளைந்தவகையை, நிலை - உள்ளபடி, விளம்புக என்றும் பதப் பொருள் கொள்ளலாம். [3]'விளைந்தவாவிளையும்' என்ற பாடத் திற்கு - இனி நடக்குங் காரியம் அச்சுக்கிரீவனது செய்கை நிகழ்ந்த தற்கு ஏற்றபடி நிகழும் என்று (அச்சமுறுத்துமாறு) கூறினனெ னப் பொருளாம். பி - ம்:—[1]தருவன். [2]எல்லையறிகென. [3]விழைந் தவாவிளையும். (627)

55.—ஐந்துகவிகள் - தாரைகூறுஞ் சமாதானம்.

சீறுவா யல்லை யைய சிறியவர் தீமை செய்தால்
[1]ஆறுவாய் நீய லான்மற் றருள [2]ரயர்ந்தா னல்லன்
வேறுவே றுலக மெங்குந் தூதரை [3]விடுத்த வெல்லை
ஊறுமா நோக்கித் [4]தாழ்த்தா [5]னுதவிமா றுதவி யுண் டோ.

(இ - ள்.) ஐய - ஐயனே! சீறுவாய் அல்லை - கோபிக்கற்பாலை யல்லை; சிறியவர் தீமை செய்தால் - (அறிவுமுதலியவற்றிற்) சிறிய வர்கள் தீங்குசெய்தால், ஆறுவாய் - (அவற்றிற்பெரியவனான நீ) பொறுத்துத் தணிந்திருக்கக்கடவாய்: (அங்ஙனமிருப்பதற்கு), நீ அலால் மற்று ஆர் உளர் - நீயல்லாமல் வேறு யார் தகுதியுடைய வர் இருக்கின்றார்? [எவருமில்லையென்றபடி]: (இதுநிற்க), அயர்ந் தான் அல்லன் - (சுக்கிரீவனோதான்சொன்னசொல்லை) மறந்தவனல் லன்; உலகம் எங்கும் வேறு வேறு தூதரை விடுத்து - (வாநர சேனைகளைத் திரட்டுதற்காக) உலகத்தில் எல்லாவிடத்திலும் தனித் தனி தூதரை யனுப்பி, அ எல்லை ஊறும் ஆ நோக்கி - அவ் விடங்களிலிருந்து அச்சேனைகள் பலவழியாலும் வந்துசேர்தலை எதிர்பார்த்துக்கொண்டு, தாழ்த்தான் - தாமதித்திருக்கின்றான்; உதவி மாறு உதவி உண்டுஓ - (நீங்கள் அவனுக்குச்செய்த) உப காரத்திற்குத்தக்கபடி (அவன் உங்கட்குச் செய்யும்) பிரதியுபகார மொன்று இருக்கின்றதோ? [இல்லையென்றபடி]; (எ - று.)

சிறியவர்தீமைசெய்தால் ஆறுவார் கருணைக்கடலானநீ அலால் மற்று ஆருளர்? அன்னான்செல்வவாழ்க்கைமுதலியவற்றில் மூழ்கி யுள்ளானென்று கருதுமாறு இருப்பினும், நுமது காரியத்தை அயர்ந்திலன்: ஆங்காங்குத்தூதரை யனுப்பிச் சேனைவரவைநோக்கி யேதாழ்க்கின்றான்: அவன் என்னசெய்யினும், "செய்யாமற் செய்த உதவி" யும், "காலத்தினாற்செய்த நன்றி"யு மாதலால், உமது உத விக்கு ஈடான கைம்மாறொன்றில்லை யென்கிறாள். மத்திமதீபமாக 'சிறியவர் தீமைசெய்தால்' என்பதை 'சீறுவாயல்லை' என்றதனோ டுங்கூட்டலாம். அயர்ந்தானல்லன்-நன்றிமறந்தவனல்லன் எனினு

மாம். பி-ம்:—[1] ஆறுவான். [2] அயர்த்தான். [3] விடுத்தல்வேலை. [4] தாழ்ந் தான். [5] உதவுமாறுதவியுண்டோ. (628)

56. [1] ஆயிர கோடி தூத ரரிக்கண [2] மழைப்ப வாணை
போயினர் புகுது நாளும் புகுந்தது புகல்புக் கோர்க்குத்
தாயினு [3] மினிய நீரே [4] தணிதிராற் றரும மஃதால்
[5] தீயன செய்யா ராயின் யாவரே செறுந ராவார்.

(இ - ள்.) ஆயிர கோடி தூதர் - ஆயிரங்கோடி தூதர்கள், அரி கணம் அழைப்ப - குரங்குகளின் கூட்டத்தை அழைத்துவருதற்பொருட்டு, ஆணை போயினர் - (சுக்கிரீவன்) கட்டளைப்படி (உலகத்தில்எங்கும்) போயிருக்கின்றார்கள்; புகுதும்நாளும் புகுந்தது - (அவ்வாநரக்கூட்டங்கள்) இங்குவந்து சேரவேண்டிய நாளும் சமீபித்தது; (அன்றியும்), புகல் புக்கோர்க்கு - சரணமடைந்தவர்கட்கு, தாயின் உம் இனிய நீரே - பெற்றதாயைக்காட்டிலும் இனிமை செய்கின்ற நீங்களே, தணிதிர் - கோபந்தணியக்கடவீர்; அஃது தருமம் - அவ்வாறுபொறுத்தருள்வது தருமமாகும்; தீயன செய்யார் ஆயின் - தீயசெயல்களைச் செய்யாமலிருப்பாரானால், செறுநர் ஆவார் யாவரே - தண்டித்தற்கு உரியராகுபவர் எவரோதாம்? (எ - று.)— 'ஆல்' இரண்டும் - அசை.

சுக்கிரீவன் தானையை வரவழைக்க ஏற்பாடுசெய்துள்ளான்: அச்சேனை வருங் காலமும் கிட்டியது: ஒருகால் அவன்நன்றிமறந்திட்டானென்றுதோன்றினும், புகல்புக்கார்க்குத் தாயினும்இனிய நீர் முரண்கொள்ளாது அன்னானைப்பொறுத்துப்பணிகொள்வதே தருமமாமென்றவாறு. தீயனசெய்துகண்டித்தற்கு உரியராய் நின்றவரது குற்றத்தைப் பொறுத்தருள்வது பெருமையாமேயன்றித் தீயனசெய்யாதாரிடம் அன்புபாராட்டுவது சிறப்பாகாதென்பது, ஈற்றடியின் கருத்து. [5] தீயனசெய்வராயின்யாவரேசிறியராவர் என்ற பாடம் - பிழைசெய்தார் திறத்தில் அவர்பிழையைப்பொருது நும்போலியர் தீமைசெய்தால் அது நும்போல்வார்க்குச் சிறுமையேயன்றோ என்றவாறு. உங்கள்கட்டளைக்கேற்ப என்றபொருளுந் தோன்ற, 'ஆணைபோயினர்' எனப் பொதுப்படக் கூறினாள். புகல் புக்கோரைக் காத்தலைக்காட்டிலும் மேம்பட்டதொரு அறனில்லையாதலால், 'தருமமஃது' எனப்பட்டது. 'ஆயிரகோடி - மிகப்பல என்றபடி. கூதிர்ப்பருவம் வந்ததும் அனுமனாற்போதிக்கப்பட்டுச் சுக்கிரீவன் சேனைகளைத்திரட்ட ஏற்பாடு செய்திட்டு மீண்டும் இன்பந் துய்க்கச் சென்றானென்பதை வெளிப்படையாக வான்மீகிபகவான் கூறியுள்ளார்: அப்பொருளைக் கம்பர் தாரை பேச்சில் வைத்து வெளிப்படுத்தியுள்ளாரென அறிக. நீர்தணிதிர் - உயர்வுப்பன்மை: இராமனை உளப்படுத்தியதுமாம். பி - ம்:—[1] ஆயிரங். [2] அழைக்க. [3] நல்ல. [4] தணித்திரால். (629)

57. அடைந்தவர்க் கபய நீவி [1]ரருளிய வளவில் செல்வம் [[5]யன்றே
தொடர்ந்துநும் [2]பணியிற் [3]றீர்ந்தா [4]லதுவுநுந் தொழிலே
மடந்தைதன் பொருட்டால் வந்த வாளமர்க் களத்து மாண்டு
கிடந்திலரென்னிற் [6]பின்னு நிற்குமோ கேண்மை யம்மா.

(இ - ள்.) நீவிர் - நீங்கள், அடைந்தவர்க்கு - (உங்களைச்) சரணமடைந்தவர்க்கு, அபயம் அருளிய - அபயப்பிரதாநஞ்செய்து கொடுத்த, அளவு இல் செல்வம் - அளவற்ற செல்வம், தொடர்ந்து - கூடியதனால், (அச்சரணம் புக்கவர் களித்து), நும்பணியின் தீர்ந்தால் - உங்கள் கட்டளையினின்று விலகினால், அதுவும்—, நும் தொழிலே அன்றே - உங்கள் செயலாகவேகொள்ளத்தக்கதன்றே? (இதுநிற்க): மடந்தைதன்பொருட்டு வந்த - பெண் காரணமாக நேர்கின்ற, வாள் அமர் களத்து - கொடிய போர்நிகழும் யுத்த களத்தில், மாண்டு கிடந்திலர் என்னின் - (நண்பர்க்காகச் சென்று பொருது) இறந்துகிடவாராயின், பின்உம்-அதன்பின்பும், கேண்மை நிற்கும்ஓ - (சேர்ந்தவர்க்கும் சேரப்பட்டவர்க்கும்) சிநேகம் நிலை பெறுமோ? [பெறுது என்றபடி]; (எ - று.)—ஆல் - அசை. அம்மா - ஈற்றசை.

நீங்கள் தயைசெய்து கொடுத்த வரம்புஅற்ற செல்வம் கிடைத்ததனால் அச்செல்வம்பெற்றவர் களித்து உங்கள்கட்டளை யினின்று தவறினால் அதுவும் உங்கள் தொழிலாலாகியதாகவே பாவித்துப்பொறுத்தருளத்தக்கதன்றேவென்பது, முதலிரண்டடி களின் பொருள். [1]அருளியவளவிற் செல்வம் தொடர்ந்து நும்பணி யிற்றீர்ந்தாற் சொல்லின்நும் பெருமையன்றே' என்ற பாடத் திற்கு - உங்களைச் சரணமடைந்தவர்க்கு நீங்கள் அபயப்பிரதானஞ் செய்த மாத்திரத்தில் செல்வங்கிடைக்கப் பெற்றதனால் அச்சரண் புக்கவர் (மெய்ம்மறந்து) உங்கள்கட்டளையினின்று தவறினால்சொல் லுமிடத்து (அதுவும்) உங்கள்பெருமையேயாகு மன்றே? என்று பொருளாம். உங்களாற் கிடைத்த செல்வம் மிகக்களித்து மெய்ம் மறக்கும்படியான அளவினதெனப் பெருமையின்பாற்படுமென்க. சுக்கிரீவன் பிழைசெய்தாலும் பொறுக்கவேணுமென்று கூறிய தாரை, இனி நும் திறத்துக் குற்றஞ்செய்யா னென்பதைத் தெளி விக்க, அவன் குற்றஞ்செய்தல்தகாதென்பதை வற்புறுத்திக்கூறு கின்றாள். வாள் அமர் - ஆயுதங்களைக் கொண்டு செய்யும் போரெனி னுமாம். நீங்கள் சுக்கிரீவனுக்கு அரசாட்சிச்செல்வத்தோடு மனை வியை மீட்டுக்கொடுத்த உபகாரத்திற்கு ஈடாக, அவன், இனிச் சீதையை மீட்டற்பொருட்டு அரக்கரோடு நேருங் கொடியபோரில் உங்கள் பக்கத்தே சென்று உயிரையுங்கொடுக்குமாறு பொருதால் சிநேகதருமத்தை நிறைவேற்றியதாகுமே யன்றி அங்ஙனஞ் செய்யாவிட்டால் பின்பு உங்கட்கும் அவனுக்கும் சிநேகம்நிற்குமோ வென்பது, பின்னிரண்டடிகளின் கருத்து. பி - ம்:—[2]பழியில்.

[3] தீர்ந்தார். [4] சொல்லினும்பெருமை, அதுவும் வென்றொழிலே. [5] என்னை. [6] பின்னை. (630)

58. செம்மைசே ருள்ளத் தீர்கள் செய்தபே ருதவி [1] தீரா
வெம்மைசேர் பகையு மாற்றி யரசுவீற் [2] றிருக்க விட்டீர் [ரே
உம்மையே [3] யிகழ்வ ரென்னி [4] னெளிமையா யொழிவ தொன்
இம்மையே வறுமை யெய்தி [5] யிருமையு மிழப்ப ரன்றே.

(இ - ள்.) செம்மை சேர் உள்ளத்தீர்கள் - நேர்மைபொருந்திய மனத்தையுடையவர்களான நீங்கள், செய்த பேர் உதவி தீரா-(சுக்கிரீவனுக்குச்) செய்கின்ற பெரிய உபகாரம் (என்றென்றைக்கும்) அழியாமலிருக்கும்படி, வெம்மை சேர் பகைஉம் மாற்றி - உக்கிரத்தன்மை பொருந்திய பகைவனையும்ஒழித்து, அரசு வீற்றிருக்கவிட்டீர் - அரசாட்சிபெற்று மிக்க சிறப்புடனிருக்கும்படி செய்து விட்டீர்கள்; (அங்ஙனம் உங்களாற்பேருதவிபெற்றவர்), உம்மைஏ இகழ்வர் என்னின் - உங்களையே அலட்சியஞ்செய்வரானால், எளிமை ஆய் ஒழிவது ஒன்றுஓ - இழிகுணத்தின் பாற்பட்டுப் பெருமை யொழிவது மாத்திரமோ! இம்மைஏ வறுமை எய்தி - (அக்கொடுவினைப்பயனால்) இப்பிறப்பிலேயே வறுமையையடைந்து, இருமைஉம் இழப்பர் அன்றே - இம்மை மறுமைப்பயன்களிரண்டையும் இழந்து விடுவரன்றோ? (எ - று.)

இம்மையிற் செல்வத்தோடு புகழும் அழிந்து மறுமையில் நற்கதிபெறுதலின்றி நரகத்தையும் அடைவரென்பதாம். 'சாலவும் மிக்க நல்வினை தீவினைகளால் இப்பிறப்பிலேயே பயன் நுகரப்படும்' என்னும் நூற்கொள்கைபற்றி, 'இம்மையே வறுமையெய்தி' எனப்பட்டது. வறுமையாவது - நுகரப்படுவன யாவுமில்லாமை. செம்மை - நல்லசிந்தனை. தீரா - தீராமல் என ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம்; தீராத என ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சமாகக் கொண்டு, நீங்கள் செய்யும் பேருதவியால் ஒழித்தற்குஅரிய வெப்பம்பொருந்திய பகைவனையும் ஒழித்து என்று உரைத்தலுமாம். [1]'தீர' என்ற பாடத்திற்கு - உதவியால் வெம்மைசேர்பகைவனையும் பற்றறும்படி ஒழித்து என்று பொருளாம். 'பகை' என்றது, வாலியை; பகை - பகைவனுக்குப் பண்பாகுபெயர்; உம்மை - உயர்வுசிறப்போடு எதிரதுதழுவிய எச்சமுமாம். வீறு - வேறொருவர்க்கில்லாத சிறப்பு. உம்மையே, இவ்வாறு பேருதவிசெய்த உங்களையே யென ஏகாரம் - உயர்வுசிறப்பாம். [4]'எளிமையாய் ஒழிவதொன்றோ' என்பதற்கு - அவ்வாறு இகழ்தல் அற்பமா யொழிவதொரு காரியமாமோ என்றலு மொன்று. இம்மையேயென்ற ஏகாரம் - தேற்றத்தோடு விரைவையுங் காட்டும்.
பி - ம்:—[2] இருத்திவிட்ட. [3] இகழ்வதென்னில். [4] எண்மையாய். [5] எழுமையுமிழப்பரன்றே. (631)

59. [1]ஆண்டுபோர் வாலி யாற்றன் [2]மாற்றிய தப்பொன் ருயின்
வேண்டுமோ [3]துணைவர் நும்பால் வில்லினு மிக்க துண்டோ
தேண்டுவார்த் [4]தேடு கின்றீர் தேவியை யதனைச் செவ்வே
[5]பூண்டுநின் றுய்தற் பாலார் நுங்கழல் புகுந்து ளோரும்.

(இ - ள்.) ஆண்டு - அப்பொழுது, போர் வாலி ஆற்றல் மாற்றியது - போர்செய்தலிற் சிறந்த வாலியின் வலிமையை ஒழித்தது [வாலியைக்கொன்றது], அம்பு ஒன்று - (உங்கள்) பாணமொன்றே, ஆயின் - என்ருல், துணைவர் வேண்டும்ஓ - (பகைமழித்தற்காக உங்கட்குத்) துணையாக ஒருவர் வேண்டுமோ? நும்பால் வில்லின் உம் மிக்கது உண்டுஓ - உங்களிடமுள்ள வில்லைக்காட்டிலும் மேலானதொரு துணையும் உளதோ? (மற்று நீங்கள்), தேவியை தேண்டுவார் தேடுகின்றீர் - பிராட்டியிருக்குமிடத்தைத் தேடிக்காண்பவரை வேண்டி நிற்கின்றீர்; (இவ்வளவுமாத்திரமே); நும் கழல் புகுந்துளோர் உம் - உங்கள் திருவடியைச் சரணமடைந்துள்ளவரான சுக்கிரீவன் முதலியோரும், அதனை - அப்பணிவிடையை, செவ்வே பூண்டு நின்று - செவ்வையாய் ஏற்றுக்கொண்டு செய்துநின்று, உய்தல் பாலார் - ஈடேறக் கடமைப்பட்டவராவர்; (எ - று.)

நீங்கள் சீதையுள்ள இடத்தை நாடியறியத் துணைவேண்டுபவரேயன்றிப் பகைவெல்ல நுமக்குத் துணைவேண்டுவதின்று: ஆகவே, நுமது அப்பணியை ஈடேற்றக்கடமைப்பட்டவர் சுக்கிரீவன் முதலியோரென்றவாறு, 'வேண்டுமோ துணைவர்' என்றதனுல், நீங்கள் அசகாயசூர ரென்றவாரும்: "கூட்டொருவரையும் வேண்டாக்கொற்றவ" என்ருன், முன்பு வாலியும். ஆண்டு - அவ்வாறு எனினுமாம். ஆண்டுப்போரென வலிமிகாதது, ஓசைநயம்பற்றி. வேண்டுமென்ற சொல் - வியங்கோள்வினைமுற்ருய் ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவாகும். தேண்டுவார் - விரித்தல். பி - ம்:—[1]ஆண்ட, மாண்ட. [2]மாற்றியவம்பொன்றல்லால். [3]துணையும். [4]தேடுகின்ருர். [5]பூண்டு நின்றுய்த்தல்போலாம்......புகுந்துபோர்க்கும், பூண்டு நின்றயர்த்தல் போலா நுங்கழல் புகுந்துளோரமை. (632)

60.—இலக்குமணன் கோபந்தணிந்தமை கண்டு அநுமான் அருகில்வருதல்.

என்றவ ளுரைத்த மாற்றம் யாவையு மினிது கேட்டு
நன்றுணர்[1] கேள்வி யாள னருள்வர [2]நாணுட் கொண்டான்
நின்றன னிற்ற லோடு [3]நீத்தனன் முனிவென் றுன்ன
வன்றுணை வயிரத் திண்டோண் மாருதி மருங்கின் வந்தான்.

(இ - ள்.) என்று அவள் உரைத்த மாற்றம் யாவைஉம்இனிது கேட்டு - என்று அத்தாரை சொன்ன வார்த்தைகளை யெல்லாம்

நன்ருகக்கேட்டு,—நன்று உணர் கேள்வியாளன் - நன்ருகக் கேட்டுணர்ந்தநூற்கேள்விகளையுடையவனுன இலக்குமணன்,—அருள் வர - கருணைவர, நாண் உள் கொண்டான் நின்றனன் - வெட்கத்தை மனத்திற்கொண்டவனுய் நின்ருன்; நிற்றலோடும் - (அவ்வாறு) நின்றவளவில், முனிவு நீத்தனன் என்று உன்ன - (இவன்) கோபத்தை யொழித்துவிட்டானென்று எண்ணி, வல் துணை வயிரம் திண் தோள் மாருதி - வலியபோர்த்துணையாகவுள்ள உறுதி யமைந்த பலங்கொண்ட தோள்களையுடைய அநுமான், மருங்கின் வந்தான் - இலக்குமணனருகில் வந்து சேர்ந்தான்; (எ - று.)

தகுதியில்லாத விடத்துக் கோபங்கொண்டன மென்பது தோன்ற, இலக்குவன் நாணத்தை யுட்கொண்டனனென்க. பி-ம்:— [1]கேள்வியாளென்று, கேள்வியாரென்று. [2]நாணுக்கொண்டான். [4]நீங்கினன் முனிவென்றுன்னி. (633)

61.—இலக்குமணன் அனுமனை நோக்கி வினவ, அன்னுன் கூறத்தொடங்குதல்.

வந்தடி வணங்கி நின்ற மாருதி வதன நோக்கி
அந்தமில் கேள்வி நீயு மயர்த்தனை [1]யாகு மன்றே
முந்தின செய்கை யென்ருன் முனிவினு [2]முளைக்கு மன்பான்
எந்தைகேட் டருளு கென்ன வியம்பின [3]னியம்ப வல்லான்.

(இ - ள்.) முனிவின் உம் முளைக்கும் அன்பான் - கோபங்கொண்ட சமயத்திலும் தோன்றுகின்ற அன்பையுடையவனுன இலக்குமணன்,—வந்து அடி வணங்கி நின்ற மாருதி வதனம் நோக்கி - அருகில் வந்து (தனது) பாதங்களில் நமஸ்கரித்துநின்ற அநுமானுடைய முகத்தைப் பார்த்து,—'அந்தம் இல் கேள்வி நீ உம் - அளவில்லாத நூற்கேள்விகளையுடையநீயும், முந்தின செய்கை அயர்த்தனை அன்றே - முன்பு நடந்த செய்தியை மறந்து விட்டா யன்ருே?' என்ருன் - என்றுசொன்னுன்; (அதுகேட்டு), இயம்ப வல்லான் - பேசுதலில்வல்லவனுன அநுமான்,—எந்தைகேட்டு அருளுக என்ன - 'எமது தலைவனே! (அடியேன்சொல்வதைக்) கேட்டருள்வாயாக' என்றுசொல்லி, இயம்பினன் - மற்றும் கூறலானுன்; (எ - று.)— அதனை, அடுத்த ஆறுகவிகளிற் காண்க. ஆகும் - அசை. அன்றே - தேற்றம்.

முந்தினசெய்கை - மழைக்காலங் கழிந்தவுடன் சேனையோடு வர வேண்டு மென்பது. பி - ம்:—[1]ஆகுமன்ருே [2]முளைக்குமென்பான், முளைக்குமென்றங்கு. [3]இயம்பல்வல்லான். (634)

62.—ஆறுகவிகள் - அனுமான் கூறிய மறுமொழி.

[1]சிதைவகல் காதற் ருயைத் [2]தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டா மாற்றலா [3]மாற்றன் மாயா [டோ.
உதவிகொன் ருர்க்[4]கொன் றேனு[5]மொழிக்கலா முபாய முண்

(இ - ள்.) சிதைவு அகல் காதல் தாயை - கெடுதலில்லாத அன்பையுடைய தாயையும், தந்தையை - தந்தையையும், குருவை - குருவையும், தெய்வம் பதவி அந்தணரை - தெய்வத்தின் தானத்தை யுடைய பிராமணர்களையும், ஆவை - பசுக்களையும், பாலரை - சிசுக்களையும், பாவைமாரை - மகளிரையும், வதை புரிகுநர்க்குஉம் - கொலை செய்தவர்களுக்கும், மாற்றல் ஆம் ஆற்றல் உண்டு ஆம் - (அந்தப் பாவங்களைப்) பரிகரிக்கத்தக்க உபாய முளதாம்; மாயா உதவி கொன்றார்க்கு - அழியாத உபகாரத்தை மறந்தவர்கட்கோ, ஒழிக்கல் ஆம் உபாயம் ஒன்று ஏன்உம் உண்டுஓ - (அப்பாவத்தை) ஒழிக்கும்வழி ஒன்றாயினும் உளதோ? [இல்லை யென்றபடி]; (எ - று.)

தாய்க்கொலை தந்தைகொலை ஆசான்கொலை அந்தணர்கொலை கோக்கொலை குழவிக்கொலை பெண்கொலை என்னுங் கொடும்பாதகங்களுக்கெல்லாம், அப்பாவம் நீங்கும் பரிகாரமாகிய கழுவாய் உண்டு; செய்ந்நன்றி மறத்தலுக்கோ அது இல்லை யென்பதாம். இதனால், மகாபாதகங்களனைத்தினுங் கொடியது இந்தச் செய்ந்நன்றிக்கொலை யெனச் செய்ந்நன்றி மறத்தலின் மிக்ககொடுமை கூறப்பட்டது; நன்றிமறத்தலின் கொடுமையை விளக்கலின் பொருட்டே உதவி கொன்றாரைக் கொலைப்பாவம் செய்தவராகக் கூறியது. "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற திருக்குறளும், "ஆன்முலை யறுத்த அறனிலோர்க்கும், மாணிழை மகளிர் கருச்சிதைத்தோர்க்கும், பார்ப்பார்த்தப்பிய கொடுமையோர்க்கும், வழுவாய்மருங்கிற் கழுவாயுமுளவென, நிலம்புடைபெயர்வதாயினு மொருவன், செய்திகொன்றோர்க்குய்தியில்லென, அறம்பாடிற்றே" என்ற புறநானூறும் நோக்கத்தக்கன.

தாய் எக்காலத்திலும் எக்காரணத்தினாலுங்கெடாத அன்பினாற் சிறத்தல்பற்றி, அவட்கு 'சிதைவகல்காதல்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. இனி, இவ்வடைமொழியைத் தந்தை முதலியோர்க்கும் கூட்டி யுரைப்பாரு முளர். தாயை முதலில் வைத்தது, சிறப்புப்பற்றி. தாய் தந்தை ஆசான் இவர்களை முறையே நிறுத்தியது, வேதமும். தெய்வப்பதவியந்தணர் - தெய்வம்போலக் கொண்டாடத்தக்க சிறப்புநிலைமையை யுடையராகிய பிராமணர்; "கரியமாலினுங் கண்ணுதலானினும், உரிய தாமரைமேலுறைவானினும், விரியும் பூதமோரைந்தினும் மெய்யினும், பெரிய ரந்தணர் பேணுதி யுள்ளத்தால்" என்று அயோத்தியாகாண்டத்திற் கூறியதும் காண்க. அந்தணர்க்கு 'பூதேவர்' என ஒருபெயரிருத்தலும் உணரத்தக்கது. தெய்வப்பதவி - சாபாநுக்கிரக சக்தியுமாம். பாவைமார் - சித்திரப்பதுமை போலழகியவர். ஆற்றல் - உபாயம். மாயாஉதவி - பயனழியாத உபகாரம்; மறக்கத்தகாத நன்றி. மாயாஉதவி கொன்றார் - அழியாத உதவிகோறலாகிய பாவத்தைச் செய்தவரென்று உரைத்து, மாயாஎன்ற பெயரெச்சத்தை உதவிகோறற்பாவத்தி லியைவ

தாக்கி, கழுவலாமுபாயமின்மைக்குக் காரணத்தைத்தெரிக்குமென் பாருமுளர். பி - ம்:—[1]சிறைவிலா. [2]தாரைதயை. [3]மாற்றம், உபாயம். [4]என்றேனும், எங்கேனும். [5]உய்யலாம். (635)

63. ஐயநும் மோடு மெங்க ளரிக்குலத் தரச னோடும்
மெய்யுறு கேண்மை [1]யாக மேலைநாள் விளைவ [2]தாய
[3]செய்கையென் செய்கை யன்றோ வன்னது சிதையு மாயின்
உய்வகை [4]யெவர்க்கு முண்டோ வுணர்வுமா சுண்ட[5]தன்றோ.

(இ - ள்.) ஐய - சுவாமி! நும்மோடுஉம் - உங்களுக்கும், எங்கள் அரி குலத்து அரசனோடுஉம் - வானரக்குழாங்கட்கு அரசனாகும் எங்கள் சுக்கிரீவனுக்கும், (ஒருவரோடொருவர்க்கு), மெய் உறு - உண்மைபொருந்திய, கேண்மை - சிநேகம், ஆக - உண்டாகும்படி, மேலை நாள் விளைவது ஆய - முன்னாளிலுண்டான, செய்கை - செயல், என் செய்கை அன்றோ - எனதுசெயலன்றோ? அன்னது சிதையும் ஆயின் - அந்தச் சிநேகதருமம் அழியுமானால், உய்வகை எவர்க்குஉம் உண்டுஓ - (அந்தத்தீவினையினின்று) தப்பும்வகை (சிநேகித்தவனான சுக்கிரீவனுக்கேயன்றிச் சிநேகஞ்செய்வித்தவனான எனக்குமுள்பட) யாவர்க்கேனும் உளதோ? [இல்லையென்றபடி]; (அன்றியும், அங்ஙனமானால்), உணர்வு மாசு உண்டது அன்றோ - (எங்கள்) அறிவெல்லாம் குற்றமடைந்ததாகுமன்றோ? (எ - று.)

'உணர்வுமாசுண்டதன்றோ' என்றது, உங்கள் கருணையைப் பெற்ற நாங்கள் அறிவுகெட்டு இழிவடைவோமோ? என்ற குறிப்பினது. பி - ம்:—[1]ஆக்கி, ஆகி. [2]ஆன. [3]செய்கையே. [4]எனக்கு முண்டோ. [5]அன்றே. (636)

64. தேவருந் தவமுஞ் செய்யு நல்லறத் திறமு மற்றும்
[1]யாவரு நீரே யென்ப [2]தென்வயிற் [3]கிடந்த தெந்தாய்
ஆவது [4]நிற்க சேரு மரணுண்டோ வரு[5]ளுண் டன்றே
மூவகை [6]யுலகுங் காக்கு [7]மொய்ம்பினீர் முனிவுண் டானால்.

(இ - ள்.) எந்தாய் - எமது தலைவனே! (செய்யும்) தவம்உம் - (முற்பிறப்புக்களிலும் இப்பிறப்பிலும் நாங்கள்செய்த) தவமும், செய்யும் நல் அறம் திறம்உம் - (மற்றும் நாங்கள்) செய்த நல்ல தருமகாரியங்களின் வருக்கமும், தேவர்உம் - தேவர்களும், மற்றுஉம் யாவர்உம் - மற்றும் (மேம்பாடுடையரான) எத்திறத்தாரும், நீரே - (எங்கட்கு) நீங்களே, என்பது - என்கிற கருத்து, என்வயின் கிடந்தது - என்னிடத்திற் பொருந்தியுள்ளது; ஆவது நிற்க - அது இருக்கட்டும்; மூவகைஉலகுஉம் காக்கும் மொய்ம்பினீர் - மூன்று வகைப்பட்ட உலகங்களையும் பாதுகாக்கும் ஆற்றலுடையவரே! முனிவு உண்டு ஆனால் - (உங்கட்கு) எங்கள்மேற் சீற்றம் உண்டாகுமானால், சேரும் அரண் உண்டுஓ - (நாங்கள்) சென்று சேர்ந்து தப்பி உய்யும் பாதுகாவலுளதோ? [இல்லையென்றபடி]; அருள் அன்றேஉண்டு - (அதற்கும் உங்கள்) கருணை தானே கதியாக உளதாவது; (எ - று.)

"எங்குப்போயுங்கே னுன்னிணையடியேயடையலல்லால், எங்கும் போய்க் கரைகாணு தெறிகடல்வாய்மீண்டேயும், வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவைபோன்றேனே" என்றாற்போல உங்களோடு மாறுபட்டவர்க்கு உங்கள் கருணையேயன்றிக் கதிவேறில்லை யென்றதாம். தவம் அறத்திறம் என்பன - அவற்றாலாகிய பயனைக் காட்டும். பி - ம்:—[1]யாவையும். [2]எம்வயின். [3]இடந்ததன்றே. [4]கிற்கச்சேரும். [5]உண்டன்றோ, உண்டன்றேல், உண்டன்றி, உண்டாகி. [6]உலகங். [7]மொய்ம்பினிர். (637)

65. மறந்திலன் கவியின் வேந்தன் வயப்படை வருவிப் பாரைத்
திறந்திற மேவி யன்னார் [1]சேர்வது பார்த்துத் தாழ்த்தான்
அறந்துணை நுமக்கு[2]ற் றான்ற [3]வாய்மையின் றழியு மாயின்
பிறந்தில னன்றே யொன்றோ நரகமும் பிழைப்ப தின்றால்.

(இ - ள்.) கவியின் வேந்தன் - வானரராசனான சுக்கிரீவன், மறந்திலன் - (உங்கள் கட்டளையை) மறந்தானில்லை; வய படை வருவிப்பாரை - வலிமையுள்ள வானரசேனைகளை யழைத்துவருந் தூதர்களை, திறம் திறம் ஏவி - கூறுகூறாக இடந்தோறும் அனுப்பி, அன்னார் சேர்வது பார்த்து · தாழ்த்தான் - அவ்வானரர்கள் வந்து சேர்வதை எதிர்பார்த்துக்கொண்டிருத்தலினால் தாமதித்தான்; (இதுவேயன்றி), அறம் துணை நுமக்கு - தருமத்திற்குத் துணையாகவுள்ள உங்களிடத்து, உற்று - நேர்ந்து, (பின்பு), ஆன்ற சிறப்புற்ற, வாய்மை-சத்தியத்தினின்று, இன்று-இப்போது, அழியும் ஆயின் -மாறுபடுவனானால், (அச்சுக்கிரீவன் இவ்வுலகத்திற் பிறந்தும்), பிறந்திலன் அன்றே - பிறவாதவனே யாவனன்றோ? ஒன்றோ - இது மாத்திரமோ? நரகம்உம் பிழைப்பது இன்று - (அவனுக்கு மறுமையில்) நரகமும் தவறாது; (எ - று.)

தருமத்தைப்பாதுகாப்பவர்களான உங்களிடத்திற்சுக்கிரீவன் தான் சொன்ன சொல்லைத் தவறுவனானால் அவன்பிறவி பயனுற்றதாகாது; அதுவுமன்றி, அவன் தவறாமல் நரகமுமடைவன் என்பதாம். பிறப்பெடுத்ததன் பயன் - வாய்மை தவறாது ஆன்றோர்க்குத் துணைசெய்வதான அறம்புரிவதே யென்பது இங்குப் போதரும். பி - ம்;—[1]செய்கையிற் சிறியனானன், செம்மையிற்சிறியனான், சேர்வதுபார்த்தேதாழ்த்தான். [2]உற்றான்றன், தான்றன், தந்த, உய்த்தான்றன். [3]வாய்மையுமழியுமாயின், வாய்மையின்றழிக்குமாயின். (638)

66. உதவாம லொருவன் செய்த வுதவிக்குக் [1]கைம்மா றாக
[2]மதயானை யனைய மைந்த [3]மற்றுமுண் டாக வற்றே
சிதையாத [4]செருவி லன்னான் முன்சென்று செறுநர் மார்பில்
உதையானே [5]லுதையுண் டாவி[6]யுலவானே லுலகின் மன்னே.

(இ - ள்.) மதம் யானை அனைய மைந்த - மதங்கொண்ட யானையைப்போன்ற இளவீரனே!—உதவாமல் ஒருவன் செய்த உதவிக்கு

கைம்மாறு ஆக - (தான் ஒருவனுக்கு) ஒருதவியுஞ் செய்யாமலிருக்கையில் (தனக்கு) அவன் செய்த உதவிக்கு மாற்றுதவியாக, சிதையாத செருவில் - கெடுதலில்லாத போரில், அன்னான்முன் சென்று - அவனுக்கு (த் தான் துணையாக) முன் சென்று, செருநர் மார்பில் - (அவனது) பகைவரது மார்பிலே, உதையான் ஏல்-(படைக் கலங்களைச்) செலுத்திடானாயினும்,—உதையுண்டு - (அப்பகைவரின் படைக்கலங்களால் தான்) அடிபட்டு, ஆவி உலவான் ஏல் - உயிரொழிந்திட்டானாயினும்,—உலகில் - உலகத்தில், மற்றும் உண்டாகவற்றுஓ - வேறு கைம்மாறு உள்ளதாக வல்லதோ? [இல்லையென்றபடி];(எ - று.)—மன், ஓ - ஈற்றசை.

"செய்யாமற் செய்தவுதவிக்கு வையகமும், வானகமு மாற்றலரிது" என்பது, நூற்கொள்கை யாயினும், அவ்வுதவியாளனுக்காகத் தான் போர்க்களத்துச் சென்று அவன் பகைவரை அழித்தலும், அது முடியாவிடின் அப்பகைவர் கையால் தான் உயிர் மாய்தலும் ஒருவாறு ஈடாகலாம்; இவையன்றி வேறு என்ன இருக்கின்றது? என்பதாம். போரிற்புண்படுதற்கு ஏற்ற இலக்கு ஆதலால், மார்பு கூறப்பட்டது. பி - ம்:—[1]கைம்மாறின்மை. [2]மதவானே. [3]மாறும். [4]செருவினான் முன்சென்று சென்றுன்னி மார்பத்து. [5]உதைப்புண்டாவி. [6]உலையானேல். (639)

67. [1]ஈண்டினி நிற்ற லென்ப தினியதோ ரியல்பிற் றன்றால்
வேண்டல ரறிவ ரேனுங் கேண்மைதீர் வினையிற் றாமால்
[2]ஆண்டகை யாளி மொய்ம்பி [3]னையநீ ரளித்த செல்வம்
காண்டியா லுன்முன் வந்த கவிக்குலக் கோனொ டென்றான்.

(இ - ள்.) ஆண் தகை ஆளி மொய்ம்பின் ஐய - ஆண்மைக் குணமுடைய சிங்கம்போன்ற வலிமையோடு கூடிய தலைவனே! ஈண்டு இனி நிற்றல் என்பது - இவ்விடத்தில் இப்போது (மாறுபாடு கொண்டான்போன்று) நிற்பது, இனியது ஓர் இயல்பிற்று அன்று - நன்மையானதொரு தன்மையையுடையதாகாது; வேண்டலர் அறிவர் ஏல் - (இச்செய்தியைப்)பகைவர் அறிவாராயின், நும் கேண்மை தீர் வினையிற்று ஆம் - (அது எங்கட்கு) நுமது சிநேகம் நீங்குதற்கு உரிய காரியமாய் முடியும்; நீர் அளித்த செல்வம் - (வாலிவதஞ் செய்து) நீங்கள் கொடுத்த செல்வத்தையும், உன் முன் வந்த கவி குலம் கோனொடு - உனக்கு முன்பிறந்தவனான [தமையன்முறை பாராட்டக்கூடிய] வாநரசாதிக்கரசனாகிய சுக்கிரீவனையும், காண்டி - (உள்ளே வந்து) பார்ப்பாயாக, என்றான் - என்று கூறினன், (அநுமான்); (எ - று.)—'ஆல்' மூன்றும் - அசை.

வானரர்கள் வாயிலையடைத்துக் குன்றுகளையடுக்கியது முதலியன, உனது சீற்றத்தைக் கண்டு அஞ்சியதனால் நிகழ்ந்த செய்கைகளே; இவற்றை நீ இவ்வாறுகருதாமல் உம்மோடுமாறுபட்டுச்

செய்தனவாகக்கொண்டு நொதுமலன்போல இங்கு நிற்பின், அது கண்ட நமது மாற்றார் உனது சீற்றத்தை மிகுவித்து நம்இருதிறத் தார்க்குமுள்ள நட்பைக் கெடுத்தற்குக் காரணமாகும். ஆதலால் நீ உள்ளேவந்து நீங்களளித்த செல்வத்தினுற் சிறப்புப்பெற்றிருக் கின்ற சுக்கிரீவனைக் கண்டு சீற்றந்தணிவாயாக என்று இலக்கும ணனை அநுமான் வேண்டினனென்பதாம். சுக்கிரீவனைக்காண வந்த இலக்குமணனை உள்ளே அழைத்துச்செல்வதற்குச் சுக்கிரீவனது பிரதான மந்திரியான அநுமான் தகுந்தவனென்க. இனி, இரண் டாமடிக்கு - நீ இவ்வாறு வெளியில் நிற்பதைப் பகைவர் அறிந்தால் சிநேகமற்ற செய்கையாகவே தோன்றும் எனப்பொருள் கூறுவாரு முளர். ஆளி - சிங்கம். இராமபிரான் சுக்கிரீவனைத் தனது முதல் தம்பியாகிய பரதனைப் போலக் கருதியிருக்கின்றனென்பது, மேல் "பரதனீயினையன பகரற்பாலையோ" என்பதனுற் பெறப்படுவ தாலும், "உன் தம்முனைச்சார்தியென்றான்" என்று வருதலாலும், பரதனைப்போலவே சுக்கிரீவனும் இலக்குவனுல் தமையன்முறை யாகக் கொள்ளப்படுபவனென்பது போதருதலால், 'உன்முன்வந்த கவிக்குலக்கோன்' என்றது. தாரையானவள் சுக்கிரீவனிடத்து வருமாறு இலக்குமணனை நோக்கிக் கூறும் சந்தர்ப்பத்தில் "த்வத் ப்ராதரம் வாநர வம்ஸநாதம்" என ஸ்ரீ வால்மீகபகவான் அருளி யிருத்தலும் காண்க. அறிவர் ஏனும் என்று எடுத்து, உம்மையை இசைநிறையாகக்கொள்வாருமுளர். 'நீர்' என்றது - இராமபிரானை உளப்படுத்தியது. பி-ம்:—[1] ஈண்டுநீ. [2] ஆண்டகையருளின், ஆண்டகை வாளி. [3] ஐயநீ, அணைய நீர். (640)

68.—அனுமன்வார்த்தையால் இலக்குமணன் சீற்றந் தணிதல்.

மாருதி மாற்றங் கேட்ட மலைபுரை வயிரத் தோளான்
[1] தீர்வினை சென்று நின்ற சீற்றத்தான் சிந்தை செய்தான்
ஆரிய னருளிற் றீர்ந்தா [2] னல்லன்வந் தடுத்த செல்வம்
[3] பேர்வரி தாகச் செய்த சிறுமையா னென்னும் பெற்றி.

(இ - ள்.) மாருதி மாற்றம் கேட்ட - அநுமான் கூறிய வார்த் தையைக் கேட்ட, மலை புரை வயிரம் தோளான் - மலையையொத்த உறுதியான தோள்களையுடையவனுன இலக்குமணன்,—தீர் வினை சென்று நின்றசீற்றத்தான் - நீங்குதல்தொழிலைப்பொருந்தியகோப முடையவனுய் [கோபம்தணிந்தவனுய்], (இச்சுக்கிரீவன்), ஆரியன் அருளின் தீர்ந்தான் அல்லன் - இராமபிரானதுகட்டளையினின்று (உண்மையாக)நீங்கினவனல்லன்: வந்து அடுத்தசெல்வம்பேர்வு அரிது ஆக செய்த சிறுமையான் - (தனக்குக்) கிடைத்த செல்வம் (தன்னை விட்டு) அப்பாற்பெயரவொட்டாமற் செய்ததனுலுண்டாகிய இழி குணத்தையுடையவனுன், என்னும் பெற்றி - என்னுந் தன்மையை, சிந்தை செய்தான் - மனத்திற் கருதினுன்; (எ - று.)

இச்சுக்கிரீவன் நம்மை அவமதித்து நின்றானல்லன்; சொன்ன தவணைப்படிவாராது இராமபிரானது கட்டளையைமீறவேண்டுமென் னும் எண்ணம் இவனுக்கு எள்ளளவுமில்லை: செல்வக்களிப்பினால் தான் செய்யவேண்டியதை மறந்ததனாலாகும் இது என்று அநுமன் வார்த்தையால் தெளிந்து, இலக்குமணன் தான்கொண்ட சினம் முற்றிலும் ஆறினனென்க. எவ்வளவுபெருஞ்செல்வம் பெற்றிருந்தாலும் தாமரையிலையில் நீர்போலத் தோய்ந்தும் தோயாது நிற்கும் பெரியோர்போலன்றிச் சுக்கிரீவன் தனக்குக் கிடைத்த செல்வத்தினாற் போகத்திற் பரவசப்பட்டு மூழ்கினவனாய்த் தான் செய்யவேண்டிய செயல்களைச் செய்யாதுநின்றதுபற்றி, அவனை, 'செல்வம் பேர்வரிதாகச்செய்த சிறுமையான்' என்றான். பின்னிரண்டடிக்கு - இராமபிரானது கட்டளையினின்று சுக்கிரீவன் உண்மையாகவே நீங்கினவனல்லன்; தனக்குக்கிடைத்த செல்வம் பிறிதொன்றிற் செல்லவொட்டாதபடி மனத்தைப்பிணித்த இழிகுணத்தினால் (ஆரியன் கட்டளையை நீங்கினான்போலும்) என்று உரை கூறுவாருமுளர். முந்தியவுரையில், சிறுமையான் - பெயர்; இவ்வுரையில், மூன்றாம் வேற்றுமைவிரி. பி - ம்:—[1]சீர்வினை சென்று நின்ற, தீர்வினைச்சென்றுமின்று. [2]அல்லர், அல்ல. [3]பேர்வகையாகச்செய்த. (641)

69.—இலக்குமணன் அநுமானை நோக்கிக் கூறத்தொடங்குதல்.

[1]அனையது கருதிப் பின்ன ரரிக்குலத் தவனை நோக்கி
[2]நினையொரு மாற்ற [3]மின்னே நிகழ்த்துவ துளது நின்பால்
[4]இனையன வுரைத்தற் கேற்ற [5]வெண்ணுதி யிவைநீ [6]யென்னா
வனைகழல் வயிரத் திண்டோள் மன்னிளங் குமரன் சொல்வான்.

(இ - ள்.) அனையது கருதி - (இவ்வாறு) அதனைப்பற்றிச் சிந்தித்து, பின்னர்-பிறகு, வனை கழல் வயிரம் திண் தோள் மன் இளங் குமரன் - (வீரக்கழலை) அணிந்த பாதங்களையும் மிகவும்வலிய தோள்களையு முடைய அரசிளங்குமரனான இளையபெருமாள்,— அரி குலத்தவனை நோக்கி - வானர சாதியானான அநுமானைப் பார்த்து, 'இன்னே நினை ஒரு மாற்றம் நிகழ்த்துவது உளது - இப்பொழுதே உன்னிடத்தில் (யான்) ஒருவார்த்தை சொல்லவேண்டுவது உண்டு; இனையன நின்பால் உரைத்தற்கு ஏற்ற - இவ்வார்த்தைகள் உன்னிடத்திற் சொல்லுதற்குத் தகுதியுடையவை; (ஆதலால்), நீ இவை எண்ணுதி - நீ இவ்வார்த்தைகளை ஆலோசிப்பாயாக', என்னா சொல்வான் - என்று கூறத்தொடங்கினான்; (எ - று.)—அவற்றை, அடுத்த ஐந்து கவிகளிற் காண்க.

அனையது என்றது - சுக்கிரீவன் ஆரியனருளில் தீராதிருந்தும், அவனைப் பேர்வரிதாப்பெற்ற செல்வச்சிறுமை செய்ததுஎன்பது. இங்குச் செல்வம்பெற்றார்க்குப் பல்வகைமாறாட்டம் நேருமென்பதும்,

அதனால் தீங்குநேரு மென்பதும் குறிப்பிக்கப்பட்டமை காண்க. ஒரு மாற்றம் நிகழ்த்துவதுஉளது, இனையனவுரைத்தற்கேற்ற, இவை - பன்மையொருமைமயக்கம். பி - ம்:—[1] அனையவை. [2] நினைவொரு. [3] இன்னம். [4] எனையனபுணர்த்தற்கேற்ற. [5] எண்ணுதியிதனை, எண்ணியநீதி. [6] என்ன. (642)

70.—இதுமுதல் ஐந்துகவிகள்-இலக்குமணன் வார்த்தை.

தேவியைக் குறித்துச் [1]செய்த சீற்றமு மானத் தீயும்
ஆவியைக் குறித்து நின்ற வையனை யதனைக் [2]கண்டேன்
கோவியற் றரும நீங்கக் கொடுமையோ டுறவு [3]கூடிப்
பாவியர்க் கேற்ற [4]செய்கை [5]கருதுவல் பழியும் பாரேன்.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) தேவியை குறித்து செய்த சீற்றம்உம் - சீதாபிராட்டியை (இராவணன் கவர்ந்துசென்றதை)க் குறித்துக் கொண்ட சினமும், மானம் தீஉம்-மானமாகிய நெருப்பும், ஐயனை ஆவியை குறித்து நின்ற - இராமபிரானது உயிரைப்பற்றி வருத்தி நின்றன; அதனை கண்டேன் - அவ்வாறு வருத்துதலை(க் கண்கூடாக)க் கண்ட நான், —கோ இயல் தருமம் நீங்க - அரசர்கட்கு உரிய தருமம் ஒழிய, கொடுமையோடு உறவு கூடி-கொடுந்தன்மையோடு உறவு கொண்டு [மிகவுங் கொடுமையாக], (உம்மை), பாவியர்க்கு ஏற்ற செய்கை கருதுவல் - பாவிகளைத்தண்டித்தற்குஉரிய செயல்களைச் செய்யநினைத்திருப்பேன்; பழிஉம் பாரேன் - (அதனால் எனக்கு நேரும்) பழியையுஞ் சிறிதும் கருதமாட்டேன்; (எ - று.)

இதனால், தனக்கு நேர்ந்த பெருஞ்சீற்றத்தையும் அதனால் விளையக்கூடியவற்றையும் அச்சீற்றத்திற்குக்காரணத்தோடு தெரிவிக்கின்றான், இலக்குமணப்பெருமாள். "பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்து, உள்வேர்ப்பரொள்ளியவர்" என்றபடி காலம் பார்த்து ஆறியிருத்தல் அரசர்க்குக்கடமையா யிருக்கவும், இராமபிரானுக்கு நேர்ந்த துன்பங்களைக் கண்டு ஆற்றாமல் இலக்குமணன் 'கோவியல் தருமம்நீங்க...செய்கைகருதுவல்' என்றான். மானம் = தமதுநிலையைக் கருதுவதனாலான மனத்திண்ணெங்கியநிலை: அபிமானம் என்னலாம். மானத்தைத்தீயாகஉருவகப்படுத்தியது, உயிரை எரித்து வருத்துவதனால். பழி - அரசதருமத்தைக் கைக்கொள்ளாமையால் வரும் அபகீர்த்தி. பி - ம்:—[1] சென்ற, செற்ற. [2] கண்டே. [3] கூட்டி. [4] செய்யக். [5] கருதுவன், கருதினன். (643)

71. ஆயினு மென்னை யானே யாற்றிநின் றுவி [1]யுற்று
நாயகன் றனையுந் [2]தேற்ற நாள்பல கழிந்த வன்றேல்
[3]தீயுமிவ் வுலக மூன்றுந் தேவரும் [4]வீவ ரொன்றோ
வீயுநல் லறமும்[5]போகா விதியையார் [6]விலக்கற் பாலார்.

(இ - ள்.) ஆயின்உம்-ஆனாலும், என்னையானேஎ ஆற்றிநின்று - என் சினத்தை யானேயே தணித்துக்கொண்டு, ஆவிஉற்று - உயிர்

தரித்திருந்து, நாயகன் தனைஉம் தேற்ற - இராமபிரானையும் தேறுதல் செய்வதற்கே, நாள் பல கழிந்த - பலநாள்கள் கழிந்திட்டன; அன்று எல் - அல்லாவிட்டால் [எங்களிருவர்க்கும் கோபந்தணியாதிருந் தால்], இ உலகம் மூன்றுஉம் தீயும் - (எங்கள் கோபத்தினால்) இந்த மூன்று உலகங்களும் தீந்துபோம்; தேவர்உம் வீவர் - தேவர்களும் இறந்தொழிவர்; ஒன்றோ - இதுமாத்திரமோ? நல் அறம்உம் வீயும் - சிறந்ததருமங்களும் அழிந்தொழியும்; போகா விதியை விலக்கல் பாலார் யார் - அழியாமல் நிலைத்திருத்தற்கு உரிய விதியை நீக்கு தற்கு உரியவர் எவர்? (எ - று.)

என்னுள்ளம் கவர்ந்தெழுந்த சினத்தைச் சுயமாகவே யவித்து உயிர் தன்னிலையடையப் பெற்றபிறகு இராமபிரானைத் தேறுதல் புரிவிக்கப் பலநாள் கழிந்தன: இங்ஙன் நாள் கழிந்து எங்கள் சினமுந் தணிந்திராவிட்டால் உலகமூன்றும் தேவரும் நல்லறமும் அழிந்தே தீரவேண்டியிருக்கும்: அவற்றினுடைய நல்வினைப்பயனாலேயே எங்கள் சீற்றமுந் துயருந் தணிந்தனஎன்றவாறு. இலக்குமணன் தமக்கு சேர்ந்ததுயரை நினைந்து விதியைநொந்து 'போகா விதியை யார்விலக் கற்பாலார்' எனக் கூறினானென்பாருமுளர். பி - ம்:—[1]நைந்து, உய்ந்து, உய்த்து. [2]தேற்றிநாள்பலகழித்தேனின்றேல். [3]தேயும். [4]வீவரன்றே, விளிவரன்றே. [5]பேராதாரது, போகர்விதியது, போகா விதியெவர். [6]விலக்கற்பாற்றோ. (644)

72. உன்னைக்கண் டுங்கோன் தன்னை யுற்றிடத் துதவும் [1]பெற்றி, [2]என்னைக்கண் டனன்போற் கண்[3]டிந் நாளிடை நெடிது வைகித், [4]தன்னைக்கொண் டிருந்தே தாழ்த்தா னன்றெனிற் றனு வொன்றாலே, [5]மின்னைக்கண் டனையாள் தன்னை நாடுதல் விலக்கற் பாற்றோ.

(இ - ள்.) (இராமபிரான்), உன்னை கண்டு - (முதலில்) உன்னைப் பார்த்ததனால், உற்ற இடத்து உதவும் பெற்றி - ஆபத்துநேர்ந்த காலத்தில் உதவி செய்யுந் தன்மைக்கு, உம் கோன் தனனை - உங்களரசனை சுக்கிரீவனை, என்னை கண்டனன் போல் கண்டு - என்னைக் கண்டிருப்பது போலவே பார்த்து [என்னிடத்திற்போலவே அபிமானித்துத் தம்பியாகப் பாவித்துச் சினேகித்து], இ நாளிடை நெடிது வைகி - இத்துணைநாள்வரையில் நெடுங்காலங் கழித்து, தன்னை கொண்டிருந்துஏ தாழ்த்தான் - தன்னுயிரை அரிதில்தாங்கியே பொறுத்திருந்தான்; அன்று எனின் - அல்லாவிட்டால், தனு ஒன்றாலே - (தனது) வில்லொன்றினாலே, மின்னை கண்ட அனை யாள் தன்னை நாடுதல் - மின்னலைக்கண்டாற்போன்ற உருவத்தை யுடையவளான சீதையைத் தேடுதல், விலக்கல் பாற்றோ - (பிறரால்) தடுக்குந் தன்மையதோ? [எவராலும் தடுக்க முடியா தென்றபடி]; (எ - று.)

உன்னைக்கண்டதும் உன்னிடத்து ஓருறவுண்டாக, உன்மூல மாக உன்கோனிடத்து நட்புக் கொண்டு, அவன் இடருற்றபோது

உதவுபவனென்றெண்ணி என்னிடத்திற்போலவே மிக்க அன்பு வைத்து, உங்கள் மூலமாகக் காரியத்தை முடித்துக்கொள்ளலா மென்றே இராமபிரான் இதுவரையிற்பொறுத்திருந்தான்; அவன் இவ்வாறு இருந்தது, உங்கட்கு ஒரு சிறப்பை விளைக்கவேண்டு மென்ற எண்ணத்தினாலாகுமேயன்றி, தனக்குவல்லமையின்மையா லன்று; நினைத்தால், தனது வில்லொன்றினாலே பகைவரைத் தொலைத்துச் சீதையை மீட்க இராமபிரானால் எளிதில்முடியு மென்ப தாம். பெற்றி - பெற்றியால், கண்டு எனவுமாம். உங்கோன் தன்னை உற்றிடத்துதவும் பெற்றியென்னைக் கண்டனன்போற் கண்டு என்ப தற்கு - உங்கோன் தன்னை உற்றிடத்துதவும் பெற்றியையுடைய என்னைக் கண்டாற்போலவே கண்டு என்றும் உரைப்பர். பி - ம்:— [1]பெற்றிக்கு. [2]உன்னைக் கண்டன்னதோர்ந்து. [3]இங்கித்துணை, இங்கெத்துணை. [4]தன்னைக் கண்டனனே தாழ்ந்தான், தன்னைக் கண்டு... [5]மின்னைக்கண்டனன்னாள். 'நின்னைக்கண்டனன் போனின் றன் கண்ணிடைநெடிதுவைகி' என்று சிலபிரதிகளில் இரண்டாமடி. (645)

73. ஒன்றுமோ வான மன்றி [1]யுலகமும் பதினொ லுள்ள
வென்றிமாக் கடலு மேழேழ் [2]மலையுள்ள வென்ன வேயாய்
நின்றதோ ரண்டத் துள்ளே யெனினது நெடிய தொன்றோ
அன்றுநீர் சொன்ன மாற்றந் தாழ்வித்தல் தரும மன்றால்.

(இ - ள்.) வானம் ஒன்றும்ஓ - ஆகாயமொன்றுமாத்திரமோ? அன்றி - அதுவல்லாமல், பதினால் உள்ள உலகம்உம் - பதினான்காக உள்ளனவாகிய உலகங்களும், வென்றி மா கடல் ஏழ்உம் - வெற்றி யையுடைய பெரிய ஏழு கடல்களும், மலை ஏழ் (உம்) - குலபர்வதங்க ளேழும், உள்ள - இருக்கின்றன, என்னஏ ஆய்நின்றது - என்று சொல்லும்படிநிற்பதாகிய, ஓர் அண்டத்துள்ளே - ஓருலகவுருண் டைக்குள்ளே, (ஏதேனுமோரிடத்தில்), எனின் - (சீதா பிராட்டி யிருக்கின்றாள்) என்றால், அது - அவ்விடத்தைத் தேடிக் கண்டு மீட்டுக்கொணர்தல், நெடியது ஒன்றுஓ - (இராமபிரானது வில்லுக் குப்) பெரியதொரு காரியமாகுமோ? (ஆயினும்), அன்று நீர் சொன்ன மாற்றம் தாழ்வித்தல் - அப்போது [முன்னே] நீங்கள் சொன்ன சொல்லை நிறைவேற்றாது தாமதித்தல், தருமம் அன்று - (உங்களுக் குத்) தருமமாகாது; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

பெரிய இவ்வண்டகோளத்தில் எங்கிருந்தாலும் தன் வில் லொன்றினாலேயே சீதாபிராட்டியைமீட்டல் இராமபிரானுக்கு அரிய தொரு தொழிலன்று: ஆயினும், யான் சினந்து இங்குவந்தது, நீங் கள் சொன்னசொற்படி நடவாமல் தருமவிரோதமாகத் தாமதித்த தனாலேயே யென்பதாம். பிரளயகாலத்தில் உலகத்தைப்பொங்கி யழிக்குந் தன்மையுடையதாதலால், 'வென்றிமாக்கடல்' என்றார். நெடியதொன்றோ? அன்று என வினவும் விடையுமாக்கித் தேற்றப்

பொருள்பட உரைப்பினுமாம். 'உங்கட்கு நெடியது ஒன்றோ?' என்பாருமுளர். பி - ம்:—[1] அரணமின்றிவ், வரனமின்றி. [2] மலேயு மேலெண்ணவேயான், மலேயுமேழென்னவேயாய், வேலேயு மென்ன வேயாம். (646)

74\. தாழ்வித்தீ ரல்லீர் பன்னாள் [1] தருக்கிய வரக்கர் தம்மை
வாழ்வித்தீ ரிமையோர்க் கின்னல் வருவித்தீர் மரபிற் றீராக்
கேள்வித்தீ [2] யாளர் துன்பங் கிளர்வித்தீர் பாவந் தன்னை
மூள்வித்தீர் முனியா தானை முனிவித்தீர் [3] முடிவி னென்றான்.

(இ - ள்.) தாழ்வித்தீர் அல்லீர் - நீங்கள் காலதாமதஞ்செய்ப வர்கள் மாத்திரமல்லீர்; (அதனால்), பல் நாள் தருக்கிய அரக்கர் தம்மை வாழ்வித்தீர் - பலநாளாகச் செருக்குக்கொண்டிருந்தராக்ஷ ஸர்களை (ப்பின்னும்) வாழச்செய்தீர்கள்; இமையோர்க்கு இன்னல் வருவித்தீர் - தேவர்கட்குத் துன்பத்தை வருவித்தவரானீர்கள; மரபில் தீரா கேள்வி தீ ஆளர் துன்பம் கிளர்வித்தீர் - வரன்முறையி னின்று நீங்காத நூற்கேள்விகளையும் ஓமாக்கினிகளையுமுடைய முனிவர்கட்குத் துன்பத்தைமிகுவித்தீர்கள்; பாவம் தன்னைமூள் வித்தீர் - பாவத்தை மேன்மேலும் வளரச்செய்தீர்கள்; (இவ்வளவே யன்றி), முடிவின் - முடிவாக, முனியாதானை முனிவித்தீர் - (ஒரு காலும் கோபியாதவனான [சாந்தமூர்த்தியான] இராமபிரானையுங் கோபிக்கச் செய்தீர்கள், என்றான் - என்று (இலக்குமணன்) கூறினான்; (எ - று.)

நீங்கள் காலதாமதஞ்செய்வது, அரக்கர்க்குப் பெருவாழ்வையும் தேவர்க்கும் முனிவர்க்கும் துன்பத்தையுமுண்டாக்கி நுமக்குப் பாவத்தை விளைப்பது மன்றிச் சாந்தமூர்த்தியான இராமபிரானுக் கும் கோபத்தைத் தோற்றுவித்து நுமதுகேட்டிற்கும் காரணமாகு மென்பதாம். பி - ம்:—[1] தருக்கினர்தம்மை நீவீர். [2] நுமக்கும், நமக்கும், அனையான். [3] முடிவென், முடிந்தீர், முடிதிர், என்றான் முன்பன். (647)

75.—அநுமான் இலக்குமணனுக்குச் சமாதானங்கூறி அவனைச் சுக்கிரீவனிடம் வருமாறு அழைத்தல்.

தோன்றலஃ துரைத்த லோடு மாருதி தொழுது தொல்லை
ஆன்றநூ லறிஞ [1] போய பொருண்மனத் தடைப்பா யல்லை
ஏன்றது முடியே மென்னி னிறத்துமித் திறத்துக் கெல்லாம்
[2] சான்றினி யறனே போந்துன் [3] தம்முனைச் சார்தி யென்றான்.

(இ - ள்.) தோன்றல் - சிறந்துதோன்றுபவனான இலக்கும ணன், அஃது உரைத்தலோடும் - அவ்வார்த்தையைச் சொன்ன வுடனே,—மாருதி - வாயுகுமாரனான அநுமான், தொழுது - (அவ் விளையபெருமாளை) வணங்கி, (அவனைநோக்கி), 'தொல்லை ஆன்ற நூல் அறிஞ - பழமையான சிறந்த நூலறிவை யுடையவனே! போய பொருள் மனத்து அடைப்பாய் அல்லை - நடந்த விஷயங்களை மனத்திற் கொள்ளாதிருப்பாயாக; ஏன்றது முடியேம் என்னின் - நாங்கள் செய்வதாக) ஏற்றுக்கொண்ட காரியத்தைச் செய்யாது

விட்டோமாயின், இறத்தும் - உயிர்விடக்கடவோம்: இ திறத்துக்கு எல்லாம் இனி சான்று அறனே - இவ்விடயங்கட்கெல்லாம் இனிச் சாட்சியாவது தருமமே; போந்து - உள்ளேவந்து, உன் தம்முனை சார்தி - உனக்குத் தமையன்முறையாகிய சுக்கிரீவனைச் சேர்வாயாக,' என்றான் - என்று கூறினன்; (எ - று.)

இலக்குமணன் சிற்றந்தோன்றுமாறு கூறினதனால் அதனைத் தணிக்க விரும்பிய அநுமான் 'சீதையைத் தேடுதல் முதலிய தொழில்களைத் தவறாது செய்துமுடிப்போம்; முடியாவிட்டால் நாங்கள் இறப்போம்; இவ்விஷயத்தில் தருமமே சாட்சி' என்று இலக்குமணனுக்கு நம்புதலுண்டாகுமாறு சபதஞ்செய்து கூறினனென்க. போய பொருள் - மாரிக்காலம் நீங்கியவுடனேவருகிறோமென்று கூறிய தவணை தவறிய தொழில். 'இறத்து மித்திறத்துக்கெல்லாஞ்சான்றினியறனே' என்ற சொற்போக்கில், நாங்கள் அறந்திறம்பினோமென்று நீவிர்எங்களைக்கொல்லவேண்டுவதில்லை, அறக்கடவுளே எங்களைக் கொல்லும் என்ற கருத்துந் தோன்றும். ஆன்ற = சான்ற; மரூஉ. தம்முனை - இராமபிரானை என்பாருமுளர். பி - ம்:—[1]பொன் போலருள். [2]சான்றினியானே, சான்றெனவறவோய், சான்றனவறவோய், சான்றினியாராம், சான்றினியறமாம். [3]தமையனை. (648)

76.—இலக்குமணன் அநுமான்வார்த்தைக்கு இசைந்து அவனுடன் சுக்கிரீவனிடஞ் செல்லுதல்.

முன்னுநீ சொல்லிற் றன்றே முயன்றது [1]முற்றுங் காலை
இன்னுநீ [2]யிசைத்த செய்வா னியைந்தன மென்று கூறி
அன்னதோ ரமைதி யான்ற னருள்சிறி [3]தறிவா னோக்கிப்
பொன்னின்வார் சிலையி னானு மாருதி யோடும் போனான்.

(இ - ள்.) பொன்னின் வார் சிலையினான் உம் - பொற்கட்டுக்களையுடைய நீண்டவில்லையுடையவனான இலக்குமணனும், (அநுமானை நோக்கி), 'முன்னும் - முன்பும், முயன்றது - (யாங்கள்செய்த) முயற்சியும், நீ சொல்லிற்று அன்றே - நீ சொல்லியதன்றோ? முற்றும் காலை- (சீதையைத்தேடுதல்தொழில்) முடியவேண்டியசமயத்தில், இன்னும் - இனிமேலும், நீ இசைத்த செய்வான் இயைந்தனம் - நீ சொல்லியதையே செய்ய உடன்படுகிறோம்,' என்றுகூறி - என்றுசொல்லி, அன்னது ஓர் அமைதியான்தன் அருள்சிறிது அறிவான் நோக்கி - அப்படிப்பட்டதாகிய ஒருதன்மையையுடையவனான சுக்கிரீவனது மனநிலையைச் சிறிது அறியக் கருதி, மாருதியோடும் போனான் - அநுமானுடனே சென்றான்; (எ- று.)

"வன்றிறன்மாருதிவணங்கினனெடுங், குன்றிவர்தோளினாய் கூறவேண்டுவ, தொன்றுளததனைநீயுணர்ந்துகேளென", "கொடுந்தொழில் வாலியைக்கொன்றுகோமகன், கடுங்கதிரோன்மகனுக்குக் கைவளர், நெடும்படைகூட்டினலன்றிநேடரி, தடும்படையரக்கர்

தமிருக்கையாணையாய்" என்பது முதலாக அநுமான் கூறியபடியே வாலிவதஞ்செய்ததனால் 'முன்னுநீசொல்லிற்றன்றோமுயன்றது'எனப் பட்டது. சுக்கிரீவன் கார்காலம் நீங்கியவுடன் சீதாபிராட்டியைத் தேட முயலாமல் அந்தப்புரத்தில் உறங்கிக்கிடக்கின்றமையால் அவன் 'அன்னதோரமைதியான்' எனப்பட்டான். பி-ம்:—[1]முயற்றினு லும், முயற்றிதானும், முயற்றுதானும், முறைமைதானும், முற்றுங் காறும், முயற்சிதானும். [2]சொன்னசெய்வான். [3]அறியநோக்கி, அமையநோக்கி. *(649)*

77.—தாரை மகளிர்கூட்டத்தோடு மீளுதல்.

அயில்விழிக் குமுதச் செவ்வாய்ச் சிலைநுத லன்னப்[1]போக்கின்
மயிலியற் கொடித்தே ரல்குன் மணிநகைத் திணிவேய் மென்றோள்
குயின்மொழிக் கலசக் கொங்கை மின்னிடைக் குமிழேர்[2]மூக்கின்
புயலியற் கூந்தன் மாதர் குழாத்தொடுந் தாரை போனாள்.

(இ - ள்.) தாரை—,—அயில் விழி - வேலையொத்த கண்களையும், குமுதம் செம் வாய் - செவ்வாம்பல்மலரை யொத்த சிவந்த வாயையும், சிலை நுதல் - விற்போன்ற புருவத்தையும், அன்னம் போக்கின் - அன்னத்தின் நடையையொத்த நடையையும், மயில் இயல் - மயிலையொத்த சாயலையும், கொடி தேர் அல்குல் - துவசத் தையுடைய தேரைப்போன்ற அல்குலையும், மணி நகை - முத்துப் போன்ற பற்களையும், திணி வேய் மெல் தோள் - வலிய மூங்கில் போன்ற மெல்லிய தோள்களையும், குயில் மொழி - குயிலின்குரலை யொத்த குரலையும், கலசம் கொங்கை - பொற்கலசத்தையொத்த தனங்களையும், மின் இடை - மின்னல்போன்ற இடையையும், குமிழ் ஏர் மூக்கின் - குமிழமலரையொத்த மூக்கையும், புயல் இயல் கூந் தல் - காளமேகத்தையொத்த [கரிய] கூந்தலையுமுடைய, மாதர் குழாத்தொடும் - மகளிர்கூட்டத்துடனே, போனாள் - (மீண்டு) சென்றாள்; (எ - று.)

உவமையணி. நுதல் - புருவத்துக்கு இலக்கணை. நவரத்தினங் களுளொன்றாதலால், முத்து 'மணி' எனப்பட்டது. செய்யுளோசை நோக்கி உவமைத்தொகையிலும் இரட்டித்த பாடம் கொள்கின்றனர். பி - ம்:—[1]போக்கு. [2]மூக்கு. *(650)*

78.—அங்கதன் இலக்குமணனைவணங்கி அவனனுமதிப்படி அவன்வரவைச் சுக்கிரீவனிடஞ் சொல்லச் செல்லுதல்.

வல்லமந் திரிய ரோடு வாலிகா தலனு மைந்தன்
அல்லியங் கமல மன்ன வடிபணிந் தச்சந் தீர்ந்தான்
வில்லியு மவனை நோக்கி விரைவினென் வரவு வீர
சொல்லுதி [1]நுந்தைக் கென்றான் நன்றெனத் தொழுது [போனான்.

(இ - ள்.) வாலி காதலன்உம் - வாலியின்மகனான அங்கதனும், வல்ல மந்திரியரோடு - (நீதிநூல்களில்) தேர்ந்த மந்திரிமார்களு டனே (வந்து), மைந்தன் அல்லி அம் கமலம் அன்ன அடி பணிந்து -

வீரனாகிய இலக்குமணனது அகவிதழ்களையுடைய அழகிய செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கி, அச்சம் தீர்ந்தான் - (இலக்குமணனால் 'என்னநேரிடுமோ?' என்று தான் முன்கொண்ட) அச்சம் ஒழியப்பெற்றான்; (அப்பொழுது), வில்லிஉம் - வில்வீரனான இலக்குமணனும், அவனை நோக்கி - அவ்வங்கதனைப் பார்த்து, 'வீர - வீரனே! என் வரவு - எனது வருகையை, நுந்தைக்கு-உனது சிற்றப்பனான சுக்கிரீவனுக்கு, விரைவின் சொல்லுதி - விரைவிற் (சென்று) சொல்வாய்,' என்றான் - என்று கூறினான்; (உடனே அங்கதன்), நன்று என - 'நல்லது' என்றுசொல்லி, தொழுது - (அவ்விலக்குமணனை) வணங்கி, போனான்—; (எ - று.)

மைந்து - வீரம்; அதனையுடையவன் - மைந்தன். நன்று - அங்கீகாரவார்த்தை. பி - ம்:—[1] உந்தைக்கு. (651)

79.—இலக்குமணன் சினந்துவந்திருத்தலை அங்கதன் சுக்கிரீவனுக்குத் தெரிவித்தல்.

போனபின் தாதை கோயில் புக்கவன் பொலங்கொள் பாதம்
[3] தானுறப் பற்றி முற்றுந் [1] தைவந்து [2] தடக்கை வீரன்
மானவற் கிளையோன் வந்துன் [3] வாயிலின் புறத்தான் சீற்றம்
மீனுயர் வேலை மேலும் [4] பெரிதிது விளைந்த தென்றான்.

(இ - ள்.) தட கை வீரன் - நீண்டகைகளையுடைய வீரனான அவ்வங்கதன், போன பின் - (இலக்குமணனைவிட்டுச்) சென்ற பிறகு, தாதை கோயில் புக்கு - சிற்றப்பனாகிய சுக்கிரீவனது அரண்மனையிற் புகுந்து, அவன் பொலம்கொள் பாதம் - அச்சுக்கிரீவனது அழகைக்கொண்ட பாதங்களை, தான் உற பற்றி முற்றும் தைவந்து - தான் நன்றாக முழுவதுந் தடவிப்பிடித்து (த் துயிலெழுப்பி),—'மானவற்கு இளையோன் வந்து உன் வாயிலின் புறத்தான் - இராமபிரானுக்குத்தம்பியாகிய இலக்குமணன் வந்து (உனது) அரண்மனை வாயில்வெளியில் நிற்கின்றான்: சீற்றம் - (அவன் இப்போது கொண்டுள்ள) கோபம், மீன் உயர் வேலை வேலும் பெரிது - மீன்கள் நிறைந்துள்ள கடலைக்காட்டிலும் பெரியது; இது விளைந்தது - இது நடந்த செயலாகும்,' என்றான்—; (எ - று.) பி - ம்:—[1] தைவந்த. [2] தடக்கைவீர. [3] வாசலின். [4] பெரிதது. (652)

80.—சுக்கிரீவன் இலக்குமணனது கோபகாரணத்தைக் குறித்து அங்கதனை வினவுதல்.

[1] அறிவுற்று மகளிர் வெள்ள [2] மலமரு மமலை நோக்கிப்
[3] பிறிவற்ற மயக்கத் தான்முந் துற்றதோர் பெற்றி யோரான்
செறிபொற்று ரலங்கல் வீர செய்திலங் குற்ற நம்மைக்
கறுவுற்ற பொருளுக் கென்னோ காரணங் கண்ட தென்றான்.

(இ - ள்.) பிறிவு அற்ற மயக்கத்தான் - நீங்குதலில்லாத மயக்கத்தினால், முந்து உற்றது ஓர் பெற்றி ஓரான் - (முன்னே) நடந்த

செய்தியொன்றையும் அறியாதவனான சுக்கிரீவன்,—அறிவு உற்று - (மயக்கந்தெளிந்து) இயற்கையறிவைப்பெற்று, மகளிர் வெள்ளம் அலமரும் அமலைநோக்கி - (தாரை முதலிய) மகளிர் கூட்டம் கலங்குவதனா லுண்டான பேராரவாரத்தைக் கேட்டு, (அவ்வங்கதனை நோக்கி), 'செறி பொன் தார் அலங்கல் வீர! - நெருங்கிய பொன்னாரங்களையும் மலர்மாலையையுமணிந்த வீரனே! குற்றம் செய்திலம் - (நாம் இராமலக்ஷ்மணர்திறத்தில்) ஒருபிழையுஞ் செய்திலோம்: (அவ்வாறிருக்க), நம்மை கறுஉற்ற பொருளுக்கு காரணம் கண்டது என்ஒ - (இலக்குமணன்) நம்மீது கோபங்கொண்ட தன்மைக்குக் காரணமாகக் கண்டதுதான் யாதோ?' என்றான் - என்று வினவினான்; (எ - று.)

சுக்கிரீவனது பாதத்தைத் தைவந்து அங்கதன் விளைந்ததைத் தெரிவிக்கவும், மயக்கத்தால் உற்றபெற்றியோராதிருந்த உணர்ச்சி வரப்பெற்ற அவன் அங்கதன் பேச்சால் இளையபெருமாள் சீற்றத்தானென்று அறிந்ததோடு தாரையுடன் சென்ற வானரமகளிர் கலங்கிச்செய்தபேராரவாரத்தையும்நோக்கி, இலக்குமணன் கறுவு கொள்ளக் காரணம்என்? என்று வினவினனென்பதாம். வெள்ளம் - ஒரு பெருந்தொகை; பெருந்திரளுக்கு, இலக்கணை. அமலை - பேராரவாரம். முந்துற்றதோர்பெற்றியைமேலே அங்கதன் கூறுவன். மயக்கத்தான் என்பதை, குறிப்புவினையாலணையும் பெயராக்கொண்டு உரைப்பினுமாம். பி - ம்:—[1] அறிவுற்ற. [2] அனைவரும்போக..., அனைவருமகனை..., அனைவருமவனை நோக்கிப்..., அவனைப்பற்றிப். [3] பிரிவுற்றார்..., பிறிவுற்ற மயக்கத்தான், பிறிவற்ற மயக்கந்தீர்ந்தான், பிறிவற்றமயக்கத்தான்முன். (653)

81.—இதுமுதல் ஆறுகவிகள் - முன் நடந்தவரலாற்றைச் சுக்கிரீவனிடம் அங்கதன் கூறியதைக் கூறும்.

இயைந்த[1] நா ளெந்தை நீசென் றெய்தலை செல்வ மெய்தி
வியந்தனை யுதவி கொன்றாய் [2] மெய்யிலை யென்ன வீங்கி
உயர்ந்தது சீற்ற [3] மற்ற [4] துற்றது செய்ய முற்றும்
நயந்தெரி யனுமன் வேண்ட நல்கினன் [5] நம்மை யின்னும்.

(இ - ள்.) (அப்போது அங்கதன் சுக்கிரீவனைநோக்கி), 'எந்தை - எனது தந்தையே! இயைந்த நாள் - (சேனையுடன் வருவதாக முன்பு) உடன்பட்ட நாளில், நீ—, சென்று எய்தலை - (இராமபிரானிடம்) போய்ச்சேர்ந்தாயில்லை; செல்வம் எய்தி வியந்தனை - பெருஞ்செல்வத்தையடைந்து செருக்கினாய்; உதவி கொன்றாய் - செய்தநன்றியை மறந்தாய்; மெய் இலை - சிறிதும்உண்மையில்லாதவனாய்,' என்ன - என்று, சீற்றம் வீங்கி உயர்ந்தது - (இலக்குமணனுக்குக்) கோபம் மிகுதியாகவுண்டது; (அப்பொழுது), நயம் முற்றும் தெரி அனுமன் - நீதிசாஸ்திரங்களை முழுவதும்உணர்ந்த

அநுமான், அது உற்றது செய்ய - அக்கோபத்தைத் தணித்தற்கு உரிய காரியத்தைச் செய்ததனாலும், வேண்ட - சினம் (நீங்கியபின் அந்த இலக்குமணனைப்) பிரார்த்திக்க அதனாலும், நம்மை இன்னும் நல்கினன் - (அவ்விலக்குமணன்)நம்மை இன்னும் உயிரோடிருக்கு மாறு விட்டான்; (எ - று.)—மற்று - அசை.

அநுமான் இலக்குமணனை வேண்டாவிடின், அப்போதே நாமனைவரும் இலக்குமணனால் இறந்திருப்போமென்றபடி. 'கறு வுற்ற பொருளுக்கு என்னோ காரணம்?' என்று வினவிய சுக்கிரீவனுக்கு, இலக்குமணன் கறுவுற்றகாரணத்தைக் கூறியதோடு, அங்கதன் இறுதியாகச் சீற்றந்தணிந்த காரணத்தையும் இச் செய்யுளிற் கூறி, இடையில் நிகழ்ந்தவற்றை அடுத்தகவிமுதற் கூறுகின்றான். இலக்குவனது பெருஞ்சீற்றத்தைமுதலில் தாரையால் போக்கிப் பின்னர்இன்சொற்களால்வேண்டினைதலால் 'முற்றும்நயந்தெரியனுமன்' என்றது. இனி, ''உற்றதுசெய்கை முற்றும்' என்ற பாடத்திற்கு - மெய்யிலே யென்னவீங்கி உயர்ந்ததாகிய (இலக்குமணனது) சீற்றமானது நயந்தெரி அநுமன் உற்றது செய்கை முற்றும் [கீழ்நடந்த வரலாறு முழுவதையும்] (சொல்லி) வேண்டியதனால் அற்றது [நீங்கிற்று] என்றும் உரைக்கலாம். பி - ம்:—[1]நாளெல்லே. [2]மேவிலே. [3]மாற்றம். [5]நம்மையின்று. 'உயர்ந்தவச்சீற்றமற்றிதுற்றது செய்கைதானும்' என்று சிலபிரதிகளில் மூன்றாமடி. (654)

82. வருகின்ற [1]வேக நோக்கி வானர வீரர் வானைப்
பொருகின்ற[2] நகர வாயிற் [3]பொற்கத வடைத்துக்[4]கார்க்குன்று
அருகொன்று மில்லா வண்ணம் வாங்கின ரடுக்கி மற்றுந்
தெரிகின்றசினத்தீப்பொங்கச்செருச்செய்வான் [5]செருக்கிநின்றார்.

(இ - ள்.) வானர வீரர்—,—வருகின்ற வேகம் நோக்கி - (இலக்குமணன்) வரும் வேகத்தைக் கண்டு, வானை பொருகின்ற நகரம் வாயில் பொன்கதவு அடைத்து - வானத்தையளாவுகின்ற கிட்கிந்தாநகரத்தின் வாயிலிலுள்ள பொற்கதவுகளைச் சாத்தி, அருகு ஒன்றும் இல்லா வண்ணம் - சமீபத்தில் ஒருமலையும்மிச்சமாய் நிற்காதபடி, கார் குன்று வாங்கினர் அடுக்கி - பெரியமலைகளையெல்லாம் எடுத்துவந்து (அவ்வாயிலில்) ஒன்றன்மேலொன்றாக அடுக்கி, மற்றும் - மேலும், தெரிகின்ற சினம் தீ பொங்க - வெளிப்படுகின்ற கோபாக்கினியானது மிக, செரு செய்வான் - (இலக்குமணனோடு) போர்செய்யும்பொருட்டு, செருக்கி நின்றார் - செருக்குக் கொண்டு நின்றார்கள்; (எ - று.)

வானைப்பொருகின்ற நகரவாயில். உயர்வுநவிற்சி. கார்க்குன்று - கரிய குன்றுமாம். பி-ம்:—[1]சீற்றம். [2]நகர்வாய்தன்னில். [3]போர்க். [4]கற்குன்று, குன்றம். [5]அமைந்து, செருக்க. (655)

83. ஆண்டவை யதனை நோக்கி யம்மலர்க் கமலத் [1]தாளின்
தீண்டினன் தீண்டா முன்னந் தெற்கொடு வடக்குச் [2]செல்வ

நீண்டகன் மதிலுங் கொற்ற [3]வாயிலு நிரைத்த குன்றும்
கீண்டன [4]தகர்ந்து பின்னைப் பொடியொடுங் கெழீஇய வன்றே.

(இ - ள்.) ஆண்தகை - ஆண்மைக்குணமுள்ளவனாகிய இலக்குமணன், அதனைநோக்கி - வானரர்களின் அச்செய்கையைப் பார்த்து, அம் கமலம் மலர் தாளின் தீண்டினன் - அழகிய செந்தாமரைமலர் போன்ற தனது பாதத்தினால் (அடைத்தவாயிற்கதவை) உதைத்தான்; தீண்டாமுன்னம் - (அப்பாதம்) படுதற்கு முன்னமே, தெற்கொடு வடக்கு நீண்ட செல்வம் கல் மதில்உம் - தெற்குவடக்காக நீண்டுள்ள சிறப்பையுடைய கல்லினாலமைக்கப்பட்ட மதிலும், கொற்றம் வாயில்உம் - வலிய நகரவாயிலும், நிரைத்த குன்றுஉம் - (அவ்வாயிலில் வானரவீரர்கள்) ஒன்றன்மேலொன்றாக அடுக்கிய மலைகளும், தகர்ந்து கீண்டன - உடைந்துசிதறினவாய், பின்னை - பின்பு, பொடியொடும் கெழீஇய - பொடியாய்விட்டன; (எ - று.)—அன்றே - ஈற்றசை; தேற்றமுமாம்: அப்பொழுதே யெனினுமாம்.

தீண்டாமுன்னம் தகர்ந்துகீண்டன - மிகையுயர்வுநவிற்சி. மதிலுக்குச் செல்வமாவது - மிக்கஉயரமும், புறத்தோர்க்கு அகழலாகாத அடியகலமும் அகத்தோர்க்கு நின்றுதொழில்செய்யலாந் தலையகலமுமுடைமை. பி - ம்:—[1]தாளால். [2]தெய்வம், தேய. [3]வாயிலில். [4]தகர்ந்த, கரந்து. (656)

84. அந்நிலை கண்ட திண்டோ ளரிக்குலத் தனிக மம்மா
எந்நிலை [1]யுற்ற தென்கேன் யாண்டுப்புக் [2]கொளித்த தென்கேன்
[3]அந்நிலை கண்ட வன்னை ஆயிழை யாயத் தோடும்
மின்னிலை [4]வில்லி னானை வழியெதிர் விலக்கி நின்றாள்.

(இ - ள்.) அ நிலை கண்ட திண் தோள் அரி குலத்து அனிகம் - அவ்வாறு (இலக்குமணனால் நேர்ந்த) நிலைமையைப்பார்த்த வலிய தோள்களையுடைய வானரசாதிச்சேனை, எ நிலை உற்றதுஎன்கேன் - எந்த நிலைமையை யடைந்ததென்று சொல்வேன்? யாண்டு புக்கு ஒளித்தது என்கேன் - எவ்விடத்திற் போய்ப் பதுங்கியதென்று தான் சொல்வேன்? அ நிலை கண்ட அன்னை - (வானர சைனியத்தின்) அந்த நிலையையறிந்த (எனது) தாயாகிய தாரை, ஆய் இழை ஆயத்தோடு - ஆய்ந்த ஆபரணங்களையுடைய மகளிர் கூட்டத்துடனே, மின் நிலை வில்லினானை - மின்னல்போன்ற [மிக ஒளிர்கின்ற] வில்லையுடைய இலக்குமணனை, எதிர் வழிவிலக்கி நின்றாள் - எதிரே சென்று வழிமறித்துநின்றாள்; (எ - று.)—அம்மா - வியப்பிடைச்சொல்; வானரசைனியங்கள் அஞ்சியோடும்படியிருந்த இலக்குமணனது தோற்றத்தை வியந்தவாறு.

இளையபெருமாளது திருவடிபட்டமாத்திரத்தில் வாயிற்கதவு முதலியனபொடியாய்விட்டதைக் கண்ட வானரங்கள் அஞ்சி அரிதில் உயிர் தப்பிக் கலங்கிப் போனதிசை தெரியாமற் சென்றன; அப்

போது அவ்விலக்குமணன் அரண்மனையினுட் புகுமாறு பெருஞ்சிற்றத்தோடுவர, மகளிர்கூட்டத்தோடு தாரை தடுத்தன ளென்பதாம். பி - ம்:—[1] நின்றது, கண்டது. [2] இருந்ததென்கேன். [3] இங்கிலே கண்ட வன்னை யேந்திழை. [4] வேலினானே. (657)

85. மங்கையர் மேனி நோக்கான் மைந்தனு [1]மனத்து வந்து
பொங்கிய சீற்றம் [2]பற்றிப் புகல்கிலன் பொருமி நின்றான்
நங்கையு மினிது கூறி நாயக [3]நடந்த தென்னோ
எங்கள்பா[4]லென்னக் கேட்டா [5]ளிளவலும் வரவு சொன்னான்.

(இ - ள்.) மைந்தன்உம் - வீரனாகிய இலக்குமணனும், மங்கையர் மேனி நோக்கான் - (வழிமறித்துநின்ற தாரைமுதலிய) மகளிரது மேனியைக் கண்ணெடுத்துப் பாராதவனும், மனத்து வந்து பொங்கிய சீற்றம் பற்றி புகல்கிலன் - (தன்) மனத்திலே மிகுதியாகஉண்டாகிய கோபத்தினால் ஒன்றுஞ் சொல்லமாட்டாதவனாய், பொருமி நின்றான் - வருந்திநின்றான்; நங்கைஉம் - மகளிரிற் சிறந்தவளான தாரையும், இனிதுகூறி - (இலக்குமணனது கோபந்தணியும்படி) இனியவார்த்தையைச் சொல்லி, (அவனைநோக்கி), 'நாயக - சிறந்தவனே! எங்கள்பால் நடந்தது என்னோ - (நீ இராமபிரானை விட்டுப் பிரிந்து) எங்களிடத்தில் வந்தகாரியம் யாதோ?' என்னகேட்டாள் - என்று வினவினாள்; இளவல்உம் - அவ்விளையபெருமாளும், வரவு சொன்னான் - வந்த காரணத்தைக் கூறினான்; (எ - று.)

'மங்கையர்மேனிநோக்கான்' என்பதனால், அயல்மாதரைக் கண்ணெடுத்துப்பாராத நோன்பையுடையவன் இலக்குமணனென்பது பெறப்படும். 'வரவு' என்றது - கீழ் 54 - ஆங் கவியில் கூறியதைச் சுட்டும். இலக்குமணன் பொருமியது - தாரையைக்கண்டவுடனே தன்தாயரைப்பற்றி நினைவுவந்ததனா லென்க; கீழ் "தாயரை நினைந்துநைந்தான்," "நங்கையைக்கண்டவள்ளல்நயனங்கள்பனிப்ப நின்றான்" எனவந்ததும் காண்க. பி - ம்:—[1] மனத்துவந்த. [2] பற்றிப்புகுந்திலன், மாற்றிப்புகல்கின்றான், பாறிப்புக்கிலன். [3] நடந்ததென்னே. [4] என்னச்சொன்னாள். [5] அண்ணலுமிதயனும், அண்ணலுமினைய. (658)

86. அதுபெரி தறிந்த வன்னை யன்னவன் சீற்ற மாற்றி
[1]விதிமுறை மறந்தா னல்லன் வெஞ்சினச் சேனை வெள்ளம்
கதுமெனக்[2] கொணருந் தூது கல்லதர் செல்ல வேவி
[3]எதிர்முறை யிருந்தா[4]னென்று ளிதுவிங்குப் [5]புகுந்த தென்றான்.

(இ - ள்.) அது பெரிது அறிந்த அன்னை - (இலக்குமணன் வந்த) அந்தக்காரியத்தை நன்றாகவுணர்ந்த எனது தாயாகிய தாரையானவள்,—அன்னவன் சீற்றம் ஆற்றி - அவ்விலக்குமணனது கோபத்தை(இன்சொற்கூறி)த்தணித்து, (இலக்குமணனைநோக்கி), 'விதி முறை மறந்தான் அல்லன் - (சுக்கிரீவன் இராமபிரானது,

கட்டளையின் தன்மையை மறந்தவனல்லன்; வெம் சினம் சேனை வெள்ளம் - கடுங்கோபத்தையுடைய வானரசேனைகளின் தொகுதியை, கதுமென கொணரும் - விரைவாகக்கொண்டு வருவதற்கு உரிய, தூது - தூதுவர்களை, கல் அதர் செல்ல ஏவி - கற்களையுடைய மலை வழியிலே போகும்படி கட்டளையிட்டு அனுப்பி, எதிர் முறை இருந்தான் - (அவ்வானரசைனியத்தின் வருகையை) எதிர்நோக்கியிருந்தான்', என்றாள் —; இது இங்கு புகுந்தது - இதுதான் இப்பொழுது [இங்கே] நடந்த செயலாகும், என்றான் - என்று (சுக்கிரீவனைநோக்கி அங்கதன்) கூறிமுடித்தான்; (எ - று.)

தூதர்கள்மூலமாக வானரசேனைகளைத் திரட்டக் காலதாமத மாதற்குக் காரணத்தைக் குறிப்பாகவுணர்த்துவாள், 'கல்லதர் செல்லவேவி' என்றாள்; அதர் - விலங்குசெல்லும்நெருக்கமான வழி. [1]விதிமுறையறிந்தாண்மன்னன் என்ற பாடத்திற்கு - செய்யவேண்டிய முறையை யறிந்தவளாகிய தாரையானவள், அன்னவன்சீற்றம் ஆற்றி, மன்னன் [சுக்கிரீவமகாராஜன்]...எதிர்முறையிருந்தான் என்றாள் என்று பொருள்காண்க. பி - ம்:—[1]விதிமுறை யறிந்தான் மன்னன். [2]கொணரத்தூது. [3]விதிமுறையிருந்தான். [4]என்ஞ. [5]விளைந்தது. (659)

87.—இலக்குமணன் வருகையை முன்னமே தனக்குத் தெரிவியாத காரணத்தைச் சுக்கிரீவன் வினவுதல்.

சொற்றலு மருக்கன் தோன்றல் சொல்லுவான் [1]மண்ணின் விண்ணில்
[2]நிற்குரி யார்கள் யாவ ரனையவர் [3]சினத்தி னேர்ந்தால்
விற்குரி யாரித் தன்மை வெகுளியின் விரைவி னெய்தின்
எற்குரை யாது நீரீ தியற்றிய தென்கொ லென்றான்.

(இ - ள்.) சொற்றலும் - (அவ்வாறு அங்கதன்)சொன்னவுடனே, அருக்கன் தோன்றல் - சூரியகுமாரனானசுக்கிரீவன், சொல்லுவான் - (பின்வருமாறு) சொல்பவனானான்: 'அனையவர் சினத்தின் நேர்ந்தால்- அவ்விராமலக்ஷ்மணர்கள் கோபங்கொண்டு எதிர்த்துவந்தால், மண்ணின் - இந்நிலவுலகத்திலாவது, விண்ணின் - மேலுலகத்திலாவது, நிற்க உரியார்கள் யாவர் - (அவர்கட்குமுன்னே) எதிர்த்து நிற்கத்தக்கவர்கள் எவர்? விற்கு உரியார் இ தன்மை வெகுளியின் விரைவின் எய்தின் - வில்வீரராகிய அவ்விளையபெருமாள் இவ்வாறு கோபத்தோடு விரைந்துவருகையில், எற்கு உரையாது - (அதனை) எனக்குத்தெரிவியாமல், நீர் ஈது இயற்றியது - நீங்கள் இவ்வாறு செய்தது, என்கொல் - என்னகாரணம்பற்றியோ?' என்றான-என்று (அங்கதனை) வினவினான்; (எ - று.)

இதனால், எவ்வுலகத்திலும் ஈடில்லாதமகாவீரர் இராமலக்குமணரென்பதைக்கருதாது வானரர்கள் வாயிலடைத்து இலக்குமணனோடு செருச்செய்ய முயன்றதும், அவ்விலக்குமணன் பெருஞ் சினத்தோடு வந்தபோது தனக்கு முன்னமே தெரிவியாதிருந்த

தும் தவறென்று சுக்கிரீவன் குறிப்பித்தவாறு. 'ஈதியற்றியது' என்பது-கதவடைத்துக்கறக்களடுக்கியது முதலியவற்றைக் குறிக்கும். பி-ம்:—[1] விண்ணில்மண்ணில். [2] கிற்கூர்யாவர்வீரர். [3] சினத்தான், சினத்தை. முதலடியில் 'சொற்குறியானவெல்லாஞ் சொல்லலுமருக்கன்மைந்தன்' என்றும், 'சொற்றெரித்தானதெல்லாம் சொல்லலுமருக்கன்றேன்றல்' என்றும், பாடம். (660)

88.—அதற்கு அங்கதன் மறுமொழி கூறல்.

உணர்த்தினேன் [1]முன்னர் நீயஃ துணர்ந்திலை யுணர்விற் றீர்ந்
தாய், புணர்ப்பதொன் றின்மை நோக்கி மாருதிக் [2]குரைப்பான் போ
னேன், [3]இணர்த்தொகை யீன்ற பொற்ரு ரெறுழ்வலித் தடந்தோ
ளெந்தாய், கணத்திடை யவனை நீயுங் காணுதல் கரும மென்றான்.

(இ - ள்.) இணர் தொகை ஈன்ற பொன் தார் எறுழ் வலி தட தோள் எந்தாய் - பூங்கொத்தின்தொகுதியினால் தொடுக்கப்பட்ட அழகிய மாலையைத் தரித்த மிக்கவலிமைபொருந்திய பெரியதோள்களையுடைய எனது தந்தையே! முன்னர் உணர்த்தினேன் - (நான் இலக்குமணன் வருகையை உனக்கு) முன்னமே தெரிவித்தேன்; நீ—, உணர்வின் தீர்ந்தாய் - (அப்போது) மதிமயங்கியிருந்தாய்; (அதனால்), அஃது உணர்ந்திலை - (நான் கூறிய) அதனைத்தெரிந்து கொண்டாயில்லை; (பிறகு), புணர்ப்பது ஒன்று இன்மை நோக்கி - (யான்) செய்யக்கூடிய வேறொருபாயமில்லாமை கண்டு, மாருதிக்கு உரைப்பான் போனேன் - (இச்செய்தியை) வாயுகுமாரனான அனுமானுக்குச் சொல்லும்படி சென்றேன்; (இப்போது), கணத்திடை - ஒருநொடிப் பொழுதிற்குள் [விரைவிலே], அவனை - அவ்விலக்குமணனை, நீயும்—, காணுதல் - சென்றுபார்த்தல், கருமம் - செய்யவேண்டியதொழிலாகும், என்றான் - என்று (சுக்கிரீவனைநோக்கி அங்கதன்) கூறினான்; (எ - று.)—பி - ம்:—[1] முன்னநீயது, முன்னமஃதே. [2] உரைக்கப். [3] இணர்த்தகை. (661)

89.—மதுவினால் மதிமயங்கிக்கிடந்ததைப்பற்றிச் சுக்கிரீவன் கழிவிரக்கங் கொண்டுகூறியதை இதுமுதல் ஒன்பதுகவிகளிற் கூறுகின்றார்

உறவுண்ட சிந்தை யானு [1]முரைசெய்வா [2]னொருவர்க் கின்னம்
[3]பெறலுண்டே யவரா [4]லீண்டி யான்பெற்ற[5]பே ருதவி யுற்றது
[6]இறலுண்டே யென்னிற் றீர்வா [7]னிருந்தபே ரிடரை யெல்லாம்
நறவுண்டு மறந்தேன் காண நாணுவன் [8]மைந்த வென்றான்.

(இ - ள்.) உறவு உண்ட சிந்தையான்உம் - (இராமபிரானிடம்) கலந்த நட்பைக்கொண்ட மனத்தையுடையவனான சுக்கிரீவனும், உரைசெய்வான் - (அங்கதனைநோக்கிச்) சொல்வான்: 'மைந்த -

இளவீரனே! அவரால் ஈண்டு யான் பெற்ற பேர் உதவி - அவ்வி ராமபிரானல் இப்பொது யான் அடைந்துள்ள பேருபகாரம், ஒருவர்க்கு இன்னம் பெறல் உண்டுஏ - மற்றொருவரால் இனிப்பெறமுடியுமோ? [முடியாது என்றபடி]; உற்றது இறல் உண்டுஓ - (யான்) அடைந்த பெருஞ்செல்வத்துக்கு அழிவேனும் உள்ளதோ? [இல்லையன்றோ]; என்னின் தீர்வான் இருந்த பேர் இடரை எல்லாம் - என்னாலே நீக்கிக்கொள்ளும்படி நினைத்திருந்த (இராமபிரானது) பெருந்துன்பங்களையெல்லாம், நறவு உண்டு மறந்தேன் - மதுவுண்டதனுல் மறந்துபோனேன்; (ஆதலால்), காண - (இப்போது இலக்குமணனைப்) பார்த்தற்கும், நாணுவன் - வெள்குகின்றேன்', என்றான்—; (எ-று.)

பிறரெவராலும் பெறுதற்கு அரியதும் அழிவில்லாததுமான பேருதவியை நான் இராமபிரான்மூலமாகப் பெற்றிருந்தும், மது மயக்கத்தாற் செய்ந்நன்றிமறந்து அப்பிரானுக்குச் செய்யவேண்டிய கைம்மாறொன்றுஞ் செய்யாமல் அவனை வருந்தும்படி விட்டிட்டதனுல், இப்போது இலக்குமணனைக் கண்ணுற்காணுதற்கும் வெள்குகின்றேனென்கிறான். "ஈன்றாள்முகத்தேயுமின்னுதாலென் மற்றுச், சான்றோர் முகத்துக் களி" என்ற திருக்குறள், இங்கு நினைவிற்கு வருகின்றது. உறவுண்ட சிந்தையான் - மனமொத்த சிநேகிதன்; இனி, (அங்கதன்வார்த்தை) நன்றாக வுறுத்திய சிந்தையை யுடையவனான சுக்கிரீவனெனினுமாம். 'பேரிடர்' என்றது, சீதையை நாடிப்பெறுமையால் இராமபிரான் மேன்மேலும் படுகின்ற வருத்தத்தை. பி - ம்:—[1]உணர்த்துவான். [2]யார்க்குமென்போல். [3]பெற. [4]ஈண்டிப்பெற்றபேர். [5]உதவிச்செல்வம். [6]இறவுண்டாள் பொருட்டாற்றீராது. [7]இருந்தவன். [8]நம்பவென்றான். (662)

90. [1]ஏயின விதுவ லான்மற் றேழைமைப் பால [2]தென்னே,
தாயிவண் மனைவி யென்னுந் தெளி[3]வின்றேற் றரும[4]மென்னும்,
[5]தீவினை யைந்தி னொன்றா மன்றியுந் திருக்கு நீங்கா,
மாயையின் [6]மயங்கு கின்றா[7]மயக்கின்மேன் மயக்கும் வைத்தாம்.

(இ - ள்.) ஏயின இது அலால் - (இப்பொழுது எனக்கு) நேர்ந்த [கட்குடித்து மயங்கியிருந்த] இதுவல்லாமல், மற்று ஏழைமை பாலது - வேறுபேதைமையானதொரு செயல், என்னே - யாது உளது? (இவ்வாறு கட்குடிப்பதனுல்), (இவள்) தாய் இவள் மனைவி என்னும் தெளிவு இன்று ஏல் - இவள் தாய் இவள் மனைவி என்கிற விவேகமில்லையாகுமென்றால், தருமம் என் ஆம்-(கட்குடிப்பவனிடத்தில்) மற்றைத் தருமங்களிருந்தும் யாதுபயன்படும்? (இவ்வாறு மதுவுண்டு மயங்குதல்), தீவினை ஐந்தின் ஒன்று ஆம் - பஞ்சமகாபாதகங்களு ளொன்றாகும்; அன்றிஉம் - அல்லாமலும், திருக்கு நீங்கா மாயையில் மயங்குகின்றாம் - வஞ்சனை நீங்காத மாயைக்கு வசப்பட்டு மயங்குகின்றவர்களாகிய நாம், (அந்த மயக்கத்தை யொழிக்க வல்லமையில்லாதிருக்கையில்), மயக்கின்மேல் மயக்குஉம் வைத்

தாம் - பெருமயக்கத்திற்குக் காரணமான மதுபானத்தில் மோகத்தையும் கொண்டோம்; (எ - று.)

இதனால், ஒருவாற்றாலும் பரிகரிக்க முடியாத குற்றஞ்செய்தேனெனச் சுக்கிரீவன் கழிவிரக்கங் கொண்டனனென்க. மதுபானம் தன்னையுடையோனை விவேகசூனியனாக்கி அவனிடத்திலுள்ளபிற அறங்களையும் கெடுத்துவிடுமென்பது, இரண்டாமடியின்பொருள். 'இவள்' - மத்திமதீபம். பஞ்சமகா பாதகங்களாவன - கொலை, களவு, கள்ளுண்டல், பொய்ம்மொழிதல், குருநிந்தை யென்பன; பிறவாறுமுரைப்பர். மாயை - இவ்வுலகத்தில் நடைபெறுகின்ற எம்பெருமானது ஒருசக்தி: இது உள்ளதை இல்லாததாகவும் இல்லாததை உள்ளதாகவும் ஒன்றைமற்றொன்றாகவுங்காட்டுந்தன்மையுள்ள தாதலால், 'திருக்கு நீங்காமாயை' எனப்பட்டது: இம்மாயைக்கு வசப்பட்டே உயிர்கள் விபரீதஞான முடையனவாய் இவ்வுலகத்தில் மயங்கியுழல்கின்றன வென்க. இம்மாயையை யொழித்தற்கு வலியில்லாமல் மயங்கிக் கிடக்கையில் பின்னும்மயக்கத்தை யுண்டாக்குகின்ற மதுபானமும் நேர்ந்ததே என ஈற்றடியால் இரங்கியவாறும். ருமையோடு தாரையையும் சுக்கிரீவன் பெண்டாகக் கொண்டானென்று ஸ்ரீவான்கிமுனிவர் கூறியுள்ளது கம்பநாடர்க்கு மனத்தைக் குத்திக்கொண்டிருத்தலால், அதுக்கு ஒரு போக்குவீடாக, 'தாயிவண் மனைவியென்னுந்தெளிவின்றேல் தருமமென்னும்' என்றுசுக்கிரீவன் பேச்சில்வைத்துக்கூறினார்போலும். ''ஏயின - 'ஏய்' என்றபகுதியினடியாகப்பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம்: பெரும்பாலும் ஏய்ந்த என்றுவரும்; சிந்தாமணியிலும் ''ஏயின வகையினாலே'' என வந்துள்ளது. பி - ம்:—[1] ஏயினிநறவு, ஏயினநறவு. [2] யாதோ. [3] அன்றேல். [4] என்னோ. [5] தீவினைவேறுமொன்றி தன்றியுந் தெரிக்கலாமோ. [6] மயங்குகின்றார். [7] மயக்கின்மேன் மயக்கு வைப்பார். (663)

91. தெளிந்துதீ [1]வினையைத் [2]தீர்ந்தோர் பிறவியிற் றீர்வ[3]ரென்னா
விளிந்திலா வுணர்வி னோரும் வேதமும் விளம்ப வேயும்
[4]நெளிந்துறை புழுவை நீக்கி நறவுண்டு [5]நிறைகின் றேனால்
[6]அளிந்தகத் தெரியுந் தீயை [7]நெய்யினா லவிக்கின் றுமால்.

(இ - ள்.) 'தெளிந்து தீவினையை தீர்ந்தோர் - (மாயைக்கு வசப்படாமல்) மனந்தெளிந்து தீச்செயல்களை யொழித்தவர், பிறவியின் தீர்வர் - பிறவித்துன்பத்தினின்று நீங்கி முத்திபெறுவர்', என்னா - என்று, விளிந்திலா உணர்வினோர்உம் - அழியாத அறிவையுடைய தத்துவஞானிகளும், வேதமும்—, விளம்பஏஉம் - சொல்லியிருக்கவும், (சிறிதும் உணர்ச்சியின்றி'), நெளிந்து உறை புழுவை நீக்கி - நெளிந்துகொண்டு நிறைந்துகிடக்கிற புழுக்களை எடுத்தெறிந்துவிட்டு, நறவு உண்டு - கள்ளைக்குடித்து, நிறைகின்றேன் - களித்துக்

இடக்கின்றேன் (யான்); (இவ்வாறு செய்கின்ற யாம்), அகத்து அளிந்து எரியும் தீயை - வீட்டிற்கனிந்து பற்றியெரியும் நெருப்பை, நெய்யினால் அவிக்கின்றும் - நெய்யைக்கொண்டு அவிக்கத்தொடங்குபவர்போலாகிறோம்; (எ - று.)—'ஆல்' இரண்டும் - ஈற்றசை.

கனிந்து பற்றியெரியும் நெருப்பில் நெய்யைச்சொரிந்தால் அந்நெருப்பு அவியாது மேன்மேல் வளருமாறுபோல, இயற்கையில் மாயைக்குவசப்பட்டுத் தீவினையிலுழல்கின்றவர் கட்குடித்தலையும் மேற்கொள்வது தீவினைவளர்தற்கே காரணமாய் முடியுமென்பதாம்; நறவினால் நிறைவுறுவதாக நினைப்பது தீயைநெய்யினால் அவிப்பதாகக்கருதுவதுபோலும் என்ற கருத்து இச்செய்யுளில் வருவது, எடுத்துக்காட்டுவமையணியின்பாற்படும். தேன்கூண்டில் புழுக்கள் தோன்றியிருத்தலைக் கண்கூடாகக் காணலாமாதலால், தெளிந்துறு புழுவைநீக்கி என்றது. மதுபானத்தின் இழிவைக் கூறுவான், 'தெளிந்துறைபுழுவைநீக்கி நறவுண்டு' என்றான். கட்குடிப்போரையெல்லாம் உளப்படுத்தி, 'அவிக்கின்றும்' எனப் பன்மையாற் கூறியது. 'அளிந்தகம்' என்பதை வடசொல்லாகக் கொண்டு, வாசலுக்கு முன்னிடத்தில் [காற்றேட்ட 'முள்ளவிடத்திற்] பற்றியெரிகின்ற நெருப்பை நெய்யைக்கொண்டு அவிக்க முயல்கின்றவரை யொத்தோ மென உரைப்பாருமுளர். பி - ம்:—[1]வினையில். [2]செற்றார். [3]என்ன. [4]தெளிந்துறு. [5]நிற்கின்றேனல், தெளிக்கின்றேனல். [6]அளிந்தகத்தேயும். [7]நெய்யினனெதுக்கின்றுமால் என்ற பாடத்தில், நொதுத்தல் - அவித்தலென்க. முதலடியில் 'தெளிந்து தீவினையைச் செற்றார் அல்லது தீர்ந்தோர் பிறவியைத் தீர்வரன்றே' என்றும் 'புழுவை நோக்கி நறவுண்டு நிற்கின்றுநாம்' என்று மூன்றமடியிலும் சிலபிரதிகள். (664)

92. [1]தன்னைத்தா னுணரத் தீருந் தகையறு பிறவி யென்பது
[2]என்னத்தான் [3]மறையு மற்றைத் துறைகளு மிசைத்த வெல்லாம்
முன்னைத்தான் [4]தன்னை யோரா முழுப்பிணி யழுக்கின் மேலே
பின்னைத்தான் பெறுவ தம்மா நறவுண்டு திகைக்கும் [5]பித்தோ.

(இ - ள்.) 'தான் தன்னை உணர - (ஒருவன்) தன் சுவரூபத்தை உணர்ந்த மாத்திரத்தில், தகை அறு பிறவி என்பது - (தனது) பெருமைக்கிடமில்லாத பிறவியானது, தீரும் - ஒழியும்', என்னத்தான் - என்றே, மறைஉம்-வேதங்களும், மற்றை துறைகள் உம் - மற்றைச் சாஸ்திரங்களும் (ஆகிய), எல்லாம் - எல்லாமும், இசைத்த - சொல்லியுள்ளன; முன்னை தான் தன்னை ஓரா முழு பிணி அழுக்கின் மேலே - முதலில் தான் தன் சுவரூபத்தை அறியாததனாலுண்டா இன்ற நிறைந்த வியாதியையுடைய அழுக்குடம்பைப் பெற்றிருத்தலோடு கூட, பின்னை - மேலும், நறவு உண்டு திகைக்கும் பித்து பெறுவதுஓ - கள்ளுண்டு மயங்குகின்ற மயக்கத்தைப் பெறுதலும்

முறைமையாகுமோ? (எ - று.)—அம்மா - வியப்பிடைச்சொல்; மதுபானத்தின் கொடுமையை நினைந்து கூறியது. தான் - அசை.

பிறவித்துயர் நீங்குதற்கு சுவரூபத்தை யுணர்தல் இன்றியமையாததாயிருக்க, அவ்வறிவின்மையோடு மதுபானமயக்கத்தையும் பெறுவது என்ன விபரீதம்! எனக்கூறியவாறு. தன்னைத்தான் உணர்தலாவது - சீவாத்மாவின் தன்மையை உள்ளபடி யுணர்தல். இதனையுணரவே, மற்றைய பரமான்மாவின் சுவரூபமும், சீவான்மா பரமான்மாவை யடையக்கூடிய உபாயத்தின் சுவரூபமும், அடைதலாற் பெறக்கூடிய பயனது சுவரூபமும், சீவான்மா பரமான்மாவை அடையவொட்டாது தடுக்கின்ற பகைச் சுவரூபமும் ஆகிய நான்கும் தாமாகவே உணரப்படும். இவ்வைந்தும், அர்த்தபஞ்சக மெனப்படும்: அர்த்தபஞ்சக ஜ்ஞாநமுடையவனே பிறவித் தடுமாற்றம் ஒழியப்பெறுவா னென்பது, வேதசாத்திரங்களின் கருத்தா மென்க. மற்றைத் துறையென்றது - வேதத்திற்கு அங்கமான ஸ்மிருதி இதிஹாச புராணங்களை. "நோயெலாம்பெய்ததோராக்கை", "அழுக்குடம்பு" என்ப வாதலால் இவ்வுடம்பை 'முழுப்பிணியழுக்கு' என்றும், இவ்வழுக்குடம்போடு கூடிய பிறவி யுண்டாதற்குக் காரணம் தன் சுவரூபத்தை யுணராமையே யாதலால் 'முன்னைத் தான் தன்னையோரா' என்று அடைமொழி கொடுத்தும் கூறினர். 'என்பது' - முதல்வேற்றுமைச் சொல்லுருபு. நான்காம் அடியில், 'பின்னே' என வருவதனால், 'முன்னே' என்றார். ஈற்று ஓகாரம் - இரக்கம். பி - ம்:—[1] தன்னைத்தானுணர்வனுயிற் றகையறும் பிறவி தீரும். [2] என்னைத்தான். [3] அறையுமற்ற மறைகளுமிசைந்தவெல்லாம், அல்லது இசைந்ததெல்லாம். [4] தன்னையோரான். [5] பித்தே. (665)

93. [1] அளித்தவ ரஞ்சு நெஞ்சி னடைத்தவ ரறிவு மூழ்கிக்
குளித்தவ ரின்ப துன்பங் குறைத்தவ ரன்றி வேரி
ஒளித்தவ [2] ருண்டு மீண்டிவ் வுலகெலா முணர வோடிக்
களித்தவ ரெய்தி நின்ற கதியொன்று கண்ட துண்டோ.

(இ - ள்.) அளித்தவர் - (அபயமென்று அடைந்தவரைப்) பாதுகாத்தவரும், அஞ்சுஉம் நெஞ்சின் அடைத்தவர் - ஐம்பொறிகளையும் மனத்தில் அடக்கியவரும், அறிவு மூழ்கி குளித்தவர் - தத்துவஞானத்தில் ஆழ்ந்திருப்பவரும், இன்பம் துன்பம் குறைத்தவர் - (சுகதுக்கங்களில்) விருப்பு வெறுப்பு அற்றவரும் [சுகதுக்கங்களை ஒருநிகராகக் கருதுபவர்களும்], அன்றி - (நற்கதியடைவார்களே) அல்லாமல்,—வேரி - மதுவை, ஒளித்தவர் உண்டு - (பிறரறியாமல்) மறைந்தவராய்க் குடித்து, (அதனாலாகிய வெறியினால்), மீண்டு - பின்பு, இ உலகு எலாம் உணர ஓடி களித்தவர் - இவ்வுலகத்தாரெல்லாரும் அறியும்படி (கண்டவிடத்திலும்) ஓடிக் களிப்புக்கொண்டவர், எய்தி நின்ற - அடைந்துள்ள, கதி ஒன்று - ஒரு நற்கதியை, கண்டது உண்டுஓ - (எவராயினும்) பார்த்ததுண்டோ?

அஞ்சிவந்தடைந்தவரை அபயமென்று காத்தலும், பஞ்சேந்திரியங்களை வசப்படுத்துதலும், தத்துவஞானம் நிரம்புதலும், சுகதுக்கங்களை ஒருநிகராகக் கருதுதலும் நற்கதியடைதற்கு ஏற்ற வழிகளாமேயன்றி, கட்குடித்தலால் ஒருகாலும் நற்கதியுண்டாகாதென்பது கருத்து. பிறரறியாதபடி மறைத்து மதுவை உண்டாலும் பிறகு உண்டவனது சொற்சோர்வு முதலியவற்றால் உலகத்தவர் பலராலும் அது அறியப்படுமாதலால், கட்குடிப்பவரை 'ஒளித்தவருண்டு மீண்டிவ்வுலகெலாமுணர வோடிக் களித்தவர்' என்றார்; "உள்ளொற்றியுள்ளூர் நகப்படுவ ரென்ஞான்றுங், கள்ளொற்றிக் கண் சாய்பவர்" என்றார் நாயனாரும். 'கதியொன்று கண்டதுண்டோ' என்றதனால், குடியர்க்கு ஒருகாலும் நற்கதி யுண்டாகா தென வற்புறுத்திய வாறும். ஐம்பொறிகளை மனத்தி லடக்குதலாவது - ஐம்பொறிகளைப் புலன்களின்மேற் செல்லவொட்டாது தடுத்து வைத்தல். அஞ்சு - பஞ்சேந்திரியங்கட்குத் தொகைக்குறிப்பு: உம்மை - முற்றுப் பொருளது.

[1] அளித்தவரஞ்சநெஞ்சி னடைந்தவரறிவுமூழ்கிக், குளித்தவரின்பதுன்பங்குடைந்தவர்குடைந்தவேரி என்ற பாடத்திற்கு—அளித்தவர் நெஞ்சின் அஞ்ச அடைந்தவர் - தம்மைப்பெற்றதாய் தந்தையர் மனத்தில் அச்சங்கொள்ளுமாறு பிறந்தவர்களும், அறிவு மூழ்கி குளித்தவர் - அறிவுகெட்டு விஷயாந்தரங்களில் [சிற்றின்பங்களில்] மூழ்கினவரும், இன்பதுன்பம் குடைந்தவர் - சுகதுக்கங்களை ஒருநிகராகப் பாராட்டாமல் அவற்றிலேயே அழுந்துபவரும் [இன்பம்வந்தகாலத்து மகிழ்ந்தும் துன்பம்வந்தகாலத்து வருந்தியும் நிற்பவரும்], குடைந்த வேரி ஒளித்தவர் உண்டுமீண்டு இ உலகுஎலாம் உணர ஓடிக் களித்தவரும் எய்திநின்ற கதியொன்று கண்டது உண்டோ? என்று பொருளாம். குடைந்தவேரி - பாளை முதலியவற்றினின்று குடைந்தெடுக்கப்பட்ட மது. பி - ம்:—[2] உண்டபின்பு. (666)

94\. செற்றதும் பகைஞர் நட்டார் செய்தபே ருதவி தானும்
கற்றதும் [1] கண்கூ டாகக் கண்டதுங் கலைவ லாளர்
சொற்றது [2] மானம்வந்து தொடர்ந்ததும் [3] படர்ந்து துன்பம்
[4] உற்றது முணர்வ ராயி னுறுதிவே றிதனி னுண்டோ.

(இ - ள்.) பகைஞர் செற்றதுஉம் - பகைவர் (தமக்குச்) செய்த தீங்கையும், நட்டார் செய்த பேர் உதவிதான்உம் - (தமக்குச்) சினேகிதர் செய்த பேருபகாரத்தையும், கற்றதுஉம் - (தாம்) கற்றகல்வியையும், கண்கூடுஆக கண்டதுஉம் - (தாம்) பிரதியட்சமாகக்கண்டறிந்ததையும், கலை வலாளர் சொற்றதுஉம் - சாஸ்திரங்களை யுணர்ந்த பெரியோர் கூறியதையும், மானம் வந்து தொடர்ந்ததுஉம்-(தமக்குப்) பெருமை வந்து சேர்ந்த வழியையும், துன்பம் படர்ந்து உற்றதுஉம் - துன்பம் வந்து மிகச் சேர்ந்ததையும், உணர்வர் ஆயின் - அறிவரானால், இதனின் வேறு உறுதி உண்டுஓ - (அவர்க்கு) இவ்வாறு

உணர்தலைக்காட்டிலும் நன்மை தருவது வேறொன்று உளதோ? [இல்லை]; (எ - று.)

தனது நண்பினராகிய இராமலட்சுமணர் செய்த பேருதவியை மறவாதிருப்பதே தனக்கு நன்மை யெனக் கூறத்தொடங்கிய சுக்கிரீவன், இனம் பற்றி மற்றவற்றையும் உடன்கூறினன்; ஒப்புமைக் கூட்டவணி. பகைஞர் செற்றது முதலியவற்றை மறத்தலால் தீமையும், மறவாது மனத்துக்கொண்டிருத்தலால் நன்மையும் உண்டாமென்க. பி - ம்:—[1]கண்கூடாத. [2]பாவம் வந்து தொடர்ந்ததும், மானம்வந்துதொலைந்ததும். [3]படர்ந்த. [4]உற்றது முணராராயினறுதி வேறதனினுண்டோ. (667)

95. வஞ்சமுங் களவும் பொய்யு மயக்கமு [1]மரபில் கொட்பும்
தஞ்சமென் றுரை நீக்குந் தன்மையுங் [2]களிப்புந் தாக்கும்
[3]கஞ்சமெல் லணங்குந் தீருங் கள்ளினு லருந்தி னுரை
நஞ்சமுங் கொல்வ [4]தல்லா னரகினை நல்கா தன்றே.

(இ - ள்.) கள்ளினால் அருந்தினரை - மதுபானஞ்செய்தவரை,— வஞ்சம்உம் - வஞ்சனையும், களவுஉம் - திருடுதலும், பொய்உம்—, மயக்கம்உம் - அறியாமையும், மரபுஇல் கொட்புஉம் - தொன்று தொட்டுவந்த முறைமைக்கு மாறான கொள்கையும், தஞ்சம் என்றுரை நீக்கும் தன்மைஉம் - சரணமென்று அடைந்தவரைப் பாது காவாது நீக்குகின்ற குணமும், களிப்புஉம் - செருக்கும், தாக்கும் - (சேர்ந்து) வருத்தும்; கஞ்சம் மெல் அணங்குஉம் தீரும் - செந்தாமரைமலரில் வசிக்கின்ற மெல்லிய தன்மையுள்ள இலக்குமியும் விட்டு நீங்குவாள்; நஞ்சம்உம் - விஷமும், கொல்வது அல்லால் - (உண்பவரைக்) கொல்லுமேயல்லாமல், நரகினைநல்காது - (அவர்க்கு) நரகத்தைத்தராது; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

விஷம் உண்டவரது உடம்பைமாத்திரம் அழிக்கும்; மதுவோ உடம்பை யழித்தலோடு உயிரையும் தீக்கதியிற் சேர்க்குமென, உபமானமாகிய நஞ்சைவிட உபமேயமாகிய மதுவுக்கு வேற்றுமை தோன்றக் கூறியது, வேற்றுமையணி. மதுவுக்கு நஞ்சு உபமானமாதலை, "நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்பதனாலும் அறிக. கள்ளினு லருந்தினர் - வேற்றுமைமயக்கம். பி - ம்:—[1]வரம்பில் கொட்பும், மரபிற்கோட்பும், வரம்பிற்கோட. [2]களியுந். [3]கஞ்சமுங்கறவுந் நீப்பும், கஞ்சமெல்லணங்குந்தீரும் அல்லது கஞ்சமே லணுகுந்தீக்குங் கள்ளினால்வருந்தினரை அல்லது கள்ளினன் அல்லது களிப்பினால் மயங்குமந்த. [4]அன்றி நரகமுந்தப்பாதன்றே, அன்றி நல்வினை நல்காதன்றே. (668)

96. கேட்டன னறவாற் கேடு வருமெனக் [1]கிளத்து மச்சொல்
காட்டிய தனும னீதிக் கல்வியாற் கடந்த தல்லான்
மீட்டினி யுரைப்ப தென்னே விரைவின்வந் தடைந்த வீரன்
மூட்டிய [2]வெகுளி யானுன் முடிவதற் கைய முண்டோ.

(இ - ள்.) நறவால் கேடு வரும் என கேட்டனன் - மதுபானத் திறற் கெடுதியுண்டாகுமென்று (பெரியோர்சொல்லக்) கேட்டுள்ளேன்; இளத்தும் அ சொல் காட்டியது - (அவ்வாறு) சொல்லப்பட்ட அச்சொல்லானது பிரதியக்ஷமாக(த் தன்தொழிலைக்) காட்டிவிட்டது; மீட்டு இனி உரைப்பது என்ன - திரும்பவும் இனிமேல் (அதைப்பற்றிச்) சொல்வதிற் பயன்என்ன? அனுமன் நீதி கல்வியால் கடந்தது அல்லால் - அநுமானது நீதிநூலுணர்ச்சியினால் (மதுவுண்டுநேர்ந்த ஆபத்தினின்று) தப்பிப்பிழைத்ததே யல்லாமல், விரைவின் வந்து அடைந்த வீரன் மூட்டிய வெகுளியால் - விரைவாக வந்து சேர்ந்த வீரனாகிய இலக்குமணனது மூண்ட கோபத்தினால், நான்—, முடிவதற்கு - இறந்தொழிவதற்கு, ஐயம் உண்டுஓ - சந்தேகமுளதோ? (எ - று.)

அநுமான் காலத்திற்கு ஏற்பத் தனது நுண்ணுணர்வினால் இலக்குமணனது கோபத்திற்குத் தக்க பரிகாரம் செய்திலனாயின், மதுவுண்டு மயங்கிக்கிடந்த நான் அத்தீச்செயலின் பயனாக அப்பொழுதே அவனது கோபத்தீக்கு இலக்காய் இறந்துபட்டிருப்பேனென்பதாம். மூட்டிய - (என்செயலால்) மூட்டப்பட்ட எனினுமாம். பி - ம்:—[1] இடைத்த. [2] வெகுளியானும், வெகுளியானேன். (669)

97. ஐயநா னஞ்சி னேனிந் [1] நறவினி னரிய கேடு
கையினா லன்றி யேயுங் [2] கருதுதல் கரும மன்றால்
[3] வெய்யதா மதுவை யின்னும் விரும்பினே னென்னின் வீரன்
செய்யதா மரைகளன்ன சேவடி [4] சிதைக்க வென்றான்.

(இ - ள்.) ஐய—! நறவினின் அரிய கேடு - இம்மதுபானத்தால் நேரும் பெரியகேட்டிற்கு, நான் அஞ்சினேன் - நான் பயப்பட்டேன்; கையினால் அன்றி கருதுதல்உம் கருமம் அன்று - (அம்மதுவைக்) கையினால் தீண்டுவதல்லாமல் மனத்தினால் நினைத்தலும் நற்காரியமன்று; வெய்யது ஆம் மதுவை - கொடுமையுடையதாகிய இம் மதுவை, இன்னும் விரும்பினேன் என்னின் - (அதனால்நேர்ந்த தீங்கைக் கண்கூடாகக்கண்ட) பின்பும் விரும்பினேனானால், வீரன்செய்ய தாமரைகள் அன்ன சே அடி-இராமபிரானது செந்தாமரை மலர்களையொத்த சிவந்ததிருவடிகள், சிதைக்க - (என்னை) அழிப்பனவாக, என்றான் - என்று (ஆணையிட்டுக்) கூறினான்: (எ - று.)

இராமபிரானது திருவடிசாட்சியாக மதுவை இனி ஒருகாலும் விரும்பேனென்று சுக்கிரீவன் பிரதிஜ்ஞை செய்தவாறு. சுக்கிரீவன் அங்கதனை 'ஐய' என்றது - அன்புபற்றிய மரபுவழுவமைதி. அன்றியே, ஏ - அசை. பி - ம்:—[1] நறவினை, நறவினான். [2] கழலுதல், கழறவும், காலற்கும். [3] வெய்யதாமதனை. [4] சிவந்ததன்றே, சிதைத்தேனென்றான், சிதைத்தலன்றே. (670)

98.—சுக்கிரீவன் இலக்குமணனை யெதிர்கொள்ளுமாறு அங்கதனையனுப்பி, தான் அரண்மனைவாயிலைச் சேர்தல்.

என்றுகொண் டியம்பி [2]யண்ணற் கெதிர்கொளற் கியைந்த வெல்லாம்
நன்றுகொண் [2]டின்னு நீயே நணுகென வவனை யேவித்
[3]தன்றுணைத் தேவி மாருந் தமரொடுந் தழுவத் தானும்
நின்றன னெடிய [4]வாயிற் கடைத்தலை [5]நிறைந்த சீரான்.

(இ - ள்.) நிறைந்த சீரான் - மிகுந்த நற்குணங்களை யுடையவனாகிய சுக்கிரீவன்,—என்று கொண்டு இயம்பி - என்றுசொல்லி, 'அண்ணற்கு எதிர்கொளற்கு இயைந்த எல்லாம் நன்றுகொண்டு - இலக்குமணனை எதிர்கொள்வதற்கு உரியஎல்லாவற்றையும் மிகுதியாக எடுத்துக்கொண்டு, இன்னும் நீயே நணுகு - இன்னமும் நீயே நெருங்கிச்செல்வாயாக,' என - என்று, அவனை ஏவி- அவ்வங்கதனைக் கட்டளையிட்டனுப்பி,—தன் துணைதேவிமார்உம் தமரொடுஉம் தழுவ - தனதுவாழ்க்கைத்துணைவியரான மனைவியரும்சுற்றத்தாரும் தன்னைச்சூழ்ந்திருக்க, தானும்—, நெடிய வாயிற் கடைத்தலை-பெரிய (அரண்மனையின்) தலைவாயிலில், நின்றனன்—; (எ - று.)

அண்ணலை எதிர்கொள்ளுதற்கு இயைந்தவை - குடை சாமரம் முதலியன. 'கடைத்தலை நிறைந்த சீரான்' என்று எடுத்து - தலைவாயிலில் நிறைந்த புகழையுடையவன் என்றுமாம்; "புறங்கடை நல்லிசை" என்றார் பிறரும். பி - ம்:—[1]அன்னாற் கெதிர்கொள. [2]இறைவனீயே, இளவனீயே, இன்று நீயே. [3]தன்றுணைத்தேவிமார்கள். [4]கோயிற். [5]நிமிர்ந்தசீரான். நன்றுகொண் டளவிலாதநணுகெனச் சேனையேவி அல்லது நவையின்றேகி என்று இரண்டாம் அடியும், சென்றனனிமிர்ந்த கோயிற் கடைத்தலை நிவந்தநீரான் அல்லது நிவந்தவீரன் என்று நான்காம் அடியும் சில பிரதிகளில் உள்ளன. (671)

99.—இதுவும், அடுத்த கவியும்–இலக்குமணன் வரும் போதைய கிட்கிந்தா நகரத்தின் வரவேற்புநிலை.

[1]உரைத்தசெஞ் சாந்தும் பூவுஞ் சுண்ணமும் புகையு மூழின்
நிரைத்தபொற் குடமுந் [2]தீப சாலமு [3]நிகரின் முத்தும்
குரைத்தெழு விதானத் தோடு தொங்கலுங் கொடியுஞ் சங்கும்
[4]இரைத்திமிழ் முரசு முற்று [5]மியங்கின வீதி யெல்லாம்.

(இ - ள்.) (அப்போது), உரைத்த செம் சாந்துஉம் - அரைத்த சிவந்த சந்தனக்குழம்பும், பூஉம் - மலர்களும், சுண்ணம்உம் - வாசனைப்பொடிகளும், புகைஉம் - (அகில்முதலியவற்றின்) நறும்புகையும், ஊழின்நிரைத்தபொன்குடம்உம் - விதிப்படி வரிசையாகவைக்கப்பட்டுள்ள பொற்குடங்களும், தீப சாலம்உம் - விளக்குக்களின் கூட்டமும், நிகர் இல் முத்துஉம் - ஒப்பற்ற முத்துச்சரங்களும், குரைத்து எழு விதானத்தோடு - அசைந்துவிளங்குகின்றமேற்கட்டி

களும், தொங்கல்உம் - பீலிக்குஞ்சங்களும், கொடிஉம் - துவசங்களும், சங்குஉம் - சங்குகளும், இரைத்து இமிழ் முரசுஉம் - இரைந்து பேரொலியைச் செய்கின்ற முரசவாத்தியங்களும், முற்றும் - (ஆகிய) இவைகளெல்லாம், வீதி எல்லாம் - (கிஷ்கிந்தாநகரத்து) வீதிகளிலெல்லாம், இயங்கின - (கொணரப்பட்டுச்) சென்று நிறைந்தன;

இலக்குமணன் வருகையையுணர்ந்த கிஷ்கிந்தாநகரவாசிகள் அவனுக்கு உபசாரமாகச் சந்தனக்குழம்புமுதலியவற்றை வீதிகளில் நிரைத்தனரென்க. சுக்கிரீவமகாராஜனது கட்டளையினால் அங்கதன் நிறைத்தா னெனினுமாம். சுண்ணம் - சூர்ணமென்ற வடசொல்லின் சிதைவு. பொற்குடம் - நிறைநீர்ப்பொற்குடம். சங்கும் முரசும் - மங்களவாத்தியங்கள். குரைத்து-குலைந்து. [3]நிகழ்ந்தனஎன்ற பாடத்துக்கு வரிசையாகத் தொங்குகின்றனஎன்று பொருள். பி - ம்:— [1]அரைத்த...ஆடி. [2]தீபமாலையும். [3]நிரைத்த. [4]இரைத்துமிழ். [5]இலங்கின. (672)

100. தூயதிண் பளிங்கிற் செய்த சுவர்களின் தளத்திற் [1]சுற்றில்
நாயக மணியிற் [2]செய்த [3]நனிநெடுந் தூணி னாப்பண்
சாயைபுக் குறலாற் கண்டோ [4]ரயர்வுறக் கைவி லோடும்
ஆயிர மைந்தர் வந்தா ருளரெனப் பொலிந்த தவ்வூர்.

(இ - ள்.) அ ஊர் - அந்தக்கிஷ்கிந்தா நகரமானது,— தூய திண் பளிங்கின் செய்த சுவர்களின் தளத்தில்-சுத்தமான [பிரதிபிம்பத்தையுண்டாக்குந்தன்மையுள்ள] வலிய படிகக்கற்களினாற் செய்யப்பட்ட சுவர்களினிடங்களிலும், சுற்றில் நாயகம் மணியின் செய்த நனி நெடுந் தூணின் நாப்பண்-சுற்றுப்பக்கங்களிற்சிறந்த நவரத்தினங்களிழைத்துச்செய்த மிகவும் நீண்ட தம்பங்களின் நடுவிடங்களிலும், சாயை புக்கு உறலால் - (இலக்குமணனது உடம்பின்) நிழல் போய்ப் பொருந்துதலால்,—கைவிலோடும் - கையில் தாங்கிய வில்லுடனே, ஆயிரம்மைந்தர் வந்தார் உளர் என - ஆயிரம்வீரர்கள் (இப்போது இங்குத்) திரண்டு வந்திருக்கிறார்களென்று, கண்டோர் அயர்வுஉற - பார்த்தவர்களெல்லாரும் மாறாட்டமாக நினைக்கும்படி, பொலிந்தது - விளங்கிற்று; (எ - று.)

இலக்குமணன் செல்லுகின்ற இடங்களிலுள்ள பளிங்குச்சுவர்களிலும் இரத்தினத்தூண்களிலும் அவ்விலக்குமணனது சாயை ஆயிரக்கணக்காகப் பிரதிபிம்பித்தலால், பலவீரர் திரண்டுவந்தார்களோ என்று ஐயுறும்படி அவ்வூர் விளங்கிற்றென்பதாம்; தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1]சுற்று, சுற்றும் சுற்றி. [2]செற்றி. [3]நன்னெடுந். [4]தகைவுறக்கைவிலோடும், அயர்வுறத் தகைவிலோடும், தயாவுறக்கைவில்லோடும். (673)

101.—தன்னிடத்துவந்த அங்கதனைக்கண்ட இலக்குமணன் சுக்கிரீவனைப் பற்றிவினவுதலும், அதற்கு அவன் விடைகூறுதலும்.

அங்கதன் பெயர்த்தும் [1]வந்தாண் டடியிணை தொழுதா னைய
எங்கிருந் தானுங் கோமா னென்றலு மெதிர்கோ ளெண்ணி

மங்குல்தோய் [2]கோயில் கொற்றக் கடைத்தலை மருங்கு நின்றான்
சிங்கவே றனைய வீர [3]செய்தவச் செல்வ னென்றான்.

(இ - ள்.) அங்கதன்—, பெயர்த்தும் ஆண்டு வந்து அடி இணை தொழுதான் - மறுபடியும் அங்கு [இலக்குமணனுள்ளவிடத்தில்] வந்து (அவனது) உபயபாதங்களை வணங்கினான்: [அப்பொழுது இலக்குமணன் அவனை நோக்கி], 'ஐய—! உம் கோமான் எங்கு இருந்தான் - உங்களது அரசனாகிய சுக்கிரீவன் எங்கேயிருக்கின்றான்?' என்றலும் - என்று வினவியவளவில்,—(அங்கதன் இலக்குமணனைநோக்கி), 'சிங்கம் ஏறு அனைய வீர - ஆண்சிங்கம் போன்ற மகாவீரனே! செய் தவம் செல்வன் - (முற்பிறப்பிற்) செய்த மிக்க தவத்தையுடையவனான சுக்கிரீவன், எதிர்கோள் எண்ணி - (உன்னை) எதிர்கொள்ள நினைத்து, மங்குல் தோய் கோயில் கொற்றம்கடைத் தலை மருங்கு நின்றான் - மேகமண்டலத்தைத் தளாவிய அரண்மனையினது வெற்றியையுடைய தலைவாயிலில் நிற்கின்றான்', என்றான்—; (எ - று.)

முற்பிறவியில் சுக்கிரீவன்செய்த தவப்பயனால்தான் உமது நட்பு அவனுக்கு நேர்ந்த தென்பான், அவனை 'செய்தவச்செல்வன்' என்றான். தவச்செல்வம் - தவத்தின்மிகுதி: தவமாகியசெல்வமெனினுமாம். எதிர்கோள் - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். பி - ம்:—[1]வந்தாங்கடிதொழுதானை. [2]வாயில் கொற்றக்கடைத்தலை மருங்கு, மாடக்கோயிற்..., மாடக்கொற்றக் கடைத்தலைவாயில். [3]செல்க. (674)

102.—சுக்கிரீவன் இலக்குமணனை எதிர்கொள்ளச் செல்லுதல்.

சுண்ணமுந் தூசும் வீசிச் சூடகத் தொடிக்கைம் மாதர்
கண்ணகன் கவரிக் கற்றைக் காலுறக் கலைவெண் டிங்கள்
விண்ணுற [1]வளர்ந்த தென்ன வெண்குடை விளங்க வீர
வண்ணவிற் கரத்தான் முன்னர்க் கவிக்குலத் தரசன் வந்தான்.

(இ - ள்.) சூடகம் தொடி கை மாதர் - சூடகத்தையும் தொடியையும் அணிந்த கைகளையுடைய வானரமகளிர், சுண்ணம்உம் தூசுஉம் வீசி - சுகந்தப்பொடிகளையும் ஆடைகளையும் வீசிக்கொண்டு, கண் அகல் கவரி கற்றை கால் உற - இடமகன்ற [பெரிய] சாமரைத் தொகுதியைக்கொண்டு காற்றையுண்டாக்கவும், கலை வெண் திங்கள் விண் உற வளர்ந்தது என்ன வெள் குடை விளங்க - பதினாறுகலைகளும்நிரம்பிய வெண்மையான முழுமதி வானத்திற் பொருந்தி விளங்குவதுபோல வெண்கொற்றக்குடை விளங்கவும்,— வீரம் வண்ணம் வில் கரத்தான் முன்னர் - பராக்கிரம முடைய அழகிய வில்லையேந்திய கையையுடையவனான இலக்குமணனெதிரில், கவிகுலத்து அரசன் - வானரசாதித்தலைவனான சுக்கிரீவன், வந்தான்—; (எ - று.)

சுண்ணந்தூவுதலும், தூசுவீசுதலும் - மகிழ்ச்சியையும்வெற்றியையும் தெரிவிப்பனவாம். சூடகம், தொடி - கைவளைவிசேடங்கள். குடையும், சாமரமும் - அரசசின்னங்கள். பி - ம்:—[1]வளர்ந்த, மலர்ந்த. (675)

103.—இதுவும் அது.

அருக்கிய முதல வாய வருச்சனைக் கமைந்த யாவும்
முருக்கிதழ் மகளி ரேந்த முரசின முகிலி னார்ப்ப
இருக்கின முனிவ [1]ரோத விசைதிசை யளப்ப யாணர்த்
திருக்கிளர் செல்வ [2]நோக்கித் தேவரு மருளச் சென்றான்.

(இ - ள்.) முருக்கு இதழ் மகளிர் - பலாசமலரையொத்த அதரங்களையுடைய வானரமகளிர், அருக்கியம் முதல ஆய அருச்சனைக்கு அடைந்த யாஉம் ஏந்த-அருக்கியம் முதலாகவுள்ள (இலக்குமணனை) உபசரித்தற்கு உரிய எல்லாப்பொருள்களையும் உடன் கொண்டுவரவும்,—முரசு இனம் முகிலின் ஆர்ப்ப - பேரிகைவாத்தியங்களின் கூட்டம் மேகம்போல ஒலிக்கவும்,—முனிவர் இருக்கு இனம் ஓத - இருடிகள் வேதவாக்கியங்களைச் சொல்லிக்கொண்டு வரவும்,—இசை திசை அளப்ப - சங்கீதங்களினோசை எல்லாத் திக்குக்களிலும் பரவவும்,—யாணர் திரு கிளர் செல்வம் நோக்கி தேவர்உம் மருள - புதிய சிறப்புமிக்க (தனது) செல்வச்சிறப்பைப் பார்த்துத் தேவர்களும் திகைக்கும்படி, சென்றான் - (சுக்கிரீவன் இலக்குமணனெதிரிற்) போனான்; (எ - று.)

அருக்கியம் = கைகழுவ நீர்தருதல்; இது, சோடசோபசாரங்களில் ஒன்று. மற்றவை - தவிசளித்தல், கால் கழுவ நீர்தருதல், முக்குடி நீர்தருதல், நீராட்டல், ஆடைசாத்தல், முப்புரி நூல்தருதல், சந்தனக்குழம்பு பூசுதல், மலர்சூட்டுதல், அக்ஷதைதூவுதல், தூபஞ்சமர்ப்பித்தல், தீபஞ்சமர்ப்பித்தல், கற்பூரமேற்றுதல், அமுதமேந்துதல், அடைக்காய்தருதல், மந்திரமலரானருச்சித்தல் என்பனவாம். முருக்கு - மரத்தின்பெயர் மலருக்கு முதலாகுபெயர்: இது நிறம் பற்றிவந்த உவமையாம். இருக்கு - ருக்: ஸ்வஸ்திவாசகம் முதலியன. பி - ம்:—[1]ஏத்த. [2]நோக்க. (676)

104.—சுக்கிரீவனது தோற்றம்.

வெம்முலை மகளிர் வெள்ள மீனென விளங்க விண்ணிற்
சும்மைவான் மதியங் குன்றிற் றோன்றிய தெனவுந் தோன்றிச்
செம்மலை யெதிர்கோ ளெண்ணித் [1]திருவொடு மலர்ந்த செல்
அம்மலை யுதயஞ் [2]செய்த தாதையு மனைய னானான். [வன்

(இ - ள்.) செம்மலை எதிர்கோள் எண்ணி - பெருமையிற்சிறந்தவனான இலக்குமணனை எதிர்கொள்ளநினைத்து, திருவொடுமலர்ந்த செல்வன் - மிக்க அழகோடுவிளங்குகின்ற ஸ்ரீமானான சுக்கிரீவன்,—வெம்முலை மகளிர் வெள்ளம் மீன் என விளங்க - விரும்பப்படுந்

தனங்களையுடைய வானரமகளிரின் கூட்டம் நட்சத்திரங்கள்போல விளங்காநிற்க, (அவர்களிடையே), குன்றில் தோன்றியது - உதய மலையிலுதித்து விளங்குவதான, விண்ணில் சும்மை வால் மதியம் எனஉம் - ஆகாயத்திற்காணப்படுகின்ற கலைகள்நிரம்பிய வெண்மை யான சந்திரன் போலவும், தோன்றி - (தான்) காணப்பட்டு,— அ மலை உதயம் செய்த தாதை அனையன்உம் ஆனான் - அந்த உதயகிரியில் உதித்து விளங்குகின்ற தனது தந்தையாகிய சூரியனை ஒத்தவனு மானான்; (எ - று.)

மகளிராற்சூழப்பட்டுக் கிட்கிந்தமலையில் விளங்குகிறவெள்ளிய சுக்கிரீவனுக்கு - நட்சத்திரங்களாற்சூழப்பட்டு உதயகிரியிலுதித்த சந்திரனும், உதயகிரியில்தோன்றிய சூரியனும் உவமையாவா ரென்க. 'தந்தையே மைந்தனாகப் பிறக்கிறான்' என்பதற்கு ஏற்ப, தகப்பனாகிய சூரியனை மகனாகிய சுக்கிரீவனுக்கு உவமை கூறுதல் தகும். இனி, இல்பொருளுவமையாகக் கொண்டு குன்றில் தோன்றியது கிட்கிந்தை கிரியிலுதித்ததாகிய, மதியம் எனவும், அ மலை உதயஞ் செய்த-அக் கிஷ்கிந்தைகிரியிலுதித்த தாதை எனவும் கூறலாம். பகைவரைத் தவிக்கச்செய்தலால், சூரியனுவமை. பி - ம்:—[1] திருவொடும்பரந்த. [2] செய்யுந். (677)

வேறு.

105.—இலக்குமணன் சுக்கிரீவனைக்கண்டவுடன் எழுந்தகோபத்தைத் தணித்துக்கொள்ளுதல்

தோற்றிய வரிக்குலத் தரசைத் தோன்றலும்
ஏற்றெதிர் நோக்கின [1] னெழுந்த தவ்வழி
சீற்றமங் கதுதனைத் தெளிந்த சிந்தையால்
ஆற்றினன் [2] தருமத்தி னமைதி யுன்னுவான்.

(இ - ள்.) தோன்றல்உம் - சிறந்தவனாகிய இலக்குமணனும்,— தோற்றிய அரி குலத்து அரசை - (எதிரிற்) காணப்பட்ட வானரக் கூட்டத்திற்குத்தலைவனான சுக்கிரீவனை, ஏற்று எதிர்நோக்கினன் - வரவேற்று எதிரே பார்த்தான்; அ வழி சீற்றம் எழுந்தது - அப் போது (அவ்விலக்குமணனுக்குக்) கோபம் மூண்டது: தருமத்தின் அமைதி உன்னுவான் - தருமத்தின் நிலைமையைக் கருதுபவனாகிய அவ்விலக்குமணன், அங்கு - அப்போது, அதுதனை - அக்கோபத்தை, தெளிந்த சிந்தையால் - தெளிவடைந்திருக்கிற (தனது) மனத்தினால், ஆற்றினன் - தணித்துக்கொண்டான்; (எ - று.)

தங்கள்திறத்திற் குறித்த தவணைப்படி வாராது தவறிய சுக்கிரீ வன் எதிர்ப்பட்டவளவில் இலக்குமணனுக்குக் கோபம்மூண்ட தென்க. 'கோவம் பாவத்திற்கு அஞ்சாது'' "மறத்தல்வெகுளியை யார்மாட்டுந்தீய, பிறத்தலதனான் வரும்," என்றபடி கோபம் தருமத் திற்கு விரோதியாதலால், இலக்குமணன் தனது தெளிந்த மனத்தி னாற் கோபத்தை உடனே ஆற்றினன். பி - ம்:—[1] எதிர்ந்ததவ்வழி. [2] கருமத்தின். (678)

106.—அவ்விருவரும் தழுவி, பரிவாரங்களுடன் அரண்மனையினுட் செல்லுதல்.

எழுவினு மலையினு மெழுந்த தோள்களால்
தழுவின ரிருவருந் தழுவித் தையலார்
குழுவொடும் [1]வீரர்தங் குழாத்தி னோடும்புக்கு
ஒழிவிலாப் [2]பொற்குழாத் துறையு ளெய்தினர்.

(இ - ள்.) இருவர்உம் - (இலட்சுமணன் சுக்கிரீவன் என்ற) அவ் விருவரும், - எழுவின்உம் மலையின்உம் எழுந்த தோள்களால் - இருப் புத்தூண் மலை என்ற இவற்றைக்காட்டிலும் பருத்தோங்கிய (தமது) தோள்களினால், தழுவினர் - (ஒருவரையொருவர்) தழுவிக்கொண் டார்கள்; தழுவி - (அங்ஙனந்) தழுவிக்கொண்டு, தையலார் குழு வொடுஉம் - வானரமகளிர் கூட்டத்துடனும், வீரர்தம்குழாத்தினோடு உம் - வானரவீரர் கூட்டத்துடனும், - ஒழிவு இலா பொன் குழாத்து உறையுள் புக்கு எய்தினர் - ஒழிவில்லாத பொன்திரளினாலமைக்கப் பட்ட மாளிகையினுட்சென்று சேர்ந்தார்கள்; (எ - று.)

ஒழிவிலாப்பொற்குழாத்துறையுள் - முழுவதும் பொன்னினாற் சமைந்த மாளிகை. ஒழிவிலா - ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் நெருங்கினவராகி எனினுமாம். பி - ம்:—[1]விராயதம், வயவர்தம். [2]கோபுரத்து. (679)

107.—இதுவும், அடுத்த கவியும்—ஒருதொடர்: சுக்கிரீவன் இலக்குமணனைச் சிங்காதனத்து இருக்கச்சொல்ல அவன் உடன்படாமை.

அரியணை யமைந்தது காட்டி யையவீண்டு
இருவெனக் கவிக்குலத் தரச னேவலும்
[1]திருமகள் தலைமகன் புல்லிற் [2]சேரவெற்கு
உரியதோ [3]வீதென மனத்தி னுன்னுவான்.

(இ - ள்.) கவி குலத்து அரசன் - வானரக்கூட்டத்தலைவனான சுக்கிரீவன், அமைந்தது அரி அணை காட்டி - சித்தஞ்செய்யப்பட்ட தொரு சிங்காதனத்தை (இலக்குமணனுக்குக்) காண்பித்து, 'ஐய - தலைவனே! ஈண்டு இரு - இதில் வீற்றிருப்பாயாக', என ஏவலும் - என்று வேண்டிக்கொள்ளவும்,—(இலக்குமணன்), 'திருமகள் தலை மகன் புல்லில் சேர - இலக்குமிக்குத்தலைவனாகிய இராமபிரான் புல் தரையிலே தங்கியிருக்க, ஈது எற்கு உரியதுஓ - இச்சிங்காதனத்து இருத்தல் (அவனது தம்பியாகிய) எனக்குத் தகுதியாகுமோ?' என - என்று, மனத்தின் உன்னுவான் - மனத்திற் சிந்திப்பவனாய்,— (எ - று.)—அடுத்த கவியில் 'என்றான்' என்பதனோடு முடியும்.

'செல்வத்திற்குஉரியமகளாகிய இலக்குமிக்குக் கணவனாயிருந் தும் இராமபிரான் தான் ஒன்றுமில்லாதானைப் போலப் புல்லணையிற் கிடக்க நேர்ந்ததே!' என்ற இரக்கந் தோன்ற, 'திருமகள் தலைமகன் புல்லிற்சேர' எனக்கருதினன்; இதில் தகுதியின்மையணி தொனிக்

கும். பி-ம்:—[1] திருமகனுயகன். [2] சேர்வுற. [3] இஃதென வுரைத்துப் பின்னரும். (680)

108. கல்லணை [1] மனத்தினை யுடைக்கை கேசியால்
எல்லணை மணிமுடி துறந்த [2] வெம்பிரான்
புல்லணை வைகயான் பொன்செய் பூத்தொடர்
மெல்லணை [3] வைகலும் வேண்டு மோவென்றான்.

(இ-ள்.) 'கல் அணை மனத்தினை உடை கைகேசியால் - கல்லைப்போன்ற [கடினமான] மனத்தையுடைய கைகேசியின்வரத்தினால், எல் அணை மணி முடி துறந்த - ஒளிபொருந்திய இரத்தின கிரீடத்தை விட்டு (வனத்தில்) வந்த, எம்பிரான் - எமது தலைவனாகிய ஸ்ரீராமன், புல் அணை வைக - புற்படுக்கையில் தங்கியிருக்க, யான்—, பொன் செய் பூ தொடர் மெல் அணை வைகல்உம் - பொன்னினாற் செய்யப்பட்டதும் மலர்களாலலங்கரிக்கப்பெற்றதுமான மென்மையாகிய ஆசனத்தில் தங்குதலும், வேண்டும்ஓ - (எனக்கு) வேண்டுவதொன்றோ?' என்றான்-என்றுகூறினன், (இலக்குமணன்); (எ-று.)- இராமபிரான் கைகேசியால் முடிதுறந்தவிவரம், கதைத்தொடர்ச்சியிற் கூறப்பட்டது. கைகேயியால் என்னுமல் கைகேசியால் என்றது, அவள்மீதுள்ள சினத்தையும் வெறுப்பையும் குறிப்பிக்கும். பி-ம்:—[1] மனத்தினலாவி காக்கின்றேன். [2] எம்முனர். [3] வைகவும். (681)

109.—அதுகேட்டுச் சுக்கிரீவன் வருந்துதலும் இலக்குமணன் தரையில் இருத்தலும்.

என்றவ னுரைத்தலு மிரவி காதலன்
நின்றனன் விம்மினன் மலர்க்க ணீருகக்
[1] குன்றென வுயர்ந்தவக் கோயிற் குட்டிம
[2] வன்றலத் திருந்தனன் [3] மனுவின் கோமகன்.

(இ-ள்.) என்று அவன் உரைத்தலும் - என்று அவ்விலக்குமணன் கூறியவளவில்,—இரவி காதலன் - சூரியனது குமாரனாகிய சுக்கிரீவன்,—மலர் கண் நீர் உக விம்மினன் நின்றனன் - தாமரைமலர்போன்ற (தனது) கண்களினின்று நீர்பெருகப் புலம்பிக்கொண்டு நின்றான்; (அப்போது), மனுவின் கோ மகன் - மநுவென்னும் அரசனதுவமிசத்தில் தோன்றிய இராசகுமாரனான இலக்குமணன், குன்று என உயர்ந்த அ கோயில் - மலைபோலவுயர்ந்த அவ்வரண்மனையினது, குட்டிமம் வல் தலத்து - கற்படுத்தின இடமாகிய வலிய தரையில், இருந்தனன்—; (எ-று.)

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர், புன்கணீர் பூசல்தரும்" என்றபடி பிறர்துன்பங்கேட்டவழிக் கண்ணீர்பெருக்குதல் அன்புடையார் செயலென்க. குட்டிமம் - வடசொல். பி-ம்:—[1] குன்றெனப்பொலிந்தவக்கோயில் கூடிய அல்லது நின்றனன். [2] மன்றலந்தாரினன். மன்றலத்திருந்தனன். [3] வாய்மை நோக்கியே. (682)

110.—அச்சமயத்தில் ஆங்குள்ளார் அனைவரும் வருந்துதல்.

மைந்தரு முதியரு மகளிர் வெள்ளமும்
அந்தமில் நோக்கின ரழுத கண்ணினர்
இந்திய மவித்தவ [1]ரெனவி ருந்தனர்
நொந்தனர் தளர்ந்தனர் நுவல்வ தோர்கிலார்.

(இ - ள்.) (அப்போது அங்குள்ள வானரக்கூட்டத்தில்), மைந்தர்உம் - இளையவரும், முதியர்உம் - வயது சென்றவர்களும், மகளிர் வெள்ளம்உம் - பெருந்திரளான மாதர்களும்,—அந்தம் இல் நோக்கினர் - அழகில்லாத [இடுங்கின] பார்வையையுடையவர்களும், அழுத கண்ணினர் - அழுகிற கண்களையுடையவர்களும், நுவல்வது ஓர்கிலர் - (ஒன்றுஞ்) சொல்லத்தெரியாதவர்களுமாகி, நொந்தனர் தளர்ந்தனர் - மனம்வருந்திச்சோர்ந்து, இந்தியம் அவித்தவர் என இருந்தனர் - பஞ்சேந்திரியங்களையும் அடக்கிய முனிவர்போல இருந்தார்கள்; (எ - று.)

இருடிகள் பரமான்மாவை இடைவிடாது கருதுதலால் ஐம்பொறிகளையும் தம்தம் வழியிற் செல்லவொட்டாது அடக்கியிருத்தலை, மிக்க துயரத்தால் வானரர்கள் ஐம்பொறிகளின் தொழிலடங்கிச் செயலற்றிருத்தலால் உவமைகூறினர். வானரர்க்குத் துன்பம், ராஜகுமாரனாகிய இலக்குமணன் தனையிலிருந்ததைக் கண்டமையா லானது; இராமபிரானுக்கு நேர்ந்துள்ள நிலைமை இலக்குமணன் சொல்லக் கேட்டதனாலாகியதுமாம். இந்தியம் = இந்த்ரியம். பி - ம்:—[1]என்ன நின்றனர். (683)

111.—சுக்கிரீவன் இலக்குமணனை நீராடியுண்ணுமாறு வேண்ட, அவன் மறுத்துக்கூறத் தொடங்குதல்.

மஞ்சன விதிமுறை மரபி [1]னாடினை
எஞ்சலி [2]லின்னமு தருந்தின் யாமெலாம்
உய்ஞ்சன மினியென வரசு [3]ரைத்தலும்
அஞ்சன வண்ணனுக் கனுசன் [4]கூறுமால்.

(இ - ள்.) அரசு - சுக்கிரீவமகாராசன்,—(இலக்குமணனைநோக்கி), '(நீ), விதி முறை மரபின் மஞ்சனம் ஆடினை - நூல்களிற்சொல்லிய முறைப்படியே கிரமமாக நீராடியவனாய், எஞ்சல் இல் இன் அமுது அருந்தின் - குறைதலில்லாத இனிய உணவை யுண்டால், யாம் எலாம் இனி உய்ஞ்சனம்-யாங்களெல்லாம் இப்போது நல் வாழ்க்கை பெற்றவர்களாவோம்', என உரைத்தலும்-என்று சொன்னவுடனே,—அஞ்சனம்வண்ணனுக்கு அனுசன் - மை போன்ற கருநிறமுடையவனான இராமபிரானுக்குத் தம்பியாகிய இலக்குமணன், கூறும் - சொல்வானாயினன்; (எ - று.)—அதனை, அடுத்த நான்கு கவிகளிற் காண்க. ஆல் - ஈற்றசை.

'நீ நீராடியுண்டால் யாம் உய்வோம்' என இலக்குமணனுக்குச் சுக்கிரீவனை முகமன் கூறினனென்க. உய்ஞ்சனம் - காலவழுவமைதி. அமுது - தேவாமிருதம்போன்ற உணவிற்கு உவமையாகு பெயர். அஞ்சனவண்ணனுக்கனுசன் — லக்ஷ்மணனுக்கு 'ராமாநுஜன்' என்று ஒருதிருநாமம். அனுசன் - பின்பிறந்தவன்: தம்பி. பி - ம்:—[1] ஆடியே. [2] இன்னமிழ்து. [3] உணர்த்தலும். [4] சொல்லுவான். 'உய்ஞ்சனம்வினை துறந்துயரவுண்டியா, லெஞ்சலி லெமதகத்தியன்ற தென்றலும்' என்று பின்னிரண்டடிகள் சிலபிரதிகளிலும்; 'மஞ்சனவள்ளலுக்கு அல்லது அஞ்சனவண்ணனுக்கிளவல் சொல்லுவான்' என்றும், 'அஞ்சனவண்ணன்பின்னோனறியச் சொல்லுவான்' என்றும் ஈற்றடியும் சிற்சிலபிரதிகளிலும் காணகின்றன. (684)

112.—இதுமுதல் நான்குகவிகள் - ஒரு தொடர்: இலக்குமணன் வார்த்தை.

வருத்தமும் பழியுமே வயிறு மீக்கொள
[1] இருத்துமென் றுலெமக் [2] கினிய தியாவதோர்
அருத்தியுண் டாயினு [3] மவலந் தான்தழீஇக்
[4] கருத்துவே [5] றுற்றபி னமிழ்துங் கைக்குமால்.

(இ - ள்.) வருத்தம்உம் பழியும்ஏ வயிறு மீக்கொள - துன்பமும் நிந்தையுமே வயிற்றைநிரப்பியிருக்கவும், (நாங்கள்), இருத்தும் என்றால் - உயிர்பிழைத்திருக்கின்றோமென்றால், எமக்கு - எங்களுக்கு, இனியது - இனிமைதரக் கூடியது, யாவது - எதுதான்? ஓர் அருத்தி உண்டு ஆயின்உம் - (உண்பதில்) ஒப்பற்ற [மிக்க] விருப்பமிருந்தாலும், அவலம் தழீஇ - துன்பமடைந்து, கருத்து வேறு உற்றபின் - மனம் மாறுபட்டபோது, அமிழ்துஉம் கைக்கும் - தேவாமிருதமும் கசக்குமன்றோ! (எ - று.)— ஆல் - ஈற்றசை: தேற்றமுமாம். தான் - அசை.

உலகத்தில் ஒருவர்க்கு மிக்கசுவையுள்ள ஒருபொருளையுண்பதில் சாதாரணமாக மிக்கவிருப்பமிருப்பினும், துன்பத்தினால் மனம் மாறுபட்டிருக்கையில் உண்ணுமாறு ஏற்பட்டபோது தேவாமிருதமேயாயினும் இனிமையாகத்தோன்றாது; அவ்வாறே, உயிரைப் போக்கக்கூடிய வருத்தத்தையும் பழியையுஞ் சுமந்து அரிதில் உயிர்பிழைத்திருக்கையில் இவ்வுலகத்தில் எதுவும் எமக்கு இனிமையாகத் தோன்றாது; ஆதலால், எனக்கு நீ இடுவதாகக் கூறும் இனிய உணவும்வேண்டா என்றவாரும். முன்னிரண்டடியைப் பின்னிரண்டடி சமர்த்தித்தது தொடர்நிலைச்செய்யுட்குறியணி. பொதுப்பொருளும் சிறப்புப்பொருளுமாகக்கொள்ள இடனின்மையால், இது வேற்றுப்பொருள்வைப்பணியாகாது. உண்ணும் விருப்பந் தங்கட்குச் சிறிதும் இல்லையென்பான், 'வருத்தமும் பழியுமே வயிறு மீக்கொள' என்றான்; வருத்தமும் பழியும் சீதாபிராட்டியை மாற்றானாகிய இராவணன் எடுத்துச்சென்றதனால் நேர்ந்தன. 'வருத்தமும் பழியுமேவயிறுமீக்கொள இருத்தும்' என்பதற்கு - வருத்தமும் பழி

யுமே வயிற்றைநிரப்பிவிட்டதனால், (நல்லுணவு இல்லாமலும்) உயிரோடிருக்கச்செய்யு மென்று உரைப்பாரு முளர். பி - ம்:— [1] அருத்துமென்றுலெமக்கு. [2] இனியதியாவதோ, இனியதாகுமோ, இனியதாவதோ, இனியதீவதோர். [3] அவலத்தாலழி, அவலந் தான்றழீஇ, அவலந்தந்தழி. [4] கருத்தின்று, கருத்துவேது. [5] உற்றபோது. (685)

113. மூட்டிய பழியெனு முருங்கு தீயவித்து
ஆட்டினை கங்கைநீ ரரசன் தேவியைக்
[1] காட்டினை யெனினெமைக் [2] கடலி னாரமிழ்து
[3] ஊட்டினை யாற்பிறி [4] துயவு மில்லையால்.

(இ - ள்.) அரசன் தேவியை காட்டினை எனின் - இராமபிரானது தேவியாகிய சீதாபிராட்டியை(த் தேடி இன்னவிடத்திலிருக்கின்றாளென்று) காட்டினாயானால், —எமை - எம்மை, மூட்டியபழி எனும் முருங்கு தீ அவித்து கங்கை நீர் ஆட்டினை - நிறைந்தபழியாகிய அழிக்கவல்லநெருப்பைஅவியச்செய்து கங்காநதியின்ஜலத்தினால் நீராட்டினவனாவாய்; (அன்றியும்), கடலின் ஆர் அமிழ்து ஊட்டினை - திருப்பாற்கடலிலுண்டாகிய அருமையான தேவாமிருதத்தை உண்பித்தவனுமாவாய்; பிறிது உயவு உம் இல்லை - (எமக்கு) வேறேதுன்பமு மில்லையாய்விடும்; (எ - று.)—'ஆல்' இரண்டும் - ஈற்றசை.

நீ சீதையைத்தேடிக் கண்டுபிடித்துத் தருவாயானால், கங்கையில் நீராடித்தேவாமிருதத்தைப் புசித்ததுபோல நாங்கள் திருப்தியடைவோமென்றபடி. கீழ் நீராடி உணவருந்தும்படி வேண்டிய சுக்கிரீவனுக்கு இச்செய்யுளிற்கூறியது, ஏற்ற மறுமொழியாத லுணர்க. பற்றியெரியும் நெருப்பை யவித்தற்கு நீர் இன்றியமையாதென்பது, முன்னிரண்டடிகளிற் போதரும். நீராடுவதால் வெப்பந் தணிதலும், நீரினால் நெருப்பு அவிதலுமாகிய இயல்புகள் இங்குக் கருதத்தக்கன. பி - ம்:—[1] காட்டினையேலெமை. [2] கடலினின்னமிழ்து, கடலினின்முது. [3] ஊட்டினையதன்பிறகு, ஊட்டினையதற்பினும், ஊட்டினையதற்பிறிது. [4] உயிருமுள்ளதால், உயிரும் உன்னதால், உயிருமில்லையால். (686)

114. பச்சிலை கிழங்குகாய் பரம னுங்கிய
[1] மிச்சிலே நுகர்வது [2] வேறு நானொன்றும்
[3] நச்சிலே னச்சினே னுயி னுயுண்ட
[4] எச்சிலே யதுவிதற் கைய மில்லையால்.

(இ - ள்.) பசு இலை - பசிய இலைகளும் [கீரைகளும்], கிழங்கு - கிழங்குகளும், காய் - காய்களும் (ஆகிய இவைகளில்), பரமன் நுங்கிய மிச்சிலஏ - சிறந்தவனாகிய இராமபிரான் அமுதுசெய்துமிகுந்த சேஷமே, நான் நுகர்வது - நான் உண்பது; (அன்றி), வேறுஒன்று உம் நச்சிலேன் - வேறொரு பொருளையும் விரும்பியுட்கொள்ளமாட்

டேன்; நச்சினேன் ஆயின் - ஒருகால் விரும்பினேனானால், அது - (பரமனுண்டமிச்சிலல்லாத) அது, நாய்உண்டஎச்சிலே—: இதற்கு ஐயம் இல்லை-இதற்குச் சந்தேகமேயில்லை; (எ-று.)-ஆல்-ஈற்றசை.

நீ இப்போது உண்ணுமாறு எனக்குக்கொடுப்பது, இராமபிரானுண்ட மிச்சிலன்றாதலால், இதை நான் உண்பது தகுதியல்லவென்றவாறும். நச்சிலேன் நச்சினேன் - தொடைமுரண். பரமனுண்ட எச்சிலையன்றிப் பிறிதொன்றை நச்சியுண்பேனாயின், நாயுண்ட எச்சிலைவிரும்பியுண்டவனாகப் பழிக்கத்தக்கேனென்கிறான். பி-ம்:—[1]மிச்சிலைநுகர்வதே. [2]வேறுயானென்றும், வேறுதானென்று. [3]நச்சிலேனயலது, நச்சிலேனயலினி. [4]எச்சிலைநுகர்வதே யையமில்லையால், எச்சிலேயது பிறிதேதுமில்லையால் அல்லது இதற்கேதுவில்லையால் அன்றி இதற்கிரங்குவீரலீர். (687)

115. அன்றியு மொன்றுள தைய யானினிச்
[1]சென்றனன் [2]கொணர்ந்தடை திருத்தி னலது
நுன்றுணைக் கோமக னுகர்வ தாதலான்
இன்றிறை தாழ்த்தலு மினிதன் றாமென்றான்.

(இ - ள்.) ஐய - தலைவனே! அன்றிஉம் - அல்லாமலும், ஒன்று உளது - (நான் சொல்லவேண்டியது) இன்னுமொன்று இருக்கின்றது; யான்—, இனி சென்றனன் அடை கொணர்ந்துதிருத்தினால் - இனிப்போய்க் கீரைமுதலியவற்றைக் கொண்டுவந்து சித்தஞ் செய்துவைத்தால், அது—, நுன் துணை கோமகன் நுகர்வது - உனது சிநேகிதனாகிய இராமபிரான் உண்பதாகும்; ஆதலான் - ஆதலால், இன்று இறை தாழ்த்தல்உம் இனிது அன்று ஆம் - இப்பொழுது நான் (இங்கு) ஒருநொடிப்பொழுது தாமதித்தலும் இனியதாகாது, என்றான் - என்று (இலக்குமணன்) கூறிமுடித்தான்; (எ - று.)

இராமபிரான் பட்டினியாய்க்கிடத்தலால், யான் இங்கொருநொடிப் பொழுது தாமதிப்பதும் நன்றன்று என்று குறிப்பித்தவாறு. அடை - கிழங்குமுதலியவற்றிற்குஉபலக்ஷணம். நுன் - திசைச்சொல். கோமகன்-சக்கரவர்த்தித்திருமகன். பி - ம்:—[1]சென்றபின், சென்று பின். [2]கொணர்ந்திடை. (688)

116.—அதுகேட்டுச் சுக்கிரீவன் வருந்துதல்.

வானர வேந்தனு மினிநின் [1]வைகுதல்
[2]மானவர் தலைமக னிடரின் வைகவே
ஆனது [3]குரக்கினத் தெமர்கட் காமென
மேனிலை யழிந்துயிர் விம்மி னனரோ.

(இ - ள்.) (அதுகேட்டு), வானர வேந்தன்உம் - வாநரராசனான சுக்கிரீவனும், (இலட்சுமணனைநோக்கி), 'மானவர் தலைமகன் இடரின் வைக - மநுவமிசத்தாருட் சிறந்தவனாகிய இராமபிரான் துன்பத்தில்

மூழ்கியிருக்கையில், இனிதின் வைகுதல் ஆனது (இப்போது எமக்கு உண்டாயிருப்பதான) இன்பமாகக்காலங்கழிப்பதென்பது, குரங்கு இனத்து எமர்கட்கு ஆம் - குரங்குச்சாதியிற்பிறந்த எம்போலியர்க்கே தகும்', என - என்றுகூறி, மேல் நிலை அழிந்து உயிர் விம்மினன் - உடம்பு நிலைகுலைந்து உயிர்வருந்தினன்; (எ - று.)

இலக்குமணன் வார்த்தையைக் கேட்டவுடனே சுக்கிரீவன் ஆற்றாது உடல்தளர்ந்து உயிர்வருந்தினனென்க. [1]வைகுதற்கியானல தலைமகன் என்ற பாடத்துக்கு - நல தலைமகன் - நன்மைக்குணமுள்ள தலைவன், இடரின் வைகுகையில் யான் இனிதின் வைகுதற்கு - யான் இனிதுதங்குவதென்பது, ஆனது - ஏற்பட்டது: இவ்வாறானது எமர்கட்கேயாம் என்க: இப்பொருளில், வைகுதற்கு என நான்கனுருபேற்றசொல், கருத்தாப்பொருளது. இனி, இனிதின் வைகுதற்கு, யான் அல - நான் அல்லேன்: [நான் சிங்காதனத்து இனிது வைகவில்லை:] (ஆனால்), ஆனது - சிங்காதனத்து இருக்குமாறு ஏற்பட்டது, இந்தக்குரக்கினத்தார்க்காகவே என்க. [2]'மானவடலைமகன்' என்றபாடத்திற்கு - மான்போன்ற சீதாபிராட்டியின்கணவனென்று பொருளாம். 'உயிர்' எனப் பின்னே வருதலால், 'மேல்' என்பது - உடம்பைக் குறித்தது. உயிர்விம்மினன் - உயிர்த்து விம்மினனென்றுமாம். பி - ம்:—[3]குரக்கினத்தவர்கட்கு. (689)

117.—வருந்தியசுக்கிரீவன் அனுமானிடத்து ஒன்று சொல்லுதல்.

எழுந்தனன் பொருக்கென விரவி கான்முளை
விழுந்தகண் ணீரினன் வெறுத்த வாழ்வினன்
அழிந்தயர் சிந்தைய [1]னனுமற் காண்டொன்று
மொழிந்தனன் [2]வரனுழைப் போதன் முன்னுவான்.

(இ - ள்.) இரவி கான்முளை - சூரியகுமாரனாகிய சுக்கிரீவன், பொருக்கென எழுந்தனன் - விரைவாக எழுந்து, விழுந்த கண்ணீரினன் - பெருகுங் கண்ணீர்ப் பெருக்குடையவனும், வெறுத்த வாழ்வினன் - செல்வவாழ்க்கையை வெறுத்தவனும், அழிந்து அயர் சிந்தையன் - வருந்திச்சோரும் மனமுடையவனும் ஆகி, வரனுழை போதல் முன்னுவான் - சிறந்தவனாகிய இராமபிரானிடம் செல்ல நினைத்தவனாய், ஆண்டு - அப்பொழுது, அனுமற்கு - அநுமானை நோக்கி, ஒன்றுமொழிந்தனன் - ஒருவார்த்தைகூறினான்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க. கான்முளை - சந்ததியில்தோன்றியவன்: மகன். பி - ம்:—[1]அனுமற்காண்டலின், அனுமற்காண்டையின். [2]அவனுழை, வான்முறை. (690)

118.—வருஞ்சேனையைக் கொணருமாறு அனுமானுக்குக் கட்டளையிட்டுச் சுக்கிரீவன் இராமபிரானிடஞ் செல்லுதல்.

போயின தூதரிற் [1]புகுதுஞ் சேனையை
நீயுடன் கொணருதி நெறிவ லோயென

ஏயின னனுமனை யிருத்தி [3]யீண்டென
நாயக னிருந்துழிக் கடிது நண்ணுவான்.

(இ - ள்.) (சுக்கிரீவன்), 'நெறி வலோய் - நீதிமார்க்கத்தில் வல்லவனே! போயின தூதரின் புகுதும் சேனையை - (நம்மிடத்தினின்று) போயிருக்கிற தூதர்களால் இனிவரும் வானரசேனையை, நீ உடன் கொணருதி - நீ உன்னுடன் அழைத்துக்கொண்டு வருவாய்,' என - எனவும்,—'ஈண்டு இருத்தி - (அதுவரையில் நீ) இங்கேயே யிருப்பாய்', என - எனவும், அனுமனை ஏயினன் - அநுமானுக்குக்கட்டளையிட்டவனாய், நாயகன் இருந்த உழி கடிது நண்ணுவான் - (யாவர்க்கும்) தலைவனாகிய இராமபிரான் இருந்த இடத்திற்கு விரைந்து செல்பவனானான்; (எ - று.)—பி - ம்:—'புகுந்த. [2]ஈண்டெனா. இச்செய்யுள் சில பிரதிகளில் இல்லை. (691)

119.—இதுமுதல் ஆறுகவிகள் – சுக்கிரீவன் பரிவாரங்களுடனே சென்று இராமபிரானைச் சேர்ந்தமையைக் கூறும்.

அங்கத னுடன் [1]செல வரிகள் முன்செல
மங்கைய ருள்ளமும் வழியும் பின்செலச்
சங்கையி லிலக்குவற் றழுவித் தம்முனில்
செங்கதி ரோன்மகன் [2]கடிது சென்றனன்.

(இ - ள்.) செங் கதிரோன் மகன் - சிவந்த கிரணங்களையுடைய சூரியனது குமாரனாகிய சுக்கிரீவன்,—சங்கை இல் இலக்குவன் தழுவி - சங்கையில்லாத [தெளிந்த மனமுடைய] இலக்குமணனைத் தழுவிக்கொண்டு,—அங்கதன் உடன் செல - அங்கதகுமாரன் தன்னுடன் வரவும், அரிகள் முன் செல - வானரர்கள் முன்னே போகவும், மங்கையர் உள்ளம் பின் செலஉம் - (தன்னிடத்துக் காதலையுடைய) வானரமகளிரது மனம் பின்தொடர்ந்து வரவும், வழி (பின் செல)உம் - கடந்தவழிகள் பின்னே தங்கிவிடவும், தம்முனில் - தமையனாகிய இராமபிரானிடத்திற்கு, கடிது சென்றனன் - விரைவாகச் செல்வானானான்; (எ - று.)

தம்முன் - தமையன்; தன்னால் [சுக்கிரீவனால்] தமையன் முறை பாராட்டத் தகுந்தவனென்க. பின்செல - இரட்டுறமொழிதல். பின் செல்லுதலென்பது - பின்தொடர்ந்துசெல்லுதலென்னும் பொருளதாதலை "சிந்தையுநிறையுமெய்ந்நலனும் பின்செல" என்ற விடத்திற் காண்க. வழிபின்செல—"சடைச்செந்நெல் பொன் விளைக்குந் தன்னாடு பின்னா" என்றாற்போலக் கொள்க. பி - ம்:—வர. [2]கடிதின். (692)

120. ஒன்பதி னாயிர கோடி யூகந்தன்
முன்செலப் பின்செல [1]ஞாங்கர் மொய்ப்புற
மன்பெருங் கிளைஞரு மருங்கு சுற்றுற
மின்பொரு பூணினன் செல்லும் வேலையில்.

இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) ஒன்பதினாயிர கோடி யூகம் - ஒன்பதினாயிர கோடிக் கணக்கான குரங்குச்சேனை, தன் முன்செல பின்செல ஞாங்கர் மொய்ப்புற - தன் முன்புறத்திலும் பின்புறத்திலும் இருபக்கங்களிலும் நெருங்கிவரவும், மன் பெருங் கிளைஞர் உம் மருங்கு சுற்றுற - மிகச் சிறந்த உறவினர்களாகிய வானரர்களும்பக்கங்களிற்சூழ்ந்து வரவும், மின்பொரு பூணினன் - மின்னல்போன்ற ஒளியை வீசுகின்ற ஆபரணங்களை யணிந்தவனான சுக்கிரீவன், செல்லும் வேலையில்-(அவ்வாறு இராமபிரானைநோக்கிச்) செல்லுஞ்சமயத்தில்,—(எ - று.)—'கொடிவன மிடைந்தன' என அடுத்தகவியோடு தொடரும். பி - ம்:— [1]மருங்கு. (693)

121. கொடிவன மிடைந்தன [1]குமுறு பேரியின்
இடிவன [2]மிடைந்தன பணில மேங்கின
தடிவன மிடைந்தன தயங்கு பூணொளி
[3]பொடிவன மெழுந்தன வானம் போர்த்தவே.

(இ - ள்.) கொடி வனம் மிடைந்தன - துவசங்களின்தொகுதி நிறைந்தன; குமுறு பேரியின் இடி வனம் மிடைந்தன - முழங்குகின்ற பேரிகைவாத்தியங்களின் ஒலித்தொகுதிகள் நிறைந்தன; பணிலம் ஏங்கின-சங்கவாத்தியங்கள் முழங்கின; தயங்கு பூண் ஒளி தடி வனம் மிடைந்தன - விளங்குகின்ற ஆபரணங்களின் காந்திகளாகிய மின்னலின் தொகுதிகள் நிறைந்தன; பொடிவனம் எழுந்தன - (பூமியினின்று) புழுதிகள் கிளம்பினவாய், வானம் போர்த்த - ஆகாயத்தை மறைத்தன; (எ - று.)

இச்செய்யுளில், 'வனம்' என்றது-தொகுதியென்னும் பொருளில் வந்தது. தடி - தடித்: வடசொல். மிடைந்தன என்ற சொற்கள் ஒரு பொருளிற் பலமுறைவந்தது-சொற்பொருட்பின்வருநிலையணி. பி-ம்:— [1]குமிறு. [2]மிடைந்தெனப். [3]பொடிவனம் எழுதுகள் அல்லது எழுத்துகள் வானம்போர்த்ததே, பொடியெழுந்த துதுகள்..., பொடியெழுந்தனபடிவானம்போர்த்ததே. (694)

122. பொன்னினின் முத்தினிற் புனைமெல் தூசினில்
[1]மின்னின மணியினிற் பளிங்கின் வெள்ளியிற்
பின்னின விசும்பினும் பெரிய பெட்புறத்
[2]துன்னின சிவிகைவெண் கவிகை சுற்றின.

(இ - ள்.) பொன்னினின் - பொன்னினாலும், முத்தினில் - முத்துக்களினாலும், புனை மெல் தூசினில் - அழகான மெல்லிய ஆடைகளினாலும், மின்னின மணியினில் - ஒளிர்கின்ற இரத்தினங்களினாலும், பளிங்கின் - படிகக்கற்களினாலும், வெள்ளியின் - வெள்ளியினாலும், பின்னின் - செய்யப்பட்டனவாகிய, சிவிகை - தண்டிகைகள், துன்னின - நெருங்கிவந்தன; வெள் கவிகை - வெண்கொற்றக்

குடைகள், விசும்பின்உம் பெரிய - ஆகாயத்தினும் மிகப்பெரியன வாய், பெட்பு உற சுற்றின - (கண்டவர்) விரும்பும்படி சூழ்ந்து வந்தன; (எ - று.)

'பொன்னினின்...பின்னின' என்ற தொடர், கவிகைக்கும் அடைமொழியாகத்தக்கது. குடைகள் இடமகன்ற ஆகாயம் முழுவதையும் மறைத்தலால், 'விசும்பினும் பெரிய' என்றார். பி - ம்:—[1] மின்னினன், மின்னினில். [2] துன்னினசிவிகைகடொடர்ந்துசுற்றவே அல்லது சுற்றுற. (695)

123. வீரனுக் கிளையவன் [1]விளங்கு சேவடி
பாரினிற் சேறலிற் பரிதி மைந்தனும்
[2]தாரினிற் பொலங்கழல் [3]தழங்கத் தாரணித்
தேரினிற் சென்றனன் சிவிகை பின்செல.

(இ - ள்.) வீரனுக்கு இளையவன் - ஸ்ரீராமபிரானது தம்பியாகிய இலக்குமணனது, விளங்கு சே அடி - விளங்குகின்ற சிவந்த திருவடிகள், பாரினில் சேறலின் - தரையில் நடந்துசெல்லுதலினால்,— பரிதி மைந்தன்உம் - சூரியகுமாரனாகிய சுக்கிரீவனும், தாரினில் பொலம்கழல் தழங்க - கிண்கிணிமாலைபோல(க் காலிற்கட்டிய) அழகிய வீரக்கழல்கள் ஒலிக்க(த் தான் காலினால்நடந்து), சிவிகை பின்செல - (தான் ஏறிச்செல்லுதற்குஉரிய) தண்டிகை பின்னால் (வெறுமையாய்) வர, தாரணி தேரினில் சென்றனன் - பூமியாகிய தேரின்மேற் சென்றான்;(எ - று.)

இளையபெருமாள் பாதம்வருந்தப் பூமியில் நடந்து செல்லுதலால், சுக்கிரீவனும் சிவிகையேறிச் செல்லாமல் தரையிற் கால்நடையாகவே நடந்து சென்றனனென்க. தார் - கிண்கிணிமாலை. தாரணி - தரணீ என்ற வடசொல்லின் விகாரம்; (எல்லாப்பொருள்களையும்) தரிப்பது எனக் காரணப்பொருள்படும். 'தாரணித்தேர்' என்றது, திரிபுர சங்காரகாலத்திற் பூமி தேராக அமைந்ததனை யெலன்க. சுக்கிரீவன் தாளினால் தரையில் நடந்துசென்றாலும் மகாராசாவாதனது பற்றி, 'தாரணித் தேரினிற் சென்றனன்' என நயந்தோன்றக் கூறினார். லக்ஷ்மண சுக்கிரீவரிருவரும் ஒருபொற் சிவிகையிலேறிச் சென்றனரென முதனூல் கூறும். பி - ம்:—[1] விரும்புஞ், விரும்பு. [2] தாரணி. [3] தயங்க. (696)

124. எய்தினன் மானவ னிருந்த மால்வரை
நொய்தினிற் சேனைபின் பொழிய நோன்கழல்
[1]ஐயவிற் குமரனுந் தானு மங்கதன்
[2]கைதுறந் தயல்செலக் காதல் முன்செல.

(இ - ள்.) நோன் கழல் ஐய வில் குமரன்உம் - வலிய வீரக்கழலையும் அழகிய வில்லையுமுடைய இளவீரனான இலக்குமணனும், தான்உம் - சுக்கிரீவனும்,—சேனை பின்பு ஒழிய - (உடன்வந்த)

வானரசேனைகள் பின்னே தங்கவும், அங்கதன் கைதுறந்து அயல் செல - அங்கதகுமாரன் பக்கத்தைவிட்டு அப்பால்வரவும், காதல் முன் செல - (இராமபிரானைக்காணவேண்டுமென்ற) ஆசை (தனக்கு) முன்னே செல்லவும், மானவன் இருந்த மால் வரை - இராமபிரான் தங்கியிருந்த பெரியமலையை, நொய்தினில் எய்தினன் - விரைவாகச் சென்றடைந்தான்; (எ - று.)

பெரியோரிடத்துச் செல்லும்போது ஆடம்பரத்துடன் செல்லுதல் தகுதியன்றாதலால், இராமபிரானிடஞ்செல்லுஞ் சுக்கிரீவன் வானரசேனைகளைவிட்டு அங்கதகுமாரனும் சிறிது அப்பால்வரத் தான் தனியே செல்வானாயினனென்க. குமரனும் தானும் எய்தினன் - பால்வழுவமைதி. ஐய - குறிப்புப்பெயரெச்சம். பி - ம்:—[1] ஐயன். [2] கைதொடர்ந்தயல்செல அல்லது வர. (697)

125.—சுக்கிரீவனது இராமபக்தி.

[1] கண்ணிய கணிப்பருஞ் செல்வக் காதல்விட்டு
அண்ணலை யடிதொழ வணையு மன்பினால்
நண்ணிய [2] கவிக்குலத் தரச னாள்தொறும்
[3] புண்ணியற் றொழுகழற் பரதன் போன்றனன்.

(இ - ள்.) கண்ணிய கணிப்பு அருஞ் செல்வம் காதல் விட்டு - (பலராலும்) விரும்பப்பட்ட அளவிடமுடியாத [மிகப்பெரிய]செல்வத்தில் ஆசையை விட்டு, அண்ணலை அடி தொழ அணையும் - இராமபிரானைத் திருவடிதொழுமாறு வந்து சேர்ந்த, அன்பினால் நண்ணிய - பக்தியோடுகூடிய, கவி குலத்து அரசன் - வானரசாதித்தலைவனாகிய சுக்கிரீவன்,—நாள் தொறும் புண்ணியன் கழல் தொழு பரதன் போன்றனன் - தினந்தோறும் தருமசொரூபியாகிய இராமபிரானைத் திருவடிகளில் வீழ்ந்து தொழுகின்ற பரதாழ்வானை யொத்தான்; (எ - று.)

இதனால், சுக்கிரீவன் இராமபிரானிடத்துக் கொண்ட பக்தி, பரதனது பக்தியைப்போலு மென்பதாம். பரதாழ்வான் செல்வப் பற்றுச் சிறிதுமின்றி ஸ்ரீராமபிரானது பாதுகைகளைத் தினந்தோறும் வணங்குந் தன்மையன்: அந்தப்பரதனை, அரசபோகத்தில் மூழ்கிக்கிடந்திடாமல் அதனைவிட்டு இராமபிரானிடத்துப் பக்திப் பெருங் காதல்கொண்டு அப்பிரானது திருவடிகளை வணங்கவருஞ் சுக்கிரீவனுக்கு உவமை கூறினார். புண்ணியற்றொழுகழற் பரதன என்பதற்கு - இராமபிரானைத் தொழுபவனான வீரக்கழலையணிந்த பரதனென்று உரைப்பாரு முளர். புண்ணியன்—"புண்யாநாமபி புண்யோஸௌ" என்றது காண்க. பி - ம்:—[1] கண்ணியபெருஞ் செல்வக்காதல் அல்லது செல்வங்காதல்விட்டவவ். [2] கவிக்குலத் தரசு தான் தொழும், கவிக்குலத்தரசுநாந்தொழும். [3] புண்ணியர் தொழுகழற்பரதன். (698)

126.—சுக்கிரீவன் இராமபிரானை வணங்குதல்.

பிறிவருந் தம்பியும் பிரியப் பேருலகு
இறுதியிற் றனென விருந்த வேந்தலை
[1] அறைமணித் தாரிேனு டாரம் பார்தொடச்
செறிமலர்ச் சேவடி முடியிற் றீண்டினான்.

(இ - ள்.) பிறிவு அருந் தம்பியும் பிரிய - பிரிதலில்லாது எப்போதும் உடனுறைகின்ற தம்பியாகிய இலக்குமணனும் பிரிந்து சென்றதனால், பேர் உலகு இறுதியில் தான் என இருந்த - பெரிய உலகமெல்லாம் அழியுங் கற்பாந்தகாலத்தில் (எஞ்சியிருக்கும் திருமாலாகிய) தன்னைப்போலத் தனிப்பட்டிருந்த, ஏந்தலை - இராமபிரானை, —(சுக்கிரீவனானவன்), அறை மணி தாரினோடு ஆரம் பார் தொட - (தனது மார்பிலணிந்த) சிறப்பித்துக் கூறுதற்கு உரிய இரத்தின மாலைகளும் முத்துமாலைகளும் பூமியிற்படும்படி, செறி மலர் சே அடி முடியின் தீண்டினான் - நெருங்கிய செந்தாமரை மலர்போன்ற சிவந்த திருவடிகளை (த் தனது) தலையினாற் பரிசித்தான் [சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான்]; (எ - று.)

எப்போதும் பிரியாது உடனுறையுந் தம்பியாகிய இலக்குமணனையும் பிரிந்து தனித்திருக்கும் இராமபிரானுக்கு, யாவுமழியுங் கற்பாந்த காலத்தில் தான்மாத்திரம் தனித்திருக்குந் திருமாலை உவமை கூறினார். பி - ம்:—[1] துறுமணித், அறைமலர்த். *(699)*

127.—இதுவும் அடுத்தகவியும் - குளகம்; வணங்கிய சுக்கிரீவனை இராமபிரான் தழுவி இருக்கச்சொல்லிச் சேமம்விசாரித்தலைக் கூறும்.

[1] தீண்டலு மார்பிடைத் திருவு நோவுற
நீண்டபொற் றடக்கையா னெடிது புல்லினான்
மூண்டெழு வெகுளிபோ யொளிப்ப [2] முன்புபோல்
[3] ஈண்டிய கருணைதந் திருக்கை [4] யேவியே.

(இ - ள்.) தீண்டலும் - (சுக்கிரீவன் தன்னை) வணங்கினவுடனே —(இராமபிரான்), மார்பிடை திருவும் நோவு உற - (தனது) திருமார்பில் (விடாது உறைகிற) திருமகளும் வருந்தும்படி, நீண்ட பொன் தட கையான் நெடிது புல்லினான் - (முழந்தாளளவும்) நீண்டுதொங்குகின்ற அழகிய பெரிய (தனது) கைகளினால் அழுந்தத் தழுவினவனாய்,—மூண்டு எழு வெகுளி போய் ஒளிப்ப - (தவணை தவறினமையாற் சுக்கிரீவன்மீது) மூண்டெழுந்த சினமானது ஆறிப்போக, முன்புபோல் ஈண்டிய கருணை தந்து - முன்போலவே மிக்க அன்பு பாராட்டி, இருக்கை ஏவி - (அச்சுக்கிரீவனை) இருக்கும்படி கட்டளையிட்டு,—(எ - று.)—'அயலிணி திருத்தி' என அடுத்த கவியோடு தொடரும்.

"அகலகில்லேனிறையுமென் றலர்மேன்மங்கையுறைமார்பா" என்றபடி திருமாலின் திருவவதாரமூர்த்திகளின் திருமார்பிலும்

இலக்குமி விட்டுப்பிரியாது உடனுறைவ னென்க. தடக்கையான் - பெயருமாம். 'கையால்' என்றும் பிரிக்கலாம். பி - ம்:—[1] நீண்டியவன் பனே. [2] முந்து. [3] ஈண்டியகருணையால. [4] ஏவவே. (700)

128\. அயலினி திருத்திநின் [1] னரசு மாணையும்
இயல்பினி [2] னியைந்தவே [3] யினிதின் வைகுமே
புயல்பொரு தடக்கைநீ புரக்கும் பல்லுயிர்
[4] வெயிலில தேகுடை யெனவி னாயினான்.

(இ - ள்.) (இராமபிரான்), அயல் இனிது இருத்தி - (சுக்கிரீவனை) அருகில் இனிமையாக இருக்கச்செய்து, (அவனைநோக்கி), 'நின் அரசுஉம் ஆணைஉம் - உனது அரசாட்சியும் ஆஜ்ஞாசக்கரமும், இயல்பினின் இயைந்தவே - ஒருவருத்தமுமில்லாமல் இயற்கையாக அமைந்துள்ளனவா? புயல் பொரு தட கை நீ புரக்கும் பல் உயிர் - மேகம்போன்ற [கைம்மாறுகருதாதுகொடுக்குந் தன்மையுள்ள] நீண்ட கைகளையுடைய நீ பாதுகாக்கின்ற பலவுயிர்களும், இனிதின் வைகும் ஏ - இனிமையாக [யாதோரிடையூறுமின்றி]த் தங்குகின்றனவா? குடை - (உனது) வெண்கொற்றக்குடை [அரசாட்சி], வெயில் இலது ஏ - வெம்மையைத் தருவதாகாமலிருக்கின்றதா?' என வினாயினான் - என்று வினவினான்; (எ - று.)

முதல்வினா சுக்கிரீவனது நன்மையையும், மற்றை வினாக்கள் குடிகளின் நன்மையையும் கருதி நிகழ்ந்தவை. அரசாட்சி இராச்சிய பாரமெனப்படுதலாலும், அதைச்செய்யும்போது எங்கும் தன்னாணை செல்லவேண்டியிருத்தலாலும், அவை ஒருசிரமமுமின்றித் தடைப் படாது நடக்கின்றனவா என்பான் 'நின்னரசு மாணையும் இயல் பினி னியைந்தவே' என்றும், அவ்வெங்குந்தடையின்றிச் சென்று லும் குடிகட்கு இனிமை தருவது இன்றியமையாத தாதலால் 'நீபுரக்கும் பல்லுயிர் இனிதின்வைகுமே' என்றும், பல்லுயிர்கள் இனிதுவைகினாலும் ஓரிடத்தும் ஆட்சி தாபத்தை விளைவியா திருக்கவேண்டுமாதலின் 'வெயிலிலதேகுடை' என்றும் வினவினான். வெயில் - தாபத்திற்கு, இலக்கணை. பி - ம்:—[1] அரசு மாண்மையும். [2] இசைந்தவே. [3] இனிது. [4] வெயிலிலவேகுடையென விளம்பி னான். (701)

129.—அதற்குச் சுக்கிரீவன் விடைகூறுதல்.

பொருளுடை [1] யவ்வுரை [2] கேட்ட போழ்துவான்
உருளுடைத் தேரினோன் புதல்வ [3] னூழியாய்
இருளுடை யுலகினுக் கிரவி யன்ன நின்
அருளுடை யேற்கவை [4] யரிய வோவென்றான்.

(இ - ள்.) பொருள் உடை அ உரை கேட்ட போழ்து - பொருட் சிறப்புமுடைய (இராமபிரானது) அந்த வார்த்தையைக் கேட்டபொழு தில்,—வான் உருள் உடைதேரினோன்புதல்வன் - ஆகாயத்திற்செல்லு கின்ற ஒற்றைச் சக்கரத்தையுடைய தேரையுடையவனான சூரியனது குமாரனாகிய சுக்கிரீவன்,—(இராமபிரானைநோக்கி), 'ஊழியாய் - ஊழிக் காலத்தும் அழியாது நிற்பவனே! இருள்உடை உலகினுக்கு இரவி

அன்ன நின் அருள் உடையேற்கு - (கற்பாந்த காலத்திற் சூழ்ந்து கொள்ளுகின்ற) இருளையுடைய உலகத்திற்குச் சூரியன்போன்றவனான உனது அருளைப் பெற்ற எனக்கு, அவை அரியவோ - அச்செயல் அருமையானவையோ?' என்றான்—; (எ - று.)

சுக்கிரீவன் தான் மனைவியையிழந்து வாலியினால் துரத்தப்பட்டு ரிசியமூகமலையிற் செய்தொழிலின்னதெனத் தெரியாது திகைத்து நின்றகாலத்தில் தன் துயரமெல்லாம் ஒருங்கேயொழிய வந்து தோன்றிய இராமபிரானுக்கு, கற்பாந்தகாலத்தில் இருள் மண்டிச் செய்தொழிலறியாது மயங்கிக்கிடக்கும் இவ்வுலகத்துயிர்கட்கு அவ்விருளை நீக்குமாறு தோன்றுவதொரு சூரியனை இல்பொருளுவமையாகக் கற்பித்தார். [3]ஊழியின் என்ற பாடத்துக்கு, கற்பாந்தகாலத்தில் என்க. ஊழியின் என்றான் என இயைத்துச் சொல்ல வேண்டிய முறைப்படியே கூறினானென்றுமாம். சுக்கிரீவன் புதிதாக இராச்சியம் பெற்று ஆஜ்ஞாசக்கரத்தைச்செலுத்த நேர்ந்த சமயமாதலால் இப்போது இராமபிரான் சுக்கிரீவனைக் குசலம் வினவும்போது வெற்றுரையாகா தென்பார், 'பொருளுடையவ்வுரை' என்றார். நினது கருணையொன்று தானே எனக்கு எல்லாவற்றையும் இனிது நடத்துகின்றதென்பான், 'நின் அருளுடையேற்கவை யரியவோ' என்றான். பி - ம்:—[1]இவ்வுரை. [2]கேட்டபோழ்தினில், கேட்டபோழ்தத்தன், கேட்டுப்போர்த்தணி. [4]அரியவோவென. (702)

130.—இதுமுதல் மூன்றுகவிகள்-சுக்கிரீவன் தன்பிழையையெடுத்துரைத்தலைத் தெரிவிக்கும்.

பின்னரும் விளம்புவான் பெருமை யோய்நினது
இன்னரு ளுதவிய செல்வ [1]மெய்தினேன்
[2]மன்னவ நின்பணி மறுத்து [3]வைகியென்
புன்னிலைக் குரக்கியல் புதுக்கி னேனென்றான்.

(இ - ள்.) பின்னர்உம் விளம்புவான்-(சுக்கிரீவன் இராமபிரானை நோக்கி) மறுபடியும் கூறுவான்:—'பெருமையோய் - பெருமைக்குணமுடையவனே! மன்னவ - அரசனே! நினது இன்அருள் உதவிய செல்வம் எய்தினேன் - உனது இனிய அருளினாற்கிடைத்த செல்வத்தையடைந்த நான், நின் பணி மறுத்து வைகி-உனது கட்டளையை மீறிநடந்து, என் புல் நிலை குரங்கு இயல் புதுக்கினேன் - எனது அற்பமான தன்மையையுடைய குரங்குக் குணத்தைப் புதிதாக வெளிப்படுத்திவிட்டேன்,' என்றான்—; (எ - று.)

உபகாரஞ்செய்தவர் திறத்தில் செய்ந்நன்றியை மறந்து பிழைசெய்த தனது இழிகுணத்தைச் சுக்கிரீவன் வெறுத்துக்கூறுகின்றானென்க. புதுக்கினேன் - நீ என்னோடு நட்புச்செய்தகாலத்து மறைந்திருந்த எனது குரங்குக் குணத்தை இப்போது வெளிப்படுத்திக்காட்டினேனென்றபடி. பி - ம்:—[1]எய்தியே, எய்தியான. [2]மன்னநின்பணியையும். [3]வைகியே, வைகினேன். (703)

181. பெருந்திசை யனைத்தையும் பிசைந்து [1]நேடினேன்
தருந்தகை [2]யமைந்துமத் தன்மை செய்திலேன்
திருந்திழை திறத்தினற் றெளிந்த சிந்தைநீ
வருந்தினை யிருப்பயான் வாழ்வின் வைகினேன்.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) (பின்னும் இராமபிரானைநோக்கிச் சுக்கிரீவன் கூறுவான்):—பெருந்திசை அனைத்தைஉம் பிசைந்து நேடினேன் - பெரியதிக்குக்களெல்லாவற்றையும் ஆராய்ந்துதேடிப் பார்த்து, தரும் - (சீதாபிராட்டியைக்) கொணர்ந்து தரக்கூடிய, தகை-திறமை, அமைந்துஉம் - (என்னிடம்) அமைந்திருந்தும், அ தன்மை செய்திலேன் - அவ்வாறு செய்யாதவனாய்,—திருந்து இழை திறத்தினால் - தொழில்திருந்திய ஆபரணங்களையணிந்தவளான சீதாபிராட்டி காரணமாக, நீ—, தெளிந்த சிந்தை வருந்தினை இருப்ப - (கலக்கமில்லாமல்) தெளிவடைந்த (உனது) மனத்தில் வருத்தங்கொண்டவனாயிருக்கையிலும், (அதனைச் சிறிதும் நினையாமல்), யான்—, வாழ்வின் வைகினேன் - இன்பவாழ்க்கையிற் காலங்கழித்தேன்; (எ - று.)

'குரக்கியல்புதுக்கினேன்' என்று கீழ்ச்செய்யுளிற் கூறியதை, இச்செய்யுளினால் விவரித்தவாறு. கலங்காத இராமபிரானது மனம் கலங்கியிருக்கையில் அதைத் தெளிவிக்கும் வல்லமை தனக்கு இருந்தும் அதற்குஏற்ற பரிகாரத்தைத் தேடாது இன்பநுகர்ச்சியில் வீண்பொழுது போக்கியிருந்த தன்பேதைமையைச்சுக்கிரீவன் வெறுத்துக்கூறுகின்றனனென்க. மூன்றாமடி - முற்றுமோனை. தெளிந்தசிந்தை நீ வருந்தினை இருப்ப என்பதற்கு - தெளிந்த மனத்தையுடைய நீ வருந்தியிருக்கவும் என்றும் உரைக்கலாம். பி - ம்:—
[1]தேடினின், தேடிநின்று, நேடியான், தேடினன். [2]அமையுமத். (704)

182. இனையன யானுடை யியல்பு [1]மெண்ணமும்
[2]நினைவுமென் றாலினி நின்றி யான்செயும்
வினையுநல் லாண்மையும் விளம்ப வேண்டுமோ
வனைகழல் [3]வரிசிலை வள்ளி யோயென்றான்.

(இ - ள்.) வனை கழல் வரி சிலை வள்ளியோய் - கட்டிய வீரக்கழலையும் கட்டமைந்த வில்லையுமுடைய ஈகைக்குணமுள்ள இராமபிரானே! யானுடை - என்னுடைய, இயல்புஉம் - தன்மையும், எண்ணம்உம் - மனக்கருத்தும், நினைவுஉம் - (உனது) மனநிலையும், இனையன என்றால் - இத்தன்மையனவானால், இனி யான் நின்று செயும் - இனிமேல் யான் நிலைத்துச் செய்யப்போகின்ற, வினைஉம் - தொழிலையும், நல் ஆண்மைஉம் - சிறந்தபராக்கிரமத்தையும், விளம்ப வேண்டும்ஓ - சொல்லத்தகுமோ? என்றான் - என்று (இராமபிரானை நோக்கிச் சுக்கிரீவன்) கூறினான்; (எ - று.)

நீ மனத்திற் பெருங்கவலையுடனிருக்கவும் யான் சீதாபிராட்டியைத் தேடித்தரவேண்டிய முயற்சி செய்யாமல் போகநுகர்ச்சியில் இதுவரையில் மனந்தாழ்ந்திருந்ததனால், இனி அத்தொழிலை விரைந்து முடிப்பேனென்று எனது செய்கையாண்மைகளைக்

கூறுவதற்கும் எனது நாத் துணியவில்லை யென்று சுக்கிரீவன் தான் தவறு செய்ததை நினைந்து நாணமுற்றுக் கூறுகின்றன னென்க. 'யானுடை எண்ணமும்' என முன்வந்ததனால், 'நினைவும்' என்பதற்கு உனது மனநினைவும் என்று பொருளுரைக்கப்பட்டது; இனி எண்ணம் என்பது - பலராலும் எண்ணப்படுவதென்ற காரணத்தாற் செயலைக் குறிக்கு மெனக்கொண்டு, என்செய்கையும் என் நினைவு மென்று உரைப்பாரு முளர். [1]'எண்ணிய நினைவும்' என்ற பாடம் ஏற்கும். தான் முன்னே ஒருதவியையுஞ் செய்யாதிருக்கத் தனது பகையை யழித்து மனைவியை மீட்டு அரசையும் அளித்ததனால், இராமபிரானைச் சுக்கிரீவன் 'வள்ளியோய்' என விளித்தான். முதலடி - முற்றுமோனை. பி - ம்:—[2]நினையவுமரிது பின்னெறி நின்றார்க்கெலாம். [3]வார்சிலை. (705)

133.—இராமபிரான் சுக்கிரீவனை நோக்கிக் கூறிய உபசாரவார்த்தை.

திருவுறை மார்பனுந் [1]தீர்ந்த தேயும்வந்து
ஒருவருங் காலமுன் னுரிமை யோருரை
தருவினைத் தாகையிற் [2]றாழ்விற் றாகுமோ
[3]பரதனீ யினையன பகர்தி யோவென்றான்.

(இ - ள்.) திரு உறை மார்பன்உம் - இலக்குமி எப்பொழுதுந் தங்குகின்ற திருமார்பையுடையவனான ஸ்ரீராமபிரானும்,—ஒருவு அரு காலம் - கழிவதற்கு அரிய [மிகநீண்டதாகத்தோன்றுமியல்புள்ள] கார்காலம், வந்து தீர்ந்ததுஉம் - வந்து நீங்கியதாகவும், உன் உரிமை உரை - உரிமையாற்பேசுகின்ற உனது வார்த்தையானது, தரு வினைத்து ஆகையின் - (சீதாபிராட்டியைத் தேடித்) தருகின்ற தொழிலையுடையதாயிருத்தலினால், தாழ்விற்று ஆகும்ஓ - தாழ்வையுடையதாகுமோ? பரதன் நீ - (என்னிடத்துப்) பரதன் போன்ற அன்புடையவனான நீ, இனையன பகர்திஓ - இத்தன்மையான வார்த்தைகளைச் சொல்லக்கடவையோ? என்றான் - என்று (சுக்கிரீவனை நோக்கிக்) கூறினான்; (எ - று.)

கார்காலங்கழிந்து நீ தவணை தவறினாயென்றாலும், சீதாபிராட்டியைத் தேடித்தராமையைக்குறித்து இரங்கிக்கூறிய உனது வார்த்தையானது எப்படியாவது பிராட்டியைத்தேடித்தரவேண்டுமென்ற கருத்து உனக்கு உறுதியாகவிருத்தலைத் தெரிவித்தல் பற்றி, உனக்கு ஒருதாழ்வுமில்லை; ஆதலால்; பரதனைப்போலவே என்னிடத்துப் பேரன்புடையவனான நீ உன்னைத்தாழ்த்திக் கூறுதல் தகுதியன்றெனச் சுக்கிரீவனை நோக்கி இராமபிரான் முகமன் கூறினனென்க. உரிமை - அன்பு. ஓர் - அசை: ஓர் உரை - ஒப்பற்ற வார்த்தையுமாம்.

இனி, [2]'தாழ்வித்தாகுமோ' என்று பாடங்கொண்டு, முன் உரிமையோர் உரை - முன்புள்ளவர்களான (நூல்களில்)உரிமையை [மிக்கபழக்கத்தை] யுடைய பெரியோரது கட்டுரையானது, தரு வினைத்து ஆகையின - ஒருவர் செயலானது தனபயனைத் தவறாது கொடுக்கிற ஊழ்வினையின வசத்ததேயாம் என்று இருத்தலால், நீ

தாழ்வித்(த)து ஆகுமோ - நீ தாழ்வித்ததாகுமோ? என்று பதவுரை கூறுவாருமுளர். எல்லாம் விதியின்படி நடக்குமென்று பெரியோர் கூறுவராதலால், எனது தொழில் இன்னும் முற்றுப்பெறாதது விதியின் செயலே; நீ தாமதித்ததாக உன்மீது குற்றங்கூறவேண்டிய தில்லை யென இராமபிரான் தேற்றியதாக இவ்வுரைக்குக் கருத்துக் காண்க; "ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று, சூழினுந் தான் முந்துறும்" என்ற திருக்குறள் இங்கே கருதத்தக்கது. பி - ம்:—[1] தீர்ந்ததோவிவண். [3] பரிவினி. 'திருவுறைமார்பனுந் தீர்ந்ததோ வந்த, தொருவருகாலமுன்னுரிய போரது, தருவினைத் தாகையுந் அல்லது தருவினைத்தாரணைத் தழுவிற்றதியோ, அல்லது தழுவிற் றுழ்தியோ, பரதனீயினையன பகர்தியோவென்றான் அல்லது பகரற்பா லையோ' என்று இங்ஙன் பிரதிபேதம் இச்செய்யுளிற் காண்கின்றது.

134.—இதுவும், அடுத்த கவியும்—ஸ்ரீராமன் 'அநுமான் எங்கே?' என்றுவினவ, சுக்கிரீவன் 'சேனையோடு விரைவில் வருவான்' எனல்.

ஆரியன் பின்னரு மமைந்து நன்குணர்
மாருதி யெவ்வழி மருவி னானெனச்
சூரியன் கான்முளை தோன்று [1] மாலவன்
[2] நீரரும் பரவையி [3] னெடிய சேனையான்.

மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) ஆரியன் - இராமபிரான், பின்னர் உம் அமைந்து மறுபடியும் (சிலவார்த்தைசொல்லத்) தொடங்கி, (சுக்கிரீவனைநோக்கி), நன்கு உணர் மாருதி எ வழி மருவினான் என - '(எல்லாவற்றையும்) நன்றாக அறியவல்ல வாயுகுமாரனான அநுமான் எவ்விடத்திலிருக்கிறான?' என்றுவினவ,—(அதற்கு), சூரியன்கான்முளை - சூரியகுமாரனான சுக்கிரீவன், 'அவன் - அந்த அநுமான், நீர் அரும் பரவையின் நெடிய சேனையான் - நீர்நிறைந்த அரிய கடல்போன்ற பெருஞ் சேனையை யுடையவனாய், தோன்றும் - வருவான்'; (எ - று.) ஆல் - ஈற்றசை. என, (136) என்றான் என்க.

இச்செய்யுளிலுள்ள 'சூரியன்கான்முளை' என்பது, மேல் 136 - ஆங் கவியிலுள்ள 'என்றான்' என்பதைக் கொண்டுமுடியும். இராமபிரான் அநுமானைப்பற்றித்தனியே வினவியதனால், அவனிடத்தில் அப்பிரான்வைத்துள்ள பெருங்கருணை தோன்றும். பி - ம்:—[1] மால்வரை. [2] நேர்வரு, நீரிரும். [3] நெடிது. (707)

135. [1] கோடியோ ராயிரங் குறித்த [2] தூதுவர்
ஓடினர் நெடும்படை கொணர [3] லுற்றதால்
நாடரக் குறித்தது [4] மின்று நாளையவ்
ஆடலந் தானையோ டவனு மெய்துமால்.

(இ - ள்.) கோடி ஓர் ஆயிரம் குறித்த தூதுவர் - ஓராயிரக் கோடியாகக் கணக்கிடப்பட்ட தூதர்கள், நெடு படை கொணரல் ஓடினர் - பெரிய வானரசேனைகளைத் திரட்டிக்கொணர்தற்கு(ச் செய்தி சொல்ல) விரைந்துசென்றார்கள்; (இதுகாறும் வானரசேனைகள் வராததனால் அவைகளைத் திரட்டிக்கொணருமாறு அநுமான காத்திருக்

கிறான்); தர குறித்தது நாள்உம் உற்றது - (சேனைகளைத் திரட்டிக்) கொணர்தற்குக் குறித்ததாகிய தவணைநாளும் வந்து விட்டது; ஆல் - ஆதலால், இன்று நாளை - இன்றைக்கு அல்லது நாளைக்கு, அ ஆடல் அம் தானையோடு அவன்உம் எய்தும் - வலிமையுள்ள அந்த அழகிய வானரசேனையோடு அவ்வநுமானும் இங்குவருவான்; (எ - று.)—'ஆல்' இரண்டனுள், முன்னது - 'ஆதலால்' என்பதன் விகாரமும், பின்னது - ஈற்றசையுமாம்.

கீழ்ச்செய்யுளின் பின்னிரண்டடி - தொகுத்துச்சுட்டல்; இச் செய்யுள் - வகுத்துக்காட்டல். பி - ம்:—[1]கோடிநூறுயிரங்குறித்து. [2]கோதிறா-தோடின. [3]உற்றவால், உற்றனர். [4]இன்றும் நாளையும். ()

136.—எல்லாச் சேனைகளும் வந்தபின்பு செய்ய வேண்டியதை ஆலோசிக்கலாமென்று சுக்கிரீவன் கூறல்.

[1]ஒன்பதி னுயிர கோடி யுற்றது
நின்பெருஞ் சேனையந் நெடிய சேனைக்கு
[2]நன்குறு [3]மவதிநாள் நாளை நண்ணிய
பின்செயத் தக்கது பேசற் பாற்றென்றான்.

(இ - ள்.) ஒன்பதினுயிரகோடி நின் பெருஞ் சேனை உற்றது - (இப்பொழுது என்னுடனே) ஒன்பதினுயிரக்கோடிக்கணக்கான உனது பெரியசேனை வந்திருக்கின்றது; அ நெடிய சேனைக்குஉம் நன்கு உறும் அவதி நாள் நாளை - (இனி வரவேண்டிய) அந்தப் பெரிய சேனைக்கு ஒருங்கே திரண்டுவந்துசேர்தற்கு உரிய தவணை நாளும் நாளைக்கே; நண்ணிய பின் - (அச்சேனையும்) வந்தபிறகு, செய தக்கது பேசல் பாற்று - செய்யத்தக்கதைப்பற்றிப்பேசுதல் தகுதியுடையது, என்றான்-என்று கூறிமுடித்தான், (சுக்கிரீவன்); (எ-று.)

'நண்ணியபின் செயத்தக்கது பேசற்பாற்று' என்று கூறிய சுக்கிரீவனுக்கு, அச்சேனையுடன் அநுமான் வந்தபிறகே செய்யத் தக்கதைப்பற்றிப் பேசவேண்டுமென்று கருத்துப்போலும். தான் இராமபிரானுக்கு அடியவனென்ற காரணத்தினால், சுக்கிரீவன் தன் சேனையை 'நின்பெருஞ்சேனை' என்றான். 'நெடியசேனை' என்றது - துணைப்படையை. பி - ம்:—[1]ஒன்பதுகோடியுண்டெனவந்துற்றன. [2]நன்பெயர், நன்குணர். [3]அறுதி. (709)

137.—இராமபிரான் சுக்கிரீவனைச் சென்று எல்லாச்சேனை களுடனும் வருமாறு அனுப்புதல்.

விரும்பிய விராமனும் வீர நிற்கதோர்
அரும்பொரு ளாகுமோ வமைதி நன்றெனப்
பெரும்பக லிறந்தது பெயர்தி நின்படை
[1]பொருந்துழி [2]வாவெனத் தொழுது போயினான்.

(இ - ள்.) விரும்பிய இராமன்உம் - (சுக்கிரீவனிடத்து) அன்புடைய இராமபிரானும்,—(அவனைநோக்கி), 'வீர - வீரனே! நிற்கு அது ஓர் அரும் பொருள் ஆகும்ஓ - உனக்கு(ச் சேனையைத்திரட்டிக் காரியத்தை முடித்தலாகிய) அச்செயல் அருமையானதொரு காரியமாகுமோ? அமைதி நன்று - (உனது) அடக்கமான குணம் நன்றாயிருக்கிறது', என - என்று கூறி,—(பின்னும் அவனை

நோக்கி), 'பெரும் பகல் இறந்தது - (இப்பொழுது) பெரிய பகற்பொழுதோ கழிந்துவிட்டது; பெயர்தி - (இன்று) போய், நின்படை பொருந்துழி வா-உனது சேனை திரண்டுவந்தபோது (அவற்றுடனே நாளைக்கு) வருவாய்', என - என்றுவிடைகொடுக்க, தொழுது (இராமபிரானை) வணங்கி, போயினன் - (அச்சுக்கிரீவன்) போனான்; (எ-று.)

சுக்கிரீவன் தன்சேனை தங்கியுள்ள பாசறைக்குச் சென்றனனென்க. பெயர்தி - முற்றெச்சம். பி-ம்:—[1]பொருந்துதி. [2]எனவவன்.

138.—இராமபிரான் அங்கதனையும் விடை கொடுத்தனுப்புதல்.

அங்கதற் கினியன வருளி யைய[1] போய்த்
தங்குதி யுந்தையோ டென்று தாமரைச்
செங்கணன் தம்பியுந் தானுஞ் சிந்தையின்
மங்கையு மவ்வழி யன்று [2]வைகினான்.

(இ-ள்.) தாமரை செங்கணன் - செந்தாமரை மலர்போன்ற சிவந்த கண்களையுடையவனான இராமபிரான், அங்கதற்கு இனியன அருளி - அங்கத குமாரனுக்கு இனியனவான வார்த்தைகளைக் கூறி, 'ஐய—! போய் உந்தையோடு தங்குதி - (நீ) போய் உனது தந்தையாகிய சுக்கிரீவனுடனே தங்குவாய்', என்று - என்று விடை கொடுத்துஅனுப்பி,— தம்பிஉம் - தம்பியாகிய இலக்குமணனும், சிந்தையின் மங்கைஉம் - (எப்பொழுதும்) தன் மனத்திற குடிகொண்டிருக்கிற சீதாபிராட்டியும், தானும் - தானுமாக, அன்று - அவ்விரவில், அ வழி - அவ்விடத்தில், வைகினன் - தங்கியிருந்தான்; (எ - று.)

இராமபிரான் இடைவிடாது சீதாபிராட்டியைச் சிந்தித்துக் கொண்டேயிருத்தலால், 'சிந்தையின் மங்கை' என்றார். 'தம்பியும் மங்கையும் தானும் வைகினன்'—தலைமைபற்றிய பால்வழுவமைதி; [2]வைகினர் என்றும் பாடமுண்டு. சிந்தையின் மங்கை - சிந்தையாகிய மங்கையென்றுகொண்டு சிந்தையைப்பற்றிய கவலையோடு தங்கினனென்னலாம். பி - ம்:—[1]நீ. சில பிரதிகளில் இச்செய்யுளோடு படலம் முடிகின்றது. (711)

139.—இலக்குமணன் சுக்கிரீவனிடம் போய்வந்த செய்தியை இராமனிடம் கூறுதல்.

சேயுயர் கீர்த்தியான் கதிரின் செம்மல்பால்
போயது மவ்வயிற் புகுந்த யாவையும்
ஓய்வுரு துணர்த்தென வுணர்த்து ளைய்ரா
[1]வாய்மையா வுணர்வுறு [2]வலிய மொய்ம்பினோன்.

(இ-ள்.) சேய் உயர் கீர்த்தியான் - மிக்க பெருங்கீர்த்தியை யுடையவனாகிய இராமபிரான், (இளையபெருமாளை நோக்கி) 'கதிரின் செம்மல்பால் போயதுஉம் - (நீ)சூரியகுமாரனான சுக்கிரீவனிடத்துச் சென்றதையும், அ வயின்புகுந்த யாவைஉம் - அவ்விடத்து நடந்த எல்லாச் செய்திகளையும், ஓய்வு உறுது உணர்த்து - (ஒன்றும்) விடா

மற் சொல்வாயாக', என - என்று கட்டளையிட,—வாய்மை ஆ உணர்வுறு வலிய மொய்ம்பினோன - உண்மையாகவே (எல்லாவற்றையும்) அறியுந்தன்மையுள்ள மகாபலசாலியாகிய லக்ஷ்மணன், உணர்த்தினன் - (அவ்வாறே) தெரிவித்தான்; (எ - று.)

சேயுயர் - ஒருபொருட்பன்மொழி. கதிர் - ஆயிரங்கிரணங்களையுடைய சூரியனுக்கு, இலக்கணை. பி - ம்:—[1]வாய்மையால். [2]வலிகொள். 'ஒப்புறு துணர்த்தெனவுணர்த்த வொண்கதிர், நாயகன் குணதிசையுதயநண்ணினன்' என்று பின்னிரண்டடிகள் சிலபிரதியில். (712)

வாலிவதத்துக்குப்பின் இதுவரை ஸ்ரீவான்மீகத்திற் கூறியதன் சுருக்கம்:—

வாலியின் மரணச்சடங்கு முற்றுப்பெற்றதும், மந்திரிமாரோடும் சுக்கிரீவன் இராமனையணுகினன்; அநுமான் சுக்கிரீவனது பட்டாபிஷேகத்தை நடப்பிக்குமாறு விண்ணப்பிக்க, இராமபிரான் 'ஊர்க்குவருதல் என்னோன்பிற்குத் தகாது: பட்டாபிஷேகத்தை நடப்பித்து, அங்கதனை இளவரசனுக்குக: இப்போது மழைக்காலமாகையால் போர்க்குப்புறப்படக்கூடிய கார்த்திகையில் வந்து போர் முயற்சியை மேற்கொள்க' என்றுசொல்லியனுப்பினன். ஸ்ரீராமன் பிறகு மால்யவானில் தங்கி நான்கு மாதங்களையும் அரிதிற் கழித்தனன்: காலங்கடந்தும் சுக்கிரீவன் வாராமையால் துயரோடு சினமுங்கொண்டு இலக்குமணனை விடுத்தான்: வெகுளிபொங்க இலக்குமணன் வருவதுகண்ட வானரர் அறிவிக்கவும், பிறகு இலக்குமணன் அங்கதன்மூலம் செய்தி சொல்லியும், சுக்கிரீவன் உணராதிருந்தனன். இளையபெருமாளது வில்நாணொலியையுங்கேட்டு அஞ்சிநடுநடுங்கும் வானரர்களின் பேரொலியால், காமக்களிப்பினாலும் மதுமயக்கத்தாலும் உணராதிருந்த சுக்கிரீவன் உணர்ந்தனன். பெருஞ்சீற்றத்தோடு இலக்குமணன் வருவதை உணர்ந்த அவன் தாரையையனுப்ப, கலவிக்குறியையுடைய அன்னாள் இன்மொழிகளால் சமாதானப் படுத்தியபின் அரண்மனையி னந்தப்புரத்து அழைக்க, இலக்குமணன் சென்றான்: சுக்கிரீவனைக் கண்டதும் இலக்குவன் பெருஞ்சீற்றத்தோடு இராமபிரான்கூறிய செய்தியை யெல்லாம் கூறினன். மிகவும் கடுமையாகப்பேசுவதைக் கண்ட தாரை, இலக்குமணனைப் பார்த்து 'மதுபானத்தாலும் காமவெறியாலும் பிழைசெய்ததைப் பொறுத்துச் சுக்கிரீவனது மனைவியரின் நடுக்கந்தீர அருள்புரிக' என்றனள். பின்பு சுக்கிரீவனும் 'உங்கள் பணியாளனாகிய யான் செய்தபிழையைப் பொறுக்க' என்ன, அவனும் பொறுத்தனன். பின்னர் வானரவரசன் அநுமான்மூலமாகப் பல யூதபதிகட்கும் செய்தியனுப்ப, யூதபதிகள் தம்சேனைகளை வருமாறு கட்டளையிட்டு விட்டுக் காணிக்கையுடன் வந்தனர். அவர்களைக்கண்டு விசாரித்து விடைகொடுத்தனுப்பிவிட்டு, இலக்குமணனுடன் சுக்கிரீவன் சிவிகையில் இராமபிரானை நோக்கிச் சென்றானென்பது.

கிட்கிந்தைப்படலம் முற்றிற்று.

12-ஆவது தானைகாண் படலம்.

சுக்கிரீவமகாராஜன் தான் ஒருங்கே திரட்டிய வானரப்படையைக் காட்ட, அதனை இராமலட்சுமணர் கண்ட செய்தியைக் கூறும்பாகம். வானரசேனைத்தலைவர் பலர் தம்தம் சேனையுடன் திரண்டு வருதலும், சுக்கிரீவன் அச்சேனைகளைக் காணுமாறு இராமலட்சுமணரை வேண்டுதலும், அவற்றை இராமபிரான லட்சுமணனோடு காணுதலும், இராமன் சேனைப்பரப்பை வியந்து கூறுதலும், இலட்சுமணன் இனி ஆகவேண்டியகாரியத்தைத் தாமதியாது தொடங்கவேண்டுமென்று கூறுதலும் முதலியன, இப்படலத்தில் விவரித்துக் கூறப்படுகின்றன. 'வானரத்தானைகாண்படலம்' என்று பலபிரதிகளின் பாடம்.

1 — கவிக்கூற்று. இப்படலத்திற்குத் தோற்றுவாய்.

அன்றவ [1]ணிறுத்தன னலரி [2]கீட்டிசைப்
பொன்றிணி நெடுவரை பொலிவு ருதமுன்
வன்றிறற் றூதுவர் [3]கூவ வானரக்
குன்றுறழ் நெடும்படை [4]யடைந்த கூறுவாம்.

(இ - ள்.) அன்று அவண் இறுத்தனன் - அன்றையிரவு முழுவதும் (இராமபிரான்) அவ்விடத்தில் தங்கியிருந்தான்; அலரி கீழ் திசை பொன் திணி நெடு வரை பொலிவுறுத முன் - சூரியன் கீழ் திசையிலுள்ள பொன் நிரம்பிய [பொன்மயமான] பெரிய உதய கிரியிலே விளங்கித் தோன்றுத முன்னமே [சூரியனுதிப்பதற்கு முன்பே], வல் திறல் தூதுவர் கூவ - மிக்க வலிமையையுடைய தூதர்கள் சென்று அழைத்ததனால், குன்று உறழ் வானரம் நெடும்படை அடைந்த(து)-மலையையொத்த வானரசேனை வந்து சேர்ந்தவிதத்தை, கூறுவாம் - (இனி) எடுத்துச்சொல்வோம்; (எ - று.)

'அன்றவணிறுத்தனன்' என்றது, கீழ்ப்படலத்தின் தொடர்ச்சி தோன்றக்கூறியது. அலரி - பரவுகின்ற கிரணங்களையுடையவனெனச் சூரியனுக்குக் காரணக்குறி. கிழக்கு + திசை = கீட்டிசை. பி - ம்:—[1]இறுத்தபின், இறுத்தனர். [2]கீழ்திசை. [3]கொணர. [4]அடைதல்.

இச்செய்யுள், இக்கிந்தைப்படலத்தின் ஈற்றுச்செய்யுளாகச் சில பிரதிகளிற் காணப்படுகின்றது. இச்செய்யுள் சில பிரதிகளில் இல்லை; இவ்விடத்து "அன்றவண்வானரச்சேனையாவையும், வென்றிகொடலை வரு [1]மெண்கின் வீரரும், குன்றுகளொருவழிக் கூடினுலென, வன்றிறலிராமனை [2]வழுத்தி வந்தவே" என்று ஒரு செய்யுள் காணப்படுகின்றது. பி - ம்:—[1]ஏனை. [2]வாழ்த்தி. (713)

இங்கு மேலும் மூன்று பாடல்கள் காணப்படுகின்றன: அவை வருமாறு:—

வேறு.

(1) இன்ன தாகிய திறத்தவ ரிருக்க முன்பேரகச்
சொன்ன வாயிர கோடியிற் றூதர் தந் திறத்தால்
பன்ன வாறிரு வெள்ளமாங் கவிப்படை பயிலப்
பொன்னின் வார்கழ லிடபனக் கிட்கிந்தை புகுந்தான்.

(2) தாம ரைப்பெரு தவிசுறை சதுமுகக் கடவுள்
ஓம வங்கியி லுதித்தன வுலப்பில கோடி
ஆமெ னப்புகல் வானரத் தானையங் கணித்தா
மாவ யப்புயத் தெறுழ்வலி மயிந்தன்வந் தடைந்தான்.

(3) கங்கை சூடிதன் கருணைபெற் றுடையமுன் வாலி
பொங்கு மானையி னெண்டிசைப் பொருப்பினும் பொலியத்
தங்கி வாழ்கவித் தானையங் காறைந்து கோடி
வங்க வேலையிற் பரந்திட வசந்தன்வந் தடைந்தான்.

வேறு.

2.—சதவலி யென்பவன் வானரசேனையோடு வருதல்.

[1] ஆனை யாயிர மாயிரத் [2] தெறுழ்வலி யமைந்த
[3] வான ராதிப ராயிர ருடன்வர வகுத்த
[4] கூனன் மாக்குரங் கையிரண் டாயிர கோடி
தானையோடுமச் [5] சதவலி யென்பவன் சார்ந்தான்.

(இ - ள்.) அ சதவலி என்பவன் - அந்தச் சதவலியென்னும் வானரவீரன்,—ஆயிரம் ஆயிரத்து ஆனை எறுழ் வலி அமைந்த - பத்துலட்சம் யானைகளின் மிக்க வலிமையோடு பொருந்திய, வானர அதிபர் ஆயிரர் - வானரப்படைத்தலைவர் ஆயிரம்பேர், உடன்வர - தன்னுடன்வர,—வகுத்த - அணிவகுக்கப்பட்ட, கூனல் மா குரங்கு ஐஇரண்டாயிரகோடி தானையோடுஉம்-உடல்வளைவையுடைய பெரிய பதினாயிரகோடிவானரசேனையோடும், சார்ந்தான் - (சுக்கிரீவனிடத்தில்) வந்து சேர்ந்தான்; (எ - று.)

சதவலி - ஶதவலி: முகத்தில் நூறுமடிப்புக்களை யுடையவனெனக் காரணப்பொருள்படும்; அகரச்சுட்டு-பிரசித்திகாட்டும். கூனல் மாக் குரங்கு - சங்குகள்போல வெண்ணிறமானகுரங்குகள் என்றும் உரைப்பர். கூன் - சங்கு. பி-ம்:—[1] ஆனையாயிரங்கோடியின். [2] எறுழ்வலிக்கு. [3] வானராதியராயிரருடன்கொண்டு, வானராதியருடன்கொண்டுதானவர். [4] கூன. [5] தசவலி. (714)

3.—சுசேடணன் தன் சேனையோடு வருதல்.

ஊன்றி மேருவை யெடுக்குறு மிடுக்கினுக் குரிய
தேன் [1] றெரிந்துண்டு தெளிவுறு [2] வானரச் சேனை
ஆன்ற பத்துநூ றுயிர கோடியோ டமையத்
தோன்றி னுன்வந்து சுசேடண [3] னெனும்பெயர்த் தோன்றல்.

(இ - ள்.) சுசேடணன் எனும் பெயர் தோன்றல் - சுசேடணனென்னும் பெயரையுடைய வானரவீரன்,—மேருவை ஊன்றி எடுக்குறும் மிடுக்கினுக்கு உரிய - மேருமலையையும் பெயர்த்தெடுக்கவல்ல வலிமை பொருந்தியதும், தேன் தெரிந்து உண்டு தெளிவுறு - மதுக்களை ஆராய்ந்துஉண்டு (மயக்கமில்லாமல்) தெளிவு பெற்றதுமான, வானரசேனை ஆன்ற பத்து நூறுயிர கோடியோடு - சிறந்த பத்துலக்ஷங்கோடி வானரசேனையுடனே, அமைய - பொருந்த, வந்து தோன்றினன் - வந்து சேர்ந்தான்;

மேருவையுமெடுக்கும் வல்லமையமைந்த பத்துலக்ஷங்கோடி வானரசேனையுடனே சுசேடணன் வந்துசேர்ந்தானென்பதாம். சுசேடணன் = ஸுஷேணன்: இவன், வாலியின் மனைவியாகிய தாரைக்குத் தந்தை: வருணதேவனது குமாரன். வால்மீகி ராமாயணத்திலும் சேனை வந்த விவரத்தைக் கூறுகையில், முதலில் சதவலியென்பவன் வந்ததைக்கூறி, இரண்டாவதாக ஸுஷேணன் வருகையைக் கூறியுள்ளது. மது, மனவூக்கமுண்டாக்குவதன்றி வானரர்க்கு மயக்கத்தை யுண்டாக்காதென்க. முதலடி - தொடர்புயர்வுநவிற்சி. பி-ம்:—[1]தெரிந்துளர், திரிந்துண்டு. [2]வானரசேனை. [3]என்னுமத். (715)

4.—ருமையின் தந்தை தன் சேனையோடு வருதல்.

ஈறில் வேலையை யிமைப்புறு [1]மளவினிற் கலக்கிச்
சேறு காண்குறுந் திறல்கெழு வானரச் சேனை
ஆறெ ணாயிர கோடிய துடன்வர [2]வமுதின்
[3]மாறி லாமொழி யுருமையைப் பயந்தவன் வந்தான்.

(இ - ள்.) அமுதம் மாறு இலா மொழி உருமையை பயந்தவன் - தேவாமிருதமும் ஒப்பாகாத [மிக இனிய] சொற்களையுடைய (சுக்கிரீவனதுமனைவியாகிய) ருமையைப் பெற்ற தந்தையானவன்,—ஈறு இல் வேலையை - முடிவு காணப்படாத கடலையும், இமைப்புறும் அளவினில் - ஓரிமைப்பொழுதிற்குள், கலக்கி சேறு காண்குறும்-கலக்கிச் சேறாக்கவல்ல, திறல் கெழு - வலிமை நிறைந்த, வானரசேனை ஆறு எணாயிரகோடி அது - நாற்பத்தெண்ணாயிரங்கோடி வானரசேனை, உடன் வர - தன்னுடன் வர, வந்தான்—; (எ - று.)

ருமையைப் பெற்ற தந்தை, தாரனெனப்படுவன்: இவன் தேவகுருவாகிய பிரகற்பதியின் புதல்வன். இவன் கடலையும் கலக்கிச் சேறுகாணவல்ல நாற்பத்தெண்ணாயிரங்கோடி வானரசேனையோடு வந்தனனென்க. பி - ம்:—[1]எல்லையிற். [2]அமுதம். [3]மாறலர். (716)

5.—கேசரி சேனையோடு வருதல்.

[1]ஐம்ப தாயநூ றுயிர [2]கோடியெண் ணமைந்த
மொய்ம்பு மால்வரை [3]புரைநெடு வானர மொய்ப்ப
இம்பர் ஞாலத்தும் வானத்து மெழுதிய சீர்த்தி
[4]நம்ப னைத்தந்த கேசரி [5]கடலென [6]நடந்தான்.

(இ - ள்.) இம்பர் ஞாலத்துஉம் வானத்துஉம் எழுதியசீர்த்தி - இந்தப் பூலோகத்திலும் மேலுலகத்திலும் நிலைபெறச்செய்த கீர்த்தியையுடைய, நம்பனை தந்த - சிறந்தவனாகிய அனுமானைப் பெற்ற, கேசரி - கேஸரியென்னும் வானரவீரன்,—ஐம்பது ஆய நூறுயிரகோடி எண் அமைந்த - ஐம்பது லக்ஷங்கோடித்தொகை பொருந்திய, மால் வரை புரை மொய்ம்பு நெடு வானரம் - மேருமலைகளையொத்த தோள்களையுடைய பெரிய வானரசேனை, மொய்ப்ப-நெருங்கி(த் தன்னுடன்) வர, கடல் என நடந்தான் - சமுத்திரம் போன்ற தோற்றத்துடன் வந்தான்; (எ - று.)

தன்சேனையோடு வந்த கேஸரிக்கு, அலையோடு கூடிய சமுத்திரம் உவமையாதற்கு ஏற்கும். மொய்ம்பு - வலிமையுடைய எனக்கொண்டு, மால்வரைபுரைநெடு வானரம் - பெரியமலையையொத்த பேருருவத்தையுடைய வானர மெனினுமாம். மால்வரை-குலபர்வதமுமாம். அநுமான் தன் செய்கையால் மிகப்பிரசித்தி பெற்றவனுதலால், அவனை 'இம்பர்ஞாலத்தும் வானத்தும் எழுதியசீர்த்தி நம்பன்' என்றார். சீர்த்தி-மிகுபுகழ். நம்பன்-எல்லாரும் விரும்புங்குணமுடையவன்; சிவபெருமானது அமிசமாகப் பிறந்தவனெனினுமாம்; நம்பன்-சிவன். பி - ம்:—[1]ஐம்பதாறு. [2]கோடியென்று. [3]நேருநவானரமொய்ப்ப, புரைநெடுவானரமொய்ம்பர், நேர்நெடு வானரமொய்ம்பர். [4]மைந்தனை. [5]என்பவன். [6]வந்தான். (717)

6.—கவாட்சன் சேனையோடு வருதல்.

[1]முனியு மாமெனி [2]னருக்கனை [3]முரணற முருக்கும்
தனிமை தாங்கிய வுலகையுஞ் [4]சலம்வரிற் குமைக்கும்
[5]இனிய மாக்குரங் [6]கீரிரண் டாயிர கோடி
அனிக முன்வர [7]வான்பெயர்க் கண்ணன்வந் தடைந்தான்.

(இ - ள்.) (ஒவ்வொன்றுமே), முனியும் ஆம் எனின் - கோபங்கொள்ளுமாயின், அருக்கனை முரண் அற முருக்கும் - சூரியனையும் வலிமை கெடும்படி அழிக்கும்; சலம்வரின் - பெருஞ்சினம் பிறந்தால், தனிமை - தனிமையாகவே [தனித்தனியாக], தாங்கிய உலகைஉம் குமைக்கும் - (தங்களைத்) தாங்கிக்கொண்டிருக்கின்ற உலகத்தையும் குத்தியழிக்கும்; (இப்படிப்பட்டவைகளான), இனிய மா குரங்கு ஈர் இரண்டு ஆயிரகோடி - மனக்களிப்புடைய நாலாயிரகோடிக்கணக்கான சிறந்த வானரங்களையுடைய, அனிகம் - சேனை, முன் வர - (தனக்கு) முன்னேவர, ஆன் பெயர் கண்ணன் - கவாட்சனென்பவன், வந்து அடைந்தான் - வந்து சேர்ந்தான்; (எ - று.)

சினங்கொள்ளுமாயின் சூரியனையும் தனித்தனியே அழிக்க வல்லனவும், அவ்வாறே பூமியின்மீது சினங்கொண்டாலும் அதையும் குத்திக் குமைக்க வல்லனவுமான நாலாயிரகோடி வானரசேனைகளுடனே கவாட்சனென்பவன் வந்தனனென்க. கவாட்சன் - பசுவின் கண்போன்ற கண்களையுடையவனெனக் காரணப்பொருள்படும்; இவன் 'கோலாங்கூலம்' எனப்படும் கொண்டைமுசுக்களுக்குத் தலைவன்: இவன்து சேனையாகவந்தனவும் அந்தச்சாதி வானரங்களே. ஆன்பெயர்க்கண்ணன் - கவாட்சன்; ஆன் - கோ: கண் - அக்ஷி: ஆன்பெயராகிய 'கோ' என்னுஞ் சொல்லோடுகூடிய 'அக்ஷி' என்னுங் கண்பெயரை யுடையவனென்க; 'ஆன்' 'கண்' என்ற சொற்கள் ஒருவகை இலக்கணையால், 'கோ' 'அக்ஷி' என்பவற்றைக்காட்டின; 'கோ' 'அக்ஷி' என்ற இவ்விருசொல்லும் தொகைநிலையாகவரும்போது வடமொழியில் கவாக்ஷனென்று ஆகும். ஆன்பெயர்க்கண்ணன் என்பதற்கு - 'இடபாட்சன்' எனச் சிலர் பொருள் கூறுவது, முதனூலோடு மாறுபடுதலாற் பொருந்தாது. இச்செய்யுள் சில பிரதிகளில் "மண்

கொள்" என்ற தொடக்கத்துச் செய்யுளுக்குப்பின் காணப்படுகின்றது: ஆயினும், இங்குக்கூறிய முறையே முதனூலுக்கு ஏற்கும்.

பி - ம்:—[1]முனையும். [2]அரனையும். [3]முடிவுறமுனையும், முரணையுமுருக்கும். [4]வலம் வருஞ்சலத்தால், வலம்வருஞ்சலத்த, சலம்வரக்குமைக்கும். [5]இனைய, குனிய, ,குனியும். [6]ஈண்டியவாயிரகோடி, ஆயிர மீண்டியகோடி, ஐயிரண்டாயிரகோடி. [7]ஆனிறக்கண்ணன். (718)

7.—தூமிரன் சேனையோடு வருதல்.

மண்கொள் வாளெயிற் றேனத்தின் [1]வலியன [2]வயிரத்
திண்கொண் மால்வரை மயிர்ப்[3]புறத் தனவெனத் திரண்ட
கண்கொ ளாயிர கோடியி [4]னிரட்டியிற் கணித்த
எண்கி னீட்டங்கொண் [5]டெறுழ்வலித் தூமிர னிறுத்தான்.

(இ - ள்.) எறுழ் வலி தூமிரன் - மிக்க வலிமையுடைய தூமிரனென்பவன்,—மண் கொள் வாள் எயிறு ஏனத்தின் வலியன - பூமியைக் குத்தியெடுத்த ஒளிபொருந்திய கோரப்பற்களுடைய (திருமாலின் திருவவதாரமான) வராகம்போன்ற பலமுடையனவாகி, வயிரம் திண்கொள் மால்வரை மயிர் புறத்தன என திரண்ட - உறுதியையுடைய வலிமையைக்கொண்ட பெரிய மலையும் ஒரு மயிர்க்காலிலேயடங்கக்கூடியதென்று சொல்லும்படி மிகப்பெரிய உருவமுடையனவும், கண் கொள் ஆயிரகோடியின் இரட்டியில் கணித்த - மிக்க இடத்தைக்கொண்ட [விசாலமாகப் பரவிய] இரண்டாயிர கோடியர்கக் கணக்கிடப்பட்டவையுமாகிய, எண்கின் ஈட்டம் கொண்டு - கரடிகளின் கூட்டத்தை உடன்கொண்டு, இறுத்தான் - வந்துசேர்ந்தான்; (எ - று.)

தூமிரன் - ஜாம்பவானுக்கு உடன்பிறந்தவனான ஒருகரடித்தலைவன்: இவனுடன் வந்த கரடிப்படையில்ஒவ்வொன்றுமே திருமாலின் வராகாவதாரம்போன்று வலிமையையும் ஒரு மயிர்க்காலிற் பெருமலையடங்கக்கூடிய பேருருவத்தையு முடையதென்க. கரடிக்கு மகாவராகத்தை உவமை கூறியது, வடிவொப்புமையுங்கருதி. இச்செய்யுளினிரண்டாமடி "சிலம்பினிடைச் சிறுபரல்போற் பெரிய மேரு திருக்குளம்பிற் கணகணப்ப" என்ற வாய்பாடுபற்றி வந்தது. 'கண்கொள்' என்பதற்கு - கண்பார்வை செல்லக்கூடியவளவு தூரம் பரவிய என்றுமாம்.

'மண்கொள்வாளெயிற்றேனம்' என்றதில் அடங்கியகதை:—ஒருகாலத்தில் பூமியைப் பாயாகச் சுருட்டி யெடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிப்போன இரணியாக்கனைத் திருமால் தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளால் மகாவராகமாகத் திருவவதரித்துக் கொன்று பூமியைக் கோட்டாற் குத்தியெடுத்துக்கொண்டு வந்து பழையபடி விரித்தருளின னென்பதாம்.

பி - ம்:—[1]வலியின, வலியென. [2]உயர்ந்த. [3]புறத்தின. [4]கணிதத்திற், கணத்தினிற். [5]எறுழ்வலியிடும்பன் வந்திறுத்தான்,

ளறுழ்வலிக் குமுதன் வந்திருந்தான் என்ற பாடங்கள் முதனூலின் போக்கிற்குச் சிறவாது. (719)

8.—பனசன் சேனையோடு வருதல்.

தனிவ ருந்த..ங் கிரியெனப் பெரியவன் சலத்தால்
[1]நினையு நஞ்செனு வுருமென நடுக்குறு [2]நிலையன்
பனச னென்பவன் பன்னிரண் டாயிர கோடிப்
புனித வெஞ்சின வானரப் [3]படைகொடு புகுந்தான்.

(இ - ள்.) தனி வரும் தட கிரி என பெரியவன் - தனித்து வருகின்ற பெரியதொரு மலைபோலப் பெருந்தோற்றமுடையவனும், சலத்தால் - கோபத்தினால், நஞ்சு என - விஷம்போலவும், உரும் என - இடிபோலவும், நடுக்குறும் - (கண்டவரை) நடுங்கச் செய்கிற, நினையும் நிலையன் - (யாவரும் அஞ்சி) நினைக்கக்கூடிய தன்மையை யுடையவனுமாகிய, பனசன் என்பவன்—, பன்னிரண்டாயிரகோடி புனித வெஞ்சினம் வானரம் படைகொடு - பன்னிரண்டாயிரகோடிக் கணக்கான பரிசுத்தமாகிய கொடுங்கோபமுடைய வானரசேனையை யுடன்கொண்டு, புகுந்தான் - வந்துசேர்ந்தான்; (எ - று.)

[1]'நினையுநெஞ்சிற வுருமென வுறுக்குறுநிலையன்' என்றபாடத்திற்கு - (தன்னை) நினைக்கும் மனம் அழியும்படி இடிபோல மருட்டியழிக்கின்ற தன்மையை யுடையவ னென்று பொருளாம். பி - ம்:— [2]நிலையின். [3]படையொடும், படைகொண்டு. (720)

9.—நீலன் சேனையோடு வருதல்.

இடியு [1]மாக்கடன் முழக்கமும் வெருக்கொள [2]விசைக்கும்
முடிவில் [3]பேர்முழக் குடையன [4]விசையன முரண
கொடிய [5]கூற்றையு மொப்பன பதிற்றைந்து கோடி
நெடிய வானரப் [6]படைகொண்டு புகுந்தன னீலன்.

(இ - ள்.) நீலன்—,—இடிஉம் மா கடல் முழக்கம்உம் வெரு கொள - இடியோசையும் கடலிரைச்சலும் அஞ்சும்படி, இசைக்கும் - ஒலிக்கின்ற, முடிவு இல் பேர் முழக்கு - எல்லையில்லாத பேராரவாரத்தை, உடையன - உடையனவும், விசையன - மிக்கபரபரப்பை யுடையனவும், முரண - வலிமையை யுடையனவும், கொடிய கூற்றை உம் ஒப்பன - கொடுமையுள்ள யமனைப்போன்றனவுமாகிய, பதிற்றைந்துகோடி நெடிய வானரம் படைகொண்டு - ஐம்பது கோடி பெரிய வானரசேனையை உடன்கொண்டு, புகுந்தனன்—; (எ - று.)

நீலன் - நீலநிறமுடைமைபற்றி இவனுக்கு இப்பெயர். இவன் - அக்கினியின் குமாரன்; வானரசேனைகளெல்லாவற்றுக்கும் முதல் தலைவன். பத்து + ஐந்து: பதிற்றைந்து: ஐம்பதென்று பொருள். பி - ம்:—[1]ஆழ். [2]விளிக்கும். [3]பெருருக்குடையன், பேர்முழக்குடையவன், போர்முழக்குடைன, பேருலகிறுக்குறும். [4]விஞ்சையன் முரண, விடையனமுரண, விசையின்மாமுரணில். [5]கூற்றையுங் கொதிப்பன. [6]படையொடும். (721)

10.—தரீமுகன் சேனையோடு வருதல்.

மாக ரத்தன [1]வுரத்தன [2]வலியன நிலைய
வேக ரத்தவெங் [3]கண்ணுமிழ் வெயிலன மலையின்
ஆக ரத்தினும் பெரியன வாறைந்து கோடி
சாக ரத்தொடுந் [4]தரீமுக னென்பவன் சார்ந்தான்.

(இ - ள்.) தரீமுகன் என்பவன்,—மா கரத்தன-பருத்த கைகளை யுடையனவும், உரத்தன - வலியமார்பையுடையனவும், வலியன - தேகவலிமையையுடையனவும், நிலைய - (செய்தொழிலில்) உறுதியுள்ளனவும், வேகரத்த - உக்கிரமுடையனவும், வெம் கண் உமிழ் வெயிலன - கொடுமையான கண்களிலிருந்து வெளிப்படும் நெருப்புப் பொறியை யுடையனவும், மலையின் ஆகரத்தின்உம் பெரியன - மலையின் வடிவத்தைக்காட்டிலும் பெருவடிவமுடையனவுமான, ஆறு ஐந்துகோடி சாகரத்தொடும் - முப்பதுகோடி வானரசேனை சமுத்திரத்தோடும், சார்ந்தான் - வந்து சேர்ந்தான்; (எ - று.)

'தரீமுகன்' என்ற பெயர் - குகைபோன்ற முகத்தையுடையவனென்று பொருள்படும். வேகரம் - கொடுமை, உக்கிரம். வெயில் என்பது - வெம்மையுடையதென்ற காரணத்தால் இங்கே, தீப்பொறியையுணர்த்திற்று. ஆகரம் - ஆகார மென்ற வடசொல்லின்குறுக்கல். சாகரம் - சகரகுமாரர் அறுபதினாயிரவரால் தோண்டப்பட்டதெனக் கடலுக்குக்குறி: இங்கே அதுபோலப் பரந்தசேனைக்கு உவமையாகுபெயர்; ஓர் பெருந்தொகையுமாம். பி-ம்:—[1]வரத்தன. [2]மலையன நிலைய, வானுறு நிலைய. [3]கனலுமிழ்வெயிலென, கனலுமிழ் கண்ணின. [4]ததிமுகன், சதமுகன். (722)

11.—கஜன் சேனையோடு வருதல்.

இளைத்து வேறொரு [1]மாநிலம் வேண்டுமென் றிரங்க
முளைத்த முப்பதி னாயிர கோடியின் முற்றும்
விளைத்த வெஞ்சினத் தரியினம் [2]வெருவுற விழிக்கும்
[3]அளக்க ரோடுமக் கயனெனும் பெயரன்வந் தடைந்தான்.

(இ - ள்.) அ கயன் எனும் பெயரன் - பிரசித்தமான கஜனென்னும் பெயரையுடைய வீரன்,—வேறு ஒரு மா நிலம் வேண்டும் என்று இளைத்து இரங்க முளைத்த - (தாம் தங்கியிருப்பதற்கு இந் நிலவுலகம் போதாமையால்) வேறொரு பெரியபூமி வேண்டுமென்று வருந்தியிரங்கும்படி தோன்றியவையும், முப்பதினாயிர கோடியின் முற்றும் விளைத்த - முப்பதினாயிரக்கோடிக்கணக்கில் உலகமுழுதும் பரவியனவுமான, வெம் சினத்து அரி இனம் வெருவுற விழிக்கும் - கடுங்கோபத்தையுடைய சிங்கத்தின் கூட்டமும் அஞ்சும்படி விழித்துப்பார்க்குந் தன்மையுள்ள, அளக்கரோடுஉம் - (வானரசேனை) சமுத்திரத்தோடும், வந்து அடைந்தான்—; (எ - று.)

கயன் - கஜனென்ற வடசொல்லின் விகாரம்: யானைபோன்ற வடிவுடையவனென்று பொருள்படும். ஒவ்வொன்றும், மிகவும்

பருத்திருத்தலால், இவனது முப்பதிநாயிரங்கோடிச்சேனை தங்குவதற்கு இந்நிலவுலகத்திலிடம்போதாதென்று இருக்கவேண்டியதாயிற்றென்க: உயர்வுநவிற்சி. அளக்கர் - அளத்தற்கு அருமையானது: சமுத்திரம்: சேனைக்கு உவமையாகுபெயர். பி - ம்:—[1]மேருவும் வேண்டுமோவென்ன. [2]வெருவுறவிரிந்த, வெருவரவிழிக்கும், வெருவுறவிளித்த. [3]அளக்கரோடு மவ்வானெனும் பெயரான், அளக்கரோடு மக்கவயனென்பவனும், அளக்கரோடு வேல் வசந்தனென்பவனும். (723)

12.—சாம்பவான் சேனையோடு வருதல்.

ஆயி ரத்தறு [1]நூறுகோ டியிற்கடை யமைந்த
பாயி ரப்பெரும் படைகொண்டு [2]பரவையிற் றிரையின்
தாயு ருத்துட னேவரத் [3]தடநெடு வரையை
[4]ஏயு ருப்புயச் சாம்பனென் பவனும்வந் [5]திறுத்தான்.

(இ - ள்.) தட நெடு வரையை ஏய் - பெரிய நீண்ட மலையையொத்த, உரு - உருவத்தோடுகூடிய, புயம் - தோள்களையுடைய, சாம்பன் என்பவன்உம் - ஜாம்பவானும்,—பரவையின் திரையின் - சமுத்திரத்தினலைகளைப்போல, தாய் உருத்து - தாவிக்கோபித்து, உடனே வர - தன்னுடனே தொடர்ந்துவர, ஆயிரத்து அறுநூறுகோடியின் - ஆயிரத்தறுநூறுகோடியென்னுங் கணக்கையுடைய, கடை அமைந்த பாயிரம் பெரும்படை - இடங்களில் நிரம்பிய சிறப்பையுடைய பெரிய வானரசேனையை, கொண்டு - உடன் கொண்டு, வந்து இறுத்தான் - வந்து தங்கினான்; (எ - று.)

பாயிரம் - விருது. சாம்பன் - ஜாம்பவான். முன்னொருகாலத்தில் பிரமன் கொட்டாவிவிட்டபோது அவனது வாயினின்று கரடி வடிவமாய்த் தோன்றியவன்; கரடிகளுக்கு அரசன்; இவன், திருமாலின் திரிவிக்கிரமாவதாரகாலத்தில் உலகமுழுவதும்நிரம்பிய அப்பெருமானைப் பதினெட்டுமுறைப் பிரதட்சிணஞ்செய்தவனென்க. பி - ம்:—[1]நூற்றிரு கோடியிற்கு. நூறுகோடியிற்கடை, நூற்றறுகோடியின். [2]பரவையுந் திசையுந், பரவையிற்றிரியும். [3]தடவரைநீடு. [4]மாம்வற்புரை சாம்பன், மாயவற்புரை சரபன். (724)

13.—துன்முகன் சேனையோடு வருதல்.

வகுத்த தாமரை மலரய [1]னிசிசரர் வாணாள்
[2]உகுத்தி நீயெனப் பொருவரும் பெருவலி யுடையான்
பகுத்த பத்துநா றுயிரப் [3]பத்தியி னிரண்டு
தொகுத்த கோடிவெம் படைகொண்டு துன்முகன் றொடர்ந் [தான்

(இ - ள்.) பொரு அரும் பெரு வலி உடையான் - ஒப்பில்லாத மிக்க வலிமையுடையவனாகிய,—துன்முகன் - துன்முகனென்பவன், வகுத்த தாமரை மலர் அயன் - (எல்லாப் பொருள்களையும்) படைப்பவனாகிய (திருமாலின் உந்தித்) தாமரை மலரில் தோன்றிய பிரமதேவன், நிசிசரர் வாழ்நாள் நீ உகுத்தி என - [1]அரக்கர்

களது வாழ்நாளை நீ ஒழிப்பாயாக' என்று கட்டளையிட்டதனால்,—பகுத்த பத்துநூறாயிரம் பத்தியின் - அணிவகுக்கப்பட்ட பத்து லட்சம் வரிசைகளையுடைய, தொகுத்த இரட்டிகோடி வெம் படை கொண்டு - நிறைந்த இரண்டுகோடிக்கணக்கான கொடிய வாநர சேனையை யுடன்கொண்டு, தொடர்ந்தான் - வந்தான்; (எ - று.)

துர்முகன் என்ற பெயர் - பகைவர்க்குப் பயங்கரமான முகத்தையுடையவனென்றும், அழகில்லாதமுகத்தையுடையவனென்றும் பொருள் படும். பெரிய வலிமையையுடைய துன்முகன் இரண்டுகோடி வாநரசேனையுடன் வந்தது, பிரமன் அரக்கரது வாழ்நாளை யழிக்கக் கட்டளையிட்டதனால் வந்தாற்போலுமென்றவாறும். இது, உருபைப் பெருதுவந்த தற்குறிப்பேற்றவணி; வடநூலார் கம்யோத்ப்ரேக்ஷாலங்காரமென்பர். அயன் = அஜன்: திருமாலினிடத்தினின்று தோன்றியவனென்று பொருள்; அ - விஷ்ணு. நிசிசரர் - (பகலினும்) இரவில் வலிகொண்டு திரிபவரெனக்காரணக்குறி. வாழ் + நாள் = வாணாள். பத்தி = பங்க்தி. இரட்டி = இரண்டு. பி-ம்:—[1] நிசாசரர். [2] புகுத்ததீயெனப்பொருவரும், உகுத்தி தீயெனப்பொருள்வரும், உகுத்த தீவினை பொருவதோர். [3] பத்தினிலிரட்டி. 25-ஆம் எண்வரையிலுள்ளசெய்யுள்கள் முன்னும் பின்னுமாக முறையின்றி ஏட்டுப் பிரதிகளிற் பல்வகையாகக் காணப்படுகின்றன. (725)

14.—துமிந்தன் சேனையொடு வருதல்.

கோடி கோடிநூ [1]றுயிர வெண்ணெனக் குவிந்த
நீடு வெஞ்சினத் தரியின மிருபுடை [2]நெருங்க
மூடு மும்பரு மிம்பரும் [3]பூழியின் மூழ்கத்
தோ[4]டிவர்ந்ததார்க் [5]கிரிபுரை [6]துமிந்தனுந் தொடர்ந்தான்.

(இ - ள்.) தோடு இவர்ந்த தார் கிரி புரை துமிந்தன்உம் - இதழ்கள் நிறைந்த மலர்மாலையை யணிந்தவனான மலையையொத்த பெருந்தோற்றமுடைய துமிந்தனென்பவனும்,—கோடி கோடிநூறுயிரம் எண் என குவிந்த - பலகோடிலக்ஷக்கணக்காகக்குவிந்த, நீடு வெம் சினத்து அரி இனம் - மிகக்கொடிய கோபத்தையுடைய வானரக்கூட்டம், இருபுடை நெருங்க - (தனது) இருபக்கங்களிலும் நெருங்கவும், மூடும் உம்பர்உம் இம்பர்உம் பூழியில் மூழ்க - மேற்கவிந்த ஆகாயமும் இவ்வுலகமும் (அப்போது மேலெழுந்த) புழுதியிலே மறைந்து விடவும், தொடர்ந்தான்—; (எ - று.)

துமிந்தன் - த்விவிதன் என்பதன் சிதைவு; இவனும் அடுத்த கவியிற் கூறப்படுகின்ற மைந்தன் என்பவனும் - தேவவைத்தியர்களாய் இரட்டையரான அசுவினீதேவர்களின் அமிசத்தாற் பிறந்த வானரர்; இச்செய்யுளுக்குமுன்னே மேல்வருகின்ற 'கையஞ்சாசரம்' (20), "நொய்தின்" (21) என்ற தொடக்கத்துச் செய்யுள்கள் சிலபிரதிகளிற் காணப்படுகின்றன. பி - ம்:—[1] ஆயிரம். [2] நெருக்கின், நெருங்கி. [3] ஊழியின் முழுக்க. [4] அலர்ந்த. [5] கரிபுரை. [6] துவிதனும். (726)

15.—மைந்தனும் கஜகோமுகனும் சேனையோடு வருதல்.

இயைந்த பத்துநூ றுயிரப் [1]பத்தெனுங் கோடி
உயர்ந்த [2]வெஞ்சின வானரப் படையொடு மொருங்கே
சயந்த னக்கொரு [3]வடிவெனத் திறல்கொடு தழைத்த
[4]மயிந்தன் மற்கச கோமுகன் தன்னொடும் வந்தான்.

(இ - ள்.) சயம் தனக்கு ஒருவடிவு என திறல்கொடு தழைத்த மயிந்தன் - வெற்றிக்கு உரிய ஒரு வடிவாகுமென்று சொல்லும்படி [வெற்றியே ஒருவடிவமெடுத்துக்கொண்டு வந்தாற்போல] பராக்கிரமத்தினாற் சிறப்புப்பெற்ற மைந்தனென்பவன்,—மல் கசகோமுகன் தன்னொடுஉம் - மற்போரிற் சிறந்த கஜகோமுகனென்பவனோடும், இயைந்தபத்து நூறுயிரம்பத்துஎனும்கோடிஉயர்ந்த வெம் சினம் வானரம் படையொடுஉம் - பொருந்திய நூறு லட்சக்கோடிக்கணக்கான மிகக்கொடிய கோபத்தையுடைய வானரசேனையொடும், ஒருங்கே - ஒருசேர, வந்தான்—; (எ - று.)

மைந்தனும், கஜகோமுகனும் நூறுலக்ஷங்கோடி சேனையுடனே வந்தார்களென்பதாம். மயிந்தன் = மைந்தன்: போலி. நூறுலக்ஷம் - கோடி. பி-ம்:—[1]பத்தினிரட்டி. [2]கோடிவெம். [3]சார்வெனத். [4]மயிந்தனிப் படைக்கோமகன்றன்னொடும், மயிந்தன் மாமத வாரண மாமென. சில பிரதிகளில் 'சயந்தனக்கொரு சார்வென்த் தகுதியாற் சமைந்த' என்று மூன்றும் அடி உள்ளது. (727)

16.—குமுதன் சேனையோடு வருதல்.

கறங்கு போல்வன காற்றினுங் கூற்றினுங் கடிய
பிறங்கு தெண்டிரைக் கடல்புடை பெயர்ந்தெனப் பெயர்வ
மறங்கொள் வானர [1]மொன்பது கோடியெண் வகுத்த
திறங்கொள் வெஞ்சினப் படைகொடு குமுதனுஞ் சேர்ந்தான்.

(இ - ள்.) குமுதனும்—,—கறங்கு போல்வன - காற்றாடிபோற் செல்வனவும், காற்றின்உம் கூற்றின்உம் கடிய-காற்றைக் காட்டிலும் வேகமுடையனவும் யமனைப்பார்க்கிலும் கொடுமையுடையனவும், பிறங்கு தெள் திரை கடல் புடை பெயர்ந்து என பெயர்வ - விளங்குகின்ற தெளிவான அலைகளையுடைய சமுத்திரம் இடம் விட்டுப் பெயர்ந்தாற்போல் பெயர்ந்துசெல்வனவும், ஒன்பது கோடி எண் வகுத்த - ஒன்பதுகோடியென்று கணக்கிடப்பட்டனவுமான, திறம் கொள் வெம் சினம் மறம் கொள் வானரம் படைகொடு-வலிமை மிக்க கடுங்கோபத்தைக் கொண்ட பராக்கிரமமுடைய வானரசேனையை உடன்கொண்டு, சேர்ந்தான்—; (எ - று.)

கறங்கு - (ஆகாயத்தில்) சுழன்றுசெல்வதெனக்காரணக்குறி. கடிய - இரட்டுறமொழிதல்; காற்றினுங்கடிய, கூற்றினுங்கடிய எனத் தனித்தனி இயைத்துப் பொருள் காண்க. பி - ம்:—[1]ஒன்பது கோடியின். முதலடியில் 'கறங்குபோலவன்' எனவும் படிப்பர். (728)

17.—பதுமுகன் சேனையோடு வருதல்.

[1] ஏழி னேழுநூ ருயிர கோடியென் றிசைந்த
பாழி நன்னெடுந் [2] தோள்கிளர் படைகொண்டு பரவை
[3] ஊழி பேரினு முலைவில னுலகினி லுயர்ந்த
பூழி விண்புகப் பதுமுக னென்பவன் புகுந்தான்.

(இ - ள்.) ஊழி பரவை பேரின்உம் உலைவு இலன் - கற்பாந்த காலத்திற் கடல் பொங்கி(த் தன் நிலையைவிட்டு)ப் பெயர்ந்து வந்தாலும் அழிவில்லாதவனாகிய, பதுமுகன் என்பவன்—,—ஏழின் ஏழு நூறுயிரகோடி என்று இசைந்த - நாற்பத்தொன்பதினாயிரகோடிக் கணக்காகப் பொருந்திய, பாழி நல் நெடுந் தோள்கிளர் படை கொண்டு-வலிமையையுடைய அழகிய நீண்ட தோள்களோடு விளங்கு கின்ற வானரசேனையை உடன்கொண்டு,—உலகினில் உயர்ந்த பூழி விண் புக - பூமியினின்று உயரவெழுந்தபுழுதி ஆகாயத்திற் செல் லும்படி, புகுந்தான் - வந்து சேர்ந்தான்; (எ - று.)

ஏழின் ஏழு - ஏழினாற்பெருக்கிய ஏழு எனப் பண்புத்தொகை: ஏழோடு சேர்ந்த ஏழு [அதாவது - பதினான்கு] என உம்மைத் தொகையாகவுங் கொள்ளலாம். பரவையூழிபேரினும் உலைவிலன் - பிரளய காலத்திலுஞ் சாவில்லாதவன். [3] 'ஊழிபேரினுமுலைவில' என்றுபாடமானபோது, படைக்குஅடைமொழியாம். பதுமுகன் = பத்மமுகன். இச்செய்யுள் சில பிரதிகளில் இல்லை. பி - ம்:—[1] ஏழும். [2] தோளகன், தோளினர், தோளவன். (729)

18.—இடபன் சேனையோடு வருதல்.

ஏழு மேழுமென் [1] றுரைக்கின்ற வுலகங்க ளெவையும்
தாழுங் காலத்துந் தாழ்விலாத் தடவரைக் குலங்கள்
சூழுந் தோற்றத்த [2] வலிகொள்தொள் ளாயிர கோடிப்
பாழி வெம்[3] புயத் தரியொடு [4] மிடபனும் படர்ந்தான்.

(இ - ள்.) இடபனும்—,—ஏழ்உம் ஏழ்உம்என்றுஉரைக்கின்ற உலகங்கள் எவைஉம் - பதினான்கென்று சொல்லப்பட்ட எல்லா வுலகங்களும், தாழும் காலத்துஉம் - அழிகின்ற கற்பாந்தகாலத் திலும், தாழ்வு இலா - அழிதலில்லாத, தட வரை குலங்கள் - பெரிய பர்வதங்களின் வருக்கங்கள், சூழும் - சூழ்ந்திருப்பது போன்ற, தோற்றத்த - தோற்றமுடையனவான, வலி கொள் - வலிமையைக்கொண்டுள்ள, பாழி வெம் புயத்து - வலிய கொடிய தோள்களோடுகூடிய, தொள்ளாயிரகோடி அரியொடுஉம் - தொள்ளா யிரக்கோடிக்கணக்கான வானரசேனையோடும், படர்ந்தான் - வந்து சேர்ந்தான்; (எ - று.)

உலகங்களெல்லாம் அழியும் பிரளயகாலத்திலும் அழியாது நிற்கும் மலைகளுண்டாயின் அம்மலைகளே அழியாத தன்மையுள்ள இவ்வானரசேனைக்கு ஒப்பாகு மென் இல்பொருளுவமை கூறினர். பி - ம்:—[1] இசைக்கின்ற. [2] தோளினர், வலியதோள், வலிகெழு,

[3] பிலத்து, பெலத்து. [4] இடம்பனும். 'இரங்கனும்படர்ந்தான்' என்ற பாடத்திற்கு (ஸிம்ஹம் - சிங்கம், ஸம்ஹாரம் - சங்காரம் என வருதல்போல) ரம்ஹன் என்ற வடமொழி இரங்கனெனத் திரிந்து வந்ததாகக் கொள்க. (730)

19.—தீர்க்கபாதன் விநதன் சரபன் இவர்கள் சேனையோடு வருதல்.

தீர்க்க பா தனும் [1] வினதனுஞ் சரபனுந் [2] திரைக்கும்
[3] மாற்க ருங்கடற் குயர்ந்துள மைம்முகத் தனிகம்
ஆர்க்கு மெண்ணருங் கோடிகொண் டண்டமும் புறமும்
பேர்க்கும் பூழியின் மறைதர முறையினிற் புகுந்தார்.

(இ - ள்.) தீர்க்கபாதனும்—, வினதனும்—, சரபனும்—, —திரைக்கும் மால் கருங் கடற்கு உயர்ந்துஉள - அலையெறிகிற பெரியகருமையான சமுத்திரத்தைக்காட்டிலும் பெருந்தோற்றத்தையுடையனவான, ஆர்க்கும் எண் அரும் - எத்திறத்தார்க்கும் எண்ணிக்கணக்கிடமுடியாத, மை முகத்து அனிகம் கோடி கொண்டு - கறுத்தமுகமுள்ள கோடிக்கணக்கான வானரசைனியத்தைஉடன் கொண்டு, அண்டம்உம் புறம்உம் போர்க்கும்பூழியின் மறைதர - உலகவுருண்டையின் உள்ளும் புறமும் மேலெழுந்து மூடிக்கொள்ளும் புழுதியினல்மறையும்படி, முறையினில் புகுந்தார் - ஒருவர்பின் ஒருவராக வந்து சேர்ந்தார்கள்; (எ - று.)

தீர்க்கபாதன்-நீண்டகாலுடையவன். விநதன் - மிகவும் வணக்கமுடையவன். சரபன் - சரபம்போன்ற பராக்கிரமமுள்ளவன்; (சரபம் - எண்காற்புள்.) இவன் பர்ஜ்ஜந்ய தேவதையின் குமாரன்: (பர்ஜ்ஜந்ய தேவதை - மேகத்திற்குஉரிய கடவுள்.) மைம் முகத்தனிகம் - கருங்குரங்குகளின் சேனை. 'ஆர்க்குமெண்ணருங்கோடி' என்பதற்கு - ஆரவாரிக்கின்ற எண்ணமுடியாத [பல] கோடிக்கணக்கான என்றும் உரைக்கலாம். பி - ம்:—[1] அரம்பனும் வினதனும், வினதனும் சாம்பனும், சாம்பனும் வினதனும், ஆம்பனும் வினதனும். [2] திறங்கொள். [3] மாற்கருங்கடல்வந்தென, ஆர்க்கருங்கடற் குயர்ந்துள. இச்செய்யுள் முன்னும், முன்செய்யுள் இங்குமாகச் சில பிரதிகளிற் காணப்படுகின்றன. (731)

20.—அனுமான் சேனையோடு வருதல்.

[1] கையஞ் சாசர முடையவக் கடவுளைக் [2] கண்டும்
மெய்யஞ் சாதவன் மாதிரஞ் சிறிதென விரிந்த
வையஞ் [3] சாய்வரத் திரிதரு [4] வானர சேனை
ஐயஞ் சாயிர கோடிகொண் டனுமன்வந் தடைந்தான்.

(இ - ள்.) அம் கை சாசரம் உடைய அ கடவுளைகண்டுஉம் மெய் அஞ்சாதவன் - அழகிய ஆயிரங்கிரணங்களையுடைய அந்தச்சூரிய பகவானைக் கண்டும் உடம்பில் அச்சங்கொள்ளாதவனான, அனுமன் - அநுமான்,—மாதிரம் சிறிது என விரிந்த - திக்கினிடம்முழு

வதும் சிறிதென்னும்படி பரவியுள்ளனவான, கையம் சாய்வரம் திரிதரு - கிலவுலகம் ஒருபுறமாகச் சாயும்படி சஞ்சரிக்கின்ற, ஐ அஞ்சு ஆயிரகோடி வானரசேனை கொண்டு - இருபத்தையாயிரங் கோடிக் கணக்கான வானரசேனையை உடன்கொண்டு, வந்து அடைந்தான்—; (எ - று.)—இச்செய்யுள் - திரிபு என்னுஞ்சொல் லணி.

கை = கரம்; கரம் - கிரணம். சூரியன் ஆயிரங்கிரணங்களையுடை யவனாதலால், 'கையஞ் சாசரமுடைய அக்கடவுள்' எனப்பட்டான். சாசரம் - ஸாஹஸ்ர மென்ற வடசொல்லின் சிதைவு. அக்கடவுள், அ்- உலகறிசுட்டு. அநுமான் பிறந்தவுடனே இளஞ்சூரியனைக் கனிந்தபழமென்று கருதிச் சிறிதும் அஞ்சாது பிடிக்கப் பாய்ந்தவ னாதலால், அவனை 'அக்கடவுளைக் கண்டு மெய்யஞ்சாதவன்' என்றார். பூமியின் எந்தப்பகுதியில் இவ்வானரசேனை செல்கின்றதோ அந்தப் பகுதி மிக்கபாரத்தாற் சாய்வதாயிற்றென்க. பி - ம்:—[1]கையஞ்சா யுதம், கையஞ்சார்சரம். [2]காணமெய்யஞ்சாதன. [3]சாய்ந்த, சாய்வுற. [4]வயநெடுஞ், வானரச். (732)

21.—நளன் சேனையோடு வருதல்.

நொய்திற் கூடிய சேனைநா றுயிர கோடி
எய்தத் தேவரு மென்கொலோ [1]முடிவென்ப தெண்ண
மையற் சிந்தையா லந்தகன் [2]மறுக்குற்று மயங்கத்
தெய்வத் தச்சன்மெய்த் திருநெடுங் காதலன் சேர்ந்தான்.

(இ - ள்.) தெய்வத் தச்சன் மெய் திருநெடுங்காதலன் - தேவ சிற்பியாகிய விசுவகர்மாவினது உண்மையுள்ள அழகுமிக்க குமார னாகிய நளனென்பவன்,—தேவர்உம் முடிவு என்கொல்ஓ என்பது எண்ண - தேவர்களும் '(இச்சேனையின்) எல்லை யாதோ?' என்று உணரமுடியாமற்சிந்தித்துக் கொண்டிருக்கவும், அந்தகன் மையல் சிந்தையால் மறுக்குற்று மயங்க - யமனும் (இதனைக் கண்டதனா லாகிய) பிரமைகொண்ட மனத்தினாற் கலக்கங்கொண்டு திகைக்கவும், நொய்தின் கூடிய நூறுஉயிரகோடி சேனை எய்த - விரைவில் திரண்ட லக்ஷகோடிக்கணக்கான வானரசேனை (தன்னுடனே) வர, சேர்ந் தான்—; (எ - று.)

இனி, இரண்டாமடிக்கு - 'இதன் முடிவு என்னகுமோ?' என்று தேவர்கள் சிந்திக்க என்று உரைப்பாருமுளர். அந்தகன் - (பிராணி கட்கு) அந்தத்தைச் செய்பவனென யமனுக்குக் காரணக்குறி. தச்சன் - தக்ஷன்; வடசொல். நளன் - தெய்வத்தச்சனான விசுவகர் மாவின் மகனாய் அவனது அமிசமாகப் பிறந்தஒருவானரவீரன்: தன் கையால் நீரில் எதைப்போட்டாலும் அது மிதக்கும்படி வரம்பெற்ற வன். பி - ம்:—[1]முடிவென்பதென்ன, முடிவென்பதுன்ன. [2]மறு குற்றுமயங்க, மறுகுறமயங்க, மறுக்குறமயங்க. இச்செய்யுள் சில பிரதிகளிற் காணப்படவில்லை. (733)

22.—கும்பன் சங்கன் முதலியோர் சேனையோடு வருதல்.

கும்ப னுங்[1] குலச் சங்கனு முதலினர் [2] குரங்கின்
[3] தம்பெ ரும்படைத் தலைவர்கள் தரவந்த தானை
இம்பர் நின்றவர்க் கெண்ணரி [4] திராகவ னுவத்து
[5] அம்பெ னுந்துணைக் குரிய[6]மற் றுரைப்பரி தளவே.

(இ - ள்.) கும்பனும்—, குலம் சங்கன்உம் - சிறந்தசங்கனென்பவனும், முதலினர் - முதலானவர்களாகிய, குரங்கின் தம் பெரும் படை தலைவர்கள் - தமது பெரிய வானரசேனைத்தலைவர்கள், தர - (தம்முடன் திரட்டிக்கொண்டு) வர, வந்த—, தானை - வானரசேனையானது,—இம்பர் நின்றவர்க்கு எண் அரிது - இவ்வுலகத்திலுள்ளார்க்குக் கணக்கிடமுடியாதது; இராகவன் ஆவத்து அம்புஎனும் துணைக்கு உரிய(து) - இராமபிரானது தூணீரத்திலுள்ள அம்புகளினளவாமென்று சொல்லத்தக்க அளவுடையது; (அன்றி), அளவு மற்று உரைப்பு அரிது-அச்சேனையினளவைப்பற்றி வேறுவகையாகக் கூறுதல் அருமையானது; (எ - று.)

இராமபிரானது அட்சயதூணீரத்தில் அம்புகள் அளவில்லாது நிறைந்திருப்பதுபோல, கும்பன் சங்கன் முதலியோரது சேனையிலும் வானரங்கள் அளவற்று நிறைந்திருந்தன வென்பதாம். ஆவம் - அம்புப்புட்டில். உரிய = உரியது. 'முதலினர்' என்றதனால் வன்னி முதலாயினோரைக் கொள்க. பி - ம்:—[1]குலச்சாம்பனும் வன்னியுங், குலச்சரபனும்.... [2]குரக்கின். [3]தம்பெரும்படைத்தலைவர்களாய் வந்ததானை. [4]இராகவனுமத்து. [5]அம்பெனுந்துணைக்குரியர். [6]மாறுரைப்பரிதே, மற்றளப்பரிதளவே. (734)

23.—இதுமுதல் மூன்று கவிகள்-வானரசேனைகளின் சிறப்பைத் தெரிவிப்பன.

தோயி னுழியோ ரேழுநீர் சுவறிவெண் துகளாம்
சாயி னண்டமு மேருவு மொருங்குடன் [1]சாயும்
ஏயின் மண்டல [2]மெள்ளிட விடமின்றி [3]யிரியும்
காயின் வெங்கனற் கடவுளு மிரவியுங் [4]கரியும்.

(இ - ள்.) (அங்குத்திரண்ட வானரசேனைகள்), தோயின்-அமிழ்ந்து முழுகினால், ஆழி ஒர்ஏழ்உம் - ஏழுமகாசமுத்திரங்களும், நீர் சுவறி வெள் துகள் ஆம்-நீர்வற்றி வெண்புழுதியாய்விடும்; சாயின் - ஒருபுறஞ்சாய்ந்தால், அண்டம்உம் - உலகவுருண்டையும், மேருஉம் - மகாமேருகிரியும், ஒருங்கு உடன் சாயும் - ஒருசேரஉடனே (அந்தப் பக்கமாகச்) சாய்ந்துவிடும்; ஏயின் - எழுந்துசஞ்சரித்தால், மண்தலம் - இந்தப்பூமியின் இடமானது, எள் இட இடம்இன்றி இரியும்- ஓரெள் இடுதற்கும் இடமில்லாமற் போம்; காயின் - கோபங்கொள்ளுமாயின், வெம் கனல் கடவுள்உம் - கொடிய அக்கினியும், இரவிஉம்- சூரியனும், கரியும் - தீயும்; (எ - று.)

இச்செய்யுள் - வானரசேனையின் மிகுதியையும், பெருவலிமையையும் பற்றிய தொடர்புயர்வுநவிற்சி: அடுத்த இரண்டு

செய்யுள்களும் இவ்வாறே. இச்செய்யுளில் எந்த அடியை எங்கே கூட்டினாலும் பொருளும் ஓசையும் வேறுபடாமையால், இது - பொருளிசைமாறு அடிமறிமாற்றுப்பொருள்கோளாம்; மேல் 25 - ஆங் கவியிலும்இது காண்க. பி - ம்:—[1] சரியும். [2] எண்ணிடை... [3] விரியும். [4] காயும். (735)

24. எண்ணில் நான்முக ரெழுபதி னுயிரர்க் [1] கியலா
உண்ணி னண்டங்க ளோர்பிடி [2] யுண்ணவு முதவா
கண்ணி [3] னோக்குறிற் [4] கண்ணுத லானையுங் கடக்கும்
மண்ணின் [5] மேல்வந்த [6] வானரச் சேனையின் வரம்பே.

(இ - ள்.) மண்ணின்மேல் வந்த வானரம் சேனையின் வரம்பு - பூமியின்மீது ஒருங்குதிரண்டுவந்த வானரசேனையின் பேரளவானது, —எண்ணில் நான்முகர் எழுபதினுயிரர்க்கு இயலா - எண்ணிக்கணக் கிடத் தொடங்கினால் எழுபதினாயிரம் பிரமர்களுக்கும் முடியாது;உண் ணின் அண்டங்கள் ஓர் பிடி உண்ணஉம் உதவா - (இவ்வானரசேனை கள்) உண்ணத்தொடங்கினால் எல்லா அண்ட கோளங்களும் தனித் தனி ஒவ்வொருபிடியளவாக உண்ணவும் போதமாட்டாது; கண் ணின் நோக்குறின் கண் நுதலானைஉம் கடக்கும் - கண்ணினாற் பார்த் தால் நெருப்புக்கண்ணை நெற்றியிலுடையவனாகிய சிவபெருமானையும் சயிக்கும்; (எ-று.)

இவற்றைப்படைத்த பிரமன்போன்ற எழுபதினாயிரம் பிரமர்கள் ஒருங்கே திரண்டுவந்தாலும் இச்சேனையை அளவிடமுடியா தென் பது, முதலடியிற் கூறிய பொருள். நெருப்புக்கண்ணை நெற்றியி லுடைய அழித்தற்கடவுளாகிய சிவபிரானையும் தமது கண் பார்வை யாற் சயிக்குமென வானரசேனையின் பேராற்றல் மூன்றுமடியில் வெளியாம். [4]'கண்ணுதலானுக்குங் கதுவா' என்ற பாடத்திற்கு - முக்கண்ணனை சிவபெருமானுக்கும் எண்ணிக்கணக்கிடுதற்கு விளங்கமாட்டாது என்று பொருள். பி - ம்:—[1] இயலும், இசையும். [2] அள்ளவும். [3] நோக்கிடில். [5] மேலவாம். [6] வானரத்தானையின் வரவே. முதலடி, 'எண்ணில் நான்முகரெழுபது கோடியர்க்கியலா' என்று சில பிரதிகளில் உள்ளது. (736)

25. ஒடிக்கு மேல்வட மேருவை வேரொடு மொடிக்கும்
இடிக்கு மேல்நெடு [1] வானக முகட்டையு மிடிக்கும்
பிடிக்கு மேற் [2] பெருங் காற்றையுங் கூற்றையும் பிடிக்கும்
குடிக்கு மேற்கட லேழையுங் [3] குடங்கையிற் குடிக்கும்.

(இ - ள்.) (அவ்வானரசேனை), - ஒடிக்கும்ஏல் வட மேருவை வேரொடுஉம் ஒடிக்கும் - ஒடிக்கவேண்டுமென்று விரும்பினால் வடக்கி லுள்ள மேருபர்வதத்தையும் வேரோடு ஒடித்துவிடும்; இடிக்கும் ஏல் நெடு வானக முகட்டைஉம் இடிக்கும் - இடிக்கவேண்டுமென்று விரும்பினால் பெரிய ஆகாசத்தின் மேல்முகட்டையும் இடித்து விடும்; பிடிக்கும் ஏல் பெருங் காற்றைஉம் கூற்றைஉம் பிடிக்கும் - (கையினாற்) பிடிக்கவேண்டுமென்று விரும்பினால் பெரிய காற்றையும் யமனையும் பிடித்துவிடும், குடிக்கும் ஏல் கடல் ஏழைஉம் குடங்கையின்

குடிக்கும் - பருகவேண்டுமென்று விரும்பினல் ஏழு கடல்களையும் உள்ளங்கையால் முகந்து குடித்துவிடும்; (எ - று.)

பிறரெவராலுஞ் செய்யவொண்ணுத பெருங்காரியத்தையும் எளிதிற் செய்துமுடிக்கும் இவ்வானரசேனை யென்றவாறு. பி - ம்:— [1]வான்முகடெட்டிடையும். [2]கருங். [3]வறள்படக்குடிக்கும், குடங்கையிற் கொள்ளும். (737)

26.—இவ்வாறு வானரசேனைத்தலைவர் எல்லோரும் திரளுதல்.

ஆறு பத்தெழு [1]கோடியாம் [2]வானரர்க் கதிபர்
கூறு [3]திக்கினுக் கப்புறங் குப்புறற் குரியார்
மாறில் கொற்றவ னினைத்தன [4]முடிக்குறும் [5]வலியர்
[6]ஊறு [7]மிப்பெருஞ் சேனைகொண் [8]டெளிதின்வந் துற்றார்.

(இ - ள்.) கூறு திக்கினுக்கு அப்புறம் குப்புறற்கு உரியார் - (நான்காகச்) சொல்லப்பட்ட திக்குக்களுக்கு அப்புறத்திலும் குதிக்கத்தக்க வல்லமையுள்ளவர்களும், மாறு இல் கொற்றவன் நினைத்தன முடிக்குறும் வலியர் - ஒப்பில்லாத தங்களரசனான சுக்கிரீவன் நினைத்த காரியங்களை உடனே செய்துமுடிக்கும் மனவுறுதியுடையவர்களுமாகிய, ஆறுபத்து எழுகோடி ஆம் வானரர்க்கு அதிபர் - அறுபத்தேழுகோடிக்கணக்கான வானரசேனைத் தலைவர்,—ஊறும் இ பெருஞ் சேனை கொண்டு - மேன்மேற் பெருகுகின்ற இந்தப் பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு, எளிதின் வந்து உற்றார் - எளிதில் வந்து சேர்ந்தார்கள்; (எ - று.)

இவ்வாறு அறுபத்தேழுகோடி வானரசேனைத்தலைவர்கள் சுக்கிரீவனது தூதுவர் வந்துசொல்லியவுடனே தம் சேனைகளைத் திரட்டிக்கொண்டு வந்துசேர்ந்தனரென்க. இரண்டாமடியால் அச்சேனைத்தலைவரது போராற்றலும், மூன்றாமடியால் அவர்கள் தங்கள் தலைவனிடத்துக் கீழ்ப்படிந்து நடக்குந்தன்மையும் கூறப்பட்டன. பி - ம்:—[1]கோடியர். [2]வானரத்தலைவர், வானரத்ததிபர். [3]திக்குறுத்து, திக்இறுத்து. [4]நினைக்குறும், நினைத்துறும். [5]மனத்தர், பலத்தர். [6]ஈறில். [7]மெய்ப். [8]எளிதினில். (738)

27.—வானரசேனாதிபதிகள் வந்து சுக்கிரீவனை வணங்குதல்.

ஏழு மா [1]கடற் பரப்பினும் பரப்பென [2]விசைப்பச்
சூழும் வானரப் படையொ [3]டவ் வீரருந் [4]துவன்றி
ஆழி [5]மாபரித் தேரவன் காதல [6]னடிகள்
வாழி வாழியென் [7]றுரைத்தலர் தூவினர் [8]வணங்கி.

(இ - ள்.) அ வீரர்உம் - அந்த வானரசேனைத்தலைவர்களும்,— ஏழு மா கடல் பரப்பின்உம் - ஏழு சமுத்திரங்களின் விஸ்தீர்ணத்தைக்காட்டிலும், பரப்பு என இசைப்ப - பரவுதலுடையதென்று (கண்டோர்யாவரும்) கூறும்படி, சூழும் வானரப் படையொடு - சூழ்ந்துள்ள வானரசேனையோடு, துவன்றி - நெருங்கிவந்து, ஆழி மா பரி தேரவன் காதலன் அடிகள் வாழி வாழி என்று உரைத்து - ஒற்றைச்சக்கரத்தையும் சிறந்த குதிரைகளையுமுடைய

தேரையுடையவனாகிய சூரியனது குமாரனான சுக்கிரீவனுடைய பாதங்கள் நன்றாக வாழ்க' என்று வாழ்த்தி, வணங்கி - சேவித்து, அலர் தூவினர் - மலர்களைத் தூவினார்கள்; (எ - று.)

சூரியனது தேர் - காலத்தின் வடிவமான ஒற்றைச்சக்கரத்தையும், காயத்ரீ உஷ்ணிக் அநுஷ்டுப் ப்ருஹதீ பங்க்தி த்ரிஷ்டுப் ஜகதீ என்ற ஏழுசந்தசுகளாகிய ஏழு குதிரைகளையுமுடைய தென்பது நூற்கொள்கை. தமது பொங்கும்பரிவினாலே வானரப்படைத் தலைவர் தங்கள் தலைவனது பாதங்களை வணங்கி மலர்சொரிந்து வாழ்த்தின ரென்க. வாழி வாழி என்ற அடுக்கு - அன்பின்மிகுதி பற்றியது. பி-ம்:—[1] கடற்கிரட்டியென்றியாவரும். [2] இசைக்க, இசைக்கும். [3] அத்தலைவரும். [4] தோன்றி. [5] மாப்பெருந்தேரவன், மாப்பரித்தேரவன், தேரவனரும்பெரும், ஒன்றுடையிரவிதன். [6] அடியில். [7] உரைத்தனர் தூதினர். [8] வணங்க. (739)

28.—சுக்கிரீவன் இராமபிரானிடத்துச்சென்று, வந்துள்ள சேனையைக் காணுமாறு வேண்டுதல்.

அனைய தாகிய சேனைவந் திறுத்தலு மருக்கன்
தனைய னொய்தினிற் றயரதன் [1] புதல்வனைச் சார்ந்தான்
[2] நினையு முன்னம்வந் தடைந்தது நின்பெருஞ் சேனை
வினையின் கூற்றுவ கண்டருள் நீயென [3] விளம்பும்.

(இ - ள்.) அனையது ஆகிய சேனை வந்து இறுத்தலும் - அப்படிப்பட்டதான வானரசேனை வந்து தங்கிய வளவிலே,—அருக்கன் தனையன் - சூரிய குமாரனான சுக்கிரீவன்,—தயரதன் புதல்வனை நொய்தினில் சார்ந்தான் - தசரதசக்கரவர்த்தியின் குமாரனான இராமபிரானை விரைவாகச் சென்று சேர்ந்து,—'வினையின் கூற்றுவ - தீவினைகட்கு யமன்போன்றவனே! நினையும் முன்னம் - நினைப்பதற்கு முன்னமே [வெகுவிரைவில்], நின் பெருஞ் சேனை - நினது பெரிய சேனையானது, வந்து அடைந்தது - வந்து சேர்ந்தது; நீ—, கண்டருள் - (அதனைக்) காண்பாயாக,' என விளம்பும் - என்று சொல்லலானான்; (எ - று.)

தயரதன் = தசரதன்: இது, தச ரத என்று பிரிந்து, பத்துத்திக்கிலும் தடையின்றிச்செல்லுந் தேரையுடையா னென்றுபொருள்படும்: இதனால், எங்குந் தடையின்றிச்செல்லவல்லவனென்றதாயிற்று: இத்தன்மை, இந்திரனைவலியழித்த சம்பராசுரனை வதைத்தற்பொருட்டு அவன் மாயையினாற் சென்ற இடமெல்லாம் விடாதுதொடர்ந்து சென்றதனால் விளங்கியது. சுக்கிரீவன் தன்னை இராமபிரானுக்கு அடிமையாக நினைத்திருத்தலால், தனது சேனையை 'நின் சேனை' என்றான். வினையின் கூற்றுவன் - (தன்னை யடைந்தாரது) இருவினைகளைத் தொலைத்து நற்கதிபெறுவிப்பவனென்றபடி. பி - ம்:—[1] தனையனை. [2] நினைவின். [3] விளம்ப. (740)

29.—இராமபிரான் சேனையைக் காணுமாறு மலைச்சிகரத்திலேறலும், சுக்கிரீவன் அச்சேனையினிடம் மீண்டுசெல்லலும்.

ஐய னும்முவந் [1]தகமென முகமலர்ந் தருளித்
தைய லாள்வரக் கண்டன னாமெனத் தளிர்ப்பான்
எய்தி னானங்கோர் [2]நெடுவரைச் சிகரத்தி னிருக்கை
வெய்ய வன்மகன் பெயர்த்துமச் [3]சேனையின் மீண்டான்.

(இ - ள்.) ஐயன்உம் - இராமபிரானும்,—உவந்து - மகிழ்ந்து, அகம் என முகம் மலர்ந்து அருளி - (தனது) மனம்போலவே முகமும் மலரப்பெற்று [உள்ளும் புறமுங் களித்து], தையலாள் வர கண்டனன் ஆம் என தளிர்ப்பான் - சீதாபிராட்டி வரக்கண்டவன்போல வாட்டம் நீங்கினவனும், (வந்தசேனையைக் காணும்பொருட்டு), அங்கு ஓர் நெடு வரைசிகரத்தின் இருக்கை எய்தினான் - அங்கேயுள்ள ஒரு பெரியமலை யினது உச்சியினிடத்தை யடைந்தான்; வெய்யவன் மகன் - சூரிய குமாரனாகிய சுக்கிரீவன், பெயர்த்தும் அ சேனையில் மீண்டான் - மறு படியும் அந்தச் சேனையினிடத்துத் திரும்பிச்சென்றான்; (எ - று.)

இரண்டுவந்த வானரசேனைகள் சீதையை நாடியறிந்துமீட்ப தற்குத்தக்க கருவி யாதலால், அச்சேனை திரண்டதைக் கேட்டவுடன் சீதையை மீட்டலாகிய காரியம் நிச்சயமாய் முடியுமென்ற உறுதி பற்றி, வானரசேனையைக் கண்ட இராமன் சீதையை நேரிற் கண்டது போலவே மகிழலாயினன். தளிர்த்தல்-சீதையைப்பிரிந்த சோகத்தால் வாட்டமடைந்த உயிர் அவ்வாட்டம் நீங்கித் தழைத்தல். ஐயனும் முவந்து-விரித்தல். பி-ம்:—[1] ஆமென. [2]சிகரத்தினெடுவரையிருக்கை, சிகரத்தினெடுவரையிருக்க. [3] தானையின். (741)

30.—சுக்கிரீவன் சேனையை ஒழுங்காகச் சிறிது தூரஞ்செல்லக் கட்டளையிட்டு, படைத்தலைவருடன் ஸ்ரீராமனிடம் வருதல்.

அஞ்சொ டையிரண் டியோசனை [1]யகலத்த தாகிச்
செஞ்செ வேவட திசைநின்று தென்றிசை செல்ல
எஞ்ச லில்பெருஞ் சேனையை யெழுகென வேவி
வெஞ்சி னப்படை வீரரை யுடன்கொண்டு மீண்டான்.

(இ - ள்.) (சுக்கிரீவன்), 'அஞ்சொடு ஐ இரண்டு யோசனை அக லத்தது ஆகி - பதினைந்துயோசனை அகலமுடையதாய், வடதிசை நின்று தென்திசை செஞ்செவே செல்ல - வடக்குத் திக்கிலிருந்து தெற்குத்திக்கிற்குச்செவ்வையாக [நேரே] செல்லும்படி, எழுக - புற ப்படுக', என - என்று, எஞ்சல் இல் பெருஞ் சேனையை ஏவி - குறை வில்லாத பெரிய வானரசேனைக்குக் கட்டளையிட்டு, வெம் சினம் படை வீரரை உடன்கொண்டு - கடுங்கோபமுடைய வானரப்படைத்தலை வரை(த் தன்னுடன்) அழைத்துக்கொண்டு, மீண்டான் - (இராமபிரா னிடம்) திரும்பிவந்தான்; (எ - று.)

இராமபிரானுக்குச் சேனையின் தோற்றத்தை நன்கு தெரிவித் தற்குச் சுக்கிரீவன் வடக்கினின்று தெற்காகச்சிறிதுதூரம் சென்று

திரும்பும்படி சேனைக்குக்கட்டளையிட்டன னென்க. செஞ்செவே - மிகச்செவ்வையாக. எழுகென - தொகுத்தல். யோசனை செல்ல எழுக என்று இயைத்துஉரைப்பினுமாம். பி - ம்:—[1] அகலமதாகி, அகலத்ததாக, அகலமதாக. (742)

31.—இராமபிரானுக்குச் சுக்கிரீவன் சேனைத்தலைவரைக் காட்டுதலும், சேனைகள் செல்லுதலும்.

மீண்டி ராமனை யடைந்திகல் [1] வென்றிவேல் வீர
காண்டி நீயென வரன்முறை [2] தெரிவுறக் காட்டி
ஆண்டி ருந்தன [3] னார்த்துளைத் தெழுந்ததை யன்றே
[4] ஈண்டு சேனைபா லெறிகடல் நெறிபடர்ந் தென்ன.

(இ - ள்.) (சுக்கிரீவன்),—மீண்டு இராமனை அடைந்து - திரும்பவும் இராமபிரானைச்சேர்ந்து, (அவனைநோக்கி), 'இகல் வென்றி வேல் வீர - பராக்கிரமத்தையும் வெற்றியையுமுடைய வேலாயுதத்தையேந்திய வீரனே! நீ காண்டி - நீ காண்பாயாக,' என - என்று, வரல் முறை தெரிவுற காட்டி - (சேனைத்தலைவர்களை) முறைமையாகத் தெரியும்படி (அவனுக்குக்) காண்பித்து, ஆண்டு இருந்தனன் - அவ்விடத்தில் (ஸ்ரீராமனருகில்) இருந்தனன்; (அப்போது), ஈண்டு சேனை - திரண்ட அந்த வானரசேனையானது, எறி பால் கடல் நெறி படர்ந்து என்ன - அலையெறிகின்ற பாற்கடலானது வழியிற் சென்றதுபோல, ஆர்த்து உளைத்து எழுந்தது - பேராரவாரஞ் செய்துகொண்டு புறப்பட்டது; (எ - று.)—ஐ - சாரியை. அன்று, ஏ - ஈற்றசை.

சுக்கிரீவன் சேனைத்தலைவர்களுடைய வரலாறுகளை இராமபிரானுக்குச் செவ்வையாக விளங்கச் சொல்லினு னென்பார், 'வரன்முறை தெரிவுறக்காட்டி' என்றார். ஆர்த்து உளைத்து - ஒருபொருட் பன்மொழி. வானரசேனைக்குப் பாற்கடலுவமை - வெண்ணிறத்திற்கும் பரப்பிற்கும் அணியணியாகச் செல்வதற்கும் பேராரவாரஞ் செய்தற்குமென்க. தற்குறிப்பேற்றவணி; இல்பொருளுவமையணி யென்பாரு முளர். 'ஈண்டுசேனையா லெறிகடனெறி படர்ந்தென்ன' என்ற பாடத்திற்கு, எறிகடலானது சேனையின் வடிவத்தைக் கொண்டு நெறிபடர்ந்தாற்போல எனப் பொருள் காண்க. பி- ம்:—[1] வீரருள்வீர, வென்றிவேல்வீரன். [2] தெரிவெனக். [3] ஆர்த்துவந்து வகையினுடி, ஆதரத்துவகையினுடி, ஆர்த்துருத்தெழுந்ததையன்றே, ஆர்த்தெழுந்திரைத்ததையன்றே. [4] ஈண்டு சேனையால். (743)

32.—அப்பொழுது எழுந்த தூளியின் வருணனை.

எட்டுத் திக்கையு மிருநிலப் பரப்பையு மிமையோர்
வட்ட விண்ணையு மறிகட லனைத்தையு [1] மறையத்
[2] தொட்டு மேலெழுந் தோங்கிய [3] தூளியிற் பூழி
[4] இட்டுச் செம்மிய நிறைகுட மொத்த [5] திவ் வண்டம்.

(இ - ள்.) எட்டுத்திக்கைஉம் - எட்டுத்திக்குகளையும், இரு நிலம் பரப்பைஉம் - பெரியபூமியின் பரந்த இடம்முழுவதையும், இமையோர் வட்டம் விண்ணைஉம் - தேவர்கள் வசிக்கின்ற வட்டவடிவமான

மேலுலகத்தையும், மறிகடல் அனைத்தையும் - அலைகள் மடங்கப் பெற்ற ஏழுகடல்களையும், மறைய - மறையும்படி, (சேனைகள் செல்வதனால்), தொட்டு மேல் எழுந்து ஓங்கிய - (பூமி) தொடங்கி மேலெழுந்து பரந்த, தூளியின் - புழுதியினால்,—இ அண்டம்-இந்த அண்டகோளமானது, பூழி இட்டு செம்மிய நிறைகுடம் ஒத்தது - புழுதியை யிட்டு நிறைந்த பூர்ணகும்பத்தைப்போன்றது; (எ-று.)

புழுதியால் நிறைந்த நிறைகுடத்தைத் தூளியால் நிரம்பிய அண்டகோளத்திற்கு உவமைகூறினர்; தொடர்புயர்வுநவிற்சியை அங்கமாகக்கொண்டு வந்த தன்மைத்தற்குறிப்பேற்றவுவமையணி.

பி - ம்:—[1]மறைப்ப, மறித்த, மறைத்த. [2]ஒட்டமேலெழுந்தோங்கிய, ஒட்டி..., [3]தூளியாம், தூளியின். [4]அட்டிச்செம்பியல், அட்டிச் செம்மிய. [5]அவ். (744)

33.—பெருந்திரளான சேனையின் வருணனை.

அத்தி யொப்பெனி [1]னன்னவை யுணர்ந்தவ ருளரால்
[2]வித்த கர்க்கினி யுரைக்கலா முவமைவே றியாதோ
பத்தி ரட்டி [3]நன் பகலிர [4]வொருவலர் பார்ப்பார்
எத்தி றத்தினு நடுவு [5]கண் டிலர் [6]முடி வெவனோ.

(இ - ள்.) அத்தி ஒப்பு எனின் - (இச்சேனைத்திரளுக்குச்) சமுத்திரங்கள் உவமையாகுமென்போமானால், அன்னவைஉணர்ந்தவர் உளர் - அக்கடல்களினளவை (இவ்வளவென்று) கண்டறிந்தவரும் உள்ளார்; (இச்சேனையின் திரளையோ கண்டறிந்தவர் எவருமில்லை), இனி வித்தகர்க்கு உரைக்கல் ஆம் உவமை வேறு யாதுஓ - இவ்வாறானபின்பு அறிவுடையாரால் (இச்சேனைக்கு) எடுத்துக்கூறத்தகும் உவமை வேறுயாது உளது? [எதுவுமில்லையென்றபடி]; பத்து இரட்டி நல் பகல் இரவு ஒருவலர் பார்ப்பார் - இருபது நாள் நல்ல பகலிலும் இரவிலும் இடைவிடாமற் பார்ப்பவராகிய ராம லக்ஷ்மணர், எ திறத்தின் உம் - எவ்வகையாலும், நடுவு கண்டிலர் - (இச்சேனையின்) நடுவையுங் காணாதவராயினர்; முடிவு எவன் ஓ - (இதன்) முடிவெல்லையைக் காண்பது எவ்வாறோ? (எ - று.)

மகாபுத்திமான்களான ராமலக்ஷ்மணர்கள் இருபதுநாள் அல்லும் பகலும் இடைவிடாமற்பார்த்தும் இச்சேனையின் நடுவெல்லையைக் காணாதவராயினர்; இவ்வாறாக, இனி இதன் முடிவெல்லையைக் காணமுடியுமோ? எனத் தண்டாபூபிகாநியாயமென்னுங் கைமுதிகநியாயந் தோன்றக் கூறியிருப்பது, தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி. அத்தி - அப்தி; வடசொல்: நீர் தங்குமிடம் என்பது பொருள். வித்தகர்க்கு - நான்கனுருபு, கருத்தாப்பொருளில் வந்தது.

பி - ம்:—[1]அன்னதுமளந்தவருளரால், அன்னவையளந்தவருளரார், அன்னதையகழ்ந்தவருளரால், அன்னதை யளந்தறிவோதும். [2]வித்தகர்க்குமீதறைந்திடுமளவுவேறியாதோ, வித்தகர்க்கினியுரைக்கலாம்..., வித்தகர்க்கு மேலறைந்திடும்... [3]நோன்பகல். [4]ஒருவலன் பார்த்தான், ஒருவலர் பார்த்தார். [5]காண்கிலர், கண்டிலன். [6]முடிவென்னோ, முடிவென்னும். (745)

34.—இராமபிரான் லக்ஷ்மணனைநோக்கி ஒன்றுகூறத் தொடங்குதல்.

விண்ணிற் [1]றீம்புன லுலகத்தி னாகரின் [2]வெற்றி
எண்ணிற் [3]றானல தொப்பில னெனநின்ற விராமன்
கண்ணிற் சிந்தையிற் கல்வியின் ஞானத்திற் கருதி
அண்ணற் றம்பியை [4]நோக்கின னுரை [5]செய்வ தானான்.

(இ - ள்.) வெற்றி எண்ணில் - சயிக்குந்திறமைபற்றி ஆலோசித்தால், தான் அலது - தானே தனக்கு உவமையாவதன்றி, விண்ணில் - மேலுலகத்திலும், தீம் புனல் உலகத்தில் - இனிய கடல் சூழ்ந்த நிலவுலகத்திலும், நாகரின் - நாகர்கள் வசிக்கின்ற பாதாள லோகத்திலும், ஒப்பு இலன் என - வேறோருபமானப்பொருளைப் பெறுதவனென்று சொல்லும்படி, நின்ற—, இராமன்—,—கண்ணின் - (தன்) கண்களினாலும், சிந்தையின் - மனத்தினாலும், கல்வியின் - நூலறிவினாலும், ஞானத்தின் - இயற்கையறிவினாலும், அண்ணல் தம்பியை நோக்கினன் - பெருமையையுடைய இளையபெருமாளைப் பார்த்து, உரை செய்வது ஆனான் - (அச்சேனையைப்பற்றிக்) கூறலானான்; (எ-று.)—அதனை, அடுத்த மூன்று கவிகளிற் காண்க.

'தீம்' என்ற உரிச்சொல், உலகத்திற்கு அடைமொழி. திருமால் ஸ்ரீராமனாகத்திருவவதரித்தது இவ்வுலகத்திலேயாதலால், இவ்வடைமொழி ஏற்கும். புனல் - கடலுக்கு இலக்கணை. நாகர் என்ற சொல் - தானியாகுபெயராய்ப் பாதாளலோகத்தை யுணர்த்திற்று: நாகராவார் - படமும் வாலுமுடையராய் மனிதர்போன்ற உருவமும் தெய்வத்தன்மையு முடைய ஒருசர்ப்பசாதியார். பி - ம்:—[1]தென்கடலுலகத்தில். [2]வேறோர், வெற்பின். [3]தன்னலது. [4]நோக்கியென்று, நோக்கிநின்று. [5]செய்வானானன். (746)

35.—இதுமுதல் மூன்றுகவிகள்—ஒருதொடர்; இராமபிரான் வார்த்தை,

[1]அடல்கொண் டோங்கிய சேனைக்கு [2]நாமுநம் மறிவால்
[3]உடல்கண் டோமினி [4]முடிவுள காணுமா றுளதோ
[5]மடல்கொண் டோங்கிய வலங்கலாய் மண்ணிடை மாக்கள்
கடல்கண் டோமென்பர் யாவரே [6]முடிவுறக் கண்டார்.

(இ - ள்.) மடல் கொண்டு ஓங்கிய அலங்கலாய் - இதழ்கள் நிறைந்து சிறந்த மாலையை யணிந்தவனே! நாமும்—, நம் அறிவால் - நமது புத்தியினால், அடல் கொண்டு ஓங்கிய சேனைக்கு உடல் கண்டோம் - வலிமையைப்பெற்றுச் சிறந்துள்ள இவ்வானர சேனையின் சரீரத்தை [நடுவிடத்தை] ஒருவாறு பார்த்தோம்: (அல்லாமல்), இனி உள முடிவு காணும் ஆறு உளதுஓ - இனி (நம்மால் இதற்கு) உள்ள முடிவெல்லையைக் கண்டறியும் வகை தான் உள்ளதோ? மண்ணிடை - இந்நிலவுலகத்தில், மாக்கள் - மனிதர்கள், கடல் கண்டோம் என்பர் - சமுத்திரத்தைப்பார்த்தோமென்று சொல்லுவார்கள்; (அல்லாமல்), முடிவு உற கண்டார் யாவர்ஏ - அக்கடலின் முடிவெல்லையை நன்றாகக் கண்டறிந்தவர் எவர்தாம்? (எ - று.)

சமுத்திரத்தைக்காண்பவர் அதன் சிறு பகுதியாகிய மேல் தோற்றத்தைமாத்திரங்காண்பாரேயன்றி அதன்முடிவெல்லேயைக் காணமாட்டார்கள்: அதுபோலவே, நாமும் இச்சேனசமுத்திரத்தின் சிறுபகுதியாகிய வடிவத்தைமாத்திரம் காண்போமேயன்றி இதன்முடிவெல்லேயைக் காணமுடியா தென்பதாம்: தொடர்முழுதுவமையணி; வடநூலார்பிம்பபிரதிபிம்பபாவந்தோன்றக்கூறப்படாமையால், எடுத்துக்காட்டுவமையணியாகாது என்ப. பி - ம்:—[1] அடல்கண்டு. [2] நாமுனம். [3] இடை. [4] தெரிவுற. [5] மடல்கொண்டோங்கிய வலங்கலான் என்ற பாடம் இராமபிரானென்று பொருள்பட்டு, மேல் 37 - ஆஞ்செய்யுளில், 'என்ன' என்பதற்கு எழுவாயாகத் தொடரும். [6] முழுதுற, முடிவறக். (747)

36. ஈசன் மேனியை யீரைந்து திசைகளை யீண்டிவ்
வாசில் சேனையை யைம்பெரும் பூதத்தை யறிவைப்
பேசும் பேச்சினைச் சமயங்கள் பிணக்குறும் பிணக்கை
வாச மாலையா யாவரே முடிவெண்ண வல்லார்.

(இ - ள்.) வாசம் மாலைமாய் - வாசனையுடையமாலையைத்தரித்தவனே! ஈசன் மேனியை - சருவேசுவரனை எம்பெருமானது திருமேனியையும், ஈர் ஐந்து திசைகளை - பத்துத்திக்குகளையும், ஐம்பெரும் பூதத்தை - பஞ்ச மகாபூதங்களையும், அறிவை - (உலகத்திலுள்ளாரது) நுண்ணறிவையும், பேசும் பேச்சினை - பேசுகின்றபேச்சுக்களையும், சமயங்கள் பிணக்குறும் பிணக்கை - மதங்கள் (ஒன்றோடொன்று) மாறுபடுகின்ற மாறுபாட்டையும், ஈண்டு இ ஆசு இல் சேனையை - திரண்டுள்ள குற்றமற்ற இந்த வானரசேனையையும், யாவரே முடிவு எண்ண வல்லார் - எவர்தாம் முடிவைக் கணக்கிட வல்லவர்? [எவருமில்லையென்றபடி]; (எ - று.)

உபமேயமாகிய சேனையையும் உபமானமாகிய ஈசன்மேனி முதலியவற்றையும் ஒருங்கே ஒருபொதுத்தன்மையைக்கொண்டு முடியுமாறு கூறியது, ஒப்புமைக்கூட்டவணியின்பாற்படும். கடவுள் எங்குமுள ளாதலால், அவனது திருமேனி அளவிட்டு அறிய முடியாது. பத்துத்திசைகளும் எல்லையில்லாமற் பரவியிருத்தலால், அவற்றை இவ்வளவென்றுவரையறுப்பது அசாத்தியம். ஐம்பெரும்பூதங்கள் உலகமுழுவதும் நிரம்பியிருத்தலால், அவற்றிற்கும் ஓரளவில்லை. அறிவு பலரிடத்திலும் புதிதுபுதிதாகநுட்பமாகக் காணப்படுமாதலின், அதற்கும்ஒரெல்லையில்லையாம். ஒருவர் ஒன்று பேசினல் மற்றொருவர் அதன்மேற்பேச இவ்வாறேமேன்மேலும் இடங்கொடுத்துச் செல்லுதலால், பேசும்பேச்சுக்கும் அளவில்லை. "ஒன்றேபொருளெனின் வேறென்ப வேறெனின், அன்றென்ப வாறுசமயத்தார்", "மதிவிகற்பாற் பிணங்குஞ்சமயம் பலபலவாக்கி" என்றபடி மதங்கள் மிகப்பலவாயிருத்தலால், சமயங்கள் பிணக்குறும்பிணக்கும் இவ்வளவுதானென்று வரையறை செய்ய முடியா தென்க. (748)

37. இன்ன சேனையை முடிவுற விருந்திவ ணோக்கிப்
[1] பின்னைக் [2] காரியம் [3] புரிதுமே னுள்பல பெயரும்

[4]உன்னிச் செய்கைமே லொருப்பட லுறுவதே யுறுதி
என்ன வீரனைக் கைதொழு திளையவ [5]னியம்பும்.

(இ - ள்.) இன்ன சேனையை - இந்தப்பெருஞ்சேனையை, இவண் இருந்து முடிவுஉற நோக்கி - இங்கேயிருந்து முழுவதும் நன்றாகப் பார்த்து, பின்னை - அதன்பிறகு, காரியம் புரிதும் ஏல் - (நமது) காரியத்தைச் செய்வோமானால், (இதைப்பார்த்து முடிவதற்குள்), நாள் பல பெயரும் - பலநாள்கள் கழிந்துபோம்; உன்னி - (இனிச் செய்ய வேண்டியதொழிலை) ஆலோசித்து, செய்கைமேல் ஒருப்படல் உறுவதுஏ - செய்யவேண்டிய தொழிலின்மேல் மனமொருமித்தலைப் பொருந்துவதே, உறுதி - நன்மைதருவதாகும், என்ன - என்று (இராமபிரான்) கூற, இளையவன் - இளையபெருமாள், வீரனை கை தொழுது - இராமபிரானைக் கைகூப்பி வணங்கி, இயம்பும்-சொல்லத் தொடங்குவான்; (எ-று.)-அதனை அடுத்த மூன்று கவிகளிற்காண்க.

கீழ்இரண்டு செய்யுள்களை மாத்திரம் இராமபிரான்வார்த்தையாகக்கொண்டு இச்செய்யுள் முதல் இளையபெருமாளதுவார்த்தையாகக் கொள்வாரு முளர். பி - ம்:—[1]பின்னர். [2]ஏயது. [3]பார்த்துமேல். [4]முன்னைச்செய்கைமேலொருப்படல் முன்னுவது. [5]விளம்பும்.

38.—இதுமுதல் மூன்றுகவிகள்-ஒருதொடர்: இலக்குமணன் வார்த்தை.

[1]யாவ தெவ்வுல கத்தினி [2]னீங்கிவர்க் கியற்றல்
ஆவ தாகுவ தரியதொன் றுளதென லாமே
தேவ தேவியைத் [3]தேடுவ தென்பது சிறித ல்
பாவந் [4]தோற்றது தருமமே வென்றதிப் படையால்.

(இ - ள்.) தேவ - தேவனே! ஈங்கு இவர்க்கு - இங்குள்ள இவ்வானர வீரர்கட்கு, எ உலகத்தினின் - எந்த உலகத்தில், இயற்றல் யாவது - செய்து முடிக்கவேண்டிய தொழில் எதுவோ, ஆகுவது - ஆகவேண்டிய அத்தொழில், ஆவது - எளிதாகச்செய்து முடிவதாகும்: அரியதுஒன்று உளது எனல் ஆம்ஏ - (இவர்க்கு) அருமையானதொரு காரியம் உண்டென்று சொல்லலாமோ? தேவியை தேடுவது என்பது சிறிது - சீதாபிராட்டியை நாடியறிதலென்பது (இவர்கள் சாமர்த்தியத்திற்கு) அற்பமானதொரு காரியமாகும்; இ படையால் - இந்தச் சேனையினால், பாவம் தோற்றது - பாவம் தோல்வியடைந்தது; தருமம்ஏ வென்றது - தருமமேவெற்றிகொண்டது; (எ - று.) —ஆல் - ஈற்றசை.

எவ்வுலகத்தினில் எக்காரியம் செய்யவேண்டுமானாலும் இவர்க்கு எளிதில் முடியுமென்பது, முன்னிரண்டடியின் கருத்து. இவ்வாறான பெருஞ்சேனை நமக்குத் துணைபுரியவந்ததனால், நல்லறமுடைய நாமே வெல்லப் பாவிகளாகிய அரக்கர் தோற்பது நிச்சய மென்பது, ஈற்றடியால் விளங்கும். இறுதியடி - முரண்தொடை. பி - ம்:— [1]ஆவது அல்லது யாவது எவ்வுலகத்திவரணுகுவரன்றே, ஆர்வ தெவ்வுலகத்திவர்... [2]ஈங்கிவர்க்கியலா. [3]தேடுவம். [4]தோற்றன.

39. தரங்க [1]நீரெழு தாமரை நான்முகன் [2]தந்த
வரங்கொள் [3]பேருல கத்தினின் [4]மற்றைமன் னுயிர்கள்

உரங்கொள் மால்வரை யுயிர்படைத் தெழுந்தன வொக்கும்
குரங்கின் மாப்படைக் குறையிடப் படைத்தனன் கொல்லாம்.

(இ - ள்.) தரங்கம் நீர் எழு தாமரை நான்முகன் - அலைகளையுடைய நீரில் முளைக்குமியல்புள்ள தாமரைமலரில் தோன்றிய பிரமதேவன்,— தந்த-(தான்) படைத்த, வரம் கொள் பேர் உலகத்தினில் - மேன்மையைக்கொண்ட இந்தப் பெரிய உலகத்திலேயுள்ள, மற்றை மன் உயிர்கள் - நிலைபெற்ற மற்றைப்பிராணிகளை,—உயிர் படைத்து எழுந்தன - உயிர்பெற்றெழுந்தனவாகிய, உரம் கொள் - வலிமை கொண்ட, மால்வரை ஒக்கும் - பெருமலைகளைப்போன்ற, குரங்கின் மா படைக்கு - பெரிய இந்த வானரசேனைக்கு, உறை இட - உறையிட்டுக்கணக்கிடுதற்கு, படைத்தனன் கொல் ஆம் - சிருட்டித்தான்போலும்; (எ - று.)

மற்றையுயிர்களின் தொகை - இச்சேனையிலுள்ள வானரங்களின் தொகைக்கு உறையிடுதற்கென்றே படைக்கப்பட்டனபோலு மென, அவ்வானரங்களின் வரம்பின்மையை விளக்கியவாறும்: "இராமன்கை, யம்பினுதவும்படைத்தலைவரவரைநோக்கினிவ்வரக்கர், வம்பின் முலையாயுறையிடவும்பேர்தார் கணக்குவரம்புண்டோ" என மேல் வருவதுங் காண்க. தற்குறிப்பேற்றவணி. உறையிடுதலாவது - பொருள்களைக் கணக்கிடும்போது ஞாபகத்தின்பொருட்டு ஒவ்வொரு பெருந்தொகைக்கு ஒன்றாக இடுவதோர் இலக்கக் குறிப்பு. 'தரங்க நீரெழும்' என்ற தொடர் - தாமரைக்கு இயற்கை யடைமொழி. வானரங்கள் மலைகள்உயிர்பெற்றெழுந்தாற் போலுமென இல்பொருளுவமையாகக் கூறியது, ஒவ்வொரு வானரத்தின் பெருந்தோற்றம் முதலியவற்றைக் கருதி யென்க. பி - ம்:—[1]நீரெழுந். [2]தவரு - வரங்கள். [3]பேருலகத்துள. [4]மன்னுயிரெல்லாம். (751)

40. ஈண்டு தாழ்க்கின்ற தென்னினி யெண்டிசை மருங்கும்
தேண்டு வார்களை வல்லையிற் [1]செலுத்துவ தல்லால்
நீண்ட நூல்வலா யென்றன னிளையவ னெடியோன்
பூண்ட தேரவன் காதலற் கொருமொழி [2]புகலும்.

(இ - ள்.) நீண்ட நூல் வலாய் - பெரிய நூல்களில் வல்லவனே! எண் திசை மருங்குஉம் - எட்டுத்திக்குகளினிடங்களிலும், தேண்டுவார்களை - (சீதாபிராட்டியைத்) தேடுதற்கு உரியவர்களை, வல்லையின் செலுத்துவது அல்லால் - விரைவாகச்செலுத்துவதல்லாமல், இனி ஈண்டு தாழ்க்கின்றது என் - இனிமேலும் இங்கிருந்து தாமதிப்பது எதற்காக? என்றனன். இளையவன் - என்று இளைய பெருமாள் கூறினான்; (உடனே), நெடியோன் - பெருமையுடையவனாகிய இராமபிரான், பூண்ட தேரவன் காதலற்கு - அலங்கரித்த தேரையுடையவனான சூரியனது புத்திரனாகிய சுக்கிரீவனுக்கு, ஒரு மொழி புகலும் - ஒரு வார்த்தை சொல்பவனானான்; (எ - று.) தேண்டுவார் - விரித்தல். பி - ம்:—[1]செலுத்திடவல்லாய். [2]புகல்வான். (752)

தானைகாண்படலம் முற்றிற்று.

13-ஆவது நாடவிட்ட படலம்.

இராமபிரானது கட்டளைப்படி சுக்கிரீவமகாராசன் வானரப் படைத் தலைவர்களைச் சீதாபிராட்டியைத் தேடும்படி எல்லாத் திசைகளிலும் விடுத்த செய்தியை யுணர்த்தும்பாகம். சுக்கிரீவ மகாராசன் இராமபிரானுக்குச் சேனையின் அளவைத் தெரிவித்து, சிற்சில வானரவீரரைத் தேர்ந்தெடுத்துத் தனித்தனி இரண்டு வெள்ளம் வானரசேனையோடு நான்குதிசைகளிலுஞ் சென்று ஒருமாத காலத்திற்குட் சீதாபிராட்டியைத்தேடித் திரும்பி வருமாறு கட்டளையிட்டு, அநுமான் முதலியோரை நோக்கித் தென்திசையிற் சென்று தேட வேண்டிய வழிகளை யுணர்த்தியமையும், இராமபிரான் அநுமானிடத்துச் சீதையின் நல்லிலக்கணங்களையும் அவனிடத்து அடையாளமாகச் சொல்லுமாறு முன் நிகழ்ந்த சில வரலாறுகளையும் சொல்லிச் சீதாபிராட்டிக்கு நம்புதலுண்டாகுமாறு காட்டுதற்குத் தனது கணையாழி கொடுத்தமையும் முதலியன, இப்படலத்திற் கூறப்படுகின்றன

1.—இராமபிரான் வானரசேனையினளவைப்பற்றிச் சுக்கிரீவனை வினவுதல்

[1]வகையு மானமு மாறெதிர்ந் [2]தாற்றுறு
பகையு மின்றி [3]நி ரைந்துப ரந்தெழு
தகைவில் சேனைக் [4]கவதி[5]ச மைந்ததோர்
தொகையு முண்டுகொ லோவெனச் சொல்லினான்.

(இ - ள்.) (இராமபிரான் சுக்கிரீவனை நோக்கி', 'வகைஉம் - அணிவகுப்பும், மானம்உம் - தேகாபிமானமும், மாறு எதிர்ந்து ஆற்றுறு பகைஉம் - (தமக்குள் ஒன்றற்கு ஒன்று) மாறுபாடு கொண்டு எதிர்த்துப்போர்செய்யும் பகைமையும், இன்றி - இல்லாமல், நிரைந்து பரந்து எழு - பெருங்கூட்டமாகத் திரண்டுபரவி யெழுந்துள்ள, தகைவு இல் சேனைக்கு - (பிறரால்) தகைதலில்லாத [தகைய முடியாத] இந்த வானரசேனைக்கு, அவதி சமைந்தது ஓர் தொகைஉம் - அளவாக ஏற்பட்டதொரு கணக்கும், உண்டுகொல்ஓ - உளதோ?' எனச்சொல்லினான் - என்றுவினவினான்; (எ - று.)

"பத்திரட்டி நன்பகலிர வொருவலர்பார்ப்பா, ரெத்திறத்தினு நடுவுகண்டிலர் முடிவெவனே" என்றவாறு தானும் இலக்குமணனுமாக இருபதுநாள் இடைவிடாதுகண்டும் அச்சேனையின் நடுவுவரையிலுங்கூடக்காணாதவராயினமையால், இராமபிரான் அச்சேனைக்கெல்லாந்தலைவனாகிய சுக்கிரீவமகாராசனை இவ்வாறு வினவலாயினனென்க. இச்சேனையிலுள்ள ஒவ்வொருவானரமும் தேகாபிமானமின்றி இராசகாரியத்தில் தனது உயிரையுங்கொடுக்கச் சித்தமானதென்பான் 'மானமுமின்றி' என்றும், ஒன்றற்கொன்று ஒற்றுமையுள்ளதென்பான் 'மாறெதிர்ந்தாற்றுறு பகையுமின்றி' என்றுங் கூறினான். மானமின்றி - குற்றமில்லாமல் என்றும், உவமையில்லாமல் என்றும் கூறினுமாம். 'மாறெதிர்ந்தாற்றுறு, பகையுமின்றி' என்பதற்கு - (தம்மோடு) மாறுபட்டுப் போர் செய்யும்பகைவரில்லாமல் என்றுபொருள் கூறலாகாது: பின்னே தகைவில் எனவருத

லால். பி - ம்:—[1] வகையுமீனமும். [2] ஆற்றுறும். [3] நிறைந்து, நிரந்து, எதிர்ந்து. [4] அமைதி, அலகு, அறுதி, தலைவர், தலைவர்க்கு. [5] சமைத்த தோர், அமைந்ததோர். (753)

2.—இதுவும், அடுத்தகவியும் - ஒருதொடர்: சுக்கிரீவனது மறுமொழி.

[1] ஏற்ற வெள்ள மெழுபதி [2] னிற்றவென்று
ஆற்ற லாள ரறிவி [3] னமைத்ததோர்
மாற்ற முண்டது வல்லது மற்றுமோர்
[4] தோற்ற மென்றிதற் கெண்ணுமுன் சொல்லுமோ.

(இ - ள்.) (சுக்கிரீவன் இராமபிரானை நோக்கிக் கூறுவான்:— 'இந்த வானரசேனையின் தொகுதி), ஏற்ற வெள்ளம் எழுபதின் இற்ற (து) - பொருந்திய எழுபதுவெள்ளமென்னுந் தொகையினுல் முடிந்திருக்கின்றது,' என்று—, ஆற்றலாளர் அறிவின் அமைத்தது ஓர் மாற்றம் உண்டு - வல்லமையுள்ளவரது அறிவினுல் ஆராய்ந்து சொல்லப்பட்டதாகிய ஒரு வார்த்தைஉள்ளது; அது அல்லது- அவ்வாறு சொல்லியதல்லாமல், இதற்கு-இச்சேனைக்கு, மற்றும் ஓர் தோற்றம் என்றுஎண்ணும்முன் சொல்லும்ஒ - வேறும் ஒருதோன்றிய அளவு உள்ளதென்றுசொல்லக்கூடியதொகையும் இனிச் சொல்லப்படுமோ? (எ - று.)

இச்சேனையின் தொகுதியைப்பற்றிப் பெரியோர் எழுபது வெள்ள மென்று கூறியதை உடன்படவேண்டுமே யன்றி, ஒருவராலும் இவ்வளவென்று கணக்கிட்டுக் கூறுவது எவ்வாற்ருலும் இயலாதென்பதாம். ஆற்றலாளர் என்றது - மற்றையோரறிவிற்கு எட்டாத பெரு விஷயங்களையும் கையிலங்கு நெல்லிக்கனிபோலத் தமது நுண்ணுணர்வினுல் உணரவல்ல தவவலிமை யுடையோரை. வெள்ளம் - ஓர் பெருந்தொகை; மிகப்பல அக்ஷௌகிணிகொண்டது; (யானை ஒன்றும், தேர் ஒன்றும், குதிரை மூன்றும், காலாள் ஐந்தும் கொண்டது - பத்தியெனப்படும்; அப்பத்தி மூன்று பங்கு கொண்டது - சேனுமுகம்; சேனுமுகம் மூன்று - குல்மம்; குல்மம் மூன்று - கணம்; கணம் மூன்று - வாகினி; வாகினி மூன்று-பிரதனை; பிரதனை மூன்று - சமூ: சமூ மூன்று - அனீகினி; அனீகினி பத்து - அக்ஷௌகிணி; அக்ஷௌகிணி எட்டுப் பங்குகொண்டது - ஏகம்; ஏகம் எட்டு - கோடி; கோடி எட்டு-சங்கம்; சங்கம் எட்டு - விந்தம்; விந்தம் எட்டு - குமுதம்; குமுதம் எட்டு - பதுமம்; பதுமம் எட்டு - நாடு; நாடு எட்டு - சமுத்திரம்; அந்தச்சமுத்திரம் எட்டுப்பங்கு கொண்டது - வெள்ளம் எனக் காண்க.)

[1] 'ஏற்ற வெள்ள மெழுபதென் றேமறை, யாற்றலாள னறிவி னமைந்ததோர்' என்றபாடத்துக்கு - வானரத்தின் தொகைஎழுபது வெள்ளமென்று வேதநூலில்வல்ல பிரமன் தனது அறிவினுல் ஆராய்ந்து சொன்னதொரு வார்த்தையுளது; முன்னுளில் ஏற்பட்ட அக்கணக்கு அல்லாமல் பிறகும் பல வானரங்கள் பிறந்திருக்கின்ற காரணத்தினுல், இப்போது இங்குள்ள இவ்வானரசேனையைக் குறித்து அப்போதே இவ்வளவென்று தொகை சொல்லப்

பட்டிருக்கமாட்டா தன்றோ? என்று பொருள் காண்க. (தோற்றம் - பிறப்பு.) பி - ம்:—[2]ஈற்றவென்று. [3]அறைந்ததோர். [4]தோற்றமுண்டி தற்கென்ன...தோற்றமென்னிதற்கென்று......, தோற்ற மென்னி தற்கெண்ணி முன் சொல்வரோ என்று பலவாருகப் பிரதிகளில் நான்காமடி. (754)

3. ஆறு பத்தெழு கோடி [1]யனீகருக்கு
ஏறு கொற்றத் தலைவ ரிவர்க்குமுன்
கூறு சேனைப் பதிகொடுங் கூற்றையும்
நீறு [2]செய்திடு நீலனென் ருேதினுன்.

(இ - ள்.) அனீகருக்கு - இச்சேனையிலுள்ள வாநரர்கட்கு, ஏறு கொற்றம் தலைவர் - சிறந்த வெற்றியையுடைய தலைவர்கள், ஆறு பத்து எழு கோடி - அறுபத்தேழுகோடிக்கணக்காவர்; இவர்க்குமுன் கூறு சேனை பதி - இவ்வறுபத்தேழுகோடிப் படைத்தலைவர்கட்கும் முதலாகச் சொல்லப்பட்ட தலைமைச் சேனாபதியானவன், கொடுங் கூற்றைஉம் நீறு செய்திடும் நீலன் - கொடிய யமனையும் சாம்பராக்க வல்ல [மிக்க பராக்கிரமமுடைய] நீலனுவன், என்று ஓதினுன்-என்று கூறினுன், (சுக்கிரீவன்); (எ - று.)

எழுபதுவெள்ளம் வானரவீரர்க்கு அறுபத்தேழுகோடி படைத் தலைவர் உளர்; அப்படைத்தலைவர்கட் கெல்லாம் அதிபதி நீலனுவ னென்பதாம். கொல்லுதற்ருெழிற் கடவுளைக் கொல்லுந்திறமுடைய வனென நீலனது சிறப்புக்கூறியவாறு. நீலன் - நீலநிறமுடைமை பற்றி, இவனுக்கு இப்பெயர்; இவன் - அக்கினியின் குமாரன். அனீகர் - சேனையிலுள்ளார்: அநீகம் - சேனைவகுப்பு. கொற்றம் ஏறு தலைவர் எனக் கூட்டியுரைப்பினுமாம்.

விலங்கினத்தைச் சேர்ந்த வானரங்களை 'அநீகர்' என்று உயர் திணையாகக்கூறுதல் இலக்கணத்திற்கு ஒக்குமோ? எனின்,—உயர் திணை அஃறிணை என்ற பகுப்பிற்குக் காரணம் முறையே அறிவின் நிறைவும் குறைவும் ஆதலால் அவ்வறிவிற் குறைவின்றி ஐம் பொறியறிவோடு பகுத்தறிவையுங்கொண்டு மனிதர்போலவே தொழில்திற மமைந்த தெய்வக் குரங்குகளை உயர்திணையின்பாற் படுத்துதல் ஒக்குமென்க. இத்தன்மை, கழுகுகளாகிய சம்பாதி சடாயு என்பவர்க்கும் பொருந்தும். தொல்காப்பியத்து மரபியலில் உரைகாரர் "மாவும் மாக்களு மையறிவினவே" என்ற சூத்தி ரத்தின்கீழ்க் குரங்கை விலங்கின மென்றபொதுவகையாற் கூறி னவர் தாமே "மக்கள் தாமே யாறறிவுயிரே" என்ற அடுத்த சூத்தி ரத்தின்கீழ் "குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையன எனப் படும் மனவுணர்வுடையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவு யிராய் அடங்கும், என்றமை காண்க. 'ஒரோவழி அஃறிணைப் பொருள்கள் மொழியாற்பேசுவன உளவாயின், அது தெய்வத் தன்மை முதலிய விசேடத்தானன்றிப் பொருட்டன்மையானன்மை யின் அமைத்துக்கொள்வது' என்ற இலக்கண விளக்கச்சூருவளியும் இங்குக் காணத்தக்கது. அன்றியும், இவர்கள் வடிவில் மனிதரிற் சிறிது வேறுபாட்டையே யுடையராயிருந்தன ரென்பதையும்

உணர்க. பி - ம்:—[1] அனீகினி, அனீகினிக்கு, அனீகமொத்து. [2] செய்தடு. (755)

4.—இனி நடக்கவேண்டுமவற்றைப்பற்றி ஆலோசிக்குமாறு இராமபிரான் சுக்கிரீவனிடங் கூறுதல்.

என்று[1] ரைத்த வெரிகதிர் மைந்தனை
வென்றி விற்கை யிராமன் [2] விருப்பினல்
[3] நின்றி னிப்பல பேசி [4] யென் ஞெநெறி
சென்றி ழைப்பன சிந்தனை [5] செய்கென்ருன்.

(இ - ள்.) என்று உரைத்த - என்று கூறிய, எரி கதிர் மைந்தனை - உஷ்ணகிரணனுன சூரியனது குமாரனுகிய சுக்கிரீவனை, வென்றி வில் கை இராமன் - வெற்றியைத் தரும் வில்லையேந்திய கையையுடைய இராமபிரான், விருப்பினல் - அன்போடு (பார்த்து), 'இனி நின்று பல பேசி என்ஓ - இப்பொழுது (வீணுகக் காலங்கழியுமாறு) நின்றுகொண்டு பலபேசுவதனுற் பயன் யாதோ? நெறி சென்று இழைப்பன - முறைமையான வழியிற்புகுந்து செய்ய வேண்டியவற்றைப்பற்றி, சிந்தனை செய்க - ஆலோசிப்பாயாக,' என்ருன் - என்று கூறினன்; (எ - று.)

'நெறிசென்றிழைப்பன சிந்தனைசெய்க' என்றதற்கு - இனி வானரர்கள் பலதிசைவழிகளிலுஞ் சென்று சீதாபிராட்டியைத் தேடுவதைக்குறித்து ஆலோசனை செய்வீராக எனக்கொள்ளினுமாம். எரிகதிர் - வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; சூரியனைக் குறிக்கும். பி - ம்:—[1] உரைக்க. [2] விரும்பினன். [3] இன்றினி. [4] என்ஞெநெறி. [5] செய்கின்ருன். (756)

5.—இதுமுதல் இருபத்தெட்டுக்கவிகள் — சுக்கிரீவன் வார்த்தை.

ஐந்துகவிகள் - சுக்கிரீவன் அனுமானைப்புகழ்ந்து பிராட்டியைத் தேட அங்கதன் முதலியோருடன் தென்திசைக்கட் செல்லுமாறு கட்டளையிடுதல்.

அவனு மண்ண லனுமனை [1] யையநீ
புவன மூன்று[2] நின் தாதையிற் புக்குழல்
தவன வேகத்தை [3] யோர்கிலை [4] தாழ்த்தனை
கவன மாக்குரங் கின்செயல் [5] காண்டியோ.

இதுமுதல் ஆறுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) அவன்உம் - அந்தச் சுக்கிரீவனும்,— அண்ணல் அனுமனை - பெருமையிற் சிறந்தவனுன அநுமனை (நோக்கி), ஐய—! நீ—, புவனம் மூன்றுஉம் - மூவுலகத்திலும், நின் தாதையின் - உனது தந்தையாகிய வாயுவைப் போல, புக்கு உழல் - புகுந்து திரிகின்ற, தவனம் வேகத்தை - (உனது) மிக்க வேகத்தை, ஓர்கிலை - உணர மாட்டாதவனுய், தாழ்த்தனை - வீணுகத் தாமதித்திருக்கின்ருய்; கவனம் மா குரங்கின் செயல் காண்டிஓ - (நீ இவ்வாறு தாமதித்து)

விரைவாகச் செல்லுந் தன்மையுள்ள பெரிய மற்றை வானரர்களுடைய செய்கையைக் காணவிரும்பியிருக்கின்றாயோ? (எ - று.)— இச்செய்யுளிலுள்ள 'அவனும்' என்பது - பத்தாஞ்செய்யுளிலுள்ள 'பன்னினன்' என்பதைக் கொண்டு முடியும்.

மூவுலகத்திலுந் திரியவல்ல வல்லமை பெற்றிருந்தும் நீ இப்போது சீதையை நாடிச் செய்தி தெரிந்துவராமல் வாளாவிருப்பது, மற்றை வானரர்கள் சீதாபிராட்டியைத் தேடுந்திறத்தில் யாது செய்கின்றார்களென்று காணக் கருதிப்போலு மெனச் சுக்கிரீவன் அநுமானைநோக்கிக் கூறினனென்றவாறும். 'தந்தையைப் போல்வான் தநயன்' என்றபடி தந்தையாகிய வாயுவைப்போலவே அவனது மகனாகிய அநுமானும் மூவுலகத்திலுந் திரியவல்ல வல்லமை யுடையவனென்க. தவனவேகத்தை என்பதற்கு - சூரியன் போன்ற வேகமுடையாய் என்றும் பொருள் கூறலாம்; அநுமான் சூரியனோடு உடன்சென்று நவவியாகரணங்களையும் மற்றும் பல கலைகளையும் ஓதினனாதலால், இவ்வாறு கூறுதல் ஏற்கும். தவனன் = தபனன்: சூரியன்: தபிப்பவனென்பது அவயவப்பொருள். இப்பொருளில், 'வேகத்தை' என்பது - 'ஐ' விகுதிபெற்றமுன்னிலை யொருமைக் குறிப்பு முற்று. முன்னையபொருளில், தவன வேகம் - ஒருபொருட் பன்மொழி. அநுமான் மிக்க வரங்களைப் பெற்றது பற்றிச் சற்றுச் செருக்குற்று பெருமுனிவர்களுடைய ஆச்சிரமங்களிற் புகுந்து யாக் பாத்திரங்களை யுடைத்தல் முதலிய பல துன்பங்களை யிழைத்து வந்ததனால், அம்முனிவர்கள் 'இவனுக்குத் தன் பலம் தனக்குத் தெரியாமற் போகக்கடவது' என்று சபித்தவரலாற்றை உட்கொண்டு 'புவன மூன்றும் புக்குழல் தவன வேகத்தை யோர்கிலை தாழ்த்தனை' என்றானென்னலாம். இனி, ஈற்றடிக்கு - (உனது பலம் உனக்குத் தெரியாமையினால்) மூவுலகங்களிலும் புக்குத் திரியவல்ல உனது தொழிலைச் சாதாரணமான ஓர் குரங்கின் செயலாகக் கருதினாயோ? எனக் கூறினுமாம். பி - ம்:—[1]நோக்கிநீ. [2]உன்றாதையிற். [3]ஓர்கலை. [4]தாழ்ந்தனை. [5]காட்டியோ. 'சவனவேகத் தொருதனித்தன்மையால்' என்று சிலபிரதிகளில் மூன்றும் அடி. (757)

6. ஏகி [1]யேந்திழை தன்னை [2]யிருந்துழி
[3]நாக நாடுக நானில நாடுக
[4]போக பூமி பொருந்திட வல்லநின்
வேக மீண்டு வெளிப்பட [5]வேண்டுமால்.

(இ - ள்.) (நீ),—ஏகி - (இங்கிருந்து) சென்று, ஏந்து இழை இருந்த உழி தன்னை - தரித்த ஆபரணங்களையுடையவளாகிய சீதை இருந்த இடத்தை, நாகம் நாடுக - நாகர்கள் வசிக்கின்ற இடமாகிய பாதாள லோகத்தில் தேடக்கடவாய்; நானிலம் நாடுக - பூமியிலுந் தேடக்கடவாய்; போக பூமி பொருந்திட வல்ல நின் வேகம் - போக பூமியாகிய சுவர்க்கலோகத்திற் சேரவல்ல உனதுவேகமும், ஈண்டு வெளிப்பட வேண்டும் - இப்போது வெளியாகவேண்டும்; (எ - று.)

நீ சுவர்க்க மத்திய பாதாளங்களாகிய மூவுலகங்களிலுஞ் சென்று சீதாபிராட்டியாரைத் தேடவேண்டுமென்று சுக்கிரீவன்

அநுமானுக்குக் கூறினனென்க. நானிலம் - நான்காகிய நிலங்களை யுடைய தெனப் பூமிக்குக் காரணப்பெயர்; நால்வகை நிலங்கள்-முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்பன: (முல்லை - காடும், காடு சார்ந்த இடமும்; குறிஞ்சி - மலையும், மலை சார்ந்த இடமும்; மருதம் - நாடும் நாடுசார்ந்த இடமும்; நெய்தல் - கடலும் கடல்சார்ந்த இடமும்.) மற்றொன்றாகிய பாலைநிலம் பிராணிசஞ்சாரத்திற்கு உரியதன் றென்று இங்கே விலக்கப்பட்டது; அது, நீரும் நிழலுமில்லாத கொடுநிலம். பாலைக்குத்தனியே நிலமில்லை யென்பதும், நால்வகை நிலங்களும் தத்தம் தன்மை கெட்ட விடத்தே பாலையா மென்பதும் சில ஆசிரியர் கொள்கை: போக பூமி - புண்ணியப்பயனாக இன்பம் நுகர்தற்கு உரிய இடம். எனவே, சுவர்க்கலோகமாம். பின் மூன் றடிகட்கு - சுவர்க்கத்தில் தேடுக; பூமியினும் தேடுக; போகபூமியிலும் சேரவல்ல நினது வேகம் இப்போது வெளிப்படவேண்டு மெனக் கூறி, பாதாள லோகத்தை உபலக்ஷணத்தாற் கொள்ளலுமாம். நாகம் - சுவர்க்க லோகம். போகபூமி - பாதாள லோகமுமாம். ஏந் திழை இருந்துழி தன்னை என உருபுமாறுக. இருந்துழி - தொகுத் தல். இரண்டாமடி - முற்றுமோனை.

பி - ம்:—[1]ஏந்திழையேழையிருந்திடம். [2]இருந்துழீஇ. [3]நாக நாடுள நானிலநாடுள, நாகமாடுள நானிலமாடுள, நாகநாடுகளுநில நாடுகள். [4]மாகவானகநாடுகவல்லைநின், போக பூமியுநாடுகபுக்கு நின்று...பூமிபுகுந்திடவல்லநின் அல்லதுவல்லைநின். [5]வேண்டுமே. ()

7. [1]தென்றி சைக்க ணிராவணன் சேணகர்
என்றி[2] சைக்கின்ற தென்னறி வின்னணம்
வன்றி சைக்கினி [3]மாருதி [4]நீயலால்
வென்றி சைக்குரி யார்பிறர் வேண்டுமோ.

(இ - ள்.) 'இராவணன் சேண் நகர் - இராவணனது நீண்ட [பெரிய] இலங்காநகரம், தென் திசைக்கண் - தெற்குத்திசையில் (உள்ளது),' என்று—, என் அறிவு இன்னணம் இசைக்கின்றது - எனது நினைவு இவ்வாறு சொல்லுகின்றது [எனக்கு ஞாபகம் என்ற படி]: மாருதி - அநுமானே! இனி - இப்போது, வல் திசைக்கு-வலிய அந்தத்திசையில் (சென்று), வென்று - (அங்கு உள்ள அரக்கரை) ஜயித்து, இசைக்கு - கீர்த்திபெறுதற்கு, உரியார் - உரியவர், நீ அலால் பிறர்வேண்டும் ஓ - நீ யொருவனேயல்லாமல் மற்றொருத் தரும் வேண்டுமோ? (எ - று.)

இராவணன் நகராகிய இலங்கை தென்திசையிலிருப்பதாக ஞாபகம்: நீயொருவனே அந்தத்தென்திசையிற்சென்று இராவண னது இலங்காபுரியைக் கண்டுபிடித்து ஆங்குள்ள அரக்கரைவென்று சீதையின்செய்தியை உணர்ந்துவந்து சொல்லிக் கீர்த்தி பெறுதற்கு உரியா யென்றவாறும். வல்திசை - அங்குள்ள அரக்கரின் வன்மை யைத் திசையின்மே லேற்றிக்கூறிய உபசாரவழக்கு. திசைக்கு - உருபுமயக்கம். மாருதி - அண்மைவிளி. பி - ம்:—[1]தென்றிசைத்த. [2]இசைக்கின்ற வென்னறி வின்னலம். [3]மாகதி. [4]நீவலாய். (759)

8. வள்ளல் தேவியை வஞ்சித்து வெளவிய
கள்ள வாளரக் கன்செலக் கண்டது
[1]தெள்ளி யோயது தென்றிசை யென்பதோர்
உள்ள மும்மெனக் குண்டென [2]வுன்னுவாய்.

(இ - ள்.) 'தெள்ளியோய் - தெளிந்த அறிவுடையவனே! வள்ளல் தேவியைவஞ்சித்துவெளவிய - வரையாது கொடுக்குந்தன்மையுள்ள இராமபிரானது மனைவியாகிய சீதாபிராட்டியை வஞ்சனை செய்து எடுத்துச்சென்ற, கள்ளம் வாள் அரக்கன் - கள்ளத்தன்மையையுடைய கொடிய ராக்ஷஸனாகிய இராவணன், செல கண்டது அது - போகக்கண்டதான அந்தத்திக்கு, தென்திசை - தெற்குத்திக்காகும், என்பது - என்பதாகிய, ஓர் உள்ளம்உம் - ஓர் எண்ணமும், எனக்கு உண்டு—,' என உன்னுவாய் - என்று நீ கருதுவாயாக; (எ - று.)

"தென்றிசைக்க ணிராவணன் சேணக, சென்றிசைக்கின்ற தென்னறி வின்னணம்" என்று மேற்கூறியதை வற்புறுத்தி, இச்செய்யுளினாற் காரணங்காட்டியவாரும். உரித்தாகிய இராச்சியத்தையும் தம்பியாகிய பரதனுக்குக் கொடுக்கவேண்டிய இளையதாயின்சொற்படியே காட்டிற்குச் சென்றதனால், இராமபிரானை 'வள்ளல்' என்றான். பி - ம்:—[1]தெள்ளியோயின்று. [2]உன்னுமால். (760)

9. தாரை மைந்தனுஞ் [1]சாம்பனுந் தாமுதல்
வீரர்[2]யாவரு மேம்படு [3]மேன்மையால்
[4]ச்சேர்க நின்னொடுந் திண்திறற் [5]சேனைகள்
[6]பேர்க வெள்ள [7]மிரண்டொடும் பெற்றியால்.

(இ - ள்.) தாரை மைந்தன்உம் - தாரையின்குமாரனாகிய அங்கதனும், சாம்பன்உம் - ஜாம்பவானும், முதல் - முதலாகிய, வீரர் யாவர்உம் - (அவர்களைச் சேர்ந்த) வீரர்பலரும், மேம்படும்மேன்மையால் - மிக்கபெருமையோடு, (சீதாபிராட்டியைத்தேடும் பொருட்டு), நின்னொடுஉம்சேர்க-(துணையாக) உன்னுடன் வருக;வெள்ளம் இரண்டொடுஉம் - இரண்டுவெள்ளமென்னுந் தொகையுடனே, திண் திறல் சேனைகள் - மிக்க வலிமையுள்ள சேனைகள், பெற்றியால் - பெருமையோடு, பேர்க - (உங்கட்குத் துணையாகப்) புறப்படட்டும், (எனக்கூறிவிட்டு), (எ - று.)—தாம் - அசை.

அங்கதன் ஜாம்பவான் முதலானாரோடும் இரண்டுவெள்ளம் வானரசேனையோடும் புறப்பட்டுச் சீதாபிராட்டியைத் தேடுமாறு நீ தென்திசைக்குச் செல்வா யெனச் சுக்கிரீவன் அநுமானுக்குக் கட்டளையிட்டன னென்க.

அங்கதன் - சுக்கிரீவன் கிஷ்கிந்தையில் வாநரராசனானபோது அங்கு இளவரசனாக்கப்பட்டவன்: சாம்பன் - ஜாம்பவான் என்ற வடமொழியின்சிதைவு: இவன் முன்னொருகால் பிரமன்கொட்டாவி விட்டபோது அவனது வாயினின்று அவனது அமிசமாய்க் காடி

வடிவமாகத் தோன்றியவன்; கரடிகளுக்கு அரசன்; இவன் திருமாலின் திரிவிக்கிரமாவதாரகாலத்தில் உலகமுழுவதும் நிரம்பிய அப்பெருமானைப் பதினெட்டுமுறை பிரதக்ஷிணஞ்செய்தனன். திண்திறல் - ஒருபொருட்பன்மொழி. பி - ம்:—[1]சாம்பனுநீலனும். [2]யாரினும். [3]மேன்மையார். [4]சேர. [5]சேனையும். [6]பேர. [7]இரண்டொரு. (761)

10 —தென்திசை தவிர மற்றைமூன்று திசைகளிலும் இடபன் முதலியோரைச் செல்லுமாறு சுக்கிரீவன் ஏவுதல்.

[1]குடதி சைக்க ணிடபன் குபேரன்வாழ்
வடதி சைக்கட் சதவலி வாசவன்
[2]இடதி சைக்கண் வினதன் விறற்றரு
படையொ டுற்றுப் [3]படர்கெனப் பன்னினான்.

(இ - ள்.) 'குடதிசைக்கண் - மேற்குத்திக்கில், இடபன் - ருஷபனும், குபேரன் வாழ் வடதிசைக்கண் - (திக்குப்பாலகனாகிய) குபேரன வாழ்கின்ற வடக்குத்திக்கில், சதவலி - சதவலியும், வாசவன் இடம் திசைக்கண் - இந்திரனுக்குஉரிய இடமாகிய கிழக்குத் திக்கில், வினதன் - வினதனும், விறல் தரு படையொடு உற்று படர்க - வலிமைபொருந்திய (இரண்டுவெள்ளம்) சேனையோடு பொருந்திச் செல்லக்கடவர்;' என பன்னினான் - என்றுகூறினான்; (எ - று.)

இமயமலைத் தடத்துச் சென்று தவஞ்செய்கையில் அங்கே எழுந்தருளிய சிவபிரானது பக்கத்திலுள்ள பார்வதியைப் பார்த்ததனால் கண் பசந்தமைபற்றி, இவனுக்குக் குபேரன் என்ற பெயர் அமைந்தது; [குபேரன் - குற்சிதமான சரீரமுடையவன்.] இதுபற்றி, ஏகாட்சிபிங்கள் னென்ற பெயரும் உண்டு. இவன், விச்சிரவசு என்னும் முனிவர்க்கு மூத்தமனைவியாகிய பரத்துவாச புத்திரியினிடம் பிறந்த குமாரன்; (இம்முனிவர்க்கு இளையமனைவியாகிய கேகசியினிடம் பிறந்தகுமாரன் - இராவணன்.) பெருந்தவஞ்செய்து பிரமனருளால் வடதிசைப்பாலகனும் தனாதிபதியுமானவன். வாசவன் - வசுக்களுக்குத் தலைவன்; வசு - அஷ்டவசுக்களும், செல்வமும். வினதன் - மிகவும் வணக்கமுடையவன் என்பது அவயவப் பொருள்.

குடக்கு + திசை = குடதிசை. விறல் - வெற்றியுமாம். படர்கென - தொகுத்தல். எதுகைநயம்பற்றி, 'இடதிசை' என இயல்பாயிற்று. [2]மிடறிசைக்கு என்ற பாடமே மோனைத் தொடைக்கு ஏற்கும்; மிடல் - வலிமை. பி - ம்:—[1]குடதிசைக்கட்சுடேணன். [3]படருநெறியென. இச்செய்யுள் "குடதிசைக்கணிடபன் குணதிசைக், கடலின்மிக்க பனசன சதவலி, வடதிசைக்கணன்றே வினன்மானமாப், படையின் வெள்ளத்துடன்செலப்பான்மையால்" என்றபாடத்தோடு 4-ஆவது செய்யுளாக்காணப்படுகின்றதென்ப. (762)

11.—வானரர்களை நோக்கிய சுக்கிரீவாஜ்ஞை.

வெற்றி வானர வெள்ள மிரண்டொடும்
சுற்றி யோடித் துருவி யொருமதி
முற்று ருதமுன் [1]முற்றுதி ரிவ்விடைக்
கொற்ற வாகையி னீரெனக் கூறினான்.

(இ - ள்.) (சுக்கிரீவன் இடபன்முதலிய வானரர்களை நோக்கி) 'கொற்றம் வாகையினீர்-வெற்றிக்குஉரிய வாகைமாலையை யணிதற்கு உரியவர்களே! (நீவிர்), வெற்றி வானரம் வெள்ளம் இரண்டொடுஉம்-செயிக்குந் தன்மையுள்ள இரண்டுவெள்ளம் வானரசேனையோடும், சுற்றி ஓடி துருவி - (பலவிடங்களிலும்) அலைந்து திரிந்து (சீதாபிராட்டியைத்) தேடி, ஒரு மதி முற்றுருதமுன் - ஒருமாதம் முடிவதற்குள்ளே, இ இடை முற்றுதிர் - இங்குத்திரும்பி வந்து சேருங்கள்,' என கூறினான்—; (எ - று.)

நீங்கள் தனித்தனி இரண்டுவெள்ளம் வானரசேனையோடு நான் உங்கட்குக் குறித்த திசைகளிற்சென்று சீதாபிராட்டியைத் தேடி ஒருமாதகாலத்திற்குள் இங்குவந்து சேரவேண்டுமென்று சுக்கிரீவன் கட்டளையிட்டன னென்க. 'வாகையினீர்' என்பதை முற்றெச்சமாகக்கொண்டு, வெற்றியையுடையவர்களாய் என்றுங் கூறலாம். வாகையென்னும்மரத்தின்பெயர் - அதன்மலர்களாலாகிய மாலைக்கு ஆகுபெயர். இது, வெற்றிக்கு அடையாளமாகத் தரிக்கப்படுவது. 'முற்றுருதமுன் முற்றுதிர், - முரண்தொடை. பி - ம்:— [1]மீளுதிர்முந்தியே. (763)

12.—இருபத்தொரு கவிகள் - ஒருதொடர்; சுக்கிரீவன் தென்திசைசெல்லும் வானரர்களைநோக்கிச் சீதையைத் தேடவேண்டிய இடங்களைக் குறிப்பித்தல்.

[1]ஈண்டு நின்றெழுந் தீரைந்து நூறெழில்
தூண்டு சோதிக் கொடுமுடி [2]தோன்றலால்
நீண்ட நேமிகொ லாமென நேர்தொழ
வேண்டும் [3]விந்த மலையினை [4]மேவுவீர்.

(இ - ள்.) (சுக்கிரீவன் தென்திசையிற்செலும் வானரர்களை நோக்கிக் கூறுவான்):—(நீங்கள்), ஈண்டு நின்று எழுந்து-இங்கிருந்து புறப்பட்டு,—எழில் தூண்டு சோதி ஈர் ஐந்து நூறு கொடுமுடி தோன்றலால் - அழகு மிகுந்த ஒளிவீசுகின்ற ஆயிரஞ்சிகரங்கள் காணப்படுதலால், நீண்ட நேமிகொல் ஆம் என-பெருவடிவு கொண்ட திருமால்தானோ! என்று, நேர் தொழ வேண்டும் - எதிர் சென்று தொழுதற்கு உரிய, விந்தமலையினை-விந்திய பருவதத்தை, மேவுவீர்-(முதலிற்சென்று) சேர்வீராக; (எ - று.)

ஆயிரங்கொடுமுடிகளை யுடைய விந்தியமலைக்கு, ஆயிரம் முடிகளையுடைய திருமாலை உவமை கூறினர் "தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய்," "கண்ணிமுடிச்சிரமாயிரம், * * * திண்டிறலாழியரங்கருக்கே" என்பன, இங்குக் காணத்தக்கன, நேமி - வட

சொல்; சக்கராயுதம்; அதனையுடையவனுக்கு ஆகுபெயர். நீண்ட - (திரிவிக்கிரமாவதாரகாலத்திலும் விசுவரூபத்திலும் விராட்சொரூபத்திலும்) பெருவடிவுகொண்ட என்பது பொருள். நீண்ட நேமியென்பதற்கு - ஆயிரம் அரங்களையுடைய (சுதரிசனமென்னுஞ்) சக்கராயுதமென்பாருமுளர். திருமாலையேயன்றி அவனையொத்த பொருள்களைக் கண்டவிடத்தும் கைகூப்பித் தொழுதல், வரம்பு கடந்த பக்தியின் செயலாமென்க.

விந்தம் = விந்த்யம்; இந்தப் பரதகண்டத்திலுள்ள குலகிரியேழனுள் ஒன்று; (மற்றவை-கைலை, இமயம், மந்தரம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பன: கந்தமாதநமுங் கூட்டி எட்டென்பாருமுளர்.) இது, பரதகண்டத்தின் நடுவிலிருக்கின்றது. விந்த்ய மென்ற வடசொல்லுக்கு-(சூரியன் முதலியோரது சஞ்சாரத்தைத்) தகைவது என்றும், (அகத்தியமுனிவரால்) அடக்கப்பட்டது என்றுங் காரணப் பொருள் கூறுவர்.

முதனூலாகிய வான்மீகிராமாயணத்தில் நான்குதிசையிலுஞ் செல்லும் வானரர்களை நோக்கி முறையே தேடவேண்டிய இடங்களையும் வழிகளையும் சுக்கிரீவன் கூறியதாகச் சொல்லியிருக்கவும், கம்பர் தென்திசையிற் செல்லும் வானரர்களை மாத்திரம் நோக்கித் தேடவேண்டிய இடங்களையும் வழிகளையும் கூறியதாகச் சொல்லியிருப்பது, "பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி" என்னும் வழி நூலிலக்கண விதிபற்றியென்க; இதுபற்றியே, கூறிய வழிகளிலும் பல மாறுபாடுகள் காணப்படுகின்றன. மதங்காச்சிரமத்தினின்று தென்திசையிற் செல்லும் வானரரை விந்தியமலைக்கு முதலிற் செல்லுமாறுகூறியது எங்ஙனம் பொருந்துமெனின்?—இங்கு 'தென்திசை' என்பது இவர் இருந்த இடத்திற்குத் தென்திசையன்று; பூமிக்கு மத்தி இமயமாதலால், அவ்விமயத்திற்குத் தென்திசையெனக் கொள்க:கொள்ளவே, முரணுதல் இன்றாம் என்பர்.

பி - ம்:—[1]ஈண்டு நின்றிறந்து. [2]தோன்றுமால். [3]விந்தத் திருமலை. [4]மேவுதிர், 'நீண்டமேனிகொள் மாலெனநேர்தொழ' என்று சில பிரதிகளில் மூன்றாமடி. (764)

13. [1]தேடி யவ்வரை தீர்ந்தபின் தேவரும்
ஆடு கின்ற தறுபத [2]மைந்திணைப்
பாடு கின்றது [3]பன்மணி யாலிருள்
[4]ஓடு கின்ற நருமதை யுன்னுவீர்.

(இ - ள்.) அவ்வரை தேடி தீர்ந்த பின் - அவ்விந்தியமலையில் (சீதாபிராட்டியைத்) தேடித் தீர்ந்த பிறகு,—தேவர்உம் ஆடுகின்றது - தேவர்களும்வந்து நீராடப்பெறுகின்றதும், அறுபதம் ஐந்திணை பாடுகின்றது - (நீர்ப்பெருக்கினால் அடித்துக்கொண்டு வரப்பெற்ற மலர்களிலுள்ள தேனைப் பருகி அம்மதக்களிப்பால்) வண்டுகள் பஞ்சமமென்னும் சுவரத்தைப் பாடப்பெறுகின்றதுமான, பல் மணியால் இருள் ஓடுகின்ற நருமதை - (அங்குள்ள)

பலவகை யிரத்தினங்களின் ஒளியால் இருள் இருந்தவிடந் தெரியாது ஓடுதற்குக் காரணமான நருமதையாற்றை, உன்னுவீர் - போய்ச் சேருங்கள்; (எ - று.)

நருமதை என்பது - கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் ஓர்யாறு. தேவர்கள் நீராடுதலால் மிக்க தூய்மையும், வண்டுகள் இசைபாடுதலாற் சிறப்பும், மணிகளால் இருள் ஓடுகின்றமையால் வளனும் அந்த நருமதைக்கு உள்ளன வென்பது பெறப்படும்.

ஐந்து = பஞ்சமம்; ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்ற ஏழுசுவரங்களுள் இது ஐந்தாவதாதல்காண்க; இது, குயிலுக்கு உரியதொனியாம். 'அறுபதமைந்திணைப் பாடுகின்றது' என்றவிடத்துச் சொல்நயம் கவனிக்கத்தக்கது. பி - ம்:—[1]தேடியம்மலே, தேடிஅவ்வழி. [2]ஐந்திணை, வந்திணை. [3]பன்மணிபாய், வண்டுளிபாய். [4]நாடுகின்ற நருமை நாடுவீர். (765)

14. வாம மேகலை [1]வானவர் மங்கையர்
[2]காம வூசற் [3]களியிசைக் கள்ளினல்
[4]தூம மேனி யசுணத் துயில்வுறும்
ஏம கூட மெனுமலை யெய்துவீர்.

(இ - ள்.) (அப்பால்),—வாமம் மேகலை வானவர் மங்கையர் - அழகிய மேகலையென்னும் அரைநூல்மாலையையணிந்த தேவமாதர்களுடைய, காமம் ஊசல் களி இசை கள்ளினல் - விருப்பத்தோடு ஊசலாடுகையில் களிப்பினாற் பாடுகின்ற இசையாகிய மதுவினால், தூமம் மேனி அசுணம் துயில்வுறும் - புகைபோன்ற உடல் நிறத்தையுடைய அசுணப்பறவைகள் தூங்குதற்கு இடமான, ஏமகூடம் எனும் மலை - ஹேமகூட மென்னும் பருவதத்தை, எய்துவீர் - போய்ச் சேருங்கள்; (எ - று.)

ஏமகூடமலையில் தேவமாதர்கள் வந்து ஊசலாடும்போது களிப்பினாற் பாடுகின்ற இசைப்பாடலினால் அசுணப்பறவை துயிலுமென்க. துயிலுமாறு மயக்கத்தை யுண்டாக்கியதனால், இசைப்பாடலைக் கள்ளாக உருவகஞ் செய்தனர். அசுணம் - இசையறி விலங்கு; இது, குறிஞ்சிநிலப் பறவை: இதனை ஒருவகை மிருகமென்றும், மானில் ஒருவகையென்றுங் கூறுவர். மேகலை - எண்கோவையிடையணி; "எண்கோவை மேகலை" என்றது காண்க. ஹேமகூடம் - பொன்மயமான சிகரங்களை யுடையது. 'வானர மங்கையர்' என்ற பாடம்—வான் அரமங்கையர் என்றுபிரிந்து, வானத்திலுள்ள தேவமங்கையரென்று பொருள்படும்; அரமங்கையர் - அமரமங்கையர் என்பதன் மரூஉ. பி - ம்:—[2]காமபூசல், காமபூசை, [3]களியிசைகள்ளினல், களியுறைகள்ளினர். [4]தூமமேனியர் துன்னித். (766)

15. நொய்தி னம்மலை நீங்கி [1] நுமரொடும்
பொய்கை யின்கரை பிற்படப் போதிரால்
[2] செய்ய பெண்ணைக் கரியபெண் ணைச்சில
வைகல் தேடிக் [3] கடிது வழிக்கொள்வீர்.

(இ - ள்.) நொய்தின் - விரைவாக, அ மலை நீங்கி - அந்த ஏமகூடபருவதத்தை விட்டுநீங்கி, நுமரொடும் - உங்களைச்சேர்ந்த வானரர்களுடனே, பொய்கையின் கரை பின்பட போதிர் - (அங்குள்ள) பொய்கையின் கரை பிற்படும்படி அதைவிட்டு அப்பாற் சென்றவர்களாய்,—கரிய பெண்ணை - கருநிறமான [தெளிவான நீர் நிறைந்த] பெண்ணைநதியினிடங்களில், செய்ய பெண்ணை - (மகளிர்க்கு உரிய) நற்குணங்களையுடைய சீதாபிராட்டியை, சில வைகல் தேடி - சிலநாள் தேடிப்பார்த்து, கடிது வழிக்கொள்வீர் - (விரைவாக) அப்புறமுள்ள வழியிற் செல்லுங்கள்; (எ - று.)

நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என மகடூஉக்குணம் நான்காம். (அவற்றுள் நாணுவது - செய்யத்தகாதவற்றின்கண் உள்ளமொடுங்குதல்; மடம் - எல்லாமறிந்தும் அறியாதுபோ லிருத்தல்; அச்சம் - புதியதைக் கண்டவிடத்து அஞ்சுதல். பயிர்ப்பு - கணவனல்லாத பிற ஆடவரது ஆடைமுதலியன தம்மேற் பட்ட விடத்து அருவருத்தல்.) பொய்கை - மானிடராக்காத நீர்நிலை; பொய்கையென்றே அதற்குப்பெய ரென்பாரும் உளர். கரியபெண்ணை = க்ருஷ்ணவேணு: வேன்கங்காவாகும். செய்யபெண்ணைக் கரிய பெண்ணை - தொடைமுரண். வைகல் - கழியுந்தன்மையதென நாளுக்குக் காரணப்பெயர். நொய்து, கடிது - விரைவுப்பொருளில் வந்த வினையுரிகள். செய்யபெண்ணை என்பதற்கு - அழகிய பெண்ணைநதியில் என்றும். கரியபெண்ணை என்பதற்கு - கருநிறமான பனந்தோப்புக்களில் என்றும் பொருளுரைப்பாரு முளர். கரிய - பெருமைபெற்ற எனினுமாம். ஆல் - ஈற்றசை. [1] நீஇ நுகராவெனும் என்ற பாடத்திற்கு - (அவ்வேமகூடத்தினின்று), நீஇ - நீங்கி, நுகரா எனும் - (பிறர் ஒருவராலும்) அனுபவிக்கப்படாதென்று சொல்லப்படுகின்ற, பொய்கை யென்று பொருள் காண்க. பி - ம்:—[1] நுகார்வெனும். செய்யபெண்ணுக்கரிய பெண்ணைச்சில, செய்யபெண்ணைக் கரைப் பெண்ணையிற்சில, செய்ய பெண்ணைச்சில பகறேடிப்பின - கைதைபோறு. [3] நெடிது. (767)

16. [1] தாங்கு வாரகில் தருவளர் சந்தனம்
[2] வீங்கு வேலி விதர்ப்பமு மெல்லென
நீங்கி நாடு நெடியன பிற்படத்
தேங்கு வார்புனற் றண்டகஞ் சேர்திரால்.

(இ - ள்.) தாங்கு - (நறுமணத்தைத்) தாங்கிய, வார் அகில் - நீண்ட அகில்மரங்களும், வளர் சந்தனம் தரு - ஓங்கிவளர்ந்துள்ள சந்தனமரங்களும், (ஆகிய இவற்றை), வீங்கு வேலி - பெரிய வேலியாகக்கொண்ட, விதர்ப்பமும் - விதர்ப்ப தேசத்தையும், மெல்லென நீங்கி - மெதுவாகக்கடந்து,—நெடியன நாடு பின்பட -

நீண்டபலநாடுகளும் (கடந்துசென்றதனாற்) பின்புறத்தனவாகும்படி, தேங்கு வார் புனல் தண்டகம் சேர்திர் - நிறைந்த மிக்க நீரையுடைய தண்டகாரணியத்தைச் சேருங்கள்; (எ - று.)

விதர்ப்பநாட்டைச்சுற்றி வேலியாக அகில்மரங்களும் சந்தன மரங்களும் நிறைந்திருக்குமென்க: மிக இனிமையுடைமையாற் கடத்தற்கருமைபற்றி, 'விதர்ப்பமுமெல்லென நீங்கி' என்றார்.

தண்டகமென்ற பெயர்க்காரணம்:—சூரியகுலத்து மநுசக்கரவர்த்தியினது குமாரனான இக்ஷுவாகுமகாராசனுடைய மக்கள் நூற்றுவருள் கடைப்பட்டவனும், மூடனும் மூர்க்கனும் துஷ்டனுமாய்த் தண்டனைக்கு உரியவனென்ற காரணங்கருதி எதிர்கால வுணர்ச்சியையுடைய தந்தையால் தண்டனென்று பெயரிடப்பட்டவனும், தண்டகனென்று வழங்கப்படுமவனுமாகிய ஓர் அரசன், விந்தியமலைக்கும் சைவலமலைக்கும் இடையிலுள்ள நிலத்தைத் தன் ஆட்சிக்கு உரியதாகக்கொண்டு மதுமந்தமென்கிற பட்டணத்தையமைத்து அங்கு அரசாண்டு வருகையில், ஒருநாள், தனது புரோகிதனான சுக்கிராசாரியனது ஆச்சிரமத்தினுட்சென்று அவன்மகளாகிய அரஜையென்பவளைக் காதலித்து வலியக் கற்பழிக்க, பின்பு அதனையுணர்ந்த அந்தப்பார்க்கவன் சினந்து, 'ஏழுநாள்களில் அவன் குடும்பத்தோடும் சேனை முதலிய பரிவாரத்தோடும் அழிந்து போக, அவனது நாடு மண்மழையால் யாதொரு பிராணியுமில்லாமற் பாழாகக்கடவது' என்று சபிக்க, அங்ஙனமே அந்நாடும் அவ்வரசனும் ஏழாநாள் மண்மழையால் அழிந்து போய்விட, அவ்விடம் பின்பு காடாகித் தண்டகாரணியமெனப் பெயர் பெற்றதென்பதாம்; அந்தக் காடு பிறகு பலகாலங்கழித்து நீர் முதலியன நிரம்பி முனிவர்கள் வசித்தற்கு ஏற்ற இடமாயிற்று. பி - ம்:—[1] தாங்குவாரிற்சந்தகில் சண்பகம், தாங்குமாரகிற் றண்ணறுஞ் சந்தனம், தாங்குமாதனை சந்தகில் சண்பகம், தாங்குவாரிற்றருவளர்சந்தனம், தாங்குமாரகிற்றரு வளர்சந்தனம், தாங்குவார்திறந்தந்ததுமுந்துற. [2] வீங்கு வேள்வி. (768)

17\. பண்ட கத்தியன் [1] வைகிய தாப்பகர்
தண்ட கத்தது தாபதர் தம்மையுள்
[2] கண்ட கத்துயர் தீர்வது காண்டிரால்
முண்ட கத்துறை யென்றொரு [3] மொய்ம்பொழில்.

(இ - ள்.) (அப்பால்), முண்டகத்துறை என்ற ஒரு மொய்பொழில் - முண்டகத்துறையென்று கூறப்படுகின்ற (மரங்கள்) அடர்ந்த ஒருசோலையானது,—பண்டு அகத்தியன் வைகியது ஆ பகர் தண்டகத்தது - பழமையாகிய அகஸ்தியமுனிவர் வசித்ததாகக் கூறப்படுகின்ற தண்டகாரணியத்திலுள்ளது; தாபதர்தம்மை உள் கண்டு அகம் துயர் தீர்வது - தவஞ் செய்யும் முனிவர்களைத் தன்னிடத்துக்காணப்பெறுவதால் (காண்பவர்கள் தமது) மனத்திலுள்ள துயர் நீங்குதற்குக் காரணமாயிருப்பது; (அதனை), காண்டிர்- சென்று காணுங்கள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

அகஸ்தியமுனிவர்வசிக்கின்ற தண்டகாரணியத்தி லுள்ளதும் தரிசித்த மாத்திரத்தில் கண்டவர்களின் மனத்துயரை மாற்றும் மகிமை வாய்ந்த முனிவர்கள் நிரம்பியிருக்கப்பெற்றதுமாகிய முண்டகத்துறையைச் சென்று காணுங்க ளென்பதாம். 'பண்டு' என்னும் பழமைகுறிக்கும் இடைச்சொல், அகத்தியற்கு அடைமொழி; இச்சொல்லை 'வைகியது' என்பதனோடு இயைத்துப்பொருள் கூறுவாருமுளர். அகஸ்த்யன் என்ற பெயர் - (விந்திய) மலையை அடக்குபவனென்று காரணப்பொருள்பெறும்; (அகம் - மலை; சலியாதது) ஆகவே, எதிர்கால வரலாற்றை நோக்கி முன்னுணர்வு கொண்ட ஆன்றோரால் இடப்பட்ட பெயர் இது வென்பது போதரும். (அகத்தியர் என்ற இதைத் தமிழ்ச்சொல் என்று கொண்டு, தமிழுக்கு அகத்தியமானவர் - அகத்தியர் என்றும் கூறுவர். அங்ஙன் கூறும் பொருள், பொருந்துவதன்று. இன்னும் வேறு வகையாகவும் பொருள்கூறினருமுளர்.) தாபதர் தம்மை உள்கண்டு அகத்துயர்தீர்வது என்பதற்கு - தவஞ்செய்யும் முனிவர் தம்மை [தமது ஆன்மசொரூபத்தை]த் தம்மனத்தினால் உணர்ந்து மனத்துயர்நீங்கப்பெறுவது எனப் பொருள் கொள்ளினுமாம். தம்மைக் காணுதல் - ஆத்மஸாக்ஷாத்காரமெனப்படும். தாபதர் = தாபஸர்: தவஞ்செய்பவ ரென்பது பொருள். முண்டகத்துறை - தாமரை நிரம்பிய நீர்நிலை: இங்கு அதனையுடையசோலைக்கு ஆயிற்று. மொய் + பொழில் = மொய்ம்பொழில். பி - ம்:—[1]வைகிய தியாம்பகர், வைகிய தாம்பகர். [2]தண்டகத்துயர். [3]மொய்பொழில். (769)

18. [1]ஞால நுங்குறு நல்லறத் தோர்பொருள்
போல நின்று [2]பொலிவது [3]பூம்பொழில்
சீல மங்கையர் வாயெனத் தீங்கனி
கால [4]மின்றிக் [5]கனிவது காண்டிரால்.

(இ - ள்.) பூ பொழில் - மலர்கள்நிறைந்த (முண்டகத்துறையென்னும்) அச்சோலையானது,—ஞாலம் நுங்குறும் - உலகத்தாரால் அனுபவிக்கப்படுகிற, நல் அறத்தோர் பொருள் போல - சிறந்த தருமிஷ்டர்களுடைய செல்வம்போல, நின்று பொலிவது - நிலை பெற்று விளங்குவது; சீலம் மங்கையர் வாய் என - நல்லொழுக்கமுடைய இளமகளிரது அதரம்போல, தீம் கனி - இனிய பழங்கள், காலம் இன்றி கனிவது - அகாலத்திலும் [எக்காலத்திலும்] பழுத்திருக்கப்பெறுவது; காண்டிர் - (அதனைச் சென்று) காணுங்கள்; (எ - று.)

இம்முண்டகத்துறையிலுள்ள மரங்கள்யாவும் பலர்க்கும்பயன் படுவனவென்றும், அவை எக்காலத்திலும் பயன்மாறாது நிற்பனவென்றுங் கூறியவாறும். ஞாலம் - அதிலுள்ளார்க்கு இடவாகு பெயர். நல்லறத்தோர் செல்வம் உலகத்தார்க்குப் பயன்படுமென்பதை, "ஊருணிநீர்நிறைந்தற்றே யுலகவாம், பேரறிவாளன் திரு," "பயன்மரமுள்ளூர்ப் பழுத்தற்றாற்செல்வம், நயனுடையான்

கட்படின்" என்ற திருக்குறள்களினாலும் அறிக. பொருள் என்பதற்கு - கடவுளெனப் பொருள் கூறுவாருமுளர். கனிகளை உபமானமாகவும், மங்கையர்வாயை உபமேயமாகவும் கூறும் இயற்கைக்கு மாறாக மங்கையர்வாயைக் கனிக்குஉவமையாகக்கூறியது - எதிர்நிலையணியின்பாற்படும்; மங்கையர்க்கு உள்ள 'சீலம்' என்ற அடைமொழி, இனம்விலக்கவந்த தன்று. பி - ம்:—[1]ஞாலநல்லறத்தோருண்ணுநற்பொருள், ஞாலநல்லறத்தோர் பொருளுண்ணுமா, ஞாலநல்லறத்தோருண்ணுநற்பொருள், ஞாலநுங்குறுநல்லறத்தொல்பொருள். [2]பொலிவன, பொழிவன. [3]பொய்தவிர், பொய்மொழி, பொய் பொதி. [4]அன்றி. [5]கனிவன. (770)

19. [1]நயன நன்கிமை யார்துயி லார்நனி
அயன மில்லை [2]யருக்கனுக் கவ்வழி
சயன மாதர் கலவித் தலைதரும்
பயனு மின்பமு நீரும் பயக்குமால்.

(இ - ள்.) (அங்குஉள்ளவர்கள்), நயனம் நன்கு இமையார் - கண்களை நன்றாக [சிறிதும்] இமைக்கமாட்டார்; நனி துயிலார் - நன்றாக [சிறிதும்] தூங்கமாட்டார்; அருக்கனுக்கு - சூரியனுக்கு, அ வழி - அவ்விடத்தில், அயனம் இல்லை - (நுழைதற்குஉரிய) வழியில்லை; (அவ்விடம்), சயனம் மாதர் கலவித்தலை தரும் பயன் உம்-படுக்கையில் மகளிரது சேர்க்கையி லுண்டாகின்றபோகத்தையும், இன்பம்உம் - பெருமகிழ்ச்சியையும், நீர்உம் - நீர்வளப்பத்தையும், பயக்கும் - (எப்பொழுதும்) உண்டாக்கும்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

கண்ணிமையாமையும், துயிலாமையும், தேவர்களுக்கு இயல்பு. தேவர்கள் வாழுமிடமாயுள்ளது அப்பொழிலென்பது, முதலடியின் கருத்து. சூரியனது கிரணமும் உட்புகாதவாறு மரங்கள் செறிந்துள்ள தென்பார், 'அயனமில்லை யருக்கனுக்கு அவ்வழி' என்றார். கலவித்தலைதரும் இன்பத்தையும் பயனையும் [சிறந்த பழங்களையும்] நீரையும் பயக்குமெனப் பின்னிரண்டடிகட்குப் பொருள் கூறினுமாம். நீர் - நற்குணங்களுமாம். பி - ம்:—[1]நயன நன்கிமையாதுயிலாநனி, நயனநன்கிசை நல்லமளித்துயில், நயனநல்கியநல்லமளித்துயில். [2]அருக்கனுமவ்வழி. (771)

20. ஆண்[1]டிறந்துபி னந்தரத் திந்துவைத்
தீண்டு கின்றது செங்கதிர்ச் செல்வனும்
[2]ஈண்டு றைந்தல [3]தேகல [4]மென்பது
[5]பாண்டு வின்மலை யென்னும் பருப்பதம்.

(இ - ள்.) ஆண்டு இறந்து - அவ்விடத்தைக் கடந்து, பின் - அப்பால், அந்தரத்து இந்துவை தீண்டுகின்றது - ஆகாயத்திற் செல்லுகின்ற சந்திரனைத் தொடுகின்றதும், செங் கதிர் செல்வன் உம் ஈண்டு உறைந்து அலது ஏகலம் என்பது - சிவந்த கிரணங்களைச் செல்வமாகவுடைய சூரியனும் 'இம்மலையில் தங்கியல்லாமல் அப்பாற் செல்லமாட்டோம்' என்று நினைத்தற்கு இடமானது

மாகிய, பாண்டுவின் மலை என்னும் பருப்பதம் - பாண்டுமலை என்னும் பருவதம், (உளது); '(அதனைச் சேருங்கள்); (எ - று.)

இந்துவைத் தீண்டுகின்றது, செங்கதிர்ச் செல்வனும் ஈண்டுறைந்தலதுஏகலமென்பது என்பன - அம்மலையின் ஓங்கிய தன்மையைவிளக்கவந்த தொடர்புயர்வுநவிற்சியணிகள். பாண்டுமலைமிக ஓங்கி மிக இனிமையான இடமாயிருத்தலால், சூரியனும் அங்குத் தங்கி அப்பாற்செல்லுமாறு கருதுகின்றனனென்க. பாண்டுவின் மலை, இன்-சாரியை. பி-ம்:—[1] இறந்த. [2] ஈண்டுறைந்ததில். [3] ஏகலன். [4] எண்ணரும். என்றெணும். [5] யாண்டுவம்மலை. (772)

வேறு.

21. முத்தீர்த்துப் [1] பொன்திரட்டி மணியுருட்டி [2] முதுநீத்த முன்றி லாயர், மத்தீர்த்து மரனீர்த்து மலையீர்த்து [3] மானீர்த்து [4] வருவதி யார்க்கும், [5] புத்தீர்த்திட் டலையாமற் புலவர்நா டுதவுவது புனிதமான, அத்தீர்த்த மகன்கோதா வரியென்ப ரம்மலையி னருகிற் றம்மா.

(இ - ள்.) முது நீத்தம் - (தனது இடையறுதுபெருகுகின்ற) பழமையாகிய வெள்ளமானது,—முத்து ஈர்த்து - முத்துக்களை யிழுத்துக்கொண்டும், பொன் திரட்டி - பொற்பொடிகளைச் சேர எடுத்துக்கொண்டும், மணி உருட்டி - இரத்தினங்களைத் தள்ளிக் கொண்டும், ஆயர் முன்றில் மத்து ஈர்த்து - இடையர்களுடைய முற்றங்களிலுள்ள மத்துக்களை யடித்துக்கொண்டும், மரன் ஈர்த்து - மரங்களை யிழுத்துக்கொண்டும், மலை ஈர்த்து - கற்பாறைகளைப் புரட்டிக்கொண்டும், மான் ஈர்த்து-மிருகங்களை யிழுத்துக்கொண்டும், வருவது - வருகின்ற தன்மையுடையது; யார்க்குஉம் - (தன்னில் மூழ்கியவர்) எவர்க்கும், புத் தீர்த்திட்டு - 'புத்' என்ற நரகத்தை வரவொட்டாமல் நீக்கி, அலையாமல் - அலைச்சற்படாதபடி, புலவர் நாடு உதவுவது - தேவலோகத்தைக் கொடுக்கவல்லது; புனிதம் ஆன அ தீர்த்தம் - (இவ்வாறு) பரிசுத்தமான அந்தப்புண்ணியதீர்த்தத்தின் பெயரை, அகல் கோதாவரி என்பர் - பரந்துள்ள கோதாவரிநதி யென்று கூறுவர், (உலகத்தார்); (அந்நதியானது),—அ மலையின் அருகிற்று - அந்தப்பாண்டுமலையினருகேயுள்ளது; (எ - று.)— அம்மா - வியப்பிடைச்சொல்; அந்நதியின் அருமைபெருமைகள் நோக்கி வியந்தவாறு.

'புத்' என்பது - மகப்பெறுதவர் அடைவதோர் நரகம். கோதாவரிநதியானது தன்னில் நீராடியவர்க்கு இம்மையிற் புத்திர சந்தானமுண்டாக்கி மறுமையில் நற்கதியையும் அளிக்கவல்லதென்பார் 'யார்க்கும் புத்தீர்த்திட் டலையாமற் புலவர்நாடு உதவுவது' என்றார். 'ஈர்த்து' என்ற சொல் ஒருபொருளிலேயே பல முறைவந்தது - சொற்பொருட்பின்வருநிலையணி. மணி - நவரத்தினங்களுக்கும் பொதுப்பெயர். புலவர் - மிக்க அறிவையுடையவர்: புலம் அல்லது புலமை - தேர்ந்த அறிவு. இது, 'விபுதர்' என்னும்

னும் வடமொழியின்பொருள் கொண்டது. அகல்+கோதாவரி= அகன் கோதாவரி. பி-ம்:—[1]பொன்னீர்த்து மணியீர்த்து. [2]முதுநீர்த்த. [3]மலரீர்த்து. [4]வருந்தியார்க்கும். [5]புத்தீர்த்துக்கதிகொடுத்துப்புதுத்தேனோடு. புத்தீர்த்த திரட்டலையாற் புதுத்தேனோடு......புதுக்கனிதேனுதவுவது. (773)

22. அவ்வாறு கடந்தப்பா லறத்தாறே [1]யெனத் தெளிந்த வருளி னாறுப, [2]வெவ்வாறு மெனக்குளிர்ந்து வெயிலியங்கா [3]வகையிலங்கும் விரிபூஞ் சோலை, எவ்வாறு [4]முறத் [5]துவன்றி [6]யிருளோட மணியிமைப்ப திமையோர் வேண்டத், [7]தெவ்வாறு முகத்தொருவன் தனிக்கிடந்த [8]சுவணத்தைச் சேர்திர் மாதோ.

(இ-ள்.) அ ஆறு கடந்து - அந்தக்கோதாவரிநதியைத் தாண்டி,—அப்பால் - பிறகு, அறத்து ஆறுஏ என - தருமமார்க்கம் போலவும், தெளிந்த அருளின் நாறும் வெம் ஆறு என உம் - தெளிவாகிய அருளினால் விளங்குகின்ற (யாவரும்) விரும்புதற்கு உரிய [அருள்மயமாகிய] மார்க்கம்போலவும், குளிர்ந்து - குளிர்ச்சியையடைந்து,—வெயில் இயங்கா வகை இலங்கும் - சூரியனது கிரணங்கள் (தன்னுள்) நுழையாதபடி விளங்குகின்ற, விரி பூ சோலை - மலர்ந்த புஷ்பங்கள் நிரம்பியசோலையானது, எ ஆறு உம் உற துவன்றி - எந்தப்பக்கங்களிலும் [தனது இருகரைகளிலும்] மிகுதியாக நெருங்கி, இருள் ஓட மணி இமைப்பது - (அச்சோலையில் நிறைந்திருந்த) இருள் இருந்தவிடமுந்தெரியாதபடி ஓடுமாறு இரத்தினங்கள் பிரகாசிப்பதற்கு இடமாகிய, இமையோர் வேண்ட தே ஆறுமுகத்து ஒருவன் தனி கிடந்த சுவணத்தை - தேவர்கள் பிரார்த்தித்ததனால் ஆறுமுகங்களையுடைய ஒப்பற்ற முருகக்கடவுள் தனியாக இருந்த சுவணநதியை, சேர்திர் - போய்ச் சேருங்கள்; (எ-று.)—மாது, ஓ - ஈற்றசை.

கோபகுணத்தை வெவ்வியதாகவும், சாந்தகுணத்தைத் தண்ணியதாகவுங் கூறுதல், கவிமரபு. சோலையின் குளிர்ச்சிக்குத் தருமமார்க்கத்தையும், தயாமார்க்கத்தையும் உவமைகூறினர். சுவணநதியானது, தனது இருகரைகளிலும் சூரியகிரணங்களும் உட்புகாதவாறு மரங்களடர்ந்த சோலைகள் நிரம்பப்பெற்று அம்மரங்களின் அடர்த்தியாற் செறிந்த இருளைத் தன்னிடத்திலுள்ள இரத்தினங்களினொளியாற் போக்குமென்க. குளிர்ந்து இலங்கும் சோலை என இயையும்; குளிர்ந்து கிடந்த சுவணத்தை என்று இயைத்துப் பொருள் கொள்ளினுமாம். "வெம்மை வேண்டல்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால், வெவ்வாறு என்பதற்கு விரும்பத்தக்க ஆறு எனப் பொருள் கூறப்பட்டது. 'தேவாறு முகத்தொருவன்' என்பதுஎதுகைநயம்நோக்கி, 'தெவ்வாறுமுகத்தொருவன்' எனத் திரிந்துவந்தது. ஆறுமுகத்தினொருவனாகிய தே என்க; தே - கடவுள். இனி, தெவ் ஆறுமுகத்து ஒருவன் என்றே எடுத்து - பகைவரை யடக்கவல்ல ஆறுமுகங்களையுடைய ஒருவனெனக் கூறுவாருமுளர்.

'தெவ்வாறு முகத்தொருவன் தனிக்கிடந்த சுவணம்' என்பதிலுள்ள கதைவிவரம் விளங்கவில்லை; இனி, சுவணமென்பதை 'சரவணம்' என்பதன் சிதைவாகக்கொண்டு, பெயரொற்றுமைபற்றி, 'தெவ்வாறு முகத்தொருவன் தனிக்கிடந்த' என்ற அடைமொழி கொடுத்துக் கூறினரென்பாருமுளர். சரவணப்பொய்கையில் சுப்பிரமணியக்கடவுள் பிறந்தன ரென்பது பிரசித்தம். சரவணப் பொய்கை தென்புறநோக்கி வருவார்க்கு வழியிடையில் இருப்பதாக் கொள்வது, பொருந்தாது. சுவணம் = பொன்: பொன்விளைதற்கிடமான மலையென்றற்கும் இடமுண்டு. பி - ம்:—[1] அதுதெரிந்தவருளினனும். [2] வெவ்வேறும். [3] வகையியங்கும். [4] என, [5] தோன்றி. [6] இருள்பாற, இருளாற, இருளாறும். [7] செவ்வாறு. [8] சுவணகத்தை, சரவணத்தை. (774)

28. [1] சுவணத்தைக் கடந்தப்பாற் [2] சூரியகாந் தகமென்னத் தோன்றி மாதர், கவணுமிழ்கல் [3] வெயிலியங்குங் கனவரையுஞ் [4] சந்திரகாந் தகமுங் [5] காண்பீர், அவணவைநீத் தேகியபி னகனாடு [6] பல கடந்தா லனந்த னென்பான், உவணபதிக் கொளித்துறையுங் கொங்கணமுங் [7] குலிந்தமுஞ்சென் றுறுதிர் மாதோ.

(இ - ள்.) சுவணத்தை கடந்து - சுவணமென்னும் நதியைத் தாண்டி, அப்பால் - பிறகு, சூரியகாந்தகம் என்ன தோன்றிய மாதர் கவண் உமிழ் கல் வெயில் இயங்கும் கனம் வரைஉம் - சூரியகாந்தமென்று கூறும்படி பிரசித்திபெற்று (அம்மலையிலுள்ள) மகளிராலெறியப்பட்ட கவண்கயிற்றிலிருந்து வெளிப்படுங் கற்கள் வெயிலைக்கக்குகின்ற பெரியமலையையும், சந்திரகாந்தகம்உம் - சந்திரகாந்தமலையையும், காண்பீர் - தேடிப்பாருங்கள்: அவண் அவை நீத்து ஏகிய பின் - அவ்விடத்திலுள்ள அம்மலைகளைவிட்டு அப்பாற் சென்ற பிறகு, அகல் நாடு பல கடந்தால் - விசாலமாகிய நாடுகள் பலவற்றைக் கடந்து சென்றால், அனந்தன் என்பான் உவணபதிக்கு ஒளித்து உறையும் கொங்கணம்உம் - ஆதிசேடன் பறவைக்கு அரசனாகிய கருடனுக்கு அஞ்சி மறைந்துவசிக்கின்ற கொங்கணதேசத்தையும், குலிந்தம்உம் - குலிந்ததேசத்தையும், சென்று உறுதிர் - போய்ச்சேர்வீர்கள்; (எ - று.) - மாது, ஓ - ஈற்றசை.

சூரியகாந்தம் - சூரியனைக்கண்டபோது நெருப்பையுமிழுங்கல்; அக்கல்மயமான மலை, சூரியகாந்தக மெனப்படும். சந்திரகாந்தம் - சந்திரனைக்கண்டபோது தண்ணீரைக்கால்வது; அக்கல்மயமான மலை, சந்திரகாந்தக மெனப்படும். தினை முதலியவற்றின் கதிர்களைக் கிளி முதலிய பறவைகள் உண்டிடாமைப்பொருட்டு வேட்டுவமாதர்கள் அருகிலமைக்கப்பட்ட பரண்களிற் காவலாக இருந்து அங்குள்ள கற்களை யெடுத்துக் கவண்கயிறுகொண்டு வீசிப் பறவைகளை யோட்டுவரெனல் மரபு; கவண் - கல்லெறிகயிறு. மகளிர் சூரியகாந்தக மலையிலுள்ள கற்களை யெடுத்துக் கவண் கயிறுகொண்டு வீசுதலால், அவை வெயிலை உமிழ்வனவாயின.

அநந்தன் - பிரளயகாலத்திலும் அழிவில்லாமல் நிற்பவன்; அந்தம் - அழிவு. உவணபதி - உவணனாகியபதி யென் இருபெய

ரெர்ட்டு. உவணன் - ஸுபர்ணன்; அழகிய சிறகையுடையவனென்பது, அவயவப்பொருள். பி - ம்:—[1]சுவணநதி, சுவணத்திஙிகந்து. [2]சூரியகாந்தம்மெனவே, சூரியகாந்தம்மென்ன. [3]வெயில் விளங்கும், அது விளங்கும். [4]சந்திரகாந்தமுமுன். [5]காண்டிர். [6]கடந்தப்பால். [7]குலிங்கமும். (775)

24. [1]அரனதிக னுலகளந்த வரியதிக [2]னென் றுரைக்கு மறிவிலார்க்குப், பரகதிசென் றடைவரிய பரிசேபோற் புகலரிய [3]பண்பிற்ருமால், சுரநதியி னயலது[4]வான் தோய்குடுமிச் [5]சுடர்த்தொகைய தொழுதோர்க் கெல்லாம், வரனதிகந் [6]தருந்தகைய [7]தருந்ததிமா நெடுமலையை வணங்கி யப்பால்.

(இ - ள்.) 'அரன் அதிகன் - சிவபிரானே சிறந்தவன்; உலகு அளந்த அரி அதிகன் - உலகங்களை(த் தனதுபாதங்களினால்) அளவிட்ட திருமாலே சிறந்தவன்,' என்று உரைக்கும் - என்று (இவ்விஷயத்தைப் பகுத்துணர்ந்து) கூறவல்ல, அறிவு - தத்துவஞானம், இலார்க்கு - இல்லாத மூடர்களுக்கு, பரகதி சென்று அடைவு அரிய பரிசுபோல் - நற்கதியைச்சென்று சேர்வது அருமையான தன்மையுடையதாதல்போல, புகல் அரிய பண்பிற்று ஆம் - புகுதற்கு அரியதன்மையுள்ளதாகிய,—சுரநதியின் அயலது - (வானத்திற் செல்லுகின்ற) தேவகங்கையின் அருகிலுள்ளதும், வான் தோய் குடுமி சுடர் தொகைய(து) - ஆகாயத்தையளாவிய (தனது) சிகரங்களிலே (சூரிய சந்திரர்களாகிய) இருசுடரும் சேர்தலையுடையதும், தொழுதோர்க்கு எல்லாம் அதிகம் வரன் தரும் தகையது-(தன்னை) வணங்கினவர்க்கெல்லாம் சிறந்த வரங்களைக்கொடுக்கும் பெருமையுடையதுமான, அருந்ததி மா நெடுமலையை - அருந்ததியென்னும் பெரியபருவதத்தை, வணங்கி - (நீங்கள் சென்று) தொழுது, அப்பால் - பிறகு,—(எ - று.)—அடுத்த கவியில் 'அதன்புறஞ்சாரவேகிர்' என்பதனோடு முடியும். இரண்டாமடியின் ஈற்றில் ஆல் - ஈற்றசை.

திருமாலே பரம்பொருளாயிருக்கவும் அதனையுணரமாட்டாது 'சிவபிரான் சிறந்தவனோ? அன்றி, திருமால்தான் சிறந்தவனோ?' என்று ஒருவகையாலும் தெளிவுறுமல் கலங்கிக் கூறுகின்ற மூடர்கட்கு நற்கதி சேர அரிதாயிருக்கும்: அதுபோல இவ்வருந்ததி மலையும் எவர்க்கும் சேர அரிதாயிருக்கு மென்க. திரிவிக்கிரமாவதாரத்தைக் குறிக்கும் 'உலகளந்த' என்ற அடைமொழியைத் திருமாலுக்குச் சேர்த்துக் கூறியதனால், பிரமலோக முட்பட எல்லாவுலகங்களையும் தனது திருவடிக்குக்கீழ்ப்படுத்திக்கொண்ட சிறப்பையும், சிவபிரான் தனது சிரமேற்கொள்ளுமாறு திருவடியினின்று கங்கையைப் பயந்த மேன்மையையும் வெளிப்படுத்துதல் மூலமாக, அத்திருமாலே பரதத்துவமென வெளியிட்டாரென்ப. இவ்வாறு மேன்மையைப்புலப்படுத்தும் அடைமொழியொன்றும் சிவபிரானுக்குக் கொடுத்துக் கூருததும், கருதத்தக்கது, [1]அரனதிகனுறவளர்ந்த வரியதிகனென்றுணரா வறிவிலார்க்குப் பரகதி சென்றடைவரிய பரிசேபோல் என்ற பாடம், இனிது

பொருள்படும். இனி, முதலடிக்கு - திரிமூர்த்திகளிற் சேர்ந்த சிவபிரானையும் திருமாலையும் சமமாகக்கருதாமல், 'சிவபிரான்தான் சிறந்தவன், அல்லது திருமால்தான் சிறந்தவன்' என்று பக்ஷபாதமாகக் கூறுகிற தத்துவஞானமில்லாத மூடர்க்கு என்று பொருள்கூறுவாரு முளர்; 'அரியும் சிவனும் ஒன்று; *அறியாதவர் வாயிலே மண்ணு' என்று உலகத்திற் சாமானியமாக வழங்குகின்ற பழமொழியின் கருத்துக்கொண்டது, இவ்விரண்டாவது பொருள்.

பண்பிற்றுஆம் மலை, அயலது மலை, சுடர்த்தொகைய மலை, தருந்தகைய மலை எனத் தனித்தனி இயையும். அரன் - ஹரன் என்ற வடமொழியின் திரிபு; சங்காரக்கடவுளென்பது பொருள்; அடியவர் துயரையழிப்பவ னெனினுமாம். அரி - ஹரி: அடியார்களின் பாவங்களையழிப்பவன். பரகதி - சிறந்த கதி; மோக்ஷம். சுரநதி - தேவர்களின் நதி: கங்கையென்கின்ற புண்ணிய நதியானது, தேவலோகத்தில் மந்தாகினி யென்றும், நிலவுலகத்தில் கங்கையென்றும், பாதாளலோகத்தில் போகவதியென்றும் பெயர்பெறுமென்க. சுரர் தேவர்; (பாற்கடலினின்று தோன்றிய) சுரையை [மதுவை]ப்பானஞ்செய்தவர். சுடர் - நவக்கிரகங்களுமாம். பி - ம்:— [2]என்றழைக்கும். [3]பண்பிற்றம்மா. [4]வான்றெருடுகுடுமி. [5]சுடர்த்தொகையை. [6]தருந்தெய்வ,தருந்தயைய. [7]அருந்ததியா நெடுமலையை, அருந்துதிசேர்நெடுவரையை. (776)

25. [1]அஞ்சுவரும் வெஞ்சுரனு [2]மாறுமகன் பெருஞ்சுனையு
[3]மகிலோங் காரம், [4]மஞ்சிவரு நெடுங்கிரியும் [5]வளநாடும் பிற்படப்
போய் [6]வழிமேற் சென்றால், நஞ்சுவரு மிடற்றரவுக் கமிழ்துநனி
[7]கொடுத்தாயைக் கலுழ [8]னண்ணும், எஞ்சின்மர கதப் [9]பொருப்பை
யிறைஞ்சியதன் புறஞ்சார [10]வேகிர் மாதோ.

(இ - ள்.) அஞ்சு வரும் வெம் சுரன் உம் - (எல்லாப்பிராணிகளும்) அஞ்சுதலைப் பொருந்துகின்ற வெப்பமுள்ள பாலைவனமும், ஆறு உம் - நதிகளும், அகல் பெருஞ் சுனை உம் - அகன்ற பெரிய சுனைகளும், அகில் ஓங்கு ஆரம் மஞ்சு இவரும் நெடுங் கிரி உம் - அகில்மரங்களும் உயர்ந்துவளர்ந்த சந்தனமரங்களும் மேகங்களும் (தம்மீது) பொருந்தப்பெற்ற நீண்டமலைகளும், வளம் நாடு உம் - வளப்பமுள்ள தேசங்களும், பின்பட போய் - (உமது) பின்புறத்தனவாம்படி (அவைகளைக் கடந்து) சென்று, வழிமேல் சென்றால் - அப்பாலுள்ள வழியில் நடந்துசென்றால்,—கலுழன் - கருடனானவன், நஞ்சு வரும் மிடறு அரவுக்கு - விஷம்பொருந்திய வாயையுடைய நாகங்களுக்கு, அமிழ்து நனி கொடுத்து - அமிருதத்தை நன்றாகக்கொடுத்து, ஆயை நண்ணும் - (தனது) தாயாகிய விநதையை (அடிமைத்தொழிலினின்று விடுவித்துக்) கிட்டுதற்கு இடமான, எஞ்சு இல் மரகதம் பொருப்பை - குறைவில்லாத மரகத மலையை, இறைஞ்சி - வணங்கி, அதன் புறம் சார ஏகிர் - அம்மலையின் பக்கத்துவழியாக அப்பாற் செல்லுங்கள்; (எ - று.)

---

*'அன்று என்பவர் வாயிலே' என்றும் வழங்குவர்.

பாலைவனத்தின் மிக்கவெம்மையை விளக்குதற்கு 'அஞ்சுவரும்வெஞ்சுரனும்' என்றார். மேகமண்டலத்திற்கும் அப்பாற்சென்றுள்ளது மலையின் சிகரம் என்றற்கு 'மஞ்சிவருநெடுங்கிரி' எனப்பட்டது. மிடறு - தொண்டையின்பெயர், வாய்க்கு இலக்கணை. அரவு - காசியபமுனிவரதுமனைவியாகிய கத்துருவென்பவளது வயிற்றிற் பிறந்த வாசுகி முதலிய நாகங்கள்; பால்பகா அஃறிணைப்பெயர். கலுழன் - கருடன்: காசியபமுனிவரது மனைவியாகிய விநதையினிடம் பிறந்தவன். அகிலோங்காரமஞ்சிவரும் நெடுங்கிரி என்பதற்கு - அகிலையும் ஓங்கிய சந்தனமரங்களையுமுடையதும் மேகங்கள் தவழப்பெற்றதுமான நெடுங்கிரியெனினுமாம்; கருத்து ஒன்றே.

கருடன் அரவுக்கு அமிழ்துகொடுத்த வரலாறு:— காசியபமுனிவரது மனைவியாகிய விநதைக்கும் கத்துருவுக்கும்வானத்திற்சென்ற உச்சைச்சிரவமென்ற தேவலோகத்துக்குதிரையின் வாலினது நிறத்தைப்பற்றி யுண்டான விவாதத்தில் கத்துருவென்பவள் அக்குதிரையின் வாலைச்சுற்றிக்கொண்டு கருநிறமாகத் தோன்றுவிக்குமாறு தனதுபுதல்வராகிய கருநாகங்களை யேவிப் பந்தயத்தை வென்றவளாக, அதனால் அக்கருத்துருவுக்கு அடிமையாய்விட்ட விநதையும் அவளது புதல்வனான கருடனும் கத்துருவையும் அவளது புதல்வரான நாகங்களையும் சுமந்துசெல்லவேண்டியதாக, அது கண்ட கருடன் அவ்வடிமையினின்று நீங்குமாறு அந்நாகங்களின் மொழிப்படியே அமிருதத்தைக் கொணரும்படி அங்கு நின்று தேவலோகத்துக்குச்சென்று தேவர்களுடன்பொருது எல்லோரையும் வென்றபொழுது தேவேந்திரனது வேண்டுகோளினால் அமிருதத்தை மீட்கும் உபாயத்தை அவனுக்குக் கூறி, தான் சர்ப்பங்களை யுண்ணுமாறு அத்தேவேந்திரனிடத்தினின்று வரமும் பெற்று, அங்குநின்று அமிருதத்தையெடுத்துவந்து பாதாளலோகத்தையடைந்து அமிருதத்தைத் தர்ப்பையின்மீது அந்நாகங்களின் முன்னர் வைத்திட்டுத் தமது அடிமைத்தன்மையை நீக்கிக்கொண்டு, அவர்களையெல்லாம் அமிருதத்தை யுண்ணுதற்காக ஸ்நானஞ்செய்துவரும்படி தந்திரமாகச்சொல்ல, அந்நாகங்கள் முழுகுவதற்குப் போயிருக்கையில் கருடனது மொழியின்படியே தேவேந்திரன் அங்குவந்து அமிருதத்தையெடுத்துச் சென்றனனாக, முழுகச்சென்ற நாகங்கள் விரைந்துவந்து பார்த்து அமிருதமில்லாமையைக் கண்டுவருத்தத்தோடு அது வைக்கப்பட்டிருந்த இடத்தை நக்கியதனால் அத்தருப்பை அவர்களது நாவை யறுத்துவிட, அவர்கள் பிளவுபட்டநாவையுடையராய்க் கருடனது உபாயத்தை நினைத்து அச்சமும் நா அறுபட்டதனாற் பெருந்துயரமும் அடைந்தன ரென்பதாம்.

பி - ம்:—[1] அஞ்ச, அஞ்சி. [2] ஆறுமுகன், ஆறுமதன். [3] அதில். [4] மஞ்சு. [5] மலைநாடும். [6] வழியே. [7] கொடுத்தாவி, கொடுத்தரவு. [8] நீக்கும், நல்கும். [9] பொருப்பும். [10] எய்தி மாதோ, ஏகிமாதோ. (777)

26. வடசொற்குந் தென்சொற்கும் வரம்பிற்ருய் நான்மறையும் மற்றைநூலும், [2] இடைசொற்ற பொருட்கெல்லா மெல்லையதாய் நல்லறத்துக் கீருய் வேறு, புடைசுற்றுந் துணையின்றிப் புகழ்பொதிந்த மெய்யேபோற் பூத்து நின்ற, [3] அடைசுற்றுந் தண்சார லோங்கியவேங் கடத்திற்சென் றடைதிர் மாதோ.

(இ - ள்.) வடசொற்குஉம் தென்சொற்குஉம் வரம்பிற்று ஆய் - வடதிசையில் வழங்கும் மொழியாகிய சம்ஸ்க்ருதத்திற்கும் தென் திசையில் வழங்கும் மொழியாகிய தமிழுக்கும் எல்லையாகியும், நால் மறைஉம் மற்றை நூல்உம் இடை சொற்ற பொருட்கு எல்லாம் எல்லையது ஆய் - நான்குவேதங்களும் மற்றைச் சாத்திரங்களும் (தம்மிடத்தில்) கூறியுள்ள எல்லாப் பொருள்கட்கும் முடிவான பொருளை யுடையதாகியும், நல் அறத்துக்கு ஈறு ஆய் - சிறந்ததரு மங்கட்கெல்லாம் வரம்பாகியும், புடை சுற்றும் துணை வேறு இன்றி - பக்கத்திலெடுத்துச் சொல்லத்தக்க உபமானப்பொருள்வேறொன்று மில்லாமல், புகழ்பொதிந்த மெய்ஏபோல் பூத்துநின்ற - கீர்த்தி நிரம் பிய சரீரத்தைப்போல் விளங்குகின்ற, அடை சுற்றும்தண் சாரல் - தேன் கூடுகளாற் சுற்றிலும் நிரம்பப்பெற்ற குளிர்ச்சியான தாழ் வரைகளையுடைய, ஓங்கிய - மிகவும் உயர்ந்துள்ள, வேங்கடத்தில் - திருவேங்கடமலையில், சென்று அடைதிர் - போய்ச்சேருங்கள்; (எ - று.)—மாது ஓ - ஈற்றசை.

ஸம்ஸ்க்ருதபாஷையானது ஆதியில் திருவேங்கடமலைக்கு வடபுறத்திலுள்ள காசிமுதலிய தேசங்களில் மிகுதியாக வழங்கி வந்ததாதலின், வடமொழி யெனப்படும். அவ்வாறே திருவேங் கடமலைக்குத் தென்புறத்தில் வழங்கிவருந் தமிழ்ப்பாஷை தென் மொழி யெனப்படும். இவ்விருமொழிகளும் மிகுதியாக வழங்கும் நிலங்களுக்கு இடையேநின்று எல்லைகுறிப்பதனால், திருவேங்கட மலையை 'வடசொற்கும் தென்சொற்கும் வரம்பிற்று' என்ருர். "வட வேங்கடம் தென்குமரி" என்னுமிடத்தில், இத்திருவேங்கட மலையைத் தமிழுலகத்திற்கு வடவெல்லையாகக் கூறியதுங்காண்க. நான்கு வேதங்களிலும் அவ்வேதங்கட்கு உபபிருமணமாகிய இதி காசம் புராணம் முதலிய மற்றை நூல்களிலும் எடுத்துக் கூறப் படும் பொருள்களாகிய கடவுளர்யாவரினுஞ் சிறந்த முழுமுதற் கடவுளான திருமாலைத் தன்னிடத்திற்கொண்டுள்ளது இது வென்பது, 'நான்மறையும் மற்றைநூலு மிடை சொற்ற பொருட் கெல்லாம் எல்லையது' என்பதன் கருத்து. நல்லறத்துக்கு ஈறு - எல்லாத்தருமங்கட்கும் கடையெல்லை; இம்மலையிலே தருமங்க ளெல்லாம் குறைவின்றி நிறைந்திருக்கின்றன வென்க. 'வேறு புடைசுற்றும் துணையின்றி' என்பதற்கு - இதற்குச்சமானமாக உடன் எடுத்துச் சொல்லத்தக்க மலை வேறொன்றுமில்லையென்று கருத்து: அறப்பயனைக் குறைவின்றியளிப்பது எனக் கருத்துக் காண்பாருமுளர். புகழ்பொதிந்தமெய் - புகழுடம்பு; பூதவுடம்பு அழிந்தாலும் கீர்த்தியானது தான் அழியாதுநின்று உலகத்தி

லுள்ளார் பலராலும் கொண்டாடப்பட்டு விளங்குதல்போலத் திருவேங்கடமலையும் பிரளயத்திலும் தான் அழியாதுநின்று உலகத்திலுள்ளார்பலரா்லும் துதிசெய்யப்பட்டு விளங்குதலால் அம்மலைக்குப் புகழுடம்பை உவமை கூறினர். 'புகழ்பொதிந்த மெய்யேபோல்' என்பதற்கு - புகழ்நிரம்பிய சத்தியம்போல எனக் கூறுவாரும், 'புகழ்பொதிந்த மெய்யேபோற்பூத்துநின்ற' என்பதைச் சாரலுக்கு அடைமொழியாக்குவாரும் உளர்.

வேங்கடம் என்பது - திருமாலின் திவ்வியதேசங்கள் நூற்றெட்டனுள் ஒன்றும், வடநாட்டுத்திருப்பதிகள் பன்னிரண்டனுள் முதலதும், 'கோயில் திருமலை பெருமாள்கோயில்' என்று சிறப்பாக எடுத்துக் கூறப்படுகின்ற மூன்றுதலங்களுள் இடையதுமாகிய தலம். தன்னையடைந்தவர்களுடைய பாவமனைத்தையும் ஒழிப்பதனால், 'வேங்கடம்' எனப் பெயர்பெற்றது; வேம் - பாவம், கடம் - எரித்தல் எனப்பொருள் காண்க. (இதனை, "அத்திருமலைக்குச் சீரார்வேங்கடாசல மெனும்பேர், வைத்தன ரதுவேதென்னில் வேமெனவழங்கெழுத்தே, கொத்துறுபவத்தைக்கூறும் கடவெனக் கூறிரண்டாஞ், சுத்தவக்கரங் கொளுத்தப் படுமெனச் சொல்வர் மேலோர்," "வெங்கொடும்பவங்களெல்லாம் வெந்திடச்செய்வதால்நல், மங்கலம் பொருந்துஞ்சீர் வேங்கடமலையான தென்ப" என்னும் புராணச் செய்யுள்களாலும் அறிக.) அன்றி, வேம் என்பது - அழிவின்மை, கடம் என்பது - ஐசுவரியம்; அழிவில்லாத ஐசுவரியங்களை (த் தன்னையடைந்தார்க்கு)த் தருதலால், வேங்கடமெனப் பெயர் கொண்டது என்று வராகபுராணத்திற் கூறப்பட்டுள்ளது.

மற்றைநூல் - சிட்சைமுதலிய ஆறு அங்கங்களும், இராமாயணம் முதலிய இதிகாசங்களும், பிராம்மம் முதலிய பதினெண்புராணங்களும், மநுமுதலியஸ்மிருதிகளுமாம். சாரல்-சார்ந்துள்ள இடத்திற்குத் தொழிலாகுபெயர். பி - ம்:—[1] வடசொற்குந்தென்றமிழ்க்கும் வரம்பாகி நான்மறையின் மற்றைநூலின், வடசொற்குந் தென்சொற்கு நான்மறைக்கும் வரம்பாகி மற்றைநூலின்,...வரம்பாகு நான்மறையும் மற்றைநூலும். [2] இடைசொற்ற பொருட்கெல்லாமறிவினுக்கு மீறுய அல்லது நல்லறிவிற்கீறுய எறும்பொற்குன்றம். [3] உடைசுற்றும் அல்லது அடல்சுற்றும் நெடுஞ்சாரல் அல்லது தடஞ்சாரல். [4] சென்றுறுதிர். (778)

27. இருவினையு [1]மிடைவிடா வெவ்வினையு மியற்றுதே யிமையோ [2]ரேத்தும், திருவினையு மிடு[3]பதந்தேர் சிறுமையையு [4]முறையொப்பத் [5]தெளிந்து நோக்கிக், கருவினைய [6]திப்பிறவிக் கென்றுணர்ந்தங் [7]கதுகளையுங் கடையின் ஞானத்து, அருவினையின் பெரும்பகைஞ ராண்டுளரீண் டிருந்துமடி வணங்கற் பாலார்.

(இ - ள்.) இருவினை உம் இடைவிடா எவ்வினை உம் இயற்றுது ஏ- (நல்வினை தீவினைகளாகிய) இருவகைவினைகளும் இடைவிடாமற் சம்பந்தப்பட்டுள்ள எந்தக்கருமங்களையுஞ் செய்யாமல்,—இமையோர் ஏத்தும் திருவினை உம் - தேவர்களும் புகழும்படியான பெருஞ்செல்வ வாழ்க்கையையும், இடு பதம் தேர் சிறுமையை உம் - (பிறர்பிச்சை

யாக) இடுஞ்சோற்றை எதிர்பார்த்திருக்கின்ற தாழ்வையும் [தரித்திர வாழ்க்கையையும்], முறைஒப்ப தெளிந்து நோக்கி - ஒன்றற்கொன்று சமமுடையதாகத் தெளிந்த அறிவுகொண்டு பார்த்து,—இ பிறவிக்கு கரு வினை அது என்று உணர்ந்து - 'இந்தப்பிறப்பு உண்டாவதற்கு மூலகாரணம் இருவினைகளே யாகும்' என்று அறிந்து, அது - அவ் வினையின் தொடர்பை, களையும் - நீக்குதற்கு உரிய, கடை இல் ஞானத்து - எல்லையில்லாத தத்துவஞானத்தையுடைய, அரு வினை யின் பெரும் பகைஞர் - (போக்குதற்கு) அரிய இருவினைகட்கும் பெருஞ் சத்துருக்களாகிய பெரியோர், ஆண்டுஉளர் - அம்மலையி லிருக்கின்றார்கள்; (அவர்கள்), ஈண்டு இருந்துஉம் அடி வணங்கல் பாலார் - (நேரிற்சென்றன்றி நாம்) இங்கிருந்தவாறேயும் [திக்குநோக் கித்] தண்டஞ்சமர்ப்பித்தற்கு உரியவராவர்; (எ - று.)—அங்கு - அசை.

பயன்கருதி ஒருதொழிலையுஞ் செய்யாமல் செல்வவாழ்க்கையி லும் வறுமைவாழ்க்கையிலும் சமபுத்தியையுடையவர்களாய், பிறப் புக்குக் காரணமான இருவினைகளையும் ஒழிக்குங் கருத்துக் கொண்டு, தத்துவஞானம் வாய்ந்து, திக்குநோக்கியும் தண்டஞ் சமர்ப்பித்தற்கு உரியராயுள்ள பெரியோர்கள், அத்திருவேங்கட மலையில் வாழ் கின்றன ரென்க. மனிதர் எந்தத்தொழில் செய்தாலும் அது புண்ணிய பாவங்கட்குச் சம்பந்தப்பட்டு அதற்குரிய வினைப்பயனை யூட்டு மாதலால், 'இருவினையு மிடைவிடாவெவ்வினையும்' என்றார்; தீவினை இரும்புவிலங்குபோலவும், நல்வினை பொன் விலங்குபோலவும் நின்று மோட்சத்திற்குச் செல்லவொட்டாமற் பந்தமுறுத்துதலால், இருவினையும் ஞானிகட்கு ஆகாவென்க. இஞ்ஞானிகள் தாம்செய்யும் வினைகளையெல்லாம் கடவுளின் திருத்தொண்டாகவன்றி, ஒருபயன் கருதிச் செய்யாராதலால், அவர்கள் எவ்வினையும் இயற்றாராவர். "ஸமலோஷ்டகாஞ்சந: [மண்கட்டியிடத்தும் பொன்னிடத்தும் சாமியபுத்தியுடையவன்]" என்றபடி பெருஞ்செல்வத்தையும் பெறு வறுமையையும் ஒருநிகராகக்கருதுந்தன்மை யுடையவ ரென்பது 'இமையோரேத்துந் திருவினையும் இடுபதந்தேர் சிறுமையையும் முறையொப்பத் தெளிந்துநோக்கி' என்பதனாற் போதரும். பதம் - சோறு. 'இமையோரேத்துந் திரு' என்றது - எப்பொழுதும் மிக்க இன்பத்திலேயே மூழ்கிக்கிடக்குந்தேவர்களும் அதனாலான இன்பத் தைக் கண்டு வியக்கும் செல்வமென்று செல்வத்தின் சிறப்புக் கூறிய வாறு. முதலடி - முற்றுமோனை.

வினை - மனம் வாக் காயம் என்னுந் திரிகரணங்களாலும் உயிர்கள் செய்யும் புண்ணியபாவங்கள். அந்தக்கர்மம், சஞ்சி தம் பிராரப்தம் ஆகாமியம் என மூன்றுவகைப்படும். அவற் றுள், சஞ்சிதமாவது - பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரால் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகள்; பிராரப்தமாவது - அவ்வினை களுள் இறந்த உடம்புகளால் பயன் நுகர்ந்தன போகப் பிறந்த உடம்பால் அநுபவிக்கத் தொடங்கியவை: ஆகாமிய மாவது - எடுத்த இப்பிறப்பிற் செய்யப்படுவன; இவ்வினைகள் பிறப்புக்குக் காரணமாதல் காண்க. வினை - சாதியொருமை. தமது

பரப்பிரமஞானத்தால் இருவினைத்தொல்லைகள் தம்மை அணுகாது போக்கிக் கொள்ளவல்லவரென்பது 'ஞானத்து அருவினையின் பெரும் பகைஞர்' என்பதன்தேர்ந்த பொருள். 'ஈண்டிருந்தும் அடி வணங்கற் பாலார்' என அந்தத்தத்துவஞானிகளின் மேன்மையை விளக்கினார். 'மால்வரையதனைக் குறுகுதிரேல் உம்கொடியகொடுமை நீங்கி வீடுறுதிர் ஆதலினால் விலகுதிர் (29)' என்று, வேங்கடமலையிற் செல்லாது விலகிச் செல்லுமாறு கூறப்படுவதால், 'ஈண்டிருந்தும் அடிவணங்கற் பாலார்'' என்று கூறினருமாம். 'ஆண்டுளரீண்டிருந்தும்' என்னு மிடத்திற் பிராசமென்னுஞ் சொல்லணி காண்க. பி - ம்:—[1] இடைவிடாது. [2] எய்தும். [3] பதங்கொள். [4] முறையாக, முறையொக்க. [5] தெரிந்து. [6] வினையின் பலபிறக்கட்டு, வினையதிப்பிறவியென்று. [7] கதங்களையும். [8] வணங்கலாவார். (779)

28. [1] தோதவத்தித் தூய்மறையோர் [2] துறையாடு நிறையாறுஞ் சுருதித் தொன்னூல், மாதவத்தோ ருறைவிடனு மழையுறங்கு மணித் தடனும் வான மாதர், [3] கீதமொத்த கின்னரங்க ளின்னரம்பு [4] வருடுதொறும் [5] கிளக்கு மோதை; போதகத்தின் மழக்கன்றும் புலிப் பறழு [6] முறங் கிடனும் பொருந்திற் றம்மா.

(இ - ள்.) தோதவத்தி - சுத்தமான ஆடையையணிந்தவராய், தூய் மறையோர் - மனத்தூய்மையுடையவரான பிராமணர்கள், ஆடு - இறங்கிமூழ்கின்ற, துறை - துறைகள், நிறை - நிரம்பவுள்ள, ஆறுஉம் - நதிகளையும், சுருதி தொல் நூல் - வேதங்களையும் பழமையான சாத்திரங்களையும் அறிந்த, மாதவத்தோர் - பெருந்தவத்தையுடைய முனிவர்கள், உறைவு - வசிக்கின்ற, இடன்உம் - ஆச்சிரமங்களையும், மழை உறங்கு மணி தடன்உம் - மேகங்கள் தங்குகின்ற இரத்தினங்களையுடைய தாழ்வரைகளையும், வானம் மாதர் - தேவமாதரின், கீதம் ஒத்த - இசைப்பாட்டுக்கு இணங்கின, கின்னரங்கள் - கின்னரமென்னும் இசைக்கருவிகளினுடைய, இன் நரம்பு - இனிய நரம்புகளை, வருடு தொறும் - தடவும்பொழுதெல்லாம், கிளர்க்கும் - உண்டாகின்ற, ஓதை - ஓசையினால், போதகத்தின் மழகன்றுஉம் புலி பறழ்உம் உறங்கு - யானைகளின் இளங்கன்றுகளும் புலிக்குட்டிகளும் (தம்முள்விரோதமற்றுத்) தூங்குகின்ற, இடன்உம் - இடங்களையும், பொருந்திற்று - பொருந்தியுள்ளது, (அத்திரு வேங்கடமலை); (எ - று.)—அம்மா - அம்மலையின்சிறப்பைக் கருதிய வியப்பிடைச்சொல்.

அம்மலையில் தேவமாதர்கள் வந்து கின்னரவாத்தியங்களைக் கொண்டு வாசிக்கின்ற இன்னிசையைக் கேட்டு ஒன்றோடொன்று பகைக்குந் தன்மையுள்ள யானைக்கன்றுகளும் புலிக்குட்டிகளும் தம்முட் பகைமைநீங்கி ஓரிடத்திலேயே வந்து உறங்குமென, பின்னிரண்டடிகளால், மலையினது சாந்தகுண முண்டாக்குந்தன்மையையும், இசையினிமையையும் எடுத்துக்காட்டியவாறு. மறையோர் - வேதியர். துறை - நீரிலிறங்குமிடம். ஆறுகள் - அம்மலையிலுள்ள ஆகாசகங்கை, பாபவிநாசம் முதலியன. கின்னரம் - ஒருவகை நரம்புக் கருவி; வீணையென்பாருமுளர். போதகம் - பத்துவருஷத்து யானைக் கன்று; இங்கு, யானை யென்ற மாத்திரமாய் நின்றது. ''யானையுங்

குதிரையுங் கழுதையுங் கடமையு, மானோடைந்துங் கன்றெனற் குரிய" என்ற தொல்காப்பியத்தால் 'போதகத்தின்மழக்கன்று' என் றும், "நாயே பன்றிபுலி முயல் நான்கும், ஆயுங்காலைக்குருளை யென்ப," குட்டியும் பறழும் கூற்றவண் வரையார்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரங்களால் 'புலிப்பறழ்' என்றுங் கூறினர். தௌதவஸ்த்ரம் என்றதொடர் 'தோதவத்தி' எனத் திரிந்ததென்ப; "தோதவத்தித் தூய்மறையோர்" என்று பெரியார் வாக்கிலும் வந் துள்ளது. பி-ம்:—[1]சூதகத்தின்றிரு, சூதகற்றுந்திரு. [2]கிறையோடுந் துறையோடு. [3]கேழுற்ற. [4]புரளுதொறு. [5]இளர்க்குமோதை [6]உறங் கிடமும். (780)

29. [1]கோடுறுமால் வரையதனைக் குறுகுதி[2]ரே லுந்நெடிய [3]கொடுமை நீங்கி, [4]வீடுறுதி [5]ராதலினான் விலங்கு[6]திரப் புறத்துநீர் மேவு தொண்டை, [7]நாடுறுதி ருற்றதனை நாடியதற் பின்னையவை [8]நனிநீர்ப் பொன்னிச், சேடுறுதண் புனற்றெய்வத் திருநதியி னிரு கரையுந் [9]தெரிதிர் மாதோ.

(இ - ள்.) கோடு உறு மால்வரை அதனை குறுகுதிர் ஏல் - சிகரங்கள் பொருந்திய பெரிய அத்திருவேங்கடமலையை நெருங்கு வீர்களானால், (அத்தலத்தின் மகிமையால்), உம் நெடிய கொடுமை நீங்கி வீடு உறுதிர் - உங்களுடைய மிக்க கொடும்பாவங்களெல்லாம் கழிய உடனே மோக்ஷமடைவீர்கள்; ஆதலினான் - ஆதலால், விலங் குதிர் - (அங்கு உட்செல்லாது) விலகினவர்களாய், அப்புறத்து - அப் பாலுள்ள, நீர் மேவு தொண்டை நாடு - நீர் நிறைந்த தொண்டை நாட்டை, உறுதிர் - சேருங்கள்; உற்று - அவ்வாறுசேர்ந்து, அதனை நாடி - அந்நாட்டில் தேடி, அதன் பின்னை - அதற்குப் பிறகு, நனி நீர் பொன்னி சேடு உறு தண் புனல் தெய்வம் திரு நதியின் இரு கரை அவைஉம் - பெருந்தன்மையையுடைய [கம்பீரமான தோற்றமுள்ள] பொன்னியென்னும் பெயர்கொண்ட சிறப்பு வாய்ந்த குளிர்ந்த நீர் நிறைந்த தெய்வத்தன்மைபெற்ற காவேரி நதியினது இருகரைகளி லும், தெரிதிர் - (சென்று சேர்ந்து சீதாபிராட்டியைத்) தேடுங்கள்; (எ - று.)—மாது ஓ - ஈற்றசைகள்.

திருவேங்கடமலையிற் புக்கமாத்திரத்து இருவினைத் தொல்லை களும் ஒழிந்து நீங்கள் முத்தியடைவீர்கள்; அவ்வாறு முத்தியை யடைந்துவிட்டால் இராமகாரியம் நடவாதாதலின் அங்குச்செல்ல வேண்டா எனச் சுக்கிரீவன் மறுத்தன னென்க. அம்மலை மிக்க தூய்மையுள்ளதாதல்பற்றி அங்கு இராவணன் சென்றிருக்கமாட்டா னென்பது திண்ணமாதலால், அங்குப்போய்த் தேடிப்பார்த்தலிற் காலதாமதமேயொழிய வேறு பயனின்று என இதனாற் குறிப்பித் தன னென்னலாம். வீடு - (இவ்வுலகப்பற்றை) விட்டு அடையும் இடம்; எனவே, மோக்ஷம்.

தொண்டைமான் என்பது அக்குலத்து அரசரில் ஒருவனது பெயராயிருந்து பிறகு அந்நாட்டரசர்க் கெல்லாம் வழங்குகின்ற தென்றும், தொண்டைமானது நாடு தொண்டைநாடு என வழங்க லாயிற்றென்றும் கூறுவர். தொண்டைமானென்ற பெயரின் காரணம்

—தொண்டைநாட்டு இராசதானியான காஞ்சிபுரத்தி லிருந்த தொண்டைமானிளந்திரையனைக்குறித்துப் பாடப்பட்ட பெரும்பாணாற்றுப்படையில் "அந்நீர்த் திரைதருமரபின்...பல்வேல் திரையன்" என்றவிடத்து 'நாகப்பட்டினத்துச்சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னிகையைப் புணர்ந்தகாலத்து, அவள் 'யான்பெற்ற புதல்வனை என்செய்வேன்?' என்ற பொழுது, 'தொண்டையை [தொண்டை - ஓர் கொடி] அடையாளமாகக் கட்டிக் கடலிலே விட அவன்வந்து கரையேறின் அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பல்' என்று அவன்கூற, அவளும் புதல்வனை அங்ஙனமே வரவிட, திரை தருதலின் திரையனென்று பெயர் பெற்ற கதை கூறினர்' என்று நச்சினார்க்கினிய ருரைத்தவாற்றால் விளங்கும். இனி, பூமியாகிய பெண்ணுக்குத் தொண்டை [கழுத்து] ஸ்தானமாயிருப்பதால் தொண்டைநாடென்றும், "தொண்டைநன்னாடுசான்றோருடைத்து" என்றபடி எம்பெருமானது தொண்டர்கள்பலர் வசிக்கின்ற நாடு தொண்டைநாடு என்றும் காரணங் கூறுதலுமுண்டு. "மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம், ஆர்க்கு முவரி யணிகிழக்குப் - பார்க்குளுயர், தெற்குப்பினாகி திகழிருபதின்காதம், நற்றொண்டை நாடெனவே நாட்டு" என்றதனால், தொண்டைநாட்டின் எல்லையை உணர்க.

"மலைத்தலைய கடற்காவிரி, புனல்பரந்து பொன்கொழிக்கும்" என்றபடிதான்பெருகும்பொழுது பொன்னைக்கொழித்துக் கொண்டு வருவதால், காவேரிநதிக்கு 'பொன்னி' என்று பெயர். காவேரிக்குத் தெய்வத்தன்மை, தன்னில் ஒருகால் மூழ்கியவர்க்கும் பிறவிப்பிணியொழித்து நற்கதியளிக்குந் திறம். [8]களிர்நீர் என்ற பாடம் - பின் வரும், 'தண்புனல்' என்பதனோடு கூறியது கூறலுக்கு இடமாம். பி - ம்:—[1]கோடுமால். [2]எனினெடிய, எனினே. [3]கோடு நீங்கி, கோளு நீங்கி. [4]வீடுறுதிராதலினலப்புறமுமிப்புறமு மேவித் தொண்டை, வீடுறுதிராதலினல் வியக்குறுதிப் புறத்துறநீர் விடுதிர்விட்டால். [5]ஆதலால். [6]அப்புறத்துள். [7]நாடுறுதிருற்ற தொண்டை நாடுறுதி ருற்றதற்பி னளிநீர், நாடுறுவீருற்றக்கான கருறுதி ருற்றதற்பினளிநீர். [9]சேர்திர். (781)

30. துறக்கமுற்றார் மனமென்னத் துறைகெழுநீர்ச் சோணாடு
கடந்தாற் றொல்லை, [1]மறக்கமுற்றா ரதனயலே மறைந்துறைவ ரவ்வழி
நீர் வல்லை யேகி, [2]உறக்கமுற்றா ரென்னுற்றா ரெனுமுணர்வி னோடு
[3]மொதுங்கி [4]மணியா லோங்கல், பிறக்க[5]முற்ற மலைநாடு [6]நாடியகல்
[7]தமிழ்நாட்டிற் பெயர்திர் மாதோ.

(இ - ள்.) துறக்கம் உற்றார் மனம் என்ன துறை கெழுநீர் சோணாடு கடந்தால் - சுவர்க்கத்தை அடைந்தவர்களது மனம்போலத் (தெளிவாகத்) துறைகளிலே விளங்குகின்ற நீரையுடைய [காவேரியாற்றைக் கொண்ட] சோழநாட்டைத் தாண்டிச்சென்றால், அதன்

அயலே - அந்நாட்டின் அருகில், தொல்லை மறக்கம் உற்றார் மறைந்து உறைவர் - பழவினைத் தொல்லைகள் மறத்தலைப் பொருந் தியவர் [வினைத்தொல்லைக ளற்ற முனிவர்கள்] மறைந்துவசிப்பர்; நீர் - நீங்கள்,— அ வழி வல்லை ஏகி - அந்தமார்க்கத்தில் விரைவாய்ச் சென்று, உறக்கம் உற்றார்என்உற்றார்எனும் உணர்வினொடுஉம் ஒதுங்கி - '(சோம்பலினால்) உறக்கத்தை யுடையவர்கள் யாது பயன் அடைவர்? [ஒருபயனையும் அடையமாட்டார்]' என்ற அறிவோடும் (பரபரப்புடனே மேற்புறமாகச்) சற்றுவிலகிச் சென்று, மணியால் ஓங் கல் பிறக்கம் உற்ற மலைநாடு நாடி - இரத்தினங்களினொளியால்மலை கள் விளக்கத்தை யடைந்திருக்கின்ற மலைநாட்டில் (சீதாபிராட்டி யைத்) தேடி, (பிறகு), அகல் தமிழ்நாட்டில்பெயர்திர் - விசாலமான செந்தமிழ்ப் பாண்டியநாட்டிற் சென்று சேருங்கள்; (எ - று.)—மாது ஓ - ஈற்றசைகள்.

சுவர்க்கமடைந்தவர் துயரத்தினாற் கலங்குதலின்றி எப்போதும் இன்பத்தினால் நிறைந்த மனத்தையுடையவராதல்போல, காவிரி யாறும் நீர்நிரம்பிய துறைகளைப் பெற்றிருக்குமென்க. வெகு தூரம் நடந்த இளைப்பாற் சோர்வுறுமற் சீதாபிராட்டியைத் தேடும் விஷயத்தில் மிக்கபரபரப்புடனே இருத்தல்வேண்டு மென்பான், 'உறக்கமுற்றா ரென்னுற்றாரெனு முணர்வினொடு மொதுங்கி,' என் றான். உறக்கமுற்றாரென்னுற்றார்—"முயற்றின்மையின்மைபுகுத்தி விடும்" என்பது, திருக்குறள். தென்திசைநோக்கிச் செல்பவர் கள் சோழநாடுகடந்ததும் பாண்டியநாட்டிற் புகுந்துவிடாமல் சோழநாட்டின் மேற்புறத்திலுள்ள மலைநாட்டிலும் தேடவேண்டு மென்ற கருத்துடனே ஒதுங்கி மலைநாட்டில் நாடிப் பிறகுபாண்டிய நாட்டிற் சேருமாறு சுக்கிரீவன் வானரர்கட்குக் கட்டளையிட்டன னென்க.

சோணாடு - சோழநாடு என்பதன் மரூஉ. மறக்கம் - 'மற' என்ற முதனிலையின் தொழிற்பெயர். மலைநாடு - சேரநாடு; சேரநாட்டில் மலைகள் மிகுதியாயிருத்தலால், அதற்கு அப்பெயர். தமிழ்நாடு - பாண்டியநாடு; செந்தமிழ் வழங்கும் நாடாதலால், பாண்டிய நாட்டிற் குத் தமிழ்நாடு என்று பெயர். "கடல் கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு, குடதிசையிற் கோட்டைக்கரையாம் - வடதிசையி, லேணாட்டுப் பெண்ணை யிருபத்துநாற்காதம், சோணாட்டுக்கெல்லை யெனச்சொல்," "வடக்குத்திசை பழனி வான்கீழ் தென்காசி, குடக் குத்திசைக் கோழிக்கூடாம் - கடற் கரையி, னேரமோ தெற்காகு முள்ளொன்பதின்காதம், சேரநாட்டுக்கெல்லையெனச் செப்பு", "வெள் ளாறது வடக்கா மேற்குப்பெருவழியா, வெள்ளாப்புனற்கன்னிதெற் காகு-முள்ளாரு, வாண்ட கடல் கிழக்காமைம்பத் தறுகாதம், பாண்டி நாட் டெல்லைப் பதி" என்பவற்றால் சேர சோழ பாண்டிய நாடுகளின எல்லையை அறிக.

பி - ம்:—[1] அறக்கணுற்றாரதனயலேமறைந்துறைவரவ்வழியேயல் லல்போக. [2] உறக்கமுற்றுதின்புற்றாரென்றிவர்கள்பெறு முணர் வினொடும், உறக்கமுற்றார் கனவுற்று ரெனுமுணர்வினொடும். [3] ஓங்கி. [4] மணிமரலோங்கல். [5] உற்று. [6] தேடி. [7] தமிழ்நாடும். (782)

31. தென்றமிழ்நாட் [1]டகன்[2]பொதியிற் றிருமுனிவன் தமிழ்ச் சங்கஞ் [3]சேர்கிற் பீரேல், என்றுமவ [4]னுறைவிடமா மாதலினு னம் மலையை [5]யிறைஞ்சி யேகிப், பொன்றிணிந்த [6]புனல்பெருகும் பொருநையெனுந் திருநதியின் பொழிய நாகக், கன்றுவளர் தடஞ்சாரன் [7]மகேந்திரமா நெடுவரையுங் கடலுங் [8]காண்டிர்.

(இ - ள்.) தென் தமிழ் நாடு - தெற்குத்திசையி லிருக்கின்ற தமிழ்நாடாகிய பாண்டிநாட்டிலுள்ள, அகல் பொதியில் - அகன்ற பொதியமலையிலே நிலைபெற்ற, திரு முனிவன் - சிறந்த அகத்திய முனிவனது, தமிழ் சங்கம் - தமிழ்ச்சங்கத்தை, சேர்கிற்பீர் ஏல் - சேர்வீர்களாயின்,—(அம்மலையானது), என்றும் அவன் உறைவு இடம் ஆம் - எப்போதும் அம்முனிவன் வசித்தற்குஉரிய இடமாகும்; ஆதலினுன்—, அ மலையை இறைஞ்சி ஏகி - அந்தப் பொதியமலையை வணங்கி அப்பாற்சென்று, பொன் திணிந்த புனல் பெருகும் பொருநை எனும் திரு நதி பின்பு ஒழிய - அழகு நிரம்பிய நீர் பெருகுகின்ற தாமிரபர்ணியென்னுஞ் சிறந்த நதி பின்னுற் கிடக்குமாறு (அதனைவிட்டுப் புறப்பட்டு), நாகம் கன்று வளர் தட சாரல் மகேந்திரம் ஆம் நெடு வரைஉம் - யானைக்கன்றுகள் வளரப்பெற்ற பெரிய தாழ்வரைகளையுடைய மகேந்திரமென்னும் பெரியமலையையும், கடல்உம் - தென்கடலையும், காண்டிர் - காண்பீர்கள்; (எ - று.)

தமிழை வளர்த்த அகத்தியமுனிவனுக்கு இருப்பிடமாதலால் பொதியமலையை வணங்கிச்செல்லுமாறு சுக்கிரீவன் கட்டளை யிட்டனன். பிற்காலத்தில் நிகழ்ந்ததாகிய அகத்தியமுனிவன் பொதியமலையில் வாழ்தலை, கவி பாஷாபிமானத்தால் மெய்ம்மறந்து முற்காலத்து நிகழ்ந்ததுபோலவே கூறினுரென்ப.

சங்கம் = ஸங்கம்: புலவர்களின் கூட்டம்; அகத்திய முனிவன் வடதிசையினின்றும் தமிழை வளர்க்குமாறு தென்திசை நோக்கி வந்தானுதலால், அம்முனிவனுள்ள இடத்தில் தமிழறிந்த வித்வான்களின் கூட்டம் இருத்தல் இயல்பேயா மென்க. சேர்கிற்பீரேல் இறைஞ்சி என இயையும். 'அம்மலையை [5]வலத்திட்டேகி' என்ற பாடத்துக்கு - பொதியமலையிலுள்ள தமிழ்ச் சங்கத்தைச் சேர்வீர்களாயின் அதை விட்டுவருதற்கு மனம்வராதாகையால், அங்குச் செல்லாமல் அந்தப் பொதியமலை வலத்திலிருக்கும்படி பிரதக்ஷிணமாகக் கடந்துசெல்லுங்க ளென்று கூறியதாகக்கொள்க. பொதியமலை - மலயமலை. நாகம் - மலையில் வாழ்வது என யானைக்குக் காரணக்குறி: (நகம் - மலை.) மகேந்திரம் மா நெடு வரை என்றும் பிரியும். பி - ம்:—[1]அதன். [2]பொதியத்திரு முனிவன். [3]சேருவீரேல், தெரிகிற்பீரேல், சேர்கிற்றீரேல், சேருகிற்பீர். [4]உறையுமிடமாதலால். [5]இடத்திட்டேகி. [6]புனலரவப் பொருநை. [7]மயேந்திரமா. [8]காண்பீர். (783)

32. ஆண்டுகடந் தப்புறத்து [1]மெப்புறத்து மொருதிங்க ளவதி யாகத், தேண்டியிவண் வந்தடைதிர் [2]விடைகோடிர் கடிதென்னச் செப்பும் [3]வேலை, நீண்டவனு மாருதியை நிறையருளா லுறநோக்கி நீதி வல்லோய், காண்டி [4]யெனிற் குறிகேட்டி யெனவேறு கொண் டிருந்து கழற லுற்றான்.

(இ - ள்.) ஆண்டுகடந்து - அவ்விடத்தைத் தாண்டிச்சென்று, அபுறத்துஉம் எபுறத்துஉம் - அதற்கு அப்பாலும் எல்லாவிடங் களிலும், ஒரு திங்கள் அவதி ஆக தேண்டி - ஒருமாதகாலம் தவணை யாகக்கொண்டு (சீதாபிராட்டியைத்) தேடி, இவண் வந்து அடைதிர்- இங்குவந்துசேருங்கள்; கடிது விடை கோடிர் - விரைவாக விடை பெற்றுச் செல்லுங்கள், என்ன செப்பும் வேலை - என்று (சுக்கிரீவன் வாநரர்கட்குக்) கட்டளையிட்டபோது,—நீண்டவன்உம் - திரிவிக்கிர மாவதாரஞ்செய்த திருமாலின் திருவவதார மூர்த்தியாகிய இராம பிரானும், மாருதியை - வாயுகுமாரனாகிய அநுமானை, நிறை அரு ளால் உற நோக்கி - பூர்ணகிருபையோடு நன்றாகக் கடாட்சித்து, 'நீதி வல்லோய் - நீதிநூல்களில் வல்லவனே! காண்டி எனின் -(சீதாபிராட் டியைக்) காண்பாயானால், (இவள் தான் சீதை யென்று தெளிதற் காக), குறி கேட்டி - (அவளுடைய) அடையாளங்களை (யான் சொல் லக்) கேட்பாய்,' என - என்று, வேறு கொண்டு இருந்து-(அவனைத்) தனியே அழைத்துச்சென்று ஓரிடத்திலிருந்து, கழறல் உற்றான் - (அவ்வடையாளங்களைக்) கூறத் தொடங்கினான்; (எ - று.)—அதனை, அடுத்த முப்பத்து நான்கு கவிகளிற் காண்க.

"ஒருமதிமுற்றுறுதமுன் முற்றுதிரிவ்விடை" என்று சுக்கிரீ வன் தான் கீழ்க் கூறியதை "ஒருதிங்களவதியாகத் தேண்டியிவண் வந்தடைதிர் விடைகோடிர் கடிது" என்று அநுவதித்து முடித்தன னென்க. சுக்கிரீவன் இவனாலேதான் காரியங் கைகூடு மென்னுங் குறிப்போடு அநுமானையே பிரதானமாகக்கொண்டு இவ்வளவு தூரம் கூறியதனாலும், தனக்கும் சுக்கிரீவனுக்கும் முதலில் சொல்வன்மை யால் நட்புச்செய்வித்தவன் அநுமானேயாதலாலும், சீதாபிராட் டியை நாடிக்காணுதலாகிய தொழில் இவனாலேயே நிறைவேறு மென்று கருதி இராமபிரானும் அநுமானை வேறுகொண்டு கூறலாயி னன். தேண்டி - விரித்தல். பி - ம்:—[1] இப்புறத்தும். [2] விடை கொளீர், விடைகொண்டீர், விடைகோடீர். [3] எல்லை, ஏல்வை. [4] எனக். (784)

33.— முப்பத்துமூன்று கவிகள் - இராமபிரான் அனுமானிடத்துச் சீதாபிராட்டியின் அவயவங்களை வருணித்துக் கூறுதலைத் தெரிவிக்கும்.

வேறு.

அவற்றுள்,

கால்விரல்கள் பாதங்கள் இவற்றின் வருணனை.

பாற்கடல் பிறந்த [1]தெய்வப் பவளத்தைப் பஞ்சியூட்டி
மேற்பட [2]மதியஞ் சூட்டி [3]விரகுற நிரைத்த [4]செய்ய

காற்றகை விரல்க ளைய கமலமும் பிறவு [5]மெல்லாம்
ஏற்பில [6]வென்ப தன்றி யிணையடிக் [7]குவமை யென்னே.

(இ - ள்.) (இராமபிரான் அநுமானை நோக்கி), ஐய - ஐயனே!— செய்ய கால் தகை விரல்கள் - (சீதையின்) செவ்விய கால்களிலுள்ள அழகியவிரல்கள்,—பால்கடல் பிறந்த தெய்வப்பவளத்தை - பாற்கடலில் தோன்றிய தெய்வத்தன்மையுள்ள பவழத்துண்டங்களை, பஞ்சி ஊட்டி - செம்பஞ்சுக்குழம்பை யணிவித்து, மேல் பட மதியம் சூட்டி - அவற்றின் மேற்புறத்திலே சந்திரர்களை யணிவித்து, விரகுஉற நிரைத்த - திறமை விளங்குமாறு ஒழுங்காக அமைக்கப்பட்டன: (இவ்வாறு அழகிய விரல்களைப்பெற்றுள்ள தனால்), கமலம்உம் பிற உம் - (உலகத்தில் பிரசித்தமாகப் பாதங்கட்கு உவமை கூறப்படும்) தாமரைமலரும் மற்றைப்பொருள்களும் ஆகிய, யாவும் - எல்லாம், ஏற்பில - (இச்சீதாபிராட்டியின் பாதங்கட்கு) உவமையாகமாட்டா, என்பது அன்றி - என்று கூறலாமேயல்லாமல், இணை அடிக்கு உவமை என்னே - (அவளது) இரண்டு பாதங்கட்குத் தகுதியான உவமைப்பொருள் யாதோ? [ஒன்றும் அகப்படாதென்றபடி]; (எ-று.)

நகங்களோடுகூடி இயற்கைச்செந்நிறம் அமைந்த சீதா பிராட்டியினது கால்விரல்கட்கு, செம்பஞ்சு ஊட்டிச் சந்திரர்களை யணிவித்த தெய்வத்தன்மை வாய்ந்த பவழத்துண்டுகள் ஒப்பு ஆகு மென்க. தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பாற்கடலில் தோன்றிய இலக்குமியின் அவதாரமாதலால், சீதாபிராட்டியின் திருமேனியிலுள்ள கால்விரல்கட்குப் பாற்கடலில் பிறந்ததெய்வப்பவழத்தை உவமை கூறுதல் ஏற்கும். பாதங்கட்குச் செம்பஞ்சுக்குழம்பு ஊட்டுதல் - மென்மை யுண்டாதற்கும், நிறமுண்டாதற்கு மென்க. விரல்களை யுடைய பாதங்கட்கு இதழ்களையுடைய கமலம் உவமை - மென்மை யிலும் செந்நிறத்திலுமென்க. ஐய கமலம் என எடுத்து - அழகை யுடைய கமலம் எனினுமாம். பஞ்சி எனினும், பஞ்சு எனினும் ஒக்கும். விரலின் நகங்கள் பத்தாதலால், மதியமும் பத்துஎன்க. இணையடி - உபயபாதம். சீதாபிராட்டியின் பாதங்கட்குத் தாமரைமலர் முதலியன ஒப்பாகா என்றது, எதிர்நிலையணி. 'பிறவும்' என்றதனல், அன்னத்தின் தூவி, அனிச்சமலர், மாந்தளிர் முதலியன கொள்க. [5]கண்ட என்ற பாடத்திற்கு - உவமைப்பொருளாகக்கண்ட என்க. தேவர்களைப் பாதாதிகேசபரியந்தமும், மனிதர்களைக் கேசாதி பாத பரியந்தமுமாகக்கூறுதல். மரபு. சீதாபிராட்டி திருமகளின் திருவவதாரமாதலால், அது தொனிக்குமாறு பாதாதிகேசபரியந்த மாக இங்குக்கூறுகின்றன ரென்னலாம். பி - ம்:—[1]செய்ய. [2]மதிய மட்டி, [3]விரற்குறி, விளங்குற. [4]மெய்ய, நொய்ய. [5]கண்ட. [6]என்ப. [7]உவமையுண்டோ, உவமையில்லை. (785)

34.—புறவடிகளின் வருணனை.

[1]நீர்மையா லுணர்தி யைய நிரைவளை மகளிர்க் கெல்லாம்
வாய்மையா லுவமை யாக மதியறி புலவர் [2]வைத்த
[3]தூய்மையா மென்ற போது மல்லன சொல்லி னலும்
[4]யாமையாழ் மழலை யாடன் புறவடிக் கிழுக்க மன்னே.

(இ - ள்.) ஐய—! நிரை வளை மகளிர்க்கு எல்லாம் - வரிசையாக அணிந்த வளையல்களையுடைய மகளிரது புறவடிகளுக்கெல்லாம், உவமை ஆக - உபமானமாகும்படி, மதி அறி புலவர் வாய்மையால் வைத்த - தமது புத்தியினால் (எல்லாவற்றையும்) உணரவல்ல வித்துவான்கள் உண்மையாக ஏற்படுத்திய பொருள்களை, யாமம் யாழ் மழலையாள் தன் - இராப்பொழுதில் ஓசைமிக்கிருக்கின்ற வீணை போன்ற மழலைச்சொற்களை யுடையவளாகிய சீதையினது, புறம் அடிக்கு - புறவடிகட்கு (உவமையாகச் சொல்வது), தூய்மை ஆம் - சுத்தமாக [ஏற்றனவாக] உள்ளனவாம், என்ற போதும் - என்றாலும், அல்லன சொல்லினால்உம் - தூய்மையல்லன [ஏற்றனவல்ல] என்று சொன்னாலும், இழுக்கம் - குறைவேயாகும்: (இத்தன்மையை),நீர்மையால் உணர்தி - (நீ உன்) தெள்ளிய அறிவினால் அறிவாயாக; (எ-று.) —மன் ஓ - ஈற்றசைகள்.

சாதாரணமாகிய மகளிர்புறவடிகளுக்கு, ஆமை புத்தகம் முதலியன ஒப்பென்ப. அங்ஙன் உவமையாகச் சொல்லப்படுகின்ற அந்த ஆமை புத்தகம் முதலியவை தெய்வத்தன்மையுள்ள சீதாபிராட்டியின் புறவடிகட்கு ஒப்பாகா என்று எடுத்துக்கழித்தலும் இழுக்கே என்றவாறு; எதிர்நிலையணி. மழலை - நிரம்பாமென்சொல்; "மெய்பெறு வெழுத்துயிர்க்கு மழலைவா யின்முறுவற், றையலாள்" என்ற இடத்து நச்சினார்க்கினியர்'மழலை-எக்காலத்துக்கும் கூறுப'என்றது, இங்கே அறியத்தக்கது. புறவடி - அடியினது புறம் என முன்பின்னாகத்தொக்க ஆறும்வேற்றுமைத்தொகை. பி - ம்:—[1]நீமெயால், நீமெய்யாய். [2]வைத்தது, வைத்து. [3]ஆமையாம். [4]யாமையேர் மழலையாடன், யாமயாழ்..., யாமையாம். (786)

35.—கணைக்கால்களின் வருணனை.

[1]வினைவரா லரிய கோதை பேதைமென் [2]கணைக்கான் மெய்ய
நினைவரா லரிய [3]வின்ன நேர்படப் புலவர் போற்றும்
[4]சினைவரால் [5]பகழி யாவ நெற்சினை யென்னுஞ் செப்பம்
[6]எனைவராற் பகரு [7]மீட்ட யானுரைத் தின்ப மென்னோ.

(இ - ள்.) மெய்ய - உண்மையுடையோனே ! — வினைவரால் அரியகோதை பேதை - சித்திரமெழுதுவோரால் எழுதுதற்கு அரிய கூந்தலையுடைய பேதைமைக்குணமுள்ளவளான சீதையினது, மெல் கணைக்கால் - மெல்லிய கணைக்கால்கள், நினைவரால் அரிய இன்ன - ஊகித்து உணர்பவராலும் (உவமையெடுத்துச்சொல்லுதற்கு) அரியனவான இத்தன்மையையுடையன; (ஆகையால்),— புலவர் நேர்பட போற்றும் - வித்வான்கள் (கணைக்காலுக்கு) உவமையாகப் பொருந்துமாறு சிறப்பித்துக் கூறுகின்ற, சினைவரால் - கருக்கொண்டவரால் மீனும், பகழி ஆவம் - அம்பறாத்தூணியும், நெல் சினை - சூல்கொண்ட நெற்பயிரும், என்னும் - என்கின்ற, செப்பம் - வார்த்தை, எனைவரால் பகரும் - எல்லோராலும் சொல்லக் கூடிய, ஈட்ட - தன்மையுடையன: (அவற்றையே), யான் உரைத்து இன்பம் என்ஓ - திரும்பவும் யான் எடுத்துச்சொல்வதனால் இன்பம் யாதோ? (எ - று.)

புலவர்கள் சாதாரணமான மகளிரின் கணைக்காலுக்கு உவமைப் பொருளாக ஏற்படுத்தியுள்ள சினைவரால் முதலியவற்றையே சீதையின் கணைக்காலுக்கு யானும் உவமையென எடுத்துச் சொல்லுதல் சிறிதும் இன்பம்பயவா தென்பதாம்; இதுவும் எதிர்நிலையணியே. வினைவர் - சித்திரவேலை செய்பவர். கோதை - மாலையுமாம். பேதை - பேதைமைக்குணமுடையாளுக்குப் பண்பாகுபெயர். நெல்சினை - கதிர் வெளியில் வராமல் கருக்கொண்டு தண்டுஉருண்ட நெற்பயிர். செப்பம் - சொல்லப்படுவது, வார்த்தை. பி - ம்:—[1] வனைவரால். [2] கணைக்காற்கொப்பு,...மெய்யே. [3] நன்னீர். [4] சுனை. [5] பகழிக் கூடு தோற்றவென் றுரைக்கிற்றாயோர். [6] இனைவரால். [7] ஈட்டம், ஈட்டி. ஈட்ட. (787)

36.—தொடைகளின் வருணனை.

[1] அரம்பையென் றளக மாதர் குறங்கினுக் [2] கமைந்த வொப்பின்
வரம்பையுங் கடந்த போது மற்றுரை வகுக்க லாமோ
நரம்பையு மமிழ்த நாறு நறவையு [3] நன்னீர்ப் பண்ணைக்
கரும்பையுங் [4] கடந்த சொல்லாள் [5] கவாற்கிது கருது கண்டாய்.

(இ - ள்.) அளகம் மாதர் குறங்கினுக்கு - அளகத்தையுடைய மகளிரது தொடைகளுக்கு, அரம்பை என்று அமைந்த - வாழைகளென்று ஏற்பட்ட, ஒப்பின் வரம்பைஉம் - உவமையின் எல்லையையும், கடந்தபோது - (சீதையின் தொடைகள்) வென்றன வென்று சொல்லும்போது, மற்று உரை வகுக்கல் ஆம்ஓ - (அவற்றிற்கு) வேறு உவமைச்சொல்லை எடுத்துச்சொல்லுதல் முடியுமோ? [முடியாதென்றபடி]: நரம்பைஉம் - நரம்புகளையுடைய வீணையையும், அமிழ்தம் நாறும் நறவைஉம் - அமிருதம்போல (மிக்க இனிமையுடன்) விளங்குகின்ற தேனையும், நல்நீர் பண்ணை கரும்பைஉம் - நல்லநீர்வளமுள்ள கழனிகளில் விளைந்த கரும்பின் சாற்றையும், கடந்த - சயித்த, [அவற்றினும் இனிமைமிக்க], சொல்லாள் - சொற்களையுடையவளான சீதையினது, கவாற்கு - தொடைகளின் திறத்தில், இது - (யான் கூறிய) இவ்வாறான தன்மையை, கருது - (நீ) ஆலோசிப்பாயாக; (எ - று.)—கண்டாய்-முன்னிலையசை; தேற்றமுமாம்.

இதுவும் - முன்னைய அணியே. சாதாரணமகளிரின் தொடைகளைவிட வாழைகள் அழகு சிறந்திருக்கும்; அவ்வாழைகளையும் இத்தொடைகள் வென்றன வென்றதனால், இவற்றிற்கு வேறு உபமானப்பொருள் எடுத்துக்கூற அரியதாயிற் றென்க. நரம்பு - அவற்றையுடைய யாழுக்குச் சினைவாகுபெயர். அமிழ்தம் நாறும் நறவு - பாலோடு கலந்த தேன் எனினுமாம். பண்ணை - வயல். கரும்பு - அதன் இரசத்திற்கு இலக்கணை. பி - ம்:—[1] அரம்பையென்றற்கு. [2] அமைத்த. [3] நளிர்நீர். [4] கடிந்த சொல்லாள். [5] கவானிது. (788)

37.—அல்குலின் வருணனை.

வாராழிக் கலசக் கொங்கை வஞ்சிபோன் மருங்கு லாள்தன்
தாராழிக் [1]கலைசா ரல்குல் தடங்கடற் குவமை [2]தக்கோய்
பாராழி [3]பிடரிற் றாங்கும் பாந்தளும் [4]பனிவென் றோங்கும்
[5]ஓராழித் தேருங் கண்ட வுனக்குநா [6]னுரைப்பதென்னே.

(இ - ள்.) தக்கோய் - சிறந்தவனே! வார் - கச்சணிந்த, ஆழி கலசம் கொங்கை - சக்கரவாகப்பறவையையும் கலசத்தையும் போன்ற தனங்களையும், வஞ்சிபோல் மருங்குலாள் தன் - நீர்வஞ்சிக்கொடி போன்ற இடையையு முடையவளான சீதையினது, தார் - கிண்கிணி மாலையையணிந்த, ஆழி - வட்டவடிவாகிய, கலை சார் அல்குல் தட கடற்கு - ஆடையைச் சார்ந்துள்ள அல்குலாகிய பெரிய கடலுக்கு, உவமை - உபமானமாகிய பொருளை,—ஆழிபார் பிடரில் தாங்கும் பாந்தள் உம் - சமுத்திரத்தினாற் சூழப்பெற்ற உலகத்தைத் தலையில் தாங்குகின்ற ஆதிசேஷனதுபடத்தையும், பனி வென்று ஓங்கும் ஓர் தேர் உம் - பனியையடக்கி மேல்தோன்றுகின்ற ஒற்றைச்சக்கரத்தை யுடைய (சூரியனது) தேர்த்தட்டையும், கண்ட - கண்கூடாகப்பார்த்த, உனக்கு—, நான்—, உரைப்பது - (புதிதாகச்) சொல்லவேண்டுவது, என்னே - யாது உளது? [எதுவுமில்லை என்றபடி]; (எ - று.)

ஆதிசேஷனது படத்தையும், சூரியனதுதேர்த்தட்டையுமே சீதையின் அல்குலுக்கு உவமையாகக் கருதுவா யென்றவாறும். சக்கரவாகப் பட்சியும், கலசமும்-தனங்கட்கு, வடிவுவமை. கலை-மேகலையுமாம். கீழேழுலகங்கட்கும் கீழேயிருந்து ஆதிசேஷன் உலகங்களைத் தாங்குகின்றன னென்பது, நூற்கொள்கை. பனிவென்றோங்கும் தேர் - சூரியனது பனிவெல்லுந்தன்மையை அவனதுதேரின் மேலேற்றிக்கூறிய உபசாரவழக்கு. 'ஆழி' என்ற சொல் வெவ்வேறு பொருளில் வந்தது, சொற்பின்வருநிலையணி. சக்கரவாகப்பறவைக்கு 'நேமிப்புள்' என்று ஒரு பெயரிருத்தலால், அதனை 'ஆழி' என்றார். ஆழி - வட்டவடிவமானது எனச் சக்கரத்தை யுணர்த்திற்று. அழிப்பது ஆழி என்றலுமாம். பி - ம்:—[1]கலைசால், கலைசேர். [2]ஒப்ப. [3]பிடரிற்றங்கும். [4]பணியென்று, கனிவென்று. [5]ஓராழித்தேருமொவ்வா [6]உரைப்ப தென்னே, உரைப்பதுண்டோ. (789)

38.—இடையின் வருணனை.

சட்டகந் தன்னை நோக்கி யாரையுஞ் சமைக்கத் தக்காள்
இட்டிடை யிருக்குந் தன்மை யியம்பக்கேட்டுணர்தி யென்னின்
கட்டுரைத் துவமை காட்டக் கட்பொறி கதுவா கையில்
தொட்டவெற் [1]குணர லாமற் றுண்டெனுஞ் சொல்லு மில்லை.

(இ - ள்.) சட்டகம்தன்னை நோக்கி - (தனது) வடிவத்தையே பார்த்து, யாரைஉம் சமைக்க தக்காள் - எவ்வளவு அழகுள்ள மகளிரையும் (பிரமதேவன்) படைக்கத் தகுந்த பேரழகையுடைய சீதையினது, இட்டு இடை இருக்கும் தன்மை - சிறிய இடையானது இருக்கும் வகையை, இயம்ப கேட்டு உணர்தி என்னின் - (நான் உவமை) எடுத்துரைக்கக்கேட்டு நீ அறிவாயென்றால், (அது முடியாது; ஏனெனில்),—கட்டுரைத்து உவமை காட்ட கண் பொறி கதுவா - உறுதியாக எடுத்துச்சொல்லி உபமானப்பொருளைக் காட்டுவதற்கு (அந்த இடையைக்) கண்ணாகிய இந்திரியமானது பார்க்கமாட்டாது [அந்த இடைகண்ணுக்குப் புலனாகாது]; கையின தொட்ட எற்கு உணரல் ஆம் - கையினாற் பரிசித்துப்பார்த்த என்னால் மாத்திரம் (உண்டென்று) அறியக்கூடும்: மற்று உண்டு எனும் சொல்உம் இல்லை - வேறு விதமாக உண்டென்ற சொல்லைச் சொல்வதற்கும் வழியில்லை; (எ - று.)

சீதாபிராட்டியின் இடையோ, பரிசஉணர்ச்சியின்மூலமாக என்னால் மாத்திரமே உண்டென்று உணரப்பட்டு ஒருவரது கண்ணுக்கும் புலனாகாதவாறு மிகவும் நுண்ணியதாதலால், அதற்கு ஏற்ற உவமைப்பொருளை யெடுத்துச்சொல்லுதல் முடியாதென்றவாறும். அருவப்பொருளாயிருக்கின்ற இடைக்கு உவமைப்பொருளைக் காட்டியுரைத்தல் இல்லாதாயிற்றென்க. எவ்வளவு அழகுள்ள மாதரைப் படைக்க வேண்டினும் பிரமதேவன் இவளது வடிவத்தையே நோக்கிப் படைக்குமாறு உள்ளாள் சீதை யெனச் சீதாபிராட்டியின்பேரழகுடைமையைத் தெரித்தவாறு. சட்டகந் தன்னை நோக்கி யாரையும் சமைக்கத்தக்காள் என்பதற்கு—தன்னை மேல்வரிச்சட்டமாகப் பார்த்துக்கொண்டு பிரமதேவனால், எல்லா மகளிரையும் படைத்தற்கு உரியளெனினுமாம்: கருத்து ஒன்றே. இட்டிடை-சிறிய இடை. "இட்டிடைப்பின்னைகேள்வன்" என்று பிரபந்தத்திலும் வருகின்றது. பி - ம்:—[1]உணரலாகா. (790)

39.—வயிற்றின் வருணனை.

ஆலிலை படிவந் தீட்டு மைய நுண் பலகை நொய்ய
பால்நிறத் தட்டம் வட்டக் கண்ணடி பலவு மின்ன [கின்
போலுமென் [1]றுரைத்த போதும் புணர்ந்துரை [2]பொதுமை பார்க்
எலுமென் [3]றிசைக்கி னேலா விதுவயிற் [4]றியற்கை யின்னும்.

(இ - ள்.) பொதுமை பார்க்கின்-பொதுநோக்காகப் பார்த்தால்,—'(உலகத்திலுள்ள மகளிரின் வயிறுகள்),—ஆல் இலை - ஆலிலையையும், படிவம் தீட்டும் ஐய நுண் பலகை - வடிவமெழுதப்பெற்ற அழகிய மெல்லிய சித்திரப் பலகையையும், நொய்ய பால் நிறம் தட்டம்-மென்மையாகிய [தொட்டால் அதுங்குவதுபோலத்தோன்றுகிற] பால்போல் வெண்ணிறமான வெள்ளித்தட்டையும், வட்டம் கண்ணடி - வட்டவடிவான கண்ணாடியையும், இன்ன பலஉம் - இவை

போல்வன பலவற்றையும், போலும்-ஒத்திருக்கும்,' என்று உரைத்த போதும் - என்று எடுத்துக்கூறினாலும், புனைந்துரை - தோத்திர மொழியாகும்; (இச்சீதாபிராட்டியின் வயிற்றுக்கோ), ஏலும் என்று இசைக்கின் ஏலா-(முற்கூறிய ஆலிலை முதலியபொருள்கள் உபமான மாகப்) பொருந்துமென்று கூறினால் சிறிதும் பொருந்தாவாம்; இது வயிறு இயற்கை - இது (சீதையினது) வயிற்றின் தன்மையாகும்; இன்னும் - மேலும்,—(எ - று.)—இதுவும், அடுத்த செய்யுளும் - ஒருதொடர்; வயிற்றைச்சேர்ந்த உந்தியை மேற்செய்யுளில் வருணித் தலால், 'இன்னும்' என்றனர்.

மற்றை மகளிரின் வயிற்றுக்கு ஆலிலை முதலியவற்றை உவமை கூறினால், புனைந்துரையாகும்: அப்பொருள்களையே இச் சீதையின் வயிற்றுக்கு உவமை கூறினால் அவை உவமையா தற்கே ஏலா வென்பதாம்; எதிர்நிலையணி. புனைந்துரை - சிறுமை யுள்ளதைப்பெருமையுள்ளதாக வருணித்துக்கூறுதல். படிவம் - வடிவம். ஐய - 'ஐ' என்ற உரிச்சொல்லடியாப்பிறந்த குறிப்புப்பெய ரெச்சம். பி - ம்:—[1]உரைத்தயாவும். [2]பொருந்தப்பார்ப்பின். [3]உரைக்கவேலா, இசைக்குமேலா. [4]இயற்கையென்னும், இயற்கை பின்னும். (791)

40.—உந்தியின் வருணனை.

சிங்கலில் [1]சிறுகூ தாளி[2] நந்தியின் திரட்பூச் [3]சேர்ந்த
பொங்குபொற் றொளையென் றாலும்[4]புல்லிய வுவமைத் தாமால்
அங்கவ ளுந்தி யொக்குஞ் சுழியெனக் [5]கணித்த துண்டால்
கங்கையை நோக்கிச் சேறி கடலினுந் [6]நெடிது கற்றோய்.

(இ - ள்.) கடலின்உம் நெடிது கற்றோய் - கடலைப்பார்க்கிலும் அதிகமாகக் கற்றுணர்ந்தவனே! '(சீதையின் உந்திச்சுழிக்கு),— சிங்கல்இல் சிறு கூதாளி - கெடுதலில்லாத சிறுகூதாளிச்செடியும், நந்தியின் - நந்தியாவர்த்தமும் என்ற இவற்றின, திரள் பூ - வட்ட வடிவமான மலர்களிலே, சேர்ந்த - பொருந்திய, பொங்கு பொன் தொளை-பெரிய அழகிய துளைகள், (உவமையாம்),' என்றாலும்-என்று கூறினாலும், புல்லிய உவமைத்து ஆம் - (இச்சீதையின் உந்திச்சுழி) அற்பமாகிய உவமையையுடையதாகும்; 'சுழி - (கங்காநதியின்) நீர்ச் சுழியானது, அவள் உந்தி ஒக்கும் - (அந்தச்சீதையின் உந்தியை யொத்திருக்கும்,' என-என்று, கணித்தது உண்டு - (கங்காநதியைக் கண்ட போது நான்) எண்ணியது உண்டு; கங்கையைநோக்கிசேறி - கங்காநதியின் சுழியை மனத்தினாலாராய்ந்து பார்த்து (அச்சீதையின் உந்தியை இன்னபடியுள்ளதென்று) அறிவாய்; (எ - று.)—'ஆல்' இரண்டும் - ஈற்றசை.

சீதையின் உந்திச்சுழிக்கு - கூதாளிமலரின் உள்தொளையும், நந்தியாவட்டமலரின் உள்தொளையும் சிறிதும் உவமையாகா: நான் கங்கைவழியாக வந்தபோது அக்கங்காநதியின் நீர்ச்சுழிக்குச்சீதையின் உந்திச்சுழியை உவமையாகக் கருதியது உண்டு; நீயும் அந்தக் கங்காநதியின் நீர்ச்சுழியும் சீதையின் உந்திச்சுழியும் ஒக்குமெனக் கருதுவாயென்பதாம்; பிரசித்தமாக உவமை கூறுகிற நீர்ச்சுழிக்கு, அத்தன்மையை யொழித்து, உபமேயமாகிய சீதையின் உந்திச்சுழியை உவமையாகக்கூறியதும் - எதிர்நிலையணியே. கூதாளி - ஓர் செடி; கூதாளம், தாளி, நறுந்தாளி எனவும்படும்; கார்காலத்து மலர்வது, நந்தி - நந்தியாவர்த்தம்: இது, முதற்குறிப்பின்பாற்படும். துளையெனினும், தொளையெனினும் ஒக்கும். "செல்லுத லென்ற பொருளுடையவை அறிதலென்ற பொருளையுங் காட்டும்" என்ற கொள்கையின்படி, இங்கு 'சேறி' என்பதற்கு - அறிவாய் என்று பொருள் கூறப்பட்டது. பி - ம்:—[1]சிறுகட்டாழி, சிறுகட்டாளி. [2]செருந்தியின், நளினியின். [3]சேர்த்த. [4]புல்லிதுபுதுமைத்தாயால், புல்லிது பொதுமைத்தாமால். [5]அணித்ததுண்டால். [6]நெடிய கண்ணுள். (792)

41.—மயிரொழுங்கின் வருணனை.

மயிரொழுக் கெனவொன்[1]றுண்டால் வல்லிசேர் [2]வயிற்றின் மற்றென்
உயிரொழுக் கதற்கு வேண்டு [3]முவமை யொன்றுரைக்க வேண்டின்
செயிரில் [4]சிற் றிடையா யுற்ற சிறுகொடி நுடக்கந் [5]தீரக்
[6]குயிலுறுத் தமைய வைத்த கொள்கொம்பென் றுணர்ந்து கோடி.

(இ - ள்.) வல்லிசேர் வயிற்றின் - கொடிபோன்ற சீதையைச் சேர்ந்த [சீதையினுடைய] வயிற்றிலே, மயிர் ஒழுக்கு என ஒன்று உண்டு - மயிரொழுங்கென்று ஒன்று உளது: என் உயிர் ஒழுக்கு - (அது) எனது உயிரொழுக்கேயாகும்; அதற்கு—, வேண்டும் உவமை ஒன்று உரைக்க வேண்டின் - தக்க உவமைப்பொருளொன்றை எடுத்துச்சொல்ல விரும்பினால்,—(அதுகூடாது): 'செயிர் இல் சிறு இடை ஆய் உற்ற - குற்றமற்ற நுண்ணிய இடையென்று பொருந்திய, சிறு கொடி - சிறியகொடியினது, நுடக்கம் தீர - நுவட்சி நீங்க(ப் படரும்படி), குயிலுறுத்து அமையவைத்த - நன்றாகப்பதியும்படி பொருந்தவைத்த, கொள்கொம்பு - கொழுகொம்பு எனக் குறிக்கலாம்,' என்று—, உணர்ந்துகோடி - அறிந்துகொள்வாய்; (எ - று.)

சீதையின் வயிற்றில்நீள உள்ளதை உலகத்தார் மயிரொழுங்கென்று சொல்லுகிறார்கள்; அது மயிரொழுங்கு அன்று; எனது உயிரொழுங்காம் என, மயிரொழுக்கினிடத்தில் அத்தன்மையை யொழித்து உயிரொழுக்கென மற்றொன்றின் தன்மையை ஏற்றிக் கூறியது, அபநுதியணியாகும்; இதனால், இராமபிரான் அம்மயி

ரொழுக்கினிடத்தில் மிக்கபேரன்பை வைத்திருந்தமைவிளங்கும். இடைக்கு மேற்புறத்திலுள்ள அந்த வயிற்றின் மயிரொழுங்குக்கு உவமைகூறுதலியலாது: ஆனல், இடையாகியகொடி துவளாமற் படர்தற்கு நாட்டிய கொழுகொம்புபோலு மென்னலாமென்றனன் இராமபிரானென்க. 'உவமையொன்றுரைக்கவேண்டின்' என்று தொடங்கி, உவமைப்பொருளாக ஒன்றைக்கூறுமல் இடையாயுற்ற கொடிநுடக்கந்தீர அமையவைத்தகொள்கொம்பு என்று அதன் தன்மையை வருணித்ததனல், 'உவமைகூறஇயலாது' என்பது முதலியன வருவிக்கப்பட்டன. தற்குறிப்பேற்றவணி; இவ்வணிக்கு - 'இடையாயுற்றகொடி' என்றஇடத்திலுள்ள அவநுதியணி அங்கமாய் நின்றது. வல்லி - உவமவாகுபெயர். குயிலுறுத்தல் - நிலைநாட்டுதல். கொள் கொம்பு - கொடிகள் ஏறிப்படர்தற்காக நடுங்கொம்பு —மற்று - வினைமாற்று. ஆல் - அசை. பி - ம்:—[1] உண்டவ். [2] வயிற்று அல்லது வயிற்றின்மேற்றன். [3] உவமையென்று. [4] சிற்றிடை யென்றுற்ற, சிற்றிடையாளுற்ற. [5] தீர்க்கக். [6] குயில்வுறுத்தமைய வைத்த, அல்லது அமையவேய்ந்த. [5] தீர்க்கும் - இயல்புறுதன்மையேய்ந்த என்று ஒருபிரதியிற் காணப்படுகின்றதென்ப. (793)

42.—வயிற்று மடிப்பின் வருணனை.

அல்லி[1] யூன் றிடுமென் றஞ்சி யரவிந்தந் [2] துறந்தாட் கம்பொன்
வல்லிமூன் றுளவாற் கோல [3] வயிற்றின்மற் றவையு மார
வில்லிமூன் றுலகின் வாழு மாதருந் தோற்ற மெய்ம்மை
சொல்லியூன் றியவாம் வெற்றி வரையெனத்[4] தோன்று மன்றே.

(இ - ள்.) அல்லி ஊன்றிடும் என்று - அகவிதழ்கள் உறுத்து மென்று, அஞ்சி - அச்சங்கொண்டு, அரவிந்தம் - செந்தாமரை மலரை, துறந்தாட்கு - விட்டுவந்த இலக்குமி போன்றவளாகிய சீதைக்கு, கோலம் வயிற்றில் - அழகிய வயிற்றினிடத்தில், அம் பொன் வல்லி மூன்று உள - அழகிய பொன்னிறமான கொடியின் வடிவமாகிய மடிப்புக்கள் மூன்றுஉண்டு; அவைஉம் - அம்மடிப்புக்களும்,—மாரன் வில்லி - மன்மதனாகிய வில்வீரன், மூன்று உலகில் உம் வாழும் மாதர் - மூன்று உலகங்களிலும் வாழ்கின்ற மகளிரெல்லாம், தோற்ற - (இந்தச்சீதையின் வடிவழகுக்குத்) தோற்றுப்போன, மெய்ம்மை - உண்மையை, சொல்லி - எடுத்துச்சொல்லி, ஊன்றிய ஆம் - நிலைநிறுத்தியனவாகிய, வெற்றி வரை என - வெற்றிக்கு அறிகுறியாகத் தீட்டிய இரேகைபோல, தோன்றும் - விளங்கும்; (எ - று.)

சீதை இலக்குமிபோன்ற வடிவழகுடையவளென்பது, முதலடியின் கருத்து: மானுடபாவனைகொண்டு நடக்கும் இராமபிரான் சீதையை இலக்குமியென்றே கூறினனெனப் பொருள்கொள்ளுதல், சிறப்பன்று. அரவிந்தம் துறந்தமைக்குக் காரணமாகாத அல்லி யூன்றுதலைக்காரணமாகக் கற்பித்துக்கூறியது-ஏதுத்தற்குறிப்பேற்ற

வணி; இதனால், சீதையின் திருமேனியினது மென்மை தொனிக்கும். அல்லி - அகவிதழ். (புறவிதழ் - புல்லியெனப்படும்.) சீதையின் வயிற்றிலுள்ள மூன்று மடிப்புக்களை - மூவுலகிலுள்ள எல்லா மகளிரையும் வென்றதற்கு அறிகுறியாக மன்மதன் நாட்டிவைத்த மூன்று இரேகையாகக் குறித்தது, தன்மைத்தற்குறிப்பேற்றவணி; உத்தம சாதிமகளிர்க்கு வயிற்றில் மூன்றுமடிப்புக்களுளவாகவருணித்தலை, "படைப்புழி வேதன் கமலமென்மலரைப் பழிக்குமென் கரத்தினு னடுவைப், பிடித்தலும் விரல்க ளழுந்திய வரையோ பெட்புறுமங்கையம்பருவம், அடித்தலஞ்சேர்த்தியே றுதற்கமைத்த படிகொலோ அவ்வயிறணிந்த, மடிப்புறுவரையினழகினுக்குவமை மற்றுநா முரைக்குமாறெவனோ" என்றஇடத்திலுங்காணலாம். மற்று - அசை: ஆல், அன்று, ஏ - ஈற்றசைகள்: தேற்றமுமாம். பி - ம்:—[1]ஊர்ந்திடும். [2]துறந்தார்க்கு. [3]வயிற்றுமற்று. [4]தோற்று மன்றே. (794)

43.—தனங்களின் வருணனை.

செப்பென்பென் கலச மென்பென் செவ்விள நீருந் தேர்வென்
துப்பொன்று [1]திரள்சூ தென்பென் சொல்லுவென் தும்பிக் [2]கொம்
தப்பின்றிப் [3]பகலின் வந்த [4]சக்கர வாக மென்பென் [பைத்
[5]ஒப்பொன்று முலகிற் காணேன் பலநினைந் [6]துலைவெ னின்னும்.

(இ - ள்.) (சீதையின் தனங்களுக்கு), செப்பு என்பென் - இரத்தினச் சிமிழென்று உவமைசொல்வேன்; கலசம் என்பென் - பொற்கலசமென்று உவமைசொல்வேன்; செவ் இளநீர்உம் தேர்வென் - (தெங்கின்) செவ்விளநீரையும் (உவமையாகக்கூறுதற்கு) ஆராய்வேன்; துப்பு ஒன்று திரள் சூது என்பென் - பவழத்தினாற் கடைந்து தொழில்செய்யப்பட்ட திரண்ட சொக்கட்டான் காயென்று உவமை கூறுவேன்; தும்பி கொம்பை சொல்லுவென் -யானையின் தந்தங்களை உவமைசொல்வேன்; தப்பு இன்றி பகலின் வந்த சக்கரவாகம் என்பென் - தவறுதலில்லாமல் பகற்காலத்தில் வெளிப்பட்டுவருகிற சக்கரவாகமென்று உவமைகூறுவேன்; ஒப்பு ஒன்றுஉம் உலகில் காணேன் - (சீதையின் தனங்களுக்கு ஏற்ற) உவமைப் பொருளொன்றையும் உலகிற்காணப்பெறுதவனாய், பல நினைந்து - (செப்பு முதலிய) பலபொருள்களையும் (உவமையாகக் கூறுமாறு முதலில்) நினைத்து, (அவைஒன்றும்ஏற்ற உவமைப் பொருளாகாமையால்), இன்னும் உலைவென் - இன்னமும் அலைவேன்; (எ - று.)

சீதையின்தனங்கள் ஒப்பற்றபேரழகுடையன வென்றவாறு. செப்பு முதலியன, தனங்களுக்கு வடிவுவமை. செவ்விளநீர் என்பது - தெங்கில் ஒருவகை. சக்கரவாகம் - பகலில் சூரியனது முன்னிலையில் ஆணும்பெண்ணுமாகக் கூடிக் களிக்குந் தன்மையுள்ளதொரு பறவை. பி - ம்:—[1]வல். [2]கொம்பும். [3]பகரினந்த. [4]சக்கரவாளம். [5]ஒப்பொன்றுமிலைக்குக் காணேன். [6]உலைவெனம்மா, உழல்வனின்னும். (795)

44.—தோள்களின் வருணனை.

கரும்புகண் டாலு மாலைக் காம்புகண் டாலு மாலி
அரும்புகண் டாரை [1]சோர வழங்குவே னறிவ துண்டோ
சுரும்புகண் டாலுங் கோதை [2]தோள்நினைந் துவமை சொல்ல
இருப்புகண் டனைய நெஞ்ச மெனக்[3]கிலை யிசைப்ப தென்னோ.

(இ - ள்.) கரும்பு கண்டால்உம் - கரும்பைக் கண்டபோதும், மாலை காம்பு கண்டால்உம் - ஒழுங்காயிருக்கின்ற மூங்கிலைக்கண்ட போதும், கண் அரும்பு ஆலி தாரை சோர அழுங்குவேன் - கண்களிலிருந்து உண்டாகின்ற மழைத்துளிபோன்ற நீர்ப்பெருக்குத் தாரையாகப்பெருக வருந்துவேன்; அறிவதுஉண்டுஓ - (இவ்வாறு வருந்துவதன்றிஏற்ற உவமைப்பொருளை யான்) தேர்ந்தறிதல்உளதோ? [இல்லை]; சுரும்பு கண்டு ஆலும் கோதை தோள் நினைந்து உவமை சொல்ல - வண்டுகள் காணுதலும் மொய்த்து ரீங்காரஞ் செய்கின்ற மாலையைத் தரித்த சீதையினது தோள்களை நினைத்து உவமை சொல்வதற்கு, இரும்பு கண்டு அனைய நெஞ்சம் எனக்கு இலை - இரும்புபோன்ற வலியமனம் எனக்கு இல்லையே! இசைப்பது என்ஓ - (யான்) உவமை சொல்வது எவ்வாறோ? (எ - று.)

சீதையைப்பிரிந்திருக்கின்ற இந்நிலையில் கரும்பையும் இளமூங்கிலையும் காண நேரிடும்போதெல்லாம் சீதையின்தோள்கள் நினைவுக்கு வர, கண்ணீர் தாரை தாரையாய்ப்பெருக வருந்துவேன்; மிகவும் மெல்லிய அச்சீதையின் தோள்கட்குக் கடினமான கரும்பையும் மூங்கிலையும் உவமைகூறுந் திறத்தில் இரும்புபோல வலிய நெஞ்சம் எனக்கு இல்லையே! என்றவாறு. கரும்பையும் மூங்கிலையும் சீதையின் தோள்கட்கு உவமைகூறுதல், துணிவுச்செயலென்றபடி. திரண்டு உருண்டுவளர்ந்து எழுகின்ற கரும்பும் இளமூங்கிலும் - அவ்வகை வடிவமும் வழுவழுப்பும் மினுமினுப்பும் பற்றி அழகிய மகளிர்தோளுக்குஉவமையாம். ஒப்புடைப்பொருள்களெல்லாம் பிரிந்தார்க்கு நலிவு செய்யு மென்பது, முதலிரண்டடிகளிற் கவனிக்கத்தக்கது. 'ஆலை' என்று பிரித்து, கரும்புக்கு அடைமொழி யாக்குவாரு முளர். கோதை - கோதையையணிந்தவளுக்கு, ஆகுபெயர். இரும்புகண்டனைய, கண்டு - அசை.

பி - ம்:—[1]சோர்வதன்றிவேறு, சோருமதுவன்றி. [2]தோளிணைக்கு. [3]இல்லை. (796)

45.—முன்கைகளின் வருணனை.

முன்கையே யொப்ப தொன்று [1]முண்டுமூன் றுலகத் துள்ளும்
என்கையே யிழுக்க மன்றே யியம்பினுங் காந்த ளென்றல்
[2]வன்கையாழ் மணிக்கை யென்றன் மற்றென்றை யுணர்த்த லன்றி
[3]நன்கையாள் தடக்கை யாமோ நலத்தின்மே னலமுண் டாமோ.

(இ - ள்.) மூன்று உலகத்துள்உம் - மூவுலகங்களிலும், முன் கை ஒப்பது ஒன்றுஉம் உண்டு என்கைஏ-(சீதையினது) முனனங்கையைப் போன்றதாகிய ஒருபொருளானது உண்டுஎன்று சொல்லுதலே, இழுக்கம் அன்றுஏ - குறைவல்லவோ? இயம்பின்உம் - (ஒருகால் உவமையெடுத்துச்) சொல்வோமென்றாலும், மணி கை - (அவளது) அழகிய முன்னங்கைகளை,—காந்தள் என்றல் - காந்தண்மலரென்று கூறுதல், வன் கை - வலியஒழுக்கமாம் [மிக்க கடுமையாம்]: யாழ் என்றல் - மகரயாழென்றுகூறுதல், மற்று ஒன்றை உணர்த்தல் - வேறொன்றைத் தெரிவித்ததாம்: அன்றி - (இவ்வாறுவது) அல்லாமல், நல் கையாள் தட கை ஆம்ஓ - (காந்தளும் மகரயாழும்) அழகிய கைகளையுடையளான சீதையினதுசிறந்த முன்னங்கைக்கு ஒப்பாகுமோ? நலத்தின்மேல் நலம் உண்டாம்ஓ - (பிரசித்தமாக) அழகிய பொருளென்று ஏற்பட்டதற்கும் மேலே மிக்க அழகிய பொருளும் இருக்குமோ? (எ - று.)

சீதையினது முன்னங்கைகட்கு உவமையாகப்பேசுதற்கு உரியபொருள் மூவுலகங்களுள்ளும் ஏதேனுமுண்டென்று சொல்வதற்கே இடமில்லை; ஒருகால் காந்தள்மலரை எடுத்துக்கூறினால் அது அக்கைகளினும் வன்மையுள்ளதாகையால், சொல்லுவாரது மனம் கடுமையானதென்று புலப்படும்; அன்றி, மகரயாழை எடுத்துக்கூறினால் அது ஒருவகையிலும் ஒப்பாகாமையால் பொருத்தமில்லாத வேறொன்றை யெடுத்துக்கூறியதாகும்: ஆகவே, இவ்விரு பொருளும் சீதையின் முன்னங்கைக்கு ஒப்பாகமாட்டா: இவ்வாறு உவமையற்றிருப்பதற்குக் காரணம் யாதெனின், காந்தள் யாழ் முதலிய உவமைப்பொருள்கட்கெல்லாம் தாம் உவமையாகுமாறு முன்னங்கைகள் அழகுமிக்கிருத்தலால் அவற்றினுஞ்சிறந்த வேறொரு உவமைப்பொருள் இல்லாமையேயென்பதாம். சீதையின் கைகள் உவமையற்றிருக்கின்றன என்ற சிறப்புப் பொருளை 'நலத்தின் மேல் நலமுண்டாமோ' என்ற பொதுப்பொருள் சமர்த்தித்துநிற்பது - வேற்றுப்பொருள்வைப்பணியாம்; இது, 'காந்தளும் யாழும் சீதையின் முன்னங்கைக்கு ஒப்பாகமாட்டா' என்ற எதிர்நிலையணிக்கு அங்கமாய் வந்தது. 'வன்கையாழ்' என்றுஎடுத்து - மணிக்கையைக் காந்தளென்றலும், வலியகையிற் பிடித்தற்கு உரிய யாழ் என்றலும் மற்றொன்றை யுணர்த்தலாமென வுரைத்தலும் பொருந்தும். 'காந்தள்' என்ற செடியின்பெயர் - இங்கு, அம் மலருக்கு ஆகுபெயர்; இது - மகளிரின்கைக்கு வடிவிலும், நிறத்திலும், மென்மையிலும், அழகிலும் உவமம். 'நன்கையாள்' என்றது - சீதையென்ற மாத்திரமாய் நின்றது. பி - ம்:—[1]உண்டுகொல், உண்டும். [2]மங்கையாள், மன்கையாழ். [3]நன்கையதடக்கம், நன்கையாநடக்க. (797)

46.—கைகளின் வருணனை.

[1]ஏலக்கொண் டூன்ற பிண்டி யிளந்தளிர் கிடக்க யாணர்க்
[2]கோலக்கற் பகத்தின் காமர் [3]குழைபடுங் கமல மென்பூ

நூலொக்கு மருங்கு லாள்த னூபுர [4]மொலிக்குங் கோலக்
[5]காலுக்குந் [6]தொலையு மென்றாற் கைக்கொப்பு வைக்க லாமோ.

(இ - ள்.) ஏல கொண்டு ஈன்ற பிண்டி இளந்தளிர் கிடக்க - தகுதியாகத் தம்மிடத்துக்கொண்டு வெளிப்படுத்திய அசோக மரத்தின் இளந்தளிர்கள் கிடக்கட்டும்; யாணர் கோலம் கற்பகத்தின் காமர் குழை - புதுமையான அழகிய கல்பகவிருட்சத்தின் விரும்பக்கூடிய தளிர்களும், கமலம் படும் மெல் பூ - தாமரைக்கொடியினிடத்து உண்டாகின்ற மெல்லிய மலர்களும், நூல் ஒக்கும் மருங்குலாள் தன் - நூலைப்போல நுண்ணிய இடையையுடையவளாகிய சீதையினது, நூபுரம் ஒலிக்கும் கோலம் காலுக்குஉம்-சிலம்புகள் ஒலிக்கப்பெற்ற அழகிய கால்களுக்கே, தொலையும் என்றால் - தோற்றொழியுமானால், கைக்கு ஒப்பு வைக்கல் ஆம்ஓ - (அவைகளைக்) கைகளுக்கு உவமை கூறுதல் தகுமோ? (எ - று.)

கற்பகத்தளிரும் தாமரைமலரும் சீதையின் தாழ்ந்த உறுப்பாகிய கால்களுக்கே இணையாகாது தோற்றனவென்றால் உயர்ந்த உறுப்பாகிய அவளது கைகட்கு ஒப்பாகாமல் அவைகள் தோற்குமெனச்சொல்லவேண்டுமோ? தானே பெறப்படு மன்றோ! என்பதாம். தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி தொனிக்கும். காலுக்கும் என்று அவ்வுறுப்பின் இழிவு தோன்ற இழிவுசிறப்பும்மை கொடுத்துக் கூறினும், சீதைதன் சிறப்பைத் தெரிவிக்கவேண்டி 'நூபுரம் ஒலிக்கும் கோலக்கால்' என்று அதனை அடைமொழியிட்டுக்கூறினார்; 'கிடக்க' என்றதனால், 'அசோகந்தளிர் உவமையாதற்குச் சிறிதும் ஏலாது' என்ற அலட்சியம் தோன்றும். யாணர் - புதுமை: உரிச்சொல். பி-ம்:—[1]ஏலக்கோடு. [2]காலே. [3]கழிபடு, குழைந்துங், குழைபடு. [4]புலம்பும். [5]கா லுக்குத். [6]தோற்கும். (798)

47.—கைந்நகங்களின் வருணனை.

வெள்ளிய [1]முறுவல் செவ்வாய் விளங்கிழை யிளம்பொற்[2]கொம்பின்
வள்ளுகிர்க் குவமை நம்மான் [3]மயர்வற [4]வகுக்க லாமோ
எள்ளுதிர் [5]நீரே மூக்கை யென்றுகொண் [6]டிவறி [7]யென்றுங்
கிள்ளைகண் முருக்கின் பூவைக் [8]கிழிக்குமே லுரைக்க லாமோ.

(இ - ள்.) வெள்ளிய முறுவல் - வெண்மையான பற்களையும், செவ்வாய் - சிவந்த வாயையும், விளங்கு இழை - ஒளிர்கின்ற அணிகலங்களையுமுடைய, இளம் பொன் கொம்பின் - இளமையான அழகிய பூங்கொம்பு போன்ற சீதையினது, வள் உகிர்க்கு - கூர்மையான கைந்நகங்களுக்கு, உவமை - உபமானப்பொருளை, நம்மால்—, மயர்வு அற வகுக்கல் - மயக்கமில்லாமல் [தெளிவாக] எடுத்துக்கூறுதல், ஆம்ஓ - முடியுமோ? [முடியாது]: (ஏனெனில்), நீர்ஏ மூக்கை எள்ளுதிர் என்று கொண்டு - நீங்களே (எனது) மூக்கை

(சீதாபிராட்டியின் கைந்நகங்கட்கு ஒப்பாகமாட்டாதென்று) இகழ் கின்றீர்களென்று நினைத்து, இவறி - (அவற்றின்மேற்) கோபங் கொண்டு, என்றும் - எப்போதும், கிள்ளைகள் - கிளிகள், முருக் கின்பூவை - (மகளிர் வாய்க்கு உவமையாகும்) பலாசமலர்களை, (தம் மைப்பழிக்கும் மகளிர்வாயென்றே மயங்கி), கிழிக்கும் ஏல் - கிழிக்கு மானால், உரைக்கல் ஆம்ஓ - (அக்கிளிகளின் மூக்கை இச்சீதையின் கைந்நகங்கட்கு உவமையாக) எடுத்துச் சொல்லலாமோ? (எ - று.)

முருக்கமலரை மகளிர்வாய்க்கு உவமையாகக்கூறுதல் மரபு: கிளிகள் முருக்கமலரைத் தமது அலகால் இயற்கையாகக்கோதும்: இத்தன்மைகளைக்கொண்டு, தமது மூக்கைச் சீதையின் கைந்நகங் கட்கு இணையாகாதென்று பழிக்கும் மகளிர்வாயென்று முருக்க மலரை மயங்கிக் கிள்ளைகள் அவற்றினிடத்துச் சீற்றங்கொண்டு கோதிக் கிழிப்பதாகக்குறித்தார்: மயக்கவணியை அங்கமாகக் கொண்டுவந்த ஏதுத்தற்குறிப்பேற்றவணி. இவ்வாறு தமது அல கைச் சீதையின் கைந்நகங்கட்குஒப்பாகாதென்று கிள்ளைகளே நினைத்து, தம்மைப்பழிக்கும் மகளிர்வாயென்ற காரணம்பற்றிப் பலாச மலர்களைக் கோதிக்கிழித்தலால் அக்கிள்ளைகளின் மூக்கு ஒருவாற்று னும் சீதையின் கைந்நகங்கட்கு ஒப்பாகாதென்பது தேற்றமாதலால், அதனை ஒப்புக்கூறுதல் தகாதென்பதாம். இது - முற்கூறிய தற் குறிப்பை அங்கமாகக் கொண்டுவந்த எதிர்நிலையணி. உள்ளபடி யெடுத்துக்கூறின், தோற்றவர்கட்குச் சீற்றம்பிறத்தலாகிய தன்மை, இங்குக் கிள்ளைகளிடத்துக் கருதத்தக்கது. வெள்ளிய முறுவல் செவ் வாய் - முரண்தொடை. மகளிர்க்கு வாய் சிவந்திருத்தல், உத்தம விலக்கணம். 'வினைப்பகுதி வேண்டிய பொருளை விளக்கும்,' என்ற தனால், இங்கு, இவறுதல் - கோபித்தலென்ற பொருளைத் தந்தது. பி - ம்:—[1] முறுவற். [2] காம்பின். [3] மயலற. [4] வகுக்கலாமே, [5] நீள. [6] இவரி. [7] இன்னும், பின்னும். [8] கிழிக்குமஃதழிக்கலாமோ, கிழிக்குமே யுரைக்கலாமோ. (799)

48.—கழுத்தின் வருணனை.

அங்கையு மடியுங் கண்டா லரவிந்த [1] நினையு மாபோல்
[2] செங்களி சிதறி நீலஞ் செருக்கிய தெய்வ வாட்கண்
மங்கைதன் கழுத்தை [3] நோக்கி வளரிளங் கமுகும் வாரிச்
சங்கமு [4] நினைதி யாயி [5] னவையென்று [6] துணிதி தக்கோய்.

(இ - ள்.) தக்கோய் - சிறந்தவனே!—அம் கைஉம் அடிஉம் கண் டால் அரவிந்தம் நினையும் ஆபோல் - (சீதையினது) அழகிய கைகளை யும் பாதங்களையும் பார்த்தால் செந்தாமரை மலரை நினைக்கும் விதம் போல,—செம் களி சிதறி - செவ்வையாகிய மதர்ப்புக் குணம்மிக்கு, நீலம் - குவளைமலரையொத்த, செருக்கிய - செருக்குக் கொண்ட, தெய்வம் வாள் கண் - தெய்வத்தன்மையுள்ள வாள்போன்ற கண்

களையுடைய, மங்கைதன் - சீதையினது, கழுத்தை நோக்கி - கழுத்தைப் பார்த்து, வளர் இளங் கமுகு உம் - வளருந் தன்மையுள்ள இளமையான பாக்குமரத்தையும், வாரி சங்கம் உம் - நீரிலுண்டாகுஞ் சங்கத்தையும், நினைதி ஆயின் - (சீதையின் கழுத்திற்கு ஒப்பாம் என்று) நினைவாயானால், நவை என்று துணிதி - (அந்நினைப்பும்) குற்றமாம் என்று நிச்சயிப்பாய்; (எ - று.)

கழுத்துக்குப் பாக்குமரம் - திரட்சியிலும் வழுவழுப்பிலும் உவமை. குவளைமலர் - நிறத்திலும், வாள் - வடிவத்திலும் ஒளி செய்வதிலுங் கூர்மையிலும் ஆடவரைவருத்துவதிலும், கண்களுக்கு உவமை. வாரி - நீர்நிலே. நினைதி ஆயின் அவை என்று பிரித்து, கமுகையும் சங்கையும் சீதையின் கழுத்திற்கு உவமை யென்று நினைவாயானால் (அச்சீதையின் கழுத்திற்கு அந்தப்) பாக்குமரமும் சங்கமுமே உவமைப்பொருள் என்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1] நினைதியம்பொற். [2] செங்கதிர்சிதறி. [3] நோக்கின். [4] நினையலாகில். [5] அதுவென்று, அதுவென்றே, அவையென்றே. [6] தணிதி. (800)

49.—இதுவும், அடுத்த கவியும் – குளகம்: வாயின் வருணனை.

பவளமுங் கிடையுங் கொவ்வைப் பழனும்பைங் [1] குமுதப் போதும்
[2] துவள்வில விலவங் கோப [3] முருக்கென்றித் தொடக்கஞ் சாலத்
தவளமென் றுரைக்கும் வண்ணஞ் சிவந்துதேன் ததும்பு மாயின்
[4] குவளையுண் கண்ணி வண்ண வாயது குறியு மஃதே.

(இ - ள்.) குவளை உண் கண்ணி வண்ணம் வாய் அது - கருங்குவளைமலரையொத்த மையுண்ட கண்களையுடையளான சீதையினது அழகியவாயானது, பவளமும்,— கிடை உம் - செஞ்சடையும், கொவ்வை பழன் உம் - கோவைப் பழமும், பைங் குமுதம் போது உம் - புதிய செவ்வல்லி மலரும், துவள்வு இல இலவம் - அசைதலில்லாத இலவமரத்தின் மலரும், கோபம் - இந்திரகோபமும், முருக்கு - பலாச மலரும், என்ற இ தொடக்கம் - என்ற இவை தொடக்கமான உவமைப்பொருள்கள், சால தவளம் என்று உரைக்கும் வண்ணம் சிவந்து - (தனக்குமுன்னே) மிகவும் வெண்மையுடையனவாமென்று கூறுமாறு (தான் அவைகளினும் மிக்க) செந்நிறம் பெற்று, தேன் ததும்பும் - தேன்நிரம்பப்பெற்றிருக்கும்; ஆயின் - என்றால், குறி உம்- அதற்கு அடையாளமாகக் கூறத்தகுந்த பொருளும், அஃது ஏ - அச்சீதையின் வாயேயாம்; (எ - று.)

சீதையின்வாய் பவளம் முதலியவற்றினும் மிகச்சிவந்து தேன் ததும்புதலால், அப்பவளம் முதலியவை சீதையின்வாய்க்கு உவமையாகமாட்டா; அதற்கு அதுவே உவமையாகுமல்லது வேறு உவமை யில்லை யென்றவாறு; எதிர்நிலையணியை அங்கமாகக் கொண்டுவந்த இயைபின்மையணி: இதுவடமொழியில் அநந்வயாலங

காரமெனப்படும். பைங்குமுதப்போது - அன்றலர்ந்த குவளை மலர். இலவமலர்களின் இதழ்கள் தடித்திருக்குமாதலால், 'துவள்வில விலவம்' என்றார். கோபம் = இந்த்ரகோபம்: ''நாமைகதேசே நாம க்ரஹணம்:'' இது, முதற்குறைவிகாரத்தின் இனமாம்: பட்டுப் பூச்சி யென்று பொருள். 'இத்தொடக்கம்' என்றதனால், வீழி, தொண்டை முதலியன கொள்க. இலவம் கோபம் முருக்கு என்ற விடத்து, எண்ணும்மைகள் விகாரத்தால் தொக்கன. தேன் - இனிமைக்கு இலக்கணை. பி - ம்:—[1]குமுதப்பூவும். [2]துவளிலவங்கம். [3]முருக்கெனச் சொல்லினுஞ்சொல், முருக்கெனச் சொலினுஞ்சால. [4]குவளையொண், குவளையங். 'குவளையங்கண்ணிவாயதெனவறி குறியுமஃதே' என்று சில பிரதிகளில் நான்காமடி. (801)

50. சிவந்ததோ ரமிழ்த மில்லைத் தேனில்லை [1]யுளவென்றாலும்
கவர்ந்தம்பா தன்றி யுள்ள நினைப்பவோர் களிப்பு நல்கா
பவர்ந்தவாள் நுதலி னாள்தன் பவளவாய்க் குவமை [2]பாவித்து
[3]உவந்தபோ துவந்த வண்ண முரைத்தபோ[4]துரைத்த தாமோ.

(இ - ள்.) சிவந்தது ஓர் அமிழ்தம் இல்லை - சிவந்த நிறமுடைய தாகிய அமிருதமொன்று இல்லை; (சிவந்தது ஓர்) தேன் இல்லை - (சீதையின் இதழ்கள்போல அவ்வளவு) செந்நிறமானதொருதேனும் இல்லை; உள என்றால்உம் - (ஒருகால்) உள்ளனவானாலும், (அவை), கவர்ந்தபோது அன்றி உள்ளம் நினைப்ப ஓர் களிப்பு நல்கா - எடுத்து உண்டகாலத்திலல்லாமல் மனத்தினால் நினைத்த மாத்திரத்தில் ஒப்பற்றமகிழ்ச்சியை உண்டாக்கமாட்டா; (ஆதலால்); பவர்ந்த வாள் நுதலினாள் தன் பவளம் வாய்க்கு - செறிந்த ஒளியுள்ள நெற்றியையுடையவளாகிய சீதையினது பவழம்போற் சிவந்த வாய்க்கு, உவமை பாவித்து உவந்தபோது உவந்த வண்ணம் உரைத்தபோது - உவமைப்பொருளைப் பாராட்டித் தமக்கு உவப் புண்டானகாலத்தில் தாம் உவந்தவிதமாக எடுத்துக்கூறினால், உரைத்தது - (சீதாபிராட்டியின் வாய்க்கு ஒப்பாகச்) சொன்ன அப் பொருள், ஆம்ஓ - தகுதியான உவமைப்பொருளாகுமோ? [ஆகா தென்றபடி]; (எ - று.)

அமிருதமோ வெண்ணிறமுடையது: செந்நிறமுடையதன்று; தேன் செந்நிறமுடையதாயினும் சீதையின்வாய்போலச் செந்நிற முடையதன்று: மேலும் அவைகள் எடுத்து உண்டால் மாத்திரமே இனிமையைத் தருகின்றன; இச்சீதையின்வாயோ நினைத்தமாத் திரத்தில் இனிமையைத் தருகின்றது: ஆதலால், அவை சீதை யின் வாய்க்கு உவமையாகாவாம். வேற்றுமையணியை [வ்யதி ரேகாலங்காரத்தை] அங்கமாகக்கொண்டுவந்த எதிர்நிலையணி; (வேற்றுமையணியாவது - உபமான உபமேயங்கட்கு வேறுபாடு தோன்றக்கூறுவது.) அமுதம் தேன் என்ற சிறந்தபொருள்களை இவ்வாறாக, கொவ்வைப்பழம் முதலிய பொருள்களைக் காணும் போது அவை அழகாயிருக்கின்றன என்ற மாத்திரத்தைக்கொண்டு

உவந்து அவற்றைச் சீதையின் வாய்க்கு உவமையாகக் கூறினால் மாத்திரம் அவைகள் உவமையாதற்கு ஏற்குமோ? ஏலா வென்பதாம். பவர்தல் - செறிதல். "வாளொளியாகும்" என்பது, தொல்காப்பியம். பி - ம்:—[1]உளதென்றாலும், கரும்பென்றாலும். [2]பாலித்து. [3]உவந்த போதுவந்ததன்றி. [4]ஒத்தவாமோ, ஒத்ததாமோ. (802)

51.—பற்களின் வருணனை.

முல்லையு முருந்து முத்து முறுவலென் [1]றுரைத்த போது
சொல்லையு மமிழ்துர் பாலுந் தேனுமென் றுரைக்கத் தோன்றும்
அல்லதொன் றுவதில்லை [2]யமிழ்திற்கு முவமை யுண்டோ
[3]வல்லையே லறிந்து கோடி மாறிலா வாறு சான்றோய்.

(இ - ள்.) மாறு இலா ஆறு - ஒப்பில்லாதபடி, சான்றோய் - பெருமை பெற்றவனே!—'முறுவல் - (சீதையின்) பற்கள்,—முல்லை உம் - முல்லையரும்புகளையும், முருந்துஉம் - மயிலிறகினடியையும், முத்துஉம் - முத்துக்களையும், (போல்வனவாம்),' என்று உரைத்த போது - என்று சொன்ன காலத்தில் [என்று சொன்னால்], சொல்லை உம் - (அவளது) சொற்களைப்பற்றியும், 'அமிழ்துஉம் - தேவாமிருதத்தையும், பால்உம் - பாலையும், தேன்உம் - தேனையும், (போலும்),' என்று உரைக்க - என்று கூறுமாறு, தோன்றும் - (மனத்தில்) எண்ணமுண்டாகும்; அல்லது - (இவ்வாறு ஏற்கவே சொல்லிக் கொண்டுவரும் முறைப்படி சொல்லுவது) அல்லாமல், ஆவது ஒன்று இல்லை - (அவள்பற்களுக்கு) உவமையாகப் பொருள் ஒன்றும் இல்லை; அமிழ்திற்குஉம் உவமை உண்டுஓ - தேவாமிருதத்திற்கும் உவமையாகக் கூறப்படும் பொருளும் ஏற்படுமோ? வல்லை ஏல் - (நீ) வல்லமையுடையையாயின், அறிந்துகோடி - (அச்சீதையின் பற்கள் இத்தன்மையனவென்று ஊகித்து) அறிந்து கொள்வாயாக; (எ - று.)

அமிழ்து முதலியன சொற்களுக்கு உவமையாகாதவாறு போல, முல்லைமுதலியனவும் பற்களுக்கு உவமையாகாவென்பது - முன்னிரண்டடிகளின் கருத்து. சீதையின்பற்களுக்கு உவமையாதற்கு ஏலாத முல்லையரும்பு முதலியவற்றை உவமையாகு மென்றால், அவ்வாறே, அவள் சொற்களுக்கு உவமையாகாத தேவாமிருதம்முதலிய பொருள்களையும் அச்சொற்களுக்கு உவமைகூறவேண்டிவரும்; உண்மையாகப் பார்த்தால் ஒருபொருளும் உவமையாகமாட்டாது. தேவாமிருதம் தான் உபமானமாக நிற்பதன்றி உபமேயமாக நின்று தனக்கு வேறோருவமையைப் பெறாத வாறுபோலச் சீதையின் பற்களும் தாம் உபமானமாய் நிற்பதல்லது தமக்கு வேறோ ருவமையைப் பெறா வென்பது, முதல்மூன்றடிகளின் பொருள். முறுவல் - புன்சிரிப்புமாம். 'அமிழ்திற்குமுவமையுண்டோ' என்ற உபமான வாக்கியம் 'சீதையின்பற்களுக்கு உவமைப்பொருளில்லை' என்ற உபமேய

வாக்கியத்தைத் தெரிவித்தது, பிறிதுமொழிதலணியாம். பி - ம்:— [1]உரைத்தபோதும், உரைத்ததொன்றும். [2]அமிழ்தினுக்கு, அழதினுக்கு. [3]வல்லையால். (803)

52.—மூக்கின் வருணனை.

ஓதியு மெள்ளுந் தொள்ளைக் குமிழு[1]மூக் கொக்கு மென்றால்
[2]சோதிசெய் பொன்னு மின்னு மணியும்போற் [3]றுளங்கித் தோன்றா
ஏதுவு மில்லை வல்லா ரெழுதுவார்க் கெழுத வொண்ணா
[4]நீதியை நோக்கி நீயே நினைதியால் [5]நெடிது காண்பாய்.

(இ - ள்.) நெடிது காண்பாய் - மிகுதியாகக் கற்றுணர்ந்தவனே! —'ஓதிஉம் - பச்சோந்தியையும், எள்உம் - எட்பூவையும், தொள்ளை குமிழ்உம் - தொளையுள்ள குமிழமலரையும், மூக்கு - (இச்சீதையின்) மூக்கானது, ஒக்கும் - போலும், என்றால்—, (பச்சோந்தி முதலிய அப்பொருள்கள்), சோதிசெய் பொன்உம்-ஒளிசெய்கின்ற பொன்னையும், மின்னும் மணிஉம்போல் - ஒளிவிடுகின்ற இரத்தினங்களையும் போல, துளங்கிதோன்றா - விளங்கிக்காணப்படமாட்டா; ஏதுஉம் இல்லை - (அவ்வாறு ஒளிசெய்தற்கு உரிய) காரணமும் (அப்பச்சோந்தி முதலிய பொருள்களிடத்தில்) இல்லை; (மற்றும்), வல்லார் எழுதுவார்க்கு எழுத ஒண்ணா - வல்லமையுடையவரான சித்திரமெழுதுவோர்க்கும் எழுதமுடியாத, நீதியைநோக்கி - (இம்மூக்கின்) இத்தன்மையை ஆராய்ந்துபார்த்து, நீஏ நினைதி - நீயே (மூக்கினழகை) உணர்ந்துகொள்வாய்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

சீதையின் மூக்குப் பொன்போலவும் இரத்தினம்போலவும் ஒளிர்கின்றதே: அங்ஙனிருக்க அம்மூக்கிற்குப் பச்சோந்தி முதலியன எவ்வாறு உவமையாம்? உவமையாகமாட்டா; மேலும் சித்திரத்தில் எழுதமுடியாதவாறு பேரொளிக்கு அழகுவிஞ்சியிருத்தலால், அதன் சிறப்புத்தன்மையை யூகித்தறிவா யென்பதாம். முதலிரண்டடிகள் - வேற்றுமையணியை அங்கமாக்கொண்டு வந்த எதிர்நிலையணி. மின்னும் - மின்னலையும் எனினுமாம். ஓதி - ஓந்தி: இடைக்குறை. தொள்ளை - தொளை: விரித்தல். பி - ம்:—[1]மூக்கென்றாற் பின்னும், மூக்கொக்குமேற்ற. [2]சோதிசெம் பொன்னும். [3]துளங்கித் தோன்றும், துலங்கிற் றென்றே. [4]நீதியே. [5]நெடிது கண்டாய். (804)

53.—காதுகளின் வருணனை.

வள்ளைகத் தரிகை வாம மயிர்வினைக் கருவி யென்னப்
பிள்ளைக [1]ளுரைத்த வொப்பைப் பெரியவ ருரைக்கிற் பித்தாம்
[2]வெள்ளிவெண் டோடு செய்த விழுத்தவம் [3]விளைந்த தென்றே
உள்ளுதி [4]யுலகுக் கெல்லா முவமைக்கு முவமை யுண்டோ.

(இ - ள்.) '(மகளிர்காதுகளுக்கு), வள்ளை - வள்ளைக்கொடியின் இலையும், கத்தரிகை - கத்தரிக்கோலும், வாமம் மயிர் வினை கருவி - அழகிய மயிர்த்தொழிலுக்கு உரிய கருவியாகிய கத்தியும், (ஆகிய இவை, ஒப்பாக் கூறலாகும்),' என்ன - என்றகாரணத்தால், பிள்ளைகள் உரைத்த ஒப்பை - அறிவு நிரம்பாதவர்கள் (சீதையின் காதுகட்கும்) சொல்லிய அவ்வுபமானத்தை, பெரியவர் - அறிவு நிரம்பிய பெரியோர்,—(சீதையின் காதுகட்கு உவமையாக), உரைக்கின்-எடுத்துக் கூறினால், பித்து ஆம் - (அது) பைத்தியமாய் முடியும் [சிறிதும் தகாதென்றபடி]; வெள்ளி வெள்தோடு - (அச்சீதையின் காதுகளிலணியப்பட்ட) வெள்ளிபோன்ற மிகவும் வெண்மையாகிய தோடு என்னுங் காதணி, செய்த - முன்புசெய்த, விழு தவம் விளைந்தது என்றே - சிறந்த தவமே (சீதையின் காதுகளாகப்) பலித்ததென்றே, உள்ளுதி - எண்ணுவாய்; உலகுக்கு எல்லாம் உவமைக்கும் - உலகிலுள்ள பொருள்கட்கெல்லாம் உவமையாகச்சொல்லக் கூடியதற்கும், உவமை உண்டுஒ - வேறோருவமைப்பொருள் இடைக்குமோ? (எ - று.)

சீதையின் காதுகள் உலகிலுள்ள அழகியமகளிரது காதுகளுக்குத் தாம் உவமையாகுமாறு அழகு மிக்கிருத்தலால், அவற்றிற்கு வேறோருபமானப் பொருள் இல்லை யென்பதாம். 'உவமைக்கும் உவமையுண்டோ' என்ற வாக்கியம் - சீதையின் காதுகளுக்கு உவமைப்பொருள் ஒன்றுமில்லை யென்று முன்னிரண்டடிகளிற் கூறிய விஷயத்தைச் சாதித்து நிற்பது-வேற்றுப்பொருள்வைப்பணி யெனப்படும். சீதையின் காதுகளை,தோடுகள்செய்த தவப்பயனது வடிவாகக் குறித்தது - தன்மைத்தற்குறிப்பேற்றவணியாம்: இங்கு, சீதையின் காதுகளுக்கு வள்ளைமுதலியன ஒப்பாகாவென்பதை வற்புறுத்தற்பொருட்டு எல்லாமகளிர் காதுகளுக்கும் கூறுகிறபடியே சீதையின் காதுகட்கும் வள்ளை முதலியவற்றை உவமை கூறும் புலவர்களை 'பிள்ளைகள்' என இழித்து உரைத்தனர். பிள்ளைகள் - இளமைத் தன்மையர்: அறிவுநிரம்பாதவர்கள் என்றவாறு. வாமமயிர்வினைக் கருவியாகிய கத்திரிகை எனக்கூட்டி யுரைப்பாரு முளர். இங்கு, பித்து என்றது - அறிவின்மையென்ற பொருளைத் தருமென்னலாம். சிறப்புப்பொருள் தரும் 'விழுமம்' என்னும் உரிச்சொல், 'விழு' எனக் குறைந்து நின்றது. 'வள்ளை' என்னுங்கொடியின்பெயர் - இலைக்கு முதலாகுபெயர். பி - ம்:—[1] உரைக்குமொப்பை, உரைக்கவொல்லை. [2] வெள்ளைவெண்டோடு. [3] விளைந்த. [4] உலகிலென்றும், குழையைச் சொல்லின். (805)

54.—கண்களின் வருணனை.

பெரியவாய்ப் பரவை யொவ்வா பிறிதொன்று நினைந்து [1] பேச
[2] உரியவா யொருவ ருள்ளத் [3] தொடுங்குவ வல்ல வுண்மை
தெரிய[4]வா யிரக்கால் நோக்கிற் [5] றேவர்க்குந் தேவ னென்னக்
கரியவாய் வெளிய வாகும் வாள்தடங் கண்க [6] ளம்மா.

(இ - ள்.) தேவர்க்குமும் தேவன் என்ன கரிய ஆய் - தேவாதி தேவனாகிய திருமாலைப்போலக் கரியனவாகியும், வெளிய ஆகும் - வெண்மைநிறமுடையனவாகியுமுள்ள, வாள் தட கண்கள் - வாள் போன்ற நீண்ட (சீதையின்) கண்கள்,—உண்மை தெரிய ஆயிரம் கால் நோக்கின் - (அவற்றின்) உண்மையான தன்மை தெரியும்படி ஆயிரந்தரம்பார்த்தாலும்,—பெரிய ஆய் பரவை ஒவ்வா - மிகவும் பரந்தவையாய்க் கடலையும் உவமையாகப்பெறுவாம் [கடலினும் பெரியன என்றபடி]; பிறிது ஒன்று நினைந்து பேச உரிய ஆய் - வேறொருபமானப்பொருளை ஊகித்துச்சொல்லுதற்குத் தகுந்தனவாகி, ஒருவர் உள்ளத்து - ஒருவரது மனத்திற்குள், ஒடுங்குவ அல்ல - அடங்குந்தன்மையனவல்ல; (எ - று.)—அம்மா - கண்களின் மிக்க பரப்பைக் குறிக்கும் வியப்பிடைச்சொல்.

"கடலினும் பெரிய கண்கள்" என்றபடி சீதையின் கண்கள் மிகப் பெரியனவா யிருத்தலால், அவற்றின் தன்மையை உள்ளத்தினால் ஊன்றியுணர்தற்கு ஒருவராலும் இயலா தென்பதாம். அக் கண்களை முழுதும் பார்த்து முடியவேண்டு மென்றால் பலமுறை நோக்குமாறு அவை மிகப்பரந்திருக்கு மென்பார், 'உண்மைதெரிய வாயிரக்கானோக்கின்' என்றார்; ஒருமுறைநோக்கினால் மனநிறைவு பிறவாதவாறு மிக்கபேரழகுடைமையால் இவ்வாறு கூறினா ரெனினுமாம். கண்களின் கருவிழிகள் திருமால்போலக் கறுத்தும், அக்கருவிழிகளைச் சுற்றிலுமுள்ள பகுதிகள் அத்திருமால் பள்ளிகொள்ளும் பாற்கடல் போல வெளுத்து மிருக்கு மென்க. கரியவாய் வெளியவாகும் - தொடைமுரண். பி - ம்:—[1] கூற. [2] அரியவாய். [3] அடங்குவவல்ல. [4] ஆயிரங். [5] தேவர்க்குந்தெய்வம், தேவரிற்றெய்வம், தெரிவிலதெய்வம். [6] மாதோ. (806)

55.—புருவங்களின் வருணனை.

கே[1]ளொக்கி னன்றி யொன்று கிளத்தினாற் கீழ்மைத் [2]தாமால்
கோளொக்கு [3]மென்னி னல்லாற் குறி [4]யொப்பக்[5]கூறலாமே
வாளொக்கும் [6]வடிக்க ணாள்தன் புருவத்துக் குவமை வைக்கின்
தாளொக்க [7]வளைந்து நிற்ப விரண்டில்லை யநங்க சாபம்.

(இ - ள்.) வாள் ஒக்கும் வடி கணாள் தன் - வாள்போற் கூரிய கண்களையுடையவளான சீதையினது, புருவத்துக்கு - புருவங்கட்கு, உவமை வைக்கின் - உவமையெடுத்து உரைத்தால்,—கேள் ஒக்கின் அன்றி - (தமக்குள்) ஒன்றையொன்று ஒத்தாலல்லாமல், ஒன்று - வேறொரு பொருளை, கிளத்தினால் - உவமை கூறினால், கீழ்மைத்து ஆம் - இழிவுவமையாகும்; (மேலும்), கோள் ஒக்கும் என்னின் அல்லால் - (சாதாரண மகளிரது புருவத்துக்கு உவமையாவதொரு பொருளை யெடுத்து இது என்) மனப் போக்கிற்குப் பொருந்தி நிற்கின்றதென்று (அதைச் சீதையின் புருவங்கட்கு) உபமானமாகச் சொன்னாற் சொல்லலாமே யல்லாமல், குறி ஒப்ப கூறல் ஆமே -

உவமை பொருந்தக் கூறமுடியுமோ? (முடியாது); (இனி, மன்மதனது வில்லை உவமைகூறலாமென்றால்), தாள் ஒக்க வளைந்து நிற்ப - இரண்டு நுனியும் பொருந்துமாறு வளைந்து நிற்பனவாகிய, இரண்டு அநங்க சாபம் - மன்மதன்விற்கள் இரண்டு, இல்லை - (உலகத்தில்) இல்லை; (ஆதலால், அதுவும் உவமை கூறப்படாது); (எ - று)

சீதையின் புருவங்கள் தம்மில் ஒன்றையொன்று நிகர்த்தலன்றி வேறொருவமைப்பொருளைப் பெறமாட்டா;ஒருகால் ஏதோ ஒருபமானப் பொருளை என் மனப்போக்கின்படி கூறுகின்றேனென்று கூறினாற் கூறலாமேயல்லாமல் அவ்வுவமை, அப்புருவங்கட்குப் பொருந்திய உவமையாகாது: இழிவுவமையின்பாற்படும்; இனி, மன்மதனுக்கு எப்பொழுதும் நுனியிரண்டும் வளைந்துள்ளவாகிய இரண்டு விற்கள் உள்ளனவாயின், அவை சீதையின் புருவங்கட்கு ஒருபடியொப்பாம்: அவ்வாறு நுனி வளைந்தனவாகிய இரண்டுவிற்கள் மன்மதனுக்கு இல்லையாகையால், அம்மன்மதனது வில்லை உவமை என்பதும் இயைவதன்று என்பதாம். காமநூல் கரும்பு எனக் காமனுக்கு இருவிற்கள் இருப்பினும் ஒருசேர அவை வளைந்துநில்லாவாதலால், உவமையாகா என்றது. கேள் - இனமானது. இழிவுவமையாவது - உயர்ந்தபொருளோடு இறப்ப இழிந்ததை உவமையாகக் கூறுவது. பி - ம்:—[1]ஒக்கும். [3]ஆமேல். [3]என்னிலில்லாக். [4]ஒக்க. [5]கூறலாமோ, கூறிற்றன்றால். [6]வடு. [7]வளர்ந்துநிற்ப, வளைந்தே நிற்ப. (807)

56.—நெற்றியின் வருணனை.

[1]நன்னாளு நளின [2]நாணுந் [3]தளிரடி நுதலை [4]நாடிப்
பன்னாளும் பன்னி யாற்று மதியெனும் [5]பண்ப தாகி
[6]முன்னாளின் முளைவெண் திங்கள் [7]முழுநாளுங் குறையே யாகி
எந்நாளும் வளரா தென்னி னிறையொக்கு [8]மியல்பிற் றாமே.

(இ - ள்.) முன் நாளில் முளை வெள் திங்கள் - சுக்கிலபக்ஷத்துப் பிரதமையினன்று முளைக்கின்ற வெண்மையாகிய சந்திரனது,— நல் நாள் - நல்ல பகற்காலத்து, நளினம் உம் நாணும் - (மலர்ந்துள்ள) தாமரைமலரும் (தான் ஒப்பாகாது) வெட்கமடைதற்குக் காரணமான, தளிர் அடி - தளிர்போல் மெல்லிய பாதங்களையுடைய சீதையினது, நுதலை - நெற்றியின் அழகை, நாடி - ஆராய்ந்து, பல்நாளும் பன்னி - பலநாளும் (அதையே) சிந்தித்து, ஆற்று - பொறுமல், மதி எனும் பண்பது ஆகி - மதியென்று சொல்வதற்கு ஏற்ற குணத்தை யுடையதாய், முழுநாள் உம் குறை ஆகி - (பதினாறு கலைகளும் நிரம்ப வேண்டிய) பௌர்ணமிதினத்திலும் குறைவாகவே இருந்து, எ நாள் உம் வளராது என்னின் - எந்நாளிலும் வளராமலே இருக்குமானால், (அப்பொழுது அச்சந்திரன்), இறை ஒக்கும் இயல்பிற்று ஆம் - (சீதையின் நெற்றிக்குச்) சிறிதே உவமையாகின்ற தன்மையுடையதாகும்; (எ - று.)

வளர்பிறையில் முதல்நாளன்று தோன்றும் பிறைச்சந்திரன் சீதையின் நெற்றியழகை நினைந்து பொறாமைகொண்டு தான் அதற்கு ஒப்பாகவேண்டுமென்று எண்ணி, பலநாள் சிந்தித்து மதி என்னும் பெயர்க்குஏற்ற பண்பதாகியது: பதினாறு கலைகளும் நிரம்பவேண்டிய பௌர்ணமியினன்றும் தான் அவ்வாறாகாமல் பிறைச்சந்திரனாகவே யிருக்குமானால், அப்பொழுதுதான் அது சீதையின் நெற்றிக்கு ஒருபடியொப்பாகுமென்பதாம். இச்செய்யுள் - உய்த்துணர்வணியினபாற்படும்; 'இன்னபடியிருப்பின் இன்னதுகூடும்' என்ற வாய்பாடு பொருந்தக்கூறுவது, இவ்வணியின் இலக்கணம். சந்திரன் 'மதிக்குந் [மதித்தல் - ஆலோசித்தல்] தன்மையுள்ளது மதி' என்று பொருள்படக்கூடிய தனதுபெயர் நிலைத்துநிற்க வேண்டினால், சீதையின் முகத்திற்கு ஒப்பாகுமாறு அது எப்போதும் வளராமலேயிருக்க வேண்டுமென்பது, 'மதியெனும் பண்பதாகி......எந்நாளும் வளராதென்னின்' என்பதன் கருத்து. 'மதுவை [அமிருத கிரணத்தை] யுடையது மதி' என்று சந்திரனுக்குப் பெயராகின்ற இச்சொற்கு 'மதிக்குந்தன்மையுள்ளது - மதி' என வேறொருவகையாற் காரணங் கற்பித்துக்கூறியது - பிரிநிலை நவிற்சியணியின்பாற்படும். 'இறையொக்கு மியல்பிற்றாம்' என்றதனால், அப்போதும் முற்றுவமையாகா தென்றவாறு. தாமரைமலர் தான் மலர்தற்குஉரியகாலமாகிய பகற்காலத்திலும் சீதையின் பாதங்கட்கு ஒப்பாகாதென்பார் 'நன்னாளின நாணும் அடி' என்றார். [7]'முறைநாளுங்குறைவேயாகி யெந்நாளும் வளர்ந்ததென்னின்' என்று பாடமாயின், ஈற்றேகாரத்தை எதிர்மறைப்பொருளதாக்கி, சந்திரன் சீதையின்நெற்றியழகைக் கண்டு பொறாமைகொண்டு பலநாளும் அதையே நினைந்து அவ்வாறு மதித்ததனால் மதியென்ற பெயரைப் பெற்று நாளுக்குநாள் முறைமுறையாகக் குறைந்தபோதிலும் அடுத்த சுக்கிலபட்சத்தில் எந்நாளும் வளர்ந்துகொண்டிருப்பதனால், அது சீதையின்நெற்றிக்குச் சிறிதும் உவமையாகாதென்று பொருள்கொள்க. முன்நாள் = முதல்நாள்: வளர்பிறையின் பிரதமை; முழுநாள் - பூர்ணிமை. [1]நன்னாளி னநாணு முகத்தினை நுதலைநாடி என்று பாடங்கொண்டு, முகம் நெற்றி என்ற இவ்விரண்டின் வருணனையாக இச்செய்யுட்குப் பொருள் கூறுதல் - முகத்தின் வருணனைக்காகத் தனியே ஒருசெய்யுள் பின்பு வருதலாலும், நன்குபொருந்தாமையாலும், ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று.

பி - ம்:—[1]நன்னாளில். [2]நாடும். [3]நளியடி. [4]நாணி. [5]பண்பின்றாகி. [6]முந்நாளை. [7]முறை...குறைவே. [8]இயல்பிற்றம்மா. 'பன்னாளும் பன்னியாற்றா படிகாணும் படியிற்றாமோ?' என்று, சிலபிரதிகளில் இரண்டாமடி காண்கின்றதென்ப. (808)

57.—முன்நெற்றிமயிரின் வருணனை.

வனைபவ ரில்லை யன்றே வனத்துள்நாம் வந்த [1]பின்னை
அனையன வேனுந் [2]தாந்த மழகுக்கோ [3]ரழிவுண் டாகா
வினைசெயக் குழன்ற வல்ல விதிசெய விளைத்த [4]நீலம்
[5]புனைமணி யளக [6]மென்றும் [7]புதுமையா முவமை பூணா.

(இ - ள்.) நாம் வனத்துள் வந்த பின்னை - நாங்கள் வனத்தில் வந்தபிறகு, வனைபவர் இல்லை அன்றே - (சீதையின் முன்நெற்றி மயிர்களை வாரி) அலங்கரிப்பவர் இல்லையன்றோ; தாம் அனையன எனினும் - தாம் அத்தன்மையனவானாலும் [அவ்வாறு வாரியலங்கரிக்கப்படாவிட்டாலும்], தம் அழகுக்கு ஓர் அழிவு உண்டாகா - தமது அழகுக்கு ஒருகுறைவு உண்டாகாது; வினை செய குழன்ற அல்ல - வாரித்தொழில் செய்வதனால் சுரிந்தனவல்லவாய், விதிசெய விளைந்த - பிரமதேவன்படைத்ததனால் இயற்கையாகவே சுரிந்தன வான, நீலம் மணி புனை அளகம் - நீலவரதனம்போன்ற நெற்றிக்கு மேலுள்ள அந்தத்தலைமயிர்கள், என்றும் புதுமைஆம் - எப்பொழுதும் புதுமையாகவே தோன்றுகின்றன; உவமை பூணா - ஒருவமைப்பொருளையும் ஏற்றுக்கொள்ளமாட்டா; (எ - று.)—[முன்நெற்றி மயிரென்பது - நெற்றிக்குமேலுள்ளதான முன்புறத்துக் கூந்தலின்மயிர்: அதுவே, அளகமெனப்படும். முன்நெற்றி மயிர் வாருதலை முன்னிச்சிமயிர்வாருத லெனவும், அந்தஅளகத்தை வகிர்ந்துவாரிஎடுத்தலை வகிடெடுத்தல் எனவும் மரூஉமொழியாக வழங்குவர் ஒருசாரார்.]

வாரிப்புனைதலாகிய தொழில்செய்யாமலிருக்கையிலும் இயற்கையாகவே குழன்று அழகுமிக்குப் புதுமையாகத் தோன்றுகின்ற சீதையின் அளகங்களுக்கு ஏற்ற உவமைப்பொருள் யாதொன்றையும் எடுத்துக்கூற இயலாதென்பதாம். 'வனத்தில் நாங்கள் வந்த பிறகு சீதையின் அளகங்கள் வனைதற்றொழிலின்றியும் அழகிற்குறைவுபடா' என முன்னிரண்டடிகளிற்கூறிய பொருளைப் பின்னிரண்டடிகள் சமர்த்தித்து நிற்பது - தொடர்நிலைச்செய்யுட்குறியணி. பேரழகுள்ள பொருள்கள் காணுந்தோறும் விருப்பத்தை விளைத்துப் பின்னுங் காணுமாறு புதியபொருள்போலத் தோன்றுதல் இயல்பாதலால், 'என்றும் புதுமையாம்' என்றான். குழலுதல்-கருமணல் படிந்தாற்போலப் படிப்படியாக அமைதல். மயிர்த்தொகுதிபற்றிப் பன்மையாற் கூறினன். 'நாம்' என்பது, இராமபிரான்கூறிய உளப்பாட்டுத் தன்மைப்பன்மை. பி - ம்:—[1]பின்னர். [2]தந்தம், தாழ்ந்த. [3]அழகுண்டாகா, அழகுண்டாக. [4]சீதப், நீலப். [5]புனைமணிப்பவளம். [6]இனனும், ஒன்றும். [7]புன்மையாம். (809)

58.—முகத்தின் வருணனை.

கொண்டலின் குழவி யாம்பல் குனிசிலை வள்ளை கொற்றக்
கெண்டை[1]யொண் டரள மென்றிக் கேண்மைய கிடந்த திங்கள்
[2]மண்டிலம் வதன மென்று வைத்தனன் [3]விதியோன் நீயப்
புண்டரி கத்தை [4]யுற்ற பொழுதது [5]பொருந்தித் தேர்வாய்.

(இ - ள்.) கொண்டலின் குழவி - காளமேகத்தின் கொழுந்தும், ஆம்பல் - செவ்வல்லிமலரும், குனி சிலை - வளைந்த விற்களும், வள்ளை - வள்ளைக்கொடியினிலையும், கொற்றம் கெண்டை - சிறந்த கெண்டைமீன்களும், ஒள் தாளம் - ஒளிபொருந்திய முத்துக்களும், என்ற இ கேண்மைய - என்று கூறப்பட்ட இத்தன்மையனவான பொருள்கள், கிடந்த - அமையப்பெற்ற, திங்கள் மண்டிலம் - சந்திரமண்டலத்தை, விதியோன் - பிரமதேவனே, வதனம் என்று வைத்தனன் - (சீதையின்) முகமென்று படைத்துவைத்தான்; நீ—, அ புண்டரிகத்தை - (சீதையினது) அந்தத் தாமரை முகத்தை, உற்ற பொழுது - நெருங்கிக் காணும்பொழுது, அது பொருந்தி தேர்வாய் - (யான் கூறிய) அத்தன்மையை நன்றாகக் கண்டறிவாய்; (எ - று.)

சீதையின் முகமென றுபெயரிட்டு, கொண்டலின்குழவி முதலியவற்றையுடையதொரு சந்திரமண்டலத்தைப் பிரமதேவன் படைத்தானென்று கூறியது - வஞ்சவொழிப்பணியின் பாற்படும். கொண்டற்குழவி - அளகத்திற்கும், செவ்வாம்பல்மலர் - வாய்க்கும், வளைந்தவிற்கள் - புருவங்கட்கும், வள்ளையிலைகள் - காதுகட்கும், கெண்டைமீன்கள் - கண்கட்கும், முத்துக்கள் - பற்களுக்கும் உவமையாமென்க. காண்டற்கு இனிமையிலும், நிறத்திலும், கண்டோரைமகிழ்வித்தலிலும் முகத்திற்குத் தாமரைமலர் உவமையாம் 'இக்கேண்மைய' என்றதனால் மூக்கிற்கு உவமைகூறப்படுகின்ற பச்சோந்தி முதலியன கொள்க. பி - ம்:—[1] ஓரிரண்டுமொன்றிக் கேண்மையில். [2] மண்டிலவதனம். [3] விதியெநீ, மதியோய்நீ. [4] ஒத்தபோழ்தத்து, ஒத்தபொழுது. [5] பொருந்தியோர்வாய், பொருந்திக் காண்பாய்.

"வனைபவரில்லை" என்ற தொடக்கத்துச் செய்யுளானது பின்னும், 'கொண்டலின்குழவி" என்ற தொடக்கத்து இச் செய்யுளானது முன்னுமாகச் சிலபிரதிகளிற் காணப்படுகின்றன. அவ்வாறு இருத்தல், அளகத்தையும் முகத்தினுறுப்பாகக் கொண்டு 'கொண்டலின்குழவி" என்று கூறியிருக்குங் கவியின் கருத்தோடு மாறுபடும். (810)

59.—கூந்தலின் வருணனை.

காரினைக் கழித்துக் [1] கட்டிக் கள்ளினோ டாவி [2] யூட்டிப்
பேரிருட் பிழம்பு [3] தோய்த்து [4] நெறிவுறீஇப் பிறங்கு கற்றைச்
சோர்குழற் [5] றெருகுதி யென்று சும்மைசெய் தனைய தம்மா
நேர்மையைப் பருமை செய்த நிறைநறுங் கூந்தல் நீத்தம்.

(இ - ள்.) நேர்மையை பருமை செய்த - நுண்மையைக் கொண்டு பருமையாகச் செய்ததான [மெல்லிய மயிர்கள் அடர்ந்து பருத்துத்தோன்றுகின்ற], நிறை நறுங் கூந்தல் நீத்தம் - அடர்ந்த

நறுமணமுடைய (சீதையினது) கூந்தலின் தொகுதியானது.—காரினை - கரியமேகத்தை, கழித்து கட்டி - வெட்டிக்கட்டி, கள்ளினோடு ஆவி ஊட்டி - தேனையும் (அகில் முதலியவற்றின் நறுமணப்) புகையையும் ஊட்டி, பேர் இருள் பிழம்பு தோய்த்து - பெரிய இருட்குழம்பிலே தோய்த்து, நெறிவு உறீஇ - நெறித்தலைப்பொருத்தி, பிறங்கு - விளங்குகின்ற, கற்றை - கற்றையாகிய, சோர் குழல் தொகுதி என்று - தொங்குந்தன்மையுள்ள குழல்தொகுதி யென்று பேர்வைத்து, சும்மை செய்து அணையது - சுமையாக வைத்தாற் போன்றது; (எ - று.)

மேகத்தைப் பிடித்துச் சீவிக்கட்டி, அதற்கு நெய்ப்பையும் வாசனையையும் உண்டாக்கி, பின்னும் கருநிறம்அமையச்செய்து, குழற்கற்றையென்று பேரிட்டுப் பெரும்பாரத்தை வைத்தாற்போன்றது சீதையின் கூந்தல்தொகுதியென்பதாம்; வஞ்சவொழிப்பணியை அங்கமாகக்கொண்டுவந்த தன்மைத்தற்குறிப்பேற்றவுவமையணி. பல மெல்லியமயிர்கள் திரண்டிருத்தலும், நெய்ப்பும், இயற்கையுஞ் செயற்கையுமாகிய நறுமணமும், மிக்க கருநிறமும், நெறிப்பும் கூந்தலின் குணங்களாதலால், அம்மேகத்திற்கு அவற்றையெல்லாம் கூட்டியுரைக்கவேண்டுவதாயிற்று. 'கூந்தற்பாரம்' எனக் கூறப்படுதலால், 'சும்மைசெய்தணையது' என்றார். மெல்லிய மயிர்கள் பல திரண்டு பருமையாக இயன்றுள்ளதனால், கூந்தற்கு 'நேர்மையைப் பருமை செய்த' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. சும்மை = சுமை: விரித்தல். அம்மா - வியப்பிடைச்சொல். நீத்தம் - மிகுதியென்றமாத்திரமாய் நின்றது. உறீஇ = உறுவித்து: பிறவினையெச்சம். பி - ம்:—[1]காட்டி. [2]தள்ளி; காட்டி, கூட்டி. [3]தோய்ந்து. [4]நெறியுறீஇ. [5]தொகுதிச்சூழல், தொகுதியொன்று. (811)

60.—சீதையின் நல்லிலக்கணவமைதி.

புல்லிதழ் கமலத் தெய்வப் பூவிற்கு முண்டு பொற்பின்
[1]எல்லையின் மதிக்கு முண்டாங் களங்கமென் [2]றுரைக்கு மேதம்
அல்லவுஞ் சிறிது குற்ற மகன்றில வன்ன [3]மன்ன
நல்லிய லாளுக் கெல்லா நலனன்றிப் பிறி[4]துண் டன்றால்.

(இ - ள்.) தெய்வம் கமலம் பூவிற்குஉம் - தெய்வத்தன்மையுள்ள தாமரை மலர்க்கும், புல் இதழ் உண்டு - பயனற்ற [அதனைமேல்தழுவியுள்ள] புறவிதழாகிய குற்றம் உள்ளது; பொற்பின் எல்லையின் மதிக்குஉம் - அழகின் வரம்பாகிய [மிகவும் அழகிய] சந்திரனுக்கும், களங்கம் என்று உரைக்கும் ஏதம் உண்டு ஆம் - களங்கமென்று சொல்லுகிற குற்றம் உள்ளதாகும்; அல்லஉம் - இவைகளல்லாமல் மற்றுமுள்ள சிறந்தபொருள்களும், சிறிது குற்றம் அகன்றில - சிறிதாவது குற்றமில்லாமல் இருக்கமாட்டா; [ஒவ்வொரு சிறந்த பொருட்கும் சிறிதாவது குற்றம்உண்டு]: அன்னம் அன்ன நல் இயலாளுக்கு - அன்னப்பறவைபோன்ற அழகிய

நடையையுடையவளாகிய சீதைக்கு, எல்லாம் நலன் அன்றிபிறிது உண்டு அன்று - முழுவதும் நன்மையேயல்லாமல் வேறொன்ருகிய குற்றம் உளதாகாது; (எ - று.)—ஆல் - தேற்றம்.

தாமரைமலர்க்கும் புறவிதழாகிய குற்றம் இருக்கின்றது; சந்திரனுக்கும் களங்கமாகிய குற்றம் இருக்கின்றது; இவ்வாறு பல சிறந்த குணங்களையுடைய உயர்ந்த பொருள்களிலும் ஏதேனும் சிறிது குற்றமிருத்தல் உலகவியல்பு: இச்சீதைக்கோ முழுவதும் குணமேயன்றிக் குற்றம் சிறிதுமில்லை யென்பதாம்: வேற்றுமை படவந்த எடுத்துக் காட்டுவமையணி, இது; இதனால், உலகத்திற் காணப்படுஞ்சிறந்த பொருள்களெல்லாவற்றினுஞ் சிறந்தவள் சீதை யென்பது, தொனிக்கும். இலக்குமி தன்னிடத்தில் தங்குமாறு நிற்றலால், தாமரை மலரை 'கமலத்தெய்வப்பூ' என்ருர். புல்லிதழ் - பண்புத்தொகை: வினைத்தொகையாக, புல்லிய - அணைந்துள்ள, இதழ் என்றும் கொள்வர். பி - ம்:—[1] எல்லினீர், எல்லியின், எல்லிசேர், எல்லைசூழ். [2] இசைக்குமேது. [3] மின்னின். [4] உண்டாமோ. (812)

61.—இதுவும் அது.

மங்கையர்க் கோதி வைத்த விலக்கணம் [1] வண்ண வாசப்
[2] பங்கயத் தவட்கு மையா நிரம்பல பற்றி நோக்கின்
செங்கயற் கருங்கட் செவ்வாய்த் தேவரும் வணங்குந் தெய்வக்
[3] கொங்கையக் குயிலுக் கொன்றுங் [4] குறைவில குறியு மஃதே.

(இ - ள்.) ஐயா—! பற்றி நோக்கின் - ஆராய்ந்துபார்த்தால், மங்கையர்க்கு ஓதி வைத்த இலக்கணம் - மகளிர்க்காக(ச் சாமுத்திரிக சாஸ்திரத்திற்) கூறியுள்ள உத்தமவிலக்கணங்கள், வண்ணம் வாசம் பங்கயத்தவட்கும் - அழகிய வாசனையுள்ள தாமரைமலரில் வாழ்பவளான இலக்குமிக்கும், நிரம்பல - நிரம்ப அமையவில்லை; செம் கயல் கருங்கண் - அழகிய கயல்மீன்போன்ற கருவிழிகளைக் கொண்ட கண்களையும், செம் வாய் - சிவந்தவாயையுமுடைய, தேவர்உம் வணங்கும் தெய்வம் - தேவரும் வணங்குதற்கு ஏற்ற சிறப்பு வாய்ந்த, கொங்கை அ குயிலுக்கு - தனங்களோடு கூடிய குயில்போன்ற இன்சொற்களைப்பேசும் அந்தச்சீதைக்கு, ஒன்றுஉம் குறைவு இல - (உத்தமவிலக்கணங்களில்) ஒன்ருவது குறைவு பட்டிலது; குறிஉம் அஃதே - (நீ அவளை அறிதற்கு) அடையாளமும் அதுவே; (எ - று.)

சீதை இலக்குமியினும் நல்லிலக்கணம் நிரம்பியவளென்பதாம். ஒன்றுங்குறைவின்றி நல்லிலக்கணம் முழுவதும் நிரம்பி யிருத்தலால், சீதை, 'தேவரும் வணங்குந் தெய்வக்குயில்' எனப்பட்டாள். செவ்வரி பரந்திருத்தலால், கண்களுக்குச் செந்நிறக் கயலை உவமை கூறினாராம். செங்கயற் கருங்கட் செவ்வாய் - தொடைமுரண். குயில் - உவமவாகுபெயர். உம்மைகள் மூன்றனுள், முதலிரண்டும் -

உயர்வுசிறப்பும் ஈற்றது - இழிவுசிறப்புமாம். பி - ம்:—[1]மன்ன. [2]பங்கயத்தாட்கும். [3]செங்கையற. [4]குறைவில. (813)

62.—சொற்களின் வருணனை.

[1]குழல்படைத் தியாழைச் செய்து குயிலொடு கிளியுங் கூட்டி
[2]மழலையும் பிறவுந் தந்து [3]வடித்தகைம் மலரின் மேலான் [தான்
இழைபொரு[4]மிடையி னாள்த [5]னின்சொற்க ளியையச் செய்
[6]பிழையில துவமை காட்டப் பெற்றிலன் [7]பெறுங்கொ லின்னும்.

(இ - ள்.) குழல் படைத்து - வேய்ங்குழலை யுண்டாக்கியும், யாழை செய்து - வீணையையுண்டாக்கியும், குயிலொடு கிளிஉம் கூட்டி - குயிலையும் கிளியையும் படைத்தும், மழலைஉம் பிறஉம் தந்து - (நாகணவாய்ப்பறவையின்) எழுத்துநிரம்பாத மழலைச்சொல்லையும் மற்றும் இன்சொற்களுக்கு உவமையாகும் பொருள்களையும் இயற்றியும், வடித்த - பழகித்தேர்ந்த, கை - கைகளையுடைய, மலரின் மேலான் - தாமரைமலரில் வாழ்கின்ற பிரமதேவன், (பிறகு), இழை பொரும் இடையினாள்தன் இன்சொற்கள் இயைய செய்தான் - நூலிழையோடு மாறுபடுகின்ற இடையையுடைய சீதையினது இன்சொற்களை நன்றாகப்பொருந்துமாறு அமைத்தான்; பிழை இலது உவமைகாட்ட பெற்றிலன் - (அச்சொற்களுக்குக்) குற்றமற்ற உவமைப் பொருளொன்றையும் எடுத்துக்காட்டுமாறு உண்டாக்கவில்லை: இன்னும் பெறும் கொல் - இனியேனும் படைப்பனோ? (அறியோம்); (எ - று.)

பிரமன் சீதையின் இன்சொற்களைப் படைக்கவேண்டி முதலில் வேய்ங்குழல் முதலியவற்றைப் படைத்துப் பழகிக் கைதேர்ந்த பிறகே அச்சீதையின் சொற்களைப் படைத்தனன்; ஆகவே, அவற்றிற்கு ஏற்ற உவமைப்பொருள் இதுவரையிலும் பிரமன் படைப்பில் இல்லையென்பதாம். குழல் முதலியவற்றினோசையினும் சீதையின் சொற்கள் இனிமைமிக்கன என்றவாறு. மலரின் மேலான் என்ற விசேடியத்திற்கு 'குழல்படைத்து......மழலையும் பிறவுந் தந்து வடித்த கை' என்று அடைமொழிகொடுத்தது - சீதையின் சொற்கள் மிகவும் இனியனவாகுமாறு படைக்கும் ஆற்றலுள்ளவனென்ற கருத்தைத் தெரிவித்தலால், கருத்துடையடைமொழியணியாம்; பிரமன் படைத்தற்கடவுளாதலால், யாழ் முதலியவற்றையும் படைத்ததாகக் கூறினர். இனி, முதல் மூன்றடிகட்கு—வடித்த கைம்மலரின் மேலான [பிரமதேவன்] வேய்ங்குழலோசையையும் யாழொலியையும் குயிலின் குரலையும் கிளியின் பேச்சையும் (நாகணவாய்ப் பறவையின்) மழலைச் சொல்லையும், மதுரமாகிய பிறவற்றையும் தேடி அவற்றையெல்லாம் ஒன்றாகக்கூட்டிச் சீதையின் சொற்களாகப் படைத்திருக்கிறான் என்று பொருள் கூறினுமாம்; குழல் முதலியவற்றின் இனிமை முழுவதும் சீதையின் சொற்களில் ஒருங்கே திரண்டுள்ளன என்றவாறு. 'பிறவும்' என்றதனால்—"நாட்டுங்

கதலி நடுக்கரும்பு மாவருக்கை, காட்டுங் குயில் கிள்ளை கற்கண்டு - வேட்டருந்துஞ், சீனி சருக்கரை செந்தேனமுதம் பால் குழல் யா, ழான பதினாறுகு மொழிக்காம்,'' ''இயம்புமொழிகிள்ளை யிரங்கிசை யாழ் வீணை, வயங்கு கருங்குயில் வண்பூவை— தயங்கினிய, பாகுகரும் பமுதம் பால் தேன் மதுப்பழமென், றாரும்'' என்ற இடங்களிற் கூறிய வற்றில் இங்குக்கூறியன ஒழிந்த மற்றவற்றைக்கொள்க. குழல், யாழ், குயில், கிளி - அவற்றின் ஒலிக்கு, முதலாகுபெயர்கள். பொரு - ஒன்றோடொன்று ஒத்த எனினுமாம். பி - ம்:—[1]குழலைவைத்து. [2]மழலையபிறவும். [3]வடித்துக்கை, வடித்ததை. [4]முலையினாள். [5]சொற்களின். [6]பிழையிலன். [7]பெறுவதென்னோ. (814)

63.—இதுவும் அது.

வானின்ற வுலக மூன்றும் வரம்பின்றி வளர்ந்த வேனும்
நாநின்ற சுவைமற் றொன்றோ வமிழ்தன்றி நல்ல தில்லை
மீனின்ற கண்ணி னாள்தன் மென்மொழிக் குவமை வேண்டின்
[1]தேனொன்றோ வமிழ்த மொன்றோ வவைசெவிக் கின்பஞ் செய்யா.

(இ - ள்.) வான் நின்ற உலகம் மூன்றுஉம்-சுவர்க்கம்முதலாகப் பொருந்திய மூன்று உலகங்களும், வரம்பு இன்றி வளர்ந்த ஏனும் - வரம்பில்லாமற் பரவியுள்ளன வென்றாலும், (அவ்வுலகங்களுள்), மீன் நின்ற கண்ணினாள்தன் மெல் மொழிக்கு - மீன்போன்ற கண்களை யுடையவளான சீதையினது மெல்லிய சொற்களுக்கு, உவமை வேண்டின் - உவமைப்பொருளை யெடுத்துக் கூற விரும்பினால்,— தேன் ஒன்றுஓ - தேன் ஒன்றும், அமிழ்தம் ஒன்றுஓ-பால் ஒன்றும், (உள்ளன); (ஆயினும்), அவை செவிக்கு இன்பம் செய்யா - அவ்விருபொருள்களும் (நாவிற்கு இனிமைதருமேயன்றிச்) செவிக்கு இன்பஞ்செய்யாவாம்; மற்று ஒன்று அமிழ்துஓ - மற்றொன்றாகிய தேவாமிருதமும், நா நின்ற சுவை அன்றி நல்லது இல்லை - (முற்கூறியனபோல்) நாவிற்கு உரிய சுவையுடையதாகுமே யன்றி வேறு நன்மையை யுடையதன்று [செவிக்கு இன்பஞ்செய்யாது என்றபடி]; (எ - று.)

மிகவும்விசாலமான மூவுலகங்களிலும், தேடித்தேடிப்பார்த்துச் சீதையின் சொற்களுக்கு, ஒருபடியாக உவமைகாட்டுவோமெனின், செவிக்குஇனிமைதரும் சீதாபிராட்டியாரின் சொற்களுக்கு, நாவிற்கு இனிமைதரும் தேனை, பால், இவற்றினுஞ்சிறந்த தேவாமிருதம் என்ற பொருளை உவமைகூறுதல் எவ்வாறு ஏற்குமென்றவாறு. எதிர்நிலையணி. பி - ம்:—[1]தேனன்றோவமிழ்தமன்றோ. (815)

64.—நடையின் வருணனை.

பூவரு மழலை யன்னம் புனை [1]மடப்[2]பிடியென் றின்ன
தேவரு மருளத் தக்க[3]செலவின [4]வெனினுந் தேறேன்

[5]பாவருங் கிழமைத் தொன்மைப் பருணிதர் [6]தொடுத்த பத்தி
நாவருங் கிளவிச் செவ்வி நடைவரு நடையள் நல்லோய்.

(இ - ள்.) நல்லோய் - நற்குணமுடையோனே! பூ வரும் - தாமரைமலரிற் பழகுந்தன்மையுள்ள, மழலை - மழலைச்சொற்களையுடைய, அன்னம் - அன்னப்பறவையும், புனை மடம் பிடி - அழகிய இளமையாகிய பெண்யானையும், என்ற இன்ன - என்ற இவைகள், தேவர்உம் மருள தக்க செலவின - தேவர்களும் கண்டு மருளும்படியான [சிறந்த] நடையையுடையன, எனின்உம் - என்றாலும், தேறேன் - (அவைகளைச் சீதையின் நடைக்கு உவமையென்று கூற) உறுதிகொள்ளேன்; பா வரும் கிழமை தொன்மை பருணிதர் - செய்யுள் செய்வதிற் பொருந்திய உரிமையையுடைய [புலமையையுடைய] பழமையான புலவர்கள், தொடுத்த - இயற்றிய, பத்தி - ஒழுங்காகிய, நா வரும் கிளவி செவ்வி நடை - நாக்கிற்கு இனிமையாக வருகின்ற சொற்களையுடைய காவியங்களின் அழகிய நடையை, வரும் - ஒத்த, நடையள் - நடையையுடையவளாவள்; (எ - று.)

உலகத்து மகளிர்நடைக்கு உவமையாகக் கூறப்படுகின்ற அன்னப்பறவை முதலியவற்றின் நடையைச் சீதையின் நடைக்கு ஒப்பாகுமென்று சிறிதுங் கருதேன்; பழைய நல்லிசைப்புலவர்களியற்றியுள்ள காப்பியங்களின் நடை தட்டுத்தடங்கலின்றி எவ்வகையாலும் ஒப்பற்று விளங்குதல்போல இச்சீதையின் நடையும் ஒப்பற்று விளங்குமென்பதாம். 'நடை' என்னுஞ் சொல்லொப்புமை பற்றி, நூலின் நடை சீதையின் நடைக்கு உவமை கூறப்பட்டது. வடநூலார் நூலின்நடையை 'சைலீ' என்பர். "பூ எனப்படுவது பொறிவாழ்பூவே" என்ப வாதலால், பூஎன்பது - தாமரையைக் குறித்து நின்றது. செலவு - நடை. நாவருங்கிளவி - காப்பியத்திற்கு, அடையடுத்த ஆகுபெயர். நடைவரு நடை, வரு - உவமவுருபு. பி - ம்:— [1]மயில். [2]பெடையோடு. [3]செலவினள். [4]எனவுந். [5]பாவருகேண்மை. [6]தெரித்த, கொடுத்த. (816)

65.—நிறத்தின் வருணனை.

எந்நிற முரைக்கேன் மாவின் [1]இளநிற முதிரு [2]மற்றைப்
[3]பொன்னிறங் கருகு மென்றால் மணிநிற முவமை போதா
மின்னிற[4] நாணிப்பொங்கி [5]வெளிப்படா வொளிக்கும் வேண்டின்
தன்னிறந் தானே யொக்கு மலர்நிறஞ் சமழ்க்கு மன்றே.

(இ - ள்.) (சீதையின் நிறத்திற்கு உவமை கூறவேண்டுமாயின்),—மாவின் இள நிறம் முதிரும் - மாமரத்தின் இளந்தளிரின் நிறம் (என்றும் ஒருபடிப்படவில்லாமல்) முதிர்ந்துபோகும்; பொன் நிறம் கருகும் - பொன்னின் நிறமும் (இவள்நிறத்துக்கு முன்னே) கறுத்துத்தோன்றும்; [ஆகையால் மாந்தளிர்நிறம் முதலிய உவமையாகா: அவ்வாறே], மணி நிறம் உவமை போதா - இரத்தினங்

களின் நிறமும் உவமையாதற்கு ஏற்ற ஒளியின்றிக் குறைந்திருக்கும்; மின் நிறம் நாணி பொங்கி வெளிப்படா ஒளிக்கும் - மின்னலின் நிறமோ (சீதையின் நிறத்தைக் கண்ணாரக்கண்டு) வெட்கி (முதலிற்) கிளர்ந்து (பிறகு) வெளிவராமலே மறைந்துவிடும்; மலர் நிறம் சாம்புக்கும் - தாமரைமலரின் நிறமும் பின்வாங்கிவிடும்; என்றால்—, எ நிறம் உரைக்கேன் - வேறு எந்த நிறத்தை யெடுத்து உவமை கூறுவேன் (யான்)? வேண்டின் - (எப்படியாவது உவமை கூற) வேண்டுமென்றால், தன் நிறம் தானே ஒக்கும் - (அந்தச்சீதையின்) நிறம் (வேறு உவமைபெறாமல்) தனக்குத்தானே ஒப்பாகும், (என்பேன்); (எ - று.)

மாந்தளிர், பொன், இரத்தினங்கள், மின்னல், தாமரைமலர் என்பவற்றை மகளிர்மேனிநிறத்துக்கு உவமைகூறுதல், மரபு. இவற்றினும் சீதையின் மேனிநிறம் அழகில் விஞ்சியிருக்கு மென்பது, கருத்து. எதிர்நிலையணியை அங்கமாகக்கொண்டுவந்த இயைபின்மையணி. இயற்கையாக ஒருநொடிப்பொழுதில் தோன்றி மறையுந்தன்மையதான மின்னலை, சீதையின் நிறத்தைக் கண்டு மறைவதாகக் காரணங் கற்பித்துக்கூறியதனால், 'மின்னிறம்நாணிப் பொங்கி வெளிப்படாவொளிக்கும்' என்றது - ஏதுத்தற்குறிப்பேற்றவணியின் பாற்படும். நாள்செல்லச்செல்ல இளந்தளிர்கள்முதிர்ந்து நிறம் மாறுதல், இயல்பு. மற்றை - அசை: உவமைப்பொருளாகக் கூறிய தன் இனத்தைக் காட்டு மெனினுமாம். அன்றே - தேற்றம். பி - ம்:—[1] இளந்தளிர், இளைநிறம். [2] யாணர். [3] பொன்னிறங் கறுக்கும்மற்றை. [4] நாணியெங்கும், நோக்கிநாணி. [5] வெளிப்படாது. (817)

66.—இராமபிரான் பிராட்டியினிடஞ் சொல்லுமாறு சில அடையாளங்களை அநுமானுக்குக் கூறத்தொடங்குதல்.

மங்கைய [1]ரவளை யொப்பார்[2] மற்றுளா ரில்ல ரென்னும்
சங்கையி லுள்ளந் தானே சான்றெனக் கொண்டு சான்றோய்
[3] அங்கவள் நிலைமை யெல்லா மளந்தறிந் தருகு சார்ந்து
திங்கள்வாண் முகத்தினாட்குச் செப்பெனப் பின்னுஞ் செப்பும்.

(இ - ள்.) சான்றோய் - நற்குணங்களையுடையவனே! அவளை ஒப்பார் மற்று மங்கையர் உளார் இல்லர் என்னும் - அச்சீதையைப் போன்றவராகிய வேறுமகளிர் ஒருவரு மிலரென்று நினைக்கிற, சங்கை இல் உள்ளம் தானே - சந்தேகமில்லாத (உனது) மனத்தையே, சான்று என கொண்டு - சாட்சியாகக்கொண்டு, அங்கு - அச்சீதையிருக்குமிடத்தில், அவள் நிலைமை எல்லாம் அளந்து அறிந்து - அவளது தன்மை முழுவதையும் நன்றாக ஆராய்ந்து அறிந்து, (சீதையென்று துணிவுவந்தபின்பு), அருகு சார்ந்து - அவளது அருகிற் போய், திங்கள் வாள் முகத்தினாட்கு செப்பு - பூர்ணசந்திரனபோன்ற ஒளிபொருந்திய முகத்தை யுடையவளான அச்சீதைக்கு (யான்கூறுகிற அடையாளமொழிகளைச்) சொல்வாய்,

என - என்று, பின்னும் செப்பும் - மீண்டும் கூறத்தொடங்கினன் (இராமபிரான்); (எ - று.)— அவற்றை, அடுத்த ஆறுகவிகளிற் காண்க.

நீ தேடிச்செல்லுகையில் எந்தப்பெண் உவமையற்றவளெனத் தோன்றுகின்றுளோ அவளையேசீதையென்று தெளிவாயாக வென்பது, முன்னிரண்டடிகளின் கருத்து. "ஸதாம் ஹிஸந்தேஹ பதேஷு வஸ்துஷு ப்ரமாணம் அந்த: கரணப்ரவ்ருத்தய: [பெரியோர்கட்கு ஐயம் நிகழ்ந்தவிடத்து மனத்தின் செயலே சான்ருகும்]" என்பவாதலால், 'உள்ளந்தானே சான்றெனக்கொண்டு' என்ருரென்னலாம். இங்குக் கூறியவாற்ருல், 'சீதாபிராட்டி சர்வாங்க சுந்தரி [எல்லாவுறுப்பிலும் கட்டழகினள்] என்று அநுமான் தெளிதற்காக ஒவ்வோருறுப்பையும் இராமபிரான் வருணித்துக்கூறியதன்றி ஒவ்வோருறுப்பையும் அநுமான் காணவேணுமென்ற கருத்தினோடு கூறினனல்லன் என்பது, பெறப்படும். இங்ஙன் கொள்ளவேணுமென்பதே, கவியினுள்ளமாகும்: மேல் சுந்தரகாண்டத்தில் "இலங்கையை முழுதும்நாடி யிராவணனிருக்கையெய்திப், பொலங்குழை யவரையெல்லாம் பொதுவுற நோக்கிப் போந்தேன்" என்று கூறியிருத்தலும், "ஆறுமைப்பொறி நின்னையுமா ணெனக்கூறும்" என்று வருதலும் கவியினுள்ளத்தைக் காட்டுதல் காண்க. பெரியோனே என்ற பொருளோடு மனச்சாக்ஷியுடையோனே என்றும் ஒருபொருள் தோன்றுமாறு, சமத்காரமாக, 'சான்றெனக்கொண்டு சான்ரேய்" என்று கூறிய சொல்நயம் கருதத்தக்கது. பி - ம்:—[1] இவளை. [2] மற்றுளரில்லை. [3] அங்கணி. (818)

வேறு.

67.—ஆறுகவிகள் - இராமபிரான் வார்த்தை: சீதையினிடஞ் சொல்லுமாறு அனுமானுக்குக் கூறிய அடையாளங்கள்.

[1] முன்னை நான் முனியொடும் முதியநீர் மிதிலைவாய்ச்
சென்னி[2] நீண் மாலையான் வேள்வி[3] கா ணியசெல
[4] அன்னமா டுந்துறைக் கருகு[5] நின் ருள்தனைக்
கன்னிமா டத்திடைக் கண்டதுங் கழறுவாய்.

(இ - ள்.) முன்னை - முன்னாளில், முனியொடும் - விசுவாமித்திரமுனிவனோடும், முதிய நீர் மிதிலைவாய் - பழமையான நீர்வளமுள்ள மிதிலாபட்டணத்தில், சென்னி நீள் மாலையான் வேள்வி காணிய - தலையில் நீண்டமாலையைத் தரித்தவனாகிய ஜனகமகாராஜனது யாகத்தைத் தரிசிக்குமாறு, நான்—, செல - சென்றபோது, அன்னம் ஆடும் துறைக்கு அருகு - அன்னப்பறவைகள் (தங்கள் பேடையுடனே) விளையாடுகின்ற அகழியின்நீர்த்துறைக்கு அருகிலேயுள்ள, கன்னிமாடத்திடை - கன்னிகா மாடத்தின் உப்பரிகையில், நின்ருள் தனை - நின்றவளாகிய சீதையை, கண்டதும் - பார்த்ததையும், கழறுவாய் - (நீ அவட்குச்) சொல்லுவாய்; (எ - று.)

விசுவாமித்திரமுனிவன் இராமலக்ஷ்மணர்களைத் துணையாக வைத்துக்கொண்டு தனது யாகத்தை முடித்தபின்பு மிதிலாபுரியில் சனகமகாராசன் செய்யும் யாகத்தைத் தரிசிப்பதாக ஒரு வியாஜம் வைத்து இராமலக்ஷ்மணர்களுடன் செல்லுகையில், மிதிலையிற் புகுந்தபின்பு ஜநகமகாராசனது அரண்மனையைச் சூழ்ந்திருக்கின்ற அகழியின் அருகேயுள்ள கன்னிமாடத்தின்மேல் தன்னருகே ஆணன்னங்களுடனே பெண்ணன்னம் விளையாடுந் துறைக்கு அருகே சீதாபிராட்டி யிருக்க, அந்நிலையிலே தான் கண்டதை இராமபிரான் அடையாளமாக எடுத்துக்கூறுகின்றானென்க. இவ்விவரத்தை, "விரியும்வார்புனன் மருதஞ்சூழ்மிதிலையர் கோமான், புரியும்வேள்வியுங் காண்டுநா மெழு கென்று போனார்," "பொன்னின் சோதி போதினினாற்றம் பொலிவேபோல், தென்னுண்டேனிற்றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம், கன்னிம்மாடத் தும்பரின்மாடே கழிபேடோடு, அன்னம் மாடும் முன்றுறை கண்டாங் கயனின்றார்," "எண்ணருநலத்தினா ளிளையணின்றுழி, கண்ணொடுகண்ணிணை கவ்வி யொன்றையொன்று, உண்ணவுநிலை பெறாதுணர்வுமொன்றிட, அண்ணலுநோக்கினா னவளுநோக்கினாள்" என்பவற்றால் அறிக. பி - ம்:—[1]முன்னையான், முனைனாள். [2]நாண் மாலையான். [3]காணிய செல்வான். [4]அன்னமாடும்பொழிற்கு, அன்னமாடுறையுளுக்கு. [5]கின்றாளைக். (819)

68\. வரைசெய்தாள் வில்லிறுத் தவனமா முனியொடும்
[1]விரசினா னல்லனேல் [2]விடுவல்யா னுயிரெனாக்
[3]கரைசெயா வேலையிற் பெரியகா தலள்தெரிந்து
உரைசெய்தா ளஃதெலா முணரநீ யுரைசெய்வாய்.

(இ - ள்.) கரை செயா வேலையின் பெரிய காதலள் - கரை கட்ட முடியாத கடலினும் மிக்கதான காதலை யுடையவளாகிய சீதை,— 'வரை செய் வில் தாள் இறுத்தவன் - மலையைப்போன்ற (சிவனது) தநுர்த் தண்டத்தை முறித்தவன், அ மா முனியோடும் விரசினான் அல்லன் ஏல் - அந்தவிசுவாமித்திரமுனிவனுடனே வந்தவனல்லாவிட்டால், யான் உயிர்விடுவல் - யான் (எனது) உயிரை விடுவேன் [இறப்பேன்],' எனா - என்று, தெரிந்து உரை செய்தாள் - (கற்புடையார் கடமையைத்) தெரிந்துகொண்டுசொன்னாள்; அஃது எலாம் - அச்செய்தி முழுவதையும், உணர நீ உரை செய்வாய் - (அவள்) அறியுமாறு நீ சொல்வாய்; (எ - று.)

இராமன் வில்லிறுத்த செய்தியைத் தோழியொருத்தி சொல்லக் கேட்டசீதை 'விசுவாமித்திரனுடன் வந்தவன் இவ்வில்லிறுத்தவனாக இல்லாவிடின், நான் உயிரை மாய்த்துக்கொள்வேன்' எனக் கருதியதை, பிறரு இராமபிரானிடத்துச் சொல்லியிருக்கக் கூடுமாதலால், அஃது, இங்கு அடையாளமாகக் குறிக்கப்பட்டது. அவ்வாறு சீதை கருதியதை, "இல்லையேநுசுப் பென்பாருண்டுஎன்

டென்னவும், மெல்லியன்முலைகளும் விம்மவிம்முவாள், சொல்லிய குறியினத் தோன்றலேயவன், அல்லனேலிறப்பனென் றகத்து ணுன்னினள்" என்றதுகொண்டு உணரலாம். [8]'கரைசெயாவேலையிற் பெரியகற்பினள்' என்று பாடம் வழங்குகின்றது: அந்தப் பாடத்திற்கு - ஓர் ஆடவனிடத்து மனஞ்சென்ற பின்புவேறொராடவனை மணப்பது கற்பிற்கு இழுக்கு ஆதலாலும், விசுவாமித்திர முனிவனோடு இராமபிரான் சனகமகாராசனது அரண்மனைவழியாகச் சென்றபோது சீதை கன்னிமாடத்திலிருந்தவாறே அவ்விராமபிரானிடத்துக் காதல்கொண்டு நோக்கின ளாதலாலும், 'வில்லிறுத்தவன் முனியொடும் விரசினனல்லனேல் யான் உயிர்விடுவல்' என்று கூறினளென்க.

சிலபிரதிகளில் "சூழிமால்யானையின்" என்ற தொடக்கத்துச் செய்யுளின் பிறகு இச்செய்யுள் காணப்படினும், அஃது கதைப் போக்கை முறையே கூறிவரும் இச்சந்தர்ப்பத்திற்கு ஏலாமை காண்க. பி - ம்:—[1]விரவினன். [2]விடுவெனுருயிரென. [3]கரைசெய்வான். (820)

69. சூழிமால் யானையின் துணைமருப் பிணையெனக்
[1]கேழிலா வனமுலைக் கிரிசுமந் [2]திடைவதோர்
[3]வாழிவான் மின்னிளங் கொடியின் [4]வந் தாளையன்று
ஆழியா னரசவைக் கண்டதும் [5]அறைகுவாய்.

(இ - ள்.) சூழி மால் யானையின் துணை மருப்பு இணை என - முகபடாமணிந்த மதங்கொண்ட ஆண்யானையினது ஒன்றோடொன்று ஒத்துள்ள இரண்டு தந்தங்களென்று சொல்லுதற்கு, கேழ் இலா - (அவற்றை) ஒப்பாகக்கொள்ளாத, வனம் - அழகிய, முலை கிரி - தனங்களாகிய மலைகளை, சுமந்து - தாங்கிக்கொண்டு, இடைவது - (பாரத்தைப்பொறுக்கமாட்டாது) பின்னிடைவதாகிய, ஓர் வான்மின் இளங்கொடியின் - ஒப்பற்ற வானத்திலுள்ள மின்னலினது இளங்கொடிபோல, வந்தாளை - வந்தவளாகிய அச்சீதையை, அன்று - அக்காலத்தில், ஆழியான் அரசு அவை கண்டதும் - ஆஜ்ஞாசக்கரமுடையவனாகிய ஜநகமகாராசனது சபையில்பார்த்ததையும், அறைகுவாய் - சொல்வாய்; (எ-று.)

ஜநகமகாராசனது சபையின்கணுள்ள மண்டபத்தில் சீதை எல்லாவணிகளையும் அணிந்தவளாக வர, அப்போது இராமபிரான்தான் அவளைக்கண்டதை அடையாளமாகக்கூறினனென்க; இதனை "பொன்னினொளிபூவின்வெறி சாந்துபொதி சீத, மின்னினிழலன்னவடன் மேனியொளிமான, அன்னமு மரம்பையருமாரமிழ்து நாண, மன்னவையிருந்த மணிமண்டப மடைந்தாள," "அன்னவளை யல்லளெனவாமெனவயிர்ப்பான, கன்னியமிழ்தத்தை யெதிர்கண்ட கடல்வண்ணன், உன்னுயிர்நிலைப்பதொருத்தியொடுழைத்தாண்டு, இன்னமிழ்தெழக்களிகொளிந்திரனை

யொத்தான்" என்ற பாலகாண்டச் செய்யுள்களா லறிக. யானையின் தந்தங்களும் சீதையின் தனங்கட்கு ஒப்பாகா வென்பது, 'யானையின் துணைமருப்பிணையெனக் கேழிலா வனமுலை' என்பதன் பொருள். முலைக்கிரியைச் சுமக்கும் மின்னிளங்கொடி - சீதைக்கு, இல்பொருளுவமம். வாழி - அசை பி - ம்:—[1]கேழலாம் வனமுலைக் கிடைசுமந்து. [2]உடைவதோர். [3]வாழியர், வாழியாம். [4]வந்தாடனை. [5]அருளுவாய். (821)

70. முன்புநா னறிகிலா முளிநெடுங் கானிலே
என்பினே [1]போதுவா னிணைதியோ [2]வேழைநீ
[3]இன்பமா யாருயிர்க் கினியையா யிணையினித்
துன்பமாய் முடிதியோ வென்றதுஞ் சொல்லுவாய்.

(இ - ள்.) ஏழை - மடமைக்குணமுடையவளே! நீ—, முன்பு நான் அறிகிலா முளி நெடுங் கானிலே - இதுவரையிலும் யான்சென்றறியாத தீந்துபோன பெரியகாட்டிலே, என் பினே போதுவான் - என் பின்னே வருமாறு, இணைதி௦.- எண்ணுகின்றாயோ? இன்பம் ஆய் - (இதுவரையிலும் நீ எனக்கு) மகிழ்ச்சியை விளைப்பவளாயிருந்து, ஆர் உயிர்க்கு இனியை ஆயினை - (எனது) அருமையான உயிர்க்கும் இனியளாயிருந்தாய்; இனி - இனிமேல், துன்பம் ஆய் முடிதிஓ-துன்பஞ் செய்பவளாக ஆகக் கடவையோ? என்றதும் - என்று (யான் சீதையை நோக்கிச்) சொன்னதையும், சொல்லுவாய் - (நீ அவளிடஞ்) சொல்வாயாக; (எ - று.)

கைகேயியின் விருப்பத்தின்படி இராமபிரான் பதினான்கு யாண்டு கானகத்துறையுமாறு உடன்பட்டுச் சீதையினிடம்வந்து 'யான் பதினான்கு வருடம் வனவாசஞ்செய்து மீண்டுவருவேன்; நீ இங்கு வருந்தாது இரு' என்று சொல்லினன்: அதுகேட்ட சீதை, கணவன் காட்டிற்குச் செல்கின்றா னென்பதைப்பற்றிச் சிறிதும் வருந்தாது 'நீ இங்கு வருந்தாதிரு' என்று கூறிய சொல்லுக்கு மிக வருந்தி, உடன்வருவேனென்று வற்புறுத்திக்கூற, அதற்கு இராமபிரான் "முல்லையுங்கடன்முத்துமெதிர்ப்பினும், வெல்லும்வெண்ணகையாய் விளைவுன்னுவா, யல்லை போதவமைந்தனையாதலின், எல்லையற்ற விடர்தருவாயென்றான்" என்று கூறியது, இங்குக் கவனிக்கத்தக்கது. இதுவரையிலுந்தான் சென்றறியாத காட்டிலே செல்லுகையில், வீரராகிய தம்பியுந்தானுமே யன்றிப் பெண்பாலாகிற சீதையை யுடனழைத்துச்சென்றால் அவளைக்காப்பாற்றுவதில் தமக்கு மிகவும் வருத்தமுண்டாகுமென்று கருதி, இராமபிரான் 'இன்பமாயாருயிர்க்கினியையாயினை யினித், துன்பமாய் முடிதியோ?' என்றனன். பி - ம்:—[1]போதுவாய். [2]இனியெனா. [3]இன்பமாருயிர் தனக்கு. (822)

71. ஆனபே ரரசிழந் தடவி[1]சேர் வாயுனக்கு
யானலா தனவெலா மினியவோ வினியெனா

மீனுலா நெடுமலர்க்[2] கண்கணீர் விழவிழுந்து
ஊனிலா வுயிரின்[3] வெந் தயர்வதும் முரைசெய்வாய்.

(இ - ள்.) (உனக்கு) 'ஆன பேர் அரசு இழந்து அடவி சேர்வாய் - உனக்கு உரிய பெரிய இராச்சியத்தை விட்டுக் காட்டிற்குச் செல்பவனே! இனி - இனிமேல், யான் அலாதன எலாம் உனக்கு இனியஓ - என்னைத் தவிர மற்றைப் பொருள்களெல்லாம் உனக்கு இன்பந்தருவனவோ? [என்னொருத்தியினால்தான் உனக்குத் துன்பம்போலும்],' என - என்று நிட்டூரமாக (என்னைநோக்கிக் கூறி, (சீதையானவள்), மீன் உலாம் நெடு மலர் கண்கள் நீர் விழ விழுந்து - மீன்கள் போலப் பிறழ்வனவும் பெரியதாமரைமலரைப்போன்றனவுமான கண்களினின்று நீர்பெருகக் கீழேவிழுந்து, ஊன் நிலா உயிரின் - உடம்பில் நிற்கமாட்டாது தத்தளிக்கின்ற உயிர்போல, வெந்து அயர்வதும் - மிகவும் வருந்திச் சோர்ந்ததையும், உரைசெய்வாய் - (நீ அவனுக்குச்) சொல்வாய்; (எ - று.)

இராமன் வனவாசஞ்செய்யப் புறப்படுகின்ற காலத்தில் சீதையை நோக்கி 'நீ என்னுடன் வருவாயாயின் எனக்குத் துன்பத்திற்குக் காரணமாவாய்' என்று சொல்ல, அதுகேட்டுச் சீதை மிகவும் வருந்தி "கொற்றவன்னது கூறலுங் கோகிலஞ், செற்றதன்னகுதலையள்சீறுவாள், உற்றுகின்ற துயரமிதொன்றுமே, எற்றுறந்தபினின்பங்கொலாமென்றாள்" என்று கூறியது, இங்கு உணரத்தக்கது. தசரதசக்கரவர்த்தி பட்டாபிஷேகஞ் செய்வதாகத்துணிவு கொண்டிருந்த காலத்துக் கைகேயியின் வரத்தினால் தவறியதனால், 'ஆனபேரரசிழந்து' எனப்பட்டது. அயர்வது - காலவழுவமைதி.
பி - ம்:—[1]சேரின்கதி. [2]கண்ணினீர். [3]வந்து. (823)

72. மல்லன்மா நகர்துறந் தேகுநாண் மதிதொடும்
கல்லின்மா மதின்மணிக் கடை [1]கடந் திடுதன்முன்
எல்லைதீர் வரியவெங் கானம்யா தோ[2]வெனச்
சொல்லினா[3]ளஃதெலா முணரநீ சொல்லுவாய்.

(இ - ள்.) மல்லல் மா நகர் துறந்து ஏகும் நாள் - வளத்தையுடைய பெரிய அயோத்தியாநகரத்தை விட்டு (வனத்திற்குச்) சென்றகாலத்தில்,—மதி தொடும் கல்லின் மா மதில் மணி கடை கடந்திடுதல் முன் - சந்திரனைத் தீண்டுகின்ற [மிகவும்உயர்ந்த] கற்களினாலாகிய பெரிய மதிலினது அழகியவாயிலைக் கடப்பதற்கு முன்னமே [கடந்தவுடனே என்றபடி], எல்லை தீர்வு அரிய வெம் கானம் யாதுஓ என சொல்லினாள் - (என்னைநோக்கிச் சீதை), 'எல்லையில்லாத கொடிய காடு எவ்விடத்திலுள்ளது?' என்று வினவினாள்; அஃது எலாம் உணர நீ சொல்லுவாய்—; (எ - று.)

"நீண்டமுடிவேந்தனருளேந்திநிறைசெல்வம், பூண்டதனைநீங்கி நெறிபோதலுறுநாளின், ஆண்டநகராரையொடு வாயிலகலாமுன்

யாண்டையது கானெனவிசைத்ததுமிசைப்பாய்" என்று இச்செய்யு ளின் அநுவாதமாகச் சுந்தரகாண்டத்து வருகின்றது. இதனால், கணவன் திருமனையையேயன்றி வேறொன்றையும் அறியாத பிராட்டி யினது தன்மையும், மெல்லியல்பும், பேதைமையும் வெளியாம். இத் தகைய பேதைமையைத்தான் மாதர்க்கு அணிகலம் என்பது. பி-ம்:— [1]கடந்திடுதலும். [2]என. [3]ஈதெலாம். (824)

73.—இராமபிரான் கணையாழி கொடுத்தனுப்ப, அனுமான் விடைகொண்டு செல்லுதல்.

[1]இனையவா றுரைசெயா வினிதினே குதியெனு
[2]வனையுமா மணிநன்மோ திரமளித் [3]தறிஞநின்
வினையெலா முடிகென விடைகொடுத் துதவலும்
புனையும்வார் கழலினு னருளொடும் போயினான்.

(இ - ள்.) (இராமபிரான்), இனைய ஆறு உரைசெயா - (அநுமா னிடம்) இவ்விதமாக (அடையாளவார்த்தைகளை)ச் சொல்லி, இனி தின் ஏகுதி எனா - 'இனிது செல்வாய்' என்று கூறி, மா மணி வனை யும் நல் மோதிரம் அளித்து - சிறந்த இரத்தின மிழைத்துச் செய் யப்பட்ட அழகிய மோதிரத்தை (அநுமானிடம்) கொடுத்து, (பின் னும் அவனை நோக்கி),—'அறிஞ - அறிவுடையோனே! நின் வினை எலாம் முடிக எனா விடை கொடுத்து உதவலும் - நீ செல்லுங் காரியம் முழுவதும் (இடையூறில்லாமல் இனிதாக) முடியக்கடவது' என்று விடைகொடுத்து அனுப்புதலும், (அநுமான்),—புனையும் வார் கழலினான் அருளொடும் போயினான் - கட்டப்பட்ட நீண்ட வீரக்கழலையுடையவனான இராமபிரானது கருணையை முன்னிட்டுக் கொண்டு செல்லலானான்; (எ - று.)

மிக்கபக்திமான்கள் கடவுளின் கருணையை முன்னிட்டுக்கொண்டு செய்தொழில் தொடங்குதல் இயல்பு ஆதலின், 'புனையும் வார்கழ லினானருளொடும் போயினான்' என்றார். பி - ம்:—[1]இனியவாறுரை செய்வாயினியன். [2]அனகன்மாமணிநன், வனையன் மாமணிநன். [3]அருளிநின். (825)

74.—சீதையைத்தேடுமாறு அங்கதன்முதலியோரும் தென்திசை நோக்கிப் புறப்படுதல்.

அங்கதக் குரிசிலோ டடுசினத் துழவராம்
வெங்கதத் தலைவரும் [1]விரிகடற் படையொடும்
பொங்குவிற் றலைவரைத் தொழுதுமுன் போயினார்
செங்கதிர்ச் செல்வனைப்[2] பணிவுறுஞ் சென்னியார்.

(இ - ள்.) அங்கதன் குரிசிலோடு - அங்கதகுமாரனுடனே, அடு சினத்து உழவர் ஆம் வெம் கதம் தலைவர்உம் - (பகைவரைக்) கொல்லுகின்ற கோபத்தையுடைய வீரராகிய மிக்கவலிமையுள்ள (ஜாம்பவான் முதலாகிய) சேனைபதிகளும்,—செங் கதிர் செல்வனை

பணிவுறும் சென்னியார் - சிவந்தகிரணங்களையுடைய சூரியனது செல்வக் குமாரனான சுக்கிரீவனை வணங்குகின்ற தலையையுடையவர்களாய், பொங்கு வில் தலைவரை தொழுது - சிறந்த வில்வீரராகிய இராமலக்ஷ்மணரையும் வணங்கி, விரி கடல் படையொடும் - பரந்த கடல்போன்ற (இரண்டுவெள்ளம் வானர) சேனையுடனே, முன் போயினர் - (தென்திசைநோக்கி) முன்னாகச் சென்றார்கள்; (எ - று.)

அங்கதன் முதலியோர் சுக்கிரீவனையும் இராமலக்ஷ்மணரையும் வணங்கித் தமக்கு நியமித்துள்ள தென்திசையை நோக்கிப் புறப்பட்டார்களென்பதாம். 'உழவர்' என்பது - பகைவரது உடம்பாகிய வயல்களில் தமதுபடைகளாகிய கலப்பைகளைக்கொண்டு உழுது வெற்றியாகியபயனை விளைப்பவராதலால், வீரரைக் குறிக்கும். பி - ம்:—[1] மிகுசினப்படையொடும், மிகுகடற்படையொடும். [2] பணிகுறுஞ். (826)

நாடவிட்டபடலம் முற்றிற்று.

14—ஆவது பிலம்புக்கு நீங்கு படலம்.

சுக்கிரீவனது கட்டளைப்படி தென்திசைநோக்கிச்சென்ற அங்கதன்முதலிய வீரர்கள் பலவிடங்களிலுஞ் சீதையைத்தேடிக்கொண்டுசென்று வழியிடையிலுள்ளதொரு பாலைவனத்திற்புக்கு அந்நிலத்தின் வெப்பத்தைத் தாங்கும் வலியிலராய், அங்குக் காணப்பட்டதொரு பிலத்திலேபுகுந்து அதுஇருள்செறிந்திருந்தமையால் வழிதெரியாது திகைத்து அநுமானது வாலைப்பற்றிக் கொண்டு சென்று அங்கிருந்ததொரு நகரத்திற் புக்குஅங்குவசித்திருந்த ஒரு தவப் பெண்ணின் உதவியால் யாவரும் அப்பிலத்திினின்று நீங்கி வெளிவந்த செய்தியைக் கூறும் பாகம். பிலம் - நிலத்தின் கீழறை; மலைக்குகைபோல்வது. சிலபிரதிகளில் 'பிலம்புகு படலம்' என்றும் பெயர் கூறப்பட்டிருக்கின்றது.

1.—சுக்கிரீவன்கட்டளைப்படி மற்றைமூன்றுதிசைகளிலும் வானரவீரர்கள் செல்லுதல்.

போயினர்[1] போயபின் புறநெடுந் திசைகள்தோறு
ஏயினு னிரவிகா தலனுமே யினபொருட்கு
[2] ஆயினு ரவருமங் கன்னநா ளவதியில்
தாயினு[3] ருலகினைத் தகைநெடுந் தானையார்.

(இ - ள்.) போயினர் - (அங்கதன்முதலிய வீரர்கள் சுக்கிரீவன் கட்டளையின்படி தென்திசையைநோக்கிப்) போனார்கள்; போய பின் - (அவர்கள் அவ்வாறு) சென்றபின்பு,— இரவி காதலன் உம் - சூரியனது குமாரனாகிய சுக்கிரீவனும், புறம் நெடுந் திசைகள்தோறு ஏயினன் - (தென்திசைக்குப்) புறம்பான பெரிய மற்

றைத்திசைகளிலெல்லாம் (விநதன்முதலிய வாநரவீரர்களைச் சீதையைத் தேடுமாறு) விடைகொடுத்து அனுப்பினான்; ஏயின பொருட்கு ஆயினர் அவர்உம் - (சுக்கிரீவன்) ஏவின தொழிலாகிய சீதையைத் தேடுவதற்கு இசைந்தவராகிய அவ்வானரவீரரும், உலகினை தகை நெடுந் தானையார் - உலகமுழுவதையும் (தமது வலிமையால்) தடுக்க வல்ல பெருஞ்சேனையை யுடையவர்களாய், அன்ன நாள் அவதியில் - (சுக்கிரீவமகாராசன் தமக்குக் குறித்த) அந்த ஒருமாதத் தவணைக்குள் (தேடிவருவதாக), தாயினர் - தாவிச்சென்றார்கள்;

தென்திசை தவிர மற்றைத்திசைகளில் இன்னாரின்னார் அனுப்பப்பட்டன ரென்பதை, கீழ் நாடவிட்டபடலத்துப் பத்தாஞ் செய்யுளிற் காண்க. மூன்றுமடி முற்றுமோனை. 'அன்னநாளவதி' என்றது - "ஒருமதி, முற்றுறுதமுன் முற்றுதி ரிவ்விடை" என்று கீழ்க்கூறியதைச் சுட்டியது. அங்கு - அசை. 'உலகினைத்தகை' என்றதை - தானைக்கேனும், தானையுடையார்க்கேனும் அடைமொழியாக்கலாம்: உலகம் முழுவதும் எதிர்ப்பினும் தாம் தடுத்துப் போர்செய்ய வல்ல பேராற்றலுள்ளா ரென்பது இதன் பொருள். பி - ம்:—[1]போன. [2]ஆயினரவரை..., ஆயினர் பலரையங்கவரும். [3]உலகினில். (827)

2.—கவிக்கூற்று: மற்றைத்திசைகளிற் சென்றவர் செய்தி கூறாமல் தென்திசையிற் சென்றவர் செய்தி கூறுவேனெனல்.

குன்றிசைத் தனவெனக் [1]குலவுதோள் வலியினர்
மின்[2]றிசைத் திடுமிடைக் கொடியைநா டினர்விராய்
வன்றிசைப் படருமா றொழியவண் தமிழுடைத்
தென்றிசைச் [3]சென்றுளார் திறனெடுத் துரைசெய்வாம்.

(இ - ள்.) குன்று இசைத்தன என குலவு தோள் வலியினர் - மலைகள் பொருந்த வைக்கப்பட்டுள்ளனவென்று சொல்லுமாறு விளங்குகின்ற தோள்களின் வலிமையையுடைய வானரர்கள், மின் திசைத்திடும் இடை கொடியை விராய் நாடினர் - மின்னலும் திகைக்கும்படியான [மின்னலைக்காட்டிலும் நுண்ணிதான] இடையையுடைய பூங்கொடிபோன்ற சீதையைப் பொருந்தித் தேடினவர்களாய், வல் திசை படரும் - வலிய (கிழக்குமேற்குவடக்கு என்ற மூன்று) திசைகளிலே செல்லுகின்ற, ஆறு - வகை, ஒழிய - (சொல்லப்படாது) தவிர [அதனைக்கூறாதுவிட்டு],வள் தமிழ்உடை தென் திசை சென்று உளார் திறன் - வளமான தமிழ்மொழியையுடைய தெற்குத் திசையிற் சென்றவராகிய வாநரரது செய்கையை, எடுத்து உரை செய்வாம்-எடுத்துக்கூறுவோம்; (எ - று.)

மற்றைத் திசைகளிற் சென்ற வானரர் செய்தி கதைப்போக்கிற்கு அவ்வளவாக வேண்டுவதன் றாகையால், அதனையொழித்து, இக்கதைக்கு இன்றியமையாததான தென்திசையிற்சென்ற வானரர்

செய்தியைக் கூறுகின்றாரென்க. திசைத்திடுதலெனினும், திகைத்திடுதலெனினும் ஒக்கும். சிறந்த தொண்டர்கள் பலர் கடவுளைத் துதித்தது தமிழினாலே யாதலாலும், வடமொழியோடு ஒப்புமை தமிழுக்கேயன்றி மற்றைப் பாஷைகட்கு இல்லாமையாலும், செவிக்கு இனிய செஞ்சொலுடைமையாலும், 'வண்தமிழ்' எனப் பட்டது. 'உரைசெய்வாம்' - கவிகளுக்கு உரிய இயற்கைத் தனித் தன்மைப்பன்மை. பி - ம்:—[1] குவவுதோள். [2] திகைத்திடும். [3] சென்ற தோர்திறன். (828)

3.—வானரர் விந்தியமலை சேர்தல்.

சிந்துரா கத்தொடுந் திரண்மணிச் சுடர்செறிந்து
அந்திவா னத்தினின் [1]றவிர்தலா னரவினோடு
[2] இந்தியா றெய்தலா [3]னிறைவன்மா மௌலிபோல்
[4] விந்தைநா கத்தின்மா டெய்தினர் வெய்தினால்.

(இ - ள்.) சிந்துராகத்தொடும் - சிந்துரமென்னுஞ் செம் பொடி யோடும், திரள் மணி சுடர் - திரண்டுள்ள மாணிக்கங்களினொளி, செறிந்து - நெருங்கி, அந்திவானத்தின் நின்று அவிர்தலான்-அந்தி வானத்தில் தோன்றுகின்ற செவ்வானம்போல விளங்குதலாலும், அரவினோடு இந்து யாறு எய்தலான் - பாம்புகளும் சந்திரனும் நதியும் பொருந்துதலாலும், இறைவன் மா மௌலிபோல் - சிவபிரா னது பெரிய ஜடாமகுடம்போன்ற, விந்தை நாகத்தின் - விந்தியபரு வதத்தினது, மாடு - சாரலை, வெய்தினால் எய்தினர் - விரைவாகச் சென்று சேர்ந்தார்கள், (வானரர்கள்); (எ - று.)

சிவபிரானுக்கும் விந்தியமலைக்கும் செம்மொழிச்சிலேடை யுவமை. (செம்மொழிச்சிலேடையாவது - சொற்கள் வெவ்வேறு வகையாகப் பிரிக்கப்படாமல் பலபொருள்படுவது.) சிவபிரான் செந் நிறமாகிய சடைமுடியை யுடைமையும், தாருகவன முனிவர்களா லேவப்பட்டுத் தன்னைக்கொல்லவந்த நாகங்களை வலியடக்கி ஆபர ணமாக அணிந்துகொண்டமையும், தக்ஷமுனிரவது சாபத்தால் க்ஷயமடைபவனாய்க் கலைகுறைந்து வந்து சரணமடைந்த சந்திரனை முடிமீதுகொண்டு வரமளித்துப் பாதுகாத்தமையும், பகீரதனது வேண்டுகோளினாற் கங்காநதியை முடிமீது கொண்டமையுங் காண்க. விந்திய பருவதத்தில் சிந்துரச்செம்பொடியாலும் மாணிக்கங்களினாலும் செந்நிறம்மிக்கிருத்தலும், நாகங்களும் நீரரு விகளும் இருத்தலும், மிக உயர்ந்த அம்மலையின்மேல் சந்திரன் வருதலும், இயல்பு. இச்செய்யுளை, "பாணி பிறை கொன்றை பணிசூடி மரனேந்தி, வேணியரனைப் பொருவும் வேங்கடம்" என்ற தனோடு ஒப்பிடுக. சிந்துராகம் - ஸிந்தூரராகம் என்னும் வட மொழியின் விகாரம். காலை மாலை என்று இரண்டு அந்திகளிலும் செவ்வானமுண்டாதல், இயல்பு. பி - ம்:—[1] அளவலால். [2] இந்து வாறுடலால். [3] இறைவனோ டொத்திடும். [4] விந்தநாகத் தின். (829)

4.—இதுமுதல் மூன்றுகவிகள் - வானரர் சீதையை அவ்விந்தியமலையில் தேடுதலைக் கூறும்.

அந்நெடுங் [1]குன்றமோ டவிர்மணிச் சிகரமும்
பொன்னெடுங் கொடுமுடிப் [2]புரைகளும் புடைகளும்
நன்னெடுந் [3]தாழ்வரை நாடினர் நவையிலார்
பன்னெடுங் காலமா மென்னவோர் பகலிடை.

(இ - ள்.) நவை இலார் - குற்றமற்ற வானரவீரர்கள்,—அ நெடுங் குன்றமோடு - நீண்ட அந்த விந்தியபருவதத்தினிடத்தில்,—அவிர் மணிசிகரம்உம் - விளங்குகின்ற இரத்தினங்களையுடையசிகரங்களை யும், பொன் நெடுங் கொடுமுடி புரைகள்உம் - அழகியநீண்ட சிகரங் களிலுள்ள குகைகளையும், புடைகள்உம் - பக்கங்களையும், நல் நெடுந் தாழ்வரை - அழகிய நீண்ட அடிவாரங்களையும், ஓர் பகலிடை - ஒரு பகற் பொழுதிற்குள், பல் நெடுங் காலம் ஆம் என்ன - மிகவும் அநேக நாளில் தேடிப்பார்ப்பதுபோல, நாடினர் - (சீதாபிராட்டியைத்) தேடிப் பார்த்தார்கள்; (எ - று.)

வானரர்கள் மிகப்பலராயிருந்ததனாலும், செய்தொழிலைமிக்க ஊக்கங் கொண்டு வெகுபரபரப்புடன் செய்தலாலும், பலகாலம் தேடினால் எவ்வளவு தேடமுடியுமோ, அவ்வளவு ஒருபகற்பொழு திலேயே தேடவல்லராயினரென்க: இதனால், ஒருபகற்பொழுதி லேயே அம்மலையின் பகுதிபலவும் வானரர்களால் தேடப்படலாயிற் றென்றவாறு. 'குன்றமோடு' — ஓடு - இடப்பொருளில்வந்தது; வேற்றுமைமயக்கம். மணிச்சிகரம் - அழகிய சிகரமெனினுமாம். புரை - துளை; இங்கு, குகையைக் குறித்தது. பி - ம்:—[1]குன்றுசென்று, குன்றினோடு, குன்றிரண்டு. [2]புரைகளும்புக்குற, புரைகளும்புக்கு முன். [3]தாளவர். (830)

5. மல்லன்மா ஞாலமோர் மறுவுரு வகையினச்
சில்லலோ தியையிருந் துறைவிடந் தேடுவார்
புல்லின [1]ருலகினைப் பொதுவிலா வகையினால்
எல்லைமா கடல்களே யாகுமா [2]றெய்தினர்.

(இ - ள்.) எல்லை மா கடல்கள் ஏ ஆகும் ஆறு எய்தினர் - (பூமி யைச்சுற்றிலும்) எல்லையாகவுள்ள பெரிய சமுத்திரங்களே (தமக்கு) ஒப்பென்று சொல்லும்படி சென்றவர்களாகிய வானரர்கள்,—மல் லல் மா ஞாலம் - வளப்பம்பொருந்திய பெரியபூமிதேவியானவள், ஓர் மறு உரு வகையின் - ஒருகுற்றமுமடையாதவாறு தோன்றியுள்ள, அ சில் அல் ஓதி - பொன்வட்டத்தகட்டையணிந்த இருள்போன்ற [கரிய] கூந்தலையுடையவளாகிய அந்தச்சீதை, இருந்த உறைவு இடம் ஐ - இருந்த உறைவிடத்தை, தேடுவார் - தேடுபவர்களாய்,— உலகினை பொது இலா வகையினால் புல்லினர் - (அவ்விந்தியமலை

யின்) பூமியை (வேறொருவர்க்கும்) சம்பந்தமில்லாதபடி [முழுவதும் தாமேயாகச்] சேர்ந்தார்கள்; (எ - று.)

வானரர்கள் விந்தியமலையில் ஒருசிற்றிடமும் விட்டிடாதவாறு தாமே பரவிநின்று முழுவதும் சீதையைத் தேடினார்களென்க. சீதை-சனகமகாராசன் யாகஞ்செய்தற்குச் சாலை யமைத்தற்பொருட்டு நிலத்தை யுழுதபொழுது, அப்படைச்சாலின் வழியாகப் பூமியினின்று தோன்றியவள்: அதனால், அப்பிராட்டியைப் பூமிதேவியின் மகளாகக் கூறுதல் மரபு. பூமிதேவிக்குப் பெரும்புகழுண்டாகுமாறு நற்குண நற்செய்கைகளோடு கூடியவளாதலால், சீதையை 'ஞால மோர்மறுவுறுவகையி னச்சில்லலோதி' என்றார். சில் - மாதர்கள் தலையிலணியும் பொன்வட்டத்தகட்டணி. சில் அல் ஓதி - அன்மொழித்தொகைப்பன்மொழித்தொடர். சில்லலோதியை யிருந்துறை விடம்' என்றவிடத்து, இரண்டனுருபு பிரித்துக் கூட்டப்பட்டது. உலகுஎன்றது-இங்கு, பூமியின் ஒருபகுதியைக் குறித்தது: "மாயோன் மாய காடுறை யுலகமும்" என்றவிடத்துப் போல. பி - ம்:—[1]உல கிடை, உலகினில். [2]ஏகினார். (831)

6. [1]விண்டுபோ யிழிவர்மே னிமிர்வர்விண் படர்வர்வேர்
உண்ட [2]மா மரனினம் மலையின்வா யுறையுநீர்
மண்டுபா ரதனின்வா ழுயிர்களம் மதியினார்
கண்டிலா தனவயன் கண்டிலா தனகொலாம்.

(இ - ள்.) அ மதியினார் - நல்லறிவுடையவர்களாகிய அவ் வானரர்கள்,—விண்டு - (தனித்தனி) பிரிந்து, போய் இழிவர் - (சிலர்) இறங்கிச் செல்வர்; மேல் நிமிர்வர் - (சிலர்) மேலேறிச்செல்வர்; விண் படர்வர் - (சிலர்) வானத்தில் தாவிச்செல்வர்; வேர் உண்ட மா மரனின் - வேரினால் நீரையுட்கொள்ளுகின்ற மரங்களினிடத்தும், அ மலையின்வாய் - அந்தமலையின் தரையினிடத்தும், உறையும் நீர் மண்டு - மிகுதியாயிருக்கின்ற நீர் நிரம்பப்பெற்ற, பார் அதனின் - தலங்களினிடத்தும், வாழ் - வாழ்கின்ற, உயிர்கள் - பிராணிவர்க்கங் களில், கண்டிலாதன - (அவ்வானரர்களால்) தேடிப்பார்க்கப்படா தவை உண்டானால் அவை, அயன் கண்டிலாதன ஆம் - பிரமதேவ னாற் படைக்கப்படாதனவாகும்; (எ - று.)

மரஞ்செறிந்த இடமும் வெற்றிடமும் புனல்நிரம்பிய இடமு மாய் மூன்று பகுப்பாயுள்ள அவ்விந்தியமலை முழுவதும் பிரம சிருஷ்டிக்கு உட்பட்ட எல்லாவுயிர்களையும் வானரர்கள் தேடிப் பார்த்தார்களென்பதாம். பிரமசிருஷ்டிக்கு உட்படாத பொருள் ஒன்று மில்லையாதல் போல, இவ்வானர வீரர்களாற் பார்க்கப் படாத பொருளும் ஒன்றுமில்லை யென்பது, ஈற்றடியின் கருத்து. விண்டு - மலையுமாம். மதியினார் - ஒருமாதத் தவணையையுடையவர் எனினுமாம். போயிழிவர் = இழிந்துபோவர். வேருண்ட மாமரன் - 'பாதபம்' என்று பெயர் வழங்குமாறு தமது உணவாகிய நீரை

வேரினாலே யுட்கொள்ளும் மரங்கள்; இனி வேரூன்றிய பெரிய மரங்கள் எனினுமாம். நீர்மண்டுபார் - ஓடை, சுனை முதலியன. பின்னின்ற 'கண்டிலாதன' என்பதில், காணுதல் - செய்தலென்ற பொருளில் வந்தது. கொல், அசை.

[1]'விண்டுபோயிழிவமேனிமிர்வவிண்படர்வ' என்ற பாடத்திற்கு—விண்டுபோய் இழிவ - (நிலத்தை) விள்ளச்செய்து கீழே போயிறங்குவனவும், மேல் நிமிர்வ விண் படர்வ - மேலோங்கி வளர்ந்து ஆகாயத்தையளாவுவனவுமாய், வேர் உண்ட மா மரனின் - வேரினால் (தமது உணவை) உட்கொள்ளுகின்ற பெரிய மரங்களையுடைய, அ மலையின்வாய் - அந்த விந்தியமலையினிடத்தில், உறையும் - வசிக்கின்ற, நீர் மண்டு பார் அதனின் வாழ் உயிர்கள் - கடல் சூழ்ந்த நிலவுலகத்தில் வாழும் உயிர்களில், அம்மதியினார் கண்டிலாதன, அயன் கண்டிலாதனவாம் என்று பொருள் காண்க. விண்டு என்பது, தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுச்சொல் லாதலால், இங்குப் பிறவினையில் வந்தது. மலையின் வாயுறையும் உயிர்கள் என இயையும். 'நீர்மண்டுபாரதனின்வாழ்' என்ற தொடர் - உயிர்கட்கு இயற்கையடைமொழியாய் வந்த இடைப்பிறவரல். அம்மலையிலுறையும் பிரமன்படைப்பாகிய உயிர்களில் அவர்கள் காணாதன இல்லை யென்றவாறும். விண்டுபோயிழிவ, மேனிமிர்வ, விண்படர்வ, வேருண்ட என்பன - மரத்திற்கு அடைமொழிகள். இனி, விண்டுபோய் இழிவ - (நிலத்தை) விள்ளச்செய்து கீழேயிறங்கும் (பாம்பு முதலிய) ஊர்வனவும், மேல் நிமிர்வ - நிலத்தின்மேலே நடப்பனவாகிய (சிங்கம் முதலிய) விலங்குகளும், விண்படர்வ - ஆகாயத்திற் பறப்பனவாகிய (கருடன் முதலிய) பறவைகளுமாய், வேருண்ட மா மரனின் அம்மலையின் வாயுறையும்—, உயிர்களில், அம்மதியினார் கண்டிலாதன, அயன் கண்டிலாதனவாம் என்று பொருள் கூறலு மொன்று. இப்பொருளில், பிரமன்படைப்பாகிய மக்கள் தேவர் நரகர் விலங்கு புள் ஊர்வன நீர்வாழ்வன என்ற எழுவகைத் தோற்றங்களில் மூன்றைக் கூறி, மற்றையவற்றை உபலட்சணத்தாற் பெறவைத்தன ரென்க. உயர்ந்தசாதிநாகங்கள் உயிர்ப்பால் நிலத்தை விள்ளச்செய்து அப்பிளப்பிற் போய்த் தங்குமென்ற கொள்கைபற்றி, 'விண்டுபோயிழிவ' என்றார். பி - ம்:—[1]விண்டுபார், மண்டுபார். [2]மாமணியி னம்மலையின்வா யுதவுநீர்,...உறையினின், மாமரனினம்மலையும் வாயுறையுமநீர். (832)

வேறு.

7.—வானரர் நருமதையாற்றை யடைதல்.

ஏகினார் [1]யோசனை யேழொ டேழுபார்
[2]சேகரத் தென்றிசை [3]கடிது செல்கின்றார்
[4]மேகமா லையினெடும் [5]விரவி மேதியின்
[6]நாகுசேர் நருமதை யாறு நண்ணினார்.

(இ - ள்.) பார் சேகரம் தென் திசை கடிது செல்கின்றார் - பூமிக்குத் தலையணிபோற் சிறந்து விளங்குகின்ற தென்திசையிலே (சீதாபிராட்டியைத் தேடுமாறு) விரைந்து செல்கின்ற வாநரர்கள்,—ஏழொடு ஏழுயோசனை ஏகினர் - பதினான்குயோசனை தூரஞ் சென்றவர்களாய்,—மேதியின் நாகு - எருமைகளின் இளங்கன்றுகள், மேகம் மாலையினொடுஉம் விரவி சேர் - கார்மேகங்களின் வரிசைகளோடு ஒன்றாகக்கலந்து பொருந்தியுள்ள, நருமதை யாறு-நருமதையாற்றை, நண்ணினார் - போய்ச்சேர்ந்தார்கள்; (எ - று.)

நருமதையாறு மிக்க பரப்புள்ளதாதலால் அதனைக் கடலென்று மயங்கி நீருண்ணுமாறு மேகங்கள் அங்கு வரலாயின வென்க. கடலிற்படிந்து மேகங்கள் நீர்பருகு மெனக் கூறுதல், கவி சமயம். அங்குள்ள எருமையின் இளநாகுகள் நீருண்ட காளமேகங்களோடு வேறுபாடு தோன்றாதவாறு நருமதைநீரிற் படிகின்றன வென்பது, பின்னிரண்டடிகளிற போதரும். சிறந்த தமிழ்மொழி வளர்கின்ற இடமாதல்பற்றி, 'பார்சேகரத்தென்றிசை' என்றார்; இதனால், கவியினது பாஷாபிமானமும், தேசாபிமானமும் தோன்றும். பி-ம்:—[1]ஓசனை. [2]சேகற. [3]கடிதின், கண்டு. [4]மேகமார்மலையொடும். [5]விரவித்தேனிழி. [6]நாகுதோய். (833)

8.—இதுவும், அடுத்த கவியும் - வாநரர் நருமதையாற்றைச் சார்ந்தவிடத்து நாடுதலைக்கூறும்.

அன்னமா டிடங்களு மமரர் நாடியர்
துன்னியா டிடங்களுந் துறக்க மேயவர்
முன்னியா டிடங்களுஞ் சுரும்பு மூசுதேன்
[1]பன்னியா டிடங்களும் பரந்து சுற்றினர்.

(இ - ள்.) (வானரர்கள்)—அன்னம் ஆடு இடங்கள்உம் - அன்னப்பறவைகள் விளையாடுகின்ற இடங்களையும், அமரர் நாடியர் துன்னி ஆடு இடங்கள்உம்-தேவருலகத்துவாழும் அரம்பை முதலிய மகளிர் வந்துநீராடுகின்ற இடங்களையும், துறக்கம் மேயவர் முன்னி ஆடு இடங்கள்உம் - சுவர்க்கலோகத்திற் பொருந்திய தேவர் வந்து சஞ்சரிக்கின்ற இடங்களையும், சுரும்பு மூசு தேன் பன்னி ஆடு இடங்கள்உம் - சுரும்புகளும் (நல்மணத்தே) மொய்க்கின்ற தேன்களும் பாடிக்கொண்டு திரிகின்ற இடங்களையும், பரந்து சுற்றினர் - பரவிச் சுற்றித் தேடினார்கள்; (எ - று.)

நருமதையாற்றின் பெருஞ் சிறப்பினாலும், அதனைச்சார்ந்த இடங்களின் மிக்க இனிமையினாலும், அங்குத் தேவமாதர்களும் தேவர்களும் வரலாயின ரென்க. முன்னி ஆடு என்பதற்கு - சிறப்பைக் கருதி நீராடுகின்ற எனினுமாம். சுரும்பு, தேன் என்பன - வண்டின் சாதிபேதம்: சுரும்பு - எல்லா மணத்திலுஞ் செல்வது; தேன் - நன்மணத்தே செல்வது என வேறுபாடு காண்க; இத்தன்மையை,

"எங்குமோடியிடறுஞ் சுரும்புகாள், வண்டுகாண் மகிழ்தேனினங் காண்மது, வுண்டுதேக்கிடுமொண்மிஞிறீட்டங்காள்" என்ற சிந்தாமணிச் செய்யுளின் நச்சினார்க்கினியருரையா லுணர்க. நாடினர்-பெண் பன்மை. பி - ம்:—[1] துன்னி. (834)

9. பெறலருந் [1]தெரிவையை நாடும் பெற்றியார்
அறனறுங் கூந்தலு [2]மளக வண்டுசூழ்
[3]நிறைநறுந் தாமரை முகமு நித்தில
முறுவலுங் காண்பரான் [4]முழுதுங் காண்கிலார்.

(இ - ள்.) பெறல் அருந் தெரிவையை நாடும் பெற்றியார் - பெறுதற்கு அரிய சீதாபிராட்டியைத் தேடுந் தன்மையுடையவராகிய வானரர்கள்,—அறல் நறுங் கூந்தல்உம் - கருமணலாகிய நறுமணமுள்ள (அவளது) கூந்தலையும், அளகம் வண்டு சூழ் நிறை நறுந் தாமரை முகம்உம் - அளகம்போன்ற (கருநிறமுள்ள) வண்டுகள் சூழ்ந்து நிறைந்துள்ள நறுமணமுள்ள தாமரை மலராகிய (அவளது) முகத்தையும், நித்திலம் முறுவல்உம் - (அந்நதிகளின் அலைகளினால் கொழிக்கப்படுகின்ற) முத்துக்களாகிய (அவளது) பற்களையும், காண்பர் - காண்பார்கள்; முழுதும் காண்கிலார் - (சீதாபிராட்டியின்) உருவ முழுவதையும் ஒருசேரக் காணப்பெறாதவராயினர்; (எ - று.)

சீதாபிராட்டியைத் தேடிச்சென்ற வானரர்கள் நருமதையாற்றின் கரைகளில் அப்பிராட்டியினது உருவ முழுவதையும்பார்க்கப் பெறாமல், அவளது முகத்திற்கும் அம்முகத்திலுள்ள உறுப்புக்கட்கும் போலியான பொருள்களை மாத்திரம் கண்டனரென்பதாம். நருமதையாற்றின் கருமணல் சீதையின் கூந்தலையும், தாமரை மலர் முகத்தையும், அதில் மொய்க்கின்ற வண்டுகள் அளகத்தையும், அங்குக் காணப்படுகின்ற முத்துக்கள் பற்களையும் போலுமென்க. அளகவண்டுசூழ்தாமரைமுகம் - உவமையை அங்கமாகக் கொண்ட உருவகம். அறற்கூந்தல், நித்திலமுறுவல் - உருவகம். பெறலருந்தெரிவை - இவ்வளவு அழகுள்ள மாதர் கிடைப்பது அருமை என்றவாறு. காண்பரான் முழுதுங் காண்கிலார் - தொடைமுரண். பி - ம்:—[1] திருவினை. [2] அளவில், அளியும். [3] நிறநறுந். [4] முற்றுங். (835)

10.—வாநரர் நருமதையாற்றைக் கடத்தல்.

செருமத யாக்கையர் [1]திருக்கில் சிந்தையர்
தரும[2]த யாவிவை தழுவுந் தன்மையர்
பொருமத யானையும் பிடியும் புக்குழல்
[3]நருமதை யாமெனு நதியை நீங்கினார்.

(இ - ள்.) செரு மதம் யாக்கையர் - போர்செய்வதில் உற்சாகங் கொண்ட உடம்புடையவர்களும், திருக்கு இல் சிந்தையர் - மாறுபாடில்லாத மனமுடையவர்களும், தருமம் தயா இவை தழுவும் தன்

மையர் - தருமமும் அருளும் பொருந்திய சுபாவமுடையவர்களுமாகிய வானரர்கள்,—பொரு மதம் யானைஉம் - போர்செய்கின்ற மதங் கொண்ட ஆண்யானைகளும், பிடிஉம் - பெண்யானைகளும், புக்கு உழல் - புகுந்து விளையாடுகின்ற, நருமதை எனும் நதியை - நருமதை யாற்றை, நீங்கினர் - கடந்து அப்பாற்சென்றார்கள்; (எ - று.)

யாக்கை - (ரஸம், ரக்தம், சுக்லம், மூளை, தசை, எலும்பு, தோல் என்ற எழுவகைத்தாதுக்களாற்)கட்டப்படுவதுஎன உடம்புக்குக் காரணக்குறி. திருக்கு இல்சிந்தையர் - (குரங்குத்தன்மையால்) மாறுமல் ஒருபடிப்பட ஒற்றுமைகொண்ட மனமுடையவர். தருமம் - இப்பிறப்பிற் செய்யப்படும் நல்வினை. தயா - பிறர்நோவு கண்டவிடத்து ஐயோ எனத் தோன்றும் இரக்கம். ஆம் - அசை. பி - ம்:—[1] செருக்கில். [2] தயாவிசை, தயாவினை. [3] நருமதையாறெனும், நருமதையாம் பெயர். (836)

11.—வாநரர் ஏமகூடமலையை யடைதல்.

[1] தாமகூ டத்திரைத் தீர்த்த [2] சங்கமும்
நாமகூ டப்பெரு[3] ந் திசையை [4] நல்கிய
வாமகூ டச்சுடர்[5] மணிவ யங்குறும்
ஏமகூ டத்தடங் [6] கிரியை எய்தினர்.

(இ - ள்.) தாம கூடம் திரை தீர்த்த சங்கம்உம் - ஒளியோடு கூடிய சிகரங்களினின்று தோன்றுகின்ற அலைகளையுடைய தீர்த்தங்களின் தொகுதியும், வாமம் கூடம் சுடர்மணி(உம்)-அழகிய தொகுதியாகிய ஒளியையுடைய இரத்தினங்களும், வயங்குறும் - (தன்னிடத்தில்) விளங்குகின்ற, நாமம் கூடு அ பெருந் திசையை நல்கிய - புகழ் பொருந்திய அந்தப் பெரிய திக்கைப்பாதுகாக்கின்ற, ஏமகூடம் தட கிரியை - ஏமகூடமென்னும் பெரியதொரு மலையை, எய்தினர் - (வானரர்கள்) போய்ச்சேர்ந்தார்கள்; (எ - று.)

பல புண்ணிய தீர்த்தங்களும், மிகச்சிறந்த பல இரத்தினங்களும் நிரம்பியிருக்கப்பெற்றது ஏமகூடமலை யென்க. 'நல்கிய' என்பது, 'ஏமகூடத் தடங்கிரி' என்பதனோடு இயையும். பூமியின் மேல் எவ்வளவு உயர்ந்திருக்கின்றனவோ அவ்வளவு நிலத்தின் கீழ் வேரூன்றிப் பூமியைத்தாங்குகின்றனவாகிய அஷ்டகுல பருவதங்களுள் ஒன்றன் பெயரை இம்மலை கொண்டிருத்தலால், 'நாமகூடப் பெருந்திசையை நல்கிய ஏமகூடத்தடங்கிரி' எனப்பட்டது. எதுகை நயம்பற்றி, 'நாமங்கூடு' என்பது நாமகூடு என விகாரப்பட்டது. தாமகூடம் என்பதற்கு - ஒழுங்காகிய மலைமுழைஞ்சுகளினின்று எனக் கூறுவாருமுளர். இனி, 'நல்கிய' என்பதை 'வாமகூடச்சுடர்மணி' என்பதனோடு இயைத்து, இரத்தினங்கள் சுற்றிலுமுள்ள திசைகளில் தமது மிக்கவொளியைப் பரப்பி அவற்றை விளங்கச்செய்யுமென்று கூறினுமாம். 'மணி' என்ற

விடத்து, உம்மை - செய்யுள்விகாரத்தால் தொக்கது. 'நாமகூடப் பெருந்திசை' என்பதற்கு - (மரச்செறிவால்) அச்சத்திற்கு இடமாய் மறைந்துகிடந்த பெரிய திசை யெனினுமாம்; இப்பொருளில், நாம - குறிப்புப்பெயரெச்சம்; இதில் (அச்சப்பொருளதாகிய) 'நாம்' என்னும் உரிச்சொல் - பகுதி. கூடம் என்ற சொல் முதலடியில் சிகரமென்ற பொருளிலும், மூன்றுமடியில் தொகுதியென்ற பொருளிலும் வந்தது. இச்செய்யுளில், ஒவ்வோரடியிலும் முதலெழுத்து மாத்திரம் வேறுபட்டிருக்க, இரண்டு முதலிய சில எழுத்துக்கள் ஒன்றிப் பொருள் வேறுபட்டு வந்தது - திரிபு என்னுஞ் சொல்லணியின்பாற் படும். பி - ம்:—[1] தா்மகூடத்திறை, தாமகூடத்தினை. [2] சங்கமாம் நாமகூடப். [3] நதியை. [4] நண்ணிய வாமகூடற்சுடர். [5] மதி. [6] குன்றம். (837)

12.—இதுமுதல் நான்குகவிகள் - ஏமகூடமலையின் வருணனை.

மாடுறு கிரிகளும் மரனு மற்றவும்
சூடுறு பொன்னெனப் பொலிந்து தோன்றுறப்
பாடுறு சுடரொளி பரப்பு கின்றது
[1] வீடுறு முலகினும் விளங்கு மெய்யது.

(இ - ள்.) (இந்த ஏமகூடமலையானது),—மாடு உறு கிரிகள் உம் - பக்கத்திலுள்ள மலைகளும், மரன் உம் - மரங்களும், மற்ற உம் - மற்றைப் பொருள்களும், சூடு உறு பொன் என பொலிந்து தோன்றுற - சுடுதல் பொருந்திய [புடம் வைத்த] பொன்போல விளங்கித் தோன்றும்படி, பாடு உறு சுடர் ஒளி பரப்புகின்றது - பெருமை பொருந்திய மிக்கஒளியை வீசுகின்றது: வீடு உறும் உலகின் உம் விளங்கும் மெய்யது - (இவ்வுலகத்தை) விடுதல்பொருந்திய [இவ்வுலகத்தைவிட்டு அடையக்கூடிய] சுவர்க்கலோகத்தைக் காட்டிலும் மிக்கு விளங்குந் தோற்றத்தையுடையது; (எ - று.)

தன்னிடத்திலன்றிப் பக்கங்களிலுள்ள பொருள்களையும் தனது ஒளிமிகுதியால் தன்னைப்போலவே பொன்னிறமாகச் செய்யவல்லது, ஏமகூடமலையென்க; மலைகளும் மரமும் பிறவும் தமது இயற்கைநிறம் மாறி அருகிலுள்ள ஏமகூடத்தின் நிறத்தை யடைந்தனவாகக்கூறியது - பிறிதின்குணம்பெறலணியின்பாற்படும். பொன்னுலக மென்று பெயர்கூறப்படுஞ் சுவர்க்கலோகத்திலுள்ள பொருள்கள் யாவும் பொன்மயமாக விளங்குமென்பது நூற்கொள்கை. ஏமகூடத்திலுள்ள பொருள்கள்யாவும் பொன்மயமாக விளங்குதலால், 'வீடுறுமுலகினும் விளங்கு மெய்யது' என்றார். சூடுறுபொன் - "சுடச் சுடரும் பொன்." பாடுறு - தன்னிடத்திற பொருந்திய எனினுமாம். பி-ம்:—[1] வீடெனு முலகுபோல். (838)

இச்செய்யுளுக்குப்பிறகு சில ஏட்டுப்பிரதிகளில்

"இந்நெடுங் கிரிகொலோ [1] வெதுகொ லோ்வென
அந்நெடு மேருவோ டயிர்க்க லாவது

தொன்னெடு நிலமெனு மங்கை சூடிய
பொன்னெடு முடியெனப் [2]பொலியும் பொற்பது''

என்று ஒருசெய்யுள் காணப்படுகின்றது. பி - ம்:—[1]அது. [2]பொலிந்த.

13. பறவையும் பல்வகை விலங்கும் பாடமைந்து
[1]உறைவன கனகநுண் [2]பூழி [3]யொட்டலால்
நிறைநெடு மேருவைச் சேர்ந்த [4]நீரவாய்ப்
பொறைநெடும் பொன்ளொளி [5]முழுதும் போர்ப்பது.

(இ - ள்.) (அம்மலையானது),—பாடு அமைந்து உறைவன - தன்னிடத்திற் பொருந்தி வாழ்வனவாகிய, பறவைஉம் - பட்சிகளும், பல்வகை விலங்குஉம் - பலவகைமிருகங்களும், கனகம் நுண் பூழி ஒட்டலால் - (அம்மலையிலிருப்பதுபற்றி அங்குள்ள) சிறிய பொறறூளிகள் (தம்மீது) ஒட்டிக்கொள்ளுதலினாலே, நிறை நெடு மேருவை சேர்ந்த நீர ஆய் - நிறைந்துவளர்ந்துள்ள பெரிய மேரு மலையைச் சேர்ந்த தன்மையன வென்னுமாறு, பொறை நெடும் பொன் ஒளி முழுதும் போர்ப்பது - பாரமாகிய மிக்க பொன்னி னொளியை எல்லாப்பொருள்களின்மீதும் போர்க்குந் தன்மையது; (எ - று.)

தன்மீதுவாழ்கின்ற பறவைகளும் விலங்குகளும் மேருவைச் சார்ந்த பொருள்கள்போலப் பொற்றூளிபடியப்பெற்று விளங்கும்படி அப்பொருள்களெல்லாவற்றையும் பொன்மயமாகச்செய்வது, ஏமகூடமலை யென்றவாறு. மேருமலை தன்னைச்சார்ந்த பொருள்களையெல்லாம் பொன்மயமாக்கு மென்பதை, ''இமயப் பொருப்பகஞ் சேர்ந்த பொல்லாக் கருங்காக்கையும் பொன்னிறமா யிருக்கும்'' என்பதனாலு முணர்க. பி - ம்:—[1]உறைவது. [2]தூளி. [3]போர்த்தலால், ஒற்றலான். [4]நீரதாய். [5]மிளிரும் பொற்பது. (839)

14. [1]பரவிய கனகநுண் பராகம் பாடுற
[2]எரிசுடர்ச் செய்மணி யீட்டத் தோடிழி
[3]அருவியு நதிகளு மலங்கு தீயிடை
உருகுபொன் பாய்வபோன் றொழுகு கின்றது.

(இ - ள்.) பரவிய கனகம் நுண் பராகம் - பரவியுள்ள பொன்னினது சிறுபொடிகள், பாடு உற - தம்மிடத்திற் பொருந்த, எரி சுடர் செம் மணி ஈட்டத்தோடு இழி - விளங்குகின்ற ஒளியையுடைய சிவந்தபதுமராகரத்தினங்களின் கூட்டத்தோடு இழிகின்ற, அருவிஉம் - நீரருவிகளும், நதிகளும்—, அலங்கு தீயிடை - எரிகின்ற நெருப்பினிடத்தில், உருகு-உருகிய, பொன்—, பாய்வ(து) போன்று - பாய்வதுபோலத் தோன்றுமாறு, ஒழுகுகின்றது - பெருகப்பெறுகின்றது, (அம்மலை); (எ - று.)

பொற்பொடிகள் பொருந்திச் செம்மணியின் நிறமமைந்து பெருகுகின்ற நீர்ப்பெருக்குகளுக்கு, நெருப்பிலுருக்கி ஓடவிட்ட பொன்னை உவமையாகக் குறித்தார்; தற்குறிப்பேற்றவுவமையணி,

இனி, பொற்பொடிகள் தம்மிடத்திலே பொருந்தச் செம்மணியின் கூட்டத்தின்மீது விழுந்து பெருகுகின்ற அருவிகளாலும் நதிகளாலும், தீயிடையிலே உருகிய பொன் பாய்வதுபோன்று தோன்றப் பெற்றது அம்மலையென்று உரைகூறினுமாம். செம்மணிகளில் பொன்மயமான அருவிகள் பாய்வது, தீயினிடையில் பொன் உருகிப் பெருகுவதுபோலு மென வருணித்தவாறு. ஈட்டத்தோடு - ஈட்டத்தினிடத்து. மலை ஒழுகுகின்றது என்றது - இடத்துநிகழ்பொருளின் தொழிலை இடத்தின்மேலேற்றிக்கூறிய உபசாரவழக்கு. பி - ம்:— [1]மருவிய..., பரவியபராக நுண்கனகம். [2]விரிசுடர்...ஈட்டத்தாடு வீழ்,...ஈட்டத்தோடுமிழ். [3]அருவியந்திரள்களும். (840)

15. விஞ்சையர் பாடலும் விசும்பின் வெள்வளைப்
பஞ்சின் மெல் [1]லடியினு ராடற் பாணியும்
குஞ்சர முழக்கமுங் குமுறு பேரியின்
மஞ்சின [2]முரற்றலும் [3]மயங்கு மாண்பது.

(இ - ள்.) விஞ்சையர் பாடல்உம் - (அங்குவந்துள்ள) வித்தியாதரர்களது பாட்டுக்களினொலியும், விசும்பின் வெள் வளை பஞ்சின் மெல் அடியினர் - தேவலோகத்திலிருந்து வந்தவரான வெள்ளிய வளையல்களைத் தரித்த பஞ்சுபோன்ற மெல்லிய பாதங்களை யுடையவராகிய தேவமாதரது, ஆடல் பாணிஉம் - ஆடலோடுகூடிய தாளங்களினொலியும், குஞ்சரம் முழக்கம்உம் - யானைகளின் பிளிறுதலும், குமுறு பேரியின் மஞ்சு இனம் முரற்றல் உம்-முழங்குகின்ற முரசவாத்தியம்போன்ற (அங்குவந்துதங்கும்) மேகக்கூட்டங்களின் இடியொலியும், மயங்கும் - ஒன்றுசேர்ந்துள்ள, மாண்பது - பெருமையையுடையது, (அம்மலை); (எ - று.)

குஞ்சரமுழக்கங் கூறியது - அங்குள்ள மற்றை விலங்கு பறவைகளின் முழக்கங்கட்கும் உபலட்சணம். பலவகையொலிகளும் நிரம்பப் பெற்றுள்ளது அம்மலை யென்க. பஞ்சின்மெல்லடி-செம்பஞ்சுக்குழம்பு ஊட்டிய மெல்லிய பாதமுமாம். வெள்வளை - சங்குவளை. ஆடற்பாணி-அபிநயஞ்செய்கையில் சதிமிதித்தற்குப் பொருந்துமாறு போடப்படுந் தாளம். பி - ம்:—[1]அடியவர் பாடற். [2]அரற்றலும். [3]மயங்கிமாய்வன, வயங்குமாண்பது. (841)

16.—வாநரர் அம்மலையை இராவணனிருக்கு மிடமென்று நினைத்து உவகையுஞ் சினமும் ஒருங்கே கொள்ளுதல்.

அனையது நோக்கின ராமி தாமயில்
[2]இனையவே யிராவண [3]னிருக்கும் வெற்பெனும்
நினைவின [4]ருவந்துயர்ந் தோங்கு நெஞ்சினர்
சினமிகக் கனற்பொறி [5]சிந்து செங்கணார்.

(இ - ள்.) (வானரர்),—அனையது நோக்கினர் - அவ்வேமகூடமலையைக் கண்டு, 'ஆம் இது - இங்குப்பொருந்தியுள்ள இம்மலை

யானது, அயில் வேல் இனைய இராவணன் இருக்கும் வெற்பு ஆம் - கூர்மையான வேலாயுதத்தையுடைய இப்படிப்பட்ட இராவணன் இருக்கின்ற மலையாகும்,' எனும் - என்று கருதுகின்ற, நினைவினர் - எண்ணமுடையவர்களும், உவந்து உயர்ந்து ஓங்கு நெஞ்சினர் - (அது பற்றி) மகிழ்ந்து மிகவும் பொங்குகின்ற மனமுடையவர்களும், சினம் மிக கனல் பொறி சிந்து செங் கணர் - கோபம் மிகுதலாற் கனற் பொறியைக் கக்குகின்ற செந்நிறமான கண்களையுடையவர்களுமானார்கள்; (எ - று.)

வானரர்கள், அம்மலையின் வளத்தைக் கண்டு இராவணனது இருப்பிடமாக இருக்கலா மென்று கருதி, 'விரைவிற் சீதாபிராட்டியைக் காணலாம்' என்பதனால் மனப்பூரிப்பையும், சீதையைக் கவர்ந்த கொடுந்தொழிலை யுடையனான இராவணனது தன்மையை நினைத்ததனால் தோன்றிய பெருஞ் சினத்தையும் ஒருங்கே கொண்டனரென்க: கோபத்தாற் கண்சிவத்தல், இயல்பு. பி - ம்:—[1] அமுதவாய்மயில், அமிர்தமாமயில், அமுதின் மாமயில், அமரரஞ்சுறும். [2] வினைவல, வினையன்வேல், வினையம் வல், இனையமுன். [3] இருந்த. [4] உவந்துவந்து, சிந்துஞ்செங் கணர். (842)

17.—வாநரர் சீதையைத்தேடுமாறு அம்மலையின்மீது ஏறுதல்.

[1] இம் மலை காணுது மேழை மானையச்
செம்மலை [2] நீக்குதுஞ் [3] சிந்தைத் தீதென
[4] விம்மலுற் றுவகையின் விளங்கு முள்ளத்தர்
அம்மலை யேறினா ரச்ச நீங்கினார்.

(இ - ள்.) 'இ மலை - இந்தமலையிலே, ஏழை மானை - பேதைமைக் குணமுடைய மான்போன்ற சீதையை, காணுதும் - காண்போம்; (அதனால்), அ செம்மலை - அந்த இராமபிரானது, சிந்தை தீது - மனத்தின் துன்பத்தை, நீக்குதும்-ஒழித்துவிடுவோம்,' என-என்று கருதி, (வானரர்கள்),—விம்மல் உற்று - பூரிப்புக் கொண்டு, உவகையின் விளங்கும்-மகிழ்ச்சியினால் விளங்குகின்ற, உள்ளத்தர்-மனத்தையுடையவர்களாகி, அச்சம் நீங்கினார் - பயம் அற்றவர்களாய் [சிறிதும் அச்சமில்லாமலே], அ மலை ஏறினார் - அம்மலையின்மீது ஏறினார்கள்; (எ - று.)

அம்மலையை இராவணனது இருப்பிடமெனக் கருதியதனால், வாநரர்கள் 'இம்மலை காணுதும் ஏழைமானை' என்றார்களெனக. அச்செம்மலைச் சிந்தைத்தீது நீக்குதும் - சீதையின் செய்தியைக் கண்டறிந்து இராமபிரானிடத்துச்சொல்லி அவனது மனத்துயரத்தை மாற்றுவோமென்றவாறு. இரண்டாமடிக்கு—இராவணனைக் கொன்றொழித்தலால் அவன்மனத்தீமையைப் போக்குவோம் என்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1] அம்மலைக்கணுகுது மேழையாளை. [2] தீர்க்குதும். [3] சிந்தைத்தீயன, சிந்தைத்தீவினை, சிந்தையாமென. [4] விம்மலுமுவகையும். (843)

18.—வாநரர் அங்குச் சீதையைத் தேடிக்காணுமை.

இரிந்தன கரிகளும் யாளி யீட்டமும்
விரிந்தகோ ளரிகளும் [1]வெருவி நீங்கின
திரிந்தன ரெங்கணுந் திருவைக் காண்கிலர்
[2]பிரிந்தனர் பிறிதெனப் பெயரும் பெற்றியார்.

(இ - ள்.) (அம்மலைமீது ஏறிய வானரர்களைக் கண்டு), கரிகள் உம் - யானைகளும், யாளி ஈட்டம் உம் - யாளிகளின் கூட்டமும், இரிந்தன - (அஞ்சி) விலகியோடின; விரிந்த கோள் அரிகள் உம்-(அம்மலை மீது) பரவியிருந்த கொல்லுந்தன்மையுள்ள சிங்கங்களும், வெருவி நீங்கின - அஞ்சி நிலைகெட்டுச்சென்றன; பெயரும் பெற்றியார் - இவ்வாறு செல்கின்ற தன்மையையுடைய அவ்வானரர்கள், எங்கண் உம் திரிந்தனர் - மலைமுழுவதிலும் தேடிப்பார்த்தவர்களாகி, திருவை காண்கிலர் - சீதாபிராட்டியைக் காணமாட்டாதவர்களாய், (அதனால்), பிறிது என - (இராவணனிருக்குமிடம் இதுவன்று) வேறு என்று நினைத்து, பிரிந்தனர் - அவ்விடம்விட்டு அப்பாற்செல்லுந் தன்மையுடையவரானார்கள்; (எ - று.)

சிங்கம் முதலிய கொடுவிலங்குகளும் கண்டு அஞ்சுமாறு வானரர்களின் வடிவத்தோற்றம் இருந்ததென்க. கோள் - உயிரைக் கொள்ளுதல்; வலியுமாம். ஈற்றடி - முற்றுமோனை. பிரிந்தனர் என்பதற்கு - (இதுதான் இராவணனிருக்குமிடமென்று முதலில் தாம் கொண்ட எண்ணத்தை) மாற்றினார்களெனினுமாம். பி - ம்:— [1]வெருவிநீங்கிட. [2]பிரிந்தனர்சிந்தனைபிரிக்கின்றுமென, பரிந்தன சிந்தனைபரிகின்றுமென, பிரிந்தனர்சிந்தனைபிறிதொன்றுமென. (844)

19—வானரர்கள் அம்மலையை விட்டு இறங்குதல்

ஐம்பதிற் றிரட்டிகா வதத்தி னலகன்று
உம்பரைத் தொடுவதொத் துயர்வி னோங்கிய
[1]செம்பொனற் கிரியையோர் பகலிற் றேடினார்
கொம்பினைக் கண்டிலர் குப்புற் றேகினார்.

(இ - ள்.) (வானரர்கள்),—ஐம்பதிற்று இரட்டி காவதத்தினால் அகன்று-நூறுகாததூரம் அகலமுடையதாய், உம்பரை தொடுவது ஒத்து உயர்வின் ஓங்கிய-மேலுலகத்தைத் தொடுவதுபோல மிகவும் உயர்ந்துள்ள, செம்பொன் நல் கிரியை-செம்பொன்மயமான அழகிய அந்த ஏமகூடபர்வதத்தில், ஓர் பகலில் தேடினார் - ஒருபகல் முழுவதும் தேடிப்பார்த்தும், கொம்பினை கண்டிலர் - பூங்கொம்புபோன்ற சீதையைக் காணாதவர்களாய் [சீதையைக் காணாமையால்], குப்புற்று ஏகினார் - (அம்மலையினின்று) இறங்கிச்செல்லலானார்கள், (எ - று.)

இச்செய்யுள், கீழ்ச்செய்யுளின் பின்னிரண்டடிகளினது அநுவாதம். குப்புறுதல் - கீழிறங்குதல். பி - ம்:—[1]பைம்பொனின்கிரியை.

20.—அங்கதன் முதலியோர் சீதையைத் தேடிவருமாறு தமதுசேனையைத் தனியே அனுப்புதல்.

வெள்ளமோ ரிரண்டென விரிந்த சேனையைத்
தெள்ளுநீ ருலகெலாந் [1]திரிந்து தேடிநீர்
எள்ளரு மகேந்திரத் தெம்மிற் கூடுமென்று
உள்ளினு [2]ருயர்நெடு மோங்கல் நீங்கினார்.

(இ - ள்.) (அங்கதன் முதலிய சேனாதிபதிகளாகிய வானரவீரர்கள்),—வெள்ளம் ஓர் இரண்டு என விரிந்த சேனையை - இரண்டு வெள்ளமென்று சொல்லுமாறு பரவிய தமது வானரசேனையை (நோக்கி), 'நீர் - நீங்கள், தெள்ளும் நீர் உலகு எலாம் திரிந்துதேடி - தெளிந்த நீர்நிறைந்த (தென்திசையிலுள்ள) பூமியிடம் முழுவதிலும் அலைந்து (சீதையைத்)தேடிப்பார்த்து,(பிறகு),எள் அரு மகேந்திரத்து - (தென்கடற்கரையிலுள்ள) குற்றமற்ற மகேந்திரபருவதத்தினிடத்தில், எம்மில் கூடும் - எம்மிடத்து வந்து சேருங்கள்', என்று உள்ளினார் - என்று நினைத்துக் கட்டளையிட்டவராகி, உயர் நெடுங் ஓங்கல் நீங்கினார் - உயர்ந்து நீண்ட அவ்வேமகூடத்தைப் பிரிந்து சென்றார்கள்; (எ - று.)

பிரிந்துசென்று தேடினால், குறித்த தவணைக்குள் தமக்கு நியமித்துள்ள திசைமுழுவதையும் நன்குதேடி முடிக்கலா மென்று கருதி, சேனைகளைத் தனியே பிரிந்துசென்று தேடிக் கடைசியாக மகேந்திரத்தில் வந்து சேருமாறு கட்டளையிட்டு, சேனாதிபதிகளாகிய அங்கதன் முதலியோர் தாம் தனியே சென்றன ரென்க.

பி - ம்:—[1]தெரிந்துதேடி, திரிந்துதேடும், தெரிந்துகூடினார். [2]உரைத்துமால்வரையை, உயர்நெடுவரையை, ஆணையினுளைய. (846)

21.—அநுமான் முதலியோர் ஓர்பாலைவனத்தை யடைதல்.

மாருதி முதலிய வயிரத் தோள்வயப்
[1]போர்கெழு வீரரே குழுமிப் போகின்றார்
நீரெனும் [2]பெயருமந் நெறியி னீங்கலாற்
சூரியன் வெருவுமோர் சுரத்தைத் [3]துன்னினார்.

(இ - ள்.) மாருதி முதலிய வயிரம் தோள் வயம் போர் கெழு வீரர் - அநுமான் முதலாகிய உறுதியான தோள்களையுடைய வெற்றியைத்தரும் போரில் உற்சாகங்கொண்ட வீரர்கள் மாத்திரம், குழுமி போகின்றார் - திரண்டுசெல்கின்றவர்களாய்,—அ நெறியில் - அந்தவழியிலே, நீர் எனும் பெயரும் நீங்கலால் - நீரென்ற பெயர் மாத்திரமும் இல்லையாதலினால், சூரியன் வெருவும் - வெவ்விய கதிர்களையுடைய சூரியனும்கண்டு அஞ்சுதற்குஉரிய, ஓர் சுரத்தை - ஒரு பாலைவனத்தை, துன்னினார் - சென்றுசேர்ந்தார்கள்; (எ - று.)

பூமியிலுள்ள நீரை வற்றச்செய்து அதற்கு வெம்மையையுண்டாக்கும்வெவ்வியகிரணங்களையுடையனாய்ப் பாலைநிலத்திற்கு உரிய

தெய்வமாகி வெப்பத்தையே இயற்கையாகவுடைய சூரியனும் கண்டு அஞ்சவேண்டியிருந்தது பாலைவனத்தின் கொடுமையென்க. 'நீரெனும் பெயரும்நீங்கலால்' உலகவழக்குநவிற்சியணி. நீர்சிறிதும் அங்கு இல்லை யென்றவாறு. கண்டுஎன்னும் பெயர்கொண்ட மகரிஷி இங்குஉறைகையில் அவருடைய பதினாறு வயதுள்ள புதல்வன் மரண மடைந்தனனாக, அதனால் மிகவும் வெகுளியை யடைந்த அம்முனிவர் இந்தவனத்தை மனிதர் வசித்தற்கு ஏற்றதல்லாததும் விலங்கு கள் பறவைகள் செடிகள் முதலியன அற்றதும் ஆகுமாறு சபித்தா ரென்றதை, முதனூலாலறியலாம். வயிரம் - உறுதிக்கு, இலக் கணை. 'வய' என்று எடுத்து - வலிமையென்று பொருள் கூறினு மாம். பி - ம்:—[1]போர்வலி. [2]பெயருமொன்றின்றி நீணெடும். [3]நண்ணினர். (847)

22.—பாலைவனத்தின் வருணனை.

புள்ளடை யா [1]விலங் கரிது [2]புல்லொடும்
[3]கள்ளுடை மரனில கல்லுந் தீந்துகும்
[4]உள்ளிடை யாவுநுண் பொடியொ டோடிய
வெள்ளிடை யல்லதொன் [5]றரிதவ் வெஞ்சுரம்.

(இ - ள்.) அ வெஞ்சுரம் - அந்தக் கொடிய பாலைவனத்தில்,— புள் அடையா - பறவைகள் வந்துதங்கமாட்டா; விலங்கு அரிது - ஒரு மிருகமும் (காண) அரியதாகும் [ஒருமிருகமும் காணக்கிடைக்கா தென்றபடி]; புல்லொடுஉம் கள் உடை மரன் இல - புற்களும் தேனை யுடைய மலர்மரங்களும் அடியோடு இல்லை; கல்உம் தீந்து உகும் - கற் களும் சாம்பராய்விடும்; உள் இடை யாவும் நுண்பொடியொடு ஓடிய வெள் இடை அல்லது - (தனது) உள்ளிடத்தில் (வெளியிடங்களி லிருந்துவருகின்ற) எல்லாப்பொருள்களும் சிறு தூளியாக மாறிப் பறக்கின்ற வெற்றிடமல்லது, ஒன்று அரிது - வேறொன்று (அங்குக் காணக்கிடைத்தல்) அரிதாகும்; (எ - று.)

அந்தப்பாலைவனத்தில் பறவைமுதலிய உயிர்ப்பிராணிகள் வரு வதுமில்லை; மரஞ்செடிகளும் முளைப்பதே யில்லை; கற்களுந் தீந்து போம்; குறிஞ்சி முதலிய வேற்று நிலங்களிலிருந்து எப்பொருள் வந் தாலும் அவையாவும் பொடியாய்ப் பறக்கின்ற வெப்பம்நிறைந்த வெற்றிடமாகவே யுள்ளது அப்பாலைவன மென்று அச்சுரத்தின் கொடுமை கூறியவாறு. கள்ளுடைமரன் - பூத்துள்ள மலர்களில் தேனைக் கொண்டுள்ள மரங்கள். உள்ளிடையாவும் நுண்பொடியொடு ஓடிய வெள்ளிடை - உள்ளிடத்திற்சேர்ந்த யாவும் சிறிய பொடியாந் தன்மையோடு ஓடுதற்குக்காரணமான வெற்றிடம். புள்ளடையா - (ஆகாயத்தின் மீதும்) புட்கள் அடையமாட்டா எனினுமாம். பி-ம்:— [1]விலங்கரிய. [2]பூவொடும். [3]கள்ளடையாநிலம்..., கள்ளிடையாவிலங் கல்லும் தீர்ந்துக, கள்ளுடை...கல்லுந்தீந்தக, கள்ளுடைமரமிகுகல் லும் தீந்துக. [4]உள்ளிடை யரவநுண்பொடியொடெட்டலின், உள்

ளிடையரவு...பொடியொடோடலின்,...நுண்பொடியினேடிடும். [5] இல்லைவெஞ்சுரம். (848)

23.—இதுவும், அடுத்தகவியும்–பாலைவனத்தின் கொடுமையை ஆற்ருது வாநரர் வருந்தியதைக் கூறும்.

நன்புல னடுக்குற வுணர்வு [1] நாமறப்
[2] பொன்பொலி யாக்கைகள் புழுங்கிப் [3] பொங்குவார்
[4] தென்புலந் தங்கெரி நரகிற் சிந்திய
[5] என்பில்பல் லுயிரென வெம்மை யெய்தினர்.

(இ - ள்.) (அங்குச்சென்ற வாநரவீரர்கள்)—நல்புலன் நடுக்குற - (தமது) நல்ல பஞ்சேந்திரியங்களும் நடுங்கவும், உணர்வு நாம் அற - அறிவு என்னும்பேரும் அடியோடு அழியவும், பொன் பொலி யாக்கைகள் புழுங்கி பொங்குவார் - பொன்போல விளங்குகின்ற (தமது) உடலங்கள் வேர்த்துத் தவிப்பவர்களாய்,—தென் புலம் தங்குஎரி நரகில்- தெற்குத்திசையிலிருக்கின்ற எரியுந்தன்மையுள்ள நரகத்தில், சிந்திய - வீழ்ந்து துடிக்கின்ற, என்பு இல் பல் உயிர் என - (எலும்பில்லாத உடம்பையுடைய) புழுமுதலிய பலவகைச் சீவராசிகளைப்போல, வெம்மை எய்தினர் - தாபத்தை யடைந்தார்கள்; (எ - று.)

அங்குச்சென்ற வானரர்கள் நிலத்தின் வெம்மையைப் பொறுக்க முடியாமல் புழுத்துடிப்பதுபோலத் துடித்தார்களென்பதாம். என்பு இல்லாத உயிர்கள் வெம்மையைத்தாங்கும் ஆற்றல் இலவாதலின், வானரர்கள் வெயிலில் துடிப்பதற்கு, என்பில் பல்லுயிரை உவமை கூறினர்: "என்பிலதனை வெயில்போலக் காயுமே" என்ருர் திருவள்ளுவரும். புலன் - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து விஷயங்கள்; இங்கு, இலக்கணையால், அவற்றிற்கு உரிய ஐம்பொறிகளைக் காட்டும். உணர்வுநாமம் அறுதல் - அறிவு சிறிதுமின்றி உடலம் பரவசமாதல். நாமற - நாமமற என்பதன் விகாரம். 'நாமுற' என்ற பாடம் அச்சமடைய வென்று பொருள்படும். நரகத்தைத் தென்திசையிலுள்ளதாகக் கூறுதல், மரபு. எரி நரகு - அக்கினியை யுடையனவான தப்தகும்பம், கும்பீபாகம் போல்வன; எரிகின்ற நரகம் எனினுமாம். "எரிவாய்நிரயம்" என்றது நாலடி. நரகு = நரகம்.
பி - ம்:—[1] நாவுற, நாப்புற, நைந்தற. [2] புன்புலவாக்கைகள், புன்புற யாக்கைகள். [3] ஏங்குவார். [4] தென்புலத்தவனெரி, தென்புலத்தங்கெரி, தென்புலத்தினிலெரி. [5] என்பிலாவுயிரென..., என்பிலபல்லுயிரென்ன வுன்னினர். (849)

24. நீட்டிய நாவினர் நிலத்திற் [1] றீண்டுதோறு
[2] ஊட்டிய வெம்மையா [3] லுலையுங் காலினர்
காட்டினுங் [4] காய்ந்துதங் காயந் [5] தீதலாற்
சூட்டகன் மேலெழு பொரியிற் [6] றுள்ளினர்.

(இ - ள்.) (பின்னும் அவ்வானரர்கள்),—நீட்டிய நாவினர் - (நீர் வேட்கையால்) வெளியில் நீட்டிய நாக்கையுடையவர்களும்,— நிலத்தில் தீண்டுதோறு ஊட்டிய வெம்மையால் உலேயும் காலினர் - நிலத்தில் அடிவைக்குந்தோறும் கீழிருந்து உறைத்தவெப்பத்தினல் கொப்புளித்த பாதங்களையுடையவர்களுமாகி, — காட்டின் உம் காய்ந்து தம் காயம் தீதலால் - அப்பாலைவனத்தைப் பார்க்கிலும் மிகுதியாக வெப்பமடைந்து தங்களுடம்பு தீந்துவிட்டதனல், சூட்ட கல் மேல் எழு பொரியின் - சூடுகொண்ட கல்லிலிருந்து மேலெழுகின்ற நெற்பொரிபோல, துள்ளினர் - துடிப்பவரானார்கள்; (எ - று.)

மிக்க நீர்வேட்கையால் நாவை வெளியே நீட்டுதலும், பொறுக்க முடியாத மிக்கவெப்பத்தினல் கால்கொப்புளித்தலும் - இயல்பு. மிகவுஞ் சுகுமாரமான மேனியையுடையராதலின், இயற்கையில் மிக்க வெப்பங்கொண்ட பாலைவனத்தின்மீது அவ்வானர வீரர் நடந்து செல்லும்போது அவர்களுடைய உடம்பு அக்காட்டினுங் காய்ந்து விட்டதென்பது, மூன்றாமடியின் பொருள். நெருப்பினல்வெம்மையடைந்த கல்லில் நெல் பொரிந்து மேலெழுவது போல, வானர வீரர்கள் பாலைவனத்தின் மிக்க வெம்மையால் துள்ளித்துடிக்கலானார்களென்பது, பின்னிரண்டடிகளின் கருத்து; உவமையணி. சூட்ட - சூடுஎன்ற பெயரினடியாப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம். சூடு அகல் என்றுபிரித்து - சூட்டையடைந்த சட்டியெனினுமாம். இரண்டு செய்யுள்களால், அப்போதைய வானரரின் நிலைமையைக் கம்பர் சித்திரித்துக் காட்டியமை இன்புறற்பாலது! பி - ம்:— [1] தீண்டிமே, தூண்டுதோறு [2] ஒட்டிடமொன்றிலா, ஊட்டியவெம்மையர். [3] உலையுங்காலரக். [4] காய்ந்ததங்காயம், காய்ந்தவக்காயம், காய்ந்தங்கால்கள். [5] தீந்தற, காய்தலால், கன்றலால். [6] துள்ளுவார். (850)

25.—மிகவும் வருந்திய வாநரர் பிலவழியில் சேர்தல்.

[1] ஒதுங்கலா நிழலிணைக் காண்கி லாதுயிர்
[2] பிதுங்கலா முடலினர் முடிவில்[3] பீழையார்
பதங்களுப்[4] பருகிடப் பதைக்கின் றார்பல
[5] விதங்களா[6] னெடும்பில வழியின் மேவினார்.

(இ - ள்.) (வானரவீரர்),—ஒதுங்கல் ஆம் நிழலினை காண்கிலாது - (வெயிலுக்கு) ஒதுங்கக்கூடிய நிழலைக் காணப்பெறாமல், உயிர் பிதுங்கல் ஆம் உடலினர் - உயிர்வெளிப்படக்கூடிய [இறக்கும் நிலையிலிருக்கிற] உடம்பையுடையவர்களும், முடிவு இல் பீழையார் - எல்லையில்லாத துன்பத்தையடைந்தவர்களும், பதங்கள் தீ பருகிட பதைக்கின்றார் - பாதங்களில் (அந்நிலத்தின்) வெப்பந் தாங்குதலால் துடிக்கின்றவர்களுமாய், பல விதங்களால் - (அவ்வெப்பத்தினின்று தப்புதற்குப்) பலவகையினாற் பார்த்துக் கடைசியாக, நெடும் பிலம் வழியில் மேவினார் - பெரிய பிலத்துவாரத்தின்வழியை அடைந்தார்கள்; (எ - று.)

வானரவீரர்கள் அந்தப்பாலைவனத்தில் ஒதுங்கித் தப்புவதற்குச் சிறிதும் நிழலகப்படாமல் உயிர்போகும்நிலையை யடைந்து, இறுதியாக, அங்குப் புலப்பட்டதொரு பிலவழியைச் சேர்ந்தன ரென்பதாம். பீழை - பீடா; வடசொல். பல்விதங்களால் பதைக்கின்றார் என்று கூட்டி, பலவகையாக வருத்தமடைகின்றவர்களாய் எனினுமாம். பி - ம்:—[1]ஒதுங்கலாமுறையுறை, ஒதுங்கலாநிழலிறை. [2]பிதுங்கிடும். [3]பீடையார். [4]உருகிட. [5]விதங்கொளா. [6]நெடும்பிலவாயின், நெடுவெளிவானின், நெடுவெயில்வானின். 'விதங்களான் வெந்தனர் விண்ணினேறுங்கினர்' என்று சிலபிரதிகளில் நான்காமடி. (851)

26.—வாநரவீரர் அப்பிலத்தினுட் செல்லுதல்.

மீச்செல[1]வரிதினி விளியி னல்லது
[2]தீச்செல வொழியவுந் [3]தடுக்குந் திண்பில
வாய்ச்செலல் நன்றென மனத்தி னெண்ணினர்
போய்ச்[4]சில வறிதுமென்[5]றதனிற் போயினர்.

(இ - ள்.) 'இனி - இனிமேல், விளியின் அல்லது - இறத்தலல்லாமல், மீ செலவு அரிது - (சீதாபிராட்டியைத் தேடுமாறு பாலைவனத்தின் வழியாக) அப்பாற்செல்லுதல் (நமக்குக்) கூடாதகாரியமாகும்; (ஆகையால்), திண் பிலம் வாய் செலல் - வலியபிலத்தின் வழியிற் செல்லுதல், தீ செலவு ஒழியஉம் தடுக்கும் - வெப்பமான பாலைநிலத்திற் செல்லுதலையாவது தடுக்கும்; (ஆகவே), நன்று - (இங்குச்செல்லுதலே) நல்லது, என - என்று, மனத்தின் எண்ணினர் - மனத்திற் கருதியவர்களாய்,—போய் சில அறிதும் என்று - (இப்பிலத்தினுட்) சென்று அங்குள்ள சிலஇடங்களில் ஆராய்வோமென்று சொல்லி, அதனில் போயினர் - அப்பிலத்திலுள்ளே போனார்கள்; (எ - று.)

இப்பாலைவனத்தில் இனி ஒருகணஞ் செல்லுதலும் உயிரழிவுக்கே காரணமாம்; ஆகவே, இங்குத்தோன்றுகின்ற பிலவழியிற் சென்றால், அது சீதையுள்ள இடமாக இல்லாதிருந்தாலுங்கூட நிலத்தின் வெம்மையையேனும் தணிக்கும்; ஆதலின், இப்போது இங்குச் செல்லுதலே நாம் செயற்பாலது; மேலும், இதற்குள்ளிருக்குஞ் சிலவிடங்களிலும் சீதையைத் தேடிப் பார்ப்போமென்று கருதி வானரவீரர்கள் அப்பிலத்தினுட் புகுந்தன ரென்பதாம். மீச் செலவு - (அப்பாலைவனத்தின்) மீது செல்லுதல் எனினுமாம். ஒழியவும், உம்மை - இழிவுசிறப்பு, ஒழிவென்னும் செயவெனெச்சம், தொழிற்பெயர்த்தன்மையையடைந்து தடுத்தல் தொழிற்குச் செயப்படுபொருளாய்நின்றது; "அறஞ்செயவிரும்பு" என்னுமிடத்தில் 'செய' என்பதுபோல. பி - ம்:—[1]அரிதுநாம். [2]தீச்செலாதொளியவும், தீச்செலவுரியவும். [3]அடுக்கும். [4]செலவறிதும். [5]அதனிற்புக்கனர், அரிதிற்புக்கனர். (852)

27.—வாநரவீரர் அங்கு இருள்செறிந்த குகையை யடைதல்.

அக்கணத் தப்பிலத்[1] தகணி யெய்தினர்
திக்கினொ[2]டுலகுறச்[3] செறிந்த [4]தேங்கிருள்
[5]எக்கிய கதிரவற் கஞ்சி யேமுறப்
புக்கது வனையதோர் புரைபுக் கெய்தினர்.

(இ - ள்.) (வாநரவீரர்கள்),—அ கணத்து - அப்பொழுது, அ பிலத்து அகணி எய்தினர் - அந்தப்பிலத்தினது உள்ளிடத்தை யடைந்தவர்களாய்,—திக்கினொடு உலகு உற செறிந்த தேங்கு இருள் - நான்கு திக்குகளிலும் இவ்வுலகத்திலும் மிகநெருங்கிய பேரிருள், எக்கிய கதிரவற்கு அஞ்சி - (வானத்தில்) ஏறிய சூரியனிடத்து அச்சங்கொண்டு, ஏமுற - புக்கது அனையது - (தான்) வாழ்ச்சிலை யடையுமாறு புகுந்துள்ளது போலத்தோன்றுவதாகிய, ஓர் புரை - ஒரு குகையில், புக்கு எய்தினர் - புகுந்து சென்றார்கள்; (எ - று.)

வானரவீரர் பிலத்தினுட் செல்லுகையில், அதனிடையிலே இருள் செறிந்ததொரு குகையில் நுழைந்து செல்லலாயின ரென்பதாம். அங்கு நிறைந்திருந்த இருளை, உலகமெங்கும் பரவியுள்ள இருள் தனக்குப் பகைவனான சூரியனுக்கு அஞ்சி அங்குப் பதுங்கியிருப்பதாகக் குறித்தது—தன்மைத்தற்குறிப்பேற்றவணியாம். "தூங்கிருள் வெய்யோற் கொதுங்கிப், புக்கிருந்தா லன்னபொழில்" என்ற நளவெண்பா இங்கு ஒப்புநோக்கத்தக்கது. எக்குதல் - திசைச்சொல்: (தெலுங்கில் வழங்குகின்றது.) இனி, எக்குதல் - பசியினால் வயிறுகுழைத்தல் எனக் கொண்டு சூரியன் தம்மையுண்ணுதற்கு அஞ்சி இருள் ஏமுறப்புக்கதையனைய புரை என்று உரைப்பாருமுளர். புரை - உள்ளறை. பி - ம்:—[1]அதனின். [2]உலகினில். [3]செறிந்து. [4]தீங்கிருள். [5]தொக்கதோர்கதிர்வரத்தஞ்சிச் சூழ்ச்சியில். (853)

28.—வாநரவீரர் அங்குத் திகைத்து வருந்துதல்.

எழுகிலர் காலெடுத்[1]தேகு மெண்ணிலர்
வழியுள தாமெனு[2]முணர்வு[3]மாறினர்
[4]இழுகிய நெய்யெனு மிருட்பி ழம்பினுள்
[5]முழுகிய மெய்யரா யுயிர்ப்பு[6]முட்டினர்.

(இ - ள்.) (அவர்கள்),—எழுகிலர் - (அப்பாற்செல்லும்படி) புறப்படாமலும்,—கால் எடுத்து ஏகும் எண் இலர் - அடியெடுத்துச் செல்லும் எண்ணமில்லாமலும்,—வழி உளது ஆம் எனும் உணர்வு மாறினர் - அப்பாற்செல்லுதற்குஉரியவழி உள்ளது என்னும் அறிவும் இல்லாமலும்,—இழுகிய நெய் எனும் இருள் பிழம்பினுள் - விழுதாகவுறைந்த நெய்போன்ற இருளின் தொகுதியில், முழுகிய - முழுகிப்போன, மெய்யர் ஆய் - உடம்பையுடையவர்களாய், (ஒருவர்க்கொருவர் இருப்பிடம் அறிந்துகொள்ளமுடியாமல்), உயிர்ப்பு

முட்டினர் - (அச்சத்தினாலும் வருத்தத்தினாலும்) பெருமூச்சுவிட்டார்கள்; (எ - று.)

அங்கு இருட்பிழம்பினுள் அகப்பட்டுக்கொண்டதனால் வானர வீரர், மேற்செய்தொழிலிற் சிறிதும் எண்ணமில்லாது ஒருவரையொருவர் முகங்காணமுடியாது திகைத்துப் பெருமூச்சுவிட்டனரென்பதாம். பி - ம்:—[1] ஏகவெண்ணிலர். [2] நினைவு. [3] மாற்றினர். [4] இழுகியதென்னிதிலிழிந்துவீழ்ந்துழி, இழுகியதெனவதிலிழிந்துவீழ்ந்துழி, இழுகியநெய்யெனவிருளினேக்கத்துள், ஒழுகுமதெனவுழந்திருளிலுள்ளத்தில், ஒழுகியதேயன்ன விருளினைதத்துள், ஒழுகியதெனவுழந்திருளினுள்ளத்தில். [5] முழுகியமெய்யினருரப்பி, முழுகியதேயெனவுரப்பி, முழுகியமெய்யெனவுயிர்ப்பு. [6] மூட்டினர். மற்றும் சிலபிரதிகளில் இரண்டு மூன்றும் அடிகள் மாறியுள்ளன. ()

29.—மற்றவாநரவீரர்கள் தம்மைக்காக்குமாறு அநுமானை வேண்டுதல்.

நின்றனர் செய்வதோர் நிலைமை [1] யோர்கலர்
[2] பொன்றின ராமெனப்[3] பொருமு புந்தியர்
வன்றிறன் மாருதி[4] வல்லை யோவெமை
இன்றிது காக்கவென் றிரந்து கூறினர்.

(இ - ள்.) (அநுமானல்லாத மற்றைவாநரவீரர்கள்)—, செய்வது ஓர் நிலைமை ஓர்கலா நின்றனர் - (தாம்) செய்யவேண்டியதொரு காரியத்தையும் உணரமாட்டாதவர்களாய்த் திகைத்து நின்றவர்களும், பொன்றினர் ஆம் என பொருமு புந்தியர் - இறக்கும் நிலையையடைந்தவர்போல வருந்துகின்ற மனத்தை யுடையவர்களுமாகி,—(அநுமானைநோக்கி),—'வல் திறல் மாருதி - மிக்கவலிமையையுடைய அநுமானே! இன்று - இப்போது, எமை இது காக்க வல்லை ஓ - எங்களை இத்துயரத்தினின்றுமீட்டுக் காப்பதற்கு வல்லமையுடையையோ?' என்று—, இரந்து கூறினர் - வேண்டிக்கொண்டார்கள்;

இருளின் தொகுதியில் அகப்பட்டுக்கொண்ட அவ்வானர வீரர் சாகும்நிலையையடைந்தவர்போல வருத்தமுற்று, அநுமனை விளித்து 'இன்று இந்தத்துயர்நிலையினின்று பாதுகாக்க வேணும்' என்று இரந்துகூறினரென்பதாம். வல்லையோ என்று வினாவாக இருப்பினும், நீ வல்லமையுடையை யாதலால் காக்கவேணுமென்று இரந்ததாகக் கருத்துக்கொள்க. மாருதி - அண்மைவிளி. புந்தி - எண்ணமென்ற பொருளில்வந்தது. பி - ம்:—[1] நோக்கிலர், நோக்கலர். [2] பொன்றினம் யாமென. [3] பொருமும். [4] வல்லைநீயெமை, வல்லையேலெமை. (855)

30.—அநுமான் தன்னைப் பின்பற்றிவருமாறு அவர்கட்குக் கட்டளையிட்டு, தான் கையினால் தடவிக்கொண்டு முன்னே செல்லுதல்.

உய்வுறுத் துவென்மன [1] முலையி ரூழின்வால்
மெய்யுறப்[2] பற்றுதிர் விடுகி லீரென

ஐயனக் [3]கணத்தினி லகலு நீணெறி
[4]கையினிற் றடவிவெங் [5]காலி னேகினன்.

(இ - ள்.) (அநுமான் மற்றையோரை நோக்கி), 'உய்வு உறுத்துவென் - (உங்களுக்குப்) பிழைப்பை யுண்டாக்குவேன்; மனம் உலையிர் - (நீங்கள்) மனம்வருந்தவேண்டா; ஊழின் - முறையாக [ஒருவர் பின் ஒருவராக நின்று], வால் - (எனது) வாலை, மெய் உற பற்றுதிர் - உறுதியாகப் பிடித்துக்கொள்ளுங்கள்; விடுகிலீர் - (அதனை) விடாதீர்கள்,' என - என்றுகட்டளையிட்டு, அ கணத்தினில் - (அவர்கள் தனது வாலை முறைமையாகப் பிடித்துக்கொண்ட) அப்பொழுதே, ஐயன் - சிறந்தவனாகிய அந்த அநுமான்,—அகலும் நீள் நெறி - (தான்) செல்லவேண்டிய அந்தக்குகையின் வழியில், கையினில் தடவி - கையினால் தடவிக்கொண்டு, வெம்காலின் ஏகினன் - வேகத்தையுடைய காலினால் நடந்து முன்னே சென்றான்; (எ - று.)

பேரிருட்பிழம்பில் திசைதெரியாதுதிகைத்துத் தம்மைக் காக்குமாறு வருந்திக்கூறிய வானரவீரர்கட்கு அநுமான் அபயமளித்துப் பேருருவங்கொண்டு தனது நீண்டவாலைப் பிடித்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டுக் கையினால் தடவிக்கொண்டு காலினால் முன்னே நடந்துசென்றனனென்க. அநுமான் பேருருவங் கொண்டமை, அடுத்தசெய்யுளில் விளங்கும். பேரிருளிற் செல்பவர் எதிரில் ஒன்றுமில்லையாவென்பதை யுணர்தற்பொருட்டுக் கையினால் துழாவிக் கொண்டு செல்லுதல், இயல்பு. காலினேகினன் - காற்றுப்போல விரைந்துசென்றானென்றும் பொருள்படும். மெய் என்ற சொல் - உறுதி யென்ற பொருளில் வந்தது. பி - ம்:—[1]உலையுமூழினேன், உலையலூழிலென். [2]பற்றுமின். [3]கணத்தினின்று. [4]கையுறத்தடவி. [5]கண்ணினேக்கினன், கனலினேக்கினன். (856)

31.—இதுவும் அநுமான் சென்றமையைக் கூறும்.

பன்னிரண் [1]டியோசனை [2]படர்ந்த மெய்யினன்
மின்னிரண் டனையகுண் டலங்கள் [3]வில்விடத்
துன்னிருள் [4]தொலைந்திடத் துரிதத் தேகினன்
பொன்னெடுங் [5]கிரிகள்போற் பொலிந்த தோளினன்.

(இ - ள்.) நெடும் பொன் கிரிகள் போல் பொலிந்த தோளினன் - நீண்ட பொன்மயமான மலைகள் [மேருமலையிரண்டு உண்டானால் அவை] போல விளங்குகின்ற தோள்களையுடையவனான அநுமான்,—பன்னிரண்டு யோசனை படர்ந்த மெய்யினன் - பன்னிரண்டு யோசனைதூரம் வளர்ந்த சரீரத்தை யுடையவனாய்,—மின் இரண்டு அனைய குண்டலங்கள் வில்இட - (தனது காதுகளிலணிந்துள்ள) இரண்டுமின்னற்கொடிபோன்ற குண்டலம்இரண்டு ஒளியை வீசுவதனால், துன் இருள் தொலைந்திட - நெருங்கிய இருள் விலகியொழிய, துரிதத்து ஏகினன் - விரைவாகச் சென்றான்; (எ-று.)

அநுமான் பெருவடிவமெடுத்துத் தனது குண்டலங்கள் விட்டுவிட்டு விளங்குவதனால் இடையிடையே இருள் இரிந்தோட, அக்குகையினுட்புறத்திற் சென்றன னென்பதாம். அநுமான்சென்ற வகையை வேறுவகையாக விவரித்துக் கூறிய தனால், இச்செய்யுள் கீழ்க்கவியோடு கூறியதுகூறலாகாது. அநுமான் தான் எண்ணியபடியெல்லாம் உருவமெடுக்கும் வல்லமையுடையா னென்ப தோர்க. அக்குகையினுட்புறத்தில் அரக்கரேனும் கொடுவிலங்குகளேனும் இருப்பின் தனது உருவத்தைக் கண்டே அச்சங்கொள்ளவேண்டுமென்று கருதி, அநுமான் பேருருவங்கொண்டன னென்னலாம். "காஞ்சநாத்ரி கமநீய விக்ரஹ: [மேருமலைபோல அழகிய சரீரமுடையான்]" என்ற துதிக்குப் பொருந்துதலால், நான்காமடியில் 'பொனநெடுங்கிரி யெனப் பொலிந்த மேனியான்' என்ற பாடம் ஏற்கும். பி - ம்:— [1]ஓசனை. [2]பரந்தமேனியான், பரந்தமெய்யினன். [3]வில்விட. [4]இடைக்கிடைதுற்ற, தொலைந்திடத்துருவி. [5]கிரியென, கிரிநிகர். (857)

32.—அநுமான் முதலிய வாநரவீரர் அங்கு நகரமொன்றைக் காணுதல்.

[1]கண்டனர் கடிநகர் [2]கமலத் தொண்கதிர்
மண்டல மறைந்துறைந் தணைய மாண்பது
விண்டல நாணுற விளங்கு கின்றது
[3]புண்டரி கத்தவள் வதனம் போன்றது.

(இ - ள்.) (வானரவீரர்), கடி நகர் கண்டனர் - (இப்பிலத்தினுட்புறத்தில்) சிறந்த நகரமொன்றைக் கண்டார்கள்; (அது) கமலத்து ஒள்கதிர் மண்டலம் மறைந்து உறைந்து அனைய மாண்பது - தாமரையை மலரச்செய்யும்ஒள்ளியகிரணங்களையுடைய சூரியமண்டலமானது அங்கு வந்து மறைந்து வசித்தாற்போன்ற பெருமையையுடையது; விண் தலம் நாண் உற விளங்குகின்றது - வானத்திலுள்ள சுவர்க்கலோகமும் வெள்கும்படி (அதனினுஞ் சிறப்பாக) ஒளிர்வது; புண்டரிகத்தவள் வதனம் போன்றது - செந்தாமரைமலரில் வாழ்பவளான இலக்குமியின் முகத்தை யொப்பது; (எ - று.)

பிலத்தினுளிருந்த அந்நகரமானது மிக்கவொளியுடைமையால் மறைந்துள்ளதொரு சூரியமண்டலத்தைப் போன்றும், செல்வச்சிறப்பினாலும் பொன்னிறமானபொருள்களை யுடைமையாலும் சுவர்க்கலோகமும் நாணுமாறு பொலிவுபெற்றும், மிக்க அழகுடைமையால் இலக்குமியின்முகத்தை நிகர்த்தும் தோன்றிற் றெனக. சூரியனைக் கண்ட மாத்திரத்தில் தாமரைமலர்தல் இயல்பாதலால், சூரியமண்டலத்தை 'கமலத்தொண்கதிர்மண்டலம்' என்றார். பி-ம்:— [1]கண்டனன். [2]கனகத்து, கானத்து, கருணை. [3]புண்டரிகத்தினள்.

33.—இதுமுதல் ஐந்துகவிகள் - அந்நகரின் வருணனை.

கற்பகக் [1]கானது கமலக் காடது
பொற்பெருங்[2]கோபுரப் புரிசை[3]புக்கது

[4]அற்புத மமரரு[5]மெய்த லாவது
[6]சிற்பியா மயன்மனம்[7]வருந்திச் செய்தது.

(இ - ள்.) (அந்நகரம்),—கற்பகம் கானது - கற்பகவிருட்சம் போன்ற (பொன்மயமான) மரங்களையுடையது; கமலம் காடது - தாமரைமலர்த்தொகுதியை (யுடைய நீர்நிலையை) யுடையது; பொன் பெருங் கோபுரம் புரிசை புக்கது - பொன்னிறமான பெரிய கோபுரங்களையுடைய மதில்கள் பொருந்தப்பெற்றது; அமரர்உம் அற்புதம் எய்தல் ஆவது - தேவர்களும் (கண்டு) வியப்படையக் கூடியது; சிற்பி ஆம் மயன் மனம் வருந்தி செய்தது - அசுரசிற்பியாகிய மயனென்பவன் (தனது) மனத்தினால் சிரமப்பட்டு நிருமித்தது; (எ - று.)

இந்நகரம் பொன்மயமான மரங்களை யுடையதென்பார் 'கற்பகக்கானது' என்றும், பொன்னுலகத்தில் வாழ்கின்ற தேவர்களும் கண்டு வியப்படையுமாறு தோற்றஞ் சிறந்துள்ள தென்பார் 'அற்புதமமரருமெய்தலாவது' என்றும், அசுரசிற்பியாகிய மயனால் நிருமிக்கப்பட்டதென்பார், 'சிற்பியா மயன்மனம் வருந்திச் செய்தது' என்றும்கூறினர். கான், காடு என்பன - தொகுதியென்னும் பொருளில் வந்தன. இச்செய்யுளில், புக்கதுவற்புதம்எனக் குற்றியலுகரம் கெடாமல் உடம்படுமெய் பெற்றது. பி - ம்:—[1]காவது. [2]கோபுரம்புரிசை. [3]பொற்பது, நீடியது. [4]அற்புதவமரரும், அற்புதத்தமரரும். [5]அறிதற்றேற்றது. [6]சிற்பமுமயனமனம், சிற்பியன்மயன்மனம், சிற்பநூன்மயன்மனம், சிற்பியாமயன்மகன். [7]வருந்தச். (859)

54. [1]இந்திர நகரமு[2]மிணையி லாதது
மந்திர [3]மணியினிற் பொன்னின் [4]மண்ணினில்
அந்தரத் [5]தெழுசுட [6]ரவையின் றுயினும்
உந்தரு மிருள்துரந் [7]தொளிர நிற்பது.

(இ - ள்.) (இன்னும் அக்கடிநகர்),— இந்திரன் நகரம்உம் இணை இலாதது - தேவேந்திரனுடைய நகரமாகிய அமராவதியும் (தனக்கு) ஒப்பாகப் பெறாதது; அந்தரத்து எழு சுடர் அவை மண்ணினில் இன்று ஆயினஉம் - ஆகாயத்தில் தோன்றுகின்ற சூரிய சந்திரர்களாகிய இருசுடர்களினொளியும் (அந்நகரத்துத்) தரையில் தோன்றுகின்றனவல்ல என்றாலும்,—மந்திரம் மணியினில் பொன்னின் - (அந்நகரத்து) மாளிகைகளின் இரத்தினங்களினாலும் பொன்னினாலும், உந்த அரும் இருள் துரந்து ஒளிர நிற்பது - நீக்குதற்கு அரிய பேரிருளையும் அடியோடு ஒழித்து விளங்குவது; (எ - று.)

ருக்ஷபிலமென்ற அந்தப்பிலத்தினுட்புறத்திலுள்ள அந்நகரம், சூரியசந்திரர்களினொளியைப் பெறுதற்கு இடமில்லையாயினும், தன்னிடத்து நிரம்பியுள்ளமாளிகைகளின் இரத்தினங்களினாலும் பொன்னினாலும் இருளையொழித்து விளங்குமென்பதாம். சுடரவை, அவை -

பகுதிப்பொருள்விகுதி. உந்து அரும் என்று பிரித்து, உந்து என்பதை - முதனிலைத் தொழிற்பெயரெனினுமாம். பி - ம்:—[1] இந்திரநகரினும். [2] நிகரிலாதன, நிகரிலாதன, எதிரிலாதது, எதிரிலாதன. [3] மணியினத். [4] மண்ணிய, மன்னியே. [5] இரு, அவிர், நிமிர், எழுஞ். [6] அமைவு, அங்கு. [7] ஒளிருகின்றது, ஒளிரநின்றது. (860)

35. புவிபுகழ் [1] சென்னிபே ரமலன் தோள்புகழ்
கவிகட மனையெனக் கனக ராசியும்
[2] சவியுடைத் தூசுமென் [3] சாந்து மாலையும்
[4] அவிரிழைக் குப்பையு மளவி லாதது.

(இ - ள்.) (மற்றும் அக்கடிநகர்)—புவி புகழ் சென்னி பேர் அமலன் தோள் புகழ் கவிகள் தம் மனை என - உலகத்தாராற் புகழப்படுகின்ற குலோத்துங்க சோழனாகிய பெருமைபெற்ற குற்றமற்ற அரசனது தோள்வலிமையைப் புகழ்ந்துபாடிய புலவர்களது வீடுகள்போல, கனகராசிஉம் - பொன்திரளும், சவி உடை தூசுஉம் - ஒளியையுடைய வஸ்திரங்களும் [பீதாம்பரங்களும்], மெல் சாந்துஉம் - மென்மையான கலவைச் சந்தனமும், மாலைஉம் - மலர்மாலைகளும், அவிர் இழை குப்பைஉம் - விளங்குகின்ற ஆபரணங்களின் குவியல்களும், அளவு இலாதது - அளவில்லாமல் நிறையப் பெற்றது; (எ - று.)

கம்பர் தமது செய்ந்நன்றியறிவினால் தம்மையாதரித்த குலோத்துங்க சோழராசனது பெருமையை, உபமானமுகத்தால் இச்செய்யுளிற் பாராட்டிக்கூறினரென்க. அவ்வரசன் தன்னை நாடி வந்து புகழ்ந்துபாடுகின்ற கவிசனங்களுக்கு உடனே பொற்றிரள் முதலியவற்றைக் கணக்கில்லாமற்கொடுக்கும் வண்மையுடையானென்பதை விளக்கினார். சென்னி - தலை; அரசர்களுள் தலைமைபெற்றவனாதலால், சோழராசனுக்கு இப்பெயர். மற்றும், 'சென்னி' என்பது சோழர்களுக்கே வழங்குவதன்றி, ஏனைச் சேர பாண்டியர்களைக் குறிக்காதுஎன உணர்க. ராசி = என்பதை 'ராஜி' எனின், வரிசை: 'ராசீ' எனின், குவியலாம். பி-ம்:—[1] சென்னிபேரபயன்—, சென்னியாதித்தன்..., சென்னிபோரமலன்..., சென்னியோர்ப்புகழும் பொற்புடை, சென்னியோனமலன்றோல்புகழ். [2] சவியுடைத்துகிலும், தவிசுடைத்தூசும். [3] சாந்துஞ்சுண்ணமும். [4] அவிர்மணிக்குப்பையும். (861)

36. பயில்குரற் கிண்கிணிப் [1] பதத்த பாவையர்
[2] இயல்புடை மைந்தர்க ளியக்கி லாமையால்
[3] துயிலவு நோக்கவுந் துணைய தன்றியும்
[4] உயிரிலா வோவிய மென்ன வொப்பது.

(இ - ள்.) (மற்றும் அக்கடிநகர்), பயில் குரல் கிண்கிணி பதத்த பாவையர் - ஒலிக்கின்ற ஓசையையுடைய சதங்கையையணிந்த கால்களோடு கூடியமகளிரும், இயல்பு உடை மைந்தர்கள் -

நல்லொழுக்கமுடைய ஆடவரும், (என்ற இவர்களுடைய), இயங்கு - சஞ்சாரம், இலாமையால் - இல்லாமையாலே,—துயிலஉம் நோக்கஉம் துணையது அன்றிஉம் - நித்திரைசெய்யவும் காணவும் வல்லமை யுடையதாகாமலும், உயிர் இலா - உயிரில்லாமலு மிருக்கின்ற, ஓவியம் என்ன - சித்திரத்தைப் போன்றதென்று சொல்வதற்கு, ஒப்பது - தகுதியாயிருக்கின்றது; (எ - று.)

மிகவும் வல்லமை பொருந்தியவனல் வரையப்பட்ட சித்திரம் மற்றெவ்வாற்றானும் குறைவின்றி யிருப்பினும் உணர்ச்சிக்குக் காரணமான உயிரில்லாமையாகிய ஒருகுறைவை யுடையதாவதுபோல பலவகைக் காட்சிகளும் நிரம்பப்பெற்ற இந்நகரம் வேறு வகையாற் குறைபாடொன்றும் இன்றியிருப்பினும் தன்காட்சிகளைக் கண்டு நுகரும் மகளிரையும் ஆடவரையும் பெற்றிலாமையாகிய ஒரு பெருங் குறைவைக் கொண்டுள்ளதென்றவாறு. பி - ம்:—[1]பரந்தபாவையர், பாதப்பாவையர், பாடற்பாவையர். [2]அயிலுடைமைந்த ரென்றவர், இயல்புடைமைந்தரென்றிவர்,.... மைந்தரென்றியக்கு. [3]துயில்வுறு நாட்டமுந்துடிப்பதொன்றிலா, துயில்வுறுநாகமுந்துணைப்பதன்றியும், துயில்வுறுநோக்கமுந் துணைப்பதன்றியும், துயிலவுநோக்கவுந்துணைய தன்றியும். [4]உயிரினல். (862)

37. [1]அமிழ்துற முயினியை யடுத்த வுண்டியும்
தமிழ்நிகர் நறவமுந் [2]தனித்தண் தேறலும்
இமிழ்கனிப் பிறக்கமும் பிறவு மின்னன
[3]கமழ்வுறத் [4]தோன்றிய கணக்கில் கொட்பது.

(இ - ள்.) (மேலும் அக்கடிநகர்),—அமிழ்து உறழ் அயினியை அடுத்த உண்டிஉம் - அமிருதத்தையொத்த சோறுமுதலிய உணவுப் பொருள்களும், தமிழ் நிகர் நறவம்உம் - தமிழ்மொழியையொத்த இனிய தேனும், தனி தண் தேறல்உம் - ஒப்பற்ற குளிர்ந்த மதுவும், இமிழ் கனி பிறக்கம்உம் - இனிய பழங்களின் திரளும், இன்னனபிற உம் - இவைபோல்வன மற்றை யுணவுப்பொருள்களும், கமழ்வுஉற தோன்றிய - நறுமணம் வீசுமாறு நிறைந்துள்ள, கணக்கு இல்கொட்பது - எல்லையில்லாத பெருமையுடையது; (எ - று.)

உண்ணுதற்கு இனிய பலவகைப்பண்டங்களும் நிறைந்துள்ளது அக்கடிநக ரென்க. அயினி - சோறு. கவி தமக்குஉள்ள பாஷாபிமானத்தால் நறவத்துக்குத் தமிழை உவமைகூறினர். பிறக்கம்-மலை: இலக்கணையால், பெருந்திரளை யுணர்த்திற்று. [1]அமிழ்துலையயினி என்றபாடத்திற்கு - அமிருதத்தையும் வருத்துகின்ற [அமுதத்தினும் இனிய] சோறு என்க. பி - ம்:—[1]அமிழ்துலைவாயின. [2]தணிதண், தெளிதண், தெளித்துண். [3]கமழ்வுறுத்தோங்கிய. [4]துவன்றிய, துன்னிய. சிலபிரதிகளில் 2 - 3ஆம் அடிகள் 'தமிழ்நிகர்நறவமுந்தயங்குந்தேனுடை, உமிழ்கனிப்புறவமுற்றெருளிரு மின்னன' என உள்ளன. (863)

வேறு.

38.—வாநரர்கள் அந்நகரத்தினுட் புகுதல்.

கன்னிநெடு மாநகர மன்னதெதிர் கண்டார்
[1] இந்நகர மாமிக லிராவணன தூரென்று
உன்னியுரை யாடின ருவந்தனர் வியந்தார்
பொன்னினெடு [2] வாயிலத னூ[3]டினிது புக்கார்.

(இ-ள்.) (அநுமான் முதலிய வானரவீரர்கள்),—அன்னது கன்னி நெடு மா நகரம் - அத்தன்மையதாகிய அழிவில்லாத மிகப்பெரிய பட்டணத்தை, எதிர் கண்டார் - நேரிற்கண்டவர்களாய்,—இ நகரம் இகல் இராவணனது ஊர் ஆம் என்று உன்னி உரை ஆடினர் - 'இந்நகரமானது பகைமையையுடைய இராவணனது நகரமாகும்' என்று நினைத்து(த் தமக்குள் ஒருவரோடொருவர்) பேசிக்கொண்டு, உவந்தனர் வியந்தார் - மகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும், ஒருங்கே கொண்டவர்களாய், பொன்னின் நெடு வாயில் அதனூடு இனிது புக்கார் - பொன்மயமான நீண்ட அந்நகரத்து வாயிலில் இனிதாக நுழைந்தார்கள்; (எ - று.)

அந்நகரத்தை வானரவீரர்கள் கண்டமாத்திரத்தில் இராவணனது இலங்கையென்று நினைத்து உடனே சீதையைக் காணலாமென்ற உவப்போடு உள்ளே புகுந்தன ரென்க. இனி, கன்னி நகரம்- சுயம்பிரபையின் நகரம் எனினுமாம். பி - ம்:—[1] இந்நகரமீதிகல். [2] வாசலதனூடு. [3] நணிபுக்கார். (864)

39.—வாநரவீரர்கள் அங்குத் தேடுதல்.

புக்க[1] நக ரத்தினிது நாடினர் புகுந்தார்
மக்கள்கடை தேவர்தலை [2] வானுலகின் வையத்து
ஒக்கவுறை வோ[3]ருருவ மோவிய மலான்மற்று
[4] எக்குறியி னுள்ளவு மெதிர்ந்திலர் திரிந்தார்.

(இ- ள்.) (வானரவீரர்கள்),—புக்க நகரத்து-(தாங்கள்) நுழைந்து சென்ற அந்தநகரத்தில், இனிது நாடினர் புகுந்தார் - நன்றாகத் தேடத் தொடங்கினவர்களாய்,—தேவர் தலை மக்கள் கடை வான் உலகின் வையத்து ஒக்க உறைவோர் உருவம் - தேவர்கள் முதலாக மனிதர்கள் ஈறாக வானுலகத்திலும் நிலவுலகத்திலும் பொருந்தி வாழ்கின்றவர்களின் உருவங்கள், ஓவியம் அலால் - சித்திர ரூபமாக அங்கு உள்ளனவல்லாமல், மற்று எ குறியின் உள்ளஉம் - வேறே உண்மையான வடிவமுடைய எப்பொருள்களையும், எதிர்ந்திலர்-நேரே காணப்பெறாதவர்களாய், திரிந்தார் - (அந்நகரமுழுதும்) திரிந்தார்கள்; (எ - று.)

தேவர் மனிதர் முதலியோரது உருவங்கள் சித்திரரூபமாகக் காணப்பட்டனவே யல்லாமல் மெய்ம்மையான வடிவத்தையுடைய ஒருபிராணியாவது அந்நகரத்துக்காணப்படவில்லை யென்றவாறு.

தேவர்களை முதலாகவும் மனிதர்களைக் கடையாகவும் கூறியதனால் அசுரர் அரக்கர் முதலியோரை இடைப்பட்டவராகக் கொள்க. மக்கள் தேவர் என்ற முறைக்கு ஏற்ப, 'வையம்' 'வானுலகு' என்று நிறுத்தாது மாற்றிநிறுத்தியது, எதிர்நிரனிறை யென்ற பொருள்கோளின்பாற்படும். குறி - குறிக்கப்படுவது; எனவே, பிராணியாம். பி - ம்:—[1]நகரத்து நனிநாடினர் அல்லது நகரத்தினிது நாடுதல் புரிந்தார். [2]வானுலகின்வாழ்வார். [3]உருவவோவியமெலாமுற்று, உருவவோவியமலான்மற்று. [4]அக்குறியினுள்ளவுமயர்ந்தனர் தெரிந்தார். (865)

40.—அந்நகரத்தின் தன்மை

வாவியுள பொய்கையுள [1]வாசமண நாறுங்
காவுமுள [2]காவிவிழி யார்மொழிக ளென்னக்
கூவுமிள மென்குயில்கள் பூவைகிளி கோலத்
தூவிமட [3]வன்னமுள தோகையர்க ளில்லை.

(இ - ள்.) (அந்நகரத்தில்),—வாவி உள - நடைவாவிகள் உள்ளன; பொய்கை உள - தடாகங்கள் உள்ளன; வாசம் மணம் நாறும் காவும் உள - மிக்கநறுமணம்வீசுகின்ற சோலைகளும் உள்ளன; காவி விழியார் மொழிகள் என்ன கூவும் - கருங்குவளை மலர் போன்ற கண்களையுடைய மகளிரது இன்சொற்கள்போலக் கூவுகின்ற, இள மெல் குயில்கள் - இளமையான மெல்லிய குயில்களும், பூவை - நாகணவாய்ப் பறவைகளும், கிளி - கிளிகளும், கோலம் தூவி மடம் அன்னம் - அழகிய இறகுகளையுடைய இளமையான அன்னப்பறவைகளும், உள - உள்ளன; தோகையர்கள் இல்லை - (இவற்றால் இன்பமடைதற்குஉரிய) மகளிர் மாத்திரம் (அங்கு) இல்லை; (எ - று.)

மகளிர் புனல்விளையாட்டிற்குரிய வாவியும், பொய்கையும், பூக்கொய்து விளையாடற்கு உரிய பூஞ்சோலைகளும், கொஞ்சிப்பழகியும் மென்னடை பயின்றும் போதுபோக்குதற்கு உரிய குயில் முதலிய பறவைகளும் அங்கு நிரம்பியிருப்பினும், இவற்றைக் கண்டு மகிழ்தற்குஉரிய மகளிர் மாத்திரம் காணப்பட்டிலரென்பதாம். 4-ஆம் அடியில் 'தூவிமடவன்னமுள தோகைசுவடில்லை' என்ற பாடத்திற்கு - அங்கு அன்னம் முதலிய எல்லாப்பொருள்களும் உள்ளன; (இவையன்றி), தாம் தேடப்புகுந்த மயில்போன்ற சாயலையுடைய சீதையின் வடிவம் அங்குக் காணப்படவில்லை யெனப் பொருள் காண்க. பி - ம்:—[1]வாசமலர். [2]ஆறுமுளகாவி விழியாரில், காவி விழியார்கண்மொழியென்ன, யாவுமுளகாவிவிழியாரில். [3]அன்னமிவையுள்ள சுவடில்லை. (866)

41.—இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்: அக்குகைக்குள் வானரர்கள் திகைத்ததைக் கூறும்.

ஆயநகரத்தினியல் புள்ளுற வறிந்தார்
மாயைகொ லெனக்கருதி மற்று [1]நினைவுற்றார்

[2] தீயபில னுட்பிறவி [3] சென்றவிது வொன்றோ
[4] தூயது துறக்கமென நெஞ்சுதுணி வுற்றார்.

(இ - ள்.) (வானரவீரர்கள்), ஆய நகரத்தின் இயல்பு உள் உற அறிந்தார் - அந்நகரத்தினது தன்மையை உட்புறத்துச் சென்று அறிந்தவர்களாய், மாயை கொல் என கருதி - மாயைத் தோற்றமோ என்று முதலில் நினைத்து, (பின்பு), தீய பிலனுள் பிறவி சென்ற (என)-('நமக்குக்) கொடிய பாதாளத்துப் பிறப்பு வந்தது' என்று, மற்று நினைவு உற்றார் - மற்றொரு நினைவுடையராய், (பின்னர்), 'இது ஒன்றோ - இங்ஙனங் கருதியது ஓர் கருத்தோ? தூயது துறக்கம் - இது பரிசுத்தமுடையதாகிய சுவர்க்கலோகமே,' என - என்று, நெஞ்சு துணிவுற்றார்-மனத்தில் நிச்சயித்துக் கொண்டார்கள்; (எ - று.)

பிராட்டியைத்தேடும் வானரவீரர்கள் பொன்மயமான தருக்கள் முதலியவற்றைப் பெற்றிருக்கின்ற அந்நகரத்திற் புகுந்து கண்ட போது, மண்ணுலகில் பொன்மயமான தருக்களும் சித்திரரூபங்களும் பலவகைப்பறவைகளும் பொன்னினாலும் இரத்தினங்களினாலும் இயன்ற மாளிகைகளும் நிரம்பியிருக்கவும் ஆடவர் மகளிர் மாத்திரம் காணப்படாதிருந்தமையால், முதலில் மாயையோ என்று திகைத்து, பிறகு சிறிதுதேறிப் பூமியினின்றும் இறங்கி வந்தது பற்றி 'இது பாதலமாயிருக்க வேண்டும்' என்று நினைத்து, அப்பால் பொன்மயமான தருக்கள் முதலியவற்றையுடைமையால் பாதாளமென்ற கருத்தை மறுத்து இது சுவர்க்கமென்றே மனந் துணிந்தனரென்பதாம். 'என' என்னும் வினையெச்சம், 'சென்ற' என்பதனோடு மீண்டும் கூட்டப்பட்டது. உற = உற்று. பி - ம்:—[1] நினைகின்றார். [2] தீயமுனுடற்பிறவி. [3] சென்றவிவையொன்றோ, சென்றதிதுவொன்றோ, சென்றதென நின்றார், சென்றவதுவன்றோ. [4] தூயன துறக்கம். (867)

42. [1] இறந்தில மிதற்குரிய தெண்ணியில மேதும்
[2] மறந்தில மயிர்ப்பினொ டிமைப்புள [3] மயக்கம்
[4] பிறந்தவர் செயற்குரிய செய்தல் பிழையின்றால்
[5] திறந்தெரிவ தென்னென விசைத்தனர் திகைத்தார்.

(இ - ள்.) '(இனி நாம் சுவர்க்கத்தை யடைந்துவிட்டோமென்போமாகில்),—இறந்திலம் - நாம் இறக்கவில்லையே; இதற்கு உரியது எண்ணி இலம் - இந்தச்சுவர்க்கலோகத்தை யடைதற்கு உரிய தொழில்வகையை ஆலோசித்துச்செய்யவும் இல்லையே; ஏதும் மறந்திலம் - (முன்நிகழ்ந்த) எதையும் மறந்தோமில்லையே; அயிர்ப்பினொடு இமைப்பு உள - சந்தேகமும் இமைகொட்டுதலும் (நமக்கு) உள்ளன; இன்று மயக்கம் பிறந்தவர் செயற்கு உரிய செய்தல் பிழை - இப்பொழுது மயக்கமடைந்தவர் செய்தற்கு உரிய தொழிலைச்செய்தலும் (நமக்குப்) பிழையாகும்; (இங்ஙனமா

யின்), திறம்தெரிவது என் - (இப்போது நமக்கு நேர்ந்துள்ள) தன்மையைப்பற்றி ஆலோசித்துத் தெளிவது எவ்வாறோ?' என - என்று, இசைத்தனர் - (வானரவீரர்கள் ஒருவரோடொருவர்) கூறியவர்களாய், திகைத்தார்-பிரமித்து நின்றார்கள்; (எ- று.)—இன்றால், ஆல் - ஈற்றசை.

கீழ்ச் சுவர்க்கமடைந்தவர்களாகத் தம்மைத் துணிந்த வானரவீரர்கள், முன்னைய உடலினோடு இருத்தலினாலும், தாம் சுவர்க்கத்தைப் பெறுதற்குஉரிய சாதனத்தைச் செய்யாமையாலும், சீதாபிராட்டியைத்தேடுதல் முதலிய முன்னைய எண்ணங்கள் தொடர்ச்சியாக உண்டாவதனாலும், தெளிவின்றியிருத்தலும் கண்ணிமைத்தலும் மதிமயக்கமும் தமக்கு நேர்ந்திருத்தலினாலும், தாம் சுவர்க்கத்தை யடையவில்லையெனத் துணிந்தனரென்பது, முன் மூன்றடிகளின் பொருள்: இவ்வாறான தன்மைகள் துறக்கமடைந்தவர்க்குத் தோன்றாவென்க. இவ்வாறு துறக்கமடையவில்லையெனத் துணிந்து தெளிந்து, வானரவீரர்கள் தமது முன்னைய மனநிலையில் மாறுபட்டம் பிறந்திருந்தமையால், 'திறம் தெரிவது என்?' என்பாராயினர். [3]'துறக்கம் பிறந்தவர் செயற்குரிய பீடுமில தென்னே' என்ற பாடத்துக்கு - சுவர்க்கமடைந்தவர்கள் செய்தற்கு உரிய பெருமையான செயலும் நம்மிடத்தி லில்லை; இது என்ன வியப்பு! என்று பொருளாம். இனி [1]இறந்திலம்...எது, அறிந்திலமயிர்ப்பிறெடிமைப்புளமயக்கம் என்ற பாடத்திற்கு—எதுவையறிந்திலம்: இமைப்பு அயிர்ப்புக்களுடனே, உளம் அயக்கம் பிறந்தவர் - உறுதியான மனத்தைப்பெறாதவர், செய்தற்குஉரியசெய்தல் பிழையாம் என்று உரைக்க. பி - ம்:—[2]மறந்திலமறப்பிறெடிமைப்பிலர் துறக்கம், அறிந்திலமயிர்ப்பிறெடிமைப்புள துறக்கம், மறந்திலமனத்துயரம் விட்டிலம்வருத்தம், துறந்திலம்வியர்ப்பிறெடிமைப்பில துறக்கம். [4]பிறந்தவர்செயற்குரியபெற்றியிலமென்னே, பிறந்தவர் செயற்குரிய செய்தல் பிழையென்றார், பிறந்தவர்செயற்குரிய செய்தல் பிழையொன்றோ. [5]திறந்திலமிதென்னெனவிசைத்தனர் திகைத்தார். (868)

43.—அப்போது சாம்பவான் கலங்கிக்கூறுதல்.

சாம்பனவ னொன்றுரை செய் வானெழு [1]சலத்தால்
காம்பனைய தோளியை [2]யொளித்த படுகள்வன்
[3]நாம்புக வமைத்தபொறி நன்று முடிவின்றால்
ஏம்பலினி மேலைவிதி யான்முடியு மென்றான்.

(இ - ள்.) (அப்போது வானரவீரர்களை நோக்கி), சாம்பன் அவன் - ஜாம்பவான், ஒன்று உரை செய்வான் - ஒன்று கூறத் தொடங்கினான்:—'எழு சலத்தால் - (தன்னிடத்து இயல்பாகத்) தோன்றியுள்ள வஞ்சனையினால், காம்பு அனைய தோளியை ஒளித்த - இளமூங்கிலையொத்த தோள்களையுடைய சீதாபிராட்டியைக் கவர்ந்து சென்று மறைத்துவைத்த, படு கள்வன் - பெருந்திருடனான இராவணன்,

நாம் புக அமைத்த - (அச்சீதையைத்தேடிவருகின்ற) நாம் அகப்பட்டுத் தவிக்குமாறு ஏற்படுத்திவைத்த, பொறி - யந்திரம், நன்று - நன்றாயிருக்கிறது! முடிவு இன்று - (இதற்கு) ஒரு முடிவு மில்லை; ஏம்பல் - (இதுவரையிலும் நமக்கு உண்டாயிருந்த) ஊக்கம், இனி மேலை விதியால் முடியும் - இனிமேல் முன்னைத்தீவினையால் ஒழிந்துவிடும்,' என்றான் - என்று வருந்திக் கூறினான்; (எ - று.)

'சீதையைக் கவர்ந்துசென்ற இராவணன் அச்சீதையைத் தேடுபவர்கள் தன்னிடத்து வராவண்ணம் இடைவழியிலே யகப்பட்டு வீழ்ந்தொழியும்படி வஞ்சனையாற் செய்த படுகுழியாகும் இது; நாம் இதிலே அகப்பட்டுக் கொண்டபடியால், இனி இதில் அழிந்தொழிவதே நமது விதி'என்று சாம்பவான் மனம்நொந்து கூறினனென்க. சலம் - சலம்: வடசொல்; வஞ்சனை யென்று பொருள். எழுசலத்தால் உரைசெய்வான் என்று இயைத்து - (தமது பகைவனாகிய இராவணனை நினைத்தலினால்) மூண்டெழுகின்ற கோபத்தோடு சொல்லத் தொடங்கினா னென றுமாம். படுகள்வன்—'படு' - மிக்க கொடுமையையுணர்த்துவதோர் தமிழுபசருக்கம்; 'படுபாழ்', 'படுபாவி' , என்னுமிடங்களிலும் இது காண்க. பொறி நன்று - பிறகுறிப்பு. 'முடிவின்று' என்பது இதனிலிருந்து நாம் தப்ப வழியில்லை யென்ற குறிப்பு. மேலைவிதி - முற்பவத்திற் செய்த வினை. பி - ம்:—[1] தவத்தால். [2] எடுத்த. [3] நாம் புகுதவைத்த பிலம். (869)

44.—அநுமான் சாம்பவானைத் தேற்றுதல்.

இன்றுபில [1]னீதிடையி னேறரி தெனிற்பார்
தின்று[2] சக ரர்க்கதிக மாகிநனி சேறும்
அன்றதெனின் வஞ்சனை யரக்கரை யடங்கக்
கொன்றெழுது மஞ்சலென மாருதி கொதித்தான்.

(இ - ள்.) (அந்தச் சாம்பவானை நோக்கி), மாருதி - அநுமான், —'இன்று - இப்பொழுது, இடையின் - இடைவழியிலுள்ள, பிலன் ஈது - இந்தப்பிலத்தினின்று, ஏறு அரிது எனின்-ஏறி அப்பாற் செல்லுதல் முடியாதென்றால்,—சகரர்க்கு அதிகம் ஆகி பார் தின்று நனி சேறும் - சகரபுத்திரரைப் பார்க்கிலும் மிக்க வல்லமையையுடையவர்களாகிப் பூமியைக் குடைந்துகொண்டு (நாம் மேற்புறமாகஏறி) அப்பாற் சுகமாகச் சென்றுவிடுவோம்; அது அன்று எனின் - அவ்வாறில்லை யென்றால், வஞ்சனை அரக்கரை அடங்க கொன்று எழுதும் - இவ்வாறு வஞ்சனை செய்த இராக்கதர்களை யெல்லாம் கொன்று மேலெழுந்து செல்வோம்; அஞ்சல் - சிறிதும் அஞ்ச வேண்டா' என - என்று, கொதித்தான - கோபங்கொண்டு கூறினான்; (எ - று.)

'சகரபுத்திரர்களைப்போலப் பூமியைத்தோண்டியாவது அரக்கர்களை யெல்லாம் அடியோடு அழித்து மேலெழுந்தாவது வெளிச்

செல்வோம்: அஞ்சவேண்டா' என அநுமான் மனங்கலங்கிய சாம்பவானைத்தேற்றினனென்க. மண்ணைத்தோண்டிப் பாதாளத்திற் சென்றவரினும் மேற்சென்றவர் சிறந்தவராதலால், 'பார்தின்று சகரர்க்கதிகமாகி' எனப்பட்டது. ["To ascend we must make an effort; to descend we have only to let ourselves go"—என்பது Fr. de Ravignan என்பவர் கூறிய பொன்மொழி. இதன்பொருள்:—மேலோட்டமாக நோக்குவார்க்கு, 'மேலேறுதற்கு முயற்சிவேண்டும்; ஆனால், கீழிறங்குதற்கு முயற்சியின்றி நம்மைத் தாழவிட்டுக்கொண்டாலே போதும்' என்பது. மனிதன் மேனிலைக்கு வந்து நல்லபேர் வாங்குதற்கு முயற்சிசெய்யவேண்டும்; ஆனால், கெட்டபேர் வாங்கிக் கீழ்நிலைபோவதற்குத் தன்னைக் கீழ்மையாக்கிக் கொண்டால்போதும்; தானே கீழாகிவிடுவான் என்பது இதன் கருத்து. ஈண்டு, முயற்சியோடு மேலேறவேண்டிய வானரர்க்கு, முயற்சி சிறிதே செய்து கீழ்ச்சென்ற சகரர் அதிகமிலர் என்ற கருத்துத்தோன்றுவது காண்க.] 'வினைச்சொல் வேண்டியபொருளை விளக்கும்' என்ற கொள்கையின்படி, தின்று என்பதற்கு - தோண்டியெனப் பொருள் கொள்ளப்பட்டது.

சகரபுத்திரர் பூமியைத் தோண்டிய வரலாறு:—சூரியகுலத்து உதித்த சகரமகாராசன் தனது அறுபதினாயிரம் புதல்வரது வலிமையைக் கண்டு 'அசுவமேதயாகஞ் செய்துமுடிக்கலாம்' என்று கருத்துக்கொண்டு அவ்வண்ணமே தொடங்கி, புவியை வலம் வருமாறு குதிரையைவிடுக்க, அவ்வேள்வியில் விடுத்த குதிரையைத் தேவேந்திரன் பாதாளத்தில் தவஞ்செய்திருந்த கபிலமுனிவரிருந்த இடத்தி லொளித்தனன்; குதிரை கெட்டமையைத் தனது பேரனை அம்சுமானால் உணர்ந்த சகரமகாராசன் தனது அறுபதினாயிரங் குமாரரையும் அக்குதிரையைத் தேடிக்கொணருமாறு ஏவ, அவர்கள் புவிமுற்றிலும தேடியும் காணாமையால் பூமியைத் தோண்டிக்கொண்டு பாதாளத்திற் சென்று கபில முனிவரிருந்த விடத்தில் அக்குதிரையைக்கண்டு அம்முனிவனே அதனை யொளித்தானென்று கொண்டு அம்முனிவனைச் சீறி வைது நெருக்கியதனால் அவனது கண்ணின் கோபத்தீக்கு இலக்காய்ச் சாம்பராயொழிந்தனர்: அச்செய்தியை யுணர்ந்த சகரமகாராசன் அம்சுமானால் அக்குதிரையைக் கொணரப்பெற்றுத் தான் தொடங்கிய வேள்வியை முடித்தனனென்பதாம். பி - ம்:—[1] ஈதினிடை. [2] சகராதியர்களாகி. (870)

45.—வானரவீரர்கள் சுயம்பிரபையைக் காணுதல்.

மற்றவரு மற்றது மனக்கொள [1]வலித்தார்
உற்றனர் புரத்திடையவ் வொண்சுடரி னுள்ளோர்
நற்றவ மனைத்துமுரு நண்ணியொளி பெற்ற
கற்றைவிரி பொற்சடையி னாளை யெதிர் கண்டார்.

(இ - ள்.) மற்றவர்உம் - (அங்கதன்முதலிய) மற்றை வானர வீரர்களும், அது மனம் கொள-(அநுமான்சொல்லிய) அவ்வார்த்தை (தமது) மனத்திற் பதியவே, வலித்தார் - (அவ்வாறே செய்ய) உறுதிகொண்டவர்களாய், புரத்து இடை உற்றனர் - (யாவரும் அந்தப்) பட்டணத்தினிடையே சென்று, அ ஒள் சுடரினுள் - மிக்க ஒளியையுடைய(அப்பட்டணத்தின்)நடுவிடத்தில், நல்தவம் அனைத்து உம் ஓர் உரு நண்ணி - சிறந்த தவம்முழுவதும் ஒரு பெண்ணுருவத்தைப் பெற்றாற்போன்று, ஒளிபெற்ற - ஒளிநிறைந்த, கற்றை விரி பொன் சடையினளை - தொகுதியாகவிரிந்த அழகிய ஜடையை யுடையவளான சுயம்பிரபையை, எதிர்கண்டார் - கண்ணெதிராகப் பார்த்தார்கள்; (எ - று.)

அந்தப்பட்டணத்தினிடையில் தவமே ஒருருவெடுத்துவந்தாற் போன்ற சுயம்பிரபையை வானரவீரர்கள் கண்டன ரென்பதாம். பொற்சடையினளை என்பதற்கு - பொன்னிறமான ஜடையையுடைய வளை யெனினுமாம். சுயம்பிரபையின் வரலாறு மேலே கூறப்படும். மற்று-அசை. பி-ம்:—[1] அறிந்தார். 'இற்றது செயற்குரிய தென்றுட னெழுந்தார் அல்லது இயைந்தார்' என்பது இரண்டாமடியும், 'உற்றனர் புரத்தினிடையொண்சுடரினுள்ளோர்' என்பது மூன்றும் அடியுமாகச் சிலபிரதிகளில் காணப்படுகின்றன. (871)

46.—இதுமுதல் நான்குகவிகள்—சுயம்பிரபையின் தன்மை கூறுவன.

மருங்கலச வற்கலை [1]விரிந்து வரிவாளம்
பொருங்கலச மொக்குமுலை மாசுபுடை பூசிப்
பெருங்கலை மதித்திரு [2]முகத்தள்பிறழ் செங்கேழ்
கருங் [3]கயல் களிற்பிறழ்கண் மூக்கினுதி காண.

இதுமுதல் ஐந்துகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) பெருங் கலை மதி திரு முகத்தள் - பெருமைபெற்ற பதினாறுகலைகளும்நிரம்பிய பூர்ணசந்திரனை யொத்த அழகிய முகத்தை யுடையவளாகிய சுயம்பிரபை,—மருங்கு அலச வற்கலை விரிந்து-இடையிலே அலையுமாறு மரவுரியைத் தரித்தும், வரி வாளம் பொரும் கலசம் ஒக்கும் முலை புடை மாசு பூசி - இரேகைகளையுடைய சக்கரவாகப் பறவையைப் போன்றனவும் பொற்கலசங்களைப் போன்றனவுமாகிய தனங்களின்மேல் மாசுபடியப்பெற்றும்,—பிறழ் செங் கேழ் கருங் கயல்களின் பிறழ் கண் மூக்கின் நுதிகாண - விளங்குகின்ற செந்நிறத்தையுடையனவும் கருமையான கயல்மீன்களைப்போலப் பிறழ்வனவுமான (தனது) கண்களிரண்டும் மூக்கின் நுனியைக் கண்டுகொண்டிருக்கவும்,—(எ - று.)—இச்செய்யுளிலுள்ள 'விரிந்து,' 'பூசி, 'காண' என்னும் வினையெச்சங்கள், 50 - ஆங் கவியிலுள்ள 'இருந்தனள்' என்னும் வினைமுற்றைக்கொண்டு முடியும்.

சுயம்பிரபையானவள் மரவுரி தரித்து, நீராடுதலுமின்றித் தவத்திலேயே மனத்தைச் செலுத்தியிருந்தமையால் தனங்களில் மாசுபடியத் தனது கண்களின் பார்வையை மூக்கின்நுனியிற் செலுத்தியிருந்தனளென்பதாம். செபஞ்செய்கையில் கண் விழிகளைப் பிறவிடங்களிற் செலுத்தாது மூக்கின்நுனியிற் செலுத்த வேண்டுமென்பது, நூற்கொள்கை. வற்கலை=வல்கலா: வடசொல்: பூர்ஜமென்னும் மரத்தினின்று உரித்தெடுக்கப்படும் மெல்லிய பட்டையாகிய ஆடை: இது, தவவேடத்திற்கு உரியது. வாளம் - சக்கரவாளமென்னும் வடசொல்லின் நாமைகதேசே நாமக்ரஹணம். பி - ம்:—[1]வரிந்துமணிமான,...மணிவானம். [2]முகத்தபிறழ். [3]கயல்களிப்புறவு மூக்கிலுதிகண்ணுள், கயல்களிற்றிகழ் கண் மூக்கினுதிகாண. (872)

47. தேரணைய வல்குல்செறி திண்கதலி செப்பும்
[1]ஊருவினொ டொப்புற வொடுக்கியுற [2]வொல்கும்
நேரிடை[3] சலிப்பற நிறுத்திநிமிர் கொங்கைப்
பாரமு ளொடுக்குற வுயிர்ப்பிடை [5]பரிப்ப.

(இ - ள்.) தேர் அணைய அல்குல் - தேர்த்தட்டையொத்த அல்குலை, செறி திண் கதலி செப்பும் ஊருவினொடு - ஒன்றோடொன்று நெருங்கிய வலிய வாழைமரத்தைப்போன்ற தொடைகளோடு, ஒப்புற ஒடுக்கி ஒன்றாகப் பொருந்துமாறு அடக்கிவைத்தும், உயிர்ப்பு இடை பரிப்ப - சுவாசத்தைப் பந்தனஞ்செய்தலினாலே, உற ஒல்கும் நேர் இடை சலிப்பு அற நிறுத்தி - மிகவும் அசைகின்ற நுண்ணிய இடையைச் சிறிதும் அசையாதபடி நிறுத்தி, நிமிர் கொங்கை பாரம் உள் ஒடுக்கு உற - சாயாத தனபாரங்கள் உள்ளே யொடுங்கவும்,—(எ - று.)—இச்செய்யுளில் 'ஒடுக்கி' 'ஒடுக்குற' என்ற எச்சங்களும் - 50 - ஆஞ் செய்யுளிலுள்ள 'இருந்தனள்' என்பதனையே கொண்டு முடியும்.

உயிர்ப்பிடைபரித்தல், இடைசலிப்பறநிற்றற்கும் தனங்கள் ஒடுங்குதற்குங் காரணமாம். செப்பும் - உவமவுருபு. ஒடுக்குற-ஒடுங்குதலைப் பொருந்த. இடைபரித்தல் - உட்புறத்திலேயே தங்குதல்; பந்தனஞ்செய்தல். 'உயிர்ப்பிடைபரிப்ப' என்றதனால், இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்ற யோகத்தினுறுப்பு எட்டனுள், "உந்தியொடுபுணர்ந்த விருவகைவளியும், தந்தமியக்கந்தடுப்பது வளிநிலை" என்றுகூறப் பட்டுள்ள பிராணாயாமத்தைக் கூறினாரென அறிக. பி - ம்:—[1]ஊருவினொடுங்குற. [2]ஒல்கி. [3]சலிப்புற. [4]பாரமுந்நடுக்குற, பாரமுளொடுங்கிய. [5]பதைப்ப. (873)

48. தாமரை மலர்க்குவமை [1]சால்புறு தளிர்க்கை
பூமருவு பொற்சேறி [2]குறங்கிடை பொருந்தக்
காமமுத லுற்றபகை[3] கால்தளர வாசை
[4]நாமமறி யப் [5]புலனு நல்லறிவு புல்க.

(இ - ள்.) தாமரை மலர்க்கு உவமை - தாமரை மலருக்கு உவமையாகின்ற, சால்பு உறு - சிறப்புப்பொருந்திய, தளிர் கை - தளிர் போன்ற (தனது மெல்லிய) கைகள், பூ மருவு பொன் செறி குறங்கிடை பொருந்த - அழகு பொருந்திய பொன்னிறமாக நெருங்கிய தொடைகளினிடத்திற் பொருந்தவும்,—காமம் முதல் உற்றபகை கால்தளர - காமம்முதலாகப் பொருந்திய உட்பகைகள் அடியோடு ஒழியவும்,—ஆசை நாமம் மறிய - ஆசையென்னும் பெயரேயொழியவும்,—புலன்உம் நல் அறிவு புல்க - ஐம்பொறிகளும் (தீ வழியிற் செல்லாது) நல்லுணர்ச்சியைப் பொருந்தவும்,—(எ - று.)—"இருந்தனள்" (50) என்க.

சுயம்பிரபையானவள் தனது இருகைகளையும் இரண்டு தொடைகளின்மேல் வைத்துக்கொண்டு, உட்பகையை யொடுக்கிப் பற்றற்று மனத்தை யோகத்திற் செலுத்தியிருந்தனளென்க. காமமுதலுற்ற பகை - காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம்என்னும் அரிஷட்வர்க்கம்; இவை, உடலிலேயேயிருந்து உயிரை நல்வழியிற் செல்லவொட்டாது தடுத்துக் கொடுநரகிற் செலுத்துதலால், 'உட்பகை' எனப்படும். காமம் முதலுற்றபகை - காமம் வெகுளி மயக்கம் எனினுமாம். 'காமமுதலுற்றபகைகால் தளரவாசைநாமமறிய' என்பதனால் "பொய் கொலைகளவே காமம் பொருளாசை, யிவ்வகையைந்துமடக்கிய தியமம்" என்று கூறப்பட்டுள்ள இயமமும், 'புலனு நல்லறிவுபுல்க' என்பதனால் "பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமல், ஒருவழிப்படுப்பது தொகை நிலைப்புறனே" என்று கூறப்பட்டுள்ள பிரத்தியாகாரமும் உரைக்கப் பட்டுள்ளவாறு காண்க. முதலடி - எதிர்நிலையணி. பி - ம்:—[1]சால்வுறு. [2]குறங்கொடு. [3]காறளரவேதன், காறளரவோதி. [4]நாமமழிய. [5]புலனினல்லறிவுபுல்ல. (874)

49. நெறிந்துநிமிர் கற்றைநிறை [1]யோதிநெடு நீலம்
[2]செறிந்த[3]சடை யுற்றது [4]தலத்திநெறி செல்லப்
பறிந்துவினை பற்றற மனப்[5]பெரிய பாசம்
பிறிந்துபெய ரக்கருணை கண்வழி [6]பிறங்க.

(இ - ள்.) நெறிந்து - நெறிப்புக்கொண்டு, நிமிர் - நிமிர்ந்த, கற்றை - தொகுதியாக, நிறை - நிறைந்த, நெடு நீலம் ஓதி - நீண்ட கருநிறமாகிய (தனது) கூந்தலானது, செறிந்த சடை உற்றது - நெருங்கிய சடையாகப் பொருந்தியதாகி, தலத்தின் நெறி செல்ல - பூமியினிடத்திற் புரளவும்,—வினை பறிந்து பற்று அற - இருவினைகளும் (தன்னைவிட்டு) அடியோடு பெயர்ந்தொழியவும், மனம்பெரிய பாசம் பிறிந்து பெயர - (தனது) மனத்தி லுண்டாகக்கூடிய பெரிய பாசபந்தமானது விலகியொழியவும், கருணை கண்வழி பிறங்க - அருளானது கண்களிலுண்டாகி விளங்கவும்,—(எ - று.)—"இருந்தனள்" (50) என்க.

ஞானயோகத்தின்முன் இருவினைகளும் காட்டுத்தீமுன்னர்ப் பஞ்சுத்துய்போல ஒழியுமாதலால், 'வினைபறிந்து பற்றற' என்றார். பாசம் - சுற்றத்தார் முதலியவிடத்துக் கயிறுபோல மனப்

பிணிப்பை யுண்டாக்கும் பற்று: இது, பாசம்போலுதலால், பாச மெனப்பட்டது; உவமையாகுபெயர். பாசம் - கயிறு. அருளென்பது, கண்பார்வை சென்றவிடத்து உண்டாவ தாதலால், 'கருணை கண்வழி பிறங்க' என்றார்; இதுபற்றியே, தயை, கண்ணோட்ட மெனப்படுவது. யோகஞ்செய்வார்க்குப் பூததயை இன்றியமையாத குணங்களுளொன்றாத லறிக. பி - ம்:—[1]சோதி. [2]செறிந்து. [3]சடையுற்றன. [4]தவத்திநெறி, தனத்திநெறி. [5]பெரிய பாவம். [6]பிறக்க. (875)

50 —வாநரவீரர்கள் அவளைச் சீதைதானோ? என்று ஆராயுமாறு அநுமானிடங் கூறுதல்.

இருந்தன ளிருந்தவளை யெய்தின ரிறைஞ்சா
அருந்ததி யெனத்தகைய சீதை [1]யவ ளாகப்
பரிந்தனர் [2]பதைத்தனர் பணித்தகுறி பண்பில்
தெரிந்துணர்தி மற்றிவள்கொல் தேவியென லோடும்.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) இருந்தனள் - அவ்வாறு இருந்தாள்; இருந்தவளை - அங்ஙனம் வீற்றிருந்த சுயம்பிரபையை, ('மற்றைவானரவீரர்கள்'), எய்தினர் - கிட்டி, இறைஞ்சா - வணங்கி, அருந்ததி என தகைய சீதை அவள் ஆக பரிந்தனர் - அருந்ததியென்று சொல்லத் தகுந்த கற்புக் குணமுடைய சீதையாகவே நினைத்து (அவளிடத்து) அன்புகொண்டவர்களாய், பதைத்தனர் - விரைவுகொண்டு, (அநுமானைநோக்கி), 'இவள் தேவி கொல் - இவள் சீதாபிராட்டிதானோ? பணித்த குறி பண்பில் தெரிந்து உணர்தி - [இராமபிரான்) கூறியுள்ள அடையாளங்களைக்கொண்டு முறைமையாக ஆராய்ந்து அறிந்துகூறுவாய்,' எனலோடும் - என்று வினவியவுடனே.—(எ - று.) 'மாருதி யுரைத்தான்' என அடுத்தகவியோடு தொடர்ந்து முடியும்.

வானரவீரர்கள் அந்தச் சுயம்பிரபையைச் சீதையாகவே கருதி உண்மையறிந்து கூறும்படி அநுமானை வினவின ரென்க. தவ வேடத்துடன் மிக்க கட்டழகையுமுடையளா யிருந்தமை பற்றி அச்சுயம்பிரபையைச் சீதையென்ற ஓர்கருத்துந்தோன்ற வானரவீரர் வணங்கினர். அருந்ததி - அருந்ததீ; வடசொல்: இவள் வசிஷ்ட முனிவரது மனைவி; கற்புடைமகளிர்க்கு உவமைகூறப் படுவள். சீதையவள், அவள் - பகுதிப்பொருள்விகுதி. இருந் தவளை எனப் பிரித்து - மிக்கதவத்தையுடையவளை யெனக் கூறுவாருமுளர். மற்று - அசை. பி - ம்:—[1]இவளாக. [2]புகழ்ந்தனர், பழிச்சினர். (876)

51.—அநுமானது மறுமொழி.

எக்குறியொ டெக்குண மெடுத்திவ [1]ணுரைக்கேன்
[2]இக்குறியு டைக்கொடி யிராமன்மனை யாளோ

[3] அக்குவட [4] முத்தமணி யாரமத னேர்நின்று
ஒக்குமெனி னொக்குமென மாருதி யுரைத்தான்.

(இ - ள்.) மாருதி - வாயுகுமாரனான அநுமான், —(அவ்வானர வீரர்களைநோக்கி), —'ஏ குறியொடு ஏ குணம் இவண் எடுத்து உரைக்கேன் - (சீதாபிராட்டிக்குஉரிய அடையாளங்களிலும் குணங்களிலும்) எந்த அடையாளந்தான் எந்தக்குணந்தான் இவளிடத்திலிருப்பதாக எடுத்துச்சொல்வேன்? [சீதாபிராட்டியின் குணங் குறிகளில் இவளிடத்தில் ஒன்றுமில்லை யென்றபடி]; இ குறி உடைகொடி இராமன் மனையாள்ஒ - இத்தன்மையையுடைய கொடிபோன்ற இவள் இராமபிரானது மனைவியாகிய சீதாபிராட்டியாவளோ? [ஆகமாட்டாள்]; அக்கு வடம் முத்தம் மணி ஆரம் அதன் நேர்நின்று ஒக்கும் எனின் - என்புமாலையானது (நவரத்தினங்களுளொன்றாகிய) முத்தினாலியன்ற ஹாரத்தோடு நேராக நின்று உவமையாகப்பொருந்துமாயின், ஒக்கும் - (இவளும் அச்சீதையை) ஒத்திருப்பாள்,' என - என்று, உரைத்தான்—: (எ - று.)

இராமபிரான் தன்னிடத்துக்கூறிய சீதையின் குணங்குறிகளொன்றும் இவளிடத்து இல்லை யாதலின், இவள் சீதையல்லளென அநுமான் துணிந்து கூறினனென்க. என்புமாலைக்கும் முத்துமாலைக்கும் எத்துணைவேறுபாடு உளதோ, அத்துணை வேறுபாடு இவட்கும் சீதைக்குமுண்டென்பது, பின்னிரண்டடிகளின் கருத்து. 'இவள் சீதையை யொவ்வாள்' என்ற பொருளை நிலைநாட்டுதற்காக, ஒன்றோடொன்றுஒவ்வாத அக்குவட முத்துவடங்களுக்கு ஒப்புமைநேர்படின் இவளும் சீதையையொப்பாளென்று குறித்தது - பொய்த்தற்குறிப்பணி: இது, வடமொழியில், மித்யாத்யவஸித்யலங்காரம் எனப்படும். கொடி - உவமையாகு பெயர். அக்குவடம்-சங்குமணியினாலாகிய ஹாரமுமாம். நவமணிகளுளொன்றாதலால், முத்தை 'மணி' என்றார்.
பி - ம:—[1] இசைக்கேன். [2] இக்குணமுடைக்கொடி. [3] அக்குமணி, அக்கின்மணி. [4] முத்தமணியாரமதினேர்வந்து. முத்துமணியார வடநேர்நின்று. (877)

52.—சுயம்பிரபை வாநரவீரர்களை யாரென்று வினவுதல்.

அன்னபொழு தின்கண வணங்குமறி வுற்றாள்
முன்னனையர் சேறன்முறை யன்றென முனிந்தாள்
துன்னரிய [1] பொன்னகரி யிற்றுறைய ரல்லீர்
என்னவர வியாவருரை செய்மென விசைத்தாள்.

(இ - ள்.) அன்ன பொழுதின்கண் - அந்தச் சமயத்தில், அ அணங்குஉம் - தெய்வமகளாகிய அந்தச்சுயம்பிரபையும், அறிவுற்றாள் - (யோகநிலைமையினின்றும் நீங்கி இவர்களைக்) கண்டவளாய், —முன் அனையர் சேறல் முறைஅன்று என முனிந்தாள் - தன்னெதிரிலே அவர்கள் வருதல் தகுதியன்றென்று கோபங்கொண்டு, —(அவர்களைநோக்கி), —'துன் அரிய பொன் நகரியில் துறையர் அல்லீர் - (நீங்கள் ஒருவராலும்) நெருங்கமுடியாத பொன்மயமான

இந்த நகரத்தில் வாழிடத்தைக் கொண்டவரல்லீர்; வரவு என்ன - (நீங்கள் இங்கு) வருவதற்குஉரிய காரணம் யாது? யாவர் - (நீவிர்) யாவர்? உரைசெய்ம் - கூறுங்கள்,' என இசைத்தாள் - என்று வினவினள்; (எ - று.)

தவஞ்செய்யும் பெண்ணாகிய தனது எதிரில் பல ஆடவர் வந்ததனால், சுயம்பிரபை முனிந்தனளென்க. அங்கு அவர்கள் வந்தமைக்கு வியப்புற்றதாகவும், அவர்களை மகிழ்ச்சிகொண்டு வரவேற்றதாகவுமே முதனூலா லேற்படுகிறது. மற்றும் அந்தச் சுயம்பிரபையை வயசு சென்றவளெனவும், சாந்தியென்ற பண்பே வடிவெடுத்தாற் போன்றவளெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்னம்முதலிய விலங்குகளன்றி வேறொரு பிராணியும் அந்நகரத்திலில்லை யாதலின், வானரவீரர்களை நோக்கி 'துன்னரிய பொன்னகரியிற்றுறையரல்லீர்' என்றனள். இனி, இதற்கு - தேவமாதர் வாசஞ்செய்தற்கு இடமான இந்நகரத்தில் தேவர்களினத்திற்சேராத நீவிர் எவ்வாறு வந்தீரென வினவியதாகவும் பொருள்கொள்ளலாம்.

அவணங்கு - அவ்வணங்கு என்பதன் தொகுத்தல். செய்ம் - செய்யுமென்னும் ஏவல்முற்றின் ஈற்றுயிர்மெய் சென்றது. பி - ம்:—[1]பொன்னகரியின்னுறைவிரல்லீர், பொன்னகரியிற்றுயரிலீரேல். 'முன்னையர்களல்லர்நெறி முந்தினர்களென்ன, இந்நகரமிவ்விடமுனெய்தினர்களல்லீர்' எனச் சிலபிரதிகளில் இரண்டு மூன்றுமடிகளும், மற்றும் சிலபிரதிகளில் 'முன்னனையர் சென்றமுறையென்னெனமுனிந்தாள், என்னரிய பொன்னகரிணித்துறையரல்லீர், என்னவர வியாவருரை செய்திரினியென்றாள்' என்று இரண்டாம் அடிமுதல் முற்றிலும் பாடம் காண்கின்றன. (878)

53.—அநுமான் கூறிய உத்தரம்.

வேதனைய ரக்கரொரு [1]மாயைவினை வித்தார்
சீதையை யொளித்தனர் [2]மறைத்தபுரை தேர்வுற்று
ஏதமி லறத்துறை நிறுத்திய விராமன்
தூதருல கிற்றிரிது மென்னுமுரை [3]சொன்னான்.

(இ - ள்.) வேதனை அரக்கர் - (உலகத்தார்க்கு) உபத்திரவகாரிகளாகிய இராக்கதர்கள், ஒரு மாயை வினைவித்தார் - ஒரு வஞ்சகத்தொழிலைச் செய்தவர்களாய், சீதையை ஒளித்தனர் - சீதையைக் கவர்ந்துசென்று மறைத்திட்டார்கள்; ஏதம் இல் அறம் துறை நிறுத்திய இராமன் தூதர் - குற்றமற்ற தருமமார்க்கத்தை நிலைநிறுத்திய இராமபிரானது தூதுவர்களாகிய நாங்கள், மறைத்த புரை தேர்வுற்று உலகில் திரிதும் - (அவ்வரக்கர்கள் சீதையை) ஒளித்துவைத்த மறைவிடங்களைத் தேடத்தொடங்கி உலகில் திரிகின்றோம், என்னும் - என்கிற, உரை - வார்த்தையை, சொன்னான் - (அநுமான் அவள் வினவிற்கு விடையாகக்) கூறினான்; (எ - று.)

திருமால் சாதுசனத்தைநலியும் கொடியவர்களைக் கடிந்து நல்லோர்களைப் பாதுகாத்து அறத்தைநிலைநாட்டுமாறு ஆதியஞ்சோதியுருவை அங்குப்போல் இங்குவைத்து இராமபிரானாகத் திருவவதரித்தமை, மூன்றாமடியிற் குறிக்கப்பட்டது. யாவருக்கும் பிரதிநிதியாக இருந்து அனுமான் சுயம்பிரபையினிடம் விடை கூறினனென்பது, முதனூலிலும் உள்ளது. தூதர் - தன்மையிற் படர்க்கைவந்த இடவழுவமைதி. பி - ம்:—[1]மாயைவிளைத்தார். [2]மறைத்தவுழை தேர்வுற்று. [3]சொன்னார். (879)

54.—அதுகேட்ட சுயம்பிரபையின் மகிழ்ச்சி.

என்றலு மிருந்தவ ளெழுந்தன ளிரங்கிக்
குன்றனைய [1]தாயதொரு பேருவகை கொண்டாள்
நன்றுவர வாகநட னம்[2]புரிவ லென்னா
நின்றனள் நெடுங்கணிணை நீர்கலுழி [3]கொள்ள.

(இ - ள்.) என்றலும் - என்று (அநுமான் மறுமொழி) கூறியவுடனே,—இருந்தவள் - வீற்றிருந்தவளாகிய அந்தச்சுயம்பிரபை, எழுந்தனள் - எழுந்துநின்று, இரங்கி - (அவ்விராமதூதரிடத்தில்) அன்புகொண்டு, குன்று அனையது ஆயது ஒரு பேர் உவகை கொண்டாள் - மலையை யொத்ததாகிய ஒரு பெருங்களிப்பையடைந்தவளாகி,—(வானரவீரர்களை நோக்கி), 'வரவு நன்று ஆக - உங்கள் வரவு நல்வரவு ஆகுக: நடனம் புரிவல் - ஆனந்தக்கூத்தாடுவேன்,' என்னா - என்றுசொல்லி, நெடுங் கண் இணை நீர் கலுழி கொள்ள - நீண்ட (தனது) இரண்டு கண்களினின்றும் உவகைக்கண்ணீர் ஆறாகப்பெருக, நின்றனள்—; (எ - று.)

இவ்வானரவீரர்களை இராமதூதரென்று அறிந்தவுடன் சுயம்பிரபை தனது சாபம் நீங்குங்காலம் நெருங்கியதென்ற காரணத்தால் அவர்கள்மீது அன்புபாராட்டி நல்வரவுவிசாரித்துக் கண்களில் ஆனந்தவருவி சொரிய மகிழ்ச்சியினால் நடனஞ்செய்யலாயினளென்க. சுயம்பிரபையின் சாபவரலாறு, மேலே கூறப்படும். இருந்தவள் எழுந்ததற்குக் காரணம், அவ்வானரவீரர்களிடத்து மரியாதைசெய்ய வேண்டியதனாலென்க. உவமை மிகுதியாகத் தோன்றியதென்றற்கு, குன்றை உவமைகூறினார். இருந் தவள் என்றும் பிரிக்கலாம். பி - ம்:—[1]ஆயவொரு. [2]புரிவன். [3]கொண்டாள். (880)

55.—சுயம்பிரபை இராமனைப்பற்றி வினவுதலும், அநுமானது விடையும்.

எவ்வுழையி ருந்தனனி ராமனென யாணர்ச்
செவ்வுழை நெடுங்கணவள் செப்பிடுத லோடும்
அவ்வுழை நிகழ்ந்ததனை யாதியினொ டந்தம்
[1]வெவ்விழைவில் சிந்தைநெடு மாருதி விரித்தான்.

(இ - ள்.) 'இராமன் எ உழை இருந்தனன் - இராமபிரான் எவ்விடத்திலுள்ளான்?' என - என்று, யாணர் செவ் உழை நெடுங்

கண் அவள் - புதுமையாகிய அழகிய மான்போன்ற நீண்டகண்களையுடைய அந்தச் சுயம்பிரபை, செப்பிடுதலோடும் - (அநுமானைநோக்கி) வினவியவுடனே,—வெம் விழைவு இல் சிந்தை நெடு மாருதி - கொடுமையாகிய ஆசையில்லாத மனத்தையுடைய பெருமைபெற்ற அனுமான், அ உழை நிகழ்ந்ததனை - அவ்விடத்து [இராமபிரானிடத்து] நடந்துள்ள வரலாற்றை, ஆதியினொடு அந்தம் விரித்தான் - ஆதியோடந்தமாக [முழுவதும்] விவரித்துக் கூறினன்; (எ - று.)

மருண்டநோக்க முடைமையால், மகளிர்கண்ணுக்கு மான் உவமைகூறப்படும். ஆசையென்பது நல்வழியிற்செல்லவொட்டாது மனத்தைத் தீவழியிற்புகுத்தலால், 'வெவ் விழைவு' எனப்பட்டது. அனுமான் நித்தியபிரமசாரியாகி அதற்கு ஏற்ற ஒழுக்கமுடையவனாதலால், 'வெவ்விழைவில்சிந்தை நெடுமாருதி' எனப்பட்டான். பி - ம்:—[1] வெவ்வினைகள்சிந்த. (881)

56.—சுயம்பிரபை வானரவீரர்களை உபசரித்தல்.

கேட்டவளு மென்னுடைய [1] கேடிறவ மின்னே
காட்டியது வீடெனா [2] விரும்பிநனி கானீர்
ஆட்டியமிழ் தன்னசுவை யின்னடிசி லன்போடு
ஊட்டிமன னுள் [3] குளிர வின்னுரை யுரைத்தாள்.

(இ - ள்.) கேட்டு - (அநுமான்கூறிய இராமபிரானது செய்தி முழுவதையும்) கேட்டு,—அவள்உம் - அந்தச்சுயம்பிரபையும், என்னுடைய கேடு இல் தவம் இன்னே வீடு காட்டியது - 'எனது கெடுதலில்லாத தவம் இப்பொழுதுதான் சாபவிமோசனத்தையுண்டாக்கிற்று,' என - என்றுசொல்லி, விரும்பி - (அவ்வானரவீரரிடத்து) அன்புகொண்டு, (அவர்களை), கான் நீர் நனி ஆட்டி - நறுமணமுள்ள நீரினால் நன்றாகநீராடச்செய்து, அமிழ்து அன்ன சுவை இன் அடிசில் - தேவாமிருதம்போன்ற சுவையையுடைய இனிய உணவை, அன்போடுஊட்டி - அன்போடுஉண்பித்து, மனன் உள் குளிர-(அவர்களது) மனம் உள்ளூரக் குளிரும்படி, இன் உரை உரைத்தாள் - இன்சொற்களைக் கூறினாள்; (எ - று.)

வீடு - மோட்சமுமாம். "உண்பொழுது நீராடியுண்டல்" என்பவாதலால், நீராட்டியமுதாட்டினாள். இனி, கால் நீர் ஆட்டி என்று பிரித்து - கால்கழுவ நீர்கொடுத்து எனப் பொருள் கூறினுமாம்; இது, பாத்ய மெனப்படும். இதனைக் கூறியது, அவள்செய்த மற்றை உபசாரங்கட்கெல்லாம் உபலட்சணம். கானநீர் - காட்டாற்றின்நீர் என்றுருமுளர். உணவிற்கு அறுசுவையொடு எழுசுவையென்னுமாறு அன்பு சிறத்தலால் 'அடிசில் அன்போடூட்டி' என்றார். பி-ம்:—[1] கேடிறவமன்றேகுட்டியது, கேடிறவுமன்றேகுட்டியது. [2] விரும்புநனிகானீர், விரும்பிகளிர்கானீர், விரும்பிநனிதூநீர். [3] குளிருமின்னுரையுரைக்கும், குளிரும்வாசகமுரைத்தாள். (882)

57.—அநுமான் சுயம்பிரபையின் வரலாற்றை வினவ, சுயம்பிரபை விடைகூறத் தொடங்குதல்.

மாருதியு மற்றவண் மலர்ச்சரண் வணங்கி
யாரிநக ருக்கிறைவர் [1]யாதுநி னியற்பேர்
பார்புகழ் தவத்தினை பணித்தருளு கென்முன்
சோர்குழலு [2]மற்றவனொ டுற்றபடி சொன்னாள்.

(இ - ள்.) மாருதிஉம் - அநுமானும், அவண் மலர் சரண் வணங்கி - அந்தச்சுயம்பிரபையினது தாமரைமலர்போன்ற பாதங்களைத்தொழுது, (அவளை நோக்கி), 'யார் இ நகருக்கு இறைவர் - எவர் இந்தநகரத்துக்குத் தலைவர்? நின் இயல் பேர் யாது - உனது இயற்கையானபெயர் யாது? பார் புகழ் தவத்தினை பணித்தருளுக - உலகத்தார் புகழ்தற்குக் காரணமான தவப்பெண்ணாகிய நீ (இவற்றைச்) சொல்வாயாக,' என்முன் - என்று வினவினன்; சோர் குழல்உம் - (சடைப்பட்டுச்) சோர்ந்த கூந்தலையுடையவளாகிய அந்தச்சுயம்பிரபையும், அவனொடு - அவ்வனுமானோடு, உற்றபடி சொன்னாள் - நடந்தபடியே சொல்வாளாயினாள்; (எ - று.)—அதனை, அடுத்த எட்டுக்கவிகளிற் காண்க. 'மற்று' இரண்டும் - அசைநிலைகள்.

பார்புகழ்தவத்தினை - விளியுமாம். சோர்குழல் - வினைத்தொகையன்மொழி. மற்றவனொடுற்றபடி - பிராசம். பி - ம்:—[1]யாவதுனியற்கை, யாவதுனியற்பேர். [2]மற்றையவண், மற்றைறவனை. (883)

58.—இதுமுதல் எட்டுக்கவிகள் - ஒருதொடர்: சுயம்பிரபை அனுமானுக்குக் கூறிய விடையைத் தெரிவிக்கும்.

நூன்முக [1]நுனித்த நெறி [2]நூறுவர நொய்தாய்
மேன்முக நிமிர்த்துவெயில் காலொடு விழுங்கா
[3]மான்முக முகத்தவன் மயன்செய்த தவத்தால்
நான்முக னளித்துளது மாநகர நல்லோய்.

(இ - ள்.) (சுயம்பிரபை கூறுவாள்:—),—நல்லோய் - நற்குணமுடையவனே! மான் முகம் முகத்தவன் மயன் - மானினது முகம்போன்ற முகத்தையுடையவனாகிய மயன், நூல்முகம் நுனித்த நெறி நூறு வர - யோகசாஸ்திரத்தில் நுட்பமாகக்கூறியுள்ள வழி பலவும் தன்னிடத்திற் பொருந்தும்படி [யோகசாஸ்திரத்திற்கூறிய முறைமைப்படியே], நொய்து ஆய்- எளிதாக, முகம்மேல் நிமிர்த்து-(தனது) முகத்தை மேலேநிமிர்த்து [அண்ணாந்து வானத்தை நோக்கியபடியே], வெயில் காலொடு விழுங்கா - வெயிலையும் காற்றையும் உணவாகக்கொண்டு, செய்த - கடுமையாகச்செய்த, தவத்தால் - தவத்தின் பயனாக, இ மா நகரம் - இந்தப் பெரியநகரமானது, நான்முகன் அளித்து உளது - நான்குமுகங்களையுடைய பிரமதேவனால் (அம்மயனுக்கு) அளிக்கப்பட்டுள்ளதாகும்; (எ - று.)

இங்ஙகரமானது மயனதுதவத்தைக்கண்டுமெச்சிய பிரமதேவனால் அருளோடு அவனுக்குக் கொடுக்கப்பட்டதாகு மென்றவாறு. நூன்முகநுனித்த நெறிநூறுவர - யோகநூலார்கூறிய விதி சிறிதும் வழுவாமலென்றபடி. மேன்முகநிமிர்ந்து - மேனோக்கியமுகமாய் வானத்தைநோக்கி. தவஞ்செய்பவர் படிப்படியாகக் காய்கனிகிழங்குகளையும் சருகுகளையும் நீரையும் வெயில் காற்றுக்களையும் உட்கொள்ளுதல், இயல்பு. மயன் - அசுரசிற்பி; இவன் மானினதுமுகம் போன்ற முகமுடையவனென்க. பி - ம்:—[1] நுனித்தமுறை. [2] நூறுவனநொய்தாய், நூறுவனனெய்தாய், நூறுமழைநொய்தாய். [3] மான்முகநலத்தவன். (884)

59. [1] அன்னதிது தானவ னரம்பையரு [2] ளாங்கோர்
நன்னுதலி னுண்முலை நயந்தன [3] ன நல்லாள்
என்னுயி ரனுளவளை [4] யானவ னிரப்பப்
பொன்னுலகி [5] னின்றியல் பிலத்திடை [6] புணர்த்தேன்.

(இ - ள்.) இது அன்னது - இந்நகரம் அவ்வாறாகத் தோன்றியதாகும்; தானவன்-அந்தமயனென்ற அசுரன், அரம்பையருள் ஓர் நல் நுதலினுள் முலை நயந்தனன் - தேவமாதர்களுள் அழகிய நெற்றியையுடைய ஒருத்தியினது போகத்தை விரும்பினான்; அ நல்லாள் என் உயிர் அனாள் - நல்ல அழகையுடைய அவள் எனது உயிர்போன்ற தோழியாவள்; அவன் இரப்ப - அவ்வசுரன் (என்னை) வேண்டிக் கொண்டதனால், யான்—, அவளை—, பொன்உலகினின்று - பொன்மயமான தேவலோகத்திலிருந்து, இயல் பிலத்திடை புணர்த்தேன் - பொருந்திய இந்த ருக்ஷபிலத்திற் கொண்டு சேர்த்தேன்; (எ - று.)

தானவன் - காசியபமுனிவரது மனைவியருள் தநுவென்பவளின் சந்ததியான். அநல்லாள் - தொகுத்தல். இக்கவிமுதல் மேல் 63 ஆங் கவிவரையில் அந்தாதித்தொடைகாண்க. (அந்தாதித்தொடையாவது - முன்னின்ற செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் அடுத்துவருஞ் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது.)

அசுரசிற்பியான மயனென்பவன் தனது தவமகிமையாற் பிரமதேவனிடத்தினின்று சுக்கிராசாரியரது பொருள் முழுவதையும் வரமாகப்பெற்றுப் பொன்மயமான வனத்தை நிருமித்தனனென்றும், பின்னர் அது அவனாற் காதலிக்கப்பட்ட ஹேமையென்னும் அப்ஸரஸ்ஸ்த்ரீக்கு உரியதாயிற் றென்றும் முதனூல் கூறுகின்றது, ஆகவே, தானவன் என்றது - மயனையும் நன்னுதலினுள் என்றது - ஹேமையென்பவளையும் குறிக்குமென்னலாம். பி - ம்:—[1] அன்னஇளர். [2] ஏமை. [3] அவள்ளல். [4] யாணிவண்விடுப்ப, யானவணிரப்ப. [5] நின்றுளிர், நின்றயல். [6] புணர்ந்தாள். "அன்ன இளர் தானவனரம்பையருளாங்கோர், நன்னுதலினுண் முலை புணர்ந்தனனவள்ளல், என்னுயிரனுளவளையாணிவண்விடுப்பப்,

பொன்னுலகினின்றியல் பிலத்திடைபுணர்ந்தான்'' என்று சில ஏட்டுப்பிரதிகள். (885)

60. [1]புணர்ந்தவளு மன்னவனு மன்றில்விழை போகத்து
உணர்ந்திலர் நெடும்பகலிம் [2]மாநக ருறைந்தார்
[3]கணங்குழையி னுளொ [4]டுயர் காதலொரு வாதுற்று
[5]இணங்கிவரு பாசமுடை யேனுட னிருந்தேன்.

(இ - ள்.) அவள்உம் அன்னவன்உம் - அத்தேவமாதும் அந்த மயனும், புணர்ந்து—, அன்றில்விழை போகத்து - அன்றிற் பறவை போல (ஒருவரை யொருவர் விட்டுப்பிரியாது) விரும்புஞ் சிற்றின்பத்தில், உணர்ந்திலர் - (வேறொன்றையும்) அறியாதவராய், நெடும் பகல் இ மா நகர் உறைந்தார் - பலகாலம் இந்தப் பெரியநகரத்தில் வசித்தார்கள்; கணம் குழையினுளொடு - திரண்ட காதணியை யணிந்த அவளோடு, உயர் காதல் ஒருவாது-சிறந்த அன்பு நீங்காது, உற்று இணங்கி வரு - நெருங்கிப்பழகிவருகின்ற, பாசம் உடையேன்- பாசமுடையவளாகிய யான், உடன் இருந்தேன் - அவளுடன் இங்கேயே இருந்தேன்; (எ - று.)

அவ்விருவரும் சிற்றின்பத்தில் மூழ்கி இங்குவசிக்கையில் எனது உயிர்த்தோழியாகிய அவளை விட்டுப்பிரிய மனம்வாராது யானும் இங்கேயே அவளுட னிருந்தே னென்பதாம். அன்றிலின் தன்மை, கீழ்க்கூறப்பட்டது. மன்றில்விழைபோகத்து என்று எடுத்து - (ஒருவருமில்லாத) வெளியிடத்தில் விரும்பியபோகத்தினால் என்று கூறுவாருமுளர். பகல் - இலக்கணையால், நாள்களைக்குறித்தது. கணம் - கூட்டமுமாம். பி - ம்:—[1]புணர்ந்தவனுமன்னவளும். [2]மாநகரு கந்தார். [3]கணங்குழையினோடும், கனங்குழையினுளொடு. [4]உயிர்க் காதல். [5]உணங்கிவருபாசம், இணங்கிவருமாசை. (886)

61. இருந்துபல நாள்கழியு மெல்லையினின் [1]வல்லோய்
திருந்திழையை நாடிவரு தேவரிறை சீறிப்
பெருந்திறலி னானை [2]யுயி ருண்டுபிழை யென்றம்
[3]முருந்துநிகர் மூரல்நகை யாளையு முனிந்தான்.

(இ - ள்.) வல்லோய் - வல்லமையுடையோனே! இருந்து பல நாள் கழியும் எல்லையினின் - (அவர்கள் அவ்வாறு இங்கே) கூடியிருந்து பலநாள் கழியும்பொழுதில்,— திருந்து இழையை நாடி வரு - வேலைத்திறமமைந்த ஆபரணங்களையணிந்த அந்தத் தேவமாதைத் தேடிவருகின்ற, தேவர் இறை - தேவேந்திரனானவன், சீறி - கோபித்து, பெருந் திறலினானை உயிர் உண்டு - மிக்க வல்லமை பொருந்திய அம்மயனை உயிரொழித்து, அ முருந்து நிகர் மூரல் நகையாளைஉம் பிழை என்று முனிந்தான் - மயிலிறகினடிக்குருத்தையொத்த பற்களையும் புன்சிரிப்பையுமுடைய அத்தேவமாதையும் (நீ செய்தது) தவறானதொழிலாகுமென்று சினந்துகூறினான்; (எ - று.)

இவ்வாறு அவ்விருவரும் இந்நகரத்தில் இன்பமனுபவித்துப் பலநாள் கழிக்கையில், தேவலோகத்தில் அத்தேவமாதைக் காணுமையால் அவளைத் தேடிவந்த இந்திரன அந்தவமையைக் கவர்ந்தானென்ற காரணத்தினல் அம்மயன் மீது சீற்றங்கொண்டு அவனைக் கொன்று, அவனுக்கு இணங்கிய அந்த ஏமையைச் சினந்தனனென்பதாம். திருந்திழை - வினைத்தொகையன்மொழி. உயிருண்டு - மரபுவழுவமைதி. பி - ம்:—[1] என்னே, நல்லோய். [2] உயிர்கொண்டு பிழையென்ன, உயிருண்ட பிழையன்றே. [3] முருந்தனைய.

இச்செய்யுளின்பின்

"மாதவ னுயிர்த்தமக வோரிருவர் வாசப்
போதுறை நறைக்குழ லொருத்திபுகழ் மேலோய்
[1] ஏதமவண் மைந்தர் தவ [2] மெய்தியயல் போனர்
சீதள முலைச்சிறுமி தாதையொடு சென்றுள்."

"மத்த [3] நெடு மாகளி றுகைக்கு லிசவன்றுள்
சித்தமொடு மான்முகன் வணங்கி யயல்சென்றுன்
வித்தகனு மாயிர [4] விலோசனனு மென்மேல்
முத்தநகை யாளைநனி நோக்கினன் முனிந்தான்.

என்று இரண்டுபாடல்கள் சில ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றன; பயிலவழங்கா: இவற்றை வெள்ளிப்பாட்டு என்பர். பி-ம்:— [1] ஏதமுறு. [2] எய்தவயல். [3] மதவெண்களிறுடைக்குலிசி. [4] விலோசனனுமேன்முன். (887)

6?. முனிந்தவளை [1] யுற்றசெயன் முற்று [2] மொழி கென்னக்
கனிந்ததுவர் வாயவளு மென்னையிவள் [3] கண்ணுல்
[4] வனைந்துமுடி வுற்றதென [5] மன்னனு மிதெல்லாம்
நினைந்திவ ணிருத்திநகர் காவல்நின தென்றுன்.

(இ - ள்.) முனிந்து - (தேவேந்திரன் அவ்வாறு) கோபித்து, அவளை - அத்தேவமாதை, உற்ற செயல் முற்றும் மொழிகளன்ன -'நடந்தவாலாறு முழுவதையும் கூறுவாயாக' என்று கட்டளையிட, கனிந்த துவர் வாயவள்உம் - நன்ருகமுற்றிய பவழம் போன்ற அதரத்தையுடையவளாகிய அந்த ஏமையும், என்னை - என்னைப்பற்றி, கண்ணுல் - கண்சாடையினல், '(இப்பழிப்புத்தொழிலானது), இவள் வனைந்து முடிவுற்றது - இந்த என துதோழியினுல் தொடுக்கப்பட்டு முடிந்தது,' என - என்றுதெரிவிக்க,—மன்னன்உம் - தேவேந்திரனும், இது எலாம் நினைந்து - இவற்றையெல்லாம் ஆலோசித்து, (என்னைநோக்கி),—'இவண் இருத்தி - இந்நகரத்திலேயே (தனியாக) இருக்கக்கடவாய்; நகர்காவல் நினது - நகரத்தைப் பாதுகாக்குந்தொழில் உன்னுடையதாகும்,' என்றுன் - என்று கூறினுன்; (எ - று.)

நடந்தசெயலை எனதுதோழியினு லறிந்த தேவேந்திரன் எல்லாவற்றிற்கும் முதற்காரணம் யானேயெனத் தெளிந்து, என்

மீது சினத்தினல் ஒருவருமில்லாத இந்தநகரத்தைப் பாதுகாத்துக்கொண்டு தனியேயிருக்குமாறு எனக்குக் கட்டளையிட்டன னென்பதாம். தன்தோழியின்மீது குற்றங்கூற வாயெழாமையால், அத்தேவமாது கண்சாடை காட்டினளென்க. திரிலோகாதிபதியாதலால், இந்திரன் 'மன்னன்' எனப்பட்டான்: "வேந்தன்மேய தீம்புனலுலகமும்" என்ருர், ஆசிரியர் தொல்காப்பியனரும். பி - ம்:—[1]உற்றமுறை. [2]உரையென்ன. [3]கண்ணய். [4]இளிங்கைமுடிவுற்றது. [5]அண்ணலும். (888)

63. [1]என்றலும் வணங்கியிரு ளேகுநெறி யெந்நாள்
ஒன்றுரை யெனக்குமுடி வென்றுரை செயாமுன்
[2]வன்றிறலின் வானர மிராமனருள் வந்தால்
அன்று [3]முடி வாகுமிட ரென்றவ னகன்ருன்.

(இ - ள்.) என்றலும் - என்று (இந்திரன் எனக்குக்) கட்டளையிட்டவுடனே,—வணங்கி - (யான் அத்தேவேந்திரனைத்) தொழுது, 'இருள் ஏகும் நெறி எ நாள் - (எனது) இத்துன்பம் நீங்குதற்கு உரிய வழி எக்காலத்தில்? எனக்கு முடிவு ஒன்று உரை - எனக்கு முடிவாக ஒன்று கூறுவாய்,' என்று உரை செயாமுன் - என்றுகேட்பதற்கு முன்னமே, [கேட்டவுடனே என்றபடி], —அவன் - அத்தேவேந்திரன், 'வல் திறலின் வானரம் - மிக்கவலிமையுடைய வானரங்கள், இராமன் அருள் வந்தால் - இராமனது கட்டளையினல் (இங்கு) வந்தால், அன்று - அக்காலத்தில், இடர் முடிவு ஆகும் - (உனது) துன்பம் ஒழியும் [உனக்கு நற்கதியுண்டாகும்],' என்று - என்று கூறி, அகன்ருன் - அப்பாற்சென்ருன்; (எ - று.)

தேவேந்திரன் நான் செய்த பிழைக்குத் தண்டனையாக எனக்கு இங்கேயிருக்குமாறு கட்டளையிட்டவுடனே, 'எனது துயர் நீங்கும் காலம் எப்போது?' என்று நான் அவனை வணங்கி வினவியதற்கு, அவனும் 'இராமதூதராகிய வானரர்கள் இங்கு வருகையில் உனது துயரம் நீங்கும்' எனச் சாபவிடை கூறிப்போயின னென அறிக. 'இருள்' என்பது - துன்பத்திற்கு இலக்கணை. பி - ம்:—[1]என்றனனிருத்தியிருளாகநெறியென்ன, என்றனன்வணங்கியிருளேகுநெறியெந்நாள். [2]வன்றிறலவானரம், வன்றிறலவ்வானரம். [3]முடிவாமுனிடர். (889)

64. உண்ணவுள பூசவுள சூடவுள வொன்ருே
வண்ணமணி யாடையுள மற்றுமுள பெற்றேன்
[1]அண்ணலவை விட்டுமை யடைந்திடுதல் வேண்டி
எண்ணரிய பல்பக லிருந்தவ [2]மிழைத்தேன்.

(இ - ள்.) அண்ணல் - பெருமையிற் சிறந்த அநுமானே!—(எனக்கு இங்கே), உண்ண உள - உண்பதற்குஉரிய கனி முதலிய பொருள்கள் உள்ளன; பூச உள - பூசுதற்குஉரிய கலவைச்சந்தனம் முதலிய பொருள்கள் உள்ளன; சூட உள - தலையிற்சூடுதற்குஉரிய

மலர்மாலைகள் உள்ளன; ஒன்றோ - இவை மாத்திரமோ? வண்ணம் மணி ஆடை உள - நல்லநிறங்களையுடைய அழகிய ஆடைகளும் உள்ளன; மற்றும் உள - (இவைகளன்றி) இன்னும் ஆபரணம் முதலியவைகளும் உள்ளன; பெற்றேன் - (இவையெல்லாவற்றையும்) யான் அடைந்திருக்கின்றேன்; (அவ்வாறு இருந்தும்), அவை விட்டு - அவற்றை எல்லாம் அனுபவியாமற் பற்றறவிட்டு, உமை அடைந்திடுதல் வேண்டி - (எனது சாபவிமோசனத்திற்காக) உம்மையடைய விரும்பி [உமது வருகையை எதிர்நோக்கிக்கொண்டு], எண் அரிய பல் பகல் இருந் தவம் இழைத்தேன் - எண்ணுதற்கு அரிய மிகப் பல காலமாகப் பெருந்தவம் புரிந்தேன்; (எ - று.)

எனது இன்பத்திற்கு உரிய பல பொருள்களிருந்தும் எனது சாபம் நீங்குமாறு உங்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டே பல காலமாகப் பெருந்தவம் புரிந்துகொண்டிருந்தே னென்பதாம். அண்ணல் - அண்மைவிளி. பி - ம்:—[1] அண்ணலவைமுற்றுமற விட்டதனைவெல்வான், அல்லது விட்டுவினைவெல்வான், அல்லது விட்டவினை வெல்வான். [2] உழன்றேன். (890)

65. ஐயிருப தோசனை யமைந்த[1]பில மையா
மெய்யுளது மேலுலக [2]மேறுநெறி காணேன்
[3]உய்யுநெறி [4]யுண்டுதவு வீரெனி னுபாயம்
[5]செய்யும்வகை [6]சிந்தையி னினைத்திர்சிறி தென்றாள்.

(இ - ள்.) ஐயா - பெரியோனே! அமைந்த பிலம் ஐ இருபது ஓசனை மெய் உளது - பொருந்திய இந்தப்பிலமானது நூறுயோசனை பரந்தவடிவுள்ளது; மேல் உலகம் ஏறும் நெறி காணேன் - மேலேயுள்ள உலகத்திற்கு ஏறிச்செல்லும் வழியை அறியேன்; உதவுவீர் எனின் - (நீங்கள் எனக்கு) உதவி செய்வீரானால், உய்யும் நெறி உண்டு - யான் ஈடேறுதற்கு உரிய வழியுளதாகும்; உபாயம் செய்யும் வகை - அதற்குஉரிய உபாயம்செய்யும்விதத்தை, சிந்தையின் சிறிது நினைத்திர் - உங்கள்மனத்திற் சிறிது கருதுவீர்களாக, என்றாள் - என்று கூறினாள், (சுயம்பிரபை); (எ - று.)

இந்தப்பிலம் நூறுயோசனைபரப்புள்ளதாய் இருள்செறிந்திருத்தலால் மேலேறிச்செல்லும்வழி இன்னதென்று தெரியாதபடி தேவேந்திரனது சாபம் என்னைத் தடைப்படுத்துகின்றது; எனது சாபவிடைக்காலங் குறுகி நீங்கள் இங்கு வந்திருத்தலினால், இப்போது நீவிர் அருள்செய்தால்தான் யான் ஈடேறும் வகையுளதாம்; ஆதலின், அவ்வாறான உபாயத்தைச் செய்யவேண்டுமென்று அனுமான் முதலியோரைச் சுயம்பிரபை வேண்டினளென்க. முதலில் 'ஐயா' என்று அனுமானை விளித்த சுயம்பிரபையானவள், இராமதூதரால் இடர்நீங்குமென்று தேவேந்திரன் கட்டளையிருத்தலால், 'உதவுவீர் நினைத்திர்' என்று மற்றைவானரரையும் உளப்படுத்திக்

கூறினளென அறிக. பி - ம்:—[1] நிலம். [2] ஏறுநெறிகாணு, வேறுநெறி கூறு. [3] உய்யநெறி. [4] உண்டுதவினீர், ஒன்றுதவுவீர். [5] செய்யுநெறி. [6] உண்டெனின். (891)

66.—அநுமான் சுயம்பிரபைக்கு மேலுலகநெறியைக் காட்டுவதாக வாக்களித்தல்.

அன்னது [1] சுயம்பிரபை கூறவனு மானும்
மன்னுபுலன் [2] வென்றுவரு மாதவண் மலர்த்தாள்
சென்னியின் [3] வணங்கிநனி வானவர்கள் சேரும்
பொன்னுலக மீகுவ னினக்கெனல் புகன்றான்.

(இ - ள்.) சுயம்பிரபை—, அன்னது கூற - அவ்வாறானவார்த்தையைச் சொல்ல,—அனுமானும்—, மன்னு புலன் வென்று வரு மாது அவள் மலர் தாள் சென்னியின் வணங்கி - பொருந்திய ஐம்புலன்களையும் வென்று அடக்கிய பெண்ணாகிய சுயம்பிரபையினது தாமரைமலர்போன்ற பாதங்களைத் (தனது) தலையால்வணங்கி,— (அவளைநோக்கி), 'நினக்கு-உனக்கு, வானவர்கள் நனி சேரும் பொன் உலகம் ஈகுவன் - தேவர்கள் மிகுதியாகக் கூடியுள்ளபொன்மயமான தேவலோகத்தைத் தருவேன் [மேலுலகஞ் செல்லும் வழியைக் காட்டி அங்குச் சேரச்செய்வேன்],' எனல் புகன்றான் - என்பதாகக் கூறினான்; (எ - று.)

மேலுலகநெறியைக்காட்டுமாறு வேண்டிய சுயம்பிரபைக்கு அவ்வாறே செய்வதாக அநுமான் வாக்களித்தன னென்க. சுயம்பிரபை - ஸ்வயம்ப்ரபா; வடசொல்; இயற்கையில் மிக்க ஒளியுள்ளவளென்று பொருள்படும்; இவள், மேருஸாவர்ணியின் மகள் இவளது தவவொழுக்கமும், இவள் வானரர்களை அருமையாக ஆதரித்துநடத்திய பரோபகார குணமும், பொறுமையும் பாராட்டத்தக்கன. புலன்வென்றுவருமாது - ஜிதேந்திரியை. மா தவள் என்று பிரித்து உரைப்பாருமுளர். பி - ம்:—[1] குறித்தரிவைகூற, [2] வென்றுவளர் மாமயில். [3] வணங்கினனிவானவர்கள். இச்செய்யுள். சிலபிரதிகளி லில்லை. (892)

67.—வெளிச்செல்லுதற்குரிய தொழிலைச் செய்யுமாறு மற்றைவாநரர் அநுமானை வேண்டுதல்.

முழைத்தலை யிருட்கடலின் மூழ்கி[1] முடி வேமைப்
பிழைத்[2] துயி ருயிர்ப்பவருள் செய்தபெரி யோனே
இழைத்தி[3] செய லாயவினை யென்றனர்[4] நிரந்தார்
வழுத்தரிய மாருதியு மன்னது [5] வலிப்பான்.

(இ - ள்.) (மற்றைவானரவீரர் அநுமானைநோக்கி), 'முழைத்தலை-இந்தப் பிலத்துவாரத்தில், இருள் கடலில் மூழ்கி - பேரிருளின் தொகுதியிலே முழுகி, முடிவேமை - இறப்பதற்கிருந்த எங்களை, உயிர்பிழைத்து உயிர்ப்ப - இறவாமல் தப்பிப்பிழைக்கும்படி, அருள்

செய்த - (அதனினின்று நீங்கிக்) கருணையோடு பாதுகாத்த, பெரியோனே - பெருமைக்குணமுடையவனே! செயல் ஆய வினை - 'இனிச் செய்யத்தகுந்த தொழிலை, இழைத்தி - செய்வாயாக,' என்றனர் இரந்தார் - என்றுகூறி வேண்டினார்கள்; (உடனே), வழுத்து அரிய மாருதிஉம் - புகழ்ந்து கூறமுடியாத [மிக்கநற்குணங்களையுடைய] அநுமானும், அன்னது வலிப்பான் - அவ்வாறே செய்வதாக மனத்தில் உறுதிகொண்டான்; (எ - று.)

இந்தப்பிலத்துள் சீதையில்லையென்று தெற்றென விளங்கியது பற்றி இனி இங்கிருத்தலால் யாதொருபயனுமில்லை யாதலால், உடனே வெளிச் செல்வதற்குஉரிய தொழிலைத் தேட வேண்டுமென்று அநுமானை மற்றை வானரர் இரந்தனராக, அநுமானும் அதற்கு இசைந்தனனென்பதாம். பிலத்துவாரத்தினுட்புக்குப் பேரிருட்கடலில் தாங்கள் மிகவும் வருந்திய பொழுது அநுமானே தங்களைப் பாதுகாத்ததனால், இனி வெளிச் செலுத்திப் பாதுகாக்கும் வல்லமை யுள்ளவனும் அவ்வநுமானே யென்று கருதி அதற்கும் அவனையே வானரர் வேண்டினர்: இக்கருத்து, 'முழைத்தலை யிருட்கடலில் மூழ்கி முடிவேமைப் பிழைத்துயிருர்க்க வருள் செய்த பெரியோனே' என்ற விளியில்விளங்கும். இனி, இச்செய்யுட்கு - எங்களை முழைத்தலையிற் பாதுகாத்தது போலவே இந்தச் சுயம்பிரபையையும் இப்பிலத்திலிருந்து நற்கதி யடையுமாறு பாதுகாக்க வேண்டுமென்று வானரவீரர் அநுமானை வேண்டினரென்று கருத்துக்கூறுவாரு முளர். பி - ம்:—[1] முடிவோமை, விடுவோமை. [2] உயிரிருக்க, உயிருயிர்க்க. [3] செயலானதென. [4] இருந்தார். [5] வலித்தான். (893)

68.—அநுமான் அப்பிலத்தைப்பிளக்குமாறு பேருருவங்கொள்ளுதல்.

நடுங்கன்மி [1] னெனுஞ்சொலை நவின்று நகைநாற
மடங்கலி னெழுந்து [2] மழை யேறரிய வானத்து
ஒடுங்கலில் [3] பிலந்தலை திறந்துலகொ டொன்ற
நெடுங்கைகள் [4] பெயர்த்து [5] நெடுவானுற நிமிர்ந்தான்.

(இ - ள்.) (அநுமான் மற்றையோரை நோக்கி), நடுங்கன்மின் எனும் சொலை நவின்று - 'அஞ்சவேண்டா' என்ற சொல்லைக் கூறி, நகை நாற - புன்சிரிப்புத் தோன்ற, மடங்கலின் எழுந்து - ஆண்சிங்கம்போலக் கிளம்பி,—மழை ஏறு அரிய வானத்து உலகொடு - மேகங்களும் ஏறிச்செல்லமுடியாத [மிகவும்மேலே மேகமண்டலத்திற்கும் அப்பாலுள்ள] வானுலகத்தோடு, ஒடுங்கல் இல் பிலம் - நெருக்கமில்லாத [மிகவும் விசாலமாகிய] குகையானது, தலை திறந்து ஒன்ற - தலையிடந்திறந்து ஒன்றாய்விட (ஒரே வெட்டவெளியாக), நெடுங் கைகள் பெயர்த்து - (தனது) பெரிய கைகளை யோங்கிக் கொண்டு, நெடு வான்உற நிமிர்ந்தான் - (தனது பெருவடிவம்) பெரிய ஆகாயம்முழுதும் நிரம்பும்படி மேலோங்கினான்; (எ - று.)

அநுமான் மற்றறவோர்க்கு அபயமளித்து அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே ஆண்சிங்கம்போலக் கிளம்பிப் பிலம்முதல் ஆகாயம்வரையில் ஒரேவழியாகத் திறக்குமாறு தனது கைகளைத் தூக்கிக்கொண்டு பெருவடிவமெடுத்து நிமிர்ந்தனனென்க. இதனால், அநுமானது வருத்தமின்றி எளிதில் தொழில்முடிக்குந் திறமை விளங்கும். நாறுதல் - தோன்றுதல். [2] 'மறையேறு' என்ற பாடத்திற்கு வேதங்களில் வல்ல புருடச்சிரேட்டனென அநுமான் என்பது, பொருள். பி - ம்:—[1] எனச்சொலே. [2] மழையேறிரிய. [3] பெருந்தவனுயர்ந்தவருவப்ப, பெருந்தவனிரந்தவருவப்ப, பெருந்தலைபுறத்துல கொடொன்ற. [4] சுமந்து. [5] நகர்நீக்கிடுவனென்றான். (894)

69.—இதுவும், அடுத்த கவியும் – அப்போதைய அநுமானது தோற்றத்தைக் கூறும்.

[1] எருத்துயர் சுடர்ப்புய மிரண்டு மெயிறென்ன
[2] மருத்துமக [3] னப்படி யிடந்துற வளர்ந்தான்
[4] கருத்துநிமிர் கண்ணினெதிர் கண்டவர் கலங்க
உருத்துல கெடுத்த [5] கரு மாவினையு மொத்தான்.

(இ - ள்.) மருத்து மகன் - வாயுகுமாரனாகிய அநுமான், எருத்து உயர் சுடர் புயம் இரண்டுஉம் - பிடரியின் இருபக்கத்திலும் உயர்ந்த ஒளியையுடைய (தனது) கைகளிரண்டும், எயிறு என்ன - இரண்டு கோரதந்தம்போலவிளங்க,—நிமிர் கண்ணின் எதிர் - சிறந்த உறுப்பாகிய கண்ணிலே, கண்டவர் - பிரதியட்சமாகப்பார்த்தவர், கருத்து கலங்க - மனங்கலங்கும்படி, அபடி இடந்து உற வளர்ந்தான் - அந்தப் பிலத்தின் மேல்தலத்தைப் பிளந்துகொண்டு ஓங்கி வளர்ந்தவனாய்,—உருத்து உலகு எடுத்த - சினங்கொண்டு நிலவுலகத்தை(த், தனது கோரதந்தத்தினாற் பாதலத்திநின்று) எடுத்து வந்த, கருமாவினைஉம் - பெரிய வடிவமுடைய மகாவராகத்தையும், ஒத்தான்—; (எ - று.)

அநுமான், தனது இருகைகளும் கோரதந்தம்போல் விளங்க பூமியினுள்ளிருந்த பிலத்தினின்று கண்டவர் கலங்குமாறு நிலத்தைப் பிளந்து வெளிவந்த தோற்றத்தால், பாதலத்தில் அழுந்திக் கிடந்த பூமியைத் தனதுகோரதந்தத்தினால் குத்தியெடுத்துக் கொண்டு வெளிவந்த திருமாலின் வராகாவதாரவடிவத்தைப் போன்றனனென்க. கலங்க உலகெடுத்த எனினுமாம். 'மா' என்ற பொதுப் பெயர், இங்குப் பன்றியைக் குறித்தது. கருமை - பெருமை: கருநிறமுமாம். பி - ம்:—[1] எருத்துறு. [2] மருத்தின். [3] இப்படியிடந்து. [4] கருத்தினிமிர்..., கருத்துநிமிரக்கதிகள் கண்டவர்கலங்க அல்லது நடுங்க. [5] திருமாலினையும். (895)

70. மாவடி வுடைக்கமல நான்முகன் வகுக்கும்
தூவடி வுடைச்சுடர்கொள் விண்டலை [1] தொளைக்கும்
மூவடி [2] குறித்துமுறை யீரடி முடித்தான்
பூவடி வுடைப்பொருவில் சேவடி [3] புரைந்தான்.

(இ - ள்.) மா வடிவு உடை கமலம் நான்முகன் - சிறந்தவடிவை யுடைய (திருமாலின் நாபீ) கமலத்தில் வாழ்கின்ற நான்கு முகங்களை யுடைய பிரமதேவன், வகுக்கும் - படைத்துள்ள, தூ வடிவு உடை சுடர் கொள் விண்-பரிசுத்தமான தோற்றமுடைய (சூரியன் முதலிய) சுடர்களைத் தன்னுடத்திற் கொண்ட ஆகாயத்தினது, தலை - மேல் முகட்டை, தொளைக்கும் - தொளைத்துஊடுருவிச் சென்றதாகிய, மூஅடி குறித்து முறை ஈர் அடி முடித்தான் - (வாமனனாகி மகாபலி சக்கரவர்த்தியினிடத்தில்) மூன்றடிமண் வேண்டுமென்று இரந்து பெற்று உடனே முறையாக (வானத்தையும் பூமியையும் தனது) இரண்டடியால் அளந்துகொண்ட (திரிவிக்கிரமாவதாரமெடுத்த) திருமாலினது, பூ வடிவு உடை பொருவுஇல் சே அடி - அழகிய வடிவையுடைய ஒப்பற்ற சிவந்த திருவடியை, புரைந்தான் - ஒத்தான்; (எ - று.)

தொளைக்கும் சேவடி என இயையும். வானத்திலோங்கிய திருமாலின் திருவடி, அவ்வாறு வானத்தை யளாவிவளர்ந்த அநுமான் வடிவத்திற்கு ஏற்ற உவமையாதல் காண்க. அநுமானுக்குத் திருவடியென்றே ஒருபெயரிருத்தலால், அப்பெயர்க்கு வேறுவகையாகக் காரணப்பொருளுரைப்பார் போன்று இவ்வாறு வருணித்தன ரென்னலாம். தூவடிவுடைச்சுடர்கொள்விண் - நிர்மலமானதும் சூரியசந்திராதிகளானசுடர்கள் சஞ்சரிக்கப்பெற்றதுமான ஆகாயம். ஈற்றிரண்டடிகளில் "மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பாவகை முடியத், தாவியசேவடி" என்ற சிலப்பதிகார வடிகளை ஒருசார் நினைவுகூர்க. [3]'புனைந்தான்' என்ற பாடத்திற்கு -தூவடி...முடித்தான்...சேவடி - விஷ்ணுபத மென்ற பேரை யுடைய ஆகாயத்தை, புனைந்தான் - (தான் ஓங்கி வளர்ந்ததனால்) அலங்கரித்தான் என்று பொருளாம். பி - ம்:—[1] துளைத்த. [2] குறித்த. (896)

71.—அநுமான் பிலநகரத்தை மேல்கடலிலெறிந்து ஆரவாரித்தல்.

ஏழிருப தோசனை [1]யிடந்து[2]படி யின்மேல்
ஊழுற வெழுந்ததனை யும்பரு [3]மொடுங்கப்
[4]பாழிநெடு வன்பிலனுள் நின்றுபடர் மேல்பால்
ஆழியி னெறிந்தநும [5]ஞழியென வார்த்தான்.

(இ - ள்.) அநுமான்—, ஏழ் இருபது ஓசனை இடந்து - நூற்றுநாற்பது யோசனைதூரம் பிளந்துகொண்டு, பாழி நெடு வல் பிலனுள நின்று படியின்மேல் ஊழ் உற எழுந்து - உள்ளாழ்ந்த நெடிய வலிய பிலததிலிருந்து பூமியினமேல் முறையாக எழுந்து வந்து, (பிறகு), அதனை - அந்தப்பிலநகரத்தை, உம்பர்உம் ஒடுங்க - (காண்கின்ற) தேவர்களும் அஞ்சிநடுங்குமாறு, படர் மேல்பால் ஆழியின் எறிந்து - பரவிய மேற்றிசைக்கடலில் வீசியெறிந்து, ஆழி என ஆர்த்தான - கடல்போல ஆரவாரித்தான்; (எ - று.)

அநுமான் பிலத்தைப் பிளந்து வெளிவந்து, பயனில்லாமற் கிடந்த அப்பிலநகரத்தை மேலைக்கடலி லெறிந்து தொக்கரித்தன னென்பதாம். ஊழுறவெழுந்து - சிறிதும் வருத்தமின்றி வெளி வந்து என்றபடி. அநுமானது அப்பொழுதையநிலையைக் கண்டு தமக்கு யாது தீங்குவருமோ என்று தேவர்களும் அஞ்சிநடுங்குவாராயின ரென்க. பி-ம்:—[1] பெயர்த்து. [2] படிவிண்மேல். [3] உவப்ப. [4] வாழி...வட மேல்பால். [5] மேகமென. (897)

72.—யாவரும் வெளிவந்து தம்தமக்கு உரியவழியிற் செல்லத் தொடங்குதல்.

[1] என்றுமுள மேல்கட [2] லியக்கில்பில தீவா
நின்றுநிலை பெற்றுளது நீணுதலி யோடும்
குன்றுபுரை தோளவ ரெழுந்துநெறி கொண்டார்
பொன்றிணி விசும்பினிடை நன்னுதலி போனாள்.

(இ - ள்.) (அநுமானால் வீசியெறியப்பட்ட அந்தப்பிலநகர மானது),—என்றும் உள - எப்போதுமுள்ளதான, மேல் கடல் - மேற்றிசைக்கடலில், இயக்கு இல் பில தீவு ஆ - அழிவில்லாத பிலத்தீவென்று பேருள்ளதாக, நின்று நிலைபெற்று உளது - இப்பொழுதும் உள்ளதாகி நிலைபெற்றிருக்கின்றது; நீள் நுதலி யோடும் - நீண்ட நெற்றியையுடைய சுயம்பிரபையோடும், குன்று புரை தோளவர் - மலைகளையொத்த தோள்களையுடைய வானரவீரர் கள், எழுந்து - (அந்தப்பிலத்தினின்று) வெளிவந்து, நெறிகொண் டார் - (தாம் செல்லுதற்கு உரிய) வழியை நிதானித்துக்கொண் டார்கள்; (அப்பொழுது), நல் நுதலி - அழகிய நெற்றியையுடைய அந்தச் சுயம்பிரபை, பொன் திணி விசும்பினிடை போனாள் - பொன்மயமாய் நெருங்கின தேவலோகத்திற்குச் செல்ல லானாள்; (எ - று.)

தீவு - த்வீபம்: இருபக்கத்திலும் நீரையுடையது என்று அவ யவப்பொருள். நெறிகொள்ளுதல் - செல்லவேண்டியவழியை மனத் தில் ஆராய்ந்தறிதல். இருள்மண்டிக்கிடந்த பிலத்துவாரத்திற் புகுந்து பிலநகரத்திலிருந்தபோது மேற்செல்லவேண்டியதைப்பற்றிய எண்ணமே யற்றிருக்கு மாதலால், அங்குநின்று வெளிப்பட்டபின்னர் இனிச்செல்லவேண்டியநெறியைப்பற்றி வானரர்க்கு மனத்தினால் நிதானித்துக்கொள்ளவேண்டியதாயிற்று. விசும்பு - ஆகாயத்தி லுள்ள தேவலோகத்திற்கு இடவாகுபெயர். பி-ம்:—[1] இன்றுமுளவே, இன்றுமுளமேல். [2] இயங்குபலதீவாய்.

அநுமான் முதலியோர் தென்திசையிற் பலவிடங்களிலும் பிராட்டியைத் தேடிக்கொண்டு செல்லுகையிற் பசிதாகங்களினால் வருந்தியிளைத்துக் களைத்துத் தண்ணீர்பெறும் விருப்பினராய், ருக்ஷபிலமென்னும் பெரும்பிலத்தினுள் நுழைந்து வெகுசிரமப்பட்டு உள்ளேசென்று பொன்மயமானதொருவனத்தையடைந்து அங்கு

இருந்த சுயம்பிரபையென்னும் தவப்பெண்ணைக் கண்டு வினவி அந்தவனம் மயனென்னும் அசுரசிற்பியினால் நிருமிக்கப்பட்டதென்றும் இவனால் காதலிக்கப்பட்ட ஹேமையென்னும் அப்ஸரஸ்ஸ்திரீக்கு உரியதாயிற்றென்றும் உணர்ந்தபின்பு, தங்களை அப்பிலத்திற்குவெளியே கொண்டுவிடும்படி அந்தச் சுயம்பிரபையையே பிரார்த்திக்க, அவள் இவ்வானரர்களைக் கண்களை மூடிக் கொள்ளச் சொல்லித் தன் தவமகிமையால் வெளியேகொண்டு சேர்த்திட்டனளென்று முதனூலிற் கூறியுள்ளது. (898)

73.—சுயம்பிரபை அநுமானைப்புகழ்ந்து சுவர்க்கஞ்சேருதல்.

[1]மேருவரை மாமுலையள் மென்சொலினள் விஞ்சு
[2]மாருதி யிணைப்பல வுவந்துமகிழ் வுற்றே
[3]ஏருறு சுயம்பிரபை யேமை[4]நெறி யெய்தத்
தாருவளர் [5]பொற்றல னிடைக்கடிது சார்ந்தாள்.

(இ - ள்.) மேரு வரை மா முலையள் - மகாமேருமலைபோன்ற பெரிய தனங்களையுடையவளாகிய, ஏர் உறு சுயம்பிரபை - அழகு மிக்க சுயம்பிரபையானவள், மெல் சொலினள் - இனிய சொற்களையுடையவளாய், விஞ்சு மாருதியினை பல உவந்து மகிழ்வுற்று - (யாவரினும்) மேம்பட்ட அநுமானைப் பற்றிப் பலவாறாக முகமன் கூறி மகிழ்ந்து, ஏமை நெறி எய்த - (தனதுதோழியாகிய) ஏமை யென்பவள் வாழ்கின்ற இடத்தை யடையுமாறு, தாரு வளர் பொன் தலனிடை கடிது சார்ந்தாள் - கற்பகத்தருக்கள் வளரப்பெற்ற பொன்மயமான தேவலோகத்தில் விரைந்துசென்று சேர்ந்தாள்; (எ - று.)

மேலுலகஞ்செல்லவிரும்பிய சுயம்பிரபை, தனக்குச் சாபவிமோசனம் பிறக்குமாறுசெய்து பிலவழியைத்திறந்து வழிகாட்டிய பேருதவியாளனை அநுமானைக்குறித்து உள்ளமுவந்து பலவாறு புகழ்ந்து விடைபெற்று, தன் தோழியாகிய ஹேமையுள்ள சுவர்க்கலோகத்தைச் சேர்ந்தனளென்பதாம். ஏமை = ஹேமா: பொன்னிறமானவள் என்று பொருள்படும். தாரு - தருவென்பதன் நீட்டல்; எதுகைநயம்பற்றியது. பி - ம்:—[1]மேருசவ்வருணியெனும். [2]ஏருறு மடந்தையுகமெண்ணறுதவத்தாள். [3]சீருறு... [4]செறிவெய்தும். [5]பொற்றலமிசைக். இச்செய்யுள் சிலபிரதிகளில் இல்லை. ஒருபிரதியில் "மாருதி" என்ற அடுத்த பாடலின்பின் உள்ளதென்ப. (899)

74.—வாநரர் பொய்கைக்கரையைச் சேர்தலும், சூரியன் அஸ்தமித்தலும்.

மாருதி வலித்தகைமை பேசிமற வோரும்
பாரிடை நடந்து[1]பக லெல்லை[2]பட ரப்போய்
நீருடைய [3]பொய்கையினி னீள்கரை யடைந்தார்
தேருடை நெடுந்தகையு மேலைமலை சென்றான்.

(இ - ள்.) மறவோர்உம் - வீரரான வானரர்களும், மாருதி வலி தகைமை பேசி - அநுமானது பலத்தின் தன்மையைப் புகழ்ந்து

பேசிக்கொண்டு, பகல் எல்லை படர பாரிடை நடந்து போய்-அன்றைப் பகல் முழுவதும் பூமியில் நடந்துசென்று, நீர் உடைய பொய்கையினில் நீள் கரை அடைந்தார் - நீர்நிறைந்த பொய்கையினது நீண்ட கரையைச் சேர்ந்து தங்கினார்கள்; (அப்பொழுது), தேர் உடை நெடுந் தகைஉம் - (வானத்திற்செல்லுந்) தேரையுடைய பெருமைக் குணமுடையவனாகிய சூரியனும், மேலை மலை சென்றான் - மேற்குத் திசையிலுள்ள அஸ்தகிரியைச் சேர்ந்தான் [அஸ்தமித்தான் என்றபடி]; (எ - று.)

பிலத்திற் பேரிருட்பிழம்பிலகப்பட்டுத் திகைத்தபோது தங்களுக்கு வழிகாட்டிக் காத்ததனாலும், பிறகு பிலத்தையிடித்துச் சுயம்பிரபைக்கும் தங்களுக்கும் வெளிச்செல்லும் வழியைக் காட்டியதனாலும், வானரவீரர், அநுமானது வலிமையைப் புகழ்ந்தனர். பகலெல்லை படர - பகற்பொழுதின் முடிவெல்லைவரையிலும் பரவ; ஆகவே, பகற்பொழுது முழுதும் என்றபடி. வானத்திற்செல்ல வல்லதாய் ஸம்வத்ஸரரூபமான ஒற்றைச்சக்கரம் பூண்ட தேரை யுடைமையால், சூரியனை 'தேருடைநெடுந்தகை' என்றது. பி - ம்:—[1] பலவெல்லை. [2] மறையப், கழியப். [3] பொய்கையெனு நேமியிடை நின்றார், பொய்கையெனும் பூமியிடைநின்றார், பொய்கையினினீர்க்கரையடைந்தார், பொய்கையினினீள்கடையடைந்தார். (900)

பிலம்புக்கு நீங்கு படலம் முற்றிற்று.

15—ஆவது ஆறுசெல் படலம்.

அஃதாவது - வானரவீரர்கள் பிலத்தினின்று நீங்கியபின்பு சுக்கிரீவ மகாராஜன் குறித்த வழியே சென்றதைக் கூறும் பாகம். இப்படலத்தில், அங்கதப்பெருமான் பொய்கைக்கரையில் வாழும் துமிரனென்ற அசுரனைக் கொன்றனனாக, பிறகு வானரவீரர் யாவரும் அங்குநின்று பலவிடங்களிலும் பிராட்டியை நாடி, மகேந்திரமலையைச் சார்ந்த செய்தி கூறப்படுகின்றது. 'ஆற்றுப்படலம்' என்று சில பிரதிகளிற் காணப்படுகின்றது. ஒருபதிப்பில் வழிநடைப்படலம் எனப் பெயர் காணப்படுவதாகவும் எழுதியுள்ளார்.

வேறு.

1.—வாநரர் பொய்கையையடைந்து நீர்முதலியன உண்டு உறங்குகையில், ஓரசுரன் வருதல்.

கண்டார் பொய்கைக் கண்ணக [1]னன்னீர் கையார
உண்டார் தேனு மொண்கனி காயு மொருசூழல்
[2]கொண்டா ரன்றே வின்றுயில் [3]கொண்ட குறியுங்னித்
[4]தண்டா வெனுறித் தானவன் வந்தான் [5]தகவில்லான்.

(இ - ள்.) கண்டார் - (அவ்வாறு பொய்கையைக்) கண்டவர்களாகிய வாநரவீரர்கள்,—பொய்கைக்கண் அகல் நல் நீர் கை ஆர உண்டார் - அப்பொய்கையிலுள்ள பரவிய நல்லநீரை(த் தமது)

கைக்கிளைய எடுத்துப் பருகினார்கள்; தேன்உம் ஒள் கனிகாய்உம் (உண்டார்) - (அதன்கரையிலுள்ள) தேனையும் நல்ல கனிகளையும் காய்களையும் தின்றார்கள்; ஒரு சூழல் - அங்கு ஓரிடத்தில், இன் துயில்கொண்டார் - இனிய நித்திரையைக் கொண்டார்கள்; கொண்ட குறி உன்னி - (அவ்வாறு வானரர்கள் வந்து) படுத்து உறங்குகின்ற செய்தியை நினைத்து, தண்டா வென்றி - நீங்காத வெற்றியையுடைய, தகவு இல்லான் - நற்குணமில்லாதவனாகிய, தானவன் - அசுரனொருவன், வந்தான் - (அவர்களுறங்குகின்ற இடத்தைநோக்கி) வரலானான்; (எ - று.)—அன்றே - தேற்றம்; ஈற்றசையுமாம்.

வானரவீரர்கள் தாங்கள் வந்து சேர்ந்த பொய்கையின் கரையிலே காய் கனி முதலியவற்றை யுண்டு நீர்பருகி அயர்ந்து நித்திரை செய்தனராக, அப்போது ஒரு அசுரன் அதனையறிந்து அங்குவரலாயினனென்க. அவன் பெயர் துமிரனென்பது, மேலே 19-ஆங் கவியில் விளங்கும். உண்ணுதல் தின்னுதல் பருகுதல் நக்குதல் என்ற உணவுத்தொழில்வகை நான்கற்கும் பொதுவாகவும், உண்ணுதல் தொழிலொன்றற்குமே சிறப்பாகவும் நிற்றற்கு உரிய உண்ணுதல், இங்குப் பொதுப்பொருளைத் தந்தது. பி - ம்:— [1]நீர்க்கரைகாமுற்று, நீர்க்கரை தாமுற்று. [2]கொண்டாரென்றே. [3]குன்றிற்குறியெய்தி, ஒன்றக்குறியெய்தி, கொண்டார்குறியெய்தி, கொண்ட குறிப்புன்னி, இன்றிக்குறைவெய்தி. [4]தண்டார். [5]தகை, தகைவு. (901)

2.—இதுமுதல் மூன்றுகவிகள் - அவ்வசுரனது வருணனை.

மலையே [1]போல்வான் [2]மால்கட லொப்பான் மற[3]முற்றிக்
கொலையே [4]செய்வான் [5]கூற்றை நிகர்ப்பான் [6]கொடுமைக்கோர்
நிலையே போல்வா னீர்மை யிலாதா [7]னிறைதிங்கள்
கலையே போலுங் கால வெயிற்றான் கனல்கண்ணான்.

(இ - ள்.) (அவ்வசுரன்) - மலைஏபோல்வான் - (பெருந்தோற்றமுடைமையால்) மலையை யொத்தவன்; மால் கடல் ஒப்பான் - (உடலின்பரப்பாலும் கருநிறத்தாலும்) பெரிய கரிய சமுத்திரத்தை யொப்பவன்; மறம் முற்றி கொலைஏ செய்வான் - கொடுமைமிகுதலால் கொலைத்தொழிலைச் செய்பவனாகி, கூற்றை நிகர்ப்பான் - யமனையே யொத்திருப்பவன்; கொடுமைக்கு ஓர் நிலைஏ போல்வான் - கொடுமையென்னும் பண்பிற்கு ஓர் இருப்பிடத்தையே யொத்திருப்பவன் [கொடுந்தன்மைகள் நிரம்பியவன்]; நீர்மை இலாதான் - நற்பண்பு சிறிதுமில்லாதவன்; நிறை திங்கள் கலைஏ போலும் காலம் எயிற்றான் - பதினாறுகலைகளும்நிரம்பிய சந்திரனது பிறையைப் போன்றனவும் விஷம்போறகொடியனவுமான பற்களையுடையவன்; கனல் கண்ணான் - (சினத்தினால்) கனலைச்சொரியும் கண்களையுடையவன்; (எ - று.)

'போல்வான்' முதலியவற்றைப் பெயராகக்கொண்டு, 'போல்பவனும்......கண்களையுடையவனுமாகிய தானவன் வந்தான்'

எனக் கீழ்க்கவியோடு இயைப்பினுமாம்: இவ்வாறே மேற்கவியிலுங் காண்க.

மால் - இரட்டுறமொழிதலாய், கருமை பெருமைகளை யுணர்த்திற் றென்னலாம். காலம் - கருநிறமுள்ள விஷம்; இங்கு, கொடுமைக்கு இலக்கணை. காலன் எயிற்றன் என்றுபிரித்து - யமனதுகோரப் பற்கள்போன்ற கோரப்பற்களை யுடையவ னெனினுமாம். பி - ம்:— [1]ஒப்பான். [2]மாகடல். [3]முற்ற. [4]போல்வான், ஒப்பான். [5]கூற்றம். [6]கடுமைக்கு. [7]கிமிர்திங்கள், நெடுந்திங்கள். (902)

வேறு.

3\. கருவி மாமழை கைகள் தாவிமீது
[1]உருவ மேனிசென் [2]றுலவி யொற்றலால்
[3]பொருவின் மாரிமே லொழுகு பொற்பினல்
[4]அருவி பாய்தருங் குன்ற மேயனுன்.

(இ - ள்.) (அவ்வசுரன்),—கருவி மா மழை - (உலகம்நடத் தற்கு) முதற்காரணமாகிய பெரிய மேகங்கள், கைகள்மீது தாவி - (தனது) தோள்களின்மேல் தாவியும், உருவம் மேனி சென்று உலவி - பெருந்தோற்றத்தையுடைய (தனது) உடலின் மேற்சென்று உலாவியும், ஒற்றலால் - படிதலினாலும்,—பொருவு இல் மாரி மேல் ஒழுகு பொற்பினல் - ஒப்பில்லாதமழைநீர் தன்மேற் பெருகுகின்ற அழகிய தோற்றத்தினாலும்,—அருவி பாய்தரும் குன்றம்ஏ அனுன் - (மேகங்கள் தன்மீது தவழப்பெற்று) நீரருவிபாய்கின்ற மலையை யொத்தவன்; (எ - று.)

அவ்வசுரனது தோள்களின்மீதும் உடம்பின்மீதும் மேகங்கள் தவழ்ந்து மழைநீரைப் பெருகுமாறு பொழிதலால், மேகங்கள் தன் மீது உலாவப்பெற்று நீரருவிபாயும் மலை அவனுக்கு ஏற்ற உவமையாம். உலகம் இடையறாது நடத்தற்கு மழை காரணமாய் நிற்றலால், 'கருவிமாமழை' எனப்பட்டது - 'ஒருவவானின்மேலுலாவி யொற்ற லில், பொருவில்வாரிமே லொழுகுபொற்பினல், அருவிபாய்தரும் குன்றமேயனுன்' என்று ஒரு பிரதியில் பின் மூன்றடிகளும், 'உருவி மீதுசென் றுலவியொற்றலின்' என்று சிலபிரதிகளில் இரண்டாமடி யும் காணப்படுகின்றன. பி - ம்:—[1]ஒருவவானின்மேல், உருவிமீது சென்று, உருமுமேனிசென்று. [2]உலவியொற்றலின், ஒற்றவில் லொடும். [3]பொருவின்மேகமே, பொருவின்மேனிமேல், பொருவில்வாரி மேல். [4]அருவிதோய்தரும். (903)

4\. வான வர்க்குமற் றவர்வ லிக்குநேர்
[1]தான வர்க்குமே யரிய தன்மையான்
ஆன [2]வக்கல னவனெ டாடவேறு
[3]ஏன வர்க்குமொன் றெண்ண வொண்ணுமோ.

(இ - ள்.) வானவர்க்குஉம் - தேவர்கட்கும், அவர் வலிக்கு நேர் தானவர்க்குஉம்ஏ - அத்தேவர்களது வலிமையைபோன்றப்

வலிமையையுடைய அசுரர்கட்குமே, அரிய - வெல்லுதற்குக் கூடாத, தன்மையான் ஆன - வலிமைத் தன்மையுடையவனாகிய, அ கலன் அவனொடு - துஷ்டனாகிய அவ்வசுரனோடு, ஆட - போர் செய்வதற்கு, வேறு எனவர்க்கும் - மற்றும் எத்தன்மையுடையவர்க்கும், ஒன்று எண்ண ஒண்ணுமோ - சிறிதேனும் நினைக்க முடியுமோ? (எ - று.)—மற்று - அசை.

அவ்வசுரனோடு போர்செய்தல் தேவர்கட்கும் அசுரர்கட்குமே முடியாதென்றால், மற்றையெவரால்தான்முடியும்? ஒருவராலும் இவனோடு போர்செய்துவெல்லுதலை நினைத்தலும் முடியாதென்பதாம். மற்றவர்வலிக்கு நேர்தானவர் - அத்தேவர்களின் வலிமைக்கு மாறாய்நிற்கின்ற அசுரர் எனினுமாம். கலன் - துஷ்டன்; வடசொல். [2]'புட்கலனவனொடு' என்ற பாடம் - புஷ்டியுள்ளவனாகிய அவ்வசுரனோடு என்றும், [3]'புட்கலன்மகனொடு' என்றபாடம் - புஷ்கலனென்பவனது மகனாகிய அந்தத்துமிரனோடு என்றும் பொருள்படும். அவ்வசுரனுக்கே புஷ்கலனென்றும் துமிரனென்றும் இருபெயருண்டு எனக் கூறுவாருமுளர். பி - ம்:—[1]தானவர்க்குமெய்தரிய. [2]அக்கனலவன்முனவதன்று, அக்கலன வனொடாடவே, புட்கலனவனொடாடவே, பக்கலனவனொடாடவே. [3]ஏனையர்க்கும். 'ஆனவர்க்கலாலவனொடாடவே' என்று சிலபிரதிகளில் மூன்றாமடி. (904)

5.—அவ்வசுரன் உறங்குகின்ற வாநரவீரரை யடைதல்.

பிறங்கு பங்கியான் [1]பெயரும் [2]பெட்பினில்
கறங்கு போன்றுளான் [3]பிசையுங் கையினான்
அறங்கொள் சிந்தையார் [4]நெறிசெ லாய்வினால்
உறங்கு வாரைவந் தொல்லை யெய்தினான்.

(இ - ள்.) பிறங்கு பங்கியான் - விளங்குகின்ற செம்பட்ட மயிரையுடையவனும், பெயரும் பெட்பினில் கறங்கு போன்று உளான் - செல்லுகின்ற தன்மையினால் காற்றாடியையொத்துள்ளவனும், பிசையும் கையினான் - பிசைகின்ற கைகளையுடையவனுமாகிய அவ்வசுரன்,—அறம் கொள் சிந்தையார் நெறி செல் ஆய்வினால் உறங்கு வாரை - தரும சிந்தையுள்ளவர்களும் வழிநடந்த இளைப்பினால் நித்திரைசெய்கின்றவர்களுமாகிய அவ்வாநரரை, ஒல்லை வந்து எய்தினான் - விரைவாக வந்தடைந்தான்; (எ - று.)

இராம காரியத்திற் கருத்தாய் செல்லுதலால், வானரரை 'அறங்கொள் சிந்தையார்' என உயர்த்திக்கூறினர். ஆய்வு என்பது "ஓய்தலாய்தல்" என்ற தொல்காப்பியத்தால், முன்னைய நிலையினின்றும் நுணுகுதலென்ற பொருளைக் காட்டும்: அதாவது - வலிமையின் குறைவு என்னலாம். பிசை = பிசை: போலி. கைபிசைதல்-கொடுமைக்குறி. பி - ம்:—[1]பேரும். [2]பெட்பினால், வேகத்தால். [3]பிசையும், விசையும், மிசையும். [4]நெறிசெலோய்வினால், நெறிசெலாதினால்,

நெறிசெலாறினர். 'அறங்கொள்சிந்தையாலமுனைதாடியே' என்று சில பிரதிகளில் மூன்றுமடி. (905)

6.—அவ்வசுரன் அங்கதனை மார்பிலறைதல்.

பொய்கை யென்னதென் [1]றுணர்ந்தும் புல்லியோர்
[2]எய்தி னர்கள்யா [3]ரிதுவெ னவென
ஐய னங்கத னலங்கன் மார்பினில்
கையின் மோதினன் கால னேயனன்.

(இ - ள்.) காலன்நேர் அனன் - யமனையொத்தவனாகிய துமிரனென்ற அந்த அசுரன்,—'பொய்கை என்னது என்றுஉணர்ந்துஉம் - இந்தத்தடாகம் என்னுடையதென்று அறிந்திருந்தும், எய்தினர்கள் - இங்குவந்து சேர்ந்தவர்களாகிய, புல்லியோர் - அற்பபுத்தி யுள்ளவர்கள், யார் - எவர்? ஆ இது என் - 'ஆ இது என்ன வியப்பு!' என - என்று சொல்லிக்கொண்டே, ஐயன் அங்கதன் அலங்கல் மார்பினில் - சிறந்தவனாகிய அங்கதனது மலர்மாலையையணிந்த மார்பிலே, கையின் மோதினன் - கையினால் அறைந்தான்; (எ - று.)

'இப்பொய்கை எனதென்று பிரசித்தமாயிருக்கவும், இங்குவந்து சேர்ந்தவர்கள் அறிவில்லாதவர்களே; இப்படியும் அறிவில்லாதவர்கள் இருக்கின்றார்களே!' என்று மிக்க செருக்கினாற் கூறிக்கொண்டே, அயர்ந்து உறங்குகின்ற அங்கதனது மார்பில் ஓரறையறைந்தனன் துமிரனென்பதாம். தனது பெருமையை யாவருமுணர்வரென்ற செருக்கினால், 'பொய்கை யென்னதென் றுணர்ந்தும்' எனக்கூறினான். ஆ - வியப்பிடைச்சொல், இனி, இது என் ஆ(று) என்று எடுத்து-இவர்கள் இங்கு வந்ததற்குக் காரணம் யாது? என்று உரைத்தலுமொன்று. பி - ம்:—[1]உணர்ந்து. [2]எய்தினர்களால், எய்தினர்களார். [3]இதுவெனாவென. 'எய்தினர்களாலினிதுபோரென' என்று இரண்டாமடியும், 'கையினெற்றினன் காலன் கண்ணுளான்' என்று நான்காமடியும் சில இடத்து உள்ளன என்ப. (906)

7.—அங்கதனால் அவ்வசுரன் இறத்தல்.

[1]மற்றி மைந்தனு முறக்க மாறினன்
இற்றி வன்கொலா மிலங்கை வேந்தென
எற்றி னானைநே ரெற்றி னனவன்
முற்றி னனிகற் [2]காதி மூர்த்தியான்.

(இ - ள்.) மற்று - பிறகு, இ மைந்தன்உம் - வீரனாகிய இவ்வங்கதனும், உறக்கம் மாறினன் - நித்திரைதெளிந்தவனாய், 'இன்று இவன் இலங்கை வேந்து கொல் ஆம் - இப்பொழுது வந்துள்ள இவனே இலங்கைக்கு அரசனாகிய இராவணன்போலும்,' என - எனறுகருதி, எற்றினானை - (தன்னை) அறைந்தவனாகிய அவ்வசுரனை, நேர்எற்றினன் - தானும் அதற்குமாறாக அறைந்தான்; (அவ்

வாறு அறையவே), இகற்கு ஆதிமூர்த்தியான் அவன் - போர்த் திறத்தில் முற்பட்டுநிற்கும் தோற்றமுடையவனான அவ்வசுரன், முற்றினன் - இறந்தான்; (எ - று.)

துமிரனென்ற அவ்வசுரனு லறையப்பட்ட அங்கதன், துயிலுணர்ந்தெழுந்து அவனை இராவணனென்றே கருதி, அவனது மார்பி லறைதலும், அவ்வசுரன் கீழ்விழுந்து இறக்கலாயினனென்க. இகற்கு ஆதி மூர்த்தியான் என்பதற்கு - பராக்கிரமத்திற்கு உரிய ஒருகடவுள்போன்றவ னெனினுமாம். இற்று இவன் என்பதற்கு- இத்தன்மையையுடைய இவன் என்றுமாம். முற்றுதல் - ஆயுள் முடிந்து இறத்தல். பி - ம்:—[1] மற்றமைந்தனும். [2] ஆதிமூர்த்தி போல், 'முற்றினனுயிர்க்கந்த முற்றினன்' என்று சிலபிரதிகளில் நான்காம்அடி. (907)

8.—அவ்வசுரன் இறந்து கீழ்விழுந்தவிசையினுல் வாநரர் துயிலுணர்ந்து திரளுதல்.

[1] இடியுண் டாங்கணோ ரோங்க லிற்றதொத்து
அடியுண் டான் [2] தளர்ந் தலறி வீழ்தலும்
[3] தொடியின் தோள்விசைத் தெழுந்து சுற்றினர்
[4] பிடியுண் டாரெனத் துயிலும் பெற்றியார்.

(இ - ள்.) ஆங்கண் - அப்பொழுது [அல்லது அவ்விடத்தில்], இடியுண்டு ஓர் ஓங்கல் இற்றது ஒத்து - இடிவிழுந்ததனால் ஒருமலை வேர்பறிந்துவிழுந்ததுபோல, அடியுண்டான் தளர்ந்து அலறி வீழ்தலும் - (அங்கதனால்) அறையப்பட்டவனாகிய அவ்வசுரன் தளர்ச்சியடைந்து அலறிக் கொண்டே இறந்து கீழ்விழுந்தவுடனே, —பிடியுண்டார் என துயிலும் பெற்றியார் - (பேயினால்) பிடிக்கப் பட்டவர்போல மெய்ம்மறந்து தூங்குந் தன்மையுள்ள வாநரர்கள், தொடியின் தோள் விசைத்து எழுந்து சுற்றினர் - தொடியென்னும் ஒருவகை வளையை யணிந்த தோள்களை விரைவாக ஆட்டிக்கொண்டு எழுந்து (கீழே விழுந்துள்ள அவ்வசுரனைச்) சூழ்ந்து கொண்டார் கள்; (எ - று.)

இடிவிழப்பெற்ற மலை சரிந்து அழிதல்போல, அங்கதனலறை யுண்ட அசுரன் தரையிற்சாய்ந்து உயிரொடுங்க, வானரர்கள் யாவரும் அப்பொழுது தோன்றிய ஆரவாரத்தினால் நித்திரை தெளிந்து எழுந்து, கீழ்விழுந்த அவனைச்சூழ்ந்துகொண்டனரென் பதாம். தோள்விசைத்து - தோளைத்தட்டிக்கொண்டு என்றுமாம்; தோள்களைத்தட்டுதல் - வீரக்குறியாகும். வழிநடந்த இளைப்பினால் மெய்ம்மறந்து தூங்குதல்பற்றி, வானரர்களை 'பிடியுண்டாரெனத் துயிலும் பெற்றியார்' என்றார். பி-ம்:—[1] ஒடியுண்டாங்கணோரோங்கல் வீழ்வதொத்து. [2] தலத்து. [3] தொடியின்றோள் விசைத்தொழுது. [4] பிடியுண்டானென. (908)

9.—அநுமான் இறந்த அசுரனைப்பற்றி அங்கதனை வினவ, அதற்கு அவன் விடை கூறுதல்.

[1]யார்கொ லாமிவ [2]னிழைத்த தென்னெனுத்
தாரை சேயினைத் தனிவி னுயினுன்
மாரு தேயன்மற் றவனும் [3]வாய்மைசால்
ஆரி யாதெரிந் தறிகி லேனென்ருன்.

(இ - ள்.) மாருதேயன் - வாயுவின்மகனான அநுமான், தாரை சேயினை - தாரையின்மகனான அங்கதனைநோக்கி, 'இவன் ஆர் கொல்ஆம் - (இறந்து கீழ்விழுந்துகிடக்கும்) இவன் யாவனோ? இழைத்தது என் - (இவன்) செய்தது யாது?' எனு - என்று, தனி வினுயினுன் - தனியாகக் கேட்டான்; மற்று - பின்பு, அவன்உம் - அவ்வங்கதனும், (அநுமானைநோக்கி), 'வாய்மை சால் ஆரியா - சத்தியந்தவருத பெரியோனே! தெரிந்து அறிகிலேன் - (யான் இவனைப்பற்றி) ஒன்றும் அறியேன்,' என்ருன் - என்றுவிடை கூறினுன்; (எ - று.)

இவன் - மத்திமதீபம். பி - ம்:—[1]யார்கொலாமிவண், யாரிவன் கொலாம். [2]இழைத்ததென்னென, இகழ்ந்ததென்னென, நிகழ்ந்த தென்னென, புகழ்ந்ததென்னென. [3]வாய்மையோய். (909)

10.—அவ்வசுரனது வரலாற்றை ஜாம்பவான் எடுத்துரைத்தல்.

யானி வன்றனைத் தெரிய வெண்ணினேன்
[1]தூநி வந்தவேற் [2]றுமிர னென்னும் [3]பே
[4]ரானிவ் வாழ்புனற் பொய்கை யாளுமோர்
தான வன்னெனச் சாம்பன் சாற்றினுன்.

(இ - ள்.) (அதுகேட்டு), சாம்பன் - ஜாம்பவான்,—(அநுமானை நோக்கி), 'யான் இவன்தனை தெரிய எண்ணினேன் - யான் இவ்வசுரனைப்பற்றி இன்னுனென்று தெரியுமாறு நன்ருக ஆலோசித்துப் பார்த்தேன்; (இவன்), தூ நிவந்த வேல் துமிரன் என்னும் பேரான் - (பகைவரதுஉடலின்) மாமிசம் நிறைந்துள்ள வேலாயுதத்தைத் தாங்கிய துமிரனென்னும் பெயரையுடையான்: இ ஆழ் புனல் பொய்கை ஆளும் ஓர் தானவன் - ஆழ்ந்தநீர்நிலையையுடைய இந்தப் பொய்கையை அரசாள்கின்ற ஓரசுரனுவன்,' என சாற்றினுன் - என்று சொன்னுன்; (எ - று.)

திருமால் திரிவிக்கிரமாவதாரஞ்செய்த காலத்தில் அவன் திருவடி உலகத்திற் பரவியதைக்காணுமாறு ஜாம்பவான் பலமுறை பூமியை வலம்வந்தவனுதலால் உலகத்திலுள்ள பலவிஷயங்களை யும் தெரிந்தவனுதல் பற்றி, அவன் இவ்வசுரனை இன்னுனென்று வினவியறிந்திருந்தன னென்க. தூ - மாமிசம். பி-ம்:—[1]தூணிவந்த தோள், தூநிவந்ததோள். [2]தூமுரன்னெனும், துன்முரன் னெனும், துமுகனென்னும்பேர், தூம்ரன்னருள். [3]பேரானவாம் புனல், பேரானிவ்வன்புனல். [4]போனவன்பெரும், ஆனவன்

பெரும், ஆனவன்புனல், பூநறும்புனல், போனவாழ்புனல், பேரவன் பெரும்.

பாலைவனத்தைக் கடந்தபின் சில இடங்களில் வானரர் சீதையைத்தேடிக்கொண்டு பயங்கரமான ஓரிடத்து நுழைகையில் ஓராக்கனைக்கண்டனர்: இராவணனென்று கருதப்பெற்ற அவன் வானரர்களைக்கொன்றிடுவதாக முழங்கிக்கொண்டுவர, அவனை அங்கதன் ஓரறை யறைய, அவன் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு வீழ்ந்திறந்தான். சீதையை மீளவுந்தேடிச்செல்பவராய்ப் பிலத்தையடைந்தன ரென்று ஸ்ரீவான்மீகத்திலுள்ளது. (910)

11.—வாநரர் துயில்தெளிந்து சீதையைத் தேடத் தொடங்குதல்.

[1]வேறு மெய்துவா ருளர்கொ லாமெனத்
தேறி யின்றுயிற் [2]செலவு தீர்ந்துளார்
[3]வீறு செஞ்சுடர்க் கடவுள் வேலைவாய்
[4]நாற நாண்மலர்ப் பெண்ணை [5]நாடுவார்.

(இ - ள்.) செலவு தீர்ந்துளார் - மேற்செல்லுதலைத் தவிர்ந்து அங்கு இளைப்பாறிய வானரவீரர்கள்,—வேறுஉம் எய்துவார் உளர் கொல் ஆம் என - 'இன்னும் இங்கு வேறாகவும் (இவனைப் போன்ற அசுரர் போர்க்கு) வருபவர் இருக்கிறார்களோ?' என்று எண்ணி, இன் துயில் தேறி - (தமது) இனிய தூக்கந்தெளிந்து, (அங்ஙனம் வருபவர்களைச்சிறிதுநேரம் எதிர்நோக்கியிருந்து பிறகு), வீறு செஞ் சுடர் கடவுள் வேலைவாய் நாற - பெருமை பொருந்திய சிவந்த கிரணங்களையுடைய சூரியபகவான் கீழ்திசைக்கடலில் விளங்க [சூரியோதயமாக], நாள் மலர் பெண்ணை நாடுவார் - அன்றலர்ந்தது போன்றுள்ள [வாடாத] தாமரைமலரில் வீற்றிருக்கின்ற இலக்குமியின் அவதாரமான சீதாபிராட்டியைத் தேடுவாரானார்கள்; (எ - று.)

வானரவீரர் 'இன்னும் இவன்போன்ற அசுரர் வேறுயாரேனும் போர்க்கு வருதல்கூடும்' என்று தூங்காமல் விழித்துக் கொண்டு எதிர்பார்த்திருந்து சூரியனுதயமாகுந் தருணத்தில் சீதையைத் தேடுமாறு அங்குநின்று வெளிச்செல்லலானார்க ளென்பதாம். வேறும் எய்துவார் உளர்கொல்ஆம் - இத்துமிரனைத்தவிர வேறு இங்கு யார்தான் இருப்பார்? [இப்பொய்கை இவனுடையதாகவே இருக்கும்] என்று உரைப்பாருமுளர். பி - ம்:—[1]வேறுமெய்துவா ருளர்கொன்மேலென. [2]செய்தல். [3]ஊறு...கீழ்கடல்...மேவிட. [4]நாறு. [5]நாடுவான், நண்ணினர், நண்ணினன். (911)

12.—வாநரவீரர் பெண்ணை நதியைச் சார்தல்.

புண்ணை வெம்முலை புளின [1]மேய்தடத்து
[2]உண்ண வாம்பசி னமுத [3]மூறுவாய்
வண்ண [4]வொண்ணகை தரள வாண்முகப்
[5]பெண்ணை நண்ணினர் பெண்ணை நாடுவார்.

(இ - ள்.) பெண்ணை நாடுவார் - சீதாபிராட்டியைத் தேடுபவர்களாகிய வானரவீரர்கள்,—புளினம்-மணற்குன்றுகளாகிய, புள் நை வெம்முலை - சக்கரவாகப்பறவைகள் (ஒப்பாகாமையால்) வருந்துதற்குக் காரணமான விருப்பத்தையுண்டாக்குந் தனங்களையும், தடத்து ஏய் ஆம்பலின் - நீர்நிலையிற் பொருந்திய செவ்வாம்பல் மலராகிய, உண்ண அமுதம் ஊறு வாய் - அதரபானஞ்செய்யுந்தோறும் அமுதம்போன்ற இனியரசம் சுரக்கின்ற வாயையும், தரளம் - முத்துக்களாகிய, வண்ணம் ஒள் நகை - அழகிய ஒளிபொருந்திய பற்களையும், வாள் முகம் - (தாமரைமலராகிய) ஒளிபொருந்திய முகத்தையுமுடைய, பெண்ணை - பெண்ணைநதியாகிய பெண்ணை, நண்ணினர் - சென்று சேர்ந்தார்கள்; (எ - று.)

'பெண்ணை' என்பதிலுள்ள சிலேடைநயம்பற்றி, பெண்ணை நதியை ஒரு பெண்ணாக உருவகப்படுத்தினர்; இச்சொல் - நதியைக் குறிக்கும்போது இரண்டாம்வேற்றுமைத்தொகையும், மற்றொரு பொருளில் இரண்டாம் வேற்றுமைவிரியுமாம். பெண்ணைநதியாகிய பெண்ணுக்கு—மணற்குன்றுகளைத் தனபாரங்களாகவும், செவ்வாம்பல்மலரை வாயாகவும், முத்துக்களைப் பற்களாகவும், தாமரைமலரை முகமாகவும் கொண்டனர்: சிலேடையணியை அங்கமாகக்கொண்டு வந்த இயைபுருவகவணி. பெண்ணைநண்ணினர் பெண்ணைநாடுவார் என்ற இடத்தில், காரணத்திற்கேற்ற காரியம் தோன்றியதாகக் கூறப்படுகின்ற தகுதியணி காண்க. 'அலம்புமா மணியாயத் தோடகிலளைபுளின, நலம்பெய் பூண்முலை நாகிளவஞ்சியாமருங்குற், புலம்பு மேகலைப் புதுமலர்ப் புனையறற்கூந்தற், சிலம்புசூழுங்காற் சோணமாந் தெரிவையைச் சேர்ந்தார்'' என்றவிடத்தும் நதியைப் பெண்ணாக உருவகஞ் செய்திருத்தல் காண்க. 'புள்நைமுலை' என்றவிடத்தில், உவமையாதற்கு உரிய சக்கரவாகப்பறவையை உபமேயமாகிய தனங்களினும் தாழ்த்திக் கூறியது, எதிர்நிலையணி. 'வாள்முகம்' எனக் கூறியதனால், 'தாமரையாகிய' என வருவித்து உரைக்கப்பட்டது. உயர்ச்சியில், தனங்களுக்குப் புளிநம் உவமையாம். பெண்ணை - வேன்கங்காநதி. பி - ம்:—[1]மெய்த்தடத்து. [2]உண்ணவுண்ணவீயமிழ்தம், உண்ணவுண்ண வின்னமிழ்தம், உண்ணவுண்ணமின்னமிழ்தம். [3]ஊறவாய், ஊற்றுவாய். [4]வெண்ணகை. [5]பெண்ணைநாடுவார் பெண்ணைநண்ணினர். 'மொண்ணைவெம்முலைப் புளின மொய்தடத்து' என முதலடியில் பாடம் காணப்படுகின்றதென்ப. (912)

13.—பெண்ணை நதியைச் சார்ந்தவிடங்களில் வானரவீரர் சீதையைத் தேடுதல்.

துறையுந் தேமைகைநின் [1]றுடுஞ் சூழலும்
[2]குறையுஞ் சோலையுங் [3]குளிர்ந்த சாரல்நீர்ச்
சிறையுந் தெள்ளு[4]பூந் தடமுந் தெண்பளிக்கு
அறையுந் தேடினா ரறிவின் [5]கோடியார்.

(இ-ள்.) அறிவின் கோடியார் - அறிவின் எல்லையை யடைந்தவ ராகிய [பேரறிவினராகிய] வானரவீரர்,—துறைஉம் - (அந்நதியின்) இறங்கு துறைகளிலும், தோகை நின்று ஆடு சூழல்உம் - மயில்கள் நின்று கூத்தாடுகின்ற இடங்களிலும், குறைஉம் - யாற்றிடைக் குறையாகிய தீவுகளிலும், சோலைஉம் - பூஞ்சோலைகளிலும், குளிர்ந்த சாரல் நீர் சிறைஉம் - குளிர்ச்சியான பக்கங்களி லமைந்த நீர்நிலைகளி லும், தெள்ளு பூ தடம்உம் - தெளிவான மலர்கள் நிறைந்த தடாகங் களிலும், தெள் பளிங்கு அறைஉம் - (அங்குள்ள) நிர்மலமான பளிங் குப்பாறைகளிலும், தேடினர் - (சீதையைத்) தேடினார்கள்; (எ - று.) —நீர்ச்சிறை-கரைகட்டித்தடுத்த நீர்நிலை. அறை - பாறை. பி - ம்:— [1]ஆடு. [2]குறைவில். [3]குளிர்ந்தசாலைநீர், குளிர்ந்தசாலினீர். [4]நீர்த்தடமும். [5]வேள்வியார், நீடியார், நீடினர். (913)

14.—வானரர் பெண்ணை நதியின் தென்கரையைச்சேர்தல்.

அணிகொ ழித்துவந் [1]தெவரு மாடினர்
[2]பிணிகொ ழித்தவெம் பிறவி வேரின்வன்
துணிகொ ழித்தருஞ் சுழிகள் தோறுநன்
[3]மணிகொ ழிப்பதன் கரையின் வைகினர்.

(இ - ள்.) அணி கொழித்து வந்து - அழகாக அலைவீசிக் கொண்டுவந்தும், ஆடினர் எவர்உம் (தன்னில்) மூழ்கினவர் எவ ராயினும், பிணி கொழித்த வெம் பிறவி வேரின் வல் துணி கொழி த்து - நோய்கள் நிறைந்த கொடுமையான (அவரது) பிறப்புக்களி னது வேர்களின்வலிய துண்டுகளை யடித்துக்கொண்டு, அருஞ் சுழிகள்தோறுஉம் - (அகப்பட்டவர் தப்புதற்கு) அருமையான (தன்னிலுள்ள) நீர்ச்சுழிகளிலெல்லாம், நல் மணி கொழிப்பதன் - சிறந்த இரத்தினங்களை வாரிக்கொண்டும் வருகின்ற பெண்ணை நதியினது, கரையின் - தென் கரையிலே, வைகினர் - (வானரவீரர்) வந்து தங்கினார்கள்; (எ - று.)

தன்னில்மூழ்கியவர் எத்துணைப்பாதகராயினும் அவரது பிறவிக் குக்காரணமான பாவங்களையெல்லாம்போக்கி அவர்க்கு முத்தியளிக்க வல்ல மகிமையுள்ளதும், நீர்ச்சுழிகளில் இரத்தினங்களைக் கொழித்து வரும் வளமுள்ளதுமான பெண்ணைநதியின் அக்கரையாகிய தென் கரையை யடைந்து வானரவீரர்கள் தங்கின ரென்பதாம். பிணி கொழித்த வெம்பிறவி - "நோயெலாம்பெய்ததோராக்கை". 'ஆடினர் எவரும் பிறவிவேரின்வன்றுணிகொழித்து' என்றது - தனனில் மூழ்கியவரது பிறப்புக்குக் காரணமான பாவங்களையெல்லாம் அடி யோடு ஒழித்தலா லென்க. பிறவிவேர் - பிறப்புக்குக்காரணமான வினைகள். 'கொழித்தல்' என்னும் வினைச்சொல் வெவ்வேறு பொரு ளில் பலமுறை வந்தது - சொற்பின்வருநிலையணியின் பாற்படும். பி - ம்:—[1]எவருமாடினல், எவருமாடுவார். [2]பிணிகொழித்தகிற்பிள

வொடாரவன். [3]மணிகொழித்ததென்கரையின், மணிகொழித்திடுந் துறையின், மணிகொழிப்பதன் துறையில். (914)

15.—வானரர் தசநவநாடு அடைதல்.

ஆடு பெண்ணை நீ ராறு மேறினர்
காடு நண்ணினர் [1]மலைக டந்துளார்
வீடு நண்ணினு ரென்ன வீசுநீர்
[2]நாடு நண்ணினர் [3]நாடு நண்ணினர்.

(இ - ள்.) நாடு நண்ணினர் - (சீதையைத்) தேடுதல்தொழிலை மேற்கொண்டவராகிய வானரவீரர்கள்,—நீர் ஆடு பெண்ணை ஆறு உம் ஏறினர் - நீராடுதற்குரிய பெண்ணைநதியைக் கடந்தவர்களாய் [கடந்த பிறகு],—காடு நண்ணினர் - பலகாடுகளிற் சென்றவர்களாயும், மலை கடந்துளார் - பலமலைகளைத் தாண்டியவர்களாயும், வீடு நண்ணினர் என்ன - முத்தியுலகத்தையடைந்தவர்கள்போல, வீசு நீர் நாடு நண்ணினர் - அலையெறிகின்ற நீரையுடைய தசநவ நாட்டை யடைந்தார்கள்; (எ - று.)

வானரர்கள் பலகாடுகளிலும் மலைகளிலும் அலைந்துதிரிந்து இறுதியில் நீர்வளமுள்ள தசநவநாட்டை யடைந்ததற்கு, பல பிறவிகளில் அலைந்து திரிந்தவன் இறுதியில் முத்தியுலகத்தை யடைவதை உவமைகூறினர்: இதனால், அந்நாடு பலவளங்களும் நிரம்பி மிகவும் இனியதாயிருக்கு மென்பது பெறப்படும். முதலடி - கீழ்க்கவியின் அநுவாதம். 'நாடு' என்னுஞ் சொல் இரண்டனுள், பிந்தியது-முதனிலைத்தொழிற்பெயர். வீசுநீர் என்பதை 'வீசிநீர்' எனப்படித்து, வீசி - அலை என்பாருமுளர். பி - ம்:—[1]கலை. [2]நாடன்ணினர். [3]நவையினண்ணலார், நாடநண்ணினர். (915)

16.—வாநரவீரர் விதர்ப்பநாட்டை யடைதல்.

[1]தசந வப்பெயர்ச் சரள சண்பகத்
[2]தசந வப்புலத் [3]தகணி நாடொரீஇ
உசந வப்பெயர்க் கவியு தித்தபேர்
இசைவி தர்ப்பநா டெளிதி னெய்தினர்.

(இ - ள்.) தசநவம் பெயர் - தசார்ணமென்னும் பெயரையுடைய, சரளம் சண்பகத்து - தொகுதியான செண்பகமரங்களையுடையதும், அசநம் அ புலத்து அகணி - உணவையுண்டாக்குகின்ற அழகிய விளைநிலங்களைக் கொண்ட மருதநிலங்களை யுடையது மாகிய, நாடு - நாட்டை, ஒரீஇ - விட்டுநீங்கி,—உசநவன் பெயர் கவி உதித்த - உசநஸ்என்னும் பெயரையுடைய சுக்கிரன் பிறந்த, பேர் இசை விதர்ப்பம் நாடு - மிக்கபுகழையுடைய விதர்ப்ப தேசத்தை, எளிதின் எய்தினர் - எளிதாகச் சென்று சேர்ந்தார்கள், (வாநரவீரர்கள்); (எ-று.)

தசநவம் - தசார்ணம் என்ற வடசொல்லின் திரிபு: ("தசார்ணோதேச:" என்று கௌமுதீயென்னும் வடநூலிற் கூறப்பட்

டிருக்கின்றது;) அந்நாடு சண்பகமரத்தொகுதிகளையும் நல்ல விளையுளைக்கொண்ட புலங்களையுமுடையதென்க. சரளம் - அழகுமாம். உசநவப்பெயர்க்கவி - "உசநா பார்க்கவ: கவி:" என்பது, வடமொழி நிகண்டு. நவக்கிரகபூஜையில் சுக்கிரனை "விதர்ப்பதேசியன்" எனக் கூறுதல்பற்றி, 'உசநவப்பெயர்க்கவியுதித்தபேரிசை விதர்ப்பநாடு' என்றார்.

[1]'தசநவப்பெயர்த்தாலசண்பகத்,தசனவப்பிரத்தகனறடொரீஇ' என்ற பாடத்திற்கு - தசனவப்பெயர் (த்து) - தசனவ மென்னும் பெயரையுடைய முல்லையையும், தாலம் சண்பகத்து-தேன்பொருந்திய சண்பகத்தையும், அசனம் - வேங்கையையும், அப்பிரத்து - மாமரங்களையுமுடைய, அகல் நாடு - அகன்ற நல்ல நாட்டை, ஒரீஇ - நீங்கி என்று பொருளாம்; இப்பொருளில், தசனவம் என்பது-திசைச்சொல் என்பர். 'தசனவப்பெயர்த்துத்தால' என்பது 'தசனவப்பெயர்த்தால' என விகாரப்பட்டது. [2]'அசனவப்பிரத்தகனறடு' என்பதற்கு—அசனம் - வேங்கைமரங்களிலே, அப்பிரத்து - மேகங்கள் படிதலையுடைய, அகல் - பரந்த, நல்நாடு என்றும் பொருள் கொள்ளலாம். வப்பிரம் என்று பிரித்து - தாழ்வரையென்று கூறுதற்கும் இடமுண்டு. [2]'அசனவப்பிறந்தகனறடு' என்ற பாடம்—அசனம் - உணவுக்குக்காரணமான, அப்பு - நீர்ப்பெருக்கானது, இறந்து - வரம்பு கடந்துபெருகி, அகல் - செல்லப்பெற்ற, நல்நாடு என்று பொருள் படும். பி - ம்:—[1] தசமெனும்பெயர்த்தளவசண்பகம்,......தரள சண்பகத்து, தசநவப்பெயர்த்தாழைசண்பகத்து, தசநவப்பெயர்த் தளவச்செண்பகத்து,......சாலசெண்பகத்து. [3] அகனநாடொரீஇ, அகனறுடற. (916)

17.—விதர்ப்பநாட்டில் வாநரவீரர் சீதையைத் தேடுதல்.

[1]வைத ருப்பமண் டலனில் வந்துபுக்கு
எய்த ருப்ப[2]மத் தனையு மெய்தினர்
[3]பெய்த ருப்பைநூல் பிறழு மேனியார்
செய்த வத்துளார் [4]வடிவிற் றேடினர்.

(இ - ள்.) (வாநரவீரர்கள்),—வைதருப்பம் மண்தலனில் வந்து புக்கு - விதர்ப்பதேசத்தைச்சேர்ந்ததான பூமியினிடத்தில் வந்து சேர்ந்து, எய்து அருப்பம் அத்தனைஉம் எய்தினர் - (அந்நாட்டிற்) பொருந்தியுள்ள ஊர்களெல்லாவற்றையும் அடைந்தவர்களாகி,— பெய் தருப்பை நூல் பிறழும் மேனியார் செய் தவத்துளார் வடிவின் - (கையிற்) பூண்டுள்ள தருப்பைகளினாலும் (மார்பிலணிந்துள்ள) பூணூலினாலும் விளங்குகின்ற உடம்பையுடையவர்களாகிய தவம் செய்யும் முனிவரது வடிவைக்கொண்டு, தேடினர் - சீதையைத் தேடினார்கள்; (எ - று.)

விதர்ப்பநாட்டையடைந்த வாநரவீரர்கள் முனிவர்வடிவு கொண்டு அங்கு உள்ள ஒரூரையும் விடாது புகுந்து சென்று

சீதையைத் தேடினார்களென்பதாம். மனிதர்கள் வாழ்கின்ற ஊர்களிற் சென்று வாநரவடிவுடன் தேடுதல் இயலாதாதலால், வேண்டுமுருவங்கொள்ளும் வல்லமையுடைய அவ்வாநர வீரர் விதர்ப்ப நாட்டைச்சேர்ந்த ஊர்களிற் சென்று நாடுகையில் மிக்க கௌரவத்திற்கு இடமாய் ஐயப்பாட்டிற்குச் சிறிதும் இடனல்லாத முனிவரதுவடிவைக் கொண்டன ரென்க. 'பெய்' என்பதை, நாலுக்குங் கூட்டுக. வைதருப்பம் - விதர்ப்பசம்பந்தமானது: வடமொழித்தத்திதாந்தநாமம். அருப்பம் - ஊர். செய்தவம் - செய்கின்றதவம்; செம்மையான தவம் எனினுமாம். [3]'மெய் தருப்பைநூல் பிறழுமேனியார், செய்தவத்துளாள் வடிவு தேடினார்' என்ற பாடத்திற்கு - உண்மையான தருப்பைபோலவும் நூல் போலவும் விளங்குகின்ற [போலீச்சலினால்மிகவும் இளைத்துத் தோன்றுகின்ற] சரீரமுடைய வாநரர்கள் இராமனைப்பற்றிய தியானத்தையே கொண்டிருப்பவளான சீதையினது வடிவத்தை [சீதையை]த் தேடினார்கள் என்று பொருளாம். பி - ம்:—[1]...நாடதனில்,...மண்டலத்துள், வைதருப்பன்மாநகரில். [2]எத்தனையும். [3]மெய். [4]வடிவதேயினார், வடிவதேயனார், வடிவுதேடினார், வடிவ மெய்தினார். (917)

18.—வாநரவீரர் தண்டகாரணியத்தை அடைதல்.

அன்ன [1]தன்மையா லறிஞர் [2]நாடியச்
செந்நெல் வேலிசூழ் [3]திருநன் னாடொரீஇத்
[4]தன்னை யெண்ணுமத் தகைபு குந்துளார்
துன்னு தண்டகங் கடிது துன்னினார்.

(இ - ள்.) அறிஞர் - அறிவுடையவர்களான வாநரவீரர்கள்,— அன்ன தன்மையால் நாடி - அவ்வாறாகத்தேடிக்கொண்டு, அ செம் நெல் வேலி சூழ் திரு நல் நாடு ஒரீஇ - செந்நெற்பயிர்கள் விளையும் வயல்கள் சூழ்ந்த சிறந்த அழகிய அந்தவிதர்ப்ப நாட்டை விட்டு,—தன்னை எண்ணும் அ தகை புகுந்துளார் துன்னு தண்டகம் - ஆன்மசொரூபத்தைத் தியானிக்கின்ற அத்தன்மை பொருந்தியவரான முனிவர் மிகுதியாக வசிக்கின்ற தண்டகாரணியத்தை, கடிது துன்னினார் - விரைவாகச் சென்று சேர்ந்தார்கள்; (எ - று.)

தன்னையெண்ணும் அத்தகை புகுந்துளார் - சீவான்மசொரூபத்தை உள்ளபடியுணர்ந்து காண வல்ல யோகியர் என்றபடி. வேலி- வயல். நல்நாடு - வளமுள்ள நாடு. பி - ம்:—[1]அன்னதன்மையார். [2]நாடியே. [3]சிந்துநாடு, திருந்துநாடு. [4]தன்மமெண்ணுமத்தகை, தன்னையெண்ணுமங்கவர். (918)

19.—வாநரர் முண்டகத்துறையை யடைதல்.

[1]உண்ட கத்துள்ளா ருறையு மைம்பொறிக்
[2]கண்ட கர்க்கருங் கால னயினார்

தண்ட கத்தையுந் தடவி [3]யேகினர்
முண்ட கத்துறை கடிது முற்றினர்.

(இ - ள்.) உண்டு அகத்துள் ஆர் உறையும் - (தமக்குரிய புலன்களை) அநுபவித்துக்கொண்டு உடம்பினுள் பொருந்தி வசிக்கின்ற, ஐம் பொறி கண்டகர்க்கு - பஞ்சேந்திரியங்களாகிய துஷ்டர்களுக்கு, அருங் காலன் ஆயினர் - கொடுமையான யமன்போன்றவர்களாகிய முனிவர்கள் வசிக்கின்ற, தண்டகத்தையும் - அந்தத் தண்டகாரணியத்தையும், தடவி ஏகினர் - தேடிச் சென்றவர்களாய்,—(வாநரவீரர்கள்), முண்டகத்துறை கடிது முற்றினர் - முண்டகத்துறை யென்னுமிடத்தை விரைவாகச் சேர்ந்தார்கள்; (எ - று.)

பஞ்சேந்திரியங்கள் ஆன்மாவை நற்கதியிற்சேரவொட்டாது துன்புறுத்தலால், அவற்றை 'கண்டகர்' என்றனர். ஐம்பொறிக் கண்டகர்க்கு அருங்காலனாயினர் - ஐம்பொறிகளை வென்றவரென்றபடி: மனத்தைநல்வழியிற்செல்ல வொட்டாதுதடுத்து ஐம்புலன்களிற் செல்லுமாறு இழுக்கின்ற ஐம்பொறிகளை அங்ஙனஞ்செய்ய வொட்டாது தடுத்துத் தம்வசமாக்கிமனத்தைச்சிவாத்மபரமாத்மதியானங்களிற் செலுத்தும் வல்லமையுடையவர் ஜிதேந்திரியரெனப்படுவர். பி - ம்:—[1]உண்டகத்துளாயுழலும். [2]கண்டகர்த்தெறுங்காதலர்கடாம் அல்லது கருணையோர்கள்வாழ், கண்டகத்தருங்கானநாடினர், கண்டகர்த்தெறுங் காலனாயினர். [3]எய்தினர். (919)

20.—இதுமுதல் மூன்றுகவிகள் - முண்டகத்துறையின் வருணனை.

[1]அள்ளல் நீரெலா மமரர் மாதரார்
[2]கொள்ளை மாமுலைக் [3]கலவை கோதையின்
கள்ளு நாறலிற் கமல வேலிவாழ்
புள்ளு மீனுண புலவு தீர்தலால்.

(இ - ள்.) (அந்தமுண்டகத்துறையில்),—அள்ளல் நீர் எலாம் - குழைசேற்றோடு கூடிய நீர்முழுவதிலும்,—அமரர் மாதரார் - (அங்கு வந்திறங்கி ஸ்நானஞ்செய்யும்) தேவமாதர்களது, மா முலை கொள்ளை கலவை கோதையின் - பெரியதனங்களிலணிந்த மிகுதியான கலவைச் சாந்தினாலும் மலர்மாலைகளினாலும், கள்ளு நாறலின் - நறுமணம் வீசுதலினால், புலவு தீர்தலால் - புலால்நாற்றம் நீங்குதல் பற்றி, கமலம் வேலி வாழ் புள்உம் மீன்உண - அம்முண்டகத்துறையில் வசிக்கின்ற பறவைகளும் (அங்குள்ள) மீன்களைப் புசிப்பதில்லை; (எ - று.)

அம்முண்டகத்துறையில் வந்து நீராடுகின்ற தேவமாதர்களது தனங்களில் அணிந்திருந்த கலவைச் சந்தனங்களும் மலர்மாலைகளும் படிதல்பற்றி அங்குள்ள மீன்களும் அக்கலவை கோதைகளின் நறுமணத்தை யடைந்து தமதுபுலால்நாற்றம் நீங்கப் பெறுதலினால், அங்குள்ள நாரைமுதலிய நீர்ப்பறவைகள் அம்மீன்

களை உண்ணமாட்டா வென்பதாம். இதனால், அம்முண்டகத்துறை, திரள் திரளாகத் தேவமாதர்பலர் வந்து படியப்பெற்ற சிறப்புவாய்ந்த தென்பது போதரும். புலால்நாற்றத்தையே விரும்பி மச்சங்களைப் புசிக்கும் பறவைகட்கு அப்புலால்நாற்றம் நீங்கவே, அம்மச்சங் களிடத்து விருப்பமொழிந்த தென்க. இங்கு மீன்கள் தமக்குரிய புலால்நாற்றம் நீங்கி, கலவைகோதைகளின் நறுமணத்தைப்பெற்றன வாகக்கூறியது - பிறிதின்குணம்பெறலணியின்பாற்படும். கமல வேலி = முண்டகத்துறை. பி - ம்:—[1] அள்ளிநீரெலாம், அள்ளுநீரெ லாம். [2] கொள்ளுமாமுலை, துள்ளுமாமுலை. [3] கலவைதோய்கையின். 'பௌள்ளைமாமுலைக் கலவைப்பொய்கையில்' என்று சிலபிரதிகளில் இரண்டாமடி. (920)

21. [1] குஞ்ச ரங்குடைந் தொழுகு கொட்பதால்
விஞ்சை மன்னர்பால் [2] விரக மங்கைமார்
[3] நஞ்சு வீணையி [4] னடத்து பாடலான்
[5] அஞ்சு வார்கணீ ரருவி யாறரோ.

(இ - ள்.) விஞ்சை மன்னர்பால் - காமநூலில்வல்ல ஆடவர் களிடத்தில், விரகம் - பிரிவினால் வேதனைப்படுகின்ற, மங்கைமார் - மகளிர்,—வீணையின் நடத்து - (பிரிதலில்லாத மகளிர் களிப்புக் கொண்டு) யாழினால் வாசிக்கின்ற, பாடலான் - இசைப்பாட்டினால் [இசைப்பாட்டைக் கேட்டு அதனால்], நஞ்சு - மனங்கசிந்து, அஞ்சுவார் - நடுங்குவார்கள்; கண் நீர் அருவி ஆ - (அங்ஙனம் அஞ்சுதலால் அவர்கள் சொரிகின்ற) கண்ணீர்ப்பெருக்கானது,-குஞ்சரம் குடைந்து ஒழுகு கொட்பது - யானைகள் அமிழ்ந்துமுழுகுகின்ற தன்மையுடைய தாகும்; (எ - று.)—ஆல், அரோ - ஈற்றசைகள்.

தம்தம் கணவரைப் பிரிந்தவராய் அங்குஉள்ள மகளிர், தம் மைப்போலப் பிரிவின்றியிருப்பவர்கள் மனக்கிளர்ச்சியோடுவீணை களைக் கொண்டு பாடும் பாடலைக் கேட்டு, காமநோயை வளர்ப்பவை யான அந்த இசைகளினொலியால் வருந்தி விரகவேதனையுற்று மன நடுங்கிக் கண்ணீரையுகுப்பர்; அக்கண்ணீர்ப்பெருக்கு, யானைகளும் அமிழ்ந்துமுழுகும் நீர்ப்பெருக்காகு மென்பதாம். இங்ஙனம் பொரு ளின்பம்பயக்குமாறு வருணித்துக்கூறுதலை 'கௌடநெறி' என்பர், தண்டியாசிரியர். இது - தொடர்புயர்வுநவிற்சியணியின் பாற்படும். விஞ்சை மன்னர் - காமநூல்களைக்கற்றுத் துறைபோய ஆடவர்; வித்தியாதர அரசரெனப் பொருள் கூறுவாருமுளர். வீணைப் பாடல் காதலைவளர்ப்பதாகிப் பிரிந்தோரை வருத்துதலின், 'வீணை யின் நடத்துபாடலால் நஞ்சு அஞ்சுவார்' என்றார்; இக்கருத்துப்பற்றி யன்றே, ஆசிரியர் பின்னரும் "அளந்த பாடல்வெவ்வரவு தஞ்செவி புக வலமரலுறுகின்றார்" என்றும், "காமயாழ்த் தேளினால் திகைப் பெய்துகின்றார்சிலர்" என்றும் கூறியது. விரஹம் - வடசொல். நஞ்சு = நைந்து: போலி.

'குஞ்சரங்களித்தோங்குகொல்லைவாய், விஞ்சைமன்னர்பால் விற்கு மங்கைமார், நஞ்சுவீணையினடத்துபாடலா, லஞ்சுவார்கணீ

ருவியாருடே' என்ற பாடத்துக்கு - குஞ்சரம் களித்து ஓங்கு கொல்லைவாய் - யானைகள் களித்துவளருங்கொல்லை நிலங்களில், பால் விற்கும் மங்கைமார் - பால்விற்கும் மகளிர், வீணையின் நடத்து பாடலால் - வீணையிசைபோலப் பாடல்பாடுதலினால், விஞ்சை மன்னர் - (இசைப்பாடலில்வல்ல) வித்தியாதரவரசர், நஞ்சு - (நமது பாடலினிசை இந்தமகளிரதுகுரலின் இன்னோசைக்கு முன்னே எத்தன்மையதாகும்! என்று) வருந்தி, கண்ணீர் அருவியாருடே அஞ்சுவார் - கண்ணீர்ப்பெருக்கைச்சொரிதலோடு அஞ்சுவார்கள் என்று பொருள் காண்க. பி - ம்:—[1] குஞ்சரங்குளித்தோங்குகொல்லைவாய், குஞ்சரங் களித்தொழுகுகொல்லைவாய், குஞ்சரங்களுற்றோங்குகொல்லைவாய், குஞ்சரங்களிற்குழுவுசோலைவாய். [2] விரதமங்கைமார், விற்குமங்கைமார். [3] நஞ்சவீணையின், நைஞ்சுவீணையின், நஞ்சுவீணையின். [4] நவின்று பாடலால், நவின்றபாடலால், நடத்தும்பாடலால், நடித்தும்பாடலால், நடித்துப்பாடலான். [5] அஞ்சுவாசரீர். (921)

22. [1] கமுக வார்நெடுங் கனக வூசலில்
குமுத வாயினார் குயிலை யேசுவார்
சமுக வாளியுந் தனுவும் [2] வாண்முகத்து
[3] அமுத பாடலார் [4] மருவி யாடுவார்.

(இ - ள்.) குமுதம் வாயினார் - செவ்வாம்பல்மலர்போன்ற வாயையுடையவர்களும், குயிலை ஏசுவார் - (தமதுகுரலால்) குயிலையும் பழிப்பவரும், சமுகம் வாளிஉம் தனுஉம் வாள் முகத்து அமுதம் பாடலார் - கூட்டமான மன்மதபாணங்களைப்போன்ற கண்பார்வைகளையும் (மன்மதனது) வில்லைப்போன்ற புருவங்களையும் (தமது) ஒளிபொருந்திய முகத்திலேயுடைய அமுதம்போன்ற இசைப்பாடலைப் பாடுகின்றவருமாகிய மகளிர்,—கமுகம் வார் நெடுங் கனகம் ஊசலில் - பாக்குமரங்களிற் கட்டப்பட்டுள்ள மிகவும் நீளமானபொன்னூசலில், மருவி ஆடுவார் - இருந்து ஆடுவார்கள்; (எ - று.)

அங்குப் பாக்குமரங்களிற் கட்டப்பட்டுள்ள பொன்னூசல்களில் மகளிர் மனமகிழ்ந்து ஆடுவாரென அவ்விடத்தின்அமைதியை வருணித்தவாறு. குயிலையேசுவார் என்றது - குயிலினும் இனிய குரலையுடையவரென்றபடி. தாமரை, அசோகு, தேமா, முல்லை, கருங்குவளை என்ற ஐந்துமலர்கள் - மன்மதனது பஞ்சபாணங்களாம். மன்மதனது பாணங்களின் செயலை இம்மகளிரது கண்பார்வைகள் தமக்கு இலக்காகிற ஆடவர்க்கு விளைத்தலால், அப்பார்வைகளை 'சமுகவாளி' என்றார். மன்மதனது தனு - மகளிரது புருவத்துக்கு, வடிவும் தொழிலும் பற்றிய உவமையாம். சமுகவாளி, தனு என்று உபமேயத்தை உபமானப்பொருளாகவே கூறியது - உருவகவுயர்வுநவிற்சியணியாம், சொல்லிலக்கணத்தில் இவை - உவமவாகுபெயர்களாம். பி - ம்:—[1] கமுகுமேலிடும், கமுகமாநெடும். [2] வாழ்முகத்து. [3] அமுதபாடலால். [4] அழகினாடுவார், அருவியாடுவார். (922)

23.—வாநரவீரர் அங்குச் சீதையைக்காணாமல் அப்பாற்செல்லுதல்.

இனைய வாய[1]வொண் துறையை யெய்தினார்
நினையும் வேலைவாய் நெடிது [2]தேடுவார்
வினைய வார்குழற் றிருவை [3]மேவலார்
புனையு நோயினர் கடிது போயினர்.

(இ- ள்.) இனைய(து) ஆய ஒள் துறையை - இப்படிப்பட்டதாகிய அழகிய முண்டகத்துறையை, எய்தினர் - அடைந்தவர்களாகிய வாநரவீரர்கள்,—நினையும் வேலைவாய் நெடிது தேடுவார் - (மனத்தினால்) நினைக்கும்பொழுதிற்குள்ளே வெகுதூரமாக [மனோவேகமாக]த் தேடுபவர்களாய், வினைய வார் குழல் திருவை மேவலார் - (ஐவகையாகத்) தொழில்செய்தற்குஉரிய நீண்ட கூந்தலையுடைய திருமகளின் திருவவதாரமாகிய சீதாபிராட்டியைக் காணப்பெறாமல், புனையும் நோயினர் - மிக்கவருத்தமடைந்தவராய், கடிது போயினர்-விரைவாக அப்பாற் செல்லலானார்கள்; (எ - று.)

முண்டகத்துறைமுழுவதிலும் சீதாபிராட்டியைத்தேடி அங்குக் காணப்பெறாமையால், வாநரவீரர்கள் அப்பாற் செல்லலாயின ரென்க. 'வினையவார்குழல்' என்றது - மயிரைஉச்சியில் முடித்தலாகிய முடியும், சுருட்டிமுடித்தலாகிய குழலும், முடிந்துவிடுதலாகிய தொங்கலும், பின்னிவிடுதலாகிய பனிச்சையும், பின்னே செருகலாகிய சுருளும் என்ற ஐவகையான தொழிற்கு உரிய கூந்தல் என்க: இது பற்றியே, மகளிர்கூந்தலுக்கு 'ஐம்பால்' என்று பெயர் வழங்கும். இத்தொடர்க்கு வேறுவகையாகப்பொருள்கூறுவது பொருந்துமாயிற் கொள்க. புனையுநோயினர் கடிதுபோயினர் - பிராசம். பி - ம்:— [1]வண்டுறையை. [2]நேடுவார், நாடுவார். [3]மேவுவான். (923)

24.—வானரவீரர் பாண்டுமலையை யடைதல்.

[1]நீண்ட மேனியா னெடிய தாளினின்று
[2]ஈண்டு கங்கைவந் திழிவ தென்னலாய்ப்
[3]பாண்டு வம்மலை படர்வி சும்பினைத்
[4]தீண்டு கின்றதண் சிகர மெய்தினர்.

(இ - ள்.) நீண்ட மேனியான் - திரிவிக்கிரமனாய்நீண்ட திருமேனியையுடைய திருமாலினது, நெடிய தாளினின்று - பெரியதிருவடியினின்று, ஈண்டு கங்கை வந்து இழிவது என்னல் ஆய் - 'இவ்விடத்தில்தான் கங்காநதியானது இழிகின்றதோ!' என்று சொல்லும்படி, அம் பாண்டு மலை - அழகிய பாண்டுமலையினது, படர் விசும்பினை தீண்டுகின்ற - பரவிய ஆகாசத்தை யளாவுகின்ற, தண் சிகரம் - குளிர்ந்த சிகரத்தை, எய்தினர் - (வாநரவீரர்) சென்று சேர்ந்தனர்; (எ - று.)

தனதுஉச்சி வானத்திற்படியுமாறு ஓங்கியுள்ள வெண்ணிறமான பாண்டுமலை, பார்ப்பவர்கட்குத் திருமாலின் திருவடியி

லுதித்த வெண்ணிற நீரையுடைய கங்கையாறு வானத்திநின்று இங்குத்தான் இறங்குகின்றதோ என்று நினைக்குமாறு தோன்று மெனக: தன்மைத்தற்குறிப்பேற்றவணி. திருமால் உலகமளந்த காலத்து மேலே சத்தியலோகத்திற் சென்ற அப்பிரானது திருவடியைப் பிரமன் தன்கைக் கமண்டலதீர்த்தத்தினற் கழுவிவிளக்க, அந்த ஸ்ரீபாததீர்த்தமே கங்கையாகப்பெருகிற்றென்பது, இங்கு அறியத்தக்கது. வெண்ணிறமுடைமையால், இம்மலைக்கு 'பாண்டு மலை' என்றுபெயர். பாண்டுவம்மலை' என்றவிடத்து, அம் -சாரியையுமாம். எதுகைநயம்பற்றி, 'ஈண்டுகங்கை' என இயல்பாயிற்று; நெருங் இயகங்கையென்று வினைத்தொகையாகப் பொருள்கூறுவாருமுளர். பி - ம்:—[1] நீண்டநேமியா னெடிது தாளின்வந்து. [2] ஈண்டுகங்கைதான் அல்லது ஈண்டுகங்கைவந்து இழிவதென்னலாம். [3] பாண்டுகம்மலை. [4] தீண்டுகின்றதன், திண்டுகின்றதென். (924)

25.—பாண்டுமலையின் வருணனை.

இரு[1]ளு றுத்துமீ [2]தெழுந்த [3]தெண்ணிலா
மரு[4]ளு றுத்து[5]வண் சுடர்வ ழங்கலால்
அருளு றுத்திலா வடல ரக்கன்மேல்
உரு[6]ளு றுத்த[7] திண் கயிலை யொத்ததால்.

(இ - ள்.) இருள் உறுத்து - (உலகத்திலுள்ள) இருள்முழுவதையும் தாக்கியொழித்து, மீதுஎழுந்த - வானத்தில்தோன்றிய, தெள் நிலா - தெளிவான நிலவையுடைய சந்திரனுக்கும், மருள் உறுத்து - மருட்சியுண்டாக்கி, வள்சுடர் வழங்கலால் - (தான்) வளமான வெள்ளொளியை வீசுதலினால்,—(அந்தப்பாண்டுமலையானது),—அருள் உறுத்திலா அடல் அரக்கன்மேல் - (மனத்திற் சிறிதும்) அருளைக்கொண்டிராத வலிமையையுடைய அரக்கனாகிய இராவணன்மீது, உருள் உறுத்த - (அவனைக் கீழே விழுந்து) உருளுமாறு அழுத்திய, திண் கயிலை - வலிய கைலாசபருவதத்தை,- ஒத்தது—; (எ - று.)

தனதுவெண்ணிலவினால் உலகத்து இருளை யொழிக்குஞ் சந்திரனுக்கும் மருட்சியையுண்டாக்குவது எனப் பாண்டுமலையின் வெண்ணிற வொளியைச் சிறப்பித்துக்கூறியவாறு. இவ்வாறு வெள்ளொளிமிக்கிருத்தலால், பாண்டுமலைக்குக் கைலாசபருவதத்தை உவமைகூறினரென்க. இனி, இச்செய்யுட்கு - இருட்டையொழித்துத் தெண்ணிலாவையும் மருளுறுத்தும் வெண்ணிற வொளியைவீசுதலினால், கருநிறமுள்ள அரக்கனை யடக்கிய வெள்ளிமயமான கைலாசமலையைப் போலும் பாண்டுமலை யென்று கூறினுமாம்.

'அரக்கன்மே லுருளுறுத்த திண்கயிலை' என்பதி லடங்கிய கதை:—இராவணன் அளகாபுரிக்குச்சென்று குபேரனைவென்று அவனது புட்பகவிமானத்தைப்பறித்து அதன்மேலேறிக்கொண்டு

கைலாசமலைக்கு மேலாக ஆகாயமார்க்கத்திலே விரைந்து மீண்டு வருகையில் அம்மலையின்மகிமையால் விமானம் தடைப்பட்டுநிற்க, அதற்குக்காரணம் இன்னதென்று அறியாது திகைக்கும்போது, நந்திகேசுவரர் எதிரில்வந்து 'சிவபிரா னெழுந்தருளியிருக்குமிடமான திருக்கைலாயத்தின் பெருமை இது' என்று சொல்லவும், கேளாமல் அந்தத்தசமுகன் செருக்கினாற் கோபித்து 'எனது பிரயாணத்துக்குத் தடையாகிய இம்மலையை இப்பொழுதே வேரோடு பறித்து எடுத்துஅப்பாலெறிந்துவிட்டுத் தடையின்றி மேற்செல்வேன்'என்று கூறி, விமானத்தினின்று இறங்கித் தனது இருபது கைகளையும் அம்மலையின் கீழ்க்கொடுத்து அதனைப்பெயர்த்து அசைத்து எடுத்துத் தனது பத்துத்தலைகளினாலும்தூக்கி அப்பாலெறிந்துவிட்டுச் செல்வதாக முயல, அப்பொழுது பார்வதீதேவி அஞ்சிப் பரமசிவனைத் தழுவிக்கொள்ளவே, இராவணன் செயலை யுணர்ந்த உருத்திரமூர்த்தி சினந்து தன்திருவடிப்பெருவிரலினுனியினாற் சிறிது அழுத்த, அரக்கன் மலையின்கீழகப்பட்டுத் தலைகள் நசுங்கி மிக வருந்தின னென்பது. பி - ம்:—[1] உறுத்த, அறுத்து. [2] எழுந்து. [3] நன்னிலா, தண்ணிலா. [4] அறுத்து. [5] வான்சுடர். [6] உறுத்து. [7] நீள். (925)

வேறு.

26.—வாநரவீரர் அங்குச் சீதையைத் தேடிக் காணாமல் வருந்துதல்.

விண்ணுற [1] நிவந்த சோதி [2] வெள்ளிய குன்ற மேவிக்
கண்ணுற நோக்க லுற்றார் [3] களியுறக் கனிந்த காமர்ப்
பண்ணுறு கிளவிச் செவ்வாய் படையுறு நோக்கி னாளை
[4] எண்ணுறு திறத்துங் காணா ரிடருறு மனத்த [5] ரெய்த்தார்.

(இ - ள்.) (வாநரவீரர்),—விண் உற நிவந்த சோதி வெள்ளிய குன்றம் மேவி - ஆகாயத்தையளாவுமாறு உயர்ந்த ஒளியையுடைய வெண்மையான அப்பாண்டுமலையிற் பொருந்தி, கண் உற நோக்கல் உற்றார் - (சீதாபிராட்டியைக்) காணவேண்டுமென்று அவாவோடு தேடிப்பார்க்கத்தொடங்கியவர்களாய்,—களி உற கனிந்த காமர் பண் உறு கிளவி செம் வாய் படை உறு நோக்கினாளை - (கேட்பவர்) மகிழுமாறு இனிமை கொண்ட அழகிய இராகம் போன்ற இன்சொற்களைப்பேசுஞ் சிவந்தவாயையும் வாட்படை போன்ற கண்களையுமுடையவளான சீதையை, எண் உறு திறத்தும் காணார் - ('இங்குச் சீதை இருக்கக்கூடும்' என்று தாங்கள்) எண்ணுகின்ற இடங்களிலெல்லாம் காணப்பெறாமல், இடர் உறு மனத்தர் - வருத்தங்கொண்ட மனமுடையவராய், எய்த்தார் - சோர்வடைந்தார்கள்; (எ - று.)

காமர் - காமம்மரு என்பதன் மரூஉ. 'படை' என்ற பொதுப்பெயர் - இங்குச் சிறப்புப்பொருளது; உறு - உவமவுருபு. பி - ம்:—[1] நிமிர்ந்த. [2] வெள்ளியங்குன்றம்..., வெள்ளியகுன்றையெய்தி. [3] கனியுறக்கனிந்தகாமம். [4] எண்ணுறுத்தியாண்டும், எண்ணுறெத்திறத்தும். [5] ஆனார். (926)

27.—வாநரவீரர் கோதாவிரிநதியைக் குறுகுதல்.

ஊதைபோல் விசையின் [1]வெங்க ணுழுவைபோல் வயவ [2]ரோங்கல்
ஆதியை யகன்று செல்வா ரரக்கனால் [3]வஞ்சிப் புண்ட
சீதை[4]போ கின்றாள் கூந்தல் [5]வழீஇவந்து புவனஞ் சேர்ந்த
கோதை[6]போற் கிடந்த கோதா விரியினைக் [7]குறுகிச் சென்றார்.

(இ - ள்.) ஊதை போல் விசையின் - காற்றைப்போன்ற வேகத்தைக்கொண்ட, வெங் கண் உழுவை போல் வயவர் - (சினத்தினால்) கொடுமையானபார்வையையுடைய புலிப்போன்ற வலிமையுள்ள வாநரவீரர்,—ஓங்கல் ஆதியை அகன்று செல்வார்- அப்பாண்டு மலையினடிவாரத்தைவிட்டு அப்பாற்செல்பவர்களாய்,—அரக்கனால் வஞ்சிப்புண்ட சீதை போகின்றாள் - இராவணனாற் கவர்ந்து செல்லப்பட்டுச் செல்லும் சீதையினது, கூந்தல் - கூந்தலிலிருந்து, வழீஇ வந்து - நழுவி வந்து, புவனம் சேர்ந்த - பூமியையடைந்த, கோதை போல் - மலர்மாலைபோல, கிடந்த - இருக்கின்ற, கோதாவிரியினை—, குறுகி சென்றார் - நெருங்கிச் சேர்ந்தார்கள்; (எ - று.)

உயர்ந்தஇடத்திலேறித் தூரத்திலிருந்து காண்பவர்க்கு ஆறுகள் வெள்ளிமலர்மாலைபோலத் தோன்றுமாதலால், கோதாவிரி நதியை, இராவணன் சீதாபிராட்டியைக் கவர்ந்து செல்லுகையில் அவளது கூந்தலிலிருந்து நழுவிக்கீழ்விழுந்த மலர்மாலை போலுமென வருணித்தனர். முதலடி - வாநரர்களது வேகத்தையும் வலிமையையும் விளக்கும். ஆதியை என்பதற்கு - மலைகளுட் சிறந்ததான பாண்டுமலையை யென்பாரு முளர். பி - ம்:—[1]வேங்கை. [2]ஓங்கலாதனே, ஓங்கலாதினே,... ஆதிபோல். [3]வரிப்புண்டங்நாள். [4]போங்காலே. [5]வழிவந்து. [6]நேர். [7]முறுகச்சென்றார், வீரர் கண்டார். (927)

28.—இதுவும் அடுத்தகவியும்–கோதாவிரிநதியின் வருணனை.

எழுகின்ற [1]திரையிற் றாகி யிழிகின்ற மணிநீர் யாறு
தொழுகின்ற சனகன் வேள்வி தொடங்கிய [2]சுருதி சொல்லா
உழுகின்ற பொழுதி [3]னீன்ற வொருமகட் [4]கிரங்கி ஞாலம்
அழுகின்ற [5]கலுழி வாரி யாமெனப் பொலிந்த தன்றே.

(இ - ள்.) எழுகின்ற திரையிற்று ஆகி - மேலெழுந்து வீசியெறிகின்ற அலைகளையுடையதாய், இழிகின்ற - பெருகிவருகின்ற, மணி நீர் யாறு - முத்துப்போலத்தெளிவான நீரையுடைய கோதாவிரிநதியானது,—தொழுகின்ற சனகன் - (யாவராலும்) வணங்கப்படுகின்ற [பெருமைபெற்ற] ஜநகமகாராஜன், வேள்வி தொடங்கிய - யாகத்தைத் தொடங்கிச் செய்யும்பொருட்டு, சுருதி சொல்லா உழுகின்ற பொழுதின் - வேதமந்திரங்களை யுச்சரித்து(க் கலப்பை கொண்டு) உழுகின்ற காலத்தில், ஈன்ற - (தான் உழுபடைச்சாலினின்று) பெற்ற, ஒரு மகட்கு - ஒப்பற்ற சீதைக்காக [சீதை இலங்கையிற்சிறைப்பட்டிருப்

பதற்காக], இரங்கி-மனம்வருந்தி, ஞாலம் - (அச்சீதையின் தாயாகிய) பூமிதேவியானவள், அழுகின்ற - அழுவதனாலுண்டான, கலுழி வாரி - கலங்கலான கண்ணீர்ப்பெருக்கை, ஆம் - போலும், என - என்று சொல்லுமாறு, பொலிந்தது - விளங்கிற்று; (எ - று.)— அன்றே - ஈற்றசை.

நிறைந்துபெருகுகின்ற கோதாவரிநதியை, பூமிதேவியானவள் தான் பெற்ற மகளான சீதைக்கு நேர்ந்த வருத்தத்திற்காக இரங்கிப் பெருக்குங் கண்ணீர்வெள்ளம்போலு மென வருணித்தார்; தன்மைத் தற்குறிப்பேற்றவணி. சீதாபிராட்டியைத் தேடுகின்ற வாநரவீரர்க்கு இவ்வாறுதோன்றுதல் இயல்பு ஆதலால், இங்ஙனம் வருணிக்கப் பட்டது. ஜனகமகாராசன் ஞாநயோகத்திற்சிறந்து யாவராலும் வணங்குதற்குஏற்ற பெருமையுள்ள இராசவிருடியாதலின் அவனை, 'தொழுகின்ற சனகன்' என்றார். யாகஞ் செய்யத்தொடங்கு பவர் முதலில் வேதமந்திரங்களை உச்சரித்துக் கொண்டு கலப்பையி னாலுழுது அங்கு யாகசாலையை அமைத்தல், முறையென்ப. 'மணி' என்ற பொதுப்பெயர் - இங்கு, சிறப்பாய் நவமணிகளு ளொன்றாகிய முத்தைக் குறித்தது. பி - ம்:—[1] இரியிற்றாகி, திரையினாகி. [2] சுருதிச் சொல்லால். [3] வந்த. [4] உருகி. [5] கலுழிமாரியாமெனப், ஆறேபோலு மன்பினால், ஆறேபோலுமாமெனப். (928)

29. ஆசில்பே [1] ருலகிற் காண்போ ரளவைநூ [2] லெனலு மாகிக்
காசொடு [3] கனகந் தூவிக் கவினுறக் கிடந்த [4] கான்யாறு
[5] ஏசில்போ ரரக்கன் மார்பி னிடைபறித் தெருவை வேந்தன்
வீசிய [6] வடக மீக்கோ [7] ளீதென விளங்கிற் றன்றே.

(இ - ள்.) காசொடு கனகம் தூவி - இரத்தினங்களையும் பொன் னையும் (அலைகளினாற்) கொழித்துக்கொண்டு, கவின் உற கிடந்த - அழகாக ஓடுகின்றதும், கான் யாறு - பலகாடுகளின் வழியாக வருகின்றதுமான கோதாவரிநதியானது,— ஆசு இல் பேர் உலகில் - குற்றமற்ற பெரிய இந்தநிலவுலகத்தில், காண்போர் - பார்ப்பவர் கட்கு, அளவை நூல் எனலும் ஆகி - அளக்கின்ற நூலென்று சொல்லுதற்கும் ஏற்றதாய்,—எருவை வேந்தன் - கழுகுகட்கு அரசனா கிய சடாயு, ஏசு இல் போர் அரக்கன் மார்பினிடை-(வீரத்தன்மையிற்) குற்றமற்ற போர்செய்யும் இராவணனதுமார்பிலிருந்து, பறித்து வீசிய - பிடுங்கி அப்பால்வீசியெறிந்த, மீக்கோள் வடகம் ஈது - மேலே அணியப்பெற்ற இரத்தினவாரந்தானோ இது, என - என்று சொல்லும்படியும், விளங்கிற்று—; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

கோதாவரிநதியானது - பூமியையளக்கின்ற அளவைநூல் போலவும், கழுகரசனான சடாயு சீதையைக்கவர்ந்துசென்ற இராவணனோடு போர் செய்கையில் அவன்மார்பினின்று கழற்றி யெறிந்த முத்தாரம்போலவும் விளங்கிற்று என்பதாம். அளவை நூல் என்பதற்கு - இரத்தினசாஸ்திரமெனப் பொருள்கூறி,

அந்தச்சாத்திரத்திற் பலவகையிரத்தினங்களின் தன்மையை உணருமாறு கூறப்பட்டிருப்பதுபோல, இந்நதியானது இரத்தினங்களைத் தன்னிடத்திற்கொண்டு காண்பவர்கட்குப் பலவகையிரத்தினங்களின் தன்மையை விளக்குமெனக் கருத்துக்கொள்வாருமுளர். வடகம் - வடம் என்பதன் விரித்தல்: இனி, மீக்கோள் வடகமென்பதற்கு - மேலேதரித்துள்ள உத்தரீயமென்றலும் ஒன்று. பி - ம்:—[1]உலகு. [2]என்ன. [3]கனகத்தூளிக். [4]கானில். [5]ஏசுபேர். [6]குவட்டைமீக்கோள், வடகமீன்கோள். [7]இதுவென. (929)

30.—வாநரவீரர் சுவணநதியிற் சேர்தல்.

அந்நதி முழுது நாடி யாய்வளை மயிலை யாண்டும்
சந்நிதி யுற்றி லாதார் [1]நெடிதுபின் தவிரச் சென்றார்
[2]இன்னதீ திலாத தீதென் றியாவையு [3]மெண்ணுங் கோளார்
[4]சொன்னதீ வினைகள் தீர்க்குஞ் சுவணகத் துறையிற் புக்கார்.

(இ - ள்.) இன்ன (து) தீது இலாத(து) (இன்னது) தீது என்று யாவைஉம் எண்ணும் கோளார் - இன்னது நல்லது இன்னது கெட்டது என்று எல்லாவற்றையும் ஆராய்ந்தறிகிற தன்மையையுடைய வாநரவீரர்,—அ நதிமுழுதுஉம் நாடி - அந்தக் கோதாவரி நதிமுழுவதுந் தேடிப்பார்த்து, ஆய் வளை மயிலை யாண்டுஉம் சந்நிதி உற்றிலாதார் - சிறந்த வளையலையணிந்த மயில் போன்ற சீதையை எங்குங்காணப்பெறாமல்,—நெடிது பின் தவிர சென்றார் - வெகு தூரம் பின்னாற்கழியும்படி முன்நடந்து சென்றவர்களாய் [கோதாவரி நதிக்கு அப்பால் வெகுதூரங்கடந்துசென்று], சொன்ன தீவினைகள் தீர்க்கும் சுவணகம் துறையில் புக்கார் - (தன்னில்மூழ்கியவர்க்கு நூல்களிற்) கூறப்பட்டுள்ள தீவினைகளையெல்லாம் ஒழிக்கின்ற சுவணகநதியினிடத்திற் சென்று சேர்ந்தார்கள்; (எ - று.)

மூன்றாவது அடி - வாநரவீரர்களின் பகுத்தறிவை விளக்கும். ஆய்வளைமயில் - அடையடுத்த உவமையாகுபெயர், சந்நிதி - ஸந்நிதி: வடசொல்: ஸாந்நித்தியம்: பிரதியக்ஷம் என்று பொருள். இன்ன(து) தீது இலாதது ஈது என எடுத்தும் உரைக்கலாம். பி - ம்:—[1]நெடிப்பின். [2]இன்னதியாவதீது, இன்னதீதியாவதீது. [3]உணருங்கோளார், என்றுங்கொள்ளார். [4]சொன்னதே சொல்லி நிற்கும். 'இன்னிதிவ்வாக்கை யாவியிறை செயலென்னத் தேர்ந்தோர்' என்று ஒருபிரதியில் மூன்றாமடி. (930)

31.—வானரவீரர் குலிந்ததேசத்தைக் கடத்தல்.

சுரும்பொடு தேனும் வண்டு [1]மன்னமுந் [2]துவன்றிப் புள்ளும்
கரும்பொடு செந்நெற் காடுங் கமலவா விகளு [3]மல்கிப்
பெரும்புனல் மருதஞ் சூழ்ந்த [4]கிடக்கைபின் கிடக்கச் சென்றார்
[5]குரும் பைநீ ரமுதச் சோலைக் [6]குலிந்தமும் புறத்துக் கொண்டார்.

(இ - ள்.) சுரும்பொடு - பொன்வண்டுகளும், தேன்உம் - தேன் வண்டுகளும், வண்டுஉம் - கருவண்டுகளும், அன்னம்உம் - அன்னப் பறவைகளும், புள்உம் - (நாரை முதலிய மற்றைப்) பறவைகளும், துவன்றி - நெருங்கி,—கரும்பொடு-கரும்புகளும், செந்நெல் காடுஉம் - செந்நெற்பயிர்த்தொகுதியும், கமலம் வாவிகள்உம் - தாமரைத்தடாகங்களும், மல்கி - நிறைந்து,—பெரும்புனல் மருதம் சூழ்ந்த - மிக்கநீர் வளப்பமுள்ள மருதநிலத்தாற் சூழப்பெற்ற, இடக்கை - இடங்கள், பின் கிடக்க - பின்னாற்கிடக்கும்படி, (அவற்றைத்தாண்டி), சென்றார்- அப்பாற் சென்றவர்களாய்,—(வானர வீரர்கள்), அமுதம் நீர் குரும்பை சோலை குலிந்தம்உம் புறத்து கொண்டார் - அமிருதம் போன்ற (இனிய) நீரையுடைய இளந்தேங்காய்கள் நிரம்பிய சோலைகளையுடைய குலிந்ததேசத்தையும் (தமது) பின்புறத்ததாகும்படி (அதனையும்) தாண்டிச்சென்றார்கள்; (எ - று.)

மருதநிலம் - அன்னம்முதலிய பறவைகளையும், செந்நெல் முதலிய உணவுகளையும், தாமரைமலர்களையும், பொய்கைகளையுமுடைய தென்க. மருதம் - நாடும், நாடுசார்ந்தஇடமும். மருதநிலமாகிய முதற் பொருளும், பறவை உணா பூ நீர் என்ற அந்நிலத்தின் கருப்பொருள்களும் இச்செய்யுளிற் கூறப்பட்டமைகாண்க. சுரும்பு - தேன், வண்டு என்பன - தும்பியின் சாதிபேதங்கள். சுரும்பு-எல்லா மணத்திலுஞ் செல்வது. தேன், வண்டு என்பன - நன்மணத்தே செல்வன. புள் என்றது - நாரைமுதலிய மற்றை மருதநிலப் பறவைகளை யுணர்த்தும். பி - ம்:—[1] அளிகளும். [2] துவன்றுபுள்ளும். [3] பல்கி. [4] இடத்தைப் பின்கிடத்திப்போனார். [5] குரம்பை...குரும்பை நீர்முரஞ்சும் அல்லது முரலும்சோலை...க்கமுகஞ்சோலை,...அமிர்தச்சோலை. [6] குலிங்கமும். (931)

32.—வானரவீரர் அருந்ததிமலையைச் சேர்தல்.

கொங்கண மேழு நீங்கிக் [1] குடகடற் றரளக் குப்பைச்
சங்கணி [2] பானல் நெய்தல் [3] தண்புனல் [4] தவிர வேகித்
திங்களின் கொழுந்து சுற்றுஞ் [5] சிமயநீள் கோட்டுத் தேவர்
அங்கைகள் கூப்ப நின்ற வருந்ததிக் கருக ரானார்.

(இ - ள்.) (வானரவீரர்)—கொங்கணம் ஏழ்உம் நீங்கி - எழுவகைக் கொங்கணதேசங்களையுந் தாண்டி,—குடகடல் - மேல்கடற் கரையைச் சார்ந்தனவாகிய, தரளம் குப்பை சங்கு அணி பானல் நெய்தல் - முத்துக்குவியல்களை யுண்டாக்குகின்ற சங்குகளையும் அழகிய கருங்குவளைமலர்களையு முடைய நெய்தல்நிலத்திலுள்ள, தண்புனல் - குளிர்ந்த நீரையுடைய நிலங்கள், தவிர - பின்னாகும்படி, ஏகி - (அவற்றைவிட்டு) அப்பாற் சென்று,—திங்களின் கொழுந்து சுற்றும் நீள் கோடு - பிறைச்சந்திரன் சுற்றிச்செல்லும்படியான நீண்ட சிகரங்களையுடையதும், தேவர் அம் கைகள் கூப்ப நின்ற - தேவர்கள் தமது அழகிய கைகளைக் கூப்பிவணங்கும்படி நிற்பது

மாகிய, அருந்ததி சிமயத்துக்கு - அருந்ததிமலைக்கு, அருகர் ஆனார் - நெருங்கினவர்களானார்கள்; (எ - று.)

வாநரவீரர்கள் எழுவகைப்பட்ட கொங்கணதேசங்களையும், மேல்பாலுள்ள நெய்தல்நிலங்களையுந் தாண்டி மிகவுமோங்கியுள்ள அருந்ததிமலையைச் சேர்ந்தனரென்க. திங்களின் கொழுந்து சுற்றும் நீள்கோட்டு அருந்ததிச்சிமயம் - மலையினுயர்ச்சியை விளக்கும் உயர்வுநவிற்சி. சிமயம் - மலை. சிமயம் அருந்ததிக்கு — அருந்ததிச் சிமயத்துக்கு; உருபு பிரித்துக் கூட்டப்பட்டது. திங்களின் கொழுந்தைக் கூறியது - பூர்ணசந்திரனுக்கு உபலக்ஷணம். 'அருகு' என்ற சொல் 'அர்' பெற்று, அருகர் என வந்தது. பி - ம்:—[1]குரைகடல். [2]உயர்வுநெய்தல், வாசநெய்தல். [3]தடம்புனல். [4]தடக்கை நீங்கி. [5]சீர்மைநீள்கோட்டு. (932)

33.—அங்குச் சீதையைக்காணாது வாநரவீரர் மரகதமலையைக்கடந்து திருவேங்கடமலை சார்தல்.

அருந்ததிக் கருகு [1]சென்றாண் டழகினுக் கழகு செய்தாள்
இருந்ததிக் குணர்ந்தி லாதா ரேகினா ரிடையர் மாதர்
பெருந்ததிக் கருந்தேன் மாறு மரகதப் பெருங்குன் றெய்தி
[2]யிருந்ததிற் றீர்ந்து சென்றார் [3]வேங்கடத் திறுத்த வெல்லை.

(இ - ள்.) (வாநரவீரர்), அருந்ததிக்கு அருகு சென்று - அருந்ததிமலையின் சமீபத்திற் சேர்ந்து, ஆண்டு - அவ்விடத்தில், அழகினுக்கு அழகு செய்தாள் இருந்த திக்கு உணர்ந்திலாதார் - அழகுக்கும் அழகை யுண்டாக்குபவளாகிய [மிகவுங்கட்டழகியாகிய] சீதையிருக்குமிடத்தை யறியாதவர்களாய், ஏகினர் - (அப்பாற்) சென்று, —இடையர் மாதர் பெருந் ததிக்கு அருந் தேன்மாறும் மரகதம் பெருங் குன்று எய்தி யிருந்து - இடைப்பெண்கள் தங்களது சிறப்புப்பொருந்திய தயிருக்கு (அம்மலையினிடத்திலுள்ள வேட்டுவச்சிகளிடத்தில்) அருமையான தேனை மாறுதற்கு இடமான பெரிய மரகத மலையை அடைந்திருந்து, (அங்கும் சீதையைக் காணாமையால்), அதின் தீர்ந்து - அதனினின்று நீங்கி, இறுத்த எல்லை - (தமிழ்நாட்டினது) வரையறுக்கப்பட்டுள்ள வடவெல்லையாகிய, வேங்கடத்து - திருவேங்கடமலையினிடத்து, சென்றார் - சென்று சேர்ந்தார்கள்; (எ - று.)

அழகினுக்கு அழகுசெய்தாள் - இயற்கையில் நற்குணங்கள் மிக்கு நல்லிலக்கணமொன்றிலுங் குறைவில்லாத தன்னை அழகு அடைந்திருத்தலால் தான் அதற்கு மிக்கசிறப்பை யுண்டாக்கினவள் என்றபடி. தம்மிடத்துமிகுதியாகவுள்ள பண்டத்தை விலையாகக்கொடுத்து அதற்கு ஈடாகத் தமக்குவேண்டிய அருமையான பொருளை வாங்கிக் கொள்ளுகிற பண்டமாற்று முறைப்படி, மரகத மலைக்கு அருகே முல்லைநிலத்திலுள்ள இடைப்பெண்கள் மரகதமலை மீதுள்ள குறிஞ்சிநிலத்து மகளிரிடம்தயிரைக்கொடுத்து அதற்கு

ஈடாகத் தேன்பெற்றுக் கொள்கின்றன ரென்ற இதில், குறிஞ்சி நிலத்தோடு முல்லைநிலத்திற்குக் கலப்புக் கூறியவாறு காண்க; இதனால், நிலங்களின் அண்மைவிளங்கும்: இவ்வாறு நிலங்கட்குக் கலப்புக் கூறுவது - திணைமயக்கம் எனப்படும். மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சிநிலத்திற்கும், நாடும் நாடுசார்ந்த இடமுமாகிய மருதநிலத்திற்கும் இடையிலுள்ள காடும் காடுசார்ந்த இடமுமாகிய முல்லைநிலத்தில் வாழ்பவராதல்பற்றி, இடையரென்பது - காரணப்பெயர். தயிர் - முல்லைநிலக் கருப்பொருள்; தேன் - குறிஞ்சிநிலக் கருப்பொருள். திருவேங்கடமலை "வடவேங்கடந் தென்குமரி" என்று தமிழ்நாட்டுக்கு வடவெல்லையாகக் குறிக்கப்படுதலால் 'இறுத்தவெல்லை வேங்கடத்து' என்றார். இனி, வேங்கடத்து இறுத்தவெல்லை என்பதற்கு - திருவேங்கடமலையிற் சென்று சேர்ந்தபொழுது என்று குள்கமாகப் பொருள் கூறுவாருமுளர். அது அடுத்த செய்யுள்களோடு இனிதாகப் பொருந்தாதென்க; பி - ம்:—[1]சென்றார். [2]விருந்ததிற்றீந்து, இருந்ததில்திரிந்து. [3]வேங்கடத்து இறுத்தகாலை, அல்லது இறுத்தவேலை, வேங்கடவாணன் வெற்பில். (933)

34.—இதுமுதல் மூன்றுகவிகள் – திருவேங்கடமலையின் வருணனை.

> [1]முனிவரு மறைவ லோரு முந்தைநாட் சிந்தை மூண்ட
> வினைவரு நெறியை மாற்று [2]மெய்யுணர் வோரும் விண்ணோர்
> எனைவரு மமரர் மாதர் யாவருஞ் [3]சித்த ரென்போர்
> அனைவரு மருவி நன்னீர் நாளும்வந் தாடுகின்றார்.

(இ - ள்.) முனிவர்உம் - ருஷிகளும், மறை வலோர்உம் - வேதமறிந்த அந்தணர்களும், முந்தை நாள் - முற்பிறப்பிலே, சிந்தை மூண்ட வினை வரும் - மனப்பூர்வமாகச்செய்த தீவினைகளினாலுண்டாகின்ற, நெறியை - நரகநெறியை, மாற்றும் - ஒழிக்கவல்ல, மெய் உணர்வோர்உம் - தத்துவஞானிகளும், விண்ணோர் எனைவர்உம் - தேவர்களெல்லோரும், அமரர் மாதர்யாவர்உம் - தெய்வமகளிரெல்லோரும், சித்தர் என்போர் அனைவர்உம் - எல்லாச் சித்தர்களும், அருவி நல் நீர் - (அத்திருவேங்கடமலையிலுள்ள) அருவிபெருகுகின்ற புண்ணியதீர்த்தங்களில், நாளும் - எப்போதும், வந்து ஆடுகின்றார் - வந்து நீராடுகின்றார்கள்; (எ - று.)

முனிவர் முதலிய இவ்வுலகத்தாரும், தேவகணங்களாகிய மேலுலகத்தாரும் வந்து நீராடுதற்கு உரிய பெருமைவாய்ந்த நீரருவிகளினாலாகிய பலபுண்ணியதீர்த்தங்களைக்கொண்டுள்ளது, திருவேங்கடமலை யென்க. அங்குஉள்ள புண்ணியதீர்த்தங்கள் கோனேரி, ஆகாசகங்கை, பாபவிநாசம், பாண்டவதீர்த்தம், குமாரதாரை, தும்புருதீர்த்தம், ஆழ்வார்தீர்த்தம் முதலியன. காட்டுத்தீ முன்னைப் பஞ்சுத்தூய்போல ஞானயோகத்தின் முன்னர்த் தீவினைகள் நீங்கு மென நூல்கள் கூறுதலால்,

அவ்வாறு ஞானயோக முதிர்ச்சி யுடையவரை, 'முந்தைநாட்சிந்தை மூண்ட வினைவரு நெறியை மாற்றும் மெய்யுணர்வோர்' என்றார். சித்தர் - தேவசாதியாரில் ஒருவகையர். பி - ம்:—[1]முனைவரும்முறை வலோரும். [2]மெய்யுணர்ந்தோரும், மெய்யுணர்வினரும். [3]எதிகளென் போர். (934)

வேறு.

35. பெய்த [1]வைம்பொறி யும்பெருங் காமமும்
[2]வைத வெஞ்சொலு மங்கையர் [3]வாட்கணின்
எய்த [4]வஞ்சக வாளியும் [5]வென்றுநல்
செய்த வம்பல [6]செய்குநர் தேவரால்.

(இ - ள்.) (அத்திருவேங்கடமலையின்மீது).—தேவர் - தேவர்கள்,—பெய்த ஐம் பொறிஉம் - (தமதுஉடம்பிற்) பொருந்திய பஞ்சேந்திரியங்களையும், பெருங் காமம்உம் - பெரிய காமத்தையும், வைத வெம் சொல்உம் - (பிறர் தம்மைத்) திட்டிய கொடிய சொற்களையும், மங்கையர் வாள் கணின் எய்த வஞ்சகம் வாளிஉம் - இளமகளிர் (தமது) வாள்போன்ற கண்களினாற் செலுத்திய வஞ்சகத்தன்மையுள்ள பார்வையாகிற அம்புகளையும், வென்று - (அலட்சியமாகச்) சயித்து, செய் நல் தவம் பல - செய்தற்குஉரிய நல்லதவங்கள் பலவற்றை, செய்குநர் - செய்கின்றார்கள்; (எ - று.)— ஆல் - ஈற்றசை.

தேவர்கள் அத்திருவேங்கடமலைமீதுவந்து, ஐம்பொறிகளையும் அடக்கி, காமவேதனையில்லாமல், பிறர்தம்மைத்திட்டினாலும் அதனையும் பொறுத்து, மகளிரை மனத்தினாலுங் கருதாது, பலதவங்களைச் செய்கின்றார்களென்பதாம். பெருங்காமம் - "நீருட்குளிப்பினுங் காமஞ் சுடும்" என்பது நாலடியார். 'தீயினாற்சுட்டபு ணுள்ளாறு மாறாதே, நாவினாற் சுட்ட வடு", "வைதவைவின் மராமரமேழ் தொளையெய்த," "சொல்லொக்குங்கடியவேகம்" என்றவாறு வசைச்சொற்கள் கேட்பவரது மனத்தை மிகவும் வருத்துமாதலால், 'வைதவெஞ் சொலும் வென்று' என்றார். மேல்நோக்கில் இனியதுபோலத் தோன்றுகின்ற மகளிரதுகண்பார்வை பிறகு ஆடவரது மனத்தை ஊடுருவிப்பாய்ந்து வருத்துமாதலால், அதனை 'வஞ்சகவாளி' என்றார். தேவர் - பூமி தேவராகிய அந்தணர் எனினுமாம். பி - ம்:—[1]வெம்பொறி. [2]வைத வெஞ்சொலின், எய்தவெஞ்சொலின். [3]வாட்கணால். [4]வெம்பெரு வாளியும், ஐம்பெருவாளியின். [5]எண்ணற, ஏற்றற, என்றிற. [6]செய்குவர் சீரியோர். (935)

36. வலங்கொள் நேமி மழைநிற வானவன்
அலங்கு தாளிணை [1]தாங்கிய வம்மலை
[2]விலங்கும் வீடுறு கின்றன மெய்ந்நெறிப்
[3]புலன்கொள் வார்கட் கனையது பொய்க்குமோ.

(இ - ள்.) வலம் கொள் நேமி - வெற்றியைக்கொண்ட சக்கராயுதத்தைத் தரித்த, மழை நிறம் வானவன் - கார்மேகம்போன்ற

கருநிறத்தையுடைய கடவுளாகிய ஸ்ரீநிவாஸனது, அலங்குதாள் இணை - விளங்குகின்ற இரண்டு திருவடிகளை, தாங்கிய - ஏந்தப் பெற்ற, அ மலை - அத்திருவேங்கடமலையில்வாழ்கின்ற, விலங்குஉம் - திர்யக்குக்களும், வீடு உறுகின்றன - மோக்ஷத்தையடைகின்றன; (என்றால்), மெய் நெறி புலன் கொள்வார்கட்கு - உண்மையான மார்க்கத்தில் நடக்கின்ற தத்துவஞானமுடையவர்களுக்கு, அனையது - அந்தமோக்ஷமானது, பொய்க்கும்ஒ - கிடைக்காமல் தவறுமோ? [தவறாமற் கிடைக்கும் என்றபடி]: (எ - று.)

ஸ்ரீநிவாஸன் தன்னிடத்தி லெழுந்தருளி யிருக்கும் பெருஞ் சிறப்பு வாய்ந்த அத்திருவேங்கடமலையில் வாழ்கின்ற திர்யக்குக்களும் வீட்டுலகத்தை யடையு மென்றால், சந்மார்க்கத்தில் நடக்கின்ற தத்துவஞானமுடையோர்கட்கு அவ்வீட்டுலகம் கிடைப்பது தவறுமோ? என்பதாம்: இதில், தண்டாபூபிகாநியாய மென்னுங் கைமுதிகநியாயம்படக் கூறியிருப்பது - தொடர்நிலைச்செய்யுட்பொருட் பேறணியாம். வலம்கொள்நேமி - வலத்திருக்கையிலேந்திய சக்கரத்தையுடைய எனினுமாம். சக்கரத்தைக் கூறியது, சங்கத்துக்கும் உபலக்ஷணம். ஸ்ரீநிவாஸன் 'மலைகுனியநின்றபெருமாள்' என்று ஒரு பெயரைப்பெறுமாறு தனது தாளிணைகளை அம்மலையிற் பதியவைத்துள்ளதனால், 'மழைநிறவானவ னலங்குதாளிணை தாங்கியவம்மலை' என்றார். திருமாலினதுபஞ்சாயுதங்களுள், சக்கரம் சுதரிசனமென்று பெயர் பெறும். விலங்கு - மிருகம் பக்ஷி ஊர்வன நீர்வாழ்வன என்றவற்றையும் குறிக்கும். உம்மை - இழிவுசிறப்பு. புலன் - தேர்ந்த அறிவு: தத்துவஞானம். புலன் கொள்வார்கட்கு அனையது பொய்க்குமோ என்பதற்கு - அம்மலை தத்துவஞானிகட்கு (மோக்ஷத்தையளிப்பதில்) தவறுமோ எனக் கூறுவாருமுளர். பி - ம்:— [1] தாங்கியது. [2] விளங்குவீடுயர்கின்றன, விலங்குவீடுறுகின்றன, விலங்கும்வீடுறுகிற்பன. [3] புலங்கொள்வார். 'இலங்குதாளிணை தாங்கியவிம்மலை' என்று சிலபிரதிகளில் இரண்டாமடி. (936)

37.—வாநரவீரர் அங்குள்ள பக்தர்களின் பாதங்களை முடிமேற் கொள்ளல்.

ஆய குன்றினை யெய்தி யருந்தவம்
மேய செல்வரை [1]மேவினர் மெய்ந்நெறி
[2]நாய கன்தனை நாளும் [3]வணங்கிய
[4]தூய நற்றவர் பாதங்கள் சூடினார்.

(இ - ள்.) (வாநரவீரர்),—ஆய குன்றினை எய்தி - அவ்வாறாகிய திருவேங்கடமலையையடைந்து, அருந் தவம் மேய செல்வரை மேவினர் - செய்தற்கு அரிய தவத்தைப் பொருந்திய பாக்கியவான்களைக் கிட்டுபவர்களாய்,—மெய் நெறி நாயகன்தனை நாள்உம் வணங்கிய தூய நல் தவர் பாதங்கள் சூடினார் - என்றும் அழியாததான வீட்டுலகத்தின்நெறியை யளிக்குந்தலைவனாகிய திருவேங்கடமுடை

யானை எப்போதும்வணங்கப்பெற்ற பரிசுத்தமான சிறந்த தவத்தை யுடைய அவர்களது பாதங்களைத் (தமது) தலைமேற்கொண்டு வணங்கினார்கள்; (எ - று.)

திருவேங்கடமுடையானைச் சேவிக்கின்ற பெரும்பாக்கியத்தைப் பெற்றுள்ளவராதலால், அவர்களை, 'அருந்தவமேயசெல்வர்' என்றும், 'தூயநல்தவர்' என்றுங் கூறினார். 'அருந்தவம் ஏயசெல்வரை' என்று பிரித்து உரைத்தல், மோனைத்தொடைக்குச் சிறவாது.

கீழ் நாடவிட்டபடலத்தில் 'கோடுறுமால்வரையதனைக்குறுகு திரே லுங்கொடியகொடுமைநீங்கி, வீடுறுதிராதலினான் விலங்குதிர்' என்று சுக்கிரீவன் கூறியது - அம்மலையின் மகிமையை விளக்கும் அதிசயோக்தி யென்றும், இங்குச் சுக்கிரீவன்கட்டளையைமீறித் திருவேங்கடமலையிற் சென்று அங்குள்ள பெரியோரை வாநரர்கள் தரிசித்தது - இப்புண்ணியத்தின் பயனாலேனும் ஒருகால் சீதாபிராட்டியைக் காணமுடியுமோ என்ற எண்ணத்தினாற் செய்த தென்றுங் கொள்ளலாம். பி - ம்:—[1]மேயினர். [2]நாயகன்பதம். [3]வணங்குவோர். [4]தூயர்நன்மலர்...சூட்டினார். (937)

38.—வாநரவீரர் அந்தணவடிவங்கொண்டு தொண்டைநாட்டை யடைதல்.

சூடி யாண்டச் சுரிகுழற் றோகையைத்
தேடி வார்புனற் [1]றெண்டிரைத் தொண்டைநன்
[2]னாடு நண்ணுகின் றார்மறை நாவலர்
வேட மேயினர் வேண்டுரு மேவுவார்.

(இ - ள்.) வேண்டு உரு மேவுவார் - (தாம்) விரும்பிய வடிவங்களைக் கொள்ளவல்லவர்களாகிய வானரர்கள்,—சூடி - (முற்கூறிய வாறு நற்றவர் பாதங்களைச்) சூடியபின்பு,—ஆண்டு - அத்திருவேங்கடமலையில், அ சுரி குழல் தோகையை தேடி - நுனிசுருண்ட கூந்தலையுடையவளும் மயில்போன்றசாயலையுடையவளுமான அந்தச் சீதையைத் தேடி, (அங்குக் காணாமையால்), மறை நாவலர்வேடம் மேயினர் - வேதங்களில் வல்ல அந்தணரது வேஷத்தைத் தரித்தவர்களாய், தெள் திரை வார் புனல் நல்தொண்டை நாடு நண்ணுகின்றார் - தெளிவான அலைகளையுடைய மிக்க நீர் நிறைந்த சிறந்த தொண்டைநாட்டைச் சேர்பவரானார்கள்; (எ - று)

'சூடி' என்றது-கீழ்ச்செய்யுளின் அநுவாதம். சுரிகுழல் தோகை-அடையடுத்த இருமடியாகுபெயர். "தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்றவாறு நீர்வளம் மிக்குச் சான்றோரை மிகுதியாகவுடைய நாடு ஆதலால், 'வார்புனற் றெண்டிரைத் தொண்டை நன்னாடு' என்றார். வேண்டுருமேவுவார் - காமரூபிகள். 'வேண்டுருமேவுவார்' என்ற அடைகொளி, 'மறைநாவலர்வேடமேயினர்' என்றதைச் சாதிக்குமாறுகூறப்பட்டதாதலால், கருத்துடையடைகொளி யணியாம்.

இனி, [1]'தண்டகநாடு' என்ற பாடத்திற்கும் - தொண்டை நாடென்றேபொருள்கொள்ளலாம்; முன்ஒருகாலத்தில்தொண்டை நாட்டைத் தண்டகனென்னும் அரசன் ஆண்டதுபற்றி அந்நாட்டிற்கு 'தண்டகநாடு' என்று பெயர் வந்ததென்பர். (தண்டகனென்ற அரசன் பார்க்கவமுனிவரது மகளைக் காதலித்ததனால் தான் அலியாகவும், தன்னுடையமந்திரி வேடனாகவும், தனது நாடாகிய தொண்டைநாடு காடாகவும் மாறுமாறு அம்முனிவரிடம் சாபமேற்று, அம்முனிவரையே வேண்டிக் கரிகாற்சோழன் அங்கு வருகையிற் சாப விமோசன முண்டாகும்படி அநுக்கிரகமும் பெற்றானென்பது வரலாறு.) "தண்டகநாட்டுறைதாபதர்," "தன்னடிப்படுத்துமேலைத் தண்டகநாடுமுற்றும்," "தரைவிளங்கிய தண்டகநாட்டினில்" என்று காஞ்சிப்புராணத்தில் தொண்டைநாட்டின்பெயர் கூறப்படும் இடங்கள் பலவற்றில் 'தண்டகநாடு' என்றே கூறியிருப்பது காண்க. அன்றி, இப்பாடத்திற்குத்தண்டகாரணியமென்றே கொள்வோமெனின், "தண்டகத்தையும் தடவியேகினர்" என்று கீழ்க்கூறியிருத்தலாலும், தொண்டைநாடு கூறப்படாமல் விடுபடுதலாலும் ஏற்றதன்று. எமக்குக்கிடைத்துள்ள ஏட்டுப் பிரதிகளில், 'தொண்டைநன்னாடு' என இவ்வாறே பாடங் காணப்படுகின்றது. பி - ம்:—[1] திண்டருதொண்டகம். [2] நாடுகின்றனர் நான்மறையந்தணர். (938)

39.—இதுமுதல் எட்டுக்கவிகள்-தொண்டைநாட்டின் வருணனை.

குன்று சூழ்ந்த [1]கடத்தொடுங் கோவலர்
முன்றில் சூழ்ந்த படப்பையு [2]மொய்புனல்
சென்று சூழ்ந்த [3]கிடக்கையுந் [4]தெண்டிரை
[5]மன்று சூழ்ந்த பரப்பு மருங்கெலாம்.

(இ - ள்.) மருங்கு எலாம் - (அத்தொண்டைநாட்டின்) இடம் முழுவதும்,—குன்று சூழ்ந்த கடத்தொடும் - மலைகள்சூழ்ந்த சாரல்களும்[குறிஞ்சிநிலமும்],கோவலர் முன்றில் சூழந்த படப்பையும்- இடையர்களது வீட்டுமுன்னிடங்களைச் சூழ்ந்துள்ள கொல்லைகளும் [முல்லைநிலமும்], மொய் புனல் சென்று சூழ்ந்த கிடக்கையும் - மிக்க நீர்வந்து நிறைந்துள்ள இடங்களும்[மருதநிலமும்],தெள் திரை மன்று சூழ்ந்த பரப்பும் - தெளிவான அலைகளைக் கொண்ட கடலையுடைய வெளியான இடங்களாற்சூழப்பெற்ற பரவியநிலங்களும் [நெய்தல் நிலமும்], (உள்ளன); (எ - று.)

ஏற்ற வினை, வருவித்து முடிக்கப்பட்டது. இதனால், அத்தொண்டைநாட்டில் நால்வகைநிலங்களும் இருத்தலைக் கூறினர். "திருத்தொண்டைநன்னாட்டு நானிலத்துஐந்திணை வளமுந் தெரித்துக்காட்ட" என்றார், காஞ்சிப்புராணத்துச் சிவஞானமுனிவரும். இவ்வாறு நால்வகைநிலங்களு முடைமைபற்றியே, பூமிக்கு 'நானிலம்' என்று ஒருபெயர் வழங்கும். கோவலர்—கோ வலர் எனப் பிரிந்து, பசுக்களைக் காத்தலில் வல்லவர் எனக் காரணக்

குறியாம்: இதனை, 'கோபாலர்' என்னும் வடமொழியின் திரிபு எனவுங்கொள்ளலாம். படப்பை - வரகு முதலியன விளைதற்கு உரிய கொல்லை. மன்று-வெளியான இடம். பி - ம்:—[1] தடத்தொடும். [2] மொய்ம்புனல். [3] இடங்களும், தலங்களும். [4] திங்களூர், தேடினர். [5] மன்றல். (939)

40. சூல டிப்பல வின்[1] சுளை தூங்குதேன்
கோல டிப்ப[2] வெரீஇக்[3] குல மள்ளரேர்ச்
[4] சால டித்தருஞ் சாலியின் வெண்முளை
தோல டிக்கிளை யன்னந் [5] துவைப்பன.

(இ - ள்.) குலம் மள்ளர் - கூட்டமான உழவர்கள், ஏர் கோல் அடிப்ப - ஏர் உழும்போது உழவுமாடுகளைக் கோலினா லடிக்கையில், தோல் அடி இளை அன்னம் - தோலடிகளையுடைய கூட்டமான அன்னப்பறவைகள், வெரீஇ - பயந்து, சூல் அடி பலவின் சுளை தூங்கு தேன் - கருவை அடியிலேயுடைய பலாமரத்தினது [வேர்ப் பலாமரத்தில் தோன்றிய பழங்களது] சுளையினின்று பெருகுகின்றதேன் (பாய்ந்து), சால் அடி தரும் - உழவுசாலினிடங்களிலே யுண்டாக்கிய, சாலியின் வெள் முளை - செந்நெற்பயிரின் வெண்மையானமுளைகளை, துவைப்பன - (கால்களால்) மிதித்துத் துவைப்பனவாம்; (எ - று.)

உழவர்கள் உழுகையில் உழவுமாடுகளை யடித்துத்துரத்த, அருகிலிருந்த அன்னப்பறவைகள் அதனாலஞ்சிச் சமீபத்திற் பலாச்சுளைகளின்தேன் பாய்தலினால் முளைத்துள்ள வயல்களின் மீது ஓடவே, அவற்றிலுள்ள முளைகள் சிதையு மென்பதாம். இதனால், நீர்வள நிலவளங்கள் பெறப்படுதல் காண்க. இனி, இச்செய்யுளுக்கு - கூட்டமாகிய உழவர் கருவுடைய பலாமரத்தினது பழுத்த பழத்தில் மொய்த்த வண்டுகளை ஏரோட்டுகின்ற கோலால் ஓச்ச, அம்மரத்தின் கிளைகளிலிருந்த அன்னங்கள் அஞ்சி ஏர்ச்சாலடியில் முளைத்தநெல்லினது வெள்ளியமுளைகளைத் தோலுடைய அடிகளால் துவைப்பனஎன்று பொருள்கூறுவாருமுளர். சூல் - கருப்பம்; இங்கே, பழத்தையுணர்த்தும். மள்ளர் - இங்கு, மருதநிலமாக்கள். கோல் - தாற்றுக்கோல். தோலடி - நீர்வாழ்பறவைகட்கு நீரில் நீந்துதற்குக் கருவியாக விரல்களினிடையேபரவிய தோல்களையுடைய பாதம். பி - ம்:—[1] தலை, கனி. [2] இரீஇ. [3] குழுமள்ளரேர், குலமள்ளர்தம். [4] சாலடிப்பன. [5] துகைக்குமே, துகைக்குமால். (940)

41. செருகு றுங்[1] கணிற் ஃறங்கு வளைக்குலம்
மருகு றங்கும்[2] வயன்மருங் காய்ச்சியர்
இரு[3] கு றங்கு பிறங்கிய வாழையில்
குருகு றங்குங் குயிலுந் துயிலுமால்.

(இ - ள்.) செருகு உறும் கணின் - கூந்தல்வரையில் நீண்டு பொருந்திய (மகளிரது) கண்போன்ற, தேன் குவளை குலம் - தேனை யுடைய நீலோற்பலமலரின் கூட்டம், அருகு உறங்கும் - பக்கங்களில் தங்கப்பெற்ற, வயல் மருங்கு - கழனிகளினிடங்களிலே, ஆய்ச்சியர் இரு குறங்கு பிறங்கிய வாழையில் - இடைப்பெண்களது இரட்டை யாகவுள்ள தொடைகள்போல விளங்கிய வாழை மரங்களிலே, குருகு உறங்கும் - நாரைகள் தூங்கும்; குயிலும் துயிலும் - குயில்களும் தூங்கும்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

மகளிர்கண்ணுக்கும் தொடைக்கும் முறையே உவமையாகக் கூறப்படுகின்ற குவளை மலர்களையும் வாழைகளையும் உபமேயமாக்கிக் கூறியது-எதிர்நிலையணி; இவ்வணியினால், குவளைமலர் வாழை என்ற இவற்றைவிட மகளிரது கண்ணும் தொடையும் மிக்கசிறப் பினவென்பது பெறப்படும். தொடைக்குவாழை - திரண்டுஉருண்டு நீண்டு நெய்த்த வடிவில் உவமம். செருகுறுங்கண் - கூந்தல்வரை யில் நீண்ட கண்: முடித்துச் செருகப்படுதலால், கூந்தல் 'செருகு' எனப்பட்டது; செருகு எனினும், சுருள் எனினும், ஒக்கும்: முதனி லைத் தொழிலாகுபெயர்: செயப்படுபொருள்விகுதி புணர்ந்து கெட்ட பெயருமாம். இனி, செருகுறும் - (தூக்கத்தினால்) செருகு தல் பொருந்திய எனினும் அமையும். ஆய்ச்சியர் - முல்லைநிலத்து மகளிர். குறங்குபிறங்கிய, குயிலுந்துயிலும்-பிராசம். பி-ம்:—[1] கணீர்த் தேங்கும்..., கணிற்றேங்கும்..., களித்தேங்குவளைக்குலம். [2] வயலய லாய்ச்சியர், அருங்கனிவாய்ச்சியர். [3] குறங்கிற்பிறங்கிய அல்லது பிறங்கின. (941)

42. [1] தெருவி [2] ஞர்ப்புறும் பல்லியந் தேர்மயில்
கருவி மாமழை யென்று [3] களிப்புரு
பொருநர் தண்ணுமைக் [4] கன்னமும் போகல
மருவி ஞர்க்கு [5] மயக்கமுண் டாங்கொலோ.

(இ - ள்.) தெருவின் ஆர்ப்பு உறும் பல் இயம் - தெருக்களிலே ஆரவாரிக்கின்ற பலவகை வாத்தியங்களின்ஒலியை, தேர் - கேட் டறிந்த, மயில் - மயில்கள், (அம்முழக்கத்தை), கருவி மா மழை என்று -(உலகம் நடத்தற்குத்) துணைக்காரணமான சிறந்த மேகத்தினிடி யென்று மயங்கி, களிப்பு உரு - மகிழ்ச்சியை யடையமாட்டா; அன்னம் உம்-அன்னப்பறவைகளும், பொருநர் தண்ணுமைக்கு-கூத்தரது மத்தளவோசைக்கு (அதனை மேகத்தின் இடியென்றுமயங்கி), போகல - (அஞ்சி) விலகிச்செல்லமாட்டா; மருவினர்க்கு மயக்கம் உண்டாம் கொல்ஒ - எப்பொழுதும் நெருங்கிப் பழகுபவர்க்கு மயக்க முண்டாகுமோ? (எ - று.)

மேகத்தினிடியோசையைக் கேட்டுக் களித்தல் மயில்கட்கும், அஞ்சுதல் அன்னப்பறவைகட்கும் இயல்பு. வாச்சியங்களினோசை -

மேகத்தினிடியையும், முழவினொலி - மேகத்தின் குமுறுதலையும் ஒக்கும். தொண்டைநாட்டில் வாச்சியங்களினொலியைப் பலகால் கேட்டுப் பழகியிருத்தலால், அவ்வாறுதோன்றும் ஒலியை இது மேகத்தினொலியன்றென்று உண்மையறிதலால், மயில்கள் களிப்படையாவாயின; அவ்வாறே, தண்ணுமையொலியை அடிக்கடி கேட்டுப் பழகியிருத்தலால், முழவொலியைக் கேட்கும்போதெல்லாம் இது மேகத்தின் குமுறுதலன்றென்று உண்மையுணர்தல் பற்றி, அன்னப்பறவைகள் அஞ்சி விலகாவாயின; இவ்வாறு பறவைகட்கும் பகுத்தறிவுஉண்டானதற்குக் காரணம் மிக்க பயிற்சியே யென்பதாம். முதல் மூன்றடிகளிற் கூறிய சிறப்புப்பொருள்களை ஈற்றடியிற்கூறிய பொதுப்பொருள் சாதித்து நிற்பது - வேற்றுப்பொருள்வைப்பணியின் பாற்படும். பல் இயம் - தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி எனப் பலவகைப்படும் வாச்சியங்கள். பொருநர் தண்ணுமைக்கு - போர்வீரரது பேரிகையின் முழக்கத்திற்கு, அஞ்சி எனினுமாம். பி - ம்:—[1] செருவின். [2] ஆர்த்தெழு. [3] களிபபுருப், களிப்பரு, கணிப்புரு. [4] அப்புறம் போகில, அன்னமும்போகிலா. [5] மயக்கமுண்டாகுமால். (942)

43. [1] தேரை வென்றுயர் [2] தெங்கிளம் பாளையை
[3] நாரை யென்று நடுங்குவ கெண்டைமீன்
[4] தாரை வன்றலைத் தண்ணிள வாம்பலைச்
[5] சேரை யென்று [6] புலம்புவ [7] தேரையே.

(இ - ள்.) தேரை வென்று உயர் தெங்கு இளம் பாளையை - தேர் போன்று உயர்ந்த [விரிந்த] தலையையுடைய தென்னைமரத்தின் இளமையான [விரியாத] பாளையை(க் கண்டு), மீன் கெண்டை - கெண்டைமீன்கள், நாரை என்று நடுங்குவ - (தங்களைக் கொத்திக் கொல்லும்) நாரையென்னும் பறவையென்று நினைத்து அஞ்சுவன; தாரை வல்தலை தண் இள ஆம்பலை - கூரிய நுனியையும் வலிமையையுமுடைய தலையாகிய அரும்பினைக்கொண்ட குளிர்ந்த இளைய அல்லித்தண்டைக்கண்டு, தேரை - தவளைகள், சேரை என்று புலம்புவ - (தங்களை விழுங்குஞ்) சாரைப்பாம்பென்று நினைத்து வாய்விட்டுக் கதறுவன; (எ - று.)

விரியாத தென்னம்பாளைகள் நாரைப்பறவைகளையும், அரும்புகளைக்கொண்ட செவ்வல்லித்தண்டுகள் சாரைப்பாம்புகளையும் வடிவத்தினால் ஒக்கும்: தென்னம்பாளையை இளங்கெண்டைகள் நாரையாகவும், அரும்புள்ள செவ்வல்லித்தண்டைத் தேரைகள் சாரைப் பாம்புகளாகவும் எண்ணி அஞ்சிப்புலம்பியனவாகக் கூறியது, மயக்கவணியின்பாற்படும். தென்னமரத்தின் விரிந்த தலை தேரின்தலை போல உருவத்தினால் தோன்றுதல் இயற்கையாதலால், 'தேரை வென்றுயர்தெங்கு' என்றார்; உவமையணி. செவ்வல்லியரும்புகள் பசிய புறவிதழ்களால்மூடப்பட்டு வலிமைபெற்றிருக்குமாதலால்,

அதற்கு, 'வன்றலை' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. [1]தேரை வான்றலைஎன்ற பாடத்திற்கு - தேரை, ஐ - சாரியை. தேர் ஐ வான் தலை - முதிர்ந்த அழகிய பெரிய தலைகளையுடைய தெங்கு என்றுமாம். தெங்கிளம்பாளை - தென்னம்பூக்களைப் பொதிந்து தன்னுட் கொண்டுள்ள விரியாத பாளை. வென்று - உவமவுருபு.

தாரை - கூர் நுனி. அல்லியரும்பு அரவின் தலை போன்றிருக்க, அந்த அல்லிக்கொடியின் தண்டு அரவின் உடல்போலுதலால், அல்லியை, தேரை சாரையென்று மயங்கிப் புலம்புவதாயிற்று. இச்செய்யுளின் பின்னிரண்டடியை "செங்கழுநீர்மொட்டை, அரவின் பசுந் தலையென்றஞ்சி - இரவெல்லாம், பிள்ளைக் குருகிரங்கப்பேதைப்புள் தாலாட்டும், வள்ளைக்குருநாடு" என்பதனோடு ஒப்பிடுக. பி - ம்:— [1]தேரைவென்றுயர், தேரைவன்றலை, சேரைவன்றலை, சீரைவன்றலை. [2]தெங்கின்வண் அல்லது வெண்பாளையை. [3]நாரையென்றிளங் கெண்டைநடுங்குவ. [4]ஆரைவன்றலையாம்பலரும்பினை, தாரைவன்றலைத் தண்ணிறவாம்பலை. [5]சாரையென்று. [6]நடுங்குவ. [7]தேரைதாம். (943)

44. [1]நள்ளி வாங்கு [2]கடையிள நவ்வியர்
வெள்ளி வால்வளை வீசிய வெண்மணி
புள்ளி நாரைச் [3]சினைபொரி யாதவென்று
உள்ளி யாமை முதுகி னுடைப்பரால்.

(இ - ள்.) நள்ளி வாங்கு கடை இள நவ்வியர் - பெண்நண்டுகளைப் பிடிக்கின்ற இளமையான மான்போன்ற கடைசிச்சாதிமகளிர்,—வெள்ளி வால் வளை வீசிய வெள் மணி - மிகவும் வெண்ணிறமான சங்கங்கள் ஈன்ற வெண்மையான முத்துக்களை, புள்ளி நாரை பொரியாத சினை என்று உள்ளி - புள்ளிகளையுடைய நாரைகளின் பொரிக்கப்படாத முட்டைகளாகுமென்று நினைத்து, ஆமை முதுகின் உடைப்பர் - (அவற்றை உண்பதற்காக) ஆமைகளின் முதுகில் உடைப்பார்கள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

கடைசியர் வயல்களில் பெண்நண்டுபிடிக்கையில் அங்குக் கிடக்குஞ் சங்குகளீன்ற முத்துக்களை நாரைப் பறவைகளின் முட்டைகளென்று நினைத்து, அவைகளை ஆமைகளின் முதுகில் உடைப்பரென்பதாம்; மயக்கவணி. கடையிள நவ்வியர் - உழத்தியர். கடையிளநவ்வியர் நள்ளி வாங்கு வெண்மணி என்றுஎடுத்து - உழத்தியர் விரும்பிக் கையிலெடுத்த வெண்மையான முத்துக்களை யென்று உரைப்பாருமுளர். ஆமையின் முதுகு கற்பாறைபோல வலியதாயிருத்தலால், கடைசியர் அங்கு முத்துக்களை யுடைப்பாராயினர். நவ்வி - மான். வெள்ளி வால் - ஒருபொருட்பன்மொழி. 'நள்ளி' என்பது - பெண்நண்டு; 'அலவன்' என்பது ஆண் நண்டு. இதனை "பள்ளி கமலத்திடைப்பட்ட பகுவாயலவன் முகம் நோக்கி, நள்ளியூடும் வயல்சூழ்ந்த நறையூர்" என்ற திருமங்கைமன்னர் வாக்காலுமுணர்க. 'நள்ளி வாங்குகடையிள நவ்வியர்' என்னவே, ஆண்

நண்டைத் தொடுதலும் கற்பினுக்கு இழுக்குஎன்ற நயம் தோன்ற வைத்தாரென்ப (நள்ளியென்பது ஆண்பால் நண்டையும் காட்டு வது உண்டு.) பி-ம்:—[1] கள்ளின்கூந்தல். [2] நடை. [3] சினைபொரியாமை, சினைபொரியாவ, சினைப்பொரியாகும், பொலிசினையாகும், சினைப் பொதியாவ. 'அள்ளி நாரைச்சினைப் பொரியாவவென்று' என்று சில பிரதிகளில் மூன்றுவது அடி. (944)

45 சேட்டி ளங்கடு வன்சிறு புன்கையில்
[1] கோட்ட தேம்பல வின்கனிக் கூன்சுளை
தோட்ட மைந்த பொதும்பரிற் றூங்குதேன்
[2] ஈட்ட மென்னச்சென் றீயின மொய்ப்பன.

(இ - ள்.) சேடு இளங் கடுவன் - மிகவும் இளமையான ஆண் குரங்கினது, சிறு புல் கையில் - மிகவுஞ் சிறிய கையிலேயுள்ள, கோட்ட தேன் பலவின் கனி கூன் சுளை - கிளைகளிலுண்டான இனிய பலாப்பழத்தினது வளைவான சுளையில்,—தோடு அமைந்த பொதும் பரில் தூங்கு - இதழ்களையுடைய மலர்கள் நிறைந்தசோலைகளிலே மொய்க்கின்ற, தேன் ஈட்டம் என்ன - வண்டுகளின் கூட்டம்போல,— ஈ இனம் சென்று மொய்ப்பன - ஈக்களின்கூட்டம் போய் மொய்த்துக் கொள்வனவாம்; (எ - று.)

ஆண்குரங்குகளின் கையிலேயுள்ள பலாச்சுளையில் ஈக்கள் மொய்த்தற்கு - சோலைகளிலுள்ள மலர்களில் வண்டுகள் மொய்த் தலை உவமை கூறினர். சேட்டிளம், சிறுபுன் - ஒருபொருட்பன்மொழி கள். [2] "ஈட்ட மங்கதிற்றேய்த்தினி துண்ணுமால்' என்ற பாடத்திற்கு- சிறிய ஆண்குரங்குகள் தமதுகையிலுள்ள பலாச்சுளைகளைச் சோலை யிற் பெருகுந் தேன்பெருக்கில் தோய்த்து இனிதாக உண்ணுமென்க. பி - ம்:—[1] கோட்டிளம். [2] ஈட்டமென்சிறையீயினமீண்டுமால், ஈட்ட மென்சிறையீயின மீட்டுமால், ஈட்டமென்சிறுமந்தியிரப்பன, ஈட்டமங் கதில்...ஈட்டுமால். (945)

46. செல்வ ரென்றும் வடகலை தென்தமிழ்ச்
சொல்வ ரம்பின ரென்றுஞ் [1] சுமடரைக்
கொல்வ ரென்றுங்[2] கொடுப்பன ரென்றுமவ்
[3] வில்வ ரம்பினர்க் கீதேனு மீட்டதே.

(இ - ள்.) செல்வர் என்றுஉம் - செல்வமுள்ளவரென்றும், வட கலை தென்தமிழ் சொல் வரம்பினர் என்றுஉம் - ஸம்ஸ்கிருதம் தமிழ் என்கின்ற பாஷைக்கு எல்லையாகவுள்ளவரென்றும், சுமடரை கொல் வர் என்றுஉம் - துஷ்டர்களை நிக்கிரகஞ்செய்பவ ரென்றும், கொடுப் பனர் என்றுஉம் - (வறியவர்க்கு வரையாது பொருள்) கொடுப்பவ ரென்றும் (பேர்பெற்றுள்ள), அ இல் வரம்பினர்க்கு - அந்தத் தொண்டைநாட்டிலே இல்லறவாழ்க்கைதவறுமலொழுகுஞ் சான்றோர் கட்கு, ஈ தேனுஉம் - (வேண்டுவார்க்கு வேண்டியபொருளை வரை யாது) ஈயுந்தன்மையுள்ள காமதேனுவேனும், ஈட்டுவ - ஒப்பா குமோ? [ஒப்பாகாதென்றபடி]: (எ - று.)

தொண்டை நாட்டிலே செல்வராயும் வடமொழி தென்மொழி களிற் கரைகண்டவராயும் கொடியோரைநலிபவராயு முள்ள இல் வாழ்வாராகிய சான்றோர்க்குக் கொடுக்குந்தன்மையிற் காமதேனு வும் ஒப்பாகாதென்பதாம். ஸம்ஸ்க்ருதம் ஆதியில் வடக்கே இமய மலைப் பிராந்தியத்தில் காசிமுதலிய இடங்களில் மிக்குவழங்கியத னால் அதற்கு, 'வடமொழி' என்றும், அப்பாஷைநூல்கள் 'வட கலை' என்றும் பெயர்பெறும். சுமடர் - தீக் குணமுடையோர். தேனும் - தேனுவும் என்பதன் தொகுத்தல்; உம்மை - உயர்வு சிறப்பு.

இனி, [3]'இல்வரம்பினிறைவனையேத்துவார்' என்ற பாடத் துக்கு இல்வாழ்க்கையிலிருந்துகொண்டே எல்லாம்வல்ல முழு முதற் கடவுளைப் புகழ்ந்து துதிப்பார்க ளென்று பொருளாம். [2]'கொடுப்பன ரென்றும்பே, ரில்வரம்பவர்க்கேயருமீட்டவால்' என்ற பாடத்துக்கு - கொடுப்பவரென்றும் பிரசித்தியையுடைய இல்வாழ்க் கையிலுள்ள இத்தொண்டைநாட்டுச் சான்றோர்க்கு எவ்வகையி லும் உவமைப்பொருள்கள் கிடைக்கமாட்டா வென்க; இப்பொருளில் ஏய் அரும் ஈட்ட - ஈடுஏயரிய: விகுதிபிரித்துக் கூட்டல். பி - ம்:— [1]சுளிபட, சுளிஞரை, சுளிந்துயிர். [2]கொடுப்பவர்..., கொடுப்பவ ரென்றும் பொய், கொடுப்பரென்றும்மிவை, கொடுப்பரென்றுஞ் சொலும், கொடுப்பவரென்றுமிவ். [3]வெல்வரம்பிதற்கேதெனுமீட் டதோ, இல்வரம்பின்றகைத்தெனும் அல்லது தகைத்தெனும் ஈட் டதே, இல்வரம்பினர்க் கேயருமீட்டவா, இல்வரம்பினர்க் கெய்தேனு மீட்டதே, இல்வரம்பினர்க் கேத்தரு மீட்டதே. 'கொல்வரம்பில ரென்னுமிவ்வைவங்குணம், இல்வரம்பின் தகைத்தெனு மீட்டதே' என்று சிலபிரதிகளில் பின்னிரண்டடி. *(946)*

47.—இதுவும், அடுத்த கவியும்-ஒருதொடர்: வாநரவீரர் தொண்டைநாட்டைக்கடந்து சோழநாட்டிற் செல்லுதல்.

அன்ன [1]தொண்டைநன் னாடு [2]கடந்தகல்
பொன்னி நாடு [3]பொருவில ரெய்தினர்
செந்நெ லுங்கரும் புங்கமு குஞ்செறிந்து
[4]இன்னல் செய்யு நெறியரி தேகுவார்.

(இ - ள்.) பொருவு இலர் - ஒப்பில்லாதவராகிய வாநரவீரர்,— அன்ன தொண்டை நல் நாடு கடந்து (கீழ்க்கூறிய) அத்தன்மையான வளங்களையுடைய சிறந்த தொண்டைநாட்டைத்தாண்டி,— அகல் பொன்னி நாடு எய்தினர் - அகன்ற காவேரிநதிபாயுஞ் சோழநாட்டைச் சேர்ந்தவர்களாய்,—(அந்நாட்டில்), செந்நெல்உம் கரும்புஉம் கமுகுஉம் செறிந்து இன்னல் செய்யும் நெறி - செந்நெற்பயிர்களும் கரும்புகளும் பாக்குமரங்களும் (போவதற்குக் கூடாதபடி) எங்கும் நெருங்கித் துன் பஞ் செய்கின்ற வழிகளில், அரிது ஏகுவார் - அருமையாகச் செல்வா ராயினர்; (எ - று.)

காவேரிநதி பாயப்பெற்ற வளத்தால் சோழநாடுமுழுதும்செந்நெற்பயிரும் கரும்புப்பயிரும் பாக்குமரங்களும் எங்கும்நெருங்கிச் செல்வார்க்குப்போகும்வழியும் இடைக்க அரிதாகுமென்க. பி - ம்:— [1] தண்டகநாடு, தொண்டகநாடு. [2] கடந்தனர், கடந்தொரீஇ. [3] பொருவிலது. [4] இன்னலஞ்செய், இன்னல்செய்ய. (947)

48. [1] கொடிறு தாங்கிய வாய்க்[2] குழு நாரைவாழ்
தடறு தாங்கிய [3] கூனிளந் தாழையின்
மிடறு [4] தாங்கும் விருப்புடைத் தீங்கனி
இடறு வார்நறுந் தேனி னிழுக்குவார்.

(இ - ள்.) (வாநரவீரர்),—கொடிறு தாங்கிய வாய் குழு நாரை வாழ் தடறு - கதுப்புப்பொருந்திய வாயையுடைய கூட்டமான நாரைகள் வசிக்கின்ற நீர்க்கரைகளிலே, தாங்கிய - முளைத்துவளர்ந்துள்ள, கூன் இளந் தாழையின் - வளைவையுடைய இளமையான தென்னைமரத்தினது, மிடறு - கழுத்துப்பக்கம், தாங்கும் - சுமந்து கொண்டிருக்கின்ற, விருப்பு உடை தீம் கனி - விருப்பத்தையுண்டாக்குகின்ற இனிய பழுத்துக் கீழ் விழுந்த காய்களினால், இடறுவார் - தடுக்கி விழுபவர்களும், நறுந் தேனின் இழுக்குவார் - (அங்குப் பாய்கின்ற) நறுமணமுள்ள தேன்பெருக்கினால் வழுக்கிவிழுவாருமாயினர்; (எ - று.)

வாநரவீரர் சோழநாட்டிற் செல்லுகையில் இடைவழியிலே முற்றிக் கீழ்விழுந்துள்ள தெங்கம்பழங்களிற் காலிடறியும், தேன் பெருக்கில் வழுக்கியும் வருந்திச்செல்லலாயின ரென்பதாம். தேன் - சோலைகளிற்கட்டிய தேன்கூடுகளிலிருந்து பெருகியதென்னலாம். இச்செய்யுள் - தென்னைமரமிகுதியையும், தேன்மிகுதியையம் விளக்கிய வீறுகோளணியாம். 'இன்னல்செய்ய நெறியரிதேகுவார்' என்று கீழ்க்கவியிற் கூறியதை, இங்கு வேறுவகையாக விளக்கினார். தடறு - மட்டையென்று கூறுவாருமுளர். பி-ம்:—[1] கொடுறு. [2] குளநாரை. [3] கூனினத். [4] கான்ற..., தாங்கியமுப்புடை, தாங்கும்விழுப்புடை. (948)

49.—இதுமுதல் மூன்றுகவிகள் – சோழநாட்டின் வருணனை.

[1] குழூவு மீன்வளர் குட்ட மெனக்கொளா
எழூவு பாட லிமிழ்கருப் பேந்திரத்து
[2] ஒழுகு சாற்றகன் கூனையி னூழ்முறை
முழுகி நீர்க்கருங் காக்கை [3] முளைக்குமே.

(இ - ள்.) கரு நீர் காக்கை - கருநிறமுள்ள நீர்க்காக்கைகள்,—குழுவும் மீன் வளர் - கூட்டமாகத்திரளுந் தன்மையுள்ள மீன்கள் வளர்தற்கு இடமான, குட்டம் என கொளா - குளமென்றுநினைத்து,—எழுவு பாடல் இமிழ் - (சுருதி கூட்டுதற்கு) எழுப்புகின்ற பாடல் போல ஒலிக்கின்ற, கரும்பு ஏந்திரத்து - கரும்பாலையினின்று, ஒழுகு-

பெருகுகிற, சாறு - இரசம்நிறைந்த, அகல் கூனையின் - வாயகன்ற கூனையில், ஊழ் முறை முழுகி - வரிசை வரிசையாக முழுகி, முளைக்கும் - வெளிக்கிளம்பும்; (எ - று.)

ஆலையாடிக் கருப்பஞ்சாறு நிரம்பின மிடாவை நீர்க்காக்கைகள் மீன்கள் நிரம்பிய குளங்களென்று மயங்கி அவற்றில் தமது உணவாகிய மீன்களைக் கொத்தித் தின்பதற்காக மூழ்கிமூழ்கி இரையைப் பெறாது வெளிக்கிளம்புமென்றவாறு; மயக்கவணி. ஆலையாடுகையிலுண்டாகின்ற ஓசை சுருதி கூட்டுகின்ற ஓசையை யொக்கு மென்க. நீரில்மூழ்கி மீண்டு வெளிப்படுதலை 'முளைக்கும்' என்ற சொல்லாற் கூறிய நயம் பாராட்டற்குஉரியது. ஏந்திரம் - யந்த்ரம் என்பதன் மரூஉ. கூனை - கருப்பஞ்சாறுகாய்ச்சுதற்குஉரிய வாயகன்றதொரு கலம். பி - ம்:—[1]குழுவின. [2]உழுதசாறு, உழுதசால்தரும். [3]முளைக்குமால். (949)

50. பூ[1]நெருங்கிய [2]புள்ளுறு சோலைகள்
[3]தேனொருங்கு சொரிதலிற் [4]றேர்வில
[5]மீனெருங்குறும் [6]வெள்ளம் வெரீஇப்பல
வானரங்கள் [7]மரங்களின் வைகுமால்.

(இ - ள்.) பூ நெருங்கிய புள் உறு சோலைகள் தேன் ஒருங்கு சொரிதலின் - மலர்களில் நிறைந்து மொய்க்கின்ற வண்டுகள்மிகுதியாகப்பொருந்திய சோலைகள் தேனை அதிகமாகச் சொரிதலினால், (அத்தேன்பெருக்கைக்கண்டு),—பல வானரங்கள் - (அச்சோலையில் வாழ்கின்ற) பல குரங்குகள், தேர்வு இல - (உண்மையை) ஆராயாதனவாய்,—மீன் நெருங்குறும் வெள்ளம்வெரீஇ - மீன்கள் நிறைந்துள்ள நீர்வெள்ளமென்று அஞ்சி, மரங்களின் வைகும் - மரங்களின் மீதேறி அங்குத்தானே வசிக்கும்; (எ - று.)— ஆல் - ஈற்றசை.

சோலைகளிலுள்ள மலர்கள் தேனை மிகுதியாகச்சொரிதலினால் அத்தேன்பெருக்கை நீர்வெள்ளமென்று மாறாகக்கருதி அஞ்சி அங்குள்ள வானரங்களெல்லாம் நிலத்திலிறங்காமல் மரங்களின்மேலே இருக்குமென்பதாம்: இதுவும் - மயக்கவணியே. இதனால்தேன் மிகுதி பெறப்படுதலால், வீறுகோளணி தொனிக்குமென்க. நீர்வெள்ளத்தைக்கண்டு அஞ்சுதல், வானரங்களின் இயல்பு. 'பூநெருங்கிய' என்பதைச் சோலைக்கு அடைமொழியாக்கி, 'புள்' என்பதற்குப் பறவைகளெனக் கொள்ளினுமாம். 'பூநெருங்கிய' என்ற அடைமொழி - சோலைகள் தேனை மிகுதியாகச்சொரிதற்கு ஏற்றன என்ற கருத்தை விளக்குதலால், கருத்துடையடைமொழியணி. பி - ம்:—[1]நெருங்குறு, நெருங்குவ. [2]புள்ளுறை. [3]தேனொருங்குதருதலின், தேனெருங்கிச்... [4]தேர்ந்துசாய், தேர்ந்துலாய், தேர்விலா. [5]மீனெருங்குவ, மீனொருங்குவ. [6]வெள்ளமெனவெரீஇ. [7]மலைகளின். (950)

51. தாறு நாறுவ [1]தாழைகள் [2]தாழையின்
சோறு நாறுவ [3]தூங்குறு மாங்கனி

நாறு நாறுவ நாறு வளர்க்குறும்
சேறு நாறுவ செங்கழு நீரரோ.

(இ - ள்.) தாழைகள் - தாழைமரங்கள், தாறு நாறுவ - குலைகள் தோன்றப்பெறுவன; தூங்குறு மாங்கனி - (தாழையினருகிலுள்ள மாமரங்களிற் பழுத்துத்) தொங்குகின்ற மாம்பழங்கள், தாழையின் சோறு நாறுவ - தாழைமலர்களின் சுண்ணங்கள் படியப்பெற்று அந்தமணத்தையே வீசுவன; நாறு நாறுவ - (வயல்களில்) நாற்றுக்கள் விளங்குவன; நாறு வளர்க்குறும் சேறு - அந்நாற்றை வளரச்செய்கின்ற குழைசேறுகள், செங்கழுநீர் நாறுவ - (தம்மிடத்து முளைத்து மலர்ந்துள்ள செங்கழுநீர்மலரின் தொடர்பால் அச்) செங்கழுநீர்மலரின் நறுமணத்தையே வீசுவன; (எ-று.)—அரோ - ஈற்றசை.

தாழைமரமும் மாமரமும் ஒன்றற்குஒன்று அருகிலிருத்தலினால், தாழைமலரின் சுண்ணங்கள் படியப்பெற்று மாம்பழங்கள் அம்மணத்தைவீசும்படியும், நாற்றுக்கள் நன்குவளரப்பெற்ற குழைசேறுகள் தமது அருகில் செங்கழுநீரும் உடன்முளைத்திருத்தலால் அச்செங்கழுநீர்மலரின் மணத்தைப் பெறும்படியும் பெருமைவாய்ந்தது சோழநாடென்க; இங்கு, மாம்பழங்களும் சேறும் - முறையே, தாழைமலர்ச்சுண்ணத்தின் நறுமணத்தையும், செங்கழுநீர்மலரின் நறுமணத்தையும் பெற்றனவாகக் கூறியது-பிறிதின்குணம்பெறலணியின் பாற்படும். 'தாறுநாறுவ தாழைகள்' என்பதற்கு - தென்னைமரங்கள் குலைகளினால் விளங்குவன என்று கூறுவாரும், தாழையின் சோறு - தென்னைமரத்தின் உள்ளீடு என்பாரும் முளர். பி - ம்:—[1]வாழைகள். [2]தாழியின். [3]தூம்பிழி, தேம்பிழி, தூம்புமிழ். இச்செய்யுள் சிலபிரதிகளில் இல்லை. (951)

52.—வாநரவீரர் சோழசேரநாடுகளைக் கடந்து பாண்டிய நாட்டை யடைதல்.

அனைய பொன்னி யகன்[1]புன னாடொரீஇ
மனையின் மாட்சி குலாமலை மண்டலம்
வினையி னீங்கிய [2]பண்பினர் [3]மேயினர்
[4]இனிய தென்தமிழ் நாடுசென் றெய்தினர்.

(இ - ள்.) வினையின் நீங்கிய பண்பினர் - தீவினையினின்று நீங்கிய நற்குணமுடையவர்களான வாநரர்கள்,—அனைய பொன்னி அகல் புனல் நாடு ஒரீஇ - அத்தன்மைத்தான காவேரிநதி பாயப்பெற்ற விசாலமாகிய நீர்வளமுள்ள சோழநாட்டைத் தாண்டி, மனையின் மாட்சி குலாம் மலை மண்டலம் மேயினர் - இல்லறத்தின் சிறப்பு விளங்குகின்ற மலைநாடாகிய சேரநாட்டைச் சேர்ந்தவர்களாய், (அங்குச் சீதையைக் காணப்பெறாமல்), இனிய தமிழ் தென் நாடு சென்று எய்தினர் - இனிமையான தமிழ்வழங்கப்பெற்ற தென்னாடாகிய பாண்டியநாட்டைச் சென்று சேர்ந்தார்கள்; (எ - று.)

காவேரிநதிபாயப் பெற்றுச் செழுமை வாய்ந்துள்ளதனால், சோழ நாட்டிற்கு 'புனனாடு' என்று ஒரு பெயர். சேரநாட்டிலுள்ளவர் இல்லறவொழுக்கத்தில் தவறாது நடப்பவரென்றற்கு, அதற்கு 'மனையின்மாட்சி குலாம்' என்று அடைமொழி கொடுக்கப்பட்டது. மலைமண்டலம் - மலைநாடு, சேரநாடு. இராமகாரியஞ்செய்பவராதலால், 'வினையினீங்கிய பண்பினர்' என்றார். பி - ம்:—[1] சென்னிநாடு, வளநாடு. [2] மெய்யினர். [3] மேவினார், [4] இனைய. (952)

53.—பாண்டிய நாட்டின் சிறப்பு.

[1] அத்தி ருத்தகு நாட்டினை யண்டர்நாடு
ஒத்தி ருக்குமென் றா[2] லுரை யொக்குமோ
எத்தி றத்தினு [3] மேழுல கும்புகழ்
முத்து முத்தமி ழுந்தந்து [4] முற்றலால்.

(இ - ள்.) எ திறத்தின்உம்-எல்லாவகையாலும், ஏழ் உலகுஉம் புகழ் - ஏழுலகத்தாராலும் புகழப்படுகின்ற, முத்துஉம் - முத்துக்களையும், முத்தமிழ்உம் - (இயல் இசை நாடகம் என்ற) மூவகைத் தமிழையும், தந்து - (தன்னிடத்திலுண்டாக்கிக்) கொடுத்து, முற்றலால் - பெருமைபெறுதலினால்,— அ திரு தகு நாட்டினை - செல்வவளம் விளங்குகின்ற அந்தப்பாண்டியநாட்டை, 'அண்டர் நாடு - தேவலோகமானது, ஒத்திருக்கும்—,' என்றால் - என்றுகூறினால், உரை ஒக்குமோ - அச்சொல் ஏற்புடையதாகுமோ? [ஏற்புடையதாகாது]; (எ - று.)

அந்தப்பாண்டியநாடானது முத்துக்களையும் முத்தமிழாகிய மூவகைத்தமிழ்களையும் தருகின்றதனால், ஒருவகைத்தமிழ்த்தத்தை மாத்திரமே கொடுக்கின்ற தேவலோகத்தை 'புலவர்நாடு' என்ற பெயரொற்றுமையால் [புலவர் - தேவர்களும், வித்துவான்களும்] அந்த பாண்டிய நாட்டிற்கு ஒப்பாகுமென்று சொல்லுதல் சிறிதுந் தகாதென்றவாறு; ஏதுவணி. உரையொக்குமோ - "சொல்லொக்கும் பொருளொவ்வாவால்." "பூழியர்கோன்தென்னாடு முத்துடைத்து" என்றபடி பாண்டியநாடு முத்துக்குளிக்குங் கடல்துறையை யுடைமையாலும் தமிழ்ச்சங்கங்களைப் பெற்றிருத்தலினாலும், 'முத்து முத்தமிழுந் தந்துமுற்றலால்' என்றார். இங்ஙன் பாண்டியநாட்டைக் கம்பர் சிறப்பித்தலால், இவருடைய பாஷாபிமானத்தோடு நடுநிலைமையும் விளங்கும். பி - ம்:—[1] அத்திறத்தகு. [2] அதுவொக்குமோ. [3] எவ்வுலகத்தினும், ஏழுலகம்புகழ், ஏழுலகும்புகும். [4] முற்றுமோ, முந்துமே. (953)

54.—அந்நாட்டிற் சீதையைக்காணமல் வாநரவீரர் வருந்துதல்.

என்ற [1] தென்தமிழ் நாட்டினை யெங்கணும்
சென்று நாடித் [2] திரிந்து [3] திருந்தினர்
பொன்று வாரிற் பொருந்தினர் போயினார்
துன்ற லோதியைக் கண்டிலர் துன்பினார்.

(இ - ள்.) திருந்தினர் - நேர்மையான மனமுடைய வானரவீரர்கள்,—என்ற - என்று சிறப்பித்துக்கூறப்பட்ட, தென் தமிழ் நாட்டினை - பாண்டியநாட்டை, எங்கணும் திரிந்து சென்று நாடி-எல்லாவிடங்களிலும் அலைந்துசென்று தேடிப்பார்த்து,—துன்று அல் ஒதியை கண்டிலர் - நெருங்கிய இருள்போன்ற கூந்தலையுடைய சீதாபிராட்டியைக் காணாதவர்களாய், துன்பினர் - மிக்க வருத்தங்கொண்டு, பொன்றுவாரின் பொருந்தினர் போயினர் - இறப்பவர்போலச் சோர்வுபொருந்தியவராய்ச் செல்லலானார்கள்; (எ - று.)

பாண்டியநாட்டிற்கு அப்பால் தேடிப்பார்ப்பதற்குத் தேசமொன்றுமில்லாமல் கடலே யிருத்தலால், சீதையைத்தேடும் ஊக்கங் குறைந்து வானரவீரர் உயிரற்றவர்போலச் செயலற்றவராய்ச் செல்லலானார்க ளென்பதாம். பி - ம்:—[1] திருத்தகு. [2] திரிந்த, திருந்த. [3] வருந்தினர், திருத்தினர், திறத்தினல். (954)

55.—வாநரவீரர் மகேநதிர பருவதத்தைச் சார்தல்.

வன்றி சைக்களி றன்ன[1]ம யேந்திரக்
குன்றி சைத்தது வல்லையிற் கூடினர்
தென்றி சைக்கடற் [2] சீகர மாருத
நின்றி சைக்கு நெடு[3]நெறி நீங்கினர்.

(இ - ள்.) (வாநரவீரர்கள்), தென் திசை கடல் சீகரம் - தெற்குத் திக்கிலுள்ள சமுத்திரத்தினது நீர்த்திவலைகளோடு கூடிய, மாருதம்- தென்றற்காற்று, நின்று இசைக்கும் - இடைவிடாது வீசப்பெற்ற, நெடு நெறி - (பாண்டியநாட்டின்) பெருவழியை, நீங்கினர் - கடந்தவர்களாய்,—இசைத்தது - (பலராலும்) சிறப்பித்துக்கூறப்படுவதாகிய, வல் திசை களிறு அன்ன - வலிய திக்கஜம்போன்ற, மயேந்திரம் குன்று - மகேந்திரமலையில், வல்லையில் கூடினர் - விரைவிற் சென்று சேர்ந்தார்கள்; (எ - று.)

பாண்டியநாட்டிற் சென்ற வானரவீரர் தென்கடற்கரையிலுள்ள மகேந்திரபருவதத்தைச் சேர்ந்தார்க ளென்பதாம். தெற்கிலுள்ள மகேந்திரபருவதம் அஷ்டதிக்கஜங்களுள் தென்திசைக்களிறாகிய வாமனம் என்றதைப்போலுமெனக் குறித்தார். பி - ம்:—[1] மகேந்திரக். [2] தீர்தர. [3] நிலம். (955)

ஆறுசெல் படலம் முற்றிற்று.

16—ஆவது சம்பாதிப் படலம்.

சம்பாதியினது செய்தியை யுணர்த்தும் பாகமென்பது பொருள். சம்பாதி = ஸம்பாதி: (இராவணன் சீதாபிராட்டியைக் கவர்ந்து சென்றபோது அவனோடு எதிர்த்துப்போர்செய்த) ஜடாயுவின் தமையன்; அருணனதுகுமாரன். இச்சொல் - நன்றாகப்பறப்பவனென்று

அவயவப்பொருள்படும். வாநரவீரர் சீதாபிராட்டியைத் தேடிக் காணாமையாலும் சுக்கிரீவனிட்ட தவணைநாள் கடந்துவிட்டபடியாலும் மகேந்திரமலையிற் சென்றபின் மிகவும் வருந்திப் பலபடியாகப்பேசிக் கொண்டிருத்தலும், அப்போது அவர்களது வாக்கில் வந்த சடாயுவின்மரணத்தைக் கேட்டுச் சம்பாதி அவர்களெதிரில் வந்து அதன் காரணத்தை விசாரித்தலும், அந்தச்சம்பாதி தமது முனைய வரலாற்றை வாநரர்க்குக் கூறுதலும், வாநரவீரர் தமது வரலாற்றைச் சம்பாதிக்குக் கூறுதலும், பின்பு சம்பாதி தான் முன்பு இழந்த சிறகை ராமநாமோச்சாரணத்தாற்பெற்று வாநரவீரர்க்குச் சீதையிருக்குமிடத்தைத் தெரிவித்துவிட்டு அப்பாற் செல்லுதலும் முதலியன இப்படலத்திற் கூறப்படுகின்றன.

1.—வாநரர் தென்கடலைக் காணுதல்.

மழைத்தவிண் ணகமென முழங்கி [1]வானுற
இழைத்தவெண் டிரைக்கர மெடுத்தி லங்கையாள்
உழைத்தடங் கண்ணி[2]யென் றுரைத்திட் டூழின்வந்து
அழைப்பதே [3]கடுக்கு[4]மவ் வாழி நோக்கினர்.

(இ - ள்.) மழைத்த - நீருண்டமேகத்தையுடைய, விண் அகம் என - ஆகாயத்தினிடம்போல, முழங்கி - சத்தித்து, வான் உற இழைத்த வெள் திரை கரம் எடுத்து - வானத்தைப்பொருந்துமாறு வீசியெறிகின்ற வெண்மையான அலைகளாகிய கைகளை மேலெடுத்து, 'உழை தட கண்ணி - மான்போன்ற விசாலமான கண்களையுடைய சீதை, இலங்கையாள் - இலங்காபுரியிலிருக்கிறாள்,' என்று உரைத்திட்டு - என்றுசொல்லி, ஊழின்வந்து அழைப்பதுஏ கடுக்கும் - முறைமையாக எதிரேவந்து (வானரர்களாகிய தம்மை) அழைப்பதையே யொத்திருக்கின்ற, அ ஆழி - அந்தத்தென்கடலை, நோக்கினர் - (வாநரவீரர்கள்) கண்டார்கள்; (எ - று.)

கடல்ஆரவாரிப்பது - சீதாபிராட்டி இலங்கையி லிருக்கின்றாளென்று உரத்துக்கூறுவதுபோலவும், கடல் அலைகளை வீசுதல் - வாநரர்கட்குச் சமிக்ஞை செய்வதுபோலவும், கடல்திரை கரையிற் செல்வது - அவ்வானரர்களை இங்கேவாருங்களென்று எதிர்கொண்டு கைகளைத் தூக்கி யழைப்பதுபோலவும் இருந்த தென்பதாம்: தன்மைத் தற்குறிப்பேற்றவணி; இவ்வணிக்கு 'வெண்டிரைக்கரம்' என்ற உருவக வணி அங்கமாய் நின்றது. 'முழங்கி' என்பது 'உரைத்திட்டு,' என்பதையும், 'திரைக்கரமெடுத்து' என்பது 'அழைப்பது' என்பதையும் முறையேசென்று இயைதலால், முறைநிரனிறைப்பொருள்கோளாம். 'வார்கடல் இழைத்தவெண்டிரைக் கரமெடுத்திலங்கையாள், உழைத்தடங்கண்ணியென்னுழை யென்றேடிவந்து' என்ற பாடத்துக்கு - கடலில்தோன்றுகின்ற அலைகளாகிய கைகளை உயரவெடுத்து, மான்போலும்மருண்டபார்வையையுடைய சீதாபிராட்டி

என்னிடத்தி லிருக்கின்றனளென்று உரத்துச்சொல்லி இலங்கை யென்னும்பெண் ஓடிவந்து அழைப்பதை யொத்திருத்தற்குக் காரணமான ஆழியை நோக்கினு ரென்று பொருளாம். இலங்கையாள் - இலங்கையென்ற முதனிலையின் பெண்பாற்குறிப்புமுற்று. உழைக் கண்ணி - உவமைத்தொகை. கடுக்கும் - தற்குறிப்பேற்றவுருபு. பி-ம்:—[1]வானுரை, வண்கடல். [2]என்றுரைத்திட்டோடி. [3]அடுக்கும். [4]மாலாழி. ஒருபிரதியில் 'உழைத்தடங்கண்ணியை யூளையிட்டு வந்து' என மூன்றுமடி காணப்படுகின்றதென்ப. (956)

2.—முன்பு ஏமகூடத்திற் பிரிந்த இரண்டுவெள்ளம் வாநரசேனை அங்குவந்து கூடுதல்.

[1]விரிந்துநீ ரெண்டிசை [2]மேவி நாடினீர்
பொருந்துதிர் [3]மயேந்திரத் தென்று போக்கிய
[4]வருந்துணைக் கவிகளா மல்கு சேனையும்
பெருந்திரைக் கடலெனப் [5]பெயர்த்துங் கூடிற்றே.

(இ - ள்.) நீர் - நீங்கள், விரிந்து - பரவி, எண் திசை மேவி - எட்டுத் திக்குக்களிலுஞ் சென்று, நாடினீர் - (சீதாபிராட்டியைத்) தேடியவர்களாய், மயேந்திரத்து பொருந்துதிர் - மகேந்திர மலையில் வந்துகூடுங்கள்,' என்று - என்று சொல்லி, போக்கிய - (அங்கதன் முதலிய வாநரவீரர்) அனுப்பிய, துணை வரும் மல்கு கவிகள் ஆம் சேனை உம் - (தமக்குத்) துணையாகவந்த நிறைந்த [இரண்டுவெள்ளக் கணக்கான] வாநரசேனையும், பெருந் திரை கடல் என - பெரிய அலைகளையுடைய மற்றொரு சமுத்திரம்போல, பெயர்த்து உம் கூடிற்று-மறுபடியும் (அங்கதன் முதலிய அவ்வாநரவீரரோடு) வந்து சேர்ந்தது; (எ - று.)

"தெள்ளுநீருலகெலாந் திரிந்துதேடிநீ, ரெள்ளருமயேந்திரத் தெம்மிற்கூடுமின்" என்று முன்னம் ஏற்படுத்திய சங்கேதப்படி, பிரிந்து சென்ற வாநரசேனை இப்பொழுது மகேந்திரமலையில் வந்து கூடிற் றென்பதாம். பி - ம்:—[1]விரிந்த. [2]மேவுமேன்மையார், மேவி மேன்மை யால், மேவுமேனியார். [3]மகேந்திரத்து. [4]அருந்துணைக் கவிகளாமள வில் அல்லது அலகில் சேனையும். [5]பின்பு, பெரிது. 'பொருந்துமி னென்றவர்போய சூழல்வாய்' என்று சிலபிரதிகளிலிரண்டாமடி: வேறுசிலபிரதிகளில், இச்செய்யுள் முன்னும், 'மழைத்தவிண்ணகம்' என்பது பின்னுமாகவுள்ளன. (957)

3.—வாநரவீரர் யாவரும் சீதாபிராட்டியைக் காணுமையால் வருந்திக்கூறத் தொடங்குதல்.

யாவரு மவ்வயி னெளிதி னெய்தினர்
பூவரு [1]புரிகுழற் பொருவில் கற்புடைத்
தேவியைக் காண்கிலார் செய்வ தோர்கிலார்
[2]நாவுறக் குழறிட நவில்கின் றாரரோ.

(இ - ள்.) யாவரும் - வானரர் எல்லோரும்,—அ வயின் எளிதின் எய்தினர் - அவ்விடத்து வருத்தமில்லாமல் வந்துசேர்ந்து, பூ வரு புரி குழல் பொருவு இல் கற்பு உடை தேவியை காண்கிலார் - தாமரைமலரில் தோன்றிய [இலக்குமியின் அவதாரமாகிய] நுனி சுருண்ட கூந்தலையும் ஒப்பில்லாத பதிவிரதா தருமத்தையுமுடைய சீதாபிராட்டியைக் காணமல்,—செய்வது ஓர்கிலார் - இனிச்செய்ய வேண்டியது (இன்னதென்று) தோன்றப்பெறுதவர்களாய், நா உற குழறிட - நாக்கு மிகவுங்குளற, நவில்கின்றார் - பேசலானார்கள்; (எ - று.)—அதனை, அடுத்த இரண்டு கவிகளிற் காண்க. அரோ - ஈற்றசை.

பூ வரு என்பது - மலரை யணிந்த என்றும், பூமியினின்று தோன்றிய [பூ - பூமி] என்றும் பொருள்படும். பி - ம்:—[1]பொலங்குழல். [2]நாவியல் குழறிட, நாமுதல் குன்றிட. 'யாவரும் மவ்வயினின்று மன்னியல், பூவருமருந்ததி பொருவுங் கற்புடைத், தேவியை யெங்கணுந் தேடிக் கண்டிலம், மேவின மென்பது விளம்பினாரரோ' என்று இச்செய்யுள் ஒருபிரதியில் மாறிக்காண்கின்றதென்ப. சிலபிரதிகளில் 'யாவருமகேந்திரத்தருகிலெய்தினார்... நாவுறப் பன்மொழி நவில்கின்றாரரோ' என்று முதல் நான்காமடிகள். (958)

'அன்னதோ ரளவையி னங்க நாடொரீஇத்
தென்மலை நாட்டினைத் தேடிச் சென்றுடன்
இன்னிசைத் தலைவரோ டிரண்டு வெள்ளமும்
மன்னுமா மகேந்திரத் தலத்து வந்ததால்'

என்று ஒருசெய்யுள் ஒருபிரதியில் காணப்பட்ட தென்ப.

4.—இதுவும், அடுத்த கவியும் - வாநரவீரர் வருந்திக்கூறிய வார்த்தை.

அற்றது [1]நாள்வரை யவதி [2]யாட்சியும்
[3]உற்றில மிராகவ [4]னுயிரும் பொன்றுமால்
கொற்றவ னாணையுங் [5]குறித்து நின்றனம்
இற்றது நஞ்செய லினியென் றெண்ணினார்.

(இ - ள்.) 'வரை நாள் அவதி அற்றது - (சுக்கிரீவமகாராசன் நமக்குக்) குறித்திட்ட ஒருமாதத்தவணையும் கழிந்துவிட்டது; ஆட்சிஉம் உற்றிலம் - (சீதையைக் கண்டுபிடித்தலாகிய நமது) காரியத்தையும் முடித்தோமில்லை; (இதனையறிந்தால்), இராகவன்உயிர்உம் பொன்றும் - இராமபிரானது உயிரும் ஒழியும்; கொற்றவன் ஆணைஉம் குறித்து நின்றனம் - சுக்கிரீவமகாராசனது கட்டளையையும் மனத்திற்கொண்டுநின்றோம் [அவன் கட்டளைப்படியேமுழுதுந் தேடினோம்]; இனி நம் செயல் இற்றது - இனிமேல் நாம் செய்வதற்கு உரிய தொழில் ஒன்று மில்லை,' என்று - என்றுசொல்லி, எண்ணினார் - மனத்திற் பலவாறாகக் கவலைகொண்டார்கள், (வானரர்கள்); (எ - று.)—ஆல் - ஈற்றசை.

இனி இற்றது - தெளிவினால் வந்தகாலவழுவமைதி. பி - ம்:— [1]சொன்னநாளவதி. [2]காட்சியும். [3]முற்றிடும் அல்லது உற்றிடும். [4]உயிருமோயுமால், உயிரையொன்றுநம், உயிருமொன்றுநம், உயிருமென்றுநம், உயிருமோங்குநம். [5]குதித்து. 'இற்றநஞ்செயல் வினையினியென்றுன்னுவார்' என்று சிலபிரதிகளில் நான காமடி. (959)

5. அருந்தவம் புரிதுமோ வன்ன தன்றெனின்
[1]மருந்தரு நெடுங்கடு வுண்டு மாய்துமோ
[2]திருந்திய தியாதது செய்து தீர்துமென்று
இருந்தனர் தம்முயிர்க் கிறுதி யெண்ணுவார்.

(இ - ள்.) '(இக்கிஷ்கிந்தைக்குமீண்டுசெல்லாமல் இங்கிருந்தவாறே), அருந் தவம் புரிதும்ஓ - (செய்வதற்கு) அருமையான தவத்தைச் செய்வோமோ? அன்னது அன்று எனின் - அவ்வாறு செய்யாவிட்டால், மருந்து அரு நெடுங் கடு உண்டு மாய்துமோ - மாற்று மருந்தில்லாத கொடியவிஷத்தைப் புசித்து இறப்போமோ? திருந்தியது யாது அது செய்து தீர்தும் - (இவ்விரண்டில்) தகுதியானது எதுவோ அதைச் செய்தேவிடுவோம்,' என்று - என்று சொல்லி, இருந்தனர் - (அம்மகேந்திரமலையில்) ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள்: (யாவரெனில்),—தம் உயிர்க்கு இறுதி எண்ணுவார்-தமது உயிர்க்கு முடிவு நேருமாயின் (அதனைச் சிறப்பாக) மதிக்கின்ற வாநரர்கள்; (எ - று.)

தவணைநாள்கழிந்தபிறகும் சீதையைக்கண்டுபிடித்தலாகிய காரியத்தைநிறைவேற்றாது கடுந்தண்டனையுடைய சுக்கிரீவமகாராசனது எதிரிற் செல்வதற்குப் பின்வாங்கியவர்களாய்,வாநரர்,இவ்வாறு எண்ணிக்கூறினரென்க. மருந்தருநெடுங்கடு - பரிகாரமில்லாத விஷம்; இங்கு, அருமை - இன்மைப்பொருளது. "தீண்டா விடுத லரிது" என்னுமிடத்திற் போல. 'தம்முயிர்க்கிறுதியெண்ணுவார்' என்பதற்கு - தமது மரணத்தைச் சிந்திப்பவர்களாகிய வாநரர் எனப் பொருள்கூறின், 'அருந்தவம்புரிதுமோ' என்றதனோடு மாறுபடும். பி - ம்:—[1]வருந்தருகெடுங்கடு, மருந்தினில்தீர்விலாக்கடுவின். [2]திருந்தியதொருவிதஞ்செய்து. (960)

6.—அப்போது அங்கதன் வாநரர்க்கு ஒன்று கூறத் தொடங்குதல்.

[1]கரைபொரு கடலயற் கனக மால்வரை
[2]நிரைதுன் றியவென நெடிதி ருந்தவர்க்கு
உரைசெயும் [3]பொருளுள தெனவு ணர்த்தினன்
அரசிளங் கோளரி யயருஞ் [4]சிந்தையான்.

(இ - ள்.) அரசு இளங் கோள் அரி - வலிமைமையுடைய ஆண்சிங்கம் போன்ற இளவரசனாகிய அங்கதன்,—கரை பொரு கடல் அயல்-(அலைகள்) கரையைமோதுகின்ற கடலுக்கு அருகிலுள்ள

மகேந்திரமலையில்; கனகம் மால் வரை நிரை துவன்றிய என - பெரிய மேருமலைகள் வரிசையாக விளங்கியனபோல, நெடிது இருந்தவர்க்கு - மிகுதியாக நிரம்பியிருந்த வாநரர்களை நோக்கி,—அயரும் சிந்தையான் - வருந்துகின்ற மனமுடையவனாய்,—உரைசெயும் பொருள் உளது என உணர்த்தினன் - 'கூறுதற்குஉரிய செய்தி யொன்று உண்டு' என்று கூறலானான்; (எ - று.)—அதனை, அடுத்த மூன்று கவிகளிற் காண்க.

ஒவ்வொரு வாநரனும் மேருமலைபோன்றிருத்தலால், 'கனக மால் வரை நிரை துவன்றியவென' என இல்பொருளுவமையாகக்கூறினர். அரசிளங்கோளரி=கோளரிஇளவரசு: கோள் அரி-வலிமையையுடைய குரங்குகட்கு, இளவரசுஎனக்கூறுவாரு முளர். அங்கதன் இளவரசனாதலால், அயருஞ்சிந்தையுடன் கூறலாயினனென்க. பி - ம்:—
[1] திரைபொருகனைகடல், கரைபொருகருங்கடல், கரைபொருகனைகடல். [2] நிரையவன்றுற்றென. [3] பொருளதொன்றுணர்த்தினனரோ. [4] அருளும். (961)

7.— மூன்றுகவிகள் - ஒருதொடர்: அங்கதன்வார்த்தை.

நாடிநாங் கொணருது நளினத் தாளைவான்
மூடிய வுலகினை [1]முற்று முட்டியென்று
ஆடவர் திலகனுக் [2]கன்பி னோரெனப்
பாடவம் விளம்பினம் பழியில் [3]மூழ்குவான்.

(இ - ள்.) (அங்கதகுமாரன் வாநரர்களைநோக்கி),—'நாம்—, —வான் மூடிய உலகினை முற்றும் முட்டி - வானத்தினாற்கவியப்பட்ட நிலவுலக முழுவதும் சென்று, நாடி - தேடி(க் கண்டு), நளினத்தாளை கொணருதும் - தாமரை மலரிற் பிறந்த இலக்குமியின் அமிசமான சீதாபிராட்டியினிடத்தினின்று செய்திகொண்டுவருவோம், என்று-, ஆடவர் திலகனுக்கு அன்பினோர் என - புருஷோத்தமனாகிய இராமபிரானிடத்தில் அன்புடையவர்போல, பழியில்மூழ்குவான் - (பிறகு சொன்னபடிசெய்யாமல்) பழியில்மூழ்கும் பொருட்டு, பாடவம் விளம்பினம் - வீண்வாய்ப்பெருமை கூறினோம்; (எ - று.)

சீதாபிராட்டியைத்தேடுமாறு நம்மை அனுப்பியகாலத்தில், இராமபிரானிடத்துப் பக்தியுடையவர்போலநடித்துக் காரியத்தை முடித்தே தீர்வோ மென்று நமதுவர்க்கினால் டம்பமாகக்கூறியது நமதுபழிப்பிற்கே காரணமாமென்பதாம். "சொல்லாமலேபெரியோர் ...செய்வர்" என்றவாறு முன்புசொல்லாமலே ஒரு காரியத்தைச் செய்துமுடித்தல் பெரியோர்களது தன்மையாயிருக்க, அவ்வாறு செய்யாமல் "சொல்லியுஞ்செய்யார் கயவர்" என்றபடி கீழோரின் தன்மை நமக்கு நேர்ந்துவிட்டதெனத் தம்மைப்பழித்தவாறு. நளினத்தாளைக்கொணருதும் என்பதற்கு - சீதாபிராட்டியைக்கொண்டு வருவோ மெனக் கூறுதல், பொருத்தமன்று. ஆடவர்திலகன் - திலகம் நெற்றிக்குவிளக்கத்தைச்செய்வது போல ஆடவர்

கட்கு விளக்கஞ்செய்பவன் என்றபடி. பாடவம்- படுவினிடத்திலுள்ள தன்மை; (படு - சமர்த்தன்:) ஏவியபின், தேடிவருவதாக அங்கதன் முதலியோர் புறப்பட்டதனையே 'பாடவம்விளம்பினன்' என்றதாகக் கூறியது. பி - ம்:—[1]முற்றிமுட்டி, முற்றுமோடி. [2]அன்பினரெனப், அன்பினேமென. [3]மூழ்குவாம், மூழ்கினும். (962)

8. செய்துமென் றமைந்தது செய்து தீர்ந்திலம்
நொய்துசென் றுற்றது நுவல கிற்றிலம்
எய்தும்வந் [1]தென்பதோ ரிறையுங் கண்டிலம்
உய்துமென் று[2]லிதொ [3]ருரிமைத் தாகுமோ.

(இ - ள்.) செய்தும் என்று அமைந்தது செய்து தீர்ந்திலம் - (நாங்கள்) 'செய்வோம்' என்று ஏற்றுக்கொண்ட செயலைச் செய்து முடித்திலோம்; நொய்து சென்று உற்றது நுவலகிற்றிலம் - (தவணைக் காலத்திற்குள்) விரைவாகத் திரும்பிப்போய் நேர்ந்தவற்றை [சீதையைக்காண முடியவில்லையென்பதை] ச்சொல்லித் தெரிவிக்கவும் வலியற்றவரானோம்; வந்து எய்தும் என்பது ஓர் இறைஉம் கண்டிலம் - (தவணைகடந்தாலும்) காரியம்கைகூடுமென்பதற்கு ஒருசிறிதும் (வழி) அறிந்தோமில்லை; (இப்படியிருப்பதனால்), உய்தும் என்றால் - (இறவாது) உயிர்வைத்திருப்போமானால், இது—, ஓர் உரிமைத்து ஆகுமோ - தகுதியானதொரு செயலாகுமோ? [தகுதியற்றசெயலேயாமென்றபடி]; (எ - று.)

நாம் எண்ணிவந்தகாரியம் முடிவதற்கு எவ்வகையிலும் சிறிதும் வழியில்லை; தவணைக்குள் மீண்டுசென்று சேர்தலும் முடியாது: ஆகையால் உயிர்மாய்வதே உறுதி யென்று அங்கதன் அறுதியிட்டன னென்க. பி - ம்:—[1]இன்பமோர். [2]இதற்கு, இதங்கு, அதங்கு. [3]உவமைத்து. (963)

9. எந்தையு முனியுமெம் மிறையி ராமனும்
[1]சிந்தனை வருந்துமச் செய்கை காண்குறேன்
நுந்துவெ னுயிரினை [2]நுணங்கு கேள்வியீர்
புந்தியி [3]னன்னது புகல்வி ராமென்றான்.

(இ - ள்.) (காரியத்தைமுடியாமலே தவணை கடந்தபிறகு மீண்டு சென்றேனானால்),—எந்தைஉம் முனியும் - எனது தந்தையாகிய சுக்கிரீவ மகாராசனும் கோபிப்பான்; எம் இறை இராமன்உம் சிந்தனை வருந்தும் - நமக்கெல்லாந்தலைவனாகிய இராமபிரானும் மனம் வருந்துவான்; அ செய்கை காண்குறேன் - அச்செயல்களைக் (கண்ணுற்) காணுந் திறமிலேன்: (ஆதலால்), உயிரினை நுந்துவென் - (எனது) உயிரை மாய்த்துக்கொள்வேன்; நுணங்கு கேள்வியீர் - நுட்பமான நூற்கேள்விகளையுடையவர்களே! அன்னது - அச்செயலைக்குறித்து, புந்தியின் புகல்விர் - (உமது) அறிவினால் ஆராய்ந்து கூறுவீர், என்றான் - என்று கூறினான்; (எ-று.)—ஆம் - அசை.

சுக்கிரீவனது கடுந்தண்டனைக்கும் இராமபிரானது பெருவருத்தத்திற்கும் அஞ்சி, அங்குச்செல்லாமல் இங்குத்தானே நான் உயிர் துறத்தல் நலமென்று எண்ணுகின்றேன்; இத்திறத்தில் நுமது கருத்தைச்சொல்லுங்களென்று அங்கதன் மற்றையோரை வினவினனென்க. நுந்துதல் - வெளிச்செலுத்துதல். 'அன்னதுபுகல்விர்' என்பதற்கு - (நீங்கள் இங்கிருந்து மீண்டுபோய்ச் சுக்கிரீவமகாராசனிடத்தும் இராமபிரானிடத்தும்) எனது மரணத்தைச் சொல்லுங்களென்று உரைப்பது, முதனூலுக்கு ஏற்கும். பி - ம்:—[1]சிந்தையின். [2]உணங்கு. [3]உற்றது புகலு நீர், உற்றதுபுகறிராம். 'உந்துவனுயிரினை யுணங்குகேள்வியீர்' என்று மூன்றாமடிக்குச் சில இடத்துப் பாடம். (964)

10.—இரண்டு கவிகள் - சாம்பவான் வார்த்தை.

விழுமிய துரைத்தனை விசயம் வீற்றிருந்து
எழுவொடு மலையொடு [1]மிகலுந் தோளினாய்
அழுதுமோ [2]விருந்துநம் மன்பு பாழ்படத்
தொழுதுமோ சென்றெனச் [3]சாம்பன் சொல்லினான்.

ஆறுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) விசயம்வீற்றிருந்து எழுவொடுஉம் மலையொடுஉம் இகலும் தோளினாய் - பராக்கிரமம்மிக்கு இருப்புத்தூண்களோடும் மலைகளோடும் ஒப்பாகின்ற தோள்களையுடைய அங்கதகுமாரனே!—விழுமியது உரைத்தனை - சிறப்புடையதாக ஒருவார்த்தைசொன்னாய்; (நீ இறந்து பட்டால்), இருந்து அழுதும்ஓ - (யாங்கள்) இங்கிருந்தவாறே புலம்புவோமோ? (அல்லது), நம் அன்பு பாழ்பட சென்று தொழுதும்ஓ - எமதுஅன்பு அடியோடு ஒழியுமாறு மீண்டு சென்று (சுக்கிரீவமகாராசனிடத்திலும் இராமபிரானிடத்திலும் உனதுசெய்தியைத்) தொழுது சொல்வோமோ? என - என்று கூறி, சாம்பன் - ஜாம்பவான், சொல்லினான் - (மீண்டும்) சொல்வானாயினான்; (எ - று.)

ஓகாரங்கள் - விகற்பத்தோடு எதிர்மறைப்பொருளன; நீ இறந்த பிறகு நாங்கள் அழுதுகொண்டிருத்தலும், இங்கிருந்து சென்று தொழுது செய்திகூறுதலும் தகுதியன்று என்றவாறு. 'விழுமிய துரைத்தனை' என்றது - எமக்கெல்லாம் இளவரசனாகிய நீ இறப்பேனென்பது சிறிதுந்தகாதென்று பிறகுறிப்புப்பொருளது. நீ இறந்த பிறகு நாங்களும் உடனிறவாமற் சென்று செய்தி கூறுவதெனபது, எங்களது அன்பில்லாமையைக் காட்டுமென்பான், 'அன்புபாழ்படத் தொழுதுமோ?' என்றான். பி - ம்:—[1]இசையும். [2]விழுந்து. [3]சரபன் என்றுசிலர். (965)

11. மீண்டினி யொன்றுநாம் விளம்ப மிக்கதென்
மாண்டுறு வதுநல மெனவ லித்தனம்
ஆண்டகை யரசிளங் [1]குமர வன்னது
[2]வேண்டலி னின்னுயிர்க் குறுதி [3]வேண்டுமால்.

(இ - ள்.) ஆண் தகை அரசு இளங் குமர - ஆண்மைக் குணமுடைய இளவரசனான அங்கதகுமாரனே! மீண்டு இனி ஒன்று நாம் விளம்ப மிக்கது என் - (யாங்கள்) திரும்பிச்சென்று சொல்வதற்குத் தான் என்ன செய்தி உண்டு? [ஒன்றுமில்லையன்றோ!] (ஆதலின்), மாண்டு உறுவது நலம் என வலித்தனம் - (யாங்கள்) இறந்தொழிவதே நலமென்று உறுதிகொண்டோம்; அன்னது வேண்டலின் - அவ்வாறு (நாங்கள்) விரும்பினபடியால், நின் உயிர்க்கு உறுதி வேண்டும் - உனது உயிர்க்கு அழிவின்மை அவசியமானது; (எ - று.)

சீதையைத்தேடிக்காணமுடியாமையால் நாங்கள் மீண்டு போய்ச் சொல்வதற்கும் ஒன்றுமில்லை; ஆகையால், நாங்கள் இறந்தொழிவதே தகுதி யென்று தோன்றுகின்றது; இளவரசனுயிருத்தலால், நீ உயிருடன் வாழ்வது இன்றியமையாததாகுமென்று ஜாம்பவான் கூறினனென்க. இச்செய்யுளையடுத்து, பதினேழாங் கவியாகிய "நீயு நின்றுதையும்" என்ற தொடக்கத்துச் செய்யுள் சிலபிரதிகளிற் காணப்படுகின்றது. பி - ம்:—[1]குமரன். [2]வேண்டலன், வேண்டினன், வேண்டின். [3]வேண்டுமே. (966)

12.—இதுமுதல் நான்குகவிகள் - அங்கதன் வார்த்தை.

என்றவ னுரைத்தலு மிருந்த வாலிசேய்
[1]குன்றுறழ்ந் தெனவளர் குவவுத் தோளினீர்
[2]பொன்றிநீர் மடியயான் போவ னேலது
[3]நன்றதோ [4]வுலகமு நயக்கற் பாலதோ.

(இ - ள்.) என்று அவன் உரைத்தலும் - இவ்வாறு ஜாம்பவான் கூறியவுடனே, இருந்த - அதனைக்கேட்டிருந்த, வாலி சேய் - வாலியின்குமாரனான அங்கதன்,—(மற்றையோரை நோக்கி), குன்று உறழ்ந்து என வளர் குவவு தோளினீர் - மலைகள் ஒப்பென்று சொல்லும்படி வளர்ந்த திரண்டதோள்களையுடையவர்களே! நீர் பொன்றி மடிய - நீங்கள் யாவரும் இங்கே இறந்தொழிய, யான் போவன்எல் - யான்மாத்திரம் (உயிருடன்) மீண்டுசெல்வேனானால், அது—, நன்றுஓ - நன்றாயிருக்குமோ? உலகம்உம் நயக்கல் பாலதுஓ - (எனது அச்செய்கை) உலகத்தாரால் விரும்பத்தக்கதாகுமோ? (எ - று.)— இச்செய்யுளிலுள்ள 'வாலிசேய்' என்ற எழுவாய், 'என மறித்துங் கூறுவான்' என அடுத்த செய்யுளில் முடியும்.

இங்கு, 'உலகம்' என்பது - உயர்ந்தோரையுணர்த்தும் மென்னலாம். நன்றது, அது - பகுதிப்பொருள்விகுதி. பி - ம்:—[1]குன்றுறழ்ந்தனவெனும், குன்றுறவுயர்ந்தன, குன்றுயர்ந்தனவென. [2]பொன்றினீர். [3]நன்றரோ. [4]உலகுளோர் நகைக்க நாணுமால், உலகமுநயக்கற்பாலதே அல்லது நகைக்கற்பாலதே. (967)

13. சான்றவர் [1]பழியுரைக் கஞ்சித் தன்னுயிர்
[2]போன்றவர் மடிதரப் [3]போந்து ளானென

ஆன்றபே ருலகுளோ [4]ரறைதன் முன்னம்யான்
வான்றொடர் குவெனென மறித்துங் கூறுவான்.

(இ - ள்.) 'சான்றவர் பழி உரைக்கு அஞ்சி - பெரியோர்கூறும் பழிமொழிகட்குப்பயந்து, தன் உயிர் போன்றவர் மடிதர - (உடன் வந்த) தனது உயிரோடொத்த நண்பர்கள் யாவரும் உயிர்மாயவும், போந்துளான் - (அங்கதன்மாத்திரம் இறவாமல் உயிருடன்) வந்து சேர்ந்தான்,' என - என்று, ஆன்ற பேர் உலகு உளோர் அறைதல் முன்னம் - விசாலமான பெரிய உலகத்திலுள்ளோர் (பழித்துக்)கூறுவதற்குமுன்னமே[பழித்துக்கூறுவதற்கு இடமில்லாமலே], 'யான்—, வான் தொடர்குவென் - (இறந்து) மேலுலகஞ் செல்வேன்,' என - என்றுசொல்லி, மறித்தும் கூறுவான் - மீண்டுஞ் சொல்வானாயினான்; (எ - று.)—அதனை, அடுத்த இரண்டு கவிகளிற் காண்க.

"மீண்டுசென்றால், வாயினால் டம்பமாகக்கூறி ஏற்றுக் கொண்ட காரியத்தை முடிக்காமல் வாளா மீண்டனரே!" என்று பெரியோர்கள் பழிக்கும் பழிப்பிற்கு அஞ்சி உயிர்போன்ற நண்பர் யாவரும் உயிர் விடவும் இவன்மாத்திரம் அவ்வாறு அச்சஞ்சிறிதுமின்றி மீண்டனன் என்ற உலகத்தாரது பழிச்சொல்லுக்குச் சிறிதும் இடமில்லாமல், முந்துற உயிர்மாய்வேனென்று அங்கதன் கூறினனென்க. பி - ம்:—[1]பழித்துரைக்கு. [2]ஏன்றவரழிதர, போன்றவர் பொன்றவும். [3]ஈண்டுளானென. [4]அறைதன் முன்னமே. (968)

வேறு.

14. [1]எல்லைநம் மிறுதி யாய்க்கு மெந்தைக்கும் யாவ ரேனும்
சொல்லவுங் [2]கூடுங் கேட்டாற் [3]றுஞ்சவு மடுக்குங் கண்ட
வில்லியு மிளைய கோவும் [4]வீவது திண்ண மச்சொல்
மல்லனீ ரயோத்தி[5] புக்கால் வாழ்வரோ பரதன் மற்றோர்.

(இ - ள்.) (சென்று செய்தி சொல்வதற்கும் ஒருவருமின்றி ஒருங்கே நாம் எல்லோரும் இங்கே இறந்தொழிந்தால்),—நம் இறுதி எல்லை - நமது இறத்தலாகிய ஆயுளின் முடிவை [நாம் மாண்டு போகுஞ்செய்தியை], யாய்க்குஉம் - எனது தாயாகிய தாரைக்கும், எந்தைக்குஉம் - எனது தந்தையாகிய சுக்கிரீவமகாராசனுக்கும், யாவர் ஏனும் சொல்லஉம் கூடும் - வேறுயாராவது சொல்லவுங் கூடும்; கேட்டால் - (அதனைக்) கேட்டறிந்தால், துஞ்சஉம் அடுக்கும் - (அதனால் அவர்கள்) மாண்டுபோகவுங்கூடும்; கண்ட - (நமது மரணத்தினால் சுக்கிரீவனும் தாரையும் இறந்த அச்செய்கையைக்) காண்கின்ற, வில்லிஉம் - வில்வீரனை இராமபிரானும், இளையகோஉம் - இளைய பெருமாளான இலக்குமணனும், வீவது - (தாங்களும்) இறப்பது, திண்ணம் - நிச்சயம்; அ சொல் மல்லல் நீர் அயோத்தி புக்கால் - (இராமலக்குமணர் இறந்த) அச் செய்தி வளப்பமுடைய நீர்நிறைந்த அயோத்தியாபுரியிற் சேர்ந்

தால், பரதன் மற்றோர் வாழ்வர்ஓ - பரதனும் மற்றையோரும் வாழ்வார்களோ? [உடனே உயிர்மாய்வ ரென்றபடி]; (எ - று.)

நம்மிறுதியைத் தாரையும், சுக்கிரீவனும் எவராலேனும் அறிவர்: அதனால் அவர்க்கும், ராமலக்ஷ்மணர்க்கும், அதனால் பரதன் முதலியோர்க்கும் மரணமுண்டாதல் கூடுமெனக்கலுழ்ந்தான் அங்கதனென்க. சாதலை 'துஞ்சுதல்' என்றது, மங்கலவழக்கு.பி-ம்:—[1]எல்லையெம்மிறுதியாய்க்கும், எல்லையேயிறுதியாக்கும், எல்லையிலிறுதியுய்க்கும். [2]கூடுமென்றே, கூடுமனறே. [3]துஞ்சவுந்தோன்றுந்தன்மை. [4]வீயவுமடுக்கு மிக்க. [5]வாழுமாக்களும் வாழ்வதன்றால், நல்குமக்களும்வாழ்வரன்றால், புக்கால்வாடுவர்பரதன்மற்றோர். (969)

15. பரதனும் [1]பின்னு ளோனும் [2]பயந்தெடுத் தவரு மூரும்
சரதமே முடிவர் கெட்டேன் சனகியென் றுலகஞ் சாற்றும்
விரதமா தவத்தின் மிக்க [3]விளக்கினா லுலகத் தியார்க்கும்
கரைதெரி விலாத துன்பம் விளைந்தவா வெனக்க லுழ்ந்தான்.

(இ - ள்.) பரதனும்—, பின் உளோன்உம் - (அவனது) பின் பிறந்தவனாகிய சத்துருக்கனனும், பயந்து எடுத்தவர்உம் - (இராமன் முதலிய நால்வரையும்) பெற்றெடுத்த தாய்மாரான (கௌசல்யை சுமித்திரை கைகேயி என்ற) மூவரும், ஊர்உம் - அயோத்திமாநகரத் துச்சனங்களும், முடிவர் - (ஒருங்கே) இறப்பார்கள்; சரதம்ஏ - இது சத்தியமே! கெட்டேன் - ஆ! கெடுவேன்!! சனகி என்று உலகம் சாற்றும் விரதம் மா தவத்தின் மிக்க விளக்கினால் - ஜாநகியென்று உலகத்தாராற்சொல்லப்பட்ட விரதத்தோடுகூடிய பெருந்தவத்தினாற் சிறந்துள்ள விளக்குப்போன்றவளான ஒருமகளினால், உலகத்து - உலகத்திலே, யார்க்குஉம் - எல்லார்க்கும், கரை தெரிவு இலாத துன்பம் - கரைகாணமுடியாத பெருந்துன்பம், விளைந்த ஆ - வந்து நேர்ந்தது என்னவியப்பு! என கலுழ்ந்தான் - என்று வருந்திக் கூறினான், (அங்கதன்); (எ - று.)

பரதன் என்றது கீழ்ச்செய்யுளின் அநுவாதம். 'பின்னுளோனும் பயந்தெடுத்தவரும் ஊரும்' என்றது - கீழ்க்கவியில் 'மற்றோர்' என்று தொகுத்துச் சுட்டியதன் வகுத்துக்காட்டல். ஊர் - ஊரிலுள்ளார்க்கு இடவாகுபெயர். சீதை பிறந்தகுலத்திற்கும் புகுந்த குலத்திற்கும் விளக்கஞ்செய்பவளாதலால், அவளை 'விளக்கு' என்றார். இச்செய்யுளில் தோன்றும் அவலச்சுவை [கருணாரஸம்] பாராட்டத்தக்கது. பி - ம்:—[1]இளையகோவும். [2]பரிந்தெடுத்தவரும். [3]வித்தினால். 'பரதனை முதலினோர்கள் பயந்தெடுத்தவர்கள்பாரீர், சரதமே வீவதாக' என்றும் ...'மெல்லியல் பொருட்டால்யாரும், கரைதெரிவரிய துன்பக் கடல்புகல் கடமையென்றான்' என்றும் இவ்வாறு பாடமென்ப. (970)

16.—அதுகேட்டு, சாம்பவான் கூறத்தொடங்குதல்.

பொருப்புறழ் வயிரத் திண்டோள் பொருசினத் தாளி போல்வான்
[1]தரிப்பிலா துரைத்த மாற்றந் [2]தடுப்பருந் தகைத்த தாய
[3]நெருப்பைய விளைத்த போல [4]நெஞ்சமு மறுகக் கேட்டு
விருப்பினு [5]லவனை நோக்கி விளம்பின னெண்கின் வேந்தன்.

(இ - ள்.) பொருப்பு உறழ் வயிரம் திண் தோள் பொருசினத்து ஆளி போல்வான் - மலையையொத்த உறுதியான வலிய தோள்களையுடைய போர்செய்தற்குரிய கோபத்தைக்கொண்ட சிங்கம்போன்றவனாகிய அங்கதன், தரிப்பு இலாது - மனம்பொறாமல், உரைத்த - சொல்லிய, மாற்றம் - வார்த்தையானது, தடுப்பு அருந் தகைத்தது ஆய - தடுக்கமுடியாத தன்மையையுடையதாகிய, நெருப்பைஏ விளைத்த போல - பெருநெருப்பை மூட்டியதுபோல, நெஞ்சம் உம் மறுக - மனத்தையுங் கலங்கச்செய்ய, கேட்டு - (அதனைக்) கேட்டு, —எண்கின் வேந்தன் - கரடிகட்கு அரசனாகிய சாம்பவான்,—விருப்பினால் அவனை நோக்கி விளம்பினன் - மிக்க அன்போடு அவ்வங்கத குமாரனைப்பார்த்துக் கூறலானான்; (எ - று.)

பி - ம்:—[1]தரிப்பிலது. [2]தருமருந்தனைய தாய, தடுப்பருந்தகைமைத்தாய. [3]நெருப்பையுமுமிழ்வபோல, நெருப்பையுமுளிவபோல, நெருப்பைவேய் விளைத்தல்போல. [4]நெஞ்சமெஞ்சிடவே. [5]வாலி சேய்க்கு. (*971*)

வேறு.

17.—இதுவும், அடுத்த கவியும் – சாம்பவன் அங்கதனை இறக்கக்கூடாமைக்குக் காரணங்காட்டித் தடுத்தல்.

நீயுநின் தாதையு நீங்க நின்குலத்
[1]தாயம்வந் தவர்க்கொரு தனய ரில்லையால்
ஆயது கருதின மன்ன தன்றெனின்
[2]நாயக ரிறுதியு நவிலற் பாலதோ.

(இ - ள்.) நீஉம் நின் தாதைஉம் நீங்க - நீயும் உனது தகப்பனாகிய சுக்கிரீவனும் தவிர, நின் குலம் தாயம் வந்தவர்க்கு - உனது குலத்தில் உரிமையுடையவராய்ப் பிறந்தவர்க்கு [அரசவமிசத்தார்க்கு], ஒரு தனயர் இல்லை - வேறே ஒரு புதல்வரில்லை; ஆயது கருதினம் - அத்தன்மையை ஆலோசித்தே (நீ இறக்கக்கூடாதென்று) கூறினோம்; அன்னது அன்று எனின் - அப்படியல்லாவிட்டாலும், நாயகர் இறுதிஉம் நவிலல்பாலதுஓ - தலைவரது மரணம் வாயினாற் கூறுதற்கேனும் தக்கதோ? [தகாது என்றபடி]; (எ - று.)

நும் அரசர்மரபில் இப்போதுவேறே புதல்வரில்லாமையாலும், எங்களைப்போன்ற சாமானியரது மரணமன்றி உங்களைப் போன்ற அரசகுமாரரது மரணத்தைப்பற்றிவாயினாற் சொல்லுதலும் கூடா

தாதலாலும், நீ உயிர்மாய்வே னென்றல் சிறிதும் தகாது; ஆகை யால்,நாங்களெல்லாரும் உயிரொழிய,நீ சுக்கிரீவனைச் சென்று சேர்வா யென்றுவாரும். தாயம் - சொத்திலுள்ள உரிமை; பாத்தியதை. பி - ம்:—[1] தாயம் வந்தவரொடும், தாயம்வந்தார்க்கொரு, தாயருந் துயருறுங். [2] நாயகனிறுதியு நவிறற்பாலதே. (972)

18. [1] ஏகுநீ யவ்வழி [2] யெய்தி யிவ்வழித்
தோகையைக் கண்டிலா வகையுஞ் சொல்லியெம்
சாகையு முணர்த்துதி தவிர்தி சோகம்போர்
வாகையா யென்றனன் வரம்பி லாற்றலான்.

(இ - ள்.) போர் வாகையாய் - போரில்வெற்றிபெறுதற்கு உரியவனே!— ஏகும் நீ - (உயிருடன்) போதற்குஉரியவனை நீ, அ வழி எய்தி - (இராமபிரானும் சுக்கிரீவமகாராசனும் இருக்கின்ற) அந்த இடத்தைச் சேர்ந்து, இ வழி தோகையை கண்டிலாவகைஉம் சொல்லி - இங்கே மயில்போன்ற சாயலையுடைய சீதாபிராட்டியைக் காணமுடியாத திறத்தையுந் தெரிவித்து, எம்சாகைஉம் உணர்த்துதி - எங்களது மரணத்தையும் அறிவிப்பாய்; சோகம் தவிர்தி - (இப்போது நீ கொண்டுள்ள) மனக்கவலையை மாற்றுவா யாக, என்றனன் - என்று கூறினான், (யாவனெனின்),—வரம்பு இல் ஆற்றலான் - அளவில்லாத பராக்கிரமசாலியான் சாம்ப வான்; (எ - று.)

கீழ் 14, 15 - ஆஞ் செய்யுள்களிற்கூறியவாறு அங்கதகுமாரன் கொண்ட மனக்கவலையைச் சாம்பவான் தணிக்கவிரும்பி 'நீ துயரம் தவிர்க' என்றனன். நீ ஏகு - நீ (இங்குநின்று இட்கிந்தைக்குச்) செல் வாய் என்றுமாம். பி - ம்:—[1] ஏகுதி, ஏகிநீ. [2] ஏகி. (973)

19.—இதுமுதல் மூன்றுகவிகள்—அநுமான்வார்த்தை: இறவாமல் இன்னும் சீதையைத் தேடுதலே தக்கதென்றல்.

[1] அவனவை யுரைத்தபி னனுமன் சொல்லுவான்
புவனமூன் றினுமொரு புடையிற் புக்கிலம்
கவனமாண் டவரெனக் கருத்தி லாரெனத்
தவனவே கத்தினீர் [2] சலித்தி ரோவென்றான்.

(இ - ள்.) அவன் அவை உரைத்தபின் - அந்தச்சாம்பவான் அவ்வார்த்தைகளைக் கூறியபிறகு,—அனுமன் சொல்லுவான் - அநுமான் கூறுவான்:—'தவன(ன்) வேகத்தினீர் - சூரியன்போன்ற வேகத்தையுடையவர்களே! புவனம் மூன்றின்உம் ஒருபுடையில் புக்கிலம் - (நாம் சீதையைத் தேடுதற்காக) மூன்றுஉலகங்களுள்ளும் ஒருபக்கத்திலாவது முழுவதும் போய்ப்பார்த்தோமில்லை; (இப்படி யிருக்கவும் இவ்வளவிலேயே), கவனம் மாண்டவர் என - ஓடிச்செல் லுதற்குஉரிய வல்லமை குறைந்தவர்போலவும், கருத்து இலார் என - (செய்யுந்தொழிலைப்பற்றி) ஆலோசிக்குந்திறமில்லாதவர்போலவும், சலித்திர்ஓ - சலிப்படையக் கடவீரோ? என்றான்—; (எ - று.)

தேடவேண்டிய இடம் இன்னும்மிக அதிகமாயிருக்கவும், சிறிது தேடினவிடத்துச் சீதாபிராட்டி கிடையாமையைக்கொண்டே முழுதுந் திரிந்து அலைந்து சலிப்படைந்தவர்போல நீங்கள் ஒருசிறிதும் ஆலோசனையின்றி வெறுப்படைந்து உயிர்விடத்துணிவது சிறிதுந் தகுதியின் றென்றவாறும். பி - ம்:—[1] அவனுரைசெய்தபின், அவனுரைகேட்டபின். [2] கலுழ்திரோ. 'தவனமாண்டவரென அல்லது சவனமாண்டவரெனத் தரிக்கிலாரென அல்லது, தரிக்கிலாரெனக், கவனவேகத்து நீர் அல்லது கவனவேகத்தினீர் கழிதிரோ என்ருன்' எனப் பின்னிரண்டடிகள் சில பிரதிகளில். (974)

20. பின்னருங் கூறுவான் பிலத்தில் வானத்தில்
பொன்வரைக் குடுமியிற் [1] புறத்து ளண்டத்தில்
நன்னுதற் றேவியைக் காண்டு நாமெனில்
சொன்னநா ளவதியை யிறைவன் சொல்லுமோ.

(இ - ள்.) பின்னர்உம் கூறுவான் - (அநுமான்) மேலும் கூறுவானுயினுன்;—பிலத்தில் - பாதாளலோகத்திலும், வானத்தில் - மேலுலகத்திலும், பொன் வரை குடுமியில் - பொன்மயமான மகாமேருவினது உச்சியிலும், புறத்து உள் அண்டத்தில் - மற்றுமுண்டான அண்டங்களிலும், நல் நுதல் தேவியை நாம் காண்டும் எனின் - அழகிய நெற்றியையுடைய சீதாபிராட்டியை (இனி) நாம் தேடிக் காண்போமானுல், இறைவன் - (நமது) அரசனுகிய சுக்கிரீவன், சொன்ன நாள் அவதியை - (தான் முதலிற்)கூறியுள்ள தவணைநாளெல்லை கடந்து விட்டதைப்பற்றி, சொல்லும்ஓ - (குற்றமாக எடுத்துக்) கூறுவானே? (எ - று.)

சீதையைத்தேடிக்காணுதல் இன்றியமையாத் தொழி லாதலால், தவணைநாள் கடந்தமைக்குச் சிறிதும் கலங்காது மேற்கொண்ட செயலில் ஊக்கங்கொள்ளுதலே தக்கது; அவ்வாறு செய்தொழிலை நாம் இனிது முடிப்பின், கடுந்தண்டனையுடைய சுக்கிரீவனும் நமது செயலுக்கு மெச்சுவதன்றி, ஒருகடுஞ்சொல்லையுஞ் சொல்லானென்பதாம். பி - ம்:—[1] புறத்துளண்டத்துள். (975)

21. நாடுத லேநல [1] மின்னு நாடியத்
[2] தோடலர் குழலிதன் துயரிற் [3] சென்றமர்
வீடிய சடாயுவைப் போல வீடுதல்
பாடவ மல்லது [4] பழியிற் ருமென்ருன்.

(இ - ள்.) நாடுதல்ஏ நலம் - (இனிமேலும் சீதாபிராட்டியைத்) தேடிப்பார்த்தலே தகுதியாம்; இன்னும் நாடி - பின்னுந்தேடியும் (சீதாபிராட்டி அகப்படாவிட்டால்)—அ தோடு அலர் குழலிதன் துயரின் - இதழ்களையுடைய மலர்கள் அலரப்பெற்ற கூந்தலையுடையவளான அந்தச்சீதைக்கு நேர்ந்த துன்பத்திற்காக, சென்று - (இராவணனை) எதிர்த்துப்போய், அமர் வீடிய - யுத்தத்தில் உயிர்

மாய்ந்த, சடீர்யுவைப்போல—, வீடுதல் - (நாமும்) உயிர்விடுதல், பாடவம் - பெருமையாம்; அல்லது-அவ்வாறு செய்யாது இப்போதே உயிரைவிடுவது, பழியிற்று ஆம் - பழிப்பையுடையதாகும், என்ருன்-என்று கூறி முடித்தனன், (அநுமான்); (எ - று.)

நம்மால் ஆனவரையில் எல்லாவிடங்களிலுஞ் சீதாபிராட்டியைத் தேடிப்பார்த்தும் அவள் அகப்படாவிட்டால், அப்போது உயிர் விடுதல் சிறந்ததாகுமேயன்றி, இப்போதே உயிர்விடுவோ மென்றல் சிறப்பன்று என்பதாம். சீதாபிராட்டியை மீட்பதற்காகத் தன்னு லானவரையிலும் பொருது பிறகு தனது உயிரைவிட்ட சடாயு-சீதா பிராட்டியைத் தம்மாலானவரையில் தேடி அகப்படாவிட்டால் பிறகு தமதுஉயிரைவிடத்துணிந்த வானரர்க்கு ஏற்ற உவமையாவன. சடாயுவென்னும் சொல்லுக்கு - பலமயிர்கள் சேர்த்துத் திரித்த ஜடைபோலப் பலவாய் மிக்குத்திரண்ட ஆயுளையுடையவ னென்றும், இறகில் உயிரையுடையவ னென்றும் பொருள் கூறுவர். பி - ம்:— [1]என்னும். [2]தோடவிழ். [3]தோற்றமர், தோன்றமர். [4]பழியிற்ரேும், பழியின்ரும். (976)

22.—ஜடாயு இறந்ததைக்கேட்ட சம்பாதி வாநரரிருந்தவிடத்தில் வருதல்.

என்றலுங் கேட்டன [1]னெருவை வேந்தன் தன்
பின்றுணை யாகிய பிழைப்பில் வாய்மையான்
பொன்றின னென்றசொல் புலம்பு [2]நெஞ்சினன்
குன்றென நடந்தவர்க் குறுகன் மேயினன்.

(இ - ள்.) என்றலும் - என்று (அநுமான்) கூறியவுடனே,— எருவை வேந்தன் - கழுகுகட்கு அரசனாகிய சம்பாதியானவன்,— தன் பின் துணை ஆகிய பிழைப்பு இல் வாய்மையான் பொன்றினன் என்ற சொல் - தனது பின்பிறந்த தம்பியும் தவறுதலில்லாத சத்தி யத்தையுடையவனுமாகிய சடாயு இறந்தானென்றசொல்லை, கேட்டனன் - கேட்டு, புலம்பு நெஞ்சினன்-வருந்துகின்ற மனமுடையவனும், குன்று என நடந்து - மலைபோல நடந்துசென்று, அவர் குறுகல் மேயினன் - அவ்வாநரர்களைக் கிட்டலானன்; (எ - று.)

சடாயு இறந்த செய்தியைக் கேட்ட சம்பாதி மிகவும் வருந்தி, அதனுண்மையை விசாரியறிய விரும்பி அச்சொல்லைக் கூறிய அநுமானுள்ள இடமாகிய வாநரர்களிருந்தவிடத்தைச் சேரலானு னென்க. இறகுகள் தீந்துபோய்ப்பறக்க முடியாதநிலையி லிருப்பவனுதலின், சம்பாதி பறந்துசெல்லாமல் மெல்லநடந்து வரலாயின னென்க. சம்பாதியின் பெருவடிவுக்கு மலை உவமையாம். அவர்க்குறுகல்-"இயல்பின் விகாரம்". பி - ம்:—[1]எருவைக்கீசன்றன். [2]நெஞ்சினக். (977)

23.—இதுமுதல் நான்கு கவிகள்—சம்பாதியின் வருணனை.

முறையுடை யெம்பியார் [1]முடிந்த வாவெனுப்
பறையிடு நெஞ்சினன் பதைக்கு மேனியன்

இறையுடைக் குலிசவே [2]லெறித லான்முனஞ்
[3]சிறையறு மலையெனச் செல்லுஞ் செய்கையான்.

(இ - ள்.) 'முறை உடை எம்பியார் முடிந்த ஆ - நீதிநெறியை யுடைய எனது தம்பி இறந்தவாறு என்னே!' என - என்று, பறை யிடு நெஞ்சினன் - பறையடிப்பதுபோலப் படபடக்கின்ற நெஞ்சையுடையவனும்,—பதைக்கும் மேனியன் - துடிக்கின்ற உடம்பையுடையவனும்,—இறை உடை குலிசம் வேல் எறிதலால் முனம் சிறை அறும் மலை என செல்லும் செய்கையான் - தேவேந்திரன் தான் கொண்டுள்ள வச்சிராயுதத்தை வீசியெறிந்ததனால் முற்காலத்திற் சிறகுகளறுபட்டுப்போன மலைபோலச் செல்லுந் தொழிலையுடையவனும்,—(எ - று.)

முன்னாளில் மலைகள் இறகுள்ளனவாயிருந்து பறந்து ஜனங்களின் மேல்விழுந்து அழித்துக்கொண்டிருந்ததனால், இந்திரன் அவற்றின் சிறகை யரிந்தா னென்பது, புராணகதை. சிறகுகளறு பட்ட மலை - சிறகுகள்தீயப்பெற்ற சம்பாதிக்கு ஏற்ற உவமையாம். எம்பியார் - உவப்பினால் வந்த பால்வழுவமைதி. 'வேல்' -, ஆயுதமென்ற மாத்திரமாய் நின்றது. பி - ம்:—[1]முடிந்தவாறெனா. [2]எறிகலாதமுன், எறிதலானெடும். [3]சிறையுடை, சிறையுறு. (978)

24. மிடலுடை யெம்பியை [1]வீட்டும் வெஞ்சினப்
[2]படையுள ராயினர் பாரில் யாரென
[3]உடலினை வழிந்துபோ யுவரி நீருகக்
கடலினைப் [4]புரையுறு மருவிக் கண்ணினன்.

(இ - ள்.) 'மிடல் உடை எம்பியை - வலிமையையுடைய எனது தம்பியை, வீட்டும் - அழிக்கவல்ல, வெம் சினம் படை உளர் ஆயினர் - கடுஞ்சினமுடைய படைக்கலங்களைக் கொண்டவர், பாரில் யார் - இப் பூவுலகத்தில் யாவருளர்? [ஒருவருமில்லையே],' என - என்று சொல்லி வருந்தி, உடலினை வழிந்து போய் உவரிநீர் உக கடலினை புரை உறும் அருவி கண்ணினன் - உடம்பிலிருந்து வழிந்து போய்க் கடலினைச் சேருமாறு சமுத்திரத்தைப்போன்ற நீர்ப்பெருக்குப் பொருந்திய கண்களை யுடையவனும்,—(எ - று.)

முன்னிரண்டடிகள் - ஜடாயுவினது பிறரால்வெல்லுதற்கு அரிய பராக்கிரமத்தை விளக்கும். தனது அன்புள்ள தம்பியின் மரணத்தை நினைத்துச் சம்பாதி கடல்போலக் கண்ணீரைப்பெருக்கின னென்க. நீர் நிரம்பிய பெருங்கண்களுக்கு - அவ்வாறுள்ள கடல் உவமையாம். உடலினை - உருபுமயக்கம். பி-ம்:—[1]...வெஞசமம், ...வெஞ்சரம், வீட்டிவெற்றிமேல். [2]படருளராயினர்போலும்பாரினில், படையுளர்யாரெனப்பகர்வதாயினன், படைவலியாரெவரென்னப் பன்னினன். [3]உடலினைவழிந்து போயவனி நீத்துராய், உடல்வலியிழிந்து அல்லது உடலினைக் கழிந்து போயுவரிமேற்செலும் அல்லது உவரிநீததுராய் அன்றிஉவரிநீருராய், [4]நிறைக்குறும். (979)

25. உழுங்கதிர் [1]மணியணி யுமிழு மின்னினான்
மழுங்கிய [2]நெடுங்கணின் வழங்கு மாரியான்
[3]புழுங்குவா [4]னழுங்கினான் [5]புவனி மீதினின்
முழங்கிவந் திழிவதோர் முகிலும் போல்கின்றான்.

(இ - ள்.) உழும் கதிர் மணி அணி உமிழும் மின்னினான் - சாணைபிடித்த ஒளிபொருந்திய இரத்தினங்களை யிழைத்துச்செய்த ஆபரணங்கள் வெளிவீசுகிற மின்னலையுடையவனும், மழுங்கிய நெடுங் கணின் வழங்கு மாரியான் - ஒளிகுறைந்த (தனது) நீண்ட கண்களிலிருந்து துளிக்கின்ற நீர்த்துளிகளையுடையவனும், புழுங்குவான் அழுங்கினான் - மனம்வருந்துபவனாய் வாய்விட்டுக்கதறுபவனும்,—(ஆதலினால்), புவனி மீதினில் முழங்கிவந்து இழிவது ஓர் முகில்உம் போல்கின்றான் - பூமியின்மேல் குமுறிக் கொண்டே வந்து இழிவதாகிய ஒருமேகத்தை யொத்தவனும்,—(எ - று.)

மின்னி யிடித்து நீர்சொரிகின்ற மேகம் - இரத்தினாபரணங்களினால் ஒளிவீசிக்கொண்டும், வாயினாற் கதறிக்கொண்டும், கண்ணீரைச் சொரிந்துகொண்டு மிருக்கின்ற சம்பாதிக்கு உவமையாம். இவன் மிகவும் பெரிய வடிவுடன் பூமியின்மேல் நடந்து வருதலால், புவனி மீதினிலிழியும் மேகம்போல்கின்றானெனக் குறித்தார்; தன்மைத்தற் குறிப்பேற்றவணி. ஒருசாரார் இல்பொருளுவமையென்ப. மனம் புழுங்குபவனாய் அழுங்குமவன், மின்னினாலும் மாரியாலும் முகில்போல் கின்றான் எனினுமாம். சூரியனைக்கண்டதனாலும் மிகவும் வயது சென்றமையாலும், சம்பாதிக்குக் கண் மழுங்குவதாயிற்று. பி - ம்:— [1]அணிமணி. [2]நெடுங்கணீர். [3]புழுங்குற, புழுங்கினன். [4]அழுங்குரல், நடுங்கினன், அழுங்குவான், அழுங்கினன், ஓங்கினன். [5]படவியா றென, அவனியாறென, புவனியாறென, படவி மீதினில், 'அழுங்குரன்மிகுந்தெழுந்தாற்றினானவன்' என்றும், 'அழுங்குரன் மிகுந்தெழுந்து அல்லது முழங்கவந்து அலறு மாற்றினான்' என்றும் சிலபிரதிகளில் மூன்றாமடி. (980)

26. வள்ளியு மரங்களு மலையு மண்ணுறத்
தெள்ளுநுண் பொடிபடக் கடிது செல்கின்றான்
தள்ளுவன் கால்பொரத் [1]தரணி யிற்றவழ்
[2]வெள்ளியம் பெருமலை பொருவு மேனியான்.

(இ - ள்.) வள்ளிஉம் - கொடிகளும், மரங்களும்—, மலைஉம் - மலைகளும், மண் உற தெள்ளு நுண் பொடி பட - (மண்ணோடு) மண்ணாகும்படி தெள்ளிய சிறுபொடியாகுமாறு, கடிது செல்கின்றான் - விரைவாகச் செல்பவனும்,—தள்ளு வல் கால் பொர தரணியில் தவழ் வெள்ளி அம் பெரு மலை பொருவும் மேனியான் - (எல்லாவற்றையுந்) தள்ளவல்ல வலிய காற்றுமோதுதலாற் பூமியில் தவழ்ந்து வருகின்ற அழகிய பெரியவெள்ளிமயமான கைலாசபருவதத்தை யொத்த உருவமுடையவனும் (ஆகி),—(எ - று.)

இவன் நடந்துசெல்லுகையில் வழிலுள்ள கொடிகளும் மரங்களும் மலைகளும் பொடியாயின வென, இவனது மிக்கவலிமையை வெளியிட்டவாறு. முன்னொருகாலத்தில் வாயுவுக்கும் ஆதிசேடனுக்கும் விவாதம்நேர்ந்தபோது வாயுபகவான் தனது மிக்க வலிமையால் ஆதிசேடனாற் பாதுகாக்கப்பட்ட மேருமலைச்சிகரங்கள் ஆயிரங்களுள் மூன்றை முறித்து அடித்துவந்ததை மனத்திற்கொண்டு, கவி, வெண்மைநிறத்துடனே வேகமாக நடந்துவருகின்ற சம்பாதியை, கால்பொரத்தரணியிற்றவழ் வெள்ளியம்பெரு மலைபோலும்மேனியானெனக்குறித்தன ரென்னலாம். தன்மைத்தற்குறிப்பேற்றவணி. வள்ளி = வல்லி. முதலடி - முற்றுமோனை. பி - ம்:—[1] தரணியிற்றணி, தரணிநீத்தவல், தரணிபூத்ததவ், தரணிநீங்குறும், தாளினீங்குறு. [2] வெள்ளியம் பெருங்கிரிபோலும். (981)

27.—சம்பாதியை அரக்கனென்று கருதி மற்றவாநரவீரர் அஞ்சியோட அநுமான் எதிர்நிற்றல்.

எய்தின னிருந்தவ ரிரியல் போயினர்
[1] ஐயனம் மாருதி யழலுங் கண்ணினன்
கைதவ [2] நிசாசர கள்ள வேடங்கொண்டு
உய்திகொ லினி[3] யென வுருத்துமுன் னின்றான்.

(இ - ள்.) எய்தினன் - (இவ்வாறு சம்பாதி வாநரருள்ளவிடத்தில்) வந்துசேர்ந்தான்: (அவனைக்கண்டு) இருந்தவர் இரியல் போயினர் - அங்கிருந்த வாநரர் (அஞ்சி) நிலைகெட்டுச்சென்றார்கள்; ஐயன் அ மாருதி - அறிவிற்சிறந்தவனாகிய அந்த அநுமான் மாத்திரம், அழலும் கண்ணினன் - நெருப்புப்பொறிபறக்கின்ற கண்களையுடையவனாய், (அந்தச்சம்பாதியைநோக்கி), 'கைதவ - வஞ்சனையுடையவனே! நிசாசர - அரக்கனே! (நீ), கள்ளம் வேடங்கொண்டு - மாறுபட்டஉருவத்தைக்கொண்டு, இனி உய்தி கொல் - என்னெதிரில் அகப்பட்டபிறகு தப்பிப்பிழைப்பாயோ?' என - என்று, உருத்து - கோபித்துச்சொல்லி, முன் நின்றான் - அவனெதிரில் நின்றான்; (எ - று.)

சம்பாதியின்பெருந்தோற்றத்தைக் கண்டு மற்றைவாநரர் அஞ்சியோட, அவனை இராவணனென்றே கருதி அநுமான் சினந்து 'வஞ்சனையுடைய அரக்கனே! இவ்வாறு திருட்டுத்தனமாகப் பட்சிரூபங்கொண்டு தப்பிப்பிழைக்கப் பார்க்கின்றாயோ?' என்றுகூறி அவனை யெதிர்த்துநின்றன னென்க. 'கைதவ, நிசாசர' என்று விளித்ததனால், அவனை இராவணனென்று அநுமான் கருதியமை பெறப்படும். கைதவம் - வஞ்சகம்; அதனையுடையவன், கைதவன். நிசாசரன் - இரவில் சஞ்சரிக்கவல்லவன். [2] 'நிசிசரக்கள்ளவேடத்தை' என்ற பாடத்துக்கு - திருட்டுக்குணமுள்ள அரக்க வேடத்தைப்பூண்டுள்ளா யென்க: இப்பொரு

ளில், வேடத்தை - வேடம் என்றதனடியாப்பிறந்த முன்னிலைக் குறிப்புமுற்று. ஐயன் நம் மாருதி என்று பிரித்தற்கும் இடமுண்டு. பி - ம்:—[1]ஐயன் மாருதியவன், ஐயநன்மாருதி, ஐயன்மாமாருதி. [2]வெய்யவநிசாசர, வெய்யனீநிசாசர. (982)

28.—அநுமான், முகக்குறிப்பினால் சம்பாதியைக் குற்றமற்றவனென உணர்தல்.

வெங்கதம் வீசிய மனத்தன் விம்மலன்
[1]பொங்கிய சோரிநீர் பொழியுங் கண்ணினன்
[2]சங்கையிற் சழக்கில னென்னுந் தன்மையை
இங்கித [3]வகையினா லெய்த நோக்கினான்.

(இ - ள்.) (அப்போது அநுமான்),—'வெம் கதம் வீசிய மனத்தன் - கொடியகோபத்தை நீக்கிய மனத்தையுடையவனும், விம்மலன் - மனவருத்தமுடையவனும், பொங்கிய சோரி நீர் பொழியும் கண்ணினன் - மிக்கமழைபோல நீரைச்சொரிகின்ற கண்களையுடையவனுமாயிருக்கிறான்; (ஆதலால், இவன்), சங்கையில் சழக்கு இலன் - மனத்திலே சிறிதுங்குற்றமில்லாதவன், என்னும் தன்மையை - என்பதை, இங்கிதம் வகையினால் - முகத்தின் குறிப்பு வகைகளால், எய்த நோக்கினான் - நன்றாக அறிந்தான்; (எ - று.)

அநுமானானவன், முகக்குறிப்பினால் உண்மையையுணர்பவனாதலால், சினமில்லாமலும் துயரங்கொண்டு கண்ணீரைப்பெருக்கியும் வருகின்ற சம்பாதியைக் கண்டு குற்றமற்றவனெனத்தெளிந்தனனென்க. இனி, இச்செய்யுளுக்கு - (சம்பாதியை இராவணனென்று கருதியதனால்) கடுங்கோபத்தை வெளிக்காட்டுகின்ற மனமுடையவனும், (சீதையை வஞ்சித்துக்கவர்ந்து சென்றனனேயென்று அவன்மீது) கொதிப்புக் கொண்டவனும், கடுங்கோபத்தினால் இரத்தத்தைத்தக்குகின்ற கண்களையுடையவனுமாகிய அநுமான் இங்கிதவகையினாற் (சம்பாதியைக்) குற்றமற்றவனென உணர்ந்தானென்று பொருள் கூறினும் பொருந்தும். சங்கை-மனம். [2]'சங்கையில்சழக்கிலன்' என்றபாடம், அளவில்லாதகுற்றத்தைச் செய்யாதவனென்று பொருள்படும். சங்கை - எண்ணிக்கை. இங்கிதம் - குறிப்பால்நிகழும் உறுப்பின்தொழில். பி - ம்:—[1]பொங்கிய சோகத்தன் பொழிகணீரினன். [3]முறையினின், வேலையான், வகையினில். (983)

29.—சம்பாதி 'சடாயுவைக் கொன்றவர் யார்?' என வினாவுதல்.

நோக்கின னின்றனன் நுணங்கு கேள்வியான்
வாக்கினா லொருமொழி [1]வழங்க லாதமுன்
தாக்கருஞ் சடாயுவைத் [2]தருக்கி னாலுயிர்
நீக்கின ரியா[3]ரது [4]நிரப்பு வீரென்றான்.

(இ - ள்.) நோக்கினன் நின்றனன் - (அவ்வாறு சம்பாதியின் வருகையை) நோக்கிக்கொண்டு எதிர்நின்றவனும், நுணங்கு கேள்வி

யான் - நுட்பமான நூற்கேள்விகளையுடையவனுமாகிய அநுமான், வாக்கினால் ஒருமொழி வழங்கலாத முன் - (தன்) வாயினால் ஒருசொல் கூறுதற்கு முன்னமே,—(சம்பாதி), 'தாக்க அரு சடாயுவை - (எவராலும்) எதிர்த்துப் போர்செய்யமுடியாத [மிக்கவலிமையையுடைய] ஜடாயுவை, தருக்கினால் - சூரத்தன்மையினால், உயிர் நீக்கினர் யார் - கொன்றவர் யார்? அது நிரப்புவீர் - அதனைவிவரமாகக் கூறுவீராக,' என்றான் - என்று வினாவினான்; (எ - று.)

'அமர்வீடிய சடாயுவைப் போல வீடுதல் பாடவம்' என்று அநுமான்கூறியதுகேட்டே வருகின்ற சம்பாதி 'நிரப்புவீர்' என்ற பன்மையாற்கூறியது, அனுமானைக் கௌரவித்தற்காக என்றாவது மற்றை வானரரையும் உளப்படுத்திய தென்றாவது கொள்க. பி - ம்:—[1]வழங்குறாத. [2]தருக்கினாருயிர், தருக்கினாருயிர். [3]இது. [4]நிகழ்த்துவீர், நிகழ்த்துநீ. (984)

30.—அநுமான் 'உன்னைத் தெரிவித்த பின்னரே விடையளிப்பேன்' எனல்.

உன்னை நீ யுள்ளவா றுரைப்பி [1]னுற்றதைப்
[2]பின்னையா னிரப்புதல் [3]பிழைப்பின் றாகுமால்
என்னமா ருதியெதி ரெருவை வேந்தனும்
[4]தன்னையாந் தன்மையைச் [5]சாற்றன் மேயினான்.

(இ - ள்.) 'உன்னை நீ உள்ள ஆறு உரைப்பின் - உன்னைப் பற்றி நீ உள்ளபடியே (உண்மையாகக்) கூறினால், பின்னை - பிறகு, யான்—, உற்றதை - நடந்த வரலாற்றை, நிரப்புதல் - விவரித்தல், பிழைப்பு இன்று ஆகும் - தவறுதலில்லாததாகும்', என்ன - என்று (அநுமான் சம்பாதியை நோக்கிக்) கூற,—மாருதி எதிர் - அந்த அநுமானிடத்தில், எருவை வேந்தன் உம் - கழுகரசனாகிய சம்பாதியும், தன்னை ஆம் தன்மையை - தன்னைப்பற்றியுண்டாகிய வரலாற்றை [தான் இன்னானென்பதை], சாற்றல் மேயினான் - சொல்லத்தொடங்கினான்; (எ - று.)—அதனை, அடுத்தகவியிற் காண்க. ஆல் - ஈற்றசை.

முதலடி - முற்றுமோனை. பி-ம்:—[1]உற்றது. [2]பின்னர்யானிகழ்த்தலும். [3]பிழைப்பின்றாதலால், பிழையின்றாகுமால். [4]தன்னதாந். [5]தெரித்தன்மேயினான், தருவதாயினான். 'அன்னவர்தன்மையைத் தெரிப்பதாயினான்' என்று சிலபிரதிகளில் நான்காமடி. (985)

31.—சம்பாதி தன்னை இன்னானென்று அநுமானிடத்துத் தெரிவித்தல்.

மின்பிறந் தாலென [1]விளங்கெ யிற்றினாய்
என்[2]பிறந் தார்க்கிடை யெய்த லாதவென்
பின்பிறந் தான்துணை [3]பிரிந்த பேதையேன்
முன்பிறந் தேனென [4]முடியக் கூறினான்.

(இ - ள்.) (சம்பாதி அநுமானைநோக்கி), 'மின் பிறந்தால் என விளங்கு எயிற்றினாய் - மின்னல்தோன்றினாற்போல் விளங்குகின்ற

பற்களையுடையவனே!—என்பு இறந்தார்க்கு இடை எய்தலாத - உடம்புஒழிந்தவர்க்குச் சேராத, என் பின்பிறந்தான் துணை பிரிந்த - எனக்குப்பின்பிறந்தவனாகிய துணையைப் பிரிந்த, பேதையேன் - ஏழைமையுடைய நான், முன்பிறந்தேன் - (நீ இறந்தவனாகக் கூறு இன்ற அந்த ஜடாயுவுக்கு) அண்ணனாகப் பிறந்தேன்,' என - என்று, முடிய கூறினான் - (தான் இன்னானென்பதை) விளங்கக் கூறினான்; (எ - று.)

ஜடாயு வென்பவன், எனது தம்பி: நான் அவனுக்கு முன் பிறந்தவன் என்றவாறு. 'இளையான் இறக்க மூத்தோனாகிய யான் உயிரோடிருக்கின்றேனே!' என்ற இரக்கந் தோன்றுமாறு, 'என் பின் பிறந்தான் துணை பிரிந்தபேதையேன் முன்பிறந்தேன்' என்கிறான். பிறர்க்கு உதவிசெய்வதனிமித்தம் தனது உயிரையுங் கொடுத்தவனாதலால், ஜடாயு இறந்தானாயினும் இறவாதவனே யென்பான், 'என்பிறந்தார்க்கிடையெய்தலாத வெனபின்பிறந்தான்' என்றான்; ஜடாயுவினது பூதவுடம்பு அழியினும் புகழுடம்பு அழியாது நிலை நிற்றலால், இவ்வாறு கூறியது. "பைந்தாரெங்களிராமன்பத்தினி, செந்தாள்வஞ்சி திறத்திறந்தவன், மைந்தாவெம்பிவரம்பில்சீர்த்தியோடு, உய்ந்தானல்ல துலந்த துண்மையோ" எனமேலேகூறுதலும் காண்க. என்பு - உடம்பிற்கு, ஆகுபெயர்: இதனை "என்புமுரியர் பிறர்க்கு" என்றவிடத்துப் பரிமேலழகர் கூறிய உரையிலுங் காண்க. பி - ம்:—[1] விலங்கெயிற்றினோய். [2] இறந்தாரிடரெய்தலாத. [3] பிரியும். [4] முற்றும், முழுதும். 'அன்பிறந்தார்களிலதிகனாகியென்' என்று சில பிரதிகளில் இரண்டாமடி. (986)

32.—அநுமான் ஜடாயு இறந்த காரணத்தைச் சம்பாதிக்குக் கூறல்.

கூறிய வாசகங் [1] கேட்டுக் கோதிலான்
ஊறிய துன்பத்தி னுவரி யுட்புகா
ஏறின னுணர்த்தின னிகலி ராவணன்
வீறிய [2] வாளிடை [3] விளைந்த தா[4]மென்றான்.

(இ - ள்.) கூறிய வாசகம் கேட்டு - (சம்பாதி) சொன்ன வார்த்தையைக்கேட்டு,—கோது இலான் - குற்றமற்றவனாகிய அநுமான்,—ஊறிய துன்பத்தின் உவரியுள் புகா ஏறினன் - மிக்கதுன்பமாகிய கடலினுள் மூழ்கி ஒருவாறு தெளிந்தவனாய், இகல் இராவணன் வீறிய வாளிடை விளைந்தது ஆம் என்றான் உணர்த்தினன் - 'பகைமைக்குணமுள்ள இராவணன் வீசிய வாளாயுதத்தால் (உனது தம்பியின்மரணம்) நேர்ந்ததாகும்' என்று கூறித் தெரிவித்தான்; (எ-று.)

சம்பாதியின்சொல் மனத்தைக் கரைவித்ததனால், அதைக் கேட்ட அநுமான் துயர்க்கடலுள் மூழ்கி அரிதில் தேறலாயினனென்க. துன்பத்தினுவரி - துயர்க்கடல்: சோகஸாகரம். வீறிய - பெருமைபெற்ற எனினுமாம். வாள் - சிவபெருமான் ஈந்தது; சந்திர

ஹாஸமென்னும் பெயர்பெற்றது. பி - ம்:—[1]கேட்டகோதிலான். [2]வாளினல். [3]விளிந்ததாம், வீந்ததாம், வீழ்வித்தான். [4]என. (987)

33.—சம்பாதியின் வருத்தம்.

அவ்வுரை கேட்டலு மசனி [1]யேற்றினல்
தவ்விய கிரியெனத் தரையின் [2]வீழ்ந்தனன்
வெவ்வுயி ராவுயிர் [3]பதைப்ப விம்மினன்
இவ்வுரை யிவ்வுரை யெடுத்தி யம்பினன்.

(இ - ள்.) அ உரை கேட்டலும் - (அநுமான்கூறிய) அவ்வார்த்தையைக் கேட்டவுடனே,—(சம்பாதியானவன்),—அசனி ஏற்றினல் தவ்விய கிரி என தரையின் வீழ்ந்தனன் - பேரிடியினல் நிலைகெட்டழிந்த மலைபோலத் தரையில் வீழ்ந்தவனய், வெவ் உயிரா - வெப்பமாகப் பெருமூச்செறிந்து, உயிர் பதைப்ப விம்மினன் - உயிர் துடிக்க வருந்தி, இ உரை இ உரை எடுத்து இயம்பினன் - இந்தஇந்த வார்த்தைகளை யெடுத்தெடுத்துக்கூறிப் புலம்பினன்; (எ - று.)—இவற்றை அடுத்த நான்குகவிகளிற் காண்க.

சிறந்ததையும், பெரியதையும் 'ஏறு' என்றல், மரபு. கீழ்விழுதலும், வெப்பமாகப் பெருமூச்செறிதலும், உயிர்பதைத்தலும், விம்முதலும் - சோகத்தின் மெய்ப்பாடுகள். இவ்வுரை இவ்வுரை என்ற அடுக்கு - சோகத்தினற் பல கூறுதலைக் குறிக்கும். பி - ம்:—[1]ஏற்றையால். [2]வீழ்ந்தவன். [3]பதைத்து. (988)

வேறு.

34.—இதுமுதல் நான்குகவிகள் – ஜடாயுவைப்பற்றிய சம்பாதி புலம்பல்.

[1]இளையா [2]நீள்சிற கின்றி வெந்துகத்
[3]தளையா னேனுயிர் போதல் [4]தக்கதால்
[5]வளையா நேமியன் வன்மை சால்[6]வலிக்கு
இளையா னேயிது வென்ன [7]மாயமோ.

இதுமுதல் ஐந்து கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) இளையா - (எனது) தம்பியே! நீள் சிறகு இன்றி வெந்து உக - (சூரியகிரணங்கள் எரித்ததனல்) நீண்ட சிறகுகள் இல்லாதவாறு [அடியோடு] வெந்தொழிய, (விரும்பியபடி பறந்து செல்ல முடியாமையால்), தளை ஆனேன் - தளையிடப்பட்டவன்போலிருக்கின்ற எனது, உயிர் போதல் - உயிர் ஒழிதலே, தக்கது - தகுதி; வளையா - அழியாத, நேமியன் - ஒற்றைச் சக்கரங் கொண்ட தேரையுடைய சூரியனது, வன்மை சால் வலிக்கு - மிகவும் உக்கிரமான வலிமைக்கு, இளையானே - பின்வாங்காதவனே! இது - (நீ எனக்கு முன்னே இறந்த) இச்செய்கை, என்ன மாயம்ஓ - என்ன வியப்போ! (எ - று.)—ஆல் - ஈற்றசை; தேற்றமுமாம்.

'பறவைகட்கு இன்றியமையாத உறுப்பான சிறகுகள் ஒழிந்த பிறகும் ஒருபயனுமில்லாமல் யான் உயிருடன் வீணகவீழ்ந்து

இடக்கின்றேனே; . சூரியனது வலிமைக்கும் பின்னிடையாத மிக்க வலிமையுடைய நீ, மூத்தவனாகிய எனக்குமுன்னே இறந்தது என்ன விபரீதம்!' என்று சம்பாதி புலம்பினனென்க. சூரியன் வலிமையாற் சம்பாதியின் இறகுகள் தீய ஜடாயு இறகுடனிருந்த வரலாறு, மேலே கூறப்படும். பூமிமுழுதும் ஒருபகலிற் செல்ல வல்ல ஒற்றைச்சக்கர முடையவனாதலால், சூரியன் 'வளையா நேமியன்' எனப்பட்டான். [2]நின்சிறகின்றி வெந்துகத், தளையானே னுயிர்' என்ற பாடத்திற்கு - (சூரியகிரணத்தினால்) உனது சிறகு கள் இல்லாதபடி தீந்துபோவதாயிருக்கையில் (அதற்குத்) தடை யாய்நின்ற (மூத்தோனாகிய) எனது உயிர், போதல் தக்கதுஎன்று பொருளாம்: ஓகாரம் - இரக்கமுணர்த்தும். பி - ம்:—[1]கிளையா, விளையா. [2]நீள்சிறகன்று. [3]தளையாவேன், தளையாவென்னுயிர். [4]தக்கதே, தக்கதோ. [5]வளையார். [6]வலியிளையானே. [7]தன் மையோ. (989)

35. மலரோ னின்றுளன் மண்ணும் விண்ணுமுண்டு
உலையா நீடற மின்னு முண்டரோ
[1]நிலையார் கற்பமு நின்ற தின்றுநீ
இலையா னாயிது வென்ன [2]தன்மையோ.

(இ - ள்.) மலரோன் நின்றுளன் - (திருமாலின் நாபீ) கமலத் தில் தோன்றியவனான பிரமதேவன் (அழியாமல்) நிலைத்திருக் கிறான்; மண்உம் விண்உம் உண்டு - நிலவுலகமும் வானுலகமும் நிலைத்திருக்கின்றன; உலையா நீடு அறம் இன்னும் உண்டு - அழியா மல் வளர்கின்ற தருமமும் இன்னும் இருக்கின்றது; நிலை ஆர் கற்பம்உம் நின்றது - நிலைத்திருக்கின்ற கற்பகவிருட்சமும் அழியா மல் நின்றது; (இவையெல்லாம் அழியாதிருக்க), இன்று நீ இலை ஆனாய் - இப்போது நீமாத்திரம் உயிரொழிந்தாய்; இது என்ன தன்மைஒ - இது என்ன முறைமையோ! (எ - று.)—அரோ - ஈற்றசை.

நீடூழிகாலம் நிலைத்து நிற்றற்குரிய நீ இறந்தாயே யென இரங் கியவாறு. பி - ம்:—[1]நிலையா வண்டமும். [2]மாயமோ. (990)

36. உடனே யண்டமி ரண்டு முந்துயிர்த்
திட[1] நாள் வந்[2]திரு வேமு ளோமெனை
விட[3] நீ யோர்தனிச் சென்ற வீரமும்
கடனே வெங்[4]கலு ழற்கு மேன்மையோய்.

(இ - ள்.) வெம் கலுழற்குஉம் மேன்மையோய் - வேகத்தை யுடைய கருடனைப்பார்க்கிலுஞ் சிறந்தவனே!—முந்து நாள் - முன் னாளில், அண்டம் இரண்டுஉம் உயிர்த்திட வந்து - இரண்டுமுட்டைக ளுண்டாக்கப் பிறந்து, உடனே இருவேம் உளோம் - நாமிருவரும் (இத்தனைநாள்) வாழ்ந்திருந்தோம்:—(பிறகு), எனை விட - என்னை விட்டுப்பிரியுமாறு, நீ ஓர் தனி சென்ற வீரம்உம் - நீ தன்னந்தனியாய் இறந்து சென்ற வீரச்செயலும், கடன்ஏ - முறையோ! (எ - று.)

நீ வீரத்தினால் இறந்தது சிறந்ததாயினும் என்னைவிட்டுச் சென்றது தகுதியன் றென்பான் 'எனைவிட' என்றும், இராவணனுடன் பொருது ஜடாயு விழுப்புண்பட்டு இறந்தன னாதலால் 'சென்றவீரம்' என்றுங் கூறினான் சூரியசாரதியான அருணனுக்கு அரம்பையென்னும் தேவமாதின் வயிற்றில் தோன்றியவர் சம்பாதி ஜடாயுக்கள் ஆவர். ஜராயுஜம் அண்டஜம் ஸ்வேதஜம் உத்பிஜ்ஜம் என்ற நால்வகைப்பிறப்புக்களுள், கழுகுகள் அண்டஜ மாதலால், 'அண்டமுந்துயிர்த்திடநாள்வந்து' எனப்பட்டது. (ஜராயுஜம் - கருப்பையிலிருந்து பிறப்பன; இப்பிறவியிற்சேர்ந்தவர் - மனிதரும் விலங்குகளும். அண்டஜம் - முட்டையிலிருந்துபிறப்பன; பறவைகள் முதலாயின. ஸ்வேதஜம் - வேர்வையிலிருந்து பிறப்பன; புழு முதலானவை. உத்பிஜ்ஜம் - விதையிலிருந்து தோன்றுவன; மரம் செடி முதலியன.) ஓர்தனி - ஒருபொருட்பன்மொழி. கலுழன் = கருடன். பி - ம்:—[1]நாம். [2]இருவோமுமெய்தியான், இருவேமுமெய்தினேம். [3]நீயொருதனிச். [4]கருளற்குமேன்மையாய், கருளற்குவெம்மையாய் 'உடனேயண்டமிரண்டுமொத்துய. ரிடனும், உடனே... முந்தியற், றிடனும்', என்று சிலபிரதிகளில் முன்னிரண்டடிகளிற் பாடம். (991)

37\. ஒன்று [1]மூன்றுல கத்து ளோரையும்
வென்று னென்னினும் [2]வீர நிற்குநேர்
நின்று [3]னேயவ் வரக்க னின்னையும்
[4]கொன்று னேயிஃ [5]தென்ன கொள்கையோ

(இ - ள்.) வீர - வீரனே!—(இராவணனானவன்), ஒன்று மூன்று உலகத்து உளோரைஉம் வென்றான் என்னின்உம் - (தனக்கு) இணங்கிவராத மூவுலகங்களிலுள்ளவர்களையும் வென்றானென்றாலும், நிற்கு நேர் நின்றானே- (போரில்) உனக்கு எதிராகவும் நின்றானா! அ அரக்கன் நின்னைஉம் கொன்றானே - ராக்ஷஸனாகிய அந்த இராவணன் உன்னையும் கொன்றானா!! இஃது என்னகொள்கைஓ - இது என்ன கோட்பாடோ? (எ - று.)

மூவுலகத்தையும் வென்ற அந்த இராவணனைவிட நீ மிக்க பலசாலியாதலால், அவன் உன்னை யெதிர்த்தா னென்பதும், கொன்றானென்பதும் நம்பத்தக்கதாயில்லையே யென்றவாறும். பி - ம்:—[1]மூவுலகத்தியாரையும். [2]நின்முனிற்குமோ. [3]ஏயவரத்தின். [4]கொன்றானேயிது. [5]கொள்கையோவென்றான். (992)

38\.—அனுமான் சம்பாதியைத் தேற்றுதல்.

என்றென் றேங்கி யிரங்கி யின்னலால்
பொன்றுந் தன்மை [1]புரிந்த போதவற்கு
ஒன்றுஞ் சொற்கொ [2]டுணர்ச்சி நல்கினான்
வன்றிண் [3]டோள் வரை யன்ன மாருதி.

(இ - ள்.) (சம்பாதியானவன்), என்றுஎன்று ஏங்கி இரங்கி - என்று பலவிதமாகக்கூறி மிகவும் மனந்தளர்ந்துவருந்தி, இன்ன

லால் - துன்பத்தினால், பொன்றும் தன்மை புரிந்தபோது - இறக்கும் நிலையை யடைந்தபோது,—அவற்கு - அந்தச்சம்பாதிக்கு, வல் திண் வரை அன்ன தோள் மாருதி - மிகவும்வலிய மலைபோன்ற தோள்களையுடைய அநுமான், ஒன்றும் சொல்கொடு உணர்ச்சி நல்கினன் - சமயத்திற்கு ஏற்ற சொற்களைக்கொண்டு தேறுதல் கூறினான்; (எ - று.)—பி - ம்:—[1]புகுந்தபோது. [2]உணர்த்தி. [3]மாமலை, தோண்மலை. (993)

39.—சம்பாதி வினவலும், அநுமான் விடைகூறத் தொடங்கலும்.

[1]தேற்றத் தேறி [2]யிருந்த [3]செங்கணான்
[4]கூற்றொப் பான்கொலை வாள ரக்கனோடு
[5]ஏற்றுப் போர்[6]செய்த தென்னி மித்தெனக்
காற்றின் [7]சேயிது கட்டு ரைக்குமால்.

(இ - ள்.) தேற்ற தேறி இருந்த செங் கணான் - (அநுமான்) தேறுதல் கூறியதனால் மனந்தெளிந்தவனான சிவந்தகண்களையுடைய சம்பாதியானவன்,—(அநுமானைநோக்கி), 'கூற்று ஒப்பான் - யமன் போன்றவனான [மிக்கவலிமையுடைய] ஜடாயு, கொலை வாள் அரக்கனோடு - கொல்லுதல் தொழிலையுடைய வாளாயுதத்தையேந்திய ராக்ஷஸனாகிய இராவணனோடு, ஏற்று போர் செய்தது - எதிர்த்துயுத்தஞ்செய்ததற்கு, என் நிமித்து - காரணம் யாது?' என - என்றுவினவ, காற்றின் சேய் - வாயுகுமாரனான அநுமான், இது கட்டுரைக்கும் - இவ்வரலாற்றைக் கூறலானான்; (எ - று.)—அதனை, அடுத்த மூன்றுசெய்யுளிற் காண்க. ஆல்-ஈற்றசை.

சம்பாதி அநுமான்வார்த்தையால் மனந்தெளிந்து ஜடாயு இராவணனோடு போர்செய்த காரணத்தை வினவ, அநுமான் கூறலாயின னென்பதாம். நிமித்து=நிமித்தம்; வடசொல். பி - ம்:—[1]தேற்றச்சிந்தை, சீற்றச்செவ்வி, தேற்றச்செவ்வி. [2]தெரிந்த, திருந்து, தெளிந்த, தெளிந்து. [3]சம்பாதியும், செவ்வியான். [4]கூற்றைப்போற், கூற்றம் போற். [5]ஏற்றப்போர். [6]செய்தற்கெனாநிமித்தென, செய்த தென்னிகழ்த்தென, செயவந்ததேதென. [7]சேயிவைகட்டுரைக்கின்றான், சேயதுகட்டுரைக்குவான். (994)

40.—இதுமுதல் மூன்றுகவிகள் - ஒரு தொடர்: அநுமான் ஜடாயுவின் செய்தி கூறுதல்.

எங்கோ மானவ் விராம னில்லுளாள்
[1]செங்கோ லான்மகள் சீதை செவ்வியாள்
வெங்கோல் வஞ்சன் விளைத்த மாயையால்
தங்கோ னைப்பிரி வுற்ற தன்மையாள்.

(இ - ள்.) எம் கோமான் - எமது தலைவனான, அ இராமன் - அந்த இராமபிரானது, இல் உளாள் - மனைவியும், செங்கோலன்

மகள் - நீதிநெறி தவறாத அரசாட்சியையுடையவனான ஜநகமகாராஜனது குமாரியும், செவ்வியாள் - நல்லிலக்கணமமைந்தவளுமான, சீதை—,—வெம் கோல் வஞ்சன் விளைத்த மாயையால் - கொடுங்கோலையுடைய வஞ்சகனாகிய இராவணன் செய்த சூதினால், தம் கோனை - தனது நாயகனை, பிரிவு உற்ற - பிரிந்த, தன்மையாள் - தன்மையளாயினாள்; (எ - று.)

செங்கோல் வஞ்சன் விளைத்த மாயையாவது - மாயமானினது வியாஜமாக இராமலட்சுமணர்கள் சீதாபிராட்டியைப் பிரியுமாறு செய்தமை. இல்லுளாள் - வீட்டிலிருந்து கணவனுக்கு வேண்டிய தொழிலைச் செய்பவள்; மனைவி. பி - ம்:—[1] செங்கோமான். (995)

41\. கொண்டே குங்கொலை வாள ரக்கனைக்
கண்டா னும்பி [1]யறங்[2]க டக்கிலான்
வண்டார் கோதையை வைத்து நீங்கெனாத்
திண்[3]டே ரானெதிர் [4]சிந்தை சீறினான்.

(இ - ள்.) அறம் கடக்கிலான் - தருமநெறி தவறாதவனான, உம்பி - உனது தம்பி [ஜடாயுவானவன்],—கொண்டு ஏகும் கொலை வாள் அரக்கனை கண்டான் - (சீதாபிராட்டியைக்) கவர்ந்துகொண்டு செல்கின்ற கொலைசெய்யும் வாளாயுதத்தையேந்திய இராவணனைக் கண்டு,—'வண்டு ஆர் கோதையை - வண்டுகள்மொய்க்கப்பெற்ற கூந்தலையுடைய பிராட்டியை, வைத்து - விட்டிட்டு, நீங்கு - அப்பாற் செல்,' எனா - என்று சொல்லி, திண் தேரான் எதிர்சிந்தை சீறினான் - வலிய தேரையுடைய அவ்விராவணனெதிரிலே மனங்கொதித்துப் போர்புரியலானான்; (எ - று.)

'அறங்கடக்கிலான்' என்ற அடைமொழி - பிறர்மனைவியைக் கவர்வதைக் கண்டு மனங்கொதித்தற்கு ஏற்றவனென்றகருத்தைப் புலப்படுத்தும். பி - ம்:—[1] அகங். [2] கடக்கலான். கடக்கிலா. [3] தேரானொடு. [4] எதிர்ந்து, சினந்து. (996)

42\. சீறித் தீயவ னேறு தேரையும்
கீறித் தோள்கள் கிழித்த ழித்தபின்
தேறித் தேவர்கள் தேவன் தெய்வவாள்
[1]வீறப் பொன்றினன் [2]மெய்ம்மை யோனென்றான்.

(இ - ள்.) மெய்ம்மையோன் - சத்தியமுள்ள அந்த ஜடாயு, சீறி - அவ்வாறு கோபித்து, தீயவன் ஏறு தேரைஉம் கீறி - கொடியவனாகிய அவ்விராவணன் ஏறியிருந்த தேரையும் அழித்து, தோள்கள் கிழித்து - (அவனது) தோள்களையும் பிளவுபடுத்தி, அழித்த பின் - (இங்ஙனம் பலபடியாக அவனது வீரத்தைக்) குறைத்த பின்பு,—(இராவணன்), தேறி - (தான் ஜடாயுவைவெல்லும் நெறியை) நிச்சயித்து, தேவர்கள் தேவன் தெய்வம் வாள் வீற - மகாதேவனான சிவபிரான் (தனக்கு அளித்த) தெய்வத்

தன்மையுள்ள வாளை வீசியெறிய, பொன்றினன் - (ஜடாயு) உயிர் மாய்ந்தான், என்றான் - என்று கூறி முடித்தனன், (அநுமான்); (எ - று.)

ஜடாயு இராவணனைத் தனது மூக்கினாலும் நகங்களினாலும் சிறகுகளினாலும் பலபடி இமிசித்து, இறுதியில் அவ்விராவணனது தெய்வவாளால் உயிர்மாய்ந்தன னென்றனன். மும்மூர்த்திகளுளொருவ னாதலால், சிவபெருமான் 'தேவர்கள்தேவன்' எனப்பட்டான். மூன்றாமடி-முற்றுமோனை. பி-ம்:—[1]வீறி. [2]மேன்மையோன், மெய்ம்மையோய். 'தேறித்தாழ்சடையீசன்றெய்வவாள்' என்றும், 'தேறித்தேவர்கடேவன்வாளினால்' என்றும் சிலபிரதிகளில் மூன்றாம் அடி. (997)

43.—இதுமுதல் மூன்றுகவிகள் – ஜடாயுவின்மரணத்தைக் குறித்துச் சம்பாதி வியந்து இரங்குதல்.

[1]விளித்தா னன்னது கேட்டு [2]மெய்ம்மையோய்
[3]தெளித்தா டத்தகு தீர்த்தன் மாட்டுயிர்
அளித்தா னே[4]யது நன்று நன்றெனாக்
களித்தான் வாரி [5]கலுழ்ந்த கண்ணினான்.

இதுமுதல் நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) விளித்தான் - (அவ்வாறு) கூறிமுடித்தவனான அநுமானுடைய, அன்னது - அச்சொல்லை, கேட்டு—, வாரி கலுழ்ந்த கண்ணினான் - நீரைச்சொரிகின்ற கண்களையுடையவனாகிய அந்தச் சம்பாதி,—(அந்த அநுமானைநோக்கி)—'மெய்ம்மையோய் - சத்தியமுடையவனே! தெளித்து ஆட தகு தீர்த்தன்மாட்டு உயிர் அளித்தானே - மனந்தெளிந்து அனுபவித்தற்குஉரிய பரிசுத்த மூர்த்தியாகிய இராமபிரான்திறத்தில் (எனது தம்பியாகிய ஜடாயு) உயிரையுங் கொடுத்தானன்றோ! அது நன்றுநன்று - அச்செயல் மிகவும் நன்றாயிருந்தது,' எனா களித்தான் - என்று மனஞ்சந்தோஷித்தவனாய்,—(எ - று.)

'வினைப்பகுதிகள் பலபொருளையும் தரும்' என்ற கொள்கை பற்றி, விளித்தான் என்பதற்கு - சொன்னான் எனப்பொருள்கொள்ளப்பட்டது. தெளித்து ஆடத்தகுதீர்த்தன் - முழுமுதற்கடவுளென்று உறுதிகொண்டு சரணமடைதற்கு ஏற்ற புண்ணிய மூர்த்தி; இத்தொடர் - தெளிவடைந்து பலரும்வந்து நீராடத் தகுந்த கங்கையென்னும் புண்ணிய நதியை உண்டாக்கினவனென்ற பொருளையுந்தரும். வாரி - மகிழ்ச்சிக்கண்ணீருமாம். சீதாபிராட்டியை மீட்டற்குச் சென்று ஜடாயு இறந்திருக்கவும், 'தீர்த்தன்மாட்டுயிரளித்தான்' என்றது சீதையை மீட்டலும் இராமகாரிய மாதலாலென்க; "இராமன்பத்தினி, செந்தாள் வஞ்சி திறத்திறந்தவன்" என மேற்கூறுதலுங் காண்க. விளித்தான் - பெயர்: முற்று எனின், என்றான் என்பதன் அநுவாதம். தெளித்து = தெளிந்து; எதுகை நோக்கிய வலித்தல். ஏகாரமும், அடுக்கும் - உவகைப்பொருளன.

பி - ம்:—[1] வெளித்தானன்னதுசொல்ல, தளிர்த்தானன்னதுசாற்ற. [2] மெய்ம்மையோர், மேன்மையால். [3] தெளித்தாங்கொள்ளருந்திறத்தன். [4] இது. [5] கரந்த, கலந்த. (998)

44. பைந்தா ரெங்க ளிராமன் பத்தினி
செந்தாள் வஞ்சி திறத்[1]தி றந்தவன்
மைந்தா வெம்பி வரம்பில் [2] சீர்த்தியோடு
உய்ந்தா னல்ல [3] துலந்த துண்மையோ.

(இ - ள்.) மைந்தா - வீரமுடையவனே! பைந் தார் எங்கள் இராமன் - புதியதாகிய மலர்மாலையையணிந்தவனான எங்கள் இராமபிரானது, பத்தினி - தேவியும், செந் தாள் வஞ்சி திறத்து - சிவந்த பாதங்களையுடைய வஞ்சிக்கொடிபோன்றவளுமான சீதாபிராட்டியின் விஷயத்தில், இறந்தவன் - உயிரொழிந்தவனாகிய, எம்பி - எனது தம்பியாகிய ஜடாயு, வரம்பு இல் சீர்த்தியோடு உய்ந்தான் அல்லது - அளவில்லாத பெருங்கீர்த்தியுடன் [புகழுடலோடு] பிழைத்திருக்கின்றானேயல்லாமல், உலந்தது - உயிரொழிந்தானென்று கூறுவது, உண்மைஓ - உண்மையாகுமோ? [ஆகாதென்றபடி]; (எ - று.)

சீதாபிராட்டியை மீட்பதற்காகத் தன்னுயிரைக் கொடுத்தவனாதலால், அவனது பூதவுடம்பு அழிந்தும் புகழுடம்பு அழியாது நிலைநிற்கின்றது; ஆதலால், அவன் இறந்தும் இறவாதவனேயாவனென்பதாம். 'பைந்தார்' என்றவிடத்து, பசுமை - புதுமை மேலது. பத்தினி - பதிக்கு [கணவனுக்கு] அக்கினிகாரியத்தில் உதவும் மனைவி. செந்தாள்வஞ்சி - அன்மொழித்தொகைப் பன்மொழித்தொடர்; அடையடுத்த உவமவாகுபெயருமாம்; ஒல்கி யொசியுந்தன்மையில் மாதர்க்கு வஞ்சிக்கொடி உவமை. "சீர்த்தி மிகுபுகழ்" என்பது தொல்காப்பியம். பி - ம்:—[1] இறந்தனன். [2] கீர்த்தியோடு. [3] உலர்ந்தது. (999)

45. அறமன் னனுட னெம்பி [1]யன்பினோடு
[2] உறவுன் னவுயி ரொன்ற வோவினான்
[3] பெறவொண் ணாததொர் [4] பெற்றி பெற்றவற்கு
[5] இறவென் னாமிதி னின்ப மியாவதோ.

(இ - ள்.) அறம் அன்னனுடன் - தருமம்போன்றவனாகிய இராமபிரானுடனே, எம்பி - எனது தம்பியான ஜடாயு, அன்பினோடு உறவு உன்னா - அன்போடு உறவுகொண்டாடி, உயிர் ஒன்ற ஓவினான் - (அவன் திறத்தில் தனது) உயிரையும் மனப்பூர்வமாக விட்டான்; பெற ஒண்ணாதது ஓர் பெற்றி பெற்றவற்கு - (எவராலும்) பெற முடியாததாகிய ஒப்பற்ற பேற்றை யடைந்தவனான அந்த ஜடாயுவுக்கு, இறவு என் ஆம் - மரணமென்பதுதான் என்ன நஷ்டத்தைத் தரும்? இதின் இன்பம் யாவதுஓ - இப்பேற்றைக் காட்டிலுஞ் சிறந்த இன்பந்தருவதுதான் வேறுயாதோ?[ஒன்றுமில்லை]; (எ-று.)

இராமபிரான் திறத்தில் உயிரைக்கொடுக்க நேர்ந்த இந்தப் பேற்றுக்குமுன், மரணமென்பது சிறிதும் கஷ்டத்தைத் தரவல்லதன்றென்பதாம். ஜடாயுவின் மரணத்தில் இராமபிரான் திறத்து உதவுதலாகிய நன்மையைக்கண்டு அதனை விரும்பியது - வேண்டலணியின்பாற்படும்; குற்றமுள்ள ஒன்றில் விளைகின்ற நன்மையைக் கருதி அதனை வேண்டுதல், இவ்வணியின் இலக்கணம். தருமமே ஒருவடிவெடுத்தாற்போன்றிருத்தலால், இராமனை 'அறமன்னான்' என்றான். ஜடாயு தசரதசக்கரவர்த்திக்குப் பல உதவிகள் செய்து அவனது உயிர்த்தோழனாகி அவனினும் வயது முதிர்ந்தவனாகிய தான் அச்சக்கரவர்த்திக்குத் தமையன் முறையிலிருந்து அவனது புதல்வராகிய இராமலக்ஷ்மணர் காட்டில்வந்தபோது அவர்களிடத்தில் ஈன்ற மக்களிடத்துக் கொள்ளும் அன்பைக் கொண்டிருந்தனனென்பதுபற்றி 'அன்போடுறவுன்னா' என்றார். பி - ம்:—[1] அன்பினால். [2] உறவன்னார், உறவெண்ணா. [3] பெறவெண்ணாதது. [4] பேறுபெற்றவற்கு, பெற்றிபெற்றபேர்க்கு. [5] இறவென்னேவதின். (1000)

46.—ஜடாயுவுக்காக நீர்க்கடன்கழித்தபின்பு, சம்பாதி வாநரரிடத்து ஒன்றுகூறத் தொடங்குதல்.

என்றென் றேங்கி யிரங்கி [1]யின்புனல்
சென்றங் காடுதல் [2]செய்து தீர்ந்தபின்
வன்றிண் டோள்வலி [3]மாறி லாதவன்
துன்றுந் [4]தாரவர்க் கின்ன சொல்லினான்.

(இ - ள்.) என்று என்று ஏங்கி இரங்கி - என்று பலவகையாக ஏக்கங்கொண்டு புலம்பி, இன் புனல் சென்று அங்கு ஆடுதல்செய்து தீர்ந்தபின் - இனியநீருள்ள இடத்திற்குச் சென்று அதில் நீராடுதல் முதலியன செய்து முடித்தபிறகு,—வல் திண் தோள் வலி மாறு இலாதவன் - மிக்க வலிய புஜபலத்தில் ஒப்பில்லாதவனாகிய சம்பாதி, துன்றும் தாரவர்க்கு - நெருங்கியமாலையைத்தரித்த வானரரை நோக்கி, இன்ன சொல்லினான் - இவ்வார்த்தைகளைக் கூறலானான்; (எ - று.)—அவற்றை, அடுத்த இரண்டுகவிகளிற் காண்க.

சம்பாதி ஒப்பற்ற வலிமையுடையானென்றற்கு, 'தோள்வலி மாறிலாதவன்' என்றார்: தோள் - சிறகுகளுக்கு இலக்கணையுமாம். நீராடுதலைக் கூறியது - இறந்தார்க்குச்செய்யுஞ் சடங்குகட்கெல்லாம் உபலக்ஷணம். இறகு எரிந்துபோன சம்பாதியின் வேண்டுகோளின்படி வானரர் அவனைக் கடற்கரையிற் சேர்க்க, அங்குத் தம்பிக்கு ஜலதர்ப்பணஞ் செய்தனனென்று முதனூல் கூறும். தாரவர் - இரண்டு வெள்ளம் சேனையுள்ள வானரத்தலைவரெனினுமாம். தார் - மாலையும், சேனையும். பி - ம்:—[1] ஈர்ம்புனல், இன்புற. [2] செய்தறீர்ந்தனன். [3] மாண்டிலாதவன். [4] தாரவற்கு. சில பிரதிகளில் 'உறவென்னாருயிரின்றுலோபினேன்' என்றும், 'உறவினனாயினனும்பரிம்பர்தாம்,' 'உறவன்னாருயிர் பொன்றவோவினாய் அல்லது ஓங்கினாய்,...ஓங்கினான்' என்றும் இரண்டாம் அடியும், 'பெறமுனைந்தொர்பேறுபெற்றவே' என்று மூன்றுமடியும், உள்ளனவென்ப. (1001)

47.—சம்பாதி வாநரர்களைக் கொண்டாடுதல்.

வாழ்வித் தீரெனை மைந்தர் வந்துநீர்
ஆழ்வித் தீரலீர் துன்ப வாழிவாய்
[1]கேள்வித் தீவினை கீறி னீரிருள்
போழ்வித் தீருரை பொய்யி னீங்கினீர்.

இதுமுதல் மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) கேள்வி தீ வினை கீறினீர் - (பெரியோர்களிடத்துக்) கேட்டறிந்ததனாற் பாவச்செயலை யொழித்தவர்களும், பொய் உரையின் நீங்கினீர் - பொய்பேசுதலினின்று நீங்கினவர்களுமாகிய, மைந்தர் - வீரர்களே! நீர்—, வந்து - இங்குவந்து, எனை வாழ்வித்தீர் - என்னை நல்வாழ்வடையச்செய்தீர்கள்; துன்பம் ஆழிவாய் ஆழ்வித்திர் அலிர் - (தம்பியின் மரண சமாசாரத்தைச்சொல்லி அதனால் என்னைத்) துயர்க்கடலுள் மூழ்குவித்தீரல்லீர்: இருள் போழ்வித்தீர்- (எனது) துன்பத்தைப் போக்கினீர்; (எ - று.)

நல்லறிவுடையவர்களும் பொய்யில்லாதவர்களுமாகி இங்கு வந்த நீங்கள் இராமகாரியத்தின்பொருட்டு எனதுதம்பி உயிர்துறந்தனனென்று தெரிவித்ததனால் தம்பியின்மரணத்தைக் கூறநேர்ந்ததைக் குறித்து நீங்கள் கவலவேண்டா; அவன் இவ்வாறு பேறுபெற்றதை நினைந்து எனக்கு மகிழ்ச்சியேயாயிற் றென்றன னென்க. சூரியகிரணங்களின் வெப்பம் தாக்குதலால் தனதுசிறகுகள் கரிந்தொழியவே, சம்பாதி, மகேந்திரமலையில் விழுந்து அங்கு வசித்திருந்த*லோகசாரங்கரென்ற முனிவரைச்சரணமடைய, அவர் தமது தவமகிமையால் எதிர்காலவரலாற்றை யுணர்ந்து, பின்பு 'இராம தூதர்களாக இங்குவரும் வானரர்கள் இராமநாமோச்சாரணஞ்செய்தால் உனக்கு முன்போலச் சிறகுகள் முளைத்திடும்' என்று தனக்கு வரமளித்திருந்ததைநினைத்து, இறகுமுளைக்குங்காலம் தனக்குக் குறுகியதுபற்றி, 'எனைவாழ்வித்தீர்' என்றும். 'இருள்போழ்வித்தீர்'என்றும் மகிழ்ந்து கூறினனென்க. 'இருள்போழ்வித்தீர்' என்றது - தெளிவுபற்றிய காலவழுவமைதி. பி - ம்:—[1]கேழ்வித்தீர்வினை. (1002)

48.—சம்பாதி தனக்குச் சிறகுமுளைத்தற்காக ராமநாமோச்சாரணஞ் செய்யுமாறு வாநரர்களை வேண்டுதல்.

எல்லீ ரும்மவ் விராம நாமமே
[1]சொல்லீர் சொல்ல வெனக்கொர் சோர்விலா
நல்லீ ரப்[2]பய னண்ணு நல்லசொல்
வல்லீர் வாய்மை வளர்க்கு மாண்பினீர்.

---

*நிசாகரமுனிவரென்று முதனூலாலும், பிரதிபேதத்தாலுக் ஏற்படும்.

(இ - ள்.) நல்ல சொல் வல்லீர் - இன்சொல்கூறுகின்றவரும், வாய்மை வளர்க்கும் மாண்பினீர் - சத்தியத்தைவளரச்செய்யும் பெருமை பெற்றவருமாகிய வாநரவீரர்களே!—எல்லீர் உம் - நீங்களெல்லோரும், அ இராமநாமம் ஏ சொல்லீர் - அந்த 'ராம' என்னுந்திருநாமத்தையே வாய்விட்டுச் சொல்லுங்கள்; சொல்ல - (அவ்வாறு என்னருகிற்) சொல்வதனால், எனக்கு—, ஓர் சோர்வு இலா நல் ஈரம் பயன் நண்ணும் - சிறிதும் தாழ்வில்லாத சிறந்த ஒப்பற்ற (அப்பிரானது) கருணையின் பயனனது கைகூடும் [சிறகு முன் போலவே தழைக்கும்]; (எ - று.)—'என்றான்' என்று அடுத்தகவியோடு தொடர்ந்து முடியும். பி - ம்:—[1]சொல்லீர்சொல்லவெனக் கொர்சோர்விலே, சொல்லீரென்சிறைதோன்றும்...[2]பயனண்ண. (1003)

49.—வாநரர் ராமநாமோச்சாரணஞ்செய்ய, சம்பாதிக்குச் சிறகுமுளைத்துத் தழைத்தல்.

என்ற [1]னன்னது காண்டும் யாமென
நின்றார் நின்றுழி நீல மேனியான்
நன்று நாம நவின்று நல்கினர்
[2]வன்றோ ளான்சிறை [3]வானந் தாயவே.

(இ - ள்.) என்றான் - என்று (சம்பாதி) கூறினான்; (அது கேட்ட வாநரர்கள்), யாம் அன்னது காண்டும் என-'நாம் அதனை ஆராய்ந்து பார்ப்போம்' என்று, நின்றார் நின்ற உழி - நின்றவர் நின்றபடியே, நீலம் மேனியான் நன்று ஆம் நாமம் நவின்று நல்கினர்-நீலநிறமான அவ்விராமபிரானது நன்மையைத் தரத்தக்கதாகிய திருநாமத்தைச் சொல்லியுதவினர்கள்; (அதனால்), வல் தோளான் சிறை வானம் தாய - வலியதோள்களையுடைய சம்பாதியினது சிறகுகள் (முளைத்து) ஆகாயமளாவி வளர்ந்தன; (எ - று.)

இராமகாரியத்தில் துணைபுரியவேணு மென்ற கருத்தினாலேயே சம்பாதிக்கு வெந்தசிறகை முளைத்திட முனிவர் அருள்புரியவில்லையென்பதும், இவ்வானரரோடு பேச்சுநிகழ்கையில்தானே அந்தச்சம்பாதியின்சிறகு முளைத்திட்டதென்பதும் முதனூலால் பெறப்படும். பகவந்நாமத்தை உச்சரித்தற்கு அங்கமொன்றும் வேண்டா என்பதைக் குறிப்பித்தற்கு, 'நின்றார்நின்றுழி' என்றார். பி - ம்:—[1]இன்னது, இன்றிது, ஆங்கது. [2]வன்றோளின். [3]வானந்தாவவே, வானநண்ணவே, வானளந்ததே, வான்வளர்ந்தவே. (1004)

50.—சம்பாதியின் அப்பொழுதைய தோற்றம்.

சிறைபெற் றான்[1]திகழ் கின்ற மேனியான்
[2]முறைபெற் றா[3]முல கெங்கு மூடினான்
[4]நிறைபெற் றாவி நெருப்பு யிர்க்கும்வாள்
[5]உறைபெற் றாலென லாமு றுப்பினான்.

(இ - ள்.) திகழ்கின்ற மேனியான் - விளங்குகின்ற உடம்பையுடையவனாகிய சம்பாதி,—முறைபெற்று ஆம் உலகு எங்கும் மூடி

ஞன் - வரிசையாகப் பொருந்திய உலகங்களெல்லாவற்றிலும் வியாபித்து நிற்பவனான திருமாலின் திருவவதாரமாகிய இராமபிரானது, நிறை பெற்று - நிரம்பிய அருளைப் பெற்றதனால், சிறைபெற்றான் - (தனது கரிந்துபோன) சிறகுகள் (முன்போல) முளைக்கப்பெற்று, ஆவி நெருப்பு உயிர்க்கும் வாள் - புகையோடுகூடிய நெருப்பைக்கக்குகின்ற [மிகவும் உக்கிரமான] வாளாயுதம், உறை பெற்றால் எனல் ஆம் - உறையைப் பெற்றாற்போலுமென்று சொல்லத்தக்க, உறுப்பினன் - உடம்பை யுடையவனானான்; (எ - று.)

அவனது விளங்குகின்ற உடம்பு-வாளாயுதத்திற்கும், அவ்வுடம்பைச் சுற்றிலும் நன்றாகமுளைத்த இறகு - அவ்வாளைச்சூழும் உறைக்கும் உவமையாம். இராமநாமோச்சாரணத்தாற் கரிந்துபோன சிறகுகள் முளைத்தன வாதலின், 'உலகெங்குமூடினான் நிறைபெற்றுச் சிறைபெற்றான்' என்றது. உறுப்பு - அங்கம்: அங்கம்-உடம்பு: இலக்கணை. இனி, திகழ்கின்றமேனியானாகிய சம்பாதி சிறைபெற்றவனாய், ஆவி நிறைபெற்று - தனதுஆத்மா [மனம்] திருப்தியடையப்பெற்று, முறைபெற்று ஆம் - ஒருமரியாதையில் நிற்கின்ற, உலகெங்கும் - இவ்வுலகமுழுவதிலும், (முளைத்த அச்சிறகால்)மூடினான் என்றும் உரைக்கலாம். பி - ம்:—[1]சுடர்தின்ற. [2]முறைபெற்றான். [3]உலகேழுமுயங்கினான். [4]நிறைபொற்றாரை. [5]உறைபெற்றும் அல்லது உறைபெற்றான் என்னலாம். (1005)

51.—அதுகண்டு வாநரர் யாவரும் வியந்து இராமபிரானை வாழ்த்துதல்.

[1]தெருண்டான் [2]மெய்ப்பெயர் செப்ப லோடும்வந்து
உருண்டா [3]னுற்ற பயத்தை யுன்னினார்
மருண்டார் [4]வானவர் கோனை வாழ்த்தினார்
வெருண்டார் சிந்தை வியந்து விம்முவார்.

(இ - ள்.) (அதுகண்ட வாநரர்கள்),—தெருண்டான் மெய் பெயர் செப்பலோடும் - (அறிஞராற் பரம்பொருளென்று) தெளியப்பட்டவனாகிய இராமபிரானது பயனளிக்கும் திருநாமத்தை(த்தாம்)உச்சரித்த மாத்திரத்தில், உருண்டுவந்தான் உற்ற பயத்தை-(முன்பு இறகில்லாமையால்) உருண்டுவந்தவனாகிய சம்பாதியடைந்த நன்மையை, உன்னினார் - (மனத்திற்) கருதி, மருண்டார் - திகைப்புக்கொண்டவரும், வெருண்டார் - அச்சமடைந்தவரும், வியந்து சிந்தை விம்முவார் - ஆச்சரியமடைந்து மனம்பூரிப்பவர்களுமாகி,—வானவர்கோனை வாழ்த்தினார் - தேவர்கட்கெல்லாம் தலைவனான திருமாலின் திருவவதாரமூர்த்தியாகிய அவ்விராமபிரானை வாழ்த்தித் துதித்தார்கள்; (எ - று.)

சம்பாதி இறகில்லாமல் உருண்டுவந்ததையும், இராமநாமோச்சாரணத்தினாற்சிறகுகள் முளைத்துத்தழைத்ததையும் கண்கூடாகக் கண்ட வாநரர்கள், அச்சமும் வியப்பும் மருட்சியும் ஒருங்கேகொண்

டவர்களாய், தனது நாமோச்சாரணமாத்திரத்தினாற் பெரும்பயனை விளைக்கும் மகிமைவாய்ந்த இராமபிரானை வாழ்த்தின ரென்பதாம். மெய்ப்பெயர் - தன்னையுச்சரித்தார்க்குப் பயன்விளைத்தலில் தவறாத திருநாமம்; தாரகமந்திரம். தனது திருநாமத்தால் வேண்டிய பயனை விளைத்தது கொண்டு 'இராமபிரான் மானுடனல்லன்; தேவாதிதேவனே முழுமுதற்கடவுளே' என்ற தத்துவஞானத்தைப் பெற்ற வாநரர்கள், அத்தேவாதிதேவனுடைய முற்றுணர்வு, வரம்பிலாற்றல், யாவரையும் பாதுகாக்குந்திறம், அழியாவியல்பு முதலிய குணங்களைக் கருதி அவற்றில் ஈடுபட்டு ஆழ்ந்து பக்திபரவசராகி, அதனால் தம் நிலையையும் எம்பெருமான் நிலையையும் மறந்து, 'காலாதீதமான வைகுண்டத்திலே யிருக்கிற இந்த அரும்பொருள் காலம் நடையாடப்பெற்ற இவ்வுலகத்திலே கண்ணுக்கு இலக்காகுதலால், கண்ணெச்சிலால் 'இதற்கு என்ன தீங்குவருமோ!' என்று தமக்கு உள்ள பேரன்பினால் அஞ்சவேண்டாத இடத்தும் துணுக்குற்று 'இத்திருமேனிக்கு எவ்வாற்றானும் ஒருகுறையும் வாராதிருக்கவேணும்' என்று பொங்கும்பரிவினால் வாழ்த்துவாராயினரென்க. வந்து உருண்டான் - உருண்டுவந்தானென்று விகுதி பிரித்துக் கூட்டப்பட்டது. பி-ம்:— [1]தெருண்டார். [2]அப்பெயர். [3]உற்றபலத்தை. [4]மைதிலிகோனை, மானவர்கோனை. (1006)

52.—வாநரர் சம்பாதியின் முன்னையவரலாற்றை வினவ, அவன் கூறத்தொடங்குதல்.

அன்னானைக்கடி தஞ்ச லித்துநீ
முன்னா ளுற்றது முற்று [1]மோதெனச்
சொன்னார் சொற்றது சிந்தை [2]தோய்வுறத்
தன்னா லுற்றது தான்வி ளம்புவான்.

(இ - ள்.) (வாநரவீரர்கள்),—அன்னானை கடிது அஞ்சலித்து - அந்தச்சம்பாதியை விரைவாகக் கைகூப்பிவணங்கி, 'நீ—, முன் நாள் உற்றது முற்றும் ஓது - முன்காலத்து நடந்த வரலாறு முழுவதையும் கூறுவாய்,' என சொன்னார் - என்றுவினவினார்கள்; சொற்றது சிந்தை தோய்வுற - (அவர்கள்) சொன்னசொல் (தன்) மனத்திற் படிந்ததனால்,—தான் - அந்தச் சம்பாதி, தன்னால் உற்றது விளம்புவான் - தன்னால் (தனக்கு) நேர்ந்ததை [இறகுதீந்ததன்காரணத்தை]க் கூறுவானாயினான்; (எ - று.)—அதனை, அடுத்த எட்டுக் கவிகளிற் காண்க.

சம்பாதியை வாநரர்கள் அஞ்சலித்தது - அவன் இராமநாமத்தின் மகிமையைத் தமக்குத் தெரிவித்தவனாதலாலும், இராமபிரானுக்குப் பெரியதந்தைமுறையாகி அவனது திருவருளைப் பெற்றவனாதலாலும், மிகவும் வயதுமுதிர்ந்தவனாதலாலு மென்க. 'சொற்றது சிந்தைதோய்வுற' என்பதற்கு - தான் சொன்னது கேட்பவர் மனத்தில் நன்றாய்ப்பதியும்படி, கூறலானானென்றும் உரைக்கலாம்.

நீ உற்றது என இயைப்பினுமாம். பி - ம்:—[1]ஈஙேன. [2]சோர்வுற. 'சொன்னாரன்னவர் சிந்தைதோய்வுற' என்று சிலபிரதிகளில் மூன்றும் அடி. (1007)

வேறு.

53.—இதுமுதல் எட்டுக்கவிகள் – ஒருதொடர்: சம்பாதி வாநரர்களை நோக்கித் தனது முன்னையவரலாறு கூறுதல்.

[1]தாயெனத் தகைய நண்பீர் சம்பாதி சடாயு வென்பேம்
சேயொளிச் [2]சிறைய வேகக் கழுகினுக் கரசு செய்வேம்
பாய்திரைப் பரவை ஞாலம் படரிருள் [3]சீக்கும் [4]பண்பின்
ஆய்கதிர்க் கடவுட் டேரு ரருணனுக் கமைந்த மைந்தர்.

(இ - ள்.) (சம்பாதி வாநரர்களைநோக்கிக் கூறுவான்):—தாய் என தகைய நண்பீர் - (அன்பினால்) தாயென்று சொல்லத்தக்க நண்பர்களே! பாய் திரை பரவை ஞாலம் - வீசுகின்ற அலைகளையுடைய கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்தில், படர் இருள் அகற்றும் - நிரைந்துள்ள இருட்டையொழிக்குந் தன்மையையுடைய, ஆய் கதிர் கடவுள் - சிறந்தகிரணங்களோடு கூடிய சூரியபகவானது, தேர்ஊர் - தேரைநடத்துகின்ற சாரதியான, அருணனுக்கு—, அமைந்த - பிறந்த, மைந்தர் - புத்திரர்களாகிய, சம்பாதி சடாயு என்பேம் - சம்பாதி சடாயுஎன்ற நாங்களிருவரும், சேய் ஒளி சிறைய வேகம் கழுகினுக்கு அரசு செய்வேம் - அழகிய நிறத்தைக்கொண்ட சிறகுகளையுடைய வேகமாகப் பறக்கின்ற கழுகுகட்கு அரசராவோம்; (எ - று.)

சூரியசாரதியாகிய அருணனுக்குப் புதல்வராய்ப்பிறந்த சம்பாதி ஜடாயு என்ற நாங்கள் வர்னத்தில் உயர்ந்துபறக்குந்தன்மையுள்ள கழுகுகட்கு எல்லாம் அரசராயிருந்தோ மென்றவாறு. சூரியசாரதியாகிய அருணனென்பவன் - காசியபமுனிவரது மனைவியாகிய விநதையின் வயிற்றிற் பிறந்தவன்: கருடனுக்குத் தமையன்; இடைக்குக் கீழ் உறுப்பில்லாதவன். பி - ம்:—[1]தாயெனத் தழுவு நண்பீர், தாயெனத்தழுவுநண்ப. [2]சேண்செனேக்கின், சேண்செருக்கும், சிறைய வேகக். [3]கரக்கும், அகற்றும். [4]பான்மை. (1008)

54. ஆயுய ரும்பர் நாடு காண்டுமென் றறிவு[1] தள்ளி
மீயுயர் விசும்பி னூடு மேக்குறச் செல்லும் [2]வேலை
காய்கதிர்க் கடவுட் டேரைக்[3] கண்ணுற்றுங் கண்ணு றுமுன்
தீயையுந் தீக்குந் [4]தெய்வச் செங்கதிர்ச் செல்வன் [5]சீறி.

(இ - ள்.) (நாங்களிருவரும்), அ உயர் உம்பர் நாடு காண்டும் என்று அறிவு தள்ளி - அந்த வானத்திலுள்ள தேவலோகத்தைக் காணவேண்டுமென்ற அறிவைச் செலுத்தி, மீ உயர் விசும்பினூடு மேக்கு உற செல்லும் வேலை - மிகவும்மேலே ஆகாயத்திலே பறந்து செல்லும்போது, காய் கதிர் கடவுள்தேரை கண்ணுற்றும்உம்

கண்ணுறுமுன் - வெவ்வியகிரணனை சூரியபகவானது தேரைக் கண்டதும்காணுததுமாயிருக்கும்போது,-தீயைஉம் தீக்கும் தெய்வம் செங்கதிர் செல்வன் - நெருப்பையும் தபிக்கச்செய்கின்ற தெய்வத் தன்மையுள்ள சிவந்த கிரணங்களையே செல்வமாகக்கொண்ட சூரியன், சீறி-கோபித்தலால்,—(எ-று.)—'அழன்முடுகும்வேலை' என அடுத்த கவியோடு தொடரும்.

நாங்களிருவரும் மிகவும் உயரப்பறக்கும் வல்லமை பெற்றிருந்தமையால் முன்னொருகாலத்தில் தேவலோகத்தைக் காணவேண்டுமென்று ஓரெண்ணந் தோன்றி வானத்திற் பறந்து சூரியமண்டலத்தைக் குறுகிச் சூரியபகவானைக் காணும் நிலைமையி லிருக்கையில், மனுஷ்யலோகத்தவராகிய நாங்கள் அங்குவந்ததனுல் அக்கடவுள் எங்களைச் சினந்தனனென்பதாம். அ + உயர் = ஆயுயர். தீயையும் தீக்கும் தெய்வச் செங்கதிர்ச் செல்வன் - வெம்மையின் மிகுதியை விளக்கும் உயர்வுநவிற்சி. ஈற்றடி - முற்றுமோனை. பி - ம்:—[1] தள்ள. [2] எல்லே. [3] கண்ணுற்றேங். [4] செல்லற்செங்கதிர்ச்செல்வன், செல்வச் செங்கதிர்ச் செல்வன், செல்வச்செங்கதிர்த்தேவன். [5] சீற. (1009)

55. முந்திய வெம்பி மேனி முருங்கழன் [1] முடுகும் வேலை
எந்தைநீ காத்தி யென்ருன் [2] யானிருஞ் சிறையு மேந்தி
வந்தனென் [3] மறைத்த லோடு மற்றவன் [4] மறையப் போனான்
வெந்துமெய் யிறகு [5] தீந்து விழுந்தனென் [6] விளிகி லாதேன்.

(இ - ள்.) முந்திய எம்பி மேனி முருங்கு அழல் முடுகும் வேலை - (என்னினும்) உயரமாகப்பறந்துசென்ற எனது தம்பியாகிய ஜடாயுவின் உடம்பை எரிக்குந்தன்மையுள்ள சூரியகிரணுக்கினியானது உக்கிரமாகத் தபிக்குங் காலத்தில், (அந்தஜடாயு என்னைநோக்கி), எந்தை நீ காத்தி என்ருன் - 'எந்தையே! (என்னை) நீ காப்பாற்றுவாய்' என்று வேண்டினன்: (அவ்வாறு வேண்டவே அவனுக்கு மேலே சென்று), யான்—, இருஞ் சிறைஉம் ஏந்தி வந்தனென் மறைத்தலோடும் - எனதுபெரிய (இரண்டு) இறகுகளையும் பரப்பிக்கொண்டு வந்து (அவன்மேல் வெயில் தாக்காதபடி) மறைக்கவே, அவன் மறைய போனான் - அந்த ஜடாயு (எனது சிறகின் நிழலில்) மறைவாக வந்தான்; விளிகிலாதேன் - நான் (அப்போதே) இறக்க மாட்டாதவனாய், மெய் வெந்து இறகு தீந்து விழுந்தனென் - உடம்பு வெந்துபோய் இறகுகள் கருகித் தரையில் விழுந்தேன்; (எ - று.)

என்னிலும் உயரமாகப் பறந்துசென்ற ஜடாயுவானவன் சூரியபகவான் கோபித்துச் செலுத்திய வெப்பத்தைத் தாங்கமாட்டாமல் தன்னைக் காப்பாற்றுமாறு என்னை வேண்டிக்கொள்ள, அதனுல் அவன் என்சிறகின் நிழலில் வருமாறு அவனுக்குமேலே யான் பறந்து செல்ல, அவனும் அவ்வாறே வந்து தப்பினான்; யான் அந்தச் சூரியனது வெப்பத்தைப் பொறுக்கமாட்டாமல் இறகு தீந்து கீழேவிழுந்தேனென்பதாம். 'விளிகிலாதேன்' என்றது - தனது தம்பியாகிய

ஜடாயு இறந்தனனே என்ற துயரத்தினாற் கூறியவார்த்தை யெனி னுமாம். 'தமையன் தந்தையோடொப்பான்' என்றபடி ஜடாயுவுக்குச் சம்பாதி தந்தைபோலப் பாராட்டத்தக்கவனாதலால், 'எந்தை' என விளிக்கப்பட்டான். பி - ம்:—[1] முழங்கும், முருக்கும். [2] என்னிருசிறை யும், யானிருசிறையும். [3] மறைதலோடும். [4] உய்ந்துபோனான். [5] தீய. [6] விளிந்திலாதேன். (1010)

56. மண்ணிடை விழுந்த வென்னை வானிடை [1]வயங்கு [2]வள்ளல்
கண்ணிடை நோக்கி யுற்ற கருணையன் சனகன் காதற்
பெண்ணிடை [3]யீட்டின் வந்த [4]வானர ரிராமன் பேரை
[5]எண்ணிடை யுற்ற காலத் திறகு[6] பெற் றெழுதி யென்றான்.

(இ - ள்.) மண்ணிடை விழுந்த என்னை - அவ்வாறு தரையில் விழுந்த என்னை, வானிடை வயங்கு வள்ளல் - வானத்தில் விளங்கு கின்ற சூரியபகவான், கண்ணிடை நோக்கி - கண்ணினாற் பார்த்து, உற்ற கருணையன் - மிக்க அருளையுடையவனாய்,—'சனகன் காதல் பெண் இடையீட்டின் வந்த வானரர் இராமன் பேரை எண்ணிடை உற்ற காலத்து இறகு பெற்று எழுதி - ஜனகமகாராஜனது அன் பிற்கு உரிய புதல்வியாகிய சீதை (இராமபிரானைவிட்டுப்) பிரிதலினால் (அவளைத் தேடும் பொருட்டு) இங்கே வரப்போகின்ற வாநரர்கள் (உன்னைக்கண்டு) இராமபிரான் திருநாமத்தை மனத்தினாற் கருதி உச்சரிக்குங் காலத்தில் முன்போலவே சிறகுகள் முளைக்கப் பெற்றுப் பறந்து செல்வாய்,' என்றான் - என்று அநுக்கிரகஞ் செய் தான்; (எ - று.)

தனது வெவ்வியகிரணத்தால் இறகுகள் தீந்து கீழேவிழுந் திட்ட என்னைக்கண்டு, சூரியபகவான் இரக்கங்கொண்டு, 'இனிஒரு காலத்தில் இராமபிரானது மனைவியாகிய சீதாபிராட்டியைத் தேடு தற்காக இராமதூதர்களாகிய வாநரர்கள் இங்குவந்து உன்வேண்டு கோளின்படியே ராமநாமோச்சாரணஞ்செய்ய, இப்போது இழந்தசிறகு கள் மீண்டுந் தளிர்க்கப்பெற்றெழுவாயென்று அநுக்கிரகஞ் செய்தன னென்பதாம். தன்னிடத்து அருளைச் செலுத்தியதனால், சூரியபக வானைச் சம்பாதி 'வள்ளல்' எனப் புகழ்ந்தான். பி - ம்:—[1] வயங்கும், வழங்கும். [2] அண்ணல். [3] ஊற்றின். [4] வானரம். [5] எண்ணிடலுற்ற, எண்ணிடவுற்ற. [6] பெற்றெழுக, வந்தெழுதி, பெற்றிடுதி. (1011)

57. தாழ்ந்தமா தவத்து லோக சாரங்க னுறையுஞ் சாரல்
வீழ்ந்தனனென் சிறைகள் தீய வெவ்வுயிர்த் துளமு மெய்யும்
[1]போழ்ந்தன துன்ப மூன்ற வுயிர்ப்பொறை போற்ற கில்லாது
ஆழ்ந்தனெ [2]னாழ்ந்த வென்னை யருந்தவ னெதிர்ந்து தேற்றி.

நான்கு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (நான்),—சிறைகள் தீய - (எனது) இறகுகள் தீந்து விட்டதனால், வெவ் உயிர்த்து - வெப்பமாகப் பெருமூச்சுவிட்டுக்

கொண்டு, தாழ்ந்த மா தவத்து உலோகசாரங்கன் உறையும் சாரல் விழ்ந்தனென் - மிக்க பெருந்தவத்தையுடைய லோகஸாரங்கனென்னும் முனிவன் வசிக்கின்ற மலைச்சாரலிலே வந்து விழுந்தேன்; உளம் உம் மெய்உம் போழ்ந்தன - (விழுந்த அதிர்ச்சியால் எனது) மனமும் உடம்பும் கலங்கிப் பிளவுபட்டன; துன்பம் ஊன்ற - துன்பம் மிக்க தனால், உயிர்ப்பொறை போற்றகில்லாது - உயிராகிய பாரத்தையும் பொறுக்கமுடியாமல் [உயிரோடிருக்க மனமில்லாமல்], ஆழ்ந்தனென் - (உயிரைவிடவேண்டுமென்ற கருத்தை) உறுதியாகக்கொண்டேன்; ஆழ்ந்த என்னை - அவ்வாறு (உயிரைவிடத்) துணிவுகொண்டிருந்த என்னை, அரும் தவன் - (பிறர்க்குச்செய்தற்கு) அரிய தவத்தையுடையவனாகிய அந்த முனிவன், எதிர்ந்து - எதிரிலே வந்து, தேற்றி - சமாதானஞ் சொல்லி,—(எ - று.)—மேல் 59 - ஆங்கவியிலுள்ள 'அளித்தனன்' என்ற வினைமுற்றோடு தொடரும்.

நான் முற்கூறியவாறு கீழ்விழுகையில், லோகசாரங்கமுனிவனுடைய ஆச்சிரமத்தினருகேவிழுந்து, அவ்வதிர்ச்சியினாலுண்டான துன்பமிகுதியினால் சூரியபகவான் அருள்புரிந்திருக்கவும் உயிர்விடத் துணிந்தேனாக, அக்காலத்தில் அந்த முனிவன எதிர் வந்து எனக்குத் தேறுதல்கூறினனென்பதாம். நிசாகரமுனிவன் வந்து தேற்றி அநுக்கிரகஞ் செய்ததாக முதனூல் கூறும்; 'தாழ்ந்த மாதவத்தின் மிக்க நிசாகரனுறையுஞ்சாரல்' என்று பாடம் காணப்படுகின்றதென்பர் ஒருசாரார். தாழ்ந்த தவம் - கருத்தூன்றிச் செய்த தவம். உயிர்ப்பொறை - உயிரைப் பொறுப்பது; உடலென்பாருமுளர். பி - ம்:— [1]போழ்ந்தனன். [2]ஆழுங்காலெதிர்ந்தவன் அல்லது அதிர்ந்தவன் எழுந்து.

இதுமுதல் மூன்று கவிகள் - பல பிரதிகளில் இல்லை: சிலபிரதிகளில் "எம்பியும்" (60) என்ற பாடல் உள்ளது. பல பிரதிகளில் "என்றலும்" (61) என்ற பாடலே தொடங்குகின்றது. (1012)

58. கற்றிலர் போல வுள்ளக் களிப்பினு [1]லமரர் காப்பூடு
உற்றிடக் கருதி மீப்போ யாதபத் துனது மேனி
முற்றழன் [2]முருங்க மண்ணை முயங்கினை யினியென் சின்னாள்
மற்று[3] நின் னுயிரை யோம்பா திகழ்வது மாலைத் தன்றால்.

(இ - ள்.) கற்றிலர்போல - படித்தறியாத மூடர்போல, உள்ளம் களிப்பினால் - மனத்தில் தோன்றிய உற்சாகத்தினால், அமரர்-தேவர்களது, காப்பூடு - பாதுகாப்புள்ள விடத்தில் [தேவலோகத்தில்], உற்றிட கருதி - போய்ச்சேர நினைத்து, மீ போய் - மேலே பறந்து சென்று, உனது மேனி ஆதபத்து முற்று அழல் முருங்க - உனது உடம்பு வெயிலினுடைய நிரம்பிய வெப்பத்தால் அழிய, மண்ணை முயங்கினை - (நீ மீண்டு) பூமியில் வந்து விழுந்தாய்; இனி - இவ்வாறு நடந்தபிறகு, மற்றுஉம் சில் நாள் நின் உயிரை ஓம்பாது இகழ்வது

என் - இன்னுஞ் சிலகாலம் [இராமதூதர் இங்குவருகிற வரையிலும்] உனது உயிரைக் காப்பாற்றமாட்டாமல் வெறுப்புடனே விட்டுடத் துணிவது என்னகாரணம்? மாலைத்து அன்று - (அவ்வாறு உயிரை விடுவது) நல்லொழுக்கமுமாகாது; (எ - று.)

நீ இறகை இழந்து பெருந்துன்பமடைந்ததற்குக் காரணம் உனது பிழையேயா யிருக்க, சூரியபகவான் அருள்புரிந்ததனால் உனக்கு நற்காலம் வருவது நிச்சய மென்று தெரிந்திருந்தும், அந் நாள் வரையிலும் உயிரை வைத்திராமல் நீ தற்கொலைசெய்து கொள்ளத் துணிவது பேதைமையாகுமேயன்றி, நல்லொழுக்கமாகா தென் முனிவன் எனக்கு நல்லறிவுகூறின னென்பதாம். தற்கொலை செய்பவர்கட்கு அந்ததாமிஸ்ரம்என்ற நரகம் விளையுமென்று தரும சாத்திரங்கள் கூறி யிருத்தலால், அதனை 'மாலைத்தன்று' என்று மறுத்தனன். காப்பு - காவலையுடைய இடம். ஆல் - ஈற்றசை. பி - ம்:—[1] அமரரூர்காப்பு. [2] முருக்க. [3] நீ. (1013)

59. களித்தவர் கெடுதல் திண்ணஞ் சனகியைக் கபடன் வெளவி
ஒளித்தவாய் துருவி யுற்ற வானர ரிராம நாமம் [றன்று
விளித்திடச் சிறைவந் தோங்கும் வெவ்வுயிர்த் தயர [1]லென்
அளித்தன னதனு லாவி யாற்றினே னுற்றன் மொய்ம்பீர்.

(இ-ள்.) ஆற்றல் மொய்ம்பீர் - மிக்க வலிமையையுடைய வானரர்களே! களித்தவர் கெடுதல் திண்ணம் - செருக்குக் கொண்டவர் அழிவது நிச்சயம்: (நீ வானுலகத்திற்செல்லுமாறு களிப்புக் கொண்டு மேலே பறந்து சென்றதனால் இந்நிலையையடைந்தாய்); கபடன் - வஞ்சனைக்குணமுடைய இராவணன், சனகியை வெளவி ஒளித்த - சீதா பிராட்டியைக் கவர்ந்து மறைத்துவைத்த, வாய் - இடத்தை, துருவி - தேடிக்கொண்டு, உற்ற - வரப்போகின்ற, வானரர்—, இராமன் நாமம் விளித்திட - இராமநாமத்தைச் சொன்ன மாத்திரத்தில், சிறை வந்து ஓங்கும் - (சூரியபகவான் அநுக்கிரகித்தபடியே) உனது இறகுகள் முளைத்து வளரும்; வெவ் உயிர்த்து அயரல் - வெப்பமாகப் பெருமூச்சுவிட்டு வருந்தாதே, என்று—, அன்று - (நான் உயிர்விடத் துணிந்த) அக்காலத்தில், அளித்தனன் - (அம்முனிவன்) கருணை கொண்டு கூறினன்; அதனால்—, ஆவி ஆற்றினேன் - (இதுவரையில்) உயிரை வைத்திருந்தேன்; (எ - று.)

அம்முனிவன் என்னைத் தேற்றியதனால், உங்கள் வருகையை எதிர்நோக்கி இதுவரையில் நான் உயிர்வைத்திருந்தேனென்பதாம். பி - ம்:—[1] என்றென்று. (1014)

இங்கே காணப்படும் பாடல்கள் வருமாறு:—

அன்றியு மலருள் வைகு மயனைநேர் [1]முனிவன் வாய்மை
நன்றிகொ [2]ளீசற் காண்பா னணுகலும் வினையே னுற்றது

ஒன்றொழி வுருமற் [3]கேட்டதி யோகத்தி [4]னுணர்ச்சி பேணிப்
பொன்றுத லொழிமின் யானே புகல்வது கேண்மி னென்றான்.

பி - ம்:—[1]முனியை. [2]ஈசன். [3]கேட்டான். [4]உயர்ச்சி.

தசரத ராமன் தேவர் தவத்தினாற் றுய்சொற் றுங்கிக்
கசரத துரக மின்றிக் கானிடை யிறுத்த காலை
வசைதரு மிலங்கை வேந்தன் வௌவிய திருவை நாடித்
திசைதிரி கவிக ளூற்றுற் சிறகுபெற் றெழுதி யென்ன.

இவ்விரண்டு செய்யுள்களும் சில அச்சுப்பிரதிகளிலும், எமக்குக் கிடைத்த பல ஏட்டுப் பிரதிகளிலும் காணப்படவில்லை; இவை இச்சந்தர்ப்பத்திற்கும் முக்கியமாகவேண்டுவன அல்ல. (இவற்றின் கருத்து: —மேலும் பிரமதேவனைப்போன்ற முனிவனொருவன் ஸத்ய ஸங்கல்பத்வம் முதலிய நற்குணங்களையுடைய கடவுளை நேரேகாணும் பொருட்டுத் தவஞ்செய்யுமாறு இங்குவந்தபோது, தீவினையுடைய நான் அடைந்ததை முழுவதையும் என்னைக்கேட்டுத் தெரிந்துகொண்டு, தனது ஞானக்கண்ணால் இனி வரப்போவதையறிந்து, அம்முனிவன் 'யான் சொல்வதைக் கேள்; நீ இறக்கவேண்டா: வனவாசஞ் செய்யும் இராமபிரானது மனைவியை இராவணன் கவர்ந்து செல்ல, அவளைத் தேடும்பொருட்டுப் பலதிசைகளிலுஞ் செல்கின்ற வானரர்கள் இங்கு வரும்போது நீந்த இறகுகளைப் பெற்றெழுவாய்' என்றுசொல்ல என்பதாம்.)

60. எம்பியு மிடரின் [1]வீழ்வா னேயது மறுக்க வஞ்சி
அம்பரத் தியங்கு மி[2]யாணர்க் கழுகினுக் கரச னானேன்
நம்பிமீ [3]ரீதெந் தன்மை நீரிவ [4]ணடைந்த வாற்றை
உம்பரு முவக்கத் தக்கீ ருணர்த்துமி னுணர வென்றான்.

(இ - ள்.) உம்பர்உம் உவக்க தக்கீர் - தேவர்களும் வியக்கத்தக்க தொழிலை யுடையவர்களாகிய, நம்பிமீர் - சிறந்த வானரவீரர்களே! (எனக்கு நேர்ந்த வருத்தத்தை நோக்கி), இடரின் வீழ்வான் - துன்பத்தில் மூழ்கியவனாகிய, எம்பிஉம் - எனது தம்பியான ஜடாயுவும், ஏயது மறுக்க அஞ்சி - (யான்) ஏவியதைத் தடுக்கப் பின்வாங்கியவனும் [எனது கட்டளைக்கு இசைந்து], அம்பரத்து இயங்கும் யாணர் கழுகினுக்கு அரசன் ஆனேன் - ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற வலிய கழுகுகளுக்கு அரசனாயினேன்; ஈது எம் தன்மை - இதுதான் எமது வரலாறு; நீர் இவண் அடைந்த ஆற்றை உணர உணர்த்துமின்-நீங்கள் இங்குவந்த வரலாற்றை (யான்) உணரும்படி சொல்வீராக, என்றான் - என்று கூறி முடித்தான், (சம்பாதி); (எ-று.)—யாணர்-அழகுமாம். பி - ம்:—[1]வீழ்ந்தான். [2]வாய்மைக், ஆணைக். [3]ஈதென்றன்மை. [4]நடந்த வார்த்தை, அடைந்தவார்த்தை. (*1015*)

61.—வாநரர் சீதையைத் தேடிவந்த வரலாற்றைக் கூற, சம்பாதி அவ்விடயத்தில் தனக்குத் தெரிந்ததைக் கூறலுறல்.

என்றலு மிராமன் றன்னை யேத்தின ரிறைஞ்சி யெந்தாய்
புன்றொழி லரக்கன் [1]மற்றைத் தேவியைக் கொண்டு போந்தான்

தென்றிசை யென்ன வுன்னித் [2]தேடிநாம் [3]வந்து மென்றார்
நன்றுநீர் [4]வருந்தல் வேண்டா [5]நானிது நவில்வ [6]னென்றான்.

(இ - ள்.) என்றலும் - என்று (சம்பாதி) வினவியவுடனே,— (வானரர்), இராமன் தன்னை ஏத்தினர் இறைஞ்சி - இராமபிரானைத் துதித்து(த் திக்குநோக்கி) வணங்கி,— (சம்பாதியைநோக்கி) 'எம் தாய் - எமது தாய்போன்றவனே! புல் தொழில் அரக்கன் - இழிதொழிலையுடைய ராக்ஷஸனாகிய இராவணன், தென் திசை - தென்திசை வழியாக, தேவியை கொண்டு போந்தான் - (இராமபிரானது) மனைவியாகிய சீதாபிராட்டியைக் கொண்டு போனான், என்ன உன்னி-என்று நினைத்து, நாம் தேடி வந்தும் - யாங்கள் (அப்பிராட்டியைத்) தேடிக் கொண்டு (இங்கு) வந்துசேர்ந்தோம்,' என்றார் - என்று கூறினார்கள்; (அது கேட்ட சம்பாதி), 'நன்று - நல்லது: நீர் வருந்தல் வேண்டா - நீங்கள் வருந்தாதீர்கள்; நான் இது நவில்வன் - நான் இவ்விஷயத்தைப்பற்றிச் சிறிதுசொல்வேன்,' என்றான்-என்று (அவ்வரலாற்றைக்) கூறலானான்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற் காண்க.

பிறர்மனைவியரைக்கவரும் தீக்குணமுடையவனாதலின், இராவணனை 'புன்தொழிலரக்கன்' என்றார். எந்தாய் - எனது தந்தைபோல்பவனே எனினுமாம். மற்றை - அசை: வந்தும் - தன்மைப்பன்மை யிறந்தகாலவினைமுற்று. பி - ம்:—[1]பூவில், பற்றித். [2]தேடியே. [3]வருதும். [4]வருந்தலய்யா. [5]நன்றிது. [6]நாவால், வாயால், கேண்மின்.

இங்கே சிலபிரதிகளில் காணப்படுவனவாக நான்குபாடல்கள் அச்சுப்பிரதியொன்றில் கொடுக்கப்பட்டுள்ளன: அவைவருமாறு:—

(1) எனக்குண வியற்றுங் காத லென்மகன் சுபார்சு வன்பேர்
சினக்கொலை யரக்கன் மூதூர் வடதிசை நின்று செல்வான்
நினைக்குமுன் றிருவோ டந்த நீசனை நோக்கி யெந்தை
தனக்கிரை யெய்திற் றென்னாச் சிறகினாற் றகைந்து கொண்டான்.

(2) காமத்தா னலிவுப்பட்டுக் கணங் குழைதன்னைக்கொண்டு
போமத்தா! போக லெந்தை புன்பசிக் கமைந்தா யென்று
தாமத்தார் மௌலி மைந்தன் றடுத்திடை விலக்கநீசன்
நாமத்தால் விரலைக்கவ்வ நாணி மீண் டெனக்குச் சொன்னான்,

(3) முன்னரந் நிசாகர முனி மொழிந்ததும்
பின்னரச் சுபார்சன் பெலத்திராவணன்
தன்னொடுமமர்பொரச் சமைந்து நின்றதும்
பொன்னியல் சனகியைக் கொண்டு போனதும்.

(4) நினைந்து சம்பாதியு நீதி யாவையும்
இணைந்தனன் வானர ரெவருங் கேட்கவே
நினைந்து கண்ணீர்விழ நெடிதுயிர்த்தனர்
வினைந்தனர் புரண்டனர் விதியை நொந்தனர்.

இப்பாடல்கள், வான்மீகத்து வருஞ் செய்தியையொட்டிப் பிற்காலத்தவராற் செய்யப்பட்டனபோலும்; எமக்குக்கிடைத்த எந்த ஏட்டுப்பிரதியிலும் வேறு அச்சுப்பிரதிகளிலும் காணப்படவில்லை.

62.—இராவணன் சீதையைச் சிறைவைத்துள்ளதைச் சம்பாதி தெரிவித்தல்.

பாகொன்று குதலை யாளைப் [1]பாதக வரக்கன் பற்றிப்
போகின்ற [2]பொழுது கண்டேன் புக்கன னிலங்கை புக்கு
வேகின்ற வுள்ளத் தாளை வெஞ்சிறை [3]யகத்து வைத்தான்
[4]ஏகுமின் [5]காண்டி ராங்கே யிருந்தன ளிறைவி யின்னும்.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) பாகு ஒன்று குதலையாளை - சர்க்கரைப் பாகுபோன்ற [மிக இனிய] மழலைச்சொற்களை யுடையவளாகிய சீதையை, பாதகன் அரக்கன் பற்றி போகின்ற பொழுது - பாவியாகிய இராவணன் கவர்ந்து செல்கின்ற பொழுதில், கண்டேன் - பார்த்தேன்; இலங்கை புக்கனன் - (அவ்விராவணன்) இலங்கையிற் சேர்ந்தான்; புக்கு-(அவ்வாறு) சேர்ந்து, வேகின்ற உள்ளத்தாள் - தவிக்கின்ற மனமுடையவளாகிய அச்சீதையை, வெம் சிறை அகத்து - கொடிய சிறைக்காவலில், வைத்தான் - வைத்திட்டான்; இறைவி இன்னும் ஆங்கே இருந்தனள் - சீதாபிராட்டி இப்போதும் அங்கேயே இருக்கின்றாள்; ஏகுமின் காண்டிர் - (நீங்கள்) அங்குச் சென்று காணுங்கள்; (எ - று.)

[4]ஏகொன்றிற் காண்டிரந்திலிருக்குநள் என்ற பாடத்துக்கு-ஏகுதலென்பது கூடிற்றானால் (நீங்கள் இங்கிருந்து சென்றால்) அங்குக் காணலாம், இருக்கின்றாள் என்று பொருளாம்; ஏகு - முதனிலைத் தொழிற்பெயர். அந்தில் - அசை. பி - ம்:—[1]படியொடுங்கீண்டு கொண்டு. [2]பொழுதும், போது. [3]அடுத்து. [4]ஏகுங்கள், ஏகுமுன், ஏகுங்கோள். [5]காண்பிர். *(1017)*

63—இலங்காபுரியின் கிட்டுதற்கருமையைச் சம்பாதி வாநரர்க்குத் தெரிவித்தல்.

[1]ஓசனை யொருநூ றுண்டா லொலிகட லிலங்கை யவ்வூர்
பாசவெங் கரத்துக் கூற்றுங் கட்புலன் பரப்ப வஞ்சும்
[2]நீசனவ் வரக்கன் சீற்ற நெருப்புக்கு நெருப்பு நீங்கள்
ஏசறுங் குணத்தீர் சேற லெப்பரி [3]சியைவ தென்றான்.

(இ - ள்.) ஒலி கடல் இலங்கை - ஒலிக்கின்றகடலாற் சூழப்பட்ட அவ்விலங்காபுரியானது, ஓசனை ஒரு நூறு உண்டு - (இங்கிருந்து) நூறுயோசனை தூரத்திலுள்ளது; ஊர் - அவ்விலங்காபுரியினிடத்து, வெம் பாசம் கரத்து கூற்றும் - கொடிய பாசாயுதத்தைக் கையிற்கொண்டுள்ள யமனும், கண் புலன் பரப்ப அஞ்சும் - (தனது)கண்பார்வையைச் செலுத்த அஞ்சுவான்; நீசன் அ அரக்கன் சீற்றம் - இழிகுணமுடையவனான அவ்விராவணனது கோபமோ, நெருப்புக்கும் நெருப்பு - அக்கினியையும் அடக்கவல்ல ஓர் அக்கினி

போன்றதாகும்; ஏசு அறும் குணத்தீர் - குற்றமற்ற நற்குணமுடையவர்களே! நீங்கள்—, சேறல் - (அங்குச்) செல்லுதல், ஏ பரிசு இயைவது - எவ்வாறு கூடுமோ? என்றான் - என்று (சம்பாதி) கூறினான்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

இலங்கையின் நிலையைப்பார்த்தால் எவ்வாறு அங்குச் சென்று சீதையைக் காண்பது என்று நினைக்குமாறு உள்ளது; ஆயினும், நடந்துள்ள செயலைப்பார்த்தால் நீங்கள் சீதையைத் தப்பாமற் காண்பீர்களென்று தோன்றுகின்றது என்றனனென்பதாம்: இங்ஙன் கருத்து உரைப்பதே, முதனூலுக்கும் ஏற்கும். உம்மால் செல்லவே முடியாது என்ற கருத்தினாலேயே சம்பாதி கூறினனென்றுகொள்ளின், 'மேலுமக்குறுவ தெண்ணிச் செல்லுமின்' என்று அடுத்த செய்யுளில் வருவது, பொருந்தாததாகும். இராவண னிடத்திலுள்ள அச்சத்தால் யமனும் அவ்விலங்கையைக் கண்ணெடுத்துப் பார்ப்பதற்கும் அஞ்சுவா னென்பது, இரண்டாமடியின் பொருள். மூன்றாமடி, இராவணனது மிக்க சினத்தின் கொடுமையை விளக்கும். பாசம் - கயிற்றுவடிவான ஆயுதம்; இது, யமனுக்கு உரியது. பி - ம்:—[1]யோசனையெழுநூறு. [2]நீசன்வாளரக்கன். [3]இயைவதென்னை. (1018)

64.—சம்பாதி கடலின் கடத்தற்கருமையைத் தெரிவித்தல்.

நான்முகத் தொருவன் மற்றை நாரியோர் [1]பாக னிற்க
[2]பான்முகப் பரவைப் பள்ளிப் [3]பாம்பணைப் பரனென் றாலும்
[4]காலனுக் கேயுஞ் சேற லரிதிது [5]கடலின் தன்மை
[6]மேலுமக் குறுவ தெண்ணிச் செல்லுமின் [7]விளிவி லாளீர்.

இதுமுதல் மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) நால்முகத்து ஒருவன் - (நான்குதிசைகளையும் நோக்கிய) நான்கு முகங்களையுடைய பிரமதேவனும், மற்றை நாரி ஓர் பாகன் - மற்றொரு மூர்த்தியாகிய பார்வதியை இடப்பக்கத்திற் கொண்ட சிவபிரானும், நிற்க - இடக்கட்டும்: பால் முகம் பரவை பள்ளி பாம்பு அணை பரன் என்றாலும் - பாலைத் தன்னிடத்திலேயுடைய சமுத்திரத்தில் [திருப்பாற்கடலில்] பாம்பணையிற் பள்ளிகொண்டுள்ள சிறந்த திருமாலேயானாலும், காலனுக்கு ஏயும் - யமனுக்கென்றாலும், சேறல் அரிது - உட்புகுந்து செல்லுதலென்பது கூடாததாகும்; இது கடலின் தன்மை - இது (இடைவழியிலுள்ள) கடலின் தன்மையாகும்; விளிவு இல் நாளீர் - அழிதலில்லாத [நீண்ட] ஆயுட்காலத்தையுடையவர்களே! மேல் உமக்கு உறுவது எண்ணி செல்லுமின் - இனிமேல் உங்கட்கு நேரக்கூடியவற்றை முன்னமே ஆலோசித்துச் செல்லுங்கள்; (எ - று.)

இடையிலுள்ள கடலோ திரிமூர்த்திகளாலும் யமனாலும் கடந்து செல்லவேண்டுமென்று நினைத்தாலும் முடியாததாம்; இவ்விஷயத்தில் முன்னரே ஆராய்ந்துதக்கபடி செய்யுங்கள் என்பதாம்.

"காலினுக்கேயும்" என்ற பாடத்துக்கு - வாயுபகவானுக்கே யென்றாலும் என்று பொருள். பி - ம்:—[1]பாகத்தண்ணல். [2]பாளிறை. [3]பரம்பரன்பணி, பச்சைமால்பணி. [4]கான்முதற்கேயும், கானுனித்தேனும். [5]காவற்றன்மை. [6]மேன்மறுக்குறுவது, மேனுமக்குறுவது. [7]விளிவிலாதீர். 'மேலுமக்கேயுந்தன்மைவிளம்புதிர் விளிவினளீர்' என்று சில பிரதிகளில் நான்காவது அடி. பல ஏட்டுப்பிரதிகளில் 'எல்லீரும்' என்ற செய்யுள் இதற்கு முந்தி யுள்ளது. (1019)

65.—இனிச் செய்யவேண்டுவதைப்பற்றிச் சம்பாதி ஆலோசனை கூறுதல்.

எல்லீருஞ் [1]சேற லென்ப தெளிதன்றவ் விலங்கை மூதூர்
[2]வல்லீரே லொருவ ரேகி மறைந்தவ [3]ணொழுகி வாய்மை
[4]சொல்லீரே துயரை நீக்கித் தோகையைத் தெருட்டி மீடிர்
[5]அல்லீரே லென்சொற் றேறி யுணர்த்துமி [6]னழகற் கம்மா.

(இ - ள்.) அ இலங்கை முது ஊர் - பழமையாகிய அந்த இலங்காபுரிக்கு, எல்லீர்உம் சேறல் என்பது - நீங்களெல்லீரும் (ஒருங்கே) போதலென்பது, எளிது அன்று - கூடாதகாரியமாகும்; வல்லீர் ஏல்- வல்லமை யுள்ளவராயின், ஒருவர் - (உங்களுக்குள்) ஒருவர் மாத்திரம் [வல்லமை சாலியான ஒருவர்மாத்திரம்], ஏகி - சென்று, அவண் மறைந்து ஒழுகி - (அங்குள்ளவர்களாற் காண முடியாதபடி) அங்கே மறைந்து வசித்து, வாய்மை சொல்லீர் - (இராமபிரான் கூறியருளிய) உண்மையான வார்த்தையைச் சொல்லியவர்களாய், தோகையை துயரை நீக்கி தெருட்டி - சீதையினது துன்பத்தை நீக்கி (அவளைத்) தெளியச்செய்து, மீடிர் - திரும்புங்கள்; அல்லீர் ஏல் - அல்லாவிட்டால், என் சொல் தேறி - எனது வார்த்தையை நம்பி, அழகற்கு - (கட்டழகுடையவனான) இராமபிரானிடத்தில், உணர்த்துமின் - (சீதை இலங்கையிற் சிறையிலிருக்கிறாளென்பதைத்) தெரிவியுங்கள்; (எ - று.)

அம்மா - 'அம்ம' என்பதன் நீட்டல்; (யான்சொல்வதைக்) கேளுங்கள் என்று பொருள்படும்; "அம்ம கேட்பிக்கும்." பி - ம்:— [1]சேறலென்றற்கெளிதன்றால், சேறிரென்னிலெளிதன்று. [2]வல்லீரே. [3]ஒதுங்கி. [4]சொல்லீரேயாகநீரத்தோகையைத்தெருட்டிமீள அல்லது மீண்மின். [5]வல்லீரேல். [6]மகிணர்க்கம்மா, இழவர்க்கம்மா. 'புல்லிரேலென்சொற்றேறியுணர்த்துமின்புக்கதம்மா' என்று நான்காமடி, சில பிரதிகளில். (1020)

66.—சம்பாதி வாநரரிடம் விடைகேட்டுக்கொண்டு செல்லுதல்.

காக்குந [1]ரின்மை யாலக் கழுகின முழுதுங் கன்றிச்
சேக்கைவிட் டிரியல் போகித் [2]தெருமரு மதனைத் [3]தீர்ப்பான்
போக்கெனக் [4]கடுத்த நண்பீர் நல்லது புரிமி னென்னா
மேக்குற விசையிற் சென்றான் சிறையினால் விசும்பு போர்ப்பான்.

(இ - ள்.) காக்குநர் இன்மையால் - பாதுகாப்பவ ரில்லாமையால், அ கழுகு இனம் முழுதுஉம் - அந்தக்கழுகின் கூட்டங்கள் முழுவதும், கன்றி - வருந்தி, சேக்கை விட்டு இரியல்போகி தெருமரும் - (தமது) இருப்பிடத்தைவிட்டு நிலைகெட்டுத் தடுமாறிப்போம்; அதனை தீர்ப்பான் - அத்தடுமாற்றத்தை நீக்கிப் பாதுகாக்கும் பொருட்டு, போக்கு எனக்கு அடுத்த(து) - போதற்கு உரிய காரணம் எனக்கு நேர்ந்து விட்டது; நண்பீர் - நண்பர்களே! நல்லதுபுரிமின் - (ஆலோசித்து யான் கூறிய இரண்டு வகையுள்) நன்மைதரக் கூடியதைச் செய்யுங்கள், என்னு - என்று சொல்லிவிட்டு,—சிறையினுல் விசும்பு போர்ப்பான் - (தனது) இறகுகளினுல் வானத்தை மறைப்பவனாகிய அச் சம்பாதி, மேக்கு உற விசையின் சென்றான் - ஆகாயவழியாக விரைவாய்ப் பறந்து போனான்; (எ - று.)

'இதுவரையில் ஜடாயுவின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த கழுகுகள் அந்த ஜடாயு இறந்தமைபற்றிப் பாதுகாப்பவரில்லாமல் எளியவற்றை வலியவை வருத்த நிலைகெட்டு வருந்தும்: ஆதலால், அவற்றைப் பாதுகாக்கும்பொருட்டு யான் விரைந்துசெல்லவேண்டியிருக்கிறது. ஆகையால், செல்லுகின்றேன்; நீங்கள் யான் சொல்லியவற்றுள் ஏற்றதைச் செய்யுங்கள்' எனக் கூறி, சம்பாதி ஆகாயமார்க்கமாகப் பறந்துசென்றனனென்பதாம். அக்கழுகினம் - முனபு ஜடாயுவினாற் பாதுகாக்கப்பட்ட கழுகுகள் என்றபடி: அகரம் - நெஞ்சறி சுட்டு. சேக்கை - பறவைகளின்கூடு. பி - ம்:—[1] இல்லையாம். [2] திரிதரும். [3] தீர்க்க. [4] அடுத்தனையா, அடுத்தனைய, அடுத்ததாகும்.(1021)

சம்பாதிப்படலம் முற்றிற்று.

17-ஆவது மயேந்திரப்படலம்.

மயேந்திர மலையைச் சார்ந்த வாநரவீரரால் அங்கு நிகழ்ந்த செய்தியை யுணர்த்தும் பாகம். சம்பாதியின் சொல்லால் சீதை யிருக்குமிடத்தை நன்கு உணர்ந்த வாநரர் தாம் செய்யவேண்டுவதைப்பற்றி ஆலோசித்தலும், சமுத்திரத்தைக் கடந்துசெல்வதில் தம்தமக்குள்ள திறமையைக்குறித்துச் சிலர் கூறுதலும், ஜாம்பவான் புகழப் பிறகு தனது பேராற்றலை யுணர்ந்த அநுமான் தான் கடல் கடப்பதாக உடன்படுதலும் முதலியன, இப்படலத்திற் கூறப்படுகின்றன. மகேந்திரப்படலம் என்றும் பாடம். மகேந்திரம் என்னுமிடத்திலெல்லாம் மயேந்திரம் என்ற பாடமும் உண்டு.

1, 2.—இவ்விரண்டு கவிகள் – வாநரர் செய்யவேண்டுவதைப்பற்றித் தமக்குட் சொல்லிக்கொள்ளுதல்.

1. பொய்யுரை செய்யான் புள்ளர [1]சென்றே புகலுற்றார்
[2]கையுறை நெல்லித் தன்மையி னெல்லாங் [3]கரைகண்டாம்

[4]உய்யுரை பெற்றா [5]நல்லவை யெல்லா [6]முறவெண்ணிச்
செய்யுமி னென்றே செய்வகை நொய்திற் செயவல்லீர்.

2\. சூரியன் வெற்றிக் காதல னோடுஞ் சுடர்விற்கை
ஆரிய னைச்சென் றேதொழு துற்ற [7]தறைகிற்பின்
[8]சீர்நிலை முற்றுந் [9]தேருதல் [10]கொற்றச் செயலாமா
வாரிக டப்பார் யாவ ரெனத்தம் வலிசொல்வார்.

இரண்டு கவிகள் - ஒருதொடர்.

ஆதலால், ஒருங்கே பொருள் உரைக்கப்படும்.

(இ - ள்.) '(1) புள் அரசு - கழுகுகட்கு அரசனாகிய சம்பாதி, பொய் உரை செய்யான் - பொய் சொல்லமாட்டான்,' என்றே-என்று உறுதியாக நினைத்து, புகல் உற்றார் - சொல்லத்தொடங்கிய சில வானரர்கள்,—(மற்றை வானரரை நோக்கி), 'செய் வகை நொய்தின் செய வல்லீர் - செய்தற்கு உரிய தொழில்களை விரைவிற் செய்துமுடிக்க வல்லவர்களே! (சம்பாதிகூறியவற்றால்), கை உறை நெல்லி தன்மையின் எல்லாம் கரைகண்டாம் - கையிற்கொண்ட நெல்லிக்காயின் தன்மைபோல (சீதாபிராட்டியின் செய்தி) முழுவதையும் நன்றாக அறிந்தோம்; (ஆகவே), உய் உரை பெற்றாம் - பிழைத்துப்போதற்கு உரிய வார்த்தையைப் பெற்றவரானோம்; (இனி), நல்லவை எல்லாம் உற எண்ணி ஒன்று செய்யுமின் - செய்தற்கு உரிய தொழில்கள் முழுவதையும் நன்றாக ஆலோசித்து (சம்பாதிகூறிய இரண்டில் ஏதேனும்) ஒன்றைச் செய்யுங்கள்; (2) சூரியன் வெற்றி காதலனோடு உம் - சூரியனது வெற்றிபெற்ற [சிறந்த] குமாரனாகிய சுக்கிரீவனையும், சுடர் வில் கை ஆரியனை - ஒளிபொருந்திய வில்லைக் கையிற் கொண்டவனாகிய சிறந்த இராமபிரானையும், சென்று தொழுது - போய் வணங்கி, உற்றது அறைகிற்பின் - நிகழ்ந்ததைக் கூறினால், சீர் நிலை முற்றும் - சிறந்த (நமது) கடமை ஒருவாறு முடிவுபெறும்; (ஆயினும்), தேருதல் - (நாமே கடல்கடந்து சீதாபிராட்டியுள்ள விடத்தைக் கண்டு) தெளிதல், கொற்றம் செயல் - வீரச் செயலாகும்; (இவ்வாறு செய்யத்துணிந்தால் கடலைக் கடக்கவேண்டுமே); வாரி கடப்பார் யாவர்-கடலைக்கடக்கின்ற வல்லமையுள்ளவர்(நம்முள்)எவர்?' என - என்று சொல்லி, தம் வலி சொல்வார் - தம்தம்வலிமையை எடுத்துக் கூறலானார்கள்; (எ - று.)—அதனை, அடுத்த நான்கு கவிகளிற் காண்க.

'சம்பாதி கூறியதெல்லாம் உண்மையேயா மாதலின், அவனது சொல்லின்படி ஏதேனுமொன்றைச் செய்தலே நலமாகும்; நாம் சென்று தேடாமலே சம்பாதிவார்த்தையை நம்பி மீண்டும் இராம சுக்கிரீவரையடைந்து சீதை இலங்கையிலிருத்தல் முதலியவற்றை எடுத்துக் கூறினாலும் நமது கடமை முடிவுபெறும்; இனி, நாம் கடல் கடந்து சென்று இலங்கையிற்புக்குச் சீதாபிராட்டியைக் கண்கூடாகக்கண்டு வந்து செய்தி தெரிவிக்கலாமென்றால், அது முற்கூறிய

அதனிலுஞ் சிறந்ததே; ஆனால், அவ்வாறு செய்தற்குக் கடலைக் கடக்கவேண்டுமே! அங்ஙனம் கடலைக்கடந்து சென்று மீளும் வல்லமையுள்ளவர் யாவர்?' என்று வாநரவீரர் ஆலோசித்துத் தம்தம் வலிமையை எடுத்துக் கூறலானார்களென்பதாம்.

1. 'பொய்யுரை செய்யான்' என்றது - சம்பாதி உண்மையையே கூறுவானென்று நமக்குத் தெளிவாக விளங்குதலின், நாம் நேரிற் சென்று சீதாபிராட்டியைக் காணவிடினும் மீண்டு சுக்கிரீவனிடத்தும் இராமபிரானிடத்தும் இச்செய்தியை நம்பிக்கூறலா மென்ற கருத்தை விளக்கும். கையுறை நெல்லிக்கனி-மேலுள்ள தோற்றத்தைக் கொண்டு உள்விவரமுழுவதையும் தெளிவாக அறிதலில் உவமமாம். கையுறை நெல்லி - 'கரதலாமலகம்' எனப்படும். 'சீதாபிராட்டியைப் பற்றிய செய்தி யொன்றும் தமக்குத் தெரியாமையாலும், தவணை கடந்தமையாலும், இனி மீண்டுசென்று மகாராஜரது கோபத்திற்கு இலக்காவதினும் உயிரைவிடுதலே நன்று' என்று தாம் இறப்பதற் குத் துணிந்தநிலையில், எதிர்வந்து சம்பாதி தனது உண்மைமொழி கொண்டு தேறச்செய்ததனால், 'உய்யுரைபெற்றாம்' என்றார். 'செய் வகை நொய்திற் செயவல்லீர்' என்றது - இனிக் காலம் போக்காமல் ஏதேனுமொன்றை அறுதியிட்டு விரைவிற் செய்யவேண்டுமென்ற குறிப்பு. 'புள்' என்ற பொதுப்பெயர், சிறப்பாய்க் கழுகுகளை யுணர்த் திற்று.

பி-ம்:—[1] இன்னேபுகலுற்றான், இன்னேபுகல்வுற்றான். [2] கைபுரை. [3] கரைகண்டான். [4] மெய்யுரைபெற்றோம். [5] அல்லவை, நல்லதை, அல்லதை. [6] மிகவெண்ணி.

2. அம்ம-வியப்பிடைச்சொல்; சீதையை நேரிற்கண்டு மீண்டு செய்தி தெரிவித்தலே சிறந்ததென்பதைக் குறிக்கும். வாரி - நீர்; கடலுக்கு, இலக்கணை. பி - ம்:—[7] அறைகிற்பீர். [8] சீரிதின், சீரியல், சீருதல். [9] தேறுதல். [10] கொற்றச்செயலோடும் சிலபிரதிகளில் இரண்டு மூன்றுஞ் செய்யுள்கள் முன்பின்னாக மாறிக் காணப்படுகின்றன. மற் றும் சிலபிரதிகளில் 'சூரியன்' என்பது முதற் செய்யுளாகவும், 'பொய் யுரை' என்பது ஆறுஞ்செய்யுளாகவும் உள்ளன. அன்றியும், முதற் பத்துச் செய்யுள்கள் ஒருமுறையிலன்றி, வெவ்வேறு பிரதிகளில் வெவ்வேறாக மாறிமாறியுள்ளன. (1022, 3)

3.—இதுவும், அடுத்த கவியும் -
வாநரவீரரிற் பலர் கடல்கடந்துமீளுதல் தம்மாலாகா தென்றல்.

மாளவலித்தே [1]மென்றுமிம் மாளா வசையோடு
[2]மீளவுமுற்றே மன்னவை தீரும் [3]வெளிபெற்றேம்
[4]காள நிறத்தோ [5]டொப்பவர் மாயக் கடருவுற்று
ஆளு நலத்தீ ராளுமி னெம்மா ருயிரம்மா.

(இ - ள்.) 'மாள வலித்தேம் - (தவணைகடந்துவிட்டதனால் முதலில்) இறத்தற்குத் துணிவுகொண்டோம்; என்றும் மாளா இவசையோடு மீளவும் உற்றேம் - எப்போதும் அழியாத இந்தப் பெரும் பழியுடனே மீண்டு செல்லவும் துணிந்தோம்; (பிறகு), அன்னவை தீரும் வெளி பெற்றேம் - (சாதலும் மீண்டுசெல்லுதலுமாகிய) அவ்விரண்டும் நீங்கும் ஒருநல்லவழியை(ச் சம்பாதியின் வார்த்தையால்) அடைந்தோம்: காள நிறத்தோடு ஒப்பவர் மாய - கருநிறத்தைப் பொருந்தியவராகிய அரக்கர்கள் அழியும்படி, கடல் தாவுற்று - சமுத்திரத்தைக் கடந்து, ஆளும் - வீரங்காட்டவல்ல, நலத்தீர் -சிறப்புடையவர்களே! எம் ஆர் உயிர் ஆளுமின் - (அவ்வாறுசெய்து) எமது அருமையான உயிரைப் பாதுகாவுங்கள்,' (என்று சிலவானரர் கூறினார்கள்); (எ - று.)

இச்செய்யுளில் ஏற்ற வினைமுதலும், பயனிலையும், வருவித்து உரைக்கப்பட்டன. "மாண்டுறுவதுநலமெனவலித்தனம்" என்று முதலில் தமது உயிரை விடுமாறு வானரர் கருதியதனால் 'மாளவலித்தேம்' என்றும், அங்கதன் தான் இறக்க மற்றையோர் திரும்பிச் செல்ல வேண்டுமெனவும், தாம் இறக்க இளவரசனாகிய அங்கதன் மீண்டுசெல்லுதலே தகுதியெனவும் இவ்வாறு வானரர்கட்குள் வார்த்தை நிகழ்ந்ததனால் 'என்றும் இம்மாளர்வசையோடு மீளவுமுற்றேம்' என்றும், அப்போது சம்பாதி தோன்றிச் சீதையிருக்குமிடத்தைத் தெரிவித்துச் செய்ய வேண்டுவனவற்றைத் தெளிவித்தானாதலின் 'அன்னவைதீரும் வெளி பெற்றேம்' என்றுங்கூறினர். கடல் கடந்து சென்று பிராட்டியைக்கண்டு மீளாவிடின், கடுந்தண்டனையுடைய சுக்கிரீவமகாராசனது கோபத்தீயினின்று தப்புதலரிதாமாதலால், இவ்வரியகாரியத்தைச் செய்துமுடித்து எமதுஉயிரைத் தப்புவிக்க வேண்டுமென்று சில வானரவீரர்வேண்டினரென்பது, கருத்து; இதனால், தமக்குக் கடல்கடந்துமீளுந்திறமில்லையென்று அவர்கள் வெளியிட்டவாறும். அரக்கர் கருநிறமுடையவராதலின், அவர்களை 'காளநிறத்தோடொப்பவர்' என்றார். கடலைக் கடந்து செல்லுந்திறமை ஏற்படின் பிறகு அரக்கர்மாய்தல் திண்ணமென்பார், 'காளநிறத்தோடொப்பவர்மாயக்கடறாவுற்று' என்றது. ஒப்பவர் - பொருந்தியவர். காளம் - விஷமுமாம். எம்மாருயிரம்மா - ப்ராஸம். பி - ம்:—[1] அன்றியுமாயாவசையோடும், அன்றெனின் மாளாவசையோடும். [2] மீளவுமுற்றும். [3] விளிப்பெற்றேம். [4] காளநிலத்தோடு. [5] ஒப்பனவின்னேர், ஒப்புறுமின்னேர், ஒப்பவரின்னேர், ஒப்பரிமுன்னே. (*1024*)

4\. நீலன் [1] முதற்பேர் போர்கெழு கொற்ற நெடு [2] வீரர்
சால வுரைத்தார் வாரி கடக்குந் [3] தகவின்மை
வேலை கடப்பன் மீள மிடுக்கின் றெனவிட்டான்
வாலி யளிக்கும் வீர வயப்போர் வசையில்லான்.

(இ - ள்.) போர் கொற்றம் கெழு நீலன் முதல் பேர் நெடுவீரர் - போரில் மிக்கவெற்றியடைதற்குஉரிய நீலன் முதலாகிய சிறந்த

வாநர வீரர்கள்,—வாரி கடக்கும் தகவு இன்மை - கடலைத் தாண்டிச் செல்லும் வல்லமை (தங்கட்கு) இல்லாமையை, சால உரைத்தார் - வெளிப்படையாகக் கூறிவிட்டார்கள்; வாலி அளிக்கும் வீரம் வயம் போர் வசை இல்லான் - வாலியினாற் பெறப்பட்டவனும் வீரத்தையும் வெற்றியையும் காட்டவல்ல போரிற்பழிப்பில்லாதவனுமாகிய அங்கதன், 'வேலை கடப்பன் - சமுத்திரத்தைக் கடந்து (அக்கரையிலுள்ள இலங்கை) செல்வேன், (யான்); மீளமிடுக்கு இன்று - (அங்கிருந்து) மீண்டுவரும் வல்லமை (எனக்கு) இல்லை.' என விட்டான் - என்று கூறிவிட்டான்; (எ - று.)

கீழ்க்கவியில் சாதாரண வாநரர்கள் தமக்குக் கடல் கடக்கும் வல்லமை யில்லை யென்பதை வெளியிட்ட கவியானவர், சிறந்த வானரர்கள் தம்மாலாகாதென்று கூறியதை இச்செய்யுளால் வெளியிடுகின்றரென்க. நீலன் முதலியோர் 'எமக்குக் கடல்கடந்து செல்லுதல் அடியோடு முடியாது' என்று சொல்ல, அங்கதன் 'கடல் கடந்து சென்று சீதையின் செய்தியை யுணரவல்ல வல்லமை எனக்கு இருந்தும், சென்ற மாத்திரத்திலுண்டான இளைப்பினால் வலிமைகுன்றி மீண்டுவரும் வல்லமை யில்லாமையால் யான் சென்று பயனில்லை' என்று கூறினனென்பதாம். பி - ம்:—[1] முதற்போராகிய. [2] வீரன். [3] தகைவின்மை, சதிரின்மை. (1025)

5, 6.—இரண்டு கவிகள்-ஒருதொடர்: ஜாம்பவான் தன்னால் கடல் கடக்க லாகாமைக்குக் காரணங் கூறல்.

5. வேத மனைத்துந் [1] தேர்தர வெட்டா வொருமெய்யன்
பூதல முற்று [2] மோரடி வைத்துப் பொலி[3] போதில்
மாதிர மெட்டுஞ் சூழ்[4] பறை வைத்தே வரமேரு
மோத [5] விளைத்தே தாளுலை வுற்றேன் விறன்மொய்ம்பீர்.

6. ஆதலி [1] னிப்பே ரார்கலி [2] குப்புற் [3] றகழிஞ்சி
மீது [4] கடத்தித் தீயவ ருட்கும் [5] வினையோடும்
சீதை தனைத் [6] தேர்ந் திங்குடன் மீளுந் திறனின்றென்று
ஓதி யிறுத்தா [7] னாலு முகத்தா னுதவுற்றான்.

இவ்விரண்டு கவிகளுக்கும் ஒருங்கே பொருள் உரைக்கப்படும்.

(இ - ள்.) (6) நாலுமுகத்தான் உதவுற்றான் - நான்கு முகங்களையுடைய பிரமதேவனாற் பெறப்பட்டவனாகிய ஜாம்பவான், (மற்றையோரை நோக்கி), (5) 'விறல் மொய்ம்பீர் - தோள்வலிமையுடையவர்களே! வேதம் அனைத்துஉம் தேர்தர எட்டா ஒரு மெய்யன் - வேதங்களெல்லாந் தேடிப் பார்க்கவும் அகப்படாத ஒப்பற்ற சொரூபத்தை யுடையவனாகிய திருமால், பூதலம் முற்றுஉம் ஓர் அடி வைத்து பொலி போதில் - (திரிவிக்கிரமாவதாரஞ்செய்து)

பூமி முழுவதையும் தனது (இரண்டு திருவடிகளுள்) ஓரடியின் வைப்பினால் அளந்து விளங்கின காலத்தில், (யான்),—மாதிரம் எட்டும் சூழ் பறைவைத்தே வர - எட்டுத்திக்குக்களிலும் பிரதக்ஷிணமாக வந்து பறையடித்து (அப்பகவானது வெற்றியைத் தெரிவித்துக் கொண்டு) வருகையில், மேரு மோத - மேருமலையானது தாக்கியதனால், இளைத்து - வலிமை குன்றி, தாள் உலைவு உற்றேன் - கால் வருந்தினேன்; (6) ஆதலின் - ஆதலினால், இ பேர் ஆர்கலி குப்புற்று - இந்தப் பெரிய கடலின்மீது எழும்பித்தாவி, அகழ் இஞ்சி மீது கடத்தி - அகழியைச்சார்ந்த(இலங்காபுரியின்) மதிள்களின்மீது குதித்து (உட்சென்று), தீயவர் உட்கும் வினையோடும் - கொடியவர்களாகிய அந்நகரத்திலுள்ள அரக்கர்கள் அஞ்சத்தக்க செயலுடனே, சீதைதனை தேர்ந்து - சீதாபிராட்டியைத் தேடிக்கண்டு, இங்கு உடன் மீளும் திறன் - மீண்டு இங்கு வருதற்கு முழுவலிமை, இன்று - (எனக்கு) இல்லை,' என்று—, ஓதி இறுத்தான் - சொல்லி முடித்தான்; (எ - று.)

'திரிவிக்கிரமாவதாரகாலத்தில் உலகமுழுதும் நிரம்பிய திருமாலின் திருவடியைத் தரிசித்துக்கொண்டே பலமுறை பூமியைப் பிரதக்ஷிணஞ்செய்து வருகையில் மேருமலை எனதுகாலிற்பட்டுக் கால் சிறிது ஊனமானதால், இப்போது கடல்கடக்கும் வலிமையில்லாதவனாயினேனென்று ஜாம்பவான் கூறினனென்க. விறல் - வலிமை. மொய்ம்பு - தோள்.

5. வேதங்களெல்லாவற்றாலும் இன்னபடிதான் உள்ளதென்று ஆராயமுடியாமல் நிற்கும் பரம்பொருளானவன் திருமாலென்பது, 'வேதமனைத்துந் தேர்தரவெட்டா வொருமெய்யன்' என்பதன் பொருள். வேதம் - (விதிவிலக்குக்களால் நன்மை தீமைகளை) அறிவிப்பது; வடசொல். எட்டுமாதிரங்களாவன - கிழக்கு முதலிய பெருந்திசைகள் நான்கும், தென்கிழக்கு முதலிய கோணத்திசைகள் நான்குமாம். பி - ம்:—[1]தேர்தரவொட்டா. [2]ஈரடிவைத்து, [3]போழ்தின். [4]பறைகொட்டிவரமேரு, அடிவைத்தேவடமேரு. [5]இளைத்து, இளைத்தேன்.

6. ஆர்கலி - நிறைந்த ஓசையையுடையது எனக் கடலுக்குக் காரணப்பெயர்; வினைத்தொகையன்மொழி. குப்புறுதல் - குதித்தல். அகழப்பட்டது - அகழ்; பெயர். பி - ம்:—[1]இப்பேரபோதவலைப்புற்று, இப்போதாழ்கடல், இப்போபேரலை, இப்போதாரலை, இப்போதாகுலை, இப்போழ்தார்கலி. [2]குப்பிற்றிடவஞ்சா. [3]அகவிஞ்சி. [4]கடந்தத், கடக்க, நடத்தித். [5]மிடலோடும். [6]தேராவரமுற்றுக். [7]நாலுமுகத்தோனுதவிட்டோன். (1026, 7)

7, 8.—இரண்டு கவிகள்-ஒருதொடர்: ஜாம்பவான் அநுமானே கடலைக் கடத்தற்கு உரியவனென்று அங்கதனிடந் தெரிவித்தல்.

7. யாமினி[1]யிப்போ [2]தாரிடர் துய்த்[3]திங் கினியாரைப்
போமென வைப்போ மென்பது [4]புன்மைப் புகழன்றே

கோமுதல் வர்க்கே ருகிய கொற்றக் குமரா [5] நம்
நாம நிறுத்திப் பேரிசை தைக்கு நவையில்லோன்.

8. ஆரியன் முன்னர்ப் போதுற வுற்ற வதனுனும்
[6] காரிய மெண்ணிச் சோர்வற முற்றுங் கடனுனும்
[7] மாருதி யொப்பார் வேறிலை யென்று வயன்மைந்தன்
[8] சீரியன் மற்றோ ளாண்மை [9] தெரிப்பா னிவைசெப்பும்.

இரண்டு கவிகட்கும் ஒருங்கே பொருளுரைக்கப்படும்.

(இ - ள்.) (8) அயன்மைந்தன் - பிரமதேவனது புதல்வனுகிய ஜாம்பவான், (7) (அங்கதனைநோக்கி), - 'கோ முதல்வர்க்குஏறு ஆகிய கொற்றம் குமரா - வானரராஜ வமிசத்தில் மேன்மையடைந்தவர்கட்குள்சிங்கம்போற் சிறந்தவனுகியவெற்றிபெற்ற அங்கதகுமாரனே! யாம் இனி இப்போது ஆர் இடர் துய்த்து இங்கு இனி யாரைபோம் என வைப்போம் - நாம் இப்போது பெருந்துன்பத்தை யனுபவித்துக்கொண்டு இனிமேல் இங்கு வேறு யாரைத்தான் கடல்கடந்து செல்வீரென்று வேண்டிக்கொள்வோம்? என்பது என்று இவ்வாறு நினைப்பதும், புன்மைப் புகழ் அன்றே - (நமது) புகழுக்கு இழிவாகுமல்லவோ? (8) ஆரியன் முன்னர் போதுற உற்ற அதனுன்உம் - (முதலில்) இராமபிரானது எதிரிற்சென்று (இராமபிரானுக்கும் சுக்கிரீவமகாராசனுக்கும்) நட்புச்செய்வித்த அத்தன்மையாலும், காரியம் எண்ணி சோர்வு அற முற்றும் கடனுன்உம் - செய்தொழிலை ஆராய்ந்து சிறிதும் சோம்பலின்றி முடிக்குங் கடப்பாடுடைமையாலும், (7) நம் நாமம் நிறுத்தி பேர் இசை தைக்கும் நவை இல்லோன் - நமது பெயரை நிலைநிறுத்திப் பெரும்புகழை (நமக்கு) உண்டாக்கவல்ல குற்றமற்றவன், (8) மாருதி - அநுமானேயாவன்; ஒப்பார் - அவனை ஒப்பவர், வேறு இலை- வேறே ஒருவருமில்லை,' என்று-என்று சொல்லி, சீரியன் மல் தோள் ஆண்மை தெரிப்பான் - சிறந்தவனுகிய அந்த அநுமானது மற்போர்க்கு உரிய தோள்களின் வீரத்தைத் தெரிவிக்கும் பொருட்டு, இவை செப்பும் - இவ்வாருன துதிமொழிகளை (அநுமானை நோக்கி)க் கூறலானுன்; (எ - று.)—அவற்றை, அடுத்த பத்துக்கவிகளிற் காண்க.

பெருங்கூட்டமாகத் திரண்டுள்ள நமக்குள் கடல்கடக்கும் வல்லமையுள்ளா ரொருவருமிலராக, வேறுயாரை அக் கடலைக்கடக்குமாறு வேண்டிக்கொள்வது? மேலும், ஒருவரைத் தேடி அரிதிற் பெற்றோமென்றாலும், அது நமக்குப் பெரும்பழியாகுமல்லவோ? முதலில் இராமசுக்கிரீவர்கட்கு நட்புச் செய்வித்த இவ்வநுமான் எடுத்த காரியத்தைச் சோர்வின்றி முடிக்குந்திறமுடையவனுதலின், அவனே கடல்கடந்து மீண்டு நமக்குப் புகழை நிலைநாட்டுதற்கு உரியனென்றுகூறி, ருஷிசாபத்தால் தன்வலிமை தனக்குத் தெரியாது சோர்ந்துள்ள அநுமானுக்கு உற்சாகமுண்டாகுமாறு அவன் வல்லமையைத் தெரிவிக்கலாயினன் ஜாம்பவா னென்பதாம்.

(7) 'இனியாரை' என்பதை ஒரு சொல்லாகவே கொண்டு, முன்னிரண்டடிகட்கு - நாம் பெருந்துயரத்துடன் இங்கிருந்தபடியே தக்கவரைக் கடல் கடக்க வேண்டிக்கொள்வோ மென்பது நமது பெருமைக்கு இழுக்காகுமல்லவோ? என்றுங்கூறலாம். பி - ம்:—[1] இப்போ. [2] பேரிடர். ஆரனர். [3] இங்கிதில்யாரை, இங்கிகல்யாரை. [4] புன்மைபுகமுன்றே. [5] நன்னுமமகற்றிப்பேரிசைவிக்கும் நவையில்லோன்.

(8) பி - ம்:—[6] காரியமென்ன, காரியமென்னு. [7] மாருதியல்லால். [8] வீரியன். [9] தோளாண்மையுரைப்பான். இச்செய்யுள் பின் வருமாறு மாறியும் காண்கின்றது வருமாறு:—'ஆரியன் மின்னின் பேரெழில் கூறுமமைவாலும், காரியமுன்னுன் முற்றுமெனச்சொல் கடனலும், மாருதியொப்பார் வேறிலையென்னுமனமெண்ணிச், சீரியன் மற்றேருளாண்மையுரைத்தாற் செயுமன்றே' பி - ம்:—[1] ஆண்மையுரைப்பான். (1028,9)

9.—இதுமுதல் பத்துக்கவிகள் - ஜாம்பவான் அநுமானைப் புகழ்தல்.

மேலை விரிஞ்சன் வீயினும் வீயா [1] மிகைநாளீர்
நூலை [2] நயந்து [3] நுண்ணி துணர்ந்தீர் நுவறக்கீர்
காலனு மஞ்சுங் காய்சின [4] மொய்ம்பின் கடைநின்றீர்
[5] ஆல நுகர்ந்தா னுமென வெம்போ ரடர்கிற்பீர்.

இதுமுதற் பதினெருகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (ஜாம்பவான் அநுமானை நோக்கிக் கூறுவான்):—(நீர்),—மேலை விரிஞ்சன் வீயின்உம் - (யாவரினுஞ்) சிறந்தவனை பிரமன் இறந்தாலும், வீயா - இறவாத, மிகை நாளீர் - நீண்ட ஆயுள்நாளையுடையீர்; நூலை நயந்து நுண்ணிது உணர்ந்தீர் - சகல சாஸ்திரங்களையும் விரும்பி நுட்பமாக அறிந்திருக்கிறீர்; நுவல் தக்கீர் - (அதனல் விஷயங்களை) எடுத்துக் கூறத்தக்க சொல்வன்மையுடையீர்: காலன்உம் அஞ்சும் காய் சினம் மொய்ம்பின் கடை நின்றீர் - யமனும் அஞ்சத்தக்க கடுங்கோபம் உடல்வலிமை இவற்றின் முடிவெல்லையில் நிற்பவரே! ஆலம் நுகர்ந்தான் ஆம் என வெம்போர் அடர்கிற்பீர் - விடத்தையுட்கொண்ட சிவபிரான்போலக் கொடும்போர் செய்யுந் திறமுடையீர். (எ - று.)

முனிவர்சாபத்தால் தனதுவல்லமையை யுணராது தயங்கி நிற்கின்ற அநுமானை ஜாம்பவான், கடல்கடக்குமாறு கூறுதற்பொருட்டுத் துதிக்கின்ருனுதலின், இங்குவருஞ் சொற்றொடர்கள் யாவும் அதற்கு உபகாரப்படுமாறு கருத்துக்கொள்ளத் தக்கன. முதலடி - அநுமானது சிரஞ்சீவித்தன்மையையும், இரண்டாமடி - அவன் பெருங்கல்வியாற் சொல்வன்மை பெற்றிருத்தலையும், பின்னிரண்டடி - தான் மேற்கொண்ட செயலைப் பின்வாங்காது நின்று கடுங்கோபத்தோடு பெரும்போர் செய்தாவது முடிக்கும் ஆற்றலுடைமையையும் விளக்கும்; இதனல், எவ்வகையாலுஞ் சாவினறி அரக்க

ரூர்க்குச் சென்று இராவணனேடு சமயோசிதமாகப்பேசி இடையூறு செய்யும் அரக்கர்களை அழித்துச் சீதாபிராட்டியைக்கண்டு மீளுத லாகியதொழிலை முடித்தற்கு உரியாய் நீ என்று குறிப்பித்தவாறு: இவ்வாறே அடுத்த செய்யுள்களிலும் நுண்ணிதாகக் கருத்துக் காண்க. 'பிதாமகன்' என்று பெயர் பெறுமாறு முறபட்டுத் தோன்றி நிற்பவனுதலால், பிரமனை 'மேலைவிரிஞ்சன்' என்றுருமாம். மேலை, ஐ - சாரியை. [4]மொய்ம்பிர்கடனின்றீர் என்றபாடத்துக்கு-சினத்தை யும் உடன்வலிமையையுமுடையீர் : செயற்குரிய கடமைகளில் உறுதி யாய்நிற்பீர்என உரைக்க. பி - ம்:—[1]மிகு. [2]நயந்தே, அனந்தம். [3]நுண்ணிதுணர்ந்தே. [4]மொய்ம்பின் கடனின்றீர். [5]ஆலநுகர்ந்தா னென்ன, ஆலநுகர்ந்தானன்ன. (1030)

10. வெப்புறு செந்தீ நீர்வளி யாலும் விளியாதீர்
செப்புறு தெய்வப் பல்படை யாலுஞ் சிதையாதீர்
[1]ஒப்புறி னொப்பார் [2]நும்மல தில்லீ ரொருகாலே
குப்புறி னண்டத் [3]தப்புற மேயுங் குதிகொள்வீர்.

(இ - ள்.) வெப்பு உறு செம் தீ நீர் வளியால்உம் விளியாதீர் - வெப்பம் பொருந்திய செங்கிறமான அக்கினியினுலும் நீரினுலும் காற்றினுலும் இறவாது நிற்பீர்; செப்பு உறு தெய்வம் பல் படை யாலும் சிதையாதீர் - (சிறப்பாகக்) கூறப்படுகிற தெய்வத்தன்மை யுள்ள பலவகைப்படைக்கலங்களாலும் அழியாதிருப்பீர்; ஒப்பு உறின் - (உமக்கு) உவமையெடுத்துக்கூறவிரும்பினுல், நும் அலது - உம்மையேயல்லாமல், ஒப்பார் - உவமையாவார், இல்லீர் - வேறொரு வரையும்பெறுமலிருப்பீர் [உமக்கு நீரே சமானமாயிருப்பீர்]; ஒருகாலே குப்புறின் அண்டத்து அப்புறம்எஉம் குதிகொள்வீர் - ஒருதரம் பாய்ந்துகுதிக்கும்போதே இந்த அண்டத்துக்கு அப்புறத்திலும் பாயுந் திறமுடையீர்; (எ - று.)

முதலடியில்பஞ்சபூதங்களில் இடைமூன்றைக்கூறியது - மற்றை யிரண்டுக்கும் உபலக்ஷணம். தீநீர்வளி-உம்மைத்தொகை. அஃறிணை யாதலின் பன்மைவிகுதி பெருது வந்தது. அநுமான் பிறந்தவுடனே சூரியனைக் கனிந்த பழமென்று கருதித் தாவியபோது தேவேந்திரன் வச்சிராயுதத்தினுல் அடித்தான். அதனுல் தன் புதல்வன் கவுள் முறிந்து மூர்ச்சித்ததனுல் வாயுதேவன் கோபங்கொண்டான். ஆகவே, உலகத்தில் வாயுசஞ்சாரமின்றி ஒடுங்கிற்று. அப்போது, பிரமன் சிவன் முதலிய தேவர்களெல்லோரும் தோன்றி அவ்வாயு தேவனை மகிழ்வித்தற்காகத் தம் தமது படைக்கலங்களால் அநு மான் அழிவடையாதிருக்குமாறு வரமளித்தனர்: அதனுல், 'செப் புறுதெய்வப் பல்படையாலுஞ் சிதையாதீர்' என்றுன். பி - ம்:—[1]ஒப் பிடில். [2]உம்பருமல்லீர். [3]அப்புறமேலும். (1031)

11. நல்லவு [1]மொன்றே [2]தீயவு நாடி நவைதீரச்
சொல்லவும் வல்லீர் காரிய நீரே [3]துணிகிற்பீர்

வெல்லவும் வல்லீர் மீளவும் வல்லீர் மிடலுண்டேல்
கொல்லவும் வல்லீர் தோள்வலி [4]யொன்றுங் குறையாதீர்.

(இ - ள்.) நல்லஉம்ஒன்றோ - நல்லவைமாத்திரமோ? தீயஉம் - தீயவைகளையும், நாடி - ஆராய்ந்து, நவை தீர சொல்லஉம் - குற்றமில்லாமல் முடிவு எடுத்துக்கூறுவதற்கும், வல்லீர் - திறமுடையீர்; நீர்ஏ காரியம் துணிகிற்பீர் - (பிறருதவியின்றிச்) சுமமாகவே செய்யத்தக்க தொழிலை ஆராய்ந்துமுடிக்கின்ற வல்லமையுடையீர்; வெல்ல உம் வல்லீர் - (அரக்கரை) வெல்வதற்கும் வல்லமையுடையீர்; மீளஉம் வல்லீர் - (கடல்கடந்து இலங்கைசேர்ந்து இங்குத்) திரும்பிவரவும் வல்லமையுடையீர்; மிடல் உண்டு ஏல் கொல்லஉம் வல்லீர் - (பகைவர்கள்) வலிமையுடையவராய் எதிர்த்தால் (அவர்களைக்) கொல்லவும் திறமையுடையீர்; தோள் வலி ஒன்றுஉம் குறையாதீர் - தோள்வலிமையில் ஒருசிறிதும் குறையாததன்மையுடையீர்; (எ - று.)

எந்தக்காரியத்தைப் பற்றி யாராயவேண்டுமானாலும் அதனிலுள்ள அனுகூலப்பகுதியையும் மாறுபட்டபகுதியையும் ஆராய்ந்து குற்றமில்லாது அக்காரியம் முடிவுபெறத்தக்க உபாயத்தைச் சொல்ல வல்லீரென்பது, முதல்வாக்கியத்தின் கருத்து. மிடல் - வலிமை; அதனையுடையார்க்கு, இலக்கணை. மிடல் உண்டுஏல் வெல்லவும் வல்லீர் என்பதற்கு - (வெல்லப்பட்ட பின்னும் பகைவர் தம்) வலிமையைக் காட்டுவது உண்டானால், இனி அங்ஙன் காட்டமுடியாதபடி அப்பகைவரை வெல்லவல்லீ ரென்றுமாம். பி - ம்:—[1] அன்றோ. [2] நீரவை. [3] துணிவுற்றீர். [4] என்றும். (1032)

12. மேரு கிரிக்கு மீதுற நிற்கும் [1]பெருமெய்யீர்
மாரி துளிக்குந் தாரை யிடுக்கும் வரவல்லீர்
பாரை யெடுக்கு [2]நோன்மை வலத்தீர் பழியற்றீர்
[3]சூரிய னைச்சென் றெண்கை யகத்துந் தொடவல்லீர்.

(இ - ள்.) மேரு கிரிக்குஉம் மீது உற நிற்கும் பெரும் மெய்யீர் - மேருமலைக்கும் மேற்பட்டுவளரக்கூடிய பேருடம்பையுடையீர்; மாரி துளிக்கும் தாரை இடுக்குஉம் - மேகங்கள் சொரிகின்ற நீர்த்துளிகளின்நடுவிலும், (சிறுவடிவங்கொண்டு), வர வல்லீர் - நுழைந்து செல்லுதற்கு வல்லமையுடையீர்; பாரை எடுக்கும் நோன்மை வலத்தீர் - பூமியையும் பேர்த்தெடுக்கவல்ல மிக்கவலிமையுடையீர்: பழி அற்றீர் - (பெருவரங்களால் இவ்வாறான தன்மைபெற்று இவற்றைத் தீச்செயலிற் செலுத்தாமையால் சிறிதும்) பழிப்பில்லாதீர்; சென்று ஒள் கை அகத்துஉம் சூரியனை தொட வல்லீர்- அருகிற்சென்று அழகிய கைகளினாலும் சூரியனைத்தொடுதற்குஉரிய திறமையுடையீர்.

அநுமான் தனது உடம்பு வளரவேண்டுமென்று நினைப்பனாயின் மகாமேருமலையைக்காட்டிலும் பெரியவனாவன்; அவ்வுடம்பைச் சிறிதாக ஒடுக்கவேண்டுவனாயின் மிகச்சிறிதாகிய அணுவைக்காட்டிலும்

சிறியவனுவ னென்பது, முன்னிரண்டடிகளிற் கூறிய விஷயம்; இவ்விருதன்மையும் - எட்டுவகை யோகசித்திகளுள் முறையே மகிமா அணிமா என்னுஞ் சித்திகளாம்; மிகவும் பெரிதாதல், மஹிமா; மிகவுஞ்சிறியதாதல், அணிமா: இத்தன்மைகளை அநுமான் உடையவனுயிருந்ததை, இராமாயணத்திற் பலவிடங்களிலுங் காணலாம். "பிறியாவரத்தினநுமான்வளர்ச்சி பெருமேருவிற் பெரியனுஞ், சிறிதாயொடுக்குமெனின்மேனி யற்பவணுவானதிற் சிறியனும்" என்றுர், உத்தரகாண்டமுடையாரும். நோன்மை வலம்-ஒருபொருட்பன்மொழி: மிக்கவலிமையை யுணர்த்தும். பி - ம்:—[1]உரு, உறு, நெடு. [2]தொன்மை, தோண்மை. [3]சூரியனைச்சென்றண்டரகத்தும், சூரியனைச் செந்தாணடைகற்றும். (1033)

13. அறிந்து திறத்தா றெண்ணி [1]யறத்தா றழியாமை
மறிந்துரு ளப்போர் வாலியை வெல்லும் மதிவல்லீர்
பொறிந்[2]திமை யாக்கோன் வச்சிர பாணம் [3]புகமூழ்க
எறிந்துழி [4]யிற்ருேர் [5]புன்மயி ரேனு மிழவாதீர்.

(இ - ள்.) திறத்து ஆறு எண்ணி அறிந்து - உரிய வழிகளை ஆராய்ந்தறிந்து, அறத்து ஆறு அழியாமை - (அரசர்க்குரிய) தருமமார்க்கந் தவருமல், போர் வாலியை மறிந்து உருள வெல்லும் - (எவ்வழியாலும் கொல்லமுடியாத) போர்த்திறமுடைய வாலியை மாண்டுருளும்படி வெல்லுதற்குச் செய்த, மதி வல்லீர் - அறிவின் வல்லமையையுடையீர்; இமையா(ர்) கோன் - தேவர்கட்குத் தலைவனை இந்திரன், பொறிந்து - (கோபத்திறைற் கண்களில்) தீப்பொறியைக் கக்கிக்கொண்டு, வச்சிர பாணம் புக மூழ்க எறிந்த உழி - வச்சிராயுதத்தை உடம்பில் தாக்குமாறு எறிந்தபோது, ஓர் புல் மயிர் ஏனும் இற்று இழவாதீர்-ஒருசிறுமயிர்தானும் அறுபட்டு இழவாமலிருந்தீர்; (எ - று.)

அநுமான் இராமபிரானுடன் சுக்கிரீவனை நட்புச்செய்வித்தவுடனே, முதலில் வாலிவதை செய்து பிறகு சீதாபிராட்டியைத் தேடினுல்தான் தொழில் இனிதுமுடியு மென்று கூறினனுதலால், அவனை 'வாலியைவெல்லும் மதிவல்லீர்' என்றுர்; "கொடுந்தொழில் வாலியைக் கொன்று கோமகன், கடுங்கதிரோன் மகனுக்கீக் கைவளர், நெடும்படை கூட்டினலன்றி நேடரி, தடும்படையரக்கர்தமிருக்கை யாழியாய்" என்றது, இங்கே காணத்தக்கது. பொறிந்து- "பொறிந்திடுகண்ணினன்" என்பது, இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இனி, பொறிந்த = பொறித்த என்பதன் விகாரமாகக்கொண்டு, பெயர் பெற்ற, இமையாக் கோன் என்றுமாம். இமையாக் கோன் என்பதற்கு - கண்ணிமைத்தலில்லாத (தேவர்களின்) தலைவன் என்றும் உரைக்கலாம். முன்னையபொருளில், 'இமையார் கோன்' என்பது - "சிலவிகாரமா முயர்திணை" என்பதனுல் இமையாக்கோன் என்ருயிற்றென வேண்டும். வச்சிரபாணம் = வச்சிராயுதம். அறத்தாறு - வாலி

யாலழிந்து கொண்டிருந்த தருமமார்க்கம் என்றலும், புக மூழ்க - புகவும் அழுந்தவும்கருதி என்றலுமாம். பி - ம்:—[1] அறத்தாறழியாமல், அறத்தாரழியாமை. [2] இமையக்கோன், இமையோர்கோன். [3] புதைத, புகை. [4] அற்றோர், மற்றோர். [5] புன்மயிர்தானும். (1034)

14. போர்மு னெதிர்ந்தால் [1] மூவுல கேனும் பொருளாக
ஓர்வில் வலங்கொண் டொல்கலில் வீரத் துயர்தோளீர்
[2] பாருல கெங்கும் [3] பேரிருள் சீக்கும் [4] பகலோன்முன்
தேர்மு னடந்தே யாரிய நூலுந் [5] தெரிவுற்றீர்.

(இ - ள்.) மூ உலகு என்உம் - மூன்றுலோகத்திலுள்ள பொருளும், போர்முன் எதிர்ந்தால் - போர்க்களத்தில் எதிரிட்டுவந்தாலும், பொருள் ஆக - ஒருபொருட்டாக, ஓர்வு இல் - (அவற்றைக்) கருதுதலிலாத [மிகவும் அலட்சியமாக நினைக்கிற], வலம் கொண்டு - மிக்க பலத்தைப் பொருந்தி, ஒல்கல் இல் வீரத்து உயர் - தளர்தலில்லாத மிக்க பராக்கிரமத்தோடு உயர்ந்துவிளங்குகின்ற, தோளீர் - தோள்களையுடையீர்; பார் உலகு எங்கும் பேர் இருள் சீக்கும் பகலோன் முன் - (ஓயாது வேகமாகச்சுற்றிவந்து) இந்நிலவுலகமுழுவதிலும் நிறைந்துள்ள மிக்க இருளை யொழிக்கின்ற சூரியனிடத்தில், தேர்முன் நடந்து - (எப்பொழுதுஞ் செல்லுந்தன்மையுள்ள அவனது) தேர்க்கு முன்னே (அவனைப் பார்த்தவண்ணமாக) நடந்து கொண்டே, ஆரிய நூல்உம் தெரிவுற்றீர் - வடமொழி நூல்களையெல்லாம் கற்றறிந்து கொண்டீர்; (எ - று.)

அநுமான் சூரியபகவானிடத்து வடமொழி நூல்களைக் கற்று உணர்ந்ததை, "வேதமொருநாலுடன் விளங்கியசடங்கமும் விரிந்த கலையும், ஓத நிலவீதிமிசை யேழுபரிபூணருணனூரவிரைதேர், மீது செலும் வெங்கதிரவன்றனெடையிந்திரவியாகரணமும், ஓதியொரு நாளினிலுணர்ந்தன னிமாருதி யுயர்ந்தபுகழோய்" என்ற உத்தர காண்டச் செய்யுளினாலும் அறிக. பி - ம்:—[1] ஏழுலகேனும் பொருளாகா. [2] பேருலகெங்கும். [3] காரிருள்சீக்கும், காரிருள்சிந்தும், பாயிருள் சிந்தும். [4] கதிரோன்முன், கதிர்பெற்றோன், பெரியோன்றன். [5] தெளிவுற்றீர். (1035)

15. நீதியி னின்றீர் [1] வாய்மை யமைந்தீர் நினைவானும்
மாதர் நலம்பே ணாது வளர்ந்தீர் மறையெல்லாம்
ஓதி யுணர்ந்தீ ரூழி கடந்தீ ருலகீனும்
[2] ஆதி யயன்று னேயென யாரு மறைகின்றீர்.

(இ - ள்.) நீதியில் நின்றீர் - நீதிநெறியில் நிற்கின்றீர்; வாய்மை அமைந்தீர் - மெய்ம்மைபொருந்தினீர்; மாதர் நலம் நினைவான்உம் பேணாது வளர்ந்தீர் - மகளிரின்பத்தை மனத்தினாலும் எண்ணாது வளர்ந்துள்ளீர்; மறை எல்லாம் ஓதி உணர்ந்தீர் - வேதங்களையெல்லாம் ஓதி அவற்றின்பொருளையறிந்துள்ளீர்; ஊழி கடந்தீர் - பிரமனு

யுளினும் மேற்பட்ட ஆயுளையுடையீர்; உலகு ஈனும் ஆதி அயன் தான் என யாரும் அறைகின்றீர் - உலகங்களைப் படைக்கின்ற முதற்கடவுளரில் ஒருவனான பிரமனேயாக எல்லாராலும் சொல்லப் படுகின்றீர்; (எ - று.)

அநுமான் நித்தியபிரமசாரி யாதலால் 'நினைவானும் மாதர்நலம் பேணாது வளர்ந்தீர்' என்றும், சிரஞ்சீவியாதலால் 'ஊழிகடந்தீர்' என்றும், அடுத்த பிரமபட்டத்தைப் பெறுபவனாதலால் 'ஆதியயன் றானேயென யாருமறைகின்றீர்' என்றும் கூறப்பட்டான். "தாதா வுரைக்கு மென்பிரமதண்டாற் றனுஞ்சாவின்றி, மேதாவியுமாயொரு நாளும் விளியாநாளுமுறுக," "மன்னனிராமன் மனமுவப்ப வயவா ளரக்கர் குலமறுத்துப், பின்னையவன் தன்பேரருளாற் பிரமபதமும் பெறுகென்றான்" என்பன, இங்குக் கரணத்தக்கன. பி - ம்:— [1]வாய்மைநயந்தீர். [2]ஆதியயன்றானுமென யாருமறைகின்றீர் அல்லது, வேதத்தமைகின்றீர், ஆதியயன்றானேயெனயாதும்..., ஆதி... யாவு மமைகின்றீர். (*1036*)

16. அண்ணல மைந்தற் கன்பு சிறந்தீ [1]ரதனானே
[2]கண்ணி யுணர்ந்தீர் கரும நுமக்கே கடனென்னத்
திண்ணி தமைந்தீர் செய்து முடிப்பீர் [3]சிதைவின்றால் [டீர்.
[4]புண்ணிய மொன்றே யென்று[5]நிலைக்கும் பொருள்கொண்

(இ - ள்.) அண்ணல் அமைந்தற்கு அன்பு சிறந்தீர் - பெருமையிற் சிறந்த அந்த இராமபிரானிடத்திற் பேரன்புடையீர்; அதனால் - அக்காரணத்தினால், கருமம் கண்ணி உணர்ந்தீர் - செய்தொழிலை ஆராய்ந்து அறிந்திருக்கின்றீர்; நுமக்கே கடன் என்ன திண்ணிது அமைந்தீர் - (சீதாபிராட்டியை நாடிச் செய்தியுணர்ந்து வருவது) உமக்கே செய்து முடித்தற்கு உரிய தொழிலாகுமென்று கொண்டு (இராமசுக்கிரீவர் கட்டளையிட அதனை) உறுதியாக ஏற்றுக்கொண்டீர்: சிதைவு இன்று செய்து முடிப்பீர் - (அக்காரியம் சிறிதும்) இடையூறு அடையாமல் செய்துமுடித்தற்கேற்ற திறமுடையீர்; புண்ணியம் ஒன்றே என்றும் நிலைக்கும் பொருள் கொண்டீர் - புண்ணிய மொன்றையே எப்பொழுதும் அழியாமல் நிலைத்திருக்கும் பொருளென்று (மனத்தில் உறுதியாகக்) கருதியிருக்கின்றீர்; (எ - று.)

அண்ணலமைந்தற்கன்புசிறந்தீர் - இராமபக்தி தலையெடுத்தவ ரென்றபடி. வானரர்யாவரும் இறப்பதாக இருந்த நிலையில், அதனைத் தடுத்து அநுமான் பின்னுந்தேடுமாறு ஆலோசனைகூறுகையிற் சீதை யுள்ளவிடந் தெரிந்தன ராதலின், 'கண்ணியுணர்ந்தீர் கருமம்' என்றானெனலாம். சிதைவின்றிச் செய்துமுடிப்பீர் என்றது - நீரே இலங்கையிற்சென்று பிராட்டியாரின் செய்தியை யுணர்ந்து வருந் தொழிலைச் செய்துமுடிக்கவேணுமென்ற குறிப்பு. புண்ணியமொன்றே நிலைக்கும்பொருளென்று கொண்டீர் என ஈற்றடியைமாற்றிப்

பொருள்கொள்ளினுமாம். அனமந்தற்கு = அம்மைந்தற்கு என்பதன் தொகுத்தல். இன்றி என்னும் வினையெச்சம், செய்யுளாதலின் 'இன்று' எனத் திரிந்துவந்தது; முற்றெச்சமாகக் கொள்வது எளிய வழி. சிதைவுஇன்று - நீர் மேற்கொண்டகாரியம் சிதைவுறாது எனினுமாம்.

அச்சிட்ட பிரதியொன்றில் இச்செய்யுளுக்குப் பாடாந்தரம் வருமாறு:—"அண்ணலமைந்தாற்கன்புசிறந்தி [1]ரவனாலே. [2]எண்ணியுணர்ந்திக்காரியமிற்கே கடனென்னத், திண்ணிநலமைந்தீர் செய்துமுடிப்பீர் [3]சிதைவின்றாம். [4]புண்ணியமென்றே வென்று நினைக்கும் புகழ்வல்லீர். பி - ம்:—[1] அதனாலே. [2] எண்ணியுணர்ந்தீர். [3] சிதையாதீர், சிதைவின்றால். [4] புண்ணியரொன்றேவென்று நினைக்கும்புகழ்கொண்டீர், புண்ணியரன்றேவென்று நினைக்கும் புகழ்கொண்டீர். ()

17. அடங்கவும் வல்லீர் [1]காலம தன்றே லமர்வந்தால்
மடங்கன் முனிந்தா [2]லன்ன வலத்தீர் மதிநாடித்
தொடங்கிய தொன்றோ[3]முற்று முடிக்குந் தொழி[4]லல்லால்
இடங்கெட [5]வெவ்வா யூறு கிடைத்தா லிடையாதீர்.

(இ - ள்.) காலம் அது அன்று ஏல் அடங்கவும் வல்லீர் - காலமல்லாத காலத்தில் [அடங்கியிருக்கவேண்டிய சமயத்தில்] அடங்கியிருக்கும் வல்லமையுடையீர்; அமர் வந்தால் மடங்கல் முனிந்தால் அன்ன வலத்தீர் - போர் நேர்ந்தால் [கிளர்ச்சிகொள்ளவேண்டிய காலத்தில்] ஆண்சிங்கம் கோபித்தாற்போன்ற வலிமையுடையீர்; மதி நாடி - அறிவினால் ஆராய்ந்துபார்த்து, தொடங்கியது ஒன்றோ - செய்யத்தொடங்கிய ஒருகாரியம் மாத்திரமோ, முற்றும் - (அதற்குத் தொடர்பான) எல்லாவற்றையும், முடிக்கும் - செய்துமுடிக்கின்ற, தொழில் அல்லால் - தொழில்திறமுடையவரேயல்லாமல், இடம் கெட வெவ்வாய் ஊறு கிடைத்தால் - பெருமையழியும்படி கொடுந்தன்மையுள்ள இடையூறு நேர்ந்தாலும், இடையாதீர் - (அஞ்சிப்) பின்வாங்காதுநிற்பீர்; (எ - று.)

"ஊக்கமுடையா னொடுக்கம் பொருதகர், தாக்கற்குப் பேருந் தகைத்து," "கொக்கொக்ககூம்பும் பருவத்து மற்றதன், குத்தொக்க சீர்த்தவிடத்து," "அடுக்கிவரினுமழிவிலானுற்ற, விடுக்கணிடுக்கட் படும்" என்பன, இங்கு நோக்கத்தக்கன. மடங்கல் - நரசிங்கமூர்த்தியெனக் கொள்வாருமுளர். தொடங்கியதொன்றோ, ஓகாரம் - எதிர்மறைப்பொருளது. இடம் கெட என்பதற்கு - (குறித்தகாரியத்தைச் சாதித்தற்குஏற்ற) சமயம் (வாய்த்ததுபயன்படாமற்) பழுதுபடும்படி என்பாருமுளர். பி - ம்:—[1] ஆண்மையதன்றேல்நலம். [2] என்னபலைப்பீர். [3] செய்து. [4] வல்லீர். [5] வல்லேயூறு, வந்தாலீறு. (1038)

18. ஈண்டிய கொற்றத் [1]திந்திர னென்பான் முதல்யாரும்
பூண்டு நடக்கு [2]நன்னெறி யானும் பொறையாலும்

[3]பாண்டிதர் நீரே பார்த்தினி துய்க்கும் படிவல்லீர்
வேண்டிய போதே [4]வேண்டுவ வெய்தும் வினைவல்லீர்.

(இ - ள்.) ஈண்டிய கொற்றத்து இந்திரன் என்பான் முதல் யார்உம் - மிக்க வெற்றியையுடைய தேவேந்திரன் முதலிய யாவரும், (இவரது ஒழுக்கமேசிறந்ததென்று), பூண்டு நடக்கும்-மேற்கொண்டு நடக்கத்தக்க, நல் நெறியான்உம் - நல்லொழுக்கமுடைமையாலும், பொறையால்உம் - பொறுமைக்குணமுடைமையாலும், பாண்டிதர் நீரே - பண்டிதராகிய நீரே, பார்த்து இனிது உய்க்கும்படி வல்லீர் - (எதையும்) ஆலோசித்து இனிமையாக நடத்தும்படியான வல்லமையுடையீர்; வேண்டியபோதுஏ வேண்டுவ எய்தும் வினை வல்லீர் - விரும்பியபோதே விரும்பியவற்றை யெல்லாம் பெறவல்ல தொழில் வன்மையுடையீர்; (எ - று.)

உமது ஒழுக்கம் இந்திரன் முதலியோர்க்கும் வழிகாட்டியாயுள்ளதுஎன்பது, முதலிரண்டடியின் பொருள். வீரம் கொற்றம் முதலிய குணங்கள் நிரம்பியிருப்பினும், அநுமான் அவற்றைச் சிறிதும் பாராட்டாமல், சாதாரண வானரன்போல இருத்தலால், அக்குணத்தை 'பொறையாலும்' என்று ஜாம்பவான் பாராட்டிக் கூறினன். பின்னிரண்டடிகள், கடல்கடந்து சீதாபிராட்டியைக்கண்டு வர வேணுமென்று நினைத்தால் உடனே செய்துமுடிக்கும் வல்லமை அநுமானுக்கு உண்டென்று குறிப்பிக்கும்: பாண்டிதர் - பண்டிதர் என்பதன் நீட்டல். நல்லொழுக்கம் பொறுமை என்ற அனுமானிடமுள்ள இவை, எதையும்ஆய்ந்து இனிதுஉய்த்தற்குக்காரணமாமென்க. பார்த்தினிதுய்க்கும்படி வல்லீர்என்பதற்கு - உம்நல்லொழுக்கத்தையாராய்தலின்மூலம் யாவரையும் நல்லொழுக்கத்தில் உய்த்தற்குத்திறமுடையீர் எனபாருமுளர். இனி, இவ்விரண்டு குணங்களையும் பண்டிதரென்றற்குக் காரணமென்றுமாம். பி - ம்:—[1]இந்திரரென்பார். [2]நன்னெறி சாபப்பொறையானும். [3]பாண்டிதனீரே..., பாண்டியநீரேயஃதினியுய்க்கும். [4]வேண்டியதும்க்கும், வேண்டுரு வெய்தும். (*1039*)

19.—ஜாம்பவான் அநுமானை நோக்கி 'நீரே இக்கடலைக் கடந்து சீதாபிராட்டியைக் கண்டு வரவேண்டும்' எனல்.

[1]ஏகுமி னேகி யெம்முயிர் நல்கி யிசைகொள்ளீர்
ஓகை கொணர்ந்து [2]மன்னையு மின்னல் [3]குறையில்லாச்
சாகர முற்றுந் [4]தாவிடு நீரிக் கடல்தாவும்
[5]வேக மமைந்தீ ரென்று [6]விரிஞ்சன் மகன்விட்டான்.

(இ - ள்.) நீர் - நீர்தான், இ கடல் தாவும் வேகம் அமைந்தீர் - இந்தச் சமுத்திரத்தைக் கடந்துசென்று (செய்திதெரிந்து)மீளுதற்கு உரிய வலிமை பொருந்தியுள்ளீர்; (ஆதலால்), ஏகுமின் - (இங்கிருந்து) விரைந்து செல்லுக; ஏகி - அவ்வாறுசென்று, எம்

உயிர் நல்கி இசை கொள்ளீர்-எங்களுக்கெல்லாம் உயிரைக் கொடுத்துப் பெரும்புகழைப்பெறுக; மன்னை உம் - ஸ்ரீராமனையும், ஓகை கொணர்ந்து - (சீதை கற்புநெறிவழுவாது சேமமாக இலங்கையிலிருக்கக்கண்ட) மகிழ்ச்சிச்செய்தியைக் கொண்டுவந்து, இன்னல் குறை இல்லா சாகரம் முற்றும் தாவிடும் - (சீதாபிராட்டியின்பிரிவினலான) துன்பமாகிற குறைதலில்லாத [மிகப்பெரிய] கடல் முழுவதையும்கடந்து கரையேறச்செய்யும்! என்று—, விரிஞ்சன் மகன் - பிரமகுமாரனை ஜாம்பவான், விட்டான் - (கடலைக்கடந்து செல்லுமாறு அநுமானைத்) தூண்டிவிட்டான்; (எ - று.)

நீர் கடல்கடந்து சென்றால் ஸ்ரீராமனையும் துன்பக்கடலைக்கடப்பித்தவராவீரென்று சமத்காரமாகக்கூறியிருத்தல் காண்க. 'எம்முயிர்நல்கி இசைகொள்ளீர்' என்றது - நீர் கடல்கடந்துமீண்டுவந்தால் நாங்களும் இப்போது நினைத்தவாறு இறவாமற் பிழைப்போம்; இங்ஙனம் பலரது உயிரைக் காப்பாற்றினதனால் பெரும்புகழும் உமக்குக் இடைக்குமென்றபடி. தாவிடும் - தாவவிடும் என்பதன் விகாரம்: இனி, இரண்டு மூன்றும் அடிகட்கு—உம் அன்னையும் - உமது தாயாகிய சீதாபிராட்டியும், ஓகை கொணர்ந்து - (நீர் கடல்கடந்து இராமபிரானுடைய செய்தியை யறிவித்தலாகிய) மகிழ்ச்சிவார்த்தையைக் கொணர்தலால், இன்னல்குறையில்லாச்சாகரம்முற்றும்—, தாவிடும்- கடந்துகரையேறுவாள் எனினுமாம். சீதைக்குத்துன்பக்கடல் - இராமபிரானைப்பிரிந்து அரக்கரூரிற் சிறைப்பட்டுப் பலதிங்கள் கழிந்தும் இராமபிரான் தானுள்ளவிடத்தை நாடிவந்து தன்னைச் சிறை மீட்பதற்கு ஏற்ற உபாயமொன்றுஞ் செய்யாமையினலாகியது. அநுமானே சீதையை முதலிற் சேவிக்கும் பாக்கியமுடையவனாதலின், ஜாம்பவான் அவனை நோக்கி 'உம்மன்னை' என்றானென்க. இனி, உற்சாகமூட்டுவதற்காக, இங்ஙனம் கூறினனுமாம். விட்டான் - கூறிமுடித்தான் எனினுமாம். விட்டான் என்பதை விண்டான் என்பதன் விகாரமென்பாரும், விள் என்ற பகுதியே இவ்வாறும் வருமென்பாருமுளர். பி - ம்:—[1]ஏகுமினீரே. [2]எம்மன்னையும். [3]குறைவில்லா. [4]தாவிட. [5]வேகமும் வல்லீர். [6]புகழ்தான் விதிதந்தான். (*1040*)

20.—அநுமான் தான் கடல்கடத்தற்கு உடன்பட்டுக் கூறத்தொடங்குதல்.

சாம்ப னியம்பத் தாழ்வத னத்தா மரைநாப்பண்
ஆம்பல் விரிந்தா லன்ன [1]சிரிப்பா னறிவாளன்
[2]கூம்ப லொடுஞ்சேர் கைக்[3]கம லத்தன் குலமெல்லாம்
ஏம்பல் [4]வரத்தன் சிந்தை தெரிப்பா னிவை[5]சொன்னான்.

(இ - ள்.) சாம்பன் இயம்ப - ஜாம்பவான் இவ்வாறு கூறிமுடிக்க,—அறிவாளன் - பேரறிவுடையவனாகிய அநுமான்,—தாழ்வதனன் தாமரை நாப்பண் ஆம்பல் விரிந்தால் அன்ன சிரிப்பான் - இறங்கியமுகமாகிய தாமரைமலரின் நடுவில் செவ்வாம்பல் மலர்ந்

தாற்போன்ற சிரிப்பையுடையவனாகியும், கூம்பலொடும்சேர் கை கமலத்தன் - குவிதலோடுகூடிய தாமரைமலர்போன்ற கைகளையுடையவனாகியும் [கூப்பியகையனாகியும்],—குலம் எல்லாம் ஏம்பல் வர - (அங்குள்ள) வானரக்கூட்டங்கள் யாவும் சந்தோஷமடைய, தன் சிந்தை தெரிப்பான் - தனது உள்ளக்கருத்தைத் தெரிவிக்கும் பொருட்டு, இவை சொன்னான் - இவ்வார்த்தைகளைக் கூறலானான்; (எ - று)— அவற்றை அடுத்த ஐந்துகவிகளிற் காண்க.

பிறர் தம்மைத் துதித்துப் புகழும்போது தலைகவிழ்தல் பெரியோரியல்பு ஆதலால், ஜாம்பவான் தன்னைப்புகழும்போது அநுமான் தாழ்வதனத்தனாயின னென்க. அநுமான் சிரிக்கும்போது முகத்தினிடையிற் செந்நிறமான வாய் விரிதற்கு, தாமரைமலர்நடுவில் ஆம்பல் விரிதலை உவமையாகக் குறித்தார். கைக்கமலத்தன் - கமலக்கையன். பி - ம்:—[1]சிரிப்பன். [2]கூம்பலமைந்த. [3]கமலத்திண். [4]வரத்தான். [5]சொல்வான். (1041)

வேறு.

21.—இதுமுதல் நான்குகவிகள்-அநுமான் அடக்கத்தோடு ஜாம்பவான் சொல்லை அங்கீகரித்துக்கூறுவன.

[1]நீயிரே நினைவின் முன்னே நெடுந்திரைப் பரவை யேழும்
தாயுல கனைத்தும் [2]வென்று தையலைத் தருதற் கொத்தீர்
போயிது [3]புரிதி [4]யென்று புலமைதீர் புன்மை காண்டற்கு
ஏயினி ரென்னி னென்னிற் பிறந்தவர் [5]யாவ ரின்னும்.

இதுமுதல் ஐந்து கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) நீயிரே - நீங்கள், நினைவின் முன்னே - நினைப்பதற்கு முன்னமே [மிகவிரைவில்], நெடுந் திரை பரவை ஏழ்உம் தாய் - பெரிய அலைகளையுடைய ஏழுசமுத்திரங்களையுந் தாண்டி, உலகு அனைத்துஉம் வென்று - எல்லாவுலகங்களையுஞ் சயித்து, தையலை தருதற்கு ஒத்தீர் - சீதாபிராட்டியை மீட்டுக்கொணர்தற்கு வல்லமை யுடையீர்; (அவ்வாறு வல்லமைபெற்றிருந்தும் என்னை ஒருபொருட்டாக எண்ணி), 'போய் இது புரிதி என்று - (நீ) சென்று இதனைச் செய்வாய்' என்று, புலமை தீர் புன்மை காண்டற்கு ஏயினிர் - அறிவில்லாத எனது இழிகுணத்தைக் காண்பதற்காகவே (எனக்குக்) கட்டளையிட்டீர்; என்னின் - என்றால், என்னின் பிறந்தவர் இன்னும் யாவர் - என்னைப்போலப் பாக்கியசாலியாகப் பிறந்தவர் வேறு யாவருளர்? (எ - று.)

அநுமான் அவையடக்கமாகக் கூறியது, இது. பெரியோர்கள் நிறைந்த இடத்தில், ஒருவன் தன்னைத்தானே தாழ்த்திக்கூறுவது, அவையடக்க மெனப்படும். இந்தச்சிறியதாகிய ஒருகடலையே யன்றி ஏழுகடலையுங்கடக்கவேண்டு மென்றாலும், இலங்கையையேயன்றி ஏழுலோகங்களையும் வெல்லவேண்டுமென்றாலும் அவ்வாறேசெய்து

சீதையைமீட்கும் வல்லமையையுடையவர் நீரென்று தன்னிலும் மற்றைவானரரது வலிமைமிகுதியை முதல் மூன்றடிகளால் தெரிவித்தனன் அநுமானென்க: சாம்பவானைக்குறித்தே கூறியதாகக் கொள்ளலாம். ஏயினிரென்னின் என்னிற்பிறந்தவர் யாவரின்னும் - வெகுபராக்கிரமசாலிகளாய்க் கடல்கடந்து மீண்டு வரும் வல்லமையுள்ளார் பலரிருக்கவும் என்னை ஏவினது எனது பாக்கியமேயென்று கொண்டாடியவாறு.

இச்செய்யுள், சில பிரதிகளில் இருபத்துமூன்றாவதாகக் காணப்படுகின்றது. பி - ம்:—[1] நீவிரேஙினையின் அல்லது நினைவின். [2] ஈன்ற. [3] தருதி. [4] என்றன் புலமைதீர் புன்மைகண்டும். [5] யாவரந்தோ. (1042)

22. இலங்கையை யிடந்து வேரோ டிவ்வயிற் றருகென் றாலும்
விலங்கினர் தம்மை யெல்லாம் வேரொடும் விளிய நூறிப்
பொலங்குழை மயிலைக் கொண்டு போதெனப் புகன்றிட் டாலும்
கலங்கலி ருரைத்த மாற்ற முடிக்குவல் [1] கடிது காண்டிர்.

(இ - ள்.) இலங்கையை வேரோடு இடந்து இவயின் தருக என்றால்உம் - 'இலங்காபட்டணத்தை வேரோடு பெயர்த்தெடுத்து இவ்விடத்திற் கொண்டுவரவேண்டும்' என்று (நீங்கள்) கூறினாலும், விலங்கினர் தம்மை எல்லாம் வேரொடும் விளிய நூறி பொலம் குழை மயிலை கொண்டு போது என புகன்றிட்டாலும் - 'இடையூறுசெய்யும் அரக்கர்களையெல்லாம் அடியோடு அழியுமாறு நீருக்கிப் பொன்னாலாகிய குழையென்னுங் காதணியையணிந்த மயில்போற்சாயலையுடைய சீதாபிராட்டியை எடுத்துக்கொண்டுவா' என்று சொன்னாலும், உரைத்த மாற்றம்முடிக்குவல் - (நீங்கள்) சொன்ன சொற்படியே செய்துமுடிப்பேன்: கடிது காண்டிர் - (அதனை) விரைவிற் கண்கூடாகக் காண்பீர்கள்; கலங்கலிர் - கலங்கவேண்டா; (எ - று.)

'கலங்கலிர்' என்றது - கடலைக்கடந்து சீதையைக்கண்டுவருதல் எவ்வாறு கூடுமென்ற சிந்தை நுமக்குச் சிறிதும்வேண்டா என்றவாறும். பி - ம்:—[1] கடிதிற். (1043)

23. [1] ஓசனை யொன்று நூறு முள்ளடி யுள்ள தாக
ஈசன்மண் [2] ணளந்த தேய்ப்ப விருங்கட லினிது தாவி
வாசவன் முதலோர் வந்து மலையினு மிலங்கை வாழும்
நீசரை யெல்லா [3] நூறி [4] நினைத்தது முடிப்பல் பின்னும்.

(இ - ள்.) ஈசன் மண் அளந்தது ஏய்ப்ப-திருமால் உலகமளந்தது போல, ஓசனை ஒன்று நூறுஉம் உள் அடி உள்ளது ஆக - (இங்கிருந்து இலங்கைவரையிலுள்ள) ஒருநூறுயோசனைதூரமும் ஓரடிவைப்புக்குள் அடங்கும்படி, இருங் கடல் இனிது தாவி - பெரிய கடலை எளிதாகத்தாண்டி,—வாசவன் முதலோர் வந்து மலையின்உம்- இந்திரன்முதலான தேவர்கள் (அரக்கர்க்கு உதவியாக) வந்து

(என்னோடு) எதிர்த்துப் போர்செய்தாலும், இலங்கை வாழும் நீசரை எல்லாம் நூறி - அந்த இலங்கையில் வாழ்கின்ற இழிதொழிலையுடைய அரக்கர்களை யெல்லாம் அடியோடு அழித்து, நினைத்தது முடிப்பல் - நினைத்த காரியத்தை முடித்துவிடுவேன்; பின்னும் - மேலும்,—(எ - று.)

ஒரு தாண்டிலேயே நூறுயோசனை தூரமுள்ள கடலைக் கடந்து இலங்கையிற் செல்லுமாறு பேருருக்கொண்ட அநுமானுக்கு - உலகம் முழுவதையும் திரிவிக்கிரமனாகி ஓரடியைவப்பினால் அளந்த திரிவிக்கிரமன் உவமையாவன். மலையினும் என்றது - வாசவன் முதலோர் வந்து மலையா ரென்ற பொருளை வற்புறுத்தும். பி - ம்:—[1]யோசனையேழுநூறும். [2]கடந்ததென்ன. [3]கொன்று. [4]முடிப்பது நினைப்பன். (1044)

24. முற்றுநீ ருலக முற்றும் விழுங்குவான் [1]முழங்கி முந்நீர்
உற்றதே யெனினு மண்ட [2]முடைந்துபோ யுயர்ந்த தேனும்
இற்றைநும் மருளு மெங்கோ னேவலு மிரண்டு பாலும்
கற்றைவார் சிறைக ளாகக் கலுழனிற் கடப்பல் காண்டிர்.

(இ - ள்.) நீர் முற்றும் உலகம் முற்றும் விழுங்குவான் - கடலினாற்சூழப்பெற்ற உலகமுழுவதையும் முழுத்தியழிக்கும் பொருட்டு, முந்நீர் - கடலானது, முழங்கி உற்றது எனின்உம் - சத்தித்துக்கொண்டு பொங்கிவந்தாலும், அண்டம் உடைந்துபோய் உயர்ந்தது ஏனும் - இவ்வுலகவுருண்டையே உடைந்துபோய் உயர்ந்து வானத்திற்சென்றாலும்,—(சிறிதுங் கலங்காமல்), இற்றைநும் அருள்உம் எம் கோன் ஏவல்உம் இரண்டு பாலும் கற்றை வார்சிறைகள் ஆக - இப்பொழுது நீங்கள் என்மீது வைத்திருக்கின்ற அநுக்கிரகமும் எமது தலைவனாகிய இராமபிரானது கட்டளையுமே இரண்டு பக்கத்திலும் தொகுதியான நீண்ட சிறகுகளாக அமைய, கலுழனின் - கருடன் போல, கடப்பல் - (இச்சமுத்திரத்தைக்) கடந்து விடுவேன்; காண்டிர் - (நீங்கள் இதனைக்) காண்பீர்கள்; (எ - று.)

கடலானது இவ்வுலகத்தை யழிக்கும்படி பொங்கி வந்தாலும், இவ்வண்டமே உடைந்து ஆகாயத்திற் சென்றாலும், நான் சிறிதும் பின்வாங்காமல் உங்களுடைய அநுக்கிரகத்தினால் ஸ்ரீராமபிரானது கட்டளைப்படியே கடல் கடந்துசென்று சீதாபிராட்டியைக் கண்டு செய்தியுணர்ந்து மீண்டு வருவே னென்பதாம். கருடனுக்குப் பறந்து செல்ல இரு சிறகுகள் இன்றியமையாத உறுப்பாதல்போல, நான் கடல்கடத்தற்கும் உமது அருளும் இராமபிரானது ஏவலுமே இன்றியமையாதனவாயிருந்து மேற்கொண்டசெயலை முற்றுவிக்கு மென்பது,பின்னிரண்டடியின் கருத்து;உருவகத்தை அங்கமாகக் கொண்டு வந்த உவமையணி. பி-ம்:—[1]முழங்குவானம். [2]அண்ட முடைந்து மீதுயர்ந்ததேனும், அண்டத்தூடுபோயுயர்ந்ததேனும். [3]இராகவனருளுங் கொண்ட, இராகவன்றுளுங்கொண்டு. (1045)

25.—அநுமான் வாநரரிடத்து விடைகொண்டு, மகேந்திரமலையி னுச்சியிற் செல்லுதல்.

ஈண்டினி துறைமின் [1]யானே யெறிகட லிலங்கை யெய்தி
மீண்டிவண் வருதல் காறும் விடைதம்மின் [2]விரைவி னென்று
ஆண்டவ ருவந்து வாழ்த்த வலர்மழை யமரர் தூவச்
சேண்டொடர் சிமயத் தெய்வ மயேந்திரத் தும்பர்ச்சென்றான்.

(இ - ள்.) யான்—, எறி கடல் இலங்கை எய்தி - அலைவீசுகின்ற கடலினிடையேயுள்ள இலங்காபுரியைச் சேர்ந்து, மீண்டு இவண் வருதல் காறும் - திரும்பி இங்குவருகிறவரையிலும், ஈண்டு இனிது உறைமின் - (நீங்கள்) இவ்விடத்தில்தானே சுகமாக இருங்கள்; விரைவின் விடை தம்மின் - (எனக்கு) விரைவில்விடைகொடுங்கள், என்று - என்றுசொல்லி,—(அநுமான்),—ஆண்டு அவர் உவந்து வாழ்த்த - அப்பொழுது அவ்வானரர்கள் மகிழ்ந்து வாழ்த்துக்கூறவும்,—அமரர் அலர் மழை தூவ - தேவர்கள் பூமாரிபொழியவும், சேண் தொடர் சிமயம் தெய்வம் மயேந்திரத்து உம்பர் சென்றான் - வானத்தை யளாவிய உச்சியையுடைய தெய்வத்தன்மையுள்ள மகேந்திரமலையினது மேலிடத்தை யடைந்தான்; (எ - று.)

அலர்மழை - புஷ்பவர்ஷம். பி - ம்:—[1]யானவ், யான்வேறு. [2]விரைவன். (1046)

26.—அநுமான் பேருருவங்கொள்ளுதல்.

பொருவரு வேலை தாவும் புந்தியான் புவனந் [1]தாய
[2]பெருவடி வுயர்ந்த மாயோன் மேக்குறப் [3]பெயர்ந்த தாள்போல்
[4]உருவறி வடிவி னும்ப ரோங்கின னுவமை யாலும்
திருவடி யென்னுந் தன்மை யாவர்க்குந் தெரிய நின்றான்.

(இ - ள்.) பொருவு அரு வேலை தாவும் புந்தியான் - ஒப்பற்ற கடலைக் கடக்கவேண்டுமென்ற எண்ணமுள்ள அநுமான்,—புவனம் தாய பெரு வடிவு உயர்ந்த மாயோன் மேக்கு உற பெயர்ந்த தாள் போல் - மூவுலகங்களையும் தாவியளந்த பெருவடிவங்கொண்டுஉயர்ந்த [திரிவிக்கிரமாவதாரஞ்செய்த] ஆச்சரியமான குணஞ்செயல்களையுடையவனாகிய திருமாலினது மேலிடத்திற்பொருந்துமாறு உயர எடுத்த திருவடிபோல, உருவு அறி வடிவின் - (தனது) ரூபத்தை (யாவரும்) அறிதற்குஉரிய பெருவடிவத்தோடு, உம்பர் ஓங்கினன் - வானத்தையளாவ வளர்ந்தான்; (அதனால்), உவமையாலும் திருவடி என்னும் தன்மை யாவர்க்கும் தெரிய நின்றான் - உபமானத்தினாலும் திருவடியென்கின்ற தனது (திருநாமத்தின்) தன்மை யாவர்க்கும் விளங்கும்படி நின்றான்; (எ - று.)

ஆகாயத்தை யளத்தற்காக உயரவெடுத்த திரிவிக்கிரமனது திருவடிபோல, அநுமான் வானத்தை யளாவுமாறு பெருவடிவங் கொண்டன னென்பதாம். இராமாவதாரத்திலே திருமாலுக்கு வாகனமாயிருந்து உதவியது பற்றிவந்த அநுமானது திருவடியென்ற

பெயர்க்கு, இங்குத் திரிவிக்கிரமனது திருவடிபோல வளர்ந்ததனால் அப்பெயருண்டாயிற்றென்ற கருத்துப்படக் கூறியது - பிரிநிலை நவிற்சியணியின்பாற்படும். இக்கவிச்சக்கரவர்த்தி பரமவைணவ ராதலால், இங்ஙன் வருணித்தார். பி - ம்:—[1] தாவப். [2] பெருவடிவ மைந்த. [3] பெயர்த்ததாள்போல். [4] உருவறிவடிவன், உருவடிமேவின்.

27.—அநுமான் கடல்கடக்கச் சித்தமாய் நிற்றல்.

பார்நிழல் பரப்பும் பொற்றேர் [1] வெயிற்கதிர்ப் பரிதி மைந்தன்
போர்நிழல் பரப்பு மேலோர் புகழென வுலகம் [2] புக்குத்
தார்நிழல் பரப்புந் தோளான் தடங்கடல் [3] தாவா முன்னம்
நீர்நிழ லுவரி தாவி யிலங்கைமேற் [4] செல்ல நின்றான்.

(இ - ள்.) தார் நிழல் பரப்பும் தோளான் - மாலை ஒளிவீசப் பெற்ற தோள்களை யுடையவனான அநுமான்,—நிழல் பார் பரப்பும் பொன் தேர் - (தனது) ஒளியை உலகமுழுதும் பரப்புகின்ற அழகிய தேரையும், வெயில் கதிர் - உஷ்ணகிரணங்களையுமுடைய, பரிதி மைந்தன் - சிறந்தசூரியன்,—போர் நிழல் பரப்பும் மேலோர் புகழ் என - யுத்தத்தில் (தமது) பராக்கிரமத்தை வெளிக்காட்டுகின்ற மகாவீரரது புகழ் (உலகமுழுவதும் பரவுதல்) போல, உலகம் புக்கு - உலகமுழுதும் சஞ்சரித்து [ஒளிசெய்து], தட கடல் தாவாமுன்னம் - பெரிய மேல் சமுத்திரத்திற் சென்று சேர்வதற்குமுன்னே [அஸ்தமிப்பதற்குமுன்னே], நீர் நிழல் உவரி தாவி இலங்கைமேல் செல்ல - நீர்மயமான அழகிய இக்கடலைக்கடந்து இலங்கையிற் செல்லுமாறு, நின்றான் - சித்தமாக இருந்தான்; (எ - று.)

அநுமான் சூரியாஸ்தமனத்திற்குள் இலங்கையிற் சென்று சேரவேண்டுமென்ற கருத்தோடு மகேந்திரமலையி னுச்சியி லேறிப் பேருருவங்கொண்டு சித்தமாக நின்றானென்பதாம். சூரியன் தனது கிரணங்களினால் உலகமுழுதும் ஒளிசெய்தற்குப் பெருவீரர்புகழ் உலக முழுவதும் பரவுதலை உவமை கூறினர். புக்குத்தாவாமுன்னம் செல்ல நின்றான் என இயையும். தோளான் கடல்தாவாமுன்னம் உவரிநீரில் தோன்றும்நிழல் இலங்கைமேல்நிமிர [முந்துற] நின்றான் என்பாரு முளர். பரிதிமைந்தன் என்பதற்கு - ஊர்கோளையுடைய பெருமையை யும் வலிமையையும் கொண்டவனான சூரியன் எனினுமாம்; பரிதி - ஊர்கோளை யுணர்த்தும் வடமொழி. 'பார்நிழல்பரப்பு மொற்றை வெயிற்கதிர்ப்பரிதிமைந்தன், போர்நிழல்பரப்ப' என்று முதலிரண் டடிகளிற் பாடம் காண்கின்றதென்பர்., பி - ம்:—[1] எரி. [2] புக்கான், புக்க. [3] தாவும். [4] நிமிர. (1048)

28.—மகேந்திரமலைமீது பேருருவங்கொண்டு நின்ற அநுமானது வருணனை.

பகுவாய மடங்கல் வைகும் படர்வரை முழுது மூழ்க
உகுவாய விடங்கொள் [1] நாகத் தொத்தவால் சுற்றி யூழின்

[2]நெகுவாய சிகர கோடி நெரிவன தெரிய நின்றான்
[3]மகவாமை முதுகிற் றோன்று மந்தர மெனலு மானான்.

(இ - ள்.) பகு வாய மடங்கல் வைகும் படர் வரை முழுதும் - திறந்த வாயையுடைய ஆண்சிங்கங்கள் வசிக்கும் பெரிய மகேந்திர மலைமுழுவதும், மூழ்க - (தன்மீதேறிப் பெருவடிவங்கொண்ட அநுமானதுபாரம் அழுத்துதலாற்) கீழேயழுந்தவும், ஊழின் நெகு வாய சிகரம் கோடி நெரிவன தெரிய - வரிசையாகத் தோன்றுகின்ற சிதைகின்ற இடங்களையுடைய(தனது)சிகரங்களின் தொகுதிகள் நொருங்கியனவாய் விளங்கவும், விடம் உகு வாய கொள் நாகத்து ஒத்த வால் சுற்றி - விஷத்தைக் கக்குகின்ற வாயையுடைய (வலிமை) கொண்ட பாம்பைப்போன்ற வாலினால் (தனது உடம்பைச்) சுற்றிக் கொண்டு, நின்றான் - (பேருருவத்துடன்) நின்றவனாகிய அநுமான்,—மக ஆமை முதுகில் தோன்றும் - மகாகூர்மத்தினது முதுகின்மேல் விளங்கித் தோன்றிய, மந்தரம் எனல்உம் ஆனான் - மந்தர பருவத மென்று கூறுமாறும் ஆயினான்; (எ - று.)

அநுமான் உடற்பொறையால் தரையிலழுந்துகின்ற மகேந்திர மலை - மகாகூர்மத்துக்கும், மகேந்திரமலையின்மேல் நின்ற அநுமான்- மகாகூர்மத்தினால் தாங்கப்பெற்ற மந்தரமலைக்கும், அநுமானது உடலைச் சுற்றிய அவனது வால் - மந்தரமலையைச் சுற்றிய வாசுகிக்கும் ஒப்பாகு மென்க. தேவர்கள் தாம் இழந்த பொருள்களையும் அமிருதத்தையும் பெறும்பொருட்டுத் திருமாலின் கட்டளைப்படி அசுரர்களைத் துணைக்கொண்டு திருப்பாற்கடலைக் கடைகையில், வாசுகியென்னும் மகாநாகத்தைக் கடைகயிறாகப் பூட்டிக் கடையப்பட்ட மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிட, தேவர்களின் வேண்டுகோளினால் திருமால் பெரியதோர் ஆமைவடிவ மெடுத்து அம்மலையின் கீழேசென்று, தனதுமுதுகின்மீது கொண்டு தாங்கி, அம்மலை கடலில் அழுந்திவிடாமற் கடைவதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்தன னென்பது, பிரசித்தம். மஹா என்பது, மக எனத்திரிந்து வந்தது. 'கோடி' என்பது, பல வென்னும் மாத்திரமாய் நின்றது. கொள் - கோள் என்பதன் விகார மெனக்கொண்டும் உரைக்கலாம். பி - ம்:—[1]நாகத்தொற்றைறவால் சுற்ற. [2]செகுவாயசிகரகோடிதேவரிற்றெரிய. [3]மகுவாமை. (1049)

29.—இதுவும் அது.

மின்னெடுங் [1]கொண்டல் தாளின் வீக்கிய [2]கழலி னார்ப்பத்
தன்னெடுந் தோற்றம் வானோர் கட்புலத் தெல்லை தாவ
[3]வன்னெடுஞ் சிகர கோடி மகேந்திர மண்டந் தாங்கும்
பொன்னெடுந் தூணின் பாத சிலையெனப் பொலிந்து நின்றான்.

(இ - ள்.) மின் நெடுங் கொண்டல் - மின்னலையுடைய பெரிய மேகங்கள், தாளின் வீக்கிய கழலின் ஆர்ப்ப - (தனது) காலிற்கட்டப்பட்ட வீரக்கழல்போல ஒலிக்கவும், தன் நெடுந் தோற்றம் -

தனதுபெருவடிவானது; வானோர் கண் புலத்து எல்லை தாவ-தேவர்களின் கண்களாகிய இந்திரியங்களினிடத்திற் புலப்படவும்,—வல் நெடுஞ் சிகரம் கோடி - வலிய பெரிய சிகரங்களின் தொகுதியையுடைய, மகேந்திரம் - மகேந்திரமலையானது, அண்டம் தாங்கும் பொன் நெடுந் தூணின் - உலகவுருண்டையைத் தாங்குகின்ற பொன்மயமாகிய நீண்ட தம்பத்தின், பாதம் சிலை என - அடியிலிட்ட கல்லைப்போல விளங்கவும்,—பொலிந்து நின்றான் - (தான் அம்மகேந்திரமலையின்மேல் பேருருவத்துடன்) விளங்கித்தோன்றினன், (அநுமான்); (எ - று.)

மகேந்திரமலையின்மீது ஏறி அண்டத்தின் மேல்முகடுவரையிலும்வளர்ந்த பேருருவங்கொண்ட அநுமான் - அண்டத்தைத் தாங்கும் பெருந்தூணைநிகர்க்க, அவ்வநுமானது பெருவடிவத்தைத் தாங்கி அவ்வடிவுக்குமுன் சிறுத்துத்தோன்றுகின்ற மகேந்திரமலை -தூணின்கீழ் வைக்குங் கல்லை நிகர்க்குமென்க: தற்குறிப்பேற்றவணி. அநுமான் பேருருவங்கொண்டபோது, மேகமண்டலம் அவனது முழந்தாளினிடத்து இருந்ததெனபார், 'மின்னெடுங்கொண்டல் தாளின் வீக்கியகழலினேர்ப்ப' என்றார். மேலுலகத்தில் அநுமானது வடிவம் வளர்ந்து சென்றதனால், அங்குள்ள தேவர்களும் இவனது வடிவத்தைக் காணலாயின ரென்பது, இரண்டாமடியிற் கூறிய விஷயம். அநுமானது தோத்திரத்தில் "காஞ்சநாத்ரி கமநீயவிக்ரஹம் [பொன்மலைபோல் அழகிய திருமேனியுடையவன்]" என்பவாதலால், அவனுக்குப் பொன்னெடுந்தூண் உவமையாம். தற்குறிப்பேற்றவணி. பி - ம்:—[1]மேகங். [2]கழலோடு. [3]அந்நெடுஞ். (1050)

மயேந்திரப்படலம் முற்றிற்று.

கிட்கிந்தாகாண்டம் முற்றுப்பெற்றது.

பிழைத்திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
13	25	அலகிய	அலசிய
28	10	டுதவாம்	டுதவாப்
,,	31	செஞ்கிடை	செங்கிடை
43	26	கருகி	கருதி
50	21	முன்பிருந்	முன்பிரிந்
111	19	சிவபிரானன்	சிவபிராணின்
135	28	உவமை	உவகை
138	10	காலன்உம்	காலம்உம்
140	3	யின்ற	யீன்ற
147	37	அளித்ததன்	அளித்தவன்
174	37	போன்ற -	போன்றன-
213	37	ஆசை	அசை
251	5	தோர்	லோர்
285	6	சின்னெறி	நன்னெறி
320	39	ஏத்தினன்	ஏத்தின
328	15	யுடையாயினும்	யுடையையாயினும்
348	20	சொல்லுததும்	சொல்லுதலும்
,,	28	குலவு	குவவு
381	39	தழுங்கு	தழங்கு
415	16	தரும்	தகும்
428	43	யுழைமா	வுழைமா
455	40	யருவிகளும்	யருவிகளிலும்
467	42	மாட்டமை	மாட்டாமை
487	41	ணக்காயர்	கணக்காயர்
492	23	நோக்குடத்து	நோக்குமிடத்து
522	34	காப்மை	காப்பை
533	26	காலங்	காலம்
544	36	மைம்மாருக	கைம்மாருக
554	30	வேலும்	மேலும்
561	14	இராபிரான்	இராமபிரான்
562	19	ஸ்ரீவரன்கி	ஸ்ரீவான்மீகி
598	39	முழக்குடைன	முழக்குடையன
601	22	சேனையாடு	சேனையோடு

611	30	கடடெனறி	கடனெறி
614	17	மாலைமாய்	மாலையாய்
633	2	னும்	—
637	19	அக்கருத்துரு	அக்கத்துரு
657	14	பொளும்	பொருளும்
660	1	860	660
696	1	896	696
720	31	உவமை	உவகை
731	6	தன்னுடத்	தன்னிடத்
736	41	போன்றப்	போன்ற
745	12	அகல்நாடு	அகல்நல்நாடு
"	38	செ்சயும்	செய்யும்
757	15	கடந்நு	கடந்து
790	2	வழிலுள்ள	வழியிலுள்ள

மற்றும் பிழைகள் காணப்படினும் திருத்திக்கொள்ளவும்.

கிட்கிந்தாகாண்டத்துச் செய்யுளகராதி

கிட்கிந்தாகாண்டத்தின்

அரும்பதவகராதி முதலியன

அகடு-நடு, நட்பு-38
அகணிநாடு-மருதநாடு, ஆறு-16
அகம்-இருள், தாரை-18
அகிற்புகை விளக்கொளியை விழுங்கல், கார்கா-80
அங்கதன் அளவிலா ஆற்றலன் அரசியல் - 32, இளமையிலிருந்தே துன்பங்கொண்டவரைக் காணுதவன், வாலி-140
அசனம் - உணவு, ஒருமரம், ஆறு-16
அசனி - இடி, துந்து-15
அஞ்சனக்கண், கார்-112
அஞ்சனக்கிரியனைய மஞ்சன், அனு-6
அஞ்சனம் - மை, பம்பை-20
அட்டமூர்த்தி - சிவபெருமான், நட்புக்-40
அட்டன-கொன்றன, கலன்-6
அடல்-வலிமை, நட்புக்-64
அடித்தல மெடுத்தலால் தீயெழுந்தது, துந்து-7
அடியற்று - அடியோடும் அற்று, முழுவதும் அற்று, கிட்-37
அடியன் - தொண்டன், அனும-31
அடியினு லுலகளந்தவன், மரா-7
அடுகணே, வாலி-60
அடுத்த, நட்புக்-56
அடை - இலே, மரா-6
அடைக்கலம், வாலி-138
அடைதல்-அடங்குதல், பம்பை-20
அடைவு - முறை, பம்பை-30
அண்டங்கள் தானேக்கு உண்ண ஓர் பிடிக்குமாகா, தானே-24
அண்டமுமகிலமும் துந்துபியுடல் அடைந்திருத்தல், மரா-20
அண்டர்-இடையர், கார்-82
அத்தலே - அவ்விடம், வாலி-139
அத்தா, வாலி-34
அதுக்குதல் - கடித்தல், 'எயிறதுக்குமேல்' நட்புக்-70
அந்தகன், நட்புக்-49
அந்தம்-அழகு, நட்புக்-12
அந்தியாள்-மாலேப்பொழுது, பம் - 38
அநங்கன், கார்கா-63
அநந்தன் - ஆதிசேஷன், நட்-44
அப்பு-நீர், ஆறு-16
அப்புமாரி - அம்புமழை, கார்-24
அப்போர்வில் அயன்பதிசலிப்பு உற ஒலித்தது, மரா-11
அபயநல்கும்தனினல்ல துண்டோ, அனும-26
அபயம், வாலி-96
அமர்முற்றுறமுரசு அவிதல் × பருவம் நீங்கமுகில் குளிறலோவுதல், கார்-106
அமரர்க்கெல்லாந்தேவராம்தேவர், நட்புக்-19
அமரர்தாழ்உயர்பதம், நட்புக்-12
அமலர் - குற்றமற்றவர், நட்புக் - 72
அமளி-படுக்கை, வாலி-4
அமிழ்தப் பாடல், கார்கா-33
அமிழ்தின் மாறிலாமொழிஉருமை, தானே-4
அமிழ்தின் வந்ததேவி, வாலி-78
அமைதி-காரணம், துந்துபிப்-2
அமைந்த-நிரம்பிய, தானே-12
அயல், பம்பை-29, நட்பு-65
அயன் - பிரமதேவன், நட்பு-73
அயன்செய் அண்டம், கலன்-32
அயனும் ஐம்முகனும் தேடிக்காணு மலரடியோன், நட்புக்-73
அயர்தி, கலன்-11
அயாவுயிர்த்தல், பம்பை-32
அயிர்த்தல்-ஐயுறல், வாலி-54, 78
அயிலுதல்-உண்ணுதல், வாலி-64

ஆர்-பொருந்திய, பம்பை-23
ஆர்வத்தோர் - அன்பர், அனும - 11
ஆரம்-ஹாரம், அனும்-3, சந்தனம், நட்புக்-31
ஆரமர்-பெரும்போர், வாலி-97
ஆரியன்-தலைவன், மேம்பட்டவன், அனும-39, வாலி-87
ஆல்-ஆதலால், பம்பை-30
ஆலம்-விஷம், வாலி-12
ஆலமுண்டவன், நட்புக்-2
ஆலிகைக்கரிய பேருருவளித்தருளினன், நட்பு-6
ஆலித்துளி, கார்-75
ஆலுதல் - துள்ளி விளையாடுதல், பம்பை-19
ஆவலிப்பு-பேரன்பு, வாலி-123
ஆவி-பொய்கை, பம்பை-25
ஆழி-சக்கரவாகம், வட்ட வடிவு, கடல், சக்கரம், நாட-37, கலன்-32
ஆழிமாமலை - சக்கரவாளபருவதம், நட்புக்-39
ஆளியேறு × சுக்கிரீவன், கலன்-34
ஆற்றலர்-வலிமையை யுடையவர், கார்-101
ஆற்றலின்-வலிய, வாலி-95
ஆறுஒழுகலான் செல்வம்குறைவுபடும், கார்-108
ஆறுகொள் சடிலத்தான், நட்-19
ஆறுடைவில்லி-ஸ்ரீராமன்,மரா-13
ஆறுவற்றியநிலை × தலைவனைப் பிரிந்தமகளிர், கார்-40
ஆன்பெயர்க்கண்ணன் -கவாட்சன், தானை-6
ஆன்ற-சிறந்த, வாலி-94
ஆன்றமுதியர்-அறிவினால்அமைந்த பெரியோர், வாலி-72
இகல்-வலிமை, வாலி-88
இகலேறு-ஆண்சிங்கம், வாலி-88
இசைதருதல்-நேரிடுதல், நட்-15
இட்டிடை-நுண்ணிய இடை,நாட-[38
இடங்கர், வாலி-109
இடங்கெட-பெருமையழிய, மயே-17
இடத்தல் - குத்தியெடுத்தல், நட்-43
இடர்துடித்தல், வாலி-3
இடபன், தானை-18
இடர் X கடல், தாரை-4
இடியால் தகர்ந்துவீழும்பாறைகள் Xபோர்க்களத்தில் சாயும் யானைகள், கார்கா-17
இடுதல்-கீழேபோடுதல், கலன்-2
இடை-நடுவு, அனும-5
இதண்-பரண், கார்-81
இதழ் - உதடு, பம்பை - 16; X செங்கிடை, கார் - 112 × குமுதம், பம்பை-16
இந்தியம்-இந்திரியம், கார்-76
இந்திரகோபப்பூச்சிக் கூட்டம் × உமிழ்ந்தவெற்றிலைத் தம்பலக் குப்பை, கார்-29
இந்திரகோபம், கார்-59
இந்திரி-கிழக்கு, வாலி-9
இந்து-சந்திரன், பம்பை 38
இம்பர், துந்து-12, வாலி-26
இமைப்பிலாதோர், அனும-27
இமைப்பு, கலன்-30
இயக்கம்-அசைவு, பில-71
இயல்பு, அனும-10
இயற்கை, வாலி-89
இரங்குதல், பம்பை-23
இரத்தம் பாந்த வாலிமார்பில் புரளும்தாரை × செவ்வானில் திகழும் மின்னல், தாரை-2
இரவி சுதன், அனும-3
இரவியும் கனற்கடவுளும், காய்தலாற் கரிதல், தானை-23
இராக்காலத்து மரம்இலைகுவிதல், பம்பை-39
இராகவன், கார்கா-46
இராப்பொழுதின் வருணனை, பம்பை-39, 40
இராமபிரான் முன்னோர்செயல்கள் கடல்தொடுதல் முதலியன, கலன்-22, 23
இராமன் தண்டகவாசிகளான முனிவருக்குக் கொடுத்த வாக்கு, கார்-68: இராமநாமம் விளித்தி

டச் சிறை வந்தோங்கும்; சம்பா-59: இராமன் தனக்குத்தானே நிகரானவன், கார்கா-64: இராமன் காலமா மேகமன்னான், அரசி-25: இராமன் நூலுணர் கேள்வி வீரன், கார்கா-65

இராமன் × நாகம், கார்கா-88

இராமன் ஆலிலைப்பள்ளியான், தாரை-1: இராமன் சுக்கிரீவனைத் தந்தையெனக்கருதும்படி அங்கதனுக்குக் கூறல், அரசி-25: இராமன் மறைந்து நின்று வாலியை எய்த காரணம், வாலி-117; இராமன் தகாதன செய்யான் என வாலி கூறல், தாரை-13: இராமன் தான் கூனியிடம் சிறுமை செய்து கேடடைந்ததாகக்கூறல், அரசி-11: இராமன் வள்ளல், வாலி-134: திருமறுமார்பன், வாலி-135: ஊழிநாயகன், அரசி-30: சொல்லின் எல்லையான், அரசி-5, இராமன், சீதையின்றி இன்பத்தை அனுபவியேன் என்றல், அரசி-20: இராமன் வாலி சரிதம் கேட்டு வியந்தது, நட்-60: இராமன் தருமமே உருவானவன், வாலி-125: இராமன் எல்லா உயிரிலும் இடத்திலும் நிறைந்தவன், வாலி-124: இராமன் சக்கரவர்த்தியின் திருக்குமாரன், வாலி-138: சத்திய நெறி நிற்பவன், அரசி-27: யார்க்கும் சான்று என நின்ற வீரன், வாலி-147: உயிரினங்களுக்கு உறுதிசெய்பவன், வாலி-249: பிறவி நோய்க்கு மருந்து, வாலி-148: இராமன் பொய்யர்க்குப் புலப்படான், வாலி-151: ஓவிய உருவன், வாலி-137: சுந்தரன், அரசி-16: தாய்போல் எல்லா உயிரிடத்தும் அன்பு செலுத்துபவன், வாலி-119: வித்தகன், கார்-84: வானவன் எனல், கார்-51: ஞானநாயகன், கார்-44: இராமன் பிறவிநோய்க்குமருந்தானவன், வாலி-120: இராமன் தொன்மையோன், கார்கா-70: எவர்க்கும் பதவியைநல்கும் பண்ணவன், வாலி-136: இராமனைக் கண்ணன் எனல், தாரை-18

இராமன் அங்கதனுக்கு வாள் அளித்தல், வாலி-152

இராமன், தான் வனவாசத்திற்கென வந்து நகரில் தங்குதல் முறையன்றெனல், அரசி-20

இராமன் மங்கையராலேயே தனக்குத் துன்பம் நேர்ந்ததாகக் கூறல், அரசி-12

இராமன் விட்டகணை மீண்டும் அவனது புட்டிலைவந்தடைதல், வாலி-153

இராமனது அம்பு தருமவடிவானது, வாலி-122

இராவணன், அனும-33

இராவணன் திக்கயங்களை வென்றவன், வாலிவதை-143

இராவணன் வாலியின் வாலையெண்ணிநடுங்குபவன், வாலி-143

இராவணனும் வெவ்விராதன், நட்புக்-9

இரிதல் நிலைகெட்டோடுதல், வாலி-2, தானை-23

இரிந்து-நடுங்கி, மரா-12

இருசுடர் திரியுங்குன்று, மரா-9

இருட்பிழம்பு இழுகியநெய்யெனத் தக்கது, பிலம்-18

இருடிகள் எழுவர், மரா-15

இருது-பருவம், நட்புக்-53

இரும்பு வாலியின்தோள்; சுக்கிரீவன் மார்பு, வாலி-45

இரும்-பெரிய, பம்பை-19

இருமை-இம்மை மறுமை, வாலி-125

இருவி - அரிந்ததினைத்தாள், கல-40

இருள்நிலைப்புறம், நட்பு-25
இல்-உயர்குலம், வாலி-99
இலக்கம்-குறி, மாா-15
இலக்குமணன் இராமனெடுதலை மீது கைகுவித்துப் பேசல், கார் -64
இலக்குமணன் கல்வியறிவிற் சிறந்தவன், கார்கா-62
இலக்குமணன் சீற்றம் காக்கவொண்ணாதது, கார்கா-62
இலக்குமணன் துந்துபியின் உடலைக் காலா லெறிதல், துந்துபிப் -14
இலக்குவன் × யானை, அரசியல் -30
இலக்குவன் அமைத்தசாலை, அர-33
இலக்குவன் நாணொலிக்கு இடி உவமை, கார்கா-95
இவர்தல் - ஒத்தல், மேலெழுதல், வாலி-28, பம்பை-3
இவறுதல்-கோபித்தல், நாட-47
இழிய-இழிதலையுடைய, கார்-74
இழுக்கும் - வழுக்கும், ஈர்த்துக் கொள்ளும், கலன்-41
இழுகிய நெய்யெனுமிருட்பிழம்பு, பிலம்-28
இழை-ஆடை, கலன்-2
இளம்பதம்-இளவரசாட்சி, நட்-50
இளைத்து-வருந்தி, தானை-11
இறுத்தல், நட்பு-80
இறுதல்-ஒழிதல், பம்பை-41
இறை-சிறிதும், வாலி-132
இறைவன், வாலி-82
இனைதல்-வருந்துதல், வாலி-52
ஈடுண்ணுதல்-தோற்றல், வாலி-15
ஈர்-குளிர்ந்த, பம்பை-3
ஈர்ந்த-அறுத்து வேலை செய்யப் பட்ட, பம்பை-3
ஈரநீங்கியசிற்றவை, நட்புக் - 74
உக்க-இறந்த, நட்பு-12
உக்கிலாத-சிந்தாத, நட்பு-48
உக-விழ, நட்புக்கோள்-10
உகளுதல் - உருண்டுசெல்லுதல், பம்பை-21
உகிர்-நகம், வாலி-48
உகுத்தல்-சிந்தி ஒழிதல், வாலி-79
உசாவப்பெயர்க்கவி, ஆறு-16
உணங்கி-வருந்தி, நட்பு-62
உணர்விறுக்கு உவந்ததாயினன், ராமன், கடவுள்வணக்கம்
உதயகிரி, அத்தகிரி இவைகளை விடப் பெரியமரம், மரா-9
உதயசூரியன் × மலைக்கண்வாலி, வாலி-28
உதிரம்-ரத்தம், வாலிவதைப்-55
உதிரவாரிக்கடல், வாலி-140
உர்துதல்-தள்ளுதல், வாலி-46
உம்பர்-தேவர், வாலி-28
உம்பி, தாரை-13
உய்தல்-தப்பிப்பிழைத்தல், அனு-1
உயங்குதல்-வருந்துதல், வாலி-53
உயர்புகழ்தேவி, கலன்காண்-11
உயிர்கள், நட்பு-59
உயிர்த்தல்-வாய்விடுதல், பம்பை -29
உயிர்த்தேவி-மனைவி, வாலி-101
உயிர்ப்பிடைபரித்தல்- சுவாசபந்தனஞ்செய்தல், பிலம்-47
உயிர்ப்பு மூட்டுதல் - பெருமூச்சு விடுதல், பிலம்-28
உயிர்ப்பொடுயிர்க்கின்றன், வாலி-55
உயிர்ப்பொறை, சம்பா-57
உரப்புதல்-அதட்டுதல், வாலி-46
உரம்-மார்பு, வாலிவதைப்-45
உரிமை-அன்பு, பழக்கம், கிட்-133
உருத்தல் - உருவம்தோன்ற நிற்றல், சினத்தல், வாலி-27, 116
உரும்ஏறு-பேரிடி, வாலி-30
உருவுதல்-துளைத்தல், நட்பு-85
உருளுறுத்துகயிலை, ஆறு-15
உரோமபுளகங்கள், நட்பு-18
உலகத்தை உண்டாக்கினவன் ராமன், மரா-17
உலகத்தைத் தனியாகவே சினங் கொண்டு அழித்தல், தானை-6
உலகமூன்றும் முற்றும் காலம், அரசியல்-21

உலகளந்தவனைஒப்பன, மராமரங் கள், மரா-7
உலகெலாமொரு வழிப்படர,நட்-4
உலகேழ், மராமரப்-14
உலப்பு-அளவு, பம்பை-3
உலவைக்கொம்பு, கார்கா-25
உலாம்-உவமவாசகம், கலன்-35
உலைதல் - வருந்துதல், அழிதல், நட்பு-51, மரா-1
உலைய - ஒடிய, துந்துபிப்-10
உலைவு, நட்பு, 39, வாலி-62
உலோவினர் - லோபம் செய்பவர் கள், பம்பை-24
உவகைக்கடல், நட்பு-76
உவரி-கடல், சம்பா-32
உவா-அமாவாசை, நட்பு-21
உவாமதி × அன்னம், பம்பை-3
உழுதல்-சாணைபிடித்தல், சம்-25
உழுந்து பேர்வுழி, வாலி-61
உழை-மான், கலன்-25, கார்56
உழைவர்-தூதர், கலன்-2
உள்-மனம், பம்பை-26
உள்ளிடுதல்-ஆலோசித்தல், வாலி -73
உள்ளத்திற்பாதி யென்னது,வாலி வதைப்-20
உளி - மூன்றும் வேற்றுமைப் பொருள்தரும் இடைச்சொல், அர-14, 16
உளை-பிடரிமயிர், நட்பு-8
உளைத்தல்-வலியஅழைத்தல், ஒலி த்தல், வாலி-3, நட்பு-45
உற்பலமலர் மணம் × உழுத்தியர் கூந்தல் மணம், கார்கா-48
உற்று-தொடங்கி, வாலி-62, மன மிசைந்து, பம்பை-30
உற-மிக, நட்பு-73
உறல்-சேர்தல், அனும-3
உறவு-சிநேகம், பம்பை-23
உறு-சிறந்த, நட்பு-81
உன்னுதல்-ஆராய்தல், பம்பை-22
ஊகம்-வானரம், வாலிவதை-41
ஊதியவரம், வாலி-20
ஊதைக்காற்று×மேகத்தினுயிர்ப்பு, வேசையர்மனம், கார்கா-11, 12
ஊதைக்காற்று பிரிந்தாரை வருத் தல், × தசைவிழுங்கும் பேய், கார்கா-13
ஊதைபோல்விசை, ஆறு-27
ஊர்தருதல்-ஓடித்திரிதல், வாலி- [80
ஊரியன்றமதி, வாலி-87
ஊழி-யுகம், மரா-1, ஊழிப்பரவை பேரினும் உலைவிலர், தானை-17
ஊழியிற் கடற்பொங்கல், கலன்-32
ஊன்-உடம்பு, பம்பை-14
ஊற்றம்-வலிமை, கலன்-4
ஊனமானவுரை, வாலி-93
எஞ்சுதல்-களிப்பறுதல், கார்-115
எட்டு அரும் - பாய்ந்து செல்லு தற்கு அரிய, நட்பு-52
எட்டுவகை நாகங்கள், கார்கா-11
எண்-மனம், நட்பு-3
எண்ணக-வலிமைவிளங்க, வாலி-49
எதிர்நிரல்நிறைப்பொருள்கோள், கார்கா-26
எயில்-மதில், அனும-13
எயிறு-பற்கள், வாலி-91
எரல்=ஏரல்: சங்கம், கம்பர் தனி யன் [18
எரிகதிர்பரிதிச்செல்வன், அனும-
எரிகனலெய்திய மெழுகு × கலன் கண்டராமன், கலன்-4
எரியாநின்ற உயிர், பம்பை-23
எல்லாவுயிர்களையும் அடிமையாக வுள்ளவன் ராமன், மரா-13
எல்லுறப் பரிய பேரெழுசுடர், நட்பு-7
எவ்வம் ஒங்குதல்-துன்பம்மிகுதல், பம்பை-16
எவ்வம்நிரம்பியஇறப்பு, பம்பை-16
எவ்வியது-செலுத்தியது, வாலி - 116
எழுசுடர்க்கடவுள்பல்லிறுத்தவன், நட்பு-7
எழுதிரைவளாகம், வாலி-142
எள்ளல்-இகழ்ச்சி, வாலி-32
எள்ளிட இடம் இல்லாமை, கார்-29
எற்றுதல்-தாக்குதல், வாலி-46
எற்றுவான்-மோதுதற்கு, நட்பு-69

எறித்தல் - விளங்குதல், பம்பை-19
எறுழ்வலி, தானை-2
என்பு-எலும்பு, அனும-15
என்புதோன்றல உருகினது, நட்பு-82
எம்பல்-ஊக்கம், பிலம்-43
எமுறுதல் - வாழ்ச்சி யடைதல், பிலம்-27
எய-வாசஞ்செய்த, அனும-1
எயின = எய்ந்த, கிட்-90
எயின் - எழுந்து சஞ்சரித்தால், தானை-23
ஏய்ந்த-பொருந்திய, வாலி-104
ஏலுதல்-இயலுதல், துந்து-4
ஏலும்-பொருந்தும், பம்பை-19
ஏல் = என்றால், பம்பை-19
ஏவர் - குற்றமுடையவர், வாலி-114
ஏழ்குன்றம், மரா-15
ஏறுபாய்தல் × அருவி பாய்தல், கலன்-40
ஏனல்-தினைக்கதிர், கலன்-40
ஏன்று - ஏற்றுக்கொண்டு, நட்பு-50
ஐம்பொறிக்கண்டகர், ஆறு-18
ஐம்முகன்-ருத்திர மூர்த்தி, நட்பு-73
ஐய-நுண்ணிய, நாட-39
ஒண்கேழ் நாவி: நாவி - கஸ்தூரி, கார்-35
ஒருவனேயிறைவர் மூவரோடுமெப்பன், வாலி 63
ஒழுக்கம்பற்றிச் சொல்லல் எளிது நிற்றல்அரிது, அரசி-23
ஒளிப்பார்-மறைப்பவர், பம்பை 28
ஒறுப்பல்-அழிப்பேன், வாலி-61
ஒன்றுதல்-பொருந்துதல், வாலி-47
ஓங்கல்-மலை, வாலி-28
ஓங்கலாதி - மலையடிவாரம், ஆறு-27
ஓடை - நெற்றிப்பட்டம், கார்-10, 60
ஓடைவாணுதல், கார்கா-60
ஓதக்கனைகடல், நட்பு-20
ஓதம்-பெருக்கு, வாலி-55
ஓதிமம், மரா-53
ஓதை-ஓசை, வாலி-43
ஓவல்-ஒழிவு, வாலி-123
ஓவியத் தெழுதவொண்ணு வுருவத்தான் வாலி-78
கங்குல் × கடல், தானை-20
கங்குலும் பகலெனப்பொலிதல், பம்பை-20
கங்கையின் கணவன் = பரமசிவன் —சமுத்திரராஜன், துந்துபி-2
கசேந்திரன்வரலாறு, வாலிவதை-109
கட்டதோ, தாரைபுலம்-16
கட்டனென் - உயிர்பறித்தேன், வாலி-102
கடகரி, வாலி-4
கடம் = மதம், பம்பை-11
கடல் × துந்துபி, மரா-20
கடல்கவின்றசோலை, பம்பை-42
கடல் முதலிய ஒப்பாகா, வாலி-40
கடவுட்படையினர், நட்பு-5
கடற்படை, நட்பு-10
கடன்முழக்கமும் வெருக்கொள விசைத்தல், தானை 9
கடி = வாசனை: பம்பை-17, இடை, வாலி-56
கட்டளை, தாரை-16
கடுப்பு = வேகம், வாலி-47
கடை, தானை-12, பம்பை-29
கடைக்கால் = கற்பாந்தகாலம், வாலி-58
கடைதல் - குத்திக்குமைத்துக் கலக்குதல், நட்பு-64
கண் × குவளை, பம்பை - 31; × அயில் அம்பு, கார்காலப்-54, 91
கண்கெடுதல், வாலி-7
கண்ணீர் குஞ்சரங்குடைந்தாடுந் தன்மையது, ஆறு-2
கண்ணுள்-கூத்து, பம்பை-21
கண்ணுளர், கார் - 37 × நீர்நாய், பம்பை-21

குவளைமுதலியவற்றை, அரக்கன் அருந்திச்சிந்தின — சீதையின் உறுப்புக்களெனக் கருதுதல், பம்பை-25
குவளை, கெண்டை × கண்கள், பம்பை-25
குவளைவிழிகாட்டுதல், பம்பை-17
குவால்-கூட்டம், பம்பை-3
குழல், பம்பை-28
குழை-மரத்தளிர், கார்-34
குழைபொருகண்ணினாள், கலன்-2
குளித்தல்-புதைத்தல், வாலி-47
குளிறல்-ஒலித்தல், கார்-106
குற்றமற்றா ருலகி லில்லை எனல், வாலி-35
குறங்குபிறங்கியவாழை, ஆறு-41
குறித்த ஓர் பொருட்குமுன்னாள் ஈட்டிய தவமும் பின்னர் முயற்சியும் போன்றவர், நட்பு-22
குதலை, கார்கா-46
குப்புறுதல்-குதித்தல், மயேந்-6, கீழிறங்குதல், பிலம்-19
கும்பன், தானை-23
குமட்டல், கார்கா-47
குமுதம் இதழ்காட்டுதல், பம்பை-17
குரங்கின் தானை இராகவனுவத்து அம்பளவினது, தானை-22
குறிப்பறிந்து ஒழுகல், அரசி-24
குறுமுறுவல், கார்-36
குன்றின்மேல் மழைபொழிதல் × இராமன்மேல் மலர்களைப்பொழிதல், கார்-15
குன்றுபோல் நின்று, நட்பு - 36
குன்றுறழ்படை, தானை-1
குன்றம் தேன் பெருக்குவழுக்கு சாரலால் நாண்மீன் வானவில் முதலியன இழுக்கும், கலன்-41
கூ-கூவுதல், பம்பை-39
கூடம்-சம்மட்டி, வாலி-45
கூடாதார், பம்பை-26
கூடுறைநீக்கியவாள், கார்-10
கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவன், வாலி-8
கூதாளமலர் × தாளங்கள், கார்-33
கூதிர், கலன்-15
கூலம்-கடைவீதி, பம்பை-6
கூலம்பலவகையொலியை யுடைமையால், பொய்கைக்கு உவமை, பம்பை-5
கூற்று-பகைவன், அனும-26
கூற்றுவன்-இராம்பிரான், வாலி-32
கூனற்குரங்கு, தானை-2
கெண்டை-கெண்டைமீன், பம்-25
கெழுமு-விளங்குகின்ற, நட்பு-15
கேசரி, தானை-5
கேவலத்து, அனும-7
கேள்-உறவு, பம்பை-9
கேள்விசாலறிஞர், நட்பு-32
கேள்வி நூல் மறை வல்லாளா, அனும-33
கை-கிரணம், தானை-20
கைதவம்-வஞ்சனை, வாலி-134
கைம்மலை-யானை, பம்பை-33
கைப்பணி-சிறிய ஏவல்தொழில், கலன்-13
கைம்மா, பம்பை-1
கைநெறித்தல் வியப்புக் குறிப்பு, கார்-27
கையடை, வாலிவதை-151
கையறுதல், நட்பு-24
கொக்குகள் சிறகையுலர்த்துதல், பம்பை-19
கொடி-படர்கொடி, துவசம், கிட்-46 × மருங்குல், கார்கா-55
கொடிப்பூ, வாலி-52
கொடையாளர் பொருளின்மையால் வெள்கல் × மேகம்வெளுத்தல், கார்-104
கொள்ளை-மிகுதி, ஆறு-20
கொற்றம்-வெற்றி, வாலி-37
கொன்றைமலர் தொங்கும் மரம் × பொன்தொங்கும் கற்பகம், கார்-34
கொன்றைமலர் × பொன், கார்-34
கொன்றைமலரும் வேங்கை மலரும் நிறைந்த மலைஅருவி × மேருமலையிலிருந்து பொன்னொடு பெருகும் ஜம்பூநதி, கார்கால-30

செவித்தொளே, வாலி-3
செற்றவர்-வருத்தியவர், நட்-27
சேகு-உறுதி, கார்-100
சேட்டிளங்கடுவன், ஆறு-45
சேடியர், பம்பை-18
சேடியர் செய்கையன்னம் ஏற்று தல், பம்பை-18
சேடு அழகு, கார்-112
சேமம்-காவலுள்ள இடம், அரசியல்-21
சேயிதழ்க்காந்தம்செம்பூ, கார்-27
சேரை-சாரை, ஆறு-43
சேவகம்-வீரம், கலன்-14
சேறல் - செல்லுதல், வாலி - 110
சேனை X கடல், அரசியல்-23
சேனைதோயின் ஆழியேழும் சுவறி வேண்டுகளாம், தானை - 23
சையம்-மலை, வாலி-59
சொல்லின் செல்வன், அனும - 20
சோதி-சூரியன், நட்பு-68
ஞாங்கர், கார்-48
ஞாலத்தும் வானத்தும் எழுதிய கீர்த்தி, தானை-5
ஞாலம் முதலியனநீக்கும் காலம், வாலி-12
தக்கிலதென்னும் பக்கம், வாலி-83
தகவு = தக்க அன்பு, அனும-31: வல்லமை, மயேந்-4
தகைகெடும் பகைஞனும் இந்திரன் சிறுவன் நட்பு-15
தகை-அழகு, வாலி-28
தகைவு - தடை, பம்பை-23
தசநவம்-ஒருதேசம், முல்லை, ஆறு -16
தட-பெரிய, நட்பு-79
தடம்-இடம், பம்பை-3
தடம்தில், அனும-30
தடறு-சீர்க்கரை, மட்டை, ஆறு-48
தண்டகாடு, ஆறு-38
தண்ணுமை, ஆறு-42
தம்முனே-தமையன், வாலி-93
தமிழ்-இனிமை, பம்பை-28
தயா-இரக்கம், பம்பை-32
தரங்கம்-அலை, வாலி-2
தரீமுகன், தானை-10
தருக்கு-அகங்காரம், வாலி-95
தருமத்தின் தனிமை தீர்ப்பான், அனும-34
தருமநீயல்லது வேறுண்டோ, கலன்காண்-15
தருமமாவர், அனும-14
தரும்மும் தகவும் தனமுமிவர், அனு-9 [10
தருமன் அஞ்சுறுசரிதல், அனும - தலைகாலுதல், கார்கா-27
தலைமயங்குதல் - கலத்தல், கார்கா -30
தலைவர் கார்காலத்தில் தலைவியை எண்ணித் தேரில் வரல், கார் - 22
தலைவர்பிரிவதைக்கண்டு தலைவியர் கண்ணைமூடிக் கொள்ளுதல், கார்-36
தலைவர் பொருள்வயிற் பிரிதல், கார்கா-22
தலைவர் வருகையைக்கண்டு தலைவியர் மகிழ்தல், கார்கா -36
தலைவரைப் பிரிந்த தலைவியர் உடல்பொய்யுடல், கார்கா-22
தலைவி பாதங்களைத் தலைவன் வணங்கல், கார்-45
தலைவிபிரிவு நீங்கவந்த தலைவன் X பாம்பினைக் கவரவந்த கருடன், கார்-22
தவ்வுதல்-நீங்குதல், அனும-5
தவத்தோரின் நெஞ்சையும் கார் காலம் காதலால் தளரச் செய்யும், கார்-50
தவமெய்யர், அனும-6
தவளை X கற்குஞ்சிறூர், நல்லறிவாளர், கிட்கி-114
தவா-அழியாத, பம்பை-3
தவா வலி, நட்புக்-21
தவாவிருட்பகை-அரக்கர், நட்புக்-21

தழங்குதல்-மிகுதியாக ஒலித்தல், பம்பை-6
தழல்-தீ, வாலி-38
தள-தள்ள, கார்-80
தளம்-பூவிதழ், பம்பை-6
தளர்தல் - வருந்துதல், பம்பை - 23
தளரியல், பம்பை-22
தறுகண்-அஞ்சாமை, அனும-12
தன்றுணையொருவரும் தன்னில் வேறிலான், வாலி-25
தனி-வேறு உவமைபெறுதது, பம்பை-14.
தனுவின் செல்வன் - ராமன், கலன்-32
தறையடித்தல், வாலி-143
தா - அழிவு, கேடு, கலன் - 14: வாலி - 124: குற்றம், வாலி - 114
தாக்கணங்கு, கார்-39
தாட்படாக்கமலம், அனும-36
தாடகை, நட்புக்-6
தாது - மகரந்தப்பொடி, பம்பை-28
தாமம்-ஒளி, அனும-3
தாமரை - திருவடி, மாா - 16 × பஞ்சி பூசிய மகளிர் பாதம், கார் -45, × மங்கையர்முகம், கார்-37
தாமரையும் குவளையும் பிரிந்தார்க்கு மருந்தாதல், பம்பை-24
தாமரையரும்பு × தனம், பம்-25
தார்ப்பணை, கார்-14
தாரகை - நட்சத்திரங்கள், வாலி-53
தாரையின் ஆவி வாலி, தாரை-9
தாலம்-தேன், ஆறு-16
தாவரும்பெருவலித்தம்பி, கலன் - 14
தாழ்-தொங்குகின்ற, பம்பை-30
தாழ்தல்-வணங்குதல், பம்-34
தாழ்ந்த தவம் - கருத்தூன்றிய தவம், சம்-57
தாழ்வு-விழுதல், மாா - 1
தாழைமலர்கள் × நாரையின் கூட்டம், கார் - 78
தாள்-தாளம், அனும-36
தானைசாயின் அண்டமும்மேருவுஞ் சாயும், தானை-23
திக்கயங்கள் தம் இடம்விட்டுப் பெயராதன, வாலி-143
திண்மை-உறுதி, வாலி-77
திணிதல்-வணைதல், வாலிவதைப்-37
தியம்பகம்-திரியம்பகம், நட்பு-7
திரிபுரமெரித்தது, கார்-99
திரிவுறுதல்-சுழலுதல், துந்து-6
திருவுறைமார்பன்-ஸ்ரீராமன், கலன்காண்-18
திருமால் நினைப்பினலன்றியும் படைக்கலங்களாற் பொருது வெல்வான், கார்-98
திருமால் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்தது, கார்-97
திருமாலால் பூதங்கள் படைக்கப் பட்டன, வாலி-113
திருமால் வேதத்தினல் திருவின் நாயகன் எனப்படுபவன், கார்-42
திருமால் திருவடிகள் X உருமேறு, வாலி-30
திருமுகம், பம்பை-7
திரை-அலை, பம்பை-21
திரைசெய்தீர்த்தம் முன் செய் தவம், பம்பை-35
திரைத்தல்-அலையெறிதல், தானை -19
திவளுதல்-துவளுதல், பம்பை-17
திறம்புதல்-தவறுதல், வாலி-74
திறமும்றமும் கொள்படை, தானை -16
திறன்-சாமர்த்தியம், கார்-109
தின்று = கடித்து, வாலி - 91, தோண்டுதல்செய்து, பிலம்-44
தீத்தல் = வெதும்பச்செய்தல், பம்பை-36
தீது = ஐம்பொறி, அனும-24
தீர்க்கபாதன், தானை-19
தீயகான், நட்பு-14
தீயரேயெனினுமுன்னொடு உற்றவர் எனக்குமுற்றார், நட்பு-27

நிசரர், தானை-13
நீணமுநெய்யுமிணங்கிய நேமியாய் வாலி-105
நிருதன் - ராக்ஷஸன், நட்புக்-11
நிலமடந்தை, கார்-43
நிலையம் - வீடு, பம்பை - 31
நிழல் - பிரதிபிம்பம், சாயை, பம்பை - 19
நினைப்பு-சங்கற்பசக்தி, கார்-98
நீடு - சிறந்த, பம்பை-37
நீத்தம் - வெள்ளம், தொகுதி, பம்பை-36
நீதியார், நட்பு-5, சமுத்திரம், நட்பு-43
நீர்க்காக்கை முழுகி எழுதல்X தத்துவப்பொருளுணர்த்தல், பம்பை-16
நீர்தெளிதல் X தீவினை மறந்த மாதவர் மனந்தெளிதல், கார் - 112
நீர்தொறும், கார்-112
நீரம்-நீர், கார்-112
நீரிடைக்கிடந்தபடி, மரா-7
நீல்நிறத்து வி ண் டெ ண டு முகடு, நட்பு-60
நீலகண்டன்-சிவபிரான், வாலி-64
நீலநிறமலர்கள் காவி, கருங்குவளை, நெய்தல், காயா, கார்-51
நீலம் - கருங்குவளை, நாட-48
நீலன், தானை-9
நீலோத்பலம் பூத்தல் × நஞ்சு படர்தல், பம்பை-31
நுங்கல்-விழுங்கல், கார்-3
நுதல்Xவில், கார்-67
நெகுதல்-நெகிழ்தல், வாலி-9
நெடிது, நட்பு-36
நெடிதுவத்தல்- மிகமகிழ்தல், அனும-32
நெடியகற்படிவமாமாலிகை, நட்பு-6
நெடியவன், பம்பை-36
நெடுங்குன்றமும் நா ணு ந் தோ ளிணை, நட்பு-84
நெடுஞ்சிகை விரா மழுவினன் - நட்பு-9
நெடுஞ்சிலைவல்லான், அனும-31
நெடுமனர் தூயையாவுடைமையால், நட்பு-14
நெய்த்தலை பால் கலந்தனையனேயத்தான், கலன்-3
நெரிதல் - நெருங்குதல், வாலி - 48
நெருப்பையவிக்கும்நீர் X பதுமாகத்தின் மீது பாயும் பொன்னொளி, கலன்-39
நெல்சினை, நாட-35
நெறிவயிற்பேதியா நிலைமையார், நட்பு-5
நேடினும்-தேடிடையப் பெற்றோம், மரா-19
நேமி-சக்கராயுதம், பம்பை-37
நேமியான்-திருமால், கார்-98
நேர்தல் - சினேகித்தல், நட்பு-11, ஈதல், நட்பு-26
நைதல் - வருந்துதல், "புண்ணை வெம் முலை" - ஆறு-12
நொடித்தல் - சொல்லுதல், கார் - 55
நொடிதி-சொல், தந்து-3
நொடிவருங்கமலத் த ண் ண ல், நட்பு-18
நொய்தின் - விரைவில், நட்புக் - 52
நோக்கழி-நோக்கழகின் அழிவு, கார்-39
நோய்-துயரம், நட்புக்-56
நோன்மை-பெருமை, வாலி-108
நோன்மைசால் கவியரசு, அனும-1
பகட்டுவெம்முலை, கார் 96
பகல்-பாதி, கார்-110
பகழி-பாணம், மரா-14
பகழிக்குக் கூற்று உவமை, வாலி-127
பங்கம் - சேறு, பம்பை-41
பங்கயம், பம்பை-7
பங்கு-பக்கம், பம்பை-20
பசும்புல் × பூமிதேவிக்கு மகிழ்ச்சியால் ஏற்பட்ட மயிர்ப்பொடிப்பு, கார்-43
பஞ்சு-செம்பஞ்சிக் குழம்பு, பம்பை-31

பெண எண்ணித் தழுவுதல், கார்-28
பாயிரம்-விருது, தானை-12
பாரம்-சுமை, நட்பு-31
பால்-இயல்பு, பம்பை-28
பாலமை - இளமைத் தன்மை, வாலி-148
பாவம் புகையும் சேறும் கலந்தாற் போலக் கறுத்தது, பம்பை-41
பாழி-வலிமை, தானை-7
பாற்கடல் × வாலி, வாலி-4
பிடரி-முதுகு, நாட-37
பிடவமலர் × பால்நுரை, கார்-47
பித்திகை-கூர்தல், கார்-48, சுவர், பம்பை-3
பித்து-அறிவின்மை, நாட-53
பிரபஞ்சத்தினிடையே நின்றன - ஜீவன்கள், கடவுள் வணக்கம்
பிரிந்த தலைவனைக்கண்ட தலைவி தளிர்த்தல், கார்-25
பிழைத்தல் - தவறுசெய்தல், பம்பை-27, பழியினின்று தப்புதல், கலன்-24
பிள்ளைகள் - அறிவு நிரம்பாதவர், நாட-53
பிறப்பும் இறப்பும் யாவர்க்கும் உண்டு, வாலி-147
பிறன் மனைவியைக் கற்புநிலை கெடாது காத்தல், வாலி-99
பின்செலல்-பிந்திவிடுதல், பின்னே தொடர்ந்து செலல், கிட்-128
புகர்மலை - யானை, அனும-30
புகழும் வெற்றியும் நல்லோரையே சாரும், கார்-101
புகையிருந்தால் அனலும் உண்டு, அரசி-8
புங்கவன்-பரமசிவன், நட்பு-80
புடை-சார்பு, மரா-5
புடைத்தல்-குத்துதல், வாலி-42
புண்டரிகக்கண், அனும-35
புண்டரிகம் பூத்து புயல் தழீஇப் பொலிந்த திங்கள், நட்பு-17
புணரி-சமுத்திரம், நட்பு-8
புத்தேளிர், வாலி-112
புதுமலர்ச்சோலை, நட்பு-30
புந்தி - மனம், பிலம்-29, புத்தி, நட்பு-15
புயல்-காலமேகம், வாலி-86
புயல்தரும் மதம், அனும-30
புயலும் வானகமும்முதலியனதுளி விழுவதால் அறிவருந்தகைய, துந்து-8
புரம்-உடம், கார்-91
புரவியேழ், மரா-15
புரிகுழல்-பிராட்டி, பம்பை-7
புருவம் × வில், கார்-66
புழை-குகை, உள்ளறை, பிலம்-27
புல்குதல்-சார்தல், கலன்-5
புல்லுதல்-கொள்ளுதல், வாலி-96
புலக்கு-புலனுக்கு, வாலி-148
புலம்புதல் - சோக மெய்துதல், வாலி-92
புலமைநூலோர், அரசி-15
புழுங்குதல் - தவித்தல், வாலி-64, சினத்தல், கார்-23
புள்ளிநாரை, ஆறு-44
புறம்-வீரம், வாலி-100
புன்றொழில், அனும-32
புன்னைமலரின்நறுமணம் × நுளைச்சியர் கூந்தல் மணம், கார்-48
புன்னையரும்புதல் X பொற்கிழியை விரித்தல், கார்-74
புனமான், பம்மை-42
புனல் உற்றுருவு செப்பு-நாழிகை வட்டில், கார்-73
புனிற்று, கார்-47
புனைதல்-அணிதல், பம்பை-30
புனைமலர் தடக்கை, நட்பு 20
புனையும் வாகையான், நட்பு-67
பூங்கொம்பு × சேடியர், பம்பை-18
பூசல்-பேரொலி, வாலி-3; பொல்லாங்கு, பம்பை-23
பூண்கள் × நறுமலர், கலன்-7
பூணுலாவுதோன்றுதல், ஊட்டுதல், மலர்தல், சிரித்தல், பொருந்துதல், பம்பை-31
பூதரப்புயத்துவீரர், அனும-24
பூந்துகில், கார்-116
பூமி × தகளி, கார்-2
பூர்ணசந்திரன் × அங்கதன், வாலி-140

வெங்கதிர்க்கடவுள், பம்பை-41
வெண்காந்தள்மலர் × பாம்பு, கார்-28
வெயில் கண்ணுமிழ்வ, (வெயில் - நெருப்புப்பொறி), தானை-20
வெய்தின்-விரைவாக, நட்பு-52
வெருவருந்தகைவிலார், துந்து-6
வெருவுதல்-அஞ்சுதல், கலன் - 12
வெவ்வழியிராவணன், கலன்-1
வெள்ளடைத் தம்பல், கார்-29
வெள்ளம்-ஒருபெருந்தொகை, நட்புக்-46, [பக்கம்-116]
வெள்ளிவெற்பிடம் குடைந்து போகியவேர், மரா-8
வெற்பு-பெரும்பாறை, கிட்கி-34
வெறி-மணம், வாலி-124
வெறியன-இல்லாமைகள், அரசி-11
வென்றியிர், அனும-38
வேகரம்-உக்கிரம், தானை-10
வேங்கைமலர் நறுமணம் × கொடிச்சியர்கூந்தல் மணம், கார்-48
வேங்கைமலரும் கொன்றைமலரும் பொன்னிறத்தன, கார்-30
வேங்கையென்றினையபின் சென்று காதல் கூர்தல், அனும-12
வேசையர் மனம் பொருளுடையாரையே நாடித்திரியும், கார்-12
வேடர்மறைந்து நின்றே அம்பு தொடுப்பர், வாலி-116
வேதபாரகர், பம்பை-4
வேதமாசாலியின் வேலியன்னவன், நட்புக்-37
வேதிகை-மேடை, [கார்-76கார்-21
வேல் அரத்தினால் அராவப்படல்,
வேலை-பொழுது, காலம், வாலி-31, நட்பு-58
வேலையைக் கடையுந் தோளினான்-வாலி, நட்பு-38
வேலையைக்கலக்கிச் சேறுகாண்குறுந்திறல், தானை-4
வேனிற்காலம் × கொடுங்கோல் மன்னன், கார்-43 [18
வைகலும் - நாள்தோறும், பம்பை-
வைகுதல்-பொருந்தியிருத்தல், நட்புக் 53
வைதல், அரசி-10
வைதருப்பமண்டலன், ஆறு - 17

அரும்பதவகராதி முதலியன முற்றிற்று.

அநுபந்தம்.

வானரர் தென்திசை செல்லும் வழியைப்பற்றிக் கம்பர் கூறியிருப்பது இப்போதுள்ள பூகோள சாத்திரத்துக்கு ஏற்றுள்ளதா என்று ஊன்றிப் பார்த்தபோது, "கரியபெண்ணை" (நாட - 15) என்பதற்கு - வடபெண்ணை யென்று கூறுவது முரண்படுவதாகத் தோன்றியது: இதைப்பற்றி ஆராய்ச்சி நிகழ்கையில் ஸ்ரீமாந் T. G. ஆராவமுதய்யங்கார் ஸ்வாமிகள் வான்மீகத்தில் இவ்விடத்தில் (கிட். 41) "க்ருஷ்ணவேணீ" என்று இருப்பதே கரிய பெண்ணை என்று சொல்லப்பட்டதாதல்வேண்டு மென்றனர்: மற்றும் ஆராய்ந்ததில், இந்தப் பெண்ணைக்குத் தெற்கே விதர்ப்பதேசத்தைக் [பீரார்] கடந்தமை கூறப்படுகின்றது: கரிய பெண்ணையென்பது வேறு நதியைக் காட்டாமல் வேன்கங்கா (Wainganga River) என்பதைக் குறிப்பதெனின், முரணில்லாமற் போகின்றது. நதிகளைக் காவேரியென்றும் கங்கையென்றும் என இவ்வாறு வழங்குவது உண்டாதலாலும், வேணீ யென்பது போலவே 'வேன்' என்பது பெண்ணையென்று திரிந்துவந்ததாகக் கொள்ளலாமாதலாலும் இப்பொருள் ஏற்கும். இங்கு இவ்வாறு கொள்ளின், ஆறுசெல்படலத்து 12-ஆஞ் செய்யுளில், பெண்ணை என்றதும் இங்குக் கூறிய நதியையே குறிக்குமென்க.

உரையாசிரியச் சக்கரவர்த்திகளாகிய திரு - வை. மு. சடகோப ராமானுஜாசாரியர், திரு - சே. கிருஷ்ணமாசாரியர், திரு - வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் என்னும் இப்பெரியோர்களின் உரை நூல்கள் விடயமாகச் சேலம்காலேஜ் தமிழ்ப்புலவரும், கவிராஜபண்டிதருமாகிய திரு - ரா. திம்மப்ப ஐயரவர்கள் இயற்றிய கவிகள்:—

திருக்குறள்நா லடியாரட் டப்பபந்தந் திருப்பாவை திருவி ருத்தந்
திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி தேவாரத் திருச்செய் யுட்கள்
பருப்பொருள்க ணிறைகம்ப ராமாய ணப்பனுவல் பார தந்நூற்
பெருக்கறிஞர் வில்லியார் பெருந்தேவ ரியற்றியன பீடு சான்ற. (1)

மதுரைதிரு வேங்கடந் திருவழகர் கலம்பகம் மாண்பு மிக்க
மதிகெழுமுத் தொள்ளாயி ரச்செய்யுள் மணிமேக லைக்கா தையொன்
றதிமதுரச் சூளாம ணிக்கவிக ளருஞ்சிலப் பதிகா ரஞ்சீர்த்
துதிநிறைநற் றிருத்தொண்டர் புராணந்திருக் கலம்பகந் தூய சிவஞா.(2)

புலியூர்வெண் பாப்பனுவல் முதுமொழிக் காஞ்சிதிகழ் புனித மாய
நலசரசு வதியந்தா திந்நளவெண் பாக்கோம்பி விருத்தம் ஞான
பலமலியுஞ் சடகோப ரந்தாதி பகரகநா னூற்றுப் பாக்கள் [கள். (3)
தலம்புகழ்சிற் றம்பலக்கோ வைந்நற்றிணை குறுந்தொகையிற் சார்சிற்பாக்

தக்கயா கப்பரணி பாகவதஞ் சதுரமிகு மேலொ ழுபது
மிக்கபுவி யெழுபதுபத் துப்பாட்டி னேழ்பகுதி மேன்மை யான்ற
இக்குவல யம்புகழுஞ் சீவகசிந் தாமணியி னிலம்ப கங்கள்
தக்கவீ ரிரண்டரிச் சந்திரபு ராணங்கந் தப்பு ராணம். (4)

நம்பியார் பரஞ்சோதி விளையாட னவில்காஞ்சி சீகா ளத்தி
யம்புரா ணக்கவிகள் பலநைட தப்பாட லழகி தாய
நம்புநால் வர்நான்ம ணிம்மாலை யேலாதி ஞான மேய
கம்பஞு ரவ்வைதிருப் பாசுரங் கடிகையா சாரக் கோவை. (5)

என்னுமிவற் றின்னுரையையெளிதிலெவரும்முணர்ந்திட் டிரும்பு விக்கட்
பன்னுதமிழ்க் கலைதிருந்தப் பயிலும்வணம் பழையவுரை யாசி ரியர்போல்
நன்னயங்கள் பலவமைய நாட்டினரா லொருமூவர் நவிலுஞ் சீர்த்தி
மன்னு வை. மு. சடகோப ராமாநு சாசாரிய வள்ள லார்சீர். (6)

தங்கிய சே. கிருட்டிணமா சாரியர்சற் குணக்குன்றஞ் சான்ற கேள்விச்
சங்கமிகு மெழில் வை. மு. கோபால கிருட்டிணமா சாரி யர்தாம்
சங்கைதவி ரிவருரைபோற் சகமீதிற் பிறருரையாஞ் சார்ந்தோ மில்லை
யெங்குமிவற் றிசைபரவியோங்கவென விறையவனை யிறைஞ்சுவோமே.